கோவைத் தமிழ்ச் சங்க வெளியீடு - 12

உ

சிவமயம்

கிழார்சுவாமிகள் என்னும் அருண்மொழித்தேவர்

அருளிய

# பெரியபுரர்ணம் என்னும்

# ருத்தொண்டர் புராணம்

[படங்களுடன்]

(இரண்டாம் பகுதி)

இலைமலிந்த சருக்கம் - மூம்மையாலுலகாண்ட சருக்கம்

கோவை - வழக்கறிஞர்

திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B. A., அவர்கள்

தொகுத்தியற்றிய

உரையுடன்

[சென்னைச் சர்வகலாசாலையார் ஆதரவு பெற்றது]

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை, சென்னை.

கோவைத் தமிழ்ச் சங்கம்

கோயமுத்தூர்

25 - 12 - 1940

மை ஆசிரியர்க்கே]

[விலை ரூ. 8—0—0

# பெரியபுராண உரை—(இரண்டாம் பகுதி)

## இலைமலிந்தசருக்கம்—மும்மையாலுலகாண்டசருக்கம்

## பொருளடக்கம்


முன் சேர்க்கை :

| | | |
|---|---|---|
| மதிப்புரைகள் | ... | vi—ix |
| இரண்டாம் பகுதியின் முன்னுரை | ... | x—xii |
| பெயர் விளக்கம் | ... | xiii—xx |
| மேற்கோள் நூல் அகராதி | ... | xx—xxiii |
| செய்யுளணிக்குறிப்புக்கள் | ... | xxiv—xxvi |
| திருத்தொண்டர்புராணமும் உரையும் | ... | சுகூஎ—கசுஙூ |

(முதற் மூன்றாவது பகுதி) சருக்கம்

| | | | |
|---|---|---|---|
| 8. | எறிபத்தநாயனார்புராணம் | ... | சுகூக—எஎ |
| 9. | ஏனாதிநாயனார்புராணம் | ... | எஎ—அஉசு |
| 10. | கண்ணப்பநாயனார்புராணம் | ... | அஉஎ—கஐசுச |
| | அதன் சேர்க்கை | ... | i—xvi |
| 11. | குங்குலியக்கலயநாயனார்புராணம் | ... | கஐசுடு—கஙகங |
| 12. | மானக்கஞ்சாறநாயனார்புராணம் | ... | கஙகச—கஙசுங |
| 13. | அரிவாட்டாயநாயனார்புராணம் | ... | கஙசுங—கஙகூக |
| 14. | ஆனாயநாயனார் புராணம் | ... | கஙகூஉ—கஉசக |
| | இலைமலிந்த சருக்கத்திறுதியிற் சுந்தரமூர்த்தி நாயனார் துதி | ... | கஉசக—கஉசங |
| | இலைமலிந்தசருக்கத்துச் சரித ஆராய்ச்சியுரை | ... | கஉசச—கஉசஅ |

நான்காவது, மும்மையாலுலகாண்ட சருக்கம்

| | | | |
|---|---|---|---|
| 15. | மூர்த்திநாயனார்புராணம் | ... | கஉடுக—கங்கங |
| 16. | முருகநாயனார்புராணம் | ... | கங்கச—கங்டு |
| 17. | உருத்திரபசுபதிநாயனார்புராணம் | ... | கங்சு—கங்டுங |
| 18. | திருநாளைப்போவார்நாயனார்புராணம் | ... | கங்டுச—கங்கஅ |
| 19. | திருக்குறிப்புத்தொண்டநாயனார்புராணம் | ... | கங்கஅ—கடுசஉ |
| 20. | சண்டேசுரநாயனார்புராணம் | ... | கடுசங—கசுஉஎ |
| | மும்மையாலுலகாண்ட சருக்கத்திறுதியிற் சுந்தரமூர்த்தி நாயனார் துதி | ... | கசுஉஅ—கசுஙூ |

பின்சேர்க்கை :

| | | | |
|---|---|---|---|
| பாட்டு முதற்குறிப்பு அகராதி | ... | கசுங்க—கசுஙஎ |
| திருத்தங்கள் | ... | கசுஙஅ—கசுசசு |
| அருஞ்சொற்றொடரகராதி | ... | கசுசஎ—கசுஎஉ |

# இரண்டாம் பகுதியிலுள்ள படங்கள்


| | | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| 1. | திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் ... | | முகப்பு |
| 2. | கருவூர்த் திருவானிலைக்கோயில் - முன்கோபுரம் ... | 555 | எ0டு |
| 3. | (1) எயினனூர்த் திருக்கோயில் ... | | |
| | (2) ஏலாதிநாத நாயனாரும் மனைவியாரும் ... | 610 | எஎடு |
| 4. | (1) அதிசூரனுடன் போர் நடந்த இடம் ... | 639–640 | அ0கூ |
| | (2) எயினனூர் - ஏலாதிநாத நாயனார் திருமடம் ... | | |
| 5. | (1) திருக்காளத்திக் கண்ணப்பநாயனார் திருவுருவம் ... | 829 | க0ஈஅ |
| | (2) அன்னியர் படையெடுப்பின்போது காளத்திநாதர் திருவுருவமாக அமைக்கப்பட்ட உருவம். ... | | |
| 6. | சிலந்தி - பாம்பு - யானை—சிகாளத்தி ... | 650 | அஉள |
| 7. | திருக்காளத்தித் திருமலையும் திருக்கோயிலும் பொன்முகலியாறும் ... | 749 | கூஈக |
| 8. | (1) பெருந்தலையூர் கோயில் (கோவைச்சில்லா) ... | | |
| | (2) அருச்சுனர் - கண்ணப்பர் ஒருசேரக் காணும் திருவுருவங்கள் ... | 751 | கூஈஈ |
| 9. | பொன்முகலியிலிருந்து திண்ணனூர் திருமலை ஏறிச் சென்ற படிகள் ... | 752 | ,, |
| 10. | காளத்தித் திருக்கோயில் - ஐந்து கோபுரங்கள். மலைமேலிருந்து பார்வை ... | | |
| 11. | (1) திருக்கடவூர் - திருக்கோயில். மேலைக்கோபுரப் பார்வை | | |
| | (2) திருப்பனந்தாள் தாடகையீச்சரம் - கோயிலும் கோபுரமும் - உட்புறமிருந்து பார்வை) ... | | |
| | (3) திருப்பனந்தாள் பனைகள் (தலமரங்கள்) ... | | |
| | (4) ,, தாடகை பூசித்த ஐதிகம் ... | | |
| | (5) ,, குங்குலியக்கலயனார் - தேவியார் மகனார் செப்புப்படிமங்கள் ... | | |
| 12. | (1) மானவிரதியார் ... | 887 | கூஈஈக |
| | (2) மானக்கஞ்சாற நாயனார் ... | 895 | ககடுo |
| 13. | (1) ஏயர்கோன் கலிக்காமனாரும் மனைவியாரும் ... | 901 | ககடுடு |
| | (2) மானக்கஞ்சாற நாயனாரும் மகளாரும் ... | 893 | ககஈக |
| 14. | தண்டலைநீணெறி - அரிவாட்டாயநாயனார் வழிபட்ட கோயில் ... | 903 | ககசுடு |
| 15. | (1) கணமங்கலத் திடல் (கமர்) ... | 917 | ககள்சு |
| | (2) அரிவாட்டாய நாயனார் ... | | |

| | | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| 16. | (1) திருமங்கலக்கோயில் விமானம் ... | 932 | கஉ00 |
| | (2) ஆனாய நாயனார் ... | 940–943 | கஉ0எ |
| 17. | (1) திருவாலவாய்த்திருக்கோயில் - வெளிப்பார்வை-சொக்க நாதர் சந்நிதி முன் கோபுரத்துடன் | 999–1000 | கஉஅ–கஉஅ |
| | (2) மூர்த்தியார் முழங்கை தேய்த்த "வட்டந்திகழ் பாறை" சந்தனப்பாறை ... | 987 | கஉஎடி |
| 18. | (1) திருவாலவாய் உட்பார்வை - சுவாமி அம்மன் விமானங்களும் - பொற்றுமரைத் தீர்த்தமும் ... | 1013 | கஙு00 |
| | (2) மூர்த்தி நாயனார் ... | | |
| 19. | (1) திருப்புகலூர் - திருக்கோயில் - முன் கோபுரமும் பூம் பொய்கையும் ... | 1017 | கஙுகச |
| | (2) திருப்புகலூர்:- வர்த்தமானீச்சரமும் முருகநாயனாரும்... | 1028 | கஙுஙு0 |
| | (3) வர்த்தமானீச்சுரத்தில் உள்ள முருகநாயனார் திருவுருவம் | | ,, |
| 20. | உருத்திரபசுபதி நாயனார் ... | 1033 | கஙுசo |
| 21. | (1) திருப்புன்கூர்த் திருக்கோயில் - கிழக்குக் கோபுரம் ... | | |
| | (2) நந்தனார் (திருநாளைப்போவார் நாயனார்) ... | | |
| | (3) திருப்புன்கூர் - இடபதேவர் விலகிய காட்சி ... | 1057 | கஙுஎச |
| | (4) திருப்புன்கூர் - கோயிலின் பின்புறம் காட்சியும் நந்தனார் தோண்டிய திருக்குளமும் ... | 1059 | கஙுஎசு |
| 22. | திருத்தில்லை - நந்தனார் தீமூழ்கி எழுந்த இடம் (ஓமகுளம்) ... | 1072 | கஙுஅள |
| 23. | (1) திருவேகம்பம் - விகடசக்கர விநாயகர் கோயில் ... | 1158 | கசஅஉ |
| | (2) கச்சித்திருவேகம்பமும் - மாமரமும் ... | 1138 | கசசு0 |
| 24. | (1) திருக்காமக் கோட்டம் - உலகாணித் தீர்த்தம் ... | 1148 | கசளஉ |
| | (2) ஏகாம்பரம் கோயில் - கோபுரமும் கம்பாநதியும் ... | 1137 | கசடுக |
| | (3) "கரிகாற் வெருவளத்தோன்" (சோழர்) ... | 1162 | கசஅக |
| 25. | (1) முத்தீசர் கோயில் - திருக்குறிப்புத் தொண்டநாயனார் பேறு பெற்ற குளக்கரை ... | 1202 | கடுஉசு |
| | (2) கச்சிக்கற்றளி - கைலாசநாதர் கோயில் ... | 1153 | கசளஅ |
| | (3) குமரகோட்டம் ... | 1155 | கசஅஉ |
| | (4) சாருவதீர்த்தம் ... | 1155 | கசளக |
| 26. | (1) திருச்சேய்ஞலூர் - திருக்கோயிலும் குளமும் ... | 1206 | கடுசஙு |
| | (2) திருஆப்பாடி - திருக்கோயிலும் சண்டீசர் கோயிலும் ... | 1237 | கடுஅo |
| | (3) ஷி கோயிலும் திருவாத்திமர்மும் ... | ,, | ,, |
| | (4) மண்ணியாற்றின் கரை. ... | ,, | ,, |

சிவமயம்

# மதிப்புரைகளுட் சில

இலங்கை - யாழ்ப்பாணம் - அச்சுவேலி - சரஸ்வதி வித்தியாசாலை அதிபர், "சைவ சாஸ்திர பரிபாலனம்" பத்திராதிபர்

சிவப்பிரம்மஸ்ரீ - ச. குமாரசுவாமி குருக்கள் அவர்கள்

"* * * சைவ நூல்களிற் பரந்த ஞானமும், பற்பல அரிய நூல்களே வெளியிட்டுதவும் உயரிய நோக்கமும் நிறைந்துள்ள மகோபகாரியாகிய தாங்கள் அரோக திடகாத்திரராய் நெடுநாள் வாழ்ந்து இன்னும் பல சைவப் பணிகளைச் செய்யுமாறு எல்லாம் வல்ல இறைவனைத் துதிக்கின்றேன். தங்கள் கடிதத்தையும் பெரிய புராண சஞ்சிகைகளையும் எதிர் பார்த்திருக்கின்றேன். * * * தங்கள் பெரிய புராண உரை தடுத்தாட் கொண்ட புராணம் - செ. 123 வரை மாத்திரம் என்னிடமிருக்கிறது. இதுவரை தாங்கள் அச்சிட்ட மிகுதிப் பாகத்தை இந்தக் கடிதம் கண்டவுடன் அனுப்பி வைக்கும் படி கேட்டுக் கொள்கிறேன். * * *"

மதுரை - திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ - மகா சந்நிதானம்-திருஞானசம்பந்ததேசிக பண்டார சந்நிதியவர்கள் அன்போடு ஆசீர்வதித்தெழுதிய திருமுகம். (மதுரை, 2-6-1938)

ஸ்ரீ சைவசமய கர்த்திரு சர்வஞ்ஞ பீடாரூட ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் திருபாகடாக்ஷத்திலுலே நன்மை பெருகுக. * *

தாங்கள் அன்புகூர்ந்து அனுப்பிய பெரியபுராணத் திருமுலைச் சருக்கம், தில்லைவாழந்தணர் சருக்கங்களடங்கிய மூதற்பகுதியைக் கண்ணுற்று களிபேருவகை அடைந்தனம். இப்பெரிய புராணத்திற்கு ஸ்ரீ சிவஞான சுவாமிகள் கால முதல் இன்றுவரை இருந்த மகாவித்துவான்கள் உரை செய்யவேண்டுமென்னும் அவாவுடனிருந்தும் திருவருள் கூட்டிவைக்காது மறைந்தனர். இப்பெருங் காப்பியத்திற்கு உயரிய பேருரை இல்லாதது பெருங் குறையே. இவ்வரிய செயற்கரிய செய்கையைச் செய்து முடிக்கத், தங்களுக்குக் கிடைத்த திருவருட்டிறத்தை நினைக்குந்தோறும், சைவப் பயிர் வளர்க்கும் ஒரு வெண்முகிலே இறைவன் கொடுத்துக் காத்ததாக நினைக்கிறோம். * *

தாங்கள் மேற்கொண்ட திருப்பணி இனிது நிறைவேறுமாறு எல்லாம் வல்ல ஆலவாய் அங்கயற்கண் மங்கை மணாளன் திருவருள் பாலிப்பாராக.

குருபூஜைத் திருமுகம் இத்துடன் வருகிறது. திருஞானசம்பந்தப் பெருமானின் குருபூஜை விழாவில் தாங்களும் கலந்து பெருமானின் திருவருட் பேற்றுக்கு ஆளாவீர்களென்று எதிர்பார்க்கிறோம்.

திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துத் திருக்கூட்டத் தம்பிரான்களில் ஒருவரும், ஷை ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கடவூர் தேவஸ்தானம் டிரஸ்டி ஸ்தானிகருமாகிய

ஸ்ரீமத் - இராமலிங்கத் தம்பிரான்சுவாமிகள்

ஆசீர்வதித்து எழுதிய திருமுகம்—14-6-38

நற்றொன்மைச் செந்தமிழ் நூல் பலவற்றுள்ளும் தலை சிறந்து விளங்கும் பெரிய புராணமென்னும் திருத்தொண்டர் புராணத்துக்குக், கோவை வழக்கறிஞர் எம் அன்

பர் திருவாளர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி. ஏ. உரை கண்ட புத்தகம் ஒன்று சென்ற ஆண்டு மாசித் திங்களில் இவண் தேவாலயத்தில் அவர்களுக்கு நடை பெற்ற 60-வது ஆண்டு நிறைவுவிழாவின்போது கிடைக்கப்பெற்று இன்றுவரை வாசித்துவருகிறேம்.

இச்சைவப் பெரியார்களின் புராணத்திற்குக் கரைக்காலம்மையார் புராணம் வரை சூசனம் எழுதித் தமிழுலகத்திற்கு உதவிய ஸ்ரீ நாவலர் பெருமான் ஆறுமுக நாவலர் அவர்களுக்குப் பின் அப்பிற்பகுதிகளைப் பூர்த்திசெய்ய எப்புலவர்களும் முன் வராதிருந்த குறையை நமது பெரிய புராண உரையாசிரியர் முதலியார் அவர்கள் கண்ட உரையினால் நீக்க முன்வந்தது மிகவும் போற்றத்தக்கதேயாம். அச்சூசனங்கள் கற்றோர்க்கே பயன்படுவனவா யிருந்தன. இவ்வுரையோவெனில், கற்றார்க்கும் மற்றார்க் கும் பயன் படுவனவாயிருப்பதோடு எளிய நடையில் அரிய பொருள்களை நன்கு விளக்குவனவாயும், சாஸ்திரக் கருத்துக்களையும், சகல நீதிகளையும், தற்கால ஆராய்ச்சி முறைமைக்கு ஒப்ப விளக்கம் செய்வன வாயுமிருக்கிறது. இவர்களின் சலியா முயற்சிப்பயனை உணர்ந்து நந்தமிழன்பர்கள் அனுபவிக்க வேண்டுகிறோம். இப் புத்தகம் நல்ல அழகிய எழுத்துக்களினாலும், படங்களினாலும், கட்டியிருப்பதினாலும் - ஒன்றையொன்று மிஞ்சும் வனப்பு வாய்ந்ததாகவே யிருக்கிறது.

சிவபூஜா பக்தியும், அடியார்கள் பக்தியும், சைவநூல் பக்தியும், மிகுந்த முதலி யார் அவர்கள் நீண்ட நாள் அரோக திடகாத்திரராய் இருந்து சைவ நூல்விளக்கப் பணிகளை மேலும் மேலும் புரித்து வரவேண்டுமெனச் சதா திருவருளைச் சிந்திக்கின்றோ னம்.

---

தூத்துக்குடி - "சித்தாந்த ஆசிரியர்"

உயர்சைவத் திருவாளர் - ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள்

பெரிய புராண படன முடிவு விழா மிகச் சிறப்பாக நடந்தேறியதாக அறிந்து மகிழ்ந்தேன். திரு. சேக்கிழார் திருக்கூட்டத்தாரால் 12-9-40 அனுப்பப்பெற்ற திருமுகம் கிடைத்துள்ளது. சிவஞான போதத்துக்கு ஸ்ரீமாதவச் சிவஞான யோகிகள் இயற்றிய விருத்தியுரை போலத் திருத்தொண்டர் புராணத்துக்குத் தாங்கள் இயற்றும் விருத்தியுரை சிறப்புடையது என்பது அடியேனது கருத்தாகும். முற்றும் விரைவில் முடிவுபெறக் கூத்தப்பெருமான் திருவருள் புரிவாராக.

---

தோரமங்கலம் "ஆசிரியர்" அ. வரதநஞ்சைய பிள்ளை களிகூர்ந்தியற்றிய

## உரைச் சிறப்புப்பாயிரம்

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

உலகெலாம் மலர்பொற் சிலம்படி முதல்வ னுவகையா னடிமுத லுதவ
அலகில்சீர்த் தொண்டர் திறனெலாம் நேரே யறிந்தென வியந்துபா ராட்டி
மலைவறச் சொல்லிற் பொருண்முதற் றிணையின் வளங்களு மிடன்தொறும் வயங்க
நலமலி தொண்டர் புராணமா மமுதம் நல்கின னருண்மொழித் தேவே.

*சேக்கிழார் சீரே பராவுத லடியார் செய்கையென் றுலகினர்த் தெருட்டுஞ்
சேக்கிழார் சீரே பரவுவ தினியெஞ் செய்கையென் றெம்மனோர் திரும்பி

---

*சே = எருது. கிழார் = உரியவர். எனவே, இடபத்தை வாகனமாக உடைய சிவபெருமான் எனப் பொருள்படும்.

வாக்கிலு லுரைக்குந் தொறுங்கணீர் மல்க மயிர்ப்புள குதிப்பமெய் விதிர்ப்பத்
தேக்குமா னந்த மிம்மையே யடையுந் திறத்தின்வீ றுநீஇச்சிறந் தன்றே. 2

உயர்சிவ ஞான போதநூற் பன்னி ரண்டெனுஞ் சூத்திரத் துட்கோள்
இயல்பெற விளக்கு மாதலா னிதுபன் னிரண்டெனுந் திருமுறை யெனல்நேர்
அயர்வற வீட்டி னுங்கிலே பேறு மதுதர விதிற்சிறந் ததுமின்
றுயல்பெறு வார்க்கீ தொன்றுமே சாலும் உண்மையை நோக்கிடி னம்மா. 3

அத்தகு பெருநூற் குரையெனப் பல்லோர் அறிந்தீவா விரிப்பினு மவற்றின்
வித்தக மனைத்துஞ் சித்திர வுருவின் விளக்கியெம் மனங்குடிப் புகவே
பத்தியி னியல்பைச் சொன்முகம் விரித்துப் பற்பல நயப்பொருள் காட்டும்
இத்தகு முறையே யுரையிது நூலா சிரியனுர் கருத்துமென் றியம்ப, 4

யாம்புரி தவத்தாற் பெற்றன மிங்காட் பின்வரு வோருமத் தகையர்
போம்பரி செய்தி முன்னவ ரிந்நூ னயந்தெரி தவம்புரி கிலராய்ச்
சாம்பின ரென்றென் றிரங்கிட வெம்மோர் தமக்கெலாந் தன்மதி வளத்தா
லாம்பரி சாய தமிழ்விருந் தீந்த வண்ணலே யாரறி யாரே. 5

கோவைவா யமுதப் பேரருட் செல்வி கொண்கனுர்க் கேயுளங் கொடுத்தோன்
கோவைவா யமுதப் பேரருட் செல்வன் குலத்தினுஞ் சேக்கிழார்க் குரியோன்
ஈர்வினீ டுறுகைக் கந்தசா மிப்போர்க் கலிஞனீன் றெடுத்தகண் மணியான்
மேவுநீ றணிசாந் தைத்தெழுத் துரையாய் விளங்குபூண் கொண்டகண் மணியான், 6

செப்பிர மணிய னன்பர்க ணேயன் றேக்கிய தமிழ்க்கட லொன்றே
நப்பிர மணிய நூற்கலே மேற்கு நாட்டுரைக் கடலெயுங் கடந்தோன்
விப்பிர மணியர் வாழ்தரு பேரூர்ப் பட்டிநா தன்கழல் விரும்புஞ்
சுப்பிர மணியப் பெயரினுற் றிசையும் விளக்கிடுந் தூயநற் சுடரே. 7

---

## சாத்துக் கவிகள்

கோ. தா. செட்டிபாளையம் - ரா. ரஞ்சப்ப கவுண்டர் குமாரரும், கந்தன் சித்திர பந்தனமாலை, கந்தன் வெண்பாமாலை, நால்வகைத் தோற்றத்தார் நன்மகா நாடு அல்லது கொலை மறுத்தல் முதலிய நூலாசிரியரும் ஆகிய

### R. N. கல்யாணசுந்தர கவுண்டர் இயற்றியது

#### அறுசீர் விருத்தம்

பொன்னுரு மார்பனயன் தினந்தேடிக் காணுத புனித மூர்த்தி
தன்னேரி றிருத்தொண்டு சார்ந்துசெயுஞ் சுந்தரனுர் சாற்றி வைத்த
இன்னுருந் திருத்தொண்டத் தொகைவகையாய் விரிவாகி யிலங்கப் பூவில்
மன்னுரும் குன்றைநகர்ச் சேக்கிழார் திருமுறையாய் வகுத்த காதை, 1

அப்பெரிய காவியத்தின் பொருட்சுவையை யகிலத்தி லநேகம் பேர்கள்
செப்பரிய விதத்தாலே தேர்ந்தார்க ளதற்கெல்லாஞ் சிறப்பா யோங்க
ஒப்பரிய பேருரையைக் கண்டதனை யெல்லார்க்கு மோதிப் பின்பிங்
கிப்புவியில் வெளியிடுவார்க் கியற்றுகிற கைமாறிங் கேதோ காணேன்; 2

அவனிதனிற் பன்னூலுக் குரைகண்டு பெரியோர்க ளனேகம் பேரில்
இவர்போலத் திருத்தொண்டர் புராணவுரை கண்டவர்க ளெங்கும் காணேன்
உவமான உபமேய விலக்கணமும் விளக்கமுட னெனறுரைச் சேர்த்து
நவமாகத் தமிழ்ச்சுவையைப் பொலிவித்த பெருமையது நன்று நன்றே. 3

கொங்கினிடைப் பொலிந்திலங்கு கோவைநகர்ப் பதியாளன் குணத்தின் மிக்கான்
தங்குபுகழ் மிகுகந்த சாமிசுத னுயுதித்துத் தமிழைத் தேர்ந்தோன்
மங்கையுமை பாகத்தன் மலரடியில் மறவாத மனப்பற் றுள்ளோன்
எங்கள்சுப்ர மண்யப்பே ருரையாளன் நீடுழி யினிதே வாழ்க. 4

---

Dewan Bahadur - **K. Sundaram Chettiar**
*Madras High Court Judge (Retired)*

SALEM,
19—5—1938.

DEAR SIR,

Your scholarship in Tamil language and literature, your zeal in the cause of popularising the great truths treasured up in the ancient and sacred literay works in Southern India are too well-known to require any assertion by me. Much is my appreciation of the great task you have undertaken in publishing the time - honoured Periapuranam, with your lucid commentary. I am glad, you are devoting your talents very usefully.

Yours sincerely,
(Sd). K. SUNDARAM CHETTY.

---

கள்ளிக்கோட்டை - சில்லா நீதிபதி (*District Judge*)
C. N. குப்புசுவாமி ஐயர் அவர்கள்

" * * * I would like to get further parts of Periapuranam as and when they are puplished. I am glad the monumental work is in the hands of such a great scholar as you * * * "

---

# இரண்டாம் பகுதியின் முன்னுரை

இப்புராண உரை வெளியீட்டின் முதற் சஞ்சிகை 5-6-1935 ஸ்ரீசேக்கிழார் திருநாளன்று திருத்தில்லையில் ஆயிரக்கால்மண்டபத்தில்வைத்து வெளியிடப்பெற்றது. திருமலைச்சருக்கம்-தில்லைவாழந்தணர்சருக்கம் சேர்ந்த முதற்பகுதி (I-Vol.) 15-9-1937-ல் நிறைவேறி வெளிவந்தது. இலைமலிந்த சருக்கம் - முப்மையாலுலகாண்ட சருக்கம் சேர்ந்த இரண்டாம் பகுதி (II-Vol.) இப்போது வெளியிடப்பெறுகின்றது. இத்தனை காலத்தாழ்வு நேர்வதுபற்றிப் பல அன்பர்கள் கவன்று என்னிடம் தெரிவித்துள்ளார்கள். எனது "முகவுரைக்கு முன்னுரை"யில் மூன்று முறை பன்னிரண்டாண்டு எல்லைகளைப்பற்றிக் குறித்துள்ளதைக் கண்ணுற்ற அரிய நண்பர் ஒருவர் இதுவும் அவ்வாறே யாகாமலிருக்கவேண்டுமே என்றஞ்சினர்; விரைந்து பணிசெய்யுமாறு வேண்டினர். அன்பர்களைவிட எனக்குக்கவலை அதிகந்தான். ஆயினும் என் செய்வேன்? எனக்கியல்பாயுள்ள மந்தகுணம் என்னை விட்டு எவ்வாறு நீங்கும்? அன்பர்கள் தமது பெருங்குண நிறைவினால் என்னை எனது குற்றங் குறைபாடுகளுடன்தான் ஏற்றுக் கொள்ளுதல்வேண்டும். எனது அறிவு ஆற்றல்களின் குறைவு ஒருபுறமிருக்க இவ் வெளியீட்டுக்கு நேரும் பிற இடையூறுகள் மிகப்பலவாம். நமது பண்டைப்பழஞ்சைவத் தென்றமிழ்நாட்டில் இவ்வெளியீட்டுக்கு உரிய ஆதரவில்லாமை ஒரு பெருங்குறையும் இடையூறுமாகும் என்பது அன்பர்கள் பலரும் அறிவார்கள். ஆயினும் இரண்டாம்பகுதி வெளியிடும் இடையில் திருப்பனந்தாள் காசிமடம் அதிபர் ஸ்ரீமத் - காசிவாசி - சுவாமி நாதத்தம்பிரான் சுவாமிகள் ஆசிகூறி நன்கொடையாக ரூ. 100 அளித்தார்கள். கோவைச் சைவப்பெரியார் வக்கீல் திரு. B. வேங்கடாசல முதலியார், B.A., B.L. அவர்கள் அன்புடன் ஆசிகூறி ரூ. 100 நன்கொடை தந்தனர். இவைபற்றி முன்னரே எனது நன்றியை 8-வது சஞ்சிகை அறிவிப்பில் தெரிவித்துள்ளேன். சஞ்சிகைகள் வெளிவந்தவுடன் பொருட்பேறுள்ள அன்பர்கள் பற்பல பிரதிகளை விலைக்குப்பெற்றுப் பரவச்செய்ய முன்வருவார்களாலும் நன்கொடைகளைவிட, அதுவே இவ்வெளியீட்டுக்குச் செய்யும் பேருதவியாகும் என்று கருதுவேன். பள்ளிக்கூடங்கள், சங்கங்கள், புத்தகசாலைகள் முதலிய தாபனங்களுக்குரியவர்கள் எல்லாரும் ஒவ்வொரு பிரதியேனும் பெறுவதாலும் அச்சிடும் பிரதிகள் போதா. சிவாலயங்களின் புத்தகசாலைகளில் எல்லாம் இப்புராண உரை வைக்கத்தகுந்ததாகும் என்பேன். முதற்பகுதியிலிருந்ததைவிட அதிக ஆர்வத்துடன் இலங்கையன்பர்களின் ஆதரவு பெருகிவருகின்றதனை நன்றியுடன் அறிவித்துக்கொள்கின்றேன். (இலங்கை) யாழ்ப்பாணம் - இந்துக் கல்லூரி, ஆசிரியர், பேரன்பர் - திரு. மு. மயில்வாகனம் அவர்கள் இப்புத்தகங்களையும் எனது பிற நூல்களையும் அங்குவைத்து விற்றுக்கொடுத்தும், இன்னும் பலவகையாலும் இவ்வெளியீட்டுக்குப் பேருதவிபுரிந்தும் வருகின்றதுபற்றி எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த இரண்டாம்பகுதி அச்சிடுங் காலத்தினிடையில் அச்சுக்கூடத்தில் அச்சுக்கள் புதுக்கி வார்க்க நேர்ந்தது; ஈசுவர ஆண்டு மாசி மதி ஏழாம்நாள் (18-2-1938) திருக்கடவூரில் அடியேனுக்கு அறுபதாம் ஆண்டு நிறைவுக்குரிய வழிபாடு நடைபெறுவதை முன்னிட்டு ஒன்றிரண்டு மாதங்கள் தலயாத்திரை முதலியவற்றிற் செலவிடவேண்டுவ

தாயிற்று; இடையிடையே, "மூப்புறுமத் தளர்வாலும் முதிர்ந்து முடுகி" அவ்வப் போது சேர்ந்த சிறிய பெரிய நோய்களாலும் பல நாட்கள் வாளா கழிந்தன; போதாக் குறைக்கு ஐரோப்பியப் போரும் வந்தது; இவ்வெளியீட்டுக்கு சேர்ந்த இடையூறு களின் கணக்கில் இங்குக் குறித்தன சிலவே.

முதற்பகுதியிற் போலவே இப்பகுதியிலும் உடனின்று உதவியும் திருத்தியும் படங்கள் எடுத்துத் தந்தும் மற்றும் பலவகையாலும் இவ்வெளியீட்டுக்குத் துணை செய்தும் தந்த எல்லாப் பெருமக்களுக்கும் என் நன்றி உரியது. சாது அச்சுக்கூடத் தார் இத்தனை இடையூறுகளுக்கிடையிலே, இதனை எனது வேலையன்றித் தமது வேலை யாகவேகொண்டு சிறிதும் தளராது செய்துகொடுக்கும் பேருதவி போற்றத்தக்கதாகும்.

செய்யுளணிகள் அங்கங்குத் தரப்பட்டிருத்தலின் விரிவாகச் சேர்க்கப்பட வில்லை. பெயர் விளக்கம் கண்ணப்பநாயனார் புராணத்திற்குத் தனியாக முன்னரே கொடுக்கப்பட்டிருத்தலின் எஞ்சிய பகுதிகளுக்குமட்டும் இப்போது தொகுக்கப்பட் டுள்ளது. சரித ஆராய்ச்சிக் குறிப்புக்கள் கண்ணப்பநாயனார் புராணத்திற்குரியது முன் னர் வெளிவந்துள்ளது. இப்பகுதியில் உள்ள ஏனைய நாயன்மார்களின் சரித ஆராய்ச்சி யுரை எழுதி உதவவுள்ள எனது அரிய நண்பர் திரு. இராவ்பகதூர் - C. M. இராமச்சந்திர செட்டியார், B.A., B.L., F.R.G.S. அவர்கள் இப்போது கோவையில் இல்லை; சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தில் (Commissoner, Hindu Religious Endowments Board, Madras) அங்கத்தினராக நிய மனம் பெற்றுச் சென்னையில் தங்குகின்றார்கள். அவ்வேலையின் பெரும் பொறுப்புக் களுக்கிடையில் இச்சரித ஆராய்ச்சிக் குறிப்புக்களைத் தொகுத்து எழுதியுதவுதற்குப் போதியகாலம் அவர்களுக்குக் கிடையாமையால் அவை இத்தொகுதியில் வெளிவர இயலாமைபற்றி வருந்துகின்றேன். ஆனால் திருத்தொண்டர் புராணத்தில் ஆர்வங் கொண்டு அவர்கள் செய்த பெரும்பணிகளின் பயனுகச் சிவத்திருப்பணிகள் பலவும் செய்யத்தக்க பெரும் பதவியைப் பெற்றமர்ந்துள்ளதுபற்றி அன்பர்கள் யாவரும் மகிழ்வர். மேற்கோள்நூல் வகராதி ஒன்று தொகுத்து சேர்க்கப்பட்டிருப்பது இப் பகுதியைப் படிக்கும் அன்பர்களுக்கு உதவுவதாகும்.

திருநாவுக்கரசு நாயனரிடம் பேரன்பு பூண்டு, அத்திருப்பெயரால் வித்தியாசாலை முதலிய பல அறநிலையங்கள் வகுத்து நடத்தித், தமது இல்லத்துக்கும் மகார்க்கும் அப் பெயர் வைத்து மகிழ்ந்து வரும் நேமத்தான்பட்டி திருவாளர் - கி. வீ. நா. பழனியப்ப செட்டியார் அவர்கள் தீருநாவுக்கரசுநாயனர்புராண உரைத் தொடக்கத்தில் ரூ. 50. நன்கொடை தந்து ஊக்கமளித்ததுபற்றி என் நன்றியை முன்னரே அறிவித் துக் கொண்டிருக்கின்றேன். அப்பர்சுவாமிகளின் திருவருட்டுணை கொண்டு அடுத்த பகுதி விரைவில் நிறைவேறும் என்று நம்புகின்றேன்.

இந்த இரண்டாம் பகுதி வேலை நடந்து கொண்டிருக்கும் இடையில் நாயன்மார் களின் திருவருட்டுணையால் இப்புராணப் பணி செய்வதன் பயனுக அடியேனுக்குக் கிடைத்த இரண்டு பெரும்பேறுகளை இங்குக் குறித்துவைக்க மனம் எழுகின்றது. கோவையில் பனிரண்டாண்டுகளின்முன் தொடங்கிச் சில இடையீடுகளுடன் வாரந் தோறும் அடியேனால் நடைபெற்றுவந்த திருத்தொண்டர்புராண படனமானது இந் நகர்ச் சைவப்பிரசங்கசாலை மண்டபத்தில் (1-9-1940) விக்கிரம ஆண்டு ஆவணித் திங்கள் 17-ம் நாள் நிறைவேறியது; சேக்கிழார் நாயனரது திருவுருவப்படத்தையும் திருத்தொண்டர் புராணத்தையும் யானையின்மே லேற்றுவித்துச் சிறப்பாக நகர்வலம் செய்விக்கப்பட்டது; திருவாவடுதுறை ஆதீனம் மகாசந்நிதானங்கள் பரிவட்டமும் திருவருட்பிரசாதமும் அனுப்பி ஆசீர்வதித்தருளிற்று; பல பெரியார்கள் இத்திரு

விழாவிற் கலந்துகொண்டனர்; இதுஒரு பெரும்பேறுகும். மற்றொன்றுவது விக்கிரம ஆண்டு அற்பிசித் திங்கள் 26-ம் நாள் (11-11-1940) திங்கட்கிழமை மேலைச்சிதம்பரம் என்னும் திருப்பேரூரில் சிறப்பாக நடைபெற்ற அறுபத்துமூன்று நாயன்மார்களின் அட்டபந்தன மகாகும்பாபிடேகத்தின்போது அடியேனுக்கும் மற்றும் கோவைச் சேக்கிழார் திருக்கூட்டத்தாருக்கும் திருப்பணி செய்யக் கிடைத்த பெரும்பேறுகும்.

இப்பகுதியில் வரும் படங்களுள் திருநாளைப்போவார் நாயனார், மானக்கஞ்சாற நாயனார், அரிவாட்டாய நாயனார், உருத்திரபசுபதி நாயனார் புராணங்களின் சம்பந்த மாகிய பலவற்றையும் பல இன்னல்களுக்கிடையில் பலமுறையும் தாமே நேரில் போய் படம் பிடித்து உதவியவர் கும்பகோணம் திரு. காட்சிலிங்கம் அவர்களாவார். ஆனாயநாயனார் புராணத்திற்குரிய படங்களை உதவியவர் திருமங்கலத் திருக்கோயில் தருமகர்த்தர் திரு. அரங்கசாமி ஐயர், B. A. அவர்கள். மதுரையில் மூர்த்திநாயனார் புராண சம்பந்தமான படங்கள் எடுத்துக்கொள்ள அன்போடு அனுமதி தந்து பல வுதவிகளும் செய்தவர்கள் திருவாலவாய்க் கோயில் நிர்வாக அதிகாரி திரு. R. S. நாயுடு, (Bar-at-law) அவர்கள். திருப்பனந்தாள் - திருப்புகலூர்-திருச்சேய்ஞலூர் திருவாப்பாடி - முதலிய படங்கள் எடுத்துதவியவர்கள் மாயவரம் நகரசபை நிர்வாக உத்தியோகத்தர் திரு. S. முத்துராமலிங்க முதலியார் அவர்களும், திரு. T. S. மீனாட்சிசுந்தர முதலியார், B.A. (தஞ்சாவூர் ஜில்லாப் பஞ்சாயத்து உத்தியோத்தர்) அவர்களுமாவர். கண்ணப்பநாயனார் புராணப் படங்களை எடுத்து உதவியவர் எனது உழுவலன்பர் திரு. K. ஆறுமுகநாயனார். அவர்கள் இவ்வெளியீட்டுக்குப் பல்லாற்று னும் பேருதவி புரிந்து வருகின்றார்கள். இவர்கள் எல்லாருக்கும் எனது நன்றி உரியது.

முதற்பகுதி முன்னுரையிற் குறித்த ஏட்டுப் பிரதிகளுள் திருவாவடுதுறைப் பிரதிகளை உதவியவர் அன்பர் திருவாவடுதுறை - திரு. சுப்பு செட்டியார் ஆவர். இவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்துப் பழ அடியார் கூட்டத்தைச் சார்ந்த பேரன்பர். ஏட்டுப் பிரதிகளிரண்டு தந்துதவியதுடன் பலவகையாலும் ஊக்கமளித்து வருகின்றார் கள். இவர்களது பெயர் முன்னர்க் குறியாதுவிட்டது எனது பிழை.

தேவாரத் திருமுறைகளையும் பெரிய புராணத்தையும் உலகுக்குபகரிக்க மூல காரணமானது திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாரது திருவருளாகும். ஆதலின் இவ்வெளியீட்டின் ஒவ்வோர் பகுதியின் முகப்பிலும் திருநாரையூர்பற்றிய படம் ஒவ்வொன்று பொறிக்க எண்ணி, முதற்பகுதியில் பிள்ளையாரது கோயில் அமைக்கப் பட்டது. இப்பகுதியில் ஸ்ரீ பொல்லாப்பிள்ளையாரது திருவுருவம் அமைக்கப்பட் டுள்ளது. அதனையும் தில்லை ஓம குளத்தையும் படம் எடுத்துதவியவர் அக்கோயில் பரம்பரை தருமகருத்தரும் கிராம பெரியதனக்காரரும் மிராசுதாரரும் சிவகதாப் பிரசங்க வல்லவருமாகிய அன்பர் திரு. ரா. முத்துக்குமார பிள்ளை அவர்கள் மிகுந்த சிரமப்பட்டு இப்பாடங்களை எடுத்துதவியதுடன் அவற்றைப் பொறித்து அச்சிட்டுத் தரும்வரைத் தமது பொறுப்பாக ஏற்றுக்கொண்டனர். அவர்களது அன்புக்கு நன்றி செலுத்துகிறேன்.

இப்புராண உரை வெளியீட்டுத் திருப்பணியை மதித்துச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார் அடியேனுக்குச் "சிவக்கவிமணி" என்றதொரு பட்டத்தை நேற்றுச் சென்னைச் சித்தாதிரிப்பேட்டை உயர்பள்ளி மண்டபத்திற் கூடிய தமிழ்ப் புலவர் மகாநாட்டின் முன்பு அளித்தனர். அவர்களது அன்புக்கு என் நன்றி உரியது.

கோயமுத்தூர்
சேக்கிழார் நிலயம்
25—12—1940

C. K. சுப்பிரமணி முதலியார்,
பதிப்பாசிரியன்.

# இலைமலிந்த - மும்மையாலுலகாண்ட சருக்கங்களிற்கண்ட

# பெயர் விளக்கம்

குறிப்பு :—கண்ணப்பநாயனார் புராணத்துப் பெயர்விளக்கம் அவர் புராணத்திறுதியிற் காண்க

(எண்கள் பாட்டுவரிசை எண்களைக் குறிப்பன)

அதிசூரன் - 612, 637. *ஏனாதிநாத நாயனாருடன் தாயுரிமையுடையவனும் அவரைப் பகைத்து நரகமடைந்தவன்.*

அநபாயன் - 552, 1213. *திலதைத் திருவெல்லை பொன்னின்மயமாக்கிய வளவர் போரேறு. முற்பகுதி பெயர்விளக்கம் பார்க்க.*

அம்பிகாவனம் - 1136. *காஞ்சிபுரத்தில் இறைவரது பூசைக்காகக் காமாட்சி யம்மையார் உளதாக்கிய நந்தவனம்.*

அரசு - 862. *திருநாவுக்கரசுநாயனார்; தாண்டகச் சதுரராகு மலர்புக ழரசு-862*

அருகத்தர் - 980. *சமணர் : சமண்கையர் : 981. வெஞ்சமண்பேர் எக்கர் - 982. புன்மைச்செயல் வல்லமண்குண்டர் - 985. அமண் 991 - 1006.*

அளகாபுரி - 1178. *குபேரனது நகர்.*

ஆகமவிதியின் வகுப்பு - 1164. *ஆகமநூற் பரப்பின்றெகுதி 1223.*

ஆதனூர் - 1041. *திருநாளைப்போவார் நாயனார் அவதரித்த பதி.*

ஆனாயர் - 933. *ஆனாயநாயனார். அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவர்.*

ஆனிலை - 555. *கருவூர்த்தலத்தில் சிவபெருமான் விளங்க எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலின் பெயர். (பக் - எ0சு)*

இட்டசித்தித் தீர்த்தம் - 1155. *காஞ்சிபுரத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களுள் ஒன்று.*

இந்திரன் - 1175. *தேவராசன்.*

இமயமலை - 1162. *பொன்மலை என்ப. பூலோக கைலாயம் இங்கு உளது.*

இரவி - 1175. *சூரியன்.*

இறவாத்தானம் - 1154. *காஞ்சிபுரத்தில் உள்ள அற்புதத் தானங்களுள் ஒன்று. (பக்கம் - கசஎக.)*

உச்சி - 685, 689, 750. *வானவீதியின் உச்சி இடம்.*

உபநயனம் - 1219. *மறையவர் முதலிய மூன்று வருணத்தார்க்கும் எழுவய தளவில் செய்யத்தக்க பிரமோபதேசம் புரியும் சடங்கு ; முந்நூலணியும் கல்யாணம் என்பர்.*

உமாதேவியார் - *அம்பிகை* - 1126; *உலகையாளுடையாள்* - 1127; *பெண்ணினல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து* 1128; *நங்கை* 1129; 1139, *போகமார்த்த பூண்முலையினுள்* 1129; *எம்பெருமாட்டி* 1130; *தம்பிராட்டி* 1132; *மலைமடந்தை* 1132; *பொன்மலைவல்லி*1133, 1179; *ஆளுடைய அம்மை* 1134; *மலைமகள்* 1134, 1147; *தொண்டை யங்கனி வாயுமை நங்கை* 1135; *எம்பிராட்டி* 1136, 1142, 1148; *உயிர்கள் யாவையு மீன்றவெம் பிராட்டி* 1137; *வரந்தரும் பொருளா மலை வல்லி* 1138; *அங்கயற்கண்ணி* 1140; *தன்னேயே யொப்பாள்* 1140; *மலைக்குலக்

கொடி 1141; அகிலமீன்றளித்த மாது 1143; கோதி லாவமு தனையவள் 1144; மாது 1142; வண்டுவார்குழல் மலைமகள் 1145; பிறப்பொழிப்பாள் 1146; காளமேக மொப்பாள் 1156; அந்தமில்லறம் புரப்பவள் 1260; ஆண்டநாயகி 1161; திருமறைகள் ஒலிக்குந் தெய்வ, வண்காஞ்சி யல்குல் மலைவல்லி 1163; கொந்தளர்பூங் குழலிமயக் கொம்பு 1164; நிறைதவஞ்செய் இமையப்பாவை 1170; தூணவி 1203; தேவர்கடம் பிராட்டி 1227.

உருத்திரசோலை - 1161. காஞ்சிபுரத்தில் உள்ள அற்புதத் தானங்களுள் ஒன்று.

உருத்திரம் - 1030. திருவுருத்திரம். வேதங்களின் சரி நடுவில் உள்ள மந்திரப் பகுதி. பக்கம்-கசுஉ பார்க்க. அருமறைப் பயனுகிய உருத்திரம் 1037; உருத்திரம் 1036, 1039; வேதமந்திரம் 1038.

உலகாணி - 1150. திருக்காமக்கோட்டத்தில் உள்ள அற்புதத் தீர்த்தங்களுள் ஒன்று. (பக்கம் கசஎசு).

எச்சதத்தன் - 1215. விசாரசருமனுரென்னும் சண்டீசரின் தந்தை.

எயினனூர் - 608. ஏனதிநாத நாயனுருடைய ஊர். தலவிசேடம் பார்க்க. (பக்கம் அஉசு)

எரி - 797. தீக்கடவுள்.

எறிபத்தர் - 551, 556, 570, 591, 594, 604, 607. அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவர்.

எழுத்தஞ்சும் - 1214. ஸ்ரீபஞ்சாட்சரம் - சிவமூலமந்திரம்.

ஏயர்பெருமான் - 881. ஏயர்கோன்கலிக்காம நாயனுர். அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவர். ஏயர்கோனுர் 884. கலிக்காமர் 899. ஏயர்குலமன்னவனுர் 900. மானக்கஞ்சாறரது புதல்வியாரின் கணவனுர்.

ஏனதிநாதனுர் - 609, 614, 618, 632, 644, 649. ஏனதிநாதர் 607; அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவர்.

ஐயரே! - 1070. திருநாளைப்போவாரைத் தில்லைவாழந்தணர் விளித்தது.

ஐயர் - 719. திண்ணனுர். (2) இறைவனுர் 776.

கஞ்சாறூர் - 866. தலவிசேடம் (பக்கம் ககசுக) பார்க்க. கஞ்சாறு 871.

கடைகாப்போர் - 577. அரசரது அரண்மனை வாயிற் காவலர்.

கணமங்கலம் - 903. அரிவாட்டாய நாயனுரது ஊர். தலவிசேடம் (பக்கம் கககo) பார்க்க.

கம்பைமாநதி - 1137. தொண்டை நாட்டின் ஆறுகளுள் ஒன்று. காஞ்சிபுரத்தின் தீர்த்தங்களுள் ஒன்று. (பக்கம் கசசுo).

கரிகாற் பெருவளத்தோன் - 1162. பெரும்புகழ்கொண்ட சோழ அரசர். காஞ்சிபுரத் திருநகரங்கண்டவர். இமயமலையில் புலிக்கொடி நாட்டியவர்.

கருநாடர் - 978. கானக் கடிசூழ் வடுகக் கருநாடர் காவன் மன்னன் 978; 991. தமிழ் நாட்டின் வடக்கில் கருமண் ணிலப்பரப்புள்ள தேசம் கருநாடு எனப்படும்.

கருவூர் - 552. சோழ மன்னர்களின் தலைநகரங்கள் ஐந்தனுள் ஒன்று. தலவிசேடங் காண்க. (பக்கம் எசுஅ). இதன் ஆறு ஆகிய ஆம்பிரநதி என்பது சங்க நூல்களில் வழங்கப்படும் ஆன் பொருனை என்பதன் மரூஉ என்பர்.

கலயனூர் - 830. கலயர் 835, 848, 850, 852, 854, 856, 858, 865. குங்குலியக்கலய நாயனுர். அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவர்.

கலிகைமாநகர் - 1096. இது தக்கோலம் என்றும், திரு ஊறல் என்றும் வழங்கப்படும். தொண்டை நாட்டில் தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்று. (பக்கம் கசகசு).

கன்னிகாப்பு - 1152. காஞ்சிபுரத்தின் பல பெயர்களுள் ஒன்று.

காசிபகோத்திரம் - 1215. விசாரசருமனுர் (சண்டேசநாயனுர்) அவதரித்த கோத்திரம்.

காஞ்சி - 1125. காஞ்சிபுரம். தலவிசேடம்-பக்கம் - கடுஉ - பார்க்க. இது காஞ்சி புரத்தில் ஒரு ஆற்றுக்கும் பெயராய் வழங்கும். காஞ்சியாந் திரு நதி 1152.

காஞ்சித்தானம் - 1152. காஞ்சிபுரத்திலுள்ள அற்புதத் தானங்களுள் ஒன்று.

காப்புடைத் தீர்த்தம் - 1155. காஞ்சிபுரத்தில் உள்ள சுர ரட்சிதம் என்னும் புண்ணிய தீர்த்தம்.

காரி - 1159. ஐயனுர் ; அரிகரபுத்திரர் என்ப. "செண்டுகையேந்தி வித்தகக் கரி மேற் கொளும் காரி." இவர் வரலாறு கந்தபுராணத்தினுட் காண்க. அசுரகாண்டம் - மகாசாத்தாப் படலம் - 50 - பார்க்க.

குலோத்துங்கச் சோழன் - 1213. அநபாயச்சோழரின் பெயர்.

குறிஞ்சியாழ் - 1087. குறிஞ்சி நிலத்துக்குரிய யாழ் வகை.

சதமகனகரம் - 553. தேவேந்திரனது தலைநகர்.

சாநவ தீர்த்தம் - 1155. காஞ்சிபுரத்தில் உள்ள புண்ணிய தீர்த்தங்களுள் ஒன்று.

சிவகாமியாண்டார் - 558, 590. ஆனிலையடிகளார்க்குத் திண்ணிய அன்பு கூர்ந்த புண்ணிய முனிவர். அப்பெருமானுக்கு நாணுளும் அதிகாலையில் முறைப் படி பூப்பறித்து அலங்கல் சாத்தி நியதிதவறுது ஒழுகுபவர். இவரது திருத்தொண்டினை முன்னிலையாக் கொண்டு எறிபத்தநாயனுர் சரிதம் நிகழ்ந்தது. சிவகாமியார் - 563, 600, 604.

சிவபெருமான் - முதற்பகுதி - பெயர் விளக்கம் பார்க்க. மழவிடையுடையான் 551 ; பொருட்டிருமறை கடந்த புனிதர் 556 ; இருட்கடு வொடுங்கு கண்டத் திறையவர் 556 ; அழலவிர்சடையான் 557 ; ஆனிலையடிகளார் 558 ; (களியானையினீருரியாய் ! 566 ; எளியார் வலியா மிறைவா ! 566 ; அளியாரடியாரறிவே ! 556 ; தெளிவாரமுதே ! 566 ; வேறுண்ணினைவார் புரம் வெந்தவியச் சீறும் சிலையாய்! 567 ; மறவிக் கிறைநீள் செஞ்சே வடியாய் ! 568) நெடியோ னறியா நெறியார் 569 ; மன்றவர் 570 ; எந்தையார் 571, 822, 1160 ; அண்ணல் 573 ; மன்று ளென்று நிருத்தமே புரியும் வெள்ளிக் குன்றவர் 585 ; குழையணிகாதினுன் 587 ; அம்பலவாணர் 588 ; வானவரீசர் 590 ; பன்னகாபரணர் 590; அங்கணர் 592, 753 ; களமணிகளத்துச் செய்ய கண்ணுதல் 597 ; திங்கட்கொழுந்தணி வேணிக்கூத்தர் 598; அருமறைப் பொருளாயுள்ளார் 600 ; பொன்னெடும் பொதுவி லாட னீடிய புனிதர் 603 ; தம்பிரான் 604, 809, 921, 986, 1148 ; அம்பல நிறைந்தார் 604 ; கொற்றவர் 605 ; நம்பர் 606, 847, 1263 ; தேனுருந் தண்பூங் கொன்றைச் செஞ்சடையவர் 607 ; வானுளுந் தேவர்போற்று மன்றுளார் 607; தானுந் தடமுடியுங் காணுதார் 611 ; நஞ்சணிகண்டர் 633 ; அண்டர்பிரான் 645, 1261 ; மின்னின்ற செஞ்சடையார் 647 ; பொற்றொடியாள் பாகனுர் 648 ; உம்பர்பிரான், காளத்தி உத்தமர் 649 ; திருக்காளத்தி மன்னனுர் 830 ; கங்கைவாழ் சடையார் 830 - எறிநீர்க் கங்கை தோய்ந்தநீள் சடையார் - கூற்றைக் காய்ந்த சேவடியார் 831 ; பெருநதியணியும் வேணிப் பிரான் 835 ; காலனுருயிர் செற்றூர் 836 ; கங்கைநீர் கலிக்குஞ் சென்னிக் கண்ணுதல் 837 ; தங்கணையகர் 837 ; ஆறு செஞ்சடைமேல் வைத்த அங்கணர் 843; விடையவர் 843 ; என்னையுடையவர் - எம்மையாளு மொருவர் ; சடையவர் 843 ; 1263 ; நாதன் 845; எம்பிரான் 846; காலனைக் காய்ந்த செய்ய காலனுர் 847 ; கங்கை அலைபுனற் சென்னியார் 848 ; அல்லொத்த கண்டனெம்மான்

849 ; எந்தையெம் பெருமானீசன் 850 ; கண்ணுதல் 851 ; ஊர்தொறும் பலிகொண் டுய்க்கு மொருவன் 852 ; செங்கண் வெள்ளேற்றின் பாகன் - திருப்பனந்தாளின் மேவு மங்கணன் 853 ; மின்னெறித் தனைய வேணி விகிர்தன் 854 ; மழுவுடைச் செய்ய கையர் 855 ; தேனலர் கொன்றையார் 857 ; அண்ணலார் 858 ; விண்பயில் புரங்கள் வேவ வைதிகத் தேரில் மேருத் திண்சிலை குனிய நின்றார் 860 ; எம்பிரான் 861 ; மண் பகிர்ந்தவனுங் காணு மலரடி 860 ; மன்றிடை யாடல் செய்யும் மலர்க் கழல் 861 ; நாறு பூங்கொன்றை வேணி நம்பர் 863 ; கருப்பு வில்லோனைக் கூற்றைக் காய்ந்தவர் 864 ; சிவபத நிழல் 864 ; கூனற்றண் பிறையினர் 865 ; மேலாறு செஞ்சடைமேல் வைத்தவர் 866 ; மெய்ப்பொருள் 872 ; பணியினெடும் அணி வுடைய சடைமுடி 873 ; ஆறுலவுஞ் சடைக்கற்றை யந்தணர் 874 ; அரியறியா மலர்க்கழல்கள் 875 ; குழைக்கலியும் வடிகாதிற் கூத்தனார் 876 ; கருமிடற்று மறையவனார் 881 ; உம்பர்பிரான் 886 ; மருள்செய்த பிறப்பறுப்பார் 895 ; மறைப்பொருளாமவர் 896 ; மதிக் கொழுந்தலைய விழுங்கங்கை குதித்த சடைக் கூத்தனார் 897 ; விடைமேற் கொண்டு நின்றவர் 898 ; ஐயர் 898 ; 965; இண்டைவார் சடைமுடியார் 829 ; புனிதனார் 900 ; வானவர் நாயகர் 785, 901 ; ஒருவர் 902; மாயனார் மண்கிலேத் தறியாத வத் தூய நாண்மலர்ப் பாதம் 907 ; மின்னு செஞ்சடை வேதியர் 908 ; வேதமுதல்வர் ; பாவைபங்கர் 910 ; மாலயற் கரியார் 912 ; மூவனார் 915 ; முதல்வனார் 788, 916 ; பூதநாயகர் 917 ; அல்லல் தீர்த்தாள வல்லார் 918 ; ஆட்கொள்ளுமையர் 919 ; அம்பலத்தாடு மையர் 920 ; (பரனே! 922 ; அடியிடை பாகமான தூயநற்சோதி! 922 ; பொடியணி பவளமேனிப் புரிசடைப் புராண ! 922 ;) இடபவாகனர் 923 ; மன்றுளேயாடுமையர் 923 ; பரம் பொருளாகியுள்ள பெரியவர் 924 ; முதல்வனார் 925 ; பேயுடனாடுபிரான் 934 ; எம்பிரான் 939, 1146 ; மருங்குதாழ் சடையார் 946 ; உடையவர் 946 ; வன்பூதப் படையாளி 947 ; ஆறுலவு சடைமுடியார் 950 ; திருவாளன் 951 ; மொய்வாச நறுங்கொன்றை முடிச்சடையார் 961 ; பொய்யன்புக்கெட்டாத பொற்பொதுவினட மாடும் ஐயன் 962 ; காலனிகாரணராங் கண்ணுதலார் 963 ; இசைவிரும்புங் கூத்த னார் 964 ; முதல்வனார் 965 ; புண்ணியனார் 966 ; செஞ்சடைக்கூத்தர் 967 ; ஏறுகைத்தேறுவார் 975 ; ஆலம்பெருமான் 976 ; அந்திப்பிறை செஞ்சடைமே லணி யாலவாயி லெந்தை 977 ; மேருவில்லான் 980 ; அரவஞ் சுடர்த்திங்க ளோடும் வாழும் சடையான் 981 ; செக்கர்ச்சடையார், விடையார், திருவாலவா யுள் முக்கட்பரனார் 982 ; தெள்ளும்புனல் வேணியர் 984 ; நட்டம்புரிவார் 987 ; தம்பிரானார் 988 ; சங்கரன் 991 ; அரனார் 992 ; பூங்கொன்றை மிலைந்தவர் 1000 ; சிவம் 1006 ; ஐயன் 1008 ; தொல்லை ஏனந்தேடுங் கழலார் 1010 ; நுதலின்கண் விழித்தவர் 1013 ; நாதன் 1015 ; தாது சூழுங் குழன்மலியா டளிர்க்கை சூழுந் திரு மேனி மீது சூழும் புனற்கற்றை வேணிநம்பர் 1017 ; அண்டர்பெருமான் 1020 ; நாகம்பூணவர் 1021 ; விடைமேல் வருவார் 1022 ; சுருதி மலருந் திருவாயிற், காட்டு முறுவ னிலவலரக் கனக வரையிற் பன்னகாண், பூட்டு மொருவர் 1024 ; பரமர் 1026 ; அன்ன வடிவு மேனமுமா யறிவா ரிருவ ரறியாமல் மன்னும் புகலூ ருறைவார் 1028; செங்க ணடலே றுடையவர் 1029; அரவம்அணிந்த அரையார் 1030 ; கரவி லவர்பால் வருவார் 1030 ; ஆனஞ்சிப்பன வஞ்சுகந் தாடுவார் 1032; செங்கண்மால் விடையார் - செழும்பொன்மலி வல்லிபங்கினர் 1033; மாயனு ரறியா மலர்ச்சேவடி 1034 ; தள்ளுவெண்டிரைக் கங்கைநீர் ததும்பிய சடையார் 1036 ; உமையிட மகிழ்ந்தவர் 1037 ; ஆடுசேவடி 1039 ; அயில்கொள் முக்குடுமிப்

படையார் 1040 ; சிவன் 1051 ; பிறைக்கண்ணிப் பெருந்தகை 1052 ; கூரிலைய முக்குடுமிப் படையண்ணல் 1051 ; தேவர்பிரான் 1054 ; சிவலோகன் 1056 ; காரேறுமெயிற்புன்கூர்க் கண்ணுதலார் 1057 ; சிவலோகமுடையவர் 1058 ; வடங் கொண்ட பொன்னிதழி மணிமுடியார் 1059 ; தம்பெருமான் 649, 873, 937, 1023, 1069, 1126, 1140, 1254, 1059 ; ஈசர் 1060 : எம்பெருமான் 1000, 1061, 1069 ; மைவண்ணத்திருமிடற்றர் 1066 ; அம்பலத்தாளாடுவார் 1066 ; மெய்ப்பொருளாளர் 1068 ; அம்பலவர் 1069, 1070, 1077 ; பிஞ்ஞகர் 809, 1071 ; இறையவர் 1071 ; நடமாடுங்கழல் 1072 ; அருமறைசூழ் திருமன்றில் ஆடுகின்றகழல் 1074 ; கொல்லிமான் மறிக்கரத்தார் 1075 ; உலகுய்ய நடமாடும் எல்லே 1075 ; சுந்தரத் தாமரை புரையுந் திருவடிகள் ; அந்தமிலா ஆனந்தப் பெருங்கூத்தர் 1076 ; தனியாயின தலைவர் 1078 ; கறை விளங்கிய கண்டர் 1082 ; செங்கண்மால் விடையார் - ஆறுசூழ்சடை யண்ணலார் 1090 ; உம்பர் நாயகர் 1091 ; நீறுசேர்திருமேனியர் 1096 ; தெள்ளுவார் புனல் வேணியார் 1127 ; எண்ணிலாகம மியம்பிய இறைவர் 1128 ; நாயகன் 1129 ; தேவ தேவன் 1130 ; எதமில்பல யோனி யெண்பத்துநான்கு நூறுயிரந்தனுள் வைத்த பேதமும் புரந்தருளுமக் கருணைப்பிரான் 1131 ; திங்கடங்கிய புரிசடையார் 1133 ; அவர் தனிப்பெருங்கணவர் 1134 ; பெருந்தவப் பயனுங் கம்ப மேவிய தம்பெருமான் 1135 ; உம்பர் நாயகர் 1136 ; கம்பமேவிய வும்பர் நாயகர் 1138 ; நாதர் 1139 ; அண்ணலார் 1140 ; தண்ணிலாமலர் வேணியினர் 1140 ; மாவின்மேவிய தேவநாயகர் 1141 ; கம்பர் 1142, 1164 ; ஏகம்பர் 1142 ; ஆதிதேவனர். 1143 ; வேதகாரண ராய வேகம்பர் 1144 ; அண்டர் நாயகர் 1145 ; விடையின் மேலவர் 1147 ; சென்னியிற் பிறையணிந்தவர் 1152 ; இறைவர் 1153 ; உமைபாகர் 1165 ; அளவில்சுடர்ப் பிழம்பானர் 1168 ; வன்புலியினுரியாடைத் திருவேகம்பர் 1169 ; நிறைதவஞ்செ யிமயப் பாவை நகிலுழுத சுவடும்வளைத் தழும்பும் பூண்ட நாயகனர் 1170 ; வானவர் நாயகர் திருவேகம்பர் 1176 ; கயிலைமலையார் 1178 ; மழவிளவெண் டிங்கள்புனை கம்பர் 1179 ; அண்ணலார் 1185, 1189 ; புரங்கடந்தவர் 1186 ; மைவிரவுகண்டர் 1187 ; நீரொலிக்க வராவிரைக்க நிலாமுகிழ்க்குந் திருமுடியார் 1190 ; தேசுடைய மலர்க்கமலச் சேவடியார் 1191 ; பொன்னிமயப் பொருப்பரை யின் பயந்தருளும் பூங்கொடிதை, னன்னிலைமை யன்றளக்க வெழுந்தருளு நம்பெருமான் 1192 ; மாறறியா மலரடிகள் 1193 ; மறிக்கரத்தார் 1198 ; காவாலி 1199 ; அணி வளைத்தழும்பர் 1202 ; தேனிறைந்த மலரிதழித் திருமுடியார் 1203 ; முக்கண்ணர் 1204 ; ஆடுங்கழல் 1220 ; நடமே புரியும் சேவடியார் 1221 ; மன்றுணடம்புரியும் நாயனர் 1225 ; முதற் காரணராகு நீலகண்டர்-செய்ய சடைநிருத்தர் 1226 ; உழை மான் மறிக்கன்று துள்ளுங்கரத்தார் - சுரநதிநீர் தெள்ளும் சடையார் 1227 ; மன்று ளாடும் சேவடிகள் 1228 ; சிவனர் 1236 ; செங்கண் விடையார் 1237 ; 1265 ; புனிதர் 1238 ; அண்டர் பெருமான் 1240 ; ஆளவுடையார் 1241 ; உம்பர்பிரான் 1242 ; இறையோன் 1243 ; அரனர் 555, 1253, 1264 ; உடையநாதன் - 1252 ; அரவமேவுஞ்சடை முடியார் 1253 ; செறிந்த சடைநீள் முடியார் 1257 ; விமலமூர்த்தி 1258 ; தொடித்த விதழி சூழ்சடையார் 1259 ; சிவமயம் 1260 ; அண்டர்பிரான் 1261 ; மூலமுதல்வர் 1263 ; ஈறிலாதார் 1264. நீலநிறைந்த மணிகண்டத்தீசன் 1265 ;

சிவலோக முடையவர் - 1056, 1058. சிவலோகன். திருப்புன்கூர்ச் சுவாமி பெயர்.

சூர் அரமகளிர் - 688. மலையில் வாழும் ஒருவகைத் தேவச்சாதி மகளிர்.

செவ்வழியாழ் - 1115. நெய்தனிலத்துக்குரிய யாழ்வகை.

சோணூர் - 1081. தமிழ் நாட்டு முடியுடை மூவேந்தர்கள் மரபில் சேரர் மரபு ஒன்று. இதனைச் சேர்ந்த அரசர்கள் சேரர்கள் எனப்படுவர்.

சேய்ஞலூர் - 1206. சண்டீச நாயனார் அவதரித்த தலம். தலவிசேடம் (பக்கம் கசுகசு) பார்க்க; சேய்ஞலூர்ப் பிள்ளையார் - 1242, 1263.

சைவம் - 1012. சிவசமயம். சித்தாந்த முதற் சைவ சமயம். உலகெங்கு நிரம்பிய சைவம் 1012. முதற் சைவம் 1006.

தமிழ் - 970. அருந்தமிழ் 1095. தமிழ்மொழி மிகப் பழமையும் பெருமையும் வாய்ந்தது. ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ் 970; உரை பார்க்க. சால் பாய முன்மைத் தமிழ் 971. மெய்மைப் பொருளாந் தமிழ் நூலின் விளங்குவாய்மைச் செம்மைப் பொருள் 974.

தாயனூர் - 907. அரிவாட்டாய நாயனார். அறுபான்மும்மை நாயன்மார் களுள் ஒருவர்.

திங்கள் - 691. மாமதி 707. சந்திரன்.

திருக்கழுக்குன்றம் - 1091. தொண்டை நாட்டில் தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. (பக்கம் கசகசு).

திருக்காமக் கோட்டம் - 1148. காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மையார் எழுந் தருளி யிருக்கும் தனிப்பெருங் கோயில். பக்கம் கசளசு பார்க்க.

திருக்குறிப்புத்தொண்டர் - 1077. திருக்குறிப்புத்தொண்ட நாயனார். அறு பத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவர்.

திருத்தலையூர் - 1031 - உருத்திரபசுபதி நாயனாரின் தலம். தலவிசேடம் (பக்கம் கசுடுஉ) பார்க்க.

திருத்தில்லை - 1060. சிதம்பரம். தலச்சிறப்பு - 238 முதல் 252 வரை உள்ள திருப்பாட்டுக்களையும் ஆண்டுரைத்தவைகளையும் பார்க்க.

திருப்புன்கூர் - 1056. சோழநாட்டுத் தலங்களுள் ஒன்று. திருநாளைப்போவார் சரிதநிகழ்ச்சியில் ஒருபகுதி நிகழ்ந்த தலம். ஏயர்கோனாரிடம் 24 வேலி நிலம்கொண்ட வரலாறு காண்க. " பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும் செய்கை " - நம்பி கள் தேவாரம். தலவிசேடம் - பக்கம் - ஙகஉ - முதற்பகுதி - பார்க்க. (261)

திருப்பெரும்பெயரிநுகிகை - 1152. காஞ்சிபுரத்தில் ஒரு கோயிலின் பெயர். இது கச்சி ஆனந்தருத்திரேசர் கோயில் என்ப.

திருமயிலாபுரி - 1117. இது மயிலாப்பூர் எனவழங்கும். தொண்டைநாட்டுப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. (பக்கம் கசசo). திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரமருளி எலும்பைப் பெண்ணாக்கிய திருத்தலம்.

திருமுல்லைவாயில் - 1095. தொண்டைநாட்டில் தேவாரப்பாடல்பெற்ற தலங் களுள் ஒன்று. (பக்கம் கசகஅ).

திருவாலவாய் - 974, 999, 1010. மதுரையில் இறைவனார் எழுந்தருளியிருக் கும் திருக்கோயிலின் பெயர். நகரத்துக்கும் பெயராக வழங்கும்.

திருவான்மியூர் - 1117. தொண்டைநாட்டில் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. (பக்கம் கசசo).

திருவிடைச்சுரம் - 1090. தொண்டைநாட்டுத் தேவாரப் பாடல்பெற்ற தலங் களுள் ஒன்று. தலவிசேடம் (பக்கம் கசகசு) பார்க்க.

திருவேல்லை - 1063, 1065. திருத்தில்லையம்பதியின் நாற்புறத்தினும் காத தூரத்தில் உள்ள எல்லையின் அமைப்பு.

திருவோற்றியூர் - 1116. தொண்டைநாட்டில் தேவாரம்பெற்ற தலங்களுள் ஒன்று. (பக்கம் கசஉஅ).

துந்துபி - 663. தேவ வாத்தியங்கள். ஓசை ஐந்து 750.

தொண்டைநன்னாடு - 1078. திருக்குறிப்புத்தொண்ட நாயனாரது நாடு. 1078 முதல் 5 பாட்டுக்களையும் ஆண்டு உரைத்தவையும் பார்க்க.

நந்தனார் - 1051. திருநாளைப்போவார் நாயனாரின் பிள்ளைத் திருநாமம்.

நந்திமால்வரை - 1098. தொண்டை நாட்டிலுள்ள மலைத் தொடர்களுள் ஒன்று. இதனின்றும் பாலாறு உற்பத்தியாகிறது.

நாளைப்போவார் - 1040. திருநாளைப்போவார் நாயனார். நந்தனார் என வழங்கப் படுவர். அறுபான் மும்மைநாயன்மார்களுள் ஒருவர்.

நிதிக்கோன் - 1178. குபேரன்.

பசுபதியார் - 1030 - 1033. உருத்திரபசுபதி நாயனார். அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவர்.

பட்டவர்த்தனம் - 561, 601; 776. அரசர் பட்டத்து யானையின் பெயர்.

பதும மாநாகம் - 1132. மாநாகங்கள் எட்டனுள் ஒன்று. (பக்கம் கசடுசு).

பவித்திரை - 1216. விசாரசருமனாரின் (சண்டேசநாயனாரின்) தாய்.

புகலூர் - 1017. திருப்புகலூர். (பககம - கஙகள). தலவிசேடம் (பக்கம் - கஙஙச) பார்க்க. முருகநாயனார் அவதரித்துப் பணிசெய்து பேறடைந்த தலம்.

பாதூர் - 1109. திருப்பாதூர். தொண்டைநாட்டில் தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. (பக்கம் கசஙக).

பாண்டிநாடு - 968. மூர்த்திநாயனார் அவதரித்த நாடு; தமிழ்நாடு எனப்படும். பாண்டிய மரபு மன்னர்களால் அரசுபுரியப் பெற்றமையால் இப்பெயர் பெற்றது. பாண்டியர் தமிழ்நாட்டு முடியுடை மூவேந்தர்களுள் ஒருவர். தமிழ்நாடு 979.

பார்வை - 652, 720.

பாலி - 1099. தொண்டைநாட்டின் சிறந்த ஆறு. (பக்கம் கசஉக).

பூமகள் - 1172. இலக்குமிதேவி.

பிள்ளையார் - 862, 1027. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். காழித்தலைவ ராம் பிள்ளை 862. தெள்ளுமறைகள் முதலான ஞானம் செம்பொன் வள்ளத்தில் அள்ளி யகில மீன்றளித்த வம்மை முலைப்பாலுடனுண்ட பிள்ளையார் 1027. அழகார் புகலிப் பிள்ளையார் 1029. சரிதமும் பிறவும் அவர் புராணத்துட்காண்க.

புகழ்ச்சோழர் - 561. அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவர். அத்திருக் கூட்டத்தினுள் முடிமன்னர் அறுவருள் ஒருவர். (புராண வரலாறு ஙசு.) எறிபத்த நாயனாரது அன்பின்திலை வெளிப்படக் காரணராயிருந்தவர். இவரது சரிதநிழ்ச்சி எறிபத்தநாயனர் புராணத்திலும் இவர்தம் புராணத்தினும் காண்க. (பக்கம் எகசு.)

பொன்மலை - 552. இமயமலை என்றும் கூறுப.

பொன்னிநாடு - 831, 903. சோழநாடு. பொன்னி என்னும் காவேரிபாய்வது.

போகபீடம் - 1160. திருக்காமக்கோட்டம்.

மங்கலதீர்த்தம் - 1155. காஞ்சிபுரத்தின் புண்ணிய தீர்த்தங்களுள் ஒன்று. செவ்வாய்க்கிழமையில் இதனுள் மூழ்குதல் சிறப்புத் தருவதென்ப.

மங்கலம் - 932. ஆனயநாயனர் அவதரித்த ஊர். தலவிசேடம் - பக்கம் கஉஙக.

மண்ணி - 1206; 1211. சோழநாட்டின் ஆறுகளுள் ஒன்று. கொள்ளிடத்தி னின்றும் பிரிந்து ஓடுவது. (பக்கம் கடுசுடு).

மதுராபுரி - 971. மூர்த்திநாயனார் அவதரித்த பழம்பதி. மதுரை என்று தேற்றம்பெற வழங்கப்பெறும். தலவிசேடம் (பக்கம் கஉகக) பார்க்க.

மலைநாடு - 1081. சேரர்நாடு. (பக்கம் கசoச.)

மருதயாழ் - 1110. மருதநிலத்துக்குரிய யாழ்வகை.

மாற்பேறு - 1108. திருமாற்பேறு. தொண்டை நாட்டில் தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்று. (பக்கம் கசஙo). விட்டுணுமூர்த்தி இறைவனைப் பூசித்துச் சக்கரப்பேறு பெற்ற திருத்தலம்.

மாமல்லை - 1118. மாவலிபுரம். (பக்கம் கூசசஉ).

மானக்கஞ்சாறனார் - 872. அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவர். கஞ்சாறர் 885. ஏயர்கோன் கலிக்காமநாயனாரின் மாமனார்.

முருகனார் - 1021. முருகநாயனார். அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவர். திருஞானசம்பந்தர் திருமணத்தில் சோதியினுள் முத்தி பெற்றவர்களுள் ஒருவர்.

மேற்காடு - 1041. நந்தனார் அவதரித்த நாடு. சோழநாட்டின் உட்பிரிவு களுள் ஒன்று.

மேன்மழ நாடு - 926. ஆனாய நாயனார் அவதரித்த நாடு.

யோகபீடம் - 1160. காஞ்சிபுரத்தில் முனிவர்களும் யோகிகளும் இருக்கும் அற்புதத் தானம்.

வல்லம் - 1107. திருவல்லம் என்பர். தொண்டை நாட்டில் தேவாரப்பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. (பக்கம் கசஉக).

விசாரசருமனார் - 1217. சண்டேச நாயனாரது பிள்ளைத் திருநாமம்.

விநாயகக்கட்வுள் - அஞ்சு வான்கரத் தாறிழி மதத்தோ ரானை 1158.

வென்றிமங்கை - 718. செயலட்சுமி என்பர்.

வைரவக்கடவுள் - அரையிருட் டிரியு மஞ்சு நீள்வது போலுமா மேனி மலர்ப் பதங்களில் வண்சிலம் பொலிப்ப, நஞ்சு பிலிகெயிற் றரவவெற் றரையி னும மூன் றிலைப் படையுடைப் பிள்ளை 1158. சிவகுமாரர்கள் நால்வருள் ஒருவர்.

---

## இரண்டாம் பகுதியின் மேற்கோள் நூலகராதி

(எண்கள் பாட்டு வரிசைஎண் குறிப்பன)

அகிலாண்டநாயகி பதிகம் 803.

அருணசல புராணம் 1120.

அற்புதத் திருவந்தாதி 778, 811, 908, 934, 981, 1052, 1060, 1169.

ஆசாரக்கோவை 808.

ஆத்திசூடி 759.

ஆநடையபிள்ளையார் திருவுலாமாலை 562.

இறையனாரகப்பொருள் 1122.

ஈங்கோய்மலை எழுபது 926.

உண்மை விளக்கம் 960.

ஐயடிகள் காடவர் கோனாயனார் க்ஷேத்திர வெண்பா 692, 1015.

கந்தபுராணம் 659, 661, 701, 714, 724, 772, 780, 839, 850, 910, 915, 976, 1015, 1016, 1098, 1120, 1130, 1152, 1154, 1158, 1159.
கந்தர்அனுபூதி 752.
கந்தர் கலிவெண்பா 661, 754, 813, 1257.
கம்ப ராமாயணம் 578, 656, 682, 701, 721, 776, 889, 970.
கயிலைபாதி காளத்திபாதி யந்தாதி 747, 751, 811.
கலிங்கத்துப்பரணி 1159.
கலித்தொகை 678, 1125.
காஞ்சிப்புராணம் 566, 1034, 1124, 1125, 1130, 1143, 1146, 1148, 1150, 1154, 1205.
காரைக்காலம்மையார் - மூத்ததிருப்பதிகம் 697.
கோயிற்புராணம் 1072, 1213.
கோயிஞன்மணிமாலை 822, 838, 860, 1021.
சிதம்பர புராணம் 1213.
சிதம்பர மும்மணிக்கோவை 588.
சிந்தாமணி 1044.
சிலப்பதிகாரம் 625, 658, 660, 692, 700, 930, 953, 973, 978, 1092, 1159, 1162.
சிவஞானசித்தியார் 604, 620, 745, 752, 765, 780, 803, 813, 873, 920, 925,934,1012,1013,1022,1032,1132,1158,1164, 1195,1217, 1264.
சிவஞானபோதம் 587, 734, 748, 752, 753, 754, 784, 803, 824, 843, 873, 920, 961, 975, 981, 1152.
சிவதருமோத்தரம் 836, 1224.
சிவப்பிரகாசம் 753, 960, 963, 1076, 1214, 1260.
சிவாட்டோத்தரம் 557.
சோளத்திப் புராணம் 743, 747, 751.
சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம் 555, 588, 590, 597, 606, 634, 644, 655, 707, 736, 750, 753, 754, 756, 760, 803, 817, 818, 821, 822, 826, 827, 865, 873, 907, 931, 951, 954, 962, 971, 975, 1013, 1019, 1033, 1095, 1098, 1113, 1119, 1127, 1140, 1148, 1192, 1205, 1260, 1264.
சூளாமணி 757.
சேக்கிழார் 1177.
சேதுபுராணம் 980.
ஞானமிர்தம் 698.
தணிகைப்புராணம் 1158.
தாயுமானவர் - 604, 637, 836, 1186.
திரிகடுகம் 1033.
திருக்கண்ணப்பதேவர் திருமறம் (ரக்கீர்) 627, 684, 691, 772, 738, 786, 804, 805, 827.
திருக்கண்ணப்பதேவர் திருமறம் (கல்லாடர்) 686, 753, 813, 827.
திருக்கயிலாய ஞானவுலா 879, 970, 1040.

*திருக்களிற்றுப்படியார்* 605, 755, 925, 975, 1260.

*திருக்கழுமல மும்மணிக்கோவை* 1242.

*திருக்குறள்* 552, 557, 587, 591, 601, 609, 610, 614, 621, 634, 637, 650, 671, 689, 690, 734, 746, 761, 789, 806, 820, 838, 840, 875, 883, 895, 911, 975, 978, 980, 983, 995, 996, 1032, 1045, 1051, 1146, 1171, 1201, 1204, 1216, 1247 (*பரிமே - உரை*).

*திருக்கோவையார்* 590, 662, 687, 717, 781, 880, 958, 959, 1200, 1209.

*திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரம்* 553, 557, 558, 562, 569, 572, 582, 609, 634, 643, 660, 661, 681, 692, 743, 747, 751, 770, 778, 779, 780, 795, 800, 817, 820, 827, 836, 852, 855, 862, 865, 866, 870, 872, 873, 885, 888, 890, 895, 898, 899, 903, 907, 909, 913, 916, 929, 931, 934, 955, 956, 958, 968, 976, 978, 981, 983, 984, 991, 999, 1017, 1019, 1020, 1022, 1026, 1030, 1032, 1035, 1040, 1044, 1052, 1053, 1062, 1080, 1084, 1093, 1096, 1103, 1107, 1108, 1113, 1119, 1123, 1126, 1129, 1188, 1201, 1207, 1214, 1259.

*திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்* 551, 555, 557, 558, 559, 566, 567, 568, 583, 588, 597, 607, 611, 617, 634, 641, 648, 656, 660, 662, 678, 688, 692, 697, 699, 746, 750, 753, 754, 757, 770, 772, 780, 784, 787, 788, 802, 803, 808, 811, 818, 835, 836, 838, 844, 847, 852, 858, 862, 866, 873, 887, 888, 889, 890, 894, 898, 907, 916, 918, 922, 934, 935, 954, 963, 964, 965, 969, 972, 976, 977, 981, 984, 993, 994, 1006, 1012, 1019, 1021, 1030, 1031, 1034, 1036, 1052, 1055, 1057, 1061, 1067, 1074, 1095, 1097, 1117, 1143, 1145, 1146, 1150, 1158, 1161, 1165, 1175, 1185, 1190, 1214, 1240, 1241, 1242, 1257, 1259.

*திருப்புகழ்* 627.

*திருமந்திரம்* 556, 593, 661, 662, 645, 685, 734, 751, 758, 780, 781, 784, 841, 853, 984, 995, 1014, 1034, 1057, 1128, 1158, 1218, 1244, 1254.

*திருமுருகாற்றுப்படை* 564, 627, 654, 659, 660, 661, 687, 688, 753, 781, 835, 866, 872, 873, 931, 959, 972, 1152, 1207, 1208.

*திருவருட்பயன்* 555, 652, 830, 1214.

*திருவாசகம்* 557, 559, 567, 569, 583, 584, 605, 607, 617, 641, 643, 644, 650, 662, 694, 707, 711, 720, 750, 751, 752, 753, 754, 755, 756, 761, 765, 770, 777, 780, 781, 784, 793, 808, 818, 819, 836, 838, 843, 850, 852, 860, 864, 887, 908, 919, 945, 946, 957, 963, 968, 974, 976, 985, 992, 1008, 1016, 1019, 1020, 1021, 1032, 1033, 1055, 1056, 1058, 1059, 1076, 1090, 1143, 1150, 1181, 1185, 1189, 1190, 1202, 1264.

*திருவாதவூரர் புராணம்* 761, 777, 915, 980, 1015.

திருவாய்மொழி 1118.
திருவாரூர் மும்மணிக்கோவை 780, 941, 1022.
திருவிசைப்பா 566, 778, 794, 810, 860, 930, 962, 983, 1008, 1035, 1039, 1250. திருப்பல்லாண்டு 551, 1188, 1261.
திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 750, 777, 797, 811, 990, 1062.
திருவிளையாடற்புராணம் 582, 612, 779, 820, 839, 844, 890, 913, 933, 959, 962, 971, 1052, 1075, 1127, 1143, 1214, 1263.
திருவுந்தியார் 784, 975, 1158.
திருவுருத்திரம் 1034; 1036; 1037.
திருவொற்றியூர் ஒருபாவொருபஃது 1040.
தொண்டைமண்டலம் சதகம் 1081.
தொல்காப்பியம் 620, 653, 672, 686, 698, 750, 807, 872, 944, 948, 978, 1045, 1095, 1120, 1180, 1242, 1255.
நன்னூல் 692, 978, 1242.
நாலடி 832, 1049.
நால்வர் நான்மணிமாலை 954, 1235.
நீதிநெறி விளக்கம் 1016.
நெஞ்சுவிடுதூது 751.
பஞ்சாக்கரப் பஃறொடை 829.
பட்டினப்பாலை 1206.
பதார்த்தகுண சிந்தாமணி 652
பிங்கலம் 581, 688, 700.
புறநானூறு 562, 658, 675, 996, 1111, 1119.
புறப்பொருள்வெண்பாமாலை 992.
பெருந்தேவனார் பாரதம் 970.
பெரும்பாணாற்றுப்படை 652, 1045.
பேரூர்ப்புராணம் 753, 780, 805, 968.
பொருநராற்றுப்படை 761.
பொன்வண்ணத்தந்தாதி 555, 557, 722, 908, 919, 1138, 1214.
போற்றிக் கலிவெண்பா 562, 751.
போற்றிப்பஃறொடை 803.
மணிமேகலை 1206.
மதுரைக்காஞ்சி 1175, 1190.
மலைபடுகடாம் 1045.
வில்லிபுத்தூரார் பாரதம் 741.

# சேக்கிழார் செய்யுளணிக் குறிப்புக்கள்

## (இரண்டாம் பகுதி)

குறிப்பு :—இதுபற்றி முதற்பகுதியில் உரைத்தவை பார்க்க.

### சொல்லணிகளுட் சில

(தண்டியலங்கார முடையார் பின்வருநிலையைப் பொருளணிகளுள் வகுத்தனர்.)

**பின்வருநிலை.** 1. சொற்போருட் பின்வருநிலை :—சூழும்-1017 ; அளிப்பன - 1032 ; ~~அறியா 875~~ ; பற்று 975 ; 1216 ; ஒலிக்க - 1180 ;

2. சொற் பின்வருநிலை - சூழும் - 553 ; ஆடும் - 554 பாலூறும் - 834 ; சாறு - 871 ; பதி - 872 ; மங்கலம் 932 ; ஏத்த - 998 ; மலரும் 1024 ; காஞ்சி 1163 ;

3. பொருட் பின்வருநிலை - அங்கில - ஆனில 555 ; (ஒரு பொருளின் பல வேறுபாட்டை ஒருபொருட் பன்மொழியாற் கூறுதல்) துவைப்பு - முட்டு...582 ; பறழ் - குட்டி...675 ; அடிசில் - சோறு...683 ; அதிர்வு - ஆர்ப்பு...1175.

### பொருளணிகளுட் சில

1. தன்மை - இதனைப் பொருள் - குணம் - சாதி - தொழில் என நான் கின வகைப் படுத்திக் கூறுவர். தன்மையணியில் புராணத்தினுட் பல இடங்களிலும் பலப்பல திருப்பாசுரங்கள் காணலாம். ஒரு சில மட்டும் இங்குத் தரப்படுவன. இவற்றை உரிய வகுப்புக்களுட் பாகுபடுத்தி அன்பர்கள் அமைத்துக்கொள்ளக் கடவர். 606 ; 609 ; 613 ; 647 ; 648 ; 751 ; 777 ; ~~803~~ ; 836 - 840 ; 938 - 943 ; 983 ; 1046 - 1049 ; 1212 ; 1251 ; 1253.

2. உவமை - (1) தொழிலுவமம் - ~~(அ)~~ முழையரி யென்ன - 557 ; சண்டைக்கால் கொண்டு போவார் போல 564 ; செங்கண்வா ளரியிற் கூடி 572 ; இள வரியேறு போல - 578 ; கடைநாட் பொங்கும் கடலென 582 ; இறுகான் மேன்வந் தெழுந்தது போல 583 ; வெங்கட்புலி - பைங்கட் குறுநரி 617 ; அரவனையசரம் - உதவிய பண்பினர் 629 ; ~~சினத்தைச் சார அணைபவர்போல 732~~ ; நாய் பொறிகளி னளவள 734 ; கன்றகல் புனிற்றுப் போல்வர் 761 ; வங்கினைப் பற்றிப் போதா வல்லு டும் பென்ன 765 ; விளைத்தவன் புமிழ்வார் போல 772 ; எரிவாயின் வைத்ததென 796 ; ~~வேதித்தரு பெருஞ்சோதி~~ உன்மத்தர்போல 823 ; காபெறு கானம் போல 859 ; வடமீனே அனையவர் 915 ; பிறப்பரிவார் ஒத்தார் 919 ; நிலையாமை வெல்ல 991 ; விரைந்தணை வார்க ளேபோல் 992 ; தாயனள் 1078 ; ~~கோதி லாவமு தனையவள் 1194~~.

(ஆ) தொழில் பற்றிவந்த விரியுவமம் - தாய்போல் 1099.

(இ) தொழில் பற்றி வந்த இரட்டையுவமம் - கதிரோனெழ மழுங்கிக் கால்சாயுங் காலை மதிபோல் 615 ; 634 ; 643 ; கரியிடை புகைவிடு தழலை நிகர்த்தன 630.

(2) மெய்யுவமம் - வரைபோல் 562 ; 644 ; 701 ; கலைவளர் திங்களே போல் 691 ; மாமதிபோல 707 ; பிறை போல்வன - 708 ; அரியேறன்ன திண்மை 705 ; ஆளி யேறுபோல 717 ; மைவரை யென்ன 776 ; 997 ; மைக்கற்புரை நெஞ்சு 982 ; மாலோகநிலை 1166 ; பொன்றவ முருவிக் குன்றம் 585 ; மைத்தடங் குன்றுபோலும் 588 ; ~~ஆர்கலி ஏழு மொன்றுய் மன்னிய ஒலியின் 603~~ ; நீரிடை

நெருப்பெழுந் தனைய 1035 ; குன்றுபோலுமாமதில் 1162 ; நகை யென்னு நறுமுகை 880 ; பங்கயமானிதி போன்றுளார் 904 ; களிறுண் விளங்கனி 910 ; இது பயன்பற்றியும் வந்தது); கங்கை மேனதிகள் பல 1167 ; - 1168 ; 1169 ; 1170 ; 1174.

3. பயன்பற்றிய உவமம் - (அ) வேளாண் குடிமை வைப்பனைய 872 ; தேன்...செவி வார்ப்பதென 954 ; மணியும் நஞ்சு மளிக்கு மரவுபோல் 1215 ; பைங் கூழ்க்கு வானே என்ன 1229.

(ஆ) ஒரு பொருட்கண் பயன்பற்றிப் பல வந்த உவமம்-பண்ணின் பயனும் 1214.

4. உருவம்பற்றி வந்த உவமம் - அல்லது பண்புவமம் - மஞ்சேயென வீழ்மறலி - 568 ; பானற்குலமா மலரின் - 714 ; கைப்பற்றிய திண்சிலைக் கார்மழை மேகமென்ன - 716 ; கருமுகிலென்ன - 733 ; 810 ; மைக்கற்புரை நெஞ்சு 982 ; முகைத்த மலரின் வாசம்போல் 1218 ;

5. தொழிலும் பண்பும்பற்றி வந்த உவமம் - திருமலர்ப் பொகுட்டிருந்த னனையவர் 1037 ;

6. தொழிலும் மெய்யும்பற்றி வந்த உவமம் - (அ) விஞ்சையர் குமரரை வென்றனர் - 631 ; இனத்திடைப்பிரிந்த செங்கணேறென 820 ; அந்தணன் போல் 1073 ; பகட்டேர் நிகர்ப்ப 1119 ; மஞ்சு நீள்வது போலுமாமேனி 1158 ;

(ஆ) ஷி இருதலை உவமம் - தாரகையுமதியும் போல 1208 ;

(இ) தொழிலும் மெய்யும் பற்றிய உவமமும் - தன்மையணியும் விரவிய அணி- தகட்டுவராலெழு 1042.

7. இல்பொருளுவமம் - பண்பு - அல்லது உருவம் - பற்றி வந்த இல் பொருளுவமம் - (அ) பாதலம் விட்டுயர் ஞாலமுறும் பணிவீரர்கள் நா நிமிர்கின்றன ஒத்தன - 623 ; (இதில் தொழிலும் விரவியது); மணிநீல மலியொன்று வந்ததென்ன 701 ; இரவொடு பகல் அணைவன 731 ; இருளொதுங்கினுலே 779 ;

(ஆ) மெய்பற்றி வந்த இல்பொருளுவமம் - மலி விழிப்பன - 1119 ; கருணைக் கடல் உலகம் சூழ்ந்தால் மானும் 1163 ; கருவரை தனுவொடு கடுகியது 731 ; பணி தொடர்நிலே - 732 ;

(இ) தொழில் பற்றி வந்த இல்பொருளுவமம் - உயிரின்றி வாழும் யாக்கை - 996.

(ஈ) தொழிலும் மெய்யும்பற்றி வந்த இல்பொருளுவமம் - அழைக்கும் நரி 617.

8. தொழிலும் உருவமும் பற்றிவந்த உவமம் - புகையால் முகில் செய்வ - 928 ; கடலெனைக்கதறி - மைவரையனைய - 575 ; ஆர்கலி முழக்கம் காட்ட 750 ; கருங்கடலென்ன 781 ;

9. தொழிலும் பயனும் பற்றி வந்த உவமம் - அகழி ஆகம விதியின் வகுப்புப்போலும் 1164.

10. தொழிலும் மெய்யும் பயனும் உருவும் பற்றிவந்த உவமம்-பான்மதி யுவரியீன்றுலெனை 662 ; கருவரை காளமேகம் ஏந்தியதென்ன 664 ;

11. தொழிலும் மெய்யும் உருவும் பற்றி வந்த உவமம் - களிந்தி கன்னி ஒத்ததே 722 ; கடல்விரிபுனல் கொள விழுவன கருமுகில் 733 ;

12. மெய்யும் உருவும் பற்றிவந்த உவமம் - வென்றி மங்கை...பாதமுன் சென்று நீளுமாறு 718 ; குன்றியை நிகர்...எரி கொடுவிழி 739 ;

13. மெய்யும் உருவும் பயனும் பற்றிவந்த உவமம் - மஞ்சு தழைத்தென வலர்ந்த மலர்க் கூந்தல் 894 ;

14. தற்குறிப்பேற்ற உவமை :—(அ) - ஞாலமுறும் பணிவீரர்கள் நா நிமிர் கின்றன ஒத்தன 623; ஒத்தமை போரடுபடைகொ டளப்பவர் போல்பவர் 628; திரையெடுத்துக் கைகாட்டுவான் போல - 783;

(ஆ) தொடர்நிலைத் தற்குறிப்பேற்ற உவமை - 775, 783;

15. மெய்யுட் உருவும்பற்றிய உவமையையுள்ளுறுத்த தற்குறிப்பேற்றம்- (அகழி) கறுப்பும் உவர்ப்பு நீக்க அணைந்த கடல்போன்றது 1164.

16. நிந்தையுவமம் - மின்னுமென நீடிய மெய் 991.

17. ஒருவயிற் போலியுவமை - கொடிஞ்கள் வளைத்து - 624.

18. உருவகம் - வேலுழவர் 633; முத்தும் மணியும் வேடர் பொழிதரு மழை - 663; பொங்கொளிக் கரும்போ ரேறு 689; கானவர்க்கரிய சிங்கம் 690; சிலைக்கீழ்த்தங்கி 695; இருவினை வலி 734; மைதழையும் கண்டத்து மலைமருந்து 784; ஒருமையன்பினுருறு பாசம் 858; குலக்கொழுந்து 880; சேனைக்கடல் 978; வையந்தாங்கி 1011; பதிகச் செழுந்தேன் 1019; திருப்பாட்டினமுதம் செவிமடுக் கும் 1020; தீயிண்மஞ்சனம் 1077; கானகமழை - மணிமாரி 1171;

(ஆ) முற்றுருவகம் - காரெனும் பருவமல்லாள் 944;

(இ) தற்குறிப்பேற்றத்தை உள்ளுறுத்த உருவகம் - பொதிப்பொன் அவிழ்ப்பன - பொதிசோறு அவிழ்ப்பன 1113;

19. தற்குறிப்பேற்றம் - மதிபிரிவுற வருமெனவிழும் உழை 732; வான்மதி-மீயலினை இனமென 1120; எதிரெதிர்பயில 1122; வானளப்பன 1165;

20. தன்மையணியை உள்ளுறுத்த தற்குறிப்பேற்றம் - பரிதியோடு சந்தி ரன் - தலையுவாவிற்...கும்பிடச்சென்றுல் ஒக்கும் 778;

21. தற்குறிப்பேற்றமும் உருவகமும் சொற்சிலேடையும் விரவிய தொடர்நிலைத் தன்மை நவிற்சியணி - களங்கமின்றி விளங்கும் 1018; தேன் பொழியும் 1019; கண்ணீரரும்பும் 1020;

22. தற்குறிப்பேற்றம் - உவமை - உருவகம் - தன்மை நவிற்சி முத லிய பலவும் விரவிய கலவையணி - 867; 1041;

23. தற்குறிப்பேற்றக் குறிப்புடன் வந்த தன்மை நவிற்சி - கருவுயிர்க்க முருகுயிர்க்கும் - 1042; வானுபுதைய - வண்பலவின் 1044;

24. சொற்பின்வருநிலையுடன் கூடிய தன்மையணி - 1050; சீர்மை பணித்த முத்தம் 969; செவ்விமணஞ் செயீரம் 970; செய்யுள் மிக்கேறுசங்கம் 972; நித்திலஞ்சேர்ந்த கோவை 973;

25. ஒழித்துக்காட்டணியும் சிலேடையும் - 1183; 1184; 1185; இவற்றை நியம விலக்குச்சிலேடை என்பது தண்டியலங்காரம்.

26. எண்ணலங்காரம் - 1207;

27. உயர்வு நவிற்சி - 626; 627; 1071;

28. முதனிலைத் தீவகம் - (குணம்) 624.

29. நுட்பவணி - 615; 634; 643;

30. ஆர்வமொழி - 606; 647; 648; 751; 777; 803; 946; 983; 1205; 1213; 1264;

(முன் சேர்க்கை - முற்றும்)

திருச்சிற்றம்பலம்

மூன்றாவது

# இலைமலிந்த சருக்கம்

திருச்சிற்றம்பலம்

இலைமலிந்த வேனும்பி யெறிபத்தர்க் கடியேன் ;
ஏனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன் ;
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன் ;
கடலூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன் ;
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாற
னேஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன் ;
அலைமலிந்த புனன்மங்கை யாளர்க் கடியேன் ;
ஆரூர னாரிலம்மானுக் காளே.

திருத்தொண்டத்தொகை - (2)

திருச்சிற்றம்பலம்

# 8. எறிபத்தநாயனார் புராணம்

## தோகை

" இலைமலிந்த வேனம்பி யெறிபத்தர்க் கடியேன் "—திருத்தொண்டத்தொகை.

## வகை

" ஊர்மதின் மூன்றட்ட வுத்தமர்க் கென்றே ருயர்தவத்தோன்
ரூர்மலர் கொய்யா வருபவன் றண்டின் மலர்பறித்த
ஆர்மலே மேற்கொளும் பாக ருடறுணி யாக்குமவ
னேர்மலி மாமதில் சூழ்கரு வூரி லெறிபத்தனே "—திருத்தொண்டர் திருவந்தாதி.

## விரி

551. மல்லனீர் ஞாலந் தன்னுண் மழவிடை யுடையா னன்பர்க்
கொல்லிவந் துற்ற செய்கை யுற்றிடத் துதவு வீரா
செல்லியில் புகழின் மிக்க வெறிபத்தர் பெருமை யெம்மாற்
சொல்லலாம் படித்தன் றேனு மாசையாற் சொல்ல லுற்றும்.

**இலைமலிந்த கருக்கம்:**—திருத்தொண்டத்தொகையில் ' இலைமலிந்த ' என்று தொடங்கும் திருப்பாட்டிற் கூறிய எறிபத்தர் - ஏனாதிநாதர் - கண்ணப்பர் - கலயர் - கஞ்சாறர் - தாயர் - ஆனாயர் என்ற அடியார்களது சரிதங் கூறும் பகுதி. இம்முறையே இச்சருக்கத்து முதலில் ஆசிரியர் எறிபத்த நாயனார் புராணங் கூறத் தொடங்குகின்றார்.

**எறிபத்த நாயனார் புராணம்:**—அவ்வெழுவருள்ளே எறிபத்த நாயனாரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி.

தோகை:—இலைவடிவினதாய்ப் புகழ்மலிந்த மழுவாயுதத்தை ஏந்திய நம்பி யாகிய எறிபத்த நாயனார்க்கு நான் அடியேனுவேன்.

**இலைமலிந்த** - வேலுக்கு அடைமொழி. இலைவேல் எனக் கூட்டுக. **வேல்** - ஆயுதப் பொதுப்பெயர். ஈண்டு மழுவைக் குறித்தது. **நம்பி** - புருடரிற் சிறந்தோன்.

**எறிபத்தர்** - காரணங் குறித்து வந்த பெயரென்பர். அடியார்க்கு உறும் இடரைப் பரசு எறிந்து தீர்க்கும் வகையால் இறைவனிடத்துப் பத்திசெய்பவர் என்பது பொருள். தமது இயற்பெயரும் மரபும் முதலிய பிறவரலாறுகளால் விளங்காது பத்திச் செயலால் மட்டில் விளங்கிய பெருந்தொண்டர் என்க. அவர் எந்திய படையும் அது கொண்டு தொண்டு செய்து பேறு பெற்றமையும் பெயரும் தொகைநூலிற் கூறியபடி.

வகை:—**ஊர்மதில்** மூன்று - பறந்து செல்லுமியல்புடைய, மதில் சூழ்ந்த மூன்று நகரங்கள்; திரிபுரங்கள். **ஊர்மதில்** - வினைத்தொகை. இருப்புமதில் - வெள்ளி மதில் - பொன்மதில் என்பவற்றுற் சூழப்பட்டவை இம்மூன்று புரங்கள் என்பர். மதில் ஊர் மூன்று என மாற்றி உரைத்தலுமாம். **அட்ட உத்தமர்** - சிவபெருமான். இவ்வுக் கருவூர்த் திருவானிலையில் எழுந்தருளிய பசுபதீசுரைக் குறித்தது. அட்டது அருள் என்பது.

**மாதவத்தோன்** - சிவகாமியாண்டார். பூப்பறித்துச் சாத்துதல் மாதவமெனப் பட்டது. " தவமுயல்வோர் மலர்பறிப்ப " என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரங் காண்க. சரியையாதிகள் தவமெனப்படும்.

**தார்மலர்** - திருப்பள்ளித்தாமம். தாருக்கு ஆகும் மலர். **கொய்யா வருபவன்** - கொய்துகொண்டு வருபவருடைய. ஆரும் வேற்றுமைத் தொகை. **கோய்யா** - கொய்து. செய்யா எனும் வாய்பாட்டு வினையெச்சம். **தண்டின் மலர்** - தண்டின் மேலிருந்த மலர் நிறைந்த பூக்கூடையை. **பறித்த** - பறித்துச் சிந்தியதனால். **ஊர்மலை** - யானை. **பாகர் உடல் துணியாக்குமவன்** - எண் உம்மைகள் தொக்கன. பரிணால் யானையையும் பாகரையும் உடல் துணித்தவர். **மதில்சூழ் கருவூர்** - மதிலாற் சூழப்பட்ட கருவூர் சோழர்களது இராசதானிகளில் ஒன்றுதலின் மதிலைச் சிறப்பித்தார். மதில் அரணும். அரச அங்கங்களில் ஒன்று. "மாமதில் மஞ்சுசூழும்" (553) என விரிநூல் இதனை விரித்தது காண்க. எறிபத்தனே ஊர்மலையையும் அதன் பாகர்களையும் உடல் துணியாக்குமவன் என முடிக்க. ஏகாரம் தேற்றம். துணித்ததற்குக் காரணம் மலர் பறித்தலே என்பார் **பறித்த ஊர்மலை** என்று குறித்தார்.

ஊரும், தொண்டின் நிறமும், சரித வரலாறும் வகைநூல் பேசிற்று. இவற்றை விரிநூல் விரித்தபடி புராணத்துட் காண்க.

விரி:—551. (இ - ள்) வெளிப்படை. செழித்த நீர் சூழ்ந்த நிலவுலகத்திலே, இளமையாகிய எருத்தினையுடைய சிவபெருமானது அன்பர்கட்கு இடையூறற்ற விடத்து விரைந்து வந்து அவ்விடையூற்றினை நீக்குதற்கேற்ற செய்கையை உதவும் தன்மையுடையாராகி எல்லையில்லாத புகழிலே மிகுந்த எறிபத்த நாயனாரது பெருமை எம்முடைய சொல்லில் அடங்கும் தாமுடையதன்று. ஆயினும் ஆசையினாலே சொல்லத் தொடங்குகின்றேன்.

(வி - ரை) ஒவ்வோர் புராணத் திறுதியினும் அவ்வந் நாயனாரது சரிதத்தை உபசங்கார முறையிலே முடித்துக்காட்டி, மேல்வரும் சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்வது ஆசிரியர் மரபு; அமர்நீதியார் புராணத்தோடு அச்சருக்கம் முடிவு பெற்றதாகலின் மேல்வரும் சரிதத்துக்கு ஆங்குத் தோற்றுவாய் செய்ய இயைபில்லை. எனவே, இனிக் கூறப்புகுந்த சரிதத்திற்கு இங்குத் தொடக்கத்திற் றோற்றுவாய் செய்தது இப்பாட்டு. இப்புராணத்தை இங்குச் சுருக்கி **உற்றிடத்துதவும்** என்று காட்டிய அழகு குறிக்க.

**நீர் ஞாலம்** - தண்ணீராற் சூழப்பெற்ற உலகம்.

**மழவிடை** - என்றும் இளமையோடிருப்பது. தருமசொரூபமாகிய விடையாதலின் அது மூப்பதில்லை என்க. "மழவிடையார்க்கு வழிவழியாளாய்"—திருப்பல்லாண்டு.

**உற்றிடத்து ஒல்லை(ஐ)வந்து உற்ற செய்கை உதவும்** - என மாற்றுக. **உற்றிடம்** - இடையூறு உற்ற அந்த இடத்தே; அப்போது. இடம் - காலமும் இடமும் குறித்தது. இடையூறு என்ற எழுவாய் தொக்கி நின்றது. அன்பர்க்கு வரும் இடையூற்றை வெளிப்படச் சொல்லா நியதியுடையாராதலின் ஆசிரியர் அதனைத் தொக வைத்துக் கூறினர். **உறுவதனைப்** பின்னரும், அது வருமுன்னே அதனைத் தீர்க்க **உற்ற உதவியை** முன்னரும் வைத்த மரபுங் காண்க. இக்கருத்துப் பற்றியே "அன்பர்க்கு அடாதன அடுத்த போது" என்றதுங் காண்க. **ஒல்லை** - அன்பர்களது இடையூறுகளைத் தவிர்த்தலில் நாயனர்க்கிருந்த தீவிரம் குறித்தது. "உற்ற வர்க்குத வும்பெரு மானை யூர்வ தொன்றுடை யானும்பர் கோனை" எனவரும் நம்பிகள் தேவாரமுங் கருதுக.

**உற்ற செய்கை** - செய்கையை - தீர்த்தற்குப் பொருந்திய செயலை. இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கது. **செய்கையை உதவும்** என்று கூட்டுக. **உற்ற செய்கை**- பொருந்திய தொண்டினுக்கு உதவும் என உரைப்பாருமுண்டு.

**நீரார்** - நீர்மையையுடையார்.

**எல்லையில் புகழ்** - அளவுபடாத புகழ். **புகழினீமிக்க** என்றது அத்தகைய புகழ் பலவற்றாலும் மிக்கவராதலை. **சொல்லலாம் படித்தன்று** என்றதற்குக் காரணங்

கூறியவாறு. ஓர் அடியார்க்காக அஞ்சா நெஞ்சுடன் யானையை யெறிந்து ஆளுடைத் தொண்டர் செய்த ஆண்மையும் (606), இன்னுமோர் அன்பர்க்காக வாளினைத் தம் கழுத்திற் பூட்டி அரிந்திடலுற்ற நேர்மையும் (596) முதலிய பல புகழ்களும் அடங்க **எல்லையில் புகழ்** என்றார். இது கொண்டன்றே "இலைமலிந்த வேல் நம்பி" என்று தேற்றம்பெறக் கூறியது திருத்தொண்டத்தொகை.

**ஆசையால்** - அதனைச் சொல்லவேண்டும் என்னும் விருப்பத்தால். ஆசைமிக்க போது இது இயலுமோ? இயலாதோ என்று பாராது இயலாதாயினும் அதில் முயலச் செய்யும். "ஆசை வெட்கமறியாது" என்பது பழமொழி. ஆயின் இவ்வாசை விலக்கி ஒதுக்கித் தள்ளத்தக்க பிற ஆசைகள்போலாது ஆன்றோர்கள் விரும்பி மேற் கொள்ளத் தக்கதாகலின் ஆசையாற் சொல்லலுற்றேன் என்றார் ஆசிரியர். "**நின் பழ வடியார் கூட்டம்** அத்தா! **காண** ஆசைப் பட்டேன் கண்டாயம்மானே" என்பது திரு வாசகம். இவ்வாசைதானும் உலகத்தை வழிப்படுத்தும் அருள் நோக்கத்துடன் எழுந்த மையும், "இவ்வுலகத்து மாக்கள் சிந்தையுட் சார்ந்துநின்ற பொங்கிய இருளைப்" போக்கும் என்று பாயிரத்துரைத்தமையும், பிறவும் உன்னுக.

**என்னல்—சொல்லலுற்றேன்**—என்பனவும் பாடங்கள். 1

552. பொன்மலைப் புலிவென் றேங்கப் புதுமலை யிடித்துப் போற்று
மன்நெறி வழியே யாக வயல்வழி யடைத்த சோழன்
மன்னிய வநபா யன்சீர் மரபின்மா நகர மாகுந்
தொன்னெடுங் கருவூ ரென்னுஞ் சுடர்மணி வீதி மூதூர். உ

(இ - ள்) வெளிப்படை. பழைமையாகிய நெடிய கருவூர் என்று சொல்லப்பெறும் ஒளியும் அழகுமுடைய வீதிகளோடு கூடிய பழைய ஊர், வெற்றியின் அடையாளமாக இமயமலையினுச்சியில் புலிக்கொடி ஒங்கி நிற்க, அம்மலையினை இடித்துக் காவல் பொருந் தும்படி அமைத்த புதிய வழியே வழியாய் வழங்க ஏனை வழிகளை யடைத்த, கரிகாற் சோழர் முதல் **அநபாயச் சோழர்**வரைச் சிறப்பில் நிலைபெற்ற முடிசூட்டு மரபின்வரும் தலைநகரங்களில் ஒன்றாகும். (வி - ரை) கருவூர் என்னும் மூதூர் - சோழன் - அநபாயன் - சீர்மன்னிய - மர பின் மாநகரமாகும் என மாற்றிப் பொழிப்புரைத்துக்கொள்க.

**பொன்மலை** - இமயமலையையும் பொன்மலை என்பர். "பொன்னின் வெண்டிரு நீறுபுனைந்தெனப், பன்னு நீர்ப்பனி மால்வரை" (11) என்று உவமை முகத்தால் முன்னர் உரைத்தது காண்க. இமயத்துச்சி வரை சோழர்கள் தமது அரசு கடாத்தி இமயத்துச்சியிற் புலிக்கொடி காட்டிய செய்தி நம் பழந்தமிழ் நூல்களானும், பிற சரித் திர ஆதாரவுகளானும் பெறப்பட்ட செய்தியாம். இதுபற்றிக் "கோட்டியர் பனிவரைக் குன்றினுச்சியிற் சூட்டிய வளர்புலிச் சோழர்" (51) என்ற இடத்துக் கூறியவையுங் காண்க. இவ்வாறு முதலிற் செய்தவர் கரிகாற் சோழர் என்ப.

**சோழன் அநபாயன் சீர்மன்னிய** என்றது புலிக்கொடி பொறித்த சோழர் முதல் நீடித்து நிகழ்காலத்து அநபாயர்வரைச் சிறப்பால் நிலைபெற்று வருகின்ற என்ற தாம். மரபின் முக்தையோர் புகழொடு புணர்த்திப் பின்வருவாரைக் கூறுதல் கவி யியல்பென்க. "தூலயிற் புறவி னிறையளித்த சோழர்" என்பதும் பிறவும் காண்க. இவ்வாறன்றி மூதாதையர் செயலை அநபாயருக்கே ஏற்றிப் புகழ்ந்தார் என்றுரைகொள் வாருமுளர். முன்னர் **வளர்புலிச் சோழர்** என்றபடி இங்கும் **சீர்மன்னிய** என்று கூறியது காண்க. சீரால் மன்னிய என்று விரித்துரைக்க.

**வென்று பொன்மலை புலி ஒங்க** என்க. **வென்று** - வென்றதனாலே. புலி பொன்மலையில் ஒங்குதற் குளதாய காரணங் கூறியவாறு. **புலிநின் றேங்க** என்று

பாடங்கொண்டு நிகழ்காலத்தும் நிலைபெற்று விளங்க என ஆசிக் குறிப்புப்பெற உரை கொள்வாருமுண்டு. ஸ்ரீ லையவரு தியல் கீழ வைன்று ஆங்கனம் பாடு

**மலையிடித்துப் போற்றும் அப்புது நெறியே வழியாக** எனக் கொண்டு கூட்டி யுரைத்துக்கொள்க. **போற்றும்** - காவல்புரிந்து வழங்கிய.

**அயல்வழி அடைத்த** - தான் செய்த புதுவழியே யன்றி அதன்முன் அக்காள் வழங்கிய வேறு பிற வழிகளே வழங்காது அடைத்த ; வழியன்றுகுமாறு மலைகளே இடித்துப் புதிய நேர்வழி உண்டாக்குதல் மன்னர்களின் வழக்கமென்பாரு முண்டு. இது வழக்கமன்று. இங்குக் குறித்தது புதுநாடுவென்ற அரசன் அந்நாட்டின் பாதுகாவலின் பொருட்டுச் செய்த அரணும். நாட்டிற்குரிய அரச அங்கங்கள் ஆறினுள் அரண் ஒன்று. " படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும், உடையா னரசரு ளேறு " " மணிநீரு மண்ணு மலையு மணிநிழற், காடு முடைய தாண் " என்ற திருக்குறட் பாக்களைக் காண்க. இமயமலை நமது பரதநாட்டிற்கு வடக்கு மதில்போல அமைந்தது. அதிற் பல வழிகளிருப்பின் நாடு காவல்பெறுதென் றறிந்தவராய், நாட்டின் காவலழியும்படி முன்வழங்கிய பல வழிகளையும் ஆள் வழங்காதடைத்து ஒரு புது வழி யுண்டாக்கி அயற்புலத்தார் நுழையாதவாறு அதனைக் காவல்புரிந்தது பேரரசராய் விளங்கிய கரிகாற் சோழரின் இராச தந்திர காரியப் பெருஞ் செயலாம். அமைச்சராய் விளங்கிய ஆசிரியர் இதன் பெருமையை அறிந்து இதனைத் தேற்றம் பெற (136) முன்னர்க் கூறியதுமன்றி இங்கும் எடுத்துக் காட்டியவாறு. அன்றியும் இப்புராணத்துள் வரும் புகழ்ச்சோழரும் அதுபோலவே மூரணிய அயலானுடைய மலையரணை வென்று அவனைத் துரத்தி செய்தி அவர் புராணத்துக் காணப்படுவதும் நோக்குக. அயல் வழிகளை அடைக்க, இந்நாட் பிரஞ்சு அரசாங்கத்தார் தமது புதுவை, காரைக்கால் நகரங்களைச் சுற்றி வேலியிட எண்ணுஞ் செய்திகளையும் இங்கு உன்னுக.

**இடித்துப் போற்றும்** - **இடித்து** - மலையினை இடித்தலால் குறுக்கிடாதபடி வழி யுண்டாகச் செய்து. **போற்றும்** - காவல் புரியும். இவ்வழியினை அரணுகக் கொண்ட தன்மை கூறியபடி. புறநாட்டார் தம் நாட்டில் நுழையும் வாயில்களைக் காவல் செய்தல் அரசகாரிய முறைகளில் ஒன்று. **அரண்** என முன்னோர் வழங்கியது இதுவே. இந்நாளிலும் நமது ஆங்கில மன்னரும் பிறரும் தத்தம் நாடுகளில் அயல் நாட்டார் கீர் வழியாலும் நில வழியாலும் தம் காவலினுள் அமைந்தன்றி நுழையாது செய்யும் காவல் வகைகளை இங்கு வைத்துக் காண்க. எல்லைப்புறப் பாதுகாவல் (Frontier Defence) என்று இமயச் சாரல் முழுதினும் இந்நாள் நமது அரசர் அரும்பாடுபட்டு அமைத்துள்ள அரண் முறைகளையும், அவற்றையுங் கடந்து எல்லைப்புற நாடுகள் படும் தொல்லைகளையும் இங்கு வைத்து உணர்ந்தால் இக்கூறிய சோழர் செய்தியின் பெருமை தேற்றம்பெற நன்கு விளங்கும். **அயல் வழி** - அதுவரை அயற்புலத்தோர் வந்துகொண்டிருந்த வழி எனவும், புதுவழியல்லாத பிறவழி என்றும் இருவகையுங் கொள்க.

**அநபாயன்** - இப்புராணம் பாடுவித்துச் சைவவுலகத்துக்குச் செய்த பெருந் தொண்டு கருதித் தம் அரசரை ஆசிரியர் பாராட்டி வைத்த பதினெரு இடங்களில் இது ஒன்று. சோழமன்னரையும், சோழர் தலைநகரையும்பற்றிய புராணங்களில் இவ்வாறு குறித்திருத்தல் மரபின் ஒருடர்ச்சிபற்றிய முறையுமாம். **மாபின் மா நகரம்** - முடிசூட்டும் மரபின் வந்த தலைநகரம். **மாநகர்** - தலைநகர். இவை புகார் (காவிரிப்பூம் பட்டினம்), திருவாரூர், உறையூர், சேய்ஞலூர், கருவூர் என்பன. " அநபாயன் **வருந் தொன் மாபின்** முடிசூட்டுந் தன்மை நிலவு பதியைந்தின் " என்பது சண்டீசர் புரா - 8. கருவூர் என்னும் மூதூர் மாநகரமாகும் என முடிக்க.

**தொன்னெடும்** - தொன்மையும் நெடுமையும் கொண்ட. **நெடுமை** - பெருமை. தொன்மையில் நீண்ட - வழிவழி வந்த என்றலுமாம்.

**கருவூர்** - தலவிசேடங் காண்க.

**சுடர்மணி வீதி** - இதுபற்றி முன்னர்த் திருநகரச் சிறப்பிலும் பிரண்டும் உரைத் தவை காண்க.

**பூதூர்** - பழமை பொருந்தியவூர். ஊரின் பழமை மேலுரைத்தனர். 2

553. மாமதின் மஞ்சு சூழ ; மாளிகை நிரைவிண் சூழுங் ;
தூமணி வாயில் சூழுஞ் ; சோலையில் வாசஞ் சூழுங் ;
தேமல ரளகஞ் சூழுஞ் சிலமதி தெருவு சூழுங் ;
தாமகிழ்ந் தமரர் சூழுஞ் சதமக னகரந் தாழ. கூ

**(இ - ள்)** வெளிப்படை. தேவர்கள் தாம் மகிழ்ந்து சூழும் இந்திர பட்டினமும் தாழும்படியாக, அந்நகரிலே பெரிய மதில்கள் மேகங்களாற் சூழப்பெற்றிருக்கும் ; மாளிகைகள் வரிசைபெற ஆகாயத்தில் ஒங்கி விளங்கும் ; தூய மணிகள் வாயில்களிலே சூழ்வன ; சோலைகளில் மலர்களின் வாசம் மிகுந்திருக்கும் ; கூந்தலிற் றேன்பொரும் திய மலர்களைச் சூழ அணிந்த மதிபோன்ற முகத்தினையுடைய சில பெண்கள் தெருவிலே சூழ்வர்.

**(வி - ரை)** இப்பாட்டால் நகரச்சிறப் புரைக்கின்றார். **மாமதில்** - சோழர்களது தலைநகரங்களில் ஒன்றுதலால் உயர்ந்த மதிலரணை யுடையது என்பார் **மாமதில்** என்றார். மதில் மஞ்சு சூழும் என்பது மேகந் தவழும்படி உயர்ந்த மதில் என்றதாம்.

**மாளிகைநிரை விண்சூழும்** - **மாளிகைநிரை** - வரிசையாக ஒங்கிய மாளிகைக் கூட் டங்கள். விண் சூழ்தலாவது ஆகாயத்தை அளாவி நிற்றல். " தவளக்கெடு மாடம், விண் டாங்குவ போலும்மிகு வேணுபுர மதுவே " என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரத் தையும் அங்கு ஆசிரியர் காட்டிய உட்குறிப்பினையும் இங்கு வைத்துக் காண்க.

**வாயில் தூமணி சூழும்** என மாற்றுக. வாயில்களில் மணிகள் கட்டியிருக்கும் என்பது. அரசரது தலைநகரமாதலின் வாயிலிலே ஆராய்ச்சிமணி கட்டுதல் முன்னுள் வழக்கு. திருநகரச் சிறப்புப் பார்க்க. அநீதி நிகழின் அதனை அறிந்து போக்கி நீதி வழங்கித் தூய்மை செய்தற் கருவியாதலின் **தூமணி** என்றார். தூய்மை செய்யும் மணிகள் இழைத்தவாயில் என்றலுமாம்.வாயிலை அழகுபடுத்த மணிகள் கட்டுதலும் மரபு.

**அளகம் தேமலர் சூழும் சிலமதி** என மாற்றிக்கொள்க. **சூழும்** - பெயரெச்சம். அமரர் **சூழும்** நகர் என்றதும் அவ்வாறே பெயரெச்சமாம். இப்பாட்டில் **சூழும்** என்ற ஏனைய எல்லாம் வினைமுற்றுக்கள். இவ்வாறு ஒரு பாட்டில் ஒரு சொல்லையே பல திறப்பட அடுக்கி அமைத்து அணிபெற வழங்குதல் ஆசிரியரது சிறப்பாகிய அரிய யாப்பியல்புகளில் ஒன்று. 65, 283 முதலிய ஏனை இடங்களையுங் காண்க.

**சிலமதி** - மதிபோன்ற முகமுடைய சில பெண்கள். **மதி** - நிறைமதி. ஆகுபெயர்.

**தாழ** - கீழ்ப்பட. விரும்ப என்றலுமாம். **சூழ்தல்** - சுற்றல் ; தங்கல் ; ஆராய்தல் ; பரவுதல் ; பொருந்தல் ; விரும்புதல்.

மகிழ்ந்து தாழ - என்று கூட்டி உரைப்பதுமொன்று. இப்பொருட்கு சதமகன் நகரம் மகிழ்ந்து தாழ்வது இக் கருவூரை ஆண்ட முற்சைச் சோழ அரசராகிய முசு குந்தச் சக்காவர்த்தியினும் றேவருலகத்தார் பெற்ற உபகாரம்பற்றி எனக் கொள்க.

சதமகன் நகரந் தாழ - மதில் சூழும் ; மாளிகை சூழும் ; வாயில் சூழும் ; வாசஞ் சூழும் ; மதி சூழும் என முற்கூறிய ஒவ்வொன்றோடும் கூட்டுக. இக் காரணங்கள் பல வற்றாலும் சதமகன் நகரம் இதற்குத் தாழ்ந்ததென்பது.

இந்திரன் வேண்டுகோளுக்கிரங்கி முசுகுந்தர் இந்திரலோகம் சென்று அவனுக் குப் பகைவனாகிய அசுரனை வென்று அதற்காக இந்திரனாற் பெற்ற செம்பொற் றியா கேசரைக் கொணர்ந்து திருவாரூரில் மீளத் தாபித்தார் என்பது புராண சரிதம். இது

பற்றியே சூரசங்காரத்தின் பின்னர், நன்றி பாராட்டி இந்திரன் முருகப்பெருமானுக்குத் தன் மகளாராகிய தெய்வயானை யம்மையாரை மணஞ் செய்வித்தபோது, கருவூரில் அரசாண்ட முசுகுந்தச் சக்கரவர்த்திக்குத் திருமண அழைப்பு அனுப்பினன் என்ற சரிதமும் கந்தபுராணத்திற் கேட்கப்படும். இங்குக் கூறிய சரிதங்களாலே தேவருலகம் கருவூருக்குக் கீழ்த் தாழ்ந்ததும் அதனை விரும்பி வாழ்வதுமாம். அன்றியும் இவற்றால் தேவநகரத்தின் மிக்கது கருவூராம் என நகரச்சிறப்புக் குறித்ததுவுமாம்.

**மஞ்சு சூழும்** - தேவருலகத்திலே மஞ்சுகள் இந்திரனது வாகனமாகிய பயன்மட்டும் தந்து சூழ்வன; ஆயின் இங்கு அவை இந்நகரத்தின் உயர்மதிலின்மேற் சூழ்ந்து தானத்திற்கும், சிறப்புக்கும், பூசனைக்கும் உதவின; சோலைவாசம் தேவமலராகிய கற்பகப் புதுப்பூ மணத்தினை வென்றது; தேவருலகத்தில் தேவரிலொருவனை சந்திரனொருவனே (வானவீதியில்) விளங்க, இங்குப் பலமதிகள் பல வீதிகளிலும் விளங்கின எனப் பல வுட் குறிப்புக்களும் காண்க.

**சதமகன் - சதம்** - நூறு; **மகன்** - (மகம் - யாகம்) யாகங்களைச் செய்தவன். நூறு யாகஞ் செய்த காரணத்தால் இந்திரப் பட்டம் அடைந்தவன் இந்திரன்; அது அழியக்கூடியது; ஆயின் இந்நகரத்துள்ளார் அந்த யாகங்களின் மேம்பட்ட சிவபுண்ணியங்களைச் செய்து அழியாப் புகழ் புண்ணியங்களை அடைந்தவர்கள் என்பதும் குறிப்பு. இச்சரித நிகழ்ச்சியும், அது கண்டு வணங்கி "விண்ணோர் பனிமலர் மாரி தூர்த்தார்" என்றதும் (599) இங்கு வைத்து உன்னுக.

**தேருவுஞ் சூழும்**—என்பதும் பாடம். 3

554. கடகரி துறையி லாடுங்; களிமயில் புறவி லாடு;
மடர்மணி யரங்கி லாடு மரிவையர் குழல்வண் டாடும்;
படரொளி மறுகி லாடும் பயில்கொடி கதிர்மீ தாடுந்
தடநெடும் புவிகொண் டாடுந் தனிநகர் வளமை யீதால். ச

(இ - ள்) கடகரி துறையில் ஆடும் - மத யானைகள் நீர்த்துறைகளிலே விளையாடுவன; களிமயில் புறவில் ஆடும் - களிப்புடைய மயில்கள் (நகரை யடுத்தி) புறவங்களிலே ஆடுவன; அடர்மணி.....வண்டு ஆடும் - அடர் மணிகளையுடைய ஆடரங்குகளிலே ஆடற்பெண்களின் கூந்தல்களின் மேல் வண்டுகள் ஆடுவன; படர்.....மீது ஆடும் - படரும் ஒளியுடைய வீதிகளில் ஆடுகின்ற மிகுந்த கொடிகள் கதிர்களின்மீது ஆடுவன; தடநெடும்.....ஈதால் - விசாலமான நெடிய உலகம் தொண்டாடுகின்ற ஒப்பற்ற நகரமாகிய இதன் வளமை இதுவாம்.

**(வி - ரை) கடகரி துறையில் ஆடும் - கடம்** - மதம்; மதமிக்க யானைகள் நீர் விளையாட்டு விருப்பம் மிகவே நீர்த் துறைகளில் ஆடும் என ஆடுதற்குக் காரணங் கூறியவாறு. மதமிக்கதனாலன்றி யியல்பினாலேயும் யானைகள் நீராடலில் விருப்பமுடையன. இவ்விரண்டுடன் பின்னர் இச்சரிதத்தில் வரும் பட்டவர்த்தன யானையின் செயலாகிய நிகழ்ச்சியையும் குறிப்பா லுணர்த்தியவாறும். **துறை** - இங்கு ஆம்பிராவதி நதித்துறை. **வருநதித் துறை** - எனப் பின்னர்க் கூறுவது (562) காண்க. யானை குறிஞ்சிக்குரிய கருப்பொருளாயினும் இந்நகர் அரசரது தலைநகராதலின் யானைப் படைக் காவலுடனிருக்கும் பண்பு பற்றி கடகரி என்று நகரொடு சேர்த்துக் கூறினர்.

**களிமயில் புறவில் ஆடும்** - களித்தபோதே ஆடுதலால் **களிமயில்** என்றார். **புறவு** - நகர்ப்புறத்தும் ஆற்றின் கரையோரமுள்ள சோலைகள். இவைகளின் செழிப்பிலே அங்கு மயில்கள் வாழும். "அருகுவளர் புறவிற் பூத்த மலர்கள்" என்ற சண்டீசநாயனார் (33) புராணமும் காண்க. **புறவு** - முல்லை நிலம் என்பாரு முண்டு. எங்ஙனமாயினும் நகர்ப்புறச் சோலைகள் முல்லைப் பகுதியைச் சார்ந்தனவும், மயில்கள் முல்லைக்

குரிய கருப்பொருளாதலும் பொருந்தும். சோலைகளின் செழுமையால் மேகங்கள் தவழும் ; மேகங் காண மயிலாடும் என்ற வியல்பும் குறிக்க.

**அடர்மணி** - அடர்ந்து இழைத்த மணி. **அடர்** - கெடுக்கும் எனக்கொண்டு இருளை ஓட்டும் ஒளியுடைய மணிகள் என்றலுமாம்.

**அரங்கு** - ஆடுமிடம். ஆடரங்கு என்பது வழக்கு. ஆடும் அரிவையர் எனக் கூட்டுக. அரங்கில் ஆடுதல் அவர்களது குழலில் வண்டு ஆடுதற்கு ஓர் காரணமுமாம். அவர்கள் குழலிற் சூடிய புதுமலர்களில் மொய்த்த வண்டுகள் தம்மியல்பானன்றி அவர்கள் ஆடுந்தோறும் எழுந்தாடுவன எனு மியல்பும் காட்டியவாறு. மேல் யானைகளி னாடுதற்குப் போல வண்டுகளின் ஆடுதற்கும் இருகாரணங் கூறினார். அரிவையர் அரங்குகளில் ஆடுதல் அந்நகர மாந்தரின் பசியும் பிணியுமில்லா மகிழ்வாகிய வாழ்வு குறிப்பது. **குழல்** - குழலிற் சூடிய மாலை குறித்தது. யானையாற் குறிஞ்சியும், மயிலான் முல்லையும், அரிவையர் குழல்வண்டினான் மருதமுங் குறித்து, இம்மகிழ்வு அந்நாட்டு நானிலமும் பரவின எனக் குறித்ததுமாம். யானை ஆடுதற்கு இரு காரணம் ; 554-வது பக்கத்தில் காண்க.

**அரிவையர்** - இங்குப் பெண்ணின் பொதுமை யுணர்த்திற்று. பத்தொன்பது முதல் இருபத்தைந்து வயதளவில் உள்ள **அரிவை** என்ற பெண் பருவங் குறித்ததென்பாரு முளர்.

**ஆடும் பயில் கொடி** - அரங்கில் ஆடுபவரும் கொடி போன்றார் ; மறுகிலும் கொடிகள் ஆடுவன என்பதும் குறிப்பாம். "மாடந்தோறுங், கோதைசூ ழளக பாரக் குழைக்கொடி யாட மீது, சோதிவெண் கொடிக ளாடுஞ் சுடர்நெடு மறுகு" (474) என்று மெய்ப்பொருணாயனார் புராணத்துக் கூறியதுங் காண்க. **பயில் கொடி** - கூட்டமாய்ப் பயின்ற கொடிகள்.

**கொடி கதிர் மீது ஆடுதலாவது** ஆகாயத்தில் கொடிகள் அசையுமாறு உயர்த்திக் கட்டுதல். கொடிமீது கதிர் ஆடும் என மாற்றியுரைத்தலுமாம். **கதிர்** - சூரிய சந்திரர்களது கதிர்களும் அத்தெருவுகளிற் பெரு விளக்குகளினின்று படர் ஒளியுமாம்.

**புவி கொண்டாடுதல்** - உலகம் இதனைத் தலைநகராகக் கொண்டு இதன் காவலுள் அமைந்து மகிழ்தல். **தனி நகர்** - பெருமையாற் றனித்த நகர். இதுபோன்ற பெருமையுடையது பிறிதொன்றில்லையாய்த் தானே தனக்கு ஒப்பாயினமையின் **தனி**யென்றார். மேற்பாட்டிற் கூறியபடி **சதமகன்கர**மே யன்றி நெடும் **புவி**யுங் கொண்டாடும் என்பது குறிப்பு.

துறையிற் படிந்தாடும் யானைகளை மேகமென்று எண்ணி மயில்கள் ஆடின. இந்த மயில்கள் ஆடல் எமது தலைவியர் ஆடற் சாயலுக்கு இணையாகா எனக் குழல்வண்டு ஆடின. அவ்வெற்றிக் கறிகுறியாய், விண்ணிற் கறிவுறுத்த அவர்கள் போன்ற கொடிகளும் ஆடின. இது கண்டு உலகம் கொண்டாடி மகிழ்ந்தது - என ஒரு தொடர்பாய் உரைக்க நின்ற குறிப்பும் கண்டு களிக்க. துறை களாடும் - என்பதும் பாடம்

555. மன்னிய சிறப்பின் மிக்க வளநக ரதனின் மல்கும்
பொன்னியல் புரிசை சூழ்ந்து சுரர்களும் போற்றும் பொற்பாற்
றுன்னிய வன்பின் மிக்க தொண்டர்தஞ் சிந்தை நீங்கா
வந்நிலை யரனார் வாழ்வ தானிலை யென்னுங் கோயில். ரு

(இ - ள்) வெளிப்படை. நிலைபெற்ற சிறப்பால் மிகுந்த வளமுடைய அந்நகரத்திலே தேவர்களும் வாழ்த்துகின்ற சிறப்புடன் மிகுந்த பொன் வேலைப்பாட்டானியன்ற திருமதிலாற் சூழப்பட்டதாய், உழைப்புடைய அன்பினான் மிக்க தொண்டர்களுடைய சிந்தையினின்று நீங்காதிருக்கும் அந்நிலைபோல அரனார் நிலைபெற்று வாழ்கின்ற **திருவானிலை** என்னும் கோயில் பெருகி நீடுவதாம்.

(வி - ரை) **மன்னிய சிறப்பு** - மேலிரண்டு பாட்டுக்களினும் போந்த சிறப்புக்களும் திருவிழாக்களும், அந்நான் அரசர் காவலால் இவை நிலைபெற்று விளங்கியதால் **மன்னிய** என்றார்.

**பொன்னியல் புரிசை** - **புரிசை** - கோயிலின் திருமதில். **மாமதில் மஞ்சு சூழும்** என முன்னர் 553-ல் கூறியது ஈசத்தின் மதில். கோயிற்றிருமதிலின் மேலும், அதன் சிகரங்களின் மேலும், மதில் வாயில்களினும், பிறஇடத்தும் பொன்னால் வேலைப் பாடுகள் அமைத்தல் வழக்காதலிற் **பொன்னியல்** என்றார். பொன் போன்ற அமைப்பு என்றலுமாம். பொன்னுடாகிய தமது நாட்டினும் மிக்குப் பொன்னாலும் பொற்பாலும் இவை விளங்குதலாற் **சுரர்களும் போற்றினர்கள்** என்பது குறிப்பு. சுரர்கள் போற்றுந் தன்மை முன்னரும் குறித்தது (553) காண்க. இனிச், சுரர்களும் போற்றும் பொற்பாற் சிந்தை நீங்கா என்று கூட்டி, அன்பர் மனத்தில் இறைவன் நீங்காத நிலையினைக் கண்டு தேவர்கள் போற்றுகின்றார்கள் என்றும், போற்றும் பொற்பால் வாழ்வது எனக் கூட்டித் தேவர்கள் போற்றும்படி வாழ்வதாகிய கோயில் என்றும், சூழ்ந்து போற்றும் எனக்கூட்டி மதிலைச் சுற்றிவந்து போற்றுகின்ற என்றும், உரைத்தலுமாம். **சிந்தை நீங்கா அந்நிலை** - கோயில் என்று கூட்டி அன்பர்கள் எஞ்ஞான்றும் இக்கோயிலைத் தஞ் சிந்தையில் மறவா தேத்துகின்றார்கள் என்று உரைத்தலுமாம். " அன்பர்தஞ் சிந்தை சேர்ந்தாய் ", "சிந்தையே கோயில் கொண்ட வெம் பெருமான் " என்ற திருவாக்குக்களும் காண்க. புரிசை **சூழ்ந்து** - புரிசையாற் சூழப்பட்டு. செயப்பாட்டு வினைப்பொருளில் வந்தது. அங்நிலைபோல் வாழ்வது - என உவம உருபுவிரிக்க. முன்னர்த் "திருமனத் தோங்கும்" (22) என்றதும் காண்க. அன்பர் சிந்தையே அரனுக்குத் திருக்கோயிலினுஞ் சிறந்த இருக்கை என்பார் சிந்தையை உவமான மாக்கினர். பூசலார் புராணம் காண்க.

" நாடி நாரண னொன்முக னென்றிவர், தேடி யுந்திரிந் தங்காண வல்லரோ ?
மாட மாளிகை சூழ்திலை யம்பலத், தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே "
—திருக்குறுந்தொகை - கோயில் - (10),

" ஒருவருமீங் கறியாவண்ண மென்னுள்ளத் துள்ளே
யொளித்து வைத்த, சிறையாளை "—திருத்தாண்டகம் - திருநாகேச்சரம் - (7)

" மறவாதே தன்றிறமே வாழ்த்துந் தொண்டர் மனத்தகத்தே
யனவரத மன்னினானை " —திருத்தாண்டகம் - திருழதுகுன்றம் - (8).

முதலிய திருவாக்குக்களின் பொருளே இங்கு வைத்துக் காண்க.

**அந்நிலை - ஆனிலை** - சொல்லணி. **அந்நிலை** - அகரச் சுட்டுச் சிறப்புக் குறித்தது. பண்டறி சுட்டுமாம். **அந்நிலை**-அகரமாகிய நிலையினை யுடையார் என்பதுமொரு குறிப்பாம். "அகரம் முதலாகி நின்றாய்"(திருநெல்வாயிலரத்துறை - 7 - கம்பிகள் தேவாரம்), " அவ்வண்ணமாகிய வீசன் " (~~பொன்வண்ணத் தந்தாதி~~), " அகரவுயிர்போ லறிவாகி யெங்கு, நிகரிலிறை நிற்கு நிறைந்து " (திருவருட் பயன்) முதலிய பிரமாணங்களும் காண்க. பசுக்களாகிய எங்கட்குப் பதி - தலைவன் நீயே ! என்று பசுபதியாகிய அந்நிலையினை எஞ்ஞான்றும் சிந்தித்திருத்தலே தொண்டர் நிலையாம்; ஆதலின் **தொண்டர் தஞ் சிந்தைநீங்கா** என்றார். **ஆனிலை** - பசு - காமதேனு - பூசித்துப் பேறுபெற்ற தலமாதலின் இப்பெய ரெய்தியதென்ற வரலாறு இத்தல புராணத்திலும், பேரூர்ப் புராணத்திலும் காண்க. **ஆனிலை** - திருக்கோயிலின் பெயர். ஆவூர்ப் பசு பதீச்சரம் - பேரூர்ப் பட்டீச்சரம் - முதலியவையுங் காண்க. ஆளுடைய பிள்ளையாரது இத்தலத்தேவாரப் பாசுரந் தோறும் "கருவூருளானிலை" என்று அருளியது காண்க.

**ஆனூர்** - பசுக்களாகிய ஆன்மாக்களின் பாசத்தை அரித்து (போக்கி) - ஆட்கொள்ளும் பதி என்ற குறிப்புப் பெற **ஆனூர்** என்றார்.

என்றலுமாம்

**வாழ்வது** - வாழ்வதாகிய. **என்னும்** - என்ற பெயரால் அறியப்படுகின்ற. வள நகரதனில் - போற்றும் பொற்பால் - சூழ்ந்து - நீங்கா அந்நிலை - அரனார் - வாழ்வது (ஆகிய) - கோயில் - மல்கும் என்று கூட்டி முடித்துக் கொள்க. தன்னில் மல்கு - அன்பு மிக்க - என்பனவும்

556. பொருட்டிரு மறைக டந்த புனிதரை யினிதக் கோயின்
மருட்டுறை மாற்று மாற்றால் வழிபடுந் தொழில ராகி
யிருட்கடு வொடுங்கு கண்டத் திறையவர்க் குரிமை பூண்டார்க்
கருட்பெருந் தொண்டு செய்வா ரவரெறி பத்த ராவார். ௬

(இ - ள்) வெளிப்படை. பொருளைத்தரும் வேதங்களையும் கடந்து நின்ற புனிதராகிய சிவபெருமானை இனிதாக அத்திருக்கோயிலிலே, மருளாகிய பிறவிப் பகையை மாற்றும் நெறியால் வழிபடுவாராகி, இருள் போன்ற விடமானது ஒடுங்கி நிற்கும் கண்டத்தினையுடைய சிவபெருமானுக்கு உரிமையாகிய அடிமைபூண்ட அன்பர்களுக்கு அவனது அருள்வழியே நிற்கும் பெரிய தொண்டுசெய்வா ரொருவர் உளர்; அவர் **எறிபத்தர்** என்று சொல்லப் பெறுவார்.

(வி - ரை) **பொருள் திரு மறை-பொருள்** - உண்மைப் பொருளைத் தருகின்ற. அப் பொருளை தருதலால் வீடுபேற்றினுக்குக் காரணமாகிய மறை **திருமறை** எனப்பட்டது இங்குப் பொருளென்றது அறம் பொரு ளின்பம் வீடென்னும் உறுதிப்பொருள். "வேதத்தில் ஓதத் தகுமற மெல்லாமுள"..."வேதத்தை யோதியே வீடுபெற் றார்களே" என்பது திருமந்திரம். நாதமாகிய பிரணவத்தினின்றும் உதிப்பன வேதம். இறைவன் நாதமுடிவில் - நாதாந்தத்தில் - விளங்குபவன். வேதஞானம் அபரஞானமாகிய - கலை ஞானம் எனப்படும். இறைவன் அபரஞானத்தால் உணரப்படான். உணர்வரிய மெய்ஞ் ஞானமாகிய பரஞானத்தாலே அறியப்படுபவன். ஆதலின் **மறைகடந்த** என்றார்.

**மறைகள் தந்த** என்று பிரித்து இறைவர் உலகுய்ய மறையளித்தலைக் கருத் தாகவும் உரைக்க வைத்த அழகு காண்க. **பொருள் - திரு** - என்ற அடைமொழிகள் இதன் சிறப்புக் குறித்தன. தாம் மறைகளைத் தந்தார்; ஆயின் அவற்றைக் கடந்தவர் என்க.

**மருட்டுறை மாற்றும் ஆற்றல் - மருள்** - பொருளல்லவற்றைப் பொருள் என்றுணர் வது. இது மாணாப் பிறப்புக்குக் காரணமாம் என்ப. "**மருள்** - விபரீத உணர்வு. இது சகலாவத்தையில் ஆணவமலத்தால் நிகழ்வது. **துறை** - அவ்விபரீத உணர்வின் வகை யாகிய தமம், மோகம் முதலியன. **மாற்றும் ஆறு** - மல காரியங்களை நீக்குவதாகிய சிவாகம சீலம். சிவாகம சீலமுடையார்க்கே மலநீக்க முளதாம்"—ஸ்ரீமத். முத்துக்குமா ரத் தம்பிரான் சுவாமிகள் உரைக் குறிப்பு.

**வழிபடும் தொழிலர்** - இறைவனது வழிபாடே பிறவிமாற்றும் தன்மையுடையது என்க. மருட்டுறை என்பது மருளின் வழியதாக ஆகின்ற பிறப்பு என்ற பொருள் தந்து நின்றது- அருட்டுறையாகிய பொருட்டுறை வழிப்படாதவர் மருட்டுறையே சேர்வர் என்க. அதனைமாற்றிப் புனிதராக்குதல் புனிதராகிய இறைவர் செயும் செயலே என்பார் **மாற்றும்** என்றும், **புனிதரை** - என்றும் குறித்தார். **ஆற்றல்** - வழியினாலே. அவைகள் ஆகமங்களில் விதித்தனவும் ஆன்றோராசாரத்தாற் பெற் றனவுமாம்.

**வழி படும் தொழிலர்** - அவ்வழியிலே தாம் படுகின்ற செயலினைச் செய்வார்.

தொழிலர் - ஆகி - உரிமை பூண்டார்க்குத் தொண்டு செய்வார் - அவர் எறிபத்தர் ஆவார் எனக்கூட்டி முடிக்க.

**இருள் கடு ஒடுங்கு கண்டத்து இறையவர்** - திருநீலகண்டமுடைமையால் தாமே முதல்வர் எனக்காட்டி நிற்பவர். இருண்ட விடத்தினைத் தடுக்கவல்ல அவரே மருட்

றை மாற்றும் வழிதர வல்லவர் என்பது குறிப்பு. "இருட்கடு வுண்டவ ரருளும்"— **திருநா - புரா - 185. அருட்பெருந் தொண்டு** - தற்போதத்தாற் செய்வதன்று - தற் போதமிறத்த நிலையிலே சிவனருள் பதிய அதன் வசப்பட்டுச் செய்யப்படுவது.

வழிபடுந் தொழிலர் - என்றதனால் அரன் பணியும், பூண்டார்க்கு அருட்பெருந் தொண்டு என்றதனால் அடியார் பணியும் கூறப்பட்டன. அடியார் பணி பலவாதலின் இவர் செய்த அடியார் பணியின் வகை வரும் பாட்டில் விரிக்கப்பட்டது. இவர் அரன் பணியினும் அடியார்க்குற்றிடத்தவும் பணியினையே சிறப்பாகக் கொண்டு அதனால் இச்சரிதம் நிகழ்ந்ததாதலின் அதனை இச்சரிதத் தொடக்கத்துக் (551) கூறினர்.

அடியார் தொண்டு அரன்பாலன்பு பற்றிய தொடர்பால் நிகழ்வதாதலின் இங்கு இரண்டினையும் சேர்த்துக் கூறியதோடு அரன்பாலன்பே மூலமாம் என்பதனை இச் சரித இறுதிப் பாட்டில் " சடையவர் பொற்றாளில் ஆதை காத லன்பர் எறிபத்தர், " (607) என முடித்துக் காட்டியதும் காண்க. **திறை வருக் குரிமை என்ற உரிமை பூண்ட** என்பது பாடமாயின் இப்பாட்டால் அவர் செய்த அடியார் பணி யினையும் வகுத்துக் கூறியதாகக் கொள்க.

**செய்வார் அவர் ஆவார்** - செய்வாராகிய அவரே உளராயினவர் ; அடியார் பணி செய்யா ஏனையோர் உளராகார் என்ற குறிப்புமாம். 6

557. மழைவள ருலகி லெங்கு மன்னிய சைவ மோங்க
வழலவிர் சடையா னன்பர்க் கடாதன வடுத்த போது
முழையரி யென்னத் தோன்றி மூண்டெட வெறிந்து தீர்க்கும்
பழமறை பரசுந் தூய பரசுமுன் னெடுக்கப் பெற்றார். எ

**(இ - ள்)** வெளிப்படை. நிலைபெற்ற சைவம் மழையினால் வளருந் தன்மையு டைய உலகத்தில் எங்கும் ஓங்கும்படியாக, அழல்போன்ற நிறத்துடன் அவிர்ந்த சடை யினை யுடையானது அன்பர்களுக்கு அடுக்கத்தகாத இடர்கள் வந்த காலத்தில், குகையினின்றுங் கிளம்பிப் பாயும் சிங்கம்போல, விரைவிற்சென்றி அந்த மூண்பட்ட வலிமை கெடும்படி எறிந்து தீர்க்கும்படைக்கலமாகிய, பழமறைகளாற் போற்றப்பட்ட தாகிய பரசாயுதத்தை எப்போதும் ஏந்துகின்றவர் (அவர்).

**(வி - ரை) மழைவளர் உலகு** - உலகம் மழையின் றுணையானே வளர்ந்து வழங்கு வதாம். " வானின் றுலகம் வழங்கி வருதலால் " என்பது திருக்குறள்.

**உலகில் எங்கும் மன்னிய சைவம்** - மன்னிய சைவம் எங்கு மோங்க என்க. **சைவம்** சிவத்துடன் சம்பந்தமாவது. உலகத்தென்றும் சிவசம்பந்தமே நிறைவது - சிவ நிறைவுட்பட்டது உலகம். "ஆண்டுலகே ழனைத்தினையும் வைத்தார் தாமே யங் கங்கே சிவமாகி நின்றார் தாமே" (திருப்பழனம் - 9) என்ற திருத்தாண்டகமும் காண்க. **மன்னுதல்** - இடையூறு வந்த காலத்தும் அழிவின்றி நிலைபெறுதல். **ஓங்க** - எங்கும் மேம்பட்டு நிற்க. நிலைபெற்ற நிறைவாகிய அது பொதுவகையா லன்றிச் சிறப்பாக விளக் கம் பெற. சைவம் எங்கும் மன்னியதாயினும் இடையூற்றின் மிகுதிப்பாட்டாற் சில விடத்து ஓங்காது குன்றிநிற்கும். கூன்பாண்டியர் காலத்தே சமணம்மிக்குச் சைவவிளக் கம் குன்றியதுபோலக் காண்க. அவ்வாறு குன்றாது ஓங்க இக்காயனார் இடையூற்றினை எறிந்து தீர்க்கப் பரசு எடுத்தனர் என்பது. **மன்னிய** - செய்யிய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சமாகக் கொண்டு, உலகில் எங்கும் மழை மன்னும்பொருட்டுச் சைவம் ஓங்க என்றுரைத்தலுமாம். சைவம் ஓங்குதலால் மழைமன்னுதல் "வீழ்க தண்புனல் " என்ற திருப்பாசுரத்தாற் காண்க. பரசினால் அடாதன நீங்கின ; அவை நீங்கச் சைவம் ஓங் கிற்று ; அது ஓங்க மழை மன்னிற்று ; அது மன்ன உலகம் வளரும் - எனக் கொண் டுரைக்க. இச்சரிதத்தே யானையால் நேர்ந்த சிவாபசாரம் இக்காயனாது செயலினாலே

நீங்க, மன்னனும் ஓங்கியது காண்க. மன்னனது கோலோங்குதலும் மழைக்குக் காரண மாமென்ப. திருப்பாசுரத்திலும் "வீழ்க தண்புனல்; வேந்தனு மோங்குக" எனத் தொடர்ந்து கூறியருளியதுங் காண்க. இதுபற்றிய விரிவுரையில் ஆசிரியர் சேக்கிழார் பெருமான்,

"வேள்வி சற்பயன் வீழ்புன லாவது, நாளு மர்ச்சனை நல்லுறப் பாதலா,
நாளு மன்னனை வாழ்த்திய தர்ச்சனை, மூளு மற்றிவை காக்கு முறைமையால்"
—திருஞான - புரா - 822

என்றருளியிருப்பதையும் இங்குவைத்துச் சிந்திக்க.

**அழல் அவிர் சடை**-தீப்போலச் செக்கிறத்தனவாகி விரிந்தசடை. "அழனீரொழு கியனைய சடை", "மின்னுர் செஞ்சடை", "மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை" என்பனவாதி திருவாக்குக்கள் காண்க. மின் தீயினது கூறுகும் என்க.

**அடாதன** - அடுக்கத்தகாதன. வரத்தகாத தீங்கு. அடியார்களுக்கு நேரும் தீங் கினைத் தம் வாக்கினாலும் சொல்லாத மரபுடைய ஆசிரியர், அம்மரபுபற்றி, **அடாதன** என்ற நயம் காண்க. 482, 647 - முதலிய பாட்டுக்கள் காண்க.

**முழையரியேன்ன** - **முழை** - சிங்கங்கள் பதுங்கி வசிக்கும் மலைக்குகை முதலிய மறைவிடங்கள். **அரி** - சிங்கம். பசிமுதலிய அவசியம் நேர்ந்தபோதன்றிப் பிற காலத்து இது வெளிவராது. அவசியம் நேர்ந்தபோது எவ்வகையிடையூற்றுக்கும் அஞ்சாது வீரத்தோடெழுந்து பாயும். யானைமேற் பாய்தல் சிங்கத்தினுலன்றிப் பிறவற்றுலியலாது. இவை முதலியகாரணங்கள் பற்றி இங்குச் சிங்கத்திற்கு ஒப்புமை கூறினர். தொழிலுவம அணி. "செங்கண்வாளரியிற்கூடி" (572) என்று பின்னருங் கூறினர்.

**சீறி** - இச்சீற்றம் அன்பர்க்கடாதன அடுத்தபோது தீர்க்கும் அன்புடைமையால் எழுந்த சிவப் பணிவிடையின் நிகழ்வதாகலின் நூல்களால் விலக்கப்பட்ட மனக்குற்றங் களில் ஒன்றுக வைத்து எண்ணப்படாததாமென்க. இறைவனது கோபப் பிரசாதம் போலக் காண்க.

**மூண்கெட** - பகை நீங்குமாறு. மூண்செய்த காரணத்தைக் கெடச்செய்தலே அடாதனவற்றைத் தீர்க்கும் வழியாம். "அண்ணல் அரண் முரண் ஏறும்" என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம். அடுத்தார்க்கு அரணும் அடுக்காதார்க்கு மூணுமாம்.

எறிந்துதீர்க்கும் பரசு - மறைபரசும் பரசு - எனப் **பரசு** என்பதனை இரண்டிடத் தும் கூட்டுக. மறைபரசும் பரசு - சிவபெருமான் கையில் உள்ளது. பரசு ஹஸ்தாய நம: என்பது சிவாஷ்டோத்தரம். "பாசுபாணியர்" முதலாகவுள்ள தமிழ் வேதங்க ளும் காண்க. இங்கு நாயனார் ஏந்தியது அது போன்றதே என்பதாம். இது பற்றியே முதனூலாகிய தமிழ் மறையும் "இலைமலிந்த வேல்" என்று போற்றியது.

**பரசும் பரசு** - சொற்பின் வருநிலை என்ற சொல்லணி. **தூயபரசு**-இங்குப் பரசு, எறிந்து கொலைசெய்யும் படையாயிருந்தும், **தூய** - என்ற தென்னை ? எனின், அடி யார்க்கு அடுக்கும் அடாதனவற்றை நீக்கித், தூய நல்ல சிவதன்மஞ் செய்யத் தூண்டு செய்தலானும், அடாதன செய்து அடியார்பால் அபசாரப்பட்டாரை ஒறுத்து அவரை யுந் தூய்மை செய்தலானும் அது தூயதேயாம் என்க. "கோல மழுவா லேறுண்டு குற்ற நீங்கிச் சுற்றமுடன், மூலமுதல்வர் சிவலோக மெய்தப் பெற்றுன்"—**சண்டீசர் புராணம்** - 58. "பாதகமே சோறு பற்றினவா"—**திருவாசகம்.**

**முன் எடுக்கப்பெற்றுர்** - **முன்** - முதன்மையாக. எப்போதும் தம்முன்னர் விளக் கம் பெற. **எடுக்கப்பெற்றுர்** - எடுத்துத் தாங்கும் பேறு பெற்றுர்.

அடியார் பணிகள் இருவகைப்படும். அவர் வேண்டுவன கொடுத்தல் ஒன்று. இவை யான்குடிமாற நாயனுர், இயற்பகை நாயனுர் முதலியோர் செய்தன இவ்வகை. அடியார்க் கடாதன அடுத்தபோது முன்வந்து தீர்க்கும் வீரம் மற்றொருவகை. இங்கு

நாயனுர் செய்கை இவ்வகைப்பட்டது. விறன்மிண்ட நாயனுர், சத்திநாயனுர் திருப் பணிகளும் இவ்வாறேயாவன.

மறை, இறைவன் வாக்காய் அநாதியாயுள்ளதென்பார் **பழமறை** யென்றார். 7

558. அண்ணலார் நிகழு நாளி லாணிலை யடிக ளார்க்குத்
திண்ணிய வன்பு கூர்ந்த சிவகாமி யாண்டா ரென்னும்
புண்ணிய முனிவ னுர்தாம் பூப்பறித், தலங்கல் சாத்தி,
யுண்ணிறை காத லோடு மொழுகுவ ரொருநாண் முன்போல், அ

559. வைகறை யுணர்ந்து, போந்து, புனன்முழ்கி, வாயுங் கட்டி,
மொய்ம்மலர் நெருங்கு வாச நந்தன வனத்து முன்னிக்,
கையினிற் றெரிந்து, நல்ல கமழ்முகை யலரும் வேலைத்
தெய்வநா யகர்க்குச் சாத்துந் திருப்பள்ளித் தாமங் கோய்து, கூ

560. கோலப்பூங் கூடை தன்னை நிறைத்தனர் கொண்டு, நெஞ்சில்
வாலிய நேசங் கொண்டு, மலர்க்கையிற் றண்டுங் கொண்டங்,
காலைய மதனை நோக்கி யங்கணர்க் கமைத்துச் சாத்துங்
காலைவந் துதவ வேண்டிக் கடிதினில் வாரா நின்றார். கO

558. (இ - ள்) வெளிப்படை. பெருமையுடைய எறிபத்த நாயனுர் இவ்வாறு தொண்டு செய்து வாழ்கின்ற நாளிலே திருவாணிலையில் எழுந்தருளிய பெருமானுர்க்கு உறைப்புடைய அன்பு மிகுந்த **சிவகாமி யாண்டார்** என்னும் புண்ணிய முனிவனுர், தாம், விதிப்படி பூக்களைப் பறித்து, மாலைகட்டிச் சாத்தி, மனத்துள்ளே நிறைந்தஆசை யோடும் ஒழுகிவருவார் ; ஒரு நாள் முன் வழக்கம் போல, அ

559. (இ-ள்) வெளிப்படை. விடியற்காலையில் துயிலுணர்ந்து, வெளியிற்போய்த் தண்புனலில் மூழ்கி, வாயையுங் கட்டிக்கொண்டு, கொத்துக்களாக மலர்கள் நிறைந்த மணந்தங்கிய நந்தன வனத்திற் சென்று, பழகிய கையினுலே தெரிந்து கொண்டு, நல்ல வாசனையுடையனவாய் அன்றலரும் பருவமுடைய அரும்புகளை அலருஞ் சமைய முணர்ந்து, அவற்றுள்ளே தெய்வ நாயகர்க்குச் சாத்தும் திருப்பள்ளித் தாமங்களைக் கொய்து, கூ

560. (இ - ள்) வெளிப்படை. அழகிய பூக்கூடையை நிறைத்துக்கொண்டு, மனத் துள்ளே தூய அன்பு கொண்டு, அழகிய கையில் தண்டினையுங் கொண்டு, அங்குத் திருக்கோயிலை நோக்கி, இறைவனுக்கு மாலை கட்டிச் சாத்தும் காலையில் வந்து உதவு தற்காக விரைந்து வருவாராயினுர். கO

இம்மூன்று பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன.

558. (வி - ரை) **அண்ணலார்** நீகழும் நாளில்-**அண்ணல்**பெருமையுடையார்.இவ ரதுபெரியாந்தன்மை 556ம்பாட்டிலும், இவர் செய்த திருத்தொண்டின் நிகழ்ச்சிமேற் பாட்டிலும் (557) உரைக்கப் பெற்றன. **ஆனிலை அடிகள்** - ஆனிலை பசுபதீச்சரம் என் னும் கோயில். **அடிகள்**-அத்திருக் கோயிலில் இலிங்கத் திருமேனி கொண்டு விளங்க வீற்றிருக்கும் சிவபெருமான். "கருவூருள் **ஆனிலை யடிகள்** யாவையுமாய வீசரே"(4) என்ற ஆளுடையபிள்ளையாரது இத்தலத்தேவாரங்காண்க. " ஐயாறுடையஅடிகளோ" "எல்லாந்தா னிவ்வடிகள் யாரென்பார்", "அவரெம் பெருமானடிகளே", "கடவூர் மயா னத்துப் பெரிய பெருமா னடிகளே", "நமக் கடிகளாகிய அடிகளே" முதலிய தேவாரத் திருவாக்குக்கள் காண்க. இறைவனது தன்மை பெற்று விளங்குதலால் அவனடியார் களும் **அடிகள்** எனப்படுவார். இதுபற்றி 428-ம் பாட்டில் உரைத்தவையும் காண்க.

**திண்ணிய அன்பு** - எதனாலும் கலங்காத உறைப்புடைய அன்பு. தமது சிவனுக்குத்தமாகவோ அல்லது வேறு பயன் கருதியோ செய்யப்படும் அன்பன்று. வேத இருதயன் சிவன்; அவனே வணங்கினாலல்லது உயிர்களுக்கு உய்தியில்லை. கற்றதனாலாய பயனும் இப்பிறவி பெற்றதனாலாய பயனும் அவனே வணங்குதலே என்ற வேதத் துணிபை மனத்துக் கொண்டு, உள்ளபடி செலுத்தும் அன்பு. "அடியவர்த்தந் திண்மை யொழுக்க நடைசெலுத்தி" (496), "திருத்தொண்டி னுறைப்பாலே வென்றவர்" (அப்பூதி-புரா-13) முதலியவை காண்க. **திண்மை**-வலிமை. "கற்பென்னுந் திண்மையுண்டாகப் பெறின்" (குறள்), "திண்ணமரும் புரிசை" (ஆளுடையபிள்ளையார் தேவாரம் - பண் - பஞ்சமம் - திருவெண்டுறை - 11), " திண்ணுர் புரிசை " (பண் தக்கேசி - பூவணம் - 11), " திண்ணுர் மழுவாட் படையாய் நீயே " - (திருத்தாண்டகம் - திருவையாறு-5). பகைப் புலத்தாற் கலங்காது காவல் புரிதலின் திண்ணிய மதில் என்பதுபோல, இங்கு அடாதன அடுத்தபோதும் கலங்காது நிற்கும் அன்பாதலின் **திண்ணிய** என்றார். கலங்காமை பின்னர் 564 - 565 பாட்டுக்களிற் காண்க.

**கூர்ந்த** - கூரப்பெற்ற - மிகப்பெற்ற.

**சிவகாமி யாண்டார் என்னும் புண்ணிய முனிவனுர்**-அவர் பேர் சிவகாமி யாண்டார் என்பது. இது இறைவனது பேர். சிவகாமி எனும் அம்மையாரது நாயகன் என்பதனால் இறைவன் பேராயிற்று. சிவன் பேரைத் தம் பேராக வைத்தழைக்கப் பெற்றவரிவர். " சிவன்பேர் சென்னியில் வைத்த ஆரூரன்" முதலியவை காண்க. தாம் சிவனிடத்து மிக்க காமமுடையராய் எம்மை யாள்பவர் என்று, காரணப் பெயரே இயற்பெயராக வழங்கப் பெற்றவர் எனக் கூறினுமமையும் - **திண்ணிய அன்புகூர்ந்த**- என்ற அடை மொழிகளின் குறிப்பும் காண்க. சிவபாத விருதயர் என்ற பேர்க் குறிப்பும் இது. **என்னும்** - என்னப்படும். படு விருதி தொக்கது. இல்வாழ்வானென்பான் (குறள்) என்புழிப்போல. **புண்ணிய முனிவனுர்** - சிவபுண்ணியஞ் செய்யும் முனிபுங்கவர். புண்ணியம் என்ற பொதுப்பெயர் இங்கு இட கோக்கிச் சிவ புண்ணியங்களில் முதலாவதாகிய சரியையின்மேனின்றது. **முனிவனுர்** - மனன சீலர். எப்போதும் இறைவனையே நினைத்துப் பணி செய்து கிடப்பவர். உண்ணிறை காதலோடும் ஒழுகுவார் என்று இங்குக் கூறுவதும், "நெஞ்சில் வாலிய நேசங் கொண்டு" (560) என்றதும் காண்க. இவர் மறையவராதலின் **முனிவனுர்** எனப் பட்டார் என்றுங் கூறுவர். நூல் கொண்ட மார்பிற்றெரண்டர் (564) என்றது காண்க.

**தாம்** - தாமே - ஏகாரம் தொக்கது. இப்புண்ணியங்கள் எவரெவருந்தாமே செய்தல் சிறந்ததாம். கூலியாட்களையும் பிறரையும் கொண்டு செய்வித்தல் அத்துணைச் சிறந்ததன் றென்ப.

**பூப்பறித்து அலங்கல் சாத்தி** - அடிகளார்க்குச் சாத்தி எனக் கூட்டுக - பறித்து, அவ்வாறு பறித்த பூ முதலியவற்றை மாலை முதலியவாகக் கட்டிச் சாத்தி என்க. **பூ** - என்ற பெரும்பகுதி கூறவே, மற்றும் தக்கனவாகிய இலை, வேர் முதலியனவும் உடன் கொள்ளப்படும். நால்வகைப் பூக்களிலுந் தக்கனவற்றை விதிப்படியும், காலப்படியும் கொண்டு செய்யும் இத் திருப்பணி மிக்க சிறப்புடையதாம். இதனைச் செய்து திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்தில் வழிபட்டுவந்த முருக நாயனாரை ஆளுடைய பிள்ளையார் தமது தேவாரத்தில் "பூம்புகலூர்த் தொண்டர் போற்றி வட்டஞ் சூழ்ந்தடிபரவும்" (1), "தொண்டர் தங்கய மூழ்கித் தூணையலுஞ் சாந்தமும் புகையுங், கொண்டு கொண்டடி பரவிக் குறிப்பறி முருகன்செய் கோலம்" (3), " மூசு வண்டறை கொன்றை முருகன் மூப்போதுஞ் செய் முடிமேல், வாசமா மலருடையார் " (5) எனப் பன்முறையும் வைத்துப் பாடிப் பாராட்டியிருத்தல் இத்திருப்பணிச் சிறப்புக் காட்டுவதாம். " தளக்கினன் மலர் தொடுத்தாற் றூயவிண் ணேறலாகும் " என்றருளியதால் இதன் பயனு மறிக. இப்பணி செய்யும்வகை வரும்பாட்டில் விரிக்கின்றார்.

**உள்நிறை காதலோடும் ஒழுகுவார்** - உள்ளத்தினுள்ளே நிறைந்த ஆசை. காதல். பக்தி - அன்பு என்பன ஒரு பொருட்கிளவி.

**சாத்தி** என்று மெய்யின் மெழுகிலும், **உள் நிறை காதல்** என்று மனத்தின் மெழுகிலும் கூறினர். ஏனை வாக்கின் மெழுகில் கூறுமையின் காரணம் வரும் பாட்டில் **வாயுங் கட்டி** என்றதனாலறிக. விரிவு ஆண்டுக் காண்க. 560-ம் பாட்டிலும் இவை யிரண்டுமே குறித்தலுங் காண்க. "பெரும்புலர் காலைமூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி, யரும்புனல் மலர்கள் கொண்டங் கார்வத்தை யுள்ளே வைத்து" என்ற திருக்கடவூர்த் திருகேரிசையுங் காண்க.

**ஒரு நாள்** - ஒரு - ஒப்பற்ற. இவர் பொருட்டு இச்சரித நிகழப்பெற்றுத் திருவருள் வெளிப்படு நாள் இக்காளேயாதலின், இவர் திருப்பணி செய்தொழுகிய நாள் பலவற் றினும் இஃது ஒப்பற்றதாய் **ஒரு நாளாயிற்று** என்பது குறிப்பு.

**முன் போல்** - ஒழுகுவார் அந்த வழக்கம்போல்.

ஒழுகுவார் - என்னும் - முனிவனுர் - முன்போல் கொய்து - கொண்டு - கொண்டு வேண்டி வாராநின்றார் - என இம் மூன்றுபாட்டுக்களும் தொடர்ந்து முடித்துக் கொள்க.

பறித்தல் சாத்துதல் முதலிய சரியைக்கும், எனைக்கிரியை முதலியவற்றிற்கும் காதல் இன்றியமையாத அடிப்படையாம். அஃதில்லேயேல் அவை பயன்பெறு என்பார் **உள்நிறை காதலோடும்** என்று காட்டிய ஆசிரியர், அதனை வற்புறுத்தற்குப், பின்னரும் **நெஞ்சில் வாலிய நேசங் கொண்டு** என வரும்பாட்டிலும் கூறினர். அன்றியும் இப்பாட்டிற் கூறியது, நியமமான நித்திய வொழுக்கத்தின் உள்ளுறையும், பின்னர்க் (560) கூறுவது அவ்வொருகாளின் சிறப்பியல்புமாம். ஆதலின் கூறியது கூற லாகாமை காண்க.

**அன்பு பூண்ட**—என்பதும் பாடம். 8

559. **(வி - ரை)** இப்பாட்டும் வரும்பாட்டும் மலர் கொய்து திருமாலேகட்டிச் சாத்தும் சரியைப்பணியாளர் கைக்கொண் டொழுகவேண்டிய நியமத்தை விளக்கு கின்றன. சிவகாமியாண்டார் செய்த் திருப்பணியின் இயல்பு கூறும் சரித முகத்தால் உலகினர்க்கு இதன் நியமனகளே ஆசிரியர் அழகுபெற வழிகாட்டி வகுத்தமை உய்த்து ணர்ந்து அவ்வழி உலகம் ஒழுகி உய்வதாக.

**வைகறை** - விடியற்காலம். சூரியனுதிக்கு முன் ஐந்து நாழிகை அளவுள்ள சிறு பொழுது. முந்தியாளின் வைகுதல் அறுகின்ற காலம் எனும் பொருளில் வந்த பெயர் என்பர். வைகுறு எனவும் வழங்கும். முன்னுள் இதுவரையுமே வைகிற்று என அதற் குப் பொருள் கூறுவர். வைகுறுவிடியல்-இராப்பொழுது தன்னெடு கழிவுறுதற் கேது வாகிய விடியல் என்க. " விளம்பழங் கமழுங் கமஞ்சூழ் குழிசி " என்ற நற்றிணையுள் வைகுறு புலர்விடியல் என்றது மப்பொருட்டு. அற்றை நாட்பொழுது தன்னெல்லே யோடறுதல் பற்றி வைகறையெனவும் படும். வைகுதல் கழிதல் என்னும் பொருட்டு, என்பன முதலாகச் சூத்திர விருத்தியுள் எமது மாதவச் சிவஞானசுவாமிகள் விரித் துள்ளனவுங் கருதுக.

**உணர்ந்து** - துயிலெழுந்து. சுழுத்தியிலிருந்து உயிருணர்ச்சி சாக்கிரத்தில் வருதலே துயிலுணர்தலாம் என்ப. விடிய ஐந்து நாழிகைப் பொழுது ஆயிற்று என் பதைத் தானே உணர்தல் என்றலுமாம்.

**போந்து** - காலைக் கடன்களே முடித்தற் பொருட்டுப் புறத்தில் நிருதி திக்கை நோக்கிப் போய் வருதல். மலசல முதலியவற்றை வீட்டுக்குள்ளேயே கழித்தலும், அவ் வாறு ஒன்று சேரும் குப்பைகளே ஒன்று சேர்த்து ஊருக்குப் புறம்பு வெளிப்படுத்த லும், அது காரணமாகப் பற்பல தொல்லேப்படுதலும் முதலியன, இந்நாட் புதிய நாக

ரிகத்தின் பயனுக்கு கிடைத்த கேடான உபகாரங்களாம். இவை முன்னுள் நகர, கிராம வாழ்க்கையிற் காணப்படாதது மாத்தர் சுக வாழ்விற்குக் காரணமா யிருந்தது. சூரிய னுதிக்குமுன் அதிகாலையில் எழுதல், இயன்ற அளவு சுத்தி செய்து கடவுளை வணங்கு தல், வெளியிற்போய் வந்து பற்றுலக்குதல், குளித்தல், சூரியனுதிக்கையில் அவனுக்கு அர்க்கியமாதி கொடுத்தல், பின் அற்றைநாட் கருமத்திற் புகுதல் முதலியன முன்னை யோர் கண்ட முறையும் நியமமுமாம். விரிவு ஆசாரக் கோவை முதலிய நூல்களிற் காண்க. இக்கல்லொழுக்கங்கள் இக்காள் அருகி வருதல் வருந்தத்தக்கது.

**புனன்முழுகி** - "சீதப்புனல் மூழ்கிச் சிற்றம்பலம் பாடி", "மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேனென்னக், கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி" என்பன வாதி திருவாசகங்களும், பிறவும், புனன் மூழ்கும் நியமத்தை விளக்குவன. ஊற் றுள்ள தூநீர்க்குளங்கள், நல்ல நீர் ஓடும் ஆறுகள், இவைகளில் மூழ்கிக் குளித்தல் நன்மை தரும். நீரினுட்பாய்ந்து மூழ்கிக் குளித்தல் சுகம்தரும். இவ்விதிகளைச்சுகாதார நூல்களுட் காண்க. இவ்வாறன்றி வெந் நீரிற் குளித்தல், கிணறுகளில் நீர் மொண்டு வைத்துச் சிறு பாத்திரங்களிற் குளித்தல் முதலிய இக்கால வசதிகளைப் பற்றிச் செய்து கொள்ளும் நியமங்கள் அத்தனை பயன்றரா. எவ்வாற்றானும் குளிர்ந்த நீரிற் குளித்தலே நமது நாட்டியல்புக் கடுத்ததாம். இவை முதலிய வெல்லாம் இங்கு வைத் துக் கண்டு கொள்க. இனி, நீர் மூழ்குதல் உடற்சுத்தம் செய்யும். உடல் சுத்தமற்றதா யின் உளச் சுத்தத்திற் குறைவுளதாம். அசுத்த உடலுடன் செய்யும் நியமங்கள் அசுத்த பாத்திரத்தில் வைக்கும் பால்போலக் கெடுமும் என்பது ஆன்றோர் துணிந்த உண்மை. இவ்வுண்மை யறியாதார் பலவாறு பிதற்றி யொழிவர். இவை யெல்லாம் உணர்த்துவார் இங்குப் **புனன்முழுகி** என்பதனை விதந்து கூறினர்.

**வாயுங்கட்டி** - வாயைத் துணியினுலே கட்டி. இறைவனுக்காகும் மலர் பறிக்கும் போதும் திருமாலை கட்டிச் சாத்தும் போதும் வாயினின்றும் அசுத்த வாயு, வாய் நீர் ஆவி, தும்மல், இருமல், உமிழ்நீர் முதலியன வெளிப்போந்து மலர்களிலே தாக்கி அசுத்தப் படுத்தாத படிக்கும், மலர்களின் மணம் தமது மூக்கிற்புக்கு நுகர்ச்சிக்கட் படாதபடிக்கும், இத்திருப்பணியாளர், இது செய்யும்போது வாய்கட்டிப் பணி செய்தல் மரபு. இந்நியதி இக்காளிலும் மிக நியமமான சில பூசைகளிற் கையாளப்படும் வழக் குண்மைகாண்க. கதிர்காமத் தலத்திற் பூசாரி நாடோறும் வாய்கட்டி வந்தே பணி செய்தல் இன்றும் காணத்தக்கதாம். எனவே இத்திருப்பணியாளர் பணியிற் கைத் தொண்டும் மனத்தொண்டும் என இரண்டுமே நிகழ்த்தற்குரியன. இங்கு **முன்னி** என்ற தும், மேற்பாட்டில் "உண்ணிறைகாதலோடும்" என்றதும், வரும்பாட்டில் "நெஞ்சில் வாலிய நேசங்கொண்டு" என்றதும் காண்க. இதுபற்றி முன்னுரைத்தவையும் காண்க.

உண்மை நூற்றுணிபும் விதியும் இவ்வாறிருப்பவும் இக்காளில் நந்தன வனத் திருப்பணியாளர் பலர், மலர் கொய்யும் போதும், மாலைகட்டும் போதும் நந்தன வனத் துள்ளும் பூமண்டபத்துள்ளும் ஒரு சிறிதும் கருதாது பலவற்றையும் வாயில் வந்தபடி யெல்லாம் பேசுதல், உமிழ்நீர் உமிழ்தல், தும்முதல், இருமுதல், தாம்பூலம் புகையிலை முதலியன தரித்துக் கொள்ளுதல், குளிக்காமலும், அன்றிக் கைகால் சுத்தியேனும் செய்யாமலும் பணிசெய்தல் முதலிய அநுசிதம் செய்து ஒழுகுதல் மிகவருந்தத்தக்கது. இம்மட்டோ! திருநந்தன வனத்துள்ளும், அதற்கருகிலும், இறைவன் பூசனைக்கு ஆகும் மரம் செடி கொடிகளின் கீழும், அருகிலும் அவனுக்காகும் அறுகுபடர்ந்த தரையிலும் மலசலமும் கழிக்கத் துணிந்து எரிவாய்நரகிற் காளாகின்றனர். நந்தன வனத்துள்ளே குடியிருக்க வசதி செய்தல், போசனஞ் செய்தல், சிற்றுண்டி முதலிய உல்லாசம் பயிலுதல், துயிலுதல் முதலியனவும் சிவாபராதமும் அநுசிதமுமாம். திருக் கோயிலுக்குள் வில்வ மரத்தின் கீழும் சிறிதும் அஞ்சாது மலசலம் கழிக்கும் பாதகர் எதைத்தான் செய்யத் துணியார்? அந்தோ! பாவம்! நந்தனவனம் வைத்துப் பரி

பாலிக்கும் அதிகாரிகளும் கோயில் அதிகாரிகளும் இவற்றைக் கவனித்துத் திருத்த உரியாராவர். இவ்விதிகளை உலகம் கண்டொழுகும் பொருட்டு இங்கு அமைத்தது ஆசிரியரின் அருளினைக்காட்டும். **வாயும்** - உம்மை இறந்தது தழுவியது.

**மோய்ம்மலர் நெநங்கு வாச நந்தன வனத்து முன்னி**-மோய்ம்மலர் - அரும்புகள் நெருங்கிய மலர்க் கொத்துக்கள். மோய் - அரும்புகள். மோய் - மொய்த்தல் என்று கொண்டுரைத்தலுமாம். நெநங்கு - அவ்வகைப் பூங்கொத்துக்கள் உள்ள பலவகைத் தாவரங்களும் நெருங்கிய. வாச நந்தன வனம் - மலர்களின் நறுமணங் கமழும் திருநந்தனவனம். மோய் வாச மலர் என்று கூட்டி உரைத்தலுமாம். முன்னி - நினைத்து. இத் திருப்பணி செய்யுங்காற் சிவனடியே சிந்தித்துச் செய்யவேண்டு மென்பது விதி. இறைவனுக்காகும் மலர், இலை, வேர் முதலியவற்றையும், அவற்றின் பறித்தற்குரிய பக்குவங்களையும் எண்ணி யாராய்ந்து என்றுரைத்தலுமாம். அலநம் வேலை எனக் கால நியமங் கூறுதல் காண்க.

**கையினீல் தெரிந்து** - இருளும் ஒளியும் கலந்த விடியற்காலமாகிய வைகறையின் பகுதியாதலின் பூ முதலியவற்றைக் கண்ணினுதவியாற்றானே யறிந்து பறித்தல் இயலாது. ஆதலின் கையினது முன்பயின்ற பழக்க விசேடத்தால் அறிந்து. இதுபற்றியே கண்களுள்ள கைகளை வேண்டிப் பெற்ற வியாக்கிரபாதர் சரிதம் இங்கு நினைவு கூர்க.

**தெரிந்து** என்றது இவை முன்னுள் மலர்ந்த பழமலர்; இவை காலையும்ப நின்ற முகை; இவை சிறிது போதில் அலரும் காலை மலர், என்பனவாதி பக்குவங்களைக் கைப் பழக்கத்தாலறிதல் குறித்தது. ஆவனவும் ஆகாதனவும் அறிந்து என்க.

**நல்லகமழ்முகை** - நல்லனவும் நறுமணங் கமழ்வனவுமாகிய அரும்புகள். நல்ல - புழுக்கடி முதலிய கேடில்லாதவை. கமழ் - அப்போது புதிதின் அலர்ந்து மலரும் தருணமே அவ்வற்றிற்குரிய மணம் வீசும் பருவம். "அரும்பு நன்மலர்கள்"-தேவாரம்.

**அலநம் வேலை சாத்தும்** - அலரும் பருவத்தே இறையவன் திருமுடியிற் சாத்தத் தகுதியுடையனவாய்ப், புதிதின் அலர்ந்து வீசும் மணம் முழுமையும் இறைவன் திருமுடியிலே கமழுமாறு சாத்தும் என்க. அலதும் வேலை கோய்து என்று கூட்டியுரைத்தலுமாம். காலைப் போதாயின் மலர்கள் அலர்ந்து வண்டுகள் மொய்க்கும்; அவை அநுசிதமாம்; ஆதலின் அலர்தற்கு முன்பருவத்தும் முன் காலத்தும் பூக்கொய்தல் மரபு.

**தெய்வ நாயகர்** - தேவ தேவன். உயர்திணையின் உயர்ந்து முதலில் நிற்போர் தேவர்கள். அவர்கட்கும் நாயகன் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான். "யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம், மாதே வன்னலாற் றேவர்மற் றில்லையே" என்பது அப்பர் சுவாமிகள் தேவாரம். இந்திரன் - மால் - பிரமன் முதலிய தேவர்கள் எல்லாரும் பசுக்களே யாவர். சிவபெருமான் அவர்களுக்கு நாயகராகிய பசுபதி. இத்தலத்து எழுந்தருளிய இறைவர் பசுபதீசர் என்ற பெயர் பெறுவதும் இப்புராணக் குறிப்பு.

**சாத்தும் திநப்பள்ளித்தாமம் - சாத்தும் - சாத்தத்தக்க.** இவ்விவை இறைவனுக்குச் சாத்தற் குரியனவும் அவன் பூசைக்குரியனவுமாம்; இவ்விவை அதற்கு விதிக்கப்படாதன; இவ்விவை இறைவி பூசைக்குகந்தன; இவ்விவை இறைவி பூசைக்கு விதிக்கப்படாதன; இவையிவை இன்னின்ன தெய்வங்களுக்குரியன; இவையிவை இன்னின்ன நாட்களில் எடுக்கலாகாதன என்பனவாதிநியமங்களைச் சிவாகமங்களுள்ளும் புட்பவிதி முதலிய உரிய நூல்களுள்ளும் காண்க.

**திநப்பள்ளித்தாமம்** - இறைவனுக்காகும் பூ - இலை - வேர் முதலியவற்றைத் திருப்பள்ளித்தாமம் என்பது சைவ மரபு. இவற்றைக் கோய்து என்றதும் காண்க. தாமம் - மாலை. இங்கு மலருக்கு ஆகுபெயர் என்ற உரைக் குறிப்புக்கள் பொருந்தாமை யறிக.

இத்திருப்பணியே செய்து சிறப்படைந்த முருகநாயனார்புராணத்துப் "புலரும் பொழுதின் முன்னெழுந்து" (7) என்ற திருப்பாட்டு முதல் ஐந்து திருப்பாட்டுக்களையும் ஈண்டுத் தனித்தனி சிந்திக்க. மிழலை யலர் தடமது முகம்—என்பனி

560. (வி - ரை) கோலப் பூக்கூடை - பூக்கோலக் கூடை என்று மாற்றிப் பொருள் கொள்க. கூடைக்குக் கோலமாவது சிவபெருமானுக்குரிய திருப்பள்ளித் தாமங்களைத் தன்னுட் கொள்ளுதலாம். சிவபெருமானுக்கும் அடியார்களுக்கும் உரியவாயின பொருள்கள் யாவும் கோலமுடையனவே. "சேய்ஞலூர்ப் பிள்ளையார் தந் திருக்கையிற் கோல மழு" - (சண்டீசர் புராணம்), 58, "மங்கல மழு" (592) முதலிய வழக்குக்கள் காண்க.

**நிறைத்தனர் கொண்டு** - நிறைத்துக்கொண்டு - முற்றெச்சம். **கொண்டு** எஞ்சிக் கொண்டு. கொய்து நிறைத்துக் கொண்டு என முன் பாட்டுடன் தொடர்புபடுத்தி உரைத்துக் கொள்க.

**வாலிய நேசம்** - மெய்யன்பு. "வாலறிவன்" என்ற குறளுக்கு ஆசிரியர் பரி மேலழகர் மெய்யுணர்வினையுடையான் என்றுரைத்தது காண்க. தூய அன்பெனினு மமையும். **வான்மை** - வெண்மையும் தூய்மையும் குறிக்கும் என்ப. அன்புக்குத் தூய்மையாவது மாசற்ற - வேறொன்றும் கலவாத - தன்மை. "பொது நீக்கித் தன நினைய வல்லார்" என்றபடி முழு அன்பும் இறைவன் திருப்பணியிலே செலுத்திய நெஞ்சு. தொண்டரஞ்சு தனியும் மடகிற் சூழும் பரந்மல் கிண்டை கடப்ப வழியாடி வெய்யு மிடம் (தெய்வத்தி—ழி

**தண்டு** - பூக்கூடையைத் தொங்கவைத்துத் தாங்கிவரும் தண்டு. அதற்காக இதன் தலைப்பில் ஒரு வளைவு அமைந்திருக்கும். "வன்றனித் தண்டிற் றூங்கும் மலர் கொள் பூக்கூடை" (563) என்றது காண்க. இதன் நுனியில் உள்ள வளைவு பூமரஞ்செடிகளை ஊறு வராதவண்ணம் இலகுவாக வளைத்து மலர்பறித்தற்கும் மீட்டும் அக்கொம்புகளை முன்னைநிலையில் விடுவதற்கும் உதவும். "தவமுயல்வோர் மலர் பறிப்பத் தாழவிடு கொம்புதைப்ப" என்ற ஆருடைய பிள்ளையார் தேவாரத்தில் இதனைக் குறிப்பது காண்க.

**அங்கு** காலமும் இடமுங் குறித்தது. **ஆலயம்** - திருவானிலை. **அமைத்து** - மாலை முதலியனவாகத் தொடுத்து.

**அமைத்துச் சாத்தும் காலை வந்துதவ** - மலர்களைத் தொடுத்துப் பின் சாத்த வேண்டியிருத்தலின் உரிய காலத்தில் உதவுதற்காக முன்னரே விரைந்து என்க. **கடிதினில்** - என்றதுங் காண்க. காலை - மாலை - இரவு முதலிய அவ்வக்காலங்களுக் குரியனவாய்த் தனித்தனி மலர் முதலியன விதிக்கப்பட்டுள்ளன. அம்முறையே சாத்துதல் மரபு. இங்கு அந்த ஒருநாளிற் காலை நேரத்தின் முதற்பூசைக்குதவுதல் குறித்தது. *இப்போதும் இத்தலத்து மகாசுவமி முன்னுளில் நடைபெறும் இந்தத் திருவிழாவும் இம்மரபுபற்றிக் காலைப்பூசைக்குமுன் நடைபெறுகின்றது.

**கடிதினில்** - பூசைமுறைக் காலந்தாழ்க்காது உதவும் பொருட்டு, அன்புமீதூர்தலினால், இத்தொண்டர் மூப்புடையராயினும் விரைந்து போந்து வந்தனர் என்க. அன்பின் செய்கை முட்டுப்படாது நிகழ்தற் பொருட்டு அன்புடையார் விரைந்து கடிது செல்லுதல் உலக நிலையிலே பல துறையிலும் வைத்துக் கண்டு கொள்க. சேயைப் பிரிந்த தாயானவள் பானினைந்தூட்ட விரைந்து வருவாள் என்ப. "நனிவிரைந் திறைவர் வெற்பை நண்ணினர் திண்ண னூர்தாம்" (122), "ஒல்லையினில் முன்புபோ லுடன்

*இவ்வுற்சவமானது எனது பெரியதாயார் கரூர் - மீனும்பாள் அம்மாளவர்களின் தர்ம தானசாசனப்படி வைக்கப்பட்ட மூலதனத்தின் உதவி கொண்டு உபயக்கட்டளையாக நடைபெற்று வருகின்றது.—**பதிப்பாசிரியன்.**

கொண்டு" (148) "இத்தனை பொழுது தாழ்த்தே னெனவிரைந் தேகுவார்" (163) என்ற கண்ணப்ப நாயனார் புராணத் திருவாக்குக்களும் பிறவும் காண்க.

**வாரா நின்றார்** - வருவாராயினார். இங்குவருகின்றார் என்னாது வாரா நின்றார் எனக் கூறியதனால் பின் சரித நிகழ்ச்சியின் முற்குறிப்பாகுமாறு வாரா - வந்து, நின்றார் - தடைபட்டு நின்றார் எனப் பிறிதொரு தொனிப் பொருளும்படக் கூறிய நயம் காண்க. பூக் கூடை தண்டுங் கொண்டே என்பன பாடங்க

561. மற்றவ ரணைய விப்பால் வளநக ரதனின் மன்னுங்
கொற்றவர் வளவர் தங்கள் குலப்புகழ்ச் சோழ னார்தம்
பற்றலர் முனைகள் சாய்க்கும் பட்டவர்த் தனமாம் பண்பு
பெற்றவெங் களிறு கோலம் பெருகுமா நவமி முன்னாள்; கசு

562. மங்கல விழவு கொண்டு, வருநதித் துறைநீ ராடிப்,
பொங்கிய களிப்பி னோடும் பொழிமதஞ் சொரிய, நின்றா
ரெங்கணு மிரியல் போக, வெதிர்பரிக் கார ரோடத்,
துங்கமால் வரைபோற் றோன்றித் துண்ணென வணைந்த தன்றே. கஉ

561. (இ - ள்) வெளிப்படை. அவர் மற்று இவ்வாறு அணைவாராக, இங்கு வளமை பொருந்திய அத்திருநகரில் நிலைபெற்ற அரசராகிய **அநபாயச்சோழர்** குலத்து வழிமுதலாய் வந்த **புகழ்ச்சோழ** நாயனாரது பகைப்புலத்துப் போர்களை வெல்லும் பட்டவர்த்தனம் என்னும் பண்புடைய வெங்களிறு அலங்கார மிகுந்த மகாநவமியின் முன்னாளாகிய அந்நாளிலே, கக

562. (இ - ள்) வெளிப்படை. மங்கலமாகிய திருவிழா வணியை மேற்கொண்டதாகி, (அத்தலத்தே ஓடி) வருகின்ற (ஆம்பிராவதி) நதியில் நீராடி, மிக்க களிப்புடனே பொழிகின்ற மதநீர் சொரிய வருவதாய், அங்கங்கும் நின்றவர்கள் பயந்தோட, எதிரிலே குத்துக்கோற்காரர்கள் ஓடிச்செல்லத், தூய பெரிய மலைபோலத் தோன்றிப் பயங்கரமாக அணைந்தது அன்றே. கஉ

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒருமுடிபு கொண்டன.

561. (வி - ரை) **மற்று** - அங்கு. வினைமாற்றுப்பொருளில் வந்தது. **இப்பால்** என்றலும் காண்க.

**வளநகர்** - கருவூர். **மன்னும் கொற்றவர் - அநபாயர்.** ஆசிரியரது காலத்து நிலைபெற்று நின்று பேரரசு செலுத்தியவராதலின் **மன்னும்** என்றார். **மன்னுதல்** - நிலைபேறுடைத்தாதல்.

**கொற்றவர் வளவர் தங்கள் குலப் புகழ்ச்சோழனார்** - அநபாயச்சோழர் குலத்தில் முந்தை வழிமுதலாய் அவதரித்த புகழ்ச்சோழர் என்ற அரசர். இவர் நாயன்மார்களிலொருவர் சரிதவரலாறும் பண்பும் பொய்யடிமையில்லாத புலவர் சருக்கத்துட்காண்க. "பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்க் கடியேன்" என்பது திருத்தொண்டத் தொகை. **மன்னுங்கொற்றவர் வளவர் தங்கள் குலம்** என்றது பொதுவாகச் சோழர் குலத்தைக் குறித்ததென்பர். ஆயின் இப்புராணம் பாடுங்காலத்து வாழ்ந்த அந்நகரத் தரசராகிய அநபாயரைச் சிறப்பாகச் சுட்டி அவர் வந்த குலம் என்ற பொருள்பெற வைத்தது ஆசிரியர் கருத்துப் போலும். "அநபாயன் றிருக்குலத்து வழிமுதலோர்"— புகழ்ச்சோழர் புராணம் - (8) என்று இதற்குப் பின்னர்ப் பொருள் விரித்திருத்தல் காண்க. "மன்னிய அநபாயன்"—(552) என இக்கருத்தேபெற முன்னர்க் கூறியதும் காண்க. இப்புராணத்துள்ளே நாயன்மார்களான சோழர்களது தொடர்பு பற்றிய இடங்களில் அநபாயரைச் சுட்டிக் கூறும் மரபுடைய ஆசிரியர் இங்குக் **கருவூர்** என்ற

தலைநகரின் றொடர்புபற்றி அநபாயரை முன்னர்க் கூறியதனாலும், சோழர் தொடர்பு புகழ்ச்சோழர் புராணத்திற்குச் சிறப்பா யுரியதனாலும், அவர் பேர் குறித்து அநபாயர் குலம் என்று இங்குக் குறிக்காது பின்னர்க் கூறினாரென்க. கருவூரின் றொடர்பில் அநபாயரைச் சுட்டியதன் மரபு வேறு. பின்னர்ச் சண்டீசர் புராணத்தில் "மன்னர் பெருமான் அநபாயன் வருந்தொன் மரபின் முடிசூட்டுந் தன்மை நிலவு பதியைந்தின் ஒன்றாய் விளங்குந் தகைத்தவ்வூர்" (8) என்று திருச்சேய்ஞலூரின் றொடர்பால் அநபாயரைச் சுட்டிக் கூறியதனாலறிக.

**பற்றலர் முனைகள் சாய்க்கும் பண்பு பெற்ற** - இப்பண்பு பின்னர் நிகழ்வது புகழ்ச்சோழர் புராணத்துட் காண்க. இஃது பின்னர் எதிர்காலத்து நிகழ்வதாதலின் **சாய்க்கும்** என்று எதிர்காலப் பெயரெச்சத்தாற் கூறினார். **பண்பு பெற்ற** என்ற குறிப்பும் அது. **பண்பு** - தன்மை. **வெங்களிறு** - "வெம்மை விருப்பம்" என்ப. விருப்பமே இச்சரித நிகழ்ச்சிக்குக் காரணமாதலின் இவ்வாறு குறித்தார். இக்கருத்தினை "வேறிரு தடக்கைத் தாய அடுகளி றென்ன நின்ற அன்பரை முன்பு கண்டான்" (584) என்ற இடத்துக் காண்க. உரை பார்க்க. **வெம்** - கொடிய எனக் கொண்டு பகைவர்க்குக் கொடுமை பயக்கும் என்றுரைத்தலுமாம்.

**பட்டவர்த்தனம்** - யானைச் சேனையினுட் டலைமைபெற்று, அரசர் ஏறிவரத்தக்க யானைக்கு வழங்கும் பெயர். பட்டத்துயானை என்பர்.

**கோலம்பெருகு மாநவமி** - மகாநவமி என்பது புரட்டாசி மாதத்தில் வளர்பிறை முதனாட் டொடங்கி ஒன்பது நாட்கள் அம்மையாரை நோக்கிக் காக்கப்படும் சைவ நோன்பு. இதனுள் பூசைச்சிறப்பு இரவிலே நடைபெறுவதால் இதனை நவராத்திரி என்று வழங்குவர். அடுத்த பத்தாம்நாட் பூசையுடன் இந்நோன்பு முற்றுப் பெறுவதால் அதனையுங் கூட்டித் தசரா என்பதும், இதில் தேவிபூசை சிறப்பாதலின் துர்க்கபூசை என்பதும் வடதிசையாளர் மரபு. மா நவமியில் நகரெங்கணும், திருக்கோயில்களெங்கணும், மனைகளெங்கணும், பலவகையானும் அலங்கரித்துத் தேவி கொலுவிருக்கைச் சிறப்புக் கொண்டாடப் பெறுவது மரபு. ஆதலின் **கோலம் பெருகு மாநவமி** என்றார். கோலம் நவமிவரை நாளுக்குநாட் பெருக உளதாதலின் **பெருகும்** என்று குறித்தார்.

**முன்னாள்** - அட்டமிதினத்திலே. அட்டமி என்னாது மாநவமி முன்னாள் என்று சுட்டியது விழாவின் சிறப்பெல்லாஞ் சுருங்கக் கூறிக் குறிக்கும் பொருட்டு. **அன்றே** - முன்னாளாகிய அந்நாளிலே என்று கூட்டுக. **அன்றே** - அசையென்றொதுக்கு வாருமுளர். களிறு - நவமிமுள்ளாள் - நீராட - மதஞ்சொரிய - போக-ஓட-தோன்றி - அணைந்தது - என இவ்விரண்டு பாட்டுக்களையுந் தொடர்ந்து முடிக்க.

**நவமி நன்னாள்**—என்பதும் பாடம். நவமி நாளின் என்பனவு

562. (வி - ரை) **மங்கல விழவு கொண்டு** - கோல மாநவமி விழாவின் காரணமாக மங்கலத்தை உட்கொண்டு.

**வரு நதி.** இந்நகரில் வருகின்ற ஆம்பிராவதி நதி. இது மேற்குத் தொடர்ச்சி மலைகளிலொன்றில் கோயமுத்தூர்ச்சில்லா திரிமூர்த்தி மலைக்கருகில் தோன்றிக் கிழக்கில் ஓடி வருவது. காவிரியின் கிளைநதிகளில் ஒன்று. திருச்சிராப்பள்ளிச்சில்லா கட்டளை என்ற ஊருக்கருகில் திருமுக்கூடல் என்ற தலத்தில் காவிரியொடு கலக்கின்றது. இந்நதியும் மணிமுத்தா நதியும் காவிரியும் கூடுதலால் அவ்விடத்துக்குத் திருமுக்கூடல் என்று பெயராம். இதன் வடகரையில் கருவூர்த்தலமும் திருஆனிலைக் கோயிலும் உள்ளன. ஆம்பிரம் என்னும் பெயரையுடைய மாமரங்களினது நீழலில் **வருதலால்** இதற்கு ஆம்பிரமாநதி யென்று பெயர். உமை அம்மையாரின் திருவருளே உருவமாய் **வருதலின்** அம்பாநதி யென்பர். இந்நதியின் இருமருங்கிலும் பல முனிவர்கள்

மாவிருக்கங்களாக இருந்து தவஞ் செய்தார்கள் என்பது தலபுராணம். இன்னும் இந் நதியின் வரலாறும் பண்பும் பெருமையும் கருவூர்த்தலபுராணம் ஆம்பிராவதி நதிச் சருக்கத்துட்காண்க. இங்ஙனம் உள்ள வரலாற்றினைச் சுட்டி இங்கு ஆசிரியர் **வந நதி** என்று குறித்தார்.

**நதித்துறை நீராடி** - **துறை** - நதியின் துறைகள் பலவற்றுள்ளும் யானை யிறங்கி நீராடற்குரிய துறை.

**போழி மதஞ் சோரிய** - பெருங்களிப்புக் காரணமாக மிகுதியாய் மத நீர் சொரி யும் மத மிக்க யானை கட்டுக்கடங்காது ஓடித் தனதிட்டப்படியே செயல் செய்யும் என்பர்.

**நின்றார் எங்கணும் இரியல்போக** - அது வரும்வழியில் எங்கெங்கும் அருகில் நின்றவர்கள் கண்டு ஓட. **இரியல்போக** - ஒரு சொன்னீர்மையாய் விரைந்து போத லைக் குறித்தது. 'கறையடியானை யிரியல் போக்கும்' - **புறநானூறு** - கஉடு - 12.

**எதிர்** - முன்னே. **பரிக்காரர்** - குத்துக்கோற்பாகர். யானையை வசமாக்கும் ஈட்டி முதலிய குத்துக் கோல்களைத் தாங்கி அதற்கு முன்னும் இருபக்கங்களினும் ஓடிச் சென்று மக்களை விலக்கியும், யானையை அடக்கியும், அதன் செலவை ஒழுங்கு படுத்தியும் செல்வோர். யானையின் மேலிருந்து அங்குசத்தால் அதனைச் செலுத்தும் பாகர்களைப் போலவே இவர்கள் கீழே நிலத்தில் நடந்து செலுத்தும் பாகர்கள். யானைச் செலவுக்கு இவர்களும் பொறுப்பு வாய்ந்தவர்கள் என்பது பின் இச்சரிதத் தாற்றெரிக.

> "பொற்பா கரைப்பிளந்து கூறிரண்டாப் போகட்டு
> மெற்பா ரிரைப்போக மேல்விலகி—நிற்பால
> மும்மதத்து வெண்கோட்டுக் கார்நிறத்துப் பைந்தறுகண்
> வெம்மதத்த வேகத்தால் மிக்கோடி—விம்மி
> யடர்த்திரைத்துப் பாயு மடுகளிற்றை"

என்ற, பதிஞெராந்திருமுறை - **போற்றித் திருக்கலிவெண்பாவும்**,

> "பணப்பா கரைப்பரிந்து குத்திப் பறித்த
> நிணப்பாகை கீள்விசும்பின் வீசி—யணப்பரிய
> வோடைக் கருங்களிற்றை யொண்பரிக் காரர்கடா
> மாடணையக் கொண்டு வருதலுமே"

என்ற, ஷி திருமுறை - **ஆளுடைய பிள்ளையார் திருஉலாமாலையும்**, பிறவும் காண்க.

**துங்கமால் வரைபோல்** - **துங்கம்** - பெருமையும் தூய்மையும் குறிக்கும். **மால் வரை** - பெருமலை. "மைவரை யனைய" (575), கைமலை-கடைமலை - கைவரை என்ப னவும் வழக்கு. மலைபோலப் பெருத்த உருவுடன் யானைவந்தது என்க. மெய்யுவமம். "வாசக்கட மழைமுற்பட மதவெற்பெதிர் வருமால்" (திருஞா - புரா - 111), "காற் றுருமோ குன்றே கடலோ வடலுருமோ" (ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை) - முதலிய திருவாக்குக்கள் காண்க.

**துண்ணென** - யாவரும் திடுக்கிட்டு அஞ்சும்படி. "இவ்வுலகத்தவர் யாவரும் துண்ணெனும் படிதோன்ற" (455) என்ற விடத்துக் காண்க.

மதயானையின் விலக்கற்கரிய பெரும் போக்கினை இவ்வளவும் விரித்தது, பின்னர் எறிபத்த நாயனார் இத்தனையும் ஒரு சிறிதும் பொருட்படுத்தாது அதன் மேலடர்ந்து துணித்து வீழ்த்த பெரு வீரமும் அரிய அடிமைத்திறமும் புலப்படுத்தும் பொருட்டு.12

563. வென்றிமால் யானை தன்னை மேல்கொண்ட பாக ரோடுஞ்
சென்றெரு தெருவின் முட்டிச் சிவகாமி யார்முன் செல்ல

வன்றனித் தண்டிற் றூங்கு மலர்கொள்பூக் கூடைதன்னைப்
பின்றொடர்ந் தோடிச் சென்று பிடித்துமுன் பறித்துச் சிந்த, கூ

564. மேல்கொண்ட பாகர் கண்டு விசைகொண்ட களிறு சண்டக்
கால்கொண்டு போவார் போலக் கடிதுகொண் டகலப் போக
நூல்கொண்ட மார்பிற் றெண்டர் நோக்கினர் பதைத்துப் பொங்கி
மால்கொண்ட களிற்றின் பின்பு தண்டுகொண் டடிக்க வந்தார். கச

563. (இ - ள்) வெளிப்படை. வெற்றிதருகின்ற யானையானது தன்மேலே ஏறியிருந்த பாகர்களோடும் போய் ஒரு தெருவிலே முட்டி, அங்குச் சிவகாமியாண்டார் முன்னே சென்று கொண்டிருக்க, அவரைப் பின்னே தொடர்ந்து ஓடிப் போய் அவர் தாங்கிச்சென்ற வலிய ஒப்பற்ற தண்டிலே தூங்கிய பூங்கூடையை முன்பறித்துச் சிந்த, கூ

564. (இ - ள்) வெளிப்படை. அதனை மேல்கொண்ட பாகர்கள் அது கண்டு, வேகங் கொண்ட அத்தயானையை ஊழிக்காற்றினைக் கொண்டு போவார்கள் போல விரைந்து அகலக்கொண்டு போய்விட்டார்களாக, முந்நூலணிந்த மார்பினையுடைய தொண்டராகிய சிவகாமியாண்டார் அதனை நோக்கிப் பதைத்து மிக்க கோபத்தாற் பொங்கி, மதத்தால் மயக்கங் கொண்ட அவ்வியானையின் பின்பு அதனைத் தண்டு கொண்டு அடிக்க வந்தார். கச

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன.

563. (வி - ரை) **வென்றி** - வெற்றிதருவதாகிய. வெற்றிக்குக்காரணமாகிய. அரசாது பட்டத்துயானையானதாலும், அரசர் வெற்றிமுடி சூடியவராதலாலும், இதுவரை அவருக்கு இவ்வுலக நிலையின் வெற்றிக்குத் துணை செய்ததுபோல இச்சரித நிகழ்ச்சியில் திருவருள் கூடும் வெற்றிபெறத் துணைசெய்தலானும், இன்னும் சிறிது போதினில் துண்டமாக்கிக் கொல்லப்பட நிற்கும் அதனை **வென்றி** என்னும் அடைமொழி தந்து சிறப்பித்தார். "பற்றலர் முனைகள் சாய்க்கும்" (561) என்று முன்னரும் கூறினர். **மால்** - மயக்கம். மதத்தினாலாகியது. **பொழிமதஞ்சோரிய** என மேற்பாட்டிற் கூறியதுகாண்க. யானையின் செயலுக்கும், அது இனி அடைய நிற்கும் திருவருள் வெளிப்பாட்டுக்கும் அதன் மதமே காரணமாதலின் அதனை ஈண்டு விதந்து கூறினர். **மால்** - பெரிய என்றலுமாம்.

**ஒரு தெருவின்** - அரசயானை முதலியவை செலுத்தப்படற்குரியதாக விதிக்கப்படாத வேறொரு தெருவிலே. அது சிவகாமியார் விலகிச்சென்றதொரு தெருவாயிருந்தது. **முட்டி** - அத்தெருவிலே யானை பாகராற் செலுத்தப்படாமல் தானே போந்தது என்று குறிக்க **முட்டி** என்றார்.

**முன்செல்ல** - அரசயானை முதலியவை பவனிபோதுந் தெருவாயிருப்பின் அங்கு நிகழும் ஈவமிவிழாச் சிறப்புக்கள் முதலியவற்றால் தாம் விரைந்து சென்று இறைவனுக்கு மாலைசாத்தும் காலை வந்ததவதற்கு இடையூறும் தாமதமும் நேருமாதலின் விலகிச்செல்லும் வேறு ஒரு தெருவிலே முன்னுற்போந்தனர் சிவகாமியார் என்பது.

**வன் தனித் தண்டு** - வலிமை - இறைவனுக்குரிய பூக்கள் நிறைந்த பூக்கூடையைத் தாங்கப்பெறுதல். **தனிமை** - இத்தண்டினுக்குக் கிடைத்தது போன்ற பேறு வேறு எதனுக்குங் கிடையாமை.

**தூங்கும்** - தொங்கும். இடைக்குக் கீழுள்ள உடற்பகுதிகள் அசுத்த பாகங்களாம். ஆதலின் இறைவனுக்குச் சாத்தும் பூக்களைக் கொண்ட கூடையை இடுப்புக்குக்கீழ்ப் பிடிக்கலாகாது என்பது விதி; ஒரு தண்டிலே தூக்கித் தலைக்குமேற் பிடிக்கப்படும். ஆதலின் **தண்டிற் தூங்கும்** என்றார். விரைந்து செல்கையிற் கூடையின் அசை

வினால் உள்ளிருக்கும் பூக்கள் ஒன்றோடொன்று தாக்கி நலிவுறாதபடி கொண்டுபோகப் பெறும் குறிப்பும் பெறத் **தூங்கும்** என்றார்.

**பின் தொடர்ந்து ஓடிச் சென்று** - காலை வந்துதவவேண்டித் திருப்பணியில் வைத்த அன்பினாலே கடிதினில் முன்னே விரைந்து சென்றார் சிவகாமியாராதலின் யானை அவரைப் பின்றொடர்ந்து **ஓடிச்சென்று** அவரது பூக்கூடையினைப்பிடித்தது என்பது. கடுநடையுடைய யானையும் ஓடிச்சென்று தொடருமாறு அத்தனை விரைய முன் சென்றனர் அன்பர் என்றது காண்க.

**பிடித்து முன் பறித்து** - பிடித்த பின்னரே பறித்தல் நிகழ்ந்ததாயினும் வேகத்தால் பறித்தலே முன்னர்த் தோற்றப்பட நிகழ்ந்த தென்னும்படி.

**சிந்த** - கூடையைப்பறித்து அதனுள் இருந்த திருப்பள்ளித்தாமங்களைத் தெருவிலே சிதற. "பூவை யென்கையிற் பறித்து மண்மேற் சிந்தி" (571), "பூங்கூடைதன்னில் மருவிய பள்ளித்தாம நிறைந்திட அருள" (600) என்றவற்றாலறிக.

**பிடித்துடன்**—என்பதும் பாடம். வன்றிறல் என்பனவும் பாடம் 13

564. (வி - ரை) **மேல்கொண்ட** - ஊர்ந்த.

**கண்டு** - யானை பூக்கூடையைப் பிடித்துப்பறித்துச் சிந்தியதனைக்கண்டு.

**களிறு** - களிற்றை - யானையை - இரண்டாம் வேற்றுமையுருபு தொக்கது. களிற்றைக்கொண்டு அகலப்போக என்று கூட்டுக. களிறு காற்றுப்போலப் பாகரைக்கொண்டகல என்று எழுவாய்வேற்றுமைப் பொருள்படக்கொண்டு உரைப்பாருமுளர். அஃது பொருந்தாமையறிக.

**சண்டக்கால்** - சண்டமாருதம் என்னும் ஊழிக்காற்றை. யானை தன்னியல் பானே காற்றுப்போன்ற வேகத்தாற்போவது. "கால்கிளர்ந் தன்ன வேழ மேல் கொண்டு" என்பது திருமுருகாற்றுப்படை. பாகர் அதனை மேலும் வேகமாகச் செலுத்தினர். ஆதலின் மிகு வேகமுடைய **சண்டக்கால்** என்றுவமித்ததுக் **கடிது கொண்டகல்** என்று அதற்குக் காரணமும் காட்டினார் தொழிலுவமம். தான் பிறர் வசப்பட்டமையாது தன்னகப்பட்ட எல்லாப் பொருள்களையும் அலைத்தல் ஊழிக்காற்றின் தன்மை. சில ஆண்டுகளின்முன் தென்னாறுகாடு, கூடலூர், தஞ்சை சில்லாக்களில் அடித்த சிறு பெருங்காற்றினால் உலகம் அலைப்புண்டு பெருங்கேடுற்றதனை எண்ணினால் சண்டக்காலின் நிலை ஒருவாறு ஊகிக்கக்கிடக்கும். அத்தகையதனையும் அடக்கிக் கொண்டுபோவார் போல என்க. இங்கு யானை மதம் மிக்குக் கட்டுமீறித் தானே வேறொரு தெருவின் முட்டியதாதலின் மேலும் இவ்வுவமானத்தின் பொருத்தம் கண்டுகொள்க.

**கடிது கொண்டகல** - யானை, மேலும் தீமை செய்யாதபடி கொண்டுபோக என்பது. நிகழ்ந்த சிவ அபசாரத்தைப் பொருட்படுத்தாது அலட்சியஞ்செய்தகன்றார் என்பதன்று. புகழ்ச்சோழராகிய பேரன்பரது ஏவலாட்களானமையால் சிவாபராதத்தினைக் கண்டும் புறக்கணித்தார்கள் என்று கூறுதல் பொருந்தாது. மெய்ப்பொருள் நாயனாரது "கடையுடைக் காவலாளர் கைதொழு தேற நின்றே, யுடையவர் தாமே வந்தார் உள்ளெழுந் தருளு மென்ற"தும், "தனித்தடை நின்ற தத்தன் "இடை தெரிந்தருள வேண்டும்; "துயில்கொளு மிறைவன்" என்றதும் காண்க. இங்கு இந்நிகழ்ச்சி யாவும் "திங்கட் கொழுந்தணி வேணிக் கூத்த ரருளினாற் கூடி"யன எனப் பின்னர் அறிகின்றதற் கேற்பப் பாகர் செயலின் உட்கோளையும் குறித்தல் வேண்டும் என்பது. **பாகர் கண்டு** என்றதன் குறிப்புமது.

**நூல் கொண்ட மார்பிற் றொண்டர்** - மறையவராகிய அடியார். முன்னர்ப் "புண்ணிய முனிவனார்" (558) என்றதனை விளக்கியபடி. **நோக்கினர் பதைத்து** - நோக்கிப் பதைத்து. முற்றெச்சம். பின்றொடர்ந் தோடிவந்து - பின்னிருந்தபடியே தண்டின்

தலைப்பில் தூங்கிய பூங்கூடையைப் பறித்துச் சிந்தியதாதலின் அதனைப் பின்றிரும்பிப் பார்த்தறிந்தனராகிப் பதைத்தனர் என்று குறிக்க **நோக்கினர் பதைத்து** என்றார். **நோக்கினர்** என்பதனை வினைமுற்றாகவே கொண்டு, பார்த்தனர் ; பின்னர்ப் பதைத்து - அடிக்கவந்தார் என்றுரைத்தலுமாம். நோக்குதல் ஊன்றிக் கருதிப் பார்த்தல். இறைவனுக்குத் தாம் செய்யும் நியதியான திருப்பணிக்கு முட்டு நேர்ந்ததே பதைப்புக்குக் காரணமாம்.

**அடிக்க வந்தார்** - பூக் கூடையைப் பறித்துச் சிந்தியபின் வேகமாய்ச் செலுத்தப் பட்டு முன்னே போயினமையின் அதனை நோக்கிவந்தார். யானை செய்த சிவாபராதமான குற்றத்திற்காக அதனை ஒறுத்து முறைசெய்வார்போல அடிக்க முற்பட்டனர். தாம் அதனை அணுகவும் இயலாது - அணுகினும் அடித்தல் இயலாது-அடிப்பினும், மதம் நிறைந்த அது தம்மை எதிர்த்துத் தாக்கியதாயின் தம்மைக் காத்துக் கொள்ளுதலும் இயலாது - அடித்தல் தானும் அதற்குத் தக்க தண்டனையுமாகாது - என்ற இவை ஒன்றும் தோன்றாமல் அடிக்க வந்ததற்கு இவரது பதைத்தலும், பொங்குதலும், திருப்பணியில் வைத்த அன்பும் காரணமாம். சினம் உள்ளத்தைக் கவர்ந்து எழுந்து ஓங்கிற்று.

**அடிக்கவந்தார்** - அவ்வாறு வருதலே யன்றி அடித்தல் நிகழவில்லை என்பது குறிப்பு.

**தண்டு கொண்டு** - தண்டினாலே. **தண்டு** - பூக்கூடை தூக்கியதாய் இவர் மலர்க் கையிற் கொண்டு சென்ற தண்டு. "மலர்க் கையிற் றண்டுங் கொண்டு" (560), "வன்றனித் தண்டில்" (563) என்றவை காண்க.

யானை - ஒரு தெருவின் முட்டி - சென்று - கூடை தன்னைப் பிடித்துப் - பறித்துச் சிந்த, - பாகர் கண்டு. (அக்) களிறு கடிது கொண்டு - போக, - தொண்டர் - நோக்கினர் - பொங்கி - (அதனை) அடிக்கவந்தார் - என இவ்விரண்டு பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக் கொள்க. களிறுபூண்ட . என்பதும் பாடம் 14

565. அப்பொழு தணைய வொட்டா தடற்களி றகன்று போக,
மெய்ப்பெருந் தொண்டர் மூப்பால் விரைந்துபின் செல்ல மாட்டார்,
தப்பினர் விழுந்து, கையாற் றரையடித், தெழுந்து, நின்று,
செப்பருந் துயர நீடிச், செயிர்த்து,முன் "சிவதா" வென்பார். கரு

**வேறு**

566. "களியா னையினீ ருரியாய்! சிவதா!
எளியார் வலியா மிறைவா! சிவதா!
அளியா ரடியா ரறிவே! சிவதா!
தெளிவா ரமுதே! சிவதா! சிவதா!, கசு

567. "ஆறும் மதியும் மணியுஞ் சடைமே
லேறும் மலரைக் கரிசிந் துவதே?
வேறுண் ணினைவார் புரம்வெந் தவியச்
சீறுஞ் சிலையாய்! சிவதா! சிவதா! கஎ

568. "தஞ்சே சரணம் புகுதுந் தமியோர்
நெஞ்சேய் துயரங் கெடநேர் தொடரும்
மஞ்சே யெனவீழ் மறலிக் கிறைநீள்
செஞ்சே வடியாய்! சிவதா! சிவதா!, கஅ

569. "நெடியோ னறியா நெறியா ரறியும்
படியா லடிமைப் பணிசெய் தொழுகு
மடியார் களில்யா னுரா வணைவாய்
முடியா முதலா !" யெனவே மொழிய, ககூ

வேறு

570. என்றவ ருரைத்த மாற்ற மெறிபத்த ரெதிரே வாரா
நின்றவர் கேளா மூளு நெருப்புயிர்த் தழன்று பொங்கி
"மன்றவ ரடியார்க் கென்றும் வழிப்பகை களிறே யன்றே,
கொன்றது வீழ்ப்ப" னென்று கொலைமழு வெடுத்து வந்தார். உ0

565. (இ - ள்) வெளிப்படை. அப்பொழுது வலிய அவ்வியானை அவர் தன்னை அணுகவொட்டாதபடி நீங்கிப்போயினதாக, உண்மைத் தன்மையுடைய பெருந்தொண்டர் மூப்பினுலே விரைவாய்த் தொடர்ந்து அதன்பின்னே செல்லமாட்டாதவராகி, அதனை விட்டார் ; கீழே விழுந்து, கையினுலே தரையில் அடித்து, மோதிப், பின் எழுந்து நின்று, சொல்லற்கரிய அன்பத்தால் கீடிக் கோபித்து முன்னே "சிவதா" என் பாராகி, கடி

566. (இ - ள்) வெளிப்படை. " மதங்கொண்ட யானையை உரித்து அத்தோலி னைப் போர்த்தவரே ! சிவதா !; எளியாரைக் காக்கின்ற வலிமையுடையவரே ! சிவதா !; அன்பு நிறைந்த அடியார்களின் அறிவானவரே ! சிவதா !; தெளிவார்க்கு அமுதமே ! சிவதா ! சிவதா !; கசு

567. (இ - ள்) வெளிப்படை. " கங்கையையும் பிறைச் சந்திரனையும் அணியும் சடைமுடிமேல் எற்றியணியப்படுகின்ற மலரை யானை சிந்துவதோ?;மாறுபட்டு மனத்தி னுள் நினையும் அசுராது புரங்கள் வெந்து மாயும்படி கோபித்த வில்லை யேந்தியவரே ! சிவதா !சிவதா !; கஎ

568. (இ - ள்) வெளிப்படை. " தஞ்சமாய் அடைக்கலம் புகுதும் தமியோராகிய மார்க்கண்டேயருடைய நெஞ்சிற்பொருந்திய துயரம் கெடும்படி திருவுள்ளங் கொண்டு, அவரைத் தொடர்ந்து வந்த காலனுக்குச் சிறிதே மீண்ட செம்மையுடைத்தாகிய சேவ டியினை யுடையவரே ! சிவதா ! சிவதா ! கஅ

569. (இ - ள்) வெளிப்படை. " திருமாலும் அறியமாட்டாத சிவநெறியிலே நின்றவர்களாகித்,தாம்அறிந்த வகையாலே அடிமைத் தன்மையில் நின்று பணிசெய்து ஒழுகுகின்ற அடியார் கூட்டத்திலே நான் யாராக மதித்து அணைவீர் ? முடிவில்லாத முதல்வரே !" எனச் சிவகாமியாண்டார் மொழியவே, ககூ

570. (இ - ள்) வெளிப்படை. இவ்வாறு அவர்மொழிந்த சொற்களை எதிரே வாரா நின்ற எறிபத்த நாயனர் கேட்டு, மூளும்நெருப்புப் போன்று பெருமூச்சு விட் டுக், கோபத்தாற் பொங்கி, "அம்பலவருடைய அடியார்களுக்கு என்றும் யானை வழிப் பகையன்றே ? அவ்வியானையைக் கொன்று வீழ்ப்பேன் " என்று தமது கொலை வல்ல மழுவாயுதத்தை எந்திக் கொண்டு வந்தார். உ0

இந்த ஆறுபாட்டுக்களும் ஒரு முடிபுகொண்டன.

565. (வி - ரை) **அப்பொழுது** - அடிக்க வரும்பொழுது. **அணையவொட்டாது** - அவர் அணுகாதபடி. அடிக்கும் அந்தப்பொழுது - சந்தி - கைகூடாதபடி என்றலுமாம். **தப்பினார்** - யானையை அடிக்க வந்தகுறியின் வழுவினர். அடித்திருப்பாராயின், அதனுல் நீங்குறுவார்; ஆதலின் அதனினின்றும் தப்பினர் என்றலுமாம்.

**விழுந்து** - துயரத்தால் தாமே நிலத்தில் வீழ்ந்து. வேகத்திற் குறிவைத்து வந்த அது தப்பியதாதலின் அவ்வேகம் தப்பியதாற் கீழேவிழுந்து என்றுரைத்தலுமாம். தப்பினர் என்றதனை முற்றெச்சமாக்கித் தப்பிவிழுந்து - கால்தவறி வீழ்ந்து என்றுரைப்பாருமுளர்.

**கையால் தரையடித்தல்** - மிக்க துயரத்தால் நிகழ்வதோர் மெய்ப்பாடு.

**எழுந்து நின்று** - துயரமிகுதிப் பாட்டினாலே விழுந்து தரையடித்தலாகிய முதற் செயல் நிழ்ந்தபின்னர் நிகழும் மெய்ப்பாடு. எழுந்து நிற்றலும் முறை கூறி ஓலிடுதலும் இவையே பின் நிகழ்வன.

**செப்பருந்துயரம் நீடி** - சொல்ல முடியாத துயரத்தான் மிக்கவராய். தாம் நித்தமும் நியதியாகச் செய்து வந்த இறைவன் திருப்பணி இன்று இவ்வாறு முட்டுப்பட்டமையாற் பெருந்துயரமடைந்து.

**செயிர்த்து** . திருப்பணி முட்டுமாறு செய்தலின் அதுசெய்த பொருளின் மாட்டுச் சினம் மிக்கது. பெருந்துயரத்தின் பின்னிகழும் உள்ளதிலை. இவ்வாறே மூர்த்தி நாயனார் புராண வரலாற்று நிகழ்ச்சியும் காண்க.

**சிவதா என்பார்** - இறைவனை நினைத்து ஓலமிடும் ஒரு ஓலச்சொல். இதுபோல, அவிதா - அவிதா என்பனவும், அப்பிராமண்ணியம் என்பதும் ஆபத்துக் காலங்களில் முறையிடும் ஓலச் சொற்கள். இவ்வாறன்றி இதற்கு எப்போதும் இவர் " சிவதா சிவதா " என்று சொல்வது வழக்க மென்றுரைப்பாரும் உளர். **என்பார்**-என்பாராகி.

என்பாராகிச் - சிவதா ! சிவதா ! முதலாய் ! எனவே மொழிய (569) என்று தொடர்ந்து முடிக்க.

**துயரமெய்தினீர்**—என்பதும் பாடம். 15

566. (வி - ரை) **களி** - மதம் பொருந்திய. **ஈர் உரியாய்** - உரித்த தோலைப் போர்வையாக உடையவனே. **ஈர் உரி** - உரித்த தோல். யானையை உரித்தவராதலின் மத யானையால் நேர்ந்த இவ்விடுக்கணைத் தீர்க்க உரிமையுடையவர். **உரியாய்** - உரியவனே என்ற குறிப்புமாம். **ஈர்** - ஈர்த்த. **உரியாய்** - உரிமையுடையாய் என்பது குறிப்பு.

கயாசுரனைப் பூர்வகாலத்தில் தோலை உரித்துத் தேவர்களின் இடர்போக்கியவர் சிவபெருமான் என்பது கந்தபுராண வரலாறு.

**எளியார் வலியாம் இறைவா** - ஏழைபங்காளன் ஆதலின் வலிமையற்ற எளிய எனக்கும் வலிமையளித்து இடரை நீக்குவிக்கும் இறைமைத் தன்மையுடையவரே என்பது குறிப்பு. "எளியரை வலியர் வாட்டின் வலியரை யிருதீர் வைப்பி, னளியறத் தெய்வம் வாட்டும் எனுமுரை." என்ற **காஞ்சிப் புராணம் - வயிரவக் கடவுள் துதி** காண்க. மாவலியுடைய மாவலியைச் செற்றவன் வாமனன். அவனே வயிரவராக வந்து செருத்து அவனது தோலை உரித்துச் சட்டையாகப் போர்த்தும், தண்டத்தைக் கைகொண்டும் சட்டையப்பராயினர் என்பது சரிதம். "வாமனனார் மாகாயத் துதிரங் கொண்டார்" என்ற திருத்தாண்டகமும் காண்க. அவ்வாறு மாபலங்கொண்டானையும் செருத்து உலகங்காத்ததுபோல், இங்குத் தன் பலத்தாலும் மதத்தாலும் அரசனைச் சார்ந்த இறுமாப்பாலும் என்னை வலித்த யானையைத் தண்டித்து என்னைக் காக்கும் வலிமை உடையாய் என்பது குறிப்பு.

**அளியார் அடியார் அறிவே** - உன்பால் அன்பு நிறைந்த அடியார்களின் அறிவு உனது நிறைவைப் பெற்றுளது. அதனால் அந்த அறிவு நீயே யாகின்றாய். அறிந்தாயாதலின் அதனை அகற்றுமாறு நான் வேண்டுதல் மிகை என்பனவாதி குறிப்புக்கள் காண்க. **அளி** - வையகமும் துயர்தீர்க்க என்னும் பரந்த கருணை. " அளிபவருள்ளத் தானந்தக் கனியே " என்பது திருவிசைப்பா.

**தெளிவார் அமுதே** - உன் இறைமைக் குணங்களைத் தெளிவார்க்கு அமுதமானவனே. " தேறுவார்க் கமுதமான செல்வனார் "—**கண் - புரா - 167. அமுதம்** -

துன்பம் போக்குவது. தெளிவு ஆர் அழது என்று கொண்டு எனது அறிவுமயங் கிய இங்கு அதனைத் தெளிவித்து மருந்துபோல் உதவுபவனே என்றலுமாம். 16

567. (வி - ரை) ஆறும் மதியும் அணியும் சடை ! கங்கையின் செருக்கடக்கிப் பிறையை வாழ்வித்த சிலமுடைய சடை என்க. ஆறு - கங்கை. கங்கையைச் சடையில் அணிந்தது அடியடைந்து பணிந்த பகீரதனைக் காத்தும் உலகமழியாமற் காத்தும் அருளிய சரிதம் குறித்தது. மதியணிந்தது தன் அடைந்தார்க்கு இன்பங் கள் தந்து காக்கும் செயல் குறித்தது. அத்தன்மையுடைய சடைமேல் ஏறும் மலரைச் சிந்துவதே என்றமையால் அத்தத் திருப்பணிவிடையே கதியாக அடைந்த என்னைக் காத்தல் கடன் என்பது. சடைமேல் ஏறும் - அத்தகைய சிறப்புடைய சடையினைப் போற்றி யலங்கரிக்கும் என்றதாம்.

கரி சிந்துவதே - ஏகாரம் வினு. சிந்துவது தகுமா ? முடிமேல் ஏறுவதனைப்படி மேற் சிந்துவதா? ஆற்றினை அணிந்து உலகங் காத்த சிறப்புப் பல்வகையானும் விதந் தோதப்படுதலான் இங்குப் புண்ணிய முனிவனுர் அதனைச் சுட்டினுர். "கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை கங்கை யாயிரமா முகத்தினெடு வானிற் ரோன்றும், புயல் பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்", "பகீரதற்காய் வானுர் வேண்டப் பாரித்திழி யும் புனற்கங்கை பனிபோலாகச் செறுத்தானே" முதலிய திருத்தாண்டகங்கள் காண்க. அவ்வாறு ஆற்றினை அணியாதிருந்தாராயின் "சலமுகத்தா லவன்சடையிற் பாய்ந்திலனேற் றரணியெல்லாம், பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம்" என்று திருவாசகம் அருளிற்று. உலகத்திற்கு இவ்வாறுவரும் பெருங்கேட்டைத் தவிர்த்த உமக்கு இச்சிறு கேட்டைத் தவிர்த்தல் இலகுவிற் செய்யும் கடமையாம் என்பது.

வேறு உள் நினைவார் புரம் வெந்து அவியச் சீறும் சிலையாய் - மாறுபட்ட நினைப் புள்ள மூப்புரத்தார்களை அப்போதே சீறி எரித்த வில்லையுடையவனே! இங்கு நினைப்பு மட்டு மன்றி மாறுபட்ட செயலும் நிகழ்ந்து விட்டது. உள்வேறு நினைவார் என்க. அந்த மூப்புரத்திலே வேறு நினையாதார் மூவர் இருக்க, அவர்களை வாழ்வித்து, எனைப்புரத்தார் மட்டும் எரியச் சீறினுர். ஆதலின் உள் வேறு நினைவார்புரம் என் ருர். பிறிதினியைபு நீக்கிய விசேடணம். "மூவ ருயிர்வாழ மூப்புரமு மீருக ஏவர் பொருதா ரிமையோரில்" என்ற புலவர்பாட்டும் காண்க. சீறும் சிலை - சீறியது இறைவனது நினைப்பு. செயல் சிரிப்பு. சிலையோ எந்திய அளவில் நின்றது. ஆதலின் சீறும் சிலை என்பது உபசாரமாத்திரையாய் நின்றதென்க.

வேறுந் நினைவார்—என்றதும் பாடம். 17

568. (வி - ரை) தஞ்சே - தஞ்சமாக - அடைக்கலமாக. தஞ்சம் - பற்றுக்கோடு மாம். "தஞ்சே கண்டேன்" - திருவாய்மூர் - திருக்குறுந்தொகை. அம் ஈறு குறைந் தது. சரணம் புகுதும் - அடைக்கலம் புகுந்த "முத்தி தருந்தா ளிணைக்கே சரணம் புகுந்தேன்" என்ற தேவாரத் திருவிருத்தம் காண்க. தமியோர் - ஒப்பற்றவராகிய மார்க்கண்டேயர்.

நெஞ்சு ஏய் துயரம் - மனத்திற் பொருந்திய துன்பம். துயரமாவது சிவபூசைக்கு முட்டு நேர்ந்த தென்பது. நேர் தொடரும் - இழைத்தாள் எல்லை கடக்கும் காலமறிந்து அதனுல் அந்நேர்மைபற்றி உயிர் கொண்டுசெல்வதற்குத் தொடர்ந்தான் என்க. நேர் - தனது தூதுவரானறிந் தானே நேரில் என்றலுமாம்.

மஞ்சே என வீழ் மறலி - கருமேகம்போல மேல்வந்து வீழ்ந்த இயமன். கருமைகால னுக்கும் அவனது ஊர்தியாகிய எருமைக்கும் ஒத்தநிறப்பண்பு. அவன் உயிர்களைக் கொண்டு செல்லத் தனது ஊர்தியினிவர்ந்து வருவான் என்பது "வழித்திரு மைந்த னுவி கொளவரு மறலி யூர்திக், கழுத்தணி மணியி னுர்ப்போ ?" (113) என்றதனுலறிக. "கரும்பெரும் பாண்டி லீட்ட மாலிய முகிலின் கூட்டம்" (74), "மாகடலி னுட்படியு

முருமேகமென... - கருமேதி" (திருஞா - புரா - 8), எனக் கரிய எருமைகளை மேகம் போன்றன என உவமித்தது காண்க. இங்கு உயிர்கொண்டு போகவந்து துயரம் விளைக்கும் மறலியை **மஞ்சு** என்றதென்னையோவெனின், மறலியின் செயலால் பின்னர் அம்முனிவர் அழியா ஆயுள் - சிவப்பேறு - முதலிய அமுதம் பெறுதல் குறிக்க என்க. பண்புவமம். **மறலிக்கு** - காண்கனுருபு பகைப்பொருளில் வந்தது.

**இறை நீள்** - சிறிது நீட்டிய - அழித்தற்கடவுளாகிய இறைவனது திருவடி இவ்வாறு சிறிதளவில் நீளாது பெரிதும் நீண்டிருக்குமாயின் இயமன் அழிந்தே பட்டிருப்பான் என்பது. "பண்டு தொண்டர்மேல் வந்த கூற்றைக் காய்ந்தசே வடியார்" என்ற குங்குலியக்கலய நாயனார் புராணம் (1) காண்க. "கூற்றம் பதைப்ப உதைத்துங்னே உருட்டிய சேவடி யான்கட வூருறை யுத்தமனே" (1), "உதைத்தெழு சேவடி யான்" (2), "காலனைப் பண்டொருகால் உரப்பிய சேவடியான்" (3), "காலனைத் தானலற, உருட்டிய சேவடியான்" (4), "உழக்கிய சேவடியான்" (5), "உட றிய சேவடியான்" (7) எனபனவாதி தேவாரங்களால் திருக்கடவூர் வீரட்டத் திருவிருத்தத்தினுள் இவ்வருட்செயலைப் போற்றினர் அப்பர் சுவாமிகள். அருளினாலே "இறையே நீண்டது" என்ற கருத்தினை இராவணனை ஊன்றி அருளிய செயலிலே வைத்து "அங்கொரு தன் திருவிரலா லிறையே ஊன்றி யடர்த்தவற்கே யருள்புரிந்த அடிகள்" (திருத்தாண்டகம் - திருவலம்புரம் 10), என்ற விடத்தும், "அனகனுய் நின்ற வீச னூன்றலு மலறி வீழ்ந்தான்,மனகனு யூன்றி னுனேன் மறித்துநோக் கில்லை யன்றே" (1) என்ற ஸ்ரீகயிலாயத்திருநேரிசை முழுவதினும், பிற இடங்களிலும் போற்றுதல் காண்க.

**சேஞ் சேவடி** - செம்மையைத் தருவதாகிய சிவந்த திருவடி. **செம்மை**-வீடாகிய நித்திய இன்பத் திருநின்ற செம்மை. மறலிக்கு இறை மாத்திரம் நீண்ட அச் செயலினாலே அத்திருவடி முனிவருக்குச் செம்மை தந்ததனால் **சேஞ்சேவடி** என்றார். **செம்** - சிவப்பு நிறமென்று கொண்டு, மிகுதிப் பொருள் குறித்துவந்த அடுக்கென வைத்து மிகச் சிவந்த என்று பொருள் கூறுவாரு முண்டு. செங்கோல் என்றதிற்போல **செம்** - கோடாத என்று பொருள் கொள்வர் திரு. இராமநாதச் செட்டியார். 18

*569. **(வி - ரை) நெடியோன்** - திருமால். சிறப்பும்மை தொக்கது. நீண்டவன் - ஈரடியால் மூவுலகளக்க நீண்ட திரிவிக்கிரம வடிவு கொண்டவன் என்பது பொருள். "மாலுங் குறளாய் வளர்ந்து", "உலகெல்லா மளவிட்ட நெடுமாணுருவன்" (ஆளுடைய பிள்ளையார் தேவாரம்-பண் - குறிஞ்சி - திருக்கண்ணூர் கோயில் - 5), "திருநெடுமால்" (திருவாசகம்) முதலியன் காண்க. அவனும் **அறியா நெறியாவது** சிவநெறி. இச்நெறியினையும், இவ்வறியாமையினையும் இவை இத்தன்மையன என்று இலிங்க புராணத் திருக்குறுந்தொகையிலே விளக்கியருளினார் அப்பர்சுவாமிகள். **நெறி** - திருவடி என்பாருமுண்டு.

**நெறியார்** - நெறியாராகி. அந்நெறி நிற்பார்களாகி. அறியும் படியால் அடிமைப் பணி செய்தொழுகும் என்றது அடியார்கள் தாந் தாம் அறிந்த வகையாலும் அறிந்த அளவாலும், என்றும் இறைவனுக்குத் தாம் அடிமை என்பதுணர்ந்து, பணியே செய்து ஒழுகுகின்ற என்றதாம். "யானறி வகையால் வாழ்த்தி" (403), "கோழைமிட றுகசுவி கோளுமில வாகவிசை கூடும்வகையால், எழையடி யாரவர்கள் யாவைசொன சொன்

---

*குறிப்பு - இப்பாட்டுச் சில ஏட்டுப் பிரதிகளில் இல்லை - 565 ம் பாட்டு "சிவதா என்பார்" என முடிந்துள்ளதும், அதனையே தொடர்ந்து 570-ம் பாட்டு "என்றவரு ரைத்த" எனத் தொடங்குவதும் கருதத் தக்கது. இப்பாட்டின் "எனவே மொழிய" என முடிந்த தொடருடன் வரும் பாட்டின் தொடக்கம் இலகுவிற் றொடர்ந்து செல்லாமையும் ஆராயத்தக்கது.

மகிழு மீசன்'' (ஆளுடைய பிள்ளையார் தேவாரம் - பண் - சாதாரி - திருவைகா - 1) முதலிய திருவாக்குக்களின் கருத்தினையே இங்கு **அறியும்படியால்** என்ற விடத்துக் கொள்ளப்பட்டது.

**நெறியார்** - நெறிக்கு உடையவராகிய சிவபெருமான் என்று கொண்டு, அவரறியும்படியால் எனப் பொருள் கொள்வாருமுண்டு. இப்பொருட்சேற்ப, **அணைவார்** - முதலார் என்று படர்க்கைப் பொருள்பட வரும் பாடங் கொள்வர். மேன் மூன்று பாட்டுக்களினும் இறைவனே முன்னிலையாக்கி உரியாய் ! இறைவா ! என்று பலவாறும் கூவி விளித்துச் சிவதா ! சிவதா ! என ஓலமிடுகின்றனராதலின் அவற்றைத் தொடர்ந்த பொருளில் வரும் இப்பாட்டில் படர்க்கை முகத்து வைத்துக் கூறியதாகக் கொள்ளும் பாடமும் பொருளும் சிறவா என்க.

**அடிமைப்பணி** - அடிமையிலே பட்டுச் செய்யும் பலவகைத் திருப்பணிகள்.

**அடியார்களில் யான் ஆரா அணைவாய்** - பணி செய்யும் தொடியார்களில் ஒருவனாக வைத்து எண்ணுதற்கு நான் எவ்வகையில் உரிமையுடையவன் என்றுட் கொண்டு நீ இங்கு அணைத்து இடர் தீர்ப்பாய் ? நான் ஒன்றுக்கும் பற்றுத நாயேன் ஆதலின் நீ அணையாமல் நின்றனை என்பது குறிப்பு. ''நாங்க ளெண்ணலா ரடிமைக் கென்ப தின்றறி வித்தீர்'' (353), '' யான்மிகை யுமக்கின் றுளனென் செய்வீர் போதாது'' (354), '' இன்றெ னடிமைதீர் வேண்டா விட்டால் '' (355) என்ற ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணப் பாட்டுக் கருத்துக்களை இங்கு வைத்துக் காண்க. '' ஊடுவ துன்னோடு '' என்ற திருவாசகப்படி தமது ஆன்ம நாயகனுகிய இறைவனுடன் ஊடி நின்றுலரப்பது அவர்பாற் பற்றுக்கொண்ட அடியார்களுக் கியல்பாம்.

**முடியா முதலாய்** ! - ''பொன்னம் பலத்தெம் முடியா முதலே '' - **திருவாசகம்.** முதல் உண்டாயின் முடிவும் வேண்டும். ''தோற்ற முண்டேல் மரண முண்டு'' - **நம்பியாரூர் தேவாரம்.** ஆனல் இம்முதலுக்கு முடிவில்லை. எனவே **முதல்** - ஆதியுமில்லை. ''ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ் சோதியை'' என்று திருவாசகம் போற்றியது.

இதற்கு இவ்வாறன்றி, அடியார்களில் யான் ஆரா எனவே மொழியா முடியா முதலார் அணைவார் என்று பாடங் கொண்டு ''அடியார்களில் யான் யார் ? அதனைச் சொல்லுவாய்'' என்று அதிகாரத்துடன் கேட்க, முடியா முதல்வராகிய சிவனுரைப்போல (ஒருவர் அங்கு) வருவாராயினர் - என்றுரை கூறுவர் ஆலால சுந்தரம் பிள்ளை அவர்கள். இப்பொருட் பொருத்தம் ஆராயத்தக்கது. மொழியாமுதல்வர்-

**அணைவார்...முதலார்...மொழியா**—என்ன பாடபேதங்கள். [illegible] 19

570. (வி - ரை) **மாற்றம்** - சொற்கள். மேலே விரித்துக் கூறப்பட்டவை, ஒருவர் கருத்துக்களைக் கேட்பவர் மனதிற்குச் செல்லுமாறு இடம் மாற்றுதற்குக் கருவியாயிருத்தலின் சொற்கள் **மாற்றம்** எனப்படுவன போலும். இங்குச் சிவகாமியார் மனதிலும் எறிபத்தர் மனத்திலும் ஒரே தன்மைத்தாகிய சிவநிறைவு பொருந்தியிருந்தது. மேல் **ஆரா அணைவாய்** என்பதீறாகச் சொல்லியவை அந்நிறைவுக்குள்ளே தாக்க, சிவம் அவ்விடை யூற்றினை மாற்றத் திருவுளங்கொள்ள, அது எறிபத்தர் உள்ளத்திற்றாக்க, அவராக அணைந்தனர் என்ற குறிப்புப்பெற **மாற்றம்** என்றார்.

**எதிரே வாரா நின்றவர்** - அடியார்க்கு அடாதன அடுத்தபோது சிங்கம்போலத் தோன்றி இடையூறு தீர்ப்பார் (557) ஆதலின் இங்கு எதிரே வாரா நின்றவர் கேட்டு என்க. **வாரா** வந்து, என்று பொருள் கொண்டு, எதிர்வந்து கொண்டிருந்தவர், மேற் செல்லாது இதனுற்றடைபட்டு நின்றார்என்ற குறிப்பும்பெற இவ்வாறுகூறினர். முன்னர் 560ம் பாட்டில் **வாரா** நின்றார் என்றபடி இங்கும் குறித்தது காண்க.

**முளரும் நெருப்பு உயிர்த்து** - மூள்கின்ற கோபத் தீயால், தீப்போல வீசும் கெட்டியிர்ப்பு **வீசி. அழன்று** - முன்னர் மூண்டு புகைகின்ற அழல் பின்னர்ப் பொங்கி மேல்

எழுந் தெரிவதுபோல, முன்னர் நெருப்பு உயிர்த்தலும் அதன்பின் அழன்று பொங்கு தலும் உண்டாயின என்க.

**மன்றவர்** - அம்பலவாணர் - சிவபெருமான். **களிறே வழிப்பகை** - சிவபெருமானுடன் பொருதான் கயாசுரன். அவ்வாறு ஒரு யானை இறைவனுக்குப் பகையாகவே அதன் வழிவரும் யானைகளும் அவ்விறைவன் வழிப்படும் அடியார்க்குப் பகையாம் என்று குறிக்க **வழிப்பகை** என்றார். இறைவனுக்கு எவரும் பகையில்லை என்றிருப்பவும் அவனுக்கு மாறாகப் பொருதல் என்றது, அவன் விதித்த விதிகளினின்றும் மாறுபட்டு ஒழுகும்படி ஏவி உலக நியமத்தை அழிக்க முயலுதல். களிறு வழிப்பகையே என ஏகாரம் பிரித்துக் கூட்டுக. **வழிப்பகை** - வழியில் உள்ள பகை என்றலுமாம். ௧௬

**கொலைமழு** - தண்டனையின் பொருட்டுக் கொலைசெய்யும் மழு. கொலை பாவச் செயலாயினும் அரனடிக் கன்பு பற்றிச் செய்யப்படுவ தாதலின் அது புண்ணியமே யாகும் என்பது ஞான நூற்றுணிபு. இதனைக்குறிக்க மழுவுக்கு அடைகொடுத்து விசேடித்தார். இக்கருத்தேபற்றிப் பின்னர் மங்கலமழு என்றதும் காண்க. **கொலை** - மழுவுக்கு இயற்கை யடைமொழியே யன்றிப் பின்னர் யானையையும் பாகர் ஐவரையும் கொல்லும் மழு என்ற சரிதக் குறிப்புமாம்.

**கொடுமழு**—என்பதும் பாடம். கொன்றதை-என்பதும் பாடம் 20

571. வந்தவ ரழைத்த தொண்டர் தமைக்கண்டு வணங்கி "யும்மை
யிந்தவல் லிடும்பை செய்த யானையெங் குற்ற?" தென்ன,
"வெந்தையார் சாத்தும் பூவை யென்கையிற் பறித்து மண்மேற்
சிந்திமுன் பிழைத்துப் போகா நின்றதித் தெருவே" யென்றார். உக

(இ - ள்) வெளிப்படை. வந்தவராகிய எறிபத்தர், சிவபெருமானை நோக்கிச் "சிவதா" என்று அழைத்த தொண்டராகிய சிவகாமி யாண்டாரைக் கண்டு, வணங்கி, "உம்மை இந்த வலிய துன்பஞ் செய்த யானை எங்குச் சென்றது?" என்றுகேட்க, "எமது பெருமான் அணிகின்ற பூவை என் கையினின்றும் பறித்துத் தரையிற் சிந்தி முன்னாலே பிழைத்து இதோ இத்தெருவே போகாநின்றது" என்றுசொன்னார்.

(வி - ரை) **வந்தவர்** - மழுவெடுத்து வந்தார் - எனமுடிந்த மேற்பாட்டினைத் தொடர்ந்து கொண்டதாம்.

**அழைத்த** - "சிவதா" என்று ஓலமிட்டு இறைவனைக் கூவியழைத்த.

**வணங்கி** என்றதனால் எறிபத்தர் அடியார்பாற் கொண்ட பத்தியும், அடியாரிடத்து ஒழுகும் முறையும் அறிவித்ததாம். "தாழ்வெனுந் தன்மை" விளங்கும் "சைவமாம் சமய" வொழுக்கமும், "உரிமை பூண்டார்க் கருட்பெருந் தொண்டு செய்வாரவ ரெறிபத்தர்" (556) என்ற தன்மையும் விளக்கியபடி.

**இந்த** - உமது மாற்றங்களாலும் உமது நிலையாலும் பிறவற்றாலும் யானறிகின்ற வாறுள்ள இந்த.

**வல்இடும்பை** - "வேண்டுதல் வேண்டாமை யிலானடிசேர்ந்தார்க், கியாண்டு மிடும்பை யில" (குறள்) என்பது உண்மை. ஆதலின் இறைவனடியா ராகிய உமக்கு இடும்பை யென்ப திலதாதல் வேண்டும். ஆயின் உம்மிடத்துக் கண்ட இவ்விடும்பை உம்மைச்சார்ந்ததன்று. இறைபணியின் முட்டுப்பாடு காரணமாக நிகழ்ந்தது என்றது குறிப்பு. இக்கருத்தை உட்கொண்டே சிவகாமியாண்டாரும் "எந்தையார் சாத்தும் பூவைப் பறித்துச் சிந்திப் பிழைத்து" என்றதும் காண்க.

சிந்தியதே பிழையாதலின் **சிந்திப் பிழைத்து** என்றார்.

**முன்பிழைத்துப் போகாநின்றது**-பிழைத்து முன்னே போகின்றது. **பிழைத்து** - பிழை செய்து என்றும், உயிருடன் பிழைத்து என்றும், இருபொருளும் பெற வைத்த

சொல்லணி. சிவபராதத்துக்கு உயிர்த்தண்டனையே கழுவாய் என்ற விதியையும் உட் கொண்டது கருத்து. சண்டீசர்புராணம், கோட்புலியார் புராண முதலியவற்றின் உள் ளீடு சிந்திக்க. இக்கருத்தினையே பின்பற்றி எறிபத்தரும் "இங்கிது பிழைப்ப தெங்கே யினி" என்று வரும்பாட்டிற் றொடர்ந்து கூறுவதும் காண்க.

**யானை எங்கு உற்றது?**-முன்கிகழ்ச்சியைச் சிவகாமியாரது "சிவதா சிவதா" என்ற ஓலச்சொற்களாலும் அங்குச் சிந்திக்கிடந்த பூக்களாலும் பிறவாற்றாலும் எறிபத்தர் அறிந்து கொண்டாராதலின், "இடும்பை யாது ?" என அதன் வாலாற்றை வினவாது இடும்பை செய்த யானை எங்கே? யென்று கேட்டனர். இதற்குச் சிவகாமியார் "இத்தெ ருவே போயிற்று" என்றமையாது, வரலாறு கூறியதென்னை? யெனின், அவர் அறிந் ததனை மிக்க துயரத்தாலும் சினத்தாலும் இவர் அறியார்; அன்றியும் அன்பர்க் கடா தன அடுத்தபோது தீர்க்கும் இயல்புடைய எறிபத்தர்க்கு இங்கு அவர்தம் பணி செய்ய வேண்டிய தகுதியை அறிவுறுத்தினர் என்க. மேலும் தம் நியதியான சிறந்த திருப் பணி இன்று வலியப்பட்டு மூட்டுப்பட்டமையால் தாம் உற்ற துயர மிகுதிபற்றி அத னைப் பன்னிக் கூறியதுமாம். இஃதுலக நியற்கை என்க. 21

572. "இங்கிது பிழைப்ப தெங்கே யினி" யென வெரிவாய் சிந்து
மங்கையின் மழுவுந் தாமு மனலும்வெங் காலு மென்னப்
பொங்கிய விசையிற் சென்று பொருகரி தொடர்ந்து பற்றுஞ்
செங்கண்வா ளரியிற் கூடிக் கிடைத்தனர் சீற்ற மிக்கார். உஉ

(இ - ள்) வெளிப்படை. "இங்கு இந்த யானை இனிப்பிழைப்பது எங்கே ?" என்றுசொல்லி, உடனே, தீயை வாயிலே சிந்துவதாய் அங்கையில் ஏந்திய மழுவும் தாமுமாகத் தீயும் காற்றும் கூடியது போல மிக்க வேகத்தினுலே போய்ப், போர் செய்யும் யானையை வேகத்தினுற் றொடர்ந்து பாய்ந்து பற்றுகின்ற சிவந்த கண்களையும் கூரிய நகங்களையுமுடைய சிங்கத்தினைப்போலக் கோபத்தால் மிக்கவராய் அவ்வியானை யைக் கிட்டினர்.

(வி - ரை) எரிவாய் சிந்தும் - மழுவுக்கு அடை. அதன்முகத்தில் ஒளிவீசுதலா லும் அதுசெய்யும் செயலாலும் தீயுமிழ்வது போன்றிருக்கும் மழு என்க. இவரது தன்மை இவர் படையின்மேலும் ஏற்றப்பட்டது. கருவியினைக் கையாள்பவர் செயலே கருவிக்குமாகும் என்பதியல்பு.

**மழவும் தாமும் - அனலும் வெங்காலும் - என்ன** - மழு அனல் என்னவும் தாம் வெங்கால் (வெவ்விய கடுங்காற்று) என்னவும் என்று நிரனிறையாக்கிக் கூட்டி உரைத் துக்கொள்க. பாய்ந்து சென்ற வேகத்தாற் காற்றினைப்போன்றார் என்க. இதனையே **பொங்கிய விசையில்** என்று தொடர்ந்து காட்டியவாறு. தீயும் காற்றும் கூடியபோது கடுமை மிக்கு அழிவுசெய்த லுறுதியாதலின் இவ்விரண்டினையும் கூட்டியுவமித்தார்.

**பொங்கிய** - சினத்தாற் பொங்குதலாலே. மேலே " நெருப்புயிர்த் தழன்று பொங்கி " (570) என்றது காண்க.

**செங்கண் வாள் அரியில்** - சிங்கத்தின் செங்கண் அதன் கோபங்காட்டும். கோபித்த சிங்கம் யானையின்மேற் பாய்ந்து அதன் மத்தகத்தைத் தனது கூரிய நகங் களாற் பிளக்கும் என்பர். **வாள்** ஆகுபெயராய் வாள்போற்கூரிய நகங்களைக்குறித்தது. "பருக்கை யானை மத்தகத் தரிக்குலத் துகிர்ப்புக, நெருக்கி வாய நித்திலம் நிரக்குமீள் பொருப்பனூர் " (திருவாரூர் - கட்டராகம் - திருவிராகம். 1) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரம் காண்க. **அரியில்** - அரியினைப்போல. **இல்** ஐந்தனுருபு. ஒப்புப் பொருளில் வந்தது. முன்னர் அனலுங்காலும் என்றவிடத்துபோல, இங்கும் **வாள்** மழுவுக்கும், அரி - நாயனருக்கும் முறையே உவமானமாகக் கொள்க. முன் சொன்

னவை விசையிற்சென்றபோது உள்ள நிலையினும், இங்குக்கூறியன, யானையைக்கூடிக் கிடைத்த நிலையினும் உவமானமாயின. ஆதலின் மிகைபடக் கூறலாகாமை உணர்க. **செங்கண்** - முன், எரிவாய் சிந்தும் என்றதற்கேற்பச் **செங்கண்** - செவ்வொளி என்று கொண்டு வாளுக்குக்கூட்டி யுரைத்தலுமொன்று.

**போதகரி தோடர்ந்து பற்றும்** - கரி - இங்கு உண்மையில் மதங்கொண்டதோர் யானையினையே நாயனார் கூடிக்கிடைத்தனராதலின் **கரி** என்றது உவமை முகத்தானன்றி உண்மை முகத்தானும் நேர்பட்ட நயம் காண்க. **தோடர்ந்து - பற்றும் -** என்றதற்கேற்பக் கூடி - **கிடைத்தனர்** - என்றார்.

**கிடைத்தனர் - மிக்காரி** - மிக்காராய்க்கிட்டினர், இவ்வாறன்றிக் கிட்டினர் ; கிட்டினபோது, பிழைத்த யானையைக்கண்டதும் கோபம் மிக்கனர் என **வினைமுற்றுக** உரைப்பினுமமையும்.

**வன்காலும்—தோடர்ந்து செல்லும்—**என்பனவும் பாடங்கள். 22

573. *கண்டவ "நிதமுன் பண்ண லுரித்தவக் களிறே போலு ;*
*மண்டரு மண்ணு லோருந் தடுக்கினு மடர்த்துச் சிந்தித்*
*துண்டித்துக் கொல்வே" னென்று சுடர்மழு வலத்தில் வீசிக்*
*கொண்டெழுந் தார்த்துச் சென்று காலினுற் குலுங்கப் பாய்ந்தார்.*

**(இ - ள்)** - வெளிப்படை. (கிட்டியவுடன் அவ்வியானையை முற்றிலுங்) கண்ட நாயனார், "இது முன்காலத்திற் சிவபெருமான் உரித்த அந்த யானையினையே போன்றதாம்! தேவர்களும் மண்ணவர்களும் தடுத்தாலும் பொருட்படுத்தாது மேற்சென்று எதிர்த்துச் சிந்திவீழும்படி துண்டித்துக் கொன்றிடுவேன்" என்று, ஒளி வீசும் மழுவை வலமாகத் திரித்து வீசிக்கொண்டு மேலெழுந்து ஆர்ப்பரித்துச்சென்று காலினுற் குலுங்கியானைமீது பாய்ந்தார்.

**(வி - ரை) இது முன்பு அண்ணல் உரித்த அக் களிறே போலும் !** - வழிப்பகை களிறேயன்றே? (570) என்று முன்கொண்ட கருத்தினையே தொடர்ந்து கூறியவாறு. முன்னர் யானையைக் காணுது அதன் செயலைக் கேட்டபோது யானையே வழிப்பகை என்ற நினைவு வந்தது. அதனை நேரிற் கண்டபோது அந்நினைவு உறுதி பெற்றது என்க. **பகைவனைக் காணுன்** - பகைமைச்செயல் மட்டிற் கண்டானொருவன் இஃதோர் உற்ற முற்பகைவனுல் நேர்ந்தது என்று முதலில் எண்ணுவன். பின்னர்ப் பகைவனை நேரிற் கண்டானுயின் அவ்வெண்ணத்தைத் திடப்படுத்துவன். இஃது உலக இயல்பு. முன்னர் **வழிப்பகை களிறே** என்றது பகைமைச் செயலின் விளைவு கண்டபோது நிகழ்ந்த அனுமானத்தால் உண்டாயின உணர்ச்சி. இங்கு **அக்களிறே போலும்** என்றது காட்சியால் அவ்வனுமானத்தை உறுதிப்படுத்திய உணர்ச்சி. "களியா னையினீ ருரியாய் !" என்று முதலிற் சிவகாமியார் ஓலமிட்டதும் காண்க.

**போலும்** - போன்றுள்ளது - ஆதலால் என்க.

**அண்டநம்** - தேவர்கள் தவத்தால் மிக்க அறிவும் ஆற்றலும், சிலகாற் சிவாபராத முயல்வும் படைத்தவர்களாதலின் அவர்கள் இதற்காகப் பரிந்து எதிர்த்துவரினும் என்பார் **அண்டநம்** என்றார்.

**மண்ணுளோநம்** - இவ்வியானை அரசரது பட்டத்து யானை யாதலின் அரசன் சார்புகொண்ட மண்ணவர் எதிர்த்துவரினும் என்பார் **மண்ணுளோநம்** என்று கூட்டினர். **வழிப்பகை** என்ற கருத்தினைத் தொடர்ந்து கூறியதாம்.

**சிந்தி** - அதன் வலிமையைச்சிந்தி, அறுபட்டு வீழச்செய்து என்றலுமாம்.

**துண்டித்து** - சிவ அபசாரம் வினைத்தது திதிக்கை யாதலின் அதனை உடலினின்றும் வேறுபடத்துணித்து. " தோய்தனித் தடக்கை வீழத் துணித்தனர் " என வரும்

பாட்டிற் கூறியது காண்க. குற்றஞ் செய்த அங்கத்தினையே முற்படத் தண்டிக்க ஒருப்பட்டனர் என்க. இந் நியதியினைச் சண்டேச நாயனார், அபசாரம் செய்த பிதாவின் காலைத் துணித்ததும், செருத்துணையார் அரசனது தேவியாரின் மூக்கினைவார்த்ததும், கழற்சிங்கர் அத்தேவியாரது கைதடிந்ததும் முதலிய வரலாறுகளில் வைத்துக் காண்க.

**மழ வலத்தில் வீசிக் கொண்டு** - போர்ப்படையை வலமாகத்திரித்து வீசுதல் வேகத்தால் எறியும் பொருட்டாம். வலக்கையால் என்றும், பலங்கொண்டு என்றும் உரைப்பாருமுளர்.

**காலினும் குலுங்கப் பாய்ந்தார்** - மேலே வலத்தில் வீசியதாற்பெற்ற பலத்துடனே, காலின் பாய்ச்சலாலும் உடலின் குலுங்கலாலும் கூடிய தமது முழு உடற் பலமும் தமது செயலுக்குத் துணையாகப் பெற்றுக்கொண்டனர் என்பது. யானை குலுங்க என்று கூட்டி யுரைப்பாருமுண்டு. 23

574. பாய்தலு மிசைகொண் டுய்க்கும் பாகரைக் கொண்டு சீறிக்
காய்தழ லுமிழ்கண் வேழந் திரிந்துமேற் கதுவ,(வச்சந்
தாய்தலை யன்பின் முன்பு நிற்குமே !), தகைந்து பாய்ந்து
தோய்தனித் தடக்கை வீழ மழுவினற் றுணித்தார் தொண்டர். உச

(இ - ள்). வெளிப்படை. பாய்ந்த உடனே, மேலிருந்து செலுத்துகின்ற பாகரை மேற்கொண்டும், சீறிக் காயும் நெருப்பினை உமிழும்படி சிவந்த கண்ணுடன் அவ்வியானை, திரிந்து இவர்மேற் பாய்ந்ததாவ, அதனை மறித்துப், பாய்ந்து நிலந்தோய நீண்ட அதன் ஒப்பற்ற பெரிய துதிக்கை வீழும்படி தொண்டர் மழுவினாலே துணித்தார். தாயினது தலையன்பின் முன்னே அச்சம் எதிர்த்து நிற்கவல்லதோ? (இல்லாது).

**(வி - ரை) மிசை கொண்டு உய்க்கும் பாகர்** - மேலிருந்து யானையைச் செலுத்தும் கடமையுண்ட பாகர்.தன்னை வசப்படுத்திச் செலுத்தும் பாகர் தன் மேலிருந்தும், அவர்களால் அடக்கப்பெறுது. சிறப்பும்மை தொக்கது.

**தழல் உமிழ் கண் வேழம்** - யானையினது இயல்பாற் சிவந்த கண் கோபத்தாற் பின்னும் மிகச் சிவந்ததனைத் தீ உமிழ்வது போன்றதென்றார். கோபத்தாற் கண்கள் தீப்பொறி பறக்க என்பது மரபும் வழக்குமாம். நாயனார் நெருப்புயிர்த் தழன்று பொங்கிப் பாய்ததற்கெதிர் யானையும் கண் தழல் உமிழ்ந்து கதுவ என்க.

**திரிந்து** - முன் செல்கை தவிர்ந்து நாயனார் மீது திரும்பி. **கதுவ** - எதிர்த்துக் கைசுழற்றித் தாவ.

**அச்சம் தாய் தலையன்பின் முன்பு நிற்குமே?** இது கவிக்கூற்று. **அச்சம்** - யானை தம்மீது தாவிப் பாய்கின்றதனால் தம்முயிர்க் கிறுதி நேரிடும் என்ற அச்சம். **தாய் தலையன்பு** - தாயின் தலையன்பு போன்ற தலையன்பு. இங்கு அடியார் பணிக்கு வரும் முட்டுப்பாட்டை நீக்குதலின் வைத்த தலையன்பினைக் குறித்தது. **நிற்குமே** - ஏகாரம் நிற்காது என எதிர்மறைப் பொருளில் வந்தது. குழவியைக் காக்கும் தாய் அச்செயலிலே தனக்கு நேரிடும் அபாயத்தையும் நோக்காது விரைகின்றது போல இங்குத் தம் முயிர்க்குவரும் இடரையும் நோக்காது அன்பு மீதூர்ந்து பாய்ந்தனர். அச்சம் அன்பின் முன்னே முனைந்து நிற்கலாற்றாது அதனால் விழுங்கப்பட்டது என்க. அன்பு அச்சத்தை மேலிடும் என்பது நூற்றுணிபு. இதற்கு இவ்வாறன்றி அடியார்க்குத் தாயினுமினிய இறைவனது அன்பின் முன் யானையினது பகைமை என்ன செய்ய வல்லது? முன்னிற்குமோ? என்று பொருள் கூறுவாருமுளர். அது பொருந்தாமை யுணர்க. தாய் என்றதற்குத் தாய்ப் பசு என்றுரைப்பாருமுளர்,

**தகைந்து பாய்ந்து** - தம்மேற் பாயும் யானையை மறித்துத் தாம் அதன்மேற் பாய்ந்து.

**தோய்** - அதிக்கை நிலந்தோய நீண்டு வளர்ந்திருத்தல் உத்தம யானையினிலக் கணம் என்பர். கால்கள் நான்கும், பீசம் - கை - என்றவையும் ஆக ஆறு அங்கங்கள் நிலந்தோய்தல் யானைக்கு உயர்ந்த இலக்கணமாம் என்ப.

**தனி** - ஒப்பற்ற. **தடக்கை** - பெரிய அதிக்கை.

**தடக் கை வீழத் துணித்தார்** - கையினைத் துணித்த காரணம் முன்னர் உரைக்கப்பட்டது. துண்டித்துக்கொல்வேன் என மேற்பாட்டிற் கூறியதுகாண்க. கைதுண்டிக்கவே யானை இறந்துபடும் என்பதாம்.

**காய் கனல்**—என்பதும் பாடம். 24

575. கையினைத் துணித்த போது கடலெனக் கதறி வீழ்ந்து
மையவை யனைய வேழம் புரண்டிட, மருங்கு வந்த
வெய்யகோற் பாகர் மூவர் மிசைகொண்டா ரிருவ ராக
வைவரைக் கொன்று நின்ரு ரருவரை யனைய தோளார். உரு

(இ - ள்) வெளிப்படை. அதிக்கையினைத் தொண்டர் துணித்தபோது கடல் போலக் கதறிக் கீழேவீழ்ந்து கரியமலைபோன்ற அவ்வியானை புரள, அதன் பக்கத்தே வந்த வெவ்விய குத்துக்கோற்பாகர் மூவரும் யானைமேலிருந்து செலுத்திய பாகர் இருவருமாக ஐவரையும் அரியமலைபோன்ற தோளுடைய நாயனார் கொன்று நின்றார்.

(வி - ரை) **கடலெனக் கதறி** - கடல்போல இரைத்து. மலைபோன்ற யானை கடல் போலக் கதறிற்று என்ற நயமுங்காண்க. ஒரே பொருள் உருவத்தால் மலையும் ஓசையினால் கடலும் போன்றதென்க.

**புரண்டிட** - கை துணிபட்டமையால் இறக்கின்ற யானை மரண வேதனையாற் புரண்டது என்க. "பட்டவர்த்தனமும் பட்டு" என்று வரும் பாட்டிலும், "களிறுபாகர் மடியவும்" (595) எனவும், "உறங்கிய தெழுந்த தொத்து" (601) எனவும் கூறுவனவற்றால் இச்செயலினால் யானை இறந்துபட்டதென்பது துணியப்படும்.

**மருங்கு வந்த வெய்ய கோற்பாகர்** - யானைக்குமுன் ஒருவனும், இருபக்கங்களில் இருவருமாக மூவர் பாகர்கள் குத்துக்கோலுடன் யானையோடு வருவது வழக்கு. குத்துக்கோல் முன்னும் பக்கத்தும் வருவாரை விலக்கவும், யானையை வழிப்படுத்தவும் உதவுவதாம். பெரிய மதயானையையும் குத்தி வசப்படுத்தும் கோலாதலின் **வெய்ய கோல்** என்றார். இவர்களும் யானையை நேர் செலுத்தும் கடன் பூண்டாராதலின் **பாகர்** எனப்பட்டார்.

**மிசை கொண்டார்** - "மிசை கொண்டுய்க்கும் பாகர்" என்றது மேற்பாட்டு.

**ஐவரைக் கொன்றார்**—அதவரை யனைய தோளார் என்ற சொன்னயமும், பொருணயமும், கொல்வதற்குத் துணைக்காரணம் தோள் என்றுகுறித்த சதுரப்பாடும் காண்க.

**கொன்று நின்றார்** - இதுவரை சலியாது பாய்ந்த நாயனார் தமது செயல் முற்றிய பின்னரே நின்றனர் என்றது குறிப்பு. 25

576. வெட்டுண்டு பட்டு வீழ்ந்தா ரொழியமற் றுள்ளா ரோடி
மட்டவிழ் தொங்கண் மன்னன் வாயிற்கா வலரை நோக்கிப்
"பட்டவர்த் தனமும் பட்டுப் பாகரும் பட்டா ரென்று
முட்டநீர் கடிது புக்கு முதல்வனுக் குரையு" மென்றார். உசு

(இ - ள்) வெளிப்படை. வெட்டியதாற் பட்டு வீழ்ந்த பாகர்கள் ஒழிய வேறுள்ளவர் ஓடிப்போய், வாசனையுடைய மாலையை அணிந்த அரசரது அரண்மனை வாயிற்

காவலாளரை நோக்கிப் "(சிலரால்) பட்டவர்த்தனயானையும் பட்டது. (சில) பாகரும் இறந்து பட்டனர் என்று நீவிர் சேர விரைவிற் சென்று அரசருக்குச் சொல்லுங்கள்" என்றார்கள்.

**(வி - ரை) வெட்டுண்டு** - வெட்டுண்டதனாலே. **பட்டு** - இறந்து. **ஒழிய** - மங்கல வீழாக் கொண்டு யானையுடன் வந்தார் பலராக, அவருள்ளே, மேலே கண்டவாறு பட்டவர் ஐவர் ஒழிய. **ஒழிய** - ஒழிந்தேபோக என்ற குறிப்புமாம். "ஒழிந்தவரொழிந்தே மாண்டார்" (427) என்றது காண்க.

**மற்றுள்ளார்** - மிகுந்த - எஞ்சிய - ஏனையோர். இவர்களும் பாகர் கூட்டத்திற் சேர்ந்தவர்கள். வரும் பாட்டிற் "செப்பினர் பாகர்" என்றது காண்க. அறிவிக்கும் பொறுப்பு வாய்ந்தவர்களாற் கேட்டசெய்தியே அரசன்பா லறிவிப்பது முறையாம்.

**மன்னன் வாயிற் காவலர்** - அரசரது அரண்மனை வாயில் காப்போர். இதனால் அப்பாகர் அரண்மனை வாயிலையடைந்தமை குறிப்பாலுணர்த்தப்பட்டது. விரைவு குறிக்க அதனை வெளிப்படக் கூறாது எஞ்சவைத்துக் கூறிய நயமும் காண்க.

**பட்டவர்த்தன்மம் பட்டுப் பாகரும் பட்டார் என்று** - இது அவர்களது ஆவலும், ஆத்திரமும், கவலையும் மிகுந்த மனநிலை குறித்தது. இதுபற்றியே **முட்ட** என்றும், **கடிது புக்கு உரையும்**, என்றும் கூறுவதும் காண்க. ஓடி என்றதும் குறிக்க. **முட்டப் புக்கு** - அடுத்துப் போய். வரும் பாட்டிற் "சிலராம்" என்றதுகொண்டு இங்குச் சில ரால் என வருவித்துரைத்துக் கொள்க. **பாகரும்** - பாகரிற் சிலரும். **முதல்வன்** - தமது முதல்வன். அரசன்.

**வேறுள்ளார்**—என்பதும் பாடம். 26

577. மற்றவர் மொழிந்த மாற்ற மணிக்கடைக் காப்போர் கேளாக்
கொற்றவன் றன்பால் வந்து குரைகழல் பணிந்து நின்று
"பற்றல நிலாதாய்! 'நின்பொற் பட்டமால் யானை வீழச்
செற்றனர் சிலரா' மென்று செப்பினர் பாக" ரென்றார். உஎ

**(இ - ள்)** வெளிப்படை. அவர்கள் சொன்ன மாற்றத்தை மணி கட்டிய வாயிலைக் காப்போர் கேட்டு அரசரிடம் போய், அவரது வீரக்கழலணிந்த அடியிற் பணிந்து நின்று, "பகைவரில்லாதவரே! 'உம்முடைய பொற்பட்டமணிந்த பெரிய யானை வீழும்படிச் சிலர் கொன்றார்களாம்' எனப் பாகர் சொன்னார்கள்" என்றார்கள்.

**(வி - ரை) மாற்றம்** - மன நிலையின் மாறுதல் விளைத்தலின் **மாற்றம்** என்ற பெயராற் கூறினர். **மணிக்கடை** - ஆராய்ச்சிமணி கட்டிய: அழகிய என்றலுமாம்.

**குரைகழல்**-சத்திக்கும் வீரக்கழல். அது அதனை அணிந்த அடிக்காயிற்று. இது அரசரது வெற்றிநிலை குறித்தது. மேற்பாட்டில் "மட்டவிழ் தொங்கல்" என்றதும் இக் கருத்தே பற்றியது. "**பற்றலரிலாதாய்!**" என்று அவர்கள் அரசரை விளித்ததும் காண்க. அரசரது வெற்றியினையும் வீரத்தினையும் எடுத்துக்கூறி "உமக்குப் பகைவர் என்போர் இல்லை. ஆயினும் இது நிகழ்ந்தது சிலரது செய்கை. உமது வீரங்கொண்டு இதனை எளிதின் மாற்றத் தக்கது" என்பது குறிப்பு. இது கேட்ட மன்னனும் அதனையே உட்கொண்டு **கிளர்மணித் தோளலங்கற் சுரும்பினங் கிளர்ந்து போங்கச்** (578) செல்வதும் காண்க. **பற்றலரிலாதாய்** என்றதனால் இது பகைவர் செயலன்று என்பதும் குறிப்பாம். **பற்றலர்** - பகைவர். **கழல் பணிந்து நின்று** - அரசர்பால் அறிவிக்கும் முறை.

**பொற்பட்டம்** - பொன்னாலியன்றதாய் யானை நெற்றியி னணியும் பட்டம். **பட்ட மால் யானை** - அரசப் பட்டத்திற்குரிய அடையாளமாய்ப் பட்டவர்த்தனமாம் பண்பு பெற்ற (561) யானை என்றலுமாம்.

செற்றனர் சிலராம் - சிலர் செற்றனராம் என மாற்றுக. எழுவாய் பயனிலை மாறியது அவர்களது மனநிலை குறித்தது. மாற்றம் என்ற குறிப்பும் காண்க. "பட்ட வர்த்தனமும் பட்டுப் பாகரும் பட்டார்" என்ற அளவே பாகரால் அறிவிக்கப்பெற்ற வாயில் காவலர், இதனை யாவரோ சிலர்தாம் செய்திருத்தல் வேண்டும் என்று தாமே உட்கொண்டு, அவர் சொல்லாத அதனையும் சேர்த்து இவ்வாறுரைத்தனர். இஃதுல கியல்பு. கேள்விச் செய்தி உலகில் பரவும்போது பற்பலவாறு மாறுபாடுகளையடையும் இயல்பு காண்க.

சிலர் - பலரல்லர் - சிலரே. இதனைத் அவிவசனம் என்பர் வடநூலார். தமிழில் இது இருமை குறித்து வழங்குவது மரபு. "நல்ல நூல்களிற் சொல்லறம் பல சில, இல்லறந் துறவறமெனச் சிறந்தனவே" என்றது காண்க. பாகர் அறியாராயினும் இங்கு யானைபட்டது சிவகாமியார் - எறிபத்தர் - என இருவரால் நிகழ்ந்தது என்ற உண்மைக் குறிப்புச் சிலர் என்றதிற் பொதிப்பது காண்க.

யானைபட்டபோது அதனைக் காக்கும்செயலிற் பாகரும் பட்டிருத்தல்வேண்டுமென ஊகித்துக் கொள்ளக்கிடக்குமாதலின் வாயிற் காவலர் அதனைக் கூறினரில்லை.

செப்பினர் பாகர் என்றது இச்செய்தி யாங்கண்டதன்று; கேட்டது; ஆயினும் பொறுப்புள்ளார்பாற் கேட்டது என்பது குறிப்பு. Reliable information - என்பர் கவீனர்.

போற்றி நின்று—என்பதும் பாடம். 27

578. வளவனுங் கேட்ட போதின் மாறின்றி மண்காக் கின்ற
இளர்மணித் தோள லங்கற் சுரும்பினங் கிளர்ந்து பொங்க
வளவில்சீற் றத்தி னுலே யார்செய்தா ரென்றுங் கேளா
னிளவரி யேறு போல வெழின்மணி வாயி னீங்க, உ அ

579. தந்திரத் தலைவர் தாமுந் தலைவன்ற னிலைமை கண்டு
வந்துறச் சேனை தன்னை வல்விரைந் தெழுமுன் சாற்ற
வந்தரத் தகல மெல்லா மணிதுகிற் பதாகை தூர்ப்ப
வெந்திரத் தேரு மாவு மிடையிடை களிறு மாகி, உ கூ

580. வில்லொடு வேல்வா ளண்டு பிண்டிபா லங்கண் மிக்க
வல்லெழு முசல நேமி மழுக்கழுக் கடைமுன் னென
பல்படைக் கலன்கள் பற்றிப் பைங்கழல் வரிந்த வன்க
ணெல்லையில் படைஞர் கொட்புற் றெழுந்தன சென்கு; மெங்கும், உ ஒ

581. சங்கொடு தாரை காளந் தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரற் பம்பை கண்டை வியன்முடி திமிலை தட்டி
பொங்கொலிச் சின்ன மெல்லாம் பொருபடை மிடைந்த பொற்பின்
மங்குல்வான் கிளர்ச்சி நாண மருங்கெழுந் தியம்பி மல்க, உ க

582. தூரியத் துவைப்பு முட்டுஞ் சுடர்ப்படை யொலியு மாவின்
ரூர்மணி யிசைப்பும் வேழ முழக்கமுந் தடந்தேர்ச் சீறும்
வீரர்தஞ் செருக்கி னார்ப்பு மிக்கெழுந் தொன்ரு மெல்லைக்
காருடன் கடைகாட் பொங்குங் கடலெனக் கலித்த வன்றே. உ உ

578. (இ - ள்) வெளிப்படை. சோழரும், அதனைக் கேட்டபோது, எதிர் ஒருவரு மின்றி உலகத்தைத் தனிகாக்கின்ற கிளர்ச்சியுடைய மணிகளணிந்த தோளில் உள்ள

மாலையில் மொய்த்த வண்டுகள் ஆரவாரித்து எழும்படி உண்டாகிய அளவுபடாத பெருங் கோபத்தினாலே "இதனைச் செய்தவர்யாவர்?" என்றுங் கேளாது, மணிவாயி லினை இளைய ஆண்சிங்கம்போல, நீங்கிவர, உஅ

579. (இ-ள்) வெளிப்படை. (அதுகண்டு) இராசதந்திரத் தலைவர்களாகிய அமைச் சர்களும் தம் தலைவராகிய அரசரது நிலையைக் கண்டு வந்து, சேனையை மிக விரைந்து எழுந்து சேரும்படி முன்னே பறைசாற்றவே, அழகிய துகிற் கொடிகள் பூமியின் மேலிடமாகிய ஆகாய வெளியெல்லாம் தூர்த்து நிறைய, எந்திரத் தேர்களும், குதிரை களும், இடையிடையே யானைகளுமாகி, உக

580. (இ - ள்) வெளிப்படை. வில்லுடனே வேலும், வாளும், தண்டும், பிண்டி பாலங்களும், வலிய இருப்புலக்கையும், சக்கரங்களும், மழுவும், சூலமும் முதலிய பற்பல படைக்கலங்களையும் ஏந்தியவர்களாய், அழகிய வீரக்கழலணிந்த, வரிந்து கச்சுச் கட்டிய வன்கண்மையுடைய, அளவில்லாத படைவீரர்கள் சுழன்று குதித்து எங்கும் எழுந்த னர்; எங்கும், கூ0

581. (இ - ள்) வெளிப்படை. சங்குடனே, தாரையும், காளமும், மிக்க ஒலி முழங்கும் பேரியும், வெங்குரலுடைய பம்பையும், கண்டையும், பெரியதுடியும், திமிலை யும், தட்டியும், முதலிய பொங்கொலி செய்யும் வாத்திய விசேடங்கள் யாவும் கூடிய இவ்வகையிலே போர்ப்படைகள் செருங்கிய சிறப்பினாலே, மேகங்கள் நிறைந்த ஆகா யத்தின் இளர்ச்சியும் கீழ்ப்படுமாறு, பக்கங்களில் எழுந்து சத்தித்து நிரம்ப, கூக

582. (இ - ள்) வெளிப்படை. வாத்திய ஓசையும், தாக்குகின்ற ஒளியுடைய படைக்கலங்களின் ஒலியும், குதிரைகளின் கழுத்துமாலை மணிகளின் சத்தமும், யானை களின் முழக்கமும், பெரிய தேர்களின் ஆரவாரமும், படைவீரர்களின் ஆர்ப்பும், மிக வும் இளம்பி, எழுந்து, ஒன்றுகக் கூடியபோது ஊழிக்காலத்திலே, ஊழிப்பெரு மேக முழக்குடனே பொங்கும் கடல்போலச் சத்தம் பெருகின. கூஉ

இவ்வைந்து பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன. இவ்வாறன்றி 580-ல் எங்கு மெங்கும் என்றதனை அடுக்காக்கி எங்கெங்கும் என்று கொண்டு முன் மூன்று பாட்டுக் களை ஒரு முடிபாகவும், பின் இரண்டினை ஒரு முடிபாகவும் உரைப்பாரு முண்டு. அர சர் எழவே சேனையும் எழுந்தன எனப்பிரிவின்றிக் கொள்ளும் முறையின் ஒருடர்பா யமைதலின் ஒரு முடிபாகக் கொண்டுரைக்கப் பட்டது.

578. (வி - ரை) கேட்டபோதில் - கேட்டவுடனே.

**மாறின்றி மண் காக்கின்ற - பற்றலரிலாதாய்** எனை மேற்பாட்டில் வாயிற்காவலர் சுட்டியபடி என்க. **மாறு** - பகை. **கிளர் தோள் சுரும்பு கிளர்ந்து போங்க** - விரைந்து எழுச்சி பெற்றதாலும் போர்குறித்து எழுந்ததாலும் தோள் கிளர்ந்தன. அவ்வசைவு காரணமாக வண்டினம் கிளர்ந்தன என்க. "மண்ணினைக் காக்கின்ற மன்னன்"-கம்பர்.

**யார் செய்தார் என்றும் கேளான்-பற்றலரிலாதாய்** என்று அவர்கள் விளித்தவத னால் தம்பால் இது செய்யத்தக்க பகைப்புலத்தவரில்லாமை கினைவூட்டப் பெற்றும், கோபம் மிக்க காரணத்தாலே அது தமது உள்ளத்தைக் கவர்ந்தெழுந்தமையின், இயல்பில் எவரும் முதலில் கேட்கத்தக்க இக்கேள்வியைத் தானும் கேட்காமல் மேல் எழுந்தனர். கேட்டிருந்தால் இவ்வாறு புறப்பட்டிருக்க மாட்டார் என்பது குறிப்பு. "உள்ளங் கவர்ந்தெழுந் தோங்குசினங் காத்துக், கொள்ளுங் குணமே குணமென்க" என்ற மேம்பாட்டினை உன்னுக.

**சிலராம்** என வாயிற்காவலர் கூறினாரேனும், அதனுள் அமைந்துபடாமை, "சிறிய பகையெனினும் ஒம்புத றேற்றார்", "வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங் காற், றீயெச்சம் போலத் தெறும்" என்பனவாதி நியாயம்பற்றி யென்க.

**இளவரி ஏறு போல** . கிழச்சிங்கமாயின் போருக்கு இங்ஙனம் விரையாது என்க. **முழையரி** - (557) **வாளரி** - (572) என முன்னர் எறிபத்தரைக் குறித்தனராதலின் இங்குச் சோழரை **இளவரி** என்றார். இருவரும் அரியேறே போல்வார்களாயினும் இச்சரிதப் பின்னிகழ்ச்சி பற்றி அவருக்கு இவர் இளையார் என்று குறித்த நயமும் அழகும் காண்க. இச்சரித நாயகராகிய எறிபத்தரின் ஏற்றங் குறித்த அழகுங் காணத்தக்கது.

**மணிவாயில்** - மணிகட்டியவாயில். **மணி** - ஆராய்ச்சி மணி. திருநகரச்சிறப்புச் சரிதம் (112) காண்க. ஆராய்ச்சிமணி கட்டியிருந்தும் ஆராயாது கிளம்பினார் என்றது குறிப்பு. **மணி** அழகு எனக் கொள்ளின் **எழின்மணி** - மிக்க அழகு என்க.

**வாயில் நீங்க** - வாயிலினின்றும் கதுமென விரைந்து புறப்பட.

**எரிமணி**—என்பதும் பாடம். 28

579. (வி - ரை) **தந்திரத்தலைவர்** - அரசாங்க தந்திரம் வல்ல அமைச்சரிற் சேனைக் காரியம் பார்ப்பவர். சேனைத்தலைவர் என்பாருமுண்டு.

**தலைவன்** - அரசன். **முதல்வன்** (576) என்றது காண்க.

**நிலைமை**-அளவில் சீற்றங்கொண்டு போர்க்குப் புறப்பட்ட நிலை. தலைவர் ஏவாமலே அவரது குறிப்பறிந்து உரியன செய்தல் தந்திரத் தலைவர் கடமையா மென்பார் **நிலைமைகண்டு** என்றதும் காண்க.

**வந்துற** - தலைவர் தாமும் வந்து, சேர்ந்து. **உற்று** என்பது உற என நின்றது. **வல்விரைந்து** - மிக விரைவில் எழும்படி - **முன்** - சேர்வதற்குமுன். சேனையை வந்துறச் சாற்ற என்றலுமாம்.

**சாற்ற** - பறைசாற்றுவிக்க. இதனை இரண பேரிகை அடிப்பித்தல் என்பர்.

**அந்தரத்து அகலம்** - ஆகாயவெளி - **அணி துகிற் பதாகை** - அழகிய பல நிறங்களுடைய துணிகளால் அமைத்த கொடிகள்.

**தூர்ப்ப** - மறைக்க. கொடிகள் ஆகாயவெளி முழுதும் மறைக்க. கொடிகள் ஆகாய வெளி முழுதும் மறையுமாறு நெருங்கின என்க.

**எந்திரத்தேர்** - எந்திரங்களைக் கொண்ட தேர்கள். எந்திரங்களால் இயக்கப்படும் தேர்கள் என்றும், பகைப் புலத்தின் மேற் பல படைகளை வீசும் எந்திரங்களைக் கொண்ட தேர்கள் என்றும் கொள்ள நின்றது. சீவகன் கதையில் கருப்பிணியா யிருந்த அவனது தாயை மயில் வடிவாயமைந்ததொரு பொறி ஆகாயத்திற்கொண்டு சென்ற வரலாறு கேட்கப்படும். நூற்றுவரைக் கொல்லி - ஆயிரவரைக் கொல்லி - முதலியனவாகிய படைகளையும், உருகிய உலோகக் குழம்பு முதலியவற்றையும், வீசும் எந்திரங்களையும் முன்னாளில் தமிழர்கள் போரில் வழங்கினர் எனப் பல பழைய இலக்கியங்களில் அறிகின்றோம். எந்திரத்தேர் உருளையுடைய தேர் என்பாரு முண்டு.

**மா** - குதிரைப்படை. குதிரைப்படையின் மிகுதியும் அதனை நோக்க யானைப் படையின் தொகைக் குறைவும் குறிக்க **இடை இடை** என்ற தோடு **களிறும்** என வும்மையுந் தந்தோதினார்.

**பதாகை போர்ப்ப** ~~என்பதும் பாடம்~~. வெந்திறற்றோரும் என்பது

580. (வி - ரை) **வில்லொடு**-ஏனைப் படைகளினின்றும் **வில்லினை, ஓடு** உருபு தந்து பிரித்துக் கூறியது அதன் சிறப்பும் மிகுதியும் நோக்கி.

**பிண்டிபாலம்** - "தலையிலே பீலி கட்டப்பட்டு எறிவதோர் படை". ஒருவகை எறியாயுதம். பீலித் தண்டம் என்பர்.

**முசலம்** - இருப்புலக்கை, **கழுக்கடை** - சூலம். எறியீட்டி என்றலுமாம். **மழு** - பரசு. கோடரி போன்றது. **முன்னான** - முதலாகிய. **பைங்கழல்** - வீரக்கழல் அணிந்தார்களும், **வரிந்த** - கச்சுவரிந்து கட்டி. கழலை வரிந்து கட்டிய என்பாரு

முண்டு. **வன்கண்** - வீரமுடைய. இரக்கமற்ற மறம். அப்படைஞர் யாவரும் வீரர் களே என்பார் பைங்கழற் படைஞர் என்று குறித்தார்.

**கோட்புற்று** - சுழன்று. உற்சாகத்தோடு குதித்து என்பர் ஸ்ரீமத் ஆறுமுகத் தம் பிரான் சுவாமிகள். போர்க்குச் செல்லும்போது இடசாரி வலசாரியாகச் சுற்றிப் பல விந்நியாசமான அவ்வித்தையின் தொழில்களைச் செய்தென்று பொருள் கூறுதலு மொருபட்சம் - என்பர் மகாலிங்கையர்.

**எங்கும்** - எங்கேயும் - எவ்விடத்தும். முற்றும்மை. நால்வகைச் சேனையினும் இதிற்குறித்த காலாட் படையின் தொகுதியும் மிகுதியும் குறித்தது. **படைஞர்** - படைக்கல மேந்திய காலாள் வீரர். இவர்கள் எந்திரவத்த படைகளை மேலே குறித்தது காண்க. **எங்கும் எழுந்தனர்** என்று மாற்றியுரைக்க. இரண்டாவது **எங்கும்** என்ற தனை வரும்பாட்டில் **மலிக** என்றதோடு கூட்டி **எங்கும் மலிக** என்றுரைத்துக் கொள்க. இவ்வாறன்றி **எங்கு மெங்கும்** என்பதனை மிகுதிபற்றிய அடுக்குத் தொடராக்கி எங் கெங்கு மென்று பொருள் கொள்வாருமுண்டு. அது சிறவாமை காண்க.

நால்வகைச் சேனையில் தேர் - யானை - குதிரைப்படைகள் என்ற மூதன் மூன் றும் மேற்பாட்டானும், ஏனைய காலாட்படை இப்பாட்டானும் குறித்தார். **உறுப்பு நான்கு** எனக் (583) கூறுவதும் காண்க.

மூன்றும் சேர ஒரு பாட்டானும் இவ்வொன்று ஒரு பாட்டானும் கூறியது அவ்வ வற்றின் தொகைச் சுருக்கமும் பெருக்கமும் பற்றி. 30

581. **(வி - ரை) சங்கோடு** - மேற்பாட்டில். **வேலோடு** என்றதற் கேற்ப இங்கும் மிகுதியும் சிறப்பும்பற்றி ஏனைவாத்தியங்களினின்றும் சங்கினைப் பிரித்துக் கூறினர். வெற்றிக்கறிகுறியாகச் சங்கு முழக்குதலும் காண்க. பாரதத்திற் கண்ணன் சங்கமூதியது முதலிய கதைகளுங் காண்க.

**தழங்கு ஒலி முழங்கு பேரி** - **பேரி** - மிக்க பேரொலி மூழக்கும் வாத்திய விசேட மாதலின் இவ்வாறு பல அடைமொழி புணர்த்தார். பேரி, யானை முதலியவற்றின் மேலிருத்தும் முழக்கப் பெறும்.

**வெங்குரல் பம்பை** - பம்பை பரந்த இருமுகமுடையதாயும், பெரிய உருவ டையதாயும் உள்ள வாத்திய விசேடம். வெவ்விய - கடிய ஓசைமுழக்குவது. தடாரி.

**கண்டை** - ஒருவகைப்பறை. **திமிலை** - சல்லரி என்பர். **வியன்துடி** - பெரும் உடுக்கை. பம்பை போலாது இடைசிறுத்துள்ளது துடி. சிறுதுடியினின்றும் வேறுணர **வியன்றுடி** என்றார்.

**தட்டி** - காடிப்பறை. இதனைத் தட்டை என்பது பிங்கலம். "காடி காமக் கட்டுரை தட்டை".

**பொங்கு - ஒலி - சின்னம்** - இவ்வகையும் ஏனைப் பலவுமாகிய சின்னங்கள். இவை போரிற் சேனைகளை ஊக்கப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் பயன்படுவன. இதுபற் றியேஇவை படைமிடைந்த மருங்கு எழுந்தியம்பின என்றார். படைஞர் இவற்றால்உற் சாகப்படுத்தப் பெற்றுத் தமது இன்னுயிரையும் பொருட்படுத்தாது போரில் முனைந்து நின்று வெற்றிபெறுமாறு செய்யவல்லது இந்த வகைப் போர்முனை யியங்களின் இசை யின் சத்தி என்க. இக்காலத்தும் ஆங்கிலர் முதலிய சுவீனர் போர்க்குச் செல்லுங் கால், பற்பலவகை இயங்களை (War Band) முழக்கி, அவ்வானந்தத்தில் ஈடுபட்டுச் செல்வது காணலாம்.

**மிடைந்த** - நெருங்கிய.

**மங்குல்வான் கிளர்ச்சி நாண** - மேக நிறைந்த கார்காலத்து ஆகாயத்தில் எழும் ஓசையும் கீழ்ப்பட. **நாண** - கீழ்ப்பட என்றதை வெட்கத்தால் நாண என்று உயர்

திணைபோலக் கூறினார். கிளர்ச்சி - ஒலி. ஒலியணுக்கள் விசையிற் றெருகுதியாகக் கிளர்வதனால் உண்டாவதால் கிளர்ச்சி என்பது ஒலிகுறித்தது.

மருங்கு - சேனைச் செலவில் இருபக்கமும்.

எழுந்தியம்பி மல்க - எழுந்து - மிகக் கிளர்ச்சியுடன் ஆர்ப்பரித்து. இயம்பி - வேறு வேறு தத்தம் இயல்புக்கு ஏற்றவாறு ஒலித்து. மல்க - நெருங்க. வகையானும் தொகையானும் பலவாகி மலிந்தபடியால் மல்க என்றார்.

மங்குல்வான் - மங்குல் - மேகம் - பல கூட்டமாகிய மேக கர்ச்சனையும் வானத்தின் எதிர் ஒலியும் கூடியதால் கிளர்ச்சி என்றார். வானம் ஒலி என்னும் குண முடையதுமாம். வான்கிளர்ச்சி - இடி என்றலுமாம்.

கிளர்ச்சி மான்—என்பதும் பாடம். 31

582. (வீ - ரை) தூரியம் - வாத்தியப்பொது. மேற்பாட்டிற் கூறிய இயங்களையும் குறித்தது. துவைப்பு - ஓசை. கைகளாலும் கோல்களாலும் குறிப்பிட்டவாறு ஓசையுண்டாக்குதலால் துவைப்பு என்றார். துவைத்தல் - முழக்குதல்.

முட்டுஞ் சுடர்ப்படை ஒலி - படை - மேல் 580-ம் பாட்டினில் விரித்த பலவகைப் படைகள். செறிவினாலும் எறிவினாலும் முட்டுவதால் முட்டும் - என்றார். இவற்றினின்றும் வெளிவீசும் ஒளியே பகைவரை முட்டுவதால் முட்டும்சுடர்ப்படை என்றலுமாம். முட்டும்படை - முட்டும் சுடர் - முட்டும் சுடர்ப்படை என மூன்று வகையானும் கூட்டியுரைக்க நின்றது.

மாவின் தார்மணி இசைப்பு - மா - குதிரை. மணித்தார் என மாற்றுக. மணிகளை மாலையாகக் கோத்தணிதல் வழக்கு. இசைத்தலால் எழும் ஓசை இசைப்பு.

வேழ முழக்கீகம் - பேரொலியாதலின் முழக்கீகம் என்றார். கீறு - ஒலி. கீறி எழுதலான் உளதாம் ஓசை கீறு எனப்பட்டது. கீநம் என்று பாடங்கொண்டு இரைச்சல் எனப் பொருள் கொள்வாருமுண்டு.

செருக்கு - தாம் ஏத்திய படையினாலும் தமது ஆண்மையினாலும் செருக்குமிக்கார். வீராவேசம் என்பர். செருக்கினாற் கூறும் வீரமொழிகளின் ஒலி என்பாருமுண்டு. ஆர்ப்பு - ஆரவாரம். ஒலி.

அவைப்பு - ஒலி - இசைப்பு - முழக்கம் - கீறு - ஆர்ப்பு என்பன ஓசை என்ற ஒரு பொருள் தரும் பல சொற்கள். ஒரு பொருட்பன்மொழி என்பர். வெவ்வேறு வகையாலெழும் வெவ்வேறு வகை ஓசைகளைக் குறிக்க வெவ்வேறு சொற்களால் அவ்வவற்றிற் குரிய குறிப்பும் பெற அமைத்துக் கூறிய அழகு காண்க. கண்ணப்பர் புராணத்து "ஐவன வடிசில்" என்ற 34-ம் பாட்டும், 'இவ்வாறு வருவன பிறவும் காண்க.

மேல் மூன்று பாட்டுக்களிலும் தனித்தனி கூறிய படையெழுச்சியின் மூட்சியை இப்பாட்டாற் றெருகுத்துக் கூறியபடி. இதில் தூரியம் மேற்பாட்டிலும், படைகள் அதற்கு மேற்பாட்டிலும், மா - வேழம் - தேர் இவை அதற்கு மேற்பாட்டிலுமாக எதிர் நிரன் முறையா யமைத்தலும் காண்க. தேரும் மாவு மிடை யிடை களிறும் (579) என்றதில் இடையிடை களிறு என்றதனால் தேர் - களிறு - மா என்றதே வரிசையாயிற்று. ஆதலின் இங்கு அது மா - வேழம் - தேர் என்று எதிர் நிரனிறையாயினமை கண்டு கொள்க.

ஆர்ப்பு - ஏனை ஓசைகள் யாவும் ஓசை அளவில் எழுந்தனவாதலின் முன்னர்த் தொகுத்துக் கூறினார். படைஞர் ஆர்ப்பு அவ்வாறன்றி அவர்களது மன எழுச்சியாலாகிய செருக்குக் குறித்தெழுந்த மொழிகளாதலின் அச்சிறப்புப் பற்றி இறுதியில் வேறு பிரித்துக் கூறிக் காரணமும் கூறினார்.

அவ்வச் சேனை வகைகள் வெவ்வேறாக அமைந்த தத்தம் திடங்களினின்றுங்கிளம்பும் எழுச்சியைத் தனித்தனி முன்குறித்த பாட்டுக்களானும், அவை ஒன்றுகூடிய

ஆழனியை இப்பாட்டானுங் கூறினர். அவற்றை முன்னர்த் தனித்தனிக் கண்ட ஒருவன் அவை தொக்க சிறப்பைக் கூட்டி எண்ணுங்கால் இறுதியில் வந்து கூடிய இனத்தை முதலாக வைத்து அம்முறையே எண்ணுதல் வழக்காதலின் எதிர் நிரன் முறையாகக் கூறினர் என்க. இக்கருத்துப் பற்றியே மிக்கு எழுந்து ஒன்றும் எல்லை என்றதும் காண்க.

ஒன்றும் எல்லை - ஒன்றுகும்போது - கூடியபோது. எல்லைக்கார் என்று கூட்டி ஊழிக்கால முகில்கள் என்பாரு முண்டு.

காநுடன் கடைநாட் பொங்கும் கடல் - ஊழி முடிவில் நீர்ப் பிரளயத்துப் பொங்கும் கடலின் எழுச்சி. "பொங்கோதங் கடைகாள்", "கடையுகத்திற் றனிவெள்ளம் பல" எனத் திருஞானசம்பந்த நாயனர் புராணத்துக் கூறுதலும், பிறவுங் காண்க. வரும் பாட்டில் "இறுகால்" என்றதுமிது. காநுடன் - ஆயின் இவ்வெழுச்சி கடற் பெருக்குப் போல அழிவினிற் செல்லாது "ஆர்கலி யேழுமொன்றுய் மன்னிய ஒலியின் ஆர்த்து, மண்ணெலா மகிழ்ந்து வாழ்த்தச்" (603) செய்து மகிழ்ச்சிக்கே காரணமாய் நின்றதாதலின் கடைநாட் பொங்கும் கடல் என்றெழுயாது உலக நிலைபேற்றுக்கும் மகிழ்ச்சிக்கும் காரணக்குறிப்போடு காநுடன் என்று உடன் கூட்டிக் கூறினர். "வீழ்க தண்புனல்" என்ற பெருவாக்கினுல் காரி வாழ்த்துதற்குரியதாயினமை காண்க.

கலித்த - சத்தித்தன. இப்பாட்டின் உவமான உவமேயங் கூட்டி எழுவகைச் சத்தங்களாயின. சேனை எழுதலின் எழுவகையாயின வென்பதும் குறிப்பு.

இக்குறிப்புப் பற்றிப் பின்னர் ஆர்கலி ஏழும் ஒன்றுய் - (603). என்பதும் காண்க.

அன்றே - தத்திரத் தலைவர் சாற்றிய (579) அப்போதே - அன்று - ஏ - அசை யென்றுமாக்குவாரு முளர்.

துவைப்ப—அசைப்பும்—என்பனவும் பாடங்கள். 32

583. பண்ணுறு முறுப்பு நான்கிற் பரந்தெழு சேனை யெல்லா
மண்ணிடை யிறுகான் மேன்மேல் வந்தெழுந் ததுபோற் றோன்றத்
தண்ணளிக் கவிகை மன்னன் றுணைபின் றொடரத் தானே
ரண்ணலம் புரவி மேல்கொண் டரசமா வீதி சென்றுன். கூ

(இ - ள்) வெளிப்படை. வகை பண்ணப்பட்ட நால்வகை உறுப்புக்களினுற் பரந்தெழுந்த சேனையெல்லாம், உலகத்து அழிவைச் செய்யும் ஊழிக்காற்று மேன்மேல் வந்தெழுந்ததுபோலத் தோன்ற, (அவ்வாறெழுந்த) சேனை தம்மைப் பின்றொடர்ந்து வரத், தாம் ஓர் பெருமை பொருந்திய குதிரையின்மே லேறிக் குளிர்ந்த கருணை பொருந்திய கொற்றக் குடையுடைய அரசர், அரசமா வீதியிலே சென்றுர்.

(வி - ரை) உறுப்பு நான்கு - தேர் - யானை - குதிரை - காலாள் - என்பன. சதுரங்கசேனை யென்பர். "நெருங்கிய சாதுரங்கம்" எனத் திருநாவுக்கரசு நாயனர் புராணத்துக் (6) கூறியது காண்க. இவற்றில் முதல் மூன்று 579-ம் பாட்டிலும், நான்காவது காலாட்படையைப் படைஞர் என 580-ம் பாட்டிலும் கூறினர்.

இறுகால் - இறுதலினை - அழிதலைச் - செய்யும் ஊழிக்காற்று. சண்டமாருதம் என்பர். கால் - காற்று. கால் மண்ணிடை வந்தெழுந்தது என்று கூட்டுக.

போல் தோன்ற - தோற்றத்தால்மட்டும் இவ்வாறு காட்டியதேயன்றிச் செயலில் ஒன்றும் நிகழ்ச்சியின்றும் என்பார் போல் என்றும், தோன்ற என்றும் குறித்தார். ஓசையும் விரைவின் அசைவும் ஆகிய இரண்டு குணமுடைமையின் சேனைச் செலவிற்குக்காற்றினை உவமித்தார். "மாருதத் திரண்டை" (திருப்புள்ளிருக்கு வேளூர்த் திருத்தாண்டகம்), "வளியிடை யிரண்டாய் மிழற்றாய் போற்றி" (திருவாசகம்) என்பனவாதி திருவாக்குக்கள் காண்க. ஐம்பெரும் பூதங்களில் ஊறு - ஓசை எனும் இரண்டு குணமுடையது காற்று என்பது சாத்திரம்.

**மேன்மேல்** - படை வகை ஒவ்வொன்றும் இக்குணச் செயல்களுடன் வந்துகூடியனவாகலின் **மேன்மேல் வந்து** என்றார்.

**தண்ணளிக் கவிகை மன்னன்** - அரசர் பகைவர்மேற் சென்ற செயல் பிறரின் அழிவு கருதாது தமது குடிகாத்தலாகிய தண்ணளியின் செயலாம் என்பது கருத்து. அரசர் கருணை அதற்கடையாளமாகிய கவிகை - குடையின்மேல் ஏற்றப்பட்டது. "தண்ணளி வெண்குடை வேந்தன்" - (130) என்றது காண்க.

**அண்ணல் அம் புரவி** - நூல்களில் வகுத்தவாறு நல்ல குதிரைக்குரிய எல்லா நல்ல இலக்கணங்களும் பொருந்தியதுடன் அழகும் உடையதொரு குதிரை என்க.

**அரசமா வீதி** - அரசர்கள் செல்வதற்கமைந்த வீதி. அரசரது தலைநகரங்களில் ஒன்றுதலின் பலவகையானும் மாறுபாடு விளையாவண்ணம் பலவகையினர்க்கும் உரியனவாய் வெவ்வேறு பற்பல தெருவுகள் அமைந்தன. எல்லாத் தெருவுகளும் எல்லாரும் இயங்குதற்குரியன என்பது பிற்கால நவீனக் கருத்து. இவற்றின் பொருத்தங்கள் ஆராயத் தக்கன. "அரசுலாந் தெருவில்" (116) என்றதுங் காண்க. 33

584. கடிவிசை மூடுகிப் போகிக் களிற்றெடும் பாகர் வீழ்ந்த
படுகளங் குறுகச் சென்றான்; பகைப்புலத் தவரைக் காணான்;
விடுசுடர் மழுவொன் றேந்தி வேறிரு தடக்கைத் தாய
வடுகளி றென்ன நின்ற வன்பரை முன்பு கண்டான். ஈச

(இ - ள்) வெளிப்படை. (அரசர்) மிக்க வேகமாகப் போய் யானையோடு பாகர்கள் இறந்துபட்ட களத்தினை அணுக அடைந்தனர்; அங்கே பகைப்புலத்தவர்கள் ஒருவரையுங் கண்டாரில்லை; ஒளிவீசுகின்ற ஒரு மழுவினை ஏந்தியதாய், வேறு இரண்டு பெருங் கைகளையுடையதாய் அழிக்கும் யானைபோல நின்ற அன்பரை முன்னே கண்டார்.

(வி - ரை) **கடி - விசை - மூடுகி** - சேனைகள் ஊழிக் காற்றினைப்போல மேன்மேல் வந்து எழுந்தன; அவை தாமும் பின்வர முன்னே சென்றது அண்ணலம் புரவி; அதனை ஊர்ந்த அரசரோ யார் செய்தார்? என்றுங் கேளாது எழுந்த அளவில்சிற்றத்தின் நிலையினர். ஆதலின் **கடி - விசை - மூடுகி** என்று மும்மடங்கு அடுக்கிக் கூறினர். விசை கடிவிசையாக, அதுவும் மூடுகியதாயிற்று என்க.

**படுகளம்** - பட்டஇடம் - இறந்துபட்ட களம்.

**பகைப் புலத்தவர்** - பகைவர். வேற்றுப் புலத்தவர். பகைப் புலம் இங்குப் பகையாகிய காட்டத்தினைக் குறித்தது. ஆன்மாவுக்குப் பகையாகிய புலத்தவர். நின்றவர் உயிர்க்குப் பகையல்லா அறுதிதரும் அன்பர் என்பதும் குறிப்பு.

**விடுசுடர்** - சுடர் விடு எனமாற்றுக. தூரத்தே முதலிற் காட்சிப் படவும் முதன்மை பெற்றும் விளங்கிற்று என்பதாம். கொலைமழு - (570) **எரிவாய் சிந்தும் அங்கையின் மழு** (572) என முன்னர்க் கூறியன காண்க.

**மழு ஒன்று** - ஒருமழு. கைகளிரண்டாயினும் ஏந்திய தொருமழுவே என்பது. ஒன்று - ஒப்பற்ற என்றலுமாம்.

**வேறு இரு தடக்கைத்து ஆய அடுகளிறு** - தடக்கை - பெரிய துதிக்கை. வேறு இரு. உவமித்த யானைத் துதிக்கையின் வேறுய தன்மை கொண்ட. எண்ணிக்கையில் இரண்டு; யானைத் துதிக்கை ஒன்று - ஆனால் இரண்டு தன்மை கொண்டது. "இருகை யானையை ஒத்து"—(திருவாசகம்), முதலிய திருவாக்குக்கள் காண்க. ஆயின் இங்குக்கண்ட களிற்றினுக்குக் கைகள் எண்ணாலும் தன்மையாலும் வேறு என்றபடி. இவ்வாறு இரண்டுகைகளும் யானைத் துதிக்கை போன்றன என்பது. **அடுகளிறு** - தமது அடப்பட்ட களிறு பட்ட களத்தில் அரசர் பகைப் புலத்தவரைக் காணார்; ஆனால் ஒரு களிறே கண்டார்; அது அடுங்களிறுயிருந்தது; இருகைகளை யுடைத்து;

அவை வேறு தன்மையன - என்று தொடர்த்து பொருள்கொள்க. **களிறு** - முன்னர் முழைமரி - (557), **வாளரி** - (572) எனச் சிங்கமாக உவமித்த ஆசிரியர் இங்கு நாயனார்க்குக் களிற்றினை உவமித்ததென்னை? எனின், அடியார்க் கடாதன அடுத்த போது அவற்றை விலக்கும் பொருள்களின் முன் எறிபத்தர் நிற்கும் நிலையினை ஆசிரியர் தாங் கண்டவாறு உவமித்தலின் அரி என்றார். யானையை அடர்த்து வெல்வது அரியேயாம். இடையூறு யானை போன்ற எத்துணை வலியதேயாயினும் அரி போலக் கிளம்பி அதனை எறியும் வலிமை பெற்றார் என்பது. ஆயின், ஈண்டு அரசர் நாயனாரைக் கண்டவாறு தாமுங் கண்டு காட்ட வேண்டுதலின் **அடுகளிறு** என்றார். அரசர் தமது யானையின்மேல் வைத்த விருப்பமே இங்ஙனமாக காரணமாயிற்று. அன்பரைக் கண்ட போதும் அவ்வகை விருப்பமே முன்னின்றதாதலின் இவர் அவர் காட்சியிற் களிறே போன்றார். கையொன்றே யுடைய யானையினும் இருகையுடைய இவனிடத்து அதிக விருப்பத்துடன் கண்டாராதலின் **வேறிரு தடக்கைத் தாய** என்றார். **அன்பரைக் கண்டார்** என்ற குறிப்பும் காண்க. அன்பர்களைக் காணிற் கசிந்துருகும் இவ்வாசாரது திறம் இவர் புராணத்துப் பின்னர்க் காண்க. **வேறு இரு தடக்கை** - வடிவாலுங் குணத்தாலும் யானைக் கையின் வேறுந் தன்மை யுடைய இரண்டு பெருங்கைகள் என்றது யானையின் ஒருகை இங்கு அன்பர்க்கு அடாதன செய்யக் காரணமாயினதாக, இவ்விரு கைகள் அவ்வாறன்றி அன்பர்க்கு அரணும் ஏனையோர்க்கு முரணும் ஆயின என்றதாம்.

**அன்பரை முன்பு கண்டான்** - யானையினையும் பாகரையும் எறிந்த பின்னர், அச்செய்தி கேட்டு அரசரும் சேனையும் வருமளவும், வந்தபின்பும், அப்படுகளத்தினிங் காது நின்றதும் பின்னர் அரசர் வெடிபட முழங்குஞ் சொல்லாற் கேட்ட போதுந் தான் செய்த செயலை ஒரு சிறிதும் அஞ்சாது எடுத்துச் சொல்லுந் திறனும் (590-591), நாயனாரின் வீரத்தை மேலும் விளக்குகின்றன. "ஈர அன்பினர்; யாதுங் குறைவிலார்; வீரமென்னுல் விளம்புந் தகையதோ?" எனத் திருக்கூட்டச் சிறப்பிற் சிறப்பாக எடுத்துக் கூறிய அன்பரிலக்கணத்தை இங்கு எறிபத்தர்பால் வைத்துச் சிறக்கக் காண்க.

பகைப்புலத்தவர் செயலே இது என உட்கொண்டு பெருஞ்சினத்துடன் வந்த அரசர், அவ்வாறு பகைவர் ஒருவரையுங் காணாராய்த் தம்மால் அன்பு செய்யப்பட்ட, தம்பிரான் றமராய அன்பரையே கண்டார். ஆதலின் இது இவர் செய்தனர் என்ற கருத்து அரசர் மனத்தில் உதிக்கவில்லை. ஆதலின் அவர் முன்பு நிற்கக் கண்டும் **யாவர்** ? என மேல் வினவினர். இதனை வரும் பாட்டிற் றொடர்த்து விரித்தது காண்க.

சென்றான் - காணுன் - கண்டான் - என்றான் என்ற வினை முற்றுக்கள் ஒன்றன் பின் ஒன்றாய் முற்றிய செயல்களாய் அரசன் மனத்து உண்டாகிய திகழ்ச்சிகளை ஓவியம் போலத் தீட்டிக் காட்டும் சொல்லமைப்பின் அழகு காண்க.

**முன்பு** - அரசர் காட்சியிலே முதலில். முதன்மையாக - தேற்றமாக என்றலுமாம். களிற்றின் முன்பு என்று கூறுவாருமுண்டு. வரும்பாட்டில் களிற்றின் முன்பு என்றலால் அஃதுரையன் றென்க.

**முடுகிப் போங்கி**—என்பதும் பாடம். 34

585. பொன்றவ ழருவிக் குன்ற மெனப்புரள் களிற்றின் முன்பு
நின்றவர் மன்று ளென்று நிருத்தமே புரியும் வெள்ளிக்
குன்றவ ரடியா ரானுர்; கொன்றவ ரிவரென் றேரான்;
"வென்றவ ரியாவ ?" ரென்றான் வெடிபட முழங்குஞ் சொல்லான்.

(இ - ள்) வெளிப்படை. பொற்சுன்னங்கள் நீருடன் கலந்து வருதற்கிடமாகிய அருவிகளையுடைய குன்று போலப் புரண்ட யானையின் முன்னே நின்றவர் திருவம்பலத்திலே எப்போதும் ஆனந்தக் கூத்தினையே பயில்கின்றவரும், வெள்ளிமலையினையுடையவரும் ஆகிய சிவபெருமானுக்கு அடியவராயினர். ஆதலின் இவர் யானையையும்

பாகரையும் கொன்றவரென்று நினைக்க மாட்டாதவராய், "வென்றவர் யாவர்" என்று வெடிபட முழங்குஞ் சொல்லாற் கேட்டனர் (அரசர்).

(வி - ரை) தன்றம் - யானைக்கும், அருவி - அதனை வெட்டிய ஊறினின்றும் வெளியோடும் குருதி நீரின் ஓட்டத்திற்கும், பொன்தவழ் என்றது அக்குருதியின் செந்நிறத்திற்கும் உவமையாயின. பொன்-செம்பொன்னின் றுகள். வெட்டுண்டு நேரஞ் சென்றமையானும், செந்நீரோடு யானையினது முன்னர்ப் பொங்கியகளிப்பினோடும் பொழிந்த மத நீரும் (562) சேர்ந்தமையானும், குருதியின் அடர்ந்த செந்நிறம் மாறி நீர்த்துச் செம்பொன் னீறம் பெற்றுத் காண்டலின் பொன்றவ ழருவி என்றார். இவ் வாறன்றி, இதற்குப் பொற்பட்டத்தோடு புரண்ட என்றுரைப்பாரு முண்டு. ஈண்டு யானை பட்டமணிந்ததை எடுத்துக்கூறுமை குறிக்க. குருதி கலந்த நிலப்புழுதி யென் பாருமுண்டு.

புரள் களிறு - மரணவேதனையாற் புரண்டயானை. வெட்டுண்டுபட்ட உடற் குறை பின்னருஞ் சிறிது நேரம் அவ்வேதனையாற் புரள்வது இயல்பாம். "மைவரை யனைய வேழம் புரண்டிட" (575) என்ற மட்டில் முன்னர்க் கூறியதும் காண்க.

மன்று - திருவம்பலம். நிருத்தம் - அருட்கூத்து. ஏகாரம் தேற்றம். வெள்ளிக் குன்று - வெள்ளிமலை - கயிலை. (காரை - புரா - 56; ஏயர்கோன் - புரா - 362).

வெள்ளிக் குன்றவர் - வெள்ளிமலை; பனிமலையில் இருக்கையுடையார் என் பாருமுண்டு.

அவர் கூத்து இயற்றுமிடம் மன்று ஞானமயம். கூத்து அருளும் இன்பமு மாகிய நிறைவு. அவர் இருக்கை வெள்ளிமலை. அது புண்ணி யந்திரண் டுள்ளது போல் வது (12). இவர் அவரதன்பர். ஆதலின் நற்குணநிறைவுடையாராவர் என்பன குறிப்பு. பின்னரும் அன்பராங் குணத்தின் மிக்கார் (587) என்று இதனையே உட்கொண்டு கூறுதலும் காண்க.

கொன்றவர் இவர் என்று ஓரான் - அடியாராதலின் இவர் கொன்றிருப்பார் என்ற எண்ணம் தோன்ற மாட்டாதவராகி. ஓரான் - ஓராராகி. முற்றெச்சம். ஓர்தலைச் செய்யமாட்டாராய். இவரென்று ஓரான் என்ற எதிர்மறையெச்சம் இவரல்லர் என்று ஓர்ந்து என்னும் பொருளில் வந்தது.

வென்றவர் - கொன்றுவிட்டாராதலின் அவ்வளவில் வெற்றி பெற்றாராய் எண்ணி யவர் என்பார் வென்றவர் என்றார். எறிந்தவர் - கொன்றவர் என்ற பொருளில் வந்தது. அடியார் ஆனார் - (ஆதலால்) வென்றவர் யாவர் - என்க.

வெடிபட - வெடித்தல் படுமாறு அதிர. சொல் வெடிபட முழங்குதல் அளவில் லாத சீற்றத்தாலாயது. வெடி - இடி என்றும், பட - கீழ்ப்பட என்றும் இடியும் கீழ்ப் படுமாறு முழங்கும் - என்றலுமாம்.

சொல்லான் - சொல்லினாலே. சொல்லையுடையவனாய் என்பாருமுண்டு.

ஓரானாய் - சொல்லான் - என்றான் - எனக் கூட்டிமுடிக்க. 35

586. அரசனுங் கருளிச் செய்ய வருகுசென் றணைந்து பாகர்,
"விரைசெய்தார் மாலை யோய்! நின் விறற்களிற் றெதிரே நிற்கும்
திரைசெய்நீ ருலகின் மன்ன ரியாருளார்? தீங்கு செய்தார்
பரசுழுன் கொண்டு நின்ற விவ"ரெனப் பணிந்து சொன்னார். கூசு

(இ - ள்) வெளிப்படை. அரசர் அவ்வாறு சொன்னராகப், பாகர்கள் அவர் பக் கத்தே சென்று சேர்ந்து, "வாசம் பொருந்திய மலர்மாலையும் மணிமாலையும் அணிந் தோய்! உனது வலிய யானையின் முன்பு எதிர்த்து நிற்கவும் வல்லார் அலைகடல் சூழ்ந்த உலக முழுவதினும் யாவர் மன்னர் உள்ளார்? அத்தீங்கு செய்தார் மழுவாயுதத்தை முன்னே ஏந்தி நின்ற இவரேயாம்" என்று வணங்கிச் சொன்னார்கள்.

(வி - ரை) ஆங்கு - அவ்வாறு. செய்தவர் தம் முன்பு நிற்கவும் அவரல்லர் என்று கருதிய அப்படி.

அநளிச்செய்ய - சொல்ல. மரபு வழக்கு.

பாகர் - யானையுடன் வந்தோரில் வெட்டுண்ணுது தப்பிச் சென்று அரசனுக்குச் செய்தியை அறிவித்த பாகர்கள். 577 - பார்க்க.

விரைசெய் தார் - மணமுடைய பூமாலை. சோழருக்குரிய அடையாள மாலை குறித்தது. கிளர்மணித் தோளலங்கற் சுரும்பினம் - (578) என முன்னர் இதனையே குறித்ததும் காண்க. மாலை - மணிமாலைகள்.

மாலையோய்! - சிற்றத்தாலும் வலிமையாலுங் கிளர்ந்த மாலைத் தோளின் கிளர்ச்சி அடித்தபடியிலே தணிந்து தாழ உள்ளதாதலின் ஒய்வினை யுடைய என்ற குறிப்பும் பெற, மாலையாய் என்னுது மாலையோய் என்று கூறினர். "தாழ்ந்து பருவரைத் தடந்தோள் மன்னன்" (591) என்றது காண்க. இக்குறிப்புப் பற்றியே வரும்பாட்டில் இழிந்தனன் என்றதும் குறிக்க.

விறற்களிறு - இதுவரையும் வெற்றியே பெற்ற வலிய யானை.

எதிரே நிற்கும் - அதனைக் கிட்டிப் போர் செய்தல் நிற்க, அதன் எதிரில் நிற்கத் தானும் வல்லவராகிய.

தீரை செய்நீர் உலகு - அலைகளையுடைய கடல் சூழ்ந்த உலகம். "அடுத்து மேன்மே லலைத்தெழு மாழி" (312) என்றது காண்க. வலிமையாலும் நீதியாலும் இவர்க்கு உலகிலே எவரும் பகையிலர் என்பார் உலகில் என்றார். வரும்பாட்டிலும் உலக மன்னன் என்றது காண்க.

மன்னர் யாருளர்? - பகை யரசர் ஒருவரும் எதிர்த்து நில்லாத வண்ணம் நீர் வென்று உலகங் காக்கும் தண்ணளிக் கவிகை மன்னராதலின் (583) இது செய்ய வல்லார் தேவரீர் கருதிக் கேட்டபடி மன்னர் ஒருவருமிலர் என்றபடியாம். வினை இன்மை குறித்தது. உலகில் எதிரே நிற்கும் மன்னர் யாருளர்? எனக் கூட்டுக.

தீங்கு செய்தார் - இத்தீய செயல் செய்தவர். தீங்கு செய்தார் மன்னர் யாருளர் எனவும், (வேறு யாவர் எனின்,) தீங்கு செய்தார் இவர் எனவும் முன்னும் பின்னும் கூட்டி உரைக்கச் சிங்க நோக்காக இடையில்வைத்த அழகும் சொற்சுருக்கமும் காண்க.

முன் பரசு கொண்டு என்க. தேற்றமாக இவர்களும் மழுவினையே குறித்தது காண்க. இத்த மழுக்கொண்டு துணித்தனர் என்ற குறிப்புமாம்.

பணிந்து அரசரிடம் அறிவிக்கும் மரபு குறித்தது. பணிந்து - 597 காண்க. 36

587. குழையணி காதி னனுக் கன்பராங் குணத்தின் மிக்கார்
பிழைபடி னன்றிக் கொல்லார்; பிழைத்ததுண்;" டென்றுட் கொண்டு
மழைமத யானைச் சேனை வாவினை மாற்றி, மற்ற
வுழைவயப் புரவி மேனின் றிழிந்தன னுலக மன்னன். கூஎ

(இ - ள்) வெளிப்படை. "குழை யணிந்த காதினையுடைய சிவபெருமானுக்கு அன்பராகிய குணத்தின் மிக்க இவர், பிழைபட்டிருந்தாலல்லது கொலை செய்யமாட்டார்; ஆதலின் பிழை நேர்ந்தமுண்டு." என்று மனத்தினுட் கொண்டு, மழைபோல மதஞ் சொரியும் யானை, படை முதலிய சேனைகள் மேல்வராமற் றடுத்து, தாம் மேல் கொண்டுவந்த கொற்றக்குதிரையினின்றும் உலகமன்னர் (தனியிடத்து) இழிந்தனர்.

(வி - ரை) குழையணி காதினன் - சிவபெருமான். குழை - சங்கக்குழை - "சங்கக் குழையார் செவியா" - தேவாரம். இறைவனது திருவுருவத்தில் ஆண்பாகம் வலப்பாகம். வலக்காதிலணிந்த குழை வலிய வீரம்பற்றிய மறக்கருணை குறிக்கும். அவனன்பாகிய

இவரும் பிழைகீக்கும் மறக்கருணையாலே இது செய்தாராதல் வேண்டும் என்பது குறிப்பு.

**குணத்தின் மிக்கார்** - கொல்லார் - கருணைக் குணத்தின் மிக்கவர். "குண மென்னுங் குன்றேறி நின்றூர் வெகுளி" - எனுக் திருக்குறளை இங்கு நினைவுகூர்க. "கோதிலாத குணப்பெருங் குன்றனார்" - (திருக்கூட்டச் சிறப்பு 7) காண்க.குணத்தால் மிக்காராதலின் பிழை கண்டல்லாது கொல்லுதலைச் செய்யார் என்ற நியதியை அரசர் இங்குத் தம்முள் நிச்சயித்துக் கொண்டனர். எவ்வீடத்தும் கொலை தீது என்று வெறு முழக்கம் செய்து ஆரவாரிக்கும் பொய்க்கொள்கை இங்கு மறுக்கப்பட்ட நேர்மை நோக்குக. பிழைபடிற் குற்ற நீங்கத் தண்டித்தல் இறைவன் மறைவழிக் காட்டிய நீதியாம். தக்கயாக சங்காரம், சூரசங்காரம் முதலியவற்றினிகழ்ச்சிகள் காண்க. இதனை நன்கறிந்து நீதிசெலுத்திய அரசராதலின் இவ்வாறு அணிந்தனர். இவரது புராண சரிதத்தில், பின்னர் இவர் சேனை செய்த அபராதத்துக்குக் கழுவாயாகத் தாமே தீப்புகுந்தமையும் இங்குவைத்துக் காண்க. பிழைபடிற் கொல்லுதல் பிறவுயிர்கள் ஈடேறவும், அவ்வுயிர், மேலே தருமன்றண்டனைக்குத் தப்பவும் ஆம் என்பது.

**பிழைத்ததுண்டு**-பிழை நேர்ந்ததுண்டாம். இது கருதலளவையாற் போந்த முடிபு. அனுமானம் என்பர். நெருப்பில்லாத வீடத்துப் புகையில்லை. ஓரிடத்துப் புகை காணப்பட்டபோது தீ அங்குக் காணப்படாவிடினும், நெருப்புண்டு எனக் கொள்ளுதல்போல ஈண்டுக் காணப்படாத பிழையாகிய காரணத்தைக் காணப்பட்ட தண்டமாகிய காரியத்தினின்றும் துணிந்தனர், பிழைபடினன்றிக் கொல்லார் என்ற எதுவினைக்கொண்டு.

**படின் அன்றி** - கொல்லார் - படிற் கொல்வார் என்பதனை வலியுறுத்த இரண்டு எதிர்மறைகளாற் கூறினர். "ஞாயிறு படரி னல்லதைக் காண்டல் செல்லாக் கண்" என்றவிடத்துப், "படரிற் காண்டல் செல்லும் கண்ணெனப்பாலதனை எதிர்மறை முகத்தாற் கூறினர் இன்றியமையாமை விளக்குதற்கு" என்று எமது மாதவச் சிவஞான சுவாமிகள் சிவஞானபோதப் பாயிரத்துட் காட்டினமை காண்க.

**உட்கொண்டு** - அனுமானித்து - கருதலளவையாற் றுணிந்து.

**மழை மதயானை** - வீரக் களிப்பினுற் படையின் யானைகள் மழைபோல மதநீர் சொரிய நின்றன என்பது.

**சேனை வாவினை மாற்றி** - மண்ணிடை இறுகால் - ஊழிக்காற்று - மேன்மேல் வந்தெழுந்தது போல் (583) அழிவு செய்யு முயற்சியின்மிக்கு வேகத்தால் வருதலால் அவை, உண்மை அறியாமையாலே, மேல்வந் தடாதபடி சேனை வரவினை மாற்றினர். தடுத்து நிறுத்தினர்.

**மற்றவ்வுழை** - சேனைகளை நிறுத்திய இடத்தினின்றும் வேறுகிய தனியிடத்து. **வயவுழைப்புரவி** என்று மாற்றிக் கூட்டி வெற்றிக்கு இடமாகிய புரவி என்றுரைப் பாருமுளர். இப்பொருளில், **மற்ற** என்ற சொல்லுக்குப் பொருளின்மையானும், **இழிந்தனன்** எனுஞ் சொற்குறிப்புடனும் பிற சொல்லாற்றலுடனும் மாறுபடலானும், புரவியினிடத்து வெற்றி நிற்றல் கூறுதல் முறையாகவும், வெற்றியினிடத்துப் புரவி எனமாறு பொருள் படுதலானும் அஃதுரையன் றென்க. **உளை** என்பது எதுகை நோக்கி உழை எனத் திரிந்து நின்றதென்று கொண்டு, உளை - பிடரிமயிர் என்பாருமுண்டு.

**மேல்நின்று இழிந்தனன்** - இழிந்தனன் - மேலே இறங்கினர். தான் மேற்கொண்டு வந்த அளவில் சிற்றமாகிய தலைநிமிர்ந்த நிலையினின்றும், தணிந்து, இறங்கிய நிலையினையடைந்தனர் என்பதும் குறிப்பு.

**உலக மன்னன்** - "உலகில் யாருளர்" என்றது மேற்பாட்டு. உலகத்தார்க்கு மன்னனுவதன்றித் தொண்டரிடத்துத் தாழ்ந்தவரே என்பது குறிப்பு. கவிகை மன்னன்-புரவிமேற்கொண்டு போந்தான் (583) என முன்னர்ப்புரவியை எறிவந்த போதும் இக்குறிப்புப் பெற உரைத்தமை காண்க.

அளவில் சீற்றங் கொண்டெழுந்து வந்த மன்னனுக்கு, இச்செயல் அன்பர் செய்தார் என்றறிந்தவுடனே அத்தனை சீற்றமும் மாறிச் சிவாபராதத்தில் அச்சம் மிக்கது எஞ்ஞான்றும் பிறழாத அவரது அன்புநெறியொழுக்கத் திண்மையினைக் காட்டுவது.37

588. "மைத்தடங் குன்று போலு மதக்களிற் றெதிரே யிந்த
மெய்த்தவர் சென்ற போது வேறொன்றும் புகுதா விட்ட
வத்தவ முடையே னானே ; னம்பல வாண ரன்ப
ரித்தனை முனியக், கெட்டே ! னெனக்கொலோ பிழை?"யென்றஞ்சி,

589. சேறிந்தவர் தம்மை நீக்கி, யன்பர்முன் றொழுது சென்"றீ
தறிந்திலே னடியே ; னங்குக் கேட்டதொன் ; றதுதா னிற்க ;
மறிந்தவிக் களிற்றின் குற்றம் பாகரோ டிதனை மாள
வெறிந்ததே போது மோதா? னருள்செயு" மென்று நின்றார். ஈக

588. (இ - ள்) வெளிப்படை. கரிய பெரிய குன்றுபோல உருவுடையதும் மத முடையதுமாயின யானையின் முன்னே இந்த மெய்த்தவர் போயினபோது வேறு ஒன்றும் நிகழாமல் விட்டதாகிய அந்தத் தவமுடையேனையினேன் ; அம்பலமுடையாரது அடியாராகும் இவர் இத்தனை முனிவு கொள்ளும்படி என்ன பெரும்பிழை நேர்ந்ததுவோ ? ஓ கெட்டேன் !" என்று பயங் கொண்டவராய், ஈஅ

589. (இ - ள்) வெளிப்படை. தம் பக்கத்து நெருங்கி வந்தவர்களை யெல்லாம் விலகி நிற்கச் செய்து, அன்பராகிய எறிபத்தர் முன்னே போய், "இதனை அடியேன் அறிந்திலேன் ; அடியேன் அங்குக் கேள்விப்பட்டது ஒரு செய்தி ; அது நிற்க ; இறந்த யானையால் நேர்ந்த பிழைக்குத் தீர்வு பாகருடனே இதனை மாளும்படி எறிந்த செயலே போதுமோ ? அருளிச் செய்யும்" என்று நின்றார் (அரசர்). ஈக

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன.

588. **(வி - ரை) மை தடம்** - குன்று - **போலும்** - **மதக்** - **களிறு** - இது யானை எறிந்து படுவதற்கு முன்னிருந்த நிலையை அரசர் மனத்தில் எண்ணிச் சொல்லியபடி. துங்கமால் வரைபோல் (562) - என முன்னர்க் கூறியது காண்க. இது யானை நின்ற உயர்நிலை. **மைத்தடம்** - துங்கமால் என்ற அடைமொழிகள் தந்து **குன்று** எனவும் **வரை** எனவும் கூறினர். இதுபோல **பொன்றவ ழருவிக் குன்றம்** (585) - என்ற அது வீழ்ந்துபட்ட கீழ்நிலை குறித்தபோது அடைமொழி கொடாது வாளா கூறியதுடன் குறைவுநிலைக் குறிப்புப்பட அம் விகுதி தந்து **குன்றம்** என்றதும் காண்க. யானை நின்றால் வரையும் குன்றும் போலும் ; வீழ்ந்தாற் குன்றம் போலும் என்பது.

**மதக்களிறு** - பொழுமதஞ் சொரிய (562) என இதன் முன்னைநிலை கூறினர்.

**மெய்த்தவர்** - ஆனிலையுடையாரை வழிபடுந் தொழிலராகி, இறையவர்க்குரிமை பூண்டார்க்குத் தொண்டு செய்வாராதலானும், பழமறை பரசும் தூயபரசுமுன் எடுக்கப் பெற்றாராதலானும் இவரைக் கண்டபோதே இவரது தோற்றத்தானே இவர் **மெய்த்தவர்** என அரசர் உணர்ந்தனர் என்க. வேடம் மெய்வேடமாதலின் அது தாங்கியவர் மெய்த்தவர் என்று அரசர் கொண்டொழுகியவர் என்பது. இவர் புராணமுங் காண்க. அன்றி யிவரை முன்னரே அறிந்தார் என்றலுமாம்.

**வேறொன்றும்** - இடையூறு ஒன்றும். **வேறு** - நன்மைக்கு மாறுகியது - வேறுகியது. அடியவர்க்கு வரும் அடாதனவற்றை வாக்கினுற் சொல்லுதலும் கூடாதென்பது உயர்ந்தோர் மரபு. அரசர் **வேறு ஒன்று** என்றார். முன்னரும் (481) இவ்வாறு கூறிய தவிமாபு காண்க. 647 பார்க்க.

**புகுதாவிட்ட** - புகுதாது போயின - நிகழாமல் விட்ட.

**அத்தவம்** - தமது யானையிலால் அன்பர்க்கு வேறு வினையாதுவிட்டது தமது பெருந்தவமென்று கொண்டனர் அரசர். இவர் இக்கொள்கையினையே கடைப்பிடித்துக் கைக்கொண்டு ஒழுகித் தம்வாணாள் செலுத்தியவர் என்பது, மாற்றாரை வென்ற இவரது சேனைகள் அவனகரினின்றும் கொணர்ந்த தலைக்குவியலில் ஒரு தலையிற் சடை தெரியப் பார்த்துப், பெருந்துயர் கூர்ந்து, அதனைப் பொற்றட்டிலேந்திச் சிரத்திற்றாங்கித் தீப்பாய்ந்த இவரது சரிதத்தினின்றும் புலனும். இவரது புராணங் காண்க.

**அம்பலவாணர் அன்பர் இத்தனை முனிய - அம்பலவாணர்** - சிவபெருமான். "மன்று ளென்றும் நிருத்தமே புரியும்"—(585) என்றது காண்க. **அன்பர்** - "அன்பராங் குணத்தின்மிக்கார் பிழைபடி னன்றிக் கொல்லார்" என மேற்பாட்டிற் கூறியதனைத் தொடர்ந்து கூறினர். அவ்வாறு அருட்குண மிக்காரும். சிறப்பு உம்மை தொக்கது. **இத்தனை முனிய** - இவ்வளவும் கோபிக்கும்படி - உம்மை தொக்கது. **தனை** - அளவு என்பதைக் குறிப்பதோர் உரிச்சொல். "இத்தனையும் எம்பரமோ" - அப்பர் தேவாரம் - "இத்தனையா மாற்றை" - நம்பிகள் தேவாரம். பட்டத்து யானையையும் பாகர் ஐவரையும் கொல்லும் அந்த மிக்க அளவும்.

**என்கொலோ பிழை ?** - அன்பர் செய்த பெருந் தண்டனைக்குக் காரணமாயிருந்தது பெரும் பிழையாதல் வேண்டும் ; அதுதான் யாதோ? முன்னரும் இங்கும் **அன்பர்** என்றதனால் - ஈசனிடத் தன்புடையார் எவ்வுயிர்க்கு மன்புடையார்; ஆதலின் பிற எவ்வுயிரையும் வாளா கொல்லார் என்பது குறிப்பு. மேற்பாட்டிலும், வரும் பாட்டிலும் இவ்வாறே **அன்பர்** என்றதுங் காண்க.

**கேட்டேன் !** - அவலத்தால் தம்மையே கொந்துகொள்ளும் ஓர் இரக்கச் சொல். இத்தனை முனிய என்கொலோ பிழை என்று தொடரும் பொருட் செலவினிடையே **கேட்டேன்** என்னும் இந்த அவலச் சொல் வந்தது இவரது துயரமிகுதியும், அன்பர் பால் வைத்த பற்றுமிகுதியும் குறித்தது. "முடிக்கச் சிவந்தது போலுங் கெட்டேன்" - சிதம்பர மும்மணிக்கோவை என்புழிப்போல. கெட்டேனுல் நேரிட்ட பிழை யாதோ என்று கூட்டி உரைப்பாருமுளர். இஃதுரையன்மையுணர்க. 593 பார்க்க. 38

589. **(வி - ரை) செறிந்தவர் தம்மை நீக்கி** - அத்தப் படைகளத்தினிடை அரசர் செல்ல இடையூறுகச் சூழ்ந்த பரிசனங்கள். தன்னுடன் சேர்ந்த இந்திரியங்கள் ஆன்மாவை மயக்கி வினையிலே வீழ்த்துவனபோல, உண்மை சொல்லாது தம்மை அபசாரத்துக்குள்ளாக்கும் நிலையினால் இவர்கள் நீக்கத் தக்கார் என்பார் நீக்கி என்றார். இங்கு நீக்கி என்றது அவர்கள் தம்பாற் செறியாது விலக்கி என்பதாம். அறியாமையால் எதேனும் வினைத்துவிடாதபடி விலக்கினர். சேனை வாவினை மாற்றினர் என்க. எறிபத்தர் மனத்து வேறு எண்ணம் வினையாதபடி விலக்கினர் என்பாருமுண்டு.

**தொழுது சென்று** - தொழுதுகொண்டபடியே நடந்துபோய் - சென்று தொழுது என்னுது இவ்வாறு கூறியது அடியவர்பால் இவர் ஒழுகிப் பயின்ற பண்பும் பணிவும் குறித்தது. "கொழுநற் றொழுதெழுவாள்" என்ற குறளிற்போலக் காண்க.

**ஈது** - இது செய்தார் ஒரு அன்பர் என்ற செய்தி.

**கேட்டது ஒன்று** - கேட்டது வேறு ஒன்று.

**அங்கு** - அரண்மனையில். இங்குக் கண்டதுங் கேட்டதுமாகிய இதனுக்கு மாறுகியது என்பது குறிக்க **அங்கு** என்றார்.

**அதுதான் நிற்க** - அது கிடக்க. சேனையும் தாமும் அங்கு வரநேர்ந்தது பிழைபட்ட கேள்வியாலாகியது என்று அன்பர்பால் தமது பிழையினை உணர்த்தும் குறிப்புப் பெற **நிற்க** - என்றார். அச்செய்தி மனங்கொளவாராது ஒருபுறம் ஒதுங்கி நிற்பதாக; அதனை விரிக்க வேண்டா என்றபடி.

**களிற்றின் குற்றம்** - இங்குப் பட்டார்கள் பட்டதற்குப் பாகர் குற்றமே காரணமா யின் களிற்றினை எறியக் காரணமிரா தென்ற அனுமானம் பற்றிக் களிறு குற்றம் செய்ததுண்டு என அரசர் உட்கொண்டு கூறியதாம். யானை பூக்கூடையினைப் பறித் துச் சிந்திய செய்தியினை அரசர் அன்பர் வாயிலாகப் பின்பே உணர நின்றார் ஆதலின் இங்குக் களிற்றின் குற்ற மென்றது கருதலளவைப் பொதுவறிவு பற்றி யென்பது. பாகர் பட்டதும் அவர்கள் செலுத்திய யானையால் நிகழ்ந்திருத்தல் வேண்டுமென்று உட் கொண்டதும் அவ்வாறேயாம். **குற்றம்** - முன்னர்ப் **பிழைபடின் அன்றி** - என்றும், **என்கொலோ பிழை** - என்றும் கூறியன காண்க.

**மாள எறிந்ததே போதுமோ தான்?** - மாள - மாளும்படி. எறிந்ததாலே அவர் மாண்டனர் என முன்னர் உணர்ந்தாராதலின் **மாள எறிந்தது** என்றார்.

**போதுமோ தான்?** - என்கொலோ பிழை? என்றஞ்சி அதனை அறியலுற்ற அர சர் நேர்ந்த பிழை யாது? என அன்பர்பால் வினவாது எறிந்தது போதுமோ தான்? அருள் செய்யும் என்றார். இது பெரியோர்பாற் பொருள் வினவி யறியும் மாபு. **தான்**- எறிந்தது தானும் போதுமோ என்க. **தான்** - அசை யென்பாரு முண்டு.

**அருள்செயும்** - அன்பர்பாற் பிழைபட்டே மென்று உட்கொண்டாராதலின் இவ் வாறு பணிந்திரந்தனர். பெரியோர்பாற் கேட்கும் மரபுமாம்.

**நீன்றார்.** தொழுது சென்றதும், அருள்செயும் என்றதும், நின்றதும் பெரியோர் திருமுன்பு ஒழுகும் ஒழுக்க முறை. இங்குப் பிழைபாடு நேர்ந்தமையின் இவை மேலும் இன்றியமையா ஒழுக்கமாயின. **நிற்றல்** - கட்டளையைக் கேட்கும் முறை. 39

590. மன்னவன் றன்னை நோக்கி வானவ ரீசர் நேசர்
"சென்னி!யித் துங்க வேழஞ் சிவகாமி யாண்டார் கொய்து
பன்னகா பரணர்ச் சாத்தக் கொடுவரும் பள்ளித் தாமம்
தன்னைமுன் பறித்துச் சிந்தத் தரைப்படத் துணித்து வீழ்த்தேன்;

591. "மாதங்கந் தீங்கு செய்யு வருபரிக் காரர் தாமு
மீதங்குக் கடவு வாரும் விலக்கிடா தொழிந்து பட்டா;
ரீதிங்கு நிகழ்ந்த" தென்று ரெறிபத்த; ரென்ன, வஞ்சிப்
பாதங்கண் முறையாற் றுழ்ந்து பருவரைத் தடந்தோண் மன்னன்,

592. "அங்கண ரடியார் தம்மைச் செய்தவிவ் வபரா தத்துக்
கிங்கிது தன்னற் போதா; தென்னையுங் கொல்ல வேண்டு;
மங்கல மழுவாற் கொல்கை வழக்குமன்; றிதுவா;" மென்று
செங்கையா லுடைவாள் வாங்கிக் கொடுத்தனர் தீர்வு நேர்வார். சஉ

590. (இ - ள்) வெளிப்படை. தேவதேவரது அன்பராகிய எறிபத்தர் அரசரைப் பார்த்துச், "சென்னியே! சிவகாமியாண்டார் இறைவனுக்குச் சாத்தும் பொருட்டுக் கொய்து கொண்டு வந்த திருப்பள்ளித்தாமத்தை, முன்னே, இந்தப் பெரிய யானை பறித்துச் சிந்தியதனாலே அதனை நிலத்தில் வீழும்படித் துண்டித்து வீழ்த்தினேன், சஎ

591. (இ - ள்) வெளிப்படை. "யானை தீங்கு செய்யவும், அதனைக் கொண்டு வருகின்ற குத்துக்கோற்காரர்களும், அதனை மேல்கொண்டு செலுத்தும் பாகர்களும் அது தீங்கு செய்த காலத்து அதனை விலக்கா தொழிந்தமையாலே இறந்துபட்டார். இதுவே யிங்கு நிகழ்ந்தது" என்றார். அவர் அவ்வாறு சொல்லவே, பெரிய மலைபோன்ற தடந்தோள் களையுடைய அரசர், அஞ்சி அவரது பாதங்களில் முறைப்படி வணங்கி, சக

592. (இ - ள்) வெளிப்படை. "இறைவனிடத்தும், அவனடியார்களிடத்தும் செய்த இந்த அபசாரத்துக்கு இங்கு இதுமட்டும் போதாது; என்னையுங் கொல்ல வேண்டும்; தேவரீரது மங்கலம் பொருந்திய மழுவாயுதத்தினுலே கொல்லுதல் பொருத்தமு மன்று; இது அதற்குத் தக்கது." என்று தீர்வினை நேர்வாராய்ச் செவ்விய கையினுலே தமது உடைவாளை உருவி அவர் கையிற் கொடுத்தனர். சஉ

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து முடிபுபெற்றன.

590. (வி - ரை) **வானவர் ஈசர்** - தேவர்க்கெல்லாம் பெரியாராகிய மாதேவர். "யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம், மாதே வன்னலாற் றேவர்மற் றில்லையே"—என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு.

**(ஈசர்) நேசர்** - அவர்பால் அன்பு வைத்தவர். **நேசம்** - அன்பு. **குழையணிகாதினனுக் கன்பர்** - (587), **அம்பலவாண ரன்பர்** (588) எனமுன்னர்க் கூறியதற்கேற்ப இங்கும் **ஈசர்நேசர்** என்றார்.

**சென்னி** - சோழர்களது மரபுக்குரிய பெயர். சோழர்கள் வழிவழியாய்ச் சிவனடி சென்னி சேர்த்திய மரபினர்; ஆதலின் சிவாபசாரம் நிகழவொட்டார் என்னும் அக்குறிப்புப் பெறச் **சென்னி** என்றார். "சென்னிவளர் மதியணிந்த சிலம்பணி சேவடியார் தம் - மன்னிய சைவத்துறையின் வழிவந்த குடி வளவர்"—என்ற திருஞான சம்பந்த நாயனார் புராணம் (2) காண்க.

**துங்கவேழம்** - பெரியயானை - உயர்ந்த யானை என்றலுமாம்.

**பன்னகாபரணர்** - **பன்னகம்** - பாம்பு - பாம்புகளை அணியாக அணிந்தவர். சிவபெருமான். "ஆர்த்திட்டதும் பாம்பு கைக்கொண்டதும் பாம்பு" (கும்பிகள் தேவாரம், திருக்கோத்திட்டையும் திருக்கோவலூரும் 1), "ஆரமாவது நாகமோ சொலும்"—(அவரது - திருப்பைஞ்ஞீலி - 1) முதலிய திருவாக்குக்கள் காண்க. "குஞ்சரங்கோளி ழைக்கும் பாம்பு" (திருக்கோவையார் - 21) என்றபடி யானையையும் கட்டியிடவல்ல பாம்புகளை அணியாகப் பூண்டவர்க்குச் சாத்தும் மலரை யானை பறித்துச் சிந்தியது என்றதொரு குறிப்பும் காண்க.

**முன் பறித்துச் சிந்த** - "பிடித்து முன் பறித்துச் சிந்த" - 563 என்றதுகாண்க. முதலில் பறித்துப் பின்னர்ச் சிந்தியது. பறித்தற்குக் காரணமாக வேறொன்றும் நிகழாதிருப்பவும் தானே முன் பறித்தது என்பது குறிப்பு.

**தரைப்படத் துணித்து** - அபராதம் செய்த அதன் துதிக்கை துணிபட்டு நிலத்தில் வீழும்படி துணித்து. 579 பார்க்க.

**வீழ்த்தேன்** - தாம் செய்த செயலை ஏற்று அஞ்சாது எடுத்துச் சொல்லும் வீரங் காண்க. 40

591. (வி - ரை) **மாதங்கம்** - யானை. **வநபரிக்காரர்** - யானையின் இருபுறமும் முன்னரும் வரும் குத்துக்கோற்காரர். **பரிக்காரர்** - (562) **வெய்யகோற்பாகர்** - (575) என்றவை பார்க்க.

**மீது அங்கு கடவுவார்** - யானையை மேலிருந்து செலுத்தும் பாகர்கள். **மீசைக் கொண்டார் இருவர்** - (575) பார்க்க. மேலிருந்து என்பார் **மீது அங்கு** - என்றார். மேல் அவ்விடத்திருந்தபடியே. பரிக்காரர் ஓடிச் செலுத்துபவர்.

**விலக்கிடாது ஒழிந்து** - (தமது கடமையின் வழுவினர்களாய்), விலக்காதொழிந்தமையால் - ஒழிந்த காரணத்தால்- **பட்டார்** - எறியப்பட்டு இறந்தார். எறியப்படுதலும் அதனுல் இறந்துபடுதலும் எனக்காரணகாரிய மிரண்டுங் குறிக்க ஒரு சொல்லாய் வைத்த அழகு காண்க. யானை முழு அறிவுள்ளதன்றுதலின் அதனைத்தண்டித்து வீழ்த்திய செயல் என்னளவேயாயிற்று என்னும் பொருள்பட **வீழ்த்தேன்** என்றார்.

இங்கு அறிவுமுதிர்ந்த பாகர் தமது கடமையின் வழுவினமையின் தாங்கள் படுவதற்குத் தாமே காரணராயினதால் பட்டார் - என அவர் செயலும் விரவக் கூறினர்.

**ஈது இங்கு நிகழ்ந்தது** - அங்குக் கேட்டதொன்று என்று கூறி இங்கு நிகழ்ச்சி வேறுகக் காண்கின்றேன். அது யாது? என வினவுவார் பணியுமரபுபற்றிய பிறிது மொழியால் எறிபத்தரே போதுமோ தான்? என்ற அரசருக்கு இதுவே இங்கு நிகழ்ந்தது என்றறிவித்தபடியாம்.

**என்றார்** - **எறிபத்தர்** - நேசராகிய (590) எறிபத்தர் என்று சொன்னர் என மூன் பாட்டொடு புணர்த்தி உரைக்க.

**என்ன** - அவர் அவ்வாறு சொல்ல. இவ்வாறன்றி, எறிபத்தரென்ன - என்று கூட்டி, இவ்வாறு சொன்னவர் எறிபத்தர் என்று தெளிர்து என்றுரைப்பாரு முண்டு. அது பொருந்தாமையறிக.

**அஞ்சி** - சிவாபராதமும் அடியவர்பா லபசாரமும் நேர்ந்ததற்குப் பயந்து, முன்ன ரும் **பிழையென்றஞ்சி** என்றார். தீவினையச்சம் என நீதிநூலுள்ளும்விதித்தார். "அஞ் சுவ தஞ்ச லறிவார் தொழில்" என்ற திருக்குறட் கருத்தும், திருவாசகத்து அச்சப்பத் தில் மணிவாசகப் பெருமான் அருளியனவும் இங்கு வைத்துக் காண்க.

**பாதங்கள் முறையால் தாழ்ந்து** - எறிபத்தரது திருவடிகளில் விதிப்படி வீழ்ந்து வணங்கி. "வயப்புரவி மேனின்" றிழிந்தனராய்த் தொழுது சென்று, நிகழ்ச்சி கேட் டறியும் வகையால் இதுவரை நின்றார் அரசர். இப்போது அவர் பாலே தீர்வு நேர்ந்து பெறும் வண்ணம் கீழ்வீழ்ந்து வணங்கினர் என்பது குறிக்க **முறையாற் றாழ்ந்து** என் றார். **முறை** - தம்மைப் புனிதராக்கும் பெரியாரை முன்னர் வணங்குதல் - ஐந் நுப்பு - எட்டுறுப்புக்களால் வணங்குதல் - மும்முறை முதலாக வணங்குதல் முதலியன யாக நூல்களில் விதித்தமுறை.

**பருவரைத் தடந்தோள்** - "அவருள்ளுஞ் செல்வர்க்கே செல்வந் தகைத்து" - (திருக் குறள்) என்றபடி வன்மை யுடையாரிடத்தே பணிவு சிறப்பாய் வேண்டப் படுவது. ஆத லின் **பருவரை** - என்றும், தடம் என்றும் உவமையோடு அடைமொழியும் புணர்த்திக் கூறினர். முன்னர் உலகமன்னன் என்றதும் இக்குறிப்புப் பற்றியது. பருவரை சலி யாத தன்மையுடையது. அதுவுங் கீழ்ப்பட்டுப் பணியும் என்றதாம். 41

592. **(வி - ரை) அங்கணர் அடியார் தம்மை** - உம்மைத்தொகை. அங்கணர் தம் மையும் அடியார் தம்மையும் என விரித்துக் கொள்க. "சிவகாமியாண்டார் - பன்னகாபர ணர்ச் சாத்தக் கொடுவரும் பள்ளித்தாமம்-பறித்துச் சித்த" (590) என்று அவர் அறி விக்க அறிந்தாராதலின் இருவகையினும் அபசாரப்பட்டமை தெரிந்த அரசர் இவ்வாறு கூறினர்.

**தம்மைச் செய்த** - தமக்குச் செய்த. இரண்டனுருபு தான்கனுருபுப் பகைப் பொருளில் வந்தது. வேற்றுமை மயக்கம். (~~தங்கள் - தம்மிடத்து~~) என ஏழாம் வேற் றுமையாக உரைப்பினுமாம்.

**அபராதத்துக்கு** - குற்றத்துக்குத் தீர்வு - தண்டம். பிராயச் சித்தம் என்பர்.

**இது தன்னுல் போதாது** - இவ்வபராதத் தீர்வு பெறத் தேவரீர் இங்குச் செய்த இத்தண்டம் போதியதன்று. அபராதத்துக்குப் போதிய தண்டனையன்று. இச்சிறிய தண்டத்தால் அப்பெரிய அபராதம் தீர்வு பெறுது என்றபடி. ஆதலின் எனவருவிக்க. "என்னையும் கொல்லவேண்டும்" எனப் பின்வருத்துக் கூறுதற்குக் காரணங் கூறிய தாம். அரசாங்கத்தார் செய்யும் எவ்வகைத் தீர்ப்புக்கும் காரணங் காட்டிச் செய்தல் வேண்டும் மென்ற இக்காள் நீதிமுறை விதியுங்காண்க.

**என்னையும் கொல்லவேண்டும்** - சிவாபராதம் விளைத்த யானையினையும், அறியாப் பாகரையும் வைத்திருத்தமையால் இவ்வபசாரத்துக்குத் தாமும் பொறுப்புள்ளவர் என்

றமையாலே அதற்குத் தீர்வாகத் தன்னையும் கொல்ல வேண்டும் என்றார். தாமே அரசரும் பேரடியாரும் ஆதலின், அடியார் நிலையினின்று குற்ற நிச்சயமும், அரசர் நிலையினின்று அக்குற்றத்துக்குத் தக்க தண்ட நிச்சயமும் தாமே வகுத்திவ்வாறு முடித்தனர்.

**மங்கல மழுவால் கொல்கை வழக்கும் அன்று** - அடியவர் கையில் எத்தியது மங்கலமாயது - தூய்மையுடையது. அதனுற் றண்டிக்கப்பட்டுப் பேறு பெறுந் தகுதி தமக்கில்லை. ஆதலின் அது வழக்கன்று. தகுதியில்லாமையுடன் வழக்கும் அன்று என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மையுமாம். தண்டநெறி வழக்கு நெறியினைப் பற்றி நின்ற தென்ற குறிப்பும் காண்க. "பிள்ளையார் தந்திருக்கையிற் கோலமழுவா லேறுண்டு குற்ற நீங்கி" என்று சண்டீசநாயனார் புராணத்து கூறுதல் காண்க. இதனால் அரசர் அடியார்களிடத்தில் வைத்த உயர்ந்த நோக்கமும், தம்தாழ்வினிடத்தே வைத்த பிறநோக்கமும் புலப்பட்டமை காண்க. அடியார் முன்பு மிகச் சிறியரா யடையும் பொதுப் பண்பு நிலையேயன்றி இங்கு நேர்ந்த சிவாபராதத்தாலும் தம்மை மிகக் கீழாகக் கருதி யிவ்வாறு கூறினர் என்க.

**மங்கலமழு** - மங்கலமுடையது - மங்கலஞ் செய்வது. சிவபெருமானது ஆயுதமாதலும் குறிப்பு.

**இது ஆம்** - இதுவே வழக்கு ஆம். இது என்ற சுட்டு உடைவாள் வாங்கி வீட்டும் செயலைச் சுட்டியது. இதனைச் சொல்லாலன்றிச் செயலால் நாடகச் சுவை பெறக் காட்டியதோர் கவியமாமென்க. அரசர்க்கு இச்செயலில் இருந்த தீவிரம் குறித்தது. இனி, இது என்ற சுட்டு வாங்கி வீட்டும் உடைவாளைச் சுட்டியதென்று கொண்டு, மங்கலமழுவினால் எறிந்துபட நான் தகுதியில்லேன் - என்னைத் தண்டிக்க இந்த வாளே தக்கது என்று பொருள் கொள்வாருமுண்டு.

**உடைவாள் செங்கையால் வாங்கி** என மாற்றுக. **உடைவாள்** - தமது அரையிற் றாங்கிய நீண்டவாள். **வாங்கி** - உறையினின்றும் உருவி எடுத்து. உறைகழித்தெடுத்து.

**தீர்வு நேர்வார்** - தமது குற்றத்துக்குத் தக்க கழுவாய் நேர்படுவாராய். முற்றெச்சம். நேர்வார் - கொடுத்தனர் என்க. தீர்வு - சிவாபராதத்துக்குரிய நரக முதலிய கொடுமை நேராமல் இத்தண்டத்தாலே தீர்த்தல். கழுவாய் - உய்வு - உய்தி யென்பர்.

**இங்கிவை தம்மாற் போதா**—என்பதும் பாடம். 42

593. வெந்தழற் சுடர்வா ணீட்டும் வேந்தனை நோக்கிக் "கெட்டே!
னந்தமில் புகழா னன்புக் களவின்மை கண்டே" னென்று
தந்தவாள் வாங்க மீட்டார், தன்னைத்தான் றறக்கு மென்று
சிந்தையா லுணர்வுற் றஞ்சி வாங்கினர் தீங்கு தீர்ப்பார். சுஉ

(இ - ள்) வெளிப்படை. வெவ்விய தழல்போல் ஒளி வீசும் வாளினை உருவி வீட்டும் அரசரைப் பார்த்து "ஓ! கெட்டேன்! எல்லையில்லாத புகழினையுடைய அரசரது அன்பினுக்கு ஓர் எல்லையில்லாத் தன்மையை யிப்போது கண்டுகொண்டேன்" என்று கருதியவராகி, அவர் வீட்டிய வாளினை வாங்கமாட்டாதவரா யிருந்தும், தாம் வாங்கா விடில் அரசர் தம்மைத்தாமே மாய்த்துக்கொள்வர் என்று உணர்ந்தவராகிப் பயந்து, அத்தீங்கு வராமற் காக்குங் கருத்தினால் கையில் வாங்கினர்.

**(வி - ரை) வெந்தழல்** - (வாளின்) செயலையும், **சுடர்** - உருவினையும் குறித்தன.

**கெட்டேன்** - இரக்கக் குறிப்புப்பட வருவதோர் அவலச் சொல். 588 பார்க்க.

**அந்தமில் புகழான்** - அந்தம் - முடிவு. இவரது புகழுக்கு ஓர் முடிபு - எல்லை - இல்லை என்றபடி. புகழ்ச்சோழர் என்பது இவர்க்குக் காரணப் பெயராம் என எண்ணினார் என்றதும் குறிப்பு.

**அன்புக்கு அளவின்மை** - புகழுக்கு அந்தம் - அளவு - இல்லாமை போலவே அன்புக்கும் அளவில்லாமை. உம்மை தொக்கது.

**என்று** - என்று உட்கொண்டவராய் - கருதியவராய்.

**தந்த வாள்** - அவர் நீட்டிய. தம் பொருட்டாகவே நீட்டியமையால் **தந்த** என்றார். அரசர் என்ற நிலையிலே தம்மை வைத்துக் குற்றத் தீர்வு தாமே விதித்தாராதலின் கொடுத்தனர் என மேற்பாட்டிற் கூறினார். அன்பரிடத்துத் தம்மைப்போலவே அன்பு கொண்டார் அரசர் என்று எறிபத்தர் இங்கு எண்ணியதனையும், **தொழுந்தகை யன்பின் மிக்கீர்** - (598) என இறைவர் இவ்விருவரும் அன்பினால் ஒப்பாகுந் தன்மை விளக்கிய தனையும் காண்க.

**வாங்கமாட்டார்** - இது அவர் மனத்து முதலில் நிகழ்ந்த உள்ள நிகழ்ச்சி. பேரன் புடையராய்க் கண்ட அரசரது பிழையுடன்பாட்டுக்குத் தாம் உடன்படமாட்டாத வராகி வாளினை வாங்காது சிறிது தாழ்த்தனர். **மாட்டார்** - மாட்டாராகியும். உம்மை தொக்கது. மாட்டாராயும் - வாங்கினார் என்று முடிக்க.

**தன்னைத்தான் துறக்கும்** - நாம் வாங்காவிடில் அரசர் தாம் கொண்டபடி தமது பிழைக்குத் தாமே தீர்வு செய்வாராய், 'அடியார்பால் பிழைபட்ட இவ்வுடலை நானே சிதைப்பேன்' என்று தம்மைத்தாமே மாய்த்துக்கொள்ளும். **துறக்கும்** - விட்டுவிடும். **தன்னை** - தன் உடலை. ஆயின் இது மிக அரியதாகிய செயல். கிடைத்தற்கரியது இந்த மானிட உடலிற் பிறப்பு. "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவி அரிது" என்பது பெரியோர் வாக்கு. இதனினும் பெரியதோர் பேறு பெறுதற்காக வன்றி இதனைத் துறவார் அறிஞர். "உடம்பாரழியி லுயிரா ரழிவர், திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டா, ருடம்பை வளர்க்கு முபாய மறிந்தே, உடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே" - "உடம்புளே யுத்தமன் கோயில் கொண்டானென், னுடம்பினை யானிருந் தோம்புகின் றேன்" என்பனவாதி திருமூலர் திருமந்திரங்களுங் காண்க.

இறைவனைக் "காணப் பெற்றால், மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத் தே" என்றருளினர் அப்பர் சுவாமிகள். இறைவன்றாள்தொழ உடம்பின் பிறவி உறுதி யைச் சாரும் என்பது ஆசிரியர் திருவாக்கு. எவ்வகைப் பாதகமுஞ் செய்தேனும் உடம் பினை ஓம்பி வளர்க்கும் ஊமர்கள் பலர். அவர் நிற்க; இங்கு உறுதிப் பயன் கைவரப்பெற்ற அரசர் அரிய மானிடப் பிறவிபெற்ற உடம்பினைத் - "துறக்கப்படாத உடலை"த் - துறத்தல் தகுமா? அவ்வாறு துறக்கும் என்று நாயனார் துணிதற்குக் காரணமென்னை? யெனின், சிவாபராதத்துக்குத் துணையாய் நின்ற பாதகமுற்ற உடல் சிதைக்கத் தக்கதே யாம் என்ற விதிபற்றி என்க. தக்கயாக சங்கார முதலிய வீரங்கள் காண்க- அறிஞர்கள் கண்டு நகைத்தற்குரிய சிறு சிறு காரணங்களுக்காக இந்நாளில் இந்நாட்டினும் பிற நாட்டினும் பலர் தம்முடல் தாமே மாய்க்கக் காண்கின்றோம். அங்ஙனமே பிறர் உடலை யும் மாய்க்கக் காண்கின்றோம். இங்ஙனம் உண்மைநெறி அறியாது உழல்கின்ற இக்கால உலகம் இங்கு அரசர் தம்மைக் கொல்ல வேண்டினதும், பின்னர் நாயனார் தம்முயிரைச் செகுக்க வாளினைக் கழுத்திற் பூட்டியதும் ஆகிய செயற்கருஞ் செயல்களின் திறத்தை அறிந்து உய்ய வலிமை பெறுவதாக. பின்னர் இவ்வரசர் தீப்பாய்ந்து தம்முடல் விடுத்த சரிதமும் இக்கருத்தே பற்றியது. இவ்வாறே இப்புராணத்தினுள் வரும் பிற சரிதங்க ளும் காண்க.

**என்று உணர்வுற்று அஞ்சி** - எனக் கூட்டுக. என்று அறிந்தமையால் அவர் தம்மை மாய்த்துக்கொள்ளும் செயலை அஞ்சி. **சிந்தையால் வாங்கி** - அவர் அங்ஙனஞ் செய்யாது காக்குங் கருத்தால் வாங்கி. **சிந்தையால்** என்பது நாயனார் வாங்குதற்குக் காரணங் குறித்து நின்றது. **தீங்கு** - அச்செயலாகிய தீங்கு.

**தீர்ப்பார்** - வாராமற் றடுப்பாராகி. தீர்ப்பாராகி - தவிர்ப்பாராகி - வாங்கினார் என்க. முற்றெச்சம். தீர்வு நேர்வார் கொடுத்தனர் என மேற்பாட்டிற் கூறியதற்கேற்

பத் தீங்கு தீர்ப்பார் வாங்கினர் என்று குறித்தது காண்க. இதுவே - இச்செயலே - அரசர் மனத்தில் தீர்வு தருவார் வாங்கினர் என்ற எண்ணத்தை விளைத்ததனையும் வரும்பாட்டிற் காண்க.

தீர்வு தீர்ப்பார்—என்றதும் பாடம். 43

594. வாங்கிய தொண்டர் முன்பு மன்னனர் தொழுது நின்றே
"யீங்கெனை வாளி னற்கொன் றென்பிழை தீர்க்க வேண்டி
யோங்கிய வுதவி செய்யப் பெற்றன னிவர்பா" லென்றே
யாங்கவ ருவப்பக் கண்ட வெறிபத்த ரதனுக் கஞ்சி, சச

595. "வன்பெருங் களிறு பாகர் மடியவு முடைவா ளோத்தந்
தென்பெரும் பிழையி னாலே யென்னையுங் கொல்லு மென்னு
மன்பனர் தம்மைத் தீங்கு நினைந்தன" னென்று கொண்டு,
"மூன்பென துயிர்செ குத்து முடிப்பதே முடி"வென் றெண்ணி, சடு

596. புரிந்தவர் கொடுத்த வாளை யன்பர்தங் கழுத்திற் பூட்டி
யரிந்திட லுற்ற போதி லரசனும் "பெரியோர் செய்கை
யிருந்தவா றிதுவென் ? கெட்டே!" னென்றெதிர் கடிதிற் சென்று
பெருந்தடந் தோளாற் கூடிப் பிடித்தனன் வாளுங் கையும். சசு

594. (இ - ள்) வெளிப்படை. வாங்கிய தொண்டரின் முன்னர்த் தொழுது நின்று, "இங்கு வாளினாலே கொன்று என் பிழையைத் தீர்க்கும் வண்ணம் பெரிய வுதவி செய்யும் பேற்றினை இவரிடம் நான் பெற்றேன்" என்று அரசர் மகிழவே, அதனைக் கண்ட எறிபத்தர் அதனுக்கஞ்சி, சச

595. (இ - ள்) வெளிப்படை. "வலிய பெரிய யானையும் பாகரும் மடியவும், தமது உடைவாளைத் தந்து எனது பெரும் பிழையினாலே என்னையுங் கொல்லும் என்று சொல்கின்ற பேரன்பருக்குத் தீங்கு நினைத்தனன்" என்று கருதி, முன்னர் எனது உயிரைப் போக்கி முடிப்பதுவே இதற்கு முடிபாகும்" என்று எண்ணி, சடு

596. (இ - ள்) வெளிப்படை. நினைந்து அவர் கொடுத்த வாளை அன்பர்தம் கழுத்திற் பூட்டி அரியத் தொடங்கிய போதிலே, "பெரியோர் செய்கை யிருந்தபடி இது என்ன ? ஓ! கெட்டேன்!" என்று எதிர் விரைந்து போய் மிகப் பெரிய தமது தோள்களாற் கூடி அரசரும் அந்த வாளினையும் அதைப் பிடித்த அன்பரது கையினையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டனர். சசு

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

594. **(வி - ரை) உவப்ப** - மகிழ. மகிழ்ச்சியாகிய உள்ள நிகழ்ச்சி அவரது சொற்களால் அறியக் கிடந்தது. ஆதலின் அச்சொற்களே முன்னர்க் கூறினர். இவை "ஈங்கெனை.....இவர்பால்" என்பன. இவை எறிபத்தரை நோக்கிச் சொல்லப்பட்டனவல்ல. மகிழ்ச்சி மீக்கூர்தலாலே தமக்குத் தாமே வாய்விட்டுச் சொல்லியவை.

மன்னனர் - முன்னர் **மன்னன்** - (583 - 587 - 581) என்று ஒருமையிற் சுட்டிய ஆசிரியர் இங்கு **மன்னனர்** - என்றார் இவ்வாறு தீர்வு பெற்றுய்வதில் அவர் கொண்ட பெருமகிழ்ச்சியின் சிறந்த பெற்றி நோக்கி. இச்சொற்களே பின் சரித விளைவுக்குக் காரணமாயின என்பதும் காண்க.

**ஓங்கிய உதவி** - மிகப் பெரிய பேருதவி. **ஆங்கு** - அந்த நிலையில் - அவ்வகையில்,

**அதனுக்கு** - அந்த எண்ணத்தை அவர் முடிபாகக் கொள்ளுமாறு தமது செயல் (வாள் வாங்கிய செயல்) வினை வித்த அதற்கு. அடியார் உள்ளத்துத் தவறுகிய எண்ணம் வினைவிக்கும் செயல் செய்தல் சிவாபராதமாம் என்று அதற்கு அஞ்சினர் என்க.

**ஈங்கேனை.....இவர்பால்** - இச்சொற்கள் சிவாபராதத்தினின்றும் தாம் கழுவாய் பெற்று உய்யும் நெறி பெற்ற நிலையினை எதிர்பார்த்த அளவில் அரசர்க்குள்ள ஆர்வத்தைக் காட்டுவனவாம். தமக்குக் குற்றத் தீர்வு புரிந்து தம்மைப் புனிதராகச் செய்வதனைப் பேருதவி என்றதும் காண்க. தாம் தாம் செய்த குற்றத் தீர்வுக் குபகரிக்கும் அரசாங்க நீதியதிபர்களை எத்தனை பேர் வெறுத்து வைதெழுகின்றார்கள்! அவ்வாறன்றித் தம் குற்றத்தைப் போக்குபவரைப் போற்றிப் பாராட்டல் பெரியோர் செயல்.

**உதவி செய்யப் பேற்றனன்** - விரைவும் உறுதியும் பற்றி எதிர்காலச் செயலை இறந்த காலத்தாற் கூறினர்.

**உரைப்பக் கண்ட**—என்பதும் பாடம். 44

595. **(வி - ரை) வன் - பெரும்-களிறு** - வலிமையும் பெருமையுமுடைய யானை. **துங்கமால் வரைபோல்** - 562, **வென்றி மால்யானை** - 563. என்பனவாதி முன்னர் உரைத்தவை காண்க. திருத்தொண்டின் பெருமையை உலகிற் காட்டுதற் கென்று திருவருளாலே யானை மலரைச் சிந்தியதேயன்றி (598) அதனது தீக்குணத்தாலன்று. ஆதலின் திருவருள் விளக்கத்துக்குக் கருவியா யிருந்த இதனை இவ்வாறு சிறப்புக் குறிக்கும் அடைமொழிகள் தந்தோதினர். **களிறு பாகர்** - உம்மைத் தொகை.

**பெரும்பிழை** - பெரியோரும் பொறுத்தற்கரியதாய், உயிர் போக்குதலாகிய பெருந் தண்டத்தைத் தவிர வேறு எவ்வாற்றானும் கழுவாய் பெறுததாய் உள்ள தென்று அரசர் கொண்டனர் எனுங் குறிப்பு.

**அன்பனார்** - முதலில் அவரை அரசராக மட்டும் கருதிச் **சென்னி!** - (590) என்றார். பின்னர்ச் சிவாபராதத் தீர்வின் பொருட்டு உயிரையும் உவந்தீயும் பெரும்புகழ் நோக்கி **அந்தமில் புகழான்** - (593) என்றார். உயிர் கொடுத்தும் அபராதத் தீர்வில் அவர்க்கிருந்த ஆர்வப் பெருக்கினைக் கண்டு இங்கு **அன்பனார்** என்ற சிறப்புக் காண்க.

**அன்பனார் தம்மைத் தீங்கு நினைந்தனன்** - எறிபத்தர் எவ்வாற்றானும் அவர்க்குத் தீங்கு நினைத்தாரல்லர். ஆனால் தீங்கு தீர்ப்பாராகியே (593) வாளை வாங்கினராகவும், **தீங்கு நினைந்தனன்** என்ற தென்னை? யெனின் அவரை வாளினாற் கொன்று பிழை தீர்க்க வாங்கினர் என்னும் தீங்காகிய எண்ணத்தை அவர் மனத்தில் உண்டாகும்படி செய்தனர் என்றதனையே இவ்வாறு கூறினர். **நினைந்தனன்** - அவர் நினையும்படி செய்தனன் என்ற பொருளில் வந்தது. இவ்வாறன்றி, யானையையும் பாகரையும் வீழ்த்திய அவர் - அரசர் வரின் அவரையும் கொல்வேன் என்று எண்ணியிருந்தனர் என்று கொண்டுரைப்பாருமுண்டு. **தம்மை** - தமக்கு.

**கொண்டு** - உட்கொண்டு - நிச்சயித்து - கருதி.

**முன்பு** - அவர் முன்பு. அவர் வேண்டியபடி தாம் செய்யாவிடின் அவர் எவ்வாற்றானும் தம்மைத் தாமே அறக்கு அபராதத் தீர்வாகக் கருதியதனைத் தாமே தேடிக் கொள்வர்; அதற்கு முன்பு - அம்முடிபினைக் காண்பதற்கு முன்பு - அவர் முடியு முன்பு என்றலுமாம்.

**உயிர் செகுத்து முடிப்பதே முடிவு** - உயிரைப்போக்கி இத்தீங்கு சேராமல் முடிப்பதுவே இதற்கு முடிபாவது என்றபடி. **முடிவு** - அன்பனார்பால் தீங்கு இயற்றுவேன் என்ற நினைவுவரச் செய்த தீமையைப் போக்கும் கழுவாய்.

**தமக்குத் தீங்கு**—என்பதும் பாடம். 45

596. (வி - ரை) புரிந்தவர் கொடுத்த - அவர் புரிந்து கொடுத்த என மாற்றுக. புரிதல் - தீரவெண்ணுதல் - முற்றும் நினைத்தல் - தம் முன்பு உலகைபுரிந்தும் தொழு தலைப்புரிந்தும் - கொடுத்த என்றலுமாம். புரிந்து - விரும்பி என்பாருமுண்டு.

அன்பர் - இங்கு எறிபத்தரைக் குறித்தது. புகழ்ச்சோழரை இங்கு அரசர் என்று பிரித்துச் சுட்டியது காண்க.

பெரியோர் - சிவாபராதம் தம்பால் நிகழ்வதனால் தாம் எரிவாய் நரகத்துக்காளா காதபடி தடுத்து உதவும் பெற்றியாற் பெரியோர் என்றார். செய்தற்கரும் செயல் செய்தலாற் பெரியோர் என்றார் என்றலுமாம்.

இருந்தவாறு இது என் ? கேட்டேன் ! நாம் எதிர்பாராத வண்ணம் இவ்வாறு இருந்தபடி இது என்ன! ஆச்சரியம்!. கேட்டேன் ! எதிர்பாராதபடி அதிவிரைவில் தீங்கு நிகழக்கண்டபோது வரும் அவலச்சொல். 588 - 593 - பார்க்க. இவ்வாறு தமக் கிறுதியைத் தாமே தேடிக் கொள்ளும் செய்கை ஒரு பெரியார்பால் நிகழ்வது தம் மாற் கூடிற்றே என்று எண்ணியபோது பேரவலம் மனத்து நிகழ்ந்ததாக அதனைக் குறிக்கக் கேட்டேன் என்ற அவலச்சொற் போந்தது.

பெநம் தடம் தோள் - உருவினாலும் வலிமையாலும் பெருமை நோக்கி - பெரு - தட - என இரண்டு அடைமொழிதந்தார். முழையரி - வாளரி - யென்னத்தோன்றி வலிய மழு வீசி வன்பெருங்களிற்றினையும் எறிந்து வீரஞ்செய்து வென்ற பெருவீரர் செயலே விளக்குதற்குரிய பெருவன்மை நோக்கி இவ்வாறு சிறப்பித்தார். கூடி - கிட்டி - சேர்ந்து. கழுத்தை அரியவொட்டாமல் வாளுங் கையும் சேர்த்துப் பிடித்தனர் என்க. ஊறு செய்யும் கருவி வாளாதலின் முதலில் இவாது கையின் பிடியினுள்ளே கொண்டு தடுக்கப்பட்டது அது வென்பார் வாளும் என்று அதனை முன்வைத்துக் கூறினர். தோளால் - கையால். பெருந்தோளுடைமை உயர்ந்த உடலிலக்கணமுமாம்.

மன்னனார் - நின்றே - என்றே - உவப்பக் - கண்ட - எறிபத்தர் (ஆகிய) - அன் பர் - அஞ்சி, - என்று கொண்டு - என்றெண்ணி - அரிந்திடலுற்ற போதில் - அரச னும் - என்று - சென்று - கூடிப் - பிடித்தனன் - என இம்மூன்று பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக் கொள்க. எறிபத்தர் - (ஆகிய) (594) - அன்பர் (596) - என்று கூட்டுக. 46

597. வளவனார் விடாது பற்ற மாதவர் வருந்தி நிற்ப
அளவிலாப் பரிவில் வந்த விடுக்கணை யகற்ற வேண்டிக்
களமணி களத்துச் செய்ய கண்ணுத லருளால் வாக்குக்
கிளரொளி விசும்பின் மேல்வந் தெழுந்தது பலருங் கேட்ப, சஎ

*598. "தொழுந்தகை யன்பின் மிக்கீர் ! தொண்டினை மண்மேற் காட்டச்
செழுந்திரு மலரை யின்று சினக்கரி சிந்தத் திங்கட்
கொழுந்தணி வேணிக் கூத்த ரருளினாற் கூடிற்" றென்றங்
கெழுந்தது பாக ரோடு மியானையு மெழுந்த தன்றே. சஅ

597. (இ - ள்) வெளிப்படை. தாம் கொண்ட வாளினையும் கையினையும் வளவ னார் (தாம் துணிந்த செய்கையைச் செய்ய) விடாமற் பற்ற, அத்தனைப் பெருந்தவராகிய எறிபத்தர் வருந்தி நிற்க, இவ்விருவரிடத்திலும் அளவற்ற அன்பு காரணத்தினால் வந்த இடுக்கணை நீக்கும் பொருட்டு, விடத்தை யணிந்த கண்டத்தினையுடைய செம்மைதரும் கண்ணுதற் பெருமா னருளினாலே (ஞான) ஒளி கிளரும் விசும்பிற் பலருங் கேட்குமாறு எழுந்ததாகிய திருவாக்கானது, சஎ

598. (இ - ள்) வெளிப்படை. "யாவரும் தொழும் தகைமையுடைய அன்பினுலே மிக்கீர்களே! திருத்தொண்டி னீர்மையை மண்ணுலகிலே காட்டும் பொருட்டாகச் செழுந் திருப்பள்ளித்தாமத்தை இன்று கோபங் கொண்ட யானை சிந்தும்படி நேர்ந்த நிகழ்ச்சி, பிறையை யணிந்த சடையினையுடைய கூத்தனுடைய திருவருளினுலே கூடிற்று" என்று எழுந்தது. (இறந்த) பாகர்களோடும் (இறந்த) யானையும் அப்போதே எழுந்தது. சுஅ

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன. தனி முடிபாக்கி முன் பாட்டினை எழுந்தது என வினைமுற்றாக்கி முடித்து, எவ்வாறெழுந்தனின் என வருவித்து, இவ்வாறு என இப்பாட்டினைத் தனி முடிபாக்கி உரைப்பாருமுண்டு.

597. (வி - ரை) முன்பு **அன்பனுர்** என்றது நாயனுர் மனத்துள் எண்ணிய நிலை. இங்கு **வளவனுர்** என்றது ஆசிரியர் அரசரைக் குறித்துக் கூறும் நிலை. முன்னர் வேந்தன் - (593) அரசன் - (596) என்ற ஆசிரியர், இங்கு **அன்பனுர்** - (595) என்று நாயனுர் குறித்ததற் கேற்பத் தாமும் வளவனுர் என்றே காண்க. முன்னர்ப் பன்மையிற் கூறிய மன்னனுர் - (594) என்றதும் இக்கருத்தே பற்றியது.

**விடாது பற்ற** - தாம் நினைத்தபடி செய்ய விடாமற் பிடிக்க.

**மாதவர்** - இறையவர்க்குரிமை பூண்டார்க்கு அருட்பெருந் தொண்டு செய்வார் (556), அன்பின் மிக்கார் (598), சடையவர் பொற்றுளில் ஆதை காதலன்பர் (607) ஆதலின் **மாதவர்** என்றார். அன்பாற் செய்யுந் தொண்டே - பெருந்தவமா மென்பது. "நெக்கு நெக்கு நினைபவர்" எனும் வாகீசர் தேவாரம் காண்க.

**வருந்தி நிற்ப** - அன்பனுர்க்குத் தீங்கு நினைந்தேன் எனும் எண்ணத்தை வருவித்த தீமைக்குத் தீர்வு தாமே செய்து கொள்ள விடாது அந்த அன்பனுர் தாமே தடுத்து நின்றனர் என்ற வருத்தம்.

**அளவு இலா பரிவில் வந்த இடுக்கண்** - இடுக்கண் அன்பின்மையால் நிகழ்வது இயல்பு. ஆயின் இங்கு இவ்விருவர்க்கும் நேர்ந்த அச்சமும் (அஞ்சி - 591, அஞ்சி - 594,) அது காரணமாகத் தம் உயிரைக் கொடுக்க நேர்ந்தமையும், அது தடைபட்டமையும், அதனுல் உண்டாயின மனவருத்தமும், பிறவுமாகிய இடுக்கண்கள் அளவுட்படாத. எல்லையில்லாத - அன்புடைமை மீக்கூர்தலின் உண்டாயின. ஆதலின் **பரிவில் வந்த இடுக்கண்** என்றார்.

**களம் அணி களம்** - சொற்பின் வருநிலை. சொல்லணி. **களம்** - (முன்னையது) கறுப்பு. அங்கிறமுடைய விடத்துக்காயிற்று. பண்பாகு பெயர். **களம்** - (பின்னையது) கழுத்து - மிடறு. எனவே விடத்தைப் போனகமாக நுங்கந்து அதனையே அணிகலமாக அம்மட்டில் நிறுத்திக் காட்டிய கழுத்து என்க. 'கறைமிட றணியலு மணிந்தன்று' என்றதுங் காண்க. திருநீலகண்டம். களம் களத்தணிந்தது கொடிய ஆலகாலவிடத்தி னுல் தேவர்களுக்கு நேர்ந்த இடரை நீக்க. இங்கு அடியா ரிருவருக்கும் அன்பினுல் வினைந்த பேரிடுக்கணை நீக்க ஆகாயத்தில் திருவாக்கு எழுவித்தலால் இங்ஙனங் கூறினர்.

**சேய்ய கண்ணுதல்** - **சேய்யகண்** - செம்மைதருங் கண் - அருட்பார்வையினுல் உயிர்களை ஈடேற்றும் கண். கண்ணுதல் - கண்ணைக் கொண்ட நுதலை உடையோன். அன்மொழித்தொகை.

**சேய்யகண்** - இக்கண் தீயாதலின் சிவத்தகண் என்றலுமாம். "பொங்கு மனல் சிவப்பு" என்பது சாத்திரம். இந்தக் கண் ஒருகால் காமனை எரித்ததெனும் அதுவும் அருளேயாம். "வல்லிருளா யெல்லா வுலகுடன்முன் மூடவிரு ளோடும் வகை நெற்றி யொற்றைக்கண் படைத்துகந்த உத்தமன்" - (திருக்கலயநல்லூர் - பண் - தக்காகம் - 4) - என்ற சுந்தாமூர்த்திசுவாமிகள் தேவாரத்திற் குறித்தபடி

உலகிற் பரந்த வல்லிருளை ஓட்டும் வகையிலே திறந்தருளியது இத்தற்கண். "செற்றங் கனங்களைத் தீவிழித் தான்றில்லை யம்பலவன், நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே" - என்று அப்பர் சுவாமிகள் இதன் அருட்டிறத்தை விளக்கியருளினர். இங்கு இருவர்பாலும் நேர்ந்த இடுக்கணை யகற்றும் அருள்கொண்டு திருவாக்கு எழுதலால் **களமணி களம்** என்றதனோடு கண்ணுதல் என்ற இவ்வியல் பாலும் இறைவனை எடுத்துக்காட்டினர். இருவர்க் கருள்செய்தலின் இரண்டு அருட் செயல்கள் உடன்காட்டப்பட்டன.

**அநளால்** - இருவர்பாலும் இடுக்கண் தீர எழுந்ததாதலின் **அநளால்** என்றார்.

**எழுந்தது - வாக்கு** - எழுந்ததாகிய வாக்கு. வரும் பாட்டில் **என்று பலநங் கேட்ப அங்கு எழுந்தது** என முடிந்தது. இங்கு **எழுந்தது** என்றது திருவருள் எங்கும் பரந்த நிலையினின்றும் கூர்ந்து ஓரிடத்து **வந்த** தொடக்கநிலை. வரும் பாட்டில் **எழுந்தது** என முடிந்தது அதனைப் பலரும் கேட்கும்படி முடிந்தநின்றநிலை.

**ஒளி கிளர் ஏகம்பு** - என மாற்றுக. ஒளி - ஞானவொளி. இங்குப் பலருங் கேட்ப எழுந்து இறைவனது திருவருளின் ஞானத்தை உணர்த்தலால் **ஒளி கிளர்** என்றார். ஞானகாயம் இறைவனது திருமேனி யாதலால் அதினின்றும் ஞான வாக்கு எழுந்ததென்க. இவ்வாறன்றி ஞாயிறு - மதி - மீன்கள் - முதலிய பல ஒளிப் பொருள்களும் கிளர்ந்து செல்வதற்கிடமாகிய ஆகாயம் என்றுரைப்பாரு முண்டு.

**பலநங் கேட்ப** - இச்செயல் "தொண்டினை மண்மேற் காட்ட அருளினுற் கூடிற்று" என்று வரும்பாட்டிற் காண்கின்றோம். "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" என்றபடி பலரும் கேட்ப அறிவித்தாலன்றி மண்ணோர் காண்பதும் அறிதலும் இல்லை. உலகிற் பரந்த வல்லிருளை ஓடத்துரந்து ஒளி காட்டிய கண்ணுதல் அவ்வருட் கண்ணுற் கண்டு உலகிற்குக் காட்டினர் என்பார் **பலநங் கேட்ப** எழுந்த (தாகிய) வாக்கு என்றார். **கண்ணுதல்** என்றதனுற் போந்த சிறப்பை இதனாலும் காண்க.

**மாதவர் வநந்துகின்ற** என்று பாடங்கொண்டு, மாதவர் என்றது இவ்விரு நாயன் மார்களையும் உணர்த்தியதாக உரைப்பாருமுண்டு. 47

598. (வி - ரை) **தொழும் - தகை - அன்பு** - யாவராலும் தொழுது பாராட்டத் தக்க தகுதியுடைய அன்பு. எம்மையே எஞ்ஞான்றும் தொழுந் தகுதியையுடைய அன்பு என்றலுமாம்.

**மிக்கீர்** - இவ்விரு நாயன்மாரையும் குறித்தது - **மிக்கார்** என்று பாடங்கொண்டு சிவகாமியாண்டாரையு முன்னிட்டுக் கூறியதாக உரைப்பாருமுண்டு.

**தொண்டினை** - உங்களிருவருடைய தொண்டின் உறைப்பினை. பொதுப்படத் திருத்தொண்டின் பெருமையினை என்றலுமாம்.

**செழும் திரு** - "முடிமேல் ஏறும் மலர்" (567) என்றபடி இறைவனுக்கானமை யோடு திருத்தொண்டினை விளக்கக் காரணமு மாயினமையின் அச்சிறப்புக்கள் குறிக்க செழும் - திரு - என்றிரண்டு அடைமொழி தந்து கூறினர்.

**கரி** - யானை. கரத்தையுடையது. சிந்தியது கரமாதலின் இப்பெயராற் குறித்தார்.

**சிந்தக் - கூடிற்று** என்று கூட்டி முடிக்க. சிந்துதலாகிய செயல் நிகழ்ச்சி கூடிற்று என்றபடியாம். "ஏறும் மலரைக் கரிசிந் துவதே?" - (567) உனது திருவருள் வசத்தா லாவதன்றி உன் முடிக்கணியாகு மலரைக் கேவலம் ஒரு யானை சிந்தவல்லதா? என்ற குறிப்புடன் சிவகாமியாண்டார் விளுவியதற்கு விடையாக இறைவன் நமது அருளினுலே சிந்தக்கூடிற்று என்றுரைப்பார் போன்று திருவாக்கு எழுந்தது காண்க.

**திங்கட்கொழுந்து** - மூன்றும் பிறை. மறைந்த மதி அன்று மூளைக்கத் தொடங்கு தலின் கொழுந்து என்றார். இங்குத் தொண்டர்க்கும் முன்னர் மறைந்து இடுக்கண் பட்ட மதி இதனுல் மூளைத்தலும் இக்குறிப்பாலுணர்த்தியது காண்க.

**எழுந்தது** - மேற்பாட்டில் **வாக்கு** என்ற எழுவாய் தழுவியது. **எழுந்தது** - எழுந்தது - வாக்கு எழுதலும், பாகரோடு யானை எழுதலுமாகிய இரண்டு செயல்களும் ஒன்றுபட்டு ஒரே காலத்தில் இடையீடு காணமுடியாத வண்ணம் நிகழ்ந்தமை குறிக்க இவ்வாறு பிரிவுறுமல் தொடர்ந்து ஒரே அடியில் ஒருவகைச் சொல்லாற் கூறினர்.

**பாகரோடு யானையும்** - பாகர் பின்னர் பிடித்தனர். யாது இறுதியில் ஒடுங் கிற்றோ மீள உளதாம் போது அது முதலிற் தோற்றும் என்பது சிருட்டி முறை. அதுபற்றி இவர்கள் மீளவுண்டாங்கால் முன்னர் எழுதல் முறையாமாதலின் இவர்களை முதலில் வைத்துக் கூறினர். பாகரும் யானையும் ஒரே நிகழ்ச்சி காரணமாகப் பட்டார்களாதலின் உடனிகழ்ச்சிப் பொருளில் மூன்றனுருபாகிய ஓடு உருபுதக் தோதினம் காண்க. **யானையும்** - உம்மை எச்சப்பொருளில் வந்தது.

**அன்றே** - அக்கணமே. அசையென் றொருகுக்குவாருமுண்டு. 48

599. ஈரவே பூட்டும் வாளை விட்டெறி பத்தர் தாமு
நேரியர் பெருமான் றுண்மேல் விழுந்தனர் ; நிருபர் கோனும்
போர்வடி வாளைப் போக எறிந்தவர் கழல்கள் போற்றிப்
பார்மிசைப் பணிந்தான் ; விண்ணோர் பனிமலர் மாரி தூர்த்தார். சகூ

**(இ - ள்)** வெளிப்படை. தம் கழுத்தினை எவ்வாற்றானும் அரியும்படி பூட்டிய வாளினை விட்டு எறிபத்தரும் சோழர் பெருமானுடைய பாதங்களில் விழுந்தனர்; அரசர் பெருமானும் (தமது கைப்பிடியினுட்பட்டுநின்ற) போருக்குவல்லதாய் வடித்த அவ் வாளினைப் போக எறிந்துவிட்டு எறிபத்தரைத் தடுத்து அவரது திருவடிகளில் நிலமிசை விழுந்து பணிந்தனர்; தேவர்கள் குளிர்ந்த பூமழையை நிறையப் பொழிந்தார்கள்.

**(வி - ரை) ஈரவே** - ஈரும் பொருட்டாகவே முழுதும் கருதி. தேற்றேகாரம் அவரது துணிபுணர்த்தியது.

**வாளைவிட்டு** - ஈர்வதற்கென்றே கழுத்திற் பூட்டினராயினும் எக்கத் தீர்வின் பொருட்டுப் பூட்டி அரியலுற்றனரோ அது வேண்டப்படாமை திருவருள் காட்டிற்றாகலின் தாம் துணிந்த அக்காரியத்தினையும் விட்டு என்றபடி. அது கொண்டு ஈர்வதற்கே துணிந்தாராயினும் அந்த வாளினை. **விட்டு** - வாளைப்பற்றியிருந்த பற்றை விட்டு. **வடி** - கூர்மையுமாம்.

**எறிபத்தர் தாமும்** - ஆளரிபோன்ற அவரும். உயர்வு சிறப்பு. தாமும் வீழ்ந்தார். கோனும் பணிந்தார் என எச்சவும்மை. அருள் வாக்குக் கேட்டோரில், இந் நிகழ்ச்சி சிவனருளால் நிகழ்ந்ததென்றுணரப் பெறாது சிவாபராதமாக நிகழ்ந்ததென்று பிறழவுணர்ந்து முன்னர்ச் செயல் செய்தவர், தாம் எண்ணியபடி யானையும் பாகரும் அபராதஞ் செய்யவில்லை என்று கண்டமையால், இவ்வறிவு பெறவும் திருவருள் வெளிப்படவும் கருவியாயிருந்த அரசரது தாளில் எறிபத்தர் முதலில் விழுந்தனர். முன்னர் அன்பர் என்ற பொதுநோக்கால் பாதங்கள் முறையிற்றழுவ்த - (591) அரசர் இப்போது திருவருள் வெளிப்படக் கருவியாயின வீரமுடைய பேரன்பர் எனச் சிறப்பு வகையால் உணர்ந்தமையாற் பார்மிசை வீழ்ந்து எறிபத்தரது கழல் பணிந்தார்.

**நேரியர்** - நேரி - சோழர்களுக்குரியமலை. நேரிமலையையுடையவர் - சோழர்.

**போர்வடிவாள்** - போரில் வெற்றியே பெறும் தமது வடிக்கப்பெற்ற உடைவாள்; வாளினைப் பற்றிய பற்றை எறிபத்தர் விடவே, அவர் கையையும் வாளினையும் கூடிப் பிடித்த அரசர் கையில் வாள் நின்றது; அதனைப் **போக எறிந்து** என்க. உடைவாளை எப்போதும் கொள்வதே யியல்பாதலன்றிப் போக எறிதல் அரசரது இயல்பன்று. ஆயின் இங்கு அரசராந்தன்மை யன்றி அடியராந் தன்மையில் நின்றனராதலின் **போக எறிந்தனர்** என்க.

**வாள்விட்டெறிபத்தர் தாழமந்த**—என்பதும் பாடம். 49

600. இருவரு மெழுந்து வானி லெழுந்தபே ரொலியைப் போற்ற
அருமறைப் பொருளா யுள்ளா ரணிகொள்பூங் கூடை தன்னின்
மருவிய பள்ளித் தாம நிறைந்திட வருள மற்றத்
திருவருள் கண்டு வாழ்ந்து சிவகாமி யாரு நின்றார். 60

(இ - ள்) வெளிப்படை. இருவரும் எழுந்து நின்று, வானில் எழுந்த அந்தப் பெரிய திருவாக்கின் ஒலியைப் போற்றினர்களாக, அருமறைப் பொருளாயுள்ள சிவ பெருமான் அழகிய பூங்கூடையில் முன் பொருந்திய திருப்பள்ளித்தாமம் நிறைந்திடும் படி அருள்செய்ய, மற்ற அந்தத் திருவருட் செயலைக் கண்டு பெருவாழ்வடைந்தாராய் மகிழ்ந்து சிவகாமியாண்டாரும் நின்றனர்.

(வி - ரை) **பேரொலி** - பலரும் கேட்க மேல் வந்தெழுந்த திருவாக்கின் பெரிய ஒலி. **ஒலி** - சுத்தமாயை முதற்காரணமாகிய எழுத்தொலி. இங்கு அவ்வொலி எல்லாவற்றிற்கும் நிமித்த காரணராகிய இறைவனிடத்தினின்றும் போந்தபடியாற் **பேரொலி** எனப்பட்ட தென்றலுமாம்.

**ஒலியைப் போற்றுதல்** - சிதாகாயத்தினின்று மெழுந்த அருணுத வொலியாகலின் அதனை எழுவித்த திருவருளினைத் துதித்தல். பேரொலி என்பது வாக்கை யுணர்த்தலால் ஆகுபெயர்.

**மறைப்பொருள்** - வேதங்களாற் பேசப்பட்ட பொருளாவார். வேதங்கள் நூதலிய பொருள்.

**அணிகொள் பூங்கூடை** - கோலப் பூங்கூடை (560) என்றது காண்க. அணி கொள்ளும்வகை முன்னர் உரைக்கப்பட்டது. இறைவனுக்கு அழகுசெய்யும் மலர்களை அணியாகியவைகளைத் தன்னைத்துக் கொள்ளும் என்றலுமாம்.

**மருவிய பள்ளித்தாமம்** - தெய்வ நாயகர்க்குச் சாத்தும் - நல்ல கமழ் முகை - அலரும் வேலை - தொடுத்து கொய்து நிறைத்த வகையால் (559) முன்னர் **மருவிய** - அவ்வாறே அமைந்த என்க.

**நிறைந்திட அருள** - சினக்கரி பறித்துச் சிந்திய அந்த மலர்கள், கீழே நிலத்திற் சிந்தியனவாதலின் விதிப்படி பூசைக்குதவா வாயின. அது பற்றியே சிவகாமியார் கையாற் றரையடித்து வருந்தி முறையிட்டனர். கீழே நிலத்தில் வீழ்ந்த மலர் பூசைக்காகா என்று விதியிருப்பவும் இக்காட் பலரும் பூசைக்குரிய பூக்களைக் கீழே போட்டும் உதிர்த்தும் பின்னர் அவற்றையே பூசைக்குதவியும், நிலத்தில் வீழ்ந்த மலர் - இலைகளை - எடுத்தும் அபசாரம் செய்கின்றார்கள். இது பணியாகுமா ? இஃதென்ன பாவம் ! என்ன கொடுமை ! பூத் திருப்பணி செய்வாரும் செய்விப்பாரும் இதனை அறிந்து திருத்தச் செய்வார்களாக.

ஆயின் இங்குத் திருமலரைக் கரி சிந்த அருளியதும் அத்திருவருளே. பின்னர் அவற்றையே நிறைந்திட அருளியதும் அத்திருவருளே. ஆதலின் அவை நிலத்திற் சிந்தப்பட்டனவாயினும், அங்கிலனும், பலர் மிதித்து நடக்கும் தெருவும் பின்னர்ப் பலர் பட்டு வீழ்ந்த படுகளமும் ஆயினும், முன்குறித்த அவ்விதி இங்குப் பொருந்தா

தாயிற்று. அந்த மலர்கள் திருவருளாற் சிந்தவும், நிறையவும்பெற்று இருமுறையும் புனிதமாகி இறைவன் பணிக்கு உகந்தனவாயின. அதனாலே சிவகாமியாரும் **வாழ்ந்து தம்பிரான் பணி மேற்கொண்டு** - சார்ந்தனர் (604) என்க. இவரது பணி முட்டுப் படாது நிறைவேறிய வழியே திருவருட்டிறம் இங்கு முற்ற நிறைவெய்திய தாகும். அப்பணி முற்றியதனாலே அது கண்டு வாழ்ந்து அவரும் கின்றூர் என்க. நியதியான திருப்பணி முட்டுப்படின் வாழார் என்பது குறிப்பு.

**மற்றத் திருவருள் கண்டு** - வாக்கு எழுத்தும் பாகரோடு யானை எழுத்தும் திரு வருட் செயல்களேயாயினும் அன்பராகிய சிவகாமியார் அவை கண்டும் பொதுவகையான் வாழ்வடைவாராயினும் தமது பணி முட்டாது நிறைவேறிய வழியன்றி அவர் தமது வாழ்வு வாழ்வாகக் கருதிச் சிறப்பாக மகிழாராதலின் **மற்று** - அ - **திருவருள் கண்டு** என **மற்று** என்ற வினைமாற்றுச் சொல்லும், அ என்ற சிறப்புச் சுட்டும் புணர்த்து ஓதியதுடன் மற்ற இருவரைப்போலப் **போற்றி** என்னுது **வாழ்ந்து** என்றும் கூறினர்.

**வாழ்ந்து** - புத்துணர்வு பெற்று என்றுரைப்பாரு முண்டு. **சிவகாமியாரும்** - அவர் களோடு இவரும் என இறந்தது தழுவிய எச்சவும்மை.

**வாழ்ந்து நின்றார்** - மலர் சிந்தக் கண்டபோது கையாற் றரையடித்து **நின்று** (565) சிவதா என **நின்ற** அவர், இங்குத்திருவருளால் மலர்நிறைந்திடக் கண்டபோது **வாழ்ந்து நின்றார்** என்பது.

சங்கார முறையினைப் பின்பற்றியே புனருற்பவ முறை நிகழுமாதலின் அம் முறையே முதலில் நிகழ்ந்த செயலாகிய கூடை நிறைந்த மலர் சிந்தியது, சிந்திய மலர் கூடையில் நிறைதலாகி, இறுதியில் நிறை வெய்தியது. முன்னர் (598) உரைத்தவை யும் இது பற்றித் திருவாரூர்த் திருநகரச் சிறப்பி லுரைத்தவையும் காண்க.

மேற்பாட்டிலே இருபெருமக்களில் அவ்வவரும் தத்தம்நிலையினின் று அடியார்களைப் பணிதலாகிய செயலைக் கூறி,இங்குப் பேரொலி போற்றலாகிய அரன்பணியை இப்பாட் டிற் கூறினர். அடியார் பணி - அரன் பணி என்ற இரண்டும் செய்தலில் அடியார் பணியே முன்னர்ச் செய்யத்தக்கது என்பது குறிப்பு. இவை பற்றி விறன்மிண்ட நாய னார் புராணத்தும் (495) பிரமுண்டும் உரைத்தவை காண்க. அசித்திதலுகிய சிவனைச் சித்திதலுகக் கண்டு வழிபடுக என்பது சாத்திரம். சிவனை விசுவ ரூபனுகக் கண்டு வழிபடுதலில், உலகம், சரம் அசரமென இருவகைத்தாகி நிற்க, அவற்றில் அசர ரூப மாகிய இலிங்கத் திருமேனியுள்ளும், சரரூபமாகிய குருவினுள்ளும், அடியாருள்ளும் சிவன் விளங்குபவனும். சித்திருவாகிய இருவருள்ளும் தம்மை யடைந்த பக்கு வர்க்கே யருள்பவர் குரு ; அடியார்கள் எல்லார்க்கும் அருள்பவர்களாதலால் முதற்கண் வழிபடப்படுவர் என்பது நூற்றுணிபாம். 50

601. மட்டவி ழலங்கல் வென்றி மன்னவர் பெருமான் முன்ன
ருட்டரு களிப்பி னோடு முறங்கியீ தெழுந்த தொத்து
மூட்டவெங் கடங்கள் பாய்ந்து முகிலென முழங்கிப் பொங்கும்
பட்டவர்த் தனத்தைக் கொண்டு பாகரு மணைய வந்தார். நிக

(இ - ள்) வெளிப்படை. வாசனை வீசும் (ஆத்தி) மாலை யணிந்த வெற்றியுடைய மன்னர் பெருமானின் முன்பு, தூங்கி மீண்டு விழித்து எழுந்ததுபோல் நிறைவாகி வெவ்விய மத நீர்கள் பாய முகில்போல முழக்கஞ் செய்து ஆரவாரத்துடன் இளம் பும் பட்டவர்த்தன யானையைச் செலுத்திக் கொண்டு உண்ணிறைந்த மகிழ்ச்சியி னோடும் அந்தப் பாகர்களும் அங்கு அணைய வந்தார்கள்.

(வி - ரை) **மட்டவிழ் அலங்கல் வென்றி** - இவ்வாறு திருவருள் விளக்கம் பெற்ற பின்னர் அரசரது அடையாள மாலை இப்போது புதியதொரு மணம் வீசப்பெற்ற

தோடு புதியதொரு வெற்றியும் பொருந்துவதாயிற்று என்பது குறிப்பு. கிளர்மணித் தோள் அலங்கற் சுரும்பினங் கிளர்ந்து பொங்க (578), என்றும், விரைசெய் தார் மாலையோய் (586) என்றும் குறித்த இடங்களினும் அடையாள மாலையினையே கூறினரேனும் அக்கிலேகள் வேறு; இங்குக் குறித்த கிலே வேறு; இப்போதே அது புதுமணமும் உண்மை வென்றி கிலேயும்பெற்ற தென்பார் இவ்வடை மொழிகள் தந்தோதினார். இக்கருத்துப் பற்றியே முன்னர் மன்னன் (583) உலக மன்னன் (587) மன்னவன் (590) தடந்தோள் மன்னன் (591) வேந்தன் (593) என்று கூறிய ஆசிரியர், இங்கு **மன்னவர் பெருமான்** - சக்கரவர்த்தி - முடிமன்னர் - என்றார், திருவருளினாலே உலகிற்கு எடுத்துக் காட்டாகிய பெருமை நோக்கி. **மட்டு** - தேன் என்றலுமாம்.

**உறங்கி மீது எழுந்தது ஒத்து** - வெட்டுண்டு இறந்துபட்ட யானையும் பாகரும் மீண்டும் உயிர் பெற்றெழுந்தது தூங்கி எழுவதை ஒத்திருந்ததென்றார். "உறங்குவது போலும் சாக்கா டுறங்கி, விழிப்பது போலும் பிறப்பு" என்ற திருக்குறட் கருத்தினை இங்கு வைத்துக் காண்க. **மீது** - மேலே. **முட்ட** - நிறைய - மிகுதியாக. **பாய்ந்து** - பாய. செய்தெனைச்சத்தைச் செயவெனைச்சமாக்கி யுரைக்க. ஒத்து - பாய - மூழ்கிப் பொங்கும் பட்டவர்த்தனம் என முடிக்க.

**உள் தரு களிப்பினோடும் உறங்கி எழுந்ததொத்து** என்றதனை யானைக்குக் கூட்டியுரைத்து யானை மகிழ்ந்து தூங்கி எழுந்ததுபோல என்றுரைத்தலுமாம். சுகமாகத் துயின்றேன் என்னும் வழக்குக் காண்க.

**வெங் கடங்கள்** - யானையின் உட்லின், மகிழ்ச்சி முதலிய வெப்பக் கூறுகள் மிக்க போது மதநீர் பாயும் என்பர். **வெம்மை** - விருப்பம். மதமூன்றுதலிற் பன்மையாற் கூறினர். யானையை முன்னர்க் குன்று - வரை - போன்றது என உவமித்தது உருவ நோக்கி. இங்கு அதன் முழக்கம் முகிலென உவமித்தது, மழைக் குறிப்பு நற் பயன் தருவதாதலின், யானை என்ற கருவியினால் உலக வாழ்வாகிய மங்கலம் பெறும் திருவருள் வெளிப்பாட்டினைப் பற்றிய குறிப்பாம்.

**முழங்குதல்** - முகில் முழக்கம் குன்றினிடமாக உண்டாதலும் காண்க. **வெம்** - விரும்பத் தக்க நறுமணங் கமழும் என்றுரைப்பாரு முளர்.

**பொங்கும்** - ஆரவாரிக்கும் - மேல் மூடுகி வருகின்ற - யானை. கடங்கள் பாய்ந்து பொங்கும் என்றலுமாம்.

**பாகநும்** - அவ்வாறே உறங்கி எழுந்தார்போன் றெழுந்தார்களாகிய பாகரும். இறந்தது தழுவிய எச்சவும்மை. பாகரும் - களிப்பினோடும் - கொண்டு - அணைய - வந்தார் என்று கூட்டி முடிக்க.

**அணைய** - அரசர்பாற் சேர.

**உறங்கிய தெழுந்தது**—என்பதும் பாடம். 51

602. ஆனசீர்த் தொண்டர் கும்பிட் "டடியனேன் களிப்ப விந்த
மானவெங் களிற்றி லேறி மகிழ்ந்தெழுந் தருளு" மென்ன
மேன்மையப் பணிமேற் கொண்டு வணங்கிவெண் குடையி னீழல்
யானைமேற் கொண்டு சென்று ரிவுளிமேற் கொண்டு வந்தார். ருஉ

(இ - ள்) வெளிப்படை. ஆயின சிறப்புடைய தொண்டராகிய எறிபத்தர் அரசரைக் கும்பிட்டு, "அடியேன் கண்டு களிக்கும்படி இந்தப் பெரியதும் விருப்பத்தைத் தருவதுமாகிய யானையின்மேல் ஏறி மகிழ்ச்சியுடன் இனி உமது அரண்மனைக்கு எழுந்தருளக் கடவீர்" என்று சொல்லக், குதிரையேறி வந்தாராகிய மன்னவர்மன்னர்

மேலோராற் றரப்படும் மேன்மை தங்கிய அந்தக் கட்டளையை ஏற்று, மேற்கொண்டு, அவரை வணங்கி வெண்குடையின் நீழலிலே யானையினை மேற்கொண்டு சென்றனர்.

(வி - ரை) ஆனசீர் - சரித நிகழ்ச்சியிற்றுணைநின்ற சிறப்பு அரசருக்கு முன்னையினும் சிறந்த கீர்த்தியை உண்டாக்கியதனால் ஆனசீர் என்றார் என்றுரைப்பாருமுண்டு.

**அடியனேன் களிப்ப** என்றது திருவருட் கிலக்காகி நின்ற பேரன்பரை யானையின்மீது பவனிவரக் கண்டு களிக்க வேண்டுமென்று எறிபத்தர் கொண்ட ஆசை மிகுதியினை உணர்த்திற்று. முன்னர் மங்கல வீழவு கொண்டு (562) மாசுவமி முன்னுளாகிய அந்நாளிலே வந்த அந்த யானை அவ்விடை இங்கிகழ்ச்சியால் தடையுண்டு நின்றதாக, அரசரும் அன்பருமாகிய தன் முதல்வனைத் தன்மேற் கொண்டு மங்கல விழாக் கொண்டு உலாப்போதல் தகுதியுடைத்தாம் என்பதும் எறிபத்த நாயனார் திருவுள்ளமாம். அடியார்கள் திரண்டு ஆளுடைய பிள்ளையாரை யானையின்மீது திருவுலாப் போதுமாறு விண்ணப்பித்த கருத்தினைத் திருவுலாமாலையில் நம்பியாண்டார் நம்பிகள் அமைத்ததனை இங்கு நினைவு கூர்க.

**இந்த மான வேங் களிறு** - இந்த - இறைவனது பேரருள் வெளிப்பாடு பெறக் கருவியாதற் குரிமைபெற்ற உயர்வுடையதாய் இங்கு அணைய வந்து நிற்கின்ற என அண்மைச் சுட்டுச் சிறப்பும் உணர்த்திற்று. **மானம்** - உயர்வு. உருவாலும் திருவாலும் உயர்வு குறித்தது. **மானம்** - வலிமை என்பாருமுண்டு. **வேம்** - விருப்பம்பெற்ற-விரும்பிய. அரசர்க்கு இதன்மீது உள்ள விருப்ப மிகுதி முன்னர்க் குறிக்கப்பட்டது (584). இங்கு இம்மீது அதனை முன்னர்க் கடிந்த சிவகாமியாண்டார், எறிபத்தர் உள்ளிட்ட யாவராலும் விரும்பத் தக்கதாயிற்று.

**மேன்மை** - மேலாயின. அன்பராங்குணத்தின் மிக்காரால் (587) இடப்பட்ட பணியாகிய மேன்மை.

**வணங்கிய** - பெரியோராயின சேரன்பரின் முன்னே வாகனமூர்ந்து செல்லுதல் முறையன்றுதலின் அவர் இட்டகட்டளையை மேற்கொள்ளும் வகையாலே யானையினை அவர் முன்பு ஊர்ந்து செல்ல ஒருப்பட்டமைகின்றாராதலின் அவரை வணங்கினர். அன்றியும் அவர்பால் விடைபெறுகின்ற குறிப்புமாம்.

**யானை மேல்கொண்டு சென்றார்** - இறைவரது திருவருட் பிரசாதமாகிய யானையின் மீது அரசர் அன்பர் பணிப்ப ஏறினர். இறைவனருளிய முத்துச்சிவிகையினை ஆளுடைய பிள்ளையார் மேற்கொண்டதும், வெள்ளை யானையை ஆளுடைய நம்பிகள் மேற் கொண்டதுமாகிய, அவரது ஆணையின் வழியே நிகழ்ந்த சரிதங்களை நினைவுகூர்க.

**இவுளி** - குதிரை. அரசர் வந்தநிலை வேறு ; இப்போது செல்லுநிலை வேறு என்று குறிப்பார் இவுளி மேல் கொண்டு வந்தார் யானைமேற் கொண்டு சென்றார் என்றார். மேற்சரித நிகழ்ச்சிகளை எல்லாம் இங்குவைத்து நினைவுகூர்க.

**களிற்றையேறி மனமகிழ்ந்து**—என்பதும் பாடம். 52

603. அந்நிலை யெழுந்த சேனை யார்கலி யேழு மொன்றாய்
மன்னிய வொலியி னார்ப்ப, மண்ணெலா மகிழ்ந்து வாழ்த்தப்,
பொன்னெடும் பொதுவி லாட னீடிய புனிதர் பொற்றாள்
சென்னியிற் கொண்டு சென்னி திருவளர் கோயில் புக்கான். நிஉ

(இ - ள்) வெளிப்படை. அந்நிலையிலே, எழுச்சி பெற்ற சேனைகள் ஏழுகடல்களும் ஒன்று சேர்ந்தொலித்தாற் போன்ற ஓசையோடு ஆரவாரிக்கவும், உலகத்தார் எவரும் மகிழ்ச்சியோடு வாழ்த்தவும் நெடிய பொன்னம்பலத்தே நித்தமாகிய திருக்கூத்து ஆடுகின்ற இறைவனது திருவடிகளைச் சிரத்திற் றரித்தவராய்ச் சோழர் தமது திருவளரும் கோயில் புகுந்தனர்.

(வி - ரை) அந்நிலை - அரசர் பெருமான் தமது பட்டவர்த்தனத்தினை மேற் கொண்டு செல்லக் கண்ட அந்த நிலையிலே.

ஆர்கலி ஏழும் ஒன்றுய் மன்னிய ஒலி - முன்னர்த் தனித்தனி ஆர்த்த சிறப்புக் கூறினர். இங்குச் சேனை வகைகளும் இயங்களும் முழுதும் ஒன்றுய்ச் சேர்ந்து ஆர்த்த நிலையினைக் கூறுகின்றார். 582 - உரை பார்க்க. ஆர்கலி - கடல். எப்போதும் ஒலி நிறைந்தது என்ற பொருளில் வந்த காரணப் பெயர் போலும். மிக்க ஓசைப் பண்பில் உவமை கூறினராதலின் இப்பெயராற் குறித்தார். ஏழு கடல்களும் ஒன்றுய் ஒலிக்கும் காலம் உகமுடிவிற் காணும் நீர்ப்பெருக்கி லாகும் என்பர் "கடைகாட் பொங்கும் கடல்" (582) என முன்னர்க் கூறினர். கடல் ஏழு உவர்நீர், கன்னீர், பால், தயிர், நெய், கருப் பஞ்சாறு, தேன் என்பவற்று னிறைந்தன என்பர்.

பொன் நேடும் போது - நெடும் பொற்பொது என மாற்றுக. பொன்னம்பலம் என்க. இதன் நெடுமையாவது ஞானத்தால் எங்கும் என்றும் நிறைந்திருத்தல்.

நீடிய ஆடற் புனிதர் - என மாற்றுக. அவர் ஆடும் அம்பலமும் நித்தம். அவர்தந் திருக்கூத்தும் நித்தம். அம்பலம் ஞானமாம். கூத்து ஆனந்தமாம். ஆதலின் நெடும் பொதுவில் ஆடலை, நீடிய ஆடல் என்றார். ஆடலை நீடி (யியற்றுகின்ற) என்று கூட்டி யுரைப்பாருமுண்டு. புனிதர் . புனிதத்தைச் செய்பவர் - தீர்த்தன் என்பதுபோல. அமலனுதலிற் புனிதர் என்றார் என்றலுமாம்.

சேன்னியிற் கொண்டு சென்னி - சொற்பின் வருநிலை என்ற சொல்லணி. தாள் சென்னியிற் கொண்டு என்றது இறைவனது சீபாதங்களைத் தலைமேற் சூடினன் என்றதாம். தாளினைத் தாங்கிய தன்மை பெற்றனவே சென்னி யெனப்படும். அவ்வாறு தாங்காதவை வெறுஞ் சுமையே என்பர். "வணங்காத் தலையுஞ் பொறையாம்" - பொன் வண்ணத்தந்தாதி (42). சோழர் மரபு அரசர்கள் தமது சென்னியை இறைவனது தாளுக்கென்றே ஒதுக்கி வைத்த நெறியினர் என்பது பழைய நூல்களிற் கண்ட உண்மை. இச்சிறப்புடைய சென்னியார் ஆதலின் இவர்கள் சென்னி என்ற மரபுப் பெயரானழைக்கப்பட்டார் போலும். இச்சிறப்பாலே இவர்கள் அரச மரபினர்கள் எல்லாருள்ளுந் தலையாயார் என்றதும் பொருள் போலும். "சென்னி வெண்குடை நீடரபாயன் திருக்குலம்" - (404) முதலிய ஆட்சிகள் காண்க.

இங்குத், தாள் சென்னியிற் கொண்டு என்றது வெங்களிற்றின் மேற் கொண்ட அரசர் தமது உயர்ந்த தானமாகிய முடியின் மேற்கொண்டது இறைவனது தாள் என்றதாம். அரசர், யானையின் மேலே ஊர்ந்த சிறப்பினும் இறைவரது திரு வடியின் கீழே நாமிருக்கின்றோம் என்ற உணர்ச்சியினைச் சிறப்பாக எண்ணினர், எஞ் ஞான்றும் திருவடி மறவாத பான்மையார், என்பனவாதி குறிப்புக்கள் காண்க. எப் போதும் திருவடி முடியிற் சூடியவர் இங்கும் சூடினர் என்றது தமது நாட்டில் திரு வருள் வெளிப்பாட்டினாலே திருத்தொண்டின் பெருமையை உணர்த்தி உலகத்தை வாழ்வித்த உபகாரத்தை உன்னிச் சிறப்பாகச் சூடினர் என்பது தெரித்தற் தென்க.

திருவளர் கோயில் - அரசரது அரண்மனையைக் கோயில் என்பது வழக்கு. கோ - அரசர். திருவளர் - அருளும் பொருளும் நிறைவாகியது. உலகாளும் மன்னவன் திரு மாலின் கூறு எனப்படுவனுதலின் திரு - இலக்குமி எனக்கொண்டு, அவளதடையாளமா யுளவாம் நிலையங்கள் மேன்மேல் வளர்தற் கிடமாகிய என்றலுமாம்.

மகிழ்ந்து பொங்க—என்பதும் பாடம். 53

604. தம்பிரான் பணிமேற் கொண்டு சிவகாமி யாருஞ் சார
எம்பிரா னன்ப ரான வெறிபத்தர் தாமு "மென்னே!
யம்பல நிறைந்தார் தொண்ட ரறிவதற் கரியா" ரென்று
செம்பியன் பெருமை யுன்னித் திருப்பணி நோக்கிச் சென்றார். நிச

(இ - ள்) வெளிப்படை. தம்பிரானுடைய பணியை மேற்கொண்டு சிவகாமியாரும் திருக்கோயிலை நோக்கிச் செல்ல, இறைவனது அன்பராகிய எறிபத்த நாயனாரும் "என்னே! அம்பல நிறைந்த சிவபெருமானது தொண்டர்கள் அறிதற்கரியாராவர்" என்று சோழனது பெருமையை நினைத்து அற்புதமடைந்தவராகித் தமது திருப்பணி நோக்கிச் செல்வாராயினர்.

(வி - ரை) தம்பிரான் பணி - தமது பெருமானுடைய ஆனிலையடிகளார்க்குத் திண்ணிய அன்பு கூர்ந்து விதிப்படி அலங்கல் சாத்தும் திருத்தொண்டு. அரசர் தமது திருவளர் கோயில் புக்காராகச், சிவகாமியார் தமதுபிரான் பணியிலே திருக்கோயில் நோக்கிச் சென்றார்; எறிபத்தர் தமது திருப்பணி நோக்கிச் சென்றார்; என அவ்வவர் திருத்தொண்டுகளிலே அவ்வவரைப் போக்கிச் சரிதத்தை நிறைவு செய்கின்றவாறு.

தம்பிரான்பணி மேற்கொண்டு - திருப்பணி நோக்கி - இறைவனுக்கு மாலை சாத்தும் பணியினை நியதியாய் மேற்கொண்ட சிவகாமியார் இன்று திருவருளினாலே மலர்கள் மீள நிறைந்த பூங்கூடையை எடுத்து நின்றாராதலின் தாம் முன்னர் மேற் கொண்ட அப்பணியினையே மேற்கொண்டு சார்ந்தனர் என்றார். ஆயின், எறிபத்தர், "அழலவிர் சடையா னன்பர்க் கடாதன வடுத்த போது, முழையரி யென்னத் தோன்றி முரண்கெட எறிந்து தீர்க்கும்" (557) திருப்பணி செய்பவராதலானும், அஃது, அன்புடையார்க்கு இடையூறுமிகும் இக்காலிற் போலன்றி, அக்காலத்து, ஒரோ வழி அருகியே நிகழ்வதாதலானும் அதனைத் தேடிப் போயினார் என்பார் திருப்பணி நோக்கிச் சென்றார் என்றார். அவர் என்றும் செய்யலாம்; இவர் பணி கிடைத்த வழியே செய்யலாம் என்பது. முன்னையதனைத் தம்பிரான் பணி என்று சிறப்படை மொழி தந்து சுட்டிக் குறித்ததும், பின்னையதனை அடைமொழியின்றித் திருப்பணி என்று தேற்றம்பெறக் குறித்ததும், அரன்பணியினும் அன்பர் பணியின் பெருமை உணர்த்தியவாறு காண்க. "அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டு விட்டால், இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே" - என்ற தாயுமானார் திருவாக்கு இங்கு நினைவு கூர்தற்பாலதாம்.

எம்பிரான் அன்பரான - எம்பிரான் - சிவபெருமான். முன்னர்த் தம்பிரான் என்ற ஆசிரியர் இங்கு இப்புராணமுடையார்க்குப் பிரானுஞ் சிறப்பு நோக்கி எம்பிரானன்பர் என்றார். எம்பிரானிடத் தன்பராயினார்க்கே அவனது அன்பரிடத்து அன்பும் அவர்களது பணி செய்தலில் ஆர்வமும் உண்டாகும் என்பது உண்மை நூற்றுணிபு. "ஈசனுக் கன்பில்லார் அடியவர்க் கன்பில்லார்" என்ற திருப்பாட்டில் (சிவஞான சித்தியார் - பன்னிரண்டாஞ் சூத்திரத்தில்) இவ்வுண்மையினை விரித்திருத்தல் காண்க. அதுபற்றியே "ஆசையொடு மானடியா ரடியாரை யடைந்திட் டவர்களும முன்களும மாகச் செய்து" என்றதும் நோக்குக. இக்கருத்துப் பற்றியே, "புனிதரை வழிபடுந் தொழிலராகி," "இறையவர்க் குரிமைபூண்டார்க் கருட்பெருந் தொண்டுசெய்வார்" எறிபத்தர் - (556) என்று தொடக்கத்துக் காட்டியதுபோல இங்கும் எம்பிரானன்பரான எறிபத்தர் என முடித்துக் காட்டினார்.

என்னே! - ஆச்சரியக் குறிப்பு. இஃதென்ன ஆச்சரியம் என்றபடி.

அம்பல நிறைந்தார்-அம்பலம் - அருட்சத்தியின் சொரூபம். அதனில் நிறைந்தார் என்றது தமது சத்தியினிடமாகவே வியாபித்து நிற்பர் என இறைவனிலக்கணங் குறித்தது.

நிறைந்தார் தொண்டர் அறிவதற்கு அரியார் - நிறைந்தாரைப்போல அவர் தொண்டரும் அறிவரியார். நிறைந்தாரினை என ஒப்புப்பொருளில் வரும் ஐந்தாம் வேற்றுமை இன்விகுதி தொக்கது எனவும், நிறைந்தாரும் தொண்டரும் என உம்மைத்தொகை எனவும், கொண்டுரைப்பினு மமையும்.

**தொண்டர் அறிவதற்கரியார்**-இஃதோர் உண்மையாகிய பொதுவியல்பு. இதனை எறிபத்த நாயனர் இச்சரித நிகழ்ச்சியின் அனுபவத்திலிருந்து "தெள்ளிவடித் தறிந்த பொரு"ளாய் உணர்ந்து, அதனைத் தேற்றவித்த செம்பியர் பெருமையை யெண்ணி யெண்ணித் திளைக்கின்றார்.

**பெருமை உன்னி** - அப்பெருமையினைத் " தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்றபடி சிந்தித்துக்கொண்டு. ஒரு அரசர் வடிவுக்குள்ளே அறிதற்கரிதாய் நின்று அரசர் பெருமையினும் தொண்டர் பெருமை மிகநிறைந்ததனை நினைந்து நினைந்து என்க. இப்பெருமையினைப் பின்னரும் இவரது **(பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்) புராண** முடிபிலும் காண்க. " எத்தொழிலைச் செய்தாலென் எதவத் தைப் பட்டாலென் முத்தர் மனமிருக்கும் மோனத்தே " என்ற கருத்தும் இங்குக் காணத் தக்கது.

அடியார்க் கடாதன அடுத்தபோ ததனைத் தீர்த்தலில் முற்பட்டொழுகிய எறிபத்த நாயனர், தம்மால் அடியார்க்கிடர் நேர்ந்ததாகத் கருதி தம்மையினியேவிடத் துணிந்த அரசரது மனப்பான்மையாகிய அன்பின் பெருமையை உன்னினர் என்பதாம். அவர் பெருமை கண்டபோது தஞ்செயலும் தம் பெருமையும் கண்டாரில்லை என்க. 54

605. மற்றவ ரினைய தான வன்பெருந் தொண்டு மண்மே
லுற்றிடத் தடியார் முன்சென் றுதவியே காலு காலு
நற்றவக் கொள்கை தாங்கி நலமிகு கயிலை வெற்பிற்
கொற்றவர் கணத்தின் முன்னுங் கோமுதற் றலைமை பெற்றார். ருரு

**(இ - ள்)** வெளிப்படை. மற்று அவ்வெறிபத்த நாயனர், இத்தன்மைத்தாகிய வலிய பெருந்தொண்டினை இவ்வுலகிலே இடையூறற்ற இடத்திலே அடியார்களுக்கு முன்சென்று உதவியே காலுகாலும் இவ்வாறு (இந்த) நற்றவக் கொள்கையைய் மேற் கொண்டு செலுத்திவந்து, நலமிக்க திருக்கயிலை மலையில் இறைவரது திருக்கணங் களின் முதல்வர்க்கு முதல்வராகும் கணநாயகத் தலைமையைப் பெற்றனர்.

**(வி - ரை) மற்றவர் - மற்று** - சிந்திக்கப்பட்ட அரசர் நிற்கச், சிந்தித்துச் சென்ற அவர் - என வினைமாற்றுப் பொருளில் வந்தது. **மற்று** - அசைநிலை யெனினுமாம். **அவர்** என்ற சேய்மைச் சுட்டும் அப்பொருள் குறித்தது.

**வன்பெரும் தொண்டு**-அன்பர்க்கடாதன அடுத்தபோதவற்றை முரண்கெட மழுவி னால் எறிந்து தீர்த்தலின் **வன்றொண்டு** என்றார். பேரிடர்களையும் பெருவீரங் கொண்டு தீர்த்தலானும் தொண்டர்க்குச் செய்யும் தொண்டாதலானும் அது **பெருந்தொண்டு** எனப்பெற்றது. வலிய பெரிய தொண்டு என்க. இவர் தாம் தொண்டு செய்தலேயன்றி ஏனைய உரிமைத் தொண்டர் செய்யும் தொண்டினையும் முட்டின்றிச் செய்யும்படி வழிசெய்தலானும் இவர் செய்தது **பெருந்தொண்டு** எனப்பட்டதாம்.

தொண்டு, மென்றொண்டு வன்றொண்டு என இருவகைப்படும் என்று கூறுவர். மென்றொண்டு, நியதியாகத் தாந்தாம் செய்யுமாறு நூல்களால் விதிக்கப்பட்ட சரியை முதலாயின. உலகராற் செய்தற்கரியனவாய் உலகிறந்த நிலையில் நூல்விதி கடந்து செய்யப்படுவன வன்றொண்டு எனப்படும். இங்குச் சிவகாமியாண்டாரும் புகழ்ச்சோழ ரும், முருகர், தண்டியடிகள், குங்கிலியக்கலயர் முதலிய நாயன்மார்களும் செய்தமை மென்றொண்டின் பாற்படும். இங்கு எறிபத்தரும் கோட்புலியார், செருத்துணையார், சத்தியார் முதலிய நாயன்மார்களும் செய்தவை வன்றொண்டின் பாற்படும்.

" மெல்வினையே யென்ன வியனுலகு சோர்க்கரிய வல்வினையே யென்னவரு மிரண்டுஞ் - சொல்லிற் சிவதன்மமாம் "—(16) என்பது முதலாகவரும் திருக்களிற்றுப் படியாரும் காண்க.

**தொண்டு** - உதவியே என்று கூட்டுக.

**உற்றிடத்து** - முன் சென்று - அடாதனவாகிய இடையூறுகள் உற்ற அவ்விடத்தே ஒருவரும் வேண்டாது, தாமே முற்படச் சென்று. "அன்பர்க் கொல்லவந் தற்ற செய்கை யுற்றிடத் துதவு நீரார்"(551) என்று தொடங்கிய ஆசிரியர் அதனையே அனுவதித்து முடித்துக் காட்டினர்.

**நாளும் நாளும்** - பலகாலும். நாளுநாளும் உதவியே என்றும், நாளுநாளுந் தாங்கி என்றும் முன்னும் பின்னும் இயைக்க. இடைநிலைத் தீபம்.

**நல் - தவம் - கொள்கை - தாங்கி** - சிவனடி மறவாச் சித்தையும் அதனால் அவனடியார்க்குப் பணி செய்யும் ஆர்வமும் தவக்கொள்கை எனப்பட்டன. அடாதன செய்தாரைத் தண்டித்து எறிகின்ற வகையாலே இங்கு யானையும் பாகரும் பட்டமைபோலப் பலரும் படவரினும், அவை திருத்தொண்டினை நிகழச் செய்யும் நன்மை பயத்தலால் **நற்கொள்கை** எனப்பட்டன. **தாங்கி** அடியார்க்கு வரும் இடையூறுகளைக் களைவது ஆண்டாளுகிய அரன் பொறுப்பு. "இன்றே நிடையூ றெனக்குண்டோ" என்பது திருவாசகம். ஆயின் இங்கு அவரது பிரதிநிதியாக, அவர் உள்ளிருந்து ஊக்கி அறிவித்து இயக்கிய வழியே, எறிபத்தர், தமது கடமையாக மேற்கொண்டு செய்தனர். இது பெரும் பாரமான கடமையாதலின் **தாங்கி** என்றார். அதனாற் கயிலையிலே இவர் **கோற்றவர் கணத்தின் முன்னும் கோழதற் றலைமை** பெற்றனர் என்க.

**நலமிகு கயிலை வேற்பு** - நன்மைக்கே யிடமாகியது கயிலை என்பது. **கணத்தின் முன்னுங் கோ** - கணங்களின் முதல்வர். **முதற் றலைமை** - அவர்க்குள்ளும் முதல்வராகும் தலைமை.

**கொற்றவக்கணம்**—என்பதும் பாடம். 55

606. ஆளுடைத் தொண்டர் செய்த வாண்மையுந் தம்மைக் கொல்ல
வாளினைக் கொடுத்து நின்ற வளவனார் பெருமை தானும்
நாளுமற் றவர்க்கு நல்கு நம்பர்தா மளக்கி லன்றி
நீளுமித் தொண்டி னீர்மை நினைக்கிலா ரளக்க வல்லார் ? நிசு

**(இ - ள்)** வெளிப்படை. ஆளுடைய தொண்டராகிய எறிபத்த நாயனார் செய்த வீரச் செயலினையும், தம்மையுங் கொல்லும்படி தமது உடைவாளையுங் கொடுத்துநின்ற சோழனாரது பெருமையினையும், நாளுநாளும் அவர்க்கு அருள்கள் நல்கும் நம்பராகிய இறைவர் தாமே அளக்தாலன்றி, நீளச் செல்கின்ற இத்தத் திருத்தொண்டின் தன்மைகளை நினைக்குமிடத்து யாவர் அளக்கும் வன்மையுடையா ராவர் ? (ஒருவருமிலர்.)

**(வி - ரை)** **ஆளுடைத் தொண்டர்** - தாம் அடியார்க்கு ஆளாகவும் தம்மை அவர்களது உடைமைப் பொருளாகவும் கொண்ட தொண்டர். அடியவர்க் காளாகத் தொண்டு செய்தலே தமது செயல் என்பதாம். மேற்பாட்டில் உரைத்தவை காண்க. ஆளுடைய அரசு என்பதுபோல் இறைவனுல் ஆளாகக் கொள்ளப்பட்ட என்றுரைப்பாரு முண்டு.

**ஆளுள்** - ஆண்மை என்பாரு முண்டு. மேலும் **ஆண்மையும்** என்றமையால் அஃ தரையன் றென்க.

**ஆண்மை** - வீரச் செயல். இச்சரிதத்தின் நிகழ்ச்சிகள் காண்க. யானையின் பலமும், அதுவும் மதங் கொண்டதும், பாகரும் பலராய்ப் பெரிய அரசரின் வலிய சார்பு கொண்டதும். தமது தனிமையும் முதலிய ஒன்றும் எண்ணுது திருத்தொண்டினுக்குச் செய்த அபசாரம் ஒன்றினையே கருதிச் செய்த தீரச்செயலை இங்கு உன்னுக.

**வளவனார் பெருமை** என்ற விடத்தும் அரசர்பால் நிகழ்ந்த முன்னிகழ்ச்சிகளை எண்ணுக. பெருமை-செம்பியன் பெருமை (604) என்றதின் கீழ் உரைத்தவை காண்க. மேற்பாட்டில் எறிபத்த நாயனார் அப்பெருமைகளைச் சிந்தித்தவாறு கூறினர். இங்கு ஆசிரியர் தாம் சிந்தித்துக் கண்டவாறு உலகுக்குக் காட்டுகின்றார்.

நாளும் - எப்போதும். " அருளைநீர் தாவிருந்தீர் செய்தவா றழகிது " - (ஏயர் கோன் புரா - 262) "நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பும்"—(தேவா) என்றவை காண்க.

நல்தும் நம்பர்தாம் அளக்கில் அன்றி - " அன்புடையாரை அறிவன் சிவன் ", "அழுது காமுற் றரற்றுகின் றாரையும், எழுதுங் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே", "விட முண்டவெம் மத்த னாடி யாரை யறிவரே", என்பனவாதி திருவாக்குக்கள் காண்க. அளத்தல் - அளவிட்டறிதல். மற்று அவர்கீது - மற்று - அவ்வவர் எண்ணிய எண்ணங் களின் வேறுபாடு குறித்து நின்றது.

நீளும் - எஞ்ஞான்றும் எவ்விடத்தும் பொருந்த நீள்கின்ற. தத்தம் பயன் களைத் தந்து அழியும் பசு புண்ணியங்கள் போலன்றி அழியாது பெருகும். ஆண்மை யும் பெருமையும் தொண்டின்றிறங்கள் என்றபடி. நீளும் - என்றமையால் இச்சரித நிகழ்ச்சியின் பின்னரும் இவ்விரு நாயன்மார்களும் பல காலமும் தத்தம் திருத் தொண்டுகளைச் செய்து வாழ்ந்தமையுங் குறித்தபடியாம்.

யார் அளக்க வல்லார் ? வினு ஒருவருமிலர் என்று குறித்தது. அளக்கவல்லார் என்றது அளந்து இனைத்து என்று அறிவால் நிச்சயிக்கும் வன்மையுடையாராதலை. இப்பாட்டுக் கவிக்கூற்று. மேற்பாட்டிற் சரிதத்தை நிறைவு செய்த ஆசிரியர், இச் சரிதத்திற் போந்த தொண்டின் நினைப்பரிய பெருமைகளைச் சிந்தித்துக் கொண்டு அதிற் ரும்பெற்ற அற்புத உணர்ச்சியை இதனைக் கற்போருக்கும் அழகு பெற ஊட்டு கின்றார். இஃது இச்சரிதத்தால் ஆசிரியர் கற்பித்த கற்பனையாய் இதன் அருமை பெருமைகளை உணர்த்தி நின்றது.

தொண்டர்நீர்மை - அளத்தலன்றி—என்பனவும் பாடங்கள். 56

607. தேனுருந் தண்பூங் கொன்றைச் செஞ்சடை யவர்பொற் றூளி
லானுத காத லன்ப ரேறிபத்த ரடிகள் சூடி
வானுளுந் தேவர் போற்று மன்றுளார் நீறு போற்று
மேனுதி நாதர் செய்த திருத்தொழி லியம்ப லுற்றேன். நிஎ

(இ - ள்) வெளிப்படை. தேன் நிறைந்த குளிர்ந்த அழகிய கொன்றைமலரை அணிந்த சிவந்த சடையினையுடைய சிவபெருமானது பொன்னடிகளிலே குறையாத ஆசையுடைய அன்பாகிய எறிபத்த நாயனாரது திருவடிகளைத் தலைமீது தரித்து, வானுலகங் காவல் பூண்ட தேவர்கள் போற்றுகின்ற அம்பலவாணருடைய திருநீற் றினைப் போற்றும் வாழ்வுடைய எனதினாத நாயனார் செய்த திருத்தொழிலினைச் சொல்லப் புகுகின்றேன்.

(வி - ரை) இச்சரிதத்தை முடித்துக் காட்டி மேல்வரும் சரிதத்துக்குத் தோற்று வாய் செய்தவாறு.

தேன் ஆரும் - தேன் - இனிமை தருவது எனும் குறிப்பு. தேன் பொருந்துதல் வண்டு மொய்த்தலுக்குக் காரணம். அன்பர்களாகிய வண்டுகள் மொய்க்கின்ற குறிப்புப் பெற இதனைக் கூறினார். "ஆனந்தத் தேனிருந்த பொற்றைப் பாவி " - (திருவாசகம் - திருப்பூவல்லி - 2), " இம்மலைப் பெருந்தேன் சூழ்ந்து " - (கண் - புரா - 101) என்ற திருவாக்குக்களின் குறிப்பும் இங்கு வைத்துக் காண்க. தேன் - வண்டு என்றலுமாம். தண் - (இனிமையுடன்) தண்மையும் தருவது. பிறவி வெயிற்சுட அடையும் உயிர் களுக்குத் தண்மைதந் தாற்றுவது. "சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித் தொண் டர்தன்னு நிழலாவன " என அப்பர் சுவாமிகள் திருவடியினை நிழலாக உருவகித்தது காண்க. பூ - அழகினைத் தருவது. கொன்றை - பிரணவ உருவாயது. சிவகாமியார்

செய்துவந்த " பூப்பறித் தலங்கல் சாத்தும் " திருத்தொண்டின் குறிப்புமாம். **செம்** - செம்மை. **சடை** - சிவபெருமானுக்குரிய திருவடையாளம்.

**சடையவர் போற்றளில் ஆனாத காதல் அன்பர்** - முன்னர் **எம்பிரான் அன்பரான்** என்ற விடத்துக் கூறியவை காண்க.

**வானாளுந் தேவர்** - பெருந் தேவர்களான இந்திரன், பிரமன், மால் முதலியோர். இவர்கள் சிவபெருமா னருள்வழி நின்று வானுலங்கள் ஒவ்வொன்றின் ஆட்சி புரிவோர். ஆதலின் **ஆளும்** என்றார்.

**போற்றும்** - போற்றும் மன்று எனவும், போற்றும் மன்றுளார் எனவும், போற்றும் நீறு எனவும் கூட்டியுரைக்க நின்றது. "வானவர் மேலது நீறு" முதலிய திருவாக்குக்கள் காண்க. **போற்றும் மன்று** - "தில்லையுட் செம்பொ னம்பலம் போற்றி" முதலிய திருவாக்குக்களா னறிக.

**நீறு போற்றும்** - தம்முயிரினுஞ் சிறந்த பொருளாக எஞ்ஞான்றும் திருநீற்றின் மேல் வைத்த அன்பினைக் காப்பாற்றும். இஃது இவர் சரிதத்திற் போந்த உள்ளுறையாதல் காண்க. வானாளுந் தேவர்கள் தவஞ்செய்து அமுதமுண்டும் இறத்தல் பிறத்தலாதி துன்பங்களுக் காளாகி யுழல்கின்றார். அது நீங்க ஒரோவழித் துதிப்பர். ஆயின் ஏனாதி நாயனார் திருநீறு போற்றியதனாலே இறைவன் திருவருளாற் பாசமறப் பெற்றுஎன்றும் பிரியா அன்பினைப் பெற்றார் என்ற அவர் சரித முடிபினை (649) இங்குத் தோற்றுவாய் செய்து இந்நினைவுடனே நாம் இச்சரிதத்திற் பயிலுமாறு குறித்துக் காட்டினர். எறிபத்த நாயனார் சரித உள்ளுறை அன்பர் பணியாம்; அஃது அவர் செய்த ஆண்மையால் விளங்குவது என்ற பயனை மேற்பாட்டில் வடித்துக் காட்டிய ஆசிரியர் இங்கு அதற்கு அடிநிலையாயினது அரன்பாற் காதலன்பாம் என்பார் **தாளில் ஆனாதகாதல்** என எடுத்து முடிந்த முடிபாகக் காட்டினார்.

**அடிகள் போற்றி - செய்த திருப்பணி** - என்பனவும் பாடங்கள். 57

---

**சரிதச் சுருக்கம் :**—அநபாயரது மரபினராகிய சோழர்களது தலைநகரங்களில் ஒன்று **கருவூர்** என்ற செழிப்புடைய பழவூராகும். இதில் இறைவன் **பசுபதீசர்** என்ற திருப்பேருடன் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யுள்ளார். அக்கோயில் **திருவானிலை** என்று பெயர் பெறும். இக்கோயிலில் நியதியாக இறைவரை வழிபட்டு அடியார்களுக்குத் தொண்டு செய்து வருபவர் **எறிபத்த நாயனார்**. அவர் உலகிலே சைவம் ஓங்கும்படியாகிய ஒழுக்கமுடையார். அடியார்களுக்கு வரக்கூடாத இடையூறுகள் நேர்ந்த போது சிங்கம்போலத் தோன்றி அவ்விடையூற்றினை நீக்கும் மழுவாயுதத்தை ஏந்தி வருவார்.

இத் திருநகரிலே இறைவருக்கு விதிப்படி பூப்பறித்து மாலை சாத்தும் திண்ணிய அன்பு கூர்ந்த **சிவகாமி யாண்டார்** என்ற புண்ணிய மறைமுனிவர் ஒருவர் உளராயினர். அவர் தம்வழக்கப்படி ஒரு நாள் வைகறை எழுந்து, நீர்மூழ்கி, வாய்கட்டி, நந்தனவனஞ் சென்று, இறைவனுக்கான அன்றலர்ந்த பூக்களைக் கைப்பழக்கத்தாற் றெரிந்து, கொய்து, பூங்கூடை நிறைத்து, அதனைக் கோலிற்றாங்கி மிக்க அன்போடு திருவானிலையாருக்குச் சாத்துங்காலை உதவ வேண்டி விரைய வாராநின்றார். அந்நாள் மகாநவமியின் முன்னாளாம். அன்று **புகழ்ச்சோழனாரது** பட்டவர்த்தனம் என்னும் பட்டத்து யானை மங்கல விழாக்கொண்டு நதித்துறை நீராடி மிக்க களிப்புடன் மதம் பொழியச் சென்று ஒரு தெருவில் முட்டியது. அதன்மேல் நின்று கடவிய பாகர் இருவர். பக்கங்களினும் முன்னும் ஓடி அதனை நன்கு செலுத்தும் பரிக்கோற்காரர் மூவர்.

இவ்வாறு சென்ற அந்த யானை அத்தெருவில் முன் சென்றுகொண்டிருந்த சிவகாமியாண்டாரைப் பின்றொடர்ந்து சென்று அவர் கையிற் கோலிற்றூங்கிய பூக்கூடையைப் பறித்துக் கீழே சிந்தியது. அது கண்டு பாகர் அதனைக் காற்றினுங் கடிதாகச்

செலுத்திப்போயினர். சிவகாமியார் பதைத்துப் பொங்கி, யானைபின்போய்த் தண்டி னூலே அதனை அடிக்க வந்தார்.

இவர் அணையவொட்டாது அது விரைந்து போயிற்று. தொண்டர் மூப்பினூலே விரைந்து பின்செல்ல மாட்டாதவராகி நிலத்தில் வீழ்ந்து,கையினால் தரையையடித்து, எழுந்து, மிக்க துன்பத்தாற் கோபித்துச் சிவதா! சிவதா ! என்று இறைவரை நோக்கி அறைகூவி முறையிட்டனர். இதனை எதிரே வந்த எறிபத்தர் கேட்டு, மிக்க கோபங் கொண்டு, ' அடியார்க்கு யானை வழிப்பகையன்றே ? அதனை வெட்டி வீழ்ப்பேன் ' என்று, மழுவேந்தி வந்து 'இடும்பைசெய்த யானை எங்குற்ற'தென்று சிவகாமியாரைக் கேட்க, அவர் "அது இறைவருக்குச் சாத்தும் பூவைப்பறித்துச் சிந்திப் பிழைத்து இத் தெருவே போயிற்று" என்றனர். 'இது இனிப் பிழைப்பதெங்கே ?' என்று எறிபத்தர் பெருகெருப்பும் பெருங்காற்றும் கூடியதுபோல விரைந்து எழுந்து சிங்கம்போற் சென்று யானையைக்கிட்டி. மழுவை வலந்திரித்து வீசி அதன்மேற் குலுங்கப் பாய்ந்த னர். மேனின்ற பாகரோடும் யானை திரிந்து இவர்மேற் கதுவவே, அதன் நிலந்தோய் பெருந் துதிக்கை அற்றுக் கீழேவிழும்படி தொண்டர் மழுவினற் றுணித்தனர். அதன் பின்பு பாகரிருவர், குத்துக்கோற்காரர் மூவர் ஆக ஐவரையும் கொன்று நின்றூர் எறி பத்தர். தாயின் தலையன்பின் முன் அச்சம் எதிர்த்து நிற்குமோ ?

இவ்வாறு இறந்துபட்டார் ஒழிய, வேறுஉள்ளார் ஓடி அரசரது அரண்மனை வாயில் காவலரிடம் பட்டவர்த்தனமும் பட்டது - பாகரும் பட்டனர் என்றறிவிக்க, அவர்கள் அரசருக்கு அறிவித்தனர். அரசர் அளவில்லாத கோபங்கொண்டனர். அத னால் யார் செய்தார் ? என்றுங் கேளாது உடனே எழுந்து புறப்பட்டனர். சேனைத் தலைவர் கட்டளைப்படி நால்வகைச் சேனையும் வந்து நெருங்க, அரசர், ஒரு குதிரையின் மேலேறி யானையும் பாகரும் பட்ட களத்தை அடைந்தார். அங்குப் பகைப்புலத்தார் எவரையுங் கண்டாரில்லை. ஆனால் ஒரு மழுவேந்தி வேறிரு கையுடைய யானைபோல நின்ற அன்பரை முன்பு கண்டார். சிவனடியாராதலின், இவ்வியானையைக் கொன்றவ ரிவரென்றெண்ணாராய், "யாவர் வென்றவர்?" என்று வெடிபட முழங்கக் கேட்டனர். பாகர் " இவ்வியானைமுன் செல்லும் அரசருமுளரோ ? கொன்றவர் மழுவேந்திய விவரே " என்றனர். அரசர், " அரனடியார்கள் பிழைபடினன்றிக் கொல்லார் ; பிழை பட்டதுண்டு" என்று மனத்துட்கொண்டு, மேன்மேலும் வரும் சேனைகளின் வரவினை நிறுத்தித், தமது குதிரையினின்றுமிழிந்தனர்."இந்த மெய்த்தவர் யானைமுன் சென்ற போது வேறொன்றும் புகுதாவிட்ட தவமுடையேனானேன்; கெட்டேன்! இவ்வடியார் இத்தனையும் முனிவதற்குரிய என்ன பெரியபிழை நிகழ்ந்ததோ ?" என்று எண்ணி னர் ; அணுக வந்தவர்களை விலக்கினர் ; அன்பர் முன்னர்த் தொழுது சென்றனர் ; " ஐயனே ! அடியேன் ஈது அறிந்திலேன் ; அங்கு அடியேன் கேட்டதொன்று ; அது நிற்க ; இந்த யானைபின் குற்றத்திற்குத் தீர்வு அதனையும் பாகரையும் எறிந்ததே போதுமோ ? அருள்செய்யும் " என்று பணிந்து நின்றனர். அதுகேட்ட எறிபத்தர், " சென்னியே ! இறைவருக்குச் சாத்தச் சிவகாமியார் கொணர்ந்த திருப்பள்ளித் தாமத்தை இந்த யானை பறித்துச் சிந்தியதாதலின் அதனைத் தண்டித்து வீழ்த் தேன் ; யானை தீங்கு செய்யவும் அதனை விலக்காமையாற் பாகரும் பட்டனர்; இதுவே இங்கு நிகழ்ந்தது " என்றூர். அரசர், மிகஅஞ்சிச், " சிவனடியார் தம்மைச் செய்த இந்த அபசாரத்துக்குத் தீர்வு இவற்றூற் போதாது ; என்னையுங் கொல்லவேண்டும்; ஆயின் தேவரீர் கையிலுள்ள மங்கலம் பொருந்திய மழுவினூலே கொல்லப்பெறுதற்கு யான் தகுதியுடையே னல்லேன் ; இது அதற்குத் தக்கது " என்று தமது உடை வாளை உருவி அவர் கையிலே நீட்டினூர். எறிபத்தர் அதுகண்டு பயந்து, " ஓ ! கெட் டேன் ! அளவற்ற புகழாரது அன்புக்கும் அளவில்லாமை கண்டு அறிந்தேன் " என்று எண்ணி, அவர் தந்த வாளினை வாங்கமாட்டாராயினும், அவர் தம்மைத்தாமே மாய்த்

துக்கொள்வர் என்று அஞ்சி, அதனைத் தடுக்கும்பொருட்டு வாங்கினர். "என்னை வாளினுற் கொன்று என் பிழை தீர்க்க ஒங்கிய உதவி செய்யும் பேறு இவர் பாற் பெற்றேன்" என்று அவர் களித்தனர். அது கண்ட எறிபத்தர், மேலும் பயந்து "யானையும் பாகரும் மடியவும் உடைவாளைத் தந்து தம்மையும் கொல்லச் சொல்லும் இவ்வன்பர்க்குத் தீங்கு நினைத்தேன் என்ற எண்ணம் விளைவித்தேன்; முன்னை என் உயிரைப் போக்கி முடிப்பதே முடிபு" என்று உட்கொண்டு அவ்வாளினைத் தம் கழுத்திற் பூட்டி அரியலுற்றார். அரசர் இது கண்டு "பெரியோர் செய்கை இருந்தபடி இது என்! ஓ! கெட்டேன்!" என்று விரைந்துகூடி வாளினையும் அவர் தம் கையினையும் சேரப் பிடித்துக்கொள்ளவே தொண்டர் வருந்தி நின்றார். அப்போது அளவிலாப் பேரன்பு காரணமாய் சேர்ந்த இவ்விடுக்கண் எல்லாம் தீர்க்கக் கண்ணுதற் பெருமானருளாலே "அன்புமிக்கீர்! தொண்டினிலையை உலகிற் காட்டும் பொருட்டு மலை யானைந்தும் செயல் திருவருளினுலே கூடிற்று" என்று திருவாக்கு ஆகாயத்தில் எழுந்தது; யானையும் பாகரோடும் எழுந்தது. எறிபத்தர் வாளினை விட்டு அரசர் பாதத்தில் வீழ்ந்து வணங்கினர். அரசர் வாளைப்போக எறிந்து எறிபத்தர் பாதங்களைத் தொழுது வணங்கினர். இருவரும் எழுந்து அசரீரியாய் எழுந்த திருவாக்கினைத் தொழுது நின்றார்கள். பூங்கூடையில் மலர்கள் நிறைந்திடக் கண்டு சிவகாமியாரும் வாழ்ந்து நின்றார். உறங்கி விழித்ததுபோல் எழுந்த யானையைச் செலுத்திப் பாகரும் அணைந்தனர். எறிபத்தர் வேண்ட, அரசர் யானையினை மேற்கொண்டு தமது திருவளர் கோயில்புக்கனர். சிவகாமியார் தம்பிரான் பணிமேற்கொண்டு சென்றனர். "அரனடியார்கள் அறிதற் கரியார்" என்று வியந்து எறிபத்தர் தமது நியதியான திருப்பணி நோக்கிச் சென்றார்.

இவர் பின்னர்ப் பல்காலம், இத்தன்மையவாகிய வன்பெருந்தொண்டுகள் செய்து வாழ்ந்து முடிவில் திருக்கயிலையிற் கணநாயகராய் விளங்கினர். எறிபத்தரது ஆண்மையும் வளவனர் பெருமையும் இவர்க்கு நாளும் அருளும் இறைவனே அளக்கிலன்றி மற்று யாவர் அளந்தறியவல்லார்?

---

**தலவிசேடம்:—கருவூர்** - இத்தலம் கொங்குநாட்டிற் பாடல் பெற்ற ஏழு தலங்களில் ஒன்று. ஆம்பிராவதிநதியின் வடகரையிலுள்ளது. காமதேனு வழிபட்டு வரம் பெற்ற காரணத்தால் இதன் ஆலயம் **ஆனிலை** என்று பெயர் பெறும். காமதேனு திருப்பேருநிற் பட்டிப்பெருமானைப் பூசித்து அவரது திருநடங் கண்டு, பின்னர் அவரது அருள் வழியே சென்று இத்தலத்தை அடைந்து பூசித்துப் பேறு பெற்றதென்பது வரலாறு. பல முனிவர்கள் ஆமிர (மாமரம்) உருவமாகி நின்று இதன் கரையிற் றவஞ் செய்த காரணத்தால் இந்நதி இப்பெயர் பெற்றது. திருவிசைப்பா அருளிய கருவூர்த்தேவர் நதியடைந்த தலம். இவர் சன்னிதி தனியாகத் தெற்குப் பிராகாரத்தில் உள்ளது. இத்தலம் சோழர்கள் முடிசூடும் தலைநகரங்கள் ஐந்தில் ஒன்று.

இது தென்னிந்திய இருப்புப்பாதையில் ஈரோடு - திருச்சிராப்பள்ளிப் - பிரிவில் **கருர்** என்ற நிலையத்தினின்று மேற்கில் கற்சாலையில் ஒரு நாழிகை யளவில் அடையத் தக்கது. பதிகம் 1. சுவாமி **பசுபதீசுவரர்**. தேவியார் **சவுந்தரியவல்லி, கற்பகவல்லி** என்ற இருவர்.

**கற்பனை:**—(1) புதிதாக நாடு கொண்ட அரசர் பகைப்புலத்தவர் தம் நாட்டுக்குள் வரக்கூடிய பல வழிகளையும் அடைத்துக் காவல் பொருந்தியதொரு புதுவழி உண்டாக்குதல் நாடு காவல்செய் முறைகளிலொன்றும்.

(2) அடியவர் தொண்டினுக்கு அடாதன அடுத்தபோது முன்வந்து தீர்த்து அவர்தம் திருத்தொண்டினை முட்டின்றி நிகழச் செய்தல் பெரும் திருத்தொண்டாகும்.

(3) அன்போடும் விதிப்படி உரிய பூப்பறித்துத் தொடுத்துக் காலத்திற் சிவனுக்குச் சாத்துதல் அரியதோர் சரியைத் திருத்தொண்டாம்.

(4) மகாசுவமியில் நாடு விழாக்கொண்டாடுதல் சிறப்புத் தரும்.

(5) விலங்கு முதலிய குறைந்த அறிவுடைய பிராணிகளேயாயினும் சிவாபராதஞ் செய்தல் நீது. அவ்வாறு செய்யின் அவையுந் தண்டிக்கப்பட்டுச் சோகக்கற்பாலன. அவை அவ்வாறு செய்யாது காத்தல் அவற்றைச் செலுத்துவோர் கடமை. அக்கடமையினின்றும் வழுவுதல் சிவாபராதமும் பெருந் தண்டனைக்குள்ளாகும் பெரும் பாவமுமாம். குறைந்த அறிவுடைய பிராணிகளைக் காப்போரும் அவற்றை உடையோரும் அவற்றால் நேரும் எதங்களுக்குப் பொறுப்புடையோர் என்பது இக்காட் குற்றத்தண்ட நீதியினும் விதித்தது.

(6) தாம் செய்யும் சிவப்பணிவிடைகளுக்கு இடையூறு நேர்ந்தபோது சிவனிடத்தே முறையிடுவது பெரியோர் செய்கை.

(7) யானை சிவனடியார்களுக்கு வழிப்பகை. கோச்செங்கட்சோழ நாயனார் சரிதமும் உன்னுக.

(8) தம்மால் அன்பு செய்யப்பட்டார்க்குக் கெடுதி நேருங்கால், அதனை விலக்க முற்படுவதில் தமக்கு எவ்வகைப் பெருங் கேடு வருவதாயினும் அஞ்சாது மேற்சென்று காவல் புரிவது தலையன்புடையோர் தன்மை. தாயினது தலையன்பின் முன்பு அச்சம் நிற்குமோ ? நில்லாது.

(9) சிவனது திருவடிச் சார்பு பெற்ற உறைப்பினாலே சிவனடியார்கள் பெரு வீரமுடையார். அஞ்சாநெஞ்சுடன் எதையுஞ் செய்யவல்லவராவர். " வானந் தளங்கிலென் ?.....ஒருவனுக்காட்பட்ட வுத்தமர்க்கே " என்பது அப்பர் சுவாமிகள் திருவிருத்தம். அவர்கள் தமது செயலைக் கூறும் சொல்லும் வீரமுடையன. 590 - 591 - வீரச்சுவை காண்க.

(10) பெருங் கோபத்தால் விழுங்கப்பட்டார், தீரவீசாரிக்கும் மனநேர்மையை யிழப்பர். "காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண், ஆய்த லறிவுடையார் கண்ணதே - காய்வதன்கண், உற்ற குணந்தோன்று தாகு முவப்பதன்கட், குற்றமுந் தோன்றுக் கெடும் " என்பது நீதிநூல். மிக்க கோபத்தினைப் போலவே மிக்க மகிழ்ச்சியினையும் தமதுள்ளங் கவர்ந்து மேலெழாதபடி காத்தல் அறிவு பெற்ற பயன்.

(11) மன்னன் குறிப்பின் வழி ஒழுகி உலகங் காத்தலில் அமைதல் தற்றிரத் தலைவர் கடன்.

(12) சிவனடியார்களான அன்பர்கள் குணமிக்கவர்கள் ; பிழைகாணில்லாது வெகுளி கொள்ளார் ; பிறவுயிர்களுக்குத் தண்டமுஞ் செய்யார்.

(13) தம்மாலன்புசெய்யப்பட்ட அடியார்களைக் கண்டபோது தாம் அன்பு கொண்ட ஏனை உலகப் பொருள் எவையேயாயினும் அவற்றின்மேல் வைத்த காதலினும் பன்மடங்கு காதல் பெருகுதல் உண்மையன்பர் தன்மை.

(14) தாம் அன்பு வைத்த பொருள் வேறு எதுவேயாயினும் அதனுக்கு ஓர் சிவனடியாரால் ஊறு நேரக்காணில் பிழை தம் பொருளின்மேலதே என்று கொண்டு அஞ்சுதல் உண்மையன்பர் தன்மை. தமது பெருந் தேவியின் மூக்கினைச் செருத்துணையார் வார்த்தனர் என்று தெரிந்தபோது அரசராகிய கழற்சிங்க தேவர் தேவியாரது கைதடிந்த செயலையும் இங்கு வைத்துக் காண்க.

(15) தம்முடைப் பொருள்களாற் பிறருக்கு எதம் நேரிடா வண்ணங் காத்தலும், அவ்வாறு நேர்ந்தவழி அதற்குத் தாமும் பொறுப்பேற்றலும் யாவர்க்குங் கடன். அதனினும் அரசரிடத்து அக்கடமை மிகப் பெரிது. 121-ம் பாட்டிற் கூறியன இங்குக் காண்க. மேலும் இப்பிழைகள் சிவாபராதமாயினபோது பெரிதும் அஞ்சித் தம் உயிரையும் அதற்கீடாகக் கொடுக்க முற்படுவது பேரன்பர்களின் தன்மை.

(16) சிவப்பணிவிடையிலும் அடியார் பணிவிடையிலும் பயன்படுகின்ற கருவிகள் மங்கலமுடையன. அவற்றுற் றண்டிக்கப்படுவோர் புனிதமுடையோர். அடியவர்களை எதிர்கொள்ளுங்கால் எடுத்தேந்தப்படும் எனைய மங்கலங்களுடன் சேர்த்துத் திருக்கோயிற் றிருவலகு முதலியனவும் மங்கலப் பொருள்களாய் ஏந்தப் பெற்ற சிறப்பும் காணத் தக்கதாம்.

(17) அன்பர்களது மனத்தில் அவர்க்கு ஊறு செய்வதாக ஓர் எண்ணம் உண்டாக்கத்தக்க செய்கை ஒருவர்செய்தல், அவ்வாறு தாம் நினையாது செய்யினும், பெரும் பாவமாம்.

(18) அடியார்கள் செய்யும் உண்மைப் பணிவிடைக்கு இடையூறுபோல கேர்வனயாவும் இறைவனதருள்வழி கேர்வனவாம். அவற்றை இறைவன் • முன்னின்று தீர்ப்பன்.

(19) அடியார்களின் அன்பு அளவிடப்படாதது. " அம்பல நிறைத்தார் தொண்டறிவதற் கரியார் ". " அளவிலாத பெருமையர் ". " நீண்டதொல் புகழார் ".

(20) அடியார் பெருமைகளை அவர்க்கருளும் சம்பர் தாமே அளக்கிலன்றி வேறு எவரும் அளக்கும் வலியிலர்.

(21) கொலை, களவு முதலியன தீயனவாம் என்பது நீதி நூல், சமய நூல், உலக நூல்களின் விதி. ஆயின் அவற்றின் கருத்து நோக்காது எல்லாவிடத்தும் அவை தீயன என்று கொள்ளுதல் அமையாது. சிவத்திருத்தொண்டுக்கு இடையூறு செய்தாரைக் கொல்லுதல் பெரு நூல்களில் விதித்ததேயாம். இங்குக் கொலை தீமையாகாது சிவபுண்ணியமாமென்பது. என்னை ? திருத்தொண்டுக்கு அவ்வாறு இடர் செய்தார் மறுமையிற் கொடிய நரகத்தன்ப மடையாதபடி அது காக்கும் ; இவரைக் கண்டு பிறரும் இடர் செய்து கெடாதபடி காக்கும் ; பணிவிடையில் நேரும் இடையூறு கண்டு, மூதிர்ந்த அன்பு பெரிதோர் பயந்து தொண்டு செய்யாது காலங் கழியாதபடி காக்குமாதலி னென்க. உலக நூலிலும் கொலை செய்தார்க்குக் கொலைத்தண்டம் விதித்தல் இக்கருத்துப் பற்றியதேயாம். "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ், களைகட் டதனொடு நேர்" - திருக்குறள். பிறவுயிர்களைப் பொருளாசை முதலிய காரணம்பற்றிக் கொலை செய்வோர், களவுசெய்வோர் முதலிய கொடியவர்களினும் அடியார் தொண்டுக் கிடர்புரிவோர் பெரும்பாவிகள் என்பது உண்மை நூற்றுணிபு.

எறிபத்தநாயனார் புராணம் முற்றும்.

உ

திருச்சிற்றம்பலம்

# 9. ஏனாதிநாத நாயனார் புராணம்

தோகை

"ஏனாதிநாதன்ற னடியார்க்கு மடியேன்"—திருத்தொண்டத்தொகை

வகை

பத்தனே யேனாதி நாதனைப் பார்மீ டெயினனென்னு
மத்தனைத் தன்னே டமர்மலைந் தானெற்றி கீறுகண்டு
கைத்தனி வாள்வீ டொழிந்தவன் கண்டிடப்ப ணின்றருளு
நித்தனே யீழக் குலதீப னெனபரிக் கீணிலத்தே—திருத்தொண்டர் திருவந்தாதி

விரி

608. புண்டரிகம் பொன்வரைமே லேற்றிப் புவியளிக்குந்
தண்டரள வெண்கவிகைத் தார்வளவர் சோணாட்டில்
வண்டறைபூஞ் சோலை வயன்மருதத் தண்பணைசூழ்ந்
தெண்டிசையு மேறியசீர் மூதூ ரேயினனூர். க

புராணம் - ஏனாதிநாதர் என்ற பெயருடைய நாயனாரது சரிதவரலாறும் பண்புங் கூறும் பகுதி. நிறுத்த முறையானே இலேசலிங்க சருக்கத்தில் இரண்டாவதாய் ஏனாதிநாத நாயனாரது சரிதங் கூறத் தொடங்குகின்றார்.

தோகை - ஏனாதிநாத நாயனாருடைய அடியவர்க்கு நான் அடியேனாவேன்.

வகை - பத்தரும், ஏனாதிநாதர் என்ற பேருடையவரும், உலகத்தில் மீடிய எயினனூரின் அத்தராகியவரும், தம்முடன் அமர் செய்தானது நெற்றியில் திருநீற்றினைக் கண்டதனாலே தாம் முன்னர் அவனைக் கொல்ல எடுத்திய வாளினை (ப் பயன்படுத்தாது விட்டதனாலே) எறிந்துவிடாமல் நின்று அவன் நினைத்தபடியே தம்மைச் செய்யும்படி நின்றருள்கின்ற நித்தரும் ஆகிய பெரியாரை இப்பெரிய உலகத்தே ஈழக்குலச் சான்றவர் என்று சொல்வர்.

முதனூல் நாயனாரது பெயர் கூறிற்று. வகை தூல் அவரது பண்பும், ஊரும், பேரும், குலமும், வரலாறும் கூறிற்று. இவை விரித்த வகை விரிதூலினுட் கண்டு கொள்க.

எயினன் - எயினனூர். வீடொழிந்து - விடுவதை யொழிந்து. வீடு - பகுதி முதனீண்டமுதனிலைத் தொழிற் பெயர். இரண்டாம் வேற்றுமைத் தொகை. கைவிடாமல் என்றபடி. வாளினால் அமர்செய்ய நின்றவர் அது செய்யாது நின்றார்; அதனாலொழியாது வாளினை விடாமல் மலைவார்போல் - சேர்வார்போல் - நின்றார்; நெற்றியில் நீறு கண்டதனால் அவ்வாறு நின்றார்; அவன் தம்மைக் கண்டிக்குமிறுதிவரை நின்றார்; கிராயுதரைக் கொன்றனனும் தீமை அவனுக் கெய்தாமை வேண்டுமென்னு

மருளால் நின்றூர் - என இச்சரித நிகழ்ச்சி பலவும் உட்கொண்டுணர நின்றருளும் என்றூர். அவன் கண்டித்ததனால் ஒழிந்தாரல்லர்; அழியாத் தன்மையே பெற்றூர் என்பார் நீத்தூர் என்றூர். இறைவன் நித்தன். அவனை யடைந்தோரும் நித்தர். **கண்டு** - கண்டதனால். முன்பு எக்காலமும் காணாது அன்று கண்டாராயினும் கண்ட போதே என்பதும் குறித்தது. **ஈழக் குலதீபன்** - ஈழக் குலச் சான்றவர் மரபை விளக்க அவதரித்த விளக்குப் போல்வார். பத்தனை - நாதனை - அத்தனை - நித்தனை - நீணிலத்து - தீபன் என்பர் என முடிக்க.

608. (இ - ள்) வெளிப்படை. புலிக்கொடியை இமயமலையின்மேல் நாட்டி, அவ்வெல்லைவரையினும் பரந்த தமது நாட்டினைக்காவல் செய்யும், குளிர்ந்த முத்துக்கள் கட்டிய வெண்கொற்றக்குடையும் வெற்றி மாலையும் உடைய சோழர்களது வளப்பம் மிக்க **சோழநாட்டிலே** வண்டுகள் பாடுதற்கிடமாகிய பூக்கள் மிக்க சோலைகள் சூழ்ந்த வயல்களையுடைய மருதத்தின் குளிர்ந்த பண்ணைகளாற் சூழப்பட்டதாய், எல்லாத் திக்குக்களிலும் தனது சிறப்பு எறிய பழையனூர் எயினனூராகும்.

**(வி - ரை) புண்டரிகம்** - புலி. வடசொல். **பொன்வரை** - இமயம். **ஏற்றி** - வென்று, அதற்கடையாளமாக ஏற்றி. இவ்வரலாறு முன் 552 பாட்டின் கீழ் உரைக்கப்பட்டது.

**புவியளிக்கும்** - இப்புராணம் பாடிய காலத்துச் சோழர் அரசாட்சி வலிமையொடும் நிலை பெற்று நடந்தமையின் **அளிக்கும்** என நிகழ்காலத்தாற் கூறினர். சோழ அரசர் வாள்வீட்டி நின்ற சார்புபற்றிய சரிதமாதலின் முன்புராணத்தில் (552) இச் செய்தி கூறிய ஆசிரியர், அரசருக்கு வென்றி வடிவாட்படை பயிற்றும் தன்மைத் தொழில் விஞ்சையிற் றலைமை பெற்றூர் சரிதமாதலின், அரசர் வெற்றிக்கு இவர் போன்ற படைத்தொழிலாசிரியரே காரணராம் எனுந் தொடர்புபற்றி அவ்வெற்றிச் செயலை மீண்டும் இச்சரிதத்தினும் குறித்தார். இதனானே சரிதத் தொடக்கத்து நாட்டுச் சிறப்புரைத்தபடியுமாம். என்னை? நல் அரசர் வெற்றியாலே நாடு பெருமையும் சிறப்பும் பெறும் என்பது. மேற் சரிதத்தில் கருவூர், சோழரது தலைநகராதலின் நகரச் சிறப்புப்பற்றி நகரொடு புணர்த்து இதனை விரித்த ஆசிரியர் இங்கு நாடு பற்றிய பெருமைக் குறிப்பிற் கூறியதும் உன்னுக. "கொற்றவ னகபா யன்பொற் குடைநிழற் குளிர்வதென்றூல், மற்றிதன் பெருமை யெம்மால் வரம்புற விளம்ப லாமோ?" (85) என்று நாடு அரசனுற் சிறப்புப் பெறுவதனை விளக்கியது காண்க.

**தண்தாரள வெண் கவிகை** - **தண்கவிகை** - நாடு அதன் கீழ்க் குளிர்ந்து வாழச் செய்வதால் **தண்** என்றூர். "குடைநிழற் குளிர்வது" என்றமை காண்க. **வெண்** - வெண்மை புகழினையும் தூய்மையினையும் குறிக்கும் அடையாளம். **தாரளம்** - தனது முன்னைக் கட்டினின்றும் முத்து விடுபடுதல் போலப் பசிப்பிணி முதலிய கட்டுக்களினின்றும் நாட்டினை விடுவித்து வாழச் செய்தல் குறிப்பு. முத்துக்களினியல்பு 492-ன் கீழ் உரைக்கப்பட்டது பார்க்க. **தார்** - வெற்றிக் கறிகுறியாக அணியும் மாலை. சோழர் களுக்குரிய அடையாள மாலையாகிய ஆத்தி எனினுமாம்.

**சோணாடு** - சோழர் நாடு சோணாடு என மருவி நின்றது. அரசரது காவலால் நாட்டின் சிறப்புக் கூறிய ஆசிரியர் அக்காவலாற் போந்த விளைவாகிய வளத்தை நகர் வளத்தின் வைத்துக் கூறுகின்றூர்.

பூஞ்சோலையும் வயலும் பணையும் இம்மைப் பயனோடு இறை வழிபாட்டுக்குரிய பலனும் தருவன ஆதலின் இங்கு நகரச் சிறப்புக் கூறியவாற்றால் இம்மை மறுமை வீடு என்னும் மூன்று பயனும் குறித்தபடி காண்க. அவாய்நிலையால் இவற்றிற் கின்றியமையாத ஆற்றுவளமுங் குறிக்கப்பட்டது. எனவே நாடு - நகர் - ஆறு - முதலிய பலவும் இப்பாட்டால் ஒருங்கே கூறிய அழகுகண்டு கொள்க.

சூழ்ந்து - சூழப்பட்டு.

எண்திசையும் ஏறிய கீர் - எல்லாத்திசைகளிலுமுள்ளார்க்கும் இறைதிரு மீற்றின் சிறப்பினை எடுத்துக்காட்டி வழிப்படுத்தும் சிறப்பு. ஏறிய - எண்திசையுள்ளாரும் ஏறுதற்கு - அறிந்து உய்வதற்குக் - காரணமாகிய சிறப்பு என்றலுமாம்.

எயின்மூதூர்—என்பதும் பாடம். 1

609. வேழக் கரும்பினொடு மென்கரும்பு தண்வயலிற்
சூழக் கதிர்ச்சாலி தானோங்குந் தன்மையதாய்
வாழக் குடிதழைத்து மன்னியவப் பொற்பதியி
லீழக் குலச்சான்ற ரேனாதி நாதனார். உ

(இ - ள்) வெளிப்படை. குளிர்ச்சிபொருந்திய வயல்களில் நாணற்கரும்பினோடு மென்கரும்பும் தாழும்படி கதிர்ச்சாலிதான் ஓங்கிவளரும் தன்மையுடையதாக (அதனால்) வாழ்வு பெறும் பெருங்குடிகள் தழைத்து நிலைபெற்ற அந்த அழகிய நகரிலே ஈழக்குலச்சான்றார் மரபிலே வந்தவர் ஏனாதி நாதனார் என்ற பெரியார்.

(வி - ரை) வேழக்கரும்பு - மென்கரும்பு - கரும்புவகைகள். வேழக்கரும்பு - நாணற்கரும்பு-குச்சிக்கரும்பு என்று வழங்குவர். இவை கடினமான தண்டுடையனவாம். கரி முதலிய பிராணிகள் நாசம் செய்யக்கூடாதனவாகி நாணல் போன்ற சிறிய தண்டுடையன. இவற்றின் கடினத்தன்மையைக் " கருஞ்சகட மிளகவளர் கரும்பு " (மேகராகக் குறிஞ்சி - திருக்கழுமலம் 6) என்றருளினர் ஆளுடையபிள்ளையார். மென் கரும்பு-மெல்லிய கரும்புவகை. இவற்றின் மேல்பாகம் இலகுவில் உடைந்து சாறுதரக் கூடியன ; இவை சாறுமிகவுடையன ; இவற்றைச் சாறுபிழிந்து பயன்படுத்துதலோடு மக்கள் நேரே பல்லினுற் கறித்தும் உண்டு சுவைப்பர். மென் என்றது இலகுவில் உடைத்துச் சாறுபெறுதற்குற்ற மென்மைத்தன்மை குறித்தது. " விரும்பு மென்கணுடையவாய் விட்டுநீள் - கரும்பு தேன்சொரியுங் கணமங்கலம்" (அரிவாட்டாயர் - புரா - 1) என்றது காண்க. மென்கரும்பை ஒடு விருதி தந்து வேழக்கரும்பினைச்சார வைத்தது பெரும்பான்மை இக்கட்டின் இவ்வகையே மிகும் சிறப்புப்பற்றி. கரும்பின் வகை விசேடங்களைப் பயிர்நூலுடையார்பாற்றெரிக.

தண்வயலில் - வயன்மருதத்தண்பணை என்று மேற்பாட்டிற் கூறியதனையே தொடர்ந்து குறித்தபடி.

கரும்புதாழக் கதிர்ச்சாலி தான் ஓங்கும் தன்மை - கரும்புதாழும்படி நெல் ஓங்குவன. கரும்பல்ல நெல்லென்ன (5) என்ற பாட்டில் உரைத்தவற்றை நினைவுகூர்க. நிக்தையணி. கதிர்ச்சாலி - கதிர்விட்டபருவத்துள்ள நெற்பயிர். இவை தழைத்தோங்கி நிமிர்ந்து பரந்து நிற்கும் இயல்புடையன ; நீர் - நிலம் - உரம் - விதை வலிமை - முதலிய வளங்களால் சாலியின் தண்டுகள் பருத்து நிமிர்ந்து மென்கரும்பின் றண்டு போல்வன. நெல்லும் கரும்பும் இக்காட்டு வயல்களில் அடுத்துக்காண உள்ளன. இரண்டும் மருதத்துக்குரியன. நெல் நிமிர்ந்து கதிருடன் நிற்கும் பருவத்தே கரும்பு சாய்ந்து நிடக்கும் காட்சியினாலே கரும்பு தாழச் சாலிஓங்கும் தன்மையதாய் என்றார். தாழ - வீழ்ந்து தாழ்ந்து நிடக்க என்றும், குறைந்து காட்ட என்றும் இரு பொருளும் படவைத்த தன்மைநவிற்சி யணியின் அழகு காண்க. நெல் இன்றியமையாத உணவுப் பொருளாதலும், கரும்பு அவ்வாறன்றி உருசிவேண்டுவார்க்கு அமுதுக்கு உருசிதரும் அறுவகையினுள்ளொன்றாகி ஓரோவழி வேண்டப்படுதலின் அத்தனைச் சிறப்பில்லாத அதனினும் தாழ்த்தலும், அதனால் மேலே மிகுதலும் குறித்த நயமும் காண்க. மேற்பாட்டில் வயன்மருதம் - என்றார். இங்கு வயலின் வினைபொருள்களுள் உயர்ந்த இருவளக்கள் கூறினர். வலிய கரும்பு தாழ மெல்லிய சாலி ஓங்கும் என்றதனால்

அரனுக்கன்பர் ஆலின சிக்தைபோல அலர்ந்தன கதிர்கள் - (71) என்றபடி அடியார் தோற்றங் காட்டும் மெலியானுகிய அதிசூரனுக்கு வலியாராகிய காயனூர் தலைவணங்கித் தாழும் இச்சரித நிகழ்ச்சி பற்றியதோருட்குறிப்பும் கிற்பது காண்க. இவ்வாறு உலகியற் பொருள்களை அவ்வச்சரிதக் குறிப்புக் கண்ணுற் கண்டு காட்டுதல் ஆசிரியர் மரபு.

**வாழக்குடிதழைத்து** - **வாழ** - மேற்கூறியவாறுள்ள நிலவளத்தால் வாழ்வடைய. **குடி தழைத்து மன்னிய** - **குடி** - அரச அங்கம் ஆறனுள் ஒன்று. "படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண், ஆறு, முடையா னரசருள் ஏறு" என்பது குறள். **வாழ** என் பதனைச் சாலி என்பதனோடு சேர்த்து சாலி தன்மையதாகி வாழ என்றலுமாம்.

**தழைத்து** - மக்கள், செல்வம் - அறிவு ஒழுக்கம் இறைவன் வழிபாடு-முதலியவற் றால் மிகுத்து. **மன்னிய** - நிலைபெற்ற. வழிவழியாய் வந்த. **வாழ் அக் குடி** என்று பிரித்து வாழ்கின்ற அந்தக் குடிகள் என்றலுமாம்.

**ஈழக் குலம்.** இஃது சான்றூர் குடிவகைகளில் ஒன்று. **ஈழம்** - இங்கு ஈழநாட் டின் மொடர்பு பற்றியதோ என்று சிலர் ஐயங் கொள்கின்றனர். **ஈழம்** - கள் என்ற பொருளில் வழங்குதலின், **ஈழக்குலம்** என்றது கள் இறக்கும் தொழில் பூண்ட குலம் என்றும், அது **சான்றார்** மரபில் ஒரு பிரிவு என்றும் கூறுவர். மலைநாட்டில் இத் தொழில் செய்பவர் **ஈழவர்** என்ற பெயரால் வழங்கும் ஒரு சாதியினர் உண்டு. கொங்கு நாட்டில் இத்தொழில் செய்வோர் **சான்றார்** (சானார் என மருவி வழங்குவது) என்ற மரபுப் பெயரால் வழங்கும் ஒரு சாதியினரும் உண்டு.

இங்கு ஆசிரியரும், வகை நூலுடையாரும், புராண சாரமுடையாரும் **ஈழக்குலம்** என்று குலத்தொடு புணர்த்தியே கூறியிருத்தலின் இது ஈழம் என்ற நாட்டின்மொடர் பாற் போந்ததென்று கொள்ளுதற் காதாரமின் றென்பர். புராண வரலாற்றில் குலங் குறியாது **சான்றார் ஏனாதிநாதர்** என்று கூறினர். **குலம்** - மரபின் உட்பிரி வென்பது வழக்கிலும் காண்க. **சான்றார்** சான்றவர் மரபினர். சான்றார் எனுதி நாதனார் என்க. பெயர்ப் பயனிலை கொண்டது.

**ஏனாதி நாதனார்** - "ஏனாதி நாதன்" என்ற முதனூலாட்சியை எடுத்தாண்டபடி. இச்சரிதத்துப் பிற இடங்களிலும் (607, 614, 618, 632, 644) இவ்வாறே கூறியதும் காண்க. "ஏனாதி நாதனே" என்று வகை நூலிலும், "ஏனாதி நாதனார்" (11) என்று புராண சாரத்தினும், புராண வரலாற்றினும், "நீண்டபுக ழேனாதிநாதர்" என்று திரு நாமக் கோவையினும் ஒப்பக் குறித்தல் காண்க. **ஏனாதி நாதர்** என்பது அவர் பெயர் போலும். எனவே ஏனாதி காயனார் என்று குறித்த பதிப்புக்கள் தவறென்க.

**ஏனாதி** என்பது முன்னாளில் அரசர் சேனைகளின் அதிபர்களாகிய உத்தியோகத் தின் பெயர் என்றும், இதற்கடையாளமாக வெற்றியி லணியும் ஏனாதித் தங்கப்பட்டமும் வீரனுக்கு ஏனாதிமோதிரமும் அரசர்கள் தருதல் மரபாமென்றும், சிந்தாமணி - மணி மேகலை - புறநானூறு முதலிய பழந்தமிழ் நூல்களால் அறிகின்றோம். ஏனாதி, எட்டி, காவிதி முதலியன பட்டப் பெயர்களாம் (தொல் - பொருள்). **நாதர்** - தலைவர் - முதல் வர் - என்ற பொருளில் வந்தது. Commander-in-Chief முதலிய நவீனப் பெயர் களும் காண்க.

**ஏனாதி நாதர்** என்பது இவ்வாறு அவரது உத்தியோகப் பெயராய் நின்றதோ? அன்றித் "தங்கள்குலத் தாயத்தின் ஆனை செய்தொழிலா மாசிரியத் தன்மை" (614) என்றதனால் அதுவே இக்குடியில் வந்த முதல்வர்க்கு இயற்பெயராய் வழங்கிற்றோ? என்பது ஐயம். **குலச்சிறை** - என்ற பெயரும் இவ்வாறே காணப்படுமென்பர். இப்பாட் டான், நிலவளம், நீர்வளம், குடிவளம், காயனாது பெயர், மரபு ஆதிய பலவும் கூறினர்.

**தன்மையவாய்**—என்பதும் பாடம்.

610. தோன்மைத் திருநீற்றுத் தொண்டின் வழிபாட்டி
னன்மைக்க ணின்ற நலமென்றுங் குன்றாதார்
மன்னர்க்கு வென்றி வடிவாட் படைபயிற்றுந்
தன்மைத் தொழில்விஞ்சை யிற்றலைமை சார்ந்துள்ளார். ஈ

(இ - ள்) வெளிப்படை. (அவர்) பழமையாகிய திருநீற்றுத் தொண்டினை வழி படும் திறத்தின் நன்மையிலே நிலைத்து நின்ற தன்மையின் என்றும் வழுவாதவர்; அரசர்க்கு வெற்றிதரும் வாட்படைபயிற்றும் தொழிலாகிய வித்தைத் திறத்திலே தலைமை பெற்றுள்ளார்.

(வி - ரை) **தோன்மைத் திருநீறு** - முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாயுள்ளானது திருநீறு - வேதத்திலுள்ளது - என்றுமுள்ளது - பராசத்தியின் ரூபமாயுள்ளது (பராவணமாவது நீறு) என்பனவாதி பொருள்பற்றித் **தோன்மை** என்றார்.

**திருநீற்றுத் தொண்டு - நீறு** - "எரியலா லுருவமில்"லா ஞெகிய இறைவன் தன்னே யடைந்த உயிர்களின் பாசங்களை அரித்தலின் அரன் எனப்படுதல் போல, அவ்வெரி யின் விளைவாய்த் தன்னை அணிந்தாரது பாவங்களை நீற்றுதலால் **நீறு** எனப்படும். "பயி லப்படுவது நீறு பாவ மறுப்பது நீறு" - தேவாரம். நீறு பூசிய திருவேடத்துடன் தொண்டு செய்வோர் **நீற்றுத்தொண்டு** எனப்பட்டார்.

**தொண்டின் வழிபாடு** - நீறணிந்த தொண்டர்களை வழிபடுதல். தொண்டர் மேனி மேலணிந்த திருநீறுகண்டபோது, மங்கையரது இளங்கொங்கையிற் செங்குங்குமங் கண்ட இளைஞர் மனம் அதன் வசப்பட்டு அதனுல் ஈர்க்கப்படுதல் போல, மனமுருகி வசீகரிக் கப்பட்டு அவர் ஏவின செய்து அவர்வழி நிற்றல். அவர் வழியிலே படுதல் **வழிபாடு** எனப்பட்டது. " வெண்டிரு நீற்றின் பொலிவு மேற்கண்டேன் " (ஆதலின்) **இவர்தங் கோள்கைக் குறிவழி நிற்பேன்** (645) என்றது இவர்தஞ் சரிதக் குறிப்பு.

**வழிபாட்டின் நன்மைக் கண்** - வழிபாடாகிய இனிய நன்மையிலே.

**நலம்** - தன்மை. **என்றும் குன்றாதார்** - **என்றும்** - எக்காலத்தும். அதனுல் தம் முயிர் போக நேர்வதைத் தாம் அறிந்த அக்காலத்தும் என்ற பிற்சரிதக் குறிப்புக் காட்ட **என்றும்** என்றார். **குன்றாமை** - அத்தன்மையினின்றும் வழுவாதிருத்தல்.

**வென்றி....விஞ்சை** - வெற்றிதருவதாகிய வாட் படைக்கலப் பயிற்சி செய்விக்கும் **வித்தை**. வாள்பிடித்து நெருங்கிப் போர்செய்து வெற்றி பெறுவது அந்காள் வீரப் போர். நெடுந்தூரம் மறைந்து நின்று, இவர், பாலர், முதுவர், பிணியாளர் என வும், இவர் வேறு இன்னர் எனவும் ஒன்று மறியாதேயும் பெரும் போர்க் கருவிகளாகிய பொறிகளின் அனல் தூவி மக்களைப்பெருவாரியாக நாசம்செய்து பொருட்பே றொன்றே கருதிப் போர்செய்வதே மாபாகும் இந்காட் பேடிப்போருடன் இதனை ஒப்புநோக்கி உலகம் உணர்ந்துய்வதாக.

**வடிவாள்** - சிறப்புவகையால் நஞ்சு முதலிய ஊட்டியும் வடித்தெடுத்துக் கூர்மை யும் பதமும் ஆக்கப்பட்ட வாள்.

**பயிற்றுந் தன்மைத் தொழில்** - அரசரை வாள் பயிற்றுவிக்கும் தன்மையுடைய ஆசிரியத் தொழில். பயிற்றி அதனுல் வரும் ஊதியமாகிய வளத்தையே தமது உணவுரி மைத் தொழிலாகக் கொண்டவர் என்பது. "செய் தொழிலா மாசிரியத் தன்மைவளம்" (614) என்றதினுலும் காண்க.

**விஞ்சையிற்றலைமை** - வித்தையிற் பிறர் எவரும் இணையின்றிச் சிறந்து நிற்றல்.

**(ஏனாதிநாதனாராகிய) அவர் - குன்றாதார் - சார்ந்துள்ளார்** என எழுவாய் தொக் கது. வரும்பாட்டிலும் இவ்வாறே அவர் ஆக்குவார் என முடிந்தது.

உயிரோ டுடன்சேரும் சிறப்புப்பற்றி உள்ளுணர்ச்சித் திறமான சிவ வழி பாட்டின்முழுலை முன்னர்க்கூறி, அதற்குத் துணையாயின மட்டில் வேண்டப்பட்டு உடலோடொழியும் உலகவிலைத் தொழிலைப் பின்கூறினர். இவ்வாறே திருநீலகண்டர் புராணம் (2 - 3), திருநாளைப்போவார் புராணம் (12 - 13), திருக்குறிப்புத்தொண்டர் புராணம் (112 - 113) முதலிய பல இடங்களிலும் கண்டு கொள்க. 3

611. வாளின் படைபயிற்றி வந்த வளமெல்லா
நாளும் பெருவிருப்பி னண்ணுங் கடப்பாட்டிற்
றாளும் தடமுடியுங் காணுதார் தம்மையுந்தொண்
டாளும் பெருமா னடித்தொண்டர்க் காக்குவார். ச

(இ - ள்) வெளிப்படை. (அவர்) வாட்படை பயிற்றுவித்து அதனால் வந்த ஊதிய மாகிய வளங்களையெல்லாம் ஒவ்வொருநாளும் மிக்க விருப்பத்துடன் பொருந்திய கடமை வகையிலே, தமது அடிமுடிகளை அறிய முடியாதார்களையும் ஆட்கொள்ளும் சிவபெரு மானது அடித்தொண்டர்களுக்காகப் பயன்படுத்துவார்.

(வி - ரை) **வந்த வளம் எல்லாம்** - பயிற்சி செய்வித்தற்கு ஊதியமாக வந்த எல்லாவகை வளங்களையும். பொன்னும் - நெல்லும் - துணியும் முதலிய பலவும் அடங்க **வளம் எல்லாம்** என்றார். அரசர்க்குப் படை பயிற்றுதலால் அவை பிருதிபெற வந்தன என்பார் **வளம்** என்றார்.

**நாளும்** - காலநாளும். ஒருநாள் ஆக்கினர் - பலநாள் ஆக்கிச்சலித்தார் என்ப தின்றி எந்நாளும்.

**நண்ணும் கடப்பாட்டில்** - கடப்பாடு-இதுவே தமது செய்கடன் என்றுகொண்டு. "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கின் கருத் தினை உன்னுக. நண்ணும்-தொண்டர்களது இன்முகமும் உவகைமொழியும் பொருந்தப் பெறும் என்க. "இன்முகங் காணுமளவு" **குறள்** (சுகை), "தொண்ட ரின்று தாழா தமுதுசெய்யப் பெற்றிங் கவர்த மலர்ந்தமுக, நன்று காண்பது" (**சிறுத்தொண்டர் புராணம்**-57-"தொண்ட ரிச்சையி னமுது செய்ய வளித்துளார்"(4); "அன்ப ரானவ ரளவி லாருள மகிழவே, நாளுநாளு நிறைத்து வந்து நுகர்ந்த தன்மை"-**இளையான்குடி மாறர் புராணம்** (5); "திருத்தொண்டர், வாய்ப்புறுமென் சுவையடிசில் மாங்கனியோ டினிதருந்திப், பூப்பயின்மென் குழன்மடவார் செயலுவந்து போயினர்." - **காரைக்கா லம்மையார் புராணம்** - (21) முதலியன காண்க. அன்பர் பணியின் வாய்ப்பும் அவர் தம் கல்வரவும் நண்ணும் என்றலுமாம்.

வளமெல்லாம் - விருப்பால் - கடப்பாட்டில் - ஆக்குவார் என்று முடிக்க.

இவ்வாறன்றி நண்ணும் கடப்பாட்டில் காணுதார் - என்று கூட்டி அவனை எவ் வகையால் (அன்பு வகையால்) நண்ணக் கடமைப்பட்டாரோ அவ்வகையாற் காணுதா ராய், வேறு வகையாற் (ஆணவ வகையால்) காணலுற்றார் என்றுரைப்பது மொன்று. "புக்கணைந்து புரிந்தல ரிட்டிலர்" என்பது முதலாக இலிங்க புராணத் திருக்குறுந் தொகையினுள் அப்பர் சுவாமிகள் அருளிய கருத்துக்கள் காண்க. இப்பொருளில் விருப் பால் - தொண்டர்க்கு - ஆக்குவார் என்று முடிக்க.

**தாளும் தடமுடியும் காணுதார்** - பிரம விட்டுணுக்கள் அடிமுடி தேடிய சரிதங் குறித்தது. **காணுதார் தம்மையும்** - காணுதாராகிய அவ்விருவரையும். உம்மை இழிவு சிறப்பு. அருள் பெறத் தகுதியில்லாதிருப்பவும், ஆட்கொள்ளும் பெருமான் என்க. இறைவனது எண்குணங்களுட் பேரருளுடைமை குறித்தது.

**காணுதார்** - இவ்வாழ்வான் என்பதுபோலப் படு விகுதி தொக்கதாகக் கொண்டு, காணப்படாதவராகிய இறைவன் என்று பொருள் கூறி, அவ்விறைவனையும் தொண்டு

ஆளும் - ஏவல் கொள்ளவல்ல - தொண்டர் என்றுரைப்பாருமுண்டு. ஆளுடைய நம்பி களுக்கு சோறு இரந்து கொடுத்தது முதலிய அருள் நிகழ்ச்சிகளை இங்கு எடுத்துக் காட்டுவர்.

**தொண்டு ஆளும்** - தொண்டுசெய்யும் பேறு தந்து ஆளுகின்ற பெருமையுடைய.

**அடித்தொண்டர்** - மற்றொரு பற்றுமின்றி அவனது திருவடியே பற்றுக்கோடாகக் கொண்ட அடியார். " திருவடி மறவாப் பான்மையோர் " எனுங் குறிப்பினின்றவர். தகுதி யில்லாதாரையும் ஆளும் பேருளுடையான் திருவடி பிடித்தாராதலின் இவர் களும் தம்மையடைந்த, தகுதி யில்லாதாரையும் உருப்படுத்தி உய்விப்பர் என்பது கருத்து.

**தொண்டர்க்கு ஆக்குவார்** - வளங்களை அவர்க்கே பயன்படுமாறு உய்ப்பவர்.

மேற்பாட்டில் நாயனாரது சரித இயல் கூறிய ஆசிரியர் இப்பாட்டில் அவரது நியதியான ஒழுக்க இயல் கூறினர். 4

612. நள்ளார் களும்போற்று நன்மைத் துறையின்க
ணெள்ளாத செய்கை யியல்பி னெழுகுநாட்
டுள்ளாத தங்க டொழிலுரிமைத் தாயத்தி
னுள்ளா னதிசூர னென்பா னுளனனன். 5

(இ - ள்) வெளிப்படை. பகைவர்களும் பாராட்டும்படியான நன்மைத் துறை யிலே எவ்வகையானும் இகழப்படாத செய்கையில் இயல்பிலே இவர் ஒழுகுகின்ற காலத்தில் விடுபடாதபடி பிணைத்துள்ள தமது தொழில் உரிமைத் தாயத்தில் உள்ளா னாய் அதிசூரன் எனப்படுவா னொருவனிருந்தான்.

(வி - ரை) **நள்ளார்களும் போற்றும் நன்மைத்துறை** - நன்மைத் துறையாதலின் பகைவர்களும் போற்றினர்கள். பகைவராலும் பாராட்டப்படத் தக்கவாறு இவரது நன்மைநிலை யொழுக்கம் சென்றது என்பதாம். **நள்ளார்** - இவர்பால் வாள்விஞ்சை பயின்ற அரசரால் வெல்லப்பட்டோரும் வெல்லப்பட நின்றோரும் ஆகிய பகைவர். **போற்றும்** - பாராட்டும் வகையால் பகைத்திறம் ஒழித்து உய்யும். இவர் அன்பர் ஆத லின் இவர் எவரையும் நள்ளாராகக் கொண்டாரலர். இவர்பாற் படைபயின்ற அரசர்க்கே அரசகாரியத்தில் நள்ளார் உளராவர் என்க. அங்ஙனமாயினும் ஒருவன் தாயபாகப் பொருமை கருதி இவர்பால் ஏலா இகல்புரிவானுயினன் எனச் சரிதந் தொடங்கிச் செல்லுமுகத்தால் இப்பாட்டில் இவரது இயல்பு ஒழுக்கங்கூறி அவ்விகல் கொண்டோ னையும் உடன் கூறிய உள்ளுறை காண்க. "புல்லாதார் மூரண்டக்கிப் பொருள்கவர்வா ரென்பதெவன்?, செல்லாத பல்வேறு தீபத்துச் செங்கோன்மை, வல்லாரும் தத்தம தேத் தரியபொருள் வரவிடுத்து, நல்லாரா யொப்புரவு நட்படைய நடக்கின்றார்" (திருவாத வூரடிகளுக்கு உபதேசித்த படலம்) என்ற திருவிளையாடற் புராணக் கருத்தை இங்கு வைத்துக் காண்க. உம்மை உயர்வு சிறப்பு.

நள்ளார்களும் போற்றுதல் பகைமை பற்றி யிகழாது, தெறிவழுவாது நிற்கும் தன்மை நோக்கிப் புகழ்தல். **நன்மைத்துறை** - நல்லொழுக்கம் - திருநீற்றினன்பு. **எள்ளாதசெய்கை இயல்பு** - என்றும் கைவிடா தொழுகும் தன்மை. இயல்பு - அவர் நினைந்து மேற்கொள்ள வேண்டுவதொன்றன்று - இஃதவரியற்கையேயாம் என் னும்படி. விபூதியைப் பாதுகாக்கு நன்னெறியில் நூல்களால் இகழப் படாத திருத் தொண்டினை நூலாராய்ச்சியின்றி யியற்கையாகவே கொண்டொழுகுகின்ற - என்பது இராமநாத செட்டியார் உரைக் குறிப்பு.

**தள்ளாத தங்கள் தொழில் உரிமைத் தாயம்** - விலக்க முடியாத வண்ணம் தமது தொழிலின் உரிமை பெற்ற தாயபாக முடையவன். **தாயத்தின் உள்ளான்** - தாயாதி,

தாயத்தால் மட்டும் உள்ளானேயன்றி வேறு எவ்வகையானும் உள்ளானல்லன் என்பது குறிப்பு.

**அதிசூரன் என்பான்** - **என்பான்** - எனப்படுவான். படுவிகுதி தொக்கது. தன்னையே தான் சாலமதித்துத் தன்னை அதிசூரன் என்று சொல்லிக்கொள்வான் என்றுரைத்தலு மொன்று. வரும்பாட்டுக்காண்க. **உளன் ஆனன்** - அவ்வகையிலே உள்ளவனுயினன்.

அரிசூரன்—என்பது பாடம். 5

613. மற்றவனுங் கொற்ற வடிவாட் படைத்தொழில்கள்
கற்றவர்க டன்னிற் கடந்துளா ரில்லையெனும்
பெற்றிமையான் மாநிலத்து மிக்க பெருமிதம்வந்
தற்றுலகிற் றன்னையே சால மதித்துள்ளான். சு

(இ - ள்) வெளிப்படை. மற்ற அவனும் வெற்றி வடிவாட்படைத் தொழில் கற்றவர்களிலே தன்னைவிட மேம்பட்டவர்கள் இல்லை என்னுந் தன்மையால் உலகிலே மிகுந்த பெருமித முடையானுய், உலகில் தன்னைத் தானே மிகவும் மதித்துள்ளானுயினன்.

(வி - ரை) **மற்றவன்** - அவன் மற்றையவனே ; நமரல்லன் என்பது குறிப்பு.

**எனும் பெற்றிமையால்** - என்ற எண்ணம் படைத்ததனுல். **பெருமிதம்** - அகங்காரம். தானே தன்னைப் பெரியானுக மதித்துக் கொள்ளுதல். நூல்களில் வருத்த மெய்ப்பாடுகள் எட்டனுள் பெருமிதம் என்பதொன்றும். அது "கல்வி தறுகண் ணிசைமை கொடையென" நான்கா வகுப்பர். இவை உண்மையில் மிக்ககல்வி முதலிய பெருமைகளால் வருவது. இதனையே வீரம் என்றும் சொல்வர். எல்லாரொடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்றல் **பெருமிதம்** எனப்படும் என்றுர் போசிரியர். ஆயின் இங்கு அதிசூரன் உற்றது ஒருவாற்றனும் அவ்வகையுட்பட்ட பெருமித மாகாது தன்னிற் கற்றாரில்லை எனும் பெற்றிமையாலே தன்னைத்தானே சால மதித்த அகங்காரத்தின்பாற்பட்ட தென்பார் **பெற்றிமையால்** என்றுர். **மிக்க** - அளவுக்கு மிகுந்த.

**தன்னையே சால மதித்துள்ளான்** - தானே தன்னைப் பெரியானென்று மதித்துக் கொண்டான். பிறர் மதிப்பதே மதிப்பாம். பிறர் தன்னைப் பெரியவன் என மதிப்பவும் தான் அவ்வாறு சொல்லாது சிறியனுக எண்ணி ஒழுகுதல் வேண்டுமென்பது நன்னெறி. விசுவாமித்திரர் எல்லா வன்மையுமுடையரா யிருந்தும் வசிட்டராற் சொல்லப் பட்ட பின்னரே பிரமரிஷியாயினர் என்ற சரிதமும், அதுபற்றி யெழுந்து வழங்கும் "வசிட்டர் வாக்கில் வந்தாலே பிரமரிஷி" என்ற பழமொழியும் காண்க. "தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த நீச்சுடர், நன்னீர் சொரிந்து வளர்த்தற்றுல்" என்றது நீதி நூல். "தன்னைப் புகழ்தலுந் தகும்புல வோர்க்கே" என்று விதித்த இடங்கள் வேறு. அதுவே வேறிடங்களிற் றற்புகழ்தல் கூடாதென்பதனை வலியுறுத்தும். இங்கு அதிசூரன் அதனுள் அமையாது எங்கும் தானே தன்னை மதித்து அகங்கரித்து ஒழுகினனென்பதாம். இதனுலே நீதி வாக்கியப்படி தன் தொழிலிற் குறைந்து கேடடைந்தான் என்பது அவன் கைமேற் பெற்ற பலனுக அடுத்து வரும் பாட்டாற் கூறினுர்.

**உலகில் தன்னையே மதித்துளான்** என்றமையால் உலகில் வேறு பலரும் இவனை மதிப்பாரிலர் என்றதும் குறிப்பாம். 6

614. தாளுள் விருத்திகெடத் தங்கள்குலத் தாயத்தி
னுரை செய்தொழிலா மாசிரியத் தன்மைவள

மேனுளுந் தான்குறைந்து மற்றவர்க்கே மேம்படலா
லேனுதி நாதர்திறத் தேலா விகல்புரிந்தான். எ

(இ - ள்) வெளிப்படை. தனது தொழின்முறை குறைவுபடத் தங்கள், குலத் திற்குரிமையாகிய தாய உரிமையிற் குறையாத செய்தொழிலாகிய வாட்படை பயிற்றும் ஆசிரியத் தொழிலான்வரும் ஊதியமானவை மேன்மேல் நாளும் தனக்குக் குறைந்து மற்ற அவருக்கே மேம்பட்டு வருதலாலே ஏஞ்திநாதர் திறத்திலே பொருந் தாத பகைமை பாராட்டுவானுயினன்.

(வி - ரை) விநுத்தி - பிழைக்கும் வழி. சிவனேபாயம் என்பது வடமொழி வழக்கு. கெட - சிவனேபாயம் கெடுதலால். கெட (அதனால்) குறைந்து எனக் கூட்டுக.

குலத்தாயுத்தின்.....வளம் - தமது அந்தக் குலத்தினுள்ளார் அனைவர்க்கும் தாய பாக உரிமையின்படி பொருந்தியதாகிய. தாயாதி பாத்தியப்பட்ட என்பது இந்நாள் வழக்கு. ஆனுத செய்தொழில் - அரசர்க்குப் படைபயிற்றும் தொழிலாதலின் குறைவு படாத செய்தொழிலாயிற்று. ஆசிரியத் தன்மை - படை பயிற்றுவிக்கும் உபாத்திமை. வளம் - அதனாற் பெறும் பலவகை ஊதியங்களின் பெருமை குறித்தது. 611 பார்க்க.

மேல் நாளும் - மேல் - எதிர்காலத்திலே வரவர. நாளும் - நாணுளும் - படிப்படி யாக. மற்றவர்க்கே - இவனின் வேறுகிய அவருக்கு. ஏகாரம் தேற்றம். பிரிநிலை.

மேம்படல் - இவனுக்குமேல் நாளும் குறைந்தது போல, அவ்வளவிற்கு அவர்க்கு மேம்பட்டது என்க.

ஏஞ்திநாதர் திறத்து - ஏஞ்திநாதர் பால். அவரிடத்திலே என்க. திறம் - பகுதியு மாம். திறத்து - பகுதியிலே பக்கத்திலே.

திறத்து - அவரது திறத்தின்கண் என்றுரைத்தலுமாம். திறமாவது படைபயிற் றுந் தொழில், விஞ்சையிற் றலைமை சார்ந்தமை, அதனால் வளம்பெற வாழ்தல், நள்ளார் களும் போற்றும் நன்மைத் துறையினிற்றல், வளத்தின் மேம்படல் முதலியன.

ஏலா இகல் - ஏலா - அவர் மாட்டுப் பொருந்தத் தகாத. பொருமை காரணமாக எழுந்ததாகலின் ஏலாததாயிற்று. அவர் முன்னிலையில் தன் குறை அறிந்து திருத்திக் கொள்ளமுயலாமற் பொருமை கொண்டான். "தம்மினுங் - கற்றுரை நோக்கிக் கருத் தழிக கற்றவெலா, மெற்றே யிவர்க்குகா மென்று" என்று நீதிநூல் விதிப்பவும் அவ்வாறு ஒழுகாது அழுக்காறு கொண்டதனால் அது அவாவை விளைத்தது ; அது வெகுளியை யும், அது இன்னுச் சொல்லையும் முறையே உண்டாக்கின. இதனால் அறந் தேய்ந்தது; மறம் வளர்ந்தது ; அதனாற் பொருள் தேய்ந்தது ; என முறையிற் கண்டு கொள்க. "அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ, டவ்வையைக் காட்டி விடும்" என்பது திருக்குறள்.

இகல் - பகைத் தன்மை. புரிந்தான் - பல காலமும் மனத்தில் வைத்துச் சிந்தித் தான். "திருச்செற்றுத் தீயுழி யுய்த்து விடும்" என்றபடி இகல் புரிந்தான் என்க. "அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொல்" என்றபடி இவை முறையின் விளைக்கும் மேல்விளைவை மேலிரண்டு பாட்டானுங் கூறுகின்றார். முன்கின்ற செற்றம் - (616) என்றதனுங் காண்க. 7

615. கதிரோ னெழமழுங்கிக் கால்சாயுங் காலை
மதிபோ லழிந்துபொரு மற்றவனுஞ் சுற்றப்
பதியோ ருடன்கூடப் பண்ணி யமர்மேற்சென்
றெதிர்போர் விளைப்பதற்கே யெண்ணித் துணிந்தெழுந்தான். அ

(இ - ள்) வெளிப்படை. ஞாயிறு மேலே வரவரத் தன் ஒளி குறைந்து மங்கு கின்ற காலைநிலாப் போலக் குறைவடைந்து பொருமை மேற்கொண்ட மற்ற அந்த

அதிசூரனும் தனது சுற்றத்தாரையும் ஏனை ஊரவரையும் கூட்டி எனதிகாதர் மேற் சென்று எதிர்த்துப் போர் விளைப்பதற்கே நினைத்து அதுவே துணிந்து எழுந்தான்.

(வி - ரை) கதிரோன் - ஞாயிறு. மதியுங் கதிருடையவனுயினும், அவனது ஒளி ஞாயிற்றின் கதிரொளியினது எதிர்த் தோற்றமேயாம் என்ப. ஆதலின் அடைமொழி யின்றி வழங்கும் கதிரோன் என்பது ஞாயிற்றினையே குறிப்பது மரபு.

எழ மழுங்கி - எழுதலால் மழுக்கமடைந்து. எழுவதற்குமுன் இருந்த விளக்கம் சிறிது சிறிதாகக் குறைந்துபடுதலை மழுங்கி என்றார்.

கால்சாயும் - இறுதியில் முற்றும் மங்கி உருத்தெரியாது போகின்ற. கால் - (காலுதல்) கதிர் வீசுதலைக் குறிப்பது போலும். சாய்தல் - கதிர் வீசித் தோற்றப்படும் நிலை குறைதல். கால் சாய்தல் - ஒரு சொன்னீர்மைப்பட்டு, முன் தோற்றத்தினின் றும் வீழ்தலைக் குறிக்க வழங்குவதாயிற்று. கருதிய பொருள் கைகூடும் என்புழிக் கை என்பதுபோலக் கால் என்பதும் உபசர்க்கம் போல்வதோ நிடைச்சொல் என்றலுமாம்.

மதிபோல் - வினைபற்றிவந்த இரட்டையுவமத்தின்பாற்படும். கதிரோனெழுதல்- குலத்தாயத்தின் செய்தொழில்வளம் காளும்எனதிகாதர்க்குமேம்படுதலுக்கும், காலைமதி யழிதல்,அவ்வளத்தின்முன்னிலை அதிசூரனுக்கு காளும் குறைதலுக்கும் உவமங்களாம்.

போற - பொறுமையுண்ட. மற்றவன் - அயலான். அழுக்காறு கொண்டு தீமை குறித்தானுதலின் மற்றவன் என்றார்.

சுற்றப் பதியோர் - தனக்கியைந்த சுற்றமும் பதியோரும் என்க. எண்ணும்மை தொக்கது. வரும்பாட்டில் சுற்றத்தோடும் போர்மள்ளர் கூட்டத்தோடும் என்றது காண்க. வல்லெழுத்து மிகுதலால் பதியோராகிய சுற்றம் என்று பண்புத்தொகை யாகக் கொள்வாருமுண்டு.

உடன்கூடப் பண்ணி-தன்னுடன்வந்து கூடும்படி - சேரும்படிசெய்து. திரட்டி. பண்ணி - செய்து. கள்ளார்களும் போற்றும் நன்மைத்துறையில் நின்ற நாயனார்க் கெதிர்முகமாய் எவரும் இவனுடன் தாமாகச் சேராராதலின் பல உபாயங்களாலே தன் உடன்கூடப் பண்ணித் திரட்டினனென்பது குறிப்பு.

அமர் மேற் சென்று - தன்மேல் வராதிருப்பவும், போர்க்கு வேறு காரண மில்லா திருப்பவும் பொருளாசை பற்றிய அழுக்காறு ஈர்ப்பத் தான் வலிந்து அவர் மேற் சென் றான் என்பது. இந்நாள் மேனாட்டார் கீழ்நாட்டார்களுள் நிகழும் பெரும் போர்களின் தொடக்க வரலாறுகளை இங்கே வைத்துக்காண்க. மக்கட்கூட்டம் தீக்குணங்களின் வசப் பட்டொழுகும் நிலை மிக வருந்தத்தக்கது.

எதிர்போர் விளைப்பதற்கே எண்ணி - எதிர்த்து எவ்வாற்றானும் சண்டை உண் டாக்குதற்கே எண்ணங்கொண்டு. எகாரம் தேற்றம். வலியச் சண்டைக் கிழுக்க என்ப தலக வழக்கு. எண்ணி - துணிந்து - எழுந்தான்-நினைத்தல் - அவ்வாறு நினைத்ததனைத் துணிதல் - அதனைமேற்கொண்டு, நிச்சயித்து, எழுதல் - இவை ஒரு செயல் நிகழுமுன் உண்டாகும் மனநிலைகளின் வெவ்வேறு கூறுகள். எழுந்தபின் நிகழ்ந்தவை இவற்றால் எவப்பட்ட உடற்செய்கைகளாம். இவை வரும் பாட்டிற் காண்க. முன்பாட்டில் அவன் கொண்ட அழுக்காறும், இப்பாட்டால் அதனால் விளைந்த அவாவும் வெகுளியும், வரும் பாட்டில் அதன்மேல் விளையும் இன்னுஞ்சொல்லும் பின்னர், அது பற்றி வந்த அறம் பிறழ்ந்த செயலும் கூறிப் போந்த முறைகாண்க.

பண்ணியவர் மேல்—எண்ணியது துணிந்தான்—என்பனவும் பாடங்கள். 8

616. தோள்கொண்ட வல்லாண்மைச் சுற்றத் தொடுந்துணையாங்
கோள்கொண்ட போர்மள்ளர் கூட்டத் தொடுஞ்சென்று
"வாள்கொண்ட தாயம் வலியாரே கொள்வ"தென
மூள்கின்ற செற்றத்தான் முன்கடையி னின்றழைத்தான். கூ

(இ - ள்) வெளிப்படை. தோளின் வலிய ஆண்மை கொண்ட சுற்றத்தாருடனே, தனக்குத் துணையாகக் கொள்ளப்பட்ட போர்மள்ளர்களின் கூட்டத்தோடு சென்று, எஞ்திகாதரது மனையின் முன் கடையில் நின்று, "வாள்பயிற்றும் தொழில் தாயத்தை அதில் வலியவர்களாயுள்ளாரே கொள்ளத்தக்கவர்" என்று, மிக மூண்ட கோபத்தினை யுடையனாய் அறை கூவினன்.

(வி - ரை) வல் ஆண்மை தோள் கொண்ட என மாற்றுக.

**துணையாம் கோள் கொண்ட போர் மள்ளர் கூட்டம்** - இவனுக்குத் துணையாகக் கொள்ளப்பட்ட போர்வீரர் கூட்டம். **கோள்கொண்ட** என்றது இவன் அவர்களைக் கூலி முதலியவற்றுற்றுணையாகக் கொண்டான் என்றுதல்; அவர்கள் இவனை ஆசிரியனாகக் கோடல் முதலிய பல தொடர்புகளால் தமக்குத் துணையாகக் கொண்டார்கள் என்றுதல் உரைகொள்ளக் கிடக்கின்றது. இங்குத் துணையாந்தன்மை எவ்வாற்றானும் இயல்பாலேனும் மெய்மையாலேனும் அன்பாலேனும் உண்டாகாது ஒருவகையால் வளைத்துக் கொள்ளப் பட்டதே யென்பார் **துணையாங் கோள் கொண்ட** என்றார். **கோள்** - குய்யச்சொல் - புறங்கூறல் எனுங் குறிப்புப்பெறக் கொள்வது மமையும்.

**சுற்றத்தார்** - அதிசூரனது சுற்றத்தார். எனவே தாய உரிமையினால் நாயனார்க்கும் இவர்கள் சுற்றத்தாராவர். ஆயினும் அவன் போலவே, வேறு காரணமின்றி அழுக்காறு கொண்டு பகைமைப் படுவோர் சுற்றத்தாரிற் பல்லோர். இதுலக இயல்பாம். "எதார்த்தவாதி வெகுசன விரோதி" என்ற பழமொழியும் காண்க. நன்மைத்துறைக்குப் பகை பல என்க.

**வாள்கொண்ட தாயம்** - வாட்படை பயிற்றுகின்ற குலத்தாயத் தொழிலுரிமை. **வலியாரே கொள்வது** என - போரில் வெற்றிபெறும் வலிமையுடையார் எவரோ அவரே கைக்கொள்ளத்தக்கது என்று சொல்லி. **என** - அழைத்தான் என்று கூட்டுக. **அழைத்தல்** - அறைகூவிப் போருக்கு அழைத்தல். "ஆர்கொல் பொர அழைத்தான்?" என்று (618) பின்னர் இதனை விளக்கியது காண்க.

**முள்கின்ற செற்றத்தால்** - அழுக்காறு அவாவை விளைக்க, அவாவிய பொருள் கிட்டாத போது அது வெகுளியைத் தரச், செற்றம் மூண்டது. அது இன்னுச் சொல்லை விளைக்குமாதலின் அவன் "தாயம் வலியாரே கொள்வது" எனச் சொல்லத் தகாத சொல் கூறினன். **செற்றத்தான்** - செற்றமுடையானனி என்றலுமாம்.

**முன்கடையில்** - எஞ்திகாதரது மனையின் முன்றிலில். **சுற்றத்தொடும்** - கூட்டத்தொடும் - **சென்று** - **செற்றத்தான்** - **முன்கடையில் நின்று** - "தாயம் வலியாரே கொள்வது" என அழைத்தான் என்று கூட்டியுரைக்க. 9

617. வெங்கட் புலிகிடந்த வெம்முழையிற் சென்றழைக்கும்
பைங்கட் குறுநரியே போல்வான் படைகொண்டு
பொங்கிப் புறஞ்சூழ்ந்து போர்குறித்து நோர்நின்றே
யங்கட் கடைநின் றழைத்தா னெனிலேளா, கo

618. "ஆர்கொல் பொரவழைத்தா?" னென்றரியேற் றிற்கிளர்ந்து
சேர்வுபெறக் கச்சிற் செறிந்தவுடை மேல்வீக்கி
வார்கழலுங் கட்டி வடிவாட் பலகைகொடு
போர்முனையி லேஞதி நாதர் புறப்பட்டார். கக

617. (இ - ள்) வெளிப்படை. வெவ்வியகண்ணுடைய புலியிருந்த கடியகுகையிற் சென்று அதனை அறைகூவி யழைக்கும் சிறுகியகண்ணுடைய குறுகரியே போல்வானகிய அதிசூரன் தனதுபடையைத் துணைக்கொண்டு பொங்கிப் புறத்திற் சூழ்ந்து

போரினைக் குறித்து நேரே வந்து நின்று இடமகன்ற தமது கடைத்தலையில் நின்று அழைத்தவனுடைய ஒலியைக் கேட்டு, கo

618. (இ - ள்) வெளிப்படை. "யாவர் கொல்! போருக்கு அறைகூவியழைத்தவர்? என்று ஆண்சிங்கம் போலக் கிளர்ச்சியுடன் எழுந்து, கச்சுக்கட்டிய உடையை இடையில் வரிந்து கட்டி, வீரக்கழலையுங்கட்டி, வடித்தவாளினையும் பலகையினையும் கொண்டு, போர்க்குத் துணிந்தவராய்த் தமது திருமனையினின்றும் எழுந்தாதர் புறப்பட்டார். கக

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன.

617. (வி - ரை) **வேங்கட்புலி - பைங்கட்குறுநரி** - முறையே எழுந்தாதருக்கும், அதிசூரனுக்கும் வினைபற்றிக் கூறிய ஒப்புமை. அழைக்கும் நரியேபோல்வான் என்றதை நரி அழைக்கின்றதே போல் எனக்கொண்டு மெய்யுற் தொழிலும் பற்றி விரவி வந்த உவமமென்பர். **வேங்கட்புலி - பைங்கட்குறுநரி** என்பன தன்மையணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்கள். **கண்** - இங்குப் பார்வை குறித்தன.

**புலிகிடந்த - கிடந்த** - தான் ஒன்றும் மிகை செய்யாது தன்னளவில் அமைந்து கிடக்கின்ற என்பது குறிப்பு. புலிகிடத்தல் என்பது மரபுமாம். **புலி** - புல்லி என்ற சொற் **புலி** என வந்தது. தனது இரையினை மேற்பாய்ந்து புல்லிக்கொல்வது என்பது பொருள் என்பர். புலி பெருமிதமுடையது. போரிற் சினந்து நேரெதிர்த்துப் பெரும் பிராணிகளின் மீது பாய்வதே யன்றிக் கீழ்மையாய் ஒளித்திருந்து அற்பப்பிராணிகளைப் பற்றி வதைக்காது. **நரி** - வஞ்சனையோடு பதுங்கும். **புலி** - கம்பீரமாய்ப் பாய்ந்து யானை முதலியவற்றையும் எதிர்க்கும். நரியின் தன்மையாகிய வஞ்சம், ஏமாற்றுதல், முதலியவை குறிக்க **நரிப்பு** என்பது மரபு. "அவர் முன்னே நரிப்பாய் காயே னிருப்பேனே?" - **திருவாசகம்**, "திரிச்சி ராப்பள்ளி யென்றலுந் தீவினை, நரிச்சி ராது நடக்கு நடக்குமே" - **திருக்குறுந்தொகை** முதலியவை காண்க.

**வெம்முழை** - கொடிய குகை. **முழை** - மலைக்குகை முதலிய பதிவிடங்கள். அதனுட் பதுங்கிக் கிடக்கும் புலி முதலிய கொடு விலங்குகளின் வெம்மை - கொடுமை - முழையின்மே லேற்றப்பட்டது.

**பைங்கட் குறுநரி - பைங்கண்** - வஞ்சமுட் கொண்ட பார்வையும், **வெங்கண்** - வீரக் தகும்பும் பார்வையும் குறிக்கும். கண் தீயினது கூறுகொண்டதனால் ஒளி கவரும் சத்தியுடையது. புலி - யானை - முதலிய பிராணிகளின் கண்கள் இச்சத்தி மிகுதியுமுடைமையால் இருளிலே சிறிய பிராணிகளையும் பாய்ந்தோடிப் பற்ற வல்லனவாகின்றன. பறவைகளில் ஆந்தை, கோட்டான் கூகை முதலியவற்றிற்கும் நாய்முதலியவற்றிற்கும் இரவிற் கூரிய பார்வை யுண்டு. ஆதலின் அவை பைசாச உருவமாகிய வாயு சரீரங்களையும் காணவல்லன; மக்கள் உயிர் போகுங் காலத்தில் இவை கூவுதல், குரைத்தல் முதலிய அன்னிமித்தங்கள் இது பற்றியே நிகழ்வன என்பது நூற்றுணிபு. மக்களிற் பூனைக்கண்ணுடையாரும் இது போன்றதோ ரொளியுடையார் என்பர்.

**படை கொண்டு - படை** - மேற் சொன்ன சுற்றத்தாரும் மள்ளரும் கூடிய படைஞர். **படை** - வாள், பலகை முதலிய படைகளைக் கொண்டு என்றலுமாம்.

**போங்கி - புறஞ்சூழ்ந்து - போர்குறித்து - நேர்நின்றே** - இவை ஒவ்வோர் தனிச் செயல் குறித்தன. **போங்கி** - வஞ்சினங்கூறி ஆரவாரித்து; **புறஞ்சூழ்ந்து** - அவரது திருமனைப்புறத்திற் சுற்றிவளைத்து. **போர்குறித்து** - போர் உட்கொண்டதைப் புலப்படுத்தும் செயல்பலவும் செய்து; **நேர்நின்று** மறைமுகமாயன்றி நேர்நின்று.

**அங்கட்கடை - கடை** - திருமனையின் முன்வாயில். "கடைமுன் கேளா" - 163, முதலிய வழக்குக்கள் காண்க. **அங்கண்** - அருட்பார்வை யுடையாரது என்றலுமாம்.

ஒலி - இவர் பேர் குறித்துக் கூவித் 'தாயம் வலியாரே கொள்வது' என்ற பொருள்பட அறைகூவி யழைத்த சத்தம். இது சரி ஊளையிதலே போன்ற தென் பார் ஒலி என்ற இலேசாற் குறித்தார்.

**புடை சூழ்ந்து**—என்பதும் பாடம். 10

618. (வி - ரை) **ஆர்கோல் போர அழைத்தார்? - கோல்** - ஐயச்சொல். இவர் அன்பும் அருளும் உடையாராதலின் தமக்குப் பகைவருண்மையை உணராராகவே, **கோல்** என்றது ஆச்சரியக் குறிப்பும் படநின்றது. "கள்ளார்களும் போற்றும்" என்றது காண்க. **போர அழைத்தார்** - "தாயம் போரில் வலியாரே கொள்ளற்குரியார்" என்று போருக்கு அறைகூவினர். **ஆர்கோல்** என்றதனால் அழைத்தான் யாவன் என்றறியாத நிலையிற் கிளர்ந்தனர் என்க.

**அரிஏற்றில் கிளர்ந்து** - கிடந்தபோது வெங்கட்புலி போன்றார் (617). கிளர்ந்த போது அரியேறு போன்றார். போர் என்றுற் றேறுபெருத்துக் கிளர்தல் வீரர் இலக்கணம் என்ப.

**சேர்வுபெறக் கச்சிற் செறிந்த உடை மேல்வீக்கி** - செறிவு பெற்ற உடையின் மேலே சேரக் கச்சினை வரிந்து கட்டி. **கச்சு** - இடையில் உடை நெகிழாமல் வரிந்து கட்டும் உடைக்கோலம். கச்சு இல்லாவிடின் உடை போரினிடை அவிழநேருமாயின் "உடுக்கை யிழந்தவன் கைபோல" என்றபடி உடனே கையானது போரினை விட்டு அவிழ்ந்த உடையினைக் கட்ட முற்படும். படவே, போர் இழக்க நேரிடும். ஆகலின் கச்சினை வரிந்து போர்வீரர் இடையில் உடையின்மேற் கட்டுதல் மரபு.

**கழலும் கட்டி** - **கழல்** - வீரக்கழல். காலில் அணிவது. **வாள்** - பலகை இயற் பகை நாயனார் புராணத்துரைத்தவை காண்க. வாள் பகைவரைத் தாக்கற்கும் (Offensive) பலகை தம்மைக் காத்தற்கும் (Defensive) உதவுவன.

**போர் முனையில்** - யுத்த சன்னத்தராகப் போர் செய்ய முற்பட்டாராக.

**புறப்பட்டார்** - திருமனையினின்றும் வெளியே போந்தனர். அழைத்தானை இன்னானென்றறியாதேயும் ஒலி கேட்டவுடன் போர் முகத்துப் புறப்படுதல் வீரர் செயல். இதனைப் படைச்செருக்கு என்னு மதிகாசத்தில் வைத்துப் பாராட்டினார் திருவள்ளுவதேவர்.

**ஏற்றிற் சினந்து**—என்பதும் பாடம். 11

619. புறப்பட்ட போதின்கட் போர்த்தொழில்கள் கற்கும்
விறற்பெருஞ்சீர்க் காளையர்கள் வேறிடத்து நின்றார்
மறப்படைவாட் சுற்றத்தார் கேட்டோடி வந்து
செறற்கரும்போர் வீரர்க் கிருமருங்குஞ் சேர்ந்தார்கள். கஉ

(இ - ள்) வெளிப்படை. அவ்வாறு அவர் புறப்பட்ட போது இவர்பாற் போர்த் தொழில் வாட் பயிற்சி பெறும் வலிய பெரிய சிறந்த காளைபர்களும், முன்னர்ப் பயின்று வெவ்வேறிடத்தமர்ந்தவர்களும், கொலை புரியும் பல படைக்கலங்களையும் வாளையும் ஏந்திய சுற்றத்தார்களும் இது கேட்டு ஓடிவந்து போரில் வெல்ல அரிய சிறந்த வீராகிய ஏனாதிநாதருக் கிருபுடையும் சேர்ந்தார்கள்.

(வி - ரை) **புறப்பட்டபோது** - ஏனாதியார் தமது மனையை விட்டுப் போர் குறித்து வெளியே வரும்போது. **போர்த்தொழில்கள்.....காளையர்கள்** "மன்னர்க்கு வென்றி வடிவாட் படைபயிற்றும் தொழில்" (610) - உடையவர் ஆதலின் இவர்பாற் போர்த்தொழில் கற்போர் பலர். அவர் தமதியல்பானே **விறல்** படைத்தவர் - தொழில் கற்றதனாலே இயற்கை விறலுடனே சீர் படைத்தவர் - இவர்பாற் கற்றலிற் **பெருஞ் சீர்**படைத்தார் என அடைமொழிகட்கு உரை விரித்துக் கொள்க. **காளையர்கள்**-

இளமை மிக்குள்ளார். அதனலும் துணிவும் வலியும் பெற்றார். இவர்கள் மன்னர் மரபினராதலினலும் ஏனைப் பெருஞ்சீர் பலவும் உள்ளார். தமதாசிரியராகிய காயனர் போர்க்குப் புறப்பட்ட போதில் அவர்பால் வைத்த அன்பினல் அவர்க்குத் துணையாய் எழுந்து வந்தனர் என்க. மனைக்கடையில் வந்து நின்று பொர அழைத்தானதலின் காயனர் புறப்பட்ட போது முதலில் அவருடன் சேர்ந்தார் அங்கிருந்து தொழில் கற்கும் இவர்களேயாவர். இதனலும், பிற சிறப்பாலும் அங்கு வந்து சேர்ந்த காளையர்கள், வேறிடத்து நின்றார், சுற்றத்தார் என்ற மூவகையாருள் இவர்கள் முதலிற் கூறப்பட்டனர். ஏனையோர் கேட்டோடி வந்து சேர்ந்தார் என்றதும் காண்க.

**வேறிடத்து நின்றார்** - அவ்விடத்தன்றி வேறிடத்து நின்றார்கள். இவர்பால் வைத்த அன்பின் மிகுதியால் இது கேட்டதும் தாமிருந்த இடத்தினின்றும் வந்து சேர்ந்தனர். இவர்களே **வேறிடத்து நின்றார்** என்றமையால் முன்னர்க் கூறிய **காளையர்கள்** அங்கு நின்றவர்கள் என்க. தொழில் முதலிய எத்தக் கலையும் கற்போர் தத்தம் ஆசிரியர்பாலே வதிந்து கலைபயிலுதல் முன்னுள் வழக்கும் மரபுமாம். இவ்வழக்கு இக்காள் ஒழிந்தமை வருந்தத்தக்கது. இங்குக் கூறிய **வேறிடத்து நின்றார்** என்போர் பயிற்சி முற்றியபின் வெவ்வேறு தத்தம் துறையில் வாழ்வார்.

**மறப் படை வாட் சுற்றத்தார்** - மேற்கூறிய இவ்விரு வகையாருமன்றிச் சுற்றத்தாரும் வந்தனர். அவரும் வீரமும் படைவல்லாரும் ஆவர் என்பது. (ஒன்று) உண்டாயின போது வந்து கூடியும் ஒன்றற்ற போது சென்றோடியும் விடுவார் சுற்றத்தார் என்போரிற் பல்லோர். பக்கத்திருந்தும் உற்றழி உதவாது நீங்குவார். அவர் உறவல்லர். "உற்றழித் தீர்வா ருறவல்லர்" என்பதுநீதிநூல். ஆயின் இங்கு காயனரது சுற்றத்தார் அவ்வாறன்றிச் சேய்மையிலிருந்தும் செய்தி கேட்டவுடன் விரைவில் ஒடிவந்து படையுடன் போர்முகத்தாய்ச் சேர்ந்தனர். இவரே உண்மையில் அன்பினற் சுற்றி ஒழுகும் இயல்புடைய **சுற்றத்தார்** எனப்படுவர். **மறம்** - வீரம். **படை வாள்** - உம்மைத்தொகை. வேறு பல்படையும் வாளும் பயின்று வல்லவர். சிறப்புப்பற்றி வாளைப் பிரித்தோதினர். படையாகிய வாள் என்பாருமுளர். பின்னர்ப் பல படைகள் கூறுதல் காண்க. இயற்பகையாரின் மனைவியாரது சுற்றத்தார் திறமும் உன்னுக.

**கேட்டு ஓடி வந்து கேட்டு** - அதிசூரன் போருக்கு அழைக்க இவர் தெம்முனையிற் புறப்பட்டது கேட்டு. ஓடி வந்து என்ற விரைவு இவர்பால் இவர்களுக்குற்ற மெய்யன்பின் தீவிரங் குறித்தது. இவர்க்காக இவர்கள் தம் உயிரையும் கொடுக்க முற்பட்டார்கள் என்பது சரிதத்துட் காண்க.

**செறற்கு அரும்** - எதிர்த்துப் போர்செய்தற்கரிய ; **போர் வீரர்** - பெருவீரமுடைய எனதி காயனர். சரிதத்துட் காண்க.

**இருமருங்குஞ் சேர்ந்தார்கள்** - அவர்க்கிருபுறமும் அணிவகுத்துப் பக்கபலமாகச் சேர்ந்தார்கள் ; செறற்கரும் வீராதலின் அவர் துணையாக ஒருவரையும் வேண்டினரில்லை. இவர்கள் தாமே வந்து கூடினர்கள் என்க. **காளையர்கள் - நின்றார் - சுற்றத்தார்** - உம்மைத் தொகை. இவ்வாறன்றி அதிசூரன் சுற்றத்தாரையும் மள்ளரையும் கூட்டிச் சென்றான் (616) என்றதும் காண்க.

**போர்த் தொழில் வாள்**—என்றதும் பாடம். 12

620. வந்தழைத்த மாற்றான் வயப்புலிப்போத் தன்னார்மு
"னந்தமது வாள்பயிற்று நற்றாயங் கொள்ளுங்கா
லிந்தவெளி மேற்கைவகுத் திருவேம் பொருபடையுஞ்
சந்திக் தமர்வினைத்தாற் சாயாதார் கொள்வதென", கஉ

621. என்றுபகைத் தோனுரைப்ப, வேழுதி நாத"ரது
நன்றுனக்கு வேண்டுமே னண்ணுவ"னென் றுண்மகிழ்ந்து
சென்றவன்முன் சொன்ன செருக்களத்துப் போர்குறிப்பக்
கன்றி யிருபடையுங் கைவகுத்து நேர்மலிவார். கச

620. (இ - ள்) வெளிப்படை. (மனைக்கடையில்) வந்து போருக்கு அழைத்த பகைவனுகிய அதிசூரன், வெற்றியுடைய புலியேறுபோன்ற நாயனரின் முன்னே நின்று "வாள் வித்தை பயிற்றுதலாகிய, நல்ல, தாய உரிமையை நாம் கைக்கொண்டு அதன் ஊதியங்களைப் பெறுங்கால், இந்த வெளியிடத்திலே நாம் இருவேமும் அவ்வவர் படைகளைக் கைவகுத்து எதிரெதிர் கலந்து அமர் செய்தால் அதில் வெற்றிபெறுவோரே, அதனைக் கொள்ளத்தக்கது" என வுரைத்தான். கஙு

621. (இ - ள்) வெளிப்படை. இவ்வாறு பகைத்தோனுகிய அவன் சொல்ல, ஏழுதி நாதர் " அது நன்றென்று உனக்கு வேண்டுவதாயின் நான் அவ்வாறே சேர்வேன் " என்று கூறி, உண்மகிழ்ச்சியோடும் உடன்பட்டாராய் அவன் முன்னே குறித்துச் சொன்ன போர்க்களத்துக்குச் சென்று போர் குறித்து நிற்கவே, கோபித்து, இருவர் படைவீரர்களும் அணிவகுத்து எதிரெதிர் போர் புரியலாயினர். கச

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன.

620. (வி - ரை) **வந்து** - தானே வலிய வந்து.

**மாற்றான்** - மாறுகொண்டவன். "இகல்புரிந்தான்" (614).

**வயப்புலிப் போத்து - வயம்** - வெற்றியுடைய - வலிய என்றலுமாம். **புலிப் போத்து** - ஆண்புலி. **போத்து**-மிருகச் சாதியுட் சிலவற்றின் ஆண்பாற் பெயர். "..... .....போத்துங் கண்டியுங் கடுவனும்பிறவும், யாத்த வாண்பாற் பெயரென மொழிப". என்பது தொல்காப்பியம். [பொருளதிகாரம் - மரபியல் 2]. இப்போரில் இங்கு இவரே வெற்றிபெற, அவன் 'உடைந்து புறங்கிட்டான்' (636) எனக் காண்போமாதலின், இவர்க்கு ஆண்புலியை வெற்றியொடு புணர்த்தி உவமித்த ஆசிரியர், மாற்றானுக்கு எப்பொருளையும் இங்கு உவமித்திலர். முன்னர்க் கதிரோனையும் காலை மதியையும் (615) இவரது எழுதலுக்கும் அவனது மழுங்கலுக்கும் உவமித்தார். புலிகிடந்த முழையிற் சென்றழைக்கும் குறுநரி (617) என, இவர் இருக்க அவன் அழைத்தபோது உவமித்தார். போரில் அவன் ஒன்றுக்கும் பற்றுதவன் என்பார், இங்கு எவ்வாற்றானும் உவமித்திலர். ஆக உயர்ந்த பொருளாகிய பரம்பொருளுக்கும் உவமையின்றும். ஆகக் கடைப்பட்டதற்கும் அவ்வாறே என்பது. இவ்வாறே பின்னரும் "வெம்புலி யேறன்னவர்தம்" (635) என்ற பாட்டினுங் காண்க. இறுதியில் இதற்கு மேலாய் அவனை உயிரற்ற பிணமாகிய மாமிசமே என்பார் விடக்கீ என்றும், இவரை வென்றி மடங்கல் - (643) என்றும் குறித்து முடித்ததுவுங் கருதுக. "பேசுவதென் னறிவிலாப் பிணங்களே " (12-ம் சூத்திரம் - 2) என்ற சிவஞானசித்தியாரும் இக்கருத்தே பற்றியது.

**நந்தமது வாள் பயிற்று நற்றாயம்** - " தங்கள்குலத் தாயத்தின் ஆனுத செய் தொழிலா மாசிரியத் தன்மை " (614), " மன்னர்க்கு வென்றி வடிவாட் படை பயிற்றுந் தன்மைத் தொழில்" (610) என்றவை காண்க. **நந்தமது** - நம்மிருவேமுக்கும் உரிமையாகிய, **வாள்** - வாள் வித்தை. **நல்தாயம்** - தாய உரிமையால் வரும் வளம். **நல்** என்றது அரசர்க்கு வாள் பயிற்றும் மேன்மையும் அதனுல் தமக்கு வரும் வளத்தின் சிறப்பும், உலகம் ஓம்பப்படும் நற்பயனுங் குறித்து நின்றது. நந்தமது தாயம், பயிற்றுதலான் வருந் தாயம் எனத் தனித்தனி முடிந்தது. வாள் பயிற்றும் என்றது இடைப்பிற வரலாய்த் தாயத்தை விசேடித்து நின்றது.

**கொள்ளுங்கால்** - அனுபவிக்கும் காலத்தில். அவ்வுரிமையத்தைப் போரிற்சாயாதாரே கொள்ளுதல்லும் என்க. **சாயாதார்** - சாய்தலில்லாதார் - முடிக்தொழியாதார். **சாய்தல்**-

போரில் முடிந்துபோதல். அதிசூரன், தன்னிற் கடந்துளா ரிவ்வுலகிலில்லை என்னும் பெருமிதம் வந்து-தன்னையே சாலமதித்துள்ளான்" (613) ஆதலின் தான் வெல்ல எண்ணினான். ஆயின் "ஏலாஇகல்புரிந்தான்" (614) ஆதலினால் தன்னால் வெல்ல இயலாவிடினும் எவ்வாற்றாலும் கொல்ல எண்ணினான். பெருமிதத்தால் விழுங்கப்பட்ட இவன் போரில் வெல்ல எண்ணியது பிழைத்த பின்னர், ஈனமிகு வஞ்சனையால் வெல்ல எண்ணிச் செயல் செய்தமையாற் காண்க. இவ்வெண்ணங்களால் இங்கு "வென்றார் கொள்வதென" என்னாது "சாயாதார் கொள்வதென" என்றான். என்னை? நேர் முறையால் வெற்றி தோல்வியின்றியே, இச்சரிதத்துப் பின்னர்க் காண்கின்றபடி, வஞ்சனையாலும் சாயாமையும் சாய்தலும் நிகழுமாதலின் என்க.

**கொள்வதென** - உரைத்தான் என்னும் முடிக்குஞ் சொல் எஞ்சி நின்றது; "சிவிகை பொறுத்தானோ சேர்ந்தானிடை" என்ற விடத்துக் "காணப்படும்" என்பது எஞ்சி நின்றது போற் கொள்க. இதற்கு என்று எனப் பொருளுரைப்பாருமுளர். வரும் பாட்டு "என்று பகைத்தோனுரைப்ப" எனத் தொடங்குதலால் அஃதுரையன்றென்க. இங்கு, **என** - என்று எனக்கொண்டும், வரும் பாட்டில் வரும் **என்று** - கதிரோன் எனப்பொருள் கொண்டும், 615ல் கூறிய உவமைக் கேற்பப் பொருள் அமைத்துக், கதிரோனைப்பகைத்த மதி போன்றானாகிய அதிசூரன் கொள்வது என உரைப்ப என்றுரை கூறுவாருமுண்டு.

**இந்த வெளி** - ஊர்க்குப் புறத்தே படைப்பயிற்சி, போர் முதலியவற்றிற்காக உள்ள பொதுவிடம். **இந்த** - அண்மைச்சுட்டு வாள்வித்தை முதலியன பயிற்றுவோர் இருக்கைகளுக்கு அணிமையில் அஃதமைந்ததனைக் குறிப்பது போலும். ஒவ்வொரு தொழில்பற்றிய வகுப்பினர் ஒவ்வோர் தனியிடங்களில் கூடி வசிப்பதுவும், அவ்வக் கூட்டத்தாரின் தொழிற்குரிய பொதுவிடம் அவ்வவர் இருக்கைகளுக்கு அணிமையில் அமைப்பதும், முன்னாள் நமது நாட்டில் வழங்கிய நகர அமைப்பாகும். அது இந்நாளில் நாகரிக மென்றபேரால் மாறிப் பல அல்லல்களுக்கிடனாக விளைதல் வருந்தத்தக்கது. இதுபற்றி முன் உரைத்தவைகளும் நினைவுகூர்க. படைபயிற்றுவோர் புறநகரிருக்கை கொள்ளுதலும் அவர்தொழிற்கேற்ற இயல்பாகும். ஓது கிடைகளும் இவ்வாறே பிற காரணங்கள் பற்றி முன்னாள் நகர அமைப்பிலே நகர்ப்புறத் தமைந்தன என்பதும் அறியக்கிடக்கின்றது. **வெளிமேல்** - வெளியினிடத்து. **மேல்** - ஏழாம் வேற்றுமை யுருபு. இவ்வெளியினை, **செருக்களம்** - (621), **கொல்களம்** - (634), **போர்செய்களம்** (635), **அமர்செய் பறந்தலை** (636), **களம்** (640) என்று குறித்தமை காண்க.

**கைவகுத்து** - படையைப் போருக்கு ஏற்றவாறு வரிசை பெற அணி வகுத்து. வரும் பாட்டினும் "கைவகுத்து நேர்மலைவார்" என்றது காண்க. வாள் வீரர்க்கு வாள் வீரரும், வேல் வீரர்க்கு அவரும், வில் வீரர்க்கு அவ்வகையோரும் என அவ்வப் படையோர் அவ்வவற்றிற்கேற்ற படையேந்திய அவ்வவருடன் பொருதற்குரியதாய்ப் படை வகுத்தல் **கைவகுத்தல்** எனப்படும். இவ்வாறே நால்வகைச் சேனையோடும் பிறவற்றோடும் போர்புரியும் பேரரசர் போரினும் படை வரிசைகள் அணிவகுக்கப்படும். இங்குப் பின்னர், வாள்-பலகை ஏந்திய வரிசையினரின் போர் 642-643 பாட்டுக்களினும், வில் வீரர் வகுப்பினர் போர் வேறாக 644லும், வேற் படைஞர் போர் தனியாக 648லும் பிரித்தும் வகுத்தும் விரித்தது காண்க. இவ்வாறே அரசரது நால்வகைப் படை அணி வகுப்புப் புகழ்ச்சோழர் புராணத்தும் பிறாண்டுங் காண்க. இங்கு நிகழும் போர், மன்னரல்லாத குடிமக்களிடையே நிகழும் சாதாரண ஆட்போராதலின் **கைவகுத்து** என்றமைந்தார். இவ்வகைப் போரினை முன்னர் இயற்பகை நாயனார் புராணத்துக் கூறியவையும் இங்கு நினைவு கூர்க.

இருவேம் பொருபடை - இருவேமுடைய போர்ப்படை வரிசைகளும். சந்தித்து - எதிரெதிர்முட்டி. அமர் விளைத்தால் - போர் செய்தால்.

அமர் மலைந்தால்—என்பதும் பாடம். 13

621. (வி - ரை) பகைத்தோன் - மாற்றான் - அதிசூரன். இவர் பகைக்காதிருப்பவும் தானே பொறாமையாற் பகைத்தவன் என்பது குறிப்பு.

அது நன்று உனக்கு வேண்டுமேல் - நன்று - நல்லதென்று. உனக்கு வேண்டுமேல் - உனக்கு நன்றென்று தோன்றி அதனை வேண்டுவாயாயின் என்க. நன்று - இங்குக் குறிப்பு மொழியாய் நன்றன் றென்பதுணர்த்தி நின்றது. "உடம்போடியிரிடை நட்பு" என்ற குறளில் "நட்பு" என்றதற்குப் பரிமேலழகர் உரைத்தது காண்க. அது - அமரிற் சாயாத வலியாரே தாயம் கொள்வது என்ற அது.

அது - அக்கொள்கை - நன்றன்று என்பது நாயனார் கருத்து. என்னை? போரில் வலியாரே பொருளுக் குரியோராதல் என்பது சேர்மையுமன்று; நியாயமுமன்று. இவ்வாறு வலியார் மெலியாரது பொருளைக் கவர்வது நன்மை தீமை பகுத்தறியும் உணர்வில்லாத மிருக நியாயம் பற்றிய திருட்டு வழியும், மனிதக் கூட்டத்தின் மிருகத் தன்மையான கொள்கை பற்றிய கொள்ளைச் செயலுமாம் என்பது அறிஞர் துணிபு. இதுவே நீதிநூற் றுணிபுமாம். ஆயினும் அரசருள்ளேயும் குடிமக்களுள்ளேயும் முன்னுள்முதல் நாகரிகப் போரால் வழங்கும் அநாகரிக மூர்க்கப் போர்ப்பலம் முழங்கும் இந்நாள்வரை மக்கட் கூட்டத்தினும் பல துறையினும் இச்செயலே வழக்கிலிருந்து வருகின்றதென்பது உலக சரிதம் கற்பிக்கும் உண்மைகளில் ஒன்று. "சிறுமீன் பெருமீனுக்கிரை" என்பது பழமொழியாகி ஒரு நியாயம் போல உருவம்பெற்று வழங்குகின்றது. பலமுள்ளதே எஞ்சும் - எனையவெல்லாம் அஞ்சும் - (The survival of the fittest - The weakest go to the wall) என்பது நவீன சாத்திரிகள் ஒரு கொள்கையாகவே கொண்டனர். ஆயின் இது அறிஞர் வெறுக்கும் கொடுமைகளில் ஒன்றென்று இங்கு நாயனார் திருவாக்கின் மூலம் பேரமைச்சராகிய ஆசிரியர் உணர்த்திய அழகு காண்க. இதற்கு இவ்வாறன்றி - நன்று - அது நன்று - நல்லது - என உடன்பட்டுப் போருக்கு இசைந்தனர் நாயனார் என்று உரை கூறுவாருமுளர்.

அது நன்று என்பது தமக்கு உடன்பாடின்மையின் நாயனார் போருக்கு இசைந்து நண்ணுவான் என்று கூறிச்சென்று அமர்மலைந்தது என்னை? எனின், போர்குறித்து ஒரு வீரன் அறைகூவி அழைத்தானையின் அதனை ஏற்றுப் போர் குறித்தல் வீரர் தன்மை. அவ்வாறு ஒப்பாமை பேடித்தன்மை என்பது போர் வீரர் மரபு. அன்றியும் தமது ஆண்மை வெல்லும்; "தருமமும் நீதியும் சால்பும்" வெல்லும்; அன்பின்றிறமும் அடிமைத் திறமும் வெல்லும் என்ற துணிபின் உரைத்தனர் நாயனார் என்க.

உள் மகிழ்ந்து சென்று - போர்மலையப் போவார் மனவெழுச்சியுடன் போதல் போர் மரபு. மற்று, அவனை வெல்வோமென்றுவது, வென்று தாயந் தனிகொள்வோமென்றுவது கருதி உண் மகிழ்ந்தவரல்லர் என்க. பெருமிதம், அழுக்காறு முதலிய தீயவை அதிசூரனே விழுங்கினவன்றி நாயனார்பால் ஒரு சிறிதும் அவை தணுகவில்லை என்பது முன்னர்க் காணப்பட்டது. இத்தகையோனுடைய பகைமை விரும்பிக்கொள்ளப்படும் என்ற நீதிபற்றி மகிழ்ந்தார் என்றுரைப்பாருமுண்டு.

முன்சொன்ன செருக்களம் - "இந்த வெளிமேல்" (620) என்று அவன் சுட்டிய போர்பயிலுமிடம். போர் குறிப்ப - போர் குறித்து நிற்க.

கன்றி - கோபித்து. கோபத்தாலன்றிப் போர் நிகழாதாதலின் கன்றினர். வேறு காரணமின்றிப் போர் துணிவதற்கே இருவர் படையும் கன்றின. அவன் இகல்புரிந் தழைத்தான். இவர் அதனை ஏற்று நின்றார். இவ்விரு தலைவர் தன்மையும் அவ்வவர் சார்பான படைகட்கேறின. அச்சார்புபற்றி அவர்கள் கன்றி மலைவாராயினர் என்பது.

**இருபடை** - இருவர் படை. **நேர்** - எதிரெதிராய். **மலைவார்** - போரினைத் தொடங்கிச் செய்வாராயினர். போர் செய்யும்வகை மேல்வரும் பாட்டுக்களில் விரிக்கின்றார். போர் பின்னர் நிகழ்வதாதலின் **மலைவார்** என எதிர்காலத்தாற் கூறினார். 14

**இருபடையும்**—என்பதும் பாடம்.

வேறு

622. மேக மொழுங்குகண் முன்கொடு மின்னிரை தம்மிடை யேகொடு
மாக மருங்கினு மண்ணினும் வல்லுரு மேறெதிர் செல்வன
வாக நெடும்பல கைக்குல மாள்வினை வாளுடை யாடவர்
காக மிடைந்த களத்திரு கைகளின் வந்து கலந்தனர். • கரு

(இ - ள்) மேக...முன்கொடு - மேக வரிசைகளை முன்னுற் கொண்டும்; மின்...கொடு - மின்னல் வரிசைகளைத் தமக்கிடையிடை கொண்டும்; மாக...ஏறு - ஆகாயத்திலும் பூமியிலும் வலிய இடிஏறு; எதிர் செல்வனவாக - எதிரெதிர் செல்வனபோல; நெடும்...ஆடவர் - நெடிய கேடக வரிசைகளை யாளுந் தன்மையும், வாள் ஆளுந் தொழிலையும் கொண்ட போர்மள்ளர்; காகம்...கலந்தனர் - காகங்கள் நிறைந்த போர்க் களத்தில் இருபக்கமும் எதிரெதிர் வந்து கலந்தனர்.

(வி - ரை) மேக ஒழுங்கு - மின்நிரை - உரும் ஏறு - இவை முறையே பலகைக் குலம் - வாள் - ஆடவரோகை - இவற்றுக்கு உவமிக்கப்பட்டன. மேகக் கூட்டம் முன்னர்த் தெரிவன. மின் - அவற்றின் சேர்க்கையிற் பின்னர் உளவாகிக் காட்சிப்படுவன. இடியேறு - மின்னல் தோன்றியபின் சிறிதுபோது தாழ்த்துச் செவிப்புலப்படுவன. மேகங்கள் தொடர்ந்தும், மின்னும் இடியும் இடைவிட்டும் காணப்படுவன. ஒரே காலத்து ஒரே இடத்து வானிற்றோன்றிய மின்னும் இடியும் அவ்வவற்றின் ஒளி-ஒலி வேக எற்றத்தாழ்ச்சி காரணமாக மின் முன்னும் இடி பின்னும் புலப்படுவனவாதலின் அம்முறையே மின்னை முன்னும் இடியைப் பின்னும் வைத்தார். மேகத்தினின்று இவ்விரண்டுந் தோன்றலின் மேகம் முதலிற் கூறப்பட்டதும் காண்க. கரிய பலகைக்கூட்டம் மேகங்கள் போன்றன என்பது. பண்புவமம்.

**இடையே கொடு** - இடை இடையே கொண்டு. தோன்றி மறைந்து காணப்படுதல் **இடையே** எனக் குறிக்கப்பட்டது.

**மாக மருங்கினும் மண்ணினும்** - வானிலும் நிலத்திலும். மேகம் - மின் - இடி - இவை புறப்பட்டுநிகழ்வது வானிலும், புலப்பட்டுத் தாக்கித் தொழில்செய்வது நிலத்திலுமாம். இவ்வாறே ஆடவர் செல்வது நிலத்தும், அவர்கள் ஏந்திய பலகைக்குலமும் வாளும் மேலிடத்தும் தோன்றுவன. எனவே இவ்விருவகையும் மேலிடத்தும் மண்ணிலும் தொடர்வுறுவன என்ற தன்மை காண்க. மின் தாக்கிற்று, இடி வீழ்ந்தது என்ற வழக்குக்களும் இவற்றைப் பிணைப்பது காண்க.

**வல் உரும் ஏறு** - தாக்கியிடின் அழிவு உறுதியாதலின் **வல்** என்றார்.

**உரும் ஏறு**-பேரிடி. வெறு முழக்கோடொழியாது பயன் றந்தேவிடும் பெரியஇடி. ஆணிடி - பெண்ணிடி என்றும், கருப்பிடி - கீரிடி என்றும், குமுறல் - முழக்கம் என்றும் இவற்றின் பயன்பற்றி வழங்கும் வழக்குக்களும் காண்க. மின் சத்தி, உடன்பாடு - எதிர்மறை - என இருவகைத்து எனவும், இவை மேகவரிசைகளின் எதிரெதிரிற் கூர்வனவாகுமெனவும், இவை ஒன்றையொன்று தாக்கித் தம்முட்கலந்தபோதே மின்னல் வீழ்வன எனவும், அவ்வாறு கலக்கும்போது உளதாகும் முழக்கமே இடி எனவும், பிறவாறும், இதுபற்றி நவீன சாத்திரிகள் கூறும் முடிபுகளும் இங்கு இவ்வுவமானத்துப் பொருந்தக் காண்க. போர்வீரர்களின் வீரப் பிரதாப ஆரவாரம் இடிபோன்ற தென்ப.

**ஆள்வினை** - ஆளுந் தன்மையின் மேம்பாடு. முயற்சியுடைமை - மெய்ம்முயற்சியுடையனுதல் என்பர் பரிமேலழகர். பலகைக்குலம் ஆள்வினை - வாள் ஆள்வினை என ஈரிடத்தும் கூட்டுக. தடுநிலைத் தீபம். வாள் மாற்றாரைக் கொல்லுதலும் பலகைக் குலம் தற்காப்புச் செய்தலும் குறித்தலின் இரண்டிலும் ஆள்வினை வேண்டப்படும். பலகைக்குலத்தையும் ஆள்வினையையும் வாளையும் உடைய ஆடவர். உடைய என்பது ஈறு குறைந்து நின்றது. **ஆடவர்** - ஆண்மக்கள். இங்குப் போர்வீரர்களைக் குறித்தது. ஆண்மக்களே பெரும்பான்மையும் போர்மள்ளராயினும் வாளுடையார் என்னுது வாளுடை யாடவர் என்றது தேற்றமும் சிறப்புங் குறித்தது. பெண்களும் போர் மக்களாதல் சிறுபான்மை முன்னுளிலும் காணப்படும்.

**காகம் மிடைந்த களம்** - போர் குறித்து மக்கள் புறப்படுதல் கண்ட காகங்கள் தம் இயற்கையுணர்வானே போர் விளைவுண்டென்றும், அதன் விளைவாகக் களத்திற்படும் நிணங்களின் உணவுண்டென்றும் கண்டு எதிர்பார்த்தவைகளாய், வீரர்கள் களத்திற்கூடுமுன் கூடின. காகபலி கொடுப்பார் பலியிடுமுன்னர்க் காகங்கள் கரைந்து திரண்டு வந்து கூடுதல் கண்கூடு. இவ்வாறன்றிப் போர் வழக்கமாய் நிகழும் களமாதலின் காகங்களுக்கு நித்திய உணவு கிடைக்குமாதலின் அவை கூடிநின்றன என்றலுமாம். **இந்த வெளி** (620) என்று சிறப்பிற் சுட்டியதும் காண்க.

**இருகைகளின்** - இருவர் பக்கங்களினும். உம்மை தொக்கது.

**கலந்தனர்** - சேர்ந்து கொண்டனர். மின்கலத்தலால் உருமேறு உண்டாகும் வகைபற்றி உவமானத் துணைத்தனை இங்கு வைத்துச் சிந்திக்க. உருமேறு முன் மேக ஒழுங்கு கொடு, மின் நிரை இடையே கொடு, மாகமும் மண்ணும் செல்வன எனக் கூட்டுக.

இப்பாட்டாற் போர்கலக்கும் முன் நிலை கூறப்பட்டது. 15

623. கால்கழல் கட்டிய மள்ளர்கள் கைகளின் மெய்க ளடக்கிய
வாளொளி வட்டமு னேந்திட வந்திரு கைகளின் மூந்தினர் ;
வேலொடு வேலெதிர் நீள்வன மேவிய பாதலம் விட்டுயர்
ஞாலமு நும்பணி வீரர்க ணேகிமிர் கின்றன வொத்தன. கசு

(இ - ள்) கால்கழல்.....மூந்தினர் - கால்களில் வீரக்கழல் கட்டிய போர் மள்ளர்கள் கைகளில் உடலை மறைக்கும் ஒளிவட்டமும் வாளுமாகக் கலந்து போர்புரிய வந்து இருவர் பக்கத்தும் மூந்திப் பொருதனர் ; வேலொடு வேலெதிர் நீள்வன - (இருவர் பக்கத்தும்) வேற்படையொடு வேற்படை மாறுபோரில் நீள்கின்றவை ; மேலிய..... ஒத்தன - தாந்தாம் இருந்த பாதல உலகத்தைவிட்டு மேலிருக்கும் நிலவுலகத்தைப் பொருந்துகின்ற நாகவீரர்களின் நாக்கள் மேலே நிமிர்கின்றவற்றைப் போன்றன.

(வி - ரை) **கழல் காலிற் கட்டிய** என மாற்றுக. **ஒளிவட்டம்** - ஒளியுடைய வட்டவடிவமா யமைந்த கேடகம். மெய்களடக்கிய ஒளி வட்டம் என்க. **மெய்களடக்குதல்** தம்முடலின்மேல் மாற்றூர் வீசும் படையின் ஊறு படாதபடி மறைத்தல். ஒளிக்க உதவும் பலகை என்பாருமுண்டு. இது தற்காப்பு. முன்னர்வர வேண்டிய ஒளி வட்டம் எதுகை நோக்கி **வாள்** - என்பதனை முன் கொண்டு நின்றது.

**கைகளில்**-கைகளிரண்டில். இடது கையிற்பலகையும் வலக்கையில் வாளும் ஏந்துதல் மரபு. ஏந்திய என்பதனை வருவிக்க. கைகளில் ஏந்திய ஒளி வட்டமும் வாளும் மூனேந்திட என்க. **வாள் ஒளி வட்டம்** - வாளை வேகமாகச் சுழற்றி வீசுதலால் ஆகிய ஒளிவட்டம் என உரைத்து இருகைகளிலும் இரண்டு வாள்கொடு வீசிப் பொருத வீரர்கள் செயலைக் குறித்ததாக உரைத்தலு மொன்று. இப்பொருளில் **ஒளி வட்ட**மென்றது ஒளியுடைய வாளின் வேகச் சுழற்சியாலாகிய வட்டத்தை. "கறங்கோலை கொள்ளிவட்டம்" என்ற வழக்கும் காண்க. கைகளில் ஏந்திய வாட்களின் சுழற்சியே

தமது மெய்யை மறைத்துக் காக்கவும் எதிர்த்தாரை முனைந்து பொரவும் பயன்பட்டன என்றபடி. மின்னிரை (622) சுழலும்போது ஒளிவட்டமாக்கல் இயல்பாம். வாள்வீரரிற் பெரும்பான்மையாராய்ப் பலகையும் வாளும் ஏத்திப் பொருவாரை மேற் பாட்டிற் கூறி, அவருட்சிறுபான்மை இருகைகளிலும் இரண்டு வாள் ஏத்திய வீரரை இங்குக் குறித்தார் என்றபடி.

**வாள்** - ஒளி என்று கொண்டு, **வாள் ஒளி வட்டம்** - மிக்க ஒளியுடைய கேடகம் என்றுரைப்பாரு முண்டு. மேலே கண்டவாறு இப்பாட்டின் முன்னிரண்டு அடிகள் வாட்போர்வீரர் செயல் குறியாது, பலகையும் வேலும் ஏத்திப் பொரும் வேற்படை வீரர் செயலைக் குறிப்பதாக உரைத்தலுமாம். இப்பொருளில் மேற்பாட்டில் வாள் வீரரையும் இப்பாட்டில் வேல் வீரரையும் அம்முறையே வரும்பாட்டில் வில் வீரரையும் கூறியதாகக் கொள்க. கேடகம் பெரும்பான்மையும் வட்டவடிவமாக அமைவதாம். சிறுபான்மை சதுர வடிவாயும் அமைப்பர்.

**முந்தினர்** - கலந்து போர் செய்வதில் மூற்பட்டனர்.

**வேலோடு வேலெதிர் நீள்வன** - வாளினை வீசிப்பொருதலும், வேலினை வீட்டித்தாக்கிப் பொருதலும் உரியன. ஆதலின் **நீள்வன** என்றார். இது வேற்படை ஞர் போர் குறித்தது. **எதிர்** - எதிரெதிராக. நீள்வன - நிமிர்கின்றன (வற்றை) - ஒத்தன என்று கூட்டுக. இரண்டாம் வேற்றுமைத் தொகை. இல்பொருளுவமை. பாதலம் விட்டு உயர் ஞாலம் உறும் - தற்குறிப்பேற்ற அணி. பாதலம் பாவ உலகமாகலின் அதைவிட்டு உயர்ந்த உலகம் உறுவார் போல என்பது.

**பணிவீரர்கள் நாநிமிர்கின்றன** - நாக வீரர்களின் நாக்கள் வெளியே நீண்டு சுழல்கின்றவற்றை. அனந்தன் கார்க்கோடகன் முதலியோர் நாக வீரர்கள். நாகங்கள் நீண்ட நாவுடையன; அவை நாவை நீட்டிச் சுழற்றும் இயல்பும் உடையன; அவை கொடிய சீற்றமும் வீரமும் குத்தித்தாக்கும் இயல்புமுடையன முதலிய தன்மைகளை இவ்வுவமையில் வைத்து அழகுபடக் கண்டுகொள்க.

**ஒளிவட்ட முனைத்திட**—என்பதும் பாடம். 16

624. வெங்கண் விறற்சில வீரர்கள் வேறிரு கையினு நேர்பவர்
தங்கள் சிலைக்குல மூந்தின தாவில் சரங்க ணெருங்குவ
பொங்கு சினத்தெரி யிற்புகை போகு கொடிக்கள் வளைத்தெதிர்
செங்கண் விழிக்கனல் சிந்திய சீறு பொறிச்செல வொத்தன. கஎ

(இ - ள்) வெங்கண்.....நேர்பவர் - வெவ்விய கண்ணுடையராய் வலிய வில் ஏந்திய வீரர்கள் பிறிதோரிடத்தில் இருவர் பக்கமும் போர் புரிவாராகி; தங்கள்..... நெருங்குவ-தத்தம் விற் கூட்டங்களினின்றும் எவிய கெடுதலில்லாத அம்புகள் ஒன்றை யொன்று நெருங்கி முனைக்கும் செயல்; பொங்கு சினத்து - மிக்க கோபத்தில்; எரியில் வளைத்து - மூண்ட தீயினின்றும் புகை போகும் மண்டிலங்கள் போல வளைத்து; செங்கண்.....சிந்திய - சிவந்த கண்களின் (கோபத்) தீயினின்று எதிரெதிராகப் போந்த; சீறு...ஒத்தன - சீறித் தெறிக்கும் பொறிகள் செல்லுதலை ஒத்தன.

(வி - ரை) இப்பாட்டான் விற் போர்வீரர் போர்ச் செயல் குறிக்கப்பட்டது.

**வெங்கண்** - வெவ்விய தறுகண்மை. **விறல்** - வலிமை. **சிலை வீரர்** - விற்படை வீரர்கள். **வேறு** - முன் சொன்ன வாட்படை வேற்படைப் போர் வீரர் முனைந்த இடத்தினின் வேறுக அணிவகுத்து. **இரு கையினும்** - இருவர் பக்கத்தும். முன்னர் **இரு கைகளின்** - என்றது காண்க.

**நேர்பவர்** - முற்றெச்சம். நேர்பவராகி உற்றின என்க.

**சிலைக்குலம்** - **குலம்** - கூட்டம் - வரிசை எனும் பொருளில் வந்தது.

சரங்கள் நெருங்குவ - பொறிச் செலவை - ஒத்தன என்க. செலவு - செல்லுதலை. இரண்டாம் வேற்றுமைத் தொகை.

**பொங்கு சினத்து** - சினத்து விழி என்றும், சினத்து எரி என்றும் இரண்டிக்கும் கூட்ட நின்ற முதனிலைத் தீவகம். முன்னர் எரி துள்ளினலென (527) என்றது காண்க. ஆண்டுரைத்தவையும் இங்கு உன்னுக.

**எரியிற் புகை போகு கொடிக்கள்** - தீமூண்டு எரியும்போது அதினின்றும் முன்னர்ப் புகைப்படலம் வளைவு வளைவாகக் கொடிகள் போலத் தொடர்ந்து மேற் செல்வ தியல்பு.

**கொடிக்கள் வளைத்து** - புகைக் கொடிகள்போல வளைத்து. ஒருவயிற் போலியுவமையணி. மிக்க கோபங் கொண்டபோது புருவங்கள் மாறி மாறி வளைந்து காட்டும் இயல்பு குறித்தது. சரம் உந்தும் தோறும் சிலைகள்வளைவன சினத்திலே புருவங்கள் மாறி மாறி வளைவன போன்றன. அவ்வாறு புருவங்கள் வளைவன எரியிற் புகை போகு கொடிக்கள் வளைவன போன்றன. அம்புகள் சினத்து விழியிற் பொறி போன்றனவாம். அவை தாம் சினத்தெரியிற் சிறு பொறியும் போன்றன. இவை மூன்றினும் பொங்குசினம் அடிப்படையாயினதும் காண்க. இங்குச் சிலை வீரர்களது சிலையின் அம்புகளும் கண்களினின்று கோபத் தீப்பொறிகளும் பறந்தன என்றதோர் தொடர்பாயின குறிப்பும் காண்க.

**செங்கண் விழி** - பொங்கு சினத்தாற் சிவந்து செங்கண்ணுகிய விழி.

**சிறுபொறி** - சிறுதலாற் சிந்தித் தெறிக்கும் தீப்பொறிகள். சிறு என்பது முதல் நீண்டு சிறு என நின்றதாகக் கொண்டு சிறுபொறிகள் என்பாருமுண்டு.

இம்மூன்று பாட்டானும் வாளின் போர் - வேலின் போர் - வில்லின் போர் தொடங்கி மூளும் வகை கூறிய ஆசிரியர், அவை மூண்டு நிகழும் நிகழ்ச்சிகளை மேல் வரும் இரண்டு பாட்டாற் கூறுகின்றார். 17

625. வாளொடு நீள்கை துடித்தன ; மார்பொடு வேல்கள் குளித்தன;
தோளொடு வாளி நிலத்தன; தோலொடு தோல்க டகைத்தன ;
தாளொடு வார்கழ லிற்றன ; தாளொடு சூழ்கிர மற்றன ;
நாளொடு சீறி மலைப்பவர் நாடிய போர்செய் களத்தினில். கஅ

(இ - ள்) வெளிப்படை. தங்களது இழைத்த நாளெல்லையுடனும், சீறிப் போர் புரியவல்ல அவ்வீரர்கள் நாடிய போரினைச் செய்யும் அந்தப் போர்க்களத்திலே வாள்களோடு அவற்றைப் பிடித்த நீண்ட கைகள் துடித்தன; மார்புக்குள்ளே வேல்கள் குளித்தன ; (தாம் தூவித்து அறுத்த) தோள்களோடு அம்புகள் நிலத்தில் வீழ்ந்தன ; வீரர்களது உடலிற்றுக்கி அழுந்திக் கேடகங்கள் அத்தோளுடனே ஒன்றுசேர்ந்து பதிந்தன; கால்களுடன் அவற்றிற் கட்டிய வீரக் கழல்களும் இற்றன ; சுற்றிய மாலையுடன் அவை சூழ்ந்த தலைகளும் அற்றன.

(வி - ரை) மேன்மூன்று பாட்டானும் கூறிய வாள், வேல், வில் என்ற மூன்று வகைப் படைகளின் போர் மூண்ட விளைவுகளை அம்முறையே இப்பாட்டிற் கூறுவது காண்க. வாளொடு நீள்கை துடித்தன என்பது வாட்போர் விளைவும், மார்பொடு வேல்கள் குளித்தன என்பது வேலின் போர் விளைவும், தோளொடு வாளி நிலத்தன என்றது வில்லின் போர் விளைவும் காட்டியன.

**வாளொடு நீள்கை துடித்தன** - போர் செய்ய வாளினைப் பிடித்து நீட்டிய கைகள் வாள் பிடித்தவாறே அறுபட்டு வீழ்ந்து, அற்று வீழ்ந்தபின்னும் வாளின் பிடிவிடா

மல் வாளோடு துடித்தன. உடலினின்றும் அறுபட்ட துண்டங்கள் அவ்விரத்த ஓட்டம் ஓயும்வரை துடித்தலும் பிடிவிடாது பற்றியபடியே மூடங்குதலும் உடற்றத்துவமாம். இவ்வகையால் அற்றுவீழ்ந்த பின்னரும் வாளோடு கைகள் துடித்ததனை அங்கங்களும் அப்போதும் வீரங்குன்றுவாயின என நாடகச் சுவை பெற உரைத்தது அணிநலமாம்.

**மார்போடு வேல்கள் குளித்தன** - எறிந்த வேல்கள் எறியப்பட்டாரது மார்பு களுட்புக்குக் குருதியுட்டோய்ந்தன. குருதிநிறைந்த இரத்தாசய இருப்பிடமாகிய மார் பினை நீர்நிலையாக்கி அதிற்புக்கு மறைவதனைக் குளித்தல் என உருவகம் செய்தார். ஓடு என்ற மூன்றனுருபு ஏழாவதன் பொருளில் வந்தது. உருபுமயக்கம். " மெய்வேல் பறியா நகும் " (குறள்) என்பதன் பொருளை இங்குவைத்துக் காண்க.

**தோளோடு வாளி நிலத்தன** - வீரர்கள் ஏவின அம்புகள் குறிபிழையாது தம் ஏவ லைச் செய்தே வீழ்ந்தன என்பது குறிப்பு. "சிலையிராமன் றோள்வலி "என்றபடி வில் வீரர் தோள்வலி மிக்கார். ஆதலின் வில்வல்ல பகைவரது தோளினையே குறித்தெய்து தோள் துணிப்பது கருதுவர் என்பார் **தோளோடு வாளி** என்றார். வில்லின் போர் வலிமை தோளின்பாலதாம் என்பது. இவ்வுட்கருத்தே **வாளோடு நீள்கை துடித்தன** என்ற இடத்தும் வாட்போருக்கும் பொருந்துவது காண்க.

இங்கு வாள் - வேல் - அம்பு எனும் இம்மூவகைப் படைகளில், வாள், பிடித்தகை யினது பிடிப்பினுள்ளும், வேல் மார்பினுள்ளேயும், அம்பு அறுபட்ட தோளின் வேறு யும் போந்த இயல்பு காட்டியவகையில் இம் மூவகைப்படைச் செயலுக்குமுரிய மூவகை வெவ்வேறு தன்மையும் காட்டியபடியாம்.

**தோல்** - கேடகங்கள். **தகைத்தன** - மோதுதலால் நெருங்கின. **தகைந்தன** என்ற பாடம் தவறு. **தோலோடு தோல்** - சொற்பின் வருநிலை. இதற்குப் பலகைகளோடு பல கைகள் மூட்டின என்றுரைப்பாரு முண்டு.

**தாளோடு வார்கழல் இற்றன** - கால்களுடன் அவற்றிற்கட்டிய கழலும் அற்றன. **வார் கழல்** - வீரங்குறிக்க வரிந்து கட்டிய கழல். கால் கழல் கட்டிய (623) என்றது காண்க. அது தாளொடு வீழ்தல் என்றது தாள் துண்டிக்கப்பட்டு அறும்வரையில் கழ லாற்குறித்த வீரம் குறையாது போர்மூனைந்து வீரன் நின்றனன் எனவும், தாளறுத்து இவனது வீரங் குறைத்தாலன்றி இவனை மாற்றலரிதென்றும், வேறு வழியில்லை என் றும் கண்ட பகைவன் இவனது தாளினை இறச்செய்து இவனது வீரத்தைத் தொலைத் தானென்றும் உட்குறிப்புப் பெறத் தாளோடு வார்கழல் இற்றன என்றார். **தாள்** - முயற்சி எனக்கொண்டு, விடாமுயற்சியொடு பிரியாது பிணைந்து நின்ற கழல் இற்றன என்ற குறிப்புப்பட உரைத்தலுமாம்.

**சூழ் தாரோடு சீரம் அற்றன** - என மாற்றுக.

**தார்** - போர்க்குரிய தும்பை - வாகை முதலியனவாகச் சூடப்படும் அடையாள மாலைகள். மாலைசூடி மிக்கெழுந்த சில வீரர் உயிரைப் பொருட்படுத்தாது அஞ்சா நெஞ்சுடன் தலையற்று வீழும் வரை போர் செய்தனர் என்பது. தாளற்று வீழ்ந்த பின்னரும் வீரஞ் செய்வாருளராதலின் அவர் வீரம் தலையற்ற போதே ஒழிந்தன என் பதும் குறிப்பு. 627 பார்க்க. இங்குக் கை - மார்பு - தோள் - தோல் - தாள் என ஒவ் வோர் அங்கமாகக் கூறி வந்தபின் உடலினுட் டலைமையாகிய **தலையினைக்** கூறினர். பற்பல அங்கமும் கண்டதுண்டமாக்கப்பட்டார் வீரர் என்பது. இதன் விளைவு மேற் பாட்டிற் கூறுவது காண்க.

**நாளோடு சீறி மலைப்பவர்** - வாழ்நாளுடனும் சீறி - இழைத்த நாளெல்லை என் னும் விதியுடனேயும் சினந்து என்பது. இங்குப் போர் செய்தொழியாவிடின் இவர் கள் இன்னுஞ் சின்னாள் உலகில் வாழலாம் ; அவ்வாறு போரின்றி வாழ்வது வீராயி னர்க்கு வாழ்வன்று ; வீண்வாழ்வேயாமென்று தம் வாளாலே முனிந்து போர்

துணிந்து செய்தனர் என்க. "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்ற ஞான நூன்முடிபு போலப், போரிற் கழியா நாள் நாளல்ல என்பது உலக நூல் வகையில் வீரர் முடிபு. "அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப், பகை விலக்கியதிப் பயங்கெழு மலையென" (95-96 வரிகள் இந்திர விழவூரெடுத்த காதை - சிலப்பதிகாரம்) என்ற தும், அதற்குத் "தமிழ்நாட் டெல்லையுள் தன்னோடு எதிர்த்துப் பொரும் அரசரை இரண்டு திசையினும் பெறுத கரிகாலன் போரிலே பேராசை யுடையனுதலினுலே..." என்பது முதலாக உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் எழுதிய உரையிற் கண்டவை யும் *பிறவும் இங்கு உன்னுக.

இவ்வாறு வாழ்நாளெல்லை வருமுன் போரில் மடிவதனைச் செய்தலால் நாளொடு சேறி மலைப்பவராயினர். அன்றியும் போரில் மடிந்த பின்னும் குறையுடல்களானும் சில நேரம் அப்போர்ரினையே தொடர்ந்து செய்தல் - ஆருயிர் கழியவு நிற்பவர் (628) முத லியனவாகப் பின்னர்க் கூறுமாற்றுல் அறியப்படுகின்றதனுலும், நாளெல்லை கடந்த பின்னும் சேறி மலைப்பவராயினர். எனவே நாளெல்லையில் அமைவுட் படாது முன்னும் பின்னும் தமது போரினுற் கடத்தலின், பிறருடன் கடக்க முடியாத நாளுடன்-காலத் துடன் - சேறி மலைப்பவர் என்றார்.

இவ்வாறன்றித் தம் ஆயுள் பெறுதற்கரிய சிறப்பிற்றுக அதனையும் பொருட்படுத் தாது வெறுத்து மலைதலில் என்றும், நாளை விரும்பி யிருத்தல் போர்வரும் நாளைக் குறித்தேயாகலான் அப்போர்வருங்கால் அப்போரை விரும்பி நாளை வெறுத்தார் எனவும், நாள்முழுதும் கோபித்து யுத்தஞ் செய்வாரெனவும் பலவாறு முரைப்பாரு முனர்.

**மலைப்பவர்** - இப்போர்வீரர் தம் வினையான் மலைபவராகாது, பிறர் வினையாற் கூடி மலைந்தாராதலின் **மலைப்பவர்** எனப் பிறவினைப் பொருள் பெற ஒற்று இரட்டித்தது.

இப்பாட்டு மூண்டபோர் நிகழ, இருபக்கத்தின் வன்செயல் குறித்தலின் அடித் தன - குளித்தன - நிலத்தன - என எல்லா வினை முற்றுக்களும் வலித்த ஓசைபடப் புணர்த்திக் கூறினர். அதற்கேற்ப **மலைப்பவர்** என்றார் என்பதுமாம்,

வலிந்த போரின் மூண்ட செயல் ஓய்ந்தபின் மெலிவு நிகழுமாதலின் அந்நிகழ் வினை வரும் பாட்டில் பரந்தன - அலைந்தன - என எல்லாம் மெல்லோசை படவரும் வினைமுற்றுக்களாற் கூறினதும் காண்க. மள்ளர்களுட் போர் மூண்டு நடந்த பின்னர் மெலிந்து ஓய்வுறுங்காலையிற் பரந்த களத்தில் அங்கங்கு ஒரோர் இடங்களிற் றனித்த வகையிற் போர் நிகழும். அவ்வகைகளை அதன்மேல் 627, 628 629, என்ற மூன்று பாட்டானும், வாள், வேல், வில் என்ற இம்முறையேபற்றிக் கூறும் சிறப்பு வகையும் காண்க.

621 வரை சரிதங்கூறிப் போந்த யாப்பினை மாற்றிப், போர் தொடங்கி நிகழும் வலிந்த நிகழ்ச்சிகளைக் குறிக்க மூடுகிய சந்த யாப்பினுல் 622 முதல் 631 வரை யாத்த நயமும் சொற்பொருட் பொருத்தமும் காண்க. இது குடிமக்களுள் அக்காலத்து வழக் கில் நிகழ்ந்த சிறுபோர். இவ்வாறே கண்ணப்பர் புராணம் 68 முதல் 91 வரை வேட்டையும், புகழ்ச் சோழர் புராணம் 20 முதல் 33 வரை கால்வகைச் சேனையுடைய பெரும்போரும் கூறிப்போந்த சொற் பொருட் பொருத்தங்களும் அழகும் காண்க.

இவ்வாறு கூறப்படும் பொருட்குத் தக்க சொல்லமைதி பெற்று ஒத்து இயலும் இலக்கணம் மாபெருங்கவிகளினிடத்தே காணப்படுவதோ ரியல்பென்க.

மலைபவராகி நாடிய போர் செய்யும் என்று கூட்டுக. 18

---

*எனது சேக்கிழார் 107-111 பக்கங்கள் பார்க்க.

626. குருதியி னதிகள் பரந்தன ; குறையுட லோடி யலைந்தன ;
பொருபடை யறுதுணி சிந்தின ; புடைசொரி குடருடல் பம்பின ;
வெருவர வெருவை நெருங்கின ; விசியறு துடிகள் புரண்டன ;
இருபடை தனினு மெதிர்ந்தவ ரெதிரெதி ரடர்செய் பறந்தலை. ககூ

(இ - ள்) வெளிப்படை. இருபக்கத்துப் படைகளிலும் முன் நின்ற வீரர்கள் எதிரெதிராகப் போர் செய்யும் போர்க்களத்தில், இரத்தப்பெருக்குகள் ஆறுகள் போலப் பரவின ; உடற்குறைகளாகிய முண்டங்கள் ஓடி அலைந்தன ; போர்ப்படை வீரர்களுடலின் அற்றதுண்டங்கள் சிந்தின ; பக்கங்களில் வெளிவந்த குடல்களோடு கூடிய உடல்கள் நிரம்பிக் கிடந்தன ; அச்சப்படுமாறு கழுகுகள் கூடின ; வார்கள் அறுபட்ட உடுக்கைகள் புரண்டன.

(வி - ரை) **குருதியின் நதிகள் பரந்தன** - நதிகளிற் குருதிபரந்தன என இன் - விகுதி பிரித்துக் கூட்டுக. **இன்** - ஒப்புப் பொருளில் வந்த ஐக்தனுருபு. பெருகி ஓடுவதனை ஆறு என்பது வழக்கு. ஆறுபோல இரத்த வெள்ளங்கள் பெருகிப் பரவின என்பதாம். பண்பு உவமை. இங்ஙனமின்றிக் குருதியாலாகிய நதி என உருவகமாகக் கொண்டுரைத்தலுமாம்.

வாள் - வேல் - வில் - என்ற மூவகைப்படைகளின் போர் வெவ்வேறிடங்களில் மூண்டதனால் அவ்வகளத்தினின்றும் இரத்த வெள்ளம் பரந்தமையாலே **நதிகள்** என்று பன்மையாற் கூறினர். மழை யுண்டாயின் ஆறு பெருகுதலியல்பு. இங்குப் படைகள் மழைபோலப் பொழிந்தனவாதலின் அதன் விளைவாகிய இரத்தப்பெருக்கை நதிகள் என்றுவமித்தார். **பரந்தன** என்ற குறிப்புமது.

**குறை உடல்** - உடலிற் றலையங்கமாகிய தலைதுறைந்த உடல். முண்டம் என்க. கவந்தமென்பர். உடற்குறை என்றும் வழங்குவர்.

**ஓடி அலைந்தன** - தலையற்ற பின்னும் முண்டமான அவ்வுடல்கள் இரத்த ஓட்டமும் உயிர்ச்சத்தியும் ஒயும் வரை சிறிது போது துள்ளி அலைவது இயல்பு. மேற்பாட்டில் **நீள்கை துடித்தன** என்றதும் அது. அவ்வாறு துள்ளும்போது தமது முன்னை முயற்சியிற் றொடர்ந்தபடியே செல்வனவாயினும் ஒரு குறியில்லாது குதிப்பனவாதலின் **அலைந்தன** என்றார்.

**படை** - படை ஏந்திய மள்ளர். ஆகுபெயர். **படை** - பொருத வெவ்வேறு படைக்கலங்கள் என்று கொண்டு தண்டிக்கப்பட்ட வாள் - வில் முதலிய படைத்தண்டங்களே நிலத்திற் சிந்தின. அவற்றின் எஞ்சிய பகுதி அவற்றை ஏந்திய வீரர் கைப்பிடியினின்றும் நீங்காது அவர் கையினுள் நின்றன என்றலுமாம். **விற்படைதுணியவும்** (629) என்றது காண்க. **துணி** - துண்டம். துணிக்கப்படுதலால் துணி எனப்பட்டது.

**புடைசொரி குடர் உடல் பம்பின** - வயிற்றினிடை வாளும், வேலும், அம்பும் தாக்கக் குடல்கள் உடலின் பக்கங்களில் வெளிவந்து சொரிந்தன. **குடர்** - குடல் ஈற்றுப்போலி. இது பெருவயிற்றினைத் தொடர்ந்து கீழ்வயிற்றினுள், 34 அடி நீளம் வரை குழாய் போன்று சுருள்சுருளா யமைந்த உடற்பகுதி. வயிற்றின் ஊறுபட்ட திறப்பின் வழியே அவை வெளிவந்து கீண்டு உள்ளிருக்கும் சீரணித்த உணவுப் பண்டங்களுடன் தொங்குதல் இங்குச் **சொரிதடர்** எனப்பட்டது. இவை கீண்டு சரியுந் தன்மையைப் பின்னர்ப் "புண்படு வழி சொரிகுடர்" (631) என்றது காண்க. **பம்பின** - **பம்புதல்** - நிறைதல்.

**எருவை** - கழுகுகள். சாதியொருமை யாதலின் **நிறைந்தன** எனப் பன்மை வினை கொண்டு முடிந்தது. இவை பிணந் தின்பதற்குக் கூடுவன. வீரர்கள் உயிருடன்

போருக்குச் செல்லும் போதே அவர்களது பிணத்தைத் தமது இயற்கையறிவால் அறிந்து எதிர்பார்த்துக் கூடிய காகங்கள் போலல்லாது, அவர்கள் உயிரற்ற பின் பிண மும் நிணமும் கண்டபின்னர் அவற்றை உண்ணக் கூடும், அறிவுக் கூர்மையற்ற கழுகு களே **வெருவா** என்றது இவற்றின் பயம் விளக்கும் கோரச் செயல்கள் கருதி என்க. இவற்றுட் சில கழுகுகள் பெரிய உருவுடையனவாகிக் கொடுமை பெற உடலைப் பிடுங் கித் தின்பன ; மனித உடலை அவ்வாறே தூக்கிப் பறந்து செல்லவும் வல்லனவாதலும் காண்க. "கழுகு பருந்தொடு கொண்டெழு பொழுதினும்" - (631) என்று பின்னர்க் குறித்தலும் காண்க.

**விசி அறு துடிகள்** - **விசித்தல்** - கட்டுதல். இங்கு விசி என்பது கட்டப்பட்ட வாருக்கு வந்தது. ஆகுபெயர். **துடிகள்** - போர்முனையிற் சங்கு - துடி - முதலியன முழக்குதல் வழக்கு. "வியன்துடி" (581) என முன்னர்க் குறித்ததும் காண்க. **புரண் டன** - விசித்த வார்கள் அற்றெறியப்படுதலால் உருண்டோடின.

**எதிர்ந்தவர்** - போரில் எதிர்த்துப் பொருதவீரர். **அமர்**-போர். **பறந்தலை** - போர்க் களம். ஏழாம் வேற்றுமைத் தொகை. பறந்தலையினிடத்துப் - பரந்தன - அலைந்தன என்பன முதலாகக் கூட்டியுரைக்க.

போர் ஓய்ந்த களத்திற் பரந்த இரத்த வெள்ளத்தில் வீழ்ந்த உறுப்புக்கள் - முண் டங்கள் - நிணங்கள் - முதலியனவும் துள்ளியும் சிதறியும் ஒன்றோடொன்று தாக்கித் தொடர்ந்து போர் புரிவன போன்றன. அதற்கு இணங்க வாரறுத்த துடிகளும் உருண்டு தாக்கி ஓசை முழக்கின என ஒரு தொடர்பாக நகையும் வீரமும் விரவிய சுவைபட உரைத்த குறிப்பும் காண்க.

**இருபடையினினும்**—என்பதும் பாடம். 19

627. நீளிடை முடுகி நடந்தெதிர் நேரிரு வரிலொரு வன்றொடர்
தாளிரு தொடையற முன்பெயர் சாரிகை முறைமை தடிந்தனன் ;
வாளொடு விழுமுடல் வென்றவன் மார்பிடை யறமு னெறிந்திட
வாளியி னவனு மறிந்தன ; ரினர், பலருள ரெங்கணும். உ0

**(இ - ள்)** நீள் இடை.....ஒருவன் - நீண்ட தூரமாக - நீண்ட நேரமாக - விரைந்து எதிர்த்துப் போர்புரிந்து வந்த வீரர் இருவரில் ஒருவன் ; தொடர்..... தடிந்தனன் - தன்னைத் தொடர்ந்தமாற்றானது தாள்கள் இருதுடையோடு அற்று விழும்படி முன் வெட்டி வீழ்த்தினன் ; வாளொடு.....மறிந்தனன் - (இவ்வாறு வெட்டப்பட்டு) விழுகின்ற உடலானது விழுமுன்னே தான் ஏந்திப் பொருத வாளி னாலே, தன்னை வென்றவனது மார்பு இடைபிளந்து அறும்படி வீசவே சிங்கம்போன்ற அவனும் இறந்தான் ; ஆயினர்...எங்கணும் - இவ்வாறாக இறந்த வீரர்கள் பலர் அப் போர்க் களமெங்கும் உள்ளாராயினர்.

**(வி - ரை)** இப்பாட்டான் அப்போர்க்களத்தில் வெவ்வேறிடத்து நடந்த வாள்- வேல் - வில் எனும் மூவகைப்போரில், வாட்போர் நிகழ்ந்த இடத்து ஓர் சிறப்புக் கூறினர். 625 - ல் போர்மூண்டு நிகழ்ந்த நிலைகூறி, 626ல் அது ஒய்ந்த நிலைகூறி, இப்பாட்டால் அது ஒய்ந்தபின் அக்களத்துக் காணும் ஓர் காட்சியைக் கூறுகின்றார்.

**நீள் இடை** - காலத்தாலும் இடத்தாலும் நீண்டஇடை. **முடுகி நடந்து** - ஒடுதற்கும் நடத்தற்கும் இடைப்பட்ட வேகமுடையதோர் நடையில் நடந்து. இவ்விரு வீரரும் நேரத்தாலும் தூரத்தாலும் நீண்டு வாள்வீசிப் பொருது விசையில் முன்னும் பின்னு மாய் இடசாரி வலசாரியாக நடந்து போர்புரிந்து வந்தனர்.

**தொடர் தொடைஅற** - **தாள்** - தொடர்ந்து பொருதற்குத் துணையா யிருந்த இரண்டு தாளும் தொடையோடு உடலினின்றும் வேறாக அற்று விழும்படி. இரண்டு

கால்களும் தொடையளவில் வெட்டப்பட்டு வேறாக வீழ்ந்தன. உடலைத் தாங்கிநின்ற அவை அறவே, இடையும் அதன் மேல் உள்ள உடற்பகுதியும் மற்றொரு துண்டமாக வீழ்ந்தன என்க.

**சாரிகை முறைமை** - வாட்போரில் முனைந்த இருவரும் பலகையால் தத்தம் மெய்களை மறைத்துத் (623) தற்காப்புச்செய்து போர் புரிவாராதலின், சாரிகைசுற்றி வாள் வீசிப் பொருதலில் தொடையோடு வெட்டத்தக்க சமயம் கோர்த்த வகையிலுலே என்க. "அடர்த்தவனைக் கொல்லும் இடைதெரிந்து தாள் பெயர்க்கும்" (644) எனப் பின்னர் இம்முறைமையை விளக்குதல் காண்க. வேறுவகையால் அவனைக்கொன்று வெற்றி பெற இயலாமைபற்றி இதுவரை தொடர்ந்து போர் செய்யத் துணிகின்ற தாள்களை அறவெட்டி வீட்டி அவன் போரை ஒழிக்க எண்ணிய வீரன் இவ்வாறு செய்தான் என்க. **தாள்** - முயற்சி என்ற குறிப்புமாம். 625-பார்க்க.

**விழுமுடல் எறிந்திட** என்று கூட்டி முடிக்க. தாள் தொடையோடு அறவெட்டப் பட்டதனால் மிக்க குருதி வெளிப்பாட்டின் அதிர்ச்சியினாலும் (Shock and excessve loss of blood) கரம்புத் தாரைத் தொடர்ச்சி அற்றதனாலும் அவன் உடனே இறந்து படலால், **அவன்** - எறிந்திட என்னுது, விழுமுடல் - எறிந்திட என்றார். **முன்** - விழு முன்பே வென்றவன் மார்பு இடைஅறும்படி வாளினால் எறிந்திட என்க. **இடையற** - இடை பிளவுபட.

**வென்றவன்** - சாரிகை முறைமையில் தொடையறத் தாள் வெட்டி வீழ்த்தியதனாலே தன்னை வென்றவனாக எண்ணிய அவன். **மார்பு** - அவ்வாறு எண்ணி இறுமாப் படைந்த நெஞ்சுக்கு இடனாகிய மார்பு என்பது குறிப்பு. வீரர்களது வீரச் செருக்குக்கு நிலைக்களன் மார்பிடமே என்பது "மண்டமர் கடந்தநின் வென்றி டகலத்து" - (திரு முருகாற்றுப்படை), "நிறற்படை நிழித்தநின் வரையகலம்" - (பதினொராந்திருமுறை-கக்கீரர் - திருக்கண்ணப்பதேவர் திருமறம்), "காணென்று மார்தட்டும் பெருமானே" (திருப்புகழ்) முதலியவற்றானறிக.

இங்கு, வீழும் உடலுடையான் தான் வீழுமுன்பே சாரிகை முறையில் மாற்றானது மார்பைக் குறிவைத்து எறிந்தான் என்றும் அவ் அளவில் தொடையற எறியப்பட்டான் என்றும் அறிக. இருவர் எறிந்ததும் ஒரே கணத்தில் நிகழுமாறு சாரிகை முறையில் வாட்போரின் கைவன்மை நிகழ்ந்ததென்பது.

**ஆளியின் அவனும்** - சிங்கம்போன்ற அவனும். **அவனும்** - விழுமுடல் என்றமையால் இவன் இறந்தமை குறிப்பிடவே இவனோடு அவனும் என இறந்தது தழுவிய எச்சவும்மை. இங்கு, உம்மை சொன்மாத்திரையானன்றி உண்மையில் இறந்ததனையே தழுவிய கையமும் காண்க. உயர்வு சிறப்பும்மை என்றலுமாம். எங்கணும் - ஒரிடத்தினன்றிப் பல இடத்தும்.

**மறிந்தனன்**—என்பதும் பாடம். 20

628. கூர்முனை யயில்கொடு மூட்டினர் கூடிமு னுருவிய தட்டுட
னேருர முருவ வுரப்புட னேர்பட வெதிரெதிர் குத்தின
ராருயிர் கழியவு நிற்பவ ராண்மையி லிருவரு மொத்தமை
போரடு படைகொ டளப்பவர் போல்பவ ரளவிலர் பட்டனர். உக

**(இ - ள்)** கூர்முனை...நிற்பவர் - கூரிய முனையுடைய வேற்படையுடன் அணுகி எதிர்த்தவர்கள் முன்னால் மீட்டிய பலகையினையும் மார்பினையும் நேராக ஊடுருவிச் செல்லும்படி எதிரெதிராய் உரப்பாகக் குத்தினராகி அதனால் தத்தம் உயிர்கள் போயின பின்னரும் அங்கிலையே நிற்கின்ற அவர்கள்; ஆண்மையில்...போல்பவர் - வீரத்தில் இருவரும் ஒப்பாந் தன்மையைத் தத்தமது போர்ப்படையினைக் கொண்டு அளந்து நிலையிடு

வார் போன்றனர். அளவிலர் பட்டனர் - ~~இவ்வகை அள்ள வீரர்~~ எண்ணிறந்தோர் இறந்து பட்டனர்.

(வி - ரை) இப்பாட்டு வேலின் போர்ப்பகுதியின் சிறப்புக் குறித்தது.

**முட்டினர்** - "வேலொடு வேலெதிர் நீள்வன" (623) எனக் கூறியவாறு வேற் படை, நீட்டிக் குத்திப் பொருதும் இயல்புடையதாதலின் **முட்டிய** என்றார். **அயில்**-வேல். **தட்டி** - பலகை. **முன் உறுவிய தட்டி** என்றது முன்னுல் மெய்யை மறைக்குமாறு உறை நீக்கி ஏந்திய பலகை.

**தட்டுடன் நேர்உறுவ** - தட்டினையும், அதனுல் தேரே மறைப்புண்டுநிற்கும் மார்பை யும் ஊடுருவும்படி.

**உரப்புடன்** - வீராவேசத்திற்குரிய சொல்லோடு என்பது திரு. இராமநாதச் செட்டியார் உரைக்குறிப்பு. **உறைப்புடன்** என்பது பாடமாயின் அதிக பலத்துடனே பலகையினையும் ஊடுருவி மார்பைக் குத்துதற்குரிய மிக்க வலிமையுடனே என்க.

**நேர்பட** - ஒப்பாக - இருவரும் ஒன்றுபோல. **எதிர் எதிர் குத்தினர்** - ஒரு கணமா வது முன்பின் என்றில்லாதபடி இருவரும் குறிபார்த்து எதிரெதிராக ஒருவரை ஒருவர் குத்தினராகி. இது வேற்போரின், நுணுகிய குறித்திறத்தின் மாபு குறித்தது. இவ் வாறு ஒத்த குறித்திறமில்லையாயின் ஒருவன் முன்னர்க் குத்துண்டு இறந்துபட மற்ற வன் வென்றவனுவன் என்பது. வாட்போரின் குறித்திறன் மேற்பாட்டிற் குறித்தனர்.

**ஆருயிர்** - பெறுதற்கரிய மானுடப் பிறவி பெற்ற உயிரின் சிறப்பு நோக்கி **ஆருயிர்** என்றார். **கழியவும்** - மார்பு பிளப்ப வேலாற் குத்துண்டபடியால் உயிர் போக; அது போயின பின்னுமென்க. உயிரினுக்கு அழிவில்லை. அது நித்தப் பொருள். இங்குக் **கழிய** என்றது உடலினின்றும் **கழிய** என்றதாம். உயிர் போயினபின் உடல் நிற்கலாற் றது வீழுமியல்புடையது. இங்கு, அவ்வாறன்றி இவருடல்கள் வீழாது நின்றன என்ற பொருளைக் **கழியவும் நிற்பவர்** எனச் சிறப்பும்மையாற் குறித்தார். உயிர் போயின பின்னும் உடல் நிற்கும் நிலையுமுளதோ? எனின், நின்றிடும் நிலையாவது, இருவர் மார்பி னுள்ளும் எதிரெதிர் பலகைகளுடன் ஊடுருவி மார்பினுட் சென்ற வேல்கள் எதிரெதி ராக இரண்டு ஆப்புக்கள் கடாவியன போலாகவே, அவ்வேல்களை விடாது பற்றிய இரு கைப்பிடியும் தான்கு கால்களுமாகப் பிணைத்ததோர் நாற்காலி போன்று நிற்பதாம்.

**ஆண்மையில்...போல்பவர்** - இஃது தற்குறிப்பேற்ற உவமை. **படைகொடு அளப்பவர்** - இவன் மார்பினுள் அவன் வேலும், அவன் மார்பினுள் இவன் வேலுமாக நீட்டிக் குத்தும் இருவரது வேலும் அளவு காண்பது போன்றது. இது ஆண்மையில் இருவரும் ஒத்த தன்மையைப் படையின் அளவாகிய கருவிகொண்டு அளப்பவர் போன்றதாம் என்றார். கணமும் தவறுது குறிபிறழாது எதிரெதிர் குத்திய செயலே இவர்களது ஆண்மை ஒப்புக் காட்டிற்று. இதனை இவர்கள் நின்ற நிலையின்மேல் ஏற்றிக் கூறினர். ஒத்தமையை **அளப்பவர்** - இரண்டாம் வேற்றுமைத் தொகை. **போல் பவர் அளப்பிலர்** - போல்பவராகிய எண்ணிறந்தோர். **பட்டனர்** - இறந்துபட்டனர்.

கூடி முட்டினராய் நிற்பவர் அளப்பவர் போல்பவராகிய அளவிலர் பட்டனர் என்று முடிக்க. **முட்டினர்** - குத்தினர் - **பட்டனர்** - இறந்தகால வினைமுற்றுக்கள். இவை இவர்களின் முற்றிய வினைகள் குறித்தன. நிற்பவர் - அளப்பவர் - போல்பவர் - எதிர்கால வினையாலணையும் பெயர். இவை அவ்வினைகளால் நிகழும் நிலைகள் குறித்தன.

இது உறைப்புடைய வேற்போர் முடிந்து நின்ற நிலையானமையால் **முட்டினர்** - **தட்டுடன்** என்பனவாதி வல்லோசை பெற்று முடிந்த சந்த யாப்பினும் கூறினர். இவ்வாறன்றி வீழ்ந்த நிலையில் உள்ள வாளின்போர், வில்லின்போர் முடிபுகளை மேல் 627ல் **நடந்தெதிர்** - என்பனவாதியாகவும், வரும் 629ல் **எதிர்ந்தவர்** என்பனவாதியாக வும் மெல்லோசை பெற்று முடிந்த சந்தயாப்பினும் கூறுதலும் உன்னுக. இவற்றின்

மேல் இரண்டு பாட்டுக்களும் (630-631) அவ்வாறே மெல்லோசைச் சந்தத்தில் யாத்தது இருபக்கத்துப் படைஞர் பலர் இறந்தொழிந்து மெலிந்தநிலை குறிக்க என்க. அதன்மேல் தலைவராகிய நாயனார் போர் தொடங்குதலின் உயிர்தடைபெற் றெழுகும் தரவு கொச்சகக் கலிப்பாவாகிய வேறு யாப்பினுற் கூறும் யாப்பமைதியும் நோக்குக.21

629. பொற்சிலை வளைய வெதிர்ந்தவர் புற்றர வனைய சரம்பட
விற்படை துணியவு நின்றிலர் வெற்றிகொள் சுரிகை வழங்கினர்
முற்றிய பெருவள னின்றியு முற்படு கொடைநிலை நின்றிட
வுற்றன வுதவிய பண்பின ரொத்தன ருளர்சில கண்டகர். உஉ

(இ - ள்) பொற்சிலை...வழங்கினர் - பொற்பூணிட்ட தமது விற்களை வளைத்துப் போர் செய்தாரில் புற்றினின்று கிளம்பும் அரவு போல மாற்றூர் விட்ட அம்பினால் தமது விற்படை அறுபட்டொழியவும் போர் ஒழிந்து நிற்காதவர்களாகி, வெற்றி தரும் உடைவாளை உருவிப் போரிட்டனராகிய இவர்கள் ; முற்றிய.....பண்பினர் - முன்னர் நிறைந்திருந்த தமது பெருவளங்கள் ஒழிந்த பின்னரும் முன்னைக் கொடை நிலையிலே நிற்கத் தம்மிடம் எஞ்சி உள்ளனவற்றை உதவுகின்ற வள்ளற்றன்மையுடையாரை ; ஒத்தனர் உளர் சில கண்டகர் - ஒத்தாராகி உள்ளார் சில வீரர்கள்.

(வி - ரை) பொற்சிலை - பொற்பூணிட்ட வில். போர் மள்ளர்களும் ஏனைத் தொழிலாளர்களும் தத்தம் தொழிற்குரிய கருவிகளுக்குப் பொற்பூண் முதலியன இட்டுப் பாராட்டிக்கொள்ளுதல் மரபு. இவை அக்கருவிகளுக்குப் பலமும் உறுதியுந் தருவனவுமாம். பொன் - அழகிய என்பாருமுண்டு.

சிலைவளைய எதிர்ந்தவர் - விற்படை மள்ளராய் எதிர்த்துப் போரிட்டார். வளைய என்பது அதற்கு உரிய போர்த்தொழில் குறித்தது.

புற்று அரவு அனைய சரம் - அம்பரூத்தூணி (புட்டில்) புற்றுகவும், அதினின்றும் ஒன்றன்பின் ஒன்றுக இடைவிடாது தொடர்ந்து வரும் சரங்கள் அரவாகவும் உவமித்தார். இறத்தலைத் தரும் தொழிலாலும் அரவுக்குவமையாம். விடமூட்டிய அம்புகள் என்பதுமாம்.

பட - பட்டமையால். துணியவும் - துணிக்கப்பட்டு அற்றுப்போயின பின்னரும். நின்றிலர் - போர் செய்யாது நின்றாரிலை.

வெற்றிகொள் - வெற்றியைத் தன்னதாகக் கொள்கின்ற.

வழங்கினர் - போரிற் பயன்படுத்தினர்.

முற்படு கொடை நிலை - முற்படு - பெருவளன் இல்லாமற் போயின காலத்தின் முன் தம்மிடத்துப்பட்ட. கொடைநிலை - பெருங்கொடையாகிய தன்மை. நின்றிட - அத்தன்மை ஒழியாது தங்க. நிலைநின்றிட என்று கூட்டிக் கொடையானது அருமல் நிலைக்க என்றலுமாம். கொடைநிலை நின்றிட - கொடை நிலை செல்லாது நின்று பட்டதாக என்பாருமுண்டு. உற்றன-அப்போதைக்குத் தம் கைக்கு உதவியன - கிடைத்தன.

பண்பினர் - தன்மையுடையாரை. இரண்டனுருபு தொக்கது. பண்பினரை ஒத்தனர் என்க. எதிர்ந்தவரில் - நின்றிலராகி - வழங்கினர்கள் - பண்பினரை - சில கண்டகர் - ஒத்தனர் - என்று கூட்டி முடித்துக் கொள்க.

கண்டகர் - வன்கண்மையுடைய போர் வீரர்கள்.

கண்டர்கள்—என்பதும் பாடம். 22

630. அடன்முனை மறவர் மடிந்தவ ரலர்முக முயிருள வென்றுறு
படர்சிறை சுலவு கருங்கொடி படர்வன சுழல்வன துன்றலில்
விடுசுடர் விழிக ளிரும்புசெய் வினைஞர்த முலையின் முகம்பொதி
புடைமிடை கரியிடை தங்கிய புகைவிடு தழலே நிகர்ந்தன. உங

(இ - ள்) அடல்...முகம் - வலிமையுடைய போர்வீரர்களில் இறந்தவர்களுடைய விரிந்த முகங்கள்; உயிருள...தின்றலில் - உயிர் உள்ளனவென்று எண்ணியபடியால், அவற்றைப்பொருந்தச் சிறைவிரித்துப் பறந்துவந்த கரிய காக்கைகள், அணுகாது பக்கத்திற் செல்வனவும், சுழல்வனவுமாகக் கூடியதனால் (அவற்றினிடையில்); விடுசுடர் விழிகள் - சுடர்விட்டு விளங்கும் (வீரரது) கண்கள்; இரும்பு...நிகர்த்தன - இருப்புவினை செய்யும் கருங்கொல்லர் தம் உலையிலே மேலே பொதிர்த்து பக்கத்து நிறைந்த கரியினிடையே பொங்கிய புகைவிடும் தீயையொத்தன.

(வி - ரை) அடல் - வலிமை, முனை - முனைத்தல். போரில் எழுதல். அடலும் முனைப்புமுடைய. அடல்முனை - போர்முகத்தில் என்றுரைப்பாருமுண்டு.

மறவர் மடிந்தவர் அலர்முகம் - மறவர்களில் மடிந்தவர்களது மலர்ச்சியுடன் விளங்கிய முகம். மடிந்தவர் முகம் - பிறிதினியைபு நீக்கிய விசேடணம். இருபக்கமும் மடியாது எஞ்சியவர் பலராதலின் அவர்களைப் பற்றியன்றி மடிந்தவர் முகம் பற்றியே இங்குக் குறித்தது என்பதாம். வீடாது மிக்கொழிந்த தம்முடைய பல்படைஞர் - (632) எஞ்சி எதிர்நின்ற விகன்முனையில் வேலுழவர் - (633) என்றவை காண்க.

அலர் முகம்-போர்வீரர் உற்சாகத்துடன் மலர்ந்த முகங்கொண்டு போர் செய்தல் மரபு. ஆதலின் போரில் வெட்டுண்ணும்போது இருந்த மலர்ந்த நிலையிலே, அவர் முகங்கள், வீழ்ந்த பின்னரும் இருந்தன என்பது. கண்ணினைக் கொண்டே முகமலர்ச்சி அறியப்படுதலான் அவர் கண்கள் சுடர்விட்டபடியிருந்தன என்பார் விடுசுடர் விழிகள் என்றார்.

முகம் அலர்ந்திருந்தது; விழிகள் சுடர்விட்டு நின்றன; இவை ஆன்மப்பிராகாசமுணர்த்துவன ஆதலின் காக்கைகள் அவை உயிருள்ளனவென்று கொண்டு நெருங்காது பறந்து சுழன்று கூடின என்பது. உயிருள எனக் கருங்கொடி எண்ணுதற்குக் காரணங் கூறியபடி. ஆயின் இங்கு உயிரொளியின்றியும் முகமும் கண்ணும் ஒளிகொண்டது சடுதியிற் சாங்காலத்து நின்ற நிலையின் நீடிப்பு என்பதைக் காக்கைகள் உணர்தற்குரிய அறிவற்றன ஆதலின் மயங்கின என்க.

என்று - என எண்ணியபடியாலே. உறு - அங்கு நிணமுண்ண வந்த. படர்சிறை சுலவு கருங்கொடி-விரித்த சிறகுடன் சுழன்ற கரிய காக்கைகள். காகமிடைந்த களத்தினில் (622) என முன்னரே இவை கூடியதனைக் குறித்தது நினைவுகூர்க.

படர்வன சுழல்வன துன்றலில் - எண்ணி வந்த செயலைச் செய்யமாட்டாமலும் அகல்வதற்கு மனமில்லாமலும் சுற்றிக் கூடுதலாலே. துன்றலில் - துன்றுதலினாலே. துன்றலில் விடுசுடர் என்றுகூட்டி நெருங்காதபடி ஒளிவிடுகின்ற என்றும், கொடிதுன்றல் இல் - காகங்கள் நெருங்குதல் இல்லை என்றும், இன்னும் பலவாறும்கூட்டி உரைப்பாருமுண்டு. சுடர் விடு விழிகள் - என மாற்றுக.

உலையின் முகம் பொதி புடை மிடை கரியிடை - உலையின் முகம் பொதி கரி - உலையின்புடை மிடை கரி என்க. உலைமுகத்தும் பக்கங்களினும் சேர்த்த கரியினிடையே.

புகை விடு தழல் - கரிய புகைவிடும் தீ. சினத்தாற் புகைவிட்டுச் சீறி நின்ற விழிகள் அவ்வாறே நின்று காணப்பட்டன. ஆதலின் புகை விடுதழலை ஒத்தனவென்றார். "புகைபோகுகொடிக்கள் வளைத்தெதிர் செங்கண் விழிக்கனல்" (624) என்ற விடத்துக் கூறியவை காண்க.

உலைக்களம் - போர்க்களமாக, கொல்லர் - போர் மள்ளராக, கரி காகங்களாக, தழல் சுடர்விடு கண்களாக ஒப்புமை கூறிய தொடர்புவமமாகக் கண்டுகொள்க. கோபத்தீயானது வீரர் செத்த பின்பும் கண்களிற் சுடர்விட்டதென அவர்களது வீராவேசத்தின் செறிவு கூறப்பட்டது.

கொடி படர்வன சுழல்வன ஆன்றலில் - வினைஞர் - உலையின் - கரியிடை-தழலை விழிகள் - நிகர்த்தன - என்று கூட்டி முடிக்க.

நிகர்த்தன என்ற பாடம் தவறு. நிகர்த்தன என்பது நிகர்ந்தன எனச் சந்த நோக்கி விகாரமாயிற்று.

கோடி பயில்வன—போங்கிய புகை—தழனிகர்கின்றன—என்பனவும் பாடங்கள். 23

631. திண்படை வயவர் பிணம்படு செங்கள மதனிடை முன்சிலர்
புண்படு வழிசொரி யுங்குடர் பொங்கிய கழுகு பருந்தொடு
கொண்டெழு பொழுதினு முன்செயல் குன்றுத லிலர்தலை நின்றனர்
விண்படர் கொடிவிடு பண்பயில் விஞ்சையர் குமரரை வென்றனர்.

(இ - ள்) திண்படை...முன் சிலர் - வலிய படை வீரர்கள் பட்ட பிணங்கள் வீழ்ந்த சிவந்த களத்தில் முன்னே சிலர்; புண்படு.....தலைநின்றனர் - படைகளால் ஊறுபட்ட புண்வாய் வழியே சொரிந்த குடர்களை மிக்குக் கூடிய பருந்துகளோடு கழுகுகள் பற்றி மேலெழுகின்ற காலத்திலும் சலியாது தமது முன்னைச் செயலாகிய போரில் முயற்சி யுடையாராகும் அவர்கள்; விண்படர்...வென்றனர் - விண்ணிற் செல்கின்ற - காற்றடிப் பட்டம் விடுகின்ற, இசை பயில்கின்ற வித்தியாதரர் சிறுவர்களை வென்றனர்.

(வி - ரை) **வயவர்** - போர் மள்ளர். வெற்றிதரும் போர்த்தொழில் செய்வாராதலின் **வயவர்** எனப்படுவர். **வயம்** - வெற்றி.

**பிணம்படு செங்களம்** - உடல்கள் பிணங்களாக்கப்பட்டதனாலாகிய குருதி பரத்தலாற் சிவந்த போர்க்களம்.

**முன்** - பிணமாய்ப் பட்டு வீழ்வதன் முன்னே. இங்குக் குறித்த குடர்சரிந்து கழுகெடுத்த வீரரும் பின்னர்ச் சில நேரத்திற் பிணமாய் வீழ உள்ளாராதலின் அவ்வாறு வீழுமுன் என்க.

**புண்படுவழி...தலைநின்றனர்** - மாற்றரசது வாள் முதலியவற்றால் உடலில் ஊறு பட்டுப்புண்ணுகியது.உள்ளிருந்து அந்தப் புண்வாய் திறந்தவழி வெளியே குடர் சொரிந்தது. நீண்டு கயிறு போலச் சொரிந்து வழிந்த அக்குடர்களைக் கழுகும் பருந்தும்பற்றிக் கொண்டு மேற்பறந்தன. அதனால் இவர்களும் நிலத்தினின்றும் தூக்கிச் செல்லப்பட்டு மேற்போந்தனர் என்றதுமாம். அப்போதும் சலியாது தாம் முன் செய்த அப்போர்த் தொழிலின் முயற்சியிலே முனைத்தனர் என்பதாம். குடர்-626ல் உரைத்தவை பார்க்க. குடர் சொரிதலால் சிறிது போதிற் சாகும்படி புண்பட்ட பின்னரும் உயிர்போகும் வரை முனைந்து நின்றனர் என இவர் வீரத்தின் உறைப்புக் காட்டியபடி.

**முன் செயல்** - தாம் செய்த வாட்போர் முதலியவாற்றால் தன்னை எதிர்ந்தவனை அடர்க்கும் செயல். **முன்** - கழுகு குடர்கொண்டெழுமுன்.

**குன்றுதல் இலர்** - குறையாதவர்களாகி - சலியாது. முற்றெச்சம். முன்செயல் குன்றுதலிலர் தலை நின்றனர் எனக் கூட்டிமுடிக்க.

**தலைநின்றனர்**-ஒரு சொன்னீர்மைத்தாய் முயன்று செய்தல் எனப்பொருள்படும். "தூபஞ், சாலவே நிறைந்து விம்ம விடும்பணி தலைகின் றுள்ளார்"-(குங்குலியக்கலய நாயனார் புராணம்-6), "முன்னை நல்வினைத் தொழிற்றலை நின்றனர்" - (வெள்ளானைச் சருக்கம் - 49) முதலியன காண்க. **தலை** - எழாவதனுருபெனக் கொண்டு செயலிற் சலியாது நிலைத்து நின்றனர் எனவும், **தலையில்** - சிறந்து நின்றனர் எனவும் உரைப் பாருமுண்டு. இவ்வாறன்றி **நின்றனர்** - கீழ் வீழாது நிற்றலைச் செய்தனர் என்றுரைப் பாருமுளர்.

**போங்கிய** - வேகத்தாலும் கொழுமையாலும் மிக்க கூட்டமாய்வந்து கூடிய என் றலுமாம். முன்னர், "வெருவர எருவை செருங்கின" (626) என்றது காண்க. **பரந்து**-கழுகினத்திற் பெரிய உருவுடையனவாய் அச்சம் விளைக்குமாறு கொடுஞ்செயல் செய்யுமியல்புடையதோர் சாதி. **பரந்தோடு கழுது குடர் கொண்டு எழுபொழுது** எனக் கூட்டுக. **குடர் கொண்டெழுதல்** - குடரினைப்பற்றி எழுதலும் அதனுலே அத்தொடர் புப் பற்றிலே வீரனது உடலையும் மேலே கொண்டு எழுதலும் உட்கொண்டது.

**விஞ்சையர்** - வித்தியாதரர். தேவச்சாதியாருள் ஒருவகையினர். வானிற்பறப்பர்-கானம்வல்லவர் - போர் வன்மையுடையார் என்ப. **விண்படர்** - கொடிவிடு - பண்பயில் என்பன மூன்றும் தனித்தனி விஞ்சையர் குமரர்க்கு அடைமொழிகள். **கொடிவிடு விஞ்சையர் குமரரை வென்றனர்** - காற்றுடிப்பட்டம் பறக்கவிட்டு விளையாட்டயரும் வித்தியாதரச் சிறுவரிலும் மிக்காராயினர். விஞ்சையர் குமார் - மேலே தூக்கிச் செல்லப்பட்ட வீரர்க்கும், பட்டம் - கழுகுபருந்துகட்கும், பட்டம் விடும் கயிறு - ஒரு புறம் கழுகு பருந்துகளைப் பற்றியும், ஒருபுறம் வீரருடலைப்பற்றியு முள்ள நீண்ட குடருக்கும் ஒப்புமையாக உவமம் விரித்துக் கண்டு கொள்க. மெய்யும் தொழிலும் பற்றிவந்ததோர் உவமம். **கொடி** - காற்றுடி. **வென்றனர்** - குமரருக்குக் கொடிவிடுதல் வெறும் விளையாட்டேயாக, இங்கு இவர்கிலை அமர் விளையாட்டின் மிக்க வீரக்குறித்தலால் **வென்றனர்** என்றார்.

இவ்வாறன்றி **விண்படர்** என்றதைக் கொடிக்கு அடையாக்கி விண்ணிற்படரும் பட்டம் விடும் பண்பு கொண்ட வித்தையுடைய இளங்குமரரை வென்றனர் என் றுரைப்பாருமுண்டு. இப்பொருளில் **விஞ்சை** - வித்தை. **கொடிவிடுவதோர் தன்மை** பெற்ற வித்தை என்பர். இப்பொருட் பொருத்தமும் உவமானச் சிறப்பும் ஆராயத் தக்கன.

போர் ஓய்ந்தபோது நிணமுண்ணக்கூடிய பிராணிகளில் முன்னர் 622ல் குறித்த காக்கைக் கூட்டத்தின் செயலே மேற்பாட்டாலும், 626ல் கூறிய கழுகுக் கூட்டங்களின் செயலை இப்பாட்டாலும் கூறினர். முன்பாட்டுக்களில் வாள் - வேல் - வில் - போர் வினைகளைப் பிரித்துத் தனித்தனி விரித்துப் போர்க்கள நிகழ்ச்சி கூறிய ஆசிரியர், அவ்வீரர், போரில் எதிரெதிராவதன்றிப் பிணமாந் தன்மை பெற்றுக் காக்கை கழுகுகட் கிரையாவதில் யாவரும் ஒரு தன்மையராய் உள்ளா ராவதனாற் பிணம்படு நிகழ்ச்சி கூறும் இவ்விரண்டு பாட்டுக்களினும் இருதிறத்து வீரருட் பாகுபாடின்றிப் பொதுமை யிற் கூறினர். 24

வேறு

632. இம்முனைய வெம்போரி லிருபடையின் வாள்வீரர்
வெம்முனையில் வீடியபின் வீடாது மிக்கொழிந்த
தம்முடைய பல்படைஞர் பின்னுகத் தாமுன்பு
தெம்முனையி லேனாதி நாதர் செயிர்த்தெழுந்தார். உரு

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறு மூண்டதாகிய கொடிய போரிலே இருபக்கத் தும் வீரமிக்க படைஞர் கடும்போர் புரிந்து பலர் இறந்த பின்னர், மடியாது எஞ்சிய தம்முடைய பல படைஞர்களும் பின்னுகத் தாம் முன்பு போந்து, போர் செய்வ ராகி ஏனாதிநாதர் சினத்தோடு மேலெழுந்தனர்.

(வி - ரை) **இம்முனைய வெம்போர்** - இகரச்சுட்டு இவ்வகையிலே - என முன்னர் விரித்துக் கூறியனவற்றையெல்லா மடக்கிச் சுட்டிக்காட்டியபடி. **முனையபோர்**-முனைத் தலை உடையதாகிய - பகையையுடைய - போர். **வெம்போர்** - **வெம்மை** - கடுமை.

**வாள்வீரர்** - வாள் இங்கு ஆயுதப் பொதுமை குறித்தது. **வெம்முனையில்-முனை** - போர். போர் செய்தலால். **வீடுதல்** - இறத்தல்.

**பின்னுகத் தாம் முன்பு** - தலைவர்கள் பின்னின்று எவ்வதும் அதன்படி படைகள் முன்னின்று போர் புரிதலும் மரபு. இது முதற்போரின் (போர்த்தொடக்கம்) இயல். போர் முற்றிய பின் தமது படைகள் தளர்வடையுங்கால் தலைவர் முன்வந்து தாமே நேராகப் போரில் முனைந்து படைஞரை ஊக்குதல் வழக்கு. இம்முறையைக் கந்த புராண முதலிய மாபுராண சரிதங்களிற் காண்க. இங்குத் தமது படைஞர் பலர் மடிந்தும் எஞ்சியோர் போர் மெலிந்தும் நின்ற நிலையில் முன்னணியில் நின்று பொருத அவர்கள் பின்னுகுமாறு தாம் அவர்கட்கு முன்பு வந்து தாமே போருக்கு எழுந்தார் என்பதாம். **பின்னுக** - பின்னே வர என்பாருமுண்டு.

**தெம்முனையில்** - தெவ் - பகை. தெவ்வர் - பகைவர். தெவ்முனை என்றது தெம்முனை என்றுயிற்று. **முனை** - போர் மூளுதல். **முன்பு** - முன்னணியில்.

**செயிர்த்து - எழுந்தார்** - செயிர்ப்பின்றிப் போர் நிகழாதாகலின் **செயிர்த்து** என்றார். இது இங்குப் போரின் பொருட்டு வந்ததே யன்றிக் குணவசத்தான் வந்ததன் றென்பார் **தெம்முனையிற்** செயிர்த்து என்றார். குணவசத்தான் வந்ததொன்றுயின் அது இவரைத் தன்வயமாக்கி மன நிறையினை யழிவு செய்திருக்கும். அவ்வாறு இவர் அதன் வயப்பட்டாரிலர் என்பது பின்னர் இவர் மாற்றானெற்றியில் நீறு கண்டபோது தங்கிலையே நின்று கொண்ட திருவுள்ளநிலையா லறியப்படும். 645 - 646 பாட்டுக்கள் பார்க்க. இச்சரித உட்கிடையும் காண்க.

**எழுந்தார்** - மனக்கிளர்ச்சி குறித்தது. பாய்ந்தார் என்றலுமாம். 25

633. வெஞ்சினவா ளுயுமிழ வீரக் கழல்கலிப்ப
கஞ்சணிகண் டர்க்கன்பர் தாமெதிர்ந்த ஞாட்பின்க
ணெஞ்சியெதிர் நின்ற விகன்முனையில் வேலுழவர்
தஞ்சிரமுந் தோளுரமுந் தாளுரமுந் தாந்துணித்தார். உக

**(இ - ள்)** வெளிப்படை. மிக்க கோபமுடைய வாளினின்றும் தீப்பறக்கவும், காலில் வீரக்கழல் சத்திக்கவும், விடமணிந்த கண்டமுடையவராகிய சிவபெருமானுக்கன்பராகிய எறிபத்தநாயனார் தாம் மேலே கண்டவாறு போர்க்களத்தில் முன்வந்து செயிர்த்தெழுந்தபோது முன்னர் வீடாது எஞ்சியவர்களாய் அவரை எதிர்த்துப் போரில் நின்ற படைஞர்களது தலையும் தோள் வலிமையும் தாள் வலிமையும் தாம் துணித்தனர்.

**(வி - ரை) வெஞ் சின வாள்** - இவரது செயிர்ப்பு இவர் ஏந்திய வாளின்மேல் ஏற்றப்பட்டது. **வாள் தீ உமிழ** - வாளின் முனையிலிருந்து ஒளியுண்டாக. வாள் தீயுமிழ்தல் இவர் ஒருவரே தீப்பறக்கக் குருதி பொங்கப் பெருஞ்சினத்தோடு வட்டணை திரிந்து வீசியபடியினால் வாளின் ஒளிமிக்குக் காணப்பட்டது. போர்க்களமெங்கும் எதிர்த்த பலவகைவீரரையும் விரைந்துசெல்லும் சாரிகையில் வாள்வீசித் துணித்தலால் காலின் கழல் சத்தித்தன என்க. " ஆண்டகை வீரர் தாமே யனைவர்க்கு மனைவராகிக், காண்டகு விசையிற் பாய்ந்து கலந்துமுன் துணித்து வீழ்த்தார் " (425) என்ற கருத்தை இங்கு வைத்துக் காண்க. கைவாள் தீயை வீசியது ; கால் அதற்கிசைய விரைய வட்டணை சுற்றிற்று. ஆதலின் இவ்வீரண்டுமே கூட்டிக் கூறினர்.

**எஞ்சி இகன்முனையில் எதிர்நின்ற** என மாற்றுக. **எஞ்சி** - மடியாமல் எஞ்சி. **எதிர் நின்ற** - போர்க்களத்தில் எதிர்த்து நின்ற. **ஞாட்பு** - போர்க்களம்.

**வேலுழவர்** - வேல் கொண்டு தொழில் செய்வோர். வேலினைப் பகைப்புலத்தினிற் செலுத்திப் போர் விளைத்தலால் உழவு என உருவகப்படுத்தினர்.

**தம் சிரமும் தோள் உரமும் தாள் உரமும்** - மெய்களைப் பலகையால் மறைத்துத் (623) தற்காப்புச் செய்து வீரர் பொருவாராதலின் சாரிகை முறையிற் குறிபார்த்துச்

சிலரைச் சிரமும், (அது கிட்டாதபோது) சிலரைப் படைபிடித்த தோளும், அக்குறியும் கிட்டாதபோது சிலரை அவர்களது போர் முயற்சிக்குத் துணையாகிய தாளும் துணித்து வீழ்த்தார். எவ்வாற்றலும் மேலடர்ந்து பொராத நிலையினை விளைத்தனர் என்பது. தாம் - தாமே. பிறருதவியின்றித் தாமொருவரே. உரம் - வலிமை. தோள் உரமும் தாளும் என்று பாடங் கொண்டு தோளும் மார்பும் காலும் என்றுரைப்பாரு முண்டு. தாள் துணிப்பதுபற்றி 627ல் உரைத்தவையும் காண்க. தோளும் தாளும் துணித்தார் என்னுது தோள் உரமும் தாள் உரமும் என்றது தோள் துணிப்பதும் தாள் துணிப்பதும் அவர் கருத்தன்று ; அவர்களது போர் வலிமை தவிர்ப்பதே குறியீடாகக் கொண்டு அதற்கு வேண்டிய அளவே துணித்தலைச் செய்தனர் என்றதாம். 26

634. தலைப்பட்டா செல்லாருந் தனிவீரர் வாளிற்
கொலைப்பட்டார் ; மூட்டாதார் கொல்களத்தை விட்டு
நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதி
லலைப்பட்ட வார்வமுதற் குற்றம்போ லாயினர். உஎ

(இ - ள்) வெளிப்படை. கூடி எதிர்ந்தவர்கள் எல்லாரும், ஒப்பற்ற வீரராகிய எறிபத்தருடைய வாளினுற் கொல்லப்பட்டொழிந்தனர். இது கண்டு, வந்தெதிர்க்காத படைஞர் படுகளத்தை விட்டு, நிலைத்த மெய்யுணர்வின்முன் அலைந்து ஒழிகின்ற ஆர்வ முதலிய குற்றங்கள்போல ஆயினர்கள்.

(வி - ரை) தலைப்படுதல் - கூடுதல் - ஒன்றுதல். இங்குப் போரில் முனைந்து ஒருவரோ டொருவர் பொருந்தக் கிட்டுதல் குறித்தது. "தன்னை மறந்தாடன் ஞமங் கெட்டா டலைப்பட்டா ணங்கை தலைவன் ருளே" (திருவாரூர்த் திருத்தாண்டகம்) என்றது அப்பர் சுவாமிகள் திருவாக்கு. "தலைப்படுஞ் சார்வு நோக்கி" (திருஞான - புரா - 1245) என்றதும் காண்க. அதிற்றலைப்பட்டான் - தலையிட்டான் - அதற்குத் தலை கொடுத்தான் என்ற உலக வழக்குக்களும் காண்க. போராதலின், இங்கு உவமை முகத்தானன்றி உண்மையானும் தலையையே படமுனைந்தார் என்ற சுவையும் காண்க.

வாளிற் கொலைப்பட்டார் - இல் - ஐத்தனுருபு ஆல் எனக் கருவிப் பொருளில் மூன்ற னுருபாக வந்த உருபு மயக்கம். வாளினுற் கொலையுண்டார். படு விகுதி செயப்பாட்டு வினைப்பொருள் தந்தது.

மூட்டாதார் - மாற்றானது படைவீரர்களுள், அவ்வாறு எதிர் வந்து போரில் முனையாதவர்கள்.

கொல்களம் - போர்க்களம். ஓர் இடத்திற்குப் பெயர் அவ்வப்போது அங்கு நிகழும் நிகழ்ச்சியாற் கூடுவதியல்பு. இங்கு இந்த இடம், முதலில் இந்தவெளி (620) என்றது, போர் குறித்து இருபடையும் சேர்ந்தபோது "செருக்களம்" (621) ஆயிற்று. அதன்பின் போர் மூண்டு நிகழும்போது போர்க்களம் (635) என்றாயிற்று. பின் படைஞரது போர் ஒய்ந்தபின் மேலும் போர் நிகழ நிற்றலின் பறந்தலை (636) எனப் பட்டது. இங்குத் தனிவீரர் வாளின்முன் எதிர்த்தார் தம் படை ஒன்றும் பயன்படாது கொல்லப்பட்டாராதலின் கொல்களம் எனப்பட்டது காண்க. பின்னர் இவ்வகையி லும் நிகழ்ச்சி உளதாகாமையின் வேறிடம் (638), அக்களம் (639), (640), இடம் (643) எனப்படுவதும் காண்க.

கொல்களத்தை விட்டு.....குற்றம்போல் ஆயினர் - கொல்களத்தில் அவர்கள் கொல்லப்படவுமில்லை. காணப்படவுமில்லை. ஆதலின் அவர்தாம் யாதாயினர் எனின் மெய்யுணர்வு வெளிப்பட அதன்முன் ஆர்வம் முதலிய குற்றங்கள் யாதாகுமோ அது போல் ஆயினர் என்க. செயலற்றுப் போய் அங்கு எதிர் நிற்க லாற்றாது மறைந்து போயினர் என்பது. ஒளிந்து மறைந்தனர் என்னுது "குற்றம்போல் ஆயினர்" என்

றிவ்வாறு கூறியது அவர்கள் யாதாயினர் என்றே தெரியா வகை மறைந்தனர் என வீரச்சுவை நீங்க நகைச் சுவைபடக் கூறியவாறு. இறந்தவரினும் ஒடினர் கொடிய ரென்பார் குற்றம்போல் என்றார் என வுரைப்பாருமுண்டு.

**நிலைப்பட்ட மெய்யுணர்வு** - மெய்யுணர்வு - உண்மைப் பொருளை உணரும் உணர்வு. ஞானமென்ப. வீட்டிற்கு நிமித்தமாகிய செம்பொருளைக் காண்பதுவே மெய்யுணர்வாம். அஃதாவது **அநட்கண்ணுகிய** சிவஞானத்தால் விளங்கிச் சிவம்-உயிர்-பாசம் என்ற பொருள்களைக் காணும் மெய்யுணர்வாம். அவ்வகை உணர்வின் முன்னர் ஆர்வம் முதலிய குற்றங்கள் முனைத்து நிற்கலாற்றாது காட்டுத்தீ முன்னர்ப் பஞ்சுத்துய் போலவும், ஒளியின்முன் இருள் போலவும் ஒழிந்தேபோம். இவைகளைச் "சார்புணர்ந்து சார்புகெட", "மூன்றன் காமங்கெட" என்ற திருக்குறட் பாக்களின் கீழ்க் கண்டு கொள்க. மெய்யுணர்வின் இயல்பும், ஆர்வம் முதற் குற்றங்களி னியல்பும், மெய்யுணர்வின் முன் குற்றம் நில்லாத இயல்பும் ஞான சாத்திரங்களுட் காண்க. **நிலைப்பட்ட** - "கல்லெறியப் பாசி கலைந்து நன்னீர் காணுதல்போல" அப்போதைக்குக் காணப்பட்டு மறையும் உணர்வாயின், அது பின்னர் அப்பாசத்தால் மறைக்கப்படுமாதலின், அவ்வாறல்லாது குற்றங்கள் அறவே ஒழியுமாறு நிலைநின்ற மெய்யுணர் வென்பார் **நிலைப்பட்ட** என்று சிறப்பித்தார். "இடையறாத ஞான யோகங்களின் முன்னர் இக்குற்றங்கள் மூன்றும் காட்டுத் தீ முன்னர்ப் பஞ்சுத்துய் போலுமாதலின்" என்றார் பரிமேலழகர். **நிலைப்பட்ட மெய்யுணர்வாவது** திருவடி மறவாதிருத்தல். "மறக்குமா நிலாத வென்னே" (பண் - நட்டராகம் - திருவிராகம் - திருத்துருத்தி - 5) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரமும், "பண்டு திருவடி மறவாப் பான்மையோர்" (திருஞான - புரா - 55) என்ற புராணமும் முதலிய திருவாக்குக்களிற் குறித்த நிலை இது.

**ஆர்வம் முதல் குற்றம்** - இவை காமம் - வெகுளி - மயக்கம் என்ற மூன்றென்பர். "காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற னுமங் கெடக்கெடு நோய்" என்ற குறளின் கீழ் "அநாதியாய அவிச்சையும், அது பற்றி யானெனது மதிக்கும் அகங்காரமும், அது பற்றி எனக்கிது வேண்டுமென்னு மவாவும், அது பற்றி அப்பொருட்கட் செல்லு மாசையும், அது பற்றி அதன் மறுதலைக்கட் செல்லுங் கோபமும் என வடநூலார் குற்றமைந்தென்பர். இவர் அவற்றுள் அகங்காரம் அவிச்சையின் கண்ணும், அவாவுதல் ஆசைக்கண்ணும் அடங்குதலால் மூன்றென்றார்" என்பன முதலாக உரைத்தவை காண்க. இவற்றைக் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என ஆறாகவும் வகுப்பர். "கலையமைத்த காமச்செற்றக் குரோதலோப மதவருடை, உலையமைத்திங் கொன்றமாட்டே ளுணைகாத்தன் றளியுளீரே" (8) என்ற ஆளுடைய நம்பிகள் தேவாரமும் பிறவுங் காண்க. இவையெல்லா மடங்க "ஆர்வமுதற் குற்ற" மென்றார். இவை மூலமலத்தின் காரியம். நெல்லிற்குமிதவிடும் நீள்செம்பினிற் களிம்பும்போல.

**அலைப்பட்ட** - இக்குற்றம் உயிரைப்பற்றி நின்ற முன்னை நிலையினின்றும் மெய்யுணர்வு இவற்றை அலைக்க, அதிலேபட்டுப் பெயர்ந்த என்க. மெய்யுணர்வொன்றே நிலைப்படுவதென்றும், ஏனைக் குற்றங்கள் ஒரு காலத்து அலைப்பட்டொழிவன என்றும் குறித்ததும் காண்க.

இங்கு உவமான உவமேயங்களில் நிலைப்பட்ட மெய்யுணர்வுடையார் ஏனைநாதரும், ஆர்வமுதற் குற்றமுடையார் அதிசூரனும் அவன் படை வீரருமாயின பொருத்தமும் அழகும் கண்டு களிக்க.

கொல்களத்தினும் நிலைப்பட்ட மெய்யுணர்வு மயமாக விளங்கினர் நாயனார் என்பது, பின்னர்த் திருநீற்றின் பொலிவினை மாற்றுனெற்றியிற் கண்டபோதே அவனது கொள்கைக் குறிவழிநின்ற நேர்மையாலும், அதன் மேலும் நிராயுதரைக் கொன்ற

னனும் தீமை அவனுக்கு எய்தாமைப் பொருட்டே மலைவார்போற் காட்டி அவன் கருத்து முற்றுமளவும் வாளா படை தாங்கி நின்ற நேர்மையாலும் அணியப்படும்.

இவையெல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும்; உண்மையுணர்ந்த ஞானதேசிகர்பாலறியத்தக்கன.

வெம்போரில் தமது உயிர் கொடுத்தும் மெய்யுணர்வின்கண் நின்ற நாயனார் திறத்தின் முன் மாற்றார் படை ஒழிந்த திறத்திற்கு உரியவாறு கொலைக்களத்திலும் நிலைப்பட்ட மெய்யுணர்வும் அலைப்பட்ட குற்றமும் உவமித்த ஆசிரியரது நிலைப்பட்ட மெய்யுணர்வுகண்டு வியக்கற்பாலதாம். இங்குப் போரிற் படைமக்கள் சிரமும் தோளும் தாளும் அணிக்கப்பட்டுக் கிடக்கும் கொல்களத்தினிடையிற் பிறழாது மெய்யுணர்வின் நின்றதுபோலவே திண்ணனார் வேட்டையில் மாக்கள் படும் கொல்களத்தினிடையும்,

> "பலதுறைகளின் வெருவரலொடு பயில்வலையற நுழைமா
> வுலமொடுபடர் வனதகையுற வுறுசினமொடு கவர்நாய்
> நிலவியவிந வினைவலியிடை நிலைசுழல்பவர் நெறிசேர்
> புலனுறுமன னிடைதடைசெய்த பொறிகளினள வுளவே"

என்று மெய்யுணர்விற் பிறழா நேர்மையின் உவமித்ததும், இவ்வாறுள்ளன பிறவுங் கண்டுய்வோமாக. 27

635. இந்நிலைய வெங்களத்தி னேற்றழிந்த மானத்தாற்
றன்னுடைய பல்படைஞர் மீண்டார் தமைக்கொண்டு
மின்னெளிவாள் வீசி விறல்வீரர் வெம்புலியே
றன்னவர்தம் முன்சென் றதிசூர னேரடர்ந்தான். உஅ

(இ - ள்) வெளிப்படை. இந்நிலையினையுடைய கொடிய போர்க்களத்திற் போரேற்றுவந்து போரில் அழிந்துபோயின இளிவரவு பொறுமையினாலே தனது பல படைஞர்களில் மீண்டவர்களைச் சேர்த்து உடன்கொண்டு மின்போன்ற ஒளியுடைய வாளினை வீசி, வெவ்விய புலியை ஒத்த வலிமையுடைய வீரராகிய ஏனாதிநாதரின் முன்பு நேராகச் சென்று அதிசூரன் போர் புரிந்தான்.

(வி - ரை) இந்நிலைய வெங்களம் - இம்முனைய வெம்போரில் - (632) என்றது போல வந்தது. வெங்களம் - கொடிய போர் நிகழும் களம். இடத்து நிகழும் போரின் வெம்மை இடத்தின்மேல் ஏற்றப்பட்டது.

வெம்மை - விருப்பம் எனக்கொண்டு, அதிசூரன் தானே விரும்பி "இந்த வெளி மேற் கை வருத்து" (620) என்று போருக்கு அழைத்த களம் என்ற குறிப்புமாம்.

ஏற்று - போர் ஏற்று. அழிந்த - அழிந்ததனால். அதில் தன் படைகள் மடிந்தும் ஓடியும் போயினதாலே விளைந்த.

மானத்தால் - மானம் - தன்னிலை திரியாதிருத்தல். இங்கு இளிவரவு பொறுததன்மேல் வந்தது. இதனையே அவமானம் என்பர். மானங்கெடவரின் என்ற வழக்குங் காண்க. அழிந்த மானமிக (637) என்று பின்னர்க் கூறுவதுங் குறிக்க.

படைஞர் மீண்டார் - படைஞரில் மீண்டவர், இவனது படைஞருள்ளே, முன்னர்ப் படைவீரர் விளைத்த போரில்626-ல் கூறியபடி பட்டவர் பலர்; அவர் போக எஞ்சியவருள் நாயனார் செயிர்த்தெழுந்து வாளாற்றுணித்தபோது எதிர்ந்தவர் எல்லாரும் கொலைப்பட்டொழிய, அவருடன் முட்டாதாசாய்க் களத்தைவிட்டுப் போர்முனையில் எதிர் நில்லாது மறைத்தும் ஓடியும் போயினருள்ளே, தன்னுல் ஊக்கங்கொண்டு போருக்கு மீண்டும் வந்தவர் சிலர்; அவர்களையும் உடன்கொண்டு என்க. மாண்டாரும் ஓடினரும் உள்ளாரும் ஒழிய மீண்டார் தமை என்பதாம்.

**மின் ஒளி வாள் வீசி** - மின்னிரை தம்மிடையே கொடு (622) என்றது காண்க.

**விறல் வீரர் வேம்புலி ஏறு அன்னவர்** - **விறல் வீரர்** என்றது தம்மை எதிர்த்தா செல்லாரையும் தனி வீராராகிக் கொன்றொழித்த வாளாண்மை செய்த விறலுடைய வீரர். **வீரர்** - அன்னவர் - புலியனையாராகிய வீரர். ஒருபொருட் பல்பெயர்.

**வேம்புலி ஏறு** - வெங்கட் புலி (617) என முன்னரும் இவ்வாறே கூறியது காண்க. ஆண்டுரைத்தவையும் நினைவு கூர்க.

**அதிசூரன் நேர் அடர்ந்தான்** - நாயனுர்க்கு **விறல் வீரர்** என்றும், **புலி அன்னர்** என்றும் அடைமொழியும் உவமையும் தந்து கூறிய ஆசிரியர் அதிசூரன் என்று வாளா கூறியது அவனது சிறுமை நோக்கி.

**நேர் அடர்ந்தான்** - நேர் பொருதற்குத் தகுதி பெற்றுனல்லனுயிருந்தும் சென்று நேர் நின்று போர் செய்தான் என்க.

**தம்முன் - தம்** - நாயனுரது சிறப்புக் குறித்து நின்றது. வேற்றுமைப் புணர்ச்சிக் கண்வந்தசாரியை.

**புல் படையூர்—வந்ததிசூரன்**—என்பனவும் பாடங்கள். 28

*636. மற்றவர்தஞ் செய்கை வடிவா ளொளிகாணச்
சுற்றிவரும் வட்டணையிற் ரேன்ரு வகைகலந்து
பற்றியடர்க் கும்பொழுதிற் ருனும் படைபிழைத்துப்
பொற்றடந்தோள் வீரர்க் குடைந்து புறகிட்டான். உக

(இ - ள்) வெளிப்படை. அவர் தமது செயலே சிறந்த வடிவாளின் ஒளிமட்டும் காணு மாறும் சாரிகை சுற்றி வருகின்ற வட்டணையிலே தாம் காணுதவாறும் அப்போரினுட் கலந்து மூண்டு அவ்வதிசூரனே வீசித் துண்டிக்கும் சமயம் நேர்ந்தபோது அவனும் அதினின்றும் தப்பியவனுப்ப், பொன்னணிந்த பெரிய தோள்களையுடைய வீரராகிய எனுதிகாதருக்குத் தோற்றுப் புறந்தந்து ஓடினன்.

(வி - ரை) **மற்றவர்** - எனுதிகாதர். **தம் செய்கை** - "மின்னெளி வாள்வீசி நேர் டர்ந்த" என்று அதிசூரன் செய்கையை மேற்பாட்டிற் கூறினுராதலின், இங்கு இவர் செய்கை **மற்று** இது என்று விரிக்கின்றுர். **மற்று** - வினைமாற்றுப் பொருளில் வந்தது.

**வடிவாள்.....வட்டணை** - வாளினை வீசிச் சாரிகை சுற்றிவரும் விரைவினுலே வாளின் ஒளிமட்டும் காணப்பட்டதாக அந்த வட்டணையினுள்ளே.

**தோன்ற வகை** - வாளுங்காணுது, அதனை வீசிச் சாரிகை சுற்றும் தம் திருமேனி யுங் காணுது ஒளிவட்டம் மட்டும் காணுமாறு. "கைகளின் மெய்களடக்கிய வாளொளி வட்டம்" (623) என்ற இடத்து உரைத்தவை காண்க.

**கலந்து பற்றி** - அவன் வாள் வீசியடர்ந்த போரில் தாமும் கூடி நெருங்கி.

**பற்றி அடர்க்கும்பொழுது** - சாரிகை முறைமையிற் குறிபார்த்து வாள் வீசிக் கொல்லும் சமயம். முன்னர் 627-ல் உரைத்தவை காண்க. இதற்கு இவ்வாறன்றித் **தம் செய்கை தோன்ற வகை** என்று கூட்டி எனுதிகாதநாயனுர் சத்துருக்களைக் கொல் லுதற்குச் செய்த தந்திரச் செய்கைகள் அவருடைய வாள் வீச்சின் பிரகாசத்தினுலும் கேடகத்தினுடைய சுற்றுதலினுலும் கண்ணுக்குப் புலப்படாமல் இருந்தன என்பர் மகாலிங்கையர். இதன் பொருத்தம் ஆராயத்தக்கது.

**தானும் படை பிழைத்து** - **படை** - படுதல். தொழிற்பெயர். ஐகாரம் தொழிற் பெயர் விகுதி. அவரது வாள் வீசும் வட்டணையினுள்ளே படுதலினின்றும், **பிழைத்து**-தப்பி. **படை** - வட்டணை வீசிய வாட்படை என்றலுமாம். **தானும்** - வடிவாட் படைத் தொழில்கள் கற்றவர்கள் தன்னிற் கடந்துளாரில்லை எனும் பெருமிதம் வந்து தன் னையே சால மதித்துள்ளாரெனிய அவனும் என உம்மை சிறப்பு.

இவ்வாறன்றிப் படை பிழைத்து - என்பதற்குப் படையுடன் தப்பி - தானும் தன்னுடைய சேனையுமாகத் தப்பி - தனது வாட்படையைக் கொண்டும் கேடகத்தைக் கொண்டும் போர் செய்ய அறியாமல் - என்று பலவாறு முரைப்பாருமுண்டு.

**போன்**-அழகிய என்றலுமாம். **தடந்தோள்** - இங்கு மாற்றலனைப் புறங்கிடச்செய்து வென்றது வாள்வலி பெற்ற தோள்வலியே யாதலின் தோளைச் சிறப்பித்தார். **தோள் வலி** என்ற இடத்துச் சங்கோத்தர விருத்தியில் எமது மாதவச் சிவஞான சுவாமிகள் உரைத்தவை காண்க.

**புறகிட்டான்** - தோல்வியுற்று அதற்கடையாளமாக முதுகு காட்டி ஓடினன்.

**புறமிட்டான்**—என்பதும் பாடம். 29

637. போன வதிசூரன் போரி லவர்க்கழித்த
மானமிக மீதூர மண்படுவான் கண்படா
னைசெய லோரிரவுஞ் சிந்தித் தலமருவா
"னீனமிகு வஞ்சனையால் வெல்வ"னென வெண்ணினனே, கூ0

638. சேட்டாருங் கங்குல் புலர்காலைத் தீயோனு
"நாட்டாரைக் கொல்லாதே நாமிருவேம் வேறிடத்து
வாட்டாயங் கொள்போர் மலைக்க வருக"வெனத்
தோட்டார்பூந் தாரார்க்குச் சொல்லிச் செலவிட்டான். கூக

637. (இ - ள்) வெளிப்படை. (இவ்வாறு உடைந்து புறகிட்டு ஓடிப்) போயின அதிசூரன் போரிலே அவருக்குத் தோற்றதனாலாகிய மான மிகமேற்படத் தரையிற் படுத்தவன் தூங்காதவனாகி இவ்வாறுயின செயலே எண்ணி யெண்ணி அந்த ஒரு இரவு முழுதுஞ் சிந்தித்து மனஞ் சுழன்று "(இப்படி நேர் பொருதலின்றி) ஈனமிகுந்த வஞ்சனைச் செயலாலே அவரை வெல்வேன்" என்று எண்ணினனாய், கூ0

638. (இ - ள்) வெளிப்படை. அந்நீண்ட இரவு முழுதும் கழிந்து புலர்காலையில் தீயவனாகிய அவனும் "நமது போரில் நம்பொருட்டு நாட்டார்களைக் கொல்லாமல் நாமிருவரும் தனியிடத்தில் வாளின் தாய உரிமை கைக்கொள்வதனை நிச்சயிக்கும் போரினைச் செய்ய வருக" என்று இதழ்கள் செறிந்த பூமாலையணிந்த எறிதாதர்க்குச் சொல்லி வர (அவனாளனை) அனுப்பினன். கூக

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன. தனி முடிபுகளாகக் கொள்வாருமுண்டு.

637. (வி - ரை) **போன்** - புறகிட்டுச் சென்ற. அவன் ஆயினவனுகாது நன்மைக்குப் புறம் போயினவனே என்பது குறிப்பு.

**மிக மீதூர** - ஒரு பொருட்பன்மொழி. அடர்ந்த மிகுதி குறித்தது. **மீதூர்தல்** - அடக்க முடியாதபடி மேற்கிளம்புதல். **மான மிக மீதூர** - மானமுடையார் தங்கிலையழியார். மானம்பட வரின் உயிர் வாழார். "மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னார், உயிர்நீப்பர் மானம் வரின்". ஆயின் இவன் அவ்வாறு தன்னுயிர் நீத்து மானங்காத்துக் கொள்ள முற்படாது, வஞ்சனையால் வென்று, தகாத வழியிலே உயிர் ஓம்பியும் பிறர் பொருள் கவர்ந்தும் வெற்றி என்ற பேர்பெற்று மானமுங் காத்துக் கொள்ள எண்ணினன். இது, மான மிக மீதூர அதனால் விழுங்கப்பட்டானதனாலும், அழுக்காற்றினால் விழுங்கப்பட்டு ஏலா இகல் புரிந்தானதனாலும், தன்னையே சால மதித்த தீய பெருமிதமுடையனதனாலும் அறம் பிறழ்ந்து வஞ்சனைசெய்தான் என்பது.

**மண்படுவான் கண்படான்** - தரையிற் படுப்பன் - ஆனால் தூங்க இயலாது எழு வானுகி. பூவார் அமளி முதலிய படுக்கையின்பம் விரும்பாது தரையிற் படுத்தல் மிக்க துயரத்தாலாவதாம். நோன்பு - விரதம் - முதலியவற்றிலும் இவ்வழக்குண்மையும் கருதுக. மிகு துயரம், கவலை முதலிய வற்றோர் படுப்பினும் உறக்கம் வராது அழுர் தும் இயல்பும் காண்க.

**மண்படுவான்** - மண்விழுவான் - காசமாவான் - பாவி என்ற வசைச்சொற் குறிப்பும்பட கிற்பது காண்க. இவனது வஞ்சக் கொடுமைபற்றி ஆசிரியர் இவ்வாறு வசைக் குறிப்புப்பெற இரட்டுற மொழிந்தார் என்க. "கண்ணுவா ரேனுமூனைக் கை குவியா ராயினந்த, மண்ணுவார் நட்பை மதியேன் பராபரமே" என்ற தாயுமானர் வாக்குங் காண்க. மானமுடையார் தக்கிலை திரியார்; ஆனால் இங்கு இவன் வீரன் என்ற நேர்மை திரிந்து வஞ்சனையால் வெல்ல எண்ணினனுதலின் **மண்படுவான்** என்றதாம். "மண்புகார் வான்புகுவர்" என்ற தேவார ஆட்சியும் காண்க. **மண்படு வான்** - மண்ணில் வீழ்வான் என்று பொருள் கொள்வது சிறப்பின்றும்.

**ஆன செயல்** - தான் போரில் அழிந்த செயலை. **ஓர் இரவும்** - ஒரு இராப் பொழுது முழுமையும். முற்றும்மை. **ஓர்** - எண்ணிய வகையில், அந்த இரவு முழு மையும் என்றலுமாம். ஆன செயலைச் சிந்தித்து என்க. தான் தோற்றுப் புறகிட நேர்ந்த நிகழ்ச்சியினையே பன்னிப் பன்னி இரவு முழுதும் எண்ணமிட்டு. இதனைக் கழிவிரக்கம் என்ப. இவ்வாறு கழிந்த பொருட்கிரங்கி நிற்றல் துன்பமே விளைக்கும்; ஆதலின் **அலமந்து** என்றார். அலமரு - பகுதி. மனஞ் சுழன்று வருந்துதல். **அலம் வா** - பகுதி எனக்கொண்டு இச்சொல் அலம் வருதல் எனவும் வழங்கும். இங்கு **அலம் வருவான்** என்பதும் பாடம். **அலம்** - சஞ்சலம் - துன்பம்.

**ஈன்மிகு வஞ்சனையால் வெல்வன்** - நேரடர்ந்தான் போரில் உடைந்து புறகிட் டமையால் அவ்வகை வெற்றி பெறுவது தன்னால் இயலாமை தெளிந்தனன். ஆத லின் வஞ்சித்து வெற்றி பெறுவதே வழி என்று கருதினன் என்க. இது உலகிற் பெரும்பாலும் மக்களுட் காண்பதோரியல்பு. நேரிய ஒழுக்கம் கைக்கொண்ட மான முடையார் இதிற்றுணியார் என்பார் **ஈன்மிகு வஞ்சனை** என்றார். உலகியலிற் பெரும் பான்மை மக்களுள் இக்கொள்கை பரவி நிற்றலின், "வழி எதுவேயாயினும் உட் கொண்டது பெறுதல்" என்பதொரு போலி நியாயமும் நிலவுவதாயிற்று. The end Justifies the means என்பது முதலாகக் கூறுவது கீழோரது கவின மரபு. இவ் வாறே போரிற் "பன்முறை யிழந்து தோற்றுப் பரிபவப்பட்டுப் போன" முத்த நாதன் மெய்ப்பொருணயனாரை வஞ்சனையால் வெல்ல எண்ணிச் செயல்செய்தான் என்பதும் காண்க. 472-ம் பாட்டும் அச்சரித நிகழ்ச்சியும் காண்க. முத்தநாதன் பன் முறையிழந்து தோற்ற பின்பே அது துணிந்தானுக, இங்கு அவனிலுங் கடையனுகிய அதிசூரன் ஒருமுறை புறகிட்டவுடனே வஞ்சனை துணிந்து செயல் செய்தனன். ஆத லின் அக்கீழ்மை நோக்கி இங்கு **மண்படுவான்** என்றும், வரும்பாட்டிலும், 641-லும் **தீயோன்** என்றும், 647-ல் **பாதகன்** என்றும் குறித்தார்.

**எண்ணினனீ** - எண்ணினனுய். எண்ணினனுகி - செலவிட்டான் என்று முடிக்க.

638. (வி - ரை) **சேட்டாநம்** - சேடு ஆரும். **சேடு** - சேய்மை. சேய்த்தாகிய அளவுகொண்டு கீடித்தல். சேடு கொண்ட ஒளி (247) (சேய்மையினும் கீண்டு விளங்கும் பேரொளி) என்றது காண்க. **ஆநம்** - கிறைந்த. **ஆர்தல்** - கிறைதல். கால கீட்டித்துக் கழிந்த இரவு என்பதாம். துன்பம் - துயரம் - பிரிவு முதலியவற்றுற் காலம் செல்லாது கீடித்துக் காட்டுதல் இயல்பாம்.

**புலர்காலை** - இரவு இருள் கழிந்து போகும் அதிகாலை. நன்றுய் விடிந்து ஞாயிறு படருமளவும் பொறுனுகி என்பது குறிப்பு.

**நாட்டாரைக் கொல்லாதே** - பதியோர் கூடிய படையோடு போர்செய்தலில் அவர் பலரும் மாண்டனர். அவ்வாறு அவர் மாண்டது நமது தாய உரிமை நிச்சயிக்கச் செய்யும் போரில் நம்மிற் சாயாதார் தாயம் கொள்ளும் பொருட்டே யாவதன்றி இப் போரில் அவர்க்காவதோர் காரணமும் பயனும் இல்லை. ஆதலின் நம் பொருட்டே அவர்களை மாளச் செய்தலால் நாம் அவர்களைக் கொன்றவராவோம். அது நம்பாற் குற்றமாம் என்றதெல்லாம் கருதிச் சொல்வான் போல **நாட்டாரைக் கொல்லாதே** என்றான். தனது தோல்வியை மறைத்து நாட்டார்பாற் கருணையுடைய நேர்மையும் கொலை முதலிய பாதகத்துக் கச்சமும் கொண்டவன்போலச் சொல்லிவிட்டது அவனது **முதல் வஞ்சனைச் செயலாம்.**

**நாமிருவேம்** - நாமிருவரும் மட்டும். இது **இரண்டாவது வஞ்சனைச் செயல்.** **வேறிடம்** - தனியிடம். இது **மூன்றவது வஞ்சனைச் செயல்** - "நானு நீயும் வேறிடத் திருக்க வேண்டும்" (479), முதலியவை காண்க.

**வாள் தாயம் கொள் போர்** - வாள் பயிற்றும் ஆரியத் தொழிலின் வழிவழி உரிமையினைச் சாயாதார் தம்முடையதாக ஆக்கிக் கொள்ளுதற்குரிய போர். 625 பார்க்க. **மலைக்க** - மலைய என்பது மலைக்க என விகாரமாயிற்று. வஞ்சனையால் விகாரப்பட்டானது வாக்காதலின் சொல்லும் விகாரப்பட்டது போலும். போரில் உம்மை மலைக்க - மலைவுறுவிக்க என்ற குறிப்புமாம். மலைவுறுதல் ஒன்றை மற்றொன்றாக அறிதல். ஆயின் இங்கு மலைவு இவன் மட்டில் நின்றதேயன்றி நாயனார்பாற் சாரவில்லை. இவனே தன் வஞ்சனையை நீற்றினால் மறைத்துக் காட்டினான். அவர் இவன் பகைவனாகிய அதிசூரன் என்று கண்டார்; ஆயினும் அவன் நெற்றியில் திருநீற்றினை நீறாகவே கண்டார்; இவன் தமதுயிர்மேலும் தாய உரிமைமேலும் வைத்த கொள்கைக் குறியினையும் அவ்வாறே கண்டார்; ஆனால் நீற்றினைக் கொண்டதனால் அடியாராயினார் என்று கொண்டு அவ்விதிப்படி ஒழுகினார். இவன் அவரை **மலைக்க** எண்ணியும் அவர் மலைவுறுதலிலராயினர் என்க.

**தோடு ஆர் பூ தாரார்க்கு**-முன்னாள் வெற்றி பெற்ற பொற்றடந் தோளில் வாகை சூடியவர் என்பது குறிப்பு. இங்கு மீண்டும் அடிமைத்திறத்திற்காக உயிர் கொடுத்த அருள்வெற்றி அவருடையதே என்பதும் குறிப்பு. "தொழுது வென்றார்" (481) என்றது காண்க. எதுகை நோக்கித் தோட்டார் என இரட்டித்து வந்தது.

**சொல்லிச் செலவிட்டான்** - சொல்லி வர ஒருவனை விடுத்தான். ஒருவனை என்பது வருவிக்க. மறைவு மொழி சொல்லச் சென்றானதலின் அவனை மறைவுபடுத்திக் கூறிய மரபு காண்க.

சொல்லி வரவிட்டான்—என்பதும் பாடம். 31

639. இவ்வாறு கேட்டலுமே யேனதி நாதனு
"ரவ்வாறு செய்த லழகி" தெனவமைந்து,
"கைவா ளமர்வினைக்கத் தான்கருது மக்களத்தில்
வெவ்வா ளரவோன் வருக"வென மேற்கொள்வார், கூஉ

640. சுற்றத்தார் யாரு மறியா வகைசூடர்வாள்
பொற்பலகை யுந்தாமே கொண்டு புறம்போந்து
மற்றவன்முன் சொல்லி வரக்குறித்த வக்களத்தே
பற்றலனை முன்வரவு பார்த்துத் தனிநின்றார். கூக

639. (இ - ள்) வெளிப்படை. இதனைக் கேட்டலும் எனதிநாதனார், "அவ்வாறு செய்தல் அழகிது" என்று ஏற்றுக்கொண்டு, "கையில் வாளேந்திப் போர்செய்ய அவன்

எண்ணிய அந்தக் களத்திற் கொடிய வாளேந்திய வலிமையுடைய அவன் வரக்கடவன்'' என்றுசொல்லி, அச்செயலே மேற் கொண்டவராய், கூஉ

640. (இ - ள்) வெளிப்படை. தமது சுற்றத்தார் முதலிய எவரும் இதனை அறியாதபடி தாமொருவரே, ஒளியுடைய வாளினையும் அழகிய பூணிட்ட பலகையையும் எடுத்து வெளிவந்து, மற்றவன் முன் சொல்லிவிட்டு வருமாறு குறித்த அந்தக் களத்திலே பற்றலரஞ்சிய அவனுக்கு முன்னமே சென்று அவன் வரவினை எதிர்பார்த்துத் தனி நின்றார். கூஉ

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒரு தொடர்.

639. (வி - ரை) இவ்வாறு - இத்தவகைக் குறிப்புக்கள் பெற அவன் சொல்லியனுப்பிய வரலாற்றை. இரண்டாம் வேற்றுமைத் தொகை.

அவ்வாறு செய்தல் அழகிது - இது காயனாரது மன நிகழ்ச்சி. காட்டாரைக் கொல்லாது இருவேமும் வேறு பொருதல் சிறந்தது. அமைந்து - ஒப்பி. நீதிக்குப் பொருந்துவதாகக் காண்டலின் அது நியாயம் என்று ஏற்றுக்கொண்டு. அழகிது என்பது அமைதற்குக் காரணம்.

கைவாள் அமர் - கையில் வாளேந்திச் செய்யும் வாட்போர். கை - வாளுக்கு அடை மொழி மாத்திரையாய் நின்றது. தம் கையே துணையாகப் பிறிதொருவரையும் துணைக் கூட்டாது என்ற குறிப்புமாம்.

தான் கருதும் - அவ்வதிசூரன் குறித்துச்சொன்ன.

அக்களம் - முன்னைப் போர் நிகழ்ந்த, யாவரும் காணத்தக்க பொதுப் போர்க்கள மல்லாத வேறிடம் என மேற் பாட்டிற் குறித்த அந்தக்களம். அகரச் சுட்டு முன் குறித்த அந்த என்றதாம். "முன் சொல்லி வரக்குறித்த அக்களத்தே" என வரும் பாட்டிலும் இதனையே சுட்டியது காண்க. வேறொருவரும் அறியாத தனிப்போராதலின் குறித்த இடம் சேர்தல் அவசியமாயிற்று. காயனார் அக்கருத்தினை அழகிது என்றமைத்தாராதலின் அக்குறிப்பினையே கொண்டு அக்களத்திற்கு முன் சென்றனர் என்பார் இருமுறையும் இடத்தையே முதன்மையாய்ச் சுட்டிக் கூறினர். இப்பாட்டில் அவனுக்கு இடம்பற்றிய இசைவை அறிவித்து, வரும்பாட்டில் அவ்வாறே இவர் சென்றதனைக் கூறுவதனாற் கூறியது கூறலாகாமை யறிக.

வேவ்வாள் உரவோன் வரக - கொடிய வாளினை யேந்தித் தன்னை வலியோனை எண்ணிக் கொண்டவன் வரக் கடவன் என்று சொல்லி. மேற்கொள்வார் - போரேற்றவராகி.

கேட்டலும் - எனுதிராதனார் - அமைந்து - களத்தே - உரவோன் வருகென மேற் கொள்வார் - போந்து - களத்தே - வரவு பார்த்துத் தனி நின்றார் - என இவ்விரண்டு பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக் கொள்க. 32

640. (வி - ரை) சுற்றத்தார் யாரும் - சுற்றத்தார் எவரேனும் பிறர் யாரேனும். முன்னர் இவர் புறப்படுதல் கேட்டுத் தாமாகவே ஓடி வந்து காளையருஞ் சுற்றத்தாரும் சேர்ந்தார் (619) ஆதலின் அவ்வாறு அவர்கள் காணுவகையாலும், கேள்வியும் படாவகையாலும் என்க. காண்பது - கேட்பது - என இரண்டும் குறிக்க அறியா வகை என்றார்.

சுடர்வாள் போற் பல்கையும் - வாளும் பலகையும் என உம்மை வாளுக்கும் கூட்டுக. போற்பலகை - பொற்பூண் முதலியன இட்டுத் தமது படையாகக் கொண்ட பலகை. பொன் பூண் முதலியன இட்டுத் தத்தம் தொழிற் கருவிகளை அழகுபடுத்திக் கொள்ளுதல் தொழிற்றுறை வழக்கு. பொன் - அழகு என்றலுமாம்.

சுடர்வாள் - ஒளியுடைய வாள். முன்னர் (636) தனது ஒளி காணச் சுற்றி வரும் வட்டணையில் மாற்றாரைப் புறங்கிடச் செய்தற்குத் துணையா யிருந்தது வாளின் சுடர். ஆதலின் அதனையே இங்குச் சுட்டினர். அந்தச் சுடர் வாள் கையிலிருப்பவும்

சரித நிகழ்ச்சி முன்னை நாளிற் போலன்றி வேறு வகையாயின தென்றற்குத் தோற்று வாய் செய்தபடி.

**தாமே கொண்டு** - இவற்றையும் பிறர் கொணர்ந்தால் அவர் அறிவாராதலின் எவரும் அறியா வகை தாமே எடுத்துத் தாங்கினர் என்ற உறுதிபெறத் **தாம்** என்றொழியாது **தாமே** என்று ஏகாரமும் தந்தோதினர். இவ்வாறு கூறியது தாம் அழகிதென அமைந்து ஒப்புக்கொண்ட அதனை அவ்வாறே நிறைவேற்றுதலில் நாயனார் கையாண்ட மனமார்ந்த உண்மைத் திறத்தின் ஏற்றமும், தான் சொல்லிய அதனுள் மறைந்து நின்ற மாற்றானது வஞ்சனையின் ஈன மிகுதியும் காட்டுதற் பொருட்டாம்.

**தாமே புறம் போந்து** என்றும் கூட்டுக.

**மற்றவன்** - தாம் கொண்டவாறு உண்மைத் திறத்தினில்லாத வஞ்சமுடையவன். **முன் சொல்லிக் குறித்த** - வேறு கருத்தினை எண்ணிக் குறித்துச் சொல்லிய என்க. இவர் சென்றதும் அவன் குறித்ததும் அக்களமேயாயினும் இவர் குறித்துச் சென்ற காரணம் வேறு ; அவன் குறித்துச் சொன்ன காரணம் வேறு என்பது.

**பற்றலன்** - பகைவன். இனி அவன் பற்றுதலின்றி வஞ்சனையாற் றிருநீறு பூண்பான் என்பது குறிப்பு. **முன்** - அவன் அக்களம் சேரு முன்பு.

**தனி நின்றார்** - **தனி** - அவன் சொல்லியதில் தாம் அமைந்த உண்மை நிலையை முற்றக் காப்பவராய்த் தாமே தனித்து. **தனி** - ஒப்பற்ற நிலையிலே என்றலுமாம். **நின்றார்** - நிற்பாராயினர். 33

641. தீங்கு குறித்தழைத்த தீயோன் றிருநீறு
தாங்கிய நெற்றியினர் தங்களையே யெவ்விடத்து
மாங்கவருந் தீங்கிழையா ரென்ப தறிந்தானுய்ப்
பாங்கிற் றிருநீறு பண்டு பயிலாதான், கூச

642. வெண்ணீறு நெற்றி விரவப் புறம்பூசி
யுண்ணெஞ்சில் வஞ்சக் கறுப்பு முடன்கொண்டு
வண்ணச் சுடர்வாள் மணிப்பலகை கைக்கொண்டு
புண்ணியப்போர் வீரர்க்குச் சொன்ன விடம்புகுந்தான். கூடு

641. (இ - ள்) வெளிப்படை. வஞ்சனையினால் தீங்கு இயற்ற உட்குறிவைத்துப் போருக்கு அழைத்த கொடியோன் திருநீற்றினைப் பூசிய நெற்றியினையுடையார்க்கு எவ்விடத்தும் எஞ்ஞான்றும் அந்நாயனார் தீங்கு செய்யமாட்டார் என்பதறிந்தவனுதலின் உண்மைப் பாங்கிலே முன்னம் திருநீற்றினை அணிந்து பயிலாதவனுகியும், கூச

642. (இ - ள்) வெளிப்படை. திருவெண்ணீற்றினை நெற்றி முழுதும் பொருந்தும்படி புறத்திற் பூசி, நெஞ்சினுள்ளே வஞ்சனையாகிய கறுப்பினையும் உடனே கொண்டு அழகிய சுடருடைய வாளினையும் மணிகளிழைத்த பலகையினையும் கைகளிற் கொண்டு, புண்ணியப் போர் வீராகிய ஏனாதிநாதருக்குத் தான் சொல்லிவிட்ட அந்த இடத்திற் புகுந்தனன். கூடு

641. (வி - ரை) **தீங்கு** - பலவகையாலும் பெரிதும் வஞ்சித்து வெல்வது. **குறித்து** - எண்ணி - கருதி. **அழைத்த தீயோன்** - முன்னரும் அழைத்தான் என்றார். 616 - 617 - 618 காண்க. ஆயின் அங்கு நேர்முகமாய்ப் போருக்கு அறைகூவி அழைத்தது போலன்றி இங்கு மறைமுகமாய்ப் போர் செய்யாமலே வெற்றி பெறவேண்டித் தீமை கருதி யழைத்தான் என்பார் **அழைத்த தீயோன்** என்றார். முன் தீயோன் (638) என்று கூறியபடியே இங்கும் குறித்ததை உன்னுக.

**திருநீறு.....தீங்கிழையார்** - இஃது ஏனாதிநாதர் கொண்டொழுகிய ஒழுக்கம். "தொன்மைத் திருநீற்றுத் தொண்டின் வழிபாட்டின், நன்மைக்க ணின்ற நலமென்றுங்

குன்றுதார்" (610) எனத் தொடங்கித் "தம்பெருமான் சாத்துந் திருநீற்றுச் சார் புடைய, வெம்பெருமா னேஞ்தி நாதர்" (649) என ஆசிரியர் முடித்துக்காட்டிய ஒழுக்கம் இங்கு மாற்றானுங் கண்டுணர்ந்த வகையினால் விரிந்து புலப்படுதல் காண்க. நாயனாரது தூய வாழ்க்கை யொழுக்கத்தின் உள்ளுறையும் குறிக்கோளும் இதுவே. இதனை அவர் தம் உயிரினுஞ் சிறந்ததாகக் கொண்டது இச்சரிதப் பின்னிலவாலன்றி முன்னரே உலகமறிந்த ஒழுக்கமாயிற்று என்க. "நள்ளார்களும் போற்று நன்மைத் துறை" (612) என்றது காண்க.

**திருநீறு தாங்கிய நெற்றியினர் தங்களையே** - வேடம் பூண்டார் யாவரேயாயினும் திருவேடமே கருதி வழிபட்டார் என்பது குறிப்பார் **தாங்கினர்** என்னுது **தாங்கிய நெற்றியினர்** என்றார். திருநீற்றினால் விளங்கும் அடிமைத் திறம் உள்ளத்தினுட் புகாது திருநீறு நெற்றியளவில் நாடக வேடம்போல வேடமாத்திரையாய் நின்றதாயினும் என்க. இதுபற்றியே மாற்றானுய்ப் பண்டு நீறு பயிலாத அவனும் புறம் பூசி வஞ்சிக்கத் துணிவு கொண்டான். எகாரம் தேற்றம். **தாங்கிய** - உண்மையானன்றிப் பொய்வகையானும் பூசிய. **எவ்விடத்தும்** - அதற்கிடாகத் தம் உயிர் போவதாய் முடியும் நிலையினும்.

**ஆங்கவரும்** - **ஆங்கு** - அவர் - என்ற சுட்டின்மேற் சுட்டுத் தேற்றம் பற்றியது. **உம்மை** - உயர்வு சிறப்பு. **தீங்கு இழையார்** - எவ்வகையானும் தீமை செய்யார்.

**அறிந்தானும்** - **ஆய்** - காரணப் பொருளில் வந்தது. அறிந்ததனாலே.

**தீயோன்** - பயிலாதானையினும். அறிந்தானும் - பூசி - உடன் கொண்டு - கைக் கொண்டு புகுந்தான் - என இவ்விரண்டு பாட்டுக்களையும் தொடர்ந்து முடிக்க.

**பண்டு திருநீறு பாங்கில் பயிலாதான்** - என மாற்றுக. **பண்டு** - முன் ஒரு காலும். **பாங்கில்** - வழிபாட்டு நெறியில் நின்று. நீறு பூசியிடமே நெற்றிபடைக்கப்பட்டமையால் அப்பாங்கில் நின்று என்றலுமாம். "நீறிலாநெற்றிபாழ்", "திருவெண்ணீறணியாத திருவிலூரும்.....அவையெல்லா மூரல்ல அடவி காடே", "வெண்ணீ றணிகிலா தவரைக் கண்டா லம்மகா மஞ்சு மாறே" என்பனவாதி திருவாக்குக்கள் காண்க. "நீறில்லா நெற்றியைச் சுடு" என்பது வேதம். **பயிலுதல்** - பல காலும் உள்ளுருகப் பூசி வழிபட்டு ஒழுகுதல். **பயிலாதான்** - பயிலாதானையினும். "பள்ளியின்முக் கூடலானைப் பயிலாதே பாழேகா னுழன்ற வாறே" என்ற திருத்தாண்டக ஆட்சி காண்க. **பாங்கிற் றிருநீறு** என்றபடியே கூட்டிப் பாங்கினைச் செய்யும் திருநீறு என்றலுமாம்.*

**திருநீறு**பற்றி 141லும் பிறண்டும் வருபவை யாவும் நினைவுகூர்க. 34

642. (**வி - ரை**) **வெண்ணீறு** - நாயனார் நோக்குங் கருத்துப் பற்றி மேற்பாட்டிற் **றிருநீறு** - என்றார். "பாவமறுப்பது நீறு" என்பது மறை. ஆயின் இங்கு அது இவனுக்குத் திருநீறு பூசிய பயன்றந்து பாவமறுக்காமல் அதற்குமாறுகப் பாதகப்பயனேதந்து, வெண்ணீறுகும் அளவில் மட்டும் நின்ற தென்பார் **திருநீறு** என்னுது **வெண்ணீறு** என்றார். "புண்ணியர் பூசும் வெண்ணீறு" என்றபடிக் கன்றி இவனைப் **பாதகன்** (647) என்று முடித்ததும் காண்க. இங்கு இவன்பால் திருநீற்றின் நிறமாத்திரம்

---

*இங்கு நாயனாரது மரபில் வந்தோனும் அவருடன் தொழிலுரிமைத்தாயத்தின் உள்ளோனும் ஆன அதிசூரன் முன் ஒரு காலும் திருநீறு பூசியறியான் என்றமையால் "அவன் சைவ மரபிற் பிறந்தவனுயிருந்தும் பிறமதத்திற் பிரவேசித்தவனுகத் தோன்றுகின்றது" என ஊகிக்கின்றார் மழவை மகாலிங்கையர். பல பிறவிகளிற் செய்த நல்லூழின் பயனுகச் சைவ நன்மரபிற் றோன்றப் பேறுபெற்ற எத்தனையோ காலையர்களின் நெற்றிகள் திருநீற்றை அறியாமலே கழிந்தொழிந்து போகின்றவதனை நாம் இக்காளிற் காண்கின்றோம்! அந்தோ! நல்லோரினஞ் சார்ந்த இவர்கள் நல்லோரைக் கண்டேனும் திருத்தியுய்யுமாறு இறைவன் **நல்லருள் புரிவாராக.**

வெண்மையாய் நின்ற தென்பார் பின்னர், கறுப்புமுடன்கொண்டென்று உடன் சேர்த்துக் கூறியதும் காண்க.

**நெற்றிவிரவப் புறம்பூசி** - தாங்கிய நெற்றியினர் என மேற்பாட்டிற் கூறிய பொருள் இங்கு நினைவு கூர்க. "பூசு நீறுபோ லுள்ளும் புனிதர்கள்" என்று திருக்கூட்டச்சிறப்பிற் கூறிய படிக்கில்லாமல், நீறு புறத்தேயும், அதற்குமாறுகக் கறுப்பு உள்ளத்தேயும் இருந்தது என்று குறிக்கப் **புறம் பூசி** என்றும், **கறுப்புமுடன் கொண்டு** என்றும் கூறினர்.

இது அவனது நான்காவது வஞ்சனை.

**நெஞ்சினுள்** எனமாற்றுக. கறுப்பாகிய வஞ்சம். கோபம் முதலிய தீக்குணங்கள் தாமதகுணத்தின் பாற்பட்டவை. தாமதத்தின் நிறம் கறுப்பு என்ப. நெற்றிவிரவ நீறுபூசுதல் நல்லசெயலாக விதிக்கப்பட்டது. அதனைக் குற்ற மென்று கூறலாகாது ; குற்றம் வேறுக அவன் உள்ளத்தில் நின்ற தென்று எச்சரிப்பார் **நெஞ்சில் கறுப்பு முடன் கொண்டென்று** உடன் கூறினர். திருநீற்றுப் பொலிவுடன் இது சேர்த்தெண்ணத் தகாதென்பார் இழிவு சிறப்பும்மை தந்து **கறுப்பும்** என வோதினர்.

**வண்ணச்சுடர்வாள் - மணிப்பலகை** - மேலே, நாயனார் எந்தியவற்றைச் **சுடர்வாள் - பொற்பலகை** (640) என்ற ஆசிரியர், இங்கு மாற்றலுறுகிய பாதகனால் எந்தப்பட்டுப் பாதகத்துக்குத்துணையாய் நின்ற இப்படைகளை இவ்வாறு அடைமொழிகள் தந்து சிறப்பித்த தென்னே ? எனின், பகைவன் எந்தியவை என்று காணுது "அண்டர்பிரான் சீரடியா ராயினார்" (645) ஒருவர் எந்திய படைகளாக நாயனார் இவற்றை நற்பாவனையிற் காண்டலாலும், இவை அவர்தந்திருமேனியுந் தீண்டும் பேறு பெறுதலாலும், "பற்றலர்தங் கைவாளாற் பாச மறுத்தருளி" (648) என்றபடி இவை இறைவனது திருவருட் சொரூபமாகிப் பாசமறுக்கும் கருவிகளாயினமையாலும் இவ்வாறு சிறப்பித்தார் என்க. அன்றியும் அவனது தீச்செயலுக்குக் காரணமாய் நின்றது அவனது வஞ்சக்கறுப்பே யன்றி வாளும் பலகையுமன்று என்பதும் குறிப்பு.

**புண்ணியப் போர்வீரர்** - அதிசூரன் போல வஞ்சனை நெறியாகிய மறநெறியாற் போர் புரியாது அறநெறியாற் போர் புரிபவர் என்பார் இவ்வாறு கூறினர். புண்ணியம் என்னும் அடைமொழி பாவப்போரை நீக்குதலின் பிறிதினியைபு நீக்கிய விசேடணம்.

**சொன்ன இடம்** - முன்னர் **வேறிடம்** (638), **அக்களம்** (639 - 640) என்றபடி பிறர்கண்ணுக்குப் புலப்படாது வஞ்சிக்க ஏற்றதாய் அவன்தானே குறித்த இடம். அவன் தன் வஞ்சகத்தை முற்றுவித்தற்கு இந்த மறைவிடத்தை ஒரு பெருஞ் சாதனமாகக் கொண்டான் என்பது.

**புகுந்தான்** - அவர் தனிநின்றாராக (640) இவன் எண்ணியபடி வலிந்து புகுந்து மூண்டு மறம்பூண்டான் என்க.

**வண்ணக் கதிர்வாள்**—என்பதும் பாடம். 35

643. வென்றி மடங்கல் விடக்குவர முன்பார்த்து
நின்றுற்போ னின்ற நிலைகண்டு தன்னெற்றி
சென்று கிடைப்பளவுந் திண்பலகை யான்மறைத்து
முன்றானி வீ ரர்க்கெதிரே மூண்டான் மறம்பூண்டான். ஙூ

(இ - ள்) வெளிப்படை. வெற்றியுடைய சிங்கம் தன் இரைக்குரிய பிராணி வருதலே எதிர்பார்த்து நின்றுற்போல நின்ற நிலையினைக்கண்டு, அவர்பாற்சென்று கெருங்க அணுகுமளவும் தனது நெற்றியை வலிய பலகையால் மறைத்துக் கொண்டே, முன்பு சென்று ஒப்பற்ற வீராகிய அவர்க் கெதிராக மறம் பூண்டானுகிய அவன் போரில் தோன்றினன்.

(வி - ரை) வென்றி மடங்கல் - மிருகங்கட்கு அரசாகி, எதிர்த்து எதுவரினும் வெற்றியே பெறும் சிங்கம். எஞ்ஞான்றும் அரியேறுபோல வெற்றியே பெற்ற நாயனாரது நிலை குறித்தது. முன்னர் வெம்புலியேறு (635) என்றனர். இங்கு வென்றி மடங்கல் என்றது இவ்விடமே புலியேற்றினும் மிக்க உயர்வாகிய இவரது பேருயர்ச்சி வெளிப்படும் இடம் இதுவென்பதும், எவ்விடத்திலும் இழிதகைமையிற் செல்லாத மடங்கல் போல இங்கும் நாயனார் பெறுவது வெற்றியே என்பதும் குறிப்பு.

விடக்கு - உணவாகிய மாமிசம். அதனையுடைய பிராணிக்கு வந்தது. ஆகுபெயர். "விடக்கொருவர் நன்றென விடக்கொருவர் தீதென"(பண் இந்தளம் - திருவிராகம் - திருப்புறம் பயம் - 10) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரமும், "வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப" என்ற திருவாசகமும் காண்க. தன்னையும் ஒரு வீரனென்று எண்ணிக்கொண்டு போருக்கென வந்த அதிசூரனை வெறும் மாமிசபிண்டத்துக்கு ஒப்பாக்கிக் கூறினர். 617-ல் உரைத்தவை காண்க. மடங்கலின் முன்வரும் ஒரு விடக்கினுக்கு ஒரு பாய்ச்சலில் ஓரறையிற் பற்றுண்டு கொல்லப்படுதலன்றி மற்று எதிர்ச் செயல் வேறில்லையாதல்போல் அவனுக்கும் வேறு செயலில்லை என்பதை அவர் நின்றநிலையினுற் குறித்தார்.

நிலை கண்டு - தன்னுல் வேறொன்றுமியலாமை கண்டு அதனுல் வஞ்சனை முற்றும் வகை குறித்து.

கிடைத்தல் - கிட்டுதல் - நெருங்குதல். "கிடைத்தனர்" (572).

பலகையான் தன் நெற்றி மறைத்து எனக் கூட்டுக. மறைத்து - காவாடும் வன்னெஞ்சனுதலின் தன்னை மறைத்தான் என்பதும் குறிப்பு. "நஞ்சுடைமை தானறிந்து நாகங் காத்துறையும்", "நெஞ்சிற் காவுடையார் தம்மைக் காப்பர்" என்றவை காண்க.

மறம் பூண்டான் முண்டான் என மாற்றுக. மறம் - அறத்திற் றிறம்புதலாகிய மறமாம். இங்கு வஞ்சித்து வெல்லுதல் குறித்தது. பூண்டானுகிய அவன். வினையாலணையும் பெயர். முண்டான் - போர் செய்வான்போல் தோன்றினன். "மூளாத்தீப் போல்" என்ற நம்பிகள் தேவாரம் காண்க.

பலகையால் மறைத்தல் போரில் வீரர் செய்யும் தற்காப்புச் செயல். இதனையே தன் வஞ்சச் செயலை மறைக்குமாறு அவன் மேற்கொண்டது ஐந்தாவது வஞ்சனைச் செய்கை என்க. அதனுனும் மறம் பூண்டான் என வற்புறுத்தியவாறு.

நின்றார் நிலை—என்பதும் பாடம். 36

644. அடல்விடையே றென்ன வடர்த்தவனைக் கொல்லு
மிடைதெரிந்து தாள்பெயர்க்கு மேனுதி நாதர்
புடைபெயர்ந்த மாற்றுன் பலகை புறம்போக்கக்
கடையவன்ற னெற்றியின்மேல் வெண்ணீறு தாங்கண்டார். கஎ

(இ - ள்) வெளிப்படை. வல்லமை பொருந்திய விடையேறுபோல எதிர்த்து அவனைக் கொல்லத்தக்க சமயத்தைத் தெரிந்து கால்பெயர்த்துச் செல்கின்றபோது புடை பெயர்ந்த மாற்றலன் பலகையை விலக்கவே, கடையவனுகிய அவன் நெற்றியின் மேல் வெண்ணீற்றினைத் தாம் கண்டனர்.

(வி - ரை) அடல் விடை ஏறு என்ன அடர்த்து - இடப ஏறு முட்டிப் பாய்ந்து கொல்வதுபோல எதிர்த்து. பெருமிதமும் கம்பீரமும் வலிமையும் மிக்கது விடையேறு. முட்டிப் பாய்ந்து கொல்லுதலிற் சிறந்து விளங்குவது. முன்னர்ப் புலியேறு, வென்றி மடங்கல் என உவமித்த ஆசிரியர், இங்கு நாயனரை அடல்விடை ஏற்றினுக்கு உவமித்தார். விடையேறு சீறி முட்டிப் பாய்தலிற் சிறந்தது போலவே, அவ்வாறு பாயும்போது பழகியோரைக் காணின் முட்டாது நிற்கவும் வல்லது. இங்குச் சரித நிகழ்ச்சிக்கேற்ப இவ்

வாறு கூறினார். இக்கெறி, புலி - சிங்கங்களிற் காணலரிது. இக்காலிற் சிலர் பழக்க மிருக காட்சிகளில் (Circus)புலி, சிங்க முதலியவற்றைப் பழக்கிக்காட்டினாலும் அவை ஒரு நாட் கேடு விளைப்பனவேயாம். மேலும், இங்கு, அடுத்து நாயனார் இறைவன் திருவடி நீழலிற் பிரியா நிலைபெற்றுச் செல்கின்றாராதலின் அக்குறிப்புக்கேற்ப **வென்றி அடல் விடைஏறு** என்று உவமித்தார் என்றலுமாம். விடைஏறு அடர்க்கு நிலையின் பெருமையினையும், அது இறைவரது ஊர்தியாதற் சிறப்பினையும் பொருந்த வைத்து ஏறுகோள் கூறி வரைவு கடாதல் என்ற துறையில் "விடையார் மருப்புத் திருத்திவிட் டார் வியன் றென்புலியூர், உடையார் கடலி வருவது போலு முருவினதே" (136) என்று கூறிய திருக்கோவையார்க் கருத்துக்களே இங்கு உன்னுக.

**அடர்த்து** - தாக்கி. **அவனை** - மாற்றானை - அதிசூரனை. **கொல்லும் இடை - இடை** - சமயம். ஒரு வீச்சில் வெட்டி வீழ்க்கும் சமயம். "இடைதெரிந் தருள வேண்டும்" (475), "கலந்து பற்றி யடர்க்கும் பொழுது" (636) என்றவை காண்க.

**தெரிந்து தாள்பெயர்க்கும்** - அந்த சமயம் தேர்ந்து அது செய்தற்குக் கால் பெயர்த்த. வாட்போரில் மாற்றானது வாள் விலகப் பின் பெயர்ந்தும், அவனைத் தாக்க முன் பெயர்ந்தும் வருவது மரபு. இதனை வட்டனை என்றும் இடசாரி வலசாரி என்றும் வழங்குவர். தாள் பெயர்த்ததாதலின் அதனைத் தொடர்ந்து கைவாள் பெயரக் கொலை முற்றிவிடும் என்பது. இந்த இடையினைத் தெரிந்து இவர் தாள்பெயர்த்தார்; அவனும் பலகை புறம் போக்க என இடைதெரிந்து என்றதனை அங்கும் கூட்டுக. அவ் வொரு கணமே இரண்டு செயலும் ஒருங்கே நிகழ்ந்தன என்க.

**புடைபெயர்ந்த** - வாளால் அடர்த்துக் கொல்லப்படும் குறியினுக்குத் தப்பி விலகிய. அருகே வந்த என்றுரைப்பாருமுளர். அஃதுரையன்மை யுணர்க.

**பலகை** - தன் நெற்றியை மறைத்திருந்த பலகையை.

**புறம் போக்க** - மறைப்பினை நீக்கிப் பலகையை விலக்க. "அவர் புடை பெயர்ந்த நிலையில் தான் வெட்டுண்பது திண்ணமென் றறிந்து அந்நிலையினின்று புடைபெயர்ந்து அவர் தன்னை வெல்லக் கொண்ட நிலைபோலத் தான் அவரை வெல்லத் தக்க இலக்கு இதுவே என்று குறிவைப்பான் போல" - திரு. கு. சதாசிவச் செட்டியார் உரைக் குறிப்பு.

**கடையவன்** - கீழோன் - கீழ்மகன். முன்னர்த் தீயோன் என்றதற் கேற்ப இவ்வாறு கூறினார். "கடையவனேனைக் கலந்தாண்டு கொண்ட" - திருவாசகம்.

**நீறு தாம் கண்டார்** - என்றதனால் நீற்றினைக் கண்டாரேயன்றி அதனை அணிந்த நெற்றியுடையோன் கடையவனுந் தன்மை காணவில்லை என்பது குறிப்பு. **தாம்** - தாமே என்றலுமாம். 37

**645.** கண்டபொழு தே"கெட்டேன்! முன்பிவர்மேற் காணுத
வெண்டிருநீற் றின்பொலிவு மேற்கண்டேன்; வேறினியென்?
அண்டர்பிரான் சீரடியா ராயினு" மென் றுமனங்
கொண்"டிவர்தங் கொள்கைக் குறிவழிநிற் பே"னென்று, நஅ

**646.** கைவா ளுடன்பலகை நீக்கக் கருதியது
செய்யார் "நிராயுதரைக் கொன்று ரெனுந்தீமை
யெய்தாமை வேண்டு மிவர்க்"கென் றிரும்பலகை
நெய்வா ளுடனடர்த்து நேர்வார்போ னேர்நின்றார். நக

645. (இ - ள்) வெளிப்படை. கண்டபொழுதே "ஆ! கெட்டேன்! முன்பு எந்நாளும் இவர் மேற் காணப்படாத வெள்ளிய திருநீற்றின் பொலிவினை மேலே கண்

டேன்; வேறு இனி என்ன நினைக்க உள்ளது ? தேவதேவனுகிய சிவபெருமானது சீடியாராக இவர் ஆயினர்" என்று எண்ணியவராகி, "இவருடைய மனங் கொண்ட கொள்கையின் குறிவழியே அமைத்து நிற்பேன்" என்று நிச்சயித்து, ஈஅ

646. (இ - ள்) வெளிப்படை. (அவனைக் கொல்லும் இடை தெரிந்து அடர்க்கக்) கையில் ஏந்திய வாளினையும் பலகையையும் போக விட்டுவிட முதலிற் கருதினராயினும் "நிராயுதரைக் கொன்றார் என்கின்ற பழி இவர்க்கு வாராதிருக்க வேண்டு"மென்று எண்ணி அந்த வலிய பலகையினையும் செய்யூட்டிய வாளினையும் உடன் ஏந்தி, எதிர்த்துப் போர்செய்வாரைப் போலக் காட்டி நேரே நின்றனர். ஈக

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒரு தொடர்.

645. (வி - ரை) **கண்டபோழதே** - "திருநீறுஞ் சாதனமுங் கண்டால்" என்ற திருத்தாண்டகம் காண்க.

**கேட்டேன்** ! - "உறவாவா ருருத்திரபல் கணத்தினோர்கள்" என்றபடி வெண்ணீறிட்ட ஒரு அடியவரை உற்றார் என்றெண்ணுது பகைவர் என்று எண்ணி, அவரை அடர்த்துக் கொல்லும் இடைதெரிந்து தாள் பெயர்த்துத் தாயமுழுமையும் கொள்ள அமைந்துநின்றேனே என்று வருந்தியிரங்கும் இரக்கச் சொல், 593-596-உரை பார்க்க.

**முன்பு இவர்மேல் காணுத** - இவர்மேல் முன் எக்காலும் பார்த்தறியாத - காணப்படாத. இதற்கு முன் எக்காலும் இவர் நீறிட்டதை நான் கண்டதில்லை என்ற படி. "பண்டு திருநீறு பாங்கிற் பயிலாதான்" (641) என்றது காண்க. **இவர்** - இவனை. **முன்னர் உன்கீது** (621), **உரவோன்** (693) என ஒருமையிற் சுட்டிய நாயனார், இங்கு இவன் நெற்றிநீறு கண்டவுடன் தமது முன்கருத்துக்களை யெல்லாம் அக்கணமே அறவே மாற்றி, இவர்மேல் - அடியார் ஆயினர் - இவர்தம் கொள்கைக்குறி - கொன்றார் எனும் - இவர்க்கு என இவ்வாறு பன்மையாற் சுட்டி இங்குக் கூறியது திருநீற்றின் வழிபாட்டிலே இவரது ஒழுக்கத்தின் உறைப்புக் காட்டியது. இவ்வாறு நாயனாரது மன நிலையை ஆசிரியர் நாடகச் சுவைபெற நமக்கு அறிவித்தது காவியநயமாம். எனினும் ஆசிரியர் தமது நிலையில் நமக்கு அறிவிக்கும் வகையில் **முன்னின்ற பாதகனும்** என முடித்துக் காட்டுதலும் குறிக்கொள்ளத்தக்கது.

**வெண் திருநீற்றின் பொலிவு மேல் கண்டேன்-சீடியார் ஆயினர்**-திருநீற்றின் பொலிவு காண்டலின் அடியார் ஆயினர் என்பது துணிந்தேன். இவர் அடியாராயினர்-நீறிட்டுள்ளாராதலின் - மற்றை யடியார் போல - என்பது தருக்க முறையிற் றுணிந்த அனுமானம் என்னும் கருதலளவையாற் பெறப்பட்டது. காணப்படாத அடியாராந் தன்மையினைக், கண்ட திருநீற்றினுன் அறிந்தனர் என்க. புகழ்ச்சோழர் தம் யானை பிழைத்ததண்டு (587) என்று கண்ட உண்மை போலக் காண்க. நீறிட்டார் அடியாராவார் என்பது திரு வேட வழிபாட்டின் உள்ளுறை யாகத் துணிந்தபொருள். "நீறிடுந் தொண்டர்" (158), "நீறிடுவா ரடியார் நிகழ்தேவர்கள்" (ஏழாந் தந்திரம்-159) முதலிய திருமூலர் திருமந்திரங்களும் பிறவும் காண்க.

**மேற்கண்டேன்** - முன்னரும் **புறம் பூசி** (642) என்றது காண்க. **மேல்** - மேலாக. உயர்வாக என்றலுமாம். இதுமேலாகவே, ஏனைய காட்சிகள் யாவும் கீழாயின என்பதும் குறிப்பாம்.

**திருநீற்றின் பொலிவு** - அதனில் அன்புவைத்து வழிபடுவார்க்கே நீறு பொலிவுள்ள சாதனமாய் விளங்கும். அதனிலன்பில்லாதார் பலரும் பேணியணியாமை மாத்திரமேயன்றி இகழ்ந்தும் திரிந்தொழியக் காண்கின்றோமன்றே ! ஆயின் அன்புடையார்க்கு அது "சேலுங் கயலுந் திகைக்கும் கண்ணி ரிளங்கொங்கையிற் செங்குங்குமம், போலும் பொடி", என்ற திருப்பல்லாண்டிற் கூறியபடி இன்பம் தரும். "நீறுகண்டனை யாயினு நெக்கிலை" என்ற திருவாசகத்தின் கருத்தினையும் உன்னுக.

**வேறினீ என்** - முன் எக்காலும் இவர் மேல் தீறு கண்டேனில்லையாயினும், இவர் என்னைப் பகைத்து என்பால் எலா இகல்பூண்டு வலித்து எனது தாயங்கொள்ள எண்ணிப் போருக்கழைத்தவராயினும், இவர் என்னை வஞ்சனையாற் கொல்ல எண்ணிய வராயினும், இவர் என்னை வெல்ல முடியாதவராய் மேற்று எனக்குத் தோற்றுப் புறகிட்டு ஓடியவரேயாயினும், இவர்மேல் தீறு கண்டபின், வேறு இவ்வாறெல் லாம் மற்று நினைக்கவேண்டிய நினைப்புக்கள் யாவுள ? ஒன்றுமில்லை. தீறு காணின் அது திருவேடம். அது பூண்டவர் அடியார் என நினைப்பதொன்றேகொள்ள உள்ளது. ஏனையவை எல்லாம் வேறென் றொதுக்கப்படுவன என்பது முடிந்த கருத்து. ஆதலின் **சீராடியார் ஆயினார்** என்று முடித்தார்.

"எவரேனும் தாமாக விலாடத் திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி, யுவ ராதே யவரவரைக் கண்ட போது உவந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி, யிவர் தேவ ரவர்தேவ ரென்று சொல்லி யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணிக், கவ ராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே கன்றுப்பூர் கடுதறியைக் காண லாமே" என்ற திருத்தாண்டகத்திற் குறித்த ஒழுக்கத்தின் இலக்கணத்திற்கு நாயனார் முற்றும் நிரம்பிய இலக்கியமாகி நின்ற நிலைகண்டு உய்வோமாக. உவர்மண் ணூறி மேனி வெளுத்த வண்ணன் எதிரே வரக்கண்ட கழறிற்றறிவார் நாயனார் அடியார் வேடமாகக் கண்டு வணங்கினார். அவன் பயந்து "யாரென்றடியேனைக் கொண்டது ? அடியேன் அடிவண்ணன்" என்று கூற, அவனை வண்ணன் என்றும், தாங் கருதியபடி அவ்வேடம் திருநீற்றுவேட மன்றென்றும் அறிந்தபின் "அடியேன் அடிச்சேரன் ! திருநீற்று வார வேட நினைப்பித்தீர் ; வருத்தா தேகும்" என்று மொழிந்து சென்ற னர் என்ற சரிதத்தினுட்குறிப்பினையும் அடிமைத் திறத்தினையும் இங்கு உன்னுக. இதுபற்றியே இங்கு நாயனார் " வெண்டிரு நீற்றின் **பொலிவு** - மேற்கண்டேன் " என்றதும் காண்க. திருவேடத்தினியல்பும் அதன் வழிபாட்டின் பயனும் முடிந்த பொருளாக வைத்து ஞானசாத்திரத்துக் கூறுவதும் இங்குக் கருதுக.

**அண்டர்பிரான்** - சிவபெருமான். பெருந்தேவர்க்கெல்லாம் தெய்வமாவார். **சீர்** - அடியார்க்கு இயற்கையடைமொழி. **ஆயினார்** - முன்னர் அடியாராந்தன்மையில்லா திருந்தும் திருநீறு பொலியக்காண்டலின் ஆயினார் ஆதலின் இவர் குறிவழிநிற்பேன்.

**மனங்கொண்டு** - மனத்தில் நிச்சயித்து.

**கொள்கைக் குறிவழி** - தமது உயிரைக் குறிவைத்து வஞ்சித்து அதனால் தாயம் பெற எண்ணிய கொள்கை. இது அவன் கருத்து எனத் தெரிந்தபின் நாயனார் துணிந்த நிலை. இதில் அவர் நின்ற உறைப்பு வரும்பாட்டில் மேலுஞ் சிறந்து விளங்குதல் காண்க. தமது உடைமை எல்லாம் தொண்டர்க்கு ஆக்குவார் நாயனார் (611). இங்கு இவரை வென்று தாயம் பெறினும் அது தொண்டர் உடைமையேயாம் ; எனை உடைமைபோல் உடலும் உயிரும் தொண்டர்க்கு ஆகும் இயல்பினவாம் என்பன நாயனா ரது உள்ளக்கிடை. என் உயிர் கொள்வதன் மூலம் தாயத்தை இவர் பெறவிரும்பினார் ; அவ்வாறே இவர்க்கு அதனை ஆக்குவன் என இது துணிந்தார். 38

646. (வி - ரை) **நீக்கக்கருதி** - இது, இவர் குறிவழி நிற்பேன் என்று துணிந்த மனநிலையினை அடுத்து, நாயனார் மனத்துள் நிகழ்ந்த நிகழ்ச்சியாம். **நீக்க** - தாங்காது போக்க. **கருதி** - கருதியும். **அது** - நீக்குதலை. **செய்யார்** - செய்யாராகி. செய்யாமைக்குக் காரணம் மேற் கூறுகின்றார்.

இவர் கொள்கைக் குறிவழி நிற்றல் மாத்திர மன்றி, அதனை அவர் பெறுதலில் நீறிட்டு அடியாராயின அவர்க்கு எவ்வகையானும் பழிவாராமற் காக்கவும்வேண்டும் என் றது நாயனார் மனத்துள் அடுத்து எழுந்த நினைவு. இதனால் அவரது திருநீற்றுச் சார் வாகிய அன்பின் உறைப்பினை மேலுங்காண்க.

**நிராயுதரைக் கொன்றார் எனும் தீமை**-இவர் விரும்பியமைந்தபடி என் உயிரைக் கொண்டு தாயரும் கொள்ளுமாறு வாளும்பலகையும் போக்கி நின்றேனுமில் அங்ஙிலையி லும் இவர் கொல்வர்; அப்போது நிராயுதரைக் கொன்றார் என்ற தீமை இவரைச் சாரும்; கீறுபூசிய ஒரு அடியாராக்கு அப்பழி சாரலாகாது ; இவரை அடியாரெனக் கண்டு இவர் குறிவழிநிற்கத் துணிந்தேனுதலின் இவர்க்குப் பழிசாரும்படி நான் நிற்கலாகாது என் பன அவர் கருதியனவாம். நிராயுதரைக் கொல்லலாகாது என்பது போர்வீரர் கைச் கொண்டொழுக வேண்டிய போர்நீதிகளில் ஒன்று. தாயத்தின் வைத்த பேராசை யால் வஞ்சித் துயிர்கொண்டு அதனைக் கவரத்துணிந்த இவர் இந்தப் போர் நீதியை யுங் கடந்து கொல்வர் என்பதும் நாயனார் துணிந்தனர்.

இவர் எவ்வகைப் பழிநிதொழிலராயினும், நீறிட்டதனு லடியாராயினமையின் இவர் வழி நான் நிற்பேன் ; அவ்வாறு நிற்கும்பொழுது இவர்க்கு எப்பழியும் வாராமலும் நிற் பேன் என்று துணிந்த திருநீற்றுச் சார்பின் அடிமைத்திறத்தின் மேன்மை நோக்குக. இதுபற்றியன்றே ஆசிரியர் "திருநீற்றுச் சார்புடைய எம்பெருமான்" (649) என முடித்தனர்.

**தீமை-பழி.** நிராயுதரைக் கொல்லலாகாது என்பது முன்னை நாள் தமிழரது போர் நீதி. பசுக்கள், முதுவர், பிணியுடையோர், பெண்டிர், புதல்வர்ப் பெறுதோர், படை யேந்திப் போர்செய்யாதார், சிறுவர் முதலியோரைக் கொல்லலாகாது என்பது தமிழ ரின் நீதிப் போர் ஒழுக்கம். அத்தகையோரைத் தம்மரண் சேரும்படி போர் தொடங்கு முன்னர்ப் பறைசாற்றுவிப்பதும் வழக்கு. பொருட் பேராசையால் வீழுங்கப்பட்டார் களாகிப், படையெடாதோர், பாலர், பெண்கள் முதலிய ஒன்றும் பாராது, வெகு தூரம் மறைந்து நின்று, நச்சுக்காற்று, வெடிகுண்டு முதலிய நாசகாரிகளாற் குடி மக்களைக் கொன்று பொருள்கவர்வதாகிய இக்காள் அநாகரிகப் போர் முறைக் கொலைக் கொள்ளைகளை நம் பழந்தமிழர் அறியார். இந்நீதிகளை யெல்லாம் அடியார் பெருமை யினில் உள்அடக்கி இங்கு நாயனார் குறிப்பாகக் கொண்டதனை எடுத்துக் காட்டும் வகையில் உலகுக்குப் போர்நீதி யறிவித்தனர் சிறந்த அமைச்சர்பெருமானுகிய ஆசிரியர்.

**நேர்வார்போல்** - அமர் வீரப்பார்போல. வாளும் பலகையும் நீக்கினருமல்லர் ; அவற்றை வாளா தாங்கி நின்றருமல்லர் ; ஆயின் அமர் செய்வார்போற் பாவனை காட்டி நின்றனர்.

**நேர் நின்றார்** - அவன் எண்ணியபடி செய்யுமளவும் அவனெதிர் நின்றனர். 39

647. அந்நின்ற தொண்டர் திருவுள்ள மாறறிவார் ?
முன்னின்ற பாதகனுந் தன்கருத்தே முற்றுவித்தான் ;
இந்நின்ற தன்மை யறிவா ரிவர்க்கருள
மின்னின்ற செஞ்சடையார் தாமே வெளிநின்றார். சுo

(இ - ள்) வெளிப்படை. அவ்வாறு நின்ற திருத்தொண்டரின் திருவுள்ளக் கிடை யினை அறியவல்லார் யாவர் ? முன்னே நின்ற பாதகனுகிய அதிசூரன் தான் கருதிய படியே முடித்தனன் ; இத்தன்மையினை அறிவாராகி இத்திருத் தொண்டர்க்கு அரு ளும் பொருட்டு மின்போன்ற செஞ்சடையுடைய சிவபெருமான் தாமே வெளிப்பட் டுத் தோன்றின ரருளினர்.

(வி - ரை) **அந்நின்ற** - மேலே கூறிய கருத்துடன் நேர்வார்போல் நேர்நின்ற.

**திருவுள்ளம் ஆர் அறிவார்** - அவர்தம் திருவுள்ளக்கிடையை யான் அறிந்த அள வில் மேலே விரித்துக் கூறினேன் ; அன்றி முற்றும் அறிவார் யாவர் ? என முடித்துக் கொள்கின்றனர் ஆசிரியர். 606-ம் பாட்டிற் குறித்த கருத்துக்களை இங்கு நினைவு கூர்க. நாயனரோடு உடனிருந்தார்களிற் சுற்றத்தார் யாரும் அறியாவகை தனியிடஞ் சென்

ரூராதலின் இங்கிகழ்ச்சியைத் தானும் உலகர் வேறு எவரும் அறியார். உடனிருந்த பகைவனுகிய பாதகன் அச்செய்கையைக் கண்டானுயினும் அதனை வினைத்த அவர்தம் திருவுள்ளக் கிடையை அறியான். இது சிவசாட்சியாக நிகழாது, சிவசாட்சியாகவே நிகழ்ந்த தொன்மூதலின் அவ்வாறு சர்வசாட்சியாய் நிற்கும் இறைவனெருவனையன்றி மற்றெவருமறியமாட்டார் என்பார் **ஆறிவார்** என்று உறுதிப் பொருள் பயப்ப வினவினுற் கூறினர். மேலும் இவ்வினவுக்கு விடை தாமே கூறுவார் போன்று பின்னர் **இந்நின்றதன்மை யறிவார்** என்று முடிந்ததை முடித்துக் காட்டியதும் காண்க. திருநீற்றின் அன்பு கொண்ட உள்ளத்தின் மேன்மைத் தன்மையை அவ்வுள்ளத்தில் (~~உள்ளத்தில்~~) உயிர்க்குயிராய் நின்ற இறைவனன்றி எவரும் அறியார் என்பார் **யாரறிவார்** என்றும், அறிந்தார் இறைவராதலின் அதற்குரிய பயனை யளிப்பாராய்த் தோன்றி நின்றார் என்பார் **அறிவார் - அநள - நின்றார்** என்றும் கூறினர்.

**தன் கருத்தே முற்றுவித்தான்** - அன்பர்க்கடாதன அடுத்தபொழுது அவற்றை இவ்வாறு கூறுதல் ஆசிரியர் மரபு. 481-ம் திருப்பாட்டும் அங்கு உரைத்தவையும் காண்க.

ஆயின், இங்கு வெற்றி அவனதன்று ; நாயனாரே வென்றனர் என்பது. என்னை? திருநீற்றுக் கீடாக உடைமை, உடல், உயிர் என்ற மூன்றையும் ஒருங்கே உவந்து தருவார் நாயனார் என்பதே இச்சரித நிகழ்ச்சியின் முடிபாம். அன்றிப் போர்வன்மையில் உலகநிலை வெற்றியும் தோல்வியும் முடிபாவதன்று. அப் போர்வன்மையிலும் நாயனாரே வெற்றி பெற்றதும் மாற்றலன் உடைந்து புறகிட்டதும் முன்னர் 636-ல் உரைக்கப்பட்டது. எனவே, உலகநிலை - உயிரின் நிலை என்ற இரண்டினிலும் வெற்றி நாயனார் பாலதேயாம் என்க. அன்பே வென்றது. 481-ல் உரைத்தவையுங் காண்க.

**இந்நின்ற தன்மை** - இங்கிகழ்ச்சியின் உள்ளுறை. **அறிவார்** - "உயிர்க்குயிராய் அங்கங்கும் நின்று" உள்குவாருள்கிற் றெல்லாம் உடனிருந் தறிபவராதலின், அறிவாராய். முற்றெச்சம். வினையாலணையும் பெயராகக்கொண்டு அறிவார் - சடையார்-வெளி நின்றார் என்று கூட்டியுரைப்பதுமாம்.

**மின் நின்ற செஞ்சடை** - ஒளி நிலைத்து விளங்கும் சடை. "மின்வண்ண மெவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை". அடைந்தாரைக் காக்கும் விளக்கம் மிக்கது.

**தாமே வெளி நின்றார்** - பாசமற்ற நிலையிலே விளங்கும் இறையருளாகிய சிதாகாய வெளியில் நின்று வெளிப்படக் காட்சி தந்தருளினர். தொண்டர் திருவுள்ளம் சடையார் தாமே அறிவர்; (அன்றி மற்று) ஆர் அறிவார்? என்பதாம். "கண்ணப்பர் தாம நிதல் காளத்தி யாரறித லல்லதுமற், றாரறியும் மன்பன் றது" என்றது ஞானசாத்திரம்.

**அறிந்தார்**—என்பதும் பாடம். 40

648. மற்றினிநாம் போற்றுவதென்? வானோர் பிரானருளைப்
பற்றலர்தங் கைவாளாற் பாச மறுத்தருளி
யுற்றவரை யென்று முடன்பிரியா வன்பருளிப்
பொற்றொடியாள் பாகனூர் பொன்னம் பலமணைந்தார். சக

(இ - ள்) வெளிப்படை. தேவர் பெருமானுருடைய திருவருளின் வகையை இனி வேறும் நாம்போற்றுவது என்னுளது? பகைவருடைய கை வாளினுலே பாசத்தையறுத் தருள்செய்து, உற்றவராகிய நாயனாரை என்றும் தம்மோடு பிரியாதிருக்கும் அன்பு கூடிய நிலையினை அடையச் செய்து, இறைவியை ஒரு பாகத்துடைய பெருமானூர் பொன்னம்பலத்தினை அடைந்தனர்.

(வி - ரை) **வானோர்பிரான் அருளை இனி மற்றுப் போற்றுவது என்? எனமாற்றுக.** மேற்பாட்டிற் கூறியபடி அவருக்கு அருள வெளிநின்றருளிய அவர் அருளியதிறம்

யாது என்போமாகில் அதனை எவ்வகையிற் போற்றுவோம்? அவ்வருட்டிறத்தின் முடிபு பாசமறுத்து உடன் பிரியா அன்பருளிய இதுவே என முடித்துக் கூறியவாறு. **போற்றுவது** - அறிந்து பாராட்டுதல். **பற்றலர்** - பகைவர். பாசமறுக்கும் இறைவனருட்டொழிற் கருவியாயினமையாலும், அருளும் வகைகளிற் பற்றலர் கைவாளும் ஒன்றாகும் எனப் பொதுமையிற் காணக் கூறியமையாலும் **பற்றலர்** எனப் பன்மையாற் கூறினர்.

**பாசம் அறுத்தநுளி** - பாசம் - கட்டு-கயிறு. இங்கு மாயா காரியமாகிய உடம்பினைக் குறித்தது. உடல் ஒன்றின் அளவாகவே நாயனர் இவ்வுலகத்திற் கட்டுப்பட்டு நின்றார். வாள்பயிற்றும் ஆசிரியத் தொழில் செய்து வளம் பெற்றும், அதிலே தாய உரிமையுடையான் எலாஇகல் கொள்ளகின்றும், அதுகாரணமாக அவன் அழைத்தபோில் மூண்டு நின்றும், செயல்கள் செய்ய நிலைக்களமாக உலகக் கட்டினுள் அகப்படுத்து வைத்தது உடலாகிய மாயாகாரியமேயாம். பாசம் கயிற்றினைப் போன்று உயிரைக் கட்டுவதனால் அப்பெயர் பெற்றது. கயிற்றை அறுத்துவிடின் மூன் கட்டப்பட்டு நின்ற பொருள் தன்னிலையிற் சேர்தல் போல் இங்குப் பாசத்தை அறுத்தனர்; கயிற்றை அறுக்க வாள் வேண்டும்; இங்கு அந்த வாள் பற்றலர்தங் கைவாளாக நின்றது என்றபடி.

அவனருள் கலந்தன்றி ஒன்றும் நிகழாது. "அவனன்றி யோரணுவு மசையா தெனும் பெரிய ஆப்தர் மொழி" என்றபடி, இங்குத் தோற்றோடிய பகைவன் தன்னை வென்ற நாயனர் பால் தான் கருதியபடியே முற்றுவித்தற்கு அருள் இருந்தவாறும். அவனருள் எஞ்ஞான்றும் உயிர்களின் பக்குவத்திற்கேற்றவாறே பாச நீக்கம் புரியுமாதலின் இங்கு நாயனரது பாசமாகிய "மாயக் குரம்பை நீங்க வழிவைத்த" அருளாய் நின்றது. அதற்குப் பற்றலர் கைவாள் வெளிப்பாட்டிற்கண்ட கருவியாய் நின்றது. அதுவே இவருக்குச் சிவபுண்ணியப் பயனையும், அவனுக்குப் பாவப்பயனையும் தரும் அருளாயிருந்தது என்பது கருத்தாதலின் கைவாளாற் **பாசமறுத் தநுளி** என்றார். **அநுளா மறினி என் போற்றுவது**? என்ற குறிப்புமது.

**உற்றவரை**-சாதனங்கண்டால் உள்கி, ஈசன் நிறமே பேணி, எஞ்ஞான்றும் தம்மை முன்னரே அன்பின் வகையினுலே உற்றிருந்த நாயனரை. **உற்றவர்** - உற்றார் - உறவினர். தமது உருத்திர கணத்தவராகிய தமரை என்க. "எம்பிரான் றமரேயோ வென்னு முன்னம்"(318)-"கருமிடற்று மறையவனூர் தமராய கழலேயர் பெருமகற்கு", (மானக்கஞ்சாறர் புராணம் 6) முதலியவை காண்க.

**உற்றவரை என்றும் உடன்பிரியா அன்பு அநுளி** என்றது முன்னர் மனத்தாற் பிரியாதிருந்தனர்; இப்போது என்றும் பிரியா அன்புடையராகப் பெற்றார் என்க. **உடன்பிரியா அன்பு** - இறைவனை நீங்காது அன்பு செய்து அனுபவித்திருக்கும் நிலை. மீளாஅெறி என்ப.

**பொன்னம்பலம்** - அருளின் நிறைவு. "புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்" என்ற திருத்தாண்டகத்தின் கருத்தும் காண்க.

**பொற்றெடியாள்** - உமாதேவியார். **பாசமறுத்தநுளி** என்றதனாற் பாச நீக்கமும், **உடன்பிரியா அன்பு அநுளி** என்றதனாற் சிவப்பேறும் தந்து திருவருள் நிறைவாயினமையாற் **பொற்றெடியாள் பாகனார்** என்று ஈண்டுக் குறித்தார்.

இனி, " உன்னுடைய கைவாளாலுறு பாசமறுத்த நிலை " - (கோட்புலியார் புராணம்-11) எனவும் " சேய்ஞலூர்ப்பிள்ளையார்தந்திருக்கையிற் கோலமழுவா லேறுண்டு குற்ற நீங்கி " - (சண்டீசர் புராணம் 58) எனவும் வருவன போல, இங்கும் பற்றலர்தம் கைவாளாற் பாசமறுத்தருளி வானோர் பிரானருளை யுற்றவரை என்று கூட்டி யுரைப் பாருமுண்டு. இப்பாட்டிற்கு இவ்வாறன்றி, மற்றினி நாம் போற்றுவது என்? என்றதனை ஒரு முடிபாக்கி நிறுத்திக்கொண்டு, **அநுளைப்பற்றலர்** என்று கூட்டிப் பரம சிவனது திருபையைப் பெற்றிராத அதிசூரன் என்று சேர்த்துரைப்பர் மகாலிங்கையர்

முதலியோர். **அருளே உற்றவரை** என்று கூட்டித் திருவருளையே பொருத்தி யிருக்கின்றவராகிய அந்த ஏனாதிநாதரை என்று பொருத்திரைப்பாரும், பிறவாறு கொண்டு கூட்டி உரைத்துப் பொருள் கொள்வாருமுண்டு. 41

649. தம்பெருமான் சாத்துந் திருநீற்றுச் சார்புடைய
வெம்பெருமா னேனாதி நாதர் கழலிறைஞ்சி
யும்பர்பிரான் காளத்தி யுத்தமர்க்குக் கண்ணப்ப
நம்பெருமான் செய்தபணி நாந்தெரிந்த படியுரைப்பாம். சஉ

(இ - ள்) வெளிப்படை. தமது இறைவன் சாத்துகின்ற திருநீற்றின் சார்பினையே சார்பாகவுடைய எமது தலைவராகிய ஏனாதிநாத நாயனருடைய திருப்பாதங்களை வணங்கிக், கண்ணப்பர் என்ற நமது பெருமானார் தேவதேவராகிய காளத்தியுத்தமனார்க்குச் செய்த திருப்பணியை நாம் அறிந்தவாறு சொல்லப்புகுவோம்.

(வி - ரை) **தம்பெருமான் சாத்துந் திருநீறு** - "வள்ளல் சாத்து மதுமலர் மாலையும் அள்ளு நீறும்" (31), "பூசுவதும் வெண்ணீறு", "திருவாலவாயான் திருநீறே", முதலியவை காண்க. இறைவன் நீறு சாத்துதலாவது மா சங்காரகாலத்து எல்லாவுலகங்களும் நீறுகவே, அந்நீறு, அஞ்ஞான்று எஞ்சிநிற்கும் அவனது திருமேனியிற் கிடத்தல்.

**திருநீற்றுச் சார்பு உடைய** - தமது உயிர் சார்ந்து நிற்கும் சார்பாகத் திருநீற்றினையே கொண்ட. **சார்பு** - நிலைபிறழாது சார்ந்து நிற்றற்குரிய ஆதரவாகக் கொண்ட பொருள். பற்றுக் கோடு என்ப.

**கண்ணப்ப நம்பெருமான்** - கண்ணினை அப்பி அதனைற் கண்ணப்பர் என்ற பேர் பெற்ற நாயனர். **நம்பெருமான்** என்பதும் நாயனர் என்பதும் ஒரு பொருளன. **கண்ணப்பு நம்பெருமான்** என்பது பாடமாயின் கண்ணினை அப்பிய நமது தலைவனர் என்க.

**தெரிந்தபடி** - மேலே **திருவுள்ளமாறிவார்** - என்று கூறி, ஆயினும் **அறிவார்** அருளியபடி இது என்று முடித்த ஆசிரியர், அவ்வாறே, கண்ணப்பரும் காளத்தியாரும் என்ற இருவருமே அறிய நின்றதொன்றாகிய வருஞ்சரிதத்தையும் நாம் அறிந்து கூற இயலாதாயினும் தெரிந்தபடி கூறப்புகுவோமாக என்று தோற்றுவாய் செய்தவாறு. இதனால் வருஞ்சரிதத் தோற்றுவாய் செய்தலும், **திருநீற்றுச் சார்பு உடைய** என்றதனால் இச்சரிதப்பயனை எடுத்துக் கூறியவகையில் முடித்துக் காட்டியதும் காண்க.

**நாந்தெளிந்த**—என்பதும் பாடம். 42

---

**சரிதச் சுருக்கம்:**— சோழநாட்டிலே செழித்த வயல்களாற் சூழப்பட்டுச் சிறந்த பழையனூர் **எயினனூ**ராகும். அதில் **ஈழக்குலச்சான்றார்** மரபில் அவதரித்து வாழ்ந்தவர் **ஏனாதிநாத நாயனர்.** இவர் பழமையாகிய திருநீற்றின் வழிபாட்டு நலத்தில் **எஞ்ஞான்றும்** குறைவுபடாதவராய்ச் சிறந்து விளங்கினர். அரசர்க்கு வாள் பயிற்றும் தொழில் செய்து அதனால்வரும் ஊதியத்தைச் சிவனடியார்க்கு ஆக்குவார்.

இவ்வாறு பகைவர்களும் போற்றும் நல்லொழுக்கத்தில் இவர் வாழ்கின்ற காலிலே, வாள் பயிற்றுந் தொழிலில் உரிமையுடையானுய் அதிசூரன் என்பானொருவன் இருந்தனன். அவன் இத் தொழிலிற் றன்னின் மேற் கடந்துளாரில்லை என்னும் செருக்கடைந்து தன்னைத்தானே மிக மதித்திருந்தனன். ஆயினும் தனது குலத்தாயத் தொழிலில் தனக்கு வருவாய் குறையவும், அது இவர்க்கே காளும் மேம்படவும் கண்டனன். அதனால் இவரிடத்துத் தகாத வழியால் அழுக்காறு கொண்டு அதனால் காலெஞாயிற்றின் முன் ஒளிமங்கும் மதிபோலழிந்து இவரை எதிர்த்துப் போர்புரியத் துணிந்தனன். அதற்காகத் தன்பக்கம் பலரையும் சேர்த்து இவ

ரது மனைவயினின்று "வாள்பயிற்றும் தொழிலுரிமைத் தாயத்தைப் போரில் வலியாரே கொள்ளத் தக்கது" என்று இவரைப் போருக்கு அறைகூவி அழைத்தான். இவ்ரும் அவ்வொலி கேட்டுப் "போருக்கழைத்தான் யாவன்?" என்று, ஆண்சிங்கம் போலக் கிளம்பிக், கழல் கட்டி, வாளும் பலகையும் ஏந்திப், போர்முனையிற் புறப்பட்டார். அவர் பாற் போர்த்தொழில் கற்கும் காளையர்களும் சுற்றத்தார் முதலியோரும் அவரோடு சேர்ந்தனர். போருக்கழைத்த அதிசூரன் "வாள்பயிற்றும் தொழிலில் நமது தாய உரிமையைக் கொள்வதற்காக இந்த வெளியிலே இருவர் படையும் சந்தித்துப் போர்புரிந்தால் அதில் சாயாது நிற்பவரே அதனைக் கொள்ள உரியார்" என்று கூறினன். இவர், "அது நன்று என உனக்கு வேண்டுவதாயின் அவ்வாறே போருக்கு நண்ணுவேன்" என்று இசைந்து அவன் சொன்ன போர்க்களத்துச் சேர்ந்தனர். இருவர் பக்கத்துப் படை வீரர்களும் கைவகுத்துப் பொருதனர்.

வாள்வீரர் வாள் வீரருடனும், வேல் வீரர், வில் வீரர் அவ்வவ் வகையாருடனுமாக அக்களத்தில் வேறு வேறு பொருதனர். இருபக்கமும் பலரும் பட்டனர். அதன்பின் வனுதி நாதர், படாது எஞ்சிய தமது படைக்கு முன்வந்து, வாளேற்றித் தாம் ஒருவராகவே சாரிகை சுற்றிப் பகைவனுடைய படைஞரைக் கண்டதுண்டமாக்கி வீழ்த்தினர். பகைவன் படைஞர் பலரும் பட்டனர். படாதார், **மெய்யுணர்வு நேர்பட்ட போது ஆர்வ முதலிய குற்றங்கள் ஒழிவது போல** அக்களத்தை விட்டொழிந்தனர். இதுகண்ட அதிசூரன், அவர்களில் மீண்ட சில படைஞரைக் கொண்டு, தானே முன்வந்து போரில் மூனைந்தான். இவர் வாள் சுற்றிவரும் வட்டணையில் தாம் தோன்றும் வகையில் அவனைப் பற்றி வீசும் சமயம் வா அவன், இவர்க்குத் தோற்றுத் தப்பிப் புறங்காட்டி ஓடினன்.

அன்று இரவு முழுதும் மான மிகுதலினால் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. பல முறையும் சிந்தித்தான். "எனமிகு வஞ்சனையால் வெல்வன்" என எண்ணினன். விடியற்காலையில், "நாட்டார் பிறரை நமது வாளின் தாயங்கொள்ளும் போரிற் கொல்லாது வேறிடத்தில் நாம் இருவரும் போர்செய்ய வருக" என்று இவர்க்குச் சொல்லிவிட்டான். இவரும் " அவ்வாறு செய்தல் அழகிது" என்று உடன்பட்டு அவன் குறித்த தனியிடத்து யாவரும் அறியாத வகையிலே வாளும் பலகையும் ஏந்தி முன்னே அவனை எதிர்பார்த்து நின்றார். "திருநீறிட்டார்க்கு எவ்விடத்தும் இவர் தீங்கு செய்யமாட்டார்" என்பதனை அவன் அறிந்தானாய், முன்னர்த் திரு நீற்றைப் பயின்றறியாதானாயும் நெற்றி வீரவப் புறத்திலே வெண்ணீற்றைப் பூசி, மனத்திலே வஞ்சக் கறுப்பு முடன் வைத்து, வாளும் பலகையும் ஏந்திக் குறித்த அந்தத் தனியிடம் புகுந்தனன். **சிங்கம்** தன் இரைப்பிராணியைப் பார்த்து நிற்பது போல உயர்ந்து நின்ற இவர் நிலையைக்கண்டு அவன் இவரைக் கிட்டி அணுகும் வரை, தனது நெற்றியைப் பலகையினால் மறைத்து வந்தெதிர்த்தனன். இவர் **விடையேறு** போல அவனைத் தாக்கிக் கொல்லும் இடைதெரிந்து தான் பெயர்க்கும் போது அவன் தன் நெற்றியை மறைத்திருந்த பலகையைப் புறம்போக்கினன். கடையவனுகிய அவன் நெற்றியிலே இவர் வெண்ணீற்றினைக் கண்டார். கண்டபொழுதே "கெட்டேன்! இவர் மேல் முன் காணுத திருநீற்றுப் பொலிவுகண்டேன். சிவபெருமானது சேடியா ராயினர்" என்று உட்கொண்டு, இவர் குறிப்பின் வழிநிற்பேன் என நிச்சயித்துத் தமது வாளும் பலகையும் போக்கக் கருதினர். பின்னர், நிராயுதரைக் கொன்றார் என்னும் பழி இவர் பாற் சாரலாகாதென்று எண்ணி அவற்றை யேந்திப் போர் செய்வார் போலக்காட்டி நேர் நின்றார். அந்தப் பாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான்.

சிவபெருமான் வெளிவந்து, பகைவன் கைவாளால் இவரது பாசமறுத்து, இவர்க்கு என்றும் பிரியாது உடனிருக்கும் அன்புநிலையினை அருளிச் செய்து எழுந்தருளினர்.

**தலவிசேடம்:—எயினனூர்** - அரிசொல் ஆற்றின் தென்கரையில் உள்ளது. கும்பகோணம் இருப்புப்பாதை நிலயத்திலிருந்து தென் கிழக்கில் கற்சாலையில் 4 காழிகையளவில் உள்ள அழகார்திருப்புத்தூரினின்று (அழகாத்திரிபுதூர் என்பர். இது புகழ்த்துணை நாயனார் தலம்) தெற்கில் ஒரு காழிகையளவில் கரை வழியாய்ச் சென்றால் இதனையடையலாம். இது இப்போது **ஏனநல்லூர்** என வழங்கப்படுகிறது. பழய சிவாலயம் உண்டு. இவ்வாலயம் ஒரு வைணவப் பெண்மணியாரால் கருங்கற் றிருப்பணி செய்யப்பட்டுள்ளது. நாயனாது திருவுருவமும் அவரது தேவியாரது திருவுருவமும் உட்புறத்தில் சன்னிதிக்கு எதிர்ப்புறமாக ஈசானதிக்கில் வைத்துப்பூசிக் கப்பட்டு வந்தன. இப்போது இவை வடக்குப் பிராகாரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருவுருவத்தின் பக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன. **சுவாமி** - பிரம்மபுரீசர்; **தேவியார்** - கற்பகாம்பிகை. திருக்கோயிலுக்கு மேற்கே அரை காழிகையளவில் ஆண் டான் கரையில் அதிசூரனுடன் போர்தடந்த களமும் இடமும் உள்ளன என்ப. அங்கு ஒரு குளமும் அதன் கரையில் ஒரு பெரிய ஆலமரமும் தென்கரையில் பெரிய திடலொன்றும் உள்ளன. இதுவே போர்க்கள மென்று கருதப்படுகின்றது. நாய னாது குருபூசையன்று சுவாமி இவ்விடத்துக்கு எழுந்தருளும் சிறப்பு இப்போதும் தடைபெறுகின்றது. இந்த இடம் இப்போது **சாலைக்கரை** என வழங்கப்படுகிறது. இத்தலத்தில் நாயனார் பேரால் ஒரு திருமடமும் உண்டு. நாயனார் சரிதமுழுவதும் இத் திருமடத்தில் சுவரில் எழுதப்பட்டுள்ளது.

**கும்பனை** :—1. சோழர்களது அரசாங்கம் இமயமலை வரை ஒரு காலத்தில் பரவி யிருந்தது.

2. குடிதழைத் தோங்குதல் நகர்த்தக்குச் சிறப்பாம்.

3. முன்னாளில் மன்னர்க்கு வாள்பயிற்றும் ஆசிரியத் தன்மையைத் தாய உரிமைப் படி வழிவழி வரும் உரிமையாய்ச் சிலர் பெற்றிருந்தனர்.

4. செய்தொழிலில் வரும் வளமெல்லாம் கடப்பாடு பற்றி அடியார்களுக்கு ஆக்கு தல் செல்வம் பெற்ற பயனும் உறுதிப்பொருளுமாம்.

5. ஒருவனது கல்லொழுக்கத்தினை கள்ளார்களும் போற்றும்படி இயல்பிலெழு குதல் தக்கது.

6. கல்விமுதலிய பேறுகளில் தனக்கு மேற்பட்டாரில்லை என ஒருவன் தன் னைத்தானே மதிக்கும் பெருமிதம் தீயது.

7. அழுக்காறு பொல்லாதது. அது பல தீமைகளுக்கும் உள்ளாக்கும். அதனை வாராமற் காத்தல் வேண்டும்.

8. வலியாரே தாயஉரிமை கொள்ளுதற்குரியார் என்பது நீதிக்குப் பொருந்தாத வழக்கு. இங்கு நாயனார் இதிற் போர்க்கு அமைந்தது இசைவு பற்றியதாம்.

9 ஒருவன் போருக்கு அறைகூவி அழைத்தால் போரேற்று நிற்றல் வீரர் இலக் கணம்.

10. முன்னாளில் வாள்முதலிய படைகளின் பயிற்சி மக்களிடை மிக்கிருந்தது. படைகள் தாங்கவும் அவைகொண்டு தம்மையும் நாட்டையும் காவல் செய்யவும், தமது தோள்வலிமையாலே வெற்றிபெற்றுத் தம் பொருள்களைக் காவல்செய்யவும், பொருள் பெறவும் உள்ள வீர உரிமைகளை முன்னாளில் நம்நாட்டுமக்கள் பெற்றிருந்தார்கள். இச்சரிதத்தில் குறித்தவாறு வீரச் சுவையுள்ள குடிமக்களின் போர் (621 - 636) கேட் டற்கும் அரிதாய் இந்நாள் நம் நாட்டின் வீரநிலை தாழ்ந்து நிற்பது வருத்தத்தக்க தொன்றும். இதன்வகைகளை அறிந்து திருத்தி நற்றமிழ் நாட்டவரை அவர்கட்குரிய முன்னைய உயர்ந்த வீரநிலைபெற்றேறுங்கச் செய்து, மக்களை நல்ல வீரமக்களாக்குதல் அரசியலார்க்கும் குடிமக்கட்கும் உரிய கடமைகளி லொன்றும்.

11. இச்சரிதத்திற் கண்ட குடிமக்கட் போர்மள்ளர்களின் வீரம், ஆண்மை, வலிமை, போர்த்திறன், குறிபீடு, குறிக்கோள் (627 - 629) முதலியன வியக்கற்பாலன.

12. ஏனாதிநாதநாயனாரின் வாட்போர்த்திறமும் நேர்மையும் அப்போர்த்தொழில் இயலுக்கு இலக்கியமாவன. இத்தகைமையுடைய வீரர்களே அத்தொழிலில் வீரக் கலைப் பயிற்சி தரும் ஆசிரியராதற்கு உரியர். இவ்விலக்கணம் இது போலவே எல்லாத் தொழிற் கலைக்கு முரியது. அவ்வத் தொழிலிலும் அவ்வவ் வாசிரியர்கள் ஒப்புயர்வற்ற தேர்ச்சியும் நேர்மையு முடையராதல் வேண்டும்.

13. போரில் உடைந்து புறகிட்டார் மானமிக மீதூர இரவிற் கண்படாது அல மருவர்.

14. மானம்படவரின் உயிர் வாழாது தம்முயிர் நீப்பர் நல்லோர். "கவரிமா அன்னர் உயிர் நீப்பர் மானம் வரின்", "மானம்படவரின் வாழாமை முன்னினிது" என்பன நீதி முதுமொழிகள். ஆயின் " அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத், தீயுழி யுய்த்து விடும்" என்றபடி இங்குப் போரிற் புறகிட்ட அதிசூரன் அழுக்காற்றினாற் கொள்ளப் பட்டானாதலின் தான் உயிர் நீக்காது வஞ்சனையால் வெல்ல எண்ணினான். இது நீயோர் செயலேயாம்.

15. இங்கு நாயனாரின் திருநீற் றுவழிபாட்டின் திறந்தெரிந்து அதிசூரன் தானும் நீறு புறம் பூசி வஞ்சிக்க முற்பட்டான். மெய்ப் பொருணயனரை முத்த நாதன் வஞ்சித் தான். உலகியலில் இவ்வாறு வஞ்சிப்பார் பலருளர். ஆயின் அதுகொண்டு அடிமைத் திறத்திற்கிழுக்கின்று. இது பற்றித் திருவேடத்தை இகழ்தல் அறியாமையாம்.

16. திருநீறிட்டார் எவரேனும் அவர்தமது பிற திறங்களை ஒன்றும் ஆராயாது திருவேடத்தால் அறியப்படும் அடிமைத்திறமே பேணிக் கவனாது தொழுவது நீவிரதா அன்பாம். இதுவே திருவேட வழிபாட்டின் உயர்ந்த நிலை. இங்கு நாயனர் பகைவனது தெற்றியிற் புதியதாய்த் திருவெண்ணீறு கண்டார். அவனது பகைமை, அழுக்காறு, தாயப்போர், வஞ்சனை, முன்னைத் தோல்வி முதலிய எல்லாம் தெரிந்தும், "நீறிட்ட ஒன்றினுலே சிவன் சீரடியாராயினர். இவர் என் உயிர் கொள்ளக்குறித்தாரேனும் இவ்வடியார் குறிவழி நிற்றல் கடன்" என்றமைந்து நின்றதனோடு, "இந்த அடியார்க் குப் பழிவாராது நிற்றலும் கடன்" என்று அவன் தன் கருத்துமுற்றுவிக்கும் வரை பாவனைக்காக வாளும் பலகையும் தாங்கி நின்றார். வெற்றிக்கேயமைந்த தமது தோள் வலியும் வாள்வலியும் காணுது போர்க்களத்தில், வலியிழந்த மாற்றானிடத்துத் திருநீறு ஒன்றினையே கண்டு திருநீற்று வழிபாட்டின் பொருட்டுத் தமது உயிரைக் காணிக்கையாக ஈந்த நேர்மையை உன்னுக. இவர் நேர்மைக்கும் ஆண்மைக்கும் இலக் கியமாயினர் என்பதன்றி அன்புக்கும் இலக்கியமாயினர்.

17. மெய்யுணர்வு நேர்பட்ட போதில் ஆர்வமுதற் குற்றங்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாது அகன்றுபோம்.

18. எஞ்ஞான்றும் அன்பே வெல்லும். வஞ்சனை தோற்கும். இச்சரிதத்தில் அதிசூரன் வஞ்சித்துத் தான் நினைந்தபடி முடித்தான் என்று உலகர் எண்ணுவர். ஆயின் அவன் வென்றனல்லன் என முன்னர் விளக்கப்பட்டது. பண்டுதிருநீறு பாங்கிற் பயிலாத கடையோனும் இவரது அன்பின் நிறங்கண்டு அதற்குள்ளாகி நீறிட் டான். நாயனரது நன்மைத் துறையொழுக்கம் கள்ளாஞ்சிய அதிசூரனும் போற்றும் படி அவனை அடிப்படுத்தியது. முன்னைப் போரில் ஆண்மையும் வீரமும் வென்றன. பின்னைப்போரில் அன்பும் திருநீறும் வென்றன. 481 பார்க்க.

19. அன்பு நிலைக்கு ஏதமாக உலகில் வெளித் தோற்றத்திற் காணப்படுபவை யெல்லாம் உண்மையில் இறைவனருளால் உலகபாசமறுத்து உயர்நிலை தர வருவனவே

யாம். உடம்பை அறுத்துக் குணஞ்செய்யும் மருத்துவன்போல இங்கு இறைவனருளே பற்றலர் கைவாளால் நாயனாது உலகத்தொடர்பை அறுத்து அவருக்கு இறைவனே யென்றும் பிரியா அன்பு நிலையாகிய நித்திய வின்பத்தை யளித்தது.

20. கொலைதீது என்பது ஒரு நீதி ; தன்னைக் கொல்லவந்தானைக் கொல்க என்பது மற்றொரு நீதி. போர் முனையிற் பகைவனைக் கொன்று வெல்வது கோரிய போரின் உலக நீதி. அங்ஙனங் கொல்லாது விடுத்தல் இல்நீதியிற் பிழை. தற்கொலை பாவம். அவ்வாறே பிறர் தம்மைக் கொல்ல வந்தபோது தற்காக்கும் வலி பெற்றிருந்தும், தற்காத்துக் கொள்ளாது பிறனுற் கொலையுண்ண நிற்றல் தற்கொலையோடொப்பப் பாவமாம். இவையெல்லாம் உலக நிலையிற் புண்ணிய பாவங்களுக் கேதுவாகிய அறநூல் விதிகள். இவ்விதிகள் இங்கு நாயனுர்பாற் சாரா என்க ; என்னை ? சாமானிய மான உலகியலறநூல் விதிகள் உலகிறந்த நிலையில் நிற்கும் எந்தம் பெருமக்கள் செயல்களை அளக்கும் அளவு கோல்களாகாமையினென்க. இவைபற்றி 364-ல் உரை பார்க்க. அன்றியும் இவ்வறநூல் விதிகள் உலகில் நல்வாழ்வும் மறுமையில் புண்ணிய பாவப்பயனும் அளிக்க வல்லனவன்றி வீடாகிய உறுதிப் பயன் றருவன அல்ல. மக்களது உலக வாழ்க்கையின் பயனுவது வீடுபேறும். வீடுபெறுவது சாத்தியப் பொருள் ; வாழ்வு அதற்குச் சாதனம். சாதனத்தால் அடையப்படு பொருளாகிய வீட்டுநிலையைப் பெற வரும் இச்சமயம் அதனைக் கைவிட்டு உடலை ஒம்பி உயிர் வாழ்வதாயின் அதுவே தற் கொலையாகும் என்பது இறைவனுற்றுணிபு.

21. இங்கு அதிசூரன் சிவனடியாரைப் பகைத்து வஞ்சித்து எரிவாய் நரகினை யடைந்தான் என்க. இவ்வாறே மெய்ப்பொருளையனுரை வஞ்சித்த முத்தநாதனும் நரகினை அடைந்தவனுனன். "பகைத்து நரகினைச் சென்றடைந் தோர்" (38) எனத் திருத்தொண்டர்புராணவரலாற்றில் உமாபதிசிவனுர் அருளியதுங் காண்க. "பாதகன்" என ஆசிரியர் குறித்ததும் உன்னுக. ஆயின் இவன் நெற்றியில் நீறு கண்ட பொழுதே சீர் அடியாராயினர் என்று நாயனுர் கொண்டொழுகினரே யெனின், அஃதுண்மையே ! அது நாயனரின் மனநிலை. அப்பக்கம் அதுவே அவர்க்கு வீடளித்தது. ஆயின் இப்பக்கம், அதுவே அரனடியாரை வஞ்சித்துத் தீங்கிழைத்த பாதகப் பயன் தந்து இவனை நரகத்திற் செலுத்துதற்கும் இழுக்கில்லை. நாயனரின் நல்லொழுக்கம் அவர்க்கு நற்பயன் தருவதாமன்றி அவ்வொழுக்கத்து நில்லாத பிறர்க்கு நற் பயன் றராதென்க. "பாவ மறுப்பது நீறு", "முத்தி தருவது நீறு" என்பன முதலாகச் சொல்லப்பட்ட வேத விதிகள் அதிசூரன்பாற் பொருந்தாவோ ? அவன் பூசிய நீற்றினுல் அப்பயன் அடையானே ? எனின் அடையான். என்னை ? அவன் நீற்றைப் பேணி யணியாது உள்நெஞ்சில் வஞ்சக்கறுப்பு முடன்வைத் தணிந்தான். "வேட நெறி நில்லார் வேடம் பூண்டென் பயன் ?" என்பது திருமந்திரம் - முதற்றந்திரம் - (128) இவன் வஞ்சம், அழுக்காறு, அவா முதலிய மனக் குற்றங்களெல்லாம் பொருந்தினன். போர்நீதி யறத்தினின்றும் வழுவினன். பொருட் பற்றினுல் விழுங்கப்பட்டான். ஒரு சிறிதும் பரனை நினைந்தானலன். "பரனை நினைந்து இம்மூன்றும் விட்"டார்க்கு வரும் திருநீற்றுப் பயனை இவன் எங்ஙனம் அடைவான் ? என விடுக்க.

விரும்பி யுண்ணினும் விரும்பாது வெறுத் துண்ணினும் பலன் றரும் மருந்து போலத் திருநீறு பவநோய் தீர்க்கும் பெரு மருந்தன்றே ? எனின், அதுவுண்மையே ! நோய் மிக வலிமைப்பட்டமையால் மருந்து உள்ளே புக்குப் பயன்றரா நிலையுற்ற பிணியாளன்பால் அம்மருந்து மேனின் றெழிவதுபோல ஈண்டு இப்பெரு மருந்தாகிய திருநீறும் உட்செல்லாதுவிடுதலிற் பயன்றருமா றில்லை என்க.

22. அடியார்க்கு வரும் ஏதங்களை வாயினுற் சொல்லுதலும் பாவம் பயக்கும்.

23. நிராயுதரைக் கொல்வது போர் முறையன்று. அது பழியாம்.

24. உயிர்கள் தனித்து நில்லாது ஒரு சார்பு பற்றியே நிற்கும் இயல்பின. உடல், பொருள், உறவு முதலிய நிலையில்லா உலகச் சார்புபற்றி ஒழுகாது, சாத்திர உணர்ச்சி, குரு உபதேசம் முதலியவை வாய்க்கப் பெறுதல் நல்வினைப் பயத்தால் உளதாம். அதனால் சிவசாதனச் சார்பு பற்றி ஒழுகும் ஒழுக்கம் வரும். இடையூறுக எதுவரினும் அதனிற் பிறழாது ஒழுகினால் அது சிவனிடத்திற் சேர்க்கும். இங்கு நாயனார் உடல் - பொருள் - முதலிய பொய்ச் சார்புகளை விட்டுத் திருநீற்று வழிபாட்டின் நலம் என்றும் குன்றுதொழுகியதனால் இறைவனைப் பிரியா அன்பு நிலை அடைந்தனர்.

25. திருநீறு அரனைப்போலவே தொன்மை யுடையதும் அழிவில்லாததுமாம். திருநீற்றின் உண்மை வழிபாடு உயிருக்குப் பாசநீக்கமும் சிவப்பேறும் தரும். திருநீற்றினை உபாசனை செய்வது சிவனை உபாசனை செய்வதாம். திருநீறு அருட்சத்தியின் உருவம். "பராவண மாவது நீறு" என்பது தமிழ்மறை. (வண்ணம் - வணம் என நின்றது.) அருட்சத்தி திருநீற்றினைக் கருவியாகக்கொண்டு அதனிடமாய் நின்று தன் தொழில் செய்யும். தன்னொடு நீங்காது பொருந்திய குணமாகிய அருட்சத்தியை யுடையவன் இறைவன். எனவே, குணியாகிய அவனோடொப்பக் குணமாகிய அருளும் அதன் கருவியாகிய திருநீறும் அநாதியேயாம்.

"தேசமலி பொதுஞானச் செவ்வொளியுந் திகழ்பதியா
மீசனது நடத்தொழிலு மிலங்குபல வுயிர்த்தொகையும்
பாசமுமங் கதுகழியப் பண்ணுதிரு வெண்ணீறு
மாசிறிரு வெழுத்தஞ்சு மாதியினை யாருக"

என்ற கோயிற் புராணப் பாயிரத் திருவாக்குங் காண்க.

ஏனாதிநாதநாயனார்புராணம் முற்றும்

---

**எயினனூர்த் தலக்குறிப்புக்கள் சில**—இத்தலம் எனனூர் எனவும் வழங்கப் பெறும். இதன் கிழக்கே ஒரு காவிரையளவில் திருநறையூர்ச் சித்தீச்சரமும், வடக்கே ஒரு காவிரையளவில் அரிசிற்கரைப்புத்தூரும், மேற்கே ஒரு காவிரையளவில் (மருத நல்லூர் என வழங்கும்) திருக்கருக்குடியும் உள்ளன. கருக்குடியிலிருந்து எயினனூருக்கு நேரே ஒரு பாதை உண்டு. கோடைகாலம் தவிர ஏனைக்காலங்களில் இத்தலத்துக்குச் செல்லுதல் மிகச் சிரமம். எயினனூர் என்பது மதில் காரணமாக வந்த பெயரென்றும், ஏனாதி என்பது சேனாபதி என்பதன்மரூஉ என்றுங் கூறுவாருமுண்டு.

இத்தலக்குறிப்புக்களும் திருவுருவப் படிமங்களும்பெறப் பெருமுயற்சிசெய்து உதவினவர்கள் எனது அரிய நண்பர்களான பண்டிதர் - திரு. அ. கந்தசாமி பிள்ளை அவர்களும், திரு. T. V. சதாசிவபண்டாரத்தார் அவர்களும், திரு. மு. அருணாசலம் B.A., அவர்களுமாவார்கள். திருவுருவப் படிமங்கள் எடுத்து உதவியவர் கும்பகோணம் தேவார பாடசாலைத் தாபகர் - திரு. உத்தண்டி செட்டியாரவர்களின் புதல்வர் திரு. சாட்சிலிங்கஞ் செட்டியார் அவர்கள். இவர்களுக்கு எனது கடப்பாடுடைய நன்றி உரியது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# 10. கண்ணப்பநாயனூர்புராணம்

தோகை

"கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்"—திருத்தொண்டத்தொகை

வகை

"நிலத்திற் றிகழ்திருக் காளத்தி யார்திரு நெற்றியின்மே
னலத்திற் பொழிதரு கண்ணிற் குருதிகண் டுண்ணடுங்கி
வலத்திற் கடுங்கணை யாற்றன் மலர்க்கண் ணிடந்தப்பிலுன்
குலத்திற் கிராதனங் கண்ணப்ப னெமென்று கூறுவரே"

—திருத்தொண்டர் திருவந்தாதி

விரி

650. மேவலர் புரங்கள் செற்ற விடையவர் வேத வாய்மைக்
காவலர் திருக்கா ளத்திக் கண்ணப்பர் திருநா டென்ப
நாவலர் புகழ்ந்து போற்று நல்வளம் பெருகி நின்ற
பூவலர் வாவி சோலை சூழ்ந்தபோத் தப்பி நாடு. க

புராணம்:—தமது கண்ணையிடந்து இறைவனது கண்ணிலே அப்பியதனாற் கண்ணப்பர் என்று பேர் பெற்ற நாயனாது வரலாறும் பண்பும் கூறும் பகுதி. நிறுத்த முறையானே இலைமலிந்த சருக்கத்து மூன்றுவதாகிய கண்ணப்ப நாயனூர் புராணங் கூறத் தொடங்குகின்றார்.

தோகை:—கலைகள் யாவற்றினும் மேம்பட்டு விளங்கும் சிறப்பினைப் பெற்ற தலைவராகிய கண்ணப்ப நாயனாருக்கு நான் அடியேனாவேன். கலைமலிந்த சீர் - எல்லா நூல்களாலும் விதந்து பேசப்பட்ட சிறப்பு. மலிதல் - மேம்பாடுற்று நிறைதல். இங்குச் சீர் என்றது அன்பின் சிறப்பினை. வீடுபேறும் உலக வாழ்வுமாகிய நிலைகள் இரண்டிற்கும் ஒப்ப இன்றியமையாது வேண்டப்படும் சிறப்பாவது அன்பே என்பது எல்லாக் கலைகளுக்கும் ஒப்ப முடிந்த உண்மை. நம்பி - ஆடவரிற் சிறந்தோன். "நம்பி என்பது நாமச் சிறப்பே" - பிங்கலம். "ஆடவன் கொன்ற னச்சோ!" என இவரது மெய்காப்பாளரும் புகழவும், "மாறிலாய் நிற்க" என்று இறைவரும் விளிக்கவும் வாய்ந்த சிறப்புக்களை இங்கு உன்னுக. கண்ணப்பர் - இது இறைவனுக்கு இவர் தம் கண்ணை யிடந்து அப்பிய காரணம்பற்றி இறைவன் தந்த திருப்பெயர்; இவரது பெற்றோர்களால் இடப்பட்ட பெயரன்று. சரிதக் குறிப்பும் தேற்றமும் பெற இப்பெயராற் குறித்தார்.

வகை:—பூவுலகிற் சிறந்துவிளங்கும் திருக்காளத்தி இறைவரது நலத்தைத்தரும் திருக்கண்ணில் குருதிபொழியக் கண்டு மனமுடைந்து அம்பிலுலே தனது வலதுகண்ணைத் தோண்டி அப்பினவர் வேடர்குலத்துதித்த கண்ணப்பராமென்று சொல்வர் பெரியோர்.

நிலத்தில் திகழ் - உலகில் தட்சிண கயிலாயமென்று விளங்குகின்ற. நெற்றியின் மேல் - முகத்தினிடத்து. நெற்றி ஆகுபெயராய் ஈண்டு முகத்தை உணர்த்தி நின்றது. நலத்திற்றந கண்ணிற் பொழிதருதி கண்டு என மாற்றுக. நலத்தில் - ஏழாவதன் உருபு இரண்டாம் வேற்றுமைப் பொருளில் வந்தது. ஈண்டு நலம் என்றது "அங்கணர் கருணை கூர்ந்த வருட்டிரு நோக்கத்தினை". (753). உண்ணடுங்கி - இதன் விரிவு புராணம் 170-ம் திருப்பாட்டு முதலியவற்றுரலறிக.

வலத்தில் மலர்க்கண் இடந்து - என்று கூட்டுக. கிராதன் - வேடன். அப்பினவன் கண்ணப்பனும் என்று கூட்டுக. பெரியோர் என்ற தோன்று எழுவாய் வருவிக்க.

பெயரும் சரிதக்குறிப்பும் பெருமைப் பண்பும் முதனூல் பேசிற்று. இவர் பேறு பெற்ற தலமும் சரித வரலாறும் மரபும் பெயரும் பிறவும் வகைநூல் வகுத்தது. இவை விரிந்தபடி புராணத்துட் காண்க.

650. (இ - ள்) வெளிப்படை. அடையலாரது மும்புரங்களை அழித்த விடைய வராகிய வேதவாய்மைக் காவலரது திருக்காளத்தியிலே பேறடைந்த கண்ணப்ப நாயனாரது திருநாடாவது, புலவர்கள் புகழ்ந்து பாராட்டும் கல்ல வளங்கள் பெருகி நிலைத்ததும் பூக்கள் மலர்ந்த வாவிகளும் சோலைகளும் சூழ்ந்ததுமாகிய பொத்தப்பி நாடாகும் என்று சொல்வர் பெரியோர்.

(வி - ரை) மேவலர் - அடையலர் : பகைவர். புரங்கள் - மும்புரம். செற்ற - கைத்து அழித்த. செற்ற என்றதனால் வேண்டுதல் வேண்டாமையிலாத இறைவனுக்குச் செற்றம் முதலிய குற்றம் ஏற்றியதாகாது எனக் குறிக்க விடையவர் - என்றார். விடை - தருமதேவதையாகிய இடபம். புரங்களை இறைவன் எரித்தது மறத்தினைப் போக்கி உயிர்களுக்குத் தன்பத்துடைத்துப் போகமளித்தற்கேயாம். திருமம் யுகந்தோறும் குறைந்துவந்து இறுதியில் அழியாது இறைவனிடம் ஒடுங்கி நிற்குமென்பர். இனி, "தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த வன்காளில் இடபமதாய்த் தாங்கினன் றிருமால்காண் சாழலோ" (திருவாசகம்) என்றபடி மும்புரமெரித்த ஞான்று விடையாய் நின்ற திருமாலின் மீது எழுந்தருளியவர் என இரண்டையும் உடன் குறிப்பார் செற்ற விடையவர் என்றார் என்பதுமாம். மும்புர மெரித்தல் என்பது மும்மலகாரியங்களை அழித்தலாகிய இறைவனது செயலைக் குறிப்பதாகக் கூறுவர் திருமூல நாயனார்.

வேதவாய்மைக் காவலர் - வேதங்களில் விதிக்கப்பட்ட அறம் - வாய்மை - என்னு மிரண்டில் அறத்தை மேல் விடையவர் என்றதனாற் கூறினாராதலின் ஏனை வாய்மையை இதனாற் குறித்தார். "அறவினை யாதெனிற் கொல்லாமை", "ஒன்றுக கல்லது கொல்லாமை மற்றதன், பின்சாரப் பொய்யாமை நன்று" என்றிவ்விரண்டினையும் வரையறுத்து முறைப்படுத்திய நீதிநூலும் காண்க. வேதமும், அறத்தைச் செய் - சத்தியத்தைப் பேசு - என்று இம்முறையிலே பேசிற்று. இம்முறைபற்றியே இங்கு ஆசிரியர் விடையவர் என்றும், அதன்பின் வாய்மைக்காவலர் என்றும் வைத்த அமைப்பும் காண்க. கொல்லாமை அறமாகியவழி, அஃது அவ்வறக்கடவுள் புரங்கள் செற்றார் என்றதனோடு முரணுமை மேலுரைக்கப்பட்டது. இதனைக் "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல்" என்பது போலக் காண்க.

இங்கு இச்சரிதத்தினும் நாயனார் பல பிராணிகளை வேட்டையாடிக் கொன்று இறைவனுக்கு நிவேதித்தனர். அவை கொலையாகாது அவற்றை ஈடேறச் செய்த அருட் செயலேயாயின என்று பின்னர்க் காண்போம். "ஒளிநின்று கொன்றருளி". (790) என்பர் ஆசிரியர். இச்சரிதக் குறிப்பும் பெற இங்கு இவ்வாறு தொடங்கினார்.

வாய்மை - வாயின் தன்மை. அது சத்தியத்தினைப் பேசுதல். இதுவே, சத்தியத்தை உன்னும் உள்ளத்தின் நிலையில் உண்மை என்றும், அதனை மெய்யாரச் செய்யும் நிலையில் மெய்மை எனவும் பெற உள்ளது. சத்து - அழியாதது. இங்கு

இச் சரிதத்தில் இறைவர் தமது நின்மலமாகிய சத்நித்திருமேனியிற் கண்போலவும் அதிற் குருதிபோலவும் காட்டினர். இவ்வாறு இல்லாதவற்றை உள்ளனபோலக் காட்டியவரை **வாய்மைக் காவலர்** என்ற தென்னை ? எனின், அவை நாயனரின் உண்மையைக் காட்ட எழுந்தன ஆகலின் வாய்மைக்காவலின் நிகழ்ந்தன என்க. இதுவும் இச்சரிதக் குறிப்பாதல் காண்க.

இவ்வாறன்றி வேதம் உபசார மாத்திரையாய் எல்லாத் தேவரையும் சொல்லுமாயினும் உண்மையிற் சிவனையே முதல்வனாக உள்ளத்தில் (இதயத்தில்) வைத்துக் கூறும் ஆதலின் அவ்வாறு வேத உண்மையாய் நின்ற **காவலர்** என்றலுமாம்.

**திருக்காளத்தி** - சிலந்தியும், காளனும் (பாம்பு), அத்தி(யானை)யும் பூசித்துப் பேறு பெற்றமையால் இப்பேர் பெற்றது. "இத்தமலை காளனோ டத்தி தம்மி லிகலிவழி பாடு செய விறைவர் மேவு, மந்தமில்சீர்க் காளத்தி மலையாம்" (திருஞான - புராண - 1021) முதலியவைகாண்க. தலவிசேடம் பார்க்க.

**திருக்காளத்திக் கண்ணப்பர்** - காளத்தியிலே வழிபட்டுக் கண்ணப்பிப்பேறுபெற்றவர் என்றது சரிதக் குறிப்பு. காளத்தியும் கண்ணப்பரும் பிரிக்கக்கூடாதபடி யினைந்துள்ள நிலையும் குறிப்பதாம். கண்ணப்பர் என்ற பேர் காளத்தியிற் போந்தது என்பதும் குறித்தார்.

**கண்ணப்பர் திருநாடு** - **திருநாடு** - அவதரித்த நாடு. **கண்ணப்பர்** - இவருக்குத் தாய் தந்தையர் இட்ட திண்ணன் என்றதனிலும் இப்பெயரே சிறந்தது.இஃது இறைவன் தந்தது. ஆசாரியர்கள் யாவரும் இப்பெயர்கொண்டே துதித்தனர். இஃது அவர் சரிதங் குறிப்பதுமாம்; ஆதலின் இப்பெயரால் தோற்றுவாய் செய்தனர்.

**நாவலர் புகழ்ந்து போற்று நல்வளம்** - குறிஞ்சிநில வளத்தைத் தமிழ் இலக்கணம் முறை செய்யும் வகையினைப் **புகழ்ந்து** என்றும், இக்காட்டுக் குறிஞ்சி, தலையன்புக் கிலக்கியமாய் நிற்கும் நாயனர் அவதரிக்கும் பேறு பெற்ற நாடாயினமையின் **போற்றும்** என்றும் கூறினர். இது பற்றியே **வளம்** என்னாது **நல்வளம்** என்றதுமாம். அச் சிறப்பு மிகுதியும் பெற்றதனோடு எஞ்ஞான்றும் நிலைபெறவும் பெற்ற தென்பார் **பேருகி நின்ற** என்றார். **நாவலர்** - கலைவாணி யருள்பெற்ற கலை நாவலரும், ஞான வாணி தன் காவிற் பதியப் பெற்ற ஞான நாவலரும் என நாவலராவார் இருவகையினர். இங்குக் கூறிய நாவலர் பிற்கூறிய நிலையினராகிய நக்கீரதேவர், சமய குரவர் முதலிய ஞானத் தமிழ் நாவலர். பதினொராந் திருமுறை முதலாயின அருட்பாட்டுக்கள் காண்க.

**பூ அலர் வாவி சோலை** - வாவியிற் பூப்பன தாமரை முதலிய நீர்ப்பூக்கள். நால் வகைப் பூக்களில் ஏனை மூன்றும் சோலையிற் பூப்பன. இவை யெல்லாம் இந்நாட்டிற் காண உளவாம் என்பார் **வாவி சோலை** என்று சேர்த்துக்கூறினர். **வாவிசோலை** - உம்மைத் தொகை. இவை ஏனை நாட்டிற் போலச் செயற்கையானன்றி இங்கு இயல்பிற் பொருந்துவன என்ற குறிப்புப் பெறச் **சூழ்ந்த** என்றார்.

**பொத்தப்பி நாடு** - காளத்திமலைச் சாரலுக்கு வடக்கே 40 - 50 நாழிகை யளவில் உள்ளது. குறிஞ்சிப் பகுதியைச் சேர்ந்த மலைநாடு. இப்பெயர் இன்றும் வழக்கிலிருக்கின்றது. பொத்தப்பி நாட்டைக் கண்ணப்பர் திருநாடென்ப எனக் கூட்டுக.

**போற்ற—பெருக—பொத்தப்பி**—என்பனவும் பாடங்கள். 1

651. இத்திரு நாடு தன்னி லிவர்திருப் பதியா தென்னி
னித்தில வருவிச் சார னீள்வரை சூழ்ந்த பாங்கர்
மத்தவெங் களிற்றுக் கோட்டு வன்முரு டார வேலி கோலி
யொத்தபே ரரணஞ் சூழ்ந்த முதுபதி யுடுப்பூ ராகும். உ

(இ - ள்) வெளிப்படை. இத்தத் திருநாட்டிலே இவரது திருப்பதியாவது யாது என்னில், முத்துக்களைக் கொழித்து வரும் அருவிகள் ஓடுதற் கிடமாகிய சாரல்களை

யுடைய நீண்ட மலைகள் சூழ்ந்த பக்கத்தில் மதம் பொருந்திய யானைகளின் கொம்பு களால் வலிய தொடர்ந்த வேலியிட்ட அதனுல் ஒரே தன்மைத்தாகும் பெரிய மதி லரணுற் சூழப்பட்டு விளங்கும் பழம்பதியாகிய **உடப்பூர்** என்பதாம்.

(வி - ரை) **திருநாடு - திருப்பதி** - என்புழித் திரு என்பன நாயனுர் அவதரிக்கும் நலம் பெற்ற சிறப்புக் குறித்தன. பெரியவர்கள் அவதரித்ததனுல் அந்நாடு பெருமை பெறும் என்றதனை " அறத்தருசா வுக்கரசும் ஆலால சுந்தரரும் பிறந்தருள உளதானுல் நம்மளவோ " என்று திருமூனைப்பாடி நாட்டுக்கும், " ஐயர் நீரவ தரித்திட விப்பதி யளவில் மாதவ முன்பு, செய்தவாறு" - திருஞான - புரா - (179) என்று நகரத்துக்கும் சிறப்புக் கூறிய வகையில் ஆசிரியர் அறிவித்திருத்தல் காண்க.

**நீத்தில அருவி** - மலையின் மூங்கில் - யானைக்கோடு முதலியவற்றினின்று பிறக் கும் முத்துக்களை வாரிவரும் அருவிகள்.

**நீள்வரை சூழ்ந்த பாங்கர்** - உயரத்தாலும் பரப்பினுலும் நீண்ட மலைகளாற் சுற்றப் பட்ட பக்க இடங்களில். **மத்த**-மதத்தையுடைய ; வடசொல். " மத்தோன்மத்த னுக்கி" என்ற திருவாசகமும் காண்க. இங்கு மதம் யானைகளுக்கு இயற்கை யடைமொழி. **வெம்மை** - கொடுமை.

**வன் தொடர் வேலி கோலி** - யானைக் கொம்புகளை வரிசையும் வலிமையும் பெறத் தொடர்ச்சியாய் நாட்டி வேலியாக அமைத்து. மலைச்சாரலாதலின் புலி முத லிய கொடிய மிருகங்கள் மிக்கு வாழும் ; அவை பதியினுள்ளே புகுந்து மக்களையும் அவர்கள் கவர்ந்து வளர்க்கும் ஆனிரை மான் முதலியவற்றையும் அன்புறுத்தாதபடி மதில்போல நகர்காவல் செய்வதனைக் குறித்து **வேலி கோலி** என்றார்.

**ஒத்தபேர் அரணம்** - புறப்பகையாகிய பகைவர் வாராது காப்பது நீள்வரை சூழ்ந்த மலையரண் ; உட்பகையாகிய ஏனை மிருகங்கள் வாராது காப்பது யானைக் கொம்பின் வேலியாலாகிய இந்த மதிலரண் ; இவ்விரண்டும் ஒத்துச் சூழ்ந்து பெரிய அரண்களாய் இந்தப் பதியைச் சுற்றியிருந்தன என்க. எனவே, இப்புராணத் தலைவராகியநாயனுர் புறப்பகை உட்பகை எனும் இவ்விரு பகையும் வாராது முற்பிறப்பிலே தவம் புரிந்து காவல் செய்து இங்கு வந்தவதரித்து இறைவனடி கூடியதாகிய இச்சரிதத்துக்கு ஏற்ற நகர்வனப் பொருளைக் குறித்த நயமும் காண்க.

**முதுபதி** - பழம்பதி. **பதி** - மலை நாட்டு ஊர்களுக்கு வழங்கும் பெயர்களில் ஒன் றும். குறிஞ்சி நிலத்து ஊர்கள், சிறூர் (664) சிறுகுடி - குறிச்சி என்பர். குறிச்சி வாழ்க்கை (657 - 687) என்றது காண்க. இக்காளிலும் மலைசர்பதி - இருளர்பதி என் னும் வழக்குக்கள் மலைநாட்டில் (கொங்கு நாட்டில்) வழங்குவன காண்க. **ஆகும்** - உயிர் களுக்கு ஆக்கம் தரும் இடம் என்ற குறிப்புமாம். 2

652. குன்றவ ரதனில் வாழ்வார் கொடுஞ்செவி ஞமலி யார்த்த
வன்றிரள் விளவின் கோட்டு வார்வலை மருங்கு தூங்கப்
பன்றியும் புலியு மெண்கு கடமையு மானின் பார்வை
யன்றியும் பாறை முன்றி லிவன முணங்கு மெங்கும்.

(இ - ள்) வெளிப்படை. அப்பதியில் வாழ்பவர்கள் மலைவாழ்நராகிய குன்றவர்கள். அப்பதியின் இடமெங்கும் வளர்த்த காதுகளையுடைய நாய்களைக் கட்டிய வலிய கூட்ட மாகிய விளாமரக் கிளைகளில் வார்களையுடைய வலைகள் பக்கங்களில் தொங்க, காட்டுப் பன்றியும், புலியும், கரடியும், கடமை முதலிய மானினங்களும் என்றிவற்றின் பார்வை மிருகங்களும் உள்ளன ; அன்றி, இல்லங்களின் முன்னர்ப் பாறை முற்றங்களில் ஐவன அரிசியும் உணங்கும் (உலரும்).

(வி - ரை) அதனில் குன்றவர் வாழ்வார் என மாற்றுக.

குன்றவர் - குறிஞ்சிநில மக்கள். இவர்கள் கானவர் (662) வேட்டுவர் (654), குறவர் (664) இறவுளர் (665), வேடர் (655), மறவர் (656) எனவும் பெறுவர். இப்பெயர்கள் பலவும் இப்புராணத்தினுள் வழங்கிய இலக்கிய அமைவுங் காண்க.

கொடுஞ்செவி ஞமலி - காது வளைந்து தொங்கியிருத்தல் சிறந்தசாதி வேட்டை நாய்களின் இலக்கணங்களில் ஒன்றென்பர். வேட்டை பயில்வோர் பலர் தொங்கிய காதுடைய நாய் வகையை வளர்த்தல் கண்கூடு. வேட்டையில் இவர்களுக்கு நாய்கள் பயன்படும் செய்தி பின்னர் 717 - 725 - 734 முதலிய பாட்டுக்களிற் காண்க.

வன் திரள் விளவின் கோட்டு - வரைசூழ்ந்த குறிஞ்சிநிலமாதலின் விளாமரங்கள் கூட்டமாக அங்கு அப்பதியில் ஓங்கி வளர்ந்திருந்தன என்பதாம். அவை நாய்களைக் கட்டி வைத்தற்கும், மேற்கொம்புகளில் வார்வலைகள் தொங்கவிட்டு வைத்தற்கும் உதவுவன. "பார்வை யாத்த பறைதாள் விளவின் " (பெரும்பாணற்-95) என்றதும் காண்க.

வன் திரள் விளா - குன்றவர் தமது குறிச்சி வாழ்க்கைக் குடியிருப்பிடங்களை விளாமரங்கள் சூழ்ந்த சூழலின் அமைத்தனர். அன்றித், தம் குடியிருப்பிடங்களைச் சூழ விளாமரங்களை வைத்து வளர்த்தனர் என்றலுமாம். விளாமரச் சூழலின் காற்று உடற் சுகந் தருவதேனுடு அவை இவர்களது முயற்சியின்றியே இயல்பின் வளர்ந்து பலன் தருவன. அவற்றின் பழங்கள் சுகந்தரும் உணவாதலும் காண்க. "வேரி விளங்கனிக் கவளங் கொள்வார்"-(684) என்று பின்னர்க் கூறுதலும் உன்னுக. விளாமரத்தின் குணம்-"காச சுவாசங் கதித்த வரிடுமுதற், பேசரிய தாகமிவை பேசுங்கால் - வீசு, தபித்தலைச்செய் பித்தந் தரிக்குமோ பூவிற், கபித்த மரமிருக்குங் கால்"-(கபித்தமரம்-விளாமரம்); விளாம் பழத்தின் குணம் - "எப்போது மெய்க்கிதமா மீளையிரு மல்கபமும், வெப்பாகுந் தாக மும்போ மெய்ப்பசியா—மிப்புவியி, லென்றுகி லுங்கனிமே லிச்சைவைத்துத் தின்ன வெண்ணித், தின்றுல் விளங்கனியைத் தின்" - என்ற பதார்த்தகுண சிந்தாமணிப் பாட்டுக்களுங் காண்க. விளங்கனியின் ஓடு முதலியவை மருந்தாக உதவுதல் மருத்துநூல் களுட் காண்க.

வார் வலை - வாரும் வலையும். 724 - பார்க்க. இவைகள் வேட்டைக் காடு காவல் செய்து அமைத்து மாக்களை அகப்படுத்த வுதவுவன. 718 - 724 - 736 முதலிய பாட்டுக் களில் வார் வலையை இவ்வேடர்கள் தொழிற்படுத்திய முறை காண்க. வார் வலை - நீண்ட - பெரிய - வலை என்பாருமுளர். அது பொருந்தாமையறிக.

பன்றி - புலி - கரடி - யானை - குறிஞ்சிநில விலங்குகள்.

பார்வை - பார்வை மிருகங்கள். வேடர் மிருகங்களைப் பிடித்துப் பழக்கிவைத்து அவற்றி னுதவிகொண்டு அவற்றினினங்களைப் பற்றுதற்குப் பயன்படுத்திக் கொள்வர். "மான் காட்டி மான் பிடிப்பதுபோல" என்றதொரு பழமொழி வழக்கும் இதினின் றெழுந்ததாம். இறைவன் அவ்வவுயிர்க்கும் அவ்வவையாய்த் தோன்றி அருள்புரிவன் என்ற ஞானசாத்திரக் கருத்துங் காண்க. "பார்வையென மாக்களைமுன்பற்றிப் பிடித்தற் காம் போர்வையெனக் காணுர் புவி" என்பது திருவருட்பயன். பார்வை - என்றதற்கு மிருகங்களைப்போலச் செயற்கையாற் செய்யப்பட்ட மிருக உருவங்கள் என்பாருமுளர். அது பொருந்தாமையறிக. இதுபற்றி 672-ல் உரைத்தவை காண்க. பார்வை உள்ளன என்று வருவித்து முடித்துக்கொள்க.

பாறை - கற்பாறை. இவற்றையே குன்றவர் தமது குறிச்சியிலே முற்றங்களாக் கிக் கொள்வர். ஐவனம் - மலைநெல். இது குறிஞ்சித் திணையின் உணவகைகளில் ஒன் றும். இந்நிலத்தவர்களின் உணவகைகளை உருவெறச் சமைத்துக் காட்டிய திறம் 683-684 பாட்டுக்களிற் காண்க.

உணங்குதம் - உலரும். இந்நெல்லைச் சேமித்து வைத்துக்கொள்ளும் பொருட்டுப் பாறையில் உலர்த்தி எடுத்தல் மரபு.

இப்பாட்டால், இப்பதியின் மக்கள் - மாக்கள் - மரம் - தொழில்-ஊர முதலிய பலவும் காடகச் சுவைபெற இயற்கை வருணனையாகத் தன்மையணியில் வைத்து ஆசிரியர் அமைத்துக்காட்டிய அழகு காண்க.*

அதனில் (பதியில்) எங்கும் குன்றவர் வாழ்வார் ; எங்கும் வன்றிரள் விளா ஒங்கு வன ; அவற்றிற் கொடுஞ்செவி ஞமலி ஆர்க்கப்பட்டுள்ளன ; அவற்றின் கோட்டில் வார் வலை மருங்கு தூங்கும் ; அடியில் பன்றியும் புலியும் எண்கும் கடமையும் மானுமாகிய பார்வை உள்ளன ; அன்றி ஐவனமுமுணங்கும் ; என உரைநடையிற் கூட்டி முடித்துக்கொள்க.

**வன்றிரள்**—என்பதும் பாடம். 3

653. வன்புலிக் குருளை யோடும் வயக்கரிக் கன்றி னோடும்
புன்றலைச் சிறும காரகள் புரிந்துட னுடை லன்றி
யன்புறு காதல் கூர வணையுமான் பிணைக ளோடும்
இன்புற மருவி யாடு மெயிற்றியர் மகளி ரெங்கும். ச

**(இ - ள்)** வெளிப்படை - அப்பதியில் எங்கும் வலிய புலிக்குட்டிகளோடும் வெற்றியுடைய யானைக்கன்றுகளோடும், புன்றலையினையுடைய வேட்டுவச்சிறுவர்கள் விரும்பி விளையாடுதல் உள்ளது. அன்றி அன்போடு ஆசைமிக அணைகின்ற பெண் மான்களோடு இன்பமுறக் கூடி விளையாடும் வேட்டுவச் சிறுமிகளும் உள்ளார்.

**(வி - ரை)** **புலிக்குருளை** - யானைக்கன்று - மான்பிணை - இவை அவ்வச்சாதிக்குரிய பெயர்மரபு "எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர், செப்பின ரப்படிச் செப்புதல் மாபே" என்பதிலக்கணம். "காயே பன்றி புலிமுயல் நான்கும், ஆயுங் காலைக் குருளை யென்ப" (8) "யானையுங் குதிரையுங் கழுதையுங் கடமையும், ஆனை டைந்துங் கன்றெனற்குரிய" - (15), புல்வாய் கவ்வி யுழையே கவரி சொல்வாய் நாடிற் பிணை யெனப் படுமே". (57). என்ற தொல்காப்பிய மாபியற் சூத்திரங்கள் காண்க. **வன்புலி** - **வயக்கரி** - அடைமொழிகள் அவ்வச் சாதிக்குரிய பண்பு குறித்தன.

**புன்றலைச் சிறுமகார்கள்** - **புன்றலை** - எண்ணெயிடுதல், சிக்கறுத்தல் முதலிய பண்பாடின்றிக் குறுகிச் சுருண்டு பிளவுபட்டுச் செறிந்த மயிர்கொண்ட தலையினையுடைய. **மக** - மக்களிளமைப் பெயர். **ஆர்** - என்னும் பன்மைவிகுதி யேற்று **மகார்** என நின்றது. "குழவியு மகவு மாயிரண் டல்லவை, கிழவ வல்ல மக்கட் கண்ணே"—(மாபியல் - 23) என்பது தொல்காப்பியம். பின்னர் மகளிரை வேறு பிரித்தமையால் இங்கு **மகார்** - என்பது இடநோக்கி ஆண்மக்களைக் குறித்து நின்றது. வேடர் சிறுமகார்கள் புலிக்குருளை யானைக்கன்றுகளோடு விரும்பி விளையாடுகின்றார்கள். வேட்டுவச் சிறுமியர் மான்பிணைகளோடு இன்புற மருவி யாடுகின்றார்கள். இவ்விருவகையினரும் அங்குள்ளார். ஆடும் மகளிர் என்றதுபோல ஆடும் மகார்கள் என்றது மகார்கள் ஆடல் என்றது அவராடல்களின் வீரச்சிறப்பு நோக்கி என்க. இக்கருத்துப்பற்றி மகார்கள் ஆடலன்றி என்றேனும் ஆடும் மகார்களன்றி என்பது கருத்தாகக்கொள்க. வேடர் மகார்கள் மாபுக்கேற்ப இளமையிலே வீரத்தன்மையுடையார் என்பது குறிப்பு. **புரிந்து** - விரும்பி.

**அன்புறு காதல் கூர அணையும்**-பழக்கத்தாலும் புல் முதலியன ஊட்டிப் பாராட்டும் அன்பினாலும் தமக்குரிய இயற்கைத் தன்மையினாலும் மான்பிணைகள் மகளிர்பால் தாமே அணைகின்றன என்க. பெண்களின் கண்கள் தமது கண்களின் மேலாயினமை

*இதுபற்றி எனது சேக்கிழார் - 127-128 பக்கங்களில் உரைத்தவையும் காண்க.

திருக்கோயிலில் உள்ள திருவுருவம்.

(பாட்டு - 610—பக்கம் - எஎடு)




(பாட்டுக்கள் - 639, 640—பக்கம் - அ0க)

கண்டு அவர்கள்பால் மான்கள் அணைகின்றன என்பதுமொரு குறிப்பு. எயிற்றியர் - குறிஞ்சிநிலப்பெண் மக்களின் பெயர். ஈண்டு மகளிர் என்றது சிறுமிகளை.

மான் ஆன் முதலிய பிளந்த குளம்புடையவாகிய காயிலைதின்னும் பிராணிகள் கூட்டமாய் வாழு மியல்புடையனவாம். அவை மக்களால் வீட்டில் வளர்க்கப்பட்டு அவர்களோடு மிக விசுவாசித் பழகி அன்பு பூண்டு வாழ்வன. குடும்பப் பிராணிகள் (Domestic animals), என்பர் கவீனர். இவற்றின் இணையற்ற புனிதமான அன்புக்கு எதிராக தம்மை அன்போடு அணையும் இவற்றை இழிதகைமையால் வன்புடன் கொன்று தின்று வாழ்கின்றவர் பலர். இவர்கள் கொடுமைதா னென்னே !*

சிறுவர்களும் சிறுமியர்களும் இளமையிலே தங்கள் தங்கள் தகுதிக் கேற்றவாறு வெவ்வேறு வகை ஆடல்கள் பயில்கின்றனர். மகார்கள், வீரம், ஆண்மை, பெருமிதம், வலிமை முதலியவற்றின் மூலைகளாகி வளர்பவராதலின் புலிக்குரூள கரிக்கன்று இவைகளுடன் ஆடினர். மகளிர் அவ்வாறன்றி அன்பு இன்பம் முதலியவற்றின் நிலைக்களமாய் வளர வேண்டுபவர்களாதலின் அன்புற அணையும் மான் பிணைகளோடு இன்புற மருவியாடினர். ஆணும் பெண்ணும் மக்கட்டன்மையில் ஒரு தன்மையினரே யென்றும், இருவருமுடன்பயின்று ஒரேவகைக் கல்வி, பயிற்சி, தொழில் முதலியவற்றிற்குரியார் என்றும் கூறி அதுபற்றி ஒரே பள்ளியில் இருவரும் உடன்பயிலக் கல்விச் சாலையும் பயிற்சியமைப்பும் அமைத்தும் பலவாறு கூவித் தடுமாறி யுழன்றும் உலகுக்கு நிலைகெடுவினைக்கும் கவீனர் இக்கருத்துக்களை யறிந்து சிந்தித்துத்திருத்துவாராக.

இங்குக் கூறிய புலிக்குரூள முதலியன மேலே கூறிய பார்வை மிருகங்கள் ஈன்றவையாம் என்றும், அன்றி இவையும் பிடித்துக் கட்டி வளர்க்கப்படுவனவாம் என்றும் கொள்ளக்கிடக்கின்றது. 675-ம் பாட்டுப் பார்க்க.

ஆடும் மகார்களன்றி ஆடும் எயிற்றியர் மகளிர் எங்கும் உள்ளார் என்க. உள்ளார் என்றது வருவிக்கப்பட்டது.

இவ்வாறே மேல்வரும் இரண்டு பாட்டுக்களிலும் வினைமுற்று வருவிக்க. 4

654. வெல்படைத் தறுகண் வெஞ்சொல் வேட்டுவர் கூட்டங் தோறும்
கொல்லெறி குத்தென் றூர்த்துக் குழுமிய வோசை யன்றிச்
சில்லரித் துடியுங் கொம்புஞ் சிறுகணு குளியுங் கூடிக்
கல்லெனு மொலியின் மேலுங் கறங்கிசை யருவி யெங்கும். ரு

(இ - ள்) வெளிப்படை. வெல்லும் படையும், தறுகண்மையும், கடிய சொல்லும் உடைய வேட்டுவர் கூட்டங்களி லெங்கும் கொல் - எறி—குத்து என்று ஆரவாரித்துக் கூடுதலால் எழும் ஓசைகளேயல்லாமல் சிலவாய பரல்களையுடைய உடுக்கையும், ஊது கொம்பும் சிறிய முகமுடைய சிறுபறையும் சேர்ந்து பெருகுகின்ற ஒலியினும் மிக்குச் சத்தித்து ஓடும் அருவிகள் அங்கே எங்கும் உள்ளன.

---

*எங்கள் கொங்குநாட்டு மலைச்சாரற் காடுகளிற் கொடிய மிருகங்கள் உண்டு. அவற்றை வேட்டையாடச் சென்றனர் ஒரு வேட்டைக் கூட்டத்தார். வேட்டை தொடங்கி இவர்கள் செய்த ஆர்ப்பரவங்களுக்குப் பயந்து வேட்டைக் காட்டுக்குள்ளிருந்து ஒரு கலைமான் வெளியில் ஓடிவந்து இவர்களிடமே நேரில் அடைக்கலம் புகுந்ததுபோல அன்புடன் வந்தணைந்தது. ஒரு சிறிதும் கருணையின்றி உடனே அதனைப் பற்றித் தலையைத் திருகிக் கொன்று எடுத்துக்கொண்டனர். இக்கொடுமையைக் கண்ட அக்கூட்டத்திற் சேர்ந்த என் நண்பர் ஒருவர் கடுகடுங்கி அதுமுதல் அவ்வேட்டைக் கூட்டத்தாரை விட்டகன்றனர். இது நான் அறிந்த செய்தி.—பதிப்பாசிரியன்.

(வி - ரை) படை மெய்யின் ரௌத்திரமும், தறுகண்மை மனத்தின் ரௌத்திரமும், வெஞ்சொல் வாக்கின் ரௌத்திரமும் காட்டலின் இவ்வேடரது மன மொழி மெய் என்ற மூன்று காரணங்களின் கொடுமைத் தொழிலுங் குறித்தபடி.

கோல் - எறி - குத்து - இவைகளே இவர்கள் வாக்கினின்று வரும் சொற்கள். இவற்றை வெஞ்சொற்கள் எனக் குறித்தபடி. ஒரு கூட்டத்தாரிற் பெரும்பான்மை வழங்கும் வழக்கச் சொற்களே அவர்தம் வாழ்க்கை நிலையைப் புலப்படுத்துவன என்பதற்கு இஃது ஏற்றதோர் ருதாரணமாதல் காண்க.

ஆர்த்துக் குழுமிய ஓசை-இச்சொற்களுடன் ஆரவாரித்துக் கூடுதலால் எழும் ஓசை.

சீல் அரி துடி - சிலவாகிய உருக்குப்பரல் உள்ளே இடப்பட்ட வெண்டயம் சுற்றிய தோடி. இவ்வெண்டய முதலியவை தோடியின் வெளிப்புறம் அடித்தார்ப்பன. சிலம்பு முதலியவை மணி - பரல் முதலியவற்றை உள்ளே இடப்பட்டு ஆர்ப்பன. இங்குச் சீல்லரி என்பதற்குத் தோடியினுள் இடப்பட்ட பரல் என்பாரும் உண்டு.

கோம்பு - வாய் வைத்து ஊதி முழக்கும் வாத்திய விசேடம். கொம்பு போன்றமைதலின் இப்பெயர் பெற்றது.

ஆகுளி - சிறுபறை. சிறுகண் - தோடியின் முகத்தை நோக்க இவை சிறிய முகமுள்ளன எனக் குறித்தது. இவ்வாத்திய விசேடங்கள் குன்றவர்களின் வேட்டையிற் பயன்படும் வகை 720—725 பாட்டுக்களிலும், குறிஞ்சிநிலத் திருவிழா முதலிய சிறப்புக்களிற் பயன்படும் வகை 687-ம் பாட்டிலும் காண்க.

கூடிக் கல்லெனும் ஒலி - இவ்வாத்திய ஒலிகள் ஒருங்கு சேர்ந்தபோது உளதாகிய பேரோசை.

துடி - கோம்பு - ஆகுளி - இவை குறிஞ்சித்திணைக்குரிய பறை விசேடங்கள்.

கோல் - எறி - குத்து என்னும் பொருள்பற்றி நிகழும் சொல்லோசைகளை வேறு பிரித்தும், துடி முதலியவற்றின் பொருள்பற்றாது நிகழும் ஓசைகளை வேறு பிரித்தும் கூறினர். எறி - கையினின்றும் வெளியே எறியப்பட்டு ஊறு செய்யும் படைவகையின் ரௌத்தில் குறித்தது. குத்து - அவ்வாறு வெளிப் போகாது கையினின்றே ஊறு செய்யும் படைவகைத் தொழில் பற்றியது. இவ்விருவகைப் படைகளாலும் செய்யுந் தொழிலுடையார் இக்குன்றவர் என்பது கருத்து.

கறங்கு இசை அருவி - மிக உயரத்தினின்றும் பள்ளத்தா முறுபுனலாய் மலையின் வீழருவிகளாதலின் அவற்றின் வேகமும், கற்களின் மோதுதல் வளைந்து வளைந்து செல்லுதல் முதலியனவும் ஒன்று கூடி ஓர் இசைபட ஒலிக்கும் அருவி. இவற்றைக் கவி வல்லோர் பலவாறு சுவைபடக் கூறி அனுபவிப்பர். வேடரின் சொற் செயல்களுக் கேற்ற தோடி முதலியனவும், இவற்றின் மேலாய்க் கறங்குமிசை யருவியும் கூடிய மூவகைச் சத்தங்கள் குறித்த நயம் காண்க. "இமிழிசை யருவியோ டின்னியங் கறங்க" என்று இவற்றைக் குறித்த திருமுருகாற்றுப்படையுங் காண்க.

அருவி - குறிஞ்சியின் நீர்நிலை. 5

655. ஆறலைத் துண்ணும் வேட ரயற்புலங் கவர்ந்து கொண்ட
வேறுபல் லுருவின் மிக்கு விரவுமா நிரைக ளன்றி
யேறுடை வானந் தன்னி லிடிக்குரா லெழிலி யோடு
மாறுகொண் முழக்கங் காட்டு மதக்கைமா நிரைக ளெங்கும். கூ

(இ - ள்) வெளிப்படை. அப்பதி யெங்கும் ஆறலைத் துண்ணுதலைத் தம் தொழிலாகக் கொண்ட வேடர்கள் அயற்புலங்களிற் கவர்ந்து கொண்டு வந்த வெவ்வேறுகிய பல உருவினுல் மிக்கனவாய்ப் பொருந்திய ஆனிரைகளல்லாமல் வானில் இடியேற்றின்

குரலுடன் சூழும் மேகங்களோடு எதிராகிய முழக்கத்தைக் காட்டும் மதமுடைய யானைக் கூட்டங்களும் உள்ளன.

(வி - ரை) **ஆறலைத்துண்ணும்** - ஆறலைத்துண்ணுதல் - ஆநிரை கவர்தல் இவை குறிஞ்சிநில மக்களாகிய குன்றவர் செய்தொழில்களாதலின் **ஆறலைத்து உண்ணும்** என்றார். Criminal tribes என்பர் ஈவினர். **ஆறுஅலைத்தல்** - வழிபோவாரை அலைத்து அவர் பொருளைக் கவர்ந்து அது கொண்டு உண்டு வாழ்தல். "கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் விரவலாமை சொல்லித், திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண் டாறலைக்கு மிடம்" என்ற திருமுருகன்பூண்டித் திருப்பதிகத்தில் ஆளுடைய நம்பிகள் இதன் இயல்புகளை விரித்திருத்தல் காண்க. சிலப்பதிகாரம் வேட்டுவ வரியும் பார்க்க.

**அயற்புலம் கவர்ந்து கொண்ட...ஆநிரைகள்** - ஆநிரை கவர்ந்து கொள்ளுதல் பண்டைத் தமிழ் நூல்களா னறியப்படும் போர்முறைத் தொடக்கத்திற் பகைவர் நாட்டின் பசுக் கூட்டங்களைக் கவர்ந்து செல்லும் மரபு பற்றியது. அயற்புலம் - பகைவர் நாடு. இதற்கு இவ்வாறன்றி அயல்நாடுகளினின்றும் கொள்ளை யடித்து வந்த பசுக் கூட்டம் என்பாரும், வேறுபட்ட நிறங்களோடு கூடிய விலங்குகள் என்பாரும் உண்டு. **ஆறலைத்துண்ணும்** என அதனை அவர் உணவுத் தொழிலாக வேறு பிரித்துக் கூறின மையின் **ஆநிரை** கவர்தல் அவரது வீனத் தொழிலன்றென்க.

**ஆநிரை** - குறிஞ்சி நிலக் கருப்பொருளாகாது முல்லைக்குரிய கருப்பொருளாத லின் **அயற்புலங் கவர்ந்து கொண்ட** - விரவும் **ஆநிரை** என்றார். அவைகளன்றிக் **கைம்மாநிரை** எங்குமுள்ளன என்றதனால் குறிஞ்சியும் முல்லையும் விரவிய திணை மயக்கங் கூறியவாறும், இத்திணைக்குரிய கருப்பொருள் கூறியவாறுமாயிற்று.

**வானந் தன்னில் இடிஏறுடைக் குரல் எழிலி** என மாற்றுக. **இடியேறு** - வல்லுரு மேறு (622) என்றது காண்க. ஆண்டுரைத்தவை பார்க்க. **எழிலி** (மேகம்)-யானைகளின் பெரிய கரிய உருவிற்கும், **இடிக்குரல்** - அவற்றின் பிளிற்றுரைசையாகிய பேரோசைக் கும், **மழைநீர்** - யானைகள் மிக்குப்பொழியும் மதநீருக்கும் உவமை. மெய்யும் பண்பும் பற்றி வந்த உவமம். **ஏறுடைய வானம்** என்பதற்கு உயர்ந்த வானம் என்றுரைப்பாரு முண்டு.

**கைம்மா** - கையையுடைய மிருகம். யானை. காரணப் பெயர். **நிரை** - கூட்டம். யானைகள் கூட்டமாகக் கூடிவாழுமியல்புடையன என்பதும் உன்னுக. இவை கூட்ட மாகக் கூடிப் பிளிறும் ஒலி மலையின் எதிரொலியுடன் சேர்ந்து மேகங்களினின்றும் எழும் இடி போன்றன என்பதாம். மலைகளின் உச்சியில் மேகந் தவழ்வன. எனவே, மேலே இடியும், மலைச்சாரலில் யானைகளின் பிளிறலும் ஒன்றற்கொன்று எதிர்த்து மாறு கொண்டு முழங்குதலைக் காட்டுவன என்க. மேகமுங் களிறு மெங்கும் - (81) முதலியவை காண்க. 6

656. மைச்செறிந் தனைய மேனி வன்நெஞ்சில் மறவர் தம்பா
லச்சமு மருளு மென்று மடைவிலா ருடைவன் றேலார்
பொச்சையி னறவு மூனின் புழுக்கலு முணவு கொள்ளு
நச்சழற் பகழி வேடர்க் கதிபதி நாக னென்பான். எ

(இ - ள்) வெளிப்படை. மை செறிவு கொண்டாற் போலும் மேனியும், வன் நெஞ்சிலும் உடைய மறவர்கள் தம்மிடத்து அச்சம் அருள் எனுமிவ்விரண்டும் எக்கா லத்தும் அடைதலில்லாதவர்; வலிய தோலாலாகிய உடையினையுடையார்; மலைத் தேனும் ஊன் கலந்த இனிய சோறும் உண்ணுகின்றவர்களாய் நஞ்சு ஊட்டிய அழல் அம்புகளை உடையவர்கள்; இத்தகைய வேடர்களுக்குத் தலைவன் நாகன் எனப் படுவான்.

(வி - ரை) **மைச் செறிந்தனைய** - அல்வழிக்கண் வல்லொற்றுமிக்கது.

**வன்றெழில் - கொல் - எறி - குத்து** (654) என்ற சொற்களாற் பெறப்பட்டவையும், மேற்பாட்டிற் கூறியவையுமாம்.

**மறவர்** - குறிஞ்சிநில மக்கள் பெயர்.

**தம்பால் என்றும் அச்சமும் அருளும் அடைவிலார்** - **அச்சம்**-தீய விலங்குகட்கும் மக்கட்கும் எக்காரணத்தாலும் அஞ்சுதல்.விலங்கிற் கஞ்சாமை வேட்டையாலும், மக்கட் கஞ்சாமை ஆறலைத்தல் அயற்புலங்கவர்தல் முதலியவற்றாலும் பெறப்படும். **அச்சம் அடைவிலார்** - என்பதற்குத் தீவினையச்ச மில்லாதார் என்றலுமாம். **அருள்** - இரக்கம். **தம்பால் அடைவு இலார்** - தம்மிடத்துச் சேராதார் - வாராதுகாத்தவர். அச்சம், அருள் என்னு மிரண்டுமே உயிர்க் கொலையிற் றுணியாது மக்களைத் தடுத்து அறவழியில் நிறுத்தி இறைவன்பாற் செலுத்துவன. "அஞ்சி யாகிலு மன்புபட் டாகிலும், நெஞ்சம் வாழி நினைமட நெஞ்சமே" என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு. "அஞ்சி லன்பதி லொன்றறி யாதவன்" என்ற கம்பர் பாட்டுங் காண்க. இவ்விரண்டும் தம்மிடத்து அடையாது நின்றவர் இம்மறவர் என்றமையால் அறமென்பதே இவர் அறியார்; வன்கண்மையும் கொலையுமே செய்வார் என்றவாறும். **மறவர்** என்ற பெயராற் குறித்தும் காண்க. **வன்தோல் உடையார்** என மாற்றுக.

**போச்சை** - மலை. காடு என்றலுமாம். **ஊன் இன் புழுக்கல்** - ஊன் கலந்த இனிய பல்வகைச் சோறு. 683 பாட்டுப் பார்க்க. **உணவு கொள்ளும்** - என்றதனால் மலைநாட்டு உணவுகை உணர்த்தியபடியாம்.

**நச்சு அழல் பகழி** - நஞ்சு ஊட்டி [வடித்ததாய்த் தீப்போன்ற அம்பு. இவற்றின் ஊறுபடவே, ஊற்றின் வலியானும் அதுவன்றி இவற்றில் ஊட்டியுள்ள நஞ்சின் கலப்பினாலும் பிராணிகள் இறந்துபடுதல் திண்ணமாதலின் இவ்வகைப் பகழிகளை இவ்வேடர் கையாள்வது வழக்கம். இவ்வகை அம்புபட்ட பிராணி அப்போது அங்கு நின்று தப்பி ஓடிவிடினும் பிறிதோரிடத்தில் வீழ்ந்துபடும் பொருட்டுப் பகழிக்கு நஞ்சூட்டுவர். **நஞ்சு** என்றது எதுகை நோக்கி **நச்சு** என விகாரமாயிற்று. இதன் செயலும் விகாரமுடைய வலிந்த செயலாதல் குறிப்பு.

**அதிபதி** - தலைவன். "தங்கள்குல முதற்றலைவ னுகி யுள்ள தண்டெரிய னுகன்" (693) முதலியவை காண்க.

**நாகன்** - மலைவாழ்நராகிய குறிஞ்சித் திணைக்குரிய மக்கள் இட்டு வழங்கும் பெயர்களில் ஒன்று. இவர்கள் அத்திணைக்குரிய நாகம் முதலியவற்றைத் தெய்வமாகக் கொண்டும் வனதெய்வங்களை வழிபட்டும் அவற்றின் பெயர்களையே தம் மக்கட்கு இட்டு வழங்குவர். "காட்டிலுறை தெய்வங்கள்" (696), "கொற்ற வன தெய்வங்கள்" (700) என்பன காண்க.இவ்வாறு அங்கங்கும் தாந்தாம் வழிபடு தெய்வங்களின் பெயரை மக்களிட்டு வழங்குதல் எங்கும் காணும் உலக வழக்கு. பின்னர்த் தத்தை-நாணன் - காடன் என வரும் பேர்களையும் காண்க.

**என்பான்** - எனப்படுவான். படுவிகுதி தொக்கு நின்றது. "இல்வாழ்வா னென்பான்" என்புழிப்போல. வரும்பாட்டிலும் இவ்வாறே **தத்தை யென்பாள்** - என்றார். இவை பெயர்ப் பயனிலை கொண்டு முடிந்தன.

இப்பாட்டால் இந்நில மக்களும், தொழிலும், உணவும், பிறவும் கூறப்பட்டன. 7

657. பெற்றியாற் றவமுன் செய்தா னுயினும் பிறப்பின் சார்பாற்
குற்றமே குணமா வாழ்வான்; கொடுமையே தலைநின் றுள்ளான்;
விற்றெழில் விறலின் மிக்கான்; வெஞ்சின மடங்கல் போல்வான்;
மற்றவன் குறிச்சி வாழ்க்கை மனைவியுந் தத்தை யென்பாள். அ

(இ - ள்) வெளிப்படை. பெற்றிமையினாலே முன்னைப் பிறப்பிற் றவஞ் செய் தவனையினும், (இப்பிறப்பில்) தான் பிறந்த குலத்தின் சார்பினாலே குற்றங்கள் செய்வ தனையே குணமெனக் கொண்டு வாழ்பவன்; உயிர்களுக்குக் கொடுமையே செய்தலில் மிக்குள்ளவன்; விற்றொழிலில் வலிமை மிக்கவன்; மிக்க சினமுடைய சிங்கம் போன்ற வன்; மற்று அவனது குறிச்சி வாழ்க்கையில் மனைவியா யமைந்தவள் **தத்தை** எனப் படுபவள்.

(வி - ரை) இதனால் நாகனது குலம், குணம், தொழில், மனநிலை, ஒழுக்கம், இல் வாழ்க்கை முதலிய பலவுங் கூறப்பட்டன. வரும்பாட்டில் இவ்வாறே இவனது மனைவி தத்தையின் தன்மைகளைக் கூறுவதும் காண்க.

**பேற்றியால் - பேற்றி** - தன்மை. இங்குக் கண்ணப்ப நாயனாரைத் தன் மகனாகப் பெறும் தன்மை குறித்தது.

**முன் தவஞ் செய்தானெனினும்** - என மாற்றுக. **முன்** - முற்பிறப்பிலே. **தவம்** - நோன்பும் அருளுடைமையுமாம். தவமே ஒருவன் பெறும் நலங்களுக் கெல்லாம் காரணமா மென்பது. இங்கு இவன் முன் தவஞ் செய்தா னென்பது அத் தவங்காரணமாக இவன் பெற்ற பெற்றியாகிய காரியம்பற்றி அனுமானத்தா னறியப்பட்ட தென்பார் **பேற்றியால்** என்றார். "தக்கார் தகவில ரென்ப தவரவ, ரெச்சத்தாற் காணப் படும்" (குறள்) என்ற உண்மை இப்பிறப்பினளவேயன்றி முற்பிறப்பின் தகுதிக்குஞ்செல்லும்.

**பிறப்பின் சார்பு** - முன் தவஞ் செய்து பெற்றி பெற்றான் இப்பிறப்பிற் கொடுமையும் கொலையுமே செய்யக் காண்டுமே எனின், அது அவனது இப்பிறப்பின் சார்பினாலாகியது என்பார் இவ்வாறு குறித்தார். **சார்பு** - இங்கு இப்பிறப்பின் வந்த குலச் சார்பு குறித்தது. **பிறப்பின் சார்பு** என்றது சுற்றங்களையும், **குணமா வாழ்வான்** - என்றது அவனது மனச்சார்புகளையும், **தலைநின்றுள்ளான்** என்றது அவனது செயல்களையும் குறித்தன. ஒரு குலத்திற் பிறந்தும் அப்பிறப்பின் சார்பு பற்றாது திருநாளைப்போவார் போல ஒழுகும் பெரியாருமுளர். ஆயின் இங்கு நாகன் பெறற்கரிய மகப்பேறு பெறும் பெற்றிக்குரியவாறு மட்டும் தவம் புரிந்தானே யன்றித் தவஞ்செய்யும் நற்சார்பில் வருதற்குரிய தவம் ஒன்றும் புரிந்தானலன் என்பதாம்.

**வில் தொழில் விறல்** - கொடுமையில் தலைநிற்றலுக்குக் காரணங் கூறியபடி. வேடர்க்குச் சிறப்பினாலியது இத்தொழிலே. சிலைமறவர் (696), சிலைவேடர் (704), வில் விழா (680), சிலைபிடிப்பித்தார்கள் (689), சிலைத்தொழி லாண்மை முற்றக் கற்றனன் (690), தினது சிலைக் கீழ்த்தங்கி (695) முதலியவை காண்க. சிறுபான்மை பிற படைத் தொழில்களும் (சுரிகை, 740, மற்றப் படைகளும் 691) உரியவாயினும் விற்றொழிலே இவர்க்குப் பெரும்பான்மையு முரித்தாம். விற்றொழிலினும் விறலினும் என உம்மை விரித்துரைப்பினுமமையும்.

**வெஞ்சின மடங்கல் - மடங்கல்** - சிங்கம். இது எப்போதும் சினமுடையதன்று. உணவின் பொருட்டும் வேறு காரணத்தாலும் பிற பிராணிகளின்மேற் பாயும் பொழுதே சினமிகும். ஆயின் நாகன் அதனைப் போன்றானெனினும் எப்போதும் பெருஞ்சினந் தணியாது நிற்பவன் என்பது. இவனை **மடங்கல் போல்வான்** என்றதற் கேற்ப மனைவி தத்தையை **அரிப்பிணவு போல்வாள்** என்றார். இவ்விருவரையும் இவ்வாறு உயர்த்தி உவமித்தது ஒப்பற்ற, "கானவர்க்கரிய சிங்கம்" (690) என்னும் திண்ணனாரைப் பெற நின்றமை நோக்கி என்க.

**குறிச்சி** - குறிஞ்சி நிலச்சிற்றூர். **சீறூர்** - (669).

**வாழ்க்கை மனைவியும்** - வாழ்க்கைத் துணையாகிய இல்லக்கிழத்தியும். உம்மை இறந்தது தழுவியது. "அவர்தங்கண் மனைவி யாரும்" - (363) என்புழிப்போல.

நாகனது இல்வாழ்க்கையை இப்பாட்டானும், வாழ்க்கைத்துணையாகிய தத்தையின் நலத்தை வரும் பாட்டானும், இல்வாழ்க்கைக்கு நன்கலமாகி அறிவறிந்த நன்மகப் பேற்றினை அதற்கடுத்த பாட்டானும் கூறிய வைப்பு முறையும், **புதல்வர்ப்பேறு** என்ற பெயராட்சியும் குறிக்கத்தக்கன. 8

658. அரும்பெறன் மறவர் தாயத் தான்றதொல் குடியில் வந்தாள் ;
இரும்புலி யெயிற்றுத் தாலி யிடையிடை மனவு கோத்துப்
பெரும்புற மலையப் பூண்டாள் ; பீலியுங் குழையுந் தட்டச்
சுரும்புறு படலை முச்சிச் சூரரிப் பிணவு போல்வாள். கூ

(இ - ள்) வெளிப்படை. (தத்தை) பெறுதற்கரிய சிறப்புடைய மறவர் தாயத்திலே உயர்ந்த பழங்குடியிற் பிறந்தவள் ; பெரிய புலிப்பல்லாலாகிய தாலியை இடையிடையே பலகறைகளைக் கோத்துப் பிடரியின் கீழும் நீண்டு தொங்கும்படி அணிந்தவள் ; மயிற்பீலியும் இலைத்தளிர்களும் மோத வண்டுகள் மொய்க்கும் பூமாலையை அணிந்த, உச்சிக்கொண்டையை உடைய அச்சந் தரும் பெண்சிங்கத்தைப் போன்றவள்.

(வி - ரை) பெறல் அரும் **மறவர்** என்க. **மறவர்** - சாதி. **தாயம்** - அதனுட் பிரிவாகிய குலம். **தொல்குடி** - அதனுட் பிரிவான குடி. "நடைமாபிற் குடிதாப்பண், விலக்கின்மனை யொழுக்கத்தின் மேதக்க நிலைவேளாண், குலத்தின்கண் வரும்பெருமைக் குறுக்கையர்தங் குடிவிளங்கும்" (திருநா - புரா - 15) "அந்தணர்தங் குல முதல்வ ராசின்மறை, கைப்படுத்த சீலத்துக் கவுணியர்கோத் திரம்விளங்க" (திருஞான - புரா - 15) "தருமுறைக் கோத்திரத்திற் றங்குலஞ் செப்பி" (திருஞான - புரா - 1235) முதலியவை காண்க. **அரும்பெறல் மறவர்** என்றது கண்ணப்ப நாயனாரைப் பெறும் பெரியதோர் பேறு பெற்ற மரபாதலின் என்க. இதனை **வந்தாள்** - என்றதனோடு கூட்டி இம்மரபிற் பெறலரு மணியாய்ப் பிறந்தவள் என்று தத்தையைக் குறிப்பதாய்க் கூறுவாருமுண்டு. **பெற்றியால்** - என்றதற் கேற்ப உரை கொள்வது பொருத்தமுடைத்தாம். "கானவர்தங் குலமுலகு போற்றவந்த கண்ணப்பர்"—திருஞான - புரா - 1017 என்றது காண்க. இனி, அரும்பெறற்றொல்குடி எனக் கூட்டியுரைத்தலுமாம்.

**தாயத்து** - பெருங்கிளைகளில் ஒன்றாகிய. **ஆன்ற** - குலவொழுக்கத்தின் மேம்பட்ட. **தொல்குடி** - "இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி" (திருமுருகாற்றுப்படை) என்றபடி வழிவழியாக வழாது, நீண்ட காலமாய்த் தொடர்ந்துவரும் பழங்குடி.

**இரும்புலி எயிற்றுத் தாலி** - **இரும்புலி** - பெரும்புலி, வேங்கை. புலிப் பல்லைத் தாலியாகக் கோத்தணிவது குன்றவர் பழமரபு. "புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி-" (புறநானூறு) முதலிய பழந்தமிழ்நூ லாட்சிகள் காண்க. **இடை இடை மனவு கோத்த**- என்றமையால் புலிப்பற்கள் பலவற்றை இடையிடையே பலகறைகளைக் கோத்து மாலையாக்கித் தாலியாக அணிவது வழக்கென்பதாம். இவர்களது இளஞ்சிறார்க்கும் இவை போல்வனவற்றைக் காப்பாகவும் அணியாகவும் அணிவது நாட்டு வழக்கு. 669 பார்க்க. **மனவு** - பலகறை. மணமகன் வீரத்தாற் கொன்ற புலியின் பற்களைக் கோத்துத் தாலியாக மணமகளுக்கு அணிவதும் வழக்குப்போலும். "மறங்கொள் வயப்புலி வாய்பிளந்து பெற்ற, மாலை வெண்பற் றூலி"—(வேட்டுவ வரி - 27 - 28) என்பது சிலப்பதிகாரம்.

**பெரும்புறம்** - பிடரியினை அடுத்துள்ள முதுகின் பாகங்களில். **அலைய** - தொங்க என்பர் மகாலிங்கையர். பிடரியைச் சிறுபுறம் என்னும் வழக்கும் காண்க.

**பீலி** - மயிற்பீலி. இக்காள ஐரோப்பியர் முதலிய நவீனர் வழக்கிலும் உயர்குடிப் பெண்கள் தலையில் வான்கோழி (Ostrich) முதலிய பறவையிறகுகளே அணிதல்காண்க. ஆயின் எந்தப் பறவையிறகுகளும் மயிற்பீலியின் அழகுக்கொவ்வா என்பது அணிபு.

இது கொண்டே முற்காலத்தில் ஐரோப்பியரும் பிறநாட்டவரும், "பீலிபெய் சாகாடு" என்று திருக்குறளாசிரியர் உவமான முகத்தாற் கூறியது உண்மை முகத்தாலும் பொருந்தும் எனக் கொள்ளுமாறு பெரிய அளவுக்கு, மயிற்பீலியை நமது நாட்டினின் றும் ஏற்றுமதி செய்து வந்தார்கள் என்று சரிதங்களா லறிகின்றோம்.

குழை - சந்தன முதலிய உயர்ந்தசாதி மரங்களின் இளந்தளிர்கள்.

முச்சி - உச்சியில் முடித்த கூந்தல். இது கூந்தல் முடிக்கும் ஐம்பாலில் ஒன்று.

சூர் - அச்சம். அரிப்பிணவு - பெண் சிங்கம். பிணை என்றது பிணவு என நின்றது. நிலா நிலவு என வருவதுபோல. 9

659. பொருவருஞ் சிறப்பின் மிக்கா ரிவர்க்கினிப் புதல்வர்ப் பேறே
யரியதென் றெவருஞ் சொல்ல வதற்படு காத லாலே
முருகல ரலங்கற் செவ்வேன் முருகவேள் முன்றிற் சென்று
பரவுதல் செய்து நாளும் பராய்க்கட னெறியி னிற்பார், கo

660. வாரணச் சேவ லோடு வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிக டுக்கிச் சுரும்பணி கதம்ப நாற்றிப்
போரணி நெடுவே லாற்குப் புகழ்புரி சூரை தூங்கப்
பேரணங் காடல் செய்து பெருவிழா வெடுத்த பின்றை, கக

661. பயில்வடுப் பொலிந்த யாக்கை வேடர்தம் பதியா காகற்
கேயிலுடைப் புரங்கள் சேற்ற வேந்தையார் மைந்த ரான
மயிலுடைக் கோற்ற வூர்தி வரையுரங் கிழித்த திண்மை
யயிலுடைத் தடக்கை வென்றி யண்ணலா ருருவி னுலே, கஉ

662. கானவர் குலம்வி ளங்கத் தத்தைபாற் கருப்ப நீட
வூனமில் பலிகள் போக்கி யுறுகடன் வெறியாட் டோடும்
ஆனவத் திங்கள் செல்ல வளவில்செய் தவத்தி னுலே
பான்மதி யுவரி யீன்ற லெனமகப் பயந்த போது, கஉ

663. கரிப்பரு மருப்பின் முத்துங் கழைவிளை செழுநீர் முத்தும்
பொருப்பினின் மணியும் வேடர் பொழிதரு மழையே யன்றி
வரிச்சுரும் பலைய வானின் மலர்மழை பொழிந்த தெங்கும் ;
அரிக்குறுந் துடியே யன்றி யமரர்தந் துபியு மார்த்த. கச

659. (இ - ள்) வெளிப்படை. ஒப்பற்ற சிறப்பினால் மிக்கார்களாகிய இவர்க்கு இனிப் புதல்வர்ப்பே றென்பதே கிடைத்தற்கரியதாம் என்று எல்லாரும் கூற, அப் பேற்றிலே பட்ட ஆசை மிகுதியாலே வாசமிக்கலர்ந்த மாலையணிந்த சேவ்வேலேந்திய முருகவேளினது திருமுன்றிலிற் சென்று பரவி நாடோறும் பரவுக்கடன் பூண்ட நெறியிலே நிற்பார்களாகி, கo

660. (இ - ள்) வெளிப்படை. அந்நெறியிலே, சேவற் கோழிகளையும் வரிகளை யுடைய மயில்களையும் காணிக்கையாக விட்டும், தோரணமாக மணிகளைத் தொங்க வைத் தும், வண்டுகள் மொய்க்கும் அழகிய கடப்ப மாலைகளைத் தொங்க விட்டும், போரில் வல்ல அழகிய நீண்ட வேலேந்திய முருகப் பெருமானுக்குப் புகழ் புரியும் சூரவைக் கூத்தாடப் பெரிய அணங்காடல் செய்வித்தும் பெருவிழா எடுத்துச் செய்தபின்னர், கக

661. (இ - ள்) வெளிப்படை. பயின்ற வடுக்கள் பொலிந்த உடலினையுடைய வேடர்களது அதிபதியாகிய நாகனுக்கு மதில்களையுடைய முப்புரங்களையும் எரித்த எந்தையாகிய சிவபெருமானது மகனாராகிய வெற்றிபொருந்திய மயில் ஊர்தியினையும் கிரவுஞ்ச மலையினைப் பிளந்த திண்ணிய **வேற்படை** யேந்திய பெரிய கையினையும் உடைய வெற்றி பொருந்திய பெருமையிற் சிறந்த **முருகப்பெருமானது** திருவருளினாலே, கஉ

662. (இ - ள்) வெளிப்படை. வேடர்களது குலம் விளங்கும்படி தத்தையின் வயிற்றிலே கருப்பம் தரித்ததாக, ஊனமில் பலிகளைக் கொடுத்துக் கடமையாயுற்ற வெறியாட்டினாலே, ஒவ்வொன்றாய் ஆயின அந்த மாதங்கள் சென்றனவாக, முன்னே அளவில்லாது செய்த தவத்தினாலே நற்பான்மையுடைய நிறைமதியை உவர்க்கடல் பெற்றது போலத் தத்தை மகவினைப் பெற்றெடுத்தபோது, கங

663. (இ - ள்) வெளிப்படை. யானையின் பெரிய கொம்புகளில் விளையும் முத்துக்களையும், மூங்கிலில் விளையும் செழிய நீர்மையுடைய முத்துக்களையும், மலையில் விளையும் ஏனைய மணிகளையும் வேடர்கள் மகிழ்ச்சியாற் பொழிகின்ற மணிமழையேயன்றி வரிவண்டுகள் எழுந்து பறக்க விண்ணில் மலர் மழையும் எங்கும் பொழிந்தது; சில்லரியுடைய சிறிய உடுக்கைகளே யன்றித் தேவர் துந்துபிகளும் எங்கும் ஆர்த்தன. கச

இவ்வைந்து பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன. இவற்றின் இறுதித் தொடர்கள், நெறியினிற்பார் - எடுத்த பின்றை - அருளினாலே - மகப்பயந்தபோது - துந்துபியு மார்த்த என அவ்வாறே ஒருமுடிபுபடக் கூட்டிமுடிக்குமாறு அமைந்த அழகும் காண்க.

659. (வி - ரை) **பொருவரும் சிறப்பு** என்றது பெற்றியால் (657), அரும் பெறல் - (658) என முன்னர்க் குறித்தபடி நாயனாரை மகனாகப் பெறும் சிறப்பு.

**இவர்க்கு இனிப் புதல்வர்ப்பேறே அரியது** - இது அங்காட்டவர் இவர்களைச் சுட்டிக் கூறும் கூற்று. **இனி அரியது** - இவர்களது வயது மிக முதிர்ந்த நிலை குறித்தது. **புதல்வர்ப் பேறே** - மக்களைப் பெறுதலாகிய செயலே. ஏகாரம் தேற்றம். **அரியது** - இன்மை குறித்தது.

**அதன் படு காதல்** - **அதன்** - அதனில். அந்தப் புதல்வர்ப்பேற்றிலே. **படு** - உண்டாகிய. படுதல் - உண்டாதல்; "ஈத லிசைபட வாழ்தல்" என்புழிப் போல. **காதல்** - ஆசை பலவற்றுள் ஒரு வகை. காதலன் என்பது காதலுக்கிடமாகியவன் - மகன் - என்ற பொருளில் வழங்குதல் காண்க.

**முருகு அலர் அலங்கல்** - **முருகு** - வாசனை. மணம் விரியும் மாலை. இங்குக் குமாரக் கடவுட்குரிய கடம்பமலர் மாலையைக் குறித்தது. "இருள்படப் பொதுளிய பாரை மராஅத், திருள்பூந் தண்டார் புரளு மார்பினன்"—என இதனை முதலிற் றேற்றம்பெறத் திருமுருகாற்றுப்படையினுட் கூறியது காண்க.

**செவ்வேல்** - செவ்வொளி வீசும் வேலினையேந்திய. **வேல்**-முருகப்பெருமானது ஞானசத்தி யென்ப.

**முருகவேள்** - **முருகு** - இளமை. எஞ்ஞான்றும் மாறுத - அழியாத - இளமையுள்ள வேள். **வேள்** - விரும்பப்படுபவன். இப் பெயரானறியப்படும் கரிய வேளாகிய அழகிய மன்மதனுமுளனாதலின் அவனினின்றும் பிரித்துணரும் பொருட்டு **முருகவேள்** - எனப் பிரிதினியைபு நீக்கிய விசேடணம் தந்தோதினார். இவரது இளமையும் பேரழகும்பற்றி இவர்க்குக் குமரன் - இளையோன் - முருகன் - குழகன் - முதலியவாக வழங்கும் பெயர்களும் காண்க.

"ஆயிரங் கோடி காம ரழகெலாந் திரண்டொன் றாகி
மேயின வெனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னிற்

*றாயகல் லெழிலுக் காற்ரு தென்றிடி னினைய தொல்லோன்*
*மாயிரு வடிவிற் கெல்லா முவமையார் வகுக்க வல்லார்''*

*என்பது முதலிய கந்தபுராணத் திருவாக்கும் பிறவுங் காண்க.*

**முன்றில்** - சந்நிதி. **பரவுதல்செய்து** - துதித்து ; **விண்ணப்பித்து. நாளும்** - தனது கருத்து நிறைவேறும் வரை ஒவ்வொரு நாளும்.

**பாய்க்கடன் நேறி** - பிரார்த்தனை நேர்ச்சியின்வழி. ஒரு குறிக்கோளை உட் கொண்டு செய்யும் வழிபாட்டு நெறி.

**நிற்பார்** - நிற்பாராகி. முற்றெச்சம். நிற்பாராயினர் என வினைமுற்றாக்கொண் டுரைப்பாருமுண்டு. ஒவ்வொரு நாளும் சூமாரக் கடவுளின் கோயிலிற் சென்று நேர்ச் சிக்கடன் விதியின்படி ஒழுகி வந்தாராகி என்க. இன்நெறியினை வரும்பாட்டில் விரிக் கின்றார். இக்காலத்துப் பலர் தாம் கோயிலுக்குச் சென்று நின்றொழுகாமலே பிறர் வாயிலாகச் செலுத்தும் நேர்ச்சிகள் பெரும்பயன் றரா என்பதுணர்க. 10

660. **(வி - ரை) வாரணச் சேவல்** - சேவற் கோழி. ஆண்கோழியைச் சேவல் என்பது மரபு.

**வரிமயிற் சூலங்கள்** - தோகையில் பல வரிகளும் எழு நிறங்களும் கண்போன்ற சித்திர அமைப்புக்களும் உடைய மயில்கள். தொகையிற் பலவாக விடுதலும், வகை யில் ஆணும்பெண்ணுமாகச் சேர்த்துவிடுதலும் குறிப்பதுபற்றிச் சூலங்கள்என்றார். ஏடு என்றமூன்றனுருபு உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தது. சேவலும் மயிலும் ஒருசோ விடு தல்குறித்ததாம். இவ்விரண்டும் பிராணிவகையில் ஓரினத்தைச் சார்ந்தவையென வகுப் பர் சாத்திரிகள். சேவல் சுமாரக்கடவுளது கொடியும் மயில் அவரது ஊர்தியுமாதலின் அவருக் குகந்தவை. இவை குறிஞ்சிக் கருப்பொருள்களுமாம். "அறிந்த புள்ளின் சூழ் சிலம் போசை கேட்டு" - (781) எனக் கோழியைப் பின்னர்ச் சுட்டிக் கூறுதல் காண்க. சூரன் பதுமன் என்ற இரண்டசுரர்கள் ஒருடலில் ஒன்றுகூடி நிற்க, அதனைக் சுமா ரக் கடவுள் வேலாற் பிளக்க, இருவராகிச் சேவலு மயிலுமாய் வாவே, சேவலைக் கொடியாகவும், மயிலை ஊர்தியாகவும் அவர் கொண்டருளினார் என்பது கந்தபுராணம். இவ்வாறு பலவகையாலும் இவ்விரண்டும் இணைந்தவையாதலின் **சேவலோடு வரிமயில்** என்று கூறினார். கொடியாக உயர்த்தப்பட்ட உயர்வுபற்றிச் சேவலை முதலிற் கூறியதாம். **விட்டு** - இவற்றை விடுதலாவது, தம்பொருளென்று கொண்ட இவற்றைத் தம் சார்புநீக்கி இவை முருகக்கடவுளுக்கு உரியனவாகுக என்று சிந்தித்து அவரது திருமுன்றிலிலே கொண்டுபோய்க் கட்டில்லாது விட்டிடுதல். "ஒருதலை மீன்படுந் தோறும், நட்ட மாடிய நம்பருக் கெனகளிர் முன்னீர், **விட்டு வந்த னீர்** விடாதவன் புடனென்றும் விருப்பால்" (11) என்ற அநிபத்தநாயனார்புராண வரலாற்றினை இங்கு நினைவு கூர்க. இவ்வழக்கு இக்காளினும் முருகப்பெருமானது பெருங்கோயில் பலவற்றினும் நிகழ்வது காணலாம். இதனால் முருகக் கடவுள் திரு வுள்ள முவந்து அருள் தருவார் என்பது.

இவ்வுண்மைகளைச் சிறிதும் உணராது இந்நாள் மாக்கள்பலர் சற்று மஞ்சாது அறியாமை மிகுதியால் வன்கண்மை பூண்டு இவற்றைக் கொன்று தின்று முருகப் பெருமானது கோபத்திற்காளாகிக் கொடுநரகடைகின்றார்கள். இன்னோர் முருகப் பெருமானது கொடியையும் ஊர்தி (வாகனம்)யையும் அறுத்துக் கொன்று அபசாரஞ் செய்து கொண்டே அவனை வழிபாடு செய்வதனால் நரக மடைவதன்றி வேறு என்ன பயன் பெறுவர்? இவர்களது வழிபாடு வஞ்சனையே யாகுமன்றே ? இனியாவது இவ் வுண்மை யுணர்ந்து இன்னோர் முருகப்பெருமானை வஞ்சிக்க எண்ணுது அவருக் குகந்த இப்பிராணிகளையும், மயிலைப் போலவே அவருக்கு வாகனமாகிய ஆடுகளையும், விட்டு, நன்னெறி யொழுகி நன்மை யடைவார்களாக !

**மணிகள் தோரணந் தூக்கி** - என மாற்றுக. மணி மாலைகளைத் தோரணமாகக் கட்டி. அசைத்து ஓசை உண்டாக்கும் மணிகளைத் தோரணமாகக் கட்டி இசைப் பித்தலும் ஒருவகை வழிபாடு. தூக்கி என்ற சொல்லாற்றலும் இதனைக் குறிக்கும். இங்கு மணிகள் என்றதற்கு இவ்வாறன்றிப் பலவகை மணிகளை மாலைகளாக்கித் தூக்கிக் கட்டி அழகுசெய்து என்றுரைப்பாருமுண்டு.

**நாற்றுதல்** - தொங்கவைத்தல். பூமாலைகளை ஒரே அளவுடையனவாக அறுத்துத் தோரணங்களில் தொங்க வைத்தல் மரபு. "பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை, தூணியுற வறுத்துத் தூங்க நாற்றி" என்பது திருமுருகாற்றுப்படை.

கதம்பம் - கடப்ப மலர்மாலை "தாதிவர்பூந் தொடைமாலைத் தண்பத்தர் களுமமைத்து." (267) முதலியவையுங் காண்க.

**போர்அணிநெடுவேலான்** - போர் - அணி - நெடு - என்பன வேலுக்கு அடை. **வேலான்** - முருகன். இவற்றை வேலானுக்குக் கூட்டி யுரைப்பினு மமையும். "தானைத் தலைவ", "செருவி லொருவ பொருவிறன் மள்ள," "வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ", "போர்மிகு பொருந" என்பனவாதி திருமுருகாற்றுப் படைத் திருவாக்குக்கள் காண்க. வேலாற்கு - ஆடல் செய்து - எனக் கூட்டிமுடிக்க.

**புகழ்புரி குரவை தூங்க** - **புகழ் புரிதல்** - அவ்வேலோன் புகழ்களை எப்பொழுதுஞ் சொல்லுதல். "புகழ் புரிந்தார்க் கருள் செய்யு மையஞ்சி னப்புறத்தான்"-திருவாரூர் - அப்பர் சுவாமிகள் தேவாரம். **குரவை** - ஒருவகைக் கூத்து. "குரவை யென்பது கூறுங் காலைச், செய்தோர் செய்த காமமும் விறலு மெய்த உரைக்கு மியல்பிற் றென்ப" என்பதிலக்கணம். இதனை, "காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுட் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணைத்தாடுவது" எனவும், "இது வரிக்கூத்தின் ஒருறுப்பு" எனவும், "இது விநோதக் கூத்துப் பகுப்பினுள் வரும்" எனவும் பிறவும் உரையாசிரியர் அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை உரையினுள் விரித்தனர். "குரவை யென்ப தெழுவர் மங்கையர், செங்கிலை மண்டலக் கடகக் கைகோத், தங்கிலை கொட்பகின் றூட லாகும்" என அதற்கு இலக்கணங் காட்டியதுங் காண்க. (பதிகம் 77)

மலைநாட்டுத் திருச்செங்குன்று என்னும் மலைமே லேறி வேங்கை மரத்தினிழலினின்று, கண்ணகி, விமானமேறி விண்ணுடு செல்லக்கண்ட வேட்டுவ மகளிர் அவளை வாழ்த்தித் தமது குறிச்சியில் ஒரு குரவைக் கூத்து இயற்றிய வரலாறு பற்றிய சிலப் பதிகாரம் 24 - குன்றக்குரவையும் காண்க. குரவைக்கூத்துத்தானும் திணைதோறும் அவ்வத்திணைக்குரிய தெய்வத்திறனைப் போற்றி அவ்வம் மக்கள் அவ்வவற்றிற்கேற்ற வாறு ஆடற்குரியதாம். "மாயோன் மேய காடுறை யுலகம்" என்றபடி முல்லைநிலத்துக் குரிய கண்ணன் புகழ் கூறி வாழ்த்தி ஆடியதாகக் கூறும் ஆய்ச்சியர்குரவையும், சிலப் பதிகாரத்துக் காண்க. "சேயோன் மேய மைவரை யுலகமும்" என்றபடி இங்குக் குறிஞ்சித் தெய்வமாகிய வேலோனது புகழைப் புரிந்து அக்கில மக்கள் ஆடுவது குன்றக்குரவையாம். இக்கூத்தினுள் சிறுகுடியாராகிய குன்றவரது பெண்கள் அருவியிலும் சுனையிலும் கீராடியும், பின்னர்த் தொண்டகப்பறை அடித்தும், கோடு (கொம்பு) வாய்வைத்தும், கொடுமணி யியக்கியும், குறிஞ்சி பாடியும், நறும்புகை எடுத்தும், பூப்பலி செய்தும், காப்புக்கடை நிறுத்தும், பரவல் பரவியும், விரவுமலர் தூவியும், வெறியாடல் செய்து, முருகனையும் அவன்கை வேலினையும் அவனது விறலினையும், ஏத்தி வேலன்வருக எனக் கைகோத்து ஆடலும் பாடலுமாகப் பயில்வதாம். விரிவு சிலப்பதிகார முதலிய பழந்தமிழ் நூல்களுட் காண்க.

"பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை, தூணியுற வறுத்துத் தூங்க நாற்றி,
நளிமலைச் சிலம்பி னன்னகர் வாழ்த்தி, நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி,

*யிமிழிசை யருவியோ டின்னியங் கறங்க, வுருவப் பல்பூத் தூஉய் வெருவரக்,*
*குருதிச் செந்தினை பரப்பிக் குறமகண், முருகிய கிறுத்து முரணின ருட்க,*
*முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனக, ராடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்,*
*கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி, யோடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி,*
**வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட ''**

என்ற திருமுருகாற்றுப்படை முதலியனவுங் காண்க.

**வேலாற்கு** - இக்குன்றக்குரவையி னேத்தப்படுவது முருகப்பெருமான் கை வேலாதலின் **வேலாற்கு** என்றார்.

*" உரவுநீர் மாகொன்ற* **வேலேத்தி** *யேத்திக்*
*குரவை தொடுத்தொன்று பாடுகம்வா தோழி !''—*

*" கீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்*
*ஏரகமு நீங்கா விறைவன்கை* **வேலன்றே**
*பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்டொருநாட்*
*சூர்மா தடிந்த சுடரிலேய வெள்**வேலே** ''—*

*" அணிமுகங்க ளாறாறு மீராறு கையு*
*மிணையின்றித் தானுடையா னேந்திய**வே** லன்றே*
*பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ண*
*மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்**வேலே** ''—*

*" சரவணப்பூம் பொய்கையினிற் ரூய்மா ரறுவர்*
*திருமுலைப்பா லுண்டான் றிருக்கை**வே** லன்றே*
*வருதிகிரி யோனவுணன் மார்பம் பிளந்து*
*குருகுபெயர்க் குன்றங் கொன்ற நெடு**வேலே** ''—*

என்பன ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளின்முன்னர் வழங்கிய குன்றக்குரவைக் கூத்தினை உடனிருந்துகண்ட இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்துக்கூறிய பாட்டுக்கள்.

**குரவை தூங்க** - குரவைக் கூத்தாட. **தூங்க** - ஈண்டு ஆடலும், அதனொடு கலந்து பயின்ற பாடலுமாக இயல என்ற பொருளில் வந்தது.

**பேர் அணங்கு ஆடல் செய்து** - **பேர்** - பெரிய - **அணங்காடல்** - வெறியாடல் செய்து முருகனை ஆவேசித்தவர வழைத்தல். " வேலன் றைஇய வெறியயர் களனும்'' திருமுருகாற்றுப்படை. "வெறியாட ருன்விரும்பி வேலன்வரு கென்ரூள்'', " மாமலே வெற்பனேய் தீர்க்கவரும் வேலன் " (குன்றக்குரவை) என்ற சிலப்பதி காரமும் காண்க. இவ்வெறியாட்டில் பயின்றவன் வேலினை யேந்தி முருகனைத் துதித்து ஆடல் செய்து வர, முருகன் அவன்மேல் ஆவேசித்து வருவதும், வந்த பின்னர் அவனிடத்தித் தாம் வேண்டிய வரங்கள் கேட்பதும் மரபாம். இதற்கு இவ்வா றன்றி **அணங்கு** - பெண் என்று கொண்டு, பெரிய தேவராட்டியை வெறியாட்டயர் வித்து என்றும், தேவராட்டி சன்னதம் வந்து சொல்லி என்றும் உரைப்பினுமமையும். ஆடல் செய்து சன்னதம் சொல்லி, அதனுற் பெருவிழா எடுத்தபின் என்று உரைப் பாரு முண்டு.

**பெருவிழா எடுத்த பின்றை** - இவ்வாறு, விட்டு - தூக்கி - நாற்றி - தூங்க-ஆடல் செய்து - கூடிய பெரிய திருவிழாத் தொடங்கி நடத்திய பின்பு. இப்பாட்டில் விழா அணிவகை கூறினர். மேற்பாட்டிற் சொல்லியவை அவ்விருவரும் தாமே பராவுக்கடன் பூண்ட நெறிநின்ற ஒழுக்கமாகிய பூசனை கூறினர். இப்பாட்டில் அவர்கள்

பிறரைக் கொண்டு செய்வித்த சிறப்புக் கூறினர். **விழா வெடுத்தல்** - ஒரு சொன் னீர்மையாய்த் திருவிழாக் கொண்டாடுதல் எனும் பொருளில் வந்தது. இத்திருவிழா வுக்குக் கோழி - மயில் - விடுதல், தோரண மணிகளும் கதம்பமும் கோற்றுதல், குரவை யாடுதல், குரவை பாடுதல், அணங்காடுதல் முதலியவை அங்கங்களாம்.

**எடுத்த பின்னர்**—என்பதும் பாடம். 11

661. **(வி - ரை) பயில் வடுப் போலிந்த** யாக்கை - கரடி, புலி, யானை முதலிய கொடிய மிருகங்களோடும், பகைவர்களோடும் போர் பயின்றதனால் உண்டாகிய புண் களின் வடுக்கள் விளங்குகின்ற உடம்பு. இது வீரர்களுக்கு இலக்கணமாகவும், அவர் தம் வீரத்துக்கும் புகழுக்கும் அடையாளமாகவும் கருதப்படும். இத்திறத்தை "வடிவே, மறப்புலி கடித்த வன்றிரண் முன்கை, திறற்படை கிழித்த திண்வரை யகல, மெயிற்றெண்கு கவர்ந்த விருந்த ணெற்றி" என, நாயனார் திருவடிவம் முதலியவற் றைக் கூறுமுகத்தாலே திருக்கண்ணப்பதேவர் திருமறத்தில் நக்கீரதேவர் காட்டுதல் காண்க (11-ம் திருமுறை). இத்திறமாக நாயனாது திருமேனியில் ஊறுபட்டன என்று குறிப்பிடவும்பொறாத மாபுடைய ஆசிரியர் இதனை நாகனது உடலின்மேல் வைத்துக் காட்டிய நயத்தின் அமைதி காண்க.

**மைந்தரான்** - அண்ணலார் என்று கூட்டுக.

**எந்தையார்மைந்தரான** - எந்தையார்-நம் எல்லார்க்கும் தந்தையாராகிய சிவபெரு மான். "எந்தை யீசனெம் பெருமான்"—திருநெல்வாயிலரத்துறை - 1. ஆளுடைய பிள்ளையார் தேவாரம். "யாவர்க்கும் தந்தைதா யெனுமவரிப் படியளித்தா, ராவதனு லாளுடைய பிள்ளையா ராய்" (திருஞான - புரா - 69) முதலியவற்றின் கருத்துக்களை இங்குவைத்துக் காண்க.

**மயிலுடை...வென்றி** - இவ்வளவும் அண்ணலாருக்கு அடைமொழிகள். **கொற்ற முடை மயில் ஊர்தி** - என மாற்றுக. கொற்றத்தையுடைய மயிலாகிய ஊர்தி. சூரபது மன் போரில் மாயத்தினாலே மேமிப்பறவையாக வடிவுகொண்டு எதிர்த்தபோது இந்தி ரன் மயிலுருக் கொள்ள முருகக்கடவுள், அதன்மேல் ஏறிப் போர்செய்து சூரனது மாயவுருவைப் பிளந்தனர். இறுதியில் மாயத்தாற் பெரிய மாமராமாய்நின்ற சூரன திருவைச் சுவாமியின் வேலாயுதம் இருகூறாகப் பிளந்தது. அவ்விரு கூறுகளில் ஒன்று மயிலும் மற்றொன்று சேவலுமாகி வர, மயிலை ஊர்தியாகவும் சேவலைக் கொடி யாகவும் சுவாமி கொண்டு ஆட்கொண்டனர். இவை,

> **இந்திர னெனைய** காலை யெம்பிரான் குறிப்புந் தன்மே
> லந்தமி லருள்வைத் துள்ள தன்மையு மறிந்து நோக்கிச்
> சுந்தர நெடுங்கட் பீலித் தோகைமா **மயிலாய்த்** தோன்றி
> வந்தனன் குமரற் போற்றி மாகத மலைபோ னின்றான்.
>
> —**சூரபதுமன் வதைப்படலம்** - 378

> ஆட்படு நெறியிற் சேர்த்து மாதியி னூழ்தந் தூய்க்கத்
> தாட்படை **மயூ** மாகித் தன்னிக ரில்லாச் சூரன்
> காட்படை யுளத்த ஞகிக் கடவுள ரிரியல் போக
> ஞாட்பியல் செருக்கில் வந்தான் ஞானநா யகன்றன் முன்னம். செ-494

> சீர்திகழ் குமர மூர்த்தி செறிவிழி கொண்ட தொல்லை
> யூர்தியி னிருக்கை நீங்கி யுணர்வுகொண் டொழுகி னின்ற
> **சூர்திகழ் மஞ்ஞை** யேறிச் சுமக்குதி யெம்மை யென்னப்
> பார்திசை வான மூற்றும் பரியென நடாத்த லுற்றான். செ - 499

என்பனவாதி கந்தபுராண வரலாற்றினுணர்க.

**கோற்றழடை மயில்** - கோற்றம் - இந்திரனுடைய மயில், சுவாமி அதனை ஊர்ந்து சூரனது மேமிப்புள்ளுருவம் பிளந்த கொற்றத்தையும், சூரனுடைய மயில் தன்னை வென்று அடிப்படுத்தி ஆட்கொண்டருளிய கொற்றத்தையும் காட்டி நிற்பன ஆதலின் **கோற்றழடை** என்றார். உடைய என்றது உடை என ஈறு குறைந்தது.

சாகத்தீவில் பிரபாகரன் என்ற அரசனுக்கு அவன் மனைவி சுகுமாரியினிடம் சூரன், பதுமன் என்ற இரட்டைப் பிள்ளைகள் பிறந்தனர். இவர்க்குப் பின் சிங்கனும் அவன் பின் தாரகன் என்பானும் பிறந்தனர். இவர்களுள்ளே சூரன் பதுமன் என்ற இருவருக்கும் அகத்திய முனிவர் முருகப்பெருமானது மான்மியத்தைச் சொல்லியருளச், சூரன் தான் முருகனது ஊர்தியாகிய மயிலாக இருக்க விரும்பினன். பதுமன் அவரது கொடியாகிய சேவலாக விரும்பினன். அவ்வாறே கிரணவிந்து, இடபயோகி என்ற முனிவர்கள்பால் முறையே தர்க்கையின் மான்மியமும் சாத்தாவின் மான்மியமும் கேட்ட சிங்கனும் தாரகனும் அவ்வவர் ஊர்திகளாக விரும்பினர். இவை பெறுதற் பொருட்டு அவர்கள் தவஞ் செய்தனர். அதன் பயனுகப் பின் இப்பிறவி பெற்றனர் - என்றது முன்வரலாறு. உபதேசகாண்டம் தணிகைப்புராணம் முதலியவை பார்க்க.

**ஊர்தி** - "ஆசைதீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்" - (திருக்கடவூர் மயானம் - ஆளுடையபிள்ளையார் தேவாரம்) என்றபடி வேண்டுவாரிடத்து வேண்டுகடை நடக்கும் வெள்ளேறேறி நடந்து வந்தருளுவார் **எந்தையார்**. அவர் **மைந்தராகிய** முருகப்பெருமான் வேண்டுவார்பால் அவரினும் விரைந்து **தமது மயிலுடைக் கொற்ற ஊர்தியினை ஊர்ந்து** பறந்து வருவாராதலின் இங்குப் **பெருவிழா எடுத்தபின்றை** (660) **அவாநளினுலே** (661) **தத்தைபாற் கருப்பநீட** (662) மகப்பேறு விரைவிற் கூடிற்று என்று குறிப்பார் அருளுடைப் பெருமான் மைந்தாந் தன்மையையும் மயிலூர்தியுடைமையையும் முதலிற் சுட்டினர்.

சகச மலமாகிய ஆணவமலத்துடன் கூடிய ஆன்மா இருதிற னறிவுளது என்றும், சார்ந்ததன் வண்ணமாவதென்றும் சொல்லப்படும். பளிங்கிற் பவளம் பதித்தது போலத் தன்னை ஆன்மாவில் விளங்கச் செய்து இறைவன் ஆட்கொள்ளும்போது, அதன் அசத்தாந்தன்மை நீங்கும். சத்தாந் தன்மையே ஓங்கி நிற்கும். அதனை மறைத்து நின்ற ஆணவமலம் வலியற்று இறைவனது ஆனந்தத்தை உயிர் அனுபவித்தற்கு நிமித்தமாய் நிற்கும். "இன்பங் கொடுத்தலிறை யித்தை விளைவித்தன் மலம்" என்றது ஞானசாத்திரம். இங்கு, முருகப் பெருமான் சூரனுடைய மயிலை வாகனமாகக் கொண்டதன் குறிப்பை ஆராயுங்கால் பல உண்மைகள் காணப்படுகின்றன. ஆணவம் கன்மம் மாயை எனும் மும்மலங்களின் நிலையர்களாகியோர் சூரபதுமன், சிங்கமுகன், தாரகன் என்ற மூவர். இவருள் ஆணவமல நிலையுடைய விளங்கினவன் சூரபதுமன் என்றது இவன் பின்னர் ஏனைத் தாரகன் சிங்கமுகன்போ லழிந்து படாது மயிலாய் வந்து முருகப் பெருமான் திருவடிக்கீழ் என்றும் தங்கி நின்றதனால் அறியப்படும். வானவில்லிற் காணப்படுவது போல மிக்க நீலம் முதற் சிவப்பீறாக உள்ள ஏழு வண்ணங்களும் மயிலிற் காணப்படுவதனால் அவை ஆணவ மலத்தைக் குறிப்பாய் விளக்குவனவென்பர். என்னை ? காரிய வேறுபாட்டால் மோகம், மதம், அராகம், கவலை, தாபம் வாட்டம், விசித்திரம் என்ற ஏழு வகைப்படும் ஆணவத்தின் தன்மையை இங்கிறங்களேழும் குறிப்பன என்க. ஆன்மாவை இறைவன் தன் மலரடிக்கீழ் வைத்த காலத்தேயும் ஆணவமும் அங்கு அழியாது வலியற்று நிற்குமென்பது ஞானசாத்திரம். இறைவராகிய முருகப் பெருமான் சூரன் முதலிய மூவரையும் வதைத்து, மும்மல காரியமாகிய மயிலுடைப் புரங்கள் செற்ற தமது தந்தையார் போலத், தாமும் உயிர்களுக்கு மலநீக்கம் செய்து, திருவடிக்கீழ் வைக்கும் **கோற்றத்** திறத்தினை உணர்த்த மயிலை ஊர்தியாக **ஊர்ந்தனர்** என்ற குறிப்பும் இங்குக் காணத்தக்கது.

**வரை உரம் கிழித்த தீண்மை அயில்** - **வரை** - மாயத்திலுல் அமைந்த மலை. இதில் தாரகன் மறைந்து மாயம் செய்தான். **உரங்கிழித்த** - கிரவுஞ்சத்தைப் பிளந்து தாரகனை வதைத்த ; முருகப்பெருமான் சூரசங்காரத்தின் பொருட்டுப் பூதசேனைகளுடன் மகேந்திரபுரி நோக்கி வரும் வழியில் கிரவுஞ்ச மலையாகிய மாயத்தின் மறைந்து தாரகன் போர் செய்ய அவனை வதைத்தனர் எனும் நிகழ்ச்சி குறித்தது. இதனை "முன்னுள் வரைகிழிய வேந்து மயில்வே னிலைகாட்டி, யிமையோ ரிகல்வெம் பகைகடக்குஞ், சேந்தன்" (சண்டீசர் புராணம் - 1) என்று குறித்ததும் காண்க. விரிவு கந்தபுராணத்திலுட் கண்டு கொள்க. **தீண்மை** - வலிமையுடைமை. **அயில்** - வேல். **தீண்மை அயில்** - வேல் முருகப்பெருமானது ஞானசத்தி யென்ப. இச்சை - ஞானம் - கிரியை - என்ற சத்திகள் மூன்றில் ஞானசத்தியே சிறந்தது. " எத்திறம் ஞானமுள்ள தத்திறமிச்சை செய்தி" - என்பது ஞானச்சாத்திரம். இறைவனது சத்தியினுலன்றிப் பிறிதொன்றினுலும் வெல்லப்படாத வலிய வரம்பெற்ற வெஞ்சூர்களையும் வதைத்த வலிமை யுடையதும் முருகப் பெருமானது ஞான சத்தியுமாதலின் **தீண்மைஅயில்** என்று விதந்தோதினுர். "கொன்னெடுவேற், சூரனது மாயத் தடங்கிரியுந் தூளாக, **வீர வடிவேல்** விடுத்தோனே" என்பது கந்தர்கலிவெண்பா. "குருகு பெயர்க் குன்றங் கொன்ற நெடுவேலே" என்று (24. குன்றக் குரவை) சிலப்பதிகாரமும் துதிக்கும். "வீரவேல்! தாரைவேல்! விண்ணோர் சிறைமீட்ட, தீரவேல்! செவ்வேள் திருக்கைவேல் !—வாரி, குளித்தவேல் ! கொற்றவேல் ! சூர்மார்புங் குன்றும், துளைத்தவே ! லுண்டே துணை" என இதற்கென்று தனியாக வேற்பாட்டும் பாடித் துதித்தனர் பெரியார். அருணகிரிநாதர் வேல் வகுப்பும் வகுத்தனர்.

**மயிலுடைக் கோற்ற ஊர்தி** - என்றதனுல் சூரன் வதையும், **வரையுரங் கிழித்த** - என்றதனுற் சூரகன் வதையும் கூறவே இடைப்பட்ட சிங்கமுகன் வதமும் ஏனை அவுணர் சங்காரமும் கொள்ளப்படும் என்பார் **வேன்றி அண்ணலார்** என்றார்.

**அயிலுடைத் தடக்கை** - சூர்முதல் தடிந்து, தேவர் குறைமுடித்து வின் குடியேற்றியருளும் பொருட்டுச் சிவபெருமான் முருகப்பிரானைத் திருக்கயிலையிலிருந்து செல்ல விடுத்தருளும்போது பதினெரு ருருத்திரர்களையும் **தோமரம் - கோடி - வாள் - வலிய குலிசம் - பகழி - அங்குசம் - மணி - பங்கயம் . தண்டம் - வென்றிவில் - மழு** என்ற பதினெரு படைகளாக அவரது பதினெரு திருக்காங்களிலும் அமரும்படி ஈந்தருளினர். பின்னர் எல்லாப் படைகளுக்கும் நாயகமாகிய ஒப்பற்ற **வேற்படை**யினை நல்கி அவரது கையினிற் கொடுத்தருளினர்.

"பொன்றிகழ் சடிலத் தண்ணறன் பெயரும் பொருவிலா வுருவமுந் தொன்னு
ணன்றுபெற் றுடைய வுருத்திர கணத்தோர் தவிலருந் **தோமாங் கோடிவாள்**
**வன்றிறற் குலிசம் பகழியங் குசழ மணிமலர்ப் பங்கயந் தண்டம்**
**வென்றிவின் மழுவு** மாகிவீற் றிருந்தார் விறன்மிகு மறுமுகன் காத்தில்"—

"ஆயதற் பின்ன ரேவின்மூ தண்டத் தைம்பெரும் பூதமு மடுவ ;
தேய பல்லுயிரு மொருதலை முடிப்ப; தேவர்மேல் விடுக்கினு மவர்தம்
மாயிருந் திறலும் வாங்களுஞ் சிந்தி மன்னுயி ருண்ப;தெப் படைக்கு
நாயகமாவ ; **தோருதனிச் சுடர்வே னல்கியே** மதலைகைக் கொடுத்தான்"—

விடைபெறு படலம் - 37 - 38

என்ற கந்தபுராணமும் காண்க.

முருகப்பெருமான் இவ்வெற்றிவேற் படையைச் சூரபதுமன், சூரகன் என்றிவர் மேல் ஏவி யவர்களை வதைத்தனர். ஆதலின் **மயிலுடைக் கோற்றம்** - என்றும், **வரையுரங் கிழித்த** என்றும் கூறிய இவ்விடத்துத் **தீண்மை அயில் உடைத் தடக்கை**

வென்றி - என்று வேற்படையினையும் வெற்றியையும் புணர்த்து விதந்தோதினார். "அவுணர் கல்வல மடங்கக் கவிழினர், மாமுத முடிந்த மறுவில் கொற்றத், தெய்யா கல் லிசைச் செவ்வேற் சேஎய்..." எனவும், "வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ! குன்றங் கொன்ற குன்றுக் கோற்றத்து"—எனவும் வரும் திருமுருகாற்றுப் படைக் கருத்துக்களே இங்குவைத்துக் காண்க.

மைந்தர் - அண்ணலார் - பன்மை யீறுகள் பெருமை குறித்தன.

அருளினுலே - கநப்பநீட என வரும்பாட்டோடு தொடர்ந்து கொள்க. குறவர் மங்கையாகிய வள்ளியம்மையாரோடு முருகவேள் கூடி வீற்றிருந்து உலகத்துயிர் யாவைக்கும் உரியவாறு போகமும் முத்தியுங் கொடுத்து நல்லருள் புரிகின்றான் என உணர்கின்றே மாதலின் அவனருளினுலே குன்றவர் கோமானுக்கு மகப்பேறு உண்டா கத் தத்தை பாற் கருப்ப மீடிற்று என்க. "பச்சிளங் கொங்கை வனசார் பாவையோ டொன்றி, யிச்ச கத்துயிர் யாவையு முய்யவீற் றிருந்தான்"—(வள்ளியம்மை திருமணப் படலம் - 214) என்பது கந்தபுராணம். மேற்பாட்டில் முருக வேளைப் பரவிய விழா வும், அவ்விழா எடுத்த வினை முடிவு கொள்ளு முன்னர் இப்பாட்டில் அதனுற் பெறும் அவனருளும், வரும்பாட்டில் அவ்வருளாற் பெறும் மகப்பேறும் அதுபற்றிய வெறி யாட்டுமாக ஒன்றையொன்றுபற்றி விரைந்து தொடர்ந்து முடிவதும் சிறப்புக் காண்க.

சிவபெருமானைச் "சதாசிவோம்!" என ஒருமுறை துதித்த வேதங் குமாரப் பெருமானைச் "சுப்ரமண்யோம் !!!" என மும்முறை துதித்து அவரது அருட் பெருமையை விளக்கிற்று என்ப. அதுபோலவே இங்கு ஆசிரியர் தமிழ் மறையாகிய இப் புராணத்துள்ளேயும், புராங்கள் செற்ற எந்தையார் என்று ஒரு முறை துதித்த இடத்தைச், "கேவ்வேன் முருகவேள்" - (659), "போரணி நெடுவேலான்" - (660), "அயிலுடைத் தடக்கை வென்றி யண்ணலார்"—(661) என மும்முறையும் அடுக்கி அவரது அருட் சத்தியாகிய வேலுடனே கூட்டி முருகப்பெருமானைத் துதித் துக் காட்டிய அருமைப்பாடும் காண்க.

"பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளே தோன்றும்" - என்றபடி பன்னிரண்டு திருக்கண்களும் பன்னிரண்டு திருக்கைகளும் உடையோராகிய முருகப்பெருமானுடைய திருவருள் வெளிப்பாட்டைக் கூறும் இப்பொருளைப் பன்னிரண்டாவது திருமுறையின் கண்ணுகிய இப்புராணத்திற் பன்னிரண்டாவது திருப்பாட்டிற் கூறிய தெய்வச் சிறப் பும் காண்க. இவ்வாறு வருதல் ஆசிரியரது தெய்வ வாக்கிற் கூத்தப்பிரான் அமைத்த தெய்விகச் சிறப்பான அமைப்புக்களில் ஒன்றென்க. "ஆதி யெழுத்தவை யைம்பதோ டொன்றென்பர்," "ஐம்பத்தோ ரக்கரி" என்று போற்றப்படும் அம்மையார் காஞ்சி யிலே தவஞ் செய்து இறைவனைப் பூசித்த பொருள் திருக்குறிப்புத்தொண்ட நாயனர் புராணத்தில் ஐம்பத்தொன்றுவது திருப்பாட்டிற் கூறவும், திருமந்திரம் - நாலாந்தந்தி ரம் - திருவம்பலச் சக்கரப் பகுதியில் "ஐம்பத்தொன்றுமே" என்று 51-ம் திருமந்திரம் அருளவும், அமைந்த தெய்விகச் சிறப்பும், "அரிவையோர் பாகத்த, னஞ்சொ டிருபத்து மூன்றுள வாகமம்" - (57) "சிந்தைசெய் தாகமம் செப்ப வந்தேனே" (73) - முதற்றந் திரம்-திருமந்திரம், "தண்ணிலவார் சடையார்தாந் தந்தவா கமப்பொருளே, மண்ணின் மிசைத் திருமூலர் வாக்கினுற் றமிழ்வகுப்ப" - திருமூல நாயனர் புராணம் - (23), என் பனவற்றுணர்கின்றபடி, இருபத்தெட்டுச் சிவாகமங்களின் பொருளைத் திருமந்திரங்க ளாகத் தமிழில் அருளிய திருமூலநாயனர் சரிதத்தை இருபத்தெட்டுத் திருப்பாடல் களால் வகுக்க அமைந்த தெய்விகச் சிறப்பும், இன்னும் இவைபோல்வன பலவும் இங்கு உன்னுங்கால் நாம் மேலே கூறியது வெறும் புனைந்துரையன்றென்பது வினங் கும். திருமூலர் திருமந்திரம் - நாலாந் தந்திரம் - சுவகுண்டப் பகுதியில் முருகனைப்

பற்றிக் கூறும் "எத்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த், தத்தைதன் முன்னே சண்முகம் தோன்றலால்" என்பது 12-வது திருமந்திரமாக அமைந்ததுங் காண்க. 12

662. (வி - ரை) **கானவர் குலம் விளங்க** - கானவர் - வேட்டுவர். குறிஞ்சி நிலமக்கள். கண்ணப்ப நாயனாரைத் தன்னகத்துப் பெற்றதனால் வேடர்குலம் விளக்கம்பெற்றது என்பது. "மறை, கைப்படுத்த சீலத்துக் கவுணியகோத் திரம்விளங்கச், செப்புமெறி வழிவந்தார் சிவபாத விருதயர்"—(திருஞான - புரா - 15), "உபயகுல மணிவிளக்காஞ் சேக்கிழார்" - (திருத்தொண்டர் புராண வரலாறு - 11) என்பன காண்க. ஒரு பெரியார் ஒரு குலத்தில் அவதரித்தாராயின் அவரால் அக்குலமுழுவதும் விளக்கமடைந்து உய்யும் என்பது ஆன்றோர் துணிபு. திருவண்ணாமலைக் கார்த்திகைச் சோதி தரிசித்தவரின் "கோத்திரத்தி லிருபத்தோர் தலைமுறைக்கு முத்திவாங் கொடுப்போ மென்றார்" என்ற அருணாசல புராணமுங் காண்க.

**தத்தைபால் கருப்பம் நீட** - தத்தையின் வயிற்றிலே கருப்பம் தங்க. "சேவடிக்கீழ் வழிபட்டுக், கருத்துமுடிக் திடப்பரவுங் காதலியார் மணிவயிற்றில், உருத்தெரிய வரும்பெரும்பே றுலகுய்ய வுளதாக" - (திருஞான - புரா-20) என்பது காண்க. **நீடுதல்** - தங்குதல். "அளிநீடளகம்" - திருக்கோவையார் - 122. **நீட** - வளர என்றுரைப்பாருமுண்டு.

**ஊனமில் பலிகள்** - மாதந்தோறும் ஒழுங்குபெற முற்றிக் கருப்பம் வளராமற் செய்யும் ஊனங்களே யில்லையாகச் செய்யும் பலிகள். **போக்கி** - இட்டு - கொடுத்து. இம்மாதங்களின் வரும் ஊனங்களைத் திருவாசகத்தில் (போற்றித் திருவகவல்)

"மானுடப் பிறப்பினுண் மாதா வுதரத், தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்து,
மொருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்து, மிருமதி வீளவி னெருமையிற் பி
மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்து, மீரிரு திங்களிற் பேரிருள் பிழைத்து, [ழைத்து,
மஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்து, மாறு திங்களி னூறலர் பிழைத்து,
மேழு திங்களிற் ரூழ்புவி பிழைத்து, மெட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்து,
மொன்பதில் வருதரு னன்பமும் பிழைத்துந், தக்க தசமதி தாயொடு தான்படுந்,
தக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்....."

என்பனவாதியாக மணிவாசகப் பெருமான் அருளியனவற்றை இங்கு நினைவு கூர்க.

**உறுகடன் வெறியாட்டோடும்** - அவ்வம் மாதந்தோறும் கடமையாகச் செய்யும் வெறியாடல்களுடன். வெறியாடல்வகை மேல் **அணங்காடல்** - (660) என்றவிடத் துரைக்கப்பட்டது.

**ஆன அத்திங்கள் சேல்ல** - கருப்பம் தரித்தபின் "கருவாகிக் குழம்பிருத்து கலித்து மூளை கருகரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன் ரூகி, யுருவாகிப் புறப்பட்டு" (திருத்தாண்டகம் - திருவாரூர் - 6) என்றபடி வளர்ச்சி முற்றுவதான பத்துத்திங்களும் நிரம்பிச் செல்ல. "முட்டை பிறக்கது முந்நூறு நாளினில்" என்பது திருமந்திரம். இதனை 280 நாட்களுக்குமேல் முந்நூறு நாட்களுக்குள் என்பர் நவீன சாத்திரிகள். முற்றுவதற்கு வேண்டிய அந்த என அகரம் உலகறிசுட்டு.

**செய் அளவில் தவத்தினுலே** என மாற்றுக. தத்தையும் நாகனும் செய்தவம் - கானவர்குலஞ் செய்தவம் - மாதவஞ் செய்த தென்றிசை செய்தவம் - அன்புநிலை உணராது ஆணவத்தினழுந்தி உழலும் உயிரெல்லாஞ் செய்தவம் என்று பலவாறு கூட்டியுரைக்க நின்ற அழகுங் காண்க. "முந்தை யெம்பெருந் தவத்தினு லென்கோ முனிவரிங்கெழுந் தருளியது" (408) பார்க்க. உவரிசெய் தவத்தினுற் பான்மதி யீன்றுலென என்று கூட்டியுரைப்பதுமாம். பாற்கடலைத் தேவர்கள் கடைய அதிற் பிறந்தது மதி என்பர். அதுபோலத் தானும் ஒரு மதியினையீனும்பொருட்டு உவரியாகிய கருங்கடலும் தவஞ் செய்து பெற்றதுபோல என்பதாம். கடல் தவஞ் செய்தல் எற்றுக்கெனின்

தனது கருமை, உவர்ப்பு, மண்ணீருமாகாத தன்மை, கழிநாற்றம் முதலிய இழிபுகளைப் போக்கும்படிக்கும், பாற்கடல் பெற்ற அந்த மதிக் குழவியின் மேம்பட்ட குழவிமதியை ஈன்றெடுக்கவும் ஆம் என்க. இவ்வாறுரைப்பின் தற்குறிப்பேற்றமாம். அக்குழவியின் மேம்படுதலாவது அது வெண்மதியாய்க், கலைகள் வளர்வதும் தேய்வதுமுடையதாய்த், தேவரிலொன்றாய், இறப்பும் பிறப்பும் உடையதாய், இறைவனாற் காக்கப்பட்டுள்ளதாய் நிற்பது; தான் பெறும் இக்குழவி அவ்வாறன்றிக் கருங்கதிர் விரிக்குமேனிக் காமர் பெற்றுடையதாய், பதினாறாண்டிற் கலைவளர்வதாய்ப், பின்னர் என்றும் குறைவில்லாததாய், இறப்பும் பிறப்பு மில்லாததாய், இறைவன் பக்கத்திருந்து அகலாது அவருக்குக் காவல் புரிவதாய் உள்ளது என்ப.

**உவரி** - தத்தைக்கும், **பான்மதி** - நாயனாராகிய மகவுக்கும் உவமை. உருவும் தொழிலும் பற்றி வந்தது. **பான்மதி** - நற்பான்மையும் நிறைவும் பெற்ற மதி என்க. பால் போன்ற வெள்ளிய சந்திரன் என்றுரைப்பாருமுளர். முழுமதி தோன்றும்போது சிவந்து காட்டும். அன்றியும் இம்மகவு பின்னர்க்"கருங்கதிர் விரிக்கு மேனி"(665)யுடையதாம். ஆதலின் அவ்வுரை பொருந்தாமை யறிக.குழவிகள் பின்னர் எந்நிறமுடையனவாக ஆயினும், தாய் வயிற்றினின்றும் பிறக்கும்போது புதிய இரத்தஊற்றத்தினால் எல்லாக் குழவிகளும் செம்மை நிறமே தந்நிறத்தின் மிக்குக்காட்டும். இங்குத் தத்தையீன்றபோது உவரியின் தோன்றும் பான்மதியாயின இம்மகவு, தாதை எடுக்கும்போது "காளமேகம்" (664) ஒப்பாயினதென் றுரைத்தலும் காண்க.

இனி, இறைவனது நெற்றிக் கண்ணாகிய கனற் கண்ணினின்றும் அவதரித்தவர் முருகப்பெருமான். அவர் "பலர் புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு" என்றபடி "வெம்புந்திய கதிரோனொளி"யென விளங்குபவர். இம்மகவு அவரது தண்ணருளாலே போந்தது. ஆதலின் இது மதி போன்றது என்றார் என்றலுமாம். ஞாயிற்றின் ஒளி "வெம்பு உந்திய"தாகலின் வெப்பமுடையது; அதனைப் பல உயிர்களும் தரித்தாற்றலாகாதாம்; ஆயினும் அந்த ஞாயிற்றின் ஒளிபெற்று விளங்கும் மதி அமுதமாக்குவது; "தோற்று மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே,சாற்று மின்பமுந் தண்மையுந் தந்துபோ, யாற்ற வண்டமெ லாம்பரந் தண்ணல்வெண், ணீற்றின் பேரொளி" (308) போன்றது; அது ஞாயிற்றின் கதிரொளியைத் தான் பெற்று அதனால் தண்ணிதாய்விளங்குவது என்பது பௌதிக சாத்திர உண்மை. அதுபோல இந்தப் பான்மதியும் முருகனாகிய ஞாயிற்றின் அருளொளியால் விளங்கி உலவி உலகுக்கு அன்பாகிய தண்ணொளி பரப்பி உய்விப்பதாயிற்று என்றதொரு குறிப்பினாற் பயனுவமையாதலும் பெறப்படும்.

**மகப் பயந்த போது** - தத்தை மகவை யீன்றபோது. தத்தை என்பது வருவிக்க. பயந்தபோது - பொழிந்தது - ஆர்த்த என வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.

**பலிகளோக்கி** - பலிகளோச்சி—என்பனவும் பாடங்கள். 13

663. (வி - ரை) **கரிப் பரு மருப்பின் முத்து** - யானைக்கொம்பு மூங்கில் முதலிய பதின்மூன்றிடங்களில் முத்துப்பிறக்குமென்ப. **கரி**-யானை. **பருமருப்பு**-பெரிதாய்நீண்டு முற்றியகொம்பு. "மத்தவெங் களிற்றுக் கோட்டு வன்றொடர் வேலி" ( 51) என்ற தன் கருத்தை நினைவுகூர்க. **கழை** - மூங்கில். **செழுநீர்** - செழியநீர்மை- இதனை நீரோட்டம் என்பது வழக்கு. "வேரல் விளையுங் குளிர்முத்து" (492) என்றது காண்க. **நீர்** - ஒளி என்பாருமுண்டு. இவை பற்றி (492) உரைத்தவை காண்க.

**பொருப்பினின்மணி** - நவமணிகளில் முத்தும் பவளமு மொழிந்தவற்றில் மலையிற் கல்லின் விளைவோடு சேர்ந்து விளைந்துபடும் பச்சை நீலம் முதலிய ஏனை மணிகள். இவைபற்றி 225ல் உரைத்தவை காண்க. ஏனைமணிகளினின்றும் முத்தினை வேறு பிரித்து முதன்மைபெறக் கூறுதற்குக் காரணம் மேல் உரைக்கப்பட்டது.

**வேடர் பொழிதரு மழை** - பலகாலம் பிள்ளைப்பேறின்றி நின்றதம் தலைவனது குடி விளங்குதற்கும், தாம் இளந்தலைவனைப் பெறுதற்கும் ஓர் ஆண்மகவு பிறந்தபெருமகிழ்ச்சி

யிஞல், காகன்கீழ் வாழும் குடிகளாகிய வேடர்கள் மழைபோல முத்துக்களையும் ஏனைய மணிகளையும் இரவலர்க்குப் பொழிந்தார்கள் என்பது. இம்மணிகள் ஏனை நிலத்தார்க்கு அரியனவாய் மிக்கவிலை பெறுமாயினும் இவர்களுக்கு விலையின்றி மிகுதியாய் இலகுவிற்கிட்டுவன ஆதலின் அவர்கள் அவற்றை எளிதாக வழங்குதல் கூடிற் றென்க. "குறவர் பன்மணி யரித்திதை விதைப்பன குறிஞ்சி" என்ற திருக்குறிப்புத் தொண்ட நாயனர் புராணமும் (7) காண்க. இங்கு அரசன்மகப்பேறு பெற்றது குறித்துக் குடிகள் மகிழ்ந்து கொண்டாடியதும், பின்பு அரசன் தன்மகனது வில்விழாவுக்குக் குடிகளை அழைத்துச் சிறப்புச் செய்ததும், பின்னர்க் குடிகள் அரசனிடம் தமது குறைகளை முறையிடத் தன் மகனை அவர்களுக்கு அரசனுக்கொள்ளுமாறு கொடுத்ததுமாகிய அரசர்க்கும் குடிகட்கு மிடைகின்ற அரசவிசுவாசச் செயல்கள் காண்க. மனுநீதிச் சோழர், கழறிற்றறிவார், மூர்த்திநாயனர் புராணசரிதங்களும் பிறவும் காண்க. இக்காளில் இதற்கு மாறுக அரசர் முடிகளை அழித்து அலைக்கழிப்பதாய்க்கிளம்பி நாடெங்கும் பரவி வளரும் பகை உணர்ச்சியும் சிந்திக்க.

**வரிச்சுரும்பு.....பொழிந்தது** - என்றது தேவர்கள் கற்பகப்புதுப்பூ மழை பொழிந்தனர் என்றதாம். நாயனர் பேறு பெற்ற ஞான்றும் "வானவர் பூவின் மாரி பொழிந்தனர்" (828) என்றது காண்க. பெரியார்கள் இறைவனடி சேர்ந்து முத்தி பெற்ற திருநாளைக் கொண்டாடுதலே மரபன்றிப், பிறந்தநாள் (செயந்தி) கொண்டாடுதல் சைவர் மரபன்று. இப்பிறப்பில் முத்திபெறுதற்கே அவதரித்தவர் இக்காயனாதனின் அவர்தந்திருவவதாரமே முத்திபோலப் பெருமையுடையதென்பது வானின்மலர் மழையாலும் அமரர்துதியாலும் உணர்த்தப்பட்டது. இவ்வாறே, முத்தி தருதற்கென்றே அவதரித்த திருஞானசம்பந்தமூர்த்திகள் திருவவதாரத்திலும் உரைத்தது காண்க. ஏனைநாயன்மார்கள் முத்தி பெற்ற காலத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகளுங் காண்க. **வரிச்சுரும்பு அலைய** - மழைபோலப் பொழிந்த புதிய பூக்களில் மொய்த்த வண்டுகள் அவை வீழும்போது மோதுண்டு அலைந்தன என்பது. **வரிச்சுரும்பு** - வரிகளையுடைய வண்டுகள். **வானின் மலர் மழை** - தேவருலகப் புதுமலராகிய (கற்பகமலர்) மழை. "தெய்வப் பூவின் மாமழை" (398), "கதிர்வி சும்பிடை காத்திட நிரந்தகற் பகத்தின், புதிய பூமழை யிமையவர் மகிழ்வுடன் பொழிந்தார்" (546) முதலியவை காண்க.

**எங்கும் பொழிந்தது** - **எங்கும் ஆர்த்த** - என ஈரிடத்தும் கூட்டுக.

**அரிக்குறுந்துடி** - "சில்லரித்துடி" (654) பார்க்க. குறிஞ்சிப் பறைவகையிலொன்று.

**அமரர் துந்துபி** - தேவவாத்திய வகை. இது தெய்விகச் சிறப்பு நிகழும்போது ஆர்க்குமென்ப. ஆளுடையபிள்ளையார் திருவவதாரத்தின்போது கண்ட நிகழ்ச்சிகளையும் இங்கு உன்னுக.

(659) அரியதென்று எவருங் கூற - காதலாலே - (660) விட்டு - தூக்கி - காற்றிதூங்க - செய்து - எடுத்த பின்றை - (661) நாகற்கு - அண்ணலாரருளினாலே - (662) விளங்க - தித்தைபாற் கருப்பரீட - திங்கள் செல்ல - தவத்தினாலே - மகப்பயந்தபோது - (663) வேடர் பொழிதரு மழையெயன்றி - வானின் மலர்மழை (எங்கும்) - பொழிந்தது ; - எங்கும்-துடியெயன்றி - துந்துபியும் ஆர்த்த என இவ்வைக்து பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக் கொள்க. 14

*664. அருவரைக் குறவர் தங்க ளகன்குடிச் சீறூ ராயம்
பெருவிழா வெடுத்து மிக்க பெருங்களி கூருங் காலைக்
கருவரை காள மேக மேந்திய தென்னத் தாதை
பொருவரைத் தோள்க ளாரப் புதல்வனை யெடுத்துக் கொண்டான்.

(இ - ள்) வெளிப்படை. அரிய மலைக்குறவர்களுடைய பெரிய குடிகள் வாழ்கின்ற சிற்றூரில் வசிக்கும் மக்கட் கூட்டம் விழாக் கொண்டாடி மிக மகிழ்ச்சிகூருங் காலையில்

கரிய மலையானது காளமேகத்தை மேலேகொண்டு தாங்கியதேபோலத் தந்தை யாகிய நாகன் போர்செய்யும் மலைபோன்ற தோள்கள் ஆரும்படி புதல்வரை எடுத்துக் கொண்டான்.

**(வி - ரை) வரைக்குறவர்** - மலையில் வாழும் குறவர். "மலைக ளாளு மறக்குலத் தலைவர்" (678) என்றது காண்க.

**அகன்குடி** - பெருங்குடிகள். நீண்டகாலம் வழிவழி வரும் பெருமையும் குல வொழுக்கப் பெருமையும் முதலியன குறித்தது.

**சீறூர்** - சிற்றூர். குறிஞ்சி நிலத்து ஊர்களின் பெயர். ஏற்றமும் இழிவுமாயுள்ள நில அமைப்பினாலும், காடுகள் சூழ்வதாலும், மருத நிலத்திற்போலப் பெருநகரங்கள் குறிஞ்சி நிலத்தில் அமைத்தல் இயலாது. சிற்சில மனைகள் கூடிய தொகுதிகளாய் அங் கங்கு அமைந்து வாழ்வர் அந்நிலமக்கள். ஆதலின் இவை சீறூர் - சிறுகுடி எனப் பெயர் பெறும். **ஆயம்** - ஒரு சார்புபற்றிய மக்கட் கூட்டம். இங்கு நாகனுடைய தலை மையின்கீழ் வாழும் குடிமக்களின் கூட்டம் குறித்தது.

**பெரு விழா - பெருங்களி** - பெருமகிழ்ச்சியால் முத்தும் மணியும் மழைபோலப் பொழிந்தனர் என மேற்பாட்டிற் கண்டோம். அம்மகிழ்ச்சி பற்றியே பெருவிழாக் கொண்டாடினர். பெருங்களியாட் டயர்ந்தனர். **விழா** பொதுவிற் பலர் கூடி மகிழ்தல். **களி** - அவ்வவர் மனையில் தாந்தாம் மகிழ்தல்.

**கருவரை காளமேகம் ஏந்தியதேன்ன** - "பான்மதி உவரி ஈன்றெனென" - (662) என்றது மகப்பயந்தபோது தாயும் சேயுமாய் நின்ற நிலைக்கும், இங்குக் கூறியது, அம்மகவினை எடுத்துக்கொண்டு தந்தையும் மைந்தனுமாய் நின்ற நிலைக்கும் உவமைக ளாம். இதுவும் உருவும் தொழிலும் பற்றிய உவமம். தந்தை எடுத்தேந்திய நாளில் குழவி தனது குலத்துக் கியல்பாகிய கருநிறம் மிக்கு விளங்கிற்று என்பது.

**கருவரை** - கரிய மலை. **காளமேகம்** - கீர் சுமந்து பெரும்பெயல் பெய்யகின்ற கருமேகம். மலையின் உச்சியில் நின்ற சூல்கொண்ட மேகம் பெய்யும் பெருமழையினால் உலகு உய்வதுபோல இக்குழவி பின்னர்க் காளத்தியுச்சியில் நின்று முன்பு செய்தவத் தின் விளைந்த அன்பு மழையினால் உலகம் உய்திபெற நின்றதென்ற குறிப்பினால் பயனுவமையாதல் ஈண்டும் பெறப்படும்.

**பொருவரைத் தோள்கள் ஆர்-போர்த்தொழில்வல்ல** இருதோள்களும் பொருந்த. **புதல்வன்** - "புதல்வர்ப்பேறே" (659) என்றதுபோல இங்கும் கூறியது காண்க.

**எடுத்துக் கொண்டான்** - எடுத்துக் கையில் ஏந்திக் கொண்டான். குழவியை எடுத் தல் என்பது உலக வழக்கு.

**வலித்தோள்களார்ப்ப**—என்பதும் பாடம். 15

665. கருங்கதிர் விரிக்கு மேனிக் காமரு குழவி தானு
மிரும்புலிப் பறழி னேங்கி யிறவுள ளாகி வேயன்றி
யரும்பெற லுலக மெல்லா மளப்பரும் பெருமை காட்டித்
தருங்குறி பலவுஞ் சாற்றுந் தன்மையிற் பொலிந்து தோன்ற, கசு

666. அண்ணலைக் கையி லேந்தற் கருமையா "லுரிமைப் பேருந்
திண்ணனென் றியம்பு" மென்னத் திண்சிலை வேட ரார்த்தார்;
புண்ணியப் பொருளா யுள்ள பொருவில்சீ ருருவி னீனைக்
கண்ணினுக் கணியாத் தங்கள் கலன்பல வணிந்தா ரன்றே. கஎ

665. (இ - ள்) வெளிப்படை. கரிய கதிரொளியை விரித்து வீசுகின்ற அழகிய மேனியுடைய அக்குழவியும் பெரிய புலிக்குட்டிபோல மிக்கோங்கி, வேடர்களாலே

மட்டுமன்றி உலகமெல்லாம் அளத்தற்கரிய பெறற்கரிய பெருமைகாட்டித் தரும் குறிகள்பலவும் எடுத்துச்சொல்லக்கூடிய தன்மையினாலே விளங்கித் தோன்ற, கசு

666. (இ - ள்) வெளிப்படை. பெருமையுடைய அக்குழவியைக் கையில் எடுத்தற் கரியதாயிருந்தமையால்"உரியபேரும் திண்ணனே என்று வைத்து அழைமின்கள்"என்று (நாகன்) சொல்ல, வலிய சிலேவேடர்கள் ஆரவாரித்தனர். புண்ணியத்தின் பொருளா யுள்ள ஒப்பற்ற சிறப்புக்களின் உருவுடைய குழவியைக் கண்ணுக்கு அழகாகத் தங்க ஞுக்குரிய பல அணிகலங்களாலும் அன்றே அணிந்தார்கள். கஎ

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

665. (வி - ரை) கருங்கதிர் விரிக்கும் மேனி - கரியமேனி - கதிர்விரிக்கும் மேனி என்று கூட்டுக. காளமேகம் (664), மணிநீலமலை யொன்று (701) எனக் கூறுதலால் நாயனாது திருமேனி மிகக் கரிய நிறங்கொண்டு விளங்கிய தென்பதாம். ஆயின் கருமை ஒரு தனி நிறமன்று, ஏனை நிறங்களின் இன்மையே என்றும், இருள் ஒரு தனிப்பொருளன்று, அஃது ஒளியின் அபாவமே என்றும் கூறுவார் கூற்றுப் பொய்யா யொழிய, இங்கு நாயனாது மேனி கரியதாயினும் அது தனக்குரிய கதிரை விரித்து வீசி விளங்கிற்று என்று கூறினார்.ஏனை நிறங்களையுடைய பொருள்கள் ஞாயிற்றின் கதிர் தம்மேற் பட்டபோது அக்கதிரிலே உள்ள ஏழு நிறங்களில் தத்தமக் குரிய நிறமுடைய ஒளியைப் பிரதிவிம்பிக்கும் சத்தியினால் அவ்வந் நிறத்தைக் காட்டு வனவென்றும், கருமைநிறம் அவ்வாறன்றி ஞாயிற்றின் கதிரில் உள்ள கிரணமுழு தும் தன்னுள் வாங்கி வெளியில் விரிக்காது நிற்குமெனவும் ஒளிநூலோர் கூறுவர். ஆயின் இங்கு நாயனாது திருமேனி கரிதேயாயினும் கதிர்விரிக்கு மாற்றலுடன் விளங் கிற்று என்பது.

**காமநு குழவி** - அழகிய மகவு. காமம் வரும் என்பது விகாரத்தால் **காமநு** என நின்று கண்டார்க்கு விருப்பம் வரும் என்பதாயிற்று எனப் பொருளுரைப்பர் அடி யார்க்கு நல்லார். காமர் மரு என்பது **காமநு** என்றுயிற்று என்பாருமுண்டு. கரிய பொருளும் அழகியவாமோ? எனின், ஆம் என்க. அழகுடையவன் எனப்படும் மன்ம தன் கரியன். அவன் தந்தை திருமாலும் கரியன். திருமாலினது பத்துப் பிறப்புக் களுட் சிறந்த இராமன், கண்ணன் என்ற இரண்டு பிறப்பும் மிகக்கருமையும் அழகும் பெற்றன என்பர்.

**புலிப்பறழ்** -புலிக்குட்டி. **இறவுளர்** - வேடர். **அளவேயன்றி** - அளப்பரும் **அநம்பெறல் பெநுமை** எனக்கூட்டுக. **அநம்பெறல் உலகம் எல்லாம் அளப் பரும்** எனக்கொண்டு பெறற்கரிய அறிவுடைய பெரியோர் எவராலும் அளத்தற் கரிய என்றுரைத்தலுமாம். இப்பொருளில் இக்குழவி காட்டித்தந்த பெருமை, இற வுளர் மட்டுமேயன்றி, அறிவாற்பெரியோர் எவரும் அளந்தறிதற்கரிதாயிற்று என்க. இங்கு **உலகம்** - உயர்ந்தோர். நாயனாரைப் பெரியோர் எல்லாரும் அரியர் என்று பாராட்டிப் போற்றியிருத்தல் காண்க. இக்குறிப்பு இவரது குழவிப்பருவத்து நின்றே விளங்கிற்று என்றவாறு.

**பெநுமை காட்டித்தநும் குறிபலவும் சாற்றும் தன்மை** - சாமுத்திரிக இலக் கணம் இரேகைநூல் முதலிய உடல்நூற்கலைகளி னறிவாலே இக்குழவியிற் காணும் குறிகளைக்கண்டு அக்குறிகளையுடைமை காரணமாக இக்குழவி யடையகின்ற பற்பல பெருமைகளையும் எடுத்துச் சொல்லுமாறு நின்ற தன்மை.

**பொலிந்து** - விளக்கமுற்று. **தோன்ற** - ஆர்த்தார் - என்று கூட்டி முடிக்க. நாகன் மிக வயதுசென்றவனுதலின் உலக அனுபவத்தினால் அவனுக்குத் தோன்ற என்றலுமாம்.

666. (வி - ரை) - **அண்ணலே** - தோன்றநின்ற அவ்வண்ணலே என்று தொடர்ந்து கொள்க. **அண்ணல்** - பெருமையிற் சிறந்தோன்.

**ஏந்தற்கு அருமையால்** - கையில் எடுத்தற்கு அரிதாக அவ்வளவு திண்மை பெற்று விளங்கியதனால். **உரிமைப்பேர்** - வேடர் குலத்தில் காரணம்பற்றிப் பேரிடுகின்ற வழக்குக்கு உரிய பேர். அடிப்பேர், குடிப்பேர், பேரன் (பாட்டன்) பேர், பண்புபற்றிய பேர் எனப் பற்பல காரணங்களால் ஒருவற்கு ஒருபேர் இடுதல் உலக வழக்கு.

**"திண்ணன் என்று இயம்பும்"** என்ன - இது சொல்லியது மகவைக்கையில் எடுத்துக்கொண்டு கண்ட நாகன். எனவே **திண்ணன்** என்பது நாயனாருக்குத் தந்தையினால் இடப்பட்ட இவரது பண்புபற்றிய காரணப்பெயராம் என்க. அவன் இவரது உடலின் திண்மைபற்றியே இப்பெயரிட்டான். உண்மையில் அது அவனே அறியாமலே முன்னமே நிரம்பிய இவரது தவத்தின் திண்மையும், தலையன்பின் திண்மையும் குறித்ததும் காண்க. இவ்வாறு தெய்வச்செயலாய்ச் சிலர்க்குப் பொருத்தமாகப் பெயர்கள் அமைவனவாம்.

**திண்சீலை வேடர் ஆர்த்தார்** - பேரிட்ட அழகும் மரபும் பற்றி வேடர் மகிழ்ச்சி பொங்கி ஆர்த்தனர். நாமகரணம் என்பது வேடர்களுள்ளும் மகிழ்ச்சிக்குரியதொரு சிறப்பா யிருந்தது போலும்.

**புண்ணியப் பொருள்** - புண்ணியம் செய்தலாற் பெறப்படும் பொருளாகிய. **பொருவில்** - ஒப்பற்ற. **சீர் உருவம்** - சிறப்புக்களின் உருவம். **சீர்** - மேற்பாட்டிற் சொல்லிய பெருமைகாட்டிய குறிபலவுடைய சிறப்பு.

**கண்ணினுக்கு அணியா** - புண்ணியப் பொருளாயுள்ள பொருவில் சீருருவுடைமையின் அவர்க்கு வேறு அணி மிகையாயினும், தங்கள் கண்பார்வையில் அழகுதரும் பொருட்டு. **தங்கள் கலன்பல** - தங்கள் நாட்டுக்கும் வேடர் தலைமைக்கும் குலத்துக்கும் உரிய பலஅணிகள். இவை மேல்வரும் பாட்டினும், 669-670 பாட்டுக்களினுங் காண்க. **அன்றே** - அப்பொழுதே. அசையென் றொதுக்குவாருமுளர். 17

667 வரையுறை கடவுட் காப்பு மறக்குடி மரபிற் றங்கள்
புரையிறைன் முறைமைக் கேற்பப் பொருந்துவ போற்றிச் செய்து
விரையிளந் தளிருஞ் சூட்டி வேம்பிழைத் திடையே கோத்த
வரைமணிக் கவடி கட்டி யழகுற வளர்க்கு நாளில், கஅ

*668. வருமுறைப் பருவந் தோறும் வளமிகு சிறப்பிற் றெய்வப்
பெருமடை கொடுத்துத் தொக்க பெருவிறல் வேடர்க் கெல்லாந்
திருமலி தழனி பொங்கச் செழுங்களி மகிழ்ச்சி செய்தே
யருமையிற் புதல்வர்ப் பெற்ற வார்வமுந் தோன்ற வுய்த்தார். கக

(இ - ள்) 667. வெளிப்படை. மலைவாழும் கடவுட் காப்பாகத் தமது மறவர்குடி மரபிலே வந்த குற்றமற்ற பழையவழக்குக்கேற்குமாறு பொருந்துவனவற்றை யெல்லாம் விரும்பிச் செய்து, வாசனையுடைய இளந்தளிர்களைச் சூட்டி மலைவேப்பங் கொட்டைகளை ஒழுங்குபடுத்தி இடையிடையே கோத்த அரையிற்றரிக்கும் பலகறைமணிக் கோவையைக் கட்டி அழகுபொருந்த வளர்க்கின்ற நாளிலே, கஅ

668. (இ - ள்) வெளிப்படை. அதன்மேல் முறையாக வருகின்ற பருவங்கள் தோறும் வளமிக்க திருவிழாவுடன் தெய்வங்களுக்குப் பெருமடைகளைக் கொடுத்து, அவ்வக்காலங்களில் மங்கலவாத்தியங்கள் மேன்மேல் ஒலிக்க, வந்து கூடிய வேடர்களுக்

கெல்லாம் பெருங் களியாட்டினுல் மகிழ்ச்சி விளைத்து, அருமையாற் புதல்வரைப் பெற் றெடுத்த ஆசையும் வெளிப்படச் சிறப்பு நடத்தினுர்கள். ககூ

667. (வி - ரை) **வரையுறை கடவுள் காப்புச்...கெய்து** - மலைவாழ்கின்ற தெய் வங்கள் இக்குழவியைக் காப்பனவாக என்று தொழுது அதன்பொருட்டுத் தமது பழையவழக்குப்படி வேண்டுவன செய்து. அவைதாம், கைகளிலும் கால்களிலும் இரும்புகலந்த கலன்களிடுதல் முதலியனவாய் நிலத்தோறும் மரபுதோறும் வெவ் வேறுவகைப்படும். **காப்பு** - என இக்காளில் மணி - பொன் - வெள்ளி முதலியவற்றுற் சிறுகுழவிகட்கு இடும் வழக்கும் இக்கருத்தே பற்றியது. ஆயின் காப்பு - என்ற போல் இயன்று காவல் செய்ய இடுகின்ற இவை காவலுக்கு மாருக அக்குழவிக்கு இறுதிசேரச் செய்துவிடுகின்றன. முன்னேர் கையாண்ட முறைக்கு மாருய்நடந்து மக்கள் இவ்வாறு தன்பப்பட்டிழலுதல் வருந்தத் தக்கது.

குழவிகட்குச் செய்யும் முதற்சடங்கு பேரிடுதலாம். (காமகாணம்). அதனை மேற் பாட்டிற் கூறி, அதனையடுத்துள்ள பருவங்களில் முதலாவதாகிய காப்புப்பருவச் செய் தியை இப்பாட்டானும், அதன்மேல் ஓராண்டுவரைவரும் ஏனைப்பருவங்களை அடுத்து வரும் பாட்டானும், ஆண்டிற்குமேல் வரும் வளர்ச்சியைச் சிலேக்கலேபயில் பருவம்வரை அப்பால் எட்டுப் பாட்டுக்களானும் கூறி, இவ்வாறு நாயனுரது வளர்ச்சியைப் பாட் டுக்களின் வளர்ச்சியாற் கொண்டு செலுத்திக் காட்டிய அழகு காண்க. இவைபற்றி 279-ம் பாட்டில் உரைத்தவையும் பார்க்க.

**வரையுறை கடவுள்** - முருகன் என்றுரைப்பாருமுண்டு. முருகவேள் முன்றிலிற் பரவுதல் செய்து பெற்ற இக்குழவியை முருகனேகாக்க என்று காப்புச்செய்தல் மிகை யாம். "தாம்வ ளர்த்ததோர் சுச்சு மாமர மாயி னுங்கொலார்" (திருவாசகம்) என்பது உண்மை. திருமாலே முன்னிட்டுக் காப்புக் கூறுவது பிள்ளைக்கவி மரபு. பற்பல மரபு வழக்கும் பற்பல நிலவழக்கும் பலவேறு திறப்படுவன. இங்கு வேடர் தங்குலத்தின் பழைய மரபுபற்றியே பொருந்துவன போற்றிச் செய்தார் எனக் கூறினுராதலானும், பின்னர் "அலர்பகல் கழிந்த வந்தி யையவிப் புகையு மாட்டி" (676), "காட்டிலுறை தெய்வங்கள் விரும்பி யுண்ண" (699), "தலைமரபில் வழிவந்த தேவராட்டி" (696) எனவும் பிறவும் கூறுகின்றவாற்றுனும், இங்கு **வரையுறை கடவுள்** என்றது மலை வாழும் சிறு தெய்வங்கள் எனக் கொண்டுரைக்கப் பட்டது. **வரை உறை** என்றதனுல் மலையில் உறைகின்ற - வாழ்கின்ற என்ற குறிப்பும் காண்க. முருகப் பெருமான் வரை உறைவார்மட்டுமன்றி வரைக்குரிய முதல்வனுதலும் உணர்தற்பாலதாம். **மறக்குடிமரபு** - வேடர்குலம். **புரையில் தொல்முறைமை** - இவர்களது வாழ்க்கை கொல் எறி குத்து என்ற ஆர்ப்பினுலறியப்படுவது ; ஆறலைத்துண்பது இவர் தொழில் ; இவர்கள் உயிர்க் கொலை செய்து ஊனுண்பவர்கள்; குற்றமே குணமா வாழ்வார்; இக்குலத்தைப்புரையில் என்ற தென்னே? எனின், இவை இவர்களது மரபுக்குரிய தொன்னெறியாதலின் இவ் வாறு கூறினுர். இவையே குலவொழுக்கம் - பிறப்பொழுக்கம் என்பர். " குலமிலராகி லும் குலத்துக் கேற்பதோர் நலம்" என்ற அப்பர் சுவாமிகள் தேவாரமு மிக்கருத்தே குறித்ததென்ப.

**பொருந்துவ** - காப்புக்குரியவை. பலரும் பலவாறு இயற்றுவரேனும், இவர் தங்கள் குலத்துக்கு ஏற்றபடி பொருத்தமானவற்றையே செய்தனர். ஆனுடையபிள்ளையா ருக்கு அவர்தம் குலத்துக்கு ஏற்றபடி பொருந்திய திருநீற்றுக்காப்பு இட்ட வரலாறு இங்கு நினைவுகூர்க.

**விரை இளம் தளிரும் சூட்டி** - மணமுடைய இளந்தளிர்களைச் சூட்டுதல் கொசு முதலிய சிறு பிராணிகளும் பிணி முதலியனவும் அணுகி நலியாமைப்பொருட்டு.

**வேம்பு.....கட்டி** - பலகறைகளைக்கோத்து அரைஞாண்போல அணிந்தனர். அக்கோவையின் இடையிடையே மலைவேம்பங் கொட்டைகளை இழைத்துக்கோத்தனர்.

வேப்பங்கோலைத் துண்டங்களாகத்தறித்து மணிபோல் இழைத்துப் பலகறைஅரைஞாண் கோவையின் இடையிடை கோத்தனர் என்றலுமாம். இவையும் **காப்புச்** செய்தலின் ஒருபகுதி. **மணிக்கவடி** - பலகறை மணி.

அவ்வநிலத்து வாழும் மக்கள் தத்தமக்கு வேண்டியபொருள்களை அவ்வநிலத்துப் பொருள்களினின்றே தேடிக்கொண்டு வாழும் இயற்கைவாழ்க்கையே நமதுநாட்டு மூத்தையோர் கைக்கொண்டொழுகிய முறை. இதுபற்றியே அவ்வத்திணைக் குரிய முதல் - கரு-உரிப்பொருள்கள் என்று வகுத்தது தமிழ் இலக்கணம். ஒரோர் சிறு பொருளுங்கூட அயல்நாட்டினின்றும் வரச்செய்து பலவாறும் இடர்ப்பட்டொழிவது இந்நாள் நாகரிகமென்ற பேரால் வாழும் நமது ஆபாச அநாகரிக வாழ்க்கையாய் விட்டது வருத்தத்தக்கது.

**அழகுற வளர்க்கும்** - மேலே சொல்லிய காப்புமுறையும், சூட்டுதல் கட்டுதல் முதலியனவும் குழவிக்குக் காப்புச்செய்தது மட்டுமன்றி அழகுஞ் செய்த தென்க. நாளில் வரும்பாட்டில் உய்த்தார் என்ற வினைமுற்றுக்கொண்டுமுடிந்தது. 18

668. **(வி - ரை) முறைவநம் பரவந் தோறும்** - என மாற்றுக. பருவங்களைப் பற்றி முன்னர் உரைத்தவை காண்க. **தெய்வப் பெருமடை - மடை**-வனதெய்வங்களுக்குச் செய்யும் பெரும்பூசனை. அஃதாவது காய் கிழங்கு மாமிசம் முதலிய பல பிரப்புக்களைத் தனித்தனி குவித்து நிவேதித்து வழிபடுதல் என்பர் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள். **மடை** என்பது பெரும் பொங்கற் சோறு முதலிய நிவேதனங்களைச் சிறு தெய்வங்களுக்கு ஊட்டிப் பெரும்பூசை யிடுதல் என்க. **மடு**-(உண்) என்ற பகுதி, செயப்படு பொருளில் வந்த ஐகார விகுதி பெற்று **மடை** - (உண்ணப்படுவது) - என்றுயிற்று போலும். இது கிராமிய வழக்குச் சொல். **மடை கொடுத்து** - பலிகள் இட்டு.

**தொக்க பெருவிறல் வேடர்** - இம்மகிழ்ச்சி கொண்டாட வந்துகூடிய வேடர்கள். **களி** - களியாட்டு - **களிமகிழ்ச்சி** - ஒருபொருட் பன்மொழித்தொடராய் மிகுதிப் பொருளில் வந்ததென்பாரு முண்டு. **மகிழ்ச்சிசெய்தே** - மகிழ்ச்சியை விளைத்து. **திரு மலி துழனி பொங்க** - **திரு** - மங்கலம்; **துழனி** - வாத்திய ஓசைகள்; **பொங்குதல்** - மிக முழங்குதல். **புதல்வர் அருமையிற் பெற்ற** என மாற்றுக. **அருமை** - மிக்க முதுமையிற் பெற்றதும் - முருகனருளும் - கையிலேந்தற்கருமையும் - பெருமை காட்டும் பலகுறியும் - முதலிய பல அருமைகளும் குறித்தது.

**புதல்வர்ப்பெற்ற** - இரண்டாம் வேற்றுமைத் தொகை. முன்னரும் (664) **புதல்வன்** என்ற சொல்லாற் குறித்தது காண்க.

**ஆர்வமுந் தோன்றுதல்** - ஆசையும் வெளிப்பட்டு நிற்றல். உம்மை இறந்தது தழுவியது. **உய்த்தார்** - மகப்பேற்றின் விழாச்சிறப்புக்களை நடைபெறச் செய்தார்.

**கழிமகிழ்ச்சி**—என்பதும் பாடம். 19

669. ஆண்டெதி ரணைந்து செல்ல விடுமடித் தளர்வு நீங்கிப்
பூண்டிகழ் சிறுபுன் குஞ்சிப் புலியுகிர்ச் சுட்டி சாத்தி
மூண்டெழு தினத்துச் செங்கண் முளவுமுள் ளரிந்து கோத்த
நாண்டரு மெயிற்றுத் தாலி நலங்கிளர் மார்பிற் றூங்க, உ0

670. பாசொளி மணியோ டார்த்த பன்மணிச் சதங்கை யேங்கக்
காசொடு தொடுத்த காப்புக் கலன்புனை யரைஞாண் சேர்த்தித்
தேசுடை மருப்பிற் றண்டை செறிமணிக் குதம்பை மின்ன
மாசறு கோலங் காட்டி மறுகிடை யாடு நாளில், உக

671. தண்மல ரலங்கற் முதை தாய்மனங் களிப்ப வந்து
புண்ணியக் கங்கை நீரிற் புனிதமாந் திருவாய் நீரி
லுண்ணினைந் தமுத மூறி யொழுகிய மழலைத் தீஞ்சொல்
வண்ணமென் குதலைச் செவ்வாய் குதட்டியே வளரா நின்றார். உஉ

669. (இ - ள்) வெளிப்படை. ஆண்டு நிறைந்து எதிராம் ஆண்டு வந்தபின்பு இடும் அடியின் தளர்ச்சி நீங்கிச் சிறுநடைப்பருவம் வந்து சிறிய புன்மயிர்த் தலையில் பூணுகந் திகழும் புலிநகச்சுட்டி சாத்தி, மூண்டெழுகின்ற சினமுடைய செங்கண் முள்ளம்பன்றியின் முள்ளே அரிந்து இடையிடை கயிற்றிற்கோத்த புலிப்பல் மாலையை நன்மை மிக்க மார்பில் தொங்கவைத்து, உ0

670. (இ - ள்) வெளிப்படை. பசிய ஒளியுடைய மணிகளோடு எனைப் பலமணி களையும் கோத்த சதங்கை ஒலிக்கக், காசுடன்கூட்டிக் கட்டிய கலன்கள்புனைந்த அரைநாணையும் கட்டி, ஒளியுடைய யானைக்கொம்பினுலியன்ற தண்டையும் மணிகள் செறிந்த குதம்பையும் மின்ன இவ்வாறு குற்றமறும் திருக்கோலத்தைக் காண்பார்க் குக் காட்டிக் கொண்டு வீதியில் விளையாடுகின்ற நாளில், உக

671. (இ - ள்) வெளிப்படை. குளிர்ந்த மலர்மாலை சூடிய தந்தையும் தாயும் மனமகிழக் குறுநடை நடந்துவந்து, புண்ணியமான கங்கைநீரினும் புனிதமாகிய திருவாய்நீரிலே உள்ளேநினைந்து அமுதமாக ஊறி மேல்வழியும் இனிய மழலைச் சொற்களை அழகியமெல்லிய செவ்வாயினைக் குதட்டிச் சொல்லி வளர்கின்றார். உஉ

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

669. (வி - ரை) **ஆண்டு.....நீங்கி** - முதல் ஆண்டின் நிறைவு தளர்நடைப்பருவம். அதன் மேல் இரண்டாவதாண்டு நடந்து விளையாடும் பருவம் என்பர். வளர் பருவ முறையாண்டு வருவதன்முன்.....சென்கின்று.....தளர் நடையிட்டருளினார். (50), பாதமலர் நிலம்பொருந்தப் பருவமுறை யாண்டொன்றின், மீதணைய நடந் தருளி விளையாடத் தொடங்கினார் (51) என்ற திருஞானசம்பந்தநாயனார் புராணங் காண்க. **ஆண்டு எதிர் அணைந்து செல்ல** - வரும் ஆண்டை எதிர்கொண்டு அழைத்துத் தான் நின்றுவிட்ட ஆண்டு. **இடும் அடித்தளர்வு நீங்கி** - எடுத்து வைக்கும் அடித்தளர்ச்சி. தாயர் தாதியர் கைப்பற்றி நடைபழகும் பருவம் நீங்கி. "எட்டாவது மாதம் எடுத்தடி வைக்கும்" என்பர். அதன் மேலும் நான்குமாதங்கள் சென்றதனால் அடித்தளர்வு நீங்கிற்று. நீங்கி மறுகிடைஆடும் நாளில் என வரும்பாட்டுடன் கூட்டி முடிக்க.

**பூண்திகழ் சுட்டி சிறுபுன் குஞ்சி சாத்தி** - என மாற்றிக் கொள்க.

**புலியுகிர்ச்சுட்டி** - புலிநகத்தை அரிந்து சுட்டி என்னும் அணியாகக் கட்டிச் சாத்துதல் வேடர்மரபு. **சுட்டி** - சிறுர்க்குத் தலையின் முன்புறம் அணியும் அணிவகை. புலிநகத்தை ஒற்றையாயேனும் எதிரெதிராக இரண்டாகச் சேர்த்தேனும் பொன்னுற் கட்டிச் சிறுர்க்கு மார்பிலணிதல் இந்நாளினும் பலமரபினரிடையும் வழக்குண்டு.

**புலியுகிர் - முளவுமுள் - புலியெயிறு - பாசொளிமணி - மநுப்பு** - முதலிய அணிகலப்பொருள் எல்லாம் வேடர்கள் தமது நிலமாகிய குறிஞ்சி நிலத்துப் பொருள்களினின்றே ஆக்கிக்கொண்டது காண்க. இவ்வாறே 686 - 697 - 710 முதல் 710 வரை - வரும் பாட்டுக்களிலும் காண்க. இஃது எல்லா நிலமக்களுக்கும் ஒக்கும். இவைபற்றி மேல் 667-ல் உரைத்தவை காண்க.

**சிறு புன் குஞ்சி** - ஓராண்டு நிரம்பிய சிறு குழவியாதலின் தலையின் மயிர் சிறிய வாய்ச் சிலவாயிருக்குமென்க. "புன்றலைச் சிறுமை கார்கள்" (618) என்றது நினைவு கூர்க.

**புன்குஞ்சி** - இதனைப் "புன்றலை" (653) என்ற விடத்துக் காண்க. இந்தச் சிறுபுன் குஞ்சி பின்னர் நெறிகொண்ட குஞ்சிச் சுருளாய் (706) நீண்டு செறிந்தது காண்க.

**முண்டு எழ சினத்துச் செங்கண் முளவு** - முள்ளம்பன்றியின் தன்மை கூறினர். இது கோபத்தால் முட்கள் சிலிர்த்துப் பாய்ந்து மேல்விழுந்து பகைப்பிராணிகளை அடர்க்கும் ; சினத்தால் உடல் சிலிர்த்தபோது இதன் உடலில் உள்ள நீண்ட முட்கள் உடலினின்றும் இளம்பி அம்புகள்போலப் பாய்ந்து எதிர்நிற்போரை மிக ஊறுபடுத்தும் என்ப. **முள் அரிந்து கோத்து** - நீண்ட முள்ளினை அளவாகச் சிறு சிறு துண்டங்களாக அரிந்து அவற்றின் உட்டுளையில் நாண்கோத்து மாலையாக்குதல். இவ்வழக்கு இந்நாளினும் பிற மரபினரிடையும் அருகி நிகழ்கின்றது.

**எயிற்றுத் தாலி** - புலிப் பல்லினையும் ஒழுங்குபட அரிந்து துளையிட்டு மாலையில் கோப்பது வழக்கு. 658-ல் உரைத்தவையுங் காண்க. **தாலி** - இங்கு மாலையைக் குறித்தது.

**நலம் கிளர் மார்பு** என்றது பின்னர் இம்மார்பின் வீரத்தால் விளையும் பெருநன்மை நோக்கி. 20

670. **(வி - ரை) பாசொளி மணி** - பசுமை ஒளி என்றது பாசொளி எனப் புணர்ந்து நின்றது. நீலநிறமுடைய மணிவகைகள். இரத்தினங்கள் நாள் செல்லச் செல்ல நீலநிறம் பொருந்த விளையும். இவற்றைக் கெம்புநீல மென்பர். இவை மிக விலையுயர்ந்தன. இங்குக் குறித்தது பச்சையன்று, அது குறிஞ்சிப் பொருளன்மையின். பாசிகள் என்றலுமாம்.

**மணியோடு பன்மணியும் ஆர்த்த சதங்கை** என மாற்றுக. பன்மணி யென்பன ஏனை மணிகள். **சதங்கை** - இடையிலணியும் அணிவகை. **ஏங்குதல்** - சத்தித்தல்.

**காசோடு...அரைஞாண்** - நாய்க்காசு முதலிய செப்புக் காசுகளும் தாயித்துக்களும் வெள்ளெருக்க நாரில் கோத்துக் குழந்தைகட்கு அரைஞாணுகைக்கட்டுதல் மரபு. இது பைசாச முதலியவை வாராமற்காக்குமென்பது நம்பிக்கை.

**தேசுடைமநப்பின் தண்டை** - யானைக்கொம்பு ஒளியுடையது. அதனுற்றண்டை செய்தணிதல் அக்காள் உயர்குடி வழக்கு.

**செறிமணிக் குதம்பை - குதம்பை** - ஒருவகைக் காதணி. இதனைப் பல மணிகளால் ஆக்கியதனுற் செறிமணி என்றார். **சதங்கை ஏங்க** என்றும், **அரைஞாண் சேர்த்தி** - என்றும் தனிவினைகளாற்கூறிய ஆசிரியர் **மநப்புத்தண்டையும் மணிக்குதம்பையும்** ஒளி செய்தலால் இவ்விரண்டையும் சேர்த்து **மின்ன** என்ற ஒருவினையெச்சத்தாற் பிணைத்தார். காலணியும் காதணியும் கூறியதனுல் கால்முதற் றலைவரையும் உள்ள எல்லா அணிகளையுங் குறித்தவாறுமாம்.

**மாசு அறு கோலம் காட்டி** - காண்பாரது மாசுகள் அறுதற்கேதுவாகிய தமது புண்ணியக்கோலத்தைக்காணும்படி காட்டி. **ஆடும்** - விளையாடும். 21

671. **(வி - ரை) அலங்கல்தாதை தாய்** - வெற்றிமாலை முதலியன இங்குத்தாதையாகிய தலைவனுக்குரியன வாதலின், **அலங்கல்தாதை** என்ற ஆசிரியர், **தாய்** என வாளாகூறியது காண்க.

**வந்து** - தாம் இருக்குமிடத்தினின்றும் ஆடுமிடத்தினின்றும் ஓடிவந்து. இது தந்தை தாயரிடத்துக் குழந்தைகள் ஓடிவரும் இயல்பு குறித்தது.

**களிப்ப** - இவர் அவதரித்ததனுலே தந்தைதாய் களித்தனர் என்பதுண்மை. ஆயினும் பின்னரும் இவர் தம்பால் வருந்தோறும் களிக்கும்படி. குழவிகள் தம்மிடம் வருந்தோறும் பெற்றோர் களிகூர்வது இயல்பு. திருஞானசம்பந்தமூர்த்திகள் புராணம் 49 பாட்டுப் பார்க்க. இவ்வாறன்றி, **களிப்ப - மழலைத் தீஞ்சொல் குதட்டி** என்று கூட்டி உரைப்பதுமாம். " மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர், சொற்கேட்ட

லின்பஞ் செவிக்கு" "குழலினி தியாழினி தென்பதம் மக்கள், மழலைச்சொற் கேளா தவர்" (குறள்) என்றபடி குழலிகளின்மழலை கேட்டலாற் பெற்றோர் மிகக்களிப்பர் என்பது. மேலே குறித்த குறளில் மழலையைச் சார வைக்கப்பட்டமையின் யாழ் குழலினுஞ் சிறந்ததென்பது காட்டப்பட்டதென்று கூறுவர். யாழில் சொல்லின் தன்மை தோற்றும்; குழலில் அது தோற்றாது என்ப.

**புண்ணிய.....நீரில்** - கங்கை நீர் புண்ணியமுடையது; தானுங்கேடுறாது தன்னுட்படிந்தாரையும் கேடுறாமற் புண்ணியம்பெறச் செய்யும். இறந்துபட்ட சகரர் களுக்கு நலஞ்செய்த சரிதமுங் காண்க.

நீரின் - நீரினும். இன் - ஐந்தனுருபு உறழ் பொருவுப் பொருளில் வந்தது.

**புனிதம்ஆம் திருவாய் நீரில்** - கங்கையைச் சடையுள் வைத்து அதில் எக்காலும் தோய்ந்து ஆடிநிற்கும் இறைவர் அதனினும் இது புனிதமென்று இவர் திருவாய் நீரின் ஆடுகின்றார் எனப் பின்னர் இச்சரிதத்துக் காண்பதன் குறிப்பாக இவ்வாறு முன்னுணர்த்தினர். இவ்வாறே வரும்பாட்டில் "இருசுடர்க் குறுகண் ஊர்க்கும் எழில் வளர் கண்" என்றதுங் காண்க. காயுரை வாய்நீருங் கண்ணும் முதலியவை முன்பு செய் தவத்தினீட்டத்தால் முற்றியனவாம். இங்கு மேற் செய்வினையால் இனிப் பக்குவப்பட எஞ்சி நிற்கும் குறை யொன்றுமில்லாதன; ஆதலின் இப்பருவத்தே அவற்றின் முற்றிய தன்மைபற்றிக் கூறினர். "மகவு மனிதனின் தந்தை" (The child is the father of the man) என்ற ஈவீனர் பழமொழிக் கருத்தும் காண்க.

**நீரில் உள்.....ஒழுகிய மழலை** - மழலைச் சொற்கள் வாய்நீரொழுக்குடனே கலந்து வெளிவருகின்ற இயல்புபற்றி வாய்நீரில் **நனைந்து ஊறி ஒழுகிய மழலை** என்றார். சொல் என்ற ஒலியுருவம் நீரில் நனைந்து ஊறி ஒழுகியதென்பது உபசாரம். **தீஞ்சொல்** - இனிய சொல்.

**வண்ணம்**-அழகு. **மென்மை** - மெல்லிய தன்மை. **பவளம்**-பவளம்போன்ற நிறம்.

**குதட்டுதல்** - மழலைச் சொல் சொல்லப் பழகும்போது குழவிகள் வாயிதழ்களைக் கூட்டி அசைத்து ஒலிக்க முயலுதல்.

**வளரா நின்றார்** - வளர்கின்றார். காலுகாலும் வளர்ந்து கொண்டே செல்லும் தொடர்ந்த செய்தியை **ஆநின்று** என்ற நிகழ்கால இடைநிலையாற் குறித்தார். 22

672. பொருபுலிப் பார்வைப் பேழ்வாய் முழையெனப் பொற்கை நீட்டப்
பரிவுடைத் தந்தை கண்டு பைந்தழை கைக்கொண் டோச்ச
விருசுடர்க் குறுகண் ஊர்க்கு மெழில்வளர் கண்ணீர் மல்கி
வருதுளி முத்த மத்தாய் வாய்முத்தங் கொள்ள மாற்றி, உங

673. துடிக்குற டுருட்டி யோடித் தொடக்குகாய்ப் பாசஞ் சுற்றிப்
பிடித்தறுத், தெயினப் பிள்ளைப் பேதைய ரிழைத்த வண்ட
லடிச்சிறு தளிராற் சிந்தி, யருகுறு சிறுவ ரோடுங்
குடிச்செறி குரம்பை யெங்குங் குறுநடைக் குறும்பு செய்து, உச

674. அனையன பலவுஞ் செய்தே யைந்தின்மே லான வாண்டின்
வனைதரு வடிவார் கண்ணி மறச்சிறு மைந்த ரோடுஞ்
சினைமலர்க் காவு ளாடிச் செறிகுடிக் குறிச்சி சூழ்ந்த
புனைமருப் புழலை வேலிப் புறச்சிறு கானிற் போகி, உரு

675. கடுமுயற் பறழி னோடுங் கானவே னத்தின் குட்டி
கொடுவரிக் குருளை செந்நாய்க் கொடுஞ்செவிச் சாப மான
முடுகிய விசையி லோடித் தொடர்ந்துடன் பற்றி முற்றத்
திடுமரத் திரளிற் கட்டி வளர்ப்பன வெண்ணி லாத. உசு

672. (இ - ள்) பொருபுலி...நீட்ட-பொருகின்ற புலியாகிய பார்வைமிருகத்தின் திறந்த அகன்ற வாயினைச் சிறு குகையென்று கருதித் தமது அழகிய கையை அதனுள் நீட்ட; பரிவுடை...ஓச்ச - அன்பு மிக்க தந்தை அதனைக் கண்டு பரிந்து பசுந்தழை யொன்றைக் கையிற் கொண்டு ஓச்சவே ; இருசுடர்க்கு...மாற்றி - சூரிய சந்திரர்கள் என்னு மிரண்டு சுடர்களுக்கு உளதாம் துன்பத்தைத் தீர்க்கும் அழகு வளரும் கண் களின் நீர் நிரம்பி வருகின்ற துளியாகிய முத்தத்தை அந்தத் தாயாகிய தத்தை வாய்முத்தங் கொள்ள அதனுல் மாற்றிக் கொண்டும், உக

673. (இ - ள்) வெளிப்படை. உடுக்கை போன்ற குறட்டினை உருட்டி ஓடியும், காயைக் கட்டிய கயிற்றைச் சுற்றிப் பிடித்து அறுத்தும், வேட்டுவச் சிறுமியர் வினையாடக் கட்டிய சிறுவீடுகளைத் தமது தளிர்போன்ற சிற்றடியினுல் அழித்தும், பக் கத்துக்கூடிய வேட்டுவச் சிறுவர்களோடும் கூடி அந்தச் சிறுகுடியிற் செறிந்த குடில் களிலெங்கும் குறுநடைக் குறும்பு வினையாடல்களைச் செய்தும், உச

674. (இ - ள்) வெளிப்படை. இவ்வாறுகிய பல வினையாட்டுக்களையும் செய்தே ஐந்தாண்டு நிரம்ப, அதன் மேல் செல்கின்ற ஆறாவது ஆண்டில், வனையப்படுவதாய் வடித்த வாரையும் கண்ணியையும் கொண்டு மறமிகும் வேட்டுவச்சிறார்களோடும் மலர்கள் நிறைந்த கிளைகளையுடைய மரங்கள்வளர்ந்த சோலைகளில் வினையாடியும் குடிகள் நெருங்கிய குறிச்சியினைச்சுற்றி யானைக் கொம்புகளாலிட்ட உழலையுடைய வேலிப்புறத்திலே அடுத்துள்ள சிறுகாட்டிலேபோய், உரு

675. (இ - ள்) வெளிப்படை. மிக்க வேகமுடைய முயற்குட்டியுடன் காட்டுப் பன்றியின் குட்டியும் புலிக்குட்டியும் வளர்ந்த காதுகளையுடைய செந்நாயின் குட்டி யும் ஆகிய இவற்றை முடுகிச் செல்லும் வேகத்தாற் பின்னொடர்ந்தோடிப் பிடித் தத் தமது வாயில் முற்றத்தில் உள்ள மரங்களிற் கட்டி (இவ்வாறு) திண்ணனார் வளர்க்கின்ற பிராணிகள் எண்ணில்லாதனவாம். உசு

இந்தான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

672. (வி - ரை) **பொரு** - பிராணிகளின்மேலே கொலைகுறித்துப்பாயும்.

**புலிப்பார்வை - பார்வை** - 652 பார்க்க.

**பேழ்வாய்** - திறந்திருத்தலால் அகன்றவாய். அகன்று திறந்த வாயினையுடைய கொள்கலம் **பேழை** - எனப்படுதல் காண்க.

சிங்கம், புலி முதலிய விலங்கினங்களின் மேல்வாய் கீழ்வாய்ப் பற்கள் வளர்ந்து குறடுபோலப் பொருந்தி மாட்டிக்கொள்ளுந் தன்மையுடையன; ஆதலின் இரைகண்ட போது எளிதின் வாய்திறந்து பற்ற இயலாதன ; இதுபற்றி அவை பெரும்பாலும் வாயை அகலத்திறந்து வைத்திருக்கு மியல்புடையன என்பர்.

**முழை என** - இவ்வாறு திறந்துள்ள அகன்ற வாய் சுருங்கி நீண்டு உள்ளே செல்லுதலால் குகை எனக் கருதி. **முழை** - குகை - உட்சுருங்கிய திறப்பு. " மந்திகள் முழையின் வைத்த மணிவிளக் கொளிக ளாலும்" (780) என்பது காண்க. **முழை எனக் கைநீட்ட** - குகையினுள்ளே உள்ளது எது அதனைப் பற்றுவோம் என்று உள்ளே கை நீட்டுதல் சிறுவரியல்புகளில் ஒன்றும்.

**போற்கை - போன்** - அழகு. வேட்டையாடி வந்து, சிவபிரானுக்கு அமுதூட்டிக் காவல்புரிந்தமும், "இருசுடர்க் குறுகண்டீர்க்" க அம்பிஞற் றமது கண்ணைப் போழ்ந்து

அப்பிக் கண்ணைப்பாக்கியதும் கையாதலின் அதனை முற்கூறி அழகு படுத்தினர். இவ்வாறு இளம்பிராயத்தும் பின்னர்க் காளைப் பருவத்தும் கொடிய விலங்குகளுடன் பழகியதனாலும் போர்செய்து வென்றதனாலும் இவரது திருமேனியில் அவற்றால் புண் செய்யப்பட்ட வடுக்கள் விளங்கின என்று, "வடிவே, மறப்புலி கடித்த வன்றிரண் முன்கை, திறற்படை கிழித்த திண்வரை யகலம், எயிற்றெண்கு கவர்ந்த விருந்த ணெற்றி" என நக்கீரதேவர் திருக்கண்ணப்பதேவர் திருமறத்தில் அருளினர். ஆயின் அவ்வாறு நாயனாரது திருமேனியில் ஊறு பட்டதெனக் கூறவும் மனமொருப்படாத ஆசிரியர் அதன் அறிகுறியாக இங்குச் சிறு வயதிற் புலியின் வாயில் இவர் கைகீட்டினர் என வொருசெய்திமட்டுங் கூறி ஏனையவெல்லாம் அநுமானத்தா லுணர்ந்துகொள்ள வைத்தாரென்க.

**பரிவுடைத் தந்தை** - நீண்டகாலங் கழித்துத் தவங்கிடந்து அரிதிற்பெற்ற பட்டத் திற்கு உரிய மகனுதலிற் **பரிவுடை** என்றார். புலிவாயிற் கை கீட்டுவதாகிய பெருங் கேடு தரத்தக்க பெருஞ் செயலைத் தடுக்க முயல்பவன் அதற்குரியபடி பெருந் தண்டஞ் செய்து ஒறுக்காது பைந்தழை கொண்டதும், அதனைக் கொண்டாகிலும் அடித்து ஒறுக்காது ஒச்சுவதும் இவனது பரிவு காட்டும். **ஓச்சுதல்** - ஓங்குதல். அடித்துத் தண்டிப்பான் போன்று பாவனை காட்டுதல். அம்மையார் ஊட்டிய திருமுலைப்பால் உண்டு பால்வடிந்த வாயுடன் நின்ற ஆளுடையபிள்ளையாரை " எச்சின்மயங் கிட வுனக்கீ திட்டாரைக் காட்டென்று, கைச்சிறிய தொருமாறு கொண்டோச்சி "னர் அவரது தந்தையார் சிவபாதவிருதயர். இங்கு நாகன் புலிவாயிற் கைகீட்டிய தன் மகனுரை மாறுதானும் கொண்டோச்சச் சகியாது பைந்தழைகொண் டோச்சினன் என்றதும் அவனது **பரிவு** காட்டுவதாம்.

**இருசுடர்க்கு...கண்** - நாயனாரது சரிதக் குறிப்பும், கண்ணப்பர் என்ற பேர்க் காரணக் குறிப்பும் பெற இதனை முற்கூறியவாறு. இருசுடர்கள் சூரிய சந்திரர்கள். இவர்கள் முறையே சிவபெருமானது வலது கண்ணும் இடது கண்ணுமாவார்.

**உறுகண்** - வருத்தம். உறுகணுறும்பல் - தொல் - பொருளியல் 45. இங்குக் குறித்த **உறுகண்** ஆவது உதிரம் பாய்ந்தது. **தீர்க்கும்** - உதிரம் வாராது பான்மைபண்ண நின்ற. இவை பின்னர் இவர் சரித நிகழ்ச்சிகளின் முற்குறிப்பாக இங்குக் கூறினர்.

**எழில்வளர்கண்** - இவரது கண்கள் அழகால் வளர்ந்தே நின்றன. அவை "கொன்றை தங்கு வேணி யார்தமைக், கண்ணி னீடு பார்வை யொன்று கொண்டு"(720) "காணுதற்கரியார் தம்மை, ஆர்வமுன் பெருக ஆரா அன்பினிற் கண்டு கொண்டே" (776)எஞ்ஞான்றும் நிற்பன. இவற்றில் ஒன்று இறைவனது கண்ணில் அப்பப்பட்டு அவரது கண்ணே யாயிற்று. ஆதலின் **எழில்வளர் கண்** என்றார்.

**நீர் கண் மல்கி வரும் துளிமுத்தம்** - நீர், பெருகும்போது முதலிற் கண்களில் நிறைவதும், பின்னரே துளிகளாக வீழ்வதும் இயல்பாம்.

**அத்தாய்** - தந்தையினும் மிக்க பரிவுடைய அத்தத் தாய். முன்னறி சுட்டு.

**துளிமுத்தம் - வாய்முத்தம்** - சொற்பின்வருநிலை. 'ஊனுக்கூன்' எனுமுறை என்று நினைவுற்று இறைவன் கண்ணேய்க்குக் கண் **மாற்றுக** ஒப்பு முறை (Homeopathic) மருந்தாய் உதவும் மருந்துப் பண்டமாகிய இக்கண்கள் அந்த ஒப்புமுறை மருந்தினிலையில் நோய்க்கு மாற்றுகப் பழகித் தேர்ந்தன என்ற குறிப்புப் பெறத் **துளிமுத்தம் வாய்முத்தம்** கொள்ள **மாற்றி** எனக் கூறிய நயமும் காண்க. வாய் முத்தங் கொள்ளத் துளிமுத்தம் மாற்றி எனப் பண்டமாற்றுக் குறிப்புப் பெறக் கூறிய சுவையும் குறிக்கத் தக்கதாம்.

**வாய்முத்தங் கொள்ளுதல்** - பிள்ளைப்பருவங்கள் பத்தினுள் **முத்தப்பருவம்** என்பது குறித்தது. இவ்வாறே முன்னர் " **மழலைத் தீஞ்சொல் வண்ணமென் குதலைச் செவ்வாய் குதட்டியே வளரா நின்றார்**"என்றது **செங்கீரைப்பருவம்** குறித்ததென்பர்.

673. (வி - ரை) **துடிக்குறடு** - உடுக்கை வடிவினதாய் மரக்கட்டையாற் செய்யப் பட்ட இது சிறார் விளையாடுகருவிகளில் ஒன்று. துடியின் கட்டை என்பாருமுண்டு. உருளுஞ் சிறுகட்டைகளை உருட்டி விளையாடும்பருவம் **சிறுதேர்ப்பருவம்** எனப்படும்.

**பேதையர் இழைத்த வண்டல் அடிச்சிறு தளிரால் சிந்தி** - இது **சிற்றிற்பருவம்** குறிப்பதென்ப. சிறுமிகள் இழைத்து விளையாடும் சிறுமணல் வீடுகளை இப்பருவத் தச் சிறார்கள் காலினல் அழிக்க, அதுபற்றி அச்சிறுமியர் " சிறியேஞ் சிற்றில் சிதை யேலே " என்று வேண்டுவதாக வைத்துப் பாராட்டிப் பிள்ளைத்தமிழ் கூறுதல் மரபு.

**நாய் தொடக்கும் பாசம்** எனவும், **தளிர்ச்சிறு அடி** எனவும் மாற்றுக.

**நாய்ப்பாசம் அறுத்தல்** நாய்களுடன் ஓடி விளையாடுதற்கு. **பாசம் சுற்றிப் பிடித்து அறுத்து** என்றது கயிற்றினை அறுக்கும் வகை குறித்தது.

**எயினர்** - வேடர். **பிள்ளைப்பேதையர்** - பிள்ளைமைப்பருவங் கடந்து பேதை மைப்பருவம் புகுந்த பெண்கள். ஐந்து முதல் ஏழு வயதுவரையுள்ள சிறுமியர். 282 உரை பார்க்க. **பேதையர்** - இங்குப் பருவங் குறித்தது.

**வண்டல்** - மண்ணிற் புரண்டும் மண் கூட்டியும் மணற்சிறுவீடு கட்டியும் விளை யாடும் சிறுமியர் ஆடல் வகை. " வண்டல்பயில் வனவெல்லாம் வளர்மதியம் புனைந்த சடை, அண்டர்பிரான் திருவார்த்தை யணையவரு வனபயின்று " என்ற காரைக்கா லம்மையார் புராணமுங் காண்க.

**குரம்பை-சிறுகுடில்.** **குறுநடைக் குறும்பு-குறுநடை** தளர்நடைக்கும் பெருநடைக் கும் இடைப்பட்ட நடை. இப்பருவத்தே செய்யும் சிற்சிறுடல்கள் **குறும்பு** எனப்படும்.

இவ்விரண்டு பாட்டுக்களானும் இரண்டாண்டுவரை உள்ள வளர்ச்சி கூறப்பட்டது.

674. (வி - ரை) **அனையன பலவும் செய்தே** - சிறுபறை முழக்குதல் முதலிய ஆடல்களும் பிறவும் தொகுத்து **அனையன பல** என்றார். இதனுல் மூன்று முதல் ஐந் தாண்டுவரை வளர்ச்சி குறிக்கப்பட்டது. ஐந்து ஆண்டுகள் வரையிற் சிறுவர் மனைக்குள் ளும் மனைமுன்றிலிலும் தவழ்ந்தும் நடந்தும் விளையாடுவர். அதன்மேல் முன்றிலை நீங்கி வெளியே, முதலிற் சிறுதூரமும், பின்னர் நெடுந்தூரமும் ஓடியும் ஆடியும் விளையாடு வர். இதனையே படிப்படியாக வேலிக்குட்பட்ட மனைகளை யடுத்துச்சூழ்ந்த **கானமலர்க் காவுள் ஆடி** என்றும், பின்னர், **வேலிப் புறச்சிறு கானிற்போகி** என்றும் கூறினர்.

**மலர்ச்சினைக்காவுள்** என மாற்றுக. குடிசைகளைச் சுற்றியுள்ள **வன்றிரள்வினா** - (572) முதலிய மரங்களின் சோலை. **சினை** - ஆகுபெயர்.

**மநப்புப்புனை உழலை வேலி** என்க. **மநப்பு** - யானைக்கொம்பு. **புனைதல்** - வலி மையும் ஒழுங்கும் பெற யாத்து நிறுவுதல். " களிற்றுக் கோட்டு வன்றொடர் வேலி கோலி" (651) என முன்னர் இதனைக்குறித்தது நினைவுகூர்க. யானை புலி முதலிய வலிய பெரிய பிராணிகளும் உள்ளே நுழையாதபடி ஊரினைச்சுற்றிச் சூழச் செறிவாகப் புனையப்படுவதனுல் - **சூழ்ந்த** - **புனை** - என்றார். **உழலை** - கடக்கும் மக்களுக்கு வழிதந்து உழன்று பின் தன் முன்னிலையில் நிற்பதாக மரத்தா னியன்றதோர் அமைப்பு. இக்காள் இருப்புப்பாதைகளின் குறுக்காக மக்கள் தாண்டிச்செல்லும் சுருங்கை வழிகள் பலவற்றிலும் இவ்வித அமைப்புக்காணலாம். கடவு, காவு என்பன உலக வழக்கு. உழலுதலால் **உழலை** எனப்படும். ஐகார விகுதி பறவை என்பதிற்போலக் கருத்தாப் பொருளில் வந்தது. **உழலுதல்** - சுழலுதல் - முன்னும் பின்னும் அசைதல் - முதலியன ; இவ்வழியால் விலங்குகள் புக இயலாதென்க. **உழலை** என்பதொருவகைச் செடியா னியன்ற வேலி என்பாருமுண்டு. நுழைவோர்க்கு இடந்தந்து வளைந்து

பின்னர் நிமிர்ந்து நிற்ப திவ்வகைச் செடி என்பர்; மாவேலி என்புழிப்போல உழலை யாணியன்ற வேலி என்பது இவர்கள் கருத்து.

**புறச்சிறுகான்** - குறிச்சி ஊரினை அடுத்து அதன் புறத்தே உள்ள மாச்செறி வில்லாத சிறுகாடு. ஊரை விட்டு முதலில் வெளிவரும் வேடர்சிறார் இதனில் ஆடல் பயில்வர். இவற்றில் புலி - யானை - முதலிய வலிய பெருவிலங்குகள் வசிக்கமாட்டா. மக்கள் வாழிட மருங்கினை அடுத்து முயல்களும், அதனிற்சிறிது சேய்மையிற்காட்டுப் பன்றிகளும் வாழும். பின்னும் சேயனவாய்ப் பெருவிலங்குகள் வாழ்கின்ற காட்டை அடுத்துச் செந்நாய்கள் வாழும். இஃதிவற்றினியல்பு. ஆதலின் அம்முறையில் வரும் பாட்டிற் கூறியது காண்க. இவ்வாறு படிப்படியாக இச்சிறார் கானில் மேன்மேற் சென்று பழகும் இயல்பு குறித்த நயமும் ஓர்க.

**வரிக்குரளை** - இவை ஏனைவிலங்குகளுடன்கூடித் தவறி வந்தனவாம். "ஏனத் திரளோ டினமான் கரடி யிழியு மிரவின்கண், ஆனைத் திரள்வந் தணையுஞ் சார லண்ணு மலையாரே" என்ற ஆளுடைய பிள்ளையார் தேவார மூதலியவை காண்க.

**சிறுகான்** - பெருங்கானமுள்ள மலைச்சாரலும் அதில் வாழ்வனவும் பற்றி 693 - 727 முதலிய பாட்டுக்களிற் காண்க. 25

675. **(வி - ரை) பறழ் - குட்டி - குரளை - சாபம்** - என்பன மிருகச்சாதி யிள மைக்குரிய மரபுப் பெயர்கள். வெவ்வேறு சாதி குறிக்க வெவ்வேறு பெயராற் கூறினர். 683-ம் பிறவும் பார்க்க. தொல்காப்பியம் மரபியலுட் கூறியனவும் காண்க.

**கடுமுயல்** - வேகத்தாற்கடிய முயல். இது மனிதனாற் பின்றொடர்ந்தோடிப் பற்ற முடியாத வேகமுடையது. பின்னர்க் கூறும் மூவகைப் பிராணிகளின் வேறுகிய இன மாதலின் இதனை ஒரு உருபு தந்து பிரித்தோதினர்.

**கான ஏனம்** - காட்டுப்பன்றி. மிக்க மூர்க்கத் தன்மை யுள்ளது. யானைக்கிருத்தல் போல் முன்னுல் வளைந்து நீண்ட இரண்டு பற்களுடையது. இவ்வினத்தில் ஒருபெரும் பன்றி பதினுன்கு ஆள் சுமக்கும் பாரமுள்ளது என்றும், அதனை உண்போர் பெரு விலை தந்தும் பெறுவர் என்றும் கூறுப.

காட்டுப்பன்றிக் குட்டிகளை - இளமையில் முடிகியவிசையிற் சென்று பற்றிய பயிற்சியே பின்னர் காயுனர், மொய்வலிகளை யறுத்துக் கடுவிசையில் முடுகி யெடிதோ டிய (734) எனத்தைக் காதங்கள்பலவும் (741) அதன் முடுகிய விசையுடன் தொடர்ந் தோடிச் சுரிகையாற் குத்தி வீழ்த்திய திறமாக வினைத்தது என்று பிற் சரிதக் குறிப் பும் காண்க.

**கோடுவரி** - புலி. வளைந்த வரிகளையுடையது என்பது பொருள். "கொடுவரி யியங்கும் கோடுயர் நெடுவரை" - **புறம்** - 135. இது வீரம் மிகுந்த சாதி. **செந்நாய்** - ஒருவகைக் கானவிலங்கு. மிகக் கொடுமை யுடையது. இதுமுதலில் ஒன்றிரண்டாய் வந்துபின் பெருந்திரளாகக் கூடி மக்களையும் வேற்று விலங்குகளையும் கொடுமை யாய்க் கடித்தும் அடர்த்தும் கொல்லுந் தன்மையுடையது.

**கோடுஞ் செவிச் செந்நாய்ச் சாபம்-சாபம்** - குட்டி. வளைந்த காதுகளையுடைய செந்நாயின் குட்டி என்க. இச்சாதியின் குட்டிகள் நாய்க்குட்டிகள் போல வளைந்து தொங்கிய காதுடையன என்பர். கொடுஞ்செவிஞமலி (652) என்றது காண்க.

இங்கு, **சரபமான** எனப் பாடங்கொண்டு கொடிய காதுகளையுடைய சரபம்(பறவை) போல வேகத்திற் சென்று என்பாருமுண்டு. இவர்கள் **ஆன** - உவம உருபென்பர். **சாபம்** - எனவே கொண்டு - வில் என்று பொருள்கூறி, இருபுறமும் வளைந்த காதுகளை யுடைய வில்லிற் கோத்த அம்பின் விசையில் எனப் பொருள் கூறுவாரும், வில்லின் ஆனவிசை - பாணவேகம் என்பாருமுண்டு. இவற்றின் பொருத்தங்கள் ஆரா யத் தக்கன.

**முகிய விசையில் ஓடித் தோடர்ந்துடன்பற்றி** - இங்குக் கூறிய பிராணி வகைகள் மிக விசையில் ஓடும் இயல்புடையனவும் மூர்க்கமும் வீரமும் கொடுமையும் உடையனவும் ஆம். இவை இழைய குட்டிகளேயாயினும், இவரும் ஏழாண்டுடைய சிறுவரேயாமாதலின் அவற்றிற்கேற்ற வேகத்தின்மிக்கு ஓடித் தொடர்ந்து பற்றினர் என்பதாம். இதனால் இளமையில் இவர்பால் முனைந்து மூளைத்து வளர்ந்த குணங்களினியல்பு குறித்தார்.

**முற்றத்தீடு மாத்திரள்** - 652 பார்க்க.

**கட்டி வளர்ப்பன** - பார்வை மிருகங்கள் முன்னரே கட்டப்பட்டிருக்கின்றனவாதலின் இனமாகிய இவற்றையும் அவற்றின் பக்கத்தே சிறார்கள் கட்டி வளர்க்கக் காரணமாயிற்று. **வளர்ப்பன** - குட்டிகளுக்கு ஊறில்லாதவாறு பற்றிக் கொணர்ந்து வளர்த்தல் இவர்பால் மேற்குறித்த குணங்களுடனே முனைத்து வளர்ந்த அன்பின் நிலையும் காட்டுவதாம். பின்னர் "விளைத்த அன்பு" என்றதுங் காண்க. கொடிய வேட்டையினும் இளவிலங்குகளைக் கொல்லாமை இவர்க்குரிய குலவொழுக்கமுமாம். 735 பார்க்க. ஆயின் குலவொழுக்கம் பயிலும் பருவமுற்றுத இவர்க்கு இங்கு அன்பின் நிலையே இதற்குப் பெரிதும் ஏதுவாயிற்றென்பது.

**மாத்தாளில்**—என்பதும் பாடம். 26

676.* அலர்பகல் கழிந்த வந்தி யையவிப் புகையு மாட்டிக்
குலமுது குறத்தி யூட்டிக் கொண்டுகண் டுயிற்றிக் கங்குல்
புலரவு ணவு நல்கிப் புரிவினை யாட்டின் விட்டுச்
சிலமுறை யாண்டு செல்லச் சிலையில் பருவஞ் சேர்ந்தார். உள

**(இ - ள்)** வெளிப்படை. வேடர்குலத்து வந்த முதியவளாகிய குறத்தி கதிரொளி அலர்ந்து விளங்கும் பகல் கழிந்த மாலைப்பொழுதிற் கடுகின் புகையும் சுற்றி, உணவு ஊட்டி, இம்மகவை எடுத்துக்கொண்டு ஒரு இடத்து வைத்துத் துயிலச்செய்து, இரவு கழிந்தபின் ஊன் உணவு கொடுத்துப், பின்னர் அது செய்யும் விளையாட்டிலே பயிலும்படி விட்டு, இவ்வாறு சில ஆண்டுகள் செல்ல இவர் வில்வித்தை பயிலும் பருவத்தை அடைந்தார்.

**(வி - ரை) அலர்பகல்** - ஞாயிற்றின் கதிர்கள் அலர்ந்து வீசும் காலமாகிய பகற் பொழுது. **பகல்** - பகுதல் - பிளத்தல். ஒருநாட் பொழுதை இருபகுதியாகப் பிளவு படுத்துவதில் ஒரு கூறு. பகுதலாகிய தொழில் அதனைப் போந்த பொழுதிற்கு - கால அளவிற்கு - வந்தது. ஆகு பெயர். நாட்பொழுதை இருகூறுகப் பகுத்தலைச் செய்வோன் **பகலோன்.**

**புகையுமாட்டி** - கடுகுப்புகை கமழச்சுற்றிக் கண்ணேறு கழித்தல். இதனைச் சிறுரை விடம், கொடுந்தெய்வப்பீடை, பிணி முதலியவையும் தாக்கா என்பர்.

**குலமுது குறத்தி** - குலத்தவரில் முதியவளாயுள்ள குறத்தி. குழவிகளை வளர்த்தலில் நீண்ட அனுபவமுடையவர்களாதலின் முதியவராகிய பெண்களிடம் சிறுரை வளர்க்க விடுதல் உலகியல். இது முன்னுள் வழக்கு. இதுவும் இக்காள் அருகி வருகின்றது. குழந்தையுலகப் பாதுகாவலின் நேர்ந்துள்ள குறைபாடுகளில் இதுவும் ஒன்று என்பர்.

**ஊட்டிக் - கொண்டு - கண்துயிற்றி** - சிறுரை உணவூட்டிக் கொண்டு துயில வைத்தல் மரபாம். தூக்கமிகுதியாற் சிறுவர் இரவில் தாமே உண்ணார். ஆதலின் **ஊட்டி** என்றார். பகலில் அவ்வாறன்றித் தாமே உண்பாராதலின், **கங்குல் புலர, உணவு நல்கி** என்றது காண்க.

ஊன் உணவு - ஊனுகிய உணவு - ஊன்கலக்து சமைத்த உணவு என்றலுமாம். விட்டு-விளையாட்டுப்பயிலுமாறு ஆடிடத்தில் விட்டு. முறைசில ஆண்டு எனமாற்றுக சிலை பயில் பருவம் - பன்னிரண்டாண்டளவுள்ளது. "பன்னீராண்டிற் கச்சொடு சுரிகை காமுறப் புனைதல்"—பிங்கலம். 27

677. தந்தையு மைந்த னுரை நோக்கித்தன் றடித்த தோளாற்
சிந்தையுண் மகிழப் புல்லிச் சிலைத்தொழில் பயிற்ற வேண்டி
மூந்தையத் துறையின் மிக்க முதியரை யழைத்துக் கூட்டி
வந்தநாட் குறித்த தெல்லா மறவர்க்குச் சொல்லி விட்டான். உஅ

(இ - ள்) வெளிப்படை. மைந்தனுர் செவ்விதிற் சிலைபயில் பருவஞ்சேர்ந்தது கண்டு தந்தையும் மனமிக மகிழ்ந்து தனது தடித்த தோள்களினுல் அவரைத்தழுவிக் கொண்டு, அவருக்கு விற்றொழிலப்பயில்விக்க எண்ணி முன்னே அத்துறையில் முதியோரை அழைத்துக்கூட்டி, அவர்களுடன் ஆராய்ந்து, அதற்குரிய நன்னாட்குறித்து, அவ்வரலாறெல்லாம் மறவர்களாகிய வேடர்களுக்குச் சொல்லிவிட்டான்.

(வி - ரை) தந்தையும் - சிறப்பும்மை. நோக்கி - நோக்குதல் - எண்ணம் வைத்து ஊன்றிப்பார்த்தல். அவன் நோக்கமிது என்பதாதி வழக்குக்கள் காண்க. புதல்வரைப் பெற வாங்கிடந்து பெற்றவன், அவர் செம்மைபெற வளர்தலையும், தனது வரையாட்சி கைக்கொள்ளத் தகுதியுடையாதலையுங் காணவிரும்பி அதுவே கருதிக்கொண்டிருந் தானுதலின், இப்போது அவர் சிலைபயில் பருவந் சேர்ந்ததனை ஊன்றி நோக்கினன் என்றார். பருவநோக்கமே இங்குக்குறிக்கோள் என்பது.

சிந்தைஉள் மகிழத் தன் தடித்த தோளாற்புல்லி-மகிழ்ந்து என்பது மகிழ எனத் திரிந்து நின்றது. மகிழ்ச்சியின் காரணம் மேல் உரைக்கப்பட்டது. தடித்த - பெருத்த. இத்தோள்கள் ஊன்வளர்ச்சியாகிய புற உடற் பெருக்கம் மட்டில் உள்ளனவேயன்றி வேறு உட்பெருமையற்றன என்பது குறிப்பு. "பிறப்பின் சார்பாற் குற்றமே குணமா வாழ்வான்" (657), "செவ்வரைபோற் புயமிரண்டுஞ் செறியப் புல்லி" (701) என்பவை காண்க. நாயனுரது தோள்களைப் பற்றிக் "குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினுர்" (823) என்று பாராட்டுஞ் சிறப்பும் இங்கு கினைவு கூர்க.

சிலைத்தொழில் பயிற்ற வேண்டி - எவரும் உரியவயதில் அவ்வவர்க்குரிய கல்வி பயிலுதல் வேண்டும் என்ற நியதி விளக்கப்பட்டது. பயிலப்படும் வித்தை பற்றி இப் பருவம் பலதிறப்படும். கல்விப்பயிற்சி ஐக்துவயதளவிற்றொடங்குதல் மரபு. "ஐக்து வருட மவர்க்கணைய" என்ற சண்டீசர்புராணமுங் காண்க. ஆயின் இங்கு வில்வித்தை உடலைப் பற்றிய கலையாதலின் அதற்குரிய உடல் வளர்ச்சி பெற்ற பின்னர்த் தொடங் கப் பெறவேண்டுதலின் இப்பருவம் பன்னிரண்டாண்டென்ப.

சிலைத்தொழிலே வேடர்க்குரிய சிறந்த வித்தையாம்; அதனில் வலியனு யினன்றி ஒருவன் அக்குலத்தலைமைபூணத் தகுதியுள்ளவனுகான்; தகுதியில்லாத ஒரு வனுக்குத் தலைமைவரினும் அதனைத்தாங்கலாற்றாது இடர்ப்பட்டு இழக்க நேரிடும்; கலைகளை உரியபருவத்தே பயிலுதல் வேண்டும் என்பனவாதி உள்ளுறைகளையெல்லாம் இங்கு நாகன் கருத்தில் வைத்துப், பயிற்ற வேண்டினன் என்று ஆசிரியர் காட்டிய அழகு காணத்தக்கது.

மூந்தை அத்துறையில் மிக்க முதியரை - அத்துறை-தன்மாபிற் சிலைத்தொழில் பயில்விக்கும் அந்தத் துறை. "மன்னர்க்கு வென்றி வடிவாட் படைபயிற்றுக், தன்மைத் தொழில் விஞ்சை" (610) என வாட்படைபயிற்றும் ஆசிரியத்தன்மை பற்றிக் கூறி யது காண்க. அகரச்சுட்டு, தான் எண்ணிய சிலைத்தொழில் பயிற்றும் அந்த எனச் சேய்மை சுட்டியது. முதியர் - வயது பயிற்றும்வன்மை முதலியவற்றுல் முதிர்ந்தவர்.

இதனால் பயிற்றுங் கலைக்குத்தக்க ஆசிரியனிலக்கணமும் நல்லாசிரியனைத் தேர்ந்து கொள்ளும் அவசியமும் கூறப்பட்டன.

**அழைத்துக் கூட்டி** - பலரையும் அழைத்து ஒன்றுகூடும்படிசெய்து ஆலோசித்து. இவ்வேடர்களும் மந்திராலோசனை முறை கையாண்டவகை காண்க. **வந்தநாள்** - முதியர் ஆய்ந்தமையாற் பெறப்பட்ட நன்னாட்குறித்து அதனை.

**மறவர்** - வீரத்தினையுடைய வேடர். காரணவிடுகுறி.

**சொல்லிவிட்டான்** - அழைக்கும்படி தூதுவரைப் போக்கினன். சொல்லி வருமாறு தூதரை விடுத்தான். சொல்லிவிட்ட மொழிகள் வரும்பாட்டிற் காண்க. 28

678. "வேடர்தங் கோமா னகன் வென்றிவே ளருளாற் பெற்ற
சேடரின் மிக்க செய்கைத் திண்ணன்விற் பிடிக்கின் ரூ"னென்
றூடியற் றுடியுஞ் சாற்றி யறைந்தபே ரோசை கேட்டு
மாடுயர் மலைக ளாளு மறக்குலத் தலைவ ரெல்லாம், உசு

679. மலைபடு மணியும் பொன்னுந் தாளமும் வரியின் றேனுங்
கொலைபுரி களிற்றுக் கோடும் பீலியின் குவையுந் தேனுந்
தொலைவில்பன் னறவு மூனும் பலங்களுங் கிழங்குந் தின்றச்
சிலைபயில் வேடர் கொண்டு திசைதொறு நெருங்க வந்தார். உ0

678. (இ - ள்) வெளிப்படை. "வேடர்களுடைய அரசனுகிய நாகன் வெற்றியுடைய கத்தவேளினது திருவருளினாற் பெற்ற அறிவுடையாரினும் மிக்குச் சிறந்த செயலையுடைய திண்ணனார் விற் பிடிக்கின்றார்" என்று, வெற்றி தரும் இயல்பினையுடைய உடுக்கை ஒலிப்பித்து, வாக்கினாலும் சொல்லிய, பேரோசையைக் கேட்டுப் பக்கத்து மலைகளை ஆட்சி செய்யும் மறக்குலத் தலைவர்கள் எல்லாரும், உக

679. (இ - ள்) வெளிப்படை. மலைபடு பொருள்களாகிய மணியும் பொன்னும் முத்துமாகியவற்றையும் புலித்தோலும், கொலைபுரி யானைக்கொம்பும் மயிற்பீலியின் சுமையும் தேனும் அளவில்லாத பலவகை நறவும் ஊனும் பழங்களும் கிழங்குமாகியவற்றைச் செறிய விற்பயிற்சி மிக்க வேடர்களும், எடுத்துக்கொண்டு பல திசைகளினின்றும் நெருங்க வந்தனர். உ0

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

678. (வி - ரை) "**வேடர்...பிடிக்கின்றன்**" - இவை வேடர்கள் அச்செய்தியைத் துடிசாற்றி அறைவித்த சொற்கள். மேற்பாட்டில் **சொல்லிவிட்டான்** என்றும், இங்கு **என்று—அறைந்த** - என்றும் கூறியது காண்க. அரசாங்கத்தார் பெருநிகழ்ச்சிகளைப்பலரறியச் செய்யுங்கால் முரசு, பறை முதலியன முழக்கியும் அதனோடு கூட அவ்விவரத்தினைச் சொல்லாற் சாற்றியும் அறிவித்தல் பண்டைநாள் முதல் வழங்கும் வழக்காம். திருவீழிமிழலையில் பஞ்சம் வந்தகாலத்து அடியார்க்கெல்லாம் அமுதளித்த ஆளுடைய அரசுகளும், ஆளுடைய பிள்ளையாரும் "பரமனடியா ரானுக்க ளெல்லா மெய்தி யுண்கவென வீரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச், சொல்லாற் சாற்றிச் சோறிட்டார்" (திருஞா - புரா - 259) என்றதும் இங்கு நினைவுகூர்க. இந்திர விழாச் செய்தியை நாடறியுமாறு யானையின்மீது முரசறைந்து அறிவித்ததாகிய சிலப்பதிகார வரலாறும் காண்க. இங்குத்துடியாற் சாற்றுதல் அந்நில வழக்கு. பறை முதலியன முதலில் முழக்குதல் அச்செய்தி சொல்லும் மொழிகளைக் கேட்குமாறு பலருடைய சவனத்தையும் கவரும்பொருட்டு.

**ஆடு இயல்** - ஆடு - வெற்றி. துடியின் ஒலி வெற்றிக்குத் துணையாதலின் **ஆடியற்றுடி** என்றார். "ஆடுகொணே மியான்" - (கலித் - 105-70).

**மாடு உயர் மலைகள்** - அந்நாட்டின் மலைத்தொடரில் வரிசையாய்ப் பக்கத்தே தோன்றும் உயர்ந்த பல தனிமலைகள். "திருக்காளத்தித் திருமலையிம் மலைகளில் யாதென்று கேட்டார்" (திருஞான - புரா - 1019) என்றது காண்க.

தலைவர் எல்லாரும் - சிலபயில் வேடரும் - கேட்டுத் - துன்றக் - கொண்டு - வந்தார் - என இவ்விரண்டு பாட்டுக்களையுந் தொடர்ந்து முடித்துக்கொள்க. எல்லாரும் வேடரும் - எண்ணும்மைகள் தொக்கன.

இவருள், மணி - பொன் - தரளம் - முதலியனகொண்டு முன்னே வரும் தலைவர்களை முன்னர் இப்பாட்டிலும், தோல் - கோடு - குவை - தேன் - நறவு - ஊன் - பலம் - கிழங்கு முதலியன சுமந்து அத்தலைவர்களைப் பின்பற்றி வரும் வேடர்களை அடுத்த பாட்டிலும் வைத்துக்கூறிய வைப்புமுறை நயமும் காண்க.

**வேடர்தம் கோமான் நாகன்** - வேடர்தலைவனுகிய நாகன். சிறப்புப்பெயர் முன் வந்தது.

**வென்றிவேள் அருளால் பெற்ற** - "அயிலுடைத் தடக்கை வென்றி அண்ணலார் அருளினாலே" (661) என்றது காண்க. **வென்றி** - எஞ்ஞான்றும் தவிராது எப்பகையையும் வெல்லும் ஞானவெற்றிக் கடையாளமாகிய வேல் ஏந்தியதைக் குறித்தது. **வேள்** - முருகன்.

**வென்றி வேள்** - பிறிதினியைபு நீக்கிய விசேடணம். **வேள்** என்ற பெயர் பெறினும் சிவபெருமானிடம் வெற்றிபெறு தொழிற்தழிந்த காமவேளினும் பிரித்தறிதற்கு **வென்றிவேள்** என்றார். 659-ல் உரைத்தவையும் காண்க. அருளாற் பெற்ற வரலாறு முன்னர் உரைக்கப்பட்டது.

**சேடரின் மிக்கசெய்கை** - **சேடர்** - அறிவுடையோர். **மிக்கசெய்கை** - மிகுதியாய அறிவுடைச் செயல் "அறிவானிலு மறிவான்" (திருக்கேதாரம். பண் - கட்ட பாடை. 2) என்ற ஆளுடைய நம்பிகள் தேவாரமுங் காண்க. அருளாலும் அறிவாலும் செயலாலும் சிறந்த என்றபடி. இச்செய்கையும் அறிவும் அருளும் இவர்க்குப் பிறந்தது முதல் இயல்பின் விளங்கின. அளப்பரும் பெருமைகாட்டித் தருங்குறி பலவும் சாற்றும் தன்மை (665) என்றது காண்க. இவை தம் தலைவரது மெய்க்கீர்த்திகளாக வேடர்களாற் சாற்றப்பட்டனவாம்.

**வில் பிடிக்கின்றனன்** - வில்வித்தைப்பயிற்சி தொடங்கப் பெறுகின்றனன். வித்தை பயிலத் தொடங்குதல் ஒருசடங்கு. இது அவ்வகிலத்துக்கும் அவ்வமக்கட்கும் அவ்வவித்தைக்கும் ஏற்றபடி பற்பலவாறு கொண்டாடப்படும்; கல்விப்பயிற்சியில் எழுத்துக்களை வாயாற் சொல்லியும் கையால் எழுதியும் படிப்பித்தல்போல வில்வித்தையில் **வில்லைப் பிடித்தலே** முதலிற் கற்றுக்கொடுக்கப்படுவது. "பொருசிலை பிடிப்பித்தார்கள்" (689) என்றது காண்க. **பிடிக்கின்றனன்** என்றது முதலாவதாக கன்னளிற் பிடித்துப் பயிலத் தொடங்குகின்றனன் என்ற பொருளில் வந்தது. 29

679. (வி - ரை) இப்பாட்டிற்கூறிய **மணி**-முதலியனயாவும் இவ்வேடர்கள் வாழும் மலைகளிற்படும் கருப்பொருள்களேயாம். அவ்வநாட்டில் வாழும் மக்கள் தமது நித்திய வாழ்வுக்கும் மணம் முதலிய சிறப்புக்களுக்கும் வேண்டும் அணி - உணவு-உடைமுதலிய எல்லாப்பண்டங்களையும் தாம் வாழும் அவ்வநாட்டிற்படும் பொருள்களினின்றுந் தேடி அமைத்துக்கொள்ளுதலே அமைவுடைத்தாம் என்று குறிக்க **மலைபடு** என்றார். இதுவே மனிதருள் எல்லா வகையார்க்கும் இயற்கை வாழ்க்கை. இதுபற்றி முன்னர் உரைத்தவையும் நினைவு கூர்க. இவ்வுண்மையை வற்புறுத்தவும் மக்கள் கேடுபடாது வளம்பட வாழ்ந்தின்புறவும் கருதிக் கருணையே யுருவாகிய ஆசிரியர் **மலைபடு** எனத் தலைமைபெற முதலிற் குறித்தார். இஃதவரது தெய்வமணக்கும் செய்யுளியல்பாமென்க.

**மணியும்** - மலையிற் படுவனவற்றில் முத்தல்லாத ஏனை மணிகள். தாளம் எனப் பின்னர்ப் பிரித்துக் கூறியதும், பொன்னை இடையில் வைத்துக் கூறியதும் பற்றி 235, 492 முதலிய திருப்பாட்டுக்களில் உரைத்தவை காண்க.

**பொன்னும்.....கிழங்கும்** - பொன் - மணி - தாளம் - இவை வீலைபெற்ற அணிகளுக்காம். இவற்றை இந்நிலமாக்களும் அணிந்து கொள்ளுதல் வழக்கு என்பதறியப் படும். **வரித்தோல்** இருக்கையு முடையுமாம். **களிற்றுக்கோடு** வேலியும் அணியுமாம். **பீலியின் தூவை** அணிவகையும் உடைவகையுமாம். **தேன்** முதலியன உணவுப் பண்டங்களென்க. இவற்றுள்ளே தேனும் கறவும் பருகுவன ; பலம் முதலியவை உண்பன என்றிவ்வாறு கண்டுகொள்க. இவைகளுள்ளே உணவு வகை 684 - 685-ல் விரித்தல் காண்க. மயிற்பீலி அணியாயும் உடையாயும் பயன்படுதல் 706, 710 முதலியவற்றிற் காண்க. இப்பண்டங்களைக் கொண்டுசெல்லுதல் அவ்வேடர் தமது தலைவனுக்குச் செலுத்தும் காணிக்கை முறையாகவும் விழாவிற்குப் பயன்படும் முறையாகவும் உள்ள உலகநிலை நயமும் காண்க. இது அந்நாட்டு நல்வழக்குக்களில் ஒன்று. இது இந்நாள் நாகரிக உலகமும் படியெடுத்தொழுகற்பாலதாம்.

**சிலைபயில் வேடர்** - விற்பிடிக்கும் விழாவாதலின் அவ்வித்தை பயின்றோர் பலரும் கூடுதல் முறையாமென்பார் இவ்வாறு கூறினர்.

**திசைதொறும் நெருங்க** - எல்லாத் திசைகளிலுமிருந்தும் செறிந்து கூட. 30

680. மல்கிய வளங்க ளெல்லா நிறைந்திட மாறில் சீறூர்
செல்லெயி லடங்கா வண்ண மீண்டினர் கொணர்ந்தா ; ரெங்கும்
"பல்பெருங் கிளைஞர் போற்றப் பராய்க்கடன் பலவுஞ் செய்து
வில்விழா வெடுக்க" வென்று விளம்பினன் வேடர் கோமான். 30

(இ - ள்) வெளிப்படை. மேற்கூறியவாறு நெருங்கிய வளங்கள் எல்லாம் நிறைந்திடலாலே, தனக்கு மாறுஇல்லாத அந்தச் சிற்றூரின் எல்லைக்குள் அடங்காதபடி எங்கும் ஒன்றுகூடினராகிக் கொணர்ந்தார்கள்; "எங்கும் பல பெருங்கிளைஞர்கள்கூடிப் பாராட்டத் தெய்வத்திற்குப் பராவுக்கடன் பலவும் செய்து வில்விழா எடுப்பீராக" என்று வேடர் கோமானுரைய நாகன் சொன்னன்.

(வி - ரை) **மல்கிய வளங்கள் எல்லாம்** - மேற்பாட்டிற் சொல்லியவையும் அவை போல்வன பிறவும் ஆகிய எல்லாம். **எல்லாம்** என்றதனால் வகையின் நிறைவும், **நிறைந்திட** என்றதனால் தொகையின் மிகுதியும் குறித்தார்.

**மாறு** - ஒப்பும் மிகையுமாகிய எதிர்வு.

**சீறூர் எல்லெயி லடங்கா வண்ணம்** - ஊர் எல்லையுட் கொள்ளாதபடி அளவின் மிகுதியாக. திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாருக்கு நிவேதிக்க இராசராசதேவர் கொணர்ந்து வைத்த பழ முதலிய திரவியங்களின் வகையை " ஆங்கதனுக் கங்ஙகரி லிடம்போ தாம லயல்சூழப் பதின்காத வகல வெல்லை, மாங்கனிவா ழைக்கனிகள் வருக்கை யாவும் வந்தனவவ் வெல்லையெல்லாம் மருவ வைத்து" என்று திருமுறைகண்ட புராண(7)த்தினுட் கூறியதனை இங்கு நினைவு கூர்க.

**ஈண்டினர் கொணர்ந்தார்**-ஈண்டினராகிக் கொணர்ந்தனர். முற்றெச்சம் எங்கும்-எங்கும் ஈண்டினர் எனவும்,எங்கும் பலவுஞ்செய்து எனவும் கூட்டியுரைக்கவும் நின்றது.

**"பல்பெருங்.....எடுக்க"** - இது நாகன் அங்குவந்து கூடிய வேடர்களுக்கு இட்ட ஆணை. **கிளைஞர் போற்றுதல்** - உறவினராகிய வேடர் உண்டுதித்தி வாழ்த்திப் பாராட்டுதல். இது இக்கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாம்.

**பராய்க்கடன் பலவும் செய்து** - இது மற்றொரு பகுதி. **வில்விழா எடுக்க**-விழாவின் முடிபாகிய மூன்றும் பகுதி. கிளைஞர் போற்றல் 681-684 வரையும், விழா

685-687 வரையும், பராய்க்கடன் 688-689-ம் கூறியது காண்க. **பராய்க்கடன்**-பரவுக் கடன் என்ப. தெய்வம் பரவுதற்குரியனவாகி விதித்த செயல்கள். "பராய்க்கடனெறியினிற்பார் " (659) என்றது காண்க. **பல** - அணங்கையாடல் முதலியன. **வில்விழா** - பிடிப்பிக்கும் வில்லினைக் காப்புச் செய்வது முதல் அதனை மாணவரைப் பிடிப்பிக்கும் வரை உள்ள திருவிழாக் கொண்டாட்டமாம்.

**எடுக்க** - செய்க - கொண்டாடுக. **வேடர் கோமான்** - நாகன்.

**பலவும் நேர்ந்து—மிகவும் செய்து**—என்பனவும் பாடங்கள். 31

681. பான்மையிற் சமைத்துக் கொண்டு படைக்கலம் வினைஞ ரேத்தத்
தேனலர் கொன்றை யார்தந் திருச்சிலைச் செம்பொன் மேரு
வானது கடலி னஞ்ச மாக்கிட வவர்க்கே பின்னுங்
கானவூ னமுத மாக்குஞ் சிலையினைக் காப்புச் சேர்த்தார். கூஉ

(இ - ள்) பான்மையில்...ஏந்த - வினைஞர் உரிய தன்மையில் படைக்கலத்தை யமைத்து ஏந்த; தேனலர்...சிலையினை - தேனுடன் அலர்கின்ற கொன்றை யணிந்த சிவபிரானுடைய திருச்சிலையாகிய செம்பொன் மேருமலையானது அவர்க்குப் பாற்கடலமுதினை நஞ்சமுதாக்க, இவரது கையில் வந்தபோது அதற்குப் பரிகாரமாக அவருக்கே பின்னும் கானவூனைத் திருவமுதாக்கும் சிலையினைக் காப்புச் சேர்த்தனர்.

(வி - ரை) **படைக்கலம்**-இங்கு வில்லைக் குறித்தது.ஏந்திய பின்னரே வில் எனப் பெயர் பெறுதலின் வினைஞர் சமைத்த அப்போது **படைக்கலம்** எனப்பட்டது.

**வினைஞர் பான்மையில் படைக்கலம் சமைத்துக் கொண்டு ஏந்த** என்க. விழாச் செய்து பிடிப்பிக்கும் பொருட்டுத் தனியானதொரு வில் தக்கவாறு தக்க வினைஞராற் சமைக்கப்பட்ட தென்பதாம். **பான்மை** - ஏற்ற தன்மை. **வினைஞர்** - படைக்கலம்சமைக்கும் பண்புடைய கைவன்மையுடையோர். இதற்கு வேறுவேறு படைக்கலம் என்றும், விழாவிற்கு வேண்டிய வெவ்வேறு படைக்கலமென்றும் பற்பலவா றுரைப் பாருமுளர். அவை ஒன்றும் ஈண்டைக்கேலாமையுணர்க. **பான்மையின்**-ஈண்டு ஊழின் படி - நியதியின்படி என்ற குறிப்புத் தருதல் காணப்படும். முன்பு அருச்சுனனுயிருந்த இக்காயனூர் இறைவனை அடைதற்பொருட்டே இப்பிறப்பில் வேடராய்வந்தார் என்ற சரிதம் கோளத்திப் புராணத்தாலும் பிறவாற்றாலும் அறியப்படும். இதன் விரிவு "முன்பு செய்தவத்தி னீட்டம் " (751) என்ற இடத்துக் காண்க. அவ்வூழினைப்பற்றியே, இங்கு இவர் கையில் வில் பிடிப்பிக்க, இதுவே இறைவனுக்கு ஊனினை அமுதமாகச் செய்தது. இவரையும் அமுதம் (மீளா இன்பநிலை) பெறுவித்தது என்ற குறிப்பும்பெறக் **கானவூன் அமுதம் ஆக்கும் சிலையினை** - என்று கூறியது காண்க.

**தேனலர் கொன்றையார்** - சிவபெருமான். **சிலை** - சிலையாகிய மேரு. **சிலை** - வில் என்க. கடலின் நஞ்சமாக்கிய மந்தரத்தை மேருவென்றது மலையாகிய சாதி பற்றிய உபசாரம்.

**பாரப் பெருவில்** (711) என்றதும் குறிக்க. **பொன்மேருமலையினைச்** சிவபெருமான் திரிபுரமெரித்த காலத்தில் வில்லாகக் கைக்கொண்டனர் என்பது சரிதம். "நாணென்ரு னஞ்சிருக்கு நற்சாபங் கற்சாபம்" என்ற புலவர் பாட்டும் காண்க.

**தேனலர்.....ஆக்கும்** - திண்ணனார் பிடிக்கும் வில்லின் சிறப்பு. சிவபெருமான் ஏந்திய வில்லாகிய மேருமலை தேவர்கள் திருப்பாற்கடல் கடைந்த காலத்து மத்தாக நின்றது. "மத்தாவரை நிறுவிக்கடல் கடைய" என்ற தேவார முதலியன காண்க. அதுபோழ்து நஞ்சுஎழுந்தது. தேவர்களைக் காக்கும்பொருட்டு அதனைச் சிவபெருமான் உண்டு கண்டத்தடக்கித் திருநீலகண்டராய் விளங்கினர். தேவர்கள் நஞ்சினுற் சாவாது காக்கப்பட்டுப் பின்னர் அமுதமுண்டனர் என்பது வரலாறு.ஆதலின் **மேரு கடலினஞ்ச**

**மாக்கிட** என்றார். அந்த மேருவே பின்னர் இங்கு நாயனாரது கையிற் சேர்ந்தபோது சிவபெருமானுக்கு ஊனினை அமுதமாக்கிக் கொடுத்தது என்றபடி. சிவபெருமானது திருச்சிலை கடல்கடைந்த தேவர்களது காத்தில் நின்றபோது விரும்பத்தக்க நல்ல அமுதத்தை விடமாக்கியது. அதுவே நாயனார் திருக்கையில் வந்தபோது விரும்பத்தகாத தீமை பயப்பதாகிய - விலக்கப்பட்ட பொருளாகிய - **ஊனினை** அமுதமாக்கி உதவிற்று என்றதொரு நயமும் காண்க. இந்த வில் மேரு மலைபோலப் பெருத்த தென்பதாம். ஊன் விலக்கப்பட்ட பொருள் என்பதும் குறிப்பாம். **அவர்க்கே** - அந்தச் சிவபெருமானுக்கே. ஏகாரம் தேற்றத்தோடு பிரிநிலையுமாம். ஊனமுதம் என்றதற்கேற்ப, மேல், **ஆக்கிட** என்பதற்கு அமுதினை என்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது.

**காப்புச் சேர்த்தார்** - வில் விழாவினில் முதலிற் செய்யும் சடங்காவது சிலையினையும் அதனைப்பயிலும் மாணவரையும் காப்பிடுதலாம். வரும்பாட்டில் திண்ணனார் கையிற் காப்பணிதல் கூறுவது காண்க. இங்கு இவ்விரண்டுகாப்பும் ஒரே புலி நரம்பினால் அமைத்தமாபும் காப்புச்செய்தல்பற்றி முன்உரைத்தனவுங் காண்க. 32

682. சிலையினைக் காப்புக் கட்டுந் திண்புலி நரம்பிற் செய்த
நலமிகு காப்பு நன்னு ணுகனார் பயந்த நாகர்
குலம்விளங் கரிய குன்றின் கோலமுன் கையிற் சேர்த்தி
மலையுறை மாக்க ளெல்லாம் வாழ்த்தெடுத் தியம்பினார்கள். கூக

(இ - ள்) வெளிப்படை. சிலையைக்காப்புக் கட்டிய அந்த வலிய புலி நரம்பினாற் செய்யப்பட்ட நலமிகும் காப்பினை நல்ல வேளையிலே, நாகனார் பெற்ற மலையர்களாகிய வேடர் குலம் விளங்க அவதரித்த அரிய மலைபோன்ற திண்ணனாரின் அழகிய முன் கையிலே கட்டி, மலைவாசிகளாகிய அந்த வேடமாக்கள் எல்லாரும் மரபுக்குரிய வாழ்த்துக்களை எடுத்துச் சொல்லி வாழ்த்தினார்கள்.

(வி - ரை) **சிலையினை - நலமிகு காப்பு** - சிலைக்குக் காப்பு எந்தப்புலியின் நரம்பினால் அமைத்தனரோ அதே புலியின் நரம்பினால் திண்ணனாருக்கும் காப்புக் கட்டினார்கள் என்பதாம். இது அவர் நாட்டு மரபு. சிலைக்கும் புலிநரம்பினாலமைந்த காப்புச் சேர்த்தனர் என்பது இதனாற் பெறப்பட்டது.

**நலமிகு காப்பு** - நலமிகும் என்றது பிற்சரிதவினாவு பற்றிய குறிப்பு. 704 - 705 முதலியவை காண்க.

**நாகனார்** - பெற்றியாற் றவமுன் செய்தான் (657) என்றபடி இவரை மகனாராகப் பெறச் செய்த இவனது உயர்தவம்பற்றி **ஆர்** விருதிதற்கு சிறப்பித்தார். காப்புச் சேர்க்கும்போது வேடர்கள் தம் தலைவன் பால் அமைந்துகொண்ட வரம்பினுயர்வு குறித்த பன்மை யென்றலுமாம்.

**நாக குலம்** - வேடர் மரபு. நாகம்-மலை. "மலையர் குலம்" (702). "குலம் விளங்க" (662) பார்க்க.

**முன்கை** - முன் கையிற் காப்புக்கட்டும் மரபு குறித்தது.

**நல் நாள்** - நன்னுளோடு நல்வேளையும் பார்த்து நற்செயல்களும் சிறப்புக்களும் தொடங்கும் மரபு குறிஞ்சிநில மக்களாகிய பழைய வேடர்களுள்ளும் நிலவியது. வேடர்களுள் கதிரவன் உச்சி சேரும் நேரம் நல்வேளையாகக் கருதப்பட்டது காணலாம். 609 முதலியன காண்க.

**மலை உறை மாக்கள்** - மலை வாழ்நராகிய தலைவர்களும் வேடர்களும் ஆகியோர் (678 - 679) மக்கள் என்னுது **மாக்கள்** என்றது, இவர்கள் ஆறு அறிவுடைய மக்களுக்குரிய அறிவிச்சைசெயல்களின் விளக்க மிலாது, 654-ம் பாட்டிற் கூறியபடி, கொல் எறி - குத்து என்ற சொற்களானறியப்படும் மலைவாழும் கொடிய விலங்கு வாழ்க்கையே

வாழ்வாராவர் என்ற குறிப்புப்பற்றி. அன்றியும், இவர்கள் வாழ்த்தியபடி உலகினிலத் தாழ்வுக்குறியின் வாராது இவ்வில்வித்தை உயர்ந்த தெய்வக்குறியின் முற்றியதாதலின் இவ்வேடர்களது அறிவுக்குறைவு காட்ட **மாக்கள்** என்றார் என்பதுமாம். இராமன் முடிசூட்டுதற்கு நாள்வைத்த கணிதநூல் வல்லோரை அந்நாளே அவன் முடிதுறந்து காடு செல்ல அமைத்த பின்வினைவு நோக்கிக் "கணித மாக்கள்" என்ற கம்பர்பாட்டும் காண்க.

**வாழ்த்து எடுத்து இயம்பினர்கள்** - தமது மரபுக்கும் வழக்குக்கும் உரிய பல வாழ்த்துச் சொற்களை உரத்த ஓசையிற் கூறினர்கள். 33

683. ஐவன வடிசில், வெவ்வே றமைந்தன புற்பாற் சொன்றி,
மொய்வரைத் தினைமென் சோறு, மூங்கில்வன் பதங்கண், மற்றுங்
கைவினை யெயின ராக்கிக் கலந்தவூன் கிழங்கு துன்றச்
செய்வரை யுயர்ப்ப வெங்குங் கலந்தனர் சினவில் வேடர். ஈச

(இ - ள்) வெளிப்படை. மலைநெற் சோறும், வெவ்வேறு வகையான புல்லரிசிச் சோறும், அடர்ந்த மலைவினைவாகிய தினையின் மெல்லிய சோறும், மூங்கிலரிசியின் வலிய சோறுகளும், சமைத்தற்றொழிலிற் கைவல்லவர்களாகிய வேடர்கள் சமைத்து அவற்றோடு கலந்த ஊனும் கிழங்குகளும் சேரச் செய்குன்றைப்போலக் குவிக்க, எவ்விடத்தும் கோபமிக்க வில் வேடர்கள் உண்ணக் கலந்து கொண்டார்கள்.

**(வி - ரை) அடிசில் - சொன்றி - சோறு - பதங்கள்** - இவை சோறு என்ற ஒரு பொருள்குறிக்கும் பலமொழிகள். பலவகை அரிசிகளாலாக்கும் வெவ்வேறு பலவகைச் சோறுகளைக் குறிக்க வெவ்வேறு மொழிகளாற் கூறினர். பொருட்பின் வருநிலை.

**ஐவன அடிசில்** - தண்ணீர் பாய்வதின்றி மழையினுதவிகொண்டே மலையிற் புன்செய் வினைவுபோல விளைவதோர் நெல்வகை. இது குன்றவாது பெரும்பான்மையான உணவுப் பொருளாதலின் இங்கு முதலில் வைத்துக் கூறியதுமன்றிப் " பாறை முன்றில் ஐவன முணங்குமெங்கும் " (652) எனத் தொடக்கத்திற் கூறியதும் காண்க.

**வெவ்வேறு அமைந்தன புற்பாற் சொன்றி** - வெவ்வேறுவகைப் புற்களின் அரிசியும் அவற்றுல் வெவ்வேறு வகையில் அடப்பட்ட சோற்று வகையும் குறித்தார். **சொன்றி - சோறு, மொய்வரைத் தினைமென் சோறு** - இது மலைநிலத்துக்குச் சிறப்பாயுரியதாய் மிகுதியாக விளையும் அந்நிலக் கருப்பொருள் ஆதலின் இவ்வாறு அடைமொழி தந்து சிறப்பித்தார். ஐவனத்தை அடுத்துத் தினையும் குறிஞ்சி நிலத்தார்க்குரிய பெரும்பான்மை உணவுப்பொருளாம். **மென்மை** - இச்சோற்றின் தன்மை குறித்தது. இவ்வாறே மூங்கில் **வன்** பதங்கள் என்றதும் காண்க. **பதங்கள்** - பன்மை இவ்வகையுட் பலவகைச் சோறும், **வன்மை** - மூங்கில்நெற்சோற்றின் வலிமையும் குறித்தன. **மற்றும்** - இவ்வகையான வேறுவகை உணவும்.

**கைவினை எயினர்** - வேடர்களுள்ளே சோறுக்குதலிற் கைவல்லவர்.

**கலந்த ஊன் கிழங்கு துன்ற** - வெந்த சோற்றுடன் வெந்த ஊனும் கிழங்கும் பதத்திற் கலந்து உண்ணும் வழக்குக் குறித்தது. **துன்ற** - மிகச் சேர. துன்ற - ஆக்கி - உயர்ப்ப - எனக் கூட்டுக.

**செய் வரை உயர்ப்ப** - செய்குன்று போலக் குவிக்க. உவம உருபு தொக்கது. **செய் வரை** - மலைபோலச் செய்த கட்டுமலை.

**சின வில் வேடர்** - வேடர்களின் சினம் அவர்களது வில்லின்மே லேற்றப்பட்டது. சின வேடர் - வில் வேடர் என்று கூட்டி உரைத்தலுமாம். சின்ம் - அவரது இயல்புக்குணம்.

**கலந்தனர்** - உண்ணுதற்குக் கூடினர். உண்ணும் இயல்பு மேல்வரும் பாட்டுக்களிற் கூறுவார்.

**கிழங்கு கூட**—என்பதும் பாடம். 34

684. செந்தினை யிடியுந் தேனு மருந்துவார் ; தேனிற் றோய்த்து
வெந்தவூ னையில்வார் ; வேரி வீளங்கனிக் கவளங் கொள்வார் ;
நந்திய வீய லுண்டி நசையொடு மிசைவார் ; வெவ்வே
றந்தமி லுணவின் மேலோ ராயின ரளவி லார்கள். கூடு

(இ - ள்) வெளிப்படை. செந்தினை மாவும் தேனும் கூட்டி உண்பார்களும், வெந்த இறைச்சியைத் தேனிலே தோய்த்து உண்பவர்களும், விளாம்பழத்தைத் தேன் கலந்து பிசைந்து கவளமாக்கி உட்கொள்வார்களும், இறந்த ஈசல் உண்டியை ஆசையொடும் மிசைவார்களுமாக இவ்வாறு வேறு வேறுகிய அளவில்லாத பல வுணவுகளிலும் மேலவர்களாக ஆயினர் அளவில்லாத வேடர்கள்.

(வி - ரை) **செந்தினை** - செந்தெல் என்பதுபோலத் தினையின் உயர்ந்த ஒருவகை. **இடி** - மா. **இடி** - இடிக்கப்பட்டது. செயப்படுபொருள் விகுதி குறைந்து நின்றது. **தேன்** - அறுசுவைகளில் இனிப்புத் தரும் இயற்கைப் பண்டம். இது குறிஞ்சிக் கருப்பொருள்களில் ஒன்றாய் மலைகளில் மிகுதிபெறக் கிடைப்பது. உடல் நலத்திற்கு மிகவும் அடுத்தது. சுவையும் மணமும் குணமும் ஒருங்கே உதவும் உணவுப் பொருள் இதுபோன்றது பிறிதில்லை. இக்காரணங்கள்பற்றியே கானவர் இதனைத் தமதுணவில் மிகுதியும் பயன்படுத்தினர் என்று ஆசிரியர் இப்பாட்டில் மூவகையானுங் குறித்தது காண்க. இவ்வுணவுவகைகளுள்ளே வெந்தவூனைத் தேனிற்றோய்த்து உண்பது இவர்க்குள் உயர்ந்த உணவாகக் கொண்டனர் போலும். இது "பொச்சையில் நறவு மூனின் புழுக்கலு முணவு கொள்ளும்" (656) எனத் தொடக்கத்திற் றேற்றம்பெற எடுத்துக் காட்டியதனாலறியலாம். இதுபற்றியே நாயனார் காளத்தியடிகளார்க்குத் தம்மிச்சைப் படி தாமறிந்த வகையில் உயர்ந்த அமுதமைப்பார் "கல்லத முறவெந்து காவின்க ணிடுமிறைச்சி, கல்லினிற் படைத்துத்தேன் கலந்துபிழிந் ததுகொண்டு" (797) "தேனுமுடன் கலந்ததிது தித்திக்கு மெனமொழிந்து" (799) ஊட்டினர் எனப் பின்னர்க் காண்கின்றோம். "பிறந்தது, தேனழித் தூனுண் கானவர் குலத்தே" என்ற சுக்கீரர் - திருக்கண்ணப்பதேவர் திருமறமுங் காண்க. இக்காலினும் உலக உயர் நிலையிலுள்ளோர் தேன்றோய்த்த பலவகை உணவு உட்கொள்ளும் திறமும் காண்க.

**வேரி வீளங்கனிக் கவளம்** - விளா குறிஞ்சிக் கருப்பொருளாம். இதனையும் முன்னரே "வன்றிரள் விளவின்கோட்டு" (652) என்று குறித்தது காண்க.

பேரூணுகிய சோற்று வகைகளே அடுக்கித் தனிப்பட முன்பாட்டிற் கூறி, அவற் றிற்கிடையிடை நுகரும் சிற்றூணுகிய தினைமாவும் தேனும் கலந்த உணவை "அருந்து வார்" என அடுத்துவைத்து, இன்னும் அருகியதாய் உணவுச் சுவைதர அதற்கிடை நுகரும் இடையூண்வகையாகிய தேன்றோய்த்த வெந்த வூனை அதற்கடுத்துக் கூறிய சுவை யுங் காண்க. சிற்றூண் எனக் குறிப்போர் **பலகாரம்** என இக்காலில் வழங்கும் உண்மை யிற் பேரூண்வகைகளைப் போலல்லாமல், இவ்வேடர்கள் உண்மைப் பலகாரமாகிய (பலம்-பழம் - பழத்திலுலாகிய ஆகாரம்) வேரி விளங்கனிக்கவளம் கொண்டதுங்காண்க. இடியுந் தேனும் **பிசைந்து** சேர்த்து உண்பதும், வெந்த வூன்றுண்டங்கள் தனித்தனி தேனிற் **றோய்த்து** உண்பதும், தேன் கலந்த விளங்கனியை **உருட்டிக்** கவளமாக உண் பதும் என்ற உண்ணும்வகை காட்டிய திறமுங் காண்க.

**நந்திய ஈயல் உண்டி** - பெருந்திரளாகச் சேர்த்துக் கூட்டிய ஈயல்களைச் சுண்டல் போலப் பக்குவமாக்கி உண்ணுதல் குறிஞ்சிநில மாக்களின் உணவுவகைகளில் ஒன்று. "புலபுலெனக் கலகலெனப் புற்றீசல் போல" என்றுவமித்தவாறு ஈயல்கள் புற்றி னின்றும் பெருந்திரளாய் வந்து சிறிது போதில் உயிர்துறக்கும்; அவை கூடையில் வாரிச் செல்லும் அளவிற் பெறக்கூடும். அவைகிளம்பும் புற்றுவாய் முதலிய இடத்தில் ஒருவகை மறைப்பு - விளக்கு முதலிய அமைப்புக்களால் அவற்றை உண்டாகுமிடத்தி

னின்றும் திரளாய் வெளிவரச் செய்வதும் தாம் வைத்தகொள்கலத்திற்குள்வந்து வீழச் செய்வதும் குன்றவர்க்குக்கைவந்த பழக்கமாம். "புற்றிலே கரடி வாயைவைத்தாற்போல் உறிஞ்சுதல்" என்பது பழமொழியாய் வழங்குவதாயிற்று. நந்திய - ஏனைப்பிராணிக ளின் இறைச்சிபோ லல்லாமல் இவை தாமாக வெளிவந்து வீழ்ந்து பிறராற்கொல்லப் படாது தாமே இயல்பின் இறந்துபடுவன ஆதலின் நந்திய என்றார். நந்துதல் - குறை தல் - இறத்தல். மிகுந்த என்றுரைப்பாரு மூண்டு. நசையோடு மிசைவார் என்றது முன் கூறிய பிற பெரும்உணவுகளின் பின்னர் இதன் அமைப்பும், சுவையும், தொடர்ந்து சிறிது சிறிதாகக் கறித்துண்ணும் பெற்றியும் முதலிய பல காரணங்களால் ஆசையோடும் வேடர்கள் உட்கொள்ளும் இயல்பு குறித்தது. இது அவர்களது உண வில் பெரும்பாலும் இன்றியமையாப்பகுதி என்பது "மென்றசையும் ஈயலொடு கற வும்" (698) எனத் தேவராட்டி, நாகன் தனக்கு அமைத்த திட்டப்படியின் முறையைப் பற்றிக் கூறுமிடத்துக் காணப்படும்.

இவ்விரண்டு பாட்டுக்களானும் இவர்களது உணவகைகள், உண்ணும் வகைகள், உணவின் மரபு, உணவுமுறை, உணவார்வம் முதலிய வாழ்க்கைத்திறம் பலவும் கண் ணுடியிற் காண்பதுபோல நாம் காணக்காட்டிய ஆசிரியர் திறங்கண்டு களிக்க.

வேவ்வேறு அந்தமில் உணவின் மேலோர் - இதனால் இங்குக்கூறியனவும் பிறவு மாகிய பற்பல வகையும் தொகையும் குறித்தார். உணவின் மேலோர் - இயல்பாகிய அளவுக்குமேல் மிக்க உணவு கொண்டனர். தமது தலைவன் அழைத்து அன்புடன் அளித்த கொண்டாட்டமாதலின் வயிறாரவும் அதற்குமேலும் உட்கொண்டனர் என் பதாம். மேன்மை - மிகுதி குறித்தது. மலையுறை மாக்கள் (682) என்றபடி இவர்கள் மக்கள் இனத்தவரேயாயினும் உணவினால் மட்டும் மேலோராவதன்றி உண் மையான உணர்வினால் மேலோராவரல்லர் என்ற குறிப்பும்பெறக் கூறினர். "அழுக்குடைப் புலன்வழி யிழுக்கத்தி னெழுகி, வலைவாய்த் தூண்டிலி னுள்ளிரை விழுங்கும், பன்மீன்போல" (பதிணேராந்திருமுறை - கோயினூன் மணிமாலை - 28) என்று பட்டினத்தடிகள் இரங்கிக்கூறியருளியபடி, நாவின்சுவைக் கடிமைப்பட்ட மாக் களே இழுத்தற்குப் பலநூறுவகைக் கேடுதரும் பகட்டுச் செயற்கை உணவுப்பண்டங்கள் மலிந்து எவ்விடத்தும் கணக்கிலடங்காது பெருகும் இக்காளின் உணவு விற் பனைச் சாலைகளில் மனம் போனபடி உண்டுகளித்து மருத்துவச்சாலைகளைப் பெருக் கும் நகர நாகரிகப் பேர்பெற்ற மாக்களும் கேட்டுவாயூறிப் பொருமைப்படுமாறுகுறிஞ்சி நிலப்பழங்குடி மாக்களின் இயற்கை யுணவு வகைகளைச் சுவை பெறத் தன்மையணியில் எடுத்துக் காட்டியது ஆசிரியரது தெய்வப்புலமையாம். உடல்நலக் கேடு விளைக்கும் நம்து செயற்கை உணவுவகை போலல்லாது இவை பலவும் இயற்கையுணவாயமைந் தன வென்று வரும்பாட்டில் இயல்வகையுணவு என்றதும் சிந்திக்க.*

அந்தமிலுணவின்மேலோர் ஆயினர் என்றதற்குச்சாவாமருந்தாகிய அமுதத்தை உண்டதேவர்கள்போ லாயினர் என்று அதிசயோத்தி பெற உரைப்பாரு முண்டு. (அந்தம் இல் உணவு - சாவில்லாமற் செய்யும் அமுதம்)

அளவிலார்கள்-மாடுயர் மலைகளினின்றும் போந்த மறக்குலத் தலைவர்களும் ஏனை வேடர்களும் அருங்குடி யிருப்பினுள்ளாருமாகிக் கூடிய எண்ணிறந்தவர்களில் பெரும் பாலோர்உணவின் மேலோராயினர். மேலோர்-மேற்கொண்டவர்கள் என்றலுமாம். அவ்

---

*எனது கண்பராகிய பெருநிலக் கிழவர் ஒருவர் இம்மலைச்சார்களின் மணவிழா ஒன்றிற்கு அழைக்கப்பட்டுச் சென்றார். அங்கு இவ்வேழைக் குன்றவாணர்கள் அவர்க்கு உரியபடி உண்ணத்தக்கதாய் ஈந்த விருந்தின் வகையில் தேன், தினைமா, செங்கீரை விதைமா, பலவகைப் பழங்கள், கிழங்கு முதலிய உணவுகளைப்பற்றி அவர் வியந்து பாராட்டிப் பேசியது இங்கு நினைவிற்கு வருகின்றது.—பதிப்பாசிரியன்

வாறில்லாது அளவிற் பொருந்த உண்டு விழாவின் உயர்பகுதியைக் கண்காணித்துச் செலுத்தியோர் சிலரே என்பதாம். தமது மணவிழாக்கூட்ட முதலியவற்றிலும் நிகழ்ச்சிகள் இவ்வாறே இருத்தலும் காண்க. 35

685. அயல்வரைப் புலத்தின் வந்தா ரருங்குடி யிருப்பி னுள்ளா
ரியல்வகை யுணவி லார்ந்த வெயிற்றிய ரெயின ரெல்லா
மூயர்கதி ருச்சி நீங்க வொழிவில்பன் னறவு மாந்தி
மயலுறு களிப்பி னீடி வரிசிலை விழவு கொள்வார், நகு

686. பாசிலைப் படலை சுற்றிப் பன்மலர்த் தொடையல் சூடிக்
காசுடை வடத்தோல் கட்டிக் கவடிமெய்க் கலன்கள் பூண்டு
மாசில்சீர் வெட்சி முன்ஞ வருதுறைக் கண்ணி சூடி
யாசிலா கிரிய னேந்து மடற்சிலை மருங்கு சூழ்ந்தார். நஎ

685. (இ - ள்) வெளிப்படை. பக்கத்து மலைச்சாரற்புலத்தின் வந்தாரும், இங்கு அரிய (உடற்பூரில்) சிறுகுடியிருப்பின் கண்ணுள்ளாருமாய், நில இயலும் உடலிய லும் பொருந்திய வகையாற் கூடிய அவ்வுணவில் நிறைய உண்டு தேக்கிய எயிற்றிய ரும், எயினரும் ஆகிய யாவரும் விண்ணில் உயர்ந்த ஞாயிற்றின் செலவில் உச்சிப் பொழுது கழிய அளவற்ற பலவகையாயின நறவங்குடித்து, அதனால் மயல் பொருந்திய களியாட்டத்திற் பெருகி, வரிவில் விழாக் கொண்டாடுவார்களாய், நசு

686. (இ - ள்) வெளிப்படை. பச்சிலையானியன்ற படலைகளைச் சுற்றிப் பல வகைப் பூமாலைகளைச் சூடி, மணிகள் கட்டிய வடத்தோலை மேலே கட்டி, உடலிற் பல நிறைகளாலியன்ற அணிகலன்களை அணிந்து, குற்றமற்ற சிறப்புடைய வெட்சி முத லாகச் சொல்லப்பட்டனவாகித் தாம் மேற்கொண்டு வரும் அத்துறைக்குரிய மாலை களைச்சூடிக், குற்றம் நீங்கிய ஆசிரியன் ஏந்திய வலியவில்லின் பக்கத்திற் சூழ்ந்தார்கள்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

685. (வி - ரை) **அயல்வரைப் புலத்தின் வந்தார்** - நாகன் வில்விழாவின் நாட் குறித்துச்சொல்லிவிட, அதுபற்றி, "மாடியர் மலைக ளாஞ மறக்குலத் தலைவ ரெல்லாம்" (678), "சிலைபயில் வேடர் கொண்டு திசைதொறு நெருங்க வந்தார்" (679) என்றுமுன் கூறியவாறு அயலில் உள்ள மலை நிலத்திலிருந்து வந்தவர்கள். **அயல்** என்றது பொத் தப்பி நாட்டுக்கு அயல் நாடும், உடற்பூருக்கு அயலூரும் ஆம். **வந்தார்** - குடியிருப்புக்கு அப்பாலிருந்து வந்து கூடியவர்கள். இவர்க்கு வேறாய் இந்நாட்டுச் சீறூரினுள்ளாராய்க் கூடியவர்களைக் **குடியிருப்பினுள்ளார்** என்று பிரித்துக் கூறியது காண்க. **அருங்குடி** - அரியசிற்றூர். **இயல்வகை உணவு**-நிலத்துக்கும் நலத்திற்கும் பகுதியிற் பொருந்தியன வாகத் தத்தமக் கியைந்த உணவு. மேலிரண்டு பாட்டுக்களினும் விரித்த உணவு வகை. **ஆர்ந்த** - வயிறு நிறையவும் ஆசை தீரவும் நிறைய உண்ட.

**எயிற்றியர் - எயினர்** - வேடிச்சியரும் வேடரும். வில்விழா ஆண்மகவுக்குரிய சடங்காயினும் நன்மக்கள் வாழ்க்கைத் திறத்தில் இவ்விழாவிற் பெண்களும் கலந்து கொள்ளும் பண்டைநாள் வழக்கும், இதனால் பழங்குடிமக்கள் பெண்களுக்கே கொடுத்த உரிமையும், அதுபற்றியே எயிற்றியரை முதலிற் சுட்டிய சிறப்பும் குறிக்கொள்க.

**உயர்கதிர் உச்சி நீங்க** - ஞாயிற்றின் உச்சிவேளையை ஒருநல்வேளையாகக் கொள் வது இவர்கள் வழக்கு. இது நல்வேளை என்பது சோதிடநூற் றுணிபுமாம். இதனை அபிசித்து முகூர்த்த மென்பர். காலப் பிரகாசிகை, காலவிதானம் முதலியவை பார்க்க. இங்கு வில்விழாத் தொடக்கத்தில் வில்லினுக்கும் மாணவராகிய திண்ணனுருக்கும் காப்புச் சேர்த்த இது நல்வேளை. இதுபோலவே இதன் ஏழாநாளில் விழா

நிறைவில் வில்லினைப் பிடிப்பித்த நேரமும் இதுவேயாம். " வெங்கதி - ருச்சி மேவிய பொழுது " (689) என்றது காண்க. முடிவில் ராயனூர் திருக்காளத்தி மலையேறிக் காளத்தி யடிகளாரைக் காணலுறுதற்கும் இந்த நல்வேளையே கூடிற்று. "கதிரவ னுச்சி நண்ண" (750). உச்சிவேளையிற் சிறுவர் முதலியோர் வெளியிற் போதலாகாது என்னும் உலக வழக்கும் இக் கருத்தினின் றெழுந்தது போலும். ஞாயிற்றின் முழு வெப்பமுந் தாக்கிக் காய்தலின் உயிர் வகைகளுக்கு அதன் பயன்றரும் நேரம் இது வென்க. ஞாயிறு கடலிற்றோன்றும் உதய நேரம் ஒரு நல்வேளையாம் என்னும் இந் நாள் வழக்கும் காண்க.

**ஒழிவில் பன் னறவு மாந்தி** - உணவு வகைகள் பலவாயினமை போலக் கள்வகை களும் பலவாயின. இவையும் அந்நிலத்துக்கும் உடல்நலத்துக்கும் பொருந்திய இயல்பு வகையாலமைந்த ஈச்சஞ் சாறு முதலியன வென்பர். **ஒழிவில்** - தடுக்கலாகாத வகையால் அவ்வுணவுகளோடு உடன்கூட்டி உட்கொள்ளப்படுவன என்ற குறிப்புமாம். இதுபற்றியே முன்னரும் " தொலைவில்பன் னறவு மாந்தி " (669) என்றார். **மாந்தல்** - மிகுதிபெற உட்கொள்ளுதல்.

**பல் நறவு** - பலவேறு வகைப்பட்ட நறவுகள். ஆயின் இவை அறிஞராற் கடியப் பட்டன. ஆதலின் இவற்றை விரித்துரைத்தல் முறையன்றென்பார் **பல்** என்று தொகுத்து கிறுத்தினர். **மயலுறு களிப்பின்** என்றதன் குறிப்பும் அது.

இக் குடிவகைகள் இக்காளிற்போல மிகையும் கேடும் விளக்காமல், அக்காலிலே கீழ்நிலையிலுள்ளார் கொண்டாட்டச் சிறப்புக்களில் அளவில் அமைத்துள்ள உணவு வகையாகிய மட்டில் நின்றதுபோலும். இக்காளிலே சிறப்பு நாளிலும் பிறநாளிலும் உலகப் பெருநிலைப் பேர்படைத்தோரும் பேருண்டி மிசைந்து பெருங்குடி மாந்திக் கேடுற்றழியக் காண்கின்றோம். இது முன்னுளின் வழக்கக்கேடுகளின் எச்சமாய் வந்த வழிவழி வழக்குப்போலும்.

**மயலுறு களிப்பின் நீடி** - விழாக் கொண்டாட்டங்களில் யாவரும் களிப்புக் கொண்டு ஆடுதல் இயல்பேயாயினும் இங்குக் கூறிய நறவின் களிப்பு அறிஞர்களாற் கடிந்து விலக்கப்பட்ட தொன்றும் என்பார் **மயலுறு** என்றார். மயல் ஒருவனது நிறையை அழித்து மயக்கஞ் செய்தலால் அதனைத் தரும் நறவு ஒதுக்கப்பட்டது. "சத்தி யழிந்தது தம்மை மறத்தலால்" என்பது திருமந்திரம்.

**வரிசிலை விழவு கொள்வார்** - வில்விழாக் கொண்டாடுவாராகி. முற்றெச்சம். கொள்வார் - சூழ்ந்தார் என வரும்பாட்டுடன் கூட்டிமுடிக்க.

**அயல்வரைப் புறத்தின்**—என்பதும் பாடம். 36

686. (வி - ரை) **பாசிலைப் படலை** - பசுமை இலை **பாசிலை** எனப் புணர்ந்தது. **படலை** - மாலைவிசேடம். குழையுந் தட்டச் சுரும்புற படலை (658) என்றது காண்க. பரந்த அமைப்புடைய மறைப்புத் தருவதனைப் **படல்** என்பது மலை நாட்டு வழக்கு. பச் சிலைகளாற் றொடுக்கப்பட்டபடலை இடையிற் கட்டப்பட்டு உடையின்மேல் ஓளவிற்கு மறைப்பாகவும் பயன்படும் ஆதலின் **சுற்றி** என்றார். **தோடையல்தூடி** என்றதும் நோக்குக. **தோடையல்** - தொடுக்கப்படுவது. அல் - சாரியை.

**காசுடை வடத்தோல்** - பலவகை மணிகளையும் அழுத்தித் தோலினுட் பதியக் கட்டிய வடம் போன்ற தோல். இதுவும் இடையில் உடையின்மேற் கட்டப்படுவது. இது உடைவாள் முதலிய பலவும் கட்டுதற்குப் பயன்படுவதால், உறுதி பெற வலிய தாய்க் கட்டப்படும்; ஆதலின் **வடத்தோல் கட்டி** என்றார். **வடத்தோல்** - வடம் போன்று வலிமையுடையதோல். "நிரையிற்பொலி நீளுடைத்தோல் சுரிகைப் புறஞ் சூழ " (710) என்றது காண்க. "குருதி புலராச் சுரிகை யெஃக, மரையிற் கட்டிய வுடைதோற் கச்சையன், றோனெடும் பையிற் குறுமயிர் திணித்து, வாரில் வீக்கிய

வரிக்கை கட்டியன் " என்பது கல்லாடதேவநாயனா ரருளிய திருக்கண்ணப்ப தேவர் திருமறம் (பதினொராந் திருமுறை).

**கவடி** - பலகறை. பலகறைகளை வரிசைபெற அமைத்துப் பற்பல வகை மாலைகள் கோத்து அணிதல் இந்நாளிலும் மலைவாழ் மக்கள் முதலியவர்பாற் காணப்படும் வழக்கு.

**மாசில்சீர் வெட்சி முன்னு** - "வெட்சி தானே குறிஞ்சியது புறனே" (தொல்காப்பியம் - புறத்திணையியல் 1) என்றபடி குறிஞ்சியின் புறத்திணைக்குரியது **வெட்சி** மாலையாதலின் **வெட்சிமுன்னு** என்றார். **மாசில்சீர்** - நூல்களால் விலக்கப்பட்ட குற்றங்களின் நீங்கிய சிறப்பு.

**வநதுறைக் கண்ணி** - அதற்குரித்தாய் வரும் துறைக்குச் சார்புடைய கண்ணி. இவை ஈண்டைக் கேற்றவையாகிய கடவுள் வாழ்த்தும் வாயுறை வாழ்த்தும் விரவிய பாடாண் புறத்திணைக்குரியன. பின்னர்க் குன்றவர்வரியும், கொடிச்சியர் அணங்கையும்,சூரமகளிர்ஆட்டும்(688)கூறுதலானும், குறிஞ்சியை வலங்கொண்டுவிழவுகொள்ளுதலானும் பிறவாற்றானும் இது குறிஞ்சித்தெய்வமாகிய முருகனை வணங்கி, இந்த வில்லாண்மை இத் திண்ணனுக்குத் திறம்பட முற்றி வெற்றி தருவதாக என வாழ்த்தியதாம். "வாழ்த்தெடுத் தியம்பி னார்கள்" என முன்னரும் (682) கூறியது காண்க. இவற்றின் விரிவுகள் தொல்காப்பிய முதலிய நூல்களுட் கண்டுகொள்க. இவ்வாறன்றி, இதற்கு வெட்சி முதலாகச் சொல்லப்பட்ட போர்த் துறைகளில் வல்லோர் அவ்வல்லமைக் கடையாளமாக அவ்வத்துறைக்கண்ணி சூடுவராதலின் அந்த மாலைகள் என்பாருமுண்டு.**வநநறைக் கண்ணி** என்று பாடங்கொண் டுரைப்பாருமுண்டு. " பன்மலர்த் தொடையல்" என முன்னர்க் கூறியதனால் அது கூறியது கூறலாகும். அணி மாலை வகைகள் முன்னர்க் கூறி அவற்றின் மேலாகச் சூடும் உரிய துறைக்கண்ணியைப் பின்னர்க் கூறிய அமைதியும் காண்க.

**ஆசில் ஆசிரியன்** என்றமையால் ஆசிரிய இலக்கணம் முற்றும் அமையப் பெற்று, நல்லாசிரியனுகாமைக்குரிய குற்றங்களி னீங்கியவன் என்பது பெறப்படும்.

நல்லாசிரியனிலக்கணம், " குலனரு டெய்வங் கொள்கை மேன்மை, கலைபயி றெளிவு கட்டுரை வன்மை" என்ற சூத்திரத்தானும்,.ஆசிரிய னுகாதவ னிவனென்பது "மொழிகுண மின்மையு மிழிகுண வியல்பும், அழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலும்"என்ற சூத்திரத்தானும் உணர்க. இவற்றுள் ஆசிரிய இலக்கணம் ஈண்டைக் கேற்றபெற்றி அமைத்துக் கண்டுகொள்க. இக்கருத்துப் பற்றியே பின்னர்த் "தங்கடொல் மரபில் விஞ்சைத் தனுத்தொழில் வலவர் தம்பால்" (689) என்று விதந்து கூறினர்.

**ஆசிரியன் ஏந்தும் அடல் சிலை** - வில்விழாவில், மாணவகன் கைக்கொடுக்கும் வில்லினை முதலில் ஆசிரியன் ஏந்தி விழாக் கொண்டாடி அதன் முடிவில் மாணவகன் கையிற் கொடுத்து அதனைத் தக்கவாறு பிடிப்பித்து வித்தைகற்பித்தல் மரபு. அடல் - வலிமை. வெற்றி என்றலுமாம். அது பான்மையிற் சமைத்துக் கொண்டமையானும், பின்னர் இதனால் விளையும் பயனானும் ஆம். 681 பார்க்க.

**கலங்கள் பூண்டார்—மாசிலாவேட்சி—என்பனவும் பாடங்கள்.** 37

687. தோண்டக முரசுங் கொம்புந் துடிகளுந் தூளைகொள் வேயு
மெண்டிசை நிறைத்து விம்ம வெழுந்தபே ரொலியி னோடுந்
திண்டிறன் மறவ ரார்ப்புச் சேண்விசும் பிடித்துச் செல்லக்
கொண்டசீர் விழவு பொங்கக் குறிச்சியை வலங்கொண் டார்கள். ஈ அ

(இ - ள்) வெளிப்படை. தொண்டகச் சிறுபறையும், கொம்பும், உடுக்கையும், தூளைகொண்ட மூங்கில் இயமும் எட்டுத் திக்கிலும் நிறைந்து எழுந்து ஒசைபட, அவற்றினெழுந்த பேரோசையினோடுங்கூடித் திண்ணிய வல்லமையுடைய மறவர்களின்

ஆரவாரம், நீண்ட ஆகாய நிறைந்து முழக்கிச் செல்ல, அத்திருவிழாக் கொண்ட சிறப்புப் பொங்கக் குறிச்சியை வலமாகச் சுற்றினர்கள்.

(வி - ரை) இங்குக் கூறப்பட்டன குறிஞ்சிக்குரிய பறை வகைகள். இவற்றை முன்னர் 654ல் குறித்தது காண்க. அங்குக் குறித்தவை நித்தியாங்கமும், இங்குக் கூறியவை நைமித்திகாங்கமுமா மென்பது. "தொண்டகச் சிறுபறைக் குரவை யயர" என்ற திருமுருகாற்றுப்படையும் காண்க. தொண்டகப்பறை குறிஞ்சிக் கருப்பொருளாம்.

**துளைகோள் வேய்** - வேய்ங்குழல். இது பெரும்பான்மை முல்லைத் திணைக்கு உரியதாயினும், திணை மயக்கத்தானும், ஆனிரை கவர்தலும் அவ்வாறு கவர்ந்தவற்றை வளர்த்தலும் குறிஞ்சித்திணையினுள் வருதலானும், அவற்றோடு முல்லைத்திணைக்கு உரியகுழலும் போதருமாதலானும், சிறுபான்மை வேய்ங்குழல் குறிஞ்சிக்கு முரிய தாம். "வேறுபல் லுருவின் மிக்கு விரவுமா நிரைகள்" (655) என முன்னர்க் கூறினர். "குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்" என்ற திருமுருகாற்றுப்படையும் காண்க. ஆயின் இங்குக் குறித்தது கோவலன் வாயின் முல்லையர் தீங்குழல் போலாது, வெஞ்சொல் வேட்டுவர் வாயினதாய்ப் பேரொலி செய்வதா யுள்ளதோர் வகையென்பார் ஏனைப்பேரொலி செய்யும் தொண்டகப்பறை, கொம்பு முதலியவற்றோடு உடன் வைத்தனமன்றி "எண்டிசை நிறைந்து விம்ம வெழுந்த பேரொலி" என்றார். பல இயங்களும் முழக்கி மக்கள் ஆர்த்துக்கூவி விழாச் செய்தல் இன்றும் மலைநாட்டில் வழங்கும் மரபு.

**எண்டிசை நிறைந்து விம்ம** - பேரொலியாதலின் எழுந்து எல்லாத் திசைகளிலும் பரந்தது. எண்டிசையினின்றும் போந்த வேடர் இசைத்த பறையொலி மிக்கது என்றதொரு குறிப்புமாம். "வேடர் திசைதொறு மெருங்க வந்தார்" (679).

**தீண் திறல் மறவர்** - அசைவிலாத் திறனும் மிகுவலிமையும் குறித்தது. யானை, புலி முதலாயின பெருங் கொடு விலங்குகளுடன் கலந்து வாழும் வாழ்க்கையுடையாராதலின் இவ்வாறு கூறினர்.

**சேண் விசும்பு இடித்து செல்ல - விசும்புசேண்** - என்க. ஆகாயத்தில் நெடுந்தூரம்.பேரொலிகளாதலின் இவை நெடுந்தூரம் சென்று பரவுதலும் எதிரொலி தருதலும்பற்றி **இடித்து - செல்ல** என்றார். முன்னர் "ஏறுடை வானந் தன்னி லிடிக்குர லெழிலி யோடு, மாறுகொண் முழக்கங் காட்டும்" (655) என்றது நோக்குக. "வண் பூங் கொடிகள், பயிலச் சிலம்பெதிர் கூய்ப்பண்ணை நண்ணும்" என்ற திருக்கோவையாரும் இனைவு கூர்க.

**விழவு கொண்ட சீர்போங்க** - என மாற்றுக.

**குறிச்சியை வலங் கொண்டார்கள்** - விழாவில் நகர்வலம் வருதல் எத்திணையிலும் மரபாம். குறிச்சி - குறிஞ்சி நிலவூர். 38

688. குன்றவர் வரிகொண் டாடக் கொடிச்சியர் குணங்கை யாடத்
குன்றிய மகிழ்ச்சி யோடுஞ் சூர மகளி ராட
வென்றிவில் விழவி னோடும் விருப்புடை யேழா நாளா
மன்றிரு மடங்கு செய்கை யழகுற வமைத்த பின்றை, நகூ

689. வெங்கதிர் விசும்பி னுச்சி மேவிய பொழுதி லெங்கு
மங்கல வாழ்த்து மல்க மருங்குபல் லியங்க ளார்ப்பத்
தங்கடொன் மரபின் விஞ்சைத் தனுத்திதாழில் வலவர் தம்பாற்
பொங்கொளிக் கரும்போ ரேற்றைப் பொருகிலை பிடிப்பித் தார்கள். சo

688. (இ - ள்) வெளிப்படை. (இவ்வாறு) வேடர்கள் வரிக்கூத்து ஆடவும், வேடிச்சிகள் குணங்கைக்கூத்து ஆடவும், மிக்க மகிழ்ச்சியோடும் அச்சந்தருகின்ற

தெய்வ மகளிர்கள் ஆடவும், வெற்றிதரும் வில்விழாவை நாள்தோறுங் கொண்டாடி வந்து, விருப்புடைய ஏழாம் நாளிலே முன்னே நாள்களிலிட இருமடங்கு அதிகமாக அக்கொண்டாட்டங்களை அழகுறச் செய்த பின்னர், ஈக

689. (இ - ள்) வெங்கதிர்.....பொழுதில் - ஞாயிறு ஆகாய வெளியின் உச்சியிற் பொருந்திய நேரத்திலே; எங்கும்...ஆர்ப்ப - எவ்விடத்தும் பல மங்கல வாழ்த்து நிறையவும், பக்கங்களிற் பலவகை மங்கல இயங்கள் சத்திக்கவும்; தங்கள்...தம்பால்-(அவ்வேடர்கள்) தங்களுடைய பழைய மாபில் வந்த வில்வித்தை பயிற்றும்தன்மை வல்லவரிடமாக; பொங்கொளி...பிடிப்பித்தார்கள். ஒளி வீசும், கரிய போர் வல்ல, ஏறுபோன்ற திண்ணஞரைப் போர் புரிய வல்லதாகிய வில்லினைப் பிடிப்பித்தார்கள். ஈ0

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

688. (வி - ரை) **துன்றவர்வரி - வரி** - வரிக்கூத்து. வரிப்பாட்டு - குறிஞ்சிப் பண் என்பாருமுண்டு. இவற்றின் விரிவுகளைச் சிலப்பதிகார உரை முதலியவற்றுட் கண்டு கொள்க. **வரிகொண்டாடுதல்** - குறிஞ்சிப் பண்ணைப்பாடிக் கூத்தாடுதல் என்பர். குறிஞ்சிப் பண் இத்திணைக்குரியது. நெஞ்சு உரத்துடன் மிக்க மூச்சுச் செலவுடன் பாடத்தக்கது. வேடர்களில் ஆண் மக்கள் வரிகொண்டாட என்க.

**கோடிச்சியர் துணங்கை ஆட - துணங்கை** - துணங்கைக் கூத்து. சிங்கிக் கூத்தென்பதும் வழக்கு. "மூடக்கிய விருகை பழுப்புடை யொற்றித், தொடக்கிய நடையது துணங்கை யாகும்" - (பிங்கலம்). வேட்டுவருட் பெண்கள் துணங்கைக் கூத்தாட என்க. "வெருவர, வென்றடு விறற்களம் பாடித் தோள்பெயரா, நிணந்தின் வாயள் துணங்கை தூங்க" என்பது திருமுருகாற்றுப்படை. **கோடிச்சியர்** - குன்றவர் மகளிர்.

**தூர் அமகளிர்** - கண்டார்க்கு அச்சத்தை வருவிக்கும் தெய்வப் பெண்கள். தூர் - அச்சம். இவர்கள் மலையிடங்களில் வாழ்பவர். தெய்வம் பரவிக் குரவை - வரி - துணங்கை முதலியன ஆடியும் பாடியும் வேட்டுவர் விழாக் கொண்டாடினார்களாக, அது கண்டு தெய்வப் பெண்கள் மகிழ்ந்து ஆடினர் என்பதாம். **துன்றிய மகிழ்ச்சி** - விழாக் கொண்டாட்டங்களில் நிறைந்த மகிழ்வு. "கோழி யோங்கிய வென்றடு விறற் கொடி, வாழிய பெரிதென் றேத்திப் பலருடன், சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச், சூரர மகளி ராடுஞ் சோலை" என்ற திருமுருகாற்றுப்படையுங் காண்க.

**வென்றி வில் விழவு** - இவ்வில் வெற்றிபெற் றேங்குவதாக என்று மேற்கூறிப் போந்தவாறு ஆறு நாளும் விழாக் கொண்டாடினார்கள் என்க.

**விருப்புடை ஏழாம் நாள்** - திருவிழாவின் நிறைவு நாளாதலின் விருப்புடை என்றார். காப்பணிந்தபின் எழு நாட்கள் தொடர்ந்து விழாக் கொண்டாடி முடித்தனர் என்க. ஏழுநாட் கொண்ட திருவிழாக்கள் ஆகமங்களிலும் விதிக்கப்பட்டன என்பதையும் நினைவு கூர்க. "தீர்த்தமா மட்ட மீமுன் சிறப்புடை யேழ நாளும், கூத்தராய் வீதி போந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே" என்ற திருநேரிசையும் காண்க. "கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி, ஆடுதுவன்று விழவின் நாடார்த் தன்றே" என்னும் சங்க நூன் மேற்கோளும் அறிக. ஏழாம் நாள் முடிவாகச் செய்யப்படும் திருவிழா **கணம்** எனப் பெயர் பெறும்.

**அன்று இருமடங்கு செய்கை** - மூன் ஆறு நாளும் நிகழ்ந்தது போல ஒரு மடங்கும், விழா நிறைவின் பொருட்டுத் தனியாக ஒரு மடங்கும் ஆக இருமடங்கு என்க. **இருமடங்கு** - மிகுதிப் பொருள் தருதல் மாத்திரையாய் நின்றது என்பாருமுண்டு.

**அழகுற அமைத்த** - குறிச்சியை அலங்கரித்தலும் தம்மை அலங்கரித்தலும் முதலிய யாவும் அழகு பொருந்தச் செய்த. 686 பார்க்க. இவற்றின்வகை திருமுருகாற்றுப்படை யுள்ளுங் காண்க. **பின்றை** - பின்பு.

**களிகொண்டாட—அமைத்த பின்னர்—ஏழா நாளின்**—என்பனவும் பாடங்கள். 39

689. (வி - ரை) வேங்கதிர் விசும்பின் உச்சி மேவிய பொழுதில்-685 பார்க்க. **மங்கலம்** என்பதனை இயங்களுக்கும், பல என்பதனை வாழ்த்துக்கும் கூட்டுக. **வாழ்த்து** - மக்கள் வாயால் வாழ்த்துவது. வாழ்த்தெடுத்தியம்பினர்கள் (682) என்றது காண்க. அவ்வாறே இயங்களின் மங்கல ஆர்ப்புக்களும் மிக என்க.

**தங்கள் தோல்மாபின்** - தமது பழமையான மரபு வழிவந்த. ஆசிரியத் தொழிலுக்குத் தொன்மையும் மரபுவழி வருதலும் வேண்டப்படுவன என்பது நம்மை முன்னேயோராகிய ஆன்றோர் துணிபு. ஒரு மரபும் பற்றாது வழிவருதலுமிலராய்ப் புதிதின் வந்தவரைச் சிறந்த ஆசிரியராகக் கொள்ளார் நம்முன்னோர். "குலவித்தை கல்லாமற் பாகம் படும்" என்பது கைவந்ததொரு பழமொழி. இவ்வாறல்லாது சிலர் பால் விஞ்சை மேம்பாடு காணப்படுவது ஒரோவழி உளதாம். அது விதியாகாது. வணிகமரபினர் இயல்பிலே கணக்கில் வல்லவராதலும், வழிவழிவரும் பழைய வேளாள மக்களுக்கு உழவின் அறிவு கல்லாமே அனுபவத்தில் வருதலும் பிறவும் காணலாம். இதுபற்றியே முன்னுள் வேடர்கள் வில்வித்தையில் **தங்கள் தோல் மாபில்** வந்த வலவரை ஆசிரியராகக் கொண்டு பயிற்றினர்.

**தனுத் தொழில் விஞ்சை** என மாற்றுக. விற்றொழிற்கலை. வல்லவர் என்றது **வலவர்** என நின்றது. வலவர்பால் - ஏற்றைச் - சிலை பிடிப்பித்தார்கள் என்று முடிக்க. முறையிற் காப்புச்செய்த வில்லினை வலவராற் றிண்ணனார் கையிற் பிடிக்கும்படி செய்தார்கள். சிலை கையிற் பிடித்தலே அவ்வித்தையின் பயிற்சித் தொடக்கம் என்க. இவ்வித்தையின் மேன்மை விற்பிடிப்பினுள்ளே அமைவதாம் என்பதும் குறிப்பு. திண்ணன் விற்பிடிக்கின்றான் (678) என்றதும் காண்க. **வலவர்** என்ற பன்மையால் அவர்களது மாபிலே அவ்வித்தை வல்ல ஆசிரியர் பலர் உளராக அவரெல்லார்பாலும் வில்லினை முதலிற் றொட்டுப்பிடிப்பித்தலும் அவர்களது விழாவில் வழக்குப் போலும். அவ்வாசிரியர் பலருள்ளும் தக்க ஒருவனே ஆசிரியனாகக் கொள்ளப்பட்டானாதல் வேண்டுமென்பது முன்னர் "ஆசிலாசிரியன்" (686) என ஒருமையிற் கூறியதனாலுணரக் கிடக்கின்றது. இவ்வாறன்றி **வலவர்** என்பது சிறப்புப்பன்மை என உரைப்பினுமமையும்.

**பொங்கு ஒளிக் கரும்போர் ஏறு** - ஒளியைக் கரந்து உள்வாங்கும் இயல்புடையது கருமை. ஆயின், இவாது கருமை, ஒளி பொங்கிய அழகுடையது என்றார். முன்னர்க் "கருங்கதிர் விரிக்கு மேனிக் காமரு குழவி" என்றவிடத் துரைத்தது காண்க. **ஏறு** - ஆண்சிங்கம். **ஏறு** - இது பொதுமையின் விலங்குச்சாதி ஆணினைக் குறிப்பதாயினும், வரும் பாட்டிற் சிங்கம் என்பதனால் இங்கும் ஆண்சிங்கம் என்றுரைக்கப்பட்டது. "ஏறுபோற் பீடு நடை" என்றகுறளில் **ஏறு** - சிங்கம் என்றுரைத்தனர் பரிமேலழகர்.

**போநசிலை** - போர்வல்ல வில். இவரது வில் முற்பிறவியில் அருச்சுனனுயிருந்தபோது பன்றியை எய்து சிவபெருமானுடன் பொருதது போலவே இங்கும் பின்னர்ப் பன்றி வேட்டஞ் செய்தும், சிவபெருமானுக்குக் கானவூன் அமுதமாக்கியும், காவல் புரிந்துஞ் செயல் செய்தமையின் **போநசிலை** என்றார். ஏற்றைச் சிலையைப் பிடிப்பித்தார்கள். செயப்படு பொருள் அடுக்கிவந்தது. "முதலையைப் பிள்ளை(யைத்) தரச் சொல்லு காலனையே" என்ற ஆளுடைய நம்பிகளது திருவவிநாசித் தேவாரங் காண்க.

**மேவிய போதில்**—என்பதும் பாடம். 40

690. பொற்றட வரையின் பாங்கர்ப் புரிவுறு கடன்முன் செய்த
விற்றொழிற் களத்தி னண்ணி விதிமுறை வணங்கி மேவு
மற்றைநாட் டொடங்கி நாளு மடற்சிலை யாண்மை முற்றக்
கற்றன னென்னை யாளுங் கானவர்க் கரிய சிங்கம். சக

(இ - ள்) வெளிப்படை. அழகிய பெரிய மலையின் சாரலில் விருப்ப மிக்க (விற் றொழிலின்) கடன்களே யெல்லாம் முன்னர்ச் செய்துவைத்த விற்றொழிற் களத்திலே சேர்த்து விதிப்படி முறையாக வணங்கிப் பொருந்திய அன்றைய நாளிலே தொடங்கி, ஒவ்வொருநாளும் வலியவில்லாளருந்தொழிலினே முற்றுப்பெறுமாறு முழுவதும் கற்று நிரம்பினர் என்னே ஆளுகின்ற கானவர்குலத்தில் அரியாய்அவதரித்த சிங்க வேறுபோன்ற திண்ணனார்.

(வி - ரை) **பொன்தட வரையின் பாங்கர்** - இது விற்றொழில் பயிற்றும் பயிற்சிக் களமிருந்த மலைச்சாரல் குறித்தது.

**புரிவுறு கடன்முன் செய்த** - செய்யத் தக்கனவாகிய கடன்களே முன்னமே செய்து வைத்திருந்த. அவை, தொழிற் பயிற்சிக் களத்தில் முன்னர்ச் செய்து வைக்கத் தக்க கடவுட் பராவுதல் முதலிய கடமைகள். வில்லினையும் மாணவகனையும் காப்பணி தலும், சிலையைச் சூழ்ந்து ஏழு நாள் குறிச்சியை வலங்கொள்ளுதலும், விற்பிடிப்பித்த லும்,முதலிய கடன்கள் குறிச்சியிற் செய்யப்படுவன. விற்றொழிற் பயிற்சிக்களம் குறிச் சிக்குப் புறம்பாய் அடுத்த மலைச்சாரலில் அமைவதாம். சிலைபிடிப்பிக்கு தன்னுளின் முன்னர் அவ்விடத்திலும் இதுபோலவே செய்கடன்களே முன்னரே செய்துவைத்தல் மரபு. சிலை பிடிப்பித்த பின்னர்க் குறிச்சியினின்று மாணவகனை ஆசிரியன் அக்களத் துக்கு அழைத்துச் சென்று விற்றொழில் பயிற்றுவிக்கத் தொடங்குவான். அச்சிறப்பு இங்குக் கூறப்பட்டது.

**விற்றொழிற் களம்**-விற்றொழில் கற்றற்குரிய களம். முற்காலத்தில் கலைபயில் இடங் கள் நகர முதலிய குடியிருப்பு இடங்களே அடுத்துப் புறம்பே அமைப்பது ஊர் அமைப் பாகும். விற்றொழிற் பயிற்சி யிடமாகிய களமும் இவ்வாறே குன்றவர் வாழும் ஊரா கிய குறிச்சிக்குப் புறம்பே அதனை அடுத்த மலைச்சாரலில் அமைவதாம். இவ்வமைப்பு இக்கலைப் பயிற்சிக்கு இன்றியமையாததுமாம். என்னை? அம்புகளைக் குறிவைத்து எய் யும் கலையாதலின் அதற்குரிய அகன்ற வெளியும், மாங்கள் முதலிய பிறவும் வேண்டப் படும்; தனியிடமல்லாது குடியிருப்புக்கு அணிமையாயின் அங்கு வாழ்வாருக்கு இப்பயிற் சியால் இடையூறு நேரும்; இவை முதலிய காரணம் பற்றி **விற்றொழிற்களம் பொற் றட வரையின் பாங்கர்** அமைக்கப்பட்ட தென்க. ஊர்ப்புறம்பே ஓதுகிடைகளும் யாக சாலைகளும் அமைந்த அமைப்பினைச் சண்டீசநாயனார் புராணம் 3,4,6 திருப்பாட்டுக் களிற் கூறியதும் காண்க.

**விதிமுறை வணங்கி** - வில்லின் தொழிற்கலை பயிலத் தொடங்கும் மாணவகன் முதலில் வில்லினையும், ஆசிரியனையும் அதற்குரிய கடவுளையும் வேலன் முதலியவர் களையும் பெரியோரையும் வணங்குதல் மரபு. அம்மரபாலே வணங்கி.

**மேவும் அற்றை நாள்** - வில் விழா முடிவுறுகின்ற ஏழாநாளாகிய அன்று (688).

**நாளும்**-ஒவ்வொருநாளும். கல்விப்பயிற்சி முற்றும்வரை அதனை நாடோறும் பயில வேண்டும் என்பது முறை. **அடற்சிலை** - சிலைக்கு வலிமையாவது அதனை எந்தியோன் எண்ணியாங்கு வினைமுடிக்கத் தக்கதாகி உதவுதல்.உண்ணத் தகாதவற்றையும் உண்ணத் தக்கதாக ஆக்கும் வலிமை (681) என்ற குறிப்பும், முற்பிறப்பில் இவர் அருச்சுனனாகி இருந்தபோது எந்திய விற்சிறப்பின் குறிப்புமாம்.

**சிலை ஆண்மை** - வில்லை ஆளுந்தன்மை. **ஆண்மை** - வல்லமை என்பாருமுண்டு. அஃதீண்டைக்கேலா தென்க.

**முற்றக் கற்றனன்.** முற்ற - நிறைவெய்த. கலையின் முற்றுதலாவது அதனாலாகிய முடிந்த பயனைத் தருதல். "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ, னற்றா டொழாஅ ரெனின்" என்பது திருக்குறள். முற்றக்கற்றதனால் இது இறைவர்க்குப் பக லிற் கானவ னமுதமாக்குதற்கும், இரவிற் காவல்புரிவதற்கும் பயன்பட்ட தென்பதும்

காண்க. அன்றியும் "கற்பனவு மினியமையும்...கூத்தாவுன் குரைகழற்கே, கற்றூவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே" (திருவாசகம்) என்றபடி இக்கலை முற்றியதனல் மேலும் வேண்டப்படாது, இறைவன்பாலிற் "கன்றகல் புனிற்றூப் போல்வர்" என்று கூறும் நிலையில் விடுவதற்கே அமைத்தனும் காண்க.

**என்னை ஆளும்** - இது கவிக்கூற்று. சிலக்கலை முற்றும் கற்று நிரம்பிய இவ்விடத்தில் ஆசிரியர் நாயனருக்கு ஒரு வணக்கம்செய்து மேற்செல்கின்றூர். நாயனரது சரிதத்தை உலகச்சார்பு பற்றியதும் சிவச்சார்பு பற்றியதும் என இருபகுதியாகப் பிரிப்போமாயின் உலகச்சார்பின் பகுதி நிரம்புகின்றநிலை இது. இனி இது முற்றியபின் நாயனர் வேட்டையிற் புக்குச் சென்றவாறே சிவச்சார்பு பெறப்போக உள்ள பகுதி தொடங்குகின்றது. "ஐம்புல வேடரின் அயர்த்தனை வளர்ந்தென" (சிவஞானபோதம் - 8-ம் சூத்திரம்) என்றபடி உண்மையில் வேடர் சேரியில் வளர்கின்ற மன்னவ குமாரராகிய திண்ணனூரது, அந்தச் சேரியில் வளரும் வளர்ச்சித்திறங் கூறும் பகுதி இங்கு முற்றுப்பெறுகின்றது. இனித் "தவத்தினி லுணர்த்த விட்டு...அரன்கழல் செல்"வதாகிய பகுதி தொடங்குகின்றது என்ற உண்மையுங் காண்க. சிவவழிபாட்டுக் கிரியைகளுட் புகுமுன் நியாசங்கள் முதலியவற்றுற் சுத்தி செய்துகொண்டு புகும் ஆகமவிதிபோல இங்குச் சிவச்சார்பு பெறப்புகும் நாயனர்க்கு வணக்கம்செய்து ஆசிரியர் மேற்பகுதி தொடங்குகின்றூர். இஃது ஆசிரியரது மரபு. "ஒருமணத் திறத்தி னங்கு நிகழ்த்தது மொழிவே னுய்ந்தேன்" (173), "மூவாண்டி னுலகுய்ய நிகழ்த்ததனை மொழிகின்றேன்" (திருஞான - புரா - 54) முதலியவை காண்க. பின்னரும் "செய்வண்ணத் திற மொழிவேன் றீவினையின் றிறமொழிவேன்" (790) என்பது காண்க. **என்னை ஆளும்** என்றது எமக்குத் தலைவர் என்றபடி.

**கானவர்க்கு அரிய** - "அரும்பெறன் மறவர்தாயத்து" (658) என்றதும் காண்க. வேடர் குலத்துக்குக் கிடைத்தற்கரிய பேறுகக் கிடைத்தவர் என்பது கருத்து.

**சிங்கம்** - சிங்கம் போன்றூர். உவமையாகு பெயர். இங்குக் **கரிய சிங்கம்** என்று கொண்டு கருமைநிறம் பற்றிய விசேட உரைக் குறிப்புக்கள் காண்பாருமுண்டு. அவை பொருந்தாமையறிக.

**களத்தை**—என்பதும் பாடம். 41

691.* வண்ணவெஞ் சிலையு மற்றப் படைகளு மலரக் கற்றுக்
கண்ணகன் சாயல் பொங்கக் கலைவளர் திங்க ளேபோல்
எண்ணிரண் டாண்டின் செவ்வி யெய்தினு ரெல்லை யில்லாப்
புண்ணியந் தோன்றி மேன்மேல் வளர்வதன் போலிவு போல்வார்.

(இ - ள்) வெளிப்படை. எல்லையில்லாத சிவ புண்ணியங்களெல்லாம் ஒன்றுகூடி அவதரித்து மேலுமேலும் வளர்வதன்பொலிவைப் போன்றுள்ளாராகிய திண்ணனூர் அழகிய விருப்பர் தரத்தக்க வில்வித்தையையும், அதனுடன் இனமாகிய ஏனைப் படைகளின் வித்தைகளையும் நிரம்பக் கற்று, விரிந்த அழகு மேன்மேற் பொங்க, எல்லாக் கலைகளும் நிரம்பியவாறே நிற்கும் திங்களேபோலப், பதினறுவயது ஆகின்றபருவத்தையடைந்தனர்.

(வி - ரை) **வெம் - சிலை** - சிலைக்கு முன்னர் உரைத்த சிறப்புக்களைப் பார்க்க. **சிலை, படை** என்பன இங்கு அவ்வவற்றின் பயிற்சி குறித்தன. **வெம்** - விருப்பந் தரும். "மூக்தை யறிவின் றெடர்ச்சியினுன் முகைத்த மலரின் வாசம்போற், சிந்தை மலர வுடன்மலருஞ் செவ்வி யுணர்வு" (சண்டீசர் புராணம் - 13) என்றபடி மூந்தைத் தொடர்பினுல் இவர்க்கு வில்லின் கலையில் விருப்பம் மிக்கது ; அதனை விரைவிற்

பயின்று நிரம்பினர் என்பதாம். சிலையை வேறு பிரித்தோதியதும் இக்கருத்துப் பற்றியே.

**மற்றப் படைகள்** - சரிகை, வாள், வேல் முதலியன. "பயில்வது வெற்றிறற் சிலையொடு வேல்வாண் முதலிய, வந்தமில் படைக்கல மவையே" - திருக்கண்ணப்ப தேவர் திருமறம் - நக்கீரதேவர் - பதினொராந் திருமுறை.

**மலராக் கற்றல்** - கலை முழுதும் நிரம்பக் கற்றல்.

**கண்ணகன் சாயல்** - இடம் விரிந்த அழகு.

**கலைவளர் திங்களேபோல்** - ஏகாரம் பிரிநிலை. திங்கள் கலை வளர்வதுங் குறைவதுமாயுள்ளது. வளர்ந்த கலைகள் என்றுங் குறையாமல் வளர்ந்தபடியே நிற்பதொரு திங்கள் உளதாயின் அதுபோல. "கண்ணிறை கதிரே கலைவளர் மதியே" (63), "வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தை" (728) என்ற திருஞான சம்பந்தமூர்த்திகள் புராணத் திருவாக்குக்களுங் காண்க.

**எண்ணிரண் டாண்டின் செவ்வி** - பதினேறு வயதாகிய பருவம். இதனை மணப் பருவம் · காளைப்பருவம் எனப் பலவாறும் விதந்து பேசுவர். "புண்ணியப் பதினெ ருண்டு பேர்பெறும் புகலி வேந்தர்" (திருஞான - புரா - 1109) என்றது காண்க. புகலிவேந்தரைப் போன்று நாயனாரும் இப் பதினெருண்டின் பருவத்திலே இறைவனை அடைந்து மீளா நெறி பெற்றது குறிக்கற்பாலதாம். **செவ்வி** - பருவம். முழுமதிக்குக் கலைகள் பதினேரும். மார்க்கண்டேயர் சரிதமுங் காண்க.

**எல்லையிலாப் புண்ணியம்** - அளவில்லாத - குறைவுபடாத - என்றும் அழியாத சிவபுண்ணியம். புண்ணியம் என்பது இங்குச் சிவபுண்ணியங் குறித்தது. ஏனைப் பசு புண்ணியம் என்று கூறப்படுவனவெல்லாம், இவைபோலன்றி அழியும்படியான எகதேச இன்பங்களைக் கொடுத்து மீளப் பிறவிக்கு ஏதுவாவன. "புண்ணியப் பொருளாயுள்ள பொருவில்சீ ருருவி னானே" (666) என முன்னர்ச் சுட்டியதுங் காண்க. "புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன்" முதலிய திருவாக்குக்களுங் காண்க.

**புண்ணியந் திரண்டு**—என்பதும் பாடம். 42

**வேறு**

692. இவ்வண்ணந் திண்ணனார் நிரம்பு காளி
யிருங்குறவர் பெருங்குறிச்சிக் கிறைவ னாய
மைவண்ண வரைநெடுந்தோ ளுகன் ருனு
மலையெங்கும் வனமெங்கும் வரம்பில் காலங்
கைவண்ணச் சிலைவேட்டை யாடித் தெவ்வர்
கணநிரைகள் பலகவர்ந்து கானங் காத்து
மெய்வண்ணந் தளர்மூப்பின் பருவ மெய்தி
வில்லுழவின் பெருமுயற்சி மெலிவா னானன். சாரு

(இ - ள்) வெளிப்படை. இவ்வண்ணமாகத் திண்ணனார் பருவம் நிரம்பிய காலத்தில் வலியிற் பெரிய குறவர்கள் வாழும் பெருமை வாய்ந்த சீறூர்க்குத் தலைவனாகிய கரிய மலைபோன்ற பெருந் தோள்களையுடைய காளனும், மலைகளெங்கும் வனங்களெங்கும் அளவில்லாத காலங்கள் கையிலேந்திய அழகிய வில்லினாலே வேட்டையாடியும் பகைக் கூட்டத்தார்களுடைய ஆநிரைகள் பலவற்றைக் கவர்ந்தும் தனக்குரிய கானங்களைக் காத்தும் உடம்பின்கண் தளர்ச்சிதரும் மூப்புப்பருவத்தினை அடைந்து வில்லுழவின் பெருமுயற்சியில் குறைவுற்றவனானன்.

(வி - ரை) **இவ்வண்ணம் - நீரும்பும் நாளில்** - மேலே 662 முதல் 691 வரை திண்ணனார் அவதரித்துப் பதினாறாண்டு வளர்ந்த சரிதம் கூறினார். இங்கு அதனை **இவ்வண்ண** மென்று சுட்டியவாறு. இந்தப் பதினாறாண்டினும் நிகழ்ந்த நாகனுடைய வரலாறு இவ்வொரு பாட்டிற் கூறிச் செல்கின்ற சரிதக் கவிச் சுவை காண்க. இப்பாட்டு முதல் 705 வரை பதின்மூன்று திருப்பாட்டுக்களில் கதைப் போக்காக உரைநடை போன்று சரித நிகழ்ச்சி கூறிப் போகும் உயர்ந்த கவி நடைச் சிறப்பும் யாப்பமைதியும் குறிக்கொள்க. இவ்வாறு இடத்துக்கேற்றபடி மாற்றி யாப்பமைதியும் செய்யுணடையும் மேற்கொண்ட சிறந்த காப்பிய இலக்கிய அமைதி நமது ஆசிரியர்க்கேயுரிய சிறப்பியல்புகளில் ஒன்று. திருஞானசம்பந்தசுவாமிகள் புராணம் 443 முதல் 485 வரை உள்ள பகுதியும் பிறவும் காண்க. இதனைக் கதைசொல்லும் போக்குச் சுவை (Narration) என்பர் நவீனர்.

**இருங்குறவர்** - மறக்குலமாதலின் இவ்வாறு குறித்தார். இவர் வாழ்க்கைத்திறம் பற்றி முன் உரைத்தவை யெல்லாம் நினைவுகூர்க.

**பெருங் குறிச்சி** - கானவர்களின் பெரிய குடிவாழ்க்கைக்குரிய இடங்கள். ஊர்கள் சிறூர்களேயாயினும் இவ்வாறு பல ஊர்களைக் கொண்ட பெரிய மலை எல்லையாதலின் **பெருங் குறிச்சி** என்றார்.

**மைவண்ண வரை (நெடுந் தோள்)** - கரியமலை. "கருவரை காள மேக மேந்திய தென்ன" (664) என்றது காண்க. **வரை** - சலியாது தாங்கும் தன்மையும் நெடுமையும் பெருமையும் குறித்தது. "அளக்க லாகா வளவும் பொருளும், துளக்க லாகா நிலையுத் தோற்றமும், வறப்பினும் வளர்த்தரும் வண்மையு மலைக்கே" (நன்னூல் - பாயிரம் - 28) என்ற இலக்கணமும் காண்க.

**வரம்பில் காலம்** - திண்ணனாரைப் பெற்றெடுத்த பின் அவர் இப்பருவம் எய்தும் வரை அனேக முறைகள்.

**மலையெங்கும் வனமெங்கும்** - தன்னுடைய ஆட்சிக்குட்பட்ட நிலங்களேயன்றி அடுத்துள்ள மலைகளும் காடுகளும். இவ்வாறு பிறபுலங்களிற் புக்கு வேட்டையாடுதலும் ஆநிரைகவர்தலும் தகுமோ? எனின், அஃதவர் தினையொழுக்க மென்க. "இம்மறக்குடியில் தாயம் பற்றிவருகின்ற ஆறலை, சூறை, ஆகோள்முதலிய வற்றால் விளையும் வளங்குன்றி, அறக்குடிகளைப் போலச் சினங்குறைத்து செருக்கடங்கி விட்டார்கள்" என்று அடியார்க்கு நல்லார், "மறக்குடித் தாயத்து வழிவளஞ் சுரவாதறக்குடி போலவிக் தடங்கின ரெயினரும்" என்ற (12. வேட்டுவவரி - 14 - 15) சிலப்பதிகாரத்தின் கீழ் உரைத்தவை காண்க. "தெவ்வர் கணநிரைகள் பலகவர்ந்து" "தெம்மூனையி லயற்புலங்கள் கவர்ந்து கொண்ட திண்சிலையின் வளம்"(704) என்றவை காண்க. அன்றியும், அயற்புலங்களில் மலைச்சாரல்களில் உள்ள மிருகங்கள் மீதூர்ந்து வந்து இவர்களது புனங்களையும் பிறவற்றையும் அழிவு செய்யாதவண்ணம் அவற்றை அங்கங்குச் சென்று வேட்டையாடுதலும் இயல்பாம். இதுபற்றி அவர்கள் "மலைத் தடஞ் சாரற்புனங்களெங்கும்.....மிருகங்கள் மிகநெருங்கி மீதூர் காலை" என வரும் பாட்டிற் கூறியதும், "திங்கண்முறை வேட்டைவினை தாழ்த்தி" தென்று வேட்டஞ் செய்தற்கு உரிய பருவங்களைக் குறித்ததும் காண்க.

**தெவ்வர் கணம்** - பகைவர் கூட்டம். **நிரை** - ஆநிரைகள். ஆகோள் குன்றவர் தொழில்களில் ஒன்று.

**கானம் காத்து** - மேற்சொல்லிய வேட்டமும் நிரைகவர்தலும் கானங்காக்குந் தொழிற் குரியவகைகள்.

**மெய்வண்ணம் தளிர்ப்பின் பருவம்** - மெய்தளர்ந்த மிக்க மூப்புப்பருவம். "இவர்க்கினி புதல்வர்ப் பேறே, யரியதென் றெவருஞ் சொல்ல" (659) என்றாதலின் அதுபோழ்து நாகனுக்கு அறுபதுக்கு மேலாயின ஆண்டுகள் சென்றிருக்கக்

கூடு மெனவும், அதன் பின் இது போழ்து பதினைஞ்ஞூண்டுகள் சென்றன வாதலின் இங்கு அவனுக்கு எண்பது ஆண்டு வரை சென்றிருக்கு மெனவும் ஊகிக்கக் கிடத்தலான் இவ்வாறு கூறினர். திண்ணனார் அவதரித்த பின்னரும் அவன் பல காலம் வேட்டையாடியும் நிரைகவர்ந்தும் காளங்காத்தும் வந்தானெனப்படுதலால் மிக மூத்த வயதாகும் வரை அவன் உறுதிபெற்ற உடல்வன்மையுடன் வாழ்ந்தான் என அறியலாம். இற்றைநாள் மக்கள் இளவயதில் மூப்படைந்து ஒன்றுக்கு முதவாது மருத்துச்சாலைகளே நிரப்பியுழலும் அல்லல்வாழ்க்கையை இதனுடன் ஒப்பிடுக. மூப்புப்பருவத்தினியல்புகளைக் "கணைகொ ளிருமல் சூலைநோய் கம்ப தாளி குன்மமும், இனைய பலவு மூப்பினே டெய்தி வந்து நலியாமுன்" (ஆளுடையபிள்ளையார் - பண் - கட்டராகம் - திருவிராகம் - திருக்கோவல் வீரட்டம்), "தனித்தொருதண் டேந்தி மெய் தளரா முன்னம்"(தனித்திருத்தாண்டகம்), "குயிலொத் திருள்குஞ்சி கொக்கொத் திருமல், பயிலப் புகாமுன்னம்" (பதினொராந்திருமுறை - கூேத்திரத் திருவெண்பா 12) என்பனவாதி திருவாக்குக்களிற் காண்க. உடல்வலி குறைந்தகாலத்து உடல் முயற்சியாற் செய்யப்படும் வில் முதலிய தொழில்கள் பயன்படா என்க. **வண்ணம்** - அழகு எனக் கொண்டு, மெய்யினது அழகு கெடும்படியான மூப்புப் பருவம் என்பாரு முண்டு.

**வில் உழவு** - **உழவு** - தொழிற் பெயர். "வில்லே ருழவர்" - குறள்.

**மெலிவதானனீ**—என்பதும் பாடம். 43

693. **அங்கண்மலைத் தடஞ்சாரற் புனங்க ளெங்கு**
**மடலேனம் புலிகரடி கடமை யாமா**
**வெங்கண்மரை கலையொடுமான் முதலா யுள்ள**
**மிருகங்கண் மிகநெருங்கி மீதூர் காலைத்**
**"திங்கண்முறை வேட்டைவினை தாழ்த்த" தென்று**
**சிலவேடர் தாமெல்லாந் திரண்டு சென்று**
**தங்கள்குல முதற்றலைவ னுகி யுள்ள**
**தண்டெரிய னுகன்பாற் சார்ந்து சொன்னர்.** சச

(இ - ள்) வெளிப்படை. அழகிய இடங்களையுடைய மலைகளின் பெருஞ்சாரல்களும் புனங்களுமாகிய எவ்விடங்களிலும் வலிய காட்டுப்பன்றியும், புலி, கரடி, கடைமை, காட்டுப்பசு, மரை, மான் முதலாகிய மிருகங்களும் மிகவும் நெருங்கி மேற்சென்று அழிக்கத் தொடங்கியபோது, "திங்கள்முறை வேட்டைச் செயல்கள் நிகழாது தாழ்த்தமை யாலே இக்கொடுமைகள் நேர்ந்தன"என்று வில்லேந்திய வேடர்கள் எல்லாரும் ஒருங்கு கூடிச் சென்று தங்கள்குலத் தலைவனுயுள்ள குளிர்ந்த மாலைசூடிய நாகனிடத்துச் சேர்ந்து சொன்னர்கள்.

(வி - ரை) **மலைத் தடஞ் சாரல் அங்கண் புனங்கள்** என மாற்றியுரைத்தலு மொன்று. **தடஞ் சாரல்** - செறிந்த பரந்த சாரல்கள். **சாரற் புனங்கள்** - மலைச் சாரலில் குறவர் வாழிடங்களும் அவர்களது தினைப்புன முதலியனவும்.

**அடல் ஏனம்.....முதலாயுள்ள** - இவை அச்சாரல்களிலும் அயற்புலங்களிலும் வாழ்ந்து இவர்களது புனங்களில் மீதூர்ந்து வந்து பயிர்களையும் இவர்களது ஆனிரை முதலிய பிராணிகளையும் அழிப்பன. விலங்குகளே, இங்கு இவர்களுக்கு கொடுமையும் அழிவுசெய்யும் சத்தியும் பற்றிய வரிசையாற் கூறினர். ஏனம் புலியினும் சிறிதாயினும் பயிர்களை அழிக்கும் செயலிற் பெரிது. அன்றியும் இச்சரிதவேட்டையிற்பன்றி முதன்மைபெற்று நாயனாரைத் திருக்காளத்திமலைகாணமுன்னோடி அழைத்துச்சென்றது. இச்சிறப்புக்கள்பற்றி இதனை முதலில் வைத்ததோடு **அடல்** என்ற

அடைமொழியும் தந்து சிறப்பித்தார். ஆளுடையபிள்ளையார் தேவாரத்தினும் எனத் திரளோடு என ஒடு உருபு தந்து வேறு பிரித்து முதலில் வைத்ததும் காண்க.

**கடமை** - ஒருவகைக் காட்டுப் பசு. கடமையாகிய ஆமா என்பாருமுண்டு. **ஆமா** - காட்டுப் பசு.

**வெங்கண்மரை** - வெவ்விய கோபக்கண்ணுடைய மரைமான். **மரை** - மானின் ஒருவகை. **கலை** - மானின் மற்றொருவகை. இவை மெல்லியவாய் நீண்டு கிளைத்த கொம்புகளையுடையன. **மான்** - வேறுமான்வகை. கலை - ஆண் என்றும், **மான்** - பெண்மான் என்றும் கூறுவாருமுளர். இங்குக் கூறியவை பலவகை மானினங்களைக் குறிப்பன என்பது 726 - 728-ம் பாட்டுக்களானுமறிக.

**மிகநெருங்கி மீதூர்தலாவது** மிருகங்கள் தாந்தாம் வாழும் நெருங்கிய காட்டினிடங்களை விட்டு வெளிப்போந்து குன்றவர் வாழும் குறிச்சிகளிலும் அவரது புனங்களிலும் புக்கு உயிர்களுக்கும் பயிர்களுக்கும் தீங்குசெய்தல்.

**தீங்கள் முறை வேட்டை** - குறித்த மாதங்களிலேனும் இத்தனை மாதத்துக்கொரு முறையென்ற முறைபற்றியேனும் காடுவளைத்து வேட்டையாடுதல். மாதந்தோறும் என்றுரைப்பாரு முண்டு. அது பொருந்தாதென்க.

**தண்தெரியல் நாகன்** - **தெரியல்** - ஈண்டு வேடர்க்குரிய மாலை.

**கலைகளோடு முதலா—பலநெருங்கி—சினவேடர்—என்பனவும் பாடங்கள்.** 44

994. சொன்னவுரை கேட்டலுமே நாகன் முனுஞ்
சூழ்ந்துவரு தன்மூப்பின் முறைவு நோக்கி
முன்னவர்கட் குரைசெய்வான் "மூப்பி னாலே
முன்புபோல் வேட்டையினின் முயல கில்லே ;
னென்மகனை யுங்களுக்கு நாத னாக
வெல்லீருங் கைக்கொண்மின் !" னென்ற போதின்
அன்னவரு மிரங்கிப்பின் மகிழ்ந்து தங்கோ
னடிவணங்கி யிம்மாற்ற மறைகின் றார்கள்— சடு

995. "இத்தனைகா லமுநினது சிலைக்கீழ்த் தங்கி
யினிதுண்டு தீங்கின்றி யிருந்தோ !; மின்னும்
அத்த ! வுன தருள்வழியே நிற்ப தல்லா
லடுத்தநெறி வேறுளதோ ?; வதுவே யன்றி
மெய்த்தவிறற் றிண்ணனையுன் மரபிற் சால
மேம்படவே பெற்றளித்தாய் ; விளங்கு மேன்மை
வைத்தசிலை மைத்தனையீண் டழைத்து நுங்கள்
வசையாட்சி யரு" ளென்றார் மகிழ்ந்து வேடர். சசு

694. (இ - ள்) வெளிப்படை. வேடர்கள் சொன்ன சொல்லைக் கேட்டலுமே நாகனும் தன்னைச் சூழ்ந்துகொண்டு வருகின்ற மூப்பின் முறைவச்சியை நோக்கி முன்னின்ற அவர்கட்குச் சொல்வானாகி, "மூப்புக்காரணமாக முன்புபோல வேட்டையில்முயலும் வலிமையில்லேன். ஆதலால் என்மகனை உங்களுக்குத் தலைவனாக நீங்கள் எல்லீரும் ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று உரைத்த போதில், அவர்கள் முதலில் இரங்கிப், பின்னர் மகிழ்ந்து, தமது தலைவனை வணங்கிப் பின்வரும் வார்த்தைகளைச் சொல்வார்களாய்— சுரு

695. (இ - ள்) வெளிப்படை. "இத்தனை காலமும் உன்னுடைய சிலையாட்சியின் கீழே தங்கி இனிதாக உண்டு தீங்கின்றி வாழ்ந்திருந்தோம்!; அத்தனை! நீ கட்டளையிட்டருளிய வழியிலே அமைந்து நிற்கின்றதல்லாமல் எங்களுக்கு அடுத்த நெறி வேறு முண்டோ?; அதுவேயுமன்றி, மெய்த்த விறலுடைய திண்ணனை உன் மரபிலே மிகவும் மேன்மையடையவே பெற்று அளித்தாய்; விளங்கும் மேன்மைவைத்த வில்லினை ஏந்திய உன் மைந்தனை இங்கே அழைத்து உங்களுக்குரிய மலையாட்சி யுரிமையை அவனுக்குக் கொடுத்தருள்வாயாக" என்று அவ்வேடர்கள் மகிழ்ந்து கூறினர். சசு

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

694. (வி - ரை) **சொன்ன உரை** - சிலவேடர் திங்கள்முறை வேட்டைவினை தாழ்த்ததென்று சொல்லிய முறையீடு.

**தன் சூழ்ந்து வரும்** என மாற்றுக. தன் சத்திகளை யெல்லாம் ஒடுக்கித் தன்னைச் சுற்றிக் கொண்டு வருகின்ற. மாலையில் இருள் கணக்தோறும் வந்து சூழ்ந்து கண்ணை மறைப்பது போலவும், தனது நூல் வலயத்துட்பட்ட பிராணியினைச் சிலந்தி வாய் நூலாற் சுற்றிச் சுற்றிப் பிணிப்பது போலவும் கணக்தோறும் சூழ்ந்து உடற் சத்தியை ஒடுக்கும் என்பார் சூழ்ந்துவரும்...தொடர்வு என்றார். **தொடர்வு** - பிணிப்பு.

**ழப்பினுலே முயலகில்லேன்**-மூப்பினால் வரும் ஏதங்கள் முன்பாட்டி லுரைக்கப் பட்டன. கில் - ஆற்றலுணர்த்தும் இடைச்சொல். "கேட்கவுங் கில்லேனே"—**திருவாசகம் - திருச்சதகம்** - 33.

**நாதனுக** - அரசனுக, தலைவனுக.

**கைக்கொண்மின்** - ஏற்று அவன்கீழ் அமைந்து நடந்து கொள்ளுங்கள். வழிவழி அரசனுயினும் குடிகளின் அங்கீகாரத்தின் மேல் அரசனும் தலைமைத்தன்மை நிலை பெறுவதாம் என்ற உண்மையினை இங்குக் காண்க. **கொண்மின்** என்றலே அமையுமாயினும் **கைக்கொண்மின்** என்றார். கை என்பது கைகூடும் என்புழிப்போல உபசர்க்கமாய் உறுதிப் பொருள் தந்து நிற்பதோர் இடைச்சொல்.

**இரங்கிப் பின் மகிழ்ந்து** - இஃது நாகனது உரை கேட்டவுடன் வேடர்களின் மன நிகழ்ச்சிகளை ஒன்றன்பின் ஒன்றுக உணர்த்துவதாம். முதலில் தமது தலைவனது மூப்பு நிலையினையும் அதுகாரணமாக அவன் தமது தலைவனுந் தன்மையினின்று நீங்குவதனையும் பற்றி இரக்கம் வந்தது; பின்னர் அவன் மகனைத் தமக்கு மேன்மையுடைய தலைவனுகப் பெறும் பேறு பற்றி மகிழ்ச்சி வந்தது என்க.

**அடிவணங்கி** - தலைவனிடம் விசேட அறிக்கை செய்யும் முறை.

**முயல்கிலேனுன்**—என்பதும் பாடம். 45

695. (வி - ரை) **நினது சிலைக்கீழ்த் தங்கி** - சிலை - இங்கு அரச அடையாளங் குறித்தது. சிலையின் ஆட்சியாற் பெற்ற காவலின் கீழமைந்து என்பது பொருள். "வெண்கொற்றக் குடையும் நவமணி முடியும் சிங்காதனமும் மன்னவர்க்கேயுரிய சிறப் படையாளமாம்" - என்ப. (சிவஞானபோதச் சிற்றுரை - 8-ம் சூத்திரம்.) மன்னவனது குடையைத் "தண்ணளி வெண்குடை" எனவும், அதன் நிழலின்கீழ் உலகம் குளிர்ந்து காவல் பெற்று நிற்குமெனவும் உபசரித்துக் கூறுவது மரபு. அதுபோல இங்கு, வேடர் தலைவன் ஆட்சி புரிந்து காவல்தரா இன்றியமையாச் சிறப்பின் உள்ளது அவன் கையேந்திய வில்லேயாதலின் அச்சிலையின் கீழ் அவன் குடிமக்கள் தங்கினர் என்பதாம்.

**இனிதுண்டு தீங்கின்றி** - வழிவழி அரசனேயாக, அல்லது தலைவனேயாக, அல்லது அரசாங்கமேயாக, இன்னேர் குடிகளுக்குச் செய்து தரவேண்டிய இன்றியமையாத கடமைகள் இரண்டேயுள்ளன. அவையாவன, அவர்களைப் பசியின்றி இனிதுண்டு வாழ வைத்தலும், அவர்தம் உடலுக்கும் உடைமைக்கும் பிறரால் எவ்வித தீமையும் நேராதபடி காவல்பெற்று வாழவைத்தலும் என்ற இவைகளேயாம். அர

சாங்கத்தின் உள்ளுறையாகிய இந்தக் கடமைகளை இங்கு வேடர்கள் தமது தலைவன் தமக்களித்த காவலின் பெற்றியைப் பாராட்டும் முறையால் பேரமைச்சராகிய ஆசிரியர் அவ்வேடர்களது வாக்கில் வைத்துக் காட்டிய அழகு காண்க. **தீங்கின்றி - தீங்கு** - அரசர் கள்வர் முதலாயினோரால் வரும் தீமைகள். இதுபற்றி 121-ம் திருப்பாட்டில் உரைத் தவை காண்க.*

**அத்த உன்து அருள் வழியே.....வேறுளதோ ?** என்றும், **வரை ஆட்சி அருள்** என் றும் வருவன தலைவன்பால் குடிகளாகிய வேடர் பணிவுடன் விண்ணப்பிக்கும்முறை. Ever your Majesties' subjects - Graciously pleased என்பனவாதி மரபு வழக் குக்களும் காண்க.

**அதுவேயன்றி** - இனி அண்டு தீங்கின்றி இருக்க வைத்ததுமன்றி.

**மெய்த்த விறல்** - உடல் வலிமை மிக உடைய. **மெய்** - உடம்பு. **மெய்த்த** - உடம் பின் கண்ணதாகிய. பெயர்ச்சொல் லடியாகப்பிறந்த பெயரெச்சம். இவர்கள் கண்ட தும்,இவர்களது சிலையாட்சிக்கு வேண்டுவதும் அதுவேயாதலின் அதனை இங்குக்குறித்த னர். மூப்பினால் வேட்டையினில் முயலகில்லேன் என்ற தலைவனை நோக்கி உன்னி னும் மிக்க உடல் வலிபெற்று அதனால் எங்களைக் காக்கவல்ல மகனைத் தந்தனை என்று வேடர்கள் குறித்தபடி. **மைந்தனை** என்ற குறிப்புமது. ஆயின் இங்கு அவர்களறியா மலே, மெய்த்த விறல் என்றது உண்மையன்பு உருப்பட்டு வந்த தவவலிமை பெற்ற என்றதோ ருண்மைப்பொருள் தொனித்தலும் காண்க. " அன்பின் மெய்ம்மை யுரு வினையும் " (திருஞான - புரா - 1023) என்றது காண்க.

**மாபில் கால மேம்படவே** - உன் மரபில் வந்த பிறர் யாவரினும் மிக மேலோங்க. இங்கும் பிறிதோருண்மைப் பொருட்குறிப்புக்காண்க. இவ்வாறே பின்னர்த்தேவராட்டி வாக்கில் "நின் அளவி லன்றி மேம்படுகின்றன்" (700) என்ற இடத்தும் பிறிதோருட் குறிப்பும், சரித நிகழ்ச்சியின் மூற்குறிப்பும் காண்க. பிறவும் இவ்வாறே அங்கங்கும் இச் சரித்துட்கண்டு கொள்க.

**விளங்கும் மேன்மை வைத்த சிலை** - முன்னர் வில் விழாவிற்கூடிய சிறப்புக்களும் மேன்மையும் கொண்டசிலை. **மைந்தனை** - மைந்து - வல்லமை. நீ எவியதன் அளவே யன்றி அவனும் அதற்குத் தகுதிபெற்ற வன்மையுடையோன் என்பதாம்.

**நுங்கள் வரை ஆட்சி அருள்** - உங்களுக்கு வழிவழி உரிமையாய் வந்த மலையாளும் தலைமையை அவனிடத்து ஏற்றுக - அரசனுக்குக என்றார். **நுங்கள்** - நீ கூறியவாறு எங்கள் இசைவேயன்றி உங்களுக்கே உரிமையுடையதான. **அருள்**-உரியமாபிற்கொடுக்க. இம்மரபுகள் 701 - 702-ல் உரைக்கப்பட்டன. 46

696. சிலைமறவ ருரைசெய்ய நாகன் முனுந்
திண்ணனைமுன் கொண்டுவரச் செப்பி விட்டு
" மலைமருவு நெடுங்கானிற் கன்னி வேட்டை
மகன்போகக் காடுபலி மகிழ வூட்டத்
தலைமரபின் வழிவந்த தேவ ராட்டி
தனையழைமி" னெனவங்குச் சோர்ந்தோர் சென்று
நிலைமையவ டனைக்குரைப்ப நகைமூ தாட்டி சள
நெடிதுவந்து விருப்பினெடுங் கடிது வந்தாள்.

(இ - ள்) வெளிப்படை. வில்லேந்திய வேடர்கள் இவ்வாறு சொல்ல, நாகனும், திண்ணனுரை அழைத்துக் கொண்டு வரும்படி முன்னர்ச் சொல்லியனுப்பிவிட்டு,

*எனது சேக்கிழார் 49, 50 பக்கங்கள் பார்க்க.

"மலைகளிற் பொருந்திய பெருங்காட்டில் என்மகன் கன்னிவேட்டைக்குப் போவதற் காகக் காட்டுத் தெய்வங்கள் மகிழுமாறு பலிகளை ஊட்டுவதற்கு எனது தலைமை பெற்ற மரபின் வழிவழி வந்த தேவராட்டியை அழையுங்கள்" என்று சொல்ல, அங் குள்ளோர் சென்று அந்நிலைமையை அவ்வாறே அவளுக்கு அறிவிக்க, சரைமூதாட்டி யாகிய அவளும் பெரிதும் மகிழ்ந்து விருப்பத்தோடும் விரைந்து வந்தாள்.

**(வி - ரை) உரைசெய்ய** - வரை ஆட்சியை மகனுக்கு அருள்க என்று சொல்ல.

**கொண்டுவர** - அழைத்துக்கொண்டு வருமாறு. **முன் சேப்பிவிட்டு** என்க.

**மலைமருவு .....அழைமின்** - இவை நாகன் அங்கிருந்த வேடர்களைப் பார்த்துக் கூறியவை. நாடகச்சுவை பெற முன்னிலைக் கூற்றாக அவன் சொல்லிய வாறு கூறினார். மேலிரண்டு பாட்டுக்களினும் இவ்வாறே கூறியதுங் காண்க. நாகன் வேடர்கள் கேட்டவாறு தன்மகன்பால் வரையாட்சியைச் சூட்டி அவனை அவர்களுக் குத்தலைவனுக்குவது மன்றி, அன்றைக்கே அவன் கன்னிவேட்டைக்குச் செல்லுமாறு காடுபலியூட்டச் செய்யவும் தொடங்கி விட்டான். இது குடிமக்களின் முறையீடு கேட்ட நற்றலைவன் செய்யும் தன்மையாம்.

**மலைமருவும் நெடுங்கான்** - "அங்கண்மலைத் தடஞ்சாரற் புனமெங்கும்" (693) என்றது காண்க.

**கன்னிவேட்டை** - பயிற்சிப் பொருட்டா னன்றித் தொழிற்பொருட்டான் முதல் முறையாக வேட்டையிற் றொடங்குதலை இவ்வாறு கூறுதல் மரபு. இவ்வாறே ஈவீன ரும் Maiden speech - Maiden attempt என்று வழங்குதலுங் காண்க. **மகன் கானில் கன்னி வேட்டைபோக** எனக் கூட்டுக.

**காடு மகிழப் பலி ஊட்டுக** - என்க. **காடு** - இங்கு ஆகுபெயராய்க் காட்டில் வாழுஞ் சிறு தெய்வங்களைக் குறித்து நின்றது. "காட்டிலுறை தெய்வங்கள் விரும்பி யுண்ணைக் காடுபலி ஊட்டு" (699) என்றது காண்க. **காடுபலி** என்றது ஒரு சொன்னீர்மைப்பட்டு வனதெய்வங்களுக்குக் காட்டிற் பலியிடுவதைக்குறிக்கும் குழூஉக் குறி என்றலுமாம்.

**தன்மரபின் வழிவந்த - தன்மரபு** - தலைமைபெற்ற மரபு - தங்கள்மரபில் வழிவழி யாகவந்து அக்குலத்தவர்பொருட்டுத் தெய்வர் தொழுவதற் கென்று அக்குலத்தில் முதியாளொருத்தியை வழிவழியாக நியமித்து அவளுக்கு வேண்டுவன படி முறை அளித்து வருதல் பெருமரபுகளின் பழைய வழக்கு. இவ்வாறு நாகன் இத்தேவராட் டிக்கு அமைத்த படிமுறை 698-ல் காண்க.

**தேவராட்டி**-உபாசனையினால் தெய்வ ஆவேசம் தன்வடிவிலே வரப்பெற்று அதன் அருளிப்பாடுகளை வழிபடுவோருக்கு அளிப்பவள்; தெய்வத்தால் ஆளப்பெற்ற வள்; தெய்வ மேறப்பெற்றவள் என்பர். இவளைப், "படிமத்தாள்", "அணங்கு சார்ந் தாள்" (698), "வரைச் சூராட்டி" (700), "தெய்வங்கிழ் குறமுதியாள்" (701), "கட வுட் பொறையாட்டி" (714), "அணங்குடையாட்டி" (716), "அணங்குறைவாள்"(802) என்று கூறுகின்றவாற்றால் இவளியல்புகள் தெரிக்கப்பட்டன.

**நிலைமை** - நாகன் மகனுக்கு வரையாட்சி யருளுதலும் கன்னிவேட்டைக்குக் காடு பலியூட்டலும் ஆக உள்ள செய்திகள். நாகன் கூறிய செய்தியை அவளுக்கு உரைத்தார் என்னுது **நிலைமை உரைசெய்து** என்றது இங்கு நிகழ்ந்தவை யாவும் மேல் ஆகவேண்டு வனவும் அவள் உளங்கொளத் தெருட்டுதல் குறித்தது.

**நரை மூதாட்டி** - நரைத்து மிக்க மூப்பு அடைந்தவள். **முதாட்டி** - முதுமையால் ஆளப்பட்டவள். இவளுடலின் முதுநிலையைப்பற்றி மேல்வரும் பாட்டிற் கூறுவதும் பிறவும் காண்க.

697. கானில்வரித் தளிர்துதைந்த கண்ணி சூடிக்
கலைமருப்பி னரிந்தகுழை காதிற் பெய்து
மானின்வயிற் றரிதாரத் திலக மிட்டு
மயிற்கழுத்து மனவுமணி வடமும் பூண்டு
தானிழிந்து திரங்கிமுலை சரிந்து தாழத்
தழைப்பீலி மரவுரிமேற் சார வெய்திப்
பூங்கருங்கு தோரைமலி சேடை நல்கிப்
போர்வேடர் கோமானைப் போற்றி நின்றாள். சஅ

(இ - ள்) வெளிப்படை. தேவராட்டி வரிபொருந்திய காட்டுத் தளிர்களாலாகிய முடி மாலையைச் சூடிக், கலைமான் கொம்பின் அரிந்த குழையைக் காதிலணிந்து, மான்வயிற்றி னரிதாரத்தாற் பொட்டிட்டு, மயிற் கழுத்துப் போன்று வன்னமிட்ட சங்குமணி வடமும் பூண்டு, முலை தொங்கித் திரங்கிச் சரிந்து தாழ, இடையிற் கட்டிய மரவுரிமேல் தழையுடன் மயிற்பீலியும் தொங்க வந்துசேர்ந்து பூவும் மலை நெல்லுஞ் சேர்ந்த அட்சதையைக் கொடுத்துப் போர்வல்ல வேடர் தலைவனுகிய நாகனைத் துதித்து நின்றாள்.

(வி - ரை) இதனுல் தன் அரசனைக் காணவந்த தேவராட்டியின் வடிவங் கூறினார்.

இங்கு அவள் அலங்கரித்துக் கொண்ட அணியும் உடையும் ஆகிய பொருள்கள் யாவும் குறிஞ்சியாகிய அந்நிலத்துக்குரிய கருப்பொருள் விளைவுகளாகி வீலை கொடுத்துத் தேடி யிடர்ப்படாமல் அங்கு எளிதிற் பெறும் பண்டங்களே யாதல் காண்க. இதுபற்றி 667ல் உரைத்தவையும் பிறவும் காண்க. தேவராட்டியின் அணியையும் உடையையும் விளக்கும் நெறியால் அந்தந்த நிலப்பொருள்களினின்றே மக்கள் தம் உணவு உடைகளை ஆக்கிக்கொள்ளும் மரபினையும் ஆசிரியர் உடன்காட்டியவாறு காண்க.

**வரித்தளிர்** - வரிகளையுடைய தளிர்கள். முடிமாலை **கண்ணி** எனப்படும். "மாதர் பிறைக்கண்ணி யானை" என்ற தேவாரங் காண்க.

**கலை மருப்பின் அரிந்த குழை** - கலைமானின் கொம்பில் அளவுபட அரிந்தெடுத்துக் குழைபோலச் செய்த காதணி.

**மானின் வயிற்று அரிதாரத் திலகம்** - "கள்ளிவயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்றி, னெள்ளரி தாரம் பிறக்கும்" என்றபடி மான் வயிற்றினின்றும் எடுப்பது அரிதாரம். இது உயர்ந்த அரிய பொருள், ஆன் வயிற்றிற் கோரோசனை எடுப்பதுபோல. இதுவன்றி கல்லினின்றும் எடுப்பது ஒருவகை அரிதாரம். அது மனோசிலை எனப்படும் தாழ்ந்த வகை யென்பர்.

**மயிற்கழுத்து மனவுமணி வடம்** - மயிலின் கழுத்துப் போல நீலமிக்க நிறம் பொருந்தச் சங்குமணிகளைச் சாயமேற்றி வடமாகப்பூணுதல் வழக்கு. மயிலின்கழுத்தை அரிந்து உலர்த்தி யிடையிடை பலகறைமணியும் கோத்த வடமென்றுரைப்பாருமுண்டு. இது பொருந்தாவுரை யென்க. இக்காலில் செவ்வந்திப்பூத்திருகு, மாங்காய் மாலை முதலியனவாக வழங்கும் அணிவகைப்பேர்களைப்போல அந்நாள் அந்நாட்டில் மயிற்கழுத்துப்போல அமைந்த மனவுமணிவடம் அப்பெயர் பெற்றதென்பதுவே அமைவுடைத்தாம்.

**இழிந்து திரங்கி முலை சரிந்து தாழ** - தேவராட்டியினது மிக மூத்தபருவங் குறித்தது. "கொங்கைதிரங்கி" - அம்மை முந்நிலைப்பதிகம். அம் மலைநாட்டுப் பெண்கள் இடையில் உடையணிவதன்றி மேலால் எவ்வகை ஆடையுமணிவது வழக்கிலாமையறிக.

**தழைப்பீலி** - தழையுடன் கூடிய பீலி. உடனிகழ்ச்சிப் பொருளில் வந்த மூன்றனுருபு தொக்கது. தழையாலாகிய மயிற்பீலி என்பாருமுண்டு. இடையிற் கட்டிய

மாவுரியாடையின் மேல் தழைகளை வரிசைபெற மேலாடைபோலத் தொங்கவிடுதல் மரபு. தன் அரசனைக் காணவந்தாளாதலால் மயிற்பீலியுஞ் சேர்த்தணிந்தாள். பூ - தெய்வத்தை அருச்சித்த பூ. பூ நெருங்குதோரைமலி சேடை நல்கி - பூவும் மலை நெல்லரிசியுஞ் சேர்த்து ஆசீர்வதித்துக் கொடுக்கும் மரபு கூறியபடி. தோரை - மலை நெல். சேடை - அட்சதை. முளை முறியாமல் பிளவுபடாமல் நீர்தங்காமல்உள்ள முழு அரிசியே அட்சதைக்குரிய அரிசியாம். முன்னுள்களிற் கும்பாபிடேக முதலிய சிறப்புக்களில் அட்சதைக்கு வேண்டிய அரிசிக்காகப் பலவீடுகளிலும் நல்ல நெல்லுத்தந்து அரிசி தேய்த்துப் பெற்றுக்கொள்ளும்வழக்கும்இருந்தது. இக்காளிலும் நியதியாகச் சிவபூசை செய்வோர் பலர் இவ்வழக்கினைக் கையாள்வதுமுண்டு. இவ்வாறு முழு அரிசியாற் செய்யப்படும் வாழ்த்தும் பிளவுபடாது முற்றி நீடிநிற்குமென்பது கொள்கை.

**போற்றி நீன்றாள்** - அரசன்பால் துதித்துநின்று பணிகேட்கும் முறைபற்றிப் போற்றினாள். 48

698. நின்றமுது குறக்கோலப் படிமத் தாளை
நேர்நோக்கி "யன்னை! நீ நிரப்பு நீங்கி
நன்றினிது னிருந்தனையோ ?" வென்று கூறு
நாகனெதிர் நலம்பெருக வாழ்த்தி, "நல்ல
மென்றசையு மீயலொடு நறவும் வெற்பில்
விளைவளனும் பிறவளனும் வேண்டிற் றெல்லா
மன்றுநீ வைத்தபடி பெற்று வாழ்வே ;
னழைத்தபணி யென்?" னென்ற ணங்கு சார்ந்தாள். சகூ

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறுவந்து போற்றிநின்ற குறத்தியாகிய மூப்புடைய தேவராட்டியை நேர்நோக்கி, "அன்னையே! நீ வறுமையினின்றும் நீங்கிப் பெரிதும் இனிது வாழ்ந்திருந்தனையோ ?" என்று நாகன் கேட்க, அவனுக்கு நன்மையுண்டாக என்று முன்னே வாழ்த்தி, நல்ல மெல்லிய மாமிசமும் ஈயலும் தேனும் மலைபடுவளங்களும் வனைவளங்களும் எனக்கு வேண்டியவையெல்லாம் ஆதியில் நீ வகுத்துவைத்த நிபந்தப்படி குறையின்றிப் பெற்று வாழ்ந்து வருகின்றேன் ; என்னை அழைத்தபணி யாது ?" என்று கேட்டாள்.

(வி - ரை) **நீன்ற** - சேடைநல்கிப் போற்றி நின்ற. **நன்று** - பெரிதும். "நன்று பெரிதாகும்" (தொல் - உரி - 4).

**குறமுதுகோலப் படிமத்தாள்** என மாற்றுக. கோலம் மேற்பாட்டிற் கூறியது.

**அன்னை !** - அண்மைவிளி. முதிய பெண்மகளாதலானும் தெய்வஞ்சார்ந்தாளாதலானும் தன்சொல்வழிப் பணிகேட்கும் இவளை, அரசன், **அன்னையே !** என்றழைத்த மரபு காண்க. தன் மனைவியல்லாத பெண்மக்கள் யாவரேயாயினும் அவரைத் தாய் என விளித்தல் தமிழ் நாட்டு வழக்கு. "தன்மனைக் கிழத்தி யல்லதைப் பிறர்மனை, யன்னையிற் றீரா நன்ன ராண்மை" (ஞானமிர்தம் 17-39) என்றதுங் காண்க. தமிழர்க்குப் பெண்ணின் பெருமை காட்டிப் பெண்மக்களிடத்து ஒழுகும் உயரிய ஒழுக்க முறை கற்பிக்க முன்வரும் நவீனநாகரிகக்காரர்கள் இவ்வுண்மைகண்டு தெளிவாராக.

**நீ நீரப்பு நீங்கி நன்று இனிதின் இருந்தனையோ ?** - மேலும், இங்கு நாகன் தன் சொல்வழிப் பணிசெய்யுமிவளை இவ்வாறு கேட்ட வகையால், அரசன் தன்கீழ் வாழும் குடிகள் பணியாளர் முதலியோர் வறுமை முதலிய துன்பநீங்கி இன்பம்பெற்று நல் வாழ்வு வாழ்வதில் வைத்திருந்த கவலையும் கருத்தும் விளங்குதலும் காண்க. அரசர் கடமையின் உயர்ந்த நோக்கத்தை இதனால் ஆசிரியர் விளக்கியிருத்தலும் உன்னுக.

**நிரப்புநீங்கி** *என்றது துன்ப நீக்கமும்,* **நன்றினிதினிருந்தனையோ ?** *என்றது இன்பப் பேறும் குறித்தன. துன்ப நீக்கம் முதற்கண் வேண்டப்படுவது. அதன் பின்னரே இன்பம் வருவதாம். துன்ப நீக்கமும் இன்பப் பேறுமாகிய இவையே சைவ சித்தாந்த முடிபின் உள்ளுறை யாதலும் உன்னுக.*

**அன்று நீ வைத்தபடி** - *அரசன் தன்கீழ் உள்ள பணியாளர் வறுமையின்றி நல் வாழ்வு பெற்றிருக்குமாறு மானியங்கள் வகுத்து வைப்பது முன்தைகாள்முதல் நமது நாட்டு வழக்கு. இங்குத் தேவாட்டிக்குவைத்த நாட்படி முறை நிபந்த விவரம் அவள் வாக்கில்வைத்து ஆசிரியர் அறிவிக்கும் அழகு காண்க.* **அன்று** - *இவ்வூழியத்தைத் தொடங்கி நியமித்தது முதல்.* **வைத்த** - *நியமித்த; உத்தரவு செய்து ஒழுங்குபடுத்திய.* **படி** - *நிபந்தம் - நாட்படி.*

**வேற்பில்லினை வளனும் பிறவளனும்** - *உணவுக்கும் உடைக்கும் வேண்டப் படுவன பெரும்பாலும் அந்நாட்டிற் பெறப்படும். சிறுபான்மை அவ்வாறு பெறப்படா. இன்றியமையாத உப்புப் போன்ற ஏனை நெய்தல் முதலிய நிலப்பண்டங்களும் வேண் டப்படும். அவற்றைப் பிறவளன் என்றார். இவற்றைப் பண்டமாற்று வகையாற் பெறு வது முன்னுள் வழக்கு. இவைபற்றித் திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்தும் பிறுண்டுங் காண்க.* **வேற்பில்லினைவளன்**-*கிழங்கு கனி வகைகளும் தேன் முதலியன வும். 683, 684 முதலியவை காண்க.*

**அணங்கு சார்ந்தாள்** - **அணங்கு** - *தெய்வம்.* **சார்தல்** - *எப்போதும் தெய்வத்தினை வழிபாடாற்றி அதனைச்சாருங்கோலத்தோடு விளங்குதல்.* (சிலப்பதிகாரம் வேட்டுவவரி.)

**நன்றுமினி தீருந்தனையே ?**—*என்பதும் பாடம்.* 49

699. "கோட்டமிலென் குலமைந்தன் றிண்ணை னெங்கள்
குலத்தலைமை யான்கொடுப்பக் கொண்டு பூண்டு
பூட்றுவேஞ் சிலைவேடர் தம்மைக் காக்கும்
பொருப்புரிமை புகுகின்றா; னவனுக் கென்றும்
வேட்டைவினை யேன்க்குமே லாக வாய்த்து
வேறுபுலங் கவர்வென்றி மேவு மாறு
காட்டிலுறை தெய்வங்கள் விரும்பி யுண்ணக்
காடுபலி யூட்"டென்றான் கவலை யில்லான். நo

(இ - ள்) வெளிப்படை. "நிலை பிறழாத எனது குலமகனாகிய திண்ணன் எங்கள் குலவுரிமையாகிய தலைமையை நான் கொடுக்க அதனை ஏற்றுத் தலைமை பூண்டு, நாண் பூட்டிய வெவ்விய வில்லேந்திய வேடர்களைக் காவல் செய்கின்ற மலையாட்சி யுரிமை யிலே தலைப்படுகின்றான்; அவனுக்கு என்றும் எனக்கு மேலாக வேட்டைத்தொழில் வாய்க்கும் படியும், மாறுபட்ட அயற்புலங்களைக் கவரும் வெற்றி யுண்டாகும்படியும் வனத்தில் வாழும் தெய்வங்கள் விரும்பி யுண்ணுமாறு (பூசித்துக்) காடுபலி ஊட்டுவா யாக" என்று கூறினான் கவலை சிறிது மில்லாதவனாகிய நாகன்.

(வி - ரை) **கோட்டம் இல் என் குலமைந்தன்** - *மன்னவனுவான் நடுநிலைபிற ழாது எல்லார்க்கும் ஒப்ப முறைசெய்தல் வேண்டும் என்பதனை உணர்ந்து அவ்வழியில் தானும் தன்மரபுளோரும் ஒழுகிவருவதைப் பெருமிதவுணர்ச்சியோடும் நாகன் கூறிய வாறு.* "கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது" *என்ற அப்பர் சுவாமிகள் தேவாரம் காண்க. 122-ம் திருப்பாட்டும், இது பற்றித் திருநகரச்சிறப்பில் உரைத்தவையும் நினைவுகூர்க.*

**எங்கள் குலத்தலைமை**-எங்கள் குலத்துக்கு வழிவழியாக உரிய வேடர்தலைவராந் தன்மை.

**யான் கொடுப்ப** - நானே இளவரசனே அரசனுகச்செய்து தலைமைகொடுக்க. எனக்குப்பின் அவன் பெறுதல் என்பதின்றி நானே கொடுக்க. இவ்வாறு தம் வாழ் நாளிலே அரசுரிமையைத் தாமே துறந்து இளவரசருக்குப் பட்டஞ்சூட்டுவோர் அரசரில் மிகச் சிலரே யாவர். உத்தமகுணம் படைத்துத் தமதுகடமையில் தலைநின்ற ஒருசிலரே இது செய்தல் கூடும் என்பது பலதேச சரிதங்களா லறியப்படும் உண்மை. கழறிற்றறிவார் நாயனார் புராணமும் பிறவும் காண்க.

**பூட்டுறு வெஞ்சிலை வேடர்** - வேடர்களின் தறுகண்மையும் ஆண்மையும் குறித்தபடி. எப்போதும் வில்லாண்மைத்தொழிற்கு ஆயத்தராகிப் பூட்டியநாணுடன் உள்ள வில்லேந்திய வேடர்கள்.

**காக்கும்** - அவ்வாறு பெருவிறல் மிக்க வேடர்களைக் காப்பது பெரும்பாரமாகிய ஆண்மைத் தன்மையும் பொறுப்பும் வாய்ந்தது என்பது குறிப்பு.

**புகுகின்றன்** - கைக்கொண்டு அதில் தலைப்பட உள்ளான். எதிர்காலத்தைத் தெளிவுபற்றி நிகழ்காலத்தாற் கூறினர்.

**என்றும்...மேவுமாறு** - வேட்டை தமது புலத்திற் செய்யும் காவற்றொழிலும், வேறு புலங்கவர்தல் அயற்புலத்திற் சென்று அவர்கள் தம்மேல் மீதூர்தல்செய்யா தடக்குதலுமாகும் என்பார் **வாய்த்து** - **மேவுமாறு** என்றார்.

**எனக்கு மேலாக வாய்த்து** - "தம்மிற் றம்மக்க ளறிவுடைமை மாநிலத்து, மன்னுயிர்க் கெல்லா மினிது" என்றது நீதிநூல். நாகன் அறிவுடையோன் ; இம்மகனைப் பெற முன்பு தவமுஞ் செய்துமுள்ளான் ; ஆதலின் தன் மகன் தன்னினும் மேம்பட்டு விளங்க வேண்டுமென்று ஆசை கொண்டான் என்க.

**வேறு புலம் கவர் வென்றி** - "அயற்புலங் கவர்ந்து கொண்ட" (655), "தெவ்வர் கணநிரைகள் பலகவர்ந்து கானங் காத்து" (692) முதலாக மேல் உரைத்தவை காண்க.

**எனக்கு மேலாக வாய்த்து** எனவும், **வேறுபுலங் கவர்வென்றி மேவுமாறு** எனவும் இங்கு நாகன் கூறிய சொற்களில் அவனையறியாமலே மேல்நிகழ்ச்சி பற்றிய உட்குறிப்புத் தோன்றுவது காண்க. நாகனது வேட்டைவினைகள்யாவும் ஊனவேட்டைகளேயா யொழியத் திண்ணனாரது வேட்டை உண்மையில் அவனுக்கு எய்தாததாகிய ஞான வேட்டையாக வாய்த்தது. ஐம்புல வேடர்கூட்டங்களே வெற்றிகொண்டு அவற்றிற்கு வேறுகிய பேரின்பப் புலங்களைக் கவர்ந்து விளங்குபவர் திண்ணனார். நாகன் விரும்பியவண்ணம் தேவராட்டியின் பூசை மேலாகிய பலனையே தந்தது என்க. நாகன் சொற்கேட்ட தேவராட்டியும் அவ்வாறே யாகுக என்று வாழ்த்தும்போது "திண்ணனை வெற்றிவரிச் சிலையோனின் னளவி லன்றி மேம்படுகின்றான்" என்று கூறியதன் உண்மைக்குறிப்பும் வரும்பாட்டிற் காண்க.

**காட்டிலுறை தெய்வங்கள்** - ஒவ்வோர் துறைக்கும் பற்பல படித்தரமாக அரசாங்கத்தின் கீழமைந்து தொழிலியற்றும் பல அதிகாரிகளிருத்தல்போலக் காட்டில்உறைந்து காவல் செய்வனவாகிய பல சிறு தெய்வங்கள் உள்ளன. இதனால் இறைவனது முழுமுதற்றன்மைக்கு இழுக்காவதொன்றில்லை. இவற்றின் வழிபாடும் பல தெய்வ வழிபாடாகாது. "பிறவாயாக்கைப் பெரியோன் முதலாப், பதிவாழ் சதுக்கத்துத் தெய்வ மீறுக" வெவ்வேறு கடவுளர்களைப்பற்றிப் பழந்தமிழ் நூல்களும் பேசும். "நற்றெய்வமும் மனந்த பேதம்" என்பர் தாயுமானார். மகனைப் பெறுதற்கு முழுமுதற்கடவுளும் குறிஞ்சிக் கிழவனுமாகிய முருகப் பெருமானை வழிபட்டான் நாகன். எனவே, இந்நாட்டில் முதற்கடவுள் முதல் வனதெய்வமீறுக உள்ள தெய்வங்களை வழிபட்டு வந்தார்கள் என்று தெரிகின்றோம். இவ்வாறு எல்லாக் கோட்டங்களுக்கும் குறைவின்றி வழிபாடு இயற்றச்செய்வது அரசனது கடமையுமாம். இங்கு மகன் கானிற் கன்னிவேட்டைக்குச்

செல்வதால் காட்டிலுறை தெய்வங்களே வழிபாடுசெய்தான் என்க. **காடு** - மலையைச் சார்ந்த வேட்டைக்காடுகள். **தெய்வம்** - ஒளியுடையவை. **திவ்** பகுதி. ஒளி குறித்தது.

**கவலையில்லான்**-இவ்வேட்டை திண்ணனுர்பால் உலகத்தொடர்புகளையெல்லாம் அறவெறியும்செயலாய் முடிந்தது. அவ்வினைவை யறியாதவனுதலின் கவலையில்லாது காடுபலியூட்டு என்றான் என்பதாம். வரையாட்சிபெற்று, அதனைத்தாங்கும் வன்மை யுடைய தக்கமகனையும் பெறுதலியலாக்காலத்துப் பெற்று, அவனுக்கு ஆட்சியும்தந்து உவக்கும் தந்தைக்கு உலகநிலையில் ஒருகவலையு மிராதென்ற உலகியலையும் விளக்கிய படியாம்.

**பூட்டுறு...புகுகின்றான்** என்றது (வில்லல்லாவிடினும் வில்லாகப்) பூட்டப்பெற்ற விருப்பத்தரும் (பொன்மலைச்) சிலையுடைய வேடர்வடிவம் தாங்கிவந்த காளத்தி யப்பரை என்றும் காவல்புரிந்து அவரது வலப்பக்கத்து அழியாது நிற்பதோர்(காளத்தி) மலையின் உரிமையைப்பெற என்மகன் புகுகின்றான் என்றிவ்வாறு பிறிதோர் குறிப்புப் பொருள்பட நின்ற அமைப்புங் காண்க. 50

700. மற்றவன்றன் மொழிகேட்ட வரைச்சூ ராட்டி
"மனமகிழ்ந்திங் கன்போடு வருகின் றேனுக்
கேற்றையினுங் குறிகண்மிக நல்ல வான;
விதனுலே யுன்மைந்தன் றிண்ண னென
வெற்றிவரிச் சிலையோனின் னளவி லன்றி
மேம்படுகின் றா"னென்று விரும்பி வாழ்த்திக்
கொற்றவன தெய்வங்கண் மகிழ வூட்ட
வேண்டுவன குறைவின்றிக் கொண்டு போனாள்." நிக

(இ - ள்) வெளிப்படை. அவனது வார்த்தைகளைக்கேட்ட தேவராட்டி மிக மகிழ்ந்து "இங்கு அன்போடு வருகின்ற எனக்கு முன் எந்நாள்களிலும் காணப்படாத மிகநல்ல குறிகள் உண்டாயின; அதனுலே உன் மைந்தன் வெற்றிபொருந்திய வரிவில் ஏந்திய திண்ணனுனவன் உன் அளவில் மட்டும் அமையாது மேம்படுகின்றான்" என்று விரும்பி வாழ்த்திக், கொற்றத்தரும் வனதெய்வங்கள் மகிழும்படி காடு பலி ஊட்டுதற்கு வேண்டுவனவற்றை யெல்லாம் குறைவில்லாது கைக்கொண்டு போயினாள்.

(வி - ரை) **வரைச்சூர் ஆட்டி** - மலைத் தெய்வங்களுக்குப் பூசை செய்கின்ற படிமத் தாள். **சூர்** - தெய்வம். **குறிகள் மிகநல்ல ஆன** - குறிகள் - நிமித்தங்கள். இவை வென் றிப்புள் முதலிய புறச்சகுனங்களும், வலக்கண் துடித்தல் முதலாகிய உடற் சகுனங் களுமாம். இவைபற்றி "மொய்த்தபல் சகுன மெல்லா முறைமுறை தீங்கு செய்ய இத்தகு தீய புட்க ளீண்டமுன் உதிரங் காட்டும் அத்தனுக்கு" (812) என்றதும், "தீக் களுக்க ளோடு, துன்னிமித் தங்க ளங்கு நிகழ்ந்தன " (631) என்று தொடங்கித் திரு ஞானசம்பந்தமூர்த்திகள் புராணத்தில் 632, 633, 634-ம் பாட்டுக்களிற் கூறியனவும் காண்க. "விரிச்சியும் வாய்ப்புள்ளும் நற்சொ னிமித்தம்"-பிங்கலம். கண்ணுற் காண்பன வும், காதாற் கேட்பனவும் என இவற்றை வகுத்துக் கூறுவர்.

**எற்றையினும்** - இந்நாள்வரை கோர்ந்தவற்றினும் மேலாக.

**மிக நல்லஆன** - உண்மையில் இக்குறிகள் திண்ணனுர் செல்லும் உயர்கதியைக் குறித்தன என்ற குறிப்பும் காண்க. இக்குறிப்பே பின்னர்த் தேவராட்டி "இதனுலே" என்று தொடங்கிக்கூறும் மொழியிலும் விரவிநிற்றலும் காண்க.அதுவரை இக்குறிச்சியி னின்றும் போந்த மற்றெவரும் காளத்தியிறைவன தருணேக்கமுற்று மேம்பட்டா

நில்லை என்பதும், நாகனும் காளத்தி கண்டானையினும் திண்ணனாரைப்போல மேம்பட்டானலன் என்பதும் உன்னுக.

**நீன் அளவின்றி மேம்படுகின்றான்** - உன்னைப்போல வேடர்தலைவன் என்ற அளவில் நில்லாது மேலோராகிய எல்லாரினும் மிக மேம்பட்ட பெருநிலையை அடைகின்றான் என்பதும் குறிப்பு.

**கொற்ற வனதெய்வங்கள்** - வழிபடின் வெற்றிதருவன என்பது கருத்து. "கூலையமர் செல்வி கடனுணி னல்லது, சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லள்" (சிலப் - வேட் - 16 - 17) என்றதும் காண்க.

**வேற்றி வரிச்சிலையோன்** - குறிகளின் பயன் வேட்டையின் வெற்றியாதலின் இதனை இறுதியில் வைத்துக் கூறினர்.

**குறைவின்றி** - பொருள்களாலும் அளவாலும் குறைவில்லாமல். இதனைத் திரவிய லோபமில்லாமல் என்பர். **கொண்டு** - பெற்றுக் கொண்டு.

**மனமகிழ்ந்து நானிங்கு**—என்பதும் பாடம். 51

701. தெய்வநிகழ் குறமுதியாள் சென்ற பின்பு
திண்ணனார் சிலைத்தாதை யழைப்பச் சீர்கொள்
மைவிரவு நறுங்குஞ்சி வாசக் கண்ணி
மணிநீல மலையொன்று வந்த தென்னக்
கைவிரவு சிலைவேடர் போற்ற வந்து
காதல்புரி தாதைகழல் வணங்கும் போதிற்
செவ்வரைபோற் புயமிரண்டுஞ் செறியப் புல்லிச்
செழும்புலித்தோ லிருக்கையின்முன் சேர வைத்தான். ருஉ

(இ - ள்) வெளிப்படை. தேவராட்டி போயின பின்னர், வில்லையுடைய தந்தை அழைக்கக் கேட்டுச் சிறப்புக்கொண்ட கரிய நல்ல குடுமியினையும் வாசமிக்க மாலையையு முடைய நீல மணிமலையொன்று வந்தது போலத் திண்ணனார் கையிலே பொருந்திய வில்லையுடைய வேடர்பலரும் போற்ற வந்து தம்பாற் காதல்புரி தாதையின் கழல்களை வணங்கியபோது, தாதையாகிய நாகன் நேர்மைபெற்ற குன்றுபோல உயர்ந்த இரு தோள்களையும் பொருந்தத் தழுவிக்கொண்டு செழுமையான புலித்தோல் ஆசனத்திலே தன் முன்புகூட வீற்றிருக்கும்படி வைத்தான்.

(வி - ரை) **தெய்வநிகழ் குறமுதியாள்** - தேவராட்டியின் மரபும் தொழிலும் படிமமும் வயதும் குறித்தது காண்க. நிகழ்தல் - ஆவேசித்தல்.

**சிலைத்தாதை அழைப்ப** - சிலை-வேந்தர்க்குக் கோல்போல வேடர்தலைவனுடைய ஆட்சிக்குறி என்றபொருளில்வந்தது. சிலைக்கீழ் (695) என்றதுகாண்க. அழைப்ப - அழைத்தாராதலின். "கொண்டுவரச் செப்பிவிட்டு" (696). அழைப்ப என்றதனால், அழைக்கப்படாமல் இளவரசன் தன்தலைவனைக் காண்பது முறையன்று என்பதாம்.

**சீர்கொள்** - குஞ்சி என்று கூட்டுக. சீர் - சிறப்பு. இக்குஞ்சிக்குச் சிறப்பாவது பின்னர்க் காளத்திநாதரது பூசனைக்குரிய திருப்பள்ளித்தாமம் தாங்கப்பெறுதல். சீர் கொள்குஞ்சி, மைவிரவு குஞ்சி எனத் தனித்தனிக் கூட்டுக.

**மணி** - அழகு என்றலுமாம். **மலை ஒன்று வந்ததென்ன** - உருவம்பற்றி வந்த இல்பொருளுவமம்.

**கைவிரவு சிலை வேடர் போற்ற** - கையிற் சிலைபிடித்தவாறே நின்று வேட்டைப் போர்க்கோலத்துடன் வேடர்கள் தமக்குத் தலைவனுக்குப் பட்டம் சூடும் இளவரசனைக் காவல் செய்ய. Military Guard of honour என்பர் நவீனர்.

**செவ்வரை போற் புயமிரண்டும்** - செம்மை - சேர்மை. சேர்மையாவது திரண்டு உருண்டு வளர்ந்திருத்தல்.

**புயமிரண்டும் செறியப் புல்லி** - திண்ணஞரது புயமிரண்டையும் தனது புய மிரண்டும் செருங்கத் தழுவி. 'கருவரை காளமேக மேந்திய தென்னத் தாதை, பொரு வரைத் தோள்களார' என முன்னர் இவனது தோள்களைக் கரிய மலையாகக் கூறியதும் காண்க. இக்கருத்தைத் தழுவியே தசரதன் இராமனைத் தழுவிய வதனைக் கூறும் போது "நிலங்க டாங்குறு நிலையினை நிலையிட நினைந்தான், விலங்க லன்னதிண் டோளையு மெய்த்திரு விருக்கும், அலங்கல் மார்பையும் தனதுதோள் மார்புகொண் டளந்தான்" என்று கம்பர் சமத்காரமாகக் கூறியதுங் காண்க.

**புலித்தோல் இருக்கை** - இது இவர்களது அரசு வீற்றிருக்கும் அரசுகட்டில் என் பர். எனை அரசர் வீற்றிருக்கும் சிங்காசனம் என்பது பொன், மரம் முதலியவற்றுற் சிங் கத்தின் வடிவம் போன்றியன்று, உபசாரமாத்திரையாற் போலியாக அப்பெயர்பெறும். இவ்வேடர்களது அரசாசனமோ அவ்வாறன்றி உண்மைப்புலித்தோ லாசனமாயுள்ள தாம். **இருக்கை** - அரசு கட்டில். **புலித்தோல் இருக்கை** - குறவர் மரபிற்கு உயர்ந்த ஆசனமுமாம். இதனை முருகப்பெருமானுக்கு வள்ளிப்பிராட்டியாரை மணம் செய்விக்க அமைந்த ஞான்று வேடர்கோமானுகிய நம்பிராசன் "தன்றிரு மனையி னூடே சரவண முதல்வன் றன்னை, மன்றலங் குழலி யோடு மரபுளி யுய்த்து **வேங்கைப், பொன்றிக ழதளின் மீது போலிவுற விருத்தி னனே**" என்ற கந்தபுராணத்தானுமறிக.

**முன் சேர வைத்தான்** - முன்வைத்தான் - சேரவைத்தான் என்க. தனது தலை மையை மகனுக்குக் கொடுக்கும் செயலில் முதலிற் செய்யும் செயலாவது தன் ஆசனத் தில் ஒருங்கே தன்னுடன்சேர அவனைவைத்தலாம். முன்வைத்தல் மகனுக்கு வேண்டு வனகூறிச் சுரிகையும் உடைதோலும் ஆகிய தனது அரசஅடையாளங்களைக் கையிற் கொடுத்துத் தலைமை சூட்டுதற்கென்பது வரும்பாட்டானறிக.

செய்வரைபோல்—என்பதும் பாடம். 52

702✱ முன்னிருந்த மைந்தன்முக நோக்கி நாகன்
"மூப்பெனைவந் தடைதலினுல் முன்பு போல
என்னுடைய முயற்சியினுல் வேட்டை யாட
வினியெனக்குக் கருத்தில்லை; யெனக்கு மேலாய்
மன்னுசிலை மலையர்குலக் காவல் பூண்டு
மாறேறிந்து மாவேட்டை யாடி யென்றும்
உன்னுடைய மரபுரிமை தாங்கு வா"யென்
றுடைதோலுஞ் சுரிகையுங்கைக் கொடுத்தா னன்றே. (இ)

(இ - ள்) வெளிப்படை. நாகன், முன்னுல் வீற்றிருந்த மைந்தனரது முகத் தைப் பார்த்து "என்னை மூப்புவந்து அடைந்ததனுலே முன்புபோல என்னுடைய முயற்சியினுலே வேட்டையாட இனி எனக்குக் கருத்தில்லை; என்னிலும் மேலாக நீ நிலைபெற்ற மலையர்களாகிய இவ்வேடர்குலக் காவலை மேற்கொண்டு பகைப்புலங்களை வென்று மா வேட்டையாடி உனது மரபுரிமையாகிய தலைமையை என்றுந்தாங்குவா யாக" என்று ஆசிகூறித் தன் அரசாங்க அடையாளமாகிய உடைதோலையுஞ் சுரிகை யையும் அவர் கையில் அப்பொழுதே கொடுத்தான்.

(வி - ரை) **முன் இருந்த** - தன் முன்பு இருக்கவைத்தபடி இருந்த.

**மூப்பு வந்து எனை அடைதலினுல்** என மாற்றுக. என்னுடைய முயற்சியினுல் உடல் வலிமையின் துணைகொண்டு.

**வேட்டையாடக் கருத்தில்லை** - உயிர்களின் பக்குவ நோக்கி உடலும் கரணங்களும் புவன போகங்களும் இறைவனாலே தரப்படுகின்றன. அவ்வுடல்தானும் பிறந்தது முதல் இறக்கும்வரை பருவந்தோறும் மாறுதலடைந்துகொண்டே வருகின்றது. அதனுள்ளே தங்கியிருக்கும் உயிரோ அவ்வாறு மாறுத லடைகின்றதில்லை. ஆனால் அதன் இச்சை ஞானம் கிரியை என்ற சத்திகள் உடலின் தகுதிக்கேற்றபடி மாறுகின்றன. ஆதலின் எனைய எல்லாஉதவிகளுமிருப்பினும் மூப்பு வந்தடைதலினால் இனி வேட்டையாடக் கருத்தில்லை என்றான். கருத்து - மன எழுச்சி. நோய்கொண்ட ஒருவனுக்குக் காமம் போகம் முதலியவற்றில் இச்சையும் அவைபற்றிய அறிவும் செயலும் செல்லாமை இயல்பாதல்போலக் காண்க. இவ்வுண்மையை யாவரும் எப்போதும் மனத்திற் கொண்டுவைத்தல் நன்மை பயப்பதென்றாகும்.

**எனக்குமேலாய்** - இது பின்னர் உண்மையாகவே விளைதல் காண்க.

**மன்னுசிலை மலையர்குலம்** - வேடர்களது நிலைபெற்றகுலம். இங்கு சிலைமலையர் - மலைச்சிலையர் - சிலை - வில். மலையாகிய வில்லினையுடையவர் - சிவபெருமான். குலம் - கோயில் - தேவகுலம் என்று கொண்டு காளத்தியப்பரது திருக்கோயிலுக்குக் காவல் பூண்டு என்ற பொருளும், **மாறு எறிந்து** - அன்பு நிலைக்கு மாறுகிய மும்மலச்சார்புகளெல்லாவற்றையும் அறப்போக்கி என்ற பொருளும் தொனித்தல் காண்க.

**உன்னுடைய மாபுரிமை** - நீ இதுகாறும் (ஐம்புல) வேடர்களாகிய எங்கள் பால் வளர்ந்தனை; இது உனது மரபன்று; மன்னவ குமாரனுவது உன்னுடைய மரபு; இனி உனக்குரிமையாகிய மன்னவமரபுரிமையைத் தாங்குவாய் என்பன முதலாகச் சிவஞானபோதம் எட்டாஞ் சூத்திரத்திற்கூறிய உண்மையின்குறிப்பும் இங்குப் படுதல் காண்க. முன்பு உண்மையில் இவர் மன்னவகுமாரன்-அருச்சுனன் - ஆதலும் உன்னுக.

**உடைதோல் - சுரிகை** - வேடர்களது அரசாங்க அடையாளங்கள். இவை நாகன் தாங்கியவை. இக்காளினும் இராணுவப் பட்டைத்தோல்வாரும், வாளும் (Belt and Sword) சேனைத்தலைமை முதலிய பெருநிலைகளின் அடையாளங்களாய் அரசரால் தரப்படுதல் காண்க.

**கைக்கொடுத்தான்** - இவற்றை மகன்கையிற் கொடுத்தலாலே முடிசூட்டுதல் போலத் தனது தலைமைத்தானத்தை மகன்பாலதாக ஆக்கினன்.

**அன்றே** - வேடர்கள் முறைசொல்லிய அப்பொழுதிலே. அவசியம் கண்டபின் ஒரு கணமேனும் பயனில்லாதவனுகத் தான் தலைமைதாங்க விரும்பாது உடனே கொடுத்தான். நாகன் குடிகளைக்காக்கும் தன் கடமையைச் செம்மைபெற உணர்ந்தொழுகியதிறம் எடுத்துக்காட்டப்பட்டது. நோய் - மூப்பு - முதலியவற்றால் தாம் தாங்கச் சத்தியற்றபோதும் அதிகாரஆசைவயப்பட்டு, அதனைத் தக்கார் பால் ஆக்கிக் கடமைசெலுத்த இசையாது, இடர்ப்பட்டிருத்தல் மக்களிற் பெரும்பாலோர் செய்கை. உண்மைகண்டு உலகம் திருத்துமாறு அமைச்சர்பெருமானுகிய ஆசிரியர் இதனை இங்கு இவ்வாறு எடுத்துக்காட்டினர் என்க.

**அன்றே** - அசையென் றொருதுக்குவாருமுளர். 53

703. தந்தைநிலை யுட்கொண்டு தளர்வு கொண்டு,
தங்கள்குலத் தலைமைக்குச் சார்வு தோன்ற
வந்தகுறை பாடதனை நிரப்பு மாறு
மனங்கொண்ட குறிப்பினுன் மறுமை கொண்டு,
மூந்தையவன் கழல்வணங்கி முறைமை தந்த
முதற்சுரிகை யுடைதோலும் வாங்கிக் கொண்டு,
சிந்தைபரங் கொளநின்ற திண்ண னூர்க்குத்
திருத்தாதை முகமலர்ந்து செப்பு கின்றான்— நிச

704. "நம்முடைய குலமறவர் சுற்றத் தாரை
நான்கொண்டு பரித்ததன்மே னலமே செய்து
தெம்முனையி லயற்புலங்கள் கவர்ந்து கொண்ட
திண்சிலையின் வளமொழியாச் சிறப்பின் வாழ்வாய்!;
வெம்முனையில் வேட்டைகளு முனக்கு வாய்க்கும்;
விரைந்துநீ தாழாதே வேட்டை யாட
இம்முரண்வெஞ் சிலைவேடர் தங்க ளோடு
மெழுக!" வென விடைகொடுத்தா னியல்பி னின்றான். நிரு

703. (இ - ள்) வெளிப்படை. தமது தந்தையின் நிலையினை உட்கொண்டு அதனால் பரிவடைந்து, பின்னர்த் தங்கள் குலத்தலைமைக்கு ஒரு பற்றுக்கோடு வேண்டப்படுவதாகிய குறையை நீக்குதல் வேண்டுமென்று மனத்தினுட்கொண்ட குறிப்பினாலே தந்தையினது சொல்லை மறுக்காமையை மேற்கொண்டு, தமது முன்னவனாகிய அவன் கழலை வணங்கி, அவன் முறைமையாற் கொடுத்த முதற்சுரிகையையும் உடைதோலையும் ஏற்றுக்கொண்டு, தமது சிந்தை பாங்கொள நின்றவராகிய திண்ணனார்க்கு அவரது திருத்தாதை முகமலர்ந்து சொல்வானாகி— நிச

704. (இ - ள்) வெளிப்படை. "நம்முடைய குலத்தவராகிய வேடர்களையும் சுற்றத்தார்களையும் நான் கொண்டுதாங்கியவதனினும் மேலாக அவர்களுக்கு நன்மையே செய்து, பகைமுனையில் அயற்புலங்களைக் கவர்ந்து அதனிற் கைக்கொண்ட வலிய வில்லினால் வினையும் வளங்குறையாத சிறப்போடு வாழ்வாயாக! விரும்பத்தக்க வேட்டை முனையிலே நல் வேட்டைகளும் உனக்கு வாய்க்கும்; நீ தாமதியாது விரைவாய் வேட்டையாடுதற்கு, இந்த வலிய கொடிய வில்வேடர்களுடனே எழுவாயாக!" என்று இயல்பின் நின்ற நாகன் திண்ணனார்க்கு விடைகொடுத்தான். நிரு

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

703. (வி-ரை) **தந்தை நிலை** - மேற்பாட்டில் சொல்லியபடி நாகன் நிலைமை. **உட்கொண்டு** - உட்கொண்டு அதனாலே. தளர்வு கொண்டதற்குக் காரணங் காட்டியவாறு.

**தளர்வு கொண்டு** - மனம் பரிந்து; வருந்தி. இவ்வாறே "அன்னவரு மிரங்கி" (694) என்று வேடர் மனநிலை குறித்தவாறும் காண்க.

**குறைபாடதனை நிரப்புமாறு** என்றது குறையை நீக்கி நிறைவாக்குதல் குறித்தது.

**மன்கொண்ட குறிப்பினால்** - மனத்தில் தோன்றி ஏறுந்த குறிப்பினாலே - கருதியதனாலே. முதலில் திண்ணனாது மனத்திற்றோன்றினது வருத்தம்; அதன் பின்னே தோன்றியது குலத்தலைமைக்குச் சார்வுதோன்ற வந்த குறைபாடு; அதன் பின்னர்த் தோன்றியது அக்குறையை நிரப்பும் குறிப்பு என்றிவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாகப் போந்த அவரது மனநிலைகளைக் குறித்தவாறும்.

**மறுமை கொண்டு** - தந்தையிருக்க மகன் தலைமைபூணுதல் தகாதென்று மறுக்காமல். தளர்வு கொண்டாராயினும் மறுமையும் கொண்டார். அதன் காரணம் மனங் கொண்ட குறிப்பு என்பது. அரசுரிமை தாங்கவேண்டு மென்ற ஆவல் அவர்க்கில்லை என்பதும் கூறியபடி.

**முந்தை** - முன்னோன் - தாதை - தலைவன். முன்னே என்பாருமுண்டு.

**கழல் வணங்கி** - அவ்விடத்துக்கு வந்தவுடனே முறைமையால் வணங்கினார் (701). இங்கு வணங்கியது அவனது சொல்வழி அமைந்துநின்ற தமது இசைவுகாட்டுதற்கும் சுரிகையும் உடைதோலும் பெற்றுத் தலைமைபூணுவதற்குமுன் அவ்வுரிமையைப் பெரியோர்பாற்பெறும் முறைமையில் ஒழுகுதற்குமாம். புலித்தோல்

இருக்கையில் தந்தையுடன் சேரஇருந்தவர் (701) எழுந்து வணங்கிநின்று சுரிகையும் உடைதோலும் வாங்கினர் என்க.

**முதற் சுரிகை** - முதன்மைக்கு - தலைமைக்கு - அடையாளமாகியசுரிகை. வழிவழி யாய்த் தமது குலத்தலைவர் தாங்கும் சுரிகை என்றலுமாம்.

**வாங்கிக் கொண்டு** - பெரியோர் பணித்ததனை உடனே ஏற்றுக்கொள்ளல் வேண்டுமென்னும் மரபுபற்றி முதலில் வாங்கிக்கொண்டு பின்னரே சிந்தித்தார். இதன்பின் **சிந்தைபரங் கொளநின்ற** என்றது காண்க.

**பரம்** - பாரம். அரசாங்கமாகிய பாரத்தைச் சிந்தையிலே கொண்டு. அதுவே இராச்சியபாரம் எனப்படும். **பரித்ததன்மேல்** என வரும்பாட்டிற் கூறுவதும் காண்க. இது உடம்பானன்றி மனத்தாற்பரிக்கப்படுவதாம். அரசாட்சியானது பெரும் பொறுப் புடையது - பெரும்பாரமானது - என்ற பயமுடைய எண்ணம் உடைதோலும் சுரிகையும் ஏற்றவுடன் உண்டாகியது. கழறிற்றறிவார் நாயனார் அரசுரிமை ஏற்குமுன் இறைவனிடம் விண்ணப்பித்து அதற்குரிய தகுதிகள் பெற்றபின்னரே அதனைத் தாங் கிய சரிதத்தை இங்கு நினைவுகூர்க. தலைமை தாங்குதலில் விருப்பும் வெறுப்புமின்றித், தந்தை மூப்படைதலினால் வேடர்களைத் தாங்குதற்குரியவர் இல்லாக்குறை நேர்ந்தது- இதனை நீக்குதல் தாதைவழிநிற்கும் நமதுகடமையாயிற்று என்ற கடப்பாடுபெற்றிச் சிந் தையை அதில் நிறுத்துதல் இங்குக்குறித்தநிலை.

இனி, இங்கு இன்று மறுமைகொண்டு தோலும் சுரிகையும் கைக்கொண்டார். இவர் சிந்தையைப் பரம் - காளத்தியப்பர் - கடவுள் - நாளைக் கைக்கொள்ளும் நிலையில் நின்றார் என்றதோ ருட்பொருளும் போந்தவாறு காண்க.

**திருத்தாதை - திரு** - நாயனார்க்குத் தாதையாகியசிறப்பும் அதனாற் பெரியார்பலரும் போற்றநின்றசிறப்பும் குறித்தது. இதனைப் பின்னர் "செய்தவத்தின் பெருமைபெற்ற வெங்கண்விறற் ரூதை" எனவிரித்தனர்.முன்னரும்"தவமுன் செய்தான்"(657)என்றார்.

**முகமலர்ந்து செப்புகின்றான்** - பின்னர் மறுகாட்பகலில் நேர்வதறியாது கூறி னான் என்பது உட்குறிப்பு. வரும்பாட்டில் இக்கருத்தேபற்றி "இயல்பினின்றான்" என்றதும் காண்க.

**சாய்வு தோன்ற**—என்பதும் பாடம். 54

704. (வி - ரை) **மறவர் சுற்றத்தாரை** - மறவரையும் சுற்றத்தாரையும். இரண்ட னுருபும் உம்மையும் விரிக்க.

**சுற்றம்** - சுற்றியிருப்பவர். சார்ந்து பலவாற்றானும் சூழ்ந்திருப்பவர்.

**கொண்டு பரித்தது** - **கொண்டு** - தான் எனது முன்தையோரிடம் பெற்றுக் கொண்டு. **பரித்தது** - தாங்கியது.

**நலமேசெய்து** - ஏகாரம் பிரிநிலை. எக்காலமும் அவர்கட்கு நன்மையே செய்து என்றபடி. அவரால் தமக்கும் பிறர்க்கும் எவ்வகையானும் ஒரு தீங்கு நேர்ந்தபோதி லும் நலமே அவர்க்குச் செய்து என்றபடியாம். இது அரசாங்கத்தின் மிக உயர்ந்த நோக்கமும் குறிக்கோளுமாம். ஆயின் குற்றஞ் செய்தாரைத் தண்டித்தலிலதோ ? எனின், உண்டு ; அதுவும் அவரை ஒறுக்கும் வகையானன்றி அவர்பால் இரங்கித் திருத்தி நன்மைசெய்யும் வகையாற் செய்யப்படுதல் வேண்டுமென்பது. இறைவன் உயிர்களை ஆட்கொண்டு பரிக்கும் செய்தியும் இவ்வாறே ஞானநூல்களா லுணர்த்தப் படும். "எல்லாம் பார்த்திடிற் பரிவே யாகும்" என்பது ஞான சாத்திரம்.

**தெம்முனையில் அயற்புலங்கள் கவர்ந்து** - பகைமுகத்தில் அயலாரது புலங்களின் பொருள்களைக் கவர்ந்து. உயிரைவாட்டிப் பகைசெய்யும் அயற்புலங்களாகிய ஐம்புலங் களையும் கவர்ந்து அவற்றின் பகையை ஒழித்து என்றதும் குறிப்பாம்.

**கொண்டவளம்** - **திண்சிலையின் வளம்** எனக் கூட்டுக. சிலைவலியாற் பெறும் வளம் என்க. **திண்சிலை** - இறைவனுக்குக் கானவனை அமுதமாக்கிக் காவல்புரியும்

வலிமை பெற்றமையாற் றிண் என்றார். தோள்வலியாற் பெறுவதனைச் சிலையின்மேல் ஏற்றியது உபசாரம்.

**வளம் ஒழியாச் சிறப்பு** - சிலையினாற் பெறும்வளம். என்றைக்கும் அழிவு பெறாது நிலைத்து இறைவனது ஆணைப்படி அவரது வலப்பக்கத்தில் என்றும் நிற்கப்பெற்ற சிறப்பின் குறிப்பும் காண்க. **வாழ்வாய்** - வாழ்க என்றது நாகன் சொன்ன ஆசி.

**வெம்முனையில்** - வெம்மை - விருப்பம். சிலையின் வளம் மேலே சொல்லப்பட்டமையால் இது வெறும் வேட்டைப்பலன் பற்றிய ஆசிமட்டு மன்றுகித், தேவராட்டி "மேம்படுகின்றான்" என்றபடி, நீ இறைவனுக்கு ஊட்ட விரும்பியவாறே வேட்டைகள் வாய்க்கும் என்பதைக் குறிப்பாலுணர்த்திற்று. **வேட்டை** - அதனாலகப்படும் மிருக முதலியவற்றைக் குறித்தது.

**மூரண் வெஞ்சிலை வேடர்** - **மூரண்** - வலிமை - **வெம்மை** - கொடுமை - கொலைத் தொழில் புரிவதனைக் குறித்தது.

எழுக - செல்க எனின் அமங்கலக் குறிப்புத் தருமாதலின் மங்கலமாகக் கூறினான். "போங்கள்" என்பதற்கு "வாருங்கள்" என்னும் உலகவழக்குக் காண்க. வேடர்மகனாகிய கீழ்நிலையினின்றும் மன்னவகுமாரனாகிய உயர்நிலைக்கு எழுக என்றது குறிப்பு.

**விடைகொடுத்தான்** - இதுவே இறுதியாக உலகநிலையில் நாகனுக்கும் திண்ணனாருக்கும் இருந்த தொடர்பு. இனி இத்தொடர்பு அற நிகழ்வது சரிதம். மறுநாட் புலர்காலை வேட்டைக்குச்செல்லும் திண்ணனார் உச்சிப்போதில் இறைவனைப்பிடித்துலகப் பற்றை அறவே விடுவர். ஆதலின் அக்குறிப்புப்பெற இவ்வாறு முடித்துக் கூறினார்.

**இயல்பின் நீன்றான்** - நின்றருளிய நாகன். வினையாலணையும்பெயர். இதனை வினைமுற்றாகவே கொண்டு, விடைதந்த இச்செயலிலே உலகஇயல்பில் நின்றான் எனவும், விடைகொடுத்தபின் இனித் திண்ணனார்க்குத்தாதை என்றநிலையில்லையாகத் தன் முன்னையியல்பாகிய வேடர்தலைவனும் நாகன் என்ற இயல்பிலே அமைந்து நின்று கொண்டவனானான் எனவும் உரைத்தலுமாம்.

**கொண்டுதிண்—இயல்பின் மீக்கான்**—என்பனவும் பாடங்கள். 55

705. செங்கண்வயக் கோளரியே றன்ன திண்மைத்
திண்ணனார் செய்தவத்தின் பெருமை பெற்ற
வெங்கண்விறற் றுதைகழல் வணங்கி நின்று
விடைகொண்டு புறம்போந்து வேட ரோடு
மங்கலநீர்ச் சுனைபடிந்து மனையின் வைகி
வைகிருளின் புலர்காலை வரிவிற் சாலைப்
பொங்குசிலை யடல்வேட்டைக் கோலங் கொள்ளப்
புனைதொழிற்கை வினைஞரொடும் பொலிந்து புக்கார். நிசு

(இ - ள்) வெளிப்படை. சிவந்த கண்களையுடைய வெற்றிபொருந்திய சிங்க ஏறுபோன்ற வலிமையுடைய திண்ணனார், செய்தவத்தின் பெருமைபெற்ற வெவ்விய கண்ணும் விறலுமுடைய தாதைகழலிலே நிலமுறவீழ்ந்து அடிபணிந்து எழுந்து நின்று விடைபெற்றுக்கொண்டு வெளிப்போந்து வேடர்களோடும்போய்ப் பின்னர் மங்கலஞ்செய்யும் நீரையுடைய சுனையிற்படிந்து நீராடி மனையிலே தங்கித், தங்கிய இருள்புலர்கின்ற வைகறைக்காலத்தில் வரிவிற்சாலையிலே பொங்குசிலைகொண்டு செய்யும் வலியவேட்டைக்கோலம் கொள்ளுதற்காக அலங்கரிக்கும்தொழில் செய்கின்ற கையுடைய ஏவலாளர்களுடன் மகிழ்ந்துபுகுந்தனர்.

(வி - ரை) **கோளரி** - சிங்கம். இதற்குக் கோள் என்ற பகுதி முதனீண்டதெனக் கொண்டு, எதிர்ந்தாரைப்பற்றி உயிர்கொள்ளுதலை உடைய **அரி** - சிங்கம் என்று

பொருள் கூறுவாருமுண்டு. இங்குத் திண்ணனார் மாவேட்டைக்குச் செல்லுதலால் எத்த மிருகங்களும் இவர்கீழ்ப்பட்டு வெல்லப்பட்டும் கொல்லப்பட்டும் போம் என்பதுங் குறிப்பு. முன்னரும் இவரைச் சிங்கமென்றே கூறியதும் காண்க (690).

**செய்தவத்தின் பெருமை பேற்ற** - எல்லாப்பேற்றினும் திண்ணனாரை மகனாகப் பெறும்பேறே சிறந்ததாகலின் அதனைக் கூட்டுவித்ததவமே பெருமையுடையதென்ற படியாம். திண்ணனாரால் வணங்கப்பெற்றதும் பெருந்தவமாம்.

**புறம் போந்து** - நாகன் இருந்து தமக்குத் தலைமைசூட்டிய அவ்விடம்விட்டு வெளிப்போந்து. இதனாலும், "மைந்தனே ஈண்டழைத்து" (695), "திண்ணனேமுன் கொண்டுவரச் செப்பி விட்டு" (696), என்றமையாலும் நாகனது இருக்கைவேறு, திண்ணனாரது இருக்கைவேறு என்பது பெறப்படும்.

**மங்கலநீர்க் சுனைபடிந்து** - மங்கலஞ்செய்யும் நீர்பொருந்திய சுனையிற்றோய்ந்து நீராடி. **மங்கலம்** - இன்பம். **சுனை** - குறிஞ்சியின் நீர்நிலைப் பெயர். புதிய ஊற்றுடையதாகித் தோய்ந்தார்க்கு உடற்சுகந்தருவது. **படிந்து** - தோய்ந்து குளிக்கும் முறை. குறிஞ்சிநில மக்கள் மாலையில் மங்கலம் - இன்பம் - தருகின்ற நீர்ச்சுனைபடிந்து மனைவைகுதல் மரபு என்க. இதுவரை வேடர்மகனாராகி மங்கலத்துக்கு மாறுகிய கொல்-எறி - குத்து என்பனவாதி செயலேசெய்து ஊன்உண்ணுதல் முதலிய அசுத்த உலகோபோகங்கள் துய்த்துவந்தவற்றையெல்லாம் கழுவி எறிந்து, இனிப் பிற்றைநாளே மங்கலமாகிய சிவமாந்தன்மைப்பெருவாழ்வு பெறுகின்றாராதலின் அதற்குத் தூண செய்த நீர் என்ற குறிப்பும்பெற **மங்கலநீர்** என்றார் என்பதுமாம்.

**வைகிநளின் புலர்காலை** - இடையாமத்துத் தங்கியஇருள் புலர்கின்றகாலம் வைகறையாதலின் இவ்வாறு கூறினர். இனி - **வைகுதல்** - நீங்குதல் எனக் கொண்டு, நீங்குகின்ற இருளினையுடைய புலர்காலை என்பதுமாம். " நீத்தது யாமின வாகி" (திருமூலர் புராணம் - 14) என்புழிப்போல. வேட்டையிற் புகுகின்ற காலம் வைகறையேயாம். பின்னர் 781 - 782ம் பாட்டுக்களில் இதனை விரித்துக் கூறியிருத்தல் காண்க. விலங்குகள் புட்கள் என்பவை தத்தம் இருப்பிடங்களை விட்டெழும்முன்னரே தாம் அவ்வவிடங்களில் அவ்வவற்றைக் காணவும், அவை தம்மைக் காணவண்ணம் தாமிருக்கவும் வசதிபெறுங் காலம் இதுவென்பது வேட்டைவினையாளர் கைகண்டமுறை. எத்தொழிலிற் புகுதற்கும் வைகறைப்பொழுது உரித்தாம் என்பது உடல்நூல் உளநூல்களின் துணிபுமாம். இரவிற் றுயின்று இளைப்பாறி மதிக்கலைகளினால் அமுதம் பெற்று உடற்பகுதிகள் ஊக்கத்துடன் நிற்கும். **பலவிகாணி** என்னும், பலத்தை வேறுபாடு படுத்தும் ஞாயிற்றின் "வெம்புங்கிய கதிர்"கள் மேல்வந்து தாக்கி உடற்பகுதிகளின் பலத்தைக் குறைக்குமுன் தொழிலிற்புகுதல் பலன்றரும் என்பது ஒரு பொதுவிதி. அது வேட்டைக்குரிய சிறப்புவிதியு மாயிற்று.

**வரிவிற் சாலை** - வரிந்து பலப்படுத்திய வில் முதலிய படைகள் இருக்கும் சாலையில். ஏழாம் வேற்றுமையுருபு தொக்கது. சாலை - **புகிகார்** என முடிக்க.

**வேட்டைக் கோலம்** - வேட்டைவினை செய்தற்குரிய கோலம். இது அவ்வேட்டை வினையிலே உடல்வசதி - படைவசதி முதலியவை ஒழுங்குபெற நிற்கும்படி அமைவுபடுத்தும் கோலமாம். போர் முறையிலும் இவ்வாறு முன்னர் வசதிநிலைபெற அமைத்த கோலங்கொள்ளுதல் முறை. 618 பார்க்க. இக்கோலத்தை மேல் 706 முதல் 712 வரை ஏழு திருப்பாட்டுக்களில் விரித்தனர்.

**போங்கு சீலை** - வேட்டைவினையாகிய புல்லிய கொல்வினையல்லாது அத்தனுக்கு அமுதூட்டிக் காவல்புரியும் நல்வினை செய்து அன்பு பொங்குதற்கேதுவாய் நிற்றலால் இவ்வாறு கூறினர்.

அடல் வேட்டை - அடல் - அதிதல் எனக்கொண்டு அதிதலைச் செய்யும் - கொலை புரியும் - வேட்டை என்பாருமுண்டு.

புனைதொழிற்கை வினைஞர் - வேட்டைக்கோலத்தை வழுவின்றிச் செம்மைபெறச் செய்யவல்ல கைத்தொழிலிற் றேர்ந்தவர். இவ்வாறு ஒவ்வொரு தொழிலுக்கும் உரிய கோலஞ் செய்யும் கைவல்லார் உளராதல் மரபு. "கைவலான்" (162) என்றதும் காண்க.

போலிந்து - மகிழ்ந்து. இது உள்ளப் பொலிவு. மேல்வரும் சிவப்பொலிவின் முன்னதிகுறியாம். 56

வேறு

706. நெறிகொண்ட குஞ்சிச் சுருடுஞ்சி நிமிர்ந்து பொங்க
முறிகொண்ட கண்ணிக்கிடை மொய்யொளிப் பீலி சேர்த்தி,
வெறிகொண்ட முல்லைப் பிணைமீது குறிஞ்சி வெட்சி
செறிகொண்ட வண்டின்குலஞ் சீர்கொளப் பின்பு செய்து, நுஎ

707. முன்னெற்றியின் மீது முருக்திடை வைத்த குன்றி
தன்னிற்புரி கொண்ட மயிர்க்கயி றுரச் சாத்தி,
மின்னிற்றிகழ் சங்கு விளங்குவெண் டோடு காதின்
மன்னிப்புடை கின்றன மாமதி போல வைக, நுஅ

708. கண்டத்திடை வெண்கவ டிக்கதிர் மாலை சேரக்
கொண்டக்கொடு பன்மணி கோத்திடை யேனக் கோடு
துண்டப்பிறை போல்வன தூங்கிட, வேங்கை வன்றோற்
றண்டைச்செயல் பொங்கிய சன்னவீ ரந்த யங்க, நுக

709. மார்பிற்சிறு தந்த மணித்திரண் மாலை தாழத்,
தாரிற்பொலி தோள்வல யங்க டழைத்து மின்னச்,
சேர்விற்பொலி கங்கண மீது திகழ்ந்த முன்கைக்
கார்விற்செறி நாணெறி கைச்சேறி கட்டி கட்டி, கூ0

710. அரையிற்சர ணத்துரி யாடையின் மீது பௌவத்
திரையிற்படு வெள்ளல காத்து விளிம்பு சேர்த்தி,
நிரையிற்பொலி நீளுடை தோல்சுரி கைப்பு றஞ்சூழ்
விரையிற்றுவர் வார்விசி போக்கி யமைத்து வீக்கி, கூக

711. வீரக்கழல் காலின் விளங்க வணிந்து பாதஞ்
சேரத்தொடு நீடு செருப்பு விருப்பு வாய்ப்பப்
பாரப்பெரு வில்வலங் கொண்டு பணிந்து நிண்ணன்
சாரத்திருத் தாண்மடித் தேற்றி வியந்து தாங்கி, கூஉ

712. அங்கப்பொழு திற்புவ னத்திடர் வாங்க வோங்கித்
துங்கப்பெரு மாமழை போன்று துணைன் றெழிப்ப
வெங்கட்சின நீடு விலங்கு விலங்கி நீங்கச்
செங்கைத்தலத் தாற்றட விச்சிறு நாணை றிந்தார். கூந

706. (இ - ள்) வெளிப்படை. நெறிப்புக்கொண்ட தலைமயிரைச் சுருள்கள்போய் நேரே நிமிர்ந்து பொங்கும்படி மேலே தூக்கிக்கட்டி, அதில் தளிர்களாலாகிய கண்ணி

சாத்தி, அதற்கிடையே செருங்கிய ஒளியுடைய மயிற்பீலி சேர்த்தி, வாசனையுடைய முல்லைமாலையுடன் குறிஞ்சிப்பூவையும் வெட்சிப்பூவையும் நிறைந்த வண்டின்கூட்டம் மொய்க்குமாறு சிறப்பாக அவற்றின்பின்பு சேரச் செய்து, நிஎ

707. (இ - ள்) வெளிப்படை. முன்னேற்றிமேல், மயிலிறகின் அடியில் இடையிடையே குன்றிமணிகளை உடன்வைத்து முறுக்கியமயிர்க்கயிற்றைப் பொருந்தும்படி சாத்தி, மின்போல ஒளிவிடுகின்ற சங்கினாற்செய்த விளங்குகின்ற வெள்ளிய தோடு காதிலேபொருந்தி இருபக்கமும் நின்றனவாய்ப் பெரிய முழுமதிபோலப் பொருந்த வைத்து, நிஅ

708. (இ - ள்) வெளிப்படை. கழுத்தில், வெள்ளையாகிய பலகறைகளாலாகிய ஒளியுடைய மாலையைப் பொருந்தக் கொண்டு, சங்குமணியோடு பலவகை மணிகளையும் கோத்து அவற்றினிடையே பன்றிக்கொம்புகள் துண்டப்பிறை போல்வனவாகத் தொங்கவைத்து, இவற்றை வேங்கையின் வலியதோலிற்பதித்துத் தட்டையாகிய வடிவமையச் செய்த சன்னவீரம்என்ற வெற்றிமாலை விளங்க. நிக

709. (இ - ள்) வெளிப்படை. மார்பில், யானைத்தந்தத்தாலாகிய சிறுமணிகளின் மாலை தாழ்ந்துதொங்க, மாலைகளினூல் விளங்குகின்றதோளில் வாகுவலயங்கள் பொங்கி விளங்கப், பொருந்திய பொலிந்த கங்கணமானது தன்மேல் விளங்கும் முன்கையிலே வில்லிற் பூட்டிய நாணைக் கார்முழக்கம் போல எறிவதற்குதவும் கைக்கோதையைக் கட்டி, கூ0

710. (இ - ள்) வெளிப்படை. இடையில், மேலே மயிற்பீலியமைந்த புலித்தோலாடையின்மேல் கடல் அலைகளிற் பொருந்தும் வெள்ளிய பலகறைகளைக் கோத்து விளிம்பாகக்(ஓரத்திற்)கட்டி, வரிசையாக விளங்கும் நீண்ட உடைதோலினையும் சுரிகையின்புறத்துச் சூழ்கின்ற வாசனையுடன் துவரேற்றியவாரையும் சேரக்கட்டும் விசியைப் பூட்டி அமைத்துக்கட்டி, கூக

711. (இ - ள்) வெளிப்படை. காலில், வீரக்கழல் விளங்கும்படி அணிந்து, திருப்பாதங்களிற், பொருந்தத்தொடுகின்ற நீடுசெருப்பு விருப்புவாய்ப்ப,பாரமாகிய பெரிய வில்லினை வலங்கொண்டு பணிந்து, திண்ணனார், தமது திருத்தாள்பொருந்த வைத்து வளைத்து நாணேற்றி வியந்து தாங்கி, கூஉ

712. (இ - ள்) வெளிப்படை. அங்கு, அப்பொழுது, புவனத்தின் துன்பநீங்கவும், ஓங்கி உயர்ந்த பெரிய காளமேகம்போன்று துண்ணென்ரூலிப்பவும், கொடிய கோபக்கண்ணுடைய பெருவிலங்குகள் விலகிநீங்கவும், தமது செங்கைத்தலத்தினூல், தடவில்லிற் சிறுநாணினூலி செய்தார். கூங

இவ்வேழுபாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண்டன.

நாயனாது வேட்டைக்கோலத்தை உச்சிமுதல் உள்ளங்கால்வரை தொடர்பாய் அலங்கரித்துக் காட்டுகின்றாராதலின் இடையீடின்றி ஒருதொடர்பாய்க் கொண்டு முடித்தார். கோலஞ்செய்யும் வினைநீர் (705) செய்வன அக்கோலமுற்றியபின்னன்றி வினை முற்றப்பெறாது. அதுவரை செய்கின்றவை யாவும் வினையெஞ்சியே நிற்பன. ஆதலின் இடைப்பட்ட செயல்களை யெல்லாம், சேர்த்திச் - செய்து - என்பனவாதி வினையெச்சங்களாற் கூறினர். வினைஞரும் தாமுமாகக் கோலஞ்செய்யும் வினை திண்ணனார் கோலம்பூண்டு வில் ஏத்தி நாணெறிகொண்டதோடு உடன்கூடி முற்றப் பெறுவதால் அவ்வகையே நாணெறிந்தார் என இவர்வினையோடுசேர்த்தி வினைமுற்றுத்தந்து முடித்தனர் என்க. இது பொருளமைதிக்கேற்ற சொல்லமைதியாம்.

இதுவேயன்றி இங்கு ஆசிரியர் கைக்கொண்ட யாப்பமைதியும் கண்டுகளிகூர்க. 691 முதல் 705 வரை கதை சொல்லிச் செலுத்தும் வகையால் யாப்புச் சென்றது.

இங்கு நாயனார் வேட்டைக்கோலம் பூண்டு புறப்படும் வரை 706 முதல் 716 வரை பாட்டுக்கள் சித்திரித்துப் புறப்படும் பொருள் குறிக்கும் வகையாலியன்ற ஐஞ்சீர் விருத்தத்தாற் கூறினர். அதன்மேல் 717 முதல் 727 வரை உள்ளபாட்டுக்கள் வேடர் கூட்டம் ஊக்கத்துடன் வேட்டைக்கு எழுந்துசெல்வதால் அதற்கேற்ற வலியஓசை மிக்க எழுசீர்ச்சந்தப்பாவிலும், அதன்மேல் வேட்டையாடி ஓடிக்கொல்லும் வேட்டை வினைகளை 728 முதல் 740 வரை பாட்டுக்களில் அவற்றிற்குரிய தங்கிசை முடுகிசை கலந்த நாற்சீர்ச் சந்தப்பாவிலும், யாத்த இசையும் சொல்லும் பொருளும் பொருந்தும் அமைதியும் காணத்தக்கன. அதன்மேல் "அன்பெனு மாறு கரையது புரள, நன்புல னென்றி நாதவென் றரற்றும்" சரிதப் பகுதியை இயல்பின் ஆற்றெழுக்கிற்செல்லும் அறுசீர் விருத்தத்தால் 741 முதல் 782 வரையில் உள்ள பாட்டுக்களாற் கூறினர். அதன்பின் நாற்பாதத்தில் மிக்க ஞானபாதத்தாலே நாற்றுனத் தொருவனுகிய இறைவனை அணைந்து நிலைபெறுகின்ற சரிதத் தொடர்பை முன்னையதனினும் மிக்க இயலொழுக்குடைய நாற்சீர்க்கொச்சகக்கலிப்பாவினுற் கூறிமுடித்த அழகும் அமைதியும் காண்க. நாற்சீர்க்கொச்சகக்கலிப்பா ஆசிரியர் திருவாக்கில் மிக அழகுற அமைவதொன்றும். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர், திருநாவுக்கரசு நாயனர், ஆனாயநாயனர் முதலிய பலபெரியார்களும் இறைவன்றிருவடிசேர்ந்த சரிதங்கூறும் பகுதிகளை இதுபோலவே கொச்சகக்கலிப்பாவிலே ஆசிரியர்கூறுவதும் காண்க.

706. (வி - ரை) **நெறிகொண்ட** - நெறித்தலையுடைய-நெறித்த. **நெறித்தல்** - தலை மயிர் சுருள்களையுடையதா யிருத்தல். "தொடர்பங்கி சுருண்டிருண்டு தூறிநெறித் தசைந்துசெறி, படர்தஞ்சின் கருங்குஞ்சி" (26), "அஞ்சனமஞ் சனஞ்செய்த தனைய வணி களிர்பம்பை" (27), எனவரும் சிறுத்தொண்டநாயனர்புராணத் திருவாக்குக்கள் காண்க. இதனைப் பம்பை என்பதும் வழக்கு.

**சுருள் துஞ்சி நிமிர்ந்து போங்க** - சுருள்போய் ஒழுங்காய் நீண்டு விரிய. **துஞ்சி** - நீங்கி என்ற பொருளில் வந்தது.

**முறிகொண்ட கண்ணி** - தளிர்களைச் சேர்த்துக்கட்டிய மாலை. **முறி** - தளிர். இத்தகைய மாலைசூடுதல் இங்காட்டவர்வழக்கு. "கானில்வரித் தளிர்தைத்த கண்ணி சூடி" (697). **கண்ணி** - ஆடவர் தலையிற்சூடும் மாலை.

**மொய் ஒளிப் பீலி** - பீலி (658)ல் உரைத்தவை காண்க. மயிற்பீலி குறிஞ்சி நிலத்தில் மிகுதியாய்க் கிடைக்கும் கருப்பொருளாம். இதனைத் தலையிற்செருகும் அணியாக இந்நிலமக்கள் பூண்பர். **மாவுரி** - புலித்தோல் முதலிய உடைகளின் மேலும் அணிந்துகொள்வர். **மொய்ஒளி** - எழுவர்ணங்களும்விரவி அழகும் ஒளியும் செய்கின்ற.

**வெறிகொண்ட முல்லை** - வெறி வாசனை. முல்லை மலர்கள் மிக்க மணமுள்ளவை என்பது குறித்தது. **பிணை** - மாலை. பிணைக்கப்பட்டது. **குறிஞ்சி** - குறிஞ்சிப்பூ. இது இத்திணைக்குரியது. இதனல் திணையும் நிலமும் இப்பெயர் பெற்றன என்பர். **வெட்சி**-686 பார்க்க.

**செறிகொண்ட வண்டின் குலம்** - இப்புதுமலர்களிற் றேன்உண்ண மிக்கு மொய்க்கும் வண்டுக்கூட்டங்கள். செறிவு தொகையும், குலம் வகையும் குறிக்கும். காலைமலர்ந்தபூக்களில் வண்டுகள்மொய்த்தல் நந்தனவனங்களிலும் பூ விற்பனை செய்யுமிடங்களிலும் காணலாம்.

**சீர்கொளப் பின்பு செய்து** - தலையின்முன்புறம்சேர இப் பூமாலைகளைச்சாத்தின் வண்டுகள்மொய்த்து முகத்தின்முன் பறந்து கண்ணின் பார்வையை மறைத்துப் பலவாறு இன்னல்விளைக்குமாதலின் இவற்றைச் சீர்கொள்ளும்படி பின்புறம் அணிந்தனர் என்றதாம். சீர்-இங்கு ஒழுங்கு குறித்தது. சீர்கொள்ளுதல்-ஒலித்தல் என்றலுமாம்.

707. (வி - ரை) **முன்னேற்றியின்** மீது - மேற்பாட்டிற் குஞ்சி முடித்தகோல மும் தலையின் பின்புறக்கோலமும்கூறி, இங்கு முன்புறம் நெற்றியின்மேல் அணி வகை கூறுகின்றார். **முன்னேற்றி** - நெற்றிமுன். முன்பின்னுகத் தொக்க ஆறும்வேற் றுமைத்தொகை. கடைக்கண் - "கீழ்நீர்" என்பவைபோல.

**முருந்து** - மயிலிறகின் அடி. **முருந்து.....மயிர்க் கயிறு** - மயிலிறகின் அடியும் குன்றிமணிகளும் இடையிடையேவைத்துப் புரிகொண்ட முறுக்கமைந்த மயிர்க்கயிறு. இவ்வாறு முறுக்கிய மயிர்க்கயிற்றினைத் தலையில்நெற்றிக்குமேல் திரணைபோல் அணிதல் வேடர் முதலியோரது வழக்கு. திருஞானசம்பந்தமூர்த்திகளது திருமணத்தில் திரு நெற்றியின்மேல் முத்திரைலமைந்த திரணை சாத்திரைர்கள் என்பதும் காண்க (திரு ஞான - புரா - 1216). **ஆரச் சாத்தி** - பொருந்தி விளக்கமுறும்படி நிறையச் சாத்தி. **மீன்னில் திகழ்சங்கு - இல்** - ஒப்புப் பொருளில்வந்த ஐந்தாம்வேற்றுமை யுருபு. மின்போலத் திகழ்கின்ற. தோடுபோலச் செதுக்கப்பட்டு ஒளிவிளங்குதலால் **மீன்னில்** என்றார். சங்கிளுலியன்றதோட்டினை அணிதல் முன்னுள்வழக்கு. சிவபெருமான் சங்கக் குழை தரித்துள்ளார் எனஆகமங்கள்பேசும். "சங்கக் குழையார் செவியா அழகா" என்ற நம்பிகள் தேவார முதலியன காண்க.

**புடை**-இருபுடையிலும். **மாமதி**-(இரண்டு)முழுமதிகள். வரும்பாட்டில் **துண்டப் பிறை**என்றதனுல் இங்கு **மாமதி** என்றதுமுழுமதிகுறித்தது. **வைக** - தங்க. 58

708. (வி - ரை) **வெண்கவடி** - வெள்ளிய பலகறை. **மாலை சேரக்கோண்டு** - மாலையாகச்சேரும்படி கொண்டு. **அக்கு** - சங்குமணி.

**பன்மணி** - வேறு பலவகை மணிகள். **ஏனக் கோடு** - பன்றியின்கொம்பு. பன்றி யின் வளைந்தபல் (வக்ரதந்தம்) **கோடு** எனப்படும்.

**துண்டப் பிறைபோல்வன தூங்க** - பிறையினது துண்டங்கள் போல்வனவாகித் தொங்க. "துண்டப் பிறையான் மறையான்" - (திருவாசகம் - திருவம்மானை - 9.)

**வேங்கை.....சன்னவீரம்**-வேங்கையின் வலியதோலால்கைவினைத்திறமமையச் செய்த சன்னவீரம்என்னும் வெற்றிமாலை. முத்துமாலை முதலியவற்றுனியன்ற சன்ன வீரம் அரசர் முதலியோர் அணிவது மரபு. இங்கு வேடர்கள் தங்கள் மாபுக்கேற்ப அதனைவேங்கைத்தோலால்ஆக்கி, அதிற் பலமணிகளும் பலகறை, சங்குமணி இவைகளும் பன்றிக்கோடும் பொருத்தச்செய்துஅணிந்தனர். இது இவர் வழக்கு. தட்டை என்பது **தண்டை** எனவந்தது. **தண்டை** - என்பதற்குப் புலித்தோலினை வலயமாகத்தைத்து உள்ளே சிறுகற்களையிட்டுவைத்தஅணி என்பாருமுளர். அது பொருத்தமை யறிக. 59

709. (வி - ரை) **தந்தச் சிறுமணித்தார்** என்க. யானைத் தந்தத்தை அளவுபடச் சிறுமணிகளாகஅறுத்து அவற்றைமாலையாகச் சேர்ப்பது வழக்கு. **தோள்வலயங்கள்** - வாகுவலயமென்பர். இது பரப்புடையதாய்க் கவசம்போலத் தோளை மூடிநிற்கும் ஒரு வகை அணி. இது தோண்மாலைபோல நின்றதென்பார் **தாரிற்போலி** என்றார்.

**சேர்விற்போலி கங்கணம்** - இவரது கையிற்சேர்தலுலே கங்கணம் பொலிவு பெற்றது என்க. **சேர்வு** - சேர்தல். அவ்வாறு சேராதபோது கங்கணத்திற்குத் தனி யாக மதிப்பும் விளக்கமும் இல்லை என்பார் **சேர்விற் போலி** என்றார்.

**காரிநாண் எறி** - மேக முழக்கம்போல. **காணெலிசெய்யும் கார்** - கார் முழக்கம். ஆகுபெயர், "தங்கப்பெரு மாமழை போன்றுதண்ணென் றெலிப்ப" (712).

**நாண்எறி கைச்செறிகட்டி கட்டி** - வில் நாணில் அம்புபூட்டி எய்வதற்குதவியாக உள்ள கைக்கோதையைக்கட்டி. **கைச்செறிகட்டி** - கைக்கோதை, விரலுறை, கைவிரற் சட்டை. இது அம்பு பூட்டுதலாலும், இறுகக்கட்டிய புலிநரம்பு முதலியவற்றுனியன்ற வின்னுணை வலித்தெய்வதனுலும் விரலுக்கு ஊறு உண்டாகாதபடி காவலாக விரலில் அணியும் ஒரு உறைபோன்றது. இது காழகம், விரற்றலைப் புட்டில் முதலிய பெயர்க

ளாற் பழந்தமிழ் இலக்கியங்களிற் பேசப்படும். இங்ஙாள் கவீனர் Gloves என்ப தொருவகைக் கைச்சட்டை அணிவதும், தையல்வேலை செய்வோர் வீரல் முனையில் உலோகக்குப்பாயம் அணிவதும் காண்க. ஆயின் கைக்கோதை வீரலின்அளவில் நிற்ப தாய்க் கையில்வரிந்து கட்டப்படுவது என்க. 60

710. (வி - ரை) **சரணத்து உரியாடை** - சரணம் - மயிற்பீலி. **உரியாடை** - புலி முதலியவற்றின் தோலாலாகிய ஆடை. மரவுரி என்பாருமுண்டு. "தோல் தழைத்த நீடு தானையார்" (717) எனப் பின்னர்க்கூறுவதால் இவர்கள் தோலாடைஅணிவது வழக்கென்க. இதற்குக் காலோடு கழற்றியணியும் ஆடைவகை என்பாருமுண்டு.

**படு** - உண்டாகும். **வெள்ளலகு** - வெள்ளிய பலகறை. அலகு - எண்ணல் அளவு. அதற்குக் கருவியாதலின் பலகறைக்கு ஆகுபெயர்.

**ஆர்த்து விளிம்பு சேர்த்தி** - சிறிய பலகறைகளை ஆடையின் ஓரத்தில் விளிம்பாக வரிசையாகக்கட்டி யமைத்து. **நிரையிற் போலிநீள்** - வரிசையாக விளங்கிய நீண்ட. **உடைதோல்** - உரியாடையின்மேல் கட்டும்தோலில். **சுரிகைப்புறஞ்சூழ் வரையில் துவர்வார் விசிபோக்கி** - உடைவாளின்புறத்துச்சூழ்ந்த உரையைச் சுற்றி வாசனை பொருந்திய பவளம்போன்ற செஞ்சாயமேற்றியவாரினால் விசிபோக்கிக் கட்டி. **புறம்** - புறத்தே சூழ்ந்த உறை. ஆகுபெயர். **விசி** - விசியை. **விசி** - இணைத்துக் கட்டும் கயிறு போன்ற தோல். **விசித்தல்** - கட்டுதல். **வரையில்துவர்** - தோல்வாரின் துர்நாற்றம் போக்கி அது நீடுசெல்லுதற்குரிய பதம்தருதற்குத் துவர்ப்பட்டையில் ஊறவைப்பர். அழகின்பொருட்டுஞ் செஞ்சாயமேற்றுவர். **நிரையிற் போலிநீள்** - உடை தோலிற்கு அடைமொழி. உடைதோலும் சுரிகையும் ஈகைஞற்றரப்பட்ட அரசடையாளமாதலின் அடைமொழிகளாற் சிறப்பித்தார். 702 பார்க்க. **விசிபோக்கி அமைத்து வீக்கி** என்றது விசிவாரினைப்புகுத்தித் தைத்தது போல அமைவுற இழுத்துக்கட்டி. "போர்வைத் தோல் விசிவார்" (திருநாளைப்போவார் புராணம் - 14) என்றது காண்க. 61

711. (வி - ரை) **காலில் வீரக்கழல் அணிந்து** எனவும், **தொடுநீடுசெருப்பு பாதம்சேர** எனவும் மாற்றி யுரைத்துக்கொள்க. செருப்புத்தொடுதல் என்பது வழக்கு. முன் சொல்லிய ஏனை அணி ஆடை வகைகள் அந்தந்த அங்கங்களின்மீது சேர்த்து அணியப்படுவனவாகச், செருப்பு, அவ்வாறல்லாது பாதமாகிய அங்கம் அதனுட் சென்று சேர்தலால் செருப்புப் பாதம்சேர என்னுது **பாதம் செருப்புச் சேர** என்றமைத்தனர். **நீடு செருப்பு** - இறைவனது திருமுடியிலும் திருமுகத்திற் கண்ணருகிலும் ஏறும் பெருமையும், அதுபற்றி "செருப்புற்ற சீரடி" (திருவாசகம்) முதலிய அருண்ஞானத் திருவாக்குக்களில் எறித் துதிக்கப்பெற்ற பெருமையும் நோக்கி **நீடு** என்று சிறப்பித்தார். நீடுதல் பெருமையால் நீடியிருத்தல்.

**விநப்பு வாய்ப்ப (வில்லினைப்) பணிந்து** என்று கூட்டி யுரைப்பினுமமையும்.

**பாரப்பெருவில்** - எந்துதற்கரியதாய் மிகப் பாரமுடைய வில். இது மேருமலை போன்றதென (681) முன்னர்க் கூறியது காண்க. **வில்வலங் கொண்டு பணிந்து**-அவ்வத் தொழிலாளரும் தத்தம் தொழிற்குரிய கருவிகளை வணங்கித் தொழிலிற் புகுவது இன்றும் வழக்கமாதல் காண்க. ஆயுதபூசை என்ற சிறப்பாகிய திருநாட்கொண்டாட்டமும் காண்க. முன்னரும் "விதிமுறை வணங்கி" (690) என்றார். இதுபற்றியே இங்குத் திண்ணனாரும் கன்னிவேட்டை புகுவதன் முன் தமது வில்லினைச் சுற்றி வலம்வந்து வணங்கி ஏந்தினார் என்க.

**விநப்பு வாய்ப்ப** - தாம்புகும் காரியமாகிய வேட்டையானது தாம் விரும்பிய பலன் தருவதாக என்று பிராத்தித்து. இது இப்போது விரும்பிய வேட்டை வினையோ டொழியாது முன் பிறவியில் கயிலையில் அருச்சுனனாயிருந்து தவஞ் செய்த காலையில்

விரும்பிவேண்டிய முத்தியாகிய பேறு வாய்க்கும்படி என்றதோ ருட்குறிப்பும் தருத லும், அது வாய்த்தற்கும் இவ்வில்லே தூணையாதலும் காண்க.

**சார** - வில்லினேவணங்கி அது திருத்தாளினேச்சார மடித்து என்றதாம். **தீருத் தாள் மடுத்து ஏற்றி** - வில்லினேத் தாளில்வைத்து நாண்ஏற்றி. தாளில் மடித்தல் வில்லின் இருதலேயும்பற்றிவளேத்து இறுகும்படி நாண்கட்டும் பொருட்டாம்.

**வியந்து** - தெய்வக் குதித்து. "வியத்தலறேன்" (திருவாசகம்-திருச்சதகம் - 12); "வியவேனயவேன் றெய்வ மிக்கனவே" (திருக்கோவையார் - 6).

**பாரப்போரு - மடித்தேற்றி** - என்பனவும் பாடங்கள். 62

712. (வி - ரை) **புவனத்து இடர்வாங்க** - உலகத்தின் துன்பம் நீங்க. திண்ணப் பனூர் இனிக் கண்ணப்பராவார்; ஆகவே, அவரது திருவடிபிடித்து உலகம் உய்ய. **புவனத்து** - உலகத்தில். **இடர்வாங்க** - உயிர்கள் துன்பநீங்கிஉய்ய. **வாங்குதல்** - நீங்குதல் என்றபொருளில் வந்தது. அந்காட்டின் துன்பநீங்க என்றுரைப்பாருமுண்டு.

**துங்கம்** - பெருமை. உயர்ச்சி. **பெருமாமழை** - மிகப்பெரிய மேகம். **மழை** - மழைமுழக்கம். ஆகுபெயர்.

**வெஞ்சினக்கண் நீடு விலங்து** என மாற்றுக. **நீடு விலங்கு** - பெருவிலங்குகள். நெடுந்தூரத்தில் இருக்கும் விலங்குகள் என்றலுமாம். சிறப்பும்மை தொக்கது. **விலங்கு** சாதி யொருமை. **நீங்க** - தாந்தாம் பதுங்கியிருந்த இடங்களினின்றும் நீங்க.

**சிறுநாண்எறிதல்** - முதலில் நாண்ஒலிகொள்ளுதல் வில்லின் நாணே எறிந்து அம்பு எய்வதற்கான பதம் பார்த்தல்.

**சிறு** - சிறிதே எறிந்து அமைதிபார்த்தல் குறித்தது. நாண் சிறிது எறிந்தார் என்க. நாண் சிறிதென்பதன்று. யாழ் முதலிய நரம்பு இசைக்கருவிகளே மிழற்றும் முன்னர் நாணெறிந்து சிற்றொலிகொள்ளும்வழக்கும் காண்க.

701 முதல் 712 வரை உள்ள இவ்வெழுபாட்டுக்களாலும் ஒருதொடர்பாய்த் திண்ணனுரைத் தலேமுதல் பாதம் வரை அலங்கரித்து வேட்டைக்குரிய வில்வேடத் துடன் எழும் வகையிற் முழும் தரிசித்து ஆசிரியர் நமக்குங் காட்டுகின்றார்.

**தலேயில்,** சுருண்ட குஞ்சி நிமிர்த்துபொங்கக் கட்டினூர்; அதில் தளிராலியன்ற கொண்டைமாலே சூட்டினூர்; அதில் மயிற்பீலி செருகினூர்; தளிர் மாலேயின்மேல் முல்லேமலர்மாலேயும் அதிற் குறிஞ்சிப்பூவும் வெட்சிப்பூவும் பின்புறம் சூட்டினூர்;

**முன்னேற்றியின்மேல்,** மயிலிறகின் அடிப்புறத்துடன் குன்றிமணிவைத்து முறுக்கிய மயிர்க்கயிற்றைப் பொருத்தச்சாத்தினூர்; காதுகளில் முழுமதிபோல விளங் கும் வெண்சங்கத் தோடுகளணிந்தார்;

**கழுத்தில்,** வெள்ளேப்பலகறைமாலேயும் சங்குமணிகளும், பிறைத்துண்டம்போன்ற பன்றிக்கொம்புகளும் இடையிடை தொங்கவைத்து ஒருசேர அமைத்த தட்டையாகிய வேங்கைத் தோலினுலாகிய சன்னவீரம் அணிந்தார்;

**மார்பில்,** யானேத்தந்தத்தை ஒழுங்குபெறஅரிந்து சிறுமணிகளாக்கிக் கோத்த மாலே சாத்தினூர்;

**தோள்களில்,** வாகுவலயங்களும், முன்கைகளில் கங்கணங்களும், **விரலுக்குக்** கைக்கோதையும் பூட்டினூர்;

**இடுப்பில்,** மயிற்பீலிசேர்த்த புலித்தோலாடை சாத்தி அதனேப் பலகறைகளால் ஒழுங்குபெற விளிம்புசேர்த்தார்; அதன்மேல் உடைதோல் பூண்டார்; சுரிகைப் புறஞ் சூழ அவ்வுடைதோலுடன்சேர்த்துத் துவர்வார்விசித்து வீக்கினூர்;

**காலில்,** வீரக்கழல் கட்டினூர்; **திருப்பாதங்கள்** நீடுசெருப்பைப் பொருத்தின; பெருவில்லேப்பணிந்து தாள்மடித்துத்தாங்கி நாணேற்றிச் சிறுநாணெலிகொண்ட

இவ்வாறு வேட்டைக்கோலத்தை உச்சிமுதல் கால்வரை விரிவாய்ச் சித்திரித்து "இவன் இறைவன் என்று எழுதிக் காட்"டியதென்னே? எனின், இக்கோலத்துடனே நாயனார் காளத்தியப்பரைக் காண்கின்றார்; கண்டு கண்ணப்பராய் அவ்விறைவனுடன் ஒன்றி அவர்தம் வலப்பக்கத்தே என்றும் மன்னி நிற்கின்றார்; இக்கோலமே பின்னர்த் திருஞானசம்பந்தமூர்த்திகள் முதலிய ஆசாரியன்மார்கள்யாவரும் கண்டு தரிசித்துத் துதித்தார்கள் ஆதலின் என்க. இதுபோலவே, வேய்ங்குழற் கானவிசையமுதம் பரப்பி நின்றநிலையிலே கயிலைசென்றஆனயநாயனரையும் அவர் ஆதிரைகாக்கப்புறம்போந்த போது உள்ளகோலத்தைத் தலைமுதற்கால்வரை அலங்கரித்து ஆசிரியர் கண்டு காட்டிய அமைதியும், இறைவன் சேரேவந்து தடுத்தாண்ட ஆளுடைய நம்பிகளது திருமணக்கோலத்தை விரிவாய் அலங்கரித்துக் கண்டுகாட்டிய அழகும், திருமணத்தில் நல்லூர்ப்பெருமணத்தானே அடைந்து "போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி யுடனு"கிய ஆளுடையபிள்ளையாரது திருமணக்கோலத்தையும் சிறுதற் பாதம்வரை முத்தணிகளால் அலங்கரித்துக் கண்டுகாட்டிய அருளிப்பாடும் இங்குவைத்து உண்மை காண்க.

குஞ்சி நிமிர்ந்துபொங்க - பீலி சேர்த்தி - சீர்கொளச் - செய்து - சாத்தி - வைகசேர - தூங்கிட - தயங்க - தாழ - மின்ன(ச்செய்து) - கட்டி - சேர்த்தி - போக்கி-வீக்கி-அணிந்து - சேர - வலங்கொண்டு - பணிந்து - ஏற்றி - தாங்கி - வாங்க - ஒலிப்ப - நீங்க-நாணெறிந்தார் - என இவ்வேழு பாட்டுக்களையுந் தொடர்ந்து முடித்துக்கொள்க. 63

713. பல்வேறு வாளி புதைபார்த்துடன் போத வேவி
வில்வேட ராயத் துடிமேவி யொலிக்கு முன்றிற்
சொல்வேறு வாழ்த்துத் திசைதோறுந் துதைந்து விம்ம
வல்லேறு போல்வா ரடல்வாளி தெரிந்து நின்றார். சூச

(இ - ள்) வல்லேறு போல்வார் - (சிறு நாணெறிந்த) வலிய சிங்கஏறு போல் வாராகிய திண்ணனார்; பல்வேறு...ஏவி - பலவேறு அம்புகளை அம்புக்கூட்டிற் பார்த்துத்தெரிந்துஎடுத்துக்கொண்டு தம்முடனே வரும்படிவேவுகாரருக்குக் கட்டளையிட்டு; வில்வேடர்...முன்றில் - வில்வேடர்கள்கூட்டங்களினது சிற்றுடுக்கை சேர்ந்து சத்திக்கும் முன்றிலில் வந்து; சொல்வேறு...விம்ம - அவர்கள் சொல்கின்ற பலவேறு வாழ்த்தொலிகளும் எல்லாத்திக்குக்களிலும் நெருங்கிநிறைய; அடல்...நின்றார் - வலியஅம்புகளை ஆராய்ந்துநின்றார்.

(வி - ரை) ஏவி - வேவுகாரருக்குக் கட்டளையிட்டு. பலவகைப்பட்ட வேற்றுமையான பாணங்களை அம்புக்கூட்டிலே தெரிந்தெடுத்து உடனேபோம்படி செலுத்தி வென்றிபொருந்திய அவ்வாளிகளின் றன்மையைப் பரீட்சித்துநின்றார் என்பது இராமநாதச்செட்டியார் உரைக்குறிப்பு. பல்வேறு - பல வடிவினவாகிய - பலதிறப்பட்ட. பற்பலவிலங்குகளுக்கும் அவ்வவற்றின் திறந்தெரிந்து ஏற்றவாறு எய்யும் வகையாலும் பிறவாற்றாலும் வாளிகளும் பலதிறப்பட்டனவாம் என்க. சிறுநாணெறிந்த அதனால் நாண் ஒழுங்குபடஅமைந்த திறங்கண்டவர் அந்நாணிற் பலவகை அம்புகளையும் பூட்டிச் செலுத்தியதனால் அந்நாண் அம்புபூட்டி எய்வதற்குத் தகுதி பெற்றதனைக் காண்பதும் வழக்காமாதலின் அதற்குஏற்றபடி இங்குஉரைப்பாருமுண்டு.

புதை - அம்புக்கூடு. அம்பறாத்தூணி - புட்டில். பார்த்து-தேர்ந்தெடுத்து. புதையின்கண் என ஏழனுருபு விரிக்க. உடன்போத - உடன் கொண்டுவர.

ஆயம் - கூட்டம். (முன்றில்) வந்து என ஒருசொல் வருவித்துக்கொள்க.

வாழ்த்துத் துதைந்து விம்ம - வேடர்கூட்டத்தில் ஒலிக்கும் துடியோசையின் மிக்குஒலிஇ வாழ்த்தொலிநிறைய என்பதாம்.

**சோல் வேறு வாழ்த்து** - சொல்கின்ற பலவேறுவகைப்பட்ட வாழ்த்து. அவ்வவரும் தத்தம் மனங்கொண்டபடியும் தகுதிக்கேற்றபடியும் பலவாறு வாழ்த்துவாதலின் **சோல் வேறு** என்றார். இனி, இவர் வாழ்த்தியது ஒருநிலை ; அவ்வாழ்த்தின்வேறாய்த் திண்ணனார் அடையின்றது மற்றொருநிலையாய்முடிதலின் **வேறுசோல் வாழ்த்து** எனப் பிறிதொருகுறிப்பும்பட நின்றதுங் காண்க.

**அல் ஏறு** - கரிய சிங்கவேறு என்றலுமாம். **அட்லி** - வெற்றி என்றலுமாம். ஏறு போல்வார் - எவி - முன்றில்(வர்து) - விம்ம - தெரிக்துகின்றார் எனமுடிக்க. 64

714. மானச்சிலை வேடர் மருங்கு நெருங்கு போதிற்
பானற்குல மாமல ரிற்படர் சோதி யார்முன்
றேனற்றசை தேறல் சருப்பொரி மற்று முள்ள
கானப்பலி நேர்கட வுட்பொறை யாட்டி வந்தாள். கூரு

(இ - ள்) வெளிப்படை. பெரிய வில்லேந்திய வேடர்கள் வேட்டைக்கு ஆயத்தமாய் அவர்பக்கம் நெருங்கியபோதில் பெருந்தொகுதியாகிய நீலோற்பல மலர்களின் ஒளிபோன்று வீசுகின்ற நீலவொளியுடைய திண்ணனார் முன்பு, தேனும் நல்லதசையும் கள்ளும் சருவும் பொரியும் இன்னும் இவைபோன்ற பிறவுமாகிய பொருள்களாற் காடு பலியூட்டிய தேவராட்டி வந்தனள்.

(வி - ரை) **மானம்** - பெருமை. **மானச்சிலை** - பெரிய வில். " மானமா மடப்பிடி வன்கையா லலகிட ", " மானக் கயிலை மலையாய் போற்றி " என்பனவாதி திருவாக்குக்கள் காண்க. **மானவேடர்** என்றுகூட்டிக் குலப்பெருமையுடையவேடர் என்றுரைத்தலுமாம். இவர்கள் குலப்பெருமையுடைமை கந்தபுராணத்தில் வள்ளியம்மையார் திருமணவாலாற்றில் முருகப்பிரானே வேடர்கள் வேண்டுவதாகக் கூறும்,

" அடுத்திற லெயினர் சேரி யளித்திடு நீயே யெங்கண்
மடந்தையைக் காவில் வௌவி வரம்பினை யழித்துத் தீரா
தெடுத்தனிப் பழிய தொன்று நிறுவினை; புதல்வர் கொள்ள
விடந்தனை யன்னை யூட்டின் விலக்கிடு கின்று ருண்டோ ?" (191)

என்ற திருப்பாட்டானறிக. மானவேடர் (722) என்பதுங் காண்க.

**மருங்கு நெருங்குதல்**-திண்ணனாரோடுகூடி வேட்டைக்கு ஆயத்தமாக இவர்களும் புறப்படுதற்காக என்க.

**மாக்தல்ப் பான்ல் மலரில்** - **பான்ல்** - நீலோற்பலம் - மா - தலம் - தொகுதியின் பெருமை குறித்தது. மலர்களின் பெருங்கூட்டம். "செந் தாமரைக்கா டனைய மேனி" (திருவாசகம்). **இல்** - ஒப்புப் பொருளில் வந்த ஐந்தனுருபு. **மலர்க்தல்த்தில்** என்றது அதன்ஒளிபோல என்றதாம். ஆகுபெயர்.

**பானற்குல மலரிற்படர் சோதியார்** - அளவில்லாத நீலோற்பலமலர்கள் ஒருங்கே புதிதின்மலர்ந்து ஒளிகாட்டி வருதல்போன்ற கரியதாய்வீசும் ஒளியுடைய திண்ணனார். கருமையிலும் விரிகின்றஒளியும் அழகும் உளதென்பார் நீலமலரின் ஒளியை உவமித்தார். காளமேகம் (664), மைவிரவு கறுங்குஞ்சி வாசக் கண்ணி மணிநீல மலை (701), கருங்கதிர் விரிக்குமேனி (615) என்றவை காண்க. இப்போது புறப்படும் வேட்டையின்பின்னர்ச் சோதியாகிய இறைவனே அடையின்றாராதலின் இங்குச் **சோதியார்** என்றார்.

**தேன்** முதலியவை வனதெய்வங்களுக்கு ஊட்டத் தேவராட்டி கொண்டுபோன பலிப்பண்டங்கள். இவற்றை, வேண்டுவனகுறைவின்றி (700)என்றுமுன்னர்த்தொகுத்துக்கூறிய ஆசிரியர் இங்கு விரித்துக் கூறினர். (698-ல் மென்றசை முதலியன

தேவராட்டிக்கு நாகன் வைத்த உணவுப் படித்திட்டம்) தேவர்க்கு ஊட்டும் பலிப் பொருள்களே நிவேதிக்குமுன்னர்ப் பலரும் பார்க்கலாகாதென்ற முறைபற்றி முன்னர் வேண்டுவன என்றமைத்தஆசிரியர், நிவேதித்தபின் தேவராதுஅருட்பிரசாதங்களாய் இவற்றைப் பலருங்காணலாம் என்றதுபற்றி விரித்துக்காட்டிய மரபுங் காண்க.

**காண்ப்பலி** - முன்னர்க் காடுபலி (699) என்றது காண்க.

**கடவுட் போறையாட்டி** - தேவராட்டி. **போறையாட்டி**-தேவரது படிமத்தையும் ஆவேசத்தினையும் தன்னிடத்துத் தாங்கியவள். 65

*715. நின்றெங்கு மொய்க்குஞ் சிலைவேடர்க ணீங்கப் புக்குச்
சென்றங்கு வள்ள திருநெற்றியிற் சேடை சாத்தி
"உன்றந்தை தந்தைக்கு மிந்நன்மைக ளுள்ள வல்ல
நன்றும்பெரி துன்விற னம்மள வன்றி" தென்றாள். சுசு

**(இ - ள்)** வெளிப்படை. (வந்த தேவராட்டி) எவ்விடத்துங் கூடிநின்று மொய்க்கும் வில்வேடர்கள் ஒதுங்க, வள்ளலாராகிய திண்ணனூர்ப்பக்கத்துச் சென்று அவரது திருநெற்றியிலே அட்சதைசாத்தி "உனது தந்தைதந்தைக்கும் இந்த நன்மைகள் உள்ளனவல்ல ; உன்வலிமை மிகவும்பெரிதாகும் ; இது கம்மளவில்அடங்காது." என்று ஆசிர்வதித்தாள்.

**(வி - ரை) எங்கும்மொய்க்கும்** - திண்ணனூருடன்வேட்டைக்குப்போக நாற்புறமும் நெருங்கிச்சூழும். மேற்பாட்டில் மருங்குநெருங்கு என்றதனை இங்கு **மொய்க்கும்** என்றார். **மொய்த்தல்** - நெருங்கிச்சூழ்தல்.

**சிலைவேடர் நீங்க** - கொடியவில்வேடரேயாயினும் தேவராட்டியினிடம் ஒழுகும் முறையில் வழிதந்து நீங்க.

**வள்ளல்** - தற்பயன் குறியாது வரையாது வேண்டுவனவற்றையெல்லாம் கல்கும் அன்புடையார். இங்கு, இனி இறைவனுக்குத் தமதுகண்ணைக் கொடுக்க நிற்கும் இவரினும் வள்ளலாவார் பிறரில்லை என்க.

**சேடை** - 697 பார்க்க. சேடைநெற்றியிற்சாத்துதல் வாழ்த்துதற்குரியசெயல். தலையிற்றூவுதலும் மரபு.

**உன் தந்தை.....அன்றிது** - தேவராட்டிசொல்லிய ஆசிமொழிகள் முழுதும் உண்மைக் குறிப்புப்பெற நிற்றல்காண்க. நாயனாரது தந்தை தந்தை முதலிய மூன்தையோர் எவர்க்கும் இதுபோன்ற நன்மைகள் இல. இவரதுவிறல் வேடர்மரபின் வலிமையளவில் அமைவதன்றாகி மிகப்பெரிதாய் நிற்குந்தன்மையைப் பின்னர்த் தங்கள்குறிவாராமற் கைவிட்டார் (802), அன்புபிழம் பாய்த்திரிவா ரவர்கருத்தி னளவினரோ (803) என்பவற்றுட் காண்க. இவள் வழிபடும் வனதெய்வங்கள் இவளது வாக்கில்நின்று உண்மையை வெளிப்படுத்தித் திண்ணனாரைப் போற்றிநின்ற குறிப்புங் காண்க.

**உன் தந்தை தந்தைக்கும்** என்றதனால் நாகனும் அவன்றந்தையும் கன்னிவேட்டையிற் புரும்போது இத்தேவராட்டியே காடுபலியூட்டிவந்து சேடைசாத்தியவள் என்றும், அப்போதுகண்ட குறிகளைக்காட்டிலும் சிறந்தகுறிகள் இப்போது கண்டனள் என்றும் கூறும் மகாலிங்கையரின் உரைப்பொருத்தம் ஆராயத்தக்கது.

**சினவேடரை நீக்கி**—என்பதும் பாடம். 66

716. அப்பெற்றியின் வாழ்த்து மணங்குடை யாட்டி தன்னைச்
செப்பற்கரி தாய சிறப்பெதிர் செய்து போக்கிக்
கைப்பற்றிய திண்சிலைக் கார்மழை மேக மென்ன
மெய்ப்பொற்புடை வேட்டையின் மேற்கொண் டெழுந்து போந்தார்.

(இ - ள்) வெளிப்படை. அவ்வாறு வாழ்த்துகின்ற தேவராட்டியைச் சொல்லுதற்கரிய பெருஞ்சிறப்புக்கள் எதிர்செய்து போக்கி, வலிய சிலையினைக் கையிலேந்திய கார்காலத்து மழைமேகம்போல, உண்மைப்பொலிவுகொண்ட வேட்டையினைமேற்கொண்டு எழுந்த (திண்ணனூர்) புறப்பட்டனர்.

(வி - ரை) சிறப்பு எதிர்செய்தல் - அவள் மகிழும்படி சிறந்த வரிசைபலவும் தந்து பாராட்டுதல். எதிர்செய்தல்-அவள்செய்த நன்றிக்குத் தாமதமின்றிக் கைம்மாறு செய்தல். போக்கி - தனது இருப்பிடத்துக்குப் போகும்படி செய்து.

திண்சிலை கைப்பற்றிய என மாற்றுக. கார் - கார்காலம். மழைமேகம் - எழுந்து மழைபெய்யச் சூல்கிரம்பிய மேகம். மேகமும் இந்திரவில்லாகிய சிலையினை எற்றிநிற்பதனால், வினையும் உருவும் பயனும் விரவிவந்த உவமம். முன்னரும் காளமேகம் என்றார். கார்மழை மேகம் அம்பு (நீர்) மழை பெய்வது போன்று இவர் தமது வில்லினின்றும் பொழியும் அம்புமழை அன்புமழையேயாகிப்பொழிந்து உலகுய்யச் செய்தது.

மெய்ப்போற்பு - உண்மையின் பொலிவு. இவ்வேட்டைக்கு உண்மைப்பொலிவாவது தனக்கென ஒரு பயனும் வேண்டாது வேடர்களாகிய குடிகளைக்காத்துத் தாங்கி நலமே செய்யும் (703 - 704) கருத்தின்வழியே சிந்தித்து எழுந்தது என்பதாம். இனி, சிறிதுநேரங்கழியவே தன்னைமறந்த உள்ளத்திற் றெளிகின்ற மெய்ம்மையன்பின் உருவமேயாகி (திருஞான - புரா - 1024) மெய்ம்மையின் வேறு கொள்ளாச் செவ்விய அன்பு தாங்கி (776) நிற்பதாகிய நிலையினைத் திண்ணனூர்பெறுவர். இரவு கழிவதன்முன் புலரியி னிருளிடத்துச்சென்று பகலின்ஒளி விரவிக் காட்டுதல்போல அந்தப் பேரன்புநிலையின் உண்மைப்பொலிவு இருள்போன்ற கொலைவேட்டை புகும் இப்பொழுதே கலந்து காட்டிற்று என்ற குறிப்புமாம். மெய் - உடல் எனக்கொண்டு அதற்கேற்ப உரைப்பாருமுளர்.

மேற்கொண்டு எழுந்து - அதனில் முயற்சித்துக் கிளம்பி. போந்தார் - தன் மனையின் வரிவிற்சாலை முன்றிலினின்றும் புறப்பட்டார். 67

வேறு

717. தாளில் வாழ்செ ருப்பர் தோற றைத்த நீடு தானையார்
வாளி யோடு சாப மேவு கையர் வெய்ய வன்கணர்
ஆளி யேறு போல வேகு மண்ண லார்மு னெண்ணிலார்
மீளி வேடர் கூடு மிக்கு மேலெ ழுந்த தே. கூஅ

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறு வேட்டையின்மே லெழுந்து ஆண்சிங்கம் போலப் புறப்பட்ட பெருமையுடைய திண்ணனாரின் முன்னே, கால்களில் இட்ட செருப்பினையுடையாராய், விரிந்த தோலைமேலே கட்டிய நீண்ட உரியாடையினையுடையாராய், அம்புகளுடன் வில் பொருந்திய கைகளையுடையாராய்த், தறுகண்மையுடையாராய், எண்ணில்லாத கொடிய வலிய வேடர்கள் நெருங்கிய கூட்டம் மிகுதிபெற மேலெழுந்தது.

(வி - ரை) வாழ் செருப்பர் - வாழ்க்கை நிலையில் எவ்வேளையினும் செருப்பையணிந்து திரிதலின் அவர்களது கால்களினிடமாக வாழும் செருப்பு என்றார்.

நீடுதானை - உரியாடையாகிய நீண்ட உடை. தோல் தழைத்த - அதன்மேல் தோல்வரிந்த.

சாப மேவு கை - வில்லினைப் பிடித்த கை. செருப்பு இவர்களது தாளிலும், வில் இவர் கையிலும் நீங்காது நின்றன என்பது கருத்து. சாபம் - இரட்டுற மொழிதலால் கொலைப்பழியின் நியதியாக இடப்பட்ட சாபம் எனக்கொண்டு, அது இவர்கள் எய்யும்

குறிதவிராத அம்புடனே பற்றிவந்து இவர்களே மேவுகின்றதென்ற குறிப்புப்பொருளும்பட நிற்றல் காண்க. இதனைப் பாண்டு, தசரதன் முதலியோர் சரிதங்களிற் காண்க.

செருப்பராய்த், தானையராய்க், கையராய், வன்கண்ணராய் எண்ணில்லாத வேடர் என முடிக்க.

**வெய்ய வன்கணர்** - வன்கண்மை - கொடுமை. **வெய்ய**-அதன் மிகுதி குறித்தது. தாட்சண்ணியமில்லாமற் கொடுமைசெய்கின்றவர்கள்என்பர் மகாலிங்கையர்.

**ஆளி ஏறு** - அடலேனம் புலிகரடி (693) முதலிய விலங்குகளே வேட்டையாடுதல் மேற்கொண்டெழுந்து செல்கின்றராதலின் விலங்கினத்தின் அரசாகிய சிங்க ஏறு என்றுவமித்தார். இவரது வேட்டையிற் றப்பிச்செல்லும் விலங்குகளில்லை என்பது குறிப்பு. பெருமிதத்தோற்றம், அவசியமின்றிக்கொல்லாமை, சிறுபிராணிகளை வதைக்காமை முதலியபெருங்குணங்கள்பற்றியும் சிங்கத்தை உவமித்ததுமாம்.

**மீளி** . வலிமை. நமனைப் போல்வாராகிய என்பாருமுண்டு. 68

718. வன்றொ டர்ப்பி ணித்த பாசம் வன்கை மள்ளர் கொள்ளவே
வென்றி மங்கை வேடர் வில்லின் மீது மேவு பாதமூன்
சென்று நீளு மாறு போல்வ செய்ய நாவின் வாயவாய்
ஒன்றொ டொன்று நேர்ப டாம லோடு நாய்கண் மாடெலாம். சுகூ

(இ - ள்) வன்றொடர்...கொள்ளவே - வலியசங்கிலியிற்கட்டிய கயிற்றை வீரர்கள் வலியகையிற் பிடித்துக்கொண்டிருக்கவே ; நாய்கள் - நாய்கள் ; வென்றி...வாயவாய் - வேடர்களது வில்லின்மீது பொருந்தும் (விசயலட்சுமியின்) வெற்றிமங்கையினதுபாதம் முன்போய் நீள்வதுபோல்வனவாகிய சிவந்தநாக்கள் தொங்கிய வாயினையுடையனவாகி; மாடெலாம்-பக்கங்களிலெங்கும்; ஒன்றொடொன்று...ஓடும் - ஒன்றொடொன்றுபொருந்தாமல் ஓடும்.

(வி - ரை) **வன்தொடர்ப்பிணித்த** - **தொடர்** - சங்கிலி. வேட்டை நாய்கள்மிக்க கோபமுடையவை. மக்கட்கும் விலங்குகட்கும் ஊறுசெய்வன. அவற்றை உரியகாலத்து உரியவர் கண்காணிப்பிலே கட்டவிழ்த்து விடுவதன்றி ஏனைக்காலத்துக் கட்டிவைத்தல் வழக்கு. அதுபற்றி, வேட்டையில் விலங்குகளைத்துரத்திப்பற்றவிடும்வரை இவைகளைப் பிணித்துக் கைப்பற்றிக் கொண்டுபோயினர். இவர்களது வீட்டுமுன்றிலிற் கட்டிவைப்பதைக், "கொடுஞ்செவி ஞமலி யார்த்த வன்றிரள் வினவின் கோட்டு"(652) என்றும், வேட்டைக்குக் கொண்டுபோகும் இவ்விடத்து, "வன்றொ டர்ப்பிணித்த பாசம் வன்கை மள்ளர் கொள்ளவே" என்றும், பின்னர் வேட்டையிற் கட்டு அவிழ்த்துவிட்டு விலங்குகளைப் பற்றவிட்டுப் பயன்படுத்துவதனை "மா அஞ்சு வித்தடர்க்கு நாய்க ளட்ட மாக விட்டு (725) என்றும் கூறியது காண்க.

**மள்ளர் வன்கை கொள்ள** எனமாற்றுக. **பாசம்** - கயிறு. நாயைச் சங்கிலியாற் பிணித்து அச்சங்கிலியைச் சேர்த்துப்பூட்டியகயிற்றை மள்ளர் கையிற்கொண்டனர். இவ்வாறு கையிற் பற்றிக்கொண்டு போகும்போது ஒழுங்கின்றிப் பலபுறமும் ஓடும் அவற்றின் இயல்பினை இங்கு ஒன்றொடொன்று நேர்படாமல் ஓடும் நாய்கள் என்ற தன்மைநவிற்சியணியின் அழகு காண்க. நாய்பிடித்துச் செல்வோரும் அதனைநோக்கும் விழியுடையோரும் இத் தன்மையணியின் சுவையை நன்கறிவர். எருது - குதிரை முதலிய பிராணிகளைப்போல நாய்கள் இனமாகக் கூடிவாழும் இயல்புடையன அல்ல. நாய்கள் "சுவஜாதிவைரி" என்றதொரு பழமொழியும் உண்டு. ஆதலின் அவை ஒழுங்குபடச் செல்லா என்க.

**வென்றிமங்கை** - வெற்றிக்கு அதிதெய்வமாகிய இலக்குமி. இலக்குமிகள் எண்மர். அவருள் இங்குக் குறிக்கப்பட்டவர் விசயலட்சுமி என்பர். வெற்றிமங்கையின் பாதம்

வில்லின் மீது தங்குதல் என்றது வெற்றி அவர்களது வில்லுக்கு உளதாம் என்றபடி. வில்லினைப் பூட்டிக் குறிவைத்து எய்ய, எய்த பொருள் குறிபிழையாது இவர்களுடையதேயாக ஆக்குதலின் **வென்றிமங்கை** மேவும் என்றார். வேட்டைநாய்களின் சிவந்து நீண்ட மெல்லியவான நாக்கள் வெற்றிமங்கையின் பாதங்கள் போல்வன என்றார். மெய்யும் உருவும் பற்றிய உவமம். **போல்வசெய்ய** - போல்வனவாகிய சிவந்த.

**மாவேலாம்** - வேடர்பலரும் பலநாய்களைக் கொணர்ந்தார்களாதலின் பக்கமெங்கும் என்றார். அண்ணலார்முன் வேடர்கூட்டம் செல்ல, அவ்வேடர் கைப்பற்றிய நாய்கள் பக்கங்களிற் சென்றன.

மீளுமாறு—என்பதும் பாடம். 69

719. போர்வ லேச்சி லேத்தொ ழிற்பு றத்தி லேவி னேப்பவச்
சார்வ லேத்தோ டக்க றுக்க வேகு மையர் தம்முனே
கார்வ லேப்ப டுத்த குன்று கான மாவ னேக்களீள்
வார்வ லேத்தி றஞ்சு மந்து வந்த வெற்பர் முந்தினர். ஏ0

(இ - ள்) வெளிப்படை. போர்க்குரிய வலேத்தொழிலேயும் விற்றொழிலேயும் புறத்திலே செய்ய அந்தச் (அநாதி) சார்பாகிய வலேயின்கட்டினே அறுக்கும்படி செல்கின்ற பெருமையுடைய திண்ணனூரின் முன்னே, மேகங்கள்சூழ்ந்த மலேயினும் வேட்டைக்காடுகளினும் விலங்குகளே வளேத்தற்பொருட்டு நீண்ட வார்களேயும் வலேவகைகளேயுஞ் சுமந்து கொண்டுவந்த குன்றவர்கள் (இக்கூட்டத்தின்) முற்பட்டுச் சென்றனர்.

(வி - ரை) **போர்** - போர்க்குரிய. **போர்** - இங்கு வேட்டை குறித்தது. **வலேச் சிலேத்தொழில்** - வலேகொண்டு மலேயுங் காடும் வளேத்தும், வில்லினேக் கொண்டு அம்பெய்தும் ஆடும் வேட்டைத் தொழில். **தொழில்** என்பதை வலேயோடுங் கூட்டுக.

**புறத்திலே** - புறப்பொருள் என்றபேருங்காண்க. ஊர்ப்புறத்தில் என்பாருமுண்டு.

**அச்சார்வலேத் தொடக்கு** - **அ** - அந்த. அநாதியாகிய அந்தப் பிறவிச் சார்பாகிய வலேயின் கட்டு. பண்டறிசுட்டு.

**ஐயர்** - பெரியவர். "ஐயரே யம்பலவ ரருளாலிப் பொழுதணேர்தோம்" (திருநாளே - புரா - 30), "ஐயர் நீரவ தரித்திட விப்பதி யளவின்மா தவமுன்பு, செய்த வாறு" (திருஞான - புரா - 179) என்பவை காண்க. ஐயர் என்ற சொல் பிறப்புமாத்திரையாய்நின்று இடுகுறியளவாய் வேதியர் என்றதொரு சாதிகுறிப்பதாய் வழங்கும் இந்நாள் உலகவழக்குப் பிற்காலத் தெழுந்தது போலும்.

**கார்வலேப் படுத்த குன்று கானம்** - இவர்கள் வேட்டைக்காடு காவல் செய்ய வலேயால் வளேத்தற்குமுன், அது, **கார்**-மேகம் என்ற வலேயால் வளேத்துச் சூழப்பட்டுள்ளது போன்ற தென்பதாம். **குன்றுகானம்**-குன்றும் அதைச் சார்ந்த காடும். **மா** - அவற்றில் உள்ள விலங்குகளே. இவர்களது வேட்டைச் சூழலிலிருந்து தப்பி ஓடாமலிருக்கும்பொருட்டும், அவ்வாறு ஓடுகின்றவற்றைப் பிணித்து அகப்படுத்திக்கொள்ளும் பொருட்டும் வேட்டைக்காட்டைச்சுற்றி வலேயிட்டுக் காவல்செய்தல் மரபு. 724 பார்க்க.

**நீள் வார் வலே** - நீண்ட வார்களும் வலேகளும் உம்மைத்தொகை. புலிமுதலிய பெருமிருகங்களும் தப்பிஓடாமல் அகப்படும்பொருட்டு நீண்ட வலிய வார்களாற் பிணிக்கப்பட்ட வலே. "வார்வலே மருங்கு தூங்க" (652) என இதனே முதலிற்குறித்ததும் காண்க. **வலேத்திறம்** - பற்பலவகை வலேகள். **சுமந்து** - இவ்வலேகள் நெடும்பரப்புக்காடு வளேக்கவேண்டப்படுதலின் நீண்டனவாயும் பெரியனவாயும் உள்ளனவாதலின் தாங்கற்கரிய பெருஞ்சுமையாம். 70

720. நண்ணி மாம றைக்கு லங்க ணுட வென்று நீடுமத்
தண்ணி லாவ டம்பு கொன்றை தங்கு வேணி யார்தமைக்
கண்ணி னீடு பார்வை யொன்று கொண்டு காணு மன்பர்முன்
எண்ணில் பார்வை கொண்டு வேட ரெம்ம ருங்கு மேகினார். எக

(இ - ள்) வெளிப்படை. பெரிய வேதங்கள் கூடித் தேடும்படி, நீடுகின்ற அந்தக் குளிர்ந்த நிலவும் அடம்பும் கொன்றையும் தங்குஞ் சடையுடையவராகிய இறைவரைத் தமது கண்ணின் நீடியபார்வை ஒன்றுகொண்டு காணும் அன்பராகிய திண்ணனார் முன்னே எண்ணில்லாத பார்வைகளைக்கொண்டு வேடர்கள் எல்லாப்பக்கங்களிலுஞ் சென்றனர்.

(வி - ரை) மாமறைக் குலங்கள் நண்ணி நாட என்க. மா - பெரிய மறைக் குலங்கள் - வேதத்தின் பல சாகைத்தொகுதிகள். நண்ணி நாட - தேடும் அத்துறையிலே பொருந்தி நாட.

என்றும் நீடும் - எக்காலத்தும் அங்காட்டத்துக்கு அகப்படாமல் நீளுகின்ற. நாட நீளுதல்-சொல்லிமுடிய இயலாமல் நீளச்சென்றுகொண்டேயிருத்தல். "பாதாள மேழினுங்கீழ் சோதிகழிவு பாதமலர், போதார் புனைமுடியு மெல்லாப் பொருண் முடிபே" என்ற திருவாசகங் காண்க.

அ வேணியர் - அகரம் உலகறிசுட்டு. பெரியோரால் அறியப்பட்ட அந்த.

கண்ணினீ...அன்பர் - ஒன்று பார்வை கொண்டு - என்க. அவரைக் காண்ப தன்றிவேறொன்றையும் காணுத. இவ்வாறு கண்டு கொண்டிருந்தபொருள் 777ம் பாட்டில் " ஆர்வமுன் பெருக ஆரா அன்பினிற் கண்டு கொண்டே, கோபெற கோக்கி நின்றார் " என விரித்துரைக்கப்பட்டது காண்க. நீடுபார்வை - முற்பிறப்பிற் றவஞ்செய்து பார்த்த பார்வை இப்பிறப்பிலும் வந்து நீடியது ; இங்குப் பார்த்த பின்னர் விலகாது நித்தமாய் நீடியுள்ளது. ஒன்று - ஒப்பற்ற - தனி - என்ற குறிப்புமாம்.

பார்வை ஒன்று - வலக்கண்ணைப் போழ்ந்து இறைவன் கண்ணிலே அப்பிவிட்டாராதலின் மற்றை இடக்கண் ஒன்றின் நீடிய பார்வை கொண்டு என்பதுமாம். பார்வை - ஒன்று - எண்ணில் பார்வை - முரண்அணி. எண்ணில் பார்வை - அளவில்லாத பல வகைப்பட்ட பார்வைமிருகங்கள். " பன்றியும் புலியு மெண்குங் கடமையு மானின் பார்வை" (652) என இவற்றை முகப்பிலே, வேட்டைக்குரிய "கொடுஞ்செவி ஞமலி", "வார்வலே" முதலியவற்றுடன் சேரவைத்துக் காட்டியது நினைவு கூர்க.

அரும்பு கொன்றை—என்பதும் பாடம். 71

721. கோடு முன்பொ லிக்க வுங்கு றுங்க ணுகு ளிக்குலம்
மாடு சென்றி சைப்ப வும்ம ருங்கு பம்பை கொட்டவுஞ்
சேடு கொண்ட கைவி ளிச்சி றந்த வோசை செல்லவுங்
காடு கொண்டெ ழுந்த வேடு கைவ ளைந்து சென்றதே. எஉ

(இ - ள்) வெளிப்படை. கொம்புகள் முன்னே ஒலிசெய்யவும், குறுகிய முக முடைய சிறுபறைகள் பக்கங்களிற்சென்று சத்திக்கவும், பக்கத்தில் பம்பைகொட்டவும், தொகையாகக்கூடிய கைத்தட்டுதலினுல் உளதாகிய சிறப்புடையஓசை செல்லவும் பெருந்திரள் கொண்டெழுந்த வேட்டுவக்கூட்டம் அதனைப் பலபக்கமும் வளைந்து சென்றது.

(வி - ரை) வேட்டையினை மேற்கொண்டுவந்த கூட்டம் வேட்டைக் காட்டினை அணுகி அதனுட்புகும் செலவின் சிறப்பினை இப்பாட்டாற்கூறிய ஆசிரியர், அதனை உவமையின்வைத்து வரும்பாட்டால் விரிக்கின்றார்.

கோடுமுன்புஒலிக்க - இயங்களின்வகைகளிற் கொம்புகள் முன் ஒலித்தல்செய்ய. குறுங்கண்.....இசைப்ப - குறுங்கண் - குறுகிய மேற்பரப்பு. குலம் - இங்குத் தொகுதியுணர்த்திற்று. மாடு சென்று இசைப்ப - இவ்வகைப் பறை ஏந்தியோர் பக்கங்களிற் சென்று அவற்றை முழக்குவர். இசைப்பவரது செல்லுதலேப் பறையின்மேல் ஏற்றிக் கூறினர். பம்பை - இருமுகமுடைய வாத்திய வகை. இவை மருங்கிற் றூரஞ் செல்லாது பக்கத்து இசைத்தன. ஒலிக்க, இசைப்ப, கொட்ட எனச் செயப்பாட்டு வினைகள் செய்வினைகளாகக் கூறப்பட்டன.

சேடு - கூட்டம் - திரட்சி. இங்கு அனேகர் சேர்ந்து கைவிளியோசைசெய்தல் குறித்தது. வேட்டைக்கலேயிற் சிறக்கப்பயிற்சிபெற்றவர்களாதலின் அனேகர்கூடி ஒழுங்குபெற ஒரேகாலத்தில் குறித்தஓசைதரும்படி கைதட்டி ஓசைசெய்யக் கற்றிருந்தனர். இசை யரங்குகளிற் கையினுற் ருளவொற்றறுப்போர் பலரும் ஒன்றுபோல ஓசைசெய்தல் காணத்தக்கது. இங்கு ஏனை இயங்களின் ஓசைகளேவிடச் சிறந்ததென்பார் இறுதியில் வைத்ததோடு கைவிளிச் சிறந்தவோசை என்றுங்கூறினர். விளி - முதனிலைத் தொழிற்பெயர். கைவிளியாகியஓசை. கைவிளி - கை தட்டுதல். ஈவீனரிற் சேனைவீரர்கள் படையமைப்பிற் செல்லும்போது கால்அடிவைக்கும் ஓசை, ஏந்திய படையோசை முதலியன ஒழுங்குபெறக் காட்டிச் செல்லும் முறை காண்க (Military march). இது போன்றதொரு பழக்கம் இவ் வேடர்பால் இருந்ததென்பது. சேடு - பெருமை என்பாருமுண்டு.

காடு - பெருந்திரட்சி. "காய்த்த செங்கெலின் காடு", "செந்தாமரைக் காடு" என்பனகாண்க. கொண்டெழுந்த-அணுகிய. வேடு-வேடர்கூட்டம். ஆகுபெயர். "வேடு கொடுத்தது பாரெனு மிப்புகழ்" என்ற கம்பர் பாட்டும் காண்க.

கைவளைந்து - எல்லாப் பக்கங்களிலும் - சுற்றிலும் - மூற்றுகையிட்டாற் போல் வளைந்து சூழ்ந்து. கொம்பு, ஆகுளி, பம்பை, கைவிளி என்றிவற்றின் ஓசைகளுடன் சூழ்ந்து சென்றனர் என்க. பெரிய ஓசைகளுடன் சூழ்தலால் முழை புதர்முதலிய மறைவிடங்களிற் பதுங்கியிருக்கும் விலங்குகள் பயந்துவெளிப்பட்டு ஓடும்போது அவற்றை வேட்டையாடுவர்; ஓடுவதனல் அடிச்சுவடுகண்டு அதற்குத் தக்கவாறு செய்வர். இது வேட்டையில் முற்செய்தொழில்களில் ஒன்று. இதனை விலங்கு எழுப்புதல் என்பர். 726 பாட்டுப் பார்க்க.

வேடர் கைவளைந்து சென்றனர்—என்பதும் பாடம். 72

722. நெருங்கு பைந்த ருக்கு லங்க ணீடு காடு கூடநேர்
வருங்க ருஞ்சி லத்த டக்கை மான வேடர் சேனைதான்
பொருந்த டந்தி ரைக்க டற்ப ரப்பி டைப்பு கும்பெருங்
கருந்த ரங்க நீள்பு னற்க ளிந்தி கன்னி யொத்ததே. எஙூ

(இ - ள்) வெளிப்படை. நெருங்கிய பசிய மரக்கூட்டங்கள்நீடிய காட்டினை அடைவதற்கு நேர்வருகின்ற கரியவில்லேந்திய பெரிய கைகளையுடைய வலியவேடர் சேனையானது பொருகின்ற பெரியஅலைகளையுடைய கடலின்பரப்பினிடையே புகுகின்ற பெரிய கரிய அலைகளையுடைய நீளும் புனல்வாய்ந்த காளிந்திநதி போன்றது.

(வி - ரை) நெருங்குபைந் தருக்குலங்கள் - குறிஞ்சியிற்பட்ட மலைச்சாரற் காடுகளாதலின் மரங்கள் நெருங்கியும் நீண்டும் வளர்ந்திருந்தன. குலங்கள் - பலவகை குறித்தது. கூட - கூடும்படி. நேர்வரும்-முன்னார்க் கைவளைந்து சென்றது என்றூர்; காட்டை வளைந்து சுற்றிச் செல்லினும் அதனைக்கூடுவதனையே நோக்குறித்து வருகின்ற என்க.

கருமை - வேடர்களுடையநிறம். சேனை - வேட்டை என்பது படையேந்தி விலங்குகளுடன் போர் புரிந்து கொல்லுதலே யாதலின் சேனை என்றூர். போர்வேடர் என்பதும் காண்க. பொருந் தடந்திரை என்ற குறிப்புமது.

**பொருந் தடந்திரை...ஒத்ததே** - பெரிய கைகளில் வில் ஏந்திப் பல முகத்தாலும் காட்டுக்குள் புகுந்து மறையும் வேடர் கூட்டத்துக்குப் பலமுகத்தாலும் வளைந்து சென்று சேரே கடலினகத்துப்புக்குமறையும் கரியநீரினையுடைய காளிந்திநதி உவமிக்கப்பட்டது. மெய்யும் வினையும் உருவும் பற்றிய உவமம். கரிய நீர் வேடர்கிறத்துக்கும், தரங்கம் அவர்கள் ஏந்திய வில்வரிசைக்கும், பெருமை அவர்களது வடிவிற்கும், நதி கடல் புகுதல் அவர்கள் காடுபுகுதற்கும் உவமை.

**களிந்தி கன்னி** - காளிந்தியாகிய நதி. யமுனை என்பர். நதிகளைக் கன்னிகளாகக் கூறுதல் மரபு. இந்நதியின் நீர் கருநிறங் காட்டுமென்றும், கங்கை நீர் அவ்வாறன்றி வெளியதாய்ப் பளிங்குபோலத் தெளிர்துள்ளதென்றும் கூறுவர். யமுனையும் கங்கையும் கூடி முகத்தில் இரண்டுங் கலந்த பின்னரும் நெடுந்தூரம்வரை இவ்வாறே காணப்படுமென்றும் கூறுப. இதனை இறைவனது திருநீறு மேற்கொண்ட வலப்பாகமும் அதனுடன் கலந்த உமையம்மையாரின் பசிய இடப்பாகமும் கூடியதற் குவமையாகக் காட்டினர் சேரமான்பெருமாணயனார். "ஆடிய நீறது கங்கையுந் தெண்ணீர் யமுனையுமே, கூடிய கோப்பொத்த தாலுமை பாகமெங் கொற்றவற்கே" (பொன்வண்ணத்தந்தாதி - 90). காளிந்தி என்றது **களிந்தி** என நின்றது. குறுக்கல்விகாரம். 73

723. தென்றி சைப்போ ருப்பு டன்செ றிந்த கானின் மானினம்
பன்றி வெம்ம ரைக்க ணங்க ளாதி யான பல்குலந்
துன்றி நின்ற வென்ற டிச்சு வட்டி னுற்றர் சொல்லவே
வன்ற டக்கை வார்கொ டெம்ம ருங்கும் வேட ரோடினர். எச

(இ - ள்) வெளிப்படை. தென்றிசையின் கண்ணுள்ள மலையோடுகூடிய காட்டில் மானினங்களும், பன்றிகளும், வெவ்விய மரையினங்களும் முதலாயின பலவகை விலங்குக்கூட்டங்கள் நெருங்கிக்கூடிநின்றன என்று அவற்றின் அடிச்சுவட்டினால் அறிந்துவந்து ஒற்றர்கள் அறிவிக்கவே, வார்களைத் தமது வலிய பெரிய கைகளிற் கொண்டு எப்பக்கத்திலும் வேடர்கள் ஓடினர்கள்.

(வி - ரை) **பொருப்புடன் செறிந்தகான்** என்றது மலையுடன்கூடி மலையும் காடுமாய்உள்ள பிரதேசம். காளத்திமலைக்கு வடக்கேயுள்ளன பொத்தப்பிநாடும் உடுப்பூரும். அங்குநின்றும் வேட்டைக்குப்போந்த நாயனார் வேட்டைக்காட்டினின்று பலகாதங்கள்வந்து திருக்காளத்திமலையைக் கண்டார் என்று சரிதங்கூறுவதால் இவ்வேட்டைக் காட்டைப் பொத்தப்பியின் **தென்றிசைச் செறிந்த** காடு என்றார்.

**ஓற்றர்** - காடாய்பவர் - வேவுகாரர். **அடிச்சுவடின்** - அடிச்சுவடு கண்டு அதனால் அறிந்து. **செல்லவே** என்பது பாடமாயின் அவர் வேவுபார்த்துப்போக அதுகண்டு என்க. **கை** - கையில். **ஓடினர்** - தின்றிநின்றவை தப்பிஓடாவண்ணம் இவர்கள் விரைந்து ஓடினர்கள் என்பதாம். வேட்டையும் போர்முகமான செயலாதலின் போரிற்போல இதனிலும் ஒற்றர்கள்செய்வினை உண்டு என்க.

**வார்கொடு** - வார்கொண்டும், அதனுடன் பொருந்தும் வலைகொண்டும் செய்வன வற்றை வரும்பாட்டிற் கூறுவார்.

**எம்மருங்கும்** - நான்குபக்கங்களிலும் விலங்குகள் தின்றியசூழல் முற்றும்வளைந்து காவல் செய்யவேண்டி யிருந்தமையாலும், அச்சூழல் யோசனைப்பரப்புடையதாயிருந்தமையாலும் விரைவுபற்றி எம்மருங்கும் ஓடினர். உம்மை முற்றும்மை.

**மரைகே குலங்கள்**—என்பதும் பாடம். 74

724. ஓடியெ றிந்து வாரொ மூக்கி யோச னைப்ப ரப்பெலாம்
தெடிய திண்வ லத்தொ டக்கு நீளி டைப்பி ணித்துநேர்

*கடிகொ ளப்ப ரந்த காடு காவல் செய்த மைத்தபின்*
*செடித லேச்சி லேக்கை வேடர் திண்ண னர்மு னண்ணினார்.* எடு

(இ - ள்) வெளிப்படை. ஒடி எறிந்தும், வார் ஒழுக்கியும், யோசனை அளவுள்ள காட்டின்பரப்புமுற்றும் மீண்ட திண்ணியவலையின் பிணிப்புக்களை மீண்டவெளிகளிற் கட்டிக் காண்பார்அஞ்சும்படி பரந்தகாட்டினை நேராகக்காவல்செய்து முடித்தபின், சிறுதூறுபோன்ற தலையையுடைய விற்பிடித்த கையினராகிய வேடர்கள் திண்ணனார் முன்பு வந்துசேர்ந்தனர்.

(வி - ரை) ஒடி எறிந்து - காட்டின் மரக்கிளைகளை வார்போக்க ஒழுங்கு காணும்படி வெட்டிப் போக்கி. மீன்சார - கம்பிகள் - தந்திக்கம்பிகள் முதலியவையிடுவோர் இடையிற் குறுக்கிடும் மரங்களையும் கிளைகளையும் கம்பிகள் நேர்செல்லும் வழி காணும் பொருட்டு வெட்டி வீழ்த்தும் வழக்குங் காண்க.

ஒடி - ஒடித்தும் வெட்டியும் வீழ்த்தும் கிளைகள். இவற்றை வார்போக்கிய ஒழுங் கினைப் பற்றிக் கீழே இட்டுவைப்பதும் காவல்செய் முறையாம். ஒடிகளை அதற்கும் பயன்படுத்துவர். ஒடித்தாலுளதாவது ஒடி எனப்பட்டது. முதனிலைத் தொழிற்பெயர். அரி - என்றது காண்க. 73-பார்க்க. ஒடியவெறிந்தென்பது ஒடியெறிந்தென விகார மாயிற்றென்பாருமுளர்.

வார்ஒழுக்கி - ஒடிஎறிதலால் வார்களை நேர் ஒழுங்காகப் போக்குதற்கு வழியாயின மையின் ஒழுக்கி என்ற சொல்லாற் கூறினர். இடையிடையே மீண்ட கோல்களை நட்டு அவற்றிலும், அவ்வொழுங்கிலே வேறு மரங்கள் இருப்பின் அவற்றிலும், வார்களைப் போக்கி இறுகக் கட்டுவர். ஒடிகள் இவ்வாறு வார்பிணிக்கும் கோலாக நடுதற்கும் பயன் படும்.

யோசனைப் பரப்பெல்லாம் - யோசனை என்னும் அளவு முழுதும். யோசனை என் பது "அங்குல மறுநான் கெய்தி னதுகரங் காமோர் நான்கு, தங்குத றனுவென் றுகுந் தனுவிரண் டதுவோர் தண்ட, மிங்குறு தண்ட மானவிராயிரங் குரோசத் தெல்லை, பங்கமில் குரோச நான்கோ ரியோசனைப் பால தாமே" (கந்தபுராணம்-அண்டகோசப்படலம்-6) என்ற திருப்பாட்டா னறிக. யோசனைப் பரப்பென்பது அவ்வளவின் சதுரம் குறிப்பது. சதுரமைல் என்று ஈவினர் வழங்குவது காண்க. யோசனை அகல நீளங்கொண்ட பரப்பினையுடைய காடு முற்றும். இதுபற்றி 752-ன் கீழுரைத்தவையும் பார்க்க.

நெடியதிண்வலைத்தொடக்கு - யோசனைப் பரப்பெலாஞ் சுற்றவேண்டுதலின் நெடிய - நீளமுடைய என்றும், புலிமுதலிய பெருவிலங்குகளும் கடந்துசெல்லாது காக்க வேண்டுதலின் திண் என்றுங் கூறினர். வலைத்தொடக்கு - வலைகளின் பிணிப்புக் கள்-கட்டுக்கள். வலைக் கயிறுகளை என்றும், கயிற்று வலைகளை என்றுங் கூறுவாருமுண்டு.

நீளிடைப்பிணித்து - வலைகள் நீண்டுசெல்லினும் யோசனையெலாம் செல்லப் பல வலைகளைப் பொருத்தவேண்டியிருத்தலின் அங்நீண்ட இடைகளைத் தக்கவாறு கட்டி.

காடுநேர்காவல்செய்து என மாற்றுக. கடி - அச்சம். கடிகொளப் பரந்த - உட்புகுந்தார் யாரும் வழிமயங்கியும், விலங்குஅஞ்சியும், பிறவாறும் பயமுறும்படி, பரப் பும் செறிவுமுடைய.

காவல் செய்தமைத்தல் - இது வேட்டைதொடங்குமுன் செயத்தகும் இன்றி யமையாத தொழில். வேட்டைக்காட்டினின்று விலங்குகள் தப்பிஓடாமற் காவல் செய்தல்.

செடிதலை - எண்ணெயிட்டு ஒழுங்குபடுத்தப்படாது புதர்போன்ற செறிமயிரினை யுடைய தலை. சந்தநோக்கிச் செடித்தலை என்பது செடிதலை என நின்றது.

காட்டை அணுகியவுடன் காடுவளைந்துசெல்லுதல், காட்டினுட் பலபுறமும் புகுதல், ஒற்றறிதல், வார்கொண்டோடியும் ஒடியெறிந்தும் வாரொழுக்கியும் வலை பிணித்தும் சேர்காவல் செய்தல் என்னும் இவை முன்செல்லும் ஏவலாட்களாகிய வேடர், வேட்டைவினை தொடங்குமுன் செய்வினைகளாம். இவற்றைச் செய்யுமுறையே இதுவரை (721—724) இங்ஙான்கு திருப்பாட்டானுங் கூறினர்.

இனி, அவ்வாறு காவல்செய்த காட்டினுட் புகுதல், நாய்களை ஏவித் துடி பம்பை கொட்டிக் கைவினி வாயொலிகள் செய்து மாஎழுப்புதல், அவற்றுல் மாக்கள் எழுந்து பாய்தல் ஆகிய வேட்டை தொடங்குமுன்னர் நிகழ் செயல்களை அம்முறையே மேல் வரும் (725—727) மூன்று திருப்பாட்டுக்களானும், அதன்பின் வேட்டைவினைவகை களையும், அவற்றின் விளைவாக மாக்கள் படும் வகைகளையும் அம்முறையே அவற்றின் மேல்வரும் (728—735) எட்டுத் திருப்பாட்டுக்களானும் கூறுதல் காண்க.

**வேடர்** - முன் ஓடிச்சென்று காவற்றொழில் புரியும் ஏவலாளர்களாகிய வேடர்.

**முன் நண்ணினர்** - காட்டினுள்ளும் சுற்றியும் போய் வினைசெய்த அவ்வேடர் தம் தலைவராகிய திண்ணனாரின்முன்பு காவல மைப்புத்தொழில் முற்றியதை அறிவிக்கு மாறு அணைந்தனர். 75

*725. வெஞ்சி லைக்கை வீர னரும் வேட ரோடு கூடிமுன்
மஞ்ச லைக்கு மாம லைச்ச ரிப்பு றத்து வந்தமா
வஞ்சு வித்த டர்க்கு நாய்க ளட்ட மாக விட்டுநீள்
செஞ்ச ரத்தி னோடு சூழல் செய்த கானு ளெய்தினர். எசு

(இ - ள்) வெளிப்படை. தாம்விரும்பும் சிலையேந்திய கையினையுடைய வீரனு ராகிய திண்ணனாரும் வேனி வில்வேடர்களோடு கூடி, முன், மேகந்தவழும் பெரிய மலைச்சாரலிலே புறத்துவந்த விலங்குகளை அஞ்சி வெளிவந்து ஓடுமாறு செய்து பற்று கின்ற நாய்களைப் பல புறத்தினும் விட்டு, நீண்ட செம்மையாகிய அம்புகளுடனே, காவல் செய்யப்பட்ட காட்டினுள்ளே புகுந்தனர்.

(வி - ரை) **வெஞ்சிலை** - பாரப்பெருவில் (711), திருக்கையிற் சிலையும் தாங்கி (776) என, விரும்பி ஏந்தும் பெருமையுடைய வில்லாதலின் **வெஞ்சிலை** என்றார். **வெம்மை** - விருப்பம். வெவ்விய - கொடிய என்றுரைப்பாருமுண்டு.

**முன் நாய்கள் விட்டு** என்று கூட்டுக. **முன்** - தமக்கு முன்பு விட்டு என்றும், முதலில் விட்டு என்றும் உரைக்க நின்றது.

**சரி** - சரிவு - சாரல். **புறத்து வந்தமா** - முழை, புதர் முதலியவற்றிலிருந்து வெளிவந்து துன்றிய விலங்குகளை. **அஞ்சுவித்து அடர்க்கும்**-பலபுறமும் ஓடியும்குரைத் தும் அச்சுறுத்தித் தாக்கிப் பற்றுகின்ற.

நாய் - 718 பார்க்க. **அட்டமாக விட்டு** - பிணித்த பாசம் அவிழ்த்துப் பலபுறமும் குறுக்காகவும் அருகாகவும் ஓடவிட்டு. **அட்டம்** - வேட்டைத் தொழிலாளருள் வழங் கும் குழூஉக்குறி. எட்டுத் திக்கினும் என்றுரைப்பாருமுண்டு.

**நீள் செஞ்சரம்-நீள்** - குறிவைத்த அளவிற்குச் சென்று நீளும். **செம்மை**-தனது வினைசெய்தற் றன்மையிற் பிழையாமை.

**சூழல் செய்தகான்** - "காடுகாவல் செய்தமைத்த" என மேற்பாட்டிற் கூறியபடி வலையிட்டுச் சூழப்பட்ட அந்தக் காடு. 76

726. வெய்ய மாவெ ழுப்ப வேஷி வெற்ப ராய மோடிநே
செய்யும் வாளி முன்றெ ரிந்து கொண்டு செல்ல வெங்கணும்
மொய்கு ரற்று டிக்கு லங்கள் பம்பை முன்சி லத்தெழக்
கைவி ளித்த திர்த்து மாவெ ழுப்பி னார்கள் காணலாம். எஎ

(இ - ள்) வெளிப்படை. (மேற்கூறியபடி விட்ட) கொடியவிலங்குகளை எழுப்பும் படிஎவி நாய்களை, வேடர்கூட்டம் ஓடி, நேரேவிடுத்தற்குரிய அம்புகளை முன்னே ஆராய்ந்து எடுத்துக்கொண்டுபோக, எவ்விடங்களினும் மொய்த்த குரலுடைய உடுக்கைகளும் பம்பைகளும் முன்னே பேரோசைசெய்தெழ, அதனோடு கைதட்டியும் வாயினால் உரப்பிக்கூவியும் காடெங்கும் பதுங்கியிருந்த விலங்குகளை அவற்றின் மறைவாகிய இருப்பிடங்களினின்றும் எழுப்பினார்கள்.

(வி - ரை) **எழுப்ப ஏவி** - முன்னே அட்டமாகவிட்டனர். பின்னர் அவற்றைப் பதுங்கிய விலங்குகளின்மேல் ஏவினார்கள். ஏவியவற்றின் மேற்சென்று தூரத்திப்பற்றுதல் காய்களின் இயல்பு. ஒற்றர்களை ஏவி என்றுரைப்பாருமுண்டு.

**நேர் எய்யும் வாளி முன் தெரிந்துகொண்டு** - கொடிய விலங்குகளை எழுப்புகின்றவர்கள், எழும்பும் அவை தங்கண்மேற் சினந்துபாயுமாதலின் அப்போது அவற்றை நேரே எய்துகொல்வதற்கு ஏற்றஅம்புகளை முன்னரே சித்தஞ்செய்துகொள்ளுதல் வேண்டுமாதலின், வாளி முன் தெரிந்து என்றார். **எய்யும்** - எய்யத்தகுந்த. **கொண்டு** - சித்தமாய் எடுத்துக்கொண்டு.

**மொய்குரல் துடி - துடி** - இடைசுருங்கிய இருமுகக் கருவி. ஒருமுறை யிசைத்தலிற் பலவோசை முழக்குமாதலின் **மொய்குரல்** என்றார்.

**பம்பை** - பெருமுகமாகிய இருமுகமும் பேருடலும் படைத்தது. துடிக்குலங்களும் பம்பைகளும். உம்மைதொக்கது. இவ்விருவகையும் சேர்ந்தபோது பேரோசை செய்தலின் **சிலைத்தெழ** என்றார். **எழுதல்** - ஓசைமிகுதல்.

**கைவிளித்தும் அதிர்த்தும்** என உம்மை விரித்துரைக்க.

**அதிர்த்தல்** - வாயினால் உரப்புதல். கைவிளியினால் அதிர்த்து எனச் சேர்த்துரைப்பினுமாம். வேட்டைக் காட்டில் இம்முழக்குக்களோடு வாயினாலும் பலவகைப்பட்ட ஓசைபடக் கூவுதல் வழக்கு. மிருகங்களின் ஓசைபோலக் கூவுதலுமாம்.

**கானெலாம் மா எழுப்பினார்கள்** எனக் கூட்டுக. மறைவிடங்களினின்றும் வெளிவராவிடின் விலங்குகளை வேட்டையாடுதல் இயலாமையின் அவற்றை அங்கினின்றும் வெளிவரச் செய்தல் வேட்டையின் முற்செய்வினையாம். 77

727. ஏன மோடு மானி னங்க ளெண்கு திண்க லுக்குலம்
கான மேதி யானை வெம்பு லிக்க ணங்கள் கான்மரை
யான மாவ னேக மாவெ ருண்டெ ழுந்து பாயமுன்
சேனை வேடர் மேல டர்ந்து சீறி யம்பி னூறினர். எஅ

(இ - ள்) வெளிப்படை. காட்டுப்பன்றிகளோடு, மான் வகைகள், கரடிகள், வலிய கலைமான் கூட்டங்கள், காட்டெருமைகள், யானைகள், வெவ்விய புலிவகைகள், காட்டு மரைகள் ஆகிய விலங்குகள் பலவாக வெருண்டெழுந்து சீறி முன்வந்து பாய்தலும் கூட்டமாகிய வேடர்கள் அவற்றின்மேல் அடர்ந்து சீறி அம்புகளினால் எய்தழித்தனர்.

(வி - ரை) **ஏனமோடு** என ஏனத்தைப் பிரித்து முதலில்வைத்த சிறப்புப்பற்றி 693-ல் உரைத்தவை பார்க்க. ஏனவிலங்குகள் எல்லாம் ஒரோனம் வெளிப்படுதற்குத் துணையாயினமட்டில் நின்றொழிந்தனவன்றி இச்சரிதநிகழ்ச்சிக்கு அவற்றாலானதொன்றில்லையாதலின் அவை அனேத்தையும் ஒருசேரத்தொகுத்துப் பின்வைத்து **ஆனமா அனேகமா** என்று எளிமைபெறக் கூறினார்.

**மானினங்கள்** - கலைமான். **மான்** - பெண் மான் என்றும், **கலை** - ஆண்மான் என்றுங் கூறுவாருமுண்டு. 693 பார்க்க. இவற்றுள் மானினம் 728 - 732லும், கலை 730லும், மேதி 733லும், புலி, பன்றி 729லும், யானை, அரி 731லும் கூறியது காண்க. **எண்கு** - கரடி. **திண் கலைக்குலம்** - வலிய பெரிய கீண்ட கொம்புடைய கலைமான். **குலம்** - கூட்டம். இவை கூட்டமாகச் சேர்ந்து வாழுமியல்புடையன.

**கான்மேதி** - காட்டெருமை. **வெம்புலி** - விலங்குகளில் மிகக்கொடியது புலியாம். **புலிக்கணங்கள்** - புலி வகைகள். சிங்கம், பெரும்புலி (வேங்கை), சிறுபுலி முதலிய இவைகள் கூட்டமாகச் சேர்ந்துவாழுமியல்புடையனவல்ல. ஆதலின் இங்குக் கணம் கூட்டம் என்றல் பொருந்தாது. பல புலிகள் பல இடங்களினின்று பாய்ந்தன என்றலுமாம். **கான்மரை** - காட்டுக்குதிரை. இங்குக் கூறிய விலங்குவகைகளே வேடர்க்குத் தீங்குவிளைப்பன. இவற்றை "மிக நெருங்கி மீதூர்" விலங்குகள் என முன்னர் (693)க் கூறினர். ஆனமா அனேகமாக. ஈறுகெட்டது.

**வேநண்டு எழுந்து பாய** - மேற்கூறிய வகைகளால் எழுப்பப்பட்ட இவை பயந்தன; பின்னர்த் தமதிருப்பிடங்களினின்றும் எழுந்தன; பின்னர்த் தம்மை அடர வந்தார்மேற் பாய்ந்தன என்க. தம்முயிர்க்குக் கேடுநேரும்போது எத்தப்பிராணியும் அவ்வீளவு செய்தார்மேற் பாய்வது இயல்பு. **முன்** - முன் பாய என்க. இருந்த இடம்விட்டு முன்வந்து. **முன்நூறினுர்** என்று கூட்டி அவை தம்மேற் பாய்வதற்குமுன் அவற்றினை அம்பினுல் எய்து வீழ்த்தினர் என்றலுமொன்று.

**சேனை** - 722 பார்க்க. மேல்-அவற்றின்மேல். **நூறினுர்**-கொன்று அழித்தார்கள். **அம்பு நூறினுர்**—என்பதும் பாடம். 78

மேலே 717 முதல் 727 வரை பதினெருபாட்டுக்கள் முடிய ஓசையுடைய எழுசீர்ச் சந்தவிருத்தங்களாய் எடுத்தபொருளுக்கேற்ற சந்தத்தில் அமைந்துள்ளன. (திருவாசகம் - திருச்சதகம் - "ஈச னேநீ யல்ல தில்லை" என்ற பகுதித் திருவாக்குக்கள் காண்க). இப்பாட்டுக்கள் சொல்லும் சீரும் ஒத்திசையாது வேட்டையில் விலங்குகளின் அங்கங்கள் துண்டப்படுவன போலத் துண்டித்திசைப்பன. இவை நாற்சீர்க்கலிவிருத்தங்களாகப் பிரித்தலகிடப்பட்டுச் சிலபதிப்புக்களில் காணப்படுகின்றன.

வேறு

728. தாளறுவன விடைதுணிவன தலைதுமிவன கலைமா ;
வாளிகளொடு குடல்சொரிதர மறிவனசில மரைமா ;
நீளுடல்விடு சரமுருவிட நிமிர்வனமிடை கடமா ;
மீளிகொள்கணை படுமுடலெழ விழுவனபல வுழையே. எக

(இ - ள்) வெளிப்படை. கலைமான்(களிற் பல) காலறுவனவும், இடை துணிவனவும், தலை இறுவனவும் ஆயின; மரையினத்துட் சில உடலுட்பாய்ந்த அம்புகளோடு குடல் வெளியிற்சொரிய இறப்பன ஆயின; கூட்டமாக நெருங்கிய கடமாக்கள் நீண்ட வுடலினுள் வேடர்விட்ட அம்புகள் பாய்ந்து ஊடுருவிச்செல்லவே செயலற்றுப் பெருவருத்தத்துடன் நிமிர்வனவாயின ; பலமான்கள் வலியஅம்புகள் தைத்தலால் உடல் துள்ள விழுவன ஆயின.

(வி - ரை) இப்பாட்டிற் கூறியன மான் வகைகள். 726 பார்க்க. அறுபடுவன துணிபடுவன துமிபடுவன என்றபடி செயப்பாட்டுவினைகள் செய்வினையாக வந்தன.

**வாளிகளோடு...மறிவன** - அம்புகள் உடலிற் றைத்த வழியால் குடல்கள் வெளியிற்சொரிந்தன. அக்குடல்களோடு அம்புகளும் வெளியிற் சரிந்துபோந்தன என்பதாம்.

**நீள்.....நிமிர்வன** - கடமான்கள் சிலவற்றில் நீண்டசரங்கள் உடலூடுருவிச் சென்றன ; அவ்வருத்தத்தால் அவை உடல் நிமிர்ந்து வீழ்ந்தன. **நீள்சரம்** என்று கூட்டியுரைத்தலுமாம். **உடல் நிமிர்தல்** - இங்கு இவற்றிற்கு இயல்பினுள்ள கவிழ்ந்த தன்மை நீங்கி வருத்தமிகுதியால் நீண்டு நிமிர்ந்து வீழ்தல் குறித்தது. **கடமா**-மானின் ஒருவகை. யானைகள் என்றுகொண்டு செயலற்றுநின்றன என்றுரைப்பாருமுண்டு. அஃதீண்டுப் பொருந்தாமையுணர்க. **கடமா** - காட்டுப்பசு என்பாருமுண்டு.

**உடல் எழ - எழ** - இங்குத்துள்ளி மேலெழுதல் குறித்தது.

இதுமுதல் 740 வரைஉள்ள 13 திருப்பாட்டுக்களே இங்கு நாற்சீர்க்கலிவிருத்தமாக அலகிட்டவா றன்றித், "தாளறு வனவிடை துணிவன தலைதுமி வனகலைமான்" என்ற படி முதற்சீர் விளச்சீராகவும், பின் மூன்று சீர்கள் கருவிளச்சீர்களாகவும், இறுதிச்சீர் கருவிளங்காய்ச் சீராகவும் பிரித்து ஐஞ்சீர்க்கலிநிலைத்துறையாகக் கொள்ளுதலும் உரிய ஓசைநயம்படும். 79

729. வெங்கணைபடு பிடர்கிழிபட விசையுருவிய கயவாய்
செங்கனல்பட வதனெடுகணை செறியமுனிரு கருமா
வங்கெழுசிர மூருவியபொழு தடலெயிறுற வதனைப்
பொங்கியசின மொடுகவர்வன புரைவனசில புலிகள். அ0

(இ - ள்) முன் இரு கருமா - முன்னேவந்த பெரியபன்றிகள்; வெங்கணைபடு... கனல்பட - வெவ்விய அம்புபட்டுப் பிடர்கிழியும்படி விசையினால் உருவியதாற் பிளந்த புண்வாயில் செவ்விய தீப்போன்ற குருதிபெருகி ஒழுக; அதனெடு கணைசெறிய-அதன் மேலும் அம்புகள் நெருங்கிப்பாய்ந்து; அங்கெழு...பொழுது - அவை அங்கு எழும் சிரத்தின் வழி (அப்பன்றிகளையிழுத்து) உருவிச்சென்றபொழுது; புலிகள் அடல் எயிறு உற - (எதிர்பாய்ந்து திறந்தவாயுடன் ஓடிவந்த) புலிகளில் வலிய பற்களினிடையே சேர(தைக்க); அதனை...புரைவன - (அவ்வப்புலி) அவ்வப்பன்றியை மிக்கெழுந்த சினத்தோடு கவர்வன போன்றன சில புலிகள்.

(வி - ரை) கருமா - பிடர்கிழிபட - உருவிய - கயவாய் - கனல் - விட - கணை செறிய - எழுசிரம் - உருவியபொழுது - புலிகளி(ன்) - அடலெயிறுற - அவை அதனை-சினமொடு-கவர்வன - புரைவன - எனக்கொண்டு கூட்டி உரைத்துக் கொள்க.

**இருகருமா** - பெரிய காட்டுப்பன்றிகள். "இழிவாகும் கருவிலங்கும்" (திருஞான-புரா - 78). சுந்தரோக்கி இருங்கருமா என்றது **இருகருமா** என நின்றது.

**கயவாய்** - பிளந்த பெருவாய்தல். பெருந்திறப்பு. புண்வாய்.

**கணைசெறிய** - கணைகள் மேலும்நெருங்க. **சிரம்** - தலையின் வழி. புலிகளின் அடல் எயிற்றின் உற அப்புலிகள் புரைவன (போல்வன) என்க.

**அதனை** - அதனதனை - அவ்வப்பன்றியை. ஒவ்வோர் பன்றியை ஒவ்வோர் புலி கவர்தல் போன்றதால் ஒருமையிற் கூறினர். **கவர்வன** - கவர்வனவற்றை. வினையாலணையும் பெயர். இரண்டாம் வேற்றுமைத் தொகை.

**கனல்** - கனல் போன்ற இரத்தம். தீ என உரைப்பாருமுண்டு.

ஒரு பன்றியின் பிடர் அம்பினற் கிழிபட்டது; அதனற் பிளவுபட்ட புண்வாய் தீ(குருதி) உமிழ்ந்தது; மேலும் அம்புகள் நெருங்கிப் பாய்ந்தன; அவை தலையின் வழி உருவி அப்பன்றியையும் இழுத்துக் கொண்டு எதிரே பாய்ந்து வாய்திறந்து ஓடி வந்த புலியின் பற்களிடை ஊடுருவின; இவ்வாறு இப்பன்றி புலி வாயினிடத்து அம்பினல் ஈர்த்துச் செல்லப்படுதல் எதிர்வந்த புலி அதனைப்பாய்ந்து கவர்வதுபோன்றிருந்தது. இவ்வாறு சில புலிகள் இருந்தன என்பதாம். 80

730. பின்மறவர்கள் விடுபகழிகள் பிறகுறவயி றிடைபோய்
முன்னடுமுக மிசையுருவிட முடுகியவிசை யுடனக்
கொன்முனையடு சரமினமெதிர் குறுகியமுக முருவத்
தன்னெதிரெதிர் பொருவனநிகர் தலையனபல கலைகள். அக

(இ - ள்) பல கலைகள் - பல கலை மான்கள்; பின் மறவர்கள்.....பிறகுற - பின் புறத்தினின்று மறவர்கள் எய்த அம்புகள் தமது உடலின் பின்பாகத்திற் றைக்க; வயிறிடை...உருவிட - (அந்த அம்புகள்) அவற்றின் வயிற்றினிடை போய் முன்புறம் முகத்தினிடுவில் உருவிட; முடுகிய...சரம் - மிக வேகத்துடன் விடப்பட்ட வேட்டை

முகத்தில் அடல்வல்ல அந்த அம்புகள் ; இனம்...உருவ - அவ்வாறெய்யப்பட்ட கலை மானின் இனமாகிய எதிரேஓடிய மானின் நெருங்கிய முகத்திலும் தைத்து அதனை யும் ஊடுருவ ; தன்...தலையன - (அவ்விரண்டு மான்களும் ஒன்றை யொன்று)தான் தான் எதிர்முட்டிப் போர் செய்கின்றன போன்ற தலைகளை யுடையவாயின.

(வி - ரை) **பின்** - பின்புறமிருந்து. **மறவர்கள்** - மறம்புரியும் வேடர். பின்புறம் தாக்குமாறு பின்னின்று படைவிடுதல் அறமன்று ; அது மறமாம். பின்காட்டி ஓடுகின் றார்மீது படைதொடுதல் கூடாதென்பது போர் நீதிகளில் ஒன்று. இங்கு இவ்வேடர் அவ்வாறன்றிப் பின்காட்டிய மான்களின்மீது பின்னிருந்து அம்பு எய்தனராதலின் மறமேசெய்தார் என்ற குறிப்புப்பட **பின் மறவர்கள் விடுபகழிகள்** என்றார். இவர்கள் போலல்லாது திண்ணனார் பகை விலங்குகளின் எதிர்நின்று போர்செய்தார் என்பார் **தரிசில் முன்விடு சரம்** என மேல்வரும் பாட்டிற் பாராட்டிக் கூறியதும் காண்க.

**பிறகுற** - உடலின் பின்புறத்திற் றைத்துப் பொருந்த.

**முன் நடுமுக மிசை உருவிட** - முன்புறம் முகத்தின் நடுப்பாகத்தின் மேல்வந்து உருவ. **முகத்தின் நடு** என்க. முன்பின்னுகத் தொக்க ஆறாம்வேற்றுமைத் தொகை.

**முடுகிய விசை** - மிக்க விசை. **அக் கொன்முனை அடுசரம்** - கொல்லுலையில் வடித் துக் கூர்மையாக்கிய அடுகின்ற அம்பு என்பாருமுண்டு.

**இனம்** - தம் இனமாகிய கலைமான். **எதிர்குறுகிய முகம் உருவ** - எதிராக ஓடி வந்து கூடிமுட்டிய முகத்திலே தைக்க. தான் என்பது **தன்** எனக் குறுகிநின்றது. அதனை அடுக்கியுரைத்துக் கொள்க. 81

731. கருவரையொரு தனுவொடுவிசை கடுகியதென முனைகோர்
குரிசில்முன்விடு மடுசரமெதிர் கொலைபயில்பொழு தவையே
பொருகரியொடு சினவரியிடை புரையறவுடல் புகலால்
வருமிரவொடு பகலணைவன வெனமிடையுமவ் வனமே. அஉ

(இ - ள்) **கருவரை.....பொழுது** - கரியமலை ஒருவில்லுடனே ஓடிவந்ததென்று சொல்லும்படி போர்முகத்தில் சேர்வந்த அண்ணலாராகிய திண்ணனார் முன்னால் எதிர்த்துநின்று விடுகின்ற அம்புகள் எதிர்ப்பட்ட விலங்குகளைக் கொலைசெய்கின்ற போது ; **அவையே.....புகலால்** - அவை போர்செய்யும் யானைகளோடும் சோபமிக்க சிங்கங்களினிடையே இடைவெளியின்றி அவற்றினுடல்களிற் புகுதலால் ; **வருமிர வொடு...அவ்வனமே** - அவ்வனம் பின்வரும் இரவுகளுடன் பகல்கள் சேர்ந்தாற்போல் மிகும்.

(வி - ரை) **கருவரை** - கரியமலை. திண்ணனார்க்கு உவமானம். " மணிநீல மலை ஒன்று" (701) என முன்கூறியதும் காண்க.

**ஒரு** - நடுநிலைத்தீபம். **ஒருகருவரை** - ஒருதனு(வில்) என்க.

**வரைதனுவொடு விசை கடுகியதென** - இல்பொருளுவமை. **ஒருதனுவொடு-தனு**- உடம்பென்று கொண்டு கரியமலையொன்று உடல் பெற்றுவந்ததுபோல என்ற குறிப் புப்பொருளும் காண்க. " மணிநீல மலையொன்று வந்த தென்ன " (701) என்றதை காண்க. **விசை கடுகியது** - ஒரு பொருட் பன்மொழி. மிகுதி குறித்தது. மிக்கவேகமாய் வந்தது. **என்** உவமஉருபு.

**முனை** - போர்முகம். வேட்டை முனை என்பர். **தரிசில்** - பெருமையையுடையார் - திண்ணனார். **எதிர்** - எதிரேநின்று.

**முன்விடும்...பயில்பொழுது** - மேற்பாட்டில் மறவர்களது சிறுமையும் மறமும் உடைய வேட்டை கூறிய ஆசிரியர் இப்பாட்டில் திண்ணனாரது பெருமையும் போர் அறமுமுடைய வேட்டைவினை கூறுகின்றார். அவர்கள் தமது தகுதிக்கேற்பப் பன்றி யும் மானும் கலையும் என்ற சிறுவிலங்குகளை எய்கின்றார்கள் ; இவர் யானை, சிங்கம்

என்ற பெருங்கொடுவிலங்குகளே எய்கின்றூர்; அவர்கள் அவற்றின் பின்னிருந்து புரை பட எய்ய இவர் புரையற முன்னின்று எய்து வீரப்போர் செய்கின்றூர்; இவர்விடும் அடி சரம் தவறாது எதிர்த்துக் கொலை செய்தேவிடும்; என்பன முதலிய கருத்துகள் காண்க.

**கொலை பயில் போழது** - கொன்றே விடுவனவாக, அப்பொழுது. **அவையே-புகலால்** என்று கூட்டுக.

**போருகரி - கினஅரி** - அவ்வவற்றுக்கேற்ற அடைமொழி தந்து கூறியதுகாண்க. கரி போரில்வல்லது; எத்தனை நாள்களாயினும் சலியாது மூனேந்து உயிர்போம் வரை போர்புரியும் தன்மையுடையது. அரி சினம்மிக்குப்பாயும் தன்மையுடையது. செங்கண் வாளரி என்றதும் பிறவும்காண்க.

**இடைபுரையற அவையே உடல் புகலால்** - வேகத்தால் இடையீடின்றி அம்பு கள் அவற்றின் உடலிற் புகுதலாலே. **இடைபுரைஅற** - இடையீடில்லாது தொடர் பாக. இடையே குற்றமற என்ற குறிப்புமாம். இவ்வாற்றால் பல யானைகளும் பல சிங் கங்களும் பட்டு வீழவே, அந்தக் கரியயானைகளும் வெளிய சிங்கங்களும் பக்கங்களில் வீழ்ந்துள்ள தோற்றம் இரவோடு பகல் கூடியதைப்போன்ற தென்றூர். பெருவிலங்குக ளாதலின் இவற்றை வீழ்த்தத் தொடர்பாய்ப் பலவலிய அம்புகள் எய்தல்வேண்டும்.

**அவ்வனம் வரும் இரவோடு பகல் அணைவன என மிடையும்** - என மாற்றுக. **மிடைதல்** - நெருங்குதல் - மிகுதல். இவ்வேட்டை நிகழ்வது பகற்போதாதலின் இனி அடுத்து வருவது இரவாம். ஆதலின் **வருமிரவு** என்றூர். **பகல்** - பகற்காலம். பகல் கழியவே இரவு அணையும். பகலும் இரவும் உடன் அணைவதில்லையாதலின் இல் பொருளுவமம். திண்ணனூர் தமக்கு உவமையில்லாதவர்; இவர் செயலின் வீரமும் உவமையில்லாததாம் என்பது குறிக்க இப்பாட்டில் **வரைதனுவோடு கடுகியதும், இர வோடுபகல் அணைவதும்** என்ற இரண்டும் இல்பொருளுவமங்களாக ஆசிரியர் வைத்த னர் போலும். அன்றியும் இங்குத் திண்ணனூர் காலம் என்னும் தத்துவக்கட்டினைக் கடக்கும் நிலையின் விளங்குதலால் இரவும் பகலும் என்ற ஈட்கூறுபாடாகிய காலம் அவர்க்குக் கீழ்ப்பட்டு நிற்பது என்பதும் குறிப்பாம். பகலும் இரவும் ஒன்றுகூடாது ஒன்றன்பின்ஒன்றூய் மாறிமாறி வருவனவாம். அதுபோலக் கரியும் அரியும் ஒன்றற் கொன்று பகையுடையன. இவ்வேடர் துரத்துதலாகிய செயற்கையாற் சேர வந்தனவே யன்றி இயற்கையாற் சேர்ந்தனவல்ல. இயற்கையாற் சேராத இரவும்பகலும் ஈண்டு இதுபோலவே செயற்கையாற் சேர்ந்தனபோல என்று பின்னரும் கூறுகின்றது காண்க. விளக்கு முதலியவற்றால் இரவு பகல் எனப்பட நிற்கும். 778, 779, 780 பாட் டுக்கள் பார்க்க. வெளிநின்ற புறவிருள் தீபமாமரங்களாலும், வீட்டின் நின்ற புறவிருள் மணிவிளக்கொளிகளாலும், அகவிருள் ஐந்தடக்கிய பெரியாரது சோதியாலும் நீங்கின (780) என்று குறித்தமையும் இங்குக் காண்க.

**அணைவன** - இரவொடு பகல் அணைவன. சாதியொருமையாதலிற் பன்மைவினை யாற் கூறினூர். 82

732. நீளிடைவிசை மிசைகுதிகொள நெடுமுகிறொட வெழுமான்
றாளுறுகழன் மறவர்கள்விடு சரநிரைதொடர் வனதாம்
வாள்விடுகதிர் மதிபிரிவுற வருமெனவிழு மூழையைக்
கோளொடுபயில் பணிதொடர்நிலை கொளவுளவெதிர் பலவே. அஉ

(இ - ள்) நீள்இடை விசை...எழும்மான் - நீண்ட ஆகாய வெளியில் விசையோடு மேலே குதிக்க நெடுமுகில்களைத் தொடும்படி எழுகின்ற மான்களை; தாள் உறுகழல்... தொடர்வனதாம் - காலிற்பொருந்திய வீரக்கழலையுடைய மறவர்கள் விடுகின்ற அம்பு

வரிசைகள் தொடர்கின்றவை; வாள்விடு கதிர்மதி...விழும் உழையை - ஒளிவீசும் கதிர்களையுடைய மதியைப் பிரிவுறாரு மென்று (அந்த மதி மண்டலத்தினின்றும்) கீழே விழுகின்ற மானை; கோளொடு பயில்பணி தொடர்நிலை-பீடிக்கின்ற தன்மையோடு பயில்கின்ற இராகு என்ற பாம்பு தொடர்ந்து வருகின்ற நிலைமை; கொள உள எதிர் பலவே - எதிராகக் காண உள்ளன பலவாம்.

(வி - ரை) **குதிகோள எழும் மான்** - மான்கள் வெருண்டு மேற்கிளம்பித்துள்ளும் இயல்புடையன. அதனோடு இங்கு வேடர்கள் பல பக்கமும் சூழ்ந்து ஆர்த்தும் நாய்களை ஏவியும் வெருட்டுதலால் எங்கும் ஓடிப் போக இயலாமல் மேலே துள்ளிக் குதித்தன.

**நெடுமுகில்தோட** - விண்ணில் தாவி மிக உயரமாய் என்றபடி.

**மான்** - மான்களை. இரண்டனுருபு தொக்கது. மான்களைத் தொடர்வன என்க.

**வாள்விடு கதிர்மதி** - மிக ஒளிவீசும் கதிர்களையுடைய முழுமதி. முழுமதி நாள்களே மதியை இராகு பீடிக்கும் நாள்களாதலின் **வாள்விடுகதிர்** என்றார்.

**பிரிவுற வரும் என விழும் உழை** - மதிக்குவந்த பீடை தன்னையும் பீடிக்குமோ என்றஞ்சி அதனைவிட்டு வெளிவந்துவிடாரு மென் றெண்ணியது போலக் கீழே வீழ்கின்றமான். **உழை** - மான். சந்திரனில் தோன்றுகின்ற கறையை மான் என்பதும் ஒரு வழக்கு. அதனை முயல் என்பதும் உண்டு. வருதும், வருவோம் (வந்துவிடுவேம்) என்பது **வரும்** என விகாரமாயிற்று என்பர் மகாலிங்கையர்.

**கோளொடு பயில்பணி - கோள்** - கொள்ளுதல் - பீடித்தல். கொள் - பகுதி. முதனிலைதிரிந்த தொழிற்பெயர். பீடித்தலே தொழிலாகப் பயிலும் பாம்பு. **பணி** - பாம்பு - இராகு. **கோள்** - கவக்கோள் எனவும், **ஒடு** - ஏழாம் வேற்றுமைப் பொருளில் மயங்கி வந்த மூன்றன் உருபு எனவுங் கொண்டு, கவக்கோள்களில் ஒன்றாகப் பயில்கின்ற என்றலுமாம்.

**தொடர்நிலை கோள** - தொடர்கின்ற நிலைமைபோலக் காண. **எதிர் பலஉள** என்க. இவ்வாறு எதிரே பல மான்கள் உள்ளன. இராகுகேதுக்கள் என்னுமிரண்டு பாம்புகள் சந்திர சூரியர்களைப் பீடித்து மறைக்கும் சரிதம் காந்தம் முதலிய மா புராணங்களுட் காண்க. அண்டகோளகையின் சூழலிலே, நாம் காணும் மதியும் ஞாயிறும் நமது பூமியாகிய அண்டத்துக்கு நேர்கோட்டில் வரும்காலத்து ஒன்றின் நிழல் மதியின்மேல் அல்லது ஞாயிற்றின்மேல் பட்டு அதனை மறைக்கும். அந்நிழலின் மறைப்புக்களே சந்திர சூரிய கிரகணங்கள் எனப்படும் என்று நவீன வானசாஸ்திரிகள் கூறுவர். இதுகண்டு நம்மிற்பலர் இதுபற்றிய புராண சரிதங்களில் அவநம்பிக்கை கொள்கின்றனர். மதியும் ஞாயிறும் பூமியும் முதலிய அண்டங்களின் வட்டங்களையும் இவை ஓடிச் சுற்றிவரும் சுழற்சிநிலைகளையும் நம்முன்னோர் அறிந்துகணக்கிட்டு இம்மறைப்புக்களை முன்னதாகக் குறிக்கவல்லாயினர். இல்லையேல் பஞ்சாங்கங்களில் இந்நாளும் நேரமும் குறித்துச்சொல்லுதல் இயலாதன்றே? இவற்றைக் கணக்கிட்டுக் கொண்டதோடு இவற்றைப்பற்றி நவீனர் காணாத வேறுபலவும் கண்டனர். இவற்றின் குணங்களையும் இம்மறைப்புக் காலங்களில் இவற்றின் சத்தியால் மக்களுக்கு நேரவுள்ள கேடுகளையும் அறிந்தே இவைகள் விஷத்தன்மையுடையன என்று காட்ட இவற்றைப் பாம்புகளாகவும் காட்டினர். ஆனால் தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடைந்து அமிர்தம் பெற்றுப் பங்கிட்டு உண்ணும்போது கலாம்வீளைய அதனில் இராகு கேதுக்கள் உண்டாகி மதியையும் ஞாயிற்றையும் பீடிக்கலாயினர் என்றது புராண வரலாறன்றே? எனின், ஆம். அதுவும் உண்மையே. அது இவ்வண்டங்களுக்குரிய அதிதெய்வங்களின் நிலை. இத்தெய்வங்கள் நம் கண்ணுக்குப் புலப்படாத காரணங்கொண்டு இவை இல்லை என்றல் கூடாது. இவற்றிற்குரிய மந்திரங்களின் மூலம் இவைகளின் சத்திகள் வெளிப்பட்டு உரிய பலன்றருதல் கண்கூடாகலின் இச்சரித உண்மையும் பெறப்படும். இம்

மறைப்புக்களைச் செய்யும் இராகு கேதுக்களைச் சாயாக்கிரகங்கள், நிழற்கோள்கள் என்பர். காணாக்கிரகம், கரந்துறைகோள் (பெருங் - உஞ்சை - 58 - 57) என்பனவும் காண்க. இவையெல்லாம் அவ்வக்கலைகளில் வல்லார்பாற் கேட்டுத் தெளிக.

**மதி பிரிவுற வரும்என விழும்உழை** - தற்குறிப்பேற்ற அணி. **விழும் உழையைப் பணி தொடர்நிலை உளதென** என்றது இல்பொருளுவமை. கீழிருந்து உயரக்கிளம்பி விழும் மானினை மேலிருந்து விழும் மானாகவும், மானைக் குறிவைத்து இடைவிடாது தொடர்ந்து எய்யப்படும் அம்புவரிசையைப் பாம்பாகவும் கூறியது தற்குறிப்பேற்றம்.

**வயவர்கள் விடு—பரிவுற—பிரிவுற**—என்பனவும் பாடங்கள். 83

733. கடல்விரிபுனல் கொளவிழுவன கருமுகிலென நிரையே
படர்வொடுசெறி தழைபொதுளிய பயில்புதல்வன மதன்மே
லடலுறுசர முடலுறவரை யடியிடமல மரலான்
மிடைகருமரை கரடிகளொடு விழுவனவன மேதி. அச

(இ - ள்) அடல் உறுசரம் உடல்உற - அடுகின்ற அம்புகள் உடலிற் றைத்தலால்; வரை அடியிடம் அலமரலால் - மலைச்சரிவில் அடிநிலை கொள்ளாது சுழலுதலால்; நிரையே படர்வொடு...வனம் அதன்மேல் - வரிசையாகப் படர்ந்து செறிந்த தழைகள் நிறைந்த நெருங்கிய புதர்களையுடைய அக்காட்டின்மேல்: கடல் விரிபுனல்.....முகிலென - கடலிற் பரந்த நீரைக்கொள்ள வீழ்ந்து படிகின்ற கரிய முகிற்கூட்டம் போல; மிடைகருமரை.....வனமேதி - கூட்டமாகிய கரிய மரைகளும் கரடிகளும் என்ற இவற்றுடனே காட்டு எருமைகள் வீழ்வனவாயின.

(வி - ரை) சரம் உடல் உற - அலமரலால் - புதல்வனமதன்மேல் - கடல் புனல் கொள கருமுகில் விழுவன என - மரை கரடிகளொடு - வனமேதி - விழுவன என்று கூட்டி உரைத்துக்கொள்க.

**நிரையே...புதல்வனம் அதன்மேல்** - வரிசைபெறப் படர்ந்து செறிந்ததழை நிரம்பிய பசிய புதர்களையுடைய காடு. இதனைக் கடலுக்கு உவமித்தார். **நிரை**-வரிசை-கடலலைக்கும், **செறிதழை பொதுளிய** நிலை - கடல் நீருக்கும், **கருமரை** - **கரடி** - (கரிய) **வனமேதி** இவை கருமுகில்களுக்கும் உவமிக்கப்பட்டன. **புதல்** - பெருந் தூறுகள் - புதர்கள். **உடல்உற** - உடல் உறுதலாலே. **அலமருதல்** - வருந்துதல்-சுழலுதல். **வரை இடம் அடி அலமரலால்** என்க. **கருமரை** - காட்டுக்குதிரை என்பர். "கான்மரை" - (727) கருமான் என்பாருமுண்டு. **நிரையே விழுவன** என்று கூட்டியுரைப்பினுமாம்.

734. பலதுறைகளின் வெருவரலொடு பயில்வலையற நுழைமா
வுலமொடுபடர் வனதகைவுற வுறுசினமொடு கவர்நாய்
நிலவியவிரு வினைவலையிடை நிலைசுழல்பவர் நெறிசேர்
புலனுறுமன னிடைதடைசெய்த பொறிகளினள வுளவே. அரு

(இ - ள்) பலதுறைகளில்.....படர்வன - பல வழிகளினின்றும் கட்டிய வலைகளறும்படி பயத்தோடு நுழைகின்ற விலங்குகள் கல்வழியிற் செல்ல முற்பட்டவற்றை; தகைவுற...கவர்நாய் - தடைப்படுமாறு பொருந்திய கோபத்தோடு பிடிக்கின்ற நாய்கள்; நிலவிய விருவினை...மனன் - பிறப்பிறப்புக்களிற் கட்டுகின்ற இருவினையாகிய வலையினிடையிற் பட்டுத் தந்நிலை கலங்கிச் சுழல்கின்றவர்களுடைய நன்னெறி சேர் மெய்யறிவிற் செல்லும் மனத்தை; இடைதடை செய்த பொறிகளின் அளவு - (அவ்வாறு செல்லவொட்டாது) இடையிலே தடைசெய்த ஐம்பொறிகளைப் போல; உளவே-உள்ளனவாம்.

(வி - ரை) பயில்வலையற - உலமொடு - மா படர்வன - தகைவுறக் கவர்நாய், இரு வினை வலையிடை - சுழல்பவர் - நெறிசேர் மனனை - இடைதடை செய்த பொறிகளின் அளவு - உள என்று கொண்டு கூட்டிமுடிக்க.

**பல துறைகளின்...நுழை** - விலங்குகள் பலவழிகளினின்றும் தப்பி ஓட முயன்றன ; எங்கும் அவற்றுக்கு அபாயமே எதிர்ப்படப் பயந்து வலைகளை அறுத்துக்கொண்டு வெளிப்பட வலைகளினூடே நுழைகின்ற. **உலமொடு - ஒடு** - எழனுருபுப்பொருளில் வந்தது.

**தகைவுற** - தடைபட - தகைதல் - தடுத்தல் - "யாஞ்செய் தவமின்று தடுத்த தென்னத் தகைந்துதான் தரித்த தென்று" (363). **உறுசினம்**-இயல்பானும், வேட்டையிற்றப்பியோடும் விலங்கினைக் கண்டபோது அதன்மேல் எழும் வேகத்தானும் உற்ற கோபம். **கவர்** - கௌவிப் பற்றுகின்ற. மாவும், நாயும்-சாதியொருமைகள். **நாய்** என்னும் எழுவாய் **உளவே** எனப் பன்மைவினை கொண்டது.

**நிலவிய இருவினை வலையிடை** - நல்வினை தீவினை யென்னும் இருவினைகளே உயிர்களைப் பிறப்பு இறப்புக்களுக்குட்படுத்தி மீளமீள உலகில் வந்து போய் நிலவச் செய்வன. " இழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த விப்பிறவிக் **கொடுஞ்சூழல்**" (மானக்கஞ் - புரா - 11) என்றது காண்க. தீவினை பாவத்துக்கேதுவாகி நரகத்தின்பத்துட்படுத்தி மீளப்பிறவியிற் செலுத்தும். அதுபோலவே நல்வினையும் புண்ணியத்துக்கேதுவாகிச் சுவர்க்க முதலிய இன்பம் நுகர்வித்து மீளப்பிறவியிற்செலுத்தும்.எனவே,இவையிரண்டும் பிறவிக்கேதுவாகிச் சுவர்க்க முதலியவற்றிற் சுழல்வித்து உயிர்களைக் கட்டுக்குள் அகப்படுத்துவனவாதலின் **இருவினை வலையிடைநிலை சுழல்பவர்** என்றார். "ஒருவனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்தமுறுத்துதற்கட் பொன்விலங்கும் இருப்புவிலங்கும் போலத் தம்மூட் சமப்படுத்துணரப்படுவனவாகிய அறம்பாவ மிரண்டும்...சரியை முதலிய தவங்களானே நோக ஒத்தால்" எனவும், "வேள்வி முதலாயின எல்லாம் அழிதன் மாலேயவாகிய காமியங்களைப் பயப்பனவன்றித் தத்துவஞானத்தைப் பயவா" எனவும், " அவை ஞானத்தைப் பயவாமை மாத்திரையேயன்றித் தீவினைபோல அது கிழவொட்டாது தடைசெய்து நிற்றலு முடைமையின் அவற்றது கழிவே ஈண்டைக்குக் காரணமாவதென்பார் இசைத்தவிரு வினையொப்பி லென்றுங் கூறினர் " எனவும் சிவஞானபோதம் (8 - 1) "பசித்தீண்டு" என்றவெண்பாவின்கீழ் எமது மாதவச்சிவஞான சுவாமிகள் உரைத்தருளியவை காண்க. " இருள்சேரிருவினை " என்றார் திருவள்ளுவர். " அறம்பாவ மென்னு மருங்கயிற்றூற் கட்டி " என்று மணிவாசகப்பெருமானரும் ஒருங்குவைத்து இவற்றை வலை எனக் காட்டியிருத்தல் காண்க.

**நீலை சுழல்பவர்** - நிலைகலங்கித் துன்பத்தினின்றும் விடுதிபெறும் வழியறியாது பலபுறமும் சுழல்கின்றவர்களுடைய. சுழல்பவரது மனன் என ஆறனுருபு விரிக்க.

**நெறிசேர் புலனுறுமனன்-நெறி** - நன்னெறி. செல்ல வேண்டிய நெறி அதுவே யாதலின், இருவினை வலை என்று ஆங்கு அடைமொழி தந்து குறித்த ஆசிரியர் ஈண்டு அடைமொழியின்றிக் கூறினர். "நெறியைப் படைத்தா னெருஞ்சில் படைத்தான், நெறியில் வழுவி னெருஞ்சின்முட் பாயும்" என்ற திருமந்திரமுங் காண்க. **புலன்உறு மனன்** - நல்வினை வசத்தால் நற்புலம் - மெய்யறிவு - பெறும் மனம்.

**படர்வன** என்ற உவமேயத்தினும், **மனன்** என்ற உவமானத்தினும் ஒற்றுமை யுற இரண்டனுருபு தொகவைத்த அழகு காண்க. **இடை** - நெறி சேரும் இடையில். **தடைசெய்த பொறிகள்** - அவ்வாறு மனன் நன்னெறியிற்போகாமற் றடுத்த ஐம்பொறிகள். **அளவு** - உவம உருபு. பொறிகளைப் போல நன்னெறி செல்லும் மனத்தைத் தடுத்த ஐம்பொறிகளைப் போன்றன நாய்கள் என்றுவமித்தார்.

நாய் பசையற்ற எலும்பைக் கறித்து, அதனால் தன் வாயில் ஊறுபட்டு, அதனினின்றும்வரும் தன் இரத்தத்தைத், தன்கேட்டினை எண்ணாது அவ்வெலும்பினின்றுங்

கிடைத்த இன்பமாக எண்ணி உண்டு மகிழும். உண்ணற்குரிய வேறு நற்பொருளிருக்க அவற்றை உண்ணாது உண்ணத் தகாத மலத்தை உண்ணும்; தான் தின்று கக்கிய சோற்றைத் தானே மீள உண்ணும். இதுபோலவே உயிர்களும் பொறிகளால் வரும் கேடுதரும் அனுபவங்களே யின்பமென்று மயங்கி யனுபவித்து மகிழ்வன; அனுபவத்திற் குரிய நல்ல சிவானுபவம் உளதாகவும் உலகானுபவங்களாகிய மலங்களைச் சுவைத் துக் கிடப்பன; அனுபவித்துக் கழித்த மல அனுபவங்களே மீளமீளத் தாமே அனுப விப்பன. "உண்டதே உண்டு முடித்ததே யுடுத்து மடித்துத் துரைத்ததே யுரைத்தும், கண்டதே கண்டுங் கேட்டதே கேட்டுங் கழிந்தன கடவுளா ளெல்லாம்" என்பது பட்டி னத்தடிகள் திருப்பாட்டு. இக்கருத்துக்கள் பற்றி நாயேன், நாயனேயேன் என்று பெரியோர் உவமிப்பது மரபு. இங்கு நன்னெறியிற் புகாது தடுக்கு மளவிற்கு நாய்களை உவமித்தார்.

வேடர்கள் சிறு யம்பு தூறி விலங்குகளைக் கொல்லும் வேட்டை வினையை ஒருபாட் டாற் (728) கூறிய ஆசிரியர், அவ்வேட்டைவினையை வேட்டைக்காட்டின் வெளியே நின்று காணுமொருவனது காட்சியாக வருவனவற்றை (729 - 734) ஆறு பாட்டுக்க ளாற் கூறுகின்றார். அம்புபட்டுப் புலிவாயிற் சேர்ந்த பன்றியைப் புலி கவர்வன போன்ற (729) தென்றதும், எய்யப்பட்ட கலைகள் எதிரெதிர் பொருவன போல்வன (730) என்றதும், உலகநிலை உவமக்காட்சி. இரவொடு பகல் அணைவன என (731), உழையைப் பணி தொடர் நிலைகொள (732), கடல்புனல் கொளவரு முகிலென (733), என்றவை கவிநிலை உவமக்காட்சி. இப்பாட்டில் நாய்கள் மனனிடை தடைசெய்த பொறிகளினளவுள (734) என்றது ஞானநிலை உவமக்காட்சி. "நிருவிகற்பமாய்க் காண்டலும், இரட்டுறக் காண்டலும், தெளியக் காண்டலும் எனக் காட்சி மூவகைப் படும். இம்மூன்றும் அதி பக்குவமுடையார்க்குக் கேட்ட மாத்திரையே ஒருங்கு நிகழு மாயினும் ஏனையோர்க்குக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்னுஞ் சோபான முறை யானன்றி நிகழாமையின்" என எமது மாதவச் சிவஞானசுவாமிகள் சிவஞானபோதத் துரையிற் (9-ம் சூத்திரம்) கூறிய பொருளை இங்குச் சிந்திக்க.

குருதியும் கொலையுமே நிறைந்த வேட்டைக் காட்டினும் இவ்வாறு ஞானமெய்க் நெறிசேர் பொருளைக் கண்டு காட்டுதல் ஆசிரியர்பெருமானது தெய்வமணக்குஞ் செய் யுளி னியல்பாமென்க. "நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதில், அலைப்பட்ட ஆர்வமுதற் குற்றம்போ லாயினார்" (634) என்று போர்க்களத்திற் காட்டியதும் இங்கு நினைவுகூர்க. 85

*735. துடியடியன மடிசெவியன தூறுகயமுனி தொடரார் ;
வெடிபடவிரி சிறுகுருளைகண் மிசைபடுகொலை விரவார் ;
அடிதளர்வுறு கருவுடையன வணைவுறுபிணை யலையார் ;
கொடியனவெதிர் மூடுகியுமுறு கொலைபுரிசில மறவோர். அசு

(இ - ள்) கொடியனவெதிர்...மறவோர் - கொடிய மிருகங்களை எதிராகச் சென்று எதிர்த்து ஓடியும் அவற்றை மிகவும் கொலைசெய்கின்ற வில் வேடர்கள் ; துடியடி யன...தொடரார் - உடுக்கையையொத்த கால்களுடையனவும் மடிந்த காதுகளையுடை யனவும் ஆகிய நெருங்கி வருகின்ற யானைக்கன்றுகளின்மேல் வேட்டைவினை தொடர மாட்டார்கள் ; வெடிபட...விரவார் - ஓசைபட ஓடிக் குதிக்கும் சிறிய விலங்குக்குட்டி களின்மேல் படும் கொலையைச் செய்யார் ; அடிதளர்வுறு...அலையார்-அடிதளர்வுறுதற் கேதுவாகிய கருப்பந்தரித்தனவாய்த் தள்ளாடி நடந்துவரும் பெண் விலங்குகளுக்குத் துன்பஞ் செய்யமாட்டார்கள்.

(வி - ரை) இப்பாட்டினுல் வேட்டையின் நீதிமுறை எடுத்துக் காட்டப்பட்டது. இஃது எல்லாப் போர் முறைகளுக்கும் ஒக்கும். பசுக்கள், அறவோர், சிறுவர், நோய்

கொண்டோர், பெண்கள், புதல்வர்ப்பெறுதோர், படையெடாதோர் முதலியவர்களைப் போர் தொடங்குமுன் பறைசாற்றி அவ்வவர் காப்பிடம் செல்லுமாறு அறிவித்துப் பின் போர்தொடங்குதல் தமிழ் மக்களின் அறப்போர் என்பது பழந் தமிழ்நூல்களிற் கண்டவுண்மை. இக்காளில் மேனாடு என்ற சீழாகிய ஐரோப்பிய காட்டினும், சீனத்திலும், இக்நீதி முற்றும் மறந்து, உணவின்பொருட்டுச் சிறிதும் இரக்கமின்றி வதைச் சாலையில் ஆடு மாடுகள் வதைக்கப்படுதல்போலப், போர்செய்யாக் குடிமக்கள் பலரும் ஆயிரக்கணக்காய் வதைக்கப்படுதல் காண்கிறோம். இங்கு ஆசிரியர் பெருங்கருணையினாலே உலக நலங்கருதி எடுத்துக்காட்டிய இக்நீதிகளைப் போர்மட்டுமன்றி எல்லாத் துறைகளிலும் தம் வலிமையே கருதிப் பிறர்பொருள் வௌவும் வெறிபிடித்த இக்காள் மாக்கள் உணர்ந்து ஒழுகுவாராயின் மிகநன்மையுண்டாகும். கொல் எறி குத்து என்ற சொற்களாலுணர்த்தப்படும் செயலும், வழியிற்போவாரை அலைத்துண்பதும் முதலிய கொடுமைகளையே தமது வாழ்க்கையாகக்கொண்ட, கல்விவாசனையேயில்லாத, கொடிய வேடர்களும் கொலைவேட்டையில் கொண்டொழுகிய இக்நீதிகள் இக்காள் உயர்ந்த நாகரிகர் என்று சொல்லும் மக்களும் மறந்து பல துறைகளிலும் உலகை அலைத்தல் கொடுமையினும் கொடுமை!

பெண்விலங்குகளையும் குட்டிகளையும் வேட்டையினும் அலைக்காதுவிடும் கருத்துக் கருணையை அடியாகக் கொண்ட நீதியாம். இஃது இறைவனது அருட்குணம். அவன் உயிர்க்குயிராய் எங்கும் நிறைந்தவனதலின் அது இக்கொடிய வேடர்க்குள்ளும் காணப்பட்டு அவர்களையும் அறியாமல் வெளிப்பட நிகழ்வதாயிற்று. தமது நீடித்த நலங் கருதியேனும் விலங்கின் சாதிமுற்றும் நாசமாகி யொழியாதவண்ணங் காத்தல் என்னும் தந்நலம் இவர்களை இவ்வொழுக்கத்தில் நிறுத்திய வெளிப்படையான காரணமாம். யானைகளின் பாதுகாப்புச் சட்டம், வேட்டை விலங்குகளின் பாதுகாவற் சட்டம், விலங்குகளைக் கொடுமை செய்வதனைத் தடுக்கும் சட்டம் முதலியனவாக இக்காளிலும் அரசாங்கத்தார் விதித்துள்ளவைகளும் இக்கருத்தே பற்றியன. (The Elephants Preservation Act; Games Preservation Act; Prevention of Cruelty to Animals Act) இச்சட்டங்களினும் பெட்டைமான் முதலியவற்றைச் சுடக்கூடாது என்னும் விதியுண்மையும் காண்க.

**துடிஅடியன மடிசெவியன துறுகயமுனி - வேடிபடவிரி சிறு குருளைகள் - அடிதளர்வுறு கருவுடையன** என்றவை மிக மேலாகிய தன்மைநவிற்சியணி யாம். **மடி செவி** - யானைக்காதுகள் மெல்லியனவாய் அகன்று பரந்து தொங்குமியல்புடையன. யானைக்கன்றின் காதுகளும் மிக மெல்லியனவாய் மடிந்து தொங்குமியல்புடையன. களிற்றியானைநிரை எனும் அகப்பாட்டுங்காண்க. **துறு** - யானையினம் கூட்டமாய் வருமியல்பு குறித்தது. **கயமுனி** - யானைக்கன்று. யானை முதலா யெறும்பீ றாகிய என்ற படி முதன்மைபற்றி யானைக்கன்றுகளை வேறு பிரித்து முதலில் வைத்தார். ஏனைய விலங்கினங்களை யெல்லாம் ஒன்று சேர்த்துச் சிறுகுருளைகள் என உரைத்தார். "நற் குஞ்சரக் கன்று"கிய விசாயகப்பெருமானது முதன்மைபற்றிய நினைவுக்குறிப்புமாம்.

**வேடிபட இரி** - வெடித்த ஓசையுண்டாக ஓடுகின்ற. **இரிதல்** - ஓடுதல். இது சிறு குட்டிகளின் இயல்பு. இஃது எல்லாப் பிராணிகளின் இளமைக்கும் பொருந்துவதாம். இது பயமும் அன்பமும் இன்னதென்றறியாத இளமையிற் காணும் ஆனந்தக் குறிப்பு. "இளங்கன்று பயமறியாது" என்ற பழமொழியும் காண்க. முருகு என்னும் சொல், என்றும் மாறு இளமையுடையோனாகிய முருகனை, ஆனந்த சொரூபனாகக் குறித்து விளையாடும் உருவத்துடன் சோமாஸ்கந்தத் திருவுருவிற் காண்பதும் இக்கருத்தை விளக்குவது. **குருளை** - விலங்கினத்தில் இளமைப் பொதுப்பெயர்.

**கரு** - கருப்பம். **பிணை**-விலங்கினத்தின் பெட்டைகளின் பொதுப்பெயர். இங்குப் **பிணை** - பெண்மான் என்றுரைகொள்வாருமுண்டு. **அடிதளர்வுறு** - கருப்பபாரந் தாங்

கியதனால் விசையில் நடக்கமுடியாமற் கால் தளர்ந்து சேர்கின்ற. **அணைவுறும்** - இவர் களிடம் அடைக்கலம் புகுவதுபோல அணைந்த என்றதும் காண்க.

**கோடியன எதிர்முடுகியும் கோலுபுரி** - கொடியவாகிய விலங்குகளே எதிர்த்துச் சென்றும் கொல்கின்ற இவர்கள் இக் கயமுனி, குருவே, பிணை என்றிவை இலகுவிற்கிட்டிய போதிலும் கொலைசெய்யார் என்பது. **எதிர்முடுகியும்**-அவை தம்முன் விரைந்து சேர்ந்தபோதிலும் என்றுரைப்பதுமொன்று. உம்மை எச்சம்.

**உறு கோலுபுரி சிலமறவோர்** - கொலை புரிவதனையே தம் இயல்பாகக் கொண்டோராயினும், கொலை புரிவதற்கே இங்கு உற்றோராயினும், அது செய்தற்குரிய சிலையேந்தியோராயினும், அறமின்றி மறமேபூண்டாராயினும் என விரித்துக்கொள்க.

736. இவ்வகைவரு கொலைமறவினை யெதிர்ங்கிகழ்வுழி யதிரக்
கைவரைகளும் வெருவுறமிடை காணெழுவதொ ரேனம்
பெய்கருமுகி லெனவிடியொடு பிதிர்கனல்விழி சிதறி
மொய்வலிகளை யறகிமிர்வுற முடுகியகடு விசையில். அ

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறுக வருகின்ற கொலையாகிய மறத்தொழிலுடைய வேட்டை எதிரே நிகழாகிற்கும்போது, யானைகளும் அஞ்சும்படி செருங்கிய காடும் அதிருமாறு எழுவதாகிய ஓர் பன்றி இடிக்குரலோடும் மழைபெய்யும் கரியமுகில் போல முழக்கம்செய்து பிதிர்ந்த கண்களினின்றும் கனல் உமிழ்ந்து, மொய்த்த வலிகள் அறும்படி கிளம்பி மிகுந்த விசையோடு ஓடிற்று.

(வி - ரை) **கொலை மறவினை** - கொலையாகிய மறவினை. "அறவினை யாதெனிற் கொல்லாமை" என்பவாகலின், அதற்கெதிர்மறை **மறவினையாயிற்று. கான்அதிர எழுவது** எனக்கூட்டுக. **கைவரை** - யானை. காடே குடியாக வாழும் யானைகளும் அஞ்சும்படி மரச்செறிவுடைய காடு. இது காட்டின் செறிவும் பெருமையும் உணர்த்தியது. "மந்தியு மறியா மரன்பயி லடுக்கத்து" என்றதுபோலக் காண்க. **மிடை** - அடர்ந்த. **கான்** - காடு. **கைவரைகளும் வெருவுற எழுவதோர் ஏனம்** எனக் கூட்டியுரைப்பாருமுண்டு.

**பெய்கருமுகில்** - **பெய்** - மழை பெய்யும். சூல்கொண்ட என்க. **கருமுகில்** - மழை பெய்யும் வெண்முகிலு முளதாகலின் அதினின்றும் பிரிக்கக் கருமுகில் என்றார். பிறிதினியைபு நீக்கிய விசேடணம். வெண்முகில் மழை பெய்வதனை "ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரக் தெங்கும் பெய்யு மாமழைப் பெருவெள்ளம்" என்ற ஆளுடைய நம்பிகளது தேவாரத்தா னறிக.

**இடியொடு** - **இடி** - உரும் எனக்கொண்டு **பெய்கருமுகில்** எனவும், **இடி** - இடித்தல், முழக்கம்-எனக்கொண்டு **இடியொடு கனல் சிதறி** எனவும் இரண்டிடத்துங்கூட்டியுரைக்க நின்றது. **இடி** எனத்தின் உரப்புதலாகிய முழக்கத்துக்கும், **கருமுகில்** அதன் நிறத்திற்கும் உவமம். வினையும் உருவும் பற்றிய உவமம். இது இச்செய்கையிற்றிண்ணனுரைக் காளத்திமலை சேரச்செய்து உலகுக்கு அன்பு மழை உதவக் காரணமாயிற்றுதலின் பயன் பற்றிய குறிப்புவமமுமாம்.

**பிதிர்விழி கனல் சிதறி** - கோபத்தாலும் ஓடும் வேகத்தாலும் கண் பிதிர்ந்து சிவந்து பொறிபறந்து. இதுபற்றி முன் 624 லும் பிறவிடத்தும் உரைத்தவை பார்க்க. கண்பிதிர்தல் அதிக கோபத்தால் தன்னிலைவிட்டு வெளிப்படத் தோன்றுதல். மேகங்கள் கீர்சுமந்து கூரும்போது அவற்றில் தீயின்கூறு உடைய மின்னற்சத்தி எதிரெதிர் கூர்ந்து தாக்கிக் கலக்கும். அப்போது பேரொளியும் பேரொலியும் உடன்உண்டாவன. இவ்வாறு ஒரு காலத்தில் ஒரு இடத்திற்றோன்றும் இரண்டில் பேரொளி மின்னல் எனவும், பேரொலி இடி எனவும் பெயர்பெறும். ஆதலின் அக்குறிப்பும்பெற **இடியொடு கனல் - சிதறி** என்றார்.

மோய்வலைகள்-"நீளிடைப் பிணித்து...காடு காவல்செய்" தமைத்தவலைகள்(724).

மோய்த்தல் - நெருங்குதல். ஒன்றேடொன்று நெருங்கப் பிணித்துக் கட்டுதல்.

**அறநிமிர்வுறற** - அறும்படி மேற்கிளம்பி வலித்து. மிக்க கோபத்தோடு மேல் எழுந்து நிமிர்வுறுதலால் வலைகள் அறுபட்டு வழிதா என்க. **வலைகள்** - ஐ - அசை.

**கடு விசையில் முடுகியது** எனக் கூட்டுக. இம்மூன்று சொற்களும் வேகங் குறிப்பன. மிகுதி பற்றி மூன்றும் புணர்த்துக் கூறினர். **முடுகிய** - முடுகியது, விரைந்தோடிற்று. தவ் விகுதி தொக்கு நின்ற வினைமுற்று. இவ்வாறன்றி **முடுகிய** என்றதனைப் பெயரெச்சமாகவே கொண்டு மிக்க **விசையிற்போம் அதுதனை** என வரும்பாட்டுடன் தொடர்த்து பொருள்கொள்வாருமுண்டு. 87

737. போமதுதனை யடுதிறலொடு பொருமறவர்க ளரியே
றுமவர்தொடர் வறும்விசையுட னடிவழிசெலு மளவிற்
றுமொருவரு மறிகிலரவர் தனிதொடர்வுழி யதன்மேல்
ஏமுனையடு சிலைவிடலொக ளிருவர்களடி பிரியார், அஅ

738. நாடியகழல் வயவர்களவர் நாணனுநெடு வரிவிற்
காடனுமெனு மிருவருமலை காவலரொடு கடிதிற்
கூடினர்விடு பகழிகளொடு கொலைஞமலிகள் வழுவி
நீடியசரி படர்வதுதரு நீழலின்விரை கேழல். அக

737. (இ - ள்) வெளிப்படை. போகின்ற அதனைக் கொல்லும் வன்மையோடு பொருகின்ற வேடர்களுக்கு ஆண்சிங்கமாகிய திண்ணனார் தொடர்ந்து பிடிக்கும் விசையோடு அது செல்லும் அடியின் வழிபற்றிப் போகும்போது மற்றை வேடர்கள் தாம் ஒருவருமறிந்திலராகத், தாம் தனியாகவே அதனைத்தொடர்ந்து செல்லும்போது, அம்பினால் வேட்டைமுனையில் அடுகின்ற வில்லையுடையவர்களாய் அத்திண்ணனாரை அடி பிரியாதவர்களாய் உள்ள காளைப்பருவமுள்ள வேடர்கள் இருவர், அஅ

738. (இ - ள்) வெளிப்படை. நாடிய கழல்கட்டிய வீரர்களாகிய நெடிய வரிவில்லுடைய நாணனும் காடனும் என்னும் அவர்களிருவரும் மலைகாவலராகிய திண்ணனாரொடு விரைவிற் கூடினராகி விடுகின்ற அம்புகளையும் கொலைபுரியும் நாய்களையும் தப்பி, நீண்ட மலைச்சாரியில் மாங்களின் நீழலில் விரைவுடைய அப்பன்றி படர்வதாயிற்று. அக

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

737. **(வி - ரை) மறவர்கள் அரி ஏறு ஆம் அவர்** - திண்ணனார் மறவர்களின் தலைவர் என்றபடி. வயக்கோளரி யேறன்ன (705) என்றது காண்க. விலங்குகட்கெல்லாம் தலைமைபெற்று, அவசியம் சேர்ந்தவிடத்து எவ்விலங்கையும் கொல்லும் வன்மையுடையது அரியாதலானும், இங்கு ஏனம் மிக்க வலியினும் விசையினும் சென்றாலும் அதனை விடாது தொடர்ந்து கொல்கின்ற தருணமாதலானும் அரியேறு என்றார்.

**தொடர்வறும் விசையுடன் அடிவழி செலும் அளவில்** - அது செல்லும் விசையளவு விசையுடன் இவர் போகாவிடின் செறிந்த கானில் அது முன்னர் ஓடி மறைந்து விடும்; அதன் அடிவழியொட்டிச் செல்லாவிடினும் மரச்செறிவில் அதனைக் காணுதல் இயலாது; ஆதலின் விசையுடன் அடிவழி சென்றார். "இதன்பின் இன்று காதங்கள் பலவந் தெய்த்தோம்" (741) என்றபடி பல காதங்களினளவும் கானில் ஓடிச் செல்கின்றாராதலின் அதன் அருமைபுலப்பட இவ்வாறு கூறினர். அடுதிறலொடு செலுமளவில் என்று கூட்டுக.

**தாமொருவரும் அறிகிலர்** - பொருமறவர்களில் ஒருவரும் தம் தலைவர் சென்றதை அறிந்திலர். வேட்டைக்காட்டில் அவர்கள் பலரும் பலவிடத்து வேறுவேறு விலங்குகளை வேட்டையாடும் வினையில் முயன்றுநின்ற ராதலின் அறிந்திலர் என்பதாம். அன்றியும் அவர்கள் பொருதற் றொழிலிலே அமைந்த மறவர்களாய்நின் றொழிவார்களன்றி, அறவர்கள் நாயகமாய்ச் சென்று இறைவரைக்கூடும் தமது தலைவரின் தன்மையை அறியகில்லார் என்ற குறிப்புமாம். அவர்கள் இதற்குமுன்னும் அவர் தங்களுடன் பதினொருண்டு வாழ்ந்து பழகியும் அவரை அறிகிலர். பின்னும் அறியகில்லார் (802)* "என்னை ஒருவரு மறியீராகில்" (211) என்று கிழவேதியராகி வந்த இறைவன் கூறிய கருத்தும் இங்குக் குறிப்பிற்றொனிப்பது காண்க.

**தாமே அதனைத் தனி தோடர்வுழி அதன்மேல்** - தனித்துத் தொடரும்போது அதனை. **அதன்மேல்**-மேல் என்னும் எழனுருபு இரண்டனுருபின் பொருளில்வந்தது. **ஏ** - அம்புகொண்டு. **முனை அடுசீலை** - முனையில் அடும் சீலை. எவும் என்றது **ஏம்** என விகாரப்பட்டுநின்றதென்றுரைப்பாருமுண்டு.

**இருவர்கள் அடிபிரியார்** - இவரை அடிபிரியாது பின்பற்றும் மெய்காவலாளர்கள். இவர்களும் அந்த எனத்தைக் குறிவைத்துப் பின்றொடர்ந்து இவரைப் பிரியாதவர்களாய். எனைமறவர்களறியார்களாயினும் இவ்விருவரும் அடிபிரியாராதலின் அறிந்து அதன்மேற்சென்று அவரொடு **கடிதில் கூடினர்** என வரும்பாட்டுடன்கூட்டி முடித்துக்கொள்க. **பிரியார்** - பிரியாதவர்களாகியுள்ளவர். வினையாலணையும் பெயர்.

**அரியேதாமவர்**—என்பதும் பாடம். 88

738. (வி - ரை) **நாடிய** - தேர்ச்சியுடைய. **கழல்** - காலணி மணிவடம் - வீரக்கழல். **வயவர்கள்** - வெற்றியுடையோர். **விடலைகள்** - இருவர் - அடிபிரியார் - வயவர் - நாணனும் - காடனும் எனும் - அவர் - இருவரும் - கூடினர் - விடு - பகழிகள் - என்று கூட்டுக.

**நாணன் - காடன்** - வேடர் பெயர் வைக்கும்முறை காண்க. திண்ணன் - நாகன் என்பவற்றிற்கேற்ப இவையும் அமைந்தன.

**நெடு வரி வில்** என்னும் அடைமொழிகளை நாணனுக்கும் கூட்டியுரைக்க. நெடு நிலைத்தீபம். மேற்பாட்டில் **ஏழனையதீசீலை** என்றது அவர்கள் பன்றியை அம்புகொண்டு எய்யக் குறிவைத்ததனையும், இங்குக் கூறியது அவர்களது உபாங்கத்தியல்பையும் குறித்ததனால் கூறியது கூறலாகாமையுணர்க.

**மலைகாவலர்** - மலைகாவல் பூண்டவர். முன்னைநாளில் மலைகாவல்புரியும் பட்டத்தைச்சூட்டிக்கொண்ட திண்ணனார். பட்டஞ்சூட்டிய அன்று " மலையர்குலக்காவல் பூண்டு" (702) என்று நாகன் கூறியதும் காண்க. அரசரிமை என்பது காவல்செய்தலேயாம் என ஆசிரியர் காட்டியது காண்க. மேலும் இவர் (காளத்தி)மலையின் காவலரேயாகின்ற நிலையும் குறிப்பாலுணர்த்தினர்.

**கூடினர்** - சேர்ந்தனராகி. கூடினராய் விடும்பகழிகள். முற்றெச்சம்.

**கோலை ஞமலிகள்** - இவை வேட்டைக் காட்டில்நின்ற நாய்கள். 784 பார்க்க. பொருமறவர்களில் அடிபிரியாத இவ்விருவர் ஒழிய எனையோர் அறிகிலர். கோலை ஞமலிகளும் தொடராது வழுவின. ஆனால் அடிபிரியாத காரணத்தால் விரைவிற்கூடிய நாணன் காடன் எனும் இருவிடலைகள்போல அடிபிரியாததொரு ஞமலியும் திண்ணனாருடன் தொடர்ந்துவந்தது. திண்ணனார் திருக்காளத்திசேர்ந்த பின்னர் இவர்கள் யாவரும் அகன்றுவிடவும் அஞ்ஞமலி அவரை அகலாது உடன்றொடர்ந்து நின்றது என்பதீண்டுணர்த்தற்பாலதாம். "செருப்படியும் நாயடியுந் திருவலகான் மாற்றியபின்" (787) என்பது காண்க. " வேடுவன் நாயொடும் புகுந்து " என்ற நக்கீரர் அருளிய திருக்கண்ணப்பதேவர் திருமறமும் காண்க.

**நீடிய சரி தருநீழலின் விரைகேழல் படர்வது** என்க. சரி - மலைச்சாரல். தரு - மரங்கள். நீழல் - மரங்கள்செறிந்து நீண்டு வளர்ந்தமையால் நீழலும் மிக்கது. அவ் விருண்ட நீழலைத்துணையாக்கொண்டு விரைந்து கேழல் படர்வதாயிற்று. தருநீடியவாக லின் நீழலும் நீண்டு, நீழல் என்றுயிற்று. இவர்கள் சென்ற நேரம் நீண்டநிழல்தரும் காலையின் முன்னேரமாயினதும் நினைவு கூர்க. கேழல் - பன்றி. கேழலுக்குத் துணை யாய் நின்றதென்ற குறிப்புப்பெற நீழல் எனச் சந்தம்படவும் கூறினர். 89

739. குன்றியைநிகர் முன்செறவெரி கொடுவிழியிடி குரனீள்
பன்றியுமடல் வன்றிறலொடு படர்நெறிநெடி தோடித்
துன்றியதொரு குன்றடிவரை சுலவியசெறி சூழற்
சென்றதனிடை நின்றதுவலி தெருமரமர நிரையில். கூ○

(இ - ள்) வெளிப்படை. குன்றிமணியைப் போன்றனவாய் முன்னே பிதிர்ந் தனவாய்ச் செறும்படி எரிகின்றனவாய்க் கொடியனவாகிய கண்களையும, இடி போன்று முழங்கும் குரலையும் உடைய நீள்பன்றியும் மிக்க வலிய திறமையுடன் ஓடுகின்ற வழியிலே நெடுந்தூரம் ஓடிப் பொருந்தியதொரு குன்றினடியில் மலையிற் சுற்றுவிக்குமொரு சூழலிலே போய் மேலும் செல்ல வலியிழந்து அங்குள்ள மரக்கூட் டத்தினிடை நின்றது.

(வி - ரை) **குன்றியை.....விழி** - **குன்றி** - குன்றிமணி. உருண்டு பசந்த சிவப் பினிடையிற் கரியகண்மணி பிதிர்ந்து தோன்றலாற் குன்றிமணியை ஒத்ததென்றார். மெய்யும் உருவும்பற்றி வந்த உவமம். சினத்தாற் சிவந்த கண்ணெடு சென்றதாதலின் **செறவெரி கொடுவிழி** என்றார். குன்றியை நிகர்விழி, எரிவிழி, கொடுவிழி என அடை மூன்றும் விழியோடிசையும். முன்னரும் **கனல்விழி சிதறி** (736) என்றார். **முன்செற** என்றது கண் பிதிர்ந்த நிலை குறித்தது. நெடுந்தூரம் ஓடியதனால் பின்னரும் பிதிர்ந்து சிவந்ததாம். **இடிகுரல்** - அச்சம் சினம் முதலியவற்று லூப்புண்டபோது பெருங் குரலால் உரப்பிக்கொண்டே போதல் பன்றியினியல்பாம். இதுபற்றியே முன்னரும் **கநமுகில் இடிகுரல்** (736) என்றது காண்க.

**நீள்பன்றி** - நீண்ட உடலுடைய என்க. இவ்வளவும் நீண்ட தூரம் ஓடிய என் றலுமாம்.

**அடல் வன் திறலொடு** - **அடல்** - **வன்(மை)** - **திறல்** - மூன்றும் வலிமைப் பொருள்பற்றிய ஒரு பொருட்பன்மொழி ; மிகுதி குறித்து நின்றன.

**படர்நெறி நெடிது ஓடி** - பலகாதங்கள் (741) செறிகானில் மிக்க விசையில் ஓடி - இத்தனை தூரமும் இவர்களைத் தப்பித் தன்னுயிர் காக்க ஓடிய திறலுடைமையால் **அடல் வன் றிறல்** என விதந்து ஓதினர்.

**துன்றியது ஒரு குன்று அடி** - அங்குப் பொருந்தியதாகிய ஒரு குன்றின் அடியில். **குன்று** - பெருமலைச்சரியில் இளைத்த சிறுமலை. **வரை சுலவிய செறி சூழல்** - மலையில் சார்ந்தாரை மீள அறியாது சுழலவைக்கின்ற வழியுடைய ஒரு அடர்ந்த சோலையில்.

**வலிதெருமர** - மேலும் ஓடுதற்கு ஏற்ற உடல் வலியில் இளைத்தலால். நின்றதற்குக் காரணங் கூறியபடி. **தெருமர மாநிரையில் நீன்றது** என மாற்றுக. **தெருமரல்** - இளைத் தல் - எய்த்தல். **மாநிரை** - மரச்செறிவில். **நீன்றது** - மேல் ஓடமாட்டாது நின்றது.

**நெறிசூழல்** எனவும், **வழிதெருமர** எனவும் பாடங்கொண்டு மேற்செல்ல வழிசுழல என்றுரைப்பாருமுண்டு. காட்டில் வாழும் பன்றி முதலியவை செல்ல வழியின்றி நிற்றல் இயல்பன்றுதலானும், **சுலவு சூழல்** என்றதனால் சுற்றிச் சுழல்விக்கும் வழி யுடையதென்பது பெறப்படுதலின் மேலும் **நெறி** என்றும் **வழிதெருமர** என்றும் கூற

வேண்டாமையானும், சுழலிடை அதன் நிலையறிபவர் என வரும்பாட்டிற் கூறுதலானும் அவை பாடமன்றென்பது. 90

740. அத்தருவளர் சுழலிடையடை யதனிலையறி பவர்முன்
கைத்தெரிகணை யினிலடுவது கருதலர்விசை கடுகி
மொய்த்தெழுசுடர் விடுசுரிகையை முனைபெறவெதி ருருவிக்
குத்தினருடன் முறிபடவெறி குலமறவர்க டலைவர். கூக

(இ - ள்) வெளிப்படை. கொலைச்செயல் பூண்ட மறக்குலத்தவர்களின் தலைவராகிய திண்ணனார் அந்த மரங்கள் வளர்ந்த சூழலினிடையில் அப்பன்றியின் நிலையினை முன் அறிந்தவராய்த் தமது கையிற்றெரிந்து எய்யும் அம்புகளினால் எய்துகொல்ல எண்ணுதவராய் வேகத்தால் அதனை அணுகி நேர்ப்போர் பெறுமாறு மொய்த்து எழுகின்ற ஒளிவிடும் உடைவாளை எதிரில் உருவி அதனுடல் துண்டம்படுமாறு குத்தினர்.

(வி - ரை) அத்தருவளர் சுழல் - மேற்பாட்டில் சுலவிய செறிசூழல் என உரைத்த அந்தச் சோலை. சுழல் - மரங்களாற் சூழப்பட்ட இடம். சுழல் - சூழல் என்றுமியற்று.

அதன்நிலை முன் அறிபவர் - எனமாற்றுக. அது நிற்கு நிலையை முன்னர் அறிந்தவராதலின். அறிந்தவர் என்பது அறிபவர் என இயல்பாகக் காலம்மயங்கி வந்தது. முன் - இவ்வாறு தப்பி ஓடிய பிராணிகள் பின்னர் ஓடாது நிற்குநிலையை முன்பழக்கத்தாலும் இப்போது அப்பன்றியின்பின் நெடுந்தூரம் ஓடிவந்த முன்அனுபவத்தாலும். நிலை - மனநிலையும் உடல் நிலையும்.

கைத்தெரி கணையினி லடுவது கருதலர் - தேர்ந்து எடுத்த அம்பினால் எய்து கொல்ல நினைத்தாரிலர். தனக்குக் கேடு வருவதனை அறிந்த பிராணிகள் முதலில் உயிர்க்குத் தப்பி ஓடும்; அஃதியலாதபோது எதிர்த்துப் பாய்ந்து தனக்குக் கேடுசூழ மதனை அடர்த்துத் தப்ப முயலும். இஃது பிராணிகளி னியற்கை. இதனை முன்னர் அறிவாராதலின் அப்பன்றி எதிர்த்துத் தம்மேற் பாய நின்ற நிலையில் அதனை நேர்முகமாகக் கிட்டிமற்போர் செய்வார்போலச் சுரிகையாற் குத்துவதன்றித் தூரத்திலிருந்து அம்பு எய்வது வீரத்துக் கிழுக்காம் என்றெண்ணி யதனைற் கணையினில் அடுவது கருதாராயினர் என்பதாம். கைக்கணை - தெரிகணை எனக் கூட்டுக. கணையினில் - இல் - மூன்றனுருபின் கருவிப்பொருளில் வந்தது.

சுரிகை - சுடர்விடும் என்ற அடைமொழி வேட்டைவினைக்காகக் கூர்மைப்படுத்திய நிலைகுறித்தது. சுரிகை அணுக்கப்போரிலும், வில், அம்பு செய்மைப் போரிலும் பயன்படுவன. இது பற்றியே வேட்டைக்கு வருவார் இதனையும் தாங்கி வந்தனர். 710 பார்க்க. இச்சுரிகை இவர் தந்தை நாகன்பாற்பெற்ற அரசஅடையாளமுமாம். எவ்விலங்கையும் அணுகிப் பிளந்து வெல்வது விலங்கி னரசாகிய சிங்கத்தின் தன்மை. அது போல அரச இலக்கணம்பெற விசையிற் கடுகிச் சுரிகையாற் குத்தினர் என்றார். " அரியேறுமவர் " (737) என்றது காண்க.

முனைபெற - நேர்முகப் போர்நிலையினைப் பெறுமாறு. எதிர் - எதிர்முகமாய் நின்று. உடல்முறிபடக் குத்தினர் எனக்கூட்டுக. குத்தும்செயல் முன்னரும் அதன் விளைவாகிய உடல் முறிபடும் செயல் பின்னரும் நிகழ்வனவாதலின் அந்நிகழ்ச்சி முறையில் வைத்தார்.

எறி மறவர் என்க. எறிதல் (கொல்லுதல்) இவர் வாழ்க்கைத்திறம். " குற்றமே குணமாவாழ்வான் " - "கொல் எறி குத்தென்றூர்த்துக் குழுமிய வோசை" (614) என்றவைகாண்க. எறிதல் தூரத்தினின்று எறியும் அம்புமுதலிய படையினு னிகழ்த்துவது. எறிமறவர் என்றதனால் ஏனைவேடர் பெரும்பாலும் விலங்குகளை அணுகாது தூரத்திருந்து எறியும்செயலுடையார் என்ற குறிப்பும், தலைவர் என்றதனால் அவர்கள்

போலல்லாது இவர் வீரத்துடன் அணுகி எதிர்நின்று சுரிகையாற் குத்தினர் என்ற குறிப்பும் காண்க. 730 பார்க்க. 91

வேறு

741. வேடர்தங் கரிய செங்கண் வில்லியார் விசையிற் குத்த
மாடிரு துணியாய் வீழ்ந்த வராகத்தைக் கண்டு ஞாணன்
" காடனே ! யிதன்பின் னின்று காதங்கள் பலவந் தெய்த்தோம்;
ஆடவன் கொன்ரு னச்சோ !" வென்றவ ரடியிற் ரூழ்ந்தார். கூஉ

(இ - ள்) வெளிப்படை. வேடர் தலைவராகிய கரியமேனியும் செங்கண்ணு முடைய திண்ணனூர் விசையிற் குத்தியதனாலே பக்கத்தில் இரண்டு துண்டமாய் விழுந்தபன்றியை ஞாணன் கண்டு, "காடனே ! இன்று இதன் பின்னே பலகாதங்கள் வந்து களைத்தோம். ஆண்மகனுகிய இவர் கொன்ரூர். அச்சோ "! என்று கூறி இருவரும் அவரடியிலே வணங்கினூர்கள்.

(வி - ரை) **வேடர்தம்...வில்லியார்** - சிலவேடர் என்றபடி. வேடர் எல்லாரும் வில் ஏந்தியவர்களேயாயினும் அவர்க்குள் இவர்க்கே வில்லின் தலைமை பொருந்திய தென்பதாம். **வில்லியார்** - வில்லவர்க்குள் எல்லாம் மிக்க வில்லவராகிய தலைவர் என்ற பொருளில் வந்தது. வில்லுக்கு விசயன் என்றபடி முற்பிறப்பிலே வில்வித்தை யிற் ரூலைவராய் நின்றதும் குறிப்பு. வில்லியார் தனிவேட்டை (783) என்றும், மேலும் பலவாறு இவர் வில் ஏந்தியதனை விதந்து ஓதுதல் காண்க. " வரிந்த வெஞ்சிலைக்கு மண்மகித்த வீரனே " என்ரூர் வில்லிபுத்தூராரும். (13-ம் நாள் போர்)

**வில்லியார் விசையிற் குத்த** - தமக்கு அதனால் எவ்விதக் கெடுதியும் நேராதபடி தூரமிருந்து எய்து கொல்லக் கூடிய வில்லும் அம்பும் இருக்கவும் வீரத்தாற் போர் அறங் கருதி அணுகச்சென்று சுரிகையாற் குத்த என மேற்பாட்டின் கருத்தை அனுவதித்துக் கூறியது அதனைப் பாராட்டி வற்புறுத்தற் பொருட்டு.

**ஞாணன்** - அவரது அடிபிரியாத மெய்காவலர்களாகிய இருவருள் ஞாணன் அவர் பால் அணுக்கத்தொண்டும் துணிச்சலுங் கொண்டவன் ஆதலின் அவன் இவ்வாறு கூறுகின்ரூன்.சரிதப் பின்னிகழ்ச்சியில் காடன் முகலியாற்றங் கரையில் தீக்கடையவும் பன்றியை வதக்கிப் பாதுகாக்கவும் உள்ள தாழ்ந்த பணியாளனுய் நிற்க, ஞாணன் திண்ணனூர்க்கு முன்சென்று காளத்திமலைமேல் வழிகாட்டவும், உபதேசமொழிகள் போன்ற பலவற்றையும் சொல்லவும், இறைவன்பாற் கூட்டிச் சேர்க்கவும் உயர்பணியின் ரூணையாயினன் என்பதும் காண்க.

**இன்று காதங்கள் பல வந்து எய்த்தோம்** - பல - இரண்டுக்கு மேற்பட்டவை. " நல்லற நூல்களிற் சொல்லறம் பல; சில, இல்லறந் துறவற மெனச்சிறந் தனவே " என்புழிச் சில என்பது இரண்டையும், பல என்பது இரண்டின் மிக்க எண்ணையும் உணர்த்திநிற்றல் காண்க.வடமொழியில் ஒன்று - இரண்டு - அதன் மேற்பட்டவை எனக் குறிக்க ஒருமை - இருமை - பன்மை என வகுப்பர். இது சிறுபான்மை தமிழிலும் வழங்கும். காதம் - பத்து நாழிகை யளவு கொண்டது. எனவே இங்குத் திண்ணனூரும் வேடர்க ளிருவரும் பன்றிப்பின் மூன்று காதங்களுக்குக் (30 நாழிகை தூரத்துக்கு) குறையாமல் ஓடி வந்துள்ளார் என்று ஊகிக்கலாம். விடலைகளாகிய இவர்கள் **பின் வந்து எய்த்தோம்** என்றதனாலும் இவர்கள் நெடுந்தூரம் ஓடிவந்து பின்பற்றித் தொடர மாட்டாது இளைத்தமை தணியப்படும்.

**ஆடவன் கொன்றன் அச்சோ !** - விடலைகளாகிய அவ்விருவரும் எய்த்துப் பின் வரவும், இவர் சிறிதும் இளைக்காது முன்னே விசையிற் கடுகிச்சென்று பன்றியைக் குத்தி வீழ்த்தினது இவரது வீரமும் உடல் வலிமையும் குறித்தது. இதனாலே அவ் விடலைகளிருவரும் அற்புதமுற்று " முன் பலமுறை வேட்டையிற் பழகிய நாம் எய்த்

அப் பின்னடைந்தோம். ஆனல் முதல் வேட்டை (கன்னிவேட்டை)யில் வந்த இவர் முன்சென்று கொன்றார்! இவரே ஆடவர்!" என்று போற்றி வணங்கினர் என்க. **ஆடவன்** - ஆண்தன்மை மிக்கவன். **அடியிற்றாழ்ந்தார்** - வியந்து போற்றும் முறை. **அச்சோ** - ஆச்சரியச்சொல். 92

742. மற்றவர் திண்ண னார்க்கு மொழிகின்றார் " வழிவந் தாற்ற
வுற்றது பசிவந் தெம்மை யுதவிய விதனைக் காய்ச்சிச்
சற்றுநீ யருந்தி யாழும் தின்றுதண் ணீர்கு டித்து
வெற்றிகொள் வேட்டைக் காடு குறுகுவோ மெல்ல " வென்றார். கூகூ

(இ - ள்) வெளிப்படை. மேலும் அவர்கள் திண்ணனாரை நோக்கிச் சொல்கின்ற வர்களாய், " வழிநடந்து வந்ததனலே மிகப் பசிவந்து எம்மைப் பொருந்தியது; (ஆதலின்) உதவிய இப்பன்றியைக் காய்ச்சி நீ சிறிது அருந்தி, நாங்களும் தின்று தண்ணீர் குடித்து வெற்றிகொள்ளும் வேட்டைக்காட்டை மெல்லச்சென்று அடைவோம்" என்று சொன்னார்கள்.

(வி - ரை) **மற்று** - அங்ஙனம் வியந்து கூறியதனை விடுத்து மேலும். **மற்று**-வினை மாற்றுப் பொருளில் வந்தது. **அவர்** - அவ்விருவரும். மற்றவர் என ஒரு சொல்லாகக் கொண்டு உரைப்பாருமுண்டு. **மொழிகின்றார்** - சொல்வாராகி. முற்றெச்சம். மேற் பாட்டில் நாணன் ஒருவன் பேசினன். இங்கு இருவரும் சொன்னார்கள் என்க.

**வழிவந்து** - வழியின்கண் வருதலால். ஏழனுருபுதொக்கது. **வந்து** - வினையெச்சத் திரிபு ; காரணப் பொருள் தந்தது.

**ஆற்ற பசிவந்து எம்மை உற்றது** - எனக் கூட்டுக. **ஆற்ற** மிகுதியாய். **உதவிய** - கைக்குக் கிட்டியதாகிய. **நீ கொன்று தந்த** என்றலுமாம். **இதனை** - இப்பன்றியினை. **காய்ச்சி** - தீயில் வதக்கி. வதக்கிப் பக்குவப்படுத்தும் முறை 767 - 774 - 795 முதலிய பாட்டுக்களில் விரித்திருத்தல் காண்க.

**சற்று நீ அருந்தி யாழும் தின்று** - சுவைக் கலப்புக்குரிய உயர்ந்த மான் முதலாகிய வேறு ஊனும் தேனும் பிறவும் ஈங்கு இல்லையாக, இது தாழ்ந்த பன்றியிறைச்சியொன்றே யாதலானும், இவர் இளமை, வீரம், முதலிய திண்மை படைத்தமையால் தம்மைப் போல் எய்ப்பில்லாது நின்றாராதலின் உணவு வேட்கை அதிகமிலர் என்றமையாலும் பிறவாற்றலும் இப்பன்றி யிறைச்சியை இவர் மிக உண்ணார் என்று கருதி, **நீ - சற்று - அருந்தி** என்றும், **யாம்** அவ்வாறன்றி வயிறு நிறைய இவ்வோரிறைச்சியினையே மிகுதி யும் தின்போம் என்ற குறிப்புப்பெற **யாழும் தின்று** என்றும் கூறியவற்றின் நயமும் சொல்லாற்றலும் பொருட்செறிவும் காண்க. **நீ** - நீயும் - உம்மை தொக்கது. **யாழும்** - எச்சவும்மை. **அருந்தல்**-பொதுவினை. **தின்னல்**-சால்வகை உண்டிகளில் ஒன்று. இரண் டும் உணவு உட்கொள்ளுதல் என்று பொருள்பட்டுச், சுவை பார்த்து அளவுபடச் சிறிது உண்ணுதலுக்கு **அருந்தல்** என்றும், அளவுபடாது மிகுதிபடப் பெருந்தீனியாய் உண்ணுதலுக்குத் **தின்னுதல்** என்றும் வழங்கும். தலைவர் உண்டபின் பணியாளர் உண்ணுமுறை குறித்ததும் காண்க. உயர்ந்தோரை அருந்துக என்பதும், தாழ்ந்தோ ரைத் தின்க என்பதும் வழக்கு.

**தண்ணீர்குடித்து** - உற்றதுபசி என்று பசியைமட்டும் கூறினுரேனும் அதனேடு உடன்வருவதாகிய தாகமும் இனம்பற்றி அறிந்துகொள்ளப்படுமாதலின் தாகம் உற்றது என்று சொல்லாமலே தண்ணீர்குடித்து என்றனர். "வைகிருளின் புலர்காலே" (705) யில் வேட்டைக்காட்டுக்குப் போந்த இவர்கள் "கதிரவனுச்சி நண்ண" (750) உள்ள இதுநேரம்வரை வேட்டைவினைமுயன்றும், ஓடியும் கடுங்கானிற் கடுவெயிலில்அலைந்த ராதலின் பெரும்பசியோடு கடுந்தாகமுங்கொண்டனர் என்க.

வேற்றிகோள் வேட்டைக்காடு-மீதூர்கின்ற விலங்கினங்களை மாற்றூர்களாகவைத்து வேட்டையைப் போர் என்றும், வேடர்களைச் சேனை என்றும் கூறியதற்கேற்ப வேற்றி கோள் என்றார். வேற்றி-விலங்கினம்எவையும் இவர்களது குறியினிற்றப்பாதமடிதலும், அவை ஒன்றும் இவர்க்கு எவ்வகை ஊறுஞ்செய்ய வலியிலாதொழிதலும், மொய்வலை களை அறுத்து நெடிதோடிய இப்பன்றியும் அணிக்கப்படுதலும் ஆகியவற்றால் இக் கன்னிவேட்டை வெற்றிகரமாக நிகழ்ந்தமைகுறித்தது.

வேட்டைக்காடு - இவர்கள் வேட்டைக்காக வளைத்துச் சூழல்செய்த பரப்புடைய காடு. 721 - 722 - 723 - 725 பார்க்க.

குறுகுவோம் மெல்ல - களைப்பின்மிகுதியானும், உண்டபின் கடியநடைகூடாமை யானும், வேட்டைவினை வெற்றிபெற்று முடிந்தமையானும் இவ்வாறு கூறினர். முன் னர் ஓடிவந்த கடியவேகத்தில்செல்லுதல் இனி அவசியமில்லை என்றபடி. அவர்களது இளைப்பும் மனவெழுச்சியின்மையும் விரைவின்மையும் குறிப்பார் மெல்லக்குறுகு வோம் என்னாது குறுகுவோம் மெல்ல என்று மாற்றிக் கூறினர். 93

743. என்றவர் கூற நோக்கித், திண்ணனார் "தண்ணீ ரெங்கே
நன்றுமிவ் வனத்தி னுள்ள?" தென்றுரை செய்ய, நாணன்
"நின்றவிப் பெரிய தேக்கி னப்புறஞ் சென்று னீண்ட
குன்றினுக் கயலே யோடுங் குளிர்ந்தபொன் முகலி" யென்றான். கூச

(இ - ள்) வெளிப்படை. அவர்கள் இவ்வாறு சொல்லத், திண்ணனார் அவர்களை நோக்கி "இவ்வனத்தினுள்ளேயும் தண்ணீர் எங்கே நன்று உள்ளது?" என்றுகேட்க, "முன்னேநின்ற இத்தத் தேக்கமரச்சோலையைக்கடந்துசென்றால் அங்கே நீண்ட குன்றின் பக்கத்திற் குளிர்ந்த பொன்முகலியாறு ஓடும்" என்று நாணன் சொன்னான்.

(வி - ரை) நோக்கி - அவர்கள் சொல்லியதை ஊன்றி எண்ணி என்றலுமாம்.

தண்ணீர் இவ்வனத்திலும் எங்கே நன்று உள்ளது என உம்மைபிரித்துக் கூட்டி யுரைத்துக்கொள்க. நீரில்லாத இக்கானகத்துள்ளும் குடிக்கத்தக்கதாய் நீர் நன்று காணவுள்ளதெங்கே என்றபடி. நன்று-காட்டுநீர்கள் பெரும்பாலும் குடிக்கத்தகாதவை யாயும் நோய் செய்வனவாயும் உள்ளன என்றது கருதி இவ்வாறு கேட்டார். உம்மை பலகாதமும் இக்காட்டிற் காணப்படாத நீரின் அருமை குறித்தது. இவ்வனம் என்ற தில் இகரச்சுட்டும் நாம் கண்டுபோந்த இந்த என அக்கருத்தே பற்றியது. நன்றும் - அப்படியே செய்வோம் என்றுரைப்பாரும், உம் அசை எனக்கொண்டு நன்று தண்ணீர் எனக் கூட்டியுரைப்பாரும், நன்று பெரிதென்றுரைப்பாரும் உண்டு. உரைசெய்ய - வினவ என்ற பொருளில் வந்தது.

நாணன் - இருவரையும் நோக்கிக்கேட்ட வினவுக்கு, அவருள் நாணன் விடை சொன்னான். இவ்விருவருள் இவனே அறிவும் மிக்க அனுபவமும் படைத்தவன்; காளத்திகாண நீபோதின் நல்ல காட்சியே காணும் (745) என்று திண்ணனாது அன் பையும் ஆர்வத்தையும் வளர்த்தவன். அவர் காளத்தியேறி இறைவனைக்கண்டு அணைந்து பற்றிக்கொள்ளுந்தனையும் இவனே வழிகாட்டியாகவும் உற்றதுணைக்கும் உறுதுணையாக வும் நின்றவன். மலையேறிய உச்சிநேரத்திற் கேட்ட ஐந்தாந்தூபி ஓசையை இது என்ன என்று கேட்ட திண்ணனார்க்கு "இம்மலைப்பெருந்தேன் சூழ்ந்து மதுமல ரீக்கள் மொய்த்து மருங்கெழு மொலிகொல்" (750) என்றவன். அங்கு இறைவர் திருமேனியிற் கண்ட பூவுநீரும் ஒரு பார்ப்பான் செய்த பூசைச்செயல் என்று தான் முன்னுள் கண்டு அறிந்த அறிவு கொண்டு பூசைமுறையினை இவன் உணர்த்தியவதனால் நாய னார்க்கு இனியசெய்கை இவைகொலாம் என்று கடைப்பிடித்து அவர் அரியபூசை யியற்றத் துணைக்காரணமாயிருந்தவன் (757 - 758). தம்சார்பைவிட்டொழிந்த இவரது

நிலையை "வங்கினைப்பற்றிப் போதா வல்லுடும்பு என்ன" என்று (765) உள்ளவாறு காடனுக்குச்சொல்லும் திறத்தால் இவனது அறிவின்றிறம் உணரப்படும். காகனுக்கும் வேட்டையில் ஏவலாளனாகி உற்றதுணைவனாய் அவனோடு காளத்திக்குவந்தவன் இவனே யாம் என்றதனால் இவனது தொடர்பும் முதிர்ந்த அனுபவமும் வயதும் அறியப்படும். 741-ல் உரைத்தவையும் மேல்வருவனவும் காண்க.

**நீன்ற இப்பெரிய தேக்கின்** அப்புறம் - இகரச்சுட்டு முன்னால் அணிமையில் காணப்பட்ட நிலைகுறித்தது. **நீன்ற** - முருடு, வளவு முதலியன இன்றி நேராக நீண்டுவளரும் தேக்கின்றன்மையும், **பெரிய** - அவற்றின் பருத்த அரையும் குறித்தன. **தேக்கு** - தேக்கமரச் சோலைக்கு ஆகுபெயர். முகலியாற்றின் கரையருகினில் தேக்கஞ் சோலைகள் மிகுதியாம் என்பது "சந்தமா ரகிலொடு சாதிதேக் கம்மா,முந்துமா முகலி யின் கரையினில்" என்று ஆளுடையபிள்ளையார் இதனைத் தெரியக்காட்டியருளியமை யானுமறியப்படும். **அப்புறம்** - தேக்கினுக்கு இப்புறம் இவர்களும், அதற்கப்புறத்தே காளத்திமலையும் ஆக இடையில் பெரியதேக்கு நீன்றதென்பதாம். நீன்ற-குன்றையும் முகலியையும் மறைத்துத் தடையாய் நின்ற என்ற குறிப்புமாம்.

**நீண்டகுன்று** - தொடர்ச்சியாய் நீண்டமலைவரிசையில் உள்ளதொரு குன்று என் பதாம். இடைவிட்டுவிட்டு நீண்டுசெல்லும் கிழக்குத்தொடர்ச்சி மலைகளில் ஒன்று திருக்காளத்திமலை. "குல்வரை பார்ப்பாய கயிலை" (திருவலஞ்சுழி - 8 - பிள்ளையார்).

**குன்றினுக்கயலே குளிர்ந்த பொன்முகலி** ஓடும் என்க. இளைப்பும் பசியும் நீர் வேட்கையும் போக்கிக் குளிர்ச்சிசெய்யவல்ல தென்ற குறிப்புப்பெறக் **குளிர்ந்த** என்ற அடைமொழிதந்து கூறினன். அதனை மனத்தால் எண்ணி வாக்கினாற்சொல்லிய போதே குளிர்ச்சியைச்செய்ததென்ற குறிப்பாற் **குளிர்ந்த** என இறந்தகாலத்தாற் சொன்னன். **பொன்முகலி** - இது வடமொழியிற் சொர்ணமுகி எனவழங்கப்படும். தேவாரங்களில் முகலிஎன ஆளப்பட்டுள்ளது. பொன்மையோடு ஒலியுமுடை மையின் இப்பேர்பெற்றது. முகரம் - ஒலி; முகரி - ஒலியுடையது. பேதமின்றி ரகரம் லகர மாயும் வருமாதலின் முகரி முகலிஎன வந்தது. "பொன்மையோடு, கலியுடை மையிற் பேர் பொன்மு கலியென வுரைத்துப் போனன்" (பொன்முகரிச்சருக்கம் - 58) என்ற சிகாளத்திப்புராணங் காண்க. பிறவி வெப்பமும் போக்குவது என்றதனுங் குறிப்பு.

இப்பாட்டாற் றீர்த்தவிசேடங் கூறப்பட்டது. 94

744* பொங்கிய சினவில் வேடன் சொன்னபின், "பேரோ மங்கே ;
யிங்கிது தன்னைக் கொண்டு போதுமி" னென்று, தாமு
மங்கது நோக்கிச் சென்றார்; காவத மடையிற் கண்டார்
செங்கணை றுடையார் வைகுந் திருமலைச் சாரற் சோலை. கூடு

(இ - ள்) வெளிப்படை. மேன்மேற்பொங்கிய சினமுடைய வில்லேந்திய வேட னாகிய காணன் இவ்வாறுசொன்னபின், திண்ணனார் "நாம் அங்கே போவோம்; இந்தப் பன்றியினை எடுத்துக்கொண்டு வாருங்கள்" என்றுசொல்லித், தாமும் அதனைநோக்கிச் சென்றனர். அரைக்காததூரஞ் சென்றபின் செங்கண் இடபத்தையுடைய சிவபெரு மான் எழுந்தருளிய திருக்காளத்திமலைச்சாரற் சோலைகண்டனர்.

(வி - ரை) **பொங்கிய சினவில்** - வில்லைஉடையானது சினம் வில்லின்மேல் ஏற் றப்பட்டது உபசாரம். சினவேடன் என்றுகூட்டியுரைப்பினுமமையும்.

**அங்கே போவோம்** என மாற்றுக. வினைமுற்று முன்வந்தது அவரது தீவிரங் குறித்தது. **இங்கு இதுதன்னை** - இங்குகின்றும் இப்பன்றியை. **இது** - அண்மைச் சுட்டு முன்புகிடந்த பன்றியைச் சுட்டிற்று. **இதுதன்னை** - தன் சாரியைபெற்று உரு பேற்ற சுட்டுப்பெயர்.

கொண்டு போதுமின் - பன்றியின் உடல் மிகுகனமுடையது. அச்சாதியுள்ளும் இக்காட்டுப்பன்றி வகை மிகப்பருத்துப் பெரும்பாரமுடையது என்பர். பெரும்பன்றி (791) என்றது காண்க. விடலைகளாகிய வலிய இருவருங்கூடிச் சுமக்கும் பாரமாதலின் இவ்விருவரையும் நோக்கிக் கொண்டு போதுமின் என்றார்.

தாமம் - ஆவல்கொண்ட தாமும். உம்மை இறந்தது தழுவியது.

அங்கு அது - அங்கு - சேய்மைச்சுட்டு. அப்புறம் சென்றால் என்று சுட்டிய அவ்விடம். அது - " குன்றினுக்கயலே ஓடும் " என்ற அப்பொன்முகலி யாறு. அது - நீண்ட குன்று என்றலுமாம். நோக்கி - குறித்து - குறிவைத்து. " கண்டு கொண்டே ", " கோற்பெற நோக்கி நின்றார் " (777) என்பவை காண்க.

சென்றார் - கண்டார் - சென்றதும் கண்டதுமாகிய இவை விரைவில் முடிந்தன என்பார் இவ் வினைமுற்றுக்களே அடுத்து வைத்துக் கூறினர். இச்சொற்களின் விரைவில் அரைக்காத தூரமும் கடந்தனர் என்பது.

செங்கண்ஏறு-செங்கண் - கோபங்குறித்தது. கொல்லேறு,சினவேறு,முரணேறு என்ற வழக்குக்கள் காண்க. ஏற்றினது இயல்பு செங்கண்ணுடைமை என்றலுமாம்.

உடையார் - கொடியாகவும் ஊர்தியாகவும் உடையவர்.

திருமலைச்சாரற் சோலைகண்டார் - எனமாற்றுக. போவோம் அங்கே எனமாற்றிக் கூற நின்ற மனவேகம்போலவே, செயலும், வேகமாய் முற்றியது என்று குறிக்கப் பயனிலைமுன் வந்தது.

திருமலைச் சாரற்சோலை - மலையின்சாரலில் உள்ளசோலை. உயர்ந்த இடமாதலின் முதலிற் காட்சிக்குப்புலப்பட்டது மலையும், பின்னர்க்காணப்படுவது அதன்சாரலும், அதன்பின் சோலையுமாம். இவை வேறுவேறாகத் தெரியும் சவிகற்பக் காட்சியின்முறை யில்வைத்தார். முன்னர்ச் செய்மையில் விகழ்வது மலையும் சாரலும் சோலையுமாகிய மூன்றுஞ் சேர்ந்துள்ள நிருவிகற்பக்காட்சியாதலின் அவ்வாறு முரைக்கின்றதுகாண்க.

திருமலை - காளத்தி. மேலே திருமலைச்சருக்கம் என்றஇடத்தும், பிரண்டும் திரு மலைஎன்றது கயிலையைக்குறிக்கும். "சித்திநிகழ் வயிரவராய்த் திருமலைகின் றணைகின் றார்" - சிறுத்-புரா - 25. காளத்தியும் கயிலையாம். இது தென்கயிலைஎனப்படும். கயிலை பாதிகாளத்திபாதி யந்தாதியும் இக்கருத்தேபற்றியது. அப்பர்சுவாமிகள் இம்மலைமேற் றாள்பணிந்த குறிப்பினால் கயிலையினில்வீற்றிருந்த பெருக்கோலங் காணுமது காதலித்து அந்த யாத்திரையிற் புறப்பட்டனர். ஆளுடையபிள்ளையாரும், ஆளுடையநம்பிகளும், இங்குநின்றே திருக்கயிலையைப் பாடியருளினர். அருச்சுனர் கயிலைச்சாரலிற் கேட்ட வரத்தை அவரே திண்ணனாராகி இங்குப் பெறப்போகின்றார் என்ற குறிப்புக்க ளெல்லாம் பெற இங்குத் திருமலை என்ற பெயராற்கூறினர்.

கண்டார் - மலையும் சாரலும் சோலையும் கண்டஇக்காட்சி, திண்ணனாரது பசி, தாகம், இளைப்பு முதலியவற்றை மறப்பித்து அவரது உள்ளத்தைக் கொள்ளைகொண்டு " தோன்றுங் குன்றின் கண்ணுவோம் " என்று தடுக்கலாகாப்பேராசையை விளைத்தது பற்றி இதனை இவ்வாறு விதந்துகூறினர்.

இப்பாட்டுத் தலவிசேடங் கூறிற்று. 95

745. " நாணனே! தோன்றுங் குன்றி னண்ணுவோ " மென்ன, நாணன்,
" காணநீ போதி னல்ல காட்சியே காணு ; மிந்தச்
சேணுயர் திருக்கா ளத்தி மலைமிசை யெழுந்து செல்வே
கோணமில் குடுமித் தேவ ரிருப்பர்;கும் பிடலா " மென்றான். கூசு

(இ - ள்) வெளிப்படை. " நாணனே! முன்னே தோன்றும் குன்றின்கண் சேர் வோம் " என்று திண்ணனார் சொல்ல, நாணன், " நீ அங்கே காணப்போவாயாகில்

**நல்ல காட்சியே** காணப்படும்; சேணில் உயரும் இந்தத் திருக்காளத்திமலையின்மேல் எழுந்து செம்மைபெறக் கோணமில்லையாகச் செய்யும் **குடுமித்தேவர்** இருப்பார்; காம் கும்பிடலாம்" என்று சொன்னன்.

(வி - ரை) **தோன்றும் குன்றில்** - முதலிற் கண்ணுக்குப் புலப்பட்டது குன்றின் உயர்ந்த சிகரமாதலின் அது அவர் கருத்தைக் கவர்ந்தது.

**காண.....காணும்** - நீ காணப்போதின் என்க. காண்பதற்கென்று நீ போவாயானால். இவ்வகையிடங்களுக்குப் போதுவார் பலரும் போய்வந்த மட்டில் அமைவரேயன்றி அங்குள்ள சிறப்புக்களைக் காணுமலே வருவர் என்பது கண்கூடு. ஆதலின், கண்ணுவோம் என்று தன் தலைவன் கூற அவ்வாணைக் குட்பட்டு உடன்படும் காணன், அவ்வாறு நீ காணும்பொருட்டே செல்வாயானால், ஏனையோர்போலல்லாது நீ காணும் சிறப்பு இன்னதென்று கூறுவானாகி, அது நல்ல காட்சியே என அறிவுறுத்துகின்றான். அக்காட்சி இன்னதாம் என மேலும் வற்புறுத்திக் கூறுகின்றான். "குன்றின் கண்ணுவோம்; அதனைக் காணல்வேண்டும்; காண்பது நல்ல காட்சி; அஃது இதுவாம்" என்றவாறு. இக்குன்றுவர் கடவுட் காட்சியில் வைத்தகருத்துப் பாராட்டத்தக்கது.

**காணநீபோதின்** என்று காணன் உரைத்தவாறு உண்மையில் நாயனார் காண்பதற்கே அங்குப்போகின்றார். ஏனையோர் போலல்லாது, "ஆர்வமுன் பெருக ஆரா அன்பினிற் கண்டுகொண்டே கேர்பெற நோக்கி நின்றார்" (777) என்பது காண்க.

**நல்ல காட்சியே காணும்** - காட்சி - காணப்படுவது. **காணும்** - காணப்படும். படுவிகுதிதொக்கது. இவர்காணும் காட்சி இறைவனது அருட்டிருநோக்கம்பெற்று அவன் காட்டக்காணும் காட்சியாதலின் **நல்ல காட்சியே** என்றார். ஏகாரம் பிரிநிலை. தேற்றமுமாம். நல்லகாட்சியாவது அகம்புறமாகிய கரணங்களால் எதனைக் காணவேண்டுமென்று நூல்கள் விதிக்கின்றனவோ அதனையே காணுதல். "கண்காள் காண்மின்களோ-கடல்-நஞ்சுண்ட கண்டனை, யெண்டோள் வீசிநின் றாடும் பிரான்றனைக் (கண்காள்)" என்றது தமிழ்மறை. "காணுங் கண்ணுற் காண்பது மெய்த்தொண்டே"—(தண்டி-புரா-2).

**இந்த...கும்பிடலாம்** - நல்லகாட்சி இதுவாமென்று காணன் கூறியது. **சேண் உயர்** - வானில் உயர்ந்துவிளங்கும். ஏழனுருபு தொக்கது. உயர்ந்து தோன்றியதனால் முன்னர்த் "தோன்றும் குன்று" என்றார். அவ்வாறு திண்ணனார் "தோன்றும்குன்று" என்ற அதன்பெயரை அவருக்கு அறிவுறுத்துவான் இந்த என்று கையாற்சுட்டிக் காட்டித், திருக்காளத்திமலை என்று வாயினாற் பேர் கூறினன். "பெரிய தேக்கினப் புறஞ் சென்றூல் நீண்ட, குன்று" (743) என்று காணன்கூறக் கேள்விமாத்திரத்தாலறிந்த நாயனார், இங்கு அதனைக் கண்ணுக்குப் புலப்படக் கண்டறிந்தபோது அவன் சொல்லியபடியே "தோன்றும் குன்று" என்று பேர்குறியாது கூறியது காண்க.

**மலைமிசைனழந்து செவ்வே** - மலையினின்றும் வேரூன்றிமுளைத்ததுபோல மேல் எழுந்து செம்மைபெற. **கோணம்இல்** - கோணத்தை இல்லையாகச்செய்யும். **கோணம்** - குற்றம். இது கோண் - கோணை எனவும் வழங்கும். "யான்செய்தேன் பிறர்செய்தா ரென்னதியா னென்னுமிக் கோணை" (சிவஞானசித்தியார் - 10. சூத்திரம் - உ).

**குடுமித்தேவர்** - குடுமி-உச்சி. மலையின் உச்சியிலிருப்பவர். தலையின்மேல் உச்சியிலிருப்பதால் தலைமயிர்க்கற்றை,குடுமியெனப்படும்.கானவர் காளத்தியப்பரை இப்பெயரால்அறிந்து கும்பிட்டனர்என்க. வேதங்களுள் முடிவினிற்பது அதர்வணமாம். அதன் சிரம் அதர்வசிரசு எனப்படும். அதன் சிகையாயுள்ள அதர்வசிகை "ஏனையவற்றையெல்லாங் கைவிட்டு மங்களஞ்செய்பவனாகிய சிவன்ஒருவனே தியானிக்கற்பாலன். அதர்வசிகை முடிந்தது" என்று முடிபுகூறுகின்றது. அவ்வுச்சியில் முடிந்தமுடிபாய் விளங்குபவன் இவ்விறைவன் என்பதும் குறிப்பாம். உபநிடதத்துச்சியில் விளங்கும் போதக்காட்சி என்னும் வழக்குங்காண்க.

காணன் மேலே 743-ல் சொல்லியவை "குன்றினுக் கயலே யோடும் குளிர்ந்த பொன் முகலி" என்றது இவரை வழிப்படுத்திய முதல்உபதேச மொழி; இப்பாட்டிற் கூறியன இரண்டாவது உபதேச மொழிகளாம்.

மேலிருபாட்டிலும் முறையே தீர்த்த விசேடமும் தலவிசேடமும் கூறப்பட்டது போல இப்பாட்டால் மூர்த்திவிசேடம் கூறப்பட்டது காண்க. 96

746. "ஆவதென்? னிதணிக் கண்டிங் கணைதொறு மென்மேற் பாரம்
போவதொன் றுளது போலு; மாசையும் பொங்கி மேன்மேன்
மேவிய நெஞ்சும் வேறூர் விருப்புற விரையா நிற்கும்;
தேவரங் கிருப்ப தெங்கே? போ"தென்றூர் திண்ண னூர்தாம். கூள

(இ - ள்) வெளிப்படை. "இவ்வாறு ஆவது என்னை? இம்மலையைக்கண்டு இவ் விடத்தே அணுகிச்செல்லுந்தோறும் என்மேல்உள்ள பாரம் குறைவதுபோல அனு பவம் உளதாகின்றது; ஆசையும்பொங்கி மேலும்மேலும் பொருந்திய நெஞ்சமும் வேறொரு விருப்பம்கொண்டதாக விரைந்துசெல்லாநிற்கும்; அங்கே தேவரது இருப்பி டம் எங்குள்ளது? போவாயாக" என்று திண்ணனூர் கூறினர்.

(வி - ரை) **கண்டிங்கு அணைதோறும்** - மேற்பாட்டிற் கூறியபடி பேசிக்கொண்டு இருவரும் மலையைநோக்கி நடந்து செல்கின்றூர்களாதலின் இவ்வாறு கூறினர்.

**போவது போலும் உளது** என்றுகூட்டுக. அடிபெயர்த்து வைக்குந்தோறும் அவ்வளவிற்குச் சிறிதுசிறிதாய் என்பாரம் குறைவதுபோன்ற அனுபவம் நிகழ்கின்றது. **போலும்** - போல்வதாகிய. பெயரெச்சம். ஒவ்வொன்றுய்க் குறையும் அளவுகுறிக்க **உளது** ஒன்று **போவது** என்றும், **அணைதோறும்** என்றும் கூறினர்.

**ஆசையும் பொங்கி** - தோன்றும்குன்றில் கண்ணுவோம் என்று முன்னர்எழுந்த ஆசையும் என வும்மை இறந்ததுதழுவியது. அவ்வாறெழுந்த ஆசைஅடங்காது மேலும் மேலும் பொங்கிவளர்ந்தது என்க.

**நெஞ்சும் - விரையா நிற்கும்** - மனவேகம் என்றபடி உடல் அணைவதன் முன்னே நெஞ்சு மிக விரைகின்றது. நெஞ்சும்-எச்சவும்மை. **வேறுஓர் விருப்புஉற** - விருப்பு - விருப்பமும். **உற** - மிக. உம்மைதொக்கது. காணவேண்டுமென்னும் ஆசையேயன்றி இன்னதென்றறியப்படாத மற்றேர் விருப்பமும். இன்னதென்றுணராவாராமையின் **வேறுஓர்** என்றூர். இது முன்னைப்பிறவியின் தொடர்ச்சிபற்றி இவருள்ளத்தில் எழுந் தது. "முந்தை யறிவின் தொடர்ச்சியினுல் முகைத்த மலரின் வாசம்போற், சிந்தை மலர உடன்மலருஞ் செவ்வி யுணர்வு" என்ற சண்டீசநாயனர் புராணமும் "ஒருமைக் கட் டான்கற்ற கல்வி யொருவற், கெழுமையு மேமாப் புடைத்து" என்ற திருக்குறளும் இக்கருத்தை விளக்குவன. "முன்புசெய் தவத்தி னீட்டம்" என்று பின்னர்க் கூறுவ தும் காண்க. தோன்றுங் குன்றி னண்ணுவோம் என்று முன்னர் எழுந்த ஆசை இவ ராற் காரணமறியப்பட்டதும், இங்குஉறும் வேறு ஓர் விருப்பம் காரணமறியப்படாததும் ஆம். **விரையாநிற்கும்** என்பது பாடமாயின் ஆசைபொங்கி மேவிய நெஞ்சினுள் அவ்வா சையினையன்றி வேறு ஒரு விருப்பமும் மிகவிளைகின்றது என இக்கருத்துக்கேற்ப உரைத்துக்கொள்க. **விரைதல்** - சிறிதாய்த் தோன்றி வளர்தல்.

**தேவர்** - காணன் சொல்லியதனுல் இவர்அறிந்த குடுமித்தேவர். **அங்குத் தேவர் எங்கே இருப்பது?** என்க. **எங்கே** - மலையில் அவர் இருப்பதாகக் குறித்தஇடம் எது? என்றபடி. **அங்கு** - அக்குன்றில் - சேணுயர்மலையில். **போது** - போவாயாக.

தத்துவ தாத்துவிகங்க ளாகிய **தோண்ணுற்றுறுந்** தன்னின் வேறுகக்கண்டு கடந்த நிலையில் உடல்முதலிய கருவிகாணங்கள் பாரமாகக்காணப்பட்டுக் கழல்வனவாம். அது வரை அவற்றிற்பற்றுண்டு அவற்றைச் சுமைஎன்றுணராது சுகமென்றும், அவற்றையே

தான்என்றும் கண்டு, சுமந்து திரிந்த உயிர் இப்போது சுமை என்று அறிந்தது. பெரும்பாரம் சுமந்திளைத்தவன் அது குறையக்குறையக் களிப்பதுபோல, இந்நிலையடைந்த உயிரும் களிப்படையும். இப்பாரம் குறையக்குறைய இறைவனை அணையும் ஆசையும் மிகும். அதுவரை ஆணவத்தோடு ஒற்றித்துநின்று அறிவிழந்த உயிர் அதன் கண் உவர்ப்படைந்து விட்டுப் பின்னர் மெய்ஞ்ஞானத் தாணுவினோடு ஒற்றித்து நிற்கத் தலைப்படும்.

" துருத்தியாங் குரம்பை தன்னிற் றொண்ணூற்றங் கறுவர் நின்று
விருத்திதான் றருக வென்று வேதனை பலவுஞ் செய்ய
வருத்தியால் வல்ல வாறு வந்துவந் தடைய நின்ற
வருத்தியார்க் கன்பர் போலு மதிகைவீ ரட்ட னாரே " (4)

என்ற திருநேரிசைக்கருத்தையும் காண்க. இவ்விளைவின்றன்மை இப்பாட்டிற் றிண்ணனார் தம் அனுபவநிலையைக் கூறும்வகையாற் குறிக்கப்பட்டது. இது 96 பாட்டுக்களையுங் கடந்த மேல் 97-வது திருப்பாட்டாகஅமைந்த தெய்விகஅமைப்பும் காண்க. மாணிக்க வாசகசுவாமிகள் திருப்பெருந்துறையை அடையும்போது இத்தன்மைத்தானதொரு நிலையை அடைந்தனர் என்ற வரலாறுங்காண்க. 97

747. உரைசெய்து விரைந்து செல்ல வவர்களு முடனே போந்து
கரைவளர் கழையின் முத்துங் காரகிற் குறடுஞ் சந்தும்
வரைதரு மணியும் பொன்னும் வயிரமும் புளினந் தோறுந்
திரைகண்முன் றிரட்டி வைத்த திருமுக லியினைச் சார்ந்தார். ௯௮

(இ - ள்) வெளிப்படை. (திண்ணனார் மேற்கண்டவாறு) சொல்லி விரைந்துசெல்ல, அவ்விருவரும் கூடவே சென்று, கரையில் இருமருங்கும் ஓங்கிவளரும் மூங்கிலின் முத்துக்களையும், காரகிற் கட்டைகளையும், சந்தனமரங்களையும், மலையில் விளையும் ஏனை மணிகளையும், பொன்னையும், வயிரத்தையும் மணற்குவியல்களிலெங்கும் அலைகளால் முன்திரட்டிச் சேர்த்துவைத்த திருமுகலியாற்றினை அணைந்தார்கள்.

(வி - ரை) **விரைந்து செல்ல**-விரைவு முன் ஆசையும் விருப்பும் என்று சொன்னவற்றாலுளதாகிய ஆவல் மிகுதிகுறித்தது. திண்ணனார் - செல்ல என்க.

செல்ல - போந்து - (மூவரும்) - திருமுகலியினைச் சார்ந்தார் எனக் கூட்டுக.

**கரைவளர் கழையின் முத்தும்** - முகலியின் இருகரையிலும் மூங்கில்கள் உயர வளர்ந்திருக்கின்றன. அவற்றின் முதிர்ந்தவற்றில் விளைந்து உதிர்ந்த முத்துக்களை ஆறு அடித்து வந்தது என்றதாம். "அலைகொள்புன லருவிபல சுனைகள்வழி யிழியவய னிலவு முதுவேய், கலகலென வொளிகொள்கதிர் முத்தமவை சிந்துகா ளத்திமலையே" (5) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரங் காண்க.

**கார் அகில் குறடு சந்து** - "சந்தமார் அகிலொடு...உந்துமாமுகலியின் கரையினில்" என்ற ஆளுடையபிள்ளையாரது திருக்காளத்தித் தேவாரங் காண்க. **குறடு** - கட்டைகள். அகிற் குறடும் சந்தும் முறிந்து வீழ்ந்தனவும் உலர்ந்தனவும் வெள்ளத்திற் பறிக்கப்பட்டனவும்ஆம்.

**வரைதருமணி**-முத்தும் பவளமும் வயிரமும் ஒழிந்த ஏனையமணிகள். முத்து முன்னர்க் கூறினார். பவளம் கடல்படுபொருளாம்.

**வயிரம்** - விலையில் மிகுதியும், குணத்திற் குறைவுமுடைத்தாதலால் வேறு பிரித்துக் கடையிற் கூறினார்.

**புளினம்** - அருவியின் நீரோட்டத்தாற் குவிக்கப்படும் சிறுமணற் குவியல்கள்.

**திரைகள்முன் திரட்டிவைத்த** - சலசலவென்று அலைந்துஓடும் அருவிநீரால் மணற் குவியல்களும் அவற்றின் ஓரத்தில் அவ்வவற்றின் மென்மை வன்மைக் கேற்றபடி மணி

பொன்முதலியனவும் வரிசைபெறச் சேர்த்துவைத்த. முனி-முன்னுல் காணத்தக்கதாக. கரையில் ஓரத்தில். "முத்துமாமணிகளும்.....எத்துமாமுகலியின் கரையினில்" என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரமுங் காண்க.

**திரட்டிவைத்த திருமுகலி** - " அறியாம லேனு மறிந்தேனுஞ் செய்து, செறிகின்ற தீவினைக ளெல்லாம்-நெறிகின்று, நன்முகில்சேர் காளத்தி நாத னடிபணிந்து, பொன் முகலி யாடுதலும் போம்" (74) என்று கயிலைபாதி காளத்திபாதியந்தாதியிற் கூறியபடி, தன்னையணைந்து தன்னுட்படிந்தோர் சிவபூசைசெய்து முத்திபெற்று உய்யும்பொருட்டுப் பூசைக்குரியபொருள்களாய் நறும்புகையூட்ட அகிலும், அரைத்து மெய்ப்பூச்சிட்டுச் சாத்தச்சந்தனமும்,மஞ்சனப்புனலினும் அர்க்கியநீரிலும் இட மணிகளும் பொன்னுமாக வெளிப்பட, முகலியாறு, திரட்டிக் காட்டிவைத்தது என்றதொரு தற்குறிப்பேற்றக் குறிப்பும்காண்க. 236 பார்க்க. முகலியினுட்படிந்தோர் முத்திபெறுவர்என " உலகி லெங்கணு மில்லதோ ரதிசய மொன்றித், தலைமை கொண்டபொன் முகலியுட் டாழ்ந் தவர் யாரும், தொலைவி றுன்பங்கள் பலதருஞ் சூழ்வினைப் பிறப்பா, மலைநெ டுங்கடற் கரைமிசை யேறுவ ரன்றே" (பொன்முகலிச்சருக்கம் - 91) என்று அதிசயச்சுவை பெறச் சீகாளத்திப்புராணம் கூறும். "இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்" என்றபடி தன்னை அணைந்தார்க்கு அந்த முத்தியேயன்றி இம்மைநலங்களையும் தருதற்பொருட்டு இங்கதி முன் மணியும்பொன்னும் முதலியவற்றைத் திரட்டிவைத்திருக்கும் என்ற தொரு குறிப்புப்பொருளும்காண்க. 98

*748. ஆங்கதன் கரையின் பாங்கோ ரணிநிழற் கேழலிட்டு
வாங்குவிற் காடன் றன்னை மரக்கடை தீக்கோல் பண்ணி
"யீங்குநீ நெருப்புக் காண்பா யிம்மலை யேறிக் கண்டு
நாங்கள்வந் தணைவோ" மென்று நாணனுந் தாமும் போந்தார். கூகூ

(இ - ள்) வெளிப்படை. அங்கு அவ்வாற்றின் கரையின் பக்கத்தில் ஒரு அமைதியான மராநிழலிலே பன்றியின் உடலை யிடுவித்து வளைந்த வில்லேந்திய காடனை நோக்கித் திண்ணனுர் "மரத்தினுல் தீக்கடைகோல் செய்து இங்கு நீ நெருப்பு உண்டாக்குவாயாக ; இந்த மலையில்ஏறி நாங்கள் கண்டுவந்து சேருவோம்" என்று சொல்லி நாணனும் தாமும் சென்ருர்கள்.

(வி - ரை) அணிநிழல்-அணி - அழகு. இங்கு அமைதி குறித்தது. நிழல்-ஆற்றின் கரையினிற் சோலையிலுள்ள மராநிழல். " மத்தமார் பொழில்வளர் "என்ற தேவாரமுங் காண்க. இறந்த பன்றியின் உடலை வெயிலில் இட்டுவைத்தால் ஊன் விரைவிற் கெட்டுவிடும். ஆதலின் அதனை இடத்தக்க நிழல் வேண்டும். தீக்கடைந்து காணவும்,தீவளர்த்து ஊனை வதக்குதற்கும் காற்று மிகுதியில்லாத அமைதியான இடம்வேண்டும். ஆதலின் இவ்வமைதிகள் பெற்ற மராநிழல் என்பார் அணிநிழல் என்ருர்.

மரத் தீக்கடைகோல் என மாற்றுக. தீக்கடைகோல் பண்ணுதல் - கடைந்து நெருப்பு உண்டாக்குதற்குத் தக்கபடி காய்ந்தமைந்த மரக்கட்டையை நேர்செய்தல். " அக்கினியின்கூறு அதிகமாயிருக்கின்ற மரத்தின்கொம்பைத் தீக்கடைகோலாகச் செய்து " என்பர்மகாலிங்கையர். இதனை அரணிஎன்பது வடமொழி. " விறகிற்றீயினன்...மூறுக வாங்கிக்கடைய " என்ற அப்பர்சுவாமிகள் தேவாரமும், " காட்டாக்கிற் ரூன்றி " என்ற சிவஞானபோதம் ஒன்பதாஞ்சூத்திர உதாரணவெண்பாவும் அதற்குக், கோலைநட்டுக் கயிற்றினுற் சுற்றிக்கடையவே காட்டத்தினின்று அங்கி தோன்று மாறுபோல என்ற வுரையுங் காண்க. மரத்தில் தீ மறைந்துள்ளதென்றும், விரையக் கடைதலால் அது வெளிப்படுமென்றும் உள்ள தத்துவஞானம் இவ்வேடர்கள் காட்சியளவையா லறிந்த உண்மையாம். இதனை இவர்கள் தமக்கு வேண்டியபோது தீ உண்

டாக்கப் பயன்படுத்திக் கொள்வர். யாகங்களில் அரணியில் தீக்கடைந்து எடுத்தல் மரபு. "அரணி தந்தசுட ராகுதி தோறும்" (247). நெருப்புப்பெட்டி - தீப்பெட்டி - (Match box) இல்லாவிடின் உயிர்வாழ முடியாதபடி தாழ்ந்து விட்டநிலையில் உள்ள இந்நாள் "நாகரிக" உலகர், தேவையான சிறுபொருளையும் தமக்குத்தாமே உதவி செய்துகொள்ள இயலாதவாறு பரதந்திரப்பட்ட தமது அபாய நிலையை உணர்ந்து கொள்வார்களானால் அவ்வுணர்ச்சி நற்பயன்றருவதாம்.

**நெருப்புக் காண்பாய்** - நெருப்பை உண்டாக்குவாய். உள்ளே மறைந்துநின்ற பொருளாகியதீயை வெளிப்படச் செய்வாய்.

**கண்டு**-"நல்ல காட்சியே காணும்"(745)என்றபடி அக்காட்சிகண்டு.விறகில்மறைந்த நெருப்பை நீ கோலாற்கடைந்து காண்பாய். முன்னைப்பிறவியில் "வஞ்சமனத் தஞ் சொடுக்கி வைகலுநற் பூசனையால், நஞ்சமுது செய்தருளு நம்பி யெனவே நினைந்து"ம், "உறவுகோல்நட்டு உணர்வுகயிற்றினால் முறுகவாங்கிக் கடைந்"தும் நான் தியானித்துத் தவஞ்செய்துகண்டபொருள் இப்பிறவியில் இதுவரை மறைந்துநின்றது;அதனை இம்மலை மேல் ஏறி வெளிப்படக்காண்பேன் என்றதொரு குறிப்பும்காண்க.

**நாணனும் தாழம்** - பின்வரக்கடவனாகிய நாணன் வழிகாட்டி முன்செல்வதால் (752) நாணனும் என முன்வைத்துக் கூறினார். 99

749. அளிமிடை கரைசூழ் சோலை யலர்கள்கொண் டணைந்த வாற்றின்
றெளிபுன லிழிந்து சிந்தை தெளிவுறுந் திண்ண னார்தாம்
களிவரு மகிழ்ச்சி பொங்கக் காளத்தி கண்டு கொண்டு
குளிர்வரு நதியூ டேகிக் குலவரைச் சாரல் சேர்ந்தார். ௧௦௦

(இ - ள்) வெளிப்படை. வண்டுகள்மொய்த்த கரையினைச்சூழ்ந்த சோலைகளின் மலர்களைத் தாங்கிக்கொண்டு அணைந்த முகலியாற்றின் தெளிந்தபுனலிலே இறங்கிச் சிந்தைதெளிதலுறுகின்ற திண்ணனார், களிப்புவருதற்கேதுவாகிய மகிழ்ச்சி மேன்மேற் பொங்கத் திருக்காளத்திமலையைக் கண்டுகொண்டே குளிர்ச்சியோடு வருகின்ற அந்நதி யின் ஊடேபோய் உயர்ந்தமலைச்சாரலிற் சேர்ந்தனர்.

(வி - ரை) **அளிமிடைசோலை** என்க. **அலர்கள் கொண்டணைந்த ஆற்றின்** - திண்ணனாரை எதிர்கொள்வதற்கு மங்கலப்பொருளாகிய மலர்களைக்கொண்டணைந்த தென்ற பொருளும் காண்க.

"வண்டி ரைத்தெழு செழுமலர்ப் பிறங்கலு மணியுமா ரமுமுந்தித்
தண்ட லைப்பல வளத்தொடும் வருபுன றாழ்ந்துசே வடிதாழத்
தெண்டி ரைக்கடற் பவளமும் பணிலமுஞ் செழுமணித் திரண்முத்துங்
கொண்டி ரட்டியுந் தோதமங் கெதிர்கொளக் கொள்ளிடங் கடந்தேறி" (146)

என்ற திருஞானசம்பந்தநாயனார் புராணமுங்காண்க. முகலியாறு மலர்களை வாரிக் கொண்டுவருமியல்புடையதென்பது "முழுமலர்த் திரள்களும் எத்துமா முகலியின்" என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரத்தானுமறிக.

**தெளிபுனல் இழிந்து சிந்தைதெளிவுறும்** - இதன் நீரினைத் தொடுதலாலே மயல் தீர்ந்து மனந்தெளியும் என்றமையாற் றீர்த்தச்சிறப்புரைத்ததுமாம். "ஆடக முகலிதா னாண வப்பெயர், நீடிய வழுக்கற நீக்கு நீரதாய்" (79) என்ற சீகாளத்திப்புராணமுங் காண்க. "ஆவதென்" (746) எனமுன்னர் மனந்தெளியாது நின்றநிலைமாறி இப்போது தெளிவுறுகின்றது என்றபடி.

**தெளிபுனல்** - எஞ்ஞான்றும் தெளிவுடையது. **தெளி** - தெளிவிக்கும் எனக் கொண்டு சிந்தைமயல்தீர்த்துத் தெளிவிக்கும்புனல் என்பதுமாம்.நாயனார்இவ்வாற்றினை

அடைந்தது தைமாதமாகலின் அப்பருவம் இதில்தெளிவுடையதாய் மிக்க நீர் ஒடுங் காலமாம் என்பதும் காண்க.

**சிந்தை தெளிவுறும்** - இதுவரைநின்ற தமது குலம் முதலிய இவ்வுலகச்சார்பாகிய மயக்கவுணர்ச்சிகளும், " ஆவதென் " என்ற ஐயமும் நீங்கி உண்மையுணர்ச்சியாகிய சிவ ஞானானந்தத்திற் றெளிவுபொருந்தும்.

**திண்ணனார்தாம்** - மேற்பாட்டிற்கூறியபடி போந்தஇருவருள் **இவர்தாம் கண்டு கொண்டு** என்பதாம்.

**களிவருமகிழ்ச்சிபொங்க - களி** - மகிழ்ச்சியின் முதிர்ந்து அவசமாகிய நிலை, களிப்புவருமாறு - மகிழ்ச்சிமீக்கூர.

**காளத்தி கண்டுகொண்டு** - உள்ளும் புறமும் காட்சிக்கு வேறொன்றும் விடய மாகாமற் காளத்தியையே கண்டவண்ணமாக.

**நதிஊடு** - நதியின் குறுக்கே கடந்து. **சாரல்** - சார்ந்தஇடம் - மலைச்சரிவு. 100

750. கதிரவ னுச்சி நண்ணக் கடவுண்மால் வரையி னுச்சி
யதிர்தரு மோசை யைந்து மார்கலி முழக்கங் காட்ட,
" விதுவென்கொ? னாணா?"வென்றார்க்"கிம்மலைப் பெருந்தேன் சூழ்ந்து
மதுமல ரீக்கண் மொய்த்து மருங்கெழு மொலிகொ" லென்றான்.

(இ - ள்) கதிரவன் உச்சிநண்ண - ஞாயிறு வானவீதியின் உச்சிசேர; கடவுள்... காட்ட - தெய்வத்தன்மையுடைய பெரிய அம்மலையின் உச்சியில் அதிர்கின்ற ஐந்து தேவதுந்துபிஓசைகளும் கடல்முழக்கம்போல முழங்க; "இது...என்றார்க்கு "நாணனே இது என்கொல்!" என்று கேட்ட திண்ணனாருக்கு; "இம்மலை...ஒலிகொல்" என்றான்- "இம்மலையின் பெருந்தேனைச் சூழ்ந்துகொண்டு தேன்பொருந்திய மலர்களிலிருந்து வரும் தேனீக்கள் மொய்த்துப் பின்பு பக்கங்களிலே மீள எழுகின்றதனால் உளதாகிய ஒலிபோலும்" என்று நாணன் கூறினான்.

(வி - ரை) **கதிரவன் உச்சிநண்ண** - பகலில் உச்சிப்போதாக. **கதிரவன்**-ஞாயிறு-சூரியன். அவனது கதிர்களே கதிர்எனத் தக்கன என்பது. **உச்சி** - மேலிடம். இங்கு வானவீதியின்முகட்டைக் குறித்தது. உருண்ட நிலஉலகமாகிய அண்டம் தன்னையும் சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றிவரும்.இவ்வாறு சுற்றிவரும்வட்டம் வானவீதிஎனப் படும். "சென்றுருளும் கதிரிரண்டும் விசும்பில் வைத்தார்" என்ற அப்பர்சுவாமிகள் திருத்தாண்டகத்தில் இவ்வண்டங்களுக்குச் செல்லுதல் உருளுதல் ஆகிய இரண்டு சுழற்சிகள் உள்ளநிலை குறித்தது காண்க. நிலஉலக அண்டம் தன்னைச் சுற்றிய சுழற்சி ஒருநாள். அதனிற் சூரியனுக்கு எதிர்ப்படும் பாதி பகல் எனப்படும். அதனிற் பாதியில் ஞாயிறு உச்சியிற் காணப்படுவன். இந்நேரமே நிலத்தில் அவ்விடத்துக்கு உச்சியாம். இதனை உலக வழக்கில் ஞாயிற்றின்மேலேற்றி அவன் உச்சிசேர என வழங்கப்படும். இதுபற்றியே ஆசிரியரும் இங்குக் **கதிரவ னுச்சி நண்ண** என்றார். " உச்சம் போதா லூரூர் திரிய " என்ற ஆளுடையநம்பிகள் (திருக்கச்சூராலக்கோயில்) தேவாரமும், " கடும்பகற் போது " என அதனை விரித்துரைத்த ஏயர்கோன்கலிக்காமநாயனார் புராணமும் (178) காண்க. இதுபற்றிமுன் 685-ல் உரைத்தவை பார்க்க.

**கடவுள் மால் வரையின் உச்சி-கடவுள்**-இங்குத் தெய்வத்தன்மை குறித்தது.இத் தன்மைத்தாதலினன்றே இம்மலை தன் காட்சியளவின் இவர்பால் உலகஆசை போக்கி வேறுஆசையும் விருப்பும்பொங்க விளைவித்தது. (745 - 746). **மால்** - பெரிய. **கடவுள் வரை**-கடவுள் எழுந்தருளியிருக்கும்மலை என்றலுமாம். **உச்சி**-இங்கு மலையின்மேலிடம்-முகடுகுறித்தது. **மால்** - மயக்கம் எனக்கொண்டு கடவுளிடத்து மால்விளைக்கும் மலை என்றலுமாம். "தேவுமால்" (769) என்றது காண்க.

*ஓசை ஐந்து - தேவதுந்துபிஎன்னும் தேவவாத்திய ஓசைவிசேடங்கள் ஐந்து. இவை தேவர்கள் இம்மலைமேல்வந்து இறைவனை உச்சிப்போதில் வழிபடும்போது முழக்குபவை. இது தென்கயிலையாதலின் கயிலையிற்போலவே இங்கும் பிரமன்முதலியதேவர்கள்வந்துவழிபடுவர். இவ்வரலாறுகள் காளத்திப்புராண முதலியவற்றுட்காண்க. இங்கு ஓசை ஐந்துஎன்பன ஹிருஸ்வம், தீர்க்கம் முதலாகிய உச்சரிக்கும்வகை ஐந்துஎன்று கூறுவாருமுண்டு. **ஆர்கலி முழக்கம்காட்ட** - கடல்முழக்கம் போல முழங்க.

கயிலையில் தேவர்கள்வந்து வழிபடும்உண்மை "மேன்மை காண்மறை காதமும் விஞ்சையர், கான வீணையி னோசையும்" (14), "பனிவிசும்பி லமரர் பணிந்துசூழ், அனித கோடி யணிமுடி மாலையும்" (15) என்ற திருப்பாட்டுக்களாலறிக. காளத்திமலை திருக்கயிலையேயாம் என்பது முன்னர் "திருமலை" (744) என்றவிடத்து உரைத்த வற்றாலறிக.

**"இது என்கோல் நாண!" என்றர்க்கு** - நாண! இதுஎன்? என்ற திண்ணனார்க்கு. வீணையாலணையும் பெயர், தேவதுந்துபி கேட்ட திண்ணனார் தாம் முன் கேட்டறியாத அது இன்னதென்றறியவாராமையின் ஐயமுற்று **இது என் கோல்?**என வினவுகின்றார். **கோல்** - ஐயப்பொருள் தரும் இடைச்சொல். "கொல்லே ஐயம்" (தொல் - இடை - 20). நாணனும் இவ்வாறே "ஒலிகொல்" என ஐயப்பட விடைகூறுவதும் காண்க. பாசவுலகம் திண்ணனாரைவிடுகின்றதும், வீட்டுலகம் தொடுகின்றதுமாகிய நிலைஇது. உலகத்தொடர்புணர்ச்சியுடன் திண்ணனார் உலகினரை விளித்துப் பேசிய இறுதிப் பேச்சு இதுவேயாம். இதன்பின்னர்ச் சின்னோத்தில் இறைவனருட் பார்வையால் அன்புருவமேயாகித் தம்மையும் மறந்த நிலைபெறுகின்றாராதலின் (753) உலகினருடன் பேச்சொழிந்தது என்க. (757ல் கேட்டது ஒருவரையும் விளிக்காது தாமாகப் பேசியதாம்.)

**இம்மலைப் பெருந்தேன்...ஒலிகொல்!** - இவர் கேட்டதுபோலத் தேவதுந்துபி கேட்கப்பெறும் புண்ணியவசமில்லாதவன் நாணன். அவன் எந்த ஓசையும் கேட்டானல்லன். ஆதலின் ஒலிகொல் என்று ஐயத்தாற் கூறினன். பெருந்தேன் ஓசைகளே அவன்முன் கேட்டறிந்த பழக்கத்தால் திண்ணனார் கேட்டுவினவிய ஓசையும் அதுவாகத்தா னிருத்தல் வேண்டும் என்றுகருதி விடைகூறினன். முன்னர் "நல்ல காட்சியே காணும்", "கோணமில் குடுமித்தேவர் இருப்பர் கும்பிடலாம்" என்று கூறியபடி இங்கும் அவனை யறியாமலே, உண்மை, அவன் வாக்கில் வெளிப்பட்டுத் திண்ணனாரை மேலும் இறைவனிடத்தில் ஈடுபடுத்திச் செலுத்தியது. இது அவன் கூறிய மூன்றுவது உபதேச மொழியாயிற்று. என்னை? **இம்மலைப் பெருந்தேன் சூழ்ந்து** - இம்மலையில் எழுந்தருளிய பெரிய இன்ப வடிவாகிய இறைவனைச் சூழ்ந்துகொண்டு; **மதுமலர் ஈக்கள்**-இறைவனை நாடியணையும் சிந்தையுடைய பக்குவான்மாக்கள்; **மொய்த்து மருங்கு எழும் ஒலி** - நெருங்கி வாழ்த்தித் துதிக்கும் ஒலி; என்ற உண்மைப்பொருள்பட நிற்பதும் காண்க. இறைவனைப் பெருந்தேனுகப் பாராட்டினர் பெரியோர். "அந்த இடை மருதி லானந்தத் தேனிருந்த, பொன்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ" என்ற திருவாசகமும், "புகழ் மாமருதிற் பெருந்தேன் முகந்துகொண் டுண்டு" என்ற திருவிடைமருதூர் மும்மணிக்கோவையும் (3) முதலிய திருவாக்குக்கள் காண்க. 242-ம் பாட்டின்கீழ் உரைத்தவையும் காண்க.

**பெருந்தேன் சூழ்ந்து** - ஒவ்வோர் தேன்கூட்டிலும் தலைமையான **ராணி ஈ** என்னும் பெருவண்டு ஒன்று உண்டு என்றும், அதன் ஆணைப்படியே அந்தக் கூட்டினைச்

*இவ்வகையான தேவஓசைகள் தென்கைலாயம்எனப்படும் **வெள்ளிமலையின்மேல்** (இது கோயமுத்தூர்ச் சில்லாதிருப்பேரூருக்கு மேற்கில் 20 நாழிகையளவில்உள்ள நீண்ட மலைத்தொடரின் ஒரு குன்று) இப்போதும் கள்ளிரவிலும் அதிகாலையிலும் கேட்கப்படுகின்றன. பேரூர்ப்புராணம் விம்மிதப்படலம் பார்க்க.

சூழ்ந்துவாழும் எல்லா ஈக்களும்கூடிய சமூக வாழ்க்கைத்திறமும் நடைபெறும் என்றும், பிறவும் நவீனர் கூறும் ஆராய்ச்சியுரைகளுக்கிணங்க இங்குப் பெருந்தேன் என்பதற்குப் பெருந்தேன்வண்டு என்றுரைத்தலும் பொருந்தும். 101

751. முன்புசெய் தவத்தி னீட்ட முடிவிலா வின்ப மான
வன்பினை யெடுத்துக் காட்ட வளவிலா வார்வம் பொங்கி
மன்பெருங் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
யென்புகெக் குருகி யுள்ளத் தெழுபெரு வேட்கை யோடும், கஉ

752. நாணனு மன்பு முன்பு நளிர்வரை யேறத் தாமும்
பேணுதத் துவங்க ளென்னும் பெருகுசோ பான மேறி
யாணையாஞ் சிவத்தைச் சார வணைபவர் போல வையர்
நீணிலை மலையை யேறி நேர்படச் செல்லும் போதில், கஊ.

753* திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணு முன்னே
யங்கணர் கருணை கூர்ந்த வருட்டிரு நோக்க மெய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய வொளியி னீழற் பொருவிலன் புருவ மானார், கஎ

751. (இ - ள்) முன்பு...காட்ட - முன்னேசெய்த தவத்தின் தொகுதி முடிவில்லாத இன்பமாகிய அன்பை எடுத்துக்காட்டாநிற்ப; அளவிலா...கூர - அளவில்லாத அவாப்பொங்கி நிலைத்த பெருங்காதலாகச் சிறக்க; வள்ளலார்...வேட்கையோடும்-வள்ளலாராகிய இறைவரது மலையைநோக்கி எழும்புகள் உள்ளுருக உள்ளத்தினுள்ளே எழுந்த பெரியஆசையோடும், கஉ

752. (இ - ள்) நாணனும்...ஏற - நாணனும் அன்பும் தமக்குமுன்னே குளிர்ந்த மலையை ஏறிச்செல்ல; தாமும் - திண்ணனாரும்; பேணு...போல - பேணுகின்ற தத்துவங்கள்என்கிற பெருகும் படிகளேயேறிச் சத்தியேவடிவமாகிய சிவத்தைச்சார அணைபவர்களாகிய சிவயோகிகள்போல; ஐயர்...போதில் - ஐயரது நீண்டநிலைமையுடைய மலையைஏறி நேர்படப் போகும்போதில், கஊ

753. (இ - ள்) திங்கள்சேர்...எய்த - (அவ்வாறு) சென்ற திண்ணனாராகிய அவர் பிறைச்சந்திரன் சேர்ந்த சடையாரைக் காணுமுன்னர் அங்கணருடைய கருணை மிகுந்த அருள்கொண்ட திருநோக்கம் இவர்மேல் பொருந்த; தங்கிய...நீங்கி - தங்கிய பிறவியின் முன்சார்புகள் இவரைவிட்டுஅகல அவற்றினின்று நீங்கி; பொங்கிய...ஆனர் - பொங்கியஒளியின் நீழலிலே ஒப்பற்றஅன்பே தமதுஉருவமாக ஆயினர். கஎ

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

751. (வி - ரை) முன்பு செய்தவத்தின் ஈட்டம் - முன்பு - முன்பிறவி. செய் தவத்தின் ஈட்டம்-அருச்சுனனுயிருந்து இவர்செய்த தவங்களின் தொகுதி. அதற்கு முன் பல பிறவிகளினுஞ்செய்த தவங்களெல்லாம் அவ்வருச்சுனப் பிறப்பிற் றவஞ்செய்தற்கேதுவாயின வென்க. "தவமும் தவமுடையார்க் காகும்" என்றதுங் காண்க. இவற்றின் வரலாறு மாபாரதத்தில் அருச்சுனன்றீர்த்தயாத்திரைச் சருக்கம், அருச்சுனன்தவநிலைச்சருக்கம், கோளத்திப்புராணம் சிலந்திமுதல முற்கதைச்சருக்கம் முதலியவற்றிற் கண்டுகொள்க. இத்தவத்தின் பெருமை,

"வஞ்சமனத் தஞ்சொடுக்கி வைகலுநற் பூசனையால்
நஞ்சமுது செய்தருளு நம்பியென வேநினையும்

பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபத மீந்துகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சணவு கோளிலியெம் பெருமானே ''

என்று ஆளுடையபிள்ளையாராற் பாராட்டப்பட்டது காண்க. இங்கு **முன்புசெய் தவத்தினீட்டம்** என்று பொதுப்படக் குறித்தாரன்றி, ஆசிரியர் அப்பிறப்பும் செய்தவமும் இன்னவெனக்கூறிஞரல்லர். இஃதவர் மரபு என்க.

"உன்னுடைய மனக்கவலை யொழிதீயுன் னுடன்பிறந்தான்
முன்னமே முனியாகி யெனையடையத் தவமுயன்றான்" (திருஞா-புரா-48) எனவும்,

"பண்டுபுரி நற்றவத்துப் பழுதினள விறைவழுவுத் தொண்டர்" (ஷி) எனவும்,

"வளர் திருத்தொண்டி னெறிவாழ,வருஞானத் தவமுனிவர் வாகீசர்"(ஷி)எனவும்

அப்பர் சுவாமிகளது முன் பிறப்பைப்பற்றிக் குறித்தனர்.

"பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டி னளித்தருள "

எனவும்,

"தொண்டினிலே தரவருவார் தொடர்ந்த பிரிவுணர் வொருகாற்
கொண்டெழலும் "

எனவும்,

"தம்மேலைச் சார்புணர்ந்தோ ? சாரும்பிள் ளாமைதானே ?"

எனவும்,

"பவமற வென்னை முன்னு ளாண்டவப் பண்பு கூட
நவமலர்ப் பாதங் கூட்டு மென்னுநல் லுணர்வு நல்க " (1245)

எனவும், ஆளுடையபிள்ளையாரது முன்னைத் திருத்தொண்டினிலையைக் கூறினர். இவ்வாறு குறிப்பாற் கூறுவதன்றி அவையின்னவென விரித்தாரலர். அவை அவ்வப்புராணச் சரிதங்களிற் கூறவேண்டிய நியதியும் இன்றியமையாத தொடர்பும் இன்மையான் என்க.

ஆளுடையநம்பிகளது முன்பின்வரலாறுகள் திருமூலச்சருக்கத்திலும் வெள்ளானைச்சருக்கத்திலும் கூறியுள்ளாரே ? எனின், அவர் இப்புராணகாவியத்தலைவராதலாலும் இப்புராணத்துக்கு மூலமாகிய திருத்தொண்டத்தொகை வரலாறும், இப்புராணம் வந்தவரலாறும் கூறவேண்டியது இன்றியமையாததாலாலும் கூறினர் என்க.

கோச்செங்கட்சோழர் ஆதிமூர்த்தியருளால் முன்னுணர்ந்து பிறந்து அரசாண்டு தான் அமைத்த சிவாலயங்களனைத்தும் யானைபுகாத மாடக்கோயில்களாக எடுப்பித்த சரிதஅமைப்புக்கூறுதல் இன்றியமையாத தொடர்பாதலின் அவரது முன்சரிதங்கூறினர்என்பது காணப்படும். எனவே இவற்றால் ஆசிரியர் இம்மரபு பிழையாமை காண்க.

"வாமான்றேர் வல்ல வயப்போர் விசயனைப்போல்,தாமா ருலகிற் றவமுடையார் - தாமார்க்குங், காண்டற் கரியராய்க் **காளத்தி யாள்வாரைத், தீண்டத்தாம் பெற்றமை** யாற் சென்று" (70) என்ற திருப்பாட்டாலும், "வாளா பொழுது கழிக்கின்றூர் மானுட வர், கேளார்கொ லந்தோ கிறிபட்டார் - கீளாடை, **யண்ணற் கணுக்காராய்க் காளத்தி யுண்ணின்ற, கண்ணப்ப** ராவார் கதை" (12), "**கதைபிலே கேளீர்** கயிலாய நோக் கிப், புதையிருட்கண் மாலோடும் போகிச் - சிதையாய்ச்சீர்த், தீர்த்தன்பாற் பாசுபதம் பெற்றுச் செருக்களத்திற், **பார்த்தன்போர் வென்றிலனே பண்டு**" (13) என்றுகூட்டியுரைத்த தொடர்பாலும், கயிலைபாதி காளத்திபாதியந்தாதியிலும், "ஒட்டி, விசையன் விசையளப்பான் வேடுருவ மாகி, யசைய வடநிரியா கின்று - விசையினுற், பேசுபதப் பான பிழைபொறுத்து **மற்றவர்க்குப், பாசுபத மீந்த பதம் போற்றி** - (அந்த) **நேசத்** தால், வாயினீர் கொண்டு மகுடத் தமிழ்ந்திறைச்சி, யாயசீர்ப் போனகமா வங்கமைத் துத் - தூயசீர்க், **கண்ணிடந்த கண்ணப்பர்** தம்மைமிகக் காதலித்து, விண்ணுலக மீந்த விறல்போற்றி - மண்ணின்மேல், காளத்தி போற்றி கயிலைமலை போற்றி" என்று கூட்டியுரைத்த தொடர்பால்போற்றித்திருக்கலிவெண்பாவிலும் பதினொராந்திருமுறையில் நக்கீரதேவர் அருளியவாற்றால் இவரது முன்னைநடர்பு அறியக்கிடத்தல்காண்க.

பாரதப்போர் வெல்லுதற்குப் பாசுபதப்படை பெறும்பொருட்டு அருச்சுனர் திருக்கயிலாயமலைச்சாரலில் அரியதவஞ்செய்ய இறைவர் வெளிப்பட்டனர். அவரைக் கண்டு அர்ச்சுனர் பாசுபதம் வேண்டாது முத்தியை வேண்டினர். அவர் "நீவிரும்பித் தவஞ்செய்த பாசுபதத்தை இப்போது தருவோம். இன்று வேண்டிய முத்தியைக் காளத்தியிற் றருவோம். எம்மை வேடனென்று இகழ்ந்தமையால் வேடனுகப்பிறக்து காளத்தியில் எம்மை அடைவாய்" என்றருள அவ்வாறே அருச்சுனர் வந்து அடைந்தனர் என்று சீகாளத்திபுராணம் கூறும்.

"பத்தியிற் பணிந்துபின் பாண்டு மைந்தனு, 'மத்தவுன் னருளினு லடிய னேனுய, மெத்தவெம் பவத்தினுன் மிகவு நொந்தனன், முத்தியை யரு'ளென முதல்வன் கூறிடும் (63);

"'வாங்குவிற் றடக்கையாய் வாரி சூழ்நிலத்,தோங்கிய பகைஞரை யொறுக்கு மாற்றினுற் றீங்கறு கணபெறச் சிந்தை செய்துநீ, யோங்கிய தவமிக வுஞற்றி வைகுஞய் (64);

"முன்னிய பகழிநீ கோடி முன்'னெனத், தன்னிகர் சங்கரன் றூன லித்'தெமை, யின்னல்செய் வேடனென் றிகழ்ந்து கூறினை, யன்னதால் வேட்டுவ வரச னுகியே(65),

"தென்றிசைக் கயிலையைச் சென்று சேர்ந்துநீ,குன்றலின்புருக்கொண்டு கம்மய[(66),
னன்றிகொ ளிலிங்கபூ சனைகற் பத்தியா,லொன்றையு முணர்ந்திடாதுவந்துசெய்தோ

"கோலமே முதலிய விலங்கு கொன்றுநீ, சாலவே தசையமு தருத்திச் சாருகா
ளேலவே முத்தியு மீதும் போ'வெனு, நீலமார் களத்திறை நீங்கி னனரோ. (67)

என்பது சீகாளத்திப்புராணம் (சிலந்தி முதல முற்கதைச் சுருக்கம்).

இறைவன் அருளியவாறே அருச்சுனர் வேடராய்ப் பிறந்து திண்ணனுராய்த் திருக்காளத்தியை அடைந்தனர். முன்னர்த் தவஞ்செய்த திருக்கயிலைமலைச் சாரல் திருக்காளத்திமலைச்சாரல்; முன்தவநிலையில் இறைவனைக்காண ஒருபன்றி துணைக் காரணமாய்நின்றதுபோல இங்குக் காளத்தியப்பரைக் காண்பதற்கும் ஒருபன்றி துணையாய்வந்து அழைத்துச்சென்றது; என்றிவ்வாறு தொடர்புகள் பலவும் பொருந்தக் கண்டுகொள்க. காளத்திகயிலையேயாம் என்பது சீகாளத்திப்புராணம் சுக்கிரச்சருக்கத்தினுலும் உணர்க. "கயிலாயத் துச்சி யுள்ளான் காளத்தி யானவனென் கண்ணு ளானே", "காளத்தி காணப் பட்ட கணநாதன்காண்" என்பவை தமிழ்வேதத் திருவாக்குக்கள்.

**முடிவிலா இன்பமான் அன்பினை எடுத்துக்காட்ட** - **முடிவிலா** - காலத்தாலும் இடத்தாலும் அளவுபடாத - முடிவுபெறுத. "பேரா ஒழியாப் பிரிவில்லா மறவா நினையா அளவிலா மாளா இன்பம்" என்ற திருவாசகம் காண்க. **முடிவு** - அழிவு என்று கொண்டு அழிவில்லாத என்றலுமாம். "இறவாத இன்ப அன்பு" என்றது காண்க. உலகத்து இன்பங்கள் எல்லாம் ஒருகாலத்தில் அழிந்து ஒழிவன. இறைவனது இன்பம் ஒன்றே என்றைக்கும் முடிவு இல்லாதது என்றதாம். "ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே என்னுடை யன்பே" என்ற திருவாசகத்திலும் இக்கருத்தே காண்க. **இன்பமான் அன்பு** - அன்புதானே முடிவிலா இன்பமாகவிளையும். **ஆன** என்றது ஆயின - அதுவாய்விளைந்த-என்ற பொருளில்வந்தது. "அன்பே சிவமாவ தாரு மறிகிலார்" என்ற திருமந்திரமுங்காண்க. அந்தமில் இன்பத் தழிவில் வீட்டுக்கு ஏதுவாகிய அன்பு. "இனியன் றன்னடைந் தார்க்கிடை மருதனே" என்றது தமிழ்வேதம்.

**எடுத்துக்காட்ட** - உள்ளிருந்து உயிருணர்ச்சிக்குப் புலனுக்க. இவர்முன்பு தவஞ் செய்து பண்பட்டுத்திருந்தியமையால் அது அன்பினையும், அந்தஅன்பே முடிவான இன்பத்தினையும் இவர்க்கு உணர்த்தியன. முன்னைத்தவமுடையாரே இவ்வாறு காண்பர். திருக்காளத்தியைக்காணும் ஏனையோர் எவரும் இவ்வாறு கண்டனையாமைக்கு

இல்லாமையே காரணமாம். காட்ட - காட்டலால் என்க. பொங்குதற்குக் காரணங் கூறியவாறு.

தவம் என்றது ஈண்டுச் சிவபூசை குறித்தது. ஏனைத்தேவர்களை நோக்கிச் செய்வன முடிவிலா வின்பமான அன்பினைக் காட்டுந் தவமாகா. "செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று, பத்தி செய்மனப் பாறைகட் கேறுமோ" என்றதுகாண்க. மாபாரதம் 13-ம்காட் போர்ச்சருக்கங் கைலாசயாத்திரை கூறுமிடத்துப் "பாவை பங்கன் மேற் புரிந்தில னின்னமும் பூசை யென்றனன்", "மனமொன்றியே சிவாகமவுரையிற் சாத்திலுன்" என்ற இவை முதலியவற்றுனறிக. "தவத்தினி லுணர்த்தவிட்டு" என்ற ஞானசாத்திரமுங்காண்க. ஈண்டுத் தவத்தினீட்டம் காட்டியமுறையினை-நீர்வேட்கையால் குளிர்ந்த நதிகாணவந்த திண்ணனூர் அரைக்காவதத்தில் மலைச்சாரற் சோலைகண்டார்; அக்காட்சி அக்குன்றில் நண்ணுவோம் என்ற விருப்பைத்தந்தது; காணன் அங்குப்போயின் நல்லகாட்சிகாணும் எனக்கேட்டதும் தன்மேற்பாரம்போவது போலத் தோன்றிற்று; ஆசைமிக்கு நெஞ்சில்வேரூர் விருப்புவிரைத்தது; அவ்வாறே நதியூடுவந்தார்க்குச் சிந்தைதெளிவுற்றது; இக்கிலேயில் பின்னும் காளத்திகண்டு கொண்டு நதிகடந்து சாரல்சேர்ந்தார்; அங்கு காணன் 'இம்மலைப்பெருந்தேன் சூழ்ந்மதுமலர் ஈக்கள்மொய்த்த' ஒலியினையும் அதனுல்பெரிய இன்பநிலையத்தினையும் நினைவூட்டினுன்; அப்போது முன்னைத்தவம் முடிவிலாஇன்பமாய் விளைந்த அன்பினை எடுத்துக் காட்டிற்று; காட்டவே இன்பத்தை அடைய முயலுதல் ஆன்மாக்களின் இயல்பாதலின், அதனில் அளவிலா ஆர்வம்பொங்கிற்று - என்று இவ்வாறு முன் உரைத்த மனநிகழ்ச்சி மாறுபாடுகளினும், திண்ணனூர் உலகநிலைவிட்டுச் சிவச்சார்பு பெறச்செல்லும் படிமுறையான செயல்களினும் வைத்துக் கண்டுகொள்க. இக்கருத்துப் பற்றியே "பேணுதத் தவங்க ளென்னும் பெருகுசோ பான மேறி" என வரும் பாட்டிற் கூறினர். தவப்பெருக்கிலுலே உயிர் உலகத்தை விடவிடச் சிவத்தைப்பற்றுகின்ற தென்ற உண்மையும் காண்க.

**ஆர்வம்பொங்கி** - தவம்உள்ளிருந்து இன்பமான அன்பை உயிருக்குக்காட்ட அவ்வுயிருணர்ச்சி அளவுபடாமற் பொங்கி.

**மன்பெருங் காதல் கூர** - நிலைத்த பெருங்காதலாகச் சிறந்துவர. இது அந்த உயிருணர்ச்சி மனத்திலே தாக்கி மிக்க காதலாய் மாறிய நிலைகுறித்தது. **மன்னுதல்** - பின்னர் எஞ்ஞான்றும் மாறுது நிலைத்தல்.

**வள்ளலார் மலையை நோக்கி-வள்ளலார்**-இறைவர். "காளத்தி கண்டுகொண்"டே (749) வந்தவர் காதல்கூர்ந்ததனுல் அதனையே நோக்கி என்க. **நோக்குதல்** - ஊன்றிப் பார்த்தல். ஒருபொருளை மிக இச்சித்தவன் அதனையேநோக்கிக் குறிவைத்துச்செல்வது உலக ஒழுக்கத்தினும் காணப்படும். காதல்மிக்கபோது அதுவே வெளிப்பட மற்றெல்லாவற்றையும் மறந்து சரித்தலுங் காணப்படும். உருவெளிப்பாடு முதலிய அகப்பொருட்டுறைகளும் இக்கருத்துப்பற்றியன. ஒருபொருள்வெறி (Monomania) என்று சாத்திரிகள் கூறும் மனநிலை இதனுேடொத்ததாம்.

**என்புநெக்குருகி** - பெருங்காதல் கூர்ந்தபோது உளதாம் மெய்ப்பாடு. உடலுக்காதாரமாயுள்ள எலும்பும் உள்ளுருகி. எனவே உடல்முழுதும் பரவசமாய் உருகிற்று என்பதாம். **நெக்குருகி** - மிகஉருகி என்க. எலும்பும் தனது கடினத்தன்மை நெகிழ்ந்து இளகி மென்மையை அடைந்து. "புன்புலால் யாக்கை புரைபுரை கனிய... என்பொலாமுருக்கி" என்ற திருவாசகமும் காண்க.

**வேட்கை** - காதலித்தபொருளைப் பெறுதற்கண்உளதாகும் உள்ளகிளர்ச்சி. 102

752. (வி - ரை) **அன்பு** - இது ஆர்வம், காதல், வேட்கை என ஒன்றினுென்று மிக்க மூன்றுநிலையில் வெளிப்பட்டது. இவை இச்சா சத்தியின்ருழில். அது (இச்சை)

முன்னர்ச்சென்றது. அதனை அன்பு முன்பு நளிர்வரை ஏற்ற என்றார். நாணனும் அன்பும் - எண்ணும்மை. தாழும் - உம்மை இறந்ததுதழுவியது.

பேணுதத்துவங்கள்...ஏறி - பேணுதல் - போஷித்தல் - வளர்த்தல். கண்ணுக்கு விளக்குப்போலத் தத்துவங்கள் ஆன்மாவுக்குச் சகலநிலையில் அறிவு இச்சை செயல்களின் வளர்ச்சிக்குக்கருவியாய் அவற்றைவளர்த்தலின் பேணுதத்துவங்கள் என்றார். "வருமிவள் நம்மைப் பேணு மம்மைகாண்" என்ற காரைக்காலம்மையார் புராணங் காண்க. பேணுதல் - வழிபாடுசெய்தல் என்றலுமாம். "கொன்றையா னடியலாற் பேண எம்பிரான் சம்பந்தன்" என்ற திருத்தொண்டத்தொகை காண்க. தத்துவங்களை வழிபாடுசெய்தல் சிவபூசையில் பதமாசனபூசையிலும், நிர்வாணதீட்சையில் அத்துவ சோதனையிலும் நமார்த்தமாகத் தத்துவங்களைவழிபடுதல். இம்முறைகள் ஆகமங்களில் விதிக்கப்பட்டன.

தத்துவங்கள் என்னும் பேநதுசோபானம் - இங்குத் தத்துவமென்றது சுத்தம் அசுத்தம்என்ற இருவகை மாயையினின்றுந்தோன்றிய நிலமுதல் சிவமீறுகளுள்ள முப்பத்தாறினையுமாம். இவைகளைத் தத்துவம் என்றது எல்லாவுயிர்களுக்கும் போகத்தைக்கொடுப்பனவாய்ப் பிரளயம்வரைஉள்ளனஎன்னும் பொருள்பற்றியாம். நிலம்முதலாக ஒவ்வொன்றினையுமேறி அனேத்தையுங்கடந்து பரம்பொருளை அணைதற்குப் படிகள் போல இவைஅமைதலின் தத்துவப்படி - தத்துவசோபானம் என்பர். முதலாவதாகிய நிலம் நூறுகோடி *யோசனைப்பரப்புடையது. நிலத்துக்குப் பத்துமடங்கு விரிந்தது அப்புதத்துவம். இவ்வாறே அப்புமுதல் குணதத்துவம்வரை ஒன்றுக்கொன்று பத்து மடங்கு விரிவுள்ளன; அதன்மேற் பிரகிருதிமுதல் அசுத்தமாயாதத்துவம்வரை ஒன்றுக்கொன்று நூறுமடங்குவிரிவும், சுத்தவித்தைமுதல் சதாசிவதத்துவம்வரை ஒன்றுக்கொன்று ஆயிரமடங்கு விரிவுமுடையன. அதன்மேற் சத்திதத்துவம் இலக்கம்மடங்கு விரிவுடையது. அதன்மேற் சிவதத்துவம் எல்லைகடந்தது. இவ்வாறு இவை ஒன்றினொன்று மேல்விரிந்துசெல்லுதலின் பேநதுசோபானம் என்றார்.

ஆணையாம்சிவம் - புறப்பொருளை நோக்காது பேரறிவுமாத்திரமாய் நிற்கின்ற சைதன்னியமே சிவம். அச்சிவம் உயிர்களுக்குப் பசுத்துவத்தைநீக்கிச் சிவத்துவத்தை விளக்குதலில் உள்ளதாகிய இரக்கமேஅருள். ஆதலின் ஆணையாம் சிவம் என்றார். அருள் - சத்தி - ஆணைஎன்பன ஒருபொருட்சொற்கள். "ஆணையின் நீக்க மின்றி நிற்கு மன்றே" என்பது சிவஞானபோதம். இனி, அச்சிவமென்னும்பொருள் உயிர்கட்கு அருளும்பொருட்டுத் தோன்றுங்கால் அருளாகிய ஆணையினிடமாகத் தோன்றுதலின் ஆணைஆம் என்றார் என்றுரைத்தலுமாம். இப்பொருட்கு ஆணை - ஆணையினிடத்தி,

* யோசனையாவது: 24 அங்குலம்கொண்ட முழத்திலுலே 16000 கொண்டது ஒரு குரோசமாக,நான்கு குரோசங்கள்கொண்டது ஒருயோசனையாம்.எனவே 64000முழம் ஒருயோசனைஎனப்படும். இதுபற்றி, "சாளரத்திற்றோன்றும் ஞாயிற்றின்கதிரின் அதி நுட்பமாய்த் தோன்றும் நுண்ணிய துகள் அணுவெனப்படும். அஃதெண்மடங்கு கொண்டது திரிசர அணு. அஃதெண்மடங்குகொண்டது கசாக்கிரம். அஃதெண்மடங்கு கொண்டது இலீக்கை. அஃதெண்மடங்குகொண்டது யூகை. அஃதெண்மடங்கு கொண்டது இயவைநெல்லு. இயவைநெல்லகலம் எட்டுக்கொண்டது ஓர்அங்குலம். அங்குலம் இருபத்துநான்குகொண்டது ஒருமுழம். முழம் நான்குகொண்டது ஒரு வில். வில்லிரண்டுகொண்டது ஒருதண்டம். தண்டம் இரண்டாயிரங்கொண்டது ஒரு குரோசம். குரோசம் நான்குகொண்டது ஒருயோசனை; ஆகலான் இத்தனையாற் சாதாரண புடவிதத்துவமாகிய அண்டம்நூறுகோடியோசனை ஆழ வகல நீளங்களையுடையது" என்று சிவஞானபாடியம் 2, 3-ல் "அரவுதன்" என்ற வெண்பாவின்கீழ் உரைத்தலைகாண்க. வில் ஒருஅளவுஎன்பது "பட்டிகை யெட்டா தங்கு நூறு விற்கிடக்கை முன்னே போனது" (திருஞான. புரா - 815) என்றதனாலும் அறிக.

**ஆம்** - தோன்றும்எனவுரைத்துக்கொள்க."முன்னருட் சத்தி தன்பால்முகிழ்க்குந்தான் முளையான்"என்றசிவஞானசித்தியா(1.68)ரும்,அதற்கு"அவன் யாண்டுஞ் சத்தியினிட மாகவே தோன்றுவானன்றித் தானாக வேறு தோன்றான் " என்னும் பொழிப்புரையுங் காண்க. இதற்குத் தனக்குமேற்பட்ட ஆணையில்லாதசிவம் என்றுரைப்பாருமுண்டு.

**சார**-முன்சார்ந்துநின்ற பாசச்சார்பைவிட்டுச் சிவத்தைச்சார.ஆணவத்தொடத்து விதமாதலை விட்டு, மெய்ஞ்ஞானத் தாணுவினோடத்துவிதமாய்ச் சாரஎன்க. **சார்பு** - "சார்புணர்ந்து" என்ற திருக்குறளுங்காண்க.

**அணைபவர்போல - அணைபவர்** - சிவயோகிகள். இவர்கள் நிலமுதற் சிவமீறாகிய 36 தத்துவங்களையும் படிமுறையானே ஏறி நீக்கிச் சிவத்தை அணைந்துசார்வர். "பூத முங் காரணம் பொறிக ளைம்புலனும் பொருந்திய குணங்களோர் மூன்றும், நாதமுங் கடந்த வெளியிலே நீயு நானுமாய் நிற்குநா ளுளதோ?" என்ற **பட்டினத்தடிகள்** திருப்பாட்டும், "ஆறா றையுநீத் ததன்மே னிலையைப், பேறா வடியேன் பெறுமா றுளதோ?" என்ற கந்தரனுபூதியுங்காண்க.

**ஐயர்** - பெருமையுடையவர். ஐம்புலன்களையும் வென்றமுனிவர். **ஐயர்மலை**-ஐயர் கள் வாழ்கின்றமலை என்பதாம். "ஐந்துமா றடக்கி யுள்ளா ரரும்பெருஞ் சோதி யாலும்" (780) என்று பின்னர்க் கூறுவதனால் இம்மலையில் முனிவர்கள் தவஞ்செய்து வாழ்தல் பெறப்படும். தலபுராணசரிதங்களுங் காண்க. இனி, **ஐயர்**-இறைவன் என்று கொண்டு, அவர் எழுந்தருளிய மலை என்றலுமாம். ஐயர் - (776) என்றதும்காண்க.

**நீள்நிலை - நீள்** - நெடுந்தூரம் வடிவத்தாலும் நீளுவது. **நீள்நிலை** - முக்காலத்தி லும் ஒப்ப நீளும்தன்மையுடையது. இத்தலம் ஐந்துயோசனை அகலமும் பத்துயோசனை நீளமும் உடையதுஎன்பது திருக்காளத்திப்புராணம் சூதசங்கிதை முதலியவற்றா னறி யப்படும். இதுகயிலையேயாதலின் என்றும் அழியாது நிலைத்த தன்மையுடையது என்க.

**நேர்பட** - எதிர்ப்பட. எந்தப்பேற்றினைப் பெறுதற்கு அவதரித்தனரோ அதனைப் பெற. எதிர்ப்படுதல் என்பதுணர்த்தும் நேர்படுதல் என்னும்சொல் ஈண்டு நேர்பட்ட வழிப் பெறும் பயனைப்பெற என்ற பொருளில்வந்தது. "கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டு" என்ற திருவாசகத்தின் சொல்லும் பொருளும் இங்குவைத்துக் காண்க.

**அணையும்போதில்** அங்கணர் அருட்டிரு நோக்கமெய்த என்று வரும்பாட்டுடன் கூட்டிமுடிக்க. 103

753. (வி - ரை) **சென்றவர் சடையார் தம்மைக் காணாமுன்னே** எனமாற்றுக. **சென்றவர்** - நேர்படச் சென்றவராகிய திண்ணனார். வினையாலணையும் பெயர்.

**காணாமுன்னே** - காணுதற்குமுன் என்றது **காணாமுன்** என நின்றது.

**அங்கணர்** - கிருபைக் கண்ணுடையவர். கண்ணுக்கு அழகாவது கண்ணோட்ட முடைமை. **கருணைகூர்ந்த அருட்டிருநோக்கமெய்த** என்று இப்பொருளை இங்குச் சொற்பொருள் விரித்துக்காட்டியதும் காண்க. அருட்பார்வை செய்கின்றாராதலின் இங்கு இப்பெயராற்கூறினார். 39-147 பாட்டுக்களும் காண்க.

**கருணைகூர்ந்த அருள் திருநோக்கம்** - கருணைகூர்ந்த நோக்கம், அருட்டிருநோக்கம் எனக்கூட்டுக. **கருணைகூர்ந்த நோக்கமாவது** இருவினைப்பயனை ஊட்டித் திரோதான உருவமாய் நின்ற மறக்கருணை மாறி, அறக்கருணையாய்ச்சிறந்த நோக்கம். **அருள்திரு நோக்கம்** என்பது சட்சுதீட்சை. இதனை, "சிஷ்ய: ஶமீக்ஷ்யதே பாசபந்த விமோக்ஷாய தீக்ஷேயம் சாக்ஷுஷீபவேத்" (பாசபந்தம் நீங்கும்பொருட்டுச் சீடன் [ஆசாரியனால்] பார்க்கப்படுகிறான்) என்று ஆகமங்கூறும். "முன் சினமருவு திரோதாயி கருணையாகித் திருந்தியசத் திநிபாதந் திகழு மன்றே" என்ற ஞானசாத்திரத்தால் (சிவப்பிரகாசம் - 48) கருணைகூர்ந்த திருநோக்கம் விளக்கப்பட்டது.

**நோக்கம் எய்த** - அருட்பார்வை இவர்பாற்பொருந்த."தானென்னைப், பார்த்தான் பழையவினைப் பஞ்சமலக் கொத்தையெல்லாம், நீத்தான் நினைவுவே றாக்கினான் - ஏத்

தரிய, தொண்ணூற் றறுவர்பயில் தொக்கிற் றுவக்கறுத்தான், கண்ணூறு தேனமுதங் காட்டினுன்'' என்ற செஞ்சுவிடுதூதுங் காண்க. இத்திருநோக்கம் முன்னுட் கயிலாயத்தில், காளத்திசார்ந்து பூசைசெய்து ''சாருநா ளேலவே முத்தியு மீதும்போ''வென்று அருளிச்செய்த காலத்து இறைவன் பார்த்த அருட்பார்வையின் தொடர்ச்சியாதலின் அவர் (திண்ணனுர்) காணுமுன் எய்தியது. அவரது முன்னைத்தவம் இதற்குக் காரணமாம். எனையோர்க்கும் அவ்வாறெய்தாமைக்கு அவ்வவர் தவமின்மையே காரணமெனவும் இறைவன் யாவரையும் ஒன்றுகவே காண்பவன் எனவும் கண்டு கொள்க.

**தங்கியபவம்** - இவ்வுலகில்வந்த வேடராகிய இப்பிறப்பு. பவம் - பிறத்தல் - உண்டாதல். இனி, இதற்குத் தங்கிய - எஞ்சிநின்ற, பவம் - பிறப்பு என்று கூறலுமாம். இவ்வொருபிறப்பே இவர்க்கு எஞ்சிநின்றது என்றபடி.

**முன்னைச்சார்பு விட்டு அகல** - முன்னைச்சார்பு - அகாதியே தொடர்ந்துநின்ற சார்பாகிய மல மாயை கன்மங்கள். விட்டு அகல - விடுத்துப்போக. **விடுதல்** - சேர்க்கையின்றுதல். நீங்கி - அவற்றினின்றும் விடுபட்டு.

**அருள்திருநோக்கால் முன்னைச்சார்புவிட்டு நீங்குதல்**-''உயிர், தான் முன்னேசெய்து கொள்ளப்பட்ட புண்ணிய விசேடத்தாற் றனக்கு அத்தியாமியாய் இதுகாறுமுண்ணின்றுணர்த்திவந்த பரம்பொருளே இப்பொழுது குருவடிவமுங்கொண் டெழுந்தருளிவந்து சிவதீக்கைசெய்து, 'மன்னவகுமாரனுகியநீ ஐம்பொறிகளாகிய வேடருட்பட்டு வளர்ந்துநின் பெருந்தகைமை அறியாது மயங்கியிடர்ப்பட்டாய்; நின்பெருந்தகைமையாவது இவ்வியல்பிற்'றென்றறிவுறுப்ப, அறிந்தமாத்திரையே, அவ்வேடரை விட்டு நீங்கி, அன்னியமின்றி, அகன்னியமாந் தன்மையின் நிலைபெற்று, அம்முதல்வன்றிருவடிகளேயணையும்'' என்று சிவஞானபோதம் எட்டாஞ்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்புரைக்குமாற்றூல் எமது மாதவச்சிவஞானசுவாமிகள் இதனை விளக்கியதுகாண்க.

**பொங்கிய ஒளியின் நீழல்** - பொங்குதல் - விரிந்துவிளங்குதல். ஒளியின் நீழல்-ஒளியினது நீழலின்கண். ஒளி என்றது ஈண்டுக் காளத்திநாதரை. நீழல் - அவரதுதிருவடி. அத்திருவடியினிடத்து. ''திருக்காளத்தி யுள்ளிருந்த ஒளியே யுன்னையல்லாலொன்று முணரேனே'' என்ற ஆளுடையநம்பிகளது தேவாரமும், ''அடித்தொண்டர்துன்னு நிழலாவன...அடித்தலமே''என்ற திருவிருத்தமும், ''தண்ணிழலாம்பதி'' என்ற சிவஞானபோதம் ஒன்பதாஞ்சூத்திரமும், அதனுரையுங் காண்க.இறைவனைப் பேரொளியாகத் தியானித்தல் சிவாகமங்களில் விதிக்கப்பட்டது. '' ஆயிர ஞாயிறு போலு மாயிர நீண்முடி யானும்'' என்ற அப்பர்சுவாமிகளது (திருவாரூர்-பண்-காந்தாரம்-8) தேவாரமும், ''ஞாயிறு கடற்கண் டாஅங், கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி'' என்ற திருமுருகாற்றுப்படையும், பிறவும்காண்க. கண்டம், கண்டாகண்டம், அகண்டம் என ஒளிகள் மூவகைப்படும். கண்டஒளிகளாகிய விளக்குமுதலியவையும், கண்டாகண்ட ஒளிகளெனப்படும் இரவி - மதிமுதலியனவும் அகண்டஒளியாகிய சிவவொளியின்முன்னர்ப் பிரகாசிக்கமாட்டா.சிவவொளியே ஏனைஎல்லா வொளிகளுக்கும் ஒளிதரும் காரணமாம்.ஆன்மஞானம், ஏனைஅத்தக்காணஞான,இந்திரியஞானங்களின் மிக்கு அவற்றிற்கு மூலமாய் நிற்பதுபோலச் சிவவொளியே ஏனை எல்லாவொளிகட்கும் மேலாய்நிற்பது. அது சுயஞ்சோதி, பரஞ்சோதி, அலகில்சோதி என்று பலதிறப்பட அறியப்படும். '' சோதியே சுடரே சூழொளி விளக்கே '' என்ற திருவாசகத்தில் இவ்வியல்பு விளக்கப்பட்டமை காண்க. '' ஒளியா யொளியத வொளியா யொளியத வொளியும் தணிதரு மொளியாகி '' என்ற பேரூர்ப்புராண (திருத்தப்படலம்)முங் காண்க.

**பொருவில் அன்பு உருவம் ஆனுர்** - நீழலின்கண்ணே அன்புஅடங்காது மீதூர அந்த அன்பே தமக்கு வடிவமாக ஆயினுர்.முன்புசெய்தவத்தினீட்டம் முடிவிலா இன்பமான அன்பினை எடுத்துக்காட்டிற்று ; அருட்டிருநோக்கத்தால் முன்னைச்சார்புவிட்டு அகன்றது ; அகலவே பொங்கியஒளியினீழலே சேர்பட்டார் ; படுதலும் அதனிடத்து

அடங்காது மீதூர்ந்த அன்பே வடிவமாகப்பெற்றார் என்பதாம். இனி, அன்பே சிவம்; சிவன்சார்ந்ததன் வண்ணமாவன்; சிவனைச்சார்ந்தசிவன் அவனதுருவாகிய அன்புருவ மாவன் என்றலுமாம். "பரிவின்றன்மையுருவுகொண்டனையவன்"-கல்லாடனார். 104

754. மாகமார் திருக்கா ளத்தி மலையெழு கொழுந்தா யுள்ள
வேகநா யகரைக் கண்டா; ரெழுந்தபே ருவகை யன்பின்
வேகமா னதுமேற் செல்ல மிக்கதோர் விசையி னோடு
மோகமா யோடிச் சென்றார்; தழுவினர்; மோந்து நின்றார். கஅடு

(இ - ள்) வெளிப்படை. ஆகாயத்தை அளாவி நிறைந்தோங்கிய திருக்காளத்தி மலையில் எழும் கொழுந்தாகியுள்ள ஏகநாயகராகிய இறைவரைத் (திண்ணனார்) கண்டனர்; அக்காட்சியால் எழுந்த பெரிய மகிழ்ச்சியாகிய அன்பினது வேகமானது மேற் செல்ல, மிகுந்ததோர் விசையினோடும், மோகமாகி ஓடிச்சென்று (அவரைத்) தழுவிக் கொண்டு உச்சிமோந்து நின்றனர்.

(வி - ரை) மாகம் - ஆகாயம். ஆர்தல் - நிறைதல். மாகமார்-ஆகாயத்தை அளாவ உயர்ந்து நிறைந்த. மாகம் - ஆகுபெயராய் விண்ணவரைக் குறித்ததாகக் கொண்டு, விண்ணவர்கள் வணங்குதற்பொருட்டுக்கூடி நிறைந்த என்றுரைப்பது மொன்று. "கடவுண்மால் வரையி னுச்சி அதிர்தரும் ஓசை யைந்தும்" (750) என்றுகூறியதும் காண்க. மாகமாவது பூமிக்கும் சுவர்க்கத்திற்கும் நடு என்பார் பரிமேலழகர் (பரிபாடல்-க. 47).

மலை எழு கொழுந்து-மலையின் சிகரத்தில் எழுந்துவிளங்கும் கொழுந்துபோல்பவர். கொழுந்து - தாவரங்களிற் தளிர்தோன்று முறுப்பு. மலை-சிவமாக,இவர் அதன் இளைய தனிப்பகுதிபோல்வார் என்றதாம். சுந்தமித்தேவர் என்றதுமிது. இத்தலத் தேவாரத்தில் ஆளுடையபிள்ளைகள் "கொழுந்தே! யென்குணக்கடலே!" (8) என்று போற்றியதும் காண்க. "கோட்டேர்க் கொழுந்தே!" என்ற தேவாரமும், "சைவக்கொழுந்தே! தவக்கடலே!" என்ற கந்தர்கலி வெண்பாவும் காண்க. சுயம்பு, காணம், ஆரிடம், முதலியனவாய் வகுக்கப்பட்ட இலிங்கங்களுள்ளே இம்மூர்த்தி மலையின் உச்சியில் அருவுருவத் திருமேனியாகிய சதாசிவமூர்த்தமாய்ச் சுயம்புவாய் முளைத்தெழுந்த மூர்த்தி என்பது.

ஏகநாயகர் - தனிமுதற் கடவுள். "ஒருவனே போற்றி", "ஒருவனென்னு மொருவன்","ஏகநா யகனே யிமையவர்க் கரசை" என்றற்கிருடக்கத்த தமிழ்மறைகளும்,"ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்றேபதி" என்பதுமுதலிய ஞானசாத்திரமும் காண்க. "சிவன் ஒருவனே கர்த்தா, பிறர் ஒருவர்இன்று" என வேதாந்தங்கள் கூறுகின்றன. "பிரபஞ்சம் விசித்திர காரியமாய்க் காணப்படுதலின் இவ்வாறுகூடாத்தும் முதற்கடவுள் மூற்றுணர்வும் அளவிலாற்றலும் பேரருளும் சுதந்தரமும் முதலிய நிரதிசய குணங்களுடையனென்பதூஉம் பெறப்பட்டது. படவே இத்தன்மையனுகிய முதற்கடவுளொருவனே யமையுமாகலின் வேறுமத்தன்மையருண்டெனக்கொள்ளின் மிகையென்னுங் குற்றமாம். அல்லதூஉம் இலக்கணத்துள் ஒருவாற்றானும் வேற்றுமையில்வழி இலக்கியம் பலவாதல் செல்லாதென்னுங் கருத்தால் 'ஒன்றலா வொன்று' என வரையறுத்தோதினார்" என்று சிவஞானபோதம் முதற்சூத்திரத்தில் "ஒன்றலா வொன்றல்" என்னும் வெண்பாவின்கீழ் எமது மாதவச்சிவஞானசுவாமிகள் உரைத்தவையுங்காண்க.

கண்டார் - "தேவரங் கிருப்ப தெங்கே" என்று அளவிலாஆர்வம் பொங்கிக் காதல் கூரப் பெருவேட்கையோடும் (751) காண்பதற்கு வந்த திண்ணனார், தேவரைக் காணமுன்னே தேவரது அருட்கண்ணால் காணப்பெற்றார். பெறவே அவரது உயிரும் கரணங்களும் "அங்கண் மாயை யாக்கையின்மே லளவின் றுயர்ந்த சிவமயமாய்ப், பொங்கியெழுந்த திருவருளின் மூழ்கி" (சண்டீசர் புரா - 55) விளங்கின. இவ்வாறு சிவமயமாகப்பெற்ற கண்களாற் கண்டார்.

**எழுந்த பேரவகை அன்பின் வேகம்** - எழுந்த - முன்னர் உள்ளேகின்று இப் போது மேல்எழுந்த. பேரவகை - பெருமகிழ்ச்சியாகிய இன்பம். அன்பு - இன்ப மான அன்பு. வேகம் - ஆர்வம், காதல், வேட்கை என (751) மேற்சொல்லப்பட்டவை. வேகம் - சிவானந்தத்திற்கு ஏதுவாகிய அன்பின் கதி என்பர் இராமகாதச்செட்டி யார். இங்கு வேகம் என்றது பசி, தாகம், தூக்கம்முதலிய உபாதிவசப்பட்ட வேக மன்று. இந்த வேகங்கள் கெட்டபோதே சிவத்தை அடைவதாகிய இங்குக் குறித்த அன்பின் வேகம் - சிவவேகம் - உண்டாகும். "வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிபோற்றி" என்பது திருவாசகம். இந்த வேகம் உள்ளடங்காது மேல்எழுந்து இவரைத் தன்வசப் படுத்தி ஈர்த்துச்சென்றது. இவர் தம்வசமிழந்து தம்மை முற்றும் மறந்தார்; இறைவர் வசமேயாயினர். இந்நிலையினை மேல்வரும் இரண்டு பாட்டுக்களிற்கூறுவார். இதன்மேல் வரும் சரித நிகழ்ச்சிகள் யாவும் இந்நிலையின் நிகழ்வன.

**மோகம்** - குறித்தபொருளிடத்து அதிகஆசை. **தழுவுதல் - மோந்துநிற்றல் முத** லியவை அன்பு மேலீட்டால் நிகழ்வன. இதனைக் குறிக்க **மோகமாய்** என்றார்.

**சென்றார் - தழுவினார் - (நின்றார்)** என்ற வினைமுற்றுக்கள் சென்று தழுவி மோந்து (நின்றார்) என எச்சப்பொருள் தந்தன. திண்ணனார் முன்னம் குடுமித்தேவர் என்ற அவரது நாமம்கேட்டார்; அதன்பின் செவ்வே கோணமில்...தேவர் இருப்பர் என்று அவரிருக்கும் வண்ணம் கேட்டார்; பின்னர்த் திருக்காளத்திமலைமிசை என்று அவ னுடைய ஊர்கேட்டார்; இவ்வாறுரல் வேகமாய் ஓடிச்சென்று அவர் வசமாகித் தழுவிக் கொண்டார்; தாய்தந்தையரையும் உலக ஒழுக்கம் முதலிய முன்னைச் சார்புகளையும் அன்றே விட்டார்; தம்மையு மறந்தார்; அத்தேவரது தாள்களைத் தலைப்பட்டார் என் றிந்நிலைகளை,

"முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்; மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்;
பின்னை யவனுடைய வூரூர் கேட்டாள்; பெயர்த்து மவனுக்கே பிச்சி யாளுள்;
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்; அகன்ரு ளகலிடத்தா ராசா ரத்தைத்;
தன்னை மறந்தாடன் னுமங் கெட்டாள்; தலைப்பட்டா ணங்கை தலைவன் ரூளே"

என்ற திருத்தாண்டகத்தி லருளிச் செய்யப்பட்டவாறு கண்டு கொள்க. இவையே முன்னைத் தவத்திற்கேற்றவாறு உயிர்கள்பெறும் பக்குவநிலையில் அடையும் அனுபவங் களாம். 105

755. நெடிதுபோ துயிர்த்து நின்று, நிறைந்தெழு மயிர்க்கா றோறும்
வடிவேலாம் புளகம் பொங்க, மலர்க்கண்ணீ ரருவி பாய,
"அடியனேற் கிவர்தா மிங்கே யகப்பட்டா ரச்சோ!" வென்று
படியிலாப் பரிவு தானேர் படிவமாம் பரிசு தோன்ற, கoசு

756. வெம்மறக் குலத்து வந்த வேட்டுவச் சாதி யார்போற்
கைம்மலை காடி வேங்கை யரிதிரி கானந் தன்னில்
உம்முடன் னுணையா யுள்ளா ரொருவரு மின்றிக் கெட்டேன்!
இம்மலை தனியே நீரிங் கிருப்பதே!" யென்று நைந்தார். கoஎ

755. (இ - ள்) வெளிப்படை. நெடுநேரம் அவ்வாறு மோந்து நின்று, தமது திருமேனியெங்கும் எழுந்த மயிர்க்கால்தோறும் புளகம் பொங்கவும், மலர்போன்ற கண்களினின்று கண்ணீர் அருவிபோலப் பாய்ந்து வடியவும், " அடியேனுக்கு இவர் தாம் இங்கு அகப்பட்டனரே! அச்சோ! (இது என்ன அதிசயம்?)" என்று தாமே கூறி, ஒப்பில்லாத அன்புதானே ஒருவடிவமாயிற்று என்னும் தன்மை புலப்பட, கoசு

756. (இ - ள்) வெளிப்படை. "கொடிய மறக்குலத்தில் வந்த வேட்டுவச் சாதியாரைப்போல, யானை காடி புலி சிங்கம் முதலிய கொடிய விலங்குகள் திரிதற்கிடமாகிய காட்டிலே, உம்முடன் துணையாயுள்ளவர்கள் ஒருவருமில்லாமல், ஓ! கெட்டேன்!, நீர் இம்மலையில் தனியே யிருப்பதோ?" என்றுகூறி மனம் நைந்தனர். கூடுக

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

755. (வி - ரை) நெடிதுபோது உயிர்த்து நின்று - எழுந்த பெருமகிழ்வும் அன்பும் கூடிய வேகத்தால் விரைவில் ஓடித் தழுவி மோந்து நின்றாராதலின் அவ்வேகமும் மோகமும் தணியும்வரை நீண்டநேரம் மோந்த வண்ணமாக நின்றதாம்.

நிறைந்து எழும் மயிர்க்கால் தோறும் - செறிவாய் நிறைந்துள்ள மயிர்களின் அடியிடங்கள் ஒவ்வொன்றிலும். வடிவு எலாம் - உடல்முழுவதும். புளகம் பொங்குதல் - (உரோமகூபங்கள்) மயிர்களின் வேர்களிருக்கும் இடங்கள் மேற்கிளம்பி மிக்குக் காட்டுதல். இஃது அளவற்ற ஆனந்தத்தாலாவது. உடல் வேகம் மனவேகங்களால் உடலிற்சூடு கொண்ட இரத்தம், உழைப்புமிக்க அந்தந்த இடங்களுக்கு விரைவாகச் செலுத்தப்பட்டு ஓடும்; அதனால் வேர்வையுண்டாம்; கண்ணீர்வரும். இங்கு அன்பின் வேகம் மிகவே உள்ளம் நெகிழ்ந்தது. உள்ளத்தால் இயக்கப்படும் உடல்முழுதும் இரத்தம் அதிகவிசையில் ஓட மயிர்ப்புளகமும் கண்ணீர்ப் பெருக்கமும் உண்டாயின.

மலர்க்கண்ண - தாமரை மலர்போன்ற கண்களிலிருந்து; ஐந்தனுருபுதொக்கது. 'பூவெனப் படுவது பொறிவாழ் பூவே' என்றபடி, மலர் என்ற பொதுப்பெயர் இங்குத் தாமரையைக்குறித்தது. அநவிநீர்பாய என்க. அருவிபோலக் கண்ணீர் இடையறாது பாய்ந்து வர. உவமவுருபு தொக்கது. "பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப் பள்ளந்தாழுறுபுனலிற் கீழ்மே லாகப் பதைத்துருகு மவர்" என்ற திருவாசகத்திற் குறித்தநிலை இது.

அடியனேற்கு இவர்தாம் இங்கே அகப்பட்டார் - இங்கு இவர் தாம் அடியேனுகிய எனக்குட்கிடைத்தனர். அகப்படுதல் - தன்னுட்படுதல்; பெற்றபொருளாதல். மிகக் கீழான அடிமைக்கு மிகமேலான இவர் கிடைத்துவிட்டனரே!. "யாவர்க்கு மேலா மளவிலாச் சிருடையான்!, யாவர்க்குங் கீழா மடியேனை-யாவரும், பெற்றறியா வின்பத்துள் வைத்தாய்க்கென் னெம்பெருமான்!, மற்றறியேன் செய்யும் வகை" என்ற திருவாசகக் கருத்தை இங்குவைத்து நோக்குக. "என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே?", "எனக்கு அருளியவா ரூர்பெறுவா ரச்சோவே!", "ஆரும் பெறுத வறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்?" என்பனவாதி திருவாக்குக்கள்காண்க.

அச்சோ! - விதப்புச்சொல். இன்பமான ஆச்சரியக்குறிப்பு.

படியிலாப் பரிவு...தோன்ற - படி - ஒப்பு. படியிலா - ஒப்பில்லாத - இதன்படி வேறொன்றும் இல்லாத. பரிவு - அன்பு. இணையற்றஅன்பே ஒரு வடிவாயிற்று என்னுந்தன்மை வெளிப்பட. பரிசு - தன்மை. படிவம் - வடிவம். "கண்ணப்ப னெப்பதோர் அன்பின்மை" என்ற திருவாசகம் இதனை எதிர்மறைப் பண்பில் வைத்து ஒப்பித்துக்கூறிற்று. இதனையே "கண்ணப்ப னெப்பதோ ரன்பின்மை யென்றமையால்" என்று ஞானசாத்திரமும் (திருக்களிற்றுப்படியார் - 52) எடுத்தாண்டது காண்க.

பரிசுதோன்ற - என்று - கைத்தார் என வரும்பாட்டுடன் கூட்டிமுடிக்க. 106

756. (வி - ரை) வேம்மறக்குலம் - வேட்டுவச் சாதி. சாதி பெரும்பிரிவு; குலம் சாதியினுட்பிரிவு. குடிமை என்னும் அதிகாரத்தில் சாதியாகிய வருணம் நான்கனுள் குலவேறுபாடுண்மை விளக்கினார். அரசசாதியுள் சோர்குலம் சோழகுலம் என்பன காண்க. "சாதிகுலம் பிறப்பு" என்பது திருவாசகம். சிறுபான்மை ஆகுபெயரான் இவ்விரண்டும் மாறிக்கூறுவதும் உண்டு. "சாதியும் வேதியன் றூதை" -(திருவாசகம்), "தம்மானை யறியாத சாதியார்"-(தேவாரம்) என்பன நற்சாதிப் பிரிவு

பற்றியன. "சூத்ரா: சுத்த குலோத்பவா:" என்ற சிவாகமத்தில் சாதிக்குட்பிரிவு குலமாதல் காண்க. இந்நூலுட் பெரும்பாலும் சாதிகுலம் இரண்டும் ஒரு பொருளில் வருகின்றன. "ஓங்கிய நாற்குலத்து...உயர்ந்தனவு மிழிந்தனவு மான சாதி" என்பது காண்க. குலப்பிறப்பாலும் மறம்பூண்டார்; தொழிலாலும் வேட்டை (மறவினை) செய்வார்; ஆதலின் கருணையற்றவராவார்; கொல், எறி, குத்து என்னும் வாழ்க்கையே வாழ்பவராகிய கொடுமையுள்ளார்; அவர்களே கொடுவிலங்குகள் வாழும் இக்காளில் தனியிருத்தற்பாலர். அவ்வாறன்றி மிகஇனியராய்க், கருணையே உருவாகவுடைய தேவரீர் இங்குத் தனியாய் இருத்தல் தகுமோ என்றதாம். வேடர் காட்டில் தனியிருப்பர் என்றது இவரது முன்னனுபவஞானத்தின் வாசனையுணர்ச்சி. இங்கு இவர் தம்மைமறந்த நிலையினும் அது வந்துதாக்கியது.

**கைம்மலை** - யானை. கையையுடைய மலைபோன்றது. உவமையாகுபெயர். அது யானைக்குப் பெயராய் வழங்கலாயிற்று. கைவரை - (736) என்றதுகாண்க. **கைம்மலை-காடி** - **வேங்கை** - **அரி** - இவையனைத்தும் கொடிய பெருவிலங்குகள். **வேங்கை** - புலி. **தீரீ** என்றதனால் அக்கானத்தில் இவை எப்போதும் எவ்விடத்திலும் எதிர்ப்பட உள்ளதன்மை குறிக்கப்பட்டது.

**உம்முடன் துணையாயுள்ளார் ஒருவரும் இன்றி** - விலங்குகள்வரின் உம்மைக் காத்தற்குற்ற துணையாக உள்ளவர்கள் எவரும்உடன் இல்லாமல். விலங்குகள் இத்தேவர்க்கு ஊறுசெய்தல்கூடும் என்பது திண்ணனார்கொண்ட அச்சம். பின்னர் "இரவு சேரும் வெவ்விலங் குளவென் றஞ்சு"வதும் (776), தேவரது கண்ணில் உதிரங்கண்டபோது இத்தகினைவுபற்றியே, அப்புண்ணினை "விலங்கின் சாதி ஆளிமுன் ஞகியுள்ள வினைத் தவோ"என்றஞ்சுவதும் காண்க. இதுவும் இவர்க்கு இப்பிறவியின் அனுபவஞானத்தின் எஞ்சியவாசனை. தம்மை முற்றும் மறந்து பசி, பயம், இன்பம், துன்பம் முதலிய உலகநினைவு யாதும் இல்லாத சீவன்முத்த நிலையை யடைந்தாராயினும் திண்ணனார், எந்தத் தேவரிடத்து அன்புருவமாயினாரோ அவர் பொருட்டுப் பசி, சுவை, பயம், இன்பம், துன்பம் முதலிய உலக நினைவு கொண்டுள்ளவராயினர். அந்நினைவினிடமாகத் தமது உலக அனுபவவாசனைபற்றி இவ்வாறு மறக்குலமும், விலங்குகளும், அவை மக்களுக்கு ஊறுசெய்யும் தன்மையும், கடுங்கானம் மக்கள்வாழத் தகுதியற்ற தன்மையும் பிறவும் நினைவுகொள்கின்றார். இவர்தமக் கமுது செய்ய இறைச்சியு மிடுவா ரில்லை (760), நீர்பசித் திருக்க விங்கு நிற்கவுங் கில்லேன் (762), வாலிய சுவைமுன் காண்பான் வாயினிலதுக்கி (767), இனியஎம் பிரானார் சாலப் பசிப்பர் (771), வேறுவே றினங்கள் வேட்டை வினைத்தொழில் விரகினாலே, ஊறுசெய் காலஞ் சிந்தித்து (782), (791) முதல் (797) வரை உள்ளவை, சுவைகண்டேன், தேனுமுடன் கலந்ததிது தித்திக்கும் (789) என்றவை முதலிய நினைவுகள் யாவும் இப்பிறவியின் உலகஅனுபவம் பற்றிய ஞானத்தின் எழுந்த வாசனை பற்றியனவேயாம். "எனக்குமாரு மீளிவெம் மறவர் செய்தா ருளர்கொலோ" (816) என்று தம்முடைய இப்பிறப்பின் முன்நினைவும் தேவரின் பொருட்டாய்த் தமது விருப்பு வெறுப்பு முதலிய நினைவுகளும் நேர்ந்தது காண்க. தம்பொருட்டுத் தம் நினைவு முற்றும் இலராகியும், ஆனால், தேவர்பொருட்டுத் தம் நினைவு முற்றும் உளராகியும் நிகழ்ந்தது இந்த ஆறுநாள்களிற் சீவன்முத்தியின்நிலை இவரது உலகவாழ்க்கை என்று தெளிக.

**உம்முடன் துணையா யுள்ளார் ஒருவரும் இன்றி** என்பது முற்றும் உண்மையே!. **துணை** - ஒப்புமை. இத்தேவர் தமக்குவமையில்லாதவர். இவர் ஒருவரே பதி. இவ்வுண்மையை வேதாகமமாதி எல்லாநூல்களும் எடுத்து முழக்குகின்றன. நீர் யாவர்க்கும் துணையாவதன்றி உமக்குத் துணையாவார் பிறரெவரும் இல்லை என்ற கருத்தும்காண்க.

**கேட்டேன்!** - அவலக் குறிப்புச்சொல். இவ்வாறு கண்டதனால் நான் கேடடைந்தவனானேன். பின்னர்ப், பாவியேன் கண்ட வுண்ணம் (818) என்றதும் காண்க.

**இம்மலை...நைந்தார்.** ஆஞ்டையநம்பிகள் திருக்கோடிக் குழகரைக் கடற்கரையிற் றனியேயிருக்கக் கண்டபோது "கொடியேன் கண்கள் கண்டன" என்று தம்மைநொந்து கொண்ட மனநிகழ்ச்சியை இங்கு வைத்துக் காண்க.

**இருப்பதே ? -** இருப்பது தக்கதா?. ஏகாவினை எதிர்மறை குறித்தது. நைந்தார் - மனமிக வருந்தினர். "வீரர்"(781)மனைநைந்து தேவர்க்குவரும் ஏதத்துக்குவருந்தினர்.

நின்று - பொங்க - பாய - அச்சோ ! என்று - பரிவுதோன்ற - இருப்பதே ! என்று நைந்தார் - என இவ்விரண்டு பாட்டுக்களையும் தொடர்ந்து முடிக்க. 107

757. கைச்சிலை விழுந்த தோரார் காளையார் மீள "விந்தப்
பச்சிலை யோடு பூவும் பறித்திட்டு நீரும் வார்த்து
மச்சிது செய்தார் யாரோ ?" வென்றலு மருங்கு நின்ற
வச்சிலை நாணன் முனு "நானிது வறிந்தே" னென்பான், கஅ

758. "வன்றிற லுந்தை யோடு மாவேட்டை யாடிப் பண்டிக்
குன்றிடை வந்தோ மாகக், குளிர்ந்தநீ ரிவரை யாட்டி,
யொன்றிய விலைப்பூச் சூட்டி, யூட்டி, முன் பறைந்தோர் பார்ப்பா
னன்றிது செய்தா ; னின்று மவன்செய்தா னுகு"மென்றான். கஉ

757. **(இ - ள்)** வெளிப்படை. கையிலிருந்த வில் கீழேவிழுந்ததை உணராதவ ராகிக், காளைபோன்றாராகிய திண்ணனார், மீண்டு, "இந்தப் பச்சிலையுடனே பூவும் பறித்து இட்டு, நீரையும்வார்த்து, நல்ல இக்காரியத்தைச் செய்தவர் யாவரோ ?" என் றலும், பக்கத்தில் நின்ற வில் ஏந்திய அந்தநாணன்தானும், "நான் இதனை அறிந்துள் ளேன் " என்று சொல்வானுய், கஅ

758. **(இ - ள்)** வெளிப்படை. "வலியதிறலுடைய உன்தந்தையோடு விலங்கு களை வேட்டையாடி முன்ஒருகாலத்தில் நாங்கள் இந்தக் குன்றினிடத்துவந்தோமாகக், குளிர்ந்தநீரால் இவரைஆட்டிப், பொருந்திய இலையையும் பூவையும்சூட்டி, (உணவும்) ஊட்டி, முன்னே (சிலமொழிகள்) சொல்லி, ஒருபார்ப்பான் இதனை அன்றுசெய்தான்; (ஆதலால்) இன்றும் அவன் இது செய்தானுகும் " என்றுசொன்னான். கஉ

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

757. **(வி - ரை) கைச்சிலை** - கையில்எந்திய வில். **விழுந்தது** - கைப்பிடிகழுவிக் கீழேவிழுந்தது. மிக்கஅன்பினுல் காளத்தியப்பரைத் தழுவித் தம்மை மறந்து நின்ற ராதலின் கையிற்பிடித்த பிடி நீங்க வில் கீழ்வீழ்ந்தது. மிக்கதுயரத்தால் உடல் அவசப் பட்டபோதும் இவ்வாறு நிகழும் என்பது "கையில் ஊனும் சிலையுடன் சிதறி வீழ " (814) என்ற விடத்துக்காண்க. இன்பத் துன்பங்கள் மிக்கூர்ந்தபோது உடல்வசமிழந்த தனுல் இவைஉளவாகும்.

**சிலை கையினின்றும் வீழ்ந்தது** என்று கூட்டியுரைப்பதுமாம். **ஓரார்** - உணராத வராகி. **மீள** - "அகப்பட்டாரச்சோ!" (755) என்றும், "தனியே நீரிங்கிருப்பதே" (756) என்றும் கூறியவற்றோடு மீண்டும்என்க.

**இந்த** - தேவர்திருமேனியில் தாம் நேரே பக்கத்திற்கண்ட இலை • பூ - நீர் என்ற இவற்றைச்சுட்டிய அண்மைசுட்டு.

**இலையோடுபூவும் பறித்திட்டு நீரும்வார்த்து** - இவை பூசையின் அங்கமாக ஆகமங் களில் விதிக்கப்பட்டவை. "பூவொடு நீர்சுமந் தேத்தி", "பறித்திட்ட வியலும் முகை யும் எல்லாம்", "சலம்பூவொடு தூபம்" முதலிய தமிழ்மறைத் திருவாக்குக்கள்காண்க. பறித்ததும், இட்டதும், வார்த்ததும் இவர் கண்டிலரேனும், **பறித்திட்டு** என மாஞ்செடி

கொடிகளினின்றும் பறித்தாலன்றி இவைகிடையா என்ற முன் அனுபவத்தின் வழி வந்த அனுமானத்தால் **பறித்து** என்றும், **இடுதல் - வார்த்தல்** என்ற இவைகள், செய்யும் ஒருவரது செய்கையில்லாவிடின் இங்குத் திருமேனியிற்காண இயைபில்லை என்ற அனுபவ அனுமானத்தால் **இட்டு - வார்த்துச் - செய்தார் யாரோ ?** என்றும் வினவினர்.

**மச்சிது - மஞ்சு** - அழகு. **மஞ்சிது** என்றாகிய இதனை, ' மஞ்சுடை மணிநகு மாலை மண்டபம்''-(சூளாமணி). மஞ்சு என்பது எதுகைநோக்கி **மச்சு** என விகாரப்பட்டு நின்றது. இது தமிழிலிருந்து பிறந்த தெலுங்குமொழியில் மஞ்சிது என வழங்கிவருதல் காண்க. தமிழில் பண்டை உலகவழக்கிலும் நூல்வழக்கிலும் இருந்த பலமொழிகள் தமிழ்வழக்காறொழிந்தும், தமிழினின்றும் பிறந்த தெலுங்கு மலையாள முதலியவற்றில் புகுந்து அவ்வாறே வழக்கில் நின்றுவருதல் காணப்படும். இவை தமிழின் தூய்மையும், தாய்மையும் காட்டுவனவாம். கடை - ஆவணவீதி எனப் பொருள்படும் அங்காடி என்ற மொழி பழந்தமிழ் நூல்களிலும் பேச்சுவழக்கிலும் இருந்தது. நாளங்காடி - (தினப்படி கூடும் கடை - நாட்சந்தை) என்பது சிலப்பதிகாரகாலத்தில் வழங்கிவந்த பழந்தமிழ் மொழி. இது தமிழ்வழக்கொழிந்தும் தெலுங்கில், **அங்கிடி** என இன்றும் வழங்கிவருதல் காண்க. பழந்தமிழ்மொழிகளான குப்பாயம், கடவு, படிஞாயிறு, புழை (ஆறு), ஊண் (சோறு), களி(விளையாட்டு) முதலிய பல செம்மொழிகள் இவ்வாறே மலையாளத்தில் வழங்கிவருதலும்காண்க.

இவ்வாறன்றி **மஞ்சு** - குற்றம் - அநுசிதம் என்று உரைகூறுவாருமுண்டு. திண்ணப்பனார், பூசூட்டலும், நீர்வார்த்தலும் குற்றமென்றும் தகாதசெயலென்றும் நினைத்தற்குக் காரணமின்று. அன்றியும் **செய்தார் யாரோ ?** என்று வினவினரேயன்றி இவ்வநுசிதம் ஏன் செய்தார் எனக்கேட்டனரல்லர். முன்னாளாள் அவர் மங்கலநீர்ச் சூனை படிந்தனர் (705). அற்றைநாளில்தானே முல்லை குறிஞ்சி வெட்சிப்பூவும், முறி கொண்ட கண்ணியும் சூடினர் (706). எனவே, இவை தூய்மையும் அணியும்செய்வன என்ற உணர்ச்சியுடன் வினவினராதல்வேண்டும். இதுபற்றியே பின்னர் " நாயனார்க் கினிய செய்கை, எண்ணிய விவைகொ லாமென் றிதுகடைப் பிடித்துக் கொண் "டார். இக்கருத்தால் இவ்வினாவிற்கு விடைகூறிய நாணனும் " ஓர் பார்ப்பான் இவை செய்தான் " (758) என்றுகூறினனன்றி இவை தீயனவன்று, நல்லனவேஎன்று குறிக்குமாறெதுவும் எடுத்துக்கூறினனல்லன். ஆதலின் அஃதுரையன்றென்க. **மற்றிது** என்பது எதுகைநோக்கி **மச்சிது**என நின்றதென்பாருமுண்டு.

**என்றலும் - செய்தார் யாரே ?** என்ற இவ்வினாவைத் திண்ணனார் நாணனை நோக்கிக் கேட்டனரல்லர். அவர் தம்முடைய உலக இருப்பினையே முற்றும் மறந்தாராதலின் அவரதுகண்கள் அடுத்துநின்ற நாணனைக்காணுதல் ஒழிந்தன ; அவன் சொன்ன சொற்களில் தேவரைப்பற்றியனவற்றையன்றிப் பிறமொழிகளை அவர் செவிகள் கேட்டலொழிந்தன. பிரியாமல் உடன்தொடர்ந்ததோர் நாயினையும் அவர் அறிந்தாரிலர். பிறதுறை வேட்கை முற்றுமீங்கினர். 765, 766 பாட்டுக்கள் இங்கிலையிலை விளக்கியதுகாண்க. ஆதலின் இவ்வினா ஐயப்பட்டு அவர் தமக்குத்தாமே நிகழ்த்தினனன்றி எவரையும் முன்னிலைப்படுத்திக் கேட்டவரல்லர் என்க. இதுபோலன்றி முன்னர் மலையைஏறும்போது கேட்ட ஒலியைப்பற்றி வினவுவார் நாணனை முன்னிலைப் படுத்தி " இது என்கொல் நாண் ? " என்று வினவியதும் காண்க.

**மருங்குநின்ற அச்சிலை நாணன்தானும் -** அவர் தன்னைநோக்கி வினவாவிடினும் **மருங்கு நின்றதனால்** அதனைக் கேட்டவனுதலானும், தன்தலைவனது ஐயத்தை நீக்கும் பொறுப்புடையவனுதலானும் நாணன்தானுகவே முந்திக்கொண்டு " இது நான் அறிந்தேன் " என்று தொடங்கிக் கொண்டவனும் வரும்பாட்டிற் கண்டவாறு விடைசொல்கின்றான். இக்கருத்துப்பற்றியே **நாணன் தானும்** என்றார்.

நான் இது அறிந்தேன் - இது - இது செய்தார் யாரோ ? என்ற வினவிற்குறித்த இது. அறிந்தேன் - அறிந்தவகையை வரும்பாட்டில் விரித்துக்கூறுகின்றனன். அறிந்தேன் ; அறிந்தது எப்படிஎனில் இப்படியாம் என்க.

என்பான் - என்று சொல்வானுகி. முற்றெச்சம். என்பான் (ஆகி) - என்றனன் என வரும்பாட்டுடன் முடித்துக்கொள்க. 108

758. (வி - ரை) வன்றிறல் உந்தை - வலியதிறலுடைய உமதுதந்தை. வன்மை-திறல் - ஒரு பொருட்பன்மொழி மிகுதி குறித்தது. இவ்வாறுகூறியது ஒருஅரசனைக் கூறுவான் அவனது மெய்க்கீர்த்தியொடு புணர்த்திக்கூறும் மரபுபற்றியாம் His Majesty என்றிவ்வாறு பலவும் புணர்த்துக்கூறும் கவீனர் மரபுங்காண்க. வன்றிறல்-உந்தை வேட்டையாடுதற்குரிய மிக்க வலிமைபெற்றிருந்த அக்காலத்து என்றதும் குறிப்பு.

மா வேட்டை - மா - விலங்குகள். திங்கள்முறை வேட்டைவினை (693) என்றபடி இப்போது ஆடிவந்ததுபோல முன்னுள்ஒருமுறை யாடிவந்த வேட்டை. மா - பெரிய என்றலுமாம். பண்டு - முன்னொருகாலத்து. நாகன் "வில்லின் பெருமுயற்சி மெலிவானு" (692)கிப் பன்னுளாயினமையின் அதற்கு முற்பட்டதொருகாலத்து என்றதாம். மா வேட்டையாடும் ஒவ்வோர்முறையும் இங்கு வருவதென்றில்லாமல் ஏதோ ஒரு முறைவந்த குறிப்பும்பெறப் பண்டு என்றதுமாம்.

வந்தோம் ஆக - வரவே ; ஆக - ஆகவே. நீர் - நீரால். இலைப்பூ - இலையோடு பூவும். "தன்றலை தங்கிய சருகிலை யுதிர்த்து"—திருக்கண்ணப்பதேவர் திருமறம்.

குளிர்ந்தநீர் ஆட்டி - ஒன்றிய இலை பூ சூட்டி-இவை ஆகமத்தில்விதித்த திருமஞ்சன - அலங்கார - அர்ச்சனைவிதிகள்.

குளிர்ந்த நீர் - அதிகாலையில், புதிதாய்வந்த குளிர்ந்த நீரைப் புதுத் துணியால் வடித்துப் புதுப்பானையிலிட்டு அறுகும்பூவுந் தூவிவைத்து அதுகொண்டு திருமஞ்சனமாட்டுதல் வேண்டுமென்பது ஆகமவிதி. (நெய்யபிடேகத்தின் பின்னர்மட்டும் இளவெக்கீர் ஆட்டுதல் வேண்டுமென்ப.) ஒன்றிய இலைப்பூ - ஒன்றிய-பொருந்திய-விதித்த. மூர்த்திகட்கும் காலத்திற்கும் ஏற்றனவாய் விதிக்கப்பட்ட. இவை இங்கு, கூவிளம், அறுகு, தும்பை, கொன்றை, வெள்ளெருக்கு, ஊமத்தை முதலியவையாம். நீரும் பூவும் இலையும் பூசைக்கு இன்றியமையாதனவாம். "புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" என்பது திருமந்திரம். நாணன் இந்நூல்விதிகளை அறியாதுயினும் சிவகோசரியார் ஆகம விதிப்படிசெய்த சிவபூசையை உடனிருந்து உள்ளபடி கண்டுணர்ந்தவனதலின் இவ்வாறு கூறினன். இதுகேட்ட திண்ணனாரும் விதியினை அறியாது செயலமட்டும் கடைப்பிடித்து நீரும் பூவும் இலையும் என்றவைமட்டும் கருதிக் கொண்டு பூசித்தார். அதீதநிலையில்உள்ள அவர் செயல்கள், விதிகடந்தவேனும், அவற்றை இறைவனும் உகந்துகொண்டார்.

ஊட்டி - முன்பறைந்து - குளிர்நீராட்டுதலையும், பூச்சூட்டுதலையும்போலவே இவற்றையும் நாணன் தான் கண்டமட்டில் அறிவித்தான். நீரையும் இலைப்பூவையும் அவன் பார்த்தான். ஊட்டியபொருள் - நிவேதனம் - இன்னதென்று பாராதவனதலால் அது இன்னதென்னுது ஊட்டி என்று வாளாகூறினன். தேவர் நிவேதனங்களை யாரும் பார்க்கலாகாது என்பது விதியாம். ஊட்டியஉணவு இன்னதென்று இவன் கூறுனகவே திண்ணனார் தமது முன்னேஉணர்வுகொண்டு அதனை இறைச்சி என்று நிச்சயித்து அதனையே ஊட்டினர். ஊட்டி - முன்பறைந்து - குழவிகளுக்குத் தாய் எடுத்துச் சிறிதுசிறிதாய் வாயில் ஊட்டுவதுபோலும் அன்புடன் நிவேதனத்தின் சிறுபகுதி எடுத்துத் தேவரது திருவாயின்முன் காட்டித் தேவரீர் இதனை அமுதுசெய்தருளும் என்றுபிரார்த்தித்து அதன்பொருட்டுச் சுவாகாந்தமாக உரிய மந்திரத்தைச் சொல்லி

இவ்வாறு ஐந்துமுறை ஊட்டுவித்தல் வேண்டுமென்பது ஆகமவிதி. நாணனதுமொழிகள் இக்குறிப்பும்பெற இருத்தல்காண்க. இது கடைப்பிடித்த திண்ணனாரும் 774 - 799 பாட்டுக்களிற்கண்டவாறு மொழிகள்சொல்லி அமுதுசெய்வித்தலும் காண்க.

**முன்** - திருமுன்பு. **பறைந்து** - ஏதோசில சொற்கள்சொல்லி. **பறைதல்** - சொல்லுதல். தமிழ்நாட்டிற் பெருவழக்காகிவழிந்த இம்மொழி மலையாளத்தில் இப்பொருளில் நின்று வழங்குதல்காண்க. யாழ்ப்பாணத்தில் தமிழிலும் வழங்குவது. முன்பு அறைந்து - சொல்லி - என்றலுமாம்.

**பார்ப்பான்** - மெய்ப்பொருளைப் பார்ப்பவன்' என்ற காரணத்தால் முனிவரைக் குறித்து வந்தது. அஃது அம்முனிவர் கோத்திரத்தில் வந்தோர்க்குங் காரண விடுகுறியளவாய் வழங்கி ஒரு சாதியாரை உணர்த்தியொழிந்ததாம்.

**அன்றிது செய்தான்** - இன்றும் அவன் செய்தானுதும் - இது பூர்வக்காட்சி யனுமானம். மணத்தைக் கொண்டு இது இன்ன மலர் என்றறிவதுபோலக் காண்க. அன்று அவன் இது செய்தல் கண்டேன். இன்று அச்செயலே கண்டேன். செய்தானைக் காணேன். செய்வோரின்றிச் செய்வினையின்மையின் இச்செயலை முன்செய்யக்கண்ட அவனே செய்தானுகும் என்ற அனுமானப் பிரமாணத்தால் அறிந்த ஞானம். கல்விப் பயிற்சியில்லாத இவ்வேடரிடத்தும் அனுமான அறிவு நிகழ்ந்து பயன்படும்வகைகாண்க. **அன்று** - பண்டு இக்குன்றிடை வந்த அன்று. **இது** - இது செய்தார் யாரோ? என்று வினவிய இது. **இதுசெய்தான்** - இதுபோன்ற செயல் செய்தான். அவன் **செய்தான் ஆகும்** - அவனே செய்தானுதல் வேண்டும்.

**அவன் செய்ததாகும்** என்பது பாடமாயின் இது அவன் செய்தது ஆகும் என்க. **செய்தது** - தெவ்விருதிபெற்ற தொழிற்பெயர். 109

759. உண்ணிறைந் தெழுந்த தேனு மொழிவின்றி யாரா வன்பிற்
றிண்ணனூர் "திருக்கா ளத்தி நாயனூர்க் கினிய செய்கை
யெண்ணிய விவைகொ லா"வென் றிதுகடைப் பிடித்துக் கொண்டவ்
வண்ணலைப் பிரிய மாட்டா வளவிலா தாவு நீட, ககo

760. "இவர்தமைக் கண்டே னுக்குத் தனியரா யிருந்தா; ரென்னே!
யிவர்தமக் கழுது செய்ய விறைச்சியு மிடுவா ரில்லை;
யிவர்தமைப் பிரிய வொண்ணு; தென்செய்கே; னினியான் சால
விவர்தமக் கிறைச்சி கொண்டிங் கெய்தவும் வேண்டு மென்று, ககக

761. போதுவர்; மீண்டு செல்வர்; புல்லுவர்; மீளப் போவர்;
காதலி னேக்கி நிற்பர்; கன்றகல் புனிற்றுப் போல்வர்;
"நாதனே யழுது செய்ய நல்லமெல் லிறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு கொண்டிங்கு வருவே" னென்பார்; ககஉ

763. "ஆர்தம ராக நீரிங் கிருப்பதென் றகல மாட்டேன்;
நீர்பசித் திருக்க விங்கு நிற்கவுங் கில்லே" னென்று
சோர்தரு கண்ணீர் வாரப் போய்வரத் துணிந்தா ராகி
வார்சிலை யெடுத்துக் கொண்டு மலர்க்கையாற் றொழுது போந்தார்.

759. (இ - ள்) வெளிப்படை. உள்ளத்திலே நிறைந்து எழுந்ததாயினும், இடைமீடில்லாது பெருகிய அளவுபடாத அன்பினுலே திருக்காளத்தி நாயனுராகிய குடுமித் தேவருக்கு இனிய செய்கைகள் எண்ணப்பட்ட இவையே போலும்" என்று திண்ண

னார் இதனையே கடைப்பிடித்துக் கொண்டு, அந்த அண்ணலாரைப் பிரியமாட்டாத அளவற்ற ஆதரவு பெருக, கசo

760. (இ - ள்) வெளிப்படை. இவரைக் கண்டவளுகிய எனக்கு இவர் தனியராய் இருந்தார்; என்னே! இவருக்கு அமுதுசெய்ய இறைச்சி இடுவாரும் இல்லை; இவர் தமமைப் பிரியவும் முடியாது; யான் என்னசெய்வேன்? இனி நான் இவர்க்குவேண்டு மளவு இறைச்சியைக் கொண்டு இங்குச் சேரவும் வேண்டும்" என்று எண்ணி, கசக

761. (இ - ள்) வெளிப்படை. (சிறிது தூரம்) போவார்; மீண்டு வருவார்; தழுவிக்கொள்வார்; மீளப்போவார்; காதலால் நோக்கி நிற்பார்; கன்றினைவிட்டுப் போகும் ஈன்றணிய பசுவினைப் போல்வார்; "நாதனே! தேவரீர் அமுதுசெய்ய நல்ல மெல்லிய இறைச்சியை நானே குற்றமறத் தெரிந்து அமைத்துக்கொண்டு இங்கே வருவேன்" என்பார்; கசஉ

762. (இ - ள்) வெளிப்படை. "உமக்கு யாரைத்துணையாகக் கொண்டு நீர் இங்கிருப்பது? என்ற எண்ணத்தால் உம்மைப் பிரிந்து போகமாட்டேன்; நீர் பசியோடு இருக்க இங்குநிற்கவும் ஆற்றேன்" என்றுசொல்லிச் சோர்கின்ற கண்ணீர் விடாது பெருகிவர, ஒருவாறு போய்வரத் துணிவுகொண்டவராய்ப், பெரியவில்லை எடுத்துக் கொண்டு, தமது மலர்போன்ற கைகளாற் றேவரைத்தொழுது போயினர். கசங

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

759. (வி - ரை) உள்நிறைந்து எழுந்ததேனும்-மனத்தினுள்ளகே முற்றும் வேறொன்றிற்கும் இடமின்றிநிறைந்து மேலெழுந்ததேயாயினும். முகைமலரின் வாசம்நிறைந்து வெளிப்படுமாறுபோல் முன்னையறிவின்றொடர்ச்சியினுலே சிந்தைவிரிய அதனுடனே நிறைந்துவிரியும் செவ்வியஅன்பாகிய வுணர்ச்சியாதலின் உள்நிறைந்து எழுந்தது என்றார்.

**எழுந்ததேனும் ஒழிவின்றிஆரா** - எழுந்ததேயாயினும் மேலும் ஒய்தலில்லாமல் தொடர்ந்து அடங்காது பெருகிய. ஏனும் என்னும் வினையெச்சவிகுதி நிறைந்து எழுந்தாயினும் உள்ளத்தின் அளவில் நில்லாமல் மேன்மேலும் அளவின்றிப் பெருகுதல்குறித்தது. "எழுந்தபே ருவகை யன்பின் வேகம்" (754) என்றதுகாண்க. **ஒழிவின்றி** - சிறிது போதுகின்று கழிவதன்றிப் இடையறாதுநின்ற. "காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின், அயரா அன்பின் அரன்கழல் செலுமே" என்று சிவப்பேற்றினை எடுத்துக்காட்டும் சிவஞானபோதத்திற் (11-ம் சூ) கூறியபடி இங்கு இறைவர் கருணைகூர்ந்த அருட்டிருநோக்கஞ்செய்து இவரது உள்ளத்தைக்கண்டு காட்டினராதலின் அயர்த்தலில்லாத அன்பு இடைவிடாது மேன்மேற் பெருகிஎழுந்தது. **ஆர்தல்** - நிறைதல்எனக்கொண்டு **ஆரா** எப்போதும் நிறைவுபெறுத - அடங்காத - போதியதென்று முற்றுப்பெறுத என்றுரைத்தலுமாம். "நின்பூசனை யென்று முடிவதில்லை நம்பாலென" (திருக்குறிப்பு - புரா - 68) என்றபொருளை இங்குவைத்துக்காண்க.

**திருக்காளத்திநாயனார்** - திருக்காளத்தியில் எழுந்தருளிய தலைவர். குடுமித்தேவர். **நாயனார்** - தலைவர்.

**இனிய செய்கை எண்ணிய இவைகொலாம்** - இனிய - உகந்த-விரும்பிய. **எண்ணிய** - எண்ணப்பட்ட. படு வினுதிதொக்கது. பெரியோர்களால் தக்கதென எண்ணப்பட்ட - எல்லாநூற்றொகுதிகளாலும் இனியவை என எண்ணப்பட்ட. தேவர் தமக்கு இனியசெய்கை என்று எண்ணிய என்றலுமாம். **இவைகொலாம்** - இவையேபோலும். தேவர்திருமேனியில் தாம் பொருந்தக்கண்டவற்றாலும், நாணன் பண்டும் இவற்றையே கண்டேன் என்றறிவித்தமையாலும், பண்டுதொட்டு தடைபெற்று வருகின்றமையால் இவர் விரும்பியவை இவையேபோலும் எனத்துணிந்தார். "எண்ணி லாகம மியம்பிய

இறைவர்தாம் விரும்பும் உண்மை யாவது பூசனை " - (திருக்குறிப்பு - புரா-51) என்ற கருத்துக்காண்க.

**இது கடைப்பிடித்து** - இதுவே செய்யத்தக்கதென்று உறுதியாகப்பிடித்து. **கடைப்பிடித்தல்**-விடாதுபற்றுதல். " நன்மை கடைப்பிடி "-ஆத்திசூடி. **இது** - "இது செய்தார் யாரோ ? என்றதிற்குறித்ததும், நாணன் அன்றிது செய்தான் என்றதாற் போந்ததும் ஆகிய **இது**. நீராட்டலும் இலைப்பூச்சூட்டலும் ஊட்டலும்ஆகிய **இது**.

**அண்ணலைப்பிரியமாட்டா ஆதரவு**-இது கடைப்பிடித்தாராதலின் நீரும்இலையும் பூவும் ஊனும் வேண்டும்; அவை தேடிக்கொணர இவரைப்பிரிதல் வேண்டும் என்ற நினைவுவந்தது. வரவே பிரியமாட்டாத ஆதரவு நீடிற்று என்க. **ஆதரவு** - ஆசை. **நீட**-மிக. 110

**பிரியமாட்டாதளவில்**—என்பதும் பாடம்.

760. **(வி - ரை) கண்டேனுக்கு** - கண்டனெனக்கு. எனது காட்சிக்கு. **தனியர்** - வேறு துணையில்லாதவர். உம்முடன்றுணையாயுள்ளார் ஒருவருமின்றி (107) என்ற விடத்துரைத்தவை காண்க. **கண்டேன்** - வினையாலணையும் பெயர். 'அயலே குடி தானிருந்தாற் குற்றமாமோ ? கொடியேன் கண்கள் கண்டன கோடிக்குழகீர் ' என்ற ஆளுடைய நம்பிகள் மனக்கருத்தும் இங்கு வைத்துக்காண்க.

**என்னே !** - இது என்ன நிலைமை ? தனியராயினமையின் நான் பிரியாது துணை யிருத்தல்வேண்டும்.

**இறைச்சி இடுவாரும் இல்லை** என்று உம்மை பிரித்துக்கூட்டுக. துணையிருப்பாரில் லாததன்றி என்று உம்மை இறந்தது தழுவியது. இல்லை, ஆதலின் நான்பிரிந்துபோய் இறைச்சி கொணரவும்வேண்டும். ஆனால் மேலே சொன்ன காரணத்தால் **பிரியஒண் ணாது** என்றது அதன்மேல் நிகழ்ந்த உள்ளநிகழ்ச்சி. பிரியாமலிருக்கவும்வேண்டும் - பிரியவும்வேண்டும். ஆதலின் **என்செய்கேன்** என்றார். **இறைச்சி** - உணவு. 758 - ல் உரைத்தவைபார்க்க. தமது பசியைமறந்தார். ஆனால் தேவர்பசியை அறிந்து அதனைத் தீர்க்கத் தம்பசி தீர்க்கும்வகைபோல இறைச்சிதேட முற்பட்டார்.

திண்ணனார் புண்ணியமென்றும் பாவமென்றும் தெரியாது வேட்டுவத்தொழிலில் ஈடுபட்டார். இப்போது சிவத்தில் ஈடுபட்டு அன்பராயினர் என்றும், அன்பர் தமது உணவை ஆண்டவனுக்கு ஊட்டுவர் என்றும், அன்பு பாவபுண்ணிய நிலையைக்கடந்தது என்றும், பாவபுண்ணியங்களிற் கட்டுப்பட்டுழல்வோர் அன்பு நிலையிலிருப்போருடைய செயல்களைத் தம்மதியால் ஆராய்ந்து முடிவு காணப்புகுவது அறியாமை என்றும், திண்ணனார் இங்குச்செய்த செயல்கள் அன்புவழி நிகழ்வனவாதலின் அவற்றைக்கட்டுப் பாடுகளில் நுழைத்துப்பார்ப்பதே தவறு என்றும், இறைவன் விரும்புவது அன்பு - கட்டுப்பாடன்று என்றும் இங்கு விசேடவுரை காண்பாருமுண்டு. இவை சில மயக்கங் கட்குக் காரணமாதலின் இவற்றை விளங்க உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். விதிநிலை என்றும், விதிகடந்தநிலை என்றும் உயிர்கள்இறைவனை அடையும்வழிகள் இரண்டுள் ளன. இவையிரண்டும் அன்புபற்றியே எழுவன. புண்ணியபாவங்களுக்கு அன்பும் அன் பின்மையுமே காரணமாம். இவையும் இறைவன் விதித்த விதிகளின்படி வருவனவே யன்றி இவை மனிதர் தம்மனம் போனவாறு ஒதுக்கிக் கொள்ளக்கூடியனவல்ல. கொலையும் புலையும் பாவமென்பது இறைவன் வகுத்த வேதநூல்களில் விதித்தது. கொலையும்புலையும் என்ற இவை எல்லா நூல்களாலும் அறிஞர்களாலும் உலகர்யாவர்க் கும் ஒப்பக் கடியப்பட்டன.

" மாஹிம்ஸியாத் " (கொலைசெய்யாதே) "தர்மம்சர"-என்பது வேதம். "அறவினை யாதெனிற் கொல்லாமை"என்பது திருக்குறள். "கல்ல நினைப்பொழிய நாள்களி லாருயி ரைக், கொல்ல நினைப்பதுவுங் குற்றமு மற்றொழிய" என்பது தமிழ்வேதம் (ஆளுடைய நம்பிகள்தேவாரம் - திருவாரூர்-புறநீர்மை-4). இவற்றை வெறுங்கட்டுப்பாடுகள் என்பது பெருந்தவறும். அன்பின் வழியேநின்று விதிவிலக்குக்களை அறிந்து விதிவழி யொழுகித்

தவஞ்செய்யின் அன்புமுறுகும். சிவனருள் சிறக்கும். முடிவில் அன்பே உருவாகி உலகக் கட்டுவிட்டுச் சிவத்தைச்சாரும் நிலை வரும். அப்போது விதிவிலக்குக்கள் தோன்றாது விதிகடந்தசெயலும் நிகழும். அவைதாம் புண்ணியபாவங்கள் என்ற விதிகளுக்குக் கட்டுப்படா என்பது துணிபு. தூங்கியவன் கைப்பாக்குப் போல உலகச்சிந்தை தானுகவே தழுவியபின் இங்கிலை உளதாம். அன்றியும் சுவர்க்கநரகங்களுக்கும், மீளப்பிறவிக்கும் ஏதுவாகிய புண்ணியபாவங்களை, முத்திக்கே ஏதுவாகிய சிவபுண்ணியங்களோடு மயங்கியுணர்தல் பெருந்தவறு. அன்பின் வழிநின்று நூல்கள் விதித்த விதியொழுக்கமும், உலகமறந்து விதிகடந்த ஒழுக்கமுமாகிய இரண்டும்உயிர்களின் பக்குவநோக்கி இறைவன் அருளுதலால் இவையிரண்டும் அவன் விரும்புவனவேயாம். இச்சரிதத்தில் அன்பு பற்றி விதிவழி ஒழுகிப் பூசித்த சிவகோசரியாரையும், அவ்வன்பே பற்றி விதிகடந்து பூசித்த திண்ணனாரையும் இறைவன் ஆட்கொண்டமை காண்க. இவ்வாறன்றி உலகினை ஒருவாற்றானும் விடாதுபற்றிக்கொண் டுழல்வோர் உலகை மறந்தோர்போலத் தம்மை மதித்தோ அல்லது விதிவிலக்குக்களை அறியாமலோ, விதிதவறித், தமது உணவு என்கின்ற காரணத்தால் அதனையே இறைவனுக்கும் ஊட்டுவதும், விதிதவறிய பிறவும் செய்யின் அவைஅன்புநிலை யாகாது பெரும்பாவமேயாம் என்க.

**பிரிய ஒண்ணுது - பிரிய** - பிரியவும். பிரியாது இருக்கவும் ஒண்ணுது என எதிரது தழுவிய எச்ச உம்மை தொக்கது. கொடுவிலங்குகள் திரியும் கானமாதலின் இவ்வாறஞ் சினர். 756 பார்க்க. உண்மையில் உயிர்கள் இறைவனைப் பிரிய ஒண்ணுதன என்பது ஞானசாத்திர முடிபுதானே?

**எய்தவும் வேண்டும்** - பிரிய ஒண்ணுதகான் பிரிந்துபோய் இவர்க்கு இறைச்சி கொண்டு சேர்தலும் வேண்டும்என உம்மை இறந்தது தழுவியது. **தனியாய் இருந்தார்-ஆதலின் பிரியஒண்ணுது ; இடுவார்இல்லை** - ஆதலின் **எய்தவும் வேண்டும்** என நிரனிறையாகவைத்துக் காரணகாரியமாகவும் கண்டுகொள்க.

**எனசெய்கேன்** - இதனை 762-ல் விரித்துரைத்தனர். 111

761. (வி : ரை) **போதுவர்** - சிறிது தூரம் போவார். இறைச்சி கொண்டு எய்தவும் வேண்டுமென்ற எண்ணம் தீவிரமாய் இறுதியில் நிகழ்ந்ததனால் அதனை முன்னிட்டுப் போவார் என்க.

**மீண்டு செல்வர்** - அவ்வாறு தணிந்து முன்செல்லும் செயல்மாறி ஊக்கிய ஊசல் போலப் பின்வரும் செயலாகியது. தனியாயினமையாற் பிரிய ஒண்ணுதென்ற எண்ணம் தோன்றி அவரைப் பின்னிழுக்கவே மீண்டு செல்வார் என்க.

**புல்லுவர்** - சிறிதகன்று போனதாலும், பின்னரும் அகன்று வரவேண்டுதலாலும் பிரிவு ஆற்றும் பொருட்டுத் தழுவிக்கொள்வர்.

**மீளப்போவர்** - பின் வந்த ஊசல் மீள முன்செல்வதுபோல இவரது பசிக்கு இறைச்சி வேண்டும் என்ற எண்ணம் மேலோங்க மறுபடியும் போவாராயினர்.

**காதலின் நோக்கி நிற்பர்** - போய்வரும் எண்ணம் மேலிட்டதாகவே முன்னர் வந்ததுபோல் மீண்டு வாராது, சென்று, சிறிது தூரத்தில் நின்றபடியே ஆசையோடு நோக்கி நிற்பாராயினர். இக்கிலையினையே

> "அன்புட னேக்கி நிற்ப ரழுவர்கை தொழுவர் வீழ்வர்
> இன்புற வெழுவர் பின்பா லேகுவ ரிரங்கி மீள்வர்"

எனவரும் திருப்பாட்டிற் (திருவாதவூரர் புராணம் - திருப்பெருந்துறைச்சருக்கம் - 128) கூறுதலும் காண்க.

**கன்று அகல் புனிற்று ஆ போல்வர்-புனிற்று ஆ**-ஈன்றணிய பசு. இது கன்றைப் பிரியமாட்டாது நிற்பதனையும், மேய்ச்சற் காட்டுக்குப் போவதற்குச் சிறிது போவதனையும், கன்றின்மேல் உள்ள அன்புமேலீட்டினால் செல்லாது மீண்டு வருவதனையும்

நாம் காண்கிறோம். இதனைப் பேரன்புக்கு உதாரணமாகப் பெரியோர் கூறுவர். இங்கு இறைவன் கன்றாகவும், திண்ணனார் அதனை ஊட்டுவித்துக் காக்கும் தாயாகவும் கொள்ளப்பட்டதும் உன்னுக. இது திண்ணனாரது அன்பே வடிவாகிய உள்ளநிலை நோக்கியாம். இதுபற்றி 214-ம் திருப்பாட்டில் " ஈன்றஆன் கனைப்புக் கேட்ட கன்று " என்ற விடத் துரைத்தவையும் பார்க்க.

இறைவனே எல்லா வுயிர்க்கும் எல்லாங் கொடுத்துத் தாய்போலக் காப்பவன். " தாயே யாகி வளர்த்தனை போற்றி ", " தாயு மாயெனக் கேதலை கண்ணுமாய் " என்பனவாதி அளவில்லாத தமிழ்மறைத் திருவாக்குக்கள் காண்க. தாயுமானவராகியதும், பன்றிக்குட்டிக்குப் பால்கொடுத்ததும் முதலிய திருவிளையாடல்களும் காண்க. "சேணிடை விட்ட கன்று கோவினைக் கண்டனைந் ததுவென"(வெள்ளானைச் சருக்கம்-42) முதலியனவும் இங்கு நினைவுகூர்க. ஆனால், இங்கிலை மாறி இறைவனைக் கன்றெனக்கொண்டு தாம் அவரை வளர்க்கும் தாய் என்றுஎண்ணி மனமுழுகும்கொடுத்த பெரியோர்களுமுண்டு. இதுபற்றியன்றோ காரைக்காலம்மையாரை "மற்றிவள் நம்மைப் பேணும் அம்மைகாண் " என்றுசொல்லி இறைவன் அவரை " அம்மையே " என்றழைத்தனர் ?

கன்றினைப் பிரியமாட்டாது பசு திரும்பித்திரும்பி நின்று கன்றினைப் பார்த்துக் கசிந்துருகுவதுமுண்டு. "கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே"-திருவாசகம்; " ஈற்றா விருப்பிற் போற்றுபு நோக்கி "-பொருநராற்றுப்படை - 151; " கன்றகல் புனிற்றா வென்னக் கசிந்திரு கண்ணீர் வார, நின்றுநின் றிறைஞ்சி யையா நீத்தியோ வென்று கொண்டு " - திருவாதவூரர் புராணம் - திருப்பெருந்துறை - 150 என்றவையும் காண்க.

நல்ல மெல் இறைச்சி - இவர்க்கேற்றவாறு தெரிந்த சுவையுடைய மெல்லிய இறைச்சி. நானே கோது அறத்தேரிந்து-குற்றநீங்குமாறு நானே சுவை பார்த்தறிந்து. பிறரெவரும் அன்றி நானே என்க. வேறெவரும் அன்போடுசெய்யார். செய்தற்கு வேறெவரும் இல்லை என்றபடி. மருங்குநின்ற நாணனும் பிறர்எவரும் உள்ளார் என்ற நினைவுமுற்றும் மறந்தார் என்பதுகாண்க. இக்கருத்துப்பற்றியே " ஆர்தம ராக நீரிங் கிருப்பதுஎன் றகல மாட்டேன்" என வரும்பாட்டிற் கூறுவதும் காண்க,

வருவேன் என்ற இதனுல் போதல் குறிப்பிற்கூறினர். உலகவழக்கிலும் இவ்வாறு வழங்குதல் காண்க. " செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின், வல்வரவு வாழ்வார்க் குரை " என்ற திருக்குறளில் இதன் நுணுக்கம் புலப்படுத்தியது காண்க.

என்பார் - செல்வர் - போவர் - நிற்பர் - என்பன அவரது செயல்நிலையும், போல்வர் என்பது அவர்மனநிலையும், என்பார் என்பது சொல்நிலையும் உணர்த்தின. 112

762. (வி - ரை) தமர்ஆர்ஆக இங்குநீர் இருப்பது எனமாற்றுக. நம்மவர் - நமர் எனவருவதுபோலத் தம்மவர் என்பது தமர் எனநின்றது. தமர் - தூணவர் - " தூணையா யுள்ளார் " (756). ஆர்தமராக - யாரைத் தூணையாகக்கொண்டு. இங்கு - கைம்மலை காடி வேங்கை யிரிதிரி கானம் "(756)மாகிய இங்கு. என்று அகலமாட்டேன் - என்ற காரணத்தால் பிரிந்துபோகமாட்டேன் ; ஆயினும். நீங்கவும்கில்லேன் - நிற்கவும் மாட்டேன். கில் - ஆற்றலுணர்த்தும் இடைநிலை.

அகலமாட்டேன் - நீங்கவுங்கில்லேன் - முரணை இரண்டுநிலைகளுட்பட்டு ஊசலாடிய அவரது மனநிலைகுறித்தது. இவை மேற்பாட்டிற் கூறியபடி திண்ணனார் தேவரைக் காதலின் நோக்கிநின்று சொல்லியவை.

சோர்தரு கண்ணீர் வார - கண்ணீர் சோர்தல் - கண்களினின்று நீர்துளித்து வடிதல். வார்தல் - மிக்குப்பெருகுதல்.

போய்வரத் துணிந்தார் - மேலும் தாமதித்தால் பசி மேலும் அதிகரிக்குமாதலாலும், இவர் இதுவரை தனித்திருக்கக் கண்டாராதலின் தனியிருந்து ஆற்றும் அனுபவ

முடையர் என்றறியவந்ததனலும்,விரைவில் திரும்பிவர எண்ணியபடியாலும் போதலில் மனங்கொண்டார். ஊசலாடிய உள்ளம் ஒன்றிற்றுணிதற்குக் காரணங் குறிப்பிற் கூறிய படி. **வர** என்றதன் நுணுக்கம் காண்க. மேற்பாட்டில் **வருவேன்** என்றதும்அது. அன்றியும், போதலின்றி வருதலின்மையின் போதலில் மனம்வைத்தனர். தேவர்பால் வருதல் அவரது துணிபேயன்றிப் போதல் அவரது திருவுளக்குறிப்பன்று என்பார் போகத்துணிந்தார் என்னுது போய் **வரத்துணிந்தார்** என்றார்.

**வார்சிலை** - பெரியவில். இது மேருமலைபோன்றதென்றும், பாரப்பெருவில் என்றும் முன்கூறியவைகாண்க.

**எடுத்துக்கொண்டு** - கையிற்றாங்கியிருந்த வில் அவரையறியாது முன்னர்க் கீழே வீழ்ந்து (757) விட்டமையின், இறைச்சி கொண்டுவருதற்கு வில்வேண்டும் என்ற எண்ணம்வர, அதனைத்தேடி **எடுத்துக்கொண்டு** என்றார்.

**தொழுது** - தமது பிரிவாற்றுமைக்காகவும், பிரிதலின்பொருட்டு மன்னிப்புக்காகவும், தாம் மீளவரும்வரை அவர் ஆற்றியிருத்தற்காகவும் தொழுதனர்.

அன்பில் திண்ணனார் - இது கடைப்பிடித்துக்கொண்டு - பிரியமாட்டாது - ஆதரவுநீட - என்று (எண்ணி) - போதுவர் - மீண்டுசெல்வர் - புல்லுவர் - போவர் - நிற்பர் - போல்வர் - என்பார் - என்று - கண்ணீர்வாரத் - துணிந்தாராகிச் சிலஎடுத்துக் கொண்டு-தொழுது போந்தார் என்று இந்நான்கு பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க.

763. முன்புகின் றரிதி னீங்கி மொய்வரை யிழிந்து நாணன்
பின்புவந் தணைய முன்னைப் பிறதுறை வேட்கை நீங்கி
யன்புகொண் டெய்ப்பச் செல்லு மவர்திரு முகலி யாற்றின்
பொன்புனை கரையி லேறிப் புதுமலர்க் காவிற் புக்கார். ககச

(இ - ள்) வெளிப்படை. (தேவரின்) திருமுன்பினின்றும் இவ்வாறு அரிதாய் நீங்கி மொய்த்த மலையினின்று கீழேஇறங்கி, நாணன் பின்புவந்து சேர, முன்னைய வாகிய வேற்றுத்துறைகளின் ஆசைஒழிந்து, அன்பேதம்மைப் பற்றிக்கொண்டு செலுத்தச்செல்கின்ற அவர், திருமுகலியாற்றினது பொன்றிரண்டு அழகுசெய்யும் அப்புறக் கரையில் ஏறிப், புதியமலர்கள் நிறைந்தசோலையிற் புகுந்தனர்.

(வி - ரை) **முன்பு** - திருமுன்பு -.சன்னிதானம். **நீன்று** - ஐந்தாவதன் சொல்லுருபு. **அரிதில் நீங்கி** - நீங்கத்தரிக்கமுடியாத நிலையில்நீங்கி. இங்கு இவ்வாறன்றித் திருமுன்பு நெடுநேரம்நின்று பின் நீங்கி என்றுரைப்பாருமுண்டு. அஃதுரையன்மையுணர்க.

**மொய்வரை** - பல குன்றுகளும் மொய்த்த - சேர்ந்த - அம்மலை. "திருக்காளத்தித் திருமலையிம் மலைகளில்யா தென்று கேட்டார்" என்ற ஆருடையபிள்ளையார்புராணங் (1020) காண்க. மரங்களும், சோலைகளும், மதுமலர்களும் **மொய்த்த** என்றலுமாம்.

**நாணன் பின்பு வந்தணைய** - மலைஏறும்போது நாணன்முன்பு வழிகாட்டிச் (752) சென்றான். இப்போது வழிகாட்டவேண்டிய அவசியமில்லை. மேலும் திண்ணனாது நீவிரகதிக்குமுன் செல்லுதல் நாணனாலும் வேறெவராலும் இயலாது. அன்றியும் அவரதுநிலைகண்டு அஞ்சிப் பின்வந்தான் என்றலுமாம். இனித் திண்ணனார்செல்ல அவரைப்பின்பற்றியே உலகர் வந்தணையவேண்டும் என்ற குறிப்பும் காண்க.

**முன்னைப் பிறதுறை வேட்கை நீங்கி** - மலையேறிக், கண்டு, வந்து அணைந்து, பன்றி இறைச்சி தின்று, தண்ணீர் குடித்து, வேட்டைக்காடு மெல்லக் குறுகுவோம் என்பன முதலாக முன்னையிருந்த பிறதுறைகளின் வேட்கைகளினின்றும் நீங்கி. அவை தாமாகவே இவரைவிட்டன ; இவர் நீக்கினவன்று. "முன்னைச் சார்பு

விட்டகலநீங்கி"(753) என்றதுகாண்க. முன்னேச் சார்புவிட்டு நீங்கியும் இங்கு இறைச் சிக்குச் செல்கின்ற செயல் நிகழ்ந்தது ; இது வேட்கையால் நிகழ்ந்ததன்று. கருவிகளே வேட்கையேகொண்டு செலுத்தித் தொழில்செய்விக்கும். இச்சாசத்தியின் வழியே கிரியாசத்தி செல்லுமென்பர். ஆனல் இவர்க்கு அந்தப் பிறதுறை வேட்கை நீங்கின படியால் இங்கு இறைவர்க்கு இறைச்சிதருவதாகிய செயலில் அன்பே கொண்டுசெலுத் திற்று. ஆதலின் **வேட்கைநீங்கி - அன்புகொண்டுய்ப்ப** என்றார்.

**பொன்புனைகரை**-முகலியாறு பொன்னே உந்திவருதல் முன் உரைக்கப்பட்டது. 747 பார்க்க. ஆற்றில் அடித்துவரப்பட்ட பொன்னிலல் அணிசெய்யப்பெற்ற சரை.

**ஏறி** - மலையினின்றும் இழிந்தபின், தாம் முன்பு போந்தவாறே திரும்ப நடியூ டேகி (749). ஆற்றின் எதிர்ப்புறக் கரையில் ஏறி என்க.

**புதுமலர்க் காவில் புக்கார்** - அணிகிழற் கேழல்இட்ட (748) இடம் அளிமிடை கரைசூழ்சோலை (749) யாதலின் அந்நினேப்பிலல் அங்குச் சென்றனர். அது தேவர்க் குப் பன்றியிறைச்சியும் பூவும் இலையும் கொணரும் பொருட்டாம். 114

764. காடனு மெதிரே சென்று தொழுது"தீக் கடைந்து வைத்தேன் ;
கோடுடை யேன முங்கள் குறிப்படி யுறுப்பை யெல்லா
மாடுற நோக்கிக் கொள்ளு ; மறித்துநாம் போகைக் கின்று
நீடுநீர் தாழ்த்த தென்னே?" வென்றலு நின்ற நாணன், ககடு

765. "அங்கிவன் மலையிற் றேவர் தம்மைக்கண் டணேத்துக் கொண்டு
வங்கினேப் பற்றிப் போகா வல்லுடும் பென்ன நீங்கா ;
னிங்குமத் தேவர் தின்ன விறைச்சிகொண் டேகப் போந்தான் ;
நங்குலத் தலேமை விட்டா ; னலப்பட்டான் றேவர்க்" கென்றான்.

764. (இ - ள்) வெளிப்படை. (அங்குநின்ற) காடனும் எதிரில்வந்து தொழுது, "தீக்கடைந்து வைத்தேன் ; கொம்பினேயுடைய பன்றியின் உறுப்புக்களேயெல்லாம் உங்கள் அடையாளப்படி அங்கங்கிருக்கப் பார்த்துக்கொள்ளும். இன்று நாம் மீண்டு போதலுக்குக் காலம் நீடும்படி நீர் தாமதித்த தென்னகாரணம் ?" என்று வினவுதலும், பக்கத்தில் நின்ற நாணன், ககடு

765. (இ - ள்) வெளிப்படை. "அங்கே இவன் மலேயில் குடுமித்தேவரைக் கண்டு அணேத்துக்கொண்டு **வங்கினேப் பிடித்துக்கொண்டு** விடாத வலிய உடும்பைப்போல நீங்காதவனுயினுன் ; இங்கும் அந்தத் தேவர் தின்னுதற்கு இறைச்சிகொண்டு போவ தற்காக வந்தான் ; நமது குலத்தலேமையை விட்டான் ; தேவர்க்கே ஆளாயினுன்" என்று சொன்னுன். ககசு

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

764 (வி - ரை) **காடனும்** - "தீக்கடை மாக்கோல்பண்ணி ஈங்கு நீ நெருப்புக் காண்பாய்" (742) என்று பன்றியை ஒப்புவிக்கப்பெற்ற காடனும். உம்மை இறந்தது தழுவியது.

**தொழுது** - தலேவனிடம் அறிவிக்கும் முறைப்படி வணங்கி. **தீக்கடைந்து வைத் தேன்** - உம்முடைய உத்தாவுப்படி தீக்கடைந்துவைத்துள்ளேன் என்றான்.

**ஏன உறுப்பை எல்லாம் குறிப்படி மாடுற நோக்கிக் கோள்ளும்** எனக்கூட்டுக. ஒப்புவித்த மாமிசத்தை இவ்வாறு அடையாளங் காட்டி மீள ஒப்புவிப்பது இவர் களுக்குள் வழங்கியதொரு வழக்கமாம். " நண்டுக்கு நரியைக் காவல் வைப்பதுபோல " என்ற பழமொழிப்படிக்கில்லாது இவன் அப்பன்றி இறைச்சியின் சிறுபகுதியேனும்

தான் தின்னாமல், ஒப்புவித்தபடியே வைத்திருப்பதற் கறிகுறியாக இவ்வாறு தமது மரபு வழக்கப்படி கூறினான் என்க. இக்கருத்துப்பற்றியே நகை வியாபாரிகள் நகை மணிகள் முதலியவற்றை பொதிதிறந்து காட்டிக்கொடுத்து வாங்கும் வழக்கமும் காண்க.

**கோடு உடை ஏனம்** - கொம்புடைமை பன்றியினியல்பு. "ஏன முளைக்கொம் பவை பூண்டு" என்ற தேவாரங் காண்க. **மாடு உற** - அவ்வப்பக்கத்தேயிருக்க.

**இன்று நாம் மறித்துப் போகைக்கு** என்க. **மறித்து** - மீட்டும் வேட்டைக் காட்டுக்குத் திரும்பிப் போதலுக்கு.

**போகை** - போதல் - செல்லுதல். கை விகுதிபெற்று வந்த தொழிற் பெயர்.

**நீட** - அதிக காலம் ஆகும்படி.

**நின்ற நாணன்** - காடன் சொல்லியவை திண்ணனார் செவியிலேறவில்லை. அவரது காட்சிக்கு அவன் புலப்பட்டானுமல்லன். "முகத்தைநோக்கார்" (766) என்பது காண்க. ஆதலின் அவனுக்கு நாணன் விடைசொல்வானாயினான். 115

765. (வி - ரை) **கண்டு அணைத்துக் கொண்டு**-கண்டவுடனே தழுவிக்கொண்டு. கண்டார் - ஓடிச் சென்றார் - தழுவினார் (754) என்ற செயல்களை நேரிற்கண்டானாதலின் நாணன் இவ்வாறு தொடர்புபடக் கூறினான். **அணைத்துக் கொள்ளுதல்** - தழுவுதல். தழுவினார் (754), புல்லுவர் (761) என்றவை காண்க.

**வங்கினைப்பற்றிப் போகா வல் உடும்பு என்ன** - இது இவர்களுக்குள் உவமானமாய் வழங்கிய பழமொழியாம். வேடர்கள் பேச்சில் அவர்கள் வழக்குக் கேற்ற தன்மையில் உவமைகூறி யமைத்தது ஆசிரியது பெருங்கவித்திறமையாம். உடும்பு எவ்விடமாயினும் பற்றினால் விடா இயல்புடையது. நேரான சமனிடமன்றி, வளைந்த வங்கு ஆயின் அவ்விடத்து அதன்பிடி மிகவலிதாய் விடாப்பிடியாயிருக்கும் என்பதாம். உடும்பு பிடித்தது; வங்கு அதற்குத் தன் வளைந்த அமைப்பு இயல்பினால் இடங் கொடுத்து விடாப்பிடிக்கு மேலும் உதவி செய்தது என்ற உவமானப்படி இங்குத் திண்ணனாரும் பிடித்தனர்; அதற்குத் தேவரும் தமது அருட்டிரு நோக்கம் செய்து தம்மை அவர் விடாது பற்றக்கொடுத்து உதவியருளினர் என்ற குறிப்பும் கண்டுகொள்க. "அந்த விடைமருதில் ஆனந்தத் தேனிருந்த, **பொந்தைப்** பரவி" என்று திருவாசகத்தில் இறைவனை முழையாகக்கூறியது காண்க. சொல்வோன் மரபு வழக்குப்படி உவமை கூறுந் திறத்தினைச் சிந்தாமணியில் ஓர் இடையன் வாக்கில் வைத்து "வெண்ணெய்போன் றூறினியள் மேம்பால்போற் றீஞ்சொல்லள், உண்ண வுருக்கிய வானெய் போன் மேனியள்" (480) எனக் கூறியதனையும் இங்குவைத்து ஒப்புநோக்குக.

**வங்கு** - வளைந்த உள்ளிடமுள்ள முழை. மரப்பொந்து என்றலுமாம். விடாது பற்றுதற்குரிய இயல்புடன் வங்கு நிற்க, உடும்புசென்று பற்றுதல்போலத் தன்னை உயிர்கள் அடைந்து பற்றுமாறு கருணையுடன் இறைவன்நிற்க உயிர்கள் அடைந்து பற்றுவர் என்ற குறிப்பும் காண்க. நாணனது வாக்கில் அவனையுமறியாது முன்னர் வந்த உண்மைப் பொலிவுடைய உபதேசமொழிகள்போல இவ்வுவமானமும் உண்மை உள்ளுறைப் பொலிவும் உயர்ந்த தன்மைநவிற்சிப் பொலிவும் பெற்று விளங்குதல் கண்டுகளிக்க. **வல்உடும்பு - வலிமை** - இயல்பாலே அதன்பிடியின்வலிமை. **உடும்பென்ன நீங்கான்** - உடும்பு பிடித்தபிடி விடாதது; இவனும் அவரைப்பற்றி விடாதவனானான். **உடும்பு என்ன** - உடும்பு நீங்காமைபோல. தொழில்பற்றிவந்த உவமம்.

**இங்கும்** - நீங்கி இங்குப் போந்துள்ளானே எனில் அவ்வாறு இங்குப்போந்ததும் என்றபடி. எச்சவும்மை. **தின்ன** - உண்ண. அவ்வேடர்களின் பேச்சுவழக்குப்படி **தின்ன** என்றது காண்க.

**கொண்டேக** - கொண்டு தேவரிடம் மீண்டுபோக. காடன் எண்ணியபடி வேட்டைக் காட்டுக்கு மறித்துப்போக வன்றி என்பது குறிப்பு.

விட்டான் - நீங்கினன். "பிறப்பிலெடு மிறப்பிலெடும் பிணங்குவர் விடுநீ" என்றபடி (சிவஞான சித்தியார் 12 - 2) விட்டார் - நீத்தார் - அறத்துறந்தார் என்க. விடுநீ (448) விட்டான் (485) என்ற இடங்களிலுரைத்தவையுங் காண்க.

நலப்பட்டான் தேவர்க்கு - உலகத் தொடர்பு விட்ட உயிர் இறைவனைப் பற்றுதல் உண்மை. பற்றுக்கோடின்றி உயிர்கள் நில்லா. அவை மலச்சார்பினைப்பற்றி நிற்பன. அச்சார்புவிட இறைசார்பினைப் பற்றும் என்பது ஞானசாத்திரமுடிபு. இக்கருத்துப் புலப்படக் குலத்தலைமைவிட்டான் - தேவர்க்கு நலப்பட்டான் என்று கூட்டியுரைத்த குறிப்பும் காண்க.

"தன்னுமங் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன்றாளே" என்ற தேவாரமுங்காண்க. 753-ல் உரைத்தவையும் பிறவும் நோக்குக. குலத்தலைமை முதலிய உலகச்சார்பாகிய அசத்தின்பாலும், இறைவனுகிய சத்தின்பாலுஞ் சார்ந்ததன் வண்ணமாய்நிற்குந் தன்மையுடைய உயிர் சதசத்து எனப்படும். இது அவ்விரண்டினிடமும் நிற்கும். விட்டான் - தலைப்பட்டான் என, உயிரின்நிலையைக் குலத்தலைமைக்கும் தேவர்க்கும் இடையில் வைத்த இயையும், இதுபற்றியே தேவர்க்கு நலப்பட்டான் என்னுது மாற்றியமைத்த குறிப்பும் உன்னுக. மேற்கூறிய தேவாரத்தினும் இவ்வாறே கண்டுகொள்க. "இருதிறன் அறிவுள திரண்டலா ஆன்மா" என்றது சிவஞானபோதம் (7-ம் சூத்). சீ பஞ்சாக்கர வைப்புமுறையும் இக்கருத்தே பற்றியதென்பது ஞானதேசிகர்பாற் றெளிக.

நாணன் இவ்வாறு மாற்றியுரைத்தது தாம் அரியதலைவனைப் பெற்றும் பெரு தொழிந்த ஆற்றுமைபற்றி. இஃதுலகியல் வழக்கிலுங் காணப்படும். இதனைவிடுதலும் அதனைத் தொடுதலும்ஆகிய தொடர்பின்விரைவும் குறிப்பதாம்.

நலப்படுதல் - மீளா ஆளாகுதல்.

தேவர் - நாணன்குறித்தது குடுமித்தேவரை. சிவபெருமான் ஒருவரே மெய்த் தேவர். பிறர் தேவர்எனப்படுதல் உபசாரமாத்திரையா யொழியும். அத்தேவர்களுக்கும் இவர் தேவராவார்.

"அத்தேவர் தேவ ரவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பற்றேது மில்லாதென் பற்றறநான் பற்றுகின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்ற திருவாசகக் கருத்தை இங்கு இச்சரித நிகழ்ச்சியினும், சொல்லாற்றலினும் வைத்துக்காண்க. இத்தேவரைச் சிவகோசரியாரும் "தனிமுதலாம் பரனென்று" (789) துதித்தலும், இவரே கயிலாயநாதர் என்பதும் காண்க.

தேவர்க்கின்னம்—என்பதும்பாடம். 116

766. "என்செய்தாய் திண்ணு! நீதான், என்னமால் கொண்டா? யெங்கள்
முன்பெரு முதலி யல்லி யோ ?"வென, முகத்தை நோக்கார்,
வன்பெரும் பன்றி தன்னை யெரியினில் வதக்கி மிக்க
வின்புறு தசைகள் வெவ்வே றம்பினி லீர்ந்து கொண்டு, ககள

767. கோலினிற் கோத்துக் காய்ச்சிக் கொழுந்தசை பதத்தில் வேவ
வாலிய சுவைமூன் காண்பான் வாயினி லதுக்கிப் பார்த்துச்
சாலவு மினிய வெல்லாஞ் சருகிலை யிணைத்த கல்லி
யேலவே கோலிக் கூட வதன்மிசை யிடுவா ராளுர். ககஅ

766. (இ - ள்) வெளிப்படை. "திண்ணா! என்னகாரியம் செய்தாய்! நீதான் என்ன மயக்கம்கொண்டாய்? நீ வேடர்களாகிய எங்களது முன்னைப் பெருமுதல்வனல்லையோ?" என்று காடன்கேட்க, அவன் முகத்தையும் நோக்காதவராகி, வலிய பெரிய பன்றியினை நெருப்பில் இட்டு வதக்கி, மிக்க இன்பமுடைய தசைகளே வேறு வேறுக அம்பினால் ஈர்ந்துகொண்டு, ககஎ

767. (இ - ள்) வெளிப்படை. கோலிற் கோத்துக்காய்ச்சி அந்தக்கொழுப்புடைய தசைகள் நல்ல பதத்தில்வேக, அவற்றின் இனியசுவையை முன்காண்பதற்காக வாயில் இட்டுப் பல்லினால் அதுக்கிச் சுவைபார்த்து, அவற்றில் மிக இனியவற்றையெல்லாம் முன்னரே இலைச்சருகுகளைச் சேர்த்த கல்லை தைத்து அதில் ஒன்றுசேர இடுவாராயினர். ககஅ

766. (வி - ரை) என் செய்தாய் - என்ன விபரீதம் செய்துவிட்டாய்! என்று ஆச்சரியக் குறிப்புப்படக் கூறியது.

என்னமால் கொண்டாய் - என்னவிதமான மயக்கத்தினுள் அகப்பட்டுக்கொண்டாய்? மால்கொள்ளுதல் - மயக்கத்தினுட்படுதல். "தேவுமால் கொண்டா னிந்தத் திண்ணன்" (769) என்று இதனைத் தெய்வத்தாலாகிய மயக்கம் என்று அவர்கள்கொண்டது காண்க.

முதலி - முதல்வன் - தலைவன். எங்கள் முதல்வனல்லையோ என்றது "முன்னை நாளில் அரசுரிமையேற்றதால் எங்களைக் காப்பாற்றும் கடமை உன்மேல் உள்ளது. அதன்பொருட்டே இங்கு வேட்டைக்கு வந்தனை; நீ இவ்வாறு கைவிட்டால் எங்களைக் காப்பவர்யார்?" என்று அவருக்கு நினைவூட்டினால் அவர் மயக்கம்தீரும் என்று எண்ணினவனாகி இவ்வாறு அவரிடம் கூறினன்.

முகத்தை நோக்கார் - காடன்சொல்லிய சொற்கள் செவிக்குப் புலப்படாதது போலக் காடனும் அவர்கண்ணுக்குப் புலப்படவில்லை. ஆதலின் அவன் முகத்தைப் பார்க்கவில்லை. இச்சிலேயின் இயல்பைச் சண்டீசநாயனார்புராணம் 49, 50 ம் திருப்பாட்டுக்களில் விரிவாய்க் காணலாம். ஆனால், காதல்கொண்ட அத்தேவரைப்பற்றிய செயல்கள் காட்சிப்படும்; சொற்களும் செவிப்புலப்படும் என்க. 758-ல் உரைத்தவைகாண்க.

பன்றி - தாம் சுரிகையால் துணித்து அங்குக் கொண்டுவரச்செய்து கீழலிலிட்ட அப்பன்றி.

வதக்கி - இது இறைச்சியை உணவாகச் செய்தலில் முதற்செயல். வதக்குதல் மென்மைபெறத் தீயின்கண் வேகவைத்தல்.

மிக்க இன்புறு தசைகள் - அப்பன்றியின் இறைச்சியில் மிகச்சுவையும் இன்ப மூட்டும் தசைப்பகுதிகள். அம்பினால் வெவ்வேறு ஈர்த்து - அவ்வினிய பகுதிகள் அதனுடலில் வெவ்வேறு பாகங்களில் உள்ளனவாதலின் அப்பாகங்களைத் தனித்தனி அம்பினால் அரிந்து பிரித்து எடுத்து. கொண்டு - வேறுக எடுத்துக்கொண்டு. வேறு பிரித்துக்கொள்ளுதல் இறைச்சியைச் சித்தஞ் செய்தலில் இரண்டாவது செயல். 117

767. (வி - ரை) கோலினிற் கோத்துக் காய்ச்சி - இறைச்சியை உணவாக்குவதில் மூன்றுஞ்செய்கை. வனவேடர்கள் முதலிய பழங்காலமக்கள் இறைச்சி சமைத்தற்கு இக்கால நாகரிகமக்கள் கைக்கொள்ளும் கரண்டி - முள் - கோல் - சட்டி முதலிய உபகரணங்களின்றிச் சமைத்து உண்டவகை காண்க. மரக்கடைகோல் நெருப்பைக் கண்டு தந்தது. காய்ந்த கட்டைகள் நெருப்பைவளர்த்தன. அம்பு தசையை வேறாரிந்தது. வேறொருகோல் இறைச்சியைக்கோத்து அனலிற்காய்ச்ச உதவிற்று. சருகிலைக் கல்லையே கொள்கலமாயிற்று என்க. இவை 793 - 794-ம் திருப்பாட்டுக்களில் விரித்துக் காட்டப்பட்டது.

**கோத்துக் காய்ச்சுதல்** - ஒரு கோலில் இறைச்சியின் பகுதிகளைக் கோத்துக் கோலினைப் பற்றியவாறே அவற்றைத் தீயில் மேலேகாட்டிச் சூடேறப்பண்ணுதல். அதனை இட்டுக் காய்ச்சுதற்குரிய பாத்திரமின்மையானும் கோலிற் கோத்துத் தீயின் உயரப்பிடித்துக் காய்ச்சுவர். "நெடுங் கோல்கோத்துக் கனலின்கண் உறக்காய்ச்சி" (795) என்றதுங் காண்க. முதலில் வதக்குதல் அதன் உடல்முழுதும் ஒரு பாகமாக வெந்து பக்குவப்பட அதன் இனிய பகுதிகள் இலகுவில் அரிந்தெடுக்க உதவியாதற் பொருட்டு. இங்கு மறுமுறை காய்ச்சுதல் அவை செம்மையாய் வெந்து உணவாக அமைதற் பொருட்டு.

**கொழுந் தசை** - கொழுவியதசை. கொழுப்பு என்ற நெய்ப்பசையுள்ள மாமிசப் பகுதி.

**பதத்தில் வேவ** - நெருப்பின்மேல் காட்டியதனால் தசையினின்று கொழுப்பாகிய நெய் மேல்வந்து தீயில் விழாது வடிய அந்நெய் முழுதினாலும் அத்தசை பதம்பட வேவச்செய்து. **பதமாவது** - அதிகமாய்க் காய்ச்சின் தசை கருகியும், சுருங்கக் காய்ச்சின் செம்மையாய் வேகாமலும் போய் உணவுக்குப் பயன்படாது. ஆதலின் இவ்விரண்டுமில்லாத நேரான பக்குவம். **வாலிய** - இனிய.

**அதுக்கிப் பார்த்து** - சிறிதுமென்று சுவைபார்த்து.

**சாலவும் இனிய எல்லாம்** - முன்பாட்டில் இன்புறு தசைகள் வெவ்வேறு கொண்டு என்றது கையினிற்றெரிந்த அளவுக்கு இனிய பகுதிகள். இங்கு இனிய என்றவை அவற்றுள்ளேயும் தீயிற் சமைக்கப்பட்டபின் வாயினுற் சுவைத்தறிந்தவற்றில் மிகவும் இனிய பகுதிகள். எனவே, இனியவற்றுள் இனியவாகிய தசைப்பகுதிகள் என்றபடி. **ஏலவே இலைச்சுநது இணைத்த கல்லை கோலி** என்க.

**ஏலவே** - அதற்குப் பொருந்த. **பொருத்தமாவது** - கல்லை இணைக்கும் பொருத்தமும், பன்றியிறைச்சி இடுதற்குரிய பொருத்தமும், கொண்டுபோதற்குரிய பொருத்தமும் பிறவுமாம். **இலைச்சுநது** - வாடிய இலை. இங்குத் தேக்கிலையால் இணைத்தனர் என்றறியப்படும் (793). இவை கல்லையிணைத்தற்குப் பொருந்தச் செய்து. **கோலி** - கல்லையினையும் தாமே கோலினர், பணியாளரிருவர் இருந்தமை யுணராராதலின் என்க. **கல்லை** - உணவு வைக்கும் கொள்கலம். எச்சில் செய்யப்பட்டு எறியப்பட்ட இலையை எச்சிற்கல்லை என்னும் வழக்குங்காண்க.

**கூட** - மேன்மேல் சுவைபார்த்த பகுதிகள் ஒவ்வொன்றுகச் சேர்த்து கூட. **அதன் மிசை** - கல்லையினிடத்து.

**கோலிக் கூட்டி** - என்பதும் பாடம். 118

768. மருங்குகின் றவர்கள் பின்னு மயன்மிக முதிர்ந்தா ; னென்னே !
யரும்பெற விறைச்சி காய்ச்சி யதுக்கிவே றுமிழா நின்றான் ;
பெரும்பசி யுடைய னேனும் பேச்சில ; னமக்கும் பேறு
தரும்பரி சுணரான் ; மற்றைத் தசைபுறத் தெறியா நின்றான் ; கஙஙூ

769. "தேவுமால் கொண்டா னிந்தத் திண்ணன் ;மற் றிதனைத் தீர்க்க
லாவதொன் றறியோங் ; தேவ ராட்டியை நாக ணேடு
மேவிநாங் கொணர்ந்து தீர்க்க வேண்டுமவ் வேட்டைக் காட்டி
லேவலாட் களையுங் கொண்டு போது "மென் றெண்ணிப் போனர்.

768. **(இ - ள்)** வெளிப்படை. பக்கத்தில் நின்றவர்களாகிய நாணனும் காடனும் "மேலும் மிக மயக்கம் முதிர்ந்தவனுயினன் ; என்னே ! அரியதாய்ப் பெற்ற இப் பன்றியிறைச்சியைக் காய்ச்சி அதுக்கிப் புறம்பு வேறே உமிழ்கின்றான் ; தான் பெரும்

பசியை உடையவனேயாயினும் (உண்ணும்) பேச்சில்லான் ; பெற்ற இதனை எங்களுக்கும் கொடுக்கும் பரிசுணராதவனானான் ; ஏனை இறைச்சியைப் புறத்து எறிகின்றான்."

769. (இ - ள்) வெளிப்படை. "இந்தத் திண்ணன் தெய்வ மயக்கம் கொண்டான்; இதனைத் தீர்க்கும் வழியொன்றினையும் நாம் அறியோம் ; நாம் ஊருக்குப் போய்த் தேவராட்டியை நாகனோடு கொண்டுவந்து இதனைத் தீர்க்க வேண்டும் ; அந்த வேட்டைக்காட்டில் நின்ற ஏனைய ஏவலாட்களையும் கூட்டிக்கொண்டு ஊர்க்குப்போவோம்" என்று எண்ணிப் போயினர். ௧௨௦

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

768. (வி - ரை) **மருங்கு நின்றவர்கள்** - காடன் - நாணன் எனுமிருவரே. வேறு வேடர்கள் அங்கில்லை. வேறு வேடர்களுமிருந்தனர் என்று கொண்டுரைப்பாருமுண்டு.

**பின்னும்** - மேலும். **மிகமுதிர்ந்தான்** - மிக அதிகமாகக் கொண்டான். முதிர்ந்த மயல் கொண்டான் என்பதாம். மயலின் முதிர்ச்சி அதனைக் கொண்டார்மேல் ஏற்றப்பட்டது. மயக்கம் மேன்மேலும் முதிர்ந்து பெருகிவிட்டது என்க. பெருகியதென்றற்கு அடையாளமாகத் தாங் கண்டவற்றைப் பின்வருமாறு குறிக்கின்றார்கள். உமிழாநின்றான் - பேச்சிலன் - பரிசுணரான் - எறியா நின்றான் - ஆதலின் மயல்மிக முதிர்ந்தான் என்றதாம். **என்னே** - மயலின் விளைவுதான் என்ன ஆச்சரியம்.

**அரும்பெறல் இறைச்சி** - காட்டுப்பன்றி யிறைச்சியை இவர்கள் மிகமேலாக மதித்திருந்தார்கள் என்பது. மிக முயன்று - வருத்தப்பட்டுப்பெற்ற என்றலுமாம். 741-ல் இதனைப்பெற்ற அருமையை இவர்கள் வியந்து பாராட்டியது காண்க.

**அதுக்குதல்** - பல்லினிடை வைத்துச் சிறிது மெல்லுதல். **வேறு** - தனியாக. **உமிழாநின்றான் - எறியாநின்றான்** - ஆநின்று என்ற நிகழ்கால இடைநிலைகள் பல முறை உமிழ்தலையும் எறிதலையும் செய்கின்றதனைக் குறித்தன. சில தசைகளை உமிழ்ந்தும், வேறு சிலவற்றை எறிந்தும் என்க.

கல்லையில் இட்டவற்றை இவர்கள் உமிழ்தல் என்றும், புறத்துத் துப்பிய ஏனையவற்றை எறிதல்என்றும் கொண்டனர். அவர் உட்கொள்ளாதநிலையில் இரண்டும்ஒத்தனவாயினும்,கல்லையில் இட்டவையும் தின்னாதவையாயினும்,அவற்றை வேறு ஒரு பயன்கருதியதுபோல அவ்வாறு செய்கின்றார் என்றறிந்தமையால் இங்ஙனம் பிரித்துக் கூறினார்கள். இன்புறு தசைகளைமட்டும் அம்பில் ஈர்ந்துகொண்டு பிறவற்றைக் கழித்தனர். அவற்றுள்ளும் சுவைத்தவற்றில் சாலவும் இனியவல்லாதவற்றைப் புறத்துக் கழித்து உமிழ்ந்தனர். இவ்விரண்டினையும் **மற்றைத் தசை - எறியா நின்றான்** - என்றனர்.

**பெரும்பசி யுடையன்** - தமது பசியின் அளவுகொண்டு அவர் பசியினையும் அனுமானத்தால் அறிந்தனர். அவர் தம்மையும் மறந்து பசி முதலியவற்றையும் மறந்த நிலையுற்றதனை இவர்கள் அறிந்திலர்.

**பேச்சிலன்** - பசியை மாற்றிக்கொள்ளும் செயல் சிறிதுமிலர். நம்முடன் ஒரு பேச்சுமற்றனர் என்றலுமாம்.

**பேறு** - பெற்ற இறைச்சி. உண்மையில் அவர்பெற்ற **கடவுட்பேறு** இவர்கட்குந் தரும்வகையிலில்லை என்ற குறிப்பும் காணத்தக்கது. 119

769. (வி - ரை) **தேவுமால்** - கடவுட்பித்து. கடவுளைப்பற்றிய பித்து. கடவுளால் மேல்கொள்ளப்பட்ட பித்து என்றலுமாம். இதனை **மருள், ஆவேசம்** முதலிய பெயர்களாற் கூறுவர்.

**தீர்க்கல் ஆவது ஒன்று** - தீர்த்தற்கு ஆகும்வழி ஒன்றனையும். **தீர்த்தற்கு** - என நான்கனுருபும், **ஒன்றும்** என்ன முற்றும்மையும் விரித்துரைக்க.

**நாம் மேவி நாகனோடு தேவராட்டியைக் கொணர்ந்து** என மாற்றுக. **மேவி** - உடுப்பூர்க்குச் சென்று, இந்தத் தேவுமால் தீர்த்தற்குரியவள் அவளே

என்றெண்ணிய சிறப்புப்பற்றித் தேவராட்டியை முன்வைத்தனர். நோய் கண்ட போது அதனைப் போக்கற்குரிய மருத்துவனது பெயர் முதலில் நினைவுக்கு வருதல்போல அவளது நினைவே இவர்கள் மனத்தில் முதலில் நிகழ்ந்தது. மால் தீர்த்தற்கன்றியினும் தன் மகன் நிலையறிந்து ஆவன பிற பலவும் செய்தற்பொருட்டுத் தேவராட்டியை அடுத்து நினைவு வரத்தக்கவனும், இந்நிலையிலுல் முதலாகப் பந்தப் பட்டவனும் தந்தை நாகனே யாதலின் நாகனோடு என்று அவனை அடுத்துவைத்து, இவ்விருவரும் ஒன்றுபோல இங்கு உடன்வரத்தக்கார் என்று குறிக்க உடனிகழ்ச்சிப் பொருளில் ஓடு என்ற மூன்றனுருபு புணர்த்திக் கூறினர். ஓடு விகுதியை நாகன் பாற் சார்த்திக் கூறியது சிறப்புநோக்கி. தீர்க்கவேண்டும் - இதனை - (தேவுமாலினை) - எனச் செயப்படுபொருள் வருவிக்க.

**அவ்வேட்டைக்கான்** - அத்தக்காடு. நாம் அதிகாலையிற் போந்து வேட்டையாடிப் பல காதங்கள் பிரிந்துவந்த அந்த என்று இடத்தாற் செய்மை குறிக்க அ என்ற சேய்மைச் சுட்டாற் கூறினர்.

**ஏவல் ஆட்கள்** - வார் வலைகொண்டு காடுசூழ்ந்தும், வேவுபார்த்தும், இயங்கள் முழக்கியும், வேட்டையாடியும், பிறவாறும் தலைவன் ஏவலில் நின்று பணிசெய்த வேடர். இவர்கள் மீளி வேடர் - (717), மள்ளர் (718), வெற்பர் (719), வேடர் (720), வேடு (721), வேடர்சேனை (722,) ஒற்றர் (723), முதலிய பெயர்களால் முன்னர்க் கூறப்பட்டனர்.

**போதும்** - உடப்பூர்க்குப் போவோம் ; **என்றுஎண்ணி** - என்றிவ்வாறு அவ்விருவரும் ஒருவர்க் கொருவர் பேசித் துணிந்து. 120

770. கானவர் போன தோரார், கடிதினிற் கல்லை யின்க
ணூனமு தமைத்துக் கொண்டு, மஞ்சன மாட்ட வுன்னி
மாநதி நன்னீர் தூய வாயினிற் கொண்டு, கொய்த
தூநறும் பள்ளித் தாமங் குஞ்சிமேற் றுதையக் கொண்டார், கூஉக

771. தனுவொரு கையில் வெய்ய சரத்துடன் றுங்கிக் கல்லைப்
புனிதமெல் லிறைச்சி நல்ல போனக மொருகை யேந்தி
யினியவெம் பிரானுர் சாலப் பசிப்பரென் றிரங்கி யேங்கி
நனிவிரைந் திறைவர் வெற்பை நண்ணினர் திண்ண னர்தாம். கூஉஉ

770. (இ - ள்) வெளிப்படை. திண்ணனர்தாம், வேடர்களிருவரும் போனதை உணராதவராய், விரைவிலே கல்லையில் ஊனமுதைத் திருந்த அமைத்துக்கொண்டு, தேவரைத் திருமஞ்சனம் ஆட்ட எண்ணித், தமது தூய வாயினிடத்துப் பெரிய நதியின் நல்ல நீரைக்கொண்டு, பறித்தனவாகிய தூய நறிய திருப்பள்ளித்தாமங்களைத் தமது (தூய) தலைமயிரினிடத்தில் நிறையக் கொண்டவராய், கூஉக

771. (இ - ள்) வெளிப்படை. வெவ்விய அம்பினோடு வில்லை ஒரு கையில் தாங்கிக் கல்லையினிடத்து இட்ட தூய மெல்லிய இறைச்சியாகிய நல்ல திருவமுதினை ஒரு கையில் ஏந்தி " இனியவராகிய எமது பெருமானுர் மிகவும் பசித்திருப்பார் " என்று இரங்கி, ஏங்கி, மிக விரைந்து, இறைவரது மலையினைச் சேர்ந்தனர். கூஉஉ

இவ்விருபாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிவு கொண்டன.

770. (வி - ரை) **ஓரார்**-உணராதவராய். முற்றெச்சம். உணராமைக்குக் காரணம் முன்னர் முகத்தை நோக்கார் (761) என்ற விடத்தும், பிறுண்டும் உரைக்கப்பட்டது.

கல்லையில் அமுதமைத்துக் கொண்டு, வாயினில் மஞ்சனநீர்கொண்டு, குஞ்சி மேற் பள்ளித்தாமங் கொண்டு என, நீராட்டல் - பூச்சூட்டல் - அமுதூட்டல் என்று

தாம் கடைப்பிடித்த மூன்றற்கும் உரிய திருச்சாதனங்களைத் தேடிக் கொண்டதனை இப்பாட்டாலும், இவற்றை எந்திக்கொண்டு மலைமேற் சென்றதனை வரும் பாட்டாலும் கூறினராதலின் இவையிரண்டும் தொடர்ந்து ஒருமுடிபுபடப் பொருள் கொள்ளப் பட்டன. 559 - 560 - பாட்டுக்களிலும் இது போன்ற அமைப்புக் காண்க.

திண்ணனார் தாம் - ஓரார் - (ஆகி) கொண்டு - கொண்டு - கொண்டார் (ஆகித்) தாங்கி - ஏந்தி - இரங்கி - ஏங்கி - விரைந்து - வெற்பை நண்ணினார் என இவை இரண்டு பாட்டுக்களையும் கூட்டி முடித்துக் கொள்க.

**கடிதினில்** - தாமதப்படாமல் - விரைந்து. தேவருக்குப் பசி மிக முடுகுமென்ற கவலையினால் எல்லாம் விரைவில் முடித்த கருத்துக் குறித்தது. இதனைப் பசிப்பார் என்று இரங்கி ஏங்கி என வரும்பாட்டில் குறித்ததும், அதுபற்றியே **நனி விரைந்து நண்ணினார்** என்றதும் காண்க.

**ஊன்** - அழுது - ஊனுகிய அமுது. பண்புத் தொகை. இதனைப் பெரிய அளவிற் குக் கொண்டனர் என்பது " குவப்பெருந் தடக்கை வேடன் கொடுஞ்சிலை யிறைச்சிப் பாரம் " (திருச்சாய்க்காடு 8) என்ற திருநேரிசையா லறியப்படும்.

**அமைந்துக்கொண்டு** - சாலவு மினியவற்றை ஒவ்வோர் பகுதியாகச் சுவை பார்த்து உமிழ்ந்தவற்றை ஒன்றுகூட்டி ஏந்திச்செல்வதற்குரியபடி அமைத்து.

**மஞ்சனம் ஆட்ட** - நீராட்ட. நதி பெருமையினையும், அதன் நீர் நன்மையினை யும், அதனைக் கொள்ளும் கொள்கலம் தூய்மையினையும் உடையன என்பார், **மாநதி - நன்னீர் - தூயவாய்** என்ற அடைமொழிகளாற் சாற்றினர். இவை திருமஞ்சன நீர் அமைக்கும் விதிகளைக் குறித்தவாறும். "குளிர்ந்தநீர்" (758) என்றவிடத்துரைத்தவை காண்க. " வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன் " என்ற ஆளுடைபிள்ளையாரது இத்தலத் தேவாரமுங் காண்க. " தூயவாய்க்கலசமாட்ட " என்பது திருநேரிசை.

**தூநறும் பள்ளித்தாமம்**-தூய்மை-இவராற் கொய்யப்பெற்றமையாலும், நறுமை-புதுமலர்களானதாலும் பெறப்பட்டன. "புதுமலர்க்காவில்"(763) என்றது காண்க. இவ் விரண்டு அடைமொழிகளால் பள்ளித்தாமத்தின் இலக்கணங் குறித்தபடியாம். இதனை ஆகமங்களினும், புட்பவிதி முதலிய நூல்களிலும் காண்க. எறிபத்தநாயனார்புராணத்து உரைத்தவையும், முருகநாயனார் புராணத்து உரைப்பவையுங் காண்க.

**குஞ்சிமேல் தூதைய** - குஞ்சி - தலைமயிர். தலைமயிரைப் பூக்கூடையாகக்கொண்டு அதனுள் நெருங்கப் பள்ளித்தாமங்களை அமைத்துக்கொண்டனர். இடச்சுருக்கம் நோக் கித் தூதையக்கொண்டனர் என்க. தூய என்றதனைக் குஞ்சியுடனும் சேர்த்துக.

**கொண்டார்** - கொண்டாராகி. முற்றெச்சம். கொண்டு-கொண்டு - கொண்டாராய் என எறிபத்தர்புராணம் 560-ம் பாட்டினும் இவ்வாறே கூறியதும் காண்க. இவ்வாறு தனித்தனி பிரித்து ஒரே சொல்லால் முடிபுகட்டிக் கூறுதல் அந்தச் செயல்கள் ஒவ் வொன்றையும் பிரித்துக் காட்டிக் கற்போர் மனத்தை அவற்றிற் புகுத்தற்பொருட்டும், அவையாவும் ஒன்றுபோலவே சிவபூசைக்குரியவை என அறிவுறுத்தற் பொருட்டுமாம்.

771. (வி - ரை) ஒரு கையில் வெய்ய சரத்துடன் தனுதாங்கி என மாற்றுக.

**கல்லை போனகம் ஏந்தி** - அவர் ஏந்தியது கல்லையினை. இறைச்சிப் போனகம் அதனுள் நின்றது. போனகக் கல்லை ஏந்தி என்னுது **கல்லைப் போனகம் ஏந்தி** என் னார், போனகத்திற்குக் கொள்கலமாகியமட்டில் கல்லை நிற்றலின் அதனை ஏந்துதல் அவர் கருத்தன்று ; போனகம் நிவேதிக்கும் உணவாதலின் அதனை ஏந்துதலே அவர் கருதியதென்று குறிக்கும்பொருட்டென்பதாம். **மெல் இறைச்சி** - சுவைகாணத் தாம் வாயினில் மென்ற - அதுக்கிப் பார்த்த - இறைச்சி என்றகுறிப்புமாம்.

**இனிய...என்று** - இது அவர் மனத்தில் எண்ணியது. உள்ள நிகழ்ச்சி.

**இரங்கி - ஏங்கி** - இவை அவர் மனநிலை. தேவர்பசிக்கு அவர் இரங்கினர். **இரங் குதல்** - பரிவுகொள்ளுதல். " பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து " என்ற

திருவாசகமும், " கன்றகல் புனிற்றா " (791) என்றதுங்காண்க. ஏங்குதல் - இதுவரை தாழ்க்க சேர்த்ததே ! முன்பே பசிதீர்க்க என்னல் இயலவில்லையே ! என்ற எக்கம்.

நனி - விரைந்து . மிகவிரைவாக. பசிதீர்க்கும் ஆவலால் மிகவிரைந்தனர்.

நண்ணினார் திண்ணனார்தாம் - செய்வினை முற்றிய விரைவுகுறிக்கப் பயனிலையை முன்னுரைத்தனர்.

நீர்சுமந்து, திருப்பள்ளித்தாமம் கொண்டு, ஊனமுது ஏந்தி விரைதல் மெய்யிலும், பசிப்பார்என்று இரங்கி ஏங்குதல் மனத்திலும் நிகழ்ந்தன. திருவாயிற் றிருமஞ்சனநீர் நிறையக்கொண்டதனால் வாக்கினாற் பணிசெய்ய இயலாமையின் இவ்விரண்டுமே கூறினார். இறைவனுக்குத் திருப்பணிசெய்தலில் வேண்டப்பட்டு விதித்த மன மொழி மெய்களின் ஒருமைப்பாடும் ஆர்வமும் குறித்ததுகாண்க. 122

772. இளைத்தனர் நாய னாரென் றீண்டச்சென், றெய்தி, வெற்பின்
முளைத்தெழு முதலைக் கண்டு, முடிமிசை மலரைக் காலில்
வளைத்தபோற் செருப்பான் மாற்றி, வாயின்மஞ் சனநீர் தன்னை
விளைத்தவன் புமிழ்வார் போல விமலனார் முடிமேல் விட்டார். கஉஉ

(இ - ள்) வெளிப்படை. தமது தலைவராகிய தேவர் இளைத்தனர் என்று, வேகமாய்ப்போய், மலையில் முளைத்தெழுந்த முதல்வராகிய அவரைக் கண்டு, அவரது திருமுடிமேல் இருந்த மலர்களைத் தமது காலில்தரித்த அழகிய செருப்பினாலே மாற்றித், திருவாயிலிருந்த திருமஞ்சனநீரை விளைத்த அன்பினை உமிழ்வார்போல விமலனாரது திருமுடியின்மேல் விட்டனர்.

(வி - ரை) இளைத்தனர் - பசியால் மேனியிளைக்கும் இயல்புபற்றி இவ்வாறு எண்ணினார். இளைத்தல் - காரணங்கள் சத்திகுறைதல். களைத்தல் என்றலுமாம். தேவரது இளைப்பே இவர்மனத்தின் முன் நின்றபடியால் பின்வரும் பயனிலையாகிய இளைத்தனர் என்றதனை முன்வைத்துக் கூறினர்.

நாயனார் - 759 பார்க்க. என்று - என்றஎண்ணிக் கவலைகொண்டு. முன்பாட்டிற் காலப்பசிப்பர் என்ற கவலை தொடர்ந்து நின்றதென்பது.

ஈண்ட - விரைவுகுறித்தது. "ஈண்டநீ வருவாயோலம்" (432) என்றதுகாண்க.

கண்டு - இதுவரை பிரிந்திருந்தமையால் திரும்பிச் சென்றவுடன் மிக்க ஆர்வத்தோடும் கண்டு என்க.

முடிமிசை.....மாற்றி - காட்பூசையின் தொடக்கம் முன்னைப் பூசையின் நின்மாலியங் களைதலாதலின், முதலில் நாதனார் முடிமேலிருந்த மலர்களைச் செருப்புக் காலால் மாற்றினர். பழம்பூக் களைதலினை நாணன் சொன்னவனல்ல ஞயினும் பழய பூக்களைக் களைந்தா லல்லது நீர் வார்த்தற்கும் புதிய பூச்சாத்துதற்கும் இயைபில்லை என்றறிந்து திண்ணனார் இதனைச் செய்தனர். முன்பிறப்பிற் பூசனை செய்த வாசனை பற்றி இவ்வாறு செய்தார் என்றலுமாம். பழம்பூக் களைந்தபின் அபிடேகஞ் செய்தல்வேண்டுமாதலின் வாயின் மஞ்சனநீர்தன்னை இறைவன் திருமேனியில் விட்டனர். கைகளில் வில்லும் இறைச்சியுமேந்துதலாற் காலால் மாற்றினர்.

முளைத்தெழுமுதல் - தானாய் முளைத்து எழுந்த முதல்வர் ; சுயம்பு மூர்த்தி. மலை மிசை யெழுந்து (745) என்றதும், மலையெழு கொழுந்தாயுள்ள (654) என்றதும் காண்க. முதல் - முழுமுதல்வர் - ஏகநாயகர் - எல்லார்க்கும் முன்னவர்.

காலில் வளைத்த போற் செருப்பு - காலின்கண் வளைத்து சூழ்ந்த அழகிய செருப்பு. நீடு செருப்பு விருப்பு வாய்ப்ப (711) என்றவிடத் தரைத்தவை காண்க.

" பொன்னார் திருவடி " என்புழிப்போல பொன் என்று அருமைபடக்கூறிய திறமும் உணர்க.

**நீர் தன்னை - முடிமேல் விட்டார்** - என்று முடிக்க. நீர் விடுதல் என்பது வழக்கு. "...தொழிற், பூசனை தன்னைப் புக்கொரு காலில், தொடுசெருப் படியால் நீக்கி வாயில், இடுபுனல் மேனியி லாட்டித் தன்றலை, தங்கிய துவர்ப்பூ வேற்றி யிறைச்சியிற், பெரி தும் போனகம் படைத்துப் பிரானைக், கண்டுகண் டுள்ளங் கசிந்து காதலில், கொண்ட தோர் கூத்துமுன் னுடிக் குரைகழல், அன்பொடு மிறுக விறைஞ்சி யாறு, அன்பொடு காணக மடையும்", என நக்கீரர் (திருக்கண்ணப்பதேவர் திருமறம் 57 - 66) கூறும் முறையினையும்காண்க.

**விளைத்த அன்பு** - விளைந்த என்பது எதுகை நோக்கி விளைத்த என விகார மாயிற்று. முன்பு செய்தவங் காரணமாக இப்போது தானே விளைந்த. **அன்பு** - இவர்க்கு முன்னைப் பிறவியினின்றும் உடன்வந்த குணவிசேடமாம் என்பது 675-ல் உரைத்தவற்றாலும் உணர்க.

**அன்பு உமிழ்வார் போல** - வாய் கலசமாகக் கொண்டுவந்த நீரினால் நீராட்டு வித்தல் தம்முள்ளே விளைந்த அன்பினை உமிழ்ந்ததுபோல இருந்தது என்பதாம். அன்பு காரணமாக நிகழ்ந்த செயலுக்கு அன்பினையே உவமித்தது இதற்கு உவமை பிறிதின்மையும் தோன்றக் கூறியபடியாம். வாயின் மஞ்சனநீரை முடிமேல் விட்டது அன்பினை உமிழ்ந்தது போன்றது என்றமையின் தற்குறிப்பேற்ற உவமையின் பாற் படும். "பொருவில் அன்பு உருவமானார் (753) என்றபடி இவர் முழுதும் அன்பே உருவமாக ஆயினவராதலின், அன்புருவத்தில் அன்பினையன்றி வேறொன்றும் விளை யாமையால் அவ்வாறு உள்ளே விளைந்த அன்பினையே மேல்வழியுமாறு உமிழ்ந்தார் என்பது கருத்து. 460 - 752 திருப்பாட்டுக்களின் கீழ் உரைத்தவையுங் காண்க.

*"பூட்டு கார்முகந் தன்னெடுந் தோன்றிய புயல்வா, யூட்டு தண்புன னன்கியங் கிரிமிசை யுகுத்தல், வேட்டு வக்குலத் திண்ணனார் மஞ்சனம் விமலற், காட்டு கின்ற தோர் தனிச்செயல் போன்றுள தன்றே" என்ற கந்தபுராணத் திருப்பாட்டில் (ஆற் றுப்படலம் - 6) இக்கருத்தை உவமை முகத்தால் வைத்துப் பாராட்டியிருத்தலும் இங்குவைத்துக் காண்க.

**விமலனார்** - தின்மலராதலின் அவரை மஞ்சன மாட்டித் தூய்மைப் படுத்துதல் வேண்டப்படுவதன்று. அன்பினில் ஆடுதலேயே அவர் விரும்புவராதலின் இங்கு இவரது திருவாய்நீர் மஞ்சனத்தை விரும்பி ஏற்றனர் என்ற கருத்துப் புலப்பட இங்கு இப்பெயராற் கூறினார். 806 பார்க்க. இத்தன்மையினைப் பின்னர் 818ல் "விமலனார்" என்று திண்ணனார் திருவாக்காற் குறிப்பதும் காண்க. அவர் இயல்பாகவே பாசங்களி னீங்கியவர்; திண்ணனார் பொருவில் அன்பு உருவமாயினவர். ஆதலின் இவரது வாய்நீரால் அவரது தூய்மை அநுசிதப்படவில்லை என்பதும் குறிப்பு. "யாவையும் சூனியஞ் சத்தெதிராதலின்" என்றபடி, சத்தின்முன் அசத்து விளக்கமுறாது. இக்கு இச்ச அன்பாகிய சத்து விளக்கிட உணராத விடத்துச் சிவகோசரியார் இச்செயல்களை அநுசிதமென்றனர். பின்னர் இறைவனார் "அவனுடைய வடிவெல்லா நம்பக்கலன்பு" (186), "அவனுடைய செயலெல்லா நமக்கினியவாம்" என்று காட்டவே (807), இவை தூயனவாகிய பரிசெல்லாங் காண்கின்றார்.

---

*இத்திருப்பாட்டில் கரிய பெரிய மேகம் இந்திர வில் ஏந்தியதும், மேகமாகிய வாயி னில் நீரினைக் கொண்டதும், அதனையே கந்திமலைமேல் உகுத்ததும் திண்ணனாருக்கு மெய்யும் உருவும் வினையும் பயனும் பற்றிய முற்றுவமமாக அமைத்திருத்தல் காண்க. **நந்தி** என்பது இறைவனது பெயராயினமையின் அதுவும் முற்றுவமத்திற்கு அங்க மாய்ப் பொருந்தி அழகுசெய்து நின்றது. **விளைந்த அன்பு உமிழ்வார்போல** என் றதனைத் தனக்குவமை யில்லாத **தனிச் செயல்** என்றார். கருவரை காளமேக மேர் தியதென்ன (664) என்ற விடத்துத் திண்ணனார்க்குக் காளமேகத்தை உவமை கூறிய கருத்தினைத் தொடர்ந்த விரிவுரை போல இப்பாட்டு விளங்குகின்றதும் காண்க.

விட்டார் - உமிழ்ந்தார் - மஞ்சனமாக வார்த்தார். மஞ்சன மாட்ட எண்ணி நதி யின் நீரினை வாயினில் கொண்டார் (770) என உரைத்தபடி, இவர் இந்நீரினைக் கொண்டு அபிடேகம் செய்வதாகப் பாவித்தார். இங்கு விட்டார் என்பது பாவனாபி டேகம் என ஆகமங்களில் விதித்தபடிக்குள்ளதொரு வழிபாட்டுச் செயல் என்க. ஒரு வாயின் அளவுமட்டிற் கொண்ட நீர் இறைவனது திருமேனி முழுதும் ஆட்டுதற்குச் சிறிதும் போதாமையால் இங்குத் திண்ணனார் அந்த நீரினால் இறைவன் திருமேனி முழுதும் நீராடி யமைத்தனராகப் பாவித்துக்கொண்டனர் என்பது கொள்ளத்தக்கது. இறைவனும் அந்தப் பாவனையினுள்ளே நின்று அமர்ந்துகொண்டு பாவனைப்பயனே அருளினர் என்க. " பாவிப்பார் மனம் பாவிக் கொண்டானே " என்பது தேவாரம். சண்டீச நாயனார் ஆட்டிய பாலாகிய திருமஞ்சனத்தை வெண்மண லிலிங்கத் திரு மேனியினுள்ளிருந்து,"அன்ப ரன்பின் பாலளதாய், மூள வமர்ந்த நயப்பாடு முதிர்ந்த பற்று முற்றச்சூழ், கோள மதனி னுண்ணிறைத்து குறித்த பூசை கொண்"டருளியதும் இங்கு உன்னுக. திண்ணனார் என்ற எழுவாய் மேற்பாட்டினின்றும் வருவிக்க. 123

773.* தலைமிசைச் சுமந்த பள்ளித் தாமத்தைத் தடங்கா ளத்தி
மலைமிசைத் தம்பி ரானார் முடிமிசை வணங்கிச் சாத்திச்,
சிலைமிசைப் பொலிந்த செங்கைத் திண்ணனார் சேர்த்த கல்லை
யிலைமிசைப் படைத்த வூனின் றிருவமு தெதிரே வைத்து, கஉச

774. "கொழுவிய தசைக ளெல்லாங் கோலினிற் றெரிந்து கோத்,தங்
கழலுறு பதத்திற் காய்ச்சிப், பல்லினு லதுக்கி, நாவிற்
பழகிய வினிமை பார்த்துப், படைத்தவிவ் விறைச்சி, சால
அழகிது ; நாய னீரே ! யமுதுசெய் தருளும் " என்றார். கஉஞ

773. (இ - ள்) வெளிப்படை. வில்லின்மேல்விளங்கிய செம்மையாகிய கையினை யுடைய திண்ணனார் தமது தலையின்மேற் குடுமியிற் சுமந்துகொண்டுவந்த திருப்பள் ளித்தாமத்தைப் பெரிய காளத்திமலையின்மேல் எழுந்த தமது பெருமானருடைய திரு முடியின்மீது வணங்கிச்சாத்திச், சேர்த்துத்தைத்த சருகுஇலைக் கல்லியிற்கொண்ட ஊனுகியதிருவமுதினை எதிரில்வைத்து, கஉச

774. (இ - ள்) வெளிப்படை. " கொழுப்பினையுடைய தசைகளை யெல்லாம் தெரிந்து அரிந்துஎடுத்துக் கோலினிற்கோத்து அங்கு நெருப்பில் உற்றபதம்பொருந் தக் காய்ச்சியபின், பல்லினால் அதுக்கி, முன் பழகியநாவினால் இனிய சுவை ஆராய்ந்து பார்த்துப் படைத்த இவ்விறைச்சி மிகவும் அழகியது ; நாயனீரே ! தேவரீர் இதனை அமுதுசெய்தருளும் " என்றார். கஉஞ

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண்டன.

773. (வி - ரை) தலைமிசை - தலையின்மேல்உள்ள குடுமியின்மேல். குஞ்சிமேற் றுதையக்கொண்டார் (770) என்றதுகாண்க. உடலில் உயர்ந்தது தலை, அதனின் மேலாகிய உச்சியில்உள்ளது குஞ்சி. குடுமித்தேவர்க்குரிய திருப்பள்ளித்தாமத்தை அதனினும்மேலாக வைத்தனர்என்று திண்ணனார் அதைப்போற்றிய தன்மை குறிக்கப் பட்டதாம். சுமந்த - மிகுதியாக - சுமையாகக் கொணர்ந்த. " பூவொடு நீர்சுமக்கும் நின்னடியார் ", பூநாளுந் தலைசுமப்ப என்பனவாதி திருவாக்குக்கள் காண்க.

தம்பிரானார் - திண்ணனார் இவரைத் தமது தலைவராக - இனிய பிரானாராகக் கொண்ட அன்புநிலை குறிக்க இவ்வாறு கூறினார். " இனிய எம்பிரானார் " (771) என்றது காண்க.

முடிமிசை வணங்கிச்சாத்தி - ஒரு கையினில் அம்பும்வில்லும், மற்ற ஒருகையினில் ஊனமுதும்கொண்டனர் ஆதலின், கையால் எடுத்துச்சாத்துதல் இயலாமையின் தமது

தலையினைத் தேவரது திருமுடியின்மேல் வருமாறு நின்று வணங்கித் தலையிற்கொண்ட திருப்பள்ளித்தாமத்தை அவரது திருமுடியின்மேல் உதிர்த்தனர் **எண்க.** இதனையே **சாத்தி என்றார். வணங்கி** என்றது தமதுமுடி அவர்முடிமேல் வரும்படி வளைந்து குனிந்து - என்க. வணக்கம் - பூச்சூட்டும்போது வணங்கி அச்செயல்செய்யவேண்டிய வழிபாட்டுமுறையும் குறித்ததுகாண்க.

இப்போது நாம் கண்டுதரிசிக்கும் திருக்காளத்திநாதரது திருமுடிமீது தமது திருமுடியினால் வணங்கிப் பூக்களை உதிர்க்கவேண்டுமாயின் திண்ணனார் இக்காலத்து நாம் காணும் மனிதவர்க்கத்தாரின் மிகநீண்ட உடல் நீளத்தின் இரண்டு பங்குக்குமேல் அதிக நீண்டதிருமேனியுடையராயிருந்திருத்தல்வேண்டுமென்பது ஊகிக்கவுள்ளது.

**கீலமிகைப் பொலிந்த** - வில்லினை உள்வைத்துப் பிடித்த. **கேங்கை** - செம்மையுடைய-அழகிய - திருக்கை. **இலைசேர்ந்த கல்லை மிகைப்படைத்த** எனமாற்றுக. 124

774. (வி - ரை) **கொழுவிய**-கொழுப்போடி கூடிய. இன்புறுதசைகள் வெவ்வேறம்பினி லீர்த்து கொண்டு (766), கொழுந்தசை (767) என்றவை காண்க. "கறிவிரவு நெய்சோறு" (ஆளுடைய நம்பிகள் தேவாரம்) என்றதுபோலக் கொழுப்புடன் கலந்திருத்தலால் இவையே ஊனினது மிக இனிய பகுதிகள்.

**கொழுவிய.....இவ்விறைச்சி** - திண்ணனார் அவற்றைத் தேர்ந்து எடுத்துச் சமைத்த செயலினையும் அவற்றின் இனிமையினையும் தமது தேவருக்கு எடுத்துச் சொல்லிப் புகட்டும் அன்பின்றிறத்தை உணர்த்த இவ்வாறு கூறினர். இவை 766 - 767-ல் உரைக்கப்பட்டன. அமுதுபடைக்கச் செய்த செயல்களை யெல்லாம் தெரித்து. **கோத்து** - காய்ச்சி - **அதுக்கி** - பார்த்து - **படைத்த** என்று இவ்வளவும் தனித்தனி கூறியது இச்செயல்கள் ஒவ்வொன்றும் இவை தேவர்க்கு இனிய அமுதுபடைக்க வேண்டும் என்ற ஒருமைப்பட்ட உணர்ச்சியுடனே திண்ணனார் முன்னர் எண்ணிச் செய்தனர் என்பதைக் குறித்ததாம். சிவபூசைக்கு வேண்டிய நீர் - பூ - அமுது முதலிய யாவையும் இவ்வாறே அவ்வவற்றில் அழுந்திய ஒருமைப்பட்ட மனத்துடன் எண்ணியெண்ணி அமைத்தல் வேண்டும் என்ற சிவாகம விதிகளையும் இங்கு வைத்துக் காண்க. முன்னி (559), நெஞ்சில் வாலிய நேசம் கொண்டு (560), என உரைத்தவற்றை இங்கு நினைவுகூர்க.

**பழகிய நாவில் இனிமை பார்த்து** - என்று கூட்டுக. முன் பழக்கமுடைய நாவினால் இனிய சுவையுடைய ஊனினை அறிந்து. இரசம் என்ற புலனுக்கு உரிய பொறி நாவேயாம். ஆதலின், இனிமை பார்த்து என்றலே அமையுமாயினும் பல நாட் சுவைத்துச் சுவைத்துப் பார்த்துண்ட பழக்கமுள்ள நாவினது முன்அனுபவத்தின் துணைகொண்டு இதன் சுவையினை அறிந்தாராதலின் இது தவறுபடாது நிச்சயிக்கப்பட்ட இனிமையுடையது என வற்புறுத்தற் பொருட்டு நாவில் என்று கூறியிடன் அதற்குப் **பழகிய** என்ற அடைமொழியும் தந்தோதினர்.

**கால அழகிது** - மிக இனியது. முன்னர் **மச்சிது** என்றதன் கருத்தும் இது. குழவிகட்கு உணவு ஊட்டும் தாய்மார், அவ்வுணவின் சிறப்பும், அமைப்பும், படைப்பும் தனித்தனி எடுத்துக் கூறி ஊட்டும் அன்பினியல்பு இங்கு வைத்துக் காண்க.

**நாயனீரே ! - தலைவரே !. அழது செய்தருளும்** - அமுது செய்யக் கடவீர். இம்மொழிகள் சொல்லியது, பார்ப்பான் முன்பறைந்து ஊட்டிஞன் என்று நாணன் உபதேசித்த அதனைத் திண்ணனார் கடைப்பிடித்து அவ்வாறே செய்த செயல் என்க.

இறைவரை அமுதூட்டுவிக்கும் ஆகம மந்திரங்களும், "இது இன்ன அமுது ; இதனைத் தேவரீர் உண்டருளும்" என்ற இக்கருத்தே பற்றியன வாதலும் காண்க. 758-ல் உரைத்தவை பார்க்க.

பூசைக்குரிய பொருள்களைச் சேர்த்தவகையை மேல் 770-771ல் தொடர்ந்து கூறியதுபோலப் பூசைவினையை இவ்விரண்டுபாட்டுக்களிற் றொடர்ந்துகூறினர். 125

775. அன்னவிம் மொழிகள் சொல்லி யமுதுசெய் வித்த வேடர்
மன்னனூர் திருக்கா ளத்தி மலையினுர்க் கினிய நல்லூன்
இன்னமும் வேண்டு மென்னு மெழுபெருங் காதல் கண்டு
பன்னெடுங் கரங்கள் கூப்பிப் பகலவன் மலையிற் ருழ்ந்தான். கூகசு

(இ - ள்) வெளிப்படை. அத்தன்மையவாகிய இந்த மொழிகளைச் சொல்லி அமுதூட்டிய வேடர் தலைவனுரது உள்ளத்திலே திருக்காளத்தி மலையிறைவருக்கு இனிய நல்ல ஊன் இன்னமும் வேண்டும் என்று எழுகின்ற பெருத்த ஆசையினைக் கண்டு, தனது பலவாகிய நீண்ட கரங்களையும் குவித்துப் பகலோன் மலையிலே தாழ்ந்தனன்.

(வி - ரை) **அன்ன இம்மொழிகள்** - அன்ன - அத்தன்மை யுடையனவாகிய. அந்த ஆகமங்களில் விதித்த மந்திரங்களின் கருத்தே பற்றிய தன்மையுடைய என அகரம் உலகறிசுட்டு.

**இம்மொழிகள்** - மேலே கூறிய இவையும் இவைபோன்ற பல இனியமொழிகளும். இவை பலவும் தாயர் தம் சேய்கட்கு உணவு ஊட்டும் காலத்து அன்பினில் ஊறி இயல்பின் எழுவன காண்க. 799 பார்க்க.

**அமுது செய்வித்த** - ஊட்டிய. **ஊட்டி** (758) என்ற விடத்துரைத்தவை பார்க்க. செய்வித்த என்றதனுல் இறைவன் அதனை ஏற்றுக் கொண்டமை குறிப்பாம்.

**வேடர் மன்னனூர்** - திண்ணனூர். அன்றைக்கு முன்னூரில் மன்னராகப் பட்டம் சூட்டிக் கொள்ளப்பெற்றவர்.

**திருக்காளத்தி மலையினூர்** - குடுமித் தேவர்.

**இன்னமும் வேண்டும்** - மேலும் ஊட்ட வேண்டும்.

**காதல் கண்டு** - திண்ணனூரது ஆசையைக் கண்டு. வேடர் மன்னனூர் காதல் என்று கூட்டுக. ஆறும் வேற்றுமைத் தொகை.

**பன்னெடுங் கரங்கள்** - அனேகங் கோடியாகிய நீண்ட கதிர்கள். **கரம்** - கதிர். கிரணம் என்பர். **கூப்பி** - குவித்துக்கொண்டு. சத்தியைமடக்கி மறைத்துக்கொண்டு.

**மலையில் தாழ்ந்தான்** - அத்தமன மலையின்கீழ் இறங்கி மறைந்தான். நாம் இருக்கும் நில உலகமாகிய அண்டம் சுழல்வதால் பகலவனுடைய பார்வையினின்று மறைவதைப் பகலவன் மறைவதாகக் கூறுதல் உலக வழக்கு. **கதிரவன் உச்சி நண்ண** (750) என்ற விடத்துரைத்தவை பார்க்க. இரவி...எழும்போதில் 783 என்றதும், இவை போல்வன பிறவும் இவ்வாறே கண்டுகொள்க.

இனி, இங்கு, **கரம்** - கைஎனவும், **தாழ்ந்தான்** - வணங்கினன் எனவும் கொண்டு இவரது அன்பின் பெருமையைக்கண்டு கதிரவன் தனது பலப்பலவாகிய கைகளையும் கூப்பிக்கொண்டு மலைமேல் வணங்கினன் என்று பிறிதோர் பொருள் உரைக்கின்ற குறிப்பும் காண்க.

**காதல் கண்டு கதிரவன் மலையில் தாழ்ந்தான்** என்றது இன்னமும் அமுதூட்ட வேண்டும் என்று திண்ணனூர் காதல்கொண்டனர்; அதற்காகப் பகல்போய் இரவு வருதலும், இரவுபோய்ப் பகல் வருதலும் வேண்டும்; அவ்வாறு இரவும் பகலும் வருதற்கு முறையேதானும் மேலைமலையிற்ருழ்ந்து கீழ்கடலிற் ருேன்றல்வேண்டும்; பின்னர் அவர் காதலித்த ஊன்பெறுதற்கு அவ்விலங்குகளைக் காட்டுதலும்வேண்டும்; இவ்வாறு திண்ணனூருக்கு ஊழியம்செய்து அவராருளினைப் பெற்றுய்வோமென்று கருதியவன்போலக் கதிரவன் தாழ்ந்தனன் என்றதாம். திண்ணனூரது பெருங்காதல் கண்டு தாழ்ந்தனன் என்க. தற்குறிப்பேற்ற அணி.

இக்கருத்தைத் தொடர்ந்துகொண்டு "மாவலைக்க இட்டகருங் திரைஎடுத்துக் கைகாட்டு வான்போலக் கதிர்காட்டி எழும்போதில்" (783) என்று கதிரவன் அன்



கருவூர்த் திருவானிலைக் கோயில்

—பாட்டு - 555 - பக்கம் - 201.

பெருந்தலையூர் (கோவை சில்லா) கோயிலும்,
அதில் அருச்சுனர் - கண்ணப்பர் ஒருசேரக் காணும் திருவுருவங்களும்.

—பாட்டு - 751 - பக்கம் - ௯௪௫.

நிரவுகழிந்த விடியற்காலை எழுவதனையும் தொடர்கிலேத் தற்குறிப்பேற்ற உவமையணியில் அழகுபெற அமைத்த சிறப்பும் காண்க. 303-ம் பாட்டும் பார்க்க. 126

776. அவ்வழி யந்தி மாலை யணைதலு மிரவு சேரும்
வெவ்விலங் குளவென் றஞ்சி மெய்ம்மையின் வேறு கொள்ளாச்
செவ்விய வன்பு தாங்கித் திருக்கையிற் சிலையுந் தாங்கி
மைவரை யென்ன வையர் மருங்குநின் றகலா நின்றார். கஉள

(இ - ள்) வெளிப்படை. அவ்வழியே அந்திமாலை வரவும் (திண்ணனார்) இரவிலே சேரும் கொடிய விலங்குகள் இங்குள்ளன என்று பயந்து உண்மையினின்றும் வேறு படாத செம்மையாகிய அன்பினை மனத்தினுள்ளே தாங்கித், திருக்கையிலே (புறத்திலே) வில்லையுந்தாங்கி இறைவரின் பக்கத்தினின்றும் கரியமலைபோல நீங்காது நின்றனர்.

(வி - ரை) அவ்வழி - கதிரவன் மலையிற்றழ்ந்த அவ்வழியிலே - அதனைத் தொடர்ந்து.

அந்திமாலை - அந்தி - செவ்வானம். அந்தியைக் கொண்ட மாலைக்காலம். அந்தி வண்ணன் என்பது காண்க. கதிரவன் ஒளி போய் நண்பகல் கழிதலும் மாலை வருதலும் நாட்போதினில் வெவ்வேறு கூறுகள் என்பது குறிக்க அணைதலும் என்றார். இவை யிரண்டிற்கும் வெவ்வேறு தன்மைகளும் குணங்களும் உள்ளன. இவ்வாறே நாட்கூறுகள், காலக்கூறுகள் பிறவற்றிற்கும் உள்ள குணத்தன்மை வேறுபாடுகளும் கண்டு கொள்க. ஒளியின் இன்மையே இருள் என்பது தவறு. ஒளியும் இருளும் வெவ்வேறு பொருள்கள் என்ற சாத்திர உண்மை இங்கு விளக்கப்படுதலும் காண்க. ஒளியும் இருளும் பகலுமிரவுமாகிய காலக்கூறுகளில் நிகழும் பொருள்கள். ஒளியும் இருளும் பிராகிருதமும், காலம் மாயேயமுமாம். கங்குல்தான்...இருளின்கணம் (454), இருள் யாமத்து (454) என்றவை காண்க.

இரவு சேரும் வெவ்விலங்கு உள என்று அஞ்சி - இரவு சேரும் - இரவிலே சஞ்சரிக்கும் இயல்புடைய. இது கொடுவிலங்குகள் எல்லாவற்றினுக்கு மியல்பாம். கைம்மலை கரடி வேங்கை யிதிரி கானம் (756) என்றது காண்க. இவ்விலங்குகளேயஞ்சியே இவர், துணையின்றித் தனியாய் இருந்த இறைவரைப் பிரியமாட்டாது (762) வருந்தினர் என்பதும் முன்னர்க் கண்டோம். இவ்வாறன்றிச் சேரும் என்ற தனை வினைமுற்றாகக் கொண்டு, இராக்காலம் சேரும்-வரும் ; (இங்கு) விலங்குகள் உள என்றலுமாம்; விலங்கு உள, அவை இரவிற் சேரும் என்று உரைத்தலுமாம். விலங்கின் பொதுமை நீக்க வெம்மை என்ற அடைமொழி தந்தோதினர்.

சிலையும் தாங்கி - எய்வதற்குச் சித்தமாக வில்லைப்பிடித்துக்கொண்டு. அகத்துள்ளே அன்பு தாங்கியதனோடு கையிற் சிலையும் என உம்மை இறந்தது தழுவியது. உள்ளே அன்பு தாங்கிய மனமாகிய உட்கரணத்தால் எவப்பட்டுப் புறக்கரணமாகிய கையில் சிலைதாங்கி என்க. இத்தொடர்பை ஈரிடத்தும் தாங்கி என்ற ஒரே சொற்றால் பிணைத்து ஓதினர். இஃது ஆசிரியரது கவிநயமாகிய மாபு என்க. 770-ம் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

மெய்ம்மையின் வேறு கொள்ளாச் செவ்விய அன்பு-உண்மைத் தன்மையினைத் தவிர வேறு ஒன்றும் தன்னகத்துப் பொருந்தாத செம்மையாகிய அன்பு. "தன்னெஞ் சறிவது பொய்யற்க", "வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம்" என்றபடி பிறரெல்லாம் கொள்ளும் அன்பு உண்மையினையேயன்றிப் பிறவற்றையும் உள்ளே பொருந்தக் கொண்டிருப்பன. இவரது அன்பு வேறொன்றினையும் உட்கலவாத தூய்மையுடையது என்பதாம்.

இனி இதற்கு இவ்வாறன்றி, மெய்மை - சத்து - சத்தாந்தன்மை; (இது இறை வனுகிய பொருள்); வேறு கோள்ளா - திரிவுபடாத ; சத்தினிடத்தினின்றும் திரிவு படாத; செவ்விய-வேறுபடாமையாகிய; (செம்மை - செப்பம்; வேறுபடாமையே செப் பமாம்) என்றுரைத்தலுமொன்று. தாங்கி - சிந்தையில் எனவருவிக்க.

ஐயர் மருங்கு - குடுமித் தேவரது பக்கல்; ஆரும் வேற்றுமைத் தொகை. 752 பார்க்க. மருங்கு நின்று - பக்கலினின்றும். அகலா - அகலாது - நீங்காது. அவ்விருதி குறைந்த வினையெச்சம். " முறைகாக்கு முட்டாச் செயின் " (செங்கோன்மை - குறள்) என்புழிப் போலக்கொள்க. பக்கலிலிருந்து நீங்காது நின்றனர். மருங்கு நின்று - நின்று - ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபு. உம்மை தொக்கது.

நின்றார் - நிற்றலையே செய்தார். இருத்தல், படுத்தல் முதலிய வேறெச்செய லும் செய்திலர். இவ்வாறு வில்லேந்தி நிற்றல் விலங்குகள் வாராது காவல்செய்தற் பொருட்டு. இக்காளிலும் அரசமாளிகைகள் - நிதிநிலையங்கள் முதலியவற்றைக் காவல் செய்வோர் துப்பாக்கி - கத்தி - முதலிய படைகளே ஏந்தியவண்ணமாக நின்றபடியும், உலாவியும், காவல்புரியும் வழக்கினை இங்குவைத்துக் காண்க. " வில்லையேந் தியகை யோடும்...வீரன்...கங்குல் எல்லைகாண் பளவு நின்றான் ; இமைப்பில னயனம் " என்ற கம்பர்பாட்டுங் காண்க. "அவனே தானே யாகிய வன்கெறி, யேக னுகி இறைபணி நிற்க" என்று சிவஞான போதம் (10-சூத்) உணர்த்தும் இலக்கணத்துக் கிலக்கியமாய் நின்றார் என்பதும் கண்டுகொள்க. அதனுலே மெய்ம்மையின் வேறுகொள்ளாச் செவ்விய அன்பு தாங்கி என்றதுமாம்.

அகலாநின்றார் - பக்கலில்நின்றும் அகல்கின்றாராயினர் ; நிகழ்கால வினைமுற்று என்றுரைப்பாருமுண்டு. அது பொருத்தமை அறிக. 127

*777. சார்வரும் தவங்கள் செய்து முனிவரு மமரர் தாமுங்
கார்வரை யடவி சேர்ந்துங் காணுதற் கரியார் தம்மை
யார்வமுன் பெருக வாரா வன்பினிற் கண்டு கொண்டே
நேர்பெற நோக்கி நின்றார் நீளிரு ணீங்க நின்றார். கஉ.அ

(இ - ள்) வெளிப்படை. சார்தற்கரியனவாகிய தவங்களைச் செய்தும், மேகங்கள் தவழும் மலைகளையும் காடுகளையும் சேர்ந்தும்,முனிவர்களும் தேவர்கள்தாமும் காணுதற் கரியவராகிய சிவபெருமானே ஆசைமுன்னே பெருக ஆராத அன்பினுலே கண்டுகொண்ட படியே நேர்பெற நோக்கி நின்றார் ; நீண்ட இருள் நீங்கும்படி நின்றார் (நிண்ணனர்).

(வி - ரை) சார்வரும் தவங்கள் - விரதம், யோகம் முதலியன. தவம் - தபித்தல் - வாட்டுதல் - என்ற பொருளில், இங்கு, உடலைவாட்டிப் புலன்களை ஒறுக்கும் முயற்சியிற் செய்யப்படுவனவாகிய சாதனங்களைக் குறித்து நின்றெழுந்தது. அவை வெயிற்காலத் துத் தீயினிடை நிற்றல், குளிர்காலத்து நீரினிடை நிற்றல், இட்டிகளை இயற்றல் முதலியன.

" மலர்தலை யுலகத்துப் பலபல மாக்கண், மக்களை மனைவியை யொக்கலை யொரீஇ,
மனையும் பிறவுந் துறந்து நினைவருங், காடு மலையும் புக்குக் கோடையிற்,
கைம்மே னிமிர்த்துக் காலொன்று மூடக்கி, யைவகை நெருப்பி னடுவத்து நின்று,
மாரி காளிலும் வார்பனி காளிலு, நீரிடை மூழ்கி நெடிது கிடந்துஞ்,
சடையைப் புனைந்துந் தலையைப் பறித்து, முடையைத் துறந்து முண்ணு நுழன்றுங்,
காயுங் கிழங்குங் காற்றுதிர் சருகும், வாயுவு நீரும் வர்தன வருந்தியுங், [கவ
களாலுங் கல்லிலுங் கண்படை கொண்டுங், தளர்வுறு மியாக்கையைத் தளர்வித் தாங்
ரம்மை முத்தி யடைவதற் காகத், தம்மைத் தாமே சால்வு மொறுப்பர்..."

—திருவிடைமருதூர் மும்மணிக்கோவை (19)

என்று கூட்டினத்தடிகள் இவற்றை விரித்துரைத்தது காண்க.

**செய்து** - செய்தும். சிறப்பும்மை தொக்கது,

**முனிவர்** - மனனசீலமுடையார். **அமரர்** - சாவா மருந்துண்ணல் முதலியவற்றால் மரணத்தைத் தடுத்து நிற்பவர்வானோர்; இவர்கள் முதலியோரினும் உயர்ந்த நிலையுடைமையால் முனிவர் முன்வைக்கப்பட்டனர். உம்மைகள் உயர்வுசிறப்பு.

**வரை அடவி** - வரைகளையும் அடவிகளையும். **அடவி** மரங்கள் அடர்ந்த காடு. **தவங்கள் செய்தும் அடவி சேர்ந்தும்** என்க. **செய்து சேர்ந்தும், சேர்ந்து செய்தும்,** எனக் கூட்டியுரைப்பினுமாம். "புற்று மாய்மர மாய்ப்புனல் காலே யுண்டி யாயண்ட வாணரும் பிறரும், வற்றி யாருநின் மலரடி காணு மன்ன!" (செத்திலாப்பத்து - 2) என்பது திருவாசகம்.

**காணுதற்கு அரியார்** - அருந்தவங்களாலும் காண்டற்கரியார். இவை ஆன்மபோத மூனைப்பினுற் செய்யப்படுவன ஆதலின் அரியாயினர். அன்புமிகுதியால் ஆன்மபோதம் சிவபோதத்துளடங்கி நின்றவழி இறைவர் எளியராய் வெளிப்பட்டருளுவர் என்பது எல்லாநூல்கட்குந் துணிபாம். "முத்திக் குழன்று முனிவர்குழா தனிவாட - அத்திக் கருளி அடியேனை யாண்டுகொண்டு - பத்தி கடலுட் பதித்த பரஞ்சோதி" என்ற திருவாசகக் கருத்தும் உன்னுக. இதுபற்றியே இங்கு "ஆர்வமுன் பெருக ஆரா அன்பினிற் கண்டு கொண்டே" எனப் பின்னர்க் கூறுவது காண்க.

**ஆரா அன்பினிற் கண்டுகொண்டே**-மேன்மேல் வளர்ந்து மீதூரும் அன்பாதலின் அதனுள் இறைவன் வெளிப்பட, அவனைக் கண்ட வண்ணமாகவே. "பாசங் கழித்த கண்களா லாரூருக் கண்டுகொண்டு" (திருவாத·உப - படலம் - 38) என்பது திருவிளையாடற் புராணம்.

**நேர் பெற நோக்குதல்** - காண்பானும் காட்சிப் பொருளும் காட்சியும் வேறு தோன்றுமல் ஒன்றும் வண்ணம் ஊன்றிப்பார்த்தல். **நின்றார்** - அச்செயலிலே நிலைத்து நின்றனர். மேற்பாட்டில் **அகலா நின்றார்** என்றதும் காண்க. மேற்பாட்டால் அவர் நின்ற புறச்செயலும், இப்பாட்டால் அவர் நின்ற அகச்செயலும் கூறப்பட்டன.

**நீள் இருள் நீங்க நின்றார்** - **நீள் இருள்** - நீண்டு சென்றதாகிய அவ்விரவு. தலைவனிடத்துப் பணி செய்யும் அன்புமிகுதி யுடையார்க்கு அத்தப் பணிவிடைக்கும் தமக்கும் இடையில் இடையூறுய்த் தடுத்துநிற்கும் காலம் சிறிதேயாயினும் அது ஊழிபோல நீண்டுக் காட்டும் என்பது அகத்திணையியல்பாம். "மிகுபுலவிப் புணர்ச்சிக்கண் ஊழியா மொருகணைத்தான்; அவ்வூழி யொருகணமாம்" (எயர்கோன்-புராண - 268) என்று இதன் இயல்பை உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வைத்து ஆசிரியர் சுவைபடக் காட்டுவது காண்க.

**நீங்க நின்றார்** - நீள் இருள் நீங்குதலை எதிர்பார்த்து நின்றார். உண்ணைவந்தான் என்புழிப்போலக் கொள்க. "புலரும் படியன் றிரவும்" (222) என்றபடி, இந்நீண்ட விரவு நீங்குவதனையும், பொழுது விடிவதனையும், இறைவனைப் பின்னரும் ஊட்டுவதனையும் எதிர்பார்த்து நின்றனர். இனி, **நீள் இருள் நீங்க** - அநாதியே பந்தித்து உயிருடன் தொடர்ந்த நீண்ட இருளாகிய ஆணவமலம் நீங்கியதனாலே - முன்னர் அங்ஙனாது அருட்டிரு நோக்க மெய்தத் தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கியதனாலே; **நின்றார்** - சிவத்தோடொன்றாய் நிலை பெற்றனர்; என்ற குறிப்பும் காண்க. ஆணவமலம் நீங்காதவழிக் கறைக்கோலைபோல ஆன்மா ஒருவழியில் நில்லாது சுழற்சியுறும். "மலங்களைந் தாற்சுழல் வன்றயி ரிற்பொரு மத்துறவே", "வன்மத்திட வுடைத்து, தாழியைப் பாவு தயிர்போற் றளர்ந்தேன்" என்ற திருவாசகங்கள் காண்க. ஆதலின் ஆணவமலம் நீங்கியதனால் நின்றார் என்பது.

**நீங்க நின்றார்** - மேற் பாட்டில் அகலா நின்றார் என்றார்; எவ்வகை நின்றாரெனின்? நேர் பெற நோக்கி நின்றார்; எவ்வளவும் நின்றார் எனின்? நீளிருள் நீங்கு

மளவும் நின்றூர் என இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து பொருள் பொருந்த உரைத்துக் கொள்ள நின்றன.

**நோக்கி நின்றூர்.....நீள் இருள் நீங்கநின்றூர்** - இருள்நீங்க - உயிர்கள் இருளோங்க என்று கொண்டு, அவர் நோக்கி நின்றதனால் உலகத்தில் உயிர்கள் அன்பின்மிலைகண்டு ஆணவஇருள் நீங்கி உய்யுமாறு நின்றூர் என்றதொரு குறிப்பும்காண்க. **நீங்கநின்றூர்** - நின்றூராகிய திண்ணனூர் என வினையாலணையும் பெயராக்கிப் பெரிய மலவிருள் அகத்தினின்று நீங்கும்படி நின்றவராகிய திண்ணனூர் நேர்பெற நோக்கி நின்றூர் என்று பொருள்கொண்டு கூட்டி உரைப்பாருமுண்டு. 128

778. கழைசொரி தரளக் குன்றிற் கதிர்நில வொருபாற் பொங்க,
முழையர வமிழ்ந்த செய்ய மணிவெயி லொருபான் மொய்ப்பத்
தழைகதிர்ப் பரிதி யோடுஞ் சந்திரன் றலையு வாவிற்
குழையணி காதர் வெற்பைக் கும்பிடச் சென்று லொக்கும். கஉசு

**(இ - ள்)** வெளிப்படை. மூங்கில்கள் சொரியும் முத்துக்குவைகளின் கதிராகிய நிலவு ஒருபக்கம் பொங்குதலாலும், குகைகளிற் பாம்புகள் உமிழ்ந்த சிவந்தமணிகளின் செஞ்சுடர் ஒருபக்கம் மொய்த்தலாலும், அத்தோற்றமானது சந்திரன் தழைத்த கதிர் களையுடைய ஞாயிற்றினுடனே கூடிக் குழையணிந்த செவியினையுடைய சிவபெருமானது இத்தத் திருமலையைத் தலையுவாவிற் சேவிக்க வந்தாற் போன்றிருந்தது.

**(வி - ரை) தரளக்குன்று** - முத்துக்குவை. குன்றுபோற் குவிந்தன என்பார் **குன்று** என்றூர். **கழை** - மூங்கில். மூங்கில் குறிஞ்சிக் கருப்பொருள்; மூங்கிலிலிருந்து முத்துக்கள் வீளைத்துபடும். வேரல் வீளையுங் குளிர்முத்தும் (492) என்ற விடத்துரைத்தவை பார்க்க. அங்குக் **குளிர்முத்து** என்றதற்கேற்ப ஈண்டுக் **கதிர்நிலவு** என்று சந்திரனுக்குவமித்தார். முத்துக்களினின்று வரும் கதிர்கள் வெள்ளியன வாயும் தண்ணியனவாயும் இருக்கும் என்பது கருத்து.

**முழை** - மலைப்பொந்துகள்-குகைகள். இவற்றைப் பெருவிலங்குகள், மலைப்பெரும் பாம்புகள் முதலியவை தமது இருக்கைகளாகக் கொண்டு வாழும்.

**அரவு உமிழ்ந்த செய்யமணி** - அரவுகளில் உயர்ந்தவை தம் தலையில் மாணிக்க மணிகளைக் கொண்டுள்ளன வென்பதும், அந்த மணிகள் தாமே செவ்விய மிக்க ஒளி வீசுவன என்பதும், அரவுகள் இந்த மணிகளை இராக்காலங்களில் வெளியில் உமிழ்ந்து அவ்வொளியின் உதவிகொண்டு உலாவி இரைதேடி வந்து பின்னர் அவற்றை மீள உட்கொண்டுவிடும் என்பதும் பழமரபாய் வழங்கிவரும் உண்மைகள். "ஊருமர வம் மொளிகொண் மாமணி யுமிழ்ந்தவை யுலாவி வரலாற், காரிருள் கடிந்தன கம்மென வீளங்குகா ளத்தி மலையே" - (சாதாரி - 7) என்ற ஆளுடையபிள்ளையாரது இத்தலத் தேவாரத்தில் இக்கருத்து விளங்கிநிற்றல் காண்க.

**மணிவெயில்** - சிவந்த அரதனமணிகள் வெளிவீசும் செஞ்சுடர். **வெயில்** - சூரியவொளிபோன்ற செங்கதிர் குறித்தது.

**பொங்க - மொய்ப்ப** - பல மணிகளினின்று பலபுறமும் மிக்குவீசும் மிகுதியும் தொகுதியும் குறித்தன. பொங்குதலால் - மொய்த்தலால் எனக் காரணப்பொருளில் வந்த வினையெச்சங்கள் ஒக்கும் என்ற வினைமுற்றுக்கொண்டு முடிந்தன.

**தழைகதிர்ப் பரிதி**-(மதியின் கதிர்போலன்றித்) தழைத்து வீசும் வெங்கதிருடைய ஞாயிறு. தழைத்தலாவது காலைப்போதிலிருந்து காட்சூறு மேலேறக் கதிரின் ஒளியும் வெப்பமும் கூர்ந்து மிகுதல். "காலையே போன்றிலங்கு மேனி; கடும்பகலின், வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு; - மாலையின், முங்குருவே போலுஞ் சடைக் கற்றை" என்று அற்புதத்திருவந்தாதியில் அம்மையார் ஞாயிற்றின் கதிர் தழைத்துக்

காட்டும் வகையை அழகுபெற எல்லாம் இறைவனது திருமேனியாக உவமித்துக் காட்டுதல்காண்க.

**பரிதி** - சூரியன் - ஞாயிறு. பரிதி, சந்திரன் என்ற உவமப்பொருள்களின் பொதுத் தன்மையை நினைவுறுத்தற்கு **நீலவு** - **வெயில்** - என்று கூறினர். சந்திரன் பரிதியோடு சென்றால் ஒக்கும்என மாற்றி உவமத்தை நிரனிறையாக்கிக் கொள்க.

**தலையுவா** - அமாவாசி. சந்திரனும் சூரியனும் உலக அண்டங்களின் சுழற்சியில் வான வீதியில் நேரிடத்துக்காண நிற்கும் நாளும், எதிர் எதிர் காண நிற்கும் நாளும் என இரண்டும் **உவா** எனப்படும். இவற்றை அமாவாசி, பௌர்ணமி என வழங்குவர். மதியின் கலைகள் சேரத்தலைப்படும் காலமாதலின் அமாவாசியினைத் **தலையுவா** - என்ற பெயரால் வழங்குவர் என்ப.

**குழை அணி காதர்** - குடுமித்தேவர். சிவபெருமானது திருச்செவிகளிரண்டில். வலது செவியிற் குழையும் இடது செவியிற் ரோடும் உள்ளன என்பர். **குழை** மகர மீன் வடிவினதாய் அமைந்த காதணி.

**வேற்பைக் கும்பிட** - வெற்பின் இறைவரைக் கும்பிடலன்றி வெற்பினையே கும்பிட என்றதும் குறிப்பு. இறைவன் எழுந்தருளிய இடமாதலானும், இது கயிலையே யாதலானும் இதனை வலம் வந்து கும்பிடுதல் மரபு. " தாழ்ந்தெழுந்து திருமலையைத் தொழுது கொண்டே " என்றதும் (திருஞான - புரா - 1022) காண்க.

**கும்பிடச் சென்றல்** - கும்பிடச் செல்வதாயின் அவ்விரு சுடர்களது விளக்கங்களின் தோற்றத்தை ஒக்கும். தன்மைநவிற்சியை உள்ளுறுத்த தற்குறிப்பேற்றம்.

**போங்க - மோய்ப்ப** - அத்தோற்றம் ஒக்கும் என எழுவாய் தொக்கு நின்றது.

திண்ணனார் நீள் இருள் நீங்க நின்றாராதலின், அவ்விரவின் இருள் நீங்கும்வகையினைக் கூறுவார், முதலில் இரவின் முன் பாகத்தில் இருள்கூடிக் கலக்கபகுதியைத் தலையுவாப்போல் என இப்பாட்டாற் கூறினர். அது கடந்து செல்ல இருள் முற்றிய நடு இரவுப் பகுதியை நீலமணிச் சோதியால் இரவிருள் ஒதுங்கினாற் போல் என வரும்பாட்டாற் கூறுகின்றார். அதன்மேல், விடியும் இரவின் பிற்பகுதியைப் பல வொளிகளால் "இரவொன்றில்லை" எனக் கூறுவார். இவ்வாறு திண்ணனார் குடுமித் தேவரைக் காவல் செய்யும் இரவு முழுதும் உறங்காமற் கழித்ததனை அறிவுறுத்தும் சிறப்புக்காண்க. இரவு முழுதும் திண்ணனார் தேவரை ஆசா அன்பினிற் கண்டு கொண்டே நேர்பெற நோக்கி நின்றனராதலின், அம்மலையின் அவ்விரவு முழுதினும் அதற்குத்துணையாகத், தரளமும் மணிகளும் நீலமணிகளும் இமைத்தன ; நீபமரங்களும் மணிவிளக்கொளிகளும் விளக்கஞ் செய்தன ; ஐந்தடக்கிய பெரியோர் தியானவொளியுடன் சோதி விரித்தனர் ; என அம்மலைமுழுமையும் இருள் நீங்கியதாய் உணர் வொளிமயமாகக் காட்டியதும் ஆசிரியரது தெய்வமணக்கும் செய்யுள் நயமாம்.

**வேற்புக்கும்பிட**—என்பதும் பாடம். 129

779. விரவுபன் மணிகள் கான்ற விரிகதிர்ப் படலை பொங்க
மரகத மொளிகொ ணீல மணிகளு மிமைக்குஞ் சோதி
பொரவிரு சுடருக் கஞ்சிப் போயின புடைக டோறு
மிரவிரு ளொதுங்கி ஞாலை போன்றுள தெங்கு மெங்கும். கஉ0

(இ - ள்) வெளிப்படை. (மேலும்) அங்குப்பொருந்திய பலவகைமணிகளும் வெளிவிட்ட விரிந்த கதிர்ப்பரப்புப் பொங்குதலால், மரகதமணிகளும், ஒளி பொருந்திய நீலமணிகளும் இமைக்கும் சோதியானது, இருசுடர்களாகிய சூரிய சந்திரர்கள் பொர, அதற்குப் பயந்து ஒளிந்து போயின பக்கங்களிலெல்லாம் இரவும் இருளும் ஒதுங்கினதுவே போன்ற தோற்றம் எங்கெங்கும் உள்ளது.

(வி - ரை) **பன்மணிகள்** - முத்தும் அரதனமும் மரகதமும் நீலமும் ஒழிந்த ஏனை வைர முதலிய மணிகள்.

**விரிகதிர்ப்படலை**-விரிந்து வீசுகின்ற கிரணங்களின் கூட்டம். கிரணத்தொகுதி. **படலை** - பரப்பு - விரிவு. **பொங்க** - மிக்குவிளங்க. பொங்க இமைக்கும் சோதி எனக் கூட்டுக. "கதிர்மணியின் வளரொளிக ளிருளகல நிலவுகா ளத்தி மலையே" என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரமுங் காண்க.

**மரகதமும் நீலமணிகளும்** - என்க. எண்ணும்மை தொக்கது.

**இமைக்கும்** - கண்ணிமைத்தல்போல விட்டுவிட்டு ஒளிவீசும். ஒளிபடும்போது கதிர்காட்டுதல். "விலகி வில்லுமிழ்" என்றது காண்க.

**போர இருசுடருக்கு அஞ்சி** - இருசுடரும் அடர, அதனுக்கு அஞ்சி. சுடர்பொருத லாவது போர்செய்து துரத்துதல்போல இருளே எதிர்நில்லாது ஓடச்செய்தல்.

**இருசுடர்** - சூரிய சந்திரர்கள்.

**இரவு இருள்** - இரவும் இருளும். இருளும் இருள் பொதுளிய இரவும் என மாற்றி உம்மை விரித்துரைக்க. சூரியனுற் றூரத்தப்பட்ட இருளும், சந்திரனுற் றூரத் தப்பட்ட இரவுக். இருளுமாம்.

மரகதமும் நீலமணிகளும் கரியஒளி காட்டும் மணிகளாம். ஏனைமணிகளினின் றும் வீசப்பட்ட கதிர்த்தொகுதிகள் இவற்றின்மேற் றாக்கவே ஒளிக்கதிர் எதிர்வீசும் போது இக்கரிய மணிகள் தமது ஒளி காணப்பட்டு மறையும் தோற்றம் சூரிய சந்திரர்க ளாற் றூரத்தப்பட்ட இருளும் இரவும் ஒருபுடை ஒதுங்கித் தமது ஒளிகள் விட்டுவிட்டுக் காணுதல் போன்றிருந்தது என்பதாம். மேற்பாட்டிற் பரிதியுடன் சந்திரன் கூடிவந் தாற்போலும் எனக் கூறினாதலின் அதனையே தொடர்ந்து அவ்வாறு போந்த இருசுடர்களும் பொரஇருள் ஒதுங்கினாற்போல என்று இப்பாட்டில் உவமை கூறினர். நீலமணிகள் பக்கங்களில் ஒளி வீசுதலால் இங்ஙனங் கூறினர்.

ஒளியின்முன் இருள் நில்லா தென்பது சாத்திர உண்மை. திண்ணனார் நீளிருள் நீங்க நின்றார் (777); அதற்குத் துணையாய் இருசுடர் போந்தன (778); சுடர்போதவே இருள்ஒதுங்கிற்று (779); அவ்வா றொதுங்கிய இருள்,மேலும் அங்குள்ள வேறு சோதிக ளால் தன் வலி முற்று மடங்க இராக்கால மென்பதில்லையாயிற்று; (780) திண்ணனார் நீளிருள் நீங்க நிற்றலுக்கு இவை துணையாகச் சேவகஞ் செய்தன என்று இம்மூன்று பாட்டுக்களாலும் தொடர்ந்தோருண்மை புலப்பட நிற்றலும் காண்க.

பிறிதெவ்வாற்றாலும் காணுதற்கரியார் தம்மை அன்பினிற் கண்டுகொண்டே நிற் றலால் அகத்தே சிவவொளிப்பிழம்பு தோற்றலால் திணிந்த அகவிருள் இல்லை எனும் படியாயிற்று. அகவிருளில்லை யாயினார்க்குப் புறவிருள் தோற்றாதாதலின் புறவிருளும் இல்லையென்றாயிற்று. அகவிருள் நீங்கச் சிவவொளி துணைசெய்தாற் போலப், புற விருள் இல்லையாக்கச்செய்ய மணிகளும் தீபமரங்களும் பெருஞ்சோதியும்துணைசெய்தன என்பதாம். "காவி யுள்ளமாம் விசும்பிடைக் காசற விளங்கும், பரசி லாச்சுடர்க் குதய மீறின்மையாற் பகலு, மிரவு நேர்படக் கண்டிலர்"(வாதவூரடிகளுக் குபதேசித்த படலம் 39) என்ற திருவிளையாடற் புராணக் கருத்தினையும் இங்கு வைத்துக் காண்க. "சிதா தித்யோ ஹ்ருதாகாசே ப்ரதிபாதி நிரந்தரம், நாஸ்தமேதி நசோதேதி" என்பது அபியுத்தர் வாக்கியம்.

இப்பாட்டிற்கு இவ்வாறன்றி, இருசுடருக்கு அஞ்சிப் புடைகள்தோறும் ஒதுங்கிய இருளே மணிகளின் சுடர்ப்படலையும், இமைக்குஞ் சோதியும் பொருதல் போன்றன என்றும், மேற்பாட்டில் சந்திர சூரியர்களுக்கு முத்துக்களையும் மணிகளையும் ஒப்புக் கூறியமையின் அதற்கேற்ப அச்சுடர்களுக்குப் பகையாகிய இருளைத் தமக்கும் பகை எனக் கருதி இருளே அங்கங்குச் சென்றழித்தன என்றும் உரை கூறுவாருமுண்டு.

அஃதுரையன்மை தெளிக. அவர் இப்பாட்டின் உவமைக்கூற்றின் தேற்றத்தை அறிந்திலர் என்க. 130

780. செந்தழ லொளியிற் றோன்றுந் தீபமா மரங்க ளாலு,
மந்திகண் முழையில் வைத்த மணிவிளக் கொளிக ளாலு,
மைந்துமா றடக்கி யுள்ளா ரரும்பெருஞ் சோதி யாலு,
மெந்தையார் திருக்கா ளத்தி மலையினி லிரவோன் றில்லே. கஙக

(இ - ள்) வெளிப்படை. சிவந்த தீச்சுடரின் ஒளிபோல மிக்க ஒளிவீசும் பெரிய சோதி மரங்களின் விளக்கத்தாலும், மந்திகள் கற்பொந்துகளில் (தமக்கு விளக்காக) வைத்த முத்துமணிகளின் ஒளிகளாலும், மாறுசெய்யும் ஐம்புலன்களையும் அடக்கிய அருமுனிவர்களின் அரியபெரிய சோதியாலும் எந்தையாராகிய சிவபெருமானது திருக்காளத்தி மலையில் இரவு ஒன்றுதல் இல்லையாம்.

(வி - ரை) **மா தீபமரம்** - சோதிவிருட்சம் என்பர். இது பகலில் ஏனை மரங்கள் போல இருந்தும், இரவில் பெரியஒளியாய் நெடுந்தூரத்தினும் காணப்பட்டுப் பக்கங்களெங்கும் விளக்கஞ்செய்யும் இயல்புடையதோர் சிறந்த தெய்வீகமுடைய மரம். அற்புதமுடைய சிறந்த காடு மலைகளில் இதனைக்காணலாம். இதனைக் காயசித்தி மூலிகைகளில் ஒன்றாய்க் கருதுவர். தீபமரம் என்றமையால் இனம்பற்றிச் சோதிப்புல்லும் சோதிவல்லியும் உடன்கொள்ளப்படும். தீபமரத்தைப்பற்றி, "ஓதுறும் பாற்கிணற்றுக் கீழ்த்திசையில் யோசனைமூன் றளவிற் காணும், சோதிமாமுளது" (விம்மிதப்படலம்-7) என்று பேரூர்ப்புராணத்துட் கூறுதல்காண்க.

**செந்தழல் ஒளி** - செந்தீ மூண்டெரியும் பெரியஒளி. **ஒளியிற் றோன்றும்-ஒளி** போன்ற விளக்கத்துடன் இரவிலே தோன்றுகின்ற. **மாங்களாலும்** - மரங்களின் ஒளியாலும்.

**முழையில் மந்திகள் வைத்த** - குரங்குகள் தாம் வாழிடமாகிய குகைகளில் தமக்கு விளக்காகப் பயன்படுமாறு கொண்டுவந்து வைத்த.

**விளக்குமணி ஒளிகளாலும்** எனமாற்றுக. தூக்கணம் முதலிய பறவைகள் தம் கூடுகளில் விளக்கம்செய்ய மின்மினி முதலியவற்றை வைக்கும் இயல்பை இங்கு உன்னுக. மனிதனேயன்றி, ஏனைய உயிர்வகைகளில் அறிவுபடைத்த சில உயிர்கள் இவ்வாறு தம் இருக்கைகளை இன்பவீடாகப் பலவகைகளிலும் ஆக்கிக்கொள்ளுமியல்புடையனவாம். இவ்வியல்புகளைப் பலவகைப் பிராணிகளின் அமைப்புக்களையும் வாழ்க்கைத் திறங்களையும் கூறும் உயிர்வருக்க நூல்களிற் கண்டுகொள்க. குரங்குகள் (வால் - நரம்) வானரம் எனப்பட்டு, மனித வருக்கத்திற்கு அடுத்த கீழ்ப்படியில் அறிவமைந்த பிராணிகள் என ஒருசார் உயிர்வருக்க நூலார் வகுத்துள்ளதும் காண்க.

மந்தி - பெண்குரங் கென்றுகொண்டு பொருள் கூறுவாருமுண்டு. (கடுவன் - ஆண்குரங்கு.) வீட்டிற்கு விளக்கேற்றுதல் பெண்களின் கடமைகளில் முதன்மையாக வைத்துப் பேசப்படும் வழக்கையும், "தையலார் கொண்டாடும் விளக்கீடு" என்ற தேவாரத்தினையும் காட்டிக், "கைம்மக வேந்திக் கடுவனெ டேக் கழைபாய்வான், செம்முக மந்தி கருவரை யேறும் சிராப்பள்ளி", "மந்தி கடுவனெ டேடி மலைப்புறம்" என்ற தேவார ஆட்சிகளும் அன்னார் காட்டுவர். ஏனைச்சீவ வகுப்பின் இல்வாழ்க்கைத் திறத்தை "மனையுறை குருவி வளைவாய்ச் சேவல், சினைமுதிர் பேடைச் செவ்வி நோக்கி, ஈனி லிழைக்க வேண்டி யானு, அன்புபொறை கூர மேன்மேன் முயங்கிக், கண்ணுடைக் கரும்பி னுண்டோடு கவரும், பெருவளந் தழீஇய பீடுசால் கிடக்கை" என்று திருவாரூர் மும்மணிக் கோவை(19)யில் கழறிற்றறிவார் நாயனார் அருளியதானுமறிக.

யூறுசெய் காலஞ் சிந்தித் தருமிகத் தெரியாப் போதின்
மாறடு சிலையுங் கொண்டு வள்ளலைத் தொழுது போந்தார். கஙூ

781. (இ - ள்) வெளிப்படை. முன்னிரவுநீங்கி அதனோடு இருள்நிறைந்த யாமமும் கழிந்து சென்று இரவு சுருங்க, இதனை அறிந்த புட்கள் நிறைந்த தொகுதியாகச் சிலம்புதலின் ஓசையைக் கேட்டுக், கரிய கடல் போல நின்ற கண்துயிலாதிருந்த வீராகிய திண்ணனார் தாம் பெறுதற்கு அரியவராய்ப் பெற்ற தமது பெருமானுக்கு ஊனமுதம் தேடிக்கொண்டு வந்து அணைவதற்கு வேண்டி, கஙூஉ

782. (இ - ள்) வெளிப்படை. ஏறும் குறிய கால்களையுடைய பன்றியோடும், பெரிய கலையும் புனமான்களும் ஏனைய வெவ்வேறு விலங்கினமும் மாகியவற்றை வேட்டை செய்வினைத் தொழிலின் தந்திரத்தினாலே கொன்று கைப்படுத்தற்குரிய காலத்தை நினைத்து, உருவம் மிகத் தெரியாத பொழுதாகிய அதிகாலையில், பகை எவற்றையும் அழிக்கவல்ல தமது வில்லினையுங் கைக்கொண்டு, வள்ளலாராகிய குடுமித் தேவரைத் தொழுது போந்தனர். கஙூங

இவ்விரண்டு பாட்டுக்களுந் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

781. **(வி - ரை) வரும்** - அந்திமாலை (776)யினை அடுத்து வருகின்ற. மாலைக்கும் நடுயாமத்துக்கும் இடையில் உள்ள காலம். பையுண்மாலை (304)யின் பின் இருண்டது நீண்டவான் (305) என்றுரைத்தது காண்க.

**கறைப்பொழுது - கறை** - கருமை. **கறைப்பொழுது** - கருமையையுடைய காலம். **மல்கிய** - இருள் நிறைந்த. மல்குதற்கு எழுவாய் வருவிக்கப்பட்டது. **யாமம்** - இங்கு நடுயாமங் குறித்தது. **சுருங்கிட** - இரவுக்காலஞ் சுருங்க. எழுவாய் வருவிக்க.

**அறிந்த புள்ளின் சூழ்சிலம்பு ஓசை - அறிந்த** - இரவு சுருங்கியதனை அறிந்த. **புள்**-கோழியும் ஏனைப்புட்களும். "கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்", "கூவின பூங்குயில் கூவின கோழி குருகுக ளியம்பின" என்ற திருவாசகங்கள் காண்க. **புள்**-தொகுதியொருமை. **சூழ்**-நிறைந்த. **சிலம்புஓசை** சிலம்புதலின் உளதாம் ஓசை. **சிலம்புதல்**-ஒலித்தல். இரவுக் காலம் சுருங்க வைகறைக் காலம் வரும். இப்புட்கள் வைகறையிற் சிலம்பும் இயல்புடையன. "புலம்பின போதென்று புட்கள் சிலம்ப" என்று தற்குறிப்பேற்றம் படத் திருமூலநாயனார் அருளியது காண்க.

**கருங்கடல் என்ன நின்ற கண்துயிலாத வீரர்** - முன்னர் மைவரை யென்ன (776) உருவம்பற்றிய உவமமாக உரைத்த ஆசிரியர் இங்கு உருவும் வினையும் பயனும் பற்றிய உவமமாகத் திண்ணனாரைக் **கருங்கடல்** என்றார். துயிலாமையாகிய எதிர்மறைத் தொழிலும், அன்பினின்று பெருகும் அருள் மேகம் பொழிதற்கிடமாதலின் பயனும் பற்றி உவமை எழுந்தவாறு கண்டுகொள்க. "பயன்றூக்கார் செய்த உதவி நயன்றூக்கின், நன்மை கடலிற் பெரிது" (செய்ந்நன்றியறிதல்-3) என்றபடி இங்குக் **கடல்** என்ற குறிப்பும் காண்க. கடல் (நிலப்பரப்பிற்) கிடந்தும் துயிலாது; இவர் நின்று துயிலாதவர் என்பது. துயிலாமை பொதுவிலக்கணம். கடல் துயிலாமை அகப்பொருள்களில் விதந்து பேசப்படும். இங்கும் அன்பு மீதூர்தல் என்னும் அகப்பொருட்டன்மை பற்றியே துயிலாமை போந்ததும் காண்க. "ஆர்த்துன் னமிழ்துந் திருவு மதியு மிழந்தவரீ, போர்த்து மிரைப்பொழி யாய்பழி நோக்காய் பெருங்கடலே" (173), "ஒங்கணை மேவிப் புரண்டு வீழுந்தெழுந் தோலமிட்டுத், தீங்கணைந் தோரல்லுந் தேரும் கலங்கிச் செறி கடலே, யாங்கணைந் தார்நின்னை யும்முள ரோசென் றகன்றவரே" (179) என்ற திருக்கோவையார்த் திருவாக்குக்களும் காண்க. "கயிலை மாமலை மேவிய கடலே" (செத்-10) என்ற திருவாசகத்தில் இறைவனை மலைமேலிருந்த கடல் என்றதும் நினைவு கூர்க. **கண்துயிலாத** - கண்டு கொண்டே நேர்பெற நோக்கி நீள்இருள் நீங்க நின்றார் (777) என்றதனாற் கண்துயிலாமை பெறப்பட்டமையின் இது இயல்புணர்த்தல் என்றமட்டில்

அமைத்தது. நின்றபடியும் கடந்துகொண்டும் துயில்வார் உளராதலின் இவர் கண் துயிலாதே நின்றவர் என்ற குறிப்புமாம். **வீரர்** - இவரது பிற வீரங்கள் நிற்க, ஆன்மாவைப் பீடித்துநிற்கும் தாமதகுணச் செயலாகிய துயிலை வெல்வதும், பிறராற் காண்டற்கரியராகிய இறைவரைக் கண்டுகொண்டே நிற்பதும், " வஞ்சமனத் தஞ்சொடுக்கி வைகலுநற் பூசனையா, னஞ்சமுது செய்தருளும் நம்பியென வேகினையும் " முன்னைப் பிறவியின் செயலினும் மிக்குத் தம்மையுமறந்து இறைவனையே நினையும் வீரமும் குறிக்க இங்கு வீரர் என்றார். " ஈர வன்பினர் யாதுங் குறைவிலார் வீரம் " (144) என்றது காண்க.

**அநம்பெறலர்** - பெறுதற்கரிதாகப் பெற்றவர். " அடியனேற் கிவர்தா மிங்கே யகப்பட்டா ரச்சோ " (755) என்றதுகாண்க. "அருமையி லெளிய வழகே போற்றி" **திருவாசகம்.** "அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக!" **திருமுருகாற்றுப்படை.**

**தம்பிரானார்** - தமக்குப் பெருமான். எம்பிரான் நிறத்து (819) என்பது காண்க. தமக்குரிமைபாராட்டிய பொருளும்படக் கூறினர்.

**கொண்டு** - சித்தஞ் செய்துகொண்டு. உரிய வகையில் தேடிப் பக்குவப்படுத்தி அமைத்துக்கொண்டு.

**அணையவேண்டி** - மீண்டு இவர்பால் அணைதலே வேண்டினராய். வேண்டிப் போந்தார் என வரும்பாட்டுடன் கூட்டிமுடிக்க. வேண்டித் - தொழுது என்றுகூட்டி உரை கொள்வாருமுளர். அது பொருந்தாதென்க.

**வைகிய யாமம்**—என்பதும் பாடம். 132

782. (வி - ரை) **ஏறுகாற் பன்றி** . வயிறு பெரிதாய்க் கீழே தாழ்ந்து தொங்க, அதற்குள் ஏறியதாய்க்காட்டும் குறிய கால்களையுடைய பன்றி. உடலுக்குத் தக்க காலில்லாமையின் ஏறுகால் என்றார் என்பர் ஆறுமுகத்தம்பிரானார். செங்குத்தான மலைகளிலும் ஏறும் காலினையுடைய என்பாருமுண்டு.

**பன்றியோடும்** - பன்றியை முன்வைத்து ஓடி உருபுதந்து ஏனை விலங்குகளையெல்லாம் ஒருசேரப் பின்வைத்தது இச்சரிதத் தொடர்பிற் பன்றிக்குலச் சிறப்பு நோக்கி. அடலேனம் புலிகரடி (693), ஏனமோடு மானினங்கள் (727),பன்றியும் புலியுமெண்ணும் (652) என முன்னர் உரைத்தவற்றையும் உன்னுக. இவ்வேடர் முதலியோர் ஏனை இறைச்சிகளினும் பன்றியிறைச்சியை மிக விரும்பியுண்ணும் இயல்புங் குறித்தது.

**இருங்கலை** - பெரியனவாய்க் கிளைத்து நீண்ட கொம்புகளையுடைய கலைமான். கலைமான் (728) என்றவிடத் துரைத்தவைகாண்க.

**புனமான்** - மலைகளிலும் மலைச்சார்புடைய தாழிடங்களிலும் தினைப்புன முதலியவற்றை மேய்ந்து வாழும் மான் சாதி.

**மற்றும் வேறுவேறு இனங்கள்** - மானின் வேறு பல வகைகளும், மானல்லாத வேறு விலங்கினங்களும். வெவ்வேறென்றது **வேறுவேறு இனங்கள்** என்ற கருத்து மிது. மானின் பலவகைகளைப்பற்றி 728-ல் பார்க்க. **இனங்கள்** இரண்டனுருபு தொக்கது. **இனங்களை ஊறுசெய்காலம்** என்று முடிக்க.

**வேட்டைவினைத்தொழில் விரத** - வேட்டைத்தந்திரம். **வேட்டைவினை**-வேட்டையாகிய செயல். **தொழில் விரத** - தொழிற்குரிய தந்திரம். உபாயம் - சாமர்த்தியம் என்பர். **வினைத்தொழில்** என்று கூட்டி இருபெயரொட்டாக உரைப்பினுமாம். கைம்மைவினை (461) என்றதுங்காண்க.

**ஊறுசெய்காலம்** - ஊறுபடுத்திக் கொல்வதற்கு ஏற்ற நேரம். வைகிருளின் புலர்காலை (705) என்ற விடத்துரைத்தவைகாண்க. **ஊறுசெய்தல்** - இங்குக் கொல்லுதல் குறித்தது. **சிந்தித்து** - தக்கநேரம் இதுவேயாமென்று நினைத்துத் துணிந்து.

உருமிகத் தெரியாப் போது-விலங்கினத்தின் உருவம் தமக்கும், தம் உருவம் அவற்றுக்கும் விளக்கமாய்த் தெரியாத விடியற்காலம். கழிகின்ற இரவின் இருளும், வருகின்ற பகலின் ஒளியும் விரவியுள்ள காலம்.

மிகத்தெரியா - உருத்தெரியாத இரவாயின் விலங்கினத்தைக் கண்டு வேட்டையாட இயலாது. உருத்தெரியும் காலைப்போதாயின் அவை தம்மைக் கண்டு ஓடி மறைந்துவிடும். ஆதலின் சிறிது தெரிந்தும் முற்றும் தெரியாமலும் உள்ள நேரமே வேட்டையாடுதற்குரிய தென்பது வேடர் கையாண்ட முறை என்று குறிப்பார் உருத் தெரியா என்னுது உருமிகத்தெரியா என்றார்.

மாறு - பகை. அடுதல் - அழித்தல். மாறடுசிலை - பகையாயெதிர்ப்பது எதுவாயினும் அழிக்கவல்ல வில். பாரப்பெருவில் (711) என்றதும் பிறவுங் காண்க.

வள்ளல் - குடுமித்தேவர். தொழதுபோந்தார் - பிரிதலின் வணங்கிப் போயினர். பிரியும்பொழுது வணங்குதல் மரபு. முன்னரும் "மலர்க்கையாற் றொழுது போந்தார்" (762) என்றது காண்க. இதற்கு விலங்கினம் அப்புறம் போகவொட்டாமற் கொல்லுதல் வேண்டித் தொழுதனர் என்றுரை கூறுவாருமுண்டு. அஃதுரையன்றென விடுக்க. சுருங்கிட - வீரர் - ஓசைகேட்டு - அணையவேண்டி - சிந்தித்து - போதில் - கொண்டு - தொழுது போந்தார் என்று முடிக்க. 133

வேறு

783. மோய்காட்டு மிருள்வாங்கி முகங்காட்டுந் தெரிரவி
மெய்காட்டு மன்புடைய வில்லியார் தனிவேட்டை
யெய்காட்டின் மாவலைக்க விட்டகருந் திரையெடுத்துக்
கைகாட்டு வான்போலக் கதிர்காட்டி யெழும்போதில், கஉச

784. எய்தியசீ ராகமத்தி லியம்பியபூ சனைக்கேற்பக்
கொய்தமல ரும்புனலு முதலான கொண்டணைந்தார்
மைதழையுங் கண்டத்து மலைமருந்தை வழிபாடு
செய்துவருந் தவமுடைய முனிவர்சிவ கோசரியார். கஉரு

783. (இ - ள்) வெளிப்படை. செறிந்த இருளை நீக்கி முகத்தைக் காட்டுகின்ற தெரில்வருகின்ற சூரியன், உண்மைத் தன்மையினையே காட்டுகின்ற அன்புருவமாகிய வில் ஏந்திய திண்ணனார் ஒப்பற்ற வேட்டையிலே எய்கின்ற காட்டு விலங்குகளைக் கொல்வதற்கு வலைக்க, அவைகளை மறைத்து முன்னே இட்ட கருந்திரையை நீக்கி அவற்றைக் கண்டு கொள்க என்று கைகாட்டுவான் போலக் கதிர்களைக் காட்டி மேலெழும்பும் போதிலே, கஉச

784. (இ - ள்) வெளிப்படை. சிறப்புப் பொருந்திய சிவாகமங்களிற் சொல்லப்பட்ட சிவபூசை விதிகளுக்கேற்றபடி கொய்துகொண்ட மலர்களும், எடுத்துக்கொண்ட தூம்புனலும் முதலான பூசைப் பொருள்களைக் கொண்டு, விடம் விளங்கும் கண்டத்தினையுடைய அந்த மலையின் எழும் மருந்தாகிய காளத்திநாதரை நியதியாய் வழிபாடுசெய்து வருதலாகிய தவமுடைய சிவகோசரியார் என்ற முனிவர் வந்து அணைந்தனர். கஉரு

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

783. (வி - ரை) மோய்காட்டும் - மொய்த்து விளங்கும் செறிவினை எடுத்துக் காட்டுகின்ற. வாங்கி - பிரித்து நீக்கி.

முகம்காட்டும் - முகமண்டலத்தைக் காட்டும். ஒருவர் முகத்தை மற்றவர்க்குக் காட்டும் என்று கூறுதலுமாம். முகம் ஆகுபெயராற் கண்ணை யுணர்த்திற்று எனக் கொண்டு கண்ணுக்குப் பொருள்களைக் காட்டும் என்றலும் பொருந்தும்.

**தேர்இரவி** - வெவ்வேறுகிய எழு நிறமுள்ள எழுகுதிரைகளைப் பூட்டிய ஒற்றைச் சக்கரமுடையதோர் தேரில் சூரியன் ஊர்ந்து வருவதாகக் கூறுதல் மரபு. 303 பார்க்க.

**மெய் காட்டும் அன்புடைய**-"மெய்மையின் வேறு கொள்ளாச் செவ்விய அன்பு" (776) என்றதும் ஆண்டுரைத்தவையுங் காண்க. **மெய்** - சத்து - இறைவன்; **மெய் காட்டும்** - இறைவனைத் தமக்குள் அமையக் காட்டும் என்றுரைத்தலுமாம். "உள்ளத் திற் றெளிகின்ற மெய்ம்மை யன்பி னுருவினையு மவ்வன்பி னுள்ளே மன்னும், வெள்ளச் செஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண் விமலரையு முடன்கண்ட" (திருஞான-புரா-1023) என்றது காண்க.

**வில்லியார்** - வில்லையுடைய திண்ணனார். **தனி** - ஒப்பற்ற. தனித்துச் சென்ற என்றுரைப்பாருமுண்டு. **எய்** - முள்ளம் பன்றிகள் நிறைந்த என்றுரைப்பாருமுளர்.

**மாவலைக்க இட்ட கருந்திரை** - வேட்டையாடுமுன் விலங்குகள் தப்பி ஓடாமல் வேட்டைக் காட்டை வலைத்துக் காவல் செய்தல் குறித்தது. 724 பார்க்க. உருமிகத் தெரியாப்போதிற் போந்தாராதலின் இரவி எழுந்து, முன் மூடிய கருந்திரையை எடுத் துக் கையினல் விலங்குகளைச் சுட்டிக் காட்டுவான்போலக் கதிர்களை **வீரித்துக்** காட்டி னன் என்க. தற்குறிப்பேற்ற உவமை. **கதிர்** - கரம் எனவும்படும். இச்சிலேடைப் பொருள்படக் **கைகாட்டுவான் போலக் கதிர் காட்டி** என்றார்.

குடுமித் தேவர்க்கு இன்னமும் **ஊன்** ஊட்டவேண்டுமென்ற திண்ணனாது ஆசை கண்டு மலையிற்றுழ்ந்தானதலின் (775), அச்செயலைத் தொடர்ந்து அவர் ஆசைப்பட்ட ஊன் பெறும் வழியைக் காட்டுவானுகி, அவ்வூன் உள்ள விலங்குகளை மறைத்துநின்ற நிரையை எடுத்துக் **கைகாட்டுவான் போல** என்று தொடர்நிலைத்தற்குறிப்பேற்ற உவமையாகக் கூறினது காண்க. **காட்டி னமர்வினைக்க** என்றும் பாடங்கொள்வர்.

எழும்போதில் - கொண்டு-அணைந்தார் என வரும் பாட்டுடன் கூட்டிமுடிக்க. 134

784. (வி - ரை) **எய்திய** - இறைவனிடத்திருந்து வந்த என்றலுமாம். **சீர் எய்திய ஆகமம்** என மாற்றுக. **ஆகமம்** - சிவாகமம். **சீர்** - சிறப்பு. சிவாகமங்களின் சிறப்புச் சத்தினிபாதர்க் குரியதாதல். இவை, பாசத்தையும் உயிர்களையும் இறைவனையும் அறி வித்து,பாசங்களிற் கட்டுப்பட்டுழலும் உயிர்கள் அவற்றினின்று நீங்கி இறைவனை யறிந்து பற்றி, வீடுபெற்று இன்பமடையும் நெறிகளை வகுத்துக் கூறுவனவாம். **ஆ** - இறை வன்; **க** - உயிர்; **ம** - மலம் - (பாசம்) எனும் இவை முதலிய பொருளைப் பெயரமைப் பினுலே அறிவித்து நிற்றல் காண்க. **மலம்** சடம் எனக்காட்ட உயிரொடு கூடிய வழி யல்லது இயங்காத **ம** என்ற மெய் யெழுத்தாலும், **உயிர்** அவ்வாறன்றி உயிர்க்குயிராகிய இறைவனுல் வியாபிக்கப்பட்டு இயக்கப்படும் தன்மையும் மலத்தாற் பீடிக்கப்படும் தன்மையும் உடையதாய்ச் **சதசத்து** எனப் படுதலால் **க** என்ற உயிர்மெய்யெழுத் தாலும், **இறைவன்** இவ்விருதிறமுமன்றி மேம்பட்ட முதல்வனுய், அவற்றை இயக்குப வனுய் உள்ளவனுதலின் **ஆ** என்ற உயிர் எழுத்தாலும், குறிக்கப்பட்டது என்பர். எனவே மூப்பொருள்களையும் உணர்த்தி உயிர்கள் உண்மை கண்டு ஒழுகி உய்யும்படி செய்யும் நூல்கள் என்றதாம். "**ஆ** - சிவஞானம், **க** முத்தி, **ம** - மலநாசம் என்னும் பொருண்மேனிற்றலால் உயிர்களுக்கு மலநாசம் செய்து சிவஞானத்தை யுதிப்பித்து முத்தி சாதனமாகும் நூலெனவும்; **ஆ** என்பது பாசம், **க** என்பது பசு, **ம** என்பது பதி எனப் பொருள்படு" தலால் திரிபதார்த்தத்தை உணர்த்தும் நூல் எனவும் கொள்ளப்படும்.

**சிவாகமங்கள்** இருபத்தெட்டென்பர். "அஞ்சன மேனி யரிவையொர் பாகத்த, னஞ்சொ டிருபத்து மூன்றுள வாகம, மஞ்சலி கூப்பி யறுபத் தறுவரு, மஞ்சா முகத்தி லரும்பொருள் கேட்டதே" என்பது திருமூலர் திருமந்திரம் (ஆகமச் சிறப்பு - முதற் றந்திரம்-57). அவையாவன காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம்,

அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற் ஷீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சருவோத்தமம், பாரமேச்சுரம், கிரணம், வாது ளம் என்பன. இவற்றின் வழிநூல் காரசிங்கம் முதல் விசுவான்மகம் ஈறுகிய இரு நூற்றேழென்ப. இவற்றை உபாகமங்கள் என்பர். இவை சிவபெருமானுலே தமது மகாசதாசிவமூர்த்தத்தின் உச்சி முகத்தினிடமுள்ள ஐம்முகங்களாலும் அருளிச் செய் யப்பட்டன என்பர். "மன்னு மாமலே மகேந்திர மதனிற், சொன்ன வாகமந் தோற்று வித் தருளியும்.....மாவேட் டாகிய வாகமம் வாங்கியும், மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந், தூற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியும்." (கீர்த்தித் திருவகவல்-10—20) என்ற திருவாசகங்களும், திருமூலர் திருமந்திர முதலியனவுங் காண்க. ஆகமங்கள் ஞானம், யோகம், கிரியை, சரியை என்ற நான்கு பாதங்களே யுடையன. வேத சிவாகமங்க ளிரண்டும் பதிவாக்கியங்களாதலின் மேற்பிரமாணம் வேண்டப்படாது தமக்குத்தாமே பிரமாணமாம். சிவாகமங்களே "வேதார்த்தத் தெளிவாஞ் **சைவ சித்தாந் தம்**" என்பர். உயிர்களுக்கு இறைவனைக் காட்டிக் கூட்டிமுடிக்கின்ற வரையில் எல்லாப் பொருள்களேயும் சிவாகமங்கள் கூறுதலின் இவை **முடிந்தமுடிபு** அல்லது **சித்தாந்தம்** எனப்படும். இவற்றில் ஞானபாதம், பதி பசு பாசம் என்னு முப்பொருள்களேயும், யோகபாதம் சிவயோகத்தையும், கிரியாபாதம் மந்திரங்களின் உத்தாரம் சந்தியா வந் தனம் பூசை செபம் ஓமம் என்றிவற்றையும், சரியாபாதம் சமயாசாரங்களேயும் அறி விப்பன. சிவன் கோயில்களெங்கும் நித்திய, நைமித்திக, பவித்திர முதலிய பூசை களும், கோயில் கட்டுதல், பிரதிட்டை செய்தல் முதலியனவும், உயிர்களுக்குரிய கரும நியமங்களும், தீக்கை, ஆன்மார்த்த பூசை முதலியனவும் இவற்றில் விதித்தபடியே நடைபெறத்தக்கன. இவை வேதங்களிலேனும் வேறு நூல்களிலேனும் விதிக்கப் பட்டில.

பூசலார் நாயனுர் நினேப்பிலுல் எடுத்த கோயிலும், அவர் சரிதத்திற் கண்ட காடவ அரசர் எடுத்த கச்சிக்கற்றளியும், அவற்றின் பிரதிட்டைகளும், **ஆகம விதிப்படியே** அமைந்தனவாம். மனுச்சோழர் சிவாலயங்களின் பூசனேக்குத் தங்க **ஆகமநீ**சொன்ன முறைமையால் அங்கங்கும் வேண்டும் நிபந்தம் ஆராய்ந்து அமைத்த செய்தி திருநகரச் சிறப்பிலும் (100), சோழவரசர் புற்றிடங்கொண்டார்க்கு **வேதாகமநூல்** விதிவிளங்க நிபந்தம் பலவும், வீதி விடங்கப் பெருமானுக்குப் பங்குனி யுத்திரத் திருநாட் சிறப்புக் குரியனவும் அரியணேயின் மீது இருந்து அமைத்தார் என்பது நமிநந்தியடிக ணைய னுர் புராணத்திலும் அறிகின்றேம். உமை யம்மையார் "**ஆகம விதியெலாஞ் செய்த**" பார்த்த பூசையில்பினேத் திருக்குறிப்புத் தொண்ட நாயனுர் புராணத்திலும், **ஆகமங்** களின் "நின்ற விதியின் வினேயாட்டா னிறைந்த வரும் பூசனே" யாகச் சண்டீசுர நாயனுர் செய்த ஆன்மார்த்த பூசை யியல்பினே அவர் தம் புராணத்திலும் காண்க. இவ் வாகமங்களே இறைவன் உமையம்மையாருக்கு உபதேசித்தருளினர். அவற்றைக் கேட் டருளிய அம்மையார்க்கு, அவ்வாறு "எண்ணி லாகம மியம்பிய விறைவர் தாம் விரும் பும் உண்மையாவது பூசனே என"வும் உரைத்தருளினர். அதனேயே கொண்டு அம்மை யார் அவ்வாறே தமது நித்தியமாகிய பூசை செய்து உயிர்களுக்குப் போகங்களேயும் முத்தியினேயும் அடையும் வழிகாட்டி வாழும் தந்தருள்கின்றனர் என்பதும் அறியப் படும். இவைபற்றித் திருக்குறிப்புத்தொண்டநாயனுர் புராணத்தினுள் 50 முதல் 71 திருப்பாட்டுக்களிற் கூறியனவும், பிறவும் காண்க. இங்கு இச்சரித்திரத்திலும் சிவ கோசரியார் **ஆகம விதிப்படியே** பூசையும், பவித்திர முதலியன செய்து வழிபடுத லும், அவர் வழிபட்டவாறு கேட்டு அக்கெறியே திண்ணனுரும் ஒழுகித் திருமஞ்சன முதலிய வழிபாடுசெய்தலும், இவர்கட்கு இறைவன் அருள் செய்தலும் காண்க.

**இயம்பிய** - மண்ணினிற் பிறந்தார் பெறும் பயனிவையேயாம் என்று எடுத்துச் சொல்லிய. "எண்ணிலாகம மியம்பிய" என்றதுங்காண்க.

**பூசனைக்கு** - பூசனைக்காக. **ஏற்பக்கோய்த மலரும்** - ஏற்பக்கொய்தலாவது விதித்த படி கொய்தலாம். இவைபற்றி எறிபத்த நாயனார் புராணத்திலும், பின் முருகநாயனார் புராணத்திலும் காண்க.

**ஏற்ப** - ஏற்பக்கொண்ட புன்னும் முதலான என்றும் கூட்டி உரைத்துக்கொள்க. **முதலான்** - அழுது முதலாயினவற்றை. இரண்டாம் வேற்றுமைத் தொகை. **கொண்டு.** ஏற்ப அமைத்துக்கொண்டு.

**அணைந்தார் சிவகோசரியார்** - எனப் பயணிலையை முன் வைத்தார் அவரது சீவிர பத்தியும் அன்பும் அவர்முன் அணைந்தன என்று குறிக்க. "அன்பு முன்பு நனிர்வரை யேற" (752) என்றது நினைவுகூர்க.

**மைதழையும் கண்டம்** - நீருநீலகண்டம். மை - விடம். தழைதல் - நின்று விளங் கிப்பயன்றருதல். இதன் பொருள் முன்னர்த் திருநீலகண்டநாயனார் புராணத்துரைக் கப்பட்டது. **தழையும்** - தழைப்பிக்கும் - தழைக்கச்செய்யும் எனப் பிறவினையாகக் கொண்டு, அழித்தலைச் செய்யும் விடம் இங்கு நின்று உயிர்கள் அழியாது அருள் பெற் றுய்ந்து தழைக்கச் செய்தற்கிடமாகிய கண்டம் என்றலுமாம். மை - கருமை. அதனை யுடைய விடத்துக்காயினமையின் பண்பாகு பெயர்.

**மலைமநந்து** - மலையில் எழுந்த மருந்தாகிய காளத்தியப்பர். மலையின் மருந்து கள் சிறப்புடையன என்பது மருத்துவ நூல். **மநந்து** - எல்லா நோய்க்குங் தொடிய தாகிய பிறவிப்பிணி தீர்க்கும் மருந்து. மருந்து போல்வாரை மருந்தென்றார். அவரே மருந்துமாகிப் பிணி தீர்ப்பார் என்றலுமாம். " மருந்து மாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான் " (திருப்புள்ளிருக்குவேளூர் - திருத்தாண்டகம்) என்ற தேவாரமுங்காண்க. மரணத்தைச் செய்யும் மையானது தழையினும் அந்த மரணத்தைப் போக்கும் மருந்து அவரேயாவர் என்ற குறிப்புப்பெற இங்கு மநந்து என்றார். "ஆயிர மாவ மார்த்த வமுதனே" (தனி நேரிசை) என்றது காண்க. "பிறவிப் (பெரும்) பிணிக்கோர் மருந்தே" (திருவாசகம்-புணர்ச்சிப்பத்து - 9), (மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்).

**வழிபாடு செய்துவரும் தவம்** - சிவ வழிபாடு செய்துவருதற் கேதுவாகிய தவம். **வழிபாடு** - சிவபூசை. சிவபூசையே தவமெனப்படும். அது செய்து வருவதற்கும் முன் னைத் தவம் வேண்டும். " தவமும் தவமுடையார்க் காகும் " என்றது காண்க. சண்டீசர் ஆருடைய பிள்ளையார் புராணங்களும் கருதுக.

**சிவகோசரியார்** - சிவத்தையே எப்போதும் கோசரித்துக் கொண்டிருப்பவர் என் பதுபொருள். இஃது இவர்க்குக் காரண இடுகுறிப் பெயராயமைந்தது. சிவபாத விருத யர் என்றது போலக்காண்க. " எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக் கொண்டே கின்றார் " என்ற திருவுந்தியார்க் கருத்தும் காண்க. **கோசரித்தல்** - அறிவுக்கு விடய மாக்கிக் கொள்ளுதல் - தியானித்தல். சித்தை நியமம் (785), தணிந்த மனம் (789), பூனதவம் (808) என்பன இவரது நிலையினை யுணர்த்துவன காண்க. வாக்குமனாதீத கோசரமாய் நின்ற வதுவே சத்தாயுள்ள சிவமாதலின் இங்ஙனம் சிவத்தியானத்தையே அறிவுக்கு கறிவாக்கி வைத்தியானத்தால் அறிந்தது பிறபயன். "அதுவென றறிய வீரண்டல்ல னுங்கிறிவு ணிற்ற, லறியுமறி வேசிவமு மாம்" (சிவஞான போதம் -6-ம் சூத்), "என்னுளே மன்னி கின்ற சீர்மைய தாயி னுனை என்னுளே நினைய மாட்டேன்" (குறைந்த திருநேரிசை 4) என்றவையுங்காண்க.

**முனிவராகிய சிவகோசரியார்** - என்க. **அணைந்தார்** என்ற மொழியின் தகுதியும் சிறப்பும் முன்னர் உரைக்கப்பட்டன. அணைந்தோர்தன்மை குறிப்பதும் காண்க. " பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்க " (திருத்தோணி - 3) என்ற திருவாசகமும் சிந்திக்க.

785. வந்துதிரு மலையின்கண் வானவர்கோ யகர்மருங்கு
சிந்தைநிய மத்தோடுஞ் செல்கின்றார் திருமுன்பு
வெந்தவிறைச் சியுமெலும்புங் கண்டகல மிதித்தோடி
"யிந்தவநு சிதங்கெட்டே ! னியார்செய்தா ?" சென்றழிவார், கஙூ

786. "மேவநேர் வாவஞ்சா வேடுவரே யிதுசெய்தார் ;
தேவதேவீசனே ! திருமுன்பே யிதுசெய்து
போவதே ! யிவ்வண்ணம் புகுதநீர் திருவுள்ள
மாவதே ?" யெனப்பதறி யழுதுவிழுந் தலமந்தார். கஙூள

785. (இ - ள்) வெளிப்படை. திருமலையில் வந்து தேவர் பெருமானது பக்கத்தில் சிந்தை நியமத்துடனே செல்கின்றவராகிய அம்முனிவர், வெந்த இறைச்சியும் எலும்பும் சன்னிதானத்திற் கிடக்கக் கண்டு, தூரத்தே தாண்டி மிதித்து ஓடிப்போய், "ஓ ! கெட்டேன் ! இந்த அநுசிதத்தை யாவர் செய்தனர் ?" என்று மனமழிவாராகி, கஙூ

786. (இ - ள்) வெளிப்படை. திருமுன்பு நேர்பொருந்த வருதற்கு அஞ்சாத வேடர்களே இது செய்தாராதல் வேண்டும் ; தேவதேவீசனே ! உமது திருமுன்பிலேயும் இவ்வநுசிதத்தை அவர்கள் செய்து போவதா ? இவ்வண்ணம் அநுசிதம் வந்துபுகுவதற்கும் தேவரீர் திருவுள்ளம் செய்வதா ?" என்று பதறி விழுந்து மிக்க துன்பமடைந்தார். கஙூள

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

785. (வி - ரை) **திருமலையின்கண் வந்து** - எனமாற்றுக. **வானவர்தாயகர்** - தேவர்களெல்லோர்க்கும் தலைவர். "யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலா, மாதே வன்னலாற் றேவர்மற் றில்லையே" என்ற திருக்குறுந்தொகையுங் காண்க. **மருங்கு** - பக்கம். "நம்பக்கலன்பு" என்றதுகாண்க.

**சிந்தை நியமம்** - சிந்தையினது நியமம். ஆறும்வேற்றுமைத் தொகை. பண்புத் தற்கிழமை. சிந்தைக்குரியதாய் - சிந்தையிலுற் செய்யப்படுவதாய் - விதிக்கப்பட்ட நியமம். அவை சிவத்தோடொன்றவைத்திருத்தல், சாந்தமுடைமை முதலாயின. **நியமம்** - அடக்கம் - வரம்பு. சிந்தையின் நியமம் கூறவே, ஏனை-வாக்கு - உடல் நியமங்களும் உடன் கொள்ளப்படும்.

**செல்கின்றார்** - (மனம்) அழிவார் - அலமந்தார் என வரும்பாட்டுடன் கூட்டுக.

**வெந்த இறைச்சியும் எலும்பும் கண்டு** - இவைதிண்ணனார் குடுமித்தேவரை வேட்டிப் பாவனையிலுல் அவர் உண்டருளியனவாகக் கொண்டவை.

**அகலமிதித்து ஓடி** - அநுசிதப்பொருள்களாதலின் அவை காலிற்படாதபடி தூரத்து எட்டி அடிவைத்து.

**கெட்டேன்** - இந்த அநுசிதம் யார் செய்தார் என்று பொருள் தொடர்ந்து செல்லாதபடி, கெட்டேன் என்ற அவலச்சொல் குறுக்கிட்டது முனிவரது உள்ளப் பதைப்பின் மிகுதியை உணர்த்திற்று. 136

786. (வி - ரை) **நேர் மேவ வா அஞ்சா** - எனமாற்றுக. மேற்பாட்டிற் கூறியபடி உள்ளமழிந்து மிகப்பதைத்தமையால் சொற்கள் தடுமாறி முன்பின்னுயின. **மேவ நோவா** என்றுபாடங் கொண்டு சன்னிதிமுன் வருதற்கு மனம் நோவாத என்றும், **அஞ்சா** - அஞ்சா இயல்புடைய என்றும் உரைப்பாருமுண்டு. ஓசை ஒழுங்கு செவ்வே செல்லாமையானும் பிறவாற்றானும் இப்பாடத்தின் பொருத்தம் ஆராயத்தக்கது.

கோயில் அமைப்பும் பிரதிட்டை பூசை முதலியனவும் வகுத்த சிவாகமங்களுள் சன்னிதானத்திற் பொருந்த இன்னார்இன்ன அளவு மேல வருதல் கூடுமென்று விதித்த லால் நேர் வரத் தகாத வேடர் சிவாபராதத்துக்கு அஞ்சாது வந்தனர் எனச் சிவ கோசரியார் மனமுடைந்தனர். சிவாகம விதிப்படி பூசித்தாராதலின் அவ்விதியைக் கடந்த செயல் காணச் சகியாதவராயினர் என்க. **அஞ்சுதல்** - பழியச்சம். தம்பால் அச் சமு மருளு மென்று மடைவிலார் (656) என்றபடி கொலை யஞ்சாவேடராதலின் நேர் மேல வருதலாலுளதாகும் சிவாபராதமாகிய பழிக்கு மஞ்சாராவர். ஆதலின் அவரே இது செய்தாராதல் வேண்டும் என்றனுமானித்தனர் சிவகோசரியார். மேற்பாட்டில் "யார் செய்தார்?" என்ற எண்ணம் வந்தது; செய்தாரைக் கண்டிலர்; செயலைக் கண்டனர்; திருமுன் இலை கிடக்கச் செய்தலின் நேர்வர அஞ்சாமையும், கிடக்கும் பொருள் வெந்த இறைச்சியு மெலும்பு மாதலின் கொலையஞ் சாமையும் அச்செயலுக் குள்ளே கண்டார்; இலையுடையார் வேடுவராதலின், இங்கு இது செய்தார் அவ் வேடுவரே என்பதனுமானத்தாற் றுணிந்தனர்.வேடுவரது அடையாளமாகிய செருப்படி யும் காயடியும் இதற்கு இன்னுந் துணை செய்தன என்க. இவ்வாறே "அன்றி னு செய்தா னின்றும் அவன் செய்த தாகும்" (758) என்று காணன் துணிந்ததும் காண்க.

**செய்தார்** - செய்தாராதல் வேண்டும் என்ற துணிபு குறித்தது.

**தேவதே வீசனே** - பெருந் தேவர்க்குந் தேவராய், அத்தேவர்கள் சிவாபராதம் செய்தபோது அவர் தம் பிழைகளுக்குரிய தண்டஞ்செய் தொறுக்கும் தேவரீர் இவ் வேடர்கள் திருமுன்பு செய்த இவ்வபசாரத்துக்குத் தக்க தண்டனை கொடுக்கும் வன்மையும் தன்மையு முடையீர் என்பது குறிப்பு. தேவதேவேசனே எனக் குண சந்தியாய் வருதற்பாலது இவ்வாறு திரிந்து நின்றது மரூஉ. "இடையுரி வடசொலி னியம்பின கொளாதவும்" என்ற விதியாற் கொள்க. **தேவதேவ!** - தேவர்களுக்குந் தேவ!, **ஈசனே** - ஆளுபவனே! எனப் பிரித்துரைத்தலுமாம். [illegible]

**திருமுன்பே** - திருமுன்பேயும். உயர்வு சிறப்பும்மை தொக்கது. **எகாரம்** தேற் றம். **போவதே** - செய்தமீ, அழிவு பெறுது போவதா? **போவதே** - **ஆவதே** - எகாரங்கள் வினை. இது தகாதென்ற அவல முள்ளுறுத்த வினைப்பொருளில் வந்தன.

**இதற்கு நீர் திருவுள்ளம் ஆவதே** - உமது திருவுள்ள மிசைவில்லாவிட்டால் இது முற்றுப் பெற்று நிகழ்ந்திராது. தக்கயாகம் போலச் செய்தோனும் செயலும் நாசமுற் றிருப்பர். அவ்வாறன்றி இது நிகழ்ந்து முற்றுப் பெற்றிருக்கக் காண்டலின் தேவரீர் திருவுள்ளமிருத்தல் வேண்டும். அவ்வாறு இதற்கும் திருவுள்ளம் செய்திருப்பதா? "உன்றனக் கழகா?", "உன்றனக் கினிதே" என்று திருக் கண்ணப்பதேவர் திரு மறத்தில் நக்கீரதேவர் கூறியது காண்க.

**பதறி விழுந்து அலமந்தார்**-சிவாபராதமாகிய அநுசிதம் சன்னிதியில் நிகழக்கண்ட ஆற்றுமை குறித்தன. **அலமநதல்** - மிக்க துன்பத்தால் மனஞ்சுழலுதல். 137

787. "பொருப்பிலெழுஞ் சுடர்க்கொழுந்தின் பூசனையுந் தாழ்க்கநான்
இருப்பதினி யென்?"னென்றவ் விறைச்சியெலும் புடனிலையுஞ்
செருப்படியு நாயடியுந் திருவுலகான் மாற்றியபின்
விருப்பினெடுந் திருமுகலிப் புனன்மூழ்கி விரைந்தணைந்தார். கஉஅ

(இ - ள்) வெளிப்படை. "மலையில் மூளாத்தெழுந்த சுடர்க் கொழுந்தாகிய காளத்தியப்பருடைய பூசனையும் தாழ்க்கும்படி நான் இங்கே இருப்பதென்ன?" என்று எண்ணி, அந்த இறைச்சியையும் எலும்பையு முடன்கிடந்த இலையினையும் செருப்படி காயடிகளின் சுவடுகளையும் திருவுலகினுல் மாற்றிய பின்னர், விருப்பத்தி னெடும் திருமுகலியாற்றில் நீர் மூழ்கி விரைந்து வந்தணைந்தனர் சிவகோசரியார்.

**(வி - ரை) பொநப்பில் எழும் சுடர்க்கொழுந்து** - முன்னர்க் கண்டபோது மேலே எழு கொழுந்து (754) என்றார்; இங்குச் சுடர்க்கொழுந்து என்றார். சிவகோசரியார் ஆகமப்படி பூசித்துத்தியானிக்கும் தவமுடைய முனிவ (784) ராதலின் இறை வரைப் புறப்பூசையும் அகப்பூசையும் செய்வார். புறப்பூசையில் மேலே எழ கொழுந்தாயும், அகப்பூசையில் பேரொளியாயும் வழிபடுவராதலின் இங்குப் பொநப்பிலெழுந் சுடர்க்கொழுந்தென்றார். மேலும் மேலே சுடர்உருவினதாயின் அதன் கொழுந்து நுனியில் எழுந்து விளங்கும் என்ற குறிப்பும் காண்க.

**பூசனையும் தாழ்க்க** - முன்னர் அநுசிதம் புகுந்ததுவுமன்றிப் பூசையும் காலத்தாற்றாழ்க்க என்று எச்ச உம்மை இறந்தது தழுவியது. சிறப்பும்மை என்றலுமாம். **தாழ்க்க** - தாமதிக்குமாறு.

**இருப்பது இனி என்?** - இங்கு இனி இருப்பது எத்தன்மையாயிருக்கின்றது. **என்** - குறிப்பு வினைமுற்று. இவ்வகை அநுசிதம் கோடின் விதித்தபடி விரைவிற் பவித்திரம் செய்து பூசித்தல் வேண்டும்; அவ்வாறு செய்யாமற்றாழ்த்து நிற்பது பிழை என்பது முனிவர் கருத்து.

**இறைச்சி எலும்புடன் இலை** - இறைச்சியும் அதனுள் நின்ற எலும்பும்கொண்ட தேக்கிலைக் கல்லை (773). இலையை மாற்றுதலாவது அகற்றுதல்.

**செருப்படியும் நாயடியும் மாற்றுதல்** - அவ்வடிச்சுவடுகளும் அவற்றிற் போந்த அசுத்த முதலியனவும் இல்லையாகும்படி திருவலகினால் விளக்கித் தூய்மை செய்தல். "ஈங்கொரு வேடுவன் நாயொடும் புகுந்து மிதித்தழக்கி" என்றும், "தொடர்ந்த நாயொடு தோன்றினன்" என்றும் திருக்கண்ணப்ப தேவர் திருமறத்தில் நக்கீரதேவர் உரைத்தவாற்றால், நாயும் திண்ணனாருடன் ஒருடர்ந்து வந்தமை பெறப்படும். நாய் வந்த செய்தியை இங்கு ஆசிரியர் முன்னர்க் கூறவில்லையாயினும் **நாயடியும்** என்றமையால் ஒரு நாய் திண்ணனாரைப் பிரியாது பின் ஒருடர்ந்து வந்தது என்பதுய்த்துணரவைத்தார். இதற்கு இவ்வாறன்றித், திண்ணனார் வேட்டைக்கெழுந்து போனவுடன், அந்த இறைச்சியைத் தின்ன வந்த காட்டிலுள்ள நாய்களின் அடி என்றுரைப்பர் மகாலிங்கையர். திருவலகிடுதலாவது திருக்கோயில் முற்றத்திற் காணும் அநுசிதங்களைப் போக்கி விளக்குதலாம். **திருவலகிடும் திருப்பணி செய்தலின் பயனே** "விளக்கினார் பெற்ற வின்பம் மெழுக்கினாற் பதிற்றி யாகும்" என்று (திருநேரிசை) அப்பர் சுவாமிகள் அருளியது காண்க.

**விருப்பு** - வழிபாடு செய்தலில் வைத்த ஆர்வம்.

**புன்னீழற்கி** - முன்னமே மூழ்கி மலரும் புனலும் முதலாயினவற்றைக் கொண்டு விதிப்படி சித்தை நியமத்தோடு வந்தவராயினும், இறைச்சி எலும்பு முதலிய பிணப் பண்டங்களாகிய அநுசிதங்களைத் தீண்டி மாற்றினாராதலின் அவற்றின் தொடக்கினால் உண்டாயின இழிவைப் போக்கிக்கொள்ள மீண்டும் மூழ்கினார் என்பதாம். **திருமஞ்சனலிப்புனல்** உடலுக்கும் உயிருக்கும் ஒப்பத் தூய்மைசெய்யவல்லது என்பது மேலுரைக்கப்பட்டது.

**விரைந்து** - பூசனையுந் தாழ்க்க நான் இருப்பதென்? என்றகன்றாராதலின் விரைந்து வந்தனர். 138

788. பழுதுபுகுந் ததுதீரப் பவித்திரமாஞ் செயல்புரிந்து
தொழுதுபெறு வனகொண்டு தூயபூ சனைதொடங்கி
வழுவிறிரு மஞ்சனமே முதலாக வரும்பூசை
முழுதுமுறை மையின்முடித்து முதல்வனார் கழல்பணிந்தார். கஙூ

(இ - ள்) வெளிப்படை. பழுது புகுந்ததனா லுண்டாயின தீங்கைத் தீர்த்தற்குரிய பவித்திரமாகிய செயல்களைச் செய்து வணங்கிப், பூசைக்குக் கிடைத்த பொருள்களை அமைத்துக் கொண்டு, நாளுநாளும் வழக்கப்படி செய்யும் தூயபூசையினைத் தொடங்கிக், குற்றமில்லாத திருமஞ்சனமாட்டுதல் முதலாக வருகின்ற பூசையின் செயல்களையெல்லாம் ஆகமங்களின் விதித்த முறைப்படி முடித்து, முதல்வனாரது திருவடிகளை வணங்கினார் சிவகோசரியார்.

(வி - ரை) பழுது புகுந்தது தீரப் பவித்திரமாஞ் செயல் - இறைவன் தூயவுடம்பினன் ; அவனது திருக்கோயில் தூய்மையுடையது ; எனவே, அதனைத்தூய்மை செய்தல் வேண்டுவதெற்றுக்கு ? என்பாரை நோக்கிப், பழுது அங்குப் புகுந்துவிட்ட தாதலின் அதனைத் தீர்க்கப் பவித்திரமாஞ் செயல் புரிந்து என்றார். பவித்திரம்-தூய்மை - பரிசுத்தம். இச்செயல்கள் பவித்திரஞ் செய்வனவாதலின் பவித்திரம் எனப்பட்டன. "பவித்திர மாந்திரு முண்டத் தானை" (தொழற்பாலதே யென்னுந் திருக்குறுந்தொகை). பரம் அபரம் ஆகிய சடங்குகளிலும் தீக்கை முதலியவற்றிலும், தருப்பைப் புல்லால் முடிந்து கைவிரலில் அணியப்படும் புல்லின் கோவை மோதிரம் தூய்மை செய்வது என்ற இப்பொருள் பற்றியே பவித்திரம் என்று வழங்கப்படுவதும் காண்க. இங்ஙனம் நேர்ந்த குற்றங்கட்குத் தீர்வு பவித்திரம். இதனைப் பிராயச்சித்தம் என்று உரைப்பது வழக்கு. இங்குக் கண்டபடி நேர்ந்தவற்றிற்குத் தீர்வாக உள்ள விதிகள் சிவாகமங்களிற் கூறப்பட்டுள்ளன. அவை புண்ணியாகம் - ஸ்நபனம் - சாந்தி ஓமம் - செபம் முதலியனவாம். அவையே இங்குப் பவித்திரம் எனப்பட்டன. இங்ஙனமன்றித் தெரியாது நேர்ந்தவற்றிற் கெல்லாம் தீர்வாகப் பவித்திரோற்சவம் என்ற உற்சவப்பகுதியும் சிவாகம விதிகளுட் காணப்படும். நித்தியகருமத்திற் குறைவு நேர்ந்தவிடத்து அப்போதே செய்யப்படவேண்டுவதாகிய பவித்திரம் நித்தியாங்கமெனப்படும்.

செயல்புரிந்து.....பூசனைதொடங்கி - நித்திய பூசனையிற் பழுதுகள் புகுந்தனவாயின், முன்னே அவற்றிற்குத் தீர்வு செய்யும் சடங்குசெய்து, பின்னர் நித்திய பூசைதொடங்குதல் விதியாதலின், பவித்திரமாஞ் செயல் முன் புரிந்து, பூசனையைப் பின்னர்த் தொடங்கினார். பூசனை - நித்தியபூசை.

தொழுது - பவித்திரமாஞ் செயல் முற்றியபின் மேலும் பழுதும் இடையூறும் புகுதாவண்ணம் தொழுது.

பெறுவன கொண்டு - பெறுவன - அன்றைப்பூசனைக்குக் கிடைப்பனவாகிய புனல் மலர் முதலியன. கொண்டு - தேடி அமைத்துக் கொண்டு. பெறுவனகொண்டு என்றதனாற் பெறாதவற்றை அன்பினால் நிரப்பி என்றதும் கொள்க. "தேடாதன அன்பினி னிரப்பி" (சண்டீசர் புராண. 36). அன்றைப் "பூசனைக் கேற்பக் கொய்த மலரும் புனலும் முதலான கொண்டு" (784) முனிவர் முன்னர் அணைந்தாராயினும் அநுசிதமாயினமையின் அவற்றைக் கழித்தனர் ; வேண்டும் பொருள்களை மீண்டும் தேடுதலிற் காலந்தாழ்க்காது அங்கு அப்போதைக்குக் கிடைத்த மலர் முதலியவற்றைத் தேடிப் பெற்றனர் என்று குறிக்க இவ்வாறு கூறினார்.

வழுவில் திருமஞ்சனமே முதலாக - பரார்த்த பூசையில், மூர்த்திகளுக்கு நித்திய பூசையின் முதலிற் செய்யக்கடவன திருமஞ்சனமும் அதன் முன்பு நின்மாலியங்களைதல் முதலியனவுமேயாதலின் முதலாக என்றார். வழுவில் - மஞ்சனமாட்டும் நீரினாலும், ஆட்டும் திறத்தாலும், அது போழ்து செய்யும் செபம் தியானம் பாவனை முதலியவற்றாலும் வழுவில்லாத. மன மொழி மெய் என்றிவற்றின் ஒருமைப்பாட்டின் வழுவில்லாத என்றலுமாம். திருமஞ்சனம் - இறைவன்றிருமேனியை நீராலும்,விதித்த ஏனைத் திரவியங்களாலும் ஆட்டுதல் அபிடேகம் என்பர். "அன்பர் வார்ந்தகண்

ணருவி மஞ்சன சாலை" (திருச்சாட்டியக்குடி. 2) என்பது கருவூர்த் தேவர் திரு விசைப்பா.

**வநம்பூசை முழுதும்** - திருமஞ்சனத்தின் பின் செய்ய வேண்டுவனவாகிய திரு வொற்றுடை சாத்தல், இலையும் பூவும் சூட்டி அலங்கரித்தல், அருச்சித்தல், அமுதூட் டல், வலம்வருதல், தொழுதல், தியானித்தல் முதலியன. இவைபற்றிய விதிகளைச் சிவாகமங்களுட் கண்டுகொள்க. திருநீலநக்கர் புராணம் 9 - 10 திருப்பாட்டுக்களும், பிற வும் பார்க்க.

**முறைமையின்** - சிவாகமங்களில் வகுத்த முறையிலே - விதித்தபடி.

**கழல்பணிந்தார்** - இது பூசைமுடிவிற் செய்யும் வணக்கம். 139

*789. பணிந்தெழுந்து, "தனிமுதலாம் பர"னென்று பன்முறையாற்
றுணிந்தமறை மொழியாலே துதிசெய்து, சுடர்த்திங்க
ளணிந்தசடை முடிக்கற்றை யங்கணரை விடைகொண்டு,
தணிந்தமனத் திருமுனிவர் தபோவனத்தி னிடைச்சார்ந்தார். கசo

(இ - ள்) வெளிப்படை. பணிந்து எழுந்து, "எல்லார்க்கும் சிவபெருமானே முழுமுதற் கடவுளாவார்" என்று பல முறையாலும் துணிந்து ஓலமிடும் வேத மந்திரங் களினுலே துதித்து, ஒளியையுடைய சந்திரனை யணிந்த சடைக்கற்றை முடியினை யுடைய அங்கணராகிய காளத்தியப்பரிடம் விடைபெற்றுக்கொண்டு, தணிவு பெற்ற மன முடைய சிவகோசரியாராகிய திருமுனிவர் தாம் தவஞ்செய்யும் வனத்திற் சார்ந்தனர்.

(வி - ரை) "**தனிமுதலாம்பரன்**" என்று பன் முறையால் துணிந்த மறை மொழி - விசுவகாரணன், விசுவரூபன், விசுவாதிகன், விசுவசேவியன் என்பன முத லாக வேதங்களாலே பலவகையாலும் துணிந்து துதிக்கப் பெற்ற வேதமந்திரங்கள். **பன்முறையால்** - பல முறைகளாலும். முற்றும்மை தொக்கது. பன்முறையாவன சமய சமயங்களிற் கூறியபடியும் மற்றும் பலபடியும் சிவபெருமானே முழுமுதற் கடவுள் எனத் துணிந்து துதித்தல். இவற்றை, சிவபெருமான் யாவுமானவர்; அவரே யாவுமல் லாதவர்; சிவனே ஒப்பாரும் அவனின் மிக்காருமில்லை; சிவன் எண்குணமுடையவர்; சிவபெருமான் ஒருவரே பிறப்பிறப்பில்லாதவர்; சிவன் வேதாகம முதலிய எல்லா நூல்களுக்கும் கர்த்தா; சிவபெருமான் எண்ணிறந்த கண், கால், சிரம் முதலியவற்றை யுடையவர்; அவர் எல்லா காமங்களாலும் கூறப்பட்டு எல்லாமாயுள்ளார்; அவர் சோதி யுட் சோதி; சிறியதிற் சிறியர்; பெரியதிற் பெரியர்; சிவனே பசுபதி; அவரே தேவதேவர் என்பனவாகிய வேதவாக்கியங்களிற் காண்க. **மறை மொழி** - அதர்வசிகை, சுவேதாசுவதரம் முதலியன. இங்குப் **பவன்** முதலிய எட்டு காமங்களாற் றுதித்துப் பூசை முடிவில் அட்டபுட்பம் சாத்தும் முறை குறிக்கப்பட்டதென்பாருமுண்டு.

**சுடர்த்திங்கள்** - முன்னர்க் குறைத்த ஒளியை மீண்டும் சிவனருளால் வளரப் பெற்று அந்த ஒளியை யுடைய திங்கள் - மூன்றும் பிறைச் சந்திரன். திருவருளாலே வளர்ந்த ஒளி என்று குறிக்கச் **சுடர்** என்று சிறப்பித்தார்.

**திங்கள் அணிந்தசடை - அங்கணர்** - இவ்விரண்டும் சேரக் கூறியது, இறைவர் தமது திருமுன்பே இவ்வநுசிதம் நிகழப் பார்த்தனரே என்றெழுந்த முனிவரது மனக் கொதிப்பையும் பதைப்பையும் மாற்றி அங்கண்மையுடன் அவர்க்கு உண்மையன்பின் நிறத்தைத் தேற்றம்பெற உணர்த்தியருளும் திருவருளின் அங்கண்மை பற்றியாம்.

**தணிந்தமனம்** - காம முதலிய தீக்குணங்களை யெல்லாம் வென்று ஐக்தவித்து ஆன்ற சாந்தமுடைய மனம். இது பெருமுனிவர்களது மனத்தின் றன்மை யென்பார் **திருமுனிவர்** என்றார். இக்கருத்துப்பற்றியே வரும்பாட்டிற் **பெருமுனிவர்** என்றதும் காண்க. முன்னர் 785 - 786 - பாட்டுக்களிற் போந்த கொதிப்பும் பதைப்பும் முதலி

யன சைவசீலங் காக்குந் திறத்தின் அன்புபற்றி எழுந்தன வாதலின் குற்றமாகாமை யோடு, தணிந்த மனத்துக்கு மாறுபடா என்பதாம். "அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார், மறத்திற்கு மஃதே துணை" என்ற திருக்குறளும் காண்க. "பற்றி லாரெறிப் பரசம யங்களைப் பாற்றும், செற்ற மேவிய சீலழ முடையராய்த் திகழ்வார்" (திரு ஞான - புரா - 1037) என்றதும், "மறைக ணிந்தனை சைவ நிந்தனை பொறுமனமும்" என்று திருநந்திதேவர் கேட்ட வரமும் காண்க. முன்னர்க் கொதித்த மனம் பூசை யினுல் தணிந்த மனமாயிற்றென்று உரை கூறுவாருமுண்டு.

**விடைகொண்டு** - வழிபாட்டின் முடிவில் இறைவனை வணங்கி விடைபெற்றுச் செல்லுதல் மரபு. **அங்கணரை** - அங்கணரிடம். உருபு மயக்கம்.

**தபோவனம்** - தவஞ்செய்தற் கிடமாகிய காடு. 140

*790. இவ்வண்ணம் பெருமுனிவ ரேகினு ; ரினியிப்பான்
மைவண்ணக் கருங்குஞ்சி வனவேடர் பெருமானர்
கைவண்ணச் சிலைவளைத்துக் கான்வேட்டை தனியாடிச்
செய்வண்ணத் திறமொழிவேன் தீவினையின் றிறமொழிவேன். கசக

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறு பெருமுனிவர் சென்றனர்; இனி, இங்குக் காட்டினிடத்து, மையினது வண்ணமாகிய கரிய குடுமியினையுடைய வனவேடர் தலை வனுர் கையினுலே அழகிய வில்லினை வளைத்துக் கான்வேட்டையைத் தனியாக ஆடிச் செய்யும் வினைத்திறத்தினை மொழிவேன்; அதனுல் தீவினையினது திறத்தினை ஒழிவேன்.

(வி - ரை) **இவ்வண்ணம் பெருமுனிவர் ஏகினர்** - சரித நிகழ்ச்சியில் (இங்குச் சன்னிதியில்) இவ்வாறாக முனிவரின் பூசைச் செயல் முற்றிய பகுதியை முடித்துக் காட்டி, ஆசிரியர், மேலே அங்குக் காட்டில் திண்ணனாரது வேட்டைவினை சொல்கின்ற ராதலின், இதுவரை கூறிய சரிதப் போக்கை இவ்வாறு முடித்துக் கொண்டனர்.

**இனி - இப்பால்** - மேற்சொல்லப்படுவது வேறு பொருள் என்று குறிக்க இவ் வாறு கூறித் தொடங்குகின்றார்.

**இப்பால்** - இப்பகுதியிலே திண்ணனார் வள்ளலைத் தொழுது வேட்டைக்குப் போந்த (782) இப்புறத்திலே. இப்போது நமது கருத்து முனிவர் ஒளித்திருந்த அங்கு நின்றும் இறைவர்க்கு அமுதுபெறும் பொருட்டு வேட்டைக்காகக் காட்டுக்குப்போன திண்ணனாரிடம் திரும்பிச் சென்றதனுல் இப்பால் என்ற அண்மைச்சுட்டினுற் கூறினர்.

**மைவண்ணக் கருங்குஞ்சி**-மிகச் செறிவாகிய கருமை. வண்ண நீடிய மைக்குழம் பாமென (455) என்றது காண்க. **மைவண்ணம்** - உருவம் பெற்ற இருள் என்றலுமாம். "பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி" என்புழிப்போல **வண்ணம்** என்ற தனை உவம உருபாகக்கொண்டு, மைபோன்ற என்பாருமுண்டு. மைவண்ண வேடர், கருங்குஞ்சி வேடர் எனக் கூட்டியுரைத்தலுமாம்.

**கை** - கையினுல். **வண்ணச்சிலை கைவளைத்து** என மாற்றுக. சிலைக்கு வண்ண மாவது வலிமை, குறி தவிராது அம்பினைச் செலுத்தும் நேர்மை, வளைக்க முறியாத தன்மை முதலியன. **வண்ணம்** - அழகு.

**வேட்டை தனியாடி** - முன்னைநாள் வந்ததுபோல மற்ற வேட்டைமக்கள் பலரும் உடனின்றித் தாமே தனியாக வேட்டையாடி. **தனிவேட்டை** என்று கூட்டியுரைத் தலுமாம். இதுபோலத் தம்மை முற்றும் மறந்து தேவரையே முற்றுநினைந்து அவர்க் காகவே தம் அனுபவங்கொண்டு ஆடிய வேட்டை பிறிதொன்றில்லையாதலின் **தனி** என்றதுமாம்.

செய் திற(த்தின்) வண்ணம் என்க. திறமொழிவேன் - திறமொழிவேன் - சொற்சிலேடை. திறத்தினை மொழிவேனுதலின் அத்தினையான் திறத்தினை ஒழிவேனுவேன் என்றதாம். இனிச் சொல்லப்புகும் வேட்டைவினைத் திறம், முன்னை நாளின் வேடர்களுடன் கூடியாடிய வேட்டைபோ லல்லாது பிறிதொன்றி லாசையின்றி இறைவனையே நினைந்து அவனருள்வழி நிகழும் வேட்டையாதலின் அருட் செயலாயிற்று. கொன்றருளி என வரும்பாட்டிற் கூறுதலும் காண்க. அருட் செயல்களைக் கூறுதல் தீவினையை ஒழிக்கும் சாதனங்களில் ஒன்றுமென்பது ஞான சாத்திரமுடிபு. ஆதலின் இவ்வேட்டைத் திறம் மொழிவேன்; அதனுல் தீவினைத் திறம் ஒழிவேன் என்றார். இவ்வேட்டை, கொலையாகிய தீவினையாகாது, அதனைச் சொல்கின்ற நமது தீவினையை ஒழிக்கும் நல்வினையே யாயிற்று என்றபடி. இவ்வாறு கூறிய இதனுற் பின்வரும் செய்தியினது அருட்சிறப்பை, இதனைப் படிப்போர் மறந்து வேறு பொருள்பற்றிச் சென்றுவிடாமல் அத்தினையே ஊன்றி நினைக்குமாறு செய்வதாம். இது ஆசிரியரது கவிமரபு. "ஒருமணத் திறத்தினங்கு நிகழ்ந்தது மொழிவே னுய்ந்தேன்" (173) எனவும், "மூவாண்டி னுலகுய்ய நிகழ்ந்ததனை மொழிகின்றேன்" (திருஞான புரா - 54) எனவும் கூறும் மரபு காண்க. 141

791. திருமலையின் புறம்போன நிண்ணனூர் செறிதுறுகற்
பெருமலைக ளிடைச்சரிவிற் பெரும்பன்றி புனமேய்ந்து
வருவனவுந் துணிபடுத்து மானினங்கள் கானிடைநின்
றுருவழிச்சென் றேறுதுறை யொளிநின்று கொன்றருளி, கசஉ

792. பயில்வினியாற் கலையழைத்துப் பாடுபெற வூடுருவும்
அயில்முகவெங் கணைபோக்கி யடியொற்றி மரையினங்கள்
துயிலிடையிற் கிடையெய்து தொடர்ந்துகட மைகளெய்து
வெயில்படுவெங் கதிர்முதிரத் தனிவேட்டை வினைமுடித்தார். கசஎ

791. (இ - ள்) வெளிப்படை. திருமலைப் புறத்திலே சென்ற நிண்ணனூர் செறிந்து தூறுகின்ற கற்களையுடைய பெரிய மலைகளினிடைச் சரிவிலே புனங்களை மேய்ந்து வருகின்ற பெரும்பன்றிகளைத் துண்டித்தும், காட்டிலிருந்து ஒருவழியாகப் போய் ஏறுகின்ற மான்வகைகளை அங்கு அவை தம்மையறியாதவாறு ஒளிந்து நின்று கொன்றருளியும், கசஉ

792. (இ - ள்) வெளிப்படை. கலைமான்போலக் கூப்பிடும் பயிலோசையினுலே கூவி, அவைகள் அணுகியபோது அவை வருந்த அவற்றின் உடலில் ஊடுருவிச் செல்லும் கூரியதனியுடைய வெவ்விய அம்புகளைப் போக்கியும், அடிச்சுவடுகளினுற் கண்டு மரையினங்கள் துயிலுமிடத்தில் அவற்றை எய்தும், கடமைகளைத் தொடர்ந்து எய்தும், இவ்வாறுக வெயில் தருகின்ற வெப்பமிகுந்த கதிர்கள் முதிரத் தனியாகிய வேட்டைத் தொழிலை முடித்தனர். கசஎ

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

791. (வி - ரை) திருமலை - திருக்காளத்திமலை. 744 - பார்க்க.

செறிதுறுகல் பெருமலை - செறிந்தனவாயும் முன்னே நீண்டு தூறுகின்றனவாயும் உள்ள பெருங் கற்பாறைகளையுடைய பெருமலைகள். இவை கிழக்குத்தொடர் மலையிற் காளத்தியை யடுத்துள்ள பல தனிமலைகள். "அப்பா லெண்ணில்பெரு வரைகளிரு மருங்கு மெங்கும், நிறையருவி நிரைபலவாய்" (1015), "கண்ணப்பர் திருப்பாதச் செருப்புத் தோய, மானவரிச் சிலைவேட்டை யாடுங் காளும்" (1017), "இசைவிளங்குந்

தமிழ்விரகர் திருக்காளத்தித் திருமலையிம் மலைகளில்யா தென்று கேட்டார்'' (1019) எனவரும் ஆளுடைய பிள்ளையார் புராணத்திருவாக்குக்கள் காண்க.

**மலைகளிடைச் சரிவு** - இரு மலைகளிடையே சரிவாகிய தாழ்ந்த இடங்கள். இவற்றில் மலையினூறிவரும் அருவிநீர்களின் ஓட்டம் இருத்தலால் மாங்கள் ஒங்கிவளரும். இவையே மலைவாணர் தினைப்புன முதலியனவும் உண்டாக்குமிடங்களுமாம். சரி என்பது பாடமாயின் மலைச்சாரலில் என்க.

**புனம் மேய்ந்து** - தினைப்புன முதலியவற்றை அழித்து அவற்றின் பயிர்களைத் தின்று. **புன்மேய்ந்து** எனப் பாடங்கொண்டுரைப்பாருமுண்டு. பன்றியை முதலில் வைத்துக் கூறியதுபற்றி முன் உரைத்தவைபார்க்க. பன்றியிறைச்சி, மான்வகை யிறைச்சிகளையே இவ்வேடரும் மலைவாணரும் மிகவிரும்பி உண்பாராதலின் அவற்றையே முன்னரும் இங்கும் சுட்டினர். 782 பார்க்க.

**ஒருவழிச் சென்று ஏறுதுறை ஒளிநின்று** - இது வேட்டைவினையின் ஒரு தந்திரம். பரந்த காட்டின் பலபக்கங்களிலும் கூட்டமாக மேய்ந்துவரும் மான் முதலியவை நீர் குடித்தல், வேறுகாடு மலைகளிற் புகுதல் முதலாகிய கருமங்களுக்காக வேறிடங்களிற் போகநேரிடும். அவ்வாறு செல்லுகையில் சில இடங்களில் அவை செல்ல நெருங்கிய ஒரேவழிதா னிருக்குமாதலின் அவ்விடங்களில் அவை நிரளாகச் செல்லமுடியாது ஒன்றன்பின் ஒன்றுகவே செல்ல நேரும். அங்கு மற்றைப்புறத்தில், அவை, தம்மைக் காணுதவாறு ஒளித்திருந்து அவை ஏறிவரும் அத்துறையில் வரவர ஒன்றொன்றுகக் கொன்றுவிடுதல் வேட்டைவினையின் ஒரு தந்திரமாம். ஒரு வினைமேல் ஒரு இடம்.

**கொன்றருளி**-இங்குக் கொலைச்செயலை அருளி என்றதுகுறிக்க. கொலை பாவவினையாம் என்பது பொதுவிதி. அதுவே இங்கு அருட்செயலாயிற்று என்றார். என்னை ? விலங்குகளாக இழிபிறவி எடுத்த இவ்வுயிர்கள் அறிவு விளக்கமின்றிக் காட்டில் வேண்டியவாறு சரித்துப் பயிர்களையும் உயிர்களையும் அழித்துத்திரிந்து ஒருநாள் இறக்கும் ; அவ்வவற்றின் கன்மத்துக்கேற்றவாறு மீளவும்பிறக்கும் ; இவ்வாறு உழலுவதன்றிச் சிவனை உணர்ந்து தமதுடல் பொருள் ஆவியை அவனுக்கென்று கொடுத்து ஈடேறுவது இவற்றுக்குக் கூடாததாம். ஆனால் இங்குத் திண்ணனாது திருக்கையினாற் கொல்லப்பட்டமையாலும், இவை சிவனுக்குகந்த அமுதாம் என்ற அவருடைய பாவனையாலும் செயலாலும் இவற்றினதிறைச்சி திருவமுதாக வுதவுதலினாலும் சிவபுண்ணியம் கிடைக்கப்பெற்று இவை உய்ந்தனவாம். இப்பெரும்பேற்றினை இவைகட்குக் கொடுத்தலால் இங்குக் **கொன்றருளி** என்றார். விதிக்கப்பட்ட தாவரங்களின், தளிர், இலை, பூ, வேர், குறடு என்றிவ்வுறுப்புக்களைக்கொண்டு சிவனுக்குச் சாத்துதல் சிவபுண்ணியமாகி,அதன் பயன் அத்தாவரங்களும் பெற்றுய்கின்றன என்ற நூற்கருத்தும் இங்கு வைத்துக்காண்க. (ஒளியினீழலில்) ஒளியாயிருந்து - சிவமாயிருந்து - கொன்று அருளிப்பாடு தந்தார் என்றது தொனிப்பொருள். 142

792. (வி - ரை) **பயில்விளி** - விலங்குகள் கூவுவனபோல ஓசைசெய்தல். இதனைப் பயிலோசை யென்பர். இது வனவேடர் கைவந்த பழக்கம். இக்காளியும் மலைவாணரிடம் இதனைக் காணலாகும்.

**பயில்விளியாற் கலையழைத்து** - விளியோசை கேட்டு விலங்குகள் அதனைத் தம்மினங்களின் ஓசையென மயங்கி உடன்வந்தணைய அப்போது அவற்றைப் பிடித்தும் வேட்டையாடியும் பயன்படுத்திக் கொள்வது வேட்டைத் தந்திரங்களில் ஒன்று. இதுவும் இக்காளிற் காணலாம்.

**அயில்முகம்**-கூரியநுனி. **வெங்கணை**-வெம்மை - கொடுமை ; விளியால் ஏமாற்றி அழைத்து அவற்றை வஞ்சித்துக் கொல்லுதலால் இங்கு வெம்மை என்றடைமொழி தந்தார்.

**அடி ஒற்றி** - அவைகூடித் துயிலும் கிடையை அவற்றினது அடிச்சுவட்டின் வழியே சென்று அறிந்து. **கிடை** - கிடக்குமிடம். "ஓதுகிடை" (சண்டேசர் - புரா- 3) என்றதும் காண்க. மான், மரை முதலிய பிளவுக்குளம்புடைய உயிர்வருக்கங்கள் ஒன்றுகூடி வாழும் மியல்பினுல் அவையிருக்குமிடம் **கிடை** எனப்படுவது வழக்கு.

**வெயில்படு வேங்கதிர்** - **வெயில்** - இங்கு ஒளிகுறித்தது. உச்சிவரையில் காட் கூறு ஏற ஞாயிற்றின் கதிர்கள் ஒளியும் வெப்பமும் மிக்குத்தருவன. **படுதல்** - உண் டாதல்; தருதல். **முதிர** - முதிரும் வேளைவர. **கதிர்முதிர்தல்** - 12 நாழிகையளவு ஆத லும் உச்சிவேளை வருதலும் குறித்தது. "காலையே போன்றிலங்கு மேனி கடும்பகலின், வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு" என்று அற்புதத்திருவந்தாதியில் அம்மை யார் அருளியவாற்றலும் அறிக. காலையிற் சிவந்து வெப்பங்குறைந்து காட்டும் வெயிற் கதிர் கடும்பகலில் வெள்ளிய ஒளியும் வெப்ப மிகுதியும் கொள்ளுதல் காணப்படும். "வெம்புந்திய கதிரோனொளி" (11) என்ற ஆளுடைய பிள்ளையாரது திருவண்ணு மலைத்தேவாரமும் காண்க. **கதிர்முதிர - முடித்தார்** எனக்கூட்டுக.

**தனிவேட்டை** - தனியாடி (790), தனிப்பெரு வேட்டை (810). **அணிபடுத்து** - கொன்றருளி - கணைபோக்கி - கிடையெய்து - தொடர்ந்தெய்து - என அவ்வப்பிராணி களுக்குரியவாறு செய்வினைகளை வெவ்வேறு உரிய வினைச்சொற்களாற்கூறி அவ்வினை களின் வேற்றுமை புலப்படுத்தியது காண்க. எண்ணும்மைகள் தொக்கன. இங்குக் கூறியன ஏனைவேடர்களினுதவியின்றித் திருவமுதமைக்கத் தனியாகச் செய்த வேட்டை வினைத்தொழில்கள். காடுவளைத்தல், மாஎழுப்புதல் பலரும் பலபுறமும் வேட்டையாடுதல் என முன்னர்க் (717—735) கூறியன தொகுதியாய்க் கூடிய வேடர்கள், விலங்குகள் மிக நெருங்கி மீதூர்ந்து வருதலைத் தடுக்கும் பொருட்டு ஆடும் பெருவேட்டை வினை என்பது காண்க.

*திண்ணனூர்* - அணிபடுத்து - கொன்றருளி - கணைபோக்கி - எய்து - எய்து - கதிர்முதிர - வேட்டை வினைமுடித்தார் என இவ்விரண்டு பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க. 143

793. பட்டவன விலங்கெல்லாம் படர்வனத்தி லொருசூழ
லிட்டருகு தீக்கடைகோ லிருஞ்சுரிகை தனையுருவி
வெட்டிநறுங் கோற்றேனை மிகமுறித்துத் தேக்கிலையால்
வட்டமுறு பெருங்கல்லை மருங்குபுடை படவமைத்தார். கசச

**(இ - ள்)** வெளிப்படை. இவ்வாறு வேட்டையிற்பட்ட விலங்குகளை யெல்லாம் படர்வனத்தில் ஒரு சூழலில் பக்கத்தே இட்டு, வலிய உடைவாளை உருவித் தீக்கடை கோல் வெட்டி, நறியகொம்புத்தேனையும் வேண்டுமளவும் முறித்துத் தேக்கிலையால் வட்டமாகிய பெரிய கல்லைகளை உள்ளிடம் பரப்புடையனவாகத் தைத்து அமைத்தனர்.

**(வி ரை)** இப்பாட்டால் அமுதுப்பொருள் சித்தமாக்குதலின் முதலிற்செய்வினை களைக் (Preliminaries என்பர் கலீனர்) குறித்தார். இவர் அரசகுமாராயிருந்தும் எவலாட்கள் செய்யும் இவ்வேலைக் கூறுபாடுகளை யெல்லாம் இவ்வளவு நன்கறிந்து செய்யவல்லராயினர் என்பது குறிக்கத்தக்கது.

**பட்ட-வேட்டையில் கொல்லப்பட்ட. விலங்கெல்லாம் ஒரு சூழல் இட்டு** - வேட் டையாடிய பின் முதலிற் செய்யப்பட்ட வேலை அவ்விலங்குகளை ஒன்று சேர்த்தல். இங்கு ஒரு துறையில் ஒளிகின்று கொன்றும், பயில்வினியா வ்ழைத்துக் கணைபோக்கி யும், துயிலிடையிற்கிடை யெய்தும், தொடர்ந்து எய்தும், இவ்வாறு பலபடி வேட்டை யாடிக் கொன்றவை பரந்த காட்டில் அங்கங்குக் கிடக்குமாதலின் அவற்றைக் கொணர்ந்து ஒரு சூழலில் சேர்த்தல் முதலிற் செய்யும் வினையாம்.

**படர்வனம்** - செறிந்து பரந்த காடு. **சூழல்** - மரங்கள் சூழ்ந்த இடம். 739 பார்க்க. மரச்சூழலாகிய இடம் தீயுண்டாக்கி இறைச்சிகளே வதக்கிப் பக்குவ மாக்குதற் குத் தக்க தென்பதாம். அணிநிழற் கேழலிட்டு (748) என்றவிடத் துரைத்தவை பார்க்க.

**அநதுஇட்டு** எனமாற்றுக. எல்லா விலங்குகளையும் ஒன்றுசேரப் பக்கமாக இட்டு. ஒன்று சேர்த்து எல்லாம் அருகுஇட்டு என்க. **அநதுவேட்டி** என்று கூட்டிப் பக்கத் திலே உள்ள மரத்தில் தீக்கடைகோல் வெட்டி என்றுரைத்தலுமாம்.

**இநஞ்சுரிகை** - வலிய உடைவாள். சுரிகை உருவி அதுகொண்டு தீக்கடைகோல் வெட்டி என்க. இதுவே பன்றியைக் குத்தின சுரிகை. "மொய்த்தெழு சுடர்விடு சுரிகை" (740).

**கோல்தேனும் மிக முறித்து** - கோற்றேன் - மரங்களிற் சிறு கிளைகளிலும் செடி களிலும் சிறுவகைத் தேனீக்கள் ஈட்டும் தேன்கூடுகள். கூடுசிதைந்து தேன் சிந்தி விடாதபடி அச்சிறு கிளைகளைத் தேன்கூடுகளுடன் அசைவின்றிக் கையால் ஒடித்த லால் **முறித்து** என்றார். இவை சிறு கூடுகளாதலின் வேண்டுமளவு தேனைப் பெறுதற் குப் பல கூடுகளை எடுத்தல் குறிக்க **மிக** என்றார். பெருமரங்களின் பெருங்கிளைகளி லும், மரப்பொந்துகளிலும், மலைப்பாறைகளிலும் பெருந் தேனீக்கள் ஈட்டுவன **பெருந் தேன்** எனப்படும். "இம்மலைப் பெருந்தேன்" (750), "அர்த்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த பொந்தை" (திருவாசகம்) என்பனகாண்க. அவை பெரிய அளவுள்ளவை. ஆதலில் தேனும் அதிகம் தருவன. ஆனால் அவற்றைத் தேடிக் காணலும், அழித்துத் தேன் பெறுதலும் அரிது. அப்பெருந் தேனீக்கள் பெருந்துன்பமும் விளைப்பன. **கோற் றேன்** அவ்வாறன்றிக் காடுகளில் எங்கும் இலகுவிற் கிடைப்பன; இவற்றின் ஈக்களும் எளிதில் அகற்றக்கூடியன; ஆதலின் இவை பலவற்றைத் திண்ணனூர் முறித்துப் பயன் படுத்திக்கொண்டனர் என்பதாம். "கோற்றே னெனைக் கென்கோ" என்ற திருவாசகம் காண்க. கூடு இருக்கும் கிளையை முறித்தலைக் கோற்றேன்முறித்தல் எனவழங்குதல்மரபு.

**முறித்தல்** - மிக அசைவுபடாமல் கையினால் ஒடித்தல். இறைச்சிக்காகும் விலங்கு களை அருகு இட்டதுபோல் அவ்விறைச்சியினுட் பிழிந்து கலக்கும் தேன்கூடுகளையும் மற்றொருபுறம் பக்கத்தில் அமைத்துக் கொண்டனர்.

**வட்டமுறு பெநுங்கல்லை**-தேக்கிலையால் வட்டமாகத் தைத்த பெரிய கொள்கலம். தேக்குமரச் சோலை, மலையின் அருகிலும் முகலி ஆற்றின் இருகரையிலும் மிக வளர்ந் திருந்தன என்பது முன்னர் உரைக்கப்பட்டது. 743 முதலியவை பார்க்க. தேக்கிலை மிகுதியாகவும் அடுத்தும் கிடைப்பதுடன் அளவால் அகன்று பெரியனவாயும் "இறைச் சிப்பாரம்" தாங்கும் வலுவுடையனவாயுமுள்ளன. அன்றியும் இறைச்சியிடுவதற்குப் பொருந்திய கொள்கலமுமாம் ஆதலின் தேக்கிலையாற் கல்லை யமைத்தனர். **மநுங்கு புடைபட** - உள்ளிடம் பக்கங்களில் இடம்படவும் வாய்குறுகவும் இருக்க. 144

794. இந்தனத்தை முறித்தடுக்கி யெரிகடையு மரணியினில்
வெந்தழலைப் பிறப்பித்து மிகவளர்த்து மிருகங்கள்
கொந்தியயி லலகம்பாற் குட்டமிட்டுக் கொழுப்பரிந்து
வந்தனகொண் டெழுந்தழலில் வக்குவன வக்குவித்து, கசஞ

795. வாயம்பா லழிப்பதுவும் வகுப்பதுவுஞ் செய்தவற்றி
னுயவுறுப் பிறைச்சியெலா மரிந்தோருகல் லையிலிட்டுக்
காயகெடுங் கோல்கோத்துக் கனலின்க ணுறக்காய்ச்சித்
தூயதிரு வமுதமைக்கச் சுவைகாண லுறுகின்றார், கசசு

796. எண்ணிறந்த கடவுளருக் கிடுமுணவு கொண்டேடும்
வண்ணவெரி வாயின்கண் வைத்ததெனக் காளத்தி

யண்ணலார்க் காம்பரிசு தாஞ்சோதித் தமைப்பதற்குத்
திண்ணனூர் திருவாயி லமைத்தாரூன் றிருவமுது. கசள

794. (இ - ள்) வெளிப்படை. விறகுக் கட்டைகளே முறித்து அடுக்கித், தீக்கடை கோலால் தீ உண்டாக்கி மூளும்படி வளர்த்து, விலங்குகளைக் கூர்மையான அம்பினால் கொன்றிக் கொழுப்புள்ள பாகங்களைக் குட்டமிட்டு அரிந்து கிடைத்தவற்றை எடுத்துக் கொண்டு, எழுகின்ற தீயில் வதக்குவனவற்றை வதக்குவித்து, கசடு

795. (இ - ள்) வெளிப்படை. கூர்மையுள்ள அம்பினால் அழிப்பதுவும் வகுப்பதுவும் ஆகிய செயல்களைச் செய்து, விலங்குகளினுடைய பல உறுப்புக்களின் இறைச்சியெல்லாம் அரிந்து எடுத்து வேறு ஒரு கல்லையில் இட்டுத் தீயிற் காயும்படி நீண்ட கோலிற் கோத்துத் தீயினிடத்துப் பொருந்தக் காய்ச்சித் தூய்மையாகிய திருவமுதாக அமைத்தற்காகச் சுவைகாணப் புகுகின்றவராகி, கசசு

796. (இ - ள்) வெளிப்படை. ~~கொண்டு சென்று ஊட்டுகின்ற அழகிய எரிக்கட வுளது வாயிலே, எண்ணிறந்த தேவர்களுக்கு இடுகின்ற உணவை வைத்தாற்போலக்,~~ காளத்திநாதருக்கு ஆகின்ற தன்மையைத் தாம் பரிசோதித்து அமைப்பதற்காகத் திண்ணனூர் திருவாயிலே ஊன்றிய திருவமுதினை அமைத்தார். கசள

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

794. (வி - ரை) இந்தனம் - இங்குச் சிறு விறகு குறித்தது. "இத்தன விலங்க லெறிபுனந் தீப்பட டெரிவதொத்து" (திருக்களத்தை யாதித்தேச்சரம் - 2) என்பது கருவூர்த்தேவர் திருவிசைப்பா.

எரிகடையும் அரணி - முறுக வாங்கிக் கடைதலால் தீயை உண்டாக்கும் கடை கோல். அரணி - கடைகோல். தழலைப் பிறப்பித்தலாவது கடைகோலை வீசையில் வாங்கிக் கடைதலினாலே தீயினை உளதாகச் செய்தல். பிறப்பித்தல் - உளதாக்குதல். வளர்த்து - மூண்டெரியச்செய்து. நின்றது

மிருகங்கள் கொந்தி - கொத்தி என்பது எதுகை நோக்கிக் கொந்தி என ~~வந்தது~~. அயில் - கூர்மை. அலகு - விளிம்பு - பக்கம். குட்டமிட்டு - வளைவாகக் கொத்தி எடுத்து. இது வேடர் வழக்கு. கொழுப்பரிந்து - கொழுப்புள்ள பாகங்களை அரிந்து எடுத்து.

வக்குவன வக்குவித்து - வதக்கு என்றதை வக்கு என வழங்குவது வேடரது வழக்குச் சொல். அவ் வழக்கை யொட்டியே கூறினர். வதக்க வேண்டுவனவற்றை வதக்கி. 145

குட்டமிடும்—என்பதும் பாடம்.

795. (வி - ரை) வாய் - கூர்மை. "வல்வாயெரி" (திருவீழிமிழலை - கட்டபாடை - 6) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரங் காண்க. வாய் அம்பால் - அம்பு வாயினால் எனமாற்றி, வாய் - நுனி என்றலுமாம்.

அழிப்பது - துண்டாக்குவது. வகுப்பது - கீறுவது. நார்போன்று செறிவாய்த் தொக்குக் கூடிய தசைப்பகுதிகளைத் துண்டு துண்டாக்குதலும் கீறுதலும் அவற்றை அமுதாகச் சமைத்தற்கு முதலிற்செய்வினைகளாம். காய் கறிகளைத் திருத்தும் வகையும் காண்க. கொழுப்புள்ள பகுதிகளைக் குட்டமிட்டெடுத்து வக்குதலும் கோலிற் கோத்துக் காய்ச்சுதலும் அடிசில் செய்வினைகளில் முற்செய்வினைகள். இங்கு உறுப்பு இறைச்சியெலாம் என்றது ஏனை உறுப்புக்களிற் சுவையுள்ள இறைச்சி. கொழுப்புள்ள பகுதிகளை முன்னர் எரியில் வக்குதலும் பின்னர்க் கோலிற் கோத்துக் கனலிற் பொருந்தக் காய்ச்சுதலும் என்று இருமுறை பக்குவப்படுத்தல் வேண்டும் என்பர். இஃது காய் கறிகளுட் கூடிய சிலவற்றை முதலில் வறுத்துப் பின்னர் வேகவைத்தலும், அப்படிக் கல்லாது வேறு சிலவற்றை நேரே வேவித்தலும் என்ற முறைபோல் அடிசில் சமைக்கும்வகை என்க. முதலில் வக்குதல் எரியில் அவற்றின் மயிர் தோல் முதலிய வேண்டாப் பகுதிகளைக் கழிக்கவுமுதவும் என்ப. 766 பார்க்க.

**காய** - காயும்படியாக - வேகும்படியாக. **நெடுங்கோல்** - ஒரு தலையில் இறைச்சித் துண்டங்களைக் கோத்து மற்ற நுனியைக் கையிற்பற்றி அனலிற் காய்ச்சுதற்குக் கோல் நீண்டிருத்தல் வேண்டுமாதலின் நெடுங் கோல் என்றார்.

**உற** - பொருந்த. **உறுதலாவது** - மிக அகலாமலும் மிக அணுகாமலும் தீயிற் பொருந்துதல். அகலிற் தீச்சூடேறுமலும் வேகாமலும் போம்; மிக அணுகில் அதிகம் தீச் சுடக் கரிந்துபோம்; இவ்விரண்டுமின்றிப் பொருந்துதல். வேகும் பக்குவம் மிகினும் குறையினும் சுவையும் கெட்டுக் கேடும் தருமாதலின் இரண்டு மில்லாத நேர் பக்குவம் பொருந்துதல் என்றலுமாம். இறைச்சியின் கொழுப்புநெய்ப்பசை முழுதும் அதனைப் பக்குவம் செய்தலிலே பொருந்த என்றதுமாம். இவைபற்றி முன்னர்ப் **பதத்தில்** (767) என்றவிடத் தமைத்தவையும் பார்க்க.

**தூயதிருஅமுது அமைக்க**-தேவர்க்குரிய தூயதிருவமுதாக அமைத்தற் பொருட்டு. இதுவரை அப்பகுதிகள் வனவிலங்குகளின் வறிய தீய இறைச்சியாய் நின்றன. திண்ணனார் திருவாயில் வைத்துச் சுவைத்து இனியன என்று கண்டு எடுத்துக்கொண்ட பகுதிகளே தேவர்க்கு அமுதாவன. ஆதலின் **தூய** என்றும், **திரு** என்றும் அடைமொழிகள் தந்தோதினார். **தூய்மை**-இவரது திருவாயில் வைத்தலாலாவது. முன்னர்த் "தூய வாயினிற் கொண்டு" (770) என்றதும் நினைவுகூர்க. **திரு** - தேவர்க்காகும் பொருள் என்பது குறித்தது.

**சுவைகாணல் உறுகின்றார்** - சுவை காண்பவராகி. முற்றெச்சம். **காணலுறுகின்றார்** - **திருவாயில் அமைத்தார்** என வரும்பாட்டுடன் கூட்டிமுடிக்க.

இவ்விரண்டு பாட்டுக்களால் திண்ணனார் தீவளர்த்து இறைச்சியைப் பக்குவப்படுத்திய செயல்களும், மேல்வரும் இரண்டு பாட்டுக்களால் சுவை கண்டு திருவமுதாக்கிய செயல்களும் கூறப்பட்டன. முன்னோட்ட பூசையில் இச்செயல்கள் 766—767-ல் உரைக்கப்பட்டன. முன்னர்க்கூறிய அவையும் பூசைக் கமுதுபெற்றுஅமைக்கும் செயல் களேயாயினும் அங்கு உச்சியின் பின்னேரமாயினமையும், வேட்டுவக் குடிமக்களின் இடர் தீர்க்கப் பலரும்கூடி ஆடியவேட்டையில் எய்தியதோர் பன்றியிறைச்சியொன்றே யாயினமையும், தேவர் பசிதீர்க்கும் விரைவு மிகுதியாயினமையும், இன்ன பிறவும் குறிப்பார் அதற்குத் தகச் சுருக்கிக் கூறினார். அவ்வாறன்றி, இங்கு முற்பகலாதலும், தாமே எண்ணியாடிய தனிவேட்டையாதலும், பன்றி மான் முதலிய பற்பல வகையிறைச்சியாதலும், திண்ணனார் மனமொன்றத் தாமே செய்யும் அமுதமைப்பாதலும், பிறவும் கருதி ஈண்டு திருப்பாட்டுக்களான் விரித்துக் கூறினார். இவ்வாறு பின்னர் விரித்தற்காக முன்னர்த் தொகுத்தும், வேண்டுமிடத்துப் பின்னர் விரித்தும் கூறுவது ஆசிரியர்க்கேயுரிய சிறப்புக்களில் ஒன்றும். திருநாவுக்கரசுநாயனாரது புராணத்தில் அப்பூதியடிகள் சரிதச்சுருக்கமும் அப்பூதிநாயனார் புராணத்தில் அச்சரித விரிவும் ஆகக் கூறியுள்ள அமைவும் காண்க. திருவீழிமிழலைப் படிக்காசு பெற்றசிறப்பும், திருமறைக்காட்டிற் கதவுதிறப்படைப்புக்களாகிய சிறப்பும் என்ற இவைகள் ஆளுடையஅரசுகள், ஆளுடையபிள்ளையார்ஆகிய இருவரது புராணங்களினும் கூறிய சுருக்கப்பெருக்கப்பொருத்த அமைதிகளும்ஒப்புநோக்குக. கழறிற்றறிவார் நாயனார் குதிரையின்மேல்ஏறி நம்பிகளது வெள்ளையானையின் முன்னர்க் கயிலைக்கு எழுந்தருளும் சரிதப்பகுதி பின்னர் வெள்ளையானைச்சருக்கத்து விரிக்கவேண்டுதலின், அவர்தம் புராணத்திலே "வன்றொண்டர்..... திருக்கயிலையினின், மதவரைமேல் எழுந்தருள முன்னர்வயப் பரியுகைக்குந் திருத்தொழில்பின் மொழிகின்றும்" (174) என்று சுருக்கிக்கூறிய அழகும் இங்கு நினைவுகூர்க.

**ஒருகல்லையில்** - சுவைத்த தூயதிருவமுதாக அமைத்தற்குமுன் இறைச்சிப்பகுதிகளே அரிந்து இடுதற்கும் வக்குவித்து இடுதற்கும் ஒருகல்லை அமைத்தனர். சுவைத்தபின் அமுதமைத்துப் படைத்து எடுத்துக்கொண்டுபோக மற்றொரு கல்லையமைத்தனர். 797 பார்க்க.

அழிப்பன வும்—என்பதும் பாடம்.

796. (வி - ரை) வைத்ததேனை...அமைத்தார் - கடவுளருக்கு இடும் உணவை ஊட்டும் எரி வாயில் வைத்ததெனக் காளத்தி அண்ணலார்க்கு (ஊன்) அமுது ஆகும் பரிசு அமைப்பதற்குத் திண்ணனார் திருவாயில் அமைத்தார்.

**எண்ணிறந்த கடவுளர்** - சிவபெருமா னல்லாத ஏனைத்தேவர்கள். இவர்கள் பிரமன் விட்டுணு இந்திரன் வருணன் இயமன் முதலியோர். இங்குக் **கடவுளர்** என்றது முதற் கடவுள் என்ற பொருள் குறியாது தேவரென்று குறிக்கும் பொதுப்பெயர் மாத்திரையாய் நின்றது. முப்பத்து முக்கோடி தேவர் என்பது காண்க. முதற் கடவுளாகிய பதி ஒருவரே என்பது வேத முடிபாகிய சித்தாந்தமாதலின் இங்கு அதற்கு மாறாய் அனேகேசுவரவாதப் பொருள்படுமா றில்லையாதல் கண்டு கொள்க.

**கடவுளருக்கு உணவு எரிவாயில் வைத்தல்**-இது அக்கடவுளரைக் குறித்துச் செய்யப்படும் யாகங்களிற் காணப்படும். **உணவு** - உணவை. **கொண்டு** - அதனைக் கொண்டு போகும். **கொண்டு ஊட்டும் எரி** - இக்கருத்துப் பற்றியே நீக்கடவுளை வடநூலார் **ஹ¨தவகம்** என வழங்குவர்; (ஹ¨த - ஓமம் செய்யப்பட்டது-அவி; **வகம்**-வகிப்பது-தாங்குவது - கொள்வது.) **வண்ணவாய்** - எரியினது சிவந்த வாய் - அழகிய வாய் என்றலுமாம். **வைத்தது** - இறந்தகால இடைநிலை பெற்றுவந்த அவ்வீற்றுத் தொழிற் பெயர். **என** - உவம வுருபு. எரிவாயில் கடவுளாது உணவை வைத்தலாவது, அவ்வவர்க்குரிய மந்திரங்களால் எரிவளர்த்து, அவ்வத் தேவர் பெயராற் கூவி, இதனை உண்க என்று சுவாகாந்தமாகிய மந்திரங்களைச் சொல்லி, அவ்வுணவை எரிக்கடவுள் வாயின் வைத்தல். அவ்வாறு வைக்கவே எரிக் கடவுளுடைய வாயின்மூலம் அவ்வக் கடவுளரும் கொண்டு உவந்து உண்கின்றனர். **கொண்டு ஊட்டும் எரி** - இவ்வாறு கடவுளர் எரிவாயின்கண் உண்பதனையே எரிக்கடவுள் கொண்டு அவ்வவர்க்கும் ஊட்டுவதாக உபசரித்துக் கூறினர்.

**திண்ணனார் திருவாயின்** - திருவாய்க்கு எரிவாய் உருபும் பயனும் பற்றி உவமிக்கப்பட்டது. எரிவாய் தன்னுட்பட்ட பொருள்கள் எவையேயாயினும் அவற்றை முன்னிலையாகிய அசுத்தமெல்லாம் நீக்கித் தூயனவாக்குதல்போலத், தீய இறைச்சியைத் திண்ணனாது திருவாய் தூயதிருவமுதாக்கிற் றென்பதும் காண்க. சிவபெருமானுக்குப் புண்ணியக் கங்கைநீரிற் புனிதமாந் திருமஞ்சனமும், அவர் உவக்கும் திருவமுதும் ஆக்குதலானும், தூயனவல்லாதவற்றையும் தூயனவாக்குதலானும் **திருவாய்** என்ற அடைமொழி புணர்த்தி ஓதினர். உவமித்த எரிவாயினும் இது உயர்ந்த தென்பார் அதனைச் சிறப்பாகிய அடைமொழியின்றி வாளா **எரிவாய்** என்றார்.

**எண்ணிறந்த கடவுளருக்கு - ஊட்டும் எரி** - எரிவாயிலானன்றித் தேவர்கள்மேரே அவி உணவு உண்ண இயலாது. "எரியலா லுருவ மில்லை", "எரிபெ ருக்குவ ரவ்வெரி யீசன,துருவ ருக்கம தாவ துணர்கிலார்" எனவரும் தேவாரத் திருவாக்குக்களா லுணர்த்தப்படுகின்றவாறு எரி அரனுரதுருவமாம். ஆதலின் அரன் யாகமுதல்வனு யிருந்து அவியைப் பெற்று அவ்வத் தேவர்களாலாம் பயனை அவ்வவர் தரச்செய்வன். இதனால் சிவபெருமானது முழுமுதற் றன்மையும், அன்பின் பெருமையும் குறித்தவாறு காண்க. சிவபெருமானே ஊட்டுவர் திண்ணனார் என அவரது பெருமையும் உடன் குறித்தபடியாம். யாகங்களில் இடும் அவியுணவு வேதப் பிரமாணமாகித் தேவர்க்கு இனியவாதல் போலத் திண்ணனார் ஊட்டும் ஊன் சிவபெருமானுக்கு வேத விலக்காகாது அந்த அவியுணவினும் உகந்ததாயிற்று என்ற குறிப்பும்பெற இவ்வாறுவமை கூறிய கருத்துங் காண்க.

**எண்ணிறந்த கடவுளர்** என்று ஏனைத்தேவர்களை யெல்லாங் கூறியஆசிரியர், இங்கு அவர்க்கெல்லாம் பெரியராய்த் தேவதேவ ராவார் இவ்விறைவர் என்று குறிக்க அண்ணலார் என்றார்.

**சோதித்தமைப்பதற்கு** - இனிய பகுதிகள் இவையிவை என்று சுவைபார்த்து இனியவற்றையே அமைத்தற்கு.

**ஆம் பரிசு - ஆம்** - ஆகும். அண்ணலார் உண்ணுதற்கு ஏற்றவாறு இனியவாகின்ற தன்மையை. **வாயில் அமைத்தார்** - வாயிலிட்டு அதுக்கிச் சுவைபார்த்தனர்.

இறைச்சியாகியதோர் அநுசிதப்பொருள், மேலும் வாயில் வைத்ததால் எச்சிலாகியதொரு அநுசிதமுமாயிற்று என்று எண்ணலுறுவார்க்கு அஃது அவ்வாறன்றாகி உயர்வாகும் படியையும், வேதத்தில் விதித்தபடி அமைந்த உணவாம்படியையும் இப்பாட்டால் உணர்த்தவும் இவ்வுவமையாற் கூறினார். "கிஞ்சித் பக்ஷித மாம்ஸ சேஷகபளம் நாவ்யோப ஹாராயதே" என்று பாராட்டிய துதியும் காண்க.

**அமைப்பார் போல்** - என்பது பாடமாயின் - அமைப்பாராய், முற்றெச்சம்; போல் - அசை என்க. 147

797. நல்லபத முறவெந்து நாவின்க ணிடுமிறைச்சி
கல்லையினிற் படைத்துத்தேன் பிழிந்துகலந் ததுகொண்டு
வல்விரைந்து திருப்பள்ளித் தாமமுந்தூய் மஞ்சனமும்
ஒல்லையினின் முன்புபோ லுடன்கொண்டு வந்தணைந்தார். கசஅ

(இ - ள்) வெளிப்படை. நல்ல பதம் பொருந்த வெந்தபின் நாவினிடத்து இட்டுச் சுவைகண்ட இறைச்சியின் பகுதிகளைக் கல்லையிலே சேர்த்துத், தேனைப்பிழிந்து கலந்து அதனை (அமுதாக) அமைத்துக்கொண்டும், மிகவிரைந்து திருப்பள்ளித் தாமமும் தூயதாகிய திருமஞ்சனமும் முன்னைநாளிற் போலவே உடன் அமைத்துக் கொண்டும், விரைவாக வந்து அணைந்தனர் (திண்ணனார்).

(வி - ரை) **நல்ல பதம் உற - பதம்** - பதத்தில் வேவ (767), உறக் காய்ச்சி (795) என்றவற்றினுரைத்தவை பார்க்க.

**வெந்து(பின்) இடும் இறைச்சி** - என்று கூட்டுக. **நாவின்கண் இடும்** - நாவினாற் சுவைபார்த்த. வாலிய சுவைமுன் காண்பான் வாயினி லதுக்கிப் பார்த்து (767), நாவிற் பழகிய இனிமை பார்த்து (774), அடியேனுஞ் சுவைகண்டேன் (799) என்றவை காண்க.

**படைத்து** - இட்டுச் சேர்த்துக் கூட்டி. "சருகிலை இணைத்த கல்லை ஏலவே கோலிக் கூட்டி யதன்மிசை யிடுவா ரானார்" (767) என்ற முன்னைநாட் செயல்காண்க.

**தேன்பிழிந்து கலந்து** - முன்னர் "நறுங் கோற்றேனை மிக முறித்து" (793) என்றபடி முறித்த தேன்கூடுகளின் உள்ள ஈக்களைப் போக்கி, அக்கூடுகளின் அறைகளில் வைக்கப்பட்டிருக்கும் ஈக்குஞ்சுப் புழுக்களையும் அகற்றித், தேனீக்கள் உணவுக்காக ஈட்டி அக்கூடுகளின் வேறு தனி அறைகளிற் பொருந்த மூடிச் சேமித்து வைத்திருக்கும் தேனைப் பிழிந்தனர். இவ்வாறு தேன்கூடுகளின் அமைப்புக்களை அறிந்து தேனைமட்டும் கண்டு பிழியாதவிடத்து ஈ குஞ்சுப்புழு முதலியனவும் சேர்ந்து பிழியப்பட்டுத் தேன் கெட்டுவிடும் ஆகலின் **தேன் பிழிந்து** என்றார். **கலந்தது** - கல்லையில் சேர்த்த இறைச்சிப் பகுதிகள் முழுதும் தேன்பொருந்தும்படி கலந்து வைத்து. வெந்த ஊனைத் தேனிற் றோய்த்து உண்ணுதல் வேடர்களின் சிறந்த உணவு விசேடங்களில் ஒன்று. இவ்வாறு சுவைத்துண்ட முன் அநுபவ உணர்ச்சிகொண்டு, தமது இனிய உணவே தேவர்க்கும் இனிதாம் என்று திண்ணனார் ஊட்டுவாராயினார். "விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று, சுரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த, பெரிய அன்பு" (திருவிடைமருதூர் மும்மணிக்கோவை - 30) என்று பட்டினத்தடிகள் இதன் இயலை இலக்கியத்துடன் உணர்த்தி யருளியது காண்க:

தேன் இவ்வேடர்கள் உண்ணும் இறைச்சி முதலிய உணவுப்பண்டங்களுக்கு மண மும் குணமும் தருவதுடன் அவற்றைச் சீரணிக்கச்செய்வதுமாம் என்ப. அன்றியும் தேன் சுகம்தந்து உடலைக்காத்து நீண்டநாள் வாழச்செய்யும் உணவாகும் என்பது மருத்துவ நூலிற் கண்ட முடிபாம். இவைபற்றி 684-ல் உரைத்தவையும் பார்க்க.

**கலந்தது** - கலந்ததனை. வினையாலணையும் பெயர். இரண்டனுருபு தொக்கது. **கொண்டும்** - உடன்கொண்டும் என எண்ணும்மைகள் விரிக்க.

**ஒலிலையினில்** - கொடிப்பொழுதில். **வல்விரைந்து** என்பது அவர் வந்தவேகத்தை யும், ஒலிலை என்பது வருதலாகிய செயல் நிகழ்ந்த காலச்சுருக்கத்தையும் குறித்தன.

**அணைந்தார்** - மலையடிவாரத்தினை அணைந்தனர். 148

798. வந்துதிருக் காளத்தி மலையேறி வனவேடர்
தந்தலைவ ஞரிமையோர் தலைவனுர் தமையெய்தி
யந்தணனுர் பூசையினை முன்புபோ லகற்றியபின்
முந்தைமுறை தம்முடைய பூசனையின் செயன்முடிப்பார், கசசு

*799. ஊனமுது கல்லியுடன் வைத்"திதுமுன் னியினன்ருல் ;
ஏனமொடு மான்கலிகண் மரைகடமை யிவையிற்றி
லானவுறுப் பிறைச்சியமு ; தடியேனுஞ் சுவைகண்டேன் ;
தேனுமுடன் கலந்ததிது தித்திக்கு" மெனமொழிந்தார். கரிO

798. (இ - ள்) வெளிப்படை. வந்து திருக்காளத்திமலையினை ஏறி வன வேடர்தலைவ ஞராகியதிண்ணனுர் தேவர்தலைவனுராகிய குடுமித்தேவரைச் சேர்ந்து சிவகோசரியா ரது பூசை நின்மாலியங்களை முன்னுளிற்போல நீக்கியபின் முன்னைமுறையிலே தம் முடைய பூசனையின்செயலை முடிப்பாராய், கசசு

799. (இ - ள்) வெளிப்படை. ஊனமுதத்தைக் கல்லியுடனே திருமுன்னர் வைத்து, "இது முன்னுளிற் கொணர்ந்ததனிலும் நன்முயது ; பன்றியிறைச்சியோடு மான், கலை, மரை, கடமை என்ற இவ்வகைகளில் ஏற்ற இறைச்சி யமுதாக்கப்பெற்றுள் ளது ; அடியேனும் சுவைகண்டேன் ; தேனும்கூடக் கலந்துள்ளது; இது தித்திக்கும்" என்று மொழிந்தனர். கரிO

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

798. (வி - ரை) **வந்து** - மேலே கூறியவாறு மலையடிவாரத்துக்கு வந்து.

**திருக்காளத்திமலை** - இங்கும் இச்சரிதத்திற் பிறஇடத்தும் மலை என்றலே திருக் காளத்திமலை என்று பொருள்தருமாயினும், இம்மலையின் பெயர் சொல்லுதலே பேறு தருவதாம் என்று காட்டுதற்கு இவ்வாறு கூறினர். இது ஆசிரியர் மரபு. பெயராற் கூறுவிடினும் திருமலை என்றுவது கூறுவர். திருக்காளத்தி (650, 745, 759), காளத்தி (749, 796), திருக்காளத்திமலை (754, 780), காளத்திமலை (773), திருக் காளத்தி மலையினுர் (775), திருமலை (744, 785, 791), என்பனகாண்க. இவ்வா றன்றிக், கடவுண் மால்வரை (750), வள்ளலார் மலை (751), களிர்வரை (752), மொய்வரை (763), இறைவர்வெற்பு (779) என்பனவாதி அடைமொழிகளாற் குறித்த லும் இவரது பண்பாம். திருக்காளத்தி (803, 809, 811, 813, 821, 827, 830) எனப்பின்னரும் கூறுதல் காண்க. வேடர்முதலிய பிறர் கூற்றாகக் கூறுமிடத்து வாளா மலை என்றமைப்பர். இது உலகர் கண்டு பின்பற்றி உய்யுமாறு கருணைத்திறத்தால் ஆசிரியர் காட்டிய மரபென்க. திருத்தில்லையைக் கூறுமிடங்களிலும் இவ்வா றடை மொழிகளாற்றுதித்துச் செல்லும் மரபும் ஆளுடையநம்பிகள் சரிதம், ஆளுடைய

அரசுகள்; ஆளுடையபிள்ளையார் புராணங்களினும், பிறாண்டும் இவ்வாறே கண்டு கொள்க.

**வனவேடர் தம் தலைவனார் - இமையோர் தலைவனார் தமை எய்தி** - இருவரும் தலைவனார். அவர் அடைபவர் - இவர் அடையப்படுபவர் என உயிரிலக்கணத்தையும், பதியிலக்கணத்தையும் எய்தி என்றதனாற் குறித்ததுகாண்க. ஆனால் திண்ணனார் வன வேடர் தலைவனார். அவர்களது அரசராவர் என்றதோடு " மனிதரிற் றலையான மனி தரே " (திருப்பூவனூர்த்திருக்குறுந்தொகை) என்றபடி இறைவனையே உள்ளமர்த் தினராதலானும் **தலைவனார்** என்ற குறிப்புமாம். வேடர்களுள் வளர்ந்த அரசகுமாரன் என்ற சிவஞானபோதக் (8-ம் சூத்) கருத்தினையும் இங்குவைத்துச் சிந்திக்க. பொருட் டன்மையில் இரண்டினுடைய ஒற்றுமையையும் சொல் ஒற்றுமையாற் குறித்தார். இது ஆசிரியர் மரபு. " நாவரச ருழைச்சண்பை நகரரசர் நண்ணுவார் " (திருஞான - புரா - 930) என்றதும், அன்னபிறவும் காண்க.

**அந்தணனார்** - " தணிந்தமனத் திருமுனிவர் " (789) என்றதற்கேற்ப **அந்தண னார்** என்றார். எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அறவோர் அந்தணர் என்ற திறங்குறித்தது.

**முன்புபோல் அகற்றியபின்** - முன் அகற்றியமுறையை "முடிமிசை மலரைக்கா லின், வளைத்த பொற்செருப்பால் மாற்றி" (772) என்றதிற் காண்க. வேட்டையினும் அமுதமைத்தலினும் இற்றைநாட் செயல் வேறு பட்டமையால் அவற்றை, 791 முதல் 797 வரை, விரித்துக்கூறிய ஆசிரியர், இங்கு அந்தணரது முன்னை நாட்பூசை அகற் றும் செயலில் இன்று வேறுபாடின்மை நோக்கி **முன்புபோல்** என்றமைந்தார்.

**முந்தைமுறை** - முன்னாளிற் செய்த முறையின்படி. **பூசனையின் செயல்** - நீராட் டலும் பூச்சூட்டலும் அமுதூட்டலும் ஆம். இவற்றினும் முன்னாட் செயலின் வேறு பாடின்மை தோன்ற **முந்தைமுறை** என்றார். ஆயின், பூசைமுடிபிலே திருமுன்பிற் சொல்லும் சொற்களின் மட்டும் முன்னைநாளினின்றும் சிறிது வேறுபாடுண்மை கருதி **முடிப்பார்** என்று தொடங்கி வரும்பாட்டால் அதனைமட்டும் விரித்துக்கூறும் திறமும் காண்க. அதாவது இன்றையநாளின் வேட்டைவினை - அமுது அமைத்தல் என்றிவற் றின் வேறு பாட்டினை இறைவனுக்குச் சொல்லி யூட்டுவித்த திறமாம்.

**முடிப்பார்** - முடிப்பாராய் - முற்றெச்சம். முடிப்பார் - மொழிந்தார் என வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.

**பூசனை இன் செயல்** - பூசையாகிய தேவர்க்கு இனிய செயல் என்ற குறிப்புமாம். " அவனுடைய செயலெல்லா நமக்கினியவாம் " (806) என்றது காண்க.

**வன சுரர்கள்**—என்பதும் பாடம். 149

799. (வி - ரை) தேவரைத் திண்ணனார் இனிய மொழிகள் சொல்லி அமுதூட் டுந்திறம் இப்பாட்டாற் கூறுகின்றார். 774 உரை பார்க்க.

**இது முன்னையின் நன்றால்** - **முன்னையின்** - முன் நாளில் ஊட்டிய அமுதினும், அமுதின் சுவை முதலிய தன்மையினும். **நன்றால்** - நன்று. **ஆல்** - உறுதிப்பொருட் குறிப்புடனின்றதோர் அசைமொழி. நன்றாகும் வகையைமேல் விரித்துக் கூறுவாராய் எவ்வாறு நன்று எனின் இவ்வாறாகும் என்றார். முன்னாற்கொண்ட **ஏன்மொடு** என்க.

**ஆன்வுறுப்பு** - இனியவை என்று கொள்ளுதற்கு ஆயின-தக்க - உறுப்புக்களின்.

**இறைச்சி அமுது** - இறைச்சியாந்தன்மை நீங்கி அமுதமாந்தன்மையாக்கப்பெற் றது. அடைக்காயமுது என்புழிப்போல இறைச்சியாகிய அமுது என்றலுமாம்.

**அடியேனும் சுவைகண்டேன்** - முன் உண்ட அநுபவத்தாற் போந்த அனுமான அறிவாலன்றி இன்று அடியேனும் கண்டேன் எனவும், தேனும் **உடன் கலந்தது** - இறைச்சி தன்னியல்பின் ஆயின இனிமையேயன்றி மேலும் இனியதாக்குதற்குரிய தேனையும் எனவும் எச்ச உம்மைகளிரண்டும் இறந்தது தழுவியன.

உடன்-உடன் கூட்டி விரவுமாறு. முன்னர்ப் பிழிந்து கலந்தது என்றது காண்க. தித்திக்கும் - கலந்தது ஆதலின் இனியசுவை தரும் என்பது.

மொழிந்தார் - தேவரை அமுதூட்டுதற்காக இம்மொழிகள் சொல்லினர் என்பார் வரும் பாட்டினை "இப்பரிசு திருவமுது செய்வித்து" என்று தொடர்ந்து கூறுதல் பார்க்க. 775-ம் உரையும் காண்க. 150

800. இப்பரிசு திருவமுது செய்வித்துத் தம்முடைய
ஒப்பரிய பூசனைசெய் தந்நெறியி லொழுகுவா
ரெப்பொழுது மேன்மேல்வந் தெழுமன்பாற் காளத்தி
யப்பரெதி ரல்லுறங்கார் பகல்வேட்டை யாடுவார். கருக

(இ - ள்) வெளிப்படை. (திண்ணனார்) இவ்வாறு காளத்தியப்பரைத் திருவமுது செய்வித்துத் தமது ஒப்பரிய பூசனையைச் செய்து அவ்வழியிலே ஒழுகுவாராகி, எப்போதும் மேலும் மேலும் வந்து எழுகின்ற அன்பினாலே காளத்தியப்பருடைய திரு முன்பு இரவில் உறங்கமாட்டார்; பகலில் வேட்டையாடுவார்.

(வி - ரை) தம்முடைய ஒப்பரிய பூசனை - தம்முடைய - தமக்கே உரியதான. தாம் செய்கின்ற என்றலுமாம். ஒப்பரிய - பிற எந்தப் பூசனைகளும் நிகராதற்கு அருமை யான. பூசைப்பொருள்களும், அவை சித்தமாக்கிய வகைகளும், அவை பூசனைக்குப் பயன்பட்ட விதமும், இவை எல்லாவற்றிலும் இவரைத் தூண்டிச் செலுத்திய அன் பின் நிறமும், அதுதான் விளைந்த முறையும் என்ற எவ்வகையாலும் பிற எதனாலும் ஒப்பாதற்கு அரியதாயினமை குறித்தபடி.

அந்நெறியில் ஒழுகுவார், அல்லுறங்கார்; பகல் வேட்டை யாடுவார் - எனக் கூட்டிமுடிக்க. ஒழுகுதற்கு இரவில் உறங்காமலும் பகலில் வேட்டையாடியும் வந்தார் என்க. அந் நெறியில் ஒழுகுதல் - தாம் கேட்டும் கண்டும் அறிந்தவாறு கடைப்பிடித்து மேற் சொல்லியபடி ஒழுகிய அந்நெறி என அகரம் முன்னறிசுட்டு.

எப்பொழுதும் மேன்மேல் வந்து எழும் அன்பால் - இரவில் உறங்காமைக்கு இரவு சேரும் வெவ்விலங்குகளாற் றுன்ப நோமாற் றேவரைக் காக்க மேன்மேல் எழும் அன்பு காரணம். பகலில் வேட்டையாடுதற்கு அவர் பசிப்பாராதலின் ஊன் ஊட்ட வேண்டுமென்னும் அந்த அன்பே காரணம். நாள்தோறும் இடைவிடாது நிகழ்ந்த அல்லுறங்காமையும், பகல் வேட்டையாடுதலும் என்றிவற்றால் இவ்வன்பு சிறிதும் எய்த் தக் குறைவுபடாததுடன் மேன்மேல் அதிகரித்து எழுந்து மேலும் இச்செயல்கள் நிகழக்காரணமாயிற்று.

காளத்தியப்பர் - இறைவன்பேர். அப்பர் - மூலகாரணராகிய கருத்தர். இப்பெய ராலே இவர் வழங்கப்படுதல் காண்க. அவிநாசியப்பர் - அஞ்சை (க்களத்து) அப்பர் என்பனபோலக் காண்க.

அல்லுறங்காமைக்குக் காரணம் 776 - 777-லும், பகல்வேட்டைக்குக் காரணம் 781-லும் உரைத்தனராதலின் அவற்றை மீட்டுங்கூறாது செயலமட்டுங் கூறினர்.

அல்லுறங்கார் - இரண்டாநாட் பகற்பூசையினை இப்பாட்டில் மேலே இப்பரிசு திருவமுது செய்வித்து என்று கூறினராகலின், அதனை அடுத்துவருகின்ற இரவினிற் காவல்செய்யும் தொழிலேயாதலால் அதனை அல்லுறங்கார் என முன்வைத்தோதினர்.

இவ்வாறு அல்லுறங்காமை முதனாட்போல, மேல்வரும் இரண்டாநாள் இரவுமுதல் ஐந்தாநாள் இரவுவரை நான்கு நாட்கள் நிகழ்ந்தன. பின்னர் அம்முறையில் வரும் ஆறு நாளில் முன்னைநாள் வருமிரவு ஒழிந்தகாலை (810)ப் பகல்வேட்டை மட்டுமே நிகழ, அன்று திண்ணப்பனார் கண்ணப்பனாராகி மீளாநெறியில் திருக்காளத்தியப்பரது வலப் பக்கத்தில் அமர்கின்றாராதலின் பகல் வேட்டையாடுவார் என்பதனை அந்நெறியில் ஒழு

கும் ஒழுக்கத்தின் இறுதியிற் பின்வைத்தார். இடைப்பட்ட நாட்களின் நிகழ்ந்த சரிதத்தின் மற்ற நிகழ்ச்சிகளை 802 முதல் 806 வரை உள்ள திருப்பாட்டுக்களாலும், ஆறாந் திருநாள் நிகழ்ச்சிகளை 809 முதல் 819 வரை திருப்பாட்டுக்களாலும் கூறுதல்காண்க.

இரண்டாம்நா ளிரவுமுதல் ஐந்தாநாள் இரவுவரை நான்கிரவும் மூன்றுபகலும் திண்ணனார் செய்த காவலும் பூசையும் முதல்நாள் இரவிலும் இரண்டாநாட் பகலிலும் போலவே நிகழ்ந்தன என்பதை இங்கு **அந்நெறியில் ஒழுகுவார் - அல்லுறங்கார் பகல் வேட்டையாடுவார்** என்று சுருக்கிக் கூறி முடித்துக்கொண்ட திறமும், அவ்வாறே மூன்றாவது நான்காவது ஐந்தாவது நாட்களில் முனிவர் செய்த பூசைகள் இவ்விரண்டா நாட் பகலிற்போலவே நிகழ்ந்தன என்பதை **அந்நெறியில் ஒழுகுவரால்** என்று ஒரு (801) பாட்டாற் கூறிமுடித்துக்கொண்ட திறமும், இவ்விருவர் பூசைகளும் மாறாகக் காணினும் சிவநெறியாகிய அன்புநெறி யொன்றேபற்றியவை என்றுகாட்ட **அந்நெறியி லொழுகுவர்** என்று ஒத்தசொற்றொடர்களால் இரண்டிடத்தும் கூறிய நயமும் காண்க. "ஊனொ டுண்ட னன்றென வூனொ டுண்ட றீதென, வான தொண்ட ரன்பினாற் பேச நின்ற பெற்றியான்" என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரமுஞ் சிந்திக்க.151

*801. மாமுனிவர் நாடோறும் வந்தணைந்து வனவேந்தர்
தாமுயலும் பூசனைக்குச் சாலமிகத் தளர்வெய்தித்
தீமையென வதுநீக்கிச் செப்பியவா கமவிதியா
லாமுறையி லர்ச்சனைசெய் தந்நெறியி லொழுகுவரால். கருஉ

(இ - ள்) வெளிப்படை. பெருமுனிவராகிய சிவகோசரியார் தினந்தோறும் வந்து அணைந்து வனவேந்தராகிய திண்ணனார் செய்யும் பூசனைக்கு மிகமிகத் தளர்வடைந்து, அதனைத்தீமை என்றுகொண்டு ஆகமங்களிற்சொன்ன விதிப்படி நீக்கி, ஆகின்ற முறையினால் அர்ச்சனைசெய்து, **அந்நெறியில் ஒழுகி வருவாராயினர்.**

**(வி - ரை) மா முனிவர்** - திருமுனிவர் (789), பெருமுனிவர் (790) என்றவை பார்க்க.

**நாள்தோறும்** - இங்குக் குறித்தவை திண்ணனார் தேவரைக் கண்டபின் மூன்றாவது நான்காவது நாட்களில் ஒவ்வொரு நாளும்.

**வந்து அணைந்து** - தபோவனத்திலிருந்து திருமலையில் இறைவர் திருமுன்புக்கு வந்துசேர்ந்து. முன்னரும், கொண்டணைந்தார் (784) என்றதுகாண்க.

**முயலும்** - செய்யும் என்ற பொருளில் வந்தது. **பூசனைக்கு** - பூசை காரணமாக. நான்கனுருபு நிமித்த காரண காரியப் பொருளில் வந்தது. **சால மிக** - ஒருபொருட் பன்மொழி ; மிகுதி குறித்தன.

**தீமை என** - உண்மையில் அது தீமையன்றாயினும் தீமை என்றுகொண்டு என்று குறிப்பார் **என** என்றார். அறிவிக்கவன்றி அறியா உளங்கள் என்றபடி பின்னரே இறைவன் அவ(திண்ணனா)ருடைய நிலையிவ்வாறு ; **அறிநீ** என்றருள்செய்து (806) அவர் செயலைக்காட்டக் காண்பாராதலின் இப்போது அதனைத் தீமை என எண்ணி என்க.

**ஆகமம் செப்பிய விதியால்** எனமாற்றுக. இறைவன் செப்பிய ஆகம விதி என்றுரைப்பினு மமையும். **ஆம்முறையில்** - ஆகும் முறை. **ஆம்** - பொருந்திய தீமை நீங்கிப் பவித்திரம் ஆகும் முறையிலும், இறைவனுக்கு உகந்ததாக ஆகும் முறையிலும். **அருச்சனை** இங்குப் பவித்திரமாஞ் செயல் - திருமஞ்சனம் - பூச்சூட்டல் - அமுதூட்டல் - துதிமந்திரம் சொல்லுதல் முதலியனவாகப் பூசனையின் எல்லா அங்கங்களையும் உள்ளடக்கிப் பூசைக்குப் பொதுப் பெயராய் நின்றது. "வருமந் நெறியே யர்ச்சனைசெய் தருளி", "மண்டு காத லருச்சனையின் வைத்தார் மற்றொன் றறிந்திலரால்" என்ற சண்

டீசர் புராண (37 - 49)த்தில் அருச்சனை திருமஞ்சனம் என்ற பொருளில் வந்தது காண்க. ஆருடையபிள்ளையார் புராணத்தில் " அருச்சனை வழிபாடு " (821), " வீழ் புனலாவது, காரு மர்ச்சனை கல்லுறுப் பாதலால் (822) என்றதும் காண்க.

**அந்நெறியில்** - ஆகமங்களில் விதித்தவாறு விதிவிலக்குகளை அறிந்து அவற்றின் படி ஒழுகும் அந்த நெறி. அகரம் பண்டறிசுட்டு. சிவகோசரியார் பூசையினையே நாணன்பாற் கேட்டுத் திண்ணனார், திருக்காளத்தி நாயனார்க் கினியசெய்கை எண்ணிய இவை கொலாமென்று இது கடைப்பிடித்த (759) தொழுதினாதலின் மேற்பாட்டில் அவர் பூசையினையும் **அந்நெறியில் ஒழுதவார்** என்றார். ஆண்டைத்தவையும் காண்க. **நெறி** - முறை. 152

802. நாணனெடு காட்டனும்போய் நாகனுக்குச் சொல்லியபின்
ஊணுமுறக் கமுமின்றி யணங்குறைவா ளையுங்கொண்டு
பேணுமக னர்தம்பால் வந்தெல்லாம் பேதித்துக்
காணுநெறி தங்கள்குறி வாராமற் கைவிட்டார். கருங

(இ - ள்) வெளிப்படை. நாணனெடு காடனும் போய், நிகழ்ந்த செய்திகளை நாகனுக்குச் சொல்லிய பின்னே, உணவும் உறக்கமும் இன்றித் தேவராட்டியையுங் கூட அழைத்துக்கொண்டு வந்து, தம்மை மறந்து இறைவனையே பேணுகின்ற திருமகனாரிடம் தாம் அறிந்தவாறெல்லாம் அவரது மனத்தைப் பேதித்துக் காணுநெறியிலே தாங்கள் எண்ணிய குறியின் வசத்தில் அவர் வாராதபடியால் அவரைக் கைவிட்டு அகன்று போயினர்.

**(வி - ரை) நாணனெடு காடனும்** - இவ்விருவரும் ஒன்று போலவே திண்ணனாரின் அடிபிரியாவிடலைகளான மெய்காவலாளராயினும் அவர்க்குள் நாணனே மூத்தவனும் பலவகையாலும் ஏற்றமுடையவனுமாக உள்ளான்; ஆதலின் **நாணனெடு** என்று ஒடு வருபு நாணன்பாற் சார்த்திச் சிறப்பிற் கூறினார். ஆசிரியனெடு மாணாக்கன் வந்தான் என்பதுபோலக் காண்க. 743ல் உரைத்தவை பார்க்க. **காடனும்**-உம்மை இசைநிறை.

**போய்** - முகலியாற்றுக் கரையின் புதுமலர்க்காவி (763)லிருந்து பல காதங்களில் உள்ள வேட்டைக்காடு சென்று ஏவலாட்களையும் கொண்டு தம் ஊராகிய உடுப்பூருக்குப்போய். 769 பார்க்க.

**ஊணும் உறக்கமும் இன்றி** - தன் மகனார் தேவமயக்கங் கொண்டு உலகை மறந்த நிலையிலிருந்தமை கேட்டுத் தந்தையாகிய நாகன் மிகக் கவலைப்பட்டானதலால் அவனுக்கு உணவு வேட்கை இல்லை, தூக்கமுமில்லையாயின என்க. வேறு கவலையிலாழ்ந்தாருக்கு உணவும் உறக்கமும் வேண்டப்படா தொழிதல் உலகியல்பாம். இங்குப் பிள்ளைப் பேறே கிடைக்கக்கூடாத மிக்க முதுமையில் அருமையிற் பெற்ற ஒரே மகனாரையும், தன்குடி தாங்கவல்லாராயும், மூன்னை நாளிற்றானே தன் மரபிற்கு உரிய வரையாட்சியைக் கைக்கொண்டவராயும் நின்ற மகனாரை இவ்வாறு இழக்கநேர்ந்த நாகனுக்குக் கவலை மிகப் பெரிதாயிற் றென்க. **அணங்குறைவாள்**-தேவராட்டி. 696 பார்க்க.

**பேணும்** - தன்னால் விரும்பிப் போற்றப்படும் என்றும், தன்னைப் பேணுவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த என்றும் உரைப்பாருமுண்டு.

**எல்லாம் பேதித்து** - தாமறிந்த எல்லாவகையாலும் அவரது மனத்தை அந்நிலையினின்றும் திரிவுபடுத்தி. **காணும் நெறி** - தாம் கண்டபடிகாணும் உலக நெறி. தாங்கள் பெறவேண்டிய நன்மை. இதற்கு உலகியலுக்கு வேறுபட்டுத் தோன்றும் அருளியல் நெறியில் நிற்றலால் என்றலுமாம்.

**தங்கள்குறி வாராமை** - தமது மீனவுக் குறியின் முகமாகத் திரும்பி மனதுசெல்லாமையால். **வாராமை** - வாராமையால். தங்கள் எண்ணம் நிறைவேறுதபடியால்

என்பர் மகாலிங்கையர். இவர்களது குறி உலக நிலைக்குறி. திண்ணனாரது குறியோ வேறுயிருந்தது. அது "உண்மை நின்ற பெருகுநிலைக் குறியாளர் அறிவு தன்னே" (திருச் செங்காட்டங்குடி-திருத்தாண்டகம் 3) என்றபடி தேவர்நிலைக் குறியாய்நின்றமையால் இவர்களது குறியில் வாராதுநின்றதாம். இதற்கு இவ்வாறன்றித் தங்கள் தெய்வத்தை முன்னிட்டுப் பார்க்கும் குறி கைவராமல் என்றும், குறியாவது தெய்வம் ஆவேசிக்கச் செய்து தேவராட்டியாயாற் கேட்கும் குறிகளும், மலைகென் முதலியவற்றை எடுத்து ஒற்றை இரட்டைபார்த்தல் முதலியனவுமாம் என்றும் உரைப்பாருமுண்டு. அப் பொருட்கு, அறிந்தவாறெல்லாம் பேதித்தும் இப்போது அவரது நிலைதிரியாமைகண்ட நாகன் முதலியோர் இனிமேல் எக்காலத்திலாவது அவர் தம்வயமாய்த் திரிதல்கூடுமோ என்று குறிபார்த்தனர் என்பர்.

கைவிடுதல் - தொடர்பு அறவே விட்டொழிதல். கைகூடு மென்புழிப்போலக் கை என்பது உபசர்க்கம் போல்வதோர் இடைச்சொல். "கொல்லாது சூலை நோய் குடர்முடக்கித் தீராமை, எல்லாருங் கைவிட்டார் (திருநா - புரா 57), "கடலி னஞ்சமு மண்டவர் கைவிட்டால், உடலி னுள்கிடந் தூர்முனி பண்டமே" (தனித் திருக்குறுந் தொகை 4) முதலிய திருவாக்குக்கள் காண்க. 153

*803. முன்புதிருக் காளத்தி முதல்வனா ருணேக்கால்
இன்புறுவே தகத்திருப்பு போன்னுனற் போல்யாக்கை
தன்பரிசும் வினையிரண்டுஞ் சாருமல மூன்றுமற
அன்புபிழம் பாய்த்திரிவா ரவர்கருத்தி னளவினரோ ? கஞ்ச

(இ - ள்) முன்பு - முன்னர் ; திருக்காளத்தி.....நோக்கால் - திருக்காளத்தியப் பரது அருட்டிரு நோக்கம் எய்தியதனாலே ; இன்புறு.....போல் - இன்பம் உறுகின்ற பரிசன வேதியினால் இரும்பானது பொன்னியினற் போல ; யாக்கை.....அற - யாக்கையின் தன்மையும், வினைகளிரண்டும், சாரும் மலம் மூன்றும் அறுதலால் ; அன்பு பிழம்பாய்த் திரிவார்-முன்னேப் பசுபோத உருவம்மாறிச் சிவபோதவடிவமாகத் திரிவாராகிய திண்ணனார் ; அவர் கருத்தின் அளவினரோ ? நாகனும் தேவராட்டியும் முதலிய வனவேடர்கள் கருத்தின் அளவில் அமைவரோ ? அமையார்.

(வி - ரை) இது கவிக் கூற்று.

முன்பு - திண்ணனார் திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்று காணுதற்கு முன்னே (753). முன்னே நாளில் என்றுரைப்பாருமுண்டு.

முதல்வனார் - பதி - பசுபதி - எல்லார்க்கும் முதல்வர்.

அருள் நோக்கால்-அருட்பார்வை எய்திய காரணத்தாலே. "அருட்டிருநோக்கம்"(753). முதல்வனார் திண்ணனாரை ஆட்கொண்டதிறத்தையும் அதன் விளைவுகளையும் அறு வதித்துத்தாம் கூறுமுகத்தால் இங்கு எடுத்துக்கூறினார். 758-ம் திருப்பாட்டிற் றிண்ண னார் சிவவொளி சீழலில் அன்புருவமாயின இயல்பைக் காரண காரிய விளைவுமுறையில் விளக்கின ஆசிரியர், இங்கு இப்பாட்டால் அந்நிலையின் உள்ளுறையாகிய உண்மை யைத் தாம் கண்டவாறு நாமும் கண்டு உய்யும்பொருட்டுத் தெளிய விரித்து உணர்த்து கின்றார். 806-ம் திருப்பாட்டில் அதனையே இறைவன் சிவகோசரியார் அறியக்காட்டு கின்ற நிலையைக் கூறுவார்.

இன்பு உறு வேதகம் - இன்புஉறு - இம்மையின்பம் பொருந்தச் செய்யும். உறு - உறுவிக்கும் எனப் பிறவினைப்பொருளில் வந்தது. உறு - உறுதற்கேதுவாகிய என்று ரைப்பினுமமையும். வேதகம் - வேதிப்பது-வேறுதன்மைப்படுத்துவது. இரதகுளிகை என்பர். "வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும் வேதித்து விற்றுண்ண லாம்" என்ற தாயுமானார் பாடலுங்காண்க. "வேதி யாதவர் தம்மை வேதிப்பன" (339) என்றவிடத்து அரைத்தவையும் காண்க.

வேதகம் - என்பதை வேதி எனவும் வழங்குவர். அது தரிசனவேதி, பரிசன வேதி என இருவகைப்படும். இங்கு இன்புறு வேதகம் என்றது பரிசனவேதி. தரிசனவேதியாவது தன் பார்வைக்குட்பட்ட பொருளைத் தன்மய மாக்குவது. இது குருவின் உபகாரமாகிய சாட்சுஷீ தீக்கையால் விளைவதாம். கண்ணேறு - கண்ணூறு-கண்மிச்சில் - திருட்டி என உலகவழக்கிற் காணப்படும் விளைவுகளையும் உன்னுக. இங்கு அநஸ் நோக்கமானது மலமூடைய ஆன்மாவை மலநீக்கி வேறுபடுத்திக் கறைநீங்கிய தூய செம்பொன்போல ஆக்குதலின் அதற்கு வேதகத்தின் செயல் உவமிக் கப்பட்டது.

யாக்கை தன்பரிசு - யாக்கை - கட்டப்படுவது. யா - பகுதி ; ஐ - செயப்படு பொருள் விகுதி. நரம்பு முதலியவற்றுற் கட்டப்பட்டமையின் இப்பெயர் பெற்றது. "கால்கொடித் தெலும்பு மூட்டிக் கருநரம் பாக்கை யார்த்துத், தோலுடுத் திதிர மட்டித் தொகுமயிர் மேய்ந்த கூரை" (திருநேரிசை - திருக்கொண்டீச்சரம் - 3) என்ற அப் பர் சுவாமிகள் தேவாரமும், "கட்டு முறுப்பும்" என்ற உதாரணவெண்பாவினுரை யுங் (சிவஞானபோதம் - சூ. 2 - அதி. 1) காண்க. யாக்கை தன்பரிசு - உடம் பின் தன்மை. மாயேயங்களாகிய தநு, கரணம், புவனம், போகம் என்ற நான்கனுள் தனுவும் கரணங்களுமாகிய இரண்டும் இங்குக்குறிக்கப்பட்டன. இவற்றின் பரிசு அறு தலாவது அருளுலகம் பெறுதற்கு முன்பு வினைக்கீடாக வரும் ஏகதேச உணர்வை விளக்கினின்றதுபோ லல்லாது, கண்ணுக்குப் பகல் விளக்குப்போலத் திருவருளாகிய பேரொளியினுள் அடங்கிநிற்றலாம்.

வினை இரண்டாவன - புனருற்பவத்துக்கேதுவாக உயிரால் ஈட்டப்பட்ட அறம் பாவங்கள் ; இவற்றினியல்பைத் "தன்மமோ டதன்ம மாகி" (சூ. 2. 39) என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தாலறிக. இவற்றின் அறுதலாவது இவை தம் பயனுகிய இன்பதுன்பங்களைத் தாராதொழிதல். அதாவது இவற்றின் பயன் உயிரினைப் பற் றுது உடனுழாய் ஒழிதல்.

சாரும்மலம் மூன்று - ஆணவம், மாயை, கன்மம் என்பன. இவற்றுள் ஆணவ மாவது சகசமலம் எனப்படும். "இச்சகசமலம் - ஞானதிரோதகமாய்த், திரவியமாய், அறியாமைக்குணத்ததாய்ச், செம்பிற்களிம்புபோல உயிரின் குற்றமாய், அநாதிபந்த மாய்ச், (சடமுமாய்ப் பலவுமாயி னழிவெய்துமாகலின் அநாதிபந்தமாதல் பெறப்படா மையின்) ஒன்றேயாய், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் எனப்படும் பாகுபாட்டிற் கேதுவாய், உயிர்கள்தோறும் தனித்தனி வெவ்வேறுய் மறைத்து நின்று தத்தங்கால வெல்லையி னீங்குவனவாகிய சத்திகள் பலபலவுடைத்தாய், உயிர்கள் மூன்றவத்தை களும் படுதற்கு மூலகாரணமாய், நித்தமாய், வியாபகமாய், வியாபக உயிர் அணுத் தன்மைப்படுமாறு செய்தலின் ஆணவமென்னும் பெயரித்தாய்ப், பசுத்துவம் பசு காரம் - மிருத்தியு - மூர்ச்சை - மலம் - அஞ்சனம் - அவித்தை - ஆவிருதி - என்றற் றொடக்கத்துக் காரணக்குறிகளுமுடைத்தாய் நிற்பது எனவும், படலம் படர்ந்தகண் ஞாயிற்றின் சந்நிதியினிற்பினும் படலத்தான் அவ்வொளியை யிழந்து இருளினழுந்து மாறுபோல, முதல்வன் சந்நிதியினிற்பினுஞ் சோபானமுறையி னறிவிக்க வறியுந் தன்மைத்தாய உயிர், அநாதியே யறிவித்தால் அறியமாட்டாமையின், அம்மாட்டாமை யான் அவ்வறிவை யிழந்து அறியாமையாய் அழுந்துதலின் அஃதவ்வுயிர்க்குப் பந்த மாயிற்றெனவு முணர்க." என்ற சிவஞானபோதச் (4 சூத் - 2 அதி) சிற்றுரையான் இதன் தன்மை யறியப்படும்.

கன்மம் - இங்கு மூலகன்மம் குறித்தது. இதுவே முதலுற்பவத்திற் சுக்கும தேகம் பெறுதற்கு ஏதுவாயது ; இதனை, "முந்தற்ற - நெல்லுக் குமிதவிடு நீடுசெம் பிற் காளிதமும், தொல்லைக் கடரூண்றத் தோன்றவரு-மெல்லா, மொருபுடை யொப் பாய்த்தா னுள்ளவா றுண்டா, யருவமா யெவ்வயிரு மார்த்தே-யுருவுடைய, மாமணியை

யுள்ளடக்கு மாகாகம் வன்னிதனைத், தானடக்குங் காட்டத் தகுதியும் போன்-ஞானத் தின், கண்ணை மறைத்த கடியதொழி லாணவத்தா, லெண்ணுஞ் செயன்மாண்ட வெவ் வுயிர்க்கு - முண்ணுடிக், கட்புலனுற் காணுர்தங் கைகொடுத்த கோலேபோற், பொற் புடைய மாயப் புணர்ப்பின்கண்-முற்பாற், றநுகரண மும்புவன முந்தந்து" என்னும் போற்றிப் பஃறொடையானும், "செம்புறுகளிம்பென வகாதிமல மூழ்கி" என்னும் செப்பஃறைப்பதி அகிலாண்டநாயகி பதிகச் செய்யுளானும் உணர்க.

மாயையாவது இருவினைப்பய னனுபவித்தற் பொருட்டு வரும் தநுகரண முதலிய வற்றுக்கு முதற் காரணமா யிருப்பது.

இம்மலங்களின் காரியங்களாவன :—மூலமலங் காரியவேறுபாட்டான் எழுவகைப் படும். அவையாவன : *மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்பனவாம். ".....இனி, இருவினையின் காரியமாவன இன்ப துன்ப முதலா யின. மாயையின் காரியமாவன தநுகரண முதலாயின" என்று மாபாடியத்துட் (2 சூ - 2 அ) கூறியவாற்றுன் அறிக.

ஆணவமறுதலாவது ஞாயிற்றின் ஒளிதோன்றியபோது இருள் அடங்கி நிற்றல் போலத் திருவருள் உயிர்களிடத்து வெளிப்பட்டபோது, அதாவது "விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல், மறைய நின்றுளன் மாமணிச் சோதியான், உறவு கோனட் டுணர்வு கயிற்றினுன், முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே"(அப்பர்சுவாமிகள்-தனித் திருக்குறுந்தொகை 10) என்றபடி முன்னின்றபோது, அதனுள் தனது மறைத்தற் சத்தி மடங்கி அடங்கி நிற்றல். மாயை கன்மங்க ளாறுதல் மேல் உரைக்கப்பட்டது.

சாதம் - அராதியே உயிர்களைச் சார்ந்து நிற்கும். முத்தியில் இவை நீங்குதலால் இவை உயிர்க்கு இயற்கையன்றென்பது தெளியப்படும்.

மலம் மூன்றும் அற - மேலே சொன்னவாறு மும்மலங்களும் தத்தம் காரியங் களைச் செய்யா தொழிய.

இங்குத் திண்ணனுர்க்கு, நான் வேட்டையாடி அமுது படைப்பேன்; நான் இர வில் இறைவரைக் காப்பேன் என்ற உணர்வும், உடலும், அகக்கரண புறக்கரணச் செயல்களும் இருந்தன. இவற்றோடு அவர் உலகிற் றிரிந்து செயல் செய்தனர். இவை மும்மல காரியங்க ளன்றே? எனின், அன்று என்றபடியாம். என்னை ? உடலும் உடற்

---

* இவற்றுள், மோகம், மலம் முதலிய அறுவகைக்கட்டு நீங்குங்காறும் ஆன்மாக்க ளோடு சகசமாயுள்ளது. மோக மில்வழி, ஏனை மத முதலியன நிகழாமையின் அது முதன்மைத்தாதல் அறிக. அம்மோகமாவது, கொள்ளற்பாலது இது, தீக்கற்பாலது இதுவென நூன்முகத்தால் உணர்ந்தும், அரிவையர் முதலிய விடயங்களின் மயங்குதற் கேதுவாயது. மதமாவது தன்னுலெய்தப்படும் அரிவையைத் தானே புகழ்ந்து இவ ளின் மேற்பட்ட மகளிர் உலகத்திலில்லை என மதித்தற்கேதுவாயது. அராகமாவது, அவள்பால் மேன்மேலும் ஆசைமிகுதற் கேதுவாயது. கவலையாவது ஊழ்வலியால் அவளைத் தணந்தவழிக் கண்ணீர்விட்டு அழுது பெரிதும் துன்பமுற்றுக் கவலுதற் கேதுவாயது. தாபமாவது அதனுல் உள்வெதும்பித் தபித்தற் கேதுவாயது. வாட்ட மாவது அங்ஙனம் அலறியும் ஆற்றியும் உள்வெதும்புதலான் மூர்ச்சையுற்று உள்ளமும் உடம்பும் வாடுதற்கேதுவாயது. அரிவையர்மேல் வைத்துக் காட்டியது உபலக்கண மாதலின், விடயந்தோறும் இவ்வாறு கண்டு கொள்க. விசித்திரமாவது தான்பெற்ற உலக வாழ்க்கையை நோக்குந்தோறும் இவர் எமக்கு உரிமைச் சுற்றத்தார்; இவள் உரிமையுடைய மனைவி; ஆடை அணி பொன் முதலிய செல்வங்களிற் குறைவில்லை; மனை கழனி முதலிய நிலங்களிற் குறைவில்லை; இனிப் பெறக் கடவதென்னை ? யென வும், என் குடும்பத்தைப் புரப்போர் யாவரெனவும் இவ்வாறு பலவேறு வகைபடச் சிந்தை செய்தற் கேதுவாயது - சிவஞானமாபாடியம் - 2 சூ. 2 அதி.

செயலும், அவ்வுணர்வும் இருத்தும் தம் பொருட்டு **யான்** என்பதும் எனது, எனதுடல் முதலிய உணர்வும் இல்லை. ஊணில்லையேல் நான் இலைப்பேன். உறக்கமில்லையேல் ஓய்வில்லாமையால் களைப்பேன். இரண்டு மில்லையேல் முடிவில்நான் இறப்பேன் என்பன வாதி யுணர்வுகள் இல்லையாயின. "அவனுடைய அறிவெல்லாம் கமையறிய மறிவு" (806) என்றதனால் அவருடைய உணர்வு முழுமையும் தேவரையே அறிந்தன; தம்மை உணரவில்லை. தம்முணர்வு என்னும் **ஆணவம்** அவரிடத்துச் சிவானந்த அனுபவத்துக்கு நிமித்தமால் மாத்திரையாய் நின்றது.

இனி, வேட்டையும் போக்குவரவு புரிதலாதி செயல்களும் இருத்தும் அவை தம் பொருட்டு நிகழவில்லை. "அவனுடைய செயலெல்லாம் கமக்கினியவாம்" (806) என்றதனால் இச்செயல்கள் வினைப்பயன்களைத் தராமலும், மேன்மேலாயாமலும்நின்றன. **வினைக்கீடாக** உடம்புகொண்ட **பிராரத்தம்** அவ்வுடலுள்ளளவும் இருக்குமாயினும், அவர் அன்புபிழம்பாய்த் திரிவாராதலானும், தம் அனுபவத்திற்காக ஐம்புலன் வழியே அறிவு செல்லாமையானும், அஃது உடலூழாதல் மாத்திரையாய் ஒழிந்தது. மூன் ஈட்டப்பட்டு அனுபவிக்க எஞ்சிகின்ற **சஞ்சிதம்** முன்பு முதல்வனுர் அருள்நோக்கால் தீப்பொறிபட்ட பஞ்சுப்பொதிபோல் எரிந்தொழிந்தது. **ஆகாமியம்** இறைபணி நிற்றலால் மேல் ஏறுமல் ஒழிந்தது. எனவே கன்மமாகிய போக்கு வரவு புரிதல் இருத்தும் இருவினைப் பயனில்லையாயற்றன என்க.

**மாயாமல** காரியங்களாய மாயேயங்கள் எனப்படும் உடலும் கரணங்களும் தம்பரிசு வேறுயின. இறைவனது திருமலர்க்கை தீண்டப்பெற்ற சண்டேசர் "மாயை யாக்கையின்மேல் அளவின் றுயர்ந்த **சிவமயமாய்ச்** - சூழ்ந்த **வொளியிற்** றோன்றியது" (சண்டேசர் - புரா - 55) போலவும், "ஊனுயிர் வேறு செய்தா னொடித் தான்மல யுத்த மனே" (திருகொடித்தான்மல - 1) என்று ஆளுடையகம்பிகள் அருளியகில போலவும், இவரது யாக்கை முதல்வனு ரருள்நோக்கால் ஒளியின் கீழல் அன்புருவமாயிற்று. உடலும் உட்கரண புறக்கரணங்களும் உள்ளனவாயினும், அவை செயல் செய்தனவாயினும், இங்கு "நஞ்செய லற்றித்த காமற்ற பின்னுதன், றன்செயல் தானேயென் றுந்தீபற" என்ற நிலையில் திண்ணனுர் சரித்தனராதலின் **மாயாமலம்** ஆன்மாவுக்குத் தன் காரியமாகிய தத்துவங்களைத் தோற்றி விளக்குப்போல வுதவும் செயல் வேண்டப் படுவதில்லையாய் ஒழிந்தது; என இவ்வாறு **மல மூன்றுமற்ற** தன்மை கண்டுகொள்க.

**மல மூன்றும் அற** - இனி, இதற்கு இவ்வாறன்றி, யாக்கைதன் பரிசு என்ற மாயாமலமும், வினையிரண்டும் என்ற கன்மமலமும், சாருமலம் என்றதனால் ஆணவ மலமும் ஆகிய மூன்று மலங்களும் அற என்றுரைப்பாருமுண்டு. **காருமல மொன்றும்** என்பது பாடமாயின், மேற்சூட்டிய மாயை கன்மங்களோடு ஆணவமாகிய சகசமல மொன்றும் எனவுரைத்துக் கொள்க. இவ்வாறு கொள்ளுங்கால், பெத்த நிலையில் ஞான திரோதகமாய் ஆன்மாக்களின் அறிவை மறைத்து நின்ற ஆணவம், முத்திநிலையில் தனது மறைத்தற்சத்தி மடங்கியவழியும், தானழியாது நிற்றல் நோக்கியும், இது பலவாதலின்றி எல்லாவுயிர்களிடத்தும் நிற்கும் பல சத்திகளையுடைய தொன்றே யாதல் நோக்கியும் **ஒன்றும்** என்று சிறப்பித்து இறுதியில் வைத்தார் என்றுரைத்துக் கொள்க.

**அன்பு பிழம்பாதல்** - அன்பே வடிவமாயிருத்தல். 'பொருவிலன் புருவ மானுர்' (753) என்றவிடத்துரைத்தவை பார்க்க. பின்னர் "அவனுடைய வடிவெல்லா நம்பக்க லன்பு" (806) என்பதுங் காண்க.

**நிரிவார்** - சரிப்பவர். **நிரிதல்** - சரித்தல் - போக்கு வரவு புரிதல். உலகில் உடலோடுகூடி உட்கரண புறக்கரணங்களாற் செயல் செய்திருத்தல். **நிரிதல்** - மாறுபடுதல் என்றுகொண்டு **நிரிவார்** - மாறுபடுபவர்; ஆணவத்தோ டத்துவித மாதலின்றி மெய்ஞ் ஞானத் தாணுவினோ டத்துவிதமாய்ச் சார்ந்து மாறுபட்டவர் என்றுரைப்பாருமுண்டு.

**அவர் கருத்தின் அளவினரோ?** அவ்வேடர்களது கருத்தின் அளவினுள் அமைவரோ? அமையார் என்பது. இவரது நிலை அவர்கருதி அளவுபடுத்தும் தன்மையதன்று. அவர்கள் கருதவும் கூடாத நிலையினராதலின் அவர்களறிந்து பேதித்த செயல்களின் குறியில் வாராதவராயினர் என்பது குறிப்பு. இவரது "நிலையிவ்வாறு அறிதீ" என்று இறைவனுர்காட்டச் சிவகோசரியார் கண்டனர் என்பது பின்னர்க்காணப்படும். ஆதலின் அவர்காட்டாக்காற் பிறர் எவர்க்கும் எவ்வாற்றானும் கருத்தினளவுக்குட் படாதாம் என்பது. சாமானியரான அவ்வேடர் கருத்தின் அளவிலே வருவரோ? என்றுரைப்பாருமுண்டு. 154*

804. அந்நிலையி லன்பனு ரறிந்தநெறி பூசிப்ப,
மன்னியவா கமப்படியான் மாமுனிவ ரருச்சித்"திங்
கென்னுடைய நாயகனே! யிதுசெய்தார் தமைக்காணேன்;
உன்னுடைய திருவருளா லொழித்தருள வேண்டு" மென, கடுடு

805. அன்றிரவு கனவின்க ணருண்முனிவர் தம்பாலே
மின்றிகழுஞ் சடைமவுலி வேதியர்தா மெழுந்தருளி
"வன்றிறல்வே டுவனென்று மற்றவனே நீநினையேல்;
நன்றவன்றன் செயறன்னை நாமுரைப்பக் கே"ளென்று, கடுசு

806. "அவனுடைய வடிவெல்லா நம்பக்க லன்"பென்று,
"மவனுடைய வறிவெல்லா நமையறியு மறி"வென்று,
"மவனுடைய செயலெல்லா நமக்கினிய வா"மென்று,
"மவனுடைய நிலையிவ்வா றறிதீ"யென் றருள்செய்வார், கடுள

807. "உனக்கவன்றன் செயல்காட்ட நாமோதீ யொளித்திருந்தா
லெனக்கவன்றன் பரிவிருக்கும் பரிசெல்லாங் காண்கின்றாய்;
மனக்கவலை யொழி" கென்று மாமுனிவர்க் கருள்செய்து
புனற்சடிலத் திருமுடியா ரெழுந்தருளிப் போயினர். கடுஅ

804. (இ - ள்) வெளிப்படை. அந்தநிலையிலே அன்பனாகிய திண்ணனர் அறிந்த நெறியிற் பூசிக்க, நிலை பெற்ற ஆகம விதிப்படி மாமுனிவராகிய சிவகோசரியார் அருச்சித்து, "என்னுடைய நாயகரே! இவ்விடத்து இவ்வநுசிதங்களைச் செய்தாரைக் கண்டிலேன்; உம்முடைய திருவருளினுலே இதனை ஒழித்தருள வேண்டும்" என்று விண்ணப்பித்தாராக, கடுடு

805. (இ - ள்) வெளிப்படை. அன்றிரவிலே அருள்முனிவரிடத்துக் கனவில் மின்னல் போல விளங்குகின்ற சடைமுடியுடைய வேதியராகிய சிவபெருமான் எழுந்தருளி "நீ அவனை வலியதிறலுடையதொரு வேடுவன் என்று நினையாதே; அவனது நன்றுகிய செயலை நாம் சொல்லக் கேட்பாயாக" என்று தொடங்கி, கடுசு

806 (இ - ள்) "அவனுடைய வடிவம் முழுவதும் நம்மிடத்து வைத்த அன்பு மயமேயாம்" என்றும், "அவனுடைய அறிவு முழுவதும் நம்மை யறியும் அறிவேயாம்" என்றும், "அவனுடைய செயல்கள் எவையேயாயினும் அவையெல்லாம் நமக்கினியனவே யாகும்" என்றுங்கூறி, "அவனுடைய நிலை இத்தன்மையுடையது; நீ அறிவாயாக" என்று அருள் செய்வாராய், கடுள

---

*"மாமுனிவர் நாடோறும்" என்ற 801-வது பாட்டு இதன்கீழ்ச் சில பிரதிகளில் காணப்படுகின்றது. வேறுசில பிரதிகளில் அப்பாட்டு இல்லை.

807. (இ - ள்) வெளிப்படை. "நாளைக்கு நீ நம்பக்கல் (அவன் காணுதபடி) ஒளித்திருந்தாயாகில், அவனது செயல்களே நாம் காட்ட (அச்செயல்களினின்று) என்னிடத்து அவனுடைய அன்பு இருக்கும் தன்மையெல்லாம் காண்கின்ற யாகுவை; உனது மனக்கவலையொழிவாயாக!" என்று பெருமுனிவராகிய சிவகோசரியாருக்கு அருளிச் செய்து, கங்கையைத் தரித்த சடைமுடியுடையாராகிய சிவபெருமான் மறைந்தருளினார். கடுஅ

இங்ஙான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன. இவற்றுல் சிவ கோசரியார் மனமிகக்கவன்று இறைவனிடம் விண்ணப்பித்ததும் அதற்கு இறைவன் அருளியதும் கூறினர்.

804. (வி - ரை) அந்நிலையில் - அவ்வேடர்களின் குறியில் வாராமல் அன்பு பிழம்பாய்த் திரிந்து சரிக்கின்றதும், பின்னர் இறைவனுலே சிவகோசரியாருக்கு "அவனுடைய நிலையிவ்வாறு" என்றறிவித்துக் காட்டுகின்ற எற்றமுடையதும் ஆகிய அந்தநிலையில்.

**அன்பனுர்** - அன்பேவடிவமா யுள்ளாராதலின் அன்பனுர் என்றார். அன்பு அன்னுர் - அன்பையே தமக்கு ஒப்பாயுள்ளார் என்றலுமாம். (753 - 803 - 806) பார்க்க.

**அறிந்தநெறி** - தாம்கண்டும் நாணன்பாற் கேட்டும் அறிந்த நெறி.

**மன்னிய** - நிலைபெற்ற. பொருந்திய என்றலுமாம். **ஆகமப்படி** - ஆகமங்களில் இறைவனுக்குரியதென்று விதிக்கப்பட்டபடியாய். **மன்னிய ஆகமம்** - இறைவன் வாக்காதலின் என்றும் அழியாமலும், மாறுபடாமலும், வேறு எந்நூல்களானும் மறுக்கப்படாமலும் நிலைபெற்ற வென்பதாம். அன்பனுர் தாம்கண்ட காட்சியளவையானும், அநுமான அளவையால் நாணன் அறிந்து உரைத்தது கேட்ட உரையளவையானும், **அறிந்தநெறி** பூசித்தார்; முனிவனுர் இறைவன் வாக்காகிய ஆகமங்களால் அறிந்த உரையளவையாற் பூசித்தார் என்க. அன்பனுர் தம் கரணங்கள் சிவகரணங்களாக மாறித் தம்அறிவு அவர் அறிவாக அறிந்து பூசித்தார். முனிவனுர் அவ்வாறன்றித் தம் கரணங்கள் தம்முடையவாகவே நின்று ஆகமம் அறிவிக்கத் தம்மறிவு கொண்டு பூசித்தார். அன்பர் பூசை இறைவர்தாமே அறிந்த பூசை. முனிவர் பூசை இறைவர் ஆகமங்களால் அறிவித்த பூசை. இவ்விரண்டும் இறைவனுக்கு உவப்பாயினும் முனிவர் பூசையின் பயனுக இறைவர் தம்மைத்தாமே அறிவிக்குமுகத்தால் அன்பரன்பினைக் காட்டி யறிவிக்க நின்ற நிலை சிந்திக்கத்தக்கது.

**மாமுனிவர்** - பெருமுனிவர் (790), திருமுனிவர் (789), அந்தணனுர் (798) என்றவை காண்க.

**அருச்சித்து** - திருமஞ்சனம் முதலாகப் பூசையின் எல்லா அங்கங்களையும் குறித்தது. "அருச்சனை செய்து" (801) பார்க்க.

**இங்கு இது செய்தார்** எனக் கூட்டுக. "என்னுடைய நாயகனே" என்ற சொற்கள் இடையிட்டது முனிவர் இச்செயல் பலநாளும் நிகழக் கண்டு சகியாது உள்ளம் பதைத்த நிலை குறித்தது. இந்த "அநுசிதம் கெட்டேன் யார் செய்தார்" (785) என்றதும் காண்க.

**என்னுடைய நாயகனே!** - என்னை அடிமையாக உடைய தலைவனே!. "தமையுடைய தன்னுணர்வார்" (சிவஞானபோதம் - அவையடக்கம்) என்றதற்குத் தம்மையுடையாகிய தலைவனை யுணரும் சித்தாந்த சைவர் என உரைத்தது காண்க. உயிர்க்குயிராகிய ஆன்ம நாயகராதலின் நீர் என் உள்ளத்தை அறிவீர்; தேவரீரது திருமுன்பின் தூய்மை கருதியே இதனை வேண்டுகின்றேன் என்று குறிப்பார் இவ்வாறு கூறினர்.

**இது செய்தார் தமைக் காணேன்** - இது செய்தாரிவர் போலும் என்றனுமானத்தால் "மேவலேர் வரவஞ்சா வேடுவரே யிதுசெய்தார்" (786) என்று கூறியதன்றி இச்செயலே நேரிற் கண்டேனல்லேன் என்றபடி. " அக்கானவன் வரவினைப், பரந்த காட்டிடைப் பார்த்து நடுக்குற்று" என்றது முதலாகக் கண்ணப்பதேவர் திருமறத்தில் (11-ம் திருமுறை) நக்கீரதேவர் அருளியது, காட்டிலே திண்ணனார் பேய்கோட் பட்டார் போலத் திரியும் தன்மை கண்டு அவரே இது செய்தாராதல் வேண்டுமென்று ஐயுற்றுக் கூறியதாதலின் இதனுடன் மாறுபடாமை யறிக. **காணேன்** - கண்டு விலக்கவில்லேன் என்ற பொருளில் வந்த தென்றலும் பொருந்தும். இவ்வாறே திருமறத்திற் கூறுவன பிறவும் இங்குக் கூறுவனவும் பொருந்த உரைத்துக் கொள்க.

**உன்னுடைய திருவருளால் ஒழித்தருள வேண்டும்** - உனது திருவருட் பிரேரணையினால் - சங்கற்பத்தால் - நீக்கக்கடவதன்றி வேறு செயல் இல்லை என்றபடி. ஒழித்தல்-நிகழாமற் செய்தல். **அருள** - எனது வேண்டுதல் நிறைவேறுமாறு அருள, **என்**-என்று பிரார்த்திக்க. 155

805. **(வி - ரை) அன்று இரவு** - திண்ணனார் " திங்கள்சேர் சடையார் தம்மைக் " கண்ட காளினின்று ஐந்தாம் காளிரவு. (810) பார்க்க. 800 - 801 பாட்டுக்களின் கீழ் உரைத்தவையும் காண்க. சிவகோசரியாரும் திண்ணனாரும் காணுமாறு திருவருள் வெளிப்பட இறைவன் சங்கற்பிக்கும் திருநாளாதலின் அவ்வுயர்வு தோன்ற **அன்று** எனச் சுட்டிக் கூறினார்.

**கனவினீகண்** - இறைவன் ஆன்மாக்களின் பக்குவநோக்கிச் சிலர்க்கு நனவிலும் சிலர்க்குக் கனவிலும் வெளிப்பட்டு அருளுவர். மற்றும் பலர்க்குக் கனவு நனவு இரண்டிலும் வெளிப்படார். இங்குப் போலவே திருநாளைப்போவார் நாயனார்க்கு " அவர் வருத்தமெலாந் தீர்ப்பதற்கு, முன்னைநேர்ந்து கனவினிடை முறுவலொடு மருள்செய்வார்"(திருநாளை-புரா-27) என்ற சரிதமும், அதுபோன்ற பிறசரிதங்களும் காண்க. இவ்வாறன்றி ஒருமலத்தார், இருமலத்தார், மும்மலத்தார் என்ற பாகுபாட்டின்படி முறையே தன்மையில் உண்ணின்றும், முன்னிலையில் மான்மழு நாற்றோள் நீலகண்டம் முதலியவற்றுடன் கோலங்காட்டித் தோன்றியும், படர்க்கையிற் குருவாய்க் கனவில் நேரே வந்தும் அருள் புரிதல் உண்மை நூல்களானறியப்படும். இங்குத் திண்ணனார்க்கு கனவில் நேரே அருள்வதனை மறுகாட் காண்போம். "கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி, நனவிலு நாயேற் கருளினை போற்றி " என்ற திருவாசகமும் காண்க.

**அருள்முனிவர்** - எவ்வுயிர்க்கும் அருளையுடையோர். "அந்தணனார்"(898) என்றது காண்க. "அருள வேண்டும்" என அருளை வேண்டினாராதலின் அவ்வருளைப் பெற நிற்கும் முனிவர் என்றது குறிப்பு. " சென்ற வல்லிடைக், கனவி லாதரிக்கு **மந்தணன்** றனக்கு " என்பது நக்கீரர் அருளிய திருமறம்.

**மீன்திகழும் சடைமவுலி வேதியர்தாம்** - இறைவர் முனிவர்பாற் கனவிற் காட்டியருளிய கோலங்கூறியபடி. சடைமுடியுடைய வேதியராய்த் " தாமாந் தன்மை யறிவுறு கோலத் தோடு", முக்கண் திருநீலகண்டம் முதலிய அடையாளங்களுடன் வந்தார் என்பதாம். இத்திருவடையாளங்களுள் முதன்மை பெறுஞ் சிறப்பு நோக்கிச் சடைமவுலியைக்கூறி அது முதலாக ஏனையவற்றை உடன்கொள்ளவைத்தார். இச்சிறப்புப்பற்றியே கபர்த்திநேசம : என்ற நாமத்தாற் சிவஷ்டோத்தரம் அதிக்கின்றது. முனிவர்க்கு இறைவர் கனவிற் காட்டிய இத்திருக்கோலத்தைச் "சீரார் திருக்காளத்தியு ளப்பன், பிறையணி யிலங்கு பின்னுபுன் **சடைமுடிக்**, கறையணி மிடற்றுக் கனன்மழுத் தடக்கை, நெற்றி நாட்டத்து நிறைநீற் றழகு, மொற்றை மால்விடை யுமை யொரு மருங்கிற், றிருவுருக் காட்டி யருளி " என்று கண்ணப்பதேவர் திருமறத்தில் சடையை முன்வைத்துத் தொடங்கிக்கூறினார் நக்கீரதேவர். **மீன்திகழும் சடை**-மின்

**நாளை** - அன்றிரவு விடிய வரும்முறை ஆறும் நாள் குறித்தது. (810).

**ஒளித்திருந்தால்** - திண்ணனார் இவரைக் காணாதபடியும், இவர் அவரைக் காணுமாறும் உள்ளநிலையில் ஒளித்திருத்தல் குறித்தது. பின்னர்க் காளத்தியப்பரின் திருக்கண்ணில் உதிரங் கண்டு திண்ணனார் "யாரிது செய்தார்? இம்மலையிடை எனக்கு மாறா மீளிவெம் மறவர் செய்தா ருளர்கொலோ?" என்று வில் எடுத்து அம்பும் தெரிந்து கொண்டு (815 - 816) மனமழிந்து கடுஞ்சினத்தோடு தேடும்போது முனிவர் அவர்க்கெதிர் காணப்படின் பொல்லாது என்று இறைவர் முனிவரை ஒளித்திருந்து காணுமாறு கட்டளையிட்டனர் என்க.

**எனக்கு அவன்றன் பரிவு இருக்கும் பரிசு** - என்னிடத்து அவனது அன்பு இருக்கின்ற தன்மை. **எனக்கு** - என்பால் - வேற்றுமை மயக்கம். **பரிசு**-தன்மை-நிலை. இவை 806ல் கூறிய பரிசுகள். **எல்லாம்** - இப்பரிசுகளைக் காட்டும் செயல்கள் 812 - 826 வரை உள்ள திருப்பாட்டுக்களால் உரைக்கப்பட்டன.

**காட்டக் காண்கின்றாய்**-செயலின் வாயிலாக நாம் காட்ட நீ காண்பாய். மேற்பாட்டில் "இவ்வாறு ; அறி நீ" என்றருளுவார் அறிவித்துக் காட்டும்முறை இப்பாட்டாற் கூறினார். நாம் காட்டக் காண்பாயாதலின் பரிவின் நிலை அறிவாய் என்றபடி. "காட்டு வித்தா லாரொருவர் காணா தாரே காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" என்பது தனித் திருத்தாண்டகம்.

**செயல் காட்டப் பரிவிருக்கும் பரிசு எல்லாம் காண்கின்றாய்** - பரிவின் பரிசினை-அன்பின் நிலையை - அது காரணமாக வெளிப்படும் செயலாலன்றி உணரலாகாமையால், செயல்களைக் காட்டவே அவைபற்றி அவற்றைத் தூண்டிய பரிவின் பரிசு கண்டறிந்துகொள் என்றதாம். "அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர், புன்கணீர் பூச றரும்" (குறள்) என்றது காண்க. இதன்படி செயல்களின் வாயிலாகக் காட்டப் பரிவின் பரிசு ஞானமா முனிவர் **கண்டார்** என 828-ல் உரைத்ததும் காண்க.

**காண்கின்றாய்** - காண்பாய். தெளிவுபற்றி நிகழ்கால வினைமுற்று எதிர்காலங் குறித்துவந்தது. "வாராக் காலத்து வினைச்சொற் கிளவி, இறப்பினு நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்று, மியற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை" (சொல் - வினை - 48) என்ற தொல்காப்பியத்தா னுணர்க.

**ஒழிக** - ஈற்றகரங் குறைந்து நின்றது. **மனக்கவலை ஒழிக** - நீ மனத்துட்கொண்ட கவலையை நீக்குவாயாக. இவரது மனக்கவலை 786 - 804 பாட்டுக்களில் உரைக்கப்பட்டது. முன்னை மூன்று நாள்களிலும் இச்செயல்களை அநுசிதமென்று கொண்டு தாமே அவற்றைமாற்றிப் பழுது புகுந்தது தீரப் பவித்திரமாஞ் செயல் செய்து பூசித்த முனிவர் அற்றைநாளில் "உன்னுடைய திருவருளால் ஒழித்தருள வேண்டுமென"ப் பிரார்த்தித்தனர். "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான், மனக்கவலை மாற்ற லரிது" (குறள்) என்றபடி, அவனருளை நாடி அவன்றாள் சிந்தித்தாராதலின் அன்றிரவே மனக்கவலை ஒழிக என்று இறைவர் அருளினார் என்க.

**மறைமுனிவர்க்கு** - அந்த முனிவர்க்கு எனச் சுட்டு விரித்துரைக்க.

**புனற்சடிலத் திருமுடியார்** - முன்னர் "மின்றிகழும் சடைமவுலி வேதியர்" (805) என்றார். மின்போலத் திகழும் சடையுடையார் என்றதனால் முனிவர்க்கு விளக்கஞ் செய்யவந்தமை குறிக்கப்பட்டது. இங்குப் **புனற்சடிலத்திருமுடியார்** என்றதனால் தம்மை நோக்கித் தவஞ்செய்த பகீரதற்காய்க் கங்கையைத் தாங்கி உதவியதுபோல, மறைமுனிவர்க்கு அவரது கவலை நீங்கக் கண்ணும் உதிரமும் காட்டி அவ்வழியே அறிவு கொளுத்தி உதவினார் என்பது குறிக்கப்பட்டது. வேதார்த்தங்களாய் விரிந்து கிடக்கும் ஆகமங்கள் சடை என்றும், அவ்வாகமார்த்தங்களை விளக்கிவல்ல அருள் கங்கை என்றும் கூறுவாருமுண்டு.

808. கனவுநிலை நீங்கியபின் விழித்துணர்ந்து கங்குலிடைப்
புனைதவத்து மாமுனிவர் புலர்வளவுங் கண்டுயிலார்
மனமுறுமற் புதமாகி வரும்பயமு முடனுகித்
தூனைபுரவித் தனித்தேர்மேற் றோன்றுவான் கதிர்தோன்ற, கருகூ

*809. முன்னைநாள் போல்வந்து திருமுகலிப் புனன்மூழ்கிப்,
பன்முறையுந் தம்பிரா னருள்செய்த படிநினைந்து,
மன்னுதிருக் காளத்தி மலையேறி, முன்புபோற்
பிஞ்ஞகனைப் பூசித்துப் பின்பாக வொளித்திருந்தார். கசுo

808. (இ - ள்) புனைதவத்து மாமுனிவர்-கொள்ளப்பட்ட தவத்திற் சிறந்த பெரு முனிவராகிய சிவகோசரியார்; கனவு.....உணர்ந்து - கனவாகிய நிலையினின்றும் நீங்கியபின் விழிப்பு நிலையினை யடைந்து (கனவிற் கண்ட பொருளை) உணர்ந்து; புலர்வளவும் கங்குலிடைக் கண்துயிலார் - போது விடியுமளவும் அவ்விரவில் தூங்காத வராகி; மனமுறும்.....உடனுகி - மனத்தில் மிக்க அற்புதமும், (அது முடிகியதனால்) வரும் பயமும் உடன் உடையராய்; தூனைபுரவி.....தோன்ற - வேகமுடைய குதிரை பூண்ட தனித் தேரின் மேல் தோன்றும் ஞாயிற்றின் கதிர்கள் தோன்றிய அளவிலே,

809. (இ - ள்) வெளிப்படை. முன்னளிற்போல வந்து திருமுகலியின் நீரின் மூழ்கித் தமக்குப் பெருமானுகிய காளத்தியப்பர் கனவில் அருள் செய்தபடியினைப் பலமுறையும் நினைந்துகொண்டே, நிலைபெற்ற திருக்காளத்தி மலையில் ஏறி முன்பு போல அக்கடவுளைப் பூசித்துப் பின்புறமாக ஒளித்திருந்தார். கசுo

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

808. (வி - ரை) **கனவுநிலை** - சொப்பனவத்தை என்பர். **பின் விழித்தெழுந்து** - அந்நிலையினின்றும் நீங்கி விழித்திருக்கும்நிலையினை - சாக்கிராவத்தையை - அடைந்து. சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்பன உடலில் ஆன்மாவின் அவத்தைபேதங்கள் எனவும், இவற்றில் முறையே புருவநடு, கழுத்து, இருதயம், நாபி மூலாதாரம் என்ற இடங்களில் ஆன்மாத் தங்குமெனவும் கூறுவர். **கனவுநிலையில்** கண்டத்தானத்தில் நின்று சூக்கும உடலின் வழி ஆன்மா தொழில் செய்யும். பின்னர் விழிப்பு நிலையடையும் போது புருவநடுவில் நின்று தூல உடலின் வழி ஐம்பொறி களாலும் உணர்ந்து தொழிலியற்றும்.

**உணர்ந்து** - கனவில் இறைவனருளியவற்றை நனவில் உணர்ந்து. நனவிற் கண்டபலவற்றையும் கனவில் மறந்தும், கனவிற் கண்டபலவற்றையும் நனவில் உணரா மலும் இருப்பது உயிரியல்பாம். இங்கு அவ்வாறன்றிக் கனவில் இறைவன்அருளியவை முற்றும் முனிவர் நனவில் உணர்ந்தார் என்பதாம்.

**புலர்வளவும் கங்குலிடைக் கண்டுயிலார்** என மாற்றுக. கனவு கண்டபின் உறங்கினவர் நற்கனவின் பயனை இழப்பர் என்பது ஒருமரபு. இரவின் கடையாமத்திற் கண்ட கனவு உடன் பலன்தரும் என்பர். உடனே பலன் தந்ததாகலின் இது விடியற் காலையிற் கண்டதென்று ஊகிக்கப்படும். ஆதலின் இறைவனருளை எதிர்பார்த்து விழித்திருந்தனர் என்பதுமாம். இரவில் நான்காம் சாமத்திலும் பின்னரும் உறங்க லாகாது என்பதும் விதி. "வைகறை யாமம் துயிலெழுந்து" என்ற ஆசாரக் கோவை காண்க. "மறையவ னறிவுற் றெழுந்து" என்ற திருமறமும் சிந்திக்க. அற்புதமும் பயமும் துயிலாமைக்குக் காரணமாம் என்றலுமொன்று.

**புனைதவத்து - புனைதல்** - மேற்கொள்ளுதல் - செய்தல். **தவத்துப்புனை** - என மாற்றித் தவத்தினை மேற்கொண்ட என்றுரைப்பாருமுண்டு.

மனம்உறும் அற்புதம் - அற்புதம் - இன்னதென்றறியப்படாததோர் பெருமித உணர்ச்சி. இங்குத் தாம் அறியாதநிலையில் இறைவனருளியபடி விளங்கிய வேடராகிய திண்ணனாரது பெருமையும், அதனை இறைவனே முன்னின்று தம்மை அறியவைத்து அன்பர் கூட்டத்துச் சேர்க்கும் அருமையும் **அற்புதமெனப்பட்டன.** "அத்த னுண்டு தன் னடியரிற் கூட்டிய அற்புதமறியேனே" என்ற திருவாசகக் கருத்தும்காண்க.

**வநம்பயமும் உடன்ஆகி** - பயம் - முன்உளதாகிய அற்புதங் காரணமாக அதனால் விளைந்தது ஆதலின் **வநம்** பயம் என்றும், **உடன்ஆகி** என்றும் கூறினார். இறைவன் அறிவிக்க அறிந்தவையும், இனிக்காட்டக் காண்பவையும் முன்னர் அறியவாராது மாறுகப் பலபலவும் எண்ணியும் செய்தும் வரகேர்ந்ததே எனும் நினைவு **பயத்தை** விளைத்தது. வேடனாரது பெருமையையும் அதனைநோக்கத் தமது சிறுமையையும் பிழைகளையும் அப்பிழைபாராது பொறுத்து இறைவன் அருளியவற்றையும் உணர்ந்தபோது **பயம்** வந்தது. "எத்தனையு மரியநீ யெளியை யாளு யெனையாண்டு கொண்டிரங்கியேன்று கொண்டாய், பித்தனேன் பேதையேன் பேயே னுயேன் பிழைத்தனகௌத்தனையும் பொறுத்தா யன்றே!, யித்தனையு மெம்பரமோ வைய! வையோ? வெம்பெருமான் நிருக்கருணை யிருந்த வாறே" (தனித்திருத்தாண்டகம்) என்றது காண்க. **அற்புதம்** என்றதற்கு வேடரது தீயசெயல் சிவபெருமானுக்கு இப்படியு மிருந்ததோ என்ற ஆச்சரியம் எனவும், சாமானிய வேடர் தேவர்கட்குமரிய நிலையினையும் சிவபெருமானுற் பாராட்டப்படும் நிலையினையும் அடைந்தனரே என்று எண்ணிய ஆச்சரியம் எனவும் உரைப்பாருமுண்டு.

இவ்வாறு அற்புதமும் பயமும் உடனுகிய மனநிலையோடு முனிவர் அக்காளில் இதன்மேற் செயல்களையும் செய்தனர் என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டி உரைத்துக் கொள்க. உடனுகி - வந்து - மூழ்கி - நினைந்து - எறி - பூசித்து - ஒளித்து - இருந்தார் என்று முடிக்க. இம்மனநிலையுடனே இச்செயல்க ளொவ்வொன்றும் நிகழ்ந்தன என்பதாம். இதனையே நக்கீரதேவர் "மறையவ னறிவுற் றெழுந்து, மனமிகக் கூசி வைகறைக் குளித்தது, தான்முன் செய்வதோர், பொற்புடைப் பூசனை புகழ்தரச் செய்து, தோன்றி வண்ண மிருந்தன னுக" என்று திருமுறத்துள் அருளினர்.

**துனைபுரவி** - வேகமாகச் செல்லும் குதிரை. **துனை** - விரைவு. "உராத்துனைத் தேர்த்தென" (சிவஞானபோதம்). **தோன்றுவான்** என எதிர்கால வினையாலணையும் பெயராற் கூறினமையாலும், தோன்றுவான் தோன்ற என்னுது **கதிர் தோன்ற** என்றமையாலும் ஞாயிறு உதிக்காது அவனது கதிர்களின் ரேற்றம் மட்டும் காணத் தொடங்கி யென்று தெரிகின்ரேரும். இதனை **அநுஷ்ணோதயம்** எனவும், ஞாயிற்றின்ரேற்றத்தைச் **சூரியோதயம்** எனவும் கூறுவர். "கண்ணு நிரவி கதிர்வந்து கார்கரப்ப", "அருணனிர் திரன்றிசை யணுகின னிருள்போ யகன்றது" என்ற திருவாசகங்கள் காண்க. எனவே, ஞாயிறு தோன்றச் சில நாழிகைகளின் முன்பே முனிவர் சென்று புனல்மூழ்கிக் கடன்முடித்தார் என்பதாம். இதனை "வைகறைக் குளித்து" என்று மேற்காட்டிய திருமறம் உணர்த்திற்று.

**கனைபுரவி**—என்பதும் பாடம். 159

809. (வி - ரை) **முன்னைநாள்போல்** - முன்னுட்களிற் செய்த வழக்கம்போல் என்க. இவை திண்ணனார் இறைவரைக் கண்டு பூசித்த இரண்டாம் நாளுக்கு முந்திய நாள்கள். நாள்-சாதியொருமை. **முன்னைநாள்**-முதல்நாள் என்பர் சுப்பராய செட்டியார். **வந்து**-தவஞ் செய்யும் வனத்திலிருந்து திருமலையினடிவாரத்துக்கு வந்து. **முழ்கிவந்து** என்றுகூட்டியுரைத்தலுமாம்.

**தம்பிரான் அநுள் செய்தபடி(யைப்) பன்முறையும் நினைந்து** - என மாற்றுக. பன்முறையும் நினைதலாவது பலவாற்றானும் வைத்துச் சிந்தித்தல். இவைமுன் **அற்புதமும் வநம் பயமும் உடனுகி** என்ற விடத்துரைக்கப்பட்டன.

**வந்து - முழ்கி - ஏறி - பூசித்து** - இவை யாவும் முன்னோர்களிற்போல நிகழ்ந்தன. மூழ்கியபின் பூசனைக்குரிய பூ - நீர் முதலிய பொருள்களைத் தேடுதலும், மலையேறிச் செல்லுதலும் திருவருட்டிறத்தினைச் சிந்தித்த வண்ணமாகவே நிகழ்ந்தன என்பார் நினைந்து - ஏறி என்றார்.

**முன்புபோற் பூசித்து** - "முன்னோர்கள் போல்வந்து" என்றலே யமையும்; மீண்டும் முன்புபோல் என்றல் வேண்டா எனின், அற்றன்று; இக்காட் பூசையில்முன்னுள்களிற் செய்ததுபோல இறைச்சியும் எலும்புங் கல்லையும் திருவுலகால் மாற்றுதலும், மீண்டும் புனன்மூழ்கி வருதலும், பவித்திரமாஞ் செயல் புரிதலும் அது பற்றிய பிரார்த்தனையும் நிகழவில்லை எனவும், திருவருளின் றிறத்தினை எண்ணியுருகிச் சாந்தி பெற்று மனம் இருந்தது எனவும் குறிப்பார் மீண்டும் **முன்புபோல்** என்றார் என்பதாம். ஆனால் இக்காளிற் றிருமுன்பு கிடந்த இறைச்சி முதலியவற்றை மாற்றினரோ? அன்றோ? எனின் மாற்றினர் என்றே கொள்க. ஆயின் அவற்றை இறைவன் தமக்கு இனியவாமென்று அறிவித்தமையின் அவை அநுசிதமென்று உணர்தலின்றி ஏனை நின்மாலியங்களோ டொப்பக் கண்டு அகற்றிய பின்னர் அக்காட்பூசையினை மூடித்தனர் என்பது ஊகிக்கின்றது. இக்கருத்துத் "தான் முனி செய்வதோர், பொற்புடைப் பூசை புகழ்தரச் செய்து" என்ற திருமறத்தால் விளங்குதல்காண்க. இவ்வாறன்றி முன்னோர்காட்களிற் செய்தபூசை தாம் அநுசிதம் என்று கொண்டதற்குப் பிராயச்சித்தமென்றும், அன்று செய்தது அநுசிதமல்லாததை அநுசிதமென்ற தமது பிழையைப் போக்கச்செய்த பிராயச்சித்தமென்றும்கூறி அன்றையகாளிலும் பவித்திரபூசை செய்தனர் என்று உரைப்பாருமுண்டு. அஃதுரையன்றென வுணர்க.

**பின்பாக** - பின்புறமாக. காளத்திநாதருக்குப் பின்புறமிருந்த மரங்களின் மறைவில் என்பர் மகாலிங்கையர். **பின்பு ஆக** எனப்பிரித்துப் பின்பு தமக்கு ஆக்கமுளதாக என்றலுமாம். ஆக்கமாவது சிவனருள்தெறிவிளங்கக் கண்டுய்தல்.

இப்பாட்டாற் சிவகோசரியார் ஆறும் காளிற் பூசை முடித்த திறங் கூறப்பட்டது. இவை முன்னோர்கள்போல் நிகழ்ந்தன என்றலே யமையும்; வந்து மூழ்கி ஏறி என விரித்துக் கூறியது மிகையாம் பிறவெனின்; அற்றன்று. அந்நான்கு நாளினும் பூசித்தல் முதலியவற்றில் முனிவர் பெருங்கவலை கொண்டனர்; இக்காளிலோ வெனின், "மனக் கவலை ஒழிக" என இறைவர் ஆணையிட அறிந்தாராதலின், கவலைக்கிடனின்றிச் சாந்தி பெற்ற மனத்தோடு இவை நிகழ்ந்தன என்பார் இச்செயல்களை வேறு வேறு பிரித்துக் கூறினர். அன்றியும், பூசனைக் கேற்பக் கொய்த மலரும் புனலும் முதலான கொண்டு அணைந்தார் (784), வந்து திருமலையின்கண் வானவர் நாயகர் மருங்கு...சிந்தை நியமத்தோடு செல்கின்றார் (785) எனக் கூறியதன்றி வருதல் - மூழ்குதல் - மலையேறுதலாதிய செயல்களை முன்னர் விரித்துக் கூறுமையும் உணரப்படும். 160

வேறு

810. கருமுகி லென்ன நின்ற கண்படா வில்லி யார்தாம்
வருமுறை யாறு நாளில் வருமிர வொழிந்த காலை
யருமறை முனிவ னுர்வந் தணைவதன் முன்னம் போகித்,
தருமுறை முன்பு போலத் தனிப்பெரு வேட்டை யாடி, ககூக

811. மாறிலா வமுது நல்ல மஞ்சனப் புனலுஞ் சென்னி
யேறுநாண் மலரும் வெவ்வே றியல்பினி லமைத்துக் கொண்டு,

தேறுவார்க் கமுதமான செல்வனூர் திருக்கா ளத்தி
யாறுசேர் சடையார் தம்மை யணுக,வந் தணையா நின்றூர், ககூ2

812. "இத்தனை பொழுது தாழ்த்தே" னெனவிரைந் தேகுவார் முன்
மொய்த்தபல் சகுன மெல்லா முறைமுறை தீங்கு செய்ய,
"இத்தகு தீய புட்க ளீண்டமு னுதிரங் காட்டும்;
அத்தனுக்கென்கொல் கெட்டேன்! அடுத்த?"தென் றணையும்போதில்,

813. அண்ணலார் திருக்கா ளத்தி யடிகளார் முனிவ னுர்க்குத்
திண்ணனூர் பரிவு காட்டத் திருநய னத்தி லொன்று
துண்ணென வுதிரம் பாய விருந்தனர்; தூரத் தேயவ்
வண்ணவெஞ் சிலையார் கண்டு வல்விரைந் தோடி வந்தார். ககூச

810. (இ - ள்) முறைவரும் ஆறும்காளில் - (தாம் இறைவரைக் கண்டபின்) முறையாகவரும் ஆறும்காளிலே; வரும் இரவு ஒழிந்தகாலை - மாறிவரும் இரவு நீங்கிய புலர்காலையில்; அருமறை.....முன்னம் - அரியமறையில் வல்ல முனிவர் வந்து அணைவதற்கு முன்னே; கருமுகில்.....தாம் - கரியமுகில்போல நின்ற கண்ணுயில் கொள்ளாத வில்லினையேந்திய திண்ணனூர்; போகி - திருமுன்பு நின்றும் நீங்கிப் போய்; தருமுறை...ஆடி - ஊனமுதம் தரும் முறையில் முன்புபோலத் தனித்த பெரியவேட்டையினை ஆடி, ககூக

811. (இ - ள்) மாறில்...மலரும் - நிகரில்லாத ஊனமுதத்தினையும், நல்லதிரு மஞ்சன நீரினையும், சென்னியில் ஏறும் புதியமலர்களையும்; வெவ்வேறு...கொண்டு - வெவ்வேறுந்தன்மையில் அமைத்துக் கொண்டு; தேறுவார்க்கு.....அணையாநின்றூர் - தெளிந்து தேறுகின்ற அன்பர்களுக்கு அமுதம்போன்ற செல்வனாரும் திருக்காளத்தியில் எழுந்தருளியவருமாகிய கங்கை ஆறு சேர்ந்த சடையாரை அணுகுதற்கு வந்து அணைகின்றவராகி, ககூஉ

812. (இ - ள்) "இத்தனை.....முன் - "இவ்வளவு நேரம் தாழ்த்து விட்டேன்" என்று எண்ணி விரைவாகச் செல்பவரின் முன்னே; மொய்த்த...செய்ய - கூடிய பல சகுனங்கள் யாவையும் தீமையுளதாம் என்று அறிவித்தலைச் செய்ய; "இத்தகு... அடுத்தது?" என்று - "தீமைகாட்டும் இத்தகைய சகுனங்கள் முன்னே நெருங்கி இரத்தக் குறியைக் காட்டுகின்றன; அதனால் எனது அத்தனாருக்கு அடுத்ததுயாதோ? ஓ! கெட்டேன்!" என்று; அணையும்போதில் - அணுகின்றபோது, ககூங

813. (இ - ள்) அண்ணலார்...காட்ட - பெருமையுடைய காளத்தியப்பர் சிவ கோசரி முனிவனாருக்குத் திண்ணனாரது அன்பின் நிறத்தினைக் காட்டுவதற்காக; திரு நயனத்தில்...இருந்தனர் - தமது திருக்கண்களுள் ஒன்றிலே கண்ணென்று இரத்தம் பாய்ந்து வெளியே ஓடி வழியுமாறு காட்டி யிருந்தனராக; அவ்வண்ண வெஞ் சிலையார் - அந்த அழகிய கொடிய வில்லினையுடைய திண்ணனூர்; தூரத்தே கண்டு - அதனைத் தூரத்திற் கண்டு; வல்விரைந்து ஓடிவந்தார் - மிக விரைவாக ஓடிவந்தனர்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

810. (வி - ரை) கருமுகில் என்ன - கரியமுகில்போல. கருக்கொண்ட மேகம் என்று கொண்டு அருள்நீரைக் கருக்கொண்டு பொழியும் அன்பு மேகம் என்று கொள்ளின் உருவும் பயனும் பற்றிவந்த உவமை. என்ன - உவமவுருபு - மேகம் உல கோம்புதல்போல விலங்குகள் வாமம் குடுமித்தேவரைக் காவல் புரிதலின் கருமுகில் என்றூர் எனவும், பண்புந் தொழிலும் பற்றிவந்த உவமை எனவும் கூறுவர் சுப்பராயச்

செட்டியார். கருவரை காளமேக மேந்திய தென்ன (664) என்று தொடக்கத்திற் கூறினர்.

**நின்ற கண்படாவில்லியார்** - " அல்லுறங்கார் " (800) என்றபடி முன் ஐந்து நாட்களிலும் இரவிற் றுயில்கொள்ளாமல் வில் ஏந்திக் காவல் புரிந்தது குறிக்க இவ்வாறு கூறினர். திருக்கையிற் சிலையுந் தாங்கி, மைவரை யென்ன வையர் மருங்கு நின் றகலா நின்றார் (776), நேர் பெறநோக்கி நின்றார் (777) என முன்னரும் கூறினர்.

**வரும் முறை ஆறும் நாளில்** - திண்ணனார் திருக்காளத்தியப்பரைக் கண்டு அவரருணோக்கால் சிவத்தன்மை பெற்றுப் பூசித்து வரும் அம்முறையில் ஆறுவது நாளின் கண். ஆறுநாளாகிய இந்நாளே திண்ணனார் சிவப்பேறடைந்த திருநாள் என்பது குறிப்பார் ஐந்தா நாளிர வென்னுது இவ்வாறு கூறினர். **வருமுறை** - என்பதற்கு முறையாய் - கிரமப்படி - வரும் எனவும், நாடோறும் நடந்து வரும் முறைப்படி எனவும், திருவருள் வெளிப்பாடு வரும் எனவும் பலவாறு உரை கூறுவாருமுண்டு.

**நாளில்** - நாளிற் காலை என்று கூட்டுக. **வரும்** - மாறிமாறி வரும். " இரவு போம் பகல் வருமாகில் "-திருவிசைப்பா. **ஆறும் நாளில்** - ஆறு நாளிற் கண்ணப்பர் பேறடைந்தனர் என்பது " நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்லன் " என்ற பட்டினத்தடிகள் திருவாக்கானு முணரப்படும்.

**இரவு ஒழிந்த காலை** - இராப்போது கழிய மேல்வரும் வைகறை - விடியற்காலம் குறித்தது.

**அருமறை** என்றும், **அருமனிவர்** என்றும் கூட்டியுரைக்க நின்றது. முன்னைநாட்களில் உண்மை விளங்காது மறைக்கப்பட்டு அன்று மறை நீக்கி விளக்கம்பெற நின்றவர் என்ற குறிப்பால் இங்கு **மறைமுனிவர்** என்றார். திண்ணனாரது அன்புநிலை யின்னதென்று கூறுது " நாளைக்குக் காட்டுவோம் காண்பாய் " என்று மறை மொழியால் இறைவர் அருளிஞராதலின் அம்மறை மொழிகளையே போற்றிய மனன நிலை என்று இங்கு விசேடவுரை காண்பாருமுண்டு.

**அணைவதன் முன்னம் போகி** - இங்குத் திண்ணனாரது செயல்களை யெல்லாம் ஒரே தொடர்பாய்க்கூறி முடித்துக் காட்டவேண்டுமென்னுங் கருத்தால், ஆசிரியர், முனிவனாரது செயல்களைக் கனவுணர்ச்சி முதல் பின்பாக ஒளித்திருந்துகாண அமைந்தவரை ஒரு சேரத் தொடர்ந்து மேல் உரைத்து முடித்துக் கொண்டனர். ஆதலின் அதற்கிடையில் திண்ணனார் வைகறையில், உருமிகத் தெரியாப்போதில், வேட்டைக்குச் செல்லும் செயல் நிகழ்ந்த அதனைச் சரிதத்தின் காலநிகழ்ச்சி முறையில் ஆங்குக் கூறுது இங்கு வேறுகத் தொடங்கிக் கொண்டனர். திண்ணனாரது அந்நாட் செயல்களையும் இடைப்பிறவாலின்றித் தொடர்ந்து கூறுதலும் ஆசிரியர் கருத்தாம்.

**தருமுறை முன்புபோல** - முன்பு தருமுறைபோல என்க. ஊனமுதைத் தரும் எனச் செயப்படுபொருள் வருவிக்க.

**முறை** - இம்முறைகள், வில்லும் தெரிந்து கொண்ட அம்பும் கொண்டு போதல், வைகறையிற் போதுதல், தொழுது போதல் முதலாக 782ல் கூறியனவும், வேட்டை செய்வினை முறையாக 792-793-ல் கூறியனவும் ஆம். முனிவனார் " முன்னைநாள் போல்வந்து.....முன்புபோற் பூசித்தார் " என்றவாறே, திண்ணனாரும் **முன்புபோல்** வேட்டையாடினர் என்ற நயமும் காண்க.

**தனிப்பெரு வேட்டை** - ஒப்பற்ற பெரிய வேட்டைவினை. கான்வேட்டை தனியாடி (790), தனிவேட்டைவினை (792) என முன்னர்க்கூறிய ஆசிரியர் இங்குத் தனிப் பெரு வேட்டை என்றது, இவ்வேட்டை முந்திய நான்கு நாட்களின் வேட்டைபோலப் பூசைக்கு வேண்டும் ஊன்அமுதம் உதவுதலின்றித் திருவருள் வெளிப்பாட்டுக் குதவினதாய் முடியும் நிலைபற்றியாம். அவை சாதனமும், இது அச்சாதனங்களால் அடையப்படும் சாத்தியமும் (பயனும்) ஆகிமுடிதலின் அவற்றினும் இவ்வேட்டை பெருமை

யுடைத்தென்பது கருதியபடி. பின்னர் வெவ்வே றியல்பினி லமைத்துக் கொண்டு என்ற குறிப்புமிது.

திண்ணப்பனார் பேறடைந்ததாகிய இந்த ஆரூர்நாட் சரிதப்பகுதியைக் கூறும் ஆசிரியர், முன்சொல்லிவந்த கொச்சகக்கலிப்பா யாப்பினை மாற்றி, அறுசீர்க்கழிநெடிலடி விருத்தத்தாற் கூறுகின்ற பொருத்தமும் காண்க. "குறியிலது குணத்தாண்டு கொண் டார்" என்றபடி இறைவன் ஆறுகுணமுடையவனுதலின், அத்தன்மையினை அடியவர் பெருமானுகிய திண்ணனாருக்கும் அருளித் தமது பக்கத்தில் இருத்திய இப்பகுதியை அறுசீர்விருத்தத்தாற் கூறிய பொருத்தமும், அந்த மூவிருகுணங்களுமே முகங்களா யமைந்த ஆறுமுகப்பெருமான் திருவருளால் அவதரித்தவரது சிறப்பு ஆறுசீர்ப் பாட் டால் முடிக்கும் பொருத்தமும் காண்க.

முன்புபோகி—என்பதும் பாடம் 161

811. (வி - ரை) **மாறுஇல் ஊன் அமுது** - மாறுஇல் - ஒப்பில்லாத. ஈட்டுதல் சமைத்தல் - சுவைபார்த்தல் முதலிய புறச்செயல்களாலும், இச்செயல்களைத் தூண்டிய அன்பாகிய அகச்செயலாலும் ஒப்பரிய. ஊன்அமுது - ஊனுகிய அமுது. முன்னுட் களில் ஈட்டிய ஊனிலும் சிறந்த என்றலுமாம். முன்னுட்கள் போலன்றி அன்று உடும் பும் அடித்துச் சமைத்துக் கொணர்ந்தனர் என்பது "கடும்பகல் வேட்டையிற் காதலித் தடித்த, உடும்பொடு" என்ற திருமறத்தா லறியப்படும்.

**நல்ல மஞ்சனப் புனல்** - "மாகதி நன்னீர் தூய வாயினிற் கொண்டு" (770) என் றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. மஞ்சனநீரும் அதனைக் கொள்ளும் கலமும் ஒக்க கன்மையுடையன ஆதலின் **நல்ல** என்றார். நல்ல மஞ்சனம் என்றுகொண்டு நன்மை தரும் திருமஞ்சனம் என்றலுமாம். இன்னின்ன பொருள்களால் திருமஞ்சனமாட்டுதல் இன்னின்ன பயன்தரும் என்று ஆகமங்களிற் கூறுதல் காண்க.

**சென்னி ஏறும் நாள் மலர்**-" தூநறும் பள்ளித்தாமங் குஞ்சிமேற் றுதையக் கொண் டார்" (770) என்றபடி திருப்பள்ளித்தாமத்தைக் குடுமியிற்செருகி அமைத்துக்கொண் டனராதலின் **சென்னிஏறும்** என்றார். இறைவனது சென்னியில் ஏறுவதற்காகக் கொண்ட என்றலுமாம்.

**வெவ்வேறு இயல்பினில் அமைத்துக் கொண்டு** - வெவ்வேறியல்பாவன தனித் தனி சிறப்புடையனவாகிய இயல்பு. அன்றுகொண்ட ஊனமுது முதலியன முன்னை நாட்களிற் கொண்டவற்றினும் சிறந்தன என்பது மேற்பாட்டின் குறிப்பு. மேன்மேல் வந்து எழும் அன்பால் (800) என்றபடி அன்பு நாளுக்குநாள் மேல்எழுந்து மிக்கதாத லின் அவ்வாறு மிக்குக்கூடிய அன்பின் எழுச்சியால் அமைத்தலின் இவை வெவ்வே றியல்பினைக் கொண்டன என்க.

இனி முன்னை ஐந்து நாட்களினும் அமைத்த அமுது, நீர், பூ இவற்றினியல்பின் இவை வேறுயின என்றலுமாம்.

முன்னுட்களிற்கொண்ட பொருள்கள் அவர் எண்ணியபடி இறைவன் திருப்பூசைக் குப் பயன்பட்டன. இன்று அவ்வாறன்றி இறைவன் "அவனுடைய செயல்எல்லா நமக் கினிய வாமென்று" (806) முன்னைநாளிரவே உகந்துகொண்ட பாங்கினால் திருவருள் வெளிப்பாட்டுக்குத் துணைக்கருவிகளாயமைந்த இயல்பின வன்றி, அவர் எண்ணி யமைத் துக் கொண்டவாறு அன்றைநாளிற் பூசிக்கப் பயன்படாத இயல்புடையனவாயின என் பதும் குறிப்பு. இது "வாயினன்னீர் சிந்திட.....ஊனும் சிதறிவீழ.....கொந்தலர் பள்ளித்தாமங் குஞ்சிநின் றுலைந்து சோர" (814) என்றுரைத்தவாற்று னறியப்படும். அன்று முன்னை நாட்களிற்போலப் பூசை நடவாது, கண்ணிடந்து சாத்தியதும் சாத்த ஒருப்பட்டதும் ஆகிய பூசையே நிகழ்ந்தது என்பதும்காண்க.

தேறுவார்க்கு அழதமான செல்வனார் - தேறுவார் - சிவபெருமானே முழுமுத லாகிய பசுபதியாவர் எனத் தெள்ளத் தேறித் தெளிந்த அறிவுடையவர். கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடுதல் என்ற நான்கனுள் தெளிந்து நிட்டைகூடுதலைக் கைவந்தவர்களே தேறுவார் எனப்படுவர். அவர்களுக்கே இறைவர் அமுதமாகுவர் என்பது. அமுதம் - நிலைபேறுடையதாய் உள்ளத்தே ஊறும் இன்பவூற்று ; மரணத்தை நீக்கும் இனிய மருந்து. செல்வனார் - அதனைற் குறைவில்லாதவர். "செல்வன் திருக்காளத்தியு ளப்பன்" என்று திருமுறத்தில் நக்கீரர் இப்பகுதியிற் கூறியதும், " அடிசார்ந் தவர்க்கு முடியா இன்பம், நிறையக் கொடுப்பினும் குறையாச் செல்வ" (திருவிடை - மும் - 22) என்று பட்டினத்தடிகள் அருளியதும் இங்கு நினைவுகூர்க.

தேறுவார் - "தெள்ளத் தேறித் தெளிந்து தித்திப்பதோர், உள்ளத் தேற லமுத வொளிவெளி" (தனித் திருக்குறுந்தொகை), "தேறிய தொண்டரைச் செங்கெறிக்கே, யேற்றுந் தகையன" (திருவிருத்தம் - திருஇன்னம்பர் - 7) என்றற்றொடக்கத்து அப்பர் சுவாமிகள் திருவாக்குக்களும் காண்க. "இவரே முதற்றேவ ரெல்லார்க்குமிக்கார், இவரல்ல ரென்றிருக்க வேண்டாம் - கவராதே, காதலித்தின் றேத்துதிரேற் காளத்தி யாள்வார்நீ, ராதரித்த தெய்வமே யாம்" (கைலைபாதி - அந்தாதி - 72), " அவர்க்கே யெழுபிறப்பு மாளாவோ மென்று, மவர்க்கேநா மன்பாவ தல்லாற் - பவர்ச்சடைமேற், பாகாப்போழ் சூடு மவர்க்கல்லான் மற்றொருவர்க், காகாப்போ மெஞ்ஞான்று மான்" (அற்புதத் திருவந்தாதி - 3) என்றபடி பசுபதியார்க்கு ஆளாய்த் தொண்டுசெய்வதனையன்றி வேறறியாத் தன்மையிலே சிறந்தோர்கள் தேறுவார் எனப்பெறுவர். " உன்னடியார் தாள் பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம், அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து, சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம், இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல், என்ன குறையுமிலோம்", " எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க, எங்கை யுனக்கல்லா லெப்பணியுஞ் செய்யற்க, கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க, இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியே, லெங்கெழிலென் ஞாயி றெமக்கு" (திருவெம்பாவை - 9-19) எனவரும் திருவாசகங்களிற் கூறுவதும் இவர்களது பண்பாம்.

ஆறுசேர்சடையார் - ஆறு அருட்பெருக்கையும், சடை அன்பின் நெறியினது விரிவையும் குறிப்பாலுணர்த்துதலின் இங்கு இவ்வாறு கூறினர்.

அணுகவந்து - சேரும்பொருட்டு வந்து. அணுகுதல் - வேட்டைக் காட்டிற் சென்று தூரத்தே நின்றவர் இடத்தால் அணிமையில் வருதலும், பின்னர்க் காளத்தியாரைப் பிரியாது வலத்தே நிற்கும் நிலைபெற வருதலும் குறித்தது. திருவடிசார அணைதல் குறிப்பு. " சிவத்தைச் சார அணைபவர் போல " (752) என்று இதனை முன்னர்க் குறித்ததும் காண்க. முன்னே நாள்களிற் போலன்றி, இன்று வருதல் மீளாது அணுகி நிற்றலுக்கேயாம் என்றுணர்த்தினர் என்பதுமாம். இறைவன் அன்பர்க்கு அணுக்கன் என்ற இயல்பும் காணத்தக்கது.

அணையா நின்றார் - அணைகின்றனராய். நிகழ்காலத்துவந்த முற்றெச்சம். வில்லியார் - காலே - போகி - ஆடி (810) - கொண்டு - அணுகவந்து அணையா நின்றார் (811) - விரைந்தேகுவார் முன் - நீங்கு செய்ய, - என்று அணையும் போதில் (812) - கண்டு - ஓடிவந்தார் (813) என இக்கான்கு பாட்டுக்களையும் தொடர்ந்து முடிக்க. இவ்வாறன்றி அணைகின்றாராயினர் என நிகழ்கால வினைமுற்றாகக் கொண்டு முடித்துரைப் பாருமுண்டு. அணையாநின்றார் - பெயராகக் கொண்டு, (சேரும் அத்திண்ணனார் என) வினைமுற்றுப் பெயராய் நிற்றலால் முதலில் அகரச்சுட்டுத் தொக்கு நின்றது எண்பர் சுப்பராயச் செட்டியார்.

812. (வி - ரை) **இத்தனைபோழது தாழ்த்தேன்** - முன்திய நான்கு நாட்களினும் "வெயில்படுவெங் கதிர்முதிரு"ம் (792) நேரம்வர நண்பகலின் முன் வேட்டை முடித்தார். இன்று "இரவியும் வான்றனிமுகட்டில் வந்தழல் சிந்தக், கடும்பகல் வேட்டையில்" (திருமறம் - நக்கீரர்) என்றறியப்படுதலின் ஞாயிற்றின் கதிர் முதிர்ந்து கடும்பகல் ஆயினபின் வேட்டை முடித்தார். ஆதலின் **தாழ்த்தேனென்றிரங்கினர்.** அன்பு மிகுதியாற் பொழுது தாழ்த்ததாகத் தோற்றிற்று என்றுரைத்தலுமாம். நீள் இருள் (777) என்ற விடத்துரைத்தவை பார்க்க.

**மோய்த்த பல் சகுனம் எல்லாம்** - மோய்த்தல் - செறிதல். **பல்** - பலப்பல. தொகையும் வகையும் குறித்தன. **சகுனம்** - பின்னர்வரும் நன்மைதீமைகளைத் தமது காட்சி - குரல் முதலியவற்றாலுணர்த்தும் பறவை முதலியன. இவற்றை **நிமித்தம்** - என்றும் கூறுவர். **எல்லாம்** - ஒன்று போலவே யாவும்.

**முறை முறை** - அவ்வவையும் தத்தம் பாங்கிலே. **தீங்கு செய்ய - செய்ய** - என்றது எடுத்துக் காட்ட என்ற பொருளில் வந்தது. 700-ம் திருப்பாட்டில் குறிகள் என்ற விடத்துரைத்தவை பார்க்க.

**இத்தகு தீய புட்கள்** - **புட்கள்** - சகுனங்கள். அவற்றுள் காக்கை - கரிக்குருவி யிடமாதல் கெடுதி குறிக்குமென்பர். "கூகையோ டாந்தை தீய, புள்ளின மான தம்மிற் பூசலிட் டழிவு சாற்றும்" - (திருஞான - புரா - 632) என்றபடி ஆந்தை கூகை கூவிப் பூசலிடுதல் அழிவு காட்டுவன. செம்போத்துக் காணுதல் இரத்தப் பெருக்குக் காட்டு மென்று கூறுவர்.

**ஈண்ட** - விரைய. **காட்டும்** - காட்டா நிற்கும். இச்சகுனங்களாற் குறித்தபொருள் விரைவின் நிகழும் என்பது.

**கெட்டேன்! அத்தனுக்கு என்கொல் அடுத்தது?** என மாற்றுக. தமது அறிவெல்லாம் அத்தனையன்றி வேறொன்றும் அறியாமையால் சகுனப்பலன் அத்தனுக்கு அடுக்கும் என்றறியவே மிக்க இரக்கம் வந்தது. ஆதலின் **கெட்டேன்!** என்றார். பிறரெல்லாம் தங்கள் தங்களது நன்மை தீமைகளையே முன்வைத்தெண்ணுவராதலின் இத்தன்மையான சகுனப்பலன் தம்மைச்சாருமே என்றிரங்குவர். இங்குத் திண்ணனார் தம்மையும் மறந்தனராதலின் **அத்தனுக்கு அடுத்தது** என் என்றனர். "ஆவியினிய வெங்க ளத்தனுக் கடுத்த தென்னே?" (818) என்று பின்னர்க் கதறுகின்ற நிலை காண்க. **கெட்டேன்** - சகுனப்பலன் நிச்சயமாதலின் அத்தனிபுபற்றி இறந்த காலத்தாற் கூறினார். சகுனப்புட்கள் உதிரங்காட்டும் என்றது திண்ணனாருக்கு முன் அனுபவ வாசனையினாற் போந்த அறிவு. 163

813. (வி - ரை) **அண்ணலார்** - பெருமையினையுடையார். திண்ணனாரையும், அவரது பரிவு காட்டிய வழியால் முனிவனாரையும் ஆட்கொள்ளும் கருணையின் பெருமைபற்றி இங்கு இப்பெயராற் கூறினார்.

**அடிகளார்** - மிகப் பெரியவர். பெரியாரிலெல்லாம் பெரியார் என்றபடி. **அண்ணலார் அடிகளார்** - என இரண்டு முறை பெருமையே குறித்தது திண்ணனாரும் முனிவனாரும் ஆகிய மாறுபட்ட இருவரையும் ஒக்க ஆட்கொண்ட பெருமையும், அதன் பொருட்டுத் தாம் உருவத்திருமேனி தாங்கிநின்று கண்கள்போல உருக்காட்டி அவற்றில் மாயாகாரியம்போன்ற உதிரமும் காட்டிநின்ற எளிமையும் கருதியது.

**திண்ணனார் பரிவு** - பண்புத் தற்கிழமைப் பொருளில் வந்த ஆரும் வேற்றுமைத் தொகை. **பரிவு காட்ட** - முனிவனாருக்குத் திண்ணனாரது பரிவினைக் காட்டுதற்குக் கண்ணில் ஒன்றில் உதிரம்பாய, அது கண்டு திண்ணனார் தமது கண்ணையிடந்து அப்ப, அச்செயல் அதனைத் தூண்டிய பரிவினை எடுத்துக் காட்ட, அதனை முனிவர் காண என்றிவ்வாறு ஒன்றனையொன்று பற்றிய சாதனமாய் உதிரம்பாய இருத்தல் பரிவு

காட்டிற்று என்க. "நீங்காக் குணத்துக் கோசரிக் கன்றவ, னேசங் காட்ட" என்ற கல்லாடதேவர் அருளிய திருமறமும் காண்க.

**திருநயனத்தில்** - நயனங்களில். சாதியொருமை. **ஒன்று** - வலது கண். 175 பார்க்க. நயனம் ஒன்று என்றதனால் உருவத்திருமேனியும், **காளத்தி அடிகளார்** என்றதனால் அதற்குக் காரணமாய் முன்போர்த்த அருவுருவத்திருமேனியும், **அண்ணலார்** என்றதனால் அதற்கு முன்னின்ற அருவத்திருமேனியும் குறித்த படிகாண்க. "உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முருவி றந்த, அருமேனி யதுவுங் கண்டோ மருவுரு வான போது, திருமேனி யுபயங் கண்டோஞ் செப்பிய மூன்று நந்தங், கருமேனி கழிக்க வந்த கருணையின் விளைவு காணே" (சித்தி-2) என்ற உண்மை நூல் உரையும்காண்க. "செல்வன் றிருக்கா ளத்தியு ளப்பன், திருமேனியில் மூன்று கண்ணு யாங்கொரு கண்ணிலு முதிர, மொழியா திருந்தன ளுக" (திருமறம்) என்றபடி காளத்தியடிகளாரது சிவலிங்கத்திருமேனியில் ஒருமுகமும் அதில் மூன்று கண்களும் காணப்பட்டு அவற்றுள் வலக்கண்ணில் உதிரம் துண்ணென்று பாயும்படி பெருமான் இருந்தனர் என்றதாம்.

**உதிரம் துண்ணெனப் பாய** - இரத்தம் விரைந்து ஓடிச் சிந்த. **இருந்தனர்** - தோற்றங் காணுமாறு செய்து வீற்றிருந் தருளினர். மாயாகாரியமாய் ஏழு தாதுக்களாலாகிய உடம்பு அவர்க்கு இல்லை யாதலின் உதிரம் பாய்ந்ததில்லை. "மந்திரமே சோரியா" எனவும், "இந்திர சாலம் புரிவோன் யாவரையும் தான் மயக்கும், தந்திரத்திற் சாராது சார்வதுபோல்" எனவும் கர்தர் கலிவெண்பாவினுள் உரைத்தவை காண்க. உதிரம் பாய்வதுபோன்ற காட்சியே காணப்பட்ட தென்பது கருத்து.

**அவ்வண்ண வெஞ்சிலையார் தூரத்தேகண்டு** - அகரம் முன்னறி சுட்டு. யாவர் காணும் பொருட்டுத் தேவர் அவ்வாறு இருந்தனரோ அந்தச் சிலையார் என்க. **சிலையார்** - வில்லையுடையவராகிய திண்ணனார். **அவ்வண்ணம்** வருந்திய என்க.

**தூரத்தேகண்டு** - அன்பு மேலீட்டினால் அத்தனுக்கு அடுத்த தென்கொல் என அதுவே கவலையாக வந்தனராதலின் தூரத்தே கண்டனர். **கண்டு** - இருந்த நிலையை எனச் செயப்படு பொருள் வருவிக்க.

**வல் - விரைந்து** - ஒரு பொருட் பன் மொழி மிகுதி குறித்தன. மிக்க விரைவில் என்க. சேயினிடத்துப் புண்கண்ட தாயின் பரிவும் செயலும் இங்குக் கருதுக.

இத்திருப் பாட்டுமுதல் "கின்றசெங் குருதி கண்டார்" (823) என்பது வரை ஒரு தொடராகக் கொண்டும், இவற்றில் வரும் கண்டார் - முதலிய வினைமுற்றுக்களையெல்லாம் முற்றெச்சங்களாகக் கொண்டும் உரை கூறுவர் சுப்பராயச் செட்டியார். குருதிகண்டபின் திண்ணனார்பால் தனித்தனி நிகழ்ந்த மன நிகழ்ச்சிகளையும், அவற்றிற் கேற்ற புறச் செயல்களையும் தனித்தனி வேறு காட்டிக் குறிக்குமாறு முற்று வினைகளாற் கூறிய ஆசிரியர் கருத்துக்கு அவ்வுரை பொருந்தா தென்க. அவ்வாறு கொள்ளுதற்கு வேறு காரணமுமில்லை என்பது. 164

814. வந்தவர் குருதி கண்டார்; மயங்கினர்; வாயி னன்னீர்
சிந்திடக், கையி லூனுஞ் சிலையுடன் சிதறி வீழக்,
கொந்தலர் பள்ளித் தாமங் குஞ்சிநின் றலைந்து சோரப்,
பைந்தழை யலங்கன் மார்பர் நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார்.

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறுவந்த பசிய தழைகளாலாகிய மாலையணிந்த மார்பினையுடைய திண்ணனார், உதிரம் பாய்தலைக் கண்டனர்; மயங்கினர்; திருவாயிற் கொண்ட கல்ல திருமஞ்சன நீர் சிந்தவும், கையினின்றும் ஊனமுதம் வில்லுடனே சிதறி வீழவும், கொத்தாக விரியும் திருப்பள்ளித் தாமம் குடுமியினின்று குலைந்து அலைந்து சோரவும் இவ்வாறாக நிலத்தில் மனமழிந்து பதைத்து வீழ்ந்தார்.

(வி - ரை) வந்தவர் - மார்பர் - கண்டார் ; மயங்கினார் ; வீழ்ந்தார் என முடிக்க. வந்தவராகிய மார்பர். **வந்தவர்** - வினையாலணையும்பெயர்.

**குருதி கண்டார்** - தேவர் குருதிபாய இருந்தனர் ; அதனைத் தூரத்தேகண்டு ஓடி வந்தவர் முதலில் தேற்றமாக அக்குருதியினையே கண்டனர். இறைவனது திருமேனியிற்கண்ட பிறதோற்றங்களினும் குருதியே அவர் காட்சிக்கு முன்னே புலப்பட்டது. சகுனங்கள் உதிரங்காட்டும் எனக் கவலைப்பட்டு வந்தபடி தூரத்தே குருதியைக் கண்டு ஓடிவந்தனர். அஃது ஐயக் காட்சி. வந்து தேற்றம்பெற அக்குருதியினையே கண்டார். இது தெளிவுக் காட்சி. ஆதலின் கூறியது கூறலாகாமையுணர்க. இக் கருத்துப்பற்றியே பின்னரும் குருதி நின்றது கண்டார் என்னாது நின்ற செங்குருதி கண்டார் (823) என்றதுங் காண்க.

**கண்டார் - மயங்கினார்** - கண்டார் ஆதலின் மயங்கினார். கண்டதும் அக்காட்சியே மயக்கத்தை விளைத்தது என்க. ஆயின் கோழை மனமுடையார் பலரும் குருதிகண்டு மயங்குவாராதலின் அதுபோலன்று எனக் குறிக்க **அலங்கல் மார்பர்** என்று இவரது மார்பின் வலியவீரத்தைக் குறித்தனர். "மண்டமர் கடந்தநின் வென்றா டகலம்" (திருமுருகாற்றுப்படை) என்றபடி மார்பின் வன்மையே வீரங்குறிப்பதாம். வேட்டையிலும் குருதிப்பெருக்கிலுமே வீரத் தொழில் செய்யும் அவர் மயங்கியது அன்புபற்றியே யாயிற்று என்பது குறிப்பு. **மயங்குதல்** - அறிவு பிறழ்தல். குருதி கண்ட காட்சி மயக்கத்தை விளைக்க, அதனால் உடலைத் தாங்கிநிற்கும் கன்மேந்திரியங்களும் அவற்றை நேர்நிற்கச் செய்து தொழிற்படுத்தும் அசைவுநரம்புகளும் நிலைதவிரவே, உடல்பதைத்துக் கீழேவிழும். ஆதலின் **கண்டார் - மயங்கினார் - பதைத்து வீழ்ந்தார்** எனத் தொடர்புபடக் கூறினார்.

**நன்னீர்சிந்திட - சிலையுடன் ஊன் வீழ - பள்ளித்தாமம் சோர** - தேவர்க்கெனமிக்க அன்புடன் அரிதின் முயன்று அமைத்து, இத்தனைபொழுது தாழ்த்தேனென்றிரங்கிப் பரிவுடன்வந்தவர், இப்பொருள்களைத் தம் உயிரினும் பெரிதுகாப்பார் ; இங்கு அவற்றையும் காக்க இயலாமல் முற்றும் சோர்ந்தனர் எனச் சோர்வின் மிகுதி குறித்தது. எனவே இவை அவர் எண்ணியபடி அன்றைப் பூசைக்கு உதவாது போயின. முன்னை நாளிரவில் முன்பே இவற்றை இறைவன் உகந்துகொண்டனராதலின் இவை நின்மாலியமாயின ; ஆதலின் பூசைக்குதவா ஆயின என்ற குறிப்புமாம். கண்ணைத் தோண்டி அப்பித் தேவரது வலப்பக்கத்தில் நிலைத்து நிற்கப்பெற்ற பேறுடன் அன்றை நாட் பூசையும் சரிதமும் முற்றுப்பெறுதல் காண்க. 811-ல் உரைத்தவை பார்க்க.

**கையில் ஊனும் சிலையுடன் சிதறிவீழ - கையில்** - கைகளினின்றும். ஐந்தனுருபு தொக்கது. இரண்டு கைகளையும் ஒருறுப்பாகவைத்து ஓதியதனால் **கையில்** என ஒருமைபடக் கூறினார். வலதுகையில் ஏந்திய ஊன்கல்லையும் இடதுகையிற் பிடித்த சிலையும்என்க. **சிலை** பகலில் ஊன்பெறவும் இரவிற் காவல்புரியவும் துணையாதலால் தேவரது திருப்பணிக்கு ஊனைவிட இன்றியமையாத சிறப்புடையதென்பார் ஒருங்குசேர்த்துக் கூறியதோடு, உடனிகழ்ச்சிப் பொருளில் வந்த மூன்றனுருபைச் **சிலையுடன்** புணர்த்தி ஓதினார். இருகைகளும் வசமிழக்க அவற்றிற்றாங்கிய ஊனும் சிலையும் ஒருங்கு வீழ்ந்தனஎன்க.

**நீர்சிந்திட - ஊன் சிதறிவீழ - பள்ளித்தாமம் சோர** - அவ்வப் பொருளுக்கேற்ற வெவ்வேறு செயல் குறிக்க வெவ்வேறு வினையெச்சங்களாற் கூறினார். வாயினின்றும் நீர் சிறிது சிறிதாகச் **சிந்தியது** ; கல்லையிற்கொண்ட பற்பல வகைப்பட்ட ஊன்துண்டங்கள், கல்லைவீழவே பலபலவாகப் பல இடங்களிற் **சிதறின** ; அவ்வாறன்றிப் பள்ளித்தாமம் இலகுவான பூவும் இலையுமாயினமையின் ஒருங்கு வீழாமல் அவிழ்ந்த குடுமியிற் சிலவும் நிலத்திற் சிலவுமாகச் **சோர்ந்தன** என்றபடி.

**கொந்து அலர்** - கொத்தாக அப்போது புதிதாய் இதழ் விரிந்த. புதிதின் மலர்ந்த பூக்களையே திண்ணனார் தேடிப் பறித்தனர் என்பது. இதுவே விதியுமாம்.

**பைந்தழை அலங்கல்** - இது திண்ணனாரது திருமார்பத்துக்கு இயற்கை யடை மொழி. சாதியடை என்பர். அன்றையநாளில் மார்பில் மாலை யணிந்திருந்தனர் என்ப தன்று.

**பதைப்பு** - உள்ளப்பதைப்பின் மெய்ப்பாடு. இது சிறிய அன்புடைய ஏனை உல கினரிடத்தும் காணப்படுவதென்றால் மெய்யன்பே உருவாகிய திண்ணனார்பால் உண் டாதல் வியப்பன்றென்க.

**வீழ்ந்தார்** - தேவரைக் காக்க நின்றவர் தம்மையும் காக்க-தாங்க-முடியாத நிலையின ராயினர். காணல், மயங்கல், வீழ்தல், சோர்தல்-வீழ்தல்-கூடநிற்றலால் கூட்டவணி என் பது சுப்பராயச் செட்டியாருரை. 165

815. விழுந்தவ ரெழுந்து சென்று துடைத்தனர் குருதி; வீழ்வ
தொழிந்திடக் காணார்; செய்வ தறிந்திலர் ருயிர்த்து மீள
வழிந்துபோய் வீழ்ந்தார்; தேறி "யாரிது செய்தா?" ரென்ன
வெழுந்தனர்; திசைக ளெங்கும் பார்த்தன; ரெடுத்தார் வில்லும்,

816. வாளியுந் தெரிந்து கொண் "டிம் மலையிடை யெனக்கு மாறு
மீளிவெம் மறவர் செய்தா ருளர்கொலோ? விலங்கின் சாதி
யாளிமுன் னுகி யுள்ள வினைத்தவோ? வறியே" னென்று
நீளிருங் குன்றச் சார னெடிதிடை நேடிச் சென்றார். 602

815. (இ - ள்) வெளிப்படை. வீழ்ந்த திண்ணனார் எழுந்துபோய் உதிரத்தைத் துடைத்தனர்; அவ்வுதிரம் பாய்தல் நிற்கக் கண்டாரிலர்; செய்யக்கடவது இன்னதென்று அறிந்திலர்; பெருமூச்சுவிட்டு மீளவும் செயலழிந்துபோய் வீழ்ந்தனர்; பின்னர் மனந் தேறி "இது செய்தார் யாவர்?" என்று எண்ணி எழுந்தனர்; எல்லாத் திக்குக்களினும் பார்த்தனர்; வில்லையும் எடுத்தனர். 603

816. (இ - ள்) வெளிப்படை. ஏற்ற அம்புகளைத் தேர்ந்து எடுத்துக்கொண்டு, 'இந்த மலையில் **எனக்கு மாறாக** வலிமையுடைய கொடியவேடர்கள் செய்தனரோ? சிங்கம் முதலாகவுள்ள விலங்கினங்கள் செய்தனவோ? தெரியேன்" என்று எண்ணி, நீண்ட பெரிய குன்றின் சாரலில் நெடுந்தூரம் தேடிச் சென்றார். 604

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

815. (வி - ரை) **துடைத்தனர் குருதி**; அக்குருதி வீழ்வது எனச் சுட்டுப் பெயர் வருவிக்க. குருதி என்பது சிங்கநோக்காக முன்னும் சென்று குருதி துடைத்தனர் என இயைத்தது என்றலுமாம்.

**ஒழிந்திடக்காணார்** - ஒழிந்திலது என்னுது இவ்வாறு கூறியது ஒழியக் "காண்டலே கருத்தாய் நினைந்திருந்" தார் திண்ணனார் என்பதுணர்த்தி வற்புறுத்தற் பொருட்டு. மேற்பாட்டிற் குருதிகண்டார் என்றவிடத் தமைத்தவையும் பார்க்க.

**துடைத்தனர், காணார், அறிந்திலர், வீழ்ந்தார், எழுந்தனர், பார்த்தனர், எடுத்தார்** என இவ்வொரு பாட்டில் ஏழு தனி வினைமுற்றுக்கள் வைத்தோதியது திண்ணனாரது மனத்தில் அலமரலுதியினால் ஒன்றன்பின்ஒன்றாய் விட்டுவிட்டு விரைவில் நிகழ்ந்த வேறுபாடுகளையும், அவற்றாற் றூண்டப்பட்ட செயல்களையும் அவ்வாறே நாடகச்சுவை படக் காட்டுதற்பொருட்டு. அன்பு பலவாறாக உருவெடுத்தலும் உணர்த்தப்பட்டது. அது தாங்கலாற்றாது மயக்கும்; தீர்வு தேடச்செய்யும்; வேறுபல முயற்சியிலும் ஊக்கும்; வீராவேசம் தோன்றிப் பழிவாங்கத் தூண்டும்; ஒன்றுமாற்றாதபோது வீழ்ந்து

கதறி யழச்செய்யும். உலகியலிற் காணும் இன்னிலைகள் யாவும் இங்குப் பெருநிலையில் நிகழ்ந்தன என்பது கண்டுகொள்க.

**செய்வதறிந்திலர்** - இதற்குத் தீர்வாக யாது செயத்தக்கதென் றறிய வாராது நின்றனர்.

**அழிந்து வீழ்ந்தார்** - மனமழிந்து பதைத்து வீழ்ந்தனர் என மூன் உரைக்கப்பட்டமையின் இங்குச் செயலழிந்து வீழ்ந்தனர் என்க.

**தேறி** - மீண்டும் மனம் தேறி. இங்குத் **தேறுதல்** - இன்னது எண்ணுவது - செய்வது - என்று தோன்றுது மயங்கி வீழ்ந்த நிலையினின்றும் தேறி ஒருவழிச் செல்லுதல் என்னும் பொருளில் வந்தது. **தேறி** - எண்ணி என்றலுமாம். **யார் இது தேறிச் செய்தார்** என்று கூட்டி இதனையும் எண்ணிச் செய்தார் யாவர் என்றுரைத்தலும் ஒன்று.

**எழுந்தனர்** - தேறி, யாவர் இது செய்தனர் என நினைந்தவுடன் இது செய்தாரைக் கண்டு ஒறுக்கவேண்டுமென்று வீரமும் சினமும் தோன்றின. அவை தோன்றவே, முன்னிருந்த கையறுநிலையாகிய வீழ்ச்சியிலிருந்து மேற்கிளம்பி எழுந்தனர் என்பதாம். புண்ணிற்குத் தீர்வு தேடுதலினும் பழிவாங்குமியல்பே முற்பட்டு நிற்பது உலகியல். அதுமாறி இறைவன் பொருட்டாய் நிகழ்ந்தது.

**திசைகள் எங்கும் பார்த்தனர்** - இது வீரத்தின் பெருமிதச் செயல்.

**எடுத்தார் வில்லும்** என்றதும், வினையை முன்வைத்ததும் அக்குறிப்பு. **வில்லும்** - பின்னர் வாளியும் தெரிந்து என்றதனால் உம்மை எதிரது தழீஇயது. எண்ணும்மை என்றலுமாம். **எடுத்தார்** - கையினின்றும் நிலை வீழ்ந்ததென்று மேற்பாட்டிற் கண்டோமாதலின் அவ்வாறு வீழ்ந்த வில்லினை எடுத்தார் என்பது.

**வில்லும் அம்பும் எடுத்துக் கொண்டது**, இது செய்தாரைக் கண்டால் ஒறுத்து ஒழிக்கும் வீரத்திறம் பற்றியது என்பது மேல்வரும் பாட்டானறிக. 166

816. (வி - ரை) **வாளியும் தெரிந்துகொண்டு** - செயலழிந்து வீழ்ந்தவர் தேறி வில்லும் எடுத்து, ஏற்ற அம்புகளையும் தெரிந்துகொள்ளவல்லராயினர். உம்மை எச்சமும் சிறப்புமாம்.

**எனக்கு மாறு மீளி வேம்மறவர்** - உலகச்சார்புகளையும் தம்மையும் மறந்துநின்ற திண்ணனாருக்கு இங்கு **எனக்கு** எனத் தமது நினைவும், **மாறு** என மாறுபாடு - பகை - சினம் முதலிய நினைவும், **மீளி வேம்மறவர்** - என வேடர் முதலிய உலகச்சார்பு நினைவும் போந்தன. தமது பசி, உறக்கம் முதலியவை தோன்றுது மறந்தார்க்கு எவ்வாறு தேவரது பசி முதலியவை தோற்றிச் செயல் நிகழக் காரணமாயினவோ, அவ்வாறே, ஈண்டும் தேவரைக்காக்கும் தமக்குப் பகையாய் ஊறு செய்தாரை எண்ணியபோது தாம் முன்னே உலக அனுபவத்திற் கண்ட தமது இருப்பும் பகையும் முதலிய தொடர்புகள் நினைவுக்குவந்தன. 756-ம் பாட்டில் உரைத்தவை பார்க்க. சண்டீசநாயனார் சரிதத்தில், அவர்பூசை செய்தபோது மற்றொன்று மறிந்திலர்; அங்குவந்த தமது பிதாவைக் கண்டிலர்; அவன் கூறிய கொடிதா மொழியுங் கேட்டிலர்; அவன் தமது திருமுதுகிற்புடைத்த தனையும் உணர்ந்திலர்; ஆனால் இறைவனுக்குத் திருமஞ்சனம் ஆட்டுதற்கு வைத்த பாற்குடத்தை அத்தீயோன் காலாலிடறிச் சிந்திய செயல்கண்டனர்; அவனைப் பிதாவும் குருவும் மறையோனுமாகிய எச்சதத்தன் என்று அறிந்தனர்; அவன் செய்த சிவாபராதம் தண்டிக்கற்பாலது என்றுணர்ந்தனர்; அதன் பொருட்டுக் கோலும் எடுத்தனர்; அது திருவருளால் மழுவாயிட அவன்றாள்களை எறிந்தனர் என்ற நிகழ்ச்சிகளை இங்கு வைத்துப் பொருந்தக் கண்டுகொள்க. திண்ணனார் பின்னர்ச் செய்வனவும் இவ்வாறே கண்டுகொள்க.

சிவன் முத்திக்கும் பாமுத்திக்கும் உள்ள வேறுபாடு இங்குக் கருதத்தக்கதாம். சிவன் முத்தர் இறைபணியின் ஏகமாகி நின்று அப்பணியின் பொருட்டு உடல் உணர்வுடன் இறைவனைப் பொருந்தி இருப்பர்; பாமுத்தர் அவ்வாறன்றி இறை

வனிற் கலக்து தொழும்பாய் அனுபவித்து நிற்பர். சீவன் முத்தர் நிலையாவது உடல் முதலிய கருவிகாணங்களுடனிருக்கும் போதே முத்தியைத் தலைக்கூடி நிற்றல். அவர் களது அறிவு, இச்சை, செயல்கள் இறைவனது திருப்பணிமாத்திரையாய் வியாபரிக் கும். திருப்பணிக்கு முட்டுப்பாடு வரும்போது அவைகட்கு வாசனையினால் உலகிய லுணர்ச்சி புலப்பட்டு அவ்விடையூற்றைப் போக்கும் அளவில் தொழிற்படும். இதனையே 753, 803, 806-ம் திருப்பாட்டுக்களில் விரித்தருளினர். இம்மூ அணைந்தோர் தன்மை எனச் சிவஞானபோதம் 12-ம் சூத்திரத்திற் கூறப்படுதல் காண்க.

திண்ணனார் காளத்தியப்பரைக் கண்டபோதே, அவரது அருளைக்கத் தினை யாற் சீவன்முத்த நிலையடைந்தனர். அதன்பின் ஆறு நாளும் அந்நிலையில் உலகிற் சரித்தனர். சீவன் முத்தர்க்கும் ஒரோவழிப், புறத்தே அறி விச்சை செயல்கள் வியா பரிக்கு மெனவும், அம்மூ அவர்க்காகாமையின் ஆணவ மாயை கான்மிய மென்னு மலங்களைக் களைவர் எனவும், அதற்கு அவர்தம் செயல் வியாபரிக்குங்காற் சிவாலயத் தைப் பரமேசுவரனெனவே கண்டு வழிபடுவர் எனவும், அவ்வாறு வழிபட்டுத் தானது வாய்க் காணுந் தவர்க்குக் கடைக்த விறகிற் றீக் காணுதல் போல இறைவன் வெளிப் பட்டுத் தானதுவாய்த் தோன்றி யருளுவன் எனவும் சிவஞான போத மாபாடியத் திரைத்தவை காண்க.

**மீளி வேம்மறவர்** - விலங்கின்சாதி - இத்தகைய கொடுமை செய்வார் மறவரே யாவர்; ஆனல் இத் தேவர்பால் எவர்க்கும் மாறுபாடு உண்டாதற்கியைபில்லை; இவர் "மேலினர் பிரியமாட்டா விமலனர் - ஆலியினினியர்" (813); ஆதலின் இதற்குக் காரணம் அவ்வேடர் என்பாற் பூண்ட மாறுபாடுதானே? ; என்று எண்ணி **என்க்கு மாறு என்றார்.** அவ்வாறு அவர்கள் செய்ததன்றியின் காரணமின்றியும் ஊறு செய் யும் குணமுடைய விலங்கின் சாதி வினைத்திருத்தல் வேண்டும்; வெவ்விலங் குள வென்றஞ்சி இரவு முழுதும் காவல் புரிந்தேனன்றே? என்று நினைத்தார். **உளர் கொலோ? - கொல்** - ஐயப்பாடு உணர்த்துவதாதலின் தமக்குமாறாக வேடர் உளர் என்பதில் திண்ணனார் துணிவுபெறவில்லை. ஆதலின் அவர்களை ஒழித்து விலங்கின் சாதியை எண்ணினர். இருகாரணமுங் கருதி வில்லும் அம்பும் எடுத்துத் தேடிப் போந்தனர் என்பதாம்.

**ஆளி** - சிங்கம். யாளி என்றுரைப்பாருமுண்டு. இது முன் காலத்தில் இருந்து இக்காலத்து மரபு ஒழிந்ததொரு பெரிய கொடிய விலங்குச்சாதி. நீண்ட மூக்குடைய புலி போன்ற தென்றும், சிங்கத்தினையும் வெல்லக்கூடிய தென்றும் கூறுவர். **ஆளி - முன்னுகி** - என விலங்கினத்தில் முதன்மை பெற்றதனைக் கூறி ஏனையவெல்லாம் அதனுள் அடக்கினர். **ஆகி** என்பது செயவெனெச்சத் திரிபு.

**அறியேன்** - இதனிலும் துணிவுபெறவில்லை யென்பதாம்.

**நீள் இருங் குன்றச் சாரல்** - தொடர்ந்து நீண்ட பெருமலைகள். விலங்கினம் தேடிச் சென்றாராதலின் அவை தங்குமிடமாகிய மலைச் சாரல்களிற் சென்றனர்.

**நெடிது இடை நேடி** - நெடுந்தூரம்வரை பல வழியாலும் தேடி. 167

817. வேடரைக் காணூர்; தீய விலங்குகள் மருங்கு மெங்கு
நாடியுங் காணூர்; மீண்டு நாயனர் தம்பால் வந்து
நீடிய சோகத் தோடு நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு கதறினர் கண்ணீர் வார; கசுஅ

818. "பாவியேன் கண்ட வண்ணம் பரமனூர்க் கடுத்த தென்னே?
வாவியி னினிய வெங்க ளத்தனூர்க் கடுத்த தென்னே?

மேவினர் பிரிய மாட்டா விமலனூர்க் கடுத்த தென்னே ?
வாவதொன் றறிகி லேன்யா ; னென் செய்கே ;" னென்று பின்னும்,

819. "என்செய்தாற் றீரு மோதா ? ; னெம்பிரான் றிறத்துத் தீங்கு
முன்செய்தார் தம்மைக் காணேன் ; மொய்கழல் வேட ரென்று
பின்செய்வார் பகழிப் புண்க டூர்க்குமெய் மருந்து தேடிப்
பொன்செய்தாழ் வரையிற் கொண்டு வருவனே " னென்று போனார்.

817. (இ - ள்) வெளிப்படை. (அவ்வாறு தேடிய திண்ணனார்) வேடர்களைக் காணார் ; தீய விலங்குகளைப் பக்கங்களிலும் வேறு எங்கும் காடியும் காணார் ; மீண்டு திருக்காளத்தியப்பரிடம் வந்து நீடிய பெருஞ் சோகத்தோடு நிறைமலர்ப் பாதங்களைப் பிடித்துப் பக்கம் பொருந்தக் கட்டிக் கொண்டு, கண்ணீர் பெருகக் கதறுவாராகி, கசுஅ

818. (இ - ள்) வெளிப்படை. " இப்பரமனார்க்குப் பாவியேன் நான் கண்டபடி இவ்வாறு அடுத்த தென்னே ?; உயிரினும் இனியவராகிய எங்கள் அத்தனார்க்கு இது அடுத்ததென்னே ?; வந்து பொருந்தினவர்கள் விட்டுப் பிரியமாட்டாத விமலனார்க்கு இங்கு அடுத்ததென்னே ? செய்யலாவதாகிய காரியமொன்றும் யான் அறிகிலேன் " என்று கதறி மீளவும் (எண்ணுவாராய்), கசுக

819. (இ - ள்) வெளிப்படை. "என்ன செய்தால் இது தீருமோ? (அறியேன்); எமது பெருமானிடத்து இத் தீங்கு முன் செய்தவர்களைக் காணேன் ; மொய்த்த வீரக் கழலையணிந்த வேடர்கள் ஒளியுடைய கொடியஅம்பிலால் உளவாம் புண்களை எப்போதும் தீர்க்கும் நிச்சயமான மருந்துகளைப் பொன் செய்யும் மலையின் தாழ்வரையி னிடத் திருந்து தேடிக்கொண்டு வருவேன் " என்று சொல்லிப் போயினார். கஎo

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

817. (வி - ரை) **வேடரைக் காணார்** - இத்தீங்கினைச் செய்திருக்கக் கூடுமென்று தாம் எண்ணிய பகையிரண்டனுள் முதலில் எண்ணியபடி வேடர்களைக் காணார் ; ஆதலின் அதன்பின் தீய விலங்கின் சாதியைத் தேடினார்.

**விலங்குகள்.....காணார்** - விலங்குகள் பகலில் வெளியிற் றங்காது ஒளியிடத்துப் பதுங்கிக் கிடக்கு மாதலின் அவ்விடங்களை **மருங்கும்** எங்கும் என்றார். **மருங்கும்** என்பது அணிய இடங்களையும், **எங்கும்** என்றது காட்சிக்குச் சேய பதிவு இடங்களையும் குறித்தன. **காணார் - காணார்** - ஒன்றுபோலவே ஐயப்பட்ட இரு பகைகளும் காணுவாயின என்பார் **காணார்** என்ற சொல்லால் இரண்டிடத்தும் குறித்தார்.

**மீண்டு...வந்து**-தீங்குசெய்தன பகை என்றெண்ணியபடி பகைகள் காணுமையின் பழிவாங்கும் வீராவேசம் இதனுட் குறைந்து விடவே, புண்ணுக்குத் தீர்வு தேடாமலும், இத்தனைபொழுது தேவரைப் பிரிந்தும், தாழ்த்தோமே என்ற கினைவு வந்தது. வரவே, பகை தேடித் திரிந்த சேய காட்டினின்றும் விரைந்து மீண்டு தேவரிடம் வந்தனர். **நாயனார்** - தலைவர் - காளத்தியப்பர். **நீடிய சோகம்**-பெருகிய வருத்தம். துன்பங்கவலை என்பவற்றின் மிகுதியால் உளதாகும் வினைவு சோகம் எனப்படும். நாயனாரது கண்ணிற் குருதி பாயப்பாய இவரது சோகமும் பெருகுகின்றது. ஒருவனுக்கு இரத்தம் பெருக வெளிப்படின் (loss of blood) அவனுக்குச் சோகமுளதாம் என்பர். ஆயின் இங்குக் காளத்தி **நாயனார்** வடிவமும் திண்ணப்ப **நாயனார்** வடிவமும் சிவோகம்பாவனையினால் ஒன்றேயாய் அன்பு வடிவமாயினமையின் அவர்க்குக் குருதி பாயப்பாய இவர்க்குச் சோகம் கீடிற்று என்பதும் குறிப்பு.

**நிறைமலர்ப்பாதம்** - மலர் நிறை பாதம் என்க. " கின்போ லமார்க ணீண்முடி சாய்த்து கினைந்துகுத்த, பைம்போ தழைக்கிப் பவளந் தழைப்பன பாங்கறியா,

யென்போ லிகள்பறித் திட்ட விலையு முகையுமெல்லா, மம்போ தெனக்கொள்ளு மையனை யாற னடித்தலமே" (திருவிருத்தம்) என்றபடி மேலாகிய விண்ணவர்களும் அவரின் மேலாகிய அடியவர்களும் நிறைய இட்ட மலர்களை யுடைய பாதம் என்பது. "அட்டபுட்ப மவைகொண்டடி போற்றி நல்ல, கரியவனான் முகனும் மடியும் முடியும் காண்பரிய, பரியவன்" (நட்டராகம் - பழமண்ணிப் படிக்கரை - 8) என்ற நம்பிகளது தேவாரமும் காண்க. "முடியால் வானவர்கள் முயங்குந் திருக்காளத்தியாய்" என்ற ஆளுடையபிள்ளையாரது இத்தலத்தேவார (7) மும், "கடவுள்மால் வரையி னுச்சி யதிர்தரு மோசை யைந்து" (750) என்றதும் இம்மலையிற்றேவர் பூசித்தலை உணர்த்து வன. அன்று காலை சிவகோசரி முனிவர் அருச்சித்த நிறைந்த பூக்களையுடைய பாதம் என்றலுமாம். யாங்கணும் நிறைந்த செந்தாமரை மலர்போன்ற பாதம் என்றலும் பொருந்தும். இதற்கு, மணம் நிறைந்த மலர்போன்ற பாதம் என்றும், தேன் நிறைந்த மலர்போன்ற என்றும், தமது உள்ளக்கமலத்தில் நிறைந்த என்றும் பற்பலவா றுரைப்பாருமுண்டு.

**மாடுஉறக் கட்டிக்கொண்டு** - திருமேனியின் பக்கம் பொருந்தத் தழுவிக் கட்டிக் கொண்டு.

**கதறுதல்** - பெருந்துக்கத்தால் ஓலமிட்டுக் கதறுதல். **வார்தல்** - பெருகுதல். ஒழுகுதல். ஓலமிட்டுக் கதறும் வகை மேல்வரும் பாட்டிற் கூறுவார்.

"**பார்த்து** நடுக்குற்றுப் **பதைத்து மனஞ்சுழன்று,வாய்ப்புனல் சிந்தக் கையிலூ னொடு கணைசிலை சிந்த**" (814), **நிலம்படப் புரண்டு** நெடிதினிற்றேறிச் (815),**சிலைக் கொடும் படைகடி தெடுத்துப்** படுத்தவ, ரடுத்த விவ்வனத் துளரெனத் திரிந்தாஅங், கின்மை கண்டு (815—816—817), நன்மையிற் றக்கன **மருந்துகள் பிழியவும்** பிழி தொறு, நெக்கிழி குருதியைக் கண்டு நிலைதளர்ந் (819—820—821)தென், **னத்தனுக் கடுத்ததென் னத்தனுக் கடுத்ததென்** னென், றன்பொடு **கனற்றி**" (817—818) என்று திருக்கண்ணப்பதேவர் திருமறத்தில் நக்கீரதேவர் அருளியதனை ஆசிரியர் விரித்தருளிய திறங் காண்க. 168

818. (வி - ரை) **பாவியேன் கண்டவண்ணம்** - நான் பாவியாதலின் என் கண் கள் இது கண்டன ; அவை கண்டவாறு என்னோ அடுத்தது ? என்க. "கொடியேன் கண்கள் கண்டன கோடிக் குழகீர்" என்ற ஆளுடையநம்பிகளது தேவாரக் கருத்தை இங்கு வைத்துக் காண்க. "நான்பாவிய னானாலுனை நல்காயென லாமே" என்ற திருவாசகமும் காண்க. உலக வழக்கிலும், தம்மால் அன்பு செய்யப்பட்டார்க்கு ஓர் தீங்குவரக் காணில் அதனைத் தம்மேல் ஏற்றிப் பாவியேன் - என்கண் செய்த பாவம் - என்கை செய்த பாவம் - என்றிவ்வாறு வைத்து வழங்குவதும் கருதுக. நான் தீயசகுனங் கண்டவண்ணம் என்றலுமாம்.

**அடுத்தது என்னோ ?** - வந்து அடுத்தது என்?. யாது காரணம்பற்றியது?. ஓகாரம் இரக்கப்பொருளில் வந்தது.

**ஆவியி னினிய எங்கள் அத்தனார்** - "என்னிலும் (எனக்கு) இனியான் ஒருவன் உளன்" என்ற திருக்குறுந்தொகை காண்க. **அத்தனார்** - யாவர்க்குந் தந்தையார். இனியராதற்குக் காரணங் குறித்தபடி. **எங்கள்** - மேற்பாட்டில் **எம்பிரான்** என்றது போல வாளா பெயராய் நின்றது. தமது சிறப்புரிமை பற்றியது என்றலுமாம்.

**மேவினார்பிரியமாட்டாவிமலனார்** - **விமலன்**-மலமற்றவர். பிரியமாட்டாமைக்குக் காரணங் கூறியபடி. மலமாசில்லாதவராதலின், மேவிக் கண்டார் காதலிக்கவும் பிரியா திருக்கவும் உள்ளவர் என்பது. 806-ம் பாட்டிற் கூறியபடி தம் அறிவிச்சை செயல்கள் அவனுடையனவேயாகி விளங்கியவர் திண்ணனாராதலின் அவர் திருவாக்கில் வைத்து இறைவர் தமதுண்மையை விளக்குகின்றார். இயல்பாகவே பாசங்களினின்று நீங்கியவர்,

தம்மை மேவினரது பாசங்களைப் போக்கித் தம்மைப் பிரியாதிருக்கும் நிலையருள் பவர் என்று பதியிலக்கணங் காட்டிய குறிப்பும் காணத்தக்கது. மாட்டா என்ற சொற்குறிப்பும் அது. ஆவியினினியராதலின் மேவினர் பிரியமாட்டாதவர் என்ற உண்மை, "என்னுயிருக் கின்னமுதா மெழிலாரூர்ப் பெருமானே, வன்னெஞ்சக் கள்வனேன் மறந்திரேன்" (கழறிற்றறிவார் புராணம், 160) என்றவிடத்து நம்பிகளது தேவாரத்திலும் காண்க.

ஆவது-அடாததாய் அடுத்த இத்தீங்குக்கு மாற்றுவது. தீர்க்கும் உபாயம். ஒன்று-ஒன்றும். முற்றும்மை தொக்கது. ஒன்று - சிறிது என்னும் பொருளில் வந்தது. " கணபதி யொன்றறியான் "—நம்பிகள் தேவாரம்.

**என்செய்கேன்** - இதனைத் தீர்க்க என்ன செய்குவேன் ? "செய்வதொன்று மறியேனே " என்ற திருவாசகக் கருத்தினை இங்கு வைத்துக் காண்க. **செய்கேன்** - செய்யக் கடவேன். க - எதிர்கால இடைநிலை. என்று-என இவ்வாறு கதறி. **பின்னும்** - பின்னரும் வரும்பாட்டிற் கூறியவாறு எண்ணிப்போயினர் என முடித்துக் கொள்க.

819. (வி - ரை) **என் செய்தால் தீருமோ ?** - "ஆவதொன்றறியேன்" "என்செய்வேன் " என்று மனமழிந்த திண்ணனார் இதனை எவ்வகையாலும் தீர்த்தல் வேண்டுமன்றே ? என்ன செய்கை செய்தால் இது தீருமோ என மேலும் எண்ணிச் சூழ்வேன் என் றெண்ணி டுவாராயினர். குருதி கண்டதும் முதலில் மயங்கி வீழ்ந்தார் ; பின் தேறி இதுசெய்தாரை ஒறுப்பேன் என்று வீராவேசத்தாற் றேடினார் ; பகை ஒன்றும் காணுமையால் மனக் கொதிப்பும் தடுமாற்றமும் நீங்கச், சோகத்தோடு கதறினார் ; அதன் பின்னர் இத்தீங்கினை எவ்வகையானும் தீர்த்தல் வேண்டுமே, அதனை எண்ணிச் செய்வேன் என்று நிதானித்து ஆராயத் தொடங்கினர். இஃது இப்போது அவரது மனநிலை. இவ்வாறே மேல் வருவனவுங் காண்க.

**என் செய்தால் தீரும்** - என் செய்கை னென்றதைத் தொடர்ந்த மனநிகழ்ச்சி.

**தீங்கு முன்செய்தார் தம்மைக் காணேன்** - தீங்கு செய்தாரைத் தண்டித்தல் அத் தீங்கினால் விளைந்த துன்பத்தைப் போக்காவிடினும் துன்பப்படுவோர்க்கு ஒருவாற்றால் மனஅமைதி உண்டாக்கும் வகையால் ஒருவகைத் தீர்வாகமேற்கொள்வது உயிரியற்கையாம். இதுபற்றியே முன்னர்த் திண்ணனார் " யார் இதுசெய்தார் ?" என்று கிளம்பி வேடரையும் விலங்கினத்தையும் தேடிச் சென்றனர். அக்கருத்தினைத் தொடர்ந்தே இங்குக் **காணேன்** என்றார். செய்தாரைக் கண்டு ஒறுத்திருந்தேனாகில் அது அம்மட்டில் ஒருவகைத் தீர்வாகி, மேலும் இங்ஙனம் விளையா வண்ணம் தடுப்பதுடன், அவரால் நேர்ந்த புண்ணின் மூலத்தை அறிந்து அதற்குத் தக்கபடி மாற்றுச் செய்து தீர்க்கலாகும் என்பதும் கருதியதாம்.

**மீன்செய்வார் பகழிப்புண்** - விளக்கமுடைய கூரிய அம்புகளாலாகிய புண். இப்புண் எதனாலுண்டாகியது என்று அறிந்திலரேனும், நோய்மூலம் காடாது நோயைமட்டும் நாடி மருந்து செய்யும் நவீன மருத்துவர்போலப், புண்ணின் விளைவாகிய உதிரம் பாய்தலும் பிறவும் கண்டு, பகழிப்புண்ணிலும் இவை காணப்படுதலால் அதன் தீர்வாகிய மருந்தே இதற்கும் ஆம் என்று அனுமான அளவையாற் றுணிந்து, **பகழிப் புண்தீர்க்கும் மெய்ம்மருந்து தேடினார்** என்க.

**மெய்ம்மருந்து** - பிழையாத - நிச்சயமாகிய - மூலிகைகள். **மெய்** - உடல் எனக் கொண்டு உடற்புற மருந்து என்றலுமாம். உயிரைச் சார்ந்த பவநோய் தீர்க்குமருந்து வேறுண்மையுமறிக.

**பொன் செய்வரைத் தாழ்வில்** - என மாற்றுக. **தாழ்வரை** - இல்முன் - முன்றில் என வருவதுபோல வரைத்தாழ்(வு) எனற்பாலது **தாழ்வரை** எனவந்தது. **தாழ்வு** - பள்ளம் - தாழ்ந்த இடத்தை யுணர்த்துதலின் ஆகுபெயர். " பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மேலாக " (திருவாசகம்), "அன்ன தன்றிருத் தாழ்வரை" (23) என்றவை காண்க.

**பொன்செய்** - பொன்விளையும் நிலத்தின் விளைவனவும், பொதுவாய் மலையின் விளைவனவும் ஆகிய மருந்து மூலிகைகள் மிக்க வீரியமுள்ளன என்பர். பொன்முகலி பெருகுதற்கிடமாதலின் **பொன்செய் வரை** என்றார். முகலி இம்மலையினின்று பொன்கொழித்து வருதல் மேல் 747-ல் உரைக்கப்பட்டது. **பொன்** - அழகு எனக் கொண் டுரைப்பாருமுண்டு.

**கொண்டு வருவன் நான் என்று போனார்** - தேடி எடுத்துக்கொண்டு நான் வருவேன் என்று சொல்லிப்போயினர். **சொல்லுதல்** - தேவர்க்கு அறிவித்து அவரைத் தேற்றுதல் கருதியது.

**வருவன் என்று போனார்** - செய்கை போதலேயாயினும், திண்ணனார் முன்கருதியது வருதலேயாம். வரும் ஆவலே அவர் கருத்தின் மிக்கிருந்தது என்பது குறிப்பு. உலக வழக்கிலும் போகின்றவர்கள் போகின்றேனென அமங்கலமாகக் கூறாமல் வருகின்றேன் என்று சொல்லிப்போகும் மரபும். இதுபோன்ற கருத்துடையதாம்.

**மருந்து நாடி**—என்பதும் பாடம். 170

820. நினைத்தனர் வேறு வேறு நெருங்கிய வனங்க ளெங்கு
மினத்திடைப் பிரிந்த செங்க ணேறென வெருக்கொண் டெய்திப்
புனத்திடைப் பறித்துக் கொண்டு பூதநா யகன்பால் வைத்த
மனத்தினுங் கடிது வந்தம் மருந்துகள் பிழிந்து வார்த்தார். கஎக

(இ - ள்) வெளிப்படை. (திண்ணனார் மருந்து மூலிகைகளையும் அவையிருக்குமிடங்களையும்) எண்ணினவராய் வேறுவேறு நெருங்கிய காடுகளில் எங்கும், தன்னினத்தினின்றும் பிரிந்த செங்கண்ணுடைய இடபத்தினைப்போல, வெருட்சியுடன்போய்ப் புனங்களில் மருந்து மூலிகைகளைப் பறித்துக்கொண்டு, பூதநாதனாகிய காளத்தியப்பரிடம் தாம்வைத்த மனத்தின்வேகத்தினும் மிக்கவிரைவாகத் திரும்பிவந்து அந்த மருந்துகளைப் பிழிந்து அவருடைய கண்ணில் வார்த்தனர்.

(வி - ரை) **நினைத்தனர்** - நினைத்தனராகி. முற்றெச்சம். நினைத்தனர் பறித்து எனக்கூட்டுக.

**வேறுவேறு வனங்கள்** - வெவ்வேறாகிய - வெவ்வேறு வகைப்பட்ட காடுகள். **நெருங்கிய** - மரஞ் செடி கொடிகளடர்ந்த; **எங்கும்** - எங்கெங்கும் - முழுதும்.

**இனத்திடைப் பிரிந்த செங்கண்ஏறு என** - **செங்கண் ஏறு** - இங்கு இடபஏற்றினைக் குறித்தது. **வெருக் கொள்ளுதல்** - எதிர்பாராது சடுதியில் நேர்ந்த பயத்தால் வெருண்டு மருட்சியடைதல். **வெருவுதல்** - பயப்படுதல். உலகவழக்கில் இதனை விருக்கென்று பயந்து என மருவிவழங்குவர். தன் இனத்தினின்று பிரிந்தஇடபம் இவ்வாறு வெருண்டு கண் சிவந்தும் காது கூப்பியும் இனம் இருந்ததிசை நோக்கித் தேடியும் அலறியும் ஓடுதல் கண்கூடாதலின் அதனை உவமித்தார். **ஏறு** - வீரத்தினைவிடாத தன்மையும் குறிப்பதாம். இது மெய்யும் தொழிலும்பற்றிய உவமை.

**இனத்தினைப் பிரிந்த** என்ற உவமைமுகத்தாற் காளத்தியப்பரைத் திண்ணனாருக்கு இனம் என்பதும், **ஏறு** - பக்குவான்மா என்பதும் குறிப்பாம். **இனம்** - அவ்வர்க்கம் கூடி அமைதி பெறுதற்குரியதாய், அதற்குச் சுகந்தருவதாய், அதன் தலைமையதாய்ச், சித்தாயுள்ள பசுபதியைக் குறிக்கும். பக்குவப்பட்ட ஆன்மாக்கள் தாம் சேர்ந்திருந்த பதியினைப் பிரிந்தால் இவ்வாறு வெருக்கொண்டு அலைவர் என்ற உண்மை நூற்கருத்தும் இங்குப் புலப்படுதல் காண்க. **செங்கண்** என்பதும் உயிரின் செம்மையாகிய பக்குவக்குறிப்பு. இதன் விரிவு சிவஞானபோதம் 8-ம் சூத்திரத்துள்ளும், பிறாண்டும்கண்டுகொள்க. மாணிக்கவாசக சுவாமிகள் "ஐயனே நினைப்பிரிந்து மாற்றகில்லேன்" (வாத - உப - பட. 55) என்று அலறிய சரிதம் காண்க. ஆளுடைய

பிள்ளையார் புராணத்தினுள் "தொடர்ந்தபிரி வுணர்வோருகாற், கொண்டெழலும் வெநக்கொண்டாற் போலமுவர் குறிப்பயலாய்" (55) என இவ்வாறே கூறுதல் காண்க. "எத்தனைநாள் பிரிந்திருக்கே னென்னூர் இறைவனையே", "எவ்வண நான் பிரிந்திருக்கேன்", "எங்குலக்கப் பிரிந்திருக்கேன்", "எங்ஙன நான் பிரிந்திருக்கேன்", "எப்பரிசு பிரிந்திருக்கேன்", "என்னுகப் பிரிந்திருக்கேன்", "எற்றளவுய்ப் பிரிந்திருக்கேன்" என்று ஆளுடைய நம்பிகள் (திருவாரூர் - பழம்பஞ்சுரம்) பாசுரந் தோறும் பலப்பலவாறு பரிந்து இரங்கியதும் காண்க.

நினைத்தனர் - பறித்து - இவையிரண்டற்கும் செயப்படுபொருள் வருவிக்க.

பூதநாயகன் - சிவபூதங்கள் முதலிய கணங்களுக்கெல்லாம் தலைவன். கோடிகோடி குறட்சிறு பூதங்கள் (16) சுற்றி ஆடவும், பாடவும், ஏவல் செய்யவும் அவைகட்கெல் லாம் தலைவராய்ச் சிவபெருமான் வீற்றிருப்பர் என்பது வேதசிவாகமங்களானறியப்படும் உண்மை. "பொன்றீ மணிவிளக்குப் பூதம் பற்ற", "பாரிடங்கள் பணிசெய்ய" (தேவா ரம்), "ஓவா வணுக்கச் சேவகத்தி லுள்ளோர் பூத கணநாதர்..." (ஏயர்கோன் - புரா - 332) முதலிய எண்ணிறந்த திருவாக்குக்களும், "பூதபதயேநம" என்ற சிவாஷ் டோத்தரமும் காண்க. பூதம் - உயிர்கள் என்று கொண்டு உயிர்க்குயிராய் நின்று இயக்கும் தலைவன் என்றலுமாம். "பூதம் யாவையி னுள்ளவர் போதென", "பூதபரம் பரை" என்பன காண்க.

பூதநாயகன்பால் வைத்த மனத்தினும் கடிது - மனவேகம் மிகக் கடிதிற் செல் வது. "வாயுவேகம் மனோவேகம்" என்ற வழக்கும் காண்க. திண்ணனாரது மனம் வேறெங்கும் செல்லாது பூதநாயகனிடமே செல்லுதலால் அவர் பால்வைத்த என் றார். மருந்து தேடிப் பறித்தபின் மிக வேகமாய் நாயகனிடம் சென்ற குறிப்புப் பெற மனத்தினும் கடிது என்றார். முன்னே "நாணனு மன்பு முன்பு களிர்வரை யேற" (751) என்றபடி அன்பு முன்போய்த் திண்ணனாரை இழுத்துச் செல்ல அவர் அதனைப் பின்பற்றிப் போயினர். இங்கு அந்த மனத்தினும் மருந்து பிழிந்துவார்த்துப் புண்தீர்க்கும் ஆர்வம் மிக்கதால் அவர் சென்ற செல்கையின் வேகம் மிக்கது. மனம் வருதற்குமுன் இவர் வந்தனர் என்பது. எண்ணம் முற்றுவதற்கு முன் அதனைத் தூண்டப்பட்ட செயல் முற்றியதெனச் செயலின் விரைவு குறித்தபடியாம்.

மனத்தினும் - இன் - உறழ்பொருளில் வந்த ஐந்தனுருபு. உம்மை உயர்வுசிறப்பு.

அம்மருந்துகள் பிழிந்து வார்த்தார் - தேடி - கினைத்து - பறித்து-கொண்டு - கடி தாவந்த - அந்த என அகரம் முன்னறி சுட்டு. பிழிதல் - வார்த்தல் - மருந்தாமூலிகை களாகிய பச்சிலைகளை ஏற்றவாறு பிழிதலும் குருதிபொங்கும் புண் உள்ள இடம் தெரிந்து வார்த்தலும் மருத்துவம் செய்யும் முறைகள் குறித்தன. "கோய்நாடி நோய் முதனாடி யதுதணிக்கும், வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்ற திருக்குறளும் அதன் கீழ் ஆசிரியர் பரிமேலழகருரைத்தனவும் இங்கு நினைவு கூர்க. இம்மருத்துவமுறை திண்ணனார்க்கு முன்அனுபவ வாசனையால் நேர்ந்த அறிவு. இம்மருந்து இலைகளைச் சல்லியகரணி என்பர்வடநூலார். (சல்லியம்-அம்பு, ஈட்டி). இத்தகைய சல்லியகரணி முதலிய பல மூலிகைள் மலைகளில் உள்ளன என்று இராமாயணங் கூறும்.

பிசைந்து வார்த்தார் —என்பதும் பாடம். 171

821. மற்றவர் பிழிந்து வார்த்த மருந்தினுற் றிருக்கா ளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர் குறைபடா தொழுகக் கண்டே
"யிற்றையி னிலைமைக் கென்னே வினிச்செய "லென்று பார்ப்பா
"ருற்றநோய் தீர்ப்ப தூனுக் கூ"னெனு முரைமுன் கண்டார். களஉ

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறு மற்றப் பிழிந்து வார்த்த மருந்தினுல் திருக்கா ளத்தி யப்பருடைய கண்ணின் புண்ணினின்று வரும் குருதிநீர் குறைவுபடாமல் முன்

போலவே வழிய, அவர்கண்டு "இக்காளின் நிலைமைக்குத் தீர்வாக இனிச் செய்வது என்னையோ?" என்று ஆராய்ந்து எண்ணுவார் "ஊனே ஊனுக்கு உற்ற நோய் தீர்ப்பது" என்னும் பழமொழி தம் நினைவின் முன்வர உணர்ந்தார்.

(வி - ரை) **மற்று** - அசை. **மற்றுப் பிழிந்து** எனவும், **அவர் கண்டே** எனவும் கூட்டுக. மாற்று என்பது **மற்று** என விகாரப்பட்டது என்றலுமாம். **மாற்று** - தீர்வு. **கொற்றவர்** - தலைவர். முன்னர் முதல்வனார், காயனார் என்றதற்கேற்ப இங்குக் கொற்றவர் என்றார். கொற்றமாவது தாம் பெரியராயினும் அன்பர்க் கெதிர்வந்து ஆட்படுத்தும் தன்மை.

**புண்நீர்** - புண்ணினின்றும் போந்தநீர்; குருதி. உடலின் மேலிடம் எங்கும் போர்த்த மேற்றோலைப் பிளந்து உள்ளிருக்கும் தசை குருதி முதலியவை வெளியிற் காண்பதுவே **புண்** எனப்படும். **புண்** - (Injury) என்பதற்கு (Breach of the continuity of the cutaneous membrane) மேற்றோலின் தொடர்ச்சி அறுபடுதல் என்று நவீன அயல்நாட்டு மருத்துவர் கொள்ளும் வரையறையும் காண்க. உடலின் உள்ளே ஒடிப் புண்ணுகிய நிறப்பினின்றும் வெளிவரும் செங்நீர் குருதி - இரத்தம்-எனப்படும்.

**இற்றையின் நிலைமை** - தமது தலைவர்க்கு இன்று இந்த நோய்கண்டதும், அது, தாம் இதுவரை முயன்றும் எவ்வாற்றாலும் தீராமையும் ஆகிய நிலைமை.

**என்னே இனிச் செயல் என்று பார்ப்பார்** - இதுவரை செய்த உபாயங்கள் பயனற்றவையா யொழியவும், மனஞ்சலித்துவிடாது மேலும் ஆய்ந்தனர். இதுவும் உலகியற்கை. "இறுவரை காறு முயல்ப" என்பது நீதிநூல். **பார்ப்பார்** - வினைப்பெயர். ஆராய்வாராகிய திண்ணனார். **பார்ப்பார்** - கண்டனர் எனக் கூட்டிமுடிக்க. **பார்த்தல்** இங்கு மனத்தினுள் ஆய்ந்து பார்த்தலின்மே னின்றது.

**உற்றநோய்...உரை** - **உரை** - பழமொழி; "ஊனுக்குஊன்" என்பது பழமொழி. **உற்றநோய் தீர்ப்பது** என்பது அதற்கு உரை. "மாம்ஸ0 மாம்ஸைக வர்த்ததே" என்னும் மேற்கோளுங் காண்க. **ஊனுக்கு உற்றநோய் தீர்ப்பது ஊன்** எனமாற்றி உரைத்துக் கொள்க. இது அக்காளில் வேடர்களுக்குள் வழங்கிய பழமொழிகளில் ஒன்று என்று தெரிகின்றது. இவர்களது குலத்தொழிலாகிய வேட்டைப் போரில் பலகாலும் உடற்பகுதிகள் சிதையக் காண்பாராதலின் அதற்கு இவ்வாறு ஆகியதொரு தீர்வும் கண்டு அதனைப் பழமொழியாகவும் வழங்கினர் என்பதாம். மனிதரது உடற் பகுதிகள் சிதைத்து ஊறுபட்டபோது பிற மனிதருடல்களிலேனும், பிற விலங்கு முதலியவற்றி னுடல்களிலேனும் அவற்றிற்கு ஒத்த பகுதிகளைப் பெற்று இரத்தச்சுடி மாறு முன்னம் சிதைத்த பகுதிகளில் ஒட்டிப் புண்ணுற்றவதென்ற வொருவகை மருத்துவ முறையினை இக்காள் நவீன மருத்துவரும் கையாளுகின்றனர். மக்களின் உடலில் எலும்பின் பகுதி ஊறுபட்டால் அதனை நீக்கி வேறு உடலின் எலும்பின் ஒத்தபகுதியைச் சேர்த்துப் பொருத்துவதும், வேறு பலபகுதிகளைப் பொருத்துவதும், மனிதரது கண் புண்ணுகையே அதனைக்குடைந்து எடுக்கவேண்டிவந்தபோது நாய், பூனைமுதலிய பிராணிகளின் கண்களைத்தோண்டி உடனே அப்பிவைத்திடுவதும் ஆகிய இவைபோன்ற மருத்துவ முறைகள் இக்காளில் மேம்பட்டனவாகச் சொல்லப்பட்ட மருத்துவச் சாலைகளில் செய்யப்படுகின்றன. இவை பண்டைநாளில் வனவேடர் கையாண்டதொரு பழைய வழக்கத்தின் வழிவந்த எச்சம் என்று சொல்லக்கூடியதாகின்றது. மருத்துவம், உழவு முதலிய கலைஞானங்களின் அனுபவ உண்மைகளைப் பழமொழிகளாக வழங்குவது தம் நாட்டிலும் ஏனை நாடுகளினும் உள்ள வழக்கமாம். ஒத்ததற்கு ஒத்தமுறை (Like for like) என்ற ஒப்புத்தீர்வு முறை (Homeopathy)ப் பழமொழியும் இதுபோன்ற பிற வும், இவைபோன்ற ஏனைக் கலைஞானப் பழமொழிகளும் காண்க.

கலைஞானங்களின் அனுபவ உண்மைகள் மறதி முதலிய காரணங்களால் மாறுபடாது நிலைத்து நிலவவும், எளிதில் யாவரும் பயிலவும், நினைவுகூரவும் அவற்றைப்

பழமொழிகளாக வழங்கும் வழக்கம் உதவிபுரிகின்றது. அவ்வழக்கம் இங்கு அரிய பெரிய செயலுக்கும், செயலின் விளக்கத்துக்கும் பயன்பட்ட வரலாறு இச்சரிதத்தி னுற் காணலாம்.

முன் கண்டார் - மனக்கண்ணின் முன்னே வரக்கண்டனர் - நினைவுக்கு வர அறிந்தனர். முன்உரை என்றுகூட்டிப் பழமொழி என்று கொள்ளலுமாம்.

இழியக் கண்டும்—என்பதும் பாடம். 172

822. "இதற்கினி யென்க ணம்பா லிடந்தப்பி னேந்தை யார்கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவு மடக்கு" மென்று
மதர்த்தெழு முள்ளத் தோடு மகிழ்ந்துமுன் னிருந்து தங்கண்
முதற்சர மடத்து வாங்கி முதல்வர்தங் கண்ணி லப்ப, களஉ

823. *நின்றசெங் குருதி கண்டார்; நிலத்தினின் றேறப் பாய்ந்தார்;
குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினர்; கூத்து மாடி
"நன்றுநான் செய்த விந்த மதி"யென நகையுந் தோன்ற
வொன்றிய களிப்பி னூலே யுன்மத்தர் போல மிக்கார். களச

822. (இ - ள்) வெளிப்படை. "இனி இம்மருந்து செய்தற்காக, எனதுகண்ணை அம்பினுலே தோண்டி அப்பினுல் எமது பெருமானுரது கண்ணில்சேர்ந்த கோயினுக்கு இதுவே மருந்தாகி, அதனுற் புண்ணினின்று போதுகின்ற குருதிநீர் வராமல் நீர்க்கவும் கூடும்" என்று எண்ணிக், களித்து எழுகின்ற உள்ளத்தோடும் மகிழ்ந்து திருமுன்பு இருந்துகொண்டு, தமது கண்முதலேச் சரத்தினுல் ஊன்றித் தோண்டி எடுத்துக் கையில் வாங்கி முதல்வனுரது கண்ணில் அப்ப, களஉ

823. (இ - ள்) வெளிப்படை. குருதிநின்றதைக் கண்டார்; அந்தப்பெருமகிழ்ச் சியினுலே நிலத்தினின்று உயரப்பாய்ந்து குதித்தார்; மலை போல வளர்ந்த தமது தோள்களைக் கொட்டினர்; கூத்தும் ஆடி "நான் செய்த இந்த மதி - யோசனை - மிக நன்று" என்று சிரிப்புத் தோன்றப் பொருந்தியகளிப்பினுலே உன்மத்தர் போன்ற நிலையில் மிக்கவராயினர். களச

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

822. (வி - ரை) இதற்கு - "ஊனுக்குஊன்" என முன்கண்ட உரையாற் றெரிந்த மருந்து பெறுதற்கு. முதல்வனுரது புண்ணுகிய ஊனில் அப்புதற்கு அது போன்ற கண்ணுகிய ஊன்பெற வேண்டிய அதனுக்கு. இதற்கு - இக்கோய்க்கு என்றலுமாம்.

என்கண் இடந்து அப்பின் - கண்ணுகிய ஊன் வேண்டும் அதற்கு மான் முத லியவற்றைக் கொன்று அவற்றின் கண்ணைத் தோண்டி அப்பலாகுமே யெனின் அது தாமதப்படுதலோடு இறந்த பிராணியின் அங்கமாதலின் சுடுதணிந்து ஒவ்வா மலும்போம். கொடுக்கத்தக்க கண்ணையுடைய தாம் பக்கத்திலிருப்ப வேறெங்கும் இத னைத் தேடவேண்டுவதில்லை எனத் துணிந்தனர். யாக்கைதன் பரிசு அற்ற (803) நிலையிலிருந்தனராதலின் அவ்வியாக்கையினின்ற கண்ணை நினைத்தனரன்றி அதனை யிடக்கும் போதும் இடந்தபின்னும் உளதாகும் அன்பமுதலாயினவற்றை நினைந்தா ரிலர்.

என்கண் - ஞானேந்திரியங்கள் ஐந்தும் இருக்குமிடமாதலின் தலையே எண் சாணுடம்பில் முதன்மை பெற்றதாம். அவ்வைந்தனுள்ளும், சேய்மையிலுஞ் சென் றியைந்தறிதலாற் கண் சிறந்தது என்ற குறிப்பால் என்கண் என்று விதந்து கூறினர்.

இறைவனது கண்ணினின்றும் போந்த முருகவேளினது அருளாற் போந்தவர் திண்ணனாராதலின் கண்கொடுத்தல் முறையேயாம் என்ற குறிப்பும் பெற **என்கண்** - என்றார் எனலுமாம்.

**புண்நீர்** - புண்ணிலிருந்து வடியும் குருதியாகிய செந்நீர்.

**நிற்கவும் அடுக்கும்** - வடியாமல் நிற்கவும் கூடும். உம்மை ஐயம்பற்றி வந்தது. " அப்பியும் காண்பன் " என்ற திருமறமும் காண்க.

**மதர்த்து எழும்** - களிப்புற்றதனால் எழுகின்ற. மதர்த்தல் - மகிழ்தல் - களிப்புறுதல். எழுதல் - பூரித்தல். காரியம் கைகூடுமுன்பே இவ்வாறு மருந்தாகவுதவும் பேறு பெற்றதற்கு மகிழ்ந்தனர்.

**முன் இருந்து** - திருமுன் வீற்றிருந்து-மருந்துகள் பிழிந்து வார்க்கும்போது நின்ற திண்ணனார் இப்போது கண்ணைத்தோண்டி வாங்கும்போது அசைவின்றியிருப்பதற்காக இருந்தனர் என்க. உடற்பகுதிகளை மருத்துவர் அறுக்கும்போது அசைவற்றிருத்தல் வேண்டுமென்பது முறை. **மடித்து** - வைத்து - ஊன்றி. **வாங்கி** - கண்ணைத் தோண்டிப் பிரித்து. வேறாக எடுத்து.

**தங்கண் முதல்** - என்க. **கண்முதல்** - கண்ணின் வேர். **முதல்** - வேர். அடிப்பாகம். " நின்முதல் வழிபடத் தன்மகற் றடிந்த தொண்டர் " (கோயிஞான் - 40), " வெஞ்சின மாசுணந் தன்முதல் முருக்க, நெஞ் முதற்சூழ்ந்த நீர்ச்சிறு பாம்பு" (ஷி 8) என்பனகாண்க. **முதற்சரம்** என்றுகூட்டி முதன்மையான அம்பு என்றுரைத்தலுமாம். முதன்மையாவது திண்ணப்பனாரைக் கண்ணப்பனாராக ஆக்குதற்குரியபடி வலது கண்ணைத் தோண்டியும், இடது கண்ணைத் தோண்ட ஊன்றியும் உதவிய சிறப்பு. பின்னரும் ஒருதனீப்பகழி (826) என்றதுகாண்க. இச்சிறப்புப்பற்றிக் " **கணைகொள்** கண்ணப்பர் " (தக்கேசி - திருநின்றியூர் - 2) என்று நம்பிகள் அருளிய குறிப்புங்காண்க. இடக்கண்ணுக்கு இரண்டாமுறை அம்பு எடுத்தலின் இதனை **முதற்சரம்** என்றார் என்றுரைப்பாருமுண்டு.

**சரம் மடுத்தல்** - அம்பினை ஊன்றுதல். " கணையது **மடுத்து** ", " மற்றைக் கண்ணிலும் வடிக்கணை **மடுத்தனன்** " என்பன திருமறத் திருவாக்கு. **வாங்கி** - தோண்டியெடுத்த கண்ணினைக் கையில்வாங்கி. " கையில் வாங்கி " என்பது திருமறம்.

**சரம் எடுத்து**—என்பதும் பாடம். 173

823. (வி - ரை) **நின்ற செங்குருதி கண்டார்** - குருதி வெளிவராத நிலைமையைக் கண்டாராதலின் செங்குருதி நின்றதுகண்டார் எனமாற்றிப் பொருள்கொள்க. "வென்றவைம் புலனும் மிக்கீர் " (401) என்றதுபோலக் காண்க. "நீங்கிய நாணும்" என்றாற்போல இவ்வாறு வருதல் பொருத்தமில் புணர்ச்சி என்பது சுப்பராய செட்டியாருரை.

**நிலத்தினின்று ஏறப்பாய்ந்தார்** - இங்குக்கூறிய ஏறப்பாய்தல், தோள்கொட்டுதல், கூத்தாடுதல், நகை தோன்றுதல், உன்மத்தர் போலாதல் எனுமிவை பெருமகிழ்ச்சியால் வெளிப்படக்காணும் உடற்செயல்கள். முன் குருதி கண்டபோது மனமும் மெய்யும் மொழியும் முடங்கி மயங்கிச் சோர்ந்து நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார் (814). குருதி நிற்கக்கண்ட இப்போது அவை தழைக்கத் தாமும் நின்று ஏறப்பாய்ந்தார். **ஏறப்பாய்தல்** - நின்ற இடத்தினின்றும் உயரக்கிளம்பிக் குதித்தல்.

**குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினார்** - **வளர்ந்த** - குருதி கண்டபோது கையிற் சிலையுடன் ஊனும் சிதறிவீழ்த்தித் (814) தோள்கள் மெலிந்தன ; குருதி நிற்கக் காணலும் அம்மகிழ்ச்சி மிகவே அவை குன்றுபோல வளர்ச்சிபெற்றன என்க. **குன்றென** - முன்னர்க் குன்றுபோல வளர்ச்சிபெற்றும் இப்போது மெலிந்த தோள்கள் தமது முன்னைநிலையாகிய குன்றுபோல. "செவ்வரை போற்புய மிரண்டும்" (701) என்றதுகாண்க. நாயகனைப் பிரிந்த சோகத்தால் நாயகிக்கு உடல் மெலிந்து கைவளை கழ

லுதலும் அவனைக் கூடியவழி உடல் பூரித்துக் கைவளை உடைதலும் முதலியனவாக அகப்பொருணூல்களிற் பேசப்படும் நிலைகளினியல்பை இங்குக் குறிக்க.

**கூத்தும் ஆடி** - தம்மை மறந்து கூத்தாடுதல் மிக்க மகிழ்ச்சியின் விளைவு. "கும்பிடுதலும், தட்டமிடுதலும், கூத்தாடுதலும் உலகை மிகுதியில் நிகழும் மெய்ப்பாடு" (சித்தியார் 12-2) என்ற பொழிப்புரையும் காண்க. "ஆசையொடு மரனடியா ரடியாரை யடைந்திட் டவர்கரும முன்கரும மாகச் செய்து" என்ற ஞானசாத்திரத் (12 - 2) திருவாக்கிற் கண்டவாறு இங்குத் திண்ணனூர் அரனையே யணைந்தனர்; அரனை ஆசையொடும் அடைந்தார்; அவர் கருமம் தன் கருமமாகச் செய்தார்; அவர் பிரேமை யாகிய அநுண்ஞானக் குறியின்நின்று தம்மை மறந்து அவரையே கும்பிட்டு அருச்சித்தார்; இங்கு அவரது நோய்தீரக் கண்டபோது உலகையிலுற் கூத்தும் ஆடினர்; சீவன் முத்த நிலையாகிய பரம உபசாந்தத்தை அடைந்தனர்-என்பது க. சதாசிவ செட்டியார் உரைக் குறிப்பு.

**நான் செய்த இந்தமதி நன்று** - எனமாற்றுக. **மதி** - எண்ணம் - ஆலோசனை. மதித்தற்கருவியின்றொழிற்பாடு. **செய்தமதி - மதி** - உள்ள நிகழ்ச்சி; **செய்தல்** - உட் கருவியின்றொழில். **மதி** - மதியாற்றூண்டப்பட்ட செயலுக்கு ஆகு பெயரென்றலு மாம்.

**ஒன்றியகளிப்பினுலே உன்மத்தர் போல** - **ஒன்றிய** - பொருந்திய - முன்னிருந்த சோகமும் கவலையும் நீங்க இப்போது வந்து சேர்ந்த. களிப்பினுலே உன்மத்தர் போலாகுதல் மதமிகுந்தபோது உளதாம் உட்காரண புறக்காரணநிலை. **உன்மத்தர்** - மதம்மிக்கவர். **உத்** - மேல். **உற்பாதம், உற்பவம், உற்பீசம்** என்பவை காண்க. **மத்தம்** - மதத்தாலாகும் நிலை.

**மிக்கார்** - இந்நிலையின் மெய்ப்பாடுகளின் மிகுதியுடையாயினர்.

**குன்றெனவளநும்**—என்பதும் பாடம். 174

824. வலத்திருக் கண்ணிற் றங்க ணப்பிய வள்ள லார்தந்
நலத்தினைப் பின்னுங் காட்ட நாயனூர் மற்றைக் கண்ணி
லுலப்பில்செங் குருதி பாயக் கண்டன ருலகில் வேடர்
குலப்பெருந் தவத்தால் வந்த கொள்கையி னும்பர் மேலார், களஎ

825. கண்டபின் "கெட்டே! னெங்கள் காளத்தி யார்க ணொன்று
புண்டரு குருதி நிற்க, மற்றைக்கண் குருதி பொங்கி
மண்டுமற் றிதனுக் கஞ்சேன் மருந்துகை கண்டே; னின்னு
மூண்டொரு கண்; ணைக் கண்ணே யிடந்தப்பி யொழிப்பே"னென்று

826. கண்ணுதல் கண்ணிற் றங்க ணிடந்தப்பிற் காணு நேர்பா
டெண்ணுவார் தம்பி ரான்றன் றிருக்கண்ணி லிடக்கா லூன்றி
யுண்ணிறை விருப்பி னேடு மொருதனிப் பகழி கொண்டு
திண்ணனூர் கண்ணி லூன்றத் தரித்திலர் தேவ தேவர், களஎ

827. செங்கண்வெள் விடையின் பாகர், திண்ணனூர் தம்மையாண்ட
வங்கணர், திருக்கா ளத்தி யற்புதர் திருக்கை யம்பாற்
றங்கண்மு னிடக்குங் கையைத் தடுக்கமூன் றடுக்கு நாக
கங்கண ரழுத வாக்குக் "கண்ணப்ப நிற்க" வென்ற. களஅ

824. (இ - ள்) நாயனார் - தலைவராகிய காளத்தியப்பர்; வலத்திருக் கண்ணில்... காட்ட - தமது வலது திருக்கண்ணிலே தம் வலக்கண்ணைத் தோண்டி அப்பிய வள்ளலாராகிய கண்ணப்ப நாயனாரது நன்றாந்தன்மையை மேலுங் காட்டுதற்பொருட்டு; மற்றைக் கண்ணில்.....கண்டனர் - தமது மற்றைக்கண்ணாகிய இடது கண்ணில் இடையறாது செங்குருதி பாய்ந்திழியும்படி செய்தனர்; உலகில்...மேலோர் - இவ்வுலகிலே வேடர்குலம் செய்த பெருந்தவங் காரணமாக அதனில் வந்தவதரித்த, கொள்கையினால் தேவரினும் மேலவராயின திண்ணனார் (அதனைக்கண்டு), கஎரு

825. (இ - ள்) கண்டபின் - கண்டவுடன்; "கெட்டேன்.....நிற்க-ஓ! கெட்டேன்! எமது காளத்தியப்பருடைய கண்களில் ஒன்றில் வந்த புண்ணினின்று பாய்ந்த குருதிவராமல் நின்றுவிட; மற்றைக்கண்...மண்டும்-மற்றைக்கண்ணில் குருதி பொங்கி மிகுகின்றது; மருந்து கைகண்டேன் - இந்நோய்தீர்க்கும் மருந்தினை அனுபவத்திற் கண்டு கொண்டேன்; மற்றிதனுக்கு அஞ்சேன் - வரத்தகாத இது வந்ததனுக்கு அஞ்சமாட்டேன்; இன்னும்.....கண் - எனக்கு இன்னும் ஒரு கண் எஞ்சியுள்ளது; அக்கண்ணை.....என்று - அந்தக் கண்ணைத் தோண்டித் தேவர் கண்ணில் அப்பி இந்நோயினைத் தீர்ப்பேன்" எனத்துணிந்து; கஎசு

826. (இ - ள்) தங்கண் இடந்து - தமது கண்ணைத் தோண்டி; கண்ணுதல் கண்ணில் அப்பின் - நுதற் கண்ணினையுடைய தேவரது கண்ணிலே அப்பினால்; காணும் நேர்பாடு எண்ணுவார் - காணும் நேர்பாட்டினை எண்ணுவாராய்; தம்பிரான்..... ஊன்ற - திண்ணனார் தமது பெருமானுடைய அத்திருக்கண்ணிலே தமது இடக்காலினை எடுத்து ஊன்றிக்கொண்டு, மனதில் நிறைந்தெழுந்த விருப்பத்தோடும் ஒப்பற்ற ஒரு அம்பினை எடுத்து அதனைத் தமது கண்ணில் ஊன்றவே; தேவதேவர் தரித்திலர் - தேவ தேவராகிய காளத்திநாதர் தரித்திலராதலின், கஎஎ

827. (இ - ள்) செங்கண்...பாகர் - சிவந்த கண்ணையுடைய வெள்ளை விடையினை ஊர்தியாகவுடையவரும்; திண்ணனார்.....அங்கணர் - திண்ணனாரை ஆட்கொண்ட அங்கண்மையுடையவரும் ஆகிய; திருக்காளத்தி.....திருக்கை-அத்திருக்காளத்தி யற்புதரது திருக்கை (தோன்றி); அம்பால்...கையை - அம்புகொண்டு கண்ணைத் தோண்ட முயற்சித்த அவரது கையினை; தடுக்க - தடுக்காநிற்க; நாககங்கணர் அமுதவாக்கு - பாம்பைக் கங்கணமாகத்தரித்த இறைவரது அமுதமாகிய திருவாக்கு; மூன்றடுக்கு - மூன்று முறை; "கண்ணப்ப நிற்க" என்ற - "கண்ணப்பனே நில்!" என்றன. கஎஅ

இந்நான்கு திருப்பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

824. (வி - ரை) **கண் அப்பிய வள்ளலார்** - கண்ணை இடந்து அப்பியதனால் வள்ளலாந்தன்மை வெளிப்படக் காண நின்றவர். **அப்பிய** - காரணப்பொருளில் வந்த பெயரெச்சம். **வள்ளலார்** - முன்னர் ஒரு கண் அப்பியதோடு பின்னும் மற்றைக் கண்ணையும் இடந்து அப்ப ஒருப்படுபவர் என்ற குறிப்புப்பெற இங்கு **வள்ளலார்** என்றார். முன்னர் "வள்ளலார் மலையை நோக்கி" (751) எனக் காளத்திநாதரை வள்ளலார் என்றார். "உள்ளதே தோற்ற" என்ற சிவஞானபோத உதாரண வெண்பாவில் (2 சூ - 2 அ) **வள்ளலவன்** என்றவிடத்து "வள்ளல் என்றார் தற்பயன் குறியாது வேண்டுவார் வேண்டியவாறே நல்கும் அருளுடைமை நோக்கி" என்று சிற்றுரையிற் கூறியது காண்க. இங்கு அவ்வள்ளலாருக்கும் வேண்டுவதை வேண்டியவாறே கொடுக்கும் வள்ளன்மைபூண்டதனாற் கண்ணப்பநாயனாரையும் அவ்வாறே **வள்ளலார்** என்ற சுவைகாண்க. ஏனை வள்ளல்கள் எனப்படுவோர் புகழ் முதலியவற்றை விரும்பித் தமது புறப்பற்றாயுள்ளவற்றைத் தருவர். "யாதனின் யாதனி னீங்கியா னோத, லதனினதனி னிலன்" என்றபடி கொடைப்பொருள்களா லுளதாகும் உபாதி நீங்குதலாகிய

சுகங்கருதியும் தருவர். திண்ணனார் அவ்வாறின்றி ஒன்றும் வேண்டாது உத்தமாங்கத்தில் உத்தமாங்கமாகிய கண்ணைக் கொடுத்தனர் என்றதனை இங்கு உணர்க.

நலம் - முற்றும் அன்பேயாந்தன்மை. **பின்னும் காட்ட** - முன் காட்டியதன்றிப் பின்னரும். மேலும் உறுதிப்படுமாறு. உம்மை இறந்தது தழுவியது. பின்னருங் காட்டுதலாவது, தமக்குப் பயன்பட மற்றொரு கண் எஞ்சியுள்ளது என்று கருதி ஒரு கண் கொடுத்தனர்; அதனையும் வேண்டின் தருவரோ ? என்ற ஐயப்பாடு நிகழாமற்காட்டுதல். நாயனார் தலைவர்; ஆளாக உடையவர் தம் அடிமையை எவ்வாறும் ஏவல்கொள்ள உரிமையுடையார் என்பதும், அடிமையினது உடலும் பொருளும் ஆவியும் முழுதும் தலைவருடையனவேயாம் என்பதும் கருதி இங்கு **நாயனார்** என்றார். கண்ணைத்தோண்டச் செய்தவதனால் முதல்வனாது கருணைக் குழுக்கில்லை, அவரது நன்மையை ஆன்மாக்கள் அறிந்துய்யச் செய்யும் கருணையின் வீளைவாதலின் என்பது.

**உலப்பில் செங்குருதி பாய** - செங்குருதி உலப்பிலதாய்ப்பாய என்க. **உலப்பு** - ஒழிவு. **செங்குருதி** - அடைமொழி இயற்கை குறித்தது.

**பாயக்கண்டனர்** - பாயச்செய்தனர்.பாய்தல்போலக் காட்சிப்படுமாறு திருவுள்ளம் வைத்தனர். **கண்டனர்** - காணுமாறு செய்தனர் என்ற பொருளில் வந்தது. பாய இருந்தனர் (813) என்றது காண்க. **பாய** - பாயும்படி செய்விக்க. பிறவினை விகுதி தொக்கது என்று கொண்டு, அவ்வாறு பாய்தலை **மேலோர்** கண்டனர் என்று கூட்டி உரைத்தலுமாம்.

**மற்றைக்கண்** - வலத்திருக்கண் அல்லாத மற்றைக்கண் அதாவது இடதுகண்.

**வேடர்குலப் பெருந்தவம்** - கானவர் குலம் விளங்க...அளவில் செய்தவத்தினாலே (662) என்றவிடத்தும், அதன் மேற்பாட்டுக்களிலும் உரைத்தவை பார்க்க.

**வந்து - மேலோர்** - கீழாயின அக்குலத்தில் வந்தவராயினும் **மேலோர்** என்று கொள்ள நின்றது.

**கொள்கையின் உம்பர் மேலோர்** - **கொள்கை** - கொள்ளப்பட்டது. இங்கு அன்பு குறித்தது. **உம்பர்** - மேல் உலகம். அவ்வுலக வாசிகளாகிய எல்லாத் தேவர்களையும் குறித்தது. **உம்பர்** - உம்பரினும். ஐந்தனுருபு தொக்கது. **உம்பர்கள்** - ஒவ்வோர் பொருளே விரும்பிச் சிவனைப் பூசித்துப் பதம் பெற்றவர்கள். திண்ணனார் அவ்வாறன்றி ஒன்றையும் வேண்டாது அன்பே வடிவாகி இறைவர் பொருட்டே பூசித்துப் பேறு பெற்றவர். ஆதலின் அவரினும் **மேலோர்** என்றார். இதனை அறிந்த "நான்முகன் முதலா யுள்ள வானவர் வளர்பூ மாரி பொழிந்தனர்" (828) என்றதும் காண்க. இங்கு **உம்பர்** என்றது தேவரில் மிக்க திருமாலைக் குறித்ததாகக் கொண்டு, அவரும் ஆழிவேண்டிக் கண்ணையிடந் தருச்சித்தாராயினும் தமக்கு ஒரு பயனும் வேண்டாது இறைவனது புண்தீர்த்தல் ஒன்றே கருதிக் கண்ணையிடந் தப்பியதனால் அவரினும் **மேலோர்** என்றுரைப்பதுமாம்.

மேலோர் (திண்ணனார்) கண்டபின் (825) என்று (825), - எண்ணுவார் - ஊன்றி ஊன்றத் - தேவதேவர் - தரித்திலர் (826), - பாகர் - அங்கணர் - அற்புதர் - திருக்கை - கையைத் - தடுக்க - வாக்கு - மூன்றடுக்கு - என்ற (828) என்று இந்நான்கு பாட்டுக்களையும் முடித்துக் கொள்க. 175

825. **(வி - ரை) கண்டபின்** - (மேலோர்) அதனைக் கண்டபின். அதனை என்ற செயப்படுபொருள் வருவிக்க.

**கெட்டேன்** - குருதிகாட்டும் சகுனம் கண்டபோதே "அத்தனுக் கடுத்ததென் கொல்கெட்டேன் (812) என்றது காண்க. இது தம்பெருமானுக்குத் தீங்கு நேரக் கண்டு தரியாதெழுந்த மிக்க இரக்கம் குறித்தது.

**எங்கள் காளத்தியார்** - முன்னரும் "எங்களத்தனார்" (818) என்றது காண்க.

மற்ற இதனுக்கு என்றது **மற்றிதனுக்கு** என வந்தது. **மற்ற** - வாத்தகாத - வேறு பாடாகிய. **இதனுக்கு மற்று அஞ்சேன்** என்று கூட்டியுரைத்தலுமாம்.

**மதந்து கை கண்டேன்**-"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை"யாதலின் அஞ்சேன் என்றதற்குக் காரணங் கூறியவாறு. கைகண்டேனுதலின் அஞ்சேன் என்க. கைகூடும் என்புழிப்போலக் கை உறுதிப் பொருள்தரும் (உபசர்க்கம்) இடைச்சொல். முன்னர் நிற்கவும் அடுக்கும் (822) என்ற ஐயப்பாட்டினிற் கண்ணைத் தோண்டினர். இப்போது அந்த ஐயம் நீங்கியதனால் உறுதிபெற்றெழுந்த துணிவு குறித்தது.

**ஒழிப்பேன்** - குருதி பெருகும் நோயினைத் தீர்ப்பேன். செயப்படுபொருள் வருவிக்க.

**என்று** - என மனத்திற் றுணிந்து.

**கெட்டேன்!** - ஒன்று நிற்க - மற்றைக்கண் குருதிமண்டும் - அஞ்சேன் - கை கண் டேன்-உண்டு - அப்பி ஒழிப்பேன் என இவ்வாறு விரைவில் ஒன்றன்பின் ஒன்றுவாக் கூறியது மிக்க விரைவில் அவரது உள்ளத்தில் தொடர்ந்து நிகழ்ந்த பலவேறு மன நிகழ்ச்சிகளை அவ்வாறே குறித்தற்காமென்க. முன்னர் 815-லும் இவ்வாறுரைத்தது காண்க. 176

826. (வி - ரை) **கண்ணுதல்** - இறைவர்காட்டிய அருட்கண் காரணமாகநிகழ்ந்த இச்சரிதம் முடியுமிடமாதலின் இங்கு இப்பெயராற் கூறினர். **கண்ணுதல்** - நுதலில் - நெற்றியில் - கண்ணுடையவர். சிவபெருமான். "வல்லிருளா யெல்லா வுலகுடன்ருன் மூடவிரு ளோடும்வகை நெற்றி யொற்றைக்கண் படைத்துகந்த உத்தமன்" (தக்க ராகம் - கலியநல்லூர் - 4) என்று ஆளுடைய நம்பிகள் அருளியபடி உலகுக்கு ஒளி நெறியாகிய அன்புநெறியினைக் காட்டி உதவும் திருக்கண் என்பதுகுறிப்பு. சிவக்கண் ணுகிய வலக்கண்ணுற் பாசநீக்கமும், அருட்கண்ணுகிய இடக்கண்ணுற் சிவமயமாக்கலும், ஞானக்கண்ணுகிய நெற்றிக்கண்ணுல்சிவானந்தானுபவ முறுவித்தலும் செய்கின்ருராதலின் கண்ணப்பரைத் தம் வலப்பக்கத்தே என்றும்மாருது நிற்கவைக்கும் இப்போது இப்பெயராற் கூறினர் என்று ஆலாலசுந்தரம் பிள்ளை இங்கு விசேடவுரை காண்பர்.

**காணும் நேர்பாடு எண்ணுவார்** - **நேர்பாடு** - கண்ணுக்குக் கண் நேர்பட்டு அமை யும் பொருத்தம். **காணும்** - காணவேண்டிய. காணத்தக்க. தெரியத்தக்க. காணு தல் இங்குப் பரிசத்தானுணர்தல் குறித்தது.

**கண்ணில் இடக்கால் ஊன்றி** - **கண்ணில்** - கண்ணின் பக்கத்தில். தமது எஞ்சிய ஒருகண்ணையும் இடந்துவிடின் அதனை அப்புதற்குரிய இறைவனது இடதுகண் இருக்குமிடம் தெரியாதாகையால், அந்த இடத்தை அடையாளம் கண்டுகொள்ள ஊன்றினர் என்க. கண் தோண்டியவுடன் அதன் சூடு தணியாமலும் இரத்தம் குளிரா மலும் உடனே அப்பிஞல்மட்டுமே ஊனுடுஊன் ஒட்டிச்சேரும். ஆதலின், இதற்காக வறிதே தடவி முயன்று தாமதப்படாதபடி இவ்வாறு முன்எச்சரிக்கை செய்தனர்.

**ஒரு தனிப்பகழி** - ஒப்பற்ற பெருமையுடைய அம்பு.

**கண்ணில் ஊன்ற** - தேவரது கண்ணிற் காலூன்றலும், பின்னர்த் தம் கண்ணில் அம்புஊன்றலும் தேவரது புண்தீர்க்கும் தீவிரத்தால் விரைவில் ஒன்றுபோல நிகழ்ந் தன என்பதனை ஊன்றி - ஊன்ற என்றதனுற் குறித்தார்.

**தரித்திலர்** - தரித்திலராதலின். வலக்கண்ணை இடந்தப்பியதனைத் தரித்த இறை வர், அம்பினை இடதுகண்ணிலூன்றலும் தரித்திலர் என்றார். வலதுகண் தமதுபாகமும் இடதுகண் அம்மையாரது கருணைப் பாகமுமாதலின் அப்பாகத்திற்குரிய இடதுகண் ணைத் தோண்டப்பார்த்தலைத் தமது **பேரருள்** தரியாதாயிற்று. அதனுல் கையைப் பிடித்துக்கொண்டு "வலத்தில் நிற்க" என்று **பேரருள்** புரிந்தார் என வரும்பாட்டிற் குறித்தல் கருதுக.

தேவதேவர் தரித்திலராதலின் (அத்தப்) பாகர் - அங்கணர் - அற்புதர்-திருக்கை-தடுக்கும் ; வாக்கு - என்ற - என வரும்பாட்டுடன் கூட்டி முடித்துக்கொள்க.

உண்ணிறை காதலோடும்—என்பதும் பாடம். 177

827. (வி - ரை) செங்கண் - விடைக்கு இயற்கையடைமொழி. வெள்விடை - இறைவனது இடபம் வெள்ளைநிறமுடையதாகச் சொல்வதுமரபு. " நரை வெள்ளே றுன்றுடையானே " (திருச்சிரா - குறிஞ்சி - 1) என்ற ஆளுடைய பிள்ளையார் திரு வாக்கும் பிறவும் காண்க. செம்மை - வெம்மை - முரண்தொடை. பாகர் - ஊர்ந்து செலுத்துபவர் - யானைப்பாகர் முதலிய வழக்குக்கள் காண்க. பாகன் என்ற சொல் வழக்கைச் சிலேடையாகவைத்துப் "படமாடும் பாம்பணை யானுக்கும் பாவை நல்லாடனக் கும், வடமாடு மால்விடை யேற்றுக்கும் பாகனுய் " (திருவாவலூர் - நட்டராகம் - 9) என்றருளிய ஆளுடையநம்பிகள் தேவாரமும் கருதுக.விடையின்பாகர்-விடை - அறம். விதிவழி நடத்தல் அறமாம். இறைவன் சொன்ன விதியே அறமாவது.

திண்ணனுர் தம்மை ஆண்ட அங்கணர் - இறைவன் சொன்ன விதியாகிய ஆக மப். " பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல் விளங்கத் " திண்ணனுர் பூசை செய்தனராதலின் அவரை ஆண்டனரென்பார் பாகர் - என்றதனை அடுத்து ஆண்ட அங்கணர் என்றார். முன்னர் அருட்கண் நோக்கத்தால் ஆட்கொண்டனர். இங்குக் குருதி பெருக நின்ற அழகிய திருக்கண்காட்டி ஆட்கொண்டனர் என்ற குறிப்புப்பட அங்கணர் - என்றார். முன்பு தந்தது பாசநீக்கம் என்பது 803-ம் கிருப் பாட்டால் உரைக்கப்பட்டது. இங்குத் தந்தது சிவப்பேறு என்பது என் வலத்தில் நிற்க - என்றதனுலறியப்படும்.

அங்கண்மையாவது கருணையின் தன்மையன்றே ? இங்குக்கண்ணைக் கொண்டு நோய் செய்தது அங்கண்மையாகுமோ? எனின், மதர்த்தெழு முள்ளத்தோடு மகிழ்ந்து (822) என்றும், உண்ணிறை விருப்பினேடும் (826) என்றும் அறிகின்றபடி இது திண்ணனுர்க்கு வருத்தமும் நோயும் செய்யாது இன்பமே விளைத்ததாகலின் அங்கண்மையேயாம் என்க.

அற்புதர் - ஞானமே வடிவாயுள்ளவர். அற்புதம் - ஞானம். வேதவழிவருவது சைவநெறி. " வேதப் பயனுஞ் சைவம் " (சண்டீசர் புரா 2). சைவவழிவருவது பத்தி " வேதநெறி சைவநெறி பத்திநெறி வழாது " என்பது திருவிளையாடற் புராணம். அன்புநெறிக்கு அருளும் முறை ஞானமும் வீடும் தருதலாமென்க.

நாகசுங்கணர் அமுதவாக்கு மூன்றடுக்கு "கண்ணப்ப நிற்க" என்ற எனக் கூட்டுக. மூன்றடுக்காவது நில்லு கண்ணப்ப என்று மூன்றுமுறை சொல்லுதல். "நில்லு கண் ணப்ப ! நில்லுகண்ணப்ப ! என்னன்புடைத்தோன்றல் நில்லுகண்ணப்ப !" எனவரும் நக்கீர தேவரருளிய திருமறப்பகுதிகளும் " ஒல்லைநம்புண் ஒழிந்தது பாராய் ! நல்லை ! நல்லை ! எனப்பெறுந் திருவேட்டுவர் " எனத்திருமறத்தினுட் கல்லாட தேவநாயனுர் அருளியதும் காண்க.

நாகசுங்கணர் அமுதவாக்கு மூன்றடுக்கு "கண்ணப்ப நிற்க" என்ற எனக் கூட்டுக. மூன்றடுக்காவது நில்லு கண்ணப்ப என்று மூன்றுமுறை சொல்லுதல். "நில்லு கண் ணப்ப ! நில்லுகண்ணப்ப ! என்னன்புடைத்தோன்றல் நில்லுகண்ணப்ப !" எனவரும் நக்கீர தேவரருளிய திருமறப்பகுதிகளும் " ஒல்லைநம்புண் ஒழிந்தது பாராய் ! நல்லை ! நல்லை ! எனப்பெறுந் திருவேட்டுவர் " எனத்திருமறத்தினுட் கல்லாட தேவநாயனுர் அருளியதும் காண்க.

திருக்கை யம்பாற் றங்கண் முன்னிடக்குங் கையைத் தடுக்க - சிவலிங்கத் திரு மேனியினின்று ஒருகை மூலைக்கச் செய்து அதனுற் கண்ணப்பரது கையினை அம் புடனே பிடித்து அவர் கண்ணைத்தோண்டும் செய்கையைத் தடுத்தது. " இன்னுரை யதனெடு மெழிற்சிவ லிங்கந், தன்னிடைப் பிறக்த தடம்லர்க் கையா,லன்னவன் றன்கை யம்பொடு மகப்படப், பிடித்தருளினன்","ஆண்டகை, ஒருகை யாலு மிருகை பிடித்து" எனவரும் திருவாக்குக்கள் காண்க. வாக்கினுற்றடுத்தலே போதும் ; கையினுற் பிடித் தும் தடுத்தல் வேண்டா எனின், அவ்வாக்கு அவர் செவியிற்புக்கு, அது அறிவிலே தாக்கி, அறிவினு லேவப்பட்ட கை அவ்வறிவினுலே மீளத் தடுக்கப்படுதல் வேண்டும். அதன்முன் செயலில் முனைத்து நின்ற கை தடுக்கப்படுதல் வேண்டுமாதலின்

திருக்கை பிடித்துக் கொண்டது. அற்றாயின் கையினாற் பிடித்தலேபோதும் வாக்கு எதற்கு என்னில் அவர்க்குப் பொருள் அறிவித்து அமுதமாக்குதற்கு வாக்கு வேண்டப்படுமென்க. இதுபற்றியே "இன்னுரை யதனொடு மெழிற்சிவ லிங்கந் தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையால்" என்றருளியது திருமறம். கண்ணப்பரது தீவிரதரச் செயல் நோக்கி இரண்டும் வேண்டப்பட்டன என்றலுமாம். உற்றுமுன் பிடித்த என மேல்வரும் பாட்டிற் கூறியதும் காண்க.

**இடக்கும்கையை** - இடப்பதற்குத் துணிந்து அம்பினைக் கண்ணில் ஊன்றிய கையை. **தடுக்க** - தடுத்தல், அது முயன்றபடி கண்ணைத் தோண்டாதவாறு அதனைப் பிடித்துக் கொள்ளுதல்.

**நாககங்கணர் - அழதவாக்கு** - மரணத்தை விளைக்கும் விடமுள்ள நாகம் கையிற் கங்கணமாக அமையினும் வாக்கு அதனை நீக்கும் அமுதமாம் என்றபடி. **அழத வாக்கு** - இறத்தலும் மீளவும் பிறத்தலுமின்றி மீளாநெறியாகிய முத்தியின்பத்திற் கண்ணப்பரை "என் வலத்தில் நிற்க" என்று இதனையடுத்து இப்போது இருத்துவதாகலின் இவ்வாறு கூறினார். **அழதம்** - இறவாத இன்பமுத்தி.

**அன்பர் தங்கண்—தடுக்குமுன்...என்றே—தடுக்கமுன்...என்றே**—என்பனவும் பாடங்கள். 17

828. கானவர் பெருமா னார்தங் கண்ணிடந் தப்பும் போது
மூனமு துகந்த வைய ருற்றுமுன் பிடிக்கும் போது
ஞானமா முனிவர் கண்டார்; நான்முகன் முதலா யுள்ள
வானவர் வளர்பூ மாரி பொழிந்தனர் மறைக ளார்ப்ப. கஎகூ

(இ - ள்) வெளிப்படை. வேடர்தலைவராகிய கண்ணப்பர் தமது கண்ணைத்தோண்டித் தேவர்கண்ணில் அப்பிய காலத்தும், அவர் ஊட்டிய ஊனமுதத்தை உவந்து கொண்டருளிய ஐயராகிய காளத்திநாதர் அவர் மற்றைக்கண்ணைத் தோண்டும் கையைத் தோண்டும் முன்னே பொருந்திப் பிடித்த காலத்தும், ஞானப்பெரு முனிவராகிய சிவகோசரியார் கண்டனர். வேதங்கள் ஆர்த்துப் பிரமதேவர் முதலிய தேவர்கள் கற்பகப் புதுமலர் மழை பொழிந்தனர். கஎகூ

(வி - ரை) **கண்இடந்து அப்பும் போதும்** - முதலில் வலக்கண்ணைத் தோண்டி அப்பிய காலத்தும். இடக்கண்ணை என்ற சுப்பராய செட்டியாருரை பிழைபோலும்.

**முன் உற்றுப் பிடிக்கும் போதும்** என மாற்றுக. உம்மைகள் எண்ணின்கண் வந்தன. அப்பியது முன்னும் பிடித்தது பின்னும் நிகழ்ந்தன. **அப்பின** என்னாது **அப்பும் போதும்** என்றதனால் அதுபற்றிய முன் நிகழ்ச்சிகளையும், இவையிரண்டுங் கூறவே இடைப்பட்ட எல்லா நிகழ்ச்சிகளையும் கண்டார் என்பது. ஊனமு துவந்த என்ற குறிப்புமது.

**ஊன் அழது உவந்த ஐயர்** - தள்ளத்தக்க ஊனைக் கொள்ளத்தக்க அமுதமாக மிக மகிழ்ந்துகொண்ட பெருமை யுடையாராதலின் அதனைத் தொடர்ந்தே அவ்வூனைப் பெற்றும் சமைத்தும் ஊட்டியும் தொழில் செய்த கையினைப் பிடித்துக் கொண்டனர் என்பது தொனிக்கின்றது காண்க. கானவூ னமுத மாக்கும் சிலை (681) என இதனை முன்னர்க் குறிப்பிட்டதும் கருதத்தக்கது.

**ஞானமா முனிவர்** - சிவஞானமுடைய பெருமுனிவர். சிவகோசரியார். முன்னர் மாமுனிவர் (801) என்றார். இங்கு இறைவனருளினாற் காட்டவும் உணர்த்தவும் பட்ட ஞானத்தைப் பெற்றவர் என்பார் ஞானமாமுனிவர் என்றார்.

**கண்டார்** - செயல் காட்டக்காண்கின்றாய் (807) என்றதனால், செயல்களின் மூலம் பரிவைக் காட்டுவிக்க அச்செயல்களையும் கண்டார்; அவற்றால் அறியப்படும்

உள்ளநிகழ்ச்சி யாகிய அன்பின் பெருக்கையும் கண்டார் எனச் செயப்படுபொருள் வருவிக்க. முனிவர்க்கும், அவர் மூலம் ஏனைய ஆன்மாக்களுக்கும் காட்ட இறைவர் இவ் வாறு நிகழ்த்தினாதலின் கண்டார் என அவற்றின் பலன் கூறினர்.

**மறைகளார்ப்ப** - வேதங்களைத் தேவர்கள் சொல்லிப் பூமழை பொழிந்தனர் என்க. வேதமந்திரங்கள் திருவருள் வெளிப்பாடுபெற்றித் தாமே நாதத்தினின்று தோன்றி ஒலித்தன என்றலுமாம். "ஓதுமறை யோர்பிறி தொலித்திடினு மோவா, வேதமொழி யாலொளி விளங்கியெழு மெங்கும்"—(திருஞான-புரா 31), "இயற்றுபவ ரின்றியுமியம்பு, மங்கல முழக்கொலி மலிந்த" (மெ - 33) என்றவை காண்க. கற்பகப் பூமாரி பொழிதல் முதலிய நிகழ்ச்சிகள் திருவருள்வெளிப்பாடு நேர்ந்த போதெல்லாம் நிகழ்வன. 398 முதலியவை பார்க்க. "அருளாலும், விண்மிசை வானவர், மலர் மழை பொழிந்தனர்;வாலியொலி படகம், துந்துபி கறங்கின; தொல்சீர் முனிவரு மேத்தினர்" என்றது திருமறம்.

**பிடித்தபோதும்—பூவின்மாரி** - என்பனவும் பாடங்கள். 179

829. பேறினி யிதன்மே லுண்டோ ? பிரான்றிருக் கண்ணில் வந்த
ஊறுகண் டஞ்சித் தங்க ணிடந்தப்ப வுதவுங் கையை
யேறுயர்த் தவர்தங் கையாற் பிடித்துக்கொண் "டென்வ லத்தின்
மாறிலாய் ! நிற்க "வென்று மன்னுபே ரருள்பு ரிந்தார். கஅo

**(இ - ள்)** பிரான்.....அஞ்சி - தமது பெருமானது திருக்கண்ணினுக்கு வந்த ஊற்றினைக் கண்டு பயந்து ; தங்கண்.....கையை - தமது இடக்கண்ணைத் தோண்டி அப்புதற்கு உதவுகின்ற கண்ணப்பரது கையை ; ஏறுயர்த்தவர்...பிடித்துக் கொண்டு - இடபக்கொடியை உயர்த்தியவராகிய காளத்தியப்பர் தமது கையிஞற்பிடித்துக்கொண்டு; மாறிலாய் !-ஒப்புயர்வற்றவனே !; என் வலத்தில் - எனது வலது பக்கத்தில் ; நிற்க... புரிந்தார் - நிற்பாயாக என்று நிலைபெற்ற பெரிய திருவருளினைச் செய்தனர். பேறு... உண்டோ ? (ஆதலால்) இனி யிதன்மேற் பெறத்தக்க பயன் வேறுமுண்டோ ? இல்லை.

**(வி - ரை) பேரருள் புரிந்தார்...பேறு இனி இதன்மேல் உண்டோ ?** - இங்கு வலப்பக்கத்தில் நிற்க என்றருளப் பெற்ற கண்ணப்ப நாயனாரும் அவ்வாறருளி அவரது இடப்பக்கத்தில் தாம் அமைத்து நின்ற காளத்திநாயனாரும் பூட்டிய வில்லின் இருதலை போலப் பிரித்துணராத நிலையிற் பிணைந்தனர் என்பது குறிக்க இவ்வாறு பூட்டுவிற் பொருள்கோள் பெற வைத்தது குறிக்க.

**இனி இதன்மேல் பேறு உண்டோ** என்க. **பேறு** - இங்கு இதன்மேல் உண்டோ என்றதனால் சிவசாயுச்சியமாகிய முடிந்த பதம் குறித்தது. அருள் ஞானக் குறியினின்று அருள் நோக்கத்தால் மலமூன்று மற்றாய், அவனே தானே ஆகிய அத்தெறியில் எகனாகி இறைபணி செய்தனராதலின் இவர் பெற்றது பாமுத்தியேயாம் என்றும், வேறு சிலர் கூறுவதுபோலச் சிவபூசையாகிய கிரியைக்குரிய சாமீபமாகிய பதம் மட்டுமன்று என்றும் விசேட உரை காண்பர் ஆலாலசுந்தரம் பிள்ளை.

**உண்டோ?** - ஆன்மாக்கள் அடையத்தகும் பேறு இதற்குமேல் வேறொன்றுமில்லை என்று வினை எதிர்மறை குறித்தது. "கற்றதனாலாய பயனென்கொல்" என்புழிப்போல வேறு இல்லை என்னுது உண்டோ என வினாச் சொல்லாற்கூறியது உறுதிப் பொருள் தருதற்பொருட்டு. "கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பரா"தலின் கற்றதனாலாய முடிந்த பயனைப் பெற்றனர் என்ற இத்திருக்குறட் பொருட் குறிப்பும் காண்க. கண்ணப்பர் தாம் யாவரினும் மிக்க பேறுபெற்றனர் என்பது கருத்து. இதுபற்றியே திருவாதவூரடிகள் முதலிய பரமாசாரிய மூர்த்திகளாலும் மற்றும் எல்லாப் பெரியோர்களாலும் துதிக்கப்பெற்றனர் என்க.

**தீருக்கண்** - பிரானது ஞானத் திருமேனியில் எவ்வித வூனமும் இல்லாத கண். **வந்த** - தோற்றப்பட்ட. **ஊறு** - உறுவது. ஆகுபெயராய்ப் புண்ணையும் அதிற் பெருகிய உதிரத்தையும் குறித்தது. **ஊறு** - பேறு தொழிலாகு பெயர்கள்.

**அஞ்சி**-அவர்க்குத் தீங்கு-**ஊறு** - நேர்ந்ததற்கு அஞ்சினரேயன்றித் தம் கண்ணைத் தோண்டுதற்கு அஞ்சினரல்லர் என்பது தோன்றத் **தங்கண்** இடந்து **அப்ப** என்றார்.

**அப்ப உதவும் கை** - **உதவும்** - வலது கண்ணைத் தோண்ட உதவின என இறந்த காலப் பெயரெச்சமாகவும், இடது கண்ணைத் தோண்ட உதவி நிற்கும் என எதிர்காலப் பெயரெச்சமாகவும் இவ்வரிய செயல்களிரண்டினையும் **உதவும்** என்ற ஒருசொல்லாலே குறிக்க உதவும் சொல் அருமை காண்க.

**உதவும் கை** - உயிரின் இச்சையறிந்து உதவுவது கையின் பண்பு என்பது குறிப்பு ; "உடுக்கை யிழந்தவன் கை போல" என்ற திருக்குறளானறிக என்பார் சுப்பராய செட்டியார்.

**ஏறு உயர்த்தவர்** - காளத்தி நாதர். தருமசொரூபமாகிய விடையினை ஊர்ந்து அருள்வது போல அதனையே கொடியாக உயர்த்தியும் கையாற்பிடித்தவாறு அவ்வறத்தின் வழியே அன்பு செய்த இவரையும் கையாற் பிடித்துத் தமது சாயுச்சியத்திற்கு உயர்த்தினர் என்றது குறிப்பு. விடையின்பாகர் (827) என்றதில் உரைத்தவை பார்க்க.

**தம்கையால்** - சிவலிங்கத்திருமேனியினின்றும் தோன்றிய கையினாலே. உதவும் கைக்குப் பிரதி உபகாரம் தமது கையாற் பிடித்தலாம் என்பது போலக் கையாற் பிடித்தனர் என்றதும் குறிப்பு. இது பெண்ணொருபாகனது வலையிலே கிடந்தானை அரனுக்கு [illegible]

**என்வலத்தில்**-வலத்தில் - வலப்பக்கத்தில். இடப்பக்கத்தில் உமையம்மையாரும் திருமாலும் உள்ளார்கள் என்ற குறிப்பினால் வலத்தில் என்றார். இடம் அம்மையாரது பாகமாக, வலம் தமது பாகமாதலின் அதனில் நிறுத்தினர் என்பதுமாம். அம்மையாருக்கு இடமே இடமாகக் கொடுத்தவர் இவர்க்கும் வலமே இடமாகக் கொடுத்தார் என்ற நயமும், சக்கரம் வேண்டித் தமது ஒரு கண்ணைத் தோண்டி அருச்சித்த திருமாலுக்கு எளிய இடப்பாகமும், தனக்கென ஒன்றும் வேண்டாது இறைவன் திருக்கண்ணில் வந்த ஊறுகண்டு அஞ்சி அதன் பொருட்டே தமது ஒருகண்ணை அப்பி உதவியும் மற்றொரு கண்ணையும் உதவ நின்றும் பணி செய்த இவர்க்கு வலப்பாகமும் கொடுத்தனர் என்ற நயமும் காண்க. **வலம்** - மேம்பாடு - வெற்றி - எனக்கொண்டு அன்பே சிவமாவது சிவத்தின் வலமாதலால் அதனில் நீ நிற்பாய் என்றார் என்றருளிப்புமாம்.

**மாறு இலாய் வலத்தில் நிற்க** என்க - ஒப்பும் உயர்வுமில்லாதவனே நீ வலத்தில் நிற்பாயாக. **வலத்தின் நிற்க** - எனப் பிரித்து, **வலம்** - வல்லமை, **இன்** - உவமவுருபு எனக்கொண்டு, அருள் வடிவாகிய சத்தி "நீரின் தன்மை அனல் வெம்மையென" அகலாது சமவாயமாக நீக்கமின்றி நிற்றல்போல, அன்பு வடிவாகிய நீ பிரிவறியாது அத்துவிதமாக நிற்க என்பதும் குறிப்பு. "ஒளியென்ன நில்லென்றான்" என்பது பஞ்சாக்கரப் பஃறொடை. **நிற்க** - நிலபேறு பெற்று நிற்க என்றதுமாம்.

**மன்னு பேரருள்** - நிலைபெறும் பெரியதிருவருள். அன்பிற் பெரியவருக்கு அருளாற் பெரியது செய்தனர் என்க.

**ஏறுகைத்தவர்**—என்பது பாடம். 180

830. மங்குல்வாழ் திருக்கா ளத்தி மன்னனார் கண்ணிற் புண்ணீர்
தங்கணுன் மாற்றப் பெற்ற தலைவர்தா டலைமேற் கொண்டே
கங்கைவாழ் சடையார் வாழுங் கடவூரிற் கலய னாராம்
பொங்கிய புகழின் மிக்கார் திருத்தொண்டு புகல லுற்றேன். கஅக

(இ - ள்) வெளிப்படை. மேகம் வாழ்தற்கிடமாகிய திருக்காளத்தியில் எழுந்தருளிய இறைவரது திருக்கண்களிற் கண்ட புண்ணில் வரும் செந்நீரைத் தமது

கண்ணினுல் மாற்றும் பேறுபெற்ற தலைவராகிய **கண்ணப்ப** நாயனாது திருத்தாள்களே எனது தலையின் மேலே அணிந்துகொண்டே, கங்கை வாழும் சடையினையுடைய சிவபெருமான் எழுந்தருளிய திருக்கடவூரில் கலயனாராகிய மிகுந்த புகழினுல் மேம்பட்டவரது திருத்தொண்டினை இனிச் சொல்லத் தொடங்குகின்றேன். கஅக

**(வி - ரை) மங்குல்வாழ்** - ஆகாயத்தில் மேக மண்டலங்கள் உள்ள அளவும் உயர்ந்திருத்தலின் மேகம் எப்போதும் வாழ்ந்திருக்கின்றது என்பது. **வாழ் திருக்காளத்தி** - முக்கால வினைத்தொகை. எப்போதும் பனியால் மூடப்பெற்ற இமயம் என்னும் திருக்கயிலே போல்வது திருக்காளத்தியென்ற குறிப்புப்பெற இவ்வாறு கூறினர். இத்திருமலையிற் றவழ்ந்திருத்தலின் மேகம் தான் வாழ்வடைந்தது என்ற குறிப்புமாம். "வானின் றுலகம் வழங்கி வருதலால்" (குறள்) என்றபடி ஏனை இடங்களில் உள்ள மேகம் உலகை வாழவைக்கும். ஆனல் இங்குத் தவழும் மேகம்தான் வாழ்வை யடைந்தது என்றவாறும். சேணுயர் திருக்காளத்தி (745), மாகமார் திருக்காளத்தி (754) முதலியவை காண்க. இனி, "கருவரை காளமேக மேந்திய தென்ன" (664) என்றபடி அன்பு மழை பொழிகின்ற மேகம் போன்ற கண்ணப்பர் நிலைத்து வாழ்கின்ற என்றுரைத்தலுமாம்.

**மாற்றப் பேற்ற** - மாற்றம் பேறுபெற்ற. பெற்ற என்பதற்குச் செயப்படு பொருள் வருவிக்க. இவ்வாறன்றி இதனை ஒரு சொல்லெனக் கொண்டு மாற்றிய எனக் கொள்வோருமுண்டு. எல்லா ஆன்மாக்களது எல்லா நோயும் தீர்க்கும் வைத்திய நாதராகிய இறைவரது புண்ணீரைத் தமது கண்ணே மருந்தாகக் கொண்டு தீர்த்த முறையின் அருமை பற்றி **மாற்றப்பேற்ற** என்று விதந்தோதினர்.

**தலைவர்** - நாயனர். அன்பினிற் றலைவர். ஆன்மாக்களை அன்பு நெறி காட்டி வழிப்படுத்தலால் அவைகட்கெல்லாந் தலைவர் என்றலுமாம்.

**தாள் தலைமேற் கொண்டே** - தாள்களைத் தலையின்மேல் தலைக்கணியாகச் சூடிக் கொண்டு. தாள்+தலை=தாடலை என்ற தொடர் சிவனடித்துவித முத்திக் கலப்பினைக் குறிக்கச் சைவ மாபில் வழங்குவதாம். "பொல்லா ரினைமலர் நல்லார் புனைவரே" என்ற சிவஞானபோத மங்கல வாழ்த்திற்குத் தாடலைபோல் அடங்கி நிற்பர் என்றுரைத்ததும், "தாடலைபோற்சூடி" (இன்புறு - 4) என்ற திருவருட் பயனும் காண்க. **கொண்டே** - கொண்டு அந்தத் தினையினுலே புகலலுற்றேன் என்பது கருத்து.

**கங்கைவாழ் சடையார்** - சிவபெருமான். 831 பார்க்க.

**கடவூரில்...மிக்கார்** - மேல்வருஞ் சரிதமுடையாரின் ஊரும், பேரும், தன்மையும், சரிதக் குறிப்பும் உணர்த்தித் தோற்றுவாய் செய்தபடியாம். **பொங்கிய புகழின் மிக்கார்** - செல்வம் மிகப் பெற்றதும், திருப்பனந்தாள் இறைவரை நேர் காணப் பெற்றதும், ஆளுடையபிள்ளையார் ஆளுடைய அரசு என்ற இவ்விரு பெருமக்களையும் நேரே தமது திருமனையில் வைத்துப் பூசித்து உபசரிக்கும் பேறு பெற்றதும் என இவ்வாறு மேன்மேல் உயரும் அழியாப் புகழ்பெற்ற சிறப்பு நோக்கி இவ்வாறு கூறினர். **பொங்கிய** என்றதனுற் செல்வம் பொங்கப் பெற்றதும், **புகழ்** என்றதனுல் அரசர் யானே சேனைவாற் காணமுடியாத, சிவனிலத்த காட்சிகண்டதும், **மிக்கார்** என்றதனுல் சைவசமய பரமாசாரிய மூர்த்திகளை நேரே பூசித்து அமுதூட்டிய சிறப்பும் குறித்தார்.

**திருத்தொண்டு** - திருத்தொண்டுகள். சாதியொருமை. திருத்தொண்டின் திறம் கூறும் சரிதம் என்றலுமாம்.

இது கவிகூற்று. ஆசிரியர் தாம் கையாண்ட முறைப்படி இதனுல் இதுவரை கூறிவந்த இச்சரிதத்தை உபசங்காரம் செய்து முடித்துக்காட்டி, மேல்வரும் புராணத் திற்குத் தோற்றுவாய் செய்தனர். இதனுள் இவ்விரண்டு சரிதங்களும் சுருங்க விளக்கப் படுதல் காண்க.

# அநுபந்தம்

## இப்புராணத்திற் காணப்படும் இடைச்செருகல்கள் (பக்கம் - கoகசு)

806-ம் பாட்டின்கீழ்ச் சில பிரதிகளில் கீழ்வரும் இவ்வைந்து பாட்டுக்களும் காணப் படுகின்றன. இவை வெள்ளி பாடல்கள் என்னும் இடைச்செருகல்களாம் என்பது பல பெரியோர்களின் அணிபு. பல பிரதிகளில் இவை காணப்படவில்லை. ஆதலின் பல பதிப்புக்களிலும் இவற்றைப் புராணத்திற் சேர்த்துப் பதிக்காமலே விடுத்தனர். தி. க. சுப்பராயச்செட்டியார் பதித்த கண்ணப்பநாயனூர் புராண உரைப்பதிப்பில் இப்பாடல்க ளைச் சேர்க்காது முடித்து, இறுதியில் இவற்றை மூலபாடமாக மட்டும் "வெள்ளிக் கவி கள்" என்று தலைப்பிட்டு அச்சிட்டு, "இவ்வைந்து செய்யுள்களும் சேக்கிழார்நாயனூர் அருளிய செய்யுள்க ளல்லாமையால் அவற்றோடு சேர்க்காமலும் பொருளெழுதாதும் விட்டனம்" என்று குறிப்பும் எழுதியுள்ளார். இவைபற்றி 806 உரையின் கீழ் எழு திய அடிக்குறிப்பும் காண்க. அன்பர்கள் பார்வைக்காக இப்பாடல்கள்மட்டும் சில குறிப் புக்களுடன் இங்குத் தரப்படுகின்றன.

1. பொருப்பினில்வந் தவன்செய்யும் பூசனைக்கு முன்பென்மே
லருப்புறுமென் மலர்முன்னே யவைநீக்கு மாதரவால்
விருப்புறுமன் பெனும்வெள்ளக் கால்பெருகிற் றெனவீழ்ந்த
செருப்படியென் னிளம்பருவச் சேயடியிற் சிறப்புடைத்தால்.

**குறிப்பு :—இளம்பருவச் சேய்** - முருகன். "செருப்படி யாவன விருப்புற வுவலே" என்பது திருமறம். **கடல்பெருகிற்றென** - **எம்மிளம்** என்பனவும் பாடங்கள்.

2. உருகியவன் பொழிவின்றி நிறைந்தவ னுருவென்னும்
பெருகியகொள் கலமுகத்திற் பிறங்கியினி தொழுகுதலா
லொருமுனிவன் செவியுமிழு முயர்கங்கை முதநீர்த்தப்
பொருபுனலி னெனக்கவன்றன் வாயுமிழும் புனல்புனிதம்.

**குறிப்பு :—**"எழிலவன் வாயது தூயபொற் குடமே, யதனிற் றங்குநீர் கங்கை யின் புனலே" என்ற திருமறக் கருத்துக்காண்க. **ஒரு முனிவன்** - சக்ரு முனி வன். பகீரதன் சிவபெருமானே வேண்டிக்கொணர்ந்த கங்கை, செல்லும்வழியில் தவஞ் செய்துகொண்டிருந்த சக்ருமுனிவனது ஆசிரமத்தினூடு சென்றதனால் அதனை அவன் குடித்துவிட்டனன் எனவும், பின்னர்ப் பகீரதன் வேண்டத் தன் செவியின்வழியே அதனை மீளவிட்டனன் எனவும் அதனாற் கங்கைக்குச் சாஹவி என்று பெயர்வந்தது எனவும் புராணங்கள் கூறும். கங்கையினும் திண்ணனாது வாய்நீர் புனிதமென்ற இப் பாட்டின் கருத்து 666-ம் பாட்டிற்காண்க. **செவியிலுமிழ்** - என்பதும் பாடம்.

3. இம்மலைவந் தெனையடைந்த கானவன்ற னியல்பாலே
மெய்ம்மலரு மன்புமேல் விரிந்தனபோல் விழுதலாற்
செம்மலர்மே லயனெடுமான் முதற்றேவர் வந்துபுனை
யெம்மலரு மவன்றலையா லிடுமலர்போ லெனைக்கொவ்வா.

**குறிப்பு :—**இப்பாடல் "அவன்றலைத் தங்கிய சருகிலை தருப்பையிற், பொதிந்த வங்குலி கற்பகத் தலரே" என்ற திருமறத்தின் கருத்தையே கொண்டது காண்க. **அயனெடுமால்** - என்பதும் பாடம்.

4. வெய்யகனற் பதங்கொள்ள வெந்துளதோ வெனுமன்பா
னையுமனத் தினிமையினி னையமிக மென்றிடலாற்

செய்யுமறை வேள்வியோர் முன்புதருந் திருந்தவியி
லெய்யும்வரிச் சிலையவன்ரு னிட்டவு னெனக்கினிய.

குறிப்பு :—இப்பாட்டிற் கண்ட பொருள் 796-ல் மிக அழகாக ஆசிரியராற் கூறப்பட்டமை காண்க. "அவனுகக் திட்ட விறைச்சி யெனக்குநன், மாதவ ரிட்ட நெய்பா லவியே" என்ற திருமறத்தின் பொருளும் காணத்தக்கது. "சுவைமுன் காண்பான் வாயினி லதுக்கிப் பார்த்து" (767), "சுவைகாண லுறுகின்ரூர்" (795), "காவின்க ணிடுமிறைச்சி" (797) என்ற புராணத் திருவாக்குக்களோடு "நையமிக மென்றிடல்" என்றது பொருத்தமாக் காணப்படவில்லை. **செய்யமறை** - என்பதும் பாடம்.

5. மன்பெருமா மறைமொழிகண் மாமுனிவர் மகிழ்ந்துரைக்கு
மின்பமொழித் தோத்திரங்கண் மந்திரங்க ளியாவையினு
முன்பிருந்து மற்றவன்றன் முகமலர வகமெகிழ
வன்பினினைக் தெனையல்லா லறிவுரு மொழிநல்ல.

குறிப்பு :—**மன்பெரு மாமறை** - "மன்பெ ருந்திரு மாமறை" (331) பார்க்க. **எனையல்லால் அறிவுறு** - என்ற கருத்து "அவனுடைய வறிவெல்லா நமையறியு மறிவு" (806) என்றதனுற் போந்தவாறுகாண்க. **அகநெகிழ்ந்த** - என்பதும்பாடம்.

இவ்வைந்து பாட்டுக்களினும் ஒன்றுபோலவே "சிறப்புடைத்தால்"—முதலியன வாக ஈற்றடி யீற்றுச்சீரிற் பயனிலைவைத்து முடிபுகாட்டிய முறை ஆசிரியரது வாக்கு நலத்துடன் பொருந்துவதாகக் காணப்படவில்லை.

---

**சரிதச்சுருக்கம்:**—திருக்காளத்திக் கண்ணப்பருடைய திருநாடு **போத்தப்பி நாடு** என்பதாகும். அதில் **உடுப்பூர்** என்பது அவர் அவதரித்த பதியாகும். அக்காட்டில்

**நாடு ; நகரம் ; மக்கள்**

வாழ்பவர்கள் குன்றவராகிய வேடர்கள். இவர்களது வீடுகளின் முன்றில்களில் உள்ள விளா மரங்களில் வார்வலை தொங்கும்; பன்றி, புலி, காடி, கடமை முதலிய இனங்களின் பார்வை மிருகங்கள் அங்கே கட்டப்பட்டு உணங்கிக்கிடக்கும்; பாறை முன்றிலில் மலைநெல் காயும். அங்குப் புலிக்குட்டி யானைக்கன்று என்றிவற்றோடு வேடர்களது புன்றலைச் சிறுமகார்கள் விளையாடுவார்கள். அன்புடன் அணையும் பெட்டை மான்களோடு வேடர் சிறுமிகள் விளையாடுவார்கள். அவ்வேடர்கள் கொலைப்படைகளை ஏந்துவர்; வன்கண்மையுடையவர்; கொடுஞ்சொல் வழங்குவர். அவர்களது குடி, கொம்பு, சிறுபறை முதலியவற்றின் ஓசையுடைன், சத்தித்து ஓடும் மலையருவிகளின் ஓசையும் எங்கும் உள்ளன. ஆறலைத்துண்பது இவ்வேடர்களின் வாழ்க்கை. அவர்கள் அயற்புலங்களினின்று கவர்ந்து கொண்டுவந்த ஆனிரைகளும் மேகம்போல முழங்கும் யானைகளும் அங்கு உள்ளன. இம்மறவர் கரிய உடம்பும் வன்றொழிலும் உடையார்; அச்சம் அருள் என்பன என்றும் அடைவில்லாதார். மலைத்தேனும் ஊனும் கலந்த சோறு இவர்களது உணவாம்.

**தந்தை, தாயர்**

அவ்வேடர்க்கரசன் நாகன் என்பவன். இந்நாயனரை மகனுகப் பெறுதற்கு அவன் முன்னைத் தவமுடையானுயினும் பிறப்பின் சார்பினுலே குற்றமே குணமாகக்கொண்டு வாழ்பவன்; கொடியவன்; விற்றொழிலிற் சிறந்த வீர சிங்கம்போன்றவன். அவனது மனைவியாகிய **தத்தை** வேடர்களது பழங்குடியில் வந்தவள். சங்கு மணிகளுடன் கோத்த புலிப்பற்றாலி பூண்ட அச்சந் தரும் பெண் சிங்கம் போன்றவள்.

ஒப்பற்ற சிறப்புடைய அவர்களுக்கு நீண்டகாலம் புதல்வர்ப்பேறு இல்லாமலிருந்தது. அவர்களுக்கு அது அரிதாம் என்று எவரும் சொல்லலாயினர். அதனைப் பெறுதலில் அவர்களுக்குக் காதல்மிக்கது. அதன் பொருட்டு முருகப் பெருமானது திருமுன்றிலிற் சென்று பராவுக்கடன் பலவும் செய்து வழிபட்டனர்; சேவலும் மயிலும் விட்டனர்; தோரணமணிகள் தூக்கினர்; மலர்மாலைகள் தொங்க விட்டனர்; குரவைக் கூத்துடன் அணங்காடல் நிகழ்த்திப் பெரு விழாச் செய்தனர். வெற்றிவேற் பெருமானது திருவருளினாலே வேடர் குலம் விளங்கும்படி தத்தையினிடம் கருப்பம் தரித்தது. மாதந்தோறும் பலிகள் போக்கி வெறியாட்டியற்றினர். உரியமாதங்கள் நிரம்பக், கருங்கடலானது சந்திரனைப் பெற்றது போலத் தத்தை மகவை ஈன்றனள். மகிழ்ச்சி மீக்கூர வேடர்கள் மணி மழை சிந்தித் துடி முதலிய மங்கல இயங்கள் முழக்கினர். எங்கும் மலர்மழை பொழிந்தது. தேவதுந்துபிகள் முழங்கின. மலைச்சீறூர்க் குடிகள் பெருவிழாக் கொண்டாடினர். கரிய மலை காளமேகத்தை எந்தியதுபோல நாகன் புதல்வரை எடுத்துக் கொண்டான். அப்போது அழகிய அக்குழவி புலிக்குட்டிபோலப் பொலிந்து, அவ்வேடர்களது அளவிலேயன்றி உலக முழுதும் போற்றும் நற்குறிகளுடன் விளங்கியது. அம்மகவு, கையில் எந்துதற் கருமையா யிருந்தமையால் நாகன் அதற்குத் திண்ணன் என்ற பேர் வைத்து யாவரையும் அவ்வாறே அழைக்கும்படி சொன்னன்.

**திருவவதாரமும் பேரிடுதலும்**

புண்ணியப் பொருளான திருவுருவுடைய அக்குழவிக்கு வேடர்களது மரபின்படி பல அணிகலன்களே அணிந்தனர். தெய்வங்களுக்குப் பருவந்தோறும் பெருமடையிட்டு வழிபட்டனர். திண்ணனார் ஓராண்டு நிறைவெய்திச் செல்லத் தளர் நடை யிட்டு நடந்தனர்; பின், நாட்செல்லக் குதலைமொழி பேசிப் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் இன்பமூட்டினர்; பின் சுறுகடை கொண்டு சிறுதுடிக் குறடு உருட்டி விளையாடினர்; ஐந்தாண்டு செல்லச் சீறூர்ப்புறத்து உழலை வேலியின் புறச்சிறு காணிற் போகி முயல், காட்டுப்பன்றி, புலி, செந்நாய் முதலிய கொடுவிலங்குக் குட்டிகள் பலவற்றையும் விசையில் ஓடிப் பிடித்து வந்து முன்றிலில் மரத்தாளிற் கட்டி வளர்த்தனர்; இவ்வாறு விளையாடி வளர்ந்து வில் வித்தை பயிலும் பருவம் சேர்ந்தனர். இவர்க்கு வில்வித்தை தொடங்குவிக்கும் பொருட்டு நல்லநாட் குறித்து நாகன் பக்கத்து மலைகளின் ஆட்சியுடைய வேடர் தலைவர்களுக்கும் தனது குடிகளுக்கும் சொல்லி யனுப்பினன். வேடர்களும் தலைவர்கள் பலருமாக மலைபடுபலன்கள் பலவற்றையும் கொண்டுவந்து சேர்ந்தனர்; வில்லினுக்கும் திண்ணனுருக்கும் புலிநாப்பினுற் காப்புச்சேர்த்து வாழ்த்தினர்; ஏழுநாள் வில்விழாக் கொண்டாடினர். ஏழாநாளாகிய நல்ல நாளில் நல்ல உச்சிவேளையில் நல்லாசிரியனைக் கொண்டு திண்ணனை வில் பிடிப்பித்தார்கள். அதுமுதற்கொண்டு அவர் வில் வித்தையினை நலனும் திறம்பட முற்றக்கற்றவராய்ப் பதினாறு வயது நிரம்பிய இளஞ் சிங்கம் போன்ற காளைப்பருவமடைந்தனர்.

**வளர்ப்பும் விற்பயிற்சியும்**

இவ்வாறு திண்ணனார் பருவ நிரம்பிய காலத்தில் நாகன் மிக மூப்படைந்து வில் முயற்சியில் மெலிவடைந்தான். காட்டிற் பன்றி, புலி, கரடி, முதலிய மிருகங்கள் மிக நெருங்கிப் பயிர்களுக்கும் உயிர்களுக்கும் கேடு விளைத்தன. அதனை வேடர்கள் தமது தலைவனுகிய நாகனுக்கு அறிவித்து முறையிட்டார்கள். அவன், "மூப்பினாலே முன்போல வேட்டை முயற்சியில்லேன்; என் மகனை உங்கள் தலைவனாகக் கொள்ளுங்கள்" என்று சொல்ல, அவர்களும் இசைந்தனர். நாகன் மகனுருக்குச் சொல்லி விட்டான். தேவராட்டியை வரவழைத்துத் தன் மகன் கன்னிவேட்டைக்குப் போவதால் (கன்னிவேட்டை-முதல் முறையாகச் செய்யும் வேட்டை) வனதெய்வங்கள் மகிழும்படி காடுபலி பூட்டுக என்றான். அவளும் ஆகுகூறி, வேண்டுவனவற்றைக் குறைவின்றிக் கொண்டு போனாள்.

**மலையாளும் உரிமைசூட்டப் பெறுதல்**

அழைத்தபடியே திண்ணனாரும் வந்து நாகனை வணங்கினர். அவரைத்தழுவிக்கொண்டு, புலித்தோலாசனத்தில் தன்னோடு ஒரு சேர முன்னிருக்க வைத்து, அவரை நோக்கி "எனக்கு மூப்பு மேலிட்டதனால் இனி என் முயற்சியினால் வேட்டையாட எனக்குக் கருத்தில்லை. எனக்கு மேலாகச் சிலைமலையர் குலக்காவல் பூண்டு உன்னுடைய மரபுரிமையாகிய மலையாட்சியைத் தாங்குவாயாக!" என்று சொல்லித் தன் அரச அடையாளமாகிய உடைதோலையும் சுரிகையையும் கையிற் கொடுத்துப் பட்டம் சூட்டினான். திண்ணனார் தந்தை நிலையினுக்கிரங்கினார்; ஆனால் தமது குலத்தலைமைக்குக் குறைவின்றிக் காக்கவேண்டுமென்னும் குறிப்பினால் அதனை மறுக்காது சிந்தை பரங்கொள நின்றார். நாகன் மகிழ்ந்து ஆசிகூறி வேட்டைமேற் செல்ல அவருக்கு விடை கொடுத்தான்.

**திண்ணனாரது கன்னி வேட்டைத் திறம்**

விடைபெற்ற திண்ணனார் மங்கல நீர்ச்சுனை படிந்து, அன்றிரவு மனையில் வைகி, விடியற்காலம் விற்சாலையிற்புக்கு வேட்டைக் கோலங்கொண்டனர். **தலையிற்** குஞ்சியை நிமிரக் கட்டித் தளிர்களாற் கட்டப்பட்ட கொண்டைமாலையும் அதில் மயிலிறகும் அதன்மேல் முல்லைமாலையும் குறிஞ்சி வெட்சிப் பூக்களும் சூடினர்; **முன்னெற்றியில்** குன்றிமணிகளை இடையிடை வைத்துப் புரித்த மயிர்க்கயிறு சாத்தினர்; **காதுகளில்** வெண்சங்கத் தோடுகளும், **கழுத்தில்** பலகறை மாலையும் சன்ன வீரமும், **மார்பில்** யானைத் தந்தத்தை அளவுபட அரிந்து கோத்தமாலையும் அணிந்தனர்; தோள்களில் வாகுவலயங்களும் **முன்கைகளிற்** கங்கணங்களும் **விரலுக்குக்** கைக்கோதையும் பூட்டினர்; **இடுப்பில்** புலித்தோலாடை சாத்தி, **உடைதோல்** வீக்கி, அதிற் **சுரிகையும்** பூண்டனர்; **காலில்** வீரக்கழலும், **திருப்பாதங்களில்நீடு** செருப்பும் அணிந்தனர்; பாரப் பெருவில்லினைப் பணிந்து தாள்மடுத்து ஏந்திச் சிறுநாணொலி கொண்டு தக்க அம்புகளையும் தெரிந்து கொண்டார். அப்போது காடு பலியூட்டிய சருப்பொரி முதலியவற்றுடன் வந்து தேவராட்டி அவரது திருநெற்றியிற் சேடைசாத்தி, "உன்தந்தை தந்தைக்கும் இந்நன்மைகள் உள்ளவல்ல; உன்வலிமை நம்மளவில் நில்லாது பெரிதாகும்" என்று வாழ்த்தினள். திண்ணனார் அவளுக்கு எதிர் சிறப்புச்செய்து போக்கி வேட்டைக்குப் புறப்பட்டனர். அவர் முன்பு வில்லேந்திய வேடர் கூட்டம் சென்றது. வேட்டை நாய்கள் பக்கங்களிற் பலபுறமும் வந்தன. எண்ணில்லாத பார்வை மிருகங்களைக் கொண்டு எம்மருங்கும் வேடர் சென்றனர். கொம்பு, சிறுபறை, பம்பை முதலியவற்றை முழக்கிக்கொண்டும் கையாலோசைசெய்தும் வேடர்கள் வேட்டைக் காடுவளைத்தனர். காடாயும் ஒற்றர்கள் பன்றிகளும் மான் கூட்டங்களும் துன்றிய இடங்களை அடிச்சுவடுகண்டு அறிந்து சொல்லவே, வலிய வேடர்கள் பலபுறமும் ஓடினர். இவ்வாறு சென்றவர்கள் ஓடி எறிந்தும், வார் போக்கியும் யோசனைப்பரப்புள்ள காட்டைக் காவல்செய்தபின் திண்ணனாரும் ஏனைவேடர்களும் அக்காட்டினுள் வேட்டை நாய்களைப் பலபுறமும் அட்டமாக விட்டுச் சென்றனர். துடி, பம்பை முதலிய வாத்திய ஓசைகளினால் மிருகங்களைப் பதிவிடங்களிலிருந்தும் எழுப்பினர். பன்றிகளும், மான்வகைகளும், யானை காட்டுப்பசு முதலியனவும் ஆகிய பல மிருகங்களும் வெருண்டு எழுந்து மேற்பாய அவற்றினை வேடர்கள் சீறி அம்புகளினாற் கொன்றனர். காலறுவனவும், தலைதுமிவனவும், குடல் சொரிவனவும், அம்பு தைக்கத் துள்ளி விழுவனவுமாக மான் வகைகள் பல பட்டன. பல சிங்கங்களும் யானைகளும் புலிகளும் பட்டன. பலபுறமும் வெருவி ஓடிய விலங்குகளை நாய்கள் பற்றிக் கவர்ந்தன. இவை, இருவினை வலையிடைப்பட்டுச் சுழன்று வழிச்சேர முயலும் மனத்தை அவ்வாறு செல்லாது தடைசெய்து தம் வசப்படுத்திய ஐம்பொறிகளைப் போன்றிருந்தன. இவ்வாறு படுகொலை செய்யும் வேட்டைவினையிலும் வேடர்கள் சிறுயானைக் கன்றுகளையும், ஏனைவிலங்குகளின் சிறுகுட்டிகளையும், கருவுடைய பெட்டைவிலங்குகளையும் எய்யாது விடுத்தனர்.

இவ்வாறு மூண்ட கொலை புரியும் வேட்டை நிகழும்போது கருமேகம்போன்ற தொரு காட்டுப்பன்றி மேகம்போலக் கர்ச்சித்து வலைகளையறுத்து வேடர்களையும் தப்பி மிக்க வேகத்தில் ஓடிற்று. அதனை வேடர்களுள் ஒருவரும் அறிந்திலராகவும் சிங்கம்போன்ற திண்ணனார் அதனைப் பின்றொடர்ந்து ஓடினார்; அவரடிபிரியாத மெய்காவலாளர்களாகிய **நாணன், காடன்** என்ற இருவரும் அவரைத்தொடர்ந்து ஓடினர். அப்பன்றி வேட்டை நாய்களையும் தப்பிக்,காட்டில் நெடுந்தூரம் ஓடி, மேற்செல்ல வன்மையின்றி யிளைத்து, ஒரு மரச்சூழலில் நின்றது. அதனைத் தூரத்தில் நின்று அம்பினாலெய்து கொல்ல நினையாமல், வீராகிய திண்ணனார் அணுகச்சென்று உடைவாளினை உருவிக் குத்தி இருதுண்டுபடுத்திக் கொன்றனர். அது கண்டு அவ்விரு வேடர்களும் அவரைப் புகழ்ந்து, அவரடி வீழ்ந்து "நெடுந்தூரம் ஓடி வந்ததனால் எமக்கு மிக்க பசிவந்தது; கிடைத்த இப்பன்றியைத் தீயில் வதக்கித்தின்று தண்ணீர் குடித்துப் பின் வேட்டைக் காட்டுக்கு மெல்லப் போவோம்" என்றார்கள். திண்ணனார் "நல்ல தண்ணீர் இவ்வனத்தினுள் எங்குள்ள"தென்று கேட்க, அவர்கள் "முன்னிருக்கும் இப்பெரிய தேக்குமரச்சோலையைத் தாண்டிப்போனால் ஒரு மலைதோன்றும்; அதன் அயலிற் குளிர்ந்த **பொன் முகலியாறு** ஓடும்" என்று சொன்னார்கள்.

**வேட்டையிற் பன்றி தப்பி ஓடுதலும் திருக்காளத்திச் சாரல் சேர்தலும்**

"அங்குப் போவோம்; இப்பன்றியை எடுத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டு மூவருமாகச் சென்றனர். சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் **திருக்காளத்தி** மலையின் சாரற்சோலையை அரைக்காத தூரத்திற் கண்ணுற்றார்கள். "நாணனே! இங்குத் தோன்றும் குன்றிற்போவோம்" எனத் திண்ணனார்கூற, நாணன், "அங்குப் போனால் நல்ல காட்சியே காணும்; இம்மலையில் செவ்வே எழுந்து கோணமில் **குடுமித்தேவர்** இருப்பர்; கும்பிடலாம்" என்று சொன்னான். "இஃது ஆவதென்ன ஆச்சரியம்! இதனைக் கண்டு சேருந்தோறும் என்மேல் உள்ளதொரு பாரம் குறைந்து வருவது போல ஓர் அனுபவம் உண்டாகின்றது. ஆசை பொங்கிய மனத்தில் வேறுமோர் விருப்பம் விளைகின்றது. அங்குத் தேவர் இருக்கும் இடம் எங்கே? போதுவாயாக" என்றார் திண்ணனார். இவ்வாறு சொல்லிக்கொண்டு மூவரும் திருமுகலியை யடைந்தனர். அதன் கரையில் ஒரு சோலை நிழலிலே பன்றியை இட்டுக் காடனை நோக்கி "நீ இங்கு மரக்கடைகோல் பண்ணி நெருப்பை உண்டாக்கு. இம்மலையேறிக் கண்டு நாங்கள் வந்தணைவோம்" என்று சொல்லி நாணனுடன் திண்ணனார் போயினர். திருக்காளத்தியைக் கண்டவண்ணமாகவே ஆற்றில் இறங்கிக் கடந்து சென்று திருமலைச்சாரல் சேர்ந்தனர். அப்போது சூரியன் உச்சியிற் சேர்ந்தனன். அத்திருமலையின் உச்சியில் பஞ்சதுந்துபி ஓசைகள் கடல்போல முழங்கின. அது கேட்ட திண்ணனார் "இது என் கொல்? நாணா!" என்று கேட்க, அவன் இம்மலைப் பெருந்தேனைச் சூழ்ந்துகொண்டு மதுமலர் ஈக்கள் மொய்த்தெழும் ஓசைபோலும்" என்றான். முன்னேசெய்த தவத்தின்பெருக்கமானது முடிவில்லாத அன்பை எடுத்துக்காட்ட, அதனால் அளவில்லாத ஆசைபொங்க, எலும்பும் உருகுமாறு உள்ளே எழுந்த பெருவேட்கையோடும் திருமலையை நோக்கித் திண்ணனார் சென்றனர். நாணனும் அன்பும் முன்பு வழிகாட்ட, ஏறிச் சென்று பேணுதத்துவங்களென்னும் படிகளையேறி, ஆணையாகியசிவத்தை யடைபவர்போலத் திண்ணனார் நீண்ட மலையை ஏறி நேர்படச் சென்றனர். அவ்வாறு சென்றவர் காளத்திநாதரைக் காணாதமுன்னே அவரது கருணை கூர்ந்த **அருட்டிருநோக்கம்** இவர்மேற் பதிந்தது. பிறப்பிற் றங்கிய முன்னைச் சார்புகள் எல்லாம் விட்டகன்றன. திண்ணனார் ஒப்பற்ற **அன்பே உருவமாக** ஆயினர். அந்நிலையில் திருக்காளத்தி நாயகரைக் கண்டார். பெருமகிழ்ச்சியாகிய அன்பின் வேகத்தினால் மிக விரைந்து ஓடிச்சென்று தழுவி

**திருக்காளத்தி கண்டு சேர்தல்**

**காளத்தியப்பர் அருணோக்கத் தால்அன்புருவ மாகுதல்**

னுர் ; உச்சி மோந்தார் ; நெடுநேரம் பெருமூச்சுவிட்டு நின்ருர். மயிர்க்கால் தோறும் புளகம் பொங்கிற்று. கண்களினின்றும் நீர் அருவிபோலப் பாய்ந்தது. " அடியேனுக்கு இவர் தாம் இங்கே அகப்பட்டார்! அச்சோ!" என்று ஒப்பற்ற அன்புகூலே தோன்ற " ஐயோ! யானே புலி முதலிய கொடிய விலங்குகள் திரியும் இக்காட்டில் மறவேடுவர் போல நீர் தனியே இருப்பதோ?" என்று மனம் கைத்தார். கையிற்ருங்கிய வில் அவரை யறியாமலே, நழுவி வீழ்ந்தது. தேவர்மேல் இருந்த அடையாளங்களைக் கண்டு " இவர்க்கு இத்தப் பச்சிலையோடு பூவுமிட்டு நீரும் வார்த்து இச்செயல் செய்தார் யாவரோ ?" என்றனர். கூடநின்ற காணன் " இது நான் அறிந்துள்ளேன். உன் தந்தையோடு முன்காலத்தில் ஒரு நாள் வேட்டையாடி இம்மலேயில் வந்தோம். அப் போது ஒரு பார்ப்பான் இவரைக் குளிர்ந்த நீராலாட்டி, இலேயும் பூவும் சூட்டி, உணவு ஊட்டி முன்னே ஏதோ சொல்லிப் போயினன். இன்றும் அவனே செய்தானுகும் " என்று சொன்னன். அது கேட்ட திண்ணனுர், திருக்காளத்தி காயனருக்கு இனிய செய்கைகள் இவையே என்று இதனேயே கடைப்பிடித்துக் கொண்டனர். " இவர் தனியாயிருக்கின்ருர் ; இவரைப் பிரியவும் ஒண்ணுது. இவர் உண்ண இறைச்சியுமிடு வாரில்லே; அதனுற் பிரிந்துபோய் இறைச்சிகொண்டு வரவும் வேண்டும்" என்று எண்ண மிட்டவராய்ச் சிறிது போவர் ; மீண்டு வருவர் ; தழுவிக் கொள்வர் ; மீளவும் போவர் ; ஆசையொடும் பார்த்து நிற்பர் ; " நானேபோய் நல்ல இறைச்சியைக் குற்றமறத் தெரிந்து கொண்டு வருவேன் " என்பர். " யாவர் உமக்குத் துணையாவர் ?" என்று போகத்துணியேன்; நீர் பசித்திருக்கப் பார்த்துக்கொண்டு இங்கு நிற்கவும் மாட்டேன் " என்று கண்ணீர் பெருக, ஒருவாறு போய்வரத் துணிந்து வில்லும் அம்பும் எடுத்துக் கொண்டு தேவரை வணங்கிப் போயினர்.

முதல் நாட் பூசை

இவ்வாறு அரிதின் நீங்கிய திண்ணனுர் உலகில் பிறதுறைகளின் வேட்கை முற் றும் நீங்கினவராய், அன்பினுற் செலுத்தப்பட்டுப் போய்த், திருமுகலியாற்றினைக் கடந்து அக்கரையிற் சோலேயைச் சேர்ந்தனர். காடன் எதிரில் வந்து தொழுது, " நீக்கடைந்து வைத்தேன் ; பன்றியின் உறுப்புக் களே யெல்லாம் உங்கள் குறிப்படி சரிபார்த்துக் கொள்ளுங்கள் ; நாம் திரும்பிப்போதற்கு இவ்வளவு நேரம் நீங்கள் தாழ்த்தது என்ன காரணம் ?" என்ருன். அதற்கு நாணன், " அங்கு இவன், வங்கினேப் பற்றிப் போகாத வல்லுடும்பு போல மலேயிற் றேவரைப் பற்றிக் கொண்டு விட்டு நீங்காதவனுனன் ; இங்கும் அத் தேவர் தின்பதற்கு இறைச்சி கொண்டு போகவே போந்தனன் ; நமது குலத் தலே மையை விட்டான்; தேவர்க்கே கலப்பட்டான் " என்ருன். காடன் " திண்ணு ! என்ன காரியம் செய்தாய் ? என்ன மயக்கங்கொண்டாய் ? நீ எமது குலமுதல்வனல்லவா ?" என்று சொல்லத், திண்ணனுர் அவனது முகத்தையும் நோக்காராய்ப் பன்றியைத் தீயில் வதக்கினர். கல்ல தசைப்பகுதிகளே வேறுவேருக அம்பினுல் அரிந்து கோலிற் கோத்துக் காய்ச்சிப் பதத்தில் வேவவைத்து கல்ல சுவைப்பகுதியைக் காணும் பொருட்டு வாயிற்போட்டு அதக்கிப் பார்த்து கல்லனவற்றை முன்னர்த்தைத்துக் கொண்ட தேக்கிலேக் கல்லியில் இட்டார். பக்கத்தில் நின்ற நாணனும் காடனும் " இவன் மயக்கம் முதிர்ந்தனன் ; கல்ல இறைச்சியைக் காய்ச்சி அதுக்கி உமிழ்கின் ருன் ; பசிமிக உடையனுகிலும் பேச்சிலான் ; நமக்கும் பேறுதரும் தன்மையும் உணரவில்லே ; இத்திண்ணன் தேவர் மயக்கம் கொண்டான் ; இதனேத் தீர்க்கும் வழியையறியோம் ; நாகனேத் தேவராட்டியுடன் கூட்டிவந்து இதனேத் தீர்க்கவேண் டும் ; வேட்டைக் காட்டுக்குச் சென்று ஏனே ஏவலாட்களேயும் கூட்டிச் செல்வோம் " என்று தமக்குள் எண்ணி முடித்துப் போய்விட்டார்கள். அவர்கள் போனதை இவர் அறியார். விரைவில் கல்லியில் ஊனமுதம் அமைத்துக் கொண்டனர். தீநமஞ் சனத்துக்காகப் பொன்முதலியின் நல்ல நீரைத் தமது தூய வாயினில் முகந்து

கொண்டார். தூய நறிய பூ இலைகளைத் தமது தலைமேல் செறிய வைத்துக் கொண்டனர். ஒரு கையில் வில்லும் அம்பும் மற்றொருகையில் ஊனமுதக் கல்லையும் ஏந்தினர். தேவர் மிகப்பசித்திருப்பார் என்று இரங்கி மிக விரைவாக மலையை அடைந்தனர். பசியால் நாயனார் இளைத்தனர் என்று எண்ணி விரைவாகச் சென்று அவரது திருமுடியில் இருந்த மலர்களைத் தமது காலில் வளைத்த அழகிய செருப்பி னால் மாற்றினர். வாயிற் கொண்ட திருமஞ்சன நீரை விளைத்த அன்பை உமிழ்வார் போல அவரது திருமுடிமேல் விட்டார். தம் குஞ்சியிலே கொண்டுவந்த திருப்பள் ளித்தாமத்தை அவரது திருமுடியிலே வணங்கிச்சாத்தினர்; ஊனமுதக் கல்லையைத் திருமுன்னர் வைத்துக் "கொழுத்த தசைகளைத் தெரிந்து கோலிற் கோத்து, அனலிற் பதத்திற்காய்ச்சிப், பல்லினால் அதுக்கி, நாவினாற் பழகிய இனிமையும் பார்த்து நான் படைத்த இவ்விறைச்சி மிக இனியது. நாயனீரே! தேவரீர் அமுது செய்தருளும்" என்று சொல்லித் தேவரை ஊட்டினர்.

**முதல் நாள் இரவு**

இவ்வாறு பூசைசெய்த திண்ணனார் மேலும் இறைச்சியை அவருக்கு ஊட்ட வேண்டும் என்று விரும்பி ஆசைகொண்டனர். அது கண்டவன்போலச் சூரியன் மலையிற்சூழ்ந்தான். அந்திமாலையும் அணைந்தது. இரவில் விலங்கு கள் வந்து தீமைசெய்யும் என்று அஞ்சியவராய்த் திண்ணனார் உண்மையன்பு தாங்கிக் கையிற் சிலையும்தாங்கி, இறைவர் பக்கத் தில் நின்று இரவு முழுதும் உறங்காது காவல்புரிந்தனர். பெருமுனிவர்களும் தேவர்களும் மலையிலும் காட்டிலும் சேர்ந்து பெருந்தவம் செய்தும் காணுதற்கரிய இறைவரை ஆராத அன்பினில் நேர்பெறக் கண்டுகொண்டே நீண்ட இருள் நீங்க நின்றார். முத்து, செம்மணி முதலியவைகள் எங்கும் மின்னின; பச்சை, நீலம் முதலியனவும் விட்டுவிட்டு ஒளி வீசின; சோதிமரங்களும், முழைகளில் விளக்காக மந்திகள் வைத்த மணிகளும், மாமுனிவர்களது அரும்பெருஞ் சோதியும் பேரொளி செய்தன. ஆதலின் எந்தையாரது திருக்காளத்தி மலையில் இரவொன்றில்லை.

**இரண்டா நாட் சிவகோசரி யார் பூசை**

இரவு நீங்கப் புட்கள் சிலம்பும் ஓசை கேட்டுப் புலர் காலையில் உருமிகத் தெரி யாப்போதில் தேவரைத்தொழுது, வில்லேந்தி, அவர்க்கு அமுதுகொண்டு அணைவ தற்காகத் திண்ணனார் போயினர். சூழ்ந்திருந்த கருந்திரையை நீக் கிக் கைகாட்டுவானைப்போலக் கதிர்காட்டி ஞாயிறு எழுந்தனன். அப்போது, காளத்திநாதரை ஆகமவிதிப்படி பூசித்துவரும் தவ முடைய சிவகோசரி முனிவர் வழக்கம்போலப் பூசை செய்தற் பொருட்டுப் பூவும் நீரும் பிறவுங்கொண்டு அணைந்தனர். சிந்தை நியமத்துடன் திரு முன்பு செல்கின்றபோது அவர்அங்கு வெந்த இறைச்சியும் எலும்பும் கிடக்கக்கண்டார்; அகலத்தாண்டி மிதித்தோடினர்; "ஓ கெட்டேன்! யாவர் இவ்வநுசிதம் செய்தனர்? திருமுன்பு நேர்வர அஞ்சாத வேடரே இது செய்திருத்தல்வேண்டும்; தேவதேவீசனே! உமது திருமுன்பிலேயும் இதுசெய்து அவர்கள் போவதா? இதற்குத் தேவரீர் திருவுள் ளம் இசைவதா?" என்று அழுதார்; விழுந்தார்; அலமந்தார். அதன்பின் பூசையினைத் தாழ்க்காது செய்யும் பொருட்டுத் திருவலகால் அந்த இறைச்சியெலும்புக் கல்லையினை யும், செருப்படிச்சுவட்டினையும், நாயடிச்சுவட்டினையும் மாற்றினர். பின்னர்த் திருப் பொன்முகலியில் மூழ்கி விரைந்து வந்தனர். புகுந்த அத்தீங்கை நீக்கும் பவித்திர மாகிய செயல் செய்து தொழுது அற்றைக்கு அங்குப் பெறுவனவற்றைக் கொண்டு திருமஞ்சன முதலிய பூசை முழுதும் முறையாகச் செய்து முடித்து இறைவனை வணங்கினர். "தனிமுதலாம் பான்" என்று பன்முறையும் துணிந்த மறைமொழி களாலே துதி செய்து இறைவனிடம் விடைபெற்றுக்கொண்டு தபோவனத்திற் போயினர்.

இப்பால், திண்ணனார்,பெருமலைச்சரியில் புனமேய்ந்து வரும் பெரும்பன்றிகளைத் துணிபடுத்தியும், மானினங்கள் ஒருவழிச் சென்று ஏறும் துறையில் ஒளி நின்று கொன்றருளியும், பயிலோசையாற் கலைகளை அழைத்து அம்பு எய்தும், மரையினங்களைத் துயிலும் இடையில் எய்தும், கடமைகளைத் தொடர்ந்து எய்தும் இவ்வாறு உச்சி வேளை வெயில் முதிர வேட்டை முடித்தனர். இப்படிக் கொன்ற விலங்குகளை ஒரு சூழலிற் சேர்த்தனர். அருகே தீக்கடைகோல் வெட்டினர். கோற்றேன்களையும் வேண்டுமளவும் மிக முறித்தனர். வட்டமாக உள்ளிடம் அகலமாகப் பெருங்கல்லைகளைத் தேக்கிலையாற் கோலிக் கொண்டனர்.விறகுகளை முறித்து அடுக்கித் தீ உண்டாக்கி வளர்த்தனர். மிருகங்களை அம்பினாற் கொத்திக் குட்டமிட்டு, இறைச்சிகளில் வதக்குவனவற்றை வதக்கிக், கூரிய அம்பினாற் கீறிவகுத்து ஒரு கல்லைபிலிட்டுப், பின்பு கோலிற் கோத்துக்கனலிற் பதம் பொருந்தக் காய்ச்சினர். எண்ணில்லாத தேவர்களுக்கு இடும் அவியுணவைத் தீக்கடவுளின் வாயில்வைத்ததுபோலக் காளத்திநாதருக்கு ஆகும் பரிசு சோதித்துச் சுவை கண்டு அமுது அமைப்பதற்குத் திண்ணனார் தமது திருவாயில் ஊனமுது அமைத்தனர். இவ்வாறு சுவை பார்த்த கல்ல இறைச்சிப் பகுதிகளை ஒரு கல்லையிற் படைத்து அதில் தேன் பிழிந்து கலந்தனர். திருப்பள்ளித்தாமமும் தூய திருமஞ்சனமும் முன்புபோலக் கொண்டு விரைவில் வந்தனர். திருக்காளத்தி யப்பரை அடைந்து முனிவர் பூசை நின்மாலியங்களை முன்புபோல நீக்கி முன்னூட்போலவே பூசையினை முடிப்பாராய், ஊனமுதத்தைக் கல்லையுடன் திருமுன்பு வைத்து, " இது நேற்றுக்கொண்ட ஊனமுதைவிட நன்று ; எனத்தினைமாவு, கலை, மரை, கடமை இவைகளின் ஆகிய இறைச்சி ; அடியேனும் சுவைகண்டேன் ; தேனும் உடன் கலந்துள்ளது ; நித்திக்கும் " என மொழிந்து அன்போடு தேவரை அமுது செய்வித்தனர்.

**இரண்டாம் நாள் திண்ணனார் பூசை**

திண்ணனார் இவ்வாறு தமது ஒப்புயர்வற்ற பூசைசெய்து அந்நெறியிலொழுகுவாராகிக் காளத்தியப்பர் திருமுன்பு இரவில் உறங்காதவரும் பகலில் வேட்டையாடுவாரு மாயினர். பெருமுனிவரும் நாள்தோறும் வந்து வேடர்பூசைக்காக மனந்தளர்ந்து அதனைத் தீமை என்றுகொண்டு, நீக்கித், தூய்மைசெய்து ஆகமங்களின் விதித்தபடி அருச்சித்து அந்நெறியில் ஒழுகுவாராயினர்.

**மூன்றாவது நான்காவது நாட்களில் இருவர் பூசை**

நாணலைடு காடனும்போய் நிகழ்ந்தவற்றை யெல்லாம் நாகனிடம் சொல்ல, அவன், உணவும் உறக்கமுமில்லாதவனுய்த் தேவராட்டியையும் கூட்டிக்கொண்டு மகனுர்பால் வந்தான். அவர்கள் தாங்களறிந்தபடியெல்லாம் பேதித்தும் அவர் தமது குறியில் வாராமைகண்டு கைவிட்டகன்றனர். வேதகத்தினுல் இரும்பு பொன்னுகியதுபோல முன்பு திருக்காளத்தி முதல்வனுடைய அருட்டிருநோக்கத்தால் யாக்கைப் பரிசும் இருவினையும் மலமூன்றும் அற அன்புபிழம்பாகித் திரிவாராகிய திண்ணனார் அவர்களுடைய கருத்தின்அளவில் அமைவரோ ? அமையார்.

**நாகன் வந்து கண்டு திண்ணனைக் கைவிட்டகலுதல்**

அந்நிலையிலே திண்ணனார் அறித்தவாறு பூசித்தனர். முனிவர் ஆகமப்படிபூசித்து " என்னுடைய நாயகனே ! இதுசெய்தாரைக் காணேன். இத்தீமையை உனது திருவருளால் ஒழித்தருளவேண்டும் " என்று பிரார்த்தித்துப் போயினர். அன்று இரவு முனிவரது கனவில் இறைவர் எழுந்தருளி " அவனை வேடுவனென்று நீ நினையாதே ! அவன் செயல்களை நாம் உரைக்கக் கேள். அவன் வடிவமெல்லாம் நம்மிடத்துக்கொண்ட அன்பேயாம் ! அவன் அறிவுமுழுமையும் நம்மையறியும் அறிவேயாம் ! அவனது செயல்கள் எல்லாம் நமக்கு இனியனவேயாம் ! அவனது நிலையிது. நாளைக்கு நீ நம்

**ஐந்தாநாள்முனிவர் பூசையும் திண்ணனார் பூசையும்**

பக்கல் ஒளித்திருந்தால் நம்மிடத்து அவனுக்கிருக்கும் பரிவின் தன்மையெல்லாம் காண்கின்றீர். மனக்கவலை ஒழிக !" என்றருளிச்செய்து போயினர்.

ஆறுநாள் முனிவர் பூசை - திண்ணனூர் கண்ணப்ப நாதல்

முனிவர் கனவுநீங்கி விழித்தெழுந்து விடியுமளவும் துயிலாதவராகி, அற்புதமும் பயமுமடைந்து, அருணோதயகாலத்தில் எழுந்து முன்னுளிற்போலவந்து திருமுகலியில் மூழ்கினர். பலமுறையும் தமது பெருமானது அருளிப்பாட்டை நினைந்தபடியே திருக்காளத்தி மலையேறி இறைவனைப் பூசித்துப் பின்பாக ஒளித்திருந்தனர். திண்ணனூர் ஆறுவதுநாள் அதிகாலையில் முனிவனூர் வருவதன்முன் போய் முன்புபோலத் தனிப்பெரு வேட்டையாடினர். ஒப்பற்ற ஊனமுதமும், திருமுடியில் ஏறும் புதுமலரும், நல்ல திருமஞ்சனமும் வெவ்வேறியல்பினில் அமைத்துக்கொண்டு, இத்தனைநேரம் தாழ்த்தேன் என்று மிகவிரைவாகத் திருக்காளத்தியப்பரிடம் வந்தனையாகின்றார். அவர்முன்கூடிய பலசகுனங்களும் நீங்குகுறித்துக்காட்டின. " இத்தீயபுட்கள் உதிரங் காட்டுகின்றனவே ! ஓ கெட்டேன் ! என் அத்தனுக்கு என்ன நேர்ந்ததோ ?" என்று திண்ணனூர் அணையும்போதில், அவரது அன்பை முனிவர்க்குக் காட்டும் பொருட்டுத் திருக்காளத்தியப்பர் தமது சிவலிங்கத் திருமேனியில் முகமும் அதில் மூன்று கண்களுமாகக் காட்டி, அக்கண்களுள் வலத்திருக்கண்ணில் தண்ணென உதிரம் பாயக் காட்டி யிருந்தனர். இதனைத் தூரத்திற் கண்ட திண்ணனூர் வல்விரைந் தோடி வந்தார் ; குருதியைக் கண்டார்; வாயிலிருந்த தன்னீர் சிந்திற்று ; கல்லையுடன் ஊனமுதம் கையிலிருந்து வீழ்ந்து சிதறிற்று ; மற்றைக் கையிலிருந்த வில்லும் வீழ்ந்தது ; குஞ்சியினின்றும் புதுமலர்கள் அலைந்து சோர்ந்தன. திண்ணனூர் நிலத்திற் பதைத்து வீழ்ந்தார் ; பின் எழுந்தார் ; சென்று இரத்தத்தைத் துடைத்தார் ; இரத்தம் வீழ்வது நிற்கவில்லை. மனமழிந்து பின்னும் வீழ்ந்தார். சிறிது தேறி " இதனை யாவர் செய்தவர் " என்று வில்லும் எடுத்து அம்புகளையும் தெரிந்துகொண்டு, " எனக்குப் பகையாய் இம்மலையிற் கொடிய வேடுவர் செய்தாருளர்கொலோ ? சிங்கம் முதலிய கொடுவிலங்குகள் செய்தனவோ ? கண்டறிந்து ஒறுப்பேன் " என்று அக்குன்றச் சாரலில் நெடுந்தூரமும் பக்கத்திலும் வேறெங்கும் தேடிச்சென்றார். வேடர்களையும் விலங்குகளையும் காணவில்லை. மீண்டும் திருக்காளத்தி நாதரிடம் வந்து அவரது பாதங்களைத் தழுவிக் கட்டிக்கொண்டு, " பாவியேன் கண்ட வண்ணம் இப்பரமனூர்க்கு என்னை அடுத்தது ? உயிரினும் இனிய இவ்வத்தனுக்கு என்னை அடுத்தது? மேவினவர்கள் பிரியமாட்டாத இவ்விமலனூர்க்கு என்னை அடுத்தது ? செய்யலாவ தொன்று மறியகில்லேனே !" என்று கண்ணீர் வாரக் கதறினர். பின், " என்ன செய்தால் இது தீருமோ ? இத்தீங்கு செய்தாரைக் காணேனே ! வேடர்களது அம்புப் புண்களை நிச்சயமாகத் தீர்க்கும் மூலிகைகளை இம்மலையிற் பொன்செய்யும் தாழ்வரையிற் றேடிக்கொண்டு வருவேன் " என்று போனர். இனத்தினிற் பிரிந்த ஏறுபோல வெருக்கொண்டு, வேறு வேறு வனங்களெங்கும் நினைத்து அம்மூலிகைகளைப் பறித்துக்கொண்டு நாதரிடம் வைத்த தமது மனவேகத்தினும் கடிது திரும்பினர். அந்த மருந்துகளைப் பிழிந்து தேவரது கண்ணில் வார்த்தார். குருதி நிற்கவில்லை. இன்னு, இதற்கு இனிச் செய்வதென்னே என்று எண்ணிப் பார்த்தார். " ஊனுக்கு ஊனே " உற்ற நோய் தீர்ப்பது என்ற பழமொழி அவரது நினைவுக்கு வந்தது. வாவே, இனி, என் கண்ணைத் தோண்டி அப்பினால் புண்ணீர் நிற்கவுங் கூடும் என்று, உடனே, மகிழ்ச்சியுடன் திருமுன்பு இருந்த தமது வலக்கண்ணைக் கூரிய அம்பினுற்றேண்டி முதல்வர் கண்ணில் அப்பினர். குருதி வாராமல் நின்றது கண்டார்; குதித்தார் ; தோள் கொட்டினர் ; கூத்தாடினர்; " நான் செய்த இந்த மதி மிகவன்று " என்று நகைத்தார் ; உன்மத்தர்போலாயினர்.

வலக்கண்ணிற் கண்ணப்பிய வள்ளலாராகிய கண்ணப்ப தேவரின் கலத்தினைப் பின்னும் காட்டுதற்காகக் காளத்திநாதர் தமது இடக்கண்ணில் உதிரம்பாயக் கண்டனர். அதனைக் கண்ணப்பர் கண்டனர். "ஓ! கெட்டேன்! எனது காயகாது ஒரு கண் குருதி நிற்க, மற்றைக் கண் குருதி மண்டிப் பொங்கியது. இதற்கு அஞ்சேன்; மருந்து கைகண்டேன். எனக்கு இன்னும் ஒரு கண் உண்டு. அதனைத் தோண்டி அப்பி இப்புண்ணை ஒழிப்பேன்" என்று துணிந்தார். கண்ணுதல் கண்ணில் தமது கண்ணை அவ்வாறு அப்பும்போது சேர்பாடு காணும் பொருட்டு அவரது கண்ணில் தமது இடது காலை ஊன்றிக் கொண்டார். உண்ணிறைந்த விருப்பத்தோடும் ஒப்பற்ற தனிப்பகழி கொண்டு தமது இடது கண்ணில் ஊன்றினர். தேவதேவர் கரித்திலர். அவரது திருமேனியில் முளைத்தெழுந்த கைகண்ணப்பனரது திருக்கையினை அம்புடன் பிடித்துக் கொண்டது. அதற்கு முன் அவரது அமுதவாக்கினின் றும் "நில்லுகண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என் அன்புடைத் தோன்றல் நில்லுகண்ணப்ப!" என்று மும்முறை எழுந்து தடுத்தது. இவை முழுதும் ஞானப் பெருமுனிவர் கண்டார். வேதங்கள் முழங்கப் பிரமன் முதலிய தேவர்கள் கற்பகப் புதுப்பூமழை பொழிந்தனர். கையைப் பிடித்துக் கொண்ட இறைவர் கண்ணப்பரை "மாறில்லாய்! என் வலத்தில் நீற்க" என்றே நிலை பெற்ற பேரருள் புரிந்தனர்.

கண்ணப்பர் காளத்தி யப்பரின் வலத்தில் என்றும் நிற்றல்

---

**தலவிசேடம்** :—திருக்காளத்தி - இத்தலம் சீகாளத்தி எனவும் வழங்கப்பெறும். இது திருத்தொண்டை நன்னாட்டிற் பாடல் பெற்ற 32 தலங்களுள் 19-வது தலம். பொன்முகலி யாற்றின் கீழ்க்கரையிலுள்ளது. ஐம்பூதப்பெருந் தலங்களுள் வாயுத்தலமாம். வாயுவின் இயக்கம் இறைவனின் பக்கத்தில் உள்ள திருவிளக்குச்சுடரின் அசைவினால் இன்றும் காணத்தக்கது. இது தென்கயிலாயம் எனப்படும். இம்மலையிற் றரிசித்த குறிப்பினால் திருக்கயிலாயத்தினை நினைந்து திருஞானசம்பந்த சுவாமிகளும் சுந்தரமூர்த்திகளும் இங்கிருந்தபடி வடக்கே நோக்கித் துதித்துத் திருப்பதிகங்கள் கட்டளையிட்டருளினர். அப்பர் சுவாமிகள் "தாணுவினை யம்மலைமேற் றூள்பணிந்த குறிப்பினால், பேணுதிருக் கயிலைமலை வீற்றிருந்த பெருங்கோலங், காணுமது காதலித்துக், "கயிலாயத் தச்சியுள்ளான் காளத்தியான்" என்று காதலனென் கண்ணுளான் என்று துதித்துத் திருக்கயிலாய யாத்திரையில் வழிப்பட்டனர். இக்குறிப்புப்பற்றியே நக்கீரர் கயிலைபாதி காளத்திபாதி யந்தாதி பாடினர். ஆறுதாரத்தலங்களுள் விசுத்தித் தானத்தலம் என்ப. இது மகாபுராணங்களாலும் போற்றப்பட்ட பெருந்தலம். விட்டுணுமூர்த்தி, பிரமதேவர், இலக்குமி, சரசுவதி, திக்குப்பாலகர் முதலிய தேவர்களும், சனகாதி முனிவர்கள், அகத்தியர். வசிட்டர், உரோமசர் முதலிய பெருமுனிவர்களும், சுவேதாசுவதராதிய நூற்றுப்பன்னிரு தேவ இருடிகளும், யோகினிகளும், அக்கினிப் பிரபன் முதலிய அசுரர்களும், ஆதிசேடன் முதலிய நாகர்களும், மணிமான் முதலிய இயக்கர்களும், முசுகுந்தர் முதலிய போரசர்களும், நக்கீரர் இருகன்னியர் முதலிய அளவிறந்த பெரியோர்களும் பூசித்துப் பேறு பெற்ற தலம். சீ (சிலந்தி), காளம் (பாம்பு), அத்தி (யானை) என்ற மூன்றும் பூசித்துக் கதியடைந்த சிறப்பினைச் சீகாளத்தி என்ற தனது பெயராலே விளக்கி நிற்கும் தலம். (புள்ளிருக்கு வேளூர் - திருவாவினன்குடி என்பனபோல, இத்தலத்து இறைவனது சிவலிங்கத் திருமேனி இரண்டு சீண்ட யானைக்கொம்புகள் கூடியன போன்றுள்ளது. அதன் உச்சியில் "ஐந்து கொலாமவ ராடர வின்படம்" என்றபடி ஐந்தலைப் பாம்பின் படமும், அடியிற் சிலந்தியுருவமும் இன்றும் காணப்பட்டுத் தலப்போ போலவே, நாதரும் சீகாளத்தியாய் விளங்குகின்ற பெருமையுடையது. அன்பே உருவமாய்நின்ற கண்ணப்பர் பூசித்து ஆறாவாளிற் பெரும்பேறு பெற்ற பெருஞ்சிறப்பு வாய்ந்ததனை உலகமறியும்.

கண்ணப்பரது பெருமையைச் சைவ சமய பரமாசாரியர் நால்வர்களும் துதித்துள்ளார்கள்; பட்டினத்தடிகள் முதலிய முற்றத்துறந்த ஞான முனிவர்களும் பாராட்டிச் சிரமேற் கொண்டனர்; சங்கராசாரியார் முதலிய மதாசாரியர்களும் போற்றி வணங்கினர். பல பெரியோர்களும் காளத்தியப்பரோடொப்பக் கண்ணப்பரையும் வணங்கிய சிறப்புடைய தலமாம். இங்கு ஆளுடைய பிள்ளையார் இறைவனைக் "**கும்பிட்ட பயன்** காண் பார்போல் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்து" வணங்கினார் என்பது பெரியபுராணம். சைவத்தெய்வத் திருமுறைகள் யாவும் எடுத்துப் போற்றுகின்ற கண்ணப்பரோடு பிரிக்கப்படாமல் இணைத்துப் பேசப்படுகின்ற சிறப்பு இத்தலத்துக்குரியது. இறைவனுடைய ஆணைப்படி அவரது வலப்பக்கத்தில் கண்ணப்பர் வெளிப்பட எழுந்தருளி யிருக்கிறார். அதுவன்றி, மலைமேல் நான்கு இடங்களில் கண்ணப்பர் சந்நிதிகள் உண்டு. திருஞானசம்பந்த சுவாமிகள் கண்ணப்ப நாயனாரை நினைத்து இத்தலத்துக்கெழுந்தருளும்போது வழியில் திருக்காளத்தி மலையைக் கண்டவுடன் பாடியருளிய பதிகத்தில் திருக்கண்ணப்பரது சரிதத்தைச் சிந்தித்து "வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன் மல ராகுநயனங். காய்கணையி னாலிடந் தீசனடி கூடுகா ளத்திமலையே" என்று பாடித் துதித்தனர். (மதுரைக்கு வரும் வழியில் மங்கையர்க்கரசியார் குலச்சிறையார் என்றிருவரும் பணியும் திருவாலவாய் என்று பாடியருளியதுபோல, பின்னர் இங்கிருந்து புறப்பட்டு எழுந்தருளும்போது நகருக்கு வெளியே வழியிற் புறத்துநின்று "எந்தையாரிணையடி யென் மனத்துள்ளவே" என்று அவ்விறைவனைத் தம் மனத்துள் எழுந்தருளுவித்துத் துதித்துப் போந்தனர்.

சுவாமி - **காளத்தியப்பர் - கணநாதர்** - குடுமித்தேவர். தேவியார் - **ஞானப்பூங் கோதையம்மையார்.** சுவாமி அம்மையார் பெயர்கள் இத்தலத் திருத்தாண்டகத்துட் காண்க. விநாயகர் - **ஐஞ்சந்தி விநாயகர்** தலவிருக்கம் - **கல்லால மரம் - வில்வம்** - தீர்த்தம் - **பொன்முகலி**; இது இங்கு வடக்கு நோக்கிச் செல்வதாற் சிறப்புடையதென்பர். பிரம தீர்த்தம், சரசுவதி தீர்த்தம், சூரிய தீர்த்தம் முதலியனவும் உண்டு. இதற்குத் திருப்பதிகங்கள் 4. இரண்டு தல புராணங்களும் பல பிரபந்தங்களும் உண்டு.

இதனை இரேணுகுண்டா என்ற இருப்புப்பாதைச் சந்தி கடந்து சென்று காளத்தி என்ற (M. S. M.) இருப்புப்பாதை நிலயத்திலிருந்து வடகிழக்கே கற்சாலையில் 2 நாழிகை யளவில் அடையலாம்.

---

கற்பனை :—(1) **உலகினியல்**

1. நாவலர் புகழ்ந்து போற்று நல்வளம் பெருகி நிற்பது நல்ல நாடாம்.

2. புலிக்குட்டி, யானைக்கன்று முதலிய இளவிலங்குகளுடன் ஆடும் வீரமுடையார்கள் மலைவாணர்களது சிறுவர்கள். அவர்தம் சிறுமியர் அன்புடனணையும் பெட்டைமான்களுடன் ஆடுவர். **சிறுவர் சிறுமியர்களின் ஆடல் வகைகளும், கலைப்பயிற்சிகளும் வெவ்வேறியல்பினையுடையன. இருவர்க்கும் ஒரே பயிற்சி தருதல் இயற்கைக்கு மாறுபட்டது**

3. ஒரு மக்கட் கூட்டத்தாரின் வாழ்க்கைத்திறன், அவர் பெரும்பான்மை வழங்கும் சொற்களாலறியப்படும். கொல், எறி, குத்து என்று ஆர்க்கும் ஓசைமிகுவது வேடரின் வாழ்க்கை இயல்பு காட்டுவதாம்.

4. வன்றொழில் மறவர் அச்சமும் அருளும் என்றும் தம்பால் அடைவில்லாதவர்.

5. **முருகப்பெருமான் தம்மை யியல்பின் வழிபட்டோர்க்கு மக்கட் பேற்றையும் பிற எல்லா நலன்களையும் ஈந்தருளுவர்.**

6. வனவேடர்களிற் றாயும் தந்தையும் அவர்தம் குழவிகளும் கரிய நிறமுடையவர். இவர்களிற் றாய்தந்தையர் மகவை ஈன்றெடுத்து ஏந்திமகிழ்தல் "பான்மதியுவரியீன்றால்" எனவும், "கருவரை காள மேக மேந்திய" தெனவும் காணுமியல்புடையது.

7. குழவிகளிற் காணும் குறிகள் அவற்றின் பிற்றை வாழ்வின் பெருமை சிறுமை களைக் காட்டும்.

8. பருவந்தோறும் உரிய தெய்வங்களுக்குப் பெருமடை கொடுத்தலும், காப் பணிதல், ஐயவிப்புகையூட்டுதல் முதலியவை செய்தலும் குழவிகட்கு வரும் தீங்குகளைப் போக்குவனவாம்.

9. வில்வித்தை முதலிய கலைகளின் பயிற்சி, கன்னிலிலே, தெய்வந்தொழுது விழாக்கொண்டாடி, கல்லாசிரியன் பாற் றொடங்கத்தக்கது.

10. எத்தக் கலைப்பயிற்சியும் இடையில் விடப்படாமல் முற்றக்கற்றற் குரியது.

11. உலகியற் கலைகள் முற்றக்கற்றலுக்குப் பதினாறு வயது ஏற்ற எல்லையாம்.

12. உடலைப்பற்றிய கலைத்தொழில்களின் முயற்சி மூப்புவரக் குறைத்துவிடும்.

13. மிருகங்கள் மீதூர்ந்து வந்து பயிருக்கும் உயிருக்கும் கேடு செய்யாத வண்ணம் திங்கள் முறை வேட்டை செய்து அவற்றை அளவில் நிறுத்துவது மலைவாணர் மரபுக்குரிய வழக்கு.

14. தன் கீழ் வாழும் குடிகள் இனிதுண்டு தீங்கின்றி யிருக்கச் செய்தல் செங் கோலாசின் இன்றியமையாப் பெருங்கடமை.

15. மரபு வழிவழி வரும் அரசுரிமையேயாயினும், அது குடி மக்களின் அங்கீ காரத்தையும் விருப்பத்தையும் பற்றி நிற்பது உண்மை ஜராசாங்கத்தியல்பு.

16. அரச குடும்பத்தாருக்கும் குடிகட்கும் நன்மை செய்தற்காகத் தேவபூசை செய்துவரப் படித்தரம் வைத்துத், தேவராட்டியை நியமித்தலும், அன்னெறி வழிவழி வரச்செய்தலும் மலைவாணர்களுட் பழைய வழக்கம்.

17. கன்னி வேட்டை தொடங்குமுன் வனதெய்வங்கள் மகிழக் காடுபலியூட்டு தல் வனவேடர்களின் வழக்கம்.

18. மலைவேடர்களுள் அரசுரிமை தந்தைக்குப் பின் மகனுக்கு வழிவழி வருவ தாயினும் மூப்படைந்த தந்தை தன் மகனுக்குத் தானே மரபுரிமை தந்து பட்டம் சூட்டுதலும் வழக்கு.

19. புலித்தோலிருக்கையில் அரசன் தன்னுடன் ஒரு சேர மகனை வைத்து "நமது மரபுரிமையை இனி நீ தாங்குவாய்" என்று சொல்லி உடை தோலும் சுரி கையும் கையிற் கொடுத்தல் மலை வேடர்க்குள் அரசபட்டம் சூடும் முறை.

20. உச்சிவேளையை ஒரு நல்ல வேளையாக் கொண்டு ஒழுகுதல் வேடர் மரபு. திண்ணனார் விற் பிடித்ததும் (689), அவர் முதலிற் காளத்திமலை யேறினதும் (750), இறுதியில் முதல்வனை யணைய மலையேறியதும் இவ்வேளையாம்.

21. வனவேடர் திங்கள் முறை வேட்டைக்குப் பலருங்கூடி உரியபடி தம்மை அலங்கரித்துக்கொண்டு, வில்லும் அம்புகளும் கொண்டு, பறைகள் முழக்கி, வேட்டை நாய்களுடன் பார்வை மிருகங்களையும் கொண்டு, போதல் மரபு.

22. கொலையே புரியும் வேட்டையிலும் மலைவேடர்கள் கையாளும் அறநீதிகள் பல வுண்டு. விலங்குகளின் பின்புறமிருந்து அம்புஎய்யாது முன்னிருந்தே எய்தல்வேட்டை யின் ஓர் அறமாம். அவர்களுள் வீராராயுள்ளோர் யானை, சிங்கம், புலி முதலிய பெரு விலங்குகளை வேட்டையாடுவர். அற்பப்பிராணிகளை எதிர்த்துக் கொல்லார். யானைக்கன் றுகள், ஏனை விலங்கினங்களின் இளமை, கருவுடைய பெட்டைகள் இவற்றை வேட்டை யாடி அழித்தல் செய்யார். ஓடி நின்ற பகைவிலங்கினைத் தூரத்தினின்று அம்பு எய்து கொல்லாது பக்கத்தில் நெருங்கிச் சுரிகையாற் றுணித்தல் அவர்களுள் வீரர் செயல்.

## அன்பினியல்

ஆவியினினியவர் சிவபெருமான். அவரிடத்திலே அன்பு செலுத்துவதே பயக்கும். ஏனைய விடத்துச் செலுத்தப்படுபவை எல்லாம் துன்பமாய் முடியும்.

24. கேட்ட மாத்திரத்தில் அன்பு பெருகி நிலையழிதல் தலையன்பாம். "முன்ன மவனுடைய நாமம் கேட்டாள்; மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்; பின்னை யவனுடைய வாநூர் கேட்டாள்; பெயர்த்துமவனுக்கே பிச்சியானாள்" என்றபடி, இங்குத் திண்ணனார், "இந்தச் சேணுயர் திருக்காளத்தி மலைமிசை யெழுந்து செவ்வே, கோணமில் குடுமித்தேவர் இருப்பர் கும்பிடலாம்" என்று அவர் நாமமும், இருக்கும் வண்ணமும் ஊரும் கேட்டவுடன் அவ்விடத்தே அணைபவர் தம்மேற் பாரம் போவது போலும் உளது என வசமிழந்து தலையன்பு மீக்கூர்ந்தனர்.

25. பல பிறவிகளிற் செய்து சேர்த்த தவங்களும், பயன் குறியாது செய்த சிவ புண்ணியங்களும் ஆகிய இவற்றின் மிகுதிப்பாட்டாற் சிவபெருமானிடத்துப் பத்தி விளைவதாம். திண்ணப்பனார், முற்பிறவியில் அருச்சுனனாயிருந்து தவஞ்செய்து பெற்ற வரத்தினால் திருக்காளத்தியைக் கண்டவுடனே பற்றிக்கொண்டு பேறடைந்தனர்.

26. சிவன்பாற் சென்றடைபவர்கள் உண்மையிலே தத்துவங்களாகிய படிகளையே கடந்து அணைபவராவர்.

27. நாயகன் நாயகி பேரைக் கேட்டவுடன் வசமழிதல் தலையன்புடையார் தன்மை. கண்டபோது வசமிழத்தல் இடையன்புக்கும், கூடியபோது அவசப்படுதல் கடையன்புக்கும் இலக்கணமென்பர். ஆகவே கேட்டலும் வசமிழக்கும் தலையன் புடையார்க்கு நாயகனைக் காணலும் கூடுதலும் உண்டாயினபோது அளவுகடந்து அன்பு மிகப் பெருகும். இது இங்கே நாயகனுடைய பெயரும் வண்ணமும் ஊரும் கேட்டு அவர்க்கே பிச்சராகிய திண்ணனார் சென்று அவரைக் கண்டதும் அன்பின் வேகம் மேற்செல்ல மோகம் மிக்கு ஓடிச்சென்று தழுவினதாலும், மோந்து உயிர்த்து நெடிதுபோது நின்று திருமேனி யெங்கும் புளகம் பொங்கவும் கண்ணீர் அருவிபோலப் பாயவும் இருந்ததனாலும் உணரப்படும்.

28. அன்புடையார் செய்கை எவையேயாயினும் அவை அன்பு செய்யப்பட் டார்க்கு உவகையே விளைக்கும்; அநுசிதத்தையும் உசிதமேயாக்கும். "குறையாத உவகைக் கண்ணீ, ராறாக வானந்தத் தடியார் செய்த வனாசாரம் பொறுத்தருளி யவர் மே லென்றும், சீறாத பெருமான்" (திருமாற்பேறு - திருத்தாண்டகம் - 5) என்ற அப்பர்சுவாமிகள் திருவாக்கும், "அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்று" இறைவன் உணர்த்தியருளியதும் காண்க.

29. அன்பின் விளைந்த முதிர்ச்சியிலே, அன்பு செய்வாரும் அன்பு செய்யப்பட் டாரும் பிறிவறியாது ஒன்றாந்தன்மை பெறுவர். சிவனிடத்து முதிரும் அன்பு சிவமாய் விளைந்து முடிவிலா இன்பமாகிய சிவத்துவத்தை விளங்கச்செய்யும். "புணர்ச்சியு ளா யிழை மேலன்பு போல, வுணர்ச்சியு ளாங்கே யொடுங்கவல் லார்க்குக், குணர்ச்சியிலாது குலாவி யுலாவி, யணைத்தலு மின்ப மதுவிது வாமே", "அன்பே சிவமாவது" என்பன திருமந்திரம்.

30. சிவனிடத் தன்புமிகுந்து முதிர்ச்சி யுற்றார்க்கு ஏனை உலக அனுபவங்கள் தோன்றா. சிவானுபவமும் அதற்காவனவும் மட்டுமே தோற்றப்படும்.

31. அன்பு செய்வார் தம்மால் அன்பு செய்யப்பட்டார்க்கு இனியவையே தமக்கு இனியவையாகவும், அவர் துன்பம் தமது துன்பமாகவும் கொண்டொழுகுவர்; தமக்கென்று வேறு செயலும் வேண்டார்; வேறு இன்ப துன்பங்களு மிவர்க்கில்லை.

32. அன்பின் முதிர்ச்சியுடையாரது சொற்செயல்கள் உன்மத்தர் செயல்போல உலகம் காணத்தக்கனவா யிருக்கும். "பித்த னென்றெனை யுலகவர் பகர்வதோர் காரண மிதுகேளீர்", "பித்திது வெனப்பிறர் நகைக்கவரு நாலாஞ், சத்திபதிய" முதலியவை காண்க. "தேவுமால் கொண்டா னிந்தத் திண்ணன்" என வேடர்கள் திண்ணனாரைக் கண்டதும் காண்க.

33. மெய்யினின்று வேறெவற்றையும் உட்கொள்ளாத அன்புக்குச் சிவன் வெளிப்படுவன். "கரவி லாதபே ரன்பினுக் கெளிவரும் குரவன்" என்றது காண்க.

34. அரிய தவஞ்செய்தும் மலையும் காடும் சேர்ந்தும் தேவர்களாலும் முனிவர்களாலும் காணுதற்கரிய சிவனே ஆரவன்பினில் ஆர்வம்பெருகும் நிலையிற் காணலாகும்.

35. ஐம்புலனடக்கியாண்ட முனிவர்பாற்,காணத்தக்க பெருஞ்சோதி விளங்கித் தோன்றும்.

36. யாமஞ்சென்று இரவு சுருங்கிய வைகறைப்பொழுதினைப் புட்கள் அறிந்து ஒலம்பும் ; அந்தப் புலர்காலையில் எழுந்து தெய்வவழிபாடும் அதற்குரியனவும் செய்தல் வேண்டும்.

37. இறைவனுக்கு உகந்த பூசைமுறைகளை அவர்தாமே வகுத்த ஆகமங்கள் எடுத்து இயம்பும்.

38. இறைவன் உரு - அருவுரு என்றும் திருமேனி கொண்டெழுந்தருளிய திருமுன்னர்ச் சிந்தை நியமத்தோடு செல்லுதல் வேண்டும்.

39. 'சிவபெருமானே தனி முதல்வனுகிய பரமன்" என்று பலமுறையும் வேதங்கள் துணிந்து முறையிடும்.

40. எண்ணிறந்த கடவுளருக்கும் இடும் உணவை எரிக்கடவுள் தன்வாயிலே கொண்டு ஊட்டுவன்.

41. சிவபெருமானது அருளேக்கத்தால் மாயாமல காரியங்களாகிய மாயேயம் எனப்படும் உடம்பு முதலியவற்றின் பாசம், இருவினைகளும், மும்மலங்களும் அறும். அவ்வாறு அறப்பெற்றவர்கள் பிராரத்தானுபவத்தினிமித்தம் உடம்போடுவாழ்ந்தாலும் சிவன்முத்தராகி அன்புபிழம்பாகித் திரிவார். உலகைப் பாரார். உலகின் வழிவாரார்.

42. பக்குவப்பட்ட அடியார்களுக்குக் கனவில் உணர்த்துவது இறைவன்செய்யும் அருளிப்பாடுகளில் ஒன்றாகும்.

43. அன்பு அதன் விளைவாகிய புறச்செயல்களாலே அறியப்படுவதாம்.

44. நீயபுட்களென்ற நீச்சகுனங்கள் உதிரங்காட்டும். அன்பின் முதிர்ச்சியுடையோர் தாம்காணும் நீச்சகுனங்களின் பலன் தமக்கு வருமென்றெண்ணுது தம்மால் அன்பு செய்யப்பட்டார்க்கு வரும் தீங்குகுறித்தன வென்று எண்ணி மனங் கவல்வர்.

45. அன்பே இன்பம் ; அன்பே சிவம். கலப்பில்லாத முடிவில்லாத இன்பத்திற்கு இருப்பிடம் சிவபெருமானேயாவர். சிவன்பாலன்பு எல்லையற்ற இன்பத்தைக் காட்டி விளைவிக்கும்.

46. கண்ணப்பநாயனர் அன்பின் உயர்ந்தஎல்லைக்கு இலக்கியமாய் விளங்குபவர்.

47. சிவகோசரியார்க்கும், அவர் மூலம் எழையடியார்களாகிய எம்போலிய உலகர்க்கும் கண்ணப்பரது அன்பின்றிறத்தைக் இறைவன் காட்டி யருளினர். அதனைக் காண்பாரார் கண்ணுதலார் காட்டாக்காலே? இதன் பொருட்டு இறைவன் திருமேனியிற் கண்ணிலுதிரம் பாயக் கண்டது அவரது பேரருட்டிறமாம்.

48. கண்ணப்பரது அன்பின்றிறம், அன்பு செய்த அவரும் அன்பு செய்யப்பட்டு அவரை ஆண்ட காளத்தியாருமே அறியக்கூடியது. ஏனையோரால் அறிதற்கரியது. "கண்ணப்ப ளெப்பதோர் அன்பு" என்ற திருவாசகமும், அதற்குக் "கண்ணப்ப ளெப்பதோ ரன்பின்மை யென்றதனால்" என்று உரை செய்த திருக்களிற்றுப்படியாரும் சிந்திக்கத்தக்கன.

49. திருஞானசம்பந்த சுவாமிகள் புண்ணியப்பதிஞருண்டிற் றிருப்பெருமணத்தில் ஞானத்திருமணத்திற் சிவபெருமானிடம் புக்கு ஒன்றி உடனுனர். கண்ணப்பநாயனரும் அவ்வாறே எண்ணிரண்டாண்டின் செவ்வியிற் றிருக்காளத்திநாதரை அணைந்து மீளாதெறியில் அவரது வலத்தே நின்றருளினர். இருவரும் முருகப்பெருமான் றிருவருள்பதிந்த பெரியார்கள் என்பது சிந்திக்கத்தக்கது.

கண்ணப்பநாயனர் புராணம் முற்றும்

# சேர்க்கை

## (1) கண்ணப்பநாயனார்புராணத்திற் காணும்

## உவமை முதலிய அணிகளுட் சில

| வரிசை எண் | புராணப் பாட்டு எண் | |
|---|---|---|
| 655 | 6 | இடிக்குர லெழிலியோடு மாறுகொண் முழக்கங் காட்டு மதக்கைமா. |
| 656 | 7 | மைச்செறிந் தனையமேனி. |
| 657 | 8 | வெஞ்சின மடங்கல் போல்வான். |
| 658 | 9 | சூரரிப் பிணவு போல்வாள். |
| 662 | 13 | பான்மதி யுவரி மீன்றலென. |
| 663 | 14 | முத்தும் மணியும் வேடர் பொழிதரு மழை. |
| 664 | 15 | கருவரை காளமேக மேந்திய தென்ன. |
| 666 | 17 | புண்ணியப் போருளா யுள்ள போருவில்சீ நாதனே. |
| 671 | 22 | புண்ணியக் கங்கைநீரிற் புனிதமாந் திருவாய்நீர். |
| 673 | 24 | அடிச்சிறு தளிர். |
| 681 | 32 | மேருவானது கடலினஞ்ச மாக்கிட அவர்க்கே பின்னுங் கானவ னமுத மாக்கும் சிலை. |
| 682 | 33 | நாகர் குலம்விளங்கரிய தன்று. |
| 683 | 34 | செய்வரை யுயர்ப்ப. |
| 689 | 40 | பொங்கொளிக் கரும்போ றேறு. |
| 690 | 41 | கானவர்க் கரிய சிங்கம். |
| 691 | 42 | (1) கலிவளர் திங்களே போல். (2) எல்லை யில்லாப் புண்ணியந் தோன்றி மேன்மேல் வளர் வதன் பொலிவு போல்வார். |
| 692 | 43 | மைவண்ண வரைநெடுந்தோள் நாகன். |
| 695 | 46 | தினது சிலைக்கீழ்த் தங்கி. |
| 701 | 52 | மைவிரவு நறுங்குஞ்சி வாசக் கண்ணி மணிநீல மலையொன்று வந்த தென்ன. |
| 705 | 56 | செங்கண்வயக் கோளரியே றன்ன திண்மை. |
| 707 | 58 | (1) மின்னிற் றிகழ்சங்கு விளங்கு வெண்டோடு. (2) மாமதிபோல. |
| 708 | 59 | எனக்கோடு தண்டப் பிறைபோல்வன. |
| 712 | 63 | தூங்கப்பெருமாமழை போன்றுதண்ணென்றெறிப்ப. |
| 713 | 64 | வல்லேறு போல்வார். |
| 714 | 65 | பானற்குலமாமலரிற் படர் சோதியார். |
| 716 | 67 | கைப்பற்றிய திண்சிலைக் கார்மழை மேக மென்ன. |
| 717 | 68 | ஆளியேறு போல ஏகும் அண்ணலார். |
| 718 | 69 | வென்றி மங்கை...பாதம் முன் சென்று மீளுமாறு போல்வ செய்ய காவின் வாய. |
| 719 | 70 | சார்வலித் தோடக்கறுக்க ஏதமையர் முன்...வலத்திறஞ்சுமந்து. |
| 720 | 71 | வேணியார்தமைக் கண்ணி னீடு பார்வை யொன்று கொண்டு காணு மன்பர்முன்...எண்ணில்பார்வை கொண்டு. |

| வரிசை எண் | புராணப் பாட்டு எண் | |
|---|---|---|
| 722 | 73 | காடுகூட நேர்வரும்...வேடர் சேனை...கடற்பரப்பி டைப்புகும்... களிந்தி கன்னீர் ஒத்தது. |
| 730 | 81 | தன்னெதிரெதிர் பொருவனநிகர் தலையனபல கலைகள். |
| 731 | 82 | வருமிரவொரு பகலணைவன வெனமிடையும்அவ் வனமே. |
| 732 | 83 | மதிபிரிவுற வருமெனவிழு முழையைக் கோளொடு பயில்பணிதொடர் நிலையுள. |
| 733 | 84 | கடல்விரிபுனல் கொளவிழுவன கருமுகிலென...புதல் வனமேல் கரு மரைகரடிக ளொடுவிழுவன. |
| 734 | 85 | இருவினைவலை யிடைநிலை சுழல்பவர் தெறிசேர்புல னுறுமனனிடை தடைசெய்த பொறிகளினளவு பலதுறைகளில் நுழைமா கவர் நாய் உள. |
| 736 | 87 | பெய்கருமுகிலென இடியொடு எனம்முடுகிய. |
| 739 | 90 | குன்றியைநிகர் எரிகொடுவிழி ; இடிகுரல். |
| 746 | 97 | என்மேற் பாரம்போவதொன் றுளது போலும். |
| 750 | 101 | அதிர்தரு மோசை யெக்கும் ஆர்கலி முழக்கம் காட்ட. |
| 752 | 103 | பேணுதத் துவங்க ளென்னும் பெருகுசோ பானம் ஏறி ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல. |
| 756 | 107 | வேட்டுவச் சாதியார் போல் கானில் தனியே இருப்பதே. |
| 761 | 112 | கன்றகல் புனிற்றுப் போல்வர். |
| 765 | 116 | வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும் பென்ன நீங்கான். |
| 772 | 123 | வினைத்தஅன்பு உமிழ்வார் போல வாயின்மஞ் சனநீர் தன்னை விமலனூர் முடிமேல் விட்டார். |
| 775 | 126 | காளத்தி மன்னனூர்க்கு இனிய நல்லூன் இன்னமும் வேண்டுமென் னும் வேடர் மன்னனூரது காதல்கண்டு கரங்கள் கூப்பிப் பகல வன் மலையிற் றுழ்ந்தான். |
| 776 | 127 | மைவரை யென்ன. |
| 777 | 128 | காணுதற் கரியார் தம்மை அன்பினிற் கண்டு கொண்டு |
| 778 | 129 | பரிதியோடுஞ் சந்திரன் றலையுவாவில் வெற்பைக்கும்பிடச் சென்று லொக்கும். |
| 779 | 130 | இருசுடருக் கஞ்சி இரவிருள் புடைகள் தோறும் ஒதுங்கினுலே போன்றுளது. |
| 780 | 131 | (சோதிகளால்) திருக்காளத்தி மலையினி லிரவொன் றில்லை. |
| 783 | 134 | இரவி மாவளைக்க இட்டகரும் திரையெடுத்துக் கைகாட்டுவான் போல கதிர்காட்டிஎழும் போது. |
| 790 | 141 | (1) மைவண்ணக் கருங்குஞ்சி ; (2) செய்வண்ணத் திறமொழிவேன் தீவினையின் றிறமொழிவேன். |
| 796 | 147 | கடவுளருக்கு இடுமுணவு கொண்டுஊட்டும் எரிவாயில்வைத்ததென. |
| 806 | 157 | வடிவெல்லா நம்பக்க லன்பு. |
| 810 | 161 | கநழகி லென்ன நின்ற கண்படா வில்லியார். |
| 811 | 162 | தேறுவார்க் கமுதமான செல்வனூர். |
| 818 | 169 | ஆவியி னினிய எங்க ளத்தனூர். |

| வரிசை எண் | புராணப் பாட்டு எண் | |
|---|---|---|
| 820 | 171 | (1) இனத்திடைப் பிரிந்த செங்கணேறென வெருக்கொண்டு. (2) பூதநா யகன்பால் வைத்த மனத்தினுங் கடிது வந்து. |
| 821 | 172 | உற்றநோய் தீர்ப்ப தானுக் கூனெனு முரை. |
| 823 | 174 | (1) குன்றென வளர்ந்த தோள்கள். (2) களிப்பிலுலே உன்மத்தர் போல. |
| 827 | 178 | நாக கங்கண ரமுத வாக்கு. |

குறிப்பு :—இப்புராண முழுவதினும் தன்மையணி முதலிய பலவும் சிறக்கக் காணலாம். எல்லா அணிகளையும் குறித்தற் கிடந்தாராமையின் உவமை, உருவகம், தற்குறிப்பேற்ற முதலிய சில பொருளணிகளும், சிற்சில சொல்லணிகளும் மட்டுமே இங்குத் திரட்டப்பட்டன.

---

## (2) கண்ணப்பநாயனார்புராணத்தினிற் காணும்

## ஞானசாத்திரக் கருத்துக்களுட் சில

1. கல்வி புதல்வரைப் பெறுதல் முன்னை நற்றவத்தால் வரும். (8)

2. முருகன் வழிபாடு மகப்பேறு முதலிய எல்லா வரங்களையும் கொடுக்கும். வேண்டுவார் வேண்டுவதே யீவது இறைவனியல்பு. (12)

3. வனதெய்வங்கள் பலியூட்டலின் மகிழும். (47)

4. ஆவேச பக்கத்தால் மனிதர்மீது தெய்வம் நிகழ்தல் உண்டு. (52 - 65)

5. புறத்தொழில் பிறவேயாயினும் அகச்செயலால் பாச வலைத்தொடக்கறுக்க நிகழும் பெரியோர் உளர். முன்னைத் தவமுடையோர்க்குப் புறச்செயல்களே தவப்பய னைத்தரும் செயல்களாக மாறும். (70 - 71)

6. கல்வினை தீவினை என்ற இரண்டும் மக்களை வசப்படுத்தி மீளாப்பிறவியிற் றள்ளுவன. இவையிரண்டினையும் ஒன்றுபோலவே கண்டு கழிப்பர் அறிவுடையோர். இவற்றுட் சிக்குண்டு கலங்கும் மனம் இவற்றினின்றும் விடுதிபெற றன்னெறியிற்சேர முயலும். அதனைப் புலன்வழிச் செல்லுமாறு தடைசெய்து ஐம்பொறிகள் பற்றி ஈர்க்கும் இயல்புடையன. (85)

7. சத்திநிபாத நிலைபெற்ற பக்குவமுடையார்க்கு அத்தீவிரம் மிகவே, உடற் பாரங் குறைவது போலத் தோன்றும். நெஞ்சினில் அதுவரை இருந்த முன் விருப்பங் கள்போக வேறு ஓர் விருப்பம் விளையும். உலகை மறந்து இறைவனைக்கண்டு அடை யும் வேகம் மிகும். (97)

8. ஓசையைந்து எனப்படும் தேவவோசைகள் உள்நாட்ட மிக்கோர்க்குப் புலப்படும் ; உலகநாட்ட நிலையுடையோர்க்குப் புலப்படா. (101)

9. முன்னைப் பிறவியிற்செய்த தவத்தின் ஈட்டம் மூடுகி விளைந்து பயன்றருங் காலையில் முடிவிலா இன்பமான அன்பை எடுத்துக்காட்டும். (102)

10. தத்துவப்படிகளேயேறி மேற்சென்றால் முடிவில் ஆணையாம் சிவத்தைச்சார அனைதல் பெறலாம். (103)

11. இறைவனது கருணை கூர்ந்த அருட்டிரு நோக்கம் எய்தினோர் பிறப்பின் முன்னைச் சார்புகளினீங்குவர்; சிவவொளி நிழலில் அன்புருவமாகுவர். (104)

12. மேற்கூறியவாறு சிவன் முத்தநிலை யடைந்தோர் உலகை மறந்து பாலர் பித்தர் பசாசர் போன்ற நிலையடைகுவர். தம்மை மறப்பர்.

13. தரிசனவேதி என்னும் குளிகை எதிர்ப்பட்ட மாத்திரையில் இரும்பு பொன்னுவது போல இறைவனது அருளேக்கம்படவே ஆன்மாக்கள் யாக்கையின் பரிசும் வினையிரண்டும் மல மூன்றும் அறப்பெற்று அன்பே உருவமாகுவர். (154)

14. பெருந்தவஞ் செய்து பெருமுனிவரும் தேவரும் காணமுடியாத கடவுளை ஆர்வமுன் பெருகும் ஆராவன்பினில் வெளிப்படக் காணலாகும். (128)

15. இறைவனது பூசை முறைகள் அவரே இயம்பிய சிவாகமங்களில் விதிக்கப்பட்டன. இவை அன்போடும் சிக்தை நியமத்தோடும் செய்யத்தக்கனவாம். இவை தவம் எனப்படும். இவையும் முன்னைத் தவத்தாற் கிடைப்பன. (135)

16. இறைவர் தேறுவார்க் கமுதமாகத் தித்திப்பர். (162) அன்பிற்குமுண்டோ அடைக்குந்தா ழார்வலர், புன்கணீர் பூச றரும் என்ற உண்மையும் இங்குக்காணப்படும். சிவனிடத்து அன்பே உருவமாய்ச் சிவசாயுச்சியம் பெற்றுச் சிவனெனொருங்கிருக்கும் பேற்றினுக்குமேற் பேறு பிறிதொன்றில்லை. (180)

---

## (3) கண்ணப்பநாயனார்புராணத்தில் கண்ட பெயர்களைக் குறித்த

# சரித்திரக் குறிப்புக்கள்

[இராவ்பகதூர் - திரு. C. M. இராமச்சந்திர செட்டியார், B.A.B.L., F.R.G.S., அவர்கள் தொகுத்துதவியது.]

### 1. நாடு :—பொத்தப்பி நாடு

கண்ணப்ப நாயனார் அவதரித்த நாட்டின் பெயர் பொத்தப்பி நாடு என்று சேக்கிழார் பெருமான் குறித்திருக்கின்றார். இப்பெயர் அதன் தலைநகரா யிருந்த பொத்தப்பி என்ற ஊரினால் வந்தது எனலாம். பொத்தப்பி என்ற ஊர் தற்காலத்திய கடப்பை ஜில்லாவில் புல்லம்பேட்டை தாலூக்காவில் உள்ள ஒரு சிறிய ஊர். இவ்வூர் வடபெண்ணை நதியின் (உத்தரபினாகினி) உபநதியாகிய செய்யாற்றின் (தெலுங்கில் செய்யேறு) மேல் கரையில் இருக்கின்றது. இவ்வூருக்கு அருகில் செய்யாறு தெற்கே இருந்து வடக்கே ஓடிச் சித்தவட்டம் தாலூக்காவில் வடபெண்ணையுடன் கலக்கிறது. பொத்தப்பியில் ஜனத்தொகை 1875-ல் 2188-ம்,1915-ல் 1453-ம்,ஆக இருந்தது.இவ்வூர் அரக்கோணம் - குண்டக்கல் இருப்புப் பாதையில் இராசம்பேட்டை என்ற நிலையத்திலிருந்து வடக்கே 15 கல்லில் இருக்கின்றது. வசிப்பதற்கு இனிமையான ஊர். பண்டைய நாட் சரிதப்பெருமை கொண்டது. இது சுமார் 1000 கி. பி. முதல் கொண்டு இக்நாட்டு அரசரின் தலைநகராக இருந்து வந்தது. இதனை 7 நூற்றாண்டுகள் வரை பற்பல அரச மரபினர்கள் இருப்பிடமாகக் கொண்டிருந்தார்கள். முதன் முதலில் இவ்வூரை இராசதானியாகக் கொண்ட அரசவம்சம் தெலுங்கு சோடர் என்ற சோழவம்சக் கிளையினர். இவ்வூரில் இரண்டு பண்டைய ஆலயங்கள் உண்டு. ஒன்று மூலத்தானேசுரம் என்ற சிவாலயம். அது கி. பி. 1193-ல் தெலுங்கு சோழரால் புதுப்பிக்கப்பட்டது. மற்றொன்று கோபாலசுவாமி கோயில் என்ற பெருமாள் கோயில். அது கி. பி. 1459-ல் மாட்ல அரசன் அனந்தராமராஜு என்பவனால் தாபிக்கப்பெற்றது. அவ்வரசனே "ராஜஸ்த விஜயம்" என்ற தெலுங்கு நூலைப்பாடியவன். அவ்வூரிலிருந்த பண்டைக் [illegible] கோட்டை அழிந்து கிடக்கின்றது. சகம் 1001-ல் இராமசோடராஜனும், [illegible]மசித்தனும் ஆண்டார்கள். மனுமசித்தன் தெலுங்கு மகாகவி திக்கனசோமயாதரித்தவன். குலோத்துங்கசோழன் III-ன் கீழ் குறுநில மன்னனாக இருந்துண்டவன் மதுராந்தகப் பொத்தப்பிச்சோழ சித்திஅரயன். பிறகு விஜய

ங்கரத்தாரும் பின்னர் மாட்ல அரசர்களும் ஆண்டு வந்தனர். சகம் 1640-ல் மாட்ல மன்னன் குமார காந்த ராஜன் ஆலயத்தின் ஒரு பகுதியைப் புதுப்பித்தான்.

**நாட்டின் பரப்பு :**—அடியில் கண்ட ஊர்கள் அவைகளிலுள்ள ஆலயக் கல்வெட்டுக்களைக்கொண்டு பொத்தப்பி நாட்டைச் சார்ந்தவை என அறிகிறோம்.1. அத்திராலா என்ற பரசுராமீசுவரர் ஆலயம். 2.குண்டலூரு:—அகத்தீசுவரர் ஆலயம்.3.கொத்தமல்லி:—பொத்தப்பி நாட்டுக் கொத்தமல்லி. 4. நந்தலூரு :—மேற்பாக்கை நாட்டு நிரந்தனூர் (பழைய பெயர்) 5. தங்கடூர் :—சித்தேசுவரர் ஆலயம்.

இவைகளைத் தவிர சித்தவட்டம், நெல்லூர் முதலியவைகளிலுள்ள ஆலயங்களிலும் பொத்தப்பி நாடு குறிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய விவரங்களிலிருந்து பொத்தப்பி நாடு தற்காலப் புல்லம்பேட்டை தாலூக்கா முழுவதையுமே அடக்கிக் கொண்டிருந்தது என்று கூறலாம். தஞ்சைச் சோழமன்னர்கள் காலத்தில் அவர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த தெலுங்குநாடு அதிராஜேந்திர மண்டலம் என்ற பெயரால் வழங்கிற்று. அதன் கிளைநாடு ஒன்றிற்குப் பாக்கைநாடு என்று பெயர். அது தற்காலக் கடப்பை, நெல்லூர் ஜில்லாக்களைக் கொண்டிருந்தது. கடப்பைப் பாகம் மேற்குப் பாக்கை நாடென்றும், நெல்லூர்ப் பாகம் கீழ்ப்பாக்கை நாடென்றும் வழங்கி வந்தது. மேற்பாக்கை நாட்டின் ஒரு பிரிவிற்கு பொத்தப்பிநாடு என்ற பெயரும் இருந்தது. இந்நாடு காளத்தி நாட்டிற்கு அடுத்தது என்பதைக் கவனிக்க.

**அரசபரம்பரை :**—முன்னமே கூறியபடி சுமார் கி. பி. 1000ல் தெலுங்கு சோழர்கள் பொத்தப்பி நாட்டை ஆண்டு வந்தனர். அதுவேயன்றிப் பாக்கைநாடு முழுவதுமே அவர்கள் வசப்பட்டிருந்தது. சோழர் என்ற தமிழ்ப்பதம் சோடர் என்று தெலுங்கில் வழங்கிவந்தது. இவர்கள் தஞ்சைச் சோழர்களின் கிளையினராக இருந்து தெலுங்கு நாட்டு இராஜப்பிரதிநிதிகளாய்ச் சென்றிருக்க வேண்டும். பின்னர் அவர்களே வம்ச பரம்பரையாக ஆள ஆரம்பித்தனர். முதல் முதலில் தாசவர்மன் பாகராஷ்டிரத்தைக் கைப்பற்றிக் கொண்டு பொத்தப்பியைத் தலைநகராக்கிக் கொண்டு ஆண்டுவந்தான். அவனுடைய சந்ததியார் மதுராந்தகப் பொத்தப்பிச் சோழர் என்ற பட்டம் வைத்துக் கொண்டனர். இவ்வம்சத்தார் தஞ்சைச் சோழர்களான குலோத்துங்கன் 1. விக்கிரமன், குலோத்துங்கன் 2, இராஜ ராஜன் 3 இவர்கள் காலங்களில் (11, 12. 13 நூற்றாண்டுகள்) குறுநிலமன்னர்களாக விளங்கினார்கள். சோழ அரசர்கள் பெருமை குறையவே பொத்தப்பிச் சோழர்கள் மேன்மை பெற்றனர். அவர்களில் திக்கன் பொத்தப்பிச்சோழன் பிரக்கியாதி அடைந்தான். அவன் மகன் மனுமசித்தி கலாவிநோதனுகித் திக்கன சோமயாஜியை ஆந்திரபாரதம் எழுதச் செய்தனன். பின்னால் இந்நாடு வாரங்கல் வசமாகி, இவ்வூர் கி. பி. 1350-ல் முகமதியர்களால் பிடிக்கப்பட்டு அவர்கள் வசமாயிற்று. பின்னர் விஜயநகரத்தார் ஆளுகைக்கு உட்பட்டது. அவர்கள் ஆட்சியில் மாட்ல மன்னர்கள் இந்நாட்டின் குறுநில மன்னர்களானார்கள். பொத்தப்பிச் சோழர்கள் காலத்தில் காளத்தி, திருப்பதி முதலிய பிரதேசங்களை யாதவராயர்கள் ஆண்டு வந்தனர். இவ்விருவம்சங்களுக்கும் விவாக சம்பந்தம் உண்டு.

**நிலப்பான்மை :**—இந்நாடு ஒரு செழிப்பான பள்ளத்தாக்கில் அமர்ந்திருக்கிறது. இப்பள்ளத்தாக்கின் வழியாகத்தான் தற்காலத்தில் அரக்கோணம் - கடப்பை இருப்புப் பாதை ஓடுகிறது. இதன் மேற்கில் சேஷாசலம் மலைத்தொடரும் கிழக்கில் பல சிறு மலைத்தொடர்களும் இருக்கின்றன. செய்யாற்றுப் பாய்ச்சல் இங்காட்டைச் செழிப்பாக்குகிறது மலைத்தொடர்களும் அடுத்தே இருப்பதால் காடுகள் அடர்ந்திருக்கின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முன் இப்பிரதேசத்தில் காடுகள் அடர்ந்து இருந்தன. அவைகளில் வேடர்கள் மிகுதியாக வாழ்ந்து வந்தனர். அருகிலுள்ள காடுகளில் மிருகங்களை வேட்டையாடிப் பிழைப்பது அவர்கள் தொழில். இப்போதும் அவ்வேடர்களின் வம்சத்தினர் இந்நாடுகளில் ஏராளமாக வசிக்கிறார்கள். **வேடர்**-என்ற தமிழ்ப்பதம் **பேடர்**-

என்று கன்னடத்திலும், **போய** - என்று தெலுங்கிலும் வழங்கி வருகிறது. வேடர்குலத் தலைவர்கள் அந்நாட்டு மலைக்கோட்டைகளுக்குத் தலைவர்களாக இருந்துவந்தார்கள். அவர்களைத் தமிழ் நாட்டுப் பண்டைய காள் வேளிர்கள் போன்றவர்கள் என்று சொல்லலாம். இவர்களுடைய வீரச் செயல்களைப் பற்றிப் பல சரிதங்கள் உண்டு. இக்குலத்தில் அவதரித்தவர் **கண்ணப்ப நாயனார்**. இக்காலத்திலும் அந்நாயனரை வேடர்கள் உச்சியின் மேற் கொண்டு பூசித்து வருகின்றனர். மைசூர் நாட்டு ஹிரியூரில் வேடர் குலத்தார்கள் கண்ணப்ப நாயனர் திருமடம் கட்டிக் கொண்டாடி வருகிறார்கள். ஆகவே, கன்னடநாட்டிலும் நாயனர் பெருமை பரவியிருக்கிறது அல்லவா ?

**மக்கள் :**—முன் காலத்தில் அந்நாட்டு மக்களிற் சிறந்தவர்கள் வேடர்கள் என்று சொன்னேம். அவர்களுடைய பழக்க வழக்கங்கள் குறிஞ்சி நிலத்திற்கு ஏற்றனவாக இருந்தன. வேடர்கள் இக்காலத்திலும் தங்கள் பண்டைப் பழக்க வழக்கங்களைவிடாமல் போற்றி வருகிறார்கள். தமிழ்ச் சில்லாக்களில் தெற்கே செல்லச் செல்ல அவர்களுடைய நாகரீகம் மிகத்தாழ்ந்து நிற்கிறது. மலையாளத்தில் வேடர்கள் இப்போதும் காட்டு மனிதர்கள் போல் அநாகரீகமாக இருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டில் அந்த வகுப்பிற்கு இணையாக இருக்கும் வேட்டுவர்கள் நாகரீகத்தில் முன்னுக்கு வந்திருக்கிறார்கள். அம்பலக்காரர் என்ற மற்றொரு வகையாரும் முன்னேற்றம் அடைந்தவர்களே. அம்பலக்காரர்களும் வேடர்களும் கண்ணப்ப நாயனருடைய வம்சத்தினர்கள் என்று தங்களைப் பெருமைப்படுத்திப் பேசிக் கொள்கிறார்கள். தெலுங்கு போயர்களோ தாங்கள் வால்மீகி ரிஷியினுடைய சந்ததிகள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். முன் காலத்தில் பொத்தப்பிநாட்டு மக்கள் தமிழ் மொழி பேசினவர்களாக இருக்க வேண்டும். வேடர்கள் தமிழ்மொழியையே தம் தாய் மொழியாகக் கொண்டிருத்தல் வேண்டும். ஏறக்குறைய 1000 ஆண்டுகளுக்கு இப்பால் எற்பட்ட கல்வெட்டுக்களிலே பெரும்பாலும் தமிழ் மொழி வழங்கப்பட்டிருக்கும்போது 2000 ஆண்டுகளுக்கு முந்திக் கண்டிப்பாகத் தமிழ் மொழியையே அந்நாட்டார் வழங்கி இருக்க வேண்டும் அல்லவா ? ஊர்ப்பெயர்கள் மக்கள் பெயர்கள் எல்லாம் தமிழ் மயமாகவே இருக்கின்றன. மேலும் ஆறுகளின் பெயர்களும், மலைகளின் பெயர்களும் தமிழ் மொழிகளே. பெண்ணையாறு, செய்யாறு (சேயாறு) இவைகளைக் காண்க. சேய்+ஆறு=சேயாறு—முருகக் கடவுள் ஆறு எனப்பொருள்படும். முருகக்கடவுள் வேடர்களின் குலதெய்வம் அல்லவா ? பொத்தப்பிச் சிவாலயத்தின் சுவாமியின் பெயர் மூலத்தானேசுவரர் என்றல் அதுவும் தமிழ்மயமேயன்றே ?

## 2. நாயனரின் ஊர்

கண்ணப்ப நாயனருடைய குடும்பத்தார் வசித்த ஊர் **உடுப்பூர்** - என்று பெரிய புராணம் கூறுகிறது. பொத்தப்பி நாட்டு ஊர்களின் பெயர்களில் உடுப்பூர் என்ற பெயர் இப்போது கிடைக்கவில்லை. ஆனால் **உடுக்கூர்** - என்ற பெயர் ஒன்று அங்கே காண்கிறோம். இது இராசம்பேட்டைக்கு அருகில் உள்ளது. உடுப்பூர் என்ற பெயரே உடுக்கூர் என்று திரிந்தது போலும். இவ்வூர்க்கு மேல் புறத்தில் மலைகளும் காடுகளும் அடர்ந்திருந்தபடியால் அவர்கள் தலைவனை நாகன் அங்கே வேட்டையாடி வசித்து வந்திருத்தல் வேண்டும். அந்நாடு அக்காலத்தில் தமிழ்நாடாக இருந்ததினால் வேடர் மக்கள் நாகன், தத்தை, காடன், நாணன், திண்ணன் என்ற தமிழ்ப் பெயர்களையே இட்டு வந்திருக்கலாம். திண்ணனார் வேட்டையாடிக் காதங்கள் பல சென்று பொன்முகலியாற்றை (சுவர்ணமுகி) அடைந்ததினால் அவ்விரண்டு இடங்களுக்கும் நடுவில் 40 கல் தூரம் இருந்திருக்க வேண்டும். இப்போதும் பொத்தப்பிநாட்டு உடுக்கூருக்கும் சீகாளத்திக்கும் 40 கல் தூரம்தான் இருக்கிறது.

## 3. பொன்முகலியாறு

இதனைச் சுவர்ணமுகி என்று வடமொழியிலும் தெலுங்கிலும் வழங்குவார்கள். கல்வெட்டில் வடமொழியில் கனகமுகரி என்று கண்டிருக்கிறது. இந்த ஆறு சிற்றூர்ச் சில்லாவில் திருமலையின் மேற்குச் சரிவில் உற்பத்தியாகிச் சந்திரகிரிக்கு அருகில் ஓடித் திருப்பதிப் பள்ளத்தாக்கின் வழியாகக் கிழக்கே ஓடிப் பிறகு வடகிழக்கே திரும்பிச் சீகாளத்திக்கு அருகில் பாய்ந்து, பிறகு வடகிழக்காக ஓடி துகராச பட்டணத்திற்கருகில் கடலில் பாய்கிறது. இதன் நீளம் ஏறக்குறைய 50, 60 கல் இருக்கலாம். இது கண்ணப்பநாயனார் சரிதத்திலும் தேவாரப்பதிகத்திலும் சிறப்புப் பெற்றது. "சந்தமாரகிலொடு" என்ற சம்பந்தர் பதிகத்தில் இக்கதியில் சந்தனம், அகில், சாதி, தேக்கு முதலிய மரங்கள் உற்பத்திக்கொண்டு வெள்ளம் செல்லும் காட்சி எடுத்தாளப்பட்டுள்ளது. காளத்திக்கருகில் இக்கதி உத்தரவாகினியாக ஓடும் பெருமைகொண்டது. கங்கை நதியே இந்த ஆறாக வந்ததாகச் சீகாளத்திப் புராணம் கூறும். கல்வெட்டுக்களில் மணிகங்கை என்ற பெயர் காண்கிறோம். அப்புராணமே கல்வெட்டிற் கண்ட மணிகங்கை என்ற பெயருக்குக் காரணமாக இருக்கலாம். அதன் கரையில் உள்ள ஆலயத் திறைவற்கு மணிகங்கேசுவரர் என்று பெயர் உண்டு. அவ்வாற்றின் கிழக்கில் சிறு குன்றுகளின் அருகில் உள்ளது காளத்தி நகரம்.

## 4. சீகாளத்தி

இவ்வூர் இரண்டு குன்றுகளுக்கு இடையில் அழகாக அமைந்திருக்கிறது. வடக்கே உள்ள குன்றின்மீது அர்க்கையின் ஆலயமிருக்கின்றது. தெற்கே உள்ள குன்றின்மீது **கண்ணப்பேசுவரர்** ஆலயம் உள்ளது. கண்ணப்ப தேவரால் பூசிக்கப் பெற்றமையால் அப்பெயர் ஏற்பட்டது. கண்ணப்பர் உருவம் ஒரு சிறு ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. கண்ணப்பர் மலைக்கு மேல்புறமாகக் காளத்தீசுவரருடைய பெரிய ஆலயம் உள்ளது. காளத்தீசுவரர் வாயுலிங்கம் என்பது யாவரும் அறிந்த செய்தி. ஆலயத்திற்கு வடகிழக்கில் இரண்டு பெரிய கோபுரங்களும் ஒரு பெரிய இரதமும் இருக்கின்றன. ஆலயத்திற்குத் தென்புறத்தில் காசி விசுவநாதர், மணிகண்டேசுவர் (மணிகங்கேசர் என்பது கல்வெட்டு) ஆலயங்கள் இருக்கின்றன. மணிகண்டேசர் ஆலயத்துச் சுவரில் பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றில் (202/92) கண்ணப்பதேவர் சரிதம் வரையப்பட்டிருக்கிறது. கண்ணப்பர்மலையின் ஒரு சரிவில் பிரமனுடைய ஆலயம் இருக்கின்றது. பிரமதேவர்ஆலயத்தின் வடபுறத்தில் சிவ வடிவங்களைப் பாறையில் செதுக்கியிருக்கிறார்கள், அதற்குத் தெற்கில் அகத்தீசர் ஆலயமும் மலைக்கு எதிர்ப்புறத்தில் பாரத்துவாச தீர்த்தம் என்ற நிலமாகிய குளமும் உண்டு. ஊர் நடுவில் வரதராஜர் கோயிலும் காளத்திச் சமீன்தார் அரண்மனையும் இருக்கின்றன. கல்வெட்டுக்களின்படி காளத்திக்கு மும்முடிச்சோழபுரம், கண்ணப்பபுரம் என்ற பெயர்கள் இருந்தன.

## 5. காளத்தீசர் ஆலயம்

இது பெரிய ஆலயம். இதனைச் சில ஆண்டுகளுக்குமுன் தேவகோட்டை நகரத்துச் செட்டி மக்களில் திரு. இராமநாதன் செட்டியார் குடும்பத்தார் புதுப்பித்தார்கள். அவர்கள் சீர்ணோத்தாரணம் செய்வதற்கு முன்னும் பின்னும் பல கல்வெட்டுக்களை அதிகாரிகள் பிரதி எடுத்து வைத்திருக்கிறார்கள். அக் கல்வெட்டுக்களிலிருந்து பல அருமையான செய்திகளை நாம் அறியலாம்.

**கல்வெட்டுக்களைப் பதித்த அரச வம்சத்தினர்கள் :**—(1) சோழர்கள்—இராஜராஜன் (958—1012) முதல் இராஜராஜன் III (13 நூ வரை). (2) வாரங்கல் காகதி

யர்—12, 13 நூ—அரசன் - கணபதி. (3) தெலுங்கு சோழர்கள் (1000—1250) மதுராந்தகப் பொத்தப்பிச் சோழர்கள்.

(4) யாதவராயர்கள்-12, 13 நூ. (சோளத்திப் புராணப்படி யாதவராயர் காளத்தி ஆலயங்களைக் கட்டினர்.) (5) கண்ட கோபாலர் (1250—83) (6) விஜயநகரத்தரசர்கள் ஹரிஹர (சகம் 1325) முதல் சதா சிவராயர் (1491) சகம் வரை.

## 6. திருக்காளத்தியில் உள்ள கல்வெட்டுக்களில் காணும் குறிப்பிடத்தக்க முக்கிய செய்திகள்

(1) இராஜராஜன் I காலத்தில் (கி. பி. 958) காளத்திக்கு மும்முடிச் சோழபுரம் என்று பெயர் கொடுக்கப்பட்டு, அப்பெயர் 16-ம் நூற்றாண்டுவரை வழக்கத்தில் இருந்தது. 86/1922 கல்வெட்டுப்படி ராஜேந்திர சோழ மண்டலத்துத் திருவேங்கட கோட்டத்து ஆற்றூர்நாட்டுத் திருக்காளத்தியான மும்முடிச் சோழபுரம் என்று இவ்வூர்ப் பெயரைக் காண்கிறோம். (2) காளத்தீசர் ஆலயத்தில் உள்ள மணிகண்டேசர் ஆலயமும், மண்டபமும், படிகளும் வீராராஜேந்திரன் II-ல் ஆண்டில் கட்டப்பட்டதாக 197/1903 கல்வெட்டுக் கூறுகிறது. ஈசன் பெயர் மணிகங்கையுடைய நாயனார் என்று காண்கிறோம் (கி. பி. 1189 என்று ஊகிக்கப்படுகிறது). இவ்வாலயம் முற்றியே இருந்ததை அவ்வரசன் புதுப்பித்திருக்கவேண்டும். எனெனில் மற்றொரு பழைய கல்வெட்டினால் அது இராஜராஜன் I காலத்தில் இருந்ததாகத் தெரிகிறது. (958 கி. பி.) (3) குலோத்துங்க அரசனுடைய 32 ஆண்டிலே தியாகசமுத்திரப் பேட்டை வீமரசன் என்ற தலைவன் ஆலசுந்தர கந்தவனத்தைப் பாதுகாப்பதற்காக இரண்டு ஆட்களை நியமிப்பதற்கு 800 குழி நிலத்தைத் தானம்செய்தான். ஆகவே சுந்தரமூர்த்திகள் பெயராலே இவ்வூரில் ஒரு கந்தவனம் இருந்ததென அறிகிறோம். (4) பொத்தப்பிச் சோழர்களுடைய கல்வெட்டுக்கள் இவ்வாலயத்தில் இருக்கின்றன. அவர்களுடைய ஆதீனத்தில் இவ்வாலயம் இருந்திருக்கவேண்டும். (11, 12, 13 நூற்றாண்டுகள் விக்கிரமன், இராஜராஜன் காலங்கள்.) பொத்தப்பிகாடும் 133/22-ல் குறிக்கப்பட்டிருக்கிறது. (5) விஜயநகரத்து அரசன் கிருஷ்ணதேவராயர் உதயகிரி, அட்டகங்கி, வினுகொண்ட, பெல்லம்கொண்ட, கொண்டவீடு முதலிய இராச்சியங்களைக் கைப்பற்றி, ஒரிசா நாட்டுப் பிரதாப ருத்திரன் மகன் வீரபத்திரனையும், குமார ஹம்மீர பாத்ரன் மகன் நரஹரிதேவனையும் ராயசூர் மல்லாகானையும் சிறைசெய்தும் மன்னித்து விட்டும், வெற்றி வீரனாக(சகம் 1438-ல்)காளத்தி விஜயம்செய்து, காளத்தீசனை வணங்கி,அங்கு நூற்றுக்கால் மண்டபத்தையும் பெரிய கோபுரத்தையும் கட்டினர் என்று 196/1903 கல்வெட்டுக்கூறுகிறது. கி.பி. 1516. (6) கிருஷ்ணதேவராயர்(1435.சகம்=1513 கி.பி. 151/24) காளத்திநாதருக்கு அபரிமிதமான இரத்தினங்களும் பிரபாவலி,ஆபரணங்கள் முதலியவைகளையும் தந்திருக்கிறார். அச்செய்தி பல கல்வெட்டுக்களில் விவரமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. (161, 165, 185) (7) விஜயநகரத்து அச்சுதராயன் 1454-ல் (கி. பி. 1532) 157/24 காளத்திநாதர் ஆலயத்தில் பட்டாபிஷேகம் செய்துகொண்டு பல கிராமங்களைத் தானம் செய்தான். (8) அவ்வச்சுதராயன் அரசி வரதாம்பிகையும், மகன் சிக்கவெங்கிடாத்திரியும் காஞ்சியில் முத்துத்துலாபாரம் செய்ததாக 2455 கல்வெட்டு கூறுகிறது. (178/24) (9) காளத்திக்கு அருகிலுள்ள ஒரு மலைக்குக் கயிலை மலை என்றும் (177/1922-சகம் 1458), மற்றொரு மலைக்கு ரிஷபக்குன்று (இடபக்குன்று) என்றும் (184/22 சகம் 1443) பழைய பெயர்கள் வழங்கி இருந்தன. இடபக்குன்றில் இளையநாயனார் ஆலயம் கிருஷ்ண தேவராயர் காலத்தில் கட்டப்பட்டது. சகம் 1443 (1521 கி. பி) (10) சகம் 1462-ல் (கி. பி. 1540) இராமாபட்டரையின் கல்லாலடியில் அறுபத்துமூவர் மண்டபத்தில் வீரசேகரத்தம்பிரானார் பிரதிமை தாபித்துக் கோயில் எழுப்பினதாகக் கண்டிருக்கிறது. (11) ஆலயத்திற்குள் தண்

ணப்ப தேவருக்குத் தனி ஆலயம் உண்டு. அதில் 8 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகள் கிருஷ்ண தேவன் அச்சுதராயன் இவர்கள் காலத்தியவை. ஆகவே அவ் வாலயம் விஜய நகரத்தார் காலத்தில் தான் எற்பட்டிருக்க வேண்டும். 1449-முதல் 1467 வரை. (12) மேலும் ஆலயத்தில் கண்ணப்பதேவர் வெண்கலப்பிரதிமை ஒன்றும் அவரது சிற்பம் ஒன்றும் இருக்கின்றன.(723-D of 1921, 22 & 726-D of 1921, 22). வெண்கலப் பிரதிமையின் உருவம் சர்க்கார் அறிக்கை 1921-22 பக்கம் 3-ல் காண்க.

## 7. கண்ணப்ப நாயனர்

இவரது பெயர் காணும் கல்வெட்டுக்கள் சிலவே கிடைத்திருக்கின்றன. இரா ஜாதிராஜச் சோழன் 5-ம் ஆண்டில் *திருக்கண்ணப்பதேவர் பெயராலே கழுகுத் தோப்பு ஒன்று வைப்பதற்காகப் பூதானம் செய்யப்பட்டது (125/22) என்று காளத்திக் கல்வெட்டொன்று கூறுகிறது. திருப்பதிக்கடித்த யோகிமல்லாபுரத்தில் உள்ள பரசுராமீசர் ஆலயத்தில் ஒரு கல்வெட்டில் திருக்கண்ணப்ப தேவர் காவணம் என்ற பெயர் குறித்து, அதன் மாகேசுவரர்க்குப் பூதானம் செய்ததும், திருக்கண்ணப்ப தேவர் ஆராதனைக்குப் பூதானம் செய்ததும் கண்டிருக்கிறது (No. 36. திருப்பதி தேவஸ்தானக் கல்வெட்டு-270/04)

"ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு 9-வது தைம் மாசத்து ஜயங்கொண்ட சோழமண்டலத்து பெரும்பாணப்பாடித் திருவேங்கடக் கோட்டத்துத் திருக்குடவூர் நாட்டுப் பிரமதேயம் திருச்சுகனூர் பிப்பிலாதீசுரமுடைய மகா தேவர்க்கு..... .....சாளுக்கி வீரசிங்கதேவரான யாதவராயற்கு திருக்கண்ணப்பதேவர் திருக்காவணத் திலே மெமகேசுவரற்கும் தானத்தாளர்க்கும் திப்பிலாதீசுவரமுடையார் கோயில் தானத்தார் அறி வித்த இடத்து.....சையும் திருச்சுகனூர் சபையாரையும்.....திருக்கண்ணப்ப தேவர் திருக்காவணத்திலே.....கல்வெட்டுப்படி.....திருக்கண்ணப்ப தேவர்க்கு, திப் பிலாதீசுவர்கோயில் மகேசுரரும்.....இப்படிக் கல்வெட்டித் திருவிட்டுக்குடுத்தபடி....."

இக்கல்வெட்டின்படி முந்தி ராஜ ராஜ I.23-ம் ஆண்டில் செய்த உபயத்தை நடத் தாமல் இருந்ததைப்பற்றி, ராஜ ராஜ III 9-வது ஆண்டில் வீர நரசிங்க யாதவராயன் முன்பு வழக்குத்தொடர, அவர் விசாரித்து அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் படி கட்டளையிட்ட விவரம் கண்டிருக்கிறது. தொகை கண்ணப்ப தேவர்க்குக் கொடுக்கப் பட்டது. மேலும் (202/83) காளத்தியில் உள்ள வடமொழிக் கல்வெட்டு ஒன்றில் கண்ணப்பர் சரிதம் விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது.

அவ்வடமொழிச் சுலோகங்களின் சுருக்கம் :

4. "வேடர் தலைவன் குஞ்சியிற் சூடப்பெற்ற மலர்கள் பூதபதியின் மௌலியில் அணியப்பெற்றன. அவ்வேடனுல் உதவப்பட்ட இறைச்சி பூதகணங்களுக்கும் அச்சத்தை விளைவித்தது.

5. அவன் கண்ணைப் பறித்து ஈந்தது - பக்தியில் முதிர்ந்தவர்க்கும் வியப்பைத் தந்தது. அவனது உமிழ்நீர் சம்புவின் சுத்தியின் பொருட்டுச் செய்யப்பட்ட அபிஷேக நீராயிற்று.

6. பிரமனது தலையும், நாகமும், சந்திரனும், வேடர்தலைவன் கால் செருப்பும் காளத்தி நாதனுக்குப் பேரணிகளாயின.

7. அடுத்தடுத்துவரும் அலைகளுடைய கங்காநதியை ஒத்ததும் வாரணத்தால் முகக்கப் பட்டதுமான கனகமுகரி (சுவர்ண முகலி-பொன் முகலி) யின் மூலத்து வடவிருக்ஷமே தன் யம் செய்ததென்னலாம்.

---

*திருக்கண்ணப்பதேவர் என்றபெயரால் இக்காயனர் வழங்கப்பட்டனர் என்பது இவரது சரித்திரங்கூறும் பதினேராந் திருமுறையிலுள்ள திருமறங்களிரண்டும் இப் பெயராலே அமைந்திருப்பதனலும் அறியப்படும்.

8. காளமும் (பாம்பு) அத்தியும் (யானை) ஆற்றும் நித்திய பூசனையில் கனகமுகரியும் அதன் போக்குக்குத் தடையாய் நின்ற சங்கரன் மலையும் அணியும் ஆடையும் ஆயின.

9. ஒரு கண்ணப்பரித்து உதவி மற்றொன்றையும் அதிவேகமாய்த்தோண்ட நினைத்தவில் பெண்ணொரு பாகனது **வலையணிந்த இடக்கை** அதற்குத் தடையாய் நின்றது.

10. எரி முகத்த அம்பு கைநின்று வழுவவும் அக்கைக்குப் புரமெரித்தோனது மேருவைத் தனுவாகக் கொண்டதும் கிரிதசர்க்கும் (தேவர்) காணவொண்ணுதபடி உயர்த்தப்பட்டதுமான கை ஆதரவாயிற்று."

(வடமொழிப் பத்ம புரா - உத். காண் - 144 சருக்கம். (சு. 20 - 98)-ல் கண்ட சரிதம் கண்ணப்ப நாயனார் சரிதம் போன்றுளது.)

மேலும் தஞ்சைசில்லா திருவலஞ்சுழிக் கபர்த்தீசர் ஆலயத்தில் இராஜராஜர் II-12-வது ஆண்டில் (628/02) திருநாவுக்கரசர், திருவாதவூரடிகள், **திருக்கண்ணப்ப தேவர்** பிரதிமைகளுக்குப் பூதானம் செய்ததாகக் கண்டிருக்கிறது (26-3-1158). புதுக்கோட்டைச் சீமை திருவான்குளத்து ஹரதீர்த்தேசுவரர் ஆலயத்தில் (261/1914) கண்ணப்பநாயனார் உருவத்தைச் சகம் 1378 வைகாசி 20-ல் பிரதிட்டை செய்ததாகக் கண்டிருக்கிறது. இன்னமும் இவ்வாறான பிற்காலத்துப் பிரதிட்டைகள் பல இருக்கின்றன.

**கண்ணப்ப தேவரது பழமை :**—கண்ணப்பதேவருடைய அன்பின்பெருமையை மணிவாசகனார், சம்பந்தர் முதலிய சைவப் பெரியார்களும் நக்கீரர் முதலிய சங்கப் புலவர்களும், அருளிச் செய்ததிலிருந்தே அவர்காலம் மிகப் பழமையானதென்று அறியலாம். தமிழ்மொழியே யன்றி வடமொழியிலும் அவரது கீர்த்தி பாராட்டப் பெற்றிருக்கிறது. ஆதிசங்கரர் தம் சிவானந்த லஹரியில்,

> "மார்க்கா வர்த்தித பாதுகா பசுபதே ரங்கஸ்ய கூர்ச்சாயதே
> கண்வேஷாம்பு நிவேஷனம் புரரிபோர் திவ்யாபிவேஷகாயதே
> கிஞ்சித் பட்சித மாம்ஸ சேஷ கபலம் நவ்யோப ஹாராயதே
> பக்திஃ கிம் நகரோதி அஹோ வனசரோ பக்தாவதம்சாயதே !

என்ற சுலோகத்திலும் அவரைப் பாராட்டியிருக்கிறார். இதில் சம்பந்தரது தேவாரக் கருத்தே உள்ளதையும் காணலாம்.

> "வேயனைய தோளுமையொர் பாகமது வாகவிடை யேறிசடைமேல்
> தூயமதி சூடிசுடு காடினட மாடிமலை தன்னை வினவில்
> **வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன்மல ராதநயனம்**
> **காய்கணையி னுலிடந் தீசனடி கூடுகா ளத்திமலையே**"—திருவிராகம் 4.

ஆதிசங்கரர் கி.பி.788-ல் இருந்ததாகச் சிலரும், கி.மு.41-ல் இருந்ததாகப் பலரும் கூறுகின்றனர். கி. மு. 41 ஆக இருந்தால் கண்ணப்பர் அதற்குப் பல்லாண்டுகளுக்கு முற்றியிருத்தல் வேண்டும்.* மேலும் †பெருந்தலையூர் - முதலான பல பண்டைய ஆலயங்களில் கண்ணப்பருடைய சரித உருவங்களைக் காண்கிறோம். அவைகளும் அவருடைய பழமையை எடுத்தாளுகின்றன.

---

*பஞ்ச பாண்டவர்களில் ஒருவராகிய அருச்சுனர் கண்ணப்பராக அவதரித்து முத்தியடைந்தனர் என்று புராணங்களால் அறியப்படுதலாற் கண்ணப்பர் காலம் கலியுகத்தின் தொடக்கமாம் என்பர்.

† பெருந்தலையூர் - இத்தலம் கோயமுத்தூர்ச் சில்லாவில் பவானிதாலுகாவில் நீக்கு அருகில் உள்ளது. அங்குப் பழய சிவாலயமுண்டு. அதில் கண்ணப்ப நாயனார் உருவமும், அர்ச்சுனருடைய திருவுருவமும் பழங்கால முதல் ஒருத் தாபித்துப் பூசிக்கப்பட்டு வருகின்றன. அந்நாட்டுப் பக்கம் கண்ணப்பராகக் கொண்டு போற்றும் வேட்டுவர் என்ற சாதியார் மிகவுள்ளார்கள்.

# பெயர் விளக்கம்

(எண்கள் பாட்டுவரிசை எண்களைக் குறிக்கும்)

**ஆகமம்** - 784, 804. *ஆகமவிதி* 801. *சிவபெருமானுல் ஈசான முதலிய ஐந்து திருமுகங்களினின்றும் அருளப் பெற்றவை. மூவகைப் பந்தமுடைய எல்லாவுயிர்களும் பாசநீங்கிச் சிவனையடையும் சரியையாதி நால்வகை நெறிகளையும் வகுத்துக் கூறுவன. சிவாலய அமைப்பும் பிரதிட்டையும், ஆன்மார்த்த - பாரார்த்த, நித்திய - நைமித்திய பூசையியலும் ; பவித்திர விதிகளும் என்ற மூன்று பிரிவுடையன. சிவாலய பூசைக்கெல்லாம் இவையே பிரமாணம். காமிக முதல் வாதுளமீறாக இவை இருபத்தெட்டென்பர். இவற்றின் வழிவந்த 207 உபாகமங்களும் உண்டு. இவை பதி - பசு - பாச மென்ற மூன்று பொருள்களையும் காட்டி ஞானத்தை விளக்குவனவாம். வேதம் பொது என்றும், இவை சிறப்பாகிய முடிந்த முடிபென்றுங் கூறுப. வேதம் உலகர்க்கென்றும், சிவாகமம் சத்திநிபாதர்க்கு என்றும் அறியப்படும். 784 உரை காண்க.*

**ஆசிரியன்** - 686. *விஞ்சைத்தனுத் தொழில் வலவர்* 689. *வில்வித்தை முதலியன பயிற்றும் உபாத்தியாயன்.*

**இருசுடர்** - 672. *சூரியனும் சந்திரனும். இவர்கள் சிவபெருமானுக்கு முறையே வலது கண்ணும் இடது கண்ணுமாவர். இவர்கள் தலையுவா நாட்களிற் கூடுவர் என்ப.*

**இறவுளர்** - 665. *வேடர்கள் - மலைவாணர். இப்பெயர் கோயமுத்தூர் சில்லாவிலும் வேறு சில இடங்களிலும் இப்பொழுதும் வழங்கப்படுகிறது.*

**உடுப்பூர்** - 651. *கண்ணப்ப நாயனூர் அவதரித்த ஊர். சரிதக் குறிப்புக்காண்க.*

**எண்ணிறத்த கடவுளர்** - 796. *சிவபெருமானல்லாத ஏனை விட்டுணு பிரமன் இந்திரன் வருணன் இயமன் முதலிய தேவர்கள்.* (796 உரை பார்க்க)

**ஒற்றர்** - 733. *காடாய்பவர். போரில் பகைவரது உளவறிந்து சொல்லும் தூதர் போல் வேட்டைக் காட்டில் மிருகங்கள் தங்கும் நிலையினை முன்சென்று அறிவர்.*

**ஒசை ஐந்து** - 750. *ஐந்து வகையான தேவவாத்தியங்களின் முழக்கு.*

**கங்கை** - 671, 830. *கயிலையில் உள்ள ஏழு புண்ணிய தீர்த்தங்களுள் ஒன்று. பெருநதிகளுள் ஒன்று. மிகப்புனித முடையது. தன்னுட் படிந்தாரைப் புனிதமாக்குவது. வான நதியாதலின் இது ஆகாய கங்கை எனப்படும். பகீரதன் வேண்டச் சிவபெருமான் இதனை ஒரு சடையிற்றாங்கிச் சிறிதளவாகப் பூமியில் விட்டருளினர்.*

**கடவூர்** - 830. *தல விசேடம் பார்க்க.*

**கண்ணப்பர்** - 650. *கண்படாவில்லியார்* 810, *வண்ணவெஞ்சிலையார்* 813, *பைந்தழை யலங்கல்மார்பர்* 814, *வள்ளலார்* 824, *கொள்கையி னும்பர் மேலார்* 824, *அன்பர்* 827, *கண்ணப்ப !* 827, *கானவர் பெருமானூர்* 828, *தலைவர்* 830, *கருங்கதிர் விரிக்கு மேனிக் காமரு குழவி* 665, *அண்ணல்* 666, *புண்ணியப் பொருளா யுள்ள பொருவில்சீ ருருவினன்* 666, *மைந்தனூர்* 677, *காகனூர் பயந்த நாகர்குலம்விளங் கரியகுன்றின் கோலமுன் கை* 682, *பொங்கொளிக் கரும்போ ரேறு* 689, *கானவர்க் கரிய சிங்கம்* 690, *எல்லையில்லாப் புண்ணியந் தோன்றி மேன்மேல் வளர்வதன் பொலிவு போல்வார்* 691, *பானற்குல மலரிற் படர் சோதியார்* 714, *அல்லேறு போல்வார்* 713, *வள்ளல்* 715, *அண்ணலார்* 717, *சார்வலைத் தொடக்கறுக்க வெகும் ஐயர்* 719, *வேணியார் தமைக் கண்ணினீடு பார்வையொன்று கொண்டு காணுமன்பர்* 700, *குரிசில்* 731, *மறவர்களரியேறுமவர்* 737, *மலை காவலர்* 738, *குலமறவர்கள் தலைவர்* 740, *வேடரர்தங் கரிய செங்கண் வில்லியார்* 741, *ஆடவன்* 741, *காளையார்* 757, *கருங்கடலென்ன நின்று கண்துயிலாத வீரர்* 789, *வேடர் மன்னனூர்* 775,

மெய்காட்டி மன்புடைய வில்லியார் 783, மைவண்ணக் கருங்குஞ்சி வனவேடர் பெரு மானுர் 790, வனசரர்கள் தந்தலைவனுர் 791, வனவேந்தர் 801. சிவபெருமானது கண் ணில் குருதி நிற்குமாறு தம் கண்ணைத் தோண்டி இறைவரது கண்ணில் அப்பிய கார ணத்தால் **கண்ணப்பர்** என்று பெயர் பெற்றனர். இது இவருக்கு இறைவரால் தரப்பட்டது 827. **திண்ணன்** பார்க்க.

**கதிருச்சி** - 750 792. வானமுகட்டின் தலையில் சூரியன் காணப்படும் நடுப்பகல் வேளை. இது ஒரு கல்வேளையாக வேடர் கருதி ஒழுகினர். தமிழரது நாட்கணக்குத் தொடக்கம் கதிருச்சி வேளை என்பர் ஆராய்ச்சியாளர் திரு. S. S. பாரதியார். நண்பகல்-கள்ளிரவு - பாலுட்கங்குல் - அரைநாட் கங்குல் - ஆரிருள் நடுநாள் - அரை நாள் யாமம் - அரையிருள் இரவு - (அரையிருள் யாமம்) முதலிய வழக்குகள் காட்டுவர்.

**கல்யனுர்** 830. குங்குலியக்கலய நாயனுர். அவர் புராணம் காண்க.

**கலிவளர் திங்கள்** 691. முழுமதி.

**களிந்தி கன்னி** 722. காளிந்தியென்னும் யமுனை நதி. இதன்நீர் கருநிறங் காட்டுமென்பர்.

**கன்னிவேட்டை** - 696. வேடர் (தலைவன்) சிலபயின்ற பின் முதன்முறை காட்டுக்குப்போய்ச் செய்யும் வேட்டை.

**காடன்** 738-741-748-764-802. திண்ணனுருடன் வேட்டைக்குச் சென்று கூடவே நின்று அவரடி பிரியா விடலைகளாயின மெய்காவலாளர் இருவரில் இளைய வன். நாகனும் திண்ணனும் காளத்தி காணச் சென்றபோது இவன் முகலியின் மேல்கரைச் சோலையில் தீக்கடைந்து வைத்தும், பன்றியினைக் காத்தும் நின்றவன். வேட்டைக் காட்டினின்றும் பன்றியைத் தொடர்ந்து பல காதங்கள் ஓடிய திண்ண னுரைத் தொடர்ந்து கூடவே ஓடிவந்த இருவரிலொருவன்.

**காடுகாவல் செய்தல்** 724. (சூழல் செய்தகான்) காட்டின் பரப்பு முழுதும் ஓடி யெறிந்தும் வார்போக்கியும் வலைதொடக்கியும் உள்ளிருந்த மிருகங்கள் தப்பி ஓடிவிடா மல் காட்டைச் சுற்றிலும் காவல் அமைத்தல்.

**காப்பு** 667 - 682. குழவிகளைப் பிணி - தெய்வக்கோள் முதலியன தாக்காது காப்பதாய்க் கையினும் - காலினும் - மார்பினும் அணியும் கயிறு, புலி நரம்பு முதலிய வற்றுளியன்ற அணிவகை. இது படைக்கல முதலிய கருவிகளுக்கும் அவற்றைப் பாது காக்க அணிவதுண்டு. ஆலயம் மனை முதலியவற்றிற்குக் காப்புக் கட்டுவதும் வழக்கம்.

**காளமேகம்** 664. கார்மழை மேகம் 716. நீர் சுமந்த கருமேகம்.

**குமிழித்தேவர்** 745. காளத்தி நாதர்க்கு வேடர் வழங்கும் பெயர். மலையின் உச்சி யில் உள்ளதனுல் இப்பெயரிட்டனர் போலும். தேவர் 746 - 765.

**குரவை** 660. குறிஞ்சி அல்லது முல்லைநில மகளிர் கைகோத்தாடும் ஒருவகைக் கூத்து.

**குலமது குறத்தி** 676. குறவர் குலத்தில் குழவிகளை வளர்த்தற்கு நியமிக்கப்பட்ட மிகமூப்பும் அனுபவமுமுடைய குறத்தி. " ஈன்ற குறமகளிர்க் கேழை முதுகுறத்தி " என்ற ஈங்கோய்மலை எழுபது பார்க்க.

**குறிச்சி** 657 - 674 - 687. குறிஞ்சி நிலத்து ஊர்ப்பெயர்.

**கோற்றேன்** 793 - 799. புதர்களிலும், சிறு செடி - மரக் கிளை இவற்றிலும் ஈட் டப்பெற்றுள்ள சிறு தேன்கூடுகள்.

**சந்திரன்** 778. மதி 732. **இருசுடர்** என்றதன்கீழ்ப் பார்க்க.

**சிலைபயில் பருவம்** 676, அரசர்-வேடர் முதலியோர் விற்கல்வி பயிலும் பருவம். இது 12 ஆண்டு முதல் தொடங்கு மென்ப.

**சிவகோசரி முனிவர்** 784. பெருமுனிவர் 790. தணிந்தமனத் திருமுனிவர் 789. அந்தணனுர் 798. அருமறை முனிவனுர் 810. மாமுனிவர் 801, 804, 808. அருமுனி

வர் 805. மறைமுனிவர் [807. திண்ணனூர் காளத்தியப்பரைக் காண்பதற்கு முன் சிவாகமங்களில் விதித்த பூசை முறைப்படி காணலும் அதிகாலையிற் பொன்முகலியிற் படிந்து புனிதமாய்க் காளத்தியப்பரை மலர் புனல் முதலியவை கொண்டு சிந்தை நிய மத்துடன் திருமஞ்சனமாட்டியும், பூச்சூட்டியும், திருவமுதூட்டியும் அருச்சித்துவந்த முனிவர். தினமும் அவ்வாறு பூசித்த பின்னர்த் தபோவனத்திற் றவஞ் செய்யும் மறை முனிவர். திண்ணனூர் பூசித்த பிற்றைநாள் இறைவரது திருமுன்பு இறைச்சியும், எலும் பும், காயடியும் கண்டு பதைபதைத்து அவற்றை மாற்றிப் பலித்திரஞ் செய்து பூசித்த னர். இவ்வாறு தினமும் சான்று நாட்கள் கண்டு, இதனை மாற்றியருளுமாறு இறைவனை வேண்டினர். "நாளை அவனது அன்பை வடிவாம் தன்மை காட்டுவேன்" என்று கனவில் இவருக்கு இறைவன் அறிவித்து அதற்காக மறுநாள் (ஆறாவது நாள்) தமது வலக்கண்ணில் உதிரம் பாய இருந்தனர். அதுகண்டு திண்ணனூர் தமது வலதுகண் ணைத்தோண்டி அப்பிக் குருதிநிற்கக் கண்டனர்; பின் இடது கண்ணிற் குருதிபாயத் தமது இடது - கண்ணையும் தோண்ட ஒருப்பட்டு அம்பினை ஊன்றியபோது தன் திருக்கையாற் பிடித்தும் திருவாயாற் கூறியும் தடுத்து "என் வலத்தில் நிற்க" என்றருளினர். இவையாவும் இம்முனிவர்க்குக் காட்டுதற்கே இறைவன் செய்தருளி னர். இச்சரித நிகழ்ச்சிக்கும், அதனால், மேம்பட்டதான அன்பின்றிறம் உலகில் விளங்கி உலகமுய்தற்கும் காரணராயிருந்த புண்ணியமுனிவர். இவர் செய்தது ஆகம விதிப்படி உள்ள பூசையாதலின் திண்ணனூர் பூசையினை விதிக்கு மாறுகக்கண்டு அஞ் சினர். ஆயினும், அது, இவர்பூசைமுறையினையே பின்பற்றித் தம்மைமறந்து அன்பே யுருவமாகச் செய்யப்பட்டமையின் இறைவனுக்கு உகந்ததாயிற்றென்று கண்டனர்.

**சிவபெருமான்** - பிஞ்ஞகன் 809. தேறுவார்க் கமுதமான செல்வனூர் 816, ஆறுசேர் சடையார் 816, அத்தன் 817, அண்ணலார் 817, பரமனூர் 818, அத்தனூர் 818, விமலனூர் 772, 818, எம்பிரான் 819, பூதநாயகன் - 820, எந்தையார் 788, 822, முதல்வர் 822, முதல்வனூர் 788, கண்ணுதல் 826, தம்பிரான் 826, தேவதேவர் 826, விடையின் பாகர் 827, அங்கணர் 753, 827, நாகநங்கணர் 828, ஊனமு துவந்த ஐயர் 828, பிரான் 829, ஏறுயர்த்தவர் 829, புரங்கள் செற்ற விடையவர் 650, வேதவாய் மைக் காவலர் 650, புரங்கள் செற்ற எந்தையார் 661, தேனலர் கொன்றையார் 681, தண்ணிலா வடம்பு கொன்றைதங்கு வேணியார் 700, செங்கணேறுடையார் 744, வள்ளலார் 751, திங்கள் சேர்சடையார் 753, ஏகநாயர் 754, இனிய எம்பிரானூர் 771, ஐயர் (சிவபெருமான்) 776, முனிவரு மமரர் தாமுங் காணுதற் கரியார் 777, சூழையணிகாதர் 778, வள்ளல் 783, அரும்பெறற் றம்பிரானூர் 789, மைதழையுங் கண்டத்து மூலமருந்து 784, வானவர் நாயகர் 785, தேவதேவேசன் 786, பொருப்பி லெழுஞ் சுடர்க்கொழுந்து 787, தனிமுதலாம்பரன் 789, சுடர்த்திங்க ளணிந்தசடை முடிக்கற்றை அங்கணர் 789, இமையோர் தலைவனூர் 791, புனற்சடிலத்திருமுடியார் 807.

**சீறூர்** 664 - 680. குறிஞ்சி நிலத்து ஊர். சிறுகுடி · குறிச்சி எனவும்படும்.

**சேடை** 697 - 715. தெய்வ வாழ்த்துக்குரிய அட்சதை. வேடர் இதனை மலை நெல் எரிசியால் ஆக்கிக்கொள்வர்.

**தந்தை** 658 - 662. கண்ணப்ப நாயனாது தாயார். நாகனது மனைவி. மறவர் தாயத்து ஆன்ற தொல்குடியில் வந்தவள். பெண் சிங்கம் போல்வாள்.

**தலை உவா** 778. அமாவாசியை. மறைமதி என்பர்.

**தனிமுதலாம் பரன்** 789. சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று பன் முறையும் துணிந்த மறைமொழி. 789 உரை பார்க்க.

**திங்கள்முறை வேட்டை** 693. மிருகங்கள் ஊர்க்குள் மேலடர்ந்து வராதபடி செய்ய மாதந்தோறும், அல்லது குறித்த சில மாதங்களுக் கொருமுறை, ஊர்வேடர் தமது தலைவருடன் திரண்டு சென்று வேட்டையாடுதல்.

**திண்ணன்** 666, 678, 695, 696, 700, 711, 769. *கண்ணப்ப நாயனாருக்குத் தந்தையால் இடப்பெற்ற பிள்ளைப்பெயர். குழந்தைப் பருவத்தில் தந்தை இவரைக் கையிலேந்தியபோது திண்ணென்றிருந்த படியால் இப்பெயரிட்டான். திண்ணனார்* 642 - 701 - 703 - 705 - 724 - 742 - 743 - 746 - 749 - 759 - 771 - 773 - 813 - 826 - 827. *திண்ணா!* 766.

**திருக்காளத்தி** 650 - 754 - 759. *இது தென்கயிலை எனப்படும். கண்ணப்பர்க்குச் சிவபெருமான் அருள்செய்த மலை. சீகாளத்தி எனப்படும். சீ - சிலந்தி, காளம் - பாம்பு, அத்தி - யானை இவைகள் பூசித்தமையால் இப்பெயரெய்தியது. தலவிசேடம் பார்க்க. திருமலை* 744, 785, 791. *திருக்காளத்திமலை* 745-754-788-798 - 809. *காளத்தி* 749, *காளத்திமலை* 773, *திருக்காளத்தி* 816.

**திருக்காளத்தியப்பர்** - *திருக்காளத்தி மன்னனார்* 830, *திருக்காளத்தி மலையினார்* 775 - 788 - 798 - 809, *திருக்காளத்தி முதல்வனார்* 803, *திருக்காளத்தி அடிகளார்* 817, *திருக்காளத்திக் கொற்றவர்* 821, *திருக்காளத்தி யற்புதர்* 827, *கடவுள் மால்வரை* 750, *வள்ளலார்மலை* 751, *களிர்வரை* 752, *திருக்காளத்தி மலை எழு கொழுந்து* 754, *திருக்காளத்தி நாயனார்* 759, *இறைவர் வெற்பு* 771, *வெற்பின் மூளத்தெழு முதல்* 772, *தடங்காளத்தி மலைமிசைத் தம்பிரானார்* 773, *குழையணி காதர் (வெற்பு)* 778, *திருக்காளத்தியண்ணலார்* 796, *காளத்தியப்பர்* 800.

**தீபமா மரங்கள்** 788. *சோதி மரம் என்பர். இரவில் நெடுந் தூரத்தில் தெரியக் கூடியதாக ஒளி வீசும் ஒருவகை மரம். பகலில் ஒளிதராது. யோகம் - மருத்துவம் முதலிய கலைகளின் வழக்குக்கும் பெரிதும் பயன்படுவது.*

**துணங்கை** 688. *எழுவர் மகளிர் கைகோத்தாடும் ஒருவகைக் கூத்து.*

**தெய்வப் பெருமடை** - 668. *தெய்வங்களுக்குப் படைக்கும் பெருஞ்சோறு முதலியவை.*

**தேவராட்டி** - 696, 769. *வேடர் தலைவர் மரபில் அவர்களது குடும்ப நன்மையின் பொருட்டுத் தெய்வங்கட்குப் பலியிட்டும் - தொழுதும், பரவும் தொழிலில் வழிவழி நியமிக்கப்பட்ட குறமுது மகள். தேவராட்டி என்பது தெய்வத்தால் ஆளப்பெற்றவள். தெய்வமேறப் பெற்றவள் - என்ற பொருளில் வந்த பெயர். அணங்குடையாட்டி* 716, *அணங்கு சார்ந்தாள்* 698, *கடவுட் பொறையாட்டி* 714, *படிமத்தாள்* 698, *தெய்வநிகழ் குறமுதியாள்* 700, *வரைச்சூராட்டி* 700, *அணங்குறைவாள்* 802, *என்று பலவாறும் சொல்லப்படுபவள். இவள்மேல் தெய்வம் ஆவேசித்துள்ளது என்பது வேடரது நம்பிக்கை. பூசைக்காக அரசனால் இறைச்சி - தேன் - ஈயல் முதலிய படிமுறை பெற்று வாழ்பவள்.*

**தேவுமால்** 769. *தேவரிடத்து மிக்க பற்றினால் மயக்கங்கொண்டு உலகை மறத்தல்.*

**நாகன்** 656, 661, 678, 692, 694, 769, 802. *கண்ணப்பநாயனாரின் தந்தை; பொத்தப்பி நாட்டு மலைவேடர்க்கரசன்; உடுப்பூரில் இருந்து அரசுசெய்த தலைவன்; வெஞ்சின மடங்கல் போல்வான்; வெகுகாலம் பிள்ளைப்பேறின்றி வருந்தி முருகப் பெருமானை வழிபட்டுக் கண்ணப்ப நாயனாரை மகனாகப் பெற்ற முன்னைத் தவமுடையான்; அவருக்குத் திண்ணனெனப் பிள்ளைப் பெயரிட்டு வளர்த்து, உரியபடி வில் வித்தை பயிற்றி, அரசுரிமை சூட்டிக், கன்னிவேட்டைக் கனுப்பினான்; அவர் அன்றைக்கே காளத்தியிற் குடுமித்தேவரைக் கண்டு பற்றிக்கொண்டு தேவுமால் கொண்டு விட்டார் என்று நாணன் காடன் இவர்களாற் கேட்டுத் தேவராட்டியுடன் போய்த் தானறிந்தவா றெல்லாம் பேதிப்பவும் அவர் தங்கள் குறிவராமையிற் கைவிட்டு வந்தவன்.* 696, 698, 702.

**நாணன்** 738, 741, 745, 748, 750, 757, 764, 802. திண்ணனூருடன் கன்னி வேட்டைக்குச் சென்று அவரடிபிரியா விடலைகளாகி மெய்காவலாளரா யிருந்த இரு வரிலொருவன். நாகனுக்கும் மெய்காவலாளனுயிருந்து முதிர்ந்த அனுபவமும் அறிவு மூடையவன்; திண்ணனூருடன் பன்றியைத் தொடர்ந்தோடியவன்; இவனே திண்ண னூரைக் காளத்தி மலைக்கு முன்சென்று வழிகாட்டி அழைத்துப்போய் அம்மலையின் காட்சி-ஐந்தோசை - குடுமித்தேவர்-அவரை வழிபடுமுறை முதலியவற்றை அறிவித்து வழிப்படுத்தி விட்டவன். மலைமேல் அவர் குடுமித்தேவரைப் பற்றிக்கொண்ட தன்மையை உடனிருந்து அறிந்து "வங்கினைப்பற்றிப் போகா வல்லுடும் பென்ன"த் "தேவுமால் கொண்டான்" என்று அதனைக்காடனுக்கு அறிவுறுத்தியவன். பின்னர் நாகனையும் தேவராட்டியையும் அழைத்து வந்து அறிந்தவகை யெல்லாம் பேதித்தும் தம்குறி வாராமையிற் கைவிட்டுப் போயினவன். நாண ! 750.

**நாயனூர்** - 759. 722 - 817 - 824. தலைவர். யாவர்க்கும் தலைவராகிய சிவபெரு மானைக் குறிக்கும் இச்சொல் அவனடியார்களாய் உலகுக்குத் தலைவராய் உலகை ஆளுதற்குரிய பெரியோர்களைக் குறிக்க வழங்குவது சைவமரபு. நாயனீரே ! 774.

**நான்முகன்** - 828. இவர் ஐந்துமுகத்துடனிருந்தவர். அகந்தை கொண்ட போது பைரவமூர்த்தி ஒருமுகத்தைக் கிள்ளி விட்டதனால் நான்முகனுயினர். இறை வன் செய்த தண்டனையாதலாற் கிள்ளப்பட்ட தலையினைப் படைத்துக் கொள்ள வலியில ராயினர். தன்னால் படைக்கப்பட்ட திலோத்தமையின் அழகைக்காணும் பொருட்டு நான்குதிக்கிலும் நான்கு முகங்கள் கொண்டனர் என்ப. "அயனே அனங்னே அந்தகனைச் சந்திரனே, வயனங்கண் மாயா வடிச்செய்தான் காணடீ, நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தாற், சயமன்றே வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ ?" என்றது திருவாசகம்.

**பாய்க்கடன்** - 659 - 680. தெய்வம் பரவிச் சடங்குடன் செய்யும் நேர்ச்சிக் கடன்முறை.

**பரிதி** - 778. சூரியன். நவக்கோள்களுள் ஒன்று இராசக்கிரகம் என்பர். "இருசுடர்" என்றவிடத்து துரைத்தன பார்க்க. பகலவன் மலையிற்றுழ்ந்தான் 775. தேரிரவி எழும்போது 783. தினபுரவித் தனித்தேர்மேற் றோன்றுவான் 808.

**பவித்திரமாஞ்சேயல்** - 788. திருக்கோயிலில் அனுதிதம் நிகழ்ந்தால் அதனை மாற்றச் சிவாகமப்படி புனிதம் செய்யும் சடங்கு - மந்திரம் - பாவனைமுதலியவிதிகள்.

**புரங்கள்** - 650. திரிபுரம் எனப்படும். பொன் - வெள்ளி - செம்பு இவற்றா லாகிய மதில்களையுடைய பறக்குமியல்புள்ள மூன்று நகரங்கள். இவற்றில் அசுரர்கள் வாழ்ந்து உலகை அலைத்தனர். இவற்றைச் சிவபெருமான் தமது புன்சிரிப்பினால் எரித்தனர். ஆனால் இவற்றுள் வாழ்ந்த சிவனடியார்களாகிய மூவர் (தாரகாட்சன் - கமலாட்சன் - வித்யுன்மாலி என்றவர்கள்) மட்டும் காப்பாற்றப்பட்டனர். அவர்களிரு வரே இறைவன் கோயில்வாயிற் காவலராவர். மற்றவர் திருக்கூத்திற்குக் குடமுழா முழக்குபவர். "மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரிலிருவர் நின்றிருக் கோயிலின் வாய்தல், காவ லாளரென் றேவிய பின்னை யொருவ னீகரி காடரங் காக, மாவை நோக்கியோர் மாடை மகிழ மணிமுழா முழக்கவ்வருள் செய்த, தேவ தேவ" என்பது கம்பிகளது (திருப்புன்கூர் (8) தக்கேசி) தேவாரம்.

**போத்தப்பி** - நாயனூர் அவதரித்த திருநாடு. சரித்திரக் குறிப்புப் பார்க்க.

**பொன் முகலி** - 743. காளத்தி மலையின் அடிவாரஞ்சேர வடக்கு நோக்கி ஓடும் ஆறு. தன்னுட் படிந்தார்க்கு உடற்றூய்மையும் உயிர்த் தூய்மையும் தந்து ஈடேற்றும் புண்ணிய நதி; திருமுறைகளிற் போற்றப்பெற்றது. சரித ஆராய்ச்சிக் குறிப்புப் பார்க்க. திருமுகலி - 747, 787, 809. திருமுகலியாறு 763.

**மாக்கடை தீக்கோல்** 748 - 793. *காய்ந்த மரக்கட்டையை மற்றோர் காய்ந்த மரத்தினுடன் விசையிற் கடைதலால் தீயினை உண்டாக்கும்படி முன்னுளில் வேடர் களுள் வழங்கியதொரு வழக்கு. தீக்கடையும் கோல். எரிகடையுமரணி* 794.

**மலமூன்று** 803. *ஆணவம் - மாயை - கன்மமெனப்படும் பாசங்கள். ஆணவம். சகசமலம் - மூலமலம் எனப்படும். இது செம்பிற்களிம்புபோல அநாதியே உயிர்களின் அறிவு தொழில்களை மறைப்பது. கன்மம் - மூலகன்மம். முதலுற்பவத்தில் சூக்கும தேகம் பெறுதற் கேதுவாகியது. அகிலாண்டேசுவரி பதிகம் பார்க்க.*

**மாயை** *இருவினைப் பயனனுபவித்தற் பொருட்டுவரும் தநு கரண முதலியவற் றுக்கு முதற் காரணமாயிருப்பது.* (803) *உரைப்பகுதி பார்க்க.*

**முருகவேள்** 659. *குமார தெய்வம். குறிஞ்சிக் கடவுள். உடுப்பூரில் இவரது திரு முன்றலில் சேவலு மயிலும் விட்டும், தோரண மணிகள் தூக்கியும், மாலைகள் தொங்க வைத்தும், குரவைக் கூத்தொடு அணங்காடல்செய்தும்,பெருவிழா எடுத்ததன் பயனுக நாகன் திண்ணனுரை மகனுகப் பெற்றான். இவர் முப்புரஞ்செற்ற சிவபெருமான் திருமைந்தர். மயில் ஊர்தியுடையவர். கிரவுஞ்சமலையைப் பிளந்த வெற்றியுடைய வேலேந்திய பெருமையுடையவர். சரிதமும் பிற சிறப்பும் கந்தபுராணத்துக் காண்க. இவரையே போற்றும் அருணகிரியார் திருப்புகழையும் ஓதியுய்க. போரணி நெடு வேலோன்* 660. *எக்கையார் மைந்தர்* 661. *வரையுரங் கிழித்தகிண்மை அயிலுடைத் தடக்கை வென்றி யண்ணலார்* 661.*மயிலுடைக் கொற்றவூர்தி* 661.*வென்றிவேல்*678.

**மா எழுப்புதல்** 726. *காடு சுற்றிலும் காவல் செய்தமைத்த பின் புதர் முதலிய மறைவிடங்களில் ஒளித்திருக்கும் விலங்குகளைப் பம்பை முதலிய இயங்கள் முழக்கியும், கை தட்டியும், வாயாற் கூவியும், மற்றும் பலவகை ஓசைசெய்தும், நாய்களை ஏவியும் அச்சுறுத்தி அவ்விடங்களிலிருந்து வெளிவரச் செய்தல்.*

**முன்பு செய்தவம்** 751. *முன்பிறப்பிற் செய்த தவம். இப்பிறப்பின் வரும் மேன் மைக்கு முன்பிறப்பின் றவம் காரணம் என்பர்.* 751 *உரை பார்க்க. திண்ணனுரது தந்தை நாகனும் அவரை மகனுகப்பெற முன்னைத்தவஞ் செய்தான். தவமுன் செய் தான்* 657.

**மேரு** 681. *மகாமேருமலை. பொன்மலை என்ப. இதனை நடுவைத்துச் சூரியன் முதலிய அண்டங்கள் சுற்றி வருவன என்பது மரபு. இதனைத் திரிபுர சங்கார காலத் தில் சிவபெருமான் வில்லாக வளைத்துக் கையிலேந்தினர் என்பன மாபுராணங்கள்.*

**யாக்கைதன் பரிசு**-803. *மாயேயங்களாகிய தநுவும் கரணங்களும். உரை பார்க்க.*

**வரை ஆட்சி** 695. *மலைவேடர்களின் தலைவனுக அவர்களை ஆளும் அரசுரிமை. பொருப்புரிமை* 699 *சிலைமலையர் குலக்காவல்* 702.*மரபுரிமை* 702. *குலத்தலைமை* 703.

**வனதெய்வங்கள்** - 700. *காடுகளில் வாழும் சிறு தெய்வங்கள். இவை பலிகள் பெருமடை முதலியவற்றால் தம்மை வழிபட்டோரைக் காத்துச் சிறு நன்மைகள் செய்வன என்றும், வழிபடாவிடில் தீங்கு செய்வன என்றும் வேடர் நம்புவர். இவை மகிழப் பலியிடுவதனைக் "காடுபலி யூட்டுதல்" என்பர். காட்டிலுறை தெய்வங்கள்* 697.

**வாளிதொரிதல்** 713. *அம்புகள் வேட்டைக்குத் தகுதியாயுள்ள தன்மையைச் சோதித்தல்.*

**வில் விழா** 680. *விற்பயிற்சி தொடங்குதற்குச் செய்யும் விழா. சில விழா* 685.

**விற் பிடித்தல்** 678. *வில்விழாக் கொண்டாடி நல்லாசிரியன்பால் நல்வேளையில் வில்லைப்பிடித்துக் கலை பயிலத் தொடங்குதல். வித்தியாரம்பம் என்ப.*

**வினையிரண்டு** 803. *புனருற்பவத்துக் கேதுவாக உயிரான் ஈட்டப்பட்ட அறமும் பாவமும். உரை பார்க்க.*

**வெறியாட்டு** 662. *முருகப் பெருமானைக் குறித்து ஆடும் ஆட்டல் வகையுள் ஒன்று.*

திருக்கடவூர் - மேலைக் கோபுரம் (நேர் திருமுன்)

—பாட்டு - 831 - பக்கம் - 603.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# 11. குங்குலியக்கலய நாயனார் புராணம்

தோகை

"கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்"—திருத்தொண்டத்தொகை.

வகை

"ஏய்ந்த கயிறுதன் கண்டத்திற் பூட்டி யெழிற்பனந்தாட்
காய்ந்த சிவனிலைத் தானென்பர் காதலி தாலிகொடுத்
தாய்ந்தநற் குங்குலி யங்கொண் டனற்புகை காலினமுன்
காய்ந்த வரற்கிட்ட தென்கட வூரிற் கலயனையே."

—திருத்தொண்டர் திருவந்தாதி

விரி

831. வாய்ந்தநீர் வளத்தா லோங்கி மன்னிய பொன்னி நாட்டில்
ஏய்ந்தசீர் மறையோர் வாழு மெயிற்பதி யெறிநீர்க் கங்கை
தோய்ந்தநீள் சடையார் பண்டு தொண்டர்மேல் வந்த கூற்றைக்
காய்ந்தசே வடியார் நீடி யிருப்பது கடவூ ராகும். க

புராணம் :—இறைவனுக்குக் குங்குலியத் தூபமிட்டுத் திருப்பணிசெய்த கலயர் என்னும் பெயரினையுடைய நாயனாரது சரிதவரலாறும் பண்புங் கூறும் பகுதி. நிறுத்த முறையானே இலைமலிந்த சருக்கத்து நான்காவது கலய நாயனார் புராணங்கூறத் தொடங்குகின்றார்.

தோகை :—திருக்கடவூரில் அவதரித்த கலயனாரது அடியவர்களுக்கு நான் அடிமையாவேன். இந்நாயனாரது ஊரும் பேரும் பேசிற்று.

வகை :—காதலியின் தாலியைக் கொடுத்துக் குங்குலியங் கொண்டு, காலினைக் காய்ந்த அரனுக்கு அனற்புகையிட்ட தென்கடவூரிற் கலயனாரைக், கயிற்றினைத் தன் கண்டத்திற்பூட்டிப் பனந்தாட் சிவனே நிலைப்பித்தவர் என்பர் எனக் கூட்டி உரைத்துக் கொள்க. காதலி - தம்மாற் காதலிக்கப்பட்டவர். தாலிகொடுத்து 842 - பார்க்க; ஆய்ந்தநற் குங்குலியம் - ஒப்பில் குங்குலியம் - (840); அங்கணர் பூசைக்கான நாறுங் குலியம் ஈதேல் (841); என விரித்தவைகாண்க. நற்குங்குலியம் - சிவபூசைக்காயினமையும் நறுமணமுடைமையும் குறிக்க நல் என்றார். கொடுத்து - கொண்டு - விலையாகத் தாலியைக் கொடுத்து வாங்கிக்கொண்டு. அனற்புகை - அனலால் விடும்புகை. முன்-முன்னர்; பண்டு-(831); அந்தணரைக் கொண்டுபோவதற்கு முன் என்றலுமாம். காய்ந்த - சினந்த - உதைத்தருட்டிய. கூற்றைக் காய்ந்த (831); தேன் - தென்றிசையில்உள்ள, கடவூர் - கடக்கும் ஊர். கடப்பிக்கும் ஊர் என்றலுமாம். வடகாட்டில் உள்ள காசியும் காலனை உதைத்த ஊர் எனப்படுதலால் அதனின்றும் வேறுணர்த் தென் என்றுரைத்தலுமாம். கலயர் - நாயனாரது பேர். 835 பார்க்க. ஏய்ந்தகயிறு. திருமேனிப் பூங்கச் சேய்ந்த மான வன் கயிறு-(857). ஏய்ந்த-பொருந்திய. சிவலிங்கத்

திருமேனியிற் பூங்கச்சிற் பூண்ட. **சாய்ந்த** - முன் சாய்ந்திருந்த. 852-ல் உரைத்தவையும் தலவிசேடமும் பார்க்க. **சிவன்** - சிவபெருமானது இலிங்கத்திருமேனி. ஆகுபெயர். இரண்டனுருபு தொக்கது. **நிலைத்தான்** - நிலைப்பித்தான். பிறவினைப் பொருள் கொள்க. **நிலைப்பித்தல்** - நேர்நிற்கச்செய்தல்.

இதனால் நாயனாரது ஊரும் பேரும் சரிதவரலாறும் பண்பும் வகுத்துக்கூறப்பட்டன காண்க. இவற்றை விரிநூல் விரித்தபடியைப் புராணத்துட் கண்டுகொள்க.

831. (இ - ள்) வாய்ந்த.....நாட்டின் - நீர் பொருந்தியதனா லுளதாம் வளத்தினாலே சிறந்து ஓங்கி நிலைபெற்ற காவிரிபாயும் **சோழநாட்டில்** ; ஏய்ந்த.....பதி - சிறப்புப் பொருந்திய வேதியர்கள் வாழ்தற்கிடமாகிய மதில்சூழ்ந்த ஊர் ; எறிநீர்.....சடையார் - அலைகள்வீசும் நீரையுடைய கங்கையாறு தோய்ந்த நீண்ட சடையினையுடையாரும் ; பண்டு.....சேவடியார் - தொண்டராகிய மார்க்கண்டேயர்மேல் உயிர்கொள்ள வந்த காலனை முன் உதைத்த சிவந்த திருவடியினையுடையாரும் ஆகிய சிவபெருமான்; நீடி.....ஆகும் - நிலைத்து வாழ்வதான **திருக்கடவூர்** என்பதாகும்.

**(வி - ரை) நீர்வாய்ந்த வளத்தால்** என மாற்றுக. நீரின் வாய்ப்பாவது உயிர்க்கும் பயிர்க்கும் நிலத்துக்கும் பொருந்தியதாகுதல். குடகு நாட்டினும் கொங்கு நாட்டினும் போந்த காவிரிநீர் இங்குச் சோழநாட்டில் வந்து வாய்ந்த - பொருந்திய-என்றலுமாம். திருநாட்டுச் சிறப்பிற் கூறியவை பார்க்க.

**நீர் வளத்தால் ஓங்கி மன்னிய** - நீர்வளம் ஒன்றானே சிறந்து நிலை பெற்ற.

**பொன்னிநாடு** - சோழநாட்டைப் பொன்னிநாடு, நீர்நாடு, காவிரிநாடு என்பனவாதி பெயர்களாற் கூறுவது ஆசிரியர்மரபு. காவிரி, தான் தொடக்க முதலாகச்செல்லும் ஏனைநாடுகளிற் பயன் தராது, சோழநாட்டுக்கே பெரும்பயன் தருதலால் இவ்வாறு கூறுவது மரபு. கன்னடதேயத்திற் காவிரி பயன்றருதல் பின்னாள் வழக்கு.

**சீர்ஏய்ந்த** - என மாற்றுக. மறையோரின் சீராவன அவர்களது பிறப்பொழுக்கமாகிய வைதிகசீலத்தானும் வேத உள்ளுறையாகிய சைவசீலத்தானும் சிறப்புறுதல்.

**மறையோர்வாழும் பதி** - இச் சரிதநாயகராகிய கலயநாயனார் மறையவர் மரபினராதலின் அதனை முற்குறிப்பாகக் காட்டியபடி. சண்டீசர்புராணம் (1), ஆளுடைய பிள்ளையார் புராணம் (7, 9), திருநீலநக்கர் புராணம் (1) முதலியவைபார்க்க. மறையோர் மரபினர் தனித்துவாழும் பதிகளும் உண்டு. இவைபோல்வன சதுர்வேதிமங்கலம் என்று வழங்கப்பட்டன என்பது கல்வெட்டுக்களா லறியப்படும்.

**எறிநீர்க் கங்கை தோய்ந்தநீள் சடையார்** - அலைகளால் நீரினை மேலே வீசும் கங்கையாறு. உலகங்களை அழிக்கவல்லதாய்ப் பல்லாயிர முகங்களாகப் பரந்திழிந்த கங்கை என்ற சரிதக்குறிப்பும் காண்க. "நெடுங்கங்கை" (311) என்றவிடத்துரைத்தவை காண்க. **எறிநீர்** என்றது இவ்வாறு மேல் அலைகளால் எறிதலேயன்றிக் கீழ்ஊற்றுக்கால்களின்வழிப் பலஇடமும் செல்லும்படி பரப்புதலும் குறித்தது. திருத்தில்லையில் திருச்சிற்றம்பலத்தி னருகே உள்ள பரமானந்த கூபத்தில் ஐப்பசி மாதத்துப் பூர்வபக்கநவமியில் கங்கை வருகின்றது என்றமரபும், திருஅவிநாசியிற் காசிக்கங்கைக் கிணற்றின் வரலாறும், திருக்குடந்தை மகாமக வரலாறும் இவைபோன்றன அங்கங்குள்ள சான்றுகளும் இங்குக் கருதத்தக்கன. **தோய்ந்த நீள்சடை** - எறியும் நீராயினும் அவ்வாறு எறியாது தன்மட்டில் அமைவதாகக்கொண்ட சடை. **தோய்ந்த** - சடைக்கற்றையின் அளவில் கட்டுப்பட்டு நின்ற. 45-ன் உரை பார்க்க. **நீள்சடை** - கங்கையின் பரப்புக்குத் தக்கபடி நீளும்சடை. மார்க்கண்டேயர் பூசிக்கும்பொருட்டுக் கங்கை வருகின்றதென்று வழங்கும் இத்தலத்துத் தீர்த்தமும், அதன் நீரினையே இங்கு அமிர்தகடேசருக்கு நாளும் திருமஞ்சனமாட்டும் வழக்குங் காண்க. (தலவிசேடம்

பார்க்க.) காசியினின்றும் கங்கை கடலூர்வரை நீர் எறிந்து பரவுமாகில் இவரது சடையும் அவ்வளவும் நீண்டு இங்கு விளக்கமுறும் என்ற உட்குறிப்பும் காண்க. இக்குறிப்பினையே இச்சரிதத்தில் பலவிடத்தும் (835, 837, 841, 848 முதலியவை) ஆசிரியர் காட்டுதலும் 830-ல் தேற்றம்பெற முதலில் வைத்துக்காட்டியதும் காண்க.

**தோண்டர்** - மார்க்கண்டேயர். **மேல்வந்த கூற்று** - பதினாறுவயது என்ற அவர் வாழ்காளின் எல்லை யணுகிற்று என்று அவருடைய உயிர் கவரும்பொருட்டு வந்த காலன். **கூற்று** - காலன் - இயம தூதன். "தருமராசற்காய் வந்த கூற்றினே" என்ற திருத்தாண்டகம் காண்க. **மேல்வந்த** - குறித்துவந்த என்ற பொருளில் வந்தது. **பண்டு** - முன். இது முன்னொரு கற்பத்திற் காசியில் நிகழ்ந்ததாகக் கந்தபுராணம் கூறும்.

**காய்ந்த சேவடியார்** - சேவடியினால் உதைத்துக் காய்ந்தவர். **காய்தல்** - உயிர் கவர்தல் - கொல்லுதல். இச்சரிதம் இத்தலத் தேவாரங்களிலெல்லாம் போற்றப்படுதலும், இப்புராணத்தினுட் (847 முதலிய) பலஇடத்திலும் குறிக்கப்படுதலும் காண்க. இத்தலத்திற் காலசங்காரமூர்த்தி சிறக்க வழிபடப்பெறுகின்றதும், அவரது திருவிழாப் பெருஞ்சிறப்பாகப் போற்றப்படுகின்றதும் காணத்தக்கன. (தலவிசேடம் பார்க்க.)

**நீடியிருத்தல்** - இப்பெருமையுடன் என்றும் நீங்காது விளக்கமாக வீற்றிருத்தல்.

**இருப்பது** - இருப்பதாகிய அவ்வூர். **கடவூர்** - அமிர்தகடம் - கலயம் - சிவலிங்கத் திருமேனியாக உருக்கொண்டு எழுந்தருளிய ஊர் ஆதலின் கடவூர் - கடபுரி எனப் பட்டது என்பது புராண வரலாறு. கால பயத்தைக் கடத்தற்குதவும் ஊர் என்றலுமாம்.

இப்பாட்டினால் இப்புராணத்துக்குரிய ஆறு - நாடு - நகரம் - குடிவளம் - மூர்த்தி - தலம் - தீர்த்தம்-சரிதம் முதலிய சிறப்புக்கள் பலவும் ஒருங்கேகூறிய அழகுகாண்க. 1

832. வயலெலாம் விளைசெஞ் சாலி ; வரம்பெலாம் வளையின் முத்தம் ;
அயலெலாம் வேள்விச் சாலை ; யணையெலாங் கழுநீர்க் கற்றை ;
புயலெலாங் கமுகின் கர;டப் புறமெலா மதன்சீர் போற்றல்;
செயலெலாந் தொழில்க ளாறே செழுந்திருக் கடவூ ரென்றும். உ

(இ - ள்) வெளிப்படை. செழுமையும் திருவுமுடைய அத்திருக்கடவூரில் எக் காலத்தும் வயல்களிலெல்லாம் விளைகின்ற செந்நெல்உண்டு ; வயல் வரப்புக்களிலெங்கும் சங்குகளும் அவையீன்ற இனிய முத்துக்களும் உள்ளன ; வயல்களின் பக்கங்களிலெங்கும் வேள்விச்சாலைகள் உள்ளன ; அணைகளிலெங்கும் செங்கழுநீர்களின் தொகுதி உண்டு ; காடுபோலச் செழித்த கமுகுச் சோலைகளில் எல்லாம் மேகங்கள் உள்ளன ; அவற்றின் புற இடங்களில் எங்கும் அதன் சிறப்பைப் போற்றுதல் உள்ளதாம் ; செய்வன எல்லாம் ஆறு தொழில்களேயாக வுள்ளன.

(வி - ரை) **எலாம்** - என்ற எழிடங்களிலும் உண்டு என்னுங் குறிப்பு வினைமுற்று விரித்துரைத்துக்கொள்க. இவ்வாறு வினையைத் தொகவைத்து அழகு பொருந்த அடுக்கிக் கூறுதல் ஆசிரியரது சிறப்பியல்புகளில் ஒன்றும். 65 - 67, 76 - 83 முதலிய பாட்டுக்கள் பார்க்க.

**வயல்** - பொன்னிநீரின் வளத்தால் ஓங்கியநாடு என்றதனால் மருதத்திணைப்பகுதியிற் சேர்தல் தெரிவிக்கப்பட்டமையால் வயலின் சிறப்பினை விதந்தோதினார்.

**செஞ்சாலி** - செந்நெல். இதுவே இறைவனது பூசைக்கும் உணவுக்கும் சிறந்தது. கார்நெல் இங்கு விளைப்பதில்லை எனவும், அது சிறப்புடைத் தன்றெனவும் உணர்த்தப்பட்டதும் காண்க. அரிவாட்டாயகாயனார் புராணம் பார்க்க.

**வரம்பெலாம் வளையின் முத்தம்** - **வளை** - சங்கு. **இன்** - இனிய. வளையும் அவை ஈன்ற முத்துக்களும். உம்மைத்தொகை. வளைகளீன்ற முத்து என்றலுமாம். தண்டாளஞ் சோரிபணிலம் (63) என்றவிடத் துரைத்தவைபார்க்க.

**அயலெலாம் வேள்விச்சாலை** - இவை நகர்ப்புறத்தில்உள்ள பொது யாகசாலைகள். 81-ல் உரைத்தவையும், சண்டீசர் புராணம் 3 - 4 திருப்பாட்டுக்களும் பார்க்க. வேதியர் மனைகளில் வளர்க்கும் ஆகுதிகள் வேறு.

**அணை** - ஒடுகின்றநீரைத் தடுத்துத் தேக்கி வாய்க்காலில் அணையவைத்தலால் அணை யெனப்படும். இங்கு **அணை** என்பது ஆகுபெயராய் அதனாற் றடுக்கப்பெற்று ஓடும் நீரையும் நீர்க்கரையையும் குறித்தது. **கற்றை** - செறிந்து முளைத்திருத்தலால் இவ்வாறு கூறினார். " விரிமலர்க் கற்றை " - (73) என்றது பார்க்க.

**கழகின்காடு எல்லாம் புயல்** என மாற்றுக. **காடு** - மனிதர் கைப்பட்டு விளைக்கப்படாது தானாக இயல்பிற்செழித்து விளையும் தாவரக்கூட்டம் காடுஎனப்படும். அவ்வாறல்லாது மனிதர் முயன்று பயிராகவிளைப்பினும் இங்குக் கழுகு காடுபோல நீர்வளத்தாலும் நிலவளத்தாலும் செறிவாய் விளைந்திருத்தலினைக் குறிக்கக் **கழகின்காடு** என்றார். 67 பார்க்க. **காடு** - மிகுதி என்று கொள்வர் நச்சினார்க்கினியர்.

**அப்புறமெலாம் அதன்சீர் போற்றல்** - **அப்புறம்** - அக்கழுகின் சோலைப்பக்கம். **அதன்சீர்** - அதன்மேற்றவழும் மேகத்தின் சிறப்பு. **போற்றல்** - பாராட்டுதல். வான்முகில் வழாது பெய்தற்கேதுவாகிய செயல்களைச் செய்தல். **அதன்** என்றது கழுகின் காட்டினைச் சுட்டுவதாகக்கொண்டு கழுகு சிறத்தலுக்குரிய தொழில்களைச் செய்தல் என்றலுமொன்று. கழுகுப்பயிரினை எப்போதும் சீர்படுத்திப் பாராட்டுதல்வேண்டும். சிறிது கவனம் குறையினும் அவ்வளவிற்கு அதன் பலன்குறையும். இதுபற்றியே " கடையாயார் நட்பிற் கழுகனையர் " (நாலடியார்) என்றது நீதிநூலும்.

**செயல் எலாம் தொழில்கள் ஆறே** - சீர்ஏய்ந்த மறையோர் வாழும் பதியாதலின் தமக்குரிய ஆறு தொழிலே செய்தமைவர். உரியனவாகிய அவ்வறுதொழில்களைத் தவிர இந்நாட் காணப்படும் வேறுவேறு தொழில்களை அவர்கள் செய்வதில்லை என்பது அறியத்தக்கது. ஏகாரம் பிரிநிலை. தேற்றமுமாம். ஆறு தொழிற்களாவன : (வேதம்) ஓதுதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன. **தொழில்களாறே** - என்பதற்கு நன்மார்க்கத்துக்குரிய செயல்கள் என்பர் மகாலிங்கையர்.

**செழுந்திருக்கடவூர்** - **செழுமை**-வாய்ந்த நீர்வளத்தானும், **திரு**-ஆறுதொழிலானும் ஆவன. முன்கூறிய அந்தக்கடவூர் எனச் சுட்டுவருவிக்க. **எலாம்** என்றதனால் இவை இடத்தால் நிரம்பியதனையும், **என்றும்** என்றதனால் எக்காலத்தும் எனக் காலத்தால் நிரம்பியதனையும் குறித்தார்.

**மலையின்முத்தம்**—என்பதும் பாடம். 2

833. குடங்கையி னகன்ற வுண்கட் கடைசியர் குழுமி யாடும்
இடம்படு பண்ணை தோறு மெழுவன மருதம் பாடல் ;
வடம்புரி முந்நூன் மார்பின் வைதிக மறையோர் செய்கைச்
சடங்குடை யிடங்க டோறு மெழுவன சாமம் பாடல். ௩

(இ - ள்) வெளிப்படை. உள்ளங்கைபோல அகலமாகிய மைதீட்டிய கண்களையுடைய பள்ளப்பெண்கள் கூடி ஆடுதற்கிடமாகிய இடமகன்ற பண்ணைகள்தோறும் மருதப்பண்ணைப் பாடும் ஓசை எழுந்திசைப்பன ; வடமாகப்புரித்து முறுக்கிய முந்நூலணிந்த மார்பினையுடைய மறையவர்கள் வேதச்சடங்குகள் செய்யும் இடங்கள்தோறும் சாமவேதத்தைப் பாடும் கானம் எழுந்திசைப்பன.

(வி - ரை) வயல்களும் அவற்றின் அயலில் வேள்விச்சாலைகளும் ஆகியஇவற்றின் சேய்மைக்காட்சியை மேற் பாட்டினாற் கூறினார். அவைகளிற் காணும் அணிமைக் காட்சியினை இப்பாட்டினாற் கூறுகின்றார். அடுத்தடுத்துள்ள இவ்விரண்டினின்றும் இருவகைப் பாடல் எழுவன. ஒன்று மருதப்பண் ; மற்றது சாமப்பாடல். மருதப்பண்

அந்நிலத்துக்கும் ஒழுக்கத்துக்கும் உரியது. குறிஞ்சிமுதலாகக் கூறப்பட்ட ஐந்திணைக்கும் ஐவகைப்பண்ணும் யாழும் பாடலும் உண்டு. முல்லைக்குரிய முல்லைப்பண்ணும் கொடிப்பாலையும் பிறவும் ஆனாயர் புராணத்துக் காண்க. **சாமம் பாடல்** தொழில்களாறே என்ற அவ்வொழுக்கத்துக் குரியது. அப்பாடல்களைக் கூறியதோடு **குழமியாடும்** என வயலின் செயலும், **சடங்குடை** எனச் சாலையின்செயலும் கூறியதும் காண்க. செயலும்பாட்டும் ஒருங்குநிகழுந் தன்மையும் உடன்குறித்த சுவையும் காணத்தக்கது.

**பாடல்** - இரண்டும் சாதியொருமை. மருதப்பண் வகை நான்கென்றும், சாமம் அளவிறந்த பாடல்வகை யுடையதென்றும் கூறுவர். ஆதலின் ஈரிடத்தும் **எழுவன** என்றார். வேள்விகளில் பிரமாஎன்ற ஆசிரியனும், ஹோதாக்கள், இருத்விக்கள், உத்காதாக்கள் என்ற மூவகைச் செயலாளர்களும் உளர். இவர்களுக்கு நந்நான்கு உபகர்த்தாக்களாகப் பதினாறு உபகர்த்தாக்கள் உளர். இவர்களுள் உத்காதாக்கள் சாமவேதம் பாடிக் கானம்செய்வர். இவரெல்லாம்கூடித் தத்தம் இடங்களில் இருந்து உரியசடங்குகள் செய்து ஒன்றுசேர்ந்து பாடுதலானும் **எழுவன** என்றார்.

**குடங்கையின் அகன்ற** - கண் விசாலமாக அகன்றிருத்தல் பெண்களின் அழகிலக்கணங்களில் ஒன்றென்பர். விசாலாட்சி என்ற பெயர்வழக்கும் காண்க.

**உண்கண்** - மைஉண்ட - தீட்டிய - கண். **மை** என்பது வருவிக்க. **கடைசியர்** - மருதநிலத்து மக்கள். இவர்கள் உழவுத்தொழிலுக்கு இன்றியமையாது வேண்டப்படுவராதலின் அந்நிலத்தைச் சொல்லுமிடங்களிலெங்கும் இவர்களையும் உடன்சேர்த்துக் கூறுவர் புலவோர். 63 - 66 முதலியவைகாண்க.

**மருதம்பாடல்** - இத்திணைக்குரிய பண். **இடம்படு - படுதல்** - உண்டாதல் என்னும் பொருளில்வந்தது. மலைபடுபொருள் என்புழிப்போலக்காண்க. இடமுடைய - இடமகன்ற என்க. படுதல் - அகலமாதல் இடமுடைய - இடமகன்றவும் "இடம் படவிடி என்றது

**வடம்புரி முந்நூல்** - பல இழைகளால் வடமாக முறுக்கப்பட்ட பூணூல்.

**மறையோர் வைதிகச் செய்கை** எனமாற்றுக. **வைதிகச் செய்கை** - வேதவிதிப்படி செய்யும் சடங்குகள். **சடங்குடை இடங்கள்** - வேள்விச் சாலைகள்.

**சாமம்** - நான்கு வேதங்களில் ஒன்று. வேதத்திற்குப் பொதுப்பெயராய் வந்ததென்றலுமாம்.

**மருதம் பாடல் - சாமம் பாடல்** - இரண்டாம் வேற்றுமைத்தொகை. பாட்டால் எழும் ஓசைஎழுவன என்க. இது **மறையோர்வாழ மெயிற்பதி** என்றமையால் அவர்களும், அவர்களது நிலங்களை அவராணையின் ஒழுகி உழுது பயிரிடும் மக்களும் கூறப்பட்டார்கள். ஏனைமரபினர் அருகியிருப்பர். இதுபற்றி விறன்மிண்டநாயனார் புராணத்துரைத்தவையும் பிறவும் பார்க்க.

நெடிய உண்கண்—என்பதும் பாடம். 3

834. துங்கநீண் மருப்பின் மேதி படிந்துபால் சொரிந்த வாவிச்
செங்கயல் பாய்ந்து வாசக் கமலமுந் தீம்பா னாறும் ;
மங்குறோய் மாடச் சாலை மருங்கிறை யொதுங்கு மஞ்சும்
அங்கவை பொழிந்த நீரு மாகுதிப் புகைப்பா னாறும். ௪

(இ - ள்) வெளிப்படை. நீண்ட கொம்புகளையுடைய பெரிய எருமைகள் தோய்ந்து பால்சொரிந்த பொய்கைகளில் செங்கயல் பாய்தலால் அந்நீர் தெறித்த மணமுடைய தாமரைகளும் தீம்பாலின் வாசமுடையனவாகும் ; மேகந்தவழுமளவும் உயர்ந்த மாடங்களையுடைய வேள்விச்சாலைகளின் பக்கத்திற் சிறிது ஒதுங்கும் மேகங்களும் அங்கு அவை பொழிந்தநீரும், ஆகுதிகளின் புகைப் பகுதியின் மணமுடையனவாகும்.

(வி - ரை) மேல் மூன்றுபாட்டுக்களிற் கூறிய நீரால் வளம்பெற்ற நிலமும் அந்நிலத்துக்குரிய மறையோரும் என்றவற்றையே அனுவதித்து வேறொருவகையாற் பின்னுங் கூறி முடிக்கின்றார். ஆற்றைக்கண்டு அதன்வழியே போந்தான் ஒருவன் அதனால் வளம்பட்டகாட்டினைக் காண்பான். பிறகு அக்காட்டின் உள்ளேசெல்ல அதன் சிறப்புடைய நகரங்காண்பான் (831). அவ்வாறு செல்லும்போது நகர்ப்புறத்துள்ள வயலும் சோலையும் அங்குப் புறநகரில்உள்ள வேள்விச்சாலையும் கண்டுசெல்வான் (832). அவ்வாறு காட்சிப்பட்ட பொருள்களினின்றும் போந்த ஒலிகள் பின்பு அவனுக்குப் புலப்படும் (833). அப்பொருள்களினின்று வரும் மணங்கள் அதன்பின்னரே அறியப்படும் (834) என்றிம்முறையிற் கூறிய அழகுகாண்க. ஒளியலைகள் மிக்கவேகத்தினும், ஒலி அலைகள் அதனிற் பன்மடங்கு குறைந்தவேகத்தினும், காற்றணுக்கள் அதனினும் பன்மடங்கு குறைந்த வேகத்தினும் செல்வன என்பதும், இதுவேயன்றி, ஒளியுணர்வு ஏனையுணர்வுகளினும் மிக விரைவிற் புலனுகின்றதன் காரணம் பிற இந்திரியங்களைப் போலல்லாது கண்ணிந்திரியம் தன்னிலையினின்று முன்சென்று பொருள்களிற்றுக்கி விடயிக்கின்றதனலும் ஆவதாம் என்பதும் சாத்திரம். 67-ல் உரைத்தவையும் பிறவும் பார்க்க.

**துங்கநீள்.....வாவி** - இதனுல் மேதிகளினியல்பு குறித்த தன்மையணிச் சிறப்புக் காண்க. மேதிகள் நீர்நிலைகளுட் படிந்து உழக்கி நெடுநேரம் தோய்ந்துகிடக்குமியல்பும், அவை எப்போதும் மிக்க பால்சுரந்து சொரியுமியல்பும், அவற்றின் வண்ணமும், உருவும் ஒருங்குகாட்டினர். நீர்வளமும் ஊர்வளமும் குறித்தவாறுமாம். **சொரிந்த** - சொரிதற்கிடமாகிய. **நீள்மநப்பின் துங்க மேதி** - எனமாற்றுக. **பால் சொரிதல்** - இது இயல்பானே மிக்கபால் சுரத்தலாலாவது. மேதிகள் கொழுத்துச் செழித்தலாலும், அன்புகூர்வதனலும் தாமாகப் பால்சொரியும். " கறவா மேபால் பொழிந்தன வால் " என்ற சண்டீசநாயனர்புராண வரலாறும், " வருமேனிச் செங்கண்வரால் மடிமுட்டப் பால்சொரியுங், கருமேதி தினைக்கொண்டு கரைபுரள்வ திரைவாவி " என்ற திருநாவுக்கரசுநாயனர் புராணமும்(8)ம் பிறவும்காண்க. **பாய்ந்து** - பாய்தலால்.

**வாசக்கமலமும்**-முன்னர் இயல்பின் வாசமுடைய கமலமும் தனதியற்கை மணத்தின்மேல் தீம்பால் வாசங்கமழும். உம்மை உயர்வுசிறப்பு.

**துங்கமேதி** - பரிய வண்ணமுடைய எருமைகள். இக்கருத்தே பற்றி " உருமேக மெனமண்டி " (திருஞா - புரா - 8) எனப் பின்னர்க் கூறுவார்.

**தீம்பால் நாறும்** - பாலின் நல்லமணமும் சுவையும் கூறியபடி. இவை நமது உணர்ச்சிக்குப் புலனுகாதவாறு இங்காளின் **பால்** மாறியது கலிகாலக் கொடுமைகளுள் ஒன்று என்க.

**மங்குல்தோய் மாடச்சாலை - சாலை** - வேள்விச்சாலைகள் (832). இவற்றில் நியதியாய் நிகழும் தீயின்தொழிலால் இவை தீப்பற்றுதபடி இவற்றை மிக உயரமுடைய மாடங்களாக அமைத்தல் வழக்கு.

**மருங்கு இறை ஒதுங்கும் மஞ்சு** - மேகந்தவழும் அளவு உயர்ந்துள்ளன. ஆதலின் அவை செல்கையில் சிறிது ஒதுங்குவன என்பது. **மஞ்சு** - சாதிஒருமை. Passing clouds என்பர் ஈவீனர்.

**மஞ்சும் அங்கு அவை பொழிந்த நீரும்** - ஒதுங்கும்போது அந்தச்சாலை மாடங்களைத் தாக்கிய மேகங்கள் நீர் பொழிந்து செல்வன. இக்காட்சி உயர்ந்த மலைகளினும் மழைக்காலங்களில் மழை விட்டுவிட்டுப் பெய்யும் ஏனையிடங்களினும் காணலாம்.

**அங்கு** என்றதனுல் பிறஇடங்களில் மஞ்சும் நீரும் ஆகுதிப்புகை நாறுகின்ற நிலையில்லையாம் என்பது.

**ஆகுதிப் புகைப்பால் நாறும்** - வேள்விப்புகையின் பகுதி மணக்கும் என்க. **புகைப்பால்** - புகைப்பினுலே, **நாறும்** - தோன்றும் - உண்டாகும் என்று கொண்டு

வேள்வியின் பயனுக மஞ்சும் நீரும் - மழையும் - உண்டாகும் என்றுரைக்க நின்றதும் காண்க. "வேள்வி தற்பயன் வீழ்புன லாவது", (823) "உலக மின்புறச், சக்தவேள்வி கள்முதல் சங்க ரர்க்குமுன், வந்தவர்ச் சனைவழி பாடு மன்னவாம்" (822) என்ற ஆளுடையபிள்ளையார் புராணமும் பிறவும் காண்க.

**மாடக்கோலை**—என்பதும் பாடம். 4

835. மருவிய திருவின் மிக்க வளம்பதி யதனில் வாழ்வார்
அருமறை முந்நூன் மார்பி னந்தணர் கலய ரென்பார்
பெருநதி யணியும் வேணிப் பிரான்கழல் பேணி நாளும்
உருகிய வன்பு கூர்ந்த சிந்தையா ரொழுக்க மிக்கார். நு

(இ - ள்) வெளிப்படை. பொருந்திய திருவினாலே மிகுந்த வளத்தையுடைய அந்தப் பதியில் வாழ்வாராகிய அரிய மறைவிதிப்படி பூணூல் அணிந்த மார்பினையுடைய அந்தணாராவார் **கலயர்** என்று சொல்லப்படுபவர்: கங்கையினை அணியும் சடையினையுடைய சிவபெருமானது திருவடிகளைப் போற்றித் தினமும் உருகிய அன்புமிக்க மனத்தையுடையவரும் ஒழுக்கம் மிகுந்தவருமாவர்.

**(வி - ரை) மருவிய**-மேற்பாட்டிற் கூறியபடி வேள்விப் புகைப்பால் நாறும் மழை நீரின் பெருக்கினைப் பொருந்திய. இறைவன் ஆணையினால் குபேரன் தன் பெருநிதியம் கொணர்ந்து சேர்த்ததனால் வந்து மருவிய. திருவருட்சாதனமாகிய திருவும், அதனால் ஏனை எந்தச் செல்வத்துக்கு மில்லாததாகிய மிக்க **வளமும்** என்று இச்சரித நிகழ்ச்சியின் குறிப்பும் காண்க. **வளம்** - இவ்வுலக வளமும் அவ்வுலக வளமும்.

**வாழ்வார்** - வாழ்வாராகிய கலயர் என்பார் - சிந்தையாரும் ஒழுக்கமிக்காருமாவர் என முடிக்க.

**மறைமுந்நூல்** - மறைகளில் விதித்தபடி மறைமந்திரங்களோதி அணியப்படுவதும், மறை ஓதும் நியதியுடைமை ஏற்று அதற்கடையாளமாவதும் ஆகிய மூந்நூல் என்க. **முந்நூல்** - மூன்றாகச் சேர்க்கப்பட்ட இழைகளையுடைய நூல். பிரமசாரிக்கு மூன்று இழையும், இல்வாழ்வானுக்கு இருமூன்றாக ஆறிழையும், அவருள் மக்களுடையானுக்கு மும்மூன்றாக ஒன்பதிழையும் கொண்ட நூல் அணிதல் விதி; ஆதலின் **முந்நூல்** எனப்படும். இங்கு முந்நூல் - மும்மூன்றிழை குறித்தது. "ஒன்பது போலவர் மார்பினி னூலிழை" என்று அப்பர் சுவாமிகள் தனித்திருக்குறுந்தொகையில் இறைவனது பூணூலைப்பற்றி அருளுதலும், "ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞான்" என்ற திருமுருகாற்றுப்படையும் காண்க. இவ்வாறன்றி அநமறை அந்தணர் என்று கூட்டியுரைப்பினுமமையும்.

**அந்தணர்** - மறைமுந்நூன் மார்பினர் என்றலே அமையும், அந்தணர் என்றது மிகையாமெனின் அற்றன்று; அரசரும் வணிகரும் நூலணிய மறைவிதியுளதாதலின் அவரினின்று பிரிக்க **அந்தணர்** என்றார். ஆயின் **அந்தணர்** என்றலேயமையும் **மறை முந்நூல்** என்றல் மிகையாமெனின், அற்றன்று. அந்தணர்களுள் ஆச்சிரமபேதம்பற்றியும் பிறவாற்றாலும் முந்நூல் அணிதல் இல்லாத அறவோரும் உளராதலின் இவர் அவ்வாறன்றி மறைவிதிப்படி இல்வாழ்க்கையினின்ற அந்தணர் என்று காட்ட **மறைமுந்நூல் மார்பின்** என்றலும் வேண்டுவதாயிற்று.

**கலயர்** - இது திருக்கடவூர் இறைவனது பெயர். **கலயம்** - கலசம் - குடம்: தேவர்கள் கொணர்ந்த அமிர்தகலசமே சிவலிங்கத் திருமேனியாக உருக்கொண்டேறிய தலம் என்ற தலசரிதம்காண்க. அக்காரணம்பற்றி இங்கு இறைவர் **கலயர்** என வழங்கப்பெறுவர். அத்தத்தத் தலத்து எழுந்தருளிய கடவுளரின் பெயரை அவ்வவரை வழி

பட்டு ஒழுகுவோர்க்கு இட்டுவழங்கும் வழக்கம்பற்றி இச்சாயனரும் கலயர் எனப் பேரிட்டு வழங்கப்பட்டனர்.

பேரு நதி - கங்கை. உருவாலும் அளவாலும் பெரிதாதலோடு சிறப்பாலும் பெரிய தென்பார் பேருநதி என்றார். அஃதாவது சிவபெருமான் சிரத்திற் சூங்கப்பெற்ற பெருமை வேறு எந்நதிக்குமில்லாமல் இதற்கே சிறப்பாயுரியதாதல். கங்கைதோய்ந்த நீள்சடையார் - (821) என்றவிடத் துரைத்தவைபார்க்க.

நாளும்பேணி உருகிய என்க. உருகுதலுக்குக் காரணம் அன்பும் பேணுதலுமாம். அன்பு கூர்ந்த உருகிய சிந்தை எனக்கூட்டுக. அன்பினுற் பேணுதல் சாதனமும் - சிந்தை உருகுதல் அதனுற்பெறும் பயனுமாம்.

ஒழுக்கம் மிக்கார் - ஒழுக்கத்தால் மிகுந்தவர். ஒழுக்கம் என்பது இங்கு வேதங்களிற் கூறப்பட்ட தர்மம்சர - சத்யம்வத என்பனவாதி உலகெறி நிற்கும் ஒழுக்கமன்றிச் சிவாகமங்களில் விதித்த சரியையாதி சன்மார்க்கம் குறித்தது. வேதநெறி சைவநெறி என்ற இரண்டனுள் வேத ஒழுக்கம் முன்னர் "மறைமுந்நூல் மார்பினந்தணர்" என்றதனுற் கூறப்பட்டது காண்க. "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க" என்றதும் காண்க. இவ்வாறன்றிச் சிந்தையார் - ஆரூர் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு, சிந்தையார்களது சைவ ஒழுக்கம் என்றுரைப்பினுமமையும். இவ்வாறுவந்த சைவ ஒழுக்கத்தை, மேல்வரும்பாட்டாலும், அதனின் மிக்கு நின்ற தன்மையை அதற்குமேல்வரும் பாட்டாலும் விரித்துக் கூறுவார்.

இப்பாட்டால் நாயனாது நகரச்சிறப்பும், மரபும், பேரும், சைவஒழுக்கத் திறமும் கூறப்பட்டன.

மார்பர்—என்பதும் பாடம். 5

836. பாலனு மறையோன் பற்றப் பயங்கெடுத் தருளு மாற்றான்
மாலுகான் முகனுங் காணு வடிவுகொண் டெதிரே வந்து
காலனு ருயிர்செற் றார்க்குக் கமழ்ந்ததுங் குலியத் தூபஞ்
சாலவே நிறைந்து விம்ம விடும்பணி தலைநின் றுள்ளார். சு

(இ - ள்) வெளிப்படை. (அவர்), பாலனுகிய மறையவராம் மார்க்கண்டேய முனிவர் பற்றிக்கொண்டதனுல் அவரது பயமுழுதுங் கெடுத்து அருள் செய்தவாற்றினுல் விட்டுணுவும் பிரமதேவனும் காணுதவடிவினைக்கொண்டு வெளிப்பட்டு வந்து காலனை உதைத்துருட்டி உயிர்போக்கிய அமிர்தகடேசராகிய சிவபெருமானுக்கு மணம்மிக்க குங்குலியத்தூபத்தை மிகவும் நிறைந்து வீசும்படியாக இடுகின்ற திருப்பணியிற் சிறந்து நின்றவராயினர்.

(வி - ரை) பாலனும் மறையோன்-மார்க்கண்டேய முனிவர். பாலன் - பதினறு வயதுடைமையிற் பாலன் என்றார். சிவபெருமான் அருளிய வரத்தினுல் இவர் என்றும் அந்தப் பதினறுவயதே உடையராகின்றாராதலின் அச்சிறப்புக்குறிக்கப் பாலன் ஆம் என்றார்.

பற்ற - பற்றிக்கொண்ட காரணத்தினுல். காரணப் பொருளில்வந்த வினையெச்சம். மழைபெய்யக் குளநிறைந்தது என்பதுபோலக் காண்க.

பயம் - எல்லாவற்றுக்கும் மேலான மரண பயம். இங்கு அவர் பற்றுதற்குக்காரணமாய் வந்த காலபயம் குறித்தது.

பயங்கெடுத்தல் - காலவேதனையைப் போக்குதல். அருளுதல் - சிவப்பேறுகிய மீளாநெறியில் வைத்தல். பாசநீக்கமும் (உண்மையில்இது காலபாச நீக்கமாம்.) சிவப்பேறுமாகிய இருபயனுங் குறித்தார். "வழிபாடு செய்யும் பாலன் மிசைச்சென்று பாசம் விசிறி மறிந்தசிந்தைக் காலனை" என்ற அப்பர்சுவாமிகள் திருவிருத்தமும்,

" வஞ்சநமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும், அஞ்சி யுனையடைந்தே னையா பராபரமே " என்ற தாயுமானார்பாடலும் காண்க.

**மாலும் நான்முகனும் காணா வடிவு** - விட்டுணுவும் பிரமனும் அடியும் முடியும் காணமாட்டாது கீழும்மேலும் நீண்டிருந்த பெரிய அழற்றூணுருவம்.

**காணா வடிவுகொண்டு எதிரே வந்து** - காணமுடியாது நின்றவர் காணுமாறுள்ள தோர் வடிவுகொண்டு தாமே எதிரில்வந்து. ஆணவம் உள்ளவழிக் காணாவடிவாய் நின்றதும், ஆணவங்கெட்டுத் தானற்றவழி எதிர்வந்ததும் ஆம் என்று குறிக்கப் பெருந்தேவர்களும் பெருமுயற்சி செய்தும் காணவொண்ணாதவர் தாமே வெளிவருவர் என்றார். " கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி, நனவிலு நாயேற் கருளினை போற்றி " என்பனவாதி எண்ணிறந்த தமிழ்மறைகள்காண்க.

**பயங்கெடுத் தருளும் ஆற்றல்.....எதிரேவந்து - செற்றார்** - இங்குக் காணும் வடிவு கொண்டு எதிர்வந்தது அடியவர்க்குப் பயம்போக்கி அருள்செய்யும் பொருட்டேயன்றிக் காலன் காணும்படியாகவன்று என்பது. அவனும்காண வந்தனரே யெனின் நெல்லுக்கு இறைத்தநீர் புல்லுக்குமாவதுபோல அவனும்கண்டான் என்க. ஆனால் அது பாலனுக்குப் பயங்கெடுத்து அருளும் வடிவமாயிருந்தது. காலனுக்கு அதுவே உதைத் துருட்டிச் சங்கரிக்கும் பயங்கொடுக்கும் வடிவமாயிருந்தது. எதிர்வருதல் அடியார்க்கும், செறுதல் அல்லார்க்குமாக நின்றது. ஒரேநிலையில் இவ்விரண்டு தன்மைகளும் நின்ற பெருமையை நக்கீரதேவநாயனார் கோபப்பிரசாதம் (பதினொராந் திருமுறை) என்ற நூலில் "மறைபயில் மார்க்கண் டேயர்க் கருளியும்" எனவும், "மறிகட லுலகின் மன்னுயிர் கவருங்,கூற்றுவன் றனக்கோர் கூற்றுவனாகியும்" என்றும் பாராட்டினர். இவ்வாறு உதை பட்டபோது அதனால் வருந்துதலின்றிப் பிரம விட்டுணுக்களுக்கும் காணக் கிடைக்காத திருவடியை யான் அறியப்பெற்றேன் என்று காலன் இறுமாந்தனன் என்னும் இக்கருத்தையே அப்பர் சுவாமிகள் " மேலு **மறிந்தில னான்முகன்** மேற்சென்று கீழிடந்து, **மாலு மறிந்திலன்** மாலுற்ற தேவழி பாடுசெய்யும், **பாலன்** மிசைச்சென்று **பாசம்** விசிறி மறிந்தசிந்தைக், **கால** னறிந்தா னறிதற் கரியான் கழலடியே" என்ற திருவிருத்தத்தினுள் நகைச்சுவைபட அருளிய அழகு காண்க. இத்தேவாரத் திருவாக்கினை நினைவூட்டி ஆசிரியர் **பாலனும்** என்றும், வழிபாடுசெய்யும் காரணத்தால் எதிர்வந்தார் என்ற கருத்தைக் குறிக்கப் **பற்ற** என்றும், நான்முகன்-மாலு மறிந்திலன் என்றதனை **மாலு நான்முகனுங் காணா** என்றும், கூறியவாற்றால் " முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும், பொன்னேபோற் போற்றுவம் " என்றபடி எடுத்துக் காட்டிய அருமை நோக்குக. **பற்ற எதிர்வந்து செற்றார்**-பற்றினால் வெளிவருவர், பற்றில்லா வழி வெளிப்படார் என்று இறைவனது அருளையும் அதனை யடையும் சாதனத்தையும் குறித்த நயமும் காண்க. " மறைய நின்றுளன் மாமணிச் சோதியான், உறவு கோனட்டுணர்வு கயிற்றினான், முறுக வாங்கிக் கடையமுன் **னிற்குமே** " என்ற கருத்தும் இது. மாலு நான்முகனும் பற்றில்லாது திருவடியைப் தேடியமையால் வெளிப்படாது, பின்னர் இறைஞ்சியபோது வெளிப்பட்டனர் என்பதும், பற்றும் வழிகள் இவை யிவையாம் என்பதும் இலிங்கபுராணத் திருக்குறுந்தொகையினுள் அப்பர் சுவாமிகள் பல வாற்றானும் வற்புறுத்தி அழகுபட அருளியது காண்க. " நன்றுநகு நாண்மலரா னல்லிருக்கு மந்திரங்கொண், **டொன்றிவழி பாடுசெய** லுற்றவன்ற னோங்குயிர்மேற், கன்றிவரு காலனுயிர் கண்டவனுக் கன்றளித்தான் " (திருஞான - தேவாரம் - பண் - பழந்தக்கராகம்-திருக்கோளிலி 3), " பதத்தெழு மந்திர மஞ்செழுத் தோதிப் பரிவினொடு,மிதத்தெழு மாணித னின்னுயி ருண்ண வெகுண்டடர்த்த, கதத்தெழு காலனைக் கண்குரு திப்புன லாறொழுக, வுதைத்தெழு சேவடி யான்கட ஆருறை யுத்தமனே " (திருவிருத்தம் - 2), என்பனவாதி எண்ணிறந்த தமிழ்மறைத் திருவாக்குக்களில் இப்பெருமை பாராட்டித் துதிக்கப்பெற்றது காண்க. " மார்க்கண்டர்க் காக மறலிபட்ட

பாட்டையுன்னிப், பார்க்கிலன்பர்க் கென்னபயங்காண் பராபரமே" என்ற தாயுமானார் பாடலும், பிறவும் கண்டு கொள்க.

**குங்குலியத் தூபம்**-குங்குலியம் என்பது தூளாக்கி அனலிலிட்டுப் புகைத்தலால் கன்மணங் கமழும் ஒரு வாசனைப் பண்டம். இது மலைக்காடுகளில் விளையும் ஒருவகை மரப் பிசின். இதனைக் குக்குலு - குற்குலு என்பர் வடமொழியாளர்.

**செற்றார்க்குக் கமழ்ந்த குங்கிலியத் தூபம்** - இறைவனது வழிபாட்டுக்கு உரிய தாய்ச் சிவாகமங்களில் விதித்த குங்குலியத்தூபம். திருவிளக்கும் தூபமும் வழிபாட்டுக்கு இன்றியமையாத பொருள்கள். இவற்றை விதிப்படி உள்ளன்போடு இடுவோர்க்கு இறைவன் அருள்கின்றார் என்பது "விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினு லிட வல் லோர்க்குக், கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னாரே" என்று இத்தலத் திருகோரிசையினுள்ளும் "சங்கொலிப் பித்திடு மின்சிறு காலைத் தடவழலிற், குங்குலி யப்புகைக் கூட்டென்றுங் காட்டி" என்று திருவாரூர்த் திருவிருத்தத்துள்ளும் அப்பர் சுவாமிகள் எடுத்துக் காட்டியருளினர். இங்குத் தூபத்தைக் குறித்தது இக்காயனாரது சரிதவாசங்கமழ்வது குறிக்க. சிறப்பாய் விதித்த ஐவகைத் தூபங்களுட் குங்குலியம் ஒன்று. அவை "குக்குருகந், துய்யபெருங் கருப்பூரந் துன்னியகா ரகில்வெண்மை, யெய்தியசந் தனமினிய குக்குலுவு மெனவறிக" என்ற சிவதரு மோத்திரத்தா லறிக. "சலம்பூ வொடு தூபமறந் தறியேன்" என்றது முதலிய திருவாக்குக்கள் காண்க.

**சாலவே நிறைந்து விம்ம** - மிக்க செறிவும் பரப்பும் குறித்த ஒரு பொருட்பன் மொழி. **விம்முதல்** - நிறைவாகி மேற்கிளம்புதல்.

**தலைநின்றல்** - அதுவே சிறந்த செய்தொழிலாக முனைத்தல்.

**உள்ளார்** - சிவத்திருப்பணி செய்தலின் உளராயினர். அவ்வாறு சிவப்பணி எதுவும் செய்யாத ஏனையோர் பிறந்தும் பிறவாதவர் எனப்படுவர் என்பது குறிப்பு. "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே", "உளராஞர் உளராஞர்" (திரு ஈ. புரா-16) முதலியவைகாண்க.

**மறையோன் போற்ற**—என்பதும் பாடம். (இ)

837. கங்கைநீர் கலிக்குஞ் சென்னிக் கண்ணுத லெம்பி ராற்குப்
பொங்குகுங் குலியத் தூபம் பொலிவுறப் போற்றிச் செல்ல
வங்கவ ருளினு லேல வறுமைவந் தடைந்த பின்னுந்
தங்கணா யகர்க்குத் தாமுன் செய்பணி தவாமை யுய்த்தார். எ

(இ - ள்) கங்கைநீர்...எம்பிராற்கு - கங்கையின் நீர் ஒலித்தற்கிடமாகிய திருமுடியும் நுதற்கண்ணுமுடைய எமது சிவபெருமானுக்கு; பொங்கு...செல்ல - மேன்மேற் செறிந்து பரந்து கிளம்பும் குங்குலியத்தூபத்தைச் சிறப்புப் பொருந்தி விளங்கும்படி தவிராது பேணிச் செலுத்தி வந்தாராக; அங்கு - அக்காலில்; அவர்...பின்னும் - அவருடைய திருவருளினுலே வறுமை வந்தடையவே அதன் பின்னரும்; தங்கள்...உய்த்தார் - தமது பெருமானுக்குத் தாம் அவ்வறுமை வருமுன்பு செய்துவந்த அத் திருப்பணியைத் தவிர்தலில்லாது முன்போலவே செய்து வருவாராயினர்.

(வி - ரை) கலித்தல் - ஒலித்தல். பெருவெள்ளமாய்ப் பாய்ந்திரைத்து வந்த கங்கை இறைவனது அவிர்சடைமுன் கண்டனவில் மிகைதவிர்ந்து சிறிதாயடங்கிற்ரு கலின் பேரிரைச்சல் செய்யும் இயல்பினையுடையதாம் என்பது. விரிந்து ஓடுகின்ற நீரைச் சிறைசெய்தபோது பேரொலி செய்யும் என்க.

**நீர்கலிக்கும் சென்னி** - கண்ணுதல் - நுதற்கண் கோபத்தையும், நீர்கலித்தல் பிரசாதத்தையும் குறிப்பன. இங்குக் காலனை யுதைத் திருட்டிய நிக்கிரகமும், மார்க் கண்டேயரைக் காத்த அனுக்கிரகமும் செய்த ஒருவர் என்பது குறிப்பாம்.

**குங்குலியப் பொங்குதூபம்** என்க. **பொலிவும்** - தூபத்துக்குப் பொலிவாவது மிக்க நன்மணம் பொருந்திச் செறிந்திருத்தல். "சாலவே நிறைந்து விம்ம" என முன்னர்க் கூறியது மிது.

**போற்றி** - சோர்வுபடாமற் பேணி. **செல்ல** - செலுத்த. இவ்வாறு நடத்த.

**அங்கு** - அந்நாளில். அங்கு இடச்சுட்டுகாலங் குறித்தது.

**அருளினுலே வறுமை வந்து அடைந்த பின்னும்** - இதுபற்றி 445-ம் திருப்பாட்டினும் பிறண்டு முரைத்தவை பார்க்க. அடியார்களுக்கு வறுமையாகிய துன்பம் வரச் செய்தலும் அருளாமோ ? எனின், இது உண்மைநிலை யறியாதார் கூற்றேயா மென்க. என்னே ? செல்வ வறுமைகளும் இன்பத்துன்பங்களும் ஒன்றுபோலவே அவ்வவர் வினைக்குத் தக்கபடி இறைவன் தர வருவன. "விரைத்தாளு நல்குரவே", "கோவுளார் வாயுளான்" என்ற தேவாரத் திருவாக்குக்களின்படி வறுமை முதலிய துன்பங்கள் அடிமையை அளக்கும் கருவிகளாகவும் இறைவன் தருவன. "ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்" என்றபடி இன்பத்துன்பங்களிரண்டையும் ஒன்று போலவே காணுவதாகிய இருவினையொப்பு என்ற பக்குவநிலை வரும்படி செய்து, அடியார்களை ஆட்கொள்ளுதல் அருளேயாதல் காண்க.

**பின்னும்** - உயர்வு சிறப்பொடு கூடிய எச்சவும்மை. வறுமையினும் திருப்பணி தவாது உய்த்தலின் அருமை குறித்தது. பின்னும் தவாமை உய்த்தார் என்க. "வளஞ்சுருங்கவும், முன்னே மாறில் திருப்ப ணிக்கண் முதிர்ந்த கொள்கைய ராயினுர்" (446) என்றதும் காண்க. **தவாமை** - குறைவில்லாதிருத்தல். **உய்த்தல்** - கொண்டு செலுத்துதல்.

**முன் செய்பணி** - வறுமை வருவதற்குமுன் சாலவே நிறைந்து விம்மக் கமழ்தூபமிட்டுச்செய்தபடி என்பார் **முன்செய்** என்றார். செய்தபடி என்க. 7

838. இந்நெறி யொழுகு நாளி லிலம்பாடு நீடு செல்ல
நன்னில முற்றும் விற்று நாடிய வடிமை விற்றும்
பன்னெடுந் தனங்கண் மாளப் பயின்மனை வாழ்க்கை தன்னின்
மன்னிய சுற்றத் தோடு மக்களும் வருந்தி னார்கள். அ

(இ - ள்) வெளிப்படை - இந்நெறியிலே ஒழுகுகின்ற காலத்தில் வறுமை மிகவும் மூடுகியதாதலின், தமது நல்ல நிலங்களையெல்லாம் விற்றும், நாடியுள்ள அடிமைகளை விற்றும் இவ்வாறு தமது பல பெரிய செல்வங்கள் எல்லாம் தீர்ந்து போயினவாகவே, பயின்ற இல்வாழ்க்கையிற் பொருந்திய சுற்றத்தார்களுடனேமக்களும் வருந்தினர்கள்.

(வி - ரை) **இந்நெறி** - மேற்பாட்டிற் கூறிய படி வறுமை வந்தடைந்த பின்னும் முன் செய்பணியில் தவாமை உய்த்த ஒழுக்கம்.

**இலம்பாடு** - இல்லாமை - வறுமை. ~~(பாடு - தொழிற்பெயர்விகுதி)~~ **நீடு செல்லுதல்** - மிகமூடுகுதல்.

**நன்னிலம்** - நன்செய். உணவுக்கு இன்றியமையாத நெல்லினை நேரே தருதலால் இவற்றை நெல் என்ற அடைமொழி தந்து வழங்குவது மரபு. ஏனை நிலங்கள் தரும் விளைவுகள் நெல்லைப்போல அத்துணைச் சிறப்பில ஆகலான் அவற்றைப் **புன்செய்** என வழங்குவர். **நன்னிலம்** - சிறந்த விளையுயர்ந்த நிலம் என்றலுமாம்.

**முற்றும்விற்றும்** - **முற்றும்** - என்ற முற்றும்மை நல்ல நிலங்களினும் ஒன்றும் ~~ஒழியாது எல்லா நிலமும் விற்றனர்~~ என்பது குறித்தது. புன்செய்கள் இன்றியமையாதனவல்ல ஆதலானும், வருவாய் குறைந்தனவாகலானும் பல நிலங்களுமுடையவன் விற்கவேண்டிவரின் அவற்றையே முதலில் விற்பன். அதன் பின்னரே ஏனை நல்லனவற்றில் தனக்கு உணவுக்கு வேண்டும் அளவுமட்டில் வைத்துக் கொண்டு, ஏனைய வற்றை விற்பன். இங்கு அவ்வாறன்றி நல்ல நில முழுதும் விற்றனர் என்பதாம்.

**நாடிய அடிமை** - தம்மையே ஆதரவாக நாடியுள்ள எனவும், தாம் நாடிக்கொண்ட எனவும் இருவழியும் கொள்ள நின்றது. அடிமைகளைக் கொள்ளுதலும் விற்றலும் அக்காலத்து வழக்கு. அடிமைவிற்பனை ஆங்கிலேயராளுகையின் பின் அரசாங்க நியமமாகிய சட்டங்களால் ஒழிக்கப்பட்டதென்பர். ஆள் அடமானப்பத்திரங்களும், முன் தொகை பெற்ற கூலி ஒப்பந்தங்களும் முதலாயின இன்றைக்கும் நடைமுறையில் உள்ளனவாதலின் அடிமைவிற்பனையும் அடிமை ஒற்றியும் உண்மையில் ஒழிந்தன வாகச் சொல்ல இடமில்லை. முன்னாளில் பிறப்பாலும் இசைவு என்ற ஒப்பந்தத்தாலும் இருவகை அடிமை வழக்கம் உண்டென்பது தடுத்தாட்கொண்ட புராணத்துட் (183 - 210) காணப்படும். மனைவியையும் விற்கும் வழக்கும் உள்ள தென்பது கலிங்கத்துப் பரணி, நாயனார் புராணத்தாலும், அரிச்சந்திரன் கதை முதலியவற்றாலும் அறியப்படும். "இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை" (திருவாசகம்-பிடித்-வின்-18), "தனியேனென்றென்னை, ஊன்றிநின் றூரைவர்க் கொற்றிவைத் தாய்பின்னை யொற்றியெல்லாஞ், சோன்று கொண்டாய்" (அப்பர் தேவாரம் - திருவிருத்தம் - திருவேகம்பம் - 9) முதலிய திருவாக்குக்களால் அடிமைகளை விற்பதேயன்றி ஒற்றிவைக்கும் வழக்கும் உண்டென்பதறியப்படும். இதுபற்றி இக்காள் கவீனர்கூறும் இகழ்ச்சொற்கள் பொருளிலவாமென்றொழிக. என்னை? உலகமுழுதும் ஒருவனுக்கொருவன் அடிமைப்பட்டே-அடிமை வேலை செய்தே-உலக வாழ்க்கை நடைபெறுகின்றது. எந்த உருவத்திலாயினும் அடிமை செய்யாது உலகம் நடைபெறுதென்பது சிறிது ஆராய்வோருக்கும் பெரிதும் புலனுமென்க. இவ்வாறு பல வழியாலும் பல உருவத்தாலும் உலகத்துக்கு அடிமையாதலை ஒழித்து இறைவனுக்கு அடிமைப்பட்டு நிற்போமாயின் எல்லாத் தீங்கையும் நீங்கி இன்பமடைவோம் என்பது வேதசிவாகமங்களின் துணிபாம். இதுவே அகரதியாக அறிஞர்கள் கைக்கொண்டொழுகும் ஒழுக்கமுமாம். "மீள்வா அடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே...ஆளாயிருக்கும் அடியார்" என்ற சம்பிகள் திருவாக்கினுல் அடிமையிலிருந்து மீட்டுக் கொள்ளுதலும் உண்டென்பது போதரும். "ஆளெனப் புதிதின்வந் தடைந்தில மத்தனின், மூளி னேவல் தலையி னியற்றி, வழிவழி வந்த மரபினம்" என்ற கோயினூன் மணிமாலை (24)யும், "கொற்றத் திறலெந்தை தந்தைதன் றந்தையெங் கூட்டமெல்லாந், தெற்றச் சடையாய் நினதடியேம்" என்ற திருத்தொண்டர் திருவந்தாதி (35)யும், இதனை எடுத்தாண்டு "எம்பிரானெந்தை தந்தை தந்தையெங் கூட்ட மெல்லாந், தம்பிரா னீரே யென்று வழிவழிச் சார்ந்து வாழு, மிம்பரின் மிக்க வாழ்க்கை யென்னே" என்ற ஏயர்கோன்புராணம் (392), "யானு மென்பால் வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கோலே" (205), காண்க. இவற்றால் வழிவழிவரும் அடிமைவழக்கமும் உண்டென்பதும் பெறப்படும்.

**பல் நெடும் தனங்கள்** - பலவகைப்பட்ட பெருத்த செல்வங்கள். வகையாலும் தொகையாலும் பெருமை குறிக்கப் பல - நெடு(மை) என்ற இரண்டடைமொழிகள் புணர்த்தியோதினர். அசையாப் பொருளும் அறிவில் பொருளுமாகிய உடைமைகளிற் சிறந்த நன்னிலங்களை முதலிற் கூறிக் கழித்ததுவும், அதன்பின் அசையும் பொருள்களும் அறிவுடைப் பொருள்களுமாகிய அடிமைகளை பின்னைக் கூறிக் கழித்ததுவும் கருதத்தக்கது. எனவே நிலமுதல் அடிமைவரை எல்லாவகைப் பெருஞ் செல்வங்களும் விற்கப்பட்டுக் கழிந்தன என்க. அதுபற்றி மாள என்றதும் காண்க.

**சுற்றத்தோடு மக்களும்** - சிறப்புக் காட்டும் ஒடு உருபைச் சுற்றத்துடன் சார்த்தியோதியது இல்வாழ்க்கை நிலையில் சுற்றத்தழுவலின் இன்றியமையாச் சிறப்பையும், காலத்தாற், சுற்றம்வந்த பின்னரே மக்கள் வரும் முறைமைச் சிறப்பையும் வற்புறுத்தற்கு. "பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல், சுற்றத்தார் கண்ணே யுள" என்ற திருக்குறளும் காண்க. மக்களும் - வருந்தப் பாராத மக்களும் என உம்மை உயர்வு சிறப்பு. மக்கள் வருந்தியது கூறவே தாமும் மனைவியாரும் முன்னர் வருந்தியது

கூறுமலே பெறப்படுமாதலின் அதனைக் கூறாது விடுத்தனர். சுற்றத்தாராவார் " அற்ற குளத்தி லறுநீர்ப் பறவைபோ, லுற்றுழித் தீர்வா ருறவல்ல - ரக்குளத்திற், கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே, யொட்டி யுலர்வா ருறவு " என்றபடி செல்வத்திற்கூடி வறுமை வந்தகாலத்தில் நீங்கிவிடாது, தாமும் கூடவே ஒட்டி உலரும் உறவாவார். ஆதலின் இவர்களே வறுமையிலும் காத்தல் கடனுயிற்று. இதனை " ஒக்கல் " என ஐம் புலத்தார் கடனுள் ஒன்றாக வைத்தோதியது நீதிநூல். இது பற்றியே இவர்களையும் மக்களையும் ஒன்றுபோலவே பார்த்து அம்மையார் தாலி கொடுத்து நெற் கொள்ளச் சொன்னர் என்க. 8

839. யாதொன்று மில்லை யாகி யிருபக லுணவு மாறிப்
பேதுறு மைந்த ரோடு பெருகுசுற் றத்தை நோக்கிக்
காதல்செய் மனைவி யார்தங் கணவனார் கலய னார்கைக்
கோதின்மங் கலநூற் ருலி கொடுத்து" நெற் கொள்ளு "மென்றார். கூ

(இ - ள்) வெளிப்படை - உணவுக்குரிய சாதனம் யாதொன்றும் கிடையாதாகி, இரண்டு பகல் உணவு இல்லாமல், வருந்துகின்ற மைந்தர்களோடும் பெருகிய சுற்றத் தாரையும் பார்த்துக் காதலையுடைய மனைவியார் தமது கணவராகிய கலயனாரது கையில் குற்றமில்லாத மங்கலநூற் ருலியைக் கொடுத்து "இதற்கு நெல் வாங்கி வாரும்" என்று சொன்னர்.

(வி - ரை) யாதொன்றும் - உணவுப் பொருள்களேனும், அவற்றைத் தேடுதற் குரிய செல்வம் முதலிய பண்டமாற்றுப் பொருள்களேனும் எவையும்.

இருபகல் - பகல் இங்கு நாளைக்குறித்தது.

உணவுமாறி - உணவில்லாமல். பேதுறுதல் - வருந்துதல்.

மைந்தரோடும் - சுற்றத்தை - இது மனைவியாரது மனநிலை குறித்த இடமாத லானும், முதலிற் பசிதீர்க்கத் தக்கவர் இளஞ்சிறாரேயாதலானும், தாயினது அன்பின் பெருக்கு ஒப்பற்றதாதலானும் இங்கு மைந்தரை முதலில் வைத்தோதினர். இது பற்றியே காதல்செய் மனைவியார் என்றதுமாம்.

கோதில் மங்கலநூல் தாலி - கோது - குற்றம். இங்கு இச்செயல் குற்றமற்ற இல்வாழ்க்கை யொழுக்கங் குறித்தலின் கோதில் எனத் தாலியின்மே லேற்றிக் கூறி னர். மங்கலநூல்-மங்கலத்துடன் வருவதானும், சுமங்கலியத்துவமாகிய தன்மை காட் டும் அடையாளமாதலானும் இவ்வாறு கூறியபடியாம். மணமகளின் கழுத்தில் மண மகன் மங்கலநூலணிவதுவே மணச்சடங்குகளில் இன்றியமையாப்பகுதி. நூலுடன் தாலியும் பிறவும் கோத்தணிவது பிற்கால வழக்குப்போலும். நூலேயேவிட்டுப் பொற் சரடு அணியும் இக்காளின் புது வழக்கு நூல் வழக்குக்கு மாறுபட்டதென்ப. "மங்கல நூல் சாத்தி" என்று திருவிளையாடற் புராணத்தில் மீனாட்சியம்மையார் திருமணப் படலத்தினும், "மங்கல நாணை மணிக்கள மார்த்து" என்று கந்த புராணத்தில் தெய்வ யானையம்மையார் திருமணப்படல (247) த்திலும் கூறுவது காண்க. மங்கல நூல் மட்டுமே சுமங்கலிகட்கு இன்றியமையாத தென்பதும், பெருங்கேடு வருங்கால் மங்கல நூலிற்கோத்த பொற்ருலியையும் வேறுபிரித்து எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலா மென்பதும் அறநூல் விதியாமாதலின் இங்கு மனைவியார் மங்கல நூலை மட்டும் அணிந்துகொண்டு தாலியை நூலினின்றும் பிரித்து எடுத்து நெற்கொள்ளக் கொடுத் தனர். கோதில் மங்கல நூல் என்ற இதனால் இச்செயலால் மங்கலத்துக் கிழுக்கின் றென்பதும் குறிப்பு. சுமங்கலித்துவத்தை நூலே குறிப்பதாம் என்பது "அம்பொன் மணி நூல்தாங்கா தன்னித்துயிர்க்கு மருள்தாங்கி" (திருநா. புரா - 84) என்றதனாலும் அறிக. " [illegible] " 9

840. அப்பொழு ததனைக் கொண்டு கெற்கொள்வா னவரும் போக
வொப்பில்குங் குலியங் கொண்டோர் வணிகனு மெதிர்வந் தூற்றுன் ;
"இப்பொதி யென்கொ?" லென்றூர்க் குள்ளவா றியம்பக் கேட்டு
மூப்புரி மூன்றூன் மார்பர் முகமலர்ந் திதனைச் சொன்னூர், கo

841. "ஆறுசெஞ் சடைமேல் வைத்த வங்கணர் பூசைக் கேற்ற
நாறுகுங் குலிய மீதே னுனின்று பெற்றேன் ; நல்ல
பேறுமற் றிதன்மே லுண்டோ ? பெறுப்பேறு பெற்று வைத்து
வேறினிக் கொள்வ தென்?"னென் றுரைத்தெழும் விருப்பின் மிக்கார்,

842. "பொன்றரத் தாரு"மென்று புகன்றிட வணிகன் றானு
"மென்றர விசைந்த ?"தென்னத் தாலியைக் கலய னீந்தார் ;
அன்றவ னதனை வாங்கி யப்பொதி கொடுப்பக் கொண்டு
நின்றிலர் விரைந்து சென்றூர் நிறைந்தெழு களிப்பி னேடும். கஉ.

840. (இ - ள்) வெளிப்படை. அப்பொழுது அத்தாலியினைக் கொண்டு கெற் கொள்ளும் பொருட்டு அவரும் போக, ஒப்பற்ற குங்குலியப் பொதியினைக் கொண்டு ஒரு வணிகன் எதிரே வந்து சேர்ந்தனன். "இந்தப் பொதி என்ன" என்று கேட்டவருக்கு அவன் உள்ளபடி சொல்ல அதனைக் கேட்டு மூப்புரியாகிய மூன்று நூல்அணிந்த மார்பினையுடைய அவர் முகமலர்ச்சியுடன் பின்வருமாறு சொல்வாராயினர், கo

841. (இ - ள்) வெளிப்படை. "கங்கையைச் சிவந்த சடையின்மேல் வைத்த அங்கணருடைய பூசைக் கேற்றதான நறுமணமுள்ள குங்குலியம் இதுவானால், நான் பெரும்பேறு இன்று பெற்றவனுயினேன் ; இதன் மேலும் நல்லபேறு வேறுண்டோ ?; பெறுதற்கரிய இப்பேற்றினைப் பெற்று வைத்திருந்தும், இனி வேறு கொள்ளத்தக்கது என்ன உளது ?" என்று எழுகின்ற விருப்பத்தில் மிகுந்தவராகி, கக

842. (இ - ள்) வெளிப்படை. "நான் உமக்குப் பொன்னேத்தர நீர் இக்குங்குலியத்தினைத்தாரும்" என்று கலயர் சொல்ல, வணிகனும் "தேவரீர் எதனைக் கொடுக்க இசைந்தீர் ?" என்றூன்; கலயர் தாலியை ஈந்தனர்; அப்போதே அவன் அதனை வாங்கிக் கொண்டு அத்தப் பொதியைக் கொடுத்தான். அதனைப் பெற்றுக் கொண்ட கலயர் அங்குச் சிறிதும் நில்லாமல் உள்ள நிறைந்த பெருமகிழ்ச்சியுடன் விரைந்து சென்றனர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

840. (வி - ரை) **அவரும் நேற்கொள்வான் போக** - என்க. **கொள்வான்**-கொள்ளும் பொருட்டு. வானீற்று வினையெச்சம்.

**ஒப்பில்** - ஒப்பற்ற தன்மையாவது இன்று அது கொண்டதனால் விளையும் பயன் குறித்தது.

**ஓர் வணிகன்** - குங்குலியமும் ஒப்பற்றது. அதனைக் கொணர்ந்தவனும் ஒப்பற்றவன் என்பார் ஓர் என்றூர். இறைவனே இவ்வாறு எழுந்தருளினனே என்பதும் குறிப்பு. "திருத்தொண்டர் ஒருவர்" என்ற காரைக்காலம்மையார் புராணத்(17)திலும் இக்குறிப்புக் காண்க.

**என்றூரிக்கு** - என்று கேட்டாராகிய அவருக்கு. **மார்பர்** - கேட்ட அந்த மார்பர் என அகரச்சுட்டு வருவிக்க. **முப்புரிநூல்** - 835 பார்க்க. மக்களும் (838)மைந்தரும் (839) என்றமையால் மூன்று இழைநூல் மூன்று அணிந்தவர் என்க.

**முகமலர்ந்து** - முகமலர்ச்சி அகமலர்ச்சியாலாகிய மெய்ப்பாடு. அகமகிழ்வின் காரணம் நாயனூர் திருவாக்கில் வைத்து ஆசிரியர் கூறுகின்றூர். "அடித்தது காட்டும்

பளிங்குபோ னெஞ்சங், கடுத்தது காட்டு முகம்" என்பது குறள். முகமலர்ச்சியாலன்றி அகமலர்ச்சி காணவொண்ணுதாதலின் முகமலர்ச்சி கூறவே இரண்டும் பெறப்பட்டது. சிந்தைமகிழ முகமலரும். அதற்கேற்ற மொழி பின்னர் வரும். அம்முறையில் வைத்து ஓதியதும் காண்க. இதனை - வரும்பாட்டிற் கூறுகின்றபடி னை

வேண்ணூல்மார்பர்—என்பதும் பாடம். 10

841. (வி - ரை) சேஞ்சடைமேல் ஆறு வைத்த எனமாற்றுக. வைத்தஅங்கணர்- அங்கணராதற்கு அடையாளங்காட்டியபடி. சடைமேல் ஆறுவைத்ததனால் தமது அங்கண்மையாகிய அருட்டிறத்தைக் காட்டியவர் என்பது குறிப்பு.

அங்கணர் பூசைக்கேற்ற - எனவும், வேறு இனிக்கொள்வதென் ? எனவும் கூறியவதனால், பிறவெல்லாவற்றினும் அவர் பூசையேவிரும்பிச் செய்யத்தக்கது என்பதும், அதுவே உறுதிதரும் அருளைப்பெறச் செய்வதாம் என்பதும் நாயனார் திருவுள்ளத்திற் கருதினார் என்றபடியாம்.

நல்ல பேறு - நன்மையெல்லாம் தரத்தக்க பேறு. இதனால் தாம் கொள்ள எண்ணிவந்த நெல் முதலிய எவற்றைக் கொண்டாலும் அவை நல்ல பேறுகா என்று நாயனார் எண்ணினார் என்பது குறிப்பு.

வேறு இனிக்கொள்வதென் ? வேறு - என்றது பூசைக்குரியவற்றின் புறம் பானவற்றைத்தக்கும் மனைவியார் மக்கள் சுற்றத்தார் முதலியோர்க்கும் பசித்துன்பம் போக்க நெற்கொள்ளும் முயற்சியை வேறு - என்று ஒதுக்கி அவையெல்லாவற்றினும் அங்கணர்பூசையினையே சிறந்த தெனக் கொண்டது மனைவிமக்களுடன் கூடிய இல் வாழ்க்கையினுள்ளிருந்தும் சிவபெருமானிடத்து இவர்க்கிருந்த அசையாஅன்பின் நிறங் காட்டியது. " விரும்புநல் விளக்குத் தூபம் விதியினு லிடவல் லார்க்குக், கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்டனாரே " என்ற அப்பர் சுவாமிகளது மெய்த்திருவாக் கின்படி மிடியும்பசியும் கவலையும் முதலிய துன்பங்களெல்லாம் களைந்து பூசையின் இன்பமே கரும்பின் கட்டிபோல ஊறுகின்றதனை இங்குக் கண்டுகொள்க. இதன் பின்வினைவகளும் இவ்வாறே இனியனவாதலும் உன்னுக.

இன்று நான் நல்ல பேறு பெற்றேன் - என்க. பெற்றேன் - பெறுவேன் என எதிர்காலத்துக் கூறற்பாலது பெற்றேன் என இறந்தகாலத்தில் வைத்துப்பற்றி இறந்த காலத்தில் வந்தது. நல்லபேறு என்றதனையே வற்புறுத்திப் பின்னரும் பெறப்பேறு என்றார்.

இதன் மேல் மற்றுப்பேறு உண்டோ ? இல்லை என்றதாம். ஓகாரம் எதிர்மறை குறித்தது. பேறு என்ற சொல்வருவிக்க.

பெறப்பேறு - எல்லாராலும் பெறுதற்கரிய பேறு. பேறு என்பது இன்மை குறிக்காது பெறுதற்கு அருமை குறித்து நின்றது. " பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும், பெறுதற் கரிய பிரானடி பேணார், பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம், பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே " என்ற திருமூலர் திருமந்திரக்கருத்தை இங்கு வைத்துக் காண்க. குங்குலிய மூட்டுதல் மிகச்சிறந்த பேறு என்று காண்பதற்குத் திருவையாற்றில் தெற்குக்கோபுரவாயிலில் ஆட்கொண்டார் சந்நிதியில் இன்றும் குங்குலியக் குழியில் நிரந்தரமாய் அது எரிக்கப்படுதல் காண்க-

வைத்து - உம்மை தொக்கது. வேறு - தாம் கருதிவந்த நெல் முதலாகிய உணவுப்பண்டம். இவற்றை வேறு என்றதுக்கியது அவை உடம்போடு ஒழியும் பயன் றருதலல்லது இதுபோல உயிர்க்குறுதி தராமை கருதி.

உரைத்து - பிறரொருவரையும் பாராது தமக்குத்தாமே சொல்லிக்கொண்டு.

எழும் விருப்பின் மிக்கார் - உள்ளிருந்து மேன்மேல் எழுகின்ற விருப்பத்தினை மிகுதியும் உடையாரானார்.

ஈதே—என்பதும் பாடம். 11

842. (வி - ரை) **பொன் தாத் தாநும்**-இது வணிகனை நோக்கி நாயனார் கூறியது விலையாகப் பொன்னை நான் தர அதனைப் பெற்றுக்கொண்டு இக்குங்குலியப் பொதியினை நீர் தாரும்.

**பொன்** என்றது இங்குப் பொன்னாலாகிய அணியைக் குறித்து வந்தது போலும். நாடு ணை ா தீ ீ ே ் ு ை ா ி ி ை ் ு ை ா ி ி ை ் ு ை ா ி ி ை

843. விடையவர் வீரட் டானம் விரைந்துசென் றெய்தி யென்னை
யுடையவ ரேம்மை யாளு மொருவர்தம் பண்டா ரத்தில்
அடைவுற வொடுக்கி யெல்லா மயர்த்தெழு மன்பு பொங்கச்
சடையவர் மலர்த்தாள் போற்றி யிருந்தனர் தமக்கொப் பில்லார். கஙூ

(இ - ள்) வெளிப்படை. தமக்குஒப்பில்லாதவராகிய கலயனார், விடையினையுடைய சிவபெருமானது வீரட்டானத்திருக்கோயிலுக்கு விரைவாகச் சென்று சேர்ந்து என்னையடிமைப் பொருளாக உடையவரும் நம்மை ஆளுகின்ற ஒருவரும் ஆகிய இறைவருடைய பண்டாரத்திலே அந்தப் பொதியினை முழுதும் சேமித்துப், பிற எல்லாவற்றையும் மறந்து எழுகின்ற அன்பு பொங்க அந்தச்சடையவருடைய மலர் போன்ற பாதங்களைத்தொழுது கொண்டு அங்கேயிருந்தனர்.

(வி - ரை) விரைந்து சென்று எய்தி - விரைவு அவரது ஆர்வங்குறித்தது. மேற் பாட்டுப் பார்க்க.

என்னை உடையவர் - எம்மை ஆளும் ஒருவர் - இது கவிகூற்று. உயிர்ப்பொருள் உயிரில் பொருள், அறிவுப் பொருள் அறிவில் பொருள் என்ற பகுப்புக்களிலே பட்ட எல்லாவற்றையும் தமது அடிமையாகவும் உடைமையாகவும் கொண்டவர் இறைவர் என்பது. எல்லாமுன் உடைமையே எல்லாமுன் அடிமையே " என்ற தாயுமானார் பாடலும் காண்க. ஒருவர் - இவ்வாறுள்ள தலைவர் ஒருவரே என்பது வேத முதலாகிய எல்லா உண்மை நூல்களின் துணிபு. " ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்றேபதி " என்பது (சிவஞானபோ -2- உதாரணம்) ஞான நூல்.

பண்டாரம்-சேமம். பொக்கிஷம் என்பர். இறைவனது பெருந்திருவாகிய முத்தி சாதனங்களை உபதேசிக்கும் தேசிகர்களைப் பண்டார சன்னிதிகள் என்று வழங்கும், " அடியவர்க்கு மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே " திருவாசக முதலியனவும் காண்க.

அடைவுற ஒடுக்கி - அப்பொதியிற் கொண்ட குங்குலியமுழுதும் படி சேமித்து.

எல்லாம் அயர்த்து - பிற எல்லாவற்றையும் மறந்து. அவை, மனவிமக்களும் சுற்றமும் தாமும் பசியால் வருந்துதலும், அதற்காக நெற்கொள்ளத் தாலிகொண்டு வந்ததும் பிறவுமாம்.

அயர்த்தல் - மறத்தல். " அயர்த்தனையோ நம்மைப் பாடுதற்கு " (திருஞான - புரா - 1010), " எம்பிரான்றனை யெறியா தயர்த்தேன் " (சாக்கியர் புரா - 15) முதலியவை காண்க. எல்லாம் ஆர்ந்தெழும் என்பது பாடமாயின் முற்றும் நிறைந்து மேலெழுகின்ற என்க. [illegible]

சடையவர் - 830-831 முதலியவற்றில் இதுபற்றி முன் உரைத்தவை பார்க்க.

தமக்கோப்பில்லார் (ஆதலின்) இருந்தனர் என்க. இவ்வாறு செய்தலும், பிறர் அன்பு பொங்க இருத்தலும் பிறர்க்கு அரிதாமாதலின் ஒப்பில்லார் என்றார்.

நம்மையாளும்—என்பதும் பாடம். 13

844. அன்பரங் கிருப்ப நம்ப ரருளினு லளகை வேந்தன்
றன்பெரு நிதியங் தூர்த்துத் தரணிமே னெருங்க வெங்கும்
பொன்பயில் குவையு நெல்லும் பொருவில்பல் வளனும் பொங்க
மன்பெருஞ் செல்வ மாக்கி வைத்தனன் மனையி னீட. கச

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறு அன்பர் அங்கே திருவீரட்டானத்தில் இருக்தாராக, நம்பரது திருவருளினாலே குபேரன் தனது பெருநிதியத்தைப் பூமியில்

கெருங்கும்படியாகக் கொண்டுவந்து அவரது திருமனையில் எவ்விடத்தும் நீடியிருக்கும் படி பொன் நிரம்பிய குவைகளும் நெல்லும் ஒப்பற்ற பிறவளங்களும் மேன்மேற் பொங்க நிலைத்த பெரிய செல்வமாக்கி வைத்தனன்.

**(வி - ரை) அன்பர் அங்கு இருப்ப** - அன்பு பொங்கிய நிலையினராதலின் அங் கிருந்தார் என்பது குறிக்க **அன்பர்** என்ற சொல்லாலும், தம்மை நம்புவார்க்கு எளிய ராய்க் காத்து நிற்கின்றவராதலின் **நம்பர்** என்ற சொல்லாலும் கூறினர். " எம்பிரா னெம்மை யாளு மிறைவனே யென்று தம்மை,நம்புவார்க் கன்பர் போலு நாகவீச் சரவ ளரே " என்ற திருநேரிசையும் காண்க. இக்கருத்துப்பட மேற்பாட்டில் " என்னை யுடையவர் எம்மை யாளும் ஒருவர் " என்றதும் காண்க. தினமும் ஆன்மார்த்தமாகத் தாம் வழிபடும் தலமாகிய திருநாகேச்சரத்தினது மேற்கூறிய தேவாசிரியனுக் குறிப் பினுல் ஆசிரியர் இவ்வாறு குறித்தனர் போலும். நம்புவார்க்கன்பர் - நம்பர் - என்ற தன்மை, மார்க்கண்டர்க்காக மறலியை உதைத்தவாற்றுல் இத்தலத்துக்குச் சிறப்பாக உரியதுமாம்.

**அருளினுல்** - ஆணையினுல். " தன்க டன்னடி யேனையுந் தாங்குதல், என்க டன் பணி செய்து கிடப்பதே " என்ற திருவாக்குச் சிந்திக்க.

**அளகை வேந்தன்** - குபேரன். திசைகாவலாளர்க ளெண்மரில் அடியார்களுக்கு நிதி கொடுக்கவென்று வடதிசைக் காவலனுகச் சிவபெருமானுல் நியமித்து வைக்கப் பட்டவன் ; சிவபெருமான் தோழன் எனவும், நிதிக்கிழவன் எனவும் பெறுபவன். 444 - 465 பார்க்க.

**பொன் பயில் தூவை** - தூவை - குவி என்னும் பகுதி திரிந்து ஐ விகுதிபெற்றது. **பொற்தூவைகள்** இனி வேண்டும் குங்குலியம், நெல் முதலியவை கொள்ளவும், நெல் இப்போது வேண்டும் குறைவறுத்தற்கும், **பல்வளன்** - பிற உணவுப் பண்ட முதலிய வற்றுக்கும் உதவும் பொருட்டு இவ்வாறு பலவும் வைக்கப்பட்டன என்றபடி. பொன்னை மட்டில் வைத்தால் அதுகொண்டு எனைய எல்லாம் பெறலாமாதலின் பிறவற்றை வைத்தல் எற்றுக்கு ? என்னின், பொன் கொண்டு நெல் முதலியவைபெறத் தாமத மாம் ; அதுவரை அன்பரும் குடும்பமும் பசித்திருப்பதனை இறைவர் பொறாதலின் உடனே சமைத்தற் பொருட்டு எல்லாம் வகைவகையாக வைக்க அருளினர் என்க. நெல்லை அரிசியாக்கும் சிரமமும் தாமதமும் பொறுத இறைவர் அரிசியும் வைத்தனர் என 846-ல் கூறியதுங்காண்க.பசித்திரப்போர்க்குக் காசு கொடுப்பதும்,பொன்னென்றே வேண்டுவதென்று தேடியலைவதுமாகிய இந்நான் வழக்குக்கள் சிறப்பிலவென்க.

**மன்பெரும் செல்வம்** - சிவனுக்கு அடிமைசெய்ததனுற் போந்த புண்ணியச் செல்வமாகலின், ஏனைச் செல்வங்கள்போல் அழிந்துபடாது நிலைத்த பெரிய செல்வ மாயிற்று என்றார். இவை புண்ணிய விளைவாதலாற் பின்னர் ஆண்டானது பூசைக் கும், அடியார்க்கும் திருக்கூட்டத்துடன் எழுந்தருளிய சைவசமய பரமாசாரியர்களிரு வரின் பூசைக்கும் உதவின என்பதும் குறிப்பு. 852 பார்க்க. "நின் பொருள்க ளெல்லா, மறத்தாற்றி னீட்டப் பட்ட வினையவை புனித மான, திறத்தாலே நமக்கு நம்மைச் சேர்ந்தவர் தமக்கு மார்வ, முறத்தாவில் வாத வூர னுதவினன்..." (மண்சுமடை - 62) என்று திருவிளையாடற் புராணத்துட் கூறியபடி சிவதருமத்தாற் போந்த பொருள் களே சிவதருமங்களுக்குதவுமென்க.

14

845. மற்றவர் மனைவி யாரு மக்களும் பகியால் வாடி
யற்றைநா ளிரவு தன்னி லயர்வுறத் துயிலும் போதில்
நற்றவக் கொடிய னுர்க்குக் கனவிடை நாத னல்கித்
தெற்றென வுணர்ந்து செல்வங் கண்டபின் சிந்தை செய்வார், கரு

846. கொம்பனா ரில்ல மெங்குங் குறைவிலா நிறைவிற் காணும்
அம்பொனின் குவையு நெல்லு மரிசியு முதலா யுள்ள
வெம்பிரா னருளா மென்றே யிருகரங் குவித்துப் போற்றித்
தம்பெருங் கணவ னார்க்குத் திருவமு தமைக்கச் சார்ந்தார். கசு

845. (இ - ள்) வெளிப்படை - இவ்வாறிருந்த அவருடைய மனைவியாரும் மக்களும் பசியினால் வாட்டமுற்று அன்று இரவில் அயர்ந்து தூங்கும்போது நல்ல தவத்தின் கொடிபோல்வாராகிய மனைவியாருக்குக் கனவில் இறைவன் இவ்விளைவுகளை உணர்த்தி யருளினாராக, அவர் உணர்ந்து எழுந்து கனவிற்கண்டபடி உள்ள செல்வங்களையெல்லாம் கண்டபின் மேல்வருமாறு எண்ணுவாராயினர், கரு

846. (இ - ள்) வெளிப்படை - இளந்தளிர்க் கொம்புபோன்ற அவர், தமது திருமனை முழுமையும் குறைவில்லாத நிறைவினாற் காணப்பட்ட அழகிய பொற்குவையும், நெல்லும், அரிசியும் முதலாயுள்ள எல்லாம் எமது பெருமானது திருவருளேயாம் என்று சிந்தித்து, இருகைகளையும் சிரசின்மேற் குவித்துத், துதித்துத், தமது நாயகராகிய ஒப்பற்ற பெரிய நாயனாருக்குத் திருவமுது சமைக்கச் (பாகசாலையைச்) சார்ந்தனர். கசு

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

845. (வி - ரை) **பசியால் வாடி - அயர்வுறத் துயிலும்போதில்** - முன்னர் இரு பகல் உணவின்றிப் பசித்திருந்தனர் (839). மூன்றா நாளாகிய அன்று நெற்கொள்ளும்படி தாலியைக்கொடுத்தும் நெல் வாராமையால் இன்றும் பசித்தனர்; ஆதலின் வாடி மிகக் களைத்து அயர்ந்து துயின்றனர். எத்தனை வாடினும் பகலிற் றுயில்கொள்ளுதல் ஆகாது என நூல்கள் விதித்தலின், அயர்வும் பசியும் மிக்கிருந்தும் இவர்கள் பகலிற்றுயிலாது **இரவுதன்னிற் றுயின்**றனர் என்றார்.

**நல்தவக் கொடி அனார்** - நல்ல தவத்தின்முளைத்து விளைந்த கொடிபோன்றவர். சிவபூசை அடியார்பூசையாகிய தவமேசெய்யும் நாயனாராகிய கொழு கொம்பிற்படர்ந்த கொடி என்றலுமாம்.

**நாதன் கொடி அனார்க்குக் கனவிடை நல்க** என்க. **நல்க** - இவ்விளைவுகளை உணரும் உணர்ச்சியை நல்க என **நல்க** என்றதற்குச் செயப்படுபொருள் வருவிக்க.

நாதன் இவ்விளைவுகளைக் கலயனார்க்கு அறிவிக்காமல் மனைவியார்க்கு அறிவித்ததும், பின்னர் நாயனார் இவற்றைக்கண்டு மனைவியாரைக் கேட்டு அவர்சொல்ல அறிந்து கொள்ளுமாறு வைத்ததும் என்னை எனின்?, இவையாவும் அம்மையார் தந்த கோதின் மங்கலநூற்றாலி கொடுத்துக் குங்குலியப்பொதி கொண்டதன் விளைவாதலானும், முன்னர் அறிந்து எழுந்து நாயனார் வருமுன்பே அமுது சமைத்து அவரையும் அடியார்களையும் ஊட்ட வேண்டுமாதலானும் மனைவியார்க்கு அறிவித்ததும், பின்னர்ப் "பாலடிசில் உண்டு பருவரல் ஒழிக" என்று நாயனார்க்கு அறிவித்ததும் ஆம் என்க. மனைவியாரது கற்பின் பெருமையும் அடியார்களைப் பன்னாள் அமுதூட்டிய அன்பின் பெருமையும் காட்டியபடியுமாம்.

**தெற்றென உணர்ந்து கண்டபின்** - கனவில் தெளிவாகக்கண்டது போன்று, கனவுநிலை நீங்கி நனவு நிலைபெற்றுக் கண்ட பின்பு என்றதாம். **உணர்ந்துகண்டபின்** - துயிலுணர்ந்து கண்டபின் என்றலுமாம். 15

846. (வி - ரை) கொடியனார்க்கு - கனவிடை - நல்க - உணர்ந்து - கண்டபின் (அக்)கொம்பனார் - சிந்தை செய்வார்-காணும் - பொன்குவை - முதலாயுள்ள (வற்றை) "அருளாம்" என்றே - போற்றி - அமுது அமைக்கச்சார்ந்தார் என்று இவ்விரண்டு பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க.

சிந்தை செய்வா(ராய்) அருளாம் என்றே போற்றி - என்க.

குறைவிலா நிறைவு - "குறைவிலா நிறைவே" என்ற திருவாசகத்தை இங்கு நினைவு கூர்க. ஒன்றுக்கொன்று என்றும் குறைவுபடாத நிறைவான்தன்மை. குறை விலா நிறைவுடைய இறைவர் தமது தன்மைக் கேற்பக் கொடுத்தார் என்க. காணும் - காணப்படும். படுவிருதி தொக்க செய்ப்பாட்டு வினைப்பெயரெச்சம்.

உள்ள - உள்ளவை அகரவீற்றுப் பலவின்பாற் பெயர். இரண்டனுருபுதொக்கது.

அருளாம் என்றே காங்குவித்துப் போற்றி - அத்தப் பொன் - நெல் - அரிசி முதலியவற்றை அவ்வப்பொருள்களாகக் காணுது எம்பெருமானுடைய அருளேயே கண்டார். ஆதலின் காங்குவித்துத் தொழுது துதித்தார். இவை அருளால் வந்தன என்று அருளால் உணர்ந்து, அருள் என்று போற்றினர். திருவருளாற் போந்த பொருள் களைத் திருவருட் சொரூபமாகவே கண்டு வணங்குதல் பெரியோர் இயல்பு. திருவாரூர் துறையில் முத்துச்சிவிகை இறைவனருளாற் போந்ததென்று கனவில் உணர்த்த உணர்ந்த திருஞானசம்பந்தராயனார் அதனை நனவிற் கண்டதும், "அரத்துறை அடி கள்தம் மருளே" என்று திருப்பதிகம்பாடி வணங்கியதும் இங்கு நினைவுகூர்க. "நல் லாள் தன்பால் புகலிவேந்தர் கண்ணுதல் கருணை வெள்ள மாயிர முகத்தாற் கண் டார்" என்ற ஆருடையபிள்ளையார் புராணம் (1108) காண்க.

தம்பெருங் கணவனார் - உலகர்களுள் உடம்போடொழியும் ஏனைக்கணவர்கள் போலல்லாது, திருவருள் வீடளவிலே கூட்டுவித்து உயிர்க்குறுதி தரும் கணவர் நாயனார், என்ற குறிக்கப் பெருங்கணவனார் என்றும், கொழுகற் றொழுதெழும் பெருங்கற்பு வாய்த்தவரென்று குறிக்கத் தம் என்றும் கூறினர். 16

847. காலனைக் காய்ந்த செய்ய காலனார் கலய ஞாரம்
ஆலுமன் புடைய சிந்தை யடியவ ரறியு மாற்றுற்
"சாலநீ பசித்தா யுன்றன் றடநெடு மனையி னண்ணிப்
பாலினின் னடிசி லுண்டு பருவர லொழிக" வென்றார். கள

(இ - ள்) வெளிப்படை. காலனை உதைத்துருட்டிய சிவந்த காலினையுடைய சிவ பெருமான் கலயனாராகிய, திருவடியில் நிறைந்த அன்புபூண்ட சிந்தையுடையவர் அறி யும்படி "நீ மிகப்பசித்தாய்; உனது விசாலமாகிய பெரிய வீட்டிற் சேர்ந்து பாலுடன் கலந்த இனிய உணவை உண்டு பசித்துன்ப நீங்குவாயாக" என்றருளிச்செய்தார்.

(வி - ரை) காலனைக் காய்ந்த செய்ய காலனார்-851 பார்க்க. காலன் - காலனார் சொற்பின் வருநிலை. காலன் - இயமன்-கூற்றுவன். சிவபெருமானது ஆணையின்படி காலத்தை யளந்து அதன் நிரமப்படி உயிர்களைக் கொண்டு சேர்ப்பவன். காலனார் - காலினை உடையவர். செய்ய காலனார். உதைத்தமையாற் சிவந்தது என்பதும் குறிப்பு. சிவப்பு இராசசத்தின் நிறமாதலின், "காலனருயிர் மாளக்கறுத்தன" என்றபடி அவரது சினத்தைத் திருவடியின்மேல் ஏற்றிக் கூறினர் என்றலுமாம். "நின்போ லமரர்கள் நீண்முடிச் சாய்த்து நினைந்துகுத்தி, பைம்போ தழுக்கிப் பவளந் தழைப்பன" என்ற திருவிருத்தத்தின் கருத்தும் காண்க.

அடி ஆலும் அன்புடைய சிந்தையவர்-எனக் கொண்டுகூட்டுக. திருவடியினில் நிறைந்த அன்பு கொண்ட சிந்தையாதலின் அதனுள் தமது பசியும் மனைவி மக்கள் முதலியோர் பசி முதலிய எவையும் மூளையா; அதனால் அவர் அறியும்படி இறைவன் அறிவித்தார் என்பார் அறியும் ஆற்றல் என்றார். திருவடித் தியானத்தில் உறைத்து நிற் பார்க்கு உலகமும் அதனுள் அனுபவங்களும் தோன்றா. இதனை "மண்டு காத லருச் சனையில் வைத்தார் மற்றொன் றறிந்திலரால்" என்ற சண்டீசநாயனார் புராணத்திலும் பிறண்டும் காண்க. இதனை உணர்த்தவே "எல்லாம் அயர்த்தெழு மன்பு பொங்கச், சடையவர் மலர்த்தாள் போற்றி யிருந்தனர்" (943) என்றது காண்க.

**காலநீபசித்தாய்** - நாயனார் தமது பசியையும் தாம் அறியாது சிவத்தியான நிட்டையில் வீற்றிருந்தாராதலின், அவரது பசியை அவர்க்கு அறிவுறுத்தவே " சாலநீ பசித்தாய் " என்றிறைவன் அருளியபடி. " உன் பசியினையும் உன் மனைவி மக்கள் முதலியோர் பசியினையும் நீ அறியாய் ; நாம் அறிவோம். நாம் அறிவிக்க நீ அறிவாய் " என்றது குறிப்பு. மனவசிகர நிபுணனுல் வசிகரிக்கப்பட்ட ஒருவன் அந்நிபுணன் சொல் லியவாறெல்லாம் அனுபவங் கூடியும், அவன் சொல்லாதவழி அனுபவம் கைகூடாமலும் உள்ள நிலையை இங்கு வைத்துக் காண்க. " அறிவிக்க வன்றி யறியா வுளங்கள் " என்பது ஞானநூல். ஏனைய உயிர்கள் ஆணவ மயக்கிலாழ்ந்து கிடத்தலின் இறைவனை அறியா. இங்கு நாயனார் சிவனடி பரவிய சிந்தையில் ஆழ்ந்து கிடத்தலின் உலகை அறியாதிருந்தனர் ; ஆதலின் **அடியவர் அறியும் ஆற்றல்** என்றார்.

**பாலின் இன் அடிசில்**-பாலுடன் கலந்த இனிய அமுது. **இன்** உவம உருபாகக் கொண்டு, தாயினது பாலினும் அதிக சுவையும் குணமும் கொண்ட அடிசில் என்று ரைத்தலுமாம். " தாய்க்குப் பின் தாரம் ", " மனைவி கணவனை ஊட்டுவித்துக் காப்ப தில் தாய்போல இருத்தல் வேண்டும் " என்பன உலகநூல் நீதிகளாதலின் இங்கு மனைவியார் இனி ஊட்டப்போகும் அடிசில் தாயின் பாலினும் இனிமையுடையதாம் என்பதும் குறிப்பு. மற்றொரு வகையாலும் இவ்வடிசில் இனிதேயாம் ; என்னை ?; எல்லாவுயிர்களுக்கும் " பாணினைத் தூட்டும் தாயினுஞ் சாலப் பரிந்து " அளிக்கும் தாய்தந்தையாகிய நம்பாருளிய அடிசிலாதலின் இது "அன்னமூலத் தீம்பாலி னரிய சுவைத்"தேயாம் என்க. நம்பாருளினுல் (844) எம்பிரான் அருளாம் (846), அருள்தர (849) என்று அருட்சத்தியைப் போற்றியது காண்க. இனி, **பால்** பான்மை எனக் கொண்டு, உனது அன்பின் தன்மைக் கேற்ற பான்மையினுல் வந்த இனிய அடிசில் என்றுரைத்தலு மொன்று.

**பருவால் ஒழிக** - இப்போது உன் பசி முதலியதன்பங்களை நீ அறியாய் ; நாம் அறிவிக்க அவற்றை அறிவாயாதலின் அத்துன்பம் தீர்க. ஒழிக என்ற அணிபினுல் இப்பிறவியில் மட்டுமன்றி இனி எஞ்ஞான்றும் அத்துன்பம் உனக்கில்லாமல் தீர்வ தாகிய முத்தி நிலையும் பெறுக என்பதும் உடன்குறிக்கப்பட்டது.

**என்றார்** - அசரீரி எனப்படும் தமது எங்கும் நிறைந்த ஒலியினுல் அவர் செவிப் புலப்படுமாறு கூறியருளினார். நேரே காட்சிதந்து சொல்லியருளினர் என்பாருமுண்டு. அஃதுரையன் றென்க.

17

848. கலயனு ரதனைக் கேளாக், ைகதொழு திறைஞ்சிக், கங்கை
யலைபுனற் சென்னி யார்த மருண்மறுத் திருக்க வஞ்சித்,
தலைமிசைப் பணிமேற் கொண்டு சங்கரன் கோயி னின்று
மலைநிகர் மாடவீதி மருங்குதம் மனையைச் சார்ந்தார். கஅ

(இ - ள்) வெளிப்படை. கலயனார், அவ்வாறு இறைவர் கூறிய அருளிப்பாட்டி னைக் கேட்டுக் கைகளாற்றொழுது வணங்கிக், கங்கையாற்றினைச் சூடிய சிரத்தினை யுடைய பெருமானது திருவருளினை மறுத்து மனையிற் போகாது கோயிலில் தங்கி யிருக்க அஞ்சியவராகி, அப்பணியைச்சிரமேற் கொண்டு, சங்கரனது திருக்கோயிலி னின்றும் போந்து, மலைபோன்ற மாடங்கள் நிறைந்த திருவீதியில் சேர்ந்து, அங்குத் தமது திருமனையினைச் சார்ந்தனர்.

(வி - ரை) **அதனை** - அவ்வாறு இறைவன் அறிவித்த அதனை. **கேளா** - கேட்டு. செவிப்புலப்படக் கேட்டு.

**கைதொழுது இறைஞ்சி** - திருவருள் வெளிப்பாட்டினைக் கண்டபோது இறைஞ்சு தல் முறையாம் ; அதுவே அடியார்களினியல்புமாம். மனைவியார் பொன்குவை நெல்

அரிசி முதலானவற்றைக் கண்டபோது அவை எம்பிரான் அருளாமென்றே உணர்ந்து அவற்றை இருகரங்குவித்துப் போற்றினர் (846) என்றதும் காண்க.

**கங்கை அலைபுனற் சென்னியார்**-841.முதலியவை பார்க்க. **அருள் மறுத்து இருக்க அஞ்சி** - அதிகாலையாதலின் தூபத்திருப்பணியை நிறைவேற்றாது செல்வதற்கு மனமில்லையாதலானும், மனையில் மூன்று பகல் உணவில்லாமையாலும் பெற்கொள்ளக் கொணர்ந்த திருமங்கிலியத்தினையும் குங்குலியப் பொதிகொண்டு சேமித்து விட்டமையாலும், பொன் - நெல் - அரிசிமுதலிய வளங்களோத்தாது அம்மையார்க்கு அறிவித்தபடி இறைவன் இவர்க்கு அறிவியாமையாலும், மனையிற் சென்று பாலடிசில் உண்ண ஒண்ணுதென அறிதலால் இங்குத்திருக்கோயிலில் இருத்தலையே விரும்பினர் நாயனார்; ஆனல் அருளாமறுத்து அவ்வாறு இருத்தற்கு அஞ்சினர் என்க. **இருக்க** - மனையிற் செல்லாது திருவீரட்டானத்தில் இருக்க. **பணி தலைமிசை மேற்கொண்டு** என்க. **மேற்கொள்ளுதல்** - தாங்குதல். **தலைமிசை மேற்கொள்ளுதல்** - தலைமையாகப்பூண்டு அதன்படி நின்று கடனாற்றுதல். **பணி** - பணிக்கப்பட்டதனை.

**சங்கரன் கோயில்** - திருவீரட்டானம். **சங்கரன்** - சுகத்தைச்செய்பவன் - சிவபெருமான். இங்கு நாயனாது துன்பமெல்லாம் போக்கி யின்பஞ்செய்கின்றாராதலின் இப்பெயராற் கூறினர். இங்கு வீரஞ்செய்தமையாற் காக்கப்பட்ட மார்க்கண்டருக்கும் உதைபட்ட காலனுக்கும் ஒருங்கே துன்பநீக்கமும் இன்பஆக்கமுஞ் செய்ததனையும் சிந்திக்கும்படிச் **சங்கரன்** என்றதும் காணத்தக்கது.

**மலிநிகர் மாடம்** - மலிபோன்ற பெரியமாடங்கள் என்றபடி. **வீதிமருங்கு** - வீதியில். இதனல் நாயனாது திருமனை மாடவீதியில் இருந்ததென் றறியப்படும். கீழை மாடவீதியினை அடுத்த உள்வீதிப்பக்கம் அந்தத் திருமனை இருந்ததாகக் கர்ணபரம்பரையாக ஓர் இடம் இன்றும் சுட்டி வழங்குகின்றது.

"**உன்தன் தடநெடு மனையில் நண்ணி**" என்று இறைவர் அருளிய சிறப்புப் பெற்றதாதலின் ஆசிரியர் தாமும் **மாடவீதி மருங்கு தம்மனை** என்று சிறப்பித்துக் கூறினர்.

**சார்ந்தார்** - நற்சார்பு என்ற சிவஞானநூற் கருத்தினை நினைவூட்ட இச்சொல்லாற் கூறினர். 18

849. இல்லத்திற் சென்று புக்கா நிருகிதிக் குவைக ளார்ந்த
செல்வத்தைக் கண்டு, நின்று, திருமனை யாரை நோக்கி,
"வில்லோத்த நுதலா! யிந்த விளைவெலா மென்கொ?" லென்ன,
"அல்லோத்த கண்ட னெம்மா னருடர வந்த" தென்றார். ஙஙூ

(இ - ள்) வெளிப்படை. நாயனார் தமது திருமனையிற்சென்று உள்ளே புகுந்தார். பெரிய நிதிக்குவைகளோடு ஏனைச்செல்வங்களை யெல்லாங்கண்டு, நின்று, தமது திருமனைவியாரை நோக்கி, "வில்போன்ற நெற்றியையுடைய பெண்ணே! இந்த விளைவுகள் எல்லாம் வந்தவாறு என்ன?" என்று கேட்க, அவர் "கரிய இருள்போன்ற நிறம்பொதிந்த திருநீலகண்டனுகிய எம்பிரான் அருள்தர இச்செல்வம் வந்தது" என்று கூறினர்.

(வி - ரை) **இல்லம்** - வீடு. **அம்** - சாரியை. **நிருநிதிக் குவைகள் ஆர்ந்த செல்வம்** - பொன் குவைகளும் நெல்லும் அரிசியும் முதலாயின வளங்கள் **செல்வம்** எனப்பட்டன. குவைகளோடு நிறைந்த. **ஆர்தல்** - நிறைதல்.

**திருமனையாரை** - இறைவனது திருவருளினை முன்னர்ப்பெற்று விளங்கினர் என்றும், அவரது கற்பின் பெருமையும் அவர் தந்த தாலியின்சிறப்புமே இச்சரித விளைவுக்குக் காரணமாயின என்றும் குறிக்க இவ்வாறு கூறினர். அவர் தந்த திருத்தாலி மீட்டும் அவரது கழுத்தில்வந்து பொருந்திப் பிரகாசித்தது என்பதும் குறிப்புப் போலும்.

**வில்ஒத்த நுதல்**-பெண்மை யுறுப்பிலக்கணங்களுட்டலையிற் றலைமையாயினதைக் குறிக்கவே ஏனையவெல்லாம் உடன்குறிக்கப்பட்டன.

**வீளைவு எல்லாம்** - பொன்முதலிய பல வளங்களையும் குறிக்க **எல்லாம்** என்றார். பொன்னும் நிலத்தினின் வீளைவு என்றே காணப்படும். **என்கோல்** - வந்த வரலாறு என்பது வருவிக்க.

**அல்லோத்த கண்டன் எம்மான் அருள்** - சிவபெருமானது திருவருட் பெருமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் திருநீலகண்டத்தினை இங்குக் குறித்தார். நாயனரும் மனைவியாரும் இதில் அன்பு செலுத்தியவர்கள் போலும். திருநீலகண்டநாயனார் புராணம் பார்க்க. தேவமாதர்கள் தாலியிழக்காமற் காத்த நீலகண்டனே என் தாலியை நான் நீக்காமற் காத்தவன் என்றதும் குறிப்பாம். **அல்** - இருள். இங்கு இது கரிய நிறத்தினால் சிவபெருமானது கண்டத்தில் விளங்கும் விடத்தை ஒத்திருத்தலின் அதனைக் குறித்தது. **எம்மான்** - யாவர்க்கும் தலைவனுதலின் தன்னை அடைந்தோர்களது அன்பஞ் சகிக்கலாற்றாது விரைந்து அருள்பவன்; ஆதலின் நமக்கும் அருள் செய்தனன் என்பதாம்.

**அருள்தர** - எம்மான் தர என்னுது எம்மான் அருள்தர என்றது சிந்திக்கத்தக்கது. திருவருட்சத்தியே தரவந்தது. மேல் **அருளாம்** - (846) என்றார். இப்பொருள்களில் எல்லாம் மனைவியார் அவ்வப்பொருள்களைக் காணுது சிவனது திருவருளையே வெளிப்படக் கண்டார். "நந்தம்மை யாளுடையா, டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு, முன்னி யவணமக்கு முன்சுரக்கு-மின்னருளே, யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்" என்ற திருவாசகத்தில் உலகத்துன்ப நீங்கப் பொழியும் மழையினை அருளே என்று கண்டு காட்டியபடி இவ்வம்மையாரும் காண்கின்றார். நாயனார் தாலியைக் குங்குலியத்துக்கு மாறியதும், திருக்கோயில் சேர்ந்திருந்ததும், இறைவன் ஆணைசெய்ததும் முதலியனவாக இடையில் நிகழ்ந்தனவொன்றும் இவ்வம்மையார் அறிந்திலரேனும் இவ்வாறு கூறியது, என்றும் எல்லாம் இறைவனருளேயாகக் காணும் அவரது செம்மை பெற்ற திருமனத்தின் இயல்பு காட்டியது. இதுபற்றியே **அருள்தர** என்று அருட்சத்தியைத் துதித்தனர் என்க.

**வீளைவெல்லாம்** - வெயிலெல்லாம் என்பதுபோல ஒருமையிற் பன்மை வந்தது; ஆதலின் **வந்தது** என்னும் ஒருமைவினை கொண்டது. 19

850. மின்னிடை மடவார் கூற மிக்கசீர்க் கலய னார்தா
மன்னிய பெருஞ்செல் வத்து வளமலி சிறப்பை நோக்கி
"யென்னையு மாளுந் தன்மைக் கெந்தையெம் பெருமா னீசன்
றன்னரு ளிருந்த வண்ண" மென்றுகை தலைமேற் கொண்டார். 20

(இ - ள்) வெளிப்படை. மின்போன்ற இடையையுடைய மடவாராகிய அம்மையார் இவ்வாறு சொல்லச் சிறப்புமிக்க கலயனார் நிலைபெற்ற பெருஞ்செல்வங்களின் வளம்மிக்க சிறப்பை நோக்கி, "என்னையும் ஆட்கொண்டருளுகின்ற தன்மைக்கு எந்தையும் எமது பெருமானும் ஈசனுமாகிய சிவபெருமானது திருவருள் இருந்த வண்ணம் தான் என்னே?" என்று கைகளைத் தலைமேற்கொண்டு துதித்தார்.

(வி - ரை) **மின்இடை** - இடைசிறுத்துத் துவளுதல் பெண்களின் சிறந்த உடலிலக்கணங்களுள் ஒன்று. **மடவார்** - மடமையையுடையார். **மடம்** - "கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமையாகிய நாற்குணத்துள் ஒன்றாய குணம்பற்றி மகளிர்க்குப் பெயராயமைந்தது. கணவனார் வினவியபோது தாம் அறிந்ததனைச் சொல்லும் கடமைபற்றி உரைத்தனர் என்ற குறிப்புப்பெற இங்கு **மடமை** என்ற தன்மைபற்றிக் கூறினார். "கைவருகற் புடைநெறியாற் கணவனுரை கரவாமை, மெய்வழியன் றென வீளம்பல் விடமாட்டார்" என்ற காரைக்காலம்மையார் புராண (27)க் கருத்தும்

காண்க. இடை - என்றது உத்தமமாகிய உடலிலக்கணத்தையும், மடமை என்றது உயர்ந்த குணவிலக்கணத்தையும் குறித்தன. மடம் - மடமான் என்புழிப்போல இளமை என்றலுமாம்.

கூற மிக்க சீர் - பாலின் இன் அடிசில் உண்டு பருவரல் ஒழிக என்று இறைவன் அருளியபோது இவ்வளங்கள் அருளியதனை அறியாராதலின், அதனை அம்மையார் கூற அறிந்து அதனுன் முன்னினும் மிகுந்த சிறப்பினையுற்ற என்க.

மன்னிய.....சிறப்பை - தாம் கண்டசெல்வங்களின் நிலைபெற்ற தன்மையும், பெருமையும், வளப்பமும் நிறைந்த சிறப்பை. மன்னுதல் - தமது முன்னைச் செல்வம் போல மறைந்து வறுமைவந்தொழியாது நிலை பெறுதல். பெருமை - தந்தருளிய இறைவரது பெருமைக் கேற்ற பெருமை. வளம் - பொருட்டன்மையின் வளப்பம். சிறப்பு - திருவருட்பேற்றின் செம்மை. இச்சிறப்புக்கள் இவைபோன்ற வேறெச் செல்வங்களுக்கும் இல்லாத தன்மை. நோக்குதல் - கூர்ந்து பார்த்தல்.

என்னையும்.....வண்ணம் - என்னையும்-ஆட்கொள்ளத்தக்க தகுதியில்லாத என்னையும் என உம்மை இழிவு சிறப்பு. " என்னைய மாண்டுகொண் டின்னருள் புரியும் " (திருப்பள்ளியெழுச்சி 4) என்ற திருவாசகமும், "என்னைய மடிய ஞக்கி யிருவினை நீக்கி யாண்ட " என்ற கந்தபுராணமும் பிறவும் காண்க.

எந்தை எம்பெருமான் ஈசன் - " எந்தை ஈசன் எம்பெருமான் வறமர் கடவுளென் றேத்தி " (திருவாத்துறை 1.) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரம் காண்க. இங்ஙனஞர் ஆளுடையபிள்ளையாரிடத்து மிக்க அன்பு பூண்டிருந்து அவரது திருப்பதிகங்களைப் பயின்றிருந்த பழக்கத்தால் அது கொண்டே துதித்தனர் போலும். அக்காலத்திற் றிருப்பதிகங்கள் மிகப் பயிலப்பட்டன என்பது " பண்ணின் னிளவி மணிவா யும் பதிகச் செழுந்தேன் பொழியுமால் " என்ற முருகதாயனுர் புராண (3)த்தாலும், "தெள்ளு மோசைத் திருப்பதி கங்கள்பைங் கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்" என்ற திருநகரச்சிறப்பி (8) னலும், பிறவாற்றலும் அறியப்படும். தகுதியில்லாத தமக்கும் இப்பெரிய திருவருள்தந்தது " நாய்சிவிகை யேற்று வித்தது " போலும் என்ற நினைவு வருதலும், அது வந்தபோது சிவிகை பெற்ற திருப்பாட்டு நினைவுகூர்தலும், இயல்பாம். " சித்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால் " என்றபடி இங்கு நாயனுர் " எல்லாம் அயர்த்தெழும் அன்பு பொங்கச் சடையவர் மலர்த்தாள் போற்றி யிருந்தனர்" ஆதலின் இத்திருவருள் கைகூடப் பெற்றனர் என்பதும் கருதுக. எந்தை - தந்தை தம்மக்களைக்காத்தல் கடனும் என்பார் முதலில் எந்தை என்றார். தந்தை என்ற உரிமை பாராட்ட நான் தகுதியற்றேனுயினும் எமது தலைவனுதலின் ஆட்கொண்டனர் என்று நினைந்து பின்னர் எம்பெருமான் என்றார். " தூணைமாலை சூட்டநான் தூயே னல்லேன் " என்று அப்பர் சுவாமிகள் அருளியபடி அவ்வாறும் அவர்க்கு ஆட்படும் தகுதியில்லாமையின் அவர் எல்லாவுயிர்க்கும் இறைவனுய் " எல்லா வுயிர்க்கும் போகமாம் பூங்கழல் "களை யுடையானுதலின் அம்முறையில் எம்மை ஆட்கொண்டனர் என்பார் பின்னர் ஈசன் என்றார். "என்னப்ப னெம்பிரா னெல்லார்க்குந் தானீசன்" (திருச்சாழல் 2) என்ற திருவாசகமும் நோக்குக. அருள் இருந்த வண்ணம் - முத்தர்சிவிகை பெற்றபோது " என்னையும் பொருளாக வின்னருள் புரிந்தருளும், பொன்னடித் தாமரை திருஞான - புரா - 226)யின் " அருள் வந்த வாறுமற் றிவ்வணமோ " (மே 224) என்று ஆளுடைய பிள்ளையாரும், திருவாலவாயுடையார் திருமுன்பு நேர்ந்தபோது அவர் தமக்குத் திருமுகம் கொடுத்தனுப்பிய அருளிப்பாட்டை எண்ணி "அடியேனைப் பொருளாக அளித்ததிரு முகக்கருணை, முடிவேதென் றறிந்திலே னெனமொழிக டுமாற" வீழ்ந்து வணங்கிக் கழறிற்றறிவார் நாயனுரும் பாராட்டியதும், பிறவும் இங்கு நினைவு கூர்க.

தன்மைத் தேந்தை—என்பதும் பாடம்.

*851. பதுமநற் றிருவின் மிக்கார் பரிகலந் திருத்திக் கொண்டு
கதுமெனக் கணவ னுரைக் கண்ணுதற் கன்ப ரோடும்
விதிமுறை தீப மேந்தி மேவுமின் னடிசி லூட்ட
வதுநுகர்ந் தின்ப மார்ந்தா ரருமறைக் கலய னார்தாம். உக

(இ - ள்) வெளிப்படை. தாமரையில் வீற்றிருக்கும் நல்ல திருவினும் மிகுந்த அம்மையார் பரிகலம் திருத்தி யமைத்துக்கொண்டு விரைவாகத் தமது கணவனுரைச் சிவபெருமானுக்கன்பர்களோடும் விதிப்படி தீபம் முதலிய ஏந்திப் பூசைசெய்து இனிய அமுதினை ஊட்ட, அரிய மறைவல்லவராகிய கலயனார் அதனை நுகர்ந்து இன்பமிறைந் தனர்.

(வி - ரை) **பதுமம் நல் திரு** - செந்தாமரையில் உள்ள இலக்குமி. உருவாலும் திருவாலும் ஒப்புமை பெறினும், **நற்றிரு** என்றது அவரினும் அருளால் மிகுந்த அம்மை யாரது மேம்பாடு கருதுதற்கு எல்லைப்பொருளாய் எண்ணப்படும் பேறுபெற்றமைபற்றி. **மிக்கார்** - அருளால் மிகுந்தவர். அந்தப் பதுமத்திரு ஒவ்வோர் காலம் தமது கண வரை யிழக்கவும் அதனால் தாலியிழக்கவும் பெற்று, அதன் பொருட்டுச் சிவபெருமானை நோக்கித் தவங்கிடந்து மீளப்பெற்றுத் தாலிதாங்குவர். அவ்வாறன்றி இவ்வம்மையார் தமது தாலியை இறைவனது தூபத்திருப்பணிக்கேற்பிக்கப்பெற்று, அதன் வினை வாகிய மாளாச்செல்வங்களையும் பெற்று, அடியார்களையும் ஆளுடைய அரசுகள் ஆளுடைய பிள்ளையார் என்ற இருபெரு மக்களையும் பூசித்து அமுதூட்டவும் அரன் பணி புரியவும் பேறுபெற்றவர் என்ற சிறப்பெல்லாங் குறிக்கத் **திருவின் மிக்கார்** என்றார். அன்றியும் **பதுமத்திரு** வானவர் தமது செல்வ வினைவுகளைச் சிவனருளை யாகக் காண்டலின்றி வாழ்ந்து கழிவர். இவ்வம்மையார் போலக் கணவனுரை அடியார்களுடன் விதிமுறை பூசித்துபசரித்தூட்டப்பெறுது தமது நாயகரின் மார் பிற் றங்கி அவரால் உபசரிக்கப்பெற்று வாழ்வார் என்ற குறிப்பும் காணத்தக்கது. இவ் வாறன்றி உருவினால் மட்டும் ஒப்புக்கூறுமிடத்து அதுபற்றியே கூறுவர் ஆசிரியர். "தேனலர் கமலப் போதிற் றிருவினு மூருவ மிக்கார்" (864) என்றது காண்க.

**பரிகலம்** - உண்கலம் - வாழைக்குருத்து. **திருத்துதல்** - அரிந்துகொண்டு ஒழுங்கு பட அமைத்தல்.

**கதுமென** - கணவனுர் மூன்றுபகல் உணவின்றிப் பசியால் வாடியிருந்தமை கருதி விரைவாகச் சமைத்து ஊட்டினர் என்பது. "திருவமு தமைக்கச் சார்ந்தார்" (846) என்று அடிசில் சமைக்கப் புகுந்ததனை மட்டிற் கூறிய ஆசிரியர், சமைத்ததனைக் கூறுது, அமுதமைக்கச் சார்ந்தார் - பரிகலந்திருத்தி - ஊட்ட என்று விரைவுபடக் கூறியது நாயனாது பசி தாங்கலாற்றாது ஊட்டுந்திறத்தில் அம்மையார்க்கிருந்த ஆர்வ மும், அதனின் மிக ஆசிரியர்க்குள்ள தீவிரமும் குறித்தது.

**கணவனுரை · அன்பரோடும்** - உடனிகழ்ச்சிப் பொருளில் வந்த ஓடு என்ற மூன்றனுருபு ஒப்பாக வைத்துப் பூசித்து ஊட்டிய பரிசு குறித்தது. அம்மையார் கலய னுரைக் கணவனுர் என்ற உடற்பொருத்தம்பற்றிய அளவில் நில்லாது, அதனின் மேலாக உயிரொடு பொருந்திய சிவனடியாராகவும் எண்ணி ஊட்டினர் என்ற குறிப் பும் காண்க. "எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க, எங்கை யுனக்கல்லா தெப்பணியும் செய்யற்க", "உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்கா வோம், அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து, சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்" (திருவெம்பாவை - 19 - 9) என்பனவாதி திருவாசகங்கள் இந்த மனநிலையை நன்கு விளக்குவன. இதுபற்றியே **விதிமுறை தீப மேந்திப் பூசித்து ஊட்டினர்** என்றதும்காண்க. **ஓடு** என்ற உருபை அன்பரோடு புணர்த்திக்கூறியது சிறப்புப்பற்றி. ஆயின் அன்பரோடும் கணவனுரை யென்னுது கணவனுரை முன்

வைத்தோதியது மூன்றுபகல் பட்டினியிருந்த அவரது பசிதீர்க்கும் ஆர்வமிகுதியும், இவ்வினைவுகட்கும் திருவருளுக்கும் அவரது அயரா அன்பே காரணம் என்று கொண்டமையும் அம்மையாரது மனத்தில் மிக்கு நின்றமைபற்றியாம்.

**கண்ணுதற்கு** - கணவனுர் என்றதற்கும் அன்பர் என்றதற்கும் இடையில் கண்ணுதல் அமரக் கூறியது அவரது அன்பே இருதிறத்தாரையும் இடைநின்று பிணைத்து ஒட்டிநிற்பதாம் என்பது குறித்தது.

**கண்ணுதற்கு அன்பர்** - மாகேசுரர்கள். **அன்பரோடும்** - தனியுண்ணுது சிவனடியார்களோடு இருந்து உடனுண்ணுதல் வேண்டுமென்னும் உண்மை உத்தராபதியாராய் வந்த சிவபெருமான் திருவாக்கினுற் சிறுத்தொண்டநாயனுர் புராணத்துள் விரிக்கப்படுதல் இங்கு நினைவுகூர்க.

**விதிமுறை** - மாகேசுரபூசைக்குச் சிவாகமங்களில் விதித்த முறைப்படி. இதனை 443-ல் பார்க்க.

**தீபம் ஏந்தி** - தலைமைபற்றித் தீபத்தைக் கூறினுரேனும் இனம்பற்றி ஏனைத் தூப முதலியனவும் உடன்கொள்ளப்படும். அதுநேரம் இரவுக்காலமாதலின் விதிப்படி தீபமேற்றினுர் என்றுரைப்பாருமுளர்.

**மேவும்** - திருவருளாற் பொருந்திய வளங்களாலாகிய.

**இன்அடிசில் ஊட்ட** - 442 - 443 பார்க்க. **ஊட்ட** - தாய் ஊட்டுவதுபோல் அன்புகூர ஊட்டுதல் வேண்டுமென்பது விதி. *

**அது நுகர்ந்து-அது** - அவ்வாறூட்டிய இனிய அடிசில். **நுகர்தல்** - உண்ணுதல் மட்டிலடங்காது மனங்களி கூர்தலுங் குறித்தது.

**இன்பம் ஆர்ந்தார்** - "இன்அடிசில் உண்டு பருவால் ஒழிக" (847) என்று இறைவன் அருள்புரிந்தாரெனவே அது இறைவனருளாகவும் மாகேசுரப் பிரசாதமாகவும் பெற்றதாகலான் நீங்கா நிறைவாகிய இன்பம் ஆரத்துய்த்தனர். இவ்வின்பம், உண்டபின் சின்னேரத்திற் கழிந்து பின்னும் பசியின் துன்பங் கூட்டுவதாகிய வெறும் உணவின் இன்பமன்று. 21

852. ஊர்தொறும் பலிகொண் டுய்க்கு மொருவன தருளி னுலே
பாரினி லார்ந்த செல்வ முடையராம் பண்பி னீடிச்
சீருடை யடிசி னல்ல செழுங்கறி தயிர்நெய் பாலா
லார்தரு காதல்கூர வடியவர்க் குதவு நாளில், உஉ

* இவ்வாறு பூசித்து ஊட்டப்பெறும் அன்பர் என்ற மாகேசுரர்களாவார், தேசிகர், நிருவாண தீக்கைபெற்றோர், விசேட தீக்கைபெற்றோர், சமயதீக்கைபெற்றோர் என மான்குவகைப்படுவர். இவர்களே விதிப்படி பூசித்துத் திருவமுதுசெய்வித்தல் **மாகேசுரபூசை** எனப்படும். மகேசுரனே வழிபடுவோர் மாகேசுரர்களாவார். சிவதீக்கை பெறுதோர் மாகேசுரர்களாயிருத்தற்குத் தகுதியுடையாரல்லர். சிவனையும், குருவையும், சமயத்தையும், சிவசாத்திரங்களையும் நிந்தைசெய்வோரும், சிவதிரவியத்தை அபகரித்தவர்களும், நித்தியகருமங்களை விட்டவர்களும், மாகேசுரபூசைக்குத் தகுதியுடையரல்லர். மாகேசுரர்களைப்பூசித்து அமுதூட்டுவோர் சிவபதங்களில் அடைகுவர். ஏனையோர்க்கு அமுதூட்டுதல் அன்னதானம் என்ற பெயர்பெற்றுப் பசுபுண்ணியமேயாகி நற்போகங்களுக்கு ஏதுவாகிச் சுவர்க்கலோக முதலியவற்றைத் தருமேயன்றிச் சிவபுண்ணியமாகாது; சிவபதம்பெறத் துணையும் செய்யாது. சமயம், விசேடம், நிருவாணம், ஆசாரியாபிடேகம் என்னும் நால்வகைத் தீக்கை பெற்றோர்களை வைத்து மாகேசுரபூசைசெய்வோர் நால்வகைச் சிவபதங்களைப் பெறுவர். திருஞான - புரா - 111 - முதலியவை பார்க்க.

853. செங்கண்வெள் ளேற்றின் பாகன் றிருப்பனந் தாளின் மேவு
மங்கணன் செம்மை கண்டு கும்பிட வரச னர்வம்
பொங்கித்தன் வேழ மெல்லாம் பூட்டவு நேர்நில் லாமைக்
கங்குலும் பகலுந் தீராக் கவலையுற் றழுங்கிச் செல்ல, உக

854. மன்னவன் வருத்தங் கேட்டு மாசறு புகழின் மிக்க
நன்னெறிக் கலய னர்தா நாதனே நேரே காணு
மந்நெறி தலைநின் றுனென் றரசனே விரும்பித் தாமு
மின்னெறித் தனைய வேணி விகிர்தனே வணங்க வந்தார். உச

852. (இ - ள்) வெளிப்படை. ஊர்கள் தோறும் பலிகொள்ளும் சிவபெருமான அது திருவருளினாலே இவ்வுலகில் நிறைந்த செல்வமுடையவராகிய தன்மையில் மிகுந்த, சிறந்த அமுதினை, நல்ல செழிய கறி, தயிர், நெய், பால் இவற்றுடன் நிறைய மிக்க அன்புடன் சிவனடியவர்களுக்கு உதவுகின்ற காளிலே, உஉ

853. (இ - ள்) வெளிப்படை. செங்கண்ணுடைய வெள்ளை எருதின் பாகராகிய திருப்பனந்தாளில் எழுந்தருளியிருக்கும் அங்கணரை நேரே நிற்கும் தன்மையைக் கண்டு கும்பிடவேண்டுமென்று அரசன் ஆசை பொங்கித் தமது யானை முதலியவை யெல்லாம் பூட்டவும் இறைவரது திருமேனி நேர் நில்லாதபடியால் அரசன் இரவும் பகலும் தீராத கவலையுற்று மனம் வருந்திச் செல்ல, உங

854. (இ - ள்) வெளிப்படை. அந்த அரசனது வருத்தத்தைக் கேள்விப்பட்டுக் குற்றமற்ற புகழும், நன்னெறி யொழுகும் ஒழுக்கமும் உடைய கலயனார் இறைவனை நேர் காணும் அந்நெறியிலே தலைநின்றுன் என்று அவ்வரசனை விரும்பி, மின்னல் நெறிகொண்டாற்போன்ற சடைமுடியுடைய விகிர்தராகிய சிவபெருமானை வணங்கு தற்பொருட்டு வழிப்பட்டனர். உச

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

852. (வி - ரை) **ஊர்தோறும்** - எவ்வூரினுமுள்ள எவ்வுயிர்களிடத்தும். ஊர் ஆகுபெயர்.

**பலிகொண்டு உய்க்கும்** - பலி - பிச்சை. கொண்டுய்க்கும் என்பது ஒரு சொன்னீர்மைத்தாய்க் கொள்ளும் என்ற பொருளில் வந்தது. பலியைத்தான் கொண்டு, பலி இட்டோரைத் தனது பதத்திற் செலுத்துகின்ற என்றலுமாம். இப்பொருட்கு **உய்த்தல்** - செலுத்துதல் - வைத்தல் என்க. " பத்திசெய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவன் " என்பது திருவாசகம். **உய்த்தலாவது** - " நிரந்தர மாக நினையு மடியார், இரண்டு தன்னடி யெட்டச் செய்"தல் என்று கொள்ளுதலுமொன்று. இறைவன் பிட்சாடனராக எழுந்தருளிப் பிச்சை ஏற்கும் வரலாறு கந்தபுராணத்துட் காண்க. இதனைப் பற்பலவாறும் பாராட்டுவது அன்பர் வழக்கு. " தள்ளுமறி யாமனது பலி கொடுத் தேன் " என்ற தாயுமானார் கூறியபடி இவர் கொள்ளும் பலியாவது ஆன்மாக்களின் பசுபோதமும் அதற்கு விடயமாகிய வினைப்பயன்களுமாம். **ஊர்தோறும்** - என்ற கருத்தைப்பற்றி " இங்குமம் மில்லங்க டோறு மெழுந்தருளிச், செங்கமலப் பொற்பாதந் தந்தருளும் சேவகனே " (திருவெம்பாவை 17) என்ற திருவாசகத்தினை உன்னுக. இவைபற்றி 413-ல் உரைத்தவையும் பார்க்க.

**ஒருவன்** - ஒப்பற்றவன். " கின்னுவார் பிறரின்றி நீயே யானுய் " (தனித்திருத் தாண்டகம் 7) என்றபடி சிவபெருமான் ஒருவனே பதி-தலைவன் என்பதாம். " ஒருவர்" (843) என்ற விடத்துரைத்தவை பார்க்க.

**ஒருவனது அருளினுலே...செல்வமுடையாம் பண்பின் நீடி** - அவர் பிச்சை கொள்வாராயினும் தம்மை யடைந்தார்க்கு எல்லாச் செல்வமும் அருளவல்லார் என்

றதனுற் பிச்சை கொள்வது தம்பொருட் டன்று என்பதாம். " படங்கொள் பாயும் பூவணையும் தருவா யெனினும் படுதலைகொண், டிடங்க டோறு மிரப்பாயென் றேசு வார்க்கென் பேசுவனே " என்ற திருவிளையாடற்புராணத்தினுள் இது சுவைபட விளக்கப்படுதல் காண்க.

**பாரினில் ஆர்ந்த செல்வம்** - உலகின் உண்மை அனுபவங்களுக்கு எவ்வெச் செல்வங்கள் வேண்டுமோ அவை முழுதும் நிறைந்த என்றபடி. **உடையராம் பண்பில் நீடி**- பாரில் பலர் ஆர்ந்த செல்வமுடையராயிருந்தும் அவ்வுடைமையின் பண்பு இல்லாதாராய்க் கழிகின்றார்கள். அவ்வாறல்லாது அருளாற் பெற்ற செல்வமாதலின் அதனை உடையராதலோடு உடைய பண்பினுலும் நீடினர் என்று குறிக்க **உடையாய் நீடி** என்னாது **உடையராம் பண்பின் நீடி** என்றார். அப்பண்பாவது செல்வம் பெற்றதால் ஆகிய நீடுபயன் பெறுதல். அப்பயனுவன அரன்பூசையும் அடியார்க்கமுதளித்தலுமே யாம். 441-504 முதலியவற்றுள் உரைத்தவை பார்க்க. இது குறிக்கப் **பண்பில் நீடி...உதவும் நாளில்** என்று உடன்சேர்த்துக் கூறினர்.

**நல்ல சுழும் கறி தயிர் நெய் பாலாற் சீருடை அடிசில் உதவும்** என்று கூட்டி உரைத்துக்கொள்க. **நல்ல** - குணத்தால் நன்மை தரும். இவற்றைப் பதார்த்த குண சிந்தாமணி முதலிய மருத்துவநூல்களுட் கண்டுகொள்க. தூய இடத்திற் றூயனவாகப் பயிரிடப்பட்ட என்பதும் உடன்கொள்க. **சுழுமை** - இளையவை - முதியவை என்றவ் வவற்றுக்கேற்ற நிலை, அழுகல்-வாடல்-புழுக்கடி முதலிய கேடு இல்லாத நிலை முதலாகிய தன்மைகள். **ஆல்**-என்ற விகுதியை தயிர் நெய் என்பவற்றுடனும் தனித்தனிகூட்டுக. உணவுப் பொருள்களில் இவையே தலைமை பெற்றனவும் இன்றியமையாதனவும் சத்துவமுடையனவும் ஆம். ஆதலின் கறி தயிர் நெய் பால் அடிசில் என்ற இவற்றைக் கூறினர். கூறினரேனும் உடனுண்ணும் இனம்பற்றிப் பருப்பு முதலியவையும், சுவை தரும் தருநிபற்றி உப்பு முதலியவையும் உடன்கொள்க. **சீருடை அரிசி** - என்று பாடம் கொள்ளின் செந்நெல்லரிசி என்றுரைத்துக் கொள்க. அதுவே அடிசிற்குச் சிறுடையதாம். அரிவாட்டாய நாயனார் புராணம் பார்க்க.

**ஆர்தரு காதல் கூர** - நிறைந்த ஆசை மேலும் மிக. **கூர்தல்** - உள்ளது சிறத்தல்.

**அடியவர்க்குதவும்** - " உருத்திர பல்கணத்தார்க் கட்டிட்டல் " என்ற ஆருடைய பிள்ளையாரது திருமயிலைத்தேவாரங் காண்க. 22

853. (வி - ரை) **செங்கண் - வெள்விடை** - 827 பார்க்க. **திருப்பனந்தாளின் மேவும் அங்கணன்-திருப்பனந்தாள்** - தலவிசேடத்தில் உரைப்பவையும், 78ல் உரைத்தவையும் பார்க்க. பனையின் அடியில் இறைவன் எழுந்தருளியிருக்கும் தலம் என்பது பொருள். காரண இடுகுறிப்பெயர். **அங்கணன்**-அழகிய கண் - அங்கண்மை - உடையவன். கண்ணுக்கு அழகாவது கண்ணோட்டம். இங்குச் சிவபெருமானது பேரருளுடைமை குறித்தது.

**செம்மைகண்டு கும்பிட** - இவரது இலிங்கத்திருமேனி சாய்ந்திருந்தது கண்டு வருந்தி அதனை நேரே நிற்கக்கண்டு கும்பிடவேண்டி. **செம்மை** - இங்கு நேர் நிற்கு நிலை குறித்தது. **அங்கணன்செம்மை** - என்றதனால் அங்கண்மையாற் குனிந்து நின்றவர் என்பது குறித்தார்.

**ஆர்வம் பொங்கி** - ஆசை மிக்கதனாற் பொங்கி. **பூட்டவும்** - யானை பூட்டி ஈர்த்த இது செய்ய வேண்டாததும், செய்யக்கூடாததுமாகியதொரு செயல் என்ப. என்னை? அரசன் இறைவன்திருமேனியைத் தான் கண்டவாறே வணங்குதல் வேண்டுமன்றி, மற்ற சிதைவுபட்ட கோயில் முதலியவற்றைப் போலத் திருமேனியையும் எண்ணிச் செப்பனிட நினைத்தல் தவறும். இக்காலிலும் சிலர் விதிகடந்து, இத்திருவுருவங்களை நிலைபெயர்த்தும், உயர்த்தியும், தாழ்த்தியும், உருமாற்றியும் பலபடியாகத் தாந் தாங் கருதியவாறெல்லாம் செப்பனிடநினைத்தும் செய்தும் வருகின்றார்கள். இதுபெரும்

தவறு. கோயில்களிலேயும் சிதைவுபட்ட பகுதிகளைமட்டும் சிதைவுகண்ட அவ்வப்போது முன்னிருந்த அவ்வாறே செப்பனிட வேண்டுமென்பது விதி. "தாபர லிங்கம் பறித்தொன்றிற் றாபித்தால், ஆவதன் முன்னே யரசு நிலைகெடும், சாவதன் முன்னே பெருநோ யடுத்திடும், காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே", "கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடில், வெட்டுவிக் கும்மபி டேகத் தரசரை, முட்டுவிக் கும்முனி வேதிய ராயினும், வெட்டுவித் தேவிடும் விண்ணவ னாணையே" என்பனவாதி திருமூலர் திருமந்திரங்கள் காண்க. விதி இவ்வாறாயினும் "உவப்பதன்கண், குற்றமுந் தோன்றாக் கெடும்" என்றபடி **ஆர்வம் பொங்கியதனால்** விதியையும் கடந்து இது செய்தனன் என்ற குறிப்புங்காண்க.

இத்தலத்து இறைவர் திருமேனி சாய்ந்து நின்றதன் வரலாறு தலவிசேடத்துக் காண்க. திருவருள் வெளிப்பாட்டினை யாவரும் உணர்ந்து உய்யும் பொருட்டுச், சாய்ந்த இறைவர் அவ்வாறே சாய்ந்து நின்ற நிலையை மாற்றி நேர்செய்து கும்பிடும் ஆர்வம் அரசன் அன்பினால் மேற் கொண்டவனாயினும் அது விதிகடந்த தென்று குறிப்பித்ததும் உன்னுக. திருப்பேரூரில் காமதேனுவின் கன்றினது காற்குளப்புச் சுவடுகளும், திருமூல்லை வாயிலில் அரிவாள் வெட்டுச்சுவடும், காஞ்சியில் அம்மையாரது வளைத் தழும்பும் முலைச்சுவடும், இவ்வாறு ஆங்காங்குக் கொண்ட எண்ணிறந்த திருவடையாளங்களும் தமது திருவருள் வெளிப்பாட்டினை யாவரும் காணுமாறு இறைவர் தாங்கி நிற்பனவாம். அவற்றை அவ்வாறே கண்டு கும்பிடவேண்டு மென்பது ஆகமவிதி. ஆதலின் அரசனது ஆர்வங்கண்டும் யானைசேனைகளின் முயற்சிகளை யெல்லாங் கடந்து இறைவர், திருமேனி நிமிராது நின்றனர் என்பதும் காண்க. பின்னர் நேர்நின்றனரே? எனின், அதுபற்றிக் கீழே 858-ம் திருப்பாட்டில் உரைப்பவை பார்க்க.

**வேழம் எல்லாம் பூட்டவும் நேர்நில்லாமை** - பிராணிகளில் மிகப் பலமுடையன யானைகள்; அவ்வியானைகள் பலகொண்ட யானைப்படை முழுதும் பூட்டி யிழுக்கவும் நேர்நில்லாமையால். யானை சேனைகளின் பலத்தைப் பெரிதாக அரசன் எண்ணினானே யன்றி அவைகளுக்குப் பலம்தந்த இறைவனது பலத்தைஎண்ணித் தாழ்ந்தமனத்தோடு புக்கவனல்லன். ஆதலின் இறைவர் நேர்நின்றிலர். ஆனால் நாயனார் கழுத்திற் கயிறு பூட்டியவுடன் நேர்நின்றனர். தமது உடல் உயிர் முயற்சியால் இறைவனை ஆழ நீள அளவு காண்போமென்று தேடிய பிரம விட்டுணுக்களுக்கு எட்டாது நின்று, பின்னர் அவர்கள் தமது ஆற்றலின்மையுணர்ந்து துதித்தபோது வெளிப்பட்டருளினர் என்பதை அப்பர்சுவாமிகள் இலிங்கபுராணத் திருக்குறுந்தொகையினுள் விளக்கியருளிய உண்மையினை நினைவுகூர்க. **நில்லாமை** - நில்லாதபடியால் அதன்பொருட்டு.

**அழுங்கிச்செல்ல** - வருந்தி இவ்வாறு நாள்செல்ல.

**பைங்கண் வெள்ளேற்றின்**—என்பதும் பாடம். 23

854. (வி - ரை) **கேட்டு** - கேட்டவுடனே. கேட்டலும்.

**மாசறு புகழ்** - எவ்விதக்குற்றமும் இல்லாத புகழ். குற்றநீங்கிய புகழ். இது நன்னெறி நிற்றலோடிணைந்ததென்பார் **புகழின் மிக்க நன்னெறி** என்றார். இப்புகழ் இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்ந்து ஈகையிற் சிறத்தலான் வருவதென்பர். இங்கு நாயனாரது புகழ் தமக்கொப்பில்லாத (843)ஈகையால் வந்த செய்தி. மேற்சரித நிகழ்ச்சியால் உலகறிந்து போற்றப்பட்டமையின் **மாசறுபுகழ்** என்று இங்கு எடுத்துக்காட்டினார். இதுபற்றியே தொடக்கத்தில் "**பொங்கிய புகழின் மிக்கார்**" (830) என்று தேற்றம்பெறக் கூறியதும்காண்க.

**நாதனை நேரேகாணும் அந்நெறி தலைநின்றான் என்று**-பிறிது கருத்தின்றி இறைவனை நேர்கண்டு கும்பிடும் அந்நெறிபற்றி நின்றான் என்றமையால். **விரும்பி** - அரசன் நற்செயலை விரும்பியபடியால் அவனை விரும்பினார். இஃதில்லையேல் அரசனைக் காணு

தல் விரும்பார் என்பது. சிவவழிபாட்டில் அரசன் கொண்ட விருப்பமே இவர் விருப்பத்தை அவன்பாற் செலுத்தியதுஎன்க.

**மின் நெறித்து அனைய வேணி** - மின்னல்தான் உருப்பட்டு நெறிவும் செறிவும் கொண்டுவந்தாற் போன்ற சடை.

**விகிர்தன்** - மாயையைப் பலப்பல பேதப்படுத்தி உயிர்கட்குப் பற்பலவிதமாகிய தனு கரண புவனம் போகங்களாக ஆக்கியும் போக்கியும் அளித்தும் செயல்செய்ய வல்லவன்.

**வேணி விகிர்தன்** - சடையப்பர் என்ற இத்தலச் சுவாமி பெயர்க்குறிப்பு.

**வந்தார்** - திருக்கடவூரினின்று புறப்பட்டுத் திருப்பனந்தாளுக்கு வர வழிப் பட்டனர் என்றபொருளில் வந்தது.

அருளினலே - பண்பில்நீடி - உதவும் நாளில் - அரசன் கவலையுற்று அழுங்கிச் செல்ல, கலயனார் - கேட்டு - நெறி தலைநின்றனனென்று - விரும்பி - விகிர்தனை வணங்க வந்தார் என இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து உரைத்துக் கொள்க. 24

855. மழுவுடைச் செய்ய கையர் கோயில்கண் மருங்கு சென்று
தொழுதுபோந் தன்பி னேடுந் தொன்மறை நெறிவ ழாமை
முழுதுல கினையும் போற்ற மூன்றெரி புரப்போர் வாழுஞ்
செழுமலர்ச் சோலை வேலித் திருப்பனந் தாளிற் சேர்ந்தார். உரு

(இ - ள்) வெளிப்படை. மழுவேந்திய சிவந்த கையினையுடைய சிவபெருமான் எழுந்தருளிய அம்மருங்குள்ள திருக்கோயில்களுக்கும் சென்று, தொழுது, மேற் போந்து, எல்லா வுலகங்களையும் காக்கும் பொருட்டு வேதவிதி வழுவாமல் ஆகவனீயம் முதலிய முத்தீக்களையும் வளர்த்துக் காத்துவருகின்ற மறையோர் வாழ்கின்ற செழிப் புடைய பூஞ்சோலைகள் சூழ்ந்த திருப்பனந்தாளிற் சேர்ந்தனர்.

(வி - ரை) **மழுவுடைச் செய்ய கையர்** - மானும் மழுவும் சிவபெருமான் கையில் ஏந்திய திருவடையாளங்கள். "பரசு ஹஸ்தாய நம" என்பது சிவாட்டோத்தரம்.

**கோயில்கள் மருங்குசென்று தொழுது போந்து** - திருக்கடவூரிலிருந்து திருப் பனந்தாளுக்கு வரும் காயனூர் வழியில் இடையில் உள்ள சிவதலங்களைச் சென்று வணங்கிப் போந்தனர். அவை திருவாக்கூர்த் தான்றோன்றிமாடம், திருச்செம்பொன் பள்ளி, செம்பொனூர் கோயில், திருமயிலாடுதுறை (மாயூரம்), திருத்துருத்தி (குற்றாலம்), திருவாவடுதுறை, குரங்காடுதுறை (ஆடுதுறை), திருமங்கலக்குடி முதலியனவாம். இவ் வழி ஏறக்குறைய 35 நாழிகை யளவு உள்ளது. ஒரு தலத்தினின்றும் மற்றொரு தலங் குறித்து யாத்திரை செய்வோர் நேரே அங்குச் சென்று விடாது, இடையில் தலங்க ளிருப்பின் அவற்றையும்சென்று தரிசித்துக்கொண்டு செல்லவேண்டுமென்பது முறை. இதனை நம்போலியர் கண்டு ஒழுகி உய்தற்பொருட்டு ஆசிரியர் அங்கங்கும் எடுத்துக் காட்டிச் செல்வர். "கறையணிந்தார் பாதலீச் சரமும் பாடி, முன்னணைந்த பதிபிறவும் பணிந்து போற்றி" (896), "அங்கருள் பெற்றுப் போந்து முன்ன மணைந்தபதி களு மிறைஞ்சி" (901) என்ற திருஞானசம்பந்த நாயனார் புராணத்தாலும், பிறவாற்றாலும் இடைப்பட்ட தலங்கள் முன்பு தரிசித்தவையாயினும் அவ்வழியே வந்து செல்லாது மீண்டும் அவற்றைத் தொழுது செல்லும் முறை காட்டப்பட்டமை காண்க. இவ்வாறு ஒழுகாது இந்நாளில் நம்மனோர் செய்யும் தலயாத்திரைகள் முறையற்றன என்பது.

**தொன்மறை நெறி...புரப்போர்** - மறையோர் மறைவிதிப்படி முத்தீபோற்று வது உலகமுய்யும் பொருட்டே யாமன்றித் தங்கலங்கருதி யன்றென்பது. "கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே, செற்றார்" (குறிஞ்சி - கோயில் - 1) என்றது ஆளுடையபிள்ளையார் தேவாரம். "வருமுறை யெரிமூன் றோம்பி மன்னுயி ரருளான்



1. திருப்பனந்தாள் தாடகையீச்சரம் கோயிலும் கோபுரமும்
(உட்புறமிருந்து பார்வை)
2. கோயிலுக்குப் பின்புறமிருக்கும் பனைகள் (தலமரம்)

—பாட்டு - 855 - பக்கம் - 600



திருப்பனந்தாள்
தாடகை பூசித்த ஐதீகம்

—பாட்டு - 854

மகனுர் - குங்குலியக்கலயர் - தேவியார்
திருப்பனந்தாள்
(செப்புப் படிமங்கள்)

—பாட்டு - 861

மல்க " (354) என்றவிடத் துரைத்தவையும் பார்க்க. அன்றியும், மூன்றெரி என்னும் சைவயாகங்கள் மழைக்குக் காரணமாம் ; மழையின்றி உலகம் போற்றல்பெறாது என்பதனாலும் **முழுதுல கினையும் போற்ற மூன்றெரி புரப்போர்** என்றார் என்பது மமையும். **எரிபுரப்போர்** - மறையவர்.

**மலர்ச்சோலை வேலி** - மலர்ச்சோலைகள் நாற்புறமும் சூழ்தலால் அவை அந்நகரத்துக்கு வேலியிட்டனபோல உள்ளன என்பது. 25

856. காதலா லரச னுற்ற வருத்தமுங் களிப்பி னோடு
தீதில்வன் சேனை செய்யுந் திருப்பணி நேர்ப டாமை
மேதினி மிசையே யெய்த்து வீழ்ந்திளைப் பதுவு நோக்கி
மாதவக் கலயர் தாமு மனத்தினில் வருத்த மெய்தி, உசு

857. சேனையு மானை பூண்ட திரளுமெய்த் தெழாமை நோக்கி
" யானுமிவ் விளைப்புற் றெய்க்கு மிதுபெற வேண்டு" மென்று
தேனலர் கொன்றை யார்தந் திருமேனிப் பூங்கச் சேய்ந்த
மானவன் கயிறு பூண்டு கழுத்தினால் வருந்த லுற்றார். உஎ

856. (இ - ள்) வெளிப்படை. தான் கொண்ட ஆசையினால் அரசன் அடைந்த வருத்தத்தினையும், யானைகளோடு குற்றமற்ற சேனைகளும் தாம் செய்யும் திருப்பணி நேர்படாமையினால் நிலத்தின் மேலே களைத்து வீழ்ந்து இளைப்பதனையும் மாதவராகிய கலயனார் நோக்கி மனதில் வருத்தங்கொண்டு, உசு

857. (இ - ள்) வெளிப்படை. சேனையும், யானைகளைக் கொண்ட கூட்டமும் இளைத்து மேல் எழமாட்டாதிருக்கிற நிலையை நோக்கி, " நானும் இந்த இளைப்பினைப் பொருந்தி மெலியும் இப்பேறு பெறவேண்டும் " என்று உட்கொண்டு, தேன் நிறைந்து அலர்கின்ற கொன்றை யணிந்த இறைவனது திருமேனியிற் பூண்ட பூங்கச் சிற்பொருந்திய பெரிய வலிய கயிற்றைப் பூட்டித் தமது கழுத்தினால் வருந்தி இழுக்கத் தொடங்கினார். உஎ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

856. (வி - ரை) **காதல்** - " அங்கணன் செம்மைகண்டு கும்பிடக்கொண்ட ஆர்வம் " (853). **காதலால் உற்ற வருத்தம்** - காதல் நிறைவேறாததால் அக்காதல் காரணமாகப் பொருந்திய வருத்தம்.

**வருத்தமும் - இளைப்பதுவும் நோக்கி** - அரசனாகிய ஏவுதற்கருத்தாவும், யானை சேனைகளாகிய இயற்றுதற் கருத்தாவும் என்ற இருதிறத்தாரின் வருத்தமும் சொல்லப்பட்டன.

**களிற்றினோடு - சேனை** - யானைகளுடன் சேனைவீரர்களும்.

**தீதில்வன் சேனை** - வலியசேனைகளேயாயினும் இங்குத் தமக்குரிய கொலைப் போர் முதலிய தீங்கு ஒன்றும் செய்தில என்பார் **தீதில்** - என்றார்.

**நேர்படாமை** - முற்றுப்பெறாமை. **நேர்படல்** - பொருந்துதல். " காலநேர் படுதல் பார்த்தய னிற்ப " (219) " காணு நேர்பா டெண்ணுவார் " என்றவை காண்க.

**எய்த்து வீழ்ந்து இளைப்பதுவும்** - கைவராத பணியில் மேலும் மேலும் முயல்வதனால் எய்ப்பு உளதாம் ; எய்ப்பு மிகவே உடல் விழும் ; பன்முறை வீழ்ந்ததனால் இளைப்பு உண்டாகும் ; இளைப்பு அதிகரிக்கவே, வீழ்ந்தவர் மீண்டும் மேல் எழாத நிலை உண்டாம். இதனையே வரும் பாட்டில் " எய்த்து எழாமை நோக்கி " என்றார். **நோக்கி** - கூர்ந்துபார்த்து, **வருத்தமும் இளைப்பதுவும்**-இரண்டனுருபுகள் தொக்கன.

**மாதவக் கலையனூர்** - உற்ற நோய் நோன்றல் தவத்திற்கு உரு என்ப ; ஆதலின் அரசனும் சேனைகளும் உற்றவருத்தம் பொறாயினர். அது பற்றி **மாதவர்** - என்ற அடைமொழி புணர்த்தியோதினர்.

**தீதிலாச் சேனை** - என்பதும் பாடம். 26

857. (வி - ரை) **ஆனபூண்ட தீரர்** - வேழமெல்லாம் (853) பூட்டியதனால் **தீரர்** - என்றார். **தீரர்** - கூட்டம். **சேனை** - சேனைவீரர்கள்.

**எய்த்து எழாமை** - எய்த்தலினால் எழமாட்டா திருந்த நிலைமையினை.

**நோக்கி** - எழாமை கண்டார். அதனால் அவற்றின் மாட்டாமையும், அதன் காரணமாகிய எய்ப்பும் கருதி அறிந்தார் என்பதாம். இது பற்றியே மேற்பாட்டிலும் **நோக்கி** - என்றார்.

**"யானும்...வேண்டும்" என்று** - இது நாயனார் கருதியது. **என்று** - என்று கருதி. யானும் பூட்டியிழுத்து நேர்நிற்கச்செய்வேன் என்றுவது, இத்திருப்பணியில் யானும் முயல்வேன் என்றுவது நாயனார் கருதினாரல்லர். யானைகளும் சேனைகளும் செய்ய மாட்டாத தொன்றைத் தனது சக்திகொண்டு நாயனார் செய்யத்துணிந்தாரென்னில் அது மதியுடையவர் செய்கையன்றாகும். யான் அங்கணரை நேர்காண்பேன் என்ற எண்ணினால் அது அகங்காரத்தின் பாற்படும். மேலும், முன்னர் 853ல் உரைத்த சிவ தருமவியலுக்கும் மாறுபடும். "எய்ப்புற் றிளைக்கும் இது பெறவேண்டும்" என்றதனால் இதுகாரியம் தம்மால் இயலாது இளைப்போம் என்ற துணிபே நாயனார் கொண்டனர் என்பது தெளிவாம். ஆயின், நாயனார் இதில் முயன்றது என் னையோ வெனின் ? யானை சேனைகளின் மெலிவைத் தானும் ஒருபங்கு கூறு கொண்டு தாங்கி அம்மெலிவைக் குறைத்து அம்மட்டில் அவற்றின் வருத்தத்தை நீக்கு வேன் என்ற அளவே இதில் துணிந்தனர் என்க. அரசன் செய்கை ஆணவத்தால் மேற்கொள்ளப்படாது செம்மைகண்டு கும்பிடக்கொண்ட ஆர்வத்தால் தூண்டப்பட்ட மையால் அதில் அரசன்கொண்ட அன்பின் நெறியினைக் காண விரும்பியே (854) நாய னார் திருப்பனைத்தாளிற் சேர்த்தனர். இவ்வாறுகொண்ட அன்புடைப்பணியில் இளைத் தாரது வருத்தத்தைக் குறைத்தல் அன்பர்பணியும் அறமுமா மாதலின் நாயனார் அதில் முயன்றனர். ஒத்த அன்புடையார் உடன்கலந்து கூறுகொள்வதனால், இன்பங்களாயின், அவை பெருகும் ; துன்பங்களாயின் அவை குறையும்; என்பது உலகியலிற் காணப்படும். இதுபற்றியே ஒருவனுக்குத் தாங்கலாற்றாத துன்பம் நேர்ந்தபோது அன்புடையார் பல ரும் சென்று சேர்ந்து உசாவிவருதல் உலகவழக்காயிற்று. இன்பத்தில் பலருங்கூடுதலும் இக்கருத்தே பற்றியது. " துயரகற்ற மாட்டாதேன் வருந்துமிது, தனதுறுபே ரிடர் யானுந் தாங்குவதே கருமமென " (127) என்று மனுநீதிச்சோழர் துணிந்ததும் இங்கு நினைவுகூர்க. ஆண்டுரைத்தவையும் பார்க்க.

**தேன் அலர் கொன்றை** - **தேன்** - வண்டு எனவும், **அலர்** - அலர்த்தப்படும் என வும்கொண்டு, வண்டுகளால் ஊதி அலர்த்தப்படும் கொன்றை என்றலுமாம்.

**திருமேனிப் பூங்கச்சு ஏய்ந்த** - பூட்டி இழுக்கும் வலிய கயிறுகள் இறைவரது இலிங்கத் திருமேனியிற்பட்டு ஊறுபடுத்தாமல் அத்திருமேனியைப் பூங்கச்சுக்களாகப் பட்டு முதலியவற்றாற் பொதிந்து அவற்றிற் பொருந்திய கயிறு பூட்டினர் என்பதாம்.

**மான வன் கயிறு** - மானம் - பெரிது. யானைத்திரளும் சேனைகளும் பூட்டி இழுத் தலின் அதற்குத் தக்கவாறு கயிறு பெரிதாயும் வலிதாயும் இருந்ததென்க.

**கழத்தினூன் பூண்டு** என்க. **வந்தலுற்றார்** - நாயனார் அக்கயிற்றினைத் தமது கழுத் திற்பூட்டி வருந்தி இழுக்கத்தொடங்கினர் என்பதாம். 27

858. நண்ணிய வொருமை யன்பி னருறு பாசத் தாலே
திண்ணிய தொண்டர் பூட்டி யினைத்தபின் றிறம்பி நிற்க

வொண்ணுமோ? கலய னார்த மொருப்பாடு கண்ட போதே
யண்ணலார் நேரே நின்றா; ரமரரும் விசும்பி லார்த்தார், உஅ

859. பார்மிசை நெருங்க வெங்கும் பரப்பினர் பயில்பூ மாரி;
தேர்மலி தானை மன்னன் சேனையுங் களிறு மெல்லாங்
கார்பெறு கானம் போலக் களித்தன; கைகள் கூப்பி
வார்கழல் வேந்தன் றொண்டர் மலரடி தலைமேல் வைத்து, உகூ

860. "விண்பயில் புரங்கள் வேவ வைதிகத் தேரின் மேருத்
திண்சிலை குனிய நின்றார் செந்நிலை காணச் செய்தீர்;
மண்பகிர்ந் தவனுங் காணா மலரடி யிரண்டும் யாரே
பண்புடை யடியா ரல்லாற் பரிந்துநேர் காண வல்லார்?" ௩o

861. என்றுமெய்த் தொண்டர் தம்மை யேத்தியங் கெம்பி ரானுக்
கொன்றிய பணிகண் மற்று முள்ளன பலவுஞ் செய்து
நின்றவெண் கவிகை மன்ன னீங்கவு, நிகரி லன்பர்
மன்றிடை யாடல் செய்யு மலர்க்கழல் வாழ்த்தி வைகி, ௩க

862. சிலபகல் கழிந்த பின்பு திருக்கட வூரி னண்ணி
நிலவுதம் பணியிற் றங்கி நிகழுநா ணிகரில் காழித்
தலைவராம் பிள்ளை யாருந் தாண்டகச் சதுர ராகு
மலர்புக ழரசுங் கூட வங்கெழுந் தருளக் கண்டு, ௩உ

863. மாறிலா மகிழ்ச்சி பொங்க வெதிர்கொண்டு மனையி லெய்தி
யீறிலா வன்பின் மிக்கார்க் கின்னமு தேற்கு மாற்றால்
ஆறுநற் சுவைக ளோங்க வமைத்தவ ரருளே யன்றி
நாறுபூங் கொன்றை வேணி நம்பர்த மருளும் பெற்றார். ௩௩

858. (இ - ள்) நண்ணிய...பாசத்தாலே - ஒருமை பொருந்திய அன்பாகிய நாரி னால் இயன்ற கயிற்றினாலே; திண்ணிய...ஒண்ணுமோ - திண்மையுடைய தொண்டர் பூட்டி இளைப்படைந்த பின்னரும் அக்கருத்துக்கு மாறுபட்டு முன் போலச் சாய்ந்து நிற்க இறைவர்க்கு முடியுமோ?; கலயனார்தம்...நின்றார் - கலயனாரது மனத்தில் எழுந்த ஒருமைப்பாட்டினைக் கண்ட அப்பொழுதே பெருமையுடைய பிரானார் நேரே நின்றனர்; அமரரும்...ஆர்த்தார் - தேவர்களும் ஆகாயத்தில் மகிழ்ச்சியினால் ஆரவாரித் தனராகி, உஅ

859. (இ - ள்) வெளிப்படை. பூமியின்மேல் எங்கும் நெருங்கும்படி அதிகமாகக் கற்பகப் பூமழை பரப்பினர்; தேர்களால் மிகுந்த மன்னனுடைய சேனைகளும் யானை களும் ஆகிய இவை எல்லாம் மேகத்தைப் பெற்ற சோலைபோல மகிழ்ந்தன; வீரக் கழல் கட்டிய அரசன் கைகளைக்கூப்பித் தொழுது தொண்டருடைய மலர்போன்ற பாதங்களைத் தலைமேற்கொண்டு வணங்கி, உகூ

860. (இ - ள்) வெளிப்படை. "விண்ணிற் பறக்கின்ற முப்புரங்களும் வேகும்படி வேதப்புரவி பூண்ட தேரில் மேருமலையை வலிய வில்லாக வளைத்து நின்ற சடையப்பருடைய நேர் நிற்கும் நிலையினை அடியேன் தரிசிக்கும்படி செய்தருளினீர்!. மண்ணைப் பிளந்து சென்ற திருமாலும் தேடிக் காண முடியாத (சிவபெருமானது) மலர் போன்ற திருவடிக ளிரண்டினையும் பண்பு மிக்க அடியவர்களல்லாது வேறு யாவரே அன்பினால் நேர் காண வல்லவர்?"; ௩o

861. (இ - ள்) வெளிப்படை. என்று இவ்வாறு மெய்த்தொண்டராகிய நாயனாரைத் துதித்து அத்தலத்தில் இறைவருக்குப் பொருந்திய மற்றும் திருப்பணிகள் பலவற்றையுஞ் செய்து, பின்னர், நீலத்த வெண்கொற்றக் குடையுடைய அவ்வரசன் தனது நகரத்துக்குப் போயினன்; அதன் பின்னும், ஒப்பற்ற அன்பராகிய கலயனாரும் அம்பலத்தினில் ஆடல்புரிகின்ற மலர்போன்ற பாதங்களே வாழ்த்தி அங்குத் தங்கி,

862. (இ - ள்) வெளிப்படை. சில நாள்கள் கழிந்த பின்பு அங்கு நின்றும் போந்து திருக்கடவூரிற் சேர்ந்து நிலைபெற்ற தமது திருப்பணியில் ஒழுகி வருகின்ற காட்களிலே, ஒப்பற்ற சீகாழித் தலைவராகிய ஆளுடைய பிள்ளையாரும் தாண்டக வேந்தராகிய மிக்குப் பெருகும் புகழுடைய ஆளுடைய அரசுகளும் ஒன்றுக அங்கு எழுந்தருளக் கண்டு, கூஉ

863. (இ - ள்) வெளிப்படை. நிகரில்லாத மகிழ்ச்சி பொங்க அவர்களே எதிர் கொண்டு சென்று அழைத்து வந்து, தமது திருமனையில் எய்தி, எல்லையில்லாத அன்பின் மிக்க அவர்களுக்கு இனிய அமுதினே அவர்களது பெருமைக்கு ஏற்றபடியாக நல்ல ஆறு சுவைகளும் பொருந்த அமைத்து ஊட்டி, அவர்களது திருவருளினைப் பெற்றதேயன்றி, மணமுடைய அழகிய கொன்றைமல ரணிந்த இறைவருடைய திருவருளினையும் பெற்றார். கூக

இந்த ஆறு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

858. (வி - ரை) ஒருமை நண்ணிய அன்பின் நார் உறு பாசம் - என்று கூட்டுக. ஒன்றிய சிந்தையினுற் பொருந்திய அன்பாகிய நார் இழைகளால் முறுக்கப்பட்ட கயிறு. "ஒன்றியிருந்து நினைமின்கள்" என்ற திருவிருத்தம் காண்க. ஒன்றுதல் வேறொன்றிலும் செல்லாது அதனிலே பொருந்துதல். "உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினுல், முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே" என்பது முதலியனவும் இக் கருத்துப்பற்றியன.

அன்பின்நார் உறுபாசத்தாற் பூட்டி என்க. நாயனார் பூங்கச்சிற்கட்டிய கயிற்றினைக் கழுத்திற் பூட்டி வருத்தலுற்றாராயினும், உண்மையில், அவர் பூட்டி ஈர்த்தினைத்தது அன்புநார்ப் பாசமேயாகும் என்பது. இறைவன் கேரே நின்றது புறத்திலே பூண்ட கயிற்றுக் கன்று, அகத்திற் கட்டிய அன்புக் கயிற்றுக்கேயாம் என்பது கருத்து. புறக் கயிற்றுக்கு நிமிர்வாராயின் முன்னர் யானை சேனைகளின் முயற்சிக்கே பயன் தந்திருத்தல் வேண்டும். அவ்வாறன்றி யானை சேனைகளின் வருந்திய முயற்சிகளின் மிக்கு நாயனார்பாற் கண்டது அன்புநார்ப் பாசமொன்றேயாம் என்று காட்டுவார், ஒருமை அன்பின் நாறு பாசத்தாலே பூட்டியிளைத்தபின் திறம்பிநிற்க ஒண்ணுமோ? என்று வற்புறுத்தி எதிர்மறை வினுவின் வைத்துக்கூறினர். இவ்வாறன்றி, அன்பினுர்-அன்பாகிய நாயனார் பொருந்திய கயிற்றினுலே என்று கொண்டுரைப்பாருமுளர்.

திண்ணிய - திண்மை - அன்பின் மிக்க திருத்தொண்டின் வலிமை. "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார், திண்ணிய ராகப் பெறின்" என்றதன் கருத்தினை இங்குச் சிந்திக்க. தாமும் மனைவியார் மக்கள் சுற்றம் என்றிவரும் இருபகல் உணவின்றி வருந்தியும் அதற்காக நெற்கொள்ளக் கொண்டு சென்ற தாலியை இறைவர்க்குக் குங்குலியங் கொண்ட திண்மை குறித்தது.

பூட்டி இளைத்த-எய்க்கும் இவ்விளைப்பு யானும் பெறவேண்டுமென்ற மனவொருமைப்பாட்டினுலே பூட்டியிழுத்து இளைத்த. ஒருப்பாடு கண்டபோதே என்ற கருத்தும் அது.

பின் - பின்னும். ஒண்ணுமோ? - ஒண்ணாது. வினு எதிர்மறை குறித்தது. கண்ட பின்னும் திறம்பி நிற்க ஒண்ணுதாயின் நேர்நிற்றல் வேண்டுமே? எப்போது நேர்நின்றார் எனில்? ஒருப்பாடு கண்டபோதே நேரே நின்றார் என்க.

**ஒருப்பாடு** - ஒருமை நண்ணிய அன்பின் துணிபு. தமது மற்றைக் கண்ணையும் தோண்ட ஒருப்பட்டுக் கண்ணப்பர் அம்பு ஊன்றலும் தேவதேவர் தரித்திலராகி அந்தக் கையினைப் பற்றிக்கொண்டனர் என்ற சரிதம் இங்கு நினைவுகூரத் தக்கது.

இதற்கு இவ்வாறன்றி, நாயனார் பூட்டி இளைக்கப் பார்த்திருந்து அதன்பின் சாய்வுமாறி நேர்நிற்றல் தகுமா? ஆதலின் அவ்வாறு இளைக்கு முன் ஒருப்பாடு கண்ட போதே நேரே நின்றார், அண்ணலாராதலின்; என்றுரைப்பதுமொன்று. இப்பொருளில் இளைத்தபின் திறம்பி நேர்நிற்றல் பெருமைக்குத் தகாது என்றதாம்.

**அண்ணலார்** - அன்பினிற் றாழும் பெருமையுடையார். அப்பெருமை விளங்கிய இடமாதலின் இங்கு இப்பெயராற் கூறினார்.

**ஆர்த்தார்** - ஆர்த்தவர்களாகி. முற்றெச்சம். ஆர்த்தாராகிப் பாரில் எங்கும் பூமாரி பரப்பினர் என வரும்பாட்டுடன் கூட்டி முடிக்க. இதனை வினைமுற்றாகவே கொண்டும், பரப்பினர் என்றதற்கு எழுவாய் வருவித்தும் உரைப்பாருமுண்டு. 28

859. (வி - ரை) **பயில் பூமாரி பார்மிசை எங்கும் நெருங்கப் பரப்பினர்** என்று கூட்டிக்கொள்க. **பயில்** - பழகிய. **பரப்பினர்** - மிகப் பெய்தலால் எங்கும் இடையில்லாது நிரப்பினர்.

**தேர் மலி தானை** - மன்னனுக்குச் சிறப்பு அடைமொழி. அங்குத் தேர்ப்படை வந்தன என்பதன்று.

**கார்பெறு கானம் போல** - மழை காணாது வாடி மழை பெய்யப்பெற்ற உடனே செழித்த சோலை போல. **கார்** - கருமை நிறத்தின் பெயர் அந்நிறத்தையுடைய மேகத்துக்காகிப், பின்னர் அம்மேகம் பொழியும் மழைக்காயிற்று. இருமடியாகு பெயர். இறைவன் திருமேனியை நேர்காணமாட்டாது இளைத்த யானை சேனைகள் தாம் விரும்பியிருந்து வாடிய செய்தியாகிய நேர்காணுதலைக் கிடைக்கப்பெற்று மகிழ்ந்ததற்குப், பயன்பற்றி வந்த உவமம்.

**கைகள் கூப்பி** என்றது, முதலில் நின்றபடியே கை கூப்பி வணங்குதலையும், **மலாடி தலைமேல் வைத்து** என்றது, பின்னர் நிலத்தில் உடல் தோய வீழ்ந்து வணங்குதலையும் குறித்தன.

**வார் கழல் வேந்தன் - மலாடி தலைமேல் வைத்து** - வெற்றிக்கடையாளமாகக் காலில் தான் வீரக்கழல் அணிந்து, முடிமன்னர்பிறர் தன்னடியில் வணங்க நிற்கும் அரசன் தன் தலையை நாயனாரது திரு அடியில் வைத்து வணங்கினான் என்று நாயனாரது சிறப்புக் குறித்தபடி. 29

860. (வி - ரை) **விண் பயில்** - ஆகாயத்திற் பறந்து சென்று பழகிய. **பயிலுதல்** - இங்கு இலகுவிற் சென்று வருதல் குறித்தது. பொன், வெள்ளி, செம்பு இவற்றானியன்ற மதிலுடைய மூன்று ஊர்களைத் தம் இடமாகக்கொண்டு, அசுரர்கள், அந்நகரங்களோடு ஆகாயத்திற் பறந்து சென்றும் இறங்கியும் அங்கங்குப் பல ஊர்களையும் உயிர்களையும் கீழ் அழுத்தி அழித்தனர் என்பது புராண சரிதம்.

**வைதிகத் தேர்** - திரிபுரமெரித்த காலையில் இறைவன் ஏறிய தேருக்குக் குதிரைகளாக வேதங்கள் அமைந்தன என்பது சரிதம். "வேந்தன் வளைத்தது மேரு வில்லரவு நாண்வெங்கணை செங்கண்மால், போந்த மதிலணி முப்புரம் பொடிபட **வேதப் புரவித் தேர்**, சாந்தை முதலயன் சாரதி" - (சேந்தனார் - திருவாவடுதுறை - 6), "மருளா, ரிடங்கொண்முப் புரம்வெந் தவியவை **திகத்தே ரேறிய** வேறுசே வகனே" (திருமாளிகைத் தேவர் - க - கோயில் - 10) என்ற திருவிசைப்பாக்கள் காண்க.

**மேருத் திண் சிலை குனிய** - மேருமலையே வில்லாக வளைய. **சிலை** - மலை எனவும் வில் எனவும் இரு பொருளும் பட நின்றது. **குனிதல்** - வளைதல். "கற்றூண்,

பிளக்கிறுவ தல்லால் பெரும்பாரைத் தாங்கிற், றளர்ந்து வீளையுமோ தான்" என்ற நியதியையும் மாறுபடுத்திக் கல்லே வளைத்து என அவரது இறைமை குறித்தபடி.

நின்றார் - தேரில் ஏறினர்; சிலை வளைத்தனர்; ஆயின் அவைகொண்டு சேவகம் ஒன்றும் செய்யாது சும்மா நின்றே வென்றவர் என்றது குறிப்பு. 190 உரை பார்க்க.

செந்நிலை காண - சாய்க்திருந்த அவரது நிமிர்ந்த நிலையினை அடியேன் காணும் படி. திண்ணிய மேரு மலையினைக் குனியும்படி செய்த வல்லாளராகிய இறைவர் தாம் குனிக்திருந்தாரை நிமிரச் செய்தீர் என்று நாயனாரது பெருமை குறித்தபடியாகும்.

மண் பகிர்ந்தவனும்-திருமாலும். பகிர்தல் - பிளத்தல். திருவடிதேடும் பொருட்டு மண்ணைத் தோண்டி உட்சென்றவன் என்ற பொருள் குறித்தது. உம்மை உயர்வு சிறப்பு. "நான்முகன் முதலா வானவர் தொழுதெழ, வீரடியாலே மூவுல களந்து, நாற் றிசை முனிவரு மைம்புலன் மலரப், போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன், றடி முடி யறியு மாதர வதனிற், கடுமுர ணேன மாகி முன்கலந், தேழ்தல முநவ விடந்து பின்னெய்த், தூழி முதல்வ சயசய வென்று, வழுத்தியுங் காணு மலரடி" (போற்றித் திருவகவல்) என்ற திருவாசகமும், "வரையொன்று நிறுவி யரவொன்று பிணித்துக், கடறட வாக மிடலொடும் வாங்கித், திண்டோ ளாண்ட தண்டா வமரர்க், கமிர்தணை வளித்த முதுபெருங் கடவுள், கடையுகஞ் சென்ற காலத்து நெடுநில, மாழிப் பரப்பி லாழ்வது பொறுஅ, தஞ்சே லென்று செஞ்சே லாகித்தன், றெய்வ வுதரத்துச் சிறு செலுப் புரையிற், பௌவ மேழே பட்டது, பௌவத்தோ, டுலகுகுழைத் தொருகாளுண் டது, முலக மூன்று மளந்துழி யாங்கவ, னீரடி நிரம்பிற்று மிலவே தேரி, லுரைப் போர்க் கல்ல தவன்குறை வின்றே, யினைய னுகிய தனிழதல் வானவன், கேழற் றிரு வுருவாகி யாழத், தடுக்கிய வேழு மெடுத்தன னெடுத்தெடுத், தூழி யூழி கீழுறக் கீளந் துங், காண்பதற் கரியநின் கழலும்" (11-ம் திருமுறை - கோயிணன் - 12) என்ற பட்டினத்தடிகள் திருவாக்கு முதலிய எண்ணிறந்த தமிழ்மறைகளில் இவ்வுயர்வுசிறப் பும்மையின் பொருள் விளக்கப்படுதல் காண்க.

காணுமலரடி யிரண்டினையும் யாரேகாண வல்லார்? என்று அவர்க்கருமையும் இவர்க்கெளிமையும் முரணணிச்சுவை பட இணைத்து வைத்துக் காட்டியவாறும். எளிமைக்குக் காரணம் ஒருமையன்பு பூண்ட அடிமைத்திறமே என்பார், பண்புடை யடியாரல்லால் என்றும், பரிந்து என்றும் கூறினர்.

அடியாரல்லால் அடியிரண்டும் யாரே நேர்காண வல்லார்? என்று கூட்டி யுரைக்க. "கம்பி, பூவணத் தவரை யுற்றார்; அவராலாற் புரங்கள் செற்ற, வேவணச் சிலையி னாரை யார்தொடர்ந் தெட்ட வல்லார்?" (190) என்றவிடத்தும் இவ்வாறே கூறினர்.

பண்பு - அடிமைத்தன்மை. பரிந்து-எனக்குக் காட்டுவாய் என்று வருந்தி யிரங்கி யிரந்து. நேர்காண - நேர் - நேர்நிலையாக. வெளிப்படையாக என்றலுமாம். யாரே - ஏகார வினா ஒருவருமிலர் என எதிர்மறை குறித்தது.

மண்புகுந்தவனும்—என்பதும் பாடம். 30

861. (வி - ரை) மெய்த்தொண்டர் - திருத்தொண்டின் உண்மைத் தன்மையில் உறைத்தவர்.

எம்பிரானுக்கு...பலவும் - யானையும் சேனையும் ஈர்த்து நின்றன என்றதனால் அரசன் திருக்கோயில்கட்டித் திருப்பணிகள் செய்வித்தான் என்பது கருதத்தக்கதாம். யானை சேனைகளுக்கு இடந்தரவும் மற்றும் இவற்றுக்கேற்ற வசதிகளுக்குமாக ஆலயத் தில் மண்டபங்கள் திருமதில் முதலியவற்றிற் பல வாயில்கள் திறக்கப்பட்டிருத்தல் கூடும். விமானங்கள், சுற்று ஆலயங்கள் முதலியன எஞ்சிநின்றிருத்தலும் கூடும். இவைபோல்வனவற்றைக் குறிக்க ஒன்றிய பணிகள் என்றும், திருநந்தனவனம், திருக்குளம் திருமதில் முதலியவற்றைக் குறிக்க மற்றும் உள்ளன பலவும் என்றும்

கூறினர். "கூவலு மமைத்து மாடு கோயில்சூழ் மதிலும் போக்கி, வாவியுந் தொட்டு மற்றும் வேண்டுவ வகுத்து" என்ற பூசலார் நாயனார் புராணம் (8) காண்க. இவை பற்றிய விரிவு சிவாகமங்களுட் கண்டு கொள்க.

**நீன்ற** - திருப்பணிகள் முற்றும்வரை அங்குத் தங்கிய என்பதாம். ஏவதற்கருத் தாக்களாய்ச் சிவாலயத் திருப்பணிகள் செய்விக்கும் அன்பர்கள் அவற்றைத் தமக்காகப் பிறர் கண்காணிக்கவிட்டுத் தாம் வேறு காரியங்கள் பார்த்து இராமல், அத்திருப்பணி கள் முழுதும் தாமே நேரில் இருந்து கண்காணித்து முடிக்க வேண்டுமென்பது முறை யும் விதியுமாம். இங்குத் திருப்பணிகள் முழுவதும் அரசன்தானே கூடஇருந்து முடித் தனன் என்பார் **நீன்ற** என்றார். ஆர்வமும் அன்பும் காரணமாக மெய்வருத்தம் பார்த் தலும் இளைப்பாறுதலுமின்றியும், இருத்தலும் கிடத்தலுமின்றியும், நீன்றபடியே கண் காணித்து என்ற குறிப்பும் காண்க.

**வெண்கவிகை** - அரச அடையாளங்களில் ஒன்று என்ற மாத்திரையாய் நின்றது. இங்கு அரசன் வெண்கவிகை நிழற்ற அதன்கீழ் நின்றனன் என்பதன்று. வெண் கொற்றக்குடை அளிசெய்தலைக் குறிக்கும் உருவகம்.

**நீங்கவும்** - அத்தலத்தினின்று தன் தலைநகருக்குச் சென்ற பின்னரும். அரசன் நீங்கவும் தாம் நீங்காராய் வைகினர் என உம்மை உயர்வு சிறப்புக் குறித்தது.

**நிகரில் அன்பர்** (ஆதலின்) **வைகி** என்க. **வைகி** - தங்கி. "காதலே கேரே காணும் அக்நெறி தலைநின்றான் என்று அரசனே விரும்பி (854)யே நாயனார் திருப்பணக் தாளிற் சேர்ந்தனர். அவன் நீங்கவும் தாம் நீங்காது பின்னரும் அங்குக் கழல் வாழ்த்தி யிருந்ததற்கு அவரது அயரா அன்பே காரணமாம் என்பார் **நிகரில் அன்பர்** என்றார்.

**மன்றிடை ஆடல் செய்யும் மலர்க்கழல் வாழ்த்தி** - **மன்று** - திருவம்பலம். ஐக் தொழில் நடனம் செய்யும் என்பது இறைவனது அம்பலத்து அருட்கூத்து. அடி யார்க் கெளிவந்த அத்திருவருளையே எண்ணியெண்ணி வாழ்த்திக்கொண்டு பலகாள் அங்குத் தங்கினர் என்பது கருத்து. யானே சேனைகளாற் கூடாதது தம்மாற் கூடிற்று என்று எண்ணினாரல்லர். திருப்பணியில் முயன்ற அவற்றின் இளைப்பைத் தாமும் கூறு கொண்டு குறைக்க எண்ணிய எண்ணத்தினுக் கிரங்கி இறைவன் நேர் நின்று அருளிய பெருங் கருணைத் திறத்தையே எண்ணினர். தமது சிறுமையினையும் இறைவரது அருளின் பெருமையினையுமே எண்ணி எண்ணி ஆராமை மிகுதியால் அத்திருவருளை வாழ்த்தி வைகினர் என்பது. **கழல்** - திருவடி - சிவசத்தி. 31

862. (**வி** - **ரை**) **பகல்** - இங்கு நாள் என்ற பொருளில்வந்தது.

**நிலவு தம் பணியில்** தங்கி-தாம் முட்டின்றி நியமமாகச்செய்துவந்த குங்குலியத் தூபத்திருப்பணி - **நிலவு** - வறுமைவந்த காலத்தும்விடாது நிலவிய. **பணியிற்றங்குத லாவது** பணிசெய்து அதில் வாழ்வடைதல்.

**நிகழும் நாள்** - வாழ்கின்ற காலத்தில். **நிகழ்தல்** - நடத்தல் - செல்லுதல்.

**நிகரில் காழித் தலைவர்** - நிகரில் காழி என்றும், நிகரில் தலைவர் என்றும் கூட்டி யுரைக்க நின்றது. காழியின் தன்னிகரில்லாச் சிறப்பு ஆளுடைய பிள்ளையாரருளிய வழிமொழித் திருவிராகம், பல்பெயர்ப்பத்து, திருவெழுகூற்றிருக்கை, திருச்சக்கர மாற்று, ஈரடி, திருவியமகம் முதலிய திருப்பதிகங்களானும், "பெருகெறிய பிரமாபுரம்" (நட்டபாடை - பிரமாபுரம் - 11), "நற்புலவர் தம்புகழ் பொற்பதி (காந் - பஞ்ச - பூந்தாய் 10), "போதனைப்போன் மறையோர் பயிலும்புகலி" (வியா - குறி - புகலி. 11), "கலியின் மேவும் மனத்தோ ரிரப்போர்க்குக் கரப்பிலார், பொலியு மந்தண் பொழில்சூழ்ந் தழகாரும்புகலி" (செவ்வழி - புகலி - 8), "பொய்யா நாவி னக்கணர் வாழும் புறவம்" (குறிஞ்சி - புறவம் - 1), "கரிதன்னைப் பண்டுரி செய்தோன் பாவனை செய்யும் பதி" (குறிஞ்சி - புறவம் - 7), "காதலாற், சைவர் பாசு பதர்கள் வணங்கும்

சண்பை நகர்" (தக்கேசி - சண்பை - 4), "உரவார் கவிதைப் புலவர்க் கொருநாளுங், காவா வண்கைக் கற்றவர் சேருங் கலிக்காழி" (குறிஞ்சி - காழி - 1), "கற்றல்கேட்ட லுடையார்கள் வாழ் கலிக்காழி" (காந்தாரம் - காழி 3), "விலங்கலமர் புயன் மறந்து மீன்சனிபுக் கூன்சலிக்குங் காலந் தானுங், கலங்கலிலா மனப்பெருவண் கையுடைய மெய்யர்வாழ் கழமலமே" (மேகரா - குறி - கழுமலம்-3), "தருத்தடக்கை முத்தழலோர் மனைகடொறு மிறைவனது தன்மை பாடிக், கருத்தடங்கண் ணுர்கழல் பற் றம்மானைப் பாட்டயருங் கழுமலமே" (மே 2), "பரக்கும்வண் புகழார் பழியவை பார்த்துப் பலபல வறங்களே பயிற்றிக், கரக்குமா றறியா வண்மையால் வாழுங் கழுமல நகர்" (புறநீர்மை - கழுமலம் - 8), "ஞானங் கருதினு ருலகிற் கருத்துடை யார்சேர் கழுமலநகர்" (மே 5), "கலையாரெடு சுருதித்தொகை கற்றோர் மிகுகூட்டம், விலை யாயின சொற்றோர்தரு வேணுபுரம்" (கட்டபாடை) என்பனவாதி ஆளுடைய பிள்ளை யார் அருளிய தேவாரங்களாலும், அவர் புராணத்துட்கூறிய தலச் சிறப்புக்களாலும் பிறவாற்றானுமறிக. நீகரில் தலைவர் என்ற அவரது ஒப்பற்ற தலைவராந் தன்மை, அவர் புராணத்துள் 69, 70, 71 திருப்பாட்டுக்கள் முதலியவற்றாலும், அவர் சரித நிகழ்ச்சிகள் பலவற்றாலும், ஆளுடைய அரசுகள் ஆளுடைய நம்பிகள் முதலிய பரமா சாரியர்களும், சங்காசாரியார் முதலிய சமயத் தாபகர்களும் வழிபட்டுத் துதித்தவாற் றாலும், இறைவன் செய்யும் அருட்டொழிலாகிய முத்திப்பேற்றைத் தன்னடைந் தோர்க்கு அருளும் தன்மையாலும், பிறவாற்றாலும் அறிக.

பிள்ளையார் - ஆளுடைய பிள்ளையார். உலகுக்கெல்லாம் தந்தை தாயாகிய தோணிபுரேசர் பெரிய நாயகியம்மையாரிவர்களுக்குப் பிள்ளையாராய் அருண்ஞானப்பா லூட்டப்பெற்று வளர்ந்தமையால் இப்பெயர் பெற்றனர். "யாவர்க்கும் தந்தைதா யெனுமவரிப் படியளித்தார், ஆவதனு லாளுடைய பிள்ளையாராய்" - (திருஞான - புரா - 69) என்றது பார்க்க.

தாண்டகச் சதுரர் - திருத்தாண்டகத்தில் தனி வல்லமை யுடையார். தாண்ட கம் - ஒற்று நீக்கிப் பெரும்பான்மை 26 எழுத்துக்களின் மிக்க தாண்டக அடியால் வருமாறு யாக்கப்பட்ட ஒருவகைச் சந்தமுடைய தமிழ்ப்பண் அமைதி பெற்ற பாவிகற்பம். இது அளவழித்தாண்டகம் அளவியற்றாண்டகம் என்ற இருபகுப்பினை யுடையது. தேவாரம் அருளிய மூவர் முதலிகளில் அரசுகள் ஒருவரே திருத்தாண்ட கம் என்னும் இந்தப் பண்ணுடைய தேவாரப் பாக்கள் அருளியவர். இப்பாக்கள் பயில்வோரது ஊனையும் உயிரையும் உருக்கி இறைவனுக்கு ஆளாந்தன்மையிற் செலுத் தும் தன்மையிற் சிறந்து விளங்குவன. இதனால் இவர்க்குத் தாண்டகவேந்தர் என்ற சிறப்புப் பெயர் வழங்கும். சதுரர் - சதுரப்பாடு - வன்மை - உடையவர். அரசு - என்றது தாண்டகத்தில் வல்லர் என்ற குறிப்பும் பற்றியது.

அலர்புகழ் அரசு - எங்கும் பரவிய புகழினையுடைய திருநாவுக்கரசர். இவரது புகழ் பரவி மக்களை ஆட்கொண்ட திறம் "காண்டகைமை யின்றியுமுன் கலந்த பெருங் கேண்மையினூர்", "பொங்குகடற் கன்மிதப்பிற் போந்தேறு மவர்பெருமை, யங்கணரும் புவனத்தி லறியாதா ரியாருளரே" என்ற அப்பூதிநாயனூர் புராணத்தா லும், பிறவாற்றாலுமறிக.

கூட அங்கு எழுந்தருள - ஒன்றாகச் சேர்ந்து அங்குத் திருக்கடவூருக்கு வந்தருள. இவ்விரு பெருமக்களும் இங்கு எழுந்தருளிக் கூற்றுதைத்த பொன்னடிகளை வணங்கிக் கலயனாரது திருமடத்தில் அமர்ந்து அவராற் பூசிக்கப்பெற்ற சரிதம் அவ்வவர் புராணங் களுட் கூறப்பட்டன. திருநா - புரா - 247ம் திருப்பாட்டும், திருஞான - புராணம் 533—536 திருப்பாட்டுக்களும் பார்க்க. பரமாசாரியர்களான இவ்விரு பெருமக்களும் இரண்டாவது முறை சந்தித்த செயல் திருப்புகலூரில் நிகழ்ந்தது. அங்கு நின்றும் அவ் விருவரும் ஒன்று கூடியே தலயாத்திரை செய்து திருவம்பர்த்தலத்தை வணங்கிக்

கொண்டு வரும் வழியில் இங்கு எழுந்தருளித் தரிசித்தனர். இங்கு நின்றும் திருவாக்கூர், திருமீயச்சூர், திருப்பாம்புரம் முதலிய தலங்களே வணங்கித் திருவீழிமிழலே சேர்ந்தனர் என்பது சரிதம்.

**கூட எழுந்தருள** - ஒன்றுகூடி வர. பெரியோர்களது வருகையை இவ்வாறுபசரித்தல் கூறுதல் சைவமரபு. இப்பெரியோர்கள் கூடிச்செய்த யாத்திரை வழிச்செலவில் இவர்கள் ஒன்றுகச் செல்லாது அரசுகள் முன்னரும், அவரைப் பின்பற்றிப் பிள்ளையாரும் செல்லுதலும் தலங்களிற் சேர்தலும் முறை. ஆயினும் இருவரும் தலங்களைக் கூடித் தரிசித்துச் சென்றதனால் கூட என்றார். 32

863. **(வி - ரை) மாறிலா மகிழ்ச்சி பொங்க** - ஆர்தருகாதல் கூர அடியவர்களுக்கு ஈளும் திருவமுதூட்டும் (852) தன்மையுடைய கலயனார், போடியார்களும் பரமாசாரியர்களுமாகிய இருபெருமக்களும் கூட எழுந்தருளக் கண்டபோது இது வரையுமில்லாத ஒப்பற்ற மகிழ்ச்சி மேன்மேற் பொங்க நின்றனர் என்பது இயல்பேயாம். அடியார்களே அமுதூட்டிப் பணி செய்ததன் பயனுகவும் அதற்குப் பரிசாகவும் இது எய்தியதென்று எண்ணி, மாறிலா மகிழ்ச்சி பொங்கினர் என்பதுமாம்.

**ஈறுஇலா அன்பின் மிக்கார்க்கு** - எல்லையற்ற - அளவு காணமுடியாத - அன்பினல் மிகுந்தவர்களாகிய அவ்விரு பெருமக்களுக்கும். அவர்களது அன்பின் மிகுதியினலன்றே, அவர்களே இறைவன் ஆட்கொண்டனர்; அவர்கள் உலகை ஆட்கொள்ளும் பரம ஆசாரியர்களாக விளங்கினர் என்க.

**ஏற்கும் ஆற்றல் ஆறு நற்சுவைகள் ஓங்க இன்னமுது அமைத்து** என்க. **ஏற்கும் ஆற்றல்** போடியார்கள் என்ற தன்மைக்கும், அதற்கு மேலாகச் சிவனுலாட்கொள்ளப்பட்ட பரமாசாரியர்கள் என்ற தன்மைக்கும் தக்கபடி. "பிள்ளே யாரெழுந் தருளிய பெருமைக்குத் தக்க" என்ற திருநீலகக்கர் புராணம் (27) காண்க. **நற்சுவைகள் ஓங்க** - வெறும் நாவின் சுவையாலன்றிக் குணத்தாலும் உயர்வுடைய என்பார் **நற்சுவை** என்றார். **இன்அமுது-இன்** - இனிய. இதனுல் அமுதுக்கான உணவுப்பண்டங்களின் இனிமை, அமுது அமைத்தலின் இனிமை, அன்பின் இனிமை முதலியன எல்லாம் அடக்கிக்கொள்க. 443 - 852 முதலியவை பார்க்க.

**அவர் அருளேயன்றி...நம்பர்தம் அருளும் பெற்றார்**-முன்னர்க் கலயனார் அடியார்களே இனிய திருஅமுதூட்டிய வகையால் **சங்கமவழிபாடு** செய்து **அவர்களருள்** பெற்றனர். அதுகாரணமாகப் பரமாசாரியர்களாகிய இரு பெருமக்களது அரிய சேவையும் கிடைக்கப்பெற்று வழிபட்டுக் **குருவருள்** பெற்றனர். அதனுல் அதன் வழியே இலிங்க வழிபாட்டிற் கிடைக்கும் **சிவனருளும்** பெற்றனர். இவ்வாறு குரு லிங்க சங்கமமென்ற மூவகை வழிபாடுகளின் அருட்பேறும் கலயனார் ஒருங்கே பெற்றனர் என்பதாம்.

**அன்பின் மிக்கார்க்கு...அமுது அமைத்து...நம்பர் அருளும் பெற்றார்** - என்றதனால் அன்பர்களே ஊட்டிய அச்செயலாலே அவர்களருளோடு அரனருளும் பெற்றார் என்பதாயிற்று. "படமாடக் கோயிற் பகவற்கு தாமே" என்றபடி அன்பர்களுக்குள்ளே நின்று மகிழ்ந்து அரன் உண்டு அருள்கின்றனன் என்பது உண்மை. இக்கருத்துப்பற்றியே "உள்ளத்திற் றெளிகின்ற மெய்ம்மை யன்பி னுருவினையு மவ்வன்பி னுள்ளே மன்னும், வெள்ளச்செஞ் சடைக்கற்றை தெற்றிச் செங்கண் விமலரையு முடன்கண்ட விருப்பும் பொங்க" (திருஞான - புரா - 1023) என்று கண்ணப்ப நாயனரைத் துதித்தது காண்க. பசுவின் வாயிலே ஊட்டிய புல் உணவு இரத்தமாக மாறி அதன் உடல் முழுதும் பரவிப் பின்னர்ப் பாலாக உருக்கொண்டு மூலக்காம்பில் வெளிவருவதுபோல அடியார்களுக்கு ஊட்டிய அமுது அருளாக உருப்பட்டுச் சிவலிங்கத்திற் போக்து வெளிப்படும் என்பது ஞானசாத்திர முடிபு.

**அவர் அருளேயன்றி - நம்பர் அருளும்** - அவர்களை ஊட்டியதொரு செயலே இருவகை யருளும் பெறுவித்தது என்ற குறிப்பும் காண்க.

**இன்னழ தொக்குமாற்றல்**—என்பதும் பாடம். 33

864. கருப்புவில் லோனைக் கூற்றைக் காய்ந்தவர் கடவூர் மன்னி
விருப்புறு மன்பு மேன்மேல் மிக்கெழும் வேட்கை கூர
ஒருப்படு முள்ளத் தன்மை யுண்மையாற் றமக்கு நேர்ந்த
திருப்பணி பலவுஞ் செய்து சிவபத நிழலிற் சேர்ந்தார். ௩௪

**(இ - ள்)** வெளிப்படை. கரும்பை வில்லாகவுடைய மன்மதனையும் இயமனையும் தண்டித்த சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கடவூரிலே (கலயனார்) நிலையாக வாழ்ந்து விருப்பம் பொருந்திய அன்பு மேன்மேலும் மிகுந்து எழுகின்ற ஆசை அதிகப்படவே, ஒருப்படுகின்ற மனநிலை உண்டாயினமையினால் தமக்கு நேர்பட்ட திருப்பணிவிடைகள் பலவற்றையும் செய்து சிவனது திருவடி நீழலிற் சேர்ந்தனர்.

**(வி - ரை) கருப்பு வில்லோன்** - மன்மதன். கரும்பை வில்லாகக் கொண்டவன் என்பது புராண வரலாறு. கரும்பு என்பது **கருப்பு** என வன்றொடராய் நின்றது. சிவபெருமானது ஆணையின்றி வலிந்து உட்சென்று அவர் மேல் வலிந்த சேவகம் செய்தமையாலே இவன் உடல் தீய்ந்துபோகுமாறு காயப்பட்டான். பின்னர் உயிர் பெற்றும் உருவிழந்து விகாரப்பட்டான் என்ற குறிப்புப்பெற மென்றொடர் வன்றொடராய் விகாரமாயிற்று.

**வில்லோனைக் காய்ந்தவர்** - தீக்கண்ணினாற் பார்த்து வேவச் செய்தவர். **காய்ந்தவர்** - என்பது இங்கு அனலால் வேவித்தவர் என்ற பொருளில் வந்தது.

**கூற்றைக் காய்ந்தவர்** - காலனைச் சினந்து உதைத்துத் தண்டித்தவர்.

**கருப்பு வில்லோனைக் கூற்றைக் காய்ந்தவர்** என்ற குறிப்பினால் இவரை வழிபட்டதனால் கலயனாரும், தம்மையும் மனைவி மக்கள் சுற்றம் என்ற தொடர்புகளையும் பற்றுகின்ற பந்த பாசமாகிய காமங்களை ஒழித்த நிலையிற் கருப்பு வில்லோனைக் காய்ந்த நிலை பெற்றனர்; மரணத்தின் நீங்கிப் பிறவாநெறி பெற்றமையாற் கூற்றைக் காய்ந்த நிலையும் பெற்றனர் என்ற குறிப்பும்பெற இந்த இரண்டு வீரங்களையும் பற்றி இங்குக் கூறினார்.

**விருப்புறும் அன்பு** - இது நமது கடமை என்பதனோடமையாது விருப்பம் பொருந்திய அன்பு.

**மேன்மேல் மிக்கெழும் வேட்கைகூர - வேட்கை** - ஆசை. **மேன்மேல் - மிக்கு எழும் - கூர** என மூன்று முறைபெறக் கூறியது ஆசை எழுச்சியின் மிக்க வேகங் குறித்தற்கு.

**ஒருப்படும் உள்ளத்தன்மை** - விருப்பமும் அன்பும் ஆசையும் கூடிப் பிறிதொன்றிலும் செல்லாது சிவன் றிருவடி ஒன்றிலே சென்ற மனநிலை. **உண்மையால்**-இருந்தபடியினாலே.

**தமக்கு நேர்ந்த திருப்பணி பலவும்** - அவ்வாறு மிக்கெழுந்த ஆசைக்குத் தக்கபடி கிடைத்தனவாகிய அரன்பணிகளும் அடியார் பணிகளும். **பலவும்** - பலதிறப்பட்டவைகளையும். குங்குலியத் தூபமேந்துதலாகிய அரன்பணியினையும், இனிய அமுதூட்டுதலாகிய அடியார் பணியினையும் நித்த நியதியாகச் செய்து வந்த கலயனார், அன்பும் விருப்பமும் ஆசையும் மிகவே அத்தகைய பிறபணி பலவும் சிறப்பாகச் செய்தனர் என்பதாம். அவை, திருவிழாச் செய்து சேவித்தலும், பிறரைச் செய்வித்தலும் முதலாகிய அரன்பணிகளாம். அடியார்க்கு அமுதளித்தலோடு, துணி, அணி, மணி, பொன் முதலாக அவர் வேண்டுவனவற்றை அளித்தலும், அவர் ஏவினவழி நிற்றலும், பிறவும் அடியார் பணிகளாம்.

**சிவபதநீழலிற் சேர்ந்தார்** - சிவபதமாவது சிவனதருளின் நிறைவு - அஃதாவது அவனதருட்சத்திவியாபகம். பிறவிவெப்பத்தினின்றும் நீக்கிக் குளிர்விப்பதனால் இதனை அடிநிழல் என்பது மரபு. 308ல் **தண்மை** - என்றதற்கும், 489ல் **கழல் நீழல்** என்றதற்கும் உரைத்தவை பார்க்க.

**பதநிழலிற் சேர்தலாவது** - அருள் நிறைவுக்குள் அடங்கி நிற்றல். " பிணிமேய்ந் திருந்த, விருகாற் குரம்பை யிதனா னுடைய திதுபிரிந்தாற், றருவா யெனக்குன் றிரு வடிக் கீழோர் தலைமறைவே " என்ற திருவிருத்தக்கருத்தும் உன்னுக. 34

865. தேனக்க கோதை மாதர் திருநெடுந் தாலி மாறிக்
கூனற்றண் பிறையி னுர்க்குக் குங்குலி யங்கொண் டேய்த்த
பான்மைத்திண். கலய னுரைப் பணிந்தவ ரருளி னுலே
மானக்கஞ் சாறர் மிக்க வண்புகழ் வழுத்த லுற்றேன். கூடு

(இ - ள்) வெளிப்படை. தேனலர்ந்த மலர்மாலை யணிந்த மனைவியாரது திருநெடுந்தாலியைக் கொடுத்து, வளர்ந்த குளிர்ச்சியுடைய பிறைச்சந்திரனைத் தலையிற் சூடிய இறைவருக்கு ஏற்ற குங்குலியத் தூபத்திருப்பணி முட்டுப்படாது செலுத்திய பான்மையும் திண்மையும் உடைய கலயனுரைப் பணிந்து, அவரது அருளின் துணையி னுலே, மானக்கஞ்சாற னாயனாது மிக்க வண்மையுடைய திருத்தொண்டினை இனித் துதிக்கத் தொடங்குகின்றேன்.

(வி - ரை) **தேன்நக்க** - மலர்கள் அலரும் பருவத்தில் தேன் சொரியும். அப் போது அவை நகுவன போன்றிருக்கும் என்பது உபசாரவழக்கு. " முருகுயிர்க்க நகைக்கும் பதத்தி னுடன்பறித்த, அலகின் மலர்கள் " (முருகர் புரா - 7) என்றதும், " நன்றுநகு நாண்மலரால்" (பழந்தக்கராகம் - திருஞான-தேவா - கோளிலி - 3) என்ற தும் பிறவும் காண்க.

**கோதை மாதர்** - மலர்மாலையணிந்த அம்மையார் - கலயனாரின் மனைவியார்.

**திருநெடுந்தாலி** - தாலியை நாணினின்றும் எடுத்துக் கொடுத்தனரேனும் அஃது இடையறாது நீளும் மங்கலத்துக்குக் காரணமாயிற் றென்பார் **தேனக்க கோதை** - என்றும் **திரு** - என்றும், **நெடு** - என்றும் கூறினர். **நெடுமை** - நாணினின்று பிரிந்த காலத்தும் பின்னரும் நீண்டு நிகழ்ந்த மங்கலத்துக்கும், அருட்செல்வம் பொருட் செல்வங்களாகிய பெருஞ் செல்வப் பேற்றுக்கும், உடல் பேணத்தந்த தூவே உயிரைப் பேணுதற்கு உதவிய சிறப்புக்கும் காரணமாயினமை குறித்தது. **மாறி** - பிரதியாகக் கொடுத்து. பண்ட மாற்று - என்ற வழக்கும் காண்க.

**கூனல்தண் பிறையினுர்**-கூன்-முதுகுவளைந்த நிலை-உள்வளைவு. "கூனற் றிங்கட் குறுங்கண்ணி" (செவ்வழி-நாகை - 1) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரங் காண்க. " வள்வாய மதிமிளிரும் (காளுட்டி முள்ளூர் 1) என்ற சம்பிகள் தேவாரமு மிக்கருத்துப் பற்றியது. **தண்மை** - நிலாவின்குணவியல்பு. **பிறையினுர்** - பிறையைச் சூடியவர்-சிவ பெருமான்.

**உய்த்தல்** - செலுத்துதல். தாம் செய்துவந்த தூபத்திருப்பணியும் அடியார்பணி யும் முட்டுப்படாது செலுத்திய என்க. உய்த்தலுக்குச் செயப்படுபொருள் வருவிக்க.

**பான்மை** - இங்கு அன்பின்தன்மை குறித்தது. **திண்மை** - மனஉறுதிப்பாடு. கேடுகளிலும் மனம்மாறு தை ஒருப்பட்ட உள்ளத்தின் வலிமை. " ஆளுடையா ரடியவர் தந் திண்மை யொழுக்க நடை செலுத்தி " (496) என்றது பார்க்க.

**பணிந்து அவர் அருளினுலே** - பணிந்ததனுற் பெற்ற அவரது திருவருளினுல். மானக்கஞ்சாறர் வண்புகழ் வழுத்தப் புகுதற்கு அருட்டுணை வேண்டியிருத்தலின் கலயனாரது திண்ணிய அருள் அதற்குத் துணைசெய்யும் என்பதாம்.

**மானக்கஞ்சாறர்** - கஞ்சாறு என்ற தலத்தில் அவதரித்து வாழ்ந்த பெரியார் ஆதலினால் இப்பெயர் பெற்றார். இளையான்குடிமாறர் என்ற பெயர் காண்க. **மானம்** - பெருமை.

**மிக்கவண்புகழ் - வண்மை** - கொடை - வள்ளற்றன்மை. மிக்க கொடையினாற் போந்த புகழ். இங்கு **வண்மை**-அடியார்கள் விரும்பியது கொடுத்தலின்மே னின்றது. இஃது இவர் சரித உள்ளுறையாம். இவ்வாறு குறிப்பினால் சரித உள்ளுறை கூறித் தொடங்கிக் காட்டிய ஆசிரியர் இதனையே " ஒரு மகள் கூத்தல் தன்னை வதுவைகா ளொருவர்க் கீந்த, பெருமையார் " (902) என்று இவ்வண்மையாவது இது என்று இப்புராண முடிவில் முடித்துக்காட்டியதிறமும் காண்க.

**புகழ் வழுத்தல் உற்றேன்** - சரிதமுற்றும் சொல்லவல்லேனல்லேன்; அவரது வள்ளன்மையாற் போந்த திருத்தொண்டினைத் துதிக்கின்ற மட்டில் அமைவேன் என்றதாம். **புகழ்** - அதனையுடைய தொண்டிற்காயிற்று. ஆகுபெயர்.

இப்பாட்டு கவிகூற்று. " தாலி மாறிக் குங்குலி யங்கொண்டு " "உய்த்த" என்ற வற்றால் இதுவரை கூறிவந்த இச்சரித முழுதும் வடித்து முடித்துக்காட்டி, இனி வரும் சரிதத்துக்கு " வண்புகழ் " என்று தோற்றுவாய் செய்தனர். இது ஆசிரியர் மரபு. 35

---

**சரிதச் சுருக்கம்** :—காவிரிபாயும் **சோழவளநாட்டில் திருக்கடவூர்** என்றதொரு தலமுண்டு. அது இறைவன் வீரஞ்செய்த எட்டுத்தலங்களில் ஒன்றாதலின் **கடவூர் வீரட்டானம்** என்று பெயர் பெறும். காலனை உதைத்த வீரம் இங்கு நிகழ்ந்ததாம். இத்தலத்தில் மறையவர்கள் சிறந்து வாழ்வார்கள். அவர்களுள் **கலயனார்** என்ற பெரியார் ஒருவர் இருந்தனர். அவர் சிவனடியேணும் சிறந்த அன்புடையவர்; கல்லொழுக்கத்திற் சிறந்தவர். அத்தலத்தே எழுந்தருளிய அமிர்தகடேசருக்கு விதிப்படி தூபம் இடும் திருப்பணியை நியதியாகச் செய்து வந்தார்.

அந்நாளில் திருவருளாலே அவருக்குவறுமைவந்தது. அதன்பின்னரும் அத்திருப்பணியை வழுவாது செய்து வந்தனர். வறுமை மிகவே தமது நல்ல நிலமுழுமையையும் அடிமைகளையும்விற்றும் பணிசெய்தனர். வறுமை மேலும் முடுகியதனால் தாமும் மனைவியுமக்களும் சுற்றமும் உணவுக்கான சாதனமொன்றுமின்றி இரண்டுநாள் உணவின்றிவருந்தினர்கள். இது கண்ட மனைவியார் கணவனார் கையில் குற்றமற்ற தமது மங்கல நாணில் அணிந்ததாலியை எடுத்துக்கொடுத்து "இதற்கு நெற்கொள்ளும்" என்றனர். அதனைக் கொண்டு அவர் நெற்கொள்ளச் சென்றபோது எதிரில் ஒருவணிகன் ஒப்பில்லாத குங்குலியப் பொதிகொண்டு வந்தான். அதனை அறிந்த கலயனார் "இறைவனுக்கேற்ற மணமுடைய குங்குலியம் இது வாயின், இன்று நல்ல பேறு பெற்றேன். பெரும் பேறாக இதனைப் பெற்றுவைத்தும் வேறு கொள்ளத்தக்கது என்ன உள்ளது?" என்று துணிந்து, பொன்பெற்றுக்கொண்டு அதனைத் தருமாறு வணிகனைக் கேட்கவே, அவனும் மகிழ்ந்து அவர்தந்த தாலியை எற்றுக்கொண்டு குங்குலியப் பொதியினைக் கொடுத்துச் சென்றான். கலயனார் சிந்தை மகிழ்வுடன் விரைந்து சென்று திருவீரட்டானத்திற் சேர்ந்து, இறைவரது பண்டாரத்தில் (சேமம்) அப்பொதியின் குங்குலியத்தை எல்லாம் சேமித்துத் திருப்பணிசெய்து சிவசிந்தையுடன் அங்கே தங்கினர்.

அன்றிரவு மனைவியாரும் மக்களும் பசியால் மிகவருந்தி அயர்ந்து தூங்கினர். அப்போது இறைவருடைய திருவருளினாலே குபேரன் தனது செல்வத்தைப் பூமியில் கொண்டுவந்து நிறைத்துக் கலயனாரது மனைமுழுதும் பொற் குவையும் நெற்குவையும் அரிசி முதலிய பிற எல்லாவளங்களுமாக ஆக்கிவைத்தனன். இதனை இறைவர் அம்மையாருக்குக் கனவில் உணர்த்த, அவர் உணர்ந்தெழுந்து செல்வங்களை நோக்கினார்; அவற்றை இறைவரருள் என்று கண்டு தொழுதனர்; தமது கணவனார்க்குத் திரு

வழுது சமைக்கலாயினர். அங்குத் திருக்கோயிலில் கலயனார்க்கு "நீ மிகப் பசித்தனை ! உன்மனையிற்சென்று பாலினின் அடிசில் உண்டு துன்ப நீங்குக" என்று இறைவர் கட்டளையிட்டருளினர். அத்திருவருளை மறுத்திருப்பதற் கஞ்சிக் கலயனர் மனையில் வந்தனர். செல்வமெல்லாங் கண்டனர் ; திருமனையாரை நோக்கி " இவ்விளவெல்லாம் என் கொல் ?" என்று கேட்க, அவர் " திருநீலகண்டராகிய எம்மானதருள் " என்றார். கலயனர் கைகூப்பி வணங்கி " என்னையும் ஆட்கொள்ள எம்பெருமான் திருவுள் இருந்தபடி இதுவோ ?" என்று துதித்தனர். மனையியார் பரிகலந்திருத்திக் கணவனைச்சிவனடியார்களோடு இருத்தித் தூபதீபம் எடுத்துப் பூசித்து இன்னமுதூட்டினர். அது நுகர்ந்து கலயனர் இன்பமார்ந்தார். இவ்வாறு இறைவருளால் உலகில் நிறைந்த செல்வமுடையராகி அடியவர்களுக்கெல்லாம் நல்ல இனிய அமுதூட்டியும் உதவியும் வாழ்ந்திருந்தனர்.

இக்காலில் **திருப்பனந்தாளில்** இறைவர் திருமேனி, **தாடகை** என்ற அசுரமாதுக் கருளும் பொருட்டுச் சாய்ந்தது அவ்வாறே இருந்தது. அதனை நேர்நிற்கக் கண்டு கும்பிடவேண்டுமென்று ஆசை கொண்ட சோழமன்னன் யானைகளையும் சேனைகளையும் பூட்டித் திருமேனியினை நிமிரப் பண்ண முயன்றனன். இறைவர் நேர்நிற்கவில்லை. யானை சேனைகள் இழுத்து வீழ்ந்தன. அரசன் புடைபடக் கவன்றிருந்தனன். இதனைக் கேட்டனர் கலயனர். காதலை நேர்காணும் பணியில்கின்ற அரசனை விரும்பித் திருக்கடவூரினின்றுபோந்து திருப்பனந்தாளிற் சேர்ந்தனர். யானைசேனைகள் இழுத்து வீழ்ந்து எழமாட்டாதகிலகண்டு மனம்வருந்தினர். " இவ்விளப்பினானும் கூறுகொண்டு அவ்வளவிற்கு இவற்றின்வருத்தத்தைக் குறைக்க முயல்வேன்" என்று தணிந்தார். இறைவரது திருமேனிப் பூங்கச்சிற் கட்டிய பெரிய வலிய கயிற்றினைத் தம்கழுத்திற்பூட்டி இழுத்து வருத்தலுற்றார். இவர் இவ்வாறு செய்து இழுத்த பின் இறைவர் நிறம்பி நிற்க ஒண்ணுமோ ? இவர்தமது அன்பின் ஒருமைப் பாட்டினைக் கண்டபோதே அண்ணலார் நேரேநின்றார். தேவர்கள் விண்ணில் ஆர்த்துப் பூமாரி பெய்தனர். வாடிய சோலை மேகம்பெற்றுக் களிப்பதுபோல யானைசேனைகள் களித்தன. சோழமன்னன் கலயனரது பாதங்களில் வீழ்ந்து வணங்கி, மேருவை வில்லாக வளைத்துப் புரமெரித்த கடவுளின் செங்கிலை காணச்செய்தீர் ! திருமாலுங் காணுத மலரடியினைகளை அன்புடையடியாரே யல்லால் நேர்காண வல்லார் யாவர் ?" என்று துதித்தான். பின்னர் அரசன் இறைவர்க்குப் பிறபணிகள் பலவுஞ்செய்து தனது நகரத்துக்குச் சென்றான். அரசன் போயின பின்னரும் கலயனார் சிலகாள் இறைவனைப் பிரியலாற்றாது அங்குத் தங்கி வழிபட்டுப் பின் திருக்கடவூர் சேர்ந்தனர்.

சிலகாள்களின் பின்னர் ஆளுடையபிள்ளையாரும் ஆளுடையஅரசகளும் கூடித் திருக்கடவூருக்கு எழுந்தருளினார்கள். மிக்க மகிழ்ச்சி பொங்கக் கலயனார் அவர்களை எதிர்கொண்டு அழைத்துத் தமது திருமனையில் அவர்களது பெருமைக் கேற்றவாறு இன்னமுது அளித்து வழிபட்டு அவர்களதருளையன்றி இறைவரது அருளும்பெற்றார்.

இவ்வாறு கலயனார் அரனுக்கும் அடியவர்க்கும் எற்றனவாய்த் தமக்கு நேர்ந்த பணிகள் பலவும் செய்து வாழ்ந்திருந்து சிவபெருமானது திருவடி நீழலிற் சேர்ந்தனர்.

---

**தலவிசேடம்:**—(1)**திருக்கடவூர்**—இது சோழநாட்டில் தேவாரப்பாடல் பெற்றனவாகிக் காவிரிக்குத் தென்கரையிலுள்ள தலங்களுள் 47வது திருத்தலம். சிவபெருமான் வீரங்கள்செய்த "அட்ட வீரட்டம்" என்னும் எட்டுத்தலங்களுள் மார்க்கண்டேயருக்காகக் காலனை உதைத்தருட்டிய காலசங்கார வீரம் நிகழ்ந்த தலம். இச்சரிதத்தைப் பலபடத் துதித்துக் " கூற்றம் பதைப்ப உதைத்தங்னே, யுருட்டிய சேவடியான்கட வூருறை யுத்தமனே", "காலனைக் காய்ந்த பிரான்" "காலனை அன்றடர்த்து" என்பன முதலிய அப்பர் சுவாமிகளது இத்தலத் திருவிருத்தங்களிலும், மற்றெல்லாத்

திருமுறைகளிலும்வரும் எண்ணிறந்த திருவாக்குக்களும் காண்க. பதுமகற்பத்தில் பிரம தேவர் சிவஞானம் பெறத் தவஞ்செய்து சிவபெருமானருளிய சிவஞான வித்தையிட்டு உண்டாக்கிய வில்வமரத்தையுடைய காரணத்தால் இது **வில்வாரண்ய** மெனப்படும். இந்த மூர்த்தி 'ஆதிவில்வாரண்யேசுவரர்' என்ற நாமத்துடன் கர்ப்பக்கிருகத்தின் வட சுற்றில் வடதிருமாளிகைப்பத்திக் கீழ்கோடியில் குகைக்கு வடகீழ்ப்பாகத்தில் அமர்ந் திருக்கிறார். இராதன்திர கற்பத்தில் தூய்மையுடைய இடமாகிய இத்தலத்தில் வைத்து உண்ணும் பொருட்டு விட்டுணுமுதலிய தேவர்கள் அமிர்தத்தைக் குடத்திலிட்டு இங்குக் கொண்டுவந்து வைத்தனர். அதுவே **அமிர்தலிங்கமாக** உருப்பட்டு ஊன்றிக் கொண்டது. ஆதலின் இத்தலம் **கடவூர்-கடபுரி**-எனப்படும்; சுவாமி **அமிர்தகடேசுவரர்** என வழங்கப் பெறுவர்.

அகஸ்தியர் பூசித்த **பாப விமோசனலிங்கம்** திருவாலயத்தினுள் காலசங்கார மூர்த்தி எழுந்தருளியுள்ள மண்டபத்திலும், புலஸ்தியர் பூசித்த **புண்ணியவர்த்தன லிங்கம்** திருமூலத்தானத்தினை அடுத்த சுற்றில் வடக்கில் தனியாலயத்திலும் தேற்ற மாக உள்ளன. காலனை உதைத்த திருக்கோலமாக வெளிப்பட்ட சிறப்புடன் **கால சங்காரமூர்த்தி** ஆலயத்தினுட்புறம் தனி மண்டபத்தில் தெற்குநோக்கி எழுந்தருளி யுள்ளார்.

"பத்தியாய் நினைவோ ரருளாவாய் மடித்துப் பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா வீருக்கும் தேவர்கா ளிவர்தந் திருவுரு விருந்தவா பாரீர்!"

என்று பூந்துருத்தி நம்பிகாடநம்பிகள் திருவிசைப்பாவிற் கூறியபடி இவரது அருமைத் திருக்கோலம் கண்டு தரிசிக்கத் தக்கதாம். சிறிதே உயரத் தூக்கிய இனித்தமுடைய இடது பொற்பாதமும், நீவிர் அடையத்தக்கது இதுவே என அத்திருவடியை இடது திருக்கரத்தாற் சுட்டிக் காட்டிய திருவிரலும், கொவ்வைச் செவ்வாயிற் பொலியும் குமிண் சிரிப்பின் அருளும், கீழ்நோக்கியூன்றிய திரிசூலப்படையும், திருவடியின்கீழ் உதையுண்டு வீழ்ந்து குண்டோதரனுல் காலைக் கயிற்றுற்கட்டி யீர்க்கப்பட்டுக் கிடக்கும் காலனும், அவனது பாசத்தினின்றும் காக்கப்பட்டுத் துதித்துநிற்கும் மார்க்கண்டேய ரும், இடது பக்கத்தில் இத்திருவருட் கூத்தை உயிர்களின்பொருட்டுச் சாட்சியாகக் கண்டு காட்சி கொடுத்து நின்றருளும் **பாலாம்பிகையம்மையாரும்**, இனிமை பொருந் தக் கண்டுய்யத்தக்க திருவுருவங்களாம். இவர் சன்னிதியின் நேரெதிரே அறுபத்து மூவர் மண்டபத்தில், திருவருளால் மீள உயிர்பெற்றுச் சிவனடியாரிடத்துப் புடையி லும் போகாத ஆணையும் வாழ்வும் பெற்றுத் தனது எருமையூர்தியுடன் துதித்து நிற் கின்ற காலனையும் காணலாம். இத்தலத்தில் அவதரித்து வாழ்ந்து சிவபத்தி அடியார் பத்திகளிற் சிறந்து முத்தியடைந்த **குங்குலியக் கலயநாயனார்** சரிதம் மேலே அவர் புராணத்துட் பரக்கக் காண்க. இவரது திருமனை இருந்த இடம் ஆலயத்தின் வடக்கு மடவளாகம், (அஃதாவது வடக்கு உள்வீதி) கீழ்க்கோடியில் உள்ளதென்று வழங்கு கின்றனர். **காரி நாயனாரும்** இத்தலத்தில் அவதரித்துச் சொல்விளங்கப் பொருள் மறையக் கவிபாடி அரசர்களிடம் பெற்ற பொருள்கொண்டு பலதிருப்பணிகள் செய்து முத்தியடைந்தனர். ஏழு கன்னியர் - வாசுகி - தர்க்கை முதலியோர் இங்கு வழி பட்டுப் பேறுபெற்றனர். மார்க்கண்டேயர் பூசைக்காகக் காசியிலிருந்து இங்கு கங்கை வந்ததென்றும், அதுவே இத்தலத்தினின்றும் ஒரு காழிகையளவில் உள்ள திருக் கடவூர் மயான ஆலயத்தின் தென்பாகத்தில் மண்சாலையில் இப்போது இணைந்த உள்ள தென்றும் அறியப்படுகிறது. இத்தீர்த்தமே அமிர்த கடேசருக்கு நித்தியப்படி திருமஞ்சனமாம். இத்தீர்த்தம் தினந்தோறும் சகடத்திற் கொணர்ந்து சுவாமி அம்பாளுக்கு அபிஷேகமாகி வருகிறது. இதர தீர்த்தங்கள் - காசி கங்கையுட்பட - இங்கு அபிடேகம் செய்யப்படுவதில்லை.

பங்குனி மாதத்து அசுவினி நாளில் அமிர்தகடேசர் இதில் தீர்த்தம் கொடுப்பது பெருஞ்சிறப்பாம். அந்நாளில் மட்டும் அன்பர்கள் யாவரும் இதில் முழுகலாம். அத் திருநாளில் இதினின்றும் எடுத்துவைத்த தீர்த்தம் கெடா திருத்தல் இன்றும் வெளிப்படை. மார்க்கண்டேயர் தவஞ் செய்து கங்கை கொண்டு வந்து பூஜித்த பிலத்துவார வழி இன்றும் காணத்தக்கதாய்த் திருமூலத்தானத்தை யடுத்த வடக்குச் சுற்றில் பிட்சாடனமூர்த்தி வைக்கப்பட்டிருக்கும் அறையில் ஆதி வில்வாரண்யேசுவரர் ஆலயத்துள் தென்பாலுள்ளது. அவர் தம்முடன் பூசைக்காகக் கொணர்ந்த **பிக்ஷை** என்னும் **சாதிக்கோடி** வழிவழியாய்த் தழைத்து ஓங்கித்திரு மூலத்தானத்துத் தென்சுற்றில் நின்று புஷ்பித்துவருவது இன்றும் காணத்தக்கதாம். இம்மலர் சுவாமி அம்மையார் உபயோகத்திற்குமட்டுமே யுரியது. இக்காரணத்தால் இத்தலம் பிஞ்சிலாரண்யம் எனவும் வழங்கப்பெறும். இத்தல அம்பிகையாகிய **அபி ராமி அம்மையார்** - அமிர்தகடேசுவரர் ஆலயத்திற்கு அடுத்த வெளிச்சுற்றில் தென்மேற்கில் கிழக்குநோக்கிய தனியாலயத்தினுள் விசேட வெளிப்பாடாகிய அருட் பெருஞ் சிறப்புடன் எழுந்தருளியுள்ளார். இத்தலத்தே அவதரித்து அம்மையாரிடம் போன்பு பூண்டு வழிபட்ட அபிராமிப்பட்டரின் பொருட்டு அமாவாசையன்று பூர்ண சந்திரனைத் தோற்றுவித்த அம்மையாரது பேரருட்சரிதம் பெருஞ் சிறப்பாக அறியப் படுகின்றது. அம்மையாரை அதன் பொருட்டுத் துதித்து "உதிக்கின்ற செஞ்சுடர்" என்று தொடங்கிப் பாடிய **அபிராமியந்தாதியை** இன்றும் பல அன்பர்கள் படித்துப் பயன் பெறுகின்றனர். இவர் சக்ததி பாரதிவம்ச மென இன்று முள்ளது.

**அமிர்த புஷ்கரணித் தீர்த்தம்** - கிழக்குக் கோபுரத்தின் மேற்கிலும் - அமிர்த கடேசர் கோயிலின் கிழக்கிலும், **காலதீர்த்தம்** - ஆலயத்திற்கு மேற்கில் 50 கஜ அளவு தூரத்திலும் உள்ளன. இது ஆனைக்குளம் என்றும் வழங்குகிறது. இத்தீர்த்தக்கரையில் **எதிர்காலேஸ்வரர்** அமர்ந்திருக்கும் ஒரு ஆலயம் இருக்கிறது. தேவர்கள் கொணர்ந்த அமிர்தகுடத்தை எடுத்து மறைத்துப் பின்னர் அவர்கள் வேண்டத் தந்தமையால் **கள்ளவாரணப் பிள்ளையார்** என இத்தலவிநாயகர் அழைக்கப் பெறுவர். இத்தலம் மேற்கு நோக்கிய சன்னிதி. காலசங்கார உற்சவம் சித்திரைமாதபூரணை தீர்த்தத்துடன் முடிவதான இரதோற்சவத்தில் 6-ம் திருநாளில் கொண்டாடப்பெறும். இத்திருத்தலத் தில் பிரதிவருட கார்த்திகை சோமவாரங்களில் மாலைக்காலங்களில் 1008 சங்காபிடேகம் வலம்புரி சங்குகளுடன் ஆகம முறைப்படி நடந்து வருவது அன்பர்கள் தரிசனம் செய்ய வேண்டியதாகும். மிருத்யுஞ்சய ஓமம் - ஜபம் - சாந்தி முதலியன செய்ய வேண்டிய உத்தம க்ஷேத்திரம் இதுவே. பக்தர்கள் செய்து சித்திபெற்று வருகின் றார்கள்*.

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கில் முதலாக வைத்தெண்ணப்பட்ட திரு வுந்தியாரருளிய திருவியலூர் உய்யவந்ததேவநாயனாரது அருள்பெற்ற ஆளுடைய தேவநாயனரின் மாணவராயும், அவரது ஆசிரியன் பெயரையே தமக்குத் தீட்சா நாம மாகச் சூட்டப்பெற்றவராயும், அத்திருவுந்தியாரின் கருத்துக்களே அதன்வழி விளக்குவ தாய்ச் சைவசித்தாந்த சாத்திரங்களுள் இரண்டாவதாக வைத்தெண்ணப்படும் **திருக் களிற்றுப்படியாரை** யருளியவராயும் உள்ள (திருக்கடவூர்) **உய்யவந்ததேவ நாயனார்** இத்தலத்திலே அவதரித்தவராவர்.

இதற்கு மூவர் முதலிகளும் அருளிய தேவாரங்களுண்டு. பதிகங்கள் ஐந்து. அன்ப ரொருவரியற்றிய உலா ஒன்றும் உண்டு. தென்னிந்திய இருப்புப்பாதையில் மாயவரம்

---

*இத்தல விசேடக் குறிப்புக்கள் பலவும் தந்துதவியவர்கள் திருத்தருமபுர வாதீனம் திருக்கடவூர்க் கட்டளை ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளாவர்.

தரங்கம்பாடி கிழையில் திருக்கடையூர் என்ற கிலையத்தினின்று ½ காழிகையளவில் இது அடையத்தக்கது. இத்திருத்தலம் **தருமபுர ஆதினத்திற்குச்** சொந்தமாய் அவ் வாதீனக் கர்த்தர்களின் மேற்பார்வையில் கன்கு பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. அவ் வாதீனத்தைச் சேர்ந்த கட்டளை மடமும் தெற்கு மாடவீதியில் அமைக்துள்ளது. இத்தலத்தில் அமிர்தகாராயணப் பெருமாள் அமர்ந்திருக்கும் ஒரு வைணவ ஆலயமும் சிவாலயத்தின் தெற்கு வீதிக்குத் தென்பாகத்தில் இருக்கிறது.

2. **திருப்பனந்தாள்:**—இது சோழவளகாட்டில் காவிரிக்கு வடகரையில் தேவாரப் பாடல் பெற்றதலங்களுள் 39 வது திருத்தலம். இங்குப் பனை தலவிருக்க மாதலாலும் பனையின் அடியில் (தாளில்) இறைவன் எழுந்தருளியிருத்தலாலும் **பனந்தாள்** எனப் பெயர் பெற்றது. இந்த ஆண்பனைமரங்களிரண்டும் திருக்கோயில் திருமாளிகை இரண்டாவது சுற்றுக்குள் அம்மையார் ஆலயத்துக் கெதிரில் இருக்கின்றன. இவற் றின் பக்கத்தில் இறைவன் தாடகைக்குத் தலைசாய்த்து அருளளித்த உருவமுளது. **தாடகேச்சுரம்** என்பது திருக்கோயிலின் பெயர். **தாடகை** என்ற பெண் பூசித்துப் பேறு பெற்ற காரணத்தால் இது இப்பெயரால் வழங்கப்படும். "பனந்தாட் டாடகை யீச்சுரமே" என்றமுடிபு அமைத்து ஆளுடைய பிள்ளையார் திருப்பதிகம் அருளினர்.

**தாடகை பூசித்த வரலாறு :**—தாடகை என்ற அசுர மாது புத்திரப்பேற்றை வேண்டிப் பிரமதேவர் ஆணைப்படி இத்தலத்து வர்து வழிபட்டு வருங்கால், ஒரு நாள் மாலைசாத்தும்போது ஆடைநெகிழ்ந்துவிட, அதனை இரண்டு முழங்கைகளினலும் இடுக்கிக்கொண்டு, மாலை சாத்த இயலாது வருந்திய அவளுக்கிரங்கிச் சுவாமி திருமுடி சாய்த்து மாலையை ஏற்றருளினர் என்பது தலபுராணம். தாடகைச் சருக்கத்தில் கண்டது. இத்தாடகை இத்தலத்தில் வாழ்ந்த சிவப்பிராமணப் பெண் என்றும் அவள் பொருட்டு மேற்கண்டவாறு சுவாமி சாய்ந்தருளினர் என்றும் வரலாறு கூறுவர் மகாலிங்கையர். இது பற்றி 853ல் உரைத்தவையும் பார்க்க.

தாடகையம்மையாருக்காகச் சாய்ந்தருமேனி, யாவர்க்கும் அவ்வருள் புலப்படு மாறு பின்னரும் சாய்ந்தேயிருந்ததும், பின்னர், இறைவனை கோக்கண்டு கும்பிட எண்ணி யானை சேனைகளுடன் வருந்திய சோழமன்னன் பொருட்டு வந்த குங்குலியக் கலயனாது அன்புக்காக இறைவன் கிமிர்ந்தருளியதும் இப்புராணத்துட்பேசப்பட்டன.

பிரமாவினலும், வெள்ளையானையாலும், யட்சகன்னிகையான தாடகையாலும், சூரியனலும், சந்திரனலும், வாசுகியின் பெண்ணகிய நாககன்னிகையாலும், சங்கு என்ற பெயருள்ள வேடஅரசனலும், யஞ்ஞகுப்தன் என்ற வியாபாரியாலும், **வீரசோழ** மகாராசாவினலும், **குங்குலியக்கலய நாயனாலும்** பூசிக்கப்பட்டது என்பது வட மொழிச்சுவடி. இத்தலத்தில் உமாதேவியார் ஐந்துகிளையுடைய பனைமரத்தடியில் விளங்கிய இறைவனைப் பூசித்து ஞானோபதேசம் பெற்றனர். பிரமதேவர், ஐராவதம், இந்திரன், தாடகை, அகத்தியர், விட்டுணு, சூரியன், சந்திரன், ஆதிசேடன், நாக கன்னிகை முதலியோர் பூசித்து வரம்பெற்றனர். நாகுகன்னன், தருமசேனன், சங்குகன்னன், காகம், எஞ்ஞகுப்தன்முதலியோர் இதிற் பேறுபெற்றனர். **பொய்கை**- எனப்படும் பிரமதீர்த்தம் முதலியபல தீர்த்தங்கள் பூசித்து வழிபட்டார் பெயரால் விளங்குகின்றன. இவற்றுள் பிரமதீர்த்தமும், அம்மையார் ஆலயத்தின் முன் புறமுள்ள காலதீர்த்தமும், மண்ணியாறும் சிறப்பாயுள்ளன. ஒவ்வொராண்டி லும் பங்குனி மாதத்தில் மூன்று நாள்வரை சூரியபூசை தவறாது நிகழும். திருச்செந்தில் முருகப் பெருமான் திருவருளால் ஊமை நீங்கிக் கலைஞானம் நிறைந்து விளங்கிய ஸ்ரீமத் குமாரகுருபர சுவாமிகள் (1642) திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுரம் ஆதினம் நான்காவது பட்டம் குருமூர்த்தமா யெழுந்தருளிய

*ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த குருமூர்த்திகளின் ஆணையின்படி காசி யாத்திரை செய்து காசியில் சுவாப்பிஞல் தமக்குக்கிடைத்த பெரும்பொருள் கொண்டு இப்போது குமாரசுவாமி மடம் (கேதாரகட்டம்) என்று விளங்கும் திருமடத்தைத் தாபித்தனர். ஸ்ரீமத் ஆதி குமாகுருபர சுவாமிகளின் வழிவழி 6 பட்டம்வரை காசி யில் உள்ள மடம் ஒன்றே யிருந்தது. 6வது பட்டத்தில் வந்த ஸ்ரீமத் தில்லைநாயகத் தம்பிரான் சுவாமிகள் இத்தலத்திற்கு வந்து இங்குப் பெருமை பெற்று விளங்கும் "காசிமடத்"தைத் தாபித்து அதற்குத் தாம்தேடிய பெரும் பொருளால் வீளைநிலமும் தேடினர். (இவர்காலம் 1720 - 1756 என்ப.) இவரோடு முன் ஆறுபட்டம். இத் திருமடத்தின் மரபின் இவர் பின் பட்டத்து வந்த அதிபர்களும் இவ்வாறே தாம்தாம் பெரும் பொருளீட்டினர். இவ்வாறு இற்றைஞான்று இத்திருமடமும் காசியில் உள்ள பெருமடமும் சிறப்புற்று விளங்குகின்றன. இதன் வழிவழிவரும் அதி பர்கள் "காசிவாசி" என்ற பட்டத்துடன் விளங்குவர். இக்காள் இதன் அதிபராக விளங்கும் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகாதத் தம்பிரான் சுவாமிகள் அத்தப்பரம்பரை யின் வந்த பல அரிய தமிழ் நூல்களேயும், தொல்காப்பிய முதலிய பழந்தமிழ் நூல்களேயும் அச்சிட்டும், சென்னைச் சர்வகலாசாலேத் தமிழ் வித்துவான் தேர்தலில் முதற்றரம் முதற்றரமாகத்தேர்ச்சி பெற்றோர்க்கு ஆண்டுதோறும் ஆயிரம் வெண்பொற் காசுப் பெரும் பரிசு அளித்தும் தமிழ்பரப்பி ஊக்கம் தந்து உதவிவரும் அரிய முயற்சி கள் தமிழுலகம் போற்றிக் காணத்தக்கன. இத்தலபுராணம் தமிழ்ச்செய்யுளால் இயற்றி யவர் செஞ்சடைவேதிய தேசிகர். இது அச்சில் வரவில்லே. இத்தலபுராணத்திற் குங்குலியக் கலயகாயனூர் சரிதம் சிற்சில மாறுபாடுகளுடன் பேசப்படுகின்றது. இப் புராணம் வடமொழியில் பிரமபுராணம் 69வது அத்தியாயத்தில் கர்திசனற் குமார சம்வாதத்தில் 350 சுலோகங்களிற் கூறப்பட்டுள்ளது. தமிழ்மொழி பெயர்ப்பில் புராண வரலாறு முதல் குங்குலியக்கலயர் சருக்கம்வரை 19 சருக்கங்களில் 889 செய்யுட்களில் அமைத்துள்ளது.

இத்தலத்துச் சுவாமிபெயர் - **செஞ்சடை வேதியர் - சடையப்பர்.** இப்பெயர் திருஞானசம்பந்தரது இத்தலத்தேவாரத்தில் முதற்றிருப்பாட்டிற் போற்றப்படுதல் காண்க. அம்மையார் - **பெரிய நாயகியார்.** தல விநாயகர்-**ஆண்ட விநாயகர்.** தலவிருக் கம் - **பனை.** தீர்த்தம் - **பொய்கை** என்னும், **பிரமதீர்த்தம்,** மண்ணியாறு முதலியன. பொய்கை திருப்பதிகம் 10-வது பாட்டிற்போற்றப்பட்டது. இது கோயிலுக்குக் கீழ் பாகத்திலுள்ளது. மேற்குநோக்கிய சன்னிதி. பதிகம் 1. இதனை, ஆடுதுறை நிலயத்தி லிருந்து வடக்கில் கற்சாலே வழியாய் 6 காழிகையளவில் அடையலாம். வண்டி வசதி கள் உண்டு.

---

**கற்பனை:**—(1) சிவசன்னிதியில் உண்மையன்புடன் விதிப்படி கறுமணமுடைய குங்குலியத்தூபம் கமழ்வித்தல் சிவபுண்ணியமாம்.

2. அத்திருப்பணிக்கு இறைவர் மகிழ்ந்து கரும்பினிற் கட்டிபோல இனிய திரு வருள் புரிவர்.

---

* உகஅ-ம் பக்கத்தில் இப்பெயர் ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர் என்றிருப்பதனை இவ்வாறு திருத்திக்கொள்க.

இதன் வரலாறுகள் சென்னை உயர்தர நீதிமன்றம் 10. Madras. 375 என்ற அறிக்கையிற்கண்டபடி குறிக்கப்பட்டன. விரிவு ஆண்டுக்கண்டுகொள்க. இவ் விவரங்களும் தலவிதேடக் குறிப்புக்குரிய தலபுராணக்குறிப்புகளும் இத்திருமடத்தின் அதிபர் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகாதத் தம்பிரான்சுவாமிகள் அன்புடன் அளித்துதவி னர்கள்.

3. தமது திருவடிகளே மெய்யன்போடு ஒருப்பட்ட சிந்தையுடன் பற்றுவார்க்குச் சிவபெருமான் காலபயத்தினை நீக்கியருளுவர்.

4. சிவபெருமான் திருவடிகளில் உருகிய அன்பு கூர்ந்து மேன்மேல் எழுகின்ற வேட்கையுடன் சிவத்திருப்பணிகள் செய்தல் வேண்டும்.

5. சிவத்திருப்பணிகள் செய்துவருங் காலத்தில் வறுமை முதலிய இடையூறுகள் சேர்ந்து மேன்மேல் வந்தடர்வனவாயினும் அவற்றைப் பொருட்படுத்தாமலும், அவற்றால் வருத்தாமலும் தமது பணியிற்சலியாது செய்துவருதல் அன்புடையார் திறம். அத்திறத்தினுள் நின்று, அந்த அன்பினை நுகர்ந்து நிகரில்லாத பேரின்பத்தை அருளுவர் சிவபெருமான்.

6. தாமும் மனைவியாரும் மக்களும் இரண்டுகால் பசியோடுகிடக்க நேர்ந்தபோதும் அப்பசி தீர்ப்பதற்கு நெல்வாங்கக் கொண்டுபோயின தாலியினைக் கொடுத்து, எதிர்ப்பட்ட குங்குலியப் பொதியினை இறைவரது தூபப்பணிக்கு வாங்கிய கலயனாரது செய்தி அன்புடையார்க்குத் திருத்தொண்டின் உறைப்பினை எடுத்துக்காட்டும் சிறந்த இலக்கியமாம் இதனை முன்வைத்துக் கொண்டு சிவனடித் தொண்டில் மக்கள் அன்புடன் முயல்வார்களாயிற் பெரும்பயன் பெறுவர்.

7. சிவபெருமான் திருப்பணிகளின் நற்பயன் இம்மை யின்பங்களையும் தருவன. இவ்வுண்மைக்கு இக்காயனாரது சரிதமே எற்றசான்றாகும். "இம்மை யேதருஞ் சோறுங் கூறையு மேத்த லாயிடர் கெடலுமாம், அம்மை யேசிவ லோக மாள்வதற் கியாது மையுற வில்லையே" என்ற ஆளுடையநம்பிகள் (திருப்புகலூர்) தேவாரமுங்காண்க.அளவற்ற அடியார்களுக்கு உளமகிழ அமுதூட்டிய நலத்தினால் இளையான்குடிமாறர்அளவற்ற நிதிபெற்றுக் குபேரன் போல வாழ்ந்திருந்தனர். "அரிய நீர்மையி லருந்தவம் புரிந்தரனடியார்க்,குரிய வர்ச்சனை யுலப்பில செய்தவந் நலத்தால்"சிவநேசர் பூம்பாவையம்மையாரைப் பெற்றனர் (திருஞான-புரா-1040). சிவபெருமானைப் பூசித்து மகாவிட்டுணுவும் கண்ணனும் மகப்பேறு பெற்றனர். இவை போல்வன பலவும் இங்கு நினைவு கூர்க. தம் கொள்கைப்படி மோட்சம் என்ற நிர்வாணபதம் வேண்டினால் தமது புத்த விகாரங்களுக்கு (கோயில்) போகிற புத்தர்கள் இலங்கையில் (ஈழம்), செல்வம் உடற்சுகம் மக்கள் முதலிய இம்மைச் சுகங்களை வேண்டியபோது அங்குள்ள சிவன் கோயில் விநாயகர்கோயில்,கதிரேசன் கோயில்களில் வந்து அருச்சனை முதலானவைசெய்து வழிபடுகின்றார்கள். நம் சைவர்கள் இம்மை வரங்கள் வேண்டி அன்னியமதக் கோயில்களில் சென்று வரங்கிடக்கக்காண்கின்றோம். இஃதென்ன கொடுமை! "வேண்டுவார் வேண்டுவதே யீவானு"கிய நமது சிவபெருமான் எல்லாம் வல்லவராய் எல்லாந் தாவல்லவராம் என்ற நம்பிக்கை யில்லாதவர்களைச் சைவர் என்று சொல்வதெப்படி ?

8. கணவர் - மக்கள் - சுற்றத்தார் முதலிய குடும்பத்தார்களைப் பசி யில்லாது பார்த்துச் சோறிட்டுக் காத்தல் மனைக்கிழத்தியாகிய மனைவியின் கடன். இதுவே இல் வாழ்க்கையின் உண்மையியல். தாம் என்றும் நீக்கலாகாது அணியும் மங்கலநூற் றாலி கொடுத்தும், அதுகொண்டு நெல் பெற்றும் இக்கடமையைச் செய்ய ஒருப்பட்ட கலயனாருடைய மனைவியாரது அரியசெயலும் பெருமையும் பெண்ணுலகம் இலக்கியமாகக் கண்டு போற்றத்தக்கன.

9. மேலேகண்டவாறுகடமைசெலுத்திய நற்புடையம்மையாருக்கு நிறைந்த செல்வங்கொடுத்ததும், அதனைக் கணவர் அறியு முன்பு அவருக்கு அறிவித்ததும், அவர் மூலம் கணவனுரை அறியவைத்ததும் நற்புடைமைக்குக் கடவுள் வைத்த கருணையின் பரிசுகளாம்.

10. சிவனருளாற் பெற்ற செல்வமுதலிய பொருள்களை அவனருளாகவே கண்டு வணங்கி ஏற்றல் முறை. ஆளுடையபிள்ளையார் தமக்குச் சிவபெருமான் அளித்த

முத்துச்சிவிகையை வலம் வந்து வணங்கிப் பின்னர் அதில் வீற்றிருந்ததும், பூம்பாவை யாரைக் கண்ணுதல் கருணை வெள்ளமாகக் கண்டதும் நினைவு கூர்க.

11. சிவபெருமான் தம்பாற் செய்யும் அருட்டிறங்களைக் காணுந்தோறும் "தகுதி யில்லாத சிறியேனுகிய என்னையும் பொருளாக எண்ணி இறைவர் இந்தப் பேரருள் புரிந்தனர்" என்று நினைந்து மனமுருகுதல் அன்பின் நிறம்.

12. சிவனடியார்களைப் பூசித்து அவர்களுக்கேற்றபடி இனிய அமுது ஊட்டி மாகேசுரபூசை செய்து வழிபடுதல் சிறந்த சிவதருமம். அவ்வடியார்களது மகிழ்ச்சிக் குள்ளே சிவபெருமான் அமர்ந்து நின்று, பூசையும் அமுதும் உவந்து ஏற்றுக்கொண்டு, தானும் மகிழ்ந்து அருள் புரிவார்.

13. அன்பானினைந்து வழிபடுபவர்கள் எவரேயாயினும் அவர்களது எளிமையும் சிறுமையும் பார்த்து அவர்களுக்கெளியனுகத் திருமுடி சாய்த்துக் கொடுத்தும் அவர் கள் வழிபாட்டை ஏற்றருளுவர் சிவபெருமான்.

14. ஒரு அடியார் பொருட்டுத் தாங்கிய அருட்கோல அடையாளங்களை ஏனை உயிர்கள் அறிந்துய்யுமாறு பின்னரும் தாங்கிநிற்பது சிவனருட் பெருமையாம். திருநீல கண்டம் முதலியவை காண்க.

15. சிவன் திருமேனியிற் பூங்கிய அருளடையாளங்களை அவ்வாறே வைத்து வழிபடுதல் வேண்டும். அவற்றை மாற்றி நேர்கண்டு கும்பிட ஆசைகொள்ளுதலும் அன்பு வகையேயாயினும், மேற்கொள்ளற் பாலதன்று. ஆயினும் அன்புபற்றி யெழுந்த அவ்வாசையினையும் உரிய வகையால் நிறைவாக்கி யருளுதலும் சிவபெருமானது கருணையியல்பு.

16. தேவர்க்குமரிய இறைவரது திருமேனியை நேர்காணப், பண்புடையடியார்க ளல்லாது வேறெவரும் வல்லரல்லர்.

17. ஆசாரியர்களைப் பூசித்து ஏற்குமாறு வழிபட்டு இன்னமுதூட்டுதல் சிவ தருமம்.

18. அவ்வாறு செய்யும் வழிபாட்டினுல் அவர்களது அருளேயன்றிச் சிவபெரு மான்றிருவருளும் உண்டாகும்.

19. குரு, இலிங்கம், சங்கமம் என்ற மூன்றும் வழிபாடு செய்தற்குரிய இடங் களாம். இம்மூன்றிலும் நின்று அவ்வழிபாட்டினை ஏற்றுச் சிவபெருமான் அருள்புரிவர்.

20. அடிமை வழக்கு முன்னுளிலிருந்தது, இக்காலிலில்லை என்பர். உலக முழு தும் பலவாற்றுனும் அடிமைப்பட்டே வாழ்கின்றது.* மக்கள் யாவரும் உலகுக்கு அடிமையாய் ஒழுகினும்; அதைவிட்டு இறைவனுக்கு மீளா அடிமையாய்க் கண்டு ஒழுகினுல் பிறவித்துன்பத்தினின்று நீங்குவர்.

---

* "பொன்னுக் கொருசார்; புடவைக் கொருசார்; போற்று பசிக்கொருசார்; - புதிய நறுஞ்சுவை யடிசில் பெறும்படி போதா வென்றேர்ச்சார், மன்னுக் கொருசார்; மனைவிக் கொருசார்; மனைக்கென் றேரோர்சார் - வாழ்வீன் பின்னுட் கொருசா சொன்றே வாணுள் வீணுளாய், என்னைப் பலவு மடிமை யிறுத்திக் கேவல் கொண் டனவால் - எளியே னுய்வகை யின்னருள் செய்தே யொருசார் தனைநினையத், தன் னடி மைக்கணு மென்னை யளித்தவள் தாலோ தாலேலோ" என்ற (எனது) அவிநாசிக் கருணும்பிகை பிள்ளைத் தமிழ் (தால்-8)க் கருத்தைக் காண்க.

திருச்சிற்றம்பலம்

# 12. மானக்கஞ்சாற நாயனார்புராணம்

## தோகை

"மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ்சாறன்
.....அடியார்க்கு மடியேன்"—திருத்தொண்டத்தொகை

## வகை

"கலச முலைக்கன்னி காதற் புதல்வி கமழ்குழலை
நலசெய் தவத்தவன் பஞ்ச வடிக்கிவை நல்கெனலும்
அலசு மெனக்கரு தாதவள் கூந்த லரிந்தளித்தான்
மலைசெய் மதிற்கஞ்சை மானக்கஞ் சாற னெனும்வள்ளலே"
—திருத்தொண்டர் திருவந்தாதி

## விரி

866. மேலாறு செஞ்சடைமேல் வைத்தவர்தாம் விரும்பியது
நூலாறு நன்குணர்வோர் தாம்பாடு நோன்மையது
கோலாறு தேன்பொழியக் கொழுங்கனியின் சாறொழுகுங்
காலாறு வயற்கரும்பின் கமழ்சாரூர் கஞ்சாறூர். க

புராணம்:—பெருமையுடைய கஞ்சாறூரில் வாழ்ந்த பெரியோருடைய சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி. இனி, நிறுத்த முறையானே இலைமலிந்த சருக்கத்தில் ஐந்தாவதாகிய மானக்கஞ்சாற நாயனார் புராணங் கூறத் தொடங்குகின்றார்.

தோகை:—மலையின் தன்மைபோன்ற தன்மை மிகுந்த தோள்களையுடைய வள்ளலாகிய மானக்கஞ்சாற நாயனருடைய அடியார்க்கும்அடியேன் ஆவேன்.

மலை - இங்கு ஆகுபெயராய் மலையின் தன்மைகளைக் குறித்து நின்றது. அவை உயர்ச்சி, வலிமை, பெருமை, நிலையிற்றிரியாமை, "வறப்பினும் வளந்தரும் வண்மை" முதலியன. மலிதல் - மிகப் பொருந்துதல். தோள்களின் பெருமை முதலியவற்றால் இவ்வாறு உவமையணி பொருந்தக் கூறினார். இவர் "அரசர்சே னாபதியாஞ் செப்பவருங் குடிவிளங்க" (872) என விரிநூல் கூறுதலின் சேனாபதித் தன்மைக்கேற்ப உயர்ந்த வலிய பெரிய தோள்களையுடையவர் என்று இக்கருத்தை விரிநூல் விரித்துக்கூறியது காண்க. ஆண்டுரைப்பவையும் பார்க்க. வள்ளல் - வரையாது கொடுப்போன். இது இவரது சரித நிகழ்ச்சி குறித்தது. இதனை "அலசு மெனக்கரு தாதவள் கூந்த லரிந்தளித்தான்" என்றும், "வள்ளலே" என்றும் வகைநூல் பேசிற்று. "வண்புகழ்" (865), "பொருள் செய்தா மெனப்பெற்றே னெனக்கூந்த லடியிலரிந்து...மலர்க்கரத்தி னிடைநீட்ட" (895), "ஒருமகள் கூந்த றன்னை வதுவைசா லொருவர்க் கீந்த பெருமையார்" (902) என விரிநூல் விரித்துக் காட்டிற்று. மாண்மை - பெருமை. பெருமையார் (902)

என்றது காண்க. மானக்கஞ்சாறனடியார்க்கு மடியேன் - தாயனடியார்க்கு மடியேன் எனத் தனித்தனிக் கூட்டுக.*

வகை :—மானக்கஞ்சாறனெனும் வள்ளலே, மாவிரதியராகிய தவசியார் "இது நமக்குப் பஞ்சவடிக்கு நல்கு" என்று கூறிய அளவில், இது தகாதென்று எண்ணாது கன்னியாகிய காதற்புதல்வியின் மலர்க்கூந்தலை அடியோடு அரிந்தளித்தான் என்க.

**கலசமுலைக்கன்னி** என்றதனால் (880) மணப்பருவம் வந்தவள் என்பதும், **காதற்புதல்வி** என்றதனால் (875 - 876) பிள்ளைப்பேறு இல்லாது சிவபெருமானை வழுத்தி அரிதிற்பெற்றுத் தாம் மிக்க அன்புபூண்ட மகள் என்பதும், **கமழ்குழல்** என்றதனால் (894) மணத்தின்பொருட்டு அலங்கரிக்கப்பட்ட கூந்தல் என்பதும், அறிவிக்கப்பட்டன. **தவத்தவன்**-மாவிரதத் தவவேடம் பூண்டவன். **நல்கு என்லும்**-"கொடு" என்று வெளிப்படையாய் வேண்டாது குறிப்பாய் வேண்டுதலும். நமது "பஞ்ச வடிக்கு ஆம் என்றார்" (894) என்ற விரிநூற் பிரமாணத்தால் இங்ஙனம் கொள்ளப்பட்டது. **நல்கு** - விருப்பம். "யாவையுநேர் கூறுவதன் முன்னவர்தங் குறிப்பறிந்து கொடுத்துள்ளார்"(874) என்று விரிநூல் தொடக்கத்தில் இதனை விளக்கியதும் காண்க. **அலசுதல்** பொருந்தாத தன்மை தருதல்-கெடுதி தருதல். "அலசாம னல்கா யெனுமா யிழையே" (இந்தளம் - திருவானைக்கா - 8) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரம் காண்க.

**மலைசெய்** - மலையின் தன்மைபோன்ற. **மலை** - ஆகுபெயர். **செய்** - உவமவுருபு. முதனூலுக் கேற்றவாறு தோள் என்பது வருவித்து மலைசெய்தோள் மானக்கஞ்சாறன் என்று கூட்டுக. **மலைசெய் மதில்** என்று கொண்டு மலைபோன்றுயர்ந்த வலியமதில் என்றுரைத்தலுமாம். **கஞ்சை** - கஞ்சாறூர் என்பது மருவிக் கஞ்சை என வந்தது.

நாயனாரது ஊரும் மரபும் குடியும் தொழிலும் குணமும் விறலும் பேரும் அடிமைத்திறத்தின் மேன்மையும் முதலியவை முதனூல் தொகுத்துணர்த்திற்று. அவரது ஊரும் பேரும் குணநலமும் செய்த திருத்தொண்டும் சரித வரலாறும் பிறவும் வகைநூல் வகுத்துக் காட்டிற்று. இவற்றின் துணையால் திருவருள் காட்டியவாறு அவை விரிந்தபடி விரிநூலுட் கண்டு கொள்க.

---

* முதனூலாகிய திருத்தொண்டத்தொகையினுள் அரையடியில் ஒவ்வோர் நாயன்மாரைத் துதித்து "அடியேன்" என்று போற்றுதல் பெருவழக்கம். ஓரடியில் "அடியேன்" என்ப திடையிடாது ஒருசேர இரண்டு நாயன்மாரைக் கூறிப் போற்றியிருப்பது இங்கும் "கறைக்கண்டன் கழலடி", "மடல்சூழ்ந்த" என்ற ஈரடிகளிலுமாம். "கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன் - கழற்சத்தி வரிஞ்சையர் கோனடியார்க்கு மடியேன்", "மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப்பூசல் வரிவளை யாண்மானிக்கு நேசனுக்கு மடியேன்" என்ற இரண்டிடங்களில் ஓர் அடியில் மூன்று நாயன்மார்கள் ஒருசேரப் போற்றப்பட்டார்கள். "முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்", "பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கு மடியேன்", "நாட்டமிகு தண்டிக்கு மூர்க்கர்க்கு மடியேன்" என்ற மூன்றிடங்களில் அரையடியில் இரண்டு நாயன்மார்கள் துதிக்கப்பட்டனர். "திருநின்ற செம்மை" "வார்கொண்ட வனமுலையாள்", "நிறைக்கொண்ட சிந்தையால்", "துறைக் கொண்ட செம்பவளம்" "கடல்சூழ்ந்த உலகெலாம்", "புடைசூழ்ந்த புலிய தண்மேல்" என்ற ஆறிடங்களில் ஒவ்வோரடியில் ஒவ்வோர் நாயன்மார் தனித் தனி துதிக்கப்பட்டமை காண்க. "மெய்ம்மையே திருமேனி", "வம்பறாவரிவண்டு" என்ற ஈரிடத்தும் ஒன்றரை அடிகளில் முறையே சண்டீசப்பிள்ளையார் - ஆளுடைய பிள்ளையார் என்ற இவர்களைப் போற்றியிருத்தல் காண்க. இஃது இவ்விருவரும் இறைவரது திருக்குமாரர்களாகிய முறையின் குறிப்புப் போலும். இவை பெரியோர்களால் ஆராயத்தக்கன.

866. (இ - ள்) கோல்ஆறு தேன்பொழிய-(தேன் கூடுகள் கட்டப்பட்ட) கொம்பு களின் வழியே கோற்றேன் பொழிய (அத்தேன்கள் பலவும் கூடுதலால்) ; கொழும் கனியின் சாறுஒழுகுங்கால் - கொழுத்து விளைந்த பழங்களின் சாறுஒழுகும் வாய்க்கால் போலச் சேர்ந்த ஒழுக்கு ; வயற்கரும்பின்சாறு ஆறு கமழ் ஊர் - வயலில் விளைந்த கரும் பின் சாறுபெருகிய ஆற்றினைக் கூடி அதனே மணஞ்செய்யும் ஊராகிய ; கஞ்சாறூர் - கஞ்சாறுரென்பது ; மேல்.....விரும்பியது - ஆகாய கங்கையைச் சிவந்த சடையின் மேல் வைத்த சிவபெருமான் விரும்பி எழுந்தருளியிருப்பதும் ; நூல்...நோன்மையது - (தமிழ்) நூல்களே தெறியானே நன்குணர்ந்த நாவலர்களாலும் பாடிப் புகழப்படும் விழுப்பமுடையதும் ஆம்.

(வி - ரை) மேல்ஆறு என்றது பிறநதிகள் போலக் கீழ்முகமாக வராமல் மேன் முகமாக விண்ணினின்றும் வருதல் குறித்தது. மேல் - மேன்மை எனக்கொண்டு மேன்மையுடைய ஆறு என்றலுமாம். இதன் மேன்மையாவன ஆறுகளில் முதலில் வைத்தெண்ணப்படுதல், தூயதாதல், கேடில்லாமை, தன்னுட்படிந்தாரைத் தூயராக்கு தல், கயிலையில் எழுபெருந் தீர்த்தங்களில் ஒன்றுதல், சிவபெருமான் திருமுடியில் வைக்கப்பெறுதல் முதலியனவாம்.*

நூல் ஆறு - நிலம் - நாடு - நகரம் - குடி - முதலியவற்றின் சிறப்பியல்புகளைக் கூறும் இலக்கண இலக்கிய நூல்களே முறையாலே. இரண்டனுருபும் மூன்றனுருபும் விரித்துரைக்க. ஆறு - நெறி - முறைமை.

நன்கு உணர்வார் தாம்பாடும் நோன்மை - முறையாக வுணர்ந்த பெரும் புலமையோர்களும் பாடிப்புகழும் பெருமை. நூலாறு நன்குணராதார் நோன்மை யில்லாத வழியும் பாடுவாதலால் அவர்கள் பாடும் சிறப்புக்கள் பொருளாகக் கொள்ளப் படா என்பதும் குறிப்பாலுணர்த்தப்பட்டது. "இறைவன் பொருள்சேர் புகழ்" என்ற திருக்குறளுக்கு, "இறைமைக் குணங்களிலராயினுரை உடையரெனக்கருதி அறியாதார் கூறும் கூற்றுப் பொருள்சேரா வாகலின் - இறைவன் புகழே பொருள்சேர் புகழ் எனப்பட்டது" என்று ஆசிரியர் பரிமேலழகர் உரைத்ததனே இங்கு நினைவு கூர்க. இந்நோன்மைகளே ஆசிரியர் மேல் வரும் 867 - 871-வரை ஐந்து திருப்பாட்டுக்களில் தமது குறியின்படி விளக்குதலும், இவையே நன்குணர்வோராற் பாடத்தக்கன - பிற பாடத்தகாதன என்பதைக் குறிப்பாலுணர்த்துவதும் காண்க.

நூல் ஆறு நன்குணர்வோர் - சுந்தரமூர்த்திகள் முதலிய பெரியோர்கள். இவ் வூரின் நோன்மை - "கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக்கையும் கயிலாய நாதனையே காணலாமே" என்று கேதாரக்கோவைத் திருத்தாண்டகத்தில் வைத்து அப்பர் சுவாமிகள் பாடியருளிய தேவார வைப்புத்தலமாதலாலும் அறியப்படும். நூலாறு நன்குணர்வோரிற் றலைசிறந்தோராகிய ஆசிரியர் சேக்கிழார் பெருமானுற் பாடப் படும் நோன்மையும் சிறக்க ஈண்டு நாம் கருதத்தக்கதாம்.

---

*இக்கங்கை விஷ்ணு பாதத்திலிருந்து வருகின்றதென்றும் அதனைச் சிவபெரு மான் சிரத்தில் ஏற்றனர் என்றும் சிலர் கூறித்திரிவர். அது பகுத்தறிவில்லார் கூற்றா கும். இவையிரண்டும் வெவ்வேறு பொருளன. "பாதங்க ணீரேற்றூர்" என்ற பத்தண நல்லூர்த் திருத்தாண்டகத்தை இப்பொருள்படச் சிலர் தவறாக எண்ணுகின்றனர். இத் திருப்பாட்டுக்குத், தமது பாதங்களில் அன்பர்களது கண்ணீர்ருவியை ஏற்று அருள்பவர் (பாதம் - கண்ணீர் - ஏற்றூர்) என்பது பொருள். "அன்பர் வார்ந்தகண் ணருவி மஞ் சனசாலே (சாட்டியக்குடி - 2) என்ற கருவூர்த்தேவர் திருவிசைப்பாக் காண்க. பாதங் களிலே கண்ணே ஈர்ந்து சாத்திய விட்டுணுவாகிய இடப ஏற்றினையுடையவர் (பாதம் கண் ஈர் ஏற்றூர்) என்றலுமாம்.

**கோல்ஆறு.....கமழ்சாறு ஊர்** - சிறு கொம்புகளில் ஈட்டிய கோற்றேன்கள் நிறைந்து கூடுகிழிய,அத்தேன் அக்கொம்புகளின் வழியே மெல்லவழிந்து பொழிந்தன. அத்தேனெடு அக்கொம்புகளிற் பறிப்பாரின்றிப் பழுத்துக்கொழுத்து வெடித்த கனிகளின் சாறு ஒழுகிக்கூடின.தேன், கனமுடையதாய் இளகி வழிவதாதலின் கீழேவிழாமல் கொம்புகளின் வழியே வழியும் தன்மையால் **தேன் கோலாறு பொழிய** என்றார். **கொழுங்கனியின் சாறு** தேனிலும் சிறிது அதிகமாகிய இளக்கமுடையதாய்ச் சொட்டவும் விரைந்து ஒழுகவும் கூடியதாதலின் **சாறு ஒழுகும்** என்றார். "வரம்பில்வளர் தேமாவின் கனிகிழிந்த மதுரமுமெய், நிரந்தரமீ ளிலக்கடையால் ஒழுகுதலால்" என்ற (திருஞான - புரா - 7)தும், "முக்கனியின் சாறெழுகிச் சேறுலாவு.....முதுகுன்றமே" என்ற (ஆளுடையபிள்ளையார் தேவா)தும் காண்க. மெல்லப் பொழியும் தேனுடன் அதனினும் விரைந்து ஒழுகும் கனியின் சாறு கூடிடவே இரண்டும் சேர்ந்து கால்வாய்போல ஓடின.

**கரும்பின் சாறு ஆறு** - கருப்பஞ்சாறு இவ்விரண்டினும் மிக்க நீர்போல ஓடும் தன்மையுடையதாதலின் அதனை **ஆறு** என்றார்- "கட்டிக்கால் வெட்டித்தீங் கரும்பு தந்த பைம்புனல் காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே" (திருஞா - தேவா - திருத்தாளச்சதி - 10) பார்க்க.

கரும்பின் சாறு ஆறுபோல் பெருக, அந்த ஆற்றினுள் மேற்கூறிய தேனும் கனிச்சாறும் கூடிய கால்வாய் வந்து சேர்ந்து அதனைத் தேன் மணமும் கனிகளின் மணமும் கமழச்செய்தது என்பதாம். சிறு கால்வாய்கள் ஆறுகளிற் கூடுவதும் அவற்றால் ஆறு வளம் பெறுவதும் ஆகிய இயற்கையிற் காணப்படும் உண்மையினையும் இங்கு வைத்துக் காண்க. இதனால் இக்காடு ஆற்றின் வளமுடைய மருதநிலத்தின்பாற் பட்டதென்பதும், மருதக் கருப்பொருள்களாகிய சோலைகளும் கனிகளும் கரும்பும் கொழுத்துச் செழித்து விளையும் வளமுடையதென்பதும் பிறவும் அறிவிக்கு முகத்தால் ஆறு, நாடு, நிலம், நகர், பொருள், குடி முதலிய பல சிறப்புக்களையும் இவ்வொரு பாட்டின் ஒரு பகுதியிற் பெறும்படி அமைத்த இலக்கியச் சுவையும் கவிநயமும் குறிக்கத்தக்கன. நூலாறு நன்குணர்வோர் தாம் பாடும் நோன்மைக்கு இவையே எடுத்துக்காட்டாய் விளங்கும் தன்மையும் காண்க.

**கமழ்சாறூர் கஞ்சாறூர்** - நாயன்மார்களது திருத்தலப் பெயர்களைச் சந்தம்பெற அமைத்து அணிபடுத்திச் சொல்வது ஆசிரியரது மரபுகளில் ஒன்று. "தெய்வநெறிச் சிவம்பெருக்கும் திருவாமூர் திருவாமூர்" (திருநா-புரா-12), "எய்தும் பெருமை யெவ்வுலகு மேறா ரேமப் பேறாரால்" (கமிகத்தி - புரா - 1) "மறைத்திரு வாக்கூ ராக்கூர்" (சிறப்புலி-புரா - 1.) "உள்ளுறையூரா முறையூர்" (புகழ்ச்சோழர் புரா - 1), "செல்வ நீடூர் திருநீடூர்" (முனை - புரா - 1) முதலியவை காண்க. இப்பாட்டிலும் வரும் பாட்டுக்களிலும் ஆசிரியர் இச்சரித நிகழ்ச்சியின் குறிப்புப்பட நாடு நகரங் குடிவளம் முதலியவற்றைக் கூறும் சுவை கருதுக.

**மேலாறு செஞ்சடைமேல் வைத்தவர் தாம் விரும்பியது** என்பது "வேண்டுதல் வேண்டாமை" யிலாராய், ஒரு பொருளையும் விரும்பாத இறைவர், பிறர் எவரும் விரும்பாத தலையிற் கழித்த மயிரை "இவள் தன் மயிர் நமக்குப் பஞ்சவடிக்கு ஆம்" என விரும்பிய சரிதம் குறிப்பது. "தலையின் இழிந்த மயிரனையர்" எனத் திருவள்ளுவனார் இதனை ஒழுக்க இழிவுக்கு உதாரணமாகக் கூறியவாறு தலையினின்றும் கழித்த மயிர் பண்புடைய மக்கள் விரும்பார். மனிதர் கழித்த மயிரையும் விலைப்படுத்தவும், முடியாகத் தலைக்கு மகளிர் கொண்டு முடிக்கவும் உள்ளவழக்கம் நாகரிகம் என்னும் அநாகரிகக் கோரங்களின் ஒன்றாதலின் அது விதியும் ஆன்றோரொழுக்கமும் ஆகாது. **தாம் விரும்பியது** என்றதனால் அவர் தாமேயன்றிப் பிறர் விரும்பாதது என்ற தொனியும் காண்க. இவ்வாறு

விரும்பிய இச்சரித நிகழ்ச்சியே மக்கள் துதித்து வாழ்வடையும் பெருமையுடைய தாயிற்று என்பதும் உன்னுக.

**கோலாறு (தென்வழிந்து) போழிவது** - இச்சரிதத்தில் "மூல நனமுகஞ்செய் முதற்பருவ நண்ணினளப் பெண்ணமுதம் (879) என்ற நாயனாது மகளாரையும், **கோழங்கனியின் சாறுஒழுகி** அத்தேனெடு கலக்கும் **கால்** என்றது அங்கு அவ்வம்மை யாரை மணக்க வரும் ஏயர்கோனாரையும், **வயற்கரும்பின் சாறுஆறு** என்றது அவ்வீரு வரின் திருமண நிகழ்காலையில் இறைவன் நேரே வெளிப்பட்டு வந்து, "எழும்பரிவு-புவ னங்களில் ஏறச்செய்"யும் அன்பின் பெருக்கினையுடைய நாயனாரையும் குறிப்பாலுணர் துவது காண்க. இவ்வம்மையாரது இன்ப அன்பின் பெருமை ஏயர்கோனார் புராணத் துட் கண்டு கொள்க.

**கமழ்சாறூர்** - **சாறு** விழாவுக்கும் பெயராதலின் அக்குறிப்பினால் மணவிழாவினை யும் (884 - 885), அதில் இறைவன் தோன்றிச் செய்யும் பேரருளினையும் உணர்த்து வதும் கருதுக. "சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி" என்பது திருமுருகாற் றுப்படை.

இக்கருத்தினைத் தொடர்ந்தே மேல்வரும் பாட்டில் " தண்ணீர்மென் கழுநீர் " என்றது நாயனாருக்கும் (887), ஏயர்கோனார்க்கும் (900 - 901) இறைவர் செய்த திருவருளினையும், கழுநீர்க்குத் தடஞ்சாலி தலைவணங்குதல் இறைவரைப் பணிந்து போற்றிய நாயன்மா ரிருவரையும், குறிப்பாலுணர்த்துதலும் காண்க. கழுநீர் அருட் டிருநோக்கத்தினை உணர்த்துவது, " பைங்குவளைக் கார்மலரால்...எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த " என்ற திருவெம்பாவையா லுணர்க. மேலும், புயல்காட் டும் கூந்தல் (868) என்றது அம்மையாரின் மஞ்சுதழைத் தெனவளர்ந்த மலர்க்கூந் தலையும் (894), நெற்கதிர் கழுகின் மிடறுரிஞ்சிக் குலையினை வளைத்து அரிவதொத்தது (869) என்று கூறும் பொருள் அம்மையாரின் கூந்தலை அடற்சுரிகையினால் அடியில் அரிந்து கொடுத்த (895) இச்சரிதத்தின் அருஞ்செயலையும், நகர அணிகள் (870) மணத்திருவிழாவின் அணிகளையும் தொடர்ந்து குறிப்பாலுணர்த்துவதும் காண்க.

இவ்வாறே அவ்வச்சரிதங்களின் உணர்ச்சி வயமாகிய கண் கொண்டு, காடு - நகர் - முதலிய இயற்கைப் பொருள்களையும் பிறவற்றையும் அங்கங்கும் கண்டு காட்டிப் போதல் ஆசிரியரது சிறப்பியல்புகளிலொன்றும். திருஞானசம்பந்த நாயனார் புரா ணம், (7), திருநாளைப்போவார் புராணம் (2), நமிநந்தியார் புராணம் (3), திருநாவுக் கரசர் புராணம் (6), திருநீலநக்கர் புராணம் (3) முதலிய பல விடங்களையும் சிந்திக்க.

**கஞ்சாறூர்** - கஞ்சாறு என்ற பெயர் பெற்ற ஊர். தலவிசேடம் பார்க்க. 1

867. கண்ணீலக் கடைசியர்கள் கடுங்களையிற் பிழைத்தொதுங்கி
உண்ணீர்மைப் புனர்ச்சிக்க ணுறைத்துமலர்க் கண்சிவக்குந்
தண்ணீர்மென் கழுநீர்க்குத் தடஞ்சாலி தலைவணங்கும்
மண்ணீர்மை நலஞ்சிறந்த வளவயல்க ளுளவயல்கள். உ

(இ - ள்) கண்.....ஒதுங்கி - நீலமலர் போன்ற கண்களையுடைய பள்ளப்பெண் கள்ளர் களையப்படுகின்ற களைகளில் தப்பி ஒரு புறம் ஒதுங்கி; உள் நீர்மை..... உறைத்து - நீர் உள்ளே புனர்ந்ததனைச் செழித்து நின்று; மலர்க்கண்...கழுநீர்க்கு - பூவின்கட் சிவப்பு ஏறிக்காட்டுகின்ற தண் நீர்ப்பூவாகிய மெல்லிய செங்கழுநீர்ப்பூவி னுக்கு; தடஞ்சாலி தலைவணங்கும் - பெரிய நெற்கதிர்கள் சாய்ந்து வணங்குகின்ற; மண் நீர்மை...அயல்கள் - மண்ணும் நீரும் என்ற இருவகை வளமும் சிறந்து காட்டும் வளப்பமிகுந்த வயல்கள் அப்பக்கங்களில் உள்ளன.

(வி - ரை) அயல்கள் - கஞ்சாறூரின் புறத்தே - பக்கங்களில். வயல்கள் ஈகரங்களை அடுத்து அவற்றின் புறத்தில் உள்ளன. இது மருதப்பகைகளின் இயல்பு. வயல்களில் நெற்பயிர்கள் இருந்தன. களை களையும் பதத்தில் அப்பயிரிற் கடைசியர்கள் களை பறித்தனர். கழுநீர், நீலம், தாமரை, முதலியனவும் அங்கு மூளாத்திருந்தமையால் அவற்றையும் கடைசியர் பறித்தெறிந்தனர். அவற்றுள் ஒரு சில செங்கழுநீர்க் கொடிகள் சாய்ந்து ஒதுங்கி அவர்களது களைபறிப்புக்குத் தப்பின. அவை பின்னர் நீர் ஏற நிமிர்ந்து தமது சிவந்த பூக்கள் பூத்தன. இக்காலத்துக்குள் நெல்லும் உயர்ந்து கதிர் விட்டு முதிர்ந்து காய்த்துச் சாய்ந்தன. அத்தோற்றம் அச்செங்கழுநீர்க்கு, நெல், தலை வணங்குதல் போன்றிருந்தது என்பது கருத்து.

இத்திருப்பாட்டில் தன்மைகவிற்பி, தற்குறிப்பேற்றம் முதலிய பொருளணிகள் பலவும், சொற்பின் வருநிலை இரட்டைமொழிதல் முதலிய அமைதி பலவும், குறிப்பாகிய உள்ளுறையணிகள் பலவும் ஒருங்கு விரவிய பேரழகு கண்டு களிக்க.

**நீலக்கண் கடைசியர்** என மாற்றுக. கடும் - உழவு மரபு வழக்கு. **நீலக்கண்** - என்றது அஃது அவர் கண்களுக்குப் பகையாய் மிளிர்வனவாதலின் களையப்பட்டது என்ற குறிப்பும்பெற நின்றது. இனம்பற்றி வாய்க்கும் முகத்துக்கும் உவமிக்கப்படும் ஆம்பல் தாமரை முதலியனவும் உடன்களையப்பட்டன என்பதும் கொள்க.

**பிழைத்து ஒதுங்கி** - கைத்தவறுதலினால் தப்பி ஒருபுறம் சாய்ந்து ஒதுங்கி. **பிழைத்து** - பிழைத்தலின் - தவறுதலாக் களையாது விடுதலின் என்க. இரட்டை மொழிதலால் உயிர் தப்பிப்பிழைத்து என்றுரைக்கவும் நின்றது.

**ஒதுங்கிப் பிழைத்து** - எனமாற்றிப் பெரும்பகை வந்தபோது ஒருபுறம் ஒதுங்கி உயிர்தப்பிப் பிழைத்தல் ஓர் உலகியல்பாதல் போலச் சில கழுநீர்க் கொடிகள் ஒதுங்கிப் பிழைத்தன என்று தற்குறிப்பேற்றம் பெறவும் உரைத்துக் கொள்க.

**உள்நீர்மைப்புணர்ச்சிக் கண் உறைத்து** - ஒதுங்கித் தளர்ந்த கொடி அங்ஙிலையில் வேரூன்றித் தழைத்து உள்ளே நீர்த்தன்மை கூடியதனால் உறுதி பெற்று நின்று. ஒதுங்கி நிலைபிறழ்ந்த கொடி உறைத்தலுக்குக் காரணம் நீர்ப் புணர்ச்சியாம் என்க. எனைக் கொடி செடி மாங்களாயின் பிழைத் தொதுங்கியவை நீர் மிகுதியும் புணர்ந்த போது அழுகிச்சாகும். நீரில்லாத வழியும் சாகும். இக் கழுநீர்க்கொடி நீரினுள் விளைவதாதலின் உள்நீர்ப் புணர்ச்சியினால் வேரூன்றித் தளர்வு நீங்கி உறைத்ததென்பது. **புணர்ச்சிக்கண்** - கண் - ஏழனுருபு.

**மலர்க்கண் சிவக்கும்** - மலரினிடத்துச் சிவப்புநிறம் ஏறுகின்ற. கொடி இலை முதலியவற்றால் நிறம் வெளிப்படையாக அறியவாராது மலரினிறத்தால் இனம் அறியநிற்பது செங்கழுநீர். **தண்நீர் மென் கழுநீர்** - குளிர்ச்சியாலாகிய தண்மையும் - மென்மையுமுடைய செங்கழுநீர்ப்பூ. **தண்நீர்** - நீர் - நீர்மை - தன்மை.

**தடஞ்சாலி** - அதுவரை தாளுரம்பெற்று நிமிர்ந்து நின்ற வலிய நெல்லின் பயிர். **தலை வணங்கும்** - கதிருள்ள நுனி வளைந்து காட்டும். **வணங்குதல்** - வளைதல் குறித்தது. நெற்கதிர் விளைந்து சாய்வதனைத் தற்குறிப்பேற்றம் பெறத் **தலைவணங்கும்** என்றார். **தலைவணங்குதல்** - ஒரு சொல்லாக - வணக்கம் குறித்தது என்க. **தலை** - நுனி - நுனியிலிருக்கும் கதிர் என்ற பொருளும், தலையால் வணங்குதல் என்ற பொருளும் படநிற்பது காண்க. களைகட்ட பின் இரண்டுமாத அளவில் நெற்கதிர் விளைந்து சாயத் தொடங்கும். இதற்குள் கழுநீரும் வேரூன்றிப் பூத்தது என்பது. இதனையே கழுநீர் கண்சிவந்தது எனவும், அதுகண்டு நெல் தலைவணங்கிற்று எனவும் தற்குறிப் பேற்றமும் நாடகச்சுவையும் படக் கூறினர்.

கழநீர் உன்நீர்மைப் புணர்ச்சிக்கண் உறைத்த தலைவியாகவும், உறைத்து என்ற தனைப் புணர்ச்சியை உள் நீர்மையாகக் கொண்டு அத்தலைவி (புணர்ச்சியின்பத் தன்மையை அகத்துட்கொண்ட) ஊடுதல் குறித்ததாகவும், கண்சிவக்கும் என்ற தனை அவ்வூடலினுற் கோபக்குறியாகக் கண்சிவத்தல் குறித்ததாகவும், தடம் சாலி தலைவணங்கும் என்றதனை சாலி என்ற தலைவன் தான் வலியோனுயினும் தலைவியின் ஊடல் தீர்க்கத் தலைவியை வணங்கும் செய்கை குறித்ததாகவும், உருவகமும் தற்குறிப் பேற்றமும் கொண்ட கலவையணியாகவும் கொண்டு அகப்பொருட்டுறைக் கருத்துப்பட விரித்துரைத்துக் கொள்க. கண் சிவத்தல் - வணங்குதல் எனும் இவை முறையே இவற்றின் மெய்ப்பாடுகளாம். பயன் - உவகை. புணர்ச்சியிற் கண்சிவத்தல் உளதாம் என்றதோர் இயல்பும் காண்க. " உன்கலங்கருதி எங்களைக் களைந்தனர் ; அதில் உன் உதவியின்றியே ஒதுங்கிப் பிழைத்தேன் ; இன்று என்னுடன் உனக்கு என்ன உறவு" எனக் கழுநீர் உரைப்பனபோன்றன என்பது கண் சிவத்தலின் கருத்தாகிய தற்குறிப் பேற்றம் ; பிழையுடன்படுவதுபோலச் சாலி தலைவணங்கிற்று என்பது அவ்வணக்கத் தின் கருத்தாகிய தற்குறிப்பேற்றம் என்றலுமொன்று. இவை உலகநூற் பொருள் தழுவிய கருத்துக்கள்.

இனி, அறிவனூற் பொருளாகிய மேம்பட்ட பிறிதொரு பொருளும் இங்குப் புலப்படுதல் குறிக்கத்தக்கது. கழநீர் என்பது உயிர்களை ஆட்கொண்டு உய்விக்கும் ஆசாரியர் அணியும் திருவடையாள மாலையினையும் அருள் பொதிந்து விளங்கும் அவரது திருமேனிக்கத்தையும் உணர்த்துவது எனவும், கழநீர்க்குச் சாலி தலை வணங்கு தல், " பத்தி யின்பால் முதிர்தலை வணங்கி மற்ற, வித்தகர் தன்மைபோல விளைந்தன சாலி " (72) என்றபடி, இறைவனது அருள் நோக்கம் பெற்றவுடனே, முன்னர் ஆணவத்தால் தலைகிடிர்க்து கின்ற உயிர் அத்தன்மை மடங்கித் தலைவணங்கின தன்மை யுணர்த்துவது எனவும் வருவதோர் மெய்ஞ்ஞானப் பொருட்குறிப்பும் கண்டு கொள்க.

இனி, இச்சரிதத்தினை ஒட்டிச் சாலி இங்கு உழவராகிய நாயனாரையும், கழநீர் அவர்பால் அருட்கண் சேர்த்தி ஆட்கொண்டு அவரது அன்பின்றிறத்தினை உலக மறியச் செய்யவரும் இறைவரையும் குறிப்பால் உணர்த்தியன எனவும், உள் நீர்மை... ...சீவக்கும் என்றது, " சேலுங் கயலுந் திளைக்கும் கண்ணு ரிளங்கொங்கையிற் செங் குங்குமம், போலும் பொடியணி மார்பிலங்கும் என்று " நாயகிநாயகத் தன்மையிற் புணர்ந்து பேரின்பமளிக்கும் அருட்பார்வை குறித்தது எனவும், கழநீர்க்குத் தலை வணங்கும் என்றது அவ்வருட்பார்வையில் வசீகரிக்கப்பட்ட நாயனர் அவர் திருப் பாதங்களில் வணங்கி அவர் வேண்டியதெல்லாங் கொடுக்க நிற்பதனைக் குறித்தது எனவும் இச்சரிதப் பொருள் காட்டும் உட்குறிப்புடன் விளங்குவதும் காணத்தக்கது.

**மண் நீர்மை - மண்** - மண்ணுகின்ற - கழுவுகின்ற - மாசுபோக்குகின்ற ; **நீர்மை** - நீரின் தன்மை எனக்கொண்டு இவ்வயல்களிற் காணப்படும் இத்தோற்றங்களின் உட் குறிப்பினை உணர்ந்தால் அவ்வுணர்ச்சிதானே அவ்வாறுணர்வோரின் ஆணவக்கறையை மண்ணும் - கழுவும் - தன்மை என உரைக்கவும் நின்றது. " கடல் பெரிது மண்ணீரு மாகாது " என்ற நீதி நூலும் காண்க.

**வளவயல்கள்** - மண்ணும் - நீரும் என்ற இருவளனும் பொருந்தப் பெற்றமை யால் வளத்திற் சிறந்த வயல்கள் என்க. அற்றாகலினன்றே கென்மணிகளின் பாரம் தாங்கலாற்றாது சாலி தலைவணங்கியது என்றார் என்ப. இது பற்றியே மண் நீர்மை நலம் - என்றார்.

**வளவயல்கள் அயல்களின் உள** - என்க. வயல்கள் மருதநிலத்தின் ஊர்களை அடுத்து அயலிற் காணப்படுமியல்பும் குறிக்க.



சீ - காளம் - அத்தி — சீகாளத்தி
(இலந்தி பாம்பு யானை)

இத்திருவுருவங்கள்
திருக்கோயிலி னுட்சுற்றில் உள்ளவை.
—பாட்டு - 650 - (திருஞான. புரா. 1021) - பக்கம் - 422



காளத்தித் திருக்கோயில் - ஐந்து கோபுரங்கள்
(மலை மேலிருந்து பார்வை)



திருக்காளத்தித் திருமலையும் திருக்கோயிலும் பொன்முகலியாறும்

—பாட்டு - 749 - பக்கம் - ௯௪௧.





பொன்முகலியாற்றினின்றும் கண்ணப்பர் திருமலை ஏறிச்சென்ற படிகள்

—பாட்டு - 752 - பக்கம் - கூசு

திருக்காளத்திக் கண்ணப்பர் திருவுருவம்

—பாட்டு - 829 - பக்கம் - 603



அன்னியர் படை எடுப்பின் போது
திருக்காளத்திநாதர் திருவுருவமாக
அமைக்கப்பட்டது.
திருக்கோயிலி னுட்சுற்றில் உள்ளது.

868. புயல்காட்டுங் கூந்தல்சிறு புறங்காட்டப் புனமயிலின்
இயல்காட்டி யிடையொதுங்க வினங்காட்டு முழத்தியர்கள்
மூயல்காட்டு மதிதோற்கு முகங்காட்டக் கண்மூரிக்
கயல்காட்டுந் தடங்கள்பல கதிர்காட்டுந் தடம்பணைகள். கூ

(இ - ள்) சிறுபுறம் புயல்காட்டும் கூந்தல் காட்ட - பிடரி மேகங்களை ஒத்த கூந்தலைக்காட்ட ; இடை புனமயிலின் இயல்காட்டி ஒதுங்க - இடையானது புனத்திலுள்ள மயிலினது இனிய சாயலைக் காட்டி (ஓர்புறம்) அசைய; இனம் காட்டும் உழத்தியர்கள் - கூட்டமாக அங்குப் பயிலும் பள்ளப்பெண்களுடைய ; மூயல்காட்டும்...முகம் காட்ட - முயற்கறையைக் காட்டும் சந்திரனைத் தோல்வியுறச் செய்கின்ற முகங்களைக் காட்ட ; கண்.....பல - கொழுத்த கயல்மீன்கள் அவர்களது கண்களைக் காட்டுதற்கிடமாகிய பல வாவிகள் ; கதிர்காட்டும் தடம் பணைகள் - நெற் கதிர்களை மேலே விளங்கக் காட்டிநிற்கும் பெரிய வயல்களில் உள்ளன.

(வி - ரை) **புயல் காட்டும்** - புயலின் தன்மையைக் காட்டும். **சிறுபுறம்கூந்தல் காட்ட** - கூந்தல் மேகங்களைப்போலக் கறுத்துப் பரவிப் பிடரியிலே அலைந்தது என்பது கருத்து.

**இடை.....ஒதுங்க** - இப்பெண்கள் நடக்கும்போது இடை அசைவது மயில்களது சாயலை ஒத்திருந்தது என்பதாம். இன் - இனிய. பறவையினம் எல்லாவற்றினும் இனிய சாயல் மயிலுக்கே உளது என்ப. **இன்** - சாரியை எனினுமாம்.

**இனம்காட்டும் உழத்தியர்கள்** - பள்ளப்பெண்கள் வயலில் நாறுநடுதல், களைகட்டல், அறுத்தல் முதலிய தொழில்கள் செய்யப்போவார் கூட்டமாகச் செல்லுமியல்பு குறித்தது.

**மூயல் காட்டும்** - **மூயல்** - சந்திரனிற் காணப்படும் கறை. இதனை முயல் என்பது வழக்கு. **காட்டும்** - காட்டுதலினால். மதி தோல்வியுறுதற்குக் காரணம் கூறியவாறு. ஏதுப்பெயர் கொண்ட பெயரெச்சம்.

**மதிதோற்கும் முகங்காட்ட** - மதி இவர்களது முகம் போன்றதென்பர்; ஆயினும் அது முயற்கறையோடுள்ளமையால் ஒப்பாகாமல் தோல்வியுற்ற தென்றபடி. **தோற்கும்.** மதியைத் தோல்வியுறுவிக்கும் எனப் பிறவினைப் பொருளில்வந்தது. **காட்ட** - முகம் காணுமாறு கண்ணுடியில் நீட்டுவது போலத் தண்ணீரில் அவர்கள் முகங்களைக் காட்ட. இதனைத் தமது வெற்றி புலப்படுமாறு முகத்தைத் தடத்தினிடம் காட்டியதாகத் தற்குறிப்பேற்றம் பெறக் கூறினர். நீரில் முகம் பார்க்கும் வழக்கமும் உண்டு என்க. "மொய்யொளியி னிழற்காணு மாடியென" (திருநா - புரா - 9) என்ற கருத்தை இங்கு வைத்துக் காண்க.

**மூரிக்கயல்.....தடங்கள்** - **மூரி** - வலிய. **கயல்** - கெண்டை மீன்கள். கயல்கள் கண்போல் விளங்கின என்க. வடிவமும், நீரினுட் பிறழுந் தொழிலும், விளக்கமும் பற்றிக் கயலைக் கண்ணுக்கு ஒப்புக் கூறுவர். மெய்யும், தொழிலும், பயனும் பற்றி வந்த உவமை. உழத்தியர் முகங்காட்டுதலைத் தற்குறிப்பேற்றம் பெறக் கூறிய ஆசிரியர் தடங்களும், உழத்தியரை நோக்கிப், "புயல் மயில் மதி முதலியவற்றை நீவிர் இனங் காட்டி வென்றீர் என நினையற்க ! உமது கண்ணுக்கு இனமாகிய கயல் எம்மிடத்துள்ளன" என்று தடம் கயற்கண்காட்டும் எனத் தற்குறிப்பேற்ற அணியும் நாடகச் சுவையும்பெறக் கூறிய அழகு காண்க.

**புயல்காட்டும், இயல்காட்டி, கயல்காட்டும்** என்பவற்றில் காட்டுதல் என்பது உவம உருபுப்பொருள் காட்டி நின்றது.

**தடங்கள்** - தடாகங்கள் - வாவிகள். பணைகளிற் பல தடங்கள் உள்ளன என்க. பல தடங்களும் பண்ணைகளும் உள்ளன என எண்ணும்மைகள் தொக்கனவாகக் கொண்டு

வினைச்சொல் வருவித்து உரைப்பினுமமையும். பணைகள் பல என்று பல என்பதைப் பின்னும் கூட்டி உரைத்தலுமாம்.

**பணைகள் கதிர் காட்டுதல்** - நெற்கதிர்கள் விளைந்ததனை மேலே விளங்கக் காட்டி நிற்றல். **பணை** - பண்ணை. இடைக்குறை.

பண்ணைகளிற் கதிர்முற்றி விளங்கின ; அவற்றை அறுக்கப் பள்ளப்பெண்கள் கூட்டமாகச் சென்று உலவினர். அப்பண்ணைகளில் பல தடங்கள் இருந்தன. நெல் விளைந்த பருவகாலமாதலின் நீரிறைக்கும் செலவின்றித் தடங்களில் நீர் தேங்கி நிறைந்திருந்தது. கயல்களும் கொழுத்துத் துள்ளின. அத்தடங்களின் கரையினில் பள்ளப்பெண்கள்சென்றும் நின்று மிருந்தபோது அவர்கள் முகங்களின் நிழல்கள் நீரினுட் காணப்பட்டன. அதுகண்டு கயல்கள் பிறழ்ந்து துள்ள, அத்தோற்றம் " நுமது கண்கள் இத்தன்மையன" என்று தம்மிடத்துள்ள கயல்களை எடுத்து அத்தடங்கள் காட்டுவதுபோன்றிருந்தது. அவர்களது முகம் மதிபோலவும், இடையசைதல் மயிலின் சாயல்போலவும், கூந்தல் மேகம்போலவும் விளங்கின என்று தொடர்ந்து பொருள் கொள்க.

வானிற்றவழும் மேகத்தையும், அங்குப் பறக்கும் மயிலையும், அங்கே விளங்கும் மதியையும் இக்கடைசியர்கள் தம்மில் **இனங்காட்டி** மேல் விளங்கவும், இவர்களுடைய கண்களே இந்நிலத்தின்கீழ் விளங்கும் தடங்கள் காட்டின என்ற குறிப்பினால் இக் காட்டுக் குடிச் சிறப்பும் அதனின் மேம்பட்ட நிலச்சிறப்பும் கூறியபடி.

மேற்பாட்டில் நெல்லின் களைகட்டலும், நெல்வளர்ந்து கதிர்முற்றிச் சாய்ந்ததனையும் கூறிய ஆசிரியர், இங்கு அவை முற்றியபின் அறுக்கத்தக்க நிலையினை அம்முறையிற் கூறுதலும், வரும் பாட்டில் அரிவாள் கொண்டு அறுக்கும் குறிப்பினைக் கூறுகின்ற அழகும் உழவுபற்றிய உள்ளுறையும் வைப்புமுறையும் காணத்தக்கன.

இச்சரிதமுடைய நாயனார் உழவராதலின் அத்தொடர்பு காட்ட உழவுத்தொழிற் பகுதிகளைக் குறித்துச் சிறப்புக் கூறி உள்ளுறை உவமம், தற்குறிப்பேற்றம் முதலிய பல அணிகலன்களும் சிறக்கவைத்ததனை உன்னி மகிழ்க. 3

869. சேறணிதண் பழனவயற் செழுநெல்லின் கொழுங்கதிர்போய்
வேறருகு மிடைவேலிப் பைங்கமுகின் மிடறுரிஞ்சி
மாறெழுதிண் குலைவாளைப்ப வண்டலிதண் டலையுழவர்
தாறரியு நெடுங்கொடுவா ளனையவுள தனியிடங்கள். ச

(இ - ள்) வெளிப்படை. சேற்றினையுடைய அழகிய குளிர்ந்த மருதத்தைச் சார்ந்த வயலில்விளைந்த செழிப்பையுடைய நெல்லினது கொழுத்தகதிர் மேலேபோய், அவ்வயலின் அயலில் வேறுக அடுத்துள்ள நெருங்கிய வேலிப் பக்கம் பசிய கமுக மரங்களின் கழுத்துவரை வளர்ந்து, மாறுக எழுந்த அவற்றின் திண்ணிய குலையை வாளைப் பவை, வண்டுகள் வாழும் சோலையில் வாழ்கின்ற உழவர்கள் குலைகளை அரிகின்ற நீண்ட வளைந்த அரிவாள்களை ஒத்தனவாயுள்ளன ஒரோவோரிடங்களில்.

(வி - ரை) **சேறுஅணி** - வேற்றுமையில் நகரவொற்றிரட்டாது வந்தது. காடக மிறக்தோர் என்புழிப்போல.

**சேறு-அணி-தண்-பழனம்** என்ற நான்கு அடைமொழிகளையும் வயல் என்ற பெயருடன் தனித்தனிக் கூட்டுக. சேற்றின் அணியையடைய என்று சேர்த்துரைப் பினுமமையும். வயலுக்குச் சேறுடைமையும், அதனால் அணியுடைமையும் சிறப்பு. எரு - தழை - முதலிய கழிபொருள்கள் பலவும் சேர்ந்து அழுகிய மண் குழம்பேயாயினும் பயிர்க்குப் பயன் தருதலும், அப்பயிர் தாமே உயிர்க்கு ஆதாரவாதலும் நோக்கி

அணி எனப்பட்டது. அள்ளல் - கருஞ்சேறும், அளறு - உவர்நில முதலிய வெண்ணிலச் சேறும் குறித்தல்போலச் சேறு இங்கு வயற்சேறு குறித்தது.

**வயற்செழு நெல்லின்** - மேற்சொன்ன சிறப்புடைய தொருவயலின் வேலி ஓரத்திற் பல செழித்த நெற்பயிரில். **கொழுங்கதிர்** - அந்தச் செழித்த நெற்பயிர்களிற் சில கொழுத்த கதிர்கள். **போய்** - மேலோங்கி வளர்ந்து. **போய்-உரிஞ்சி** எனக்கூட்டுக.

**வேறு...மிடறு** - வேறு - அந்நெற் பயிரினுக்கு வேறாய். **அருகு பைங்கழகு** - **வேலிக்கழகு** என்று தனித்தனி கூட்டுக. நெல்வயலின் அயலில் உள்ள கமுகுப்பயிரில் வேலியின் பக்கம் உள்ள சில பசிய கமுகு என்க. **மிடைவேலி** - மிடைதல் இடைவெளியில்லாது நெருங்குதல். கமுகு நாளும் மிகவும் காத்தற்குரிய பயிராகலான் அதற்கு இட்டவேலி. "நிறையாற்றுங் கமுகுநவ மணிக்கழுத்தி னுடன்கூந்தற்,பொறையாற்றா மகளிரெனப் புறம்பலைதண் டலைவேலித், துறையாற்ற மணிசொரிய" (திருநா - புரா - 7) என்றது காண்க. **பைங்கழகின் மிடறு** - பசிய கமுகின் கழுத்து; கழுத்து என்பது இலைகளை அடுத்துள்ள அடிப்புறத் தண்டு. இளங்கமுகு ஈனும் பருவத்தில் தண்டு நீண்டு மரமுழுதும் பசுமை மாறாது காட்டுதலுமுண்டு. **கதிர்போய்க் கழகின் மிடறு உரிஞ்சி** என்றது கதிர்மேலெழுந்து வளர்ந்து கமுகின்தண்டினை உராய்ந்து. **உரிஞ்சி** - உரிஞ்சுதலினால் எனக் காரணப்பொருளில் வந்த வினையெச்சம்.

**கொடுவாள்** - உள்வளைந்த அரிவாள். கமுகின் குலையைச் சார்ந்து வளைத்த நெற்கதிர், அரியும் கொடுவாள்போன்றது என்பதாம்.

**அனைய** - அனையவாகி. போன்றனவாகிய தனியிடங்களில் உள என்று கூட்டுக. இக்காட்சி சில இடங்களில் மட்டும் உண்டு என்பார் **தனி இடங்கள்** என்றார்.

தடஞ்சாலி, தண்ணீர்மென் கழுநீர்க்குத் தலைவணங்கும் தன்மையுடையவாயினும் (867), அவை தடம்பணைகளில் தம்பெருமை மிக்குக் காட்டுவனவாம் (868); அவற்றுட் சில கதிர் கமுகின் மிடறு உரிஞ்சி அவற்றின் குலைகளையும் வளைத்து அரியும் நெடுங் கொடுவாள் போன்றும் உள்ளன என்று இம்மூன்று பாட்டுக்களினும் தொடர்ந்து செல்வதொரு பொருள்படவைத்து இவற்றால் நீர்வளம் நிலவளம் முதலியனவும், நிலம், தொழில், உணவு முதலியனவும் கூறிய அமைதி காண்க.

வேலியின் ஓரத்தில் சில நெற்பயிர் செழித்தோங்கிக் கதிர் நீளுதற்கும் அருகு பைங்கமுகு குலையீனுதற்கும் காரணம் வேலி வரம்புக்கருகில் நீரும் சேறும் பலவகை எருவும் ஒதுங்கிக் கூடும் வளம் என்க. கோதாவிரி முதலிய பெருநதிகளின் நீர்வளமுள்ள நாடுகளில் நெற்பயிர் 8, 9 அடி நீளம்வரை ஓங்கி வளர்தல் இன்றும் காணலாம். நீர் நிலையினுள் வளரும் சிலவகை நெற்பயிர்கள் 20, 30 அடி உயரம் நீண்டு வளர்தலுமுண்டென்பர். "களிறுமாய்க்குங் கதிர்க்கழனி"—(பத்துப்பாட்டு)

ஒரு மகள் கூந்தலை அரிந்த இச்சரிதக் குறிப்புப்பெற நாட்டுவளங் கூறிய சிறப்பும் காண்க. ஆறு (866), வயல் (967), வயற்குளம் (தடம்பணை) (868), அதிற் றனியிடங்கள் (869) இவற்றை முறையே கடந்து சென்றால், மறுகு (870) என் றிவ்வரிசை பெறக் கூறிய வருணனைச் சிறப்பும் காண்க. 4

870. பாங்கின்மணிப் பலவெயிலுஞ் சுலவெயிலு முளமாடம்;
ஞாங்கரணி துகிற்கொடியு நகிற்கொடியு முளவரங்கம்;
ஓங்குநிலைத் தோரணமும் பூரணகும் பமுமுளவாற்
பூங்கணைவீ தியிலணைவோர் புலமறுகுஞ் சிலமறுகு. ரு

(இ - ள்) பாங்கின்...மாடம் - பக்கங்களில் மாடங்கள் பல மணி நிறங்களும் சூழ்ந்த மதில்களும் உள்ளன; ஞாங்கர்...அரங்கம் - (அவற்றின்) பக்கங்களில் மேடைகள் அழகிய துகிலாலாகிய கொடிகளும் நகிலினை உடைய கொடி (போன்ற பெண்)

களும் உள்ளன ; பூங்கணை...சில மறுகு - வீதிவழியே செல்வோர்களது புலங்களைப் பூங்கணைகள் மயங்கச் செய்யும் சில மறுகுகள் ; ஓங்கும்...உளவால் - மிக்குயர்ந்த தோரணங்களும் நிறைகுடங்களும் உள்ளன.

(வி - ரை) **பாங்கின்** - மேற்பாட்டிற்சொன்ன நெற்பழனம் கமுகுச்சோலை என் றிவற்றினை அடுத்து, அவற்றின் பக்கத்தில்.

மாடம் பல மணி வெயிலும் சுலவு எயிலும் உள என்க. **வெயில்** - ஒளி - நிறம். **பலமணி வெயில்** என்றது மணிகளின் பற்பல நிறங்களை. மணிகளின் பல ஒளி களும் சுற்றிய எயில் என்று உரைப்பாருமுண்டு. **சுலவு எயிலும்** - **எயில்** - மதில். **சுலவுதல்** - சூழ்தல். மாடம், பலமணி வெயிலும் எயிலும் உள்ளன ; அரங்கம், அகிற் கொடியும் நகிற்கொடியும் உள்ளன ; மறுகு, தோரணமும் கும்பமும் உள்ளன என முடிக்க. மாடம் முதலிய மூன்றெழுவாய்களும் சாதியொருமையாகலின் உள என் னும் பன்மைக்குறிப்பு வினைகளோடு முடிந்தன. உம்மைகள் எண்ணும்மைகள்.

**ஞாங்கர்** - பக்கம். **துகிற்கொடி** - துணிகளாலாகிய கொடிகள். கொடிகள் கட்டுவது மாடங்களுக்கும் வீதிகளுக்கும் அழகும் மங்கலமும் தருவன என்பர். இவற்றுள் வெண்கொடி சிறந்ததென்பது மரபு. " மாடமாளிகைக் கொடி, யருக்கன் மண்டலத் தணவும் " (திருஞான - திருவாரூர் - நட்டராகம் - திருவிராகம்), " நிறைவெண் கொடிமாடம் " (திருஞா - கோயில் குறிஞ்சி), " வெண் கொடியாடும் சீர்வளங்கு " (97) என்றவிடத்துரைத்தனவும், " மேலம் பாதல நிறையுங் கொடிகளில் " (திருநா. புரா. 164); " சோதிவெண் கொடிகளாடுஞ் சுடர் நெடுமறுகு " (474) என்பன பலவும் காண்க.

**அரங்கம்** - பெண்களின் ஆடல் பாடல்கள் நிகழும் பொது இடங்கள். " காந்தார மிசையமைத்துக் காரிகையார் பண்பாடுங் கவினூர் வீதித், தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார் நடமாடுந் திருவை யாறே" (ஆளுடைய பிள்ளையார்.மேகராகக்குறிஞ்சி) என்ற தேவாரமும் பிறவும் காண்க.

**நகிற்கொடி** - நகில் - முலை. **கொடி** - கொடிபோன்ற பெண்கள்.

**தோரணம்-பூரண கும்பம்** - இவை மங்கலம் காட்டும் பொருள்கள். **ஓங்குநிலை** - மேலே தூக்கி உயரக் கட்டியது குறித்தது.

**பூங்கணை** - பூக்களாலாகிய அம்புகள் - மன்மத பாணங்கள். **புலம் மறுகும்** - புலங்களில் மறுகுதலை - மயக்கத்தை - விளைத்தற்கேதுவாகிய. **புலம்** - ஐம்புலம்.

**சிலமறுகு** - **மறுகு** - வீதி. புலம் மயங்குதற்கேதுவாவன சில வீதிகளில் உள்ள விலைமாதரின் ஆடல்பாடல் முதலிய காட்சிகளாலாவன. இவ்வாறுள்ள நிகழ்ச்சி சிலவேயாம். அவை கடையொழுக்கமுமாம் என்று குறிப்பார் **சிலமறுகு** என்று கடையிற் கூறினர்.

**பூங்கணை...மறுகு** - பூங்கணையின் வழியிலே சார்கின்றோரது புலன்களிலே மறுகுதற்கேதுவாகிய சிலமறுகென்க. எனவே "முத்தாந்த வீதி முளரி தொழுமன்பர்" அம்மறுகிலுள்ள புலங்களில் மயங்கார் என்பது வெதிரேக அணியாற் பெறும் பொருள்.

**பாங்குமணி—ஓங்குமணி**—என்பனவும் பாடங்கள். 5

871. மனைசாலு நிலையறத்தின் வழிவந்த வளம்பெருகும்
வினைசாலு முழவுதொழில் மிக்கபெருங் குடிதுவன்றிப்
புனைசாயன் மயிலனையார் நடம்புரியப் புகன்முழவங்
கனைசாறு மிடைவீதிக் கஞ்சாறு விளங்கியதால். சு

(இ - ள்) புனைசாயல்...கஞ்சாறு - அணிபுனைந்த சாயலின் மயில்போன்ற பெண் கள் நடமாட அதற்கிசைய ஒலிக்கும் முழவுகள் முழங்குகின்ற விழாச் சிறப்புக்கள் மிக்க

வீதிகளையுடைய கஞ்சாறூர் ; மனைசாலும்.....துவன்றி - சால்பு பொருந்திய நிலைத்த இல்லறத்தின் வழியிலே வந்த வளங்கள் பெருக உடையனவும் உழவு தொழிலாகிய கல்வினை பூண்ட பெருமைமிக்கனவும் ஆகிய குடிகள் நிறைந்து ; விளங்கியது - விளக்க முற்றதாம். (ஆல் - அசை)

(வி - ரை) சாலும் மனையறம் - நிலைமனையறம் என்று தனித்தனி கூட்டுக - சால்பாவது தன்னெறியிற் போதியதாந் தன்மை. " சால்பாய மும்மைத் தமிழ் தங்கிய வங்கண் மூதூர் " (மூர்த்தி - புரா - 5) என்றதும் பிறவும் காண்க. மனையறம் - இல்லின்க ணிருந்து செய்யும் அறம். நிலை - ஆச்சிரமமாம். சாலுதலாவது ஏனை மூன்று நிலையினர்க்கும் உண்டியும் மருந்தும் உறையுளும் முதலியன உதவும் நிறைவுடைமை என்பதும் பொருந்தும்.

சாலும் மனையறத்தின் வழிவந்த வளம்...பெருகும் குடி - அறநூல்களுள் விதிக்கப்பட்டவாறே இல்லற நடத்தி அதன் வழியால் வந்த வளங்கள் பெருகவாழும் குடிகள் என்க. இல்லறத்தின் சால்புக்குரிய விதிகள் திருக்குறள் முதலிய அறநூல்களுட் காண்க. இதன் அருமைப்பாட்டைச் சிதம்பர மும்மணிக்கோவையில் குமாரகுருபர சுவாமிகள் தொகுத்தருளியவாற்றாலும், பிறவாற்றாலும் அறிந்துகொள்க. இதன் அருமையும் பெருமையும் குறித்தே இதனை ஈண்டுக் குடிச்சிறப்புரைக்கும் பகுதியுள் முதற்கண் வைத்து விதந்து கூறினர்.

வினைசாலும் உழவுதொழில் - தொழில்களுள் எல்லாம் சால்பு - நன்மை-மிக்கது உழவு தொழில் என்பதாம். " சுழன்று மேர்ப்பின்ன துலகம் " என்றும், "அஞ்தாற்றூ தெழுவாரை யெல்லாம் பொறுத்"தலினால் " உழுவார் உலகத்தார்க் காணி " என்றும், " மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர் " என்றும் காரணங் காட்டித் திருவள்ளுவ நாயனார் எல்லாத் தொழிலினும் " உழவேதலை " யாதலை வற்புறுத்தியுள்ளது காண்க. இக்கருத்துப் பற்றியே வினைசாலும் என்றும், அதனாலே மீக்க என்றும், அதனாலே பெருமை பெற்றதென்பார் பெருங்குடி என்றும் கூறினர். " மேழிச் செல்வம் கோழை படாது " என்பது நீதி.

புனை - அணிபுனை என்று எழுவாய் வருவிக்க. சாயல் மயில் அனையார் - சாயல்-சாயலின். உவமைக்குப் பொதுத் தன்மை கூறியபடி. ஒப்புப் பொருளில் வந்த ஐந்தனுருபு விரிக்க.

நடம்புரியப் புகல்முழவம் கனை சாறு-சாறு - விழா ; இங்கு மக்கள் பொருட்டாக நிகழும் மண முதலிய சிறப்புக்கள் குறித்தது. நடம்புரியப் புகல்முழவம் - ஆடற் பெண்கள் நடமாட அதற்குப் பொருந்த முழக்கப்படும் முழவு. ஆடலும் அதற்கிசைந்த முழவும் விழாவிற்குரிய அங்கங்களாம். " மடவார்கள் நடமாட முழவதிர ", " தேந்தா மென்றரங்கேறிச் சேயிழையார் நடமாடும் ", " முகில்முழவ மயில்கள்பல நடமாட " எனவரும் ஆளுடைய பிள்ளையார் தேவாரமுதலியன காண்க. புகல்-ஆடலுக்கு இசையச் சத்தித்தல் குறித்தது. ஆடலுக்குப் பொருந்தப் பேசுவது போலும் என்று உருவக நயம்படவுங் கொள்க. கனை என்ற குறிப்பும் அது. கனைத்தல் - சத்தித்தல். புகல் எல்லாராலும் எடுத்துச் சொல்லப்பட்ட என்றுரைப்பாருமுண்டு.

நடமாடப் புகல் முழவம் - நடமாடும் ஒலியலைகள் தாக்க, அவ்வதிர்ச்சியினால் தானாகவே சத்திக்கின்ற முழவு என்றலுமாம்.

மேற்பாட்டிற் கூறிய மாடம், அரங்கு, மறுகு என்ற மூன்றினும் அம்முறையே தொடர்ந்து, மாடம் - பெருங்குடியனவன்றி எனவும், அரங்கம் - மயிலனையார் நடம்புரியப் புகல்முழவம் எனவும், மறுகு - சாறுமிடை வீதி எனவும் சிறப்புக் கூறியது காண்க.

இவ்விரண்டு பாட்டினும் கூறிய கொடி, தோரணம், பூரண கும்பம், நடம்புரியப் புகல் முழவம், சாறு என்பன இச்சரிதத்தினுள் வரும் மணத்திறத்தின் பெருவிழாச் சிறப்பினையும், மனைசாலும் நிலையறம் - உழவு தொழில் - பெருங்குடி என்பன நாயனா

ரையும், கலிக்காமனுரையும்; ஈகிற்கொடி, சாயல் மயிலனையார் நாயனாரின் மகளாரையும் குறிப்பானுணர்த்துவதும் காண்க.

**கனைசாறு - கஞ்சாறு** - சொல்லணி. 866 பார்க்க. **கஞ்சாறு-ஊர்ப்பெயர்.** தேவார ஆட்சி போற்றப்பட்டது. தலவிசேடம் பார்க்க.

**வழிவந்து—புனைமுழவம்**—என்பனவும் பாடங்கள். 6

872. அப்பதியிற் குலப்பதியா யரசர்சே ஞபதியாஞ்
செப்பவருங் குடிவிளங்கத் திருவவதா ரஞ்செய்தார்
மெய்ப்பொருளே யறிந்துணர்ந்தார் விழுமியவே ளாண்குடிமை
வைப்பனைய மேன்மையினர் மானக்கஞ் சாறனார். எ

**(இ - ள்)** மெய்ப்பொருளே...மானக்கஞ்சாறனார் - உண்மைப் பொருளே அறிந்து அதனை எப்போதும் சிந்தித்து உணர்வினிற் கொண்டவரும், தூய வேளாள மரபின் சேமவைப்புப்போன்ற மேன்மையுடையவருமாகிய **மானக்கஞ்சாறனார்; அப்பதியில்...** அவதாரஞ் செய்தார் - அந்தத் தலத்தில் வழிவழி வாழ்கின்ற மேம்பாடுடையவராய் அரசரது சேனபதியாகிய சுட்டிக் கூறத்தக்க குடி விளங்கும்படி திருவவதாரஞ் செய்தனர்.

**(வி - ரை)** இப்பாட்டினுல் நாயனாரது மரபும், மரபின் உட்குடியும், உள்ள நிறைவும், வழிவழி வாழ்க்கையும் முதலிய சிறப்புக்கள் பலவும் ஒருங்கு பேசப்பட்டன.

**மெய்ப்பொருளர்** - மெய்ப்பொருளையனார் புராணமும், 481-ல் உரைத்தவையும் பார்க்க.

**அறிந்து உணர்ந்தார் - அறிதல் - உணர்தல்** - இவை வெவ்வேறு உணர்ச்சி நிலை குறித்தன. **அறிந்து** என்றதனுற் கேட்டலும் சிந்தித்தலும், **உணர்ந்து** என்றதனுற் தெளிதலும் கிட்டை கூடலும் உணர்த்தப்பட்டன. மெய்ப்பொருளானது ஞானேந்திரிய அறிவு அந்தக்கரண அறிவு என்னும் பாசவறிவினுலும், உயிரறிவு எனப்படும் பசு அறிவினுலும் அறியப்படாதாயும், சிவஞானமாகிய மெய்யுணர்ச்சியால்மட்டும் அளியப்படுவதாயும் உள்ள பொருளென்பது இங்குக் குறிக்கப்பட்டது.

**அப்பதியில் குலப்பதி** - அவ்வூரில் வழிவழி நிலைத்த குடிகளுள் முதன்மையுடையவர். இக்காரணம்பற்றியே முதன்மையார், முதலியார் என்ற குடிப்பெயர்கள் போந்தன என்ப. இவர்களுக்கு ஊராண்மை நாட்டாண்மை முதலிய ஊர் முதன்மைப் பட்டப் பெயர்களும் வழங்கும். இவர்களின் குடிச்சிறப்புக்களை ஆசிரியர் பல இடத்தும் விதந்து பேசுதலும், உமாபதி சிவாசாரியார் திருத்தொண்டர் புராண வரலாற்றினுட் பாராட்டியிருத்தலும் காண்க.

**அரசர் சேனபதியாம் செப்பவருங் குடி** - அரசரிடத்துச் சேனபதியாகும் தொழிலும் வேளாளர்க்கு உரியது. இது இவர்களுட் சில குடிகளில் வழிவழியாய் வருவதொன்றுதலின் இவ்வாறு கூறினர். இந்நாயனாரது மகளாரை மணம் புரியவந்த எயர்கோனரும் இதுபோலவே சேனபதிக்குடியினில் வந்தவர் என்பது " ஓங்குகுல மரபினாய்" (881), " எந்தமது மரபினுக்குத் தகும்பரிசா லேயுமென " (882) என்றவற்றாலும், எயர்கோனர் புராணத்தினுள் "எயர்கோக்குடிதான்" " மன்னிநீடிய வளவர் சேனபதிக்குடியாம் " (5) என்று கூறுவதனாலும் விளங்கும். திலகவதியம்மையாருக்கு மணம்பேசிய கலிப்பகையாரும் அரசர் சேனபதியாராகப் போர் புரிந்து உயிர் கொடுத்துப் புகழ் கொண்ட சரிதத்தையும் இங்கு நினைவு கூர்க. இதனை " வேந்து விடு தொழிலிற் படையுங் கண்ணியும், வாய்ந்தன ரென்ப வவர்பெறும் பொருளே " (பொருள் - மரபு - 81) என்ற தொல்காப்பியத்துள்ளும் காண்க.

**குடி விளங்க** - இவர் அவதரித்த குடி இவரால் விளக்கமடைய. குலவிளக்கு, குல தனம் முதலிய வழக்குக்கள் காண்க. ஒரு குலத்தில் வந்த வொருபெரியாரைச் சுட்டி அக்குலம் பெருமையடைதல் வழக்கிற் காண்க. ஆசிரியர் சேக்கிழாரைக் குடிப் பெயராலே வழங்குவது இதனை விளக்கும். "இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல் குடி" என்ற திரு முருகாற்றுப்படையும் சிந்திக்க. "கானவர்குலம் விளங்கத் தத்தை பாற் கருப்ப நீட" (662) என்றது காண்க.

**விழுமிய வேளாண் குடிமை வைப்பு-வேளாண் குடியின் விழுப்பமாவது** வாய்மை நிறம்பாமையும், கினைப்பிழலும் தீமையில்லாமையும், தொழிலாற்றாய்மையும், காவா வள்ளண்மையும் ஆம். "தீயவென்பன கனவிலு நினைவிலாச் சிந்தைத் தூய மாந்தர்" (திருக்குறிப்பு - புரா 47), "தம்முயிரையும் வணிகனுக் கொருகாற், சொற்ற சொல்லே யும் தூக்கியச் சொல்லையே காக்கப், பெற்ற மேன்மை" ( மெ. 3), "நம்பு வாய்மையி னீடு" (இளையான் குடி - புரா - 1), "அனைத்துவித கலத்தின்கண் வழுவாத நடை மரபிற் குடி" - (திருநா - புரா - 16) என்பன முதலாக ஆசிரியர் ஆங்காங்கும் காட்டிப் போந்தவை காண்க. "வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்குந், தாளா ளர்", "இன்மையாற் சென்றிரந்தார்க் கில்லையெனு நீர்த்துவக்குந் தன்மையார்" என்ற ஆளுடைய பிள்ளையார் (திருவாக்கூர்) தேவாரமுங் காண்க. **விழுமம்** - நன்மை (விழு மியார் - நல்லோர்). **குடிமை வைப்பு அனைய** - குடிக்குச் சேம நிதிபோல. முயற்சி யின்றி யாவரும் பயன்பெறக் கூடியதும் எடுக்கக் குறையாததும் சேம நிதியாம். இது இவரது காவாத வள்ளண்மை குறித்தது.

**மேன்மையினுர் மானக்கஞ்சாறனுர்-மானம்** - மேன்மை - பெருமை. நாயனாரது இயற்பெயர் விளங்கவில்லை. மேன்மையினராதலின் இப்பேர் பெற்றார் என்று பேர்ப் பொருள் விளக்கம் செய்தவாறு. 7

873. பணிவுடைய வடிவுடையார்; பணியினெடும் பணிமதியின்
அணிவுடைய சடைமுடியார்க் காளாகும் பதம்பெற்ற
தணிவில்பெரும் பேறுடையார்; தம்பெருமான் கழல்சார்ந்த
துணிவுடைய தொண்டர்க்கே யேவல்செயுந் தொழில்பூண்டார். அ

(இ - ள்) பணிவுடைய வடிவுடையார் - (அவர்) பணிவை வெளிப்படுக்கும் வடி வினையுடையவர்; பணியினெடும்...பேறுடையார் - பாம்பினோடு குளிர்ந்த சந்திரனை அணிந்த சடைமுடியுடைய சிவபெருமானுக்கு ஆளாகின்ற தகுதிபெற்ற குறைவில் லாத பெரும் பேற்றினை யுடையவர்; தம்பெருமான்...பூண்டார் - தமது பெருமான் திருவடிகளைச் சார்வாகவுடைய துணிவுகொண்ட தொண்டர்களுக்கே எவல் செய்யும் தொழிலை மேற்கொண்டவர்;

(வி - ரை) **பணிவுடைய வடிவு** - திருவடிவின் ரூற்றமே அவரது உள்ளத்தின் பணிவை ஏற்றவாறு வெளிப்படுக்கும் என்பது. இங்குப் பணிவு என்பது பெரியார் முன் தம்மை மிகச்சிறியாராய்க் கொண்டு ஒழுகும் ஒழுக்கம். "தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரு, மூழ்பெற லரிது" (சிவஞா - சித் - 2 - 91), "மேத கையா ரவர்முன்பு மிகச்சிறிய ராயடைந்தார்" (சிறுத் - புரா - 15) என்பன காண்க. "குலம்பொல்லேன் குணம்பொல்லேன்" என்பன முதலாக அப்பர் சுவாமிகள் திருவாக்கிற் கண்ட இலக்கிய அமைதியின்படி தமது வாழ்வுகளையும் குறைபாடுகளை யுமே எண்ணி எங்கிப் பெரியாரது முன்பில் நிற்பதே சைவத்தின் அடிப்படையாத வின் இவ்வாறு கூறினர். "சீரடியார் கூடி, யெண்ணிலா நிருந்த போதி லிவர்க்கியா னடியே னுகப், பண்ணுகா லெங்கா லென்று பரமர்தாள் பரவி"யும், அவர்கள் "எல்

லார்க்குந் தனித்தனிவே றடியேனென் றூர்வத்தாற் " பாடிப் பணிந்தும் நம்பியாரூரர் இவ்வொழுக்கத்தை வீளக்கியருளியதும் இங்கு நினைவு கூர்க.

**அணிவு** - அணியாக அணிந்து கொள்ளுதல்.

**ஆளாகும் பதம்** - ஆளாகின்ற உள்ளத் தன்மையின் தகுதி. **பதம்** - பக்குவம் - பரிபாகம். **பதம்** - சொல் என்று கொண்டு வாக்கின் செய்கையைக் குறிப்பதாக உரைப்பாரு முண்டு.

**தணிவில் பெரும்பேறு** - தணிவில்லாமையாவது எக்காலமும் குறைவுபடாமை. **பெரும்பேறு** - பேறினி யிதன்மே லுண்டோ ? என்றபடி இதனிற் பெரியபேறு வேறு இல்லை என்பது.

**தொழில்** - இப்பேற்றினுல் மேற்கொள்ளப்பட்ட செய்தொழில். அப்பேற்றினைப் பெறுதற்குச் சாதனமாய்ச் செய்யுந் தொழில் என்றலுமாம். இப்பொருளில் பேரு கிய காரியத்தை முன்வைத்து அதன் காரணமாகிய தொழிலை அடுத்து வைத்துக் காட் டினர். அப்பேற்றினுக்குப் பயலுவது அன்பர் ஏவல்செய்யும் தொழில் என்றுரைத் தலுமொன்று. " கும்பிட்ட பயன் காண்பார்போல்" (திருஞான - புரா - 1023) என்ற தும், " நேய மலிந்தவர் வேடமும் - .....அரனெனத் தொழுமே " என்ற சிவஞான போதக் (12 சூத்.) கருத்தும் காண்க.

**கழல்சார்ந்த துணிவு** - திருத்தொண்டினுறைப்பாலாகிய துணிபு. "சார்புணர்ந்து" (குறள்) என்றபடி சாரத்தக்க கழலைச் சார்ந்ததனுல் உண்டாகிய துணிவு. " ஒருவர் தமர்காம் அஞ்சுவதி யாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை ", " என் உளமே புகுந்த வதனுல், ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம் பிரண்டு முடனே, ஆசறு நல்ல நல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே ", " இடரினுந் தளரினு மெனதுறு நோய் தொடரினு முனகழ லெழுதெழுவேன் ", " கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினு நற்றுணை யாவது நமச்சி வாயவே ", " சேவடிக் கீழ்ச்சென்றங், கிறுமாந்திருப்பன்கொலோ ", " திருவுமெய்ப் பொருளுஞ் செல்வமு மெனக்குன் சீருடைக் கழல்களென் றெண்ணி, யொருவரை மதியா தூருமை கள் செய்து மூடியு முறைப்பலுய்த் திரிவேன் " என்பனவாதி திருவாக்குக்களா லறியப்படும் துணிவு.

**தொண்டர்க்கே** - ஏகாரம் தேற்றத்தோடு பிரிநிலையுமாம்.

**ஏவல் செயும் தொழில்** - அதுவே தாம் நியதியாகச்செய்யும் செய்தொழிலாக. உடம்பளவில் பயன்விளைத் தொழியும் ஏனைத்தொழில் போலாது, உயிரளவினும் தொடர்ந்து பற்றுதலால் இதுவே தொழிலாம் என்ற கருத்துடன் நியதியாய்ச் செய்யும் தொழிலாக. 8

874. மாறில்பெருஞ் செல்வத்து வளம்பெருக மற்றதெலாம்
ஆறுலவுஞ் சடைக்கற்றை யந்தணர்த மடியாராம்
ஈறில்பெருந் திருவுடையா ருடையாரென் றியாவையுமேர்
கூறுவதன் முன்னவர்தங் குறிப்பறிந்து கோடித்துள்ளார். கூ

(இ - ன்) ஒப்பற்ற பெருஞ்செல்வத்தின் வளங்கள் பெருகவே அவ்வளங்கள் யாவையும், கங்கையாறு உலாவுஞ்சடைமுடியுடைய சிவபெருமானது அடியவர்களா கிய முடிவில்லாத பெருந்திருவுடையவர்களே உடையவர்களாவார் என்று கொண்டு அவையெல்லாவற்றையும் அவர்கள் நோகாகக் கூறு முன்னமே, அவர்களது மனக் குறிப்பை அறிந்து கொடுத்து வந்தார்.

(வி - ரை) மாறு இல் பெருஞ் செல்வத்தின் வளம் - விழுமிய வேளாண்குடிமையால் வந்ததனை மாறுஇல் என்றும், அரசர் சேனாபதிக்குடியான் வந்ததனைப் பெருஞ் என்றும் சிறப்பித்தார். இவ்விருவகையின் வந்த செல்வங்களையுமுடைய ரென்பதாம். " உழுவேதலை " என்றாராதலின் அதனை முதற்கண் வைத்தாமன்றி, மாறுஇல் - என்றும் சிறப்பித்தார். 441-ல் உரைத்தவை பார்க்க. மாறு இல் செல்வம் - பெருஞ் செல்வம் என்று தனித்தனி கூட்டுக. செல்வத்தின் வளம் - சாதியொருமையாதலின் மற்றது எலாம் என ஒருமையிற் கூறினர்.

அடியாராம் ஈறில் பெருந் திருஉடையார் உடையார் என்று - அடியார்கள் இறைவனையே தமது செல்வமாகப் பெற்றவர்கள் என்பது. அடியார்கள் முத்தித்திருவுசித்தற் கிடமாயிருக்கின்றாராதலின் இவ்வாறு கூறினர் என்றும், அக்காரணத்தால் அநித்தியமாகிய பொருள் நித்தியமாகிய பயனைக் கொடுத்து நிலவுதற்கு வைப்பிடமவர்களையாதலின் உடையார் என்றாரென்றும் உரைப்பர் ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள். தமது அழியும் தன்மையுடைய பொருள்போலல்லாது அழிவில்லாததொன்றாதலின் ஈறில் திரு என்றும், எல்லாச்செல்வங்களுக்கும் மேலாய் ஏனை எல்லாவற்றையும் தன்னுள் அடக்குதலின் பெருந்திருவென்றும் கூறினர். "கேடு மாக்கமுங் கெட்ட திருவினர்" (143), "யாதுங் குறைவிலார்" (144) என்றபடி இறைவனுடைய பெருஞ் செல்வமுடையவர் அடியார்களாவார். எல்லாச் செல்வங்களையும் தன்னுள் அடக்கிய பெருஞ் செல்வமாகிய இறைவனையே அவர்கள் உடையவர்களாதலின் தமது செல்வங்களையும் அவர்களே உடையாராயினர் என்றுணர்ந்தொழுகியவர் இக்காயனர். என்று - என்று உட்கொண்டவராதலின் - துணிந்தவராதலின் - என்று - அறிந்து - கொடுத்துள்ளார் என்க.

உடையார் - உடையார் - அதனை உடையவராதலின் இதனையும் உடையரானார். முன்னது பெயர் - பின்னது குறிப்பு வினைமுற்று.

யாவையும் - முற்றும்மை. ஒன்றும் விடாமல். பின் சரிதக்குறிப்பு.

நேர்கூறுவதன் முன் அவர்தங் குறிப்பு அறிந்து - பின் சரிதக்குறிப்பு. 894 - 895 பார்க்க. அறிந்து கொடுத்துள்ளார் என்ற இப்பாட்டால் அவரது நியதியாகப் பூண்டொழுகிய ஒழுக்கம் கூறினர்.

கொடுத்துள்ளார் - கொடுத்ததனால் உளராயினர் என்க. "உளரானார் உளரானார்" (திருநா - புரா - 16) என்புழிப்போலக் காண்க. குறிப்பு அறிந்து செய்தலாற் காரணப்பெயர் பூண்ட திருக்குறிப்புத் தொண்டனார் வரலாற்றை இங்கு நினைவு கூர்க. (திருக்குறிப்பு - புரா - 112)

உடையார் என்று தொண்டர்க்கே ஏவல் செயும் - தொழில் பூண்டு நின்றதனால் அவர்க்கே தம்மையும் தம் சுற்றத்தாரையும் உடைமைகளையும் ஒப்புவித்தார். ஆதலின் எல்லாம் அவர்களுடையனவே என்றெண்ணியமையால் கொடுத்துள்ளார் என்று விளக்கியவாறு.

அங்கணர் தம்—என்பதும் பாடம். 9

875. விரிகடல்சூழ் மண்ணுலகில் விளங்கியவித் தன்மையராம்
பெரியவர்க்கு முன்சிலகாட் பிள்ளைப்பே றின்மையினால்
அரியறியா மலர்க்கழல்க ளறியாமை யறியாதார்
வருமகவு பெறற்பொருட்டு மனத்தருளால் வழுத்தினார். கo

(இ - ள்) வெளிப்படை. விரிந்த கடலாற் சூழப்பட்ட இம்மண்ணுலகத்தில் விளங்கிய இத்தன்மையுடையாராகிய அந்தப் பெரியவருக்கு முன் சிலகாலம் பிள்ளைப்பேறு இல்லாதிருந்ததனாலே, திருமாலும் அறியாத மலர்ப்பாதங்களை அறியாமையை அறி

யாதாராகிய அவர் வரும் பிள்ளை பெறுதற்பொருட்டுத் திருவருட்பிரேரணையால் மனத் தாற் றுதித்தனர்.

(வி - ரை) உலகில் விளங்கிய இத்தன்மை யாவது அப்பதியிற் குலப்பதியாய் அரசர் சேனாபதிக்குடியில் பெருஞ்செல்வத்தின் விளங்கிய இவர் தொண்டர்க்கே எவல் செய்யும் தொழில்பூண்டு அவர்க்கு யாவையும் கொடுத்துள்ள தன்மை. இவர் செய்த இத்தொழிலும் கொடையும் உலகில் எங்கும் விளங்கின என்பதாம். இவை இவ்வாறு **மண்ணுலகின் விளங்கினவா**யின் பின்னர் இறைவன் " இத்தச் செழும்புவ னங்களில் ஏறச்செய்தோம் " (897) என்றதென்னை ? யெனின், இத்தொழிற்கும் கொடைக்கும் மூட்டுப்பாடு வருமிடத்தும் சோர்வுபடாமைக்குக் காரணமாய் உண் ணின்ற அவரது பரிவினை உலகாறியாராதலின் அதனை அறிவிக்கும் வழியாலே இறை வர் செய்த செயல் அது என்றறிக.

**உலகை விளக்கிய** என்பது பாடமாயின், **விளக்கிய** என்பதனைச் செய்யிய என் னும் வாய்பாட்டு வினையெச்சமாகக் கொண்டு விளக்கும் பொருட்டு என்க. உலகை விளக்கும் பொருட்டு என்றபடி. விளக்குவார் இறைவராதலின் இவ் வினையெச்சம் தன்மையர் ஆம் என்ற பிறவினைமுதல் வினைகொண்டது. உலகம் விளக்கம் பெறுதல் அன்பின்றிறம் தெரிந்து உய்தி பெறுதலாம்.

**பெரியவர்** - செயற்கரும் செய்கை செய்யும் தன்மையாற் **பெரியவர்** என்றார். " செயற்கரிய செய்வார் பெரியர் " (குறள்). இப்புராணத்தை முடித்துக் காட்டு மிடத்து " ஒருமகள் கூத்த ரன்னை வதுவைசா லொருவர்க் கீந்த, பெருமையார் " (992) என்று ஆசிரியர் இக்கருத்தினையே எடுத்துக்காட்டுதல் காண்க.

**முன் சில நாள்** - அவரது வாழ்க்கைத்தொடக்கத்தில் சிலகாலம். **முன்** - முதலில்.

**பிள்ளைப்பேறு** - மகப்பேறு. மக்கட்பேறு என்று திருவள்ளுவர் வகுத்ததும் காண்க. **பேறு** - பெறு என்ற பகுதி முதனீண்டு வந்த தொழிற்பெயர். பெறுந் தன்மைமட்டிற் குறித்து நின்றது.

**வரும்மகவு...வழுத்தினார்** - **வரும் மகவு** - மனை வாழ்க்கையில் இன்பம் வருதற் கேதுவாகிய மகவு. " மற்றதன் நன்கலன் நன்மக்கட் பேறு " (குறள்), " மனையகத்தி லின்பமுறு மகப்பெறுவான் விரும்புவார்" (திருஞான - புரா - 19), "மகவி லாமையின் மங்கிமனை வாழ்க்கையின் மருண்டு " முதலியவை காண்க. **வரும்** - பிழைக்கு நெறி தமக்குதவி இச்சரித நிகழ்ச்சிக்குக் காரணமாய் வரும் என்ற குறிப்பும் காண்க. இச் சரிதத்துக்கு மட்டுமே யன்றி வையாகோனார் சரித நிகழ்ச்சிக்கும் பேராதாவாய் **வரும்** என்ற குறிப்புமாம். தென்புலத்தார் கடனிறுத்திற் கேதுவாக **வரும்** என்றுரைப்பாரு முண்டு.

**பேறு**-"ஆளாகும் தனிவில்பெரும் பேறுடைய" (873) நாயனார், அதனின்வேறாய் அதனினும் மேலாய்ப் பிள்ளைப்பேற்றைக் கருதி விரும்பினாரல்லர் என்க. ஆயின் மகவு பெறற் பொருட்டு வழுத்தினார் என்ற தென்னை ? எனின், அவ்விருப்பம் தம் மிச்சையாலன்றித் திருவருட் பிரேரணையினாற் கூடிற்று என்பார் **அநளால்** என்றும், சரித நிகழ்ச்சியின் பொருட்டு வருவதென்பார் **வரும்** என்றும் கூறினார்.

**அரி அறியா...அறியாதார்** - கழல்களை அரி அறியார் ; இந் நாயனார் அவற்றை அறியாமையை அறியார் என்ற நயம் காண்க. **அறியாமை அறியாதார்** - இரண் டெதிர்மறைகள் உறுதிபெற்ற ஒரு உடன்பாடு குறித்தன. இங்ஙனம் வலியுறுத்தி தலின் சிறப்பினை " அல்லதில்லை என்று எதிர்மறை முகத்தாற் கூறியது எனைக் கடவுள ரின் உளதாகாமை யாப்புறுத்தற் பொருட்டு " (சிவஞானபோதம் 1. 2.) எனவும், " இன்றியமையாமை யுணர்த்துவார் தோன்றானே லாராதிவார் என எதிர்மறை முகத் தாற் கூறினார்" (சூசி 2.) எனவும் உரைத்தவற்றுட் காண்க. எப்போதும் மறவாது அறிந்து அவ்வுணர்ச்சியில் உறைத்து நின்றவர் என்றபடி. **கழல்களையே அறிந்து**

நின்றவராதலின் மகவுபெற வழித்தியதும் அருளாலே கூடிற்று என்பதாம். யானென தென்பவை யற்றவிடமாகிய திருவடிகளே யானெனதென்பன வுடைமையால் அரி அறியாராயினர் என்க.

அருளால் மனத்து வழுத்தினர் என்க. மனத்தில் நினைத்துத் துதித்தனர். **வழுத்தினர்** என்றதற்கு அக்கழல்களே எனச் செயப்படுபொருள் வருவிக்க. 10

876. குழைக்கலையும் வடிகாதிற் கூத்தனு ரருளாலே
மழைக்குதவும் பெருங்கற்பின் மனைக்கிழத்தி யார்தம்பா
லிழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த விப்பிறவிக் கோடுஞ்சூழல்
பிழைக்குநெறி தமக்குதவப் பெண்கோடியைப் பெற்றெடுத்தார். ககஉ

(இ - ள்) வெளிப்படை. குழையைத் தாங்கி அசைகின்ற வடிந்த காதினையுடைய கூத்தப் பெருமானது திருவருளினாலே, மழைக்கு உதவி செய்யும் பெருங்கற்பினையுடைய மனைக்கிழத்தியாரிடமாகச், செய்வினைப்பயன்களாற் சூழப்பட்ட இப்பிறவியாகிய கொடுஞ் சூழலினின்றும் பிழைக்கும் வழியைத் தமக்கு உதவக் கொடிபோன்ற பெண்மகவினைப் பெற்றெடுத்தார் (காயனார்).

(வி - ரை) **குழை** - மகரம் போன்ற வடிவுடையதாய்ச் சங்கினால் இயன்றது. இதனை இறைவர் வலது காதில் அணிவர் என்பது மரபு. "சங்கக் குழையார் செவியா" (தேவாரம்). காதுவடிந்து தொங்குவதனாலும், அதனில் குழையிருப்பதனாலும், இறைவர் கூத்தாடும் போது காது அசைந்தாடுகின்றது என்பார் **குழைக்கலையும் வடிகாதிற் கூத்தனார்** என்றார். குழைக்கு - குழையினால். உருபுமயக்கம்.

**மழைக்குதவும்** - மழையை உதவும்; பெய்விக்கும். கான்கனாருபு இரண்டாம் வேற்றுமைச் செயப்படு பொருளில் வந்தது. உருபு மயக்கம். "பெய்யெனப் பெய்யும் மழை" (குறள்). உலகுக்கு உதவியாகும் சிறப்பை மழைக்குத் தருகின்ற என்றுரைத்தலுமாம். காயனையே தெய்வமாகக் கொண்டு வழிபடும் கற்புடையார் என்று குறிக்க **மழைக்குதவும் பெருங் கற்பு** என்றார்.

**மனைக்கிழத்தியார் தம்பால் பெண் கோடியைப் பெற்றெடுத்தார்** என்று கூட்டுக. காயனார் என்னும் எழுவாய் வருவிக்க. **மனைக்கிழத்தியார்** - மனைவியார். **மனை** - மனையறத்துக்கு; **கிழத்தியார்** - உரிமையுடையவர்.

**இழைக்கும் வினை...பிழைக்கு நெறி** - இழைக்கும் **வினை** - ஆன்மாக்களால் ஈட்டப்படும் கன்மங்கள். 803-ல் உரைத்தவை பார்க்க. **வினைப்பயன் சூழ்ந்த இப்பிறவி** - இருவினைப் பயன்களாகிய இன்ப துன்பங்களாற் சூழப்பட்ட இப்பிறவியாகிய **கொடிய சுழற்சி**. * **அவ்வவர் செய்யும் வினைகளுக்கு** ஏற்றவாறு மேற்பிறவி வருமென்பது நூற்றுணிபாம்.

---

* "இவ்வினை யீட்டப்படுங்கால், மந்திர முதலிய அத்துவாக்களிடமாக **மனம் வாக்குக் காயம்** என்னு மூன்று னீட்டப்பட்டுத், தூல கன்மமாய் ஆகாமியமெனப் பெயர் பெற்றுப், பின்னர்ப் பக்குவப்படுங்காலுஞ் சூக்குமகன்மமாய்ப் புத்திதத்துவம் பற்றுக்கோடாக மாயையிற்கிடந்து, சாதி ஆயுப் போகமென்னு மூன்றற்கு மேதுவாய், முறையே சனகந் தாரகம் போக்கிய மென்னு மூவகைத்தாய், அபூருவம் சஞ்சிதம் புண்ணிய பாவமென்னும் பரியாயப்பெயர் பெற்றுப், **பின்னர்ப் பயன் படுங்கால்** ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் ஆதிபௌதிகம் என்னு மூத்திறத்தாற் பலதிறப்பட்டுப், பிரார்த்தமெனப் பெயர்பெறும். ஆதிபௌதிகமாவது சடம் வாயிலாக வருவது ஆத்தியான்மிகமாவது சடத்தோடு கூடிய சேதனம் வாயிலாக வருவது. ஆதிதைவிக மாவது ஒரு வாயிலான்றித் தெய்வந் தானே காரணமாக வருவது" என்றிவ்வாறு சிவஞான போதச் சிற்றுரை (2 - சூத்)யில் உரைக்கப் பட்டவை காண்க.

திருமலைச் சிறப்பிற் கூறிய கிழச்சிகளும் பிறவும் காண்க. "முன்புசெய் தவத்தி னீட்டம்" (751), "உன் னுடன்பிறந்தான், முன்னமே முனியாகி யெனையடை யத் தவமுயன்றான்" (திருஞா - புரா - 48), "சிலந்தி வேந்துமகிழ், அக்கமல வதி வயிற்றி னணிமகவாய் வந்தடைய" (8), "ஆதி மூர்த்தி யருளான்முன் னறிந்து பிறந்து மண்ணுள்வான்" (12) (கோச் - புரா) முதலாயினவும், பிறவும் பார்க்க. வினைப்பயனுற் சூழப்பட்ட இப்பிறவி, மயக்கம் செய்து, மேன்மேலும் "வினைபெருக்கி" எண்ணில்லாத பிறவிகளுக்கு ஏதுவாகி, வெளியேறும் வழியறியாது மயங்கிப் பிறவிக்காட்டினுளழுந்து தலின் **பிறவிக் கொடுஞ் சூழல்** என்றார். சூழல்-வெயில்புகாத அடர்ந்த காடு. "ஏழி சைச் சூழல்புக்கோ" **திருக்கோவை.** சூழலினின்றும் என ஐந்தனுருபு விரிக்க.

**பிழைக்கு நெறி** - பிறவிச்சூழலுள் அகப்படாது தப்பிப் பிழைக்கும் வழி. இது சிவநெறியேயா மென்பது. பிழைப்பிக்கும் எனப் பிறவினையாக வாற்பாலது **பிழைக்கும்** என நின்றது.

**தமக்கு உதவ** - நாயனார் பிள்ளைப்பேற்றையே விரும்பிக் கழல் வழுத்தினு ரேனும், அவர் சடைமுடியார்க் காளாகும் பதம் பெற்ற **பேறும்,** தொண்டர்க்கே ஏவல் செய்யும் **தொழிலும்** உடையாராதலின் அத்தவங் காரணமாக, அப்பிள்ளைப்பேறு தானே அவரை வினைப்பயன் சூழ்ந்த கொடுஞ் சூழலாகிய "இப்பிறவி யாட்கொண் டினிப் பிறவா மேகாத்து, மெய்ப்பொருட்கட் டோற்றமாய் மெய்யே நிலைபேறு"க் கொண்ட சிவநெறியினைக் கூட்டுவிப்பதாய் வந்தது என்க. இதனையே **பிழைக்கு நெறி** என்றார்.

**பிழைக்கு நெறி தமக்கு உதவ** - இம்மகவின் கூந்தலே மணாளில் அரிந்து ஒருவர்க்கீவதற்குக் காரணமாய் நின்றதனாலும், எயர்கோனாது புண்ணிய சரித விளைவிற்கும் காரணமாய் நின்றதனாலும் **பெண்கொடி பிழைக்கு நெறி உதவ** என்றார். கூந்தலரிந்து மீட்டியமையால் இவர் பெற்ற பேறு 898ல் கூறுகின்றார். ஒரு பெண்ணை ஒரு நற்குடியில் ஈந்து அக்குடி தழைக்கச் செய்தலால் பெண் பெற்றோர் நற்கதியடைவர் என்பது அறநூல் விதி. "எம்முடைய குலக்கொழுந்தை யாமுய்யத் தருகின்றோம்" (திருஞான - புரா - 1068) என நம்பாண்டார் நம்பி கூறியதனை இங்கு நினைவு கூர்க.

**பிழைக்கு நெறி தமக்கு உதவப் பெண் கொடியைப் பெற்று** என்ற இதனால் பெண்பிறவி இழிந்ததெனக் கருதும் பிற்காலப் புலவர் கருத்து மறுக்கப் பட்டதாக இங்கு விசேட ஆராய்ச்சியுரை காண்பாருமுண்டு. பெண்பிறவி இழிபுடைத்து என்ற தொரு கொள்கை பிற்காலப் புலவர்கள் கொண்டனர் என்பதும் சரியன்று. உலகம் ஐந்து இந்திரிய வயமயங்கி வீழாமைப் பொருட்டுப் பெண்ணைசையை முதன்மை பெற வைத்து விலக்கிக் கூறுவது பண்டைக்கால முதல் நீதி நூல்கள் ஓதிய வகையில் மக்கள் கொண்ட **உலக அறநூல்** விதியாம். அதுபோலவே பெற்றுரை நரகத்திலிருந்து தூக்குவது ஆண்மகப்பேறு என்பதும் **மிதிநூல் வழக்கீல்** ஒன்று. இவையிரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத வெவ்வேறு வழக்குக்கள்.

ஆனால் இங்குக் குறித்த **பிழைக்கு நெறி உதவும்** செய்திக்கும் இவற்றுக்கும் எவ் விதப் பொருத்தமுமில்லை. உண்மை ஞான நூல்களாகிய முத்திநூல்களுள் ஆண்பெண் இருபாலாரும் ஒன்று போலவே வினைவயத்தராகிய உயிர்ப்பகுப்பில் வைத்துக் கருதப் படுவர். இங்குப் **பிழைக்கு நெறி** என்றது பிறவிச் சூழலுக்குக் காரணமாம் வினைகளை அறுத்தற்கு ஏதுவாகிய சிவநெறிச் சாதனங் குறித்ததேயன்றி, உலகச் சார்புகளாகிய ஆண் பெண் தொடர்ச்சியையேனும், சுவர்க்க நரகங்களையேனும் பற்றியதன்று. உலகம் பற்றிய தொடர்ச்சிக் கொள்கைகளை உலகிறந்த சிவநெறிச்சார்பு பற்றிய இப்புராண வாலாறுகளுட் புகுத்தி யிடர்ப்படுதல் முறையன்றும்.

**பேற்றெடுத்தார்** என்றதற்கு நாயனார் என எழுவாய் வருவிக்க.

877. பிறந்தபெரு மகிழ்ச்சியினாற் பெருமூதூர் களிசிறப்பச்
சிறந்தநிறை மங்கலதூ ரியமுழங்கத் தேவர்பிரான்
அறந்தலைநின் றவர்க்கெல்லா மளவில்வளத் தருள்பெருக்கிப்
புறந்தருவார் போற்றிசைப்பப் பொற்கொடியை வளர்க்கின்றார். ௧௨

(இ - ள்) வெளிப்படை. (பெண் கொடி) பிறந்த பெரு மகிழ்வினாலே பெரிய அந்தப் பழவூர் களிப்பில் மிகவும் சிறக்கச், சிறப்பையும் இசைகளின் நிறைவையுமுடைய மங்கல வாத்தியங்கள் முழங்கச், சிவதருமங்களில் தலைநின்ற அடியார்களுக்கெல்லாம் அளவில்லாத வளமாகிய கொடைகளைப் பெருகச் செய்து, (குழவியைப்) பாதுகாவல் செய்யும் தாதியர்கள் வாழ்த்திசைப்பப் பொற்கொடி போன்ற அக்குழவியை வளர்ப்பாராயினர் (நாயனார்).

(வி - ரை) **பிறந்த** என்றதற்குப் பெண் கொடி என்ற எழுவாயும், **புறந்தருவார்** - என்றதற்குக் குழவியை என்ற செயப்படுபொருளும், **வளர்க்கின்றார்** என்றதற்கு நாயனார் என்ற எழுவாயும் வருவித்துரைத்துக் கொள்க.

**ஊர்** - ஊரிலுள்ளார். ஆகுபெயர். **தேவர் பிரான் அறம்** - சிவதருமம். சரியை முதலாகிய திருத்தொண்டு. **தலைநின்ற** - அவ்வறவொழுக்கத்திற் சிறக்க ஒழுகிநின்ற. தொண்டர்க்கே யேவல் செயும் தொழில் பூண்டு (873), அவர்களே தம்மையுடையவராவர் என்று யாவையும் கொடுத்து (874) வந்த நியதியுடன் வாழ்ந்தவராதலின் நாயனார் அரன்கழலே வழுத்திப் பெற்ற இக்குழந்தை பிறந்த மகிழ்விற் செய்யும் அளவில்லாத பெரிய கொடைகளையும் **தொண்டர்க்கே** பெருக்கச் செய்தனர் என்க. இவையே சிவபுண்ணியமாகி முத்திநெறியிற் செலுத்தவல்லன என்பதும், ஏனையோர்க்குச் செய்யும் கொடைகள் பசுபுண்ணியங்களாயொழிந்து சுவர்க்க முதலிய போகங்களைத் தந்து மீளப்பிறவியிற் செலுத்துவன என்பதும் உண்மைநூற் றுணிபாகலின், மெய்ப்பொருளை அறிந்துணர்ந்து ஒழுகிய நாயனார் இவ்வாறு செய்தனர் என்க. உலகை ஆட்கொண்டு வழிகாட்டவந்த உத்தமர்களாகிய எந்தம் பெருமக்களில் ஒருவராகிய நாயனார் ஒழுகிக்காட்டிய இந்நெறியினை மக்கள் கடைப்பிடித்து ஒழுகின் நலம் பெறுவர்.

**அளவில்வளத்து அருள்பெருக்கி** - **அருள்பெருக்கி** - அன்போடு செய்யும்கொடைகளைப் பெருகச் செய்து. **வளத்துஅருள்** - வளங்களைத்தரும் கொடை குறித்து நின்றது. **அருள்** - அருளாற் செய்யும் கொடைப்பொருளுக் காயிற்று. **பெருக்கி** - சிவநெறித் தலைநின்றவர்க்குப் பெருக்கினார் என்றதனால், ஏனை உலகர்க்கு அவ்வவர்க்கு ஏற்றவாறு அளவுபடக் கொடுத்து மகிழ்வித்தார் என்றும் உணரவைத்தது காண்க. இதனைப் **பெருமூதூர் களிசிறக்க** என முன்னர்க் குறிப்பாலுணர்த்தியதும் காண்க. வெளிப்படச் சிறக்க வேண்டுவன சிவநெறிக் கொடை என்பதும், ஏனையவெல்லாம் அதன் முன் மறைந்து நிற்கத்தக்கன என்பதும் உணரவைத்ததும் காண்க. **தேவர் பிரான் அறம் தலை நின்றவர்** என்றதற்குச் சிவபிரானருளிய வேதசிவாகமங்களில் விதித்த அறத்தின் வழி நிற்கும் உலகநிலையினர்க்கு என்றுரைப்பாருமுண்டு.

**புறந்தருவார்** - தாதியர். "போற்றிய தாதியார்" (879) என்றது காண்க. ஐவகைத்தாயர் என்பாருமுண்டு. **புறந்தருதல்** - காப்பாற்றுதல். **புறந்தருவார் போற்றிசைப்ப** என்றதற்குத் தம்மைச் சூழ்ந்திருக்கும் சுற்றத்தார் தம்மைப் புகழ்ந்து கொண்டாட என் றுரைகூறுவாருளர்.

**பொற்கொடி**-பொன்னாலாகிய கொடிபோன்ற பெண்மகவு. உவமை ஆகுபெயர். 12

878. காப்பணியு மிளங்குழவிப் பதநீங்கிக் கமழ்சுரும்பின்
பூப்பயிலுஞ் சுருட்குழலும் பொலங்குழையு முடன்றாழ

யாப்புறுமென் சிறுமணிமே கலையணிசிற் றுடையுடன்
கோப்பமைகிண் கிணியசையக் குறுந்தளிர்மெல் லடியொதுங்கி, கஙு

*879. புனைமலர்மென் கரங்களினுற் போற்றியதா தியர்நடுவண்
மனையகத்து மணிமுன்றின் மணற்சிற்றி லிழைத்துமணிக்
கனைகுரலூ புரமலையக் கழன்முதலாப் பயின்றுமுலை
நனைமுகஞ்செய் முதற்பருவ நண்ணினளப் பெண்ணமுதம். கசு

878. (இ - ள்) காப்பு அணியும்...தீங்கி - காப்பினை அணிகின்ற இளங்குழவிப் பருவத்தைக்கடந்து ; கமழ்...தாழ - வண்டுகள் மொய்க்கின்ற மணமுடைய பூக்களை முடிக்கும் சுருண்ட கூந்தலும் பொன்னலியன்ற குண்டலமும் ஒருங்கு வடிந்து தாழ ; யாப்புறு...அசைய - கட்டிய மெல்லிய சிறிய மணிகளையுடைய மேகலை யணிந்த சிற்றுடையுடனே, கோக்கப்பட்ட கிங்கிணி அசைய ; குறுந்தளிர்...ஒதுங்கி - சிறிய தளிர்போன்ற மெல்லிய அடிகளினால் ஒதுங்கி நடந்து ; கஙு

879. (இ - ள்) அப்பெண் அமுதமாகிய அந்தப் பெண் ; போற்றிய தாதியர் நடுவண் - தம்மைப் பாதுகாக்கும் தாதியர்கள் சூழ அவர்களுக்கிடையில் ; மனை யகத்து மணிமுன்றில் - மனையினுள் அழகிய முற்றத்தில் ; புனைமலர் மென் கரங்களி னால் - புனைந்த மலர்போன்ற மெல்லிய கைகளினால்; மணற்சிற்றில் இழைத்தும் - மண லினாற் சிறு வீடு கட்டியும் ; மணி...பயின்றும் - பரல் மணிகள் ஒலிக்கும் பாதச் சிலம்பு கள் அசைந் தோசைசெய்யும்படி கழல் ஆடுதல் முதலாகிய விளையாடல்களைப் பயின் றும் ; முலை...நண்ணினள் - முலைகள் அரும்புபோலத் தோன்றும் பேதைப் பரு வத்தை அடைந்தனள். கசு

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

878. (வி - ரை) **காப்பு அணியும் இளம் குழவிப் பதம்** - பதம் - பருவம். 279 - 667 பாட்டுக்களில் உரைத்தவை பார்க்க. இப்பருவம் இரண்டாம் மாதத்திறுதியில் நிகழ் வது என்ப. பிணி முதலாயின பீடைகள் வரும் மூன்று வகைகளுள் ஆதிபௌதிகம், ஆத்தியாண்மிகம் என்ற இரண்டு வகையாலும் வருவனவற்றை வாராது தம்மறிவுகொண் டும் பெரியாரைத் துணைக்கொண்டும் தாங்கள் காத்து நிற்க, ஆதி தெய்விகத்தான் வரும் ஏதங்கள் வாராது காக்க அத்தெய்வங்களைத் துதித்துக் காப்பணிவது மரபு. இதுபற் றியே பிள்ளைத்தமிழ் நூல்களுட் காப்புப்பருவம் முதலிற் கூறுவதும் மரபாயிற்று.

**சுரும்பின் கமழ்பூப் பயிலும்** எனமாற்றுக. **சுருட்குழல்** - சுருண்ட கூந்தல். சுருண்டிருத்தல் குழலுக்கு அழகு தருவதென்ப. அறவியல் நறுமென் கூந்தல் என்று அணிந்து பலவாறு பாராட்டப்படுவது காண்க. இங்குப் பருவ நோக்கி, முடிந்தறியப் படாது சுருண்டு தொங்கும் குழல் குறித்தது. **பூப்பயிலும்** என்றதற்கு இனிப் பூ முடிக்கும் என்றுவது, பருவத்துக் கேற்றவாறு சிறு பூக்களைச்சூடிய என்றுவது உரைத்துக் கொள்க. பூ மணம் போன்ற இயற்கைமணங் கமழும் என்றுரைப்பினுமமை யும். இங்கு இப்பருவத்தே இவ்வாறு குழலைச் சிறப்பித்துக்கூறியது இக்குழல் பற் றியே இச்சரிதம் நிகழும் குறிப்புக் காட்டுவது என்க.

**குழலும் குழையும் உடன்தாழ** என்றது குழலை முடிந்தறியாராதலின் அக் குழலும் காதில் அணிந்த வடிந்த குழையும் ஒன்றுகூடித் தொங்கி விளங்கின என்பதாம். **பொலம் குழை** - பொன்னலாகிய குழை என்னும் காதணி. இது மகர வடிவினதாய்ச் செய்யப்படும். இங்கு **மேகலை சிறிய மெல்லிய மணிகளாற் கோக்கப்பட்ட எண் கோவை குறித்த தென்பர். சிற்றுடை** - இளம் பெண்குழவிகள் அணியும் சிறியஆடை. **சிற்றுடையுடன் கிண்கிணி அசைதலாவது** - அடியொதுங்கும் தோறும் சிறிய ஆடையும்

கிண்கிணியும் உடனசைதல். **கிண்கிணி** - ஒலியாற் போந்த பெயர். காலணிவகையுள் ஒன்று. கால் பெயர்க்கும் காலத்தெல்லாம் இவை கிண் கிண் என்று ஓசை செய்வதால் இப்பெயர் பெறும். **கோப்பு** - கட்டப்பட்ட வேலைப்பாடு.

**அடி ஒதுங்குதல்** - தளர் நடை நீங்கிச் சிறிதே அடிபெயர்த்து நடத்தல். இது ஓராண்டின் மேல் ஈராண்டளவில் நிகழும் என்ப. தளர்நடைப்பருவம் என்றுங் கூறுவர். 13

879. (வி - ரை) **காங்களினுல் இழைத்து** எனக் கூட்டுக. **போற்றுதல் காப் பாற்றுதல்** - **புறந்தருவார்** (877) என்றதுங் காண்க. **மணற்சிற்றில் இழைத்தும்** என்ற தனுல் சிற்றிலிழைக்கும் வயது நிரம்பிவரும் அளவின் வளர்ச்சி குறிக்கப்பட்டது. இது ஈராண்டின் மேல் மூவாண்டுவரை நிகழ்வதாமென்ப.

**மணி கனைதரல் நூபுரம்** - உள்ளே பரலாக மணிகளை இட்டு வைத்தமையால் அவை சத்தித்தற் கிடமாகிய சிலம்புகள்.

**நூபுரம் அலையக் கழன் முதலாப் பயின்று** - கழங்கு முதலிய ஆடல்கள் பயிலும் பருவமாதலின் அவற்றைப் பயிலும்போது பல இடமும் அடிபெயர்த்து வர வேண்டு தலின் **நூபுரங்கள் அலையப் பயின்று** என்றார்.

**கழல் முதலாப் பயின்று** - கழங்கு முதலாக உள்ள ஆடல்களைப் பயின்று. **முதலா-அம்மானை** - பந்து முதலாயின. " தருந்தடக்கை முத்தழலோர் மனைகடொறு மிறை வனது தன்மை பாடிக், கருந்தடங்கண் ணுர்கழல்பந் தம்மானைப் பாட்டயருங் கழு மலமே" என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரங்காண்க. இப்பருவம் ஐந்து வயதளவில் உள்ள தென்ப.

**முலை நனைமுகஞ்செய் முதற்பருவம்** - முலைகள் தோன்றத் தொடங்கி அரும்பும் பேதைப் பருவம். **நனைமுகம் செய்தல்** என்பது பூவிற்கு அரும்புபோல முன் காட்டத் தொடங்குதல். ஒளிநுசுப்பை முலைவருத்த (880) என முலைகள் பெருத்த நிலையைப் பின்னர்க் கூறுவதனுல் இங்கு அவை அரும்பும் பேதைப் பருவம் முற்றுகின்ற நிலை குறித்தது. " கதிர் முலைகள் எவ்வகோய் செய்யும் தொழில்பூணுள் - காமனுல் நற் கணைக்கின் மேற்சிறிதே காட்செய்தாள் " என்று ஞானவுலாவினுட் சேரமான் பெருமாணயனார் இப்பருவத்தைப் பற்றி அருளியவை பார்க்க. **முதற்பருவம்** - பருவ மேழனுள் முதலாவதாக வைத் தெண்ணப்படும் பேதைப்பருவம். இப்பருவம் எழு வயது அளவில் நிகழ்வது. இவ்வாறன்றி இதனை மறுத்து **முதற் பருவம்** என்றதற்கு ஒப்பற்ற பருவம் என்று பொருள் கூறுவர் மகாலிங்கையர். அதன் பொருத்தம் ஆராயத் தக்கது.

**பெண் அமுதம்** - அமுதம் சாதலை நீக்கி மீள உயிர்ப்பிக்கும் தன்மையுடையது. இப் பெண்மணியாரின் அரியப்பட்ட குழல் முன்போலப் புனைந்து மீள வளதாயிற்று என்பது சரிதம். இனி இவரது கணவனுராகும் எயர்கோனும் போக்கிய உயிரை மீளப் பெறுகின்றார். இவரால் தந்தையாராகிய மானக்கஞ்சாறநாயனர் " பிழைக்கு நெறி உதவப் " பெற்று இறவாத - சாவாத - மீளாநெறியினை அடைந்தனர். இவற்றையெல்லாம் உள்ளடக்கி இங்கு இறவாமை தரும் இறைவனுக்குரிய அமுத பதத்தால் உருவகமாக்கி உரைத்தனர். 14

880. உறுகவின்மெய்ப் புறம்பொலிய ஒளிநுசுப்பை முலைவருத்த
முறுவல்புற மகலாத முகிண்முத்த நகையென்னும்
நறுமுகைமென் கொடிமருங்கு னளிர்ச்சுருளந் தளிர்ச்செங்கை
மறுவில்குலக் கொழுந்தினுக்கு மணப்பருவம் வந்தணைய, கஞ

881. திருமகட்குத் மேல்விளங்குஞ் செம்மணியின் றீபமெனு
மொருமகளை மண்ணுலகி லோங்குகுல மாபினாய்க்

கருமிடற்று மறையவனூர் தமராய கழலேயர்
பெருமகற்கு மகட்பேச வந்தணைந்தார் பெருமுதியோர். ககசு

880. (இ - ள்) உறு...பொலிய - பொருந்தும் அழகு திருமேனியின் வெளியில் விளங்க; ஒளி...வருத்த - மின்போலும் இடையைப் பெருத்த தனங்கள் வருத்தம் செய்ய; முறுவல்...கறுமுகை-இளஞ்சிரிப்புப் புறத்தே வெளிப்படாதனவும் முகிழ்த்த முத்தினைப் போன்றனவும் ஆகிய பற்களாகிய நறிய அரும்பினையும்; மென்கொடி மருங்குல் - மெல்லிய கொடிபோன்ற இடையினையும்; களிர்ச் சுருள் - குளிர்ந்த சுருண்ட கூந்தலினையும்; அம்தளிர்ச் செங்கை - அழகிய தளிர் போன்ற சிவந்த கையினையும் உடைய; மறுவில்...அணைய - குற்றமில்லாத குலத்தின் எழுந்த கொழுந்துபோன்ற அப்பெண்ணுக்கு மணஞ்செய் பருவம் வந்து பொருந்த, கஙு

881. (இ - ள்) வெளிப்படை. திருமகளுக்கு மேலாக விளங்குகின்ற செம்மணியின் விளக்குப் போன்ற ஒப்பற்ற அந்தப் பெண்மணியாரை, இவ்வுலகில் ஓங்கும் வேளாண் குலத்தில் ஒத்த மாபில் வந்தவராய்த், திருநீலகண்டத்தையுடைய வேதிய ராம் சிவபெருமானுக்கு அன்பராகிய வீரக்கழல் அணிந்த ஏயர்கோன்கலிக்காமனுருக்கு மணம் பேசுவதற்குப் பெருமுதியோர்கள் வந்து சேர்ந்தனர். ககசு

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

880. (வி - ரை) **உறுகவின்** - மிகப் பொருந்தத்தக்க பெண்மை நலன். மேலே சொல்லியவாற்றால் வளர்ந்து பொருந்தும் என்றலுமாம். **மெய்ப்புறம் போலிய** - உடம்பின் புறத் தோற்றத்தில் விளங்க. அக விளக்கமாகிய மேன்மையை வரும் பாட்டிற் கூறுகின்றாராதலின் அதனைக்குறிக்க இங்குப் **புறம்போலிய** என்றார்.

**ஒளிநுசுப்பை முலை வருத்த - நுசுப்பு** - இடை. மின்போலும் இடை என உவமை கூறப்படுதலால் **ஒளிநுசுப்பு** என்றார். முலைகளின் பெருமையும் இடையின் சிறுமையும் ஒருங்கு தேற்றம் பெற்று விளங்கும் மங்கைப்பருவமாதலால் இங்கு அவ் விரண்டினையும் சேர்த்து முதலில் வைத்துக் கூறினர். பருவத்துக்கேற்றபடி முலையின் சிறப்புக் கூறியபடி. பெண்மை நலன்களின் பிற கூறுகளை எல்லாம் ஒருசேரப் பின் வைத்துக் கூறுதலும், முலைகளின் செயலைத் தனியாகப் பிரித்து முன்வைத்துக் கூறுதலும் இதுபற்றியேயாம். அன்றியும், ஒளி நுசுப்பு, முத்த நகை, கொடி மருங்குல், களிர்ச்சுருள், தளிர்ச்செங்கை என்று பிற உறுப்புக்களுக்கெல்லாம் உரிய ஒவ்வோர் அடைமொழி தந்து சிறப்பித்தோதிய ஆசிரியர், முலைக்கு அடைமொழியில்லாது வாளா கூறியதும், பெண்மை நலன்களுள் அதன் தனிச்சிறப்பியல்பு குறிப்பதாம் என்க. "மகளிர்க்கு உறுப்புட் சிறந்தவுறுப்பாகிய முலைக் குவமையாகப் புணர்க்கப்பட்ட கோங்கிற்கு அடை கொடுக்கக் கடவதன்றே வெனின், அடைகொடுப்பிற் பிறவுறுப்புக்களுடன் இதனையு மொப்பித்ததாம். ஆதலான் இதற்கடைகோடாமையே முலைக் கேற்றத்தை விளக்கிநின்றது. அஃது முற்கூறியவகையில் திருக்கோயில், திருவாயில், திருவலகு என்றவற்றிற்கு நாயகராகிய நாயனாரைத் திருநாயனார் என்றதுபோல வெனக் கொள்க" என்று "திருவளர்தாமரை" என்ற திருக்கோவையாரின் கீழ்ப் பேராசிரியர் உரைத்தவாற்றா லறிக.

**முறுவல் புறமகலாத நகை - முகிழ்முத்தநகை** என்று கூட்டுக. **புறம்அகலாத முறுவல்** - வாயினைவிட்டு வெளித் தோன்றாது உள்ளடங்கிய புன்னகை. **நகை** - பல். **முகிழ்முத்தநகை** - கதிர்முகிழ்த்த முத்துப் போன்ற பல். **நகை - மருங்குல் - சுருள் - கை** என்பன அத்தந்த அடைமொழிகளால் பருவத்துக் கேற்றபடி தத்தம் அழகு நிரம்பிய தன்மை குறித்தன. எண்ணும்மைகள் தொக்கன. இவற்றை உடைய கொழுந்து என்க. முகைபோன்ற பல்லினை **முகை** என்றார்.

**மணப்பருவம்**-பனிரண்டாண்டு நிரம்பும்பருவம். மங்கைப்பருவம் என்பர். இதுவே மணஞ்செய் பருவ மென்பது முந்து நூல்களுட்கண்ட முறை. இதுபோலவே ஆண் மக்களுக்கும் மணப்பருவம் 16வது வயதிற் பேசப்படும். 152 பார்க்க.

**குலக்கொழுந்து** - குலமாகிய கொடியின் உச்சியில் விளங்கும் மேன்மையும், வயதின் இளமையும்பற்றிக் **கொழுந்து** என்றார். **கொழுந்தினுக்கு மணப்பருவம்** - கொழுந்து பருவம்பெற்று முற்ற மணம்பெறும். உவமைக்கேற்றபடி பொருந்த உரைக்க நின்றது காண்க.

**சுருளும்**—என்பதும் பாடம். 15

881. (வி - ரை) **திருமகட்கு.....தீபம்** - உருவாலும் திருவாலும் ஒளியாலும் அருளாலும் இலக்குமியினும் இவ்வம்மையார் மிக்கிருப்பர்; திருமகள் தரும் செல்வம் போல அழிந்துபடாது இவ்வம்மை காரணமாக வரும் செல்வம் இருகுடிக்கும் நித்தியமாகிய அருட்செல்வமாய் விளங்கிற்று; திருமகள் சிவனடியார்பணி கேட்டுத்திரியாநிற்க, இவ்வம்மையார் அருணிறைந்த அடியார்க்குத் துணைவியாராயினர்; மேலும் இவ்வம்மையாரது கற்பின்றிறம் மழைக்குதவும் தன்மையுடையது என்றிவை முதலிய காரணங்களால் **திருமகட்குமேல் விளங்கும்** என்றார்.

**செம்மணியின் தீபம்** - இயற்கையாலும் தீட்டுதல் முதலிய செயற்கையாலும் மங்காத ஒளியுடையது என்க.

**மகட்குமேல் விளங்கும் மணி** என்பதற்கு இவ்வாறன்றி நான்கனுருபை ஏழனுருபாக்கி மகளின்மேல் - மகளிடத்து - என்றுகொண்டு மகளிடத்து அணியாக விளங்கும் மணி என்று உரைப்பாருமுண்டு.

**தீபம்** - அன்பின் பெருமையினையும் அருளின் பெருமையினையும் எடுத்துக்காட்டாக உலகில் விளக்கும் பொருளென்பார் இவ்வம்மையாரை **விளக்கு** என்றுவமித்தார்

**ஒரு மகளை** - ஒரு - ஒப்பற்ற. **மகள்** - இங்குப் பெண் என்ற மாத்திரையாய் நின்றது. நாயனாரின் என்று வருவித்து அவரது மகளாரை என்றுரைப்பாருமுண்டு.

**மகளை - மகற்கு - மகட்பேச** என்று கூட்டி உரைக்க. **மகற்கு** - மணமகனுக்கு- **மகட்பேச** - மணம்பேச - மணமகளாகக் கொள்வதுபற்றிப் பேச. இதுமரபு வழக்கு.

**ஓங்குகுல மரபினராய்** - குலத்தாலும் மரபாலும் ஓங்கி ஒத்து உள்ளாராய். **மரபு**- பெரும்பிரிவு. **குலம்** - அதனுட் சிறுபிரிவு. குடி - கோத்திரம் - என்பர். நாயனாரை. அரசர் சேனாதிபதியாம் குடி (872) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. சைவ சமய பரமாசாரியராலும் பாடப்பெற்ற பெருமை பற்றியும் **ஓங்கு (குலம்)** என்றார்.

**கருமிடற்று.....தமர் - தமர்** - சுற்றத்தாரைக் குறித்துப் பெரும்பாலும் வழங்கும் இச்சொல் இங்கு அன்புபூண்ட அடிமைத்திறத்தின் தொடர்பு என்ற அதன் உண்மைப் பொருள் குறித்தது. தம்மவர் எனற்பாலது **தமர்** என வழங்குவதாம். **தமர்** - இது கிளைப் பொருட்பெயர்ப் பகுபதம். **தாம்** என்னும் பகுதியும் **அர்** என்னும் விகுதியும் பெற்றுத் "தான்றாநா முதல் குறுகும்" என்பதனாற் பகுதி முதல் குறுகி உடன்மே லுயிர் ஏறி முடிந்தது. "எம்பிரான்றமரேயோ ?" (318), "நங்கள்பிரான்றமர் ஒருவர் என" (அப்பூதி - புரா. 9) முதலியவை காண்க. **தமர்** - இங்கு, வழி வழியடிமைச்சார்பு குறித்தது. **தமராதலின்** நம்பிகள் தூது விட்டமைபற்றிச் சினந்தனர் என்பதும் குறிப்பு.

**மரபினராய்.....தமராய** - ஒத்த குடியும், மரபும், இவற்றிற்கு மேலாய்ச் சிவனடிமைத்திறமுடைமையும் என்றித்திறங்களை மகட்பேச வந்த **பெருமுதியோர்** எடுத்துரைத்தனர் என்றதாம். வரும்பாட்டில் இதனை **மொழிந்த மணத்திறம்** என்றது காண்க. 153-ல் உரைத்தவையும் பிறவும் பார்க்க.

**கழல் ஏயர் பெருமகன்** - கழல் - வீரக்கழல். அரசர் சேனைபதிக் குடியின் அடையாளம் குறித்தது. **ஏயர் பெருமகன்** . ஏயர்கோன் என்பது வழக்கு. **பெருமகன்**- இங்குக் **கோன்** - தலைவன் - என்ற பொருளில் வந்தது. ஏயர்கோனர் - (883), ஏயர் குல மன்னவரும் (900) என்பனவும், பின்னர் அவர் தம் புராணத்தில் வருவனவும் காண்க.

**ஏயர்**-இவரது குடிப் பெயராம். **கேகயம்**-ஒரு நாடு; **கேகயர்** என்பது ஏயர் என்று மருவி வழங்குவதாயிற்றென்பர் ஆராய்ச்சியாளர். இது குடிப் பெயர் என்பது " ஏயர் குலப் பெருமான் " (885), " ஏயர் கோக்குடிதான், மன்னி நீடிய வளவர் சேனை பதிக்குடியாம் " (ஏயர் கோன் - புரா - 5) என்பவற்றாலறிக. இவ்வாறன்றி இதற்குக் கழலேயர் என்பவரது பெருமகனாகிய கலிக்காமர் என்ற உரைகள் தவறு.

**பெருமதியோர்** - வயது நிறைந்த அனுபவத்தாலும், அறிவாலும் முதிர்ந்தவர். இவர்களே இருதிறத்தார்க்கும் பொருந்துவனவற்றைத் தக்கபடி எடுத்துரைத்து மணம் பொருந்தவைக்க வல்லவர்களாதலின் இன்னோரை அனுப்பி மணம் பேசுதல் முன்னுள் வழக்கு. 153 - 154 பார்க்க. இவர்கள் வயதால் மட்டுமன்றி அறிவாலும் முதிர்ந்தோர் என்பதனை **வந்த முதறிவோரை** என வரும்பாட்டிற் கூறுவது காண்க.

**மன்னுலகில்**—என்பதும் பாடம். 16

882. வந்தமூ தறிவோரை மானக்கஞ் சாறனூர்
முந்தைமுறை மையின்விரும்பி மொழிந்தமணத் திறங்கேட்டே
" எந்தமது மரபினுக்குத் தகும்பரிசா லேயு "மெனச்
சிந்தைமகிழ் வுறவுரைத்து மணநேர்ந்து சேலவிட்டார். கள

(இ - ள்) வெளிப்படை. (இவ்வாறு மணம் பேச) வந்த முதிர்ந்த அறிவுடையவர்களை மானக்கஞ்சாறனூர் முந்தையோர்களது முறைமைப்படி விரும்பி வரவேற்று, அவர்கள் சொல்லிய மணத்திறம் பற்றிய பேச்சுக்களைக் கேட்டு, " எமது மரபுக்குத் தகும் தன்மையினால் இது பொருந்துவதாகும் " என்று மன மகிழ்வுறச் சொல்லித் தமது மகளாரை மணஞ் செய்து கொடுக்க இசைந்து, அவர்களைச் செல்ல விடுத்தனர்.

**(வி-ரை) முந்தை முறைமையின்** - பழைய உறவினரென்று அறிந்து அம்முறையினால் என்ற உரை பொருத்தாதென்க.

**எந்தமது...ஏயும்** - இது நாயனார் கேட்டுத்துணிந்தவாறு அவரது மனத்தின் செய்கை. **மரபு** - வேளாண் மரபும் அரசர் சேனைபதிக் குடியும் என்ற உலக உடலின் நிலைவழக்கும், அரன்பால் அன்புரிமையுடைய தமராகிய உயிரின் நிலைவழக்கும் என்ற இருவகையும் குறித்தது. உள்ளத்தின் குண நிலை நோக்காது உடலைப்பற்றிய குலம் முதலியவற்றையே நோக்கி மணந்துணிதல் சிறப்புடைத்தன்று. அதனையும் நோக்காது பண நிலை முதலிய கீழ் நோக்கங்களையே கொண்டு மண நிகழ்த்தும் இந்நாள் வழக்கு அறிஞரால் வெறுத்துக் கடியப்படுவதென்க.

**சிந்தை மகிழ்வுற** - தமது சிந்தை மகிழ்ச்சி பொருந்த என்றும், வந்த மூதறிவோரது சிந்தை மகிழ்வுற என்றும், இருதிறமும் பொருந்த உரைக்க நின்ற அழகு காண்க. மணமிசைந்த மகிழ்ச்சியின் இருதிறத்தோர் மனமும் கலந்து ஒன்றுதலின் இவ்வாறு ஒரு தொடரால் இருதிறமும் பெறவுரைத்த குறிப்பும் காண்க.

**மணநேர்ந்து** - மணமகன்றிறத்தோர் மணம் பேசவந்து பெண் கேட்டலும், அதற்குமகட்பெற்றோர் இசைந்து செலவிடுத்தலும் மண நிகழ்ச்சியின் இன்றியமையாத முற்பகுதிகள். இவையே மணத்தின் தொடக்கம் என்க. உண்மைத்தன்மையில் இந்நேர்ச்சியே மணம் நிகழ்ந்து முற்றிய செயலாகக் கொள்வதும் அறிவோர் செயலாம். " எத்தையும் எம்மனையுமவர்க் கெனைக்கொடுக்க விசைந்தார்கள், அந்த

முறை யாலவர்க்கே யுரியதுநா னாதலினால், இந்தவுயி ரவருயிரோ டிசைவிப்பன்" (திருநா - புரா - 32) என்று திலகவதியம்மையார் துணிந்ததும், பின்னர் வேறெவரையும் மணஞ்செய்ய விசையாது வாழ்ந்ததும் ஆகிய சிவசரிதம் இங்கு நினைவு கூர்தற்பாலது. உலகவழக்கு நிலையிலும் ஒரு பயன் கருதி ஒருவர் ஒரு பொருளைக் கேட்டலும் கேட்கப் பட்டார் அதற்கு இசைந்து நேர்தலும், இசைவு என்ற வழக்கு மூலத்தை முற்றுப் பெறுவிப்பனவாகும் என்ற சட்டமுறையும் காண்க. இதனை Offer and Acceptance என்பர் நவீனர்.

**செலவிட்டார்** - இருக்க வைத்துத் தாமதியாது, சென்று மணத்துடன் திரும்பும் வகை விடுத்தனர். மணநேர்ந்த பின் அப்பொருள் காரியத்தில் விரைவின் நிறைவேற்றுதலின் தீவிரம் குறித்தது. இதனையே "சுபம் சீக்கிரம்" என்ற பழமொழி உணர்த்தும். 17

883. சென்றவருங் கஞ்சாறர் மணமிசைந்த படிசெப்பக்
குன்றனைய புயத்தேயர் கோனாரு மிகவிரும்பி
நின்றநிலை மையினிரண்டு திறத்தார்க்கு நேர்வாய
மன்றல்வினை மங்கலநாண் மதிநூல்வல் லவர்வகுத்தார். ௧௮

(இ - ள்) வெளிப்படை. சென்றவர்களாகிய முதியோரும் மானக்கஞ்சாறனார் மணம் இசைந்தனர் என்ற செய்தியைச் சொல்ல, மலைபோன்ற தோள்களையுடைய ஏயர்கோனாரும், அது கேட்டு மிக்க விருப்பத்தினைக் கொண்டு நின்றனராக, இந்நிலையில் இருதிறத்தவர்க்கும் பொருந்துவதாகிய கல்யாணஞ் செய்தற்குரிய மங்கல நாளை அதற்குரிய சோதிட முதலிய நூல்களிற் கூர்ந்த மதிவல்லவர்கள் வகுத்தனர்.

(வி - ரை) **குன்றனைய புயத்து** என்றது அவர் அரசர் சேனாபதிக்குடியில் வந்த உடல் வல்லமை குறித்தது. **மலைமலிந்ததோள்** என்றவிடத் துரைத்தவை பார்க்க.

**விரும்பி நின்ற நிலைமையின்** - நாயனார் மணநேர்ந்த செய்தியைக் கேட்டு மிக விருப்பத்தோடும் அதனை மகிழ்ந்து உளங்கொண்டனர்; ஆதலின் அந்நிலைமையில்.

**இரண்டு...நாள்** - இருதிறத்தார்க்கும் பொருந்துதலாவது நாட்பொருத்தம், கோட்பொருத்தம், பலப்பொருத்தம், செய்தொழிற் பொருத்தம் முதலிய பகுதிகள் யாவும் சோதிட நூல்களில் விதித்தவாறு இருதிறத்தவர்க்கும் நன்மை தருவனவாயிருத்தல். **மங்கல நாள்** - மணநாள். மணத்திருநாள் (158), திருமணஞ் செய் கலியாணத் திருநாள் (திருஞான - புரா-1169), நன்னிலைமைத் திருநாள் (ஷை 1173), மணமீக் கூறுநாள் (ஷை 1182) என்பன காண்க.

இத்தொடரே **இரண்டு திறத்து ஆர்க்கும் நேர்வு ஆய** என்று பிரித்து, இவ்வாறு மன்றல் வினை மங்கல நாளினை மதிநூல் வல்லவர்கள் வகுத்ததனில், அந்நாள் நாயனாரது திருமகளார்க்கு **மன்றல் வினை** நாளாகவும், நாயனாருக்கு நித்திய மங்கலமாகிய சிவபோகப் பெருவாழ்வு தரும் **மங்கல** நாளாகவும், இருதிறத்தன்மையில் நிகழ்வது என்று குறிப்பாற் பொருள் தருமாறு நிற்பதும் காண்க. மங்கலமென்பன ஏனையவெல்லாம் உபசார வழக்கேயா யொழிவன வென்பதும், சிவப்பேறு ஒன்றே பெருமங்கலமாமென்பதும் உண்மைநூற் றுணிபு. "தொண்டர்க்கு, மங்கலமாம் பெருங்கருணை வைத்தருளச் சிவலோகத், தெங்கள்பிரான் கணம்புல்ல ரினிதிறைஞ்சி யமர்ந்திருந்தார்" (கணம்புல் - புரா - 8) என்றது காண்க.

**நேர்வாய** - உடன்பாடாகிய என்றுரைப்பாரு முண்டு.

**மதிநூல் வல்லவர்** - இவர்கள் ஒரு மங்கலங் கருதி வகுத்தநாளே, அந்த மங்கலத்தோடு யாவரும் போற்றும் மற்றொரு பெருமங்கலத்துக்கும் ஏதுவாகியதுபற்றி இவ்வாறு

கூறினர். இராமன் முடிசூட நிச்சயித்த காளே அவன் காடு செல்லவும், பெற்ற தந்தை உயிர்துறக்கவும் காணுகாளாய் முடியும் நிகழ்ச்சிபற்றி அக்காள் வகுத்த நூலோரைக் "கணித மாக்கள்" என்று கம்பர் குறித்ததனை இங்கு வைத்துக்காண்க. மதிநூல் - காளும் கோளும் இறைவனுணை கியதியின்படி நன்மைதீமைகளைச் செய்வன ஆதலின் அந்நியதியினை அவனுணையால் வகுத்த நூல்களாலறிந்து வகுத்தார் ஆதலின் மதிநூல் வல்லவர் என்றார்.

மதிநூல் வல்லவர் - மதியோடு நூலினும் வல்லவர். "மதிநுட்ப நூலோ டிடை யார்க்கு" (திருக்குறள்) என்பதுங் காண்க.

நோய—என்பதும் பாடம். 18

*884. மங்கலமாஞ் செயல்விரும்பி மகட்பயந்த வள்ளலார்
தங்குலநீள் சுற்றமெலாந் தயங்குபெருங் களிசிறப்பப்
பொங்கியவேண் முளேப்பெய்து பொலங்கலங்க ளிடைதெருங்கக்
கொங்கலர்தண் பொழின்முதூர் வதுவைமுகங் கோடித்தார். ககூ

(இ - ள்) வெளிப்படை. மணமகளைப் பெற்ற வள்ளலாராகிய மானக்கஞ்சாறனுர், மங்கலத்துக்குரிய செயல்களைச் செய்யவிரும்பித், தமது குலத்தினுள்ள மிக்க சுற்றத்தா ரெல்லாரும் பெருமகிழ்ச்சி கொள்ளப் பொங்கிய வேண்முளே சாத்தி, பொன் கலங்க ளிடை யிடையே தெருங்க, மணமிகுந்த குளிர்ந்த சோலைகளையுடைய அந்தப் பழைய நகரத்தைக் கலியாணக் கோலம் முன் பொருந்தும்படி அலங்கரித்தனர்.

(வி - ரை) வள்ளலார் - சுற்றத்தாரெல்லாம் - களிசிறப்ப - முளேப்பெய்து - முதூர் வதுவைமுகம் - கோடித்தார் என்று கூட்டி உரைக்க.

மங்கலமாம் செயல் - கல்யாணத்திற்குரிய செய்தொழில்கள். இவற்றில் மண மிசைந்தபின் முதலிற் செய்வது வெண்முளேப்பெய்தல் என்னும் சிறப்பு. பாலிகை களில் முளேதெளித்தலாகிய சடங்கு மணத்திற்கு இன்றியமையாததொன்று. இது மணகாளுக்கு முன் ஏழாநாளாகிய நன்னளில் இருதிறத்தார் மனைகளிலும் செய்யப் படுவது. திருமுளேசாத்து என்றும் வழங்குவர். இச்சடங்குதானும் இக்காளில் மாறி மறந்தொழியக் காண்பது வருத்தத்தக்கது.

மகட்பயந்த - 786ல் உரைத்தவை பார்க்க. பிழைக்கு நெறியினைப் பெற்றோ ருக்கு உதவும் பெண்கொடி யென்று குறிக்க இவ்வாறு கூறினர்.

வள்ளலார் - தற்பயன் கருதாது யாவையு நேர் கூறுவதன்முன் குறிப்பறிந்து கொடுக்கும் (774) வள்ளன்மையும் பின் சரித நிகழ்ச்சியும் குறித்தது.

குலநீள் சுற்றம் எலாம் - குலத்தின் பெருமையும் குலம் நீண்டு பெருகிய சுற்ற முடைமையும், அச்சுற்றந்தானும் பலவகைப்பட நிற்பினும் அவை முற்றும் என்பது குறித்தது. "சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல்", "செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்" என்பனவாதி உலகியல் நீதிகள் காண்க. குலச்சுற்றம் - நீள் சுற்றம் என்று தனித்தனிகூட்டி, முன்னையது உடற்கூட்டமாகிய உறவு என்றும், பின்னையது உயிர்பற்றிய தமராகிய சிவன் அடியார் கூட்டம் என்றும், இவ்விரண்டும் குறிக்க எலாம் என்றார் என்று உரைத்தலுமாம்.

பொலங்கலங்கள் - பொற்கலங்களில் முளேப்பெய்தனர் என்க. அணிகளுமாம்.

வதுவைமுகம் கோடித்தல் - மண அலங்காரம் செய்தல். நகரையும், திருமனையை யும் அலங்கரிப்பது மரபு. முகம்கோடித்தலாவது முன்புற மூகப்பில் அணிசெய்து பார்வைபெறச் செய்தல். 19

885. கஞ்சாறர் மகட்கொடுப்பக் கைப்பிடிக்க வருகின்ற
எஞ்சாத புகழ்ப்பெருமை யேயர்குலப் பெருமானுந்
தஞ்சால்பு நிறைசுற்றந் தலைநிறைய முரசியம்ப
மஞ்சாலு மலர்ச்சோலைக் கஞ்சாற்றின் மருங்கணைய, உ0

886. வள்ளலார் மணமவ்வூர் மருங்கணையா முன்மலர்க்கண்
ஒள்ளிழையைப் பயந்தார்தந் திருமனையி லொருவழியே
தெள்ளுதிரை நீருலக முய்வதற்கு மற்றவர்தம்
உள்ளநிலைப் பொருளாய வும்பர்பிரான் றாமணைவார், உக

887. முண்டநிறை நெற்றியின்மேன் முண்டித்த திருமுடியிற்
கொண்டசிகை, முச்சியின்கட் கோத்தணிந்த வெற்புமணி,
பண்டொருவ னுடலங்கம் பரித்தநா ளதுகடைந்த
வெண்டரள மெனக்காதின் மிசையசையுங் குண்டலமும், உஉ

888. அவ்வென்பி னொளிமணிகோத் தணிந்ததிருத் தாழ்வடமும்,
பைவன்பே ரரவொழியத் தோளிலிடும் பட்டிகையு,
மைவந்த நிறக்கேச வடப்பூணு நூலு,மனச்
செவ்வன்பர் பவமாற்றுந் திருநீற்றுப் பொக்கணமும், உங

889. ஒருமுன்கைத் தனிமணிகோத் தணிந்தவொளிர் சூத்திரமும்,
அருமறைநூற் கோவணத்தின் மிசையசையுந் திருவுடையும்,
இருநிலத்தின் மிசைத்தோய்ந்த வெழுதரிய திருவடியுந்,
திருவடியிற் றிருப்பஞ்ச முத்திரையுந் திகழ்ந்திலங்க, உச

890. பொடிமூடு தழலென்னத் திருமேனி தனிற்பொலிந்த
படிநீடு திருநீற்றின் பரப்பணிந்த பான்மையராய்க்,
கொடிநீடு மறுகணைந்து தம்முடைய குளிர்கமலத்
தடிநீடு மனத்தன்பர் தம்மனையி னகம்புகுந்தார். உரு

885. (இ - ள்) வெளிப்படை. மானக்கஞ்சாறனார் தமது மகளைக் கொடுப்ப, அப்பெண்மணியை மனைவியாராக ஏற்றுக் கைப்பிடிக்க வருகின்ற குறையாப் புகழையும் பெருமையையும் உடைய ஏயர்குலத் தலைவராகிய கலிக்காமனாரும் தம்முடைய சால்பு நிறைந்த சுற்றத்தாரெல்லாரும் நெருங்கி நிறைய, இன்னியங்கள் ஒலிக்க, முகில்கள் பொருந்திய பூஞ்சோலைகள் சூழ்ந்த கஞ்சாறூரின் பக்கத்து வர, உ0

886. (இ - ள்) வெளிப்படை. வள்ளலாரது மணவெழுச்சி அந்தக் கஞ்சாறூரின் பக்கத்திற் சேர்வதற்கு முன்னர், மலர்போன்ற கண்ணையுடைய ஒள்ளிய இழையணிந்த பெண்ணைப் பெற்றவருடைய திருமனையில், ஒருவழியாக, மேற்கிளம்பும் அலைகளையுடைய கடல்சூழ்ந்த உலகம் உய்வதற்காக, அவருடைய உள்ளத்தின் நிலைப்பொருளாகிய தேவர்பெருமானார் தாம் அணைவாராய், உக

887. (இ - ள்) முண்டநிறை நெற்றியின்மேல் - திரிபுண்டரமாகத் திருநீற்றினை அணிந்த நெற்றியின்மேல்; முண்டித்த.....எற்புமணி - மழித்ததிருமுடியில் வைத்த சிகையின் நுனியில் கோத்து அணிந்த எலும்பு மணியும்; பண்டொருவன்...என - முன் ஒரு காலத்தில் திருமாலின் கழியுடல் முழு எலும்பினைக் கொண்ட

காளிலே அவ்வெலும்பைக் கடைந்தெடுத்த வெண்முத்துக்கள்போல விளங்கும், காதின்...குண்டலமும் - காதின்கண் அசைகின்ற குண்டலமும், உஉ

888. (இ - ள்) அவ்வென்பின்.....தாழ்வடமும் - அந்த எலும்பிலுலாகிய ஒளியுடைய மணிகளைக் கோத்து அணிந்துகொண்ட திருத்தாழ்வடமும்; பைவன்பேர்...பட்டிகையும் - படத்தினையுடைய வலிய பெரிய பாம்பு நீங்கத் தோளில் இடுகின்ற யோகப்பட்டையாகிய உத்தரியமும்; மைவந்த...நூலும் - கரிய மயிரிலுல் வடமாக முறுக்கப்பட்ட பூணூலும்; மனச் செவ்வன்பர்.....பொக்கணமும் செம்மையாகிய மனத்தினையுடைய அன்பர்களது பிறவியை மாற்றுகின்ற திருநீற்றுப்பையும், உஙூ

889. (இ - ள்) ஒரு முன்கை...சூத்திரமும்-ஒரு முன்கையினிடத்து ஒரேலும்பு மணியைக் கோத்து அணிந்த விளக்கமாகிய கயிறும்; அருமறை...உடையும் - அரிய வேத நூல்களாகிய கோவணத்தின்மேல் கட்டிய திருவுடையும்; திருவடியில்...முத்திரையும் - திருவடியில் திருப்பஞ்சமுத்திரைகளும்; திகழ்ந்து இலங்க - மிகவிளங்க,

890. (இ - ள்) பொடிமூடு...பான்மையராய் - செருப்பின்மேல் மூடிய சாம்பல் போலத் திருமேனியின்மேல் விளங்கிய அழிவில்லாத தன்மையுடைய திருநீற்றை நிறையப் பூசிய தன்மையுடையராய்; கொடிநீடும் மறுகினைந்து - கொடிகள் மிக விளங்கிய திருவீதியை யடைந்து; தம்முடைய...புகுந்தார் - தம்முடைய குளிர்ந்த தாமரைபோன்ற திருவடிகள் நிலத்துத் தங்குதற்கிடமாகிய மனத்தினையுடைய அன்பாகிய மானக்கஞ்சாற நாயனாரது திருமனையினுள் புகுந்தருளினர். உடு

இந்த ஆறு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

885. (வி - ரை) மகட்கொடுப்ப - தமது மகளை அவர்க்கு மணமகளாகக் கொடுக்க.

கைப்பிடிக்க-மணவாட்டியாக - மனைக்கிழத்தியாக-ஏற்றுக்கொண்டது குறித்துக் கையைப் பிடித்துக்கொள்ள. இதனைப் பாணிக்கிரகணம் என்பர் வடவர். (பாணி - கை; கிரகணம் - பற்றுதல்). இது மணத்தில் இன்றியமையாததொரு சடங்கு.

தம் சால்புநிறை சுற்றம் - சால்பு - "அன்புரா ணெப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ, டைந்துசால் பூன்றிய தூண்" என்பது குறள். பிறர் தீமை சொல்லாராய்ப், பணிதலுடைமையின் யாவரையும் கூட்டிக்கொண்டு எக்கருமத்தையும் முடிக்க வல்லாராய், இன்ஞ செய்தார்க்கு மினியவே செய்வாராய், ஊழி பெயர்த்தாலும் தாம் பெயரா உறுதிப்பாடுடையவராய் உள்ளாரே சால்புடையார் எனப்படுவர். இத்தகைய மேன்மைக் குணங்கள் படைத்தோர்களாகிப் பின்னர். இச்சரித நிகழ்ச்சியில் இச்சுற்றத்தார் இறைவனுல் நாயனாரது அன்பின் பெருமையைப் புவனங்களில் ஏறச் செய்யப் பெற்றதனைக் கண்டனர்; கலிக்காமனாரது திருமணத்தை "உலகெலாந் தலைசிறப்ப" நிகழ்வித்துக் கண்டு களித்த பெருமையினர்; ஆதலின் இவர்களை இவ்வாறு விதந்து கூறினர். மேற்பாட்டில் நாயனர் சுற்றத்தாரையும் இவ்வாறே "தங்குலனீன் சுற்றமெலாம்" என்றதும் இக்கருத்துப்பற்றியாம். அங்குரைத்ததுபோல ஈண்டும் சால்பிற் சுற்றம் - நிறைசுற்றம் என்று தனித்தனி கூட்டியுரைக்க நின்றதும் காண்க. மேலும் இச்சுற்றத்தார் பலரும் எயர்கோனார்க்கும் ஆளுடைய நம்பிகளுக்கும் இறைவர் செய்யும் அருள் வெளிப்பாட்டினைக் காணும் பேறு பெறுவர் என்பதனையும் இங்குச் சிந்திக்க.

தலைநிறைதல் - கூட்டமாகச் சேர்தல். மஞ்சுஆலும் - ஆலுதல் - அசைதல். ஆலுதல் - ஒலித்தல் என்றலுமாம். "ஆலுமறை சூழ்கயிலை" (174) என்றது காண்க.

886. (வி - ரை) வள்ளலார் இங்கு எயர்கோன் கலிக்காமரைக் குறித்தது. இவரது வள்ளன்மையின் பெருமை இவர்தம் புராணத்துட் கண்டு கொள்க. இவர், தம்கீழ் வாழும் நாடு மழைபெய்து பஞ்சநீங்கிச் செழிக்கும்பொருட்டு பன்னிருவேலி நிலமும், பெருமழை நிற்கப் பெயர்த்தும் அவ்வாறே பன்னிருவேலி நிலமும் இறைவனுக்குக்

கொடுத்த பெருமை ஆளுடையநம்பிகளது திருப்புன்கூர்த் தேவாரத்தா லறியப்படும். சிவபெருமானிடத்துக் கொண்ட அன்பின் உறைப்பினால், அதற்குப் பழுதுவர நேர்ந்த போது தம் உயிரையும் ஈடாக உவந்துகொடுத்த பெருமை இவரது புராணத்திற் பின்னர்க் காண்க. "ஏத நன்னில மீரறு வேலி யேயர்கோ னுற்ற விரும்பிணி தவிர்த்து" என்ற நம்பிகளது (திருப்புன்கூர்) தேவாரத்தால் இவர் தமக்கு வந்ததொரு பிணிதவிர்க்கப் பன்னிருவேலி நிலம் இறைவனுக்குத் தந்தனர் என்றதொரு வரலாறும் காணக் கிடக்கின்றது. "திருப்புன்கூர்க், கதிக மாயின திருப்பணி யனேகமும் செய்"தார் என்ற (ஏயர்கோன் புரா 7)தனாலும் இவரது சிவப்பணிவிடையின் வள்ளன்மை புலனாகும். இதுபற்றியே முன்னர் "எஞ்சாத புகழ்ப்பெருமை" (885) என்றார். "மகட் பயந்த **வள்ளலார்**" (884) என நாயனாரைக் கூறிய ஆசிரியர் அதுபோலவே கலிக்காமனாரையும் **வள்ளலார்** என்றது அவரது மகளாரைத் திருமனைவியாராகக் கொள்ளுதற்கு இவர் ஏற்ற பெருமையுடையராவர் என்று குறிப்பதற்காம்.

**மணம்** - மணஎழுச்சி. மரபு வழக்கு. "அருங்கடி மணம்வந் தெய்த" (169), "திருமண மெழுந்ததன்றே" (திருஞா - புரா - 1199) முதலியவை காண்க.

**மலர்க்கண்** - கண்ணுக்குத் தாமரை, நீலம் முதலிய மலர்களை உவமிப்பது மரபு.

**ஒள்இழை** - ஒளிவீசும் அணிகள். அவற்றை அணிந்த பெண்ணைக் குறித்தது.

**பயந்தார் - பயத்தல்** - பெற்றெடுத்தல்.

**திருமனை** - சிவபெருமான் வெளிப்பட எழுந்தருளி வந்து அருள்விளையாடல் செய்த பெருமை பெற்றதனால் இவ்வாறு சிறப்பித்தார்.

**ஒருவழியே** - உலகம் - ஒருவழியே - உய்வதற்கு - அணைவாராகிப்-புகுந்தார் (890) என்று கூட்டுக. **ஒருவழியே உய்தலா**வது ஐம்புலனும் ஐந்தாகியது வெவ்வேறு வழிகளில்ஈர்த்துச் செல்ல அவ்வழிச் சென்று மீளமீளப் பிறந்தும் இறந்தும் உழலாது, சிவன்பாலன்பாகிய சிவநெறி என்ற **ஒருவழியே** பிறவாநெறி என்று கண்டு உலகம் அவ்வழிச்சென்று உய்தல் எனப் பொருள் தந்து நிற்றல் காண்க. **ஒருவழியே - அணைவார்** என்று கூட்டிப், பிறர் எவரும் காணாத - வாராத - ஒருவழியால் (அதாவது அன்பு வழியால்) அணைவார் என்றுரைப்பாருமுண்டு.

**தெள்ளுதிரை - தெள்ளுதல்** - குதித்து மேற்கிளம்புதல்.

**தெள்ளுதிரை** - தெளிந்த அலை என்பாருமுளர்

**உள்ள நிலைப்பொருள்** - உள்ளத்தினின்றும் நீங்காது எப்போதும் நிலைத்த பொருள் - ஏனைய உயிர்ப்பொருள் உயிரில் பொருள் யாவும் நிலையற்றன என்றும், இறைவனும் அவனடிமைத் திறமுமே நிலைத்தன என்றும் உணர்ந்து, இந்நாயனார் எப்போதும் சிவபெருமானைத் தம் உள்ளத்தில் நிலைபெற வைத்துணர்ந்திருந்தனர். "மெய்ப்பொருளை யறிந்துணர்ந்தார்" (872) எனத் தொடக்கத்துக் கூறியதனையும், இவ்வாறு சிவனை உள்ளநிலைப்பொருளாகக் கொள்ளாதார்க்கு "ஒருமகள் கூந்தல் றன்னை வதுவைநாள் ஒருவர்க் கீயும்" அரிய பெருஞ்செயல் செய்தலரிதாம் என்பதனையும் இங்குச் சிந்திக்க.

**உள்ளநிலை...அணைவார்** - இடைவிடாது எப்போதும் சிந்தித்து உள்ளத்தில் நிலைக்கவைத்திருந்ததனால், அவ்வுறைப்பின் பயனாய் வெளிப்பட எழுந்தருளி **அணைவாராகிப் புகுந்தார்** என்று குறிப்பதற்கு **உள்ளநிலைப்பொருளாய** என்று கூறினார். "உறவு கோனட் டுணர்வு கயிற்றினால், முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே" என்பது முதலிய தமிழ்மறை அளவைகள் கருதுக.

**உம்பர்பிரான்** - உம்பர்கள் செத்துப்பிறக்கின்ற தெய்வங்கள்; சிவபெருமான் ஒருவரே ஈறிலாதவர்; ஆதலால் அவரே ஈறின்மையைத் தரவல்லவர் என உணர்ந்ததனால் அவரையே உள்ளத்தில் நிலைப்பொருளாக வைத்தனர் என்பார் இப்பெயராற் கூறினார்,

887. (வி - ரை) முண்டம் - மூன்று கீற்றுகத் (திரிபுண்டரமாகத்) தரித்த திரு நீறு. 370-ல் உரைத்தவை பார்க்க. "திருமுண்டம் தீட்டமாட்டா தஞ்சுவா ரவ ரைக் கண்டா லம்மரா மஞ்சு மாறே" (அச்சப் பத்து - 9) என்ற திருவாசகம் காண்க.

**முண்டித்தல்** - மயிர் களைதல். வபனஞ் செய்தல் என்பர் வடவர். **முண்டித்த திருமுடியிற் கொண்டசிகை** - வேய பகுதிகளில் மயிர் களையப்பட்ட திருமுடியின் உச்சியில், களையாது மயிர் வளர்த்துக்கொண்ட பகுதி. சிகை - சிகழி ; குடுமி என்ப.

**முக்கி** - நுனி. எலும்புமணி குடுமியின் நுனியிற் கோத்தணியப்பட்டதென்க.

**ஒருவன்** - இங்கு இடகோக்கித் திருமாலைக் குறித்தது. திருமாலின் அங்கம் பண்டு ஒருநாள் பரித்ததென்பது ஊழிக்காலத்தில் இறந்து வீந்த (பிரம) விட்டுணுக் களின் எலும்புக் கூடுகள், என்றும் அழியாதெஞ்சினின்று எங்கு கிறைந்த சிவபெருமான் திருமேனியிற் கிடத்தல் குறித்தது. **பரித்தல்** - தாங்குதல். "பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போ, யிருங்கடன் மூடி யிறக்கும்; இறந்தான் களேவரமுங், கருங்கடல் வண்ணன் களேவர முங்கொண்டு கங்காளராய்" (பொதுத்திருவிருத்தம்) என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்குக் காண்க.

**அது கடைந்த வெண்தாளம்** - அவ்வெலும்பிற் கடைந்தெடுத்த வெள்ளிய முத் துப்போன்ற சிறுமணிகள்.

**குண்டலம்** - காதணிவகை. முத்து - இரத்தினம் - பொன் முதலிய மணிகளால் இவற்றை அமைப்பது வழக்கு. இங்கு இவை முத்துப் போன்ற வெள்ளிய எலும்பு மணிகளாலாகியன. பெருமான் இங்குக் கொண்ட மாவிரதச்சைவ வேடத்துக் கேற்பக் காதில் எலும்பு மணிகளாற் குண்டலம் பூண்டு வந்ததனே, அந்த எலும்பு மணிகள் திரு மாலின் எலும்புக்கூட்டினுற் கடைந்தெடுக்கப்பட்டவை போன்ற வெனக் கூறியது பண்புபற்றி வந்த இல்பொருட்புகழுவமையாம். இதனுல் சிவபெருமானது ஈறிலா முழுமுதற்றன்மை குறித்தது காண்க.

**எலும்புமணி** - இப்பாட்டிற் கூறிய தலேமயிர் நுனியிற் கோத்தணிந்த மணியும், காதுகளில் அணிந்த குண்டலங்களும், வரும்பாட்டிற் கூறும் கழுத்தில் அணிந்ததாழ் வடமும், ஒரு முன்கைக்கயிற்றின் மணியும் எலும்பாலாகிய மணியாம். எலும்புமணிக ளணிந்து, மயிர்க்கயிற்றுற் பூணூலும் யோகபட்டையும் அணிந்து, திருமேனிமுழுமை யும் நீறுபூசிக், கோவணமும் மேல் உடையும் பூண்டு திருநீற்றுப் பொக்கணத்துடன் வரும்வடிவம் **மாவிரத** வடிவம் எனப்படும். இஃது அகப்புறச் சமயங்கள் ஆறனுள் ஒன்று. அவை பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்யவாத சைவம் என்பனவாம். நாயனரின் மகளாருடைய கூந்தலைப் பஞ்சவடிக்காகக் கேட்பதற் கேற்ற சைவவடிவம் தாங்கிவருதல் வேண்டுமாதலின் பெருமான் இவ்வடிவம்கொண் டெழுந்தருளினர் என்க. இவ்வாறே பிள்ளைக்கறி கேட்பதற்கேற்ப நரப்பசு உண் ணும் வைரவச் சைவக்கோலம் பூண்டு சிறுத்தொண்டநாயனரிடம் பெருமான் எழுந் தருளிய தகுதியும் இங்குச் சிந்திக்க.

**வெண்தாளம் என** - முத்துப்போலக் கடைந்ததனே முத்தென்றுபசரித்தார்.

**சிகையின் கண்—சிகழியின்கண்**—என்பனவும் பாடங்கள். 22

888. (வி - ரை) **அவ்வேன்பு** - மேற்பாட்டிற் சொல்லிய எலும்பு. ஒருவன் உடல் அங்கம் என்ற திருமாலின் எலும்பு.

**திருத்தாழ்வடம்** - மார்பிலணியும் அழகிய வடம் - மாலே. இது உந்திவரை தாழும் படி அணியப்படுவதால் **தாழ்வடம்** எனப்படும்.

**பைவன் பேர் அரவு ஒழிய** - தாம் எப்போதும் அணிந்திருக்கும் பாம்பு நீங்க. இறைவனுக்கு அரவம் தோளின் மேல் மாலேயாகக் கிடக்கும் என்ப. இங்கு அரவு கிடந்த இடத்தில் பட்டிகையாகிய யோகப்பட்டம் பூண்டு வந்ததனுல் **அரவொழிய**

என்றார். பை - கஞ்சுப்பை. படம் என்றும் கூறுவர். " பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமன் ", " பையஞ் சுடர்விடு நாகப் பள்ளி " என்பனவாதி திருவாக்குக்கள் காண்க. **பைவனப்பேர்** என்பது பாடமாயின் **வன்னம்** வனம் என நின்றதெனக்கொண்டு, பையின் உருவத்தைத் தலையிற் கொண்ட பெரிய என்றுரைத்துக் கொள்க. பையின் வனப்பு ஆகிய எர் (அமைப்பு) கொண்ட என்றலுமாம். **பட்டிகை** - யோகபட்டம்.

**கேச வடப் பூணூல்** - மயிர்க்கயிற்றாலாகிய பூணூல்.

இதனைப் **பஞ்சவடி** என்பர். 894 பார்க்க. மயிர்க்கயிறுபூண்பது மாவிரதச் சைவர்க்குச் சிறப்பாயுரியது. இவர்களது வடிவத்தைச் " சவந்தாங்கு மயானத்துச் **சாம்ப** லென்பு தலையோடு **மயிர்க்கயிறு** தரித்தான் றன்னைப், பவந்தாங்கு பாசுபத வேடத் தானை " என்ற திருத்தாண்டகத்தாலும் பிறவாற்றாலுமறிக, "சைவர் பாசுபதர்கள் வணங்குஞ் சண்பை நகராரே " (ஆளு - பிள் - தேவாரம்) " பம்புசடைத் திருமுனிவர் கபாலக் கையர், பலவேடச் சைவர் " (திருஞான-புராண. 1018) முதலிய னவும் பிறவும் இவ்வகை அகப்புறச்சமயவேடங்களே உணர்த்துதல் காண்க. இவர்கள் சிவபெருமானே எலும்பணிந்தமூர்த்தியாக வழிபடுவர்.

**செம்மை மன அன்பர்** - எனமாற்றுக. **அன்பர் பவம் மாற்றும் திருநீறு** - திரு நீறு யாவர்க்கும் ஒன்று போலவே பவம்போக்கி முத்திதரும் மருந்தாயினும், செம்மை மனத்தினை உடைய அன்பர்க்கே சிறப்பாயும் விரைவாயும் அது பவம் மாற்றும் என் பதாம். ஒரே மருந்து உடற்பக்குவமுடையார்க்கு விரைவிலும், அஃதில்லாதார்க்கு நாட்சென்றும் நலந்தருமாறு காண்க. **பவம்** - பிறப்பு,

**பைவளர்பேர்—பூணநூலும்**—என்பனவும் பாடங்கள். 23

889. (வி - ரை) **ஒருழன்கை.....சூத்திரமும்** - முன்கைகளிரண்டில் ஒன்றினில் நூலில் ஒருமணி கோத்தணிந்திருந்தனர்; அது எலும்புமணி; அந்நூல் விளங்கித் தோன்றிற்று என்க.

**மறைநூற் கோவணம்** - மாமறைக்கோவணம் (509), ஒங்குகோவணம் (515) என்ற விடங்களிலுரைத்தவை பார்க்க. மறைகளும் அவற்றின் அங்கங்களாகிய நூல்களும் என்றிவற்றாலாகிய கோவணம். " நான்மறைப் பொருணூல்களாற் சமைத்த, சிவன் விரும்பிய கோவணம் " (540) என்றது காண்க. சிவரகசியத்தைத் தன்னகத்துக் கொண்டு மறைத்துக்கொண்டிருத்தலால் மறையினைக் கோவணம் என்றுபசரித்துக் கூறுதல் மரபு.

**அசையும் திருவுடை** - மாவிரதிகள் கோவணம் விளங்கப்பூண்பதுவும், அதன்மேல் வரிந்து கட்டியதுபோல இருநுனியும் அசைத்துகாட்டும் சிற்றுடை உடுப்பதுவும் மரபு.

**இருநிலத்தின்...திருவடியும்** - உம்பர்கள் கால்நிலந்தோயார் என்பர். இவர் **உம்பர் பிரான்** (886) ஆதலின் கொண்ட வேடத்திற்கேற்ப நிலத்தின்மிசைத் தோய்ந்த திருவடியுடன் வந்தனர் என்றார். இவர் எல்லாப் பொருள்களுள்ளும் நிறைந்து பதிந்து கிடப்பதன்றிக் கால்நிலந்தோய வெளிப்பட்டு நடப்பரல்லராயினும் அவ்வாறு வந்தபற்றி அருமைப் பட **இருநிலத்தின் மிசைத் தோய்ந்த** என்று பாராட்டினர். இவர் உத்தராபதியாராய் வந்தவிடத்திலும் " பயன்றவத்தாற் பெரும்புவியும் பாததா மரைசூட " (சிறுத். புரா. 34) என்று இவ்வாறே பாராட்டிக் கூறுதல் காண்க.

**எழுதரிய திருவடி** - படி எழுதலாகாத அழகுடைய திருவடி. " கோவண முடுத்த வாறுங் கோளர வசைத்த வாறுந், தீவணச் சாம்பற் பூசித் திருவுரு விருந்த வாறும், பூவணக் கிழவ னுரைப் புலியுரி யரைய னுரை, யேவணச் சிலையி னுரை யாவரே எழுது வாரே" தனித்திருநேரிசை (2), "இப்படிய னிற்கிறத்த னிவ்வண் ணத்த ளிவளிறைவ னென் றெழுதிக் காட்டொ ணுதே " (விளவிடைத் திருத்தாண்டகம் 10) முதலிய திருவாக்குக்கள் காண்க. அருள்கிறைவு - சிவசத்தி - என்பதனைத் திருவடியாக உப சரிப்பர். ஒரு பொருளை எப்போதும் கண்டுகொண்டிருக்க விரும்புவோர் அதனை

ஓவியமாக எழுதி முன்வைத்துக் கொள்ளுதல் உலக வழக்கு. இதுபற்றியே உலகர் பல உருவப்படங்களை மனைகளில் அணிபெற வைப்பர். இறைவனது திருவடியை நேர்காண வல்லார் உள்ளே காணுவதன்றி (860) எழுதிவைத்துக்கொள்ளுதல் இயலாது என்பதாம். " காணுதார் மலர்த்தாள் பூண்டு வந்திறைஞ்சுங் காலமிது " (ஏயர் - புரா - 338) முதலியவை பார்க்க. எழுதும் ஓவியம் படிச்சந்தம் எனப்படும். " படிச் சந்தமாவது ஒன்றன் வடிவுடைத்தாய் அது வென்றே கருதப்படு மியல்பையுடையது" என்பர் (திருக்கோவை - 78) பேராசிரியர். மொழிநடை யெழுத லரிதென விலக்கல், அவயவ மெழுத லரிதென விலக்கல் என்ற அகப்பொருட்டுறைகளின் கருத்துக்களையும் இங்குவைத்துக் காண்க. இக்கருத்தினை உட்கொண்டு, " ஓவியத் தெழுத வொண்ணு வருவத்தாய் " என்றது கம்பர் பாட்டு. திருவடியை உட்கொண்டிருத்தலிற்போலும் மறையும் எழுதரியதென்பது.

**திருஅடியில் திருப்பஞ்ச முத்திரை - முத்திரை** - கை-கால் முதலிய அங்கங்களில், சில குறித்தபொருள்களின் வடிவமா யமையும் வரைக்கீற்றுக்களின் கூட்டத்தை முத்திரை என்பது உடற்கூற்று நூல் மரபு. **பஞ்சமுத்திரை** - இவை பதுமம், சங்கம், மகரம், சக்கரம், தண்டம் என்பன. பஞ்சாயுதம் என்னும் தண்டு, வாள், சங்கு, சக்கரம், வில் என்றும் கூறுப. இவை காலில் விளங்கப் பெறுவது யோகிகள், ஞானிகள் முதலிய பெரியோர்களது உடலிலக்கணங்களில் ஒன்றென்பர்.

**அசைந்த—திருவுடை—திருவடிவில்**—என்பனவும் பாடங்கள். 24

890. **(வி - ரை) தழல் முடி போடி என்ன** என்று பொருளுக் கேற்ப மாற்றுக. **தழல்** - இறைவனது திருமேனிப் பொலிவுக்கும், அதனை உட்பொதிந்து மேல் மூடும் சாம்பற்**பொடி** - அவரணிந்த திருநீற்றுப் பரப்புக்கும் உருவம்பற்றி வந்த உவமை. " இவ் வண்ண மிருக்கு மெங்க ளிறைவண்ண வடிவு மந்தச், செவ்வண்ண மேனி பூத்த திரு வெண்ணீ றதுவும் " (மண் - பட - 108) என்ற திருவிளையாடற் புராணத்தினுள் இக் கருத்து விரிக்கப்பட்டமை காண்க. நீறுபூத்த நெருப்பு என்னும் வழக்கும், " நீரூகி நீறுமிழு நெருப்புமாகி " (திருமாற்பேறு - 5) என்ற திருத்தாண்டகமும் காண்க.

**திருநீற்றின்...பான்மையராய்** - பரப்பாய்த் திருநீற்றை அணிந்த பான்மை என்று கூட்டி உரைக்க. நீற்றினை மேனி முழுதும் பரக்கப் பூசுதல் மாவிரதர் மரபு.

**பொலிந்த** - தேற்றமாய் விளங்கிய. " சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணு நிளங் கொங்கையிற் செங்குங்குமம், போலும் பொடியணி மார்பிலங்குமென்று புண்ணியர் போற் றிசைப்ப " (திருப்பல்லாண்டு - 8) என்றபடி தம்மாற் காதலிக்கப்பட்ட இளமகளிர் மேனியிற் கண்ட பூச்சுக், காமுகரை வசமாக்குதல்போல, இத்திருநீற்றின் பரப்பு காயஞரை வசீகரித்தது என்க. அவ்வாறு அதன் வயப்பட்ட " மனச்செவ்வன்பர், பவமாற்றுந் திருநீற்றுப் பொக்கணமுங் " கண்டார் ; தொண்டர்க்கே ஏவல்செயும் தொழிலின (875) ராகிய அவர் இவற்றில் ஈடுபட்டாராய் உய்ந்தொழிந்தேன் (891) என விராதியார தது குறிப்பறிந்து அவர் வேண்டுமதனைக் கொடுக்க முற்பட்டனர் என்பதாம்.

**படிநீதேல்** - என்றும் அழியாதிருத்தல். தன்மை ஒன்குதல் என்றுரைப்பாருமுண்டு.

**கொடி நீடு மறுகு - கொடி** - வெண்கொடி. கேதனம் (83), வெண்கொடி (243), கொடியும் (323), சோதிவெண்கொடிகள் (474) என்றவிடங்களிலுரைத்தவை பார்க்க.

**குளிர்கமலத்து அடி** - நீரிலும் சேற்றிலுமே நின்று வளர்வதனால் தாமரைக்குக் குளிர்ச்சி உரிய பண்பாதலின் **குளிர்கமலம்** என்றார். **குளிர்** - குளிர்விக்கும் எனப் பிறவினையாகப் பொருள்கொண்டு, **குளிரடி** என்று கூட்டித் தன்னை அடைந்தார்க்குப் பிறவி வெயிலின் வெப்பம் போக்கி நிழல்தந்து குளிர்விக்கும் திருவடி என்றலுமாம்.

**அடிநீடும் மனத்து** - திருவடியினை எஞ்ஞான்றும் நீங்காது நிலைபெறக்கொண்ட மனத்தினையுடைய. "இடரினும் தளரினும் எனதுறுநோய் தொடரினும்", "வாழினுஞ்

சாவினும் வருந்தினும்போய் வீழினும் ", " நனவிலும் கனவிலும் ", " தும்மலோ டருந்துயர் தோன்றிடினும் ", " கையது வீழினுங் கழிவுறினும் ", " வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும் ", " வெப்பொடு விரவியோர் வினைவரினும் ", " பேரி டர் பெருகியோர் பிணிவரினும் ", " உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் ", " பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்" என்று பற்பல வகையாலும் திருவாவடுதுறைத் தேவாரத் தில் " திருவடி மறவாப் பான்மையோ" ராகிய ஆளுடையபிள்ளையார் அருளியபடி, இங்கு உலகர் மறக்கக்கூடியனவாகிய எக்காலங்களிலும் நாயனாரது மனத்தில், மறக்கப்பெறாது திருவடி நிலைபெற்று நீடிற்று என்பதாம். உள்ளநிலைப்பொருள் (886), ஆளாகும் பதம் பெற்ற தணிவில்பெரும் பேறுடையார் (873) என்றவை காண்க.

**மனையின் அகம்புகுந்தார்** - மனையில் வந்து அன்பரது மனத்தினுட்புக்கருளினர் என்ற குறிப்பும் காண்க. 25

891. வந்தணைந்த மாவிரத முனிவரைக்கண், டெதிரெழுந்து,
சிந்தைகளி கூர்ந்து, மகிழ் சிறந்தபெருந் தொண்டனார்
" எந்தைபிரான் புரிதவத்தோ ரிவ்விடத்தே யெழுந்தருள
வுய்ந்தொழிந்தே னடியே "னென் றுருகியவன் பொடுபணிந்தார். உசு

(இ - ள்) வெளிப்படை. வந்து அணைந்த மாவிரதராகிய முனிவரைக் கண்டு, அவர் முன்பு எழுந்து நின்று, மனமிகக் களித்து, மகிழ்ச்சிகூர்ந்த பெரிய தொண்ட ராகிய நாயனார், " எந்தைபிரானாகிய புரிகின்ற தவத்தினையுடைய பெருமான் இவ்வி டத்தே வருதலினால் அடியேன் உய்ந்துவிட்டேன் " என்று மனம் உருகிய அன்புடன் அவரைப் பணிந்தனர்.

(வி - ரை) **மாவிரத முனிவர்** - மாவிரதம் என்னும் அகப்புறச் சமயத்தின் கொள் கைப்படி கொண்ட முனிவர் வேடமுடையவர்.

**களிகூர்ந்து - மகிழ்சிறந்து** - ஒரு பொருட் பன்மொழி என்பர். களிகூர்தல் அக நிகழ்ச்சியும், மகிழ்சிறத்தல் அது காரணமாகப் புறத்து நிகழும் மெய்ப்பாட்டுக்கு மூலமா யிருப்பதும் குறித்தன காண்க.

**எந்தைபிரான் புரிதவத்தோர்** - எந்தை பிரானிடத்து அன்பு புரிதவம் என்றும், பிரானைப்புரி (இடைவிடாது போற்றுகின்ற) தவம் என்றும் உரைப்பாருமுண்டு. எந்தைபிரானாகிய இறைவனீரே தவத்தோராய் வந்தீர் என்ற உண்மைக் குறிப்பும் காண்க. இதனைத் தொடர்ந்தே, வரும்பாட்டில் நற்றவராம் பெருமானார் " என்றதும் கருதுக.

**எழுந்தருள உய்ந்தொழிந்தேன்** - எழுந்தருள்வதனால் உறுதியாக உய்திபெறுவேன் என்பதாம். பின் சரித நிகழ்ச்சிக் குறிப்புமாம். துணிவுபற்றி எதிர்காலம் இறந்த கால மாய் வந்தது. வருதலால் உய்தி பெற்றேன் என்று இறந்தகாலப் பொருளே கொண் டுரைப்பாருமுண்டு.

இதனாற் பெரியாரைக் கண்டு களித்துப் பணியும் முறை காட்டப்பட்டது. 26

892. நற்றவராம் பெருமானார் நலமிகுமன் பரைநோக்கி
" யுற்றசெயன் மங்கலமிங் கொழுகுவதென் " னென, " வடியேன்
பெற்றதொரு பெண்கொடிதன் வதுவை "யெனப், பெருந்தவரும்
" மற்றுமக்குச் சோபனமா குவ "தென்று வாய்மொழிந்தார். உஎ

(இ - ள்) வெளிப்படை. நல்ல தவராக வந்த இறைவனார், நன்மை மிகும் அன் பராகிய மானக்கஞ்சாறரைப் பார்த்து, " இங்கு மங்கலம் பொருந்த நிகழ்வதாகிய செயல் என்ன ?" என்று கேட்க, அவர் அடியேன் பெற்றதொரு பெண்கொடியின்

மணங்கழ்ச்சி யிது " என்று சொல்லப், பெருந்தவர் " உமக்கு மற்று மங்கலம் உண் டாகக்கடவது " என்று வாய்மொழிந்தார்.

(வி - ரை) **தவராம்** - மாவிரத முனிவராம் வேடம்பூண்ட. **நலம் மிகும்** - முன் னரும் நலமுடையார் ; இப்போது மேலும் நலம் மிகப்பெறுகின்றார் - பெறவுள்ளார் என்க. சரித நிகழ்ச்சிக் குறிப்பு.

**இங்கு மங்கலம் உற்ற செயல் ஒழுகுவது என்** ? என மாற்றுக. அச்செயலாவன சுற்றமெலாங் களி சிறப்ப மூளைப்பெய்து, மூதூர் வதுவை முகங் கோடித்த செயல் முதலியன (884). இவற்றை " மணவினைக் கமைந்த செய்கை மாதினைப் பயந்தார் செய்ய " (158) என்றது காண்க. ஆளுடையபிள்ளையார்புராணம் 1172 - 1181 திருப்பாட்டுக்களில் இவை விரித்தோதப்பட்டதும் பார்க்க. நாம் இங்கு **உற்ற செய** லாவது மங்கலமாம் என்ற பொருள்பட உரைக்க நின்றதும் காண்க.

**பெற்றது ஒரு பெண் கோடி - பெற்றது** - பிழைக்கு நெறி தமக்கு உதவப்பெற் றது என்ற குறிப்புப் பெறக் கூறினர். **கோடி** என்றதற் கேற்பப் **பெற்றது** என அஃறிணையிற் கூறினர். **ஒரு** - ஒப்பற்ற என்றதும் குறிப்பு. **பெண்கோடி** - (876) பார்க்க. பொற்கொடி (877), மடக்கொடி (894) என்பவை காண்க.

**பெருந்தவர்** - மாவிரத முனிவர் என மேற்பாட்டிலும், நற்றவர் என இப் பாட்டிலும், ஞானச் செய்தவர் என வரும் பாட்டிலும் கூறியது காண்க. **பெருந்தவர்** என்றது சுட்டுப்பெயராய் நின்றது.

**மற்று** - மற்றும் - வேறு என்பது வெளிப்பொருள். நீர் எண்ணிய வதுவை யாகிய மங்கலம் நீர் காணப்பெறீர் ; மற்று அதனின் நல்ல சோபனமாகிய " ஐயர் பெருங்கருணைத் திறம்போற்றும் பெரும்பேறு " (898) என்ற முத்திப் பேறு உமக்கு ஆகுக என்ற குறிப்பினாற் பெறும் உள்ளுறைப் பொருளும் காண்க.

**சோபனம்** - மங்கலம் - நன்மை. சுபம் என்ற சொல்லடியாற் பிறந்த பெயர். சுபத்தால் விளையும் பயன். **வாய் மொழிதல்** - ஆசிகூறுதல். 27

893. ஞானச்செய் தவரடிமேற் பணிந்துமின வகநண்ணி
மானக்கஞ் சாறனார் மணக்கோலம் புனைந்திருந்த
தேனக்க மலர்க்கூந்தற் றிருமகளைக் கொண்டணைந்து
பானற்கண் கரமறைத்து வருமவரைப் பணிவித்தார். உஅ

(இ - ள்) வெளிப்படை. ஞானவடிவுடையாய்ச் செய்யும் தவவேடம் தாங்கிய வரது திருவடியில் வீழ்ந்து வணங்கி, மனைக்குள்ளே சென்று, மணக்கோலம் பூண்டி ருந்த, தேன் பொருந்திய புதிதாக மலர்ந்த மலர்களணிந்த திருமகளாரை உடன் கூட்டிக்கொண்டுவந்து, திருநீலகண்டத்தை மறைத்துவந்த வடியில் வீழ்ந்து வணங் கச்செய்தனர்.

(வி - ரை) **ஞானச் செய்தவர்** - அவரது திருமேனி ஞானநிறைவேயாம் ; தாங்கி வந்த வேடம் செய்தவவேடமாம் என்பது.

**அடிமேற் பணிந்து** - முனிவரைக் கண்டெழுந்து முன் பணிந்தனர் (891) என் றது பெரியோரைக் கண்டதும் வணங்கும் முறை. இங்கு **அடிமேற்பணிந்தது** என்றது அவர் ஆசி கூறியதற்கு முறைமையின் அடிவீழ்ந்து வணங்கிய சிறப்பு வணக்கம்.

**மணக்கோலம் புனைதல்** - மணமகளுக்குரியபடி அலங்கரிக்கப் பெறுதல். " செம் பொன்செய் வாசிச் சூட்டுத் திருமணிப் பூணுண் டெய்வப், பைம்பொனின் மாலை வேய்ந்த பவளமென் கொடியொப் பாரை, நம்பன்ற னருளே வாழ்த்தி நல்லெழில் விளங்கச் சூட்டி, யம்பொன்செய் தீப மென்ன வழகலங் கரித்து வைத்தார் " (திரு ஞான - புரா - 1223) என்றது பார்க்க.

மாவிரதியார் (பஞ்சவடி நாதர்)

—பாட்டு - 887–890 - பக்கம் - ககசக



மானக்கஞ்சாற நாயனர்

—பாட்டு -895 -பக்கம் - ககதo



ஏயர்கோன்கலிக்காமனும்
மனைவியாரும்

—பாட்டு 901 - பக்கம் - ககடுடு

மானக்கஞ்சாறநாயனும்
மகளாரும்

—பாட்டு - 893 - பக்கம் - ககசக

**தேன் நக்க மலர்** - **தேன்** - வண்டு. நறவு என்றலுமாம். **நக்க** - புதிதாக அலர்தல் குறித்தது. "நகைக்கும் பதத்தி னுடன்பறித்த" (முருகர் - புரா - 7), "அலரும்வேலை" (559) முதலியவை பார்க்க.

**திருமகள்** - திருமகட்கு மேல்விளங்கும் (881) என்றவிடத்துரைத்தவை பார்க்க. நாயனாருக்குப் பிழைக்குநெறி உதவி (876) இறைவனது அருளாகிய திருவைத்தேடித் தரும் மகள் என்ற குறிப்புமாம்.

**பானல் கந்தரம் மறைத்து வரும் அவர்** - **பானல்** - நீலமலர். **பானற்கந்தரம்** - நீல மலர்போன்ற நிறமுடைய திருநீலகண்டம். தமது திருநீலகண்டத்தை மறைத்து மாவிரதராகிய வேடம் பூண்டு வந்தவர் என்க.

**பணிவித்தார்** - பணியச்செய்தனர். பணியுமாறு பணித்தனர். மகளார் தாமே அடியார்களைப் பணியும் நியதியுடையா ராயினும், இங்கு மணப்பெண்ணாகியதற் கேற்பப் பெரியோர் பணித்தபடி செய்யும் நிலைகுறிக்கப் பிறவினையாற் கூறினார். வரும்பாட்டில் இதுபற்றியே "தாழ்ந்தெழுந்த மடக்கொடி" என்றதும் காண்க. 28

894. தஞ்சரணத் திடைப்பணிந்து தாழ்ந்தெழுந்த மடக்கொடிதன்
மஞ்சுதழைத் தெனவளர்ந்த மலர்க்கூந்தற் புறநோக்கி,
யஞ்சலிமெய்த் தொண்டரைப்பார்த், "தணங்கிவடன் மயிர்நமக்குப்
பஞ்சவடிக் கா"மென்றார் பரவவடித் தலங்கொடுப்பார். உகூ

(இ - ள்) பரவ...கொடுப்பார் - தம்மைத் துதிப்பவர்களுக்குத் தமது திருவடித் தலம் கொடுப்பவராகிய சிவபெருமான் ; தம் சரணத்திடை...நோக்கி - தமது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்ற மடமையுடைய கொடிபோல்வாரது மேகம் தழைத்ததுபோலத் தழைத்து வளர்ந்த மலரணிந்த கூந்தலின் புறத்தை நோக்கி ; அஞ்சலி...பார்த்து - கும்பிட்டு நின்ற உண்மைத் தொண்டனாரைப் பார்த்து ; "அணங்கு... ஆம்" என்றார் - "அணங்குபோல்வா ளாகிய இவளது மயிர் நமக்குப் பஞ்சவடிக்கு ஆகும்" என்று சொன்னார்.

(வி - ரை) **மஞ்சு...கூந்தல்** - **மஞ்சு** - மேகம். **தழைத்தல்** - தாவரவுயிர்கட்குரிய தளிர்த்து வளர்தலாகிய செயலை மேகத்திற்கேற்றி, மேகம் தாவர வகையுட்பட்டதுபோல உவமித்தார். மேகத்தின் நீர்ச்செறிவினாலாகிய கருமையும், விரிவும், அசைவும் கூடிய தோற்றம் தழைத்த மரம்போன்றிருத்தலின் இவ்வாறு கூறினார். தழைத்தாலென எனற்பாலது **தழைத்தென** என நின்றது. **தழைத்தாற்போல வளர்ந்த** என்க. பயனும் மெய்யும் உருவும்பற்றி வந்த இல்பொருள் உவமை. **வளர்ந்த** - செறிந்து வளர்ந்த. மேகம் கூடிச்செறிந்தால் உலகு தழைக்கச் செய்யும் ; இங்கு இக்கூந்தல் வளர்ந்ததனால் அருண்மழை பெய்தற்குக் காரணமாயிற்று ; நாயனார் உய்ந்தனர் ; அது கண்டு "செழும்புவனங்கள்" உய்ந்தன எனப் பயனும் மெய்யும் பற்றிய உவமையாதல் கண்டுகொள்க. "பிழைக்குநெறி தமக்குதவ" (876), "இந்தச் செழும் புவனங்களில் ஏறச்செய்தோம்" (897) என்றதனாற் பயன் போந்தமையும், "இருள்செய்த கருங்கூந்தல்" (895) என்றமையால் உருவுவமையாதலும் காண்க.

**கூந்தற் புறம் நோக்கி** - கூந்தலினது நீளம், செறிவு, கருமை முதலிய புறத் தோற்றம் பற்றியே "இது பஞ்சவடிக்கு ஆம்" என்கின்றாராதலின் அது குறிக்கக் **கூந்தல் நோக்கி** என்னாது கூந்தற் **புற** நோக்கி என்றார். **நோக்குதல்** - ஊன்றிப் பார்த்தல். இங்கு ஊன்றிய நோக்கத்தினை வெளிப்படுத்தாது, வெளிப்பார்வைத் தொழில் மட்டும் காட்டப்பட்டமை குறிக்கவும் **புறநோக்கி** என்றார். மானக்கஞ்சாறரது அன்பை உலகுக்கு அறிவித்து உய்வித்தல் (897) அவரது அகநோக்கம் என்பது பின்னர்க் காண்க. "கழன்மனத்துக், கொண்ட கருத்தி னகநோக்கும் குறிப்பே யன்றிப்

புறநோக்கும் கண்ட வுணர்வு குறைந்தார்போல் " என்ற தண்டியடிகள் புராணக் கருத்தினை இங்குச் சிந்திக்க. தம் முன் பணிந்து ஐந்தங்கமும்தோயத் தாழ்ந்தெழுந்தவரது கூந்தலின் புறமே தோற்றப்படுமாதலின் புறநோக்கி என்றார் எனவும், புறம்கூந்தல் எனக் கொண்டு முதுகினிற் கிடந்த கூந்தல் எனவும் உரைப்பாருமுண்டு.

அஞ்சலி மெய்த்தொண்டர் - மகளாரைக் கொணர்ந்து பணிவித்த நாயனார் மாவிராயினைத் தாமும் அஞ்சலி செய்தபடியே நின்றனர் என்பதாம். மெய் - இயற்கையடைமொழி.

அணங்கு இவள் - அணங்கு போன்ற இவள் என உவமஉருபு விரிக்க. அணங்கு. தெய்வப் பெண்.

மயிர் - எவ்வகை உயர்வான கூந்தலேயாயினும் தலையினின்று களையப்பட்டபின் " தலையினிழிந்த மயிர் " என்று இகழ்ந்தொதுக்கப் படுவதோர் அசுத்தப் பொருளாமாதலின் இங்கு மயிர் என்று இலேசுபடக் கூறினார். மஞ்சுதழைத்தது போலும் என்பது முதலிய பெருமைகளுடையது என்று எண்ணுது நாம் இதனை மயிர் என்ற மட்டிலே கருதுவோம் என்பதும், அரிந்து பின்னர் அதனை மீள அவ்வாறே வளரக் கொடுத்துவிடுவோம் என்பதும், இவ்வாறு இழிந்ததாகக் கருதும் மயிரேயாயினும் நாம் தரிக்கும் உயர்ந்த மயிர்க்கயிற்றுப் பூணூலுக்கு ஆகும் என்பதும், உயர்ந்த பயன்தருவதாம் என்பதும் ஆகிய இவை குறிக்கவே மயிர் - பஞ்சவடிக்கு - ஆம் என்றார்.

பஞ்சவடி - மயிர்க்கயிற்றாலியன்ற பூணூல் வடம். (பஞ்சம் - விரிவு; வடி - வடம்) மயிரினால் அகலமாகப் பின்னல் செய்த மயிர்க்கயிற்றுப் பூணூல் வடம். " மயிர்க்கயிறு தரித்தான் றன்னை ", " பஞ்சவடி மார்பினானை " முதலிய தேவாரங்கள் காண்க.

அடித்தலங் கொடுப்பார் பஞ்சவடிக்கு ஆம் என்றார் - என்று கூட்டுக. கொடுப்பார் - வினையாலணையும் பெயர். பரவ அடித்தலம் கொடுக்கு மியல்புடையார் ஆதலின் மயிர் பஞ்சவடிக்காம் என்றார் என்க. பரவுதல் - மன மொழி மெய்களால் வழிபடுதல். பஞ்சவடிக்காக மயிரை அரிந்து நீட்டிய நாயனார் பரவ அவர்க்குத் தம் அடித்தலமாகிய முத்தி கொடுப்பாராகி - என்றார் என்று கூட்டிக் கொடுப்பார் என்றதனை வினை முற்றெச்சமாகக் கொண்டுரைப்பினுமமையும். அடித்தலம் கொடுத்ததனை 898 - ல் கூறுகின்றார்.

அலர்ந்தமலர்க் கூந்தல்—என்பதும் பாடம். 29

895. அருள்செய்த மொழிகேளா வடற்சுரிகை தனையுருவிப்,
" பொருள்செய்தா மெனப்பேற்றே " னெனக்கொண்டு, பூங்கொடிதன்
இருள்செய்த கருங்கூந்த லடியிலரிந், தெதிர்நின்ற
மருள்செய்த பிறப்பறுப்பார் மலர்க்கரத்தி னிடைநீட்ட, கூ0

896. வாங்குவார் போனின்ற மறைப்பொருளா மவர்மறைந்து
பாங்கின்மலி வல்லியுடன் பழையமழ விடையேறி
யோங்கியவிண் மிசைவந்தா ; ரொளிவிசும்பு நிலகெருங்கத்
தூங்கியபொன் மலர்மாரி ; தொழும்பர்தொழு தெதிர்விழுந்தார். கூக

895. (இ - ள்) வெளிப்படை. இவ்வாறு அருளிச் செய்த மொழிகளைக்கேட்டு மானக்கஞ்சாறனார் வலிமையுடைய உடைவாளை உருவிப், " பொருட்படுத்தி (இது பஞ்சவடிக்கு)ஆம் என்று சொல்லப்பெற்றேன் " என்று மனத்துட்கொண்டு, பூங்கொடி போன்ற மகளாரது இருள்செய்த கரிய கூந்தலை அடியில் அரிந்து, எதிரே நின்ற, மயக்கம் செய்யும் பிறப்பை யறுப்பாருடைய மலர்க்கையில் நீட்ட, கூ0

896. (இ - ள்) வெளிப்படை. அதனை வாங்குவார்போல நின்ற மறைப்பொருளா கிய அவர் மறைந்து, பக்கத்தில் பார்வதியம்மையாரோடு, தமது பழைய இளைய இடப வேற்றினையேறி, மேலோங்கிய ஆகாயத்தின் மேல் வெளிப்பட்டு வந்தருளினர். ஒளி பொருந்திய ஆகாயமும் நிலமும் நிறைய அழகிய கற்பகப்பூமாரி பெய்தது. அன்பரா கிய மானக்கஞ்சாறனர் தொழுது எதிரே நிலமுற வீழ்ந்தனர். ஙூக

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

895. (வி - ரை) அடல் சூரிகை - அடல் - போர் எனக்கொண்டு போர்க்கருவி யாகிய சூரிகை என்பாருமுண்டு.

**பொநள் செய்து ஆம் எனப் பேற்றேன்** - பொருளல்லாத இதனையும் பொருட்படுத்தி "இதுபஞ்சவடிக்கு ஆகும்" என்று சொல்லும்பேறு பெற்றேன் என்க. இங்குப் "பொருள் செய்தாம்; என்பெற்றேன்" என்று பாடங் கொண்டு, **பொநள்** - முற்பிறப்பிற் செய்த நல்லகருமம் என்று உரை கொண்டு, முன் செய்த நற்றவத்தால் இவ்வாறு கொடுப்பது ஒருவற்குக்கிடைக்கும்; நான் என்ன புண்ணியஞ் செய்தேன்? என்று உரைகொள்வர் மகாலிங்கையர். பெரும்பொருளை ஆக்கிக்கொண்டவன் போல (இப்பெரியார் இதனைக் கேட்கப்) பெற்றேன் என்பது ஆறுமுகத் தம்பிரானருளை. இதனை மறுத்து, மொழிகேட்டு அதற்கு உண்மைப் பொருள் செய்து, அதன்படி செய்யத்துணிந்து, இதனை ஆம் என்று செய்யும்பேறு பெற்றேன் என மகிழ்ந்து என்று கூறுவர் ஆலாலசுந்தரம்பிள்ளை.

**இநள் செய்த - இநள்** - கருநிறங்குறித்து நின்றது. ஆகுபெயர். **இநள் செய்த** - கருநிறம்பரப்பிய. "கருங்கதிர் விரிக்கு மேனி" என்றது காண்க. **இநள்** - மயக்கம் எனக்கொண்டு, கூந்தல் அழகியது - உடற்கூறு அழகியது என்றெல்லாம் இவ்வுட லைப் பற்றிக் கொண்டு அலையும் உலகியல்பு குறித்ததாக உரைப்பதுமாம். உலகர் அவ்வாறு மயங்காவண்ணம் காட்டும் நிலையில், இதுவரை **இநள் செய்த - மயக்கம் செய்த** - இனி உண்மைகாணக் காரணமாயின - கூந்தல் என்று இப்பொருட்குக் குறிப்பு உரைத்துக் கொள்க. மானக்கஞ்சாறனர்போல் "மெய்ப்பொருளை யறித்துண" ராத (872) ஏனை உலகர்க்கு மகளிரது கூந்தல் முதலியவை **இநள்** - மயக்கம் - செய்வன என்ற பொது இலக்கணமாகக் கூறியதாகக் கொள்க. இதனைத் தொடர்ந்து **மநள் செய்த பிறப்பறுப்பார்** என்றதும் உன்னுக. **இநள்** - ஆகுபெயராய் மேகத்தை உணர்த் தியதெனவும், **செய்த** - உவமஉருபெனவும் கொண்டு மேகம் போன்ற கரிய கூந்தல் என்றலுமாம். மேல் **மஞ்சுதழைத்தேன்** என்றது காண்க.

**அடியில் அரிந்து** - அந்தப் பற்றுச் சிறிதும் எஞ்சிநில்லாவகை அடியோடு களைந்து என்பது குறிப்பு. "பாசப் பழிமுதல் பறிப்பார்போல" என்றது காண்க.

**எதிர்நின்ற** - முன்னே நின்றவராகிய பிறப்பறுக்கு முதல்வர். "தாவியவ னுடனிருந் தும் காணுத தற்பரன்" (ஆளுடையபிள்ளையார் - திருக்கோளிலி) என்றபடி எதிரேவரக் காணமுடியாதவர் இவருக்கு எதிர்வந்து நின்றார் என்பது குறிப்பு. **எதிர்நின்ற மநள்** என்றுகொண்டு, உயிர்களை அறிவு மயங்கச்செய்து தம் இனமாகிய தலைவனை யடையா மல் எதிர்த்துக்கட்டி அது காரணமாகப் பிறப்பில் வீழ்த்தும் மயக்கம் என்றுரைக்க நிற்ப தும் சிந்திக்க. "பொநளல்லவற்றைப் பொநளென்றுணரும், மநளாலு மாணப்பிறப்பு" என்ற திருக்குறட் கருத்து இங்குத் தோற்றுவதனையும் உன்னுக. கூந்தல் முதலி யனவாய் மெய் என்று பேர்பெற்ற **பொநளல்லாத** பொய்யினைப் பொருளெனக் கொண்டு அவற்றுக்காவனவே செய்து இறந்து பிறந்தழலும் **மநளினால்** ஆகிய மானிட வாழ்க்கையை நோக்கி இவ்வாறு கூறினர் என்பதும் காண்க.

இனி, உலகபோகப் பொருள்கள் **பொநளல்ல** என்று தள்ளுதலும், அவையே **பொநளாம்** என்று கொண்டழலுதலும் ஆகிய இரண்டும் தவறுடையன; சிவனுக்கும் அடியாருக்கும் பயன்படும் அவ்வளவிற்கே பொருளாம் என்றுணர மருள்செய்த பிறப்ப

றும் என்று சேர்த்துரைத்துக்கொள்ளுதலும் ஆம். "ஆவன ஆகுமென்று" (470) என்றதும் காண்க.

**மருள்செய்த பிறப்பு அறுப்பார்** - "மையல் செய்திம் மண்ணின்மேற் பிறக்கு மாறு காட்டினும்" (திருஞா - தேவா - கட்டாகம் - திருத்தருத்தி - 5) என்றபடி மருளினாலாகிய பிறவியினை அறுத்துத் திருவடித்தலம் கொடுப்பதற்காக எதிர்நின்று செய்த இச்செயல் முடிகின்ற இடமாதலின் இங்கு இத்தன்மையாற் கூறினார்.

**பிறப்பு அறுப்பார் மலர்க்கரம்** - தமது கையினாற் காட்டும் ஞானமுத்திரையால் பிறப்பு அறும்வகை கூட்டுவார் என்ற குறிப்பும் காண்க. (மானக்கஞ்சாறர்) - நீட்ட - (அவர்) - மறைத்து - வந்தார் என வரும்பாட்டுடன் கூட்டி முடிக்க. பெற்றேன் என - கொண்டு-அரிந்து-நீட்ட என்ற வினைகட்கு, மானக்கஞ்சாறர் என எழுவாய் வருவிக்க.

896. (வி - ரை) **நின்ற** - மேலே **எதிர்நின்ற** (895) என்றார். திருவருத்திரம், நின்ற திருத்தாண்டகம் முதலிய திருமறைகளாலறியப்படுமாறு, எல்லாமாய் நிற்பவராதலின் மாவிரத முனிவராய் வந்து நின்றார் - எதிர் நின்றார் - இங்கு வாங்குவார்போல் நின்றார் - இனி அவரே மறைத்து நிற்பார் - விடைமேனிற்பார் என்க. இதுபற்றியே **இங்கு மறைப்பொருளாமவர்** என்றும், **மறைந்து** என்றும் கூறியதாம். **மறைப்பொருளாம் அவர்** என்றது தம் உண்மைக்கோல மறைத்துவரும் பொருள் என்று குறிப்பதும் காண்க.

**மலைவல்லி** - மலையரசன் மகளாய் வந்த கொடிபோல்வாராகிய உமையம்மை.

**பாங்கின்** - ஒரு கூற்றிலே. **பாங்கின் வந்தார்** என்று கூட்டி, அருளும் பாங்கிலே இவ்வாறு அருட்கூறுடன் வெளிப்பட எழுந்தருளினார் என்றலுமாம்.

**பழைய மழவிடை** - பழைய - எஞ்ஞான்றும் தமக்குரிய என்ற பொருளில் வந்தது. **மழ** என்றது எண்ணிலாக்காலத்தாற் பழமைபெறினும், மாறுத இளமையுடைய தெனக் குறித்தது.

**ஓங்கிய விண்** - எல்லாவற்றினும் உயர்ந்து நிறைந்த ஞாலாகாயம். முன்னர்க்கீழே இருநிலத்தின் மிசைத் திருவடிதோய வந்தவர் (889), இங்கு மேல் ஓங்கிய விண்மிசை வந்தார் என்க.

**பொன்மலர் மாரி தூங்கிய - பொன்மலர் - பொன்** அழகு குறித்தது. பொன்னிறமுடைய கற்பகமலர் என்பாருமுண்டு. **தூங்கியது** என்பது **துவ்வீறு** குறைந்து நின்றது. **தூங்கிய பொன்மலர் மாரி** - மிக்க கற்பகப் பூமழை பெருங்க என்றலுமாம். தூங்கிருள் என்றதற்குச் செறிந்த இருள் என்று நச்சினார்க்கினியர் உரை கொள்வது காண்க.

**விசும்பு நிலம்** - விசும்பும் நிலமும். எண்ணும்மைகள் தொக்கன. **விசும்பின் நிலம் நெருங்க** என்பது பாடமாயின் ஆகாயத்தின் வெளிமுழுதும் என்க. விசும்பினின்றும் நிலத்தின்மேல் நெருங்க என்றலுமாம்.

**தொழுது எதிர் விழுந்தார்** - தொழுதுகொண்டே கீழ் வீழ்ந்தனர். "தொழுதெழுவாள்" என்ற குறளிற்போலக் கொள்க. வந்ததனைக்கண்டவுடன் தொழுதலும் வீழ்தலும் ஒருங்கே நிகழ்ந்தனவாயினும் அவ்விரண்டனுள் முன்னைப் பழக்கத்தாற் கைகள் தாமாக முன்னர்ச் சிரமேற் குவிந்தன என்பார் **தொழுது** என முன் வைத்தனர். இதுபற்றியே இங்குத் **தொழும்பர்** என்ற சொல்லாற் கூறினர். "தொண்டர்க்கே யேவல்செயும் தொழில்பூண்டார்" (873) எனத்தொடக்கத்திற்கூறியதனை நினைக்க.31

897. விழுந்தெழுந்து மெய்ம்மறந்த மெய்யன்பர் தமக்குமதிக்
கொழுந்தலைய விழுங்கங்கை குதித்தசடைக் கூத்தனார்
"எழும்பரிவு நம்பக்க லுனக்கிருந்த பரிசிந்தச்
செழும்புவனங் களிலேறச் செய்தோ"மென் றருள்செய்தார். கூ

(இ - ள்) வெளிப்படை. (எதிரிற் கீழே) விழுந்து எழுந்து மெய்ம்மறந்து நின்ற மெய்யன்பருக்குப், பிறைச்சந்திரன் அலையும்படி பெருகி விழுகின்ற கங்கையாறு பொங்கிய சடையினையுடைய கூத்தனார், "உனக்கு எம்மிடத்து எழுகின்ற அன்பின் தன்மையை இத்தச் செழித்த உலகங்களில் ஏறும்படி செய்தோம்" என்று அறிவித்து தமது திருவருளினைச் செய்தனர்.

(வி - ரை) **விழுந்து எழுந்து** - எதிர் விழுந்ததனை மேற்கூறினாதலின் அவ்வாறு விழுந்தவர் எழுந்து என்க.

**மெய்ம்மறந்த** - "செய்வதொன்று மறியேனே" (திருவாசகம் - திருச்சதகம்). "ஒன்று மறிந்திலர் வாதவூர் முனிவர்" (திருவிளை - புரா - வாத - உப - பட - 47) என்றபடி இன்ன நிலைமையினர் என்றறியாது நின்றனர் என்றதாம்.

**மெய்ம்மறந்த மெய்யன்பர்** - மெய் என்ற பெயரால் வழங்கும் பொய்யாகிய உடலையும் உடல் சூழ்ந்தவற்றையும் உடலினுள் வாழும் தம்மையும் மறந்தார். ஆனால் மெய்யாகிய அன்பு மயமாய் விளங்கினர் என்றதாம். பொய்யன்புக் கெட்டாத இறைவர் கஞ்சாறனார் காண வெளிப்பட்டது அவரது உண்மையன்பு பற்றி என்ற படியாம்.

இறைவரது அருள் வெளிப்பாடுகள் மானக்கஞ்சாறனார் பொருட்டு நிகழ்ந்து அவர்க்கு முதலில் அறிவிக்கப்பட்டனவாகலான் **அன்பர் தமக்கு** என்றார்.

**மதிக் கொழுந்து** - மூன்றும் பிறை. மேல் தழைக்க உளதாதலின் **கொழுந்து** என்றார். கொழுந்துபோல்வதனைக் கொழுந்தென்ற உபசாரம்.

**அலையவிழும்** - கங்கைப் பெருக்கின் அலைகள் தாழும்பி வீழ அதன் கரையாகிய சடையில் உள்ள சந்திரன் அலைகின்ற தென்பது கருத்து.

**குதித்த சடை** - ஆகாயத்திலிருந்து பூமியில் இறங்குவதற்குமுன் கங்கை சிவபெருமானது சடையில் ஆயிரமாமுகத்திலேடு பெருகிய வேகத்தால் இறங்கியதனைக் **குதித்த** என்றார். குதித்தற் கிடமாகிய சடை.

**எழும்பரிவு** - மேன்மேலும் அதிகரிக்கும் அன்பு. "மேன்மேல்வந் தெழுமன் பால்" (800) என்றது பார்க்க. **உனக்கு நம் பக்கல் எழும் பரிவு இந்த பரிசு** என மாற்றுக.

**ஏறச்செய்தல்** - உணரச்செய்தல்-உணர்த்துதல். "அறிவிக்க வன்றி அறியா வுளங்கள்" என்றவாறு படிமுறையால் இறைவர் உணர்த்தினாலன்றி உயிர்கள் உண்மை உணரமாட்டா. "நினையுமா நினையே" என்று (திருவிசைப்பா - கோயில்) திருமாளிகைத்தேவர் அருளியவாறு இறைவர் இங்குச் செழும்புவனங்கள் பரிவின் பரிசு உணரத் தாம் உணர்ந்தருளினர் என்பதாம்.

**அருள் செய்தார்** - அருளாவன அறிவித்தலும், தமது காட்சி கொடுத்தலும், கருணைத்திறம் போற்றும் பெரும்பேறு நேர்பெறத் தந்து தமதுலகத்திற் சேரச் செய்தலும் ஆம்.

**அருள்செய்தார்** என்றதற் கேற்பக் கூத்தனார் என்றதும் காண்க. **அருள்செய்தார்** - சொன்னார் என்பாருமுண்டு. 32

893. மருங்குபெருங் கணநாதர் போற்றிசைப்ப வானவர்கள்
நெருங்கவிடை மேற்கொண்டு நின்றவர்முன் னின்றவர்தாம்
ஒருங்கியநெஞ் சொடுகரங்க ளுச்சியின்மேற் குவித்தையர்
பெருங்கருணைத் திறம்போற்றும் பெரும்பேறு நேர்பெற்றார். கஉ

(இ - ள்) வெளிப்படை. பக்கத்திற் பெரிய கணநாதர்கள் துதிக்கவும், தேவர்கள் நெருங்கி வாவும், இடபவாகனத்தினை ஏறி வந்துநின்ற பெருமான்முன் நின்றவராகிய

மானக்கஞ்சாறனார், ஒன்றுபட்ட மனத்துடனே, கைகளை உச்சிமேற் கூப்பிக்கொண்டு, சிவபெருமானது பெரிய கருணைத் திறத்தை எக்காலும் துதிக்கும் பெரும்பேற்றினை நேரே பெற்றனர்.

(வி - ரை) **பெருங்கணநாதர்** - பெரிய சிவகணத் தலைவர்கள்.

**நின்றவர்முன் நின்றவர்** - சொற்பொருட்பின் வருநிலை. (விடைமிசை) நின்றவர் என்றதற்கு வந்துநின்ற இறைவர் எனவும், (முன்) நின்றவர் என்றதற்கு எழுந்து நின்றவர் எனவும் கொள்க.

**ஒருங்கிய நெஞ்சு** - "ஒன்றியிருந்து நினைமின்கள்" (கோயில் திருவிருத்தம்), "ஒருங்கிய மனத்தோடு" (திருவெழுகூற்றிருக்கை), "ஒருவனையு மல்லா தணைரா ளுள்ளம்" (திருத்தாண்டகம்) என்றபடி பிறிதொன்றிலும் செல்லாது, சிவபெருமானிடத்தில் முழுமையும் நிலைத்த மனம்.

**காங்கள் உச்சியின்மேற் துவித்து** - "தொழுது விழுந்தார்" (896) என்றது போல இச்செயல் பயிற்சி வசத்தால் தானுகவே நிகழ்வது.

**ஐயர்** - பெருமையையுடையவர் - சிவபெருமான்.

**பெருங் கருணைத்திறம்** - தம்மையும் ஒரு பொருட்படுத்தி இறைவர் தாமே மாவிரதியாராக வந்தும், மயிரினைக்கேட்டும், மறைந்தும், விடைமேல் வெளிப்படவந்தும், பரிவு புவனங்களில் ஏறச் செய்தோம் என்றும் செய்த அருட்டிறங்களையே பேரருள் என்று எண்ணியெண்ணிச் சிந்தைசைந்து போற்றிஞராதலின் **திறம் போற்றும்** என்றார்.

**நெஞ்சு - காம் - போற்றும்** - என்றவற்றுல் முறையே மனம் - மெய் - மொழி என்ற மூக்காரணங்களின் செயலும் கூறினர்.

**ஒருங்கிய நெஞ்சொடு** - மூக்காரணங்களும் இறைவர் பாலனவாக ஒருவழிப்பட்டுச் சென்றன என்பார் ஒருங்கிய என்றார். ஏனை, மெய்ம்மொழிகளின் தொழில்களுக்கும் மன இயக்கமே காரணமாதற் சிறப்புடைமை பற்றி **ஒருங்கிய நெஞ்சொடு** என்று அவற்றை மனத்தொடு புணர்த்தியோதினர். **பெரும்பேறு**-பெறுதற்கரிய பெரிய பேறு. இங்கு இறைவர்பாற் கூடுதலாகிய மூத்திப்பேறு குறித்தது. திருவடிமறவாது போற்றியிருத்தல் முத்தி யிலக்கணமென்பர். "ஏகமாய் நின்றே" என்னும் சிவஞானபோதம் நோக்குக.

**நேர்பெற்றார்** - நேரே பெற்றனர் என்க. உடனே பெற்றார் என்றலுமாம். நேராகப் பெற்றார் - அடையப்பெற்றார் என்பாரு முண்டு. 33

899. தொண்டனார் தமக்கருளிச், சூழ்ந்திமையோர் துதிசெய்ய
இண்டைவார் சடைமுடியா ரெழுந்தருளிப் போயினார்.
வண்டுவார் குழற்கோடியைக் கைப்பிடிக்க, மணக்கோலங்
கண்டவர்கள் கண்களிப்பக், கலிக்காம ஞர்புகுந்தார். கூச

(இ - ள்) வெளிப்படை. தொண்டனாருக்கு இவ்வாறு அருளிச் செய்தபின், தேவர்கள் சூழ்ந்து துதிக்க, இண்டை மாலையை யணிந்த நீண்ட சடையினையுடைய சிவபெருமான் மறைந்தருளினர். வண்டுகள் மொய்த்தற்கிடமாகிய கூந்தலினையுடைய மணமகளாரை மணஞ் செய்துகொள்ளும் பொருட்டு, மணக்கோலத்தைக் கண்டவர்களுடைய கண்கள் களிப்படையும்படி கலிக்காமனார் வந்தணைந்தனர்.

(வி - ரை) **தொண்டனார் தமக்கு** - மெய்யன்பர் தமக்கு (897) என்றது பார்க்க.

**இமையோர் சூழ்ந்து துதிசெய்ய** என்க. மானக்கஞ்சாறனார் பெற்ற பெரும் பேறுபற்றித் தேவர்கள் துதித்தனர். இப்பேறு தமக்குப் பெறுதற்கரியதாயினமை கருதியும் துதித்தனர் என்க.

**இண்டை** - முடிக்கணியும் மாலைவகை. "தொண்ட ரஞ்சுகளிறும் மடக்கிச் சுரும்பார் மல, ரிண்டை கட்டி வழிபாடு செய்யுமிடம்" (திருஞா - தேவா செவ்வழி -

கேதாரம் - 1) என்ற தேவாரமும், " இண்டைச்சுருக்கும் தாமம் " (முருகர் புரா - 9) என்றதும் காண்க.

**எழுந்தருளிப் போயினார்** - மறைந்தருளினார் என்ற பொருள் தரும் மரபு வழக்கு.

**வண்டுவார்குழல்** - அச்சமயம் மணமகளாரின் கூந்தல் அடியில் அரிந்து எடுக்கப் பட்டமையின், இது குழலுக்கு இயற்கை யடைமொழி மாத்திரையாய் நின்றது. பின்னர் இவர் கைப்பிடிக்குமுன் திருவருளால் இப்பூங்கொடியார் பூணைத்த மலர்க்குழலினை முன்னிருந்தவாறே பெறப்போகும் நிலையின் குறிப்புமாம். மணமகளாரை வண்டுவார் குழலாராக எண்ணினார் என்றலுமாம்.

**கைப்பிடிக்க** - மணஞ்செய்ய. 885 பார்க்க. " நற்றவக் கன்னி யார்கை ஞானசம் பந்தர் செங்கை, பற்றுதற் குரிய பண்பிற் பழுதினற் பொழுது நண்ண " (திருஞா - புரா - 1237) என்றவிடத்து இதன் முதன்மை தேற்றப்படுதல் காண்க.

**மணக்கோலம் கண்டவர்கள் கண்களிப்ப** - 171 - 172-ம் பிறவும் பார்க்க.

**கலிக்காமனார்** - முன்னர் ஏயர்பெருமகன் (881), ஏயர்கோனார் (883), ஏயர்குலப் பெருமான் (885), என்றும், பின்னரும் ஏயர்குல மன்னவனார் (900) என்றும் கூறும் ஆசிரியர் இங்கு அவரது பெயராற் கூறுதல் குறிக்கொள்க. " ஏயருட " என்ற குடிப் பெயரும் காண்க. **புகுந்தார்** - திருமனையில் என்று வருவித்துக்கொள்க.

**போயினார் - புகுந்தார்** - இறைவர் எழுந்தருளிப் போயினதையும், மணமகனார் புகுந்ததையும் இவ்வொரு பாட்டில் நயம்படச் சேர்த்துக் கூறியது இவ்விரண்டும் ஒரே காலத்தில் உடனிகழ்ந்ததனைக் குறிப்பதற்காம்.

**கைப்பிடிக்கும்—என்பதும் பாடம்.** 34

900. வந்தணைந்த வேயர்குல மன்னவனார் மற்றந்தச்
சிந்தைநினை வரியசெயல் செறிந்தவர்பாற் கேட்டருளிப்,
புந்தியினின் மிகவுவந்து, புனிதனரு ளுள்போற்றிச்,
சிந்தைதளர்ந், தருள்செய்த திருவாக்கின் றிறங்கேட்டு, கூடு

901. மனந்தளரு மிடர்நீங்கி, வானவர்நா யகரருளாற்
பூணைந்தமலர்க் குழல்பெற்ற பூங்கொடியை மணம்புணர்ந்து,
தனம்பொழிந்து, பெருவதுவை யுலகெலாந் தலைசிறப்ப
வினம்பெருகத் தம்முடைய வெயின்மூதூர் சென்றணைந்தார். கூசு

900. (இ - ள்) வந்தணைந்த.....மன்னவனார் - வந்து சேர்ந்த ஏயர்கோன் கலிக் காமனார்; மற்று.....உவந்து - மனத்தாலும் நினைத்தற்கரியதாகிய அந்தச் செயலை அங்குக் கூடியிருந்தவர்கள்பாற் கேட்டருளிப் புந்தியில் மிக மகிழ்ச்சியடைந்து; புனித னருள் போற்றி - இறைவர் செய்த திருவருளினைத் துதித்து; சிந்தை தளர்ந்து - பின்னர் மனந்தளர்ந்து; அருள்செய்த.....கேட்டு - அருளிச் செய்த திருவாக்கின் றிறத்தினைக் கேட்டு, கூடு

901. (இ - ள்) மனம்...நீங்கி - மனந்தளர்ந்ததனால் உண்டாகிய துன்பம் நீங்கிய வராய்; வானவர்...மணம்புணர்ந்து - தேவதேவருடைய திருவருளினால் முன்பூணைத் திருந்த வண்ணமே மலர்களணிந்த கூந்தலினை வளரப்பெற்ற பூங்கொடி போன்ற மண மகளாரை மணஞ்செய்து; தனம்...தலைசிறப்ப - நிதிகளை யாவர்க்கும் மிகக் கொடுத் துப் பெருங்கல்யாண மகிழ்ச்சி உலகெங்கும் ஒங்கிச் சிறக்கச் செய்து; இனம்...சென் றணைந்தார் - சுற்றத்தார்கூடிப் பெருக நிறையத் தமது மதில் சூழ்ந்த பழவூரினைச் சென்று சேர்ந்தனர். கூசு

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

900. (வி - ரை) மற்று அந்த - தாம் எண்ணிவந்த அதனுக்கு வேறுக எதிர்பாராது நிகழ்ந்த அந்த. சிந்தை நினைவு அரிய செயல் - ஒருமகள் கூந்தலை மணாளில் அரிந்து மாவிரதியார் கையில் ஈட்டியதும், அவர் மறைந்தருளியதும், நாயனார் பேறுபெற்றதும் ஆகிய இவை. இவை முற்றும் கூறுசெய்து பிரித்துக் காணமுடியாதபடி ஒரு சேர உடனிகழ்ந்தமையின் ஒருமையிற் கூறினர். நினைவரிய - சிந்தையாலும் நினைத்தற்கு அரிய. உயர்வு சிறப்பு உம்மைதொக்கது.

செறிந்தவர்பால் கேட்டநுளி - "தங்குலகீள் சுற்றமெலாம் தயங்குபெருங் களி சிறப்ப" (884) என்றபடி அங்குக் கூட்டமாகக் கூடியிருந்த சுற்றத்தாரும் ஏனையோரும் ஆகியவர்கள் சொல்லக் கேட்டனர் என்க. மானக்கஞ்சாறனார் பெரும்பேறு நேர் பெற்று (898) இறைவரை யணைந்துவிட்டனராதலின் அங்கு நின்ற பிறர்பால் இச் செயல் கேட்டனர் என்றறியப்படும். கேட்டநுளி - கலிக்காமனாது திருத்தொண்டின் பெருமை நோக்கி இவ்வாறு கூறினர்.

புந்தியினின் மிக உவந்து - கேட்ட பொருளைப் புத்தி நிச்சயிக்குமாதலின் அவ்வாறு நிச்சயித்து மிக உவந்தனர். சிந்தையினு நினைவரிய செயல் நிகழ்ச்சியிற் கூடியது மிக வுவக்கத் தக்கதாம் என்று மிக மகிழ்ந்தனர் என்க. இது அவரது திருவுள்ளத்தில் முதலில் நிகழ்ந்த நிகழ்ச்சி. தமது திருத்தொண்டில் முதிர்ச்சியினால் தொண்டர் பணியில் மானக்கஞ்சாறனார்க்கிருந்த உறைப்பினை நோக்கி உவந்தனர்.

புனிதனார் அருள்போற்றி - புத்தியின் காரியமாய் உவப்பு நிகழ்ந்ததாகலின் அதனாலே, அந்நிகழ்ச்சிக்கு அருள் காரணமாமென அறிந்து அருளைப் போற்றினர். புனிதன் ஆர்அருள் என்று பிரித்துரைக்கவும் நின்றது. ஆர் - நிறைந்த - பெரிய. சிந்தை தளர்ந்து - இது அவரது மனத்தினுள் நிகழ்ந்த இரண்டாவது நிகழ்ச்சி. தளர்தல் - முயற்சி குறைதல் - இளைத்தல். இவ்வருணலம் கண்டு தரிசிக்கும்பேறு தமக்குக் கிடைக்கவில்லையே என்று மனந்தளர்ந்தனர் என்க.

அருள் செய்த திருவாக்கின் திறம் என்றது "நம்பக லுனக்கிருந்த பரிவிந்தச் செழும்புவனங் களிலேறச் செய்தோம்" (897) என்றருளிய திருவாக்கின் தன்மை.

கேட்டு மனந்தளரும் இடர்நீங்கி - அருணிகழ்ச்சிகளே நேரே காணும்பேறு தாம் பெருமைபற்றிக் கலிக்காமனார் சிந்தை தளர்ந்தனர். ஆனால் அன்பின்றிறத்தை உலகில் ஏறச் செய்வதற்கே இறைவர் இவ்வருள் வெளிப்பாட்டினைச் செய்தனர் என்ற திருவாக்கின்றிறம் கேட்ட அதனால் அவ்வாறு உணர்த்தப்பட்டாருட்பட்ட தாமும், அந்த அன்பின்றிறமும் அருளின்றிறமும் உணர்ந்து உய்திபெற்றனர். நேர் காணப்பெற்றிருப்பின் உளதாகும், அருட்டிற மறிந்துய்வதாகிய, பயனையே கேட்ட இதனால் பெற்றனராதலின் இடர் நீங்கினர் என்க. இது அவரது திருவுள்ளத்தில் நிகழ்ந்த மூன்றாவது நிகழ்ச்சி. கேட்டு - செறிந்தவர்பால் கேட்டு என வருவித்துக் கொள்க. அங்குச் செறிந்தவர் என்றதனால் நிகழ்ந்த அன்பு வெளிப்பாடு, அருள் வெளிப்பாடு, அருளிய திருவாக்கு என்பவற்றைத் தாம் நேரே கண்டும் கேட்டும் உணர்ந்த கூட்டத்தார்கள் என்றதாம். ஒரு பொருளை நேரிற் கண்டவர் கேட்டவர்கள்பால் கேட்டலே நேர்சாட்சியம் (Direct evidence) ஆகும் என்பதும் அது நம்பத்தக்கதாம் என்பதும் இக்காள நவீனரின் வழக்குநூல் விதிகளுமாம்.

சிந்தை தளர்ந்து - என்றதற்கு இவ்வாறன்றி, இச்செயல் மண நிகழ்ந்தபின் நிகழ்ந்திருப்பின் தமக்கும் அப்பேறு கிடைத்திருக்குமே என்ற கருத்தினால் மனந்தளர்ந்தனர் என்றும்; சுவாமியினால் கூந்தல் விரும்பிக் கொள்ளப்பட்ட பெண்ணை எவ்வாறு மணப்பது என்று மனந் தளர்ந்தார் என்றும்; முண்டிதமான பெண்ணை எவ்வாறு மணப்பதென மனந்தளர்ந்தனர் என்றும்; மனைவியின் மயிர் அரியுண்டமைக்கு மனந்தளர்ந்தனர் என்றும்; பேரடியாராகிய மானக்கஞ்சாறனார் தமது மண்ணத்துக்கு இல்லாமல் சிவபெருமானை அணைந்தது பற்றியும் அதனால் சுற்றத்தார் வருந்துதல் பற்றியும் மனந்

தளர்ந்தனர் என்றும், மற்றும் பலவாறும் உரை கூறுவாருமுளர். இவற்றின் பொருத் தங்கள் ஆராய்ந்து கொள்ளத்தக்கன.

**அருள்செய்த திருவாக்கின் திறம்** - "உனக்கும் அருள் செய்வோம்" எனவும், "மீ துக்கப்படாதே ; மனங்களிப்பாக அந்தப் பெண்ணே மணந்துகொள்" என்று எழுந்த வார்த்தை எனவும், "இவற்றிற்கு மீ வருந்தாது மணஞ் செய்" என்றெழுந்தவாறு எனவும் பலவாறும் உரைகூறுவாருமுண்டு. இவ்வாறு பின்னும் ஒரு திருவாக்கு எழுந்த தென்பதற்கு ஆதாரவு காணப்படவில்லை. அவ்வாறு எழுந்து கேட்கப்பட்டிருப்பின் திருவாக்குக் கேட்டு என்னுது திருவாக்கின்றிறம் கேட்டு என்றுகூறுதற்கு ஏதுவில்லை. "அருள் செய்தவாக்கு"..."என்ன"..."இவ்வண்ணமெழுந்தது கேட்டு" (மூர்த்தி-புரா 21-22-23) பார்க்க. **திருவாக்கின்றிறமாவது** "உமக்குச் சோபனமாகுக" (892) என்றெழுந்த திருவாக்கு என்றும், அதில் **உமக்கு** என்ற பன்மையால் கலிக்காமனுரை யும் உள்ளடக்கியது ஆகியாகிய அத்திருவாக்கின்றிறம் என்றும் உரைப்பர் ஆலால சுந்தரம்பிள்ளை. 35

901: **(வி - ரை) மனந்தளரும் இடர் நீங்கியதன் காரணம் மேலுரைக்கப்பட்டது.**

**வானவர்.....பூங்கோடி** - தேவ தேவராதலின் ஆக்குதல், அழித்தல் முதலிய எல்லாம் வல்லவர் ; அவரது அருள் கலையப்பட்ட கூற்றலை முன் இருந்தவாறே மீள வளரச் செய்தது என்க. **புனைந்தமலர்க்குழல் - மணக்கோலம் புனைந்திருந்த தேனக்க மலர்க்கூந்தல்** (893), என முன் அரிந்தெடுக்கப்பட்டவாறே மீளவுளதா யினமை குறித்தார். சிறுத்தொண்டநாயனார் சரிதத்தில் சமைத்து இலையிற் படைத்த கறி, மீளப் பாலகனுக வரத் திருவருள் செய்ததென்றல், வளரும் தன்மைத்தாய குழல் விரைவில் வளர்ந்த இது ஓர் அற்புதமன்றே ! **பூங்கோடி** - கொடிபோல்வார். **மலர்க் குழல் பெற்ற** என்ற இக்குறிப்பினைக் கொண்டு, கலிக்காமனார் குழல் கலையப்பட்ட பெண்ணை எவ்வாறு மணப்பதென்று மனந்தளர்ந்தனர் என்பார் சிலர். அருணகிழ்ச்சி காணும்பேறு பெறவில்லை எனச் சிந்தைதளர்ந்தனராதலின் கலிக்காமனார் காணும்படி **புனைந்தமலர்க்குழல்பெறத்** தரும் இவ்வருள் வெளிப்பாட்டினை இறைவர் செய்தருளி னர் என்க. **புனைந்தமலர்க்குழல்** - அரியுமுன், தேனக்கமலர்க்கூந்தல் (893), மலர்க் கூந்தல் (894) என்றும், மீளக்குழல் வளர்ந்தபின், இங்குப் **புனைந்தமலர்க்குழல்** என் றும் கூறிய ஆசிரியர் இடையில், அடியில் அரிந்தெடுக்கப்பட்ட நிலையில், **வண்டுவார் குழல்** என்று வாளா கூறிய நயம் சிந்திக்க.

**தனம்பொழிந்து** - கல்யாணத்தில் மணமகன் வீட்டார் தமது இயல்புக்கேற்ற படி இரவலர் முதலியோர்க்கு ஈகையிற் சிறத்தல் இயல்பு. அரசர் சேனபதிக்குடியில் வந்த ஏயர்கோனார் தம் நிலைமைக்கேற்றவாறும், அவ்வாறே அரசர் சேனபதிக்குடியில் வந்தாராய்த் திருவருள் பெற்றுப் போந்த மானக்கஞ்சாறனாரது பெருமைக்கும் புனைந்தமலர்க்குழல் மீளப்பெற்ற மகளாரது பெருமைக்கும் ஏற்றவாறும், இருவர்க்கும் இடையாடிச் செய்த சிவபெருமானது திருவருட் சிறப்பினுக்கேற்றவாறும் தனம் பொழிந்தனர் என்க. இதனால் அது **பெருவதுவையாகி உலகெலாம் தலைசிறக்க** ஓங்கி விளங்கிற்று என்பதாம்.

**தலைசிறத்தலாவது** - புகழ் மேம்படப் பாராட்டப்பெறுதல்.

**இனம்பெருக** - மணத்தின் பின்னர் இருபாலின் இனத்தவர்களும் ஒருங்கு கூடிச் செல்லுதலாலும், கலிக்காமனுருடன் தம் சால்புநிறை சுற்றம் தலைநிறையக்(885) கூடி வர, அவர்களோடு மானக்கஞ்சாறனாரது மீள்சுற்றமெலாம் (884) ஒப்பரிய இப் பெருவதுவையினுற் பிணைக்கப்பட்டு ஒன்றுகூடுதலாலும், முன் வந்ததனைவிட மிகப் பெருங்கூட்டமாதலின் **இனம்பெருக** என்று தேற்றம் பெற எடுத்துக் கூறினர்.

**தம்முடைய எயில்ழுதூர்** - இது திருப்பெருமங்கலம் என்பதாம். ஏயர்கோன் - புரா (1) பார்க்க. இதன் சிறப்பு அப்புராணம் 2, 3, 4 பாட்டுக்களிற் பேசப்படுதல்

காண்க. இது திருப்புன்கூருக்கு வடக்கில் ஒரு நாழிகையளவில் மட்சாலையில் உள்ளது. திருக்கோயிலும் அதில் எயர்கோனாது திருவுருவமும் உண்டு. சைவர் பூசை. நாயனாது உற்சவம் கொண்டாடுகின்றனர். பன்னிருவேலி என்ற கிராமமும் உண்டு. தலச்சிறப்பும் பிறவும் விரிவாய் எயர்கோனர் புராணத்திற் கண்டுகொள்க.

பொழிந்த—என்பதும் பாடம். 36

வேறு

902. ஒருமகள் கூந்த றன்னை வதுவைநா ளொருவர்க் கீந்த
பெருமையார் தன்மை போற்றும் பெருமையென் னளவிற் றுமே?
மருவிய கமரிற் புக்க மாவடு விடே!லென் னுசை
யுரிமையாற் கேட்க வல்லார் திறமினி யுரைக்க லுற்றேன். கூ எ

(இ - ள்) வெளிப்படை. ஒரு மகளாரின் கூந்தலினை அவரது மணநாளில் ஒருவராகிய மாவிராதியர்பால் அரிந்து மீட்டிய பெருமையுடைய மானக்கஞ்சாறனாரது திறத்தினைத் துதிக்கும் பெருமை எனது அளவில் அடங்குவதாகுமோ? ஆகாது. பொருந்திய நிலத்தின் வெடிப்பிலே சிந்திய மாவடுவினை இறைவர் ஏற்றுக்கொண்ட "விடேல்" என்னு மோசையினை உரிமையினால் கேட்கவல்லாராகிய அரிவாட்டாயநாயனாது சரிதத்திறத்தினை இனிப் பேசத் தொடங்குகின்றேன்.

(வி - ரை) இது கவிக்கூற்று. ஆசிரியர் தமது மரபின்படி இதுவரை கூறிவந்த சரிதத்தை முடித்துக்காட்டி இனிப் பேசப்புகும் சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்கின்றார்.

ஒருமகள் - ஒருவர்-இரண்டிடத்தும் ஒப்பற்றதன்மை குறித்தது காண்க. **ஒருமகள்** சில நாட் பிள்ளைப்பேறின்றிச் சிவபெருமானை வழுத்திப் பெற்றெடுத்து அரிதின் வளர்த்த மகளார் என முன் (885 - 876) விரித்தோதிய அருமைப்பாடுகள் எல்லாம் தோன்ற ஒருமகள் என்றார். ஒருமகள் - ஒரே மகள்; இரண்டாவது மகளாதல் மகனுதல் இல்லாதவர் என்ற குறிப்புமாம். ஒருமகள் - கலிக்காமனுருக்கு மணவாட்டியாகக் கொடுக்க இசைவு தந்துவிட்டபடியினால் தமது மகள் என்ற உரிமை நீங்கி, அவருக்கு உரிமையாயினர்; ஆதலின் தம்மகள் என்னுது ஒருமகள் என்றார் என்ற தொனியும் காண்க. திலகவதியம்மையார் சரித நிகழ்ச்சியினை உன்னுக. இவ்வாறு பிறர்க்குரியவராயினவரின் கூந்தலை அரிந்து கொடுத்ததும் செயற்கரிதாம் என்க.

**கூந்தல் தன்னை** - தன்னை என்றது கட்டுரைச் சுவைபட வந்தது. சிறப்பும்மை தொக்க தென்றலுமாம்.

**வதுவைநாள்** - பெண்களின் கூந்தலரிந்து முண்டிதமாக்குதல் வைதவியம் குறிக்கும் நிலைகாட்டுமாதலின் அதனை ஒருவரும் செய்யார்; மேலும் மங்கலஞ் செய்வதாகிய மணநாளில் அதனைச் செய்ய ஒருப்படுவாரிலர்; இன்னும் இது உயிர் கொடுத்தலினும் கொடியதாய் ஆயுள் உள்ளளவும் அவ்வம்மையாரைத் துன்ப நிலையில் வைப்பதாகுமாதலின் எவரும் இது செய்யத் துணியார் என்ற குறிப்புக்கள் காண்க.

**ஒருவர்** - சைவ மாவிரத முனிவர் என்ற திருநீற்றுநெறித் தொடர்பு ஒன்றல்லாது வேறு ஒரு தொடர்ச்சியும் பற்றாத ஒருவர் என்பதும் குறிப்பு. அவரே ஒப்பற்றவர் - சிவபெருமான் என்பதும் குறிப்பாம்.

**ஈந்த பெருமையார்** - **ஈந்த** - ஈதல் என்பது சொல்லாற்றலால் இழிந்தோனிரப்புரை குறிக்கும். * "ஆவிற்கு நீரென் றுரைப்பினு நாவிற், கிரப்பி னிளிவந்த தில்" (குறள்) என்பது நீதியாதலின் மாவிராதியார் கூந்தலைக் கேட்ட இரப்பின் இழி

* "நல்லார் குணங்க ளுரைப்பதுவும் நன்றே" என்ற நீதி நூலும் காண்க.

பும், இரப்புப் பொருளாகிய கூந்தல் தலையின் இழிந்த மயிர் எனப்படும் இழிபும், கருதி **ஈந்த** என இழிந்தோ னிரப்புரைக் குறிப்புப்படக் கூறினார் போலும்.

ஈந்த அருங்கொடையினாற் போந்த பெருமை என்பார் **ஈந்த பெருமை** என்றார். **பெருமையார்** - ஈந்த செயற்கரிதாகியசெயல் செய்த பெரியர்.

**போற்றும் பெருமை** - பெரியர் தன்மையைப் போற்றுவது பெருமை தருவதாம் என்றுணர்த்தியவாறு. **பெருமையார் பெருமை போற்றும் தன்மை யென் னளவிற் றுமே ?** என்று கூட்டி யுரைப்பதுமாம்.

**என் அளவிற்று ஆமே ?** - ஆகாது என ஏகார வினா எதிர்மறை குறித்தது.

இவ்வாற்றால் இதுவரை கூறிய மானக்கஞ்சாறனாரது சரிதத்தைச் சாரமாக வடித்து எடுத்து முடித்துக்காட்டிய அழகு கண்டுகளிக்க.

**மருவிய...வல்லார் திறம்** - இஃது மேல்வரும் அரிவாட்டாயனார் சரித சாரத்தை முகவுரையாகச் சுருக்கி அறிவித்தபடியாம். இதனையே அனுவாதமுகத்தால் அப்புராண முடிவில் "**முன்னிலை கமரேயாக** முதல்வனார் அமுது செய்யச், செந்நெலி னரிசி சிந் தச்செவியுற வடுவி னோசை, யந்நிலை கேட்ட தொண்டர்" (924)என்றதுகாண்க. இங்கு "மாவடு" விடேல் "என்னோசை உரிமையாற் **கேட்க வல்லார்**" என்று எதிர்காலத் திலும், "வடுவின் **ஓசைகேட்ட** தொண்டர்" என்று பின்னர் (924) இறந்த காலத்தி லும் கூறியதும் குறிக்கொள்க.

**மருவிய கமர் - மருவிய** - பொருந்திய. இறைவரை ஊட்டக்கொண்டுபோயின செந்நெல்லரிசி முதலிய சிவ **சாதனங்கள் மருவிய** (916) எனவும், அன்பரது கழுத்தரி யும் அரிவாளைப் பற்றும் ஐயரது வீசிய திருக்கையும் மாவடு "விடேல் விடேல்" என் னும் ஓசையும் **ஒக்கவே எழுதற்கிடமாய் மருவிய** (919) எனவும், முதல்வர் **அமுதுசெய்** யும் முன்னிலையாக **மருவிய** (924) எனவும் வரும் சரித நிகழ்ச்சிகள் பலவும் மருவ **மரு விய** என்ற அழகு காண்க.

"**விடேல்**" **என் ஓசை** - 919 பார்க்க. இது மாவடுவை விசையிற் கடித்தலின் உளதாம் ஓசை. "வடுவின் ஓசை" (924), மாவடு "விடேல் விடேல்" என்றோசை யும் (919) என்றவை காண்க.

**உரிமை** - அவ்வோசையினைக் கேட்கும் தகுதி. இத்தகுதி 917 - 918 பாட்டுக் களில் விரித்துரைக்கப்பட்டது காண்க.

**கேட்க வல்லார் திறம்** - கேட்கும் உரிமையும் கேட்டற்குரிய வன்மையும் உடையவர். அன்பினால் உரிமையும், அன்பு முறுகிய நிலையில் வன்மையும் உளவாவன என்க. **திறம்** - சரித வரலாறு. **வல்லார்** என்றதற்கேற்ப இதனைத் **திறம்** என்றார். வல்லாராயின செய்தி என்க.

**பெருமையார் தம்மை**—என்றதும் பாடம். 37

---

**சரிதச் சுருக்கம் :—சோழ** வளநாட்டில் **கஞ்சாறூர்** என்பது செழித்த மருதநில ஊர்களிற் சிறந்து விளங்குவது. அவ்வூரில் வயல்களும் வாவிகளும் மிளிர்வன. வள மிகுதியால் நெற்பயிர் கமுகளவும் உயர்ந்துவளரும். மாடங்கள் மதில்களாற் சூழப்பட் டுக் கொடி தோரணம் நிறைகுடம் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. வழிவழி யாய் உழவு தொழிலிற் சிறந்த வேளாண் பழங்குடிகள் அங்குவிளங்கின. வீதிகளில் திருவிழா முழக்கங்களும் மிக்கன.

அவ்வூரில் மெய்ப்பொருளை அறிந்துணர்ந்தாராய், **வேளாண் குலத்தின்** சேமநிதி போன்றாராய் அரசர் **சேனாபதிக் குடி** விளங்க **மானக்கஞ்சாறனார்** அவதரித்தார். அவர், அரனடியார்களே தம்மையும் தமது உடைமைகளையும் உடையவர்களென்று உணர்ந்து, அவர்களுக்கே ஏவல் செயும் தொழில்பூண்டு, அவர்கள் வேண்டுவனவற்றைக்

கூறுவதன் முன் குறிப்பறிந்து கொடுத்து வந்தனர். அப்பெரியவர்க்கு முன் சிலகாலம் பிள்ளைப் பேறில்லாமலிருந்ததனால் மகப்பேறு கருதிச் சிவபெருமானை வழுத்தினர். அவரது திருவருளினாலே இப் பிறவிக் கொடுஞ்சூழலினின்றும் பிழைக்கும் நெறியைத் தமக்குத் தேடித்தரும் ஒரு பெண்மகவை அவர் பெற்றெடுத்தார். நகரமெல்லாம் களி சிறந்து மகிழ, எல்லார்க்கும் பெருங்கொடையளித்து அப்பெண்மகவைச் சிறப்பாக வளர்த்து வந்தனர். மகவும் வளர்ச்சியடைந்து உரிய வயதில் மணப்பருவ மடைந்தது.

அந்தப் பெண்கொடியை ஏயர்கோனுருக்கு மணம் செய்ய முதியோர்கள் வந்து மகட்பேசினர். மானக்கஞ்சாறனாரும் " எந்தம் மரபினுக்குத் தகும் தன்மையில் இது பொருந்தும் " என்று மணமிசைந்தனர். இதனை அம்முதியோர்கள் அறிவிப்ப ஏயர் கோனாரும் மிகவிரும்பி மகிழ்ந்தனர். இருதிறத்தார்க்கும் பொருத்தக் கலியாண காளினை மதி நூல் வல்லவர் வகுத்தனர். மானக்கஞ்சாறனாரது திருமனையிலும் நகரிலும் மண அணிகள் செய்தனர். ஏயர்கோனாரும் தமது சால்பு நிறை சுற்றம் நிறைந்து சூழ மண வெழுச்சியின் அணி விளங்கக் கஞ்சாறூரின் மருங்கு அணைவாராயினர்.

மணவெழுச்சி கஞ்சாறூரில் வந்து அணைவதற்கு முன், மகளைப்பெற்ற வள்ளலாரது உள்ளநிலைப் பொருளாகிய சிவபெருமான் ஒரு **மாவிரத முனிவராகக்** கோலம் பூண்டு உலக முய்யும் பொருட்டு அங்கு வருவாராயினர். அவரது **நெற்றியில்** மூன்று கீற்றாக இட்ட திருநீறு - **குங்குமி** வைத்து ஒழுங்கின் மயிர்களைந்த **திருமுடி**-அக்குங்குமி **நுனியிற்** கோத்த எலும்புமணி-**காதில்** வெள்ளெலும்பாலாகிய குண்டலம்-**மார்பில்** எலும்புமணித் தாழ்வடம்-**தோளில்** யோகப் பட்டிகையும் **மயிர்க்கயிற்றின் பூணூலும்** - ஒருகையில் திருநீற்றுப் பொக்கணம் - ஒரு **முன்கையில்** எலும்பு மணி ஒன்று கோத்த கயிறு-இடையில் கோவணமும் அதன்மேல் அசைகின்ற உடையுமாய் - இவ்வாறு நிலந்தோய்ந்த எழுதரிய **திருவடியும்** அதில் **திருப்பஞ்சழத்தினையுமாக** விளங்கத், **திருமேனி** முழுதும் நெருப்பை மறைத்த பொடிபோலத் திருநீற்றினைப் பரக்கப் பூசிக்கொண்டு, தமது திருவடிகள் நீடும் மனமுடைய அன்பரது திருமனையினுட் புகுந்தனர். அதுகண்ட பெருந்தொண்டனார் மகிழ்ந்து எதிர் எழுந்து " தேவரீர் இவ்விடத்தே வருகையினால் அடியேன் உய்ந்தேன் " என்று அன்போடும் பணிந்தார். அவர் " இங்கு மங்கலம் நிகழ்வதென்ன?" என்று கேட்க, அன்பர் " அடியேன் பெற்ற பெண்கொடியின் மணம் " என்றனர். அவர் " மற்றமக்குச் சோபனம் ஆகுக " என்று ஆசி கூறினர். உடனே மானக்கஞ்சாறனார் பணிந்து, மனையினுட் சென்று, மணக் கோலம் புனைந்திருந்த திருமகளாரைக் கொணர்ந்து, அவரது திருவடியிற் பணிவித்தனர். மாவிரதியாராகிய பெருமான் மணமகளாரது மேகந்தழைத்தது போல நீண்டு வளர்ந்த மலர்க் கூந்தற்புறம் நோக்கித், தொண்டரைப் பார்த்து,"**இவளது மயிர் நமக்குப் பஞ்சவடிக்கு ஆகும்** " என்றார். அது கேட்ட தொண்டனார் " இவர் இதனைப் பொருட் படுத்தி ' நமக்கு ஆம் ' எனக் கேட்கும் பேறு பெற்றேன் " என்று கொண்டு, உடனே உடைவாளை உருவி அக்கூந்தலை அடியில் அரிந்து அவர் கையில் நீட்டினார். அதனை வாங்குவார் போல் நின்ற அவர் அந்நிலையின் மறைந்து, தமது பழைய மழவிடைமேல் பார்வதியம்மையாருடன் ஆகாயத்தில் வந்து காட்சி தந்தனர். தொழும்பனார் தொழுது வீழ்ந்து தெழுந்து மெய்ம்மறந்து நின்றனர். கங்கைசடையிற் சூடிய அருட்கூத்தனார் " நம்மிடத்தில் உனக்குள்ள அன்பின் தன்மையை உலகமெலாம் அறியச்செய்தோம் " என்று மெய்யன்பர்க்குத் தமது திருவருளினைச் செய்தனர். அவரை எஞ்ஞான்றும் அகலாத் திருக்கும் மீளாநெறியாகிய பெரும்பேற்றினை அன்பனார் நேரே பெற்றனர். இறைவரும் இமையோர் சூழ்ந்து அகலாத மறைந்தருளினர்.

இதுபோழ்தில், காண்பவர் கண் களிகொள்ள மணமகனாராகிய கலிக்காமனார் மணமனையினிற் புகுந்தனர். மனத்தாலும் நினைத்தற்கரிய அச்செயலை அங்குக் கூடி

யிருந்தவர்பாற் கேட்டு மகிழ்ந்து அரனருள் போற்றினர். இதனைக் கண்டுய்யும்பேறு தமக்குக் கிடைக்கவில்லையே என்று மனந்தளர்ந்தனர். இறைவன் அருளிய திருவாக்கின் றிறம் கேட்டு மனத்தளர்ச்சி நீங்கினர். மணமகளார், புனைந்த மலர்க்கூந்தலை மீளத் திருவருளால் முன்போலப் பெற்றனர். கலிக்காமனார் அவரை மணஞ் செய்துகொண்டு, தக்கவாறு யாவர்க்கும் நிதிமழை பொழிந்து, மணமகிழ்ச்சி உலகெங்கும் சிறக்கச்செய்து பெருகிய இனத்தாருடன் தமது நகரத்தினைச் சென்றணைந்தனர்.

---

**தலவிசேடம் :—கஞ்சாறூர்** - இத்தலம் ஆனதாண்டவபுரம் என்னும் தென்னிந்திய இருப்புப்பாதை நிலயம் உள்ள ஊராம் என்றறியப்படுகின்றது. அந்நிலயத்திலிருந்து ஊருக்குள் கிழக்கில் ¼ காழிகை யளவில் பழய சிவாலயம் உண்டு. இப்போது புதுப்பிக்கப்பட்டுள்ளது. ஆனந்த தாண்டவபுரம் என்பது ஆனதாண்டவபுரம் என மருவி வழங்குகின்றது. இத்தலத்துச் சுவாமி பெயர் **பஞ்சவடீசுவரர்** என்பதாம். இது இச்சரித்தத்தைத் தொடர்ந்துள்ளது காண்க. பாரிசாதவனேசுவரர், பாரத்துவாகேசுவரர், ஆனந்தமுனீசுவரர் என்ற பேர்களும் உண்டெனத் தலபுராணம் கூறும். இத்தலத்தின் கிழக்கே 4 காழிகை யளவில் கஞ்சனூரம் என மருவி வழங்கும் கஞ்சநகரம் என்ற ஊரும், வடக்கே 6 காழிகையளவில் வடகஞ்சாறு என வழங்குவதோர் ஊரும் உள்ளன. இவற்றால் இத்தலமே நாயனாது ஊர் என்றது உறுதிப்படுகின்றது. 45 ஆண்டுகளின்முன் இத்தலத்தின் அருகில் மிகப் பழயவாகிய சில செப்புத் திருவுருவங்கள் நிலத்தினின்றும் எடுக்கப்பட்டன. அவற்றுள் விநாயகர் - சோமாக்கந்தர் - உமையம்மையார் - சண்டீசர் - பிச்சாடனர் - சடாநாதர் என்னும் **மாவிரதியார்-மானக்கஞ்சாறனார் - அப்பர் சுவாமிகள் - திருஞானசம்பந்த சுவாமிகள் - காட்சி நாதர்** என்னும் **கல்யாணசுந்தரர்** முதலிய பழந் திருவுருவங்கள் இருந்தன. அவை இத்திருக்கோயிலில் வைத்துப் பூசிக்கப்படுகின்றன. மாவிரதியார் திருக்கோலமும் நாயனார் திருக்கோலமும் இப்புராணத்தினுட் கூறப்படும் எல்லா அடையாளங்களுடன் விளங்குகின்றன. மாவிரதியார் - நாயனார் - திருவுருவங்கள் இவ்வாறெடுத்துப் பூசிக்கப்பட்டநாள் முதல் இவ்வூர் சீரும் செல்வமும் செழிக்க ஓங்கி வருகின்றதென்றும் அறியப்படுகின்றது. இவ்வூரின் மேல்புறம் வல்லத்துவழி என வழங்கும் வெல்லத்து வழியின் நிலங்கள் இப்போதும் கரும்புப் பயிர் மிகச் செழித்து விளைவன என்று பேர்பெற்றன ; இது "வயற்கரும்பின் கமழ்சாறூர் கஞ்சாறூர்" என்ற இப்புராண முதற் பாசுர உண்மையை விளக்கி நிற்கின்றது. "கஞ்சனூர் **கஞ்சாறு** பஞ்சாக்கையும் கயிலாய நாதனையே காணலாமே" என்ற கூற்றிரக்கோவைத் திருத்தாண்டகத்தில் இத்தலம் போற்றப்பட்டிருத்தலும் இதன் பழமையினையும் மேன்மையினையும் விளக்கும்.

இத்தலத்துக்கு வடமொழியில் ஒரு தல புராணம் உண்டு. அது காந்தமா புராணத்தில் கூற்றிர காண்டம் - உபரிபாகம். 61 முதல் 69 வரை உள்ள அத்தியாயங்களில் விரிக்கப்பட்ட தென்பர். அதில் இந்நாயனார் பெயர் மானகாந்தன் என வழங்கப்படுகின்றது. நாயனாது சரிதம் சில சிறு மாறுதல்களுடன் இப்புராணம் பேசுகின்றது. மானக்கஞ்சாறனாது மனைவியார் கல்யாணசுந்தரி எனவும், கலிக்காமனாருக்குச் சந்திரவர்ணன் எனவும் அவரது பிதா சந்திரகாந்தன் எனவும், இவ்வாறு தமக்குத் தோற்றிய வாறு வடமொழியிற் சரித வரலாறும் பெயர்களும் புனைந்து இத்தமிழ்ப் புராண சரிதத்தை வடவர் வழங்கினர் என்ப. பஞ்சவடி என்பதனை ஐந்து கயிறு எனப் பொருள் கொண்டு இதில் விரிக்கப்படுகின்றதும் காணலாம்.

---

கம்பனை :—1. நூற்பயன் கன்குணர்வோராற் பாடப்படுவது நகரங்களுக்குச் சிறப்புத்தருவதாம்.

2. அவ்வவ்விடங்களில் நிகழ்ந்த சிறந்த சரிதக்குறிப்புக்களை அங்குச் சூழ்ந்துள்ள நிலம் நீர் தாவர முதலிய இயற்கைப்பொருள்களை காட்டி நிற்பனவாகக் கண்டு காட்டு மியல்பு சிறந்த பெருங்கவிகளில் அமைவதாம்.

3. அறத்தினிலையின் சால்புடையது மனையறம் ; வினைகளிற் சால்புடையது உழவு.

4. விழாக்கள் மலிவது நகரங்களின் சிறப்புக்காட்டும்.

5. அரசர் சேனுபதியாயிருத்தலும் வேளாளர்களுக்கு உரியது. அவ்வகையில் வழிவழி வரும் குடிகளும் உண்டு.

6. மெய்ப்பொருளை அறிந்துணர்ந்த பெரியோர்கள் சிவபெருமான் தொண்டர்க்கே ஏவல் செய்வர். தம்மையும் தம் பொருள்களையும் அவர்களது உடைமைப் பொருளென்றெண்ணி அவர் வேண்டுவனவற்றைக் குறிப்பறிந்து கொடுப்பர். இவை பெருஞ் சிவபுண்ணியங்களாய்ச் சிவவாழ்வைத் தேடிக்கொடுப்பன.

7. சிவபெருமானது வழிபாடு கன்மக்கட்பேறு முதலிய உலக போகப் பயன்களையும் இறுதியில் வீடுபேற்றையும் தரவல்லது.

8. பெண்மகப் பேறும் ஒருவற்குப் பிறவியினின்றும் பிழைக்கும் உயர்நெறியினைக் கூட்டுவிக்கும்.

9. ஒத்த மரபும் அரன்பால் ஒத்த அன்பும் உடையார்க்கே உயர்குடிப்பிறந்தோர் மகட்கொடை நேர்வர்.

10. மணத்தாற் பிணைக்கப்படும் இருநிறத்தார்க்கும் நேர்வாய நற்பயன்றரப் பொருந்துமாறு மண நாள் வகுத்தல் மதிநூல் வல்லவர் கடன்.

11. திருநீற்றினை நிறையப்பூசி, எலும்பணிகள், மயிர்க்கயிறுகிய பஞ்சவடி, யோகபட்டிகை, திருநீற்றுப் பொக்கணம், கடிசூத்திர உடை முதலியன தாங்கி வருதல் மாவிரதர் என்ற சைவ உட்சமயத்தார் மேற்கொள்ளும் கோலமாம்.

12. மணமகளைப் பெரியோர்பாற் பணிவித்து அவர்களது ஆசிபெறச் செய்தல் மூன்தையோர் மரபு.

13. ஒரு மகளின் மலர்க்கூந்தலை மணநாளில் அடியில் அரிந்து (அடியார்க்கு) மாவிரதியார்க்குத் தரவல்லது உறைப்புடைய பேரன்பின் திறம்.

14. இவ்வாறு பற்றுக்கள் அறக்களையக் கண்ட நிலையே இறைவனை வெளிப்படக் காணும் நிலையாம். அன்பு முறுகி விளைதலின்கண் அருளும் வெளிப்படத் தோன்றும். தமது எஞ்சிநின்ற இடது கண்ணையும் தோண்ட அம்பினை ஊன்றியபோது கண்ணப்பருக்கும், கற்பாறையில் தலையை மோத முற்பட்டபோது திருக்குறிப்புத் தொண்டருக்கும் இறைவனது வலையணிந்த இடதுகை வெளிப்படத் தோன்றி அச்செயல்களைத் தடுத்துப் பேறுதந்த சரிதங்களும் அவை போன்றனவும் இங்கு நினைவுகூரத் தக்கன.

15. தமது ஒரு மகளாரின் மலர்க்கூந்தலை மணநாளில் அடியோடு அரிந்த அக்கணமே உலகப்பற்று அடியோடு அரிந்தெடுக்கப்பட்டதாம். "அற்றது பற்றெனிலுற்றது வீடு", "அற்றவர்க் கற்றசிவன்" என்பன காண்க.

16. எந்தக் காலத்தில் எப்பொருளைக் கொடுத்தல் பிறர்க்கு இயலாததாகுமோ அதனைக் கொடுத்தலே செயற்கரிய செய்கை. தாமும் மனைவி மக்கள் சுற்றமும் இருபகல் உணவில்லாது வருந்திய நிலையில், நெற்கொள்ளக் கொண்டுசென்ற தாலியினைக், குங்குலியத்திற்கு மாறிய அரிய செய்தியும், உணவில்லாது தாம் வருந்தவும், வந்த அடியார்க்கு உணவளிக்க வயலில் விதைத்த நெல்லைவாரியும் வீட்டுக் கூரையை அறுத்தும் அமுது சமைத்த அருஞ்செயலும் அவ்வாறுயின பிறவும் இங்கு எண்ணத்தக்கன.

18. அன்பின்றிறத்தை யாவரும் அறியச்செய்து உலகினரை நல்வழிப்படுத்தி ஆட்கொள்ளுதல் சிவபெருமானது பேரருட்டிறம். அடியார்கள்பால் சிவன் வெளிப்பட எழுந்தருளிவந்து செய்யும் பேரருட்டிருவிளையாடல்கள் பலவும் இந்த வள்ளுறை கொண்டன.

19. பெரியோர்களை அவர்களது பெயராற் சுட்டி வழங்கத்தானும் ஒருப்படமாட்டார் கல்லோர். இங்கு இந்நாயனாரது இயற்பெயர் விளங்கவில்லை. மானமுடைய கஞ்சாற்றூரினர் எனப் பொருள்படும் பெரியவர் என மானக்கஞ்சாறனார் என்றே உலகம் வழங்கியது காண்க. மானம் - பெருமை என்ப. இது உயர்குடிப் பிறந்தார்க்கு உரிய குணங்களுள் முதன்மை பெற்றுக் குடிப்பிறப்பினை நிறுத்துதலுடையதென்றும், அஃதாவது எஞ்ஞான்றும் தன்நிலையிற் றாழாமையும் தெய்வத்தாற் றாழ்வு வந்தழி உயிர் வாழாமையுமாம் என்றும் உரைப்பர் ஆசிரியர் பரிமேலழகர். இச்சரிதத்தில் மூன்றிடங்களில் மட்டும் (872 - 882 - 893) மானக்கஞ்சாறனார் எனவும், இரண்டிடங்களில் கஞ்சாறர் (883 - 885) எனவும் வழங்கிய ஆசிரியர் இவ்வாறு சுட்டுதல் தானும் அஞ்சிப் பெரியவர் (875), மலர்க்கழல்களறியாமை யறியாதார் (875), வள்ளலார் (884), அடிநீடு மனத்தன்பர் (890), சிறந்த பெருந்தொண்டனார் (891), கலமிகுமன்பர் (892), மெய்த்தொண்டர் (894), தொழும்பர் (896), மெய்யன்பர் (897), நின்றவர் முன்நின்றவர் (898), தொண்டனார் (899), பெருமையார் (902) என்று பல திறத்தானும் சுட்டிக் கூறுதல் கருதத்தக்கது.

மானக்கஞ்சாறநாயனார்புராண முற்றும்

# 13. அரிவாட்டாயநாயனார்புராணம்

தோகை

(மலைமலிந்த தோள்வள்ளள் மானக்கஞ் சாறன்)
எஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன்.

—திருத்தொண்டத்தொகை

வகை

வள்ளற் பிராற்கமு தேந்தி வருவோ னுகலு"மிங்கே
வெள்ளச் சடையா ! யமுதுசெய் யாவிடி லென்றலையைத்
தள்ளத் தகு "மென்று வாட்பூட் டியதடங் கையினன்காண்
அள்ளற் பழனக் கணமங் கலத்தரி வாட்டாயனே.

விரி

903. வரும்பு னற்பொன்னி நாட்டொரு வாழ்பதி
சுரும்பு வண்டொடு சூழ்ந்து முரன்றிட
விரும்பீ மென்க ணுடையவாய் விட்டுநீள்
கரும்பு தேன்பொழி யுங்கண மங்கலம்.

புராணம் :—அரிவாள்தாயர் என்ற பெயருடைய நாயனாரது சரித வரலாறும் பண்புங் கூறும் பகுதி. நிறுத்தமுறையானே இலைமலிந்தசருக்கத்தில் ஆறுவதாய அரிவாட்டாயநாயனார் சரிதங்கூறத் தொடங்குகின்றார்.

தோகை :—குறைவுபடாத அரிவாளினையுடைய தாயனாரது அடியார்களுக்கு நான் அடியேனுவேன். நாடோறும் சிவனுக்கு ஊட்டிவந்த செங்கெல்லரிசி முதலியன தமது நிலையிற்றாழ்வு வருமாறு அவை கமரிற் சிந்தியபோது உலகில் யான் எனது என்று உள்ள பற்றுக்கள் ஒன்றும் எஞ்சாது முழுவதும் அற, உயிரினை நீக்கத் துணிந்து கழுத்தை அரிந்து, தாழ்வு வராமற் காத்த செய்தி குறிக்க **எஞ்சாத வாள்** என்றார். **வாள்** - கெல்லறுக்கும் அரிவாள். **தாயர்**-நாயனாரது பெயர். இதன் விரி 923ல் பார்க்க.

வகை :—வள்ளலாகிய சிவபெருமானுக்கு அமுது ஏந்தி வருபவர் அப்பொருள்கள் நிலத்தின் கமரில் சிந்த, "கங்கைசூடிய சடையரே! இவற்றை இங்கே அமுது செய்யாவிடில் என் தலையை அரிந்து தள்ளுதல் தகுதி" என்று அரிவாளைக் கழுத்திற் பூட்டி அரிந்த வலிய கையினை உடையவர், சேலுடைய வயல்சூழ்ந்த **கணமங்கலத்தில்** அவதரித்த அரிவாட்டாயர் என்பவரேயாம்.

**வள்ளற்பிரான்** - பேரருட் கொடையுடையவர்-சிவபெருமான். **அமுது** - இங்குத் திருவமுதுக்குரிய செங்கெல்லரிசியும், செங்கீரையும், மாவடுவும் குறித்தன; **உகலும்** - உம்மீற்று வினை யெச்சம்; **உகுதல்** - சிந்துதல்; **வெள்ளம்** - கங்கை; **தலையைத் தள்ளத்தும்** - 918 பார்க்க. **தடங்கை** - தலையை உடலினின்றும் வேறு தள்ளுமாறு தம் கழுத்தை அரியும் பெருவலிமை குறித்தது; **கணமங்கலம்** - நாயனாரது ஊர்.

**முதனூல்** பேரும் சரித நிகழ்ச்சிக் குறிப்பும் பேசிற்று. **வகைநூல்** பேரும் ஊரும் சரிதநிகழ்ச்சியும் பண்பும் வகுத்தோதியது. இவை விரித்தபடியை விரிநூலுட் காண்க.

903. (இ - ள்) வெளிப்படை. புனல் வருகின்ற காவிரி பாயும் **நாட்டில்** வாழ்வுடைய ஒரு **பதி**யாகும், சுரும்புகள் வண்டுகளோடு சூழ்ந்து மூரல, விரும்பப்படும் மெல்லிய கண்களுடைய வாய் விட்டு நீளும் கரும்பு தேனினைச் சொரிதற் கிடமாகிய **கணமங்கலம்** என்ற ஊர்.

**(வி - ரை) புனல்வரும் பொன்னி** - என மாற்றுக. என்றும் பொய்க்காமலும் பருவம் மாறுமலும் நீர் வருகின்ற காவிரி என்க. "பூத்தண் பொன்னி யெக்காளும் பொய்யா தளிக்கும் புனல்நாட்டு" (சண்டீசர் புரா - 1) என்றது காண்க. இவ்வாறன்றி **வருபுனல்** என்றதற்கு அகத்தியரது சிறிய கமண்டலத்தினின்றும் பெருகிவரும் என்றுரைப்பாருமுண்டு.

**வாழ் ஒருபதி** என்க. **வாழ்பதி** - மூக்காலத்துக்கும் பொதுவாகிய வினைத் தொகை. பதியில் உள்ளாரது வாழ்வு பதியின் மேலேற்றப்பட்டது. வாழ்விக்கும்பதி எனப் பிறவினையாகப் பொருள் கொள்ளலுமாம். **ஒருபதி** - ஒரு - ஒப்பற்ற. இஃது இச்சரித நிகழ்ச்சிப் பெருமையின் விளைவாகிய சிறப்பு.

**சுரும்பு** - ஆண் வண்டு; **வண்டு** - பெண் வண்டு: இது மரபு வழக்கு. ஒரு பினைப் பெண்வண்டொடு புணர்த்திக் கூறியது சிறப்பு நோக்கி. "சோலையில் வண்டினங்கள் சுரும்போடிசை முரல" (திருவாரூர் - வியாழக்குறிஞ்சி - 2), "தேனும் வண்டு மின்னிசை பாடுந் திருப்பாசூர்" (காத்தாரம்-11), "சுரும்புந் தும்பியும் சூழ் சடையார்" - (தண்டலைநீணெறி - 1) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரங்களும் பிறவும் காண்க. **வண்டு** - தேன் வண்டு என்பாருமுண்டு.

**முரன்றிட** - பண் பாடி ஒலிக்க. ("கமலவண்டு), தூய நீறுபூசி தொண்டர்க ளென்னச் சென்று சென்றுமூரல் கின்றன கண்டு" (242) பார்க்க. மூரலா நிற்பக் கரும்பு தேன் சொரியும் கணமங்கலம் எனக் கூட்டிக்கொள்க. இவ்வாறன்றி, **முரன்றிட - விரும்பும் மென்கண் உடையக்** கரும்பு வாய்விட்டுத் தேன் சொரியும் என்று



1. கணமங்கலத்திடல்
—பாட்டு - 917 - பக்கம் - ககஎக. (கமர்)

2. அரிவாட்டாய நாயனார்



தண்டலைநீணெறி (ஊட்டித்தண்டலை)
அரிவாட்டாயகாயனர் வழிபட்ட கோயில்
—பாட்டு - 903 - பக்கம் - ககசுடு

தொடர்புபடுத்திக்கூட்டி, **முரன்றிட** - முரன்றிடலால், மெல்லியவாயின கண்கள் உடையவே கரும்பு தேன் சொரியும் என்று காரணகாரியப்பொருளில் வந்த வினையெச்சமாக உரைத்தலுமாம். இப்பொருளில், நல்ல பாட்டுக் கேட்டோர் உள்ள முருகிக் கண்ணீர் பெருக்குமியல்பு குறித்த தற்குறிப்பேற்ற அணியாம். இசையினுக்கு சராசரவுயிர்களும் அசேதனங்களும் இளகுவன என்பது இசையினியல்பாம். ஆளுயநாயனார் புராணம் 30, 31, 34, 36 பாட்டுக்கள் பார்க்க. " மருவியகால் விசைத்தசையா ; மரங் கண்மலர்ச் சினைசலியா ; கருவரைவீ ழருவிகளுங் கான்யாறுங் கலித்தோடா " (ஷி 35) என்றதும் பிறவும் காண்க. இசை பாடிஞல் அது கேட்டுப் பசுக்கள் அதிகம் பால் சுரக்கும் என்பதும் உயிர்தூற் சாத்திரிகள் கண்டவுண்மை. முருகர் - புரா - (4), திருநா - புரா - 158-ம் பார்க்க.

முரன்றிடத் தேன் பொழியும் என்றது பசியாற்றுது கதறுவோர்க்கு உணவு ஈயும் கருணையாளரியல்பையும் நினைவூட்டுவது காண்க.

**முரன்றிட மென்கண் உடைய** - மென்கண் ஆகி உடைய. வண்டுகள் பண்முரல, வலிய கணுக்கள் இளகி மெலியவாயின. இவ்வாறு கணுக்கள் உண்மெலிதலிஞல் அவற்றின் மேற்பரவியதோலும் உட்பொதிந்த தேனைக் கட்டித் தாங்கமாட்டாது விட்டு வாய்பிளந்தது ; வாய்விடவே, மிக உள்ளூறிய தேன் வெளிச்சொரிந்தது எனக் கண்டுகொள்க. கரும்புகளிற் கணுக்களின் பாகங்கள் கடினமானவை. இவ்வாறன்றி **மென்கண் உடைய** என்றதற்கு மெல்லிய கண்களுடைய என்று கூறும் உரை பொருந்தாமை யறிக. " கருஞ்சகட மிளகவளர் கரும்பு " என்ற ஆளுடைய பிள்ளையாரது திருக்கழுமலத் (மேகராகக் குறிஞ்சி) தேவாரத்தினும் கரும்புக்கணுக்களின் வன்மை காட்டப்படுதல் காண்க. கரும்பின் கணு அல்லாத பகுதி மெல்லியனவாதலும் காண்க.

கண், வாய் என்ற உறுப்புக்களின் பெயர்களுள் தொனித்தலும், கணமங்கலம் என்ற பெயருக்கேற்பப் பலவகை மங்கலப் பொருள்களையும் சுட்டுதலும் காண்க.

**தேன்** - இங்கு இனிமையுடைய கருப்பஞ்சாறு குறித்தது. **சொரியும்** - சொரிதற் கிடமாகிய.

இத்தலம் (கணமங்கலம்) திருத்தண்டலை நீணெறிக்கு மிக அணிமையில் (அதனின்றும் ¼ காழிகை) உள்ளதென் றறியப்படுதலின் அதனை நினைவினிற்கொண்டு, நம் போலியருக்கு நினைவூட்டும் பொருட்டு அத்தலத்தின் ஆளுடைய பிள்ளையாரது "**விநம்புந் திங்களுங் கங்கையும் விம்மவே, கநம்புந் தும்பியுஞ் சூழ்சடை யார்க்கிடங், கநம்புஞ் செந்நெலுங் காய்கழை கின்வளம், கெருங்குந் தண்டலை நீணெறி காண்மினே** " என்ற திருப்பதிக முதற்பாசுரத்தின் சொல்லும், பொருளும், யாப்பும் ஆதியவற்றை அடியொற்றியே ஆசிரியர் அமைத்திருத்தல் சிந்திக்கற்பாலது. இப்பாட்டிற் **கநம்பும்**, வரும் பாட்டிற் செந்நெல்லுங் கூறியதும் காண்க.

**கணமங்கலம்** - தலவிசேடம் பார்க்க. 1

904. செங்கெ லார்வயற் கட்டகெந் தாமரை
முன்னர் நந்துமிழ் முத்தஞ் சொரிந்திடத்
துன்னு மள்ளர்கைம் மேற்கொண்டு தோன்றுவார்
மன்னு பங்கய மாநிதி போன்றுளார். உ

(இ - ள்) வெளிப்படை. செங்கெற் பயிர் நிறைந்த வயல்களிற் காலையாகப் பிடுங்கப்பட்ட தாமரைப் பூக்களை, அவற்றில் முன்னமே சங்கு ஈன்று தங்கிய முத்துக்களைச் சொரிந்திடும்படி நெருங்கிய மள்ளர்கள் கையிற்கொண்டு தோன்றுவதனால், (அவர்கள்) பங்கய மாநிதி கொண்ட தேவர்கள் போன்று உள்ளார்கள்.

(வி - வா) **செந்நெல்** - கார் நெல்லினும் செந்நெல் சிறந்தது. அன்றியும் இச் சரித நிகழ்ச்சியினைக் காட்டும் சிறப்பும் வாய்ந்தது. 908 - 913 பார்க்க. எங்கும் செந் நெல்லேயாகி விளங்கும் தன்மை குறிப்பிற்காட்டிய படியுமாம்.

**கட்ட** - களையப்பட்ட. களைகட்டல் என்பது உழவு மரபு வழக்கு. தாமரையைக் களையாகக் களையும் வயல்கள் இக்காளிலும் பல இடங்களிற் காணவுள்ளன.

**செந்தாமரை, முன்னர் நந்து உமிழ் முத்தம், சொரிந்திட** - தாமரைகளில் முத்து விளைவதில்லை. அவை முத்தம் சொரிந்திடல் வேண்டுமாயின் பிற இடத்தினின்று பெற்றிருத்தல் வேண்டும். களையப்படுமுன்பே சங்குகள் அவற்றில் ஏறி முத்துக்களை ஈன்றன. அம்முத்துக்கள் அங்குத் தங்கிக்கிடந்தன. பின்னர்க் களையப்பட்ட தாமரை அவற்றைச் சொரிந்தன என இத்துணையும் அடக்கிச் சுருங்கக்கூறிய அழகு காண்க.

**மன்னு பங்கய மாநிதி** - பதுமநிதி. தாமரை வடிவுடையதொரு நிதி. அது குறையாச் செல்வமுடையது. இதுபோன்று சங்கு வடிவமுள்ள சங்கநிதி என்ற தொரு நிதியும் உண்டு. இவையிரண்டினையும் நிதிக்கிழவனுகிய குபேரன் உடையவன் என்பது மரபு. "சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து" என்பது நிருத்தாண்டகம். **மன்னு** - எடுக்க எடுக்கக் குறையாது நிலைத்த தன்மை குறித்தது. **மாநிதி** என்றதனாலும் குறையாத பெருமை குறிக்கப்பட்டது. **நிதி** - நிதியுடைய தேவர். ஆகுபெயர். 2

905. வளத்தி னீடும் பதியதன் கண்வரி
யுளர்த்து மைம்பா லுடையோர் முகத்தினுங்,
களத்தின் மீதுங், கயல்பாய் வயலயற்
குளத்து, நீளுங் குழையுடை நீலங்கள் கூ

(இ - ள்) **வளத்தில்...முகத்தினும்** - வளத்தால் நீடும் அந்தப் பதியில் வண்டுகள் குடைகின்ற கூந்தலினையுடைய பெண்களின் முகத்திலும்; **குழை உடை நீலங்கள் நீளும்** - குழையை எட்டுகின்ற நீல மலர்போன்ற கண்கள் நீள்வன; **களத்தின் மீதும்** - (அவர்களுடைய) கழுத்தின் மேலும்; **குழை உடை நீலங்கள் நீளும்** - குழை வாகச் செய்யப்பட்ட நீலமணிகளையுடைய அணிகள் விளங்குவன; **கயல் பாய்...குளத்தும்** - கயல் மீன்கள் பாய்வதற்கிடமாகிய வயல்களின் பக்கத்துள்ள குளத்திலும்; **குழை உடை நீலங்கள் நீளும்** - குழைகளை உடைய நீலோற்பலங்கள் நீண்டு படர்ந்து பூக்கும்.

(வி - ரை) முகத்தினும், களத்தின் மீதும், குளத்தும், குழை உடை நீலங்கள் நீளும் என்று தனித்தனி கூட்டி முடித்துக் கொள்க.

**வரி உளர்த்தும்...முகத்தும்...நீளும்** - **வரி** - வண்டுகள். **உளர்த்துதல்** - ஊதிக் குடைதல். **ஐம்பால்** - முடி (உச்சியின் முடித்தல்), குழல் (சுருட்டி முடித்தல்), தொங்கல் (முடித்து தொங்க விடுதல்), பனிச்சை (பின்னி விடுதல்), சுருள் (பின் சொரு குதலும் பல வகையாகச் சுருட்டி முடிதலும்) என்ற ஐந்துவகையாகப் புனையப் படுதலின் கூந்தலினை ஐம்பால் என வழங்குதல் மரபு.*

**முகத்தினும்** - முகத்தினும், குறித்த ஏனையிடங்களினும் என உம்மை எண்ணும்மை. **முகத்தில் குழை உடை நீலங்கள் நீளுதலாவது** முகத்தில் உள்ள கண்கள் காதளவு நீண்டிருத்தல். இங்குக் **குழை** - காதணியையும், **நீலம்** - நீலமலர் போன்ற கண்

---

* இக்காளில் இது மாறி மற்றும் பலவேறு வகைகளாகப் புனையப்படுதலும், ஒரு வகையாலும் புனையப்படாமல் தூங்கவிடப் படுதலும், குறுகத் தறித்துப் பரப்ப விடுதலும் ஆகிய வழக்குகள் புகுந்து விட்டமையின் ஐம்பால் என்பது இடுகுறி யளவாய் ஒழிந்து நின்றது.

களையும் உணர்த்தின. காதளவும் நீண்டிருத்தலால் காதில் அணிந்த குழையைக் கண்கள் எட்டுகின்றன. அதனால் காதுகளேயன்றிக் கண்களும் குழையுடையன என்று சொல்லத்தக்கனவாய் நீண்டன என்ற குறிப்புமாம். **குழை உடை** - குழைகளை உடைக்கின்ற என்றுரைப்பாருமுண்டு.

**களத்தின் மீதும்** - **குழையுடை நீலங்கள் நீளும்** - குழைவையுடைய வேலைப் பாடமைந்த நீல மணிகள் பொருந்திய நீண்ட அணிகள் (அப்பெண்களின்) கழுத்தில் விளங்கின. இங்குக் **குழை** - குழைவாகிய வடிவையும், **நீலம்** - நீல மணிகளையும் **களம்** - கழுத்தையும் உணர்த்துகின்றன. நீல மணிகளை அழுத்திக் குழைத்து நீண்டு தோங்கும் சங்கிலிபோன்ற அணிகள் கழுத்திலணியப் படுவது அக்காளின் வழக்குப் போலும். **களம்** - நெற்களம் என்று கொண்டு நெற்களத்திலும் நீலங்கள் (கொடிகள்) நீண்டு படரும் என்பர் இராமநாதச் செட்டியார்.

**கயல்...குளத்தும் குழை உடை நீலங்கள் நீளும்** - வயல்களி னயலிற் குளங்கள் உள்ளன. அவ்வயல்களின் அயலிலுள்ள குளங்களினுள் நீண்டு படர்ந்து நீலம் மலர்களைப் பூத்தன. வயல்களினும் அயலிற் குளத்தினும் என்றுரைப்பினு மமையும். இங்குக் **குழை** - கொடியின் இலைகளையும், மலரின் இதழ்களையும்; **நீலங்கள்** - நீல மலர்களையும் அக்கொடிகளையும் உணர்த்தின. **நீளும்** - படர்ந்து வளர்ந்து செழிக்கும்.

மேற் பாட்டிற் **பங்கயமாநீதியுடையார்** போன்று **தோன்றும் மள்ளர்கள்** என்றது, வயல்கள் எல்லாம் செக் கெல்லையாகி விளையக்கண்டு, தாம் உணவின்றி வருந்தியும், இஃதடியேன் செய்த புண்ணியம் என்று மகிழ்ந்து, நெல்லறுத்துப் பெறும் செந்நெற் கூலியெல்லாம் இறைவனை ஊட்டிய குறையா நிதிபோன்ற வள்ளல் தாயனுரையும், இப்பாட்டில், **முகத்தினும் குழையுடை நீலங்கள் நீளும்** என்றது, தாயனுரது அன்பின் செயல்களையும், அவர் கொண்டு சென்ற பொருள்கள் கமரில் வீழ்ந்ததனையும், அவர் தமது ஊட்டியை யிரந்ததனையும், இறைவனது திருக்கை அவர் கையைப் பிடிக்க ஊறு நீங்கியதனையும் தம் கண்களாற் கண்ட மனைவியாரையும் குறிப்பாலுணர்த்துவது சிந்திக்க.

**நீடும் குழை யடை**—என்பதும் பாடம் 3

906. அக்கு லப்பதி தன்னி லறநெறித்
தக்க மாமனை வாழ்க்கையிற் றங்கினர்
தொக்க மாநிதித் தொன்மையி லோங்கிய
மிக்க செல்வத்து வேளாண் டலைமையார். சு

(இ - ள்) வெளிப்படை. அந்த நல்லபதியில் தகுதி வாய்ந்த பெருமையுடைய இல்வாழ்க்கையில் தங்கியவர் பழமையாகக் கூடிய பெரு நிதியினால் மிகுதியாகிய செல்வ நிறைந்த வேளாண்மையிற் றலைமையாகியவர்.

(வி - ரை) **குலப்பதி** - குலம் - இங்கு நலங் குறித்தது.

**அறநெறி** - இவரது வாழ்க்கை முழுதும் அற நெறியில் நின்றது குறித்தார்.

**தக்க** - அவ்வாறு நின்றதினால் தகுதிபெற்ற. இல்லறத்தின் **தகுதி** பற்றிக் " கற்ற னூற் றுறைபோய்க் கடிமனைக் கிழவ, னற்குண நிறைந்த கற்புடை மனைவியோ, டன்பு மருளுந் தாங்கி யின்சொலின், விருந்து புறந்தர் தருந்தவர்ப் பேணி, யைவகை வேள்வியு மாற்றி யிவ்வகை, நல்ல நிரப்பிப் பல்புகழ் நிறீஇப், பிறன்மனை நயவா னறன்மனை வாழ்க்கைக்கு, வரையா ளாளின் மகப்பேறு குறித்துப், பெருநலக் தூய்க்கும் பெற்றித் தன்றே ".....“ அதனால், இல்லிலே யிரண்டு மெம்மனோர்க் கியலா" என்று குமாரகுருபரசுவாமிகள் சிதம்பராமும்மணிக்கோவையில் விதந்து எடுத்தோதினர்.

இதுபற்றித் திருவள்ளுவர் திருக்குறளில் வகுத்தோதியனவும், மற்றும் நீதிநூல்களான் விதித்தனவும் காண்க. இப்பெருமை கருதியே, மேலும் மா மனைவாழ்க்கை என்றார்.

தோன்மையில் தோக்க மாநிதியில் என்க. வழி வழியாக ஈட்டித் தொகுத்த பெருஞ்செல்வம். இதனை " வழிவந்த செல்வம் " (909) என்றதும் காண்க.

ஓங்கிய மீக்க செல்வம் - முன் சொன்னது வழிவழி வந்ததும், இது இவர்தாம் தேடியதும் ஆம். ஓங்கிய - என்றது ' மேழிச் செல்வங் கோழை படாது ' என்றபடி வேளாண் செல்வத்தின் விழுப்பமும், மீக்க என்றது அதன் மிகுதியும் பரப்பும் குறித்தன. தக்க மாமனை அறநெறி வாழ்க்கை எனக்கூட்டுக.

தலைமையார் - முதன்மை பெற்றவர் என்பதாம். இது வேளாண் வகுப்பில் இவரது, முதன்மை என்ற குடியை உணர்த்தியது போலும். 4

907. தாய னெனு நாமந் தரித்துளார் ;
சேய காலந் தொடர்ந்துந் தெளிவிலா
மாய னர்மண் கிளைத்தறி யாதவத்
தூய நாண்மலர்ப் பாதந் தொடர்ந்துளார். ரு

(இ - ள்) வெளிப்படை. (அவர்) தாயனார் என்ற பெயரைத் தாங்கியவர் ; நெடுங் காலம் தொடர்ந்திருந்தும் தெளிதலிலாத திருமாலானவர் மண்ணைத் தோண்டித் தேடியும் அறியாத அத்தத் தூய புதியமலர் போன்ற பாதங்களைத் தொடர்ந்துள்ளவர்.

(வி - ரை) அவர் என எழுவாய் வருவிக்க. அவர் தரித்துளார் - தொடர்ந்துளார் என்க.

நாமம் தரித்துளார் - பெயரைத் தாங்கினர் என்றதனால் பெற்றோரால்டப்பட்ட அப்பெயருக்குத் தக்கபடி ஒழுகி அதனைத் தாங்கியவர் என்றதாம். தாய் அனார் - எவ்வுயிர்க்கும் தாய் போன்ற அன்புடைமை மேற்கொண்டவர் என்பதும் குறிப்பு.

சேயகாலம்.....மாயனார் - நெடுங்காலம் பிரியாத தொடர்புடையராய் இருந்தும் " இவன் இறைவன் " என்று தெளிவு படாத விட்டுணு. இவர் இறைவனுக்குச் சத்தியாகவும் கூறப்படுவர். இவ்வாறு நெடுங்காலம் நெருங்கிய தொடர்புடனிருந்தும் மாயையான் மயங்கித் தெளிவுபடாது " யான் தேடிக் காண்பேன் " என்று மண் கிளைத்துத் தேடியும் அறியாது நின்றவர் என்க. " தாவியவ னுடனிருந்தும் காணுதற்பான் " (திருஞான - தேவா - திருக்கோளிலி) என்ற கருத்தும், இலிங்கபுராணத் திருக்குறுந்தொகைக் கருத்துக்களும் இங்குச் சிந்திக்கத்தக்கன.

மாயனார் - மாயத்துட்பட்டு மயங்கியவர் என்பது குறிப்பு. சேய - நீண்ட.

தொடர்தல் - இடைவிடாத தொடர்ச்சியுடையாதல். தெளிவு - அவர் இறைவன் என்றும் தாம் அவரால் ஆளாகக் கொள்ளப்பட்ட அடிமை என்றும், அவர் அறிவித்தாலன்றி அறியப்படாதவர் என்றும் தெளிவுபட உணர்தல்.

தெளிவிலா மாயனார் மண் கிளைத்து அறியா - மாயனார் ஆதலின் தெளிவிலர் ; தெளிவிலாராதலின் கிளைத்தனர் ; கிளைத்தனராயினும் அறியார் என்க.

மண்கிளைத்து - நிலத்தைப் பிளந்து - தோண்டி. இவ்வாறன்றித் தெளிவிலா மாயனார் மண்கிளைத்துச் சேயகாலம் தொடர்ந்தும் அறியாத என்று கொண்டு கூட்டி உரைப்பினுமமையும்.

அத்தூய நாண்மலர்ப் பாதம் - அ-அந்த. பண்டறிசுட்டு. தூய்மை - இயல்பாகவே பாசங்களின் நீங்கும் இறைமைத்தன்மை. நாண்மலர் - " புதியையா யினியையாம் பூந்தென்னூல் " (திருநா - தேவா - பழந்தக்க - 4) என்றபடி புதுமையும் இனிமையும் குறித்தது. இறைவன் திருவடி " பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றிய "

தாம் தன்மையது. மலர்-தாமரைப்பூ. அது செம்மை நிறம், நறுமணம், இனிய ஊறு, தேனின் சுவை, வண்டின் ஓசை என்பன முற்றும் இனிமை பயப்பது. "மாசில் வீணை...இணையடி நீழலே" என்ற அப்பர் சுவாமிகள் தேவாரக் கருத்தையும், "என்னுளும் திகழும் சேவடி" என்ற இத்தலத்தேவாரமும் இங்குச் சிந்திக்க.

மாயனூர் தொடர்ந்தும் தெளிவிலாப் பாதம் தொடர்ந்து உளார் - மாயனும் தொடர்ந்து எனச் சிறப்பும்மை பிரித்துக் கூட்டுக. அவரும் தொடர்ந்து தெளியாது - அறியாது - விட்ட பாதங்களைத் தாம் தெளிந்தும், அறிந்தும், தொடர்ந்தும் விடாது பற்றியவர் என இவரது உயர்வு குறித்தது. உளார் - முக்காலத்தும் அத்தொடர்ச்சியுள் நிறைந்துள்ளவர். தொடர்ந்ததனால் உளாயினர் என்று காரண காரியப் பொருள் பட உரைத்தலுமாம். "கருவ ருத்தியி னுன்முகன் கண்ணனென், றிருவரும் தெரியா ஒருவன்" (திருஞான - தேவா - கௌசிகம் - தண்டலை நீணெறி - 9) என்ற கருத்தை இங்கு வைத்துக் காண்க. 5

908. மின்னு செஞ்சடை வேதியர்க் காமென்று
சேந்நெ லின்னமு தோடுசெங் கீரையும்
மன்னு பைந்துணர் மாவடு வுங்கொணர்ந்
தன்ன வென்று மமுதுசெய் விப்பரால். சு

(இ - ள்) வெளிப்படை. விளங்குகின்ற சிவந்த சடையினையுடைய வேதியராகிய சிவபெருமானுக்கு ஆகுமென்று செந்நெலரிசியின் இனிய அமுதுடன், செங்கீரையும், நிலைத்த பசுங்கொத்தாகிய மாவடுவையும் கொண்டு அவற்றை ஒவ்வொருகாலும் நியதியாய் அவரை அமுதுசெய்விப்பர் (தாயனார்).

(வி - ரை) மின்னு செஞ்சடை - "மாலையின் தாங்குருவே போலும் சடைக் கற்றை" (அற் - திருவந் 1), "மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை" (பொன் - அந் - 1) முதலிய திருவாக்குக்கள் காண்க. சடை செவ்வான வொளி யுடையது என்க. தாயனார் அமுதுசெய்வித்து வழிபட்ட இறைவர் திருத்தண்டலை நீணெறியில் எழுந்தருளிய மூர்த்தி என்றறியப்படுகின்றது. இத்தலத்தேவாரத்தில் "சுரும்புந் தும்பியுஞ் சூழ்சடையார்" என்று ஆளுடைய பிள்ளையார் இவரது சடை யினைச் சிறப்பித்தருளியது சிந்திக்க.

வேதியர்க்கு ஆகும் - வேதியரது பூசைக்கு உரியன ஆகும். வேதியர்கள் செந் நெல் உண்ணும் வழக்கும் குறிப்பதாம்.

செந்நெல் இன் அமுதோடு - ஞாயிற்றின் ஒளியும் வெப்பமும் மிகப் பொருந்திய காலத்தின் விளைதலின், செந்நெல் குணத்தால் மிக்கதும் உணவுக்கு உரியதும் ஆம் என்பர். எனவே "விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று" (11-ம் திருமுறை-திரு விடை - மும் - கோவை - 30) என்றபடி அன்புடைய மக்கள் தாம் உயிர்வாக உவக்கும் உணவையே இறைவனுக்கு ஊட்டுவர். கண்ணப்பநாயனார் வேட்டையாடிச் சேர்த்து இறைவனை ஊட்டிய பண்பு இங்குச் சிந்திக்கத்தக்கது. இதுபற்றியே தாயனார் செந் நெல் அமுதினையே காலும் இறைவனுக்கு அமுது செய்வித்தனர் என்க. அதுவே இனிய அமுது என்ற காரணத்தால் அதனை ஊட்டினர் என்பார் இன் அமுது என்றார்.

கீரையும் மாவடுவும் உணவுக்கு ஒத்த உதவிச்சுவை தருவனவாதலன்றி அவையே உணவாதலில்லை. செல்லரிசியமுதே உணவாம். இச்சிறப்புப்பற்றி அமு தோடு கீரையும் வடுவும் என, ஒடு வுருபை அமுதுடன் தந்து பிரித்தோதினார்.

செங்கீரை - இது செந்நெல் அமுதுடன் ஒத்த சுவையும் குணமலமும் தருவது பற்றி இதனை ஊட்டினர் என்க.

மன்னு பைந்துணர் மாவடு - வடுவின் பசுமையும் இளமையும் மாறுதபடியே பன்னாளும் நிலைக்குமாறு ஊறவைத்துப் பாதுகாக்கப்பட்ட என்ற குறிப்புப் பெற

**மன்னு** என்றார். **மாவடு** உணவைச் சீரணிக்க உதவுவது என்ப. **துணர்** - கொத்து. **வடு**- மிக இளைய உவர்ப்பிஞ்சு. " மாவடு வகிரன்ன கண்ணிபங்கா " என்பது திருவாசகம்.

**அழுது செய்விப்பாரால்** - ஒவ்வொரு நாளும் நியதியாய் ஊட்டுவிப்பார். **ஆல்** - நியதிபிழையாத உறுதிக் குறிப்புத் தரும் அசை. **செய்விப்பர்** - பூசைக்குரிய சிவ வேதியர்களைக் கொண்டு அமுதமைப்பித்து ஊட்டுவித்தார் என்ற குறிப்புப் பெறப் பிறவினையாற் கூறினர். **வேதியர்க்கு ஆம்** - என்ற முற்குறிப்பும் அது. தாயனர் என்ற எழுவாய் மேற்பாட்டிலிருந்து வருவிக்க. 6

909. இந்த நன்னிலை யின்னல்வந் தெய்தினுஞ்
சிந்தை நீங்காச் செயலி னுவந்திட
முந்தை வேத முதல்வ ரவர்வழி
வந்த செல்வ மறியாமை மாற்றினார். எ

**(இ - ள்)** வெளிப்படை. இந்த நல்ல திருத்தொண்டினைத் துன்பம் வந்த காலத்திலும், மனத்தில் விடாதுபற்றிச் செய்கையின் முடிப்பதனைத் தாம் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டு அவரைத் தம்மிடத்தே வைக்க, முன்னுகிய வேதங்களுக்கு முதல்வராகிய சிவபெருமான், அவர்க்கு வழி வழி வந்த மிக்க செல்வங்களை அவை போயின வழி அறிய முடியாதபடி மாற்றினார்.

**(வி - ரை)** **நன்னிலை** - சிவத் திருத்தொண்டின் தன்மையாதலின் நன்னிலை என்றார். **இன்னல் வந்து எய்தினும்**-**இன்னல்**-துன்பம்-இடையூறு. **வந்து எய்தினும்** என்ற இலேசானே, திருத்தொண்டராதலின் இவர்க்கு இன்னல் வருதற்கேதுவில்லை என்றும், வேறு காரணங்களால் வரினும் என்றும் குறிப்பிட்டபடியாம். " இன்பமே யெக்காலும் துன்பமில்லை", "ஒன்றினுற் குறையுடையோ மல்லோ மன்றே," "யாதுங் குறைவிலார் " என்பன வாதிய திருவாக்குக்களால் அடியார்கள் எக்காலும் துன்ப மில்லார் என்பதறியப்படும். ஆதலின் **எய்தினும் சிந்தை நீங்காச் செயல்** என்றார். "மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார், ஓது காத லுறைப்பி னெறிநின்றார்" என்றது காண்க. " இடரினுந் தளரினு மெனதுறுநோய், தொடரினு முனகழல் தொழு தெழுவேன் " என்பனவாதியாக ஆளுடையபிள்ளையார் திருவாவடுதுறைப் பதிகத்தினுட் பாசுரந்தோறும் அருளியவை காண்க.

**செயலின் உவந்து** - செயலில் தாம் மகிழ்ந்து அருள்புரிந்து, **இட** - நித்தியமான தமது உலகத்தில் வைக்க என்க.

இங்கு, இவ்வாறன்றி, இன்னல்வரினும் மனத்து நீங்காது வைத்துச் செய்வதில் தாயனார் மகிழ்வடையச் செய்யுமாறு அவரது செல்வத்தை மாற்றினார் என்றும், இதனைக் கண்டு இன்னல் வரினும் மன நீங்காது உலகத்தார் மகிழ்ந்திட என்றும் உரைப்பாருமுண்டு. தாயனாது சிந்தைநீங்காச் செயலில் இறைவர் உவந்தனர்என்பது பின்னர் " நன்று நீ புரிந்த செய்கை...என்றும் நம் உலகில் வாழ்வாய் " (922) என அருளியதனால் அறியப்படும்.

**முந்தை வேதம்** - எல்லா ஞானங்களுக்கும் - வித்தைகளுக்கும்-மூலமாகிய வேதம் **வேதம்** - வித் - (ஞானம்) என்ற பகுதிபடியாய்ப் பிறந்த பெயர்.

**அவர் வழிவந்த செல்வம்** - அவரது முந்தையோர் காலமுதல் தொன்று தொட்டு வழி வழி வந்த பழஞ் செல்வம்.

**அறியாமை** - இன்ன வழியாற் போயிற்று என்று யாரும் தெரிய முடியாதபடி. அவர் தெரிய முடியாதபடி என்றலுமாம். முன் செல்வமிருந்த நிலையை அனுமானத்தாலும் அறிய முடியாதபடி மூழுவதும் என்ற குறிப்பும் காண்க.

**மாற்றுதல்** - மறைத்தல். 7

910. மேவு செல்வங் களிறுண் விளங்கனி
யாவ தாகி யழியவு மன்பினல்
பாவை பாகர்க்கு முன்பு பயின்றவத்
தாவில் செய்கை தவிர்ந்திலர் தாயனார். அ

(இ - ள்) வெளிப்படை. பொருந்து செல்வங்கள் வேழமுண்ட விளங்கனியின் தன்மையே பெற்று அழியவும், பார்வதி பாகனருக்கு அன்பினல் முன் செய்து பழகிய, அந்தக் குற்றமற்ற திருத்தொண்டினைத் தாயனார் தவிர்த்தாரல்லர்.

(வி - ரை) மேவு - வழி வழியாக வந்து பொருந்தும்.

களிறு உண் விளங்கனி - களிறு - யானை. வேழம் - இங்கு விளங்கனிக்கு வரும் யானை நோய் என்ற பொருள் குறித்தது. விளங்கனியைக் களிறு உண்ணுதலாவது இந் நோய் பற்றிய அதனல் விளங்கனி மேற்பார்வையில் முழுக்கனியாகக் காணப்படினும் உள்ளீ டறுதல். " வேழம் - வெள்ளிலுக்கு (விளங்கனிக்கு) வருவதோர் நோய் "... " தேரை போயிற்றென்னூற் போல்வதோர் நோய் என்க. இனி, யானையுண்டது வேறுவிதமென் றுரைப்ப "--(ஜீவக சிந்தாமணி 232 நச்சினர்க்கினியருரை). " வெதும்பி வேழ, முண்டிடு கனியா மென்ன வுணர்வுபோ யுருகா நின்றூர் "--(தட்ச காண்டம் - கந்தபுரா - தக்கியுத் - பட - 40)

(விளங்கனி) ஆவது ஆகி அழியவும் - (விளங்கனிபோல) வெளிப் பார்வைக்கு ஆவது - உள்ளது - போலத்தோன்றி என்க. அழியவும் - உள்ளே ஒன்றுமில்லாத படியால் அழிந்து போகவும். இங்குச் செல்வம் அழிதல் என்றது அது மாறி மறைந்து போதல் குறித்தது.

அன்பினல் - முதனிலைத் தீபமாகக்கொண்டு, அன்பினற் பயின்ற எனவும், அன் பினற் றவிர்த்திலர் எனவும் கூட்டி உரைக்க நின்றது.

முன்பு-செல்வத்தோடிருந்த முன்காலமெல்லாம். பயிலுதல் - தவிராது செய்தல்.

தாவில் செய்கை - பொருட் குற்றம், செயற்குற்றம், மனக்குற்றம் முதலிய எக்குற்றமும் இல்லாது விதிப்படி செய்துமுடித்த திருத்தொண்டு. செய்கை - முற்றிய செயல் குறித்தது. முன்பாட்டில் " சித்தை நீங்காச் செயல் " என்றதும், " நீ புரிந்த செய்கை " (922) என்பதும் காண்க.

தாயனார் தவிர்ந்திலர் என்க. தவிராது செய்து வருவதில் அவருக்கிருந்த தீவிரங் குறிக்கப் பயனிலையை முன் வைத்தோதினர். தாயனார் இஃது குறிப்பினல் தாய் இல்லாராகிய இறைவர்க்குத் தாய் போல அன்புடன் அவரை ஒரு காலுந் தவிராது நியதியாய்ப் பரிந்து ஊட்டினர் என்றுரைக்கவும் நின்றது.

பாவை பங்கர்க்கு—என்பதும் பாடம். 8

911. அல்ல னல்குரா வாயிடக் கூலிக்கு
நெல்ல றுத்துமெய்ந் நீடிய வன்பினல்
நல்ல சேந்நெலிற் பெற்றன நாயனார்க்
கொல்லை யின்னமு தாக்கொண் டொழுகுவார், கூ

912. சாலி நேடி யறுத்தவை தாம்பெறுங்
கூலி யெல்லாங் திருவமு தாக்கொண்டு
நீல நெல்லரி கூலிகொண் டுண்ணுகாள்
மால யற்கரி யாரது மாற்றுவார், கூ

வேறு

913. நண்ணிய வீயல்க ளெல்லாம் நாடொறு முன்னங் காண
வண்ணவார் கதிர்ச்செஞ் சாலி யாக்கிட, மகிழ்ந்து சிந்தை

யண்ணலா ரறுத்த கூலி கொண்''டிஃ தடியேன் செய்த
புண்ணிய'' மென்று, போத வமுதுசெய் விப்பா ராஞர். கக

911. (இ - ள்) வெளிப்படை. துன்பத்தரும் வறுமை ஆயிடவே, கூலிக்கு நெல் அறுத்தும் உண்மையின் நீடிய அன்பினுல், அக்கூலியில் நல்ல செந்நெல்லிற் பெற்றவற்றைச் சிவபெருமானுக்கு விரைவில் இனிய திருவமுதாக ஆக்கி ஒழுகு கூ வாராய்,

912. (இ - ள்) வெளிப்படை. செந்நெல் தேடிப்போய் அறுத்துக் கூலியாகத் தாம் பெறும் செந்நெல்லே எல்லாம் இறைவனுக்குத் திருவமுதாக அமைத்துக் கொண்டு, கார்நெல் அரிந்து பெற்ற கூலிக் கார்நெல்லினுல் தாம் உணவாக்கிக்கொண்டு ஒழுகுகின்ற காலத்தில், மாலுக்கும் அயனுக்கும் அரியாராகிய சிவபெருமான் அதனை கo மாற்றுவாராகி,

913. (இ - ள்) வெளிப்படை. பொருந்திய வயல்களில் எல்லாம் நாள்தோறும் மூன்காணுமாறு அழகிய நீண்ட கதிர்களையுடைய செந்நெல்லே விளைவதாக ஆக்கியிட, அது கண்டு பெருமையுடைய தாயனுர், '' இஃது அடியேன் செய்த புண்ணியமே யாம் '' என்று கொண்டு மனமகிழ்ந்து, அதனை அறுத்த கூலிச் செந்நெல்லினைக் கொண்டு, இறைவரை நிரம்ப அமுது செய்விப்பார் ஆயினுர். கக

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

911. (வி - ரை) **அல்லல் நல்குரவு** - துன்பமே செய்யும் தரித்திரம் - '' நல்குர வென்னும் தொல்விடம் பிழைத்தும் '' என்று திருவாசகம் அருளியபடி, உயிர்போமாறு துன்பமே செய்யும் விடம் போல்வதாதலின் **அல்லல்** என்ருர். '' அல்ல லென்செயு மருவினை யென்செயும்...அடிமைபூண் டேனுக்கே '', '' அறவன், சேவடி யடைந்தன மல்லலொன் றிலமே '' என்பனவாதி தேவாரத் திருவாக்குக்களை இங்கு நினைவு கூர்க.

**கூலிக்கு நெல் அறுத்தும்** - கூலிக்காக ஏற்று நெல் அறுத்து என்றது நெற்கூலி பெறும் வழக்கம் குறித்தது. கூலி - கூலிக்காகப் பெறும் நெல் குறித்தது. இங்குச் **செந்நெலிற் பெற்றன** என்றும், வரும்பாட்டில் ''கூலி எல்லாம் திருவமுதாக்கொண்டு, நீல நெல்லரி கூலிகொண் டெண்ணும் '' என்றும், அதன்மேல் வரும்பாட்டில் '' அறுத்த கூலிகொண்டு இஃது அடியேன்செய்த புண்ணியம் '' என்றும் வருவன காண்க. நெல் முதலிய விளைபொருள்களையே கூலியாகக் கொடுக்கும் இந்நாள் வழக்கமும் காண்க. கலியநாயனுர் '' தக்க தொழிற்பெறுங் கூலி '' எண்ணெய்கொண்டு திருவிளக்கிட்ட சரிதமும் இங்கு நினைவு கூர்க. **அறுத்தும்** - உம்மை உயர்வு சிறப்பு. **மெய் நீடிய அன் பினுல்** - வாய்மை, தானம், தவம் முதலிய எல்லா நற்குணங்களையும் நல்குரவு போக்கி விடும் என்பர். ஆனுல் தாயனுரிடத்து நல்குரவு வரினும் அவை குறையாது நீடியிருந்த தற்கு உண்மையன்பே காரணமாயிற்று என்க. மெய் - உடல் என்று கொண்டு, மனம் அன்பினுல் நீடியதன் பயனுக உடலின் முயற்சியிலும் நீடியதனுல் உடம்பால் வருந்திப்பெற்ற கூலிச் செந்நெல்லைத் திருவமுதாக்கொண்டார் என்றலுமாம். வறுமை முதலிய கேடுகள்வரினும் மனம் இடுக்கண்பட்டழியாது உடல் வருந்தி முயன்று அத்துன்பங்களை நீக்கல் வேண்டும் என்ற நீதிநூற் கருத்தினையும் இங்குச் சிந்திக்க. '' தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன், மெய்வருந்தக் கூலி தரும் '' என்ற திருக்குறளின் சொல்லும் பொருளும் இங்குப் பொருத்தமுடைமை காண்க.

**நல்ல** - குணத்தால் நல்ல. **பெற்றன** - கூலியாகப் பெற்றவற்றை. இரண்டனுருபு தொக்கது.

**நாயனுர்** - தலைவர்-சிவபெருமான். '' அழகிது நாயனீரே '' (774) முதலியவை பார்க்க. தலைவர் என்று குறிக்கும் இப்பெயர் அவரே போன்று எம் தலைவர்களாகிய அடியார்களுக்கும் வழங்குவதாயிற்று.

ஓல்லை - விரைவாக. நெல் அறுத்துக் கூலிபெற்று வரக் காலந் தாழ்க்குமாதலின் அதுவரை இறைவர் பசித்திருப்பாரே எனக்கருதி விரைவில் ஊட்டுவிக்கும் ஆர்வம் குறித்தது. ஓல்லை - பழமையாகிய-எப்போதும் உண்பிக்கும் நியதிப்படி என்றலுமாம்.

இன்அமுதா - அமுதா - அமுதாக - இறைவர்க்கு இனிய திருவமுது ஆகுமாறு அமைத்துக்கொண்டு.

ஓழுதவார் - முற்றெச்சம். ஒழுகுவாராகி - திருஅமுதாக் கொண்டு - என வரும் பாட்டுடன் கூட்டி முடித்துக்கொள்க. 9

912. (வி - ரை) காலி - இங்குச் செஞ்சாலி, செங்நெல் குறித்தது. நேடுதல் - தேடுதல்.

அறுத்து அவைதாம் பெறும் கூலி - அறுத்து - அறுத்ததற்காக. அவை - அவற்றில் - அச்செங்நெல்லில். கூலி - கூலிநெல்.

எல்லாம் அழதாக் கொண்டு - அச்கூலிச் செங்நெல்லில் ஒரு பகுதியும் தமக்கென்று ஆக்கிக் கொள்ளாமல் முழுமையும் இறைவரது திருவமுதுக்காகவே அமைத்துக் கொண்டு என்பார் எல்லாம் என்றார்.

நீலநெல் - கார்நெல். கூலிகொண்டு கூலியாகக் கிடைத்த கார் நெல்லினால்.

உண்ணும் நாள் - தமது உணவு ஆக்கிச் சிவக்கும் நாளில்.

மால் அயற்கு அரியார் - சிவ பெருமான். அதுமாற்றுவார் - அது - அதனையும்; கார்நெற்கூலி கொண்டு உண்ணும் செயலையும். சிறப்பு உம்மை தொக்கது. முன்னர்ச் செல்வம் அறியாமை மாற்றி (909) யதனோடு அதனையும் என இறந்தது தழுவிய எச்ச உம்மை என்று கொள்ளுதலுமாம். மாற்றுவார் மாற்றுவாராகி. முற்றெச்சம். மாற்றுவார் - ஆக்கிட என வரும்பாட்டுடன் கூட்டுக. அரியார் - அவர்களதறிவினைத் திரோதான சத்தியால் மறைத்துத் தாம் வெளிப்படாது நிற்பவர். " மற்றவ ரறியா மாணிக்க மலையை " என்ற திருவிசைப்பாக் காண்க.

அரியார் - அதுமாற்றுவார் - அரியார் என்றதனால் மறைத்தற் றொழிலையும், மாற்றுவார் என்றதனால் முன்னர் அதனால் ஆன்ம சிற்சத்தியை மறைத்துக் கன்மங்களை ஊட்டிக் கழிப்பித்துப் பக்குவப்படுத்தி இருவினை ஒப்பும் மல பரிபாகமும் வரச்செய்து பின்னர் அந்த மறைத்தற் றொழிலை மாற்றிய அருட்டொழிலையும் குறிப்பாலுணர்த்தினார்.

இங்குக் கார்நெல்லை மாற்றிச் செங்நெல்லாக்கியதும் இக்குறிப்புப்பட நிற்பது உன்னுக. கார்நெல் உணவு கொண்டு இருந்தாயனார் அவ்வனுபவம் கழிய நின்றது கருமானுபவம் நீங்கி வீடு பெறும் பக்குவம் பெற்ற நிலையினையும், செங்நெல்லை இறைவர்க்கு ஊட்டியது, தாமும் செம்மையேயாகிய சிவபதத்தில் (922) என்றும் வாழும் நிலையும் குறித்தன.

இவ்வாறு அது மாற்றுவாராகவே, ஆசிரியரும் இதுவரை கூறிவந்த யாப்பினைத் தாமும் மாற்றுவாராய், மேல்வரும் சரிதப்பகுதியை அறுசீர் விருத்தத்தாற் கூறத் தொடங்குதல் காண்க. 10

913. (வி - ரை) நண்ணிய - (அதுமாற்றுவாராகிய - 912) இறைவரது திருவுள்ளம் நண்ணிய. தாயனார் நண்ணிய என்று உரைப்பினுமமையும். வண்ணவார் கதிர் - வண்ணம் - நெற்கதிர்களின் திரட்சியும், வார் - அவற்றின் நீளமும் குறித்தன. கதிர்கள் அதிகம் மணிப்பிடியுள்ளனவாயும் பெரியனவாயும் வளர்ந்தன.

சிந்தை - மனத்தின் செய்கையும், என்று - வாக்கின் செய்கையும், அழது செய்விப்பார் - மெய்யின் (உடலின்) செய்கையும் ஆக முக்காரணங்களும் ஒன்றிய திருத்தொண்டு குறித்தது காண்க.

சிந்தை மகிழ்ந்து என்க. வினைச்சொல் முன்னர் வந்தது மிகழ்ச்சியின் தீவிரம் குறித்தது.

**அண்ணலார்** - தாயனாரது செயலின் அருமையும் பெருமையும் விளங்குமிட மாதலின் இங்கு இப்பெயராற் கூறினர். "வள்ளலார் இளையான்குடிப்பதி மாறனார்" (456) என்றதும், இவ்வாறு கூறும் பிறவும் காண்க.

**இஃது** - இவ்வாறு கூலி எல்லாம் செங்கெல்லேயாகப் பெற்றது.

**அடியேன் செய்த புண்ணியம்** - சிவத் தொண்டு செய்ய வாய்ப்பது முன் செய்த பெரும் புண்ணிய விசேடத்தாலன்றிக் கிட்டாதென்பது உண்மையாதலின், தம் கூலி முழுதும் சிவனுக்கே அமுதாகப் பயன்படும் பேறு முன் செய்த புண்ணியத்தால் கிடைத்த தென்றார். "என்ன புண்ணியஞ் செய்தனே நெஞ்சமே யிருங்கடல் வையத்தி, முன்னே நீபுரி நல்வினைப் பயனிடை" (திருவலஞ்சுழி - கட்டராகம் - 1) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரக் கருத்தினை இங்குச் சிந்திக்க.

**போத** - நிரம்ப ; மிகுதியாக. "பூதிசாதனத்தவர் முன் போற்றப் போதேன்" (சிறுத் - புரா - 45) என்புழிக் காண்க. **போதுதல்** - செல்லுதல் என்று கொண்டு, தமது திருத்தொண்டு முட்டுப்படாது மேற்செல்ல என்றலுமாம்.

**போத அமுது** - போதம் - தற்போதம் - பசுபோதமாகிய அமுது என்றுரைக்க நின்ற தொனிக்குறிப்பும் காண்க. தாயனார் தமது உணவுக்கு நெல் இல்லையே என்ற உணர்ச்சி முற்றும் அற்றவராய் இறைவரது திருவமுதுக் காவதாய் எல்லாம் செஞ்சாலியேயாக விளைந்ததுபற்றிச் சிந்தை மகிழ்ந்தமைமன், "இஃது அடியேன் செய்த புண்ணியம்" என்றும் கொண்டாராதலின் செங்கெல்லை அமுது செய்வித்ததனோடு தற்போதத்தையும் பலியாக்கினர் எனவும், அதனை அவர் விரும்பியவாறே இறைவர் மகிழ்ந்து அமுது செய்தனர் எனவும் கொள்ளக் கிடப்பதும் கருதத் தக்கது. 'தறுகட் பாசக், கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு' (பாயிரம்) என்ற திருவிளையாடற் புராணம் காண்க. "அன்பென்னு மமுது" என்பது வாயிலார் புராணம்.

**அமுது செய்விப்பார் ஆனார்** - ஊட்டுவிப்பாராயினர். **ஆனார்** என்றது இவ்வாறு பல நாளும் செய்தனர் என்பது குறித்தது. **வைகலும்** என வரும்பாட்டிற் கூறியது காண்க.

**ஆனார்** - ஆயினர் ; ஆக்கம் பெற்றனர் ; இவ்வாறல்லாத பிறர் எல்லாம் ஆனாராகாது போனார்களேயாவர் என்ற குறிப்பும் காண்க. "போற்றிலார்...ஆக்கைக்கே இரை தேடி யலமந்து, காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே" என்ற தனித்திருக்குறுந் தொகை முதலியவற்றின் கருத்துக்களும் காண்க. 11

914. வைகலு முணவி லாமை மனைப்படப் பையினிற் புக்கு
நைகர மில்லா வன்பி னங்கைகை யடகு கொய்து
பெய்கலத் தமைத்து வைக்கப் பெருந்தகை யருந்தித் தங்கள்
செய்கடன் முட்டா வண்ணந் திருப்பணி செய்யு நாளில், கஉ

915. மனைமருங் கடகு மாள வடநெடு வான மீனே
யனையவர் தண்ணீர் வார்க்க வமுதுசெய் தன்ப ஞரும்
வினைசெயன் முடித்துச் செல்ல மேவுநா ளொருநாண் மிக்க
முனைவனர் தொண்டர்க் கக்கு நிகழ்ந்தது மொழியப் பெற்றேன். கஊ

914. (இ - ள்) வெளிப்படை. நாள்தோறும் உணவில்லாமையினால், குறைவு படாத அன்பினையுடைய மனைவியார் வீட்டுக் கொல்லையிற்புகுந்து கையினாற் பறிக்கும் இலைக்கறிகளைப் பறித்துச், சமைத்து, உண்கலத்தில் இட, அதனையே உண்டு, தாங்கள் நியதியாகச் செய்த திருத்தொண்டின் கடமை முட்டுப்படாதீபடி திருப்பணிவிடை செய்து வருநாளில், கஉ

915. (இ - ள்) வெளிப்படை. வீட்டின் பக்கத்தில் இருந்த இலக்கறிகள் அற்றுப்போகவும், அருந்தகியே போன்ற கற்பினையுடைய மனைவியார், தண்ணீரை வார்க்க அதனையே அமுது செய்து, அன்பனரும், தமது திருத்தொழிலையும் அருஞ்செயலையும் முடித்துச் செல்வாராக, இவ்வாறு பொருந்துகின்ற நாட்களிலே ஒருநாள், முதல்வனுரது பெருந்தொண்டருக்கு அங்கு நிகழ்ந்ததனை, இனி எடுத்துச்சொல்லும் பேறு பெற்றேன். கஙூ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

914. (வி - ரை) **வைகலும் உணவு இலாமை** - தமது கூலி முழுவதும் செந்நெல்லேயாக, அதனை முற்றும் இறைவரை அமுது செய்வித்தாராதலின் தமது உணவுக்கு நெல் இல்லேயாகலான் என்க. இதனால் அவர் இறைவரை ஊட்டிய அமுதத்தினைச் சிவநின்மாலியம் உட்கொள்ளலாகாது என்ற விதியினால் தாம் உட்கொள்ள வில்லை என்பதும் போந்ததாம். **வைகலும்** - உம்மை இவ்வாறு பல நாட்களும் நிகழ்ந்தமை குறித்தது. **உணவு** - நெல்லரிசி யமுதம் குறித்தது. **இலாமை** - இல்லாமையால்.

**மனைப்படப்பை** - வீட்டுக் கொல்லைத் தோட்டம்.

**புக்கு - கொய்து** - "தொக்க மாநிதித் தொன்மையில் ஓங்கிய மிக்க செல்வ"த்திலிருந்தவராதலின் இவ்வம்மையார் தாமே கொல்லையுட் புகுந்து இலக்கறிவகை தேடிப் பழகாதவர் என்பது குறிப்பு. "அல்லல் நல்குர வாயிட" (911) என்றமையால் முன்னே மிக்க செல்வத்திலிருந்த இவர்க்கு இப்போது இடம் பொருள் ஏவல் முதலிய ஒன்றும் இல்லேயாயின என்பதாயிற்று.

**நைகாம்** - குறைவு. நல்குரவு வந்தபோது அன்பு குறைவுபட் டறுவது உலகியல்பு. அவ்வாறன்றி இவ்வம்மையார் நல்குரவினும் குறைவுபடாத அன்புடன் விளங்கினர் என்பது. நைகாமில்லா நங்கை என்று கூட்டி, **நைகாம்** - வருத்தம் - துன்பம் - என்று கொண்டு இன்னிலைமை வந்ததனுக்கு அம்மையார் சிறிதும் வருந்தினரலர் என்றுரைப்பாருமுண்டு.

சிவபெருமானது திருத்தொண்டில் இவ்விருவரும் கருத்து ஒருமித்து ஆதரவு செய்தனர் என்றும், தமக்கு வந்த இன்னிலைமையினும் சிறிதுங்கவலையின்றித் திருப்பணியில் ஈடுபட்டனர் என்றும் காட்ட இவ்வாறு விதந்து கூறினர். மேற்பாட்டிற் கூறியவாறு, தாயனர் "இஃதடியேன் செய்த புண்ணியம்" என்று கொண்ட கருத்தினையே அம்மையாரும் கொண்டிருந்தனர் என்க. இறைவரை ஊட்டிய சிறப்பின் மகிழ்ந்தாரல்லது இவ்விரு பெருமக்களும் தங்களுக்கு உணவிலாமையை நினைத்தாரலர் என்பதாம். **அன்பு** - சிவன்பாலன்பும் தமது கணவனர்பாலன்பும் குறித்தது.

**கை அடகு** - கையினற் பறிக்கப்படும் கீரை. **அடகு** - இலக்கறி, கீரைவகை. இவை பெரும்பாலும் மனிதராற் பயிர் செய்யப்படாது தாமாக முளைத்தவை.

**பெய்கலம்** - உணவு பெய்யும் பாத்திரம் - உண்கலம். **இலை** - சருகு முதலியன. கொய்து அமைத்துப் பெய்கலத்து வைக்க எனக் கூட்டுக. **அமைத்து** - சமைத்து.

**பெருந்தகை** - தமது பசித்துன்பத்தை யெண்ணுது அடகும் நீரும் உண்டு கொண்டு, இறைவருக்கு அமுதூட்டுவதனையே கருதி மகிழ்ந்த பெருமையின் தகுதி குறித்தது.

**தங்கள் செய்கடன்** - இருவரும் சேர்ந்துசெய்த என்பது குறிக்கத் **தங்கள்** என்றார். இருவரும் கூடிச்செய்த விவரம் 915-916 பாட்டுக்களிற் காண்க. **செய்கடன்** - கடமைப்பாடாக மேற்கொண்டு செய்தது.

**திருப்பணி** - அமுதூட்டுதலும், அதற்காவன செய்தலுமாம். அவை கூலிவேலை செய்து செந்நெல்லும் - கீரையும் - மாவடுவும் தேடுதல், ஆன் ஐந்து பெறுதல் முதலி

யன. முட்டா வண்ணம் செய்யும் - "செய்பணி தவாமை யுய்த்தார்" (837) என்றது காண்க.

நைதுறல் - நங்கை மற்றது - நங்கையார் - செலுத்துநாளில்—என்பனவும் பாடங்கள். 12

915. (வி - ரை) நெடு வட வான மீன் என்க. வடமீன் - அருந்ததி. நெடுமை. நீண்ட புகழுடைய கற்புக்குறித்தது. வடக்கில் நீண்ட தூரத்தில் தோற்றப்படும் என்றலுமாம். மீனே - ஏகாரம் தேற்றம். மீனே அனையவர் - கற்பிலுல் அருந்ததியே போல்வார். கற்பினுக்கு எடுத்துக்காட்டாக அருந்ததி மீன் உருவுடன் விளங்குதலால் கல்யாணங்களில் அருந்ததி பார்த்தல் ஒரு சடங்காக வழங்குகின்றது. "சாலினி மங்கலே தன்னொடு கண்டான்" (தெய்வ-அம்மை - திருமண - 253) என்ற கந்தபுராண மும் காண்க. (சாலினி - அருந்ததி).

தண்ணீர் வார்க்க அழுதுசெய்து - தண்ணீரைத் தாகந் தீர்ப்பதற்குரியதாகக் கொண்டதன்றிப் பசிதீர்க்கும் உணவுப் பண்டமாகவும் கொண்டார் என்று குறிப்பார் பருகி என்னுது அழுதுசெய்து என்றார். "துப்பார்க்குத் துப்பாய தூஉ மழை" என்ற திருக்குறளும் காண்க.

வினைசெயல் - வினை - செந்நெல் - செங்கீரை - மாவடு - ஆன் ஐந்து தேடுதலும், நெல்லுக்காகக் கூலி வேலை செய்தலும் முதலிய தொழில். செயல் - வினையாற் பெற்ற வற்றை இறைவனுக்குத் திருவமுதாக்கி ஊட்டுதல்.

செல்ல மேவுநாள் - செல்லும்படி - ஒழுகும்படி - பொருந்தும் நாட்களிலே.

முனைவனாரது மிக்க தொண்டர் என்க. மிக்க - அன்பிலுல் மிக்க. பெருமை மிக்க. முனைவர் - முன்னவர் - தலைவர் - சிவபெருமான்.

மொழியப் பெற்றேன் - சொல்லும் பேறு எனக்குக் கிடைத்தது. இப்பெரியவரது புண்ணிய சரிதத்தை, அதிலும், அதனுட் சிவனருள் விளைவு தேற்றமாகும் இப் பகுதியைச் சொல்வது பெரும்பேறு என்பது. பெரியோர்களது சிவசரிதங்களை நினைப்பதும், சொல்லுதலும், கேட்டலும் சிவபுண்ணியங்களாம். "தணப்பி லெம்புகழ் சாற்றல்" (திருவாதவூர் - புரா - திருப்பெரு - சரு - 69), முதலியவை காண்க. திருவருள் விளக்கமாகும் இடங்களை இவ்வாறு விதந்து கூறிக் கேட்போரை எச்சரித்து வழிப்படுத்துதல் ஆசிரியரது மரபு. 790-ல் உரைத்தவை பார்க்க.

தொண்டனுர் - மேல் இப்பாட்டில் வினை செயல்களை அன்பு ஊக்கியிடச் செய்தல் குறிக்க அனிபனுர் என்ற ஆசிரியர், இனிவரும் நிகழ்ச்சி, தொண்டு செய்கின்ற விடத்து நிகழ்வதாகலின் தொண்டர்க்கு அங்கு நிகழ்ந்தது என்று குறித்தார். 13

916. முன்புபோன் முதல்வனுரை யமுதுசெய் விக்க முளும்
அன்புபோற் றூய செந்நெ லரிசிமா வடுமென் கீரை
துன்புபோ மனத்துத் தொண்டர் கூடையிற் சுமந்து போதப்
பின்புபோ மனைவி யாரான் பெற்றவஞ் சேந்திச் சென்றூர். - கச

(இ - ள்) வெளிப்படை. முன்போல முதல்வரை அமுது செய்விப்பதற்காக, மூண்டு மேன்மேல் எழும் அவரது அன்புபோலவே தூயதாகிய செந்நெல்லரிசியினையும், மாவடுவினையும், மெல்லிய செங்கீரையினையும் துன்பமீங்கிய மனத்தையுடைய தொண்டராகிய தாயனுர் கூடையில் வைத்துச் சுமந்து செல்ல, அவர் பின்பு செல்லும் திருமனைவியார் ஆனந்து என்னும் பஞ்சகவ்வியத்தை மட்கலத்திற் கொண்டு கையில் ஏந்திச் சென்றூர்.

(வி - ரை) முன்புபோல் - முன்னை நாட்களிற்போல-வழக்கம்போல.

**முதல்வனுரை** - சிவபெருமானே தலைவர்; உயிர்கள் யாவும் அவர்க்கு அடிமைகள் என்ற உண்மை யறிந்து அதனால் அவரை ஊட்டும் நியதி பூண்டொழுகியவர் தாயனாராதலின் இங்கு **முதல்வனார்** என்றார்.

**ழனும் அன்புபோல் நாய** - தாயனார் இறைவரை அன்பினால் ஊட்டும் அரிசி முதலாயினவற்றுக்கு உவமிக்கப்படும் பொருள் உலகத்தில் வேறில்லையாதலின் இவரது மூலும் அன்பினையே உவமித்தார். நல்குரவினாலும் பசியாலும் துன்பத்தாலும் குறைவுபடாது காணலும் வளர்வதாம் என்பது குறிக்க **ழனும்** என்று முக்காலத்துக்கும் பொதுவாகிய நிகழ்காலப் பெயரெச்சத்தினாற் கூறினார்.

**செந்நெல் அரிசி - மாவடு - மென்கீரை** - இவற்றின் தன்மைகள் 928ல் விவரிக்கப்பட்டன. இவற்றைத் திருக்கோயிலுக்குக் கொண்டு சென்று அங்குச் சமைப்பித்து அமுது செய்வித்தனர் என்று குறிக்க **அரிசி** முதலாகக் கூறினார். இறைவர்க்காகும் திருவமுது திருக்கோயிலுக்குள் திருமடைப்பள்ளியிற் செய்யத் தக்கது என்பதும் வெளியிற் சமைத்துக் கொணர்வது தகாதென்பதும் ஆகமங்களில் விதிக்கப்பட்டன.

**துன்புபோம் மனம்** - துன்பம் என்பதன் சுவடு தானும் காணமுடியாமல் மறைந்து போகும் மனம்.

**பின்பு.....சென்றார்** - இதனால் தாயனாரும் மனைவியாரும் அன்பு ஒருமித்துச் செய்த திருத்தொண்டு விளக்கப்பட்டது. தாயனார் முன்னர்ச் செல்ல அவரைப் பின்பற்றி மனைவியார் பின் சென்றனர்; அரிசி முதலியவை பெரும்பாரமாயுள்ளனவாதலின் தாயனார் அவற்றைக் கூடையிற் சுமந்து செல்ல மனைவியார் ஆனேற்றினையும் மட்கலத்தில் ஏந்திச் சென்றனர். கூடையில் என்றதனால் திருவமுதுக்காகும் பொருள்களின் அளவும் கருதி யுணரத்தக்கது. மட்கலம் மேற்பாட்டினாற் காண்க. இறைவர் பூசையைக் கணவனாரும் மனைவியாரும் ஒருமித்துச் செய்தல் வேண்டுமென்றதனைத் திருநீலநக்க நாயனார் புராணத் (8, 9 பாட்டுக்கள்) தாலும் அறிக. இவ்வியல்பு விலங்கினங்களினும் கல்லறிவுடைய சில பிராணிகள் மேற்கொண்டொழுகின என்பது, "பிடியெலாம் பின்செலப் பெருங்கைம்மா மலர்தழீஇ, விடியலே தடமூழ்கி வீதியினால் வழிபடும்" (1), மானமா மடப்பிடி வன்கையா லலகிடக், கானமார் கடகரி வழிபடும்" (7) (பண் - கொல்லி - காணப்பேர்) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரமுதலியவற்றாலறியப்படும். திருக்கழுக்குன்றில் இனமாய் இக்காளிலும் வந்து வழிபடும் இரட்டைக் கழுகுகளின் வழக்கும் காண்க.

**ஆன்பேற்ற அஞ்சு** - "ஆனுற்ற வைந்து மமர்ந்தாய் போற்றி" (ஐயாறு - திருத்தாண்டகம்) முதலிய தமிழ் மறைகள் காண்க. பஞ்சகவ்வியம் என்பது வடமொழி. இவை பசுவினது பால் - தயிர் - நெய் - மூத்திரம் - சாணம் என்பன. இவற்றின் அளவும், சேர்க்கும் முறையும், உரிய பாவனை - மந்திரம் - செய்கை முதலியனவும் சிவாகமங்களுட் கண்டு கொள்க.* 14

*சில கவீன ஆராய்ச்சியாளர் இவற்றில் பசு மூத்திரம், பசுச்சாணம் என்ற இரண்டினையும் நீக்கி, மோரும் வெண்ணெயும் சேர்த்து ஐந்தாகக் கணக்கிடவும் தொடங்கியுள்ளார். இது மிகத் திரிபுள்ளதோ ராராய்ச்சியாம். சிவாகமங்களின் பிரமாணத்தை உடன்படாதார்க்கு ஆனேற்றின் விசாரம் வேண்டுவதில்லை. இன்னருடன் சிவாகம சித்தாந்த சைவர்க்கு விவகரிக்கும் ஆகம அளவையின் ரெடார்புமில்லையாகும்.

ஆகமப்படிக்குள்ள ஆட்சி காண விரும்புவோர் தொன்று தொட்டுவரும் வழக்கும் காணலாம். இதுவேயுமன்றி, இதுபற்றிய,

"இவனே திருவண்ணுமலே உடையார்க்குப் பஞ்சகவ்யமாடியருள நித்தமும் சிறுகாலே சங்கியில் திருவண்ணுமலே என்னும் காழியால் கோமூத்திரம் உழக்கும், கோமயம் ஆழாக்கும், பால்காழி உழக்கும், தயிர் காழி உரியும், நெய் காழியும் ஆக இப்படி நித்தமும்:

என்ற திருவண்ணுமலைக் கல்வெட்டுக் குறிப்பும் காண்க. (S. I. I. Vol. 8. 1937.

917. போதரா நின்ற போது புலர்ந்துகா ளளர்ந்து தப்பி
மாதரார் வருந்தி வீழ்வார் மட்கல மூடு கையாற்
காதலா லணைத்து மெல்லாங் கமரிடைச் சிந்தக் கண்டே
பூதநா யகர்தந் தொண்டர் "போவதங் கினியே" னென்று, கடு

918. நல்லசெங் கிரை தூய மாவடு வரிசி சிந்த,
"அல்லறீர்த் தாள வல்லா ரமுதுசெய் தருளு மப்பே
றெல்லையி றீமை யேனிங் கெய்திடப் பெற்றி லே"னென்
றெல்லையி லரிவாட் பூட்டி பூட்டியை யரிய லுற்றார்; ககூ

919. "ஆட்கொளு மையர் தாமிங் கமுதுசெய் திலர்கொ"லென்னுப்
பூட்டிய வரிவாள் பற்றிப் புரையற விரவு மன்பு
காட்டிய நெறியி னுள்ளந் தண்டறக் கழுத்தி னூடே
யூட்டியு மரியா நின்ற ருறுபிறப் பரிவா ரோத்தார். கஎ

917. (இ - ள்) போதரா நின்ற...தப்பி - (இவ்வாறு) போகின்ற போது உடல் வாடியிருத்தலால் கால் தளர்ந்து தப்பி; வருந்தி வீழ்வார் - வருந்தி வீழ்கின்றவரை; மட்கல மூடுகையால் காதலால் மாதரார் அணைத்தும் - ஆனைத்து கொண்ட மட்கலத்தை மூடும் கையினால், விழாமற் காக்கும் ஆசையினால் மனைவியார் அவரை அணைத்தும்; எல்லாம்...கண்டு - செங்கெல்லரிசி, மாவடு, செங்கீரை என்ற எல்லாம் நிலப்பிளப்பிலே சிந்த, அதுகண்டு; பூத நாயகர் தம்தொண்டர் - பூதகாயகராகிய சிவபெருமானுடைய தொண்டராம் தாயனார்; "இனி என் அங்குப்போவது" என்று - "இனி என் அங்குப் போதல் வேண்டும்" என்று, கடு

918. (இ - ள்) வெளிப்படை. "நல்லசெங்கீரையும், தூயமாவடுவும், அரிசியும் சிந்தியிட்டதனால், துன்பநீக்கி ஆட்கொள்ளவல்லாராகிய சிவபெருமான் அவற்றை அமுதுசெய்து அதற்கருள்கின்ற அந்தப் பேற்றினை அளவில்லாத தீமையையுடையேன் இங்குக் கிடைக்கப்பெற்றேனில்லையே" என்று விரைவில் அரிவாளைப் பூட்டித் தமது ஊட்டியை அரியலுற்றாராய், ககூ

919. (இ - ள்) வெளிப்படை. "என்னை ஆட்கொள்ளும் பெருமானுக்காம் இங்கு அமுது செய்தா ரிலர்கொல்!" என்று கழுத்தினிற் பூட்டிய அரிவாளினைப் பிடித்துக்கொண்டு, குற்றநீங்கப் பொருத்தும் அன்பு காட்டிய வழியில் கெஞ்சங்குழல்

---

கெ. 66. P. 34. S. 10. இது இராசேந்திர சோழர் I உடைய 19-வது ஆண்டுக் கல்வெட்டு. கி. பி. 1030. கல்வெட்டுத் துறை ஆராய்ச்சியாளர் திரு. K. V. சுப்பிரமணிய ஐயர் "கொங்குமலர்" பத்திரிகைக்கு எடுத்து எழுதியுதவியது iv. p. 72.)

இந்தக் கல்வெட்டில் இவ்வைந்தும் இன்னின்னவாம் என்று கூறி அவற்றின் சேர்க்கையளவு முதலியனவும் விதிக்கப்பட்டுள்ளன. ஆனைந்து - ஆன்பெற்ற அஞ்சு - என்றற்றொடக்கத்த திருவாக்குக்களால் இவையைந்தும் ஆனிடத்தினின்று தோன்றும் வெவ்வேறான பொருள்கள் என்பதறியப்படும். பால்திரித்து வேறு பொருளாகிய தயிராதலும், தயிரைக் கடைந்து அல்லது பாலைத் திரட்டி எடுக்கப்படும் வெண்ணெயை உருக்க நெய் என்றதோர் வேறு பொருள் பெறுதலும் உணரப்படும். மோரும் வெண்ணெயும் அங்ஙனம் வேறு தனிப் பொருள்களாகாமையும் கண்டு கொள்க. மருத்து நூல் முறையில் பஞ்சகவ்விய நெய் முதலிய மருந்துகளுக்குக் கூட்டும் பொருள்கள் இவ்வைந்துமே யாதலும், இவ்வாறல்லாது மோரும் வெண்ணெயும் சேர்ப்பின் அவை பயன்றராமையும் பிறவும் காண்க.

பிளவுபட்டு அறும்படி கழுத்திலேறி மிடற்றினை அரிவாளாயினர், பொருந்திய பிறப் பினை அரிவார் போன்றார். கஎ

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

917. (வி - ரை) போதரா நின்றபோது - போதும் பொழுதில். **போதருதல்** - போதல். **ஆநின்று** - நிகழ்கால இடைநிலை. **போதாநின்ற** - போய்து மேல் அடி பெயர்க்கமாட்டாமல் நின்ற என்ற குறிப்பும் பெற நிற்றல் காண்க.

**புலர்ந்து, கால்தளர்ந்து, வருந்தி, தப்பி, வீழ்வார்** என்று கூட்டுக.

**புலர்தல்** - உணவில்லாமையால் உடல் வாடுதல்.

**கால் தளர்தல்** - கால்கள் மேல் அடிபெயர்த்தலும், உடலைத் தாங்குதலும் மாட் டாது நிலைகெடுதல். **தப்பி** - போகின்ற நிலையும் நிற்கின்ற நிலையும் தவறி. புலர்ந்தது னால் கால் தளர்தலும், அதனால் வருந்தலும், அதனால் தப்புதலும், அதனால் வீழ்தலும் நிகழ்ந்தன என்ற இம்முறையில் வரும் வினைகளைக் காரணங் குறிக்கும் வினையெச்சங் களாற் கூறிப்போதல் காண்க.

**மாதரார்** - மனைவியார். மாதரார் - கையால் அணைத்தும் என்று கூட்டிக்கொள்க.

**மட்கலம்** - ஆனைந்து கொண்ட கலம். இதனால் ஆன்பெற்ற ஐந்தினையும் மட்கலத்திற் கொண்டு சென்றார் என்றறியப்படும். தாயனார் அரிசி முதலியவற்றைக் கூடையிற் சுமந்து செல்ல, மனைவியார் அவர்பின் ஆனைந்து ஏந்திச் சென்றார் என மேற்பாட்டிற் கூறினர். அதனை ஏந்திய கொள்கலம் இன்னதென அங்குக் கூறுமை யின் அது மட்கலமா மென்பதை மட்டும் இங்குக் குறித்த முறை காண்க.

**முடு கை** - செல்லும் வழியில் அசுத்தங்கள் வீழாதபடி காக்கும் முறைபற்றிக் கலத்தைக் கையால் மூடிச்சென்றனர். இடது கையினால் கலத்தை ஏந்தியும் வலது கையினால் அதனை மேலே மூடியும் சென்ற மனைவியார் அங்ஙனம் மூடிய வலது கையி னால், கணவனுரை வீழாவண்ணம் அணைத்தனர் என்க.

வீழ்வாரை - மாதரார் - கையால் - காதலால் - அணைத்தும் என்று மாற்றிப் பொருள் கொள்க. இங்ஙனம் முறையிற் கூறுதி மாதரார் - வீழ்வாரை - என மூன் வைத்துக் கூறியது கால் தப்பியதைக் கண்ட மனைவியார் அவர் **வீழாமுன்** தடுக்க அணைத்ததனை உணர்த்தும் பொருட்டு. கால் தப்பிய நிலைக்கும் வீழ்கின்ற நிலைக்கும் இடையில் மாதரார் அணைத்த செயல் நிகழ்ந்தமையின் அதனை அம்முறையே நாடகச் சுவைபடக் கூறிய நயம் காண்க. **வீழ்வார்** - வீழ்வாரை ; இரண்டனுருபு விரிக்க.

**மட்கலமும்** - கூடை (915)யுமே அல்லல் நல்குரவு (911) ஆயின நிலையில் உள் ளார் எளிதிற்பெறும் கொள்கலங்களாம் என்பதும் காண்க.

**காதலால்** - கணவனுர் வீழாமற் றடுக்கும் ஆசையாலும், அதற்கு மேலாக, அவ் வாறு தடுப்பதன் மூலம், அவர் இறைவனுக்காகச் சுமந்து சென்ற கூடையினுள்ள பொருள்கள் வீழாமற் றடுக்கும் ஆசையாலும் என்க.

**கமம்** - நிலவெடிப்பு. அக்காலம் நிலங்களிற் பயிர் அறுக்கப்பட்டு நிலம் வெடிப் புக்களுடன் உள்ள காலமென்ப தறியப்படும். தாயனார் பேறு பெற்றது தை மாதத்து ஆதிரை நாளாதலும் சிந்திக்க. இந்நிலம் நாயனாது ஊராகிய கணமங்கலத்துக்கும் அவர் வழிபட்ட திருத்தண்டலை நீணெறிக்கும் இடையில் உள்ள வயல். இது இந்நாள் வழக்கிலும் காணப்படும். **இடை** - ஏழனுருபு.

**பூதநாயகர்** - சிவ பூதகணங்களின் தலைவர்-சிவபெருமான். ஐம்பூதங்களில் ஒன்று கிய நிலத்தினின்று வெளிப்பட்டு நாயனார்க்கு அருள்புரிகின்றாராதலின் இங்கு இப் பெயராற் கூறினர் என விசேடவுரை காண்பர் ஆலாலசுந்தரம் பிள்ளை.

**இனி அங்குப் போவது ஏன்** என மாற்றுக. **ஏன்** - என்ற வினாப் பயனின்மை குறித்தது. கொண்டார் - கண்டு - இனி - ஏன் - போவது ? - என்று (916), என -

ஊட்டியை அரியலுற்ரு(ராய்) (917), என்னு-அரியலுற்ரூர் (ஆகிய அவர்)-அரிவார் ஒத்தார் (918) என இம்மூன்று பாட்டுக்களையும் கூட்டி முடிக்க. அங்கு - திருக்கோயிலுக்கு. 15

என்னேன்று—என்பதும் பாடம்.

918. (வி - ரை) நல்ல - புழுக்கடி, வாடல், முற்றல், பழுப்பு முதலிய கேடுஇன்றி என்க. மேன்கீரை (915) என்றது காண்க. நல்ல - நன்மை செய்யும் என்று இயற்கை யடைமொழியாகக்கொண் டுரைப்பினுமாம்.

தூய - மேல், கீரைக்கு நல்ல என்றதற் குரைத்தவாறே, மாவடுவுக்கும் பொருந்த உரைத்துக் கொள்க. மன்னு பைந்துணர் மாவடு (908) என இதன் இயற்கையினை முன்னர் உணர்த்தியதனால் இங்கு அதன் தன்மைகள் பொருந்தக் கொள்க.

அரிசி - செந்நெல் இன்னமுது (908), தூய செந்நெல் அரிசி (915) என இதன் இயல்பும் தன்மையும் முன்னரே கூறினராதலின், முதன்மையாயின இதனை இங்கு அடைமொழியின்றி அரிசி என வாளா கூறினர்.

அல்லல்தீர்த்து ஆளவல்லார் - அல்லல் - பிறவித் துன்பமும் அதற்கேதுவாகிய இருவினைகளும். தீர்த்தல் - துகர்வித்துக் கழிப்பித்தல். அல்லல்தீர்த்து என்றதனாற் பாசமீக்கழும், ஆள என்றதனாற் சிவப்பேறும் ஆகிய இருபயனும் குறித்தார். வல்லார் என்றது அவ்வன்மை இவர்க்கே எளிதின் அமைவதென்றும், வேறெவர்க்கும் இன்றென்றும் குறித்தபடியாம். " தீரா கோய் தீர்த்தருள வல்லான் றன்னை " (புள்ளிருக்கு வேளூர்) என்ற திருத்தாண்டகமும், இவ்வாறு வரும் திருவாக்குக்களும் காண்க. திருத்தொண்டாற் பெறும்பேறு நிறைவுறும் இடமாதலின் இங்கு இவ்வாறு கூறினர்.

அழுதுசெய்து (அதன்கீ) அருளும் என்க. அழுதுசெய்து என்பது நியதியாகிய திருத்தொண்டினை ஏற்றுக்கொள்ளுதலையும், அருளும் அப்பேறு என்றது அதற்கு இறைவன் அருள்புரிதலினையும் குறிப்பன. அருளும் அப் பேறு - அருள் செய்யும் அந்த - அருளினைப் பெறுகின்ற அந்தப் பேறு. அகாம் தேற்றங் குறித்த முன்னறி சுட்டு.

எல்லையில் தீமையேன் ஆதலின் பெற்றிலேன் என்று பெற்றிலாமைக்குக் காரணம் கூறியவாறு.

இங்கு - இவ்விடத்தே. இந்தக் கமரினிடமாக. " போவது அங்கு இனியேன் ? " என்ற முன்பாட்டுக் காண்க. இன்று என்ற பொருளில் வந்ததென்றலுமாம்.

ஊட்டி - மிடறு. கழுத்தின் முன்பாகம். அரியலுற்ரூராய் - அரியா னின்ரூர் - ஒத்தார் - என்று வரும்பாட்டுடன் கூட்டி முடிக்க. 16

919. (வி - ரை) ஆட்கொள்ளும் ஐயர் - மேற்பாட்டில் " ஆளவல்லார் " என்றதனைத் தொடர்ந்து இவ்வாறு கூறினர். ஆட்கொள்ளும் - ஆளாக அமைத்து செய்யும் ஏவலை ஏற்றுக்கொள்ளும். " கூடுமே நாயடியேன் செய்குற் றேவல் " (திருவாரூர்) என்ற திருத்தாண்டகம் முதலியவை காண்க. ஆட்கொள்ளும் என்றதற் கேற்ப ஐயர் - தலைவர் - என்ரூர்.

தாம் - அடியேன் ஊட்டும் பாங்கினன்றித் தாமாகவே உவந்து. இங்கு - இவ்விடத்து. இந்தக் கமரில்.

செய்திலர் கொல் - செய்தாரில்லைபோலும். கொல் - அசைநிலை.

அரிசி முதலியன கமரில் சிந்தக் கண்ட தாயனர், இனி இறைவனது திருமுன் போவதிற் பயனில்லை என்று, போவது அங்கு இனி என் ? (916) என்று எண்ணினர். ஆதலின், " ஐயரே ! தேவரீர் எங்கும் நிறைந்தவர் ; இந்தக் கழரும் உமது திருமேனியாமாதலின் இப் பொருள்களை இங்கே அமுதுகொண்டருளல்வேண்டும் ; இல்லையேல் நியதி பிழைத்த எனது தலை வீழ்த்தத் தகுவதாம் " என்று விண்ணப்பித்தனர்.

இவ்வாறு விண்ணப்பம் செய்தனர் என்பது "இங்கே, வெள்ளச் சடையாய்!, அமுது செய்யாவிடில் என் தலையைத், தள்ளத்தகும்" என்ற திருவந்தாதியாற் பெறப்படும். சொற் பல்காமைப் பொருட்டு ஆசிரியர் அதனை இங்கு எடுத்துக்கூறுதி, வழிநூலுட் காணப்பட்டதனை ஈண்டுக்கொண்டு பெய்துரைக்க வைத்தார். "இங்கு அமுதுசெய்தருளும் அப்பேறு பெற்றிலேன்" (917) என்றும், "இங்கு அமுதுசெய்தில்கொல்" என்றும் உரைத்த கருத்தும் அது. இதனைத் தொடர்ந்து பின்னரும் "கமரில் வந்திங் கமுதுசெய் பரனே" (921) என்றதும் காண்க.

இப்படி விண்ணப்பித்த தாயனார், தாம் வேண்டியவாறு ஐயர் அமுது செய்தருளிய குறிப்புப் பெருமையின் "அமுது செய்திடப் பெற்றிலேன் எல்லையில் தீமையேன்" எனத் துணிந்து, முன் உட்கொண்டபடியே தலையைத் தள்ளும் பொருட்டு அரிவாள் பூட்டி ஊட்டியை அரிவாராயினர் என்பது மேற்பாட்டி லுரைக்கப்பட்டது. அக் குறிப்பாவன, என்றும் செஞ்சடை வேதியரை அமுது செய்விக்கும்போது தாயனார் கேட்ட "விடேல்" என்ற ஓசை முதலியவை போலும். அன்றி, 'இன்று இங்கு அமுது செய்தமை தெரியுமாறு இவ்வோசை கேட்க வேண்டும்' என உட்கொண்டனர்என்றும் கொள்ளக் கிடக்கின்றது. இவ்வாறு கொள்ளாக்கால் பின்னர் "விடேல் விடேல்" என்றோசையைப் பரமனு ரமுதுசெய்தருளியதற் கடையாளமாகத் தாயனார் கொள்ளுதற்கு ஏதுவின்றென்க. இக்கருத்துப் பற்றியே தொடக்கத்தில் "கமரிற் புக்க மாவடு விடேல் என்னோசை உரிமையாற் கேட்க வல்லார்" (902) என்றதும் இங்குச்சிந்திக் கற்பாலது. "விடேல் விடேல்" என் திருமுறை மிகவும் கேட்ட குறிப்புமது. ஞானமும் நியதியாகக் கேட்பித்த திருச்சிலம்பிலோசையைக் கழறிற்றறிவார்நாயனார் ஒரு நாட் பூசைமுடிவிற் கேளாதொழிய, மதிமயங்கித், தம்மாற் பிழை சேர்ந்ததென அஞ்சி உடைவாளை மார்பில் காட்டுதலும், இறைவர் விரைந்து அவ்வோசையினை **மிகவு மிசைப்பித்தார்** என்ற சரிதம் இங்கு நினைவு கூரத்தக்கது.

இறைவரது திருவருட் குறிப்பினையும் திருவுள்ளத்தையும் அவரால் ஆட்கொள்ளப் பெற்ற பெரியோர்கள் அறியவல்லார்கள் என்பது "தொண்டர் தண்கய மூழ்கித் தூண யலுஞ் சாந்தமும் புகையுங், கொண்டு கொண்டடி பரவிக் **குறிப்பறி** முருகன் செய் **கோலம்** - (ஆளுடையபிள்ளையார்-பியந்தைக் காந்தாரம்-3) என்ற திருப்புகலூர் வர்த்த மானீச்சரத் தேவாரத்தாலும், "வாது செயத் **திருவுள்ளமே**", "வாதில் வென்றழிக்கத் **திருவுள்ளமே**" (ஆளுடைய பிள்ளையாரது) என்ற திருவாலவாய்த் திருப்பரங்களாலும், "பிழைத்துச் **கேவ்வி யறியாதே** நிறப்பித் தேனுக் கேயல்லால்" என்ற (திருஞா-புரா-280) ஆளுடைய அரசுகள் சரிதத்தாலும், "பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர் பொற்பார் சிலம்பி னெலியளித்தார்" என்ற (கழறிற்-புரா 24) கழறிற்றறிவார் சரித வரலாற்றி னாலும், பிறவாற்றாலும் தேற்றம் பெற அறியக் கிடக்கும் உண்மையாம். ஒவ்வோர் பொருள்பற்றித் தெய்வத் திருவுள்ள மறியும்படி, வாய்ச்சொல், நிமித்தம் அறிதல், குறிகேட்டல், உத்தரவு கேட்டல் முதலிய வழக்குக்கள் இந்நாளிலும் சாதாரண மக்களிடத்தும் நிகழ்வது காண்க.

நியதியின்படி ஓசை கேட்கப் பெறுமையால் "அழது செய்திலர் கொல்" என்று துணிந்த தாயனார், அத்துணிபுபற்றி **அன்பு காட்டிய நெறியினுலே** கழுத்தினேடும் ஊட்டியும் அரிவாராயினர். **என்ன** - என்று நிச்சயித்து. **பூட்டிய** - "அரிவாள் பூட்டி" என மேற்பாட்டிற் கூறியபடி பூட்டிய. "வாட்பூட்டிய" என்றது திருவந்தாதி. **புரை அற** - குற்றம் நீங்க. **புரை** - "எல்லையில் தீமையேன்" (917) என்ற அவை.

**விரவும் அன்பு காட்டிய நெறியில்.....அரியா நின்றார்** - இவ்வாறு தலையைத் தள்ளும்படி தம் கழுத்தைத் தாமே அரிந்துகொள்ளுதல் அற நூல்களால் விலக்கப் பட்ட **தற்கொலை** என்ற பாவமாகாதோ? எனின், ஆகாது; இது பொருந்திய அன்பு காட்டும் நெறியே யாகும் என்றதாம். "தீயில் வீழ்கிலேன் திண்வரை யுருள்கிலேன்

செழுங்கடல் புகுவேனே", "முட்டிலேன் றலைகீறேன்" என்பனவாதிய திருவாசகங் களும், "உயிர்நீப்பர் மானம் வரின்" என்ற திருக்குறளும், பிறவும் காண்க. நாயக னைப் பிரிந்த கற்புடை மடவார் உயிர் துறத்தலும், துணைபிரிந்த அன்றில்கள் இறத்த லும் போன்றவை வீரவும் அன்பு காட்டிய நெறியேயாவன என்பதனை இங்கு நினைவு கூர்க. "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" (திருத்தாண்டகம்), "சொல்லாதன கொழு நாவல்ல சோதியுட் சோதிதன்பேர், செல்லாச் செவிமரக் தேறித் தொழாத கை மண்டிணிந்த, கல்லா நினையா மனம் வணங்காத் தலையும் பொறையா, மல்லா வவயவந் தானு மனிதர்க் கசேதனமே" (பொன்வண்ணத்தந்தாதி - 142) என்றபடி இறைவனுக் காட்படாத உடலும் அவயவங்களும் தள்ளத் தகுந்தன என்பது ஞான நூற் றுணிபாம். இறைவனது "தூய நாண்மலர்ப் பாதந் தொடர்ந்துளா"ராகிய (907) தாயனார் அத்தொடர்பாலாகிய ஆட்செய்யப் பெறுந் தன்மையின் நீங்கியதாக எண்ணியபோது, தலைமகனது பிரிவாற்றுமையால் தலைமகள் அடையும் கையற நிலையை அடைந்தவராகி, அவ்வாறு பொருந்திய அன்பு காட்டிய நெறியாலே இப் படித் துணிந்தனர் என்று ஆசிரியர் அமைதி காட்டியது காண்க.

**உள்ளந் தண்டு அற** - கழுத்தினுள்ளேயுள்ள அழகிய தண்டு அறும்படி. அன்பு நெறியினின்றும் மனது விலகாதபடி என்றுரைப்பாரு முண்டு.

**ஊட்டியும் கழுத்தினூடே** என மாற்றுக. மிடறும் - பின் கழுத்தும். கழுத்து முழுமையும்.

**அரியா நின்றார்** - தம் கழுத்தைத் தாமே அரிதல் வலிந்தசெய லாதலானும், அதற்கு இங்குக் கொண்ட கருவி, போர் வாள் முதலிய வலிய கருவியல்லாது அரி வாளே யாதலானும், அச்செயல் ஒரு வீச்சில் நிகழாது பின்னும் முன்னுமாகப் பன் முறை அரிவாளை வலிந்து ஊன்றி ஈர்த்தலால் நிகழும் கால நீட்டிப்புக் குறிக்க இவ் வாறு ஆநின்று என்ற நிகழ்கால இடைநிலை தந்து கூறினர். **அரியா நின்றார்** - அரிந்து கொண்டு நின்றார் என்றலுமாம் ; **நிற்றல்** - அச்செயலிற் பிழையாது தொடர்தல்.

**உறு பிறப்பு அரிவார் ஒத்தார்** - "பாசப் பழிமுதல் பறிப்பார்போல" (460) என்றவிடத் தரைத்தவை பார்க்க. பிறப்பு உறுகின்ற நிலையை அறக்களைந்து வீடு பெறுவார் போன்றார் என்க. இச்செயலின் பின்னிலையும் குறித்தது.

**அரியா நின்றார்** - அரிகின்றாராகிய அவர். வினையாலணையும் பெயர். அரியா நின்றார் - ஒத்தார் என முடிந்தது. 17

920. மாசறு சிந்தை யன்பர் கழுத்தரி யரிவாட் பற்று
மாசில்வண் கையை மாற்ற வம்பலத் தாடு மையர்
வீசிய செய்ய கையு, மாவடு "விடேல்வி டே"லென்
னோசையுங், கமரி னின்று மொக்கவே யெழுந்த வன்றே. கஅ

(இ - ள்) வெளிப்படை. குற்றமறுக்கும் சிந்தையுடைய அன்பர் தமது கழுத்தை அரிகின்ற அரிவாளைப் பிடிக்கும், குற்றமில்லாத வண்மையுடைய கையின் செயலைத் தடுக்க அம்பலத்தாடும் ஐயாது வீசிய செய்ய இடது திருக்கையும், மாவடுவினது "விடேல் விடேல்" என்ற ஓசையும் கமரிலிருந்து அப்போதே ஒருசேர எழுந்தன.

(வி - ரை) **மாசறுசிந்தை** - மாசு அறுக்கும் சிந்தை என்க. மேற்பாட்டிற் "புரைஅற" என்றார். **மாசு** - முன் குறித்த **புரை** தீமை - (918) என்ற அவை. தமது தீமையிலுலே இறைவர் அமுது செய்திலர் என்றும், இறைவருக் காட்படாது இருக்கும் பிறப்புத் தள்ளத்தக்கது என்றும் உறுதி பெற்றாராதலின் அதனை **அறுக்கச் சிந்தையுள் எண்ணினார்** என்பார் **மாசு அறு சிந்தை** என்றார்.

**அன்பர்** - ஞானி என்ற பொருளில் வந்தது. " இருஞ்சுரபிக் கெங்கும், உருக் காண ஒண்ணுத பான்முலைப்பால் விம்மி யொழுகுவது போல்வெளிப்பட் டருளுவன் **அன்பர்க்கே** " என்ற (சிவஞானசித்தி - 12, 4) விடத்து " அன்ப ரென்றது ஈண்டு ஞானிகண்மேற்று, ' அன்பரொடு மரீஇ ' என்புழிப்போல " என்றுரைத்ததும், சிவ ஞானபோதம் 12-ம் சூத்திரம், **அன்பரோடு** என்றதற்கு " அங்ஙனம் அயரா அன்பு செய்யும் மெய்ஞ்ஞானிகளோடு " என்றுரைத்ததும் காண்க.

**அன்பர் கழுத்து அரி அரிவாள்** - கழுத்தரியும் வன்செயல் அன்பிலுல் ஆகியது என " அன்பு காட்டிய நெறி " என்று மேற்பாட்டிற் கூறியதனை அனுவதித்து இங்கு **அன்பர்** என்றார்.

**ஆகில் வண்மையை** - **ஆசு** - குற்றம். கையினுக்குக் குற்றமாவது கைகளாற் செய்யத்தக்கவற்றைச் செய்யாமையும், செயத்தகாதவற்றைச் செய்தலுமாம். செயத் தக்கவை " கைகாள் கூப்பித் தொழீர் கடி மாமலர் தூவினின்று " (அப்பர்சுவாமிகள் - திருவங்கமாலை) என்ற தமிழ்மறையால் விதிக்கப்பட்டன. அவை இறைவனது வழி பாடும், அதற்காவன செய்யும் சரியை கிரியை என்றவற்றிற் பட்டனவுமாம். தாயனாரது கைகள் தமக்குணவில்லாத போதும் கூலி செய்தும் திருப்பணி முட்டாது செய்தும் வந்தனவாதலின் இவ்வாறு கூறினார். இங்குக் கழுத்தரிதலாகிய வலித்த செயல் செய் யினும் அக்கையினுக்குக் குற்றம் சாராதென வற்புறுத்துவார் **ஆகில்** என்றார். குற்ற மாகாமை மேலுரைக்கப்பட்டது. **வண்மை** - திருப்பணி முட்டுப்படக் காணும் காலத்து உயிரையும் ஈடாகத் தரும் வள்ளன்மை. **கையை** - கைசெய்யும் செயல் முயற்சியினை. **கை** - என்பது அது செய்யும் செயல் முயற்சிக்காகி வந்தது ஆகுபெயர்.

**மாற்ற** - இங்குத் தடுக்க என்ற பொருளில் வந்தது.

**அம்பலத்து ஆடும் ஐயர்** - அருட் கூத்தர். **வீசிய செய்ய கை** - இடது கை. வீசுகரம் என்ப. " சிக்கன வா வீசுகரம் ", " பொருந்தி லிமைப்பிலி யவ்வென்ற பொற்கை " முதலிய திருவாக்குக்கள் காண்க. ஐயரது இடதுபாகம் அருளாகிய அம் மையாருடையதாதலின், அத்திருக்கை அருளுடையதென்பார் **வீசிய செய்ய கை** என்றார். கற்றைபுடைத் திடவெற்றுங் கற்பாறையில் திருக்குறிப்புத் தொண்டர் தமது தலையை மோதப் புக்கபோது, அங்கு " வற்றெழுந்து பிடித்ததணி வளைத்தழும்பர் மலர்ச்செங்கை " (திருக்குறி - புரா) என்ற வரலாறு இங்குச் சிந்திக்கத்தக்கது.

**கமரினின்றும் கையும் ஓசையும் ஒக்கவே எழுந்த** என்க. கண்ணப்ப நாயனார் இடது கண்ணைத் தோண்ட அம்பு ஊன்றிய கையினை இறைவரது வலையலணிந்த இடது கை சிவலிங்கத்திலிருந்து மூளைத்துத் தடுத்ததுவும், 'கண்ணப்ப நிற்க' என்ற வாக்கும் உடன் எழுந்ததுவும் இங்கு நினைவு கூர்க. 827 பார்க்க.

**மாவடு விடேல் விடேல் என்னுசை** - மாவடுவினைக் கடித்தலால் உளதாகும் விடேல் என்ற ஓசை. மாவடுவின் ஓசை என்க. செயப்படு பொருட் காரகத்தின் வந்த ஆறனுருபும் பயனும் உடன் றொக்கு நின்றன. " வடுவின் ஓசை " (925, 626) என்பவற்றை நோக்குக. 902 பார்க்க. அடுக்கு உறுதியும் மிகுதியும் குறித்தது. " சிலம்பி னுசைமிகவு மிசைப்பித்தார் " (கழறிற் - புரா - 42) என்ற வரலாற்றை இங்கு நினைவு கூர்க.

**எழுந்ததன்றே** என்பது பாடமாயின் தனித்தனி கூட்டிக்கொள்க. **அன்றே** - அப்போதே.

இவ்விடத்து " ஆண்டவன் கோயிலில் மட்டும் வீற்றிருக்கின்றனில்லை என்ப தும், அன்பர்கட்கு அவன் எங்கிருந்தும் அருள்செய்வான் என்பதும், அவன் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஒருவன் என்பதும் விளங்குவது காண்க " என விசேடவுரை காண்பாருமுண்டு. இறைவனைத் திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனியில் வழிபடு

வோர் அவன் திருக்கோயிலினுள் மட்டும் வீற்றிருக்கின்றான் என்றும் ஏனையிடங்களில் அவனது நிறைவு இல்லை என்றும் கொள்கின்றார்கள் என்ற குறிப்புடன் இவ்வுரை காணப்படுகின்றது. திருக்கோயிலினுட் சிவலிங்கத் திருமேனியிலும், அடியார் திருவேடத்திலும் இறைவன் தயிரின் நெய்போல வெளிப்பட்டும், ஏனையிடங்களிற் பாலின் நெய்போல மறைந்தும் விளங்குவன் என்பது உண்மைநூற் றுணிபு.

"கண்டதொரு மந்திரத்தால்" என்ற சிவஞான போதம் (2ம் சூத்) உதாரண வெண்பாவில் "விறகிற் கடைகோலாற்றீ கடைந்தழி விளங்கும் அல்லுழி விளங்குவ தன்றுணர் போல, உயிர்கட்குப் புத்திமுத்தி யளித்தற் பொருட்டுக் காணப்பட்ட தாவர வடிவின்கட் கலப்பிலுல் அதுவே தானும், அதுவன்றி வேறு பொருளுமாமியல் புடைய முதல்வன், அதுவே தானுகக் காணுதார்க்குத் தம்மாலறியப்பட்ட தொரு மந்திர சாந்நித்திய மில்வழி அவ்வடிவின்கண் விளங்காது நின்று, அஃதுள்வழி விளங்கித் தோன்றும் பொருளாய், அவ்வாறன்றி அவ்வடிவே அவனுகக் காணப் பெறும் உண்மைத் தவமுடையார்க்கு அப்பெற்றியனேயாய் விளங்கித் தோன்றான் கொல்லோ?" என்று எமது மாதவச் சிவஞான முனிவர் உரைத்தனவும், இவ்வாறே "திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனி தன்னை" என்ற சிவஞான சித்தியாரின் (12 - 4) கீழ் உரைத்தனவும் இங்குச் சிந்திக்கத்தக்கன.

விறகிற்றீப் போலவும், பாலின் நெய்போலவும் மணியிற் கதிர் போலவும் எங்கும் நிறைந்து மறைந்து நிற்கும் இறைவன் இம் மூன்றிலும் "முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே" என்றபடி தீவிரதர முடைய அன்பர்க்கே அவர்களது பக்குவ முதிர்ச்சியால் அவர் நினைத்தவிடத்தில் வெளிப்படுவன் என்பதும், ஏனையோர்க்கு அவ்வாறு வெளிப்பட விளங்கான் என்பதும் துணிபு. திருக்கோயிலினுள் இறைவனது வெளிப்பாடும், ஈண்டுத் தாயனுர்க்குக் கமரே முன்னிலையாக வெளிப்பாடும் அன்பின் தீவிர பேதம் குறித்தனவாகலின் எல்லார்க்கும் இவ்வாறு கூடாமையின் இங்கு இவ்விசேட வுரையின் பொருத்தம் ஆராயத் தக்கது. அன்றியும் அற்றை காளைக்குமுன் வரை தாயனுரும் திருக்கோயிலுள்ளிருக்கும் திரு மேனியிலே இறைவனை வழிபட்டனர் என்பதும், அன்றைக்கும் "அங்குப் போவதேன்" என்றதும் உன்னுக. 18

921. திருக்கைசென் றரிவாட் பற்றுந் திண்கையைப் பிடித்த போது
வெருக்கொடங் கூறு நீங்க வெவ்வினை விட்டு நீங்கிப்
பெருக்கமே மகிழ்ச்சி பீடத், தம்பிரான் பேணித் தந்த
வருட்பெருங் கருணை நோக்கி யஞ்சலி கூப்பி நின்று, கக

922. "அடியனே னறிவி லாமை கண்டுமென் னடிமை வேண்டிப்
படிமிசைக் கமரில் வந்திங் கமுதுசெய் பரனே போற்றி!
துடியிடை பாகமான தூயநற் சோதி போற்றி!
பொடியணி பவள மேனிப் புரிசடைப் புராண போற்றி!" உ0

923. என்றவர் போற்றி செய்ய விடபவா கனலுய்த் தோன்றி,
"நன்றுநீ புரிந்த செய்கை; நன்னுத லுடனே கூட
என்றுநம் முலகின் வாழ்வா" யென்றவ ருடனே நண்ணு
மன்றுளே யாடு மையர் மழவிடை யுகைத்துச் சென்றார். உக

921. (இ - ள்) வெளிப்படை. (இறைவருடைய அவ்வருளைமுழுத்த) திருக்கை சென்று, அரிவாளினைப் பற்றும் (தாயனுரது) வலிய கையைப் பிடித்தபோது, அவர் வெருக்கொண்டு, அப்போதே அரிவாளினுல் உளதாகிய புண் நீங்க வெவ்வினையும்

விட்டு நீங்கிப், பெருக்கவே மகிழ்ச்சிபீடத், தமது பெருமானார் தம்மைப் பேணித் தந்த அருட்பெருங் கருணையினை நோக்கிக், கைகளை அஞ்சலியாகக் குவித்து நின்று, கக

922. (இ - ள்) வெளிப்படை. "அடியனேனது அறிவில்லாமையைக் கண்டு வைத்தும் எனது அடிமையை வேண்டிப் பொருட்படுத்தி நிலத்தின்மேற் கமிலே வந்து இங்கு அமுதுசெய் பரனே போற்றி! துடிபோன்ற இடையையுடைய உமையம்மையாரை ஒரு பாகத்திலுடைய தூய நல்ல சோதியே போற்றி!; திருநீற்றினையணிந்த பவளம் போன்ற திருமேனியையும், புரிசடையையும் உடைய புராணனே போற்றி!", உ0

923. (இ - ள்) வெளிப்படை. என்று அவர் துதிக்க, இடபவாகனராக வெளிப்படக் காட்சிகொடுத்து, "நீ புரிந்த செய்கை நன்று; நன்னுதலையுடைய உனது மனைவியுடன் என்றும் நீங்காது நமது உலகத்தில் வாழ்வாயாக!" என்று அருளிச் செய்து, அம்பலத்தாடும் ஐயர், அவர் தம்முடனே நண்ணத், தமது இளைய விடையினை ஊர்ந்து எழுந்தருளிப் போயினர். உக

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

921. (வி - ரை) **திருக்கை** - ஐயரது இடது கை. "வீசிய செய்ய கை" (919) எனக் கூறிய அந்தக் கை. "எழுந்தது" என மேற்பாட்டில் அதன் வெளிப்பாட்டைக் கூறினர்; இங்கு, "சென்று" - "பிடித்த" என அதன் ஒழிற்பாட்டைக் கூறினர்; இறைவனது "சென்றடையாத திரு"வினைத் தருவதாதலால் அதனைத் **திருக்கை** என்று சிறப்பித்தார்.

**திண்கை** - தாயனாரது கை. மனத்தின் திண்மை கையின்மேல் ஏற்றப்பட்டது. மேற்பாட்டில் கையினது செயலின் வண்மைபற்றி **வண்கை** என்ற ஆசிரியர், இங்கு அச்செயலின் செய்தற்கரிய திண்மை பற்றித் **திண்கை** என்றார். **திண்மையாவது** நினைத்தது முடிக்கும் ஆற்றல். கலங்கா நிலைமை என்பர் பரிமேலழகர். "எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார், திண்ணிய ராகப் பெறின்" (குறள்) என்றபடி இங்குத் தாயனார் தமது செய்கையினால் தாம் ஊட்டிய அமுதினை இறைவர் உண்டதைக் காண எண்ணிய கருத்தை எண்ணியாங் கெய்தினர் என்பது தோன்ற இங்குத் **திண்மை** என்ற அடைமொழி புணர்த்தோதினார்.

**வெருக்கொடு** - **வெருக்கொள்ளுதல்** - தாம் எதிர்பாராதபடி சடுதியில் தமது கை பிடிக்கப்பட்டதும், அதனால் தமது கழுத்தரியும் செயல் தடுக்கப்பட்டதும் உணர்ந்ததனால் உளதாகிய அற்புத உணர்ச்சியின் மெய்ப்பாடு. "வெருக்கொளுற் றதுநீங்க" (260) என்றவிடத் துரைத்தவை பார்க்க. "வெருக்கொண்டார் போலழுவர் குறிப் பயலாய்" (திருஞான - புரா - 55) என்றதும் பிறவும் காண்க.

**வெருக்கொண்டது** மனத்தின் முதலில் எழுந்த நிகழ்ச்சி; **ஊறுநீங்க உணர்ந்தது** இரண்டாவது நிகழ்ச்சி; **மகிழ்ச்சி நீடியது** மூன்றாவது நிகழ்ச்சி. இவை நிகழ்ந்த முறை பற்றி அம்முறையிற் கூறினர். **ஊறு** - அரிவாளினால் கழுத்தை அரிந்ததனால் உற்ற புண். **நீங்க** - திருவருளால் புண்மாறி முன்போலாக.

**வெவ்வினைவிட்டு நீங்கி** - **வெவ்வினை** - கடிய வலிந்த செயலாகிய கழுத்தரிதல். **வேம்மை** - விருப்பம் என்று கொண்டு, தாமே விரும்பிச்செய்த செயல் என்றதைப் பிறமையும். **வெவ்வினை** - பிறவிக்குக் காரணமாகிய மூலவினையின் பகுதி என்றும், **நீங்கி** - சத்திமடங்கி மறைந்து என்றும் போந்த குறிப்பும் காண்க. இறைவரது திருக்கையினால் பிடிக்கப்பட்டமையாலும், ஊறு நீங்கியமையினாலும், மாயை யாக்கை நீங்கிச் சிவயாக்கை பெற்றனர். இவ்வாறு பாசநீக்கம் பெற்ற தாயனார் சிவப்பேறு பெறுதல் 922-ல் உரைக்கப்பட்டது காண்க.

**மகிழ்ச்சி பெருக்கவே நீட்** என்க. **பெருக்கம்** - அளவிலுலும், **நீடுதல்** - காலத்தாலும் மிகுதல் குறித்தன. **மகிழ்ச்சி பெருகுதல்** இங்கு " விடேல் விடேல் " என்ற ஓசை கேட்டதனால் இறைவர் அமுது செய்தனர் என்று உணர்தலாலும், தமது நியதியாகிய திருப்பணி முற்றுப்பெற இறைவர் ஏற்றுக் கொண்டமையாலும் உண்டாகிய தென்க. ஊறுநீக்கியதனாலன்று. எறிபத்த நாயனார் வாளினைத் தமது கழுத்திற்பூட்டி அரிதடலுற்ற போதில் புகழ்ச்சோழநாயனார் அந்த வாளும் கையும் விடாதுபற்றிப் பிடித்தபோது, " மாதவர் வருந்தி நிற்ப " (597) என்ற செய்தியையும், ஆண்டுரைத்த வற்றையும், இங்கு ஒப்பு நோக்குக.

**அதுட்பெருங்கருணை** - கை பிடித்ததும், விடேல் என்ற ஓசை மிகவும் கேட்பித்ததும், ஊறுநீக்கியதும் முதலிய இவை. 19

922. **(வி - ரை) அறிவிலாமையாவது** - உள்குவா ருள்கிற் றெல்லா முடனிருந் தறிவார் இறைவர் என்றும், அமுது செய்தருளவேண்டிக் கொண்ட அவ்வேண்டுதலின் கண்ணே நிறைந்து அவ்வாறே செய்தருளுவார் என்றும் துணிவுற அறியாது ஐயப்பட்டு அமுது செய்ததற்கு அறிகுறியாக " விடேல் " என்ற ஓசை வேண்டுதல்.

**என் அடிமை வேண்டி** - யான் அடியவனுய் உளனதலை விரும்பி. அடிமைச் செயலை விரும்பி என்றலுமாம்.

**இங்கு அழதுசெய் பரன்** - **இங்கு** - கமரில் ; **அழதுசெய்** - விடேல் என்றோசையாற் புலனுயினபடி அமுது செய்தருளிய. **பரன்**-பெரியவன்-மகத்தானவன். தாழ்ந்த இடத்தில் வெளிப்பட்டதும், அறிவிலாமை கண்டும் அடிமைவேண்டி அமுது செய்ததும், அதற்கடையாளமாக ஓசை கேட்பித்ததும் அவரது மகத்துவத்தை விளக்கியன என்பது குறிப்பு. **பரன்** (எல்லாப் பொருள்கட்கும்) அப்பாற் பட்டவன் என்றலுமாம்.

**துடி இடை பாகமான** - **துடி** - உடுக்கை. மேலும் கீழும் பெருத்து, இடை சிறுத்துள்ளமையால், இருமுகமும் விரிந்து நடுச்சிறுத்த உடுக்கை, இடைக்கு, மெய்ப்பற்றி வந்த உவமம்.

**துடியிடை** - இடையினையுடைய உமையம்மையார். அம்மையார் உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. பாகம் தமக்குச் செய்த அருள் குறிப்பதாகலின் இவ்வாறு தொடர்ந்து கூறினர்.

**போடி** - திருநீறு. **பவளமேனி** - இறைவனது திருமேனி வன்ன பேதங்களாற் றுக்கப்படாத பளிங்கு போன்றதாம். சுத்தஸ்படிக சங்காசம் என்பர் வடவர். " சுத்தமார் பளிங்கின் பெருமலே " என்பது தமிழ்மறை. ஆயினும் " பொன்மைநீலாதி வன்னம் பொருந்திடப் பளிங்கிவற்றின், தன்மையாய் நிற்கும் " என்பவாதலின், " எரியலா லுருவ மில்லே " என்றபடி நின்ற எரியுருவத்தையே பவளம்போலக்காட்டியது என்பதாம். " பவளம்போல் மேனியிற் பால்வெண் ணீறும் " (திருவிருத்தம் - திருக்கோயில்) என்ற தமிழ்மறை இதனை நினைவு கூர்விப்பதாம்.

**புரிசடை** - **புரி** - பலபுரியாக - வடமாக - திரித்த. **புரிதல்**-எப்போதும் சொல்லுதல் என்றுகொண்டு, கங்கை, பிறை, கருதலை முதலியவற்றைத் தாங்கிக் கொண்டு உலகை வாழ்வித்த கருணை கருதி, அறிஞர் யாவராலும் எப்போதும் துதித்து எடுத்துச் சொல்லப்படும் எனவும், " கபர்த்திநே நம " என்று சிவாட்டோத்தரத்தில் துதித்துச் சொல்லப்படும் எனவும் உரை கொள்ளுதலுமாம்.

**புராணன்** - பழைமையானவன் - முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருள். எனக்கு அருள் செய்தாய் ; அருள் உன் இயல்பு ; அது உனக்குப் பழமையாயுள்ளது என்றதாம். 20

923. (வி - ரை) என்று அவர் போற்றி செய்ய - அவர் - வெருக்கொடு - நீங்க - நீங்கி - நீட கோக்கி - கூப்பி - நின்று - போற்றி - போற்றி - போற்றி என்று போற்றி செய்ய என்க.

அவர் - "மாசறு சிந்தை அன்பர்" என மேற்பாட்டிற் கூறிய அவர்.

நின்று போற்றி செய்ய - ஐயர் - தோன்றி - "வாழ்வாய்" என்று - அவர் உடனே கண்ண - சென்றார் - என இம்மூன்று பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க.

"நன்று...வாழ்வாய்" - இது இறைவர் தாயனாரை நோக்கி அருளிய திருவாக்கு. நன்று நீ புரிந்த செய்கை-தாயனாரது செயற்கருஞ் செய்கையைப் பாராட்டிய அருமைப் பாடு குறித்தது. "நாம் சொல்லிய அறநூல்களில் தற்கொலை தீது என்று விதித்த நாமே, எம்மிடத்து அன்பின்றிறத்தால் செய்த இதனை நன்று எனக் கொள்ளற்காயது இச்செயல்" என்றுரைக்கவும் நின்றது காண்க.

நன்னுதல் - கல்லநுதலினை யுடைய உன் மனைவி. உடனே கூட - "கைகர மில்லா அன்பின் நங்கை கையடகு கொய்து, பெய்கலத் தமைத்து வைக்க" (914) எனவும், "வடதெடு வான மீனே யனையவர் தண்ணீர் வார்க்க" (915) எனவும் கூறிய வாற்றால் அடியார்பணியும், "பின்புபோம் மனைவியார்ஆன் பெற்றஅஞ் சேக்திச் சென்றார்" (915) என்றும், "மாதாரார் - மட்கல மூடு கையால் காதலா லணைத்தும்" (916) என்றும் கூறியவாற்றால் அரன்பணியும் உடனிருந்து புரிந்தனராதலின் தமது நாயகருடனே கூடச் சிவலோக வாழ்வு பெற்றனர். திருநீலகண்டநாயனாரது மனைவியார்க்கும் (402), இயற்பகைநாயனாரது மனைவியார்க்கும் (437), இளையான்குடிமாற நாயனாரது மனைவியார்க்கும் (465) இன்னும் இவர்கள் போன்றுள்ள தேவியர்க்கும் இவ்வாறே இறைவர் அருளியது இங்கு நினைவு கூர்க.

நம் உலகில் என்றும் வாழ்வாய் என்க. மீளாத நிலையில் சிவலோக வாழ்வு பெற்றிருப்பாய். என்று - என்று அருளிச்செய்து. அவர் உடனே நண்ண-தாயனாரும் மனைவியாரும் தம்முடனே வர. சென்றார் - எழுந்தருளிப் போயினார்.

ஒன்றி நம்முலகில்—என்பதும் பாடம் 21

924. பரிவுறு சிந்தை யன்பர் பரம்பொரு ளாகி யுள்ள
"பெரியவ ரமுது செய்யப் பெற்றிலே" னென்று, மாவின்
வரிவடு விடேலெ னுமுன், வன்கழுத் தரிவாள் பூட்டி
யரிதலா "லரிவாட் டாய" ராயினார் தூய நாமம். உஉ

(இ - ள்) வெளிப்படை. அன்பு பொருந்திய சிந்தையினையுடைய அன்பாகிய தாயனார், "பரம்பொருளாகியுள்ள பெரியவராகிய சிவபெருமான் இங்கு அமுது செய்யும் பேறு பெற்றிலேன்" என்று கொண்டு வரியினையுடைய மாவடுவினது "விடேல்" என்ற ஓசையினை அவர் கேட்பிக்கு முன்பு, தம் வன் கழுத்தினை அரிவாளினைப் பூட்டி அரிதலினாலே அரிவாட்டாயர் என்ற தூய பெயரினை உடையர் ஆயினார்,

(வி - ரை) இப்பாட்டுக் கவிகூற்று.

பரிவுறு சிந்தை - பரிவு - அன்பு. மாசறு சிந்தை அன்பர் (919), அன்பு காட்டிய நெறியின் (918) என உரைத்தவற்றை இங்கு நினைவு கூர்க.

பரம்பொருள்...பெரியவர் - எல்லாப் பொருள்களுக்கும் அப்பாற்பட்ட - கடந்த - எல்லையாயுள்ள பொருள். "உலகுய்ய நடமாடும் எல்லே" (திருநாவு - புரா - 85,), "அலகில் கலையின் பொருட்கெல்லை யாடுங் கழலே" (சண்டீசர் புரா - 15) என்பன வாதிய திருவாக்குக்களும், முன்னர் "அமுதுசெய் பரனே" (921) என்றவிடத்து உரைத்த தலையும் காண்க.

அழது செய்யப்பெற்றிலேன் - 917, 918 பார்க்க.

**வரிவடி** - நிறமுடைய மாவடு. மன்னு பைத்துணர் மாவடு (908) என்றது காண்க. **வன்கழத்து** - அரிக்கும் அரியுண்ணுமலும், பின்னர் அருளால் ஊறு நீங்கியும், இறைவனது கழுத்துப்போல என்று நிலைத்த வாழ்வுபெற்றும் விளங்கிய தன்மை குறிக்க **வன்மை** என்ற அடைமொழி தந்தோதினர்.

**நாமம்** - தாயன் என்பது அவரது பெயர். **அர்** - உயர்வு குறித்த பன்மை விகுதி மாறர் - மாறனார் - (440) என்புழிப்போல.

**தூய நாமம் அரிவாட்டாயர் ஆயினார்** என்க. **தூய** - தூய்மையைத் தாத்தக்க. திருத்தொண்டத்தொகையுள் ஆளுடையநம்பிகள் இக்கருத்துப்பற்றியே " எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கு மடியேன் " என்று துதிக்க நின்றமையும், அதனைத் துதித்து உலகம் நிமை நீங்கித் தூய்மைபெற்று உய்கின்றமையும் குறிக்கத் **தூய** என்றார். அடியார் திருநாமங்கள் தூய்மை செய்வனவாம் என, "அடியிணைகள், சிந்தனைசெய் திந்தத் **திருநாமக்** கோவையினை, மந்திரமாக் கொண்டு மயிர்சிலிர்த்து - நைந்துருகி, மெய் யன்பா லென்றும் விளம்பப் பெறுவார்கள், கைதவமும் புல்லறிவுங் கற்பனையும் - **மையலுந் தீர்ந்**, தத்துவிதா னந்த வகண்டபரி பூரணத்தில், நித்தியமாய் வாழ்வார் நிசம் " என்று திருத்தொண்டர் திருநாமக்கோவையினுள் எமது மாதவச் சிவஞானசுவாமிகள் போற்றி அருளியிருப்பது காண்க. " திருஞான சம்பந்தர் " என்ற **நாமமந்திரம்** சொல்லக் கேட்டலும் பாண்டியர் அயர்ச்சியை நீங்கினார் (திருஞான - புரா - 721) என்ற வரலாறும் இங்கு நினைவு கூர்க. 22

925. முன்னிலை கமரே யாக முதல்வனு ரமுது செய்யச்
சென்நெலி னரிசி சிந்தச் செவியுற வடுவி னோசை
யன்னிலை கேட்ட தொண்ட ரடியிணை தொழுது வாழ்த்தி
மன்னுமா னுயர் செய்கை யறிந்தவா வழுத்த லுற்றேன். உங

(இ - ள்) செந்நெலின் அரிசி சிந்த - செந்நெல்லரிசி முதலியவை சிந்தியிட; கமரே முன்னிலையாக - அவை சிந்திய அந்தக் கமரே **முன்னிலையாக** ; முதல்வனார் அமுது செய்ய - இறைவர் திருஅமுது செய்தருள ; அன்னிலை - அன்னிலையில் ; வடுவின் ஓசை செவியுறக் கேட்ட தொண்டர் - மாவடுவினது " வீடேல் " என்ற ஓசையைத் தம் காதுகள் பொருந்தக் கேட்டதாகிய பேறுபெற்ற தொண்டராகிய தாயனாரது ; அடியிணை...வாழ்த்தி - திருவடியிணையைத் தொழுது துதித்து, அத்துணையானே ; மன்னும்...உற்றும் - நிலைபெற்ற ஆளுயரது செய்கையினைத் தெரிந்தபடி துதிக்கத் தொடங்குகின்றேன்.

(வி - ரை) **முன்னிலை** - இறைவர் அமுது செய்தருளுதற்கு முன்னிலையாயுற்றது. **கமரே முன்னிலையாக** என்க. இதன்முன்னர்த் தாயனாரது அமுதுகொள்வதற்கு முன்னிலையாயுற்றது சிவலிங்கத் திருமேனி ; இங்கு அந்த முன்னிலை கமரேயாயிற்று. **முன்னிலை** - வெளிப்படும் இடம். அபிவியத்தி ஸ்தானமென்பர் வடவர். இறைவர் அமுது செய்தருள உற்ற முன்னிலைகள் இரண்டே யென்பர் ; அவை சிவலிங்கத் திருமேனியும் சங்கமத் திருமேனியும் என்பன. " தாவர சங்கம லென்றிரண் டுருவினின் று, மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்பன் " (சிவஞானசித்தி 2, 28) என்றதனாலறிக. இங்கு இறைவர் பூசை கொண்டது தாவரமாகிய சிவலிங்கத் திருமேனியாம். இத்தக் கமரே அச்சிவலிங்கமாயிற்று என்க. **முன்னிலை** என்பது இங்குச் சிவலிங்கம் என்ற பொருளில் வந்தது என்பது ஸ்ரீமத் செப்பறைச் சிதம்பர சுவாமிகள் கண்ட உரைக்குறிப்பு. **முன்னிலை** - காரணம் என்பர் ஆலாலசுந்தரம்பிள்ளை.

செந்நெலின் அரிசி - முதன்மைபற்றி அரிசியைச் சொன்னவதனால் உதவியுணவாகிய செங்கீரையும் மாவடுவும் இனம் பற்றி உடன்கொள்ளப்படும்.

அந்நிலை - அவ்விடத்து - அப்பொழுதே. அரிசி சிந்த, முதல்வனார் கமரே முன்னிலையாக அமுதுசெய்ய, அந்நிலை வடுவின் ஓசை செவியுறக் கேட்ட தொண்டர் எனக் கூட்டிக் கொள்க.

முன்னிலை...தொண்டர் - இவ்வாறு ஆசிரியர் எடுத்துக்காட்டிய பெருமைபற்றியே "செய்யி லுகுத்த திருப்படி மாற்றதனை, "யைய! விதுவமுது செய்"கென்று—பையவிருந், தூட்டி யறுத்தவர்க்கே யூட்டி யறுத்தவரை, காட்டியுரை செய்வ தென்னே நாம்" (20) எனவும், "கல்லிற் கமரிற் கதிர்வாளிற் சாணையினில், வல்லுப் பலகையினில் வாதனையைச்—சொல்லும், அகமார்க்கத் தாலவர்கள் மாற்றினர்கா ணையா, சகமார்க்கத் தாலன்றே தான்" (50)—(திருக்களிற்றுப்படியார்) எனவும் விதந்து எடுத்து ஞானசாத்திரம் ஓதியதும் காண்க.

மன்னும் ஆனயர் - இவ்வுலகத்திலிருந்து குழல் வாசித்தபடியே அருளால் அந்நின்ற நிலையே ஐயர்மருங்கு அணைந்து, அத்திருக்குழல் வாசனை முதல்வனார் எப்போதும் கேட்க அவர் மருங்கு அணைந்து என்றும் உள்ளாராதலின் (964) மன்னும் - நிலை பெறும் என்றார். இவ்வுலகத்தில் போந்த அந்நிலையே வீட்டுலகத்திலும் மன்னும் என்ற குறிப்புக் காண்க.

ஆசிரியர் தமது மரபின்படி இதுவரை கூறிவந்த சரித்திரத்தின் சாரத்தை வடித்து எடுத்து முடித்துக் காட்டி, இனிமேல் வரும் சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்கின்றார்.

செய்கை - திருவைந் தெழுத்தை உள்ளுறையாகக் கொண்ட பண்ணிசையினை வேய்ங் குழலில் வாசித்து உலகெல்லாம் இசை மயமாக்கி, அதுவே ஐயன்றன் திருச்செவியினருகணையப் பெருக்கிய அருஞ்செய்கை (960 - 961). திருக்குழல் வாசனை என்பர் ஆசிரியர் 23

---

சரிதச் சுருக்கம்:—சோழர்களது காவிரிநாட்டில் கணமங்கலம் என்பது ஒரு பதி. அது நீர்வளம், நிலவளம், பயிர்வளம் முதலியவற்றுற் சிறந்து விளங்குவது. அதில் மிக்க செல்வத்து வேளாளர் குலத்துத் தலைமையராய், மனையறத்தின் வாழ்வாராய்ச், சிவபெருமானது திருப்பாதங்களைத் தொடர்ந்து பற்றுகின்றவராய்த் தாயனார் என்ற திருநாமம் உடையவராய், ஒரு பெரியார் இருந்தார். அவர் சிவபெருமானுக்கு ஏற்றன என்று செந்நெல்லரிசியும், செங்கீரையும், மாவடுவும் கள்தோறும் கொண்டு வந்து திருவமுது செய்விப்பாராயினர்.

இத்திருத்தொண்டினை அவர் வறுமைவந்த காலத்தும் விடாது செய்து வருவார் என உலகுக்குக்காட்டி அதுகொண்டு உலகை உய்விக்கும் பொருட்டு, இறைவர் அவரது வழிவழி வந்த செல்வத்தை அறியாதவாறு மாற்றினர். அதனால் அவரது செல்வம் யானையுண்ட விளங்கனி போல உள்ளீடற்று மறைந்தது. அப்போதும் தாயனார் பாவை பங்கருக்குத் தாம் முன் செய்துவந்த திருப்பணியை முட்டாது செய்து வருவாராயினர். கூலிக்கு நெல்லறுத்து வாழ்வாராய்ச், செந்நெல்லரிந்த செந்நெற் கூலியாகக் கிடைத்ததனை யெல்லாம் இறைவருக்குத் திருவமுது ஆக்கினர்; கார்நெல்லரிந்த கார் நெற் கூலிகொண்டு தாம் உண்டுவந்தனர். இங்ஙிலையினையும் மாற்ற இறைவர் திருவுள்ளம் பற்றவே வயல்களில் எல்லாம் நல்ல நீண்ட செந்நெல்லே யாகி விளைந்தன. அவற்றை அறுத்த நெற்கூலியினைக் கொண்டு, "இஃது அடியேன் செய்த புண்ணியமேயாகும்" என்று சிந்தை மகிழ்ந்து, தாயனார் அக்கூலியெல்லாம் திருவமுதுக்கே யாக்கினர். குறையாத அன்பினையுடைய மனையியார் உணவுக்காக வீட்டுக்கொல்லையில் உள்ள கீரைவகைகளைக் கொய்து சமைத்து இடப், பெருந்தகையார் அருந்தித், திருப்

பணியை முட்டாது செய்துவந்தனர். மனைப் படப்பையில் உள்ள கீரை வகைகள் தீரவே, வடமீன் அனைய மனைவியார் தண்ணீரை வார்க்க, அதனை அன்பனார் அமுது செய்து முன்போலப் பணிசெய்து வந்தனர்.

ஒரு நாள் இறைவர்க்கு ஊட்ட அவரது அன்பு போன்ற தூய செஞ்செல்லரிசியும், பசிய மாவடுவும்,மென் கீரையும் தொண்டனார் கூடையிற் சுமந்து செல்ல, அவர்பின்பு மனைவியார் மட்கலத்தில் ஆனேந்து ஏத்திச் சென்றனர். இவ்வாறு செல்லும்போது திருமேனி வாடியதனால் கால்தளர்ந்து தப்பித் தாயனார் வீழ்வாராக, மட்கலம் மூடும் கையினால் காதலால் மனைவியார் அணைத்தும், கூடையிற் கொண்டவை எல்லாம் கமரிற் சிந்தின. அதுகண்டு, தாயனார், "இனி அங்கு என் போதல் வேண்டும்?" என்று வருந்தி, "இவற்றை இங்கே அமுதுசெய்தருளாவிடில் நான் உயிர் வாழமாட்டேன்; என் ஊட்டியை அறுத்துத் தலையை வேறுகத் தள்ளுவேன்" என்று இறைவரை வேண்டினர். இறைவர் திரு அமுதுசெய்யத் தாழ்த்தமை கண்டு, "அளவில்லாத தீமையுடையேன், இறைவர் அமுது செய்யும் பேறு பெற்றிலேன்" என்று, உறுபிறப் பினை அரிவார் போன்று அரிவாள் கொண்டு உள்ளந் தண்டு அறும்படி கழுத்தினை அரியத் தொடங்கினர்.

கமரினின்றும், அம்பலத்தாடும் ஐயரது வீசிய கையும், மாவடு "விடேல் விடேல்" என்ற ஓசையும் உடனே ஒருங்கு எழுந்தன. இறைவரது திருக்கை அன்பரது கழுத் தரியும் திண்ணிய கையினைப் பிடித்துக் கொள்ளவே, அவரும் அச் செயல் தவிர்த்தனர். அரிந்த ஊறும் நீங்கியது.

அன்பனார், அஞ்சலிகூப்பி நின்று, "அடியேனது அறிவில்லாமையைக் கண்டும் என் அடிமை வேண்டிக் கமரில் வந்து இங்கு அமுது செய்தருளும் பரனே போற்றி!" என்று பலவாறு துதித்து வணங்கினர். இறைவர் இடப வாகனராய்த் தோன்றி "நீ புரிந்த செய்கை நன்று!; உன் மனைவியுடனே கூட நம்முலகில் என்றும் வாழ் வாயாக!" என்று அருளிச் செய்து, அவர் உடனே நண்ணத் திருவம்பலத்தில் எழுந்தருளினர்.

"இறைவர் அமுது செய்யும் பேறு பெற்றிலேன்" என்று கழுத்தினை அரிவாளி னால் அரிதலால் அவர் **அரிவாட்டாயர்** என்ற தூய நாமத்தையுடையாயினர்.

---

**தலவிசேடம்:—கணமங்கலம்** - இத்தலம் சோழநாட்டில் உள்ளது. இது திருத் துறைப்பூண்டி இருப்புப்பாதை நிலயத்துக்கு வடக்கே இரண்டு நாழிகையளவில், திரு வாரூருக்குச் செல்லும் பெருவழியில் உள்ள, திருத்தண்டலை நீணெறிக்குக் (காவிரிக் குத் தென்கரை - 110வது தலம்) கீழ்பால் $\frac{1}{4}$ நாழிகை யளவில் உள்ளது. ஊர் இப்போது அழிந்து பட்டது. ஊரிருந்த (நத்தம்) இடத்துக்குக் **கணமங்கலத் திடல்** என்றுபெயர் வழங்குகின்றது. தொன்றுதொட்டு வரும் இப்பெயர் வழக்கைத் தவிர வேறு கல்வெட்டு முதலிய ஆதாரவுகள் கிடைக்கவில்லை. தண்டலை நீணெறி, தாயனார் செஞ்செல்லரிசி முதலியன கொண்டு இறைவரை ஊட்டி, நாடோறும் வழிபட்ட தலம். இது **ஊட்டித் தண்டலை** எனவும் வழங்கப் பெறுகின்றது. ஊட்டித் தண்ணடை என வரலாற்றுப் பெற்ற பெயர் இங்ஙனம் மருவி வழங்குவதுபோலும். தண்டலைநீணெறி தென்னிலாறுநெய்தி[illegible]பெறுகின்றது.

**கற்பனை:**—1. அறநெறிகளில் மனைவாழ்க்கைகொண்ட அறம் தருதிபெற்றது.

2. ஞாயிற்றின் ஒளி மிகுதி கொண்டு வீசுவதால் செஞ்செல் குணத்தில் உயர்ந் தது. அது இறைவரது திருவமுதுக்கும், பெரியோர் அமுதுக்கும் சிறந்தது. அவ்வா றன்றிக் கார்செல் ஞாயிற்றின் ஒளி குறைந்தகாலத்தில் வீளைவதால் குணத்திற் குறைந்தது.

3. செங்கெல் அரிசியும், செங்கீரையும், மாவடுவும் இறைவனுக்கு அமுதுசெய்வித்தல் சிறந்த சிவபுண்ணியம்.

4. வறுமையும் அன்பமும் வந்தகாலத்திலும் திருத்தொண்டின் செயலை விடாதுசெய்வர் பெரியோர்.

5. செல்வமிக்க நிலையில் இருந்த நாயனார் அந்நிலை மாறித் தாம் கூலிக்கு நெல் லரிந்து பிழைக்க நேர்ந்த காலத்தில் அக்கூலிநெற் கொண்டும் திருத்தொண்டினை விடாது செய்த செய்கை உய்திபெறும் உள்ளமுடைய உலகம் பின்பற்றத்தக்கது.

6. கூலி நெல்லினுள்ளும் தாம் பெற்ற சிறந்த செங்நெல்லை இறைவாது திருவமுதுக்கு ஆக்கித், தாழ்ந்த கார்நெற்கூலி கொண்டு தாம் உண்டு வாழ்ந்த நாயனாது அருஞ்செயல் உலகை உய்விக்கவல்ல சிறந்த உதாரணமாம். சிறந்தனவாகத் தாந்தாம் கொள்வனவற்றையே இறைவனுக்கு ஆக்குதல் வேண்டும். " விரும்பின கொடுக்கை பரம்பரற்கென்று, புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த, பெரிய அன்பின் வரகுண தேவர் " வரலாறு சிந்திக்கத்தக்கது.

7. உணவுக்கெனக் கொண்ட கார்நெல் மாறி, எல்லாம் செங்நெல்லேயாகி விளைந்தது கண்ட நாயனார் தமக்கு உணவுக்கு நெல் இல்லாமையை மறந்து, அவ்வாறு தாம் பெறும் செந்நெற் கூலி முழுதும் இறைவனுக்கே திருவமுதாக்கியதுமன்றி, அவ்வாறு ஆக்கப்பெற்ற இது,தமது பெரும் புண்ணியம் என்று மகிழ்ந்ததும், தாம் கீரையும் தண்ணீரும் உண்டு சீவித்ததும் மிக அரிய பெரிய செயல்கள். இந்நிலைமை கைவரப் பெற்றார் பெரியார் ; அவர்களே இறைவனருள் பெற உரியார்.

8. கணவனுரோடு ஒருமித்த கருத்துடன் அமைந்து அதற்கு ஏற்றவாறு மனை வாழ்க்கை நடத்திய நாயனாது மனைவியாரின் உதாரணம் பெண்ணுலகம் கண்டு போற்றிப் பின்பற்றத் தகுந்தது.

9. கணவனுர் கருத்தமைந்து அவாது திருப்பணியில் ஒன்றுகூடி ஒழுகிய ஒழுக்கமே நாயனாது மனைவியார்க்கு அவரைப் பிரியாதநிலையிற் சிவலோகப் பெருவாழ்வும் தேடித் தந்தமை உலகம் கண்டு போற்றத்தக்கது. " மாதரொடு மாடவர்கள் வந்தடியிறைஞ்சிநிறை மாமலர்கள்தூவுய்க், கோதைவரி வண்டிசைகொள் தேமுரல் கின்ற வளர் கோகரணமே " - (சாதாரி - 2) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரம் சிந்திக்கத்தக்கது.

10. இறைவர் எங்குமுள்ளார் என்றறிந்த ஞானிகள் அவரை எவ்விடத்தும் முன்னிலையாக்கிக்கொண்டு வழிபடுவர். இறைவர் தம்மை வழிபடுவோரின் பக்குவத்துக் கேற்றவாறு அங்கங்கும் வெளிப்பட்டு அருள்புரிவர்.

11. தாம் நியதியாகச் செய்துவந்த திருத்தொண்டுக்கு முட்டுப்பாடு நேர்ந்த போது பெரியோர் உயிர்வாழத் தரியார்.

12. அன்பு காட்டிய நெறியிற் செய்யப்பட்டபோது, தற்கொலையும், அறநூலால் விலக்கப்பட்ட பாவமாகாமற், பெரியோர்களாலும் போற்றப்பட்ட புண்ணியமேயாம். இந்த அன்புச்செயல் சிவனிடமாகச் செய்யப்பட்டபோது வீட்டுக்கு வாயிலாகும்.

13. அரிவாட்டாயநாயனார்புராணம் முற்றும்

க

திருச்சிற்றம்பலம்

# 14. ஆனாய நாயனார்புராணம்

தோகை

"அலைமலிந்த புனன்மங்கை ஆனயர்க் கடியேன்"

—திருத்தொண்டத்தொகை

வகை

தாயவன் யாவுக்குந் தாழ்சடை மேற்றனித் திங்கள்வைத்த
தூயவன் பாதந் தொடர்ந்துதொல் சீர்துளை யாற்பரவும்
வேயவன் மேன்மழ நாட்டு விரிபுனன் மங்கலக்கோன்
ஆயவ னாய னென்னை யுவந்தாண் டருளினனே.

—திருத்தொண்டர் திருவந்தாதி

விரி

926. மாடு விளைப்பொலி சோலையின் வான்மதி வந்தேறச்,
சூடு பரப்பிய பண்ணை வரம்பு சுரும்பேற,
ஈடு பெருக்கிய போர்களின் மேக மிளைத்தேற,
நீடு வளத்தது மேன்மழ நாடெனு நீர்நாடு. க

புராணம்:—ஆனயர் என்ற பெயராலறியப்படும் நாயனாது சரித வரலாறும் பண்புங் கூறும் பகுதி. நிறுத்த முறையானே இலைமலிந்த சருக்கத்து எழாவது ஆனய நாயனாது புராணங்கூறத் தொடங்குகின்றார்.

தோகை:—அலைகள் பெருகிய புனல் சூழ்ந்த திருமங்கலம் என்ற தலத்தில் அவதரித்த ஆனயருக்கு அடியேனுவேன்,

மங்கை - திருமங்கலம். ஆனயர் - ஆன் ஆயர் - ஆ மேய்க்கும் ஆயர் குலத்தவர். ஆனயர் (932) என்றது காண்க. நாயனாது இயற்பெயர் விளங்கவில்லை. ஊரும் ஊர்ச்சிறப்பும், பேரும், தொழிலும், திருத்தொண்டின் குறிப்பும் முதனூல் பேசிற்று.

வகை:—யாவைக்கும் தாயானவரும், சடைமேற் பிறைவைத்த தூயவரும் ஆகிய சிவபெருமானுடைய திருவடிகளே மனதில் விடாதுபற்றி, அத்தொடர்ச்சியாலே அவருடைய பழமையாகிய சீர்களே வேய்ங்குழல் நாதத்தினுற் பரவுகின்ற, மேன்மழ நாட்டு சீர்வளம் மிக்க திருமங்கலத்தின் ஆனயர் என்னை மகிழ்ந்து ஆட்கொண்டருளியவர்.

மேன்மழ நாட்டு மங்கலக்கோன் ஆனயன், தூயவன் பாதம் தொடர்ந்து அவனது சீர் தூளையாற் பரவுபவன்; அவன் என்னை ஆண்டவன் எனமுடித்துக்கொள்க. தாயவன் யாவுக்கும் "தாயவன்காண் உலகுக்கு" (கச்சித்திருத்தாண்டகம்). தொடர்தல்-விடாது பற்றுதல் குறித்தது. தூளைவேயாற் பரவுபவன் என மாற்றுக. தூளைகளின் வழியே பண் எழுப்பிப் பரவுதலால் தூளையாற் பரவும் என்றார். மங்கலம் - ஈகாரப்பெயர். விரிபுனன் மங்கலம் - "அலைமலிந்த புனன்மங்கை" என்பது முதனூல்; (தோகை). என்னை உவந்து ஆண்டவன் - "அடியேன்" என்ற முதனூல் முடிபின் தாற்பரிய மூணர்த்திற்று. யான் அடியேன் எனப் பணிதலும், அவனும் என்னை ஆண்டனன்,

**உவந்து** - அடிமையை ஏற்றுக்கொண்டு. **விரிபுனல்** இரண்டு ஆறுகள் கூடிச் சேர்தலால் இவ்வாறு கூறினர். "இது அலைமலிந்த புனன்" என்ற முதலூற் பொருளை எடுத்து ஆண்டு வற்புறுத்தியதாம்.

நாயனாது, **நாடு** - மேன்மழ நாடு - (925) ; **நகரம்** - விரிபுனன் மங்கலம் (931) ; **பெயரும் குலமும் தொழிலும்**-ஆனையர். "ஆயர் குலத்தவர்" (932); "ஆனிரை அளித்தாள்ளார்" (934); **திருத்தொண்டின் திறமும் வரலாறும்**-தோல் சீர் **துளையாற் பாவும் வேயவன்** என்றது - "தம் பெருமானடி அன்புறு கானத்தின் மேவு துளைக்கருவிக் குழல் வாசனை மேற்கொண்டார்" (936) (937), (938); "வாயினின் மெய்யின் வழுத்து மனத்தின் வினைப்பாலின்...பிரானடியல்லது பேணுதார்" (933); "கொன்றையினை கோள்நோக்கி...அன்பை உடையவர்பால் மடைதிறத்தார்" (945),(950),(952); **தாயவன்**-அருட்கருணை தானைய...தவவல்லியுடன் (661) ; **சடைமேற் றனித்திங்கள் வைத்த தூயவன்** - மதி நாறும் சடைதாழ (961) ; **நாறுதல்** - தோன்றுதல் - முளைத்தல். இவ்வாறு விரிவாய் இப்பொருள்களை விரிநூல் விரித்தமை கண்டுகொள்க.

926. (இ - ள்) மேன்மழ...நீர்நாடு - **மேன்மழநாடு** என்று சொல்லப்படும் நீர் வளம் மிக்க நாடு ; மாடு...வந்து ஏற - பக்கங்களில் பாவுகின்ற வாசனையுடைய அழகிய சோலைகளில் வான்மதி வந்து ஏறவும் ; சூடு...சுரும்பு ஏற - சூடடிக்கும் நெல்லரிகள் பரப்பிய பண்ணையின் வரம்புகளில் வண்டுகள் ஏறவும் ; ஈடு...இளைத்து ஏற - மேன் மேல் அடுக்கியுயர்த்த வைக்கோற் போர்களில் மேகங்கள் இளைத்து ஏறவும் ; நீடு வளத்தது - நிலை பெறும் வளத்தையுடையது.

(வி - ரை) **விரைப்போலிசோலை** - **விரை** - மணம் ; **போலிதல்** - அழகுடன் விளங்குதல். கண்ணுக்கினிய காட்சியழகு மட்டும் கொண்டு மணமில்லாத சோலைகளைப் பெருஞ்சிரமப்பட்டு வைத்துக் களிக்கும் இக்காள்மாக்கள் இதனைச் சிந்திப்பார்களாக.

**வான்மதி வந்து ஏற** - மிக உயர்ந்து வளர்ந்த சோலையின் உயர்ச்சி குறித்த உயர்வுநவிற்சியணி. மதி வானவீதியிற் செல்லுவதாயினும், இச்சோலையினது வானளாவிய உயர்ச்சியினைக் கீழிருந்து, புறத்துக் காண்போர்க்கு, அது (மதி) இதனுள் வந்து நுழைந்து மேல் ஏறுவதாகப் புலப்படும் என்பது. **ஏறுதல்** - மதி, முளைத்த இடத்தினின்றும் பொழுதேற ஏற மேற்போதல். "வெண்மதியம், சோலைதொறு நுழைந்து புறப் படும்பொழுது" (திருஞான - புரா - 8) என்ற இடத்து இக்கருத்தை மேலும் நயம்பட விரித்தது காண்க. சோலையின் மரங்களின் உயர்ச்சியை "மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்து" என்று உயர்வு நவிற்சிபடக் கூறும் திருமுருகாற்றுப் படையும், "வான மதிதடவ லுற்ற விளமந்தி, கான மூதுவேயின் கண்ணேறித்-தானங், கிருந்துயரக் கைநீட்டு மீங்கோயே நம்மேல், வருந்துயரந் தீர்ப்பான் மலை" என்ற ஈங் கோய்மலை யெழுபதும் (68) பிறவும் காண்க.

**சூடு பரப்பிய பண்ணை** - **சூடு** - நெற்கதிர்களில், தலையடியில் உதிராத மணிகளை உதிர்க்கும்பொருட்டுப் பரப்பிய நெல் அரிகள். இவற்றை மேதிகளால் மிதிப்பித்து (கடாவிடுதல் என்பர்) நெல்லுதிர்த்துச் சேர்த்தல் மரபு. (அரிகளை முதலில் அடித்த போது உதிர்ந்த நெல் தலையுதிரி எனப்படும்.) 73ல் உரைத்தவை பார்க்க.

**சூடு...சுரும்பு ஏற** - சூடு உதிர்க்கப் பரப்பிய வயல்களில், வரம்புகளில் வண்டுகள் ஏறுதலாவது சூடு அரிகள் பரப்பும்போது அங்குத் தாமரை நீலம் முதலிய கொடிகளும் மலர்களும் உள்ளமையால் அவற்றின் மொய்த்த வண்டுகள் தப்பி ஓடுதற்கு ஒதுங்கி அங்குள்ளின்றும் வரம்புகளில் ஏறுதல். "அரிதரு செந்நெற் சூட்டினடுக்கிய

அடுக்கல் சேர்ப்பார்...விரிமலர்க் கற்றை வேரி பொழிற்கிழி வெற்பு வைப்பார்" (73) என்றது காண்க.

**ஈடு பெருக்கிய போர்** - சூடு அடித்தபின் வைக்கோல்களைப் பெரும் குவியல்களாக அடுக்கிக் குவித்த போர்கள். **ஈடு** - ஆதி நீண்டுவந்த முதனிலைத் தொழிற் பெயர். **ஈடு** - இடுதலினாலே - ஒன்றன்மேல் ஒன்று குவியலாக இடப்படுதலினாலே. **போர்** - வைக்கோற்போர். **ஈடு** - ஒன்றுக்கொன்று சமமாகச் செய்த என்றும், பெருமைமிகச் செய்த என்றும் உரைகூறுவாரும், **போர்** - நெற்போர் என்பாரும் உண்டு. இவை பொருந்தாமை யறிக.

**போர்களின் மேகம் இளைத்து ஏற** என்றது தாழவரும் மேகங்கள் தங்கக் கூடிய வளவிலே மிக உயர்ந்தனவாக வைக்கோற் போர்கள் இடப்பட்டன என்க. இன்றைக்கும் மலைபோல நிமிர்ந்து காணக்கூடியபடி மிக உயரமாகிய வைக்கோற் போர்கள் இந்நாட்டின் புறங்களிலும் (இத்திருமங்கல) நகரிலும் காணலாம். **இளைத்து ஏறுதல்** - மெல்லத் தவழ்தல். இலக்கணை. "சோலைகள் மேலோடும், வெங்கதிர் தங்க வீளங்கிய மேன்மழ நன்னாடு" (931) என்றதும் அங்கு உரைப்பவையும் இங்குவைத்துச் சிந்திக்க.

**மேன்மழநாடு** - இது நாட்டின் பெயர். **மழநாடு**-மழவர் என்ற மரபினர்வாழ்வதும், அம்மரபினரால் அரசு செய்யப் பெற்றதும் ஆகிய நாடு. இது மேன் மழநாடு, கீழ் மழநாடு முதலிய பல பிரிவுகளையுடையதென் றறியப்படும். திருப்பாச்சிலாச் சிராமத்தைத் தலை நகராகக் கொண்டு **கோல்லி மழவன்** அரசு புரிந்த நாடும் மழநாட்டின் ஒரு பிரிவு. அது கீழ் மழநாடு என்பது போலும். கொல்லிமழவனும் அவனது மரபினரும் வழி வழியாகச் சிவனடிச் சார்புடைய சைவமரபு அரசர்கள் என்பது, "மறிவளருங் கையார் பாதம் பற்றியே வருங்குலத்துப் பான்மையினு னுதலினால்" (திருஞான - புரா - 312) என்றமையாலும், பிறவாற்றாலும் அறியப்படும். மழநாடு சோழ நாட்டின் ஒரு பகுதி. மழவ அரசர்களும் சோழ மன்னர்களின் கீழ் வாழ்ந்த சிற்றரசர்களில் ஒருவராகும் என்ப. கொங்கு மழநாடு என்ற ஒரு பகுதியும் உண்டு. பிற வரலாறுகள் சரித ஆராய்ச்சிக் குறிப்பிற் கண்டு கொள்க.

**நீர் நாடு** - நீர் வளம் பொருந்திய நாடு என்க. "அலைமலிந்த புனல்" என்பது முதனூல். அதனை வழிநூலுள் (திருவந்தாதி) "விரிபுனல்" என்றார். அதனையே ஆசிரியர் "நீர்" என்றனர்.

**நீடு வளத்தது** - **நீடு** - முக்காலத்துக்கும் பொதுவாகிய வினைத்தொகை. இவ்வாக்கின் பயனுக இந்நாளிலும் இந்நாடு நீடும் வளமுடையதாய் விளங்குதல் கண்கூடு.

சாராசரமெல்லாம் சந்த இசைமயமாக்கிய ஆனந்த நாயனாரது சரிதமாதலின் சந்தப்பா யாப்பினுள் ஆசிரியர் தொடக்கம் செய்கின்ற நயம் காண்க. 1

927. நீவி நிதம்ப வுழத்தியர் நெய்க்குழன் மைச்சூழல்
மேவி யுறங்குவ மென்சிறை வண்டு; விரைக்கஞ்சப்
பூவி லுறங்குவ நீள்கயல்; பூமலி தேமாவின்
காவி னறுங்குளிர் நீழலு றங்குவ கார்மேதி. உ

(இ - ள்) நீவி...வண்டு - கொய்சகம் வைத்து உடுத்திய ஆடையை மேலணிந்த அல்குலையுடைய உழத்தியர்களது நெய் பூசிய குழலின் கரிய சூழலைப் பொருந்தி மெல்லிய சிறையினையுடைய வண்டுகள் உறங்குவன; விரை...கயல் - வாசனையுடைய தாமரைப் பூவில் நீண்ட கயல் மீன்கள் உறங்குவன; பூமலி...கார் மேதி - தேமாஞ் சோலையின் நறிய மணமும் குளிர்ச்சியு முடைய நீழலில் கார்மேதி உறங்குவன.

(வி - ரை) நீவி - கொய்சகம். பெண்கள் ஆடை உடுக்கும் வகையுள் ஒன்று ; உழத்தியர் உடுக்குமியல்பு குறித்தது.

நெய்க்குழல் - நெய் - மயிர்ச்சார்த்து. மைக் கூழலில் என்க- கரிய குழலின் செறிவு.

மேன் சிறைவண்டு - நீள் கயல் - கார் மேதி என இம்மூன்றின் தன்மைகளை உணர்த்துமாறு அடைமொழிகள் புணர்த்திய நயம் காண்க.

வண்டும், கயலும், மேதியும் என்ற இவைதானும் முறையே நெய்க்குழற் கூழலிலும், விரைக் கஞ்சத்திலும், நறுந்தேமா நீழலிலும், உறங்குவ என்றதனால் இச்சரிதத்தினுள் இசையின் வாசனை யறியாத "நிற்பனவும் சரிப்பனவும் இசை மயமாய், மெய் காழும் புலன்கரண மேவிய வொன்றுயின" என்ற நிகழ்ச்சியைப் பகுத்தறிவற்ற அஃறிணையாகிய இப் பிராணிகளின் வைத்துக் கண்டு காட்டும் ஆசிரியாது தெய்வக் கண்காட்சித்திறம் கண்டு களிக்க. 867 முதலியவற்றில் உரைத்தவையும் பார்க்க.

வண்டு, குழற்சூழல் மேவி உறங்குவ ; கயல், பூவில் உறங்குவ ; மேதி, நறு நீழல் உறங்குவ எனக்கூட்டி உரைத்துக் கொள்க. வைப்பு முறை மாற்றி எழுவாய்கள் மூன்றும் பின் வைத்தோதினர், அவை உறக்கத்தின் மயங்கியதும் வாசனையின் மயங்கியதும் ஆகிய மாறுதல் அறிவிக்கும் குறிப்புப்பற்றி. 2

928. வன்னிலை மள்ள ருகைப்ப வெழுந்த மரக்கோவை
பன்முறை வந்தெழு மோசை பயின்ற முழக்கத்தால்
அன்ன மருங்குறை தண்டுறை வாவி யதன்பாலைக்
கன்ன லடும்புகை யான்முகில் செய்வ கருப்பாலை. ஈ

(இ - ள்) கருப்பாலை - கரும்பு ஆலைகள் ; வன்னிலை...முழக்கத்தால் - வலிமையினால் மள்ளர்கள் செலுத்த எழுந்த இணைமரங்கள் பல முறையும் சுற்றி வருதலால் எழும் ஓசை பயின்ற முழக்கத்தாலும் ; அன்னம்...புகையால் - பக்கங்களில் அன்னங்கள் தங்குகின்ற குளிர்ந்த துறையையுடைய வாவிகளின் பக்கத்தில் கருப்பஞ்சாறு காய்ச்சுகின்ற புகையினாலும் ; முகில் செய்வ - முகிலின் காட்சிபோன்ற தன்மையைக் காட்டுவன.

(வி - ரை) வன்னிலை - வலிய நிலை. மள்ளர் வன்னிலையால் உகைப்ப என்க. வலிய நிலையாவது வலிய கரும்பினை அடுதற்குரிய வன்மை. நிலை - நிலையினால். வன்னிலையான மள்ளர் என்று கூட்டி உரைத்தலுமொன்று.

மராக்கோவை - கரும்பு அடுதலுக்காக - சாறு பிழிதலுக்காக - மரங்களை இணைத்துச் சுற்றிடும் ஆலையமைப்பு.

பன்முறை வந்து எழும் ஓசை - பல முறையும் ஆலையைச் சுற்றிவரச் செய்தலால் உளதாம் ஓசை. முழக்கம் - பேரோசை. வந்து - வருதலால். ஆலையாக இணைத்த மரங்கள் சுற்றுதலாலும், அவை வலிய கரும்பினை உடைத்துச் சாறுபிழிதலின் உண்டாகும் வலிய முயற்சியாலும் எழும் ஓசை பெரிதாம் என்க. "கருஞ்சகடமிளகவளர் கரும்பு" என்ற ஆருடைய பிள்ளையாரது திருக்கழுமலத் தேவாரத்தால் ஆலைக்கும் வலியனவாயுள்ள கரும்புகளின் நிலை குறிக்கப்பட்டது காண்க.

ஓசை பயின்ற முழக்கம் - பல ஓசைகளும் கூடியதனால் முழக்கமாயிற்று. பயின்ற - பல ஒன்று கூடுதல் குறித்தது. நீங்காத என்றலுமாம்.

முழக்கத்தால் - புகையால் - வாவியதன் பால் - கருப்பாலை - முகில் செய்வ எனக் கூட்டி முடிக்க.

முழக்கத்தாலும் புகையாலும் முகில்செய்வ என்பதாம். எண்ணும்மைகள் தொக்கன. செய்வ - உவமவருபு. உருவும் வினையும் பற்றி வந்த உவமை.

**அன்னம் மருங்கு உறை** - என்பது வாவியின் சிறப்பு. அன்னங்களின் கூட்டம் வாவியினின்று மேற்கிளம்பும் வெண்மேகம் ஆகவும், **புகை** - சூல் கொண்ட மேகம் ஆகவும் உருவகப்படுத்திக் கொள்க.

**கன்னல் அடும்புகை** - கருப்பஞ் சாற்றைக் காய்ச்சுதலால் எழும்புகை. **கன்னல்** இங்கு அதன் சாற்றுக்கு ஆயிற்று. ஆகுபெயர்.

**கருப்பாலை** - கரும்பு அடுகின்ற ஆலை. கருப்பாலை என்பது மரபு வழக்கு.

கூடு பரப்பிய பண்ணைகள் உள்ளன (925); அவற்றின் பக்கம் வயல்களில் உழத்தியர் உழவு தொழில் பலவும் செய்தனர்; பண்ணைகளின் பக்கத்தில் மாஞ்சோலைகளும் வாவிகளும் உள்ளன (926); அச்சோலைகளின் பக்கம் கரும்புப் பயிர் உண்டு; கரும்பு ஆலைகளின் முழக்கமும் புகையும் அவ்வாவிகளின் பக்கத்தில் மேகங்கள் கூடியன போன்ற தோற்றம் விளைத்தன (928) என இம்மூன்று பாட்டுக்களையும் தொடர்த்து பொருள்கொள்க. நீர்நிலையின் பக்கம் மேகம் கூடுமியல்பும் குறிக்க. 3

929. பொங்கிய மாநதி நீடலை யுந்து புனற்சங்கந்
துங்க விலைக்கத லிப்புதன் மீது தொடக்கிப்போய்த்
தங்கிய பாசடை சூழ்கொடி யூடு தவழ்ந்தேறிப்
பைங்கமு கின்றலை முத்த முதிர்க்குவ பாளையென: ச

(இ - ள்) பொங்கிய...சங்கம் - பெருகிய பெருநதியின் நீண்ட அலைப்புனல் உந்திய சங்குகள்; துங்க...தொடக்கிப் போய் - பெரிய இலைகளையுடைய வாழைப் புதல்களின் மேலே தொடர்ந்து சென்று; தங்கிய...தவழ்ந்து - அந்த வாழையின் பசிய இலைகளைச் சுற்றிய கொடிகளின் வழியே தவழ்ந்து; பைங்கமுகின்தலை - பசிய கமுகின் உச்சியில்; ஏறி - ஏறிச் சேர்ந்து அங்கு; பாளை என முத்தம் உதிர்க்குவ - அவற்றின் பாளைகள் பூ உதிர்ப்பனபோல் முத்துக்களைச் சொரிவன.

(வி - ரை) அலைப்புனல் உந்துசங்கம் - கதலிப்புதல்மீது தொடக்கிப்போய் - கொடியூடு தவழ்ந்து - கமுகின்றலை ஏறிப் - பாளை என முத்தம் உதிர்க்குவ எனத் தொடர்புபடுத்தி வினைமுடிபும் பொருளும் உரைத்துக்கொள்க.

**பொங்கிய மாநதி நீடலை** - நதி பெரிது; அது பெருகிற்று; பெருக்கினால் நீண்ட அலைகள் உண்டாயின; அலைகள் சங்குகளை உந்தின என்க.

**பொங்குதல்** - வெள்ளத்தாற் பெருக்கெடுத்தல். பெருநதியில் வெள்ளம் வந்த போது நீர் மேல்உயர்ந்து இருகரையிலும் அருகில் உள்ள பயிர்களை நீரில் மூழ்கும்படி செய்யும். அப்போது நீரில் மிதந்துவரும் பொருள்கள் அப்பயிர்கள் - மரங்கள் - முதலியவற்றின் மேலே தங்குவது இயல்பாம்.

**நீடலை அலைப்புனல் உந்து சங்கம்** "கடலேறித் திரைமோதிக் காவிரியி னுடன் வந்து கங்குல் வைகித், திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங் கீன்றலைக்குந் திருவையாறே" (மேகரா - குறி - 2) என்ற ஆளுடைபிள்ளையார் தேவாரங் காண்க.

**துங்கம்** - பெரிது. "இத்துங்க வேழம்" (590). **துங்கஇலை** - பெரிய நீண்ட இலை. வாழைமடல் ஏனை இலைகளிலும் நீண்டு அகன்று பெருத்திருப்பது குறித்தது.

**கதலிப்புதல்** - செறிந்து புதலாக முளைத்த வாழைப்பயிர். ஆற்றின் கரைகளில் உரமிகுதியாலும், நீர்வளத்தாலும், பறிப்பாரின்மையாலும் வாழைகள் செழித்து வளருமியல்பு குறித்தது.

**தொடக்கி** - தொடர்ந்து. **தங்கிய பாசடை** - அங்குத் தங்கிய பசியஇலை. **பாசடை** - வெற்றிலைக் கொடி என்றலுமாம்.

**சூழ்கொடி ஊடு தவழ்ந்து** வாழைகளின் மேலும் அங்கிருந்து தொடர்ந்து பக்கத்திலுள்ள கமுகுகளின் மேலும் சூழ்ந்து படர்ந்த கொடிகளிடையே **ஊர்ந்து**. இவ்வாறு

கொடிகள் மரங்களின்மீதுப் படர்வது இயல்பு. வாழைப்பயிரினுடன் கமுகும் வைத்தலுமுண்டு.

**பைங்கமுகின் தலை ஏறி** என்க. **தலை**- உச்சி. **தலை** - ஏழனுருபாகக்கொண்டு கமுகினிடத்து என்றுரைப்பினுமாம். **பைங்கமுகு** - பசிய கமுகு. **பாளை என முத்தம் உதிர்க்குவ** - பாளைகளின் பூக்கள் முத்துப் போன்றன என்பது உவமம். அதனை மாற்றி முத்துக்கள் பாளைகளின் பூக்கள்போல உதிர்க்கப்பட்டன என்பது உவமை நயம் மிகுதி படக்கூறியதாம். நிலவளம் நீர்வளமிகுதி குறித்த உவமச்சிறப்பு.

மேலே நெல்லும் (925), மாவும் (926), கரும்பும் (927) கூறிய ஆசிரியர், இப்பாட்டால் வாழையும் கமுகும் கூறும் வைப்புமுறையும் அமைதியும் அழகும் காண்க. கதலிப்புதலும், பாசடைக் கொடியும், பைங்கமுகும் என எல்லாம் கூடிய மிக்க பசுமையும் புதுமையுமாகிய இனிய காட்சியின் அழகும் குறிக்கப்பட்டது.

இந்நான்கு பாட்டாலும் மேன்மழ நாடெனும் நீர் நாடு (925) என்பதன் மிக்க மருத நிலச் சிறப்புக்கூறினார். சோலை - பண்ணை - நெல்-மா - கரும்பு - வாழை - கமுகு இவை மருதநிலக் கருப்பொருள்கள் ; உழவு - தொழில் ; உழத்தியர் மள்ளர் - அந்நில மக்கள் ; நெல் - கரும்பு - வாழை - மா - அதன் உணாவகை ; என்றிவ்வாறு பலவும் காண அணிபெறக் கோத்த அமைதி காண்க.

இனி, மேல்வரும் இரண்டு பாட்டுக்களால் இம்மருதத்தினை அடுத்துத் திணை மயக்கத்தாற் சேர்ந்துள்ளதும், இந்நாளிலும் காணத்தக்கதாய் விளங்குவதும், இப்புராண முடைய ஆனாயநாயனாரது சரிதத் தொடர்பும் உரிமையும் உடையதுமாகிய முல்லையின் சிறப்பும் உடன் கூறுகின்ற வகையினால் நாட்டுச் சிறப்பினைக் காட்டி அதன் மேல் நகரச்சிறப்பு உரைத்தல் கண்டுகொள்க.

**உதுப்பன**—என்பதும் பாடம். 4

930. அல்லி மலர்ப்பழ னத்தய னாகிள வானீனும்
ஒல்லை முழுப்பை யுகைப்பி னுழக்கு குழக்கன்று
கொல்லை மடக்குல மான்மறி யோடு குதித்தோடும்
மல்கு வளத்தது முல்லை யுடுத்த மருங்கோர்பால். ரு

(இ - ள்) அல்லி...அயல் - அகவிதழ் நிறைந்த பூக்களையுடைய வயல்களின் அருகில் ; ஓர்பால் - ஒரு பக்கத்தில் ; முல்லை உடுத்த மருங்கு - முல்லைப்பகுதி சூழ்ந்த பக்கநிலம் ; நாகுஇள ஆன் ஈனும் - மிக்க இளமையையுடைய பசு ஈன்ற ; ஒல்லை... உழக்கு - உகைத்தலினால் (முல்லைநிலத்து) மரஞ்செடிகளின் தலையிடத்தை விரைவில் உழக்குகின்ற ; குழக்கன்று - மிக இளையகன்று ; கொல்லை...வளத்தது - கொல்லையில் உள்ள அழகிய கூட்டமாகிய மான் கன்றுகளுடன் கூடிக் குதித்து ஓடுகின்ற நிறைந்த வளத்தையுடையது.

(வி - ரை) அல்லிமலர் - அல்லி - அகவிதழ். அல்லிப் பூ எனினுமமையும்.

**பழனத்தயல் ஓர்பால் முல்லை உடுத்த மருங்கு** என்று கூட்டுக. இது மருதமும் முல்லையும் கூடிய நிலப்பகுதி கூறியதாம். இதனை முல்லையும் மருதமும் மயங்கிய திணைமயக்கம் என்பது தமிழ் இலக்கணமரபு. திணைமயக்கமாவது ஒருதிணைக்குரிய பொருளும் ஒழுக்கமும் அடுத்த திணைப்பொருள் ஒழுக்கங்களுடன் விரவிக்கூடி நிகழ்வது என்ப. இவ்வாறு தமிழிலக்கணம் வகுத்த நானிலப்பகுதிகளும் அவை விரவிய திணைமயக்கமும் வகுத்து ஆசிரியர் காட்டிய இலக்கிய அமைதியினைத் திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணத்தினுள் (6—47) விரிவாகக் கண்டுகொள்க. இப்பாட்டினும் மேல்வரும் பாட்டினும் கூறிய முல்லையும் மருதமும் மயங்கிய திணைமயக்க அமைதி அப்புராணத்தினுள் " இயலு மன்னமுந் தோகையு மெதிரெதிர் பயில, **வயலு முல்லையு மியைவன** பலவுள மருங்கு " (45) என்ற விடத்துக்காண்க.

**நாகு** - இளையபசு - **நாகு இள ஆன்** - மிக இளமை குறித்தது. அவ்வாறே குழக்கன்று மிக்க இளமை குறித்தது. " பான்மறை நாகு " (935) என்றது பார்க்க.

முல்லை உடுத்த மருங்கு ஓர்பால் ஆன் ஈனும் கன்று மான்மறியோடு குதித் தோடும் வளத்தது என்று கூட்டிமுடிக்க.

**கொல்லை மான்மறி** - புனக்கொல்லையில் வளர்க்கும் மான்கன்று. புனங்களில் வந்து மேயும் மான் கூட்டத்தில் உள்ள கன்று என்றலுமாம். **மடக்குலமான்** - அழகிய கூட்டமாகிய மான்கள். **மடமை** - அழகு குறித்தது. இளமை என்றும், மருட்சியுடைமை என்றும் உரைப்பினுமமையும். **மான்** - முல்லைக் கருப்பொருளாகிய மா. " நீர்நசைஇ வேட்கையின் மானின்று விளக்கும் கானமும் " (சிலப் - காடுகாண் - 78) என்பதனுன் முல்லைக்கருப்பொருளாகிய மாக் கூறினர் என்ற அடியார்க்கு நல்லார் உரை (பதிகம்) காண்க. **ஆன்** - மருதக்கருப்பொருள். ஆன்கன்று முல்லை முழுப்பை உகைத்தலாலும், மான் மறியோடு குதித்தலாலும் இந்த இருதிணையும் மயங்கிய ஒழுக்கம் கூறியபடி. பின்னர், ஆனிரை மேய்க்கும் தொழில் பூண்ட முல்லைநில மகளுராகிய ஆயர் " நீர்நாடு " எனப்பட்ட மழநாட்டுப் பகுதியில் நிரைமேய்த்துக் குழலூதிப் பேறுபெற்ற வரலாற்றினைத் திணைமயக்கம் காட்டுமுகத்தால், சரிதத் தொடக்கத்தில் முற்குறிப்புப் பெற எடுத்துக் கூறினர் என்பதாம்.

ஆன்கன்று மான்மறியோடு கூடிக் குதித்தோடு மியல்பு இவ்விரண்டும், உயிர் வகுப்பில், கவர் குளம்புடைய �ரினத்தைச் சேர்ந்தவை என உயிர்ப்பகுப்புக் கூறும் சாத்திரிகள் கண்ட உண்மையினை விளக்குவதாகும்.

**முழப்பை உகைப்பின் உழக்கு குழக்கன்று** - **முழப்பு** - முகடு. உச்சிப்பரப்பு என்ற பொருளில் அருகி வழங்குவதோர் சொல். இது **மொழப்பு** என்றும் வரும் ; இங்கு முல்லைச் சோலையின் மேற்பரப்புக் குறித்தது. முல்லை முழுப்பை உகைப்பின் ஒல்லை உழக்கு குழக்கன்று என்று கூட்டிக்கொள்க. " மணம்விரி தருதே மாம்பொழில் முழுப்பின் மழைதவழ் " (கோயில் - 1) " சடையும் பிறைதவழ் முழுப்பும் " (மெ. 9) என்ற கருவூர்த்தேவர் திருவிசைப்பாக் காண்க. சோலையின் முழுப்பைக் கன்று உகைப் பின் உழக்குதலாவது துள்ளிவிளையாடும் ஆன் கன்று சோலை மரங்களின் அடியில் உராய்த்தும் மோதியும் முட்டியும் அசைத்தலால் அவற்றின் மேற்பாகம் அசைந்துபடு தல். **உகைத்தல்** - அசைத்தல். **உழக்குதல்** - தலைதடுமாறச் செய்தல்.

**முழப்பை** - கருவின் முழுப்பையினை என்றுகொண்டு, ஈன்று வெளிவருவதன் முன்னே தாயின் கருப்பையை உண்ணின்று உகைத்து உழக்கின கன்று, பிறந்தவுடன் சிறிதுபோதில் அங்குள்ள மான் கன்றுகளோடு குதித்தோடுகின்ற தென்றுரைப்பா ரும், **முழப்பு** - புதல் என்று கொண்டு சிறுகானின் புதல்களை ஆன்கன்று உகைத் தழப்புவன என்றுரைப்பாரு முண்டு.

**முல்லை உடுத்த மருங்கு** - முல்லை நிலப்பகுதி சூழ்ந்த பக்க இடம். **உடுத்தல்** - சூழ்தல்.

ஆனிரை காக்கும் ஆயர நாயனாரது சரிதத்தொடர்பு நோக்கி ஆன்கன்றினை முதலிற் கூறினர். 5

**மடக்குறு**—என்பதும் பாடம்.

931. கண்மலர் காவிகள் பாய விருப்பன கார்முல்லைத்
தண்ணகை வெண்முகை மேவு சுரும்பு; தடஞ்சாலிப்
பண்ணை யெழுங்கயல் பாய விருப்பன காயாவின்
வண்ண நறுஞ்சினை மேவிய வன்சிறை வண்டானம். சு

(இ - ள்) கார்முல்லை...சுரும்பு - காரில் மலரும் முல்லையின் குளிர்ந்த பற்போன்ற வெள்ளிய பூக்களிலுள்ள வண்டுகள் ; கண்மலர்...இருப்பன - கண்போல மலரும் கருங்

குவளை மலர்களிற் பாய உள்ளன ; காயாவின்...வண்டானம் - காயாமரத்தின் அழகிய செழித்த கிளைகளிலுள்ள காரைகள் ; தடஞ்சாலி.....இருப்பன - பெரிய நெற் பயிரையுடைய பண்ணைகளினின்று மேலெழுந்து துள்ளுகின்ற கயல்களின்மீது பாய இருப்பன.

(வி - ரை) **கண்மலர் காவி** - கண்போல மலரும் காவி என்றும், கள் மிகுதி யாக மலர்கின்ற காவி என்றும் இரட்டுற உரைக்க நின்றது. **முல்லைப் பூவிலுள்ள** தேனினும், **காவிகளிற்,** தேன், மிக்கு இருப்பதனால் முல்லையைவிட்டுக் காவிகளில் சுரும்பு **பாய்ந்தன** என்ற குறிப்பும் காண்க. பல்லவிடக் கண் சிறந்த உறுப்பாதலின் **நகை** போன்ற முல்லை **முகையினை** விட்டுக் **கண்**போன்ற **காவி**களில் பாயவிருப்பன எனவும், கண்ணுக்கு உவமையாக விளங்கும் வண்டினங்கள் தமக்கு மாறுகக் காவிகளும் கண் போல மலர்தலாற் பகைகொண்டு அவற்றின்மேற் பாய்ந்தன என்றும் தற்குறிப் பேற்றம் பெறக் கூறிய நயமும் காண்க.

**பாய்தல்** - ஓரிடம் நோக்கி விரைவாக ஓடுதல் - தாவுதல் - பறத்தல்.

**பாய இருப்பன** - சுரும்பு காவிகளிற்பாய இருப்பன; வண்டானம் கயல்கள் பாய (பாய்தலை நோக்கி - அல்லது பாய்தலால் அவற்றைத் தின்று) இருப்பன என்று, **பாய இருப்பன்** என்றதொரு சொற்றொடரை ஈரிடத்தும் வெவ்வேறு பொருள்படச் சிலேடை என்னும் அணி பெறவைத்த தமிழ்ச்சுவை காண்க. இவ்வாறே மூர்த்தி நாயனார் புராணத்துள் 2 - 3 - 5 - 6 பாட்டுக்களில் வரும் தமிழ்ச் சுவையும் காண்க.

**கண் மலர் காவி**-"காவியிருங் கருங்குவளை கருநெய்தல் கண்காட்டுங் கழுமலமே" (மேகரா - குறி 1) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரமும், " கரும்பருகே கருங் குவளை கண்வளரும் கழனிக் கமலங்கள் முகமலருங் கலயநல்லூர் காணே" (தக்காரா - 1) என்ற ஆளுடைய நம்பிகள் தேவாரமும், " எற்படக் **கண் போன்** மலர்ந்த காமர் சுனைமல, ரஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்கும்" என்ற திருமுருகாற்றுப்படையும், இவைபோல்வன பிறவும் காண்க. மாலையில் மலரும் முல்லையில் மொய்த்துத் தேனுண்ட சுரும்பு, காலையுணவு வேண்டி எற்பட மலரும் காவிகளில் பாய்தலை நோக்கி இருப்பன என்ற உட்குறிப்பும் காண்க. (எற்பாடு-காலை; படுதல் - உண்டாதல்.)

**தண்ணகை வெண் முகை. நகை** - பல். பல்லுக்குத் தண்மை புன்னகை காட்டு தல். நகை போன்ற என்க. முல்லை **முகை**க்கு வெண்மையும் தண்மையும் அலரும் பருவத்தே உளதாவதாம். முகை - அலரும் பருவத்து அரும்பு குறித்தது. நகை - ஒளி என்பாருமுண்டு.

**காயா** - கருநீல நிறமுடைய சிறு கொத்துப் பூக்களைப் பூக்கும் ஒருவகை மரம். இது முல்லையைச் சார்ந்த மரமாம். அதன் கருப்பொருள்களுள் ஒன்று. இதனால் முல்லைத்திணையும், **வண்டானம்** - தாராவும் - நீர்க்கோழியும் போன்று காரையும் மரு தக் கருப்பொருளாதலின், அதனால் மருதத்திணையும் குறித்த திணைமயக்கம். **காயா** - மலர்வாவிக் கரையில் மூலைத்தெழுந்தது.

**வண்ணம்** - பருமையும், **நறுமை** - செழிப்பும் குறித்தன.

**வண்டானம் கயல்பாய இருப்பன்** என்றது "ஓடு மீன் ஓடி உறுமீன் வருமளவும், வாடி யிருக்குமாம் கொக்கு " என்றபடி கயல் துள்ளி எழும் சமயம் நோக்கி அவற்றின் மீது பாய்ந்து கொத்தித் தின்பதற்குக் காத்திருக்கும் காரைகளின் இயற்கை குறித்தது. இக்கருத்து " கூராரல் வாய்நிறையக் கொண்டயலே கோட்டகத்தில், தாராமல் காக் கூரிற் றுன்றேறுன்றி மாடமே" (சீகா - 2) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரத்தி னுள் விளங்குதல் காண்க.

**எழும் கயல்** - கயல்கள் துள்ளிக் குதித்து நீர்மேல் எழும் இயல்புடையன. " குதித்து நீர்மேல் விழுந்த கயல் " (மேகரா - குறி - திருவீழி - 3) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரமும் பிறவும் காண்க.

காவியும் கயலும் மருதப் பொருள்கள். அவை தத்த மிடத்தே இருப்பன; முல்லைச் சுரும்பும் காயாவின் வண்டானமும் தத்தம் இடத்தைவிட்டு அயல் வயலிற் பாய்வன என்பார் பாய இருப்பன என்றார். இதனால் மருதம் பெரும்பான்மையும் முல்லை சிறு பான்மையும் உடையது இக்காட்டின் தன்மையாம் என்று காட்டியதன்றி, " பழனத் தயல் முல்லை உடுத்த மருங்கோர் பால் " என முன்பாட்டிற் கூறிய முல்லையும் மருத மும் கூடிய திணைமயக்கத்தினை விளக்கிய நயமும் காண்க.

மேன்மழநாடு முற்றும் நீர் நாடாகிய சோழநாட்டின் ஒரு சிறு பகுதியாம் என்ற அமைப்பினை விளக்கிய படியும் காண்க. 6

அஞ்சிறை—என்பதும் பாடம்.

932. பொங்கரில் வண்டு புறம்பலை சோலைகண் மேலோடும்
வெங்கதிர் தங்க விளங்கிய மேன்மழ நன்னுடாம்
அங்கது மண்ணி னருங்கல மாக, வதற்கேயோர்
மங்கல மானது மங்கல மாகிய வாழ்மூ தூர். எ

(இ - ள்) பொங்கரில்...சோலைகள் - மரக்கொம்பின் புறத்து வண்டுகள் அலைதற் கிடமாகிய சோலைகளில்; மேலோடும்...விளங்கிய - மேலே வான வீதியில் ஓடுகின்ற ஞாயிற்றின் வெப்பம் பொருந்திய கதிர்கள் தங்கும்படி விளங்கிய; மேன்மழ...ஆக - ன்மையுடைய மேன் மழ நாடு என்கின்ற அக்காடு இம்மண்ணுலகத்திற்கு அரிய அணியே ஆக; அதற்கே...வாழ்மூதூர் - வாழ்வு தருகின்ற திருமங்கலம் என்கின்ற பெரிய பழைய ஊரானது அக்காட்டினுக்கு ஒப்பற்ற மங்கலமாகியதாம்.

(வி - ரை) பொங்கர் - மரக்கிளைகள். பொங்கரில் புறம்பு வண்டு அலை என்க. வண்டுகள் மரக்கிளைகளின் புறத்தே அலைதலாவது கிளைகளிற் பூத்த பூக்களிற் றேன் உண்ணும் பொருட்டு மேற்புறத்திற் சுற்றிக் கொண்டிருத்தல்.

அலை சோலைகள் மேல் - அலைதற்கிடமாகிய சோலைகளின் மேலே. மேல் - ழனுருபு எனக் கொண்டு சோலைகளினிடத்து என்றலுமாம்.

கதிர் தங்கச் சோலைகள் விளங்கிய நாடு என்க. சோலைகளின் வெங்கதிர் தங்குதலாவது மாங்களின் செறிவினால் சோலைகள் பகலிலும் இருண்டிருத்தல். ஞாயிற் றின் கதிர்கள் உள்ளே நுழைந்து தரையிற்றாக்க முடியாதபடி சோலைகளின் மேற் புறத்தே தங்கிவிட்டன என்பது குறிப்பு. " இருள்படப் பொதுளிய ", " மந்தியு மறியா ", என்ற திருமுருகாற்றுப் படையும் " வெயினுழை பறியா " முதலிய வழக்குக்களும் காண்க. வெங்கதிர் என்றதனால் ஞாயிற்றின் கதிர்கள் குறிக்கப்பட்டன.

மேன்மழ நன்னுடாம் அங்கு அது - மேன்மழ நாடு - 925 பார்க்க - நன்(மை) இடைப்பிறவால். " சேதிநன்னுடு " - 467 என்ற விடத்துரைத்தவை பார்க்க.

அங்கு அது - அது - முன்னறிசுட்டு.

மண்ணின் அருங்கலமாக அதற்கே ஓர் மங்கலம் ஆனது - " மங்கல மென்ப மனைமாட்சி மற்றத, னன்கல நன்மக்கட் பேறு " என்ற குறளிற் காட்டியது போல இங்கு காட்டினையும் நகரத்தினையும் அருங்கலமும் மங்கலமுமாக எடுத்துக் காட்டினார். கலனில்லாத போதிலும் மங்கலம் சிறக்கும். கலன்கள் (அணிகள்) அரியனவாயினும் மங்கலமில்லாத போது சிறப்புப்பெரா. ஆயின் மக்கட்பேறில்லாத போதினும் மனை மாட்சி சிறக்கும்; ஆதலின் மனைமாட்சியினை மங்கலமாகவும் மக்கட்பேற்றை அதன் நன்கலனாகவும் திருக்குறள் எடுத்துக் காட்டிற்று.

ஆனால், மேன் மழநாடு மேற்கூறியபடி வளம் பெரிதுடைமையால் மண்ணுக் கருங்கலமேயாயினும் அணிகலனுய் நிற்பதன்றி மங்கலமாகிய் சிறப்புடையதாகாது என்று குறிக்க அதனை அருங்கலம் என்றும், அவ்வருங் கலனுக்கு மங்கலந்தருவது

அதன் நகரமாகிய **மங்கலமேயா** மென்றும் ஆசிரியர் எடுத்துக்காட்டிய அழகும் உள்ளுறையும் காண்க. "உலகுக் கெல்லா மங்க லந்தரு மழவிளம் போதகம்" என்று ஆளுடைய பிள்ளையாரைக் கூறியதும் காண்க.

**அருங்கல மாதல்** - நாடுகள் பலவற்றுள்ளும் மேற் கூறியவாறு வளமும் சிறப்பு முடைமையினால் உலகுக்கணியாய் விளங்குதல்.

**மங்கலமாதல்** உலகச் சார்பாகிய வளங்கள் எல்லாமிருப்பினும் சிவச்சார்பாகிய செல்வமில்லாத போது அவை மங்கலம் பெறா வாதலின், அந்த மங்கலமாகிய சிவச்சார் புடையதாகச் செய்தல். "மற்றவை பெற்ற நீடுபயன்" (441), "வந்த செல்வத்தின் வளத்தினால் வருபயன்" (504), "மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்" (திருஞான புரா-1087) முதலியவை பார்க்க. **மங்கலநகர்** இந்நாட்டுக்கும் உலகுக்கும் மங்கலந்தரும் சிவச்சார்பு பெறுவித்தல், பின்னர் "வையந்தன் னையு நிறைத்து வானுந்தன் வயமாக்கி" (961) என்றது முதலிய சரித நிகழ்ச்சிகளாலறிக. சிவம் - மங்கலம் என்ற பொருளுந் தருவ தென்ப.

**மங்கல மாகிய வாழ்முதூர் - வாழ்** - வாழ்வுதரும். வாழ்விக்கும் எனப் பிறவினைப் பொருளில் வந்தது. சிவவாழ்வுடைய என்றலுமாம். **முதூர்** - பழமையாகிய ஊர். இது இப்போதும் இப்பெயரால் வழங்கப்பெறுகின்றது. இதனைப் "புனன் **மங்கை**" என்று முதனூல் (திருத்தொண்டத் தொகை) பேசிய அழகும் அருமைப்பாடும் காண்க. தலவிசேடம் பார்க்க. 7

933. ஒப்பில் பெருங்குடி நீடிய தன்மையி லோவாமே
தப்பில் வளங்கள் பெருக்கி யறம்புரி சால்போடுஞ்
செப்ப வுயர்ந்த சிறப்பின் மலிந்தது சீர்மேவும்
அப்பதி மன்னிய வாயர் குலத்தவ ரானாயர். அ

(இ - ள்) வெளிப்படை. (அம்மூதூர்) ஒப்பற்ற பெருங்குடிகள் நெடுங்காலமாக நீடி வருகின்ற தன்மையால் ஒருகாலத்தும் நீங்காதே, தவறுதலில்லாத வளங்கள் யாவும் பெருகச்செய்து அறங்களைச் செய்கின்ற சால்புடனே எடுத்துக்காட்டாகச் சொல்லும் படி உயர்வுடைய சிறப்பினால் மிகுந்ததாகும். அவ்வாறு சீர்பொருந்திய அந்தப் பதி யில் நிலைத்த **ஆயர்குலத்தினைச்** சார்ந்தவர் **ஆனாயர்** என்ற பெரியார்.

(வி - ரை) **ஓவாமே - ஓவுதல்** - ஒழிதல். "ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவி ரொளி" (திருமுருகாற்றுப்படை). **தப்பில் வளங்கள்** - ஒருவகையாலுங்குறைவில்லாத வளங்கள். **ஓவாமே** என்றது இடையறாது பெருகுதல் குறித்தது. **தப்பில்** என்றத னால் பிழைபடா நெறியில் ஈட்டப்பட்டமையும், **பெருக்கி** என்றதனால் மேன்மேலும் பெருக ஈட்டுதலும் குறிக்கப்பட்டன.

**அறம்புரி சால்பு** - அறவழியிற் றேடிய செல்வத்தைப் பெருக்கியதனால் உள தாகும் சால்பு நிறைந்திருத்தல். "நின் பொருள்க ளெல்லாம், அறத்தாற்றி னீட் டப் பட்ட வனையவை புனித மான திறத்தாலே" (திருவாதவூ - உபதே - படலம் - ) என்ற திருவிளையாடற் புராணக் கருத்துக் காண்க. பொருள்களை ஈட்டுதலும், ஈட் டப்பட்டவற்றைச் செலவிடலும் அறத்தாற்றின் நிகழ்ந்தன என்பதாம். **சால்பு** - 885 பார்க்க. **செப்ப** - உயர்வாகச் சுட்டிக்காட்ட - எடுத்துச்சொல்ல.

**ஆயர் குலத்தவர் ஆனாயர்** - ஆன்மேய்க்கும் ஆயர்குலத்தவராதலின் ஆனாயர் எனப் பெற்றார் என்ற குறிப்புப்பட இவ்வாறு கூறினார். **ஆனாயர்** - காரணப் பெயர். இவரது இயற்பெயர் விளங்கவில்லை.

**ஆயர்குலம்** - பழந்தமிழக்குடிகளுட் சேர்ந்த இடையர் குலம். இது வேறு; யாதவர் குலம் வேறு. தொல்காப்பியம் சிலப்பதிகாரம் முதலிய மிகப் பழந்தமிழ் நூல்களிலும் ஆயர்குலமும் தொழிலும் பிறவும் பேசப்படும். இவர்கள் முல்லை நில

மக்கள். யதுஎன்ற அரசன் வழிவந்த சூரியகுலத்து கூத்திரியர்கள் யாதவர் எனப் படுவர். கண்ணன் அம்மரபில் வந்தமையால் யாதவன் எனப்படுவன். அவன் இடைச் சேரியில் வளர்ந்து பயின்றமையால் அத்தொடர்புபற்றி இடையர்கள் யாதவர் என்று மயங்கி யறியப்படுவர் என்ப.

மேவிய—என்பதும் பாடம். 8

934. ஆயர் குலத்தை விளக்கிட வந்துத யஞ்செய்தார் ;
தூய சுடர்த்திரு நீறு விரும்பு தொழும்புள்ளார் ;
வாயினின் மெய்யின் வழுத்து மனத்தின் வினைப்பாலிற்
பேயுட னாடி பிரானடி யல்லது பேணுதார். கூ

(இ - ள்) வெளிப்படை. (அவர்) ஆயர்குலத்தை விளக்கம் செய்திட இவ்வுலகில் வந்து அவதரித்தவர் ; தூயஒளி வீசுகின்ற திருநீற்றினை விரும்பும் திருத்தொண்டில் நின்றவர் ; வாக்கினலும், உண்மைபெற வழுத்தும் மனத்தினலும், செயல் வகையினலும் பேயோடாடுகின்ற சிவபெருமான் திருவடிகளே யல்லது வேறொன்றினையும் பேணுதவர்.

(வி - ரை) குலத்தை விளக்கிட - குலத்தை விளக்குதலாவது சிவ வழிப்பாட்டில் நிறுத்தி வழிகாட்டுதல். இவர் அவதரித்த குலம் என்று இவரால் குலம் உலகில் விளங்கப் பெறுதல் என்றலுமாம். 872 ல் உரைத்தவை பார்க்க. திருத்தொண்டத் தொகையினுள் திருமூலரும் இக்காயனாரும் ஆகிய இருவரே ஆயர் குலத்தவராவர். அவருள் சிவ யோகியாரான திருமூலர், இறந்துபோய்க்கிடந்த மூலன்என்ற இடையனது உடலினுட் புகுந்து மூலராய் விளங்கியவர். எனவே, இக்காயனார் ஒருவரே ஆயர் குலத்திற்றோன் றியபடி சிவனடியாராய் விளங்கி அக்கிலையே சிவலோகத்திலும் வாழ்பவர். ஆதலின் இவ்வாறு சிறப்பித்தார்.

**உதயம் செய்தார்** - விளக்குதல் ஞாயிறு - மதி முதலிய பேரொளிப் பொருள் களின் செயல். விளக்கிட என்றதற்கேற்ப **உதயம் செய்தார்** என்றார்.

**தூய சுடர்த் திருநீறு** - ஏனைய ஒளிப்பொருள்களிற் காணப்படாத **தூய்மை**யுடன் விளங்கும் **சுடர்**. இச்சுடர் தூய்மைசெய்வது என்பதுமாம். " சுத்தம தாவது நீறு ", " புண்ணிய மாவது நீறு " என்ற தேவாரத் திருவாக்குக்களும், " வெண்ணீற்றொளி போற்றி நின்று " (திருஞான புரா - 216) என்ற மாபுராணமும் காண்க.

**திருநீறு விரும்பு தொழும்பு** - திருநீறு வீடு தரும் சாதனம் என்று கொண்டு அதற்குத் தொண்டு புரிதல். " நீற்றினை நிறையப் பூ " சுதலும், நீறு பூசினரைக் காணில் காதல் கொள்ளுதல் - உள்ள முருகுதல் - போற்றுதல் - அவர் வேண்டுவன செய்தல் முதலியவையும் திருநீற்றுத்தொண்டு எனப்படும். சிவபெருமான் திருத்தொண்டாவன திருநீற்றுத் தொண்டேயாம் என்றலும் பொருந்தும்.

**வாயினின்...வினைப்பாலின்**-வாக்கு, மனம், காயம் என்ற மூன்றலும். இன்னுருபு கள் மூன்றும் கருவிப் பொருளில் வரும் **ஆன்** என்ற மூன்றனுருபாய்ப் பொருள் தந்து கின்றன.

**வினைப்பால்** - உடலாற் செயல் செய்தல்.

**மெய்யின் வழுத்தும் மனத்தின்-மெய்** - உண்மை. உண்மை கூர்தரச் சிந்திக்கும் மனத்தினல். உண்மை கூர நினைப்பவர் மனத்தினுள் இறைவர் வெளிப்பட நின்றருளு வர். " நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே, புக்கு நிற்கும்பொன் னுச்சடைப் புண்ணி யன் ", " கரவாடும் வன்னெஞ்சர்க் காரியானைக் கரவார்பால், விரவாடும் பெருமானே ", " வஞ்சனையா லஞ்செழுத்தும் வழுத்து வார்க்குச் சேயானை " " மெய்மையன் பருள் மெய்மை மேவினர் " முதலிய திருவாக்குக்கள் காண்க.

**வினைப்பால்** - என்பதற்குச் செயலின் பொதுமை என்றும், **மெய்** - உடம்பு - காயம் - என்றும் கொண்டு, வாய், மெய், மனம் என்ற மூன்றின் செயலால் எனத் தனித்தனி கூட்டி உரைத்தலுமாம். "மானிடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயத், தானிடத் தைந்து மாடு மரன்பணிக் காக வன்றோ" (சித்தியார் - 2 - 92) பார்க்க.

**பேயுடன் ஆடும் பிரான்** சிவபெருமான். **பேய்** - சிவ கணமாகிய சுத்த தத்துவ உடம்புடைய நற்கணம். சிவபூதங்கள். பௌதிகமாகிய வாயு சரீரமுடைய பைசாசங்களல்ல. "பேயாய நற்கணத்தி லொன்றாய நாம்" (அற்புத - அந் - 86) என்ற அம்மையார் திருப்பாட்டும் "பாரிடம் பாணி செய்யப் பறை கட்சிறு பல்கணப் பேய், சீரொடும் பாட லாட லிலயஞ்சிதை யாத கொள்கை" (பஞ்சமம் - திருவொற்றியூர் 2) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரம் முதலியவை பார்க்க. பேயோடாடி என்பது நிகண்டில் சிவபெருமானது பெயர்களிலொன்றாக ஓதப்படுதலும் காண்க. பேயோடாடுதல் அவரது நித்தியத்துவம் பரத்துவம் முதலிய தன்மைகள் குறிக்கும்.

**அடி அல்லது பேணாதார்** - எதிர்மறையாற் கூறினார் நியதி பிழையாமையும் உறுதிப்பாடும் குறித்தற்கு. 875ல் உரைத்தவை பார்க்க.

இப்பாட்டால் ஆனாயரது உயிரின் நிலையாகிய அகவாழ்வாகிய சிவச்சார்பு கூறப்பட்டது. வரும்பாட்டில் உடல் பற்றிய புறவாழ்வாகிய உலக நிலை கூறுவார். உயிர் பற்றிய அகவாழ்க்கையின் சிறப்பு நோக்கி அதனை முன்வைத்தோதினார். 9

935. ஆனிரை கூட வகன்புற விற்கொடு சென்றேறிக்
கானுறை தீய விலங்குறு நோய்கள் கடிந்தெங்குந்
தூநறு மென்பு லருந்தி விரும்பிய தூநீருண்
டூனமி லாய முலப்பில பல்க வளித்துள்ளார். க0

(இ - ள்) வெளிப்படை. (அவர்) பசுக்கூட்டங்களை, அகன்ற முல்லைநிலக்காட்டிற்கு ஒருங்கு சேரக் கொண்டுபோய்க் காட்டில் உள்ள கொடிய விலங்குகளாலும் பொருந்தும் நோய்களாலும் வரும் துன்பங்களை நீக்கிக் காத்து, எங்கும் தூய நறிய மெல்லிய புல்லை அருந்தி விரும்பும் தூய நீரினை உண்டு, குற்றமில்லாதபடி பசுக்கூட்டங்கள் அளவில்லாது பெருகும்படிக் காப்பாற்றினார்.

**(வி - ரை)** கூடக் - கொண்டு, - சென்று, - ஏறிக், - கடிந்து, - ஆயம் - அருந்தி - உண்டு - பல்க, - அளித்துள்ளார் எனக் கூட்டி முடித்துக்கொள்க.

**கூடக்கொடு சென்று ஏறி** என்பது ஆனிரைகளைச் சேர்த்துத் தம்முடனேகூடக் கொண்டு செல்லுதல் குறித்தது.

**கடிந்து-அளித்து-உள்ளார்** என்பது தீமை நீக்கிக் காத்தலும் நன்மை பெறும்படி காத்தலும் குறித்தது. பசுபதியாகிய சிவபெருமான் பசுக்கூட்டங்களாகிய உயிர்களைக் காக்கும் பாச நீக்கமும் சிவப்பேறுமாகிய இரண்டும் இங்கு உட்குறிப்பிற் பெறப்படுவதும் காண்க. "திறங்கொண்ட வடியார்மேற் றீவினைநோய் வாராமே" என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரமும் பிறவும் காண்க.

**அகன் புறவு** - அகன்ற காடு. மருத நிலத்தினை அடுத்துப் புறத்தே உள்ள முல்லைப் பகுதி **புறவு** எனப்படும். "மண்ணிக் கரையின் வளர்**புறவின்** மாடும்" (சண்டீசர் - புரா - 27), "அருகுவளர் **புறவில்**" (ஷை 33), "அங்கட் கடுக்கைக்கு **முல்லைப் புறவம்**" (திருவொற்றியூர்த் திருவிருத்தம் - 10) முதலியவை காண்க.

**கொடு, சென்று, ஏறி - கொடு** என்றது பசுக்கள் இருக்கும் வீடுகளிலிருந்து அழைத்துக் கூட்டிக்கொள்ளுதலும், **சென்று** என்றது அங்கு நின்றும் புறவுக்குக் கூட்டிப்போதலும், **ஏறி** என்றது புறவுக்குள் ஏற்ற இடங்களிற் புகுதலும் ஆகிய செயல்கள் குறித்தன. இவற்றை ஏற்ற ஒவ்வோர் சொல்லாற் கூறும் அமைதி காண்க.

**தீய விலங்கு** - பசுக்களுக்கு ஊறு செய்யும் புலி, சிறுத்தை, நரி முதலியவை.

**உறு நோய்கள்** - கானலில் பசுக்களைத் தாக்கும் நோய்கள். இவை கொடுங்காற்று தீநீர் முதலிய காரணங்களால் வருபவை. விலங்கும் நோய்களும் கடிந்து என்க. எண்ணும்மைகள் தொக்கன. இவ்வாறன்றி விலங்குகளால் வரும் நோய்கள் என்றுரைப் பாருமுண்டு.

**தூநறு மென்புல் அருந்தி - தூ** - தூய்மையும், **நறு** - புதுமையும் சுவையுடைமையும், **மென்** - உண்ணுதற் கெளிமையும் குறித்த அடைமொழிகள். இந்த அடைமொழிகளால் பசுக்களை உண்பிக்கத்தக்க புல்லுணவில் நல்லுணவின் இயல்பை எடுத்துக் காட்டியது காண்க.

**தூநீர்** என்பதும் அவை உண்ணத்தக்க நல்ல நீரின் இயல்பு காட்டிற்று.

பசுக்கள் உண்ணத்தகாத பல கெட்ட உணவும், கெடுதி செய்யும் பல கெட்ட நீர் நிலைகளும் கானலில் உள்ளனவாதலின், அது தெரிந்து விலக்கி, நல்ல புல்லுணவும் நன்னீரும் உள்ள இடங்களில் பசுக்கூட்டத்தை மேய்த்துக் காத்தனர் என்க. இதுவே பசுக்களைக் காக்கும் முறை என்பது சண்டீசநாயனர் மருதப்புறவில் ஆனிரை காத்தவாலாற்றினும் அறியப்படும். அவர்தம் புராணம் 26-ம் பாட்டுப் பார்க்க.

**ஊனமில் ஆயம் உலப்பில பல்க** - ஊனமில் - கெடுதியில்லாதபடி. கேடு இல்லா வகை - விலங்கும் நோயும் கடிந்தமையால் ஊனமில்லையாயின. **உலப்பில** - அளவில்லாதனவாக.

**பல்குதல்** - பெருகுதல். புல்லும் நீரும் நன்கு பெறுதலால் உலப்பிலவாகப் பெருகின.

**ஊன்ம் இல் ஆயம்** - மக்களுடல் வளர்ச்சிக்கு இன்றியமையாத நல்ல உணவாகிய பால் தயிர் நெய் என்பவற்றையும், மக்களின் உயிர் உய்தி பெறுதற்கு இன்றியமையாத இறைவன் வழிபாட்டுக்குரிய சாதனமாகிய பஞ்சகவ்வியம் எனப்படும் ஆனைந்தினையும் திருநீற்றின் மூலத்தையும் தந்து, உடலுக்கும் உயிருக்கும் ஒருங்கே **ஊனத்தை இல்லையாகச் செய்யும்** ஆயங்கள் என்ற பொருளும் படுகின்றது. இவ்வாறு உலப்பிலவாகப் பல்கிய ஆனிரைகள் வெவ்வேறினங்களாகக் காக்கப்படும் திறம் வரும்பாட்டிற் கூறுவார்.

**தூநிறை**—என்பதும் பாடம். 10

936. கன்றொடு பான்மறை நாகு கறப்பன பாலாவும்
புன்றலை மென்சினை யாவினொடு நீடு புனிற்றுவும்
வென்றி விடைக்குல மோடு மினந்தொறும் வெவ்வேறே
துன்றி நிறைந்துள சூழ லுடன்பல தோழங்கள். கக

(இ - ள்) வெளிப்படை. கன்றுகளோடு, பால் கறவை மாறிய இளம்பசு, பால் கறக்கும் பசு, சிறிய மயிருள்ள தலையினையும் மென்மையையும் உடைய சினைப்பசு, ஈன்றணிய பசு என்றிவையும், வெற்றியுடைய விடைகளின் கூட்டத்தோடு இவ்வாறு இனங்கள் தனித்தனியாக நெருங்கி நிறைந்துள்ள இடங்களுடன் கூடிய பல தொழுவங்கள் உள்ளன.

(வி - ரை) மேற்பாட்டில் "ஆயம் - பல்க - அளித்துள்ளார்" என்றதனை, அளித்தது இவ்வாறென இப்பாட்டால் விரித்துக் கூறுகின்றார்.

**கன்றெடு** - ஓடு உருபு தற்தோற்றியது, கன்றுகளைப் பாதுகாக்கும்போது பசுக்கள் - எருதுகளின் வேறுகப்பிரித்துக் காக்கப்பட்டன என்பது குறிக்க. இவ்வாறே "**விடைக்குல மோடும்**" என்று எருதுக்கூட்டம் வேறுபிரித்து அளிக்கப்பட்டதனையும் ஓடும் என்றதனாற் பிரித்துக் காட்டியதும் காண்க. முதலிற் காக்கப்படவேண்டிய தகுதி நோக்கிக் கன்றுகளை முதலில் வைத்துக் கூறினார். விடைகள் வலிமையால் தம்மை

யும் ஏனையவற்றையும் காக்கும் தன்மை காட்ட **வேன்றி** என்ற அடை தந்து இறுதியில் வைத்தார்.

**நாகு - பால - சினைஆன் - புனிற்று** - என்பன பசுக்கூட்டங்களின் பல வேறு வகை குறித்தன. தொக்க இடங்களிலும் எண்ணும்மைகள் விரித்துரைக்க. **பால் மறை நாகு** - பால் கறக்கும் பருவம் மாறிய நாகு ; வினைத்தொகை. **மறை** - மறைந்த - மறைத்த. **பால் மறை** - பெயர் எனக்கொண்டு பால்வற்றிய பசு என்றலுமாம். **நாகு** - இளம்பசு. **கறப்பன** - கறப்பனவாகிய, **பால் ஆ** - பால்தரும் பருவத்துள்ள பசு. **மென்மை** - சினைப்பசுக்கள் கருப்பொறையினால் உடல் வலிமை தளர்தல் குறித்தது. **நீடு புனிற்று ஆ** - ஈன்றணிய பசுக்கள் பால்தரும் காலம் நீடியிருக்கும் நிலை குறிக்க **நீடு** என்றார் ; பெருமையுடைய என்றும், கன்றினிடத்து அன்பு மிக்க என்றும் கொள்ளுதலும் ஆம். மிகவும் ஈன்றணிய என்றலுமாம்.

**வேன்றி விடைக்குலம்** - சிவபெருமான் உமையம்மையாரோடும் எழுந்தருளி வந்து அடியார்க்கு வேண்டும் வரங்கொடுத்துக் கருணைசெய் நிலையில் ஊர்தியாகிய விடைத்தேவரின் குலம் என்பது குறிப்பு. **வேன்றி** - வலிய பாசக்கூட்டத்தின் வன்மைகள் யாவும் சிதைவுபடுத்தி நன்மை முழுதும்தரும் வெற்றி குறித்தது. "சடையார் தேவர்கடம் பிராட்டி யுடனே சேரமிசைக், கொள்ளுஞ் சினமால் விடைத்தேவர் குலமன் றுவிச் சுரபிகுலம்" (22) என்ற சண்டீசநாயனார் புராணத்தின் கருத்து நோக்குக.

**இனந்தொறும் வெவ்வேறே துன்றி நிறைந்துள** - கன்று இனம் - பசு வகையினங்கள் - எருதுகளின் இனம் என்றிவற்றின் கூட்டங்கள் வெவ்வேறாகப் பிரித்துத் தொழுவங்களில் காக்கப்பட்டன. அவ்வவற்றின் தகுதிக்கேற்ப நோய்கடிதும் உணவு தந்தும் பாதுகாக்கப் படுவதனுக்கு இவ்வாறு இனம் பிரித்து அளிக்கப்படுதல் பெரிதும் துணை செய்யுமாதலின் முன்னோர்கள் இம்முறையினைக் கையாண்டனர். இவ்விதியும் மரபும் இந்நாளில் புறக்கணிக்கப்பட்டும் மறந்துபட்டும் போயினமை வருந்தத்தக்கதாம். இவ்வாறு இனம் பிரிக்காமற் காக்கப்படுதலால் நன்மை பெருகுதுமன்றி, உளவாகும் கேடுகளும் பல. **துன்றுதல்** - கூட்டம் நெருங்குதலும், **நிறைதல்** - அக் கூட்டத்தினுள் இனம் நிறைதலும் குறித்தன.

ஆனினங்களை இவ்வாறு இனம்பற்றி வெவ்வேறாகப் பிரித்துக் காத்தல், அவை பல்கிப் பெருகுதலுக்கு இன்றியமையாததாம். ஆதலின் இது விதியும் மரபும் ஆயிற்று. மேற்பாட்டிற் கூறியபடி தீமை கடிந்து நல்லுணவு ஊட்டி மேய்த்துக் காத்தலும் இன்றியமையாததாம். இவற்றின் இன்றியமையாமைபற்றிச் சண்டீசநாயனார் புராணத்தினுள்ளும் ஆசிரியர் தேற்றம் பெற இவற்றை எடுத்துக் காட்டி வற்புறுத்துகின்றமை காணலாம்.

ஊர்களின் பக்கத்துப் புறவில் ஆனிரைகளுக்காக இருக்கவேண்டிய ஊர்மந்தை, மேய்ச்சற் காடு முதலியவை, மக்களின் தகாத பேராசையால் விழுங்கப்பட்டுக் கால் நடைகளுக்கு மேய்ச்சலிடமென்பதே யில்லாமற் போயிற்று. முன்னோர் ஒழுக்கங்களையும் கல்வாழ்க்கை விதிகளையும் கடந்து மக்கள் ஒழுகுவதனால் நீர்த்துறைகள் யாவும் அசுத்தமான அழுக்குநீர் நிலைகளாய் மாறிவிட்டன. இத்தவறுகளைத் திருத்துவதற்கு மக்கள் கவலைகொள்ளாமையினால் பசுக்கள் பாலும் பயனும் பெருகவரும் நிலை மாறிற்று. "தோற்கன்று காட்டிக் கறவார் ; கறந்த பால், பாற்பட்டா ருண்ணூர்" என்று நீதி நூல்களால் விலக்கப்பட்ட பாவங்கள் நமது "நாகரிக" நகரங்களில் மலிந்து காணும் காட்சிகளாயின. ஆனிரைகள் (காமதேனுக்கள்) மக்களின் உடலையும் உயிரையும் காத்து ஈடேற்றக் கடவுளால் கொடுக்கப்பட்ட சேமவைப்புக்களாம் என்பது உலக நூல்களாலும், சண்டீசநாயனார் புராணம் முதலிய உண்மைநூல்களாலும் அறியப்படும் உண்மை. இதனை முற்றிலும் மறந்து பசுக்களையே தின்று உழலு

பாவம் பெருக நிகழும் இந்நாளில், உலகம் செழித்து உய்வதெங்ஙனமோ? என்பது அறிஞர்களின் வினா. ஆனிரைகள் செழிக்காது நடையுடற் கூடுகளாய்த் திரியக் காணும் இந்நாளில் மக்களின் சுகமும் அதற்குத்தக மெலிந்து காண்பதாம் என்பது அறிஞர் கண்ட உண்மை. இவற்றையெல்லாம் சிந்தித்து உலகம் திருந்த ஒழுகி உய்வதாக. 11

937. ஆவி னிரைக்குல மப்படி பல்க வளித்தென்றுங்
கோவல ரேவல் புரிந்திட வாயர் குலம்பேணுங்
காவலர் தம்பெரு மானடி யன்புறு கானத்தின்
மேவு துளைக்கரு விக்குழல் வாசனை மேற்கொண்டார். ௧௨

(இ - ள்) வெளிப்படை. ஆனிரையின் தொகுதிகள் அவ்வாறு பெருகும்படி காப்பாற்றிக், கோபாலர்களாகிய இடையர்கள் என்றும் தமது சொல்வழியே ஒழுகித் தமது ஏவல்களைச் செய்து நிற்க, ஆயர்குலத்தைக் காப்பாற்றும் பெரியாராகிய ஆனாயர், சிவபெருமானது திருவடிகளில் அன்பு பொருந்திய இசையுடனே துளைக்கருவிக் குழல் வாசித்தலை மேற்கொண்டார்.

(வி - ரை) **அப்படி** அளித்தலாவது மேலிரண்டு பாட்டுக்களினும் சொல்லியபடி பாதுகாத்தல். **பல்குதல்** - பெருகுதல். **என்றும்** என்றதனை **அளித்து** என்றதனோடும், **புரிந்திட** என்றதனோடும் தனித்தனி கூட்டிப் பொருள் கொள்ளுமாறு இடையில் வைத்த அமைதி காண்க.

**கோவலர்** - கோபாலர் - இடையர். "இடைமகன்" (சண்டீசர் புரா - 24). **ஏவல் புரிந்திட** - ஏனையிடையர் தமது ஏவல் கேட்டு ஆனிரைக் குலங்களைக் காத்து வந்தார்களாக, இவர், அவர்களைத் தம் ஏவல்வழி நிறுத்தித் தலைவராய் விளங்கினார் என்க. இதனை 943-945ல் விரித்திருத்தலும் காண்க.

**அடி அன்புறு...வாசனை** - கானம் திருவடி யன்புடன் கூடாதபோது வெறும் புலனின்பமா யொழியும். ஆதலின் **அடியன்புறு கானத்தின் மேவும்** என்று விசேடித்தார். இந்தக் கானமே இறைவன்றன் றிருச்செவியி னருகணையப் பெருகும் தன்மையுடையதென்பது 942ல் அறியப்படும். அது குறிக்க இங்கு இவ்வாறு தொடங்கிக்கொண்டார். **கானம்** - இசைக்கலை. **துளைக்கருவி** - துளைகளின் வழியே இசை ஓசையினை வெளிப்படுக்கும் ஊது கருவி.

**துளைக்கருவிக் குழல்** - துளைக் கருவியாகிய குழல். துளைகளின் எண் - வரிசை - தொழில்செய்யும் முறை முதலியவற்றை 938, 948, 949, 951, 952, 954 என்ற திருப்பாட்டுக்களில் விரிக்கப்பட்டமை காண்க. இசையினையுடைய துளைமேவிய கருவிக்குழல் என்றலுமாம்.

**குழல் வாசனை** - குழல் வாசித்தலினை. **மேற்கொள்ளுதல்** - மேற்கொண்டு பல நாளும் பயிலுதல். **வாசனை** - வாசித்தல் என்ற பொருளில் வழங்கும் இசைக்கலை மரபு வழக்கு. 961, 965 பார்க்க. **குழல்** - குழல் வாசித்தலை, **வாசனை** - பூர்வவாசனையினால் என்றுரைத்தலுமாம். 12

வேறு

938. முந்தைமறை நூன்மரபின் மொழிந்தமுறை யெழுந்தவேய்
அந்தமுத னாலிரண்டி னரிந்துநரம் புறுதானம்
வந்ததுளை நிரையாக்கி வாயுமுதல் வழங்குதுளை
யந்தமில்சீ ரிடையீட்டி னங்குலியெண் களிலமைத்து, ௧௩

939. எடுத்தகுழற் கருவியினி லெம்பிரா னெழுத்தைந்துந்
தொடுத்தமுறை யேழிசையின் சுருதிபெற வாசித்துத்

திருமங்கலம் கோயில் விமானம்

—பாட்டு - 932 - பக்கம் - கூ00



ஆனாய நாயனார்

—பாட்டு - 940–943 - பக்கம் -

தடுத்தசரா சரங்களெலாந் தங்கவருந் தங்கருணை
யடுத்தவிசை யமுதளித்துச் செல்கின்ற, ரங்கொருநாள், கச

940. வாசமலர்ப் பிணைபொங்க மயிர்நுழுதி, மருங்குயர்ந்த
தேசுடைய சிகழிகையிற் செறிகண்ணித் தொடைசெருகிப்,
பாசிலைமென் கொடியின்வடம் பயிலநறு விலிபுனைந்து,
காசுடைநா ணதற்கயலே கருஞ்சுருளின் புறங்கட்டி, கடி

941. வெண்கோட லிலைச்சுருளிற் பைந்தோட்டு விரைத்தோன்றித்
தண்கோல மலர்புனைந்த வடிகாதி ணெளிதயங்கத்,
திண்கோல நெற்றியின்மேற் றிருநீற்றி ணெளிகண்டோர்
கண்கோட னிறைந்தாராக் கவின்விளங்க மிசையணிந்து, கசு

942. நிறைந்தநீ றணிமார்பி னிரைமுல்லை முகைசுருக்கிச்
செறிந்தபுனை வடந்தாழத், திரடோளின் புடையலங்க
லறைந்தசுரும் பிசையரும்ப, வரையுடுத்த மரவுரியின்
புறந்தழையின் மலிதாணப் பூம்பட்டுப் பொலிந்தசைய, களை

943. சேவடியிற் றொடுதோலுஞ் செங்கையினில் வெண்கோலு
மேவுமிசை வேய்ங்குழலு மிகவிளங்க, விணைசெய்யுங்
காவல்புரி வல்லாயர் கன்றுடையா னிரைசூழப்,
பூவலர்தார்க் கோவலனூர் நிரைகாக்கப் புறம்போந்தார். கஅ

938. (இ - ள்) முந்தை...வேய் - பழைமையாகிய இசை(க்கலை)நூல்களில் மொழிந்த மரபின் முறைப்படி எழுந்து வளர்ந்த மூங்கிலில்; அந்தம் - நுனியில்; கால் (இல்) - தான்கு பங்கிலும்; முதல் (இல்) - அடியில்; இரண்டில் - இரண்டு பங்கிலும்; அரிந்து - அரிந்து, இடைப்பட்ட பாகத்தை எடுத்து; நரம்பு...ஆக்கி - சுரங்கள் எழும் தானங்களின் வந்த துளைகளின் வரிசையைச் செய்து; முதல் வாயு வழங்குதுளை - முதலில் காற்று உண்டாக்கும் துளையையும்; அந்தமில்...அமைத்து - கேடில்லாத சிறப்பினையுடைய இடைவெளி ஒவ்வோர் அங்குல அளவில் துளைகள் செய்து, கஉ

939. (இ - ள்) வெளிப்படை - இவ்வாறு எடுக்கப்பட்ட வேய்ங்குழலாகிய துளையிசைக் கருவியில் எமது பெருமானுடைய திருவைந்தெழுத்தினையும் தொடுத்தமுறையில் வரும் ஏழிசைகளினுடைய சுருதி பிறழும்படி வாசித்து, அதனுல் வேறு வழியிற் செல்லாமல் இசையினுற்றடுக்கப்பட்ட சராசரங்கள் எல்லாமும் பொருந்த வரும் தமது கருணையுடன் கூடிய இசையமுதத்தினை அளித்துச் செல்கின்றாராகியவர் (கோவலனூர் - 943) அங்கோர் நாளில், கக

940. (இ - ள்) வாசமலர்ப்பிணை பொங்க - மணமுடைய மலர் மாலை விளங்கிக் காட்ட; மயிர்நுழுதி...சிகழிகையில் - மயிரைக்கோதிப் பக்கத்தில் மேலுயரும்படி விளக்கமாக எடுத்து முடித்த சிகழிகையில்; செறி...செருகி - நெருங்கக் கட்டிய கண்ணிமாலையைச் செருகி; பாசிலை...புனைந்து - பசிய இலையுடைய மெல்லிய கொடிகளாலாகிய வடத்தில் நறுவிலியைப் புனைந்து; காசுறு...கட்டி - பொன் காசுகள் கட்டிய கயிற்றினுல் கரிய மயிர் முடியின் புறத்தினைக்கட்டி, கடி

941. (இ - ள்) வெண்கோடல்...தயங்க - வெண்காந்தளின் இலைச்சுருளிலே பச்சையிதழும் மணமும் உடைய செங்காந்தளின் குளிர்ந்த அழகிய மலரை அணிந்த

வடிந்த காதின் ஒளி விளங்க; திண்கோல...அணிந்து - திண்ணிய அழகிய நெற்றியின்மேல் பூசிய திருநீற்றின் ஒளியானது கண்டாரது கண்களைக் கொள்ளுதல் நிறைந்து அமைவுபடாத அழகு விளங்கும்படி உடலின்மேல அணிந்து, கசு

942. (இ - ள்) நிறைந்த...தாழ - நிறைவாகத் திருநீற்றினை அணிந்த மார்பினிடத்து வரிசையாக மூல்லையரும்பினைச் சுருக்கி நெருங்கப் பூனைந்த மாலை தாழ்ந்து தொங்க; திரள் தோளின்...அரும்ப - பருத்த தோள்களின் மேல் அணிந்த மாலையின் பூக்கள் - அவற்றின் மொய்த்து வண்டுகள் பாடிய இசையினால் மலர; அரை உடுத்த...அசைய - திருவரையில் உடுத்த மாவுரியாடையின் புறத்தில் தழைகளாலியன்ற அழகிய பட்டுப்போன்ற மேலாடை அழகாக அசைய, கள

943. (இ - ள்) வெளிப்படை. சிவந்த திருவடியிலே தொடுதோலும், செங்கையிலே வெள்ளியகோலும் பொருந்திய இசையினைத் தரும் வேய்ங்குழலும் மிக்க விளக்கத்தைச் செய்யத், தமது ஏவலின்படி தொழில் செய்யும் காவல்புரிகின்ற வலிய ஆயர்களும், கன்றுகளோடு கூடிய ஆனிரைகளும் தம்மைச் சூழ்ந்து வரப், பூக்கள் மலர்கின்ற மாலையணிந்த கோவலராகிய ஆனாயர் ஆனிரை காப்பதற்குப் புறம்போந்தனர்.

இந்த ஆறு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

938. **(வி - ரை) முந்தைமறை** - உபவேதங்கள் நான்கில் ஒன்றாகிய காந்தருவ வேதம் என்னும் இசைக்கலையாதலின் **முந்தைமறை** என்றார். உப்வேதங்கள் நான்காவன ஆயுள்வேதம், தனுர்வேதம், காந்தருவவேதம், அர்த்தவேதம் என்பன.

**மறை மொழிந்த மரபின் முறை எழுந்த வேய்**-அதில் விதித்த இலக்கணமமையும்படி எழுந்து வளர்ந்த மூங்கில். "உயர்ந்த ஒத்த நிலத்திற் பெருக வளர்ந்து, காலு காற்றுமயங்கின் காதமில்லையாகலான், மயங்கா நிலத்தின்கண், இளமையும் நெடும் பிராயமுமின்றி ஒரு புருடாயுப்புக்க பெரிய மரத்தை வெட்டி, ஒருபுருடாகாரமாகச் செய்து, அதனை நிழலிலே ஆற இட்டுவைத்து, திருகுதல் பிளத்தல் போழ்ந்துபடுதல் செய்கை யறிந்து, ஒரு யாண்டு சென்றபின் இலக்கணவகையான் **வங்கியம்** செய்யப்படும்" என்பது அடியார்க்கு நல்லாருரை. (சிலப் - 3 - அரங்கே - 26). இவ்வுரைக் குறிப்பிற் கண்டவற்றுள் மூங்கிலுக்குப் பொருந்துவன ஏற்ற பெற்றி கைக்கொள்ளப்படும் என்க.

மூங்கிலினால் மட்டும் அன்றிச் சந்தனம், செங்காலி, கருங்காலி வெண்கலம் என்றிவற்றினும் வங்கியம் என்னும் குழற்கருவி செய்யப்படும் என்ப. இவற்றுள் மூங்கில் பொழுது செய்யும் என்றும், உத்தமமென்றும் கூறுப. இங்கு ஆனாயர் சிறப்புடைய உத்தமமாகிய மூங்கிற் குழற்கருவியினையே கைக்கொண்டனர் என்பது **வேய்** என்றதனாலறிவிக்கப்பட்டது. இதனையே மேல்வரும் பாட்டில் "எடுத்தகுழற் கருவியினில்" என்றும், "இசைவேய்ங் குழலும்" (943) என்றும், "வேய்ங் கருவிகளில்" (947) என்றும் கூறுகின்றார்.

**அந்தம் முதல் நால் இரண்டில்** - அந்தத்தில் நாலில், முதலில் இரண்டில் என்று முறை நிரனிறையாகக் கூட்டிப் பொருள் உரைக்க. **அந்தம்** - நுனி; **முதல்** - அடி. **அந்தம் - நுனி** என்பது "அதர்வசிகை", "ஓரும் வேதாந்தமென்றுச்சியிற் பழுத்த" முதலிய வழக்குக்களாற் காண்க.

**நரம்பு உறுதானம்** - இசை பிறப்பதற்குக் காரணமாய, வீணை, யாழ் முதலியவற்றில் தந்திரிகளையும், குழற்கருவியில் விரல் உளர்துளைகளையும் குறிக்கும். ஆகுபெயராய் அதனால் எழுப்பப்படும் சுருதிக்கு - இசைக்கு - ஆயிற்று. **நரம்பு உறுதானம்** என்பது **சுருதி** நிலம்பும் இடம் என்ற பொருளில் வந்தது. இதனை மெட்டு என்பது **நாமிய வழக்கு.**

**தானம் வந்த துளை நிரை ஆக்கி** - முதலில், சுருதி எழும்பும் தானங்களையும் அவற்றிற்குத் துளை செய்யும் இடங்களையும் வரிசைபெறக் குறித்துக்கொண்டு என்ற தாம். இத்துளைகள் எழு. "எழுவிர லிடையிட்ட" (948) என்றவிடத்து அரைப்பவை காண்க.

**வாயு வழங்கு முதல்துளை** என்க. காற்றுண்டாக்கும் துளை.

**இடையீட்டின் அங்குலி எண்களில் அமைத்து** - துளைகளுக்கு இடைவெளி ஒவ்வோர் அங்குலமாக இருக்கும்படி துளை செய்து. 13

939. **(வி - ரை) எடுத்த குழற்கருவி** - (மேற்சொல்லியவாறு) எடுக்கப்பட்ட குழலாகிய கருவி. பருமையும் நீளமும் இலக்கணத்துடனமைந்து, விரலிடையிட்ட விரலுளர்துளையும் ஊதுதுளையுமுடைத்தாய்ச், சுரபேதங்கள் நிலைகுலையாமல் அளவறுக்கப்பட்டு நின்ற வங்கியம் (சிலப். 3 - அரங் - அரும்பதவுரை). தோற்கருவிகள் துளைக் கருவிகளாதியாக எண்ணப்பட்ட இசை இன்னியங்களில் முதன்மை பெற்றதாய் **எடுத்துச்** சொல்லப்பட்டது குழல் என்ற குறிப்பும் காண்க. குழலும் யாழும் என்ற இரண்டினையுமே மிகச் சிறந்த இன்னிசைக்கருவிகளாக **எடுத்தும்**, இவ்விரண்டனுள்ளும் குழலே முதன்மை பெற்றதெனச் சிறப்பித்தும் **எடுத்தனர்** நம்பெரியோர். "குழலினிது யாழினி தென்ப" என்ற திருக்குறள் காண்க. இவ்விரண்டும் சுரபேதங்களால் இனிய மழலைபோலச் சொற்களின் ஓசையே விளைக்கும் தன்மையுடையன என்ப.

**தடுத்த சாசாரங்களெலாந் தங்க** - இசையின் வசப்பட்ட உணர்ச்சி நிறைவினாலே, வேறு வழியிற் செல்லாமற் றடுக்கப்பட்ட சரம் அசரம் ஆகிய எல்லாவுயிர்களும் அந்நிலையிலே தங்கும்படி. இதனை 954 முதல் 962 வரை விரித்துக் கூறுவார்.

**தம் கருணை அடுத்த இசை அழுது** - தமது கருணை பொருந்திய இசையாகிய அழுது. திருவைந்தெழுத்துடன்கூடிய இன்னிசையே இவர்க்குச் சாவா மூவா நிலையையளித்தலால் **அழுது** என்றார். துன்ப உணர்ச்சி நீக்கி இன்ப உணர்ச்சியை எவ்வுயிர்க்கும் ஆக்குதலால் அழுது என்றார் என்றலுமாம். இசையினால் பல நோய்களும் நீங்குகின்றன என்பது மருத்துவநூற் றுணிபுகளுள் ஒன்று. **கருணை அடுத்த** - இது எல்லாவுயிர்க்கும் பயன்றருவதாக என்னும் தன்னளி. **தம் கருணை தங்க** - தமது கருணையில் மூழ்கும்படியாக என்றலுமாம்.

**அளித்துச் செல்கின்றார்** - **செல்லுதல்** - பலகாலும் கொடுத்து வந்த வழக்க முடையாராகுதல் குறித்தது. செல்கின்றாராகிய கோவலனார் என்க. வினையாலணையும் பெயர். செல்கின்றார் - புறம் போந்தார் (943) எனக்கூட்டி முடிக்க.

அமைத்து - வாசித்து - அளித்து - செல்கின்றாராகிய - கோவலனார். நுழுகி - செருகி - புனைந்து - புறங்கட்டி - ஒளிதயங்க - கவின் விளங்க - அணிந்து - தாழ - அசைய - விளங்க - சூழ - புறம் போந்தார் என இந்த ஆறுபாட்டுக்களையும் கூட்டி முடித்துக்கொள்க.

**ஓநாள்** - அஃது ஒப்பற்றநாள். சிவபெருமான் நேரே எழுந்தருளி இவர்க்குப் பேறு கொடுக்கும் பெருந்திருநாள் என்பது குறிப்பு. 14

940. **(வி - ரை) மயிர் நுழுதி**. மயிரைக் கோதி.

**உயர்ந்த** - சிகழி உயர எடுத்து முடித்துக் கட்டிய குடுமி.

**செறிகண்ணித் தோடை** - பூக்களை நெருக்கமாகக் கட்டிய கொண்டைமாலை.

**பாசிலை...புனைந்து** - பசிய இலையுடைய கொடியினை வடமாக முறுக்கி அதில் மிக விரவும்படி நறுவிலிப் பூக்களைப் புனைந்து. நறுவிலி இலை என்று கூறுவாருமுண்டு. **நறுவிலி** - முல்லைக் கருப்பொருளாகிய மரம்.

**கருஞ்சுருள்** - கரிய மயிர்ச்சுருள் முடிச்சு. இதன் [illegible] தின் அருகே அமையும்படி வைத்துக் காசுடை நாணில்

**கருஞ்சுருளின் புறம்** என்றதற்குக் கரிய சுருண்ட பச்சிலையின் விளிம்பு · ஓரம் என்பாரு முண்டு. 15

941. (வி - ரை) **வெண்கோடல்** - வெண்காந்தள். **தோன்றி** - செங்காந்தள். இது மணமுடையதாதலின் விரைத் தோன்றி என்றார். இதனது மிக்க செந்நிறத்தால் இதனைத் தீப்போல்வதென் றுபசரித்துக் கூறுவதும் வழக்கு. "தயிலாதோ யாந் தோன்றத் தோன்றித்தீத் தோன்ற" (11-ம் திருமுறை - திருவாரூர் மும்மணிக் கோவை - 5) என்ற சேரமான் பெருமாணயனாரது அழகிய திருவாக்குக் காண்க.

**தண் கோலமலர்** - கவினினுற் கண்கவரும் அழகும் குளிர்ச்சியும் உடைய செங் காந்தட் பூ என்க.

**வடிகாது** - கீழ்த்தொங்கிய காது. **வடிதல்** - தொங்குதல். வெண்காந்த ளிலையைச் சுருட்டி, அதற் கிடையில் செங்காந்தட் பூவினை வைத்து, அதனை வடிந்த காதில் அணிந்தார் என்க. ஆண் மக்களும் வடிகாதுடையாராகுதல் முன்னுள் வழக்கு.

**காதின் ஒளி** - காதுகளின் இயல்பாகிய நிறத்துடன் வெண்காந்த ளிலையின் நிற மும் செங்காந்தளின் நிறமும்கூட இம்மூன்று நிறங்களின் சேர்க்கை விளங்கியதனால் **காதின் ஒளிதயங்க** என்றார். **தயங்குதல்** - விளங்குதல். வேய்ங்குழலின் ஊதிய ஐக் தெழுத் தின்னிசையினை எவ்வுயிர்களையும் கேட்பித்து, இறைவரது திருச்செவியி னருகணையப் பெருக்குதலாலும், அவ்வாறு பெருக்குவதற்குத் தாம் முன்பு கேட்டா லன்றி இயலாமையானும் அதற்குரிய காதுகளை இப்படிச் சிறப்பித்தார் என்ற குறிப் பும் காண்க. கேட்டற்குரிய செவிகளைச் சிறப்பித்தமைபற்றித் "தம்பாடல் பரமர்பாற் செல்லுமுரை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து" என்றதும் (திருஞா - புரா - 75) காண்க.

**தின்கோல நெற்றி** - வன்மையும் அழகும் உடைய நெற்றி.

**கண்கோடல்** - கண்ணினைக் கொள்ளுதற்றன்மை. **கண்** - சாதியொருமை.

**கண் கோடல் நீறைந்து ஆராக் கவின்** - கண்ணைக் கவர்ந்து கொள்ளுதற்றன்மை நிறைந்து மேலும் இடங்கொள்ளாதபடி ததும்பும் அழகு.

**விளங்க** - விளங்கும்படி. நெற்றியின்மேல் ஒளி விளங்கும்படி திருநீற்றினை மிசை அணிந்தார் என்க.

**கண்டோர்...விளங்க** என்றது நாயனார் புனைந்த திருக்கோல முழுமையும் அழகு விளங்கியனவேயாயினும் அவற்றுக்கெல்லாம் மேலாய்க், கண்டோர் கண்கள் சலிக்காமல் கண்கொள்ளாக் காட்சியாக மேல் விளங்கியது திருநெற்றியின் திருநீற்றுப் பொலிவு என்றபடி. இது உயிர்க்குச் சார்பாகியுள்ள மேம்பட்ட சிவச்சார்பின் விளக்கமாதலின் எனை உடற் பொலிவுகளின் மிக்கு விளங்கிக், கண்டோரை வசீகரித்தது என்றதாம். "திகழ்ந்த நீற்றின் ஒரு" (394) என்றவிடத்துரைத்தவை பார்க்க. 16

942. (வி - ரை) **முல்லைமுகை** - முல்லை நிலத்துக் கருப்பொருளாகிய பூ; இது மாபுக்கும் உரியதா மென்பர். மார்பின் விளங்குவதாகலின் இதனை **முல்லை** என்று இங்கு விரித்துக் கூறினர். முன்னர்ச் சிகழிகையிற் செறிகண்ணித் தொடையினையும் (940), பின்வரும் தோளின்புடை யலங்கலினையும் இன்னவெனக் கூறுமையும் இதன் சிறப்புக் காட்டுதற்காம். **முல்லை நிரைமுகை** என்க. **சுருக்கிச் செறிந்த புனைவடம்** என் பது முல்லைப் பூக்களை நெருங்கக் கோத்துப் புனையும் மாலைவகை. **மார்பின் வடம் தாழ** என்று கூட்டுக. **நீறணி மார்பின் முல்லைவடம் தாழ** - மார்பில் விளங்கும் திருநீற் றுப் பொலிவினுக்கு முல்லைமாலையின் பொலிவு குறைத்து காட்ட என்ற குறிப்பு மாம். முன் பாட்டில் "திருநீற்றின் ஒளி...ஆராக்கவின் விளங்க" என்று கூறியதனைத் தொடர்ந்து கூறினர்.

**தோளின்புடை யலங்கல்** - மார்பில் தாழும் முல்லை மாலையின் பக்கத்தே தோளில் விளங்கும்படி அணிந்த வேறு மாலை.

**சுரும்பு அறைந்த இசை அலங்கல் அரும்ப** என்க. **அறைந்த இசை** - பாடிய இசையினால்; **அரும்ப** - மலர ; காரணப்பொருளில் வந்த மூன்றனுருபு தொக்கது. அலரும் பருவமுடைய மலர்களால் அலங்கல் தொடுக்கப்பட்டதனால் அம்மலர்களினிடத்துத் தேனுண்ண மொய்க்கும் வண்டுகளின் இசையினால் அவை அலர்ந்தன என்றபடி. **அறைந்த சுரும்பு** எனக் கூட்டி, மோதி வீழ்ந்த வண்டுகள் என்றுரைத்து, அலங்கலில் வீழ்ந்த வண்டுகள் இசைபாட என்று உரை கூறுவாருமுண்டு. **புறம் - பட்டு - பொலிந்து - அசைய** என்க.

**தானை அசைய - தானை** - ஆடை. மரவுரியினை இடையில் உடுத்து அதன்மேல் தழையாற் புனைந்த மேலாடை இருபுறமும் தொங்க அணிந்தனராதலின் **அசைய** என்றார். **பூம்பட்டு - பூ** - அழகும் மேன்மையும் குறித்தது. 17

943. (வி - ரை) **சேவடியில் தொடுதோல் - தொடுதோல்** - செருப்பு. முல்லைப் புறவில் ஆனிரை மேய்ப்போருக்குச் செருப்பு இன்றியமையாத சாதனமாம். காட்டில் வேட்டையாடுவோர்க்கும் இவ்வாறே காண்க. கண்ணப்ப நாயனார் சரிதமும் குறிக்க. இந்த இரண்டு நாயன்மார்களும் செருப்புத் தொட்ட கோலத்துடனே ஐயர்மருங்கு அமர்கின்றார்களாவர். அச்சிறப்புக் குறிக்கச் **சேவடி** என்றார்.

**வெண்கோல்** - ஆனிரைகளைச் செலுத்தும் சிறுகோல். " கோலுங் கயிறுங் கொண்டுகுழைக் குடுமி யலைய " என்றது (சண்டீசர் புரா - 25) பார்க்க.

**இசைமேவும்** என்க. இச்சரிதம் இசையினாற் பொருந்துவதாம் என்ற குறிப்பும் காண்க. **மிக விளங்குதல்** - இம்மூன்றும் தேற்றம் பெற விளங்கித் தோன்றுதல்.

**வினை செய்யும்** - நாயனாரின் ஏவல் வழி தொழில் புரிகின்ற. " கோவல ரேவல் புரிந்திட " (937) என்றது காண்க. **காவல்புரி** - ஆனிரைப்பகுதிகளைக் காக்கும்.

**ஆயரும் ஆனிரையும் சூழ** என்க. எண்ணும்மைகள் தொக்கன.

**பூ அலர் தார்** - முல்லைமுகைவடம் தாழ, அலங்கல் அரும்ப, என முன்பாட்டிற் கூறிய பூக்கள் அலரும் மாலைகள்.

**நிரைகாக்க** - அங்குநின்ற பசுக் கூட்டங்களின் தொகுதியேயன்றிப் பசுவர்க்கம் எனப்படும் எல்லா ஆன்மாக்களையும் இச் சரிதத்தாற் பாசநீக்கிக் காவல்பெறச் செய்ய. திருமூல நாயனார், மூலன் மேய்த்த பசுக்களின் துயர்நீங்கச் செய்த செயல், எல்லாப் பசு வர்க்கங்களும் உய்வதற்குரிய திருமந்திரமாய் விளைந்தசெய்தியும் இங்குக்கருதுக 18

வேறு

944. நீலமா மஞ்ஞை யேங்க நிரைக்கொடி புறவம் பாடக்
கோலவெண் முகையேர் முல்லைக் கோபவாய் முறுவல் காட்ட
ஆலுமின் னிடைசூழ் மாலைப் பயோதர மசைய வந்தாள்
ஞாலநீ டரங்கி லாடக் காரெனும் பருவ நல்லாள். கக

(இ - ள்) வெளிப்படை. நீலநிறம் பொருந்திய பெரிய மயில்கள் அகவவும், வரிசையாகிய கொடிகளில் உள்ள வண்டுகள் முல்லைப் பண்ணைப் பாடவும், இந்திர கோபமாகிய வாயினில் வண்ணமுடைய வெள்ளி அழகிய முல்லை யரும்புகள் புன்முறுவல் காட்டவும், அசைகின்ற மின்னலாகிய இடையும் சூழும் மாலைப்பொழுதாகிய முலையும் அசையவும் ஞாலமாகிய பெரிய அரங்கத்திலே ஆடுவதற்குக் கார்காலம் என்கின்ற பருவத்தையுடைய பெண் வந்தனள்.

(வி - ரை) இப்பாட்டு முற்றுருவகம். முல்லைத்திணைக்குரிய முதற் கருப்பொருள் கள் பலவும் கோத்துக் கார் என்கின்ற பெண் அரங்கில் ஆடுதற்கு வந்ததாக உருவகம் செய்யப்பட்டது.*

**மஞ்ஞை** - மயில் குறிஞ்சிக்குரிய புள்ளாயினும் முல்லை நிலத்தின் வந்து கூடியதனால் " எங்கில மருங்கிற் பூவும் புள்ளு, மங்கிலம் பொழுதொடு வாரா வாயினும், வந்த நிலத்தின் பயத்த வாகும் " (தொல் - அகத் - 19) என்றபடி இங்கு முல்லைக்குரிய தாயிற்று. கார்காலத்திலும் மாலைப்பொழுதிலும் மஞ்ஞைகள் களித்துக் கூவுதல் இயல்பு. **முல்லை** - இந்நிலத்துக்குரிய பூ. **கோபம்** - கார்காலத்தில் பெருக உண்டா கும் சிவப்பு நிறமுடைய இந்திர கோபம் என்கின்ற தம்பலப்பூச்சி. இது பெரும்பா லும் முல்லைப் புறவங்களிற் காணப்படும். மாலைப்பொழுதும் கார்காலமும் முறையே முல்லைக்குரிய சிறுபொழுதும் பெரும்பொழுதுமாம். " காரும் மாலையும் முல்லை " (தொல். அகத். 6). **ஏங்குதல்** - மயில்கூவும் குரல் ; அகவுதல் எனப்படும்.

**நிரைக்கோடி புறவம் பாட** - **நிரை** - வரிசை **கோடி** - **பாட** - கொடிகளில் மொய்த்த வண்டுகள் பாட. **புறவம்** - முல்லைப்பண். **கோடி** - முல்லைக்கொடிகள் போலும். கொடிவண்டு பாட என்றதைக் கொடிபாட என்றது கட்டில் கூப்பிட்ட தென்றாற்போல இலக்கணை என்பர்.

**கோப வாயின் முல்லைமுறுவல் காட்ட** என்க.

**மீன் இடையும் மாலைப் பயோதரமும்** என்க. எண்ணும்மைகள் தொக்கன. **மீன் இடை அசைய** - மீன் மெலிந்து ஒல்கி அசைவதாதலின் இடைக்கு மெய்பற்றி வந்த உவமம். **மாலை அசைய** என்றது மாலைப்பொழுது மெல்லச் செல்லுதல் குறித் தது. ஆடற்பெண்கள் ஆடல் தொடங்க வரும்பொழுது இடைஅசையவும் அதனால் முலையசையவும் ஒதுங்கி மெல்ல நடந்து வரும் இயல்பு காண்க.

**மாலைப்பொழுது ஆகிய பயோதரம்** - என்க. மாலைசூடிய பயோதரம் என்ற குறிப்பும்பட நின்றது காண்க.

**பருவ நல்லாள்** - **பருவம்** - பெரும்பொழுது எனவும், இளமைப்பருவம் எனவும் இருபொருளும் பட உரைக்க நின்றது. **நல்லாள்** - பெண். **நல்லம்** - கருமையை உணர்த்தப் பழந்தமிழில் வழங்கியதோர் சொல் (சூடாமணி). அது இப்போது தமி ழில் வழக்காறொழிந்தது. தமிழினின்றும் போந்த தெலுங்கு மொழியில் இப்பொரு ளில் வழக்கில் உள்ளது. கார் எனும் பெண் என்றதனால் அதற்குரிய கருமை நிறம் குறிக்க நல்லாள் என்றார்.

**கார் என்னும் ஆடற் பெண்ணுக்கு, மஞ்ஞை ஆடலுக்குத்தக உவகை முழக்குதற் கருவியாக, கோபம் வாயாக, முல்லையரும்பு முறுவலாக, மீன்னும் மாலையும் இடை யும் முலையுமாக, ஞாலம் ஆடரங்காக** - உருவகம் செய்யப்பட்டன. ஆடற்கணிகையர் சிவந்த வாயினிற் புன்முறுவல் காட்டிச் சிறுகுரலாற் பாடி இடையும் முலையும் சிறிதே அசைய உவகை முதலிய மெய்ப்பாடு தோன்ற உரிய அவிநயத்துடன் வருதல் ஈண்டுக் கருதுக.

19

---

*இப்புராணத்தினுள் ஆசிரியர் அருளிய " மும்தைமுறை " (938) என்ற திருப் பாட்டுத் தொடங்கி, " விண்ணவர்கள் " (966) என்றது வரை ஒரு தொடர்ச்சியாய்க் கொச்சகக்கலிப்பாவினை வியன்ற செம்பாகச்சிறப்புடைய யாப்பின்றொடர்பு நிலைக்கும், " நிரைகாக்கப் புறம்போந்தார் " (943), செழுங்கொன்றை மருங்கணைந்தார் " (945), உடையவர்பால் மடைதிறந்தார் (946) என்று தொடர்ந்து செல்லும் சேம்போநளின் றொடர்பு நிலைக்கும் இடையே, இப்பாட்டு வேற்று யாப்பாகவும், பொருளில் தொடர் பில்லாத தனித்த வேற்றுப்போநளாகவும் வைக்கப்பட்டது போலக் காணப்படு கின்றது. அன்றியும் ஒருவகை யாப்பினுள் சரிதம் சொல்லத் தொடங்கிச் செல்

வேறு

945. எம்மருங்கு நிரைபரப்ப வெடுத்தகோ லுடைப்பொதுவர்
தம்மருங்கு தொழுதணையத் தண்புறவில் வருந்தலைவர்
அம்மருங்கு தாழ்ந்தசினை யலர்மருங்கு மதுவுண்டு
செம்மருந்தண் சுரும்புசுழல் செழுங்கொன்றை மருங்கணைந்தார்.

(இ - ள்) வெளிப்படை. எப்பக்கத்திலும் ஆனிரைகளைப் பரவச்செய்து மேய்ப்பதற்காக எடுத்த கோலினையுடைய இடையர்கள் தம்மருங்கில் தம்மைத் தொழுதுவரக், குளிர்ந்த முல்லைப்புறவினிடத்தில் வரும் தலைவராகிய ஆனாயர் அவ்விடத்தே கீழே தாழ்ந்த கிளைகளில் மலர்ந்த பூக்களில் தேனை உண்டு மிக்க களிப்பினைப் பொருந்துகின்ற குளிர்ந்த வண்டுகள் சுழன்று சூழும் செழித்த கொன்றை மரத்தின் பக்கத்திற் சேர்ந்தனர்.

(வி - ரை) **எம்மருங்கும்...கோல்** - ஆனிரைகளைப், புல்லும் தூநீரும் உள்ள எல்லாப் பக்கங்களிலும் ஒழுங்கிற் பரவி மேயுமாறு விடுத்துக் காப்பதற்காக எடுத்த சிறு கோல். மேய்விடம் பரவியிருத்தலின் அங்கெல்லாம் ஆனிரைகளைப் பரப்பினார் என்பார் **எம்மருங்கும்** என்றார். **கோல்** - ஆனிரை காப்போர் கையில் கொள்ளும் சிறு கோல். "வெண்கோலும்" (942) என்றது காண்க.

**பொதுவர்** - இடையர். **தொழுது அணைய** - ஏவல்புரி கோவலர்களாதலின் **தலைவ**ராகிய ஆனாயரைத் தொழுது அணைந்தனர் என்க.

**செம்மரும்** - மிகக் களிக்கும். **செம்மா** - பகுதி. "சீரூர் பாட லாட லறாத செம்மாப்பார்ந்து" (குறிஞ்சி - திருவாரூர் - 10) என்ற அப்பர்சுவாமிகள் தேவாரம் முதலியவை காண்க. இங்குச் **செம்மருதல் மதுவுண்ட**மையா லாயிற்றென்றார். வண்டுகளுக் கியல்பாகிய ஆனந்தமுங் கூடிற்றென்க.

**தண்சுரும்பு** - பிற முயற்சிகளிற் காய்ந்து சூடுண்ட புலன்களுக்குக் குளிர்ந்த - குளிர்ச்சி தருகின்ற - இசையினை ஊதுதலால் **தண்** என்றார். "குளிர்ந்தூதாய் கோத்தும்பீ" என்ற திருவாசகமுங் காண்க.

தாழ்ந்த கொன்றைமரக் கொம்பில் அலர்மது வுண்டு செம்மாப்பு ஆர்ந்து பாடிச் சுழலும் சுரும்பானது, இசையின் விளையும் "ஆனந்தத் தேனிருந்த பொந்து", "ஆனந்தத் தேன்சொரியும் குனிப்புடையான்" (திருவாசகம்) என்றபடி சிவானந்தத்தை நாயனார்க்கு அங்கு நினைவூட்டிற்று; ஊட்டவே அவர் அக்கொன்றையினைச் சடையா

---

லும் நிலையில் இவ்வாறு ஒரு பாட்டினை இடையீடுபட வேறு யாப்பினால் இணைத்தல் ஆசிரியர் மரபும் அன்று. மேலும் முன்னும் பின்னும் தொடர்ந்த பொருட் பொருத்தமின்றி, இப்பாட்டு இல்லாமலே சரிதம் தொடர்ந்து செல்லும் நிலையும் காணக்கிடக்கின்றது. இன்னும் ஆசிரியரது திருவாக்குக்கே உரிய செம்பொருட் சிறப்புக்களாகிய அடையாள முத்திரைகள் ஒன்றும் இதிற் காணப்படவில்லை. இஃதன்றியும் ஆனிரை காக்கப் புறம்போவார் மாலைப்போதிற் போவதும் வழக்கில் இல்லை. இன்னோரன்ன தோற்றங்களால் இஃது ஆசிரியரது திருவாக்கல்லாத இடைச் செருகலாக இருக்கக்கூடுமோ என்ற ஐயம் மிக அச்சப்பாட்டுடன் தோன்றுகின்றது. மேலும் இந்நாயனார் கார்த்திகை மாதத்தில் அத்தநாளன்று திருவடிப்பேறு பெற்றார் என்று கூறப்படுதலின் அது கார்காலமல்லாமையும் உணர்தற்பாலது. கொன்றை காரில் மலர்வதாமே எனின் இங்குக் காயும் கனியும் உடன் கண்டதாக (945)க் கூறப்படுதலின் அது அருகிப் பூக்கும் முன்பனிக்காலமாதல் வேண்டுமென்ப.

இதுபற்றி எனது "சேக்கிழார்" என்ற நூலில் 214-வது பக்கத்தில் தவையும் பிறவும் பார்க்க.

*ராகிய உடையாராகக் கண்டு அவர்பால் இசையின் மடைதிறந்தார் என்ற குறிப்பும் காண்க.* 20

946. சென்றணைந்த வானுயர் செய்தவிரைத் தாமமென
மன்றன்மலர்த் துணர்தூக்கி மருங்குதாழ் சடையார்போல்
நின்றதொரு கொன்றையினை நேர்நோக்கி நின்றுருகி
யொன்றியசிந் தையிலன்பை யுடையவர்பான் மடைதிறந்தார். உக

**(இ - ள்)** *சென்று...ஆனுயர் - சென்று சேர்ந்த ஆனுயர்; செய்த விரைத்தாமம் என - கையாற்றொடுத்துச் செய்யப்பட்ட மணமுடைய மாலைபோல; மன்றல்... தூக்கி - மணம் பொருந்திய மலர்களாகிய கொத்துக்களைத் தொங்கவிட்டு; மருங்கு... சடையார்போல் - பக்கங்களிலே தாழ்ந்து விளங்கும் சடைகளையுடைய சிவபெரு மானைப்போல; நின்ற...உருகி - நின்ற மணமுடைய கொன்றை மரத்தினை நேராக நோக்கி, நின்று, மனமுருகி; உடையவர்பால் ஒன்றிய சிந்தையில் அன்பை மடை திறந்தார் - தம்மையுடையவராகிய சிவபெருமானிடத்தில் ஒன்றுபட்ட மனத்தினின் றும் எழுகின்ற அன்பின் மடையைத் திறந்தனர்.*

**(வி - ரை) செய்த விரைத்தாமம் - செய்த - தொடுக்கப்பட்ட. செய்ததாமம் - விரைத்தாமம் என்று பிரித்துரைத்துக்கொள்க. "கொத்தி னிற்பொலி கொன்றை கொடுக்கிலே" என்றபடி இங்குக் கொன்றை மலர்கள் இயல்பாகவே கொத்துக்களா கிய அடுக்காய் நீண்டு தொங்குதல், தொடுக்கப்பட்ட மலர்மாலைகள் போன்றது என் றார். உருவுபற்றி வந்த உவமம்.**

**மலர்த்துணர் தூக்கி** *என்றது பூங்கொத்துக்கள் மாலை அணிந்ததுபோல (மேலே தொங்க) கிற்றல் குறித்தது.*

**மருங்குதாழ் சடையார் போல் - தாழ்சடையார் - சிவபெருமான்.** *கொன்றை யின் உருண்ட நீண்ட கனிகள் சடைபோன்றன என்பது கருத்து. "மாலையின் றுங்குருவே போலுஞ் சடைக்கற்றை" (அற்பு - அச் - 65) என்ற அம்மையார் திரு வாக்குக் காண்க. அதன் முன்னர், "சடைமேலக் கொன்றை தருகனிகள்" (50) என்ற திருப்பாட்டில் உமைஅம்மையாரது நீலக்குழலானவை கொன்றைக் கனிகள் சடைமேல் விளங்குவன போன்றன என்ற கருத்தும் காண்க. 220ல் உரைத்தனவும் பார்க்க.*

**நின்றதொரு கொன்றை** *- மலர்களாகிய கொன்றை மாலையும், கனிகளாகிய சடை யும் தாங்குதலால் சிவபெருமானது திருவுருவம் நிகழ நின்றதாகிய ஒரு கொன்றை என்க. ஒரு - ஒப்பற்ற தன்மை. கொன்றை மாலையும் சடையும் சிவபெருமானுக் குரிய திருவடையாளங்கள்.*

**நேர்நோக்கி** *- கழியக்காணாது கண்ணெதிரே கண்டு. தமதுள்ளத்துக் கண்ட தாழ்சடையார் போலவே புறத்தே கண்ட கொன்றை காணப்பட்டது என்க. "நித்த னூர்தில்லை மன்றுளின் றூடல் நீடிய கோலநேர் காட்ட" (ஏயர்கோன் - புரா - 89) என்றது காண்க. நோக்குதல் - ஊன்றிப்பார்த்தல்.*

**நேர்நோக்கி நின்று உருகி ஒன்றிய சிந்தை** *- முதலில் கொன்றை மலர்த்துணரும் கனியும் கண்டார். அவரது மனம் மொழி மெய் என்ற மூன்றும் சிவனையே பற்றி யிருப்பனவாதலின் முன்னே காணும் கொன்றையும் உள்ளே காணும் சிவனுருவமும் நேராக நோக்கினர்; அந்நோக்கத்தில் அழுந்தியவராகி, ஆனிரை காக்கப் போந்த செயலை மறந்து நின்றார்; அதன்பின் மனம் உருகினர்; உருகியதன் பயனாகச் சிந்தை உடையவரிடத்து ஒன்றியவராயினர் என முறையே கண்டுகொள்க.*

மடைதிறத்தலாவது சிறைப்பட்ட நீரினை மடை திறந்து அதன் வழியே வெளியில் விடும்போது அது பெருகியும் மிக விரைந்தும் வருவதுபோல, உள்ளிருந்து வேகமாய் வெளிவருதல். உடையவர், அன்பருளம் புகுதற்கும் இங்ஙனமே "சிறைபெரு நீர்போற் சிந்தைவாய்ப் பாயுந் திருப்பெருந் துறையுறை சிவனே" (திருவாசகம்) என்று உவமை கூறுவதும் காண்க. அஃதாவது அன்பின் பெருக்கு உள்ளே யடங்கியிருக்க மாட்டாது வெளிப்படுதல்.

ஒன்றிய சிந்தை - வேறு பிரித்துணரமாட்டாது ஒன்றும் தன்மையிற் பட்ட மனது. "ஒன்றி யிருந்து நினைமின்கள்" முதலிய திருவாக்குக்கள் காண்க. இது பற்றி முன்னுரைத்தவையும் பார்க்க.

இப்பாட்டினுள் விரைத்தாமம் - மன்றன்மலர் என இரண்டு மணம் வைத்தார். இவற்றுள் முதலில் விரை என்றது ஐம்புலன்களில் நாற்றம் என்ற வாயிற்காட்சியுணர்ச்சியினையும், பின் மன்றல் என்றது அதனை உண்ணின்ற சிவக்காட்சியுடன் இணைத்துக் கண்ட தன்வேதனைக்காட்சியுணர்ச்சியினையும் குறித்தன.

கார்க்கொன்றை பொதுவாக எல்லார் நெஞ்சையும் கவரும் ஆற்றல் வாய்ந்தது என்றும், சிவகரணங்கள் சிவகரணங்களாக மாறப்பெற்றவராயும், எல்லாவற்றையும் சிவமாகப் பார்க்கும் நிலையெய்தியவராயும் உள்ள ஆனாயருக்குக் கொன்றை சிவமாகவே தோன்றலாயிற்று என்றும், பக்குவப்பட்ட உயிர்களுக்கு இயற்கை சிவமாகத் தோன்றுவது இயல்பு என்றும் இங்கு விசேட உரை காண்பாருமுண்டு. கார்காலத்து நிறைய மலர்த்த கொன்றை பொதுவாக யாவர் நெஞ்சையும் கவர்வதென்பது உண்மை. அஃது ஐம்பொறிகளிற், கண்ணுகிய இந்திரியத்தின் வாயிற்காட்சி மட்டுமாய் ஒழிவது. அது வேறு. ஆனாயர் இங்குக் கொன்றையைச் சடையாராகக் கண்ட காட்சி வேறு. இது வெறும் இந்திரியக் காட்சியாய்க் கழியாது. அன்றியும் சிவகரணங்கள் சிவகரணங்களாக மாறப்பெற்றதனாலோ அன்றி எல்லாவற்றையும் சிவமாகப் பார்க்கும் நிலையெய்தியதனாலோ உண்டாயதும் அன்று என்க. இயற்கைத்தோற்றம் என்பதும் அதுவே சிவத்தோற்றம் ஆம் என்பதும் உணரின் ஒரு தோற்றமேயாம். உண்மையால் நோக்குங்கால் சிவனது ஆணையால், இயற்கைப் பொருளாகிய மாயையினின்றும் தோற்றிய ஆக்கப்பொருளே உலகம். அதினின்றும் தோன்றும் விகாரங்களே நோக்கி அது விகாரமின்றி நின்றழிதல்பற்றி, உபசாரமாக இயற்கை எனப்படும். இயற்கை என்ற தனிப்பொருள் இல்லை. சிவனது ஆணையே உலக இயற்கைப் பொருள் என்பது சாத்திரம். ஆனாயர் முக்காரணங்களாலும் சிவனடியல்லது வேறு பேணுதார் (934); அவ்வாறு பேணும் செயலினைத் திருவடியன்புறு கானத்தின் குழல் வாசனையாக மேற்கொண்டார் (937); அதன்படி ஐந்தெழுத்தினைச் சுருதி பெற வாசித்துச் சராசரங்களுக்குத் தம் கருணை தங்கும் இசையமுது அளித்து வருவாராயினர் (939); இவ்வொழுக்கத்தின் முதிர்ச்சியினாலே மலர்ந்த கொன்றையின் காட்சியும் தாம் எப்போதும் உள்ளே வைத்துக் கண்ட சிவக்காட்சியும் ஒன்றாயிற்று; அது முதிர்ந்து உள்ளடங்க மாட்டாது இசைவெள்ளமாகப் பரந்தது என்பதாம். 21

947. அன்பூறி மிசைப்போங்கு மமுதவிசைக் குழலோலியால்
வன்பூதப் படையாளி யெழுத்தைந்தும் வழுத்தித்தாம்
முன்பூதி வருமளவின் முறைமையே யெவ்வுயிரும்
என்பூடு கரைந்துருக்கு மின்னிசைவேய்ங் கருவிகளில், உஉ

948. ஏழுவிர லிடையிட்ட வின்னிசைவங் கியமெடுத்துத்
தாழுமலர் வரிவண்டு தாதுபிடிப் பனபோலச்

சூழுமூரன் றெழுகின்று தூயபெருந் தனித்தூளியில்
வாழியகந் தோன்றலார் மணியதரம் வைத்தூத, உங

949. முத்திரையே முதலனைத்து முறைத்தானஞ் சோதித்து
வைத்ததுளை யாராய்ச்சி வக்கரணை வழிபோக்கி
யொத்தநிலை யுணர்ந்ததற்பின் னொன்றுமுதற் படிமுறையாம்
அத்தகைமை யாரோசை யமரோசை களினமைத்து, உச

950. மாறுமுதற் பண்ணின்பின் வளர்மூல்லைப் பண்ணுக்கி
யேறியதா ரமுமுழையுங் கிழமைகொள விடுந்தானம்
ஆறுலவு சடைமுடியா ரஞ்செழுத்தி னிசைபெருகக்
கூறியபட் டடைக்குரலங் கொடிப்பாலை யினினிறுத்தி, உரு

951. ஆயவிசைப் புகலுன்கி னமைந்தபுகல் வகையெடுத்து
மேயதுளை பற்றுவன விடுப்பனவாம் விரனிரையிற்
சேயவொளி யிடையலையத் திருவாள னெழுத்தஞ்சுந்
தூயவிசைக் கிளைகொள்ளுந் துறையஞ்சின் முற்றவினைத்தார், உசு

952. மந்தரத்தும் மத்திமத்துங் காரத்தும் வரன்முறையாற்
றந்திரிகண் மெலிவித்துஞ் சமங்கொண்டும் வலிவித்தும்
அந்தரத்து விரற்றொழில்க ளளவுபெற வசைத்தியக்கிச்
சுந்தரச்செங் கனிவாயும் துளைவாயும் தொடக்குண்ண, உஎ

953. எண்ணியதூற் பெருவண்ண மிடைவண்ணம் வனப்பென்னும்
வண்ணவிசை வகையெல்லா மாதுரிய நாதத்தில்
நண்ணியபா ணியுமியலுந் தூக்குநடை முதற்கதியிற்
பண்ணமைய வெழுமோசை யெம்மருங்கும் பரப்பினார். உஅ

947. (இ - ள்) வெளிப்படை. அன்பினில் உள்ளே ஊறி மேலே பொங்கும் அமுதமாகிய இசையினைத் தருகின்ற குழல் ஒலியினாலே, வலிய பூதகணப்படையை ஆளும் சிவபெருமானுடைய திருவைந்தெழுத்தையும் துதித்துத், தாம் முன்பு ஊதி வரும் அளவின் முறைமைப்படியே, எவ்வுயிர்களையும் எலும்பும் உள்ளே கரைந்து உருக்கவல்லதாகிய இனிய இசை தரும் வேய்ங்குழற் கருவிகளில், உஉ

948. (இ - ள்) வெளிப்படை. எழு விரல்கள் இடையீடுபடத் துளையிட்ட இன்னிசை வங்கியத்தை எடுத்து, தாழ்கின்ற மலர்களில் வண்டுகள் தாது பிடிப்பதுபோலச், சூழ் துளைகளிலும், மூலுதலும், எழுதலும், நிற்றலும் செய்து, தூய பெரிய தனித் துளையில், வாழியராகிய நமது தோன்றலார் அழகிய அதரத்தை வைத்து ஊத, உங

949. (இ - ள்) முத்திரையே...சோதித்து - முத்திரைத் துளை முதலாக முறையாகிய தானங்களை ஆராய்ந்து ; வைத்ததுளை...போக்கி - இசை நூல்களில் விதித்த அளவில் அமைத்தவைத்த எனைத் துளைகளை ஆராய்ச்சி செய்வதாகிய வக்கரணையின் வழிப்பட விரல்களை முறையிற் போக்கி ; ஒத்தநிலை உணர்ந்ததற்பின் - இசையொத்திருத்தலை அறிந்துகொண்ட பின்னர் ; ஒன்று முதல் படிமுறையால் - சட்சம் முதல் நிடாதம்வரைக்கும் வரிசையாக ; அத்தகைமை...அமைத்தார் - அத்தன்மையாக எச்சும் தக்கும் ஆகிய ஓசைகளில் அமைத்தருளி, உச

950. (இ - ள்) மாறுமுதற் பண்ணின்பின் - மாறிவரும் சுரங்களையுடைய குறிஞ்சிப் பண்ணின் பின்னே ; வளர்மூல்லைப்பண் ஆக்கி - வளரும் முல்லைப் பண்ணினை

ஆக்கி ; ஏறிய தாரமும் உழையும் - பாலையாழுக்கமைந்த தாரமும் உழையும் ; கிழமை கொள இடம் தானம் - கிழமைகொள்ளும்படி இடுகின்ற தானங்களில் ; ஆறு...பெருக கங்கையாறு உலவுதற் கிடமாகிய சடைமுடியுடைய சிவபெருமானது திருவைந் தெழுத்தின் இசை பெருகும்படி ; கூறிய பட்டடைக் குரலாம் - சொல்லப்பட்ட இளியைக் குரலாகவுடைய ; கொடிப்பாலையினின் நிறுத்தி - கொடிப்பாலையில் நிறுத்தி,

951. (இ - ள்) ஆய...நான்கின் - உளவாகிய இசையின் புகல் நான்கினிலும் ; அமைந்த...எடுத்து - கொடிப்பாலைக் கமைந்த கூறுபாடாகிய நிறத்தினை எடுத்து ; மேய...நிரையில் - சுரம் எழும்பும் ஏழு தானங்களில் விரல்களைப் பொத்துவதும் விடுப் பதுமாகிய வரிசையின் செயல்களினால் ; சேய ஒளி இடை அலைய - இசையின் செவ்விய ஒளி இடையிலே சஞ்சரித்து விளங்க ; திருவாளன் எழுத்து அஞ்சும் - சிவபெருமானது திருவைந்தெழுத்தும் ; தூய இசைக்கிளை கொள்ளும் - தூய்மையான இசையின் ஏற்ற பகுப்பினைக் கொள்கின்ற ; துறை அஞ்சின் முறை விளைத்தார் - ஐந்து துறைகளின் ஏற்ற முறையினை விளைவித்தாராகி, உசு

952. (இ - ள்) மந்தரத்தும் மத்திமத்தும் தாரத்தும் - மெலிவு சமன் வலிவு என்ற மூவகைச் சுருதியிலும் ; தந்திரிகள்...வலிவித்தும் - சுரத்தானத்துக்குரிய தானமுறையே மென்மையாகவும் சமமாகவும் வன்மையாகவும் பொத்தி ; அந்தரத்து... இயக்கி - இடையிட்ட தானங்களை உரிய அளவு பெறும்படி அசைத்தும் இயக்கியும் ; சுந்தரம்...தொடக்குண்ண - அழகிய சிவந்த கனி போன்ற அதரமும் குழலின் தானவாயும் ஒன்றுபட்டுக் கூடி யிணங்க, உஎ

953. (இ - ள்) எண்ணிய...எல்லாம் - இசை நூல்களில் அளவுபடுத்திய பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு என்கிற இசைவகைகள் எல்லாம் மதுரத்தையுடைய நாதத்தில் ; நண்ணிய பாணியும் - அமைந்த தாளமும் ; இயலும் - இசையும் ; தூக்கும் - தூக்கும் ; கடைமுதற்கதியில் - கடை முதலிய கதிகளுடன் ; பண்...பரப்பினர்-பண் பொருந்த எழுகின்ற ஓசையை எல்லாப் பக்கங்களிலும் பரவச்செய்தார். உஅ

இந்த ஏழு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

947. (வி - ரை) **அன்பு ஊறி** - அன்பினில் உள்ளூறி. **இசை அழுது** என்க. உருவகம். முன்னரும் இசையமுது (939) என்றார். ஆண்டுரைத்தவை பார்க்க.

**குழல் ஓலியால்...தாம்...முன்பு ஊதிவரும் அளவில்** - முன்பு - இந்தாளினுக்கு முன்னுட்களில் ; **ஊதிவரும் அளவின் முறைமையே** - நியதியானபடி அம்முறையிலே. அந்த அளவும் முறையும் 939ல் கூறினார்.

**எவ்வுயிரும்...இன்இசை** - முன் இதனைத் " தடுத்த சராசரங்களெல்லாம் தங்கவரும் தங்கருணை அடுத்த இசையமுது " (939) என்றார். எனை இசைகள் யாவும் செவிப்புலனுக்கு விடயமாய் அம்மட்டில் மனத்திலுற் கொள்ளப்பட்டு ஓசை யின் பத்தை விளைத்து ஒழிவன. இந்த இசை அவ்வாறெழியாது உயிரினுக்கும் சிறந்த நன்மையாகிய இன்பந் தரத்தக்கதாய் மனத்தினையும் கடந்து உயிரினுட் புகுவது ; எலும்பையும் கரையச்செய்து உருக்குவதாகும் என்பது. இதனை மேல் 961, 962ல் முடித்துக் கூறுவதும் காண்க. இது உயிர்க்கு உறுதி தரும் திருவைந்தெழுத்தினை உள்ளுறையாகக் கொண்டமையே இச்சிறப்புக்குக் காரணமாம்.

**வேய்ங்கருவிகளின்** - பலவகைப்பட்ட மூங்கில்களினுற் செய்யப்படும் பலவகைப் பட்ட இசைக்கருவிகள் பலவற்றுள்ளும் தோற்றெடுத்த குழல் என்க. கருவிகளில் - இன்னிசை வங்கியம் எடுத்து என வரும்பாட்டுடன் கூட்டி முடிக்க. 22

948. (வி - ரை) **ஏழவிரல் இடை இட்ட** - இடையிடையே ஒவ்வொரு விரற் கிடை அளவாக இடம் விட்ட எட்டுத்தானங்களையுடைய.

**இன்னிசை வங்கியம்** - இனிய இசையைப் பெருக்கும் குழல். **வங்கியம்**-குழலின் மாறுப்பெயர். வங்கியம் - வங்கிசம் - வம்மிசம் என்பன வம்சியம் என்னும் ஒரு சொல்லின் திரிபு வழக்குக்கள். கிழங்காகிய ஒரே வம்மிசத்திலிருந்து புடைத்துக் கிளைத்துத் தோன்றுவதனால் மூங்கிலுக்கு வம்சம் எனப் பெயர் வழங்குவதாயிற்று. வம்சத்தினின்றும் ஆயது வம்சியம். அது தமிழில் வங்கியம் என்று திரிந்து நின்று, " எண்ணெய் " என்பது போல, ஏனையவற்றிற்றோன்றும் கருவிகட்கும் பெயராயது என்ப. இது நிகண்டினும் எடுக்கப்பட்ட பெயர். குழலுக்கு மூங்கில் உத்தமம் என்பர். " **குழல் - வங்கியம்.** அதற்கு மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி, என ஐந்து மாம்...இவற்றுள் மூங்கிலிற் செய்வது உத்தமம் " என்பது அடியார்க்கு நல்லார் உரையிற் காணப்படும். இதுவே உத்தமமாதலின் மூங்கிலின் பெயராகிய வங்கியம் என்பதே குழலுக்கு மாறுப்பெயராய் வழங்கலாயிற்று.

**புல்லாங்குழல்** என்ற பெயரும் இப்பொருளினையே குறிக்கும். **புல்** என்ற வகுப் பிற்பட்ட தாவரப் பொருளால் ஆகிய குழல் என்பது பொருள். (புள்ளாங்குழல் என வழங்குவது தவறுகிய மரூஉவழக்கு). தாவரங்களில் காழ்த்த பாகம் வெளியே யிருப்பதால் மூங்கில்வகை புல் என்ற இனத்தைச் சேர்ந்தது என்பர். " புறக்கா ழனவே புல்லென மொழிப " என்பது தொல்காப்பியம் (மரபியல்).

**வங்கியம்** - "இதன் பிண்டியிலக்கணம் - நீளம் இருபது விரல்; சுற்றளவு நாலரை விரல். இது தூலையிடுமிடத்து நெல்லரிசியில் ஓர் பாதி மானிறுத்திக் கடைந்து வெண்கலத்தாலே அணைசுபண்ணி இடமுகத்தை யடைத்து வலமுகம் வெளியாக விடப்படும்.....இனித் தூல யளவிலக்கணம் - அளவு இருபது விரல். இதிலே தூப முகத்தின் இரண்டு நீக்கி முதல்வாய் விட்டு, இம் முதல்வாய்க்கு ஏழங்குலம் விட்டு வேலவாயினு மிரண்டு நீக்கி நடுவினின்ற ஒன்பது விரலினும் எட்டுத் தூலையிடப்படும். இவற்றுள் ஒன்று **முத்திரை** என்று நீக்கி, கின்ற ஏழினும் ஏழு விரல் வைத்து ஊதப்படும். தூலைகளின் இடைப்பரப்பு ஒரு விரலகலம் கொள்ளப்படும்." (அடியார்க்கு நல்லாருரை - சிலப் - அரங் - ஆய்ச்.)

**ஏழவிரல்...வங்கியம்** - மேலே கூறியபடி ஒன்பது விரலினும் ஒவ்வோர் விரலிடையிட்டு எட்டுத் தூலைகளிடப்படுவனவாயினும் ஏழு தூலைகளிற் செய்யும் தொழிற் பாட்டின் ஏழிசையும் பிறக்குமாதலானும், இது குழலின் சிறப்பியல்பாதலானும் **ஏழ விரலிடையிட்ட - வங்கியம்** என்றார். ஏழு விரலாவன - இடக்கைப் பெருவிரலும் சிறுவிரலும் நீக்கி மற்றை மூன்று விரலும், வலக்கையிற் பெருவிரலொழிந்த நான்கு விரலுமாம். தூலைகள் ஏழிலும் ஏழு விரலும் முறையே வைத்து வாசிக்க இவற்றுள்ளே ஏழிசையும் பிறக்கும். ஏழு தூலையினும் ஏழிசையும் எழுத்தாற் பிறக்கும். அவ்வெழுத்தாவன : ச-ரி-க-ம-ப-த-நி என்பனவாம் எனவும், இவ்வேழெழுத்தினையும் மாத்திரைப்படுத்தித் தொழில் செய்ய இவற்றுள்ளே ஏழிசையும் பிறக்கும் எனவும், இவ்வேழிசையாவன : சட்சம், இடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், கிடாதம் என்பனவாம் எனவும், இவற்றுள்ளே தமிழ்ப் பண்கள் பிறக்கும் எனவும் கூறுப.* வீணையில் நரம்பு தெறித்தலினுளுளதாதல்போலக், குழலினுள் விரற்றொழில்

---

*இக் குறிப்புக்களும், மேல்வருவனவும் பெரும்பாலும் அடியார்க்கு நல்லார் உரை (சிலப். அரங். ஆய்ச்.)யினைத் தழுவி எழுதப்பட்டன. விரிவுகள் ஆண்டும், இன்னும் விரிந்த இசை நூல்களுள்ளும் கண்டுகொள்க. இவ்வாராய்ச்சியில் வல்லுநராகிய இமயமால்வரை ஸ்ரீமத் விபுலானந்த அடிகள் அவ்வுரைக் குறிப்புக்களிற் சில பகுதிகள் விசாரிப்பிற் றிருத்தி யமைத்துக் காணப்படவேண்டுமென் றறிவித்ததனோடு, தமது ஆராய்ச்சியிற்பட்ட குறிப்புக்களை எழுதி யனுப்புவதாகவும் அன்புடன் வாக்களித் தருளியுள்ளார்கள். அவை கிடைப்பின், பின்னர்ச் சேர்க்கையாகப் பதிப்பிக்கப்படும்.

வகையினால் ஏழிசையும் பிறத்தலால் விரலினை முதலில் எடுத்தோதி **ஏழ விரலிடையிட்ட...வங்கியம்** என அத்தன்மைபற்றிக் குழலினைக் கூறினார். இதுபற்றியே "மேய துளை பற்றுவன விடுப்பனவாம் விரனிரையில்" (951) எனவும், "விரற்றொழில்களளவுபெற வசைத் தியக்கி" (952) எனவும் பின்னர் விரித்துக் கூறுவார்.

**தாழுமலர்...நின்று** - தாழும்-மேலிருந்து பாய்ந்து தாழும். விரும்பும் என்றலுமாம். **வண்டு தாது பிடிப்பனபோலச் சூழுமுரன் றெழ நின்று** என்றது மலர்களில் வண்டுகள் மொய்த்து அவற்றின் தேன் உண்ணவும், தாதுக்களை எடுத்துச் செல்லவும் சூழும் முரலுதல், எழுதல், நிற்றல் என்ற செயல்கள் செய்தலைக் குறித்தது. **தாது** - மகரந்தம். **தாது பிடித்தல்** என்பது தாது நுண்பொடிகளை ஏற்றபடி எடுத்துக் குழைத்துச் சேர்த்துக்கொண்டுபோதல். தாதுப் பொடிகளினால் வண்டுகள் தமது தேன் கூடுகளை அமைக்கும் என்ப. அதன் பொருட்டு தாதுத் தூள்களை ஒவ்வொன்றாக மலர்களின் கேசரங்கள் என்ற பூந்தாள்களினின்று எடுத்து ஒன்றுதிரட்டிக்கொண்டு செல்வதற்கு உரிய கால அளவுவரை வண்டுகள் பல மலர்களையும் சூழ்ந்து முரன்றும், எழுந்தும், நின்றும் தொழில் செய்யும். இத்தொழில்களாற் பலதிறப்பட்ட சுரங்கள் போன்ற ஓசை எழும்பும். ஆதலின் இங்கு இதனை உவமை கூறினார். வினைபற்றிவந்த உவமம். **முரலுதல்** - ஊதுதல். இது தாதுக்களைப் பூந்தாள்களினின்றும் பிரித்தெடுத்தற்கும் உதவும். **பிடிப்பனபோல** - ஊத என்று கூட்டுக. இதனால் விரலுளர்துளை ஏழின் றொழில் கூறினார்.

**தூய பெருந் தனித் துளை** - இதனை முத்திரை என்பர். நாயனாரது மணியதரம் வைத்து ஊதப்பெற்றமையால் தூய (துளை) என்றும், ஏனைத்துளைகளினும் பெரிதாதலின் பெருந்(துளை) என்றும், அவற்றினின்றும் தனியே அமைக்கப்படுதலின் **தனித்** (துளை) என்றும் கூறினார். **வாழிய** - வாழும்பொருட்டு. 273 பார்க்க. இவரது இசை உயிர்களை வாழ்வித்தல் 939, 961, 962ல் கூறப்பட்டன. **தோன்றல்** - தலைவர். நாயனார் என்ற சொற்பொருளை நினைவூட்டுவார் **நம் தோன்றலார்** என்றார். ஆயர்தலைவர் என்றலுமாம். 937, 943 பார்க்க. **மணியதரம்** - அழகிய உதடு. **தனித்துளையில் - வைத்தூத** என்ற இதனால் ஊதுதுளையின் றொழில் கூறினார்.

**தாவிப் பிடிப்பன**—என்பதும் பாடம். 23

949. (**வி - ரை**) **முத்திரையே.....சோதித்து** - **முத்திரை** - வளைவாய்க் கடுத்த எட்டாவது துளை. **முறைத்தானம் - அனைத்தும்** என்க. **முறைத்தானங்களாவன** முத்திரை நீக்கிச் சுரங்கள் பிறக்கும் ஏனை ஏழு துளைகள்.

**வைத்த துளை** - ஏற்ற கருவியும் துளைகளும் இசைநூலிலக்கணப்படி அமைதலைத் தெரிந்து இட்ட துளைகள். 938ல் விரித்தபடி அமைத்த துளைகள் என்க.

**ஆராய்ச்சியாகிய வக்கரனை** என்க. **வக்கரனை வழிபோக்கி** - சோதனை செய்ய விரல்களை முறையே செலுத்தி. **வக்கரனை** - எல்லா இராகங்களும் குழலின் ஆறு துவாரங்களாலேயே உண்டாகும்படி விரல்களை முறையே செலுத்திச் சமஞ்செய்து சோதித்தல். இசைநூல் மரபுப்பெயர். **வழிபோக்குதல்** - சுரங்களின் வரிசைபெற விரல்களை முறையே மெலிந்தும் சமஞ்செய்தும் வலிந்தும் பொத்துதல்.
இதனைப் "பற்றுவன விடுப்பனவாம் விரனிரையில்" (951) என்பது காண்க.

**ஒத்தநிலை** - அவைகள் ஒத்து நிகழும் நிலைமை. இசைமாறுபடாமல் ஒத்திருத்தல்.

**ஒன்று முதல் படிமுறை** - சட்சம் முதல் நிடாதம் வரை உள்ள ஏழு சுரங்களின் படிமுறையாகிய வரிசை. முத்திரைக்கடுத்ததுளை **சட்சம்**; அதற்கடுத்தது **இடபம்**; அதற்கடுத்தது **காந்தாரம்**; அதற்கடுத்தது **மத்திமம்**; அதற்கடுத்தது **பஞ்சமம்**; அதற்கடுத்தது **தைவதம்**; அதற்கடுத்தது **நிடாதம்** என்னும் படிமுறை கொள்ளப்படும். இசைகள் பிறக்குமிடத்துத் தாரத்தில் உழையும், உழையிற் குரலும், குரலில் இளியும்,

இளியுள் துத்தமும், துத்தத்தில் விளரியும், விளரியுள் கைக்கிளையும், கைக்கிளையுள் தாரமும் என ஒன்றினின்றொன்று பிறக்கும் என்னும் படிமுறையும் கொள்ளப்படும்.

**ஆரோசை - அமரோசை** - எச்சு - தக்கு என்னும் ஓசை வேறுபாடு. ஏற்றுதல் - இறக்குதல், ஆரோகணம் அவரோகணம் - என்றும் கூறுவர்.

**வக்கானை - படிமுறையாம் - அமைத்தார்** - என்பனவும் பாடங்கள். 24

950. (வி - ரை) **மாறு முதற்பண்** - ஐந்திணையினுள் முதலில் வருவது குறிஞ்சியாதலின் **முதற்பண்** என்பது குறிஞ்சிப்பண்ணைக் குறித்தது; **மாறும்** என்றது அப்பண்ணிற்குரிய சுரங்கள் மாறிவருவது குறித்தது. **பண்ணின பின்** என்று பாடங் கொண்டு முதலில் விஷமமாகப் பாடின பின்பு என்றுரைகூறுவாரு முண்டு. இப் பொருளில் **மாறு** - விஷமம். இது பாடுதலின் ஒரு பேதம் என்பர் இராமகாதச் செட்டியார்.

**வளர்முல்லைப்பண் ஆக்கி** - முல்லைக்குரிய பண்ணைச் செய்து. இத்திணைக்கும் கிலத்துக்குமுரிமை பற்றியும் சிறப்புப்பற்றியும் **வளர்** என்ற அடைமொழி தந்து சிறப்பித்தார்.

**ஏறியதாரமும் உழையும் கிழமை கோள** - "தாரத்து உழை தோன்றப் பாலையாழ்" என்றபடி பின் பாலையாழ் ஆக்கி என்பதாம். தாரம் - உச்சவிசை. அது மூக்காலுண்டாவது; **உழை** - தலையை இடமாக உடைய இசை; **கோடிப்பாலை** - நெஞ்சை இடமாக உடைய இசை. **இளி** என்னும் பண்ணே குரலாக எழும்புவது. **பட்டடை** - அழுத்தம். இவை இராமகாதச் செட்டியார் உரைக்குறிப்பு. "**பட்டடை** - நரம்புகளின் இளிக்குப் பெயர்; என்னே? எல்லாப் பண்ணிற்கும் அடிமணையாதலின்" - அடியார்க்கு நல்லார்.

**கிழமை** - இசைக்கலை மரபுப்பெயர்களுள் ஒன்று. 221-ல் மிடற்றுப்பாடலுக் கேற்ப எடுத்து உரைத்தவை பார்க்க. **கிழமைகோள** - பொருந்த என்றுரை கொள்வாருமுண்டு.

**இசை** - இராகம். **இடம்தானம்** - கொடிப்பாலையினின் - **கிறுத்தி** என்று கூட்டுக.

**கொடிப்பாலையினில் நிறுத்தி** - கொடிப்பாலை என்பது பாலையாழ் வகை பலவற்றுள் ஒன்று. அவை குரல் குரலாயது செம்பாலை; துத்தங் குரலாயது படுமலைப்பாலை; கைக்கிளை குரலாயது செவ்வழிப்பாலை; உழை குரலாயது அரும்பாலை; இவற்றின் அமைத்துப், பின்னர் இளி குரலாய கொடிப்பாலையினில் **இடந்தானம் நிறுத்தி** என்க. 25

951. (**வி - ரை**) **இசைப்புகல் நான்கு** - பண், பண்ணியல், திறம், திறத்திறம் என்பன. இவற்றைத் திதிப்புகல், பிரக்கிரமப்புகல், சஞ்சாரப்புகல், மூர்ச்சனைப் புகல் என்பர் இராமகாதச் செட்டியார். வர்த்தனை நான்கு என்றலுமாம்.

**அமைந்த புகல்வகை** - தாம் பாடும் கொடிப்பாலைக்கு அமைந்த கூறுபாடாகிய திறம். "கீடும்புகல் வகையால்" (221) என இவ்விசைக் கூறுபாட்டை முன்னர் மிடற்றுப்பாடலுக் கேற்பக் கூறியதும் காண்க.

**விரல் நிரையில்** - பொத்துவனவும் விடுப்பனவுமாகிய விரல் வரிசைத் தொழிலில், **நிரை** - இங்கு வரிசையின் ஒருழில் குறித்தது.

**சேய ஒளி** - விரல்களின் சிவந்த ஒளி குழலினிடத்துச் சஞ்சரிக்கும்படி என்பாரும் உண்டு.

**திருவாளன்** - சிவபெருமான். முத்தித் திருவை ஆள்பவர் - வழங்குபவர். அவரது திருவினைப் பெற்று உலகுக் குபகரிக்கும் அடியார்களும் இவ்வாறே திருவாளர்கள் என வழங்கப்படுவர், "தேசமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்" (சண்டீசர் புரா - 60) என்றது காண்க.

**எழுத்தைந்து** - சிவபஞ்சாக்கரம். முன்னர் "எம்பிரா னெழுத்தஞ்சும்" (939) என்றது இதற்குமுன் பலராலும் நியதியாய் வாசித்ததனைக் குறித்ததாம்.

**இசைக்கிளை ஐந்து** - ஆயத்தம், எடுப்பு, உக்கிரம் (உற்கிரகம்), சஞ்சாரம், இடாயம் என்பன.

**முறை விளித்தல்** - இவ்வைந்து கிளைகளிலும் முறையே பண்ணமையப் பாடுதல். **ஆயத்தம்** - மந்தரத்தினின்றும் அனுமந்தரமாகிய கீழ்ஸ்தாயி வரை சென்று முன்தானத்தில் வந்து முடிவது; **எடுப்பு** - மந்தரத்திலிருந்து பஞ்சமம்வரை போய் மீண்டும் மந்தரத்தில் வந்து முடிவது; **உற்கிரகம்** - மந்தரம் முதல் தாரத்தானம்வரை போய் மீண்டு மந்தரத்தில் வந்து முடிவது; **சஞ்சாரம்** - மந்தரத்திலிருந்து மத்திமம் தாரம் ஆகிய இரண்டினும் போய் இறங்கிக் கீழ்ஸ்தாயியான அனுமந்தரத்திற் சென்று மீண்டு மந்தரத்தில் வந்து நிற்பது; **இடாயம்** - மந்தரத்தானத்தையே முதன்மையாகச் செய்துகொண்டு, மத்திமம் தாரம் இரண்டினும் சென்று, பின்பு மந்தரத்தையே வலிவுறுத்தி அனுமந்தரத்திற் சென்று மீண்டும் மந்தரத்தில் வந்து முடிவது என்ப. 26

952. (வி - ரை) **மந்தரம்** - மெலிவு; **மத்திமம்** - சமன்; **தாரகம்** - வலிவு. இவை ஓசை பேதங்கள். இவற்றுக்கு முறையே மெலிவித்தும், சமங்கொண்டும், வலிவித்தும் எனத் தொழிற்பாடு கூறுவது காண்க. இவற்றை முறையே படுத்தலோசை, கலிதலோசை, எடுத்தலோசை என்றுங் கூறுவர், "குறையாநிலை மும்மைப்படி" (221) என்ற விடத்துரைத்தவை பார்க்க.

**தந்திரி** என்றது இங்குக் குழலிசைக் கருவிக் கேற்பத் துளைகளைக் குறித்தது. ஆகுபெயர்.

**அந்தரம்** - இடையிட்ட துளைகள். விரலுளர் துளைகள் என்ப.

**அந்தரத்து...இயக்கி** - மெலிவும் சமனும் வலிவுமாக வரன்முறையால் ஓசையளவு படுத்துதற்கு விரல்களை அந்தந்த அளவுக்குப் பொத்துதல், விடுத்தல், அசைத்தல் இயக்குதல் முதலிய தொழில்களைச் செய்து என்க.

**கனிவாய்** - அருள் கனிந்த வாய் என்றலுமாம்.

**துளைவாய்** - குழலின் துளைவாய். குழலின் எட்டுத் துளைகளில் விரல்கள் வைத்து இயக்கிச் சுரங்களைக் காட்டும் எழு துளைகள்போக, வாய் வைத்து ஊதும் எட்டாவது துளை. இவற்றை முறையே **விரலுளர் துளை** எனவும், **ஊதுதுளை** எனவும் கூறுவர்.

**வாயும் துளைவாயும் தோடக்குண்ணல்** - விரற்றொழில்களால் மெலிவும் சமனும் வலிவும் செய்தற்கேற்றவாறு காற்றுச் செல்வதற்குக் குழலின் துளைவாயில் தமது வாயும் பொருத்தவைத்து ஊதுதல். **தோடக்குண்ணப்-பரப்பினர்** - (947) என வரும் பாட்டொடு கூட்டி முடிக்க.

**முன்மணி அதரம் வைத்தூத** என்றது இசை ஒலி செய்யும் தொடக்கத்தினையும், இங்குக் கனிவாயும் துளைவாயும் **தோடக்குண்ண(ப் பரப்பினர்)** என்றது அவ்வாறெழுப்பிய இசையினைப் பாகுபடுத்தி மாதிரியாதத்தில் பாணியும் இயலும் தூக்கு நடை முதற்கதியில் ஒழுங்கு செய்து பரப்புதலையும் குறிப்பனவாதலின் கூறியது கூறலன்மை யுணர்க.

**சுந்தரச் செங்கனிவாய்** - முன், மணியதரம் (948) என்றதற்கேற்ப இங்கு இவ்வாறு கூறினர். இவை நாயனாது இசையிலேயே ஐயர்மருங்கணையும் அருட்டிரு மேனிப் பொலிவைப் பாராட்டும் முறை - "மாசறுகோலம்" (670), "புண்ணியக் கங்கை நீரிற் புனிதமாந் திருவாய்நீர்" (671), "வண்ணமென் பவளச் செவ்வாய்" (672) என்பன முதலாகக் கண்ணப்பநாயனாது அருட்டிரு மேனியின் பொலிவைப்

பாராட்டியதும், " தாமரைச்செங் கைகளினுற் சப்பாணி கொட்டினர் " (திருஞான - புரா - 46), "குறுவியர்ப்புத் துளியரும்பக் கொழும்பொடியா டியகோலம் " (ஷை 52), " பங்கயத்தின் செவ்வி பழித்து வனப்போங்கும் செங்கை " (ஷை 172), " பாத தாமரை " (ஷை 187) என்பன முதலாக ஆளுடையபிள்ளையாரது அருட்டிருமேனிப் பொலிவினைப் பாராட்டிய தன்மையும், " தூயவெண்ணீறு துதைந்த பொன் மேனி " (திருஞா - புரா - 140) என்பது முதலாக ஆளுடைய அரசுகளின் கருணைப் பொலிவைப் போற்றிய தன்மையும், பிறவும் இங்கு நினைவு கூர்தற்பாலன. 27

953. (வி - ரை) **நூல் எண்ணிய** என மாற்றுக. நூல்களால் அளவுபடுத்தப் பட்ட. **எண்ணுதல்** - அளவு படுத்துதல். **நூல்** - இசைக்கலை நூல்கள். கந்தருவ வேதம் என்பர் வடவர்.

**பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு** - இவை வண்ணவகை. **வனப்பு** - வனப்பு வண்ணம். செய்யுளுக்கு வண்ணம் வனப்பாதல்போல, இசைநூலில் பண் ணுக்கு இவ் வண்ணவகைகள் கூறப்படும் எனவும் இவை இக்காலத்தரியன எனவும் கூறுவர் ஆறுமுகத்தம்பிரானர்.

**பெருவண்ணம்** - கெட்டெழுத்துக்களையே தொடுத்துப் பாடுவது எனவும், **இடை வண்ணம்** - இடையெழுத்து மிகுதி வருவது எனவும், **வனப்பு** வண்ணம் - எழுத்துக் கள் ஒன்றிலொடொன்று பிளவுபடாமல் இசைந்து அழகு பொருந்தியிருப்பது எனவும் கூறுப. இவை செய்யுட்டன்மை குறிப்பன.

**வண்ணம்** - சுண்ணம், சுரிதகம், **வண்ணம்,** வரிதகம் எனச் சொல்வகை நான் காம் எனவும், அவற்றுள் **வண்ணம்** நாலுன்கடியான் வருவதெனவும், அதுதான் ஒரு வகையான் - **பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ணம்** என மூன்று வகைப்படும் எனவும், அவற்றுட் பெருவண்ணம் ஆறுகவும், இடைவண்ணம் இருபத் தொன்றுகவும், வனப்பு வண்ணம் நாற்பத்தொன்றுகவும் (நாற்பத்தொன்பதாக என் றும் பாடபேதமுண்டு) வருமெனவும் கூறுப. (சிலப்-ஈ-அரங்-அடியார்க்கு நல்லாருரை பார்க்க). இதுவும் சொற்கூறுபாடு பற்றியதாம். " யாழுங் குழலுஞ் சீரும் " (சிலப் - அரங் - 26) என்ற இடத்துச் சீர் என்றதற்குச் " செம்முறை யுறழ்பே மெய்ந்நிலை கொட்ட, நீட்ட னிமிர்த்தல் " என்று சொல்லப்படா நின்ற வண்ணக் கூறுபாட்டை யும், இருவகைத் தாளக் கூறுபாட்டையும், பாலை நிலையினையும், பண்ணு நிலையினை யும் நிலைப்படுத்துத் தூய்தாகக் காட்டும் தன்மை ", " வண்ணம் - நிறம் " என்ற அடி யார்க்குநல்லாருரையும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. இது இசைக் கூறுபாட்டினைப் பற்றியதாம்.

**வண்ண இசை-இசை வகை எல்லாம்** என்றராகலின் இங்கு **வண்ணம்** என்றது யாப்பின் வகையாகிய சொற்கூறுபாடன்றி இசை ஓசைக் கூறுபாடு குறித்ததென்று கொள்ள இடமுண்டு. அன்றியும் " எழுத்தஞ்சும் தொடுத்த முறை ஏழிசையின் சுருதிபெற வாசித்து " (939), " எழுத்தைத்தும் வழுத்தித் தாம் முன்பூதி வரும் " (947) என்று கூறியவாற்றால் ஆளுய நாயனர் திருவைந் தெழுத்தாகிய மந்திரத் தினையே இசைச் சுருதிபெற வாசித்தனர் என்று கொள்ளக்கிடக்கின்றது.

ஆனல் " உள்ளுறை யஞ்செழுத்தாக " (954) என்றதனல் வண்ண இசைவகை களில் வைத்துத் திருவைந் தெழுத்தினை உள்ளுறையாகக் கொண்ட கீத இசை பாடி னர் என்று கொள்ளவும் இடமுண்டு. " பண்ணெண்ற விசைபாடும் ", " கீதத்தை மிகப்பாடும் ", " அளப்பில கீதஞ் சொன்னர்க் கடிகடா மருளு மாறே " என்ற தேவா ரத் திருவாக்குக்கள் ஈண்டுச் சிந்திக்கத்தக்கன.

**இசை** - 221 உரை பார்க்க. **மாதுரிய நாதம்** - மதுரத்தையுடையது மாதுரியம். வடசொல் முடிபு. **நாதம்** - இசை ஓசையின் அமைவு.

**பாணி** - தாளம் - 221 பார்க்க. **இயல்** - இராகம். **பாணி** - இராகம் எனவும், **இயல்** - மூர்ச்சனை எனவும் கூறுவாரு முண்டு.

**தூக்கு** - "பாடலும் பாணியும் தூக்கும்" (சிலப் - கூ. அரங் - 16) என்ற விடத்து தூக்கு என்பது "இத்தாளங்களின் வழிவரும் செந்தூக்கு, மதலைத் தூக்கு, அணி புத்தூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத்தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கு எனப்பட்ட ஏழு தூக்குக்களும் என்க. "ஒருசீர் செந்தூக் கிருசீர்மதலை, முச்சீர் அணிபு நாற்சீர் கோயில், ஐஞ்சீர் நிவப்பே அறுசீர்கழலே, யெழுசீர் நெடுந்தூக் கென்மனார் புலவர்" என்றாகலின்" என்று அடியார்க்கு நல்லார் உரைத்தவை பார்க்க. தூக்கு - ஏற்றம் என்பாரு முண்டு.

முதற்கதி - விளம்ப கதி என்ப.

**பண் அமைய எழும் ஓசை** - பண் 221 - உரை அடிக்குறிப்புப் பார்க்க. குழலினுள் எழிசையும் தோன்றும் என்றதனையும், இவற்றுட் பண் பிறக்கும் என்றதனையும், "சரிக மப தநி யென் றேழெழுத்தாற் ரூனம், வரிபாந்த கண்ணினுய் வைத்துத்—தெரிவரிய, **வேழிசையுந் தோன்று மிவற்றுள்ளே பண்பிறக்குஞ்,** சூழ்முத லாஞ் சுத்தத் துளே" என்றதனு லறிக.

பண்ணிசை யமைதியினையும் இசையிலக்கணங்களையும் இசைதான் மரபுப்படி மிடற்றுப்பாடலுக்கேற்றவாறு 221-ல் ஒருபாட்டாற் சுருக்கி எடுத்துக் கூறிய ஆசிரியர், அதனையே குழற்கருவியின் இசைக்கேற்றவாறு, இசைக்கூறுபாடுகளை, இங்கு 938, 948—953 வரை, இப்பாட்டுக்களான் விரித்துக் கூறுகின்றார். "யாழுங் குழலும் சீரு மிடறும்" (சிலப் - கூ - அரங் - 26) என்று முறைப்படுத்தியபடி யாழினோடு சேர்த்து மிடற்றுப்பாட்டுக்கு முன்வைத்து எண்ணப்படும் சிறப்பு வாய்ந்தது குழல்; யாழ் - குழல் என்ற இரண்டனுள்ளும், சொல்லை அவ்வாறே மழலையழகுபடத் தோற்றுவித்து இசைக்கும் சிறப்புப்பற்றிக் குழலினை முன்வைத்துக் "குழலினி தியாழினி தென்ப" என்று திருக்குறளினுட் பேசினர். அன்றியும் இச்சரிதம் குழலால் விளைந்த சிறப்புடையது. ஆதலின் விரிவு குழலினோடு புணர்த்திக் கூறினர் என்பதாம். இது பற்றியே ஆசிரியர் முன்னர் இசையிலக்கணத்தையும் அமைதியையும் சுருக்கிக் கூறியருளினர். இவ்வாறு பின்னர் ஏற்ற பெற்றி விரிக்கவேண்டிய பகுதியை முன்னர்க் கூற நேர்ந்தபோது சுருக்கிக் கூறுதல் ஆசிரியரது சிறப்பாகிய மரபுகளுள் ஒன்று- கருவியின் இசையியல்பை இங்கு விரிவுபடக் கூறினுராதலின், பின்னர்த் திருநீல கண்ட யாழ்ப்பாணர் பாடிய யாழினிசைபற்றிக் கூறவரும்போது இங்கு வகுத்தவற்றை யுட்படுத்திச் சுருக்கிக் கூறும் பொருத்தமும் காண்க. திருஞான - புரா - 134, 135, 136-லும், திருநீலகண்டயாழ்ப்பாணர் புராணம் 2-லும் கூறிய திறம் நோக்குக. முன்னர் மிடற்றுப்பாடல் இயல்பற்றி 221-ல் உரைத்தவற்றுள் குழற்கருவிக்கேற்ற வற்றை ஈண்டமைத்துக்கொள்க. 28

954. வள்ளலார் வாசிக்கும் மணித்துளைவாய் வேய்ங்குழலின்
உள்ளுறையஞ் செழுத்தாக வோங்கியெழு மதுரவொலி
வெள்ளநிறைந், தெவ்வுயிர்க்கும் மேலமார் தருவினேதென்
நெள்ளமுதி னுடன்கலந்து செவிவார்ப்ப தெனத்தேக்க, உங

955. ஆனிரைக ளறுகருந்தி யசைவிடா தணைந்தயரப்,
பானுளைவாய்த் தாய்முலையிற் பற்றுமிளங் கன்றினமுந்
தானுணவு மீறந்தொழியத், தடமருப்பின் விடைக்குலமு
மான்முதலாங் கான்விலங்கு மயிர்முகிழ்த்து வந்தணைய.

956. ஆடுமயி லினங்களுமங் கசைவயர்ந்து மருங்கணுக,
ஊடுசெவி யிசைநிறைந்த வுள்ளமொடு புள்ளினமு
மாடுபடிந் துணர்வொழிய, மருங்குதொழில் புரிந்தொழுகுங்
கூடியவன் கோவலருங் குறைவினையின் றுறைகின்றார். கக

954. (இ - ள்) வெளிப்படை. வள்ளலாராகிய ஆளுயர் வாசிக்கின்ற அழகிய தூளவாயினையுடைய வேய்ங்குழலிலே திருவைந்தெழுத்தினை உள்ளுறையாகக் கொண்டொழுக்கெடுத்துப் (எம்மருங்கும்) பெருகி எழுகின்ற மதுரம் பொருந்திய இசையொலியின் வெள்ளமானது நிறைந்து எல்லா வுயிர்களிடமும், மேலான வானத்தின் வாழும் தேவர்களது கற்பகமரத்தின் விளைந்த தேனினைத் தெள்ளிய அமுதத்தினுடன் கலந்து செவி வழியாக வார்ப்பதுபோல நிறைக்க, உக

955. (இ - ள்) வெளிப்படை. முன், புல்லருந்திய பசுக்கூட்டங்கள், பின் அசைவிடாமல் இவர் பக்கம் அணைந்து தம்மை மறந்து நிற்கவும், தாய்மூலையினைப்பற்றிப் பால் உண்டுகொண்டிருந்ததால் பால்நுரை கொண்ட வாயினையுடைய பசுக்கன்றின் கூட்டமும் பாலுண்ணும் தொழிலைத் தாம் மறந்தொழியவும், வலிய கொம்புகளையுடைய இடபக் கூட்டங்களும் மான் முதலிய காட்டு விலங்குகளும் மயிர் முகிழ்த்து வந்து பக்கத்தில் அணையவும், கூ

956. (இ - ள்) வெளிப்படை. ஆடுகின்ற மயிற் கூட்டங்களும் அசைவின்றி அங்குப் பக்கத்தில் வந்து அணையவும், காதுகளின் வழியே சென்ற இசை நிறைந்த உள்ளத்திலேறு பறவைக் கூட்டங்களும் பக்கத்திற் படிந்துவந்து தம்முணர்வு நீங்கவும், மருங்கே எவலுரிந்து ஒழுகும் கூட்டமாகிய வலிய கோவலர்களும் தாம் செய்த எவற்றொழில்களை முற்றச்செய்யாது இசைகேட்ட அம்மட்டிற் குறையாக விடுத்து நின்றனர். கக

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

954. (வி - ரை) வள்ளலார் - சராசரங்கட்கெல்லாம் இசையமுது தேக்கித் தங் கருணையின் மூழ்குமாறு அமுதளித்த வள்ளன்மை குறித்தது.

**தழலின் எழும் ஒலி** என்று கூட்டுக.

**உள்ளுறை அஞ்செழுத்தாக** - பண்ணிசைக்கு உள்ளுறைப் பொருள்வேண்டும். உள்ளுறை இல்லாத வெறும் பண்ணும், இராகமும், தாளமும் பயனிலவாம். இதனை உணராத இக்காண் மாக்கள் உள்ளுறையில்லாத வெறும் இராக தாள விலயங்களிலே மயங்கிப் பலவகைப்பட்ட இசையரங்குகளுட் சிக்கிச் செவிப்புலனின்பத்துக் கடிமைப்பட்டு ஒழிதலுடன் தமது அரியகாலத்தையும் பொருளையும் இழந்துபடுகின்றார்கள். இவ்வாறு ஐம்புலனின்பங்களில் ஒன்றாகி யொழியும் செவியின்பத்து ளாழ்ந்து கழியும் பிறவி, " ஓசையின் விளிந்த புள்ளுப் போலவும் " என்றபடி, வறிதே கழிந்து சாகும் பிறவியாகுமன்றி, உயிர் ஈடேறுதற்குச் சாதனமாகாது. " சொலவல வேதஞ் சொலவல கீதஞ் சொல்லுங்காற், சிலவல போலும் " (குறிஞ்சி - திருச்சிராப்பள்ளி - 8) என்று ஆளுடைய பிள்ளையார் அருளியபடி சொல்லத்தக்க கீதத்தினையே சொல்லுதல் வேண்டும். இங்குச் சராசரங்களை இசை மயமாக்கி யுருக்கியதும், ஆளுய நாயனாரைச் சிவபெருமானின் திருமுன்பு எப்போதும் வாசித்துக்கொண்டே யிருக்கப் பண்ணினதும் இசையின் உள்ளுறையாகிய திருவைந்தெழுத்தேயாகும். நோய் போக்கி உயிர் காக்கும் மருந்துக்குமேல் இனிய கட்டி பூசி உண்பிப்பதுபோலப், பிறவிநோய் நீக்கி உயிருக்கு மீளா இன்பம் தரவல்ல ஆதி மந்திரமாகிய சிவஞ்சாக்கரத்தினை உயிர்கள் இன்பமாரப் பருகுதற்கு, இசை, மேற்பொதியும் கட்டிபோல உதவியதே யன்றிப் பிறிதில்லை என்க.

**உள்ளுறை** - நெல்லினுள் அரிசிபோல, உள்ளே உறுகின்ற உண்மைப்பொருள்.

**அஞ்செழுத்து** - சீபஞ்சாக்கர மகாமந்திரம். மந்திரங்களுக் கெல்லாம் மூலமாகிய மந்திரம். "ஆதி மந்திர மஞ்செழுத் தோதுவார் கோக்கு, மாதி ரத்தினும் மற்றை மந்திரவிதி வருமே?" (திருஞான - புரா - 698) என்றது காண்க. "காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, யோது வார்தமை நன்னெறிக் குய்ப்பது" (ஆளுடைய பிள்ளை - கவுசிகம் - நமச்சிவாயத் திருப்பதிகம் 1), "தஞ்சலுந் தஞ்ச லிலாத போழ் தினும், நெஞ்சக நைந்து நினைமி னுடொறும், வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற், றஞ்ச வுதைத்தன வஞ்செழுத்துமே" (ஷி காந்தாரம் - பஞ்சாக்கரப் பதிகம் - 1); "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினு, நற்றுணை யாவது நமச்சி வாயவே" (அப்பர் - காந்தாரபஞ்சமம் - நமச்சிவாயப்பதிகம் - 1), "பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை, நண்ணினின் றறுப்பது நமச்சி வாயவே" (ஷி 3), "நன்னெறி யாவது நமச்சி வாயவே" (ஷி 9); "உனைநான் மறக்கினுஞ் சொல்லு நா நமச்சி வாயவே" (ஆளு - நம்பிகள் - பழம்பஞ் - 1) என்பனவாதி திருவாக்குக் களால், இதனை ஓதும் முறையும் பயனும் நமது பரமாசாரியர்களால் வற்புறுத்தி யருளப்பட்டமை காண்க. இன்னும் இதுபற்றி "விதி எண்ணுமஞ் செழுத்தே" (9-ம் சூத்) என்ற சிவஞானபோதத்தினுள்ளும், உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், கொடிக்கவி முதலிய வேனைய மெய்கண்ட சாத்திரங்களுள்ளும், திரு மூலர் திருமந்திரத்தினும், சிவாகமங்களினும் கண்டுகொள்க. இவை குருமரபின் அறிந்த அனுபவமுடைய ஞானதேசிகர்பால் கேட்டு அறிந்து உணர்ந்துகொள்ளத்தக்கன.

"இறவாதே வரம்பெற்றே னென்று மிக்க விராவணனே யிருபதுதோ ணெரிய வூன்றி, யுறவாகி **யினினைகேட் டிரங்கி** மீண்டே யுற்றபிணி தவிர்த்தருள வல்லான் றன்னை" என்ற திருநள்ளாற்றுத் திருத்தாண்டகத்தாலும், "இலங்கையர் கோனைத் தலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக், **குறிகொள் பாடலின் இன்னிசை** கேட்டுக் கோல வாளொடு ஈளது கொடுத்த, செறிவு" (தக்கேசி - புன்கூர் - 9) என்ற நம்பிகள் தேவாரத்தாலும், பிறவாற்றாலு மறியப்படுகின்றபடி கழுவாயில்லாத சிவாபராதமாகிய பெருந்தீமை தானும் சிவநாம இசையினாற் றீர்க்கப்படுவதென்றால் இத்தத் திருவைக் தெழுத்தி னின்னிசை என்னதான் செய்யாது? இதுபற்றி யன்றே "**ஈளை மின் னிசை யாற்றமிழ்** பரப்பு ஞான சம்பந்தர்" என்று இத்தன்மைபற்றி ஆளுடையபிள்ளை யாரை ஆளுடையநம்பிகள் துதித்தருளினர். (தமிழ் - சிவனுக்கு ஆட்படுத்தும் தமிழ்).

**தேன் தேள் அழுதினுடன் கலந்து** - என்பதற்குப் பொருத்த, ஓழுகி என்றும், **மதுர** ஓலி என்றும், **வேள்ளம்** என்றும் நாவின் சுவைப்புலனுகிய உருசி யின்பம்படக் கூறினர். ஓழுகி எழும் - முயற்சியானன்றி இயற்கையாய் ஒழுகி என்க.

**ஓலி வேள்ளம்** - முன்னர்ப் பரப்பினர் (953) என்றதனால் அவ்வாறு ஓலி அலை களாகப் பரப்பப்பட்ட இசை, நீரின் அலைகள் பரம்பரையிற் பரவிப் பெருகுதல்போல மேலும் மேலும் பெருகியது என்பதாம்.

**அமார்தரு** - கற்பக மரம். **தருவினேதேன்** - கற்பக மலர்களின் வினைந்து எடுக்கப் பட்டதேன். தருவின் பூவில் வினை எனற்பாலது தருவினை என்று ஆகுபெயராற் கூறப்பட்டது. **தேன்** தாவரங்களின் வினைவுகளுள் ஒன்றென்பது கூறப்பட்டதுடன். ஒவ்வோர்வகை மரஞ்செடிகளின் வினையும் தேன் அவ்வத்தாவரங்களின் குணமுடைய தாகும் நிலையும் குறிக்கப்பட்டது. வேம்புத்தேன் மருந்து வகையுட் சிறந்த குண முடையதா யெடுக்கப்பட்டதும், பிறவும் காண்க. **மேல்-மேலுலகினுள்ள** - மேலாகிய என்றலுமாம்.

**சேவி வார்ப்பீது** - செவியின்வழி வார்ப்பது. "மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான்" என்ற நால்வர் நான்மணிமாலை இப்பொருள் பற்றியது.

தேக்குதல் - வெளிப்படாது உள் நிறைதல். எவ்வுயிர்க்கும் தேக்க என்க.

வார்ப்பதேன - இனிமையும் பயனும் கலந்த செய்திக்குப் பயன்பற்றி வந்த உவமம். 29

955. (வி - ரை) ஆனிரைகள் - கன்றினம் - விடைக்குலம் இவற்றை இவ்வாறு இனம் பிரித்துப் பாதுகாவல் புரிந்ததுபற்றி 936-ல் உரைக்கப்பட்டதனை உன்னுக.

அறுகு - பசுக்களின் உணவில் அறுகு முதன்மைபெற்றதாதலின் அதனைக் கூறினாரேனும் இனம்பற்றி எனையவும் கொள்ளப்படும்.

அசைவிடாதணைந்து - உணவு அருந்திய ஆனிரை, பின் தனியிடத்திருந்து அவ்வுணவை மீளவும் கவளம் கவளமாக வயிற்றினிடமிருந்து வாய்க்குக் கொண்டுவந்து பலமுறையும் மென்று விழுங்கும். இவ்வாறு அசைவிடுதல் உணவு சீரணிக்க உதவுவதாம். இது கவர்குளம்புடைய தாவரஉணவு உண்ணும் உயிர்களுக்கு இயல்பாகும். இவை அசைவிடாவிட்டால் நோய்கொள்ளும். தாம் இயல்பாயும், இன்றியமையாமலும் செய்யவேண்டிய அசைவிடுதலேத்தானும் செய்யாமல் மறந்து என்க. ஆனிரைகளுக்கு அசைவிடுதலின் இன்றியமையாமைபற்றிக், கேட்ட பொருளைத் தனியிடத்திலிருந்து சிந்திக்கவேண்டிய தலைமாணாக்கர்க்கு அவற்றைப் புலவர் உவமித்துள்ளதும் காண்க. " அன்ன மாலை...அன்னர் தலை...மாணாக்கர் " என்பது சூத்திரம். அசைவிடாது என்றதற்கு இரை எடாது என்றுரைப்பாருமுண்டு.

அணைந்து - மேய்விடங்களினின்று குழலூதுமிடத்துக்கு வந்து. அயர - இசையின் மயங்கித் தம்மை மறக்க. (இசையினை) விரும்ப என்றலுமாம்.

பால் நுரைவாய்...கன்றினமும் - தாய்மூலைபற்றிப் பாலுண்டுகொண்டிருத்தலால் வாயில் நுரை பொருந்தும் கன்று. இயற்கைகவிற்சி அல்லது தன்மையணி.

உணவுதான் மறந்து ஒழிய என்க. உணவு - உண்ணும் தொழில். மறந்தொழிய - ஒரு சொன்னீர்மைத்தாய் மறக்க என்ற பொருளில் வந்தது.

தடமநப்பின் விடைக்குலம் - விடைக் கூட்டங்களின் வலிமை குறித்தது. " வென்றி விடைக்குலம் " (936) என்றது காண்க.

மான் முதலாம் கான் விலங்கு - கான் விலங்குகளில் மனிதருட் பெண்களுடனும் அன்புடன் பழகி உடன் வளர்வதில் முதலாக வைத்து எண்ணப்படுவதும், அழகுடையதும் மான் ஆதலின், மான் முதலாம் என்றார். " அன்புறு காதல் கூர வணையுமான் பிணைகளோடு, மின்புற மருவியாடு மெயிற்றியர் மகளிர் " (653) என்றது காண்க.

மயிர் முகிழ்த்தல் - இசையின் வசப்பட்டதனாலாகிய மெய்ப்பாடு. 30

956. (வி - ரை) ஆடும் மயிலினங்கள் - கார்கண்டபோது ஆடுதல் மயிலினங்களின் இயல்பு. எனைக் காலத்தும் காலையிலும் மாலையிலும் களிப்பு மிகுதியால் ஆடுவதும் இவற்றினதியல்பாம். " ஆலும் மயில்கள் கூவுங் குயில்கள் இன்சொற் கிளிப் பிள்ளை ", " வண்டுபாட மயிலால...நீலமொட் டலரும் கேதாரம் " (1) (செவ்வழி.) " வரைசேர் முகில் முழவ பயில்கள்பல நடமாட " (மேகராகக் குறி.) என்று இவற்றினியல்பை ஆளுடைய பிள்ளையார் அருளியது காண்க.

அசைவயர்ந்து வந்து அணைய - மயில்கள் ஆடுதல் தோகையை விரித்தும் ஒரு வகை அசைவுடனும் கூடியுள்ளது. அந்த அசைவினையும் விட்டு என்க. மயில்கள் தாமாக ஆடுதற்கேதுவாகிய மகிழ்ச்சியின் மிக்கதோர் மகிழ்ச்சியை இந்த இசை வெள்ளத்தாற் பெற்றனவாதலின் தமது ஆடலை விட்டு இசையின் வசமாயிர்க்கப்பட்டு இங்கு வந்தணைந்தன என்பது.

செவியூடேபுக்க இசை என்க. ஊடு...புள்ளினமும் - இசை உள்ளத்தில் நிறைதற்கான வழியைக் கூறியபடி. தோற்செவியுடையன, தூளைச்செவியுடையன

என்று பிராணிகள் இரண்டு வகைப்படும். முட்டையிற் பிறப்பனவாகிய புள்ளினம் துளைச் செவியுடையன என்பர். அவ்வாறு உள்ள துளைகளாகிய **செவியூடு** என்றபடியாம். ஆடும் மயில்கள் ஆடும்போது உண்மகிழ்வு நிறைவன ; ஏனைக் கிளி, குயில் முதலிய புள்ளினங்கள் எப்போதும் இணைபிரியாது பாடி மகிழ்ந்து பறந்து திரிவன. இப்படி மகிழ்வு நிறைந்த உள்ளமுடைய புள்ளினம் வெளியே நின்றும் செவியூடுபுக்கு நிறைந்த இசையுள்ளத்தினோடு என விரித்துரைத்துக்கொள்க. புள்ளினத்தின் மகிழ்வு நிறைவாந்தன்மைபற்றியே திருத்தோணிபுரம் (பண் - பழந்தக்கராகம்) தேவாரத்தினுள் " பெடையினொடு மொண்டரங்க விசைபாடு மளியரசே " என்பது முதலாகப் பதிக முழுதும் இப்புள்ளினங்களை விளித்து ஆளுடையபிள்ளையார் அருளியதும், இவ்வாறே திருவாரூர் (பண் - கொல்லி) " குருகுபாய " என்ற திருப்பதிகத்தினுள் " பறக்கு மெங் கிள்ளைகாள் பாடுமெம் பூவைகாள் " என்பது முதலாகப் பதிக முழுதும் புள்ளினங்களை விளித்து ஆளுடையநம்பிகள் அருளியதும் இங்கு உன்னுக.

**மாடு படிந்து உணர்வு ஒழிய - மாடு படிதல்** - தாம் பறந்தும் இருந்தும் உள்ள உயர்ந்த இடங்களினின்றும் ஆனாயர் குழலிசைக்கும் பக்கத்தே இறங்கியிருத்தல். **உணர்வு ஒழிதல்** - தம்முணர்வு மறத்தல் - மனிதர் கையிற் படாது தம் வயமாய்ப் பறந்து வாழும் இவை, தற்காப்பையும் மறந்து மனிதர் கையகப்பட்டுக் கொள்ளும் அளவில் படிந்து இருந்தன என்க.

**தொழில் புரிந்து...கோவலர்** - முன்னர்க், " கோவல ரேவல் புரிந்திட (937) " வினை செய்யும் காவல்புரி வல்லாயர் " (943), " எடுத்தகோ லுடைப்பொதுவர் தம் மருங்கு தொழுதணைய " (945) என்று கூறப்பட்ட இடையர்கள். இவர்கள் தமது தலைவராகிய ஆனாயரின் சொல்வழி, ஆனிரை, விடைக்குலம், கன்றினம் என்பவற்றைத் தகுதிபெற வெவ்வேறாக வேறு வேறிடங்களிற் கொண்டுய்த்து மேய்த்துக் காவல் புரிபவர்.

**குறைவினையின் துறை நின்றார்** என்றது தலைவர் ஏவியபடி தொழில் புரிந்த இவர்கள் அத்தொழில்களின் இடையில் குழலிசையில் ஈடுபட்டவர்களாய் அத்தொழில்களைக் குறைபட நிறுத்தி மருங்குவந்து நின்றனர் என்பதாம். **குறைவினையின் துறை** - செய்தொழில் முற்றுப்பெறாத நிலையில். இவர்கள் மேய்த்த ஆனினங்கள் மேய்தலை விட்டு வந்தணைந்தமையானும் இவர்களது தொழில் குறைவினையாய் நின்றதும் காண்க.

**கூடியவண்**—என்பதும் பாடம். 31

957. பணிபுவனங் களிலுள்ளார் பயில்பிலங்கள் வழியணைந்தார் ;
மணிவரைவா ழரமகளிர் மருங்குமயங் கினர்மலிந்தார் ;
தணிவிலொளி விஞ்சையர்கள் சாரணர்கின் னரரமரர்
அணிவிசும்பி லயர்வெய்தி விமானங்கண் மிசையணைந்தார். ௩௨

(இ - ள்) வெளிப்படை. நாகருலகங்களிலுள்ளவர்கள் தாம் முன்பு வந்து பழகிய பாதலப்பிலங்களின் வழியாய் இங்கு வந்து அணைந்தார்கள் ; அழகிய மலைகளில் வாழும் தெய்வ மகளிர்கள் இசையால் மயங்கினர்களாகி அம்மருங்கு வந்து மலிந்தனர் ; குறையாத ஒளியுடைய விஞ்சையர்களும், சாரணர்களும், கின்னரர்களும், தேவர்களும் தாந்தாம் வாழும் அழகிய ஆகாய நிலைகளிலிருந்து இசைவயப்பட்டவர்களாய்த் தம்மை மறந்து விமானங்களில் வந்து அணைந்தார்கள்.

(வி - ரை) **பணி** - பாம்பு. **பணிபுவனம்** - அத்தெய்வப் பகுதியினர் வாழும் உலகம். இது பாதலம் - கீழுலகம் - நாகருலகம் எனவும் வழங்கப்படும்.

**பயில் பிலங்கள் - பயிலுதல்** இங்கு மேலேறி வந்து பழகுதல் குறித்தது. **பயில் பிலம்** - (அவ்வாறு) பழகிய வழிகள். நிலத்தின் கீழே உள்ளனவாகக் கருதப்

படும் பாதல உலகங்களிலிருந்து மேலே நிலவுலகத்துக்கு வரும் வழிகளைப் பிலத் துவாரங்கள் என்பது வழக்கு. காஞ்சிபுரத்தில் பதுமமாநாகம் உறையும் பிலத்தி னிடைக் காமாட்சியம்மையார் எழுந்தருளியிருந்து சிவபெருமானைப் பூசித்துத் தவஞ் செய்த சரிதம் "அடிய னேனுறை பிலமத னிடையே, மன்னு கோயில்கொண் டருளு வாய்" (55) என்ற திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்துட் காண்க.

**மணி வரைவாழ் அமகளிர்** - **மணி** - மணிகளையுடைய என்றலுமாம். **அமக ளிர்** - ஓர் தெய்வச்சாதி மகளிர். மலைகளில் வாழ்பவர். 688 பார்க்க.

**மயங்கினர்** - மயங்கினராகி. முற்றெச்சம். மலைகளை யிடமாகக்கொண்டு வாழ்ப வர் அங்கு நின்றும் கீழிறங்கி மூல்லை உடுத்த இம்மருங்கில் வருதற்குக் காரணம் கூறிய வாறு. **மலிதல்** - கூட்டமாக நிறைதல்.

**தணிவில் ஒளி.....அமரர்** - **விஞ்சையர்** - வித்தியாதரர். **விஞ்சை** - வித்தை. **காரணர்** - இயக்கர். பதினெண்வகைத் தேவகணத்தவர்களுள் ஒரு சாரார். **கின்னரர்** - இசைவல்ல தேவகணங்களுள் ஒருவகையினர். **அமரர்** - தேவகணத்தொருவகை. இந்த நான்கு வகையினரும் தேவகணங்கள். (**திவ்** - ஒளி. **தேவர்** - ஒளியுடைய உடம்புடையவர்கள்). உடம்பின் இயல்பாகிய ஒளியாதலின் **தணிவில் ஒளி** என்றார். தணிவில் ஒளி என்பதனை இந்நான்கு வகுப்பினருடனும் சேர்த்துக. தேவகணங் களில் இசைவல்லோரும் ஆடியர் குழலிசையின் மயங்கித் தம்மை மறந்து விமானங் களில் வந்துஇறங்கினர் என்பது. இசையோர்க்கும் சிறப்புபற்றி நாகரை முன்கூறினர்.

**பணி புவனம்** - பாதலம் ; **மணிவரை** - நிலவுலகம் ; **அணி விசும்பு** - விண்ணுல கம் ; இதனுள் கீழ் - நடு - மேல் என்ற மூவுலகத்துள்ள தேவச்சாதியாரும் இவரது இசையின் மயங்கி யணைந்தமை கூறப்பட்டது. 284-ல் உரைத்தவை பார்க்க. "பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தார்" (திருவம்மானை - 2) என்ற திருவாசகமும் காண்க. 32

958. சுரமகளிர் கற்பகப்பூஞ் சோலைகளின் மருங்கிருந்து
கரமலரி னமுதூட்டுங் கனிவாய்மென் கிள்ளையுடன்
விரவுநறுங் குழலிலைய விமானங்கள் விசைந்தேறிப்
பரவியவே ழிசையமுதஞ் செவிமடுத்துப் பருகினர். ங.ங

(இ - ள்) வெளிப்படை - தேவமகளிர்கள் கற்பகப் பூஞ்சோலைகளின் பக்கத்தி லிருந்து மலர்போன்ற தமது கைகளால் அமுதூட்டும் கனி பொருந்திய வாயினை யுடைய மெல்லிய கிளிகளுடனே தமது கூந்தல் அலையும்படி தத்தம் விமானங்களில் விரைவாக ஏறிவந்து பரவிய ஏழிசை யமுதத்தினைப் பருகினர்கள்.

(வி - ரை) **சுரமகளிர்** - விண்ணுலகத்திலுள்ள தேவ மாதர்கள்.

**கற்பகப்பூ...கிள்ளையுடன்** - நறிய கற்பகப் பூஞ்சோலைகளில் அமர்ந்து தமது கைமலர்களால் ஊட்டி வளர்க்கின்ற கனிகளை உண்ணும் வாயினையுடைய கிளிக ளுடனே. "நிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனெடுப்போல், முறையாலே யுணத் தருவன்" என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரம் காண்க. தேனும் பாலும் கனி களும் முதலியவற்றைத் தாமே தம் கையில் வைத்து ஊட்டிக், கிளி பூவை முதலிய வற்றை வளர்த்தல் மகளிர் இயல்புகளுள் ஒன்று என்பது பழைய வழக்காலும் நூல் களாலும் அறியப்படும் உண்மை. "பூவைதந் தாள்பொன்னம் பந்துதந்தா னென்னைப் புல்லிக்கொண்டு, பாவைதந் தாள்பைங் கிளியளித் தாளின்றென் பைந்தொடியே" (குறிப்புரைத்தல் - 200), "என்னினை போயினள் யாண்டைய னென்னைப் பருத்தடு மென், றென்னினை போக்கன்றிக் கிள்ளையென் னுள்ளத்தை மீர்கின்றதே" (கிளி மொழிக் கிரங்கல் - 231) என்ற திருக்கோவையாராலும், பிறவாற்றாலும் அறிக.

ஆயின், இவ்வகை யின்ப அன்பு வழக்குக்களெல்லா மொழிந்து துன்ப வன்பு வழக்குக் கள் பலவும் மகளிர் போதுபோக்கும் தொழில்களாகக் காணப்படுவது இக்காலக் கொடு மைகளுள் ஒன்று.

**கற்பகப் பூஞ்சோலை மருங்கிருத்தல்** - அம்மகளிர் தமக்கும், தாம் வளர்த்தூட்டும் கிளிகளுக்கும் இன்பந் தருதற்குத் தக்க இடமாகக் கொண்டமை காட்டிற்று. **கரமல ரின்** - மலர்போன்ற கைகளால். முன்பின்னுகத் தொக்க உவமத்தொகை. மெய்யும் உருவும்பற்றிவந்த உவமை. **இன்** - கருவிப் பொருளில் வரும் மூன்றனுருபின்வந்தது. உருபு மயக்கம். கரமாகிய மலரின் ; உருவகம் என்றலுமாம்.

**அழநூட்டும் கனிவாய்** - கிளிகளுக்குக் கனிகளை ஊட்டுவதும், அவை அந்தக் கனிகளைத் தம் வாயாற் பற்றிக்கொள்ளுதலும் இயல்பு. கொவ்வைக் கனிபோன்ற வாய் என்றுரைப்பினுமமையும்.

**மென்கிள்ளை** - சிறிய பறவையாதலானும், பேச்சும் இயலும் மென்மையுடையன வாதலானும் மென்கிள்ளை என்றார். விண் மாதர் கிள்ளைகளுடன் வந்தனர் என்க. நறிய கற்பகப் பூஞ்சோலையின் நறுநீழலில் அமர்ந்து மென்கிளிகளை அமுதூட்டி அவற் றின் இனிய மொழி கேட்டு மகிழ்ந்த இன்பத்தினும் மேலாய் இக்குழலிசையினை விரும்பி வந்தனர் என்பதாம்.

**குழல் அலைதல்** - வருகையின் விரைவினால் ஆகியது. " விரைந்தேறி " என் றது காண்க.

**விரைவு** - இசையின் வசப்பட்டு அதனைப் பருகும் ஆர்வங் குறித்தது. " வாரி சையு முலைமடவார் மாளிகையின் சூளிகைமேல் மகப்பா ராட்டக், காரிசையும் விசும் பியங்குங் கணங்கேட்டு மகிழ்வெய்துங் கழுமலமே " (4), " பண்ணமரு மென்மொழி யார் பாலகரைப் பாராட்டு மோசை கேட்டு, விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தோ டும்மிழியும் மிழலை யாமே " (பண் மேகராகக் குறிஞ்சி 10) என்ற ஆளுடையபிள்ளை யார் தேவாரங்கள் இங்கு நினைவு கூர்தற்பாலன. மண்ணினல்லோர் பரவிய எழிசை இறைவனது புகழை உள்ளுறையாகக் கொண்டிருந்தமையானும், இவை தேவருலகத் துக் கேட்கப்படுதலில்லை யாகலானும் விண்ணவரும் இவற்றின் வயப்பட்டு இங்கு வரு தல் இயல்பென்க.

**பரவிய** - சிவபெருமானது திருவைந்தெழுத்தை உட்கொண்டு பரவிய. மண் ணுலகமேயன்றிப் பாதலமும் விண்ணுலகமும் பரவிய என்றலுமாம். " எம்மருங்கும் பரப்பினர் " (953), " வையத்தன் னெயுநிறைத்து வானுந்தன் வயமாக்கி " (962) என் பவை காண்க.

33

**விரவநறுங்**—என்பதும் பாடம்.

959. நலிவாரு மெலிவாரு முணர்வொன்றுய் நயத்தலினுன்,
மலிவாய்வெள் ளெயிற்றரவ மயின்மீது மருண்டுவிழுந் ;
சலியாத நிலையரியுந் தடங்கரியு முடன்சாரும் ;
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும். கூச

(இ - ள்) நலிவாரும்...நயத்தலினால் - வருந்தச் செய்கின்றவர்களும் அதனால் வருந்துகின்றவர்களும் கொண்ட உணர்ச்சி ஒன்றுக நயப்பாடு உற்றமையினால் ; மலி வாய்...விழும் - வாயில் மலியும் வெள்ளிய பற்களையுடைய பாம்பு இசையான்மருட்சி யடைந்து (தன் பகையாகிய) மயிலின்மேல் விழும் ; சலியாத...சாரும் - சலித்த லில்லாத நிலையினையுடைய சிங்கமும் பெரிய யானையினுடன் சார்ந்து வரும் ; புலி வாயின்...புல்வாய புல்வாயும் - புலியினது வாயின் பக்கத்தில் புல்லெவாயிற் கொண்ட மானும் அணையும்.

(வி - ரை) நலிவார் - கலியச் செய்பவர் - துன்பம் விளைவிப்பவர். கலிவிப்பார் எனப் பிறவினையாகக் கொள்க. மெலிவார் - மெலியப்படுவோர். துன்பம் செயப் படுவோர். செயப்பாட்டு வினைமுறையே விவ் விகுதியும் படு விகுதியும் தொக்கன ; உணர்ச்சி வேற்றுமை நீங்கியது குறித்தற்கு. (விகிருதி - வேறுபாடு)

**உணர்வு ஒன்றுய் நயத்தலாவது** - 'நாம் வலியோம் - இது வலியிலது - இது நமக்கு இரையாவது - இதனைக் கொல்வோம்' என்றும், 'நான் வலியில்லேன் - இதற்கு நான் இரையாவேன் - இது என்னைக் கொல்லும்' என்றும் இருபாலிலும் பகை உறவு என்ற தமது இயல்பாகிய உணர்ச்சி மறந்து, உள்ளத்தில் இசைகிறைதலால் இருபாலிலும் இசை ஒன்றேயாகிய ஒருணர்வுடையனவாகுதல். ஒன்றற் கொன்று பகையாகிய பாம்பும் மயிலும், அரியும் கரியும், புலியும் மானும் உடன்சார் தற்குரிய காரணத்தை விளக்கிக் காட்டியவாறு. இவ்வியல்பு எங்கும் கண்கூடாகக் காணத்தக்கது. மாணிக்கவாசகசுவாமிகள் தில்லைவனத்தில் சிவயோகம் பயின்று தவஞ் செய்திருந்தபோது பிராணிகள் வந்து அவரிடம் கூடின என்று "மானினையுங் குயவரியும் வந்தொருங்கு நின்றுநிஞ்ச மயங்கு கானத், தானினைகன் றெனவிரங்கி மோந்து நக்க வானந்த வருட்கண் ணீரைக், கானினைபுள் ளினம் பருக" (திருவிளை - புரா - மண் - பட - 96) எனக் கூறியதும் இக்கருத்தே பற்றியது.

**வாய் மலி வெள் எயிறு** என்க. பாம்பின் வாயினுட் பல பற்கள் உண்டு. அவற் றுள் நான்கு, விடத்தினை உகுக்கும் குழாய்போன்ற உள்துளையுடைய வெள்ளிய கூரிய பற்கள்* "தூம்புடைவால் எயிற்று அரவு" (திருமுருகாற்றுப்படை)

**அரவழும் மயிலும்** - பகைமைபூண்ட பிராணிகள். மயில் பாம்பினைக் காணிற் கொத்திக் கிழித்துக் கொன்றுவிடும். "மஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும், பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கு" என்பது திருக்கோவையார் (21).

**கலியாத நீலை அரி** - காட்டு விலங்கினங்களுக்கெல்லாம் தலைமை பூண்டது சிங்கம். அதனது அசைவில்லா வீரத்தைக் குறிக்கச் **கலியாத நீலை** என்றார்.

**புல்வாய** - புல்லைவாயிலே யுடையனவாகிய - புல் மேய்ந்து கொண்டிருந்த-மான் கள் மேலும் மேய்ந்து வயிறு நிறைத்துக் கொள்வதனை விடுத்து அங்கிலையிற் சில புல்லை வாயிற்கொண்டபடியே என்றதாம். "பானுரைவாய்த் தாய்முலையிற் பற்றுமினங் கன்றினமும்" 955) என்றது காண்க. "செவிக்குண வில்லாத போழ்து சிறிது, வயிற் றுக்கு மீயப் படும்" (குறள்). என்ற உண்மை இவ்விலங்கினங்களானும் விளக்கப் பட்டது போலும். **புல்வாய்** - சிறிய வாயினையுடைய என்பாருமுண்டு. 34

960. மருவியகால் விசைத்தசையா; மரங்கண்மலர்ச் சினைசலியா ;
கருவரைவீ ழருவிகளுங் கான்யாறுங் கலித்தோடா ;
பெருமுகிலின் குலங்கள்புடை பெயர்வொழியப் புனல்சோரா ;
இருவிசும்பி னிடைமுழங்கா ; வெழுகடலு மிடைதுளும்பா. கூ

(இ - ள்) வெளிப்படை. பொருந்திய காற்று விசையாக அசையா ; மரங்களின் மலர்பொருந்திய கினைகள் அசையமாட்டா ; கரியமலையினின்றும் வீழ்கின்ற அருவி களும் காட்டாறுகளும் சத்தித்து ஓடமாட்டா ; பெரிய முகிற்கூட்டங்கள் புடை பெயர்ச்சியை ஒழிந்து மழை நீரைப் பெய்யமாட்டா ; ஆகாயத்தினிடை முழக்கம் செய்யமாட்டா ; ஏழு கடல்களும் துளும்பமாட்டா.

(வி - ரை) **மருவிய காலி** - கட்புலப் படாமல் பொருந்திய காற்று. வடக்கி னின்றும் வந்து பொருந்திய என்றலுமாம். **விசைத்து அசையா** - தமக்கியல்பாயுள்ள இயக்கத்தின் வேகத்தில் அசையா ; **அசைதல்** இயங்குதல். இது காற்றின் இயல்பு.

*இதுபற்றி எனது "சேக்கிழார்" 100—104 பக்கங்கள் பார்க்க.

**மாங்கள் மலர்ச்சினை கலியா** - இது காற்று விசையில் அசையாத காரணத்தால் வருவது. மரங்களும் இசை வயப்பட்டுச் சலியாது நின்றன என்றலுமாம். **கலித்தல்** - அசைதல். " சராசரங்களெல்லாம் தங்க " (939), "நிற்பனவும் (சரிப்பனவும்) இசைமய மாய் " (961) என்றவை காண்க.

**வரைவீழ் அருவிகளும் கான்யாறும் கலித்து ஓடா** - வரையின்வீழ் அருவிகள் மேலிருந்து கீழ்நோக்கி வருதலால் மிக்க வேகமாக வீழ்வன. " பள்ளத்தா ழுறுபுன லிற் கீழ்மே லாகப் பதைத்து " என்பது திருவாசகம். மேனின்று கீழ் வீழ்வதனுடன் மலைக் கற்களின் மோதுண்டு அவற்றினிடுக்குகளில் வருதலாலும் இவை மிக்க ஓசை செய்யும். இங்கு இசையின் காரணமாக இவையும் ஓசையின்றி மெல்லென ஓடின என்பது. **கலித்தல்** - சத்தித்தல். நீரோட்டங்களும் ஓசையின் காரணமாகச் சுரந் தோடுதலும் சுரவாமற் றூம்த்தலும் செய்வன என்பது இன்றும் காணத்தக்கது. கோயமுத்தூர்ச் சில்லா வெள்ளிமலைச் சாரலில் நீர் ஊற்றுகியோடும் பல சுனைகளுள் கைதட்டிச் சுனை என்பதொன்றுண்டு. இது கைதட்டி விளித்து ஓசை செய்யின் அப்போது சிறிது அதிகமாக நீர்சுரக்கு மியல்புடையது.

**முகில்கள் புடைபெயர் வொழிய** - இசையின் றன்மையாலும் முகில்களும் புடை பெயர்ச்சி ஒழிந்து என்க. **புடைபெயர்ச்சி** - ஓரிடத்தினின்றும் பிறிதோரிடம் பெயர்வதும், பல இடங்களினின்றும் போந்து செறிந்து கூடுதலுமாகிய அசைவுகள். " வாயுமிகச் சலித்தெவையும் திரட்டும் " (சிவப்பிரகாசம் - 27), " வண்கால் பரந்து சலித்துத் திரட்டும் " (உண்மை விளக்கம் - 9) என்றபடி காற்றுச் சலித்தலினால் மேகங்கள் திரட்டப்படுவன. கால் விசைத்தசையா என்றதனாலும் **முகில்கள் புடை பெயர் வொழிந்தன** என்பதாம்.

**புனல் சோரா** - மழைநீர் பெய்தல் இல்லை. **சோர்தல்** - வீழ்தல் - பெய்தல்.

**விசும்பினிடை முழங்கா** - முகில்கள் தம் சேர்க்கைகூர உளவாக்கும் இடி முத லிய முழக்கங்களையும் ஆகாயத்திற் செய்யாவாயின. முகில்கள் புடைபெயர் வொழியவே புனல் சோர்தலும் அதுகாரணமாக மின்சாரம் கூர்தலும் வானிடை முழங்குதலும் இலவாயின. இசையின் வசப்பட்ட முகில்களும் அசைவற்று நின்றன என்பது.

**கடலும் இடைதுளும்பா** - காற்று விசைத்தசையாமல் நின்றதனால் கடலும் இசைவசப்பட்டுத் துளும்பாது அலையின்றி நின்றது என்பது. 35

961. இவ்வாறு நிற்பனவுஞ் சரிப்பனவு மிசைமயமாய்
மெய்வாழும் புலன்கரண மேவியவோன் றூயினவால்
மொய்வாச நறுங்கோன்றை முடிச்சடையா ரடித்தோண்டர்
செவ்வாயின் மிசைவைத்த திருக்குழல்வா சனையுருக்க. கஉ

**(இ - ள்)** மொய்வாச...உருக்க - மொய்த்த வாசனையுடைய நறிய கொன்றை மலரைச் சூடிய முடிச்சடையுடைய சிவபெருமானது அடித்தொண்டராகிய ஆனாயர் சிவந்த வாயின் வைத்து வாசித்த திருக்குழல் வாசனை உட்புகுந்து உருக்குதலினால், இவ்வாறு அசரங்களும் சரங்களும் இசைமயமேயாகித் தமது மெய்யும் அதில் வாழும் புலன்களும் காரணங்களும் இசையாகிய ஒரு தன்மை யடைந்தன.

**(வி - ரை) நிற்பன - சரிப்பன** - " சராசரங்களெல்லாம் " (939) என்றது காண்க. **நிற்பன**வாகிய உயிர்வகைகள் ; தாவரம் எனப்படுகின்ற மரம் செடி கொடி முதலியன. " மரங்கள் மலர்ச்சினை சலியா " (960) என முன்னர்க் கூறியது காண்க. **சரிப்பன** - இயங்கும் உயிர்வகை. இவை 955 முதல் 959 வரை கூறப்பட்டன.

**மெய்வாழும்.....ஈன்றுயின** - முன்னர் " உணர்வொன்றுய் நயத்தலினால் " (959) என்றது காண்க. **மெய்வாழும் புலன்கரணம்** - மெய்யும், அதில் வாழும் பொறி

களும், அவற்றை இயக்கும் காரணங்களும் என்க. மெய்யினைப் புலன்கள் இயக்க, அப் புலன்களை உட்காரணங்கள் இயக்க, அவற்றை உயிர் உணர்வு இயக்கும் என்பர். முன்னர் வாயிற்காட்சியுணர்வு தோன்றிப், பின் மானதக்காட்சியுணர்வு தோன்றி, அதன் பின்னர்த் தன்வேதனையுணர்வு உயிரின்கண் வந்து தோன்றும் எனவும், இதுவே பரம்பரையில் உணர்வு தோன்றும் முறையாம் எனவும், சிவஞானமாபாடியம், 4. சூத், " மனமாதி " என்ற உதாரணவெண்பாவின் கீழ் உரைத்தவை பார்க்க.

**மேவிய ஒன்றுயின** - ஒன்று - ஒன்றே. தேற்றமும் பிரிநிலையும் குறித்த ஏகாரம் தொக்கது. உள்ளே வந்து பொருந்தி நிறைந்த இசையுணர்வாகிய ஒன்றேயாயின. இவற்றின் அமைதிப்பற்றி 251—252 திருப்பாட்டுக்களின் கீழ் உரைத்தவை பார்க்க. **ஆல்** - அசை. ஒன்றுய் மேவினவால் எனக் கூட்டி, இயக்குதல் இயக்கப்படுதல் என்னும் வேறுபாடின்றி ஒன்றுய் மேவின என்றலுமாம்.

**உருக்க** - **ஒன்றுயின** - என்று கூட்டுக. **உருக்க** - உருக்கியதனால். காரணப் பொருளில் வந்த வினையெச்சம். **அடித்தொண்டர்** - சடையாரின் திருவடியிலே பதிந்த அன்புடன், மன முதலாயின மூன்று காரணங்களாலும் " அடியல்லது பேணுதார் " (934). **மோய்வாக...அடித்தொண்டர்** - ஆளுயர், செழுங்கொன்றை மருங்கணைந்து (945), சடையார்போல் நின்ற அக்கறுங்கொன்றையினை நோக்கி நின்றுருகி (946), அதனை உடையவராகவே கண்டு, அன்பு மடைதிறந்தாராதலின் அக் குறிப்புத் தோன்ற இவ்வாறு **கொன்றை முடிச்சடையார்** எனக் கூறினர். இங்கு கொன்றை நீழலில் நின்று அன்புமடை திறந்து இசைபெருக்கிய ஆளுயர், சடையாரின் திருவடி நீழலில் தாம் அமர்ந்திருப்பதாகிய ஒன்றிய சிந்தையினர் என்பார் **சடையார்** - **அடித்தொண்டர்** என்று கூறினர்.

**தொண்டர் செவ்வாயின்** - சுந்தரச்செங்கனிவாயும் தூவாயும் தொடக்குண்ணவைத்து ஊதியதனை (952) **மிசைவைத்த** என்றார்.

**வாசனை** - வாசித்தல். வாசித்து (939), குழல் வாசனை (937, 965). உருக்கிய தனால் புலன்காரணம் ஒன்றுயின. ஒன்றுயினதன் விளைவை மேல் உரைக்கின்றார். 36

962. மெய்யன்பர் மனத்தன்பின் விளைந்தவிசைக் குழலோசை
வையத்தன் னியுநிறைத்து வானுந்தன் வயமாக்கிப்
பொய்யன்புக் கெட்டாத பொற்பொதுவி னடம்புரியும்
ஐயன்றன் திருச்செவியி னருகணையப் பெருகியதால். கூஎ

**(இ - ள்)** வெளிப்படை. மெய்யன்பரது அன்பினால் விளைந்த குழலினது இசையோசையானது இந்த உலகத்தையும் நிறைவித்து வானுலகத்தினையும் தன் வசமேயாகச் செய்து, பொய்யன்பினுக்கு எட்டாதவரும், பொன்னம்பலத்தினில் திருக்கூத்து இயற்றுகின்றவரும் ஆகிய ஐயாது திருச்செவியின் பக்கத்தில் அணையும்படி பெருகிற்று.

**(வி - ரை)** மெய்யன்ப ராதலின் அவரது மனத்து அன்பின் விளைந்த குழலோசை ஐயர் செவியினருகணையப் பெருகியது என்பது குறிப்பு. இதனையே வலியுறுத்துவார் **பொய்யன்புக்கெட்டாத** என்று எதிர்மறை முகத்தானும் கூறினர்.

**குழல் இசை ஓசை** - என்க. இசை ஓசை - **நிறைத்து** - **வயமாக்கி** - அணையப் பெருகியது என்க.

**வையத்தை நிறைத்தல்** - 955, 956, 959, 960 பாட்டுக்களினும், **வானத்தை வயமாக்குதல்** 957, 958 பாட்டுக்களினும் கூறினர். **திருக்செவியினருகணையப் பெருகிய தன் விளைவு** மேல்வரும் மூன்று பாட்டுக்களானும் கூறுவார்.

**நிறைத்து - வயமாக்கி - பெருகுதல்**-என்ற தொழிற்பாடுகளின் உள்ளுறை குறிக்கத்தக்கது. தூல சூக்கும காரணகிலகளுக்கேற்றவாறு கூறியது கண்டுகொள்க. புடை

பெயர்ந்து ஒன்றை யொன்று பரம்பரையிற் றொடர்ந்து சென்று மறைவது ஒலியலை களின் இயல்பு. நீரினுட் போகட்டதொரு கல்லினால் முதலில் அதனைச்சுற்றி மூண்ட அலைகள் உளவாம். பின் அவற்றைத் தொடர்ந்து தளர்ந்த அலைகள் உளவாம். பின்னர் அவ்வாறு மெலிந்து கொண்டே சென்று இறுதியில் ஒன்று மசையாமை போல அவை மிக மெலிந்து காணப்படும். அது போலவே ஒலியலைகளும் உண் டாகும் இடத்தினின்றும் மேன்மேற் கிளம்பிச் சென்று சென்று இறுதியில் அதி சூக்குமமாகிய காரணத்தில் ஒடுங்கும். இங்கு ஆனாயர் குழலிசை ஓசை முதலிற் தூல மாகிய ஒலியலைகளாக எம்மருங்கும் பரவி வையத்தை நிறைத்து, அதன்பின் சூக்கும ஒலியலைகளாக மேற்பரவி வானத்தைத் தன் வயமாக்கி, அதன்மேல் அதிசூக்குமமாகிய காரண ஒலியுருவில் ஐயர் திருச்செவியின் அருகு அணையும்படி பெருகியது. அலைகள் முதலில் காற்புறமும் சுருங்கக் கிளம்பிப் பின்னர் மேன் மேல் விரிவாகப் பெருகு மியல்பு பற்றிப் பெருகியதால் என்ற குறிப்பும் காண்க. முன்னர் " எம்மருங்கும் பரப் பினார் " (963) என்றதும் நினைவு கூர்க.

இஃது எல்லாக் குழலோசைகட்கும் எல்லா ஓசை ஒலிகட்கும் இயல்பாமே ? எனின், அற்றன்று ; பூதசம்பந்தமாய் வையத்தன்னை நிறைத்த மட்டில் நின்று ஒழியும் ஏனைத் தொனியான்மக ஓசைகள் போலல்லாமல் இஃது அஞ்செழுத்தை உள்ளுறை யாகக் கொண்டொழுகிய வாஞ்ஞான்மக ஓசையானதால் ஐயன் திருச்செவியி னருகணையப் பெருகியதென்க.

ஆனாயரது குழலிசை இம்மை, மறுமை, வீடு என்னு மூன்றினையும் தரவல்லதா யிற்றென்பதாம். வைய நிறைத்ததனால் இம்மையும், வானம் தன்வயமாக்கியமையால் மறுமையும், ஐயன்திருச் செவியினருகணைதலால் வீடும் அளிக்கவல்லதாயினமை கூறப்பட்டது. இறைவனைப் பாடுதல் இம்மூன்று பயன்களையும் அளிக்கவல்ல தென்பது " எத்தை புகலூர் பாடுமின் புலவீர்காள், இம்மை யேதருஞ் சோறுங் கூறையும் ; ஏத்த லாமிடர் கெடலுமாம், அம்மை யேசிவ லோக மாள்வதற் கியாது மையுற வில்லையே " (பண் - கொல்லி - திருப்புகலூர் - 1) என்ற ஆளுடைய சம்பிகள் திருவாக்கா னறிக.

**போய்யன்புக் கேட்டாத - ஐயன் -** எனக் கூட்டுக. " பொக்க மிக்கவர் பூவு நீருங் கண்டு, நக்கு நிற்ப னவர்தமை நாணியே " என்பது தமிழ்மறை. ஐயனது **போற்போது** என்றது மெய்ஞ்ஞானமேயான அம்பலத்தை. **எட்டாத போற்போது** என்று கூட்டி உரைத்தலுமாம். **போற்போது** - பொன்னம்பலம்.

**மெய் அன்பு** - மன மொழி மெய் என்ற மூன்றனும் சிவபெருமானை யல்லாது வேறொன்றினையும் பற்றாத அன்பு. அங்ஙன மல்லாது தம்மையும் உலகையுமே பற்றுக்கோடாகக் கொண்டு செலுத்தும் அன்பு **போய்யன்பாம்.**

**ஐயன் திருச்செவியி னருகணையப் பெருகுதலாவது** கீழுள்ள தத்துவங்களை யெல் லாம் கடந்து சுத்த தத்துவத்தில் விளங்கும் இறைவனிடமும் செல்லும்படி வியா பித்தல்.

ஆயின், " சகஸ்ர சீர்ஷாத் புருஷ சகஸ்ராட்ச சகஸ்ரபாத் " எனவும், ஆயிர ஞாயிறு போலு மாயிர நீண்முடி யானும் " (அப்பர் சுவாமிகள் - காந்தாரம் - திரு வாரூர் - 8) எனவும், " ஆயிரங் கமல ஞாயி ருயிரமுக் கண்முக கரசர ணத்தோன் " (திருவிசைப்பா - சேந்தனார் - வீழி - 8) எனவும், " எங்கும் திருமேனி " (திருமூலர்) எனவும், " எங்கணும் பணிவதனங்கள் " (கந்தபுரா) எனவும் " எங்குஞ். செவியுடை யாய் " (திருவீழி - புரா - ) எனவும் வரும் திருவாக்குக்களா லறியப்படுகின்ற படி எங்கும் நிறைந்து, எல்லாம் கேட்பது இறைவனது தன்மையாதலின், இங்கு " ஐயன் திருச்செவியி னருகணையப் பெருகியது " என்ற தென்னையோ ? எனின், " அவன் மற்றிவ்விடங்களிற் பிரகாசமாய் நின்றே அல்லாதவிடத்து அப்பிரகாசமாய்

நிற்றலான்" (சிவஞானபோதம் - 12 சூத். 3 அதி) என்ற எதுவை விளக்குவாராகி, அம்முதல்வன் யாங்கணும் வியாபகமாய் நிற்பினும் இவ்விரண்டிடத்து (பத்தாது வேடமும் சிவாலயமும்) மாத்திரையே தயிரின் நெய்போல விளங்கி நிலைபெற்று, அல்லுழியெல்லாம் பாலினெய்போல வெளிப்படாது நிற்றலான்" என்று எமது மாதவச் சிவஞான சுவாமிகள் சிற்றுரையினுள் உரைத்தது கொண்டு இஃது அமைவு படுத்திக்கொள்ளத்தக்கது.

அன்பின் வீளைந்த இசையாதல் பற்றியே, இறைவரும், இது கேட்டவுடன் வெளிப்பட்டுவந்தனர் என மேல்வரும் பாட்டிற் கூறுதலும் கருதுக.

**தீநுச்செவி** - என்பது அரன்றன் கரசரணுதி சாங்கமெல்லாம் அருளே என்ப; ஆதலின் 'சிவனடி சென்னி வைப்பாம்' என்பது போல உபசாரம். இறைவனுக்கு அருளே திருமேனியாம். அத்திருமேனியில் கண் செவி முதலாகிய அவயவப் பகுப் பெல்லாம் அருளே. இக்கருத்துப்பற்றியே "இத்தன்மை நிகழ்கா ளிவர்திருத் தொண் டிருங்கயிலை, யத்தர் திரு வடியிணைக்கீழ்ச் சென்றணைய வவருடைய, மெய்த் தன்மை யன்புநுகர்ந் தருளுதற்கு விடையவர்தாஞ், சித்தநிகழ் வயிரவராய்த் திரு மலைகின் றணைகின்றார்" (25) என்று சிறுத்தொண்டநாயனார் புராணத்துட் கூறுதலும் காண்க. 37

963. ஆனையர் குழலோசை கேட்டருளி யருட்கருணை
தானைய திருவுள்ள முடையதவ வல்லியுடன்
காளைதி காரணராங் கண்ணுதலார் விடையுகைத்து
வானுறு வந்தணைந்தார் மதிநாறுஞ் சடைதாழ. கஅ

**(இ - ள்)** வெளிப்படை. ஆனையாது குழலிசை ஓசையினைக் கேட்டருளி, அருட் கருணையேயாகும் திருவுள்ளத்தினையுடைய தவவல்லியாகிய உமையம்மையாருடனே கூட இசைக்கெல்லாம் முதற்காரணராகின்ற கண்ணுதலையுடைய சிவபெருமான், விடையின்மேல் எழுந்தருளிப், பிறைமூளைத்தற்கிடமாகிய சடை தாழுமாறு வானவீதி வழியே வந்து அணைந்தனர்.

**(வி - ரை) அருட்கருணை...தவவல்லி** - உமையம்மையார். சிவமும் சத்தியும் தீயும் சூடும் போலக் குண குணியாய்ப் பொருந்திய ஒரே பொருள் என்பதும், அருளே சத்தி யாம் என்பதும் உண்மைநூற் முணிபு; ஆதலின் **வல்லியுடன்** என்றும், **கருணைதான் ஆய** என்றும் கூறினர். தானே ஆகிய என்க. பிரிநிலை யேகாரம் தொக்கது. "அரு ளுண்டாம் ஈசற் கதுசத்தி" என்பது சிவஞானபோதம்.

**அருட்கருணை** - சிவனது திருவருட் பெருமையைத் தமிழ்மொழி வழக்குப்பற்றி விளக்குவார் **அருள்** என்றும், வடமொழி வழக்குப்பற்றி விளக்குவார் **கருணை** என் றும் கூறினர். "ஒரு பொருட் பன்மொழி சிறப்பினின் வழா" என்ற விதிப்படி மிக்க பேரருள் குறித்த தென்றலுமாம். "அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி" (குமரகுருபரர்) என்றதும் காண்க. கருணை பாசநீக்கமும், அருள் சிவப்பேறும் தருவன என்று இங்கு விசேடவுரை காண்பாருமுண்டு.

**தானைய திருவுள்ளம்** - முற்றும் அருளேயாகிய திருவுள்ளம். அத்திருவுள்ளத்தில் நிகழ்வன அருளேயன்றிப் பிறிதில்லை என்பது. "உருவருள்" (1. 47) என்ற சிவ ஞானசித்தியார்த் திருவாக்கும், "அருளே யன்றி மற்றப் புகன்றவையும் அரு ளொழியப் புகலொணுதே" (18) என்ற சிவப்பிரகாசமும் இங்கு நினைவு கூர்க.

**தவவல்லி** - தவமாவது சிவபூசை என்பதனை உயிர்கள் அறிந்து சிவபூசை செய்து உய்யும் பொருட்டுத் தவஞ்செய்து காட்டினர் என்றது குறிப்பு. **வல்லி** - கொடிபோல் வார். மெய்ப்பற்றி வந்த உவமஆகுபெயர். கொடி கொம்பினைப்பற்றி நிற்பதுபோலச்

சிவத்தைப்பற்றி நிற்பது அவரது அருளாகிய சத்தி என்க. இங்கு ஆனாயருக்கு அருள் செய்து தம் அருகு இருக்கும் நிலையைத் தர வருகின்றாதலின் கருணை வல்லியுடன் விடையுகைத்து வருகின்றார். முன் உரைத்தவை பார்க்க.

**கான ஆதிகாரணர்** என்பது காணத்தி என வந்தது தீர்க்க சந்தியென்ப. கானம் நாதத்தைப்பற்றிப் பிறக்கின்றது. சூக்குமகாரணமாகிய நாதத்தைத் தமக்குத் திருமேனியாக உடையவராதலிற் சிவபெருமான் கானத்துக்கு ஆதிகாரணராவர் என்பது கருத்து. எவ்வகைக் கீதத்துக்கும் வேதத்துக்கும் பிரணவம் காரணம். சிவபெருமான் பிரணவ சொரூபன் ; ஆதலானும் ஆதிகாரணர் என்றார். "ஈசான : சர்வ வித்யானம்" என்ற பதிவாக்கியத்தாலறியப்படுகின்றபடி கானம் முதலிய எல்லா வித்தைகளுக்கும் சிவனே இருப்பிடமும் பிறப்பிடமுமாயுள்ளவன் என்பதும் கருதுக. "நாததநு மநிசம் சங்கரம் நமாமி" எனவும், "சத்தியோஜாதாதி பஞ்சவக்த்ரஜ சரி க ம ப த நி ச சப்தஜ்வர வித்யாலோலம்" எனவும் வழங்கும் தியாகராச ஐயர் கீர்த்தனமும் காண்க.

**மதிநாறும் சடைதாழ - நாறுதல்** - முளைத்தல். ஒரு கலையினோடடைந்த பிறைச் சந்திரன் பின்னர் வளரத் தொடங்கியதனால் நாறும் என்றார். நாறும் - இளமையாகிய என்றுரைப்பாரும் உண்டு. கொன்றையினைச் சடையார்போல் நேர்நோக்கி நின்றருகு இசைபெருக்கினாதலின், "ஆரொருவ ருள்குவா ருள்ளத் துள்ளே யவ்வருவாய் நிற்கின்ற வருளுந் தோன்றும்" (திருத்தாண்டகம் - திருப்பூவணம்-11), "யாதானு மெனநினைந்தார்க் கெளிதே யாகி" (நின்ற திருத்தாண்டகம்-7) என்றபடி சடைதாழ்ந்த திருமேனியுடன் தோன்றி யருளினர் என்பது. 38

964. திசைமுழுதுங் கணநாதர் தேவர்கட்கு முன்னெருங்கி
மிசைமிடைந்து வரும்பொழுது வேற்றெலிகள் விரவாமே
யசையவெழுங் குழலினைத் தஞ்சேழுத்தாற் றமைப்பவரும்
இசைவிரும்புங் கூத்தனை ரெழுந்தருளி யெதிர்நின்றார். கூக

(இ - ள்) வெளிப்படை. எல்லாத் திசைகளினின்றும் தேவர்களுக்கு முன்னே மேல் நெருங்கிச் சிவகணநாதர்கள் வரும்பொழுது, குழலிசைக்கு மாறுகிய வேற்றெலிகள் இடைப்புகுந்து கலக்காமல், அசைய எழுகின்ற குழல்நாத இசையினில் அமைத்த திருவைந்தெழுத்தினுலே தம்மைப் பரவுகின்ற இசையினை விரும்புகின்ற அருட்கூத்தனாகிய சிவபெருமான் (மேற்சொல்லியவாறு) எழுந்தருளி வந்து எதிரில் நின்றார்.

(வி - ரை) **கணநாதர்முன்...நெருங்கி** - இறைவனது திருமுன்பு, கணநாதர்கள் தேவர்களுக்கு முன்னே நிற்கும் உரிமையுடையவர்கள். இதற்கு முன் தேவர்கள் வந்து கூடி இசையின் மயங்கி யினைந்ததனை 957-958 பாட்டுக்களிற் கூறினர். அவர்களுக்கு முன் இடம் பெற்று இருக்கவேண்டியவரும் சிவபெருமானுடன் வருவோரும் ஆதலின் சிவகணங்கள் நெருங்கித் தேவர்களை ஒதுக்கி முற்பட்டு வந்தனர் என்க. "தேவர் கணங்களெல்லாம் நம்மிற்பின் பல்ல தெடுக்க வொட்டோம்" திருப்பொற் - 5) என்ற திருவாசகமும் காண்க. இவ்வாறு இசையரங்கு முதலியவற்றில் தகுதியில்லாதார் முன் வந்து கூடிக் கொள்ளுதலும், தக்கவர் பின் வந்து அவர்களை ஒதுக்கி யொதுக்கி முன்னிருத்தலும் இயல்பாக இக்காலிலும் காணும் காட்சியாம்.

**வேற்றெலிகள் விரவாமே இசை விரும்பும்** - என்று கூட்டுக. இறைவர் தம்முடன் வரும் பூதகணங்கள் முதலாயினர் முழக்கும் முழவு சங்கம் முதலிய பலவகை இயங்களின் ஓசை விரவின், குழலின் ஓசை கெடுமாதலின் அவை விரவாமே (வேறெரு ஒலியும் உட்கலக்காமல்) தனிக்குழலிசையைக் கேட்க விரும்பினர் என்பதாம். பூத கணங்கள் சத்தமின்றிப் புடைசூழ என்றபடியாம். "தொண்டரை யாளும் செ

கண்டே, வீதியி லாடிப் பாடி மகிழ்ந்தே மிடைகின்றார், பூதியி னீடும் பல்கண நாதர் புகழ்வீர் " (ஏயர்கோன் - புரா - 368) என மற்றை யிடங்களிற் கூறுமாறும் காண்க.

அகைய எழும் குழல் நாதம் - இசை ஒலியலைகளாகப் புடைபெயர்ந்து பரம்பரை யிற் பரவி மேற்செல்லும் இயல்புடைய குழல்நாதம் என்பார் அகைய எழும் என்றார். மேல் 962-ல் உரைத்தவை பார்க்க.

நாதத்தாற் பரவும் என்றது, நாதத்து அஞ்செழுத்தாற் பரவும் என்றது, குழலின் இசைநாதத்துக்கன்றி, அவ்விசையின் உள்ளுறையாகக் கொண்ட ஐந்தெழுத்தாற் பர வியதனாலே சிவபெருமான் வெளிப்பட்டு வந்தனர் என்றறிவித்தற்கு. அதுகாரண மாகவே இசை விரும்பும் கூத்தனார் என்றும் கூறினார்.

எதிர் நின்றார்-"சிவனெனு மோசை யல்ல தறையோ வுலகிற் றிருநின்ற செம்மை யுளதே "; " பவனெனு நாமம் பிடித்துத் திரிந்து பன்னு ளைழைத்தால், இவனெனைப் பன்னு ளைழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே " என்று அப்பர்சுவாமிகளருளியபடி நாதத் திசையினால் ஐந்தெழுத்தாகிய சிவநாமத்தினைப் பிடித்துப் பன்னுளைழைத்துப் பரவிய ஆனாயர் முன்பு, சிவபெருமான் எதிர்ப்பட்டு நின்றனர். அவரது நாமமே திருவைந் தெழுத்தாம் என்பது " ஆலப் படுகரும்பின் சாறு போல வண்ணிக்கு மைந்தெழுத்தி னுமத் தான்காண் ", " நின் னுமத் திருவெழுத் தஞ்சும் தோன்ற ", " படைக்கல மாகவுன் னுமத் தெழுத்தஞ்சென் னுவிற்கொண்டேன்" என்பன வாதிய திருவாக்குக்களால் அறியப்படும்.

கூத்தனார் - அருட்கூத் தடையார் - சடாசர். அருள்புரிய வருகின்றாராதலின் இப்பெயராற் கூறினர். முன்னர்ப் " பொற்பொதுவி னடம்புரியும் ஐயன் " (965), என்றும், பின்னர்ப் " பொற்பொதுவி னிடைப்புக்கார் " (966) என்றும் கூறிய கருத்துமிது. 401, 437, 488, 648, 897, 923, முதலியவற்றினும் இக்கருத்துப் பெறப்படுதல் காண்க. 39

965. முன்னின்ற மழவிடைமேன் முதல்வனு ரெப்பொழுதுஞ்
சென்றின்ற மனப்பெரியோர் திருக்குழல்வா சனைகேட்க
" இன்றின்ற நிலையேநம் பாலணைவ " தெனவவரும்
அன்றின்ற நிலைபெயர்ப்பா ரையர்திரு மருங்கணைந்தார். ச0

(இ - ள்) வெளிப்படை. (அவ்வாறு எதிர்ப்பட்டு) முன்னே நின்ற இளமையாகிய விடையின்மேல்வந்த முதல்வனார், செம்மைபொருந்திய மனத்தினையுடைய பெரியோ ராகிய ஆனாயரது திருக்குழல் வாசனையை எப்பொழுதும் கேட்டுக்கொண்டிருப்பதற் காக, " இங்குநின்ற இந்நிலைமையாகவே நம்மிடத்து நீ அணைவாயாக !" என்றருளிச் செய்ய, ஆனாயரும் அவ்வாறே அங்குநின்ற அந்நிலையினைப் பெயர்த்து ஐயரது திரு மருங்கில் அணைந்தனர்.

(வி - ரை) எப்பொழுதும் - வாசனைகேட்க - முதல்வனார் - " அணைவாய் " என, அவரும் - பெயர்ப்பார் - மருங்கு - அணைந்தார் என்று கூட்டி உரைத்துக்கொள்க.

செந்நின்ற மனப்பெரியோர் - செம்மையில் நின்ற மனம். செம்மை - சிவத்தின் நிறைவாம் தன்மை. " வள்ளலார் தமைத்திசை நோக்கிச், சென்னி மேற்கரங் குவித்துவீழ்ந் தெழுந்துசேந் நின்று " (திருஞான - புரா - 1053) என்றும், " கரு மென் சுருட்குஞ்சி யுடனலையச் சென்னிறு " (திரு 50) என்றும், " அடிக்கீழ்ச் சேர்ந்து வீழ்ந்து செந்நின்று " (ஏயர்கோன் - புரா 240) என்றும் உரைத்தவை மேனியின் செம்மைநிலை குறித்தன. இங்கு அது மனத்தின் செம்மைநிலை குறித்த தென்பார் செந்நின்ற மனம் என்றார். மனச்செம்மையின் பெருமை கருதியே இவரது குழல் வாசனை கேட்க இறைவர் விரும்பினர் எனக் காரணங் குறிப்பார் உடம்பொடு புணர்த்தி யோதினார்.

**இந்நின்ற நீலமே** - இங்குக் குழல் வாசித்துகின்ற இக்கிலையில் வண்ணமே. **என்** - என்றருளிச்செய்ய.

**அவரும்** - அவ்வாறருள்பெற்ற ஆனையரும்.

**அந்நின்றநிலை பெயர்ப்பார்** - "இக்கின்றகிலை" என்றதற்கேற்ப **அந்நின்றநிலை** என்றார். **பெயர்ப்பார்** - இடம் பெயர்த்து செல்வாராகி. கொன்றையின் கீழலில் கின்று வாசித்த அவ்வண்ணமாகக் குழல் வாசித்துக்கொண்டே சிவபெருமானது மருங்கில் அமர்கின்றனராதலால் அவரது அத்திருக்கோலத்தை உச்சிமுதல் அடிவரை முறையாகப் படம் வரைந்து ஆசிரியர் காட்டிய தன்மையாக மேல் 940—945வரை திருப்பாட்டுக்களிற் கண்டதனை இங்கு கினைவு கூர்க.

**வாசனை** - வாசித்தலை. இரண்டனுருபு தொக்கது. 937, 961 பார்க்க. **கேட்க** - என்றும் கேட்டுக்கொண்டிருக்கும்பொருட்டு.

**திருமருங்கு** - பக்கம்; சாமீபம் என்ற கிலை. 40

966. விண்ணவர்கண் மலர்மாரி மிடைந்துலக மிசைவிளங்க,
எண்ணிலரு முனிவர்குழா மிருக்குமொழி யெடுத்தேதத்த,
அண்ணலார் குழற்கருவி யருகிசைத்தங் குடன்செல்லப்,
புண்ணியனு செழுந்தருளிப் பொற்போதுவி னிடைப்புக்கார். கச

**(இ - ள்)** வெளிப்படை. தேவர்கள் பொழியும் கற்பகப் பூமழை நெருங்கி உலகின்மேல் விளங்கவும், அளவில்லாத அருமுனிவர் கூட்டங்கள் மறைமொழிகளாலே எடுத்துத் துதிக்கவும், பெருமையுடைய ஆனையர் குழலிசையை வாசித்துப் பக்கத்தில் உடன்செல்லவும், புண்ணியப் பொருளாயுள்ள சிவபெருமான் அங்குகின்றும் எழுந்தருளிப் பொன்னம்பலத்தினிடைப் புகுந்தருளினார்.

**(வி - ரை) விண்ணவர்கண் மலர்மாரி** - தேவர்கள் பொழியும் பூமழை. **மலர்** - கற்பகமலர். இவ்வுலகில் தெய்வ அற்புதங்கள் நிகழும்போது தேவர்கள் பூமழை பொழிவர். 398 முதலியவற்றுள் முன்னுரைத்தவை பார்க்க. தேவருலகத்தில் இவ்வகைத் திருவருள் வெளிப்பாடான நிகழ்ச்சிகள் நிகழ்தற்கிடமில்லையாதலின், அவர்கள் பூவுலகின் இவை நிகழக் கண்டபோது இவ்வாறு பாராட்டிப் பூமழை பொழிவர்.

**இருக்குமொழி** - வேதமந்திரங்கள். **இருக்கு** - இங்கு வேதப் பொதுமை குறித்தது. இறைவன் திருவாக்கில் **இருக்கும்மொழி** என்பதும், **என்றும் இருக்கும்** நித்திய மாயின மொழி என்பதும் குறிப்பு. மொழிகளால் ஏத்த என்க.

**அண்ணலார்** - பெருமையுடையவர். உலகில் அவரது பெருமை விளங்கிய இடமாதலின் இப்பெயராற் கூறினார்.

**குழற்கருவி இசைத்து அங்கு உடன்செல்ல** - குழல்வாசனை கேட்க, "நம்பால் அணைவாய்" என்று அருள்செய்யப் பெற்றாராதலின், அவ்வாணையின்படியே அருகு குழல் இசைத்துச் சென்றார். அன்றுபோலவே இன்றும் என்றும் குழல் வாசித்து ஐயரின் அருகு ஆனையர் எழுந்தருளி யிருக்கின்றார் என்க.

"நான் மகிழ்ந்து பாடி அறவாளீ ஆடும் போதுன் னடியினீ ழிருக்க" வேண்டும் என்று அம்மையார் தாம் வேண்டிக்கொண்டபடி ஐயரது "எடுத்தருளும் சேவடிக்கீழ் என்றுமிருக் கின்றார்" என்ற சரிதம் இங்கு கினைவு கூர்தற்பாலது. "இடையறுமற் கும்பிடும் கொள்கை யீந்தார்" (489), "தம்முன் றெழுதிருக்கும் அழிவில் வான் பதங் கொடுத்து" (548), "கணத்தின் முன்னுங்கோமுதற் றலைமை பெற்றார்" (605), "என்வலத்தில் மாறிலாய் கிற்க" (829), "தூணையடிகள் தொழுதிருக்க" (திருநாளை - 36), "நம் மன்னுலகு பிரியாது வைகுவாய்" (திருக்குறிப்பு - 127), "அரனார் மகனு ராயினார்" (சண் - புரா - 59), "சிவலோகத்திற் பழவடிமைப் பாங்குளி"

(சாக் - புரா - 17), "என்றும் பிரியா தேயிறைஞ்சி யிருக்க" (சிறுத் - புரா - 87), "வன்றொண்ட ராலால சுந்தர ராகித்தாம் வழுவாத, முன்னை நல்வினைத் தொழிற் றலை நின்றனர்; முதற்சேரர் பெருமானு நன்மை சேர்க்கண நாதரா யவர்செயு நயப் புறு தொழில்பூண்டார்" (வெள் - சருக் - 49), "கமலினி யாருட னனிர்திதை யாராகி, மலைத் தனிப்பெரு மான்மகள் கோயிலிற் றன்தொழில் வழிநின்றார்" (டிை 50) முதலியவையும் காண்க.

**புண்ணியனார்** - புண்ணியங்களுக்கெல்லாம் பொருளாயும், பிறப்பிடமாயும், இருப் பிடமாயும், சேர்விடமாயும் உள்ளவர். சிவபெருமான்.

---

**சரிதச் சுருக்கம்:**—சோழநாட்டின் ஓர் உட்பகுதியாகிய **மேன்மழ நாடு** என்பது நீடும் வளத்தினையுடைய நீர்நாடாம். அதில் தாமரைகள் பூத்த நீர்நிலைகளும் குளிர்ந்த தேமாஞ் சோலைகளும் உண்டு. கமுகு வாழை முதலியன அந்நாட்டினின் மிகுந்த பயிர்கள். இவ்வாறுள்ள மருதத்தினைச் சூழ்ந்து ஒருபுறம் காடாரம்பமாகிய முல்லைப் பகுதியும் உண்டு. இவ்விரண்டும் ஒன்றுகூடுவதால் இவற்றின் ஒழுக்கமும் பொருள் களும் ஒன்றுகூடி மயங்கிய திணைமயக்கமும் இங்குக் காணத்தக்கது.

இப்படித்தாகிய மேன்மழநாடு மண்ணுலகிற்கு அருங்கலம்போல உள்ளது. அதற்கு மங்கலமாகியது **திருமங்கலம்** என்ற அதன் வாழ் மூதூராகும். அப்பதியில் மீடிய பெருங்குடிகளுள் ஒன்றாகிய **ஆயர் குலத்**தின் குலவிளக்குப்போல **ஆனாயர்** என்ற பெரியார் அவதரித்தார். அவர் தூய திருநீற்றினை விரும்பும் திருத்தொண்டில் நின்ற வர்; மன மொழி மெய் என்ற மூக்காரணங்களாலும் சிவபெருமான் திருவடிகளே யல் லாது வேறொன்றினையும் பேணுதவர்; தமது குலத்தொழிலாகிய பசுக் காத்தலைச் செய்வாராய்ப் பசுக்களைச் சேர்த்து, அகன்ற புறவிற் கொண்டுசென்று, அச்சமும் நோயும் அணுகாமற் காத்து,அவை விரும்பிய நல்ல புல்லும் நன்னீரும் ஊட்டிப்,பெருகு மாறு காத்துவருவார். இளங் கன்றுகள், பால்மறை நாகளம்பசு, கறவைப்பசு, சினைப் பசு, புனிற்றுப்பசு, விடைக்குலம் என்பனவாக அவற்றை வெவ்வேறு பகுத்துக் காவல் புரிவார். இவ்வாறு ஆனிரை காத்துத் தம் சொல்வழிக் கோவலர் தொழில் புரிந்துவர நின்ற இவர், சிவபெருமான் திருவடியில் அன்புபொருந்திய இசையினையுடைய துளைக் கருவிக் குழல் வாசித்தலை மேற்கொண்டொழுகினார். இசைநூல் விதிப்படி அமைத்த வேய்ங்குழலில் சிவபெருமானது திருவைந் தெழுத்தையும் ஏழிசையின் சுருதிபெற வாசித்துச் சராசரங்களெல்லாம் தமது கருணை பொருந்தக் குழலிசையமுதம் அளித்து வருவாராயினர்.

இப்படி நியதியாக ஒழுகுபவர், ஒருநாள், தமது சிகழியிற் கண்ணி செருகி, நறு விலி புனைந்து, கருஞ்சுருளின்புறங் கட்டி, வெண்காந்தட் பசிய இலைச்சுருளிற் செங் காந்தட் பூவினை வைத்துக் காதில் அணிந்து, கண்டோர்மனங் கவரத் திருநெற்றியில் திருநீற்றினை ஒளிபெற இட்டு, அதனைத் திருமேனியிலும் மார்பிலும் பூசி, முல்லை மாலை யணிந்து, இடையில் மரவுரியுடுத்து, அதன்மேல் தழைப்பூம்பட்டுத் தானை அசையக் கட்டி, திருவடியில் செருப்புப் பூண்டு, **கையினில் வெண்கோலும் வேய்ங் குழலும்** விளங்கக் கொண்டு, கோவலரும் ஆவினமும் சூழப் பசுக்காக்கப் புறம்போந்தார்.

போந்த அவர் அங்கு மாலைபோன்ற பூங்கொத்துக்களும் கனிகளும் நிறைந்த தொரு கொன்றையினைக் கண்டார். அது மனத்துள்ளே எப்போதும் கண்டுகொண் டிருந்த, சடையிற் கொன்றைமாலை சூடிய சிவபெருமானைப்போல அவருக்குத் தோன் றிற்று. தோன்றவே, அதனை நேர்நோக்கி நின்று உருகினார். ஒன்றுபட்ட சிந்தை யில் ஊறிய அன்பு தம்மையுடையவர்பால் மடைதிறந்த நீர்போலப் பெருகிற்று. அன்பு உள்ளுறிப் பொங்கிய அமுத இசைக்குழலோசையில் சிவபெருமானது திரு வைந்தெழுத்தினையும் உள்ளுறையாக அமைத்து, எல்லா வுயிர்களும் எலும்புங் கரையும்

படி வாசிக்கத் தொடங்கினார். நூல் விதிப்படி அமைந்த வங்கியம் என்னும் வேய்ங் குழலின் தனித்துளையில் ஆனாயர் மணியதரம் பொருந்த வைத்து, ஏழிசை முறைப் பட, இசையிலக்கணம் எல்லாம் அமையச்செய்து, திருவைந் தெழுத்தை உள்ளுறை யாகக் கொண்ட குழல் இசை ஒலியை எம்மருங்கும் பரப்பினார். அது கற்பகப்பூத் தேனும் தேவாமுதமும் கலந்து வார்ப்பதுபோல எல்லா வுயிர்களுள்ளும் புகுந்து தேக்கிற்று.

ஆனிரையும் கான்விலங்கும் இசைவயப்பட்டுத் தம் உணவும் மறந்து மயிர் முகிழ்த்து வந்தணைந்தன. ஆடும் மயிலினமும் மற்றைப் புள்ளினமும் தம்மை மறந்து இசை நிறைந்த உள்ளமொடு படிந்துவந்தணைந்தன. ஏவல்புரி கோவலரும் தம் தொழில் செய்தலை மறந்து நின்றனர். பாதலத்தின் நாகர்கள் - மலையின்வாழ் அரமக ளிர் - விஞ்சையர், கின்னரர் முதலிய தேவகணங்கள் - தேவமாதர்கள் என்றிவர்களும் குழலிசையின் வசப்பட்டவராகித் தத்தம் உலகங்களினின்று வந்து அணைந்தனர். நலி வாரும் மெலிவாரும் தம்மியல்பு மறந்து இசையுணர்வினாகிய உணர்ச்சி ஒன்றேயாகி நயத்தலினால், அரவும் மயிலும், அரியும் கரியும், புலியும் மானும் என்றித்திறத்தன வாகிய உயிர்வகைகள் தத்தமது பகைமையை மறந்து ஒன்றுகூடிவந்து கூடின. காற்றும் விசையில் அசையா. மரமும் சலியா. மலைவீழருவிகளும் கான்யாறும் கலித் தோடா. வான்முகிலும் ஆழ்கடலும் அசையா. இவ்வாறு நிற்பனவும் சரிப்பனவும் ஆகிய எல்லாம் இசை மயமாகிப் புலனும் கரணமும் ஒன்றாயின.

ஆனாயர் இசைத்த குழலிசையானது வையத்தை நிறைத்தது; வானத்தையும் தன்வசமாக்கிற்று; மேல் ஐயரது திருச்செவியினருகணையவும் பெருகிற்று. சிவ பெருமான் இடப வாகனத்தின்மேல் உமையம்மையாருடனே எழுந்தருளி எதிர் நின்று காட்சி தந்தனர். அக்குழல் வாசனை கேட்க, "இந்நின்ற நிலையே நம்மிடத் தில் அணைவாய்" என்றருளிச்செய்தனர். தேவர்கள் பூமழைபொழிய, முனிவர்கள் துதிக்கக், குழல் வாசித்துக்கொண்டே அந்நின்ற நிலைபெயர்ப்பாராய் ஆனாய நாயனார் உடன்செல்லச் சிவபெருமான் பொன்னம்பலத்துள் எழுந்தருளினர்.

---

**தலவிசேடம் :—திருமங்கலம்**-இத்தலம், தென்னிந்திய இருப்புப்பாதை, திருச்சி னாப்பள்ளி - விழுப்புரம் வழியில், லால்குடி என்ற நிலயத்தினின்று வடமேற்கில் கற் சாலை வழியாய் 2 நாழிகையில் உள்ள பூவாளூரை அடைந்து, அங்கு நின்றும் மேற்கே மட்சாலைக் கரை வழியாய் ஒருநாழிகை யளவில் அடையத்தக்கது. காவிரிக்கு வடகரை யில் உள்ளது. பூவாளூரிலிருந்து செல்லும் மட்சாலைக்கரை வழியில் ஆறு குறுக்கிடுவ தனால் மழைக்காலத்திற் செல்வது கடினம். லால்குடி என்பது திருத்தவத்துறை என்ற தலமாகும். இரதிக்குப் பதியளித்த தலமாகிய இத்திருத்தவத்துறையைத் திருஞானசம்பந்த சுவாமிகள் தரிசித்துப் பதிகம் பாடியருளினார் என்பது பெரிய புராணத்தினாலறியப்படும் (திருஞான - புரா - 347). திருமங்கலம் கோயிலினுள் உட்சுற்றில் வடமேற்குப் பாகத்தில் ஆனாயர் சிவப்பேறு பெற்ற இடம் தனியாக வகுக் கப்பட்டுள்ளது. அங்குக் கொன்றை நீழலில் நாயனார் குழலிசை வாசிக்கும் திருவுரு வங்கள் அமைக்கப்பட்டுப் பூசிக்கப்படுகின்றன. ஆனாயர் திருவுருவம் செப்புப்படிமமும் உண்டு. அவரது உற்சவமும் கொண்டாடப்படுகின்றது. இத்தலத்தில் இரயிக்குவ முனிவர் தமது மூதாதைகளின் நற்கதியின்பொருட்டுத் தவஞ்செய்ய இறைவ னாணை யால் உத்தரகயா பற்குனி ஆறு இங்கு இறங்கிவந்தது. இரயிக்குவரது ஆச்சிரமத்தில் இருந்த மானைச் சுவேதகிரி அரசனான சுந்தரன் வேட்டையிற் கொன்றுவிட அவர் அவனைச் சாம்பராகும்படி சாபமிட, அவன் சாப நீக்கம்பெறவேண்டிக்கொள்ள அவரும் இரங்கி, மறு பிறவியில் மன்மதனாகப் பிறந்து சிவபிரானது நெற்றிக் கண்ணினாற் சாம்பராகி, மனைவி இரதி வேண்ட மீள வுருவமடையும்படி அருளியபடியே இங்கு

இரதிதவஞ்செய்து பதியை யடைந்தனள் என்பது தலமான்மியம். ஒருகாலத்தில் அசுவினி தேவர்களுக்கு அவிப்பாகங் கொடுக்க மறுத்த இந்திரனைப் பிருகுபுத்திராகிய சியவன முனிவர் அரசிழக்கும்படி சபித்தனர்; பின்னொரு காலத்தில் இத்தலத்தில் தவஞ்செய்த உதங்க முனிவருக்கு அமிர்தங் கொடுக்க மறுத்த இந்திரனைத் தரித்திரனாகும்படி அவர் சபித்தனர்; இந்திரன் இத்தலத்திற் பூசித்து இந்த இரண்டு சாபங்களினின்றும் நீங்கினன். இலக்குமி பூசித்துப் பேறுபெற்றனள். பரசுராமர் பூசித்துத் தாய்க்கொலைப் பழியினின்றும் நீங்கினர்.

இத் திருக்கோயிலுக்குத் திருமதில் முதலிய கற்றிருப்பணிகள் நிறைவேறிச் சென்ற வெகுதானிய ஆண்டு (1938) ஆனித்திங்கள் 12-ம் நாளில் மகாகும்பாபிடேகம் நிறைவேறியது.*

இத் திருக்கோயில் பண்டைச் சோழ மன்னர்களால் கட்டப்பட்டதென்பது சுவாமி கோவிலைச் சுற்றிச் சுவரில் பொறித்துள்ள பழமையான கல்வெட்டுக்களாலறியலாம். அவற்றிற் சோழர்களால் கொடுக்கப்பட்ட நன்செய் புன்செய் கிராமங்களின் விவரமும், பூசை முறைகளும் காணப்படும். நிலங்களினின்று ஆண்டு ஒன்றுக்குப் பதினாயிரம் வெண்பொன் வரவுவரும். இதனுடன் இணைக்கப்பட்ட நான்கு சிறு கோயில்களும் உண்டு. அவற்றின் படித்தரமும் இதில் அடங்கும். சுவாமி பெயர் - **சாம வேதீசுவரர்**; அம்பிகை - **உலகநாயகியம்மையார்.**

---

**கறிபனை :—1.** நீர்வளம் நிலவள மிகுதியாயின், சில்லறிவுகளுடைய வண்டு, கயல், மேதி முதலிய பிராணிகளும் சுகவாழ்க்கையான இருக்கைகளைத் தேடியடைவன.

2. நீரின் அலையில் வரும் சில சங்குகள் தவழ்ந்து மரங்களின் உச்சியிலும் ஏறித் தங்கு மியல்புடையன.

3. ஆன்கன்றும் மான்கன்றும் வெவ்வேறு நிலத்தனவாயினும் ஓரினத்தைச் சார்ந்தனவாதலின் தம்மில் உறவுகொள்ளும் தன்மையுடையன. அதுபோல அறிவோரும் நல்லோரும் எக்நிலத்தாராயினும் கூடியபோது உறவு பூண்பர்.

4. வெவ்வேறியல்பினவாகிய முல்லை, மருதம் முதலிய திணை நிலங்கள் அடுத்தடுத்துள்ளபோது ஒன்றன் ஒழுக்கமும் பொருள்களும் மற்றொன்றில் வந்து கலந்து விரவும்படும்.

5. ஒரு குலத்தில் ஒரு பெரியார் அவதரிப்பாராயின் அவரால் அக் குல முழுதும் விளக்கம் பெறும்.

6. மனம் வாக்குக் காயம் என்ற மூன்று காரணங்களாலும் சிவபெருமான் திருவடி களையல்லாது பிறிதொன்றினையும் பேணார் பெரியோர்.

---

*இப் புராண வரலாறுகளைச் சிவ விஷ்ணு க்ஷேத்திர விளக்கம் என்ற நூலிலிருந்து எடுத்து இத்தல ஆலய விசாரணைக் கருத்தரிலொருவரும் எனது நண்பரும் அன்பருமாகிய திரு. தி. வே. அரங்கசாமி ஐயர், பி. ஏ. அவர்கள் எழுதி யுதவியதனோடு இத்தலப் படங்களும் உதவினர். இவருக்கு என் நன்றியுரியது.

இக் கோயிலின் தருமகர்த்தர்களாயிருந்த சகோதரர்கள் அன்பர்கள் சம்புலிங்க முதலியாரும் கந்தசாமி முதலியாரும் இதன் நில வருவாய்கள் பலரால் விழுங்கப்பட்டனவற்றை நீதிமன்ற மூலம் மீண்ட வழக்குக்கள் இட்டு மீட்பதிற் பெருமுயற்சி செய்து மீட்டுச் சுவாமிக்குப் பெருவருவாய் உண்டாக்கினதுமன்றித் திருப்பணியையும் தொடங்கிச் சிலபாகம் செய்தனர். அவர்கள் செய்யாது விடுத்த எஞ்சிய திருமதில் திருப்பணியும் பிறவும் பெருமுயற்சிசெய்து மேற்கண்ட அன்பர் தி. வே. அரங்கசாமி ஐயர் முற்றுப்பெறச் செய்ததுமன்றி மகா கும்பாபிடேகமும் மண்டலாபிடேகமும் நிறைவேற்றினர்.

7. ஆனிரைகளை அகன்புறவிற் கூடக் கொண்டு சென்று, அவற்றுக்குத் தீய விலங்குகளாலும் நோய்களாலும் வரும் ஏதங்களை நீக்கிக் காத்து, நல்ல புல்லுணவும் நல்ல நீரும் ஊட்டி, அவை பெருகும்படி வளர்த்துக் காத்தல் பசுக்காக்கும் முறை.

8. இளங் கன்றுகள் - பால்மறை நாகு - கறவைப் பாற்பசு - சினைப்பசு - புனிற்றுப் பசு - விடைக்குலம் என்றிவ்வாறு ஆனிரைகளை வெவ்வேறு வகுத்துப் புறவில் மேய்த்தும், தொழுவங்களிற் சேர்த்தும் வளர்த்தலும் பசுகாக்கும் முறையாகும்.

9. ஆனிரைகாப்போர் வேய்ங்குழலிசை வாசித்தலும் வழக்கு. அது பசு காத்தலுக்கும் துணை செய்யு மியல்புடையது.

10. சிவபெருமானது **மகாமந்திரமாகவும்**, எல்லா மந்திரங்களுக்கும் மேலாகிய **ஆதிமந்திரமாகவும் உள்ளது சிவநாம மந்திரமாகிய திருவைந்தெழுத்தே** யாகும்.

11. திருவைந்தெழுத்தைச் சிவனிடத்து இடையறாது பெருகும் மெய்யன்புடன் உள்ளங் கசிந்து ஓதுவோர் சிவானந்தப் பெருவாழ்வாகிய முத்தியை யடைகுவர்.

12. சிவாகமமாகிய திருவைந்தெழுத்தை உள்ளுறையாகக் கொண்டு இசைநூல் விதி தவறாது எழிசையின் சுருதிபெற விதிப்படி அமைந்த வேய்ங்குழலால் வாசித்தால் அதனை வாசிப்போர்க்கும் கேட்போர்க்கும் சிவபெருமானிடத்தில் அன்பு வளரும்.

13. இசைநூல் விதிப்படி வேய்ங்குழலில் மெய்யன்புடன் திருவைந்தெழுத்தை வாசிக்கும் இன்னிசை எல்லா வுயிர்களையும் தன்வயமாக்கி உருக்கவல்லது ; சிவபெருமான் திருச்செவியினருகணையப் பெருகி அவரை எதிர்வந்து அருளச் செய்யவும் வல்லது.

14. அசேதனங்களாகிய காற்று, அருவி, முகில், கடல் முதலியனவும் இசைநூல் விதிப்படி வேய்ங்குழலில் திருவைந்தெழுத்தை அமைத்து அன்புடன் ஊதப்படும் குழலிசையின் வசப்பட்டு நிற்பன என்றால், அறிவுடைய சராசரங்களாகிய ஏனை உயிர்கள் ஈடுபடுதல் ஆச்சரியமன்று.

15. ஒன்றுக்கொன்று பகைமையுடைய உயிர்களும் வேய்ங்குழலின் தெய்வ இசையமுதின் வசப்பட்டபோது தத்தம் பகைமையை மறப்பனவாகும். கொடிய பாம்பு, புலி முதலியனவும் குழலின் இசையின் வசப்பட்டுத் தம்மை மறப்பனவாம். இன்னிசையானது பிராணிகளினிடத்து நோய் நீக்கம், கொடுமை நீக்கம், பசி நீக்கம், துன்ப நீக்கம் முதலியவற்றுக்கும், நற்பயன் பெறுதற்கும் காரணமாம்.

16. இசைக்கலைக்கும் மற்றும் எல்லாக் கலைகளுக்கும் ஆதிகாரணர் சிவபெருமான்.

14. ஆலயநாயனார்புராணம் முற்றும்

## சுந்தரமூர்த்திசுவாமிகள் துதி

### தோகை

" ஆரூர ஞரூரி லம்மானுக் காளே "—திருத்தொண்டத்தொகை.

### வகை

" அருட்டுறை யத்தற் கடிமைப்பட் டேனினி யல்லனெனும்
பொருட்டுறை யாவதென் னே"யென்ன வல்லவன் பூங்குவளை
யிருட்டுறை நீர்வய லுவற் பதிக்கும் பிரானடைந்தார்
மருட்டுறை நீக்கிநல் வான்வழி காட்டிட வல்லவனே. (கசு)

—திருத்தொண்டர் திருவந்தாதி.

விரி

வேறு

967. தீதுகொள் வினைக்கு வாரோஞ் செஞ்சடைக் கூத்தர் தம்மைக்
காதுகொள் குழைகள் வீசுங் கதிர்நில விருள்கால் சீப்ப
மாதுகொள் புலவி நீக்க மனையிடை யிருகாற் செல்லத்
தூதுகொள் பவரா நம்மைத் தொழும்புகொண் டெனமை கோள்வார்.

துதி :—இனி, பிறுத்த முறையானே, "இலமலிந்த" என்று தொடங்கும் திருத்தொண்டத்தொகைப் பாசுரத்தினுள் "ஆளுயர்க் கடியேன்" என்ற சரிதத்துக் கடுத்து, "ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே" என்றதனுட் போந்த, ஆரூர்ப் பெருமானுக்கு ஆளுடைய நம்பிகள் ஆளாயின சரிதப் பகுதியினைக் கூறத் தொடங்கிய ஆசிரியர், நம்பிகளது சரிதத்தின் ஒரு பகுதியினை உள்ளமைத்து, அவர் ஆளாந் தன்மையைக் காட்டுமுகத்தாற் றுதியாகக் கூறுகின்றார்.

தோகை :—(தொகை நூலின் இப்பாசுரத்திற் சொல்லப்பட்ட எறிபத்தர் முதலாகிய ஏழு அடியார்களுக்குத் தனித்தனி அடியேன் ஆகிய) ஆரூரன் திருவாரூர் அம்மானுக்கும் ஆள் என்று தொடர்புபடுத்தி முடிக்க. 550ல் உரைத்தவை பார்க்க.

வகை :—"திருவருட்டுறையுள் எழுந்தருளிய நாதனுக்கு நான் ஆட்பட்டேன், இனி, ஆளல்லேன் என்று சொல்லும் பொருளின் தன்மை எவ்வாறு?" என்று திருப்பதிகத்திற் பாடியருளவல்லவர், குவளை மலர்களின் இருள் தங்குகின்ற துறையுடைய நீர் நிரம்பிய வயல்கள் சூழ்ந்த திருவாவலூர் என்னும் திருநகரத்திற்கும் முதல்வர்; தம்மை அடைந்தோர் தமது மருளுடைய வழிகளை நீக்கி முத்திநெறியைக்காட்டிட வல்லவரே யாவர்.

அருட்டுறை...என்னே? - இது, "அருட் டுறையுள் அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே" என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவார முதற் பதிகத்திற் போந்த மகுடத்தினைக் குறித்தது. அதன் சொல்லையும் பொருளையுமே எடுத்தாண்டு அக்கருத்தினை உரைசெய்து காட்டியவாறு. ஆவணங் காட்டி வழக்கில் வென்றருளிய படியும், ஆகாயத்தில் தோன்றி அறிவுறுத்தியபடியும், அத்தா!, உனக்கு நான் பண்டும் இன்றும் என்றும் ஆளாயின படியை உணர்ந்துகொண்டேன்; இவ்வாறு உணர்த்தப் பெறுவதற்குமுன் 'ஆள்அல்லேன்' என மறுத்தேனே!; அச் சொற் பொருளின்வழி இனி என்னுவது?; இனி அப்படிச் சொன்னால் அச்சொல் பொருளுடையதாகுமோ? என்றதாம். (பக்கம் உடுஉ பார்க்க).

என்ன வல்லவன் - இறைவர் பணித்தவாறு அப்பொருள் கொண்ட "பித்தா பிறைசூடி" என்ற திருப்பதிகம் பாடி, அதற்கேற்ப ஆளாகிப் பணிசெய்து நிற்கும் வன்மைபெற்றவர்.

பூங்குவளை இருட்டுறை நீர் - இருள்துறை என்றும், இருட்டு உறை என்றும் பிரித்துரைக்க நின்றது. குவளையின் நீலநிறம் இருள் செய்வதாதலின் அவ்விருள் பொருந்திய என்க; "சுரும்பல்லி குடைநீலத் தகளல்ல பகலெல்லாம்" (65), "பானற்குல மாமல ரிற்படர் சோதியார்" (714) என்றவிடங்களிலுரைத்தவை காண்க.

பதிக்கும்-உம்மை சிறப்பும்மை. பதிக்குப்பிரான் என்று பாடங்கொள்ளலுமாம்.

அடைந்தோர்...வல்லவனே - குருவினது இலக்கணம் முற்றும் அமைந்து அத்தன்மையிற் றலைசிறந்தவர் என்றபடி. மருள்துறை - மயக்கத்தை - அறிவை மயக்குதலைச் - செய்கின்ற வழி. பிறவியிற் செலுத்தும் வழி. துறை - மோகம், மதம் முதலிய ஏழு பிரிவுகளை உணர்த்தும் என்றலுமாம். "மருளானும் மாணாப் பிறப்பு" (குறள்) என்றபடி, பொருளல்லவற்றைப் பொருள் என்றுணரும் மயக்கமே மருள் எனப்படும்,

அதனை நீக்கி, இது பொருள் என்றறிவித்து நல்வழி காட்டுதல் குருவின் தொழில். **நல் வான்வழி** - பிறவியிற் செலுத்தாத முத்திநெறி. **வல்லவனே** - ஏகாரம் தேற்றம். முன்னர்த் திருவந்தாதி (8) துதியில் " ஆட்செய் யெனப்பெற்றவன் " என்று கூறிய சரிதப் பகுதியினைத் தொடர்ந்து இப்பாட்டிற் கூறியது காண்க.

967. (இ - ள்) மாதுகொள் புலவிதீர்க்க - பரவையார் கொண்டிருந்த ஊடலை நீக்கும்பொருட்டு ; செஞ்சடைக்கூத்தர் தம்மை - சிவந்த சடையையுடைய கூத்தப் பெருமானை ; காதுகொள்...கால்சீப்ப - காதில் அணிந்த குழைகள் வீசுகின்ற ஒளி யாகிய நிலவு இருளை ஒழிக்க ; மனையிடை இருகால் செல்ல - பரவையாரது திரு மாளிகைக்கு இரண்டுமுறை செல்லும்படி ; தூது...கொள்வார் - தூதராக எவர் கொள்பவராகிய ஆளுடைய நம்பிகள் நம்மை அடிமையாகக்கொண்டு உரிமைகொள்பவ ராவர் ; தீதுகொள்வினைக்கு வாரோம் - (ஆதலின்) தீமையுடைய வினையின் வழிய தாகிய பிறவியில் நாம் சேரமாட்டோம்.

**(வி - ரை) உரிமைகொள்வார் - (ஆதலின்) வினைக்கு வாரோம்** என்று கூட்டி முடித்துக்கொள்க. பூட்டுவிற் பொருள்கோள்.

**தீதுகொள் வினைக்கு** - தீமையைப் பயனுகக் கொண்ட வினை. தீமை காரணமாக வரும் வினை என்றலுமாம். **வினை**-இங்கு வினையால் வரும் பிறவி குறித்தது. **வினைக்கு** - வினையின்கண். நான்கனுருபு ஏழனுருபின் பொருளில் வந்தது. பிறவியிற் சேரோம் என்க. உரிமைகொள்வார் - எம்மை வினைக்கு வராமற் செய்வார். " இருள்சே ரிருவினையும் சேரா " (குறள்).

**தொழும்பு கொள்ளுதல்** - அடிமைப் பணிகளை ஏற்றுக்கொள்ளுதல். **உரிமை கொள்ளுதல்** - உரிமையால் ஏவல்கொள்ளுதல். " அடைந்தோர் மருட்டுறை நீக்கி நல் வான்வழி காட்டிட வல்லவனே " என்ற வகைநூற் பொருளை விரித்துரைத்ததாம்.

புலவி நீக்கக் - கூத்தர் தம்மைத் தூதுகொள்பவர் - நம்மை - உரிமைகொள்வார் - (ஆதலின்) வினைக்கு வரோம் என்று கூட்டுக.

**குழைகள்** - சங்கக் குழைகள். **நிலவு** - குழைகளின் வெள்ளிய ஒளியாகிய நிலவு. உருவகம்.

**இருள் கால்சீப்ப** - இருளைத்துடைக்க - போக்க. **கால்சீத்தல்** - ஒரு சொல்.

**மனையிடை** - பரவையார் திருமாளிகையின்கண்.

**இருகாற் செல்ல** - இருமுறை தூது செல்லும்படி (ஏயர்கோ - புரா - 324—374).

**தூதுகொள்பவர்** - தூதாகக் கொண்டவரே. தேற்றேகாரம் தொக்கது. " இனி அல்லனெனும் பொருட்டுறை யாவதென்னே " என்ற வகைநூற் கருத்தைத் தொடர்ந்து, அத்தனுக்கு அடிமையாகவும் வல்லவர் ; அவ்வாறு தம்மை ஆளாகக் கொண்டமை காரணமாக அவரைத் தூதுகொண்டு ஏவவும் வல்லவர் என்று கூறினர். " நாயனை யடியா னேவுங் காரிய னன்று " என்றதும் இது (ஏயர்கோ - புரா - 384).

" அம்மானுக் காளே " என்ற தொகைநூற் கருத்துக்கு " ஆளாயினேன் இனி யல்லனெனும் பொருட்டுறை யாவதென்னே யென்ன வல்லவன் " என்று வகைநூல் உரை வகுத்தது. அதனையே விரிநூல் தொடர்ந்து மேற்கூறியபடி விரித்தது காண்க. சருக்கத்தோறும் இவ்வாறு தொகைநூற் சொற்றொடர் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சரிதத்தின் வெவ்வேறு பகுதிகளாக விரித்துத் துதி யுருவமாக விரிநூல் பேசும். 550ல் உரைத்தவை பார்க்க.

## 3. இலைமலிந்தசருக்கம் முற்றிற்று.



# இலைமலிந்த சருக்கம்

## சரித ஆராய்ச்சியுரை

[இராவ்பகதூர் - திரு. C. M. இராமச்சந்திர செட்டியார், B.A., B.L., F.R.G.S., அவர்கள் அன்புடன் உதவிய குறிப்புக்கள்]

### 1. எறிபத்தநாயனார்

**திருப்பதி - திருக்கருவூர் :**—இது ஒரு பழைய ஊர்; கொங்குநாட்டுத் தேவாரப் பாடல்பெற்ற தலங்கள் ஏழனுள் ஒன்று. இவ்வூரில் பண்டையகாலச் சின்னங்கள் பல கிடைத்தன. உரோமானிய சக்கரவர்த்திகளின் நாணயங்கள் பல தோண்டி எடுக்கப் பட்டன.

| உரோமானிய அரசன் பெயர் | காலம் | தோண்டி எடுக்கப்பட்ட வருடம் |
|---|---|---|
| அகஸ்தஸ் | கி. மு. 41—14 கி. பி. | 1878 |
| ஆண்டோனியா | கி. மு. 8 | 1806 |
| டைபீரியஸ் | கி. பி. 14—37 | 1806—1878 |
| கிளாடியஸ் | ,, 41—54 | 1806 |
| கான்ஸ்டான்டினஸ் | ,, 323—337 | ... |

மேலும், தாலமி என்ற கிரேக்க ஆசிரியர் தமது நூலில் 'கோபோத் ரோஸ்' என்ற இராச்சியத்திற்கு 'கரௌரா' என்ற ஊர் தலைமை நகர் என்று கூறியிருக்கின் ரூர். இம்மொழிகளைச் 'சேரபதி', 'கரூர்' என்று சிலர் பொருள் கொள்ளுகின்றனர். இதைக்கொண்டு சில ஆராய்ச்சியாளர்கள் கேரள அல்லது சேர நாட்டிற்கு இக்கருவூர் தலைமை நகராக இருந்தது என எழுதியிருக்கின்றார்கள். சோழநாட்டுத் தலைநகர் இக் கருவூரோ அல்லது மலையாளநாட்டுக் கொடுங்கோளூரோ என்பது இன்னமும் வாதத் திற்குட்பட்ட ஒருசெய்தியென்பர். இவ்வூர்த் தலபுராணத்தில் இதனை வஞ்சுளாரணியம் என்று குறித்திருப்பதும், புகலூருக்கடுத்த ஆறுநாட்டார் மலையில் ஒருபழைய எழுத் தில் காணும் கல்வெட்டில் **வஞ்சி** என்ற மொழி இருத்தலும் இங்கே கவனிக்கத் தக்கவையாமெனவும் கூறுவர்.

இனி, இவ்வூர் ஆலயத்தில் இருந்த கல்வெட்டுக்களில் (ஆலயம் புதுப்பித்தபோது அவை அழிக்கப்பட்டன) **வஞ்சி** என்ற பெயர் காணவில்லை. பழைய கல்வெட்டுக்க ளெல்லாம் சோழர்களுடையவையே. சேரர் கல்வெட்டு ஒன்றும் இல்லை. இரா ஜேந்திரதேவன் (1052—1062), வீராராஜேந்திரன் (1064—1070), விக்கிரமசோழன் 1118—1135), குலோத்துங்கன் III (1178—1216) முதலியவர்களுடைய கல்வெட்டுக் கள் இருந்தன. கொங்கு நாட்டில் மற்ற இடங்களில் இருப்பதைப்போல் கொங்கு சோழர்களுடைய கல்வெட்டுக்களும் இங்கு இல்லை. ஆகவே கொங்கு நாட்டின் மற்றப் பகுதிகள் கொங்கு சோழர்களுடைய ஆட்சியில் இருந்தபோது கருவூர்ப் பிரதேசம் தஞ்சை, உறையூர்ச் சோழர்களின் நேர்முக ஆட்சியிலே இருந்தது எனல்வேண்டும். அக்காரணத்தினால்தான் புகழ்ச் சோழநாயனாரும் திறை வாங்குவதற்காகத் தம் தலைநக ரான உறையூரிலிருந்து கருவூருக்கு நேரில் வந்து இருந்தார் போலும்!

**நாடு :**—கொங்கு நாடு. ஆனால் அதற்கு இராஜேந்திரன் காலத்தில் அதிராசராச மண்டலம் என்றும், விக்கிரமன் காலத்தில் வீரசோழ மண்டலம் என்றும், குலோத் துங்கன் III காலத்தில் சோழ கேரள மண்டலம் என்றும் பெயர் கொடுக்கப்பட்டிருந் தது என்று அவரவர்களது கல் வெட்டுக்களால் அறிகிறோம்.

**உள்நாடுகள் :**—கருவூர் இருக்கும் நாட்டிற்கு வெங்கால நாடு என்று பெயர். இது கொங்கு மண்டலத்து 24 நாடுகளில் ஒன்று என்று கொங்கு மண்டல சதகம் கூறும்.

இக்காட்டில் கணவதி கல்லூர், நெல்வாய்ப்பள்ளி, பாக்கூர், புன்னம், ஆத்தனூர் முதலிய ஊர்கள் உண்டு. தட்டையூர் நாடு என்ற மற்றொரு நாடும் உண்டு. அதில் மன்னரை, கோளபள்ளி, தேவனபள்ளி முதலிய ஊர்கள் உண்டு. இவ்வூர்களைக் கருவூர் ஆலயத்திற்குத் தேவதானமாகக் கொடுத்திருந்தார்கள் எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

**ஊர் :—கருவூர்.** இதற்குக் குலோத்துங்கன் III காலத்தில் முடிவழங்கு சோழபுரம் என்ற பேர் இருந்தது.

**கோயில் :—**ஆனிலை என்பது. சுவாமிக்கு கருவூர்த் திருவானிலை மகாதேவர் என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளது. எந்தக் கல்வெட்டிலும் பசுபதீசுவரர் என்று கூறப்படவில்லை. ஆகவே இவ்வடமொழிப் பெயர் தமிழ்ப் பெயரின் மொழி பெயர்ப்பே ஆகும். சுவாமியின் கர்ப்பக்கிருகம், அம்மன் கர்ப்பக் கிருகம், மொட்டைக் கோபுரம் இவைகளில் பழங்காலக் கல்வெட்டுக்கள் இருந்தபடியால் அப்பாகங்கள் மிகப் பழையவை எனப்படும். இக் கல்வெட்டுக்களில் கண்ட இராஜேந்திரன் வீராராஜேந்திரன் இவர்களுடைய மெய்க்கீர்த்திகள் சோழ சரித்திரத்திற்குச் சிறந்த ஆதாரவுகளாக இருக்கின்றன. இக்கல்வெட்டுக்களில் இறை, வரி, சிற்றுயம், எலவை, உகவை, மன்றுபாடு, தெண்டம், குற்றம், எறச்சோறு, கூற்றாஞ்சி முதலிய வரித்திட்டங்களைப் பற்றி அறியலாம். மேலும் சாசனங்கள் எழுதும்போது நிலத்தின் விவரத்தில் "உடும்போடி, ஆமைதவழ், புற்று எழுந்த இடம், சுற்றுப்புல், பேரக முற்றூட்டு, மேலேக்கிய மரம், கீழேக்கிய கிணறு" முதலிய வாசகம் கண்டு எழுதுவதுண்டு என்பதை இக்கல்வெட்டுக்களால் அறியலாம். இச்சொற்றொடர்களினின்றும் முன்னூளில் வழங்கிய தமிழின் சுவையும் காணப்படும். மேலும் ஒரு கல்வெட்டு, கண்மாளர்களுக்குச் சில உரிமைகளைக் கோனேரின்மைகொண்டான் (வீர சோழன்) கொடுத்ததாகக் கூறுகிறது. அவ்வுரிமைகள் அதுவரை அவர்களுக்கு இல்லைபோலும்!. அவை: கன்மை தின்மைகளில் இரட்டைச்சங்கு ஊதுதல், வீட்டிற்குச் சாந்து பூசுதல், புறப்படும்போது பாதரக்ஷை அணிதல் முதலியன !. மேலும் மற்றொரு கல்வெட்டில் தேவகன்மிகளுக்கு (கோயில் சிப்பந்திகள்) வீட்டிற்கு இரட்டை மாடி கட்டுதல், இரட்டைக்கதவு வைத்தல், பூவிளுல் அலங்கரித்தல் முதலிய உரிமைகள் கொடுக்கப்பட்டனவாம் !.

மேலும் கி. பி. 1618-ல் எழுதப்பட்ட கருவூர்ப் புராணத்தில் எறிபத்தர் சருக்கம், புகழ்ச்சோழர் சருக்கம் இரண்டும் இருத்தல் காண்க. இச்சரித்திரங்கள் பெரியபுராணத்தை ஏறக்குறைய ஒட்டியே பாடப்பட்டிருக்கின்றன.

(இதன் விரிவைச் "செந்தமிழ்ச் செல்வி" 12-ம் சிலம்பில் காண்க.)

## 2. ஏழூர் நாயனூர்

**திருப்பதி - எயினனூர் :—**சோழநாட்டில் அரிசிலாற்றங்கரையில் உள்ள ஓர் ஊர். எயில் என்றால் மதில் அல்லது அரண்; எயினன் மதில் கொண்ட அரணுக்கு அதிபன்; அவனூர் எயினனூர் ஆகும். பண்டைத் தமிழில் எயினர் என்பது பாலைநிலத்து மக்களின் பெயர், அவர்களுடைய பெண்மக்களின் பெயர் எயிற்றியர். பாலைக்கு எயில் அவசியம் அல்லவா? ஆனால் இந்த எயினனூர் பாலை நிலத்தில் இல்லை; மருத நிலத்தில் உள்ளது. மருத நிலத்தில் இருக்கலாம் என்பதற்குக் காஞ்சியைச் சுற்றியுள்ள நாட்டிற்கு எயில் நாடு எனப் பெயர் இருத்தலாற் கண்டு கொள்க.

ஏழுதி என்ற மொழி பண்டைத் தமிழ் மன்னர் அளித்து வந்த ஒரு சிறந்த பட்டத்தின் பெயர். அதற்கு அறிகுறியாக ஒரு மோதிரமும் அளிப்பார்கள். அதற்கு ஏழுதி மோதிரம் என்று பெயர். இதனைப் பண்டைய தமிழ் நூல்களில் விவரமாகக் கண்டு கொள்க. இப்பட்டத்தைப்பற்றிக் கல்வெட்டு ஆதாரமும் உண்டு. சென்னைக்

கடுத்த திருவொற்றியூரில் அம்மன் சந்நிதிக் கடுத்த ஒரு கல்தூணில் 237/1912 என்ற இலக்கமிட்ட கல்வெட்டில் பெருமாள் சுந்தர பாண்டிய தேவனின் நிமித்தம் ஏனதி மேற்குடையான் பெரிய நாயன் என்ற பொத்தப்பிராயன் என்பவன் " எல்லாம் தலை யான பெருமாள் திருவாசல் " என்ற வாசலைக் கட்டினதாகச் சொல்லப்பட்டிருக் கிறது. இச்சுந்தர பாண்டியன் 1251 - 1264 கி. பி. யில் இருந்தவன். ஆகவே அக் காலத்தில் ஏனதி பட்டம் தரித்த ஒரு பொத்தப்பிராயன் (கண்ணப்பர் சரிதம் காண்க) இருந்திருக்க வேண்டும். அவன் திருவொற்றியூரில் அம்பாள் சந்நிதியில் திருப்பணி செய்தவன். நாயனூர் புகழ் அக்காலத்தில் பரவி யிருந்தது.

**3. கண்ணப்ப நாயனூர்** * * * முன்னரே வெளியிடப் பட்டது.

கண்ணப்ப நாயனூர் புராணம் - சேர்க்கை - iv-x பார்க்க.

## 4. குங்கிலியக்கலய நாயனூர்

**திருப்பதி - திருக்கடவூர்:**—அமிர்தகடேசர் ஆலயத்தில் 38 கல்வெட்டுக்களும், திருக்கடவூர் மயானத்துப் பிரமபுரீசர் ஆலயத்தில் 13 கல்வெட்டுக்களும் உள்ளன. அவைகள் பெரும்பாலும் சோழ பாண்டிய மன்னர்கள் காலத்தவையே. இராசராஜச் சோழன் I (985 - 1013) முதல் இராஜராஜன் III (1216 - 1248) வரை சோழர்கள் 13 தூற்றுண்டுப் பாண்டியர்கள், கிருஷ்ணதேவராயன் (1509 - 1535) இவர்கள் கல்வெட்டுக்களே முக்கியமானவை. இக்கல்வெட்டுக்களில் பூதானச் செய்திகள் குறிக்கப்பட்ட போதிலும் அடியிற்கண்ட குறிப்புக்கள் ஆராயத்தகுந்தன.

**நாடு:**—சோழ வம்சத் தொடக்கத்தில் உய்யக் கொண்டான் வளநாடு என்றும், பிற்காலத்தில் ஜயங்கொண்டசோழ வளநாடு என்றும் பெயர் வழங்கியது.

**உள்நாடு:**—முதலில் அம்பர் நாடு என்றும், பின்னர் ஆக்கூர் நாடு என்றும் வழங்கியது. திருஅம்பர், திரு வாக்கூர் என்ற இவ்விரு ஊர்களும் அருகில் உள்ளன: தலைமை நகர் மாற்றத்தினால் நாட்டின் பெயரும் மாறினது போலும்.

**ஊர்:**—'படைமேவிய திருக்கடவூர்,' 'உட்படை மேவிய திருக்கடவூர்' என்று காண்கிறோம். " உட்படை மேவிய " என்றிருத்தலால் இங்குப் பெருஞ் சேனையின் ஒரு பிரிவை அரசன் வைத்திருக்கலாம் (Contonment Station) என்று சாசன ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் எண்ணுகிறார்கள்.

**சுவாமிபெயர் - காலகால ஈசுவரர்.** ஆலயம் - திருவீரட்டானம். இவ்வால யத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகள் - காலகாலதேவர், கூத்தாடுதேவர், குலோத் துங்கச் சோழீசர், விக்கிரம சோழீசர் (அவ்வவ்வரசர்கள் தாபித்தவை). இப்போது வழங்கும் வடமொழிப் பெயர் கல்வெட்டுக்களில் இல்லை. திருமயானத்துச் சுவாமியின் பெயர் திருமயான்முடைய நாயனூர் என்பதே.

**சிலசெய்திகள்:**—1. குலோத்துங்கன் III காலத்தில் ஆலயப்பணியில் புதிதாக அமர்ந்த இரண்டு சிவாசாரியர்கள் நீக்கப்பட்டுப் பரம்பரைச் சிவாச்சாரியர்கள் நியமிக் கப்பட்டனர்.

2. குலசேகரபாண்டியன் காலத்தில் மன்னனுடைய தம்பிகளுக்கு நிலங்களைப் பிரித்துக்கொடுத்த காரணத்தினால் கலகம் எற்பட, அரசன் அவைகளை மீட்டுக் கொண்டான். கலகமும் தீர்ந்தது.

3. கிருஷ்ணதேவராயன் (1509) காலத்தில்நடந்த இராயச்சூர் யுத்தத்தில் போர் செய்த கடவூர் ஆபத்சகாயர் என்ற பிராமணன் இவ்வாலயத்தில் திருப்பணி செய்தது.

4. காலகாலன் ஈழத்து அரையன் என்ற கவி அகப்பொருள்பற்றிய செய்யுள் களாக இரண்டு கட்டளைக்கலித்துறைக் கவிகளைப் பாடிக்கல்வெட்டிற் பதிப்பித்தார்.

5. குலோத்துங்கன் காலத்திற் புலியூர்க்கோட்டம் குன்றத்தூர் சேக்கிழார் அம்மையப்பன் பராக்தக தேவனான கரிகால்சோழ பல்லவராயன் என்பவர் இவ்வாலயத்திற்குப் பூ தானம் செய்தார். குன்றத்தூர்ச் சேக்கிழார் என்ற பெயர் குறிப்பிடத்தக்கது.

6. குலோத்துங்கன் 26 ஆண்டு (25/06) கல்வெட்டின்படி கடவூர்ச் சபையார் ஒரு நிலத்தைத் தானம்செய்து அதை விளைநிலமாகத் திருத்திக் குங்குலியக்கலைய நாயனார் திருநாள் நிபந்தங்களுக்காக (அடியார்கள் அமுது உண்ணச்செய்ய) ஏற்பாடு செய்யும்படி உத்தரவு இட்டார்கள். இங்கே நாயனார் பெயர் குறித்திருப்பது நோக்கத்தக்கது.

7. திருமயானமுடைய பெருமாள் ஆலயத்தில் குலோத்துங்கன் III காலத்தில் ஆலயத்தில் வீணை வாசிக்கவும், வேதம், திருஉருத்திரம் இவைகளை ஓதவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

## 5. மானக்கஞ்சாறர்

**திருப்பதி - கஞ்சாறூர்:**—இது மேலைக்காழி, தலைஞாயிறு என்ற பெயர்களைக் கொண்ட கருப்பறியலூர் (வைத்தீசுவரர் கோயிலுக்கு 4 கல்லில் உள்ள ஒரு ஊர்) என்பது சிலர் கருத்து. இதன் வாயு மூலையில் ஒரு கல்லில் வட கஞ்சாறு என்ற ஒரு சிறு ஊர் இருக்கிறது. இது ஒரு வைப்புத்தலம். இதனையே மானக்கஞ்சாறர் அவதாரத்தலம் என்பர். ஆனால் இது வடகஞ்சாறு என்றிருத்தலால் தென்கஞ்சாறு ஒன்று இருத்தல் வேண்டும். அது இப்போது வழக்கில் இல்லை. என்றாலும் ஆனதாண்டவபுரத்தில் கீழ்ப்பகுதியில் பஞ்சவடீசர் ஆலயம் ஒன்று இருக்கிறது. இத்தலம்தான் கஞ்சாறூராக இருக்கக்கூடும் என்று அங்கு புதையலில் அகப்பட்ட விக்கிரகங்களினால் அறியக்கூடும். (இப்புராணத் தலவிசேடத்தினுட்காண்க.)

இனி, கஞ்சாறன் என்ற பெயருள்ள இரண்டு கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. செங்கல்பட்டு நித்தம் சண்பகேசுவரர் ஆலயத்தின் (262/1912) கல்வெட்டின்படி இராஜேந்திரச் சோழன் I (1017—1043) மூன்றாவது ஆண்டில் பரமேசுவர மங்கலத்துச் சம்வத்ஸர வாரியச்சபையார் இராஜேந்திரச் சோழன் மண்டபத்தில் (சதுஸ்ஸாலி) கூடி நிலத்தீர்வையை நிச்சயித்தார்கள். நிலத்தீர்வை விதித்த உத்தியோகத்தன் பெயர் "**கஞ்சாறன்** ஐயன் சூரியன்" என்பது. மேலும் திருவொற்றியூரில் ஒரு கல்வெட்டின்படி (188/1912) கங்கபல்லவன் விஜய கெம்பவிக்ரம வர்மன் முதலாவது ஆண்டில் சோழ வளநாட்டு இந்தளூர்நாட்டுக் **கஞ்சாறூர்** கிராமத்துக் **கஞ்சாறன் அமர்நீதி** என்ற பல்லவதரையன் திருவிளக்கு வைப்பதற்காகப் பொன் தானம் செய்தான். இதனால் சோழநாட்டில் கஞ்சாறூர் இருந்ததென்றும், அவ்வூரான் ஒருவன் கஞ்சாறன் அமர்நீதி என்ற பெயரை வகித்துக் கொண்டான் என்றும் தெரிகிறது. இதில் கஞ்சாறன் என்பது அவனது ஊரையும், அமர்நீதி என்பது அவனது பேரையும் குறிப்பன போலும். அவன் அமர்நீதி நாயனாரிடம் அன்பு செலுத்திய மரபினன் போலும்.

## 6. அரிவாட்டாயர்

**திருப்பதி-கணமங்கலம்:**—இது சோழநாட்டுத் திருப்பதி. மிகவும் செழிப்புற்றது. திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 2½ கல்லில் உள்ள தண்டலைச்சேரி என்ற ஊருக்கு ½ கல்லில் இருந்த ஒரு ஊர். இப்போது கணமங்கல மேடு என்ற ஒரு திடல் மாத்திரம் பேரளவில் இருக்கிறது. தண்டலைச்சேரி என்பது **தண்டலை நீ ணெறி** என்ற பாடல் பெற்ற மாடக்கோயில். இவ்வாலயத்திற்குத் திருஞானசம்பந்தநாயனார் அருளிச் செய்த தேவாரப்பதிகத்தின் சொற் சிறப்பினையே சேக்கிழார் கணமங்கலத்திற்கு எடுத்தாண்டு வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (புராண உரை பார்க்க.)

இங்கு அவதரித்த அரிவாட்டாயனாரைப் பற்றிய கல்வெட்டுக்கள் கிடைக்க வில்லையாயினும் அவரது பெயரை இட்டு வழங்கிய சில சிவனடியார்களின் செயல்களைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. தஞ்சை ஜில்லா கும்பகோணம் தாலூக்கா திருப்புறம்பயத்தில் உள்ள சாக்ஷீசுவர சுவாமி ஆலயத்தில் கண்ட ஒரு கல்வெட்டில் (344/27) " **அரிவாட்டாயன்**, திருத்தொண்டன், வன்றொண்டன், சண்டேசுவரன், இயற்பகை, கோட்புலியார், விறன்மிண்டன், அணுக்க நம்பி என்ற பெயர்கள் வாய்ந்த அடியார்கள் திருப்புறம்பய நாயனாருக்கு ஐப்பசி பங்குனித் திருவிழாக்களிலும், திருவேட்டை, தீர்த்தம் இக்காட்களிலும் நிமந்தங்களுக்கு நிலதானம் செய்ததாகக் கண்டிருக்கிறது. இக்கல்வெட்டு ஒரு அரசனுடைய 13 வது ஆண்டில் பொறிக்கப் பட்டது. இதன் மேல் கல்வெட்டு விக்கிரமனுடைய கல்வெட்டானதினால் இதுவும் 12 வது நூற்றாண்டினதாக இருக்கலாம். ஆகவே, பெரிய புராணம் எழுதிய பிறகு சிறிது காலத்திற்குள்ளாகவே இப்பெயர்களை மக்கள் இட்டுக்கொள்வது வழக்கத்திற்கு வந்துவிட்டது எனலாம். மேலும் **தாயன்** என்ற பெயர் வேறு கல்வெட்டுக்களிலும் காணலாம். **தாயன் கணமுடையான்** (திருச்சி - திருவெறும்பியூர் (744/1914), **தாயன் சிங்கன்** (மதுரை, பெரிய குளத்துச் செப்புச் சாசனம் 1301/1907), **தாயன் திருச்சிற்றம்பல முடையான்** (திருச்செங்காட்டங்குடி 58/1913) என்ற பெயர்கள் கிடைத்திருக்கின்றன. இப்பெயர்களில் **தாயன் கண**முடையான் என்றது குறிப்பிடத் தக்கது. (விரிவை சித்தாந்தம் 12 மலரில் காண்க).

## 7. ஆலய நாயனார்

**திருப்பதி - மேன்மழநாட்டுத் திருமங்கலம் :—நாடு** - மழநாடு. திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே கொள்ளிடத்திற்கு வடபாகம். இந்நாட்டு அந்தணர்க்கு மழநாட்டுப் பிரகச்சாரணம் என்று பெயர் உண்டு. இந்நாடு மேன்மழநாடு - கீழ்மழநாடு என்ற இருபிரிவுகள் கொண்டது. மேன்மழநாட்டிற்குத் திருத்தவத்துறை (லால்குடி) தலைநகராகவும், கீழ்மழ நாட்டிற்கு மழபாடி தலைநகரமாகவும் இருந்தன. இவை தவிர மழகொங்கு என்று ஒரு பிரிவும் இருந்ததாகச் செப்பேடு ஒன்று கூறும்.

**உள்நாடு** - மழநாட்டில் வெள்ளூர்க் கண்டம், பாச்சில் கூற்றம், இடையாற்று நாடு, கலார்க்கூற்றம் முதலிய பல பிரிவுகள் இருந்தன. நாட்டுப் பெயர்கள் பல சோழர்கள் காலங்களில் பலவாறு மாறின. இனி, மழநாட்டில் பாச்சில் ஆச்சிராமத்தில் கொல்லி மழவன் என்ற தலைவன் இருந்த செய்தி திருஞானசம்பந்த நாயனார் சரிதத்தில் காண்க. இந்நாட்டுத் தலைவர்களுக்கு மழவர், மழவராயர் என்ற பெயர் உண்டு.

**ஊர்** - மேல்மழநாட்டுக் கலார் கூற்றத்தில் உள்ள திருப்பதி **திருமங்கலம்** ஆகும். அது ஒரு மூதூர்.

**ஆலயம்** - பழையது. இதில் 13 கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. அவை ராஜராஜன் I (983-1013) காலம் முதல் ராஜராஜன் III (1238) வரையிலும், பின் மதுரைநாயகர் (1567) காலத்தும் உள்ளன.

**சுவாமி** - பரசுராமீசுவரம் உடையார். திருமழுவுடைய நாயனார் என்றும் காண்கிறோம். தற்காலப் பெயராகிய சாமவேதீசர் என்ற பெயரே கர்ணவில்லை. (பரசு - மழு ; மழுவிலிருந்து மழவர் - மழவநாடு என்ற பெயர்கள் வந்திருக்கலாம். மழு-உழவுக் கருவி. மழவர் - உழவர் என்றலுமாம்.)* (விரிவு - சித்தாந்தம் - 12 மலரில்காண்க).

---

*இத்தலத்தில் பரசுராமர் பூசித்துத் தாய்க்கொலைப்பழி நீங்கினர் என்பது தலமான்மியம். சிவபெருமான் மழுவேந்தியவர். பரசுராமரும் தவம்செய்து பரசுபெற்றவர். தலவிசேடமும் விறண்மிண்ட நாயனார் புராணமும் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

நான்காவது

# மூம்மையாலுலகாண்ட சருக்கம்

திருச்சிற்றம்பலம்

மூம்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன் ;
முருகனுக்கு, முருத்திர பசுபதிக்கு மடியேன் ;
சேம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன் ;
நிருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன் ;
மேய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வேகுண்டெழுந்த தாதைதாண் மழுவினு லேறிந்த
வம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன் ;
ஆரூ ரூரூரி லம்மானுக் காளே.

—திருத்தொண்டத்தொகை - (3)

திருச்சிற்றம்பலம்

தாதையை—என்பதும் பாடம்.

# 15. மூர்த்திநாயனூர்புராணம்

## தொகை

" மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன் "—திருத்தோண்டத்தொகை

## வகை

" 'அவந்திரி குண்டம ணுவதின் மாள்வ'னென் றன்றலவாய்ச்
சிவன்றிரு மேனிக்குச் செஞ்சந் தனமாச் செழுமுழங்கை
யுவந்தொளிர் பாறையிற் றேய்த்துல காண்டவோண் மூர்த்திதன்னூர்
நிவந்தபொன் மாட மதுரா புரியென்னு நீள்பதியே "

—திருத்தோண்டர் திருவந்தாதி - (கஎ)

## விரி

968. சீர்மன்னுசெல் வக்குடி மல்கு சிறப்பி னேங்குங்
கார்மன்னுசென் னிக்கதிர் மாமணி மாட வைப்பு
நார்மன்னுசிந் தைப்பல நற்றுறை மாந்தர் போற்றும்
பார்மன்னுதோன் மைப்புகழ் பூண்டது பாண்டி நாடு. க

மும்மையாலுலகாண்ட சருக்கம் :—இது, கிறுத்த முறையானே, நான்காவது திருத்தொண்டத் தொகையினுள் " மும்மையா லுலகாண்ட " என்று தொடங்கும் மூன்றாவது திருப்பாசுரத்தினுள் துதிக்கப்பட்ட அடியார்களின் சரிதங்களைக்கூறும் பகுதி. அந்த அடியவர்களாவார் மூர்த்தியார், முருகர், உருத்திரபசுபதியார், திருநாளைப் போவார், திருக்குறிப்புத்தொண்டர், சண்டீசர் என்ற அறுவர்.

புராணம் :—அவ்வறுவருள் மூர்த்தியார் என்ற பெயருடைய நாயனாரது சரித வரலாறும் பண்புங் கூறும் பகுதி. இனி, மேல்வருத்த முறையே மும்மையாலுலகாண்ட சருக்கத்தில் முதலாவது மூர்த்திநாயனார் சரிதங் கூறத் தொடங்குகின்றார்.

தொகை :—(சிவசாதனங்களாகிய) மூன்றினால் உலகத்தை அரசாண்ட மூர்த்தியாருக்கு நான் அடியேன் ஆவேன். மும்மை - திருநீறு, உருத்திராக்கக் கண்டிகை, சடை என்ற சிவசாதனங்கள் மூன்று. இவற்றால் உலகாண்ட திறம் 1008 - 1013-ல் விரிக்கப்பட்டது.

வகை :—"வீணைதிரியும் குண்டமணர்களுக்குள்ளாவதின் மாள்வன் " என்று அன்று ஆலவாய்ப் பெருமானது திருமேனிக்கு உகந்த செஞ்சந்தனமாகக் கொண்டு தமது செழித்த முழங்கையினை மகிழ்ச்சியுடன் பாறையில் தேய்த்து, (இறைவனருளால்) உலகாண்ட ஒண்மையுடைய மூர்த்தியாரது ஊர், ஓங்கிய பொன்மாடங்களையுடைய மதுராபுரி என்று சொல்லப்படுகின்ற நீள்பதியேயாகும்.

அமணவதின் மாள்வன் - இது, பாறையில் முழங்கையை எலும்பு திறந்து மூளை காணத் தேய்க்கத் துணிந்தபோது மூர்த்தியாரது திரு உள்ளத்தில் எழுந்த துணிபு. அவம் திரி அமண் என்க. குண்டமணர் அவந்திரிவதின் என்று விகுதி பிரித்துக்,

கூட்டி, அமணர்க்குள்ளாகிச், சிவன்பணி செய்யமாட்டாது வீணே வாளுள் போக்கு வதினும், " பேசாத நாளெல்லாம் பிறவா நாளே " என்பது முதலாகத் தமிழ்மறைகள் விதித்தபடி, சாதல் நன்று என்றுரைத்தலுமாம். **தீநுமேனிக்குச் செஞ்சந்தனமாக** - சிவனுக்குத்தாம் நியதியாகச் சாத்தும் செஞ்சந்தனக் காப்பாக எண்ணி. சந்தனத்தில் உயர்ந்தது செஞ்சந்தனம் என்ப. இது மலாக்காச் சந்தனம் எனவும்படும். " காசில் பனி நீர்பச்சைக் கற்பூரங் குங்குமப்பூ,மாசிலுரோ சனைபுழுகு மான்மதமா வியுங்கலந்த, வாசிகந்த மலாகாச்சந் தனமிலே பணம் " - (மருதவரைப்படலம்-34) என்ற பேரூர்ப் புராணங்காண்க. முழங்கை தேய்த்தலால் குருதி பெருகுமாதலின் அதனைப் புலால் கமழும் ஊன்பண்டமாகக் கருதாது அத்தச் செந்நிற வொற்றுமையே கருதிச் செஞ்சந் தனமாக எண்ணினர் என்ற கருத்தும் காண்க.

**செழுமுழங்கை** - திருமேனியின் செழுமை குறித்தது. சிவனது மெய்ப்பூச்சுக் குரிய சந்தனமரைத்துப் பணிசெய்த செழிப்புடைய கை என்ற குறிப்புமாம். "தேய்க்கும் கை"-(987). **உவந்து தேய்த்து**-உடல் வருத்தம் சிறிதும் மனங்கொள்ளாது மகிழ்ந்து செய்த மனநிலை குறித்தது. **பாறை** - சந்தனம் அரைக்குங் கல். **உலகாண்ட** - தேய்த்த காரணத்தால் இறைவன் அருளியபடி உலகாளப்பெற்ற வரலாறு (985, 986, 987) விரிநூலுட் காண்க.

**ஒண்மை** - ஒள்ளியனவாகிய மனநிலை - வாக்குநிலை - செய்கையின் நிலைகள். சரிதம் காண்க. **பூர்த்தி** - நாயனாரது பெயர் (976). **ஊர் - நீள்பதியே** என்ற முடிக்க. **பொன் மாடம்** - பொன்னணிந்த சிகர முதலிய பகுதிகளையுடைய மாடங்கள். " கதிர் மாமணி மாடவைப்பு " (960) என்பது விரிநூல். **பொன்**-அழகிய என்றலுமாம். " பொற்பதி " (975). **மதுராபுரி** - விரிநூலினுள் இப்பெயரையே எடுத்தாண்டது காண்க (971). **நீள்பதியே** - புகழாலும் பெருமையாலும் காலத்தாலும் நீளும். மூக் காலத்துக்கும் பொதுவாகிய வினைத்தொகை - 974 பார்க்க.

968. (இ - ள்) பாண்டிநாடு - பாண்டிய நாடானது ; **சீர்மன்னு...வைப்பு** - சீரினால் நிலைத்த செல்வமுடைய குடிகள் நிறைந்த சிறப்பினால் ஓங்கும், மேகங்கள் நிலைத்துத் தங்கும் உச்சியிடங்களையுடைய ஒளி பொருந்திய மணிகளைக் கொண்ட மாடங்கள் நிறைந்தது ; **நார்மன்னு...பூண்டது**-அன்பு பொருந்திய மனத்தையுடைய பல நல்ல துறைகளில் வாழ்கின்ற மாந்தர்கள் துதிக்கும்படி உலகில் நிலைத்த பழமை பொருந்திய புகழையுடையது.

**(வி - ரை) சீர்மன்னு செல்வம்** - சீரினால் நிலைத்தலாவது நல்வழியின் ஈட்டப் பட்டதனால் நிலைபெற்றிருத்தல். அவ்வாறல்லாத பொருள்களாயின் விரைவில் அழிந்துபோம் என்பது நூற்றுணிபு. **செல்வக்குடி மன்னு சிறப்பு** - குடிகள் நிறைந் திருப்பதும் நல்ல செல்வம் பெருகியிருப்பதும் மாடங்களுக்குச் சிறப்பாவனவாம். சீர் - அறம் ; செல்வம் - பொருள் ; குடி - இன்பம் ; சிறப்பு - வீடு என நான்கு உறுதிகளும் தரும் என்ற குறிப்பும் காண்க.

**ஓங்கும் கார்மன்னு சென்னி** - மேகங்கள் தங்கும் உச்சி என்பது மாடங்களின் உயர்ச்சியைக் குறித்தது. " செல்வ நெடுமாடஞ் சென்று சேரேங்கிச், செல்வமதி தோயச் செல்வ முயர்கின்ற செல்வர் வாழ்" (குறிஞ்சி - கோயில்-5) என்ற ஆலுடைய பிள்ளையார் தேவாரத்தின் கருத்தையும் காண்க. ஓங்கும் மாடம் என்று கூட்டலுமாம்.

**வைப்பு** - மாடங்களின் நிறைவாகிய சேமநிதி போல்வது என்றபடி.

**நார்மன்னு...போற்றும்** - எத்த நற்றுறைக்கும் அன்புடைய மனம் இன்றியமை யாது வேண்டப்படுவ தென்பதாம். அன்பும் நல்லொழுக்கமுமுடைய நல்லோரால் போற்றப் படுவதே நன்மதிப்பாகும் ; எனவே வெல்லாம் மதிப்பகா என்பதும் குறிப்பு. **பல நற்றுறை** - பலவகையின் நல்லொழுக்கங்கள் குறித்தது. **மாந்தர்** - பழஞ் சங்கப் புலவர்களும் மற்றும் பெரியோர்களும். **பார்மன்னு தொன்மைப்புகழ்** - உலகில் நிலை

பெற்ற பழமை. "பாண்டிநாடே பழம்பதியாகவும்" (திருவாசகம்) முதலிய திருவாக்குக்களை இங்கு நினைவுகூர்க.

**பாண்டி நாடு** - பாண்டிய மரபின் அரசர்களால் ஆளப்பட்ட நாடு.

பாண்டி நாட்டினை இத் திருத்தொண்டர் புராணத்தினுள் முதன் முதலிற் கூறநேர்ந்த இடம் இப்புராணமேயாதலானும், பாண்டிநாடு **தமிழ்நாடு** என்று சிறப்புப் பெயர் பெற்றதாதலானும் இங்குச் *செய்யுள் யாப்பினாலும், பொருளாலும் தமிழின் சிறப்புப்பற்றி ஆசிரியர் தொடங்குகின்றார். உறுதிப்பொருள் தராத சீவகசிந்தாமணியைக் கற்று அது தமிழ்வளனும் பொருள்வளனும் பெரிதுமுடையது என்று பாராட்டி மக்கள் போது போக்கிய காலத்தில் அவர்களது மனங்களை நற்றமிழிலும் நற்பொருளிலும் ஈடு படுத்த இத்திருத்தொண்டர் புராணம் எழுந்தது என்பது திருத்தொண்டர் புராண வரலாற்றினாலறியப்படும் உண்மை; ஆதலின் பாண்டிநாட்டைப்பற்றிய இச்சரிதத்தைக் "காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றி" என்ற சிந்தாமணியின் கலித்துறை யாப்பினால் தொடங்கி அந்த ஒரேவகைச் செய்யுள் யாப்பினாலே புராண முழுதும் பாடியருளினார் ஆசிரியர் என்க. சிந்தாமணியை விடுத்து இதனைக் கற்போர் தமிழ்ச் சுவையும், இகபர நலனும் ஒருங்கே அடையுமாறு இச்சரிதங்கூறிய யாப்பமைதி ஆசிரியரின் கருணைத்திறத்தினையும் கவித்திறனையும் ஒருங்கே காட்டிநிற்கின்றது. இத் தமிழ்நாட்டரசர் புராணமே தமிழ்வளத்திற்கேற்றதெனக் கொண்ட அமைதியும் காண்க. தமிழ்வளத்தினையே தமது திருமனத்துட் கொண்டு ஆசிரியர் இப் புராணத்தினுட் புகுந்தனர் என்பது, 968—974 திருப்பாட்டுக்களின் அமைப்பினால் இனிது விளங்கும். 974-ம்திருப்பாட்டில் வெளிப்படையாகக் கூறியருளியதனோடு 970-ல் **ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்**, என்று விதந்தும் கூறியருளினர்.

இதனால் நாடும் நாட்டுச் சிறப்பும் கூறினார். 1

969. சாயுந்தளிர் வல்லி மருங்கு னெடுந்த டங்கண்
வேயும்படு தோளியர் பண்படு மின்சொற் செய்ய
வாயும்படும்; நீள்கரை மண்பொருந் தண்பொ ருந்தம்
பாயுங்கட லும்படும்; நீர்மை பணித்த முத்தம். உ

(இ - ள்) **நீர்மை பணித்த முத்தம்** - அன்பின் நீர்மையினாற் கொள்ளப்பட்ட முத்தம்; சாயும்...தோளியர் - தளிர்களையுடைய சாயும் கொடிபோன்ற இடையினையும் நீண்டபெரிய கண்களையும் உடைய மூங்கில்போன்ற தோள்களையுடைய பெண்களின்; பண்படும்...**வாயும்படும்** - பண் உண்டாகின்ற இனிய சொற்கள் பொருந்திய சிவந்த வாயினிடத்தும் பொருந்துவன; **நீர்மை பணித்த முத்தம்** - நீரோட்டம் என்னும் தண்ணிய ஒளிமிகுந்த முத்துக்கள்; நீள் கரை மண் பொரும் தண் **பொருந்தம் பாயும் கடலும்படும்** - நீண்டகரையின் மண்ணை இடித்து ஓடும் குளிர்ச்சியுடைய குளிர்ந்த **தாமிரபர்ணியாறு** பாய்கின்ற கடலிலும் உண்டாகின்றன.

(வி - ரை) **நீர்மை பணித்த முத்தம்** என்பதனை இரட்டுறமொழிந்து கொண்டு, முத்தம் வாயும்படும், முத்தம் கடலும்படும் என்று ஈரிடத்துங் கூட்டி உரைக்க. உம்மைகள் எண்ணும்மைகள். மேல் வரும்பாட்டிலும், 972-லும் இவ்வாறே கொள்க.

**வாயும்படும்** என்றதனோடு கூட்டும்போது-**நீர்மை** - அன்பின் தன்மை; **முத்தம்** - அன்பு காரணமாக உளதாகும் உடலின்றொழில் என்க. "தாய் வாய்முத்தங் கொள்ள" (672) என்றது காண்க. **பணித்த** - உண்டாகிய - உண்ணின்று தூண்டப்பட்ட என்க. **படும்** - பொருந்தும். இங்கு **முத்தம்** - முத்துப்போன்ற பல் என்று உரைகொண்டு அதற்குத் தக உரைப்பாருமுண்டு.

---

*இப்புராணத்தினுள் வேறு யாப்பினால் வரும் 996, 997 பாட்டுக்கள் ஐயப் பாடுள்ளன.

**கடலும்படும்** - என்றதனைடு கூட்டும்போது, **நீர்மை** - நீரினுட்பிறக்கும் உயர்ந்த முத்துமணிகளுக்கியல்பாகிய ஒருவகை ஒளிப்பரப்பு. இதனை நீரோட்டம் என்பது வழக்கு. **முத்தம்** - முத்து மணிகள். **பணித்த** - இங்குப்பொருந்திய என்ற பொருளில் வந்தது. **படும்** - உண்டாகும்.

**மருங்குலையும் கண்ணையும் உடைய தோளியர்** என்க. **சாயும் மருங்குல்** - என்க. தளிர்களின் செறிவும் கனமும் தாங்க மாட்டாது சாயும் வல்லி என்று காரணங்கூறியபடி.

**வல்லி மருங்குல்** - **வல்லி** - கொடி. மெய்பற்றி வந்த உவமம்.

**நெடும் தடம் கண்** - நீண்டிருத்தலும் அகன்று விசாலமாயிருத்தலும் கண்ணுக்கு அழகிலக்கண மென்பர்.

**வேயும்படு தோளியர்** - **வேய்** - மூங்கில். **படுதல்** இங்கு அழகிலுற் கீழ்மைப் படுதல் குறித்தது. **வேய்**-பெண்களின் தோளுக்கு உவமமாகக் கொள்ளும் பொருள்களுள் ஒன்று.

**பண்படும் இன் சொல்** - பண்கள் இயல்பான் அமைந்து வீரவுகின்ற இனிய சொல். "பண்ணமரு மென்மொழியார்" (மேகராக - திருமிழலை - 10), "பண்ணினேர் மொழியாள்" (குறுந் - மறைக்காடு - 1) முதலிய திருவாக்குக்கள் காண்க.

**செய்ய வாய்** - செம்மை - உதடுகளின் இயல்பாகிய பவளம் போன்ற நிறம். தாம்பூலத்தினிறமுமாம்.

**நீள்கரை மண் பொரும்**-வெள்ளப்பெருக்கினுல் இருபுறமும் கரைகளில் மண்ணை அரித்துக் கொண்டு செல்லும் ஆற்றினது இயல்பு குறித்தது.

**தண் பொருந்தம்** - குளிர்ச்சியுடைய தாமிரபர்ணி ஆறு. **பாயும் கடலும்** என்று உடம்பொடு புணர்த்துக் கூறியவதனுல் தாமிரபர்ணியாற்றின் நீர் பாய்வதனுல் அந்நீரின் தன்மை பொருந்த அவ்விடத்துக் கடல் முத்துக்களை உடைத்தாகும் தன்மை பொருந்துவதாம் என்பது. தாமிரபர்ணி பாயும் கடற்கரையில் கொற்கை நகரின் பக்கத்தே முத்துக்குளிக்கப்பட்டதென்ற செய்தியும் காண்க. அன்றியும் தாமிரபர்ணியினுல் பொதியம் முதலிய மலைகளினின்றும் வாரிக்கொண்டு வரப்பட்ட முத்துக்கள், அது பாயும் கடலிற் படும் என்றதுமாம். "பூழியர்கோன் றென்னுடு முத்தடைத்து" என்ற வழக்கும் காண்க.

இப்பாட்டால் ஆறும் ஆற்றுச் சிறப்பும் கூறினர்.

மண் படும்—என்பதும் பாடம். 2

970. மொய்வைத்தவண் டின்செறி சூழ்ன் முரன்ற சந்தின்
மைவைத்தசோ லைமல யந்தர வந்த மந்த
மெய்வைத்தகா லுந்தரும் ; ஞால மளந்த மேன்மைத்
தெய்வத்தமி ழுந்தருஞ் ; சேவ்வி மணஞ்சே யீரம். கூ

(இ - ள்) **செவ்வி மணஞ்சேய் ஈரம்** - நறுமணம் வீசச் செய்யும் ஈரத்தை ; **மொய்வைத்த...காலும் தரும்** - மொய்த்த வண்டுகள் நெருங்கிய கூட்டம் ஒலிக்கின்ற இருண்ட சந்தனச் சோலை சூழ்ந்த பொதியமலை தரவந்த மெல்லவுலவுகின்ற சிறு தென்றற் காற்றும் கொடுக்கும் ; **செவ்வி மணஞ்சேய் ஈரம்** - நன்மணத்தைச் செய்தற்குரிய அன்பினை ; **ஞாலம்...தமிழும் தரும்** - உலகத்தை அளந்த மேன்மையும் தெய்வத்தன்மையும் உடைய தமிழும் தரும்.

(வி - ரை) **மொய் வைத்த வண்டு** - என்றது கூட்டமாக மொய்க்கும் வண்டுகளின் இயல்பினையும், **செறிதுழல்** என்றது அக்கூட்டங்கள் பல நெருங்கிச் சூழ்ந்ததனையும் குறித்தன.

**ஞான்ற சோலை** - எனக்கூட்டுக. **சந்து** - சந்தனம். **ஞான்ற** - முழுதுதற்கிடமாகிய, **மைவைத்த** - இருள் சூழ்ந்த. சோலையில் இருள் சூழுதல் மாங்களின் செறிவினுல் ஆவது. **மலயம்** - பொதிய மலை. **மலயம் தரவந்த கால்** - தென்றல். **கால்** - காற்று. **மந்தம் மெய் வைத்த** - மெல்லிதாகிய பரிசம் உண்டாக்கும். **மந்தம்** - குளிர் - பரிமளம் என்ற வாயுவின் வேகம் மூன்றில் **மந்த** நடையை உடம்பில் வைத்த என உரை கொள்வாரும் உண்டு.

**ஞாலம் அளந்த** - என்பது உலகம் இன்ன தன்மையுடையது என்று நிச்சயித்த - அளவுபடுத்திய - என்ற பொருளில் வந்தது. உலகத்தின் உண்மைத் தத்துவத்தை உணர்த்திய என்க. உலக முழுதும் பரவிய - உயர்ந்தாரால் மதிக்கப்பட்ட - என்றுரைப்பாருமுண்டு. **தெய்வத்தமிழ்** - சிவபெருமானருளிய பொருளிலக்கணமும், அறிவாற் சிவமே யாகிய உண்மை நாயன்மார்களருளிய தேவாரம் திருவாசகம் முதலிய திருவருணூல்களும் ஞான சாத்திரங்களும் ஆம். தெய்வத்தன்மை இத்திருவருள் வாக்குக்களின் செயலாலும் பிறவாற்றாலும் அறியப்படும். இக்கருத்தையே பாராட்டிக் கம்பரும் " நீண்டதமிழ் ஞாலுலகை நேமியி னளந்தான் " என்று அகத்தியரைத் துதித்துக் கூறியதும் காண்க.

இனி, " அவற்றுள்—படுதிரைவையம் பாத்திய பண்பே " (தொல் - பொருள் - அக - 2) என்றதனுல் உலகினை நானிலமாக அளந்து, பொருள்களையும் அவற்றுள் அடக்கி யிலக்கணஞ் செய்தமையால் ஞாலமளந்த மேன்மை என்றுரை என்பதுமாம். இதுவன்றியும், " நீலமேனி வாலிழைபாகத், தொருவ னிருதா ணிழற்கீழ், மூவகை யுலகு முகிழ்த்தன முறையே " என ஐங்குறுநூறு கடவுள் வாழ்த்தில் பாரதம் பாடிய பெருந்தேவனுர் பாடியது போன்றவையும் ஞாலமளந்ததே யாமென்க.

**மலயக்காற்று - சேவ்வி மணம் சேய் ஈரம்** தருதலாவது - குளிர்ச்சியையும் நன்மணத்தையும் கொடுத்தல். **ஈரம்** - குளிர்ச்சி. தூணேபிரிந்து வருந்துவோர்க்குத் தென்றற்காற்று மணம் என்ற கூட்டத்தினை நினைவுகூரச் செய்தலும் குறிப்பாம். கைக்கிளைத்துறையில் தென்றலைப் பலதிறப்படப் பேசுதல் அகப்பொருள் வழக்கு.

**தெய்வத்தமிழ் - சேவ்வி மணஞ்செய் ஈரம்** தருதலாவது அன்பை உளதாக்குதல். **ஈரம்** - அன்பு. இங்குச் **சேவ்வீமணம்** என்றது நன்மையின் கூடுதல் குறித்தது. யாழுடையார் மணம்பற்றிச், **சேவ்வி** - பருவத்தே, பொழிலிடத்து நேர்படும் அமையம் என்றலுமாம். நாயக நாயகிகளின் இவ்வுலகம்பற்றிய மணமும், ஆன்ம நாயகராகிய சிவபெருமானுடன் ஆன்மாவாகிய நாயகியின் ஒன்றுபடுதலும் அன்பு காரணமாகவே உளவாவனவாம். அன்பு விளைக்கும் அருட்பெருந் தமிழ்நூலாகிய திருக்கோவையாருக்கு உரை வகுத்த பேராசிரியர் இக்கருத்தை உரைத்தொடக்கத்தில் நன்கு விளக்கியுள்ளது காண்க. இறைவனுர்தந்த அருட்பெருந் தமிழாகிய இறையனு ரகப் பொருளும் இவ்வாறே அன்பினைந்திணை என்று சிறப்பித்துக் கூறப்படும். இது ஆசிரியர் கருத்தாமென்பது " மெய்ம்மைப் பொருளார் தமிழ் நூலின் விளங்கு வாய்மைச், செம்மைப் பொருளுந் தருவார் திருவால வாயின், எம்மைப் பவந்தீர்ப்பவர் " (974) என்றதனுலறியப்படும். " திருவால வாயமர்ந்த செஞ்சுடரைச் செழும் பொருணூல், தருவானே " (திருஞா - புரா. 406) என்று பின்னர்க் கூறுவதும் காண்க.

பக்குவத்துக் கியையச் சிவமணத்தைத் தருகின்ற அன்பை என்பர் இராமகாதைச் செட்டியார். தெய்வமணஞ்செய் செவ்விதரும் என்று கூட்டிப் பிறவி வெப்பத்தை மாற்றித் தெய்வத்தன்மை செய்யவல்ல அழகிய அருளேத்தரும் தமிழ் என்றுரைப்பாருமுண்டு. "தீந்தமிழின் தெய்வ வடிவாள்" என்ற (11 - ம்முறை) ஞானவுலாவுங் காண்க.

**தெய்வத் தமிழ்** - தனிமுதற் றெய்வமாகிய சிவபெருமானே முதல்வராக இருந்து தந்ததும், ஆய்ந்ததும், விரும்பியதும், உள்ளுறை பொருளாய் விளங்குவதும் ஆகிய தமிழ்மொழி என்பதுமாம். " மதுரையினிற் றிருந்தியதூற் சங்கத்தில், அன்றிருந்து

தமிழாராய்ந் தருளிய வங்கணர்" (திருஞா - புரா - 403), "தலேச்சங்கப் புலவனுர் தம்முன்" (திருஞான - புரா - 667) என்று பின்னர்க் கூறுபவையும் காண்க. "கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து, பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ்" என்றதும், "கிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண், தழற்பொலி சுடர்க் கடவுள் தந்ததமிழ்" என்ற கம்பர் பாட்டும், பிறவும் காண்க.

மலயத்தா வந்த தென்றல் வெப்பம்மாற்றி உடலுக்குக் குளிர்ச்சி தருவதுபோல, அத்திருமலேயில் வாழும் தமிழ் முனிவர் தரவரும் தமிழ், உயிர்களுக்குப் பிறவி வெப்பம் போக்கி அருணிழல் தருவதாம் என இந்த இரண்டினேயும் தொடர்பு படுத்திக் கூறிய நயமும் காண்க.

இத்திருப்பாட்டினுல் மலேயும் மலேயின் வளனும், மொழியும் மொழியின் வளனும் இனேபிரியா வகையில் ஒருங்கே கூறிய திறமும் காண்க. 3

971. சூழும்மிதழ்ப் பங்கய மாகவத் தோட்டின் மேலாள்
தாழ்வின்றியென் றுந்தனி வாழ்வதத் தைய லொப்பார்
யாழின்மொழி யிற்குழ லின்னிசை யுஞ்சு ரும்பும்
வாழுங்க ரும்மது ராபுரி யென்ப தாகும். ச

(இ - ள்) சூழும்...ஆக-இதழ்கள் சூழ்ந்த தாமரைமலர்போல; அத்தோட்டின்... வாழ்வது - அத்தாமரைமலர்மேல் தங்கும் இலக்குமி தாழ்வில்லாமல் என்றும் சிறந்து வாழப்பெறுவது; அத்தையல் ஒப்பார் - அந்த இலக்குமியைப் போன்ற பெண்களுடைய; யாழின்மொழியில்...வாழும் - யாழின் மொழியிலும் கூந்தலிலும் முறையே இன்னிசையும் வண்டும் வாழ்கின்ற; **நகாம் மதுராபுரி** என்பது ஆகும் - நகரமானது மதுராபுரி என்ற பெயராற் சொல்லப்படுவது ஆகும்.

(வி - ரை) **இதழ்சூழ் பங்கயம்** என்க. ஆக - போல என்ற பொருளில் வந்தது. **இதழ்சூழ்** என்று சிறப்பித்தது புறஇதழ் - அகஇதழ் - கேசரம் - முதலிய மலரின் உறுப்புக்கள் முற்றும் வெளிப்படக் காணுமாறு அமைந்து காண்ப்படுவது **பங்கயமே** யாம் என்ற சிறப்பு நோக்கி.

**அத் தோடு** - அந்தப் பங்கயமாகிய மலர். பங்கயமும் தோடும் ஆகுபெயர். **மேலாள்** - மேல் உறைபவள் - திருமகள். **பங்கயம்** - வெண்டாமரை என்றும், மேலாள் - கலேமகள் என்றும் கொண்டு அதற்குத் தக்கபடி உரைப்பாருமுண்டு.

**என்றும் தாழ்வின்றி** - ஒருகாலத்துப் பெருத்தும், ஒருகாலம் சிறுத்தும் காணப்படாமல் எக்காலத்தும் குறைவின்றி. **தனிவாழ்வது** - **தனிமை** - இங்குப்போல வேறெங்குமில்லேயாம் தன்மையாகிய சிறப்பு. மேலாள் - வாழ்வது - வாழும் - நகரம் என்று முடிக்க. செயப்படு பொருளைச் செய்ததுபோலக் கூறினர். இயல்பாக வந்த காலமயக்கம்.

**அத்தையல்** - முன்சொன்ன அந்தத் **தோட்டின் மேலாள்** என்ற பெண்தெய்வம். **மேலாள்** என்று ஒருமையிலும் **ஒப்பார்** என்று பன்மையிலும் கூறியவாற்றுல், மேலாள் ஒருத்தியாக, அவளே ஒப்பார் பலர் அங்குள்ளார் என்றது குறிப்பு. **தனிவாழ்வது** என்ற குறிப்பும் அது.

**யாழின் மொழியில் இசையும், குழலிற் சுரும்பும்** என்று நிரனிறையாக்கி உரைத்துக் கொள்க. **யாழின் மொழி** என்றது பெண்களின் மொழியில் இயல்பாயமைந்த பண்ணமைதி. **இசை** - இன்னிசை. இது பயிற்சியின் அமைவது. **யாழ்** - யாழோசை குறித்து நின்றது. ஆகுபெயர். யாழிஞேசைபோன்ற மொழி என்க. "யாழைப்பழித் தன்னமொழி மங்கையொரு பங்கன்" (காந்தாரம் - திருமறைக்காடு. 1)

என்ற ஆளுடையநம்பிகள் தேவாரம் காண்க. இன்-உறழ்பொருவில் வந்த ஐந்தனுருபு. யாழ் இன்மொழி என்று கூட்டியுரைத்தலுமாம்.

**யாழில் மொழியில்** - யாழிலும் மொழியிலும் என்று உம்மைத்தொகையாக்கிப் பெண்கள் (வாசிக்கும்) யாழிலும், அதனோடு பொருந்தப்பாடும் மிடற்றுப்பாட்டிலும் இசை வாழ்வதாம் என்று உரைகொள்வதுமென்று. "யாழிலெழு மோசையுட னிருவர் மிடற் றிசையொன்றி " (திருஞான - புரா. (131), " யாண ரம்பெறிற் றின்னிசை யோர்ந்தெழீஇப், பாணர் கோமகன் பன்னியும் பாடுமால் " (திருவிளை - இசை - பட. 33) முதலியவை காண்க. **வாழ்தல்** - இனிதாக இடம்பெற்றமைதல்.

**குழலிற் சுரும்பு வாழ்தலாவது** கூந்தலிற்சூடிய மலர்களிடத்துத் தங்குதல். புதிதின் மலரும் பூக்களைத் தொடுத்தணிதலால் அவை அலரும் பருவத்தில் அவற்றில் தேனுண் வண்டுகள் தோய்வனவாம். " வம்பலர் நறுந்தொடையல் வண்டொடு தொடுப்பார் " (திருஞான - புரா-38) என்றது காண்க. சூடும் பூவில் வண்டுமொய்த்தல் இன்றும் மதுரையில் அம்மையார் கோயில் முன்பு திருப்பூமண்டபத்திற் காணத்தக்கது. உத்தம சாதிப் பெண்களின் கூந்தலின் இயற்கைமணங் கவரச் சுரும்பு அங்கு வாழ்வன என்ற குறிப்புமாம்.

யாழின் மொழியில் இசை வாழ்தல்பற்றி இசைவாதுவென்ற திருவிளையாடலில் பாணபத்திரர் மனைவியாரான விறலியார் முதலியோர் சரிதங்களையும், குழலிற் சுரும்பு வாழ்தல்பற்றித் தருமிக்குப் பொற்கிழியளித்த திருவிளையாடலில் சண்பக மாறனது தேவியார் குழலின் வாசம்பற்றிய சரித முதலியவைகளையும் நினைவு கூர்க.

வாழ்வது - வாழும் ஈகரம்; (அது) மதுராபுரி என்பது ஆகும் என்று முடிக்க.

நகரம் - 968ல் நாடு கூறி, அதனை அடுத்து ஆறும் மலையும் கூறியவாறு, இப்பாட்டால் நகரம் கூறினர்

**மதுராபுரி** - மதுரை. **மது** - அமுதம். குலசேகரபாண்டியன் சிவனது ஆணையின் வழியே கடம்பவனத்தின் மூலைத்தெழுந்த கடவுளைக்கண்டு, காடெறிந்து நகரங் கண்டபோது சிவபெருமானது சிரத்திற் றரித்த பிறையினிடத்துள்ள **மது** (அமுதம்) வைத்தெளித்துச் சுத்தமாக்கிய காரணத்தால் இப்பெயர் பெற்றது. "பொன்மய மான சடைமதிக் கலையின் புத்தமு தருத்தன ரதுபோய்ச்,சின்மய மான தம்மடி யடைந்தார்ச் சிவமய் மாக்கிய செயல்போற், றன்மய மாக்கி யங்ஙகர் முழுதுஞ் சாந்திசெய் ததுவது மதுர, நன்மய மான தன்மையான் **மதுரா** நகரென வுரைத்தனர் காமம் " (மதுரை - ஈக - படை - 42) என்ற திருவிளையாடற் புராணங் காண்க. 4

972. சால்பாயமும் மைத்தமிழ் தங்கிய வங்கண் மூதூர்
நூல்பாயிடத் தும்முள; கோன்றலை மேதி பாயப்
பால்பாய்மூலை தோய்மதுப் பங்கயம் பாய வெங்குஞ்
சேல்பாய்தடத் தும்முள; செய்யுண்மிக் கேறு சங்கம். ரு

(இ - ள்) **செய்யுள் மிக்கு ஏறு சங்கம்** - செய்யுள்கள் (பாட்டுக்கள்) சிறந்து அரங்கேறுதற்கிடமாகிய சங்கங்கள் ; சால்பாய...மூதூர் - சால்பினை ஆகச்செய்கின்ற முத்தமிழும் நிலைபெற்றுத் தங்கிய அழகிய இடமகன்ற அத்தப் பழைய நகரத்தில் ; நூல்பாய் இடத்தும் உள - நூல்கள் பயிலப்படும் இடங்களிலும் உள்ளன ; **செய்யுள் மிக்கு ஏறு சங்கம்** - செய்யினுள் (செய் - வயல்) மிகுந்து ஏறுகின்ற சங்குகள் ; கோன்தலை...தடத்தும் உள - பெரிய தலைகளையுடைய எருமைகள் பாயா நிற்ப, அவற்றினுடைய பால் சொரியும் மூலைகள் தோயப்பெற்ற தேன் தாமரைகளினின்றும் பாயச் சேல்மீன்கள் எங்கும் பாய்தற்கிடமாகிய தடாகங்களிலும் உள்ளன.

(வி - ரை) **சால்பு ஆய முழ்மைத்தமிழ்** - சால்பு - நிறைவுடைய மேன்மை. 871-ல் உரைத்தவை பார்க்க. **ஆய** - ஆகச்செய்கின்ற. சால்பின் றன்மையை உயிர்களுக்கு அறிவுறுத்துகின்ற என்க. **முழ்மைத்தமிழ்** - இயல் - இசை - நாடகம் என்ற மூவகைத்தமிழ். தமிழ் நூல்களுட் சால்பில்லாதனவும் காணப்படுமன்றே ? எனின், அவை அறிவுடையோராற் கொள்ளப்படாது தள்ளப்படுவனவாதலின் அவற்றினின்றும் வேறு பிரித்துணர்தற்குச் **சால்பாய** என்று வரையறுத்துக் கூறினர். **தங்கிய** என்ற குறிப்பும் அது. ஏனையவை அங்குத் தங்கா என்றபடி. **தங்குதல்** - நிலைபெறுதல். **தமிழ்** - மொழியினையும், மொழி வல்லோரையும் உணர்த்திற்று.

**மதுரை** - மதுராபுரியின் பழமை சங்கநூல்களானும் பிறசரிதங்களானும் விளங்கும். "முனைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி" என்ற திருவாலவாய்த் திருத்தாண்டகத்தாலும் பிறவாற்றாலும் அறியப்படுகின்ற ஆலவாய்ப் பெருமானது பழமை பற்றி இங்ஙனின் பழமையும் உடனறியப்படும்.

**செய்புள் மிக்கு ஏறு சங்கம்** - நூல்பாய் இடத்தும் உள - செய்புள் நூல்களை ஆராய்ந்து சிறந்ததனை அரங்கில் ஏற்றும் சங்கங்கள் குறித்தது.

**செய்உள் மிக்கு ஏறு சங்கம்** - **சேல்பாய் தடத்தும் உள** - என்றது மிக்க சங்குகள் வயல்களில் ஏறுவன ; அவை தடாகங்களிலும் உள்ளன என்றபடியாம். தடாகங்களில் உள்ள சங்குகள் பல ஏறிச் செய்யினுள் (வயலினுள்) செல்வன என்க.

**நோன்றலை** - பெரியதலை. **நோன்மை** - பெருமை. "உறுகர்த் தாங்கிய மதனுடை நோன்முள்" (திருமுருகு).

**மேதி...பாய** - மேதிபாய, அதன்பால் பாய்மூலை தோயப்பெற்ற மதுப் பங்கயத்தினின்றும் பாய என்க. **பால் பாய்முலை** மிகுதியாகப் பால் சொரியும் மூலை. **தோய் பங்கயம்** - மூலைகள் தோய்ந்த தாமரை மலரினின். **பாய** - பாய்தலால், மிகுதியாக ஒழுகுதலால். காரணப்பொருளில் வந்த வினையெச்சம். **மதுப்பங்கயம்** - முன்னரே **தேன் ஊறி** நிறைந்த தாமரை. அதனுடைய மேதிகளின் மூலைப்பால் சேர்ந்து வெளிப்பாய, அதனை உண்ணச் சேல்கள் எங்கும் பாய்ந்தன என்பது. "வருமேனிச் செங்கண்வரால் மடிமுட்டப் பால்சொரியும், கருமேதி" (8) என்ற திருஞாவுக்கரசர் புராணச் செய்யுட் கருத்தினை இங்கு உன்னுக. மேதி தடத்தினுட் பாய, அவற்றின் பால்பாய் மூலை தேனுடைய தாமரையிற் பாய, அதனை உண்ணச் சேல் பாய உள்ள தடங்கள் என்று தொடர்ந்து பொருள்கொள்க. 5

973. மந்தாநிலம் வந்தசை பந்தரின் மாட முன்றிற்
பந்தாடிய மங்கையர் பங்கயச் செங்கை தாங்குஞ்
சந்தார்முலை மேலன ; தாழ்குழை வாண்மு கப்போற்
செந்தாமரை மேலன ; நித்திலஞ் சேர்ந்த கோவை. கூ

(இ - ள்) **நித்திலம் சேர்ந்த கோவை** - முத்துக்களைச் சேர்த்துக் கோத்த கோவையாகிய மாலை ; **மந்தாநிலம்...முலைமேலன** - தென்றற்காற்று வந்து மெல்லிதாய் அசைகின்ற மாடங்களின் முற்றத்தில் பந்து ஆடிய மங்கையரின் செங்கை தாங்கும் சந்தனம் பொருந்திய முலையின்மேல் உள்ளன ; **நித்திலம் சேர்ந்தகோவை** - முத்துப்போன்ற வேர்வையின் கோவை ; (**பந்தாடிய மங்கையர்**) **தாழ்...செந்தாமரை மேலன** - தாழும் குழையுடைய ஒளிபொருந்திய முகமாகிய அழகிய தாமரையின் மேல் உள்ளன.

(வி - ரை) **மந்தா நிலம்** - தென்றல். மந்தம் அநிலம் என்பது மந்தாநிலம் என வந்தது. வடநூன் முடிபு. **அநிலம்** - காற்று. **அசை** - மெல்லிதாக வீசும்.

**மாடமுன்றிலில் பந்தாடிய** என்க.

**சேங்கை தாங்கும் சந்தார் முலை** - கைவரைகள்படியத் தொய்யில் எழுதிய சந்தனம் பூசிய. கையைச் சந்தனக் குழம்பிற்றேய்த்து முலையில் கைபடியத் தொய்யில் எழுதுவது முன்னுள் வழக்கு. "இருநிலமா மகண்மார்பில், அழுத்துபட வெழுதுமிலைத் தொழிற்றெய்யி லணியினவாம்" (இடங்கழி - புரா. 1) என்றது காண்க. சேங்கை-கையின் தொழில். ஆகுபெயர். பங்கயச்செங்கை பந்தாடிய மங்கையர் தாங்கும் முலைஎன்று கூட்டி உரைத்திலுமொன்று.குயபாரம் எனப்படுதலால் **தாங்கும்** என்றார்.

**நித்திலம் சேர்ந்த கோவை - முலை மேலன** என்றது முத்து மாலைகள் மார்பின் மேற் சூழ்ந்து கிடந்தன என்பதாம்.

**நித்திலம் சேர்ந்த கோவை - முகப்போற் செந்தாமரை மேலன** என்றது மங்கையர் பந்தாடுதலினுல் முகத்தின் முத்துப்போன்ற வேர்வைத்துளிகள் காணப்பட்டன என்பதாம். வேர்வை துளும்ப விளையாடுதல் உடல் நலத்துக்கடுத்ததென்பர் மருத்துவ நூலோர்.

**தாழ்குழை** - குழைதாழ்ந்து தொங்குதல் அணிபுனைவகையுள் ஒன்று. இக்காளிலும் ஒவ்வோர் வகையால் கீழ்த்தொங்கும் காதணிகளை அணியும் வழக்குக்காணக. வடிந்து தொங்கும் காதுடைமை அழகிலக்கணங்களில் ஒன்றுக் கருதப்பட்டது முன்னுள் வழக்கு. வடிவார்காது - வடிந்தகுழைதாழ முதலிய வழக்குக்கள் காண்க.

**வாள் முகம்** - இயல்பாகிய ஒளி பொருந்திய முகம். குழையின் ஒளி வீசும் என்றலுமாம். **பொன்** - அழகு; **முகச்செந்தாமரை** - முகமாகிய தாமரை. உருவகம்.

**பந்தாடிய மங்கையர்**-பெண்கள் ஏற்ற பாட்டுப் பாடிக்கொண்டு பந்தடித்து விளையாடுதல் நீண்ட பழங்காலமுதல் தமிழர்களின் வழக்குக்களுள் ஒன்றாகும். பந்தாடுதல் மகளிர்க்குரிய விளையாட்டுக்களுள் ஒன்றாகவே முன்னுளிற் கருதப்பட்டது. "கருந்தடங்கண் ணுர்கழல்பந் தம்மானைப் பாட்டயரும் கழுமலமே" முதலிய திருவாக்குக்கள் காண்க. "தேவ ராரா மார்பன் வாழ்க வென்றுபந் தடித்துமே" என்பது முதலாகப் பழந்தமிழ் நூலாகிய சிலப்பதிகாரத்தினுட் கூறுதலும் பிறவும் இங்கு நினைவு கூர்க. ஆண்மக்கள் பந்தாடுதல் இக்காளின் சவீன வழக்குக்களுள் ஒன்று. இவ்வாறு ஆண்டன்மையுடைய வீர ஆடல்களில் ஆசை குறைந்து ஆடவர் பெண்மையை அவாவி நிற்பது புதுநாகரிகக் கோரங்களுள் ஒன்றென்பது அறிந்தோர் கருத்து. 6

974. மும்மைப்புவ னங்களின் மிக்கதன் றேயம் மூதூர்
மெய்ம்மைப்பொரு ளாந்தமிழ் நூலின் விளங்கு வாய்மைச்
செம்மைப்பொரு ளுந்தரு வார்திரு வால வாயில்
எம்மைப்பவந் தீர்ப்பவர் சங்க மிருந்த தென்றுல். எ

(இ - ள்) அம்மூதூர் - அந்தப் பழய நகரம்; மெய்ம்மை...திருவாலவாயில் - உண்மைப் பொருள்கள்கண்ட தமிழ் நூல்களுள் வாய்மை விளங்கும் செம்மைப்பொருளுந்தருவாராகிய இறைவனுர் எழுந்தருளிய திருவாலவாயில்; எம்மை...என்றுல் - எம்மைப் பவம்போக்கி உய்யக்கொண்டருளும் அந்த இறைவனுர் தாமே தலைவராகச் சங்கம் வீற்றிருந்த செய்தி நிகழ்தற்கிடமாயிருந்ததென்று காண்போமாகில்; மும்மை ...அன்றே - மூன்று உலகங்களிலும் அது மேலாக விளங்குவதல்லவா ?.

(வி - ரை) **மும்மை...அன்றே** - மும்மைப் புவனங்களாவன - மேல், நடு, கீழ் என்ற மூன்று புவனங்கள். சொர்க்க - மத்திய - பாதலம் என்பர். இவற்றுள் மேலே எழும் கீழே எழும் ஆகப் பதினுன்கு உலகங்கள் உள என்று கூறுவர். **மிக்கது** - மூவுலகங்களினும் மேன்மை பெற்றது. **அன்றே** - உடன்பாட்டு உறுதிப் பொருள் குறித்தவினு. **சங்கம் இருந்த தென்றல் மிக்க தன்றே ?** என்று கூட்டுக.

**ழதூர்** - முதுமை ஊர் - மூதூர் என வந்தது. நாடு, தோன்மைப் புகழ்பூண்டது 968) என்றதற் கேற்ப, அதன் தலைகரமும் **ழதூர்** எனப்பட்டது. எல்லார்க்கு மூன்னே தோன்றி மூவேத்த முழுமுதற் கடவுள் எழுத்தருளியுள்ள தலமாதலின் அந்தப் பழமை பற்றியும் **ழதூர்** என்றார்.

**மெய்ம்மைப் பொருளாம் தமிழ் நூல்**-"ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்" (970) என்றவிடத் துரைத்தவை பார்க்க. தமிழ் நூல்கள் மெய்ம்மைப் பொருள் இன்னது - பொய்மைப் பொருள் இன்னது எனக் காட்டி உலகத்தை நிலைப்படுத்துத லால் இவ்வாறு கூறினர்.

**தமிழ் நூலில் விளங்கு வாய்மைச் செம்மைப் பொருள்** - அத்தமிழ் நூல் களுள்ளே சிறந்து விளங்கும், மூடிந்த உண்மையாகிய செம்மை பெறும் பொருளைத் தருவதாய் விளங்குகின்ற பொருணூல். **மெய்மைப் பொருள்** என்றது பொருள் நிச் சயம் செய்த நிலையினையும், அதனுள், **வாய்மைச் செம்மைப் பொருள்** என்றது அவ் வாறு நிச்சயித்த பொருளை அனுபவ வகையால் அடையும் யோக (முத்தி) நிலையினையும் குறித்தன.

**செம்மைப் பொருள்** . செம்பொருள் என்ப. **செம்மை** - முத்தி. " திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரையன் " (திருத்தொண்டத்தொகை) " செம்மைநல மறியாத சிதடர் " (திருவாசகம் - அச்சோ - 9) முதலியவை காண்க. இச்செம்மைப் பொருளின் அனுபவநிலை தமிழ் அகப்பொரு ணூல்களாலுணர்த்தப்படும். திருக்கோவையாருரைப்பாயிரத்தாலும் இறையனாரகப் பொருள் உரைப்பாயிரத்தாலும் இஃது இனிது விளங்கும்.

**மெய்மை...பொருளுந் தருவார்**-திருவாலவாயில் இறைவர் தமிழ் நூலின் உண்மைத் தன்மையினை விளக்கினர் என்பது இறையனாரகப் பொருளாலும், திருவிளையாடற் புராணம்-சங்கத்தார் கலகந்தீர்த்தது முதலிய சரிதங்களாலும் அறியலாம். **செம்மைப் பொருளும் தருவார்** என்றது அறிவனூற் பொருளும் உலகியனூற் பொருளும் என்ற இரண்டனுள் பிறர் எவராலும் உணர்த்துதற்கரிய ஆகமநூல் வழியினுதலிய ஞான யோக நுண்பொருளாகிய அனுபவநிலை என்னும் முத்திப்பொருளைத் தருதல். " தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானை " (திருவம்மானை) என்ற திரு வாசகம் காண்க.

**பொருளும் தருவார்** - **பொருளும்** - தமிழ் நூல்களைத் தருதலேயன்றி அவற்றுள் விளங்கும் வாய்மைச் செம்மைப் பொருளும் என உம்மை இறக்கது தழுவிய எச்ச வும்மை. சொல்லையும் தருவார், அச்சொல் முதலிய பொருள்களாகிய " பொன்னு மெய்ப்பொருளும் " " போகமும் வீடும் " ஆகியவற்றையும் தருவார் என்பது. "போகா பவர்க்கதம் " என்பது ஆகமம். " கொங்குதேர் வாழ்க்கை " என்ற பாடலைப் பாடித் தந்ததுவும் இங்கு நினைவுகூர்க. இக்கருத்துப் பற்றியே **எம்மைப் பவந்தீர்ப்பவர்** என அவர் பொருள் தருதற்குக் காரணங் கூறினர். சிங்கம் என்றதனால் நூல்தருத லும், **பவந்தீர்ப்பவர்** என்றதனால் **செம்பொருள்** தருதலும் கூறியவாறுயிற்று. **பவம்** பிறவிக்கேதுவாய பசுத்துவம். " பவமின்றும் " (சிவஞானபோதம் - 12 - 4) என்றது பார்க்க.

**பவந்தீர்ப்பவர் சிங்கம் இருந்தது என்றல்** - **சிங்கமிருந்தது** - சங்கத்தில் தலைவ ராக வீற்றிருந்த இடம். **பவந்தீர்ப்பவர்** எழுவாய். **இருந்தது** - இருந்தது - இருத்தற் கிடமாகியது. **சிங்கமிருத்தல்** - ஒரு சொல். பவந்தீர்ப்பவருடைய சங்கம் என்று ஆறாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு அவரது சங்கம் இருந்தது என்றுரைப்பினுமாம்.

**மெய்ம்மைப் பொருளாம் தமிழ்நூல்** - " தெய்வத் தமிழ் " (970), " சால்பாய மும்மைத் தமிழ் " (971) என்றவை காண்க. தமிழ்நாட்டெல்லையுள் காணும் நாடுகள்

பலவற்றுள்ளும் பாண்டிநாடொன்றே தமிழ்நாடு எனப்படும். இறைவனுரும், அவர்தம் திருமகனுரும், அவர்களிடம் தமிழுணர்ந்த அகத்தியரும் சங்கமிருந்து தமிழ்வளர்த்தனர். அகத்தியர் இன்றும் பொதிகையில் இருந்து தமிழ்பரப்புகின்றூர் என்ப. ஆதலின், சோழநாடும் காவிரியும் இணைபிரியாமல் எண்ணவருவனபோலப், பாண்டிநாடும் தமிழும் இணைத்தே எண்ணவருவனவாம். இதுபற்றியே ஆசிரியர் தமிழொடு புணர்த்தியே நாடும் நகரும் சிறப்புக் கூறுவாயினர். முன்னர் 968ல் உரைத்தவையும் பார்க்க. நமது பரம ஆசாரியர்கள் ஆலவாயிறைவரைத் தமிழ்த்தலைவராகவே கண்டு வணங்கியதனை ஆசிரியர் கண்டு காட்டியருளினர். இத்தகைய தமிழ்ப்பெருநாட்டினும் இந்நாளின் தமிழ்வாசனை அருகிவரும் கொடிய காட்சி வருந்தத்தக்கதாம்.

**செம்மைப்பொருளும் தருவார்** என்ற இடத்தில் தமிழ்நூல்களுள் வாய்மை பெரிதும் காணப்படினும் பிற்காலத்து நூல்களுள் வாய்மையின் மாறுபட்டவை காணப்படுவன என்றும், இங்குப் **பொருளும்** என்றதனை இறையனூர் அகப்பொருள் குறித்ததெனக் கொள்ளுதல் சரிதத்துணைபெறுத பிற்காலவழக்கு என்றும், இறையனூர் என்பார் அப்பெயர் கொண்டதொரு புலவரே யென்றும் சிலர் ஆராய்ச்சியுரை காண்பர்.

தமிழ்நூலுள் வாய்மை விளங்கும் என்றதேயன்றி வேறு நூல்கள் தமிழில் இல்லை என்று இப்பாட்டிற் கூறப்படவில்லை. நமது பரம ஆசாரியன்மார்களால் மறுக்கப்பட்ட சமண சாக்கிய முதலிய புறச் சமய நூல்கள் பலவும் தமிழில்தானே இருந்தன. "வாயி ருந்தமி ழேபடித் தாளுரு ஆயிரஞ்சமண்" என்றதனுல் வாய்மை தேருமலும் சிவனுக்கு ஆட்படாமலும் கழிந்த தமிழரும் உண்டாயிருந்தனரன்றே! இங்கு ஆசிரியர் கருதியது தமிழ் நூல்களுள் வாய்மை விளங்குவது என்ற மட்டிலே அமைவதாம்.

தமிழ்நூலின் **பொருளும் தருவார்** என்றதற்கு அகப்பொருணூல் தந்ததனை உட்குறித்துவைத்து ஆசிரியர் கூறினர் என்பது, "திருந்தியநூற் சங்கத்தில் அன்றிருந்து தமிழாராய்ந் தருளியவன் கணர்கோயில்" (திருஞா - புரா - 403), "தலைச்சங்கப் புலவனுர்" (திருஞான - புரா - 667), "நூலின்கட் பொருள்பாடி நூலறிவார்க் கீந்தானே" (திருஞான - புரா - 883), "திருவால வாயமர்ந்த செஞ்சுடரைச், செழும் பொருணூல், தருவானே" (திருஞா - புரா - 406) என்றவற்றுல் இனிது விளங்கும். மேற்கூறியவாற்றுல் இறையனூர் என்பாரை வெறும் புலவராகவன்றிக் கடவுளாகவே ஆசிரியர் கருதினர் என்பதும் விளங்கும். ஆசிரியரது தெய்வத் திருவாக்குக்கு மாறுபட்ட ஆராய்ச்சிகள் உண்மைக்கு மாறுபட்டவையாமென்பது அறிவோர் துணிபு. 7

975. அப்பொற்பதி வாழ்வணி கர்குலத் தான்ற தொன்மைச்
செப்பத்தகு சீர்க்குடி செய்தவஞ் செய்ய வந்தார்
எப்பற்றினை யும்மறுத் தேறுகைத் தேறு வார்தாள்
மெய்ப்பற்றெனப் பற்றி விடாத விருப்பின் மிக்கார், அ

*976. நாளும்பெருங் காதன யப்புறும் வேட்கை யாலே
கேளுந்துணை யும்முதற் கேடில் பதங்க ளெல்லாம்
ஆளும்பெரு மானடித் தாமரை யல்ல தில்லார்,
மூளும்பெரு கன்பெனு மூர்த்தியார் மூர்த்தி யார்தாம். கூ

975. (இ - ள்) வெளிப்படை. அந்த அழகிய நகரத்தில் வாழ்கின்ற **வணிகர்** குலத்தில் மிக்க நிறைவுபட்ட பழமையாகிய யாவராலும் உயர்வாக எடுத்துச் சொல்லத்தக்க சிறப்புடைய குடியுள்ளார் செய்ததவத்தின் பயனுக அவதரித்தார்; (அவர் யாரென்னில்) எல்லாப்பற்றுக்களையும் முற்றும் அறுத்து, விடையினை ஊர்தியாக

வுடையவராகிய சிவபெருமானது திருவடிகளேயே உண்மையான பற்றுக்கோடாகப் பற்றி விடாப்பிடியாகக்கொண்ட விருப்பத்தின் மிக்கவர் ; அ

976. (இ - ள்) வெளிப்படை. நாடோறும் பெரிய காதல் கூர்ந்து பொருந்த வரும் ஆசைபெருகி வேட்கையாகி விளைந்ததனாலே சுற்றமும் தூணையும் முதலாகிய கெடுதலில்லாத பதங்கள் எல்லாம் ஆளும் பெருமானுகிய சிவனது திருவடித்தாமரை களேயல்லாது வேறில்லாதவர் ; மூண்டு பெருகும் அன்பு என்றதனையே தமது உருவ மாகக் கொண்டவர் ; அவர்தாம் **ஞரித்தியார்** என்ற பெயர் பூண்டவர். கூ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

975. (வி - ரை) **அப்போற்பதி** - அ - முன்னர் " மும்மைப் புவனங்களின் மிக்கது " (974) என்றும், "பங்கயத்தின் மேலாள் தாழ்வின்றி யென்றும் தனி வாழ்வது" (971) என்றும் உரைக்கப்பட்ட அந்த என்க. அகரம் முன்னறிசுட்டு. **போற்பதி - பொன் - அழகு குறித்தது.** திருமகள் வாழும் நகரம் என்றலுமாம். பொன் வேய்ந்த சிகரங்களேயுடைய என்றலுமொன்று.

**வணிகர் குலம் - சீர்க்குடி** - குலம் பெரும்பிரிவும், குடி அதனுட் சிறுபிரிவும் குறித்தன. இங்குச் சீர்க்குடி என்பது வணிகர் மூவகையுட் பெருங்குடி குறித்தது போலும். **ஆன்ற தோன்மை** என்றதற்கு வேதம்முதலிய அறநூல்களுள்ளே தொன்று தொட்டு நாற்குலம் என்று வழங்கும் பழமையுடைய என்பர்.

**செய்தவம் செய்ய வந்தார்** - சீர்க்குடியானது தான் செய்யத்தக்க தவத்தினைச் செய்ததனாலே - செய்த காரணத்தினாலே - அதனில் வந்தவதரித்தார். **குடி** - குடியில் முந்தையோர். ஆகுபெயர். "அளவில்செய் தவத்தினாலே" (662) என்றதும், அவ்வாறு கூறும் பிறவும் காண்க. **செய்ய** - செய்வதன்பொருட்டு என்றுகொண்டு, செய்யத் தக்க தவமாகிய சைவ தவத்தினைச் செய்வதற்காக வந்தார் என்றுரைத்தலுமாம். " தவஞ்செய்த, நற்சார்பில் வந்துதித்து " (சிவஞானம் - 8 - 1) என்றதற்கு மீளத் தவஞ் செய்தற்குரிய உயர்ந்த குலத்தின்கண் வந்து தோன்றி என்று எமது மாதவச் சிவஞானயோகிகள் உரைத்ததனை ஈண்டுச் சிந்திக்க.

**எப்பற்றினையும்** - யான் - எனது என்னும் அகப்பற்று புறப்பற்றுக்களுள் அடங் கிய எல்லாவகைப் பற்றுக்களேயும். உம்மை முற்றும்மை. மண் - பெண் - பொன் என்ற மூவகைப் பற்றுக்களும் அவைபோன்ற உலகப்பற்றுக்கள் யாவும் இவற்றுள் அடங்கும். மண், பொன் ஆகிய பற்றுக்களே அறுத்ததனை 1008—1013 பாட்டுக்களி லும், பெண் ஆகிய பற்று அறுத்ததனை 1014-லும் கூறியது காண்க. **அறுத்து** - தம் மைப் பற்றுதபடி நீக்கி. இவை உயிரோடு பற்றிக்கட்டுவன ஆதலின் அந்தக் கட்டினை அறுத்து என்றார். உருவகம். வலிமை பற்றிப் பெண்ணை வேறு பிரித்துக் கூறினர்.

**தாள் மெய்ப்பற்று எனப்பற்றி** - என்றதனால் முன் சொல்லிய ஏனை எப்பற்றும் பொய்ப்பற்றுமென்பது. அவற்றை அறுத்தற்கும் இதனைப் பற்றுதற்கும் காரணம் கூறியவாறு. " பொன்னு மெய்ப் பொருளும் " என்ற குறிப்புப்போலக் காண்க. " பொன்னும் மெய்ப்பொருளும் "=செல்வமும் கல்வியும் ; " போகமுந்திருவும் "= புத்தியும் முத்தியும் ; முன்னைய இரண்டும் சாதனங்கள் ; பின்னைய சாத்தியங்கள். " கேடில் விழுச்செல்வங் கல்வி ", " மெய்ப்பொருள் கல்வி " எனபன காண்க. **திரு** - " மோட்ச சாம்ராஜ்ய லக்ஷ்மி " என்பர் வடநூலார். " பேய்த்தேர் நீரென்று வரும் பேதைக்கு மற்றுணர்த்த, பேய்த்தே ரசத்தாகும் பெற்றிமையின் " (7 - 2) என்றும் " பன்னிறத்துப், பொய்ப்புலனே வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண் டான், மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு " (8-3) என்றும் வரும் சிவஞானபோத உதாரண வெண்பாக்களா லுணர்த்தப்படும் உண்மைகளே இங்குவைத்துக் காண்க. இவ் வாறுணர்ந்து பற்றியதனாலே பதங்கள் எல்லாம் பெருமா னடித்தாமரையல்லதில்லாது

அன்பு மூளப்பெற்றார் என மேல்வரும்பாட்டில் இக்கருத்தைத் தொடர்ந்து கூறியதும் காண்க. "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு" என்ற திருக்குறளும், "மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாத மேமனம் பாவித்தேன்" (நம்பிகள் - தேவாரம்), "பற்றை யெறியும் பற்றுவரச் சார்பா யுள்ள" (சண்டீசர் - புரா - 11) "பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றிலப், பற்றை யறுப்பரென் றுந் தீபற" (உந்தி - 25), "பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து, பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற - பற்றதனைப், பற்றுவிடி லந்நிலையே தானே பரமாகும்" (களிற்றுப்படி-30) என்ற கருத்துக்களும் சிந்திக்கத்தக்கன. அறுபான்மும்மை உண்மை நாயன்மார்களுள் துறவுநிலை பூண்டு சிவனை யடைந்த இருவரில் மூர்த்தியார் ஒருவராத லின் அவரது துறவுக்குக் காரணமாகிய உள்ள நிலையை இவ்வாறு முதலிற் கூறினார்.

**விடாத விருப்பின் மிக்கார் - விடாத** - எஞ்ஞான்றும் பிறழாத. **விருப்பின் மிகுதல்** - ஆசை மேன் மேல் அதிகரித்தல். இவ்வியல்புகளே இச்சரித விளைவுக்குக் காரணமாயின என்பதனை 983 - 987 பாட்டுக்களிற் கண்டு கொள்க. "விடாத அன்புட னென்றும் விருப்பால்" (அதிபத்தர் - புரா. 11) என்ற கருத்தும் காண்க. 8

976. (வி - ரை) **பெருங்காதல் நயப்பு உறும் வேட்கை** - விடாத விருப்பின் மிகுதி பெருங்காதலாக உருப்பட்டது; அது முறுகவே, நயப்பு என்னும் ஆசையா கியது; அது மேலிட வேட்கையாக விளைந்தது என்க. மனத்துள் அன்பு பெருகிப் படிப்படியாக வளர்ந்து கூர்தரும் வகையினைக் கூறியபடி. 751 பார்க்க.

**கேளும்...இல்லார் - கேள்** - உயிர்ச்சார்பு. **துணை** - உயிர்ச்சார்பும் பொருட் சார்பும். **கேடில் பதங்கள்** - பதமுத்திப் போகங்கள். ஏனையவற்றை நோக்க இவை காலத்தால் நீடித்தனவாதலின் **கேடில்** என்றுபசரித்தார். இப்பொருளைச் சிங்கமுகா சுரன் எடுத்துச் சூரபதுமனுக்கு இனிது விளக்குகின்ற திறம் கந்தபுராணத்தினுட் கூறப்பட்டது காண்க. "அழிவில் மெய்வரம் பெற்றன மென்றனை யதற்கு, மொழி தரும்பொருள் கேண்மதி முச்சகந் தன்னுட், கெழிய மன்னுயிர் போற்சில வைகலிற் கெடாது, கழிபெ ரும்பக லிருந்திடும் பான்மையே கண்டாய்" (சூரனமைச்சியல்-கஙக). இறைவன்றாளிற் பெறும் அபரமுத்திப் பெரும் போக மொன்றே என்றும் அழியாத தாகும் என்பது உண்மை நூல்களின் துணிபு. **அல்லது இல்லார்** - உறுதிப் பொருள் தர எதிர்மறை முகத்தாற் கூறினார். 934 முதலியவை பார்க்க. "ஈச னேநீ யல்ல தில்லை யிங்கு மங்கு மென்பதும்" என்ற திருவாசகம் காண்க. **கேளும் துணையும்** என்றவற் றால் ஆன்மாக்கள் இம்மையில் தமக்குப் பற்றுக் கோடாக எண்ணிக்கொள்வனவும், **கேடில் பதங்கள்** என்றதனால் மறுமையிற் பற்றுக் கோடாகக் கொள்வனவும் குறிக்கப் பட்டன. இம்மைத்துணை முதல் மறுமைப்பயன் வரையுள்ள எல்லாம் என்பது. "நெறியறு வகையு மேலொடு கீழடங்க வெறும்பொயென நினைந்திருக்க" என்பது சித்தியார். **துணை** - "துணையென்று நான்றொழப் பட்டவொண் சுடரை" (கழுமலங் தக்கேசி - 3) என்ற நம்பிகள் தேவாரங்காண்க.

**ஆளும் பெருமான்** - "அம்மையி னுந்துணை யஞ்செ ழுத்துமே" (காந் - பஞ்ச. பஞ்சாக்கரப் பதிகம்-6) என்று ஆளுடைபிள்ளையார் அருளியபடி உயிர்களுக்குப் பந்தமும் வீடும் தந்து ஆட்கொள்ளும் சிவபெருமான் என்பதாம். "இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்; அம்மை யேற்பிற வித்துயர் நீத்திடும்; எம்மை யாளு மிடை மரு தன்கழல், செம்மை யேதொழு வார்வினை சிந்துமே" (குறுந் - திருவிடை 4) என்ற அப்பர்சுவாமிகள் தேவாரமுஞ் சிந்திக்க.

**ழளும் பெருகு அன்பு என்னும் ழர்த்தியார்** - அன்பு மூண்டு பெருகிய அதுவே உருவாகி நின்றீ என்பது. **ழர்த்தி** - உடல் - திருமேனி (வடிவம் என்பர்). மூர்த்திக்குள் இருந்து அதனை இயக்குபவர் மூர்த்திமான். ஆசனம் - மூர்த்தி -

மூர்த்திமான் என்ற ஆகம பூசை முறையும் காண்க. மூர்த்தம் என்பதும் இது. மூர்த்தியார் மூர்த்தியை உடையவர்.

**மூர்த்தியார் தாம் மூர்த்தியார்** - என்க. மூர்த்தியார் பின்வந்தது பெயர். இவ் வாறு அடுக்கி மொழிந்து சிறப்பிப்பது ஆசிரியரது மரபு - 932 முதலியவை பார்க்க. 9

977. அந்திப்பிறை செஞ்சடை மேலணி யால வாயில்
எந்தைக்கணி சந்தனக் காப்பிடை யென்று மூட்டா
அந்தச்செய லின்னிலை நின்றடி யாரு வப்பச்
சிந்தைக்கினி தாயதி ருப்பணி செய்யு நாளில், கo

678. கானக்கடி சூழ்வடு கக்கரு நாடர் காவன்
மானப்படை மன்னன் வலிந்து நிலங்கோள் வாளுய்
யானைக்குதி ரைக்கரு விப்படை வீரர் திண்டேர்
சேனைக்கட லுங்கொடு தென்றிசை நோக்கி வந்தான். கக

977. (இ - ள்) வெளிப்படை. மாலையில் விளங்கும் பிறையைச் சிவந்தசடைமேல் அணிந்த திருவாலவாயுடையாராகிய எந்தைக்குச் சாத்துகின்ற சந்தனக்காப்பினை இடையில் ஒருநாளும் தவிராத அந்தச் செய்கையில் நிலைத்து நின்று அடியார்கள் மகிழும்படி மனதுக்கினிதாகிய திருப்பணியைச் செய்து வருகின்ற நாளிலே, கo

978. (இ - ள்) வெளிப்படை. காடாகிய அரணையுடைய வடுகக் கருநாடர்களின் காவல் பொருந்திய பெரிய சேனையுடைய அரசன், சேனைப்பலத்தினால் வலிமை செய்து நிலத்தைக் கைப்பற்றுவானுய், யானைகளும் குதிரைகளும் வீரர்களும் திண்ணிய தேர்களும் கொண்ட கடல்போன்ற சேனையைச் செலுத்திக்கொண்டு தென்றிசை நோக்கி வந்தான். கக

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

977. (வி - ரை) அணி - எந்தை எனக் கூட்டுக.

**எந்தைக்கு அணி சந்தனக் காப்பு** - "சந்தனமுங் குங்குமமுஞ் சாந்துந் தோய்ந்த தோளானை" என்பது திருத்தாண்டகம். திருமஞ்சனத்துக்கு உதவும் பொருள்களுள்ளே சந்தனக்குழம்பு சிறந்த ஒன்றாகும் என்பது ஆகமவிதி. மெய்ப் பூச்சுக்கும் திலதப் பொட்டணிவதற்கும் உதவுவதுமாம். காப்பு - மெய்ப்பூச்சு.

**இடை என்றும் முட்டா அந்தச் செயல்** - நியதியாகச் செய்யும் திருப்பணியை ஒருநாளும் தவிர்தலுறுமற் செய்தல் வேண்டுமென்பது விதி. **நிலைநிற்றல்** - உறைத்து நிற்றல்.

**அடியார் உவப்ப** - இறைவனுக்கு நியதியாகச் செய்யும் அன்புடைய திருப்பணி களைக் கண்டு மகிழ்கின்றவர்கள் அடியார்களேயாவர் என்பதாம். மூர்த்தியார் திருவால வாயுடையார்க்குச் செய்த மெய்ப்பூச்சினைத் தரிசித்த அடியவர் களித்தனர் என்பது.

**சிந்தைக்கினிதாய திருப்பணி** - அடியார் மனதுக்கு உவந்ததன்றி ஆண்டவனது திருவுள்ளத்துக்கும் ஏற்ற எனவும், அடியார் உவப்பதோடு தமது சிந்தைக்கும் இனி தாகிய எனவும் உரைக்க நின்றது.

**நாளில் - வந்தான்** என்று வரும்பாட்டுடன் கூட்டி முடித்துக்கொள்க. 10

978. (விரை) **கானக்கடிசூழ்வடுகக்கருநாடர்** - **கானக்கடி** - காடாகிய அரண். அரணுவன - "மணிநீரு மண்ணு மலையு மணிநிழற், காடு முடைய தாண்" என்ற திருக் குறளாலறிக. **கடி** - காவல். இது உயர்வு, அகலம், திண்மை, அருமை என்ற அரணி லக்கணம் மூன்றினையும் குறித்தது. **வடுகு** - ஒருமொழி. மொழியின்பெயர் அம் மொழி வழங்கும் நாட்டுக்குப் பெயராய்வந்தது. ஆகுபெயர். இக்காடு செந்தமிழ் நாட்

டுக்கு வடக்கெல்லையாயுள்ள தொருநாடு. **வடுகு** என்றபெயர் அதில் வாழும் மக்களுக்கும் வரும். " வடதிசை மருங்கின் வடுகு வரம்பாக " (பொ - 250) என்ற தொல்காப்பிய உரைகாண்க. நன்னூல் விருத்தி - (பொது - 20) " வல்லொற்று வரினே யிடத்தொகை யாகும் " என்றதற்கு " வடுகக்கண்ணன் " என் றுதாரணங்காட்டி, வடுகராட்டிற்பிறந்த கண்ணன் என விரித்துரைத்தமை காண்க.

**கருநாடர்** - கன்னடநாட்டினர். " கொடுங்கருநாடரும் " (சிலப் - 25 - 156) முதலியவை காண்க. இதுவும் ஒருமொழியின் பெயராய் வழங்கப்படும். **கருநடம்** என்பது மருவி **கன்னடம்** என வழங்குவதாமென்பர். **கருநிறங்கொண்ட** களிமண் பரப்புடைய நிலத்தன்மைபற்றி இந்நாட்டுக்கு **கருநாடு** எனப் பெயர் வந்ததென்பது மொழியாராய்ச்சியாளர் கூற்று. இதனால் அந்நாடு தமிழ் வழங்கிய நாடாயிருந்ததென்றும், அம்மொழியும் தமிழினின்றும் போந்ததென்றும் கருத இடமுண்டு. **கன்னடு** என்பது பரதகண்டத்தின் 56 தேயங்களுள் ஒன்றாக வைத்தெண்ணப்படுவதும் காண்க. **வடுகக் கருநாடர்** - வடுகர் குடியேறி நிறைந்த கன்னட நாட்டின் பகுதியைக் குறித்தது போலும்.

**காணக் கடிதூழ்** - இயல்பாகிய செறிந்தகாடே அரணாக (காவலாக) அமைத்து சூழ்ந்த. பகைவர்கள் தனது நாட்டினுட் புகாதபடி அரண்களின் காவல்பெற்றதாதலின் இந்நாட்டு மன்னவன் தன்னுடுவிட்டுத் தென்னுடு நோக்கிப் படைகொடுவந்தான் என்பது குறிக்க இத்தன்மையாற் கூறினார்.

**கருநாடர் மன்னன் வலிந்து நிலம் கொள்வானும்** - வடநாட்டினின்றும் இவ்வடுகர் பற்பல காலங்களில் தென்றிசை போந்து தமிழ்நாட்டினுக்குள்ளே படையெடுத்துவந்து பல இடங்களையும் வலிமை செய்து கைப்பற்றினர் என்பது தேசசரித்திரங்களாலறியப்படும். அங்ஙனம் வந்த **கருநாடர் மன்னன்** அறத்தின் வழியே போர் செய்யாது, வெறும் மண்ணாசையாலே தூண்டப்பட்டு நீதியற்ற போர்செய்து, வழிப்பறி செய்யும் கள்வர்போல நிலத்தை வலியப்பற்றினனென்பது குறிப்பு. இவ்வடுகர் தாம் வலிமை செய்து நிலங்கவர்ந்ததுபோலவே சில நாளில் இவர்களுடைய அரசும் வீழ்ந்தது. வீழ்ந்தபின்னரும் இவர்கள் தமது நாடு செல்லாது தமிழ்நாட்டிற் பல பக்கங்களிலும் சிதறுண்டு பரவிப் போந்திருந்தனர். சிலர் சிவனவழியின்றியலைந்தும் அலைத்தும் போந்தனர். மற்றும் சிலர் வேறுவகைகளில் இந்நாட்டுக் குடிமக்களுட் கலந்து நிலம் பகிர்ந்துகொண்டு இந்நாட்டு மக்களேபோல் ஊன்றி வாழலாயினர். கருமண்ணிலப்பரப்பு தமது கருநாடுபோல்வ தாகையால் இத்தென்னுட்டினும் கருநிறமுடைய களிமண் கண்ட இடங்களில் எங்கும் இவர்களும் தங்கி வாழ்ந்தனர். ஆதலின் களிமண் உள்ள இடந்தோறும் இவர் வழிவந்தோரை நமது நாட்டில் எங்கும் காணலாம் என்பது தேச சரித்திரத்தால் அறியப்படும். "கொடுகு வெஞ்சிலை **வடுக வேடுவர்** விரவலாமை சொல்லித், திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண் டாறலைக்குமிடம்" (முருகன்பூண்டி - பழம்பஞ் - 1) என்ற ஆளுடைய நம்பிகள் தேவாரத்தாலும் இந்நாட்டுச் சரித்திரம் ஒருவாறு புலப்படுகின்றது. திருமுருகன்பூண்டிப் பிரதேசத்தில் கருநாடும் வடுகரின் வாழ்தலும் காணத்தக்கன. **வலிந்து நிலம்கோள்ளும்** ஆசையே இந்நாளினும் உலகமுழுமையும் அலைக்கும் பெரும்போர்கள் நாகரிக மிகுந்தோர் என்று தம்மைத்தாம் புகழ்ந்துகொள்ளும் மேனாட்டாரிடை நடைபெறுதற்குக் காரணமாயிருப்பதும் இங்குக் கருதுக. இதுபற்றியே, " ஆசைக்கொ ளவில்லை யகில மெல் லாங்கட்டி யாளினுங் கடன்மீதிலே யாணைசெல வேநினைவர் " என்றனர் தாயுமானார்.

**கருவிப்படை** - கத்தி, வில், வேல், வாள் முதலியனவாக அந்நாளிற் பயின்ற படைக்கலங்கள். **வீரர்** - இவற்றைத் தரித்துப் போர்செய்யும் காலாட்படை.

சேனைக்கடல் - சேனையின் மிகுதியும் பரப்பும் நோக்கிக் கடல் என்று உருவகம் செய்தார். உவமையை உள்ளீடாகக் கொண்ட உருவகம்.

தென்றிசை நோக்கி என்றதனால் வடுகக் கருநாடு தமிழ்நாட்டுக்கு வடக்கில்லையாயுள்ளது என்பது குறிக்கப்பட்டது. தென்திசை - அதில் உள்ள தமிழ்நாடு குறித்தது.

திரண்ட சேனை—என்பதும் பாடம். 11

979. வந்துற்றபெ ரும்படை மண்புதை யப்ப ரப்பிச்,
சந்தப்பொதி யிற்றமிழ் நாடுடை மன்னன் வீரஞ்
சிந்தச்செரு வென்று,தன் ஞாணை செலுத்து மாற்றாற்
கந்தப்பொழில் சூழ்மது ராபுரி காவல் கொண்டான். கஉ

(இ - ள்) வெளிப்படை. வந்து சேர்ந்த பெரும்படையினைத் தரை தெரியக்கூடாதபடி எங்கும் பரவச்செய்து சந்தனச்சோலைகள் சூழ்ந்த பொதியமலையினையுடைய தமிழ்நாட்டை ஆளும் பாண்டிய மன்னனது வீரம் சிந்தும்படி போரில் வெற்றிகொண்டு தனது ஆணையைச் செலுத்துகின்ற வழியாலே மணம்பொருந்திய சோலைகள் சூழ்ந்த மதுரைமாநகரத்தைத் தனது தலைநகராகக் கொண்டு காவல் செய்வானுயினான்.

(வி - ரை) மண்புதையப் பரப்பி போர்க்களம் முழுதும் பெருங்க அணிவகுத்து. மண்புதைய - சேனைப்பரப்பின் கீழே மண்ணின் இடைவெளி தெரியாது மறைய. மண் இவன் காவலின்கீழ் விளக்கமில்லாது மறைய எனவும், மண்ணிற்புதைய எனவும் பிறிது பொருள்களும்பட நிற்பதுகாண்க. இவ்வாறு பரப்பி வென்றதன்பின் இவனது காவலில், இவன் கருநாடன் ஆதலின், இச்செம்மை நாட்டுக்குரிய சைவச்சிறப்பும் தெய்வச்சிறப்பும், இவன் வடுக மன்னனுதலின், செம்மொழியாகிய தமிழ்ச்சிறப்பும் மறைந்து நின்றன எனப் பின்சரிதக் குறிப்புமாம். இனி, இவன் வீரைவில் இறந்து மண்ணு யொழிதலும், இவன் படை மறைந்தொழிதலும் சரிதத்துட் காண்க.

பரப்பி - வீரம் சிந்தச் - செருவென்று - காவல் கொண்டான் என்று முடிக்க.

சந்தப்பொதியில் தமிழ்நாடு - சந்தம் - சந்தனம். பொதிய மலைக்குச் சந்தனம் உரியது. பொதியில் - பொதிகை. பாண்டியநாட்டுக்குரிய மலை. "கும்பமுனிபயிலும் தென்பொதிய மலைகாண்மற்றெங்கள்மலை" என்ற மீளாட்சியம்மை குறமும், பிறவும் காண்க. சந்தனமும் பொதிகையும் தமிழும் இணைபிரியாது சொல்லப்பெறுவன. "தமிழ் மாருதம்", "சந்தனப் பொதியிற் செந்தமிழ் முனிவன்" முதலியவை காண்க.

தமிழ் நாடுடை மன்னன் - பாண்டியன். தமிழ் நாடு - பாண்டியநாடு. வடுகக் கருநாடர் காவன் மன்னன் (978), தமிழ்நாடுடை மன்னன் என்றன மொழி வழங்கும் வகையால் நாடு பிரிவுபடுவதும் ஆளப்படுவதும் உரியதாம் என்ற குறிப்புப்போலும்.

வீரம் சிந்த - வீரம் சிந்திப்போகும்படி. இறந்துபட்டொழியாமல் அப்போதைக்கு மட்டும் வலிமை குறைந்தவனுயினன் என்றபடியாம். பின் சில நாளில் கருநாடன் ஒழிந்துபடத் தமிழ் மன்னனே வருவானுவன் என்ற குறிப்பும் காண்க. தோல்வியுற்றுன்என்பதனை மங்கலவழக்காற்கூறிய படியுமாம். *அடிக்குறிப்பிற்கண்ட சாசனத்தில் அகலநீக்கி என்றிருப்பதும் கருதுக.

---

*வேள்விக்குடிச் சாசனத்தில் "பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி யெனும் பாண்டியாதிராசன்பின்...அளவரிய அதிராசரை அகல நீக்கி அகலிடத்தைக் களப்ர னெனும் கலியரசன் கைக்கொண்டானை யிறக்கிய பின், படுகடன் முளைத்த பரிதி போல் பாண்டியாதிராசன் விடுகதி ரவிரொளி விலக வீற்றிருந்து...கடுங்கோன் என்னும் கதிர்வேற்றென்னன்..." என்று காணப்படுவது கொண்டு பாண்டியாதிராசன் பின்வந்த அதிராசனைக் களப்ரன் என்னும் கலியரசன் செருவென்று மதுரையைக்

**ஆணை செலுத்தும் ஆற்றல்** - நிலங்காவல் பூண்டு அரசு செலுத்தும் கருத்துக் கொண்டு ஒரு நாட்டின்மேற் படை எடுத்துவரும் வேற்று நாட்டரசர் வெற்றி கொண்டால் "பகைத்தவர் சின்னமும் பணிந்தவர் திறையும்" கொண்டு செல்வது பெருவழக்கு. இவன் அவ்வாறன்றி வலிந்து நிலம் கொள்ளும் ஆசையாற் போர்தவறுதலின் இங்குத் தங்கி நிலங்காவலைத் தானே மேற்கொண்டு அரசாளத் தொடங்கினன் என்பது. வீரஞ்சிந்தச் செருவென்றாலுமினும் தமிழ்நாட்டைத் தமிழரசனே ஆணை செலுத்தவைத்துத் தன் வெற்றிக்கடையாளமாகத் திறைகொண்டு செல்ல வேண்டிய வடுகக்கருநாட மன்னன், **வலிந்து நிலங்கோள்வான் வந்தான்** என முன்னர்க் கூறிய கருத்தும் இது. **செலுத்தும் மாற்றல்** - என்று கொண்டு போரின் நேர் முறைக்கு மாறுபட்ட வழியினால் என்றுரைக்க வைத்த குறிப்பும் காண்க. "அரசிறைஞ்ச வீற்றிருந்து, கொங்கரொடு குடபுலத்துக் கோமன்னர் திறை கொணர" (11), "முறைபாயுந் தனித்திகிரி முறைநில்லா முரணரசர், உறையரண முளவாகிற் றெரிந்தரைப்பீர்"(14)என்ற புகழ்ச்சோழனூர் புராணமும்,பிறவும் காண்க. சோழ அரசர்கள் இமயமலையிற் புலிக்கொடி நாட்டி, வடநாடு வென்று, கீழ்ப்படுத்திய காலத்தில் அவ்வாறே முறைசெய்த முறையும், இக்காள் நமது ஆங்கிலேய அரசர் பற்பல நாட்டுப் பழமன்னவர்களையும் அங்கங்கும் வைத்தே ஆண்டுவரும் முறையும்இங்குக் கருதத் தக்கன.

**மதுராபுரி காவல் கொண்டான்** - மதுரையைத் தனது தலைநகராகக் கைக்கொண்டு அரசு வீற்றிருக்கலாயினன். 12

980. வல்லாண்மையின் வண்டமிழ் நாடு வளம்ப டுத்து
நில்லாநிலை யொன்றிய வின்மையி னீண்ட மேரு
வில்லானடி மைத்திற மேவிய நீற்றின் சார்பு
செல்லாதரு கந்தர் திறத்தினிற் சிந்தை தாழ்ந்தான். கஉ

(இ - ள்) வெளிப்படை. வலிய ஆண்மையினால், வண்மையுடைய தமிழ்நாட்டை வளம்படுத்தி நில்லாத நிலைமை பொருந்திய இல்லாமையாலே, (அம்மன்னவன்), நீண்ட மேருவை வில்லாகவுடைய சிவபெருமானது அடிமைத்திறம் பொருந்திய திருநீற்றுச் சார்பில் செல்லாத சமணர்களது திறத்திலே சிந்தை தாழ்ந்தனன்.

(வி - ரை) **வலி ஆண்மையின்** - படைகொண்டு வலிந்து நிலங்கொண்டபடியே, அந்த வலிய படை ஆண்மையின் துணையினால். நீதி முறைவழியாலன்றி - குடிகளின் மன அமைதியின் துணையாலன்றி - என்பது குறிப்பு.

**வண் தமிழ்நாடு வளம்படுத்து** - வண்மையுடைய தமிழ் என்றும், வண்மையுடைய நாடு என்றும் கூட்டியுரைக்க நின்றது. தமிழின் **வண்மை**யாவது தன்னை வேண்டிப் பயின்றோர்க்குத் தக்க உண்மைப் பொருளின்பங்களை வேண்டியவாறே வரையில்லாது வழங்குதல். **நாட்டின் வண்மை**யாவது நாடாது வளந்தருதல். "நாடென்ப நாடா வளத்தன" - குறள். **வளம்படுத்தலாவது** நாட்டின் இயற்கை வளங்களைச் செயற்கையாற் பெருகச் செய்து மேலும் மக்களுக்குப் பயன் தரும்படி செய்தல். இவ்வாறு நாடு வளம்படுத்துதல் அரசாங்கக் கடமைகளில் ஒன்று. அவை காடுவெட்டி நாடாக்குதல், வாய்க்கால் வெட்டிப் பயிர்பெருக்குதல் முதலாயின. **வளம்படுத்தியும்** (அத்தப் பயனைத் தான் பெறமாட்டானாயினும்) **தாழ்ந்தான்** என்க.

---

கைக்கொண்டான் என்றும், கடுங்கோன் என்ற பாண்டியன் மீண்டும் நாடுபிடித்தாண்டனன் என்றும், களப்பரன் நீண்டகாலம் ஆட்சி செய்திருக்கவில்லை என்றும், அவனை இவ்வடுகக் கருநாட மன்னனுயிருக்கலாமென்றும் சில சரித ஆராய்ச்சியாளர் கருதுகின்றார்கள். இதில் ஐயங்கொள்வாருமுண்டு.

**நில்லாநிலை ஒன்றிய இன்மையின் - இன்மையின்** - இன்மையினாலே. இன்மையின் - செல்லாது - தாழ்ந்தான் எனக் கூட்டுக. **இல்லாமை** - வறுமை. **இன்மையாவது** நிலையாமை பொருந்திய, ஆயுளின்மை. வாழ்வு பெறும் ஊழ்வலிமையின்மை என்க. பின்னர் "மின்னாமென நீடிய மெய்ந்நிலை யாமை" (991) என்பது காண்க. முழுதும் நன்மை செய்யும் திருநீற்று நெறியாகிய நன்னெறியிருக்க முழுதும் தீமை செய்யும் அருகர் நெறியிற் றாழ்தல், "குணம்பிறி தாதல் கெடுவது காட்டுங் குறி" என்றபடி போகூழினால் விளைவதாம் என்பது அறிஞர் கண்ட வுண்மை என்று குறிக்க, ஆயுள் எல்லைகுறுகிய நாள்வறுமையினால் ஆயிற்று என்றார். இவ்வுலகத்தும் மேலுலகத்திலும் நீடிய நல்வாழ்வு வாழும் விதியில்லாமையிற் **றாழ்ந்தான்** என்க.

இவ்வாறன்றி, **இன்மை** என்றதற்கு அறிவின்மை என்று கொண்டு, நில்லாநிலை ஒன்றிய அறிவு - அஃதாவது அசத்தாகிய நில்லாப்பொருள் இது, சத்தாகிய நிலைத்த உண்மைப்பொருள் இது என்று உணரும் அறிவு இல்லாமையினால், சத்தாகிய நீற்று நெறியைவிட்டுச் சமண் என்ற அசத்து நவை நெறியில் தாழ்ந்தான் என்றுரைத்தலுமொன்று. இவ்வறிவு பொருள்ஞானம் எனப்படும். நித்தியாநித்திய வத்துவிவேகம் என்பர் வடவர். "மெய்ம்மை யாம்பொருள் விவேகமும் வேறுபா டாய, பொய்ம்மை யாம்பொருள் விவேகமும் புந்தியுட் டோன்ற" (வாத. உப. பட. 10) என்ற திருவிளையாடற் புராணமும், "அல்லாத பரசமயத் தலகைத் தேர்விண் டகல...நில்லாதநிலையிதுமற் றென்று மொன்றாய் நிற்குநிலை யிதுவெனமெய்ந் நெறிதேர்ந்து" (கடவுள் வாழ்த்து - மெய்கண்டார் துதி) என்ற சேதுபுராணமும் இங்குச் சிந்திக்க. "சமயங்களானவற்றி னல்லாறு தெரிந்துணர நம்பரரு ளாமையினாற், கொல்லாமை மறைந்துறையு மமண்சமயங் குறுகினார்" (திருநா - புரா - 37) என்ற கருத்தும் காண்க.

இப்பொரு ளிரண்டுமன்றி, **வளம்படுத்து** என்றதனுடன் **நில்லாநிலை ஒன்றிய இன்மை** என்றதனைக் கூட்டி, வளப்படுத்தி நிற்காததாகிய வறுமையினால் என்றுரை கொள்வர் ஆறுமுகத்தம்பிரானார். மேலும், இங்ஙனமன்றி **நில்லாநிலை ஒன்றிய வின்மையின் நீண்ட** என்றதனை **மேருவில்** என்பதற்கு விசேடணமாக்கியும், **வின்மை** - வில்ஆளும் தன்மை - வில்லின் கலைத்திறம் என்று கொண்டும், நில்லாமையினையும் நிலையுதலையும் ஒருங்கே செய்யும் ஆற்றலுடைய வில்வித்தைத் தன்மையிற் சிறந்த என்று கூறநின்றதும் காண்க. இப்பொருளில் **வின்மை** என்றது அம்புபூட்டி எய்யாமல் வில் தாங்கி நின்றதொரு செயலினாலே முப்புரங்களுக்கு நிலையாமையாகிய அழிவு நிலையும், அதனுள் வாழ்ந்த அன்பர்களாகிய மூவர்க்கு அழியும் உலகில் நில்லாமையாகிய சிவப்பேறு என்னும் ஆக்க நிலையும் ஒருங்கே விளைத்த ஆற்றல் குறித்தது. இந்த இரு வேறு தன்மையும் ஒருங்கே பொருந்தியதென்று குறிக்க **ஒன்றிய** என்றார். **நீண்ட - நீளுதல்** - அத்தன்மையிற் சிறத்தல். **நீண்ட** - பெரிய என்றலுமாம். பின் சரித விளைவிற் காணும்படி சமணத்துக்கு அழிவும் சைவத்துக்கு ஆக்கமும் ஒன்றாலே செய்யவல்ல பெருமான் என்பார் **நில்லாநிலை** என முரண் அணிபடச் சிறப்பித்தார் என்க. "முந்தைச்செய லாம்அமண் போய்முதற் சைவ மோங்கில்" (1006) என்ற கருத்தும் காண்க.

**அடிமைத்திறம் மேவிய நீற்றின் சார்வு** - திருநீற்றின் சார்வு அடிமைத் திறத்துடனே இணைபிரியாது பொருந்தியதாம் என்க. திருநீறு, சிவனது அடிமைத் திறத்தினுள் உயிர்களைக் கொண்டு செலுத்தி அதில் நிலைபெறவைக்கும் சாதனமாவதன்றியும், அடிமைத்திறத்தை அறிவிக்கும் அடையாளமுமாம். உயிரைப்பற்றிய பவநோய் தீர்ப்பதற்கும், மேல் நோய்கள் வராமற் காப்பதற்கும் உரிய மருந்துமாம். திருநீற்றுப் பதிகத்தில் ஆளுடையபிள்ளையார் அருளியவை காண்க. அது இத் திருவாலவாயானுக்குச் சிறப்பா யுரிமையுடையதென்பது அத்திருப்பதிகத்தினுள் "ஆலவாயான் றிருநீறே" என்ற மகுடத்தினா லறியப்படும். முன்செய்த தீவினைவயத்தாற்

சமணச் சார்பினிற் புகுந்த கூன்பாண்டியரைச் சிவனடிமைத் திறத்தினிற் செலுத்திய ஆளுடையபிள்ளையார், திருநீறுகொண்டே தொடங்கி அச்செயல் செய்தருளினர் என்ற வரலாறும், இச்சரிதத்திலே பின்னர்ச், சமண்போய்ச் சைவமோங்குதற் கடையாளமாக மூர்த்தியாரும் திருநீற்றினையே அபிடேகமாகக் கொண்ட வரலாறும் காண்க. நீற்றினை வெளிப்படக் காணும் நிலையின்றியும் சிவனடிமைத்திறம் பேணுநிலை உளதாம் என்பது சாக்கியநாயனூர் புராணத்திற் காணப்படுவதனால் **நீற்றிற் செல்லாது** என்னுது **நீற்றின் சார்வு செல்லாது** என்றார்.

**அருகந்தர் திறம்** - அருகர் சமயம். அருகன் - சமணசமயக் கடவுள். அவனைத் தெய்வமாகக் கொள்வோர் அருகந்தர். **சிந்தை தாழ்ந்தான்** - **தாழ்தல்** - விரும்புதல். நீற்றுச் சார்பினிற் சென்று வாழாமல் கீழ்நிலைமையில் தாழ்ந்தான் என்றே ருண்மைப் பொருள்படவு நின்றது. வரும்பாட்டில் **தாழும்** - **வீழும்** என்பதும் காண்க. சைவர் என்போரில் நீற்றின் சார்வு செல்லாது தாழ்வோரும் பலர் காணப்படுவது இக்காலக் கொடுமைகளுள் ஒன்று !

**வளம்படுத்தி**—என்பதும் பாடம். 13

981. தாழுஞ்சமண் கையர்த வத்தைமெய் யென்று சார்ந்து
வீழுங்கொடி யோனது வன்றியும் வெய்ய முன்னைச்
சூழும்வினை யாலர வஞ்சுடர்த் திங்க ளோடேம்
வாழுஞ்சடை யானடி யாரையும் வன்மை செய்வான், கச

982. சேக்கர்ச்சடை யார்விடை யார்திரு வால வாயுள்
மூக்கட்பர னார்திருத் தொண்டரை, மூர்த்தி யாரை,
மைக்கற்புரை நெஞ்சுடை வஞ்சகன் வெஞ்ச மண்பேர்
எக்கர்க்குட னுக விகழ்ந்தன செய்ய வெண்ணி, கரு

953. அந்தம்மில வாமிறை செய்யவு மன்ப னர்தாம்
மூந்தைம்முறை மைப்பணி முட்டலர் செய்து வந்தார் ;
தந்தம்பெரு மைக்கள வாகிய சார்பி னிற்கும்
எந்தம்பெரு மக்களை யாவர் தடுக்க வல்லார் ? கசு

981. (இ - ள்) வெளிப்படை. தாழும் சமணர்களாகிய வஞ்சகர்களுடைய பொய்த் தவங்களை மெய்யென்று கொண்டு அக்கெறியிற் சார்ந்து வீழும் கொடியவனுகிய அம்மன்னவன் தான் வீழ்ந்ததுவேயுமல்லாமல், அரவம் சந்திரனோடும் வாழ்தற்கிடமாகிய சடையினையுடைய சிவபெருமானது அடியார்களையும், கொடிதாகிய முன்னைச் சூழ்வினைப் பயத்தினாலே, வலிமை செய்வானுகி, கச

982. (இ - ள்) வெளிப்படை. செவ்வானம் போலும் சடையவரும் விடையவரும், திருவாலவாயினுள் எழுந்தருளிய மூன்று கண்ணுடைய பரமனரும் ஆகிய சிவபெருமானது திருத்தொண்டரை, மூர்த்தியாரை, அந்தக்கரிய கல்போன்ற நெஞ்சுடைய வஞ்சகன். வெவ்விய சமண் என்ற பேர் கொண்ட ஈனர்களுக்கு உடம்படுத்து வானுகி, இகழ்ச்சியான காரியங்களைச் செய்ய எண்ணி, கரு

983. (இ - ள்) வெளிப்படை. முடிவில்லாதனவாகிய கொடுமைகளைச் செய்யவும், அன்பனர், தாம் செய்துவந்த முன்னை முறைமையாகிய சந்தனத்திருப்பணியை வழுவாமற் செய்து வந்தனர் ; **தங்கள் தங்கள் பெருமைக்களவாகிய சார்பிலே ஒழுகி நிற்கின்ற எந்தமது பெருமக்களை அவர்களது நல்லொழுக்கத்தினின்றும் செல்லாமல் தடுக்கவல்லவர் யாவர் ?** கசு

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

981. (வி - ரை) **தாழும் சமண்கையர்** - தாழும் - தாழப்பட்ட. மேற்சொல்லிய படி மன்னவனால் விரும்பப்பட்ட. தாழும் - தாழ்ந்த சமண் என்று சமணரது தன்மை குறித்ததாக உரைத்தலுமாம்.

**தவத்தை மெய் என்று** - தவம் - தவம் என்ற பெயராற் சொல்லப்பட்ட நெறி. மெய் என்று - மெய்யல்லாததை மெய் என்று. சமணர் தவமாவன - சுடுபாறையிற் கிடத்தல், கொல்லாமை மேற்கொள்ளுதல், உடையின்றிச் சரித்தல், தலையின் மயிர் பறித்தல், பேச்சின்றி நின்றுண்ணுதல், இரவினில் உணவு கொள்ளாதிருத்தல் முதலாயின.

**வீழும் கொடியோன்** - வீழ்தல் - விரும்புதல் - குழியில் விழுதல் என்ற இரு பொருளும்பட நின்றது. " தாம் வீழ்வார் " என்ற குறளில் வீழ்தல் விருப்பம் என்ற பொருளில் வந்தது காண்க.

**அது அன்றியும்-வன்மை செய்வான்**-"கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வ னேனே" (1), " அறமிருக்க மறம்விலக்குக் கொண்ட வாறே " (3) " தவமிருக்க அவஞ்செய்து தருக்கி னேனே " (9) (திருவாரூர் - காந்தாரம் - பழமொழி) என்று பலவகையானும் அப்பர் சுவாமிகள் தேற்றியருளியது காண்க. **அது அன்றியும்** - அக்கொடியோன் ஆலவாய்ப் பெருமானது திருநீற்றுச்சார்பிருக்க அதிற் செல்லாது அருகந்தர் திறத்திற் ருழ்ந்ததுவேயுமன்றி ; அதுவே பெருந்தவறு, அதன் மேலும் வேறுமோர் பெரும்பாதகத்துக் குள்ளாயினன் என்பது.

**வெய்ய முன்னைச் சூழும் வினையால்** - கொடியதாயும், முன் செய்ததாயும், அதனால் இப்போது வந்துபற்றுவதாயும் உள்ள வினைவலி. ஒரு பெருந்தவறுக்கு மேலும் சென்று, சிவனடியாரையும் அலைக்கும் பெரும் பாதகத்துக் குள்ளாகியதற்குக் காரணங்கூறியபடி. " தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர், தீவினை யென்னுஞ் செருக்கு " (குறள்).

**அரவம்...சடையான் அடியாரையும்**-"பாம்போடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்" (திருத்தாண்டகம்) என்றபடி அரவமும் திங்களும் ஒன்றோடொன்று பகையுடையன வாயினும் அவற்றை ஒன்றுசேர இருத்தி வாழும்படி இடஞ்செய்து வைத்த சடையினையுடைய சிவபெருமான் என்பது. **அரவம்** - பாம்பு. பாம்பின் இனமான - விடத்தின் தன்மையுடைய - இராகு கேதுக்களால் மறைக்கப் படுதலின் திங்களுக்குப் பாம்பு பகை என்று உபசரித்துக் கூறுதல் மரபு. " இக்குவிர் பானுவினில் இராகு வைக் கண்டாங்கு " (9 - 3 - உதா) என்ற சிவஞான போதத்தினுள்ளும் இச்செய்தி உதகரிக்கப்படுதல் காண்க.

அரவம் - கரிய விடத்தினை அடக்கியது. கரும்பாம்பு என்றும் கூறுவர். கருமை ஒளிக்குப் பகை என்பது குறிக்கச் **சுடர்த் திங்கள்** என்றார். **ஓவும் வாழும்** - ஓவும் என்ற மூன்றனுருபு உடனிகழ்ச்சிப் பொருள் தருதலால் இரண்டும் ஒற்றுமையுணர்ச்சியுடன் தத்தமக்குரிய இடத்தினில் வாழ்தல்குறித்தது. மூன்றனுருபைத் திங்களுடன் புணர்த்தியோதியது சிறப்புப் பற்றி.

பாம்பும் மதியும் உடன் வாழவைத்த இவ்வியல்பு பற்றிக் கூறியது அத்தகைய சிவபெருமானது அடியார்களும் அத்தன்மையினராவர் என்று காட்டுதற்காம். " இது வாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி, நீதியினு லிவையேல்லா மோரிடத்தே காண நீற்ப "தாகிய சைவ சமயத்தைச் சார்ந்த அடியார் எதனிடத்தும் பகை கொள்ளார் ; எவற்றையும் அவ்வவற்றுக் கேற்ற இடத்தில் வைத்துக்கொண்டு அமைகுவர் ; ஆதலின் அத்தகையாராகிய அடியார்களே வன்மை செய்தல் பகைவானினுர்க்கும் தகாது என்பது குறிக்க **வாழும் சடையான்** என்றும், **அடியாரையும்** என்றும் கூறினர்.

மேலும் அடியார்களிடத்து அபசாரப்படுதல் சிவாபராதத்தினும் பெரிய பாதக மாய்ப் பற்றியலைக்குமென்ப தறியாது **அவர்களையும்** என்ற குறிப்பும் காண்க. அன்றியும், அடியாரிதயம் கலங்கச் செய்தால் அதனைச் செய்தோர் விரைவில் நாச முறுவர் என்பதும், அப்பர் சுவாமிகள் காலபாராயணத் திருக்குறுந்தொகையுள் இயமன்றூதரை நோக்கி ' அடியார்களின் பக்கத்திலும் செல்லாதீர்கள் ' என்று ஆணை தந்ததும் குறித்து அத்தன்மையினராகிய **அடியாரையும்** என்றார். உம்மை உயர்வு சிறப்பு.

ஆனால் வாதம் செய்து சமணர்புத்தர்களை நமது பரமாசாரியர்களாகிய ஆளுடைய பிள்ளையாரும் திருவாதவூரடிகளும் போக்கியருளினார்களன்றே ? அப்பர் சுவாமிகளும் ஆளுடைய நம்பிகளும் சமணர்புத்தர்களை இழித்துக் கூறியருளினார்களே ? இச்சரிதத் திலும் சமண்பாதகன் மாய்ந்திடவும் சமண்போகவும் உள்ளநாள் என்றுவரும் என மூர்த்தியார் எண்ணினரன்றே ? எனின், அவை உண்மையே. புறப்புறச் சமயிகளாகிய இவர்கள் நமது சைவ நாட்டினுட் புகுந்தோர் தத்தம் அளவில் நின்றமைந்துபடாமல் சைவ நாட்டைக்கவர்ந்து கொண்டு முதற்சைவத்துக்கு இடையூறு விளைத்தனர். அதன் பின்பே அவ்விடையூறுகளை நீக்கித் தற்காத்துக்கொள்ளவும், உண்மைநிலை நாட்டவும், இறைவனது நியமமாகிய திருவருள்பெற்று இச்செயல்களைச் செய்தனரே யன்றிப், பகைமைபூண்ட இகலினாலன்றென்பது உண்மை.''இகலில ரெனினும்''(திரு ஞான - புரா - 854) என்பதும், அப்புராணம் - 736—741-ல் கூறியனவும் காண்க.

**வன்மை செய்வான்** - தத்தம் நிலையில் நிற்கவொட்டாது பலவாற்றாலும் வலித்த செய்கைகளைச் செய்வானாகி. **செய்வான்** - முற்றெச்சம். செய்வான் - எண்ணி (982), பிறை செய்யவும் என்று முடித்துக்கொள்க. இக்கொடியோன் எண்ணிய அளவில் நின்றுபட்டனவேயன்றி அத்தீவினைகள் முற்றுப்பெறுதொழிதலின், அது குறிக்கச் **செய்வான் - எண்ணி** - என்ற வினையெச்சங்கள் **செய்யவும்** என்ற குறிப்பு வினையெச் சத்துடன் முடியவைத்தார். 14

982. **(வி - ரை) செக்கர்ச்சடை** - செக்கர் - அந்திச் செவ்வானம். அது போன்ற சிவந்த ஒளியுடைய சடை. ''மாலையின் நுங்குருவே போலுஞ் சடைக்கற்றை'' (அற்பு - அந் - 65) என்றது அம்மையார் திருவாக்கு.

**விடையார்**-அறத்தின் உருவமாகிய விடையினையுடையார். தருமமூர்த்தி என்ப.

**திருவாலவாயுள் முக்கட் பரனர்** - சிறப்பாகிய கண்ணுடையார் என்றது. நெருப் பாகிய நெற்றிவிழி. இருள்போக்குவதும் அஞ்ஞானத்தை எரிப்பதுமாம்.

இம்மூன்றும், பகைப்பொருள்களை ஒன்றுசேர வாழ வைப்பவர் என முன்பாட்டிற் கூறிய சிறப்பும், அதுதான் அவ்வவற்றின் நிலைகளுக்கேற்பத் தருமவழியின் நிறுத்து பவர் என்ற சிறப்பும், அந்நிலையிற் பிறழ்ந்தோரைப் போக்கி விளக்கம் செய்பவர் என்ற சிறப்பும் குறித்து நின்றன.

**திருத்தொண்டரை** - அத்தன்மைகளையுடைய தலைவருக்குத் தொண்டராதலின் இவரும் அச்சிறப்புக்களுக்குரியவர் என்பது. இவரது அன்பின் உறைப்பிலேலே கொடிய வன் இறக்குபட்டுச் சமண்போகவும், சைவம் விளங்கவும் கூடிற்று என்பது இச்சரிதத் தாற்போந்த உண்மை. 985 - 1006 பார்க்க. **தொண்டரை ழூர்த்தியாரை** என்றுகூட்டி உரைத்த கருத்துமிது.

**மைக்கல்புரை நெஞ்சு** - மை - கருமை. நெஞ்சுக்குக் கருநிறமுடைமையாவது வஞ்சம் முதலிய தீக்குணமுடைமை. வஞ்சம் பொறாமை முதலிய தீக்குணங்கள் தாமத குணத்தின்பாற்பட்டவை. தாமத குணத்தின் நிறம் கறுப்பு என்ப. இத்தொடர்பு குறிக்கவே **வஞ்சகன்** என்றார். '' மை பொதி விளக்கே யென்ன மனத்தினுட் கறுப்பு வைத்து '' (473) என்றது காண்க. **கல்** - இங்கு அன்புக்கிணங்காத கடினத்தன்மை குறித்தது. கற்களில் கருங்கல் மிகக் கடினமுடைத்தென்பர்.

**வேஞ்சமண்** பேர் எக்கர் - எக்கர் - சுனர். " எக்க ராமமண் கையர் " என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரங்காண்க. **உடனுக** - உடம்படித்துவிக்க. ஆக்க என்றது ஆக என நின்றது. சிவன் பணியில் தவிர்த்தலால் சமண்போல ஆக்க என்றதும் குறிப்பு.

**வேஞ்சமண்** - வேம்மை - கொடுமை. கொல்லாமை - அகிம்சை - சிவகாருண்ணியம் என்ற போர்வையினுள் மறைந்து நின்று கொடிய கொலை - இம்சை-வன்மைகளில் அஞ்சாது முற்படுகின்றவர்களாதலின் **வேஞ்சமண்** என்றார்.

செய்வினை - **இகழ்ந்தன** அறநூல்களாலும் அறிவோராலும் இகழப்பட்டவற்றை. செயப்பாட்டுவினையாக வந்த வினையாலணையும் பெயர். இரண்டனுருபு தொக்கது. 15

983. (வி - ரை) அந்தம் இலவாம் மிறை - மிறை - கொடுமைகள். "வெஞ்சமண் குண்டர்கள் செய்வித்த தீய மிறைக ளெல்லாம் " (137), மிண்டாய செய்கை " (141) என்ற திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் காண்க. " பெருமிறை " (குறள்-847) என்றதற்கு, மிக்க வருத்தம் - பொறுத்தற்கரிய துன்பம் - என்று பரிமேலழகர் உரைத்தது காண்க. **அந்தம் இல** - அவ்வகைப் பெருங்கொடுமைகள் அளவில்லாதன. **மிறை** என்றது அவற்றின் பெருந்துன்பமும், **அந்தம் இல** என்றது அவற்றின் பெருந்தொகையும் குறித்தன. இவை மூர்த்தியாரது உலகவாழ்க்கை நிலையைப்பற்றிச் செய்யப்பட்டன. இவை பொருள் வருவாயைத் தடுத்தல், கொள்ளும் பண்டம் பெருமற் செய்தல் முதலியன.

**மிறை செய்யவும் - பணிமாட்டலர் செய்துவந்தார்** - உலக வாழ்வில் வருவாய் முட்டுப்பாடு - வறுமை - சோர்வு முதலாயின நேர்ந்தனவாயினும், உயிரின் நல்வாழ்வு பற்றிய திருப்பணியை ஒருவாற்றானும் தவிர்தலின்றி நியதியாகச் செய்துவந்தனர். உம்மை - உயர்வு சிறப்பு.

**முந்தை முறைமைப்பணி** - 972ல் உரைத்த திருப்பணி. **முந்தை** - முன்னுளில்- என்பது காலத்தையும், முறைமை என்பது செய்யும் திறத்தையும் குறித்தன.

**அன்பனார்** - மிறை செய்யினும் பணி மூட்டாது செய்வதற்கு அவரது " மூளும் அன்பே " காரணமாம் என்று குறிக்க இத்தன்மையாற் கூறினார்.

**செய்துவந்தார்** - ஒருகாள்போலவே பலகாலும் முட்டின்றிச் செய்தல் குறித்தது.

**தந்தம்...வல்லார்?** - இது கவிகூற்று. **தந்தம் பெருமைக்கு அளவாகிய சார்பு** - தத்தமது பெருமைக் கேற்றபடி பெரியோர் விடாப்பிடியாகப் பற்றும் பெரும்பற்று. **சார்பு** - எது வரினும் விடாது பற்றும் பற்றுக்கோடு. " சார்புணர்ந்து " (திருக்குறள் - 359) என்றதனுட் போந்த பொருள்கள் காண்க. 39,346, 361,469ல் உரைத்தவையும், " தாள் மெய்ப்பற்றெனப் பற்றி விடாத விருப்பின் மிக்கார் " (975) என்றதும் காண்க. **நீர்மையும்** - நிலைபெற்று நிற்கின்ற.

**எந்தம் பெருமக்கள்**-அவர்களது திருவடிச் சார்புபற்றித், தாம் நிற்கின்ற உரிமை பாராட்டி **எந்தம்** என்றார். **பெருமக்கள்** - மக்களிற் சிறந்தோர். " நீடலங் காரத் தெம்பெரு மக்க ணெஞ்சினு ணிறைந்துநின் றானே " (சேந்தனார் - திருவீழி - 12) என்ற திருவிசைப்பாவும் காண்க. **தடுக்கவல்லார் யாவர்?** ஒருவருமிலர் என்க. வினா எதிர்மறைப் பொருளுணர்த்தியது. **தடுத்தல்** - தமது சார்பில் நிற்கவொட்டாது தடுத்தல். 16

984. எள்ளுஞ்செயல் வன்மைக ளெல்லையில் லாத செய்யத்
தள்ளுஞ்செய வில்லவர் சந்தனக் காப்புத் தேடிக்
கொள்ளுந்துறை யும்மடைத் தான்,கொடுங் கோன்மை செய்வான் ;
தெள்ளும்புனல் வேணியர்க் கன்பருஞ் சிந்தை கொந்து, கஎ

985. "புன்மைச்செயல் வல்லமண் குண்டரிற் போது போக்கும்
வன்மைக்கொடும் பாதகன் மாய்ந்திட, வாய்மை வேத
நன்மைத்திரு நீற்றுயர் நன்னெறி தாங்கு மேன்மைத்
தன்மைப்புவி மன்னரைச் சார்வதென் ?"றென்று சார்வார், கஅ

986. காய்வுற்றசெற் றங்கொடு கண்டகன் காப்ப வுஞ்சென்
ரூய்வுற்றகொட் பிற்பக லெல்லை யடங்க நாடி
யேய்வுற்றநற் சந்தன மெங்கும் பெறாது கிந்தை
சாய்வுற்றிட வந்தனர் தம்பிரான் கோயி றன்னில். கஉ

984. (இ - ள்) வெளிப்படை. இகழப்பட்ட, எல்லையில்லாத வலிந்த செய்கைகளைச் செய்யவும், தமது திருப்பணியினின்றும் விலகாத செய்கையுடையவராகிய மூர்த்தியார் சந்தனக் காப்புத் தேடிப்பெறும் வழியையும் கொடுங்கோன்மை செய்வானுகிய அக்கொடும்பாதகன் அடைத்துவிட்டான் ; தெள்ளும் நீராகிய கங்கையைத் தரித்த சடையாருடைய அன்பரும் (அதனால்) மனம் நொந்து, கள

985. (இ - ள்) வெளிப்படை. "புன்மைச் செயலில்வல்ல அமண் குண்டர்களுடனே போது போக்குகின்ற கொடியபாதகன் இறந்துபட, உண்மை வேதங்களிற் கூறப்பட்ட நன்மைதருகின்ற திருநீற்றின் உயர்ந்த சைவ நன்னெறியைத் தாங்கும் மேன்மைத் தன்மையுடைய மன்னரை இப்புவி சார்வது எங்ஙாட்கூடுவதோ ?" என்று மனத்துட் கொண்டவராகி, கஅ

986. (இ - ள்) வெளிப்படை. காய்தற்றன்மை பொருந்திய கோபத்தையுடைய கொடிய கண்டகனுகிய அவ்வடுகக் கருநாட மன்னவன், சந்தனம் பெறும்வழி இடைக்கப்பெறாமல் அடைக்கவும், போய், ஆராயும் கொட்பில் அக்காளிற் பகல் கழியுமளவும் எங்கும் தேடியும், திருவாலவாயில் எந்தைபெருமானுக்கு அணியத்தகுந்த நல்ல சந்தனம் எங்கும் கிடைக்கப்பெறாது மனம் சோர்வுற்று வருந்தித், தம் பெருமானாரது திருக்கோயிலில் வந்தணைந்தனர். கஉ

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

984. **(வி - ரை) எல்லையில்லாத(ன்வும்) வன்மைகளும் ஆகிய எள்ளும் செயல் - என்க. எள்ளுதல்** - நூல்களாலும் உயர்ந்தோராலும் விலக்கி யிகழப்படுதல். இச்செயல்களாவன " அந்தம் மிலவா மிறை " என முன் பாட்டிற்கூறிய அவை.

**தள்ளும் செயல் - தமது திருப்பணிவிடையை விடுதல். தள்ளும் செயல் இல்லவர் - மூர்த்தியார்.** முட்டலராய்ச்செய்து வந்தவராதலின், கொடுங்கோலாசனுடைய மிறைகளுக்கு உடைந்து தம் பணியைத் தள்ளாதவர்.

**சந்தனக்காப்புத் தேடிக்கொள்ளும் துறை - துறை** - சந்தனக்குறடு (கட்டை) பெறும் வழிகள். அவை, விலைக்குப் பெறுதலும், சோலைகளிற் சந்தன மரங்களை வெட்டி வருதலும் முதலாயின. **காப்பு** - இங்கு அரைத்தலாற் காப்பினைப் பெறும் குறட்டுக்காயிற்று. மெய்ப்பூச்சுக்குரியதாதலின் **காப்பு** என்றார்.

**துறையும் அடைத்தான்** - வழக்கமாய்த் தேடிப்பெறும் வழிகளில் இவர் பெறுதபடி தடுத்துவிட்டான். விலைக்குக் கொடுப்போரை வன்மையால் மறித்தும், சோலைகளில் மரம் வெட்டி எடுக்கக்கூடாமற் செய்தும் வலிந்த செய்கைகளைச் செய்தான் என்பதாம்.

**கொடுங்கோன்மை செய்வான்** - இவ்வாறு செய்தல் அரச நீதிக்கும் செங்கோன்மைக்கும் அடாத செயல் என்பார் **கொடுங்கோன்மை** என்றார். " ஆறு சமயத் தவரவரைத், தேற்றுந் தகையன" (இன்னம்பர், 7), "ஆருண்! றியசம யங்களி னவ்வவர்க் கப்

பொருள்கள், வேரொன் றிலாதன" (ஷி 4) என்ற திருவிருத்தங்களில் கூறியபடி சிவ பெருமான் அவ்வச் சமயத்தார்க்கும் அங்கங்கு நின்று அவரவர்க்கேற்றபடி அருள்புரி கின்றார். சிவன் வகுத்த நீதியாகிய செங்கோன்மைவல்ல அரசனும் அவ்வாறே அவ்வ வர் சமயக் கோட்பாட்டில் அவரவர்களை மிகை படை யின்றி நிறுத்துவித்தல் அரசநீதி யாகும். அதிற்பிறழ்ந்து இவ்வாறு சமயக்கோட்டம் விளைத்து வலிமை செய்தல் கொடுங்கோன்மை என்பதாம். இந்நீதியினை உலகம் உணர்ந்து அதன்படி ஒழுகி உய்யும்பொருட்டு அரசநீதியிற் சிறந்த அமைச்சர் பெருமானுகிய ஆசிரியர் இவ்வாறு விளக்கிக் காட்டினார்.

**தேள்ளும் புனல்** - கங்கை. தன்னுட்படிந்தார்களுடைய பாவங்களைப்போக்கி, ஆணவமாகிய மயக்கத்தைத் தெளிவித்து நன்மை செய்தலால் **தேள்ளும்** என்றார்.

**அன்பரும் சிந்தை நோந்து** - **அன்பரும்** - ஒரு குறைவுமில்லாதவர்களும், வீரமும் பெருமையுமுடையவர்களும், அச்சமும் கவலையுமில்லாதவர்களும் ஆகிய திருத்தொண் டர் கூட்டத்தினுட் சேர்ந்த அன்பருமென்க. உம்மை உயர்வு சிறப்பு. " அச்சம் மிலர் கேடும்மிலர் பாவம்மில ரடியார், நிச்சம்முறு நோயும்மிலர் " (நட்டபாடை திருநின்றியூர் - 2) என்று ஆளுடைய பிள்ளையாரும், " வானந் தளங்கிலென்...ஒரு வனுக் காட்பட்ட வுத்தமர்க்கே " (தனித்திருவிருத்தம் - 8) என்று ஆளுடைய அரசு களும் அருளியவை காண்க. " வீரம் " (144), " பெருமை " (6) என்ற விடத்துரைத் தவையும் பார்க்க. எதுவரினும் சிந்தை நோதல் இல்லாத **அன்பரும் நோந்தார்** என்றது இறைவனுக்குத் தாம் செய்த திருப்பணி முட்டநேர்ந்தது பற்றியேயன்றிப் பிறிதில்லை என்பது குறிக்க **வேணியார்க் கன்பரும்** என்றார். அன்பராதலின் திருவடியன்பு பற்றி நொந்தார் என்க. " பேசாத நாளெல்லாம் பிறவா நாளே " என்ற கருத்தும் இது.

**சிந்தை நோந்து** - " பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள் சித்தங் கலங்கிட ", " ஈசனடியா ரிதயங் கலங்கிட " என்பனவாதி திருமந்திரங்களால் அன்பர்களது சிந்தை நோவச் செய்யின் அதனால் வருங்கேடுகளைத் திருமூலர் ஆணையிட்டு அறிவித் திருத்தல் காண்க. இங்கு இவ்வாறு நொந்தமையால் வரும் இச்சரித மேல் விளைவு களையும் சிந்திக்க. 17

985. (வி - ரை) **புன்மைச் செயல் வல் அமண் குண்டர்** - **புன்மைச் செயல்** - இழி செயல்கள். கெட்ட செய்கைகள். **வல் அமண்** என்றது புன் செய்கை செய் வதில் அமணர் வல்லவர்கள் என்றபடி. **குண்டர்** - கீழ்மக்கள். திருநாவுக்கரசு சுவாமிகள் பால் சமணர்கள் செய்த தீயமிறைகளும், (அவை - அரசனிடத்து வஞ்சனை தெரிந்து சித்திரித்துச் சொல்லியதும், அரசுகளை, அரசன் ஆணையின் உதவிகொண்டு, கொடு வரச் செய்து நீற்றறையில் இடுவித்தும், விடங்கலந்த பாற்சோறு நுகர்வித்தும், யானை யினால் இடரச் செய்வித்தும், கல்லினோடு பூட்டிக் கடலில் இடுவித்தும் செய்ததும் முதலியவை) ஆளுடைய பிள்ளையாரும் சிவன் அடியார்களும் மதுரையிற் புக்கது கண்டு பொருள்களாய் அவர்கள் உறைந்த திருமடத்தில் இரவில் தீ மூட்டியதும், தண்டி யடிகளை இழித்துரைத்து வலிமை செய்து சிந்தை நோவச் செய்ததும், நமிநந்தி நாயனார்பால் இழிசொற் பேசி அவர் மனம் நோவச் செய்ததும் முதலாகிய **புன்மைச் செயல்களை** இங்கு நினைவு கூர்க. எவ்வுயிர்க்கும் எவ்விதத்தும் தீதல் செய்யாத கருணையாளராகிய அப்பர் சுவாமிகளும் தமது தூய அருட் சிந்தையும் நொந்து, அது பற்றியே இவர்களைத் தமது திருவாக்கினால் " அமண் குண்டர் " " குண்டாக்கர் " என்று கூறுதலும் காண்க. **போது போக்கும்** - நன்னெறியிற் செலுத்தித் தானும் உய்ந்து, தன் கீழ்ப்பட்ட நாட்டையும் உய்யச் செய்வதிற் கழிக்க வேண்டிய தனது காலத்தை வீணே கழித்துப் போக்கினன் என்பது. **போக்குதல்** - வீணுக்குதல். மாய்த்தல் என்றலுமாம். " பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் ",

" கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே " என்ற திருவாசகங்கள் காண்க. இக்கொடியவன் தனது கொடுஞ்செயலினால் தன் நாளை அன்றைக்கு முடித்துக் கொண்டான் என்பது பின்னர்க் காணப்படும். 991 பார்க்க.

**வன்மைக் கொடும் பாதகன்** - தனது சமயமாறுபாடு ஒன்றே பற்றிச் சிவாபராத மாகிய பெரும்பாதகத்தைக் கொடுமையாக வலிந்து செய்தவன்.

**மாய்ந்திட** - இறந்துபட. " மாய்ந்திட - தன்மை மன்னரைச் சார்வது என்று ?" எனக்கூட்டுக.

**வாய்மை வேதம்** - ' சத்தியமே உறுதியாவது ' என்று அறையும் வேதம். வாய்மையே பேசும் மறை என்றலுமாம்.

**வேத நன்மைத் திரு நீறு** - வேதங்களில் விதந்து பேசப்படுவதும் நன்மையே தருவதுமாகிய திருநீறு. திறுநீற்றுப்பதிகம் பார்க்க.

**திருநீற்று உயர் நன்நெறி** - திருநீற்றினை உறுதிப்பொருளாய்க் கொண்டு உயர்வு தரும் நன்னெறி - சைவ நெறி. "நீற்றின் சார்பு " (980), " மன்னிய சைவ வாய்மை வைதிக வழக்க மாகும், நன்னெறி" (திருஞான - புரா - 600), " தேனவில் கொன்றை யார்தந் திருநெறி " (ஷை 858), என்பவை காண்க. **உயர்** - உயர்த்தும். பிறவினைப் பொருளில் வந்தது. உயர்வாகிய என்றலுமாம்.

**நெறிதாங்கும் தன்மை** - நெறியினை மேற்கொண்டு செலுத்தும் தன்மையுடைய.

**தன்மை மன்னரைப் புவி சார்வது** என்க. **புவி சார்வது** - உலகம் அரசரது சார்பிலே நிற்கக்கடவது என்ப. " மன்ன னெவ்வழி மன்னுயி ரவ்வழி " என்பது பழமொழி. **சார்வார்** - மனத்தினுட் கொள்வாராகி. முற்றெச்சம். **சார்வார்** - **வந்தனர்** என வரும்பாட்டுடன் கூட்டி முடிக்க. 18

986. (வி - ரை) **காய்வுற்ற செற்றம்** - ஒரு பொருளை நடுநிலையில் வைத்துக்காண முடியாது காய்தலையுடைய சினம். **செற்றம்** - கோபம் - பகைமை. " காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண், ஆய்த லறிவுடையார் கண்ணதே - காய்வதன்கண், உற்ற குணந்தோன்றா தாகும் " என்பது நீதியுரை.

**கண்டகன்** - கொடியவன். **கண்டகம்** - கொடுமை. **கண்டகம்** - முள் என்று கொண்டு முள்ளினைப்போன்ற துன்பஞ்செய்பவன் என்றுரைப்பாருமுண்டு.

**செற்றங்கொடு காக்கவும்** - மேலெழுந்த செற்றத்தினால் சந்தனங் கொள்ளுந் துறையை அடைத்து, அது கிடையாமற் காவல்செய்து. உம்மை இழிவு சிறப்பு. **காக்க** என்றது வாராமல் காவல்புரிய என்ற பொருளில் வந்தது.

**ஆய்வுற்ற கொட்பு** - பல வழியாலும் ஆராய்ந்து திரியும் மனச்சுழற்சி. **கொட்பு** - கருத்து என்றலுமாம்.

**ஏய்வுற்ற நல் சந்தனம்** - ஆலவாய்ப் பரமனாருக்குச் சாத்தத்தகுந்த நல்ல மணமும் குணமும் உடையதாய் முற்றிய உயர்ந்த சந்தனக்கட்டை.

**சிந்தை சாய்வுற்றிட** - மனம் ஏக்கம் பொருந்த. " அன்பரும் சிந்தை நொந்து " (984) என்றவிடத் துரைத்தவை பார்க்க. **சிந்தை** - தமக்கு அந்தம் இலவாம் மிறை செய்யவும் அவ்விடுக்கண் ஒன்றினுக்கும் அஞ்சாது உறைப்புடன் பணிசெய்து வந்த திண்ணிய மனம். திருப்பணிக்குரிய சந்தனம் பெறாமையால் திண்மை சாய்ந்தது என்க.

987. நட்டம்புரி வாரணி நற்றிரு மெய்ப்பூச் சின்று
முட்டும்பரி சாயினுந் தேய்க்குங்கை முட்டா தென்று
வட்டந்திகழ் பாறையின் வைத்து முழங்கை தேய்த்தார்
கட்டும்புறந் தோனரம் பென்பு கரைந்து தேய. உ0

(இ - ள்) வெளிப்படை. " அருட் கூத்தப் பெருமானார் அணியும் நல்ல திரு மெய்ப்பூச்சுத்திருப்பணிக்கு இன்று முட்டுவந்து நேரும் தன்மை உண்டாயினும், அந்தச்

சந்தனத்தைத் தேய்க்கும் எனது கையினுக்கு முட்டு நோாது'' என்று துணிந்து, வட்டமாய் விளங்கிய சந்தனக்கற்பாறையில் தமது முழங்கையை வைத்து அதனைக் கட்டிப் போர்த்த புறந்தோலும் ரம்பும் எலும்பும் கரைந்து தேயும்படி தேய்த்தனர்.

(வி - ரை) **நட்டம்புரிவார்** - அருட்டிருக் கூத்தினை ஆடுகின்ற சிவபெருமான்.

**நல் திரு மெய்ப்பூச்சு**-''எய்வுற்ற நற்சந்தனம்'' என முன்பாட்டினும், ''எந்தைக்கு அணி சந்தனக்காப்பு'' என்று 977-லும் உரைத்தவை காண்க. சந்தனக்கட்டை கிடைக்காத காரணத்தால் இறைவனது திருமெய்ப்பூச்சு முட்டுப்பட்டதென்று கவன்றனர்.

**முட்டும் பரிசு** - தவிர்தலுறும் நிலை.

**தேய்க்கும் கை** - சந்தனக் கட்டையைப் பாறையில் வைத்துச் சந்தனம் இழைக்க வுதவும் கையினில் முழங்கை முற்பட உதவுவதனால் **முழங்கை தேய்த்தார்.**

**கை முட்டாது** - கையினுக்கு முட்டுப்பாடு இல்லை என்றபடி. **என்று** - என்று துணிந்து.

**வட்டம் திகழ்பாறை** - சந்தனம் அரைத்தற்கிடமாகிய கல்.

**கட்டும்.....தேய** - **கட்டும்** - உள்ளே நின்ற எலும்பு, ரம்பு, தசை, இரத்தம் முதலியவற்றை ஒன்றுகப் பொதிந்து மேலே மூடிக்கட்டிய. முழங்கையினைப் பாறையில் தேய்க்க முதலில் கரைந்து தேய்வது புறந்தோல். அதனை அடுத்து ரம்பும், அதன் பின் எலும்பும் என்றிவ்வாறு முறையிற் றேயும் உடற்கூற்றுக் களாகிய தோல் முதலிய தாதுக்களே வெளியிலிருந்து உட்செல்லும் அவ்வரிசையில் வைத்தோதினார். திருஞா - புரா - 357—360 பாட்டுக்கள் பார்க்க.

**கரைந்து தேய**-முதலில் கரைந்து, அதன் மேலும் தேய்க்க, அவை தேய்வடைய. தேய்த்தசெயல் முன்னர் நிகழ்ந்தது. அதன் காரணமாகக் கரைந்துபின் தேய்ந்தன என்பார் **தேய்த்தார்** - **தேய** என்ற முறையில் கூறி வினைமுடிபு கொள்ளவைத்த நயம் காண்க. 20

988. கல்லின்புறந் தேய்த்த முழங்கை கலுழ்ந்து சோரி
செல்லும்பரப் பெங்கணு மென்பு திறந்து மூளை
புல்லும்படி கண்டுபொ றுத்திலர் தம்பி ரானர் ;
அல்லின்கணை மூந்தது வந்தருள் செய்த வாக்கு, உக

989. ''அன்பின் றுணி வாலிது செய்திட ; லைய ! வன்பால்
வன்புன்கண்வி ளைத்தவன் கொண்டமண் ணெல்லாங் கொண்டு
முன்பின்னல்பு குந்தன முற்றவு நீத்துக் காத்துப்
பின்புன்பணி செய்துநம் பேருல கெய்து'' கென்ன, உஉ

*990. இவ்வண்ணமெ முந்தது கேட்டெழுந், தஞ்சி, முன்பு
செய்வண்ணமொ ழிந்திடத், தேய்ந்தபுண் ணூறு நீர்ந்து
கைவண்ணங் ரம்பின வாசமெல் லாங் கலந்து ;
மொய்வண்ணவி ளங்கொளி யெய்தினர் மூர்த்தி யார்தாம். உங

988. (இ - ள்) வெளிப்படை. இவ்வாறு கல்லின்மேல் தேய்த்த முழங்கையானது இரத்தம் சொரிந்து, தேய்த்துச் செல்லும் இடமெங்கும் எலும்பு திறந்து அதனுள் இருக்கும் மூளைப்பகுதியும்,பொருந்தக் கண்டு தம் பெருமானுகிய சிவபெருமான் தரித்திலர் ; அந்த இராத்திரியிலே எழுந்ததாகிய அவரது அருளினைச் செய்த திருவாக்கு, உக

989. (இ - ள்) வெளிப்படை. "ஐயனே! அன்பின் அணிவினுல் இக்காரியம செய்யற்க. உன்பால் வலியக் கொடுமை விளைத்தவன் வலிந்துகொண்ட நாடு முழுமையும் நீ கொண்டு, முன்பு புகுந்த தன்பங்கள் முழுமையும் போக்கிக் காத்துப், பின்பு உனது நியதியாகிய திருப்பணி செய்து, முடிவில் நமது பேருலகத்திற் சேர்வாயாக!" என்று சொல்ல, உஉ

990. (இ - ள்) வெளிப்படை. இவ்வாறு எழுந்ததனைக் கேட்டு, எழுந்து, பயந்து, முன்செய்த செயலினை நிறுத்தவேதெய்ந்த புண்ணுகிய ஊறு நீங்கி,தன்மணமெல்லாம் கலந்து பொருந்த அவரது கையின் வண்ணங்கள் அழகாய் நிரம்பின ; மூர்த்தியாரும் ஒன்றுகூடிப் பொருந்திய விளக்கமாகியதோர் ஒளியினைப் பொருந்தினர். உரு

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

988. (வி - ரை) **கல்லின்புறம்** - கல் - "வட்டந்திகழ்பாறை" என்று மேற் பாட்டிற் கூறிய சந்தனம் அரைக்கும் கல். **புறம்** - மேல். ஏழனுருபு.

**சோரிகலுழ்ந்து** என்க. **கலுழ்தல்** - பெருகி வெளியிற் சொரிதல்.

**செல்லும் பரப்பு** - தேய்த்த கை பரவிச் செல்கின்ற இடம்.

**என்புதிறந்து ழளை புல்லும்படி** - முழங்கையினுள் தட்டையாகிய நீண்ட இரண்டு எலும்புகள் உண்டு. அவை உள் துளையுடையனவாகிய மெல்லிய குழாய்கள் போன்ற அமைப்புடையன. அத்துளைக்குள் மூளைச் சத்தாகிய மெல்லிய நுண்ணிய நரம்புத் தன்மையுடைய உடற்கூறு நிரம்பியிருக்கும். அதனை உள்ளே வைத்துப் பொதிந்து காக்கும்பொருட்டு, மூளையைத் தலைமண்டை எலும்பு ஓடு காவல் செய்வது போல, அமைந்துள்ளன இவ்வெலும்புக் குழாய்கள். எலும்புகளின் மேற்பாகமான கடினமாகிய வெள்ளியபகுதி தேய்த்தால் குழாய் திறக்கப்பட்டு உள்ளிருக்கும் மூளைப் பகுதி வெளிப்படும். அவ்வாறு மெல்லிய எலும்பு தேய்த்து வாய்திறந்து உள்ளிருக்கும் மூளைச் சத்து வெளித்தோற்றித் தேயும்படி என்க.

**பொறுத்திலர் தம்பிரானுர்** - "தரித்திலர் தேவதேவர்" (826), "தரிப்பரே யவள் தனிப்பெருங் கணவர்" (திருக்குறிப்பு - புரா - 57) முதலியவை காண்க. யான் என்றும், எனது என்றும் உள்ள அகங்கார மமகாரங்களாகிய பற்றுக்கள் ஒரு சிறி தேனும் உள்ளவரையில் பொறுத்துப் பார்ப்பதும், அவை முற்றும்விட்டு ஒழிந்து உடற்பற்றும் உயிர்ப்பற்றும் அறவே நீங்கியபோது பொறுக்காமல் வெளிப்பட்டு அருளுதலும் இறைவனுடைய அருளின்றிறம். "அற்றது பற்றெனில் உற்றது வீடு", என்பது பழையமொழி.(வீடு என்பது திருவருள் வியாபகத்தில் தாடலேபோல் அடங்கி கிற்றல்). பயனிலை முன்வந்தது விரைவு குறித்தது.

**அருள்செய்த வாக்கு எழுந்தது** என்க. வாக்கின்றிறம் வரும் பாட்டிற் கூறுகின் ருர். **அருள்செய்த** - மூர்த்தியாருக்கு அருளைப்புரிந்த. **உவந்து அருள்செய்த** என்றலு மாம். இறைவனது அருவத் திருமேனியாகிய எங்கும் நிறைந்த ஞானகாயத்தினிட மாக மூர்த்தியார் கேட்கும்படி எழுந்தது என்றபடி. 401, 436, 465, 597, 598, 923, 965 முதலியவையும், இன்னும் இவ்வாறு வருவனவும் பார்க்க.

**வந்து எழுந்தது** - அரிவாட்டாயனருக்கு நிலத்தின் பிளப்பாகிய கமரினின்றும், திருக்குறிப்புத் தொண்டனருக்குக் கந்தை புடைத்திட எற்றுகின்ற கற்பாறையினின் றும், கண்ணப்பனருக்குச் சிவலிங்கத்தினின்றும் இறைவருடைய அருளும் திருக் கை வெளிப்பட்டருளியதுபோல், இங்கு வாக்கு எழுந்து அருளியது என்பதாம். எழுந்த (தாகிய) வாக்கு (988) - என்ன (989) - இவ்வண்ணம் எழுந்தது கேட்டு, ஒழிந்திட - ஊறுநீங்கி - நிரம்பின ; மூர்த்தியார் - ஒளி எய்தினர் (990) என்று கூட்டி முடித்துக்கொள்க. **எழுந்தது** - வினையாலணையும் பெயர்.

989. (வி - ரை) ஐய ! - ஐயனே ! அன்பின் செயலுக்கு மகிழ்ந்து இறைவர் மூர்த்தியாரை அருமைப்பட விளித்தது. ஐயன் - பெருமையிற் சிறந்தோன். முனிவன் என்றலுமாம்.

**அன்பின் துணிவால் இது செய்திடல்-அன்பின் துணிவு** - இன்று மெய்ப்பூச்சு முட்டும் பரிசாயினும் தேய்க்கும் கைக்கு முட்டின்று என்ற அணிவு (987). பகை, கவலை, பிணக்கு முதலியனவாய் உலகநிலை பற்றிய பல காரணங்களால் கைகுறைத்தல் முதலாகிய பல வலித்த செயல்களையும் தாமே செய்துகொள்வாருமுளர். அதுவன்றித், "தம்மைத் தாமே சாலவு மொறுப்பர்" (திருவிடை - மும் - கோ - 19) என்று பட்டினத்தடிகள் அருளியபடி நிலையாகிய வீட்டின்பம் பெறுவதற்கும் பலர் தம் உடலுக்குத் தாமே பற்பல ஊறு விளைத்துக்கொள்வாருமுண்டு. "இக்காயங் கீறுகின்றிலை", "பாதகன் மலர்பிரிந் திருந்தகான் மூட்டிலேன் றலைகீறேன்" (37), "தலைவனை நனி காணேன் தீயில் வீழ்கிலேன் நின்வரை யுருள்கிலேன், செழுங்கடல் புகுவேனே" (39), "ஊனி லாவியை ஓம்புதற் பொருட்டினு முண்டுடுத் திருந்தேனே" (40) திருச்சதகம் - என்று பிரிவாற்றுமையின் செயல்களாய்த் திருவாசகத்துக் கூறப்படும் கருத்துக்களையும் இங்கு வைத்துக் காண்க. 'நீ அத்தகையதொரு காரணமுமின்றி எம்மிடத்து வைத்த அன்பின் காரணமாகவே, எமக்குச் சந்தனமெய்ப்பூச்சு முட்டிய தென்றதற்காக இது செய்தனை' என்பது.

**செய்திடல்** - அல்லீற்று எதிர்மறை வியங்கோள். செய்யற்க - செய்தல்வேண்டா. "மகனெனல் மக்கட் பதடி யெனல்" (குறள்) என்புழிப்போல.

**வன்புன்கண்** - வலித்த இழிந்த இடுக்கண்கள். அந்தம் இலவாம் மிறை (983), "எள்ளுஞ் செயல் வன்மைகள்", "கொடுங்கோன்மை" (984) என்ற அவை.

**புன்கண் விளைத்துவன் கொண்ட மண்** - மண்கைக் கொண்டது, மேல் 979ல் உரைக்கப்பட்டது. **மண்** - நாடு - **கொண்ட** என்றதனுல் நீதிமுறையாலன்றி வலித்து நிலங்கொள்ளும் போராசையால் கைக்கொண்ட என்றது குறிப்பு.

**கொண்டமண் - கொண்டு** - கொண்ட என்று இறந்த காலத்தாற் கூறிய குறிப்பினுல் அவனுடைய ஆயுள் முடிந்து அவன் இறந்து படுவான் என்பதும், **கொண்டு** என்றதனுல் அதுகாலை அரசனின்றிக் கிடக்கும் நாட்டினுக்கு அவர் அரசராவார் என்பதும் தெரிவிக்கப்பட்டன. கொடியோன் இறப்பதும் நல்லரசன் வருவதுமே திருவுள்ளத்துக்கொண்டு சார்ந்தாராதலின் (985), "வேண்டுவார் வேண்டியதே யீவான்" ஆகிய ஆலவாய்ப் பரமனுர், அவர் தாம் வேண்டு மதனையே அருள் செய்தாராகி, இவ்வாறு பின் விளைவு கூறியருளினர் என்க.

**முன்பு இன்னல் புகுந்தன** - அரசன் சமணர்திறத்திற் சூழ்ந்ததும், அமணர் மொய்த்துக் கலாம் விளைத்ததும், சிவனடியாரையும் வன்மை செய்ததும் முதலாயின. 980-984 பாட்டுக்களிற் கூறிய அவை.

**காத்து** - தீமை சாராமலும் நன்னெறியிற் பிறழாமலும் உலகத்தைக் காத்தும், முதற்சைவமோங்கும்படி பாதுகாவல் புரிந்தும்.

**பின்பு உன்பணி செய்து** - திருப்பணி செய்தற்கும் அரசனது காவல் வேண்டப்படுதலின் **முதலில்** மண்கொண்டு, இன்னல் நீக்கிப், **பின்பு** பணி செய்து என்றார். "மாதவர் நோன்பும் மடவார் கற்புங் காவலன் காவலன்றித் தங்கா" என்ற உண்மை தோற்றக் கூறிய ஆசிரியரது அமைச்சுத்திறம் காண்க. **பணிசெய்து பின்பு நம் பேரூலகெய்துக** என்று கூட்டியுரைத்தலுமாம்.

**உன்பணி** - நீ நியதியாகச் செய்துவந்த சந்தனப்பணிவிடை.

**பேரூலகு** - நித்தியமாகிய நம்மூலகு. வீட்டுலகம் - சிவபுரி. ஏனைய உலகுகள் எல்லாம் அழியும் தன்மையுடைய சிற்றுலகுகள் என்க.

**எய்துக என்ன** என்பது எய்துகென்ன என வந்தது.

990. (வி - ரை) எழுந்தது - எழுந்ததனே. எழுந்த இறைவனது திருவாக்கினே. அஞ்சி - ஐய ! இது செய்திடல் என்று இறைவர் விலக்கும் இச்செயலினைச் செய்தேனே என்ற எண்ணம் தோன்றவே அச்சம் வந்தது என்க.

**முன்பு செய்வண்ணம்**-திருவாக்குக் கேட்பதற்கு முன்பு செய்த, முழங்கையைப் பாறையில் தேய்த்த செயல்.

**தேய்ந்த...கைவண்ணம் நிரம்பின** - **தேய்ந்த புண்** - புறத்தோல் நரம்பு என்பு கரைத்து தேயத் (987) தேய்த்ததனால் தேய்ந்து உண்டாகிய புண். **புண் ஊறு** - புண்ணின் உற்றதாகிய மாறுபாடு என்னும் வடு. **ஊறு** - உறு என்னும் பகுதி முதல் நீண்டுவந்த தொழிலாகுபெயர். **தீர்ந்து** - மறைத்து. **புண்** - உடம்பின் மேற்போர்வையாகக் கட்டிய தோலினது தொடர்ச்சி அறுபடுதலே புண் எனப்படும். " கட்டும் புறத்தோல்...கரைந்து தேய " (987) என்றது காண்க. (Breach of the continuity of the cutaneous membrane-என்பர் நவீனர்). "தோலிடைப் புகவிட்டுப் பொதிந்த புண் " (திருவிடை - மும் - கோவை - 13) என்றது காண்க.

**கைவண்ணம் நிரம்பின** - கையினது முன்னே வண்ணம் எல்லாம் நிரம்பியன என்றதாம். கையினது முன்னே உருட்சி, திரட்சி, அழகு, வலிமை என்ற எல்லாத் தன்மைகளும் குறிக்க **வண்ணம்** என்றார். சாதியொருமை. நிரம்பின என்று பன்மை வினே முடிபுகொண்டதும் இக்கருத்துப் பற்றியது.

**வாசமெல்லாம்.....எய்தினார்** - சிவன்பணி செய்வார்கள் தாம் தாம் செய்யும் திருப்பணிக்கேடாகிய உரிய பதங்களே அடைகுவர் என்பது சாத்திரம். "விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்க்கெறி ஞான மாகும்" என்ற அப்பர் சுவாமிகளது திருவாக்கும், அதற்கிலக்கியமாகத், திருவிளக்குப்பணி செய்த நமிநந்தியடிகள், " பாத நீழல் மிகும் வளர்பொற் சோதி மன்னினார் " என்ற வரலாறும் இங்கு நினைவுகூரத் தக்கன. வாசம் கமழும் சந்தனக் காப்புக்கொண்டு மெய்ப்பூச்சிட்ட திருப்பணியாதலின் இங்கு மூர்த்தியார் அதற்கேற்ப " வாசமெல்லாங் கலந்து.....ஒளி எய்தினார் " என்க. **வாசம் எய்தினார்** - என்பது மனித உடம்புக்குரிய புலால் கமழும் தன்மை நீங்கித் தெய்வ மணங் கமழுதல் குறித்தது. இறைவர் சாத்தும் சந்தனத்துக்குரிய குறட்டினுக்கு ஈடான பொருளாகக்கொண்டு கையினைத் தேய்க்கப்பட்டதனை அவ்வாறே இறைவரும் ஏற்றுக்கொண்டருளியதனாலும் (அத்தச் சந்தனத்தின்) " வாசமெல்லாங் கலந்தது " என்றலுமாம்.

சிவபெருமானது திருமேனியில் சருகுவிழாமற் காக்க எண்ணித் தன் வாயின் நூலாற் சித்திரப்பந்தரிழைத்த சிலந்தியை, அதன் குடையின்கீழ் உலகம் தங்குமாறு அரசளுக்கிய தொடர்பும் இங்குக் கருதத்தக்கது.

**மொய் வண்ணம் விளங்கு ஒளி** - **மொய்த்தல்** - நெருங்கிக் கூடுதல் - கூர்தல். **வண்ணம்** - அழகு. **ஒளி** - ஞானத்தினுக்கு உரிமையுடைய சிவத்துவ விளக்கமாகிய ஒளி. சிவன் தாளினையே மெய்ப்பற்றெனப் பற்றிக்கொண்டு (975), கேளும் துணையும் அதனையல்ல தில்லாதாராகி முழுத்துறவுபூண்ட மூர்த்தியாராதலின் **ஞான வொளி** மிக்கதென்பதாம். 23

991. அந்நாளிர வின்க ணமண்புகல் சார்ந்து வாழும்
மன்னுகிய போர்வடு கக்கரு நாடர் மன்னன்
தன்னுரு முடிந்தது, சங்கரன் சார்பி லோர்க்கு
மின்னுமென நீடிய மெய்ந்நிலை யாமை வெல்ல. உச

(இ - ள்) **மின் ஆம் என நீடியமெய்** - மின்னல் காணப்படும் சிறுகால அளவே நீண்டிருப்பதாகிய யாக்கை; சங்கரன்சார்வு இலோர்க்கு - சிவபெருமானது சார்வுபெறுதவர்களுக்கு; நிலையாமை - அந்த அளவுதானும் நிலைக்காதாகும் என்ற உண்மையினை

யும்; வெல்ல - மேற்பட்டு விளங்க; அமண்புகல்...காளும் - சமணர்களது புகலில் சார்ந்து வாழும் அரசனுகிய வடுகக் கருநாடர் மன்னனுடைய வாழ்காளும்; அந்நாள் இரவின்கண் - அந்த நாளில் அவ்விரவே; முடிந்தது - இறுதியுற்றது.

(வி - ரை) மின்னுமென் நீடிய மெய் - மெய் என்ற யாக்கையின் கால அளவு மின்னல்போன்ற கால அளவே நீடிப்பதாம். உலகில் மக்களின் உடம்பு தங்கும் காலம் மிகச் சுருங்கியதென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்த உண்மை. மெய் - உள்ளதுபோலக் காட்டிப் பொய்யாய் மறையும் உடலை மெய் என்பது உபசார வழக்கு என்பர் அறிவோர். இது குறிக்க இங்கு மெய் என்றார். மின்னும் என நீடிய - சிறிதும் நீடித்து நில்லாத இயல்பை நீடிய என்றது வினைபற்றிவந்த நிந்தையுவம அணி.

சங்கரன் சார்விலோர்க்கு நிலையாமை - யாக்கை நிலையாமை பற்றி மேற் கூறிய பொதுவிதியும் கடக்கப்பட்டு, மேலும் நிலையாமையைப் பெறும் என்பர். "அத்தமும் ஆவியும் ஆண்டொன்றின் மாய்ந்திடும்" (திருமந்திரம்) என்பது முதலிய திருவாக்குக்களால் அறியப்படுகின்றபடி அவரவர்க்களந்த வாழ்நாள்தானும் சிவச்சார்பில்லாதார்க்குக் குறையும் என்பது சிறப்புவிதி. மக்கள் வாழ்வு விசையின் முடிவதாமெனின் சிவச்சார்பில்லாதார் வாழ்வு அதனினும் விசைய முடியும் என்பதாம். இதனால் சிவனடிச் சார்புபெற்றூடது ஆயுள் நீளும் என்பதும் உய்த்துணரவைத்தார். மாந்தாதா சரிதமும், மார்க்கண்டேயர் வரலாறும், "கொதியுறு கால னங்கி நமனெனு தாதர் கொடுநோய்க ளான பலவும், அதிகுண நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே" (பியந்தைக்காந்தாரம் - பொது - 4), "பாரிதன் மேல் நீடி வாழ்வர் தன்மையினு லவரே" (பழந்தக்க - சிவபுரம் - 11) என்ற ஆளுடைய பிள்ளையார் திருவாக்குக்கள் முதலியனவும், "வாழ்நாளு னனிபெறுவர்" முதலிய புராண வாக்குக்களும் காண்க.

வெல்ல - இங்கு அச்சிறப்பு விதியினையும் கடந்து வெல்லும்படியாக. வெல்ல - முடிந்தது என்று கூட்டுக. அதற்குக் காரணம் சிவனடிச் சார்பில்லாமையுடன் சிவனடியாரை வன்மைசெய்து திருப்பணி முட்டச்செய்த சிவாபராதமும் கூடியதனால் என்க. தக்கன் வரலாற்றினை இங்கு நினைவுகூர்க.

மிகுதியாகிய விசைவு குறிக்க அந்நாள் இரவின்கண் எனச் சுட்டினார். இறைவர் மூர்த்தியாருக்கு அருள்செய்த அந்த எனை முன்னறிசுட்டு.

போர்வடுகக் கருநாடர் மன்னன் என்ற அதனால் 978 - 979-ல் கூறிய சரிதப் பகுதியும், "அமண்புகல் சார்ந்து வாழும்" எனவும், "சங்கரன் சார்பி லோர்க்கு" எனவும் கூறியவாற்றால் 980-ல் கூறிய பொருளும், வெல்ல என்றதனால் 981 முதல் 984 வரை கூறிய பகுதியும் குறிக்கப்பட்டன. வெல்ல - அந்நாள் அவ்விரவே. நாளும் முடிந்தற்குக் காரணங் காட்டியவாறும்.

மின்னுமென் நீடிய தன்மை இவ்வுலகிற் பிறந்தாரெல்லாருக்கும் ஒப்பமுடிந்தது போல இம்மன்னனுக்குமாகியது; சங்கரன் சார்வில்லோர்க்கு அதனினும் மிக்க நிலையாமை வருதலின் அக் கொடியோனுக்கு நாள்முடிந்தமை அவன் நீற்றின் சார்பு செல்லாது அருகுற்றார் திறத்திற் சூழ்ந்தமையாலாகியது; அந்த மிக்க நிலையாமையும் வென்று அந்நாள் அவ்விரவே முடிந்த தன்மை அவன் அடியாரையும் வன்மைசெய்து சிவத்திருப்பணி முட்டச் செய்ததனாலாகியது என்றிவ்வாறு கண்டுகொள்க.

இதற்கு இவ்வாறன்றி நீடியமெய் சங்கரன் சார்பிலோர்க்கு மின்னும் என நிலையாமை வெல்ல என்றுகூட்டி, நீடித்த நிறையாயுள் பெற்றிருக்கும் மெய்யும் சிவபெருமானது திருவருட் சார்பில்லாதாருக்குப் பாவ மிகுதியாலே குறைந்து மின்னைப் போல அற்பாயுளை அடையும் என்பதை யாவருக்கும் அறிவிக்கும் காரணமாய் என்றுரைப்பாரு முண்டு. இப்பொருளில் வெல்ல - அறிவிக்க - புலப்படுத்த என்று பொருள்கொள்வர்.

992. இவ்வாறுல கத்தி னிறப்ப வுயர்ந்த நல்லோர்
மெய்வாழுல கத்து விரைந்தணை வார்க ளேபோல்,
அவ்வாறர னடி யாரை யலைத்த தீயோன்
வெவ்வாய்நிர யத்திடை வீழ விரைந்து வீந்தான். உடு

(இ - ள்) இவ்வாறு...அணைவார்களே - இப்படி உலகத்தில் (அடியார்க்குத் தொண்டுசெய்து) மிகுந்த உயர்வுடைய நல்லோர்கள் சிவனது உலகத்தில் விரைந்து சேர்குவரே ; போல - அதுபோல ; அரனுர் அடியாரை அவ்வாறு அலைத்த தீயோன் - சிவபெருமானுரது அடியவர்களே மேற்சொல்லியபடி அலைவு செய்த தீயவன் ; வெவ் வாய்...வீழ்ந்தான் - கொடிய நரகத்தினிடை விரைந்து வீழும் பொருட்டு இறந்து பட்டான்.

(வி - ரை) ஆயுளின் எல்லையாகிய நாள் முடிந்த பின், உயிர்செல்லும் கதியினை எதிர்நிலை உவமை முகத்தால் அறிவிப்பது இத்திருப்பாட்டு.

இவ்வுடல் விட்டுப் பிரிந்த பின்னை, ஆன்மாக்கள், தாந்தாம் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்றவாறு பிறவியிற் செல்வன. முன்செய்வினைகள் மிகுதிப்படு மாயின் அவ்வாறு உடனே பிறவியிற் றத்தம் வினைகளுக்கு ஏற்ற புண்ணிய பாவ வுலகங் களிற் செலுத்தப்பட்டு உரிய இன்பத் துன்பங்களை அனுபவித்து மீண்டும் உயிர்கள் பிறவியில் வருவனவாம். நல்வினை எனப்படுவனவற்றுக்குள் மேலாகிய சிவபுண்ணிய மிகுதியைப் பெற்ற நல்லோர் மேற்கூறிய இரண்டு வகையுமன்றிப் மீளப்பிறவியில் வாராத சிவனுலகத்தில் உடனே அணைகுவர். தீவினையின் மிக்க தீமையாகிய சிவாப ராதம் செய்தோர் உடன்பிறவியில் வாராமல் நெடுங்காலம் கொடுமா நரகங்களில் அழுந்துமாறு செலுத்தப்படுவர். இவை உண்மை நூற்றுணிபுகளாம். இவையுணர்ந்து உலகமுய்யுமாறு உவமை முகத்தால் ஆசிரியர் வற்புறுத்தி உணர்த்திய திறம் காண்க.

**இவ்வாறு** - அடியாரை யலைத்தோர் மிகவும் இழிவடைந்ததுபோல அடியார்க்குத் தொண்டுசெய்து மிகவும் உயர்ந்த நல்லோர் எனக் கொள்க. இகரச்சுட்டுப் பின்னுள்ள அவ்வாறரனடியாரை அலைத்த தீயோன் என்பதைச் சுட்டுகின்றது. தீயோன் இவ் வாறு வீந்தான் என்று முடிப்பாருமுண்டு.

**இறப்ப உயர்ந்த** - மிக்க உயர்ச்சிபெற்ற. **இறப்ப** என்பது தனக்கு மேற்பட்ட எல்லையின்மை குறிக்கும் வழக்கு. "இறப்பப் புகழ்ந்தன்று" (பு. வெ - 11 - ஆண் 7 கொளு).

**மெய் வாழ் உலகம்** - சிவலோகம். மெய்-சத்தாயுள்ளபொருள். சத்து வாழ்கின்ற உலகம். பொய்வாழ்வில்லாது உண்மை வாழ்வுடைய உலகம் என்றலுமாம். ஏனைப் பிரமனுலகு - தேவருலகு முதலியவற்றின் வாழ்வுகள் யாவும் ஒரு காலத்து அழியக் கூடிய பொய் வாழ்வுகளாம் என்பது.

**விரைந்தணைவார்களே போல்** - இவ்வுலகில் அளந்த வாழ்நாள் எல்லையளவும், அது சிவதருமத்தால் நீளும் அளவும், வாழ்ந்தபின், அதன் முடிவில், வேறு உலகங் களின் அனுபவம் ஒன்றுமின்றி, **விரைவாகச்** சிவனுலகத்தில் அணைவார்களே போல என்க. சிவன்பணி செய்வாரது ஆயுள் நீடிக்குமென மேற்பாட்டில் எதிர்நிலை முகத் தால் உய்த்துணர வைத்ததனோடு இது முரணுமை அறிக.

நல்லோர் மெய்வாழுலகத்து விரைந்து அணைவார்போல அத்தீயோன் நிரயத்துவீழ விரைந்து வீந்தான் என வினையின் விரைவுபற்றி வந்த முரணுவமையணி. **அவ்வாறு** - மேற்சொல்லியவாறு. 981--984 பார்க்க. "சாமாறே விரைகின்றேன்"-(திருவாசகம்).

**அரனுடியாரை...வீந்தான்** - நிரயத்திடை வீழ்வதற்குக் காரணங் கூறியவாறு. அடியாரை அலைத்தல் கிரண மென்பார் உடம்பொடு புணர்த்தியோதினர். **விரைந்து** என்றதன் காரணம் மேற்பாட்டில் **முடிந்தது** என்றவிடத் துரைக்கப்பட்டது.

நிரயம் - எரிவாய் நரகம். சிவனடியாரை அலைப்போர் அலகைகளாய் எரிவாய் நரகிடை வெகுகாலம் நின்று அலைவர் என்பது நூற்றுணிபு. "காணரகத்து நிற்கும், அலகா வுறுவீர் அரனடி யாரை அலைமின்களே" (பொன் - அந்-14) என்ற கழறிற்றறி வார்கரையனர் திருவாக்கும் காண்க. "ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந், தான்புக் கழுந்தும் அளறு" என்ற திருக்குறளும், அதற்கு, "முடிவில் காலமெல் லாம் தான் நிரயத்து உழத்தற் கேதுவாங் கொடுவினைகளையே யறிந்து செய்து கோடல் பிறர்க்கரிதாகலின் ஆற்றும் என்றார்" என்ற பரிமேலழகர் உரையும் காண்க. இக்கருத்தேபற்றி முன்னர் "வன்புன்கண் விளைத்தவன்" (989) என்றதும், மேல் வரும் பாட்டில் "முழுதும் பழுதேபுரி மூர்க்கன்" என்பதும் காண்க. 25

993. முழுதும்பழு தேபுரி மூர்க்க னுலந்த போதின்
எழுதுங்கொடி போல்பவ ருட்பட வேங்கு சுற்றம்
முழுதும்புலர் வுற்றது ; மற்றவ னன்ன மாலைப்
பொழுதும்புலர் வுற்றது ; செங்கதிர் மீது போத. உசு

(இ - ள்) வெளிப்படை. முழுவதும் தீமைகளையே செய்த மூர்க்கன் இறந்து பட்டபோது எழுதும்கொடி போல்பவராகிய அவனது பெண்டிர் உட்பட வங்குகின்ற சுற்றம் முற்றவும் புலம்பி வாட்டமுறுவாராயினர் ; மற்றவனைப்போன்ற மாலைக்குப் பின் வரும் யாமப்பொழுதும் செங்கதிரவனுகிய ஞாயிறுமேல் வர விடியலுற்றது.

(வி - ரை) முழுதும் பழுதேபுரி மூர்க்கன் - இப்பழுதுகள் 978 முதல் 984 வரை கூறப்பட்டன. அவை ஒவ்வொன்றும் பழுதே என்று முன் காட்டப்பட்டமையின் இங்கு இவ்வாறு தொகுத்துக் கூறினர். மூர்க்கன் - "முதலையு மூர்க்கனுங் கொண் டது விடா" என்றபடி தீமைகளைத் தீமை என்றறிந்தபின்னும் மேன்மேல் விடாது செய்வோனுதலின் இவ்வாறு கூறினர்.

உலந்தல் - இறத்தல். "உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்" (கொல்லி - அதிகை - 7) என்ற அப்பர் சுவாமிகள் தேவாரம் காண்க.

எழுதும் கொடிபோல்பவர் - (அவனது) மனைவியர். அவன் மிக விரைவில் இறந் தொழிந்தமையால் சடுதியில் நேர்ந்த அதன் காரணமறியமாட்டாமையாலும், சிறிதும் எதிர்பாராத நிலையில் இடி வீழ்ந்தது போல அது தாக்கியபடியாலும் தம்பித்து அசை வற்றவராயினர் என்று குறிப்பார் கொடிபோல்பவர் என்னுது எழுதும்கொடிபோல் பவர் என்று கூறினர். எழுதுங்கொடி - சுவரில் கொடிபோல எழுதும் ஓவியம். இவ்வாறன்றி, படம் எழுதி உயர்த்திய கொடி நிற்கலாற்றாது பெருங்காற்று வீசப் புண்பதுபோல நிலைகுலைத்தனர் என்றுரைத்தலுமாம். கொடிபோல்பவர் - குல மகளிர் எனவும், ஏங்கு சுற்றம் காமமொழிந்த நுகர்ச்சி கொடுத்தற்குரிய மகளிர் (சிந்தா - 296) எனவும், புலர்வுற்றது - அழிந்தது எனவும் உரைப்பாருமுண்டு.

உட்பட - சுற்றத்தார் என்ற பொதுப்பகுப்பினுள் மனைவியரும் அடங்கியவர் களாதலின் இவ்வாறு கூறினர். தலையன்பினராகி அவனுடன் கழியாது "இல்லும் பொருளும் இருந்த மனையளவே" (ஐயடிகள் - காடவர் - வெண் - 14) என்றபடி உயிர் வைத்திருந்தார்களாதலின் மனைவியரை வேறு பிரித்தும் சுற்றத்துடன் ஒன்று சேர்த்து உட்பட ஏங்கு சுற்றம் முழுதும் புலர்வுற்றது என முடித்தார்.

முழுதும் புலர்வுற்றது-முழுமையும் புலர்ச்சியை அடைந்தது. எல்லாவகையானும் என்க. புலர்தல் - வாட்டமுறுதல். ஏங்கு சுற்றம். ஏங்கும் என்றதன் மேலும் புலர் வுற்றது என்றது, அவனுக்குக் குலமைந்தரு மின்மையாலும் (994), அவன் புதிதாய் வந்து வலிந்து நிலங்கொண்டமையாலும், இங்குத் தமக்கு வேறு பற்றுக்கோடின்மை யாலும், ஒருவாற்றலும் தேறுதல் அடையாத வருத்தமிகுதி குறித்தது. முழுதும் - சுற்றம் முழுமையும் என்றலுமாம். உம்மை முற்றும்மை.

**மற்றவன் அன்ன மாலைப்பொழுதும் புலர்வுற்றது**-கொடுங்கோன்மையும் (988), அடியாரை அலைத்த தீமையும் (992) கருதி அவனை **மற்றவன்** என்றார். "மற்றவன் முன் சொல்லி வாக்குறித்த" (640) என்றது பார்க்க. **மற்று** - வினைமாற்றின் வந்த தென்பாரும், அசை என்பாரும் உண்டு. **மற்றவன் அன்ன மாலைப்பொழுது** - கொடியோன் (981), வஞ்சகன் (982), கொடுங்கோன்மை செய்வான் (984), பாதகன் (985), கண்டகன் (986), வன்புன்கண் விளைத்தவன் (989), தீயோன் (992) என முன்னர்க் கூறியவாற்றுல் தாமத குணத்தால் அலைக்கப்பட்டவனுதலும், தாமதத்துக்கு நிறம் கருமையாதலும் குறித்து இருள் உடைய மாலைப்பொழுதினுக்கு அவனை உவமித்தார். **மாலைப்பொழுது** அவனது இதயத்தை ஒத்ததென்பாரும் உண்டு. **மாலைப் பொழுது** - இங்கு இருண்ட இரவுகுறித்தது. வினையும் உருவும்பற்றி வந்த உவமம்.

தமக்குரிய சார்பு பிரிந்து வருத்துவோர்க்கு மாலைப்பொழுதும் இரவும் பகையாய் நிற்றல் அகப்பொருளியல். இரவுறு துயரத்திற் கிரங்கி யுரைத்தல் முதலிய அகத் துறைகள் காண்க. "வந்தது, பையுண் மாலை தமியோர் பனிப்புற" (304), "புல நும் படியன் நிரவென் னளவும் பொறையுங் கிறையும் பிறையுந் தரியா" (322), "தனிமை கூரத் தளர்வார்க்குக், கங்குல் பகலாய்ப் பகல்கங்கு லாகிக் கழியா நாளெல் லாம்" (ஏயர்கோ. புரா. 313) முதலியவையும் ஈண்டுச் சிந்திக்க. தமது கற்சார்பாகிய சிவச்சார்பு என்னும் நாயகனைப் பிரிந்த பாண்டிநாட்டுக்கு, அவனது நாள்கள் இரவாகவும், அவனிறந்தமை அவ்விரவு புலர்ந்தமையாகவும் விளங்கிற் றென்பது குறிப்பார் **அவனன்ன மாலைப் பொழுது** என்றார்.

**பொழுதும் புலர்வுற்றது** - சுற்ற முழுதும் புலர்வுற்றது மன்றிப் பொழுதும் என உம்மை இறந்தது தழுவியது. இழிவு சிறப்பும்மை என்றலுமமையும். **புலர்வுற்றது** - சொற்பின் வருநிலை என்ற சொல்லணி. (சொற்சிலேடை என்பர்)

**செங்கதிர் மீது போத** - **பொழுதும் புலர்வுற்றது** - என்று பொழுதுபுலர்தலுக்கு காரணங் கூறினர். **செங்கதிர் மீது** என்றதனுல் கருமையொளி தாழ்ந்துபோத, அதன் மேற் செங்கதிர் மீது போந்ததென்ற குறிப்பும், **அவனன்ன மாலைப்பொழுது** என்றமையால் மூர்த்தியாரன்ன செங்கதிர் என்பதும் பெறப்படும். கொடியோன் கீழே வீழப் பெரியோர் அவ்விடத்து மேலெழுந்தனர் என்பதும் கொள்க.

**சுற்றம்** அழுதும் புலர்வுற்றது—என்பதும் பாடம். 26

994. அவ்வேலையி லங்க ணமைச்சர்கள் கூடித் தங்கள்
கைவேறுகொ ளீம வருங்கடன் காலே முற்றி
வைவேலவன் றன்குல மைந்தரு மின்மை யாலே
செய்வேறுவி னைத்திறஞ் சிந்தனை செய்து தேர்வார், உ எ

995. "தாழுஞ்செய லின்றெரு மன்னவன் ருங்க வேண்டுங் ;
கூழுங்குடி யும்முத லாயின கொள்கைத் தேனுஞ்
சூழும்படை மன்னவன் றேளினை காவ லின்றி
வாழுந்தகைத் தன்றிந்த வையக" மென்று சொன்ஞர். உ அ

994. (இ - ள்) வெளிப்படை. அந்த வேலையில் அவ்விடத்து உரிய அமைச்சர்கள் கூடித், தாங்கள் கடமையாய்ச் செய்து கழிக்கவேண்டிய கைவேறு கொண்டபடியான அரிய ஈமக்கடனைக் காலையில் முடித்துக், கூரிய வேல்கொண்ட அந்த மன்னனுக்குக் குலமைந்தரும் இல்லாமையாலே, வேறுவினைசெய்யும் திறத்தினைச் சிந்தித்துத் தேர்வார்களாகி, உ எ

995. (இ - ள்) "இந்த வையகம் - இந்த நாடு; தாழும்...வேண்டும் - தாழ் வாகிய செயலில்லாமல் ஒரு அரசனால் தாங்கப்படவேண்டும்; (என்? என்னில், வையகம்), கூழும் குடியும்...வாழும் தகைத்தன்று - கூழ், குடி முதலிய எனை எல்லா உறுப்புக்களையும் கொண்டதேயாயினும், நாடு காவலின் சூழ்ச்சியுடைய படைவலி பெற்ற மன்னவனது தோளிணைகளின் காவல் பெற்றாலன்றி வாழ்வு பெறும் தகுதி யுடைத்தன்று"; என்று சொன்னார் - என்று சொன்னார்கள். உ அ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

994. (வி - ரை) அவ்வேலை - பொழுது புலர்ந்த அக்காலத்தில். **அங்கண் அமைச்சர்கள்கூடி** - அரசன் இறந்துபட்டவுடனே, முதற்காரியமாவது, அரச அங்கமாக அரச காரியம்பார்க்கும் அமைச்சர்கள்கூடி, மேல் அரசாங்கம் செல்லவேண்டிய முறைகளை ஆலோசிக்க என்பது அரச நீதி. ஆதலின் **முற்றித் - தேர்வார்** என்றார்.

**தங்கள்...காலை முற்றி** - இறந்து கழிந்த அரசன் சமணச் சார்பினனாதலின் அமைச்சர் தமது சார்பு ஒழுக்கப்படிக் கல்லாது அந்தச் சமண்சமயச்சார்பு பற்றியபடி ஈமக்கடன் கழித்தனர் என்பது குறிக்கக் **கைவேறுகொள்** என்றார். கை - ஒழுக்கம். **ஈமக்கடன்** - அந்தியக் கடனுக்குரிய சடங்கு. **ஈமம்** - மயானம். அறவைப் பிணஞ் சுடுதல் முதலிய இதுபோன்ற கடமைகள் அறங்களுள் ஒன்றெனப்படுதலாலும், இறந் தோர் யாவரேயாயினும் அவர்க்கு ஈமக்கடன் ஆற்றுவித்தல் எவர்க்கும் அறமாதலாலும் **அநங்கடன்** என்றார். "தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்" என்பது காண்க.

**காலைமுற்றி** - என்றதனால் விரைவில் முடித்தார்கள் என்பதாம். மேலே விரைவில் அரசகாரியம் நிகழவேண்டிய அவசியம்பற்றி ஈமக்கடனை அதிவிரைவில் முடித்தனர்.

**குலமைந்தநம் இன்மையாலே** - நல்வாழ்வு வாழும் விதியின்றி அவன் இறந்து பட்டதன்றியும் அவனுக்குப்பின் வழிவழி வந்து நிலைத்தாங்குதற்குரிய மைந்தரும் இல் லாமையால் என உம்மை இறந்தது தழுவிய எச்ச உம்மை. இழிவு சிறப்புமாம்.

**வேறு வினை செய்திறம்** என்க. நிலங்காவலுக்கு வழிவழி அரசமரபில் வரும் அரசன் கிடையாதபோது வேறு வழியால் மன்னனைப் பெறுவதற்குச் செய்யும் செயல்.

**மைந்தரும் இன்மையாலே** - என்றதனால் அரசனது குடும்பத்தில் தந்தைக்குப் பின் (முதன்) மகனுக வழி வழி வரும் முறையில் அரசு தாங்கப்பட்டதும், அரசனும் அமைச்சரும் கூடி நாடாளுதலும் மூன்றாளில் தமிழ் நாட்டில் வழக்கு என்பதறியப் படும். திருவாரூர்ச்சிறப்பிற்கூறிய சரிதநிகழ்ச்சியை இங்கு நினைவுகூர்க. முடியரசுகள் கூடா என்றும், குடிகள் தம்மைத்தாமே அரசுபுரிந்து கொள்ளுதல் வேண்டுமென்றும், அதற்காக முடியரசர் பதவிதாங்கும் பல திறமான குடித்தலைவர்கள் கொண்ட அரசாங்க முறை வேண்டப்படுவதென்றும் வரும் கொள்கைகள் இக்காளின் புது நாகரீக விளைவு களாம். ஆனால் ஒரு மன்னவனால் தாங்கப்படுவதே உலகியல் அரசநெறி என்பது அக்காள் அறவோர் கொள்கை என்பது மேல்வரும் பாட்டால் உணர்த்தப்படும். அதனை அந்த மந்திரிகள் வாக்கில் வைத்து மந்திரத்தலைவராகிய ஆசிரியர் உலகுய்ய உணர்த்தியருளிய திறமும் காண்க. இந்நெறி தெய்வத்தினை கொண்ட தென்பதும் இச்சரிதத்தின் உயர்த்துணரத் தக்கது. 27

995. (வி - ரை) **தாழும்செய லின்றேந மன்னவன்** - தாழும் செயல் - நீதியில் தாழ்வுவரும் செய்கை. அறநெறி தவறிய செயல். இன்றி என்ற வினையெச்சத்து இகரம் உகரமாய் வந்தது. இதற்குத், தாமதமின்றி என்றுரை கூறுவாருமுண்டு.

**ஒரு மன்னவன் தாங்க வேண்டும்** - இது அக்காளில் ஆறவோரும் அறிவோரும் கொண்டொழுகிய கொள்கை. வையகம் ஒரு மன்னவனால் தாங்கப்படவேண்டும் என்க. **தாங்க** - தாங்கப்பட. செயப்பாட்டுவினை செய்வினையாக வந்தது.

**சூழும் காவலின்றி** - சூழ்தல் - நினைத்தல் - ஆராய்ந்தெண்ணுதல். **படை மன்னவன்** - படைகளையுடைய அரசன். **தோளிணை** - அரசனது ஆணையை அவன் தோள்களின் வலிமையாகவும், நாடு அவன் தோள்களின்மேற் சுமக்கப்படுவதாகவும், உருவகம் செய்வது மரபு. **சூழும்** - தன்னைச் சூழ்ந்துள்ள. தன் ஆணைவழி நிற்கும் என்றுரைப்பாரு முண்டு.

**சூழும்...கோள்கைத்தேனும்** - "படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்" என்ற ஆறும் அரசினது அங்கங்களெனப்படும். **முதலாயின்** - படையும், குடியும் சூழும் நீக்கி ஏனைய அமைச்சு, நட்பு, அரண் என்ற மூன்றுமாம். இவ்வாறனுள் படையை இவ்வாறு வேறு பிரித்துக் கூறியது அரசனுடைய ஆணை செலுத்துவதற்கும் நாடு காவலுக்கும் அது இன்றியமையாதென்பதனை எடுத்துக்காட்டுதற்பொருட்டு. இதுபற்றி **படை மன்னவன்** என உடம்பொடு புணர்த்தி ஓதினார். "படையுடை மன்னவன்" என்ற திருமந்திரமும் காண்க. **கோள்கைத்து** - (அங்கங்களைக்) கொள்ளுதலை உடையது - கொண்டுடையது. **கூழ்** - நிலம். **குடி** - குடிகள். கூழ் மிக விளையினும் அதனைக் குடிகள் பயமின்றி விளைத்து எடுத்துண்ணுதல் அரசன் காவலின்றி இயலாதென்பார், **குடி - கோள்கைத் தேனும்** என்று சிறப்பும்மை தந்தோதினார். "வானேக்கி வாழுமுலகெலா மன்னவன், கோனேக்கி வாழு முலகு" - **குறள்.**

**வாழும் தகைத்து அன்று** - வாழும் தன்மை பெறாது. நல்வாழ்வு வாழ்தல் இயலாது. மக்கள் "இனிதுண்டு தீங்கின்றி" வாழமுடியாது என்க. "சிலைக்கீழ்த் தங்கி' (695) என்ற விடத்துரைத்தவை பார்க்க. "அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய், நின்றது மன்னவன் கோல்" என்பது குறள்.

வையகம் கொள்கைத்தேனும் - காவலின்றி - வாழும் தகைத்தன்று; மன்னவன் தாங்கவேண்டும் என்று கூட்டிமுடிக்க. 28

வேறு

996. "பன்முறை யுயிர்க ளெல்லாம் பாலித்து ஞாலங் காப்பான்
றன்னெடுங் குடைக்கீழ்த் தத்த நெறிகளிற் சரித்து வாழும்
மன்னரை யின்றி வைகும் மண்ணுல கெண்ணுங் காலை
யின்னுயி ரின்றி வாழும் யாக்கையை யொக்கு" மென்பார், உக

997. இவ்வகை பலவு மெண்ணி, "யிங்கினி யரச ரில்லை;
செய்வகை யிதுவே" யென்று தெளிபவர், "சிறப்பின் மிக்க
மைவரை யனைய வேழங் கண்கட்டி விட்டான் மற்றக்
கைவரை கைக்கொண் டார்மண் காவல்கைக் கொள்வா" ரென்று,

வேறு

998. செம்மாண்விளை யர்ச்சனை நூன்முறை செய்து "தோளால்
இம்மாநில மேந்தவோ ரேந்தலை யேந்து" கென்று
பெய்ம்மாமுகில் போன்மதம் பாய்பெரு கோடை நெற்றிக்
கைம்மாவை நுறுங்குகில் கொண்டுகண் கட்டி விட்டார். நக

996. (இ - ள்) வெளிப்படை. "பலமுறையாலும் எல்லா வுயிர்களையும் காத்து உலகத்தைக் காப்பதற்காகத், தனது பெருங்குடையின் கீழே உயிர்கள் தங்கள் தங்களுக்குரிய நெறிகளில் ஒழுகி வாழச்செய்யும் மன்னரையில்லாமல் இருக்கும் மண்ணுலகத்தையெண்ணும்போது, அது, இனிய உயிர் இல்லாமல் வாழும் உடம்பை ஒக்கும்" என்பாராகி, உக

997. (இ - ள்) வெளிப்படை. இவ்வகையாகப் பலவற்றையும் எண்ணி, "இனி இங்கு அரசனில்லை; அதற்குச் செய்யத்தக்கது இதுவேயாகும்" என்று தேறித் தெளிபவர்களாய்ச் சிறந்த கரியமலைபோன்ற யானையைக் கண்கட்டிவிட்டால், அந்தக் கைம்மலையினும் கையிற் கொள்ளப்பட்டவரே இந்த உலகங் காவலைக் கைக்கொள்வார்" என்று துணிந்து, கூ

998. (இ - ள்) வெளிப்படை. நூல்களில் விதித்தபடி செவ்வியமாட்சியுடைய சடங்குகளோடு (கடவுளை) அருச்சனை செய்து, மழைபெய்யும் பெருமுகில் போன்று மதம்பாயும் பெருகிய பட்டமணிந்த கெற்றியையுடைய யானையை, நறுந்துகிலினால் கண்ணைக்கட்டி, "இந்தப் பெருநிலத்தின் அரசாட்சியைத் தனது தோள் வலியால் தாங்குதற்கு ஓர் வந்தலை நீ எடுத்து ஏற்றி வருக!" என்று சொல்லி விடுத்தனர். கூ

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

*996. (வி - ரை) **பன்முறை பாலித்து** - என்று கூட்டுக. **முறை** - முறைகளாலும். கருவிப்பொருளில் வந்த மூன்றனுருபும் முற்றும்மையும் தொக்கன. பலமுறை யாவன உலகங்காவலுக்கு அறநூல்களான் விதிக்கப்பட்ட வழிகள். "அறனிழுக்கா தல்லவை நீக்கி" என்ற திருக்குறளும் அதன்கீழ்ப் பரிமேலழகருரைத்தவையும் பார்க்க. **பாலித்தல்** - காத்தல்.

**காப்பான்** - காக்கும்பொருட்டு. **காப்பான் - வாழும்** என்று கூட்டுக. **ஞாலம்** - உலகம். இங்கு ஞாலத்துள்ள உயிர்களைக் குறித்தது.

**நெடுங் குடை** - பெருங்குடை. **நேமி** - பரப்புக்குறித்தது. **குடை** - அரசாணையின் அடையாளம். ஆணையைக் குடையாக உபசரித்துக் கூறுவது மரபு. "சிலைக்கீழ்" (695) என்றவிடத்துரைத்தவை பார்க்க.

**தத்தம் நெறிகளிற் சரித்து** - தங்கள் தங்கள் நிலைகளுக்குரிய வழிகளில் அமைந்து அறத்தின் வழி வாழ்க்கை செலுத்தி ஒழுகி.

**வாழும்** - வாழச்செய்யும். வாழ்விக்கும். பிறவினை தன்வினையாக வந்தது. **வாழ்விக்கும் - மன்னரை** என்க. பெயரெச்சம் ஏதுப்பொருள் கொண்டதென்றலுமாம்.

மன்னர் குடிகளுக்குச் செய்யவேண்டிய முறையினைக் கூறினர். புவிகாக்கும் பொருட்டு அரசர் செய்யத்தக்க முதற்காரியம் இதுவே என்றதாம். இவ்விதிகள் திருக்குறள் முதலிய நீதி நூல்களாலும் திருமந்திரம் முதலிய அருள்வாக்குக்களாலும் அறியப்படுவன.

பலவாகிய முறைகளையுடைய உயிர்களெல்லாம், ஞாலம்பாலித்துக் காப்பான்றன் குடைக்கீழ்ச் சரித்து வாழும்; (ஆதலினால்) மன்னரையின்றி வைகும் மண்ணுலகு... உயிரின்றி வாழும் யாக்கையை ஒக்கும் என்று **வாழும்** என்பதை வினைமுற்றாகக் கொண்டு, முடித்துரைத்துக்கொள்வதுமொன்று.

**மன்னரை இன்றி** - அரசனது காவலில்லாது; அரசனில்லாது. **மண் உலகு ஒக்கும்** என்க. அரசனில்லா நாடு உயிரில்லாத உடம்புபோலும் என்றபடி. அஃதாவது

---

*குறிப்பு - இப்பாட்டும் மேல் வரும் பாட்டும் ஐயப்பாடுள்ளன.

ஐஞ்சீர்க் கலிநிலைத்துறையாகிய ஒரேவகைச் சந்தயாப்பினாலியன்ற இப்புராணத்தினிடையே, இப்பாட்டும் மேல்வரும்பாட்டும் அறுசீர்க்கழி நெடில் விருத்தமாகிய வேறுயாப்பிற் றனிமையாய் உட் புக்கன போலக் காணப்படுவன. இப்பாட்டின் பொருள் முன் 995லும், மேல் வரும்பாட்டின் பொருள் 998லும் கூறப்பட்டனவேயாம். இவற்றில் ஆசிரியரது பொருட்சிறப்பும் சொற் சிறப்பும் காணப்படவில்லை. இப் பாட்டுக்களின்றியே சரிதம் தொடர்ந்து செல்கின்றதும் காணலாம். இவை இடைச் செருகல்களாக இருத்தல் கூடுமோ? என்பது அச்சத்தோடு எழுகின்ற ஐயப்பாடு. இது பற்றி எனது **சேக்கிழார்** 220 பக்கம் பார்க்க.

தற்காப்பு நியமமின்றிப், பிறர்கொண்டு வைத்தபடி அமையத்தக்க ஒரு பண்டமாகும் என்பது. அரசனே உலகுக்கு உயிராவன் என்பது முற்றையோர் கண்ட முறை. " முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட், கிறையென்று வைக்கப் படும் " என்ற திருக்குறளின் கருத்தும், " தனிமுடிகவித் தாளும் அரசினும் " என்ற திருக்குறுக் தொகையின் கருத்தும் "கெல்லு முயிரான்றே நீரு முயிரான்றே, மன்ன நயிர்த்தே மலர் தலே யுலகம் " என்ற புறநானூறும் ஈண்டுச் சிந்திக்க.

**இன் உயிர் இன்றி வாழும் யாக்கை** - உயிரில்லாது உடல் வாழாது ; அதுபோல மன்னனின்றி மண்ணுலகு வாழாது. தலே தடுமாறி ஒழியும் என்பதாம். வினைபற்றி வந்த அபூதவுவமை.

**என்பார்** - என்று கூறுவாராகி. என்பார் (996) எண்ணி - என்று (997) ' எத்துக ' என்று - கைம்மாவைக் கண்கட்டிவிட்டார் (998) என இம்மூன்று பாட்டுக்களேயும் தொடர்ந்து முடித்துக்கொள்க. 29

997. **(வி - ரை) தெளிபவர்** - துணிவு கொள்வாராகி. இதற்கு இதுவே முடிவு என்று தேறித் தெளிவாராய். முற்றெச்சம். அமைச்சர் என எழுவாய் வருவித்து - என்று எனக் கூட்டுக.

**மைவரை அனைய** - கரியமலே போன்ற. மெய்யும் உருவும் பற்றிவந்த பண்புவமை.

**மற்று அக் கைவரை - மற்று** - அசை. **கைவரை** - கையையுடைய மலேபோன் றிருப்பதனல் யானேக்குக் காரணப் பெயராய் வழங்குவது.

**கைக் கொண்டார்** - கையினற் கொள்ளப்பட்டவர் யாவரோ அவர். **கொண்டார்** - படிவிருதி தொக்குகின்ற செயப்பாட்டு வினேயாலணேயும் பெயர்.

**கைக் கொண்டார் - கைக்கோள்வார்** - சொல்லணி. **காவல் கைக் கோள்வார்** - காக்குந் தொழிலே ஏற்றுக்கொள்வாராவர் - மேற்கொள்ளும் அரசராவர். 30

998. **(வி - ரை) நூன் முறை செம்மாண்வினை அர்ச்சனை செய்து என்க.** பாவனை - மந்திரம் - கிரியை என்ற மூன்று அங்கங்களும் நன்முறையாகப் பொருந்திய அர்ச்சனே என்று குறிக்கச் செம்மை, மாண்பு, வினே என்ற மூன்று அடைமொழிகள் புணர்த்தி ஓதினர். இந்த அர்ச்சனேயின் பயனுகப் பவங்கள் மாறவும், சைவ நூற்பதம் எங்கும் நிறைந்து விளங்கவும் சிவசாதனங்களால் அரசு புரிந்து காடுகாக்கும் மன்னவனே இவர்கள் பெறுகின்றார்களாதலின் இவ்வாறு சிறப்பித்தார். **அருச்சனை செய்து** - கடவுளே என்ற செயப்படு பொருள் அவாய் நிலேயான் வந்தது. யானேயை நூல் முறை அருச்சித்து என்றுரைப்பாருமுண்டு.

**நூன் முறை** - ஆகம நூல்களில் விதித்தபடி. இவ்வாறு கடவுளேப்போற்றி அருச் சித்து யானேயைக் கண்கட்டி விட்டு, அவ்வியானேயினுல் எடுத்துக் கொண்டுவரப் பெற்றவரை அரசராகக் கொள்ளுதல் முற்றைநாளில் நம் நாட்டில் ஆன்றோர் ஆட்சி. இது நூல்களால் விதிக்கப்பட்ட செய்தியுமாம் என்பது **நூன்முறை** என்றதனலுணர்த் தப்பட்டது.

**இம்மாநிலம் தோளால் ஏந்த** - இவ்வுலகத்தைத் தன் தோள்வலிமை என்று உபசரித்துக் கூறப்படுகின்ற ஆணேயினுல் காக்க. **நிலம் ஏந்த** - நிலத்தை ஒரு உருண்டை வடிவினதாகிய பந்துபோலக் கொண்டு, அதனைக் கீழேவிழாமல் மன்னவன் கையினற் ருங்குகின்ருன் என உருவகப்படுத்திக் கூறுதல் மரபு. **ஏந்த** - எத்தும் பொருட்டு.

**ஏந்தல்** - உயர்ந்தவன். அரசன் - ஏத்துதலேச் செய்கின்றவன் என்ற சொற் கிலேடைப் பொருள்பட **ஏந்த ஓர் ஏந்தலே** - என்ற அழகும் காண்க. **ஏந்த ஓர் ஏந்தலே ஏந்துக** - சொற்பின் வீருகிலே என்ற சொல்லணி. **ஏத்துக !** என்ற - என்பது அகரம் கெட்டு **ஏந்துகென்று** என நின்றது.

பேய்மா முகில் போல் மதம்பாய் நேற்றி - என்க. இது யானைக்குரிய மூன்று மதங்களுள் கபோல மதங் குறித்தது. முகில்போல் மதம்பாய் - முகில் மழை நீரைப் பெய்வதுபோல மதநீர் பெய்யும் என்ற வினைபற்றி வந்த உவமம். அன்றி, முகில்போல் கைம்மா என்று கூட்டி, உருவும் பயனும்பற்றிய உவமையாகக் கொண்டு கரிய பெரிய முகில்போன்ற யானை என்றுரைத்தலுமாம். பேய் என்றதனால் சூல் கொண்டு பெய்யும் கருமைநிறப் பண்பு குறிக்கப்பட்டது. "வெண்முகி லாய்ப்பரக் தெங்கும் பெய்யு மாமழைப் பெருவெள்ளம்" என்றபடி வெண்முகிலை உவமித்ததாகக் கொள்ளின் கைம்மா என்றதற்கு வெண்ணிறமுடைய யானை என்க. வெள்ளை யானை தேவராசனுகிய இந்திரனைப் பிடரியிற் ருங்கிவருதல்போல் நீ ஒரு மன்னனை ஏந்திக் கொணர்க என்ற குறிப்புமாம். இந்திரன் மேகவூர்தி யுடையவன் என்பதும் குறிக்க.

ஏந்துக - தூக்கையினால் எடுத்துப் பிடர்மேல் வைத்துக்கொணர்க என்பதாம். கைம்மா - கையையுடைய விலங்கு. யானைக்குக் காரணப் பெயராய் வழங்குவது.

நறுந்துகில் - நல்ல துகில். புதிய வெள்ளிய துணி. நறுமை - இங்குப் புதுமையும் தூய்மையும் குறித்தது.

கண்கட்டி விடுதல் - முன்கண்ட பழக்கத்தால், யானை, பகையும் உறவும் கண்டு கொள்ளாது, உண்ணின்று தெய்வம் உணர்த்தியபடி தக்கோளூருவனை எடுத்து வருதற்பொருட்டுக் கண்கட்டிவிடுதல் வழக்கு. சோழன் கரிகாற்பெருவளத்தான் கழுமல வூரிலிருந்த யானையாற் கொண்டுவரப்பட்டு அரசாட்சிக்கு உரியவனுகத் தேர்ந்து கொள்ளப்பட்டான் என்ற வரலாறு பழந் தமிழ் நூல்களுட் காணப்படும்.

இதுபற்றிப் பண்டிதர் - ஈ. மு. வேங்கடசாமி நாட்டார் எழுதியுதவிய குறிப்புக் கள் இதன்கீழ்த் தரப்படுகின்றன : "யானையைக் கொண்டு அரசனைத் தேர்ந்தெடுத் தமைக்குக் கரிகாலன் செய்தி தவிர வேறு பழைய வரலாறெதுவும் புலப்படவில்லை. "கழுமலத்தி யாத்த களிறுங் கருவூர், விழுமியோன் மேற்சென் றதனுல்—விழுமிய, வேண்டினும் வேண்டா விடினு முரற்பால, தீண்டா விடுத லரிது" என்னும் பழ மொழி வெண்பாவும், 'கழுமலமென்னும் வூரின்கண்ணே பிணித்துநின்ற களிறும், கருவூரின்கண்ணே யிருந்த கரிகால்வளவன் கடிது இவையனுயினும் அவன் சிறப் புடையனுதலால் அவன்மேற் சென்று தன்மிசை யெடுத்துக்கொண்டு அரசிற் குரிமை செய்தது' என்னும் அதன் உரைப் பகுதியுமே கரிகாலன் செய்திக்கு ஆதாரமாவன. உறையூர் மண்மாரி பெய்து அழிந்தகாலை, பராந்தகன் மகனுகிய கரிகாலனை அமைச்சர் கள் யானையை விடுத்து கொணர்ந்தனரென்று செவ்வந்திப் புராணங் கூறுகின்றது."

"தமிழ்நாட்டிலே பல்லவர் குலத்தினர் முதலானேர் பேரரசராகத் திகழ்ந்தபொழு தும் அவர்கட்கு முடிசூடும் உரிமை இருந்தமை புலப்படவில்லை. மூவேந்தர் வழியி னரே முடிசூடும் உரிமையுடையரென்னும் மாபினைப் பெரியபுராணம் பாதுகாத்துச் செல்கின்றது. கூற்றுவ நாயனர் ஏனை அரசர்களை வென்று தாமே அரசராய காலத் தும், தில்லைவாழந்தணர்கள் அவர்க்கு முடிசூட மறுத்தமையும், அவர் சிவபெருமான் திருவடியையே முடியாக வேண்டிப்பெற்றமையும், அறியற்பாலன. எனவே, மூர்த்தி நாயனரும் கூற்றுவ நாயனரும் அரசுரிமை யேற்று நாடு ஆண்டனராயினும், அவர் கள் ஏனைய மன்னர்கள்போலன்றிச் சடைமுடியினையும் இறைவன் திருவடியினையுமே முடியாகக் கொண்டனர் என்னும் வரலாறுகள் பொன்முடி சூடும் உரிமை மூவேந் தர்க்கே உண்டென்னும் மரபு பிழையாவாறு அமைந்துள்ளமை தெளிவாம்." 31

999. கண்கட்டிவி டுங்களி யானையக் காவன் மூதூர்
மண்கொட்புற வீதி மருங்கு திரிந்து போகித்



1

2

1. திருவாலவாய் - திருக்கோயில்
(வெளிப்பார்வை - சொக்கநாதர் சந்நதி முன் கோபுரத்துடன்)
(மூர்த்தி நாயனார் வந்து நின்ற கோபுர வாயில்)

—பாட்டு - 999–1000 - பக்கம் - கஉஅஅ–கஉஅசு

2. மூர்த்தி நாயனார் முழங்கை தேய்த்த
" வட்டந்திகழ் பாறை " " சந்தனக் கல் "

—பாட்டு - 987 - பக்கம் - கஉஎடு

வட்டப் பாறைகள் இரண்டும் மூன்றடி சுற்றுக்களவும் மூன்றடி உயரமும் உள்ளவை.
இரு பக்கங்களிலும் காணப்படுவன தண்ணீர்க் கற்பண்ணைகள்.

திண்பொற்றட மாமதில் சூழ்திரு வால வாயின்
விண்பிற்பட வோங்கிய கோபுர முன்பு மேவி, கூ உ

1000. நீங்கும்மிர வின்க ணிகழ்ந்தது கண்ட தொண்டர்
"ஈங்கெம்பெரு மானரு ளாமெனி லிந்த வையந்
தாங்குஞ்செயல் பூண்ப"னென் றுள்ளந் தளர்வு நீங்கிப்
பூங்கொன்றைமி லிந்தவர் கோயிற் புறத்து நிற்ப, கூ கூ

*1001. வேழத்தர சங்கண் விரைந்து நடந்து சென்று
வாழ்வுற்றுல கஞ்செய் தவத்தினின் வள்ள லாரைச்
சூழ்பொற்சுடர் மாமணி மாநிலந் தோய முன்பு
தாழ்வுற்றெடுத் துப்பிடர் மீது தரித்த தன்றே. கூ ச

999. (இ - ள்) வெளிப்படை. கண்கட்டி விடப்பட்ட களிப்புடைய அவ்வியானை, அந்தக் காவலுடைய மூதூரின் தலம் எங்கும் மண் சூழ, வீதிகளின் பக்கம் திரிந்து போய்த், திண்ணிய அழகிய பெரிய கபாலி மதில் சூழ்ந்த திருவாலவாயிலில், ஆகாயமும் தாழவோங்கி உயர்ந்த கோபுரத்தின் முன்பு வந்து, கூ உ

1000. (இ - ள்) வெளிப்படை. கழிந்துபோன இரவில் நிகழ்ந்த செய்தி தெரிந்த தொண்டராகிய மூர்த்தியார், "ஈங்கு எமது பெருமானது திருவருள் இதுவாம் என்றால், இந்த நிலந்தாங்கும் அரசாட்சியை மேற்கொள்வேன்" என்று துணிவு கொண்டு, முன்னர்த் தமது உள்ளத்திற் கொண்ட தளர்ச்சி நீங்கிக், கொன்றைப் பூவினைச் சூடிய சிவபெருமானுடைய கோயிலின் புறத்திலே வந்து நிற்க, கூ கூ

1001. (இ - ள்) வெளிப்படை. பட்டத்து யானை அவ்விடத்தில் விரைவாக நடந்துபோய், உலகம் வாழ்வுற்றுச் செய்யும் தவத்தின் பயனாக உள்ளவராகிய அவரைத் தனது பட்டத்தின் மெய்யொளியுடைய மணிகள், நிலந் தோயும்படி முன்பு வணங்கி எடுத்து அப்போதே பிடரின்மேல் தரித்துக்கொண்டது. கூ ச

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

999. **(வி - ரை) விடும்** - விடப்பட்ட. **படு** விகுதி தொக்குநின்றது.

**களியானை** - மதம்பொருந்திய யானை. முன் பாட்டில் "பெய்மாமுகில் போல் மதம்பாய்" என்ற கருத்துமிது.

**அக்காவல் மூதூர்** - மதுராபுரி (979). அகரம் முன்னறிசுட்டு. **காவல்** அரண்களையுடைய என்க. "கண்ணுதலான் றன்னுடைய காப்புக்களே" என்ற காப்புத் திருத்தாண்டகத்தினுள் அப்பர் சுவாமிகள் அருளியபடி, இறைவன் காக்கின்ற ஊர் என்றலுமாம். திருவிளையாடற் புராணம் பார்க்க. "மோடிபுறங் காக்குமூர்" (பிரமபுரம் - காந்தாரம் - சக்காமாற்று 8) என்றது ஆளுடைய பிள்ளையார் தேவாரம். "அஞ்சு வான்கரத் தாறிழி மதத்தோ ரானை நிற்கவும்" (திருக்குறிப்பு - புரா - 81) என்றதும் காண்க.

**மண்கோட்புற வீதிமருங்கு** - யானை பல வீதிப்பக்கங்களிற் சுற்றி வந்தமையின் தலத்தின் மண் இளம்பிச் சுழன்றதென்க.

**திண்போன் தட மாமதில் சூழ் திரு ஆல்வாய்-திண்மை** - வலிமை. **போன்மை** - அழகு. பொன் பூசிய சிகரங்களையுடைமை குறித்ததென்றலுமாம். **தட** - என்றதனுற் பெருமையும், **மா** - என்றதனால் உயரமும் குறிக்கப்பட்டன. **திரு ஆலவாய்** - கோயிலின் பெயர். "கபாலிநீள் கடிம்மதிற் கூட லால வாயிலாய்" (கௌசிகம் - திருவாலவாய் - 1) என்று ஆளுடைய பிள்ளையார் தேவாரத்திற் போற்றப்பட்ட கபாலி

மதிலின் பெருமைகருதி இவ்வாறு சிறப்பித்தார். **மதில்** - கபாலி மதில். **தட மா** - ஒருபொருட் பன்மொழியென்றலுமாம்.

**விண்பிற்பட ஓங்கிய** - மிக்க உயர்ச்சி குறித்தது. தேவேந்திரன் முதலிய விண்ணுலகத்தவர்களும் வந்து இதன் அடியிற்றூழும் பெருமையும் குறிப்பாலுணர்த்தினர்.

**மேவ**—என்பதும் பாடம். 32

1000. **(வி - ரை) நீங்கும் இரவின்கண்** - கழிந்துபோன இரவிலே. "பொழுதும் புலர்வுற்றது" (993) என்று கூறியபடி கழிந்த முன்னிரவு. கொடுங்கோன்மையும் வெஞ்சமண் மீடையும், அடியார்க்கிழைத்த வன்கண்மையும், அடியார் கவலையும் ஒருங்கே நீங்கிய காலமாகிய இரவு.

**நிகழ்ந்தது** - 986 - 990 - திருப்பாடல்களிற் கூறிய நிகழ்ச்சிகள் ஒரு தொடர்பாய் ஒரு பொருள்பற்றி வந்தனவாகலின் ஒருமையிற் கூறினர். **கண்ட** - கண்ணுற் கண்டும் காதினுற்கேட்டும் அறிந்த என்ற பொருளில் வந்தது.

**தொண்டர்** - மூர்த்தி நாயனார். சந்தன மெய்ப்பூச்சுத் திருத்தொண்டு புரிந்தவர் ஆதலின் **தொண்டர்** என்றார்.

**" ஈங்கு.....பூண்பன் " என்று** - **அருளாம் எனில்** - 989-ல் கூறியவாறு கண்ட இறைவனது திருவருள். **வையந் தாங்குவன்** - " மண்எல்லாங் கொண்டு " என்றது குறித்தது.

**உள்ளந் தளர்வு** - "சிந்தைசாய்வுற்றிட" (986). உள்ளத் தளர்ச்சியின் நிலை 985-ல் விரிக்கப்பட்டது. **உள்ளந் தளர்வு**-வேற்றுமையில் மகரம்போய் மெல்லெழுத்துமிக்கது.

**பூங்கோன்றை மிலைந்தவர்** - சிவபெருமான். திருவாலவாயின் அவிர்சடைக் கடவுள்.

**கோயிற்புறத்து நீற்ப** - திருக்கோயிலின் உள்ளே சந்தனந்தேய்க்கும் பாறையினிடத்து நிகழ்ந்தவை யறிந்த தொண்டர் அதன் விளைவு என்னுகுமோ ? என்று காணக் கோயிலின் புறத்து வந்து நின்றார் என்க. 33

1001. **(வி - ரை) வேழத்தரசு** - பட்டத்துயானை. அரசுவா என்பர். முன்னர்க் " கைம்மா " (998), "களியானை" (999) என்று கூறிய ஆசிரியர், அரசனைத் தன்மேல் கொண்டிடவரும் இடமாதலின் இங்கு இவ்வாறு சிறப்பித்தார். அன்றியும் மூர்த்தியாரை ஏந்தி வரும் சிறப்பும் குறித்தபடி.

**அங்கண்** - கோயிற்புறத்து மூர்த்தியார் நின்ற இடத்தின்கண்.

**வாழ்வுற்று உலகம் செய் தவத்தினின்**-வாழ்வுற்றதனால் உலகம் தவம் செய்தது ; அத்தவம் காரணமாக. தவஞ்செய்தது மூர்த்தியாரை அரசராகப் பெறுதற்கு. அத் தவஞ்செய்தற்கு முன்னை வாழ்வு காரணமாயிற்று என்க. **உற்று** - உற எனச் செயவெனெச்சமாகத் திரிந்து வாழ என்றும் கொள்ளலாம்.

**தவத்தினால்** - தரித்தது என்று கூட்டுக.

**வள்ளலார்** - வரையாது கொடுப்போர். மூர்த்தியார் சமண்போய்ச் சைவம் ஓங்குதற் பொருட்டு சந்தனக் கட்டைக்கு ஈடாகத் தமது கையினை எலும்பு மூலை திறக்கும்வரை தேய்த்த வள்ளன்மை குறித்தது.

**மணி மாநிலந்தோயத் தாழ்வுற்று** - தலையைக் கீழே நிலந்தோயத் தாழ்த்து வணங்கினமையால் பட்டத்தில் உள்ள பொன்னிலழுத்திய மணிகள் நிலத்திற்றோய்ந்தன என்க. பெருகோடை நெற்றி (998) என்றமையால் யானையின் நெற்றிமேற் பொற்பட்டம் அணியப்பட்டிருந்தது ; அதனில் மணிகள் இருந்தன என்பதாம். இவ்வாறன்றிச் **சூழ்மாமணி** - என்பதற்குப் " படுமணியிரட்டு மருங்கின் " (திருமுருகு) என்றபடி யானையின் இருபுறமும் தொங்கும் மணிகள் என்றுரைத்தலுமாம்.

**பிடர்** - பிடரி - முதுகின் முன்புறம். 34

1002. மாதங்கமெ ருத்தினில் வைத்தவர் தம்மைக் காணு
ஏதங்கெட வெண்ணிய திண்மை யமைச்ச ரெல்லாம்
பாதங்களின் மீதுப ணிந்தெழுந் தார்க ளப்போ
தோதங்கிளர் வேலையை யொத்தொலி மிக்க தவ்வூர். கூடு

(இ - ள்) வெளிப்படை. தீமை கெடும்படி எண்ணிய திண்மையுடைய அமைச்சர்கள் எல்லாரும், யானையினுல் எடுத்துத் தன் பிடரியில் வைத்துக் கொள்ளப்பட்டவராகிய மூர்த்தியாரைக்கண்டு, அவர் பாதங்களின் மேல் பணிந்து எழுந்தார்கள்; அப்போது அவ்வூர் நீர் நிறைந்த கடலைப் போல முழக்கம் மிக்கது.

(வி - ரை) **மாதங்கம் (எருத்தினில்) வைத்தவர்** - யானையினுல் வைக்கப்பட்டவர் என்க. மூன்றனுருபு தொக்கது. **வைத்தவர்** - படிவிருதி தொக்குவந்த செயப்பாட்டு வினையாலணையும் பெயர்.

**மாதங்கம்** - மாது அங்கம் - மாதுடன் கூடிய அங்கமாகிய திருக்கோலத்தை; **எருத்தினில்** - அதனுடன் கூடிய எருது - இடபத்தினுடனே; **வைத்தவர்** - **தம்மை** - (அடித்தாமரையல்லது வேறில்லாது) தம்மனத்தே பதியவைத்தவராகிய மூர்த்தியாரை என்று ஓர் உட்குறிப்பாகிய பொருளும் படகிற்பது காண்க.

**ஏதம் கெட எண்ணிய திண்மை அமைச்சர்** - **ஏதம்** - உலகம் காக்கும் ஒரு மன்னவன் காவலின்றி உலகம் வாழ்வடையாது (995) என்று கூறிய பொருள். **திண்மை** - மனத்திட்பம், வினைத்திட்பம் முதலாயின எல்லாம். திருக்குறள் முதலிய நீதிநூல்கள் பார்க்க.

**அமைச்சர் எல்லாம் - பணிந்து எழுந்தார்கள்** - அரசு ஒருவர் மேலதாயினவுடன் அரசாட்சியின் முதற் செய்கை அமைச்சர் வந்து பணிவது என்பதாகும். வழி வழி அரசின்கீழ் உள்ள ஆங்கிலேய நாடு முதலிய பிறநாடுகளிலும் இத்தகையதொரு வழக்கு ண்மை அறியப்படும்.*

**அமைச்சர் எல்லாம்** என்றது ஊர் காவலில் வந்த பலதுறைகளையும் மேற்கொண்டு செலுத்தும் அமைச்சர்கள் எல்லோரும் என்றபடி. பல துறையாவன நீதித்துறை, ஊர் காவற்றுறை, அரசிறைத்துறை முதலாயின. முன்னரும் "அமைச்சர்கள்" (994) என்றது காண்க. இவர்களுள் ஒருவரே முதலமைச்சராய் நிகழ்வதும் முன்னுள் வழக்கு. "முற்றுணர்ந்த அமைச்சரினு முதலமைச்ச ராய்நிகழ்வார்" (வாதவூ - உப படை. 7) என்ற திருவிளையாடற் புராணமும், சூரபதுமன், "அற்றமில் கேள்வி சான்ற வமைச்சரை"க் கொணருவித்து உசாவிய வரலாறு கூறும் கந்தபுராணமும் இங்குக் கருதத் தக்கன. 115-ம் பிறவும் பார்க்க.

**ஊர் ஒலி மிக்கது** - மகிழ்ச்சியின் மிகுதியினுல் ஊரவர் எல்லாம் பல இயங்கள் முழக்கியும் வாழ்த்துக்கள் கூறியும் மிக்க ஒலி முழக்கினர் என்க.

**ஏதம் கிளர் வேலை** - எப்போதும் நீர் நிறைந்து அலைகளோடு கிளர்வதனுல் கடல் ஒலியால் மிகுவதாகும் என்பது.

**அவ்வூர் வேலையை ஒத்தது** - வினைபற்றி வந்த உவமம். 35

1003. சங்கங்கண் முரன்றன தாரைகள்; பேரி யோடும்
எங்கெங்கு மியம்பின பல்லிய; மெல்லை யில்ல
அங்கங்கு மலிந்தன வாழ்த்தொலி; யம்போற் கோம்பின்
பங்கன்னரு ளாலுல காள்பவர் பாங்க ரெங்கும். கூசு

* விக்டோரியா இராணியார் முதலியோர் வழி வழி அரசு தம் மேலதாகப் பெற்ற வுடன் அமைச்சர் வந்து அரச இலச்சினை முதலியவற்றைத் தந்து பணிந்தனர் என்று தேச சரித்திரங்களால் அறியப்படும் செய்திகளும் பிறவும் காண்க.

(இ - ள்) அம்பொன் கொம்பின்...எங்கும் - அழகிய பொன்பூண்ட கொம்பு போன்றாராகிய அங்கயற்கண்ணி யம்மையாரை ஒரு பாகத்திலுடைய சொக்கலிங்கப் பெருமானது **திருவருளினாலே உலகாள்பவராகிய** மூர்த்தியாரது பக்கமெங்கும்; சங்கங்கள்...தாரைகள் - தாரைகளும் சங்கங்களும் முரன்றன; பேரியோடும்...இல்ல - பேரிகையுடனே அளவில்லாத பலவகை இயங்கள் எவ்விடத்தும் இயம்பின; அங்கங்கும்...வாழ்த்தொலி - அங்கங்கேயும் வாழ்த்தொலிகள் மலிந்தன.

**(வி - ரை) தாரைகள் சங்கங்கள் முரன்றன** என்க. வாயின் வைத்து ஊத, அக்காற்றினால் உளதாக்கும் ஒலியாதலின் **முரன்றன** என்றார். **முரலுதல்**-காற்றின் உதவி கொண்டு ஒலிஉண்டாக்குதல். "சங்கு திரண்டு முரன்றெழுமோசை தழைப்பன" (திருவாசகம்) முதலிய திருவாக்குக்கள் காண்க. பல இயங்களினின்றும் இவற்றை வேறு பிரித்தோதியது, இவை மார்புக்காற்றின் உதவி கொண்டு வாயினால் ஊதி உளதாக்கும் ஒலியுடைமையும், இவ்வாறூதுதல் ஒரு பொருள்பற்றிய வாக்கியங்களைக் கொண்டிருப்பதும்பற்றி என்க. "தாரை, அணைந்த மாமறை முதற்கலை யகிலமு மோதா, அணர்ந்த முத்தமிழ் விரகன்வந் தானென வூத" (223), "சங்கு தாரை யளவிறந்த பல்லியங்கள் முழக்கி யார்த்துப், பார்குலவு தனிக்காளஞ் சின்ன மெல்லாம் பரசமய கோளரிவந் தானென் றூத" (904) என்ற திருஞானசம்பந்தநாயனார் புராணங் காண்க. மூக்கினால் முரலுதலும் வாயினால் ஊதுதலும் மார்புக்காற்றின் உதவி கொண்டேயாவன. **சங்கம்** - மங்கல நிகழ்ச்சிகளிற் சங்கமூதுதல் மரபு. "விருப்போடு வெண்சங்க மூதா ஆரும்" என்பது திருத்தாண்டகம்.

**சங்கம்** - கூட்டம் எனக் கொண்டு, பின்னர் "எல்லையில்லன" என்றதற்கேற்பச், சங்கங்களாகத் தாரைகள் முரன்றன என்றுரைத்தலுமாம். தாரை போன்றவை இரட்டையாக இணைத்து ஊதுவதும் மரபு.

**பேரியோடும் எல்லையில்லன பல்லியம் எங்கெங்கும் இயம்பின** - இயங்களினுள், அளவாலும் ஓசையாலும் பெருமையுடைமைபற்றிப் பேரிகையைப் பெயராற் சுட்டிக் கூறி, **ஓடு** என்ற உருபையும் அதனுடன் சார்த்தி, ஏனையவற்றை யெல்லாம் **பல்லியம்** எனப் பொதுவகையாற் கூறினர். **இயம்பின** - மங்கலச் செய்தியை ஊரவர் அறியச் சாற்றின. பேரிகை முதலியவற்றை முழக்கிக்கொண்டு திருவிழா முதலியவற்றைச் சாற்றுதல் முன்னுள் வழக்கு. சிலப்பதிகாரம் இந்திர விழவூரெடுத்த காதை வரலாறும் பிறவும் பார்க்க. "ஆடியற் றூடியுஞ் சாற்றி, யறைந்தபே ரோசை கேட்டு" (திருஞா - புரா - 678), "நாதர்விரும் படியார்க ளுளு நாளு நல்விருந்தா யுண்பதற்கு வருக வென்று, தீதில்பறை நிகழ்வித்து" (மே 566), "பரம னடியா ராளுர்க ளெல்லா மெய்தி யுண்கவென விரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச், சொல்லாற் சாற்றி" (திருநா - புரா - 259) முதலாயினவும் இம்மரபை விளக்குவன காண்க. மங்கலச்செய்தியை என்ற செயப்படு பொருள் வருவிக்க. இவ்வாறன்றி **இயம்பின** - சத்தித்தன என்றுரைத்தலுமாம். இயங்கள் இயம்புதல் என்பதும் மரபு.

**பல்இயம் எல்லையில்லன** - **பல்** - பல. **இயங்கள்** - வாத்தியவகை. இதனால் பலவகை வாத்தியங்கள் குறிக்கப்பட்டன. **எல்லையில்லன** என்றது ஒவ்வோர் வகையினுள் அளவுபடாத எண்ணிக்கை குறித்தது.

**அங்கங்கும் வாழ்த்து ஒலி மலிந்தன** - இவை நகர மாந்தர் தாந்தாமிருந்த அவ்விடத்திருந்தபடியே வாழ்த்துகின்ற ஒலி. **மலிதல்** - நிறைதல்.

**அம்பொற்கொம்பு** - மீனாட்சியம்மையார். உவமையாகுபெயர். **கொம்பின் பங்கன்** - உமைபாகன். சொக்கலிங்கப்பெருமான்.

**அருளால் உலகாள்பவர்** - திருவருளால் உலகாளும் இவ்வுரிமை பெற்று அருட்குறியாலே உலக ஆட்சியும் செய்பவர். இது 1006 - 1008-ல் கூறப்படுவது.

**மூரன்றன** என்றதனால் வாயொலியின்றிக் கருவிகளே இசைப்பனவும், **இயம்பின** என்றதனால் கருவியொலியும் வாயொலியும் கலந்திசைப்பனவும், **வாழ்த்தொலி மலிந்தன** என்றதனால் கருவிகளின்றி வாயொலிமட்டும் இசைப்பன்வும் கூறப்பட்டது காண்க.

*மூரன்றன தாரைகள் - இயம்பின பல்லியம் - மலிந்தன வாழ்த்தொலி* எனப் பயனிலைகளே முன்வைத்தோதினார் ஓசையொலிகள் முன்னர்க் கேட்கப்பட, அதன்பின் அவற்றை நிகழ்த்தும் கருவிவகைகள் நோக்கியபோதே காணப்படுதல் குறித்தற் பொருட்டு.

இப் பாட்டிற்கு முன்னுரையாசிரியர்கள் பேரியோடும் தாரைகள் சங்கங்கள் மூரன்றன என்று கூட்டி உரைத்தனர். 36

1004. வெங்கட்களிற் றின்மிசை நின்று மிழிச்சி வேரித்
தொங்கற்சுடர் மாலைகள் சூழ்முடி சூடு சாலை
அங்கட்கொடு புக்கரி யாசனத் தேற்றி யொற்றைத்
திங்கட்குடைக் கீழரி மைச்செயல் சூழ்ந்து செய்வார், ஈஎ

1005. மன்னுந்திசை வேதியின் மங்கல வாகு திக்கட்
டுன்னுஞ்சுடர் வன்னி வளர்த்துத் துதைந்த நூல்சூழ்
பொன்னின்கல சங்கள்கு டங்கள்பூ ரித்த நீரீர்
உன்னுஞ்செயல் மந்திர யோகர் நிறுத்தி னார்கள். ஈஅ

1004. (இ - ள்) வெளிப்படை. வெங்கண்ணுடைய அரசயானையினின்றும் மூர்த்தியாரை இறக்கித், தேன் பொருந்திய மலர்மாலைகளும், ஒளியுடைய மணிமாலைகளும் சூழ்ந்துள்ள முடிசூடும் மண்டபத்தின் அழகிய தலத்திற்கொண்டு சேர்த்துச் சிங்காதனத்தில் எழுந்தருளச் செய்து, ஒப்பற்ற சந்திரவட்டக்குடைக்கீழ் அரசுரிமைக்கு ஏற்றபடி முடி சூடுதற்குரிய சடங்குகளே எண்ணிச் செய்வார்களாகி, ஈஎ

1005. (இ - ள்) வெளிப்படை. பொருந்தி நிலை பெறும் திசையில் இடப்பட்ட வேதிகையில் சிவமந்திரங்களாலாகிய ஆகுதிக் குண்டத்தின்கண் சுடரிற் பொருந்தி வரும் தீயை வளர்த்து, மூப்புரிநூலை நெருங்கச் சுற்றிய பொற்கலசங்களேயும், குடங்களேயும் நிறைவித்த தூய்மையான கங்கை முதலிய தீர்த்தங்களேத் தியானிக்கும் மந்திரம் வல்ல தேசிகர்கள் தாபித்தனர். ஈஅ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1004. (வி - ரை) **வெங்கண்களிறு** - வெம்மை - விருப்பம். மூர்த்தியாரை விரும்பிக் கண்டு தாழ்வுற்று எடுத்துப் பிடரிமேற் கொண்டமையால் இவ்வாறு கூறினர். வெங்கண் - கோபக்கண் என இயற்கை யடையாகக் கொள்வாருமுண்டு.

**இழிச்சி** - கீழே இறங்கச் செய்து. யானை எடுத்துத் தன் பிடரியில் தரித்த செயல் இவரே அரசர் எனக் காட்டிய அளவில் நின்றது. அரண்மனை சென்று அரசராக முடிசூடி யானைமேல் ஈண்மறுகிற் போதும் உலாவினைப் பின்னர் 1010ல் "கீடுங்களிற்றின்மிசை" என்று கூறுவாராதலின், இங்கு அரசாங்க முடிசூட யானையினின்றும் இறக்கினர்கள் என்க.

**வேரித்தொங்கல் சுடர்மாலைகள் சூழ்சாலை** என்க. சாலையினைப் (முடிசூடு மண்டபத்தைப்) பூமாலைகளாலும் மணிமாலைகளாலும் அலங்கரித்தனர் என்பதாம். இழிச்சிக் கொடுபுக்கு - ஏற்றிச் - செயல் - சூழ்ந்து செய்வார் - வேதியில் - கலசங்கள் - குடங்கள் - யோகர் நிறுத்தினர்கள் என்று இந்த இரண்டு பாட்டுக்களையும் கூட்டி முடிக்க.

ஒற்றைத் திங்கள் குடை - தனித்த - தனக்கிணையில்லாத - திங்கள்போலப் பரந்த, தண்ணிய - வெள்ளிய ஒளியுடைய குடை. வெண்கொற்றக்குடை என்பர். உருவும் மெய்யும் பயனும்பற்றி வந்த வுவமை.

உரிமைச் செயல் - முடிசூட்டும் அபிடேகத்துக்குரியபடி செய்யவேண்டிய சடங்குகள்.

சூழ்தல் - எண்ணுதல். 37

1005. (வி - ரை) மன்னும் திசைவேதியில் - மூர்த்தியார் வீற்றிருந்த திசையில் அவர்க்கெதிரே அமைக்கப்பட்ட வேதிகையில். இது கிழக்குத்திசை என்பர்.

மங்கல ஆகுதி - மங்கலம் செய்யும் ஆகுதி. சிவம் - மங்களம். சிவபெருமானே எல்லா மங்கலங்களுக்கும் பிறப்பிடமும் காரணரும் ஆவர். அன்றியும் எல்லா வேள்விகளுக்கும் முதல்வரும் அவரேயாவர். ஆதலின் இங்குச் சிவவேள்விகள் குறிக்கப்பட்டன. "வேணி, நாத ஞரைமுன் ஞகவே புரியுகல் வேள்வி, நீது நீங்கநீர் செய்யவும் திருக்கழு மலத்து, வேத வேதிய ரனைவரும் செய்யவும்" (திருஞான - புரா - 429) என்ற கருத்தை நோக்குக.

ஆகுதி - இங்கு ஆகுதி செய்தற்குரிய இடம் - யாககுண்டம் - குறித்தது.

சுடர்துன்னும் வன்னி வளர்த்து - சுடர் - இங்குச் சூடுடைய ஒளிப்பொருள்களுள் மிக்க ஞாயிறு குறித்தது. யாகஞ் செய்கின்றவர்கள் ஞாயிற்றின் கதிரைச் சூரிய காந்தத்தினுல் எடுத்து அதனை வளர்த்து யாகம் தொடங்கும் ஆகமவிதி குறித்தது. சுடரிலே பொருந்திய வன்னியினைக் கொண்டு வளர்த்து என்க.

துதைந்த நூல்சூழ் - என்பதனைக் குடங்களுடனும் கூட்டுக. கலசங்களைத் தாபித்தலில், மேலே சுற்றிய நூல் அதன் ஏழு தாதுக்களில் ஒன்றாகக் கருதப்படும். நூல் சுற்றுது கலசம்தாபித்தல் விதியன்று. துதைதல்-விதித்த அளவுப்படி நூலினை நெருங்கச் சுற்றுதல். நூல் - மூன்றிழைகளாகச் சேர்த்த நூல்.

பொன்னின் கலசங்கள்-வேதிகையின் நடுவில் தாபிக்கப்பட்ட இவை முதன்மை கொண்ட சிவ சத்தி கலசங்கள். குடங்கள் - மட்குடங்களுமாம். இவை முறையே பிரதான கலசங்கள் எனவும், பரிவார கலசங்கள் எனவும்படும். இவற்றில் அவ்வத் தெய்வங்களே உரிய மந்திரங்களாற்றூபித்துப் பூசித்தும் ஒமித்தும், பின்னர், இவற்றின் நீரினுல் அரசரை நீராட்டுவித்தல் மரபு.

பூரித்தல் - நிறைவித்தல். தூநீர் - தூய்மை - நீரின் தூய்மையாலும் அதனுள் இடும் புற்றுமண், கடல்மண், மலையடிமண், மணிகள் முதலிய தூய பொருள்களாலும், மந்திரபாவனையாலும் ஆகும் என்க.

உன்னும் செயல் - தியானம் - பாவனை என்பர். மந்திரம் - அப்பாவனைக்குரிய மந்திரம். யோகர் - கூட்டுகின்றவர்கள். உன்னுதல் - மனத்தினுலும், செயல் - காயத்தினுலும், மந்திரம் - வாக்கினுலும் செய்யப்படுவன. யோகர் - இவ்வாறு மனம் வாக்குக் காயம் என்ற மூன்றனும் குறித்த பொருள் விதிப்படி கூடும்படி செய்யவல்ல ஞானதேசிகர்கள்.

நிறுத்துதல் - தாபித்தல். இவை சைவாகமங்களுள் விதிக்கப்பட்ட சடங்குகள்.

யோகில் நிறுத்தினர்கள்—என்பதும் பாடம். 38

1006. வந்துற்றெழு மங்கல மாந்தர்க டம்மை நோக்கிச்
சிந்தைச்சிவ மேதெளி யுந்திரு மூர்த்தி யார்தாம்
"முந்தைச்செய லாமமண் போய்முதற் சைவ மோங்கில்
இந்தப்புவி தாங்கியிவ் வின்னர சாள்வ" னென்றார். ஙக

(இ - ள்) வெளிப்படை. தமது சிந்தையிற் சிவபெருமானையே வைத்துத் தெளிவு பெற்றிருக்கும் மூர்த்தியாரும், தம்மிடம் வந்து வணங்கி எழும் மங்கலச் செயலில்வல்ல

அந்த மக்களைப் பார்த்து " முன் செயலாகிய சமணம்போய், முழுமுதற் சைவம் ஓங்குவதானால் இந்த உலகைத் தாங்கி இனிய அரசாட்சியைச் செய்வேன் " என்றார்.

**(வி - ரை) வந்து உற்று எழும் மங்கல மாந்தர்** - முடிசூட்டும் மங்கலவினை செய்வோரும், மந்திரிகள் முதலாயினோரும். இவர்களே மேல்வரும் பாட்டில் விரித்துக் கூறுவர்.

**சிந்தைச் சிவமே தெளியும்** - சித்தையிற் சிவமே பொருளெனத் தெளிந்த. சிவமே தெளியும் சிந்தை எனக் கூட்டி உரைத்தலுமாம். சிவமே - ஏகாரம் பிரிநிலை. " அடித்தாமரை யல்ல தில்லார் " (976) என்றது காண்க. அவ்வாறு தெளிந்தாராதலின் சமண்போய் சைவமோங்கில் அரசாள்வன் என்றார் என்பது குறிப்பு. அதற்காக அல்லாவிடின் அரசாட்சியினைப் பொருளாக மதியார் என்பதாம். எந்தம் பெருமக்களாகிய காயன்மார் திருக்கூட்டத்தில் அறவு நிலையின் (ஆச்சிரமத்தின்) உள்ளாரிருவருள் மூர்த்தியார் ஒருவர் என்பது ஈண்டு நினைவு கூர்தற்பாலது. " எலங் கமழ் கோதையர் தற்திறம் என்று நீங்கும், சிலம்கொடு " (1014) என்பது காண்க. அரசருக்குரிய மணிமுடி, பொன்கலன், பொன்னுடை முதலியனவும் நீத்தவர் என்பது " செழுங்கலன்கள் ஐயன்னடை யாளமு மாக " (1008) என்றதனால் அறிக. ஆதலின் இவ்வாறு உலகுதுறந்த மனநிலை கொண்ட தவராசராகிய மூர்த்தியார் தாம் புவிராசராக இருக்க உடன்படுவதற்குக் காரணம் கூறினார்.

வழிவழி வந்த முடிமன்னரா யரசு பூண்ட ஐயடிகள் காடவர்கோன் நாயனார் தமக்குரிமையிற் போந்த " அரசாட்சி, யின்னலென விகழ்ந்ததனை யெழிற்குமரன் மேலிழிச்சித் " திருத்தொண்டு செய்யத் தலங்கள் தோறும் செல்வாராயின், இங்குத் தமக்கு வழிவழி உரிமையின் வாராத அரசாட்சியினை மூர்த்தியார் ஏற்றதென்னையோ? என்பார்க்கு அதற்குச் சைவஆக்கத்தின் வைத்த ஆர்வமே காரணம் என்று காட்டிய படியாம். அன்றியும், அரசாட்சியினிற் பற்றுவையாது அதனைத் திருத்தொண்டிணக்குக் கீழ்ப்படுத்தித் தொண்டின் பொருட்டேயாக வைத்ததுவுமன்றித், திருத்தொண்டினையும் விடாது பற்றிவந்தனர். அது, மேல்வரும் பாட்டானும், 1013, 1014. 1015 திருப்பாட்டுக்களானும் அறியப்படும்.

**முந்தைச் செயலாம் அமண்** - முதற்சைவம் - முந்தை - சில காலத்தின் முன்வந்த என்ற பொருளில் வந்தது. செயலாம் - இது முற்றறிவுடைய இறைவனால் அருளப்படாது, சிற்றறிவுடைய மனிதராற் செய்யப்பட்டதாம் என்பது. " விரிவிலா வறிவினர்கள் வேறொரு சமயஞ் கேய்தே, யெரிவினுற் சொன்ன சேனும் " என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்குக் காண்க. இது கருதியே முதற்சைவம் என்றார். முதல் வனாலருளப்பட்ட முதன்மைபெற்ற சமயம் என்க. முதலில் வைத்தெண்ணப்படும் என்ற குறிப்புமாம். " சைவ முதலா மளவில் சமயம் " என்ற தாயுமானார் திருவாக்கும் சிந்திக்க. எனையவற்றை அங்கமாகக்கொண்டு முதலாக விளங்கும் என்றலுமாம்.

**இந்தப்புவி** - உண்மை ஞானமுடையார் விரும்பாத - வெறுக்கத்தக்க - இந்தப் புவியாட்சி.

**இன் அரசு** - இனிய அரசு. " வாய்மை வேத நன்மைத்திரு நீற்றுயர் நன்னெறி தாங்கு மேன்மைத் தன்மை " (985) என்றதனை இன்அரசு என்றார். 39

1007. அவ்வாறுமொ ழிந்தது கேட்ட வமைச்ச ரோடு
மெய்வாழ்த்தரு நூலறி விண்மிகு மாந்தர் தாமும்
"எவ்வாறருள் செய்தனை மற்றவை யன்றி யாவர்
செய்வார்? பெரி யோ!"யெனச் சேவடி தாழ்ந்து செப்ப, சO

1008. " வையம்முறை செய்குவ ஞகில், வயங்கு நீறே
செய்யும்மபி டேகமு மாகச், செழுங்க லன்கள்
ஐயன்னடை யாளமு மாக, வணிந்து தாங்கும்
மொய்புன்சடை மாமுடி யேமுடி யாவ " தென்றார். சக

1007. (இ - ள்) வெளிப்படை. மூர்த்தியார் அவ்வாறு அருள் செய்ததனைக் கேட்ட அமைச்சர்களோடு உண்மை நூலறிவின் மிக்கோர்களும் " பெரியோய் ! நீ எவ்வாறு அருளிச்செய்தனையோ அவ்வாறன்றி வேறு செய்வார் யாவர் ?" என்று அவரது திருவடிகளில் வீழ்ந்து சொல்ல, சஎ

1008. (இ - ள்) வெளிப்படை. மூர்த்தியார், "**உலகத்தை நான் அரசுசெய்வே னுகில்**, சிவபெருமானது திருமேனியில் விளங்கும் **நீறுநீறே** எனக்குச் செய்யும் **மதுடாபிடேகமாகவும்**, ஐயன் அடையாளமாகிய **உருத்திராக்கமே** பூணும் **செழுங் கலன்களாகவும்**, இறைவனது திருவடையாளமாகிய மொய்த்த புன்சடையே **அரச முடியாகவும்** இருக்கத்தக்கன " என்றார். சக

*இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.*

1007. (வி - ரை) **மெய்வாழ் தநநூல்** - அறிவனூல்களாகிய வேதங்களும் சிவாக மங்களும். இவற்றின் பொருள்கள் என்றும் மாறாது உண்மையாக விளங்குவன என் பது. மெய்வாழ்வைத் தரும் நூல் என்றுரைப்பினுமாம். இவையும் இவற்றைச் சார்ந்தவையுமல்லாத ஏனை நூல்கள் மெய்வாழ்வைத் தாராது பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்குவன என்பதும் போதரும்.

**அமைச்சர்** - உலக நூல்மதி வல்லோர் ; மெய்...நூலறிவின் **மிகுமாந்தர்** - அறிவ னூல் வல்லோர் ; எனவே இகம் பரம் என்ற இரண்டின் வல்லவர்களும் கூடி என்ற படியாம்.

**நீ எவ்வாறு அருளினையோ அதுவன்றி மற்றுச் செய்வார் யாவர் ?** என்க. **யாவர்** என்றவிடை ஒருவருமிலர் என எதிர்மறை குறித்தது. யாங்கள் மட்டுமேயன்றி இந் நாட்டில் வேறு எவரும் இலர் என்பது. **மற்று** - அதுவன்றிப்பிற.

**பெரியோய் !** - செய்தற்கரிய செயல் செய்தவரே !

**கேவடி தாழ்ந்து கேட்ப** - அரசரது முன்னிலையில் அறிவிக்கும் மரபு.

கேட்ட - அமைச்சரோடு - மாந்தர் தாமும் - செப்ப - (மூர்த்தியார்) - என்றார். என இந்த இரண்டு பாட்டுக்களையும் கூட்டி முடித்துக்கொள்க. 40

1008. (வி - ரை) **வையம் முறை செய்தல்** - அரசு செலுத்துதல். உலக மக்களை நீதிநூல் விதித்தபடி அவ்வவர்க்கேற்ற நிலையில் நிறுத்துதல். இது அரசர்களது முதற் கடமையாம். " தத்தநெறிகளிற் சரித்து வாழும் " (996) என்றது பார்க்க. கழறிற் றிவார் நாயனார் புராணத்திலும், திருநகரச் சிறப்பிலும் கூறிய அரசநீதி முறை களும் காண்க.

**வயங்குநீறு** - இறைவன் அணிந்த திருநீறு - " சிவன்றிரு டோண்மேல் நீறு கின்றது கண்டனை ", " பூசுவதும் வெண்ணீறு " (திருவாசகம்) முதலிய திருவாக்குக் கள் காண்க.

**வயங்கு** - பிறவினையாகக் கொண்டு, வயங்குவிக்கும் - விளக்கம் செய்யும்-திருநீறு என்றலுமாம். " பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு " (காந்தாரம்-திருநீற்றுப்பதிகம் - 4) என்றது ஆளுடையபிள்ளையார் தேவாரம். விளங்குகின்ற நீறு என்றுரைத்தலுமாம். " நீற்றொளி கண்டோர் கண்கோட் னிறைந்தாராக் கவின் கொள்ள" (941), "புண்ணிய நீதற்புனித நீறு பொலிவெய்த (175) முதலியவை காண்க.

நீறே அபிடேகமும் ஆக - அபிடேகம் - நீராட்டு. முடிசூட்டுவதற்காகப் புண்ணியநீரை ஆட்டுவித்தல் மரபு. செய்யும் - (முடிசூட்டுதலின் பொருட்டுச்) செய்யப்படும். படிவிருதி தொக்கது. இங்கும் நீராட்டும்பொருட்டு மந்திரயோகர்கள் பொன்னின் கலசங்கள் குடங்கள் பூரித்த தூநீர் அமைத்துவைத்தனராதலின் (1005), மூர்த்தியார், அத்தூநீருக்கு மேலாய்த் தாம் அபிடேகமாகக் கருதியது திருநீற்றுப் பூச்சேயாகும் என்பதாம். நீறே - முடியே - ஏகாரங்கள் பிரிநிலை.

நீற்றின் முழுகுதலாவது நீற்றினை நிறையப் பூசுதல். நீரிற் குளித்ததற்குமேல் தூய்மை செய்வதனால் இதனை (பஸ்ம ஸ்நானம் - ஆக்னேய ஸ்நானம்) நீற்றிற் குளித்தல், நெருப்பிற் குளித்தல் என்று விதந்து பேசுதல் சைவ மரபு. இதுபற்றியே நீரினுட் குளித்தபின் நீற்றினுட் குளிக்க என்பர். "புலரி எழுந்து புனன்மூழ்கிப் புனித வெண்ணீற் றினுமூழ்கி" (கழறிற் - புரா - 8) என்றது காண்க. அபிடேகமும் - உம்மை எண்ணும்மை.

ஐயன் அடையாளம் செழுங்கலன்களும் ஆக என மாற்றிக் கூட்டுக. ஐயன் அடையாளம் - உருத்திராக்கக் கண்டிகை. பின்னர் இதனை "உயர்கண்டிகை" (1013) என்பது காண்க. உருத்திரனது கண்ணின் கருணைக் கண்ணீரினின்றும் வந்தது என்பது வரலாறுதலின் உருத்திர அக்கம் - கண்மணி என்றும் கூறுப. ஒரு பெண் தாலி யணிதல் ஒரு நாயகனுக்கு வாழ்க்கைப்பட்டதற்குரிய அடையாளமாதல்போல, ஓர் உயிர் தனது (ஆன்ம) நாயகனுகிய சிவனுக்கு உரிமைப்பட்டதற்கு உருத்திராக்கம் பூணுதல் அடையாளமாம் என்க. உருத்திராக்கமணியாத மக்கள், நாயகனை யடையாத மகளிரை ஒப்பர் என்பதும் ஆம். அவர்களைக் காண்பதற்கும் அரன் கூசுவர் என்பது "பூண்பதற்குக் கண்டியினைக் கூசியிடும் புல்லியரைக், காண்பதற்குக் கூசுமரன் கைத்து" என்ற திருவாக்கா லறியப்படும்.

"நீறே அபிடேகமுமாக, அடையாளமே கலன்களுமாக, அணிந்து, சடை முடியே முடியாவது" என்றுரை என முடிக்க.

தாங்கும் மொய்புன் சடை மாமுடியே - தாங்குதல் - சடையின் பாரத்தைப் பொறுத்துத் தாங்குதல். சடாபாரம் என்று கூறும் மரபும் காண்க. மொய் - நெருங்கிய. புன் என்றது குறிய அளவு குறித்தது. மாச்சடைமுடியே என்க. பெருமை தங்கிய சடைமுடி. சடை - சிவபெருமானுக்குரிய சிறப்பு அடையாளம். மாமுடி - இதன் பெருமை குறித்தது. "சடைமுடி சாட்டியக் குடியார்க்கு" என்ற கருவூர்த் தேவர் திருவிசைப்பாவில் உரைத்தவை காண்க. புகழ்ச்சோழ நாயனூர் புராணம் பார்க்க.

முடியே முடியாவது - அரசர் தாங்கும் மணிமுடி - கிரீடம் ஆவது.

உலகமெல்லாம் காக்கும் தமது இறைவனூர் தாங்கிய இறைமைத் திருவடையாளங்களையே, அவரது தாள்பிடித்து அரசபூண்ட மூர்த்தியாரும் தமது உலக அரசாட்சியின் அடையாளங்களாகக் கொண்டனர். மாமுடியே முடியாவதென்றவதனால் மூர்த்தியார் முன்னரே சடைவளர்த்த பெருங்கோல முனிவராக விளங்கினர் என்பது கருதப்படும்.

இங்குக் குறித்த நீறு - கண்டிகை - சடை என்ற மூன்றினையும் சிவசாதனங்கள் என்பர். முன்னர் இவற்றைப் பூண்டு சிவனது பேரடியாராக விளங்கிய மூர்த்தியார், உலகம் ஆளும் பேரரசராக விளங்கும் அக்காலத்தும் மாறுதலின்றி இவற்றையே அதற்கும் சாதனமாகக் கொண்ட அடிமைத்திறம் கருதுக. "கேடு மாக்கமும் கெட்ட திருவினர், ஓடும் செம்பொன்னு மொக்கவே நோக்குவார்" (143), "அகில காரணர் தாள்

பணி வார்கடாம், அகில லோகமு மாளத் குரியர்" (139) என்ற கருத்துக்களே இங்கு வைத்துக் காண்க.

1006-ல் "சமண்போய் முதற்சைவ மோங்கில்" என்றது மூர்த்தியார் மேற் கொள்ளும் அரசாட்சியின் குறிக்கோள் (இலட்சியம்) என்றும், இப்பாட்டிற் கூறியவை அதன் அடையாளங்களாகிய சடங்குகளும் அரச சின்னங்களும்ஆம் என்வும் கொள்க. ஆதலின் இவைதம்முள் மாறுபாடின்மை அறிக. 41

1009. என்றிவ்வுரை கேட்டலு மெல்லையில் கல்வி யோரும்
வன்றிண்மதி நூல்வளர் வாய்மை யமைச்சர் தாமும்
"நன்றிங்கரு டா"னென, நற்றவ வேந்தர் சிந்தை
ஒன்றும்மர சாளுரி மைச்செய லான வுய்த்தார். சஉ

(இ - ள்) வெளிப்படை. என்று (கூறிய) இந்த உரையினைக் கேட்டு, அளவில்லாத கல்வியுடையோர்களும், வலிய திண்ணிய மதியையும் நூலறிவையும் வளர் வாய்மையையும் உடைய அமைச்சர்களும் "இங்கு அருளிய செய்தி நன்றுதான்" என்று கொண்டு, நல்ல தவவேந்தரது சிந்தையிற் பொருந்தும் அரசாள்வதற்கு உரிமைச் செயலாகிய சடங்குகளே யெல்லாம் செய்தளித்தனர்.

(வி - ரை) எல்லையில் கல்வியோர் - வேதாகமங்களில் வல்லவர். "மெய் வாழ்தரு நூலறிவின் மிகுமாந்தர்" (1007) என்ற அவர்.

**வன் திண் மதிநூல் வளர் வாய்மை அமைச்சர்** - மதி அமைச்சர், நூல் அமைச்சர், வளர் வாய்மை அமைச்சர் என்று தனித்தனி கூட்டுக. கூரிய மதியுடைமையும், நூலறிவுடைமையும், உலகத்தைச் சோர்வுறுது வளர்த்தற்குரிய வாய்மையுடைமையும் நல்அமைச்சர்க்கு இன்றியமையாதனவாம் என்ப.

**வன் திண் மதி** - மதிக்கு **வன்மை**யாவது எதுவரினும் கலங்காமை. **மதியின் திண்மை**யாவது எண்ணியவற்றை எண்ணியபடி முடிக்கும் உறுதிப்பாடு. **நூல்** - நூலறிவு. ஆகுபெயர். **வளர்** - வளர்க்கும் பிறவினை. உலகத்தைச் சோர்வுறுது காத்து வளர்க்கும். உலகத்தை என்பது வருவிக்க. **வாய்மை** - எஞ்ஞான்றும் உண்மையினையே எடுத்துரைக்கும் திறம். "தம்முயிர்க் குறுதி யெண்ணுர் தலைமகன் வெகுண்டபோதும், வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்" என்பது முதலியனவாகக் கம்பர் இத்தன்மைகளே எடுத்துப் பாராட்டுதலை இங்கு நினைவு கூர்க. "மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம், யாவுள முன்னிற் பவை" என்ற திருக்குறளும் காண்க. ஆசிரியர் தாமும் ஒரு பேரமைச்சராயினமையும், இவ்விலக்கணங்களுக்குத் தாமே சிறந்ததோர் இலக்கியமாய் விளங்கியமையும் இங்குக் கருதுக. அது காரணமாகவே இப்புராணம் பாடியருள நேர்ந்ததும் குறிப்பிற் காணத்தக்கது.

**இங்கு அருள் நன்றுதான்** - என்க. **அருள்** - மூர்த்தியார் அருளிச் செய்த பொருள்கள். **தான்** - உறுதி குறிக்கும் அசை. தேற்றேகாரம் தொக்கது. **என** - என்று சொல்லி என்று கருதி.

**நல் தவ வேந்தர்** - நல்ல தவத்திற் பெரியோர் என்றும், நல்ல தவஞ் செய்தமையால் வேந்தராயினோர் என்றும், ஒருங்கே நல்ல தவராயும் வேந்தராயும் அமைந்தோர் என்றும் உரைக்க நின்றது. **நல்ல தவம்** - சிவபெருமான் திருத்தொண்டு.

**சிந்தை ஒன்றும்** - மனதுக்கு இசைந்த - உகந்த.

**அரசுஆள் உரிமைச் செயல்**-அரசமுடி சூடுதற்கு உரிய சடங்குகள். **செயல் ஆன உய்த்தார்** - செயல்களே எல்லாம் மூர்த்தியார் கருத்திற்குப் பொருந்தும் வண்ணமே செய்தனர். 42

1010. மாடெங்குநெ ருங்கிய மங்கல வோசை மல்கச்
சூடுஞ்சடை மௌலி யணிந்தவர் தொல்லை யேனந்
தேடுங்கழ லார்திரு வாலவாய் சென்று தாழ்ந்து
நீடுங்களிற் றின்மிசை நீண்மறு கூடு போந்தார். ௪௩

1011. மின்னும்மணி மாளிகை வாயிலின் வேழ மீது
தன்னின்றுமி ழிந்து தயங்கொளி மண்ட பத்திற்
பொன்னின்னரி மெல்லணைச் சாமரைக் காமர் பூங்கால்
மன்னுங்குடை நீழ லிருந்தனர் வையந் தாங்கி. ௪௪

1010. (இ - ள்) வெளிப்படை. பக்கங்களில் எங்கும் கூட்டமாக நெருங்கிய மங்கல ஓசைகள் நிறையச், சூடுகின்ற முடியாகச் சடையினையே வணிந்து வேந்தராய் விளங்கிய மூர்த்தியார், பண்டு பன்றி வடிவெடுத்த விட்டுணுவானவர் தேடும் திருவடிகளையுடைய சொக்கலிங்கப்பெருமானது திருவாலவாய்க் கோயிலிற்சென்று வணங்கிப், பின்னர், நீடும் யானையின்மேல் ஏறி நீளும் வீதி வழியே அரச உலாப்போந்தனராகி,

1011. (இ - ள்) வெளிப்படை. விளங்குகின்ற மணி மாளிகை வாயிலில் யானை மேனின்றும் இறங்கி, விளக்க மிக்க கொலு மண்டபத்தில் வந்து, பொன்புனைந்த சிங்காசனத்தின் மேல், அழகிய சாமரைகளின் மெல்லிய காற்று வீசப்பெற்ற வெண்குடை நீழலில் உலகங்காவலை மேற்பூண்டு (மூர்த்தியார்) அரசு வீற்றிருந்தனர். இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன. ௪௪

1010. (வி - ரை) **நெருங்கிய மங்கல ஓசை மல்க** - பலவகையாகத் தொக்க மங்கல வாத்தியங்களும், மக்களின் பலவகை வாழ்த்தொலிகளும் நிறைய. வகையாலும் தொகையாலும் நிறைவு குறிக்க **நெருங்கிய** - என்றும், **மல்க** என்றும் கூறினார். 1003 பார்க்க. அத்திருப்பாட்டிற் கூறியவை அரசனின்றிக் கிடந்த நாடு அரசரைப் பெற்ற களிப்பினாலாகிய முதல் நிகழ்ச்சி. இங்கு **மல்கிய ஓசைகள்** அவ்வரசர் விதிப்படி முடிசூட்டிக் கொண்டது கண்ட களிப்பினாலாகிய பின் நிகழ்ச்சி. முன்னர் விரிவாகக் கூறினாராதலின் இங்குச் சுருக்கிக் கூறினார்.

**சடை சூடும் மௌலி அணிந்தவர்** என்க. "சடைமாமுடியே முடியாவது" (1008) என்றது காண்க. இதனால் அவர் முடிசூட்டிக்கொண்ட சிறப்பியல்பு கூறப்பட்டது. அவ்வாறு சிறக்க முடி சூடியவர்.

**திருவாலவாய் சென்று தாழ்ந்து** - சொக்கேசரது திருக்கோயிலுக்குச் சென்று அவரை வணங்கி. அரசமுடி சூட்டிக்கொண்டவுடன் மூர்த்தியார் செய்த முதற் செயல் ஆலவாய்ப் பெருமானிடம் சென்று வணங்கியதேயாகும். இது, முன் அப்பெருமான் தமக்குச் செய்த பெருங்கருணைத்திறத்தின் பொருட்டும், இனித் தமது அரசாட்சிக்குத் துணை நின்று செலுத்தியருள வேண்டுவதாகிய திருவருளின் பொருட்டுமாம். சிறிது செல்வம் வரினும் அதின்மயங்கித் தருக்கி அரனை மறந்து மறம்பல செய்யும் உலகர் இதனை அறிந்துய்வது கடமை.

**சென்று தாழ்ந்து - களிற்றின் மிசைப் - போந்தார்** - என்றதனால் முடிசூடு மண்டபத்தினின்றும் திருவாலவாய்க்கு வணங்கப்போகும்போது வாகனமின்றி நடந்து சென்றார் என்பதும், அவ்வணக்கம் முடிந்த பின்னரே களிற்றின்மேல் ஏறி நகர்வலமாக வீதி போந்தார் என்பதும் உணரப்படும். சிவன்கோயிற் றரிசனத்துக்குச் செல்லும்போது வாகனமூர்ந்து செல்லலாகாது என்பது விதி.

நீடும் களிறு - முன்னர்க் கண்கட்டி விடப்பட்டபோது திருவருள் வசமாகித் தம்மை எடுத்துப் பிடரியில் கொண்ட என்று குறிக்க நீடு என்றார்.

நீள் மறுகு - ஆலவாய்க்கடவுள் பல அருட் டிருவிளையாடல்கள் செய்த அருளினால் நீளும் திருவீதிகள். இங்ஙாளிலும் அவை அவ்வருட்டிரு விளையாடல்களையே (ஆவணி மூல வீதி முதலிய) தத்தம் பெயர்களால் நினைவூட்டி நிற்பதும் கண்கூடு.

மேலையணிந்தவர் என்ற எழுவாய் வினைப்பெயர். 43

1011. (வி - ரை) மணிமாளிகை - அரசரது அரண்மனை. தயங்கும் மணிமண்டபம் - அதனுள் கொலு வீற்றிருக்கும் மண்டபம்.

பொன்னின் அரி மெல் அணை - பொன்னால் புனையப்பட்டுச் சிங்கம் சுமந்தது போல அமைக்கப்பட்டிருக்கும் அரச இருக்கை. மென்மை - பஞ்சு, தூவி முதலியவற்றை உள்ளே இட்டு, வீற்றிருக்க மெல்லியதாய்ப், பட்டு முதலியவற்றால் அமைக்கப் படுதல் குறித்தது. Soft cushion என்பர் நவீனர்.

சாமரைப்பூங்கால் - சாமரைகளை இருபுறமும் மெல்ல வீசுதலால் உளதாகும் மென்மையாக அசையும் காற்று. காமர் - சாமரைகளின் அழகு-வரிசையின் ஒழுங்கு-இவற்றையும், பூ - காற்றின் மென்மையினையும், குறித்தன. நவீனர், மேல் விசிறி (Punka) வீச அதன்கீழ் வீற்றிருக்கும் இயல்பு காண்க.

மன்னும் குடைநீழல் - உலகம் தன் கீழ்த்தங்கும் அரச ஆணைக்கு அடையாள மாகிய வெண்குடையின் நீழலிலே. நீழல் - உபசாரம். "வெண்கொற்றக் குடையும், நவமணி முடியும், சிங்காதனமும் மன்னவர்க்கே யுரிய சிறப்படையாளமாம்" (சிவஞா-போ -8-ம் சூ. சிற்றுரை) என்றது காண்க.

வையந் தாங்கி இருந்தனர் என்க. தாங்குதல் உபசார வழக்கு. அரசாளுதல் குறித்தது. "வையம் முறை செய்குவனுகில்" (1008).

அணை - நீழல் - ஏழனுருபுகள் தொக்கன.

அணைந்தவர் - சென்று - தாழ்ந்து - போந்தாராகி - இழிந்து - நீழல் - இருந்தனர். என்று இந்த இரண்டு பாட்டுக்களும் கூட்டி முடித்துக்கொள்க. 44

1012. குலவுந்துறை நீதி யமைச்சர் குறிப்பின் வைகக்,
கலகஞ்செய மண்செய லாயின கட்டு நீங்கி
நிலவுந்திரு நீற்றுநெ றித்துறை நீடு வாழ,
உலகெங்குநி ரம்பிய சைவமு யர்ந்து மன்ன, சடு

1013. நுதலின்கண்வி ழித்தவர் வாய்மை நுணங்கு நூலின்
பதமெங்குநி றைந்து விளங்கப் பவங்கண் மாற
வுதவுந்திரு நீ,றுயர் கண்டிகை, கொண்ட வேணி
முதன்மும்மையி னுலுல காண்டனர் மூர்த்தி யார்தாம். சசு

1012. (இ - ள்) வெளிப்படை. குலவுகின்ற பல துறைகளிலும் நீதிநடத்தும் அமைச்சர்கள் தமது குறிப்பின்படி நிற்கவும், கலகம் செய்த அமணர் செயலாயின கட்டு நீங்கி நிலவுகின்ற திருநீற்று நெறியும் துறையும் நீடுவாழவும், உலகமெங்கும் நிரம்பிய தன்மையுடைய சைவம் ஓங்கி நிலைபெறவும், சடு

1013. (இ - ள்) வெளிப்படை. நெற்றியின் கண் விழியுடையவராகிய சிவ பெருமானது வாய்மையாகிய நுண்பொருள் கொண்ட நூலின் பொருள் எங்கும் நிறைந்து விளங்கவும், பவங்கள் மாறவும் உதவுகின்ற திருநீறும், உயர் உருத்திராக்கக்

கண்டிகையும், கொண்ட சடையும் என்ற முதன்மைபெற்ற மும்மையினால் மூர்த்தியார் தாமே உலகத்தை அரசு செலுத்தினர். சசு

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

1012. (வி - ரை) **குலவுந்துறை** - அரசியலிற்பட்ட பற்பல துறைகளைக் குறித்தது. ஒவ்வோர் அரசியற் றுறையும் ஒவ்வோர் அமைச்சரின்கீழ் உள்ளன.

**நீதி அமைச்சர்** - அறநூல் விதித்தபடியே ஒழுகவல்ல அமைச்சர்கள். **நீதி** - நியதி - ஒழுங்கு.

**குறிப்பின் வைக - குறிப்பு** - வாக்கினாற் சொல்லாமலே கண்ணின் பார்வையால் வெளிப்படுக்கும் மன்னவனது உட்கோள். **வைகுதல்** - அதனை அறிந்து அதற்குத் தக்கபடி செய்தல். "கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி" என்பது நீதி நூல். **குறிப்பின் வைகுதல்** அமைச்சர்க் கின்றியமையாத இலக்கணமாம். இது பற்றியே அமைச்சு என்ற பகுதியில் மன்னரைச் சேர்ந்தொழுகல் என்றும் அதனை அடுத்துக் குறிப்பறிதல் என்றும் இரண்டதிகாரங்கள் வகுத்தோதினர் திருவள்ளுவனார். அவற்றுள் "குறிப்பறிந்து காலங் கருதி" என்றும், "குறிப்பிற் குறிப்புணர்வார்" என்றும், "நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற், கண்ணல்ல தில்லை பிற" என்றும் பலவாறாக அமைச்சர்க்கு இஃதின்றியமையா தென்பதனை வற்புறுத்தியதும் காண்க.

**கலகம்...கட்டு** - அமணரது கலகம்பற்றி 981-982-983-ல் உரைத்தவை காண்க. **கலகமாவது** தம்மளவில் நில்லாது பிறசமயத்துக் கிடையூறு விளைத்தல். **செயலாயின கட்டு நீங்கி** - அவ்வாறு செய்வதனாலாகிய இன்னல்களின் தொடக்குமுற்றும் நீங்கி. **கட்டு** - சைவத்தை விளங்கவொட்டாமற் செய்த பந்தங்கள். மலக்கட்டு நீங்கிய வழியே உயிர் தழைக்கும் என்ற உண்மையும் காண்க. சமணர் கலகம்பற்றி அப்பர் சுவாமிகள் ஆளுடைய பிள்ளையார் சரிதங்களில் வருவன காண்க. "கலகமிடும் அமண்முருட்டுக் கையர்" என்ற திருத்தொண்டர் புராண வரலாறும் காண்க.

கட்டுநீங்கி - நீடுவாழ - உயர்ந்துமன்ன உதவும் மும்மையினால் - மூர்த்தியார் - உலகாண்டனர் என இந்த இரண்டு பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க.

**நிலவும்...வாழ - நிலவுதல்** என்றும் அழிவில்லாது இருத்தல். **நீற்று நெறித் துறை** - நீற்று நெறியாவது சிவநெறி. இதுவே ஒளிநெறி, பெருநெறி, திருநெறி, அருணெறி என்று பலவாறாகப் பாராட்டித் தமிழ் மறைகளாற் போற்றப்படும். **நெறி** - ஒழுகிச் செல்கின்ற வழியினையும், **துறை** - (அவ்வழியில்) புகுதல், நிற்றல், இருத்தல் முதலிய தொழில் நிகழும் இடத்தையும் குறிக்கும். நெறியும் துறையும் என்க. உம்மைகள் தொக்கன. "நிலை கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்" (திருவதிகை) என்ற அப்பர் சுவாமிகள் தேவாரமும், "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க" (திருஞா - புரா - 1), "தூயதிரு நீற்றுநெறி யெண்டிசையுந் தனிநடப்ப" (ஷை 23) என்றவையும் காண்க.

**உலகு எங்கும் நிரம்பிய சைவம்**-சைவநிலையே உலகமெங்கும் நிரம்பியுள்ளது என்பதாம். சிவசத்தி யடையாளங்களே உலகெல்லாமாவது என்பது, "சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ் வுலக மெல்லாம், ஒத்தொவ்வா வாணும் பெண்ணு முயர்குண குணியுமாகி, வைத்தன னவளால் வந்த வாக்கமிவ் வாழ்க்கை யெல்லாம், இத்தையு மறியார் பீட லிங்கத்தி னியல்பு மோரார்", "யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே, மாதொரு பாக னார்தாம் வருவர்" என்ற சிவஞானசித்தியாராலும், "காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன், கண்டே னவர்திருப் பாதங் கண்டறி

யாதன கண்டேன்" (அப்பர்சுவாமிகள் - காந்தாரம் - திருவையாறு) என்ற தமிழ்மறையின் உள்ளுறையினைச், "சத்தியுஞ் சிவமுமாஞ் சரிதைப், பன்மை யோனிகள் யாவையும் பயில்வன பணிந்தே" என்று விரித்த திருநாவுக்கரசர் புராண (374)த்தாலும், வேதங்களாலும் அறிக. சைவமே எல்லாமாய் நிற்பதென்ற உண்மை "இதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி, நீதியினா லிவையெல்லா மோரிடத்தே காண நின்றதி யாதொரு சமய மதுசமயம்" (சிவஞானசித்தி - 8-13) என்றதனாலுணர்த்தப்படும்.

**உயர்ந்து மன்ன** - இங்கு உலகமெங்கு நிரம்பிய சைவம் எஞ்ஞான்றும் மன்னியிருத்தல் ஒரு தலையாகவே அதனுக்காக முயற்சி ஒன்றும் வேண்டா என்பாருளராதலின், அந்த ஐயம் நீக்க **உயர்ந்து மன்ன** என்றார். ஏனைச்சமயங்களுக்குத் தாழ்ந்ததாகவாவது, அவற்றோடொப்பாகவாவது, இராமல், இதுவே எல்லாவற்றினும் உயர்ந்தது என்று நிலை பெற்றிருக்க என்றபடியாம். "மௌனமோலி யயர்வறச் சென்னியில் வைத்து ராஜாங்கத்திலமர்ந்தது வைதிக சைவம் அழகி தந்தோ?", "சைவமுதலாம் அளவில் சமயம் வகுத்து" என்பனவாதி தாயுமானார் திருவாக்குக்களும் கருதுக. 45

1013. (வி - ரை) **நுதலின்கண் விழித்தவர் - கண்** - ஏழனுருபு. விழியவர் என்பது **விழித்தவர்** என வந்தது. நெற்றியில் உள்ள கண்ணை, உலகமெல்லாம் இருண் மூடியதொரு காலத்தில், அவ்விருளைப் போக்கி ஒளி தருதற் பொருட்டு விழித்தவர் - திறந்தவர் என்றுரைத்தலுமாம். "மலைமடந்தை விளையாடி வளையாடு கரத்தான் மகிழ்ந்தவன்கண் புதைத்தலுமே வல்லிருளா யெல்லா, வுலகுடன்றான் மூடவிருளோடும்வகை நெற்றி யொற்றைக்கண் படைத்துகந்த உத்தமனூர்" (தக்கராகம் - திருக்கலயநல்லூர் - 4) என்ற ஆளுடையநம்பிகள் தேவாரம் காண்க. இவ்வாறு ஒரு காலம் நுதற்கண் திறந்து ஒளி தந்ததுபோலவே உண்மை தெளிந்து உலகம் உய்தற் பொருட்டு நுணங்கு மெய்நூல்களையும் இறைவர் அருளினர். **அந்நூல்களின் பதம் எங்கும் விளங்க** மூர்த்தியார் அரசு செய்தளித்தனர் என்ற குறிப்பும் காணத்தக்கது. "மேவியவெந் நரகத்தி லழுந்தாமை நமக்கு மெய்ந்நெறியைத் தான்காட்டும் வேதமுதலானை" (கொல்லிக் கௌவாணம் - திருக்கானாட்டு முள்ளூர் - 10) என்ற நம்பிகள் தேவாரத்தினும் "நாயகன்கண் நயப்பால் நாயகி புதைப்ப வெங்கும், பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித், தூயநேத் திரத்தி னாலே சுடரொளி கொடுத்த பண்பிற், றேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேச தென்னார்" (1-52) என்ற சிவஞானசித்தியாரினும் உள்ள கருத்துக்கள் ஈண்டுச் சிந்திக்கத்தக்கன.

மற்றொருகாலம் மன்மதனை எரிக்க நுதலின் கண்ணை விழித்தனராதலின், அதற்கிணங்கக் காமக்குரோத முதலியவற்றாலுண்டாகும் **பவங்கள்மாற** உதவும் சிவசாதனங்களை உதவினர் என்ற குறிப்பும் காணத்தக்கது.

**நுணங்கு நூல்** - நுண்ணியனவாகிய உண்மைப் பொருள்களை விளக்கும் வேத சிவாகமமாதி சித்தாந்த நூல்கள். **நூலின் பதம்** - அவற்றால் உணர்த்தப்படும் சிவநெறி. **பவங்கள்** - பாவங்களின் வழித்தாய் வரும் பிறவியும் அதனைப் பின்பற்றி வரும் துன்பங்களும். **உயர் - கொண்ட** என்ற அடைகளின் பொருத்தமுங் காண்க.

**உதவும்** - சாதனமாய் நிற்கும். விளங்கவும் - மாறவும் - உதவும் என்க. **உதவும் மும்மை** என்க. **விழித்தவர்** உதவும் என்று கூட்டியுரைப்பினு மமையும்.

**முதல்** - முத்தி சாதனங்களில் முதன்மைபெற்ற.

**முதல் மும்மையினால் உலகாண்டனர் மூர்த்தியார்தாம்** - இப்பாட்டினால் "மும்மையா லுலகாண்ட மூர்த்தி" என்ற முதனூற் றொடரை விரித்துணர்த்தியபடி கண்டுகொள்க. 46

1



2

1. திருவாலவாய்க் கோயில்

(உட்பார்வை - சுவாமி அம்மன் விமானங்களும் - பொற்றுமரைத் தீர்த்தமும்)

—பாட்டு - 1913 - பக்கம் - கஉ00

2. மூர்த்தி நாயனார் - செப்புப் படிமம்

1014. ஏலங்கமழ் கோதையர் தந்திற மென்று நீங்குஞ்
சீலங்கொடுவெம்புலன் றெவ்வுடன் வென்று நீக்கி
ஞாலந்தனி யேமி நடாத்தி நலங்கொ ளூழிக்
காலம்முயிர் கட்கிட ரான கடிந்து காத்து, சஎ

1015. பாதம்பர மன்னவர் சூழ்ந்து பணிந்து போற்ற
ஏதம்பிணி யாவகை யிவ்வுல காண்டு தொண்டின்
பேதம்புரி யாவருட் பேரர சாளப் பெற்று
நாதன்கழற் சேவடி நண்ணின ரண்ண லாரே. சஅ

1014. (இ - ள்) வெளிப்படை. மயிர்ச்சாந்து மணம் வீசுகின்ற கூந்தலினை உடைய பெண்களின் தொடர்பினை என்றைக்கும் நீங்கிய துறவொழுக்கமாகிய சீலத்தினை மேற்கொண்டவராய், வெவ்விய ஐம்புலவின்பங்களைப் பகைவர்களுடனே வென்று நீக்கி, உலகினைத் தனி ஆணையினால் ஆட்சி செலுத்தி நன்மைகொள்ளும் ஊழிக்காலம் உயிர்களுக்கு வரும் இடர்கள் வாராமே காத்து, சஎ

1015. (இ - ள்) வெளிப்படை. தமது பாதங்களை வேற்றரசர்கள் சூழ்ந்து பணிந்துபோற்றக், கெடுதிகள் பீடிக்காதவகையால் இவ்வுலகினை அரசாண்டு திருத்தொண்டினின்றும் விலகாத அருட்பேரரசும் ஆளப்பெற்று, இறைவனுடைய கழலணிந்த திருவடிகளைப் பெருமையுடைய மூர்த்தியார் அடைந்தனர். சஅ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

1014. (வி - ரை) ஏலம் கமழ்...சீலம்-துறவுநிலை. அறுபத்துமூன்று நாயன்மார்களுள் துறவொழுக்கம் பூண்டாரிருவர். அவர்களாவார், அப்பர் சுவாமிகளும் மூர்த்தி நாயனாருமாம். "மூர்த்தியா ரப்பர் நல்ல துறவறம்" (37) என்பது திருத்தொண்டர் புராண வரலாறு. உலக நலம் எதனையும் விரும்பாமலே அரசாட்சியினை ஏற்றது போலவே, எவ்வித உலகப் பற்றுமின்றி அவ்வரசாட்சியினை மூர்த்தியார் செலுத்தினர் என்பது இப்பாட்டால் அறிவிக்கப்பட்டது. இந்நாளிலோ எனின், அரசாட்சியின் எந்தப் பயனுமற்றதொரு சிறு பகுதியேயாயினும் அதனை மக்கள் விரும்பி அதனை அடைவதன் பொருட்டுப் பெரும்போரும், பெரும்பொருட் செலவும், தகுதியற்ற பல செயல்களும் செய்து, "பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்" புல்லறிவாண்மை பெருகிவரக் காண்கிறோம். ஒரு சிறு அரசாங்க பதவிதானும் மக்களைச் சுயநலத்தில் அழுத்திப் பற்பல தாழ்வுகளிற் புகுத்துவது எளிதில் இசைவதாகின்றது. இதனைப் பல துறையினும் அறிந்த அமைச்சர் பெருமானாகிய ஆசிரியர், உண்மை நாயன்மார்களாகிய எந்தம்பெருமக்களது உயர்வையும் அருமையினையும் எடுத்துக் காட்டுவாராய் இங்கு மூர்த்தியாரது முழுத் துறவொழுக்கத்தினை விதந்து எடுத்து விரித்தனர். இவ்வரசாட்சியினையும் மூர்த்தியார் விரும்பினாரல்லர். அவர் விரும்பியது "வன்மைக்கொடும் பாதகன் மாய்ந்திட, நன்மை அரசன் இப்புவிதாங்க வேண்டும்"மென்பதொன்றுதான். பின்னர், இறைவன் "நீயே அரசு கைக்கொண்டு முன்புள்ள துன்பநீங்கக் காத்துப் பணி செய்து எம்மூலகடைக" என்றருளியதனால் "அருளினாலாகில் வையந்தாங்குவன்" என்றதுவே அவர்தம் மனநிலை (1000).

"ஐவம்புலன்" - "ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே யுள" என்றபடி ஐந்து புலங்களினின்பங்களும் ஒருங்கே துய்க்கப்படும் மகளிர் இன்பத்தை நீக்கியதேயன்றிக், கண் செவி முதலிய தனிப்புலனின்பங்களையும் மூர்த்தியார் விழையாது நீக்கினர் என்பார்,

**வேம்புலன் - வேன்று - நீக்கி** என்றார். ஒவ்வொரு புலனின்பமே மக்களை மயக்கிக் கேடுகளில் ஈர்த்துத் தள்ளவல்லதென்பது பெரியோர் கண்ட உண்மையும் அனுபவமுமாம். "மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத்து" - (திருவாசகம்).

**புலனை வெல்லுதலாவது** புலனின்பத்தைப் பற்றிக்கொண்டு அவற்றின் பின் தாம் செல்லாமல் தம்மைப் பின்பற்றி அவை நிற்குமாறு செய்தல். "தம்மை யைந்து புலனும்பின் செல்லுந் தகையார்" (சண்டீசர் - புரா - 2). இதற்குப் புலன்களை அடக்குதல் என்று பொருள் கொள்வாருமுண்டு. அது பொருளன்றெனத் திருமூலர் மிக உருசிபட உரைத்தருளினர். "அஞ்சு மடக்கி னசேதன மாமென்றிட், டஞ்சு மடக்கா வறிவறிந் தேனே" (திருமந்திரம் - ஐந்திந்திரிய மடக்குமுறைமை 7-330).

**வேம்புலன் தெவ்வுடன்** - தெவ் - பகை. அரனடியாரை வன்மை செய்து மூர்த்தியாரையும் அந்தம் இலவாம் பிறை செய்வித்த அமண்கையர்களது பகைமை. அவர்களைச் சார்ந்த வடுகக்கருநாட மன்னன் இறந்து பட்டானெனினும், அவனை அவ்வாறு செய்யும்படி தூண்டிச் சைவத்துக்குப் பகைமை பூண்ட சமண்கையர்களது சார்பு அந்நாட்டில் இருந்தது. ஆதலின் அத்தகைய பகைகள் சைவமக்களைத் தாக்காமல் வென்று நீக்கினர். இது, அவ்வவர்களை அவரவர்க்குரிய அளவில் அமைந்து நிற்கச் செய்தலினாலும், வன்மை புரிவோரைத் தண்டித்தும் நாடு கடத்தியும் முறை செய்தலினாலும், அவர்களுட் பொய்விட்டு உண்மைச் சைவத்தினைச் சார வருவோரை உடன் தழுவிச் சைவராக்கி உயர்த்தியும் பிறவாறும் ஆணை புரிதலினாலும் ஆம். தண்டியடிகள் புராணமும் திருஞானசம்பந்த நாயனார் புராணமும் பார்க்க.

**தெவ்வுடன் வென்றுநீக்கி** - மூர்த்தியார் அரசு பூண்டது புறப்பகையாய்ச் சைவத்துக்கு நேர்ந்த இப்பகையை நீக்குதல் கருதியதாதலின் இவ்வாறு எடுத்துக் கூறியதுமன்றி, **உடன்** என்ற உருபினைத் **தெவ்** என்றதனோடு புணர்த்தி யோதினர். இது புறப்பகை வெல்லுதல் குறித்தது. பரமன்னரை வென்றது வரும்பாட்டிற் காண்க.

**வேம்புலன் வென்று** - என்றது உட்பகை வெல்லுதல் குறித்தது. இதனால் "மேன்மை மன்னரைப் புவிசார்வதென்று?" (985) எனக் கவன்றுராதலின் அப்பண்பு பொருந்த நடத்துவித்த திறம் கூறியபடி.

இந்நாளின் அரசாட்சியின் குறிக்கோள் உடல் - உடைமைகளின் புறக்காவலுடன் நின்று விடுகின்றது. அது உயர்ந்த இலக்கியமாகாது. புலப்பகையாகிய உட்பகையினின்றும் உயிர்களைக் காக்கவேண்டுவது அரசாட்சியின் பெருநோக்கமாதல் வேண்டுமென்பதாம். இவ்வாறு அன்பினைச் செய்யப்பட்ட இது தற்பயன் குறியாது பலகாலம் சிவனை நினைந்து அவனது சீர்பரவச் செலுத்தியபோது அருளாக உருப்படும். படவே, அது சிவபுண்ணியமாகி அவனருளைத் தேடித்தரும் என்பது.

**ஞாலம் தனி நேமி நடாத்தி** - உட்பகை புறப்பகையுடன் வென்று நீக்கிவிட்டாராதலின் உலகத்தைத் தம்முடைய தனிக்காவல் பெற முறை செலுத்தினர் என்பதாம். **தனி நடாத்துதல்** - வேறொருவரும் இதனிற் பங்கிடாதபடி தாமே செலுத்துதல்.

**நேமி** - அரசாணையைச் சக்கரமாக உருவகம்செய்து கூறுதல் மரபு.

**ஊழிக்காலம்** - நீண்டகாலம் என்ற பொருளில் வந்தது. இங்குக் காலத்தின் அளவு ஒருவரது வாழ்நாளின் அளவாகக் குறுகியிருப்பினும், அதன் பயன் நீடியிருப்பதென்பதும் குறிப்பு.

**உயிர்கட்கு இடரான காத்து** - தம்மீழ் வாழும் எல்லா வுயிர்களுக்கும் வரும் எவ்விதத் துன்பங்களும் வாராமற் காத்து. இது அரசாங்கத்தின் முக்கிய கடமை.

"மாநிலங்கா வலனுவான்" (121), "நினது சிலைக்கீழ்த் தங்கி யினிதுண்டு நீங்கின்றி யிருந்தோம்" (695) என்ற விடங்களில் உரைத்தவை பார்க்க. இக் கருத்துப்பற்றியே கழறிற்றறிவார் நாயனார் அரசாட்சியை ஏற்பதன் முன்பு இறைவனிடம், "யாரும் யாவும் கழறினவும் அறியும் உணர்வும்", பிறவும் வேண்டிப் பெற்றனர் என்ற (கழறிற் - புரா - 14) வரலாறும் சிந்திக்க.

**நீறு** - மனத்தூய்மைக்கும், **உருத்திராக்கம்** கண்ணேட்டத்துக்கும், **சடைமுடி** அபேதத்துக்கும் அறிகுறியாவன என்றும், இவ்வியல்புகளின்றி வெறும் வேடத்துக்காக இவற்றைத் தரிப்பதிற் பயனில்லை என்றும், மூர்த்தி நாயனார் புறவேடத்தின் வழி அகத்திலும் ஒழுகினார் என்றும் இம்மூன்றும் சிவகாருண்ணியத்திற்கு அறிகுறிகள் என்றும் இங்கு விசேடவுரை காண்பாரு மூண்டு.

மூர்த்தியார், இவற்றைச் சிவபெருமானது அருளடையாளங்களாகக் கொண்டு தாங்கினாரேயன்றித் தாம் உயிர்களின்மேல்வைத்த கருணைக் கறிகுறியாகத் தாங்கினாரல்லர். "வயங்கு நீறு", "ஐயன் அடையாளம்," "தாங்கும் மொய்புன்சடை" (1008) என்றவை காண்க. பொது நோக்காக உலகியலில் உயிர்கள் மேற் செல்வதும், சிவ காருண்யம் என்ற பெயரால் சமணர் புத்தர் முதலாயினோர்களது அறவுரைகளிற் காணப்படுவதுமாகிய கொள்கை வேறு. அது பசு புண்ணியத்தின்பாற்படும். அதனினும் பெரிதாய் இங்கு மூர்த்தியார் தாங்கிய நிலை வேறு. "அமண் குண்டரிற் போதுபோக்கும், வன்மைக்கொடும் பாதகன் மாய்ந்திட" (985) என்றும், "மூன்றைச் செயலாம் சமண்போய்" (1000) என்றும், "கலகஞ்செய் அமண்முத லாயின கட்டு நீங்கி" (1012) என்றும் கூறியவாற்றால் மூர்த்தியாரின் திருவுள்ளநிலை விளங்கும். அவர் உலகாளக் கைக்கொண்ட நீறு கண்டிகை சடை என்ற மூன்றும் "ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே சூழ்க; வையகமும் துயர் தீர்கவே" என்ற தேவாரத் திருவாக்காலும், "ஆழ்கதீய தென்றேதிற்; நயனெறி, வீழ்கவென்றது; வேறெல்லா மரன் பெயர் சூழ்க வென்றது; தொல்லுயிர் யாவையும், **வாழ் யஞ்செழுத் தோதி வளர்கவே**" என ஆசிரியர் சேக்கிழார் பெருமான் அதற்கு வகுத்த பேருரையாலும் அறியப்படுகின்றபடி உலகம் சிவநெறியிற் செழித்தோங்கும் கருத்தையே விளக்குவனவன்றிச் சாமானியமாய் அறியப்படுகின்ற சிவகாருண்ணியம் என்றமட்டில் அமைந்துபடுவன அல்ல. இது எல்லா வுயிர்களையும் சிவனது பெருநெறியில் வாழவைப்பதும், அல்லாதவற்றை நீக்குவதும் ஆகிய சிறப்பாகிய சிவபுண்ணியமென்னும் பேரருட்டிறம். "தெவ்வுடன் வென்று" என்றதும் காண்க. சிவனதடையாளங்களாகிய நீறு கண்டிகை சடை என்ற சாதனங்களை வெறும் வேடத்திற்காகப் புனைந்தாலும், விருப்பமின்றி உண்ணினும் பயன்தரும் மருந்துபோல, அவை அம்மட்டிற் பயன் தந்தேவிடும் என்பது நூற்றுணிபாம். அன்றியும் அத் திருவேடத்தைக் கண்டு ஈடுபடுவார்க்கு அவை பயன்தருதல் ஒருதலையாம். 47

1015. (வி - ரை) **பரமன்னவர்** - வேற்றரசர். தெவ்வரை வென்றனர் என்பது மேற்பாட்டில் கூறினாராதலின், அவ்வாறு வெல்லப்பட்ட பரமன்னரும், வெல்லப்படாமல் தாமே இவரது நீதியும் ஆணை வலிமையும் கண்டு வந்து சாரும் மன்னரும் வந்து பாதம் பணிந்து போற்றினர் என்க. திருவாதவூரடிகளது அமைச்சுத் திறத்தினை நயந்து பலதேய மன்னர்களும் தாமே வந்து பணிந்து நட்புரிமை கொண்டு நடந்தனர் என்ற செய்தியை நினைவுகூர்க.

**ஏதம்...ஆண்டு** - "தெவ்வுடன் வென்று - பரமன்னவர் பணிந்து போற்ற" என்றவாற்றால் புறப்பகையால் வரும் ஏதம் பிணியாவகையிலும், "வெம்புலன்" (1014) என்றதனால் அகப்பகையால் வரும் ஏதம் பிணியாவகையிலும் உலகாண்டனர் என்க.

தொண்டின் பேதம் புரியா - சிவத்தொண்டினின்றும் பிரியாத - சிறிதும் திறம்பாத. அருட்பேராசு - சிவனதருளின் கீழதாகிய பெரும்பாக்கியம். உலகாளும் அரசினும் அரனது திருத்தொண்டாகிய அரசே பெரிது என்று காட்டுவார் இவ் வுல காண்டு என வாளாகூறி, அருட்பேராசு எனச் சிறப்பு அடைமொழி தந்து விதந்து எடுத்துக் கூறினர். உலகுயிர்மேல் வைத்த சீவகாருண்ணியத்தினும் சிவனருட் பெருமையே பெரிதெனக் கொண்டனர் மூர்த்தியார் என்பது காண்க. (உலகு) ஆண்டு என்றமைந்த ஆசிரியர், (பேரரசு) ஆளப்பெற்று என்று சிறப்பித்துக் கூறிய திறனும் இக் கருத்தே பற்றியது. மேல்வரும் பாட்டில் களிற்றரசர் என்னுது களிற்றன்பர் என்றதும் காண்க.

மூடிமன்னர்களாகிய தமிழ் மூவேந்தர்களில் ஒருவராய், "மன்னவரும் பணிசெய்ய வடநூல்தென் றமிழ்முதலாம், பன்னுகலை பணிசெய்யப் பாரளிப்பா" ராகிய ஐயடி கள் காடவர்கோ னுயனுர் இக் கருத்துப்பற்றியே (உலக) "அரசாட்சி இன்னலென விகழ்ந்ததனே யெழிற்குமரன் மேலிழிச்சி, நன்மைநெறித் திருத்தொண்டு நயந்தளிப்பா ராயினுர்" என்ற சரிதம் கேட்கின்றேம். அவரது திருவுள்ளநிலை இக்கருத்தே பற்றிய தென்பது "படிமுழுதும் வெண்குடைக்கீழ்ப் பாரெலா மாண்ட, முடியரசர் செல் வத்து மும்மை—கடியிலங்கு, தோடேந்து கொன்றையந்தார்ச் சோதிக்குத் தொண்டு பட், டோடேந்தி யுண்ப தறும்" என்று அவர் அருளிய கூேத்திரத் திருவெண்பா வினு லறியப்படும். இதனையே வியந்து எடுத்துப் பாராட்டி "முடியரசா, மத்திற்கு மும்மைநன் முரைத் காயைய மேற்றலென்னும், பத்திக்கட லேயடிகள்" என்று அதித் தருளினர் நம்பியாண்டார்நம்பிகள் (திருத்தொண்டர் திருவந்தாதி 56). "போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி யின்பமும்" என்ற திருவாசக முதலியவை காண்க.

"கோல நீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்;
மேலை யிந்திர னரசினைக் கனவினும் வெஃகேன்;
மால யன்பெறு பதத்தையும் பொருளென மதியேன்;
சால நின்பதத் தன்பையே வேண்டுவன் றமியேன்"

(கந்தபுரா - யுத்தகாண் - பானு - வதைப்பட - 154) என்று விரவாகுதேவர் கேட்ட வரத்தின் உள்ளுறையும் கருதுக.

அண்ணலார் - பெருமையுடையவர். பெரும்பேறுகிய சிவனடிப் பேறுபெற்ற இடமாதலின் இப்பெயராற் கூறினர். ஏகாரம் தேற்றம்.

பல மன்னர்கள்—என்பதும் பாடம். 48

1016. அகல்பாறையின் வைத்து முழங்கையை யன்று தேய்த்த
விகலார்களிற் றன்பரை யேத்தி முருக னுராம்
முகில்சூழ்நறுஞ் சோலையின் மொய்யொளி மாட வீதிப்
புகலூர்வரு மந்தணர் தந்திறம் போற்ற லுற்றும். சகூ

(இ - ள்) வெளிப்படை. அகன்ற சந்தனப் பாறையில் வைத்து அன்று தமது முழங்கையை (எலும்புதிறந்து மூளைகாணத்) தேய்த்த, போர்வல்ல யானைமேற் போந்த அன்பராகிய மூர்த்தியாரைத் அதித்து, முகில்சூழ்ந்த வாசனையுடைய சோலைகள் சூழ்ந்த நெருங்கிய ஒளி பொருந்திய மாடவீதியுடைய திருப்புகலூரில் அவதரித்த முருகனுராகிய அந்தணரது திறத்தினைத் அதிக்கத் தொடங்குகின்றேம்.

(வி - ரை) இது கவிகூற்று. ஆசிரியர் தமது மரபின்படி இதுவரை கூறிவந்த சரிதத்தை முடித்துக் காட்டி, மேல்வரும் சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்கின்றார்.

**அகல்பாறை** - சந்தனம் தேய்க்கும் இடமகன்ற பாறை. "வட்டம் திகழ்" (987). **அகலுதல்** - பெருகுதல் என்று கொண்டு புகழாலும் சிறப்பாலும் பெருகும் என்றுரைத்தலுமாம். "மடங்கொன் றறிவகற்றுங் கல்வி" (குமரகுருபரர் - நீதிநெறி விளக்கம்) என்றது காண்க. ஏனைக்கற்கள்போல் வெறும்பாறையாய் நின்றொழியாது இது திருவாலவாயுடையார்க்குச் சந்தனக்காப்புத் தர உதவுதலும், மூர்த்தியாரது செழுமுழங்கை தேய்க்கப்பெற்று வாசமெல்லாம் கமழவிளங்குவதும், இவை காரணமாக அன்று முதல் இன்றுவரையும் இனிமேலும் புகழ்பெறுவது மாகிய பாறை என்பதாம். இனி, **அகல்** - நீங்கும் என்று கொண்டு மாயாபதார்த்தங்களா யொழியும் ஏனைக்கற்பாறைகளின் வகுப்பினின்றும் நீங்கும் - சிவசாதனமாகும் - என்ற குறிப்புப் பட உரைத்தலுமாம்.

**முழங்கையை** - இறைவனது மெய்ப்பூச்சுக்குரிய சந்தனக்கட்டைக்கு ஒப்பாகத் தேய்க்க உதவும் முழங்கை (987). தோல் இரத்தம் நரம்பு எலும்பு மூளை என்ற புலால்கமழும் தன்மைபோய் நல்ல மணமுடைப் பண்டமாக இறைவன் ஏற்றுக் கொண்டதும், பின்னர் இறைவனருளினால் தேய்ந்த புண் ஊறு தீர்ந்து வண்ண சிரம்பி வாசங்கலந்து விளங்கியதுமாகிய முழங்கை என்று காட்டியபடி (990).

**அன்று** - பாதகச் சமண அரசன் மிறை செய்து (983) சந்தனக்கட்டை தேடிக் கொள்ளும் துறையும் அடைத்துக் கொடுங்கோன்மை செய்த அதனால் (985) இறைவனுக்கு அணிநற்றிரு மெய்ப்பூச்சுக்கு உதவும் தமது நியதியாகிய திருப்பணிக்கு மூட்டு நேர்ந்த அன்று (987). **அன்று** - முன்னறிசுட்டு.

**தேய்த்த** - கட்டும் புறந்தோல் நரம்பு என்பு கரைந்து தேயச், சோரிகலுழ்ந்தி, என்புதிறந்து, மூளை புல்லும்படி (987 - 988) அன்பின் திணிவினால் முழங்கையினைத் தேய்த்த என்ற சிறப்புக் காட்டியது.

**இகலார் களிற்று அன்பர்** - அன்பின்றுணிவினால் கைதேய்த்த பின் இறைவனருளாலே அரசராக யானையால் எடுக்கப்பட்டுப் பிடரிமேற் கொள்ளப்பெற்ற அன்பர் (1001). **இகல்** - போர்வன்மை. **களிறு** - அரசயானை. "பெய்ம்மாமுகில் போற் பெரு கோடை நெற்றிக், கைம்மா" (998). யானையின் மேல் காணப்பட்ட அதனால் உலகிற்கு அரசராகி விளங்கியும், தாம் அன்பராகவே நின்று இறைவனது திருவடையாளங்களாகிய நீறு - கண்டிகை - வேணி என்ற **மும்மையினால் உலகாண்டவர்** என்று காட்டும் பொருட்டுக், **களிற்றரசர்** என்னாது **களிற்றன்பர்** என்றார். இதற்கு இவ்வாறன்றி, அன்பாகிய மதம் பொருந்திய யானை போன்ற அன்பர் என்று முன் உரைகாரர்கள் உரைத்தனர்.

**ஏத்திப்** - போற்றலுற்றும் - என்க. அதித்து அதன் துணையானை மேல் அதிக்க லுறுகின்றோம் என்றபடி.

**முருகனூர்ஆம்** - **அந்தணர்** - என்று கூட்டுக. அந்தணர்களுள், தாம் செய்த திருப்பணிகளின் தன்மையினால் முருகனை ஒப்பார் என்று எடுத்துச் சொல்லத்தக்க திறமுடையாராக ஆகும் என்ற குறிப்பும் காண்க. 1025-1026-1028 திருப்பாட்டுக்களில் இவர் செய்த திருப்பணியும் சிவபூசைத் திறமும் ஊரும் பேரும் மரபும் கூறி விரிக்கப்படுவன. இதனால் வருஞ்சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்தபடியாம்.

"தேவு சான்மணிப் பீடத்தி லீசனைச் சேர்த்தி, யாவி னேரைந்து மமுதமும் வரிசையா லாட்டித், தாவி லாததோர் வாலிதா மணித்துகில் சாத்திப், **பூவின் மாலிகை செய்யசாந் தத்தோடும் புனைந்தான்**" (குமாரபுரிப்படலம் - சுஅ), "முழு

தொருங் குணர்ந்திடு முருகன் யாவருந், தொழுதகு மிறைவனூற் முடர்பு நாடியே, விழுமிய கண்ணுதல் விமலன் முண்மலர், வழிபடல் புரிந்தனன் மனங்கொள் காத லால்" (மீட்சிப்படலம் - ஈஈ) முதலிய கந்தபுராண வரலாறுகளே இங்குக் கருதுக.

முகிழ் சூழ்...புகலூர் - முருகனுர் அவதரித்த திருப்புகலூர் என்ற நகரச்சிறப்பு. இதனைப் பின்னர் விரித்துக்கூறுவர். அன்றியும் முகிழ்சூழ் நறுஞ்சோலை அவர் மலர்ச் சோலைகளிற்சென்று கோட்டுப்பூ முதலியவற்றை எடுத்துத் தொடுத்துச் சாத்திப் பணி செய்த திருத்தொண்டினைக் குறிப்பித்ததும் காண்க. மேல்வரும் பாட்டிலும் இவ்வாறே குறிப்பித்தலும் கண்டுகொள்க. பிறவி வெப்பத்துக்கு அஞ்சிய உயிர்கள் புகலடையும் சிறப்புப்பற்றிப் புகலூர் எனப்படும் என்பர். அதனைக் குறிப்பாலுணர்த் துதற்கு இவ்வாறு அந்நகரத்தின் தண்மைச் சிறப்பினுல் தொடங்கிக் காட்டினுர். மேல்வரும் புராண இறுதியிற் றலவிசேடத்திற்கண்ட சிறப்புக்களும் பார்க்க.

திறம் - தொண்டின் வரலாறும் பண்பும். "மெய்மைத் தொண்டின்றிறம் போற்றி" (1030) என வரும்புராணத்திறுயில் முடித்துக் காட்டியதும் காண்க.

---

சரிதச்சுருக்கம் :—அன்புடைய நன்மாந்தர்களாற் பாராட்டப்பெற்ற பண்டைப் புகழுடையது பாண்டி நாடு. அதனிற்பாய்ந்து வளம்படுத்திக் கடல் புகுவது தாமிர பர்ணியாறு. அது பாய்வதனுல் அக்கடலும் முத்துக்கள் தருவதாயிற்று. சந்தனச் சோலை சூழ்ந்த தென்பொதியமாமலை அந்நாட்டுக்குத் தென்றலைத் தந்து குளிர்ச்சி செய்யும். அதனேடு, உலகினேயளந்த தெய்வத்தீந்தமிழும் அன்புதந்து தளிர்க்கும்.

செல்வத்தாலும் கல்வியாலும் நீடிய இந்நாட்டின் சிறந்த தலைநகரம் மதுராபுரி என்பதாகும். அத்திருநகரில் செய்யுள் மிக்கேறும் முத்தமிழ்ச் சங்கங்கள் நிலவின. அந்நகரம் குடிச்சிறப்பும் செல்வச்சிறப்பும் மிக்கு விளங்குவது. அத்திருநகரிலே தமிழ் நூலின் விளங்கும் செம்பொருள்தரும் ஆலவாயடிகளும் சங்கம் இருந்ததனுல் எல்லாவுலங்களினும் அதுவே மிக்க புகழ் பூண்டதன்றே?

அந்தப்பதியில், வணிகர் குலத்தில், சீரால் மிகுந்த பழங்குடியில், அக்குடி செய் தவப் பயனுக ஞானசியார் என்பவர் அவதரித்தார். அவர் சிவபெருமான் திருவடி களேயே மெய்ப்பற்றுகப் பற்றினவர். அத்திருவடிகளே தமக்குத் துணையும் தாம் அடையும் பொருளும் ஆவன எனக் கொண்டொழுகி வந்தனர். அவர் திருவாலவாயில் சொக்கலிங்கப் பெருமான் திருமேனிக்குத் தினமும் மெய்ப்பூச்சுக்குச் சந்தனக் காப்பு அரைத்துக் கொடுக்கும் திருப்பணியை வழுவாமற் செய்துவந்தனர்.

அந்நாளில் வடுகக்கருநாட அரசன் ஒருவன் நீதிவகையாலன்றிப் படை வலிமை யினுலே வலிந்து மண்கவரும் ஆசையால் பெரும்படைகொண்டுவந்து பாண்டியனேடு போர்செய்து வெற்றிகொண்டு பாண்டி நாட்டின் அரசாட்சியைக் கவர்ந்து மதுரா புரியின் காவல் பூண்டான். அவன் நன்னெறியாகிய திருநீற்றுச் சார்புடைய சிவநெறியிற் செல்லாது தீ நெறியாகிய சமணர் நிறத்தில் ஆழ்ந்து சிவனடியார்களே யும் அவர்களது அடிமைத் திறம் செல்லவொட்டாது வன்மை செய்வானுயினன். அவ்வாறு சமணத்திற்குட்படுத்த எண்ணி, மூர்த்தியாரையும் பல தீயமிறைகள் செய் தான். அவர் அவற்றுல் ஒன்றும் தடைபடாது தமது நியதியான திருப்பணியைச் செய்து வருவாராயினர். தந்தம் பெருமைக்கு அளவாகிய சார்பினின்றெழுதும் எமது பெருமக்களே யாவர் தடுக்க வல்லவராவர்? அதுகண்டு பொருத அக்கொடியோன் அவர் சந்தனக்கட்டை தேடிக்கொள்ளும் நிறைகளேயும் அடைத்தனன். அவர் சிந்தை

நொந்து "இக்கொடும்பாதகன் மாய்ந்திடத் திருநீற்று நன்னெறியைத் தாங்கும் மன்ன வனே இங்நாடு பெறுவதென்றே?" என்று எண்ணினர். அன்று பகல் முழுதும் சந்தனக் கட்டை தேடியும் பெறாது வருந்தி மனந்தளர்ந்து இறைவரது திருக்கோயிலுக்கு வந்தனர். "இன்று இறைவரது மெய்ப்பூச்சுக்குச் சந்தனம் முட்டுப்படினும் அதனைத் தேய்க்கும் இந்தக் கையினுக்கு முட்டில்லை" என்று துணிந்து, சந்தனப்பாறையில் தமது செழுமுழங்கையைத் தேய்த்தனர். இரத்தம் பெருகிற்று. தோலும் தசையும் நரம்பும் எலும்பும் தேய்ந்தன. எலும்பு திறந்து மூளை சொரிந்தது. "ஐயனே! அன் பின் துணிவினுல் இச்செயல் செய்யாதே! உன்னை அலைத்தவன் ஆண்ட நாடுமுற்றும் நீயே ஆண்டு, முன்பு வந்த துன்பமெல்லாம் போக்கி உலகத்தைக் காத்து உன் திருப் பணி செய்து நம் உலகு சேர்வாயாக!" என்று அன்றிரவே இறைவரது அசரீரியாகிய திருவாக்கு எழுந்தது. அதனை மூர்த்தியார் கேட்டனர். கையினது ஊறும் நீங்கி முன்போல அழகும் வண்ணமும் நிரம்பின. சிவமணங்கமழும் ஒளி பெற்ற திரு மேனியுடன் விளங்கினர் மூர்த்தியார்.

அந்த நாளிரவே அடியாரை அலைத்த அந்தக் கொடிய மன்னவன் இறந்து விரைந்து போய் எரிவாய் நரகில் வீழ்ந்தனன். அவன் மனைவியரும் சுற்றத்தாரும் ஏங்கினர். அமைச்சர் கூடி அவனுக்குரிய முறைப்படி ஈமக்கடன்களைக் காலையே செய்து முடித்தனர். அவனுக்கு மக்களில்லை. கூழும் குடியும் பிற எல்லா வளனும் உடையதாயினும் அரசனது காவலில்லாவிடின் நாடு நல்வாழ்வில் வாழமுடியாதென்று அமைச்சர் கவன்றனர். யானையைக் கண்கட்டி விட்டால் அதனுல் ஏந்திவரப்பட்ட வரை அரசராகக் கொள்ளத்தக்கதென்று துணிந்து அவ்வண்ணமே செய்தனர்.

அன்றிரவில் நிகழ்ந்தவற்றைக் கண்ட மூர்த்தியார் "எம்பெருமான் அருள் இது வாகில் உலகாளும் செயல் பூண்பேன்" என்று கொண்டு, உள்ளத்தளர்ச்சி நீங்கித் திருவாலவாய்த் திருக்கோயிலின் புறத்து வந்து நின்றனர். யானை அங்குச் சென்று மூர்த்தியாரைத் தாழ்ந்து எடுத்துப் பிடரிமேற் றரித்துக்கொண்டது. அது கண்ட நகரமாந்தர்கள் வாழ்த்தி மங்கல இயங்கள் முழக்கினர். மூர்த்தியாரை யானையினின் றும் இறக்கி முடிசூட்டு மண்டபத்திற்குக் கொண்டு சென்று முடிசூட்டுதற்குரிய சடங்குகள் செய்யலாயினர். "சமண் போய்ச் சைவம் ஓங்குமாகில் நான் அரசாட்சி யினை ஏற்றுப் புவி ஆள்வேன்; முடிசூட்டுதற்குரிய சடங்குக்குத் திருநீறே அபிடேக மாக, உருத்திராக்க மணியே அணிகலனுக, சடைமுடியே முடியாக இருக்கக்கடவன" என்று மூர்த்தியார் அருளினர். அது கேட்ட அமைச்சரும் உண்மை நூலறிவோரும் நன்று என்று பணிந்துகொண்டிசைந்து அவ்வாறே உரிய சடங்குகளை எல்லாம் செய்த னர். மூர்த்தியாரும் மங்கலஇசைகளும் மறைமுழக்கமும் வாழ்த்தொலியும் மல்க நாட்டின் அரசராக முடிசூடினர்.

முடிசூட்டு மண்டபத்தினின்றும் மூர்த்தியார் திருவாலவாய்த் திருக்கோயிலுக் குச் சென்று தாழ்ந்து அங்கு நின்றும் யானை மீதேறி நகரவீதியில் அரசுலாப் போந்து அரண்மனை வாயில் சேர்ந்து அரசமண்டபத்தில் சிங்காசனத்தில் அரசகொலு வீற் றிருந்தனர். அவரது குறிப்பில் அமைச்சர்கள் ஒழுகினர். சமண்கட்டு நீங்கித் திரு நீற்று நெறி நீடுவாழவும், உலகெங்கு நிரம்பிய சைவம் உயர்ந்து மன்னவும், சிவாகமங் களின் பதம் விளங்கப் பவங்கள் மாற உதவுகின்ற திருநீறும் கண்டிகையும் வேணியும் என்ற மும்மையினுல் உலகாண்டனர் மூர்த்தியார். பெண்ணுசையிற் சிறிதும் படாத முழுத் துறவொழுக்கம் பூண்ட மூர்த்தியார் ஐம்புலப் பகையாகிய உட்பகையும் சமணர் வேற்றரசர் முதலிய புறப்பகையும் நீக்கி உலகத்தை நெடுங்காலம் தனிமுடி

கவித்து அரசாண்டு எல்லா வுயிர்களுக்கும் வரும் துன்பநீக்கிக் காத்தனர். பரமன் னவர் தம்மடி பணிந்து போற்ற எவ்வகையாலும் உலகம் கேடுறுதபடி காத்துத் தமக்கீரிய திருத்தொண்டினையும் விடாது செய்து வாழ்ந்து இறைவனது திருவடி நீழல் சேர்ந்தனர்.

---

**தல விசேடம் :—மதுராபுரி** - இது பெரும்பாலும் **மதுரை** என்று வழங்கப் பெறும். கடம்பவனத்தில் முளைத்த சொக்கலிங்கப் பெருமானைத் தேவர்கள் பூசித்த தனை ஒருநாளிரவிற் கண்டு ஒரு வணிகன் அறிவிக்க அறிந்த குலசேகர பாண்டியன் கடம்பு அடர்ந்த காட்டைத்திருத்திக் கோயிலும் திருநகரமும் செய்தான். அப்போது சிவபெருமான் தமது தலையிற் சூடிய பிறையினிடத்துள்ள **மது**வைத் (அமுதத்தை) தெளித்துப் புனிதமாக்கிய காரணத்தால் இப்பெயர் பெற்றது. இதுபோலவே பற்பல அற்புதங்கள் பற்றிய காரணங்களால், நான்மாடக்கூடல், திருவாலவாய், கடம்பவனம், துவாதசாந்தத் தலம், பூலோக கயிலாயம், சிவராசதானி முதலிய பல பெயர்களை யுடையது. இதனைச் சுற்றி இன்றும்காணப்படும் பசுமலை, யானைமலை, நாகமலை, பன்றி மலை முதலியவை இங்குச் சிவனது அருள்விளையாடல்களையும் அருளின் எளிமைப்பாட் டினையும் விளக்கி நிற்கின்றன. வையையாற்றின் இருகரைகளும் இவ்வாறே அற்புதத் திருவருள் நிகழ்ச்சிகளை வெளிப்படுப்பன. இது பாண்டிநாட்டின் தலைநகராவதுடன் சிவபெருமான் அம்மையப்பராக அரசு வீற்றிருந்து அரசு செலுத்திய சைவத் தலைநகரு மாகும். சிவபெருமானும் முருகக்கடவுளும் தலைவர்களாகச் சங்கம் வீற்றிருந்து தமிழாராய்ந்த தலம். இத்தலத்தில் தமிழின் பொருட்டே இறைவன் வெளி வந்து பல திருவிளையாடல்களியற்றியருளினர். அகத்தியர், நக்கீரர், பரணர், கபிலர் முதலிய பொய்யடிமையில்லாத புலவர்கள் சங்கமிருந்து தமிழ் பரப்பிய தமிழ்த் தலைநகர். பொன், வெள்ளி, இரத்தினம், தாமிரம், சித்திரம் என்ற மணி மன்றங்கள் ஐந்தனுள் **வெள்ளியம்பல**மாகிய தலம். விராட்புருட உருவத்தில் துவாதசாந்தத் தலமாகவுள்ளது. சமண்காடு மூடிச் சைவப்பயிர் தழையவொட்டாது அமிழ்த்திநின்ற காலத்தில் திருஞானசம்பந்த நாயனார் எழுந்தருளிச் சமண்காடு போக்கிச் சைவம் தழைத்தோங்கக்கண்ட தலம். அவருடைய விசயத்துக்குக் காரணர்களாயிருந்த மங்கையர்க்கரசியம்மையார், குலச்சிறை மந்திரியார் இவர்களுடனே நின்றசீர் நெடுமாறராகிய கூன்பாண்டியர் நெடுங்காலம் அரசியற்றிச் சைவ சமயக் காவல் செய்த தலம். இத்தலத்திற் சிவனைப் பூசித்ததனால் இந்திரன் பழியும் வருணன் வயிற்று நோயும் தீர்ந்தன. இன்னும் பல முனிவர் தேவர் இருடியர் முதலியோர் பூசித்துப் பேறுபெற்றனர். இராமலட்சுமணர்கள் பூசித்து இராவண சங்காரத்துக்குரிய வரம் பெற்றனர். சிவபூசையின் பெருமையை உலகமறிந்து சிவபூசைசெய்து உய்யும் பொருட்டுச் சோமசுந்தரக் கடவுள் தம்மைத் தாமே பூதித்த மூர்த்தியாகிய "இம் மையே நன்மை தருவார்" எழுந்தருளி யிருக்கும் சிறப்புடையது. தம்மிடத்து அன் பால் நிறைந்த அடிக்குடியாகிய, பாண்டியர்கள் பொருட்டும், கௌரி - பொன்னனை யாள் - வந்தியம்மை - பாணபத்திரர் மனைவியார் முதலிய அம்மையார்களின் பொருட் டும், திருநீலகண்ட யாழ்ப்பாணர் - பாணபத்திரர் முதலிய பல அடியார்களின் பொருட்டும், திருவாதவூரர் - திருஞானசம்பந்த நாயனர் என்ற எந்தம் பெருமக்க ளான சமயாசாரியர்களின் பொருட்டும், பன்றிக்குட்டிகள் - கரிக்குருவி - நாரை முதலிய தாழ்ந்த பிராணிகளின் பொருட்டும் கருணையுருவம் தாங்கிவந்து இறைவனர் அநேகம் அருட்டிருவிளையாடல்களை யாவருங் காண இயற்றி யருளிய சிறப் புடையது. திருச்செந்தில் வேற்பெருமான் திருவருள்பெற்று விளங்கிய குமரகுரு

பர சுவாமிகளால் மீனுட்சியம்மையார் பிள்ளைத் தமிழ் முதலிய பிரபந்தங்கள் பாடப் பெற்றது. இன்னும் இதன் விசேடங்களை ஆலாஸ்ய மாகாத்மியம், நீபவநமகாத்மியம் முதலிய வடமொழி நூல்களாலும், திருவிளையாடற் புராணம் - கடம்பவனபுராணம் - நம்பி திருவிளையாடல் முதலிய தமிழ் நூல்களாலும், சங்கப்பழந்தமிழ்களாலும் அறிந்து கொள்ளலாம். விரிவான வரலாறுகள் திருஞானசம்பந்த நாயனூர் புராணம், திருநாவுக்கரசுநாயனூர் புராணம், கழறிற்றறிவார் புராணம், திருநீலகண்ட யாழ்ப் பாணர் புராணம் என்பவற்றினும், பிறண்டும் கண்டு கொள்ளத்தக்கன.

கோயில் - திருவாலவாய்; மதில் - கபாலிமதில்; தீர்த்தங்கள் - பொற்றாமரை, எழுகடல், வையை முதலியன; தலமரம் - கடம்பு; சுவாமி - சொக்கலிங்கப்பெரு மான்; அம்மை - அங்கயற்கண்ணம்மையார்.

இத்தலம் மதுரை என்ற இருப்புப்பாதை நிலயத்திலிருந்து கிழக்கே கற்சாலைவழி ¾ நாழிகையளவில் அடையத்தக்கது. *வையையாற்றின் தென்கரையில் உள்ளது.

---

கற்பனை :—1. சிறப்புடைய குடிகள் நிறைந்துள்ளது மாடங்களின் சிறப்பு. அன்புடைய நல்லோர்களாற் போற்றப்படுவது நாட்டுக்குச் சிறப்புத்தருவதாம். (968)

2. நன்னதிகள் பாய்தல் கடலில் முத்துவிளைதற்கு உதவி செய்வதாம். (969)

3. உலகெலாமளக்கும் மேன்மையும் தெய்வத் தன்மையும் பொருந்தியது தமிழ் மொழியாகும். (970)

4. மிக்க செய்யுள் அரங்கேறுதல் சங்கங்களுக்கு அழகு.

5. தமிழ்நூல் மெய்ப்பொருள் தருவது. அதனுள் விளங்கும் வாய்மை செம் மைப் பொருளாம். அதனை இறைவர் தந்தருளினர். (974)

6. உலகில் மனிதராற் பற்றப்படும் வேறு எவ்வகைப் பற்றுக்களும் விடத்தக்கன. சிவனடிப் பற்றே விடாது பற்றத்தக்க உண்மைப் பற்றாகும். (975)

7. உயிர்களுக்குச் சுற்றமும் தூணையும் சிவபெருமான் திருவடியல்லது வேறில்லை என்று தெளிந்து அதற்குத்தக ஒழுகுவது உயர்ந்தோர் தன்மை. (976)

8. சிவபெருமான் திருமேனிக்கு மெய்ப்பூச்சாகிய சந்தனக்காப்புத் தருதல் சிவ னுக்குகந்த இனிய திருப்பணியும் சிறந்த சிவபுண்ணியமுமாகும். (977). சந்தனக் குழம்போடு பனிநீர், குங்குமப்பூ, கோரோசனை, கத்தூரி, பச்சைக் கற்பூரம் என்பவற் றைக் கலந்து சாத்துதல் சிறந்தது. இது சிவனுக்குச் சிறந்த உபசாரமாம் என்பது ஆகமநூற் றுணிபு.

9. அற நூல்களில் விதித்தவாறன்றிப், படைவலிமை ஒன்றையே கருதிப் பிற மன்னரின் நிலங்களை வலிந்து கவர்தல் நீதியன்று. செங்கோன் மன்னர் இது செய்ய ஒருப்படமாட்டார். (978)

10. சிவனடிமைத் திறத்திற் பொருந்திய திருநீற்றுச்சார்புடைய சைவசமயத்திற் சாராது சமணம் முதலிய புல்லறிவிற் புறச்சமயத்திற் சார்வது உயிர்க்குக் கேடு செய்வதாகும். சார்ந்து பிழைக்க நல்ல சிவசமய மிருக்கப் பொல்லாப் புறச்சமயஞ் சார்வது பொய்யை மெய்யாக் கொள்வதாகும். அது "விளக்கிருக்க மின்மினித்

---

* குறிப்பு :—இடைக்காடர் பொருட்டு ஆலவாயுடையார் வையையாற்றின் தென்கரையில்போய் வீற்றிருந்தார் என்று புராணங் கூறுகின்றது. அதனைக்காட்டும் கோயில் பழய சொக்கநாதர் கோயில் என்று வழங்கப்படுகின்றது. அது இப்போது நகரின் வடபகுதியில் வையைத் தென்கரையில் உள்ளது. அதற்குத் தெற்கே பள்ளத் துத்தெரு என வழங்கும் இடமும் முன்னர் வையையாறு ஓடிய இடமாகும் என்று கூறுகின்றனர்.

தீக்காய்தல்" போலும், "கரும்பிருக்க விரும்புகடித் தெய்த்தல்" போலும் பயனற்ற செய்கையாம். நற்பயன் றராதொழிவது மட்டுமேயன்றிக் கேடு தருவதுமாகும். (980)

11. அரசராயினர் நற்சமயச் சார்புபற்றி ஒழுகுதல்வேண்டும். அது நாட்டுக்குப் பலவழியிலும் நலஞ் செய்யும். (980)

12. அவ்வாறு அரசன் தான் நற்சமயச் சார்புபற்றி ஒழுகும் நல்லூழ் பெறுவிடினும், தன் கீழ்வாழும் மக்களே மிகையும் பகையுமின்றி அவ்வவர் சமயச்சார்பில் நின்றமையும்படி பணித்து நிறுத்துதல் வேண்டும் (981). அரசன் தான் கொண்டொழுகும் சமயச்சார்பினுக்குள்ளாகும்படி வேறெந்தச் சமயத்தாரையும் பிறை செய்தலும், வன்மை செய்தலும், அவ்வவர் சமயவாழ்க்கையின் ஒழுகுதற்கு எவ்வகையாலும் தடை செய்தலும் தகாது. அவ்வாறு செய்தல் கொடுங்கோன்மையாம். (982)

13. தத்தமது பெருமைக்களவாகிய சார்பில் ஒழுகி நிற்கும் பெருமக்களை அந் நெறியில் நிற்கவொட்டாமற் றடுக்க எவரும் வலியிலார். (983)

14. பொய்ச்சமய நெறியிற் போது போக்கி நல்லோரை வன்மை செய்யும் பாதகர் மாயவும், நன்னெறி ஒங்கவும் தமது தூய உள்ளத்தில் இறைவன்றிருவருளே நாடி எண்ணுவதும் பெரியோர் இயல்பாம் (985). அதனால் அவர்களது பரந்த கருணைக்கு இழுக்கில்லை. இது உலகை நன்னெறியில் நிறுத்தி உய்விக்கும் கருணைத் திறமேயாகும். "ஆழ்கதீயது; எல்லாம் அரனுமமே சூழ்க", "வளர்க நம் பத்தர்கள்; வஞ்சகர் போயகல" முதலிய திருவாக்குக்களிற் கண்டபடி தீமை ஒழியவும் நன்மை ஓங்கவும் கடவுளைப் பிரார்த்திப்பது கருணைத்திறம்.

15. தமது நியதியாகிய திருப்பணிக்கு முட்டு நேரும்போது தம் உடலையும் உயிரையும் பொருட்படுத்தமாட்டார் பெரியோர் (987). இங்கு நாயனார் சந்தனப் பாறையில் முழங்கை தேய்த்த செயல் அன்பின் துணிவாலாகியது. "ஆராலு மென்னை யமட்டவொண் ணுதினிச், சீரார் பிரான்வந்தென் சிந்தை புகுந்தனன்; சீராடி யங்கே திரிவதல் லாதினி, யார்பாடுஞ் சாரா வறிவறிந் தேனே" (9-312) என்ற திருமந்திரம் உணர்ந்து உள்வைக்கத்தக்கது.

16. உலகப்பற்றும், உடற்பற்றும், உயிர்ப்பற்றும் விட்டபோது இறைவர் வெளிப்பட்டு உறுதிகொடுத் தருள்செய்வர்.

17. யாக்கை நிலையாமையுடையது. அது மின்போற் றோன்றி மறைவது. சிவனடிச்சார்வில்லோர்க்கு அதனினும் விரைவில் மறையும் நிலையாமையையுடையது. (991)

18. சிவன்றிருப்பணிக்கு இடையூறு விளைத்தல் பெரும்பாவம். சிவனடியாரை அலைத்தல் பெரும்பாதகம். இவை கழுவாயில்லாத சிவாபராதங்களாம். இவற்றைச் செய்தோர் வெவ்வாய் நரகத்தில் விரைந்து வீழ்ந்து அலகையாய் நெடுங்காலம் கொடு நரகத்துன்பம் அநுபவிப்பர் (992). "நாணர கத்து நிற்கும், அலகா முறுவீர் சிவனடியாரை யலைமின்களே" (11-ம் திருமுறை - பொன் - அந்.) என்ற கழறிற்றறிவார் திருவாக்குச் சிந்திக்கற்பாலது.

19. அடியார்களது திருவுள்ளம் வருந்தச் செய்வோருடைய ஆயுள் சுருங்குவதுடன் செல்வமும் அழியும். அடியாரை வருந்தச் செய்தால் அரசும் நாடும் சிதைவுறும். (985-991) "பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள், சித்தங் கலங்கிடச் சிதைவுகள் செய்தவர், அத்தமு மாவியு மாண்டொன்றின் மாய்ந்திடும், சத்திய மீது சதாநந்தி தானே" (3-196), "ஈச னடியா ரிதயங் கலங்கிடத், தேசமு நாடுஞ் சிறப்பு மழிந்திடும், வாசவன் பீடமு மாமன்னர் பீடமும், நாசம தாகுமே நம்நந்தி யாணையே" (3-198)

என்ற திருமூலர் திருமந்திரங்கள் யாவரும் கருத்தில் வைக்கத்தக்கன. இங்குச் சிவனடியாரை அலைத்த பாதகன் மாய்ந்திட மீற்று நன்னெறியரசனை இந்நாடு பெறுவ தென்றே ? (985) என மூர்த்தியார் எண்ணிய அன்றிரவே அக்கொடுங்கோலரசன் இறந்துபட்டானென்பதுணரத்தக்க உண்மை. (991-992)

20. கூழும் குடியும் முதலிய எல்லாச் சிறப்பும் பொருந்தியிருப்பினும் மன்னவனது காவலின்றி வையகம் வாழும் தன்மையுடையதன்று. (995)

21. வழிவழிவரும் அரசனில்லாத போது யானையைக் கண்கட்டி விடுவதும் அதனுல் மேல் கொள்ளப்பட்டாரை அரசனுகக் கொள்வதும் முந்தையோர் மரபு.

22. உலகந்தாங்கும் அரசாட்சி வந்து தம்மேல் நிற்பினும் அதனைத் திருத்தொண்டினுக்குக் கீழ்வைத்தே காண்பர் பெரியோர் (1008-1013). அரசாட்சியினை இன்னலென இகழ்ந்து விடுத்துச் சென்றனர் ஐயடிகள் காடவர்கோனயனுர். கழறிற்றறிவார் அதனைத் திருத்தொண்டுக் கிடையூறும் என்று கருதினர். "தனக்குன்ற மாவையஞ் சங்கரன் றன்னரு ளன்றிப்பெற்றூன், மனக்கென்று நஞ்சிற் கடையா நினைவன்" (11 - திருமுறை - பொன் - அந் - 43) என்ற அவர் திருவாக்கும், "கண்டெந்தை யென்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனேல், அண்டம் பெறினு மதுவேண்டேன்" என்ற அம்மையார் திருவாக்கும் மக்கள் கருதத்தக்கன. திருத்தொண்டின் பெருமையை நோக்க உலக அரசாட்சியைச் சிறிதாக மதிப்பர் பெரியோர் (1015).

23. அரசனது உட்கிடையைக் குறிப்பினுலறிந்து உலகளித்தல் நல்லமைச்சர் பண்பு (1012).

24. சைவநெறி ஒன்றே உலகெங்கும் நிரம்பிய தன்மையுடையது (1012).

25. தன்கீழ் வாழும் எவ்வுயிர்க்கும் உட்பகை புறப்பகைகளால் இடர்வராமற் காப்பது நல்லரசாட்சியின் இலக்கணம் (1010). உட்பகை ஐந்து ; அவை ஐம்புலங்களினின்பங்களுட்பட்டு மக்கள் கேடுறும் வகைகளாம். புறப்பகை ஐந்து; அவை "மாநிலங் காவலனுவான்" (121) என்ற திருப்பாட்டில் "ஆனபயம் ஐந்து" என்ற அவை.

26. மக்கள் உண்ணல், உடுத்தல், மகப்பெற்று வாழ்தல் முதலிய உலக நிலையில் உடல் உடைமைகளின் காவலோடு அமைந்துபடும் இந்நாளின் அரசாட்சியின் குறிக்கோள் தாழ்ந்த நிலையில் உள்ளது. மக்களின் உயிர்களது உயர்நிலைபற்றிய காவல் அரசாட்சியின் உயர்ந்த குறிக்கோளாகும்.

27. உலகரசாளும் நிலையினும் மனம் திரியாது சிவன்பாற் பத்திசெய்து திருத்தொண்டுசெய்து நிற்றல் ஞானிகளியல்பு (1015). இங்கு மூர்த்தியார் அரசராகிய போதும் தமது சந்தனத் திருப்பணியை விடாது தாமே செய்தனர் என்பது உலகம் படியெடுத் தொழுகத்தக்க பெருஞ்செயல். "எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலும், முத்தர் மனமிருக்கு மோனத்தே" என்பது குறிக்கோளாகக் கொள்ளத்தக்க பொன்மொழி. இடங்கழி நாயனுர், கழறிற்றறிவார் நாயனுர் முதலியோர் சரிதங்கள் சிந்திக்கத்தக்கன.

மூர்த்திநாயனூர்புராண முற்றும்.

---

குறிப்பு :—1005. சுடர் வன்னி - சூரியனிடத்திலிருந்து யாகத்துக்கு நெருப்புக்கொள்வது என்பது சிவாக்கிர யோகீந்திரர் கிரியா தீபிகை "பவித்திராதி வாசவிதி அரணே ஸூர்ய காந்தா....." (பக்கம் 117) என்றதனுலுமறிக.

ஓ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# 16. முருகநாயனார்புராணம்

தோகை

" முருகனுக்கும் (உருத்திர பசுபதிக்கும்) அடியேன் "

—திருத்தொண்டத்தொகை

வகை

" பதிகந் திகழ்தரு பஞ்சாக் கரம்பயி னுவினன் ; சீர்
மதியஞ் சடையாற் கலர்தோட் டணிபவன் ; யான்மகிழ்ந்து
துதியங் கழற்சண்பை நாதற்குத் தோழன் ; வன் முரண்டனம்பொ
னதிகம் பெறும்புக லூர்முரு கன்னெனு மந்தணனே " (கஅ)

—திருத்தொண்டர் திருவந்தாதி

விரி

1017. தாது சூழுங் குழன்மலையா டளிர்க்கை சூழுந் திருமேனி
மீது சூழும் புனற்கற்றை வேணி நம்பர் விரும்புபதி
சோதி சூழ மணிமௌலிச் சோழர் பொன்னித் திருநாட்டுப்
போது சூழுந் தடஞ்சோலைப் பொய்கை சூழும் பூம்புகலூர். க

புராணம் :—முருகர் என்ற பெயருடைய நாயனாரது சரிதவரலாறும் பண்பும் கூறும்பகுதி. இனி, நிறுத்த முறையானே மும்மையாலுலகாண்ட சருக்கத்தில் இரண்டாவது முருகநாயனார் புராணங் கூறத் தொடங்குகின்றார்.

தோகை :—முருகர் என்ற பெயருடைய பெரியாருக்கும் (உருத்திர பசுபதியாருக்கும்) நான் அடியேன் ஆவேன். முருகனாரும் (1016) என்றவிடத் துரைத்தவை பார்க்க.

அன்றியும், முருகன் என்பது என்றும் மாறுத " மணங்கமழ் தெய்வத் தினாலம் " உடைய செவ்வேளின் பெயர். தாம்தாம் வழிபடு கடவுளரின் பெயரை மக்களுக்கு இட்டு வழங்குதல் நமது நாட்டின் பண்டை நல்வழக்கங்களுள் ஒன்றாகும். இந் நாயனாரின் முந்தையோர் முருகப்பெருமானிடத்து மிக்க அன்புசெலுத்தியமையால் இவர்க்கு அப்பெயரிட்டனர் என்று கருத இடமுண்டு. நம்பியாரூரர் " திருவாரூர்ச் சிவன்பேர் சென்னியில் வைத்"து வழங்கப்பெற்றனர் என்பது இங்குக் கருதத்தக்கது. கடவுளர் பெயர்களேயன்றி அடியார்களின் பெயர்களையும் மக்கட்கு இட்டுவழங்கினர் என்பதும் அறியப்படும். முன்னிரண்டு சருக்கங்களினிறுதியிற் குறுக்கப்பட்ட சரித ஆராய்ச்சியுரை பார்க்க. இவ்வழக்கு, நல்ல திருநாமங்களை அடிக்கடி நினைக்கவும் சொல்லவும் காரணமாகி நற்பயன் விளைப்பதாம் என்பது கொண்டே நம்பெரியோர் இதனைக் கையாண்டனர். ஒரு பொருளுமின்றி மரம் கல் செடி கொடி பூ முதலிய வற்றின் பேர்களை மக்களுக்கு வைத்து வழங்கி வருதல் இக்காலித் புதிதாய்ப் புகுந்த பயனற்ற வழக்கங்களு ளொன்றென்றுழிக.

வகை :—வன்தொண்டன்...அந்தணனே - அழகிய பொன்னே வன்மெண்டர் மிகவும்பெற்ற தலமாகிய திநப்புகலூரில் அவதரித்துத் திருத்தொண்டு செய்து வாழ்ந்த முநகர் என்ற பெயருடைய அந்தணரே ; பதிகம்...நாவினன் - பதிகத்திகழ் தருகின்ற திருவைந்தெழுத்தினைப் பயிலும் நாவினையுடையவர் ; சீர்...அணிபவன் - சிறப்புப்பொருந்திய பிறைச்சந்திரனையுடைய அழகிய சடையாருக் குகந்த பூக்களைத் தொடுத்து அணிகின்றவர் ; யான்...தோழன் - நான் மகிழ்ச்சியோடும் துதிக்கும் அழகிய திருக்கழல்களையுடைய திருஞானசம்பந்தநாயனருக்குத் தோழர்.

பதிகம் திகழ்தநபஞ்சாக்கரம்—" பரமர்பதிகப் பற்றுன ஓங்கிச் சிறந்த வஞ் செழுத்து " (1025) என இதனை விரிநூல் விரித்தது. பதிகம் - திருஞான சம்பந்த நாயனர் அருளிய " அஞ்சலும் அஞ்ச லிலாத போழ்தினும் " என்ற பதிகம். அத் திருப்பதிகம் நுதலிய பொருளாயும், அதற்கு மகுடமாயும் விளங்குகின்ற " அஞ் செழுத்து " என்பார் திகழ்தநபஞ்சாக்கரம் என்றார். அதற்குப் பஞ்சாக்கரப் பதிகம் என்று பெயர் வழங்குதலும் காண்க. " செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க், கந்தி யுண் மந்திர மஞ்செ ழுத்துமே" என்று அத்திருப்பதிகத்தைச் " சிந்தைமயக் குறுமையந் தெளிய வெல்லாஞ் செழுமறையோர்க் கருளியவர் தெளியு மாற்றால்" (திருஞான புரா-266) ஆளுடையபிள்ளையார் அருளினர். அத்திருப்பதிகக் கருத்தினையே மிக உட் கொண்டு அதனுள் எடுத்துச்சொல்லப்பட்ட அஞ்செழுத்தினையே அவரது நண்பருமாம் பெருமை பெற்ற முருகனர் ஓயாது பயின்றனர் என்க. பயில்நாவினன் - மந்தி ரம் செபிக்கும் வகைகளாகிய உரை - உபாஞ்சு-மானதம் என்ற மூன்றனுள் வாக்கினால் ஓசைபடச்சொல்லாது நாவசைதலானும் மனத்திற் கணித்தலானும் விடாது பயின்றார். " ஓவா நாவின் உணர்வினர் " (1025) என்றது காண்க. அலர்தோட்டு அணிபவன் - விதிப்படி உரிய பூக்களை எடுத்து விதிப்படி தொடுத்து உரிய காலத்தில் உரியபடி சாத்தி மகிழ்பவர். தோட்டு - தொடுத்தது. இதனை விரிநூல் 1022 - 1025 பாட்டுக் களில் விரித்தது. யான்...தோழன் - யான் - இத்திருவந்தாதியினை அருளிய ஆசிரி யரான நம்பியாண்டார் நம்பிகள். இவர் ஆளுடைய பிள்ளையாரைத் தமது உபாசனை மூர்த்தியாகக்கொண்டு திருவந்தாதி, கலம்பகம், திருத்தொகை முதலிய பல பிரபந்தங் களாற் றுதித்தனர். அவற்றைப் 11-ம் திருமுறையிற் காண்க. தோழன் - நண்பர். 1027 - 1029 பாட்டுக்கள் பார்க்க. சண்பைநாதன் - ஆளுடைய பிள்ளையார். வன் றெண்டர்...புகலூர் - ஆளுடைய நம்பிகள் செங்கல் செழும் பொன்னகப்பெற்ற செய்தி குறித்தது. ஏயர்கோன் - புரா - 46 - 52 - பார்க்க. முநகன் - நாயனரது பெயர் ; அந்தணன் - அவரது மரபு.

முதனூல் நாயனரது பெயரும் (அதனைத்) சரிதக்குறிப்பும் உணர்த்திற்று. ஊரும், பேரும், மரபும், திருத்தொண்டும், சரிதவரலாறும் வகைநூல் வகுத்தது. விரிநூலுள் இவை விரிந்தபடி மேலே காட்டப்பட்டது. பின்னும் கண்டு கொள்க.

1017. (இ - ள்). தாது...நம்பர் - தாதுக்களையுடைய பூக்கள் சூழும் கூந்தலை யுடைய பார்வதியம்மையாரது தளிர்போன்ற கைகளாற் சுற்றித் தழுவப்பட்ட திரு மேனியையும், மேலே கங்கைசூழும் கற்றையாகிய சடையையுமுடைய சிவபெருமான் ; விரும்பும் பதி - விரும்பி அமர்கின்ற திருப்பதியானது ; சோதி...நாட்டு - ஒளி சூழும் மணிமுடி சூடிய சோழர்களது காவிரிபாயும் திருநாட்டினுள்ள ; போது...பூம்புகலூர்- மலர்கள்நிறைந்த பெரிய சோலைகளையுடைய பொய்கையினாற் சூழப்பட்ட திருப்பூம் புகலூர் என்பதாகும்.

(வி - ரை) தாது சூழும் குழல் - தாது - பூந்தாது. ஆகுபெயர். மகரந்தம் என்பர். சூடிய புதிய பூக்களினின்றும் பூந்தாதுக்கள் உதிர்ந்து நிரம்பும் கூந்தல் என்றலுமாம்.

மலையாள் - மலைமகள் - பார்வதி.

தளிர்க்கை சூழும் திருமேனி - காஞ்சிபுரத்தில் கம்பையாற்றின் கரையில் மாவின் கீழ்க் காமாட்சியம்மையார் சிவலிங்கத் திருமேனி கண்டு பூசித்தபோது கம்பையாறு பெருகிவரவே, அது அத்திருமேனிமேல் அடர்ந்துவருமென வெருவித் "தேவர்நா யகரை, மூலைக் குவட்டொடு வீலைக்கையா னெருக்கி முறுகு காதலா லிறுகிடத் தழுவி "னர் என்பது சரிதம். திருக்குறிப்பு - புரா - 63-64 பார்க்க.

மீதுபுனல் சூழும் கற்றை வேணி என்க. புனல் - கங்கை. மீது சூழ்தலாவது கரைபோல முடித்த சடைக்கற்றையில் நிறைந்து மேல்வழிந்து பாய்தல். கற்றை - தொகுதி.

விரும்பு பதி - பூம்புகலூர் என்று கூட்டுக. பெயர்ப்பயனிலை கொண்டு முடிந்தது.

மணிமௌலிச் சோழர் பொன்னித் திருநாட்டுப் புகலூர் என்பதாம். ஆசிரியர் இப்புராணத்தை அருளிச்செய்த காலத்தில் சோழமன்னர் சோழநாட்டை ஆண்டு வந்தனர் என்பதுணரப்படும். "கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன்" என்ற திருத்தொண்டத் தொகையிலும் இவ்வாறே காண்க. மணிமௌலி - மணிமுடி ; மணிகளிழைத்த அரசமுடி. கிரீடம் என்ப. பொன்னி - காவிரி - வையையும் பொருநையும் பாயும் பாண்டிநாட்டினையும் ஓரோர் காலம் சோழர்கள் ஆண்டனர். "தென்னவனு யுலகாண்ட செங்கணார்" என்றதும் காண்க. அதனின்றும் பிரித்துணரச் சோழர் பொன்னித் திருநாடு என்றார்.

போது சூழும் தடம்சோலைப் பூம்புகலூர் என்றும், போய்கைசூழும் பூம்புகலூர் என்றும் தனித்தனி கூட்டியுரைக்க. போது - மலர்கள். போது சூழும் சோலை என்றதனால் நால்வகை மலர்களுள் கோட்டுப்பூ - நிலப்பூ - கொடிப்பூ என்ற மூன்றும், போய்கை என்றதனால் நீர்ப்பூ என்ற ஒன்றும் குறிக்கப்பட்டன. இதனுள் நால் வகைப் பூத் திருப்பணியுடைய இச் சரிதக் குறிப்பும் காண்க. "மொய்ம்மலரின், பொறிக லந்தபொழில் சூழ்ந்தழ காரும்புக லூரே" (1) "கொய்து பத்தர்மல ரும்புன லுங்கொடு தூவித் துதிசெய்து, மெய்த வத்தின்முயல் வாருயர் வானக மெய்தும் புகலூரே" (10) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரங் காண்க.

தாதுசூழும் குழல் என்றதனால் இந் நால்வகை மலர்களையும் தொண்டர்கள் விதிப் படி எடுத்துத் தொடுத்துச் சாத்த, அவற்றை இறைவன் ஏற்று அருள்கொடுக்கும் சிறப் பும் கூறப்பட்டது. இதனால் இந் நாயனாரது சரிதக் குறிப்பினை நாடு நகர் கூறு முகத்தா லறிவிக்கப்பட்டது கண்டுகொள்க. அவ்வச் சரித நிகழ்ச்சி மயமாக நின்று அந்தக் கண்கொண்டே ஆசிரியர் நாடு நகர் முதலியவற்றைக் கண்டு காட்டுகின்ற திறமும் மரபும் காண்க.

அன்றியும் இப்புராணத்தை ஆறுசீர் விருத்தத்தாலே யாத்ததுவும், இத்திருப்பாட் டில் சூழும் என்ற சொல் ஆறுமுறை சொற்பொருட்பின் வருநிலை யணிபெறத் தொடுத் ததுவும், அறுதொழிலுடைய அந்தணராகிய முருகனார் (1021), ஆறுவகைப் பூந் தொடையல்களை (1025), ஆறு காலங்களிலும் அவ்வக்காலங்களுக் கேற்றவாறு அமைத்துச் (1026) சாத்திய சிறப்புக் குறிப்பதும் காணத்தக்கது.

பூம்புகலூர் - அழகிய புகலூர் என்றும், தாமரைபோன்ற புகலூர் என்றும் உரைக்க நின்றது. "அனையதனுக் ககமலரார் மறவனார் பூங்கோயில்" (135) என்

புழிப்போலக் கொள்க. பூங்கமலவாவியினும் சூழப்பட்டு அதனடுவிற் பூத்த கமலம் போல இத்திருக்கோயில் விளங்குவதனால் இவ்வாறு கூறினார் என்க.

**பொய்கை சூழும்** என்ற கருத்தும் அது. "பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்ற திருத்தாண்டக ஆட்சியினை நினைப்பிக்க இவ்வாறு கூறினார் என்பதுமாம்.

**புகலூர்** - பிறவிக்கஞ்சிய உயிர்கள் வந்து புகலடையச் (சரணடையத்) தக்க ஊர் என்பதை "தன்னைச் சரணென்று தாளடைந்தேன்" என்ற திருவிருத்தத்தானுமறிக.

இத் திருப்பாட்டால் நாடு, நகரம், ஆறு, அரசு, மூர்த்தி என்ற சிறப்புக்களை ஒருங்கே கூறியதனோடு சரிதச்சிறப்பும் உடன் குறித்துக் கூறிய அமைதியும் அழகும் காண்க.

**குழன் மடவாள்**—என்பதும் பாடம். 1

1018. நாம மூதூர் மற்றதனு ணல்லோர் மனம்போ லவரணிந்த
சேம நிலவு திருநீற்றின் சிறந்த வெண்மைத் திருந்தொளியால்
யாம விருளும் வெளியாக்கு மிரவே யல்ல ; விரைமலர்மேற்
காமர் மதுவுண் சிறைவண்டுங் களங்க மின்றி விளங்குமால். உ

(இ - ள்) நாமம்...அதனுள்-புகழினையுடைய பழமையான அத்திருப்பதியினுள் ; நல்லோர்...ஒளியால் - நல்ல அடியார்களது மனங்களைப் போலவே அவர்கள் திரு மேனிமேல் அணிந்த காவலுடைய திருநீற்றினது வெள்ளிய திருத்தம் செய்கின்ற ஒளியினாலே ; **யாம இருளும்**...அல்ல - நடுயாமத்தினிருளினையும் வெளியாக்கும் **இரவு மட்டுமல்ல** ; விரைமலர்...வண்டும் - மணமிக்க மலர்களின்மேல் தங்கும் அழகான தேன் உண்கின்ற சிறையுடைய கருவண்டுகளும் ; **களங்கம் இன்றி விளங்கும்** - கருமையின்றி விளங்குவன. (ஆல் - அசை).

(வி - ரை) **நாமம் மூதூர்** - நாமம் - புகழ். நாமம் - பெயர் எனக்கொண்டு, முன் பாட்டிற்கூறிய திருநாமத்தைக் கொண்ட பழம்பதி என்றலுமாம். **நாம்** - அச்சம் எனக்கொண்டு ஆன்மாக்களிடத்து வினைகள் வந்தடர அஞ்சும் என்றுரைப்பினுமாம். "ஆலமிடற் றரனடியா ரென்றடர வஞ்சுவரே" "இயமன் றூதரு மஞ்சுவர்" முதலியவை காண்க.

**நல்லோர்** - நன்மையுடையவர். நன்மையே செய்பவர். நல்லடியார்கள் என்க. **நன்மை** - இயற்கைப் பண்புமொழி.

**மனம் போல்** - மனம் அதன் ஒளிக்கு ஆகுபெயர். "மாசி லாத மணி நிகழ் மேனிமேற், பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்" (141) என்றபடி நல்ல அடியார் மனமும் அவர்கள் பூசும் திருநீறும் கூடி உள்ளும் புறமும் ஒரு தன்மையாய தூய ஒளியுடன் விளங்குவன என்க.

**சேம நிலவு திருநீறு** - தன்னையணிந்தோரைக் காக்குந் தன்மை நிலவுகின்ற நீறு. "மந்திர மாவது நீறு", "சேணந் தருவது நீறு", "எல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு" முதலிய தமிழ்மறைத் திருவாக்குக்கள் காண்க. இதுபற்றியே இதனைத் **திருநீற்றுக் காப்பு** என்பது மரபு. "வேறுபல காப்புமிகை யென்றவை விரும்பார், நீறுதிரு நெற்றியி னிறுத்தினிறை வித்தார்" (திருஞான - புரா - 43), "இறைவர்திரு நீற்றுக்காப் பேற்ற" (ஷை 262) முதலியவை காண்க. **இரட்சை** என்ற பெயரும் கருதுக. வசுதேவர் கண்ணனுக்கு நீறிட்டார் என்பது விஷ்ணுபுராணம்.

**திருந்து ஒளி** - உயிர்கள் திருந்துதற்குக் காரணமாகிய சிவ ஒளி. திருத்தும் ஒளி என்க. பிறவினைப் பொருளில் வந்தது. **சேமநிலவு** - இன்பநிலவும் பொருட்டு என்றலுமாம்.

**யாம இருளும் வெளியாக்கும் இரவு** - *நடு இரவின் திணிந்த இருளினையும் வெளி என ஆக்கத்தக்க புலரிக்காலம் என்பர். உம்மை உயர்வு சிறப்பு.* **இரவு களங்கமின்றி விளங்குதலாவது** - *வெண்மை ஒளிமிக்கதலால் இருளின் தன்மை காணப்படாது நிற்றல்.*

**காமர் வண்டு** *என்று கூட்டுக.* **காமர்** *என்பதை மதுவுக்கும் சிறைக்கும் அடையாக்கி அதற்குத்தக உரைப்பினுமாம்.* **வண்டு** *இங்குக் கருவண்டு குறித்தது.*

**மதுவுண் வண்டு** - *முன் பாட்டிற் போது* **சூழ்ந் தடஞ்சோலை** *என்றதைத் தொடர்ந்து வரும் பொருளியைபு காண்க.*

**களங்கம்** - *கருமை.* **வண்டு களங்க மின்றி விளங்குதலாவது** - *கருமை நிறங் காட்டாது தோன்றுதல்.*

**இரவேயல்ல ; வண்டும் களங்கமின்றி விளங்தும்.** **வண்டும்** - *உம்மை சிறப் பொடுகூடிய இறந்தது தழுவிய எச்சவும்மை. மேல்வரும் இரண்டு பாட்டுக்களினும் இவ்வாறே முடித்துக் கண்டு கொள்க.*

**இரவு களங்கமின்றி விளங்தும்** - *இரவு தீய எண்ணங்களுக்கும் தீயசெயல் களுக்கும் காமமுதலிய மனநிகழ்ச்சிகளுக்கும் உரியதாய் நிகழும் காலப்பகுதி யாகிய பொருள். அது, நல்லோர் மனச்செயலாலும் திருநீற்றுச் சார்பினாலும், தனது தீமை செய்கின்ற சத்தி நீங்கி நிற்கும் என்பது குறிப்பு. இது சிவஞான போதம் 12-ம் சூத்திரத்துள் உணர்த்தப்பட்ட உண்மையை விளக்கி நிற்பதும் காண்க.*

*இப்பாட்டில்* **யாமஇருளும், வெளியாக்கும் இரவும்** *என்று எண்ணும்மையாக வைத்து இரண்டு பொருள்களாகக் கொண்டுரைத்து,* **இருள்** - **இரவு** - **வண்டு** *என்ற மூன்றும் முறையே ஆணவம் மாயை கன்மம் என்ற மும்மலங்களையும் குறிப்பா லுணர்த்துவன என்றும், இவை திருநீற்றுச் சார்பினால் தமது வலிமைகெட்டுச் சிவாணு பவத்துக்குத் துணை செய்வனவாகித் தோன்றும் என்றும் இங்கு விசேடவுரை காண் பாருமுண்டு.* 2

**1019.** நண்ணு மிசைதேர் மதுகரங்க ணினைமென் சினையின் மருங்கலைய
வண்ண மதுரத் தேன்பொழிவ வாச மலர்வா யேயல்ல ;
தண்ணென் சோலை யெம்மருங்குஞ் சாரு மடமென் சாரிகையின்
பண்ணின் கிளவி மணிவாயும் பதிகச் செழுந்தேன் பொழியுமால். கூ

**(இ - ள்)** *நண்ணும்.....பொழிவ* - *பொருந்திய இசை தேர்கின்ற வண்டுகள் மலரும் பருவத்து அரும்புகளையுடைய மெல்லிய கிளைகளின் பக்கங்களில் பறக்கவே நிறமும் மதுரமுமுடைய தேனினைப்* **பொழிவன ; வாச மலர்வாயே அல்ல** - *மண முடைய மலர்களின் அலர்ந்த வாய்கள் மட்டுமே அல்ல;* **தண்ணென்.....மணிவாயும்** - *குளிர்ச்சி பொருந்திய சோலைகளில் எல்லாப் பக்கங்களிலும் சார்கின்ற இளமையும் மென்மையும் உடைய நாகணவாய்ப் புட்களின் பண்பொருந்திய இனிய மொழியைச் சொல்லும் வாயும் ;* **பதிகச் செழுந்தேன் பொழியும்** - *திருப்பதிகங்களாகிய செழிய தேனினைப் பொழியும்.* **(ஆல் - அசை)**

**(வி - ரை) மதுகரம்** - *வண்டு.* **நண்ணும் - மதுகரங்கள்** *என்று கூட்டுக.* **இசை தேர் மதுகரங்கள்.** *வண்டுகள் இயற்கையுணர்வினால் இசைகளைத் தேர்ந்து பண்பாடு வன என்பதனை* " *கள்ளார், வண்டு பண்செயும் புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே* ", " *சேருடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்த வண்டு, வேறுய வுருவாகிச் செவ்வழி நற் பண்பாடு மிழலை யாமே* " (பண் - மேகராகக் குறிஞ்சி - மிழலை - 7.) *என்ற ஆளு

டைய பிள்ளையார் தேவாரங்களும், "அளிதேர் விளரி, ஒலிகின்ற பூம்பொழில்" (நீத் - விண்-10), "விரையார் நறவந், ததும்புமந் தாரத்திற் முரம் பயின்றுமந் தம்முரல்வண், டதும்புங் கொழுந்தேன்" (வெ 36) என்ற திருவாசகமும், முதலிய திருவாக்குக்களா லறிக. "அரும்பருகே சுரும்பருவ வறுபதம் பண்பாட" (தக்காகம்-கலயநல்லூர் - 1) என்ற நம்பிகள் தேவாரக் கருத்தும் இங்குப் பொலிவுறுதல் காண்க. 948-ல் உரைத்த வையும் பார்க்க.

நனை - அலரும் பருவத்து அரும்புகள். இவையே வண்டுகள் ஊதி அலர்த்தப் பெறுவனவும் அலரும்போது தேன் சொரிவனவுமாம்.

அலைய - சுற்றிப்பறக்க. அலரும் பருவத்துப் புதுப்பூக்களின் மருங்கு வண்டுகள் சுற்றிப்பறந்து மொய்க்கும் இயல்பு காண்க. உணவுப் பிச்சைக்கு இச்சித்துப்பாடி வரு வார்க்குக் கதவு திறந்து பிச்சையிடுவார்போல மதுகரங்கள் இசைதேர்ந்து பாடி மருங்கு அலைய அவற்றுக்கிரங்கி மலர்கள் இதழ்க் கதவந் திறந்து தம்பாலுள்ள தேனை அவை உண்ணக்கொடுத்துப் பொழிவன என்ற உருவகக் குறிப்பும் காண்க. அலைய என்று இலேசுபடக்கூறிய அதனுல் சிறுசிறு துளிகளாகப் பல பூக்களினும் தேடித் திரிய என்ற பொருள் தொனிப்பதும் காண்க.

**வண்ணம் - மதுரம்** - என்ற அடைமொழிகள் தேனின் அழகிய நிறமும் சுவை யும் குறித்தன.

**மலர்வாயேயல்லாமல் - மணிவாயும்** - தேன் பொழிவ என்றபடியாம். **மலர் வாய்** - மலர்களின் திறந்த (அலர்ந்த) வாய். **மணிவாய் தேன் பொழிவ - மணி வாய்** - அழகிய - (அல்லது) மணிபோன்ற - வாய். பதிக ஒலியைத் தேன் என்று உருவகப்படுத்தினுர். பொழிதல் இங்கு இனிய ஒலியை வெளிப்படுத்தல் குறித்தது. **சாரிகை** - நாகணவாய்ப்புள். **பண்ணின் கிளவி வாய்** - பண்ணுடைய சொல் போன்ற ஒலியைத் தோற்றுவிக்கும் வாய்.

**மலரின்தேனை மதுரத்தேன்** என்றதனுல் அது புலனின்பமாகிய நாவின்சுவை ஒன்றே தருவதாம் என்பதும், **பதிகத்தைச் செழுந்தேன்** என்றதனுல் அது புலனின்ப மாகிய செவிச்சுவை தருவதலுேடு உயிர்க் குறுதியாகிய அன்புச் சுவையும் தரும் என் பதும் குறிப்பு. இது குறிக்கவே முன்னதனை **மலர்வாய்** என்று வாளாகூறிய ஆசிரி யர், பின்னதனை **பண்ணின் கிளவி மணிவாய்** என்று சிறப்பித்துக் கூறினுர். பண் கள் திருப்பதிகங்களுக்குச் சிறப்பாயுரியனவாதலும் காண்க.

**சோலை - நனைமென்** சினை - என்பன "போதுசூழும் தடஞ்சோலை" (1017) என்ற முதற்பாட்டின் கருத்தையே தொடர்ந்து கூறியனவாம். மேல்வரும் பாட் டில் "வண்டுபாட" என இக்கருத்துக்களைப் பின்னும் தொடர்ந்து செல்லும் பொரு ளியையும் கண்டு மகிழ்க.

**மதுகரங்கள் நனைமென் சினையின் மருங்கு அலைய** - என்ற கருத்தைப்பற்றி 948-ல் உரைத்தவை பார்க்க. **சாரிகையின் மணிவாய் பதிகச் செழுந்தேன் பொழிவ** என்ற கருத்தைப்பற்றி 93-ல் உரைத்தவை பார்க்க.

திருநாவுக்கரசுகளும், ஆளுடைய பிள்ளையாரும், சிறுத்தொண்டர், திருநீலநக்கர் முதலிய திருத்தொண்டர் கூட்டமும் பலகாலம் இத்திருத்தலத்தில் ஒருங்குகூடி முருக நாயனுரது திருமடத்தில் எழுந்தருளியிருந்தனர் என்பதும், அரசுகள் மேலும் பலகாலம் இங்குத் தனித்து வாழ்ந்து அளவிறந்த திருப்பதிகங்களை (திருநா - புரா - 413 - 414 - 415) அருளிச்செய்து இங்கே இறைவன்றிருவடியடைந்தனர் என்பதும், அவ்வவர் சரி தங்களால் அறியப்படும். • (திருஞான - புரா - 488 - 525 ; திருநா - புரா - 231 - 245; வெ - 412 - 427 பார்க்க.) அவ்விரு பெருமக்களுமருளிய தேவாரத் திருப்பதிகங்களை

அளவிறந்த மக்கள் அந்நாளிற் பயின்றிருத்தல் வேண்டும். "பிள்ளேயா ரமர்ந்த, துங்க மாமடந் தன்னிடைத் தொண்டர்தங் குழாங்கள், எங்கு மோதிய திருப்பதி கத்திசை யெடுத்த, பொங்கு பேரொலி" (திருஞான - புரா - 679), "திருப்பதிகச் செந்தமிழின் றிறம்போற்றி" (திருநா - புரா - 244) முதலியவற்றுல் அந்நாள்களில் திருக்கூட் டத்திலிருந்த அடியார்கள் திருப்பதிகங்களேப்பயின்று ஓதிவந்தனர் என்பதறிகின்றேம்.

திருப்பதிகங்களே மக்கள் பயின்றதனுல் அதுகேட்டுப் பூவைகளும் பயின்றன என்க. மக்கள் அப்புட்களேப் பதிகங்களிற் பயிற்றலுமுண்டு. இச்சிறப்புப் பற்றியே "பதிகந் திகழ்தரு பஞ்சாக் கரம்பயில் நாவினன்" என்று வகைநூல் முருகனரை அறி வித்தது. அத்துணேகொண்டு, ஆசிரியரும் அக்கருத்தேபற்றி இப்பாட்டிலும், மேல் வரும் பாட்டிலும், 1026 லும் திருப்பதிகங்களேச் சிறப்பித்தனர். சாரிகை (பூவை) பாடுவன என்பதுபற்றி "பறக்குமெங் கிள்ளேகாள்! பாடுமெம் பூவைகாள்!" (கொல்லி-திருவாரூர் - 2 ஆருடைய நம்பிகள்), "பூவை நல்லாய்!...விகிர்தனுக்கென் மெய்ப் பயலே விளம்பாயே" (ஆருடைய பிள்ளேயார் - பழந்தக்கரா - தோணிபுரம் - 9) முதலிய திருவாக்குக்கள் காண்க. பண்ணின் கிளவிமணிவாய் - "பொற்பமைந்த வாயலகிற் பூவை" என்ற தேவாரக் கருத்துக் காண்க. 3

1020. வண்டு பாடப் புனற்றடத்து மலர்ந்து கண்ணீ ரரும்புவன
கொண்ட வாச முகையவிழ்ந்த குளிர்பங் கயங்க ளேயல்ல ;
அண்டர் பெருமான் திருப்பாட்டி னமுதம் பெருகச் செவிமடுக்குந்
தொண்டர் வதன பங்கயமுந் துளித்த கண்ணீ ரரும்புமால் சு

(இ - ள்). வண்டுபாட...கண்ணீர் அரும்புவன - வண்டுகள்பாட, அதனுலே, நீர்பொருந்திய தடாகத்துள் மலர்ந்து கள் (தேன்) நீர் அரும்புவன ; கொண்ட...பங் கயங்களேயல்ல - நிறைந்து கொண்ட வாசனேயுடைய அரும்புகள் விரிந்தலர்ந்த குளிர்ச்சி பொருந்திய தாமரைமலர்களேயல்ல ; அண்டர்...அரும்பும் - தேவர் தலே வராகிய சிவபெருமானேத் துதிக்கும் திருப்பாட்டுக்களாகிய தேவாரங்களின் அமுதம் பெருக அதனேச் செவிவாயாக உண்ணும் தொண்டர்களது முகமாகிய தாமரைகளும், துளிகளாக நிரந்துவிழும் கண்ணீர் அரும்புவனவாம். (ஆல் - அசை).

(வி - ரை). வண்டுபாட (சோலேயின்) மலர்கள் மலர்வதனே மேற்பாட்டில் கூறினர். நிலப்பூ முதலியன மலர்வதுபோலவே நீர்ப்பூக்களாகிய தாமரை முதலி யனவும் மலரும் என்பது தானேபோதரும். அவ்வாறு தாமரைப்பூக்கள் மலர்தலால் கள் (தேன்) நீர் அரும்புதலே முகமலர்ந்தா லுளதாகும் கண்ணீர் அரும்பும் மெய்ப்பாடு போல உருவகம்செய்து சொற்சிலேடையாற் கூறினர்.

முகமலர்ச்சி அகமலர்ச்சி காட்டும். அகமலரக் கண்ணீர் ததும்பும். இவை மெய்ப்பாடு.

பாடமலர்ந்து - பாடுதலால் மலர்ந்து. அலரும் பருவத்து மலர்முகைகளின் பக்கம் அவை மலரும் அப்பருவம் தெரிந்து அலர்த்தித் தேன் உண்ணும் ஆசையால் வண்டுகள் பாடி ஊதிப் பறக்கும், அலரும் பருவமாதலின் மலர்களும் முகை அவிர்ந்து அலரும். அலர்ந்த புதுப்பூ தேன் துளிக்கும். இதனேப், பாடுதல் கேட்டு முகமலர்வனவாகவும், அந்த ஆனந்தத்திஞல் கண்ணீர் சொரிவனவாகவும் உருவகம் தோன்றக் கூறினர். பங்கயங்கள் முகத்துக் கொப்பாகக் கூறப்படுதலின் அவை அலர்தல் பாட்டுக்கு முக மலர்தல்போலாம் என்பதாம். வதனபங்கயம் என்றதும் காண்க. "வண்டுபாட... மலர்நீல மொட்டலரும் கேதாரமே" (செவ்வழி - 1) என்றீ ஆருடையபிள்ளேயார் தேவாரமும் பிறவும் காண்க.

**அண்டர்...அரும்புமால்** - திருப்பாட்டின் அழகும் - தேவாரத் திருப்பதிகங்களின் பண்ணிசையாகிய அமுதம். **பெருக** - பலமுறையும் பாடக்கேட்டு உள்ளே அன்பு பெருகும்படியாக. பெருகுதலினாலே என்றலுமாம்.

**வதன பங்கயம்** - வதனம் - முகம். வதனமாகிய தாமரை. உருவகம்.

**துளித்த கண்ணீர்** - அன்பின் பெருக்கினால் துளிதுளிகளாகக் கண்களினின்றும் நீர் அரும்புவன. "தடமூன் றுடையான் றனையுன்னிக், கண்முத் தரும்பக் கழற்சே வடிகை தொழுவார்கள், உண்முத் தரும்ப வுவகை தருவான்" (காந்தாரம் - திரு வெண்காடு - 3), "காதா லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி, ஓதுவார்" (கௌசிகம் - பொது - 1) முதலிய ஆளுடையபிள்ளையார் திருவாக்குக்கள் காண்க.

**திருப்பாட்டின் அழகும் பெருகச் செவிமடுக்கும்** - மடுத்தல் - உண்ணுதல். செவி வாயாக உண்ணுதலாவது நுகர்தல் - (அனுபவித்தல்) - குறிக்கும். மேற்பாட்டில் பூவைகள் பாடுவனவாகக் கூறிய தேவாரப் பதிக இசையமுதத்தினைத் தொண்டர் கேட்டநிலை குறித்தது. இவ்வாறு இறைவனது திருப்புகழ்களைப் பாடக்கேட்டபோது அதன் வசப்பட்டு மனமுருகிக் கண்ணீர் பெருக நிற்பது அன்பின் இலக்கணங்களுள் ஒன்று. "வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர் பெருமானே யெனக் கேட்டு வேட்ட நெஞ்சாய்ப், பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப் பதைத்துருகு மவர்" (சதகம் - 21) என்ற திருவாசகமும் பிறவும் காண்க.

இச் சரிதமுடைய முருக நாயனார் செய்த திருப்பணியின் நியமமாகிய சரிதக் குறிப்புக்களை நகரத்தின் இயற்கையமைப்பில் கண்டு, இம்மூன்று பாட்டுக்களிலும் தொடர்பாய்க் காட்டுகின்ற ஆசிரியரது திறம் காண்க.

1018-ல் யாம இருளும் வெளியாகு மிரவில் மலர்மேல் வண்டு களங்கமின்றி விளங்கும் என்றது புலர்வதன்முன் எழுந்து குளித்து நீறுஅணிந்து பூப்பறிக்கச் செல்லும் முருகருக்குப் புலரி இருளில் பூக்கள் விளங்கித் தோன்றும் காரணத்தையும் காட்சியினையும் குறிப்பால் உணர்த்திற்று.

1019-ல் அவ்வாறு விளங்கும் சோலையில் மலர்கள் வண்டு மருங்கலைய வாயவிழ்ந்து தேன்பொழிய நிற்பதும், பூவைகள் பதிகத்தேன் பொழிய உள்ளதும் முருகனார் சோலையினுள் புக்குக் கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ என்ற மூன்றினையும் அலரும் பருவத்தில் எடுக்கும் காலத்து நிகழ்ச்சிகளைக் குறிப்பாலுணர்த்தின.

1020-ல் வண்டுபாடத் தாமரைகள் அலர்ந்து தேன் அரும்புதலும் திருப்பாட்டினமுதம் செவிமடுக்கும் தொண்டர் முகமலர்ந்து கண்ணீர் அரும்புதலும் முருகனார் நீர்ப்பூக்களைக் கொய்யும்காலத்து அவரது உள்ளத்தே அன்பு ததும்பவும், பதிகஇசை கேட்டபோது கண்ணீர் ததும்பவும் கூடிய நிகழ்ச்சிகளைக் குறிப்பா லறிவிப்பன. இவ்வாறு தொடர்ந்து கண்டுகொள்க.

பூவை பதிகம் பாடக் கேட்டதொண்டர் என்றதனால் தொண்டர் பூப் பறிக்கும் போது பாடுதல் முதலாகிய வாக்கின் திருத்தொண்டு செய்யலாகாத நிலையும் குறிக்கப்பட்டது.

இவ்வாறு இயற்கைத் தோற்றத்தை அவ்வச் சரிதமயமாகநின்று அந்தந்த உள்ளுறைக் கண்கொண்டு காணும் சிவக்காட்சியாகிய உண்மைப் பொருளமைதியும், அதனைத் தொடர்ந்துகொண்ட உள்ளுறை உணர்த்தும் தன்மைநவிற்சியணிச் சிறப்புப் பெறக்கூறும் சொல்லமைதியும் ஆசிரியர்க்குரிய தெய்வமணக்கும் கவித்திறமாம்.

1021. ஆன பெருமை வளஞ்சிறந்த வந்தண் புகலூ ரதுதன்னின்
மான மறையோர் குலமரபின் வந்தார் முந்தை மறைமுதல்வர்,

ஞான வரம்பின் றூலிநின்றூர், நாகம் பூணவர் சேவடிக்கீழ்
ஊன மின்றி நிறையன்பா லுருகு மனத்தார் முருகனூர். நி

(இ - ள்). வெளிப்படை. ஆனபெருமையும் வளனும் சிறந்து விளங்கும் அழகிய குளிர்ச்சியுடைய புகலூர் என்னும் அந்தத்தலத்தில் பெருமையுடைய வேதியர் குலத்தில் அவதரித்தார்; மூன்தையாகிய வேத முதல்வர்; ஞானத்தின் முடிந்த எல்லையிற் சிறந்து நின்றூர்; அரவை அணியாகக் கொண்ட சிவபெருமானது திருவடிகளின்கீழ்க் குற்றமில்லாது நிறையும் அன்பினால் உருகும் மனத்தினை யுடையவர் முருகனூர் எனப் படுவோர்.

(வி - ரை) ஆன - மேற்கூறியபடி உயிரினை உயர்த்துதற்கான; உலக நிலைக்கான ஏனையபெருமைகள் ஆகாதன என்பதாம். ஆனபெருமை வளம் - மேல் 1018 - 1019 - 1020 திருப்பாட்டுக்களிற் கூறப்பட்ட சிவத்துவ விளக்கத்துக்குரிய பெருமையும், அது விளங்குதற்குரிய இடமாகிய உலகவளங்களும்.

அந்தண் புகலூர் - அழகு - சோலைகள், தடங்கள், அவற்றிற்பூக்கும் மலர்கள் என்றிவற்றாலாகுவது. தண்மை - பிறவி வெப்பத்துக்கு அஞ்சிப் புகல் அடைந்தோரது வெப்பத்தைமாற்றிக் குளிர்ச்சிசெய்யுந் தன்மை. "வஞ்சகமன் வாதனைக்கும் வன் பிறவி வேதனைக்கும், அஞ்சி யுனையடைந்தே னையா பராபரமே" என்றபடி இங்கு உலகத் துயிர்கள் சரண்புக அவர்களுக்கு அபயங்கொடுத்துக் காத்தல் குறித்தது.

ஆனபெருமை - ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசுகள், ஆளுடையநம்பிகள் என்ற மூவரும் ஈரிரண்டு முறை வந்து தரிசித்தனர். பிள்ளையாரும் அரசுகளும் திருநீலநக்கர், சிறுத்தொண்டர் முதலிய பல அடியார் திருக்கூட்டத்துடன் முருகநாயனாரது திருமடத்திற் பலகாலம் தங்கித் "திருத்தொண்டின் நிலையுணர்ந்து" (திருஞா - புரா - 243), "திருத்தொண்டர் பெருமையினை விரித்துரைத்தால், கொருப் படுசிந் தையினார்கள் உடைனுறைவின் பயன்பெற்றூர்" (ஷி 244). ஆளுடைய அரசுகள் பொய்ப்பாசம் போக்குவார் இங்குத்தங்கி "நையுமனப் பரிவோடு நாடோறுந் திருமுன்றிற்,கைகலந்த திருத்தொண்டு செய்துபெருங் காதலுடன்,வைகுநா ளெண்ணி றந்த வண்டமிழ் மாலைகள் மொழிந்து" (திருஞா - புரா - 413), "புகலூர னென்னை யினிச் சேவடிக்கீ ழிருத்திடுமென் றெழுகின்ற, முன்னுணர்வின் முயற்சியினும் திரு விருத்தம் பலமொழிந்து" (ஷி - 426), "நண்ணரிய சிவானந்த ஞானவடிவே யாகி, அண்ணலார் சேவடிக்கீழ்" அமர்ந்திருக்கப்பெற்றனர் (ஷி - 427). உலகத்தாருக்கு அடிமைத்திறத்தின் பெருமையைக் காட்டியருளும் வகையாலே பங்குனி உத்திரத் திருவிழாவில் அடியார்களை ஊட்டுதற்குப் பொன் வேண்டிய ஆளுடைய நம்பிகள் செங்கல் செழும்பொன்னாகப்பெற்றனர். இவ்வரலாறுகள் இத்தலத்தின் பெருமையை விளக்குவனவாய் இங்குக் கருதத்தக்கன.

மறையோர் குலமரபின் வந்தார் என்றதனால் அவர் அவதரித்தது வேதியர் குலமென்பதும், மறைமுதல்வர் என்றதனால் அக்குலத்தில் அவதரித்த பெருமை மட்டினமையாது, அக்குலத்துக்கேற்ப வேதியரொழுக்கத்தாலும் சிறந்து, வேதவாய்மையின் முதன்மை பெற்று விளங்கினர் என்பதும் உணர்த்தப்பட்டமையாற் கூறியது கூறலன்மையுணர்க.

ஞான வரம்பின் தூலிநின்றூர் - வேதம் வல்லவராய் விளங்கியதோடு சிவாகம சீலராகிச், சிவாகமங்களிற் சொல்லப்பட்ட சிவஞானங் கைவரப்பெற்ற முதன்மையுடையவராய் அத்துறைகளில் விதிப்படி ஒழுகி நின்றனர் என்பதாம். இங்கு நாயனார் செய்த தொண்டு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களின்

திருத்தொழில்களுமாம் என்பது மேல்வரும் ஏழு திருப்பாட்டுக்களிற் போந்த பொருளாவதும் காண்க. மேற்சொன்ன மறை என்பது வேதங்களையும், இங்குக்கூறிய ஞானம் என்றது சிவாகமங்களையும் குறித்தன. தலைநிற்றல் - ஒழுக்கத்திற் சிறத்தல்.

ஊனம் - இடையறாத அன்பு செலுத்துதற்கு வரும் தடைகள். அன்பால் மனம் உருகுதலாவது - பெரியவற்றுளெல்லாம் பெரியவனாகிய இறைவன் உயிர்களின் சிறுமை எண்ணாது எஞ்ஞான்றும் செய்துவரும் பேரருளின் பெருமையினை எண்ணி யெண்ணி அன்பு செய்தலால் உள்ளம் நெகிழ்தல். "அத்தாவுன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்...பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தா யன்றே...எம்பெருமான் நிருக் கருணை யிருந்தவாறே" (திருத்தாண்டகம்), "நாய்சிவிகை யேற்றுவித்த அம்மை" (திருவாசகம்); "நாயனைய வென்னைப் பொருட்படுத்தி நன்கருளித், தாயனைய னையருளும் தம்பிரான்" (கோயிலுன் மணிமாலை - 11-ம் திருமுறை) முதலிய திருவாக்குக்கள் காண்க.

வேதங்களிற் றலைசிறந்ததனால் சிறப்பாகிய சிவாகமங்களிற் றேர்ந்தார்; அதனால் ஞானவழி நின்றார்; அதன் பயனாகச் சிவன்சேவடிகளில் அன்பினால் உருகி, அவரது நாமம் பயின்றார்; அதனாற் சிவபூசையே உறுதிப்பொருள் என்றறிந்து சிவனை மூப் போதும் மலர்கொண்டு அலங்கரித்துப் பூசித்து அழகு பார்த்துக் களித்தார்; திருவடி ஞானத்திற் சிறக்கவே அடி அணைந்த அடியார் தொண்டினிற் சிறந்தொழுகினார்; அத னாற் சிவனடிப் பேறுபெற்றனர் என்று இம்முறையே, இப்பாட்டிற் சொல்லிய இத் தன்மைகளே மேல்வரும் சரித நிகழ்ச்சிகளாய் விளைந்தன என்பதும் கண்டுகொள்க. "வேதச் சிரப்பொருளே மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத், திறத்தடைவ ரிதிற் சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" (8 - 11) என்ற சிவஞான சித்தியார்த் திருவாக்கு இங்குக் கருதத்தக்கது.

முருகனார் - வந்தார்; - (அவர்) முதல்வர்; - தலைநின்றார்; - மனத்தார் எனமுடித் துக்கொள்க. அவர் என்ற சொல் வருவித்து முதல்வர் முதலிய மூன்று பெயர்ப்பய னிலைகளுடன் கூட்டிமுடிக்க.

முருகனார் என்ற பெயரின் பொருள்பற்றி மேலுரைக்கப்பட்டது. 5

1022. அடைமே லலவன் றுயிலுணர வலர்செங் கமல வயற்கயல்கண்
மடைமே லுகளுந் திருப்புகலூர் மன்னி வாழுந் தன்மையராய்,
விடைமேல் வருவார்க் காளான மெய்ம்மைத் தவத்தா, லவர்கற்றைச்
சடைமே லணியத் திருப்பள்ளித் தாமம் பறித்துச் சாத்துவார், சு

1023. புலரும் பொழுதின் முன்னெழுந்து, புனித நீரின் மூழ்கிப்,போய்,
மலருஞ் செவ்வித் தம்பெருமான் முடிமேல், வானீ ராறுமதி
யுலவு மருங்கு முருகுயிர்க்க, நகைக்கும் பதத்தி னுடன்பழித்த
வலகின் மலர்கள் வெவ்வேறு திருப்பூங் கூடை களிலமைப்பார், எ

1024. கோட்டு மலரு, நிலமலரும், குளிர்நீர் மலரும், கொழுங்கோடியின்
றோட்டு மலரு மாமலரும், சுருதி மலரும் திருவாயிற்
காட்டு முறுவ னிலவலரக் கனக வரையிற் பன்னகநாண்
பூட்டு மொருவர் திருமுடிமேற் புனைய லாகு மலர்தேரிந்து, அ

1025. கொண்டு வந்து, தனியிடத்தி லிருந்து, கோக்குங் கோவைகளும்
இண்டைச் சுருக்குந் தாமமுட னிணைக்கும் வாச மாலைகளும்

தண்டிற் கட்டுங் கண்ணிகளுந் தாளிற் பிணைக்கும் பிணையல்களும்
நுண்டா திறைக்குந் தொடையல்களுஞ் சமைத்து நுடங்கு நூன்மார்பர்,

1026. ஆங்கப் பணிக ளானவற்றுக் கமைத்த காலங் களிலமைத்துத்
தாங்கிக் கொடுசென் றன்பினொடுஞ் சாத்தி வாய்ந்த வர்ச்சனைகள்
பாங்கிற் புரிந்து பரிந்துள்ளார் ; பரமர் பதிகப் பற்ருன
வோங்கிச் சிறந்த வஞ்செழுத்து மோவா நாவி னுணர்வினர். கo

1022. (இ - ள்) வெளிப்படை. (தாமரை) இலைகளின்மேல் துயின்ற நண்டுகள் உறக்கத்தினின்றும் எழ, அலரும் செங்கமலங்கள் பூக்கும் வயலிற் கயல் மீன்கள் மடைகளின்மேலே பாய்தற்கிடமாகிய திருப்புகலூரில் நிலைபெற்று வாழும் தன்மை யுடையோராய், விடையின் மேல் எழுந்தருளிவரும் சிவபெருமானுக்கு ஆளாயின மெய்த்தவத்தினாலே, அவரது கற்றையாகிய சடையின்மேல் அணிவதற்குத் திருப் பள்ளித்தாமம் பறித்துச் சாத்துவாராகி, சு

1023. (இ - ள்) வெளிப்படை. விடிவதனுக்கு முன் எழுந்து தூய நீரில் முழுகிப் போய்த், தமது பெருமானுடைய திருமுடியின் மேலே கங்கையும் மதியும் உலவுகின்ற பக்கத்தில் அலர்கின்ற பருவத்தில் வாசனை வீசத்தக்கதாக மலரக் கூடிய பக்குவம் நோக்கிப் பறித்த, அளவில்லாத பூக்களை வெவ்வேருகத் திருப்பூங்கூடை களிற் சேர்ப்பாராய், எ

1024. (இ - ள்) வெளிப்படை - கோட்டுப்பூக்களும், நிலப்பூக்களும், குளிர்ந்த நீர்ப்பூக்களும், கொழுத்த கொடிகளிற் பூக்கும் இதழ்களையுடைய பூக்களும் ஆகும் (இங்ஙான்கு) மலர்களும், வேதங்கள் வெளிப்படும் திருவாயிற் காட்டும் சிறுமுறுவலின் ஒளியலரும்படி மேருமலையிற் பாம்பாகிய நாணினைப் பூட்டிய ஒருவராகிய சிவ பெருமானது திருமுடியில் புனையக் கூடிய மலர்களாகத் தெரிந்தெடுத்து, அ

1025. (இ - ள்) வெளிப்படை - நுடங்கிய நூலணிந்த மார்பினராகிய முருகனர் கொண்டுவந்து தனியிடத்தில் அமர்ந்து, அவற்றைக் கோக்கின்ற கோவைகளும், சுருக்கும் இண்டைச்சுருக்கும் தாமங்களோடு, இணைக்கின்ற வாசனை பொருந் திய மாலைகளும், தண்டுபோலக் கட்டும் கண்ணிகளும் தாளிலே பிணைக்கும் பிணை யல் வகைகளும், நுண்ணிய மகரந்தங்களை வீசுகின்ற தொடையல்களும், ஆக அமைத்து, கூ

1026. (இ - ள்) வெளிப்படை. ஆங்கு அந்தப் பூத்திருப்பணிகளை அவற்றுக்கு விதிக்கப்பட்ட காலங்களில் அமைத்துச், சுமந்து கொண்டு சென்று, அன்போடு சாத்திப், பொருந்திய அருச்சனைகளை விதிப்படி புரிந்து அன்பு செய்தார் ; சிவபெரு மானது திருப்பதிகப் பற்ருகிய உயர்ந்து சிறந்த திருவைந்தெழுத்தையும் விடாமல் நாவிற்கொண்டவுணர்வை யுடையவராயினர். கo

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

1022. (வி - ரை) துயில் உணர்தல் - விழித்தெழுதல். துயிலும் நிலையினின்றும் நீங்கி, உணரும் நிலையில் (சாக்கிரம் என்ப) வருதல். வாளா உணர என்று கூறுவதும் மரபு. அலவன் - நண்டு. அடை - இலை ; இங்குத் தாமரையிலையைக் குறித்தது. தடங் களில் தாமரையோடு ஆனைப் பூக்களும் இருப்பினும் பெரும்பான்மையும் சிறப்பும் பற்றி அவற்றைத் தாமரைத்தடம் என்றே கூறுவர். முன்னரும் வாச முகையவிழ்ந்த குளிர்பங் கயங்க ளேயல்ல " (1020) என்று தாமரையைக் குறித்தது காண்க. "அறை மலி யாம்பல்பல் லாயிரத் தத்தமி யேயெழினும், நறைமலி தாமரை தன்னதன்

றோசொல்லு நற்கயமே (11-ம் திருமுறை - திருவாரூர் - மும் - கோவை - 24) என்ற கழற்றிற்றறிவார் திருவாக்குக் காண்க.

**அலவன் துயில் உணரக் - கயல்கள் உகளும்** என்று கூட்டுக.

**மன்னிவாழும் தன்மை** - நிலைபெற்று வாழ்கின்ற தகைமை. "இவ்வூரில், வருமுறை மனையும் நீடு வாழ்க்கையும் காட்டு கென்றார்" (210) என்றது காண்க. முருகனாரும் அவர்தம் முந்தையோர்களும் திருப்புகலூரில் நிலையான குடிகளாக வாழ்ந்து வந்தனரென்பதும் அவர்களது வாழ்வு அவ்வூரின் பெருமைக்குத் தகுதியாகப் பொருந்தியதென்பதும் கருதப்படும்.

**ஆளான மெய்ம்மைத் தவத்தாற் - சாத்துவார்** என்க. தவங்கள் பலவகைப்படும்; அவற்றுள்ளே சிவனுக்காளாகும் தவமே மெய்த் தவமெனப்படும்; அவ்வாறு மெய்ம்மைத்தவ மியற்றிய காரணத்தாற் சாத்துவாராகி என்க. தமிழினையும், ஆளுறும் தமிழ் என்றும் ஆளுறாத் தமிழ் என்றும் இருவகைப்படுத்தி, ஆளுறாத் தமிழ் உயிர்களை மேலுயர்த்தாமையேயன்றிக் கேடும் உறுவித்தலால் அழிவாக்கத் தக்கதென்று அப்பர் சுவாமிகள் அருளியதனை இங்கு நினைவு கூர்க. "வாயி ருந்தமி ழேபடித் தாளுறா, வாயி ரஞ்சம ணும்மழி வாக்கினான்" (திருக்குறுந்தொகை - பழையாறை வடதளி - 9) என்ற தேவாரங் காண்க. திருப்பள்ளித்தாமஞ் சாத்திச் சரியை கிரியையாதிகள் செய்வதற்கும் முன்னாளில் தவஞ் செய்திருத்தல் வேண்டுமென்பதாம். "முன்பு செய் தவத்தி னீட்டம்" (951) என்றதும், "அறத்துறைக ளவையடைந்தும் அருந் தவங்கள் புரிந்தும்...சென்றாற் சைவத் திறத்தடைவர்" (8 - 11) என்ற சிவஞான சித்தியாரும் காண்க. "எத்தவத் தோர்க்கு மிலக்காய்நின்ற வெம்பெருமான்" (நட்டபாடை - புகலியும் திருவீழிமிழலையும் - 10) என்ற ஆளுடையபிள்ளையார் திருவாக்கின்படி எல்லாவகைத் தவத்துக்கும் சிவனே இலக்காய் நிற்பவன். ஆயின் அவை எல்லாம் முற்றிக் காலாந்தரத்திற் பயன் றருவன. சிவனுக் காளாய்ச் செய்யப்படும் தவமே மெய்ம்மைத் தவமாய் இம்மையிலே பயன்தந்து திருவடி சேர்க்கும் என்பது.

**திருப்பள்ளித் தாமம்** - 559-ல் உரைத்தவை பார்க்க. 6

1023. (வி - ரை) **புலரும்பொழுதின் - புலர்தல்** - இரவு விடிதல். **பொழுதின்** - பொழுதினுக்கு. **பொழுதுமுன்** என்பது பாடமாயின் பொழுதில் இரவி எழுவதன் முன் என்க. **முன்பொழுது** என மாற்றி வைகறை என்பாருமுண்டு.

**புனித நீரின் மூழ்கி** - "வைகறை யெழுந்து போந்து புனன்மூழ்கி" (559) என்ற விடத் துரைத்தவை பார்க்க. "புலரி யெழுந்து புனன்மூழ்கிப் புனித வெண்ணீற் றினு முழுகி" என்ற கழறிற்றறிவார் புராண(8)முங் காண்க.

**போய்** - நந்தனவனத்துக்கும், பூமரம் - பூச்செடி - பூக்கொடிகள் இருக்கும் புறவுகளுக்கும் போய்.

**மலரும் செவ்வி** - மலர்கின்ற பக்குவத்தில். **முடிமேல்** - செவ்வி(யில்) - முருகுயிர்க்க என்க.

**நகைக்கும் பதத்தில்** - இது பறிக்கும்போதுள்ள பூவின் பதம் குறித்தது. **நகைத்தல்** - வாய்திறத்தல். **பதம்** - பக்குவம். இனி, **நகைக்கும்** - சிவபெருமான் றிருமேனியில் அணியப்படும் பேறு தமக்குக் கிடைத்தமைபற்றி மலர்கள் மகிழ்ச்சிக்குறியாக நகைக்கும் என்ற தற்குறிப்பேற்றக் குறிப்பும், மூடியிருந்த இதழ்கள் வாய்விட்டு அலர்தல் வாய்திறந்து சிரித்தல்போலும் என்ற உவமக் குறிப்பும் காண்க.

**வெவ்வேறு திருப்பூங் கூடைகளில்** என்றது மலர்களை இனம்பற்றியும் வன்மை மென்மை முதலிய தன்மைபற்றியும் பறிக்கும்போழுதே வேறுவேறு கூடைகளில்

அமைத்தல் குறித்தது. இவ்வாறு செய்யாவிடில் அவற்றைத் தேர்ந்து தொடுத்தலில் தாமதமும் சிதைவும் நேரிடுமென்க.

இப்பாட்டினுல் மலர் எடுக்கும் காலமும், மலர் எடுப்பதன்முன் இன்றியமையாது செய்துகொள்ளத்தக்க நியமங்களும், மலர்கள் பறிக்கும் பக்குவமும், பறித்த மலர் களைச் சேர்க்கும் நியமமும் கூறப்பட்டன. 7

1024. (வி - ரை) **பூவையலாதும்** - கோட்டுப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ எனப் பூக்களை நான்குவகையாகப் பிரித்தனர் நம் முன்னோர். அவற்றுள் இன்ன இன்ன தெய்வங்களுக்கு இவையிவை சாத்துதற்குரியன என்பதும் நூல்களால் விதிக் கப்பட்டுள்ளன. அவ் விதிகளின்படி சிவபெருமானுக்குச் சாத்துதற்கு உரியன இவை என்று தெரிந்து பறித்துக் கொணர்ந்தனர். அவை ஆத்தி முதலியனவாகக் கீழ் விரித் தவை காண்க.

**தேரிந்து** - மலர்களின் இனம், அவை அலரும் நேரம், பறிக்கும் நேரம், நாள், புழுக்கடி சிதைவு முதலிய இல்லாத தன்மை முதலியவற்றைத் தேர்ந்து. முழுதும் கண்ணுற் பார்த்துத் தெரிந்துகொள்ள வியலாத புலரிக்காலமாதலின் கையின் பழக்கத் தாற் றேரிந்து என்று கொள்க. 559 பார்க்க.

**மலர்** - பெரும்பான்மைபற்றி மலர்களைக் கூறினுரேனும் இனம்பற்றிப் பூவைய லாகும் இலைகள் வேர் முதலியவையும் கொள்ளப்படும்.

**கோட்டுமலர்** - கோடு - கொம்பு. மரங்களிற் பூக்கும் மலர்கள். கொன்றை-மந்தாரம் - வேங்கை - சண்பகம் முதலியன. இதனுள் கூவிளம் (வில்வம்) அடங்கும்.

**நிலமலர்** - செடிகளிற்பூக்கும் மலர்கள். நந்தியாவட்டம் - வெள்ளெருக்கு - அலரி - கரந்தை - தும்பை முதலியன.

**கொடியின் தோட்டு மலர்** - கொடிகளிற்பூக்கும்மலர்கள். தோடு - இதழ். தோட்டுமலர் - இதழ்களையுடைய பூ. மல்லிகை - முல்லை - சாதிமுதலியன.

**நீர்மலர்** - நீரிற்பூக்கும் மலர்கள். தாமரை - நீலம் - செங்கழுநீர் முதலியன.

**ஆம்மலநும்** - ஆம் - ஆகும். மேற்சொல்லிய நான்கு வகைகளையும். உம்மை முற்றும்மை. மேல்உள்ள உம்மைகள் நான்கும் எண்ணும்மைகள்.

இவை பற்றி 240ல் உரைத்தவையும் பார்க்க. ஆ மலநும் சுருதி என்று கூட்டி, ஆ - பசுக்கள் என்று கொண்டு, பசுக்களாகிய உயிர்கள் கட்டவிழ்ந்து விகசிக்கச் செய்யவல்ல வேதாகமங்கள் என்றுரைப்பினுமாம். மலர்தல் - கட்டு நீங்கி விரிதல். "அங்க மாறு முடைனிறைந்த, சந்த மறைக ளுட்படமுன் றவிவர் மொழிந்த வாகமங் கள், முந்தை யறிவின் றெடர்ச்சியினுன் முகைத்த மலரின் வாசம்போற், சிந்தை மலர உடன்மலருஞ் செவ்வி யுணர்வு" (சண்டீசர் - புரா - 13); "புலன்கொளுவ மன முகிழ்த்த, சுருணீக்கி மலர்விக்குங் கலிபயிலத் தொடங்குவித்தார்" (திருநா - புரா - 20) என்ற கருத்துக்கள் காண்க. இப்பொருளில் மலநும் - மலர்விக்கும் எனப் பிற வினைப் பொருளில் வந்தது.

**சுருதிமலநும்** - இங்கு மலர்தல் வெளிப்படுதல் என்ற பொருளில்வந்தது. "திரு வாய் மலர்ந்தருளுதல்" என்ற வழக்கும் காண்க.

இப்பாட்டில் மலநும் என்று பலமுறை அணிபெற அடுக்கிக்கூறியது சொற் பின் வருநிலை என்ற அணி. இவ்வாறு அடுக்கிக்கூறுதல் ஆசிரியரின் தனிச்சிறப்பு. 553 முதலியவை பார்க்க.

**நிலவு அலர்தலாவது** - புன்முறுவல் பூத்தல். புன்சிரிப்பின் ஒளியை நிலவு என்று உருவகம் செய்தார். அதுதான் முப்புரத்தார்க்கு நிக்கிரகமாகிய அருளாதலா லும், அதில் வாழ்ந்த அன்பர் மூவர்க்கு அனுக்கிரகமாகிய அருளாதலாலும் இவ்வாறு

நிலவு என்றார். முறுவல்நிலவு அலர நாண் பூட்டும் என்க. முறுவல் அலரும்படி வில்லில் நாண் பூட்டியது என்றது, நாண் பூட்டியமட்டில் அமைந்து நிற்க, அது செய்யவேண்டிய காரியத்தை முறுவல் முடித்தது என்ற சரிதத்தை அணிபெறக் கூறியபடியாம்.

கனகவரை - பொன்மலை - மகாமேரு. பன்னகநாண் பூட்டும் - திரிபுரமெரித்த காலத்தில் ஆதிசேடனே மேருவில்லிற்கு நாணுகக்கொண்ட புராணசரிதம் குறித்தது.

தெரிந்து - கொண்டுவந்து - இருந்து - சமைத்துச் சாத்துவார் - அமைத்துச் - சென்று - சாத்திப் - புரிந்து - பரிந்துள்ளார் - என வரும்பாட்டுக்களுடன் கூட்டி முடித்துக் கொள்க. 8

1025. (வி - ரை). தனியிடத்தில் - திருப்பூமண்டபத்தில். பூக்களைக் கொண்டு வந்து சேர்த்து மாலை தொடுத்தற்கென்று தூயதான குளிர்ந்த தனியிடம் இருத்தல் வேண்டும். இதன் அமைதிபற்றி ஏயர்கோன் - புரா - 225 - 226 பாட்டுக்களிலும், பிரமுண்டும் பார்க்க. அசுத்தம் முதலியன தொடக்காமலும், வெயில் காற்று முதலியவை தாக்காமலும் இருக்கத் தனியிடம் அமைத்தல் மரபு.

கோக்கும் கோவை - கோக்கப்படுதலால் கோவை எனப் பெயராயிற்று. இண்டை - மாலைவகை. இது பெரும்பாலும் தலையில் அணிவது. கண்ணி - கொண்டை மாலை. தாளிற் பிணைக்கும் - மலர்களை அடியோடு சேர்த்துக் கட்டுதல் என்பர். பிணையல் - பிணைக்கப்படுதலாற் போந்தபெயர். தொடுக்கப்படுவது தொடையல். இவை மாலை வகைகள்.

நுண்தாது இறைக்கும் - நுண்ணிய பூந்தாதுக்கள் வீழ்கின்ற. புதிதின் மலர்ந்த பருவமாதலின் பூக்களினின்றும் மகரந்தங்கள் சிந்துவன.

சமைத்தல் - மேற்கூறிய மாலை வகைகளாக ஆக்குதல். வெவ்வேறு மாலை வகைகளைப்பற்றி 164-ம் பார்க்க.

நுடங்கு நூல் - தோளிற்கிடந்து கீழே மார்பில் அசையும் பூனூல்.

சுருதிகளிற் கூறப்படும் "பிரஞானம் பிரமம்", "அகம்பிரம்மாஸ்மி", "தத்துவமசி", "அயமாத்மா பிரமம்" என்ற நான்கு மகா வாக்கியங்களை நால்வகை மலர்களாகத் தெரிந்து எடுத்தனர் என்றும், அச்சுருதிப் பொருள்களை ஆறங்கங்கள் விளக்குவனவாதலின் அவற்றை ஆறுவகை மாலைகளாக்கிச் சடத்துவ சோதனைக்குரிய ஆறுகாலங்களினும் சாத்தினர் என்றும், ஆறுகாலங்களாவன, உஷத்காலம் - திரோபவத்தினுல் உயிர்களை இருளினின்றும் வெளிப்படுத்தும் காலம்; உதயகாலம் - உயிர்களுக்கு இருவினைத் தொழில்களைக்காட்டி அவைகளில் விடுங்காலம்; உச்சிக்காலம் அவற்றுலாகிய பொருள்களை நுகர்விக்குங்காலம்; பிரதோடகாலம் - அனுபவத்தில் செல்லானவைபோக மிகுதியைக்கணித்து வைக்குங்காலம்; சாயங்காலம் - கணித்து வைத்தவற்றை நீக்குங்காலம்; அர்த்தயாமம் - தன்வசப்பட்டுச் செயலற்றிருக்குங் காலம் என்றும் இங்கு விசேடவுரை காண்பர் ஆலாலசுந்தரம் பிள்ளை.

இறைக்குந் தோங்கல்களும்—என்பதும் பாடம். 9

1026. (வி - ரை) அப்பணிகள் - அலங்காரத்துக்குரிய அந்த மாலை வகைகள்.

அமைத்த காலங்கள் - அவ்வவற்றுக் குரியனவாய் விதிக்கப்பட்ட காலங்கள். இவற்றை வைகறை, எற்பாடு, நண்பகல், மாலை, யாமம் என்ற சிறுபொழுது ஐந்து என்பது தமிழ் மரபு. எற்பாடு - உதயகாலம்; வைகறை - உதயத்துக்குமுன் ஐந்து நாழிகை. சிறுபொழுது ஆறு என்பாரு முண்டு.

அமைத்த காலம் - உரியனவாய் விதிக்கப்பட்ட காலம். அமைத்து - மாலை வகைகளில் ஏற்றவற்றைக் கட்டி. அமைத்தல் - கட்டுதல். முன்பாட்டில் சமைத்து

என்றதும் அது. தாங்கிக்கொடு வந்து - வெவ்வேறு திருப்பூங்கூடைகளில் அமைத்த பூக்கள் வெவ்வேறு மாலைகளாகச் சமைக்கப்பட்டபடியால் ஒரு ஆள் தாங்கிச் செல்லும் சுமையாமாதலின் தாங்கி என்றார். "போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார்", "பூவோடு நீர்சுமக்கு நின்னடியார்" முதலிய திருவாக்குக்களின் குறிப்புங் காண்க. அன்றியும் இறைவனுக்குச் சாத்தும் திருப்பள்ளித்தாமங்களைக் கீழ்த்தொங்க வைக்கலாகாது என்றும், தோளிலும், மேலே தூக்கிப் பிடித்த தண்டு தூனியிலும் தாங்கிச் செல்லவேண்டுமென்றும் உள்ள விதியிலும் மேலே தாங்கிக்கொடு வந்தார் என்பதுமாம். "கோலப்பூங் கூடை தன்னை நிறைத்தனர் கொண்டு" (560) என்றதும், பிறவும் காண்க.

அன்பினோடும் சாத்தி - மலர் பறித்தல் - தொடுத்தல் - சாத்துதல் முதலிய செயல்கள் யாவும் மனத்துள் நிறைந்த அன்போடு செய்யப்படுதல் வேண்டும். "நெஞ்சில் வாலிய நேசங் கொண்டு" (560), "ஊன மின்றி நிறையன்பால் உருகும் மனத்தார்" (1021), "ஆளான மெய்ம்மைத் தவத்தால்" (1022) என்றவை காண்க.

முருகனார், அன்போடும் இறைவனுக்கு மாலைகள் சாத்தி மகிழ்ந்து குறிப்பறிந்து கண்டுருகிய இத்திறத்தை ஆளுடைய பிள்ளையார் இத்தலத் தேவாரத்தில் சிறப்பித்துப் பாராட்டியருளியது காண்க.

"தொண்டர் தண்கய ழஞ்சித் துணையலுஞ் சாந்தமும் புகையுங்
கொண்டு கொண்டடி பரவிக் குறிப்பறி முருகன்செய் கோலங்
கண்டு கண்டுகண் குளிரக் களிபரந் தொளிமல்கு கள்ளார்
வண்டு பண்செயும் புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே" ஈ

"பண்ண வண்ணத்த ராகிப் பாடலொ டாடல றுத
விண்ண வண்ணத்த ராய விரிபுகலூரர்" ச

"மூசு வண்டறை கொன்றை முருகன்முப் போதுஞ்செய் முடிமேல்
வாச மாமல ருடையார் வர்த்தமா னீச்சரத் தாரே" ஙி

"தேன்சொல் விஞ்சமர் வடசொல் திசைமொழி யெழினரம் பெடுத்துத்
துஞ்சு நெஞ்சிருள் நீங்கத் தொழுதெழ தொல்புகலூர்" எ

என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரங்களும், பிறவும் காண்க.

வாய்ந்த அருச்சனைகள் - அருச்சனை என்பது இங்கு நீராட்டுதல், சந்தனமாதிய மெய்ப்பூச்சிடுதல், பூச்சூட்டுதல், விளக்கும் புகையும் ஏத்துதல், துதித்தல், மலர்களாலருச்சித்தல் முதலிய பூசனை வகை எல்லாம் குறித்தது. அவையும் காலந்தோறும் வெவ்வேறு செய்யத்தக்கன. அவற்றையும் விதித்தபடி செய்தனர் என்பதாம். முன்னர்க் காட்டிய புகலூர் வர்த்தமானீச்சரத் தேவாரம் ஈ வது திருப்பாட்டுக் காண்க. முருகனார் வர்த்தமானீச்சரமுடைய ஆளுடை நாயகரைத் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகக் கொண்டு வழிபட்டுவந்தனர். மேல் 1028ம் திருப்பாட்டிலும் இதனை விளக்குதல் காண்க. வாய்ந்த - சிவபூசைக்குரிய அங்கங்கள் எல்லாம் பொருந்தப் பெற்ற. பாங்கில் - விதித்த முறையில். பரிதல் - அன்பினால் மன முருகுதல்.

பரமர் பதிகப்பற்றன ஓங்கிச் சிறந்த அஞ்செழுத்து - சிவநாமம் தெய்வநான் மறைகளின் உள்ளுறையாக விளங்குவது போலத் தமிழ்மறையாகிய தேவாரத் திருப்பதிகத்தினும் உள்ளுறைப் பொருளாய் விளங்குவது. அஞ்செழுத்து - 138 - ல் உரைத்தனவும், பிறவும் பார்க்க. "பதிகச் செழுந்தேன்" (1019), "அண்டர் பெருமான் றிருப்பாட்டி னமுதம்" (1020) என முன் கூறியனவையும், "பதிகம் திகழ்தரு பஞ்சாக் கரம்பயில் நாவினன்" என வழிநூலுட் கூறியவற்றையும் கருதுக.

ஓவா நாவின் உணர்விலார் - நாவானுரைத்தலும் மனவுணர்ச்சியிற் கணித்தலும் என்கின்ற இரண்டு வகையானும் சீபஞ்சாக்கரத்தை எப்போதும் பயின்று வந்துள்ளார் என்க. பூத்திருப்பணி செய்வோர் வாய்கட்டிப் பணிசெய்யவேண்டும் நியதியுடையா ராதலின் வாக்கிலுல் மந்திரம் ஓதிப் பணிசெய்தல் இயலாதென்பது முன் உரைக்கப் பட்டது. 559-ம் "அன்பு நாரா வஞ்செழுத்து நெஞ்சு தொடுக்க வலர்தொடுத்தே" (கழறிற் - புரா - 226) என்றதும் பிறவும் பார்க்க. 10

1027. தள்ளு முறைமை யொழிந்திடவித் தகுதி யொழுகு மறையவர்தாங்,
தெள்ளு மறைகள் முதலான ஞானஞ் செம்பொன் வள்ளத்தில்
அள்ளி யகில மீன்றளித்த வம்மை மூலப்பா லுடனுண்ட
பிள்ளை யார்க்கு நண்பருமாம் பெருமை யுடையா ராயினுர். கக

(இ - ள்) வெளிப்படை. நூல்களால் விலக்கப்பட்டவை நீங்க, இவ்வாறு தக்க நல்லொழுக்கத்தில் வாழும் திருமறையோராகிய முருகனுர், தெள்ளும் மறைகளில் முதலாக எடுத்துக் கூறப்பட்ட சிவஞானத்தைச் செம்பொற் கிண்ணத்தில் அள்ளி எடுத்து எல்லா உலகங்களையும் பெற்றுக்காக்கின்ற அம்மையாரது திருமூலப்பாலுடன் உண்டருளிய ஆளுடையபிள்ளையாருக்கு நண்பருமாகின்ற பெருமையினை உடையா ராயினுர்.

(வி - ரை). தள்ளும் முறைமை ஒழிந்திட - தள்ளும் முறைமை - அறநூல்களா லும் அறிவோராலும் விலக்கப்பட்ட தகைமையுடைய செயலொழுக்கங்கள். முறைமை- முறைமையின் வரும் செயல்களைக் குறித்தது. ஆகுபெயர். ஒழிந்திட - நீங்க - போக. அவரது முயற்சியின்றியே அத்தீயவை அவர்பாலணுகாது தாமே ஒதுங்கின என்று குறிக்க ஒழித்திட என்னுது ஒழிந்திட என்றுர்.

இத்தகுதி - முன் 1022 முதல் 1026 வரை கூறிய இந்தச் சரியை கிரியை முத லாகிய தவநெறி வாழ்வு. இ - அண்மைச்சுட்டு. இப்போது கூறிய இந்த என்க.

தெள்ளும் மறைகள் - உலகுக்கு உண்மை தெளிவிக்கும் வேதங்கள். தெள் ளும் - தெளிவிக்கும். இவை வேதமுடிவு, வேதசிரசு, வேதமுதல், உபநிடதம் என்று பலவாறும் உபசரித்துக் கூறப்படுவன.

முதலான ஞானம் - சிவஞானம். மறைகளில் முதலாவதாக - சிறந்த முடிவாக - எடுத்துச் சொல்லப்படும் ஞானம். "தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவு" (சிறுத் - புரா - 4) என்றது காண்க.

மறைகள் முதலான ஞானம் - மறைகள் முதலானவும் சிவஞானமும் என்று உம்மைத் தொகையாக்கி உரைப்பினும் அமையும். ஞானம் என்றது அபர ஞானங்க ளாகிய கலைஞானங்களும், உணர்வரிய மெய்ஞ்ஞானமாகிய பரஞானமுமாம். "வாரிணங்கு திருமூலிபொன் வள்ளத்துக் கறந்தருளி" (67), "எண்ணரிய சிவ ஞானத் தின்னமுதங் குழைத்தருளி" (68) என்ற திருஞானசம்பந்த நாயனுர் புராண வரலாறுகள் காண்க.

ஞானம்...பிள்ளையார் - அவர்தம் புராணம் 61-68 பாட்டுக்களிற் கூறும் சரித வரலாறு பார்க்க. அவ்வாறு உண்டமையால் மெய்ஞ்ஞானமுணர்ந்து "தாவில் தனிச் சிவஞான சம்பந்த ராயினுர்" (66) என்றதும் காண்க.

ஞானம் - அள்ளி - முலைப்பாலுடன் - பொன்வள்ளத்தில் - உண்ட - பிள்ளையார்.

அகிலம் ஈன்று அளித்த அம்மை - உலகங்களுக்கெல்லாம் தாயாகிய உமை யம்மையார்.

மூலப்பால் - பரம் அபரம் என்ற இரண்டு ஞானங்கள் திருமூலைகளாக உப சரித்துக் கூறப்படுவது மரபு. இதுபற்றியே "உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானந், தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்" என்று அத் திரு முலைப்பாலுண்டருளியதன் விளைவைப் புராணத்தினுள் கூறியதும் காண்க. 257-ல் உன்ரத்தவையும் பார்க்க.

நண்பருமாம் பெருமை - முன் சொல்லிய தகுதி ஒழுகும் பெருமையோடு என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

"சண்பைநாதற்குத் தோழன்" என்றது வகை நூல். இப்பெருமை ஆளுடைய பிள்ளையாரையும், ஆளுடைய அரசுகளையும், அவர்களுடன் போந்த எண்ணிறந்த திருத் தொண்டர்களையும் பல காலம் தமது திருமனையில் வைத்து உபசரித்தமையும் பிறவு மாக அப்புராணங்களுள் விரிக்கப்படுவது. இதுபற்றி 1019-ல் உரைக்கப்பட்டவை பார்க்க. 11

1028. அன்ன வடிவு மேனமுமா யறிவா ரிருவ ரறியாமே
மன்னும் புகலூ ருறைவாரை வர்த்த மான வீச்சுரத்து
நன்னர் மகிழ்ச்சி மனங்கொள்ள நாளும் பூசை வழுவாமே
பன்னும் பெருமை யஞ்செழுத்தும் பயின்றே பணிந்து பரவினார்.

(இ - ள்) வெளிப்படை. அன்னவடிவமும், பன்றிவடிவமும் எடுத்து அறியப் புக்க பிரமவிட்டுணுக்களாகிய தேவர்கள் இருவரும் அறியாதே நிலைபெற்ற திருப்புகலூரில் எழுந்தருளிய சிவபெருமானுரை வர்த்தமான வீச்சரம் என்ற திருக் கோயிலில் நல்ல மகிழ்ச்சியை மனங்கொள்ள ஒவ்வொருநாளும் பூசையினைச் செய் தலில் தவிராமல், சொல்லத்தக்க பெருமையினையுடைய திருவைந்தெழுத்தினையும் பயின்றே பணிந்து, வழிபட்டு வந்தார்.

(வி - ரை) அறிவார் இருவர் அறியாமே - அறிவார் - தேவர்கள் என்று கொண்டு, அறிவிற்சிறந்த புலவர் என்ற பெயர் பெற்ற தேவராயினும் அவர்களும் அறியமாட் டாது என்றுரைத்தலுமாம். அறிவாராயினும் இறைஞ்சிக் காணும்வகை யறியாது அன்னமும் ஏனமுமாகித் தாமே தற்போதத்தாற் காணப்புக்க படியால் அறியாராயி னர் என்பது குறிப்பு. அறிவார் - அறியாமே - முரண் தொடை. இலிங்க புராணத் திருக்குறுந்தொகைக் கருத்துப் பார்க்க.

அறியாமே மன்னும் புகலூர் உறைவார் - அறியத்தக்காராயினும் அவர்கள் அறியவொண்ணாமை புகலூரில் உறைவார் என்ற சுவையும் காண்க. அறிவார் அறியாராயினும் முருகனுர் அறிந்து புகலூர்ப் பெருமானே வர்த்தமான வீச்சுரத்தில் பரவினுர் என்ற குறிப்பும் காண்க. புகலடைந்து புகலூரில் காணுது இகலினுற் றேடினுர் என்றது தொனிக்கவும் நிற்பது காணத்தக்கது.

அறிவானிநவர் என்பது பாடமாயின் அறியும் பொருட்டு என்க.

வர்த்தமான ஈச்சுரம் - முருகனுர் ஆன்மார்த்தமாய்க் கொண்டு பூசித்த இடம். இது திருப்புகலூர் ஆலயத்தினுள் இறைவர் கோயிலினை அடுத்து வடகீழ்ப்பக்கம் உள்ள தனிக்கோயில். இதில் முருகனுரது திருவுருவம் திருப்பூங்கூடையுடன் திரு மாலைப்பணி செய்யும் திருக்கோலத்துடன் சந்நிதானத்தில் எழுந்தருளச் செய்துள்ளது.

நன்னர் மகிழ்ச்சி மனம் கொள்ள - நன்மகிழ்ச்சி தம்மனத்தைப்பற்றிக்கொள்ள. சிவன்றிருப்பணியின் வைத்த ஆர்வத்தால் உளதாகிய மகிழ்ச்சியாதலின் நன்னர் மகிழ்ச்சி என்றுர். ஏனையவாற்றுல் உளவாகும் மகிழ்வெல்லாம் எல்லையற்ற நன்மை செய்யமாட்டா என்பது.



1

2

1. திருப்புகலூர் திருக்கோயில்
(முன்கோபுரமும் பூம்பொய்கையும்)
—பாட்டு - 1017 - பக்கம் - கஙகச

2. திருப்புகலூர் வர்த்தமானீச்சரமும் முருக நாயனரும்
—பாட்டு - 1028 - பக்கம் - கஙகஎ

திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்திலுள்ள
முருக நாயனர் திருவுருவம்

நாளும் என்பதனை, வழுவாமே - பயின்றே - பணிந்து - பரவினூர் என்ற ஒவ்வொன்றுடனும் தனித்தனி கூட்டுக. நாளும் - ஒவ்வொரு நாளும். பூசை செய்தல் - ஐந்தெழுத்துப் பயிலுதல் - பணிதல் - பரவுதல் - என்ற ஒவ்வோர் தனிச்செய்கைகளை ஒவ்வோர் வினைச்சொற்களால் நிகழ்த்தி முடிபு செய்தல் குறிக்க. இவைதனிச் செயல்களாயினும் பூசைக்குரிய அங்கங்களாகப் பொருந்திப் பரவுதல் என்னும் வினையுடன் முடிதலின் இவற்றை வினையெச்சங்களாக்கிப் பரவினூர் என்ற வினைமுற்றுடன் கூட்டி முடித்த நயமும் காண்க. இவை பூசைக்கு அங்கங்களாகிய தனிச் செயல்கள் என்பது "பதிகம் பாடினூர் பரவினூர் பணிந்தார்" (253) என்ற விடத்து அறிவித்திருத்தலும் காண்க. பூசையின் போதும் பூசை முடிவிலும் திருவஞ்செழுத்துப் பயிலத்தக்கதென்பதனை "நீடு பூசனை நிரம்பியு மன்பினு னிரம்பார், மாடு சூழ் புடை வலங்கொண்டு வணங்கிமுன் வழுத்தித், தேடு மாமறைப் பொருளினைத் தெளிவுற நோக்கி, நாடு மஞ்செழுத் துணர்வுற விருந்துமுன் னவின்றூர்" (10) என்ற திருநீலநக்க நாயனூர் புராணத்தாலும் அறிக. இங்குக் கூறுத வேனை அங்கங்களும் அங்கு விரிக்கப்படுதலும் காண்க.

**பன்னும் பெருமை** - வேதாகமங்களால் எடுத்துச் சொல்லப்பட்ட பெருமை. **பன்னும்** - கணித்தற்குரிய என்றலுமாம்.

**அஞ்செழுத்துப் பயிலுதல்** - மனத்தின் செய்கையும், **பரவுதல்** வாக்கின் செய்கையும், **பணிதல்** காயத்தின் செய்கையுமாதலும் காண்க.

**பயின்று** என்றது இடைவிடாது கணித்தல் குறித்தது. 1025 பார்க்க.

சில பிரதிகளில் இப்பாட்டு 11-வதாகவும் 11-வது பாட்டு 12-வதாகவும் உள்ளது.

**அறியாமல்**—என்பதும் பாடம். 12

1029. அங்க ணமருந் திருமுரு கரழகார் புகலிப் பிள்ளையார்
பொங்கு மணத்தின் முன்செய்த பூசை யதனுற் புக்கருளிச்
செங்க ணடலே றுடையவர்தாஞ் சிறந்த வருளின் பொருளளிக்கத்
தங்கள் பெருமா னடிநீழற் றலையாம் நிலைமை சார்வுற்றார். கஙு

(இ - ள்) வெளிப்படை. அவ்விடத்து அமர்கின்ற திருமுருகனூர், அழகிய புகலியில் வந்த ஆளுடையபிள்ளையாருடைய சிவம் பொங்கும் திருமணத்தில் முன்செய்த பூசையின் பயனாலே புகுந்தருளிச், செங்கண்ணுடைய வலிய இடபத்தையுடைய சிவபெருமான் சிறந்த அருளாகிய இனிய பொருளை அளிக்கத், தம் பெருமானுடைய திருவடிநீழலின் கண்ணதாகிய நிலைபெற்ற தன்மையைச் சார்வுற்றனர்.

(வி - ரை) **அங்கண்** - அவ்விடத்து - புகலூரில். **அங்கண்** - அதன்கண் அஃதாவது பூசையின்கண் என்று உரைப்பினு மமையும். **அங்கண்மை** - அன்புடைமை என்ற உட்குறிப்பும் காணப்படும்.

**அமரும்** - விரும்பியிருக்கும். பூத்திருப்பணியிலும், பூசையிலும், ஆளுடைய பிள்ளையாரது நண்பினிலும் விரும்பி ஒழுகும். "பரிந்துள்ளார்" (1025), "நன்னர் மகிழ்ச்சி மனங்கொள்ள" (1028) என்றவை காண்க.

**அழகார் புகலி** - புகலி - சீகாழி. புகலியின் அழகுச் சிறப்புக்களை ஆளுடைய பிள்ளையாரது திருப்பதிகங்களாலும், அவர்தம் புராணம் 2–9 பாட்டுக்களாலும், பிறண்டும் கண்டுகொள்க.

**பொங்குமணம்** - சிவம்பெருக்கும் பிள்ளையாரது சிவம் பெருக்கும் திருமணம். **பொங்குதல்** - மேன்மேல் வளர்தல். திருமணத்தில் வந்த எல்லாரும் சோதிவாயிலி

னுள்ளே புகும்வரை சோதியோங்கியும் அத்திருவாயில் திறந்தும் சிவத்துவம் வளர்ந்து கொண்டேயிருந்த சரிதம் காண்க.

**முன்செய்தபூசை** - முன் 1022-1025, 1028-ல் கண்டபடி, இப்பிறப்பிற்செய்த பூசையும், அப்பூசைக்குக் காரணமாயிருந்த முன்னைத்தவமும் (1022) இங்குப் **பூசை** எனப்பட்டது.

**பூசையதனற்புக்கருளி** - ஆளுடைய பிள்ளையாரது திருமணத்திற் புகுவதற்குப் பூசைகாரணமாகியது. பூசையாகிய தவம் செய்தோரே அத்திருமணத்திற் புகப் பெற்றார் என்பதுண்மை. என்னை? அதிற்புகுந்தோர் அனைவரும் முத்தியடைந்தமை யாலும், "வேத சிரப்பொருளே மிகத்தெளிந்தும் சென்றுற் சைவத், திறத்தடைவ ரிதிற் சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வார்" (சிவ ஞான சித்தியார் - 8 - 11) என்பதும், தவஞ் செய்யாதார் சிவனடி சேரார் என்பதும் உண்மை நூல்களின் முடிபாதலாலும் முன்செய்த பூசைகாரணமாகத் திருமணத்திற் புக்கனர் என்றார். அவ்வாறு திருமணத்திற் புகுதலே முத்திபெற்றதாய் முடிந்த தாதலின் **புக்கருளி** என்று அருமைப்பாடு பெறக்கூறினர்.

**சிறந்த அருள் இன் பொருள்** - சிறந்த அருள் - சிவனருள். **இன் பொருள்** - சிவஞானம். சிவானந்தம் என்பாருமுண்டு.

**அடிநீழல் தலைஆம் நிலைமை** - நீழல் தலை - நீழலின் தண்ணை - தலை - ஏழ னுருபு. ஆம் - ஆகின்ற. நிலைமை - நிலைபெற்ற தன்மை - மீளாநிலை. சிவனடி பெறு தலாகிய நிலைத்த வீடுபேறு..."செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வார்" என்றும், "ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்த லெந்தும், இறைவனடி யடைவிக்கு மெழில்ஞான பூசை" (சித்தி - 8 - 23) என்றும் கூறியபடி இந்நாயனார் செய்த பூசை இவருக்குத் திருமணத்தின் வழியே இறைவனடியில் குடியிருக்கும் நிலை தந்தது. ஞானத்தாற் சிவனடி சேர்தல் என்ற உண்மையானது இந்நாயனாரளவில் ஞானசம் பந்தரது அணையால் என்ற குறிப்புத்தர நிகழ்ந்ததும் காண்க. அது குறிக்கவே ஆசிரியர் "மணத்திற் புக்கருளி அடிநீழல் - நிலைமை சார்வுற்றார்" என்றருளினர். இந்நாயனார் மலர்பறித்துச் சாத்திமகிழ்தலாகிய சரியையும், சாந்தம் புகை முதலியன கொண்டு சிவலிங்கத்தில் பூசித்தும் அருச்சித்தும் வழிபடுதலாகிய கிரியையும், அஞ் செழுத்துப் பயிலும் அகப்பூசையாகிய யோகமும், செலுத்தியபடியால் அவை காரண மாக ஞானத்தினுட் புகுந்தனர் என்ற குறிப்பும் பெறப் **பூசையதனல் புக்கருளி** என்ற நயமும் காண்க.

**சார்வுற்றார்** - **சார்பு** - சைவசித்தாந்த முணர்த்தும் மரபுப்பெயர். முன்னர் இப் பிறவியின் சார்வுற்ற உயிர், தான் சாரவேண்டிய மேலிச்சார்பினை யுணர்ந்து, இவ் வுலகச் சார்பு கெட ஒழுகிய சிவஞான ஒழுக்கத்தாலே சிவனடி நீழலாகிய நிலைத்த சார்பினை அடைந்தார் என்க. இவ்வாறு இந்நாயனார் சிவனடி நீழல் சார்வுற்ற சரிதம் "சீர்பெருகு நீலநக்கர் திருமுருகர் முதற்றொண்டர்" (1251) என்ற திருஞானசம்பந்த நாயனார் புராணத்திருப்பாட்டாலும், அச்சரித வரலாற்றாலும் அறிக. 13

1030. அரவ மணிந்த வரையாரை யருச்சித் தவர்தங் கழனிழற்கீழ்
விரவு புகலூர் முருகனார் மெய்ம்மைத் தொண்டின் றிறம்போற்றிக்,
கரவி லவர்பால் வருவாரைக் கருத்தி லுருத்தி ரங்கொண்டு
பரவு மன்பர் பசுபதியார் பணிந்த பெருமை பகர்வுற்றேன். கச

(இ - ள்) வெளிப்படை. பாம்பை அணிந்த அரையினையுடைய சிவபெருமா னரை அருச்சித்து அதன் பயனாக அவருடைய திருவடியின் கீழே பொருந்தும்

புகலூர் முருகநாயனாருடைய் உண்மைத் திருத்தொண்டின் திறத்தினைத் துதித்து, இனிக், கரவில்லாதவரிடத்து வருவாராகிய சிவபெருமானை மன்த்துட்கொண்டு திரு வுருத்திரத்தினால் துதிக்கும் அன்பராகிய பசுபதியார் சிவனைப் பணிந்த பெருமையினைச் சொல்லப்புகுகின்றேன்.

(வி - ரை) அரை அரவு அணிந்தாரை - சிவபெருமான் அரவத்தை அரைஞாணாக வும் அற்றத்தை மறைக்கும் மறைப்பாகவும் பூண்பர் என்பது மரபு. "பைவாய் பாம்பரை யார்த்த பரமனை" (அரசுகள் - திருவங்கமாலை), "அற்ற மறைப்பது முன் பணியே" (ஆளுடைய பிள்ளையார் - பழம்பஞ்சுரம் - திருவியமகம் - கழுமலம் - 1), "அரையார்த் திட்டதும் பாம்பு" (நம்பிகள் - கோத்திட்டை - 1) முதலியன காண்க.

அருச்சித்துக் - கழற்கீழ் - விரவு என்று கூட்டுக. அருச்சித்ததனால் எனக் காரணங்கூறியபடி. "முன்செய்த பூசையதனாற் புக்கருளி" (1029) என்றது பார்க்க.

அருச்சித்த முறைகள் முன்னுரைக்கப்பட்டன.

மெய்ம்மைத் தோண்டு - "மெய்ம்மைத் தவம்" (1022) என்றது காண்க. "தன்னெஞ்சறிவது பொய்யற்க" (குறள்) என்றபடி நெஞ்சறிந்தவகையில் ஒன்றனும் பிறழாதவண்ணம் செய்த திருத்தொண்டு. தொண்டினதிறம் - தொண்டினை முழு தும் போற்றுதல் இயலாது; அதன் திறம் - தன்மை - ஒரு சிறிது மட்டும் போற்றப் பட்டதென்பது குறிப்பு.

கரவு இல்லவர்பால் வருவார் - "கரவார்பால் விரவாடும் பெருமானை" என் றும், "கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை" என்றும் அப்பர் சுவாமிகள் அருளியவை காண்க.

கருத்திற்கொண்டு உருத்திரம் பரவும் என்க. உருத்திரத்தினாற் பரவும். (அன்ப ராகிய) பசுபதியார் என்க. இதனால் இனிவரும் புராணத்திற்குரிய நாயனாரது பெயரும் அவர் செய்த திருத்தொண்டும் கூறியவாறு.

பணிந்த பெருமை - தொண்டுசெய்த பெருமையுடைய வரலாற்றினை.

இதனால் ஆசிரியர் தமது மரபுப்படி இதுவரை கூறிவந்த சரிதத்தை வடித் தெடுத்து முடித்துக்காட்டி, இனிவரும் சரிதத்தையும் குறிப்பித்துத் தோற்றுவாய் செய்கின்றார்.

பரவுறேன்—என்பதும் பாடம். 14

---

சரிதச்சுருக்கம் :—சோழர்களது காவேரித் திருநாட்டில் மலர்ச்சோலைகள் சூழ்ந்த அழகுடைய சிறந்த நகரம் திருப்புகலூர். அதிற் பெரியோர் வாழ்வர். அவர் களது திருமேனிகளிலணிந்த திருநீற்றுப் பூச்சின் வெள்ளிய ஒளி உள்ளும் புறம்பும் ஒளி பரப்பி விளங்கும். சோலைகளில் பூவைகள் தாம்கேட்ட பழக்கத்தால் திருப்பதி கங்களைப் பாடுவன; அதுகேட்ட அன்பர்கள் மனமுருகிக் கண்ணீர் அரும்பாநிற்பர்.

இத்தகைய வளம் பொருந்திய புகலூரில் மறையவர் மரபில் வந்தவர் முருகனார். அவர் சிவஞானம் சிறந்தவர். சிவபெருமான் திருவடியில் நிறைந்த அன்பினால் உருகும் மனமுடையவர். முன்னை மெய்த்தவத்தினால் அவர் சிவபெருமானுக்குத் திருப்பள்ளித் தாமம் பறித்துச்சாத்தும்திருப்பணியை மேற்கொண் டொழுகினர்.

விடிவதற்கு முன் எழுந்து நாட்கடன் முடித்துத் தூயநீரின் மூழ்கிப்போய், மலர்ச் சோலைகளிலும் மலர் வாவிகளிலும் புக்குப் பெருமானுக்குச் சாத்தும் சமயத்தில் அலரும்படியான பருவத்திற் பறித்த மலர்களை வெவ்வேறு திருப்பூக் கூடைகளில் அமைப்பார். கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ என்ற நால் வகை மலர்களில்

சிவபெருமானுக்குச் சாத்துதற்கு ஆகும் மலர்களைத் தெரிந்து எடுத்துக் கொண்டுவந்து, அதற்கென் றமைக்கப்பட்ட தனியிடத்தில் இருந்துகொண்டு அவற்றைக் கோவை, தாமம், மாலை, கண்ணி, பிணையல், தொடையல் முதலியனவாக அவ்வக்காலத்துக் கேற்றபடி அமைத்து உரிய காலங்களிற் கொண்டுபோய் அன்பினோடு சாத்தி இறை வனது குறிப்பறிந்து கண்டு கண்டு மகிழ்ந்தார். சாந்தம் தூபம் முதலியவற்றோடு பொருந்திய அர்ச்சனைகளை முறைப்படி செய்து அன்பு பெருகிவந்தனர். சிவபெரு மானது திருப்பதிகப் பற்றுகிய திருவைந் தெழுத்தையும் இடைவிடாமல் நாவினாற் பயின்றார். விதிவிலக்குகளை அறிந்து அதற்கேற்றபடி ஒழுகினார். உலக மீன்ற அம்மையாரது திருமுலைப்பாலினைச் சிவஞானத்துடன் குழைத்து ஊட்ட உண் டருளிய ஆளுடைய பிள்ளையாருக்கு நண்பராதும் பேறுமையையும் பெற்றனர்.

இவ்வாறு முருகனார் பல நாள் தமது நியதியாகிய பூசையினை ஒரு நாளும் வழுவாமே செய்து வந்தனர். முன்செய்த பூசையின் பயனுகத் திருஞான சம்பந்த நாயனாருடைய திருமணத்திற் புக்கருளிச் சிவபெருமானது திருவடிநீழல் சாரும் நிலை யாகிய பெருவாழ்வை அடைந்தனர்.

---

தலவிசேடம் :—1. திருப்புகலூர் - தீக்கடவுள் வழிபட்டதனால் அக்கினீசம் என்பர். பிறவிக்கஞ்சிய உயிர்கள், புகலடையத் தக்கதாகலின் புகலூர் எனப்படும். தலமரத்தினாற் புன்னைவனம் எனப் பெயர்பெறும். இறைவன்றிருமேனி சாய்ந் திருத்தலிற் கோணேசம் எனப்படும். அக்கினி தீர்த்தம் கோயிலைச் சுற்றிலும் அகழி போலச் சூழ்ந்திருக்கின்றது. இறைவனது கோயில் திருமுற்றத்தில் வந்தெழுந்த பொன் மணி முதலியவற்றைப் பருக்கைக் கற்களோ டொப்பத் திருவுழவாரத்தில் ஏந்தி அப்பர் சுவாமிகள் இத்தலத்தில் "வண்டலர்மென் பூங்கமல வாவியினிற் புகவெறிந் தார்".இவ்வூர் சோலைகளாலும் மலர்வாவியாலும் அணிபெற விளங்கும் தன்மை புராணத் தினாலும் தேவாரப் திருப்பதிகங்களாலும் அறியலாம். சென்றகாலம், வருங்காலம், நிகழ்காலம் என்னும் மூன்று காலங்களுக்கும் முறையே உரிமைப்பாடுடைய பூத, பௌடிய, வர்த்தமான லிங்கங்கள் தாபிக்கத்தக்கன. பரமாசாரிய மூர்த்திகள் மூவரும் தாபித்துத் தங்கித் திருப்பதிகங்கள் பாடியருளிய தலம். திருஞானசம்பந்தநாயனா ரும் திருநாவுக்கரசுநாயனாரும் திருநீலநக்கநாயனார் சிறுத்தொண்டநாயனார் முதலிய எண்ணிறந்த அடியார்களும் பலகாலம் இங்கு முருகநாயனார் திருமடத்தில் எழுந் தருளியிருந்த சிறப்புடையது. 1019-ம் பாட்டில் உரைத்தவை பார்க்க. திருநாவுக் கரசர்பெருமான் இங்குப் பலகாலம் தங்கிப் பணிசெய்திருந்து "புண்ணியா வுன் னடிக்கே போதுகின்றேன்" என்று துதித்துச் சிவபெருமான் திருவடிப்பேறு பெற் றருளினர். ஆளுடையநம்பிகள் செங்கல் செழும் பொன்னகப் பெற்றுத் "தம் மையே புகழ்ந்து" என்ற திருப்பதிகத்தாற் போற்றியருளிய தலம்.

சுவாமி - அக்கினீசர் - கோணேசர்; அம்மையார் - கருந்தார்குழலி. திருப்பதிகங் கள் 8. இது தென்னிந்திய இருப்புப்பாதை நன்னிலம் நிலயத்திலிருந்து கிழக்கே மட் சாலியில் 4 நாழிகை யளவில் அடையத்தக்கது.

2. திருப்புகலூர் வர்த்தமானேச்சுரம் - புகலூர்த்திருக்கோயிலுக்குள் வர்த்த மானலிங்கம் எழுந்தருளியிருக்கும் தனியிடம். சுவாமி சந்நிதிக்கு அடுத்த வடபுறம் உள் ளது. இப்பெருமானை முருகநாயனார் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகக் கொண்டு நாளும் பூப்பணிவிடையும் பூசையும் செய்து வழிபட்டுப் பேறடைந்தனர். பூக் கூடையுடன் வழிபடும் திருக்கோலமாக நாயனாரது திருவுருவம் இச்சந்நிதியில் எழுந் தருளச் செய்யப்பட்டுள்ளது. சுவாமி - வர்த்தமானீசர்; அம்மை - கருந்தார்குழலி - திருப்பதிகம் 1.

**கற்பனை :**—1. நல்லோர்களது மனமும் அவர்கள் அணியும் திருநீற்றினைப் போலவே சிறந்த வெண்மைத் திருந்து ஒளியுடையன. அவை பொருள்களைக் களங்கமின்றி விளங்கச்செய்வன.

2. கேட்ட பழக்கத்தால் பூவை முதலிய பறவைகளும் திருப்பதிகப்பாடல்களைப் பாடவல்லனவாகும்.

3. சிவபெருமானைப் பாடும் திருப்பதிகங்களைக் கேட்ட தொண்டர்களது முகங்கள் அன்பினால் கண்ணீர் ததும்புவன.

4. விதிப்படி பூக்கொய்து மாலைகள் ஆக்கிச் சிவபெருமானுக்குச் சாத்தி மகிழ்தலும், சிவனை அருச்சித்தலும், சிவநாமமாகிய திருவைந்தெழுத்தைக் கணித்தலும் மிகச் சிறப்பாகிய சிவபுண்ணியமாம்.

5. இவற்றை மிகச் சிறப்புடன் வேதாகமங்களும் தமிழ் வேதங்களும் எடுத்துப் பேசுகின்றன. "...நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப், புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப் பூமாலைப் புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித், தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச் சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்...அலறா நில்லே" என்று நெஞ்சினுக்கு ஆணையிடுகின்றார் அப்பர் சுவாமிகள். கழறிற்றறிவார் நாயனாரும் இவ்வாறே திருப்பணிசெய்தனர்.

6. மேற்கூறிய திருப்பணிகள் செய்யும் பேறு முன்னை மெய்த்தவத்தால் வரும்.

7. பொழுது விடிவதற்குமுன் எழுந்துபோய், நாட்கடன் முடித்துத், தூய நீரிற் குளித்தல், கோட்டுப்பூ கொடிப்பூ நிலப்பூ நீர்ப்பூ என்ற நால்வகை மலர்களில் சிவபெருமானுக்குச் சாத்தத்தக்க மலர்களைத் தெரிந்து அவை அலரும்பருவத்தே பறித்து வெவ்வேறு திருப்பூங் கூடைகளில் அமைத்தல், கூடைகளை நாபிக்குக் கீழே தொங்கவைக்காது கையாற் றாங்கியும் தண்டிற் றூக்கியும் மேலுயர்த்திப் பிடித்துக்கொணர்தல், அவற்றைத் தனியிடத் தமர்ந்து கோவை - கண்ணி முதலியனவாகக் காலத்துக்கேற்றவாறு தொடுத்துத் தாங்கிச் சென்று உரிய காலங்களிற் சிவபெருமானுக்குச் சாத்துதல், (தாமே சாத்த உரிமை பெறாதார், அவ்வுரிமையுடையாரைக் கொண்டு சாத்துவித்தல்), அருச்சனைபுரிதல், திருவைந்தெழுத்தை விதிப்படி கணித்தல், மலர் எடுக்கும்போதும் தொடுக்கும்போதும் வாய்கட்டி மௌனமாயிருந்து பிறிது எண்ணமில்லாது சிவனடியை நீங்காது சிந்திக்கும் ஒருமை மனத்துடன் பணிபுரிதல் முதலிய இவை பூத்திருப்பணி செய்வார் மேற்கொண்டொழுகவேண்டிய விதிகளாம்.

8. மேற்கண்டவாறு உள்ளுருகிப் பணிசெய்வோர் சிவபத நீழலின்கண் நிலைபெற்ற தன்மை சார்குவர்.

9. முன்செய்த பூசையின் பயனாகப் பெரியோருடனுறையும் பேறு கிடைக்கும்.

10. முன் சிவபூசை செய்த புண்ணியமுடையோரே திருஞானசம்பந்த நாயனாரது திருமணத்திற் புக்குச் சிவபதமடைந்தோராவர்.

## முருகநாயனார் புராணம் முற்றும்

---

**குறிப்பு :**—" தீக்கையில்லாதான், இழிகுலத்தான், மிகுநோயாளன், தூர்த்தன், ஆசாரமில்லாதான், ஆசௌசமுடையான் என்னும் இவர்கள் கொண்டுவரும்பூ, எடுத்து வைத்து அலர்ந்தபூ, பழம்பூ, உதிர்ந்தபூ, காற்றில் அடிபட்டபூ, கையிலேனும் உடுத்த புடைவையிலேனும் எருக்கிலை ஆமணக்கிலைகளிலேனும் வைத்தபூ, அரையின் கீழே பிடித்தபூ, புழுக்கடி எச்சம் சிலந்திநூல் மயிர் என்னும் இவற்றோடு கூடியபூ, ஸ்நானம் பண்ணாமல் எடுத்தபூ, பொல்லா நிலம் - மயான சமீபம் - சண்டாளர் வசிக்குமிடம் முதலிய அசுத்த ஸ்தானங்களில் உண்டாகியபூ, இவை முதலாயின சிவனுக்குச் சாத்தலாகாது. இவை புஷ்பவிதிகளிற் கண்டவை. (ஆறுமுகநாவலர் பதிப்பு - சூசனம்.)

உ

சிவமயம்

# 17. உருத்திரபசுபதிநாயனார்புராணம்

## தோகை

(முருகனுக்கும்) உருத்திர பசுபதிக்கும் அடியேன்

—திருத்தொண்டத்தொகை

## வகை

அந்தாழ் புனறன்னி லல்லும் பகலுநின் முதரத்தால்
உந்தாத வன்போ டுருத்திரஞ் சொல்லிக் கருத்தமைந்த
பைந்தா நருத்திர பசுபதி தன்னற் பதிவயற்கே
நந்தார் திருத்தலை யூரென் றுரைப்பரிந் நானிலத்தே.

—திருத்தொண்டர் திருவந்தாதி (கக)

## விரி

1031. நிலத்தி னேங்கிய நிவந்தெழும் பெரும்புன னீத்தம்
மலர்த்த டம்பணை வயல்புகு பொன்னிநன் னாட்டுக்
குலத்தி னேங்கிய குறைவிலா நிறைகுடி குழுமித்
தலத்தின் மேம்படு நலத்தது பெருந்திருத் தலையூர். க

புராணம் :—உருத்திரபசுபதியார் என்ற பெயருடைய நாயனாரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி. இனி நிறுத்த முறையானே. மும்மையா லுல காண்ட சருக்கத்தில் மூன்றுவது உருத்திரபசுபதி நாயனார் புராணங் கூறத் தொடங்கு கின்றார்.

தோகை :—உருத்திரபசுபதியார் என்ற பெயருடைய நாயனாருக்கும் நான் அடியேன் ஆவேன். உம்மை முன்சொல்லிய முருகனுக்கும் என்றதனோடு கூடிய எண்ணும்மை. நாயனாரது பெயர் பசுபதி என்பதும், நியதியாய்த் திருவுருத்திரத்தைக் கணித்துப் பேறடைந்ததனால் உருத்திரபசுபதி எனப் பெயர்பெற்றார் என்பதும், இதனைப் பேர்க்காரண மிதுவென்பதும், உருத்திரங் கணிக்கும் உரிமையால் மறைய வர் மரபினரென்பதும், சரிதக் குறிப்பும் முதனூல் பேசிற்று.

வகை :—அழகிய ஆழமாகிய புனலுள் இரவும் பகலும் கழுத்தளவாயிடும் நீரினுள் நின்று விருப்பத்தினால் வழுவாத அன்புடனே திருவுருத்திரத்தைச் சொல்லி அதிற் கருத்தினைப் பொருந்திய அழகிய தாமரை மாலையணிந்த உருத்திர பசுபதி என்ற காரணப் பெயருடைய நாயனாரது நல்ல ஊர், வயலுக்குள் சங்குகள் ஏறிச் செல்கின்ற திருத்தலையூர் என்று இந் நானிலத்தில் அறிந்தோர் சொல்லுவார்கள்.

அம் தாழ் புனல் என்றது தாய்மையும் ஆழமும் குறித்தது. தாய்மையை 1035 லும், ஆழத்தை 1036லும் சரிதத் தொடர்புபற்றி விரிநூல் விரித்துரைத்தது காண்க. அல்லும் பகலும் நின்று ஆதரத்தால் என்ற கருத்து "வருமு றைப்பெரும் பகலுமெல் லியும்வழு வாமே" 1037 என்றதனால் விரிக்கப்பட்டது. பைந்தார்-இங்கு அந்தணர்க் குரிய அடையாள மாலையாகிய தாமரை மலர்மாலை குறித்தது என்க.

உருத்திரபசுபதிநாயனார்

—பாட்டு - 1033 - பக்கம் - கஙூ0



1

2

1. திருத்தலையூர் - கோயில்
2. திருத்தலையூர் - கோயிலும் குளமும்

(மாயவரம் - பேரளம் வழி கொல்மாங்குடி நிலயத்தினின்றும் அடைவது)

(உருத்திரபசுபதிநாயனார் தலம்)

—பாட்டு - 1031 - பக்கம் - கஙூஎ

**உருத்திராஞ் சோல்லி** அமைந்த **உருத்திரபசுபதி** என்றமையால் பெயர்போந்த காரணம் அறிவித்தவாறுமாயிற்று. இதனை விரிநூல் 1039ல் விரித்தமை காணத் தக்கது.

**வயற்கே நந்து ஆர்திருத்தலையூர்** - இதனால் இவ்வூர் மருதநிலச் சிறப்பமைந்த செழித்த நாட்டில் உள்ளதென்பதாம். இதனை "நிவந்தெழும் பெரும்புன னீத்தம், மலர்த்த டம்பணை வயல்புகு பொன்னிநன் னாடு" 1031 என்று விரிநூல் விரித்துக் காரணத்துடன் பொருள் உரைத்தது காண்க. **பதியினைத் தலையூர் என்றுரைப்பர்** என்று கூட்டி முடிக்க. உந்தாத - வழுவாத. "கொள்ளும் அன்பினில்" (1036) என்றது பார்க்க. நற்பதி - நன்மையாவன இன்ன என்பதை விரிநூல் 1032-ல் விளக்கியது காண்க. **உரைப்பர்** என்றதற்கு அறிந்தோர் என்ற எழுவாய் வருவிக்க ; உரைக்கத்தக்கவர் அவரேயாகலான்.

1031. (இ - ள்) வெளிப்படை. உயர்ந்து பரந்தெழுகின்ற நீத்தமானது மலர்த் தடங்களிலும் பெரிய வயல்களிலும் புகுகின்ற நல்ல நிலத்தில் **காவிரி நாட்டிலே**, குலத்தின் ஓங்கியனவாயும், குறைவில்லாத நிறைவையுடையனவாயும் உள்ள குடிகள் நெருங்கியிருத்தலால், ஊர்களுள் மேம்படுகின்ற நன்மையினையுடையது பெரிய **திருத்தலையூராம்.**

**(வி - ரை) நிலத்தின் ஓங்கிய நாட்டு** என்க. **ஓங்குதல் - பெருமையிற் சிறத்தல்.** உலகில் எல்லா நாடுகளுள்ளும் சிறந்த நாடு என்பதாம். **நிலத்தின் ஓங்கிய பொன்னி** என்று கூட்டிக் காவிரிக்குச் சிறப்பாக்கி உரைப்பினும் அமையும். இப்பொருளில் காவிரி ஏனைய ஆறுகளினும் சிறந்தது என்பதாம். இதுபற்றி திருநாட்டுச் சிறப் பிற் கூறியவை பார்க்க. நாட்டுச் சிறப்பாகப் பொருள் கொள்ளும்போது, காவிரி பெருகித் தடங்களிலும் வயல்களிலும் புகுதலால் என்று காரணங்காட்டினர் என்க.

**நிவந்து எழும் பெரும்புனல் நீத்தம் - நிவந்து எழும்** என்றதனால் காவிரி பெரு கும்போது அகன்று மிகப் பரந்து கிளம்பும் தன்மையும், **பெரும்புனல்** என்றதனால் அது மேலோங்கி உயரும் தன்மையும், **நீத்தம்** என்றதனால் வேகமாய்ச் செல்லும் தன்மையும் குறிக்கப்பட்டன. அகலமும் ஆழமுமிருப்பினும் வேகமாய்ச் செல்லாத கோதாவிரிபோன்ற ஆறுகளும் உண்டு.

**நீத்தம், மலர்த்தடங்களிலும், பணைவயல்களிலும்** புகும் என்று உருபு விரித் துரைக்க.முன்னுரைகாரர்கள் தாமரைகளையுடைய வயல்களிற் புகும் என்றுரைத்தனர்.

**புகுபொன்னி** - வெள்ளம் வரும்போது மக்களின் பெருமுயற்சியின்றித் தானே கவே, அங்கங்குள்ள தடம் முதலிய நீர் நிலைகளினும், வயல்களினும் சென்று நிறை கின்ற காவிரியின் இயல்பு குறித்தது. "வயலுட்புக" (60) என்றது பார்க்க.

**பொன்னி நல் நாட்டுத் - திருத்தலையூர் - நலத்தது** என்று கூட்டிமுடிக்க. நாட் டுத் தலத்தின் மேம்படு என்று கூட்டி உரைத்தலுமாம். **நன்மை** என்றது இயற்கை யடைமொழி. பொன்னி வருகின்ற வழியில் அதனைப் பயன்பெறுமலும் நோய்க்கிருப் பிடமாகவும் உள்ள நலமில்லா நாடுகளும் சிலவுள ஆதலின், அவற்றினின்றும் பிரித்து, அதன் பயன்பெற்ற நன்மையுடைய என்று கொண்டு பிறிதினியைபுநீக்கிய விசேடண மாக வுரைப்பினும் அமையும்.

**குலத்தின்...குடி - குலத்தின் ஓங்குதல் -** "இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல் குடி" என்றபடி தாய் தந்தை என்ற இருவர் மரபும் தூயவாய் வழிவழி நீண்ட காலமாய் வருதல்.

**குறைவிலா நிறைதடி** - குறைவிலாக்குடி - நிறைகுடி என்று தனித்தனி கூட்டி யுரைப்பது மொன்று. இந்நிறைவாவது செல்வம், மக்கள் முதலிய உடல்பற்றிய உலகினிலப் பொருள்களாலும், கல்வி ஞானம் முதலிய உயிர்பற்றிய அறிவு நிலைப் பொருள்களாலும் குறைவில்லாதிருத்தலும், சிந்தையின் நிறைவாகிய செல்வம் பெற் றிருத்தலுமாம். இதனையே நலம் என்றார். இதனால் இவ்வூர் சிறப்புப் பெற்றது என்று குறிக்கத் தலத்தின் மேம்படும் என்றார். தலம் - ஊர். சாதி யொருமை. நிலம் மேம் படும் வளத்தினைக் காவிரி தன்னுட்கொண்டு இருத்தல்போலக், குடிகள் குலம் மேம் படுதற்குரிய குணங்களைத் தம்முட்கொண்டு விளங்கும் என இங்கு விசேடவுரை காண்பாருமுண்டு.

**தலையூர்** - தலத்தின் மேம்பட்ட காரணத்தால் தலையூர் என்று பெயராயிற் றென்பது குறிப்பு. இவ்வாறு ஊர்ப்பெயர்களைச் சிறப்பித்துக் கூறுவது ஆசிரியரது மரபு. 866-ல் உரைத்தவையும், தலவிசேடமும் பார்க்க.

பொன்னி நீத்தம் தடம், வயல் புகலாற் குறைவில்லாததாயிற்று ; குறைவில்லை யாகக் குடிகுழுமியன ; குடிகுழுமத் தலம் நலத்தின் மேம்பட்டது ; மேம்படவே தலை யூராயிற்று என்றிவ்வாறு தொடர்ந்து கொள்ள நிற்பது காண்க.

திருவருத்திரம் திருவைந் தெழுத்தை உள்ளுறையாகக்கொண்டு மறையின் பயனுய் விளங்குதலின் இப்புராணத்தை ஐஞ்சீர்க் கலித்துறையாற் கூறும் சிறப்பும் காண்க.

**தடம்புனை—மேம்படுதகையது**—என்பனவும் பாடங்கள். 1

1032. வான ளிப்பன மறையவர் வேள்வியின் வளர்தீத்
தேன ளிப்பன நறுமலர் செறிசெழுஞ் சோலை ;
ஆன ளிப்பன வஞ்சுகந் தாடுவார்க் கவ்வூர்
தான ளிப்பன தருமமு நீதியுஞ் சால்பும். 2

(இ - ள்) வான்...தீ - மறையவர்களது வேள்வியின் வளரும் தீயானது மழையை அளிப்பன ; தேன்...சோலை - நறுமலர்கள் நிறைந்த சோலைகள் தேனை அளிப்பன ; ஆன்...ஆடுவார்க்கு - ஆனினங்கள் அளிப்பனவாகிய ஐந்தினையும் மகிழ்ந்து ஆடுகின்ற சிவபெருமானுக்கு ; அவ்வூர்...சால்பும் - அவ்வூர் தருமமும் நீதியும் சால்பும் என்ற இவற்றை அளிப்பன.

(வி - ரை) தீயானவை வானினை அளிப்பன; சோலை தேனை அளிப்பன ; அவ்வூர் தருமமும் நீதியும் சால்பும் ஆடுவார்க்கு அளிப்பன என்க.

**வான்அளிப்பன - வேள்வியின்வளர்தீ** - வேள்வி செய்தல் மழைக்குக் கார ணமா மென்பது. வேள்வி - சிவவேள்விகள். **வான்** - வானிடத்து நின்று பெய்யும் மழைக்கும் பெயராய் வழங்கும். ஆகுபெயர். "வான்சிறப்பு" என்றது காண்க. "அங்கவை பொழிந்த நீரும் ஆகுதிப் புகைப்பா லுறும்" (834) என்ற விடத்துரைத் தவை பார்க்க. "மண்ணிற் பெருவேள்வி வளர்தீப் புகைகாளும், விண்ணிற் புயல் காட்டும் வீழி மிழலையே" (குறிஞ்சி - 5) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரமும் காண்க. உலக நிலைபேற்றுக்குரிய மழையை வேள்வித்தீ தரும் என்றதொரு சிறப்புண்மையும் காணவைத்த நயம்காண்க. வேள்வியின் சிறந்தபயன் உலகம் காக்கும் மழைதருதலே என்பதாம். வேள்வித்தீ மழை பொழிவிக்கும் என்பது

**சோலை தேன் அளிப்பன** - மழையின் பயனுய் நீர்பெருக, அச்சிறப்பினுல் எங்கும் மலர்ச்சோலைகள் செழிக்க, அச்செழிப்பினுல் அவை நிறையப்பூக்க, அந்தப்

பூக்கள் தேன் தந்தன என்க. மலர்களினின்றும் கிடைக்கும் பொருள் தேன் என்றதும் குறிப்பார் **மலர்ச்சோலை** என உடம்பொடு புணர்த்தியோதினர். மலர்ச்சோலையினின்றும் பெறும்பயன் பலவற்றுள்ளும் தேன் சிறந்தது என்பதும் குறிப்பு.

**ஆன் அளிப்பன அஞ்சு** - ஆனைந்து. "ஆன்பெற்ற அஞ்சு" (916) என்ற விடத்துரைத்தவை பார்க்க.

**அளிப்பன** - அளிப்பனவாகிய - குறிப்புவினைப் பெயரெச்சம். இப்பாட்டில் ஏனை மூன்றிடங்களிலும் வரும் அளிப்பன என்பன வினைமுற்றுக்கள். இவ்வாறு வினைமுற்றாகவும் வினைப்பெயராகவும் வரும் வெவ்வேறு முடிபுகள் கொள்ளவைத்துச் சொற்பொருட் பின்வருநிலை யணிபடக் கூறுதல் ஆசிரியரின் கவிநயங்களுள் ஒன்று. 553-ல்உரைத்தவையும் பிறவும் பார்க்க.

இவ்வாறன்றி அளிப்பன என்பதனை இங்கும் வினைமுற்றாகவே கொண்டு ஆனினங்கள் ஆடுவார்க்கு ஐந்தும் கொடுப்பன என்றுரைப்பதுமாம்.

**உகந்து ஆடுவார்க்கு** - இறைவன் வேண்டுதல் வேண்டாமையில்லானதலின் **உகந்து ஆடுதல்** என்ற தென்னையோ? எனின், இன்ன பொருளாக்கு இது குணம் என்று நியதிப்படுத்தி வைத்ததுபோல, ஆனைந்தினால் ஆட்டும் ஆன்மாக்களுக்கு மலக் கறைபோதல் என்ற தன்மை வைத்தார் என்றதேயாம். ஆனைந்தில் அத்தன்மையில் நிகழ்பவன் என்க. "அருக்கனிற் சோதி யமைத்தோன் திருத்தகு, மதியிற் றண்மை வைத்தோன்; நிண்டிறற், றீயின்வெம்மை செய்தோன்; பொய்தீர், வானிற் கலப்பு வைத்தோன்; மேதகு, காலி னூக்கங் கண்டோ; னிழறிகழ், நீரி லின்சுவை நிகழ்ந்தோன்; வெளிப்பட, மண்ணிற் றிண்மை வைத்தோன் என்றென், றெனைப்பல கோடி யெனைப் பல பிறவு, மனைத்தனைத் தவ்வயி னடைத்தோன்" (அண்டப்பகுதி 20-28) என்ற திருவாசகம் முதலியவை காண்க. "விருப்பொன் றில்லான் பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை" (சிவஞானசித்தி. 2 - 27) (ஒன்றினும் விருப்பிலனாகியும் உயிர்கள் மாட்டுக் கருணை பூண்டு விருப்பம் செய்யும்) என்றதும் காண்க.

**தருமமும் நீதியும் சால்பும்** - தருமம் - சிவதருமமும் உலக தருமமுமென இருவகைப்படும். இறைவனூல்பற்றிய ஒழுக்கம் சிவதருமம் எனவும், உலகியல் நூல் பற்றிய ஒழுக்கம் உலக தருமம் எனவும் படும். அறிவித்தவா றொழுகும் ஒழுக்கமே தருமமாம். விதித்தன செய்தல் விலக்கியன ஒழிதல் என்று இதனை உலக நூல் வகைபற்றி உரைத்தார் பரிமேலழகர். நீதி - நியதி. இது விதிவிலக்குக்களை அறிந்து அதற்குத்தக ஒழுகுதல் வேண்டுமென்பதும், அவ்வாறு ஒழுகினோரும் ஒழுகத்தவறினோரும் அவரவருக்கு உரிய பயன் பெறுவர் என்பதுமாம். **சால்பு** - உயர்ந்த ஒழுக்கத்திற் சிறத்தல். நீதியும் சால்பும் உலக நூல்களால் உணர்த்தப்பட்டன. **சால்பு** - "சால்பின் மேன்மை" (440) பார்க்க.

**ஆடுவார்க்கு அவ்வூர்தான் அளிப்பன** என்றது அவ்வூரில் குழுமிய குலத்தின் ஓங்கிய குறைவிலா நிறைகுடிகள் இறைவன் அருளிய நூல்களின்வழியே ஒழுகினோர்கள் என்பதாம். இறைவர் தமக்கென ஒன்றும் வேண்டாதவர்; உயர் நல்லொழுக்கத்தினின்றொழுகி ஞானத்தாற் றம்மையடையச் செய்தலே அவரது கருணை என்ப. ஆதலின் அவர் சொல்வழி ஒழுகி அவரை அவ்வூர் வழிபடும் என்பது கருத்து. இதனை அவர்க்குக் கொடுப்பதாக உபசரித்தார். **ஊர்** - ஊரில் உள்ள குடிகள். ஆகுபெயர். **ஊர்** - ஊரில் உள்ளாரைக் குறித்த தொகுதியொருமையாதலின் அளிப்பன என்ற பன்மைவினை கொண்டது. **அளிப்பன** என்பதை அளிக்கப்படுவன எனச் செயப்பாட்டுவினையாகக் கொண்டு ஊரால் அளிக்கப்படுவன என்றுரைப்பினுமாம்.

**குலத்தின்...குழுமி** என முன்பாட்டிற் கூறியதனைத் தொடர்ந்து அவ்வாறு குழுமிய குலக்குடிகளுட் சிறப்புடைய வேதியர்கள் தாம் செய்யத்தக்கவேள்விகளைச் செய்தனர்; அதன் பயனை வெளிப்படையாய்க் காண உலகம் மழையினாற் சிறந்தது என்று முதலிற் கூறினார். ஏனை எல்லாக் குடிகளும் அவ்வாறே தங்கள் தங்கள் நெறிகளிற் சரித்து அறத்தின்வழி நீதியின் ஒழுகும் சால்புடையராயினர் என்பார் **அவ்வூர்** என்று தொகுத்துக் கூறினர்.

**தருமம்** இறைவனது வடிவம். நீதியும் அதன் வழித்தாய சால்பும் அவனது தொக்க உருவம். "தனிப்பெருந் தருமம்" (107) "அறவாழி யந்தணன்" முதலியவையும், "இன்னவுரு வின்னநிற மென்றுணர்வ தேலரிது நீதிபலவும், தன்னதுரு வாமென மிகுத்ததவ நீதியொடு தானமர்விடம்" (சாதாரி-திருவைகா - 4) என்ற ஆளுடைய பிள்ளையார் திருவாக்கும் காண்க. இவற்றால் அவ்வூரினுள்ளார் இறைவனாணை வழி நின்று அவன்றன்மை பெறுதற்கணியராய் ஒழுகினர் என்பது குறிப்பார், **ஆடுவார்க்குத் தருமமும் நீதியும் சால்பும் அவ்வூர் அளிப்பன** என்றார். "தர்மம் சர" என்பது வேதம்.

**தேன் அளிப்பன - தேன்** - வேள்விக்குரிய பொருள்களுள் ஒன்று. அன்றியும் அது இறைவனை ஆட்டும் திருமஞ்சனப் பொருள்களுள்ளும் ஒன்று. மக்களின் உணவுப் பொருள்களுள்ளும் அது சிறந்தது என்பது "செந்தினை யிடியுந் தேனும் அருந்துவார் தேனிற் றோய்த்து, வெந்தவூ னயில்வார் வேரி விளங்கனிக் கவளங் கொள்வார்" (684) என்பன முதலியவற்றிற் காண்க.

**வேள்வியின் வளர்தீ - ஆனைந்தாடுவார்** என்றதனால் அவ்வூர் இறைவன் வழிபாட்டில் நிற்பது என்பதும், **தருமமும் நீதியும் சால்பும்** என்றவற்றால் அவ்வூர் உலகியல் நீதி ஒழுக்கத்தின் நிற்பது என்பதும் கூறினார். அவ்வாறு வாழும் தரும நீதியொழுக்கமும் இறைவன் வழிபாட்டினையே உட்கொண்ட தென்பதனை **ஆடுவார்க்குத் தருமமும் நீதியும் சால்பும் அளிப்பன** என்றதனால் தேற்றமாகக்கூறினார். உலக வாழ்க்கை இறைவன் சார்பினை உட்கொண்டு வாழப்படாதபோது பயனற்றதென்பது அறிவிக்கப்பட்டமை காண்க. இது மறையவர் புராணமாதலின் அவர்கள் செய்யத்தக்க வேள்விச்சிறப்புடன் தொடங்கிய நயமும் காண்க. "நீரிடை நெருப்பெழுந் தனைய" (1035) என்ற உவமையின் உட்குறிப்பும் அது. 492-832-867-904 முதலியவற்றிலும், பிறாண்டும் உரைத்தவை பார்க்க.

**ஆனுகந்து ஆடுவார்** என்றதனாற் பசுக்களின் சிறப்பும் உணரப்படும். பசுக்களுக்குப் பதியாவார் இறைவன் என்பதும், அவரது அடிமைத்திறம் புரியும் அப்பெயர் கொண்ட பெரியவரது சரிதம் இதுவாகும் என்பதும் ஆகிய குறிப்புப்படக் கூறிய சிறப்பும் காண்க. 2

1033. அங்கண் மாநக ரதனிடை யருமறை வாய்மைத்
துங்க வேதியர் குலத்தினிற் றோன்றிய தூயோர்
செங்கண் மால்விடை யார்செழும் பொன்மலை வல்லி
பங்கி னாரடி மைத்திறம் புரிபசு பதியார். ௩

(இ - ள்) வெளிப்படை. அங்கண்மையுடைய பெரிய அந்நகரத்தில் அருமறைகளின் வாய்மையினிற்கும் உயர்ந்த மறையவர் மரபில் தோன்றிய தூயவர், செங்கண்ணுடைய பெரிய இடபத்தை ஊர்ந்து வருபவரும் செழித்த இமய மலையின் மகளாராகிய கொடிபோன்ற பார்வதியம்மையாரை ஒருபங்கிற் கொண்டவரும் ஆகிய சிவபெருமானது அடிமைத்திறத்தை விரும்பும் பசுபதியாரென்ற பேருடையவர்.

(வி - ரை) அங்கண் - அங்கண்மையாவது எவ்வுயிர்கள்மாட்டும் அருளுண்டைமை. இதற்கு அழகிய இடமுடைய என்றுரைப்பாருமுண்டு.

அநுமறை வாய்மை - சிவமாந் தெய்வத்தின்மேற் றெய்வமில்லை என்னும் சைவ உண்மை.

துங்க வேதியர் - துங்கம் - பெருமை - உயர்வு. இது வாய்மையான் வந்த தென்பார் வாய்மைத் துங்கம் என்றார். "அந்தணர்தங் குடிமுதல்வர்", "மரபிரண்டுஞ் சைவநெறி" முதலியவை காண்க. வைதிகத்தோடு சைவமும் உடைமையே துங்கம் என்பது "விப்போத் துங்க" என்ற சிவபூசாஸ்த்தவ வியாக்கியானத்துங் கூறப்பட்டது.

தூயோர் - புறமும் அகமும் தூயராகுதல். இவற்றுள் அகத்தூய்மையே சிறந்தது. ஆயின், "புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை, வாய்மையாற் காணப்படும்" (குறள்) என்றபடி, புறந்தூய்மை முன்வைக்கப்படும். என்னை? அகக்காரணங்கள் தூயனவாதற்குப் புறக்காரணங்களின் தூய்மையே சாதனமென்பது நூற் றுணிபு. ஆதலின் சாதனமாகிய புறத்தூய்மை முதற்கண் வேண்டப்படுவது. நீரிற் குளித்தல் முதலியவற்றுற் புறத்தூய்மை செய்தபின் பூதசுத்தி செய்தல் மரபு.

தூய்மை என்பதுபற்றி "உண்பொழுது நீராடி யுண்டலு மென்பெறினும், பால் பற்றிச் சொல்லா விடுதலுந் தோல்வற்றிச், சாயினுஞ் சான்முண்மை குன்முமை யிம்மூன்றுந், தூயமெனப்பார் தொழில்" (திரிகடுகம் 27) என்ற நீதி நூலும் காண்க. இதனுல் (உடல்) மெய்யின் றூய்மை கூறப்பட்டது. ஏனை மொழி மனங்களி றூய்மை மேல்வரும் பாட்டில் "வழுத்தும் தூய அன்பொடு" என்றமையாற் கூறுவார்.

செங்கண் மால்விடையார் - சிவந்த தாமரைக்கண்ணன் என்னும் திருமாலாகிய விடையினையுடையவர் என்றலுமாம். "இடபமதாய்த் தாங்கினன் றிருமால்" (திருவாசகம்), "மால்வரை" (17), "விடையவர்" (332) உரை பார்க்க. "செங்கண் மால்விடையாய்" (தக்கேசி - ஆவடுதுறை - 1) என்ற நம்பிகள் தேவாரமும் காண்க.

பொன்மலை வல்லி - பொன்மலை - இமயமலை; "பொன்னின் வெண்டிரு நீறு பூனைந்தெனப், பன்னு நீள்பனி மால்வரைப் பாலது", "பொன்மலைப் புலிவென் றேங்க" முதலியன காண்க. ஞாயிறு உதிக்கும்கால் இதன் கொடுமுடிகள் பொன்னே போற் றோன்றுதலின் இமயமலையும் பொன்மலை எனப்படும். மலையரசன் மகளாராய் வந்தாராதலின் உமையம்மையார் மலைவல்லி எனப்படுவர். வல்லி கொடி - கொடி போன்ற அம்மையார். ஆகுபெயர்.

தூயோர் - பசுபதியார் எனக் கூட்டிமுடிக்க. பெயர்ப்பயனிலை கொண்டது.

அடிமைத் திறம்புரி - புரிதல் - விரும்புதல். அடிமைத்திறம் - உயிர்கள் எஞ்ஞான்றும் இறைவனுக்கு அடிமைகள் என்பது உண்மைநூன் முடிபு. அதனை வேதம் உள்ளுறையாகக் கொண்டு நடுவில் வைத்துத் திருவுருத்திரத்தினுல் அறிவிக்கும். அவ்வுருத்திர மந்திரத்தை எப்போதும் விரும்பிச் சொல்பவராதலின் அடிமைத்திறம் புரி என்றார். புரிதல் - செய்தல் என்று கொண்டு, அடிமைத் திறத்திற்சாரும் செயல்களைச் செய்கின்ற என்றுரைத்தலுமாம். அவை - மேவி (1035), பயின்றார் (1036), உய்த்திட (1037) என்றவற்றுலுணர்த்தப்பட்டன. பசுக்கள் இறைவனைப் பதியாக உடையன என்ற பொருள்கொண்ட பசுபதியார் என்ற பெயர்பூண்டமையாலும் இது விளங்கும்.

**பசுபதியார்** - இந்நாயனாரின் இயற்பெயர். **முருகனார்** என்ற பெயர்ப் பொருள் உரைக்கப்பட்டது பார்க்க (வி - ரை - தொகை - பக்கம் கங்கச). பசுபதியாகிய சிவ பெருமானிடத்து மிக்க அன்புபூண் டொழுகும் துங்கவேதியர் குலத்தில் தோன்றினா ராதலின் இவரது பெற்றோர்கள் தங்கள் வழிபடுகடவுளின் பெயரை இவருக்கு இட்டனர்போலும். **ஆநரர்** என்ற பெயர் ஆளுடைய நம்பிகளுக்கு இட்டமை காண்க. 150-ல் உரைத்தவை பார்க்க. உருத்திரபசுபதியார் என்ற பெயரின் காரணம் 1039ல் கூறுவர்.

1034. ஆய வந்தண ரருமறை யுருத்திரங் கொண்டு
மாய னாரறி யாமலர்ச் சேவடி வழுத்துந்
தூய வன்பொடு தொடர்பினி லிடையறாச் சுருதி
நேய நெஞ்சின ராகியத் தொழிற்றலை நின்றார். ச

(இ - ள்) மாயனார்...சேவடி - மகாவிட்டுணுவும் அறியாத மலர்போன்ற திருப்பாதங்களை; ஆய...கொண்டு - அந்த அந்தணர் அருமறையின் விளங்கும் உருத்திர மந்திரத்தினைக் கொண்டு; வழுத்தும்...நெஞ்சினராகி - துதிக்கும் தொடர்பால் இடையறாத தூய அன்புடனே சுருதியில் பதிந்த நேயம் நிறைந்த மனத்தையடையவராகி (அதனையே ஓதித் துதிக்கின்ற) அந்தத் தொழிலிற் சிறந்து நின்றனர்.

(வி - ரை) **அந்தணர்**-எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு வாழும் மறைமுனிவர்.

**அருமறை - உருத்திரம்** - அரிய வேதங்களின் ஒரு கூறாயும், அதன் நடுவுள் இருப்பதாயும், அதன் இதயமாயும், அதன் பயனாயும் விளங்கும் திருவுருத்திரம் என்ற பகுதி. அது நமக சமகங்கள் என்று கூறும் மந்திரங்களை உடையது. **மறைக்கு அருமை** என்ற அடைமொழி தந்த ஆசிரியர் அதன் உள்ளுறையாய் விளங்கும் மந்திரத்திற்கு அடைமொழியின்றி வாளா **உருத்திரம்** என்று கூறினார், அதன் சிறப்பு உணர்த்துதற்கு. "திருவளர் தாமரை" என்ற திருக்கோவையாரில் "கோங்கு" என்றதற்கு அடைகொடாது கூறியதனால் அதன் தனிச் சிறப்புணர்த்தப்பட்டதென்று பேராசிரியர் உரைத்த கருத்தை இங்கு நினைவு கூர்க.

**அருமறை** - வேதங்கள் இறைவனது வாக்காதலானும், "வேதத்தை விட்ட அறமில்லை; வேதத்து, ளோதத் தகுமற மெல்லாமுள" (பாயிரம் - 51) என்று திருமந்திரத்தினுட் கூறுதலானும் **அருமறை** என்று சிறப்பித்தார். **அருமை** - இறைவனருளானன்றிக் கருவி நூலறிவுகொண்டு மெய்ப்பொருளறியவாராமை.

**அருமறை** "வேதம் இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்று நான்காகவும், அதர்வணமொழித்து மூன்றாகவும் கொள்வது மரபு. அதர்வணம் ஏனை மூன்றினின்று திரட்டப்பட்டமையின் அவற்றுளடங்கு மாதலான் வேதம் மூன்றென்றுங் கூறுவர். இதுபற்றியே வேதத்திற்குத் **திரயீ** என்ற பெயர் போந்தது. **திரயீ ழர்த்தயே நம** என்ற சிவாஷ்டோத்தர சதநாமமும் இக்கருத்துப்பற்றியது. அதர்வணம் ஏனைமூன்றினின்றும் பிரித்து எடுத்துத் தொகுக்கப்பட்டுத் தனிமுதலாய் நிற்றலின் வேறு வைத்தெண்ணி வேதம் நான்கென்று கூறுதலும் ஆன்றோர் வழக்கு. அக்காரணம் பற்றி இருதிறத்தார் கூற்றும் தம்முண் முரணாமையறிக" என்று திருத்தருமபுர ஆதீனத்து முத்தி நிச்சயச் சிற்றுரையில் வெள்ளியம்பலவாணமுனிவர் எடுத்துரைத்தனர்.

**அருமறை உருத்திரம்** - கண்ணிருப்பதனால் உடல் பெருமை பெறுதல்போல உருத்திரத்தை இதயத்திற் கொள்ளுவதனால் மறை பெருமையுற்றது. உடலும் உயிரும்போல மறையும் உருத்திரமுமாவன எனினும் பொருந்தும். வேத புருடனுக்கு இந்த உருத்திரம் கண்ணும், இதனுள் இருக்கும் பஞ்சாக்கரம் கண்மணியுமாம்

என்று சதுர்வேத தாத்பரிய சங்கிரகம் எடுத்துக்கூறும். வேதம் நான்கும் வேதாங்கம் ஆறும் நியாயம் மீமாஞ்சை மிருதி புராணம் என்னும் உபாங்கம் நான்கும் ஆகிய பதினான்கு வித்தைகளுள்ளும் வேதங்களே மேலானவை; அவற்றுள்ளும் உருத்திரை காதசனி மேலானது; அதனுள்ளும் ஐந்தெழுத்து மேலானது; அதினுள்ளும் சிவ என்ற இரண்டெழுத்தே மேலானது என்பது சிவதத்துவ விவேகத்திற்கண்டது. இக்கருத்துக்களை எடுத்து விதந்து ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் இப்புராண சூசனத்துள் எடுத்துக் காட்டினர்.

வேதம் மூன்று என்ற முறையில் அவற்றுள் நடுவணது எசுர்வேதம்; அதன் ஏழுகாண்டங்களுள் நான்காவதனுள் நடுவணதாகிய பதினோராவது அநுவாகத்தின் நடுவணதாகிய ஆறாவது சூக்தத்தில் விளங்குவது திருவுருத்திர மந்திரம்; அதன் நடுவுள் விளங்குவது சீபஞ்சாக்கரமும் அதன் நடுவுளிருப்பது சிவ என்ற திருநாமமுமாம். "சிவ சிவ வென்றிடத் தீவினை மாளும்", என்று பலவாற்றாலும் திருமந்திரத்தினுள் துதித்தனர் திருமூலதேவர். அதனையே வேத நடுவுள் விளங்கும் "அட்சரத்துவயம்" - இரண்டெழுத்துக்கள் - என்று பிற ஆசிரியரும் போற்றுவாராயினர். வேதபுருடன் சிவனை இதயத்தில் வைத்துப் போற்றுகின்றான் என்பதும் இக்கருத்துப்பற்றியது.

**தமிழ்மறைபற்றிய குறிப்புக்கள்:** வேதங்கள் நான்கென்றும் மூன்றென்றும் விரிக்கப்படுவதுபோலவே தமிழ்வேதமும் ஆசாரியன்மார்களருளிய தேவாரங்களும் திருவாசகம் கோவையும்சேர்த்து நான்கென்றும், தேவாரங்கள் மூவரருளியவாற்றால் மூன்றென்றும் விரிக்கப்படும். இத்தேவாரங்கள் மூன்றனுள் இடையில் விளங்குவது அப்பர் அருளிய தேவாரம். அதன் மூன்று திருமுறைகளில் இடையில் நிற்பது திருக்குறுந்தொகையாகிய (ஐந்தாம்) திருமுறை. அத்திருமுறையினுள் நடுவுள் இருப்பது 51-வது திருப்பதிகமாகிய திருப்பாலைத்துறைத் திருப்பதிகம். அதன் பதினொரு திருப்பாசுரங்களுள் நடுவணதாகிய 6-ம் திருப்பாட்டில் "சிவாய" என்னும் பாசமொருவிய சீ பஞ்சாக்கரம் விளங்குவதும் காண்க. (இஃது ஓர் அன்பர் அன்புடன் தந்த குறிப்பு.)

"அரனே முதற்கடவுள்" என்ற சிவஞானபோத முதற் சூத்திரப் பொருளையே உருத்திரன் - பரமன் என்றவகையால் எடுத்துக் கூறுவது திருஉருத்திர மந்திரமாகும். இதனுள் உயிர்ப்பொருள் உயிரில் பொருள் எல்லாவற்றையும் தனித்தனி எடுத்துக் கூறி அவை யாவையினுள்ளும் கலந்து விளங்கும் சிவனுக்கு "நம" என்று வணக்கம் கூறும். இக்கருத்துப் பற்றியே தமிழ் வேதமாகிய நின்றதிருத்தாண்டகமும் "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி" என்பது முதலாக உயிர்ப் பொருள் உயிரில் பொருள் என்னும் எல்லாவற்றுள்ளும் சிவன் கலந்து நிற்குந் தன்மையை எடுத்துத் துதித்தருளிற்று. (ருத் - துன்பம்; திரன் - நீக்குபவன்)

திருவுருத்திரத்தை விதிப்படி மெய்யன்போடு ஓதிச் சிவனைத் துதிப்போர் சிவபுரியிற் சேர்வார் என்னும் நூற்றுணிபு இச்சரிதத்தால் விளங்கும். "அறிஞர் வளமுற்ற, வேதத்தை யோதியே வீடு பெற்றார்களே" என்ற திருமந்திரமும் காண்க.

உருத்திரங் கொண்டு - வழுத்தும் - நெஞ்சினராகி - அத்தொழில் - தலைநின்றார் என்று கூட்டி முடிக்க.

ஆய-அந்தப் பசுபதியார் என்க. முன்பாட்டிற் கூறிய அந்த என முன்னறி சுட்டு.

**உருத்திரங்கொண்டு மாயனார் அறியாச் சேவடி** - விட்டுணு திருப்பாற் கடலில் தமது மார்பில் சிவபெருமானை வைத்து நெடுங்காலம் தியானித்தனர் என்பது சரிதம். வேதம் விட்டுணுவின் வடிவமாகில் அது இதயத்தில் சிவனை வைத்துள்ளது எனமேற் கூறிய உண்மையும் இதனை விளக்கும். இதுபற்றியே "நாராயணபரோத் த்யாதா"

(தியானிப்பவன்) என்று நாராயணனையும், "த்யேயன்" (தியானிக்கப்படுபவன்) என்று சிவனையும் வேதங்கள் கூறும். "பையஞ் சுடர்விடு நாகப் பள்ளிகொள் வானுள்ளத் தான்" (திருவாரூர் - காந்தாரம். 10), "மிக்க வேதத்துளான் விரி நீருடுத்த மண்ணகத்தான் நிருமாலகத்தான்" (தனித்திருவிருத்தம் - 6) என்று அப்பர் சுவாமிகள் திருவாக்காகிய தமிழ்மறையும் கூறும். "கர்ம கர்த்ருவ்ய பிதேசாச்ச" (சிவன்) தியானிக்கப்படும் பொருளாகவும், (விட்டுணு) தியானிப்போனுகவும் கூறப் படலானும்" என்ற பிரமசூத்திரமும் காண்க.

**வழுத்தும் நெஞ்சினராகி அத்தொழில் - வழுத்தும்** - மானதம் - மந்தம் - உரை என்று மந்திரங்களிக்கும் முறை மூன்றனுள் உரையினுல் வழுத்தினர் என்க. நெஞ்சு- மனத்தின் ருெழிலும், தொழில் - மெய்யின் ருெழிலும், குறித்தலின் முக்காரணங்களும் ஒன்றுபட்டன என்பதாயிற்று. (வாசகம் - காயிகம் - உபாஞ்சு என்பர்)

**தொடர்பினில் இடையறத் தூய அன்பொடு** என்க, "சிந்தை யிடையறு அன்பும்" (திருஞான - புரா - 270) என்ற திருவாக்கும், அதனைப்பற்றியே "இடை யறுப் பேரன்பு" என்ற காஞ்சிப்புராணமும் காண்க. **இடையறுமையாவது** "இடரினுந்தளரினும்" எஞ்ஞான்றும் விடாது தைலதாரை போலத் தொடர்பாய் ஒழுகுதல். தொடர்பினில் இடையற என்பதனைச் சுருதிக்கு அடைமொழியாக்கி உரிய சந்தசில் இடைநீங்காத என்று உரைகொள்வாருமுண்டு.

**நேயம்** - விருப்பம். **அத்தொழில்** - வழுத்துதலாகிய தொழில். செயல். அன்பும் விருப்பமும் மட்டுமேயன்றி அவற்றுற் ருண்டப்பட்ட செயலும் நிகழ்ந்தது.

**தலைநிற்றல்** - உறைப்புடன் சிறந்து ஒழுகுதல்.

**நெஞ்சினராகிய தொழில்**—என்பதும் பாடம். 4

1035. கரையில் கம்பலை புள்ளொலி கறங்கிட மருங்கு
பிரச மென்சுரும் பறைந்திடக் கருவரால் பிறழு
நிரைகெ டுங்கய னீரிடை நெருப்பெழுந் தனைய
விரைகெ கிழ்ந்தசெங் கமலமென் பொய்கையுண் மேவி, ரு

1036. தெள்ளு தண்புனல் கழுத்தள வாயிடைச் செறிய
வுள்ளு றப்புக்கு நின்றுகை யுச்சிமேற் குவித்துத்
தள்ளு வெண்டிரைக் கங்கைநீர் ததும்பிய சடையார்
கொள்ளு மன்பினி லுருத்திரங் குறிப்பொடு பயின்றூர். சு

1035. (இ - ள்) கரையில்...கறங்கிட - புட்களின் ஒலிகள் எல்லையில்லாத கம்பலையாகச் சத்திக்க; மருங்கு - அம்மருங்கிலே; பிரசம்...அறைந்திட - மெல்லிய தேன் வண்டுகள்பாட; கருவரால்...மேவி - கரிய வரால் மீன்கள் பிறழ்கின்ற, வரிசை பெற நீண்ட கயல்கள் செல்கின்ற நீரினுள் நெருப்பெழுந்ததுபோல வாசனையுடன் அலர்ந்த செந்தாமரைகளையுடைய மென் பொய்கையினுள்ளே போய், ரு

1036. (இ - ள்) வெளிப்படை. தெளிந்த குளிர்ந்த தடத்தின் நீர் கழுத்தளவு உள்ளமட்டில் நெருங்க உள்ளே பொருந்தப் புகுந்து நின்று, வழிகின்ற வெள்ளிய அலைகளையுடைய கங்கை நீர் ததும்பிய சடையினையுடைய சிவபெருமான் உகந்து கொள்ளும் அன்புடன் திருவுருத்திரத்தினை (அவரது அடிமைத் திறத்தை மனத்துட் கொண்ட) குறிப்புடனே பயின்றூர். சு

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1035. (வி - ரை) புள் ஒலி கரையில் கம்பலை கறங்கிட - புட்களின் சத்தங்கள் எல்லையற்ற ஆரவாரமாகச் சத்திக்க. புள்-நீர்ப் பறவைகளும், தடத்தின் ஓரங்களிலும் இடையிலும் உள்ள மரங்களில் சேரும் எண்ணிறந்த சிறு பறவைகளும் ஆம். இவை காலை மாலைகளில் பெருங் கூட்டமாகக் கூடி ஒலி செய்யுமாதலின் பலவொலிகள் விரவுதலால் கரையில் கம்பலை என்றார். கம்பலை - ஆரவாரம். கம்பலையாகக் கறங்கிட என்க. "கிளரொளி மணிவண் டறைபொழிற் பழனங் கெழுவுகம் பலைசெய் கீழ்க் கோட்டூர்" (1), "கிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே கெழுவு கம்பலை செய்" (4) என்ற கருவூர்த்தேவர் திருவிசைப்பாவினுள் வருங் கருத்துக்களை இங்கு வைத்துக் காண்க. கம்பு அலை என்று பிரித்துக், கம்பு - சங்குகள், அலை - அலைதற் கிடமாகிய, கரையில் என்று கூறுவாரும், கரையில் ஓசை மிக என்று கூறு வாருமாயினர் முன்னுரைகாரர்கள். கரையில் கம்பலை என இயல்புபுணர்ச்சியாய் அல் வழிச்சந்தியின் வருதலின் அவை உரையாகா வென்க. பூவைகளும் கிள்ளைகளும் இவைபோன்ற பிறவும் பாடுதல் முன் உரைக்கப்பட்டன.

மருங்கு - அவ்வொலி மிகுதியின் பக்கத்தே அதற்கு மாறாக அல்லது அதனுடன் இணைவனவாக. புள்ஒலி - சுரும்பு அறைதல்-என்ற இரண்டும் பண்களை மிழற்றின என் பார் ஒலி என்றும் அறைதல் என்றும் கூறினார். புட்கள் பலவாயும், சுரும்பை நோக்க உருவாற் பெரியனவாயும், பல பக்கங்களினின்றும் பறந்து சேர்வனவாயும் கூடுதலால் கரையில் கம்பலை ஒலி என்றார். அவ்வொலியை நோக்கச் சுரும்புகள் மிகச் சிறியன வாயும் மலரும் மலர்களைச் சூழ்ந்தே பாடுவனவாயும் கூடுதலால் அவற்றை மென் சுரும்பு அறைய என்றார். புள்ளும் சுரும்பும் ஆகிய இந்த இரண்டின் ஒலிகளையும் முன் காட்டிய திருவிசைப்பாவில் உரைத்ததும் காண்க. இவ்வாறு கூடிய ஒலி யலைகளின் சத்தமிகுதிப்பாட்டால் வரால் பிறழ்ந்தன என்றுகூறியபடியாம். "கெண் டையுங் கயலு முகளுநீர்ப் பழனங் கெழுவு கம்பலை செய்" என்றது கீழ்க்கோட்டூர்த் திருவிசைப்பா.

வரால்கள் பிறழுமியல்புடையன; கயல்கள் வரிசை வரிசையாய்ச் செல்வன; ஆதலின் பிறழும் என்றும், நிரை என்றும் கூறினார்.

நீரிடை நெருப்பு எழுந்து அனைய - செங்கமலம் என்க. ஊழிக்காலத்தில் நீரி னின்றும் நெருப்பு எழும் என்பது மரபு. வடவை எனப்படும் பெண் குதிரை முகத்தையுடையதொரு தீ கடலின் அகட்டினுள் உள்ள தென்றும், அதுவே ஊழியில் பெருகிக் கடலைச் சுருக்கிச் சுவறச் செய்து பெருந் தீயாகி உலகை எரித்து விழுங்கும் என்றும் கூறுவர். அக்கினிதீர்த்தத்தினுள் நெருப்பு எழுந்த சரிதம் திருவாதவூரர்புராணத்தினுட் கேட்கின்றோம். இங்குப் பொய்கையின் நீரிற் செந்தாமரை பூத்த தோற்றத்தை நீரில் நெருப்பு எழுந்தது போன்றதென அவ் வுண்மையினைப் புலப்படுத்துமாறு கூறிய நயமும் சுவையும் காண்க. "கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டுபோவார்" (ஆளுடைய பிள்ளை யார்-திருவாரூர் - காந்தாரம் - 2) என்றபடி இறுதிக்காலம் விரைகின்றது; "அடியா ரானீர் எல்லீரும் அகல விடுமின் விளையாட்டை...பூப்புனைந்து தொழுமின்" என்று மக்களை எச்சரிப்பது போன்று நீரிடை நெருப்பெழுந்தனையதாம் என்று நின்ற குறிப்பும் காண்க. மெய்பற்றி எழுந்த உவமம். எழுந்தால் அனைய எனற்பாலது எழுந்தனைய எனத் திரிந்து நின்றது. "சேலா கியபொய்கைச் செழுநீர்க் கமலங்கள், மேலா லெரிகாட்டும் வீழி மிழலையே" (6 - குறிஞ்சி) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரங் காண்க. "[illegible] 289-240"

மேல்வரும் பாட்டில் கழுத்தளவாகிய நீரினுட்புக்குக் கை உச்சிமேற் குவித்து நின்று உருத்திரம் கணிக்கும் பசுபதியாரையும் இவ்வுவமம் குறிப்பாலுணர்த்துவது காண்க. அவ்வாறு நீரினுள் நின்று கணிக்கும் நீர்மை (தன்மை)யினின்று எரியுருவாகிய இறைவனருகே இருக்கும் நிலை எழுந்தது என்ற சரிதக்குறிப்பும் காண்க. பொய்கை - தெய்வத் தீர்த்தம் ; மானிட ராக்காத நீர்நிலை என்பர் நச்சினார்க்கினியர். புண்ணியப் பொய்கையை யடைந்து கணித்தனர் என்பதாம்.

பொய்கையுள் மேவி - புக்கு - நின்று - குவித்து - அன்பினில் - உருத்திரம் - குறிப்பொடு - பயின்றார் என இந்த இரண்டு பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக் கொள்க.

பெருவரால்—நிரை நெடுங்கய நீரிடை—என்பனவும் பாடங்கள். 5

1036. (வி - ரை) தெள்ளுதண்புனல் - தெள்ளுதல் - தெளிதல். தெளிந்த புனல். தெளிவுடைமை நல்ல புனலுக்குரிய இயல்பு. தெளிவிக்கும் புனல் என்று பிற வினையாகக் கொண்டுரைப்பினு மமையும். இது கயத்தின் உயர்வு குறித்தது. இந்நாண் மாக்களைப் போலக் கயத்தினை அசுத்தப்படுத்தாமல் மக்கள் தூய்மையாய் வைத்திருந்தனர் என்பதும் புலப்படும். தாமரையும் வரால் கயல் முதலியனவும் இருத்தலும் அதன் தூய்மைக் குதவிசெய்வன என்க.

புனல் - கழுத்து அளவு - ஆய் இடைச் செறிய - உள்உறப் புக்கு - நின்று - இது பசுபதியார் புனலுள் நின்று செபித்தநிலை. கரிமா முதலிய யோகசித்தியால் அன்றி, இவ்வாறு கழுத்தளவு நீரினுள் நிற்பது இயலாது. மனித உடல் நீரினும் கனங் குறைந்ததாதலின் இடுப்பின் அளவுக்குமேல் நீரினுள் நிற்பது இயல்பிற் கூடாததாம். உடலினும் கனமுடைய நீர் கீழும் நாற்புறமும் செறிந்து உடலை மேலே தூக்கிவிடுமாயினும் அவ்வாறு மேற்கிளம்பாமல் நீரின் செறிவினையும் வென்று நின்றார் என்பது குறிக்கப் புனல் ஆய் இடைச் செறிய என்று கூறி இச்செயலின் அருமைப் பாட்டினை எடுத்துக் காட்டினார். சிலர் நீர்த்தம்பன சாதனையால் நீர்மேல் மிதந்து கட்டைபோற் கிடப்பதும் பேசுவதும் செய்வர். ஆனால் கழுத்தளவு ஆழத்துள் நின்று அன்பொடு தொடர்ந்து மனத்தையும் ஒருமைப்பட நிறுத்தி அல்லும்பகலும் உருத்திரம் பயிலுதல் செய்தற்கரிய பெருஞ் செயலாம்.

கை உச்சிமேல் குவித்து - என்றதனால் "கைகாள் கூப்பித் தொழீர்" என்றபடி இறைவனை வணங்குதற்குக் கைகள் இங்குப் பயன்பட்டன என்றும், உடலை நீரினுள் நிறுத்துதல் முதலிய வேறொன்றற்கும் அவற்றைப் பயன்படுத்தவில்லை என்றும் கூறிய படி. கை - குவித்து என்றதனால் இரண்டு கைகளும் என்க.

தெள்ளு - தீரை - நீர் - ததும்பிய - இறைவனது சடையினுள்ளே குடிகொண்டிருந்தும் கீழே ஓடிவருவதற்குக் காரணங் குறிப்பார்போன்று அலைகளாற் றள்ளப்பட்ட நீர் கரையின்மேல் ததும்பியது என்றார்.

சடையார் கொள்ளும் அன்பு - சடையார் உகந்து கொள்வது அன்பு ஒன்றுமேயாம் என்பது நூற்றுணிபு. "அன்ப ராயிருப் பாரை யறிவரே," "உள்ள முள்கலந் தேத்தவல் லார்க்கலாற், கள்ள முள்ள வழிக்கசி வானலன்," "அன்புநுகர்ந் தருளு தற்குச் சித்தமகிழ் வயிரவராய்த் திருமலைமின் றணைகின்றார்" (சிறுத் - புரா - 25) முதலிய திருவாக்குக்கள் காண்க.

குறிப்பொடு பயின்றார் - குறிப்பு - தலைவராகிய பதிப்பொருளுக்குப் பசுக்களாகிய உயிர்கள் யாவையும் எஞ்ஞான்றும் அடிமைகளே என்பதும், அவ்வடிமைத் திறத்தினிற் செல்லவொட்டாது இடைவிலக்கும் பாசங்களின் நீங்கி அடிமைசெயப்பெறுதலும்

வேண்டுமென்பதும் முதலிய குறிக்கோள். இதனையே முன் அடிமைத் திறம்புரி (1033) என்றார்.

பயிலுதல் இடைவிடாது பலகாலமும் சொல்லுதல். பசுபதியார் செயல்போலவும், வேதத்துள் உருத்திரமும் அதனுட் சிவமும் போலவும் இந்த இரண்டு பாட்டுக்களும் ஒரு தொடர்புபெற்று இப்புராணத்து நடுவினுள் அமைந்து விளங்கும் தெய்வச் சிறப்பும் குறிக்கொள்க. 6

1037. அரும றைப்பய னாகிய வுருத்திர மதனை
வருமு றைப்பெரும் பகலுமெல் லியும்வழு வாமே
திரும லர்ப்பொகுட் டிருந்தவ னனையவர் சிலநாள்
ஒருமை யுய்த்திட வுமையிட மகிழ்ந்தவர் உவந்தார். 7

(இ - ள்) வெளிப்படை. அரிய மறைகளின் பயனாகிய உருத்திரத்தை வரு முறையில் பெரும்பகலிலும் மாலையிலும் தவிராமல் தாமரையினது பொகுட்டில் இருக்கும் பிரமதேவனைப்போன்ற பசுபதியார் சிலநாள் ஒன்றுபட்ட வுணர்வுடன் இவ்வாறு கணித்தபோது, உமையம்மையாரை இடப்பாகத்தில் மகிழ்ந்து வைத்த சிவபெருமான் உவந்தனர்.

(வி - ரை) அருமறைப்பயன் ஆகிய உருத்திரம் - "அருமறை உருத்திரம்" (1034) என்றவிடத் துரைத்தவை காண்க. உருத்திரனே பரமன் என்று காட்டும் சிவமந்திரத்தைத் தன் நடுவுட்கொண்டு விளங்குதலால் மறைப்பயனாகிய உருத்திரம் என்றார். இக்கருத்துப் பற்றியே "வேதப் பயனுஞ் சைவமும்போல்" (சண்டீசர் புரா - 9) என்பதும் காண்க. அருமறை என்றது ஞானத்துக்கு முதலாயிருக்கும் தன்மைபற்றி. ஞானத்தின் முடிந்தநிலை திருவுருத்திரத்திற் பெறப்படுவதனால் அதனை மறைப்பயன் என்றார். மறைகள், மந்திரம் - பிராமணம் - உபநிடதம் என்று மூன்று பாகுபாடுபெறும். சாமானிய காமியாதிகளைப் பயக்கும் யாக முதலியவற்றுக்கு உதவுவன மந்திரம் என்ற பாகம் எனவும், இந்த யாகாதிகளுக்குரிய சடங்குகளை வகுப்பன பிராமணம் எனவும், இறைவனது இலக்கணங்களை எடுத்துச் சொல்வன உபநிட்தங்கள் எனவும் கூறுவர். உருத்திரமானது மந்திரம்போலியும், வேள்வித்தீயைத் தன்னுளடக்கிக் கொண்டதாயும் உள்ளதோடு, சிவனே "தனிமுதலாம் பரன்" என்று சிவனது முழுமுதற்றன்மையும் கூறுவதனால் அது வேதங்களின் மூன்று தன்மைகளையும் தன்னுட்கொண்டு விளங்குதல்பற்றி அதனை அருமறைப்பயன் என்றார் என்பதுமாம். அன்றியும், ஆன்மாக்கள் பக்குவபேதத்திற்கேற்பப் பலபல தெய்வங்களை வழிபடுவர்; அவ்வாறு வழிபடப்படும் இந்திரன், அக்கினி, யமன், பிரமன் முதலிய பிற எல்லாத் தேவர்களையும் எடுத்து ஓதி, முகமனால் அவர்களுக்கு வழிபாடு வேதத்தினுட் கூறப்படும்; ஆயினும், இம்மந்திரத்தினை இதயத்தில் வைத்துப் போற்று முகத்தால் முழுமுதல்வன் சிவனேயாம் என்ற உண்மையைத் தேற்றம்பெற வேதம் எடுத்துக் காட்டுவதனாலே இது மறைப்பயனயிற்று என்றலும் பொருந்தும்.

அருமறைப்பயனாகிய உருத்திரம் - 1. ஸ்ரீருத்ரம் என்பது திருவுருத்திரம் எனத் தமிழில் வழங்கப்படும். ஸ்ரீருத்ர ப்ரச்னம், ஸ்ரீருத்ரசூக்தம், ஸ்ரீருத்ராநுவாகம் என்பன முதலிய பெயர்களால் ஆரிய மொழியில் இது வழங்கப்படும். ஸ்ரீ அல்லது திரு என்பதற்குப் பார்வதிதேவி, சம்பத்து, காந்தி என்பன பொருளாம். இம்மூன்றனோடும் என்றும் கூடியிருத்தலின் சிவபெருமானுக்கு ஸ்ரீருத்திரன் எனப் பெயர் போந்தது.

2. துன்பக் கடலினுட்பட்ட தொண்டரை எடுத்து இன்பக்கரைக்கண் ஏற்றுவதனால் சிவபெருமானுக்கு உருத்திரன் என்னும் திருநாமம் எய்திற்று. அப்பெருமான் தந்த திருக்குமாரர்களுக்கும், அவனடியடைந்தோர்க்கும், அவனுடைய கணங்கட்கும், அவனுருவந் தாங்கினோர்க்கும் அவன் சார்பு பற்றி உருத்திரப் பெயர் வழங்கும்.

3. முழுமுதற்கடவுளாகிய அவ்வுருத்திர மூர்த்தியின் எல்லா வடிவங்களும் கோரவடிவம், சாந்தவடிவம் என்னும் இரண்டனுள் அடங்கும். அவற்றுள் கோரவடிவம் பிறவிப் பெரும் பிணிக்கு மருந்தாக உள்ளது. சாந்தவடிவம் சிவத்துவ விளக்கந் தருவது. முன்னது திருவுருத்திர நமக மந்திரங்களால் துதிக்கப்படுவது. பின்னது சமக மந்திரங்களால் துதிக்கப்படுவது.

4. வேதம் மூன்றனுள் நடுவிலுள்ள யசுர் வேதத்தின் ஏழு காண்டங்களுள் நடுக் காண்டத்துள்ளது திருவுருத்திரம். இது பதினெரு அநுவாகங்களாகிய உட்பிரிவுகளையுடைமையால் உருத்திரைகாதசனீ என்றும் பெயர் பெறும். இப்பதினெரு அநுவாகங்களிலும், இருக்கும் யசுசும் ஆகிய மந்திரங்கள் கூறப்படும். அவற்றுள் 1-வது அநுவாகத்தில் 15 இருக்கும், 2 முதல் 9 வரை அநுவாகங்களில் முறையே, 13, 17, 17, 15, 15, 16, 17, 19 யசுசும், 10-வது அநுவாகத்தில் 12 இருக்கும், 11-வது அநுவாகத்தில் 10 இருக்கும் 3 யசுசும் ஆக இருக்கு 37-ம், யசுசு 132-ம் ஆக மந்திரங்கள் 169 கூறப்பட்டுள்ளன. இம்மந்திரங்களை நியமமாக ஓதும் முறை, தியானம், பயன் முதலிய எல்லாம் உருத்திர கற்பத்துள்ளும், ஏனைய கற்ப சூத்திரங்களிலும் விரிவாகக் காணலாம். இவ் வுருத்திரப்பிரசினத்தின் பாடியம் இரண்டனுள் பட்டபாஸ்கரர் பாடியத்தும் அவை கூறப்படுதல் காணலாம்.

5. பிரளயாகலராகிய ஆன்மாக்களுள் மலபரிபாகமெய்திச், சிவபெருமானுல் நிரதிகரணமாகத் தீக்கை செய்யப்பெற்று, முத்தராகிப், பல்லாயிரங்கணங்களுடன் கூடிய நூற்றுப் பதினெட்டு உருத்திரருள், நிவிர்த்திகலையின் பிருதிவிதத்துவ அண்டங்கள் ஆயிரகோடியினு மமைந்த நூற்றெட்டுப் புவனங்களுள், புறத்தே கிழக்கு முதலிய பத்துத் திசையினும் ஒவ்வொரு திசைக்கும் பதின்மராக வைகும் புவன பதிகளாகிய உருத்திரர் நூற்றுவர்க்கும் அவர் கணங்கட்கும் வணக்கங்கூறி, இவர் அனைவரையும் பரிசனங்களாகவுடைய முழுமுதலாய்ச் சாந்தியதீத கலாபுவனந்தம் முழுதும் யாவையும் இறுதியுறச் சங்கரிக்கும் மகாருத்திரனுகிய சிவபிரானுக்கு வணக்கங்கூறிப், பிறவிப் பெரும்பிணித் துன்பவெள்ளக் கடனீந்துங் கருத்தே மிக்குச் சாந்தி வேண்டிக் கோடலின் அநுமறைப் பயனுகிய திருவுருத்திரம் சதருத்ரீயம் எனவும் பெயர் பெறும். இங்குக்கூறிய உருத்திரர் பெயர் முதலியனவும் பிறவும் ஸ்ரீ பவுட்கராகம விருத்தியில் பசுபடலத்தின் அத்துவப் பிரகரணத்திற் காண்க. "தைத்திரீய சாகையின் உருத்திரப் பிரசின முடிவிலே அவ்வத்திக்கி னிருப்போராகிய இவ்வுருத்திரர்கள் பப்பத்து எண்ணிக்கையோடும் நமஸ்காரத்தோடும் சுருக்கமாகக் குறிக்கப்பட்டனர்" என அப்பிரகரண முடிவில் கூறியதும் இங்கே சிந்திக்கற்பாலது.

6. வேதம் நான்கினும் மெய்ப்பொருளாகிய திருவைந்தெழுத்து இத்திருவுருத்திரத்துள் இருத்தலின், இதனை வேத புருடனுக்குக் கண்ணுகவும், திருவைந்தெழுத்தைக் கண்மணியாகவும் பெரியோர் கூறுப. நிற்பனவும் நடப்பனவுமாகிய உலகப்பொருள் அனைத்தினும் இறைவன் பகுப்பின்றி அவையேயாய்க் கலந்து நிற்றல் பற்றி, இறைவனை விசுவரூபனுகவும் விசுவேசனுகவும் புகழ்ந்து வணக்கங் கூறும் இத்திருவுருத்திரம்.*

* இவை ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான்சுவாமிகள் அன்புடன் எழுதிய குறிப்புக்கள்.

**வருமுறை** - முன்சொன்ன அம்முறையாகிய நியதியிலே. **பெரும்பகல்** - உச்சி வேளை வரையுள்ள சிறுபொழுது என்ற காலப்பகுதி. **எல்லி** - மாலை. "அல்லும் பகலும்" என்றது வகை நூல். "அந்தியு நண்பகலு மஞ்சு பதஞ்சொல்லி" (ஆரூர்-குறிஞ்சி - 1) என்ற நம்பிகள் தேவாரங்காண்க. **வழுவாமே** - அன்பாலும், சொல்லாலும், செயலாலும் தவிர்தலிலராகி.

**திருமலர்...அனையவர்** - **திருமலர்** - தாமரை - "பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை" "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே". **பொதுட்டு** - கொட்டை. **மலரில் இருந்தவன்** - பிரமன். செங்கமலப் பொய்கையுள் மேவியிருத்தலாலும், வேதமோதுதலாலும் பிரமனைப் போன்றவர் என்றார். வினைபற்றி யெழுந்த உவமம்.

**சிலநாள்** - இந்தக் கடுந்தவத்தை அவர் நீண்டகாலம் செய்யவிட்டுத் தாழ்க்காதபடி இறையவர் சில நாட்களிலே மகிழ்ந்து அருள் புரிந்தனர் என்பதாம். **ஒருமையுய்த்திட** - மனவொருமைப் பாட்டுடன் செலுத்த. **வழுவாமே** - **உய்த்திட** என்று கூட்டுக. **உய்த்தல்** - செலுத்துதல்.

**உமை இடம் மகிழ்ந்தவர்** - **இடம்** - இடப்பாகம். **உமை** - சிவனருள்.

**உவந்தார்** - மகிழ்ந்து ஏற்று அருள் புரிந்தனர். "சடையார் கொள்ளும் அன்பு" (1036) என்றது காண்க. 7

1038. காத லன்பர்த மருந்தவப் பெருமையுங் கலந்த
வேத மந்திர நியதியின் மிகுதியும் விரும்பி
யாதி நாயக ரமர்ந்தருள் செய்யமற் றவர்தாந்
தீதி லாநிலைச் சிவபுரி யெல்லையிற் சேர்ந்தார். அ

(இ - ள்) வெளிப்படை. விருப்பமிக்க அன்பருடைய அரியதவத்தின் பெருமையினையும், அந்தத்தவத்துடன் கலந்த வேதமந்திரத்தின் நியதியின் அளவுகடந்த மிகுதியினையும் ஏற்றுக்கொண்டு ஆதிநாயகராகிய சிவபெருமான் விரும்பி அருள் செய்யவே, பசுபதியார் தீதிலாநிலைச் சிவபுரியினது எல்லையிற் சேர்ந்தனர்.

(வி - ரை) **காதல் அன்பர்** "தூயஅன்பொடு" - "நேய நெஞ்சினர்" (1034) என்றது பார்க்க.

**தவம்** - 1036ல் குறித்த செயல் தவமெனப்பட்டது. **தவம்** - **தபிக்கச்** செய்தல். இங்கு உடலை வாட்டுதல் என்ற பொருளில் வந்தது. "மாரி நாளிலும் வார்பனி நாளிலும், நீரிடை மூழ்கி நெடிது கிடந்தும்,...தளர்வுறும் யாக்கையைத் தளர்வித் தாங்கவர், தம்மைத் தாமே சாலவு மொறுப்பர்..." (திருவிடை - மும் - கோவை - 19) என்ற பட்டினத்தடிகள் திருவாக்கும் காண்க.

நாயகர் - பெருமையும் - மிகுதியும் விரும்பி - அமர்ந்து அருள்செய்ய, அவர் - சிவபுரி எல்லையிற் சேர்ந்தார் என்று முடிக்க. **அருள் செய்ய** என்ற வினையெச்சம் **சேர்ந்தார்** என்ற பிறவினைமுதல் வினைகொண்டது.

**அமர்தல்** - விரும்பி வீற்றிருத்தல். இங்குத் தவத்தினுள்ளும், நியதியின் மிகுதியினுள்ளும் விரும்பியிருத்தல் குறித்தது. "ஆள வுடையார் தம்முடைய வன்ப ரன்பின் பாலுளதாய், மூள வமர்ந்த நயப்பாடு முதிர்ந்த பற்று முற்றச்சூழ், கோள மதனி லுண்ணிறைந்து குறித்த பூசை கொள்கின்றார்" (சண்டீசர் புரா - 36) என்றது காண்க. இறைவன் மந்திரத்தினுள்ளும் அன்பினுள்ளும் விளங்குகின்றான் என்பதுண்மை.

தீதிலா நிலைச் சிவபுரி - தீமையை யில்லையாகச்செய்து நிலைபேறுடைய வாழ்வு தரும் சிவனுலகம். இதனைச் சேர்தல் பசுபதியாரின் தவப்பெருமையின் பயனுகியது. தீது - ஆணவமாகிய மலம்.

மகிழ்ந்தருள்செய்ய — அறிந்தருள்செய்ய — எல்லையிற்சென்றார் — என்பனவும் பாடங்கள். 8

1039. நீடு மன்பினி லுருத்திர மோதிய நிலையால்
ஆடு சேவடி யருகுற வணைந்தன ; ரவர்க்குப்
பாடு பெற்றசீ ருருத்திர பசுபதி யாராங்
கூடு நாமமு நிகழ்ந்தது குவலயம் போற்ற. கூ

(இ - ள்) வெளிப்படை. நீடும் அன்புடனே திருவுருத்திரத்தை ஓதிய நிலைமை யினுலே இறைவரது ஆடுகின்ற திருவடியின் அருகு பொருந்த அணைந்தனர்; (ஆதலின்) அவருக்குப் பெருமைபெற்ற சிறந்த உருத்திரபசுபதியார் என்று கூடும் பெயரும் உல கம்போற்ற நிகழ்ந்தது.

(வி - ரை) இங்ஙாயனுருக்கு உருத்திரபசுபதியார் என்ற பெயர் வழங்குதலின் காரணத்தை அறிவிப்பது இத்திருப்பாட்டு. முதனூலாகிய திருத்தொண்டத் தொகை யினுள் இப்பெயரால் இவர் போற்றப்பட்டமையால் இதன் காரணத்தை விரிநூல் விரித்துக் கூறவேண்டிய நியதிபற்றி இவ்வாறு எடுத்துக்காட்டியபடியாம். இக்கருத் துப்பற்றியே " எஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன் " என்ற முதனூற்கருத்தை " வன்கழுத் தரிவாள் பூட்டி, யரிதலா லரிவாட் டாய ராயினுர் தூய நாமம் " (924) என்று விரித்ததும், பிறவும் காண்க.

நீடும் அன்பு - " தூய அன்பு " (1034), "கொள்ளும் அன்பு" (1036), "காதலன் பர் " (1038) என்றவை காண்க. நீடுதல் - பெருகுதல். " ஈறே முதலதனி னீறலா வொன்றுபல, வாறே தொழும்பாகு மங்கு" (சிவஞானபோதம் - சூத்) என்றபடி முத்தி நிலையிலும் உயிர் இறைவனுக்கு அடிமையாய் நிற்கு மாதலின், சிவபுரி எல்லையிற் சேர்ந்த பசுபதியார், அங்கும், நீடிய அன்பினுல் அடிமைத்திறம் புரிந்து (1033) இறை வனது சேவடியின் அருகுற அணைந்திருந்தனர் என்றலுமாம். " கோடி கோடி குறட்சிறு பூதங்கள், பாடி யாடும் " (16) என்றதும், " நன்மை சேர்கண நாதரா யவர்செயு நயப்புறு தொழில் பூண்டார் " (வெள் - சரு - 52) என்றதும் முதலியவை பார்க்க.

ஆடுசேவடி - தூக்கிய திருவடி. அதுவே உயிர்களை மலச்சேற்றினின்றும் எடுத்து அருள்தருவதாதலின் அவ்வருளினைப்பெற்ற பசுபதியார் அதன் அருகு அணைந் தனர்.

அருகுற அணைதல் - அருகுற அணைதல் அரிதின் முயன்றடையும் பெரும் பேறென்பதனை " தேடியமை யோர் பரவுந் தில்லைச்சிற் றம்பலவர், ஆடிவரும் போதருகே நிற்கவுமே யொட்டாரே " என்று அகப்பொருளில் வைத்துப் புருடோத் தம நம்பிகள் திருவிசைப்பாவினுள் அருளியது காண்க.

அவர்க்குக் கூடும் நாமமும் நிகழ்ந்தது - கூடு நாமம் - உருத்திரம் என்னும் சொல். தமது பசுபதியார் என்னும் பெயரின் முன்னே கூடப்பெற்ற நாமம். பெருமை கூடிய என்ற குறிப்பும் காண்க. உருத்திர பசுபதியார் ஆம் என்றதும் இதனை விளக் கிற்று. ஆம் - ஆகின்ற. முன் பசுபதியார் என்றது இப்போது உருத்திரபசுபதியார் என ஆகின்ற என்க. பாடுபெற்றசீர் - பாடு - பெருமை. பாடு - தவம், உடல் வருத்தல்

என்று கொண்டு பசுபதியார் செய்த கடுந்தவத்தின் (1036) பயனுகப் பெற்ற என்ற லும் ஆம்.

**குவலயம்போற்ற நிகழ்ந்தது** - உலகத்துள்ளார் அத்திருப்பெயரைப் போற்றும் படி வழங்கியது. **போற்றுதல்** - திருத்தொண்டத்தொகையாலும், அதுகொண்டு உலகராலும் துதிக்கப்படுதல். 9

1040. அயில்கொண் முக்குடு மிப்படை யார்மருங் கருளாற்
பயிலு ருத்திர பசுபதி யார்திறம் பரசி
யெயிலு டைத்தில்லே யெல்லையி னூடப்போ வாராஞ்
செயலு டைப்புறத் திருத்தொண்டர் திறத்தினை மொழிவாம். கo

(இ - ள்) வெளிப்படை. கூர்மை கொண்ட திரிசூலத்தை ஏந்திய சிவபெருமானது அருகிலே பயில் உருத்திர பசுபதியாரின் திறத்தினைத் துதித்து, மதில் சூழ்ந்த தில்லையின் எல்லையில் நாடுப்போவாராகிய செயலுடைய புறத்திருத் தொண்டருடைய திறத்தினை இனி மொழிகின்றோம்.

(வி - ரை) **அயில்கொள் முக்குடுமிப்படையார்** - முக்குடுமிப்படை - மூன்று தலையுடைய சூலம். கழுக்கடை என்றும் கூறுவர். "மூவிலை யொருதாட் சூல மேந்துதல், மூவரும் யானென மொழிந்த வாறே" (திருஒற்றியூர் ஒருபாவொருபஃது - 6) என்ற பட்டினத்தடிகள் திருவாக்கும், "ஆதி, யரியாகிக் காப்பா னயனுய்ப் படைப்பா, னரனு யழிப்பவனுந் தானே" (திருக்கயிலாயஞானவுலா) என்ற கழறிற்றறிவார்நாயனுர் திருவாக்கும், "உயிரவைதம, பவமலிதொழி லதுநினைவொடு பதுமநன்மல ரது மருவிய சிவன்" (1), "சுரர்முத லுலகுகள் நிலைபெறும்வகை நினைவொடுமிகு, மலை கடனடு வறிதுயிலம ரரியுருவியல் பரன்" (2) "உயிரவையவை முழுவதுமழி வகை நினைமுத லுருவியல்பரன்" (3) (நட்டபாடை - திருவிராகம் - சிவபுரம்) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரக் கருத்துக்களும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கன. "மும் மலங்கள் பாயுங் கழுக்கடை" "அழுக்கடை யாம லாண்டுகொண் டருள்பவன், கழுக் கடை தன்னைக் கைக்கொண் டருளியும்" என்பனவற்றுல் சூலப்படை ஏந்துதலின் கருத்து உணரப்படும். வாமை, சேட்டை, ரௌத்திரி எனவும், ஜனனீ மோதயித்திரீ ஹாரணி எனவும் பெயர்பெற்றுத், தீக்கையில் பாசச் சேதம் பண்ணுவனவும், படைத்தல் காத்தல் அழித்தலைச் செய்வனவும், ஆகிய அச் சத்தி மூன்றுமே **முக்குடுமிப் படையாயும்**, முத்தொழில் மூர்த்திகளை அதிட்டிப்பனவும் ஆம். இச்சத்திகளை அதிட்டித்துநின்ற முதல்வனும் பிரம விட்டுணு ருத்திரப் பெயர் பெறுவர். அம்முதல்வன் **தோற்ற நிலை யிறுதிகளைச் சங்கற்பித்துநின்ற** வடிவங்களையே மேற்காட்டிய சிவபுரத் தேவாரங்கள் குறித்தன. நினைவோடு என்றது காண்க. சிவலிங்கத்தின் அடி நடு முடிகளில் பிரமன் முதலியோரைப் பூசிப்பதும் இக்கருத்துப்பற்றியதேயாம். இங்கு, உருத்திரபசுபதியார் **கடையார் மதங்கு பயில்** பதம் என்றது முழுமுதலாகிய சிவன் பதமாமென்பதும், உருத்திரன் என்ற பெயராலறியப்படும் குணமூர்த்திகளுள் ஒருவராகிய உருத்திரருலகு அன்றென்பதும் குறிக்க **முக்குடுமிப்படையார்** என்ற இப்பெயராற் கூறினர்.

**பயில்** இங்கு என்றும் மீளா நிலையாகிய பேறுபெற்றிருக்கும் என்ற பொருளில் வந்தது. **உருத்திரம் பயிலும் பசுபதியார்** என்று அவர் சரிதத்தை முடித்துக்காட்டிய திறமும் காண்க.

எயிலுடைத் தில்லை எல்லை - எயில் - மதில். தீமை உட்புகாத காவல் குறித்தது. எல்லை - நாற்புறமும் காததூரத்தில் தில்லையைச் சூழ்ந்த இடம். 238-ல் உரைத்தனவும் பிறவும் பார்க்க.

தில்லை.....தொண்டர் - இது மேல்வரும் சரிதத்திற்குத் தோற்றுவாய் செய்து அறிவித்தபடியாம். இதனுல் அந்நாயனரது பெயர்க்காரணமும் சரித வரலாறும் கூறினர். 1060 - 1061 - 1062 திருப்பாட்டுக்கள் பார்க்க. முதனூலாகிய திருத்தொண்டத் தொகையினுள் இப்பெயராலே அவர் துதிக்கப்பட்டமையின் இப்பெயர் கொண்டே தோற்றுவாய் செய்ததுமன்றித், தில்லை எல்லையில் - போவார் - என்று சரித விளைவுடன்கூட்டிப் பெயர் விளக்கமுஞ்செய்தார். புறத்திருத்தொண்டர் - கோயிற்புறத்திலே யிருந்து தொண்டுசெய்பவர். அவர் மரபு குறித்தபடியாம். திருவந்தாதியும் காண்க.

ஆசிரியர் தமது மரபின்படி இதுவரை கூறிவந்த சரிதத்தை முடித்துக் காட்டிய திறமும், வருஞ்சரிதத்தை எடுத்துத் தோற்றுவித்த திறமும் கண்டுகொள்க. 10

---

சரிதச் சுருக்கம் :—காவிரி பாயும் வயல் வளமுடைய சோழநாட்டில் குலத்தில் ஓங்கிய குறைவிலாக் குடிகள் நிறைந்த நலமுடையது திருத்தலையூர் என்ற பதி. அதில் மறையவர்களின் வேள்வியின் பயனுக மழை பருவந் தவருது பெய்யும். இனிய செழுஞ் சோலைகளால் அவ்வூர் சூழப்பெற்றுள்ளது. ஆனைந்தாடும் சிவபெருமான் அருளிய நூல் வழியே ஒழுகும் அவ்வூரின் குடிகள் தருமமும் நீதியும் சால்பும் நிறைந்தவர்கள்.

அவ்வூரில் மறையவர் குலத்தில் அவதரித்த தூயவர் சிவனடிமைத் திறத்தை விரும்பி இடைவிடாது சொல்லும் பசுபதியார் என்பவர். அவர் வேத உருத்திர மந்திரங் கொண்டு அன்போடு இடையருது நேய நெஞ்சினுல் இறைவன் திருவடிகளைத் துதிக்கும் தொழிலிற் சிறந்து விளங்கினர்.

தாமரைத் தடத்தினுட் புகுந்து, தெளிந்த நீர், கழுத்தளவு செறிந்துள்ள நிலையில் சென்று நின்று கைகளை உச்சிமேற் குவித்து அன்புடன் சிவபெருமான் திருவடிகளையே குறிவைத்து அருமறைப் பயனுகிய திருவுருத்திரத்தினைப் பெரும் பகலும் எல்லியும் வழுவாமல் சில நாட்கள் ஒருமை மனத்துடன் பயின்றுவந்தனர்.

இவ்வாறு செய்துவந்த தவப்பெருமையினையும், அதனுடன் கலந்த வேதமந்திர நியதியின் மிகுதியினையும் விரும்பிச் சிவபெருமான் அமர்ந்து அருள் புரிந்தனர். பசுபதியார் சிவபுரி எல்லையிற் சேர்ந்து இறைவரது எடுத்த சேவடி யருகுற அணைந்து இனிதமர்ந்தனர்.

உருத்திரம் பயின்று பேறுபெற்றதனுல் அவருக்கு உருத்திரபசுபதியார் என்ற பெயர் உலகம் போற்ற வழங்குவதாயிற்று.

---

தலவிசேடம் :—திருத்தலையூர். (1) இத்தலம் தென்னிந்திய இருப்புப்பாதை மாயவரம் - பேரளம் வழியில் கொல்மாங்குடி நிலையத்திலிருந்து கிழக்கு உ நாழிகை யளவு கற்சாலை வழி சென்றுல் நாட்டுவாய்க்காலின் தென்கரையில் அடையத்தக்கது. மறையவர் விசேடமாய் வாழும் பதி. இங்கு உருத்திரபசுபதி நாயனுர் உட்புக்கு உருத்திரஞ் செபித்ததாக வழங்கும் திருக்குளமும் உண்டு. மறையவர்களால் அவரது திருவிழா அத்திருக்குளத்திற் கொண்டாடப்படுகின்றது. ஆலயத்தில் நாயனரது பழந் திருவுருவம் உள்ளது. நாயனர் பெயரால் திருமடமும் உண்டு.

(2) இவ்வாறன்றி, இத்தலம், திருச்சிராப்பள்ளிச் சில்லாவில், காவிரியின் வட கரையில் உள்ள முசிறியினின்றும் வடக்கே துறையூர்போகும் கற்சாலையில் 8 நாழிகையளவில் உள்ள சம்புநாதபுரத்திற்குக் கிழக்கே மட்சாலை வழி 3 நாழிகையில் உள்ளதாம் என்றதொரு வழக்குமுண்டு.* முசிறியினின்று சம்பு நாதபுரம் வரை மோட்டார் வசதியுண்டு. அவ்வழியில் சம்புநாத புரத்திலிருந்து தலையூருக்குப் பிரியும் கற்சாலையில் ஊருக்கு வடக்கே ½ நாழிகையளவில் திருத்தலையூர்ச்சாலை என்று விளம்பரப்பலகை எழுதப்பட்டிருக்கிறது. திருச்சி - ஈரோடு கிளையில் குளித்தளை நிலையத்தி னிறங்கிக் காவிரியைப் பரிசினாற் கடந்தால் முசிறியை அடையலாம். துறையூரிலிருந்து வருவதாயின், அங்கிருந்து முசிறிக்கு வரும் கற்சாலைவழியில் துறையூரிலிருந்து 10 நாழிகையளவில் திருத்தலையூர்ச்சாலை என்று விளம்பரப்பலகை காணும் இடத்தில் இறங்கிக் கிழக்கே மூன்று நாழிகை சென்றால் இத்தலையூரையடையலாம். முசிறிக்குச் சேலம் திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களிலிருந்தும் மோட்டார் வசதியுண்டு. பெரிய புராணத்தில் உள்ளபடியே இவ்வூருக்குத் திருத்தலையூர் என்று பேர் வழங்குவதும், கோயிலின் முன்பு உள்ள ஓமகுளத்தில் நாயனார் உருத்திரம் ஓதினார் என்று வழங்குவதும், அதை ஒட்டிய இவ்வூர் தலபுராண வரலாறுமே இது இந்நாயனாரது ஊர் என்பதற்குச் சான்றாவன. இங்கு நாயனாரது திருவுருவம் 10 ஆண்டுகளுக்குமுன் ஒரு ஆதிசைவரால் செய்து வைக்கப்பட்டுத் திருவிழாவும் கொண்டாடப்படுகின்றது. இராவணன் தலையை அறுத்து இட்டு ஓமஞ் செய்ததனால் தலையூர் என்றும் ஓமகுளம் என்றும் பெயர்கள் போந்தன என்பது தலபுராணம். பழைய கோயில் உண்டு. சுவாமி - சப்தரிஷீசுவரர்; அம்பிகை குங்குமவல்லி. பக்கத்தில் ஐயாறு என்ற ஆறு உண்டு. சத்த இருடியர் பூசித்த தலமென்றும், ஐயாற்று மணலால் சிவலிங்கம் அமைத்து இராவணன் பூசித்து யாகமும் செய்த இடமென்றும், புரூரவச் சக்ரவர்த்தி ஆலயம் அமைத்தனர் என்றும் வழங்கப்படுகின்றது.

இலிங்கமும் நந்தியும் மணலிறுகிய பாறையினாலாக்கப்பட்டன என்று தெரிகிறது. ஆனால் இவ்வூர் மறையவரூராக இருந்ததாய்த் தெரியவில்லை. துறையூர்ச்சமீன்தாரின் மேற்பார்வையில் கோயில்காரியங்கள் நடைபெறுகின்றன. தலபுராணம் தமிழில் உண்டு. அச்சாயிருக்கின்றது. திருத்தலையூர் என்ற பேர் ஒற்றுமை கருதி நாயனாரின் சரிதவழக்குக்கள் தொடர்ந்து வழங்கப் படுவனவோ என்பது ஐயம்.

---

கற்பனை :—(1) ஆற்றின் நீர், வெள்ள காலத்தில் வயல்களினுள் தானே வந்து புகுவது வயல்களின் இயற்கைவளத்துக்கும் சிறப்புக்கும் காரணமாம்.

(2) குலத்தின் ஓங்கிய குறைவிலா நிறைகுடிகள் செறிந்து விளங்குவது நகரச் சிறப்புக்களுள் ஒன்றாகும்.

(3) திருவுருத்திரம் வேதங்களுட் சிறந்தது. அது மறைகளின் பயனாக உள்ளது. உருத்திரத்தை விதிப்படி அன்போடு ஓதுதல் சிறப்புத் தருவதாம்.

(4) உருத்திரங் கொண்டு அன்பு நிறைந்த ஒருமை மனத்தோடு கழுத்தளவு நீரினுட்புக்குக் கைகூப்பிநின்று இடையறாது கணித்தல் பெருந்தவமும் சிவபுண்ணியமுமாகும். இவ்வாறு ஓதுவோர் சிவனுலகிற் சேர்ந்து சிவனடியருகில் வீற்றிருப்பர்.

(5) உருத்திரம் சிவன் றிருநாமத்தை உள்ளே பொருந்த வைத்தது.

உருத்திரபசுபதி நாயனார் புராணம் முற்றும்

---

*இவ்வரலாறுகளை அறிவித்தவர் எனது அரியநண்பர் பண்டிதர்திரு.அ.கந்தசாமிப் பிள்ளையவர்கள். இவ்விடத்துக்கு நேரிற்சென்று தெரிந்து எழுதியுதவினவர் நண்பர் திரு. லா. கோ. சுந்தரராஜு அவர்கள். இவ்விருவர்கட்கும் எனது நன்றி உரியது.

உ

சிவமயம்

# 18. திருநாளைப்போவார் நாயனார் புராணம்

தோகை

"செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்"

—திருத்தொண்டத் தோகை

வகை

"நாவார் புகழ்த்தில்லை யம்பலத் தானருள் பெற்றுநாளைப்
போவா னவனும் புறத்திருத் தொண்டன்றன் புன்புலை போய்
ழுவா யிரவர்கை கூப்ப முனியா யவன்பதிதான்
மாவார் பொழிறிக ழாதனூ ரென்பரிம் மண்டலத்தே"

—திருத்தொண்டர் திருவந்தாதி (20)

விரி

1041. பகர்ந்துலகு சீர்போற்றும் பழையவளம் பதியாகுந்
திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன் செழுமணிக டிரைக்கரத்தான்
முகந்துதர விருமருங்கு முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணைநீர் நன்னாட்டு மேற்காளுட் டாதனூர். க

புராணம் :—திருநாளைப்போவார் என்ற பெயருடைய நாயனரின் சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி. இனி, நிறுத்தமுறையானே, மும்மையாலுலகாண்ட சருக்கத்து நான்காவது திருநாளைப்போவார் நாயனரது சரிதங் கூறத் தொடங்குகின்றார்.

தோகை :—செம்மைபுரி சிந்தையராய்த், திருநாளைப்போவார் என்ற பெயர் வாய்ந்த பெரியவர்க்கும் நான் ஆளாவேன். செம்மை இங்குச் சிவனிடத்து ஒன்கி எழுந்த சித்தநிலையுடன் முன்னுணர்வினால், ஒழியாத காதலுணர்ச்சியினைக் குறித்தது. "செம்மைபுரி சிந்தையராய்" (1052) என்றது காண்க. 1051, 1060, 1061 பார்க்க.

செம்மை - மனப்பண்பு; நேர்மை. அதனால் தமது குலதருமத்தின் வழாது நின்றே திருப்பணியும் அதற்கேற்பச் செய்தனர். "வருபிறப்பின் வழிவந்த அறம்புரி கொள் கையராயே யடித்தொண்டின் நெறிநின்றார்" (1052). தில்லைக்குப் போவேன் என்று மனங்கொண்டவர் அன்று தமது குலத்தின் இழிபு கருதிப் போக்கொழிந்தனர்; காதல் மிக்கு எழவே "நாளைப் போவேன்" என்பாராய்ப் பலநாள் கழிந்தன; நாள்கள் வீணே செல்லத் தரியாது, பிறவி ஒழியுமாறு போகத்துணிந்தனர். இவ்வாறு போக நினைந்ததும், போக்கு ஒழிந்ததும், பின்னர்த் துணிந்ததும் ஒவ்வோர் நிலையிற் கொண்ட மனச் செம்மையினாலாகியன. தில்லை எல்லையிற் போயின பின்னரும் உட்செல்லத் துணியாது ஊரெல்லைப்புறம் சுற்றிக் கவன்று நின்றதும், இறைவனுணையாற் றீயின் மூழ்கி மறைமுனியாய் எழுந்ததும் செம்மை நிலையாலுளவாயின; என் நிவ்வளவும் செம்மையே என்றதனால் அமைத்து இச்சரித முழுமையும் காட்டநின்ற முதனூலின் மாண்பு மொழியின் மேம்பாடு கருதுக. திருநாளைப்போவார் -

நாயனரின் பெயர். தில்லை போகும் விருப்பமும் ஒருப்பாடும் இருந்தும் தமது பிறப்பாகிய குலத்தின் இழிவுகருதிப் போகத் துணியாராயும், பின்னரும் காதல் மிகவே "நாளைப் போவேன்" என்று கருதியும் இவ்வாறு பல நாளும் கழித்த காரணத்தால் இப்பெயர் போந்தது (1061). முதனூலிற்கண்ட இப்பெயராலேயே புராணம் வழங்குகின்றது. இவரது இயற்பெயர் நந்தனார் என்பதாம். (1051).

வகை :—பெரியோர்களாற் றுதிக்கப்பட்ட புகழினையுடைய தில்லையம்பல வாணருடைய திருவருளைப் பெற்றுத்,தில்லைக்கு நாளைப்போவார் என்ற பெயர் பெறும், புறத்திருத் தொண்டராய்த் தமது புன்மையுடைய புலைப்பிறவிபோய் நீங்கித் தில்லை மூவாயிரவரும் கைகுவித்துத் தொழும்படி முனியாகியவருடைய பதி, மரங்கள் நெருங்கிய பொழில்கள் சூழ்ந்த **ஆதனூர்** என்று இந்நிலவுலகத்து எடுத்துச் சொல்லுவர்.

**நாவார் புகழ்** - ஆளுடையபிள்ளையார் முதலிய பெருமக்கள் பலரும் தமது திருவாக்கினால் நிறைய எடுத்துச்சொல்லும் புகழ். இத்திருவந்தாதியருளிய நம்பியாண்டார் நம்பிகளுக்கு முன் போந்த சைவத் தெய்வத் திருமுறைகள் பதினொன்றும் அருளிய எல்லாப் பெருமக்களும் புகழ்ந்தவகை திருமுறைகளுட் காண்க. வேதங்களும் ஆகமங்களும் புகழ்ந்தன. மக்கள் தம் நாவினாற் பேசத்தக்கன இப்புகழேயன்றி வேறில்லை. இதனையே "பொருள்சேர் புகழ்" என்றது திருக்குறள். **புகழ்த்தில்லை** என்றும், **புகழ் அம்பலத்தான்** என்றும் கூட்டத்தக்கது. **நாளைப்போவான் அவன்ஆம்** - தில்லைக்கு நாளைச் செல்வேன் என்று பலநாள் கருதியதனாற் போந்த பெயர் என்பது குறிக்க **அவன் ஆம்** என்றார். **புறத்திருத் தொண்டன்** - இதனால் அவரது மரபும், தொண்டராயின நிலையும், மரபுக்கேற்ப அவர்செய்த திருத்தொண்டின் வரலாறும் குறிக்கப்பட்டன. இவை 1051 - 1059 திருப்பாட்டுக்களில் விரிக்கப்படுவனவாம். **புலைபோய்** - முனியாய வரலாறு 1072-ல் விரிக்கப்பட்டது. **மாவார் பொழில்தி்கழ் ஆதனூர்** - 1043, 1044 பார்க்க.

1041. (இ - ள்) **திகழ்ந்த...ஆதனூர்** - விளக்கம் கொண்ட நீரினையுடைய **கொள்ளிடம்** என்ற ஆறு, பொன்னையும் செழுமணிகளையும் அலைகளாகிய கையினால் முகந்துதர இரு பக்கங்களிலும் உள்ள தாமரைகளின் மலர்க்கையினாலே அவற்றை ஏற்றுக்கொள்கின்ற இடமகன்ற வயல்களையுடைய நன்மை தருகின்ற **நீர் நாட்டிலே மேற்காஞட்டின்** உள்ள **ஆதனூர்** என்பது; **பகர்ந்து...பதியாகும்** - உலகம் அதன் சிறப்பினை எடுத்துச்சொல்லித் துதிக்கின்ற பழமையாகிய வளத்தையுடைய ஊர்.

1041. (வி - ரை) **சீர்பகர்ந்து உலகு போற்றும்** என்க. அத்திருப்பதியின் சீர் இந்நாயனருக்கு முற்காலத்தில் போற்றப்படாமல், அவர் அருள்பெற்ற பின்னரே பேசப்படுவதனால் சீர் என்பதனை முன்வைக்காது பின்வைத் தோதினர். **சீர்** - நந்தனார் அவதரித்து வாழ்ந்து திருவருள் பெறநின்ற சிறப்பு.

**பழைய வளம்பதி** - நந்தனார் அவதரித்ததன் பின், சீர், வந்ததேயாயினும் அதன் வளம் பழைமையுடைத்தென்பது. **பழயை வளமாவது** கொள்ளிடத் திருநதியின் நீர் வளத்தாலாவது என்பார் பொன் - மணி - முளரி - பணை - நீர் - நன்னாடு என்றிவற்றால் விளக்கினர்.

**பதி ஆதும்** - இதுவே உயிர்களுக்கு ஆகுவது; ஏனை வெறும் உலக வளம்பதிகள் இத்தகையன ஆகா என்பதும் குறிப்பு.

**திகழ்ந்த புனல் கொள்ளிடம்** - கொள்ளிடத் திருநதியானது காவிரியினது மிக்க நீரினைக் கடலினுட் செல்ல விடுத்தற்கமைந்த வடிகால் ஆறு. பெரிய அணையின்கீழ் வடியும் ஊற்றுநீர் இதனுள்ளே செல்வதாதலின் எப்போதும் தெளிந்த நீரினையுடை

யது என்றுகுறிக்கத் திகழ்ந்த புனல் என்றார். கொள்ளிடம் - 256-ல் உரைத்தவை பார்க்க. திகழ்ந்த என்பதற்கு இவ்வாறன்றி வெள்ளகாலத்தில் மிகுதியாய்ப்போந்து விளங்கிய என்று கூறுதலுமாம்.

**பொன் செழுமணிகள்** - பொன்னையும் செழுமணிகளையும். உம்மைகளும் இரண்டனுருபுகளும் விரிக்க. பொன்னும் மணிகளும் காவிரியினால் மலையினின்றும், வழியில் உள்ள நிலங்களினின்றும் அலைத்துக் கொண்டுவரப்பட்டன. 57-ல் உரைத்தவை பார்க்க. பொன்னிலை மலைநிலங்களிற் போந்து பொன் கொண்டு வருதலிற் **பொன்னி** எனப்படும்.

**திரைக் கரத்தால் முகந்துதர** - **திரைக்கரம்** - முகத்தலும் தருதலும் செய்தலால் திரையைக் கையாக உருவகம் செய்தார். **முகந்து தர**-எடுத்துக்கொடுக்க. உருவகத்தால் இயைந்த வினையை விரித்துக் காட்டியவாறு. "நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்" என்ற படி காற்றின் வேகத்தால் நீரின் பரப்பு உந்தப்பட்டுச் சுருண்டு மேலே எழும்; அவ்வாறு அது சுருண்டு எழும்போது நீரின் கீழே கிடந்த பொன்மணல் மணி முதலியவற்றை அள்ளிக்கொண்டு மேற்கிளம்பும்; பின்னர்க் கரையில் மோதிப்பரவும்போது அவற்றை அங்கு உதிர்த்துவிடும். இச்செயல்களையே முகத்தலாகவும் தருதலாகவும் உருவகித்தார்.

**முகத்தல்** - கொள்ளுதல். **இருமருங்கும் அகன்பணை** - கொள்ளிடத்தின் இருகரைகளிலும் அகன்ற வயல்கள் உள்ளன. அவற்றினுள்ளும் அங்குள்ள தடாகங்களினுள்ளும் தாமரைகள் பூத்துள்ளன. அத்தாமரைப் பூக்களினுள் கொள்ளிடத்தின் அலைகளாற்றரப்படும் பொன்னும் மணிகளும் சென்றுதங்கும் தோற்றம் தாமரைமலராகிய கைகளினால் பணை அவற்றை ஏற்கின்றது போன்றது என விரிவு செய்து கொள்க.

**மலர்க்கை** - திரைக்கை என்றதற்குரைத்தபடி உரைத்துக் கொள்க. "வயல்புகு பொன்னி" என்றபடி காவிரியின் நீர் வயலுள்ளே வந்து புகுவதுபோலக் கொள்ளிடநீர் புகாது; வெள்ளம் பெருகும் காலத்தில் அலைகளால், நீர், கரைகளின் அயலின் வயல்களில் வீசப்படும் இயல்பு குறிக்கப்பட்டது. வள்ளன்மையுடையோர் தம் வழியிற் சென்றுகொண்டே தமது பொருள்களை வாரி இறைத்து ஈந்து செல்லும் இயல்பும், அவ்வாறே அவ்வழியிலே நின்ற இரவலரும் தாந்தாம் இருந்த இடத்தைவிட்டுப் பெயராது தம் கைகளை விரித்திருந்து அவற்றுள் வீழ்வனவற்றைப் பெறும் இயல்பும் போலக் கொள்ளிடத்தின் திரைகள் பொன் மணிகளை வீச இருபுறமும் முளரிக்கைகளால் அகன்பணைகள் ஏற்றன என்ற குறிப்பும் காண்க. ஈதலும் ஏற்றலுமாகிய தற்குறிப்பேற்ற அணியின் சுவையும் கருதுக.

**நீர் நன்னாடு** - நீர் நாடு என்று வழங்கும் சோழநாடு. நன்மை என்பது இங்கு ஏற்குமிடத்து வந்த இடைப்பிறவரல்.

**மேற்காநாடு** - சோழநாட்டின் உள்நாடுகளுள் ஒன்று. காநாடு - கோநாடு - காளட்டுமுள்ளூர் முதலியவை காண்க.

**ஆதனூர்** - நந்தனூர் அவதரித்த ஊரின் பெயர். ஆதனூர் - பதியாகும் என்க.

**பதி ஆகும்** - இது நாயனாரது திருவவதாரத்தினால் தன் சீரினை உலகு பகர்ந்து போற்றும் பதி ஆகும் பெருமை பெற்றது என்பது குறிப்பு.

இப்பாட்டு, தன்மை, உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் முதலிய பல அணி நலன்களும் விரவிக், குறிப்பு முதலிய பல உள்ளுறைகளுடன் விளங்கும் கவிநயம்

காண்க. "உணர்வினின் வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்" என்றதற்கு இஃது ஒப்பற்ற இலக்கியமாய் விளங்குவதென்க. 1

1042. நீற்றலர்பே ரொளிநெருங்கு மப்பதியி னிறைகரும்பின்
சாற்றலைவன் குலைவயலிற் றகட்டுவரா லெழப்பகட்டேர்
ஆற்றலவன் கொழுக்கிழித்த சால்வழிபோ யசைந்தேறிச்
சேற்றலவன் கருவுயிர்க்க முருகுயிர்க்குஞ் செழுங்கமலம். உ

(இ - ள்) வெளிப்படை. திருநீற்றின் பெரிய ஒளி நெருங்கி விளங்கும் அந்தப் பதியில் நிறையும் கருப்புஞ் சாற்றில் அலையும், வலிய (குலை)வரம்புகளையுடைய வயலில், தகடு போன்ற வரால் மீன்கள் எழும்படி எருமைகள் பூட்டிய ஏர் செல்லும் வழியில், கலப்பையினது வலிய கொழுவினால் கிழிக்கப்பட்ட படைச்சாலின் வழியே, மெல்ல அசைந்து மேலேறிச் சென்று, சேற்றில் வாழும் நண்டுகள் கரு ஈனச், செழுங்கமலங்கள் முருகு உயிர்க்கும்.

(வி - ரை) நீற்று அலர் பேர் ஒளி நெருங்கும் என்றதனால் அப்பகுதியில் நீறு பூசும் அடியார் கூட்டம் நிறைந்துள்ளது என்பது கருத்து. திருநீற்றுச் சார்பினால் உளதாகும் சிவஞானப் பேரொளியானது இனி விளங்கி மிகுதற்குரிய நாயனார் அவதரிக்கத்தக்க இடமாதலும் குறிப்பு.

நிறைகரும்பின் சாற்று அலை வன்குலை - நிறைந்த கரும்புச் சாற்றினாலே அலைக்கப்பட்ட வரப்புகள் என்றது, அந்நாட்டின் கரும்பு மிகுதியாதலின், அது அடப்படும் போது அதன் சாறு முதலியவை வயலினும் வரப்பினும் சேறுபடுத்துதலினாலே வரம்புகள் அச்சாற்றில் அலைகின்றன என்பதாம். குலை - வரம்பு; கரை. குலை - நெற்குலைகள் என்று கொண்டு, நெல்லும் கரும்பும் வயல்களில் அடுத்தடுத்து மிக விளையும் செழித்த மருத நிலமாதலின் நெற்குலைகள் கரும்புச் சாற்றில் அலையும் வயல்கள் என்றுரைப்பாருமுண்டு.

தகட்டு வரால் - தகடுபோன்ற வடிவுடைய வரால் மீன். தகடுபோல மெல்லி தாய் ஈண்டுதவறுதலின், வினையும் மெய்யும்பற்றிவந்த உவமமும், தன்மை நவிற்சியும் விரவி வந்தன.

பகடு ஏர் ஆறு அலம் வன்கொழு கிழித்த சால் - பகடு - எருமை. எருமைகளை ஏரிற்பூட்டி உழுவதும் உழவின் பிறதொழில்களைச் செய்வதும்பற்றி முன் உரைத்தவை பார்க்க. "பகடு" (74) என்றவிடத் துரைத்தவற்றை இங்கு நினைவுகூர்க. ஏர் ஆறு - ஏர் செல்லும் வழியே. அலம் - கலப்பையின் அடியிற் றைக்கப்பட்டு அதன் நுனியாக உள்ள இரும்பு முனை. சால் - படைச்சால். கலப்பை சென்ற பள்ளம்.

அசைந்து...கருவுயிர்க்க - சேற்றினுள் தவழ்ந்த சினைநண்டு கலப்பைக்குட் படாது தப்பி ஒதுங்கிப், பின், அந்தக் கலப்பை உழுத சால் வழியே மெல்லச்சென்று, அவ்வாறே ஒதுங்கிப் பிழைத்த தாமரையில் ஏறி, அதன் மலரில் கரு ஈன என்க.

முருகு உயிர்க்கும் - பூந்தாதுக்களை உதிர்த்து வாசனை வீசும். நண்டு மலரில் ஏறி அதனுட் படிதலால் மலரின் கேசரங்கள் அசைந்து தாதுக்களை உதிர்த்தன. அத்தோற்றம், கருவுயிர்த்த பெட்டை நண்டினை ஈரம் புலர்த்தி அது கரு ஈனுதற்குரிய மருந்து தருவன போன்றிருந்தது எனத் தற்குறிப்பேற்றம் படக், கருவுயிர்க்க முருகுயிர்க்கும் என்று காரணப்பொருளில் வந்த வினையெச்சமாக உரைத்த குறிப்பும் காண்க.

இச்சரிதமுடைய நாயனாராகிய நந்தனாரின் மரபினர் தரும் கோரோசனை முதலியவை, மக்கள் மகவு ஈனுதலுக்குரிய மருந்துவகையாதல் பற்றி, இச்சரிதம் பற்றிய குறிப்பும் காணத்தக்கது. "பரந்தவினை வயற்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்" (திருஞான - புரா - 7), என்ற திருப்பாட்டில் அச்சரித நாயகராகிய ஆளுடைய பிள்ளையாரது அந்தணர்மரபு பற்றிய தோற்றத்தினை இயற்கைப் பொருள்களிற்கண்டு காட்டியும், "கருங்கதலிப் பெருங்குலைகள் களிற்றுக்கை முகங்காட்ட" (திருநா - புரா - 6) என்ற திருப்பாட்டில் அச்சரிதமுடைய அப்பர் சுவாமிகளது திருமரபின் தோற்றத்தையும், அம்மரபுக்குரிய படைத்தலைமைக் குறிப்பினையும், அதுபற்றிய சரிதக் குறிப்பினையும் உள்ளுறையாக வைத்து நாட்டுவளம் கண்டு காட்டியும், இன்னும் இவ்வாறு கூறும் ஆசிரியரது மரபுங் காண்க. அவ்வச்சரித மயமாகிய தெய்வக் கண் கொண்டு சரிதம் சொல்லப்புகும் ஆசிரியர்க்கு, நாடும் நகரும் ஆறும் குளமும் வயலும் மரமும் பிறவும் அவ்வச்சரித மயமாக விளங்கக் காணுதல் அருமையாமோ? 2

1043. நனைமருவுஞ் சினைபொதுளி நறுவிரைசூழ் செறிதளிரிற்
றினகரமண் டலம்வருடுஞ் செழுந்தருவின் குலம்பெருகிக்
கனமருவி யசைந்தலையக் களிவண்டு புடைசூழப்
புனன்மழையோ மதுமழையோ பொழிவொழியா பூஞ்சோலை. ந

(இ - ள்) வெளிப்படை. அரும்புகள் நிறைந்த கொம்புகள் செறிந்து மிக்க வாசனை சூழும் செறிந்த தளிர்களினால் ஞாயிற்றின் மண்டலத்தைத் தடவுகின்ற செழித்த மரங்களின் கூட்டம் பெருகி, மேகங்களும் பொருந்தி, அசைந்து அலைதலால், தேன் வண்டுகள் பக்கங்களிற் சூழ, புனல் மழையோ, அன்றித் தேன்மழையோ, ஒழியாமல் பெய்வன பூஞ்சோலைகள்.

(வி - ரை) நனை - அரும்புகள். பொதுளுதல் - நெருங்குதல்.

பொதுளி நறுவிரைசூழ் - பொதுளுதலால் நல்ல மணம் சூழும். காரணப் பொருளில் வந்த வினையெச்சம். சூழ் - தளிர் என்க.

தளிரின் தினகர மண்டலம் வருட - மேல் ஓங்கி வளர்ந்த பூமரங்களின் உச்சியில் தழைத்த தளிர்கள் ஞாயிற்றின் மண்டலத்தை அளாவ என்று மரங்களின் உயர்ச்சி தோன்றக் கூறிய உயர்வுநவிற்சியணி. தினகரன் - ஞாயிறு - (சூரியன்). நாள் என்ற காலப் பகுதியைச் செய்பவன் என்பது பொருள். தினம் - நாள்; கரன் - செய்பவன். (கீரு - செய் - பகுதி). உலகம் தன்னைச் சுற்றிச் சுழன்று சென்றும் உருண்டும் சூழ்வதனால் உலகுக்குப் பகல் இரவு என்ற காலப் பாகுபாட்டை ஞாயிறு உண்டாக்குகிறான் என்பது குறித்தது. மண்டலம் ஞாயிற்றின் கதிர்களின் சூழல் குறிப்பது. மண்டிலம் என்று பாடங் கொண்டு வட்டவடிவம் என்பாரு முண்டு. தளிரின் வருடும் என்று கூட்டுக. தளிர்களினால் ஞாயிற்று மண்டலத்தைத் தடவுவன போன்றன என்பதாம். இன் - கருவிப் பொருளில் வந்த ஐந்தனுருபு.

வருடும் செழும் தரு - வருடும்படி உயர்ந்த செழிப்புடைய மரங்கள். குலம் - கூட்டம். கனம் - மேகம். மருவி அசைந்து அலைய - மேகங்கள் சஞ்சரிக்க அவற்றாலும் காற்றினாலும் அசைவுகள் உண்டாதலின், அசைந்து அலைய என்று இரண்டு இயக்கங்கள் கூறினார்.

கனம் - தளிர்ச்சினைகளில் மருவி அசைப்பன; வண்டு - புடைசூழ அச்சினைகளில் உள்ள பூ நனைகளில் புடைசூழ்ந்து முரன்றும் மொய்த்தும் அவற்றை அலர்த்துவன. கனமருவி அசைந் தலைதலால் புனன் மழைத் துளி வீழ்வன; வண்டு நனை

களின் புடைசூழ்ந்து அலர்த்துதலால் தேன்துளி மழைபோலத் துளிப்பன ; ஆதலின் புனன்மழையோ ? மதுமழையோ ? பொழிவொழியா என்றார்.

கனமருவி அசைந்தலையப் புனன்மழை, வண்டுசூழ மதுமழை, பொழிவொழியா என்று நிரனிரையாகக் கூட்டி உரைக்க. இங்கு மழை என்பது துளிகளின் தூற்று தலைக் குறித்தது.

ஓகாரங்கள் ஒவ்வோர் காலம் இரண்டினிலொன்று இடைவிடாது பொழியும் நிலையாகிய சிறப்புக் குறித்தன. ஐயப்பொருளில் வந்தன என்று கொள்வாரு மூண்டு.

இருந்தசையக் களி வண்டு—என்பதும் பாடம். 3

1044. பாளைவிரி மணங்கமழும் பைங்காய்வன் குலைத்தெங்கின்
ஞாளதிர மிசைமுட்டித் தடங்கிடங்கி னெழப்பாய்ந்த
வாளைபுதை யச்சொரிந்த பழமிதப்ப வண்பலவி
னீளமுதிர் கனிகிழிதே னீத்தத்தி லெழுந்துகளும். உ

(இ - ள்) வெளிப்படை. இளம் பாளைகள் விரிந்து மணங்கமழ்கின்றனவும், பசிய காய்களையுடைய வலிய குலைகளைக் கொண்டனவு மாகிய தென்னை மரங்களின் அடிப்பாகத்தில் மரம் அசையுமாறு முட்டிப் பெரிய நீர்ப்பள்ளங்களினின்றும் மேலெழும்பிப் பாய்ந்த வாளை மீன்கள், தாம் கீழே புதையச்சொரிந்த அத்தென்னை களின் நெற்றுக்கள் மிதக்கும்படி வண்மையுடைய பலாமரங்களின் நீண்ட முதிர்ந்த கனிகள் கிழிந்து பெருகிய தேனின் பெருக்கிலே (அவ்வாளை மீன்கள்) எழுந்து குதிக்கும்.

(வி - ரை) பாளை விரி மணம் - இளம்பாளைகள் விரிதலால் உளதாகும் மணம். இளம்பாளைகள் தென்னையின் பூங்கொத்துக்களாகும்.

பைங்காய் வன்குலை - பசிய காய்கள் நிறையக்காய்த்த வலியகுலை. குலைக்கு வலிமையாவது காய்கள் நாளுக்குநாள் கனக்கப்பெருத்து நிறையினும் பற்றுவிடாது தாங்கும் வல்லமை.

தெங்கின்...முட்டி - தெங்கின் தாளில் (அவை) அதிரும்படி மேல் முட்டி என்க. முட்டுதல் - தாக்குதல்.

கிடங்கின் எழப்பாய்ந்த - கிடங்கினின்றும் உயர மேலே எழும்புமாறு துள்ளிப் பாய்ந்த. கிடங்கு - நீரையுடைய பள்ளங்கள். தடங்கள் என்றலுமாம். முட்டிப் - பாய்ந்த - வாளை என்க.

புதைய - புதையும்படி. சொரிந்த பழம் - உதிர்த்த தெங்கங்கனி. நெற்று.

பசிய காய்கள் குலைகளில் வலிமையுடன் பற்றிக்கொண்டிருப்பதும், பழுத்து முற்றின நெற்றுக்கள் சிறிது அதிர்ச்சி உண்டாயினும் பற்றுவிட்டு உதிர்வதும் தென்னை யின் தாவர இயல்பு. "காக்கை யேறப் பனம்பழம் வீழ" என்ற முதுமொழியும் காண்க.

முட்டிப் பாய்ந்த வாளை புதையச் சொரிந்த பழம் - கரையில் வளர்ந்த தென்னை அதிரும்படி மேல்முட்டிக் கிடங்கினின்றும் வாளை குதித்துப் பாய்ந்தது; அதிர்ச்சியுண் டாகும்படி தனது தாளிற்பாய்ந்த வாளையின் தீச்செயலுக்குச் சினந்து அதனைத் தண் டிப்பது போன்று அத்தென்னை தன் பழங்களை அதன்மேற் சொரிந்தது ; அந்நெற்றுக் கள் வாளையைத்தாக்கி அதனோடு வீழ்ந்து கீழே வயலின் சேற்றிற் புதைந்தன ; அவற்றி னடியில் அமுக்குண்டு வாளையும் சேற்றினுட் புதைப்பட்டது என்க.

**வண்பலவின்...நீத்தம்** - தென்னை நெற்றுக்கள் அவ்வாறு விசையின் வீழும் போது பக்கத்திலிருந்த பலாவின் அடியிற் பழுத்திருந்த நீண்ட முதிர்ந்த கனியின் மோதி வீழ்ந்தன ; அதனால் பலாப்பழம் கிழிந்து சாற்றினைப் பொழிந்தது ; அப்பழச்சாறு பெருகி ஓடிற்று என்பதாம். பலாவினடியிற் பழுத்த கனி தானாகவெடித்துச் சாறுபாய்ந்தது என்றலுமாம்.

**பழம் மிதப்பக் கிழிந்த நீத்தத்தில் - எழுந்து உகளும்** - முன் வாளை புதைய வீழ்ந்து வயற்சேற்றினுட் புதைந்திருந்த தென்னம் பழம், பலாப்பழச் சாறுபாயச் சிறிது சிறிதாகச் சேற்றினதுபற்று இளகப்பெற்று, அச்சாறு நிறையவே, இலகுவான பொருளாதலின் மிதக்கலாயிற்று. தன்னைச்சேற்றினுட் புதைத்து மேலழுத்தி நின்ற நெற்று மிதக்கவே, புதைபட்ட வாளை அந்நீத்தத்தின் உதவியால் எழுந்து மேற்கிளம்பிக் குதிக்கும் என்பது. **உகளுதல்** - கிளம்பிக் குதித்தல். சிறையினின்றும் விடுபட்ட மகிழ்ச்சிக் குறியாகக் குதிக்கும் என்னும் தற்குறிப்புமாம்.

**தாள் அதிர முட்டிப் பாய்ந்த வாளை புதையச் சொரிந்த** - என்றதனால் தன்னை அதிர முட்டியதாற் சினந்த தென்னை, அவ்வாளை மீண்டும் கிளம்பி முட்டாவண்ணம் அதனைத் தண்டித்தலும் ஒதுக்குதலும் ஒருங்கே செய்யும் வகையால், தனது பழத்தினால் அதனைச் சாடிச் சேற்றினுள் அமிழ்த்திவைத்தது என்றும், அவ்வாறு தண்டித்தலினும் அது ஊறுண்டு சாவாவண்ணம் அருள்கொண்டு (Justice tempered with mercy என்று நவீனர் கூறுமாறு) அது தங்குமிடமாகிய சேற்றினுள் தானே அதனை அடைத்து வைத்தது (internment or imprisonment) என்றும் உள்ளுறையாகிய தற்குறிப்பேற்ற அணிநலமும் காணத்தக்கது.

**வண் பலவின் - நீத்தம்** - இனி, (அதனைத் தொடர்ந்து) இவ்வாறு தண்டிக்கப்பட்டு வருந்துவோரிடத்து இரக்கமுற்றுக் கைதூக்கிவிடும் வள்ளன்மையுடையார் போலப், பலவின் கனி தனது சாற்றினைப் பெருகச் சொரிந்து பாயவிட்டுச் சேற்றினை இளகச் செய்தலால் நெற்றுமிதப்பவும், கீழே அமிழ்த்தப்பட்ட வாளை எழுந்து உகளவும் துணைபுரிந்தது என்னும் தற்குறிப்பேற்ற அணிநயமும் காண்க.

இவ்வாறு கண்டனையும் தண்டனையும் கருணையும் ஒருங்கே தாவரங்களிலும் காணவைத்த கவிநயம் நந்தனாரது திருவுள்ளக்கிடையினையும், ஆசிரியரதுதிருவுள்ளக்கிடையினையும் ஒருங்கே விளக்கும் வகையில் அமைந்து விளங்குவது இத் தெய்வமணக்கும் திருப்பாட்டு.

இளம்பூவுங் குரும்பையும் கொண்ட பூம்பாளையும், பசிய காய்கொண்ட வலிய குலையும், முதிர்ந்த கனிகள் கொண்ட முதுபாளையும் என இவ்வாறு பல பக்குவப்பட்ட பலன்களையும் ஒருங்கே தாங்கிநிற்கும் தென்னையினைத் தன்மையணி நலம்படக் காட்டியதிறமும், இவ்வாறே பெரியோர் பல பக்குவமுடையார்க்கும் அவ்வவர் தரத்துக் கேற்றவா றுதவும் பண்புடையாராவர் என்ற குறிப்பும் காண்க.

இப்பாட்டில் உயர்வுநவிற்சி முதலிய அணிநலங்களும் உட்குறிப்பும் ஒருங்கு விளங்குவனவாம்.

நீர்வளத்தினால், கரைகளில் தென்னைகள் செழித்துவளரும் நிலையும், அவற்றின் காய்கள் மிகுதியினாற் பறிப்பாரின்றி முற்றித் தாமாக உதிரும் நிலையும், வாளைகள் குதித்து மேலெழும் இயல்பும், பலாப்பழங்கள் செழித்து வெடித்துச் சாறுபொழியும் தன்மையும் ஒன்றுசேரக் காட்டி, நாட்டுவளங் கூறிய சுவையும் காண்க.

மேலோங்கிச் செல்லும் வளங்களை, முதலில் கீழே சேற்றில் வாழ்வாரே கொள்ளவைத்து, எஞ்சிய பலன்களையே பிறர் கைக்கொள்ளவைத்த குறிப்பும், மேல் வரும் பாட்டின் கருத்துக்குத் தோற்றுவாய் செய்ததும் காண்க.

"தாழையிள நீர்முதிய காய்கமுகின் வீழநிரை தாறுசிதறி, வாழையுதிர் வீழ் கனிக ளூறிவயல் சேறுசெய்யும் வைகாவிலே "(சாதாரிப்பண் - 1) என்ற ஆளுடைய பிள்ளையாரது தேவாரக்கருத்து இங்கு நினைவு கூர்தற்பாலது. "காய்மாண்ட தெங் கின்பழம் வீழ" என்ற சிந்தாமணிப் பாட்டை இங்கு ஒப்புநோக்கி இதன் உயர்வு கண்டுகொள்க. 4

1045. வயல்வளமுஞ் செயல்படுபைந் துடவையிடை வருவளமும்
வியலிடமெங் கணுநிறைய மிக்கபெருந் திருவினவாம்
புயலடையு மாடங்கள் பொலிவெய்த மலிவுடைத்தா
யயலிடைவே றடிநெருங்கக் குடிநெருங்கி யுளதவ்வூர். ரு

(இ - ள்) வெளிப்படை. வயலின் வரும் வளங்களும், கைவினைச் செயல்களினால் விளைக்கப்படுகின்ற பசிய தோட்ட நிலங்களினின்றும் வரும் வளங்களும் மிக அகன்ற இடமெங்கணும் நிறைய, அவற்றால் மிகுந்த பெரிய செல்வங்களையுடையன வாகி, மேகந்தவழுமளவும் உயர்ந்த அளவில்லாத மாடங்கள் விளங்கப், பக்க இடங் களில் நெருங்கி மேலும் குடிகள் பெருகும்படியாகக் குடிகளின் நெருக்கத்தினையுடை யது அந்த ஆதனூர்.

(வி - ரை) **வயல் வளம் - துடவையிடை வரு வளம்** - இவை நன்செய் புன்செய் என்ற இருபகுப்பினுள் வருவன. **செயல்படு** - வயலுக்கும் உழவர்களின் செயல் வேண்டப்படினும் சேறுசெய்தல், நடுதல், களை கட்டல் என்ற பெருஞ்செயல்களின் காலங்களிலேயன்றி ஏனைக்காலங்களில் ஆற்று நீர், ஏரி நீர் ஆதரவுசெய்து உழவர் செயலின்றித் தானாகப் பாய்ந்து பயிரை வளர்த்துவர வுள்ளது **வயல்வளம். துடவை வளம்**, அவ்வாறன்றித் தொடக்க முதல் விளைவுமுற்றி அறுக்கும்வரையில் ஒவ்வோர் நாளும் நீர் பாய்ச்சுதல், களை கட்டல், பறவை கடிதல், பயிர் காத்தல் முதலிய பலவகை யாலும் உழவர் செயல்கள் வேண்டப்படுவன. இது குறிக்கவே, **வயல்வளம்** என்று வாளா கூறிய ஆசிரியர் **செயல்படுபைந் துடவை வளம்** என்றார்.

**இடை வருவளம்** - புன்செய்த் தோட்டங்களில் பல பயிர்களும் உடன் விரவும் படி விளைக்கப்படும். ஆதலின் அவற்றில் விளைவு நன்செய்யிற்போல ஒரு காலத்தில் சேரவராமல் இடையிடையே வருவனவும் உண்டு. **இடை வருவளம்** என்றது இதனைக் குறித்தது. **துடவை** - சோலைகள் என்பாரும் உண்டு.

**செயல்படு துடவை** - உழுது பயிரிடப்படுவனவும், மலைச்சரிவுகளிற்போல உழாது விதைக்கப்படுவனவும் எனத் துடவைகள் இருவகைப்படும். "தொடுப் பெறிந் துழுத துளர்படு துடவை" (பெரும்பாண் - 201), "தொய்யாது வித்திய துளர்படு துடவை" (மலைபடு - 122) என்பன காண்க. அவற்றுள் இங்குக் குறித்தவை உழுது விதைக்கப்படுவன என்பதும் குறிப்பு. நன்செய் வயல்களி னிடையே புன்செய்த் தானியங்களிலும் சிலவற்றைப் பெறவும், மற்றும் பயன்கள் கருதியும் சில பகுதிகளை மேட்டு நிலங்களாக வைத்துக்காத்தல் இந்நாளிலும் காவிரி நாட்டிற் காணலாம். இவை வயல்களி னிடையிடை தோன்றுவன என்ற குறிப்பும் **இடைவருவளம்** என்றதனாற் புலப்படும்.

**வியல் இடம் எங்கணும் நிறைய - வியல்** - அகலம். "வியலென் கிளவி யகலப் பொருட்டே" (தொல் - சொல் - உரி - 68). மாடங்கள் இடமகல முடையனவாய் அமைக்கப்பட்ட அவ்விடம் முழுமையும்.

**மிக்க பெரும் திருவின ஆம் - மிக்க** என்பது, வகையாலும், **பெரு** என்பது தொகையாலும் நிறைவு குறித்தன. **திரு** - உழவினால் வருஞ்செல்வங்கள். எவ்வகைத்

செல்வங்களும் உழவினுல் விளைவன என்பது துணிபு. "சுழன்றுமேர்ப் பின்ன துல கம்"—(குறள்). திநவின - திருவையுடையன. திந - வினவு - ஆம் - என்று பிரித்து உழவர்களின் ஊக்கத்தைக்கண்டு அவர்கள்பால் அடைதல் வேண்டி வழி வினவிச் சென்று, திரு, அடையும் என்று உரைக்க நிற்பதும் காண்க. "ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா, வூக்க முடையா னுழை" என்பது குறள்.

**புயலடையும் மாட்ங்கள்** - மாடங்கள் மேகமண்டலம் அளவும் உயர்ந்தன என்ப தாம். தங்குதற்குவந்து மேகங்கள் அடைகின்ற மாடங்கள் என்றலுமாம். 834-ல் உரைத்தவை பார்க்க.

**அயல் இடை வேறு அடிநெருங்கக் குடி நெருங்குதல்** - என்றது அயலில் அடி யிடம் நெருங்கும்படி மற்றும் குடியிருப்பு இடங்கள் வகுத்து ஊரினை அகலப்படுத்திச் செல்லுமாறு அவ்வூரினுள் குடி நெருக்கமுடையதாதல். இவ்வாறு அகலப்படுத்திக் குடிபுகும் இடங்கள் **புதூர்** என்ற பெயரால் அங்கங்கும் உள்ளன காண்க. (**Extensions** என்பர் நவீனர்). **அடி** என்பது உடம்பினை அடி நிழல் பிரியாது தொடர்தல் போல நெருங்கிய தொடர்புடைமை என்ற பொருள் குறித்தது. இதற்கு, இவ்வாறன் றிப், பக்கங்களில் ஓரடி இடைவிட்டு என்றும், அருகிடங்களில் தனித்தனி இடையில் ஓரடி நெருங்கியிருக்கும்படி என்றும், பக்கங்களில் தனித்தனி அடிக்கொரு குடியாக என்றும், (அம்மாடங்களின்) வேறுக அயலிடங்களில் அடியளவுக்கும் இடமின்றி என்றும், பற்பலவாறு முன்னுரைகாரர்கள் உரைத்துப் போந்தனர். 5

1046. மற்றவ்வூர்ப் புறம்பணையின் வயன்மருங்கு பெருங்குலையிற்
சுற்றம்விரும் பியகிழமைத் தொழிலுழவர் கிளைதுவன்றிப்,
பற்றியபைங் கொடிச்சுரைமேற் படர்ந்தபழங் கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில்பல நிலைத்துளதோர் புலைப்பாடி. சு

(இ - ள்) வெளிப்படை. அந்தவூரின் மற்று வெளிப்புறத்தில் மருத நிலத்தி னைச் சார்ந்த வயல்களின் பக்கத்து உள்ள வரம்புகளின் ஓரத்திலே, சுற்றந்தழுவுதலை விரும்பிய உரிமைத் தொழிலாளராகிய உழவின் மக்களின் கிளைகள் நெருங்கிப், பற்றிய பசிய சுரைக்கொடி மேலே படர்ந்த பழைய கூரையினையுடைய புல்லால் வேயப்பட்ட சிற்றில்கள் பல நிலையாக நெருங்கியுள்ளது ஒரு புலைப்பாடி.

(வி - ரை) **அவ்வூர் மற்றுப் புறம்பணை** என்க. **மற்று** - முன்சொன்ன குடி யிருப்பு இடங்களில் வேறுக என்ற பொருளில் வந்தது. **புறம்பணை** - ஊர்ப்புறத் துள்ள மருதநிலப் பகுதி.

**வயன்மருங்கு பெருங்குலையில்** - வயலை அடுத்த கரைப்பக்கம். **குலை** - கரைகளை அடுத்த வெளிநிலம். பெருவரப்பு.

**பெருங்குலையிற் சுற்றம்** எனக்கூட்டிக், குலைகளிற் காய்கள் நெருங்குவது போலப் பெருங்கூட்டமாய் நெருங்கிய சுற்றம் என்றலுமாம்.

**கிழமைத்தொழில் உழவர்** - (நிலக்கிழவர்க்கு) வேளாளர்க்கு உரிமையால் உழ வுத் தொழில் முயற்சி செய்யும் சாதியார். **சுற்றம்** - சுற்றத்தார். **சுற்றம் விரும்பிய** - சுற்றந்தழுவுதலை விரும்பிய.

**பற்றிய...சிற்றில் பல** - இது புலைப்பாடியிற் கூட்டமாய் நிறைந்த புலையர் கள் வாழும் சிறு குடிசைகளை, உள்ளவாறே காட்டுவதோர் அரிய சித்திரமாகும். **பற்றிய - சுரை** - பற்றிய - என்பது சுரைக்கொடிகளில் இலைகளினடியிற் றண்டினின் றும் கைபோலநீண்டு வளர்ந்த பகுதியினுற் கூரை, வேலி முதலியவற்றைப் பற்றிக் கொண்டு கொடி மேலே படர்வதற்கு ஏதுவாகும் தன்மை குறித்தது.

**சுரை மேற்படர்ந்த பழங்கூரை** - இது புலைப்பாடி முதலிய சேரிகளில் வாழ்வோர் தம் குடிசைகளின் கூரைக்கு ஆதரவு பற்றியும், உணவுக்குக் காய்கள் பெறுதல் பற்றியும் சுரைக்கொடிகளைக் கூரைமேற் படரவிடும் இயல்பு குறித்தது. புலையர் முதலியோர் உண்ணும் புலால் முதலியவற்றோடு சமைத்து உண்ணுதற்குச் சுரை ஏற்ற தகுதியுடைமையாலும், அதனை அவர்களது நிலக்கிழவர் முதலியோர் விரும்பாமையாலும் பெரும்பாலும் சுரையைப் புலையர் வளர்ப்பது இயல்பு. புல்லால் வேய்ந்த குரம்பையைப் பழுதுபடாவண்ணம் இக்கொடிகள் பற்றிப் பாதுகாப்பதற்கும் உதவுவன.

**புற்குரம்பை** - வைக்கோற் புல்லால் வேய்ந்த கூரையுடைய சிறு குடிசை. இவ்வுழவர் தமக்குக் கிடைக்கும் உரிமையாகிய புல்லினைக்கொண்டு தமது குடிசைகளை வேய்வர். கூரை பழுதுபடாது பல ஆண்டுகள் நிலவும் பொருட்டு அதன்மேற் சுரைக்கொடியையும் படர விடுவர்.

**சிற்றில் பல** - பல சிறுகுடில்கள். **நிலைத்துளது** - அவர்கள் வாழ்வது சிற்றில்களேயாயினும் அவை நிலைபெற்று வழிவழி அங்கு வாழ்ந்து வரும் தன்மை குறித்தது. **நிறைந்துளது** என்பது பாடமாயின், நெருங்கியுள்ளது என்க.

**புலைப்பாடி** - புலையர் வாழும் புறநகரிருக்கை. **பாடி** - சேரி - முதலியன புறநகர்க் குடியிருப்பு இடங்களைக் குறிப்பன. சக்கரப்பாடி - வியாசர்பாடி முதலிய வழக்குக்கள் காண்க. **புலையர்** - இறந்த பிராணிகளின் புலால் பற்றிய தொழில் செய்து அதனை உண்ணும் தொழிலாற் போந்த சாதிப்பெயர். இத்திருப்பாட்டின் தன்மைநவிற்சியணியினது சிறந்தநிலை கண்டு களித்தற்பாலது.* 6

1047. கூருகிர்மெல் லடியளகின் குறும்பார்ப்புக் குழுச்சுழலும்
வார்பயின்முன் றிலினின்ற வள்ளுகிர்நாய்த் துள்ளுபறழ்
காரிரும்பின் சரிசெறிகைக் கருஞ்சிறார் கவர்ந்தோட
வார்சிறுமென் குரைப்படக்கு மரைக்கசைத்த விருப்புமணி. எ

(இ - ள்) வெளிப்படை. கூரிய நகங்களையும் மெல்லிய அடியையும் உடைய பெட்டைக்கோழியின் சிறிய குஞ்சுகளின் கூட்டம் அதனுடனே சுழலுதற் கிடமாகிய, வார்கள் பயின்றுள்ள முற்றத்திலிருந்த வளைந்த நகங்களையுடைய நாய்களின் இளைய துள்ளுகுட்டிகளைக் கரிய இரும்புக் காப்புக்களை நெருங்க அணிந்த கரிய சிறுவர்கள் கவர்ந்து ஓட, அந்த நாய்க்குட்டிகளின் நிறைந்த சிறிய மெல்லிய குரைப்பின் ஓசையை அச்சிறுவர்கள் இடையிற் கட்டிய இரும்புமணிச் சதங்கைகள் அடக்கும்.

(வி - ரை) அவ்வப்பொருள்களின் தன்மையினை உரிய ஒவ்வோர் சிறப்பு அடைமொழிகளால் உணர்த்தப்பட்டது குறிக்க. கூர் உகிர் - மெல் அடி, குறும்பார்ப்புக் குழு - வள் உகிர் நாய் - துள்ளுபறழ் - கார் இரும்பு - இரும்பின் சரிசெறிகை - கருஞ்சிறார் - சிறுமென்குரைப்பு - முதலியவற்றின் சிறப்பு அடைமொழிகளே அவ்வவற்றின் தன்மையினைப் பொருளாழம்பெற அறிவித்தல் காண்க.

புலையர் குடில்களில் உணவுக்காகக் கோழி வளர்த்தலும், அவ்வாறு வளர்க்கப்படும் அளகின் குறுங்குஞ்சுகள் கூட்டமாகத் தம் தாய்க் கோழியுடன் அது சென்ற இடந்தோறும் முன்றிலிற் சுழலுமியல்பும், நாய்த்துள்ளுபறழ்களைச் சிறார் கவர்ந்தோடி விளையாடுமியல்பும், புலைச்சிறுவர் கருநிறமுடையராதலும், அவர் இரும்புச்சரியினையும் இரும்பு மணிகளையும் அணியுமியல்பும் அவ்வத்தன்மை தோன்ற உரைக்கப்பட்டன. இவற்றை ஒன்று சேர்த்து நாடகச் சுவைபெறக்காட்டிய இப்பாட்டின் ஒப்புயர்வற்று விளங்கும் தன்மைநவிற்சியணி வியக்கற்பாலதாம்.

---

* இதுபற்றி எனது சேக்கிழார் 128-129 பக்கங்கள் பார்க்க.

இவ்வணிநலம்புனைதற்கு ஏனையோர் இழிவாகக் கருதும் புலைப்பாடியினை ஏற்ற இடமாக்கிக்கொண்ட ஆசிரியரின் தெய்வவருட் புலமைத்திறமும் வியக்கற்பாலது.

**குழச்சுழலும் முன்றில்** - கோழிக்குஞ்சுகள் தாய்க் கோழியினுடன் முற்றத்துள் சுழலுதல், அவை இடமறிந்து உணவைப் பொறுக்கிக் கொள்ளும் பழக்கமுண்டாதற்கு உதவுவதுடன், அவற்றைப் பருந்து முதலியவை அடராது பாதுகாக்கவும் உதவுவதாம்.

**வார்பயில் முன்றில்** - புலையர் பாடியில் அவர்கள் கொண்ட ஆடு, மாடு முதலிய இறந்த பிராணிகளின் தோலினை வகிர்ந்து தோற்கருவிகளுக்கு உதவும்பொருட்டு வார் களாகக் கிழித்துப் பதமிட உலரவைக்கும் வழக்குக் குறித்தது. " விசிவார் " (1054).

**வள் உகிர்** - வளைந்த நகம். " வள்வாய மதி " என்ற நம்பிகளது (திருக்கலயநல் லூர்) தேவாரங்காண்க. **வள்** - கூரிய என்றலுமாம்.

**கவர்ந்து ஓட** - தாய்நாய் இல்லாத சமயம் பார்த்து அக்குட்டிகளை, அவைதங்கிய புனிற்று முழையினின்றும், சிறுவர் தாய் நாய் காணுதபடி அது வருமுன் விரைந்து எடுத்துப்போகும் செயல்குறித்தது.

**குரைப்பு அடக்கும் இருப்புமணி** - பறழ்களின் சிறுகுரைப்பு ஓசையைத் தாய் கேட்டபின் வந்து அவற்றைவிடாது தொடருமாதலின் அந்த ஓசை கேளாதபடி சிறுரின் அரையிற் கட்டிய இரும்புமணிகள் ஓசைசெய்து தம்மை உடையாருக்குத் துணைசெய்தன என்னுமொரு (தற்குறிப்பேற்றம்) குறிப்பும் காண்க. தாய்நாய் பறழ் களின் ஓசைக்கு வாராததன் காரணமும் தெரிவித்தபடி. **இருப்புமணி** - இரும்பினாலா கிய சிறுமணிகள் கோத்த சதங்கை. **மணி** - மணிகளாலாகிய கோவைக்குஆகி, அதன் மேல் அதன் ஓசைக்கு ஆகிவந்தது. இருமடியாகு பெயர்.

**கார் இரும்பின்சரி** - **இருப்புமணி** - **சரி** - காப்பு. இப்புலைப்பாடியில் வாழ்வோர் ஏழைமக்களாதலின் தமது சிறுர்களுக்குக் கரிய இரும்பினாலாகிய அணிகளை அணிந்தனர். அவர்களைவிட அதிகம் செல்வமுடையார் வெள்ளியினாலும், அதனினும் நிறைந்த செல்வமுடையார் பொன்மணிகளினாலும் இயன்ற அணிகலன்களை அணிகுவர். " செல்வ மென்பது சிந்தையி னிறைவே " என்ற உண்மையை இங்குக் காணலாகும். செல்வ முடையார்க்குப் பொன்னும் மணியும் வெள்ளியும் தந்த அத்தனை மகிழ்வையும் இவர் களுக்கு இரும்பு விளைத்தது காண்க. பைசாச முதலியவை தொடரா வண்ணம் இரும்பு அணிகளையும் கூட்டி அணியும் வழக்கம் செல்வர்களிடையும் காணலாம்.

**ஆர் - சிறு - மென் - துரைப்பு** - அடைமொழிகள் மூன்றும் நாய்ச் சிறுகுட்டி களின் குரைப்புக்கு ஏற்றவையாம். **ஆர்தல்** - நிறைதல்; **சிறுமை** - காலத்தால் குறுகிய தாதல் ; **மென்மை** - ஓசையளவினால் மெல்லியதாதல். **துரைப்பு** - தம்மைத் தாயின் இருப்பிடத்தினின்றும் பிரித்துக் கவர்ந்து செல்வது தெரிந்த நாய்க்குட்டிகள் அதனை அறிவித்து முறையிடுதல் போன்ற குறிப்புடைய ஓசை எனவும், **மணி அடக்கும்** என்றது அதனைக் கேளாமற் செய்யும் குறிப்புடைய ஓசை எனவும் காணுகிற்பதாம்.

இதனால் அந்தப் புலைப்பாடியில் வாழும் புலையராகிய மக்களின் வாழ்க்கைத் திறன் - பழக்கம் - உணவு - தொழில் முதலியவையும், சிறுரின் விளையாட்டு வகையும், அணிகலன் முதலியவையும் கூறப்பட்டன. கோழிகள், அவர் தம் உணவுக்கேயன்றி அவர் தொழிலுக்குரிய காலங்காட்டி யழைக்கவும் உதவுவதென்பது வரும்பாட்டிற் கூறுவார். சிறுவர் விளையாட்டு வகைகளை அவரவர் மரபுகளுக்கேற்ற இயல்பின் அறி விப்பர் ஆசிரியர். ஆருடைய பிள்ளையார் புராணம், கண்ணப்ப நாயனார் புராணம் முதலியவற்றுல் இவ்வுண்மை புலனுதலும் காண்க.

மேல்வரும் மூன்று பாட்டுக்களால் அப்புலைப்பாடி மக்களின் சுற்றிலும் உள்ள மாவும், மரமும், தொழிலும், விளையாடல் வகை முதலியனவும் கூறப்படுதல் காண்க. 7

1048. வன்சிறுதோன் மிசையுழத்தி மகவுறக்கு நிழன்மருதுந்,
தன்சினைமென் பெடையொடுங்குந் தடங்குழிசிப் புதைநீழன்
மென்சினைய வஞ்சிகளும், விசிப்பறைதூங் கியமாவும்,
புன்றலைநாய்ப் புனிற்றுமுழைப் புடைத்தெங்கு முடைத்தெங்கும்.

(இ - ள்) வெளிப்படை. வலிய சிறுதோலின்மேல் உழத்தியர் மகவைத் தூங்கவைக்கும் நிழலுடைய மருதமரங்களையும், தனது முட்டைகளை அடைகாக்கும் பெட்டைக் கோழிகள் ஒடுங்குதற் கிடமாகிய பெரிய பானைகள் புதைக்கப்பட்ட நிழல்தரும் மெல்லிய கொம்புகளையுடைய வஞ்சி மரங்களையும், வார்கட்டிய பறைகளைத் தொங்கவைத்த மாமரங்களையும், சிறிய தலையினையுடைய நாய்க்குட்டிகள் தங்குதற் கிடமாகிய அடிப்பொந்துகளையுடைய தென்னை மரங்களையும் அப்புலைப்பாடி தன்னிடத்தே எங்கும் உடையதாகும்.

(வி - ரை) மருதும், வஞ்சியும், மாவும், தெங்கும் அங்குள்ள மரங்கள் ; இவை மருதநிலப் பொருள்கள் ; நீர்வளமிக்க இடங்களில் உளவாவன. இதனால் அந்நிலத்து வளமும், நீரின் வளமும், அவை மக்கட்கூட்டத்துக்கும் அவர்கள் வளர்க்கும் பிராணிகளுக்கும் பயன்படும் பண்பும் கூறப்பட்டது காண்க.

மகவுறக்கும் நிழல் மருது, குழிசிப்புதை நீழல் வஞ்சி, பறைதூங்கியமா, நாய்ப்புனிற்று முழைத்தெங்கு என்று உடம்பொடு புணர்த்தி யோதினது அவ்வவற்றானும் உளவாகும் பயன்களை எடுத்துக்காட்டும் பொருட்டாம்.

வன்சிறுதோல் - உழத்தியர் தமது மக்களை உறங்கவைக்கும் பாயல் தோலேயாகும். இறந்தமாடு, எருமை, ஆடு முதலியவற்றின் தோல்களை உரித்துப் பண்படுத்திச் செருப்பு, பறி முதலியனவாக ஆக்க உதவுவது புலையர் மரபுத்தொழில். அவற்றுள் வலிய சிறிய தோல்களைத் தம் மகவுகளை உறங்கவைக்கப் புலைச்சியர் பயன் படுத்திக் கொள்வர். வலிமை - மருத நிலத்துக் கியல்பாயுள்ள ஈரம் தாக்காமைக்கும், சிறுமை - மகவுக்குரிய அளவுக்கும் தகுதி ஆம்.

மென் பெடை - மென்மை - முட்டையிட்டு அடைகாக்குந் தருணமாதல் குறித்தது. பெடை - இடநோக்கிப் பெட்டைக் கோழியைக் குறித்தது.

பெடை ஒடுங்கும் தடம் குழிசி - காற்று மழை வெயில் ஈரம் முதலியவற்றால் சிதைவுறாது முட்டைகளை நன்கு அடைகாக்கும் பொருட்டு உதவுதற்கு அகன்ற வாயினையுடைய பானைகளை மரநீழலிற் புதைத்து வைத்தல் வழக்கு.

மென்சினைய வஞ்சி - வஞ்சிமரங்கள் நீர்ப்பெருக்குள்ள இடங்களில் கரை ஓரங்களில் வளர்வதனால் அவற்றின் கொம்புகள் செழித்து மெல்லியனவாய் இலைச் செறிவின்றி நீண்ட தன்மை குறிக்கப்பட்டது. கிளை நீண்டிருத்தலால் நிழல் என்னாது நீழல் என்றார்.

விசிப்பறை தூக்கிய மா - விசிப்பறை - வார்களினால் விசித்துக் கட்டப்பட்ட தோற்கருவியாகிய பறை. உழவு காத்தலும், பறைசாற்றுதலும் தமது சாதித் தொழிலாகப் புலையர் உடையர். அதற்காக இவர்களுக்கு விளை நிலங்களில் மானிய வரும்படி உரிமை உண்டு. " ஊரில்விடும் பறைத்துடவை உணவு உரிமை " (1053). பறை சாற்றும் வேலையில்லாத போது தமது பறைகளை எலி, கறையான் முதலியவை

ஊறு செய்யா வண்ணம் தமது சிற்றில்களின் பக்கம் உள்ள மாமரங்களின் கொம்பு களில் தூக்கிவைப்பது வழக்கு.

**புன்தலை...புடைத் தெங்கு** - பறைச்சேரி வீடுகளில் சில பழந் தென்னைமரங்கள் உண்டு; அவற்றினடியில் உள்ள பொந்துகளில் நாய்கள் குட்டிகளை ஈன்று காப்பது இயல்பு. இவ்வாறன்றி நாய்க்குட்டிகளிருந்த பள்ளத்தினருகில் உள்ள தென்னை மரங்கள் என்றுரைப்பாருமுண்டு. அப்பூலைப்பாடி எங்கும்...உடைத்து என எழுவாய் முன் " மற்றவ்வூர் " என்ற பாட்டினின்றும் வருவித்துரைத்துக் கொள்க. 8

**1049.** செறிவலித்திண் கடைஞர்வினைச் செயல்புரிவை கறையாமக்
குறியளக்க வழைக்குஞ்செங் குடுமிவா ரணச்சேக்கை
வெறிமலர்த்தண் சினைக்காஞ்சி விரிநீழல் மருங்கெல்லாம்
நெறிகுழற்புன் புலைமகளிர் நெற்குறுபாட் டொலிபரக்கும். கூ

(இ - ள்) வெளிப்படை. மிக்க வலிமையுடைய திண்ணிய கடைஞர்கள் உழவுத் தொழிலுக்குரிய செயல்களைச் செய்யத் தொடங்க வேண்டிய காலமாகிய வைகறையா மத்தின் நேரத்தை அளந்து காட்டி அவர்களைத் தொழிலிற் செலுத்துவதற்கு அழைக் கின்ற, சிவந்த உச்சிக் கொண்டையினையுடைய கோழிகள் தங்குமிடமாகிய, வாசனை பொருந்திய குளிர்ந்த கிளைகளையுடைய காஞ்சியின் விரிந்த நீழலின் பக்கங்களில் எல்லாம், நெறித்த குழலினையுடைய புன்புலை மகளிர் நெல்லைக் குற்றும் பாட்டு ஒலி மிகுதியும் பரக்க வுளதாம்.

**(வி - ரை) செறிவலித்திண் கடைஞர் - வலிமை - திண்மை** - ஒரு பொருட் பன்மொழி. மிகுதி குறித்தன. செறி என்றதனால் இவை மேலும் திரண்ட மிகுதிப் பாடு குறிக்கப்பட்டது.

**கடைஞர் வினைச் செயல்புரி யாமக்குறி - வினை** - கடைஞர்களின் மரபுக்குரிய தொழில். இவை, உழவுத்தொழிலின் பகுதிகளும், ஊர் காவலின் பகுதிகளுமாம். **செயல்** - அத்தொழிலின் பொருட்டுச் செய்யப்படுவன. இவை, காலந்தப்பாது நீர் பாய்ச்சுதல், காவல் புரிதல், பறைசாற்றுதல் முதலியன. **செயல்புரி யாமக்குறி** - அச்செயல்களிற் புகுந்து வேலை செய்யும் காலமாகிய இரவின் கடையாமங்களின் தொடக்கமாகிய காலம்.

**அளக்க அழைக்கும் வாரணம்**-கடைஞர்களைச் " செயல் புரிதற்கு உரியகாலம் வந்து விட்டது! விழித்துச் செல்லுங்கள்!" என்று அழைப்பன போலக் கூவும் வாரணம். (வாரணம் - கோழி). தற்குறிப்பேற்றம். முன் பாட்டிற் கோழிப்பெடை களின் இயல்பும், இப்பாட்டில் செங்குடுமியுடைய ஆண் கோழிகளின் இயல்பும் கூறப் பட்டன. இவை இவ்வாறு மக்கட் கூட்டத்துக்குச் செய்யும் உபகாரம் கருதிப் பாராட்டியும், மக்களை அதிகாலையில் விழிக்கச்செய்து கடவுளைத் தியானிக்கவும் அதன்பின் உலகநிலைத் தொழில்களிற் செல்லவும் உதவும் பேருபகாரத்தைப் பாராட்டி யும், கருணையுடன் சாந்தலிங்க சுவாமிகள் எடுத்துக் கூறினர்; இவ்வுபகாரங் களுக்குப் பிரதியாக இவற்றைக் கொடுஞ்சித்தமொடு கொன்று தின்றுவிடும் மனித னது நன்றிமறந்த கொடுமையினையும் எடுத்துக்காட்டிக் கடிந்துள்ளார். இவை முருகப்பெருமானது கொடியாகும் பெருமையினைச் செங்குடுமி என்ற அடைமொழி கள் குறிப்பன.

**சேக்கை - நீழல் - மருங்கு** - சேவல்கள் தங்கும் பரந்த நீழலின் பக்கங்களில். **சேக்கை - துயிலுமிடம்** என்றலுமாம். "சேக்கை மரனெழியச் சேணீங்குபுள்" (நாலடி).

**நெல் குறு பாட்டு** - நெல்லைக் குற்றும்போது பாடும் பாட்டு. உடல் முயற்சியாலாகிய தொழில்களை மக்கள் கூடிச்செய்யும் காலத்து உடல்வருத்தந் தோன்றாதிருக்கப் பாட்டுப்பாடிக் கொண்டே தொழில் செய்வது இந்நாட்டு நல்வழக்கங்களுள் ஒன்று.

இவ்வாறே புலைமகளிரும் நெற்குற்றும்போது பாட்டுப் பாடுவர். **நெற்குறு பாட்டு** - இலக்கணை. தமக்கு உரிமைக்காகக் கிடைத்த நெல்லைத் தம் உணவுக்காகக் குற்றுவர். தமது உழவுத் தொழில் முயற்சிகளுக்கு இடையூறில்லாதபடி இரவிலும் விடியற்காலையிலும் இவர்கள் நெற்குற்றுவதும் வழக்கு.

**காஞ்சி விரிநீழல்** - காஞ்சி மரத்தின் நீண்டு விரிந்த கிளைகளின் நீழல்.

**நெறிகுழல்** - நெறித்த - நெறிப்பையுடைய - கூந்தல். **நெறிப்பு** - அலைகள் போன்ற சிறு வளைவுகளை யுடைத்தாதல்.

**புன் புலைமகளிர்** - புன்மைத்தொழில் செய்யும் மரபுடைய கடைசியர். புலைத் தொழில் **புன்மை** எனப் பட்டது. வரும்பாட்டிலும் இதனைத் தொடர்ந்து "புன் புலைச்சியர்கள்" (1050) என்றது காண்க.

**அளக்க உளைக்கும்**—என்பதும் பாடம். 9

1050. புள்ளுந்தண் புனற்கலிக்கும், பொய்கையுடைப் புடையெங்குந்,
தள்ளுந்தா ணடையசையத் தளையவிழ்பூங் குவளைமது
விள்ளும்பைங் குழற்கதிர்நெல் மிலைச்சியபுன் புலைச்சியர்கள்
கள்ளுண்டு களிதூங்கக் கறங்குபறை யுங்கலிக்கும். கo

(இ - ள்) பொய்கையுடைப் புடை எங்கும் - பொய்கையினது பக்கங்களிலெல்லாம்; புள்ளும்...கலிக்கும் - பறவைகளும் குளிர்ந்த நீரில் ஒலிக்கும்; தள்ளும்... பறையும் கலிக்கும் - தள்ளாடிச் செல்கின்ற காலின் நடை அசைதலால் கட்டு விட்டு அலர்ந்த குவளை மலர்கள் தேனைச் சொரிதற்கிடமாகிய பைங்கூந்தலிலே, நெற்கதிர்களைச் சூடிய புன்புலைச்சியர்கள், கள்ளினை உண்டு களியாட்டயர, அதற்கிசைய முழக்கப்படும் பறைகளும் சத்திக்கும்.

(வி - ரை) **புள்** - நீர் வாழ்பறவைகளும், அன்றி, நிலத்தில் வாழ்பவையாய் ஓரோர்காலம் மீன்களை உண்ணவந்து செல்லும் பறவைகளும் ஆம்.

பொய்கையுடைப் புடைஎங்கும் புள்ளும் கலிக்கும்; பறையுங் கலிக்கும் என்று கூட்டி முடித்துக் கொள்க.

**புள்ளும் - பறையும்** - கலிக்கும் என்க. **கலித்தல்** - ஓசைபட ஒலித்தல். முன்பாட்டில் அந்தப் புலைச்சேரியில் தரைப் பகுதியினுட் பல இடங்களிலும் நிகழும் செயல்களைக் கூறிய ஆசிரியர், இப்பாட்டினால், அங்குப் பொய்கைக் கரையினில் நிகழ்வனவற்றைக் கூறுகின்றார். முன்பாட்டிற் கூறியது புலைமக்களின் இன்றியமையாத வாழ்க்கைத் திறத்தின் நிலையினையும், இப்பாட்டிற் கூறியது அந்த மக்களின் ஆடல் பாடல் முதலிய மனமகிழ்வுடைய பொழுது போக்குநிலையினையும் குறிப்பன.

**தள்ளும் தாள் நடை அசைய...அவிழ் - குவளை** - கால் தள்ள அசைந்து செல்லும் நடை அவர்கள் கள் உண்ட களிப்பினாலாகியது. **அசைய** - அசைதலால். காரணப் பொருளில் வந்த வினையெச்சம். கால் தள்ள நடை அசைதலால் அப்புலைமகளிர் தலையிற் சூடிய குவளைப் போதுகள் விரிந்து தேன் சொரிந்தன. **அசைய அவிழ்** என்க. அவிழ்தலால் மதுவிள்ளும் என்பதாம்.

தழல் நெல்கதிர் மீலைச்சிய - புலைமகளிர் பசிய நெற்கதிர்களைக் குழலில் அணி பெறச் சூடிக்கொள்வர். குவளைப்பூ என்றும், நெறிபைங்கதிர் என்றும் கூட்டுக. களிதூங்க கறங்கு பறையும் கலிக்கும் - புலைமகளிர் களியாட்டயர, அந்த ஆடலுக் குத் தக்கபடி பறைகள் ஒலிக்கும் என்க. 10

1051. இப்படித்தா கியகடைஞ ரிருப்பின்வரைப் பினின்வாழ்வார் ;
மெய்ப்பரிவு சிவன்கழற்கே விளைத்தவுணர் வோடும்வந்தார் ;
அப்பதியி லூர்ப்புலைமை யான்றதொழிற் றூயத்தார் ;
ஒப்பிலவர் நந்தனு ரேனவோருவ ருளராஞர். கக

(இ - ள்) மெய்ப்பரிவு...வந்தார் - உண்மையன்பினைச் சிவபெருமான் திரு வடிக்கே விளைவித்ததனுலுளதாகிய முன் உணர்ச்சியொடும் இவ்வுலகில் வந்தவதரித் தாராய் ; நந்தனுர் என ஒருவர் - நந்தனுர் என்ற பெயருடைய ஒருவர் ; இப்படித் தாகிய...வாழ்வார் - இவ்வாறுக உள்ள புலையர் சேரியில் வாழ்வாராயினர் ; அப்பதி யில்...தாயத்தார் - அவ்வூரில் ஊர்ப்புலைமையால் அமைந்த தொழில் தாய உரிமை யுடையவர்; ஒப்பிலவர் - தமக்கு வேறெவரு மினையில்லாதவர் ; உளராஞர் - உள்ளவ ராயினர்.

(வி - ரை) இப்படித்து - மேலே கூறியபடியாகிய இந்தத் தன்மையுடையது. கடைஞர் இருப்பு - புலையர்களின் குடியிருப்பு. வரைப்பு - வட்டம் ; வளாகம்.

வந்தாராய் - வாழ்வார் - தாயத்தார் - நந்தனுர் என ஒருவர் - உளர் - என்க.

மெய்ப்பரிவு...வந்தார் - மெய்ப்பரிவு - உண்மையன்பு. "உள்ளத்திற் றெளி கின்ற வன்பின் மெய்மையுரு" (திருஞான - புரா - 1023) என்றது காண்க. அன்பின் உண்மையாவது அதனின்றும் பிரிந்து வேருென்றின்பாலும் செல்லாமை.

கழற்கே விளைத்த - அன்பினைக் கழலினிடத்தே செலுத்தி விளைவித்ததன் பயனு கப் பெற்ற. ஏகாரம் - பிரிநிலை. "மறந்துமய னினைவின்றி" (1052) என்பது காண்க.

உணர்வோடும் வந்தார் - முன் உணர்ச்சியுடனே வருதல் என்ன தன்மையால் விளங்குவதாயிற்று என்பதனை மேல்வரும் பாட்டில் உரைக்கின்ருர்.

விளைத்த உணர்வோடும் வந்தார் - "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற், கெழுமையு மேமாப் புடைத்து" என்றும், "என்னெருவன் சாந்துணையுங் கல்லாத வாறு" என்றும் (குறள்) கூறியவாறு, ஒரு பிறவியிற் கற்ற கல்வி, ஒருவனுக்குப், பின்னர்ப் பல பிறவிகளிலும் உடன்வந்து பயன்படும் என்பதறியப்படும். அது போலவே ஒருயிர் செய்த புண்ணிய பாவங்களும் அவ்வுயிருடன் பின் பிறவிகளிற் கூடவே வந்து அதனுல் அனுபவிக்கப்படும் என்பதும் உண்மை. உயிர் பற்பல பிறவி களிலும் வெவ்வேறு உடம்பு எடுத்துவரும். ஆயின், அது தனது முன்னைக் கல்வியை யும், ஞானத்தையும், புண்ணிய பாவங்களையும், விடாது உடன் கொண்டேவரும். இது பற்றியே, ஒருகுலத்தில் ஒரு குடியில் ஒருவன் அதனுள் வேறு எவருக்குமில்லாத ஞானத்துடன் மேம்படுதலும், அல்லது அவ்வாறே வேறுவகையால் மாறுபாடா யிருத்தலும் காண்கின்ருேம். இவ்வாறு வரும் விளைத்தவுணர்வின் றிறத்தைச் "சந்த மறைக ளுட்படமுன் றலைவர் மொழிந்த வாகமங்கண், முந்தை யறிவின் முடர்ச்சி யினுல் முகைத்த மலரின் வாசம்போற், சிந்தை மலர வுடன்மலருஞ் செவ்வி யுணர்வு" (சண்டீசர் - புரா - 13), "ஈசர்கழல் முறைபுரிந்த முன்னுணர்வு மூள" (திருஞான - புரா-61) என்ற இடங்களிற் காண்க. "முன்புசெய் தவத்தி னீட்டம்" (751) என்ற தும், அங்குரைத்தனவும் பார்க்க. வந்தார் - இவ்வுலகிற் பிறந்தருளினர்.

ஊர்ப்புலைமை-ஆன்ற தொழில் தாயம் - முன்னாளில் கிராமத்தண்டல், கிராமத் தோட்டி முதலிய பொதுச்சமூக ஊழியம் செய்வோர் அதனை வழிவழியாகச் செய்து வருவர். அத்தொழிலிற் றாய உரிமையும் உடையவர். "தள்ளாத தங்க டொழிலுரி மைத் தாயத்தின்" (612) எனறது காண்க. அதற்காக, அவர்களுக்கு மானிய பூமி களும் வேறு உரிமையான வரவுகளும் உண்டு. "ஊரில்விடும் பறைத்துடவை உணவுரி மை" (1053) எனப் பின்னர்க் கூறுவது காண்க.

ஒப்புஇல் அவர் - இணையில்லாதவர். புலையர் சேரியாகிய மிகத்தாழ்ந்த இடத்தி னின்ற புலையர் மரபினின்று. மிக உயர்ந்த நிலையில், பிறந்ததுமுதல் சிவனடிப்பற்றில் உறைத்து விளங்கிய இவரது திறம் இணையற்றதுதான்! உளர்ஆனார்-உள்ளவராயினர்.

உளர் - முற்பிறப்பில் சிவனைநோக்கி நோற்காதார் பலரும் இப்பிறப்பில் என்னு டையரேனும் இல்லாரேயாவர்; முற்பிறப்பில் நோற்றார் இங்கு என்னில்லாரேனும் உள்ளாரேயாவர் என்பது நூற்றுணிபு. "இலர்பல ராகிய காரண நோற்பார், சிலர்; பலர் நோலா தவர்" என்ற திருக்குறட் கருத்தினை இங்கு வைத்துக் காண்க. "நலமில ராக நலமதுண் டாக நாடவர் நாடறி கின்ற, குலமில ராகக் குலமதுண் டாக" (புறநீர்மை - திருவாலவாய்) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரங் கூறியபடி உலகத்தார் காணும் நலமும் குலமும் இலராயினும் சிவன் கழற்கே அன்புசெய்து முன்விளைத்த வுணர்வுடைமையால் இவர் எல்லாமுள்ளவராயினார் என்க. 11

1052. பிறந்துணர்வு தொடங்கியபின் பிறைக்கண்ணிப் பெருந்தகைபாற்
சிறந்தபெருங் காதலினாற் செம்மைபுரி சிந்தையராய்
மறந்துமய னினைவின்றி வருபிறப்பின் வழிவந்த
அறம்புரிகொள் கையராயே யடித்தொண்டி னெறிநின்றார். கஉ

(இ - ள்) வெளிப்படை. இவ்வுலகில் வந்து பிறந்து தம்முடைய உணர்வு தெரியத் தொடங்கிய பின்னர், அந்நாள் முதலாகப், பிறையாகிய கண்ணிமாலையைச் சூடிய பெருந்தகையாம் சிவபெருமானிடத்துச் சிறப்புடைய பெரிய ஆசையினாலே செம்மையினை விரும்பும் மனத்தையுடையவராகி, மறந்தாயினும் வேறு நினைவில்லாதவ ராகித், தாம் பிறந்த மரபினுக்குரிய சிவதருமங்களைச் செய்யும் கொள்கையையுடையவ ராகியே சிவனடித் தொண்டின் வழியிலே நிலைபெற்று நின்றனர்.

(வி - ரை) உணர்வு தொடங்கிய பின் - செம்மைபுரி சிந்தையராய் - ஒருவ னுக்கு உணர்வு தெரியத்தொடங்குமுன் நன்மையை அறிந்து கடைப்பிடித்து ஒழுகல் இயலாமையின் உணர்வு தொடங்கிய பின் என்றார். "பிறந்து மொழிபயின்ற பின் னெல்லாங் காதல், சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்" (அற்புதத் திருவந்தாதி - 1) என்ற அம்மையார் திருவாக்கினை இங்கு நினைவுகூர்க. உணர்வு தொடங்கிப் பல காலமாகியும் சிவநெறியில் உணர்வினைச் செலுத்தமாட்டாது சாமளவும் அவநெறியே சென்று வீழ்வார் உலகிற் பலராதலின், இவ்வாறு உணர்வு தொடங்கிய நாள் முதல் செம்மைபுரிதல் இந்நாயனார்போன்ற எந்தம் பெருமக்களுக்கே கூடுவதாம் என்க.

செம்மை புரி சிந்தை - செம்மை - சிவமாந்தன்மை. "செம்மையே யாய சிவபத மளித்த செல்வமே", "செம்மைநல மறியாத சிதடர்" (திருவா - அச்), "திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக் கரையன்" (திருத்தொண்டத் தொகை - 4), "செம்மை யாகிய கருத்தராய்ச் சிவகதி தேர்வார்" (திருவிளை - புரா - வாதவூ - உப - பட - 10) முதலியவை காண்க. "செம்மையே திருநாளைப் போவார்" என்ற முதனூல்ஆட்சி போற்றப்பட்டு இப்பாட்டினால் விரிவுரை செய்யப்பட்டது.

**புரிதல்** - விரும்புதல். செம்மையினையே விரும்பிய அதனால், அயல் நினைவுகள் அறவே நீங்கத், திருவடித் தொண்டினையே செய்துவந்தனர் என்பதாம்.

**பிறைக் கண்ணி** - பிறையாகிய கண்ணிமாலை. உருவகம். "மாதர் பிறைக் கண்ணி யானை" முதலியவை காண்க.

**பெருந்தகை** - பெருந்தகைமையாவது அடைந்தோர்களது பிழைபொறுத்து, அவர்களுடைய சிறுமை நோக்காது, ஆட்கொண்டருளுதல். "பெருந்தகையைப் பெற்றகரிய மாணிக் கத்தை" (திருத்தாண்டகம் - திருச்செங்காட்டங்குடி).

**மறந்தும் அயல் நினைவின்றி** - அயல் - சிவபெருமானுக்கு அயலாகிய - வேறுகிய. அயல் - பிறதெய்வங்களை என்பாருமுண்டு. "உனைநான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே" என்ற நம்பிகள் தேவாரக்கருத்து இங்குவைத்துக் காணத்தக்கது.

**வருபிறப்பின்வழி வந்த அறம்புரிகோள்கையராயே** - தாம் பிறந்த மரபுக்குரிய நிலையில் என்ன சிவதருமங்களைச் செய்தல் நூல் விதிகளுக்கு இணங்குமோ அவற்றைச் செய்வோம் என்ற கொள்கையில் நின்றே. இக்கொள்கையைச் செயல் முறையில் எவ்வாறு கொண்டு செலுத்தினர் என்பது மேல்வரும் மூன்று பாட்டுக்களால் விரித்துக் கூறப்பட்டது.

சிவன் பணியும் அடியார் பணியும் செய்தல் வேண்டுமாயின் தாம்தாம் பிறந்த மரபுக்குரிய நூல்விதி வழக்குக்களை விட்டு நீங்குதல் வேண்டுமென்று சிலர் (பலர்?) கருதுகின்றார்கள். பிறந்த குடியொழுக்கில் நின்றே அதற்கு ஏற்றவகையால் சிவதரு மங்களும் திருத்தொண்டும் செய்தலும் கூடும் என்பது நந்தனார் கொண்ட கொள்கை.

வீடுபெற முயல்வோர்கள் சாமுசித்தர் என்றும், வைநயிகர் என்றும் இருவகைப் படுவர். இவர்களுள் பண்டைநற் றவத்தாற் மேன்றிப் பரமனைப் பத்தி பண்ணும் தொண்டராகிய முதலாவது பகுப்பில் சார்ந்தவர் நந்தனார். ஆயின் நந்தனார் தமது குலமரபு நிலைகடவாது நின்றே அதற்குத்தக்க தொண்டு செய்தவர். இதனை மேல்வரும் மூன்று பாட்டுக்களானும், "இவ்வகையாற் றன்தொழிலி னியன்றவெலாம்" (1055) என்றதனாலும் உணர்க. இவ்வாறன்றிக் குலமரபுக்குத் தக்கவாறு விதிக்கப்பட்ட வரம்பினைக் கடந்த சாமுசித்த நிலையினின்று வீடுபேற்றின் முயன்ற கண்ணப்ப நாயனார் முதலிய பெரியோர் சரிதங்களையும் இங்கு ஒப்புநோக்கி கண்டு உண்மை தெளிந்து கொள்க.

கோள்கையினராய்—வழிநின்றார்—என்பனவும் பாடங்கள். 12

1053. ஊரில்விடும் பறைத்துடவை யுணவுரிமை யாக்கொண்டு
சார்பில்வருந் தொழில்செய்வார் தலைநின்றூர் தொண்டினால்;
கூரிலைய முக்குடுமிப் படையண்ணல் கோயிறொறும்
பேரிகையே முதலாய முகக்கருவி பிறவினுக்கும், கஙு

1054. போர்வைத்தோல் விசிவாரென் றிணையனவும், புகலுமிசை
கோர்வைத்த வீணைக்கும் யாழுக்கு நிலைவகையில்
சேர்வுற்ற தந்திரியுங், தேவர்பிரா னர்ச்சனைகட்
கார்வத்தி னுடன்கோரோ சனையுமிவை யளித்துள்ளார். கச

1053. (இ - ள்) வெளிப்படை. (அவர்) ஊரில் விடப்பட்ட, வெட்டிமைத் தொழிலுக்குள்ள மானிய நிலத்தின் வருவாயைத் தமக்கு உணவுக்கு ஆதரவாகக் கொண்டு, தமது பிறப்பின் சார்பினால் வரும் தொழிலைச்செய்து வருவார், திருத் தொண்டினால் தலைநின்றார்; கூர்மையாகிய இலை வடிவுடைய மூன்று தலைகளையுடையு

சூலப்படை யேந்திய சிவபெருமானுடைய திருக்கோயில்கள்தோறும் பேரிகை முதலாகிய முகமுடைய கருவிகள் பிறவற்றுக்கும், கந-

1054. (இ - ள்) வெளிப்படை. போர்வைத் தோலும், விசிவாரும், மற்றும் இவ்வாருகிய பிற சாதனங்களும், இசை பேசுகின்ற நேர்மையுடைய வீணைக்கும் யாழுக்கும் அவ்வவற்றுக் கேற்ற வகையிற் பொருத்தமுற்ற தந்திரியும், அன்புடனே தேவர் பெருமானுடைய அருச்சனைகளுக்குரிய கோரோசனை முதலிய பொருள்களும் ஆகிய இவற்றை அளித்துள்ளார். கச

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1053. (வி - ரை) **ஊரில் விடும்பறைத்துடவை** - ஊரில் பொதுச் சமூக ஊழியத்துக்காக விடப்படும் பறைத்தொழில் மானியம். ஊரால் என்றது ஊரில் என வந்தது உருபு மயக்கம். **விடும்** - விடப்படும். படுவிகுதி தொக்குவந்த செயப்பாட்டு வினைப்பெயரெச்ச முடிபு. **பறை** - பறைதல். சொல்லுதல். பொதுச் சமூக நிகழ்ச்சியான செய்திகளை ஊராரறியப் பறைசாற்றிச் சொல்லுதல் காரணமாகப் போந்த பெயர். **பறையர்** - சொல்வோர். தொழிலின் பெயர் அத்தொழிலைச் செய்யும் மரபுக்கு ஆகிவந்தது. இதுகாரணமாகவே **பறை** என்ற கருவிக்கும் இப்பெயர் வந்தது. "ஊட்டிமுன் பறைந்தோர் பார்ப்பான்" (758) என்றதும், பிறவும் காண்க. இத்தமிழ்ச்சொல் இப்பொருளில் மலையாள மொழியில் நின்று இன்றும் வழங்குவதாம்.

இப்பெயருக்கு இக்காலத்துத் தொடரும் இழிபொருள் இம்மரபினர் செய்யும் புலைத் தொழிலின் முடக்கினைக் கூடியதென்பர். இதுபோன்ற சாதிப்பெயர்களில் இழிபு தொடக்காத நிலையினைச் சுவைபெறக்காட்டும் கருத்துடன் கச்சியப்ப முனிவர் பேரூர்ப் புராணத்தினுள் "மறையவ னரசன் செட்டிதன் முதை வயங்குநூற் சூத்திரன் புவனம், **பறைதரு நல்ல சங்கரன்** வேடன் பணிசிவன் விளங்குமுக் கணக்கன், அறைசெயம் பட்ட னகமது புறத்தே காலியாட் டரவமா ரிடையன், **பறையனு** முன்ன ரானநீ யின்று பள்ளரு னமைதொழிந் தேன்யான்" (பள்ளுப்படலம் - 35) என்று தமிழ்ச் சுவையும் விரவத் தெருட்டிய திறம் இங்கு நினைவுகூர்தற்பாலது. **துடவை** - புன் செய்த்தோட்டம். அந்நிலத்திற் கிடைக்கும் வருவாய்க்காகியது.

**உணவு உரிமை** - உரிமையாற் பெறும் உணவுக்குரிய ஆதரவு. சீவனம் என்பர் வடவர்.

**சார்பில்வரும் தொழில்** - பிறந்த மரபின் சார்பினால் செய்யும் புலையர் தொழில். "பிறப்பின் சார்பாற், குற்றமே குணமா வாழ்வான் கொடுமையே தலைநின் றுள்ளான்" (657) என்றது காண்க. **வரும் சார்பு** - பிறப்பின் சார்பு. இனிச், **சார்பு** என்பதற்கு மேலைச்சார்பு என்று கொண்டு முன்பிறவியில் சிவன்கழற்கே வினைத்த சார்பினால் வருகின்ற சிவன் அடிமைத் திறத்துக்கேற்ற தொழில் என்று கொள்ளுதலும் ஆம். இப்பொருளில் **செய்வார்** - செய்வாராகித் (முற்றெச்சம்) - தலை நின்றார் என்று முடிக்க.

**சார்பில்வரும் தொழில் செய்வார் தலைநின்றார் தொண்டினால்** - புலையர் பிறவியின் சார்பினால் வரும் மரபுத் தொழிலைச் செய்வாரேனும் திருத்தொண்டில் சிறந்து விளங்கினர் என்க. **தலைநிற்றல்** - சிறத்தல். முயலுதல் என்றலுமாம்.

**கூர் இலைய முக்கடுமிப் படை** - சூலம். கூர்மையான மூன்று தலையுடைய படை. இது சிவபெருமானுக்குச் சிறப்பாய் உரியது. "ஒருதா ரீரயின் மூவிலைச் சூலம்" (பிரமபுரம் - வியாழக்குறிஞ்சி - திருவெழுகூற்றிருக்கை) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரமும், "மருள்பொழிமும் மலஞ்சிதைக்கும் வடிச்சூலம்" (சிறுத் - புரா - 35)

என்ற மாபுராணமும் காண்க. "அயில்கொள் முக்குடுமிப் படை" (1040) என்ற விடத் துரைத்தவையும் பார்க்க.

பேரிகையே முதலாய முகக்கருவி பிற - இவை தோலால் மூடப்பட்டு முழக்கப் படுவன. முழக்கப்படும் இடம் முகம் எனப்படும். இருமுகம், ஐம்முகம் உள்ளனவும் இருத்தலால் முகக்கருவி எனப் பொதுப்படக் கூறினர். சிறப்புப்பற்றி பேரிகையை எடுத்துக்கூறி முதலாய என்றார். "பேரியோடும்" (1003) என்றதும் காண்க. (திருவாரூரில் தியாகேசர் சந்நிதியில் முழக்கப்படுவது முசுகுந்தர்தேவருலகத்திலிருந்து தியாகேசருடன் கொணர்ந்த ஐம்முகமுள்ள பேரி.) இவை தோற்கருவி எனப்படும்.13

1054. (வி - ரை) போர்வைத்தோல் - முகத்தை இறுக மூட உதவும் தோல். விசிவார் - போர்வைத்தோலை அக்கருவியில் இறுகப்பிணிக்க உதவும் வார். விசித்தல் - இறுகக் கட்டுதல். வார் - வார்ந்து - கிழித்து - எடுக்கப்படுவது.

இசைபுகலும் நேர்வைத்த வீணைக்தும் யாழக்தும் என்க. இசைபுகலுதலாவது மிடற்றுப் பாடல்போலச் சொல்லமைதியினை நேராகப் பேசும் வீணையும் யாழும். இவை வெவ்வேறு வகைப்பட்ட நரம்பு இசைக்கருவிகள். யாழ் பலவகைப்படும்.

நிலைவகையிற் சேர்வுற்ற தந்திரி - நீடு நிலை பெறும்படியும், ஒத்து இயலும்படியும் உள்ள நரம்புகள். தந்திரி - இசைக்கருவியின் நரம்புகள். இவை இறந்த பிராணிகளின் நரம்புகளை எடுத்துப் பண்படுத்தியும் முறுக்கியும் உண்டாக்கப்படுவன. தந்திரி இந்நாளில் உலோகங்களின் கம்பிகளாலும் ஆக்கப்படுகின்றன.

அர்ச்சனைகட்குக் கோரோசனையும் ஆர்வத்துடன் அளித்துள்ளார் என்க. கோரோசனை - பசுவின் வயிற்றினின்றும் எடுக்கப்படும் மஞ்சள் நிறமுள்ள ஒரு வாசனைப் பண்டம். இது இறைவனது திருமெய்ப்பூச்சுச் சந்தனக் குழம்புக் கலவைக்கும் உதவுவது. அர்ச்சனை - சிவன் வழிபாடு.

இவை - தோலும், வாரும், தந்திரியும், கோரோசனையும் என்ற இவை. ஆர்வத்தினுடன் - சிவார்ச்சனைக் குதவுவதில் முற்பிறப்பின் உணர்விலுல் நந்தனருள்ளத்தப் பெருகிய ஆசை குறித்தது. இப்பொருள்கள் புலையர்க்குத் தமது குலத்தொழிலிற் கிடைப்பன. இவற்றை விற்றுத் தமது வயிற்றுப் பிழைப்புக்கு உதவும் பொருள்களாகவே காணும் ஏனையோர் போலாது, நந்தனர், தம் சிவத்திருத்தொண்டுக்குரிய பொருள்களாகக் கண்டு அவ்வாறே பயன்படுத்தினர். தம்மைக்கண்டு உருகிப் பசுக்கள், கறவாமே பொழிந்த, பாலினைக்கண்டு, "சேம்மை நெறியே யுறுமனத்திற் றிருமஞ் சனமாங் குறிப்பு உணர்ந்து", சிவார்ச்சனைக்குப் பயன்படுத்திய சண்டீச நாயனார் சரித வரலாறு இங்குச் சிந்திக்கத்தக்கது. திருநீலகண்ட நாயனர் தம் தொழிலில் வந்த மட்கலங்களின் ஊதியத்தைத் தம் அமுதுக்கு ஆக்கித், தாம், தொழில் செய்து கொண்ட திருவோடுகளை அடியார்களுக்கு அளித்த திறமும் இங்குக்கருதத்தக்கது. 14

1055. இவ்வகையாற் றந்தொழிலி னியன்றவேலா மேவ்விடத்துஞ்
செய்வனவுங், கோயில்களிற் றிருவாயிற் புறநின்று
மெய்விரவு பேரன்பு மிகுதியினு லாடுதலும்,
அவ்வியல்பிற் பாடுதலு மாய்நிகழ்வா ரந்நாளில், கரு

1056. திருப்புன்கூர்ச் சிவலோகன் சேவடிகண் மிகநினைந்து
விருப்பினெடுந் தம்பணிகள் வேண்டுவன செய்வதற்கே
யருத்தியினு லொருப்பட்டங் காதனூர் தனினின்றும்
வருத்தமுறுங் காதலினுல் வந்தவ்வூர் மருங்கணைந்தார். ககூ

1055. (இ - ள்) வெளிப்படை. இவ்வகையாலே தமது தொழிலில் இயன்ற அளவு எல்லாவற்றையும் எவ்விடத்திலேயும் செய்வனவும், திருக்கோயிலின் திருவாயிற் புறத்தே நின்று, உண்மை பொருந்திய பேரன்பின் மிகுதிப்பாட்டினாலே, ஆடுவதும், பாடுவதுமாக நிகழ்ந்துவரும் அந்நாளில், கரு

1056. (இ - ள்) வெளிப்படை. திருப்புன்கூரில் எழுந்தருளியிருக்கும் சிவலோகநாதருடைய செம்மையாகிய திருவடிகளை மிகவும் நினைந்து விருப்பத்தோடும் தாம் வேண்டிய திருப்பணிகளைச் செய்வதற்கே ஆசையினால் மனவொருமைப் பட்டாராய், அங்கு ஆதனூரினின்றும் புறப்பட்டு வருத்தமுறும் காதலினால் அந்தத் தலத்தின் பக்கத்தை வந்து அணைந்தனர். கசு

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

1055. (வி - ரை) தம்தொழிலில் இயன்ற எலாம் - தமது குலத்தொழிலின் (புலைத்தொழிலின்) வருவாயினாற் கிட்டும் பொருள்களாற் செய்யத்தக்க சிவத் திருத்தொண்டுகளை யெல்லாம். எல்லாம் - செய்வனவும் என்க. முற்றும்மை தொக்கது.

இவ்வகையால் செய்வனவும், ஆடுதலும், பாடுதலும் ஆய்நிகழ்வார் என்க.

ஆய்நிகழ்வார் - இச்செயல்கள் நிகழ்ச்சியிற் பொருந்த வாழ்வார் என்பது.

மெய்விரவு...பாடுதலும் - மிக்க அன்பு. பேரன்பு எனப்படும். அது மிகுதிப்பட்டு உண்மையுடன் பொருந்தியபோது தம்வசமிழந்து ஆடுதலும், பாடுதலும், பிறவும் நிகழும். "ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப், பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை" (திருவாசகம்), "தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி" (திருவாரூர் - தாண்டகம்), "குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினார் கூத்துமாடி" (823), "கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே" (சித்தி - 12) முதலிய அன்பினிலக்கணங் கூறும் அளவைகளைச் சிந்திக்க.

அவ்வியல்பு - மெய்விரவு பேரன்பு மிகுதியான அந்த இயல்பு. மேலே சொல்லிய அந்த என அகரம் முன்னறி சுட்டு.

எவ்விடத்தும் செய்வன - மேலே கூறிய பொருள்களைச் சிவனுக்காக ஆக்குதல். இவை கோயிலின் புறத்திருந்து எவ்விடத்தும் செய்யத்தக்கன. மேல்வரும் ஈடு பாடாகிய ஆடல் பாடல்கள் திருக்கோயிலின் திருவாயிலின் புறத்தே எதிர்நின்று செய்யத்தக்கன. 15

1056. (வி - ரை) திருப்புன்கூர் - புன்குமரம் தலமரமாதலின் இப்பெயர் பெற்றது. தலவிசேடம் பார்க்க.

சிவலோகன் - இத்தலத்துச் சுவாமி பெயர் சிவலோகநாதர் என்பது.

விருப்பினுடன் - தாம் செய்யும் திருப்பணிகளை மிகவும் விரும்பிச் செய்தல் வேண்டும் என்ற மனநிலை குறித்தது.

அருத்தியினால் ஒருப்பட்டு - அத்திருத்தலத்திற் றிருப்பணிகள் செய்வதற்கென்றே மனவொருமைப்பாடு பெற்று. இது ஆதனூரினின்றும் புறப்படும்போது அவரது ஆர்வமிகுந்த மனநிலை குறித்தது.

வருத்தமுறும் காதல் - ஆதனூரினின்றும் வழிக்கொண்டு திருப்புன்கூருக்கு வரும்போதும், அங்கு வந்தணைந்தபோதும் உள்ள அவரது மனநிலை குறித்தது.

தம்பணிகள் வேண்டுவன - வேண்டுவனவாகிய பணிகளுள் தமக்குரியவை. இவை முன் மூன்று பாட்டானும் கூறப்பட்டன. வேண்டுவன என்பது அத்திருத்தலத்திற் பொருந்துவன என்ற பொருளில் வந்தது.

அருத்தி - விருப்பத்தின் செறிவு. "(உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் னுள மன்னி...ஆண்டு கொண்ட...தித்திக்கும் சிவபதத்தை -) அருத்தியினுல் நாயடியேன் அணிகொடில்லை கண்டேனே" (கண்டபத்து - 3) என்ற திருவாசகப் பொருளை ஓர்க. சேவடிகள் மிக நினைந்து என்ற கருத்துமிது.

வருத்தமுறும் காதல் - அருத்தி மிக்கபோது அது காதலாய் விளையும்; காதலிக் கப்பட்ட அப்பொருள் கைகூட நீட்டிக்கும் காலமெல்லாம் வருத்தம் வரும். "யான் மிக வருந்து கின்றே னேயர்கோ னுர்தா முற்ற, ஞனவெஞ் சூலை நீக்கி யுடனிருப் பதனுக் கென்னூர்" (ஏயர்கோன் - புரா - 401) என்றது காண்க. இது ஆராத காதல்.16

1057. சீரேறு மிசைபாடித் திருத்தொண்டர் திருவாயில்
நேரேகும் பிடவேண்டு மெனநினைந்தார்க் கதுநேர்வார்
காரேறு மெயிற்புன்கூர்க் கண்ணுதலார் திருமுன்பு
போரேற்றை விலங்கவருள் புரிந்தருளிப் புலப்படுத்தார். கஎ

(இ - ள்) வெளிப்படை. சீர் ஏறும் இசையினைப் பாடித் திருத்தொண்டராகிய நந்தனுர், திருவாயிலின் நின்றுகொண்டு இறைவரை நேரே கண்டு கும்பிடவேண்டு மென்று நினைந்தவர்க்கு அவ்வாறே அருள்புரிவாராய், மேகங்கள் ஏறிச் செல்லும் மதில் சூழ்ந்த திருப்புன்கூர்ச் சிவலோகநாதர், தம் முன்பே இருக்கும் போர்வல்ல இடபவேற்றினை விலகியிருக்கும்படி ஆணையிட்டருளித் தம்மை நந்தனருக்கு நேர் காட்சிப் புலப்படும்படி செய்தருளினர்.

(வி - ரை) சீர் ஏறும் இசைபாடி - சிறப்பின்மிக்க இசை. இறைவன் புகழ் கூறப் பாடும் இசை. "இறைவன் பொருள்சேர் புகழ்" (குறள்) என்றது காண்க. உயிர்களைச் சீரினுல் ஏறச்செய்கின்ற இசை என்றலுமாம். இறைவனது புகழ்பாடும் இசைதான் இத்தன்மையுடையது. ஏனைய இசைகளுக்கு இத்தன்மையில்லை. அவை வெறும் புலன் இன்பமாய் ஒழிந்து உயிர்களை மயக்கிப் பிறவியுட் செலுத்துவன.

திருவாயில்...நினைந்தார்க்கு - திருவாயிலில் நின்றபடியே இடையில் எதுவும் மறைக்காதபடி நேரே கண்டு கும்பிடுதல் வேண்டுமென்று நினைந்தவராகிய அவருக்கு. தமது குல ஒழுக்கப்படி கோயிற்புறவாயிலினின்று ஆடல் பாடல் புரிந்து தொண்டு செய்த நந்தனுர், தாம் இருந்த வாயிற்புறத்தி னின்றபடியே, உள்ளே விளங்குகின்ற சிவலோகநாதரை நேர்காண விரும்பினர்; அதற்குத் தடையாக இருந்து மறைத்தனர் இடபதேவர்; அவரால் மறைக்கப்படாது நேரே கண்டு கும்பிட வேண்டும் என்று நினைத்தார். "ஆய பசுவு மடலே றெனநிற்கும்" என்று திருமந்திரத்திற் கூறியபடி ஏறு - இடபம் - ஆன்மாவைக் காட்டிநிற்பது. ஆன்மாவின் தன்மையாகிய பசுத்துவம் விலகியபோதுதான் பதி தரிசனம் பெறப்படும் என்றதொரு ஞானசாத்திர உண்மை யும் இங்குக் குறிப்பிற் பெறப்படுதல் காண்க.

அது நேர்வார் - "அவர் தாம் வேண்டு மதனையே அருள வேண்டி" (341), "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்" (திருமறைக்காடு-திருத்தாண்டகம்), "மனத்தானை மனத்திருந்த கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் றன்னை" (திரு வாலவாய் - தாண்டகம்) முதலியவை பார்க்க. நேர்வார் - வினையாலணையும் பெயர்.

நேர்வார் - விலங்க அருள்புரிந்து - புலப்படுத்தார் என்க.

திருமுன்பு போர் ஏறு - சந்நிதானத்தில் நேர் முன்பு இருக்கும் பெரிய வலிய இடபதேவர். இப்பொழுதும் இங்கு இடபதேவர், வெளியே நிற்போர் நேரே இறை வனைத் தரிசிக்கும்படி வழிவிட்டு விலகி வீற்றிருத்தல் காணத்தக்கது.

புலப்படுத்தார் - கண்ணுகிய புலனிற் படும்படி செய்தருளினர். 17

1058. சிவலோக முடையவர்தக் திருவாயில் முன்னின்று
பவலோகங் கடப்பவர்தம் பணிவிட்டுப் பணிந்தெழுந்து
சுவலோடு வாரலையப் போவார்பின் பொருசூழல்
அவலோடு மடுத்ததுகண் டாதரித்துக் குளந்தோட்டார். கஅ

(இ - ள்) வெளிப்படை. சிவலோகநாதருடைய கோயில் திருவாயின் முன் நின்றுகொண்டு உலகிற் பிறவியைக் கடக்கும் சிவநெறி நின்றவராகிய நந்தனார், (இறைவனை வழிபடும்) திருப்பணியை முடித்துக் கொண்டு, பணிந்து எழுந்து, முதுகில் வார்கள் அலையும்படி செல்பவர், அத்திருக்கோயிலினை அடுத்துப் பின்புறமாக ஒரு இடம் பள்ளமாக அமைந்திருத்தலைக் கண்டு, விருப்பத்துடன் அதனைக் குளமாகத் தோண்டினார்.

(வி - ரை) சிவலோகழடையவர் - திருப்புன்கூர்ச் சிவலோக நாதர். சிவலோகத்துக்கு நாயகராகிய இறைவர் என்றலுமாம்.

பவலோகங் கடப்பவர் - உலகப் பவம் கடப்பவர் (நந்தனார்) என்க. பிறவியில் வாராத நிலையடைய முயற்சிப்பவர். சிவநெறியில் நிற்பவர். பவம் - பிறப்பு - பிறப்பாகிய உலகம் என்றலுமாம். முன்னைப் பிறவியிற் சிவன் கழற்கே விளைத்த உணர்வு (1051) உடையாராய் வந்த நந்தனார், இனிப் பிறவாத நெறியில் நின்று சிவத் தொண்டு செய்தனர் (1052) என்பது முன் உரைக்கப்பட்டது. "இப்பிறவி யாட் கொண் டினிப்பிறவா மேகாத்து"( திருவம் - 12) என்ற திருவாசகமும் காண்க.

தம்பணி விட்டு - தம்பணி - சிவலோக நாதரை நேரே கும்பிடுமாறு புலப்படக் கண்டவுடன் திருவாயிற் புறநின்று ஆடுதலும் பாடுதலுமாகிய பணி. 1055 பார்க்க. இப்பணிகளைக் "கண்ணுரக் கண்டுமென் கையாரக் கூப்பியு, மெண்ணுர வெண்ணத்தா லெண்ணியும் " (அற்புதத் திருவந்தாதி) என்றபடி ஆரச் செய்து முடித்து, அதன்பின் பணிந்து, எழுந்து என்க. இதற்கு இவ்வாறன்றித், தோற்கருவியைக் கீழே வைத்து என்றும், சுதந்தரமிழந்து என்றும் உரை கூறுவாரும் உண்டு.

சுவலோடு வாரலையப் போவார் - திருவாயிற் புறநின்றபடியே நேரேகும் பிடும்படி இறைவன் தமக்குத்தந்த பேரருளின்றிறத்தை நினைந்து அன்பிலுல் உருகு மவர், அந்த ஆனந்த வெள்ளத்தினிடை மூழ்கி, மீளமாட்டா தேறிப், பேய்கொண்டார் போல அசைந்து செல்கின்றாராதலின், தமது தோளிற்றுங்கிய இசைக்கருவியின் வார்கள் ஒழுங்கிலே தங்கி நில்லாதபடி அலையச், சென்றனர் என்பதாம்.

ஒருசூழல் அவலோடு பின்பு அடுத்தது கண்டு - என்க. அவல் - பள்ளம். சூழல் - வட்டமாகிய இடம். சோலை என்பாருமுண்டு. பின்பு - கோயிலுக்குப் பின்புறம். திருக்கோயிலில் இறைவனைத் தரிசித்து, மீளா நிலைமையில் மீண்டு, தம் ஊருக்குப் போகின்றவர் கோயிலை அடுத்துப் பின்புறம் உள்ள ஒரு இடம் பள்ளமாய்க் குளம் தோண்டத் தகுதியுள்ளதாயிருந்தது கண்டு அதனைக் குளமாகத் தோண்டலா மென்று விருப்பம் கொண்டு தோண்டினார்.

ஆதரித்துக் குளம் தொட்டார் - ஆதரம்-சிவன்பாற் பெருகிய அன்பு - விருப்பம். எல்லா வுயிர்களுக்கும் பயன்படும் நீர்நிலை தோண்டுதல் பசுதர்மமாகிய உலகநிலை அறங்களுள் ஒன்று. "காவளர்த்துங் குளந்தொட்டும்...யாவருக்குந் தவிராத வீகை வினைத் திறை " (திருநா - புரா-36) என்றது காண்க. அது வேறு. இங்கு இந்தச் சூழல் அவ்வாறன்றிக், கோயிலினை அடுத்து உள்ளதாதலின் திருக்கோயிற் குளமாக நின்று அடியார்களுக்குப் பயன்படுமாதலின் சிவன் பணியாகிய பதிதருமமாம் என்று

கொண்டவராய்ச், சிவத்தொண்டில் நின்ற நந்தனார், குளம் தொட்டனர் என்க. 1052, 1053, 1055-ல் உரைத்தபடி தமது மரபின் வரம்பு கடவாது நின்று சிவன் பணி செய்தனராதலின் கோயிலின் புறத்து அடுத்து இருந்த குளம் தோண்டுகின்ற இதனைச் சிவன் பணியாக எண்ணிச் செய்தனர் என்பதாம்.

தொடுதல் - தோண்டுதல். இத்திருக்குளம் கோயிலை அடுத்து மேல்புறம் அழகாக விளங்குவதனை இன்றும் காணலாம். படம் பார்க்க.

பவலோகங் கடந்தவர்—என்பதும் பாடம். 18

1059. வடங்கொண்ட பொன்னிதழி மணிமுடியார் திருவருளாற்
றடங்கொண்ட குளத்தளவு சமைத்ததற்பின், றம்பெருமான்
இடங்கொண்ட கோயில்புறம் வலங்கொண்டு, பணிந்தெழுந்து,
நடங்கொண்டு, விடைகொண்டு, தம்பதியி னண்ணினார். ககூ

(இ - ள்) வெளிப்படை. தொடர்பாக மலரும் பொன்னிறமுடைய கொன்றை மலரைச் சூடிய அழகிய திருமுடியினையுடைய சிவபெருமானது திருவருளினாலே, இடமகன்ற குளத்துக்குத் தக்க அளவுப்படி தோண்டிய பின்பு, தம் பெருமான் எழுந்தருளிய திருக்கோயிலைப் புறத்தே வலமாகச் சூழ்ந்து வந்து, பணிந்து, எழுந்து, ஆனந்தக் கூத்தாடி, விடைபெற்றுக்கொண்டு தமது ஊரில் சேர்ந்தனர்.

(வி - ரை) வடம்கொண்ட - வடம்போல மலர்கின்ற தன்மையால் இது சரக் கொன்றை எனப்படும். வடம் - மாலை. மாலையாகக் கட்டப்பட்ட (இதழிமாலை) என்றுரைத்தலுமாம். பொன் இதழி - பொன் போன்ற இதழ்களை உடைய மலர். "விரைசேர்பொன் னிதழிதர" (மேகரா - குறி - வீழிமிழலை) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரம் காண்க.

திருஅருளாற் சமைத்ததற்பின் - நந்தனார் குளம் அளவுபடச் சமைத்ததற்குத் திருவருள் துணைபுரிந்தது என்பதாம். திருவருள் துணைசெய்தாலன்றித் திருத்தொண்டினை நினைத்தலும், முயலுதலும், செய்தலுங் கூடாதென்பது உண்மை. அவனருளாலே அவன்றாள் வணங்கி," "வேண்டி நீயா தருள் செய்தா யானு மதுவே வேண்டினல்லால்" (திருவாசகம்). முதலிய திருவாக்குக்கள் காண்க.

தடங்கொண்ட குளத்து அளவு - பள்ளமாயிருந்த இடத்தை இடமகன்றதொரு குளத்தின் அளவாக. முன்னரே குளமாயிருந்து தூர்ந்துபோய் வெறும்பள்ளமாயிருந்ததனை முன்னர் இருந்த குளத்தின் அளவுபடும்படி தோண்டி எடுத்தனர் என்றுரைப்பினுமாம். தண்டியடிகள் நாயனார் திருவாரூர்க் குளத்தினது இடத்தாற் குறைபாடுடைமை கண்டு குளம் பெருகக் கல்லி எடுத்த திருப்பணியும், அதற்குத் திருவருள் துணைசெய்த வரலாறும் இங்கு நினைவு கூர்தற்பாலன.

இடம் கொண்ட கோயில் புறம் வலங்கொண்டு - இடம் - வலம் - சொல்லணி. இடம் கொள்ளுதல். இடமாக வீற்றிருத்தல். புறம் வலங்கொள்ளுதல் - கோயிற் புறத்தே வலமாகச் சுற்றிவருதல்.

நடங்கொண்டு விடை கொண்டு தம்பதியில் நண்ணினார் - அத்திருத்தலத்தை அகலாததொரு வேட்கை உள்ளே எழவும், பிரியாவிடைகொண்டு சென்ற மனத்தின் உண்டாகிய தாமதமும், அதனால் புறத்தே செயலின் தாமதமும் குறிக்க அமைந்த இந்த அடியின் ஓசையமைதி கருதத்தக்கது. இவ்வாறே "பூவார்தண் புனற்பொய்கை மூழ்ப்பாடிப் புரவலனார் ("ஏயர்கோன் - புரா - 260) என்ற செய்யுளடியின் ஓசை



திருப்புன்கூர் கோயில்
கிழக்குக் கோபுரம்



நந்தனார்
(திருக்கோயில் முன்பு பாடிக்
கொண்டிருக்கும் திருக்கோலம்)

திருப்புன்கூர்
இடபதேவர் விலகிய காட்சி
—பாட்டு - 1057 - பக்கம் - கஙஎச



திருப்புன்கூர்-கோயிலின் பின்புறம்
நந்தனார் தோண்டிய குளம்
—பாட்டு - 1059 - பக்கம் - கஙஎசு

யமைதியினையும் அதுபற்றி எனது சேக்கிழார் 151-152 பக்கங்களிலுரைத்தவையும் பார்க்க.

தம்பதியை—என்பதும் பாடம். 19

1060. இத்தன்மை யீசர்மகிழ் பதிபலவுஞ் சென்றிறைஞ்சி
மெய்த்ததிருத் தொண்டுசெய்து விரவுவார் மிக்கெழுந்த
சித்தமொடுந் திருத்தில்லைத் திருமன்று சென்றிறைஞ்ச
உய்த்தபெருங் காதலுணர் வொழியாது வந்துதிப்ப, உ0

*1061. அன்றிரவு கண்டுயிலார்; புலர்ந்ததற்பி "னங்கெய்த
ஒன்றியயிண தருதன்மை யுறுகுலத்தோ டிசைவில்லை"
என்"றிதுவு மெம்பெருமா னேவ"லெனப் போக்கொழிவார்;
நன்றுமெழுங் காதன்மிக "நாளைப்போ வே"னென்பார்; உக

1062. "நாளைப்போ வே"னென்று நாள்கள்செலத் தரியாது,
பூளைப்பூ வாம்பிறவிப் பிணிப்பொழியப் போவாராய்ப்,
பாளைப்பூங் கமுகுடுத்த பழம்பதியி னின்றும்போய்,
வாளைப்போத் தெழும்பழனஞ் சூழ்தில்லை மருங்கணைவார்; உஉ

1063. செல்கின்ற போழ்தந்தத் திருவெல்லை பணிந்தெழுந்து,
பல்குஞ்செந் தீவளர்த்த பயில்வேள்வி யெழும்புகையும்,
மல்குபெருங் கிடையோது மடங்கணைருங் கினவுங்,கண்
டல்குந்தங் குலநினைந்தே யஞ்சியணைந் திலர்கின்றார். உங

1060. (இ - ள்) வெளிப்படை. ஈசர் மகிழ்ந்தெழுந்தருளியிருக்கும் தலங்கள் பலவற்றையும் இத்தன்மையிற் போய், வணங்கி, உண்மையான திருத்தொண்டினைச் செய்து வாழ்பவர், அன்பு மேன்மேல் எழுந்த சித்தத்துடனே, திருத்தில்லைத் திருவம்பலத்தினைச் சென்று வணங்குவதற்கு உய்த்த பெருத்த ஆசையுடைய உணர்ச்சியானது நீங்காமல் வந்து உதிக்க, உ0

1061. (இ - ள்) வெளிப்படை. அன்றிரவில் உறங்காதவராயினர்; விடிந்த பின்பு, "அத் திருத்தலத்தில் சேரும் தன்மை எனது குலத்திலேடு பொருந்துவதில்லை" என்று எண்ணியவர், "இவ்வெண்ணமும் எமது பெருமானுடைய ஏவலே" என்று அங்குப் போகும் முயற்சியை ஒழித்திடுவார்; அதன்பின்பு நன்மையாக எழுகின்ற ஆசை மேன்மேல் அதிகரிக்க "நாளைப் போவேன்" என்பார்; உக

1062. (இ - ள்) வெளிப்படை. இவ்வாறு "நாளைப்போவேன்" என்று பல நாள்களும் கழிய, மனம் தரியாது, பூளையின் பூப்போன்ற பிறவியாகிய கட்டு நீங்கப், போவதற்குத் துணிந்தாராகிப், பாளைகளிற் பூக்கள் நிறைந்த கமுகுகள் சூழ்ந்த அந்தப் பழம்பதியினின்றும் போய், ஆண் வாளை மீன்கள் எழுந்து பாய்வதற் கிடமாகிய வயல்கள் சூழ்ந்த திருத்தில்லையின் பக்கத்தில் அணைவாராகி, உஉ

1063. (இ - ள்) வெளிப்படை. செல்கின்றபோது, அதன் திருவெல்லையினைப் பணிந்து, எழுந்து பெருகும் செந்தீயினை வளர்க்கும் பயில்கின்ற வேள்விகளில் எழுகின்ற புகையினையும், பொருந்திய பெருங்கிடைகள் மறைகளை ஓதுகின்ற மடங்கள் அணியனவாதலையும் கண்டு, கீழாகிய தமது குலத்தினை நினைந்தே, பயந்து, மேற் சென்று அணையாது நின்றனர். உங

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

1060. (வி - ரை) பதிபலவும் இத்தன்மை இறைஞ்சி என்க. பதி பல - "அரு குளவாஞ் சிவாலயங்கள்" என்றபடி அணிமையில் உள்ள திருநின்றியூர், திருநீடூர், திருப்புள்ளிருக்குவேளூர் முதலாயின. இத்தன்மையில் இறைஞ்சுதலாவது 1053, 1054, 1055-ல் பொதுவாக உரைத்தபடியும், சிறப்பாகத் திருப்புன்கூரில் இறைஞ்சிய படியுமாம்.

மெய்த்த - உண்மையில் நின்ற. சிவனே ஆண்டவன் என்றும், உயிர் அடிமையே என்றும் கரவில்லாது உண்மையில் உணர்ந்த. உண்மைப்பொருளே அடையச்செய்த என்றலுமாம். "உண்மை நின்ற பெருகுநிலைக் குறியாள ரறிவு தன்னே" என்ற திருச் செங்காட்டங்குடித் திருத்தாண்டகம் காண்க.

மிக்கெழுந்த சித்தம் - இவ்வாறு பல பதிகளிலும் சென்று தொண்டு செய்தலில் மிகவும் எழுந்ததாகிய சித்தம். சித்தம் - அந்தக்கரணங்களுள் சிந்திக்கும் தொழில் செய்வது.

திருமன்று - திருவம்பலம் - திருச்சிற்றம்பலம் - பொன்னம்பலம்.

உயிர்த்த பெரும் காதல் - மனத்தாற் கொண்டு செலுத்திய பெரிய ஆசை. உயிர்த்தல் - செலுத்துதல். பெருங்காதல் - பேராசை என்றலுமாம். "எமக்கீதுவோ பேராசை? யென்றுந் தவிரா, தெமக்கோருநாள் காட்டுதியோ வெந்தாய்!—அமைக் கவே, போந்தெரிபாய்ந் தன்னபுரி புன்சடையாய்! பொங்கிரவில், ஏந்தெரிபாய்ந் தாடு மிடம்" என்ற அற்புதத் திருவந்தாதி (70) யின் கருத்தினையும் காண்க.

காதல் உணர்வு ஒழியாது வந்து உதிப்ப - ஆசையோடு கூடிய உணர்ச்சி உள் ளிருந்து நீங்காது வந்து தோன்ற. ஒழியாது உதித்தல் - தடுக்கலாகாதபடி இடை விடாது உள்ளிருந்து கிளம்புதல். 20

1061. (வி - ரை) அன்றிரவு - தில்லைமன்று இறைஞ்சும் காதல் உணர்வு உதித்த அன்று.

புலரீந்ததற்பின் - எனப் - போக்கு ஒழிவார் - தில்லைக்குப் போதல் வேண்டு மென்னும் காதல் இரவில் தடுக்கமுடியாதபடி மனத்துள் வந்து எழுந்தது. விடிந்த தும் அதனைச் சித்தம் சிந்தித்தது; அச்செயல் தமது குலத்தோ டிசைவில்லை என்று புத்தி போதித்து அப்போக்கினை ஒழிக்கச்செய்தது; அவ்வாறு ஒழிக்கச் செய்ததுவும் எம்பெருமானது ஏவல் என்றே எண்ணினர். "வேண்டத்தக்க தறிவோய்நீ... வேண்டும் பரிசொன் றுண்டென்னி லதுவு முன்றன் விருப்பன்றே", "மறப்பித்தி... பெயர்த்துமப்போதே நாடுவித்தி" என்பனவாதி திருவாக்குக்கள் இங்குச் சிந்திக்கத் தக்கன. இரவில் எண்ணுது அணிந்த பல கருமங்கள், பகலில் எண்ணும் போது அணி யாது ஒழிக்கப்படுதல் உலக நிலையில் பலவாற்றானும் காணும் அனுபவமாம்.

இதுவும் எம்பெருமான் ஏவல் - இதுவும் - திருமன்று சென்று இறைஞ்ச வந்த காதலும் அவன் ஏவலே; அது குலத்தோடிசைவில்லை என்று உதித்த உணர்வும் அவன் ஏவலேயாம். உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

போக்கு - போதல் வேண்டுமென்ற காதலினை. ஒழிதல் - நீங்குதல்.

நன்றும் எழும் காதல்மிக - தில்லை இறைஞ்சுவதாகிய நன்றுகிய மேன் மேல் எழுகின்ற ஆசை அதிகரிக்க - முதலில் உதித்த பெருங்காதலைப் பொழுது விடிந்தபின் சித்தம் சிந்தித்து ஒழித்தது. அதன் பின்னரும் அக்காதல் மீக்கூர்தலினால் அவ்வாறு போக்கு ஒழித்த சித்தத்தை மாற்றி "நாளைப்போவேன்" என்று மனத்தினைத் துணியச் செய்தது. மனம் - சித்தம் என்ற உட்கரணங்களின் முறையே எழும் தொழிற் பாடுகளின் தீவிரம் உணர்த்தப்பட்டது. நன்றும் எழும் - சித்தத்தின் சிந்தனையை

அடக்க நந்தனார் அணிவு கொண்டதன் காரணமாவது தடுக்கலாகாத அக்காதல் நன்மை யின் எழுந்தது என்ற உணர்ச்சியே எனக் குறித்தபடியாம்.

"நாளைப்போவேன்" என்பார் - இது சித்தத்தின் செயலைக் காதல் மிகுதிப் பாட்டினால் மீதூர்ந்து தாழ்த்தியபோது நந்தனரின் அணிவு.

காதலினால்—என்பதும் பாடம். 21

1062. (வி - ரை) நாள்கள் சேலத் தரியாது - மேற்சொல்லியவாறு தில்லை யிறைஞ்சும் அணிவும், குலத்தோடிசைவில்லை என்று அதன் ஒழிவும், பின்னரும் அணி வும் ஆக இவ்வாறு நந்தனரது மனத்தே எழுந்த நிலைகள் பல நாள்கள் நிகழ்ந்தன என்பதனை உய்த்துணர வைத்தார்.

தரியாது - நற்கருமஞ் செய்தலில் காலந் தாழ்த்தால் வருந்துவது பெரியோரது இயல்பு. அதன் காரணம் பிறவியின் அநித்தமாந் தன்மையேயாம் என்று குறிக்கப் பூளைப்பூவாம் பிறவி என மேற்கூறுவது காண்க.

பூளைப்பூ ஆம் பிறவி - பூளைப்பூப் போன்ற நொய்தாம் தன்மையுடைத்தாகும் பிறவி. பூளை - நொய்தாகிய பூவுடைய செடிவகை. அற்பமாகக் கழிவதால் பிறவிக் குப் பூளைப்பூவை உவமித்தார். "மாருதமறைந்த பூளையாமென".

பிணிப்பு - கட்டு. விரிவுடைய உயிரைக் குறுகக் கட்டுவதனால் - பிணிப்பதனால்- பிறவிப்பிணிப்பு என்றார். பிணி - நோய்-என்ற சொல்லும் இப்பொருள் கொண்டது.

பிறவிப்பிணிப்பு ஒழியப் போவாராய் - "தில்லையைக் காண முத்தி" என்னு முண்மைபற்றி இவ்வாறு கூறினர். "பொய்ப்பிறவிப் பிணியோட்டுந் திருவீதி புரண்டுவலங் கொண்டு (திருநா - புரா - 197) என்றதும், பிறவும் காண்க.

போவாராய் - மருங்கணைவார் - பணிந்தெழுந்து - கண்டு - நினைந்தே - அணைந் திலர் - நின்றார் - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

பூம்பாளைக் கழகு என்க. உடுத்தல் - சூழ்ந்திருத்தல்.

பழம்பதி - ஆதனூர். பழைமையாகத் தாம் வழிவழி வாழ்ந்த ஊர்.

வாளைப்போத்து எழும் பழனம் - வாளைமீன்கள் துள்ளி மேல் எழுந்து குதிக்கு மியல்புடையன. "வாளை செருச்செய", (ஆளுடையபிள்ளையார் தேவாரம்-குறிஞ்சி - இடைச்சுரம் - 2), "பகுவாய் வாளைகள் போர்த்தொழில் புரியும் பொருகாவிரி" (பட்டினத்தடிகள் - திருவிடைமும் - கோ - 7) முதலிய திருவாக்குக்கள் காண்க. போத்து - ஆண். "பாளையுடைக்கமுகு" என்றும், "வாளையுடைப்புனல் வாழ்வயற் றில்லை" என்றும் அப்பர் சுவாமிகள் அருளிய இத்தலத்துத் திருவிருத்தத்தின் சொல்லும் பொருளும் எடுத்தாளப்பட்டு மிளிர்வன காண்க.

மருங்கணைந்தார்—என்பதும் பாடம். 22

1063. (வி - ரை) அந்தத் திருவேல்லை - மேற்பாட்டிற் கூறிய தில்லையாகிய பதியின் திருவெல்லை என அந்த என்பது முன்னறி சுட்டு. எல்லை பணிந்தாற் பிறவி நீங்கும் என்று உண்மை நூல்களாற் றுணியப்பட்ட அந்த எனப் பண்டறிசுட்டு என்றலுமாம்.

பயில்வேள்வி - கிடைஒதும் மடங்கள் - பொதுவேள்விச் சாலைகளும் மறை பயில் இடங்களுமாம். இவை நகர அமைப்பில் நகர்ப்புறத்தில் அமைவனவாக விதித்தனர் நம் முன்னோர். சண்டீசர் புராணம் 3, 4 திருப்பாட்டுக்களும், "பெரும் பெயர்ச்சாலை" (77), "வேதமுங் கிடையு மெங்கும், யாகமுஞ் சடங்கு மெங்கும்" (81) என்ற விடங்களில் உரைத்தனவும், பிறவும் பார்க்க.

தில்லையின் மருங்கணைய வருகின்ற நந்தனர் திருவெல்லையில் வந்தார். அதனைப் பணிந்தார்; எழுந்தார்; கடந்து மேற்செல்ல எண்ணினர். அவர் முன்பு அடித்து

வேள்விப்புகையும் கிடை ஓது மடங்களும் கட்புலப்பட்டன. அவற்றைக் கண்டதும் தமது இழிகுலத்தை எண்ணி அவற்றைத் தாம் அணுகச் செல்லலாகாது என்று அஞ்சினர். ஆதலின் மேற்செல்லாது அங்குநின்றார். மேல்வருமாறு எண்ணுவாராயினர் - என்பதாம்.

**எல்லை பணிந்து** - தில்லைத் திருஎல்லையில் வணங்கி உட்புகும் விதி குறிக்கப் பட்டது. "தில்லை மல்லலம் பதியி னெல்லை வணங்கி" (238) என்றவிடத்துரைத்தவை பார்க்க.

**பல்தும் சேந்தீ வளர்த்த பயில்வேள்வி** - பல்குதல் - மிகுதல். பல்கு - பயில் என்றதனால் இவை மறையோர் பலரும் சேர்ந்து இயற்றும் வேள்விச் சாலைகள் என்பது பெறப்பட்டது. இவை வேறு. மறையவர் தத்தம் மனைகளில் நாடோறும் வளர்க்கும் **முத்தீ** என்பவை வேறு. அவற்றை மேல்வரும் பாட்டில் " மாளிகைகள் தொறுங்குலவும் வேதிகைகள், ஒன்றிய மூவாயிரமங் குளவென்பா ராகுதிகள் " என்று வேறு பிரித்துக் கூறியது காண்க. திருநீலநக்கநாயனார் புராண வரலாறும், பிறவும் இங்கு நினைவுகூர்க.

**மல்கு பெருங் கிடை-கிடை** - மாணவர் தொகுதி - கூட்டம். கிடை - கிட்டுதல் - சேர்தல்-கூடுதல்; கிடை-பகுதி. கிட என்றது பகுதியாகப் பிறந்த பெயராகக்கொண்டு, குறித்த நேரங்களின் முன்னரே வந்து, குறித்த காலஅளவு வரை தங்கிக் கிடத்தலால் கிடை எனப்பட்டது என்றலுமாம்; இப்பொருட்டுக் கிட என்ற பகுதியீற்றகரம் கெட்டு, ஐ என்ற தொழிற்பெயர் விகுதிபெற்று நின்றதெனக. இவ்வாறன்றிக், **கிடை** - வேதம்பயில் இடம் என்றுரைப்பாருமுளர். **ஓதுமடங்கள்** எனப் பின்னர் வருதலால் அது பொருந்தாதென்க. **மல்கு - பெருங்** - என்ற இரண்டு அடைமொழிகள் வேதம் பயில் மறைச்சிறார்களின் கூட்ட நிறைவும் செறிவும் குறிப்பனவாம். " அருமறை நான்கி னோடா றங்கமும் பயின்று வல்லார் " (354) என்றபடி மறைநூல் வல்ல தில்லைவாழந்தணர்கள் மூவாயிரவர்களின் சிறாரும் பிறரும் உள்ள நகராதலின் சிறாரின் நிறைவு இவ்வாறு குறிக்கப்பட்டது.

**அல்தும்...நின்றார்** - அல்குதல் - குறைதல். குறைவுடைய தமது குலச் சார்பினால், வேள்விச்சாலைகள் வேதம் பயிலிடங்கள் இவற்றி னணிமையிற் செல்ல லாகாது என்றுவரும் விதிவழக்கம் பற்றி அணைந்திலராய் நின்றனர். இன்ன மரபினர்க்கு இன்ன தொழில்கள் உரியன என்பதும், ஒரு மரபினர் பிற மரபினரோடு செல்லுதல் உறைதல் முதலியவை நிகழுங்காலங்களில் இன்னவாறு ஒழுகுதல் வேண்டு மென்பதும், யாவர்யாவர் யாண்டியாண்டு உறைதலும் செல்லுதலும் உரியர் என்பதும் முதலியன ஆகமங்களானும் பிறநூல்களானும் விதிக்கப்பட்டு, அவ்வழி மக்கள் ஒழுகி வந்தனராதலின், அவ்விதி மரபு ஒழுக்கத்தில் நின்றே அறம் புரிந்த நந்தனார் இவ்வாறு சிந்தித்தனர் என்க. " வருபிறப்பின் வழிவந்த அறம்புரிசிந் தையராயே " (1052), " இன்னறரும் இழிபிறவி " (1066) என்றவை காண்க. இந்த நிலை வேறு; சாதி குலம் மரபு முதலியவற்றை மறந்து நின்ற கண்ணப்ப நாயனார் போன்றார் நிலை வேறு என்பதனை உய்த்துணர்ந்து கொள்க.

**அணைந்திலர்**-அணைந்திலராகி. முற்றெச்சம். வினைமுற்றாகக் கொண்டுரைப்பினு மமையும்.

23

1064. நின்றவரங் கெய்தரிய பெருமையினை நினைப்பார் " முன்
சென்றிவையுங் கடந்தூர்சூ ழெயிற்றிருவா யிலைப்புக்காற்
குன்றனைய மாளிகைக டோறுங்குலவும் வேதிகைகள்
ஒன்றியமூ வாயிரமங் குளவென்பா ராகுதிகள்;"

1065. "இப்பரிசா யிருக்கவெனக் கெய்தலரி" தென்றஞ்சி
யப்பதியின் மதிற்புறத்தி லாராத பெருங்காதல்
ஒப்பரிதாய் வளர்ந்தோங்க வுள்ளுருகிக் கைதொழுதே
செப்பரிய திருவேல்லை வலங்கொண்டு செல்கின்றார். உரு

1064. (இ - ள்) வெளிப்படை. அவ்வாறு நின்றவராகிய நந்தனார், அங்குத் தாம் சென்று சேர்வதற்கரியதாகிய பெருமையினை நினைப்பாராகி, "இதற்கு மேல், முன் சென்று, இவற்றையுங்கடந்து ஊரைச்சுற்றிச் சூழ்ந்த திருமதிலின்றிருவாயிலிற் புகுந்தால் அங்கு மலிபோன்ற மாளிகைகள் தோறும் குலவிய வேதிகைகளுடன் பொருந்திய மூவாயிரம் ஆகுதிகள் உள்ளன என்று சொல்வார்கள்;" உச

1065. (இ - ள்) வெளிப்படை. "இத்தன்மையாய் இருக்க, அதனால் அங்குச் சென்று பொருந்துதல் எனக்கு அரிதாகும்" என்று அஞ்சி, அத்திருப்பதியின் மதிலின் புறத்திலே அடங்காத பெருங்காதல் ஒப்பரிதாக மேன்மேல் வளர்ந்து ஓங்க, மனம் உள்ளுருகிக் கைகளாற் றொழுதே, சொல்லுதற்கரிதாகிய அத்திருநகரினைத் திருவெல்லையிலேயே வலமாக வந்து இவ்வாறு நிகழ்வாராயினர். உரு

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1064. (வி - ரை) **அங்கு எய்தரிய பெருமை** - என நந்தனார் எண்ணிய எண்ணங்களாவன "இவ்வேள்விச்சாலைகளையும் வேதம் பயிலும் மடங்களையும் அணைந்து கடந்து செல்லுதல் அரிது; அவ்வாறு மேற்சென்றாலும் ஊர்சூழ் மதிற் றிருவாயிலினுட் புகுவதும் என் இழிகுலத்துக்கு இசையாது; அவ்வாறு புகுந்தால் அங்கு மாடங்கள்தோறும் வேதிகைகளுடன் மூவாயிரம் ஆகுதிகள் உள்ளன என்பார்; இத்தன்மையில் நான் சென்று சேர்தல் அரிது" என்பனவாம். **எய்தரிய பெருமை** - என்றதனால் அதன் பெருமையினையும் அதனைச் சேர்தற்கரிய தமது சிறுமையினையும் குறித்தபடி.

**முன்சென்று** நின்றவர், அவ்வாறு நிற்காமல் மேலே போய். **இவையும்** - முன்பு கண்ட வேள்விச்சாலைகள் வேதம்பயில் மடங்கள் ஆகிய இவற்றையும். உம்மை உயர்வு சிறப்பு. பின்னும் மூவாயிரம் ஆகுதிகள் உள எனப் பின்வருவதனைத் தழுவிய எதிரதுதழுவிய எச்சவும்மையாக வுரைப்பினுமமையும்.

**ஊர்சூழ் எயில்** - நந்தனார் எண்ணமிட்டு நின்ற எல்லையைக் கடந்து மேற்சென்றால் சில நாழிகையளவில் காணும் நகர்ப்புறத்துத் திருமதில். இது ஊரினைச்சுற்றிச் சூழ்ந்திருப்பது. இதில் நேர்திசை நான்கிலும் விளங்குவன நான்கு திருவாயில்கள். இங்கு **எயிற்றிருவாயில்** என்றது தென்புறத்துத் திருவாயிலை.

**புக்கால்** - புகுதல் இசையாது; ஒருகால் அருமையாகக் கடந்து புகுதப் பெற்றாலும் என்று புகுதலின் அருமை தோன்றக் கூறியபடியாம். இப்பாட்டு, மேல்வரும் பாட்டுடன் கூடிப் "புக்கால் - உளஎன்பார்; இத்தன்மையாதலின் எனக்கு எய்தல் அரிது" என நந்தனார் எண்ணமிட்டதனை ஒருசேரத் தொடர்ந்து கூறுதலால் **புக்கார்** என்ற பாடம் தவறு என்க. புகுதல் பின்னரே நிகழ்வதாம். 1074 பார்க்க.

**அங்கு மாளிகைகள் தோறும் குலவும் வேதிகைகள் ஒன்றிய ஆகுதிகள் மூவாயிரம் உள என்பார்** என்க. **வேதிகைகள் ஒன்றிய ஆகுதிகள்** என்றதனால் நித்தியாக்கினியாக மறையோரின் மனைகள்தோறும் வளர்க்கப்படும் முத்தீயினுக்கும் உரிய வேதிகையும் குண்டமும் அமைவன என்று காட்டியபடியாம். **வேதிகை** - வேள்விக் குண்டத்தின் முன்னர்க் குடம் முதலியன வைத்துப் பூசிப்பதற்காக இடும் சிறுதிண்ணை. "வேதியின் மங்கல ஆகுதி" (1005), "ஆங்கு வேதியி லமுதசெந் தீவலஞ் சுழிவுற்று"

(திருநீலநக்கர் புரா - 31) முதலியன பார்க்க. ஆகுதியும் வேதிகையும் ஒன்றி னொன்று பிரிக்கப்படாது பிணைந்துள்ளன என்பார் ஒன்றிய என்றார்.

மூவாயிரம் - தில்லை வாழந்தணர் மூவாயிரவரும் தமது மாளிகை ஒவ்வொன்றி லும் தனித்தனி தீவளர்ப்பாராதலின் ஆகுதிகள் மூவாயிரம் என்றார். "கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார்" (குறிஞ்சி - கோயில் 1) என்று ஆளு டைய பிள்ளையார், இத்தன்மையைத் தேற்றம்பட முதற்கண்ணே வைத்து ஓதியது காண்க. "வருமுறை யெரிமூன் றோம்பி" (354) என்றதும், பிறவும் காண்க. 24

1065. (வி - ரை) இப்பரிசு முன்பாட்டிற் கண்டபடி எண்ணிய இந்தத் தன்மை. ஆகுதிகள்உள என்பார் என்று இந்த என அண்மைச்சுட்டு, அவர் மனத்துள்ளே எழுந்த கருத்தினையும் கால அணிமையினையும் குறித்தது.

இருக்க அரிது - இருத்தலால். காரணப் பொருளில்வந்த வினையெச்சம். எய்தல் எனக்கு அரிது என்க. அரிது - "மனக்கவலை மாற்றலரிது" என்றாற்போல.

மதிற்புறம் - புறமதிலைக் குறித்தது. இது "ஊர்சூழ் எயில்" (1064) என்ற தின் புறத்தே யிருப்பது.

ஆராத...செல்கின்றார் - நந்தனாரின் மனநிகழ்ச்சியும் உடல் நிகழ்ச்சியும் கூறிய படி. தமது ஊரினின்றும் "மிக்கெழுந்த சித்தமொடும் உய்த்தபெருங் காதல் ஒழி யாது வந்துதிப்ப" (1060) அதனால் உந்தப்பட்டுப் போந்து திருவெல்லையினை அடைந் தார். புறப்படும்போது மனம் எழுவதும் தவிர்வதுமாகப் பலநாள் மனப்பூசலிட்டு ஒருவாறு காதல் மீக்கூர்ந்து உந்திவரத், திருஎல்லையினைச் சேர்ந்த அவர், வேள்விச் சாலையும் வேத மடங்களும் ஊர்சூழ் மதிலும், வாயிலும், அதனுள் (காணவிடினும்கேட் டறிந்த) வேதிகைகளும் ஆகுதிகளும், ஆகிய இவையெல்லாம் அங்கு எய்தரிய பெருமை யினை வற்புறுத்தி அவரது மேற்செலவைத் தடைபடுத்தின. அவ்வாறு தடைபட்டதா னால் ஆராத பெருங்காதல் மேலும் ஒப்பில்லாதபடி வளர்ந்தோங்கிற்று; உள்ள முருகிற்று; அதனால் மதிலின் புறத்தே பலமுறையும் வலங்கொண்டு செல்வாராய் நீகழ்ந்தனர் என இவ்வாறு கண்டுகொள்க.

செல்கின்றார் - பலமுறையும் வலங்கொண்டு நிகழ்வாராயினர். அச்செயலினை ஓயாது செய்துகொண்டிருக்கின்றார் என்று குறிக்க நிகழ்காலத்தாற் கூறினார்.

உள் உருகி - மனம் பதைத்து உருகி. பெருங்காதல் வளர்ந்தோங்க என்றதனால் முன்னமே "மெய்ப்பரிவு சிவன்கழற்கே விளைத்த வுணர்"வில் (1041) பெருங்காத லாய் எழுந்த ஆசை இன்னபடித்தென்று சொல்லமுடியாத அளவிலே வளர்ந்து மேலும் ஓங்கிற்று. ஆதலின் உள்ளே போகவும் முடியாமல், விட்டுநீங்கவும் முடியாமல், தேனடைத்த பாண்டத்தினைச் சுற்றும் எறும்புபோலச் சுற்றிச்சுற்றி வருவாராயினர் என்பதாம். தாய்ப்பசுவினை ஒரு வீட்டின் உள்ளே வைத்து அடைத்துக், கன்றினை வெளியே நிறுத்திஞற் கன்று அவ்வீட்டினைச் சுற்றிச்சுற்றிவரும் இயல்புபோல என்க.

காதல் ஓங்க - உள் உருகிற்று; கைதொழுதது; கால் வலங்கொண்டது - இவ் வாறு செல்கின்றார் என்க. இவையே ஆராத மனக்காதலுடையோர் செயல்களாம். 25

1066. இவ்வண்ண மிரவுபகல் வலஞ்செய்தங் கெய்தரிய
அவ்வண்ண நினைந்தழிந்த வடித்தொண்ட ரயர்வெய்தி,
"மைவண்ணத் திருமிடற்றார் மன்றினடங் கும்பிடுவ
தெவ்வண்ண" மெனநினைந்தே யேசறவி னெடுந்துயில்வார், உசு

1067. "இன்னறரு மிழிபிறவி யிதுதடை"யென் றேதுயில்வார்;
அந்நிலைமை யம்பலத்து ளாடுவா ரறிந்தருளி,

மன்னுதிருத் தொண்டரவர் வருத்தமெலாந் தீர்ப்பதற்கு
முன்னணைந்து கனவின்கண் முறுவலொடு மருள்செய்வார், உஎ

*1068. "இப்பிறவி போய்நீங்க வெரியினிடை நீமூழ்கி
மூப்புரிதான் மார்பருடன் முன்னணைவா" யென்னமொழிந்,
தப்பரிசே தில்லைவா ழந்தணர்க்கு மெரியமைக்க
மெய்ப்பொருளா ளரருளி, யம்பலத்தே மேவினார். உஅ

1066. (இ - ள்) வெளிப்படை. இவ்வாறு இரவும் பகலும் வலஞ்செய்து, அங்குச் சென்று சேர்தற்கரியதாகிய அத்தன்மையை நினைந்து, மனம் அழிந்த அடித்தொண்டர் அயர்ந்து, "கருமையாகிய திருமிடற்றினையுடைய சிவபெருமானது திருவம்பலத் திருநடனத்தைக் கும்பிடுவது எப்படி?" என்று நினைந்தே துக்கத்தோடும் உறங்குவாராகி, உசு

1067. (இ - ள்) வெளிப்படை. "துன்பந்தரும் இழிந்த இப்பிறவியே அதற்குத் தடையாகவுள்ளது" என்றே உட்கொண்டு துயில்வாராயினர்; அந்த நிலைமையினைத் திருவம்பலத்தினுள் ஆடுகின்றவராகிய அம்பலவாணர் அறிந்தருளி, நிலைபெற்ற அந்தத் திருத்தொண்டருடைய வருத்தங்கள் எல்லாவற்றையும் தீர்ப்பதற்காக அவர் முன்பு கனவினிடத்து அணைந்து, புன்முறுவலுடன் அருளிச் செய்வாராகி, உஎ

1068. (இ - ள்) வெளிப்படை. "இப்பிறவி போய் நீங்கும்படி தீயினிடத்து நீ மூழ்கிப், பூணூலணிந்த மார்பினையுடைய வேதியர்களுடனே முன் அணைவாயாக" என்று கூறியருளி, மெய்ப்பொருளாகிய இறைவர், அவ்வாறே தில்லைவாழந்தணர்களுக்கும் நீ அமைக்கும்படி அருளிச்செய்து, திருவம்பலத்தில் சேர்ந்தனர். உஅ

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1066. (வி - ரை) இவ்வண்ணம் - மேற்கூறியபடி. இரவு பகல் - உம்மைத் தொகை. இரவும் பகலுமாக நாள் முழுமையும்.

அங்கு.....அழிந்த - அங்குச்சென்று சேர்தற்கரிதாக்கித் தடைசெய்துநின்ற இழிபிறவியின் தன்மையினையே எண்ணியெண்ணி மனம் அழிவு அடைந்த.

அவ்வண்ணம் - அகரச்சுட்டு மேல் மூன்று பாட்டுக்களாலும் கூறிய அந்த என முன்னறிசுட்டு. அழிதல் - மனம் மிக வருந்தி நைந்திடுதல்.

அடித்தொண்டர் - திருவடிப்பற்றுவிடாத திருத்தொண்டர். "அடித்தொண்டின் நெறி" (1052) என்பது காண்க.

மைவண்ணத் திருமிடறு - திருநீலகண்டம். ஏகறவு-வருத்தம். "திருவேசறவு" என்ற திருவாசகப்பகுதி காண்க.

துயில்வார் - துயில்பவராகி - முற்றெச்சம். துயில்வார் என்ற வரும்பாட்டியுடன் முடிக்க. 26

1067. (வி - ரை) இன்னல் தரும் இழி பிறவி - பெருமானது மன்றினடங் கும்பிடத் தடையாய்நிற்பதனல் இன்னல் தரும் என்றும், இழிவினல் தடையாயிற்று என்பார் இழி பிறவி என்றும் கூறினர்.

இது தடை என்றே - மன்றினடம் கும்பிடுவது எவ்வண்ணம்? என்று தம்முள் வினவித் துயிலப் புகுந்தார், தாமே அவ்வினவுக்கு இது தடை என்று விடையும் கண்டு, துயில்வாராயினர் என்க.

அந்நிலைமை-கும்பிடுவதன் மிக்க ஆர்வமும், இழிபிறவியே தடை என்ற உணர்வும், அதனற் றடையுண்டு புறம்பே வீழ்ந்து கிடந்ததும், ஆகியநிலை.

அறிந்தருளித் - தீர்ப்பதற்கு - அணைந்து - அருள்செய்வார், - என்ன மொழிந்து, - அப்பரிசே மொழிந்து - மேவினர் - என்று மேல்வரும் பாட்டுடன் தொடர்ந்து முடித்துக் கொள்க.

மன்னு திருத்தொண்டர் - தமது திருவடியில் என்றும் நீலத்த திருத்தொண்டினையுடையவர்.

வருத்தம் எல்லாம் தீர்ப்பதற்கு - மேற்கூறிய அவை எல்லாம். இழி பிறவியே தடை என்று அவர் எண்ணி யயர்ந்தபடியினால் அவ்வெண்ணம் நீங்கினலன்றி அவ்வருத்தங்கள் போயின என்று அவர் துணியாராதலின், அதனைப் போக்கும் பரிசு இறைவன் அருளிச் செய்வாராயினர் என்க.

வேதியர்க்கு அவரது திருமேனி நெருப்பிலும் வேகாதது என்று காட்டும் வழி அன்பின் உயர்வையும் சாதியின் இழிவையும் புலப்படுத்தவும் ஆண்டவன் திருவுள்ளம் பற்றினன் என்று இங்கு விசேடவுரை காண்பாருமுண்டு. திருநடங் கும்பிடப் பெறுது மனமழிந்து துயின்ற திருத்தொண்டர் வருத்தந்தீர்ப்பதுவே இங்கு இறைவர் திருவுள்ளமன்றி, வேதியரைத் தெருட்டுதல் கருத்தன்று என்க. "அவர் வருத்தமெலாந் தீர்ப்பதற்கு" என்று ஆசிரியர் காட்டுதலும் காண்க. "இப்பிறவி போய் நீங்க" என்றும், "எரியின்கண் இம்மாயப் பொய்தகையும் உருவொழித்து" (1072) என்றும் கூறிய வாற்றால் நந்தனாரது முன்னைத்திருமேனி நில்லாதொழிந்து, பின்னைப் புண்ணிய மேனியாகப் புதுப்பிக்கப்பட்டதென்பது கருதப்படும். "இப்பிறவி போய் நீங்க" என்றதும், முனிவடிவாகி முந்நூல் விளங்க வேணியுடன் திருமேனி கொண்டு எழுந்தனர் என்றதும் கருதுக. இவை முதலிய காரணங்களால் இவ்விசேட வுரைகள் பொருந்தாதன என்பதாம். இத்தகைய புத்தாராய்ச்சிகளை இப்புராணத்தினுட் புகுத்தி யிடர்ப்படுதல் வழியன்று என்க.

புன்முறுவல் - திருவருள் செய்தற்கண் இளமூரல் அரும்ப வருதல் இயல்பு. "நாய கன்றிரு வுள்ளத்து மகிழ்ந்தே யங்க ணெய்திய முறுவலுந் தோன்ற" (திருக்குறிப்பு - புரா - 152), "திருமுக முறுவல் செய்ய வொன்றிய விளையாட் டோரார்" "அருள்பொழியுந் திருமுகத்தி னணிமுறுவ னிலவெறிப்ப" (சிறுத் - 35) என்பனவாதி பல விடங்களிலும் வருவன காண்க. இத்திருப் புன்முறுவலையே தரிசித்து ஆனந்தமடைய வேண்டுமென்று கொண்டு, "சிரித்த முகங்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே" என்றருளினர் அப்பர்சுவாமிகள். இவ்வாறன்றி, இல்லாத சாதியை உண்டென்றும் அது இழிந்ததென்றும் நந்தனார் தவறுக எண்ணியது கண்டு சாதிகுலங்களெல்லாங் கடந்த நடராசர் சிரித்தனர் என்று இங்கு விசேடவுரை காண்பாருமுண்டு. சாதிகுலம் முதலிய பாகுபாடுகள் உள்பொருள்களேயன்றி இல்லாதவையல்ல. வினைப்பயன்கள் அனுபவத்துக்கு வருங்கால், சாதி, ஆயுப், போகம் என மூன்றால் வரும் என்பது "கன்மநெறி திரிவிதநற் சாதியாயுப் போகக் கடனதென வரும்" என்னும் சிவப்பிரகாச(29)த்தான் உணர்க. அவை இறைவன் அருளிய ஆகம முதலிய நூல்களானும் தமிழிலக்கண வரம்பினாலும் விதிக்கப்பட்டவையே. அவ்விதிவழி மக்கள் நடந்து படிப்படியாக விதிகடந்த மேனிலையடைவர் என்பது சாத்திரம். ஆதலின் தாமே வகுத்த மரபுகளின் விதிவழி நின்று பணிசெய்த நந்தனாரது மனநிலையினைப் பார்த்து இறைவன் இகழ்ச்சிக் தோன்ற முறுவலிக்கக் காரணமில்லை. இத்தன்மையாயின ஆராய்ச்சிகள் பிறழ்ந்தவையாமென்க.

முன் - துயில்பவர் முன்பு.

1068. (வி - ரை) இப்பிறவி - "நீ, இழிந்ததென்றும், மன்றினடம் கும்பிடுதற்குத் தடையாயினதென்றும் கொண்டதாகிய இந்தப் பிறவி" என்க. "புன்னெறியா மமண்சமயத் தொடக்குண்டு போந்தவுடல், தன்னுடனே யுயிர்வாழத் தரியேனான்; றரிப்பதனுக், கென்னுடைய நாயகநின் னிலச்சினையிட் டருளென்று" (திருநா-புரா-150) அப்பர் சுவாமிகள் தமது உடலைத் தூய்மை செய்வதற்காகச் சூலமும் இடபமும் பொறித்தருளும்படி வேண்டிக்கொண்ட சரிதம் இங்கு நினைவு கூர்தற்பாலது.

**முன் அணைவாய்-முன்** - முப்புரிநூல் மார்பர்களுடனே அவர்களின்முன். தீயில் மூழ்கி எழுந்த நந்தனார் திருவம்பலத்துக்கு வரும்போது தில்லைவா ழந்தணர்கள் தம்முடன் செல்ல அவர்களின் முன்னே சென்றனர் என்பது பின் அறியப்படும். (1074 - 1075). **முன்** - நம் முன்பு என்றலுமாம்.

**அப்பரிசே எரிஅமைக்க** - நந்தனாருக்கு அருளிய அந்தப்படியே. நந்தனாருக்குக் கனவில் அறிவித்தருளிய அந்தச் செய்தியின்படியே தில்லைவாழந்தணர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி அருளினார். "பணிகேட்ட தவமறையோர் எல்லாரும்" என மேல் வரும் பாட்டிற் கூறுவது காண்க.

**மெய்ப்பொருள் ஆனார்** - சத்தாயுள்ளவர். உண்மை ஞானத்தின் பொருளாயுள்ளவர் என்றலுமாம்.

"மெய்ப்பொருள்" (481) என்ற விடத்துரைத்தவை பார்க்க.

**அம்பலத்தே மேவினார்** - கனவிற் றோன்றிய நிலையினின்றும் நீங்கித் தமது உண்மையுருவில் மறைந்தருளினார். 28

1069. தம்பெருமான் பணிகேட்ட தவமறையோ ரெல்லாரும்
அம்பலவர் திருவாயின் முன்பச்ச முடனீண்டி
"யெம்பெருமா னருள்செய்த பணிசெய்வோ" மென்றேத்தித்
தம்பரிவு பெருகவருந் திருத்தொண்டர் பாற்சார்ந்தார்." உகூ

(இ - ள்) வெளிப்படை. தமது பெருமானது கட்டளையைக் கேட்ட தவமறையோர்களாகிய தில்லைவா ழந்தணர்கள் யாவரும், அம்பலவாணரது திருவாயிலின் முன்பு அச்சத்தோடு வந்து சேர்ந்து "எமது பெருமான் திருவருள் புரிந்த ஏவலைச் செய்வோம்" என்று துதித்துச்சென்று, தம் அன்பு பெருக வருவாராகிய திருத்தொண்டரிடம் சார்ந்தார்கள்.

(வி - ரை) **தம்பெருமான்** - தில்லைவாழந்தணர்களுள் தாமும் ஒருவராயும் தலைவராயும் உள்ள நடராசர். தில்லைவாழந்தணர் புராணம் பார்க்க.

**அம்பலவர் திருவாயின் முன்பு** - அணுக்கன் றிருவாயிலினை அடுத்துள்ள பேரம்பலத்தின் முன்பு.

**அச்சமுடன் ஈண்டி** - அச்சம் - தம் பெருமானது திருவருட்கு இலக்காகி விளங்கும் இத்தகையதொரு பெரியாரை இதுவரையும் அறிந்துகொள்ளாது புறக்கணித்திருந்தமை பற்றி அஞ்சினார் என்க. நெருப்பு மூட்டி, அதனுள் ஒருவரைப் புகச் செய்தால், திருவருளின் பெருமையையும் ஆணையையும் அறியாத அரசும் குடிகளும் என் சொல்வரோ? இஃது என்னாய் விளையுமோ? என்றஞ்சினர் என்றலுமாம். "உலக றியாரரெனமறைவிற் கொண்டு" காரியஞ் செய்த சிறுத்தொண்ட நாயனார் சரிதவரலாறும், உமாபதியார் நடராசரது கைச்சீட்டுப்படி பெற்றான் சாம்பானுக்குத் தீக்கைசெய்து முத்திகொடுத்த வரலாற்றின் விளைவும் இங்கு நினைவு கூர்க. இது பற்றியே அந்தணர்களும் இங்கு எப்பரிசாயினுமாக; **எம்பெருமான் அருள் செய்த பணிசெய்வோம்** என்று துணிந்து நந்தனாரிடம் சென்றனர் என்க.

தும்பரிவு பெருகவரும் - தமது அன்பு பெருகியதனால் அங்கு வந்து கிடந்த. பெருக - பெருகியதனால் - காரணப் பொருளில்வந்த வினையெச்சம். பரிவுபெருகியது பற்றி 1060 - 1065 பார்க்க.

என்றேகி—என்பதுவும் பாடம். 29

1070. "ஐயரே! யம்பலவ ரருளாலிப் பொழுதணைந்தோம்
வெய்யவழ லமைத்துமக்குத் தரவேண்டி" யெனவிளம்ப,
நையுமனத் திருத்தொண்டர் "நானுய்ந்தே" னெனத்தொழுதார்;
தெய்வமறை முனிவர்களுந் தீயமைத்த படிமொழிந்தார். கூ0

(இ - ள்) வெளிப்படை. "ஐயரே! அம்பலவர் வெவ்விய அழல் உமக்கு அமைத்துத் தரும்படி அருளியபடியால் இப்பொழுது உம்மிடம் வந்தோம்" என்று சொல்ல, நையும் மனத்தினையுடைய திருத்தொண்டராகிய நந்தனார் "நான் உய்ந்தேன்" என்று தொழுதனர். தெய்வமறை முனிவர்களும் அவ்வாறே தீயமைத்த செய்தியைத் தெரிவித்தார்கள்.

(வி - ரை) ஐயரே! - பெருமையுடையவரே!. "ஐயர் நீரவதரித்திட விப்பதி" (திருஞான - புரா - 179) முதலியவை பார்க்க. ஐயர் என்பது பெருமையின்றியும் இடுகுறியளவாய் வேறும் சாதிப்பெயராய் மட்டும் வழங்குதல் பிற்கால வழக்கு.

அம்பலவர் அருளால் இப்போழுது அணைந்தோம் - நீர் பெருமையுடையீர்! ஆனால் உமது பெருமையினை நாங்கள் உணரவில்லை; அம்பலவர் அருளிக் காட்டினர். இப்போழுது - இப்பொழுதாயினும் கண்டு அணையப் பெற்றோம் என்பது குறிப்பு. "காட்டுவித்தா லாரொருவர் காணு தாரே, காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" என்றபடி அவன் உணர்த்த உணர்ந்து இப்பொழுதே யணைந்தோம். அவர் அருளவில்லையேல் இப்பொழுதும் அணையோம் என்றது குறிப்பு.

வெய்யதழலீ - வெம்மை - விருப்பம். இறைவன் விரும்பியருளிய தழல்; அதனால் நீரும் விரும்பிய தழல். பிறர் வெப்பமாக் கொண்டு அஞ்சி ஒதுங்கத்தக்கதும் நீர் விரும்பிப் புகத்தக்கதுமாகிய என்றலுமாம். பிறவியாகிய வெப்பத்தைத் தணிப்பதற்கு உதவும் வெப்பத்தையுடைய என்று ஒப்புமுறை மருத்துவ நூற்கருத்தைக் குறிப்பால் உணர்த்துவதும் காணத்தக்கது. தூணியின் அழுக்கை மற்றும் ஒரு அழுக்காகிய உவர்மண் கொண்டு போக்குவதுபோல நந்தனாரது திருவுள்ளத்தில் இருந்த இழிபிறவி யென்ற அழுக்கினைத் தீயைக்கொண்டு போக்கிக்காட்ட இறைவர் திருவுள்ளம் பற்றினார் போலும்.

தழல் அமைத்துத் தாவேண்டி - இறைவன் ஆணையின்படியே யமைத்துத் தர வந்தோம் என்பதாம். தீயிற் குளித்து வரச் சொன்ன இதனை இறைவர் தில்லை அந்தணர்க்கு அறிவியாது நந்தனாருக்கே அறிவித்துத் தம்மிடம் வரச் செய்திருப்பினும் பொருந்துமே? எனின், இப்பிறவியின் உணர்வுடனே "மன்றினடம் கும்பிடுவதெவ் வண்ணம்?" என்று வருந்திய நந்தனாருக்கு வேள்விச்சாலை, வேதமடம், மூவாயிரம் ஆகுதிகள் என்றிவற்றினிடையே முன்னை இழிபிறவியின் உடல் நீங்கிப், புண்ணிய உடலுடன் போதுகின்றோம் என்ற உணர்வை விளக்கவும், அவ்வுணர்விலெடும் வருதலை உடனிருந்து பார்த்துத் தொண்டரும் ஏனைய உலகரும் அருளின் நிறமும் அன்பின் நிறமும் கண்டு உய்யச் செய்யவும், ஆக இருபாலும் அறிவித்து மறையுவரைத் தீயமைக்கச் செய்தனர் என்க.



சிதம்பரம் ஓமகுளம்

(நந்தனர் தீ மூழ்கி எழுந்த இடம்)

—பாட்டு - 1071 - பக்கம் - கஙஅஎ

நையும் மனம் - திருஅருளின் வெளிப்பாடு கண்டு, "மிகச் சிறிய எளியேன், மிகப்பெரிய பேறு பெற்றேன்" என்றெழுகின்ற உணர்ச்சியினால் "இத்தனையு மெம்பரமோ வைய! ஐயோ! எம்பெருமான் திருக்கருணை யிருந்த வாறே" என்று எண்ணி உருகி நைந்த மனம். நைதல் - உருத்தெரியாதபடி இளகுதல்.

**நான் உய்ந்தேன்** - இழிபிறவி போய் நல்லுடம்பு பெற்றுத் தில்லை மறையோர் சூழத் திருமன்று கும்பிடும் பேறு வாய்க்கும் உறுதிகொண்டு உய்ந்தேன் என இறந்த காலத்தாற் கூறினர். இறைவன் திருவருளைக் கனவிற் கண்டபடி அதனை நிறை வேற்ற நனவில் மறையவர் வந்தது கண்டு உய்ந்தேன் என்றார் என்றலுமாம்.

**தீ அமைத்தபடி மொழிந்தார்** - நந்தனாரின் திருவுள்ளத்தின் இசைவு பெற்ற அந்தணர் சென்று அவ்வாறே அமைத்த செய்தியை அறிவித்தனர். இறைவனது அருட்டிரு உள்ளத்தையும், அந்த அருளைப்பெறப் பக்குவப்பட்ட உயிரினையும் கண்ட போது உரிய செயல் செய்து அவ்வுயிரினைத் திருவடியிற் கூட்டுவிக்கும் ஆசாரியன் போன்று இங்குத் தில்லை வேதியர்கள் நின்றனர் என்ற உண்மையும் உணர்தற் பாலது. நடராசர் இவர்களுள் ஒருவரே யாவர் என்றதும் கருதுக. 30

1071. மறையவர்கண் மொழிந்ததற்பின் றென்றிசையின் மதிற்புறத்துப்
பிறையுரிஞ்சுந் திருவாயின் முன்னைகப் பிஞ்ஞகர்த
நிறையருளான் மறையவர்க ணேருப்பமைத்த குழியேய்தி
யிறையவர்தாண் மனங்கொண்டே யெரிசூழ வலங்கொண்டார், ஙக

1072. கைதொழுது நடமாடுங் கழலுன்னி யழல்புக்கார்;
எய்தியவப் பொழுதின்க ணெரியின்க ணிம்மாயப்
போய்தகைய முருவோழித்துப் புண்ணியமா முனிவடிவாய்
மெய்திகழ்வெண் ணூல்விளங்க வேணிமுடி கொண்டெழுந்தார். ஙஉ

1071. (இ - ள்) வெளிப்படை. மறையவர்கள் அவ்வாறு அறிவித்தபின், தென்றிசை மதிற்புறத்தில் உள்ள வான மதிதடவ வுயர்ந்த திருவாயிலின் முன், சிவபெருமானுடைய நிறைந்த பேரருளினால், மறையவர்கள் நெருப்பினை அமைத்த தீக்குழியினை அடைந்து, இறைவரது திருவடிகளை மனத்துட் கொண்டே எரியினைச் சுற்றி வலமாக வந்தவராகி, ஙக

1072. (இ - ள்) வெளிப்படை. கைகளைக் கூப்பித்தொழுது, ஐந்தொழிற் றிருக்கூத்தியற்றியருளும் திருப்பாதத்தை நினைந்து தீயினுட் புகுந்தார்; சேர்ந்த அப்பொழுது தீயினிடத்து இந்த மாயா காரியமாகிய பொய் பொருந்திய உருவினை ஒழித்துப் புண்ணிய உருவமுடைய முனிவர் வடிவம்கொண்டு, மார்பில் வெண்புரிநூல் விளங்கச் சடைமுடியும் கொண்டு மேலெழுந்தனர். ஙஉ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

1071. (வி - ரை) தென்றிசையின்...எய்தி - மறையவர்கள் தீயினை எவ்விடத்து அமைத்தார்கள் என்பது முன் சொல்லாது இங்குக் கூறினர். தில்லையந்தணர் தீயமைத்த போது இதனைக் கூறியிருப்பின் அவ்விடத்து அவ்வந்தணர்மட்டும் காணப்படுவர். நந்தனாரும் அந்தணரும் தொண்டர்களும் இறைவன்திருவருள் வெளிப்பாடும் உடன் காணப்படும் இப்போது அவ்விடத்தினைக் காட்டுதல் சிறப்பும் தகுதியுமாமாதலின் முன்னர்க்கூறாது வைத்துப் பின் கூறினரென்க. இஃது ஆசிரியர்க்கே உரிய தெய்வக் கவிச் சிறப்பமைதிகளுள் ஒன்று.

தென்திசை மதிற்புறத்து - திருவாயின் முன் - நெருப்பமைத்த குழி - ஓமகுளம் என்ற பெயருடன் ஒரு திருக்குளமாக இன்றும் வழங்கி வருகின்ற குளம் இக்குழி யிருந்த இடமென்பர்.* அவ்வளவில் தென்புறம் திருமதிலும் அதன் திருவாயிலும் முன் காலத்திருந்தது போலும்.

பிறை உரிஞ்சும் திருவாயில் - திருவாயிலின் உயர்ச்சி குறித்தது.

நிறை அருளால் - நிறை - நந்தனார் பாலும் மறையவர் பாலும் நிறைந்த. இனி, இத்திருவருள் கேட்டு உய்யும் எண்ணிறந்த உயிர்களின் மேலும் எக்காலத்தும் நிறைவ தாதலின் நிறை என்று முக்காலத்துக்கும் பொதுவாகிய விளைத்தொகையாற் கூறினர்.

இறையவர்தாள் மனங்கொண்டே - இது நந்தனார் தீயினை வலங்கொண்டபோது மனத்துட்கொண்டது. மேல் வரும்பாட்டில் கழல் உன்னி என்றது தீயினுட்புகும் போது மனத்துட்கொண்ட நிலை.

கழல் நினைந்து வலம் வருதலும் தீயினுட்புகுதலும் என்னை? எனின், அருளின் வயப்பட்டு அதனுள் தம்மையே முழுதும் ஒப்புவிக்கும் பெருஞ்செயலிற் புகும்போது, பிறிதொன்றினையும் மனத்தில் வையாது இறைவன் கழல்களையே சிந்தித்தல் வேண்டு மென்பதாம். "அஞ்செழுத் தோதினு ரேறினர் தட்டில்" (554) "அஞ்செழுத் தோதிப் பாற்றடம்புனற் பொய்கையில் மூழ்கினர் பணியால்" (திருநா - புரா - 370), "அஞ் செழுத்தை, வாய்ந்த தொண்ட ரெடுத்தோதி மணிநீர் வாவி முழுகினர்" (தண்டி - புரா - 19) என்பனவும், பிறவும் பார்க்க. (அஞ்செழுத்துச் சிவநாமமேயாம்). இங்கு நந்தனார் அஞ்செழுத்தைப் பயிலப்பெருமையின் அதன் குறிக்கோளாகிய நடமாடுங் கழலினை உன்னித் தீயினை வலம் வந்து அதனுட்புகுந்தனர் என்க.

எரிசூழ வலம் கொண்டார்-அத்தீ, இறைவனது ஆணையால் வளர்க்கப்பட்டதாத லானும், அது தமது இழிபிறவியை நீக்கி மன்றினடம் கும்பிடும் புண்ணிய உடல்தரும் சிவசாதனமாகுவதென்று கொண்டனராதலானும் அதனை வலங்கொண்டார் என்க. "தனித்துலை வலங்கொடு" (543) என்றதும், இவ்வாறு வரும் பிறவும் காண்க. 31

1072. (வி - ரை) கைதொழுது - என்றதனால் உடம்பால் வணக்கமும், கழல் உன்னி என்றதனால் மனத்தால் வணக்கமும் கூறப்பட்டன. வாழ்த்துச் சொல்லுத லாகிய வாக்கின்முழில் நிகழ்த்தற்கியைபில்லை யாதலின் கூறாது விடுத்தனர். அன்றி இனம்பற்றி உடன்கொள்ளுதலுமாம். "நான் உய்ந்தேன்" என முன்னரே தோத் திரித்தார் என்று கொள்ளுவதுமையும்.

அழல்புக்கார் - "எரியினிடை மூழ்கி" (1068) என்று இறைவர் ஆணை யிட்டனராதலின் அவ்வாறே தீயின் மூழ்குவாராய் அழலினுட்புகுந்தனர்.

பொழுதின்கண் - எரியின்கண் - (மாயப் பொய்யுரு வொழித்த) காலமும் இட மும் குறித்தபடி. கண் - ஏழனுருபு.

இம்மாயப் போய்தகையும் உரு ஒழித்து - பொய் பொருந்திய மாயாகாரிய மாகிய இந்த உடல். போய் - சாதி குலம் பிறப்பு என்று அபிமானம் செய்தற்குரிமை யும் நிலையாமையும் கருதியது. நந்தனார் புலை உருவாய இழிபிறவி என்று கருதிய அவ் வுடலை ஒழித்தனர் என்பதாம்.

புண்ணியம் ஆம் முனி வடிவாய் - பொய் உடலைத் தீயில் ஒழித்த நந்தனார் மெய் உடலாம் புண்ணிய முனி வடிவம் பெற்றுத் தீயினின்றும் எழுந்தனர் என்க.

---

* இத்தீர்த்தத்தினை அடுத்து நந்தனார் திருக்கோயிலும் உண்டு. மற்றும் அம் மரபினரால் அமைக்கப்பட்டும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தீயில் உடல்விட்ட நீலி ஒவ்வோருயிரும் எய்தியே தீர்தல் வேண்டுமென்றும், இங்கு அஞ்ஞான உடல்போய் ஞான உடல் வந்ததென்றும், புலி உடல்போய் மறையவர் உடல் வந்ததென்று கொள்ளற்க என்றும் இங்குப் பலவாறு விசேட ஆராய்ச்சியுரை காண்பாருமுண்டு. அவை பொருந்தாமை மேற்காட்டப்பட்டது. பின்னரும் காட்டப்படும். முன்னர்ப் பிறவியிலும் ருமே தடையுண்டுநின்ற நந்தனார், வெண்ணூலும் வேணிமுடியும் கொண்டு எழுந்தபோது தாம் மன்றினடம் கும்பிடத் தடையாய்நின்ற இழிபிறவிநீங்கி அதற்குத் தகுதியாகிய திருவுடல் பெற்றவராய் எண்ணியே திருமன்றில் ஆடுகின்றகழல் வணங்க வருவாராகுவர். "மண்ணிலிரு வினைக்குடலாய் வானிரயத் துயர்க்குடலா, யெண்ணிலுட லொழியமுய லிநந்தவத்தா லெழிற்றில்லைப், புண்ணியமன் றினிலாடும் போதுசெயா நடங்காண, நண்ணுமுட லிதுவன்றே நமக்குடலாய் நயந்தவுடல்" என்ற கோயிற்புராணத் திருவாக்கின் (பாயிரம் - 14) கருத்துப்படி நின்றது அவர்தம் மனநிலை. இறைவர் வகுத்த ஆகமமுதலிய அறநூல் விதிவழிபாட்டு நியதியும் முட்டுப்படாது முற்றுப் பெறுவதாயிற்று என்பதும் காண்க.

**வெண்ணூல்** - முப்புரியாகிய வெள்ளிய பூணூல். **வேணிமுடி** - சிரத்திற்முங்கிய சடைமுடி. **சடை** - சைவத்தின் சிறந்த அடையாளம்.

**முந்நூல் விளங்க**—என்பதும் பாடம். 32

1073. செந்தீமே லெழும்பொழுது செம்மலர்மேல் வந்தெழுந்த
வந்தணன்போற் ரோன்றினா ; ரந்தரதுந் துபிநாதம்
வந்தெழுந்த துயர்விசும்பில் ; வானவர்கண் மகிழ்ந்தார்த்துப்
பைந்துணர்மந் தாரத்தின் பனிமலர்மா ரிகள்பொழிந்தார். நக

(இ - ள்) வெளிப்படை. அவ்வாறு செந்தீயின் மேல் வந்து எழுகின்றபோது செம்மலரின் மேல் வந்து எழுந்த அந்தணன் போலத் தோன்றினர்; அப்பொழுது பெரிய ஆகாயத்தில் வான துந்துபி முழக்கம் எழுந்தது; தேவர்கள் மகிழ்ந்து ஆரவாரித்துப் புதிய இதழ்களை உடைய மந்தாரத்தின் புது மலர்மழை பொழிந்தனர்.

(வி - ரை) **செந்தீ** - செம்மலருக்கும், **தீயின் எழுந்த நந்தனார்** - செம்மலர் மேல் எழுந்த அந்தணனுக்கும் உவமை. **செம்மலர்** - திருமாலின் செந்தாமரை போன்ற உந்தித் தாமரை. **வந்தெழுந்த அந்தணன்** - பிரமதேவன். படைப்புக் காலத்தில் மாலின் உந்தியினிடத்திருந்து பிரமன் தோன்றுவான் என்பது நூன் முறை. முன்னை இழிபிறவியின் பொய்தகையும் (மாய) உருவொழித்துச், சிவபிரான் அருட் சிருட்டியிற்பட்டு, முனிவடிவாய் வருதலின் சிருட்டிக் காலத்தில் உலகம் படைத்தற் பொருட்டு உண்டாக்கப்பட்டு வரும் பிரமனைப் போன்று நந்தனார் விளங்கினர் என்றபடி. மெய்யும் வினையும் பற்றி வந்த உவமம்.

**எழும் பொழுது**-என்றதனால் தீயின்மேல் எழுகின்ற அப்போது. அந்த அளவில்.

**தோன்றினார்** - எழும் பொழுது அத்தோற்றத்துடன் விளங்கினர். பின்னர் மன்றினடம் கும்பிடச் சென்றணையும்போது இவ்வுவமை செல்லாதென்பது குறிப்பு. பின்னர்ப் பிரமன் இவருக்கு ஒப்பாகான் என்பது கருத்து.

**அந்தர துந்துபி நாதம்வந்து எழுந்தது** - என்க. திருவருள் வெளிப்பாட்டினால் தேவதுந்துபிகள் தாமே முழங்கின என்பதாம்.

**மந்தாரம்** - தேவருலகத்துள்ள ஏழுமரங்களுள் ஒன்று.

**மாரிகள்** - பல இடத்தும், பலகாலமும் என்று குறிக்கப் பன்மையிற் கூறினர். 33

1074. திருவுடைய தில்லைவா ழந்தணர்கள் கைதொழுதார் ;
பரவரிய தொண்டர்களும் பணிந்துமனங் களிபயின்றூர் ;
அருமறைசூழ் திருமன்றி லாடுகின்ற கழல்வணங்க
வருகின்றூர் திருநாளைப் போவாரா மறைமுனிவர். நச

1075. தில்லைவா ழந்தணரு முடன்செல்லச் சென்றெய்திக்,
கொல்லைமான் மறிக்கரத்தார் கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி,
யொல்லைபோ யுட்புகுந்தா ; ருலகுய்ய நடமாடும்
எல்லையினைத் தலைப்பட்டார் ரியாவர்களுங் கண்டிலரால். நடு

1074. (இ - ள்) வெளிப்படை. (உடனிருந்து கண்ட) திருவுடைய தில்லைவா ழந்தணர்கள் கைகூப்பித் தொழுதனர். போற்றற்கரிய சிறப்புடைய திருத்தொண் டர்கள் பணிந்து மனமிகக் களிப்படைந்தனர் ; அரிய வேதங்கள் சூழ்ந்து அதிக்கும் திருமன்றினிடத்தில் அருட்பெருந் திருக்கூத்தாடுகின்ற திருப்பாதத்தை வணங்கும் பொருட்டுத் திருநாளைப் போவாராகிய மறைமுனிவர் வருகின்றூர் ; நச

1075. (இ - ள்) வெளிப்படை. தில்லைவா ழந்தணர்களும் உடன்வரச் சென்று திருநகரத்தின் உள்ளே சேர்ந்து, கொல்லை மானை ஏந்திய கையினையுடைய சிவபெருமானது திருக்கோபுரத்தைத் தொழுது வணங்கி விரைந்துபோய் உள்ளே புகுந்தனர். உலகெலாம் உய்யும் பொருட்டு அருட் கூத்தாடுகின்ற எல்லையினைத் தலைப்பட்டனர். அதன்பின் அவரை யாவரும் கண்டிலர். நடு

1074. (வி - ரை) திருவுடைய தில்லைவா ழந்தணர் - "உலகுக்கெல்லாம் திருவுடை யந்தணர்" என்றது திருவிருத்தம் (கோயில் - 2). "திருநடம் புரிவார்க் காளாந் திருவினும் பொலிந்த சீரார்" (354) என்றவிடத் தரைத்தவை பார்க்க.

கை தொழுதார் - கனவினிடைப் பெருமான் அருள் செய்தபின், முன்பு மதிற் புறத்திலே நந்தனரைக் கண்டபோது, "இது என்னுமோ" என்றச்சம் தோன்றச், செய்வதறியாது நின்ற அந்தணர்கள், திருவருள் வெளிப்பாட்டின் அற்புதத்தைக் கண்டவுடனே கைதொழுதனர் என்பதாம். தொண்டர்கள் கீழ் விழுந்து பணிந்து மிக்க களிப்பில் மூழ்கினர்கள் என்க.

அருமறை சூழ் திருமன்று எனவும், அருமறை சூழ் கழல் எனவும் கூட்டி உரைக்க நின்றது. "மன்றுளாடு மதுவின் னசையாலே மறைச்சு ரும்பறை புறம்" (242), "மறைச் சிலம் பரற்ற" (251) என்றவிடங்களிலுரைத்தவை பார்க்க.

ஆடுகின்ற கழல் - குஞ்சிதபாதம் ; எடுத்த திருவடி. இக்கூத்து எக்காலத்தும் நிகழ்ந்துகொண்டே யிருப்பதாதலின் ஆடுகின்ற என நிகழ் காலத்தாற் கூறினர். "உலகுய்ய நடமாடும்" என, மேல்வரும் பாட்டிற் கூறுவதுங் காண்க.

கழல் வணங்க வருகின்றூர் - இதனையே ஆதனூரில் தாம் தங்கிய காலம் முதல் பல நாள்கள் கருதியிருந்தாராதலின் பலநாட்டங்கிய உள்ளக்கிடை மூற்றுப்பெறும் அளவில் ஆர்வத்தோடு வருவாராயினர் என்பதாம்.

வருகின்றூர்-நாளைப்போவேன் என்று முன்னர் எதிர்காலத்துப் பன்னுள் கருதி யிருந்த பொருள், நிகழ்காலத்துக் கைகூடக் கிடைத்த பேற்றினை வருகின்றூர் என்று வினைமுடிபினும் சுவைபடக் கூறிய அழகு காணத்தக்கது.

மறை முனிவர் - 1072-ல் எழுந்த திருக்கோலக் குறிப்பு.

1075. (வி - ரை) அந்தணரும் உடன் செல்லச் சென்றெய்தி - திருவருள் பணித்த வழியே செய்து தீயமைத்துக் கொடுத்த மட்டில் நின்று வேறுசெயலறியாது நின்றவர்களாகிய அந்தணர்களும் என்க. தீ மூழ்கி முனிவராயெழுந்த நந்தனார், மன்றினடங் கும்பிடத் தடையென் றெண்ணியிருந்த இழிபிறவி போய் நீங்கக்கண்ட வுடன் தடையின்றி வேறுரென்றினையும் எதிர் நோக்காது நேரே செல்வாராயினர்; அது கண்டு அந்தணர்களும் பின் தொடர்ந்தனர் என்பதும் குறிப்பாம். அகம்படித் தொண்டுசெய்யும் அந்தணர்களும் என்று உயர்வு சிறப்பும்மையாக்கியும், தாம் உடனிருந்தேயும் நந்தனார் நடமாடும் எல்லையினைத் தலைப்பட்டு மறைவதனைக்காண இருக்கும் அந்தணரும் என எதிரது தழுவிய எச்சவும்மை யாக்கியும் உரைத்தலுமாம்.

கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி - இது தெற்குக் கோபுரம். ஆதனூரினின்றும் வருகின்றவர் தெற்கு எல்லையினைக் கடந்து தெற்குமதிற்புறத்துத் தங்கினர்; தென்திரு வாயிலைக் கடந்து தெற்குக் கோபுரத்தின்வழி உள்ளே செல்கின்றார் என்பதாம். ஆளுடைய பிள்ளையாரும் இத்திருவாயிலின் வழியே போந்தருளினர் என்பது பின்னர் உணரப்படும்.

கோல்லைமான் மறிக்கரத்தார். கோல்லைமான் - என்பது "புற்றில் வாளரவு" என்பது போல மானுக்குச் சாதிபற்றிய இயற்கையடைமொழி. இறைவர் திருக் கரத்தில் இருப்பது கொல்லையில் மேய்வது என்பதன்று. அது இருடிகளின் யாகத்தில் எழுந்து எவப்பட்டது என்ற சரிதம் மாபுராணங்களுட் காண்க.

ஒல்லைபோய் உட்புகுந்தார் - பலகாலம் தடைப்பட்டுச் சிறையிட்ட நீர் கரை யுடைந்தபோது வெளியேறும் வேகம்போல நந்தனார்க்கு இழிபிறவி என்ற எண்ணத் தினுற் றடுக்கப்பட்டு மென்மேல் எழுந்து மூண்டு நின்ற ஆர்வத்தின் தீவிரம் குறிக்க ஒல்லைபோய் என்றார்.

உட்புகுந்தார் - நடமாடும் எல்லையினைத் தலைப்பட்டார் - திருவாயிலினையும் திருக்கோபுரத்தினையும் கடந்தபின், திருவீதி வலமா வருதலும், திருமாளிகை, பேரம்பலம், முதலியவற்றைத் தொழுதலுமாகிய முறையிலே திருவணுக்கன்திரு வாயிலினைக் கடந்து திருச்சிற்றம்பலத்தின் திருமுன்பெய்தி நடன சபேசனைக் காணுதல் வழிபாட்டு முறையாகும். நமது பரமாசாரிய மூர்த்திகள் தரிசித்த முறைகளை ஆசிரியர் சேக்கிழார் பெருமான் காட்டக் கண்டு கொள்க. அவ்வாறின்றி இந்நாயனார் கோபுரத்தைத் தொழுது கடந்தவுடன் விரைந்து சென்று நடமாடும் எல்லையினைத் தலைப்பட்டார் என்பதும் இவரது தீவிரத்தைக் குறித்தது. அன்றியும் "இப்பிறவி போய்நீங்க எரியினிடை நீமூழ்கி.....அணைவாய் (1068) என்று இறைவர் அருளியவாற்றுல் இப்பிறவி நீங்கப்பெற்ற இவர்க்கு இறைவரை அணைதல் ஒன்றே எஞ்சி நின்றதாதலின் விரைவில்சென்று தலைப்பட்டு மறைந்தனர் என்பதுமாம். இவ்வாறே திருவருட் சிருட்டியில் மீளத் தோற்றிய பூம்பாவையாரும் "கன்னி மாடத்து வைத்தனர், தேனமர் கோதையும் சிவத்தை மேவினுள்" (திருஞான-புரா-1118) என்றபடி விரைவிற் சிவனையடைந்த செய்தியும் இங்கு நினைவு கூர்தற்பாலது.

உலகுய்ய நடமாடும் எல்லை - "அலகில் கலையின் பொருட்கெல்லை ஆடுங் கழலே" என்ற சண்டீசநாயனார் புராணங் காண்க. எல்லை - திருவடி. எல்லாப் பொருள்களுக்கும் முடிவிடமாயுள்ளதாதலின் திருவடி எல்லை எனப்பட்டது.

தலைப்பட்டார் - கூடினர் - கிடைத்தனர்-அடைந்தனர். தாடலைபோலத் திருவடி யிற் றலைபொருந்தப்பெற்று ஒன்றுயினர் என்ற குறிப்பும்காண்க. "தருவாய் எனக்குன் திருவடிக் கீழோர் தலைமறைவே" (அப்பர் சுவாமிகள் - திருவிருத்தம்) என்றபடி அத்

திருவடியின் கீழே தலை மறைவு கிடைக்கப்பெற்றார் என்க. "முக்கண்ணன் பாத நீழல் உள்ளிடை மறைந்து நின்றவங் குணர்விஞல் எய்யலாமே" (திருநேரிசை) என்றபடி எல்லையினுள்ளே தலைப்பட்டனர் என்பதாம்.

யாவரும் கண்டிலர் - நடமாடும் எல்லையாகிய திருச்சிற்றம்பலத்தின் திருவடியைத் தலைப்பட்டுத் திருவருள் வியாபகத்தில் இரண்டறக் கலந்து மறைந்தனர். உடன் இருந்து, புகுதலைக்கண்ட மற்றை யாவரும் மேற்காண முடியாதவராஞர். "ஈறிலா அறிவா னந்தத், தேசுடன் கலந்து நின்றார் சிவனருள் விளக்க வந்தார்" (மண்சுமந்த படலம் 114) என்ற திருவிளையாடற் புராணத்தாலும், "மன்றதனிற் கடிதேகி மறைந்தாரங் கவர்காண" (28), "கைகாட்டித் தம்முருவங் காட்டாமன் மறைந்தார்.....பாலுடனே மேவியநீ ராயினர்" (29) என்ற திருவாதவூரர் புராணத்தாலும் அறியப்படுகின்ற மணிவாசகப் பெருமானுரது சரிதவரலாறு இங்குச் சிந்திக்கற்பாலது. 35

1076. அந்தணர்க ளதிசயித்தா ; ரருமுனிவர் துதிசெய்தார் ;
வந்தணைந்த திருத்தொண்டர் தம்மைவினை மாசறுத்துச்
சுந்தரத்தா மரைபுரையுந் துணையடிகொ டொழுதிருக்க
வந்தமிலா வானந்தப் பெருங்கூத்த ரருள்புரிந்தார். ஙசு

(இ - ள்) வெளிப்படை. அந்தணர்கள் அதிசயித்தனர் ; அரிய முனிவர்கள் துதித்தனர் ; தம்மை வந்தடைந்த திருத்தொண்டரை வினைமாசு அறுத்து அழகிய தாமரை போலும் துணையடிகளைத் தொழுதுகொண்டு இருக்கும்படி அந்தமில்லாத ஆனந்தப் பெருங் கூத்தராகிய அம்பலவாணர் திருவருள் புரிந்தார்.

(வி - ரை) அதிசயித்தார் - "அருளும் மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய அதிசயம் கண்டாமே" என்ற திருவாசகக் கருத்தினை உன்னுக. உள்ளே புகுந்தாரது உருவம் காணமுடியாதபடி மறைந்தது கண்டவர்கள் அஃது இன்னதென்றறிய முடியாத தொரு பெருமித உணர்ச்சி பெற்றனர். அதுவே அதிசயம் எனப்படுவதாம்.

வந்தணைந்த திருத்தொண்டர் - நாளைப்போவார் என்று எதிர்கால நிகழ்ச்சியாய் இருந்தது, வருகின்றார் என முன்னர் நிகழ்கால நிகழ்ச்சி ஆயிற்று. அதுவும் முற்றுப் பெற்று நிறைவாகியதனால் வந்து அணைந்த என இறந்தகாலத்தாற் கூறப்பட்ட நயம் காண்க. அணைந்த - கூடிய, சேர்ந்த. "அணைவாய்" என்ற (1068) ஆணையின்படி அணைந்த என்க. உயிரும் இறைவனும் சித்தாகிய ஒப்புடைப் பொருள்கள். ஆதலின் இவையே ஒன்றேடொன்று அணையத்தக்கன. "அணைந்தோர் தன்மை" என்பது சாத்திரம்.

வினைமாசு அறுத்து - வினையினையும் மாசினையும் அறுத்து. எண்ணும்மைகள் தொக்கன. வினை - இருவினை. கன்மமலம். இங்கு வினை என்றது மூலகன்மத்தை. இதனை அறுத்து என்றது போக்கி என்ற பொருளில் வந்தது. மாசு ஆணவமலம். அறுத்து என்றது வலிகெடச் செய்து என்ற பொருளில் வந்தது. மும்மலங்களுள் மாயாமலம் அறுபட்டதனை "இம்மாயப் பொய்தகையு முருவொழித்து" எனவும், "புண்ணிய மாமுனி வடிவாய்" எனவும் கூறினர். ஆதலின் ஏனை இரண்டும் அறுத்தவகையினை இங்கு கூறினர். "சாருமல மூன்றுமற" (803) என்றவிடத்து உரைத்தவை காண்க. "எல்லையில் பிறவி நல்கும் இருவினை எரிசேர் வித்தின், ஒல்லையின் அகலு மேன்ற உடம்பழ வினைய தூட்டும், தொல்லையில் வருதல் போலத் தோன்றிரு வினைய துண்டேல், அல்லொளி புரையு

ஞானத் தழலுற அழிந்து போமே" (89) என்ற சிவப்பிரகாசத் திருவாக்கும் இங்குக் கருதத்தக்கது.

அந்தமிலா ஆனந்தப் பெருங்கூத்தர் - தில்லை நடனங் கூற நேர்ந்த இடமெல் லாம் இவ்வாறு கூறித் தினைத்து நிற்பது ஆசிரியர் மரபு. "ஆனந்த வெள்ளத்தி னிடை மூழ்கி அம்பலவர், தேனுந்து மலர்ப்பாதத் தமுதுண்டு" (திருநாவுக்கரசு - புரா - 101) "ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின், வந்தபே ரின்ப வெள்ளம்" (252) முதலியவை காண்க. "அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே" என்ற திருவாசகத்தினை இது நினைவுறச் செய்தலையும் காண்க. பெருங்கூத்தர் - இது ஒப்பதாகிய கூத்துப் பிறிதில்லையாதலின் பெருங்கூத்தென்றார். "தனிப்பெருங்கூத் தின்" என்றதும், பிறவும் காண்க. 36

1077. மாசுடம்பு விடத்தீயின் மஞ்சனஞ்செய் தருளியெழுந்
தாசின்மறை முனியாகி யம்பலவர் தாளடைந்தார்
தேசுடைய கழல்வாழ்த்தித் திருக்குறிப்புத் தொண்டர்வினைப்
பாசமற முயன்றவர்தந் திருத்தொண்டின் பரிசுரைப்பாம். கூஎ

(இ - ள்) வெளிப்படை. மாசு பொருந்திய உடம்பினை விடும்பொருட்டுத் தீயிலே குளித்தருளி மேல் எழுந்து குற்றமற்ற மறைமுனிவராகி அம்பலவாணரின் திருவடியடைந்தாரது தேசுடைய திருவடிகளை வாழ்த்தி, அத்துணையானே, திருக் குறிப்புத்தொண்டர் என்கின்ற வினைப்பாசம் போக்க முயன்றவருடைய திருத் தொண்டின் பரிசினை இனி உரைப்போம்.

(வி - ரை) ஆசிரியர் தமது மரபின்படி இதுவரை கூறிவந்த சரிதத்தை வடித்து முடித்துக் காட்டி வருஞ் சரிதத்திற்குத் தோற்றுவாய் செய்கின்றார்.

மாசுடம்பு - மன்றினடங் கும்பிடத் தடைசெய்த "இன்னல்தரு மிழிபிறவி" என்று தாம் எண்ணிய குற்றமுள்ள உடல். மாசு உடம்பு - மாயா வுடம்பு எனவும், இது எல்லார்க்கும் இருப்பதென்றும் உரைகொள்வாருமுண்டு. எல்லா உடம்பும் மாசுடம்பு என்பது ஒருவகையில் உண்மையேயாயினும் இங்கு நந்தனார் கொண்டதாக ஆசிரியர் கருதிவைத்த பொருள் அதுவன்று. "உறுகுலத் தோடிசைவில்லை" (1061), "அல்குந்தங் குலநினைந்தே" (1063), "எனக்கெய்த லரிது" (1065), "இழி பிறவி யிதுதடை" (1067) எனவரும் இடந்தோறும் நந்தனார் தமது புலைக்குல உடம் பினையே கருதி வருந்தினர் என்பதறியப்படும். அதனை விட்டுத் தடையின்றி மன்றி னடங் கும்பிடும் நல்லுடம்பு பெறுதற் பொருட்டே திரு அருளின்படித் தீக்குளித்தா ராதலின் அப்பொருள் பொருந்தாதென்க.

தாளடைந்தார் - "நடமாடு மெல்லையினைத் தலைப்பட்டார்" என்ற அந்தணிலை.

தேசு - ஒளி. தேசுடைய கழல் என்றது அருளொளியிற் கலந்து திகழும் திருவடி என்றபடி. (இதனை) வாழ்த்தி (அதனை) உரைப்பாம் என்றதனால் வாழ்த்துவதனாற் பெற்ற அருளின் துணைகொண்டு உரைப்போம் என்றதாம். இவ்வாறே எங்கும் கொள்க.

திருக்குறிப்புத் தொண்டர் வினைப் பாசமற முயன்றவர் - திருக்குறிப்புத் தொண்டர் என்ற பெயரினையுடையராய், வினைப்பாசத்தை அறுக்கும்படி முயன்றவர் என்க. திருக்குறிப்புத் தொண்டர்-காரணப் பெயர்; மேல்வரும் புராணம் 112 பாட்டுப் பார்க்க. அற - அறுக்க.

பாசமற முயன்றவர் - இதனை அப்புராணம் 114-ல் விரித்துரைத்தமை காண்க.

மாசுடம்புவிட...தாளடைந்தார் - இது இச்சரிதச் சுருக்க விளக்கம். நடனங் கும்பிடத் தடையாயிருந்த உடலைப் போக்க ஒரு சிறிதும் அச்சமின்றி உடற்பற்று முற்றும் விட்டுத் தீ மூழ்கியதும், இறைவனது திருநடங் கும்பிடும் பற்றையே பற்றி உடலை வெறுத்ததுவுமே இச்சரித தத்துவமாகும். "சார்புணர்ந்து சார்புகெட வொழுகின்" என்ற திருக்குறளினைக் கருதுக. இதுவே அம்பலவர் தாளடைதற்கு ஏதுவாயினது என்பதாம். இனி மேல்வரும் சரிதமுடைய பெரியார், தொண்டர் களின் குறிப்பறிந்து பணி செய்தனர் என்றும், அது தமது வினைப்பாசம் போதற் பொருட்டே கருதி முயன்றனர் என்றும் வரலாறுகூறித் தோற்றுவாய் செய்த படியாம்.

முயன்றவர்செய்—என்பதும் பாடம். 37

---

சரிதச் சுருக்கம்:—சோழ நாட்டில் கொள்ளிடக்கரையில் செழித்த வயல்களாற் சூழப்பெற்ற பழைய வளம்பதி ஆதனூர் என்பதாம். அதனைச்சுற்றிலும் செழித்த நெல் வயல்களும், பூஞ்சோலைகளும் தென்னை, மா, பலா முதலிய மரவருக்கங்களடர்ந்தசோலை களும் உண்டு. அது, குடி நெருக்கமுடைய மாடங்களுடையது. அதன் பக்கத்தே வழி வழியாய் உழவுத் தொழில் செய்வோராகிய பெரும் கிளைஞர் நெருங்கிய பழஞ்சிற்றில் பல உடையதொரு புலைப்பாடி உண்டு. இப்புலைச்சேரியில் வாழ்வோர் நாய்களையும் கோழிகளையும் வளர்ப்பர். அவர்களது சிற்றில்களைச் சூழத் தென்னைமரங்களும் மருதமரங்களும் வஞ்சிமரங்களும் உள்ளன. புலைமகளிர் நெற்குத்தும் தொழிலும் செய்வர். கள்ளுண்டு பறை கொட்டி அதற்கிசையப் பாடி யாடிக் காலங் கழித்தல் இவர்கள் பொழுதுபோக்கும் வகைகளாம்.

இவ்வாறுகிய புலையர் சேரியில் அவ்வூர்ப் புலைத்தொழிற் முயவரிமையுடைய குடியில் சிவன் திருவடிக்கே முற்பிறப்பில் விளைவித்த உணர்ச்சியுடன் நந்தனூர் என்ற பெரியவர் அவதரித்தார். உணர்வு வந்த நாள் முதல் அவர், சிவபெருமா னிடத்து வைத்த ஆசையினாலே, செம்மைபுரி சிந்தையினராகி, மறந்தும் வேறு நினைவில்லாமல், தமது குலப்பிறப்பின் வழிவந்த குல அறத்தின் வழி நின்றவராகியே திருத்தொண்டின் வழியிலும் ஒழுகுவாராயினர். ஊரில் விடுகின்ற பறைத்தொழிலுக் குரிய மானிய வருவாயினால் தாம் உணவுண்டு வாழ்வார். திருத்தொண்டினிற் றலைசிறந்து விளங்கினர். சிவபெருமானது திருக்கோயில்களில் பேரிகை முதலிய முகக்கருவிகளுக்குப் போர்வைத்தோல், விசிவார் முதலியன கொடுத்தும், வீணைக்கும் யாழுக்கும் தந்திரிகள் கொடுத்தும் இவ்வாறு திருப்பணி செய்து வந்தனர். கோயில் களின் புறத்தே நின்று மிக்க அன்பினால் ஆடுதலும், பாடுதலும் புரிந்து மகிழ்ந்தனர்.

திருப்புன்கூர்ச் சிவலோகநாதரை மிகவும் நினைந்து விருப்பத்தோடும் ஆதனூரி னின்றும் புறப்பட்டு மிக்க காதலினால் அங்கு அணைந்தனர். திருவாயிற்புறத்தே நின்று சிறந்த இசை பாடியும் ஆடியும் சுவாமியை நேரே கும்பிடவேண்டுமென்று விரும்பினர். அவர் விரும்பியபடி காட்சி கொடுத்தற்காகச் சிவலோகநாதர் தம்முன்பு இருக்கும் இடபதேவரை விலகும்படி கட்டளையிட்டு நேர்காட்சி கொடுக்க, நந்தனார் கண்டு பணிந்து போற்றிப் புறப்பட்டனர். திருக்கோயிலின்பின் ஒரு நிலம் பள்ளமாயிருப் பது கண்டு ஆசையுடன் அதனை ஆழமும் அகலமுமுள்ள குளமாகத் தோண்டினர். திருக்கோயிலை வலங்கொண்டு பணிந்து புறத்தே நின்று பாடியும் ஆடியும் பெருமா னிடம் விடைபெற்றுத் தம்முடைய பதியிற் சேர்ந்தனர். பின்னர்ப் பக்கத்தேயுள்ள பல தலங்களிலும் சென்று வணங்கித் தமக்கியன்ற பணி செய்துவந்தனர்.

இவ்வாறிருக்கும் நாளில் ஒருநாள் திருத்தில்லைத் திருமன்று கண்டு சேவிக்க வேண்டுமென்ற ஆசையுடைய உணர்ச்சி ஒழியாது அவர்க்குண்டாயிற்று. அதனால் கண்துயில் வரவில்லை. "அங்குப் போவது எனது உறுகுலத்துடன் இசைவில்லை. இதுவும் எம்பெருமானது ஏவல்தானே!" என்று அங்குப் போதலைத் தவிர்த்தனர். ஆனால் அந்த ஆசை அமைந்து அடங்காமையினால் "நாளைப் போவேன்" என்பார். இவ்வாறு பல நாள்கள் கழிந்ததனை உணர்ந்து தரியாமல் பூளைப்பூப்போன்ற நிலையாமையுடைய பிறவி ஒழியும்படி போகத்துணிந்தனராகிப் புறப்பட்டுத் திருத்தில்லை மருங்கு அணைந்தார்.

தில்லைத் திருவெல்லையைப் பணிந்தெழுந்தார். வேள்விச்சாலைகளையும் வேதம் ஓதும் மடங்களையும் கண்டு, தமது குலத்தின் குறைபாடு கருதி அங்கு அணைய அஞ்சி நின்றனர். "இவற்றையும் கடந்து ஊர்சூழ்ந்த மதிற் றிருவாயிலிற் புகுந்தால் மாளிகைதோறுங் கூடிய மூவாயிரம் ஆகுதிகள் உள என்று சொல்லுகின்றார்களே! இப்படியாயிருக்க எனக்கு அங்குச் சென்று சேர்தல் அரிதாகும்" என்று எண்ணங் கொண்டார். அடங்காத பெருங்காதல் வளர்ந்தோங்கிற்று. உள்ளம் உருகிற்று. கைதொழுதார். திரு எல்லையை இரவுபகலாக வலம் வந்தார். அங்கு எய்தல் அரிதாகிய நிலையை எண்ணி அயர்வெய்திச் "சிவபெருமானது திருமன்றின் நடனம் எவ்வண்ணம் நான் கும்பிடுவது" என்று நினைந்தே மன வருத்தத்தோடும் துயில்வாராயினார்.

"துன்பந் தரும் இழிந்த இப்பிறவியே எனக்குத் தடையாயுள்ளது" என்று எண்ணித் துயில்கின்ற அவரது கனவில் இறைவர் தோன்றி, "இப்பிறவி போய்நீங்க நீ தீயின் மூழ்கி மறையவருடன் முன் அணைவாயாக!" என்று புன்முறுவலுடன் அருள் புரிந்தார்; அவ்வாறே தில்லைவாழந்தணர்கள் கனவிலும் தனித்தனி எழுந்தருளி வந்து தீயமைத்துக் கொடுக்குமாறு அருளினார். அவர்கள் எழுந்து அச்சத்துடன் திருவாயில் முன்கூடி "பெருமான் ஆணையிட்டருளிய பணி செய்வோம்" என்று துணிந்து அன்பரிடம் வந்து அறிவித்தார்கள். அவர் தொழுது "நான் உய்ந்தேன்" என்று மொழிந்தனர். மறையவர்களும் சென்று தீயமைத்தபடி அறிவித்தனர். தென்றிசை மதிற்புறத்துத் திருவாயில் முன்பு அவ்வாறு தீயமைத்த குழியினை நந்தனார் நண்ணி இறைவர்தாளே மனங்கொண்டு எரியினை வலம் வந்தார். கைதொழுதார். அருட்கூத்தாடும் திருவடியினை நினைந்து அழலினுட் புகுந்தார். அப்பொழுது தீயினிடம் இம்மாயப் பொய்யுருவினை ஒழித்துப் பூணூலும், சடைமுடியுமுடைய புண்ணிய முனிவராய்த் தீயினின்றும் எழுந்தனர். எழும்போது பிரமதேவனைப் போல் விளங்கினார். தேவதுந்துபிகள் முழங்கின. வானவர்கள் மலர்மழை பெய்தனர். மறையவர் கைகூப்பினர். தொண்டர்கள் பணிந்தனர். மறையவர்கள் உடன்வரத் திருமன்றி னடனங் கும்பிடத் திருநாளைப்போவார் வருகின்றாராய்க் கோபுரத்தைத் தொழுது விரைந்து போய் உலகுய்ய நடமாடும் எல்லையினைத் தலைப்பட்டார். பின் அவரை யாருங்காணவில்லை. எல்லாரும் அதிசயித்துத் துதித்தார்கள். அவர்க்குத் தமது திருவடிகளைத் தொழுதிருக்கும் இன்பநிலையினை இறைவர் அருளினார்.

---

தலவிசேடம்:—1. ஆதனூர்-திருப்புன்கூருக்கு வடமேற்கில் கொள்ளிடத்தைக் கடந்தால் 6 நாழிகையளவில் உள்ளது. மட்பாதை. இப்போது ஆதமங்கலம் என வழங்குகின்றது. பூர்வம் சிவாலயம் இருந்தது. பழைய புலைச்சேரி முதலிய அடையாளங்கள் காணப்படவில்லை. 40 வேலி தனிவட்டமாகத் திருநாளைப்போவார் காணி என்று வழங்கும் நிலப்பகுதியுண்டு.கானாட்டம்புலியூருக்கு மேற்கில் உள்ளது ஆதனூர்.

கருப்பறியலூரில் (மேலைக்காழி - தலைஞாயிறு) இருந்து தென் மேற்கில் 3 நாழிகையள வில் மட்சாலை வழியாலும், ஓமாம்புலியூரிலிருந்து மேற்கு 2 நாழிகையளவில் அணைக் கரை வழியாலும் அடையலாம்.

2. திருப்புன்கூர் - 261ல் உரைத்தவை பார்க்க.

3. திருத்தில்லை - ஓமதளம். நந்தனார் மூழ்கி எழுந்த இடம். நடராசர் கோயி லுக்குத் தென்மேற்கில் உள்ளது. இங்கு நந்தனருக்குக் கோயில் உண்டு.

---

**கற்பனை :**—1. வயல் வளமும், துடவை (தோட்டநிலம்) வளமும் பெருந்திரு வாவன. இவ்வளங்களால் பொலிவது மாடங்களின் சிறப்பு.

2. ஊரில் குடிநெருங்கினால் அதன் அடிப்பக்கத்து அயலிடை வேறு இடம் (Extensions) நெருங்கக் குடிபுகுவது இயல்பு.

3. உழுதொழிற் கிழமையுடைய புலைமக்கள் வாழும் புலைப்பாடி ஊரின் புறத்துப் புறம்பணையில் வயல்களின் பக்கம் அமைவது முன்னுள் நகர அமைப்பு.

4. புலைச்சேரி, சுரைபடர்ந்த பழங்குடிசைகளால் நிறைவதாம். புலையர் கோழியும் நாயும் வளர்ப்பர். புலைச்சியர் பாட்டுப்பாடி நெற்குத்துவர். பறைகொட்டு தற் கிசையக் களிதூங்க ஆடுவர். புலையரின் பறைத் தொழிலுக்கு மானியம் உண்டு.

5. பிறந்து உணர்வு தொடங்கியது முதல் சிவன் பத்தியில் மனஞ் சென்று வேறு நினைவின்றி வருதல் முன்பிறவியில் விளைத்த உண்மையன்பின் பரிசினால் ஆவது.

6. தத்தம் குலமரபு பிழையாது நின்றே சிவன்பால் பத்திசெய்யலாம்.

7. புலையர் மரபில் வந்து சிவத்தொண்டு செய்வோர் **புறத்தொண்டர்கள்** எனப் படுவர். திருக்கோயிற் புறத்து நின்று அன்புடன் கும்பிட்டு ஆடியும் பாடியும் வழிபாடு செய்தலும், பேரிகை முதலிய முகக்கருவிகளுக்குப் போர்வைத் தோலும் விசிவாரும், யாழுக்கும் வீணைக்கும் தந்திரியும், அர்ச்சனைக்குக் கோரோசனையும் தருவதும் இவர்கள் செய்யும் திருத்தொண்டுகளாம். இவர்கள் திருக்குளம் தோண்டி அமைத்தற்கும் உரியர்.

8. அன்பர்க்கு நேரே தம்மைக் காட்டுதற்கு இடபதேவரையும் விலகச்செய்து பரமகருணாநிதியாகிய சிவபெருமான் காட்சி கொடுப்பார்.

9. குலநலம் மரபு முதலிய ஒழுக்கத்தையும் நிலையினையும் உளங்கொண்ட நிலையிலுள்ளோர் அதுபற்றி விதித்த தருமங்களின்படி நடத்தல் வேண்டும்.

10. குலவொழுக்கத்தின் வரம்பு பற்றிய எண்ணமுடையார்க்கு அவ்வொழுக் கத்தினின்றே அந்த வேறுபாடுகளைத் தக்கபடி போக்குவித்து அருள்புரிவர் இறைவர்.

11. தீக்குளித்தல் குலமரபின் வந்த உடல் இழிவுபற்றிய நினைவுகளைத் தூய்மை யாக்கவல்லது.

12. திருக்கோயிலின் முன்பு நின்று ஆடுதலும் பாடுதலும் அன்பின் மிகுதியினால் உண்டாகும். நந்தனார் இவ்வாறு கோயில்களின் முன் ஆடினர் ; பாடினர். இறைவர் சந்நிதியில் இவர் கையில் நரம்பிசைக்கருவி யாழ்வைத்துக்கொண்டு உட்கார்ந்து பாடும் திருக்கோலம் திருப்புன்கூரில் உள்ளது. (படம் பார்க்க). இதுபற்றியே "இசைத் தமிழ் நூல்வல்லோர், பவமணுகாத் திருநாளைப் போவாரா னுயர் பாணர் பரமனையே பாடுவா ராக நால்வர்" என்று இவரை இசைத்தமிழ் வல்லராக வகுத்தனர் உமாபதி சிவாசாரியார் (திருத்தொண்டர்புராண வரலாறு 36).

---

குறிப்பு :—இச்சரிதத்தினுள் புதிய ஆராய்ச்சி முறையிற் புகுந்து பலவாறு இடர்ப்படுவாரும் இடர்ப்படுத்துவாரும் பலராயினர். சாதி குலம் மரபு முதலிய கொள்கைகள் பற்றியும் வழக்கம் பற்றியும் இங்ஙனிற் பற்பல எண்ணங்களும் இயக்கங்களும் தோன்றிப் பூசல் விளைக்கின்றன. அவற்றை இச்சரிதத்தினுட் புகுத்தி இடர்ப்படுதல் வேண்டா. மக்கட் கூட்டத்தினுள், பிறப்பினாலும் சிறப்பினாலும் உயர்வும் தாழ்வும், காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு எந்நாளும் உண்டு என்பதனை மறுக்க இயலாது. இது இறைவன் நூல்களாலும் வகுக்கப்பட்டது. மக்கள் அனுபவத்தினும் அறிந்தது. எந்த வகையாலேனும் கன்ம பக்குவ பேதங் காரணமாக மக்களும் பிற உயிர்களும் பல திறப்பட்ட வேற்றுமையுடையார்களே யாவர். இவை சாதி ஆயு, போகம் என்றவற்றுள் அடங்குபவையாய், அவ்வவ்வுயிரின் கன்மத்துக்கீடாய், இறைவன் கூட்டுவிக்க வருவன என்பது ஞான சாத்திரங்கண்ட வுண்மை. "மேற் பிறந்தார்" "கீழ்ப்பிறந்தார்" "இழிந்தபிறப் பிறப்பாய் விடும்" "பிறப்பினுல் ஏகாலிக் குலத்துள்ளார்" முதலியவையும், "தவஞ்செய்த, நற்சார்பில் வந்துதித்து" (சிவஞானபோதம் - 8 - சூத்.); "கன்மநெறி திரிவிதநற் சாதி யாயுப் போகக் கடன தெனவரும்" (சிவப்பிரகாசம் - பொது) முதலியவையும் காண்க. "நரர்பயில் தேயந் தன்னி னுன்மறை பயிலா நாட்டில், விரவுத லொழிந்து தோன்றன் மிக்கபுண் ணியத்தா னுகும், தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து" (சித் - உ - 90) முதலியவை காண்க.

ஆனால் இச்சாதி எவ்வளவுவரையில் நிற்றல் வேண்டும் என்பதும் வகுக்கப்பட்டுள்ளது. தனக்கெனவோர் செயலற்றுத் தான்சிவமாய் நிற்கும் நிலைவரும் அளவும் அறநூல்களில் விதித்தவாற்றுல் ஒழுகவேண்டியதே முறை. தன்னுணர்வு உறங்கினவன்கைப் பொருள்போல் தானே கழன்றுவிழும் நிலை வரும்போது வீழ்ந் தொழியும். கண்ணப்பநாயனருக்குத் தன்னுணர்வு காளத்திநாதரைக் கண்டதும் ஒழிந்துபோயிற்று. அவர் பின்னர்ச் சாதிநிலை ஒழுக்கம் கடந்த நிலையினராயினர். இங்கு நந்தனருக்குத் தன்னுணர்வு நினைவிலிருந்தது. அதனை ஒழித்தல் அவ்வுடம் பினை ஒழித்தோம் என்ற நினைவு நிலை வந்தபின்னரே கூடும்; ஆதலின் இறைவர் அவர்க்கு அந்நிலையினைக் கூட்டுவிக்க எரியின் மூழ்கி எழுந்துவருமாறு அருள் புரிந்தனர் என்க.

சாதி குலம் முதலியவற்றை எந்த நிலையில் உணர்ந்து வைத்து ஒழுகல்வேண்டுமோ அவ்வளவில் நிறுத்தல் வேண்டும். அவை அபிமானத்துக்கு இடமாகி இறுமாப்பினையும் அகங்காரத்தினையும் வளர்க்கும் கருவிகளாகும்படி பீடித்தல் கூடாதென்பதனையே "சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும், ஆதமிலி நாயேனை" என்ற திருவாசகம் (கண்டபத்து) வலியுறுத்திற்று. பற்பலவாம் புதிய முறை ஆராய்ச்சியின் பயனுக இச்சரிதத்தில், இப்பிறவி நீங்க எரியில் மூழ்குமாறு இறைவன் பணித்ததாகக் கூறும் பகுதிகள் சேக்கிழார் சுவாமிகள் வாக்கல்ல என்றும் அவை பிற்கால இடைச்செருகல்கள் என்றும் ஒதுக்கித் தம் கொள்கைக்கு இடம் காண முயல்வாரும், பல குலத்தவர்களும் நாயன்மார்களாய்த் திகழ்ந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளாலே துதிக்கப்பட்டதனுல் மக்களுள் சாதிவேற்றுமையில்லையென்று முடிப் பாரும், "சாதித்திமிர் பிடித்து ஒருவரையும் அண்டவிடாமல் புறத்தே நிறுத்தி விடும் கன்னெஞ்சுடையார்" என்று தாங்கொண்ட தில்லைவாழந்தணர்களுக்கு உண்மையன்பின் நிலைகாட்ட இறைவர் இவ்வாறு நந்தனரைத் தீயின் மூழ்குமாறு பணித்தனர் என்று வகுப்பாரும் எனப் புதிய ஆராய்ச்சியாளர் பலதிறப்படுவர். ஆதனூரில் தில்லைநினைவு வந்த காலமுதல் தங்குல நினைந்து, தில்லையினுட் செல்வது தமக்குக் கூடாதென்றஞ்சி நின்றவர் நந்தனரேயாவர் என்பதுணர்தற்பாலது. இறை

வன் பக்கத்தே அணுகவிடாது நந்தனரைத் தடுத்தாரும், பக்கத்தே வந்து தீண்டி ஊன் அமுதூட்டும்படி கண்ணப்பநாயனரை விடுத்தாரும் ஒருவருமிலர் என்பது போன்ற சரித விளைவுகள் சிந்திக்கற்பாலன. அன்றியும் பூணூல் இன்றியும் கண்ணப் பரையும் திருக்குறிப்புத் தொண்டரையும் கையாற் பற்றித் தம்மிடத்தில் வைத்த இறைவர், இவரை மெய்திகழ் வெண்ணூலும் வேணிமுடியும் கொண்ட மறைமுனிவ ராக்கி அருகுவரவழைத்தது என்னையோ? எனின், மறைமுனிவராலுலன்றே அருகு செல்ல இயலும் என்று எண்ணிப் பயந்துகொண்டொழுகிய நந்தனரின் மனநிலையும் ஒழுக்கமுமே இதற்குக் காரணமாம் என்க. அவர் நினைந்தபடியே அவரை நூலணிந்த மார்பினராகிய மறைமுனிவராக்கித் தம்மிடம் வர அருளினர் என்பதாம்.

ஐயர் என்பது பெருமையுடையார் என்ற பொருளில் வரும் வழக்கேயன்றிச் சாதிப்பெயர்பற்றி வருதல் முன்னுள் வழக்கன்று என்பதும் ஈண்டு உணர்தற்பாலது. பெருமைகாரணமாயன்றி இடுகுறியளவில் சாதிப்பெயராய் வழங்குதல் பிற்கால வழக்காம். ஆளுடையபிள்ளையார் தமது திருவாக்கினுலே திருநீலகண்ட யாழ்ப் பாணரை "ஐயர்நீர் உளமகிழ விங்கணைந்த வுறுதியுடையோம்", "ஐயர்நீர் அவதரித் திட இப்பதி அளவின் மாதவம் முன்பு செய்தவாறு", "ஐயர்நீர் யாழிதனை முறிக்கும தென்" (திருஞான - புரா - 133, 179, 450) என்பனவும் பிறவும் இங்கு நினைவுகூர்க. ("ஐ வியப்பாகும்" - தொல்காப்பியம். ஐயர் - வியத்தற்குரியார் என்பதுமாம்). இச்சரிதத்தினுள் ஞானசாத்திர முடிவுகளுக்கு ஒவ்வாத புதிய ஆராய்ச்சிகளைப் புகுத்தி இடர்ப்பட்டு அபசாரப்படாதிருத்தல் அமைவுடைத்தாகும்.

சிவமயம்

# 19. திருக்குறிப்புத்தொண்டநாயனர்புராணம்



தோகை

"திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்"

—திருத்தொண்டத்தொகை.

வகை

"மண்டும் புனற்சடை யான்றமர் தூசெற்றி வாட்டும்வகை
விண்டு "மழைழகில் வீடா தொழியின்யான் வீவனென்னு
மிண்டும் படர்பாறை முட்டு மெழிலார் திருக்குறிப்புத்
தொண்டன் குலங்கச்சி யேகா லியர்தங்க டொல்குலமே"

—திருத்தொண்டர் திருவந்தாதி (21)

விரி

1078. ஏயு மாறுபல் லுயிர்களுக் கெல்லையில் கருணைத்
தாய னுடனி யாயின தலைவரைத் தழுவ
வாயு நான்மறை போற்றநின் றருந்தவம் புரியத்
தூய மாதவஞ் செய்தது தொண்டைநன் னாடு.

புராணம் :—திருக்குறிப்புத்தொண்டர் என்னும் பெயருடைய நாயனரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி. இனி, நிறுத்தமுறையானே மும்மையாலுலகாண்ட சருக்கத்து ஐந்தாவது திருக்குறிப்புத்தொண்டநாயனரது சரிதங்கூறத் தொடங்குகின்றார்.

தோகை :—திருக்குறிப்புத்தொண்ட நாயனருடைய அடியவர்களுக்கு நான் அடியேனுவேன். இந்நாயனரது பெயரும் சரிதக்குறிப்பும் பண்பும் முதனூல் பேசிற்று. சிவனடியார்களுடைய குறிப்பினையறிந்து அவர் கருத்தின்படி அவருக்குத் தொண்டு பூண்டு ஒழுகியதனால் இவருக்கு இப்பெயராயிற்றென்பது விரிநூல் 1191-ல் "புண்ணிய மெய்த் தொண்டர்திருக் குறிப்பறிந்து போற்றுநிலைத், திண்மையினுற் றிருக்குறிப்புத் தொண்டரெனும் சிறப்பினர்" எனக் கூறப்பட்டது. இக்காரணங் கொண்டே இறைவர் இவர்பால் அழுக்கடைந்த கந்தை தாங்கிவர, அவரது குறிப்பறிந்து கந்தை யினைக் கழுவுதற்கு வேண்டிப் பெற்றனர் என்பதும், அது காரணமாக இவர் சரிதம் விளைந்து திருவருள் வெளிப்பட்டது என்பதும் அறியப்படும். "குறிப்பறிந்தே" (1197) என்றது காண்க. இவ்வாற்றுல் சரிதக்குறிப்பும் கண்டுகொள்க.

வகை :—செறிந்த கங்கைப்புனலையுடைய சடையாரின் அடியாரது ஆடைகளின் அழுக்கைப் போக்கி உலரவைத்தற்கு "இடையூறுக வந்து சூழ்ந்த மழைமுகில் நிற்காதொழிந்தால் நான் இறப்பேன்" என்று துணிந்து வலிய கற்பாறையில் தமது தலையை முட்டிய அழகிய திருக்குறிப்புத் தொண்டரது திருக்குலமானது கச்சிமாநகரிலே ஏகாலியர்களது பழய குலமாகும்.

**சடையான்றமர்** - தமர்போலக் கோலந்தாங்கி வந்த சடையான் என்க. விரிநூல் (1195) பார்க்க. **மண்டுதல்** - செறிந்து நிறைதல் என்று கொள்க. **தமர்** - தம்மவர். உகந்தவர். **தூசு** - துணி. **எற்றுதல்** - தோய்த்து அழுக்குப் போக்குதல். **வாட்டுதல்** - ஈரம்புலர உலர்த்துதல். **முகில் வீடாதொழியின்** - முகில் மழை பெய்தலை நிறுத்தாதொழிந்தால்; **யான் வீவன்** - விரிநூல் (1203 - 1204) பாட்டுக்களில் இது விரிக்கப்பட்டது. **பாறை முட்டுதல்** - கந்தைபுடைத்த திடவெற்றுங் கற்பாறை மிசைத் தந்தலையினைச் சிந்தும்படி மோதுதல். **எழில்** - திருத்தொண்டின் உறைப்பு எழில் எனப்பட்டது; இதுவே உயிர்க்குறுதி செய்தலால். "சிங்காரமான திருவடி" (திருமந்திரம்) என்றதுபோல. தொண்டர்குலம் ஏகாலியர் தொல்குலம் என்க. பெயர்ப்பயனிலை கொண்டது. நாயனரது ஊரும், பெயரும், மரபும், சரிதவரலாறும், பண்பும், பிறவும் வகைநூல் வகுத்துக் காட்டிற்று. இவை விரிந்தபடி விரிநூலுட் காண்க.

1078. (இ - ள்) வெளிப்படை. பொருந்தும்படி பல உயிர்களுக்கும் எல்லையில்லாத கருணைத் தாய்போன்ற உமாதேவியார் தனியாகிய தமது தலைவரைத் தழுவுதற்காக, ஆராய்கின்ற நான்கு வேதங்களும் போற்ற ஆகமவழியில் நின்று, தன்னிடத்தே அரிய தவம்புரியும்படியான தூய பெருந்தவத்தைச் செய்துள்ளது தொண்டைநன்னாடு.

1078. (வி - ரை) பல்லுயிர்களுக்கும் ஏயுமாறு என்க. எல்லா வுயிர்களுக்கும் அவ்வவற்றின், கன்மத்திற்கேற்றபடி பொருந்த. எல்லையில்லாத கருணையேயாயினும் உயிர்தோறும் வெவ்வேறு வகைபடச் செலுத்தப்படுதற்குக் காரணங் கூறியபடியாம். **கருணைத் தாயனுள்** - உலகில் தாய்மார், மகவுக்கு நோய் மூலமாகிய உடம்பைக் கொடுத்து ஊட்டி வளர்த்து மீண்டும் பல உடற் சுமைகளை எடுக்க வழிசெய்கின்றார்கள். இத்தாய், நோய் நீங்கும்படி உடலைக் கொடுத்துக், கர்மங்களை ஊட்டிப் போக்கி, மீண்டும் உடற்சுமைவந்து பொருந்தாதபடி செய்கின்றாதலின் இவ்வாறு சிறப்பித்தார்.

**தனியாயின தலைவர் - தனி** - ஒப்பற்றவர். உமையம்மையாரைப் பிரிந்ததனால் தனியாயினவர் என்றலும் இங்கு இச்சரிதக் குறிப்பிற் பொருந்துவதாம்.

**தழுவுதல்** - இங்குப், பிரிந்த தலைவர் சேர்தலைக் குறித்தது. **தழுவத் தாயனாள் தவம் புரிய மாதவம் புரிந்தது தொண்டை நாடு** என்று முடிவு கொள்க. தன்னிடமாக என்பது வருவிக்க.

**நாடு மாதவம் செய்தது** - ஆகமத்தின்வழிப் பூசனை செய்ய வேண்டுமென்று அம்மையார் வேண்டியபோது அதற்கேற்ற தலம் காஞ்சியே என்று இறைவரருளினர். (1032). அந்தக் காஞ்சியினைத் தன்னிடத்தே கொள்ளத் தொண்டைநாடு புண்ணியம் பண்ணிற்று என்க. நாடு புண்ணியம் செய்ததாவது அந்நாட்டினில் பெருஞ் சிவதருமங்கள் பொருந்தி உயிர்களுக்கு நலம்தந்து பெருகுமாறு செய்த தவமாம். நாடு செய்த தவத்தைக் குறிஞ்சி முதலாக நெய்தலீறாக வேறு வேறு கூறி, "குறிஞ்சி செய் தவங்குறை யுளதோ" (1073), "நெய்த லெய்தமுன் செய்தவந் நிறைதவஞ் சிறிதோ" (1119) என நுணுகிக் காட்டிய திறம் காண்க.

**ஆயும் நான்மறை போற்ற நின்று - ஆய்தல்**-தெளிதல். மறைகள் இறைவனிலக் கணத்தை ஆய்ந்து சிவனே பொருள் எனத் தெளிந்து இதயத்துட் கொண்டன. 1034 - 1037 பார்க்க. கொண்டு வைத்த அப்பொருளைப் பூசித்து அடையும் வழியினை உயிர்களுக்கு நடந்துகாட்டும் பொருட்டுப் பல் உயிர்களுக்கும் கருணைத்தாய் பூசை செய்த அதனை மறை போற்றிற்று. **நின்று** - அந்த ஒழுக்கத்தின் வழிநின்று ஒழுகி.

**பெருந்தவம் புரிய** - தழுவப்புரிந்த தவமும் பூசையும் 1135 முதல் 1142 வரை திருப்பாட்டுக்களில் விரித்துரைக்கப் பெற்றன.

**தொண்டை நன் நாடு - நன்மை** - இடத்துக்கேற்பதாகிய இடைப்பிறவரல். இந்நன்மையாவது மக்கள் நல்லொழுக்கத்தில் வழுவாது வாழ்வதேயாகும் என்பதனை மேல் வரும்பாட்டில் உடன்பாட்டு முகத்தால் விளக்குகின்ற ஆசிரியர், பின்னர், இதுபற்றி எதிர்மறை முகத்தால் "தீயவென்பன கனவிலு நினைவிலாச் சிந்தை" என 1126-ல் விளக்கி வற்புறுத்துதலும் காண்க. "மெய்ம்மைநிலை வழுவாத மேன்மை நிலை விழுக்குடிமைச், செம்மையினார்" என்றதும், பிறவும் நினைவு கூர்க. "தெண் ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோ ருடைத்து" என்று பிற்காலத்து ஆசிரியர் நாடுகளை வகைப்படுத்தி முடித்துக் காட்டியதும் உன்னுக.

இது முதல் ஐந்து திருப்பாட்டுக்களால் நாயனாரது திருநாட்டுப் பெருமையும், 1083 முதல் 1126 வரை **நாட்டினியலும்** வளமுங் கூறுகின்றார். இவ்வாறு அத்திரு நாடு முற்றிலும், நம் கருத்தினை உடன்கொண்டு, நானிலப் பகுதிகளையும் திணைக்கலப்புப் பகுதிகளையும் அவ்வவை யெல்லாம் சிவபுண்ணியப் பெருவாழ்வினைத்தரும் வகையினை யும் காட்டிச் செல்கின்றனர் ஆசிரியர். அதன்மேல் இந்நாயனாரது நகரமாகிய காஞ்சி புரத்தின் சிறப்பும் வளனும் 1127 முதல் 1189 வரை **நகரச்சிறப்பாகக்** கூறுகின்றார். அதன்மேல் 1190 முதல் 1207 வரை நாயனாரது **சரிதங்கூறி** முடிக்கின்றார். இவ்வாறு இப்புராணத்தின் அமைப்பினை வரையறுத்துக் கண்டுகொள்க.

தொண்டை நாட்டினைக் கூற நேர்ந்த முதலிடம் இதுவேயாதலின் இங்கு அதனை விரித்துக் கூறினார். சரிதத்தின் அளவுக்குமேல் விரிந்தபடியாக நாடு நகர் வர்ணனை கூறப்பட்டதென்றும், இஃது ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் தமது நாட் டின்மேல் வைத்த அன்பினாலாகியது என்றும் கருதுவாரும் உண்டு. அது ஓரளவுக்கு உண்மையே என்று தோன்றினும், புராணம் பாடுவித்த சோழர்களது நாடாகவும் பெரிய நகராகவும் தொண்டைநாடும் காஞ்சீபுரமும் விளங்கின என்பதனையும், திருத் தொண்டர்புராணத்தினும் ஏனைச்சோழ பாண்டிய நாடுகளைக் கூறிய இடங்களைத்

தொகுத்து நோக்கின் இங்குத் தொண்டைநாட்டுக்குக் கூறிய அளவு சிறியதே யாகும் என்பதனையும் நாம் மறக்கலாகாது. அன்றியும் அன்பர் திருவேடமும் பூசையுமே முடிந்த பொருள்களாகக் காட்டி விளக்கும் இம்மாபெருங் காவியத்தினுள், சிறந்த அரன்பூசையினை ஆகமவிதிப்படி உலகை ஆளுடையாள் செய்து காட்டும் இடம் இதுவேயாதலின் அதனை விரித்துக் கூறுதலும் இன்றியமையாததாயிற்று. அதனை எடுத்துக் காட்டுதற்கு, யாண்டும் நாட்டுச் சிறப்பும் வளமும் என்று சொல்லத் தக்கவை யாவும் சிவன் சம்பந்தத்தோடு கூடிய வழியே சிறப்புடையன - அல்லுழி அல்ல - என்பதனையும் எடுத்துக் காட்டவேண்டிய அவசியம்பற்றி நானிலப் பகுதிகளை அச்சிறந்த பொருள்பற்றிக் காட்டவேண்டுவதும் இன்றியமையாததாயிற்று. நானிலப் பகுதிகளைக் கூறும் வகையில் சிறந்த காவிய நிலைபற்றித் தமிழ் இலக்கண முறையிற் பகுத்துக் காட்டுவதும் வேண்டப்பட்டது. மேலும் நானிலப்பகுதிகளும் நிலக் கலப் புக்களும் நிறையப் பெற்று விளங்குவது இத்திருநாடேயாகும். இம்மாபுராணத்துள் பேசப்படும் ஏனைநாடுகள் அவ்வகையில் ஒவ்வோர் குறைபாடுடையன. ஆதலின் இச்சரி தத்தின் திருநாடே தமிழிலக்கிய வரம்பிற்கு எடுத்துக்காட்டாதற் றகுதியுடையதாம். இவை முதலிய காரணங்களால், நாட்டுப்பற்று (தேசாபிமானம்) என்று வெறும் நிலம்பற்றியே தொடர்பினுல் ஆசிரியர் இத்துணையும் கூற அமைந்தனரல்லர் என்பதனை உய்த்துணர்ந்துகொள்க. அன்றியும் இதனுல் நாடும் நகரமும் மக்களும் எவ்வாறிருத் தல் வேண்டும் - எவ்வகையால் மதிக்கப்படுதல்வேண்டும் - என்று எடுத்துக்காட்டிய திறமும் சிந்திக்க.

இதனுள் ஆகமத்திறனெலாம் தெரிய எடுத்துக்கூறிச் சிவபூசையில் முயற்சி யெழுவிக்கும் இப்பகுதியை, (ஐஞ்சீருடைய) கலிநிலைத்துறையாலும், அதன்மேல் எண்குணனுகிய அட்டமூர்த்தியினைப் பூசைசெய்தலையும் பகுதியை எண்சீர் விருத்தத்தாலும், சரியையாதி நாற்பாத நெறியில் நின்று பிறவிமாசுபோக்கும் சரிதத்தை நாற்சீர் விருத்தமாகிய கொச்சகக் கலிப்பாவினுலும் யாத்த திறமும் கண்டுகொள்க. 1

1079. நன்மை நீடிய நடுநிலை யொழுக்கத்து நயந்த
தன்மை மேவிய தலைமைசால் பெருங்குடி தழைப்ப
வன்மை யோங்கெயில் வளம்பதி பயின்றது வரம்பின்
தொன்மை மேன்மையி னிகழ்வது பெருந்தொண்டை நாடு. உ

(இ - ள்) வெளிப்படை. நன்மை நீடிய நடுநிலை ஒழுக்கத்தில் விருப்பமுடைய தன்மை வாய்ந்த தலைமையுடைய பெருங்குடிகள் தழைத்தோங்க, வலிய பெரிய மதில்களையுடைய வளநகரங்கள் பலவும் தன்னுள்ளே நிலவப்பெற்றதாய், எல்லை யில்லாத பழமையாகிய மேம்பாடுகளுடன் நிகழ்வது பெருந்தொண்டை நாடாகும்.

(வி - ரை) நடுநிலை ஒழுக்கம் - தமர்பிறர் என்னுமையும், நன்றுதீது என்னுமையும், அறநெறியினிற் பிறழாமையும் துலைக்கோல்போல ஒழுகுதல். "மாற்றூர்க் கமரி லழிந் துள்ளோர் வந்து தம்பான் மாநிதியம், ஆற்றும் பரிசு பேசினு லதனைநடுவு நிலைவைத் துக், கூற்ற மொதுங்கு மாள்வினையாற் கூலி யேற்று" (3) என்ற முனையடுவார் நாயனார் புராணங் காண்க.

தலைமைசால் பெருங்குடி - ஒழுக்கத்திற் சிறந்த சால்புடைமையால் தலைமை பெற்ற குடிகள். இத்தன்மையாவது வாய்மையும், பிறர்க்கு எஞ்ஞான்றும் நினைப்பி னுலும் தீமை செய்யாமையுமாம்.

**வளம்பதி பயின்றது** - வளமையுடைய நகரங்கள் நிலவுதல் நாட்டிற்குச் சிறப்புத் தருவதாம்.

**தொன்மை மேன்மை** - ஆவதும் அழிவதும் ஆகிய புதிய வளங்கள் மேன்மை தருவன அல்ல என்பது. பழங்கால முதல் மேன்மை குறையாது வருதல் உண்மைச் சிறப்பால்மட்டு மாகுவதொன்று என்க.

**தகைமைசால்**—என்பதும் பாடம். 2

1080. நற்றி றம்புரி பழையனூர்ச் சிறுத்தொண்டர் நவைவந்
துற்ற போதுதம் முயிரையும் வணிகனுக் கொருகாற்
சொற்ற மெய்ம்மையுந் தூக்கியச் சொல்லையே காக்கப்
பெற்ற மேன்மையி னிகழ்ந்தது பெருந்தொண்டை நாடு. ௩

(இ - ள்) வெளிப்படை. நல்ல திறத்தினையே விரும்பிய **பழையனூர்** வேளாளர்கள் தம்மேற் குற்றம் வந்தபோது தங்களுடைய உயிரையும், வணிகனொருவனுக்கு ஒருதரம் தாங்கள் சொல்லிய உண்மைச் சொல்லையும் தூக்கி, உயிரினும் சிறந்த அந்தச் சொல்லையே காக்கப்பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது **பெரிய தொண்டை நாடாகும்.**

(வி - ரை) **நல் திறம் புரி** - நன்மையினையே விரும்பிய. இங்குக் குறித்த பழஞ் சரிதத்தினுள் வேளாளர்கள் வணிகனும் அவன் மனைவியும் மனமொத்து வாழ்தல் வேண்டுமென்ற நன்மையினையே விரும்பிய செய்தி குறித்தது. இவ்வாறன்றி எப்போதும் நன்மையினையே விரும்புகின்ற என்றலுமாம்.

**பழையனூர்ச் சிறுத்தொண்டர்** - "வணங்குஞ் சிறுத்தொண்டர் வைக லேத்தும் வாழ்த்துங்கேட், டணங்கும் பழையனூர்" (பழையனூர்த் திருவாலங்காடு - தக்கரா - 7) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரங் காண்க. பழையனூரில் இருந்த வேளாளர் எழுபதின்மர். இவர்கள் இறைவனது சத்தியம் என்ற உருவத்திற்குத் தம்மை அடியார்களாக ஆக்கி ஒருங்கே தம் உயிரையும் கொடுத்தார்களாதலின் இவர்களைச் **சிறுத்தொண்டர்** எனவும் கூறினார். "மிகச்சிறிய ராயடைந்தார், ஆதலினாற் சிறுத் தொண்ட ராய்நிகழ்ந்தா ரவனியின்மேல்" (சிறுத் - புரா - 15) என்றது காண்க.

**நவை வந்துற்ற போது** - தாம் எண்ணியபடி தமது செயல் நன்மையாக முடியாது தீமையாக முடிந்தபோது. **நவை** - இங்கு இவர்களது வாக்குக் குட்பட்டு வணிகன் நடந்தமையால் அவன் உயிரிழக்க நேர்ந்ததாகிய குற்றம்.

**வந்துற்ற** - தம்மையறியாமல் வந்து சேர்ந்தது என்பது குறிப்பு.

**தம் உயிரையும் - சொற்ற மெய்ம்மையும் தூக்கி** - தமது உயிரினையும், தாம் சொல்லிய சொல்லின் வாய்மையினையும் சீர்தூக்கிப் பார்த்து இரண்டில் எது சிறந்தது? (அல்லது) எது காக்கத்தகுந்தது? என்று தேர்ந்து.

**அச்சொல்லையே காக்கப்பெற்ற மேன்மை** - வணிகனுடைய உயிர்க்குக் கெடுதி நேருமாயின் தங்கள் எழுபது பேருடைய உயிர்களையும் அதற்கு ஈடாகத் தருவதாகச் சொல்லிய சொல்லினையே தமது உயிரைவிடச் சிறந்த பொருளாகக் கொண்டு, அதனைச் சோர்வுபடாமற் காத்துத், தீக்குழியில் இறங்கி உயிர் கொடுத்த சிறப்பு.

**இங்குக் குறித்த சரிதச் சுருக்கமாவது** - ஒருகாலத்துப் பரத்தை வலைப்பட்ட ஒரு வணிகன் தன்னைத் திருத்த முயன்ற தன் மனைவியைத் தனிவழிப் படும்போது கொன்றுவிட, அப்பழி நீலி என்னும் பேயாகி அவனை அலைத்து வந்தது. அதினின்றும் மீளும்பொருட்டு, அவன், ஒரு பெரியார் தந்த மந்திரவாளினை ஏந்திக்கொண்டே

திரிந்து வந்தனன். அப்பழியும் அவனைக் கொல்வதற்குச் சமயம் பார்த்துப் பின் தொடர்ந்து கொண்டே வந்தது. அவன் ஒருநாள் பழயனூருக்கு வந்தான். நீலியும் ஒரு பெண் வடிவம் பூண்டு, கள்ளிக்கொம்பு ஒன்றை முரித்து, அதனைக் குழந்தை வடிவமாக்கி இடையில் ஏந்திக்கொண்டு வணிகனைப் பின்தொடர்ந்து வந்தது. வணிகன் அவ்வூரில் வேளாளர் பெருமக்கள் எழுபதுபேர் இருந்த சபையின் முன்வந்து தன்னை நீலி கொல்ல வருகின்றமையால் காக்க வேண்டுமென்று அடைக்கலம் புகுந்தான். நீலியும் அச்சபையின்முன் வந்து "இவன் என் நாயகன்; இது எங்கள் குழவி; இவன் பரத்தை வயப்பட்டு எங்களை வெறுத்துக் கைவிட்டு ஓடிவந்துவிட்டான்; எங்களை ஒன்று படுத்தி வாழவைக்க வேண்டும்" என்று ஓலமிட்டது. வணிகன் மறுத்து "இது பெண்ணல்ல; நீலியென்ற பேய்" என்று சொல்ல, நீலி அக்கள்ளிக்குழந்தையைக் கீழேவிட, அது வணிகனிடம் அப்பாவென்று சென்று சேர்ந்தது. இதன் உண்மை புலப்பட வாராமையின், "நாளைத் தீர்ப்போம். இன்றிரவு நீங்கள் ஒன்றுகூடி இங்கே யிருங்கள்" என்று சபையினர் கூறினர். வணிகன் கையில் வாளிருந்தபடியால் அதனால் அவன் தன்னை வெட்டிவிடுவானாதலின் அதனைக் கழிப்பிக்க வேண்டுமென்றது நீலிப் பேய். வணிகனோ இந்த வாள் இல்லையேல் நீலிப்பேய் தன்னைக் கிழித்துக் கொன்று விடும் என்றான். இவ்விருவர்களுக்கு மிடையில் குழந்தையின் செய்கையால் ஏமாந்த வேளாளர்கள் வாளினை நீக்கிவிட்டு அவளுடன் தங்கும்படி வணிகனை ஏவினதோடு அதனால் அவனுயிர்க்குக் கேடுவருமாயின் தங்கள் எழுபது பேர்களின் உயிரையும் அதற்கு ஈடாகத் தருவதாக வாக்குறுதியும் செய்தனர். அன்றிரவு நீலி வணிகனைக் கிழித்துக் கொன்று பழிதீர்த்துப் போய்விட்டது. இதனையறிந்த வேளாளர்கள் தாங்கள் வணிகனுக்குச் சொல்லிய சொல்லே தமது உயிரினும் சிறந்தது எனக் கொண்டு தீ வளர்த்து அதில் எழுபது பேரும் மூழ்கித் திருவாலங்காட்டு அப்பரது திருஅடியில் அடைந்தனர்.

மிகப்பழைய உண்மைச்சரித்திரமாகிய இதனை ஆளுடைய பிள்ளையார் திருவாலங் காட்டுத் தேவாரத்துள் "முனநட்பாய், வஞ்சப் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட், டஞ்சும் பழையனூர்" என்று எடுத்துக் கூறியருளினர். இச்சிறப்பினை "எஞ்சலிலா வகைமுறையே பழய னூரா ரியம்புமொழி காத்தகதை சிறப்பித் தேத்தி" (திருஞான - புரா - 1011) என்று ஆசிரியர் காட்டியதுங் காண்க. ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகளது புராணங் கூறவந்தபோது அவரது மரபுச் சிறப்பு உரைக்கும் வகையால் இச்சரிதத்தினையே "மாறுகொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வணிகனுயி ரிறப்பத் தாங்கள், கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக் குழியி லெழு பதுபேரும் முழுகிக் கங்கை, ஆறணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்ப ரண்டமுற நிமிர்ந்தாடு மடியின் கீழ்மெய்ப், பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மாற் பிரித்தளவிட் டிவளவெனப் பேச லாமோ?" (திருத்தொண்டர் புராண வரலாறு - 15) என்று விரித்து உமாபதி சிவாசாரியார் வாயார வாழ்த்தியது காண்க. வேளாளர் தீக்குளித்த குழி இப்போது (நீலிகுளம் என வழங்கும்) ஒரு குளமாக உள்ளது. அதன் கரையில் அந்த வேளாளர் எழுபதின்மர் திருவுருவமும் நீலியின் உருவமும் ஒருகோயிலில் உள்ளன. கோயிலும் குளமும் கிலமாயுள்ளன. பழையனூர்த் திருவாலங்காட்டப்பரின் சீர்பாதந் தாங்கும் சிறந்த தொண்டர்களாய் அவ்வேளாளமரபினர் இன்றைக்கும் விளங்குவதும், அவ்வாய்மைச் சிறப்பின் மணம் இன்றளவும் வீசும் சிறப்பும் இத்திருநாட்டுக்குரிமையாவது காணப்பெறும். 3

1081. ஆணை யாமென நீறுகண் "டடிச்சேர" னென்னுஞ்
சேணு லாவுசீர்ச் சேரனார் திருமலை நாட்டு

வாணி லாவுபூண் வயவர்கண் மைத்துனக் கேண்மை
பேண நீடிய முறையது பெருந்தொண்டை நாடு. ச

(இ - ள்) வெளிப்படை. சிவபெருமானது திருவருளின் வடிவமே திருநீறாகு மென்று ஈடுபட்டுத் திருநீற்றினைக் கண்டு வணங்கும் வகையால், "அடியேன் அடிச் சேரன்" என்று, (நீறுபோன்று வெளுத்த உவர்மண் ஊறிய உடம்புடைய வண்ணானை) வணங்கும், நெடுந்தூரம் பரவிய கீர்த்தி மிக்க சேரமானுடைய திருமலைநாட்டில் வாழும் ஒளிவீசும் அணிகளை அணிந்த வெற்றிபொருந்திய வீரர்கள், மைத்துனர் முறை என்னும் உரிமையைப் பாராட்டுகின்ற நீடித்த முறைமையினையுடையது பெரிய தொண்டை நாடாகும்.

(வி - ரை) ஆணை - சிவசத்தி. திருநீறு, சத்தி என்கின்ற சிவனருளின் வடிவம். "பராவண மாவது நீறு" என்ற (திருநீற்றுப்பதிகம் - 8) தேவாரமும், "நீற்றுப் பதிகம் நிகழ்த்துங் காலை, மாற்றுப் பரையின் வரலா றாகும்" என்ற அதன் விளக்கமும் காண்க.

ஆணை யாமென நீறுகண்டு - நீற்றினை நீறாகக் காணாது எவ்விடத்தும் சிவனரு ளாகவே கண்டார் என்பதாம்.

நீறுகண்டு "அடிச்சேரன் என்னும்".....சீர்ச்சேரனார் என்ற இவ்வரலாறு கழறிற்றறிவார் நாயனார் புராணம், 17, 18, 19 திருப்பாட்டுக்களில் கூறப்பட்டுள் ளது. அரசராக முடிசூட்டிக் கொண்டு யானைமீது செல்லும் கழறிற்றறிவார் நாயனார், உவர்மண் ஊறி வெளுத்த உடம்புடன் ஒரு வண்ணான் பொதியுடன் தம்முன் வரக்கண்டனர். அப்பொலிவு திருநீறு பூசிய தன்மையில் விளங்கவே பட்டத்து யானையினின்றும் இறங்கி அவ்வண்ணானை வணங்கினர். அவன் பயந்து "அடியேன் அடி வண்ணான்" என்ன, அதனைக் கேட்டு, அவன் வண்ணானென்றும் மேனியில் உள்ளது உவர்மண் ஊறிய வெண்மையே என்றும் திருநீறு அன்றென்றும் தெரிந்த பின், சேரர்பெருமான் அவ்வேடம் திருநீற்று வாரவேடத்தினை நினைவித்ததென்று கொண்டு அவ்வண்ணானை நோக்கி "'அடியேன் அடிச்சேரன்;'.....திருநீற்றின் வாரவேடம் நினைப்பித்தீர்; வருந்தாதேகும்" என விடைகொடுத்தனுப்பினார் என்பது.

சேண் உலாவு சீர் - நெடுந்தூரமும், நெடுங்காலமும் சென்று நின்று பரவும் சிறப்பு.

திருமலைநாடு-மலைநாட்டின் சிறப்புக்குறிக்கத் திரு என்று அடைமொழி கொடுத்து ஓதினார். திருமலையின் தலைவரது ஏவலினால் இந்நாட்டினின்றும் வெள்ளை யானையி லேறிச்சென்று ஆளுடைய நம்பிகள் திருமலையை அடைந்தனர். அவரைத் தொடர்ந்து சேரமானாரும் குதிரையில் ஏறிச்சென்று திருமலையை அடைந்தனர். அவ்வாற்றால் திருமலையின் தொடர்புடைய நாடு என்ற குறிப்புமாம். (திருமலை - கயிலை.)

வயவர்கள் - வயம் - வெற்றி. வயவர் - வெற்றியுடைய வீரர்கள். வயவர் - வணிகர் என்றலுமாம்.

சேரநாட்டு வயவர்கள் மைத்துனக் கேண்மை பேண நீடியமுறை - இங்குக் குறித்த சரிதமாவது :—ஒரு காலத்தில் சேரர் நாட்டில் கலகமுண்டாக, அந்நாட்டினர் பலபக்கமும் சிதறிச் சென்றனர். அவர்களுள் ஒரு வணிகப்பெண் தொண்டை நன் னாட்டில் ஒரு வேளாளர் மனையில் அடைக்கலம்புக்கு அவர்களால் தமது பெண்போல அன்புடன் வளர்க்கப்பட்டு வந்தனள்.

கலகம் தீர்ந்த பல நாட்களின் பின்னர் அப்பெண்ணுக்குரியவர்கள் தேடிவந்து பெண்ணை அழைத்துச் செல்ல விரும்பியபோது வேளாளர் அப்பெண்ணைத் தாம் வளர்த்தமையால் தமது பெண்ணேயாவாள் எனக்கொண்டு அவளுக்கு வரிசைகள்

தந்து மணஞ் செய்வித்து வழி அனுப்பினர். ஆதலின் சேரநாட்டினர் மைத்துனர் முறைமை கொண்டாடினர். "கொத்தலர் கோதை வியன்சேர மண்டலக் கொம் பைத்தம்பால், வைத்திருந் தாங்கவ டன்கேளிர் நேடி வரவவர்க்கே, யுய்த்திரு வோர்க்கும் வரிசையு மாற்றி யுடனுஞ்சென்று, மைத்துனக் கேண்மை படைத்ததன் மேருதொண்டை மண்டலமே" என்பது தொண்டைமண்டல சதகம்.

கரிகாற் சோழனுடைய மகனுக்கும், மகன் மகனுக்கும் சேரர்குலப் பெண்களே மணம் செய்து கொண்டதனால் அந்த முறைபற்றிச் சேரநாட்டு வீரர்கள் கரிகாற் சோழனது நாட்டு வீரர்களே எதிர்த்துப் போர் புரியாமல், அவர்களுக்குச் சார்பாய் நின்று, வேற்றரசர்களே வென்று கொடுத்து மைத்துனக்கேண்மை கொண்டாடினர் என்றதொரு வரலாறும் உண்டு. கரிகாற் சோழன் - காடெறிந்து காஞ்சிபுரநகரங் கண்ட அரசன். 1164 பார்க்க. 4

*1082. கறைவி ளங்கிய கண்டர்பாற் காதல்செய்ம் முறைமை
நிறைபு ரிந்திட நேரிழை யறம்புரிந் ததனால்
பிறையு ரிஞ்செயிற் பதிபயில் "பெருந்தோண்டை நாடு
முறைமை யா"மென வுலகினின் மிகுமொழி யுடைத்தால். 5

(இ - ள்) கருமை விளங்கும் கழுத்தினையுடைய சிவபெருமானிடம் அன்பு செய் கின்ற முறைமையின் நிறைவினை விரும்ப உமையம்மையார் அறம் புரிந்ததனால், பிறைதடவுமளவும் உயர்ந்த திருமதிலையுடைய தலமானது பயில்கின்ற பெரிய தொண்டை நாடானது சிவநெறியின் நியதியை யுடையது என்று உலகத்தார் போற் றும் சிறப்பினை யுடையதாகும்.

(வி - ரை) கறை - விடத்தினாலாகிய கருமை. கறை விளங்கிய கண்டர் - திரு நீலகண்டர். கறை விளங்கிய - தாழ்ந்து மறைந்து இருக்கத்தக்க கருமையுடைய விடம் சிவபெருமான் திருமிடற்றில் தங்கப்பெற்றதனால் விளக்கம் பெற்றது என்ற குறிப்புமாம். "நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்" என்றது நீதி மொழி.

காதல் செய்ம்முறைமை நிறை புரிந்திட - அன்பு செய்கின்ற முறையாவது சிவ பூசை செய்தல். நிறை - நிறைவு ; புரிதல் - விரும்புதல். அம்மையார் சிவபிரானிடம் ஆகமத் திறங்களைக் கேட்டுத் தாம் சிவபூசைசெய்து அன்பு செய்வதனை விரும்பிய வரலாறு 1128 - 1131-ல் பார்க்க. "ஈசர்கழல் முறைபுரிந்த் மூன்னுணர்வு" (திருஞா - புரா - 61) என்றது காண்க.

நேரிழை - நேரிய - அழகிய - இழைகளாலாகிய அணிகளை அணிந்தவர்.

அறம்புரிந்ததனால் - அறங்களைச் செய்த வரலாறு 1146 - 1148 - 1149 பாகுரங் களிற் காண்க.

எயிற்பதி - காஞ்சிபுரம். சாதியொருமையாகக் கொண்டு அநேக நகரங்கள் என்பாருமுளர். "வளம்பதி பயின்றது" (1079) எனப் பிற பதிகளை முன்னர்க் கூறியது காண்க. பதி பயில் நாடு என்க. பயிலுதல் - விளங்குதல்.

முறைமையாம் - நீதியுடைத்தாகும். மிகுமொழி - தேற்றம்பெற அறிவோர் பலரும் எடுத்துரைக்கும் சொல். 5

## நானிலப் போது வியல்பு

1083. தாவில் செம்மணி யருவியா றிழிவன சாரல் ;
பூவில் வண்டினம் புதுநற வருந்துவ புறவம் ;

வாவி நீள்கயல் வரம்பிற வுகைப்பன மருதம்;
நீவி நித்திலம் பரத்திய ருணக்குவ நெய்தல். ௬

(இ - ள்) தாவில்...சாரல் - சாரல் என்ற குறிஞ்சியிடங்கள் குற்றமற்ற செம்மணிகள் அருவியினும் ஆற்றினும் இழிந்துவருதற் கிடமாயின; புறவம் - என்ற முல்லையிடங்கள்; பூவில்...புறவம் - பூக்களில் வண்டினங்கள் புதிய தேனினை அருந்துவதற் கிடமாயின; வாவி...மருதம் - மருதம் தடங்களில் நீண்ட கயல்மீன்கள் வரம்புகள் உடையும்படி துள்ளுதற்கிடமாயின; நீவி...நெய்தல் - நெய்தல் பரத்தியர் முத்துக்களைக் கழுவி உலர்த்துதற்கிடமாயின.

(வி - ரை) முதல் ஐந்து பாட்டுக்களால் தொண்டைநாட்டின் இயல்பினை அதன் பழைய சரித மேன்மைகளைக் குறித்துச் சிறப்பித்துக் கூறினார். இனி அதன் ஐந்திணை நானிலப் பகுதிகளைப் பிரித்துப் பொதுவகையால் இதுமுதல் 5 பாட்டுக்களால் (1083—1087) கூறுகின்றார். அதன்பின் அந்த ஐந்திணைகளையும் பிரித்துத் தனித்தனி சிறப்புவகையாற் கூறுவாராகி 1088 முதல் 1091 வரை நான்கு பாட்டுக்களால் குறிஞ்சித் திணையினையும், 1092ல் பாலைத் திணையினையும், 1093 முதல் 1096 வரை நான்கு திருப்பாட்டுக்களால் முல்லைத் திணையினையும், 1097 முதல் 1109 வரை 13 பாசுரங்களால் மருதத்திணையினையும், 1110 முதல் 1117 வரை 8 செய்யுட்களால் நெய்தற் றிணையினையும் கூறுகின்றார்.

அதன் பின்னர் இத்திணைகள் ஒன்றோடொன்று விரவும் திணைமயக்கம் கூறுவாராய் நெய்தலும் குறிஞ்சியும் கூடியதனை 1118ல், மருதமுங் குறிஞ்சியுங் கூடியதனை 1119லும், முல்லையும் குறிஞ்சியும் கூடியதனை 1120லும் உரைப்பார். நெய்தலும் முல்லையும் மயங்கியதனை 1121லும், மருதமும் முல்லையுங் கூடியதனை 1122லும் சொல்லுவார். நெய்தலும் மருதமும் கூடியதனை 1123-ல் பகர்வார். இவ்வாறு திணைமயக்கப் பகுதி அறுவகைப்படும் என்க.

அதன்மேல் 1124ல் இந்நானிலப் பகுதியினும் அமைந்த குடிச்சிறப்பினைப் பொதுவகையாற்கூறி, மேலே, தொண்டை நாட்டின் தலைநகரும், இப்புராணமுடைய நாயனாரது நகரமும் ஆகிய காஞ்சிபுரத்தின் சிறப்பினைக் கூறத்தொடங்கித் திருநாட்டுச் சிறப்புக் கூறியவாறே முற்பகுதியில் பழஞ்சரிதத் தொடர்புபற்றிய சிறப்பும், பிற்பகுதியில் நகரின் அமைப்பும் வளமும் கூறுவார்.

சாரலில் ஆறு இழிவன; புறவத்தில் நறவு அருந்துவ; மருதத்தில் உகைப்பன; நெய்தலில் உணக்குவ என்று கூட்டி உரைப்பினும் அமையும்.

தாவில் செம்மணி - தாவில் - மணிகள் பலவற்றிலும் காணப்படும் குற்றங்களில்லாத. செம்மணி - மாணிக்கம் என்ப.

அருவி ஆறு - அருவியினும் ஆற்றினும். ஏழனுருபும் எண்ணும்மையும் தொக்கன. அருவி அளவிற் சிறியதும், ஆறு பெரியதுமாம். அருவியின் ஆறு - (வழி) என்றுரைத்தலுமாம்.

இழிதல் - நீரினுடன் கீழே வருதல். சாரல் - மலைச்சரிவு. குறிஞ்சி நிலப்பெயர்.

நறவு - தேன். பூவில் புதுநறவு வண்டினம் அருந்துவ என்க. புதுநறவு - புதிதாக மலர்ந்த பூக்களின் தேன். புறவம் - முல்லைப் புறவம். முல்லை நிலப்பெயர்.

வரம்பு இற உகைத்தலாவது - கிளம்பி எழுந்து முட்டுதலால் வரம்புகள் இடிபடுதல் - அழிதல். நீவுதல் - கழுவுதல். துடைத்தல் என்பாருமுண்டு.

பரத்தியர் - நெய்தனிலப் பெண்கள். இழிவன முதலியன இடங்களின் நிகழ் பொருள்களின் றொழில் இடங்களின் மேலாயின.

சாரல் - புறவம் - மருதம் - நெய்தல் இவை நானிலப் பகுதிகள். செம்மணியும் நறவமும் கயலும் நித்திலமும் முறையே இவற்றிற் படும் கருப்பொருள்கள். அருவியும் ஆறும் குறிஞ்சியிலும், வாவி மருதத்திலும் உள்ள நீர்நிலைகள். 6

1084. குறவர் பன்மணி யரித்திதை விதைப்பன குறிஞ்சி ;
கறவை யானிரை மானுடன் பயில்வன கானம் ;
பறவை தாமரை யிருந்திற வருந்துவ பழனம் ;
சுறவ முண்மருப் பணங்கயர் வனகழிச் சூழல். எ

(இ - ள்) வெளிப்படை. குறவர்கள் பல மணிகளையும் அரித்து எடுத்துப் போக்கிக் காராமணிகளை விதைத்தற்கிடவமான குறிஞ்சி ; கறவைக் கூட்டங்கள் மான்களுடன் பயில்வதற்கிடமாவன காடுகள் ; பறவைகள் தாமரை மலரிலிருந்து கொண்டு இறால் மீன்களை உண்ணுதற்கிடமாவன வயல்கள் ; சுறா மீன்களின் முட்களையுடைய கொம்பு களைத் தெய்வப்படிமமாக வைத்து விழாக் கொண்டாடுதற்கிடமாவன கழியிடங்கள்.

(வி - ரை) குறிஞ்சி - குறிஞ்சி நிலம். குறவர் - குறிஞ்சிநில மக்கள். இதை - காராமணி. இதை விளைத்தல் அவர்களது தொழில். மணியரித்து இதை விளைத்தல் என்பது மணிகள் பரல்போன்று பயிர் விளைத்தற்கிடையூறாவன ஆதலின் அவற்றைப் பருக்கைக் கற்களோடொப்ப அரித்து எடுத்து எறிந்தார்கள் என்க. பயிர்க்குக் கேடு செய்வதில் விலையுயர்ந்த மணிகளும் ஏனைப் பருக்கைக் கற்களும் ஒன்றுபோலவே அமைவன ; ஆதலின் அரித்து எறிந்தார் எனப்பெற்றது. "நடவந்த வுழவரிது நடவொணா வகைபரலாய்த் தென்று துன்று, கடல்வந்த சங்கீன்ற முத்துவயற் கரைகுவிக்குங் கழுமலமே" (மேக - குறிஞ்சி - 8) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரம் காண்க.

**கறவை ஆனிரை - மான்** - முல்லைக் கருப்பொருள். முல்லையின் மாக்களாகிய ஆனும் (பசு) மானும் ஒருசேரக் கூடிவாழும் இயல்புடையன. **கானம்** - காடு. முல்லை நிலப்பகுதி.

**தாமரையிலிருந்து பறவை இற அருந்துவ** என்க. **அருந்துவ** - உண்பன. உண்பதற் கிடமாவன. **பழனம்** - வயல். மருதநிலப் பகுதி. **இற** - இறால்மீன். **இறா** என்பது இற என நின்றது.

**கழிச்சூழல்** - கழிகள் பரவிச் சூழ்ந்த இடங்கள். **கழி** - கடல்நீர் அலைகளினால் உந்தப்பட்டு நிலப்பிரப்பினுள் வந்து தங்கிவிடுமிடங்கள். **அணங்கயர்தல்** - விழாக் கொண்டாடுதல்.

**சுறவ முள் மருப்பு அணங்கயர்தல்** - சுறாமீனின் முள்ளையுடைய எலும்புகளைத் தெய்வத்தின் குறியாக வைத்துத் திருவிழாச் செய்தல் அந்நில வழக்கு.

**கானம்** - முல்லை. **பழனம்** - வயல் - மருதம். **கழிச்சூழல்** - நெய்தல்.

இதை, ஆனும் - மானும், இறவு, சுறவு இவை முறையே குறிஞ்சி முதலிய நானிலத் திணைக்கும் உரிய கருப்பொருள்களாம். 7

1085. கொண்டல் வானத்தின் மணிசொரி வனகுல வரைப்பால் ;
தண்டு ணர்க்கொன்றை பொன்சொரி வனதள வயற்பால் ;
வண்டன் முத்தநீர் மண்டுகால் சொரிவன வயற்பால் ;
கண்டன் முன்றுறைக் கரிசொரி வனகலங் கடற்பால். அ

(இ - ள்) வெளிப்படை. குலவரையிடங்களில் (மலையிடங்களில்) மேகங்கள் வானத்தினின்று முத்துக்களைச் சொரிகின்றன ; முல்லையின் அயலிடங்களில்

குளிர்ந்த கொத்துக்களையுடைய கொன்றைகள் பொன் சொரிவன; நீர்மிகுந்த கால்வாய்கள் வயலிடங்களில் உள்ள வண்டலில் முத்துக்களைச் சொரிவன; கடற் பாலில் தாழைகளை முன்னிடங்களிற் கொண்ட துறைகளில் கலங்கள் யானைகளைக் கொணர்ந்து சொரிகின்றன.

(வி - ரை) கொண்டல் மணி சொரிவன - முத்துக்கள் பிறக்கும் இடங்களுள் மேகமும் ஒன்றுமென்பர்; ஆதலின் மேகங்கள் மலையுச்சியில் பெய்யும்போது முத்துக் களையும் சொரிந்தன என்றார். மணி என்பதற்கு மணிபோன்ற மழைத்துளி என்று கொண்டுரைத்தலுமாம். கடலில் இப்பியின் அகட்டில் மழைத்துளி வீழ்ந்தால் அதுவே முத்தாகத் தரித்து விளைவதாம் என்பதும் இங்குக் கருதத்தக்கது.

குலவரை - நீண்டு உயர்ந்த பெருமலைகள். கொண்டல்மணி - குறிஞ்சிக் கருப் பொருள். பால் - ஏழனுருபு. பகுதியுமாம்.

துணர்க் கொன்றை பொன் சொரிவன - கொன்றையின் இதழ்கள் பொற் காசுபோல உதிர்வன என்பது கருத்து. "விரைசேர்பொன் னிதழிதர" (மேகரா - குறி - திருவீழி - 4) என்ற திருஞானசம்பந்த நாயனார் தேவாரங்கள் காண்க.

தளவு அயல் - முல்லைநிலப் பக்கம். தளவு - முல்லை. இங்கு நிலமும் மலரும் குறித்தது. இவை முறையே முல்லையின் முதற்பொருளும் கருப்பொருளுமாம். முல்லை நிலத்தில் கொன்றையும் முல்லையும் மலர்வன என்பதாம்.

வண்டல் - எருப்பகுதி நிறைந்த சேறு. "திருமேனி வெண்ணீற்று வண்ட லாட" முதலிய ஆட்சிகள் காண்க.

நீர்மண்டு கால் வண்டல் முத்தம் சொரிவன என்க. வண்டல் முத்தம் - என்ப தற்குச் சிறுமகளிர் வண்டலாட்டயர்ந்து விளையாடிச் சிந்திய முத்துக்கள் என் றுரைப்பாரு முண்டு. இப்பொருளில் வண்டல் - சிறுமியர் விளையாட்டிலொன்று. "வண்டல்பயில் வனவெல்லாம்" (காரைக் - புரா - 5). வயல் - மருதநிலப்பகுதி.

கண்டல் - தாழை. இது நெய்தனிலக் கருப்பொருள்.

கலம் துறைக் கரி சொரிவன என்க. அயல் நாட்டு யானைகளை மரக்கலங்கள் ஏற்றிக் கொணர்ந்து துறைமுகத்திற் சேர்ப்பன என்றபடி. யானையேற்றிவரத்தக்க பெருமரக்கலங்களும் அத்தகைய கடல் வாணிபமும் இருந்தன என்பதாம். "கலஞ் சொரிந்த கரிக்கன்றும்" (வாயிலார் புரா - 3) என்பதும் காண்க.

இப்பாட்டிலுள் நானிலப் பகுதியின் கருப்பொருள்களும் வளங்களும் முறையே கூறியதாயிற்று. 8

1086. தேனி றைந்தசெந் தினையிடி தருமலைச் சீறூர்;
பானி றைந்தபுற் பதத்தன முல்லைநீள் பாடி;
தூநெ லன்னநெய் கன்னலின் கனியதண் டுறையூர்;
மீனி றைந்தபே ருணவின வேலைவைப் பிடங்கள். கூ

(இ - ள்) வெளிப்படை. குறிஞ்சிக்குரிய சீறூர்கள் தேன் நிறையக் கலந்த செந் தினை மாவை யுடையன; முல்லைக்குரிய நீண்ட பாடிகள் பால் சேர்த்து அடப்பட்ட புல்லரிசிச் சோற்றையுடையன; மருத நிலத்தின் குளிர்ந்த துறைகளையுடைய ஊர்கள் தூய நெல்லரிசியன்னமும் நெய்யும் கரும்பும் இனிய கனிகளும் என்றிவற்றை யுடையன; நெய்தற் பகுதியாகிய கடலைச்சார்ந்த இடங்கள் மீன்கள் நிறைந்த பேருணவினையுடையன. கூ

(வி - ரை) இப்பாட்டிலுள் நானிலக் கருப்பொருள்களின் ஊர்களையும் உணவினை யும் கூறினர், உணவினைக் கூறியவாற்றால் அவ்வுணவு பெறும் வகையிற் செய்யப்

படும் செய்தி - தொழில் - களும் உடன் கூறியவாறுமாயிற்று. ஊர்கள், குறிஞ்சி நிலத்தில் சீறூர் எனவும், முல்லையில் பாடி எனவும், மருதத்தில் ஊர் எனவும், (நெய்தலில் பட்டினம் - பாக்கம் - எனவும்) பெயர் பெறும். வைப்பு என்பது பொதுப்பெயர்.

உணவு - அவ்வ நிலங்களில் வாழ்கின்ற மக்கள் அங்கங்கும் மிகுதியாய்க் கிடைப்பவையும் விளையக் கூடியவையுமாகிய விளைபொருள்களில் தக்கவற்றையே உணவாக்கிக் கொள்ளுதல் இயல்பாதலின் இங்குக் கூறிய உணவுவகைகள் அவ்வ நிலத்திற் குரியவாயின. இதுவே தமிழிற்குச் சிறப்புரிமையாகிய பொருளிலக்கண அமைதியாகும். சொல்லும் பொருளும் ஒத்தியங்கும் என்ற உண்மை தமிழுக்கு உரியது என்பது இதனைக் கண்டு கொள்க.

இங்குத் தேனும் தினையும் மலைகளிலும், புல்லரிசியும் பாலும் முல்லையிலும், நெல் - நெய் - கரும்பு - கனி முதலியன வயல்களிலும், மீன் கடலிலும் இயல்பாகவே மிகுதியும் படுகின்ற தன்மையும் காண்க. மீன்நிறைந்த பேருணவு - என்றது கடலினுள் பெருமீன்கள் மிகுதியாகக் கிடைக்கும் அளவினையும், ஏனைநிலங்களிற்போலப் பருவமும் சிரமமும் இன்றி இவ்வுணவு பெறும் எளிமையையும், இவ்வுணவிற் பயிலும் மாக்கள் இதிற் கொள்ளும் ஆர்வத்தின் மிகுதியினையும் குறித்தபடியாம். 9

1087. குழல்செய் வண்டினங் குறிஞ்சியாழ் முரல்வன குறிஞ்சி;
முழவு கார்கொள முல்லைகண் முகைப்பன முல்லை;
மழலை மென்கிளி மருதமர் சேக்கைய மருதம்;
நிழல்செய் கைதைசூழ் நெய்தலங் கழியன நெய்தல். கஂ

(இ - ள்) வெளிப்படை. குறிஞ்சி நிலத்தில் குழல்போல ஒலிக்கின்ற வண்டின் கூட்டங்கள் குறிஞ்சிப் பண்களைப்பாடுவன; முல்லை நிலத்தில் முழவுப்பறைகள் கார் போல் முழங்க முல்லைக் கொடிகள் அரும்புவன; மருத நிலத்தில் மழலையினை மிழற்றுகின்ற மென்மைத் தன்மையுடைய கிளிப்பிள்ளைகள் மருதமரங்களைத் தமக்குத் துயிலிடமாக உடையன; நெய்தனிலங்கள் நிழலைத் தருகின்ற தாழைகள் சூழ்ந்த நெய்தல் மலர்கள் மலர்ந்திருக்கும் கழிகளையுடையன.

(வி - ரை) குழல்...குறிஞ்சி - குழல்செய் - வேய்ங்குழலினைப்போல ஒலி செய்கின்ற. குழல் - கூந்தல் எனக்கொண்டு குறமகளிரின் கூந்தல் என்றுரைப்பாருமுண்டு. குறிஞ்சிக்குரிய கருப்பொருள்களுள் குறிஞ்சி யாழும், வண்டும் இங்குக் கூறினார்.

முழவு கார் கொள - முழவு - முல்லை முழவு. தயிர்த்தாழி என்பாருமுண்டு. கார் கொள - மேகங்களின் ஒலிபோல முழங்க. முகைத்தல் - அரும்புதல். முல்லைக் கருப்பொருள்களுள் முழவும், முல்லைப் பூவும், முதற்பொருள்களுள் கார் காலமும் கூறினார்.

மழலை...மருதம் - மருத நிலத்தின் மருதமாகிய மரமும், கிளியாகிய புள்ளும் கூறியபடி. சேக்கை - துயிலிடம்.

நிழல் செய்.....நெய்தல் - இங்குக்கூறிய நெய்தற் கருப்பொருள்கள் தாழையும், நெய்தற்பூவும் ஆம். நெய்தல் அம் கழி - நெய்தல் பூக்கள் பூத்தற்கிடமாகிய கழிகள். அம் - அழகு. நெய்தற் பூக்களாலும் கைதை நிழலாலும் அழகு படுத்தப்பட்ட கழி என்பது. குறிஞ்சி, வண்டுகளால் குறிஞ்சியாழ் முரல, முல்லை முழா முழக்கி முல்லை அரும்புவிக்க, மருதம் மழலைக் கிளிகளை உறங்குவிக்க, நெய்தல் கைதையின் நிழலாலும் நெய்தற் பூவினாலும் அழகு படுத்திற்று என்றதொரு தொடர்பாகிய கவிநயமும் காண்க. 10

## சிறப்பியல் - குறிஞ்சி

1088. மல்கு மப்பெரு நிலங்களில் வரைபுணர் குறிஞ்சி
யெல்லை யெங்கணு மிறவுள ரேனன்முன் விளைக்கும்
பல்பெ ரும்புனம் பயில்வன படர்சிறைத் தோகை,
சொல்லு மப்புனங் காப்பவுஞ் சுரிகுழற் றுகை. கக

(இ - ள்) வெளிப்படை. வளங்கள் நிறைந்த மூற்கூறிய அந்த நால்வகைப் பெருநிலங்களில் மலையைச் சார்ந்த குறிஞ்சி நிலத்தின் இடங்களெங்கும் இறவுளர்கள் தினைப்பயிரினை முன்விளைக்கும் பல பெரிய தினைப்புனங்களிலெல்லாம் படரும் சிறகினையும், தோகையினையும் உடைய மயில்கள் பயில்வன; சொல்லப்படும் அந்தத் தினைப்புனங்களைக் காப்பவர்களும் சுரித்த குழலையுடைய மயில் போன்ற சாயலையுடைய குறமாதர்கள்.

(வி - ரை) அப்பெருநிலங்கள் - குறிஞ்சி ஆதியாக மேல் 5 பாட்டுக்களிலும் (1083 - 1087) கூறிய அந்த நால்வகைப் பெருநிலப் பகுதிகள். அ - முன்னறி சுட்டு. பெருநிலம் - நிலத்தின் பெரும்பகுதி.

வரைபுணர் குறிஞ்சி - மலையும் மலையைச் சார்ந்த இடமும் ஆகிய குறிஞ்சி. இறவுளர் - குறிஞ்சி நிலமக்கள். "இறவுளர்" (665) பார்க்க. குறவர் - வேடர் என்பாருமுண்டு.

படர் சிறைத் தோகை புனம் பயில்வன என்க. மயிலின் சிறையும் தோகையும் வெவ்வேறு உடற் கூறுபாடுகள். தோகையையுடைய மயில் தோகை எனப்பட்டது. சினை ஆகுபெயர். தோகை - மயிலின் வால்போல நீண்டிருக்கும் பகுதி. பீலி எனவும்படும். இது உதிர்ந்து மூளைப்பதாலும், நீண்டு வளர்வதாலும், விரித்தாட உதவுவதாலும் படர் என்ற அடைமொழி தந்தார். படர் - படர்தல் - செல்லுதல் என்ற பொருளில் மயில் பறக்க உதவுவதனால் படர்கின்ற என்று சிறைக்கும் ஏற்ற அடைமொழியாயிற்று. படர்சிறை - படர்தோகை எனக்கூட்டி யுரைக்க நின்றது.

சொல்லும்...தோகை - சொல்லும் - மேலே சொல்லப்படும். குறிஞ்சிக் குரிப் பொருளாய்த் தலைவனும் தலைவியும் புணர்தற்கிடமாதலானும், அகப்பொருளில் முதலில் வைக்கப்படுதலானும் எடுத்துச் சொல்லப்படும் என்ற குறிப்பும் காண்க.

குறிஞ்சித் தெய்வமாகிய முருகன் தனது சொந்த நிலத்தில், தனக்குரிய மயிலையும், குறவர்கோமகளாகிய மயில்போன்ற வள்ளிநாயகியாரையும் தினைப்புனத்தே கண்டு அருள்விளையாடல்கள் பயின்ற செய்திகள் நினைவு கூர்தற்குரியனவாய்ச் சேர்த்துச் சொல்லப்படும் என்ற குறிப்பும் காண்க.

சுரி குழல் தோகை - சுரிகுழல் - சிறைத் தோகையினின்றும் வேறு பிரித்துணர நிற்பதனால் பிறிதினியைபு நீக்கிய விசேடணம். தோகை - சினை ஆகுபெயராய் மயிலை உணர்த்திய சொல்; பின்னர் மெய்ப்பற்றிவந்த உவம ஆகுபெயராக மயில் போன்ற சாயலையுடைய குறமாதர்க்காயிற்று. காப்ப - தோகை என்றதற்கேற்பக் காப்ப என அஃறிணை வினைமுற்றினைக் கூறினர். விருந்து வந்தது என முடிந்தது போல உயர்திணை அஃறிணையாகச் சொல்லியல்புபற்றித் திணை மயங்கிற்று. திணையும் பன்மையினொருமையும் மயங்கிவந்த வமைதி.

அப்பெரு நிலங்களில் - முன்னர்க் குறிஞ்சி முதலிய நானிலப் பகுதிகளை முதல் கரு என்ற பொருள் வளங்களாற் பொதுவகையாற் சேர்த்துக் கூறிய ஆசிரியர், இனி அவற்றைத் தனித்தனி பிரித்துச் சிறப்பித்துக்கூறத் தொடங்குகின்றார். இது

முதல் நான்கு பாட்டுக்களும் குறிஞ்சி வளங்கள். இதனுல் குறிஞ்சிக் கருப்பொருள் களுள் மக்களும், புள்ளும், செய்தியும் கூறியபடியாம்.

படர்வன பயில் சிறைத் தோகை—என்பதும் பாடம். 11

✓1089. அங்கண் வான்மிசை யரம்பையர் கருங்குழற் சுரும்பு
பொங்கு பூண்முலைக் கொடிச்சியர் குழன்மூழ்கிப் போகாச்
செங்கண் மால்விடை யார்திருக் காளத்தி யென்னு
மங்குல் சூழ்வரை நிலவிய வாழ்வினுன் மல்கும். கூ

திருக் காளத்தி

(இ - ள்) வெளிப்படை. அழகிய இடமகன்ற விண்ணுலகத்தில் வாழும் அரம்பையர்களது கரிய கூந்தலிலுள்ள வண்டுகள், ஒளிவிளங்குகின்ற அணிகளை யணிந்த தனங்களையுடைய குறவர் மாதர்களுடைய கூந்தலினுள் மூழ்கி அங்கிருந்து நீங்காதிருத்தற்கு இடமாகிய, சிவந்த கண்களையுடைய திருமாலே விடையாகவுடைய சிவபெருமானது திருக்காளத்தி என்னும் மேகஞ்சூழ்ந்த திருமலையைத் தன்னுள் நிலவப்பெற்ற வாழ்வுடைமையால் (அக்குறிஞ்சி) மிகுவதாகும்.

(வி - ரை) அங்கண் என்றதற்கு அந்தக் குறிஞ்சிநிலத்தில் என்பாருமுண்டு.

அரம்பையர் - தேவமாதர். இவர்கள் காளத்தியில் பூசிக்கவந்து வழிபடும் வானவரோடு உடன்வந்தவர்கள் என்க. "கடவுண்மால் வரையி னுச்சி, யதிர்தரு மோசை யைந்து மார்கலி முழக்கங் காட்ட" (750) என்றவிடத்துத் திருக் காளத்தியிற் றேவர்பூசித்தல் குறிப்பிக்கப்பட்டது காண்க. கண்ணப்ப நாயனர் பேறு பெற்றபோது உடனிருந்து கண்டு "நான்முகன் முதலா வுள்ள வானவர் பூவின்மாரி பொழிந்தனர்" (828) என்றதும் கருதுக.

கொடிச்சியர் - குறவர் மகளிர். குறிஞ்சிநிலத் தலைமகளிரைக் கொடிச்சியர் என்பது பொருளிலக்கணம். குழன் மூழ்கி - அவ்வாசனையில் ஈடுபட்டு, அதில் மூழ்கித் தன்வசமிழந்து என்ற குறிப்புமாம்.

(குறிஞ்சி) வாழ்வினுல் மல்கும் என்க. குறிஞ்சி என்ற எழுவாய் வருவிக்க. தொண்டைநாட்டுக் குறிஞ்சிநிலமானது திருக்காளத்தி என்ற திருமலையினைத் தன் னுள்ளே இருக்கப்பெற்ற வாழ்வுடைமையினுல் சிறப்புப் பெருகுவதாயிற்று என்க. அடுத்த இரண்டு பாட்டுக்களிலும் "குறிஞ்சி மேன்மையின் மிக்கது" (1090), "குறிஞ்சி செய் தவம்" (1091) என்றவை காண்க. குறிஞ்சி தவஞ்செய்து இத்தலங்களைத் தன்னுள்ளே கொண்டு மேன்மையடைந்தது என்பது தற்குறிப்பேற்றம்.

அரம்பையர் குழற்சுரும்பு கொடிச்சியர் குழன்மூழ்கிப் போகா என்றது அரம்பையர் கூந்தலினும் கொடிச்சியர் கூந்தலில் வண்டுகள் மிக்க மணம் கண்டன என்றதாம். வானரம்பையர் கூந்தல் மந்தாரம், கற்பகம் முதலிய மலர்களினுலாகிய செயற்கை மணம் மட்டும் கொண்டது. ஆனல் இங்குள்ள கொடிச்சியர் குறிஞ்சிநிலத் தலைவியராகிய உத்தமசாதிப் பெண்களாதலின் அவர் கூந்தல் இயற்கை மணமும், குறிஞ்சியின் பல செழித்த பூக்கள் சூடிய செயற்கைமணமும் ஆக இருவகை மணமும் பொருந்தியது என்பதாம். அன்றியும் இக்கொடிச்சியர் காளத்திநாதரின் பங்குடைய ஞானப்பூங்கோதையம்மையாரை வழிபட்டு அவரது திருவருள் மணம் பெற்றவர்கள். அவ்வம்மையாரது கூந்தலின் இயற்கை மணம் பற்றிய திருவிளையாடற் புராண வரலாறுகளும், "கொங்குதேர் வாழ்க்கை" எனற இறைவன் பாடலும் இங்கு நினைவு கூர்தற்பாலன.

தொண்டைநாட்டுக் குன்ற மகளிர் கூந்தல்களின் உயர்வை வாசனையால் வண்டுகள் முதலில் அறிந்து, அரம்பையர் கூந்தலிலிருப்பதினும் இங்குத் தங்குதலே சிறந்தது என்று கண்டு, அவ்வரம்பையர் கூந்தலைவிட்டுக் கொடிச்சியர் கூந்தலில்மூழ்கிக் குடிகொண்டன. அதன் பின்னர், அவ்வண்டுகள் வழி காட்டினமையாலும் பிறவாற் றாலும் இவ்வண்மையையறிந்த அரம்பையரும் இமையவர்களும் தேவருலகில் வாழ் வதினும் வேடமாதரும் வேடருமாகப் பிறந்து இங்கு வாழ்தல் சிறப்புடைத்தென்று வேண்டி அவ்வாறே இங்கு வந்து பிறந்து இறைவரை வணங்குகின்றார்களென் றும் (1090), அவ்வாறு பிறக்கும்பேறு கிடைக்கப்பெறுத அரமகளிர் கொடிச்சியருடன் கூடி இங்குச் சுனைநீராடுகின்றனர் என்றும் (1091) இக்கருத்தினைத் தொடர்ந்து அடுத்த இரண்டு பாட்டுக்களினும் கூறுதல் காண்க.

**காளத்தி** - தொண்டை நாட்டின் 19-வது திருத்தலம். கண்ணப்பர் புராணம் - தலவிசேடம் - பார்க்க.

**கநங்குழல்** - அழுதழுண்டு நெடுநாள் மூப்பின்றி யிருக்கப்பெற்றார்களாதலின் நரைசேராது கறுத்த கூந்தல் என்பது குறிப்பு.

**பொங்குபூண் முலைக் கொடிச்சியர்** - வள்ளி நாயகியாரை வளர்த்த தாயர் சேடி மார் முதலியோர்களின் வழியினர் என்ற சிறப்புக் குறித்தது. 12

1090. பேறு வேறுரு ழிமையவ ரரம்பையர் பிறந்து
தீரு மாறில் வேடரு மாதரு மாகவே வணங்கும்
இடைச் ஆறு சூழ்சடை யண்ணலார் திருவிடைச் சுரமுங்
சுரம் கூறு மேன்மையின் மிக்கதந் நாட்டுவண் குறிஞ்சி. கஉ

(இ - ள்) வெளிப்படை. அந்நாட்டினது வண்மையுடைய குறிஞ்சி நிலமானது, வேருகிய தனிப்பேற்றினை எண்ணி நோற்ற வானவர்களும் அரம்பையர்களும் இங்கு ஒப்பற்ற வேடர்களும் வேடமாதர்களுமாகப் பிறந்து வணங்குதற்கிடமாகிய, கங்கை யாறு சூழ்கின்ற சடையையுடைய பெருமையுடைய சிவபெருமான் எழுந்தருளிய திருவிடைச்சுரமும் நிலவிய வாழ்வுடையதென்று சொல்லத்தக்க மேன்மையினால் மிகுந்தது.

(வி - ரை) **பேறு வேறு சூழ்** - **பேறு** - அவ்வப்போது உருத்தெரியாது வந்து வணங்கிப் போதலைவிட எப்போதும் இங்கு வாழ்ந்து வணங்கும் பேறு. **வேறு சூழ்** - தனியாக - வேறுகச் - சூழ்ந்த. சூழ்தல் - ஆலோசித்தல்; நினைத்தல். அதற்கென்று தனியாக நினைத்துத் தவஞ்செய்து வேடராகவும் வேடமகளிராகவும் பிறந்தார்க ளென்பதாம்.

**மாறில்** - முன்னரே தவஞ்செய்த தேவராயிருந்து பின்னரும் தவஞ்செய்து இறைவனை வணங்கப்பெற்றவர்களாதலின் அவ்வாறு செய்யாத ஏனை வேடர்கள் இவர்களுக்கு ஒப்பாகார் என்பார் **மாறில் வேடர்** என்றார். "புவனியிற் போய்ப்பிற வாமையி னுணும் போக்குகின் றீமவமே" என்ற திருவாசகம் காண்க.

**பிறந்து - வணங்கும்** எனக. **பிறத்தல்** - வணங்குதற்காகப் பிறவி எடுத்தனர் என்பதாம். வணங்குதலே பிறவிப்பயனும் என்ற உண்மை வற்புறுத்தப்பட்டது.

**திருவிடைச் சுரமும் கூறுமேன்மை** - இடைச்சுரமும் நிலவிய வாழ்வுடைய தென்று எடுத்துச் சொல்லும் மேன்மை எனக. "நிலவிய வாழ்வுடையது என்று" என்பது குறிப்பெச்சம். உம்மை, மூன் கூறிய திருக்காளத்தியேயன்றி, என இறந்தது தழுவிய எச்சவும்மை.

**வண் குறிஞ்சி** - குறிஞ்சிக்கு வண்மையாவது தன்னையடுத்தவர் யாவர்க்கும் சிவநெறியின் வாழ்வுபெற வழிகாட்டி யிடங்கொடுக்கும் தன்மை.

இப்பாட்டில் குறிஞ்சி நிலக்கருப்பொருள்களுள் மக்கள் - வேடரும் வேட மாதரும் என்பது உணர்த்தப்பட்டது.

**திருவிடைச்சுரம்** - தொண்டை நாட்டு 27-வது தலம். மலைகளினிடையில் கற்சுரத்தில் இடையில் உள்ள காரணத்தினாற் போந்த பெயர். சுவாமியின் ஒளியுருவங்கண்டு ஆளுடையபிள்ளையார் "இடைச்சுர மேவிய இவர்வண மென்னே?" என்று பாடியருளினர். செங்கற்பட்டு நிலையத்திலிருந்து திருக்கழுக்குன்றம் கற்சாலையில் 3 நாழிகை சென்று, அங்கு நின்றும் வடக்கே திருப்போரூர் மட்சாலையில் 2 நாழிகையில் வடக்கே திரும்பி அரைநாழிகையளவில் அடையத்தக்கது.

**மேன்மையின் மிக்கது** - "நிலவிய வாழ்வு" என ஒரு மேன்மை முன்னர்க் கூறப்பட்டதாதலின் மேலும் ஒரு மேன்மை கூடும்போது **மேன்மை மிக்கதாயிற்று** என்றார். 13

1091. அம்பொன் வார்குழற் கொடிச்சிய ருடனர மகளிர்
**திருக்** வம்பு லாமலர்ச் சுனைபடிந் தாடுநீள் வரைப்பின்
**கழுக்** உம்பர் நாயகர் திருக்கழுக் குன்றமு முடைத்தால்
**குன்றம்** கொம்பர் வண்டுசூழ் குறிஞ்சிசெய் தவங்குறை யுளதோ? **கச**

(இ - ள்) வெளிப்படை. அழகிய பொன்னிறமுடைய மலர்களை அணிந்த, வளர்ந்து முடித்த கூந்தலையுடைய கொடிச்சியர்களுடன் தெய்வமாதர்கள் மணம் பொருந்திய பூக்களையுடைய சுனைகளிற் படிந்து முழுகுகின்ற நீண்ட இடங்களையுடைய, தேவர் தலைவராகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் **திருக்கழுக் குன்றத்**தையும் அக்குறிஞ்சி தன்னிடத்துடையது. ஆதலின் மரக்கொம்புகளில் மலர்களில் வண்டுகள் மொய்த்தற்கிடமாகிய அந்நாட்டுக் **குறிஞ்சி நிலம் செய்தவம் குறைவுடைய தாமோ?** (அன்று.)

(வி - ரை) **அம் பொன் வார் குழல்** - "கொடிச்சியர் குழன் மூழ்கி" (1089) என்ற கருத்தினைத் தொடர்ந்து கூறியபடி. **பொன்** - பொன்னிறமுடைய மலர்கள். பொன்னணிகள் என்றலுமாம். **வார்குழல்** - பலதிறப்பட வார்ந்து முடிக்கப்பட்ட. அழகிய பொன்னிறம் ஒழுகும் என்றுரைப்பாரும் உண்டு.

**உடன் படிந்தாடும்** - என்க. கொடிச்சியரின் சிறப்பு நோக்கி **உடன்** என்ற உருபை அப்பெயருடன் சேர்த்து ஓதினார். **அரமகளிர்** - மலைவாழும் தெய்வச்சாதிப் பெண்கள். "வான் அரமகளிர்", "சூர் அரமகளிர்" என்பன கான்க. **உடைத்து** - குறிஞ்சி என்ற எழுவாய் வருவிக்க. அக் குறிஞ்சி எனச்சுட்டு வருவிக்க.

**குறையுளதோ?** - ஓகாரவினா இன்மை குறித்தது. செங்கண்மால் விடையார் திருக்காளத்தியும், ஆறுசூழ்சடை அண்ணலார் திருவிடைச்சுரமும், உம்பர் நாயகர் திருக்கழுக்குன்றமும் தன்னுட் பொருந்தப்பெற்றதென்றால் குறிஞ்சி செய்தவம் நிறைவுடையதேயாம் என்பது. இத்தவம் வேறெந்தக் குறிஞ்சிக்குள்ளது என்பதும் குறிப்பு. உம்மை - முன் சொன்னவற்றோடு என இறந்தது தழுவிய எச்சவும்மை.

**திருக்கழுக்குன்றம்** - தொண்டை நாட்டு 28-வது திருத்தலம். தேவாரப்பாடல்களும் திருவாசகங்களும் பெற்ற சிறப்புடையது. செங்கல்பட்டு நிலையத்திலிருந்து தென் கிழக்கே கற்சாலையில் 9 நாழியளவில் உள்ளது. இரண்டு கழுகுகள் முறையே நான்கு யுகங்களினும் பூசிக்கும் காரணத்தாற் போந்த பெயர். வேதங்கள் மலையுருவ

மாயினமையின் வேதகிரி எனப்படும். கழுகுகளின் பூசை இன்றும் காணத்தக்கது. வடநாட்டார் பட்சி தீர்த்தம் என்பர். 12 ஆண்டுகளுக் கொருமுறை நீரிடியின் பூசை நடைபெறுகிறது. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை அடிவாரத்தில் உள்ள சங்க தீர்த்தத்தில் சங்கு விளைந்து மிதந்து வருவதனை இக்காலத்தும் கண்கூடாகக் காணலாம். இச்சங்க தீர்த்தத்தில் மூழ்கி மலைசுற்றி வந்து தரிசித்துப் "பிணிதான் தவிரு மென்று பிறங்கிக் கிடப்பார்" நோய் நீங்கப்பெற்றுச் செல்லுதல் இன்றும் காணும் காட்சியாகும். 14

## பாலை - (குறிஞ்சியும் முல்லையும்)

1092. கோல முல்லையுங் குறிஞ்சியு மடுத்தசில் லிடங்க
ணீல வாட்படை நீலிகோட் டங்களு நிரந்து
கால வேனிலிற் கடும்பகற் பொழுதினைப் பற்றிப்
பாலை யுஞ்சொல லாவன வுளபரன் முரம்பு. கரு

(இ - ள்) வெளிப்படை. அழகிய முல்லை நிலத்தையும் குறிஞ்சி நிலத்தையும் அடுத்த பரற்கற்களோடு கூடிய மேட்டு நிலங்களாகவுள்ள சில இடங்கள், நீலநிற முடையவளாகிய வாட்படையேந்திய துர்க்கையினது கோயில்களும் நெருங்கியுள்ளனவாய்ப், பெரும்பொழுதாகிய வேனிற்காலத்திற் கடும்பகற்பொழுதினைப் பற்றிப் பாலைநிலமென்றும் சொல்லும்படியாகவுள்ளன.

(வி - ரை) பாலையும் சொல்லலாவன - நடுவுநிற்றல் காரணமாகப் பாலைத்திணை நடுவுநிலைத் திணை எனப் பெயர் பெற்ற தென்பர் மாதவச் சிவஞான யோகிகள். "'நடுவ ணைந்திணை நடுவண தொழியப், படுதிரை வையம் பாத்திய பண்பே' என நிலம் பகுத்தோதுங்கால் நடுவணதெனக் குறியிட்டாராகலின், அங்ஙனம் பகுக்கப்படு நிலங்களுமாகாது, அவற்றின் வேறுமாகாது, தனக்குரிய நிலம் நடுநிகர்த்ததாய் நிற்றல்பற்றி நடுவுநிலைத்திணை யெனக் குறியிட்டாலுதலே ஆசிரியர் கருத்தென்க. அங்ஙனமாதல், "முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து, நல்லியல் பழிந்து நடுங்குதிய ருறுத்துப், பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்" (சிலப்பதிகாரம்) என்பதனானுமுணர்க. இங்ஙனங் குறியிட்டமையாற் பாலைக்கு நிலமுண்டென்பதூஉம், அதனை யேனை நிலங்களின் வேறுக வைத்துப் பகுத்தெண்ணுதல் மரபன்றென்பதூஉம், ஆசிரியர் கருத்தாதலுணர்க. இவ்வுண்மையுணராதார் பாலை சான்ற சுரம் நானிலத்து ளடங்காதென வேறு வைத்தெண்ணி ஆசிரியரோடு மாறுகொண்டு நிலமைந்தெனத் தமக்கு வேண்டிய வாறே கூறுப" என்றும், "ஆசிரியர் (தொல்காப்பியர்) முல்லை - குறிஞ்சி - மருதம் - நெய்தல் - பாலை என முறை செய்தற் கேது, மாலை - யாமம் - வைகறை - காலை - நண்பகல் என்னுஞ் சிறுபொழுதின் கிடக்கை முறையேயன்றி வேறின்மை" என்றும், எமது மாதவச் சிவஞான யோகிகள் தமது முதற்சூத்திர விருத்தியில் உரைத்தவை இங்கு நினைவு கூர்தற்பாலன. பாலைக்கு நிலமுண்டாயினும் அது நானிலங்களுமாகாது அவற்றின் வேறுமாகாது நிற்றல்பற்றி அதன் நிலம் நானிலங்களின் வேறுக வைத்தெண்ணப்படுதல் மரபன்மை யுணர்த்துதற்குப் பாலையும் சொல்லலாவன - பான் முரம்பு என்று சிறப்பு உம்மை தந்தோதினர். இக்கருத்துப் பற்றியே "நானிலத் தைந்திணை வளமும்" என்றனர் காஞ்சிப் புராணமுடையார்.

வேனிலிற் கடும்பகற் பொழுதினைப்பற்றி - நிலமும் பொழுதும் என்ற முதற் பொருளிரண்டனுள் பாலைக்கு நிலமும் பொழுதும் கூறினர். வேனில் அதற்குரிய பெரும்பொழுதும், கடும்பகல் உரிய சிறு பொழுதுமாம். கடும்பகல் - நடுப்பகல்.

நண்பகல் என்ப. காலம் - பொழுது என்ற முதற்பொருள். பொழுதினைப்பற்றி - காலவேறுபாட்டால் பாலையாவது என்பதாம்.

நீலிகோட்டங்களும் நிரந்து - நீலி-துர்க்கை. நீல நிறமுடையவளாதலின் நீலி எனப்படுவாள் என்று குறிப்பார் நீல - நீலி என்றார். கரம் கரி - என்றாற்போல நின்றது. வாட்படை - வாளாகிய படை. இது நீலியின் படை.

முல்லையும் குறிஞ்சியும் அடுத்த சில் இடங்கள் - முல்லையும் குறிஞ்சியும் தம்முள் விரவிய நிலங்களில் காலவேறுபாட்டால் தமது தன்மை திரித்த நிலையிற் பாலை எனப்படும். ஆதலின் சில் இடங்கள் என்றார். இது வேறு; முல்லையும் குறிஞ்சியும் தம்மியல்பு திரியாது மயங்கும் திணைமயக்கம் வேறு; அதனை 1120-ல் வேறு கூறுவது காண்க. முதற்பொருளுக்குள் நிலமும் பொழுதும், கருப்பொருளுக்குள் தெய்வமும் கூறினார். பாலைக் கருப்பொருள்களுள் ஏனையவற்றையும் உடன்கொள்க.

அடுத்த சில் இடங்கள் - ஐந்திணைகளுள், தனி நிலமுள்ள நான்கினையும் பொது வகையாற் சொல்லி, அவற்றுள் முதன்மை பெற்ற குறிஞ்சியைச் சிறப்புவகையால் முதலிற் கூறினார். மேலே, இனி முல்லையைச் சிறப்புவகையாற் கூறத் தொடங்குகின்ற ஆசிரியர், முல்லையும் குறிஞ்சியும் அடுத்து நடுவுநிலைத் திணை எனப்படுவதாய காலவேறுபாடுபற்றித் திரிந்த பாலையை அடுத்துவைத்துக்கூறி, மேலே முல்லையைத் தொடர்ந்து சொல்லும் வைப்புமுறை கண்டுகொள்ளத் தக்கது. 15

## முல்லை

1093. சொல்லு மெல்லையின் புறத்தன துணர்ச்சுரும் பலைக்கும்
பல்பெ ரும்புனற் கானியா றிடையிடை பரந்து
கொல்லை மெல்லிணர்க் குருந்தின்மேற் படர்ந்தபூம் பந்தர்
முல்லை மென்புதன் முயலுகைத் தடங்குநீண் முல்லை. கசு

(இ - ள்) துணர்ச்சுரும்பு...நீண்முல்லை - பூங்கொத்துக்களில் மொய்த்த வண்டுகளை அலைத்துக்கொண்டு வரும் பெரும்புனலுடைய கானியாறுகள் இடையிடையே ஓடிப்பரந்து சென்று, கொல்லையிலுள்ள மெல்லிய இலைகளையுடைய குருந்தமரத்தின் மேற்படர்ந்த பூம்பந்தர் போன்ற முல்லைக் கொடிகளின் மெல்லிய புதல்களிற் பதுங்கியிருந்த முயல்களை உகைத்துப், பின் அடங்குதற்கிடமாகிய நீண்ட முல்லை நிலங்கள்; சொல்லும் எல்லையின் புறத்தன - மேற்சொல்லிய எல்லையின் புறத்தில் உள்ளன.

(வி - ரை) சொல்லும் எல்லை - தொல்காப்பியனார் வகுத்துச் சொன்ன நானிலங்களிற் குறிஞ்சியின் எல்லை.

கானியாறு - பரந்து - புதல் முயல் உகைத்து அடங்கும், முல்லை - எல்லையின் - புறத்தன என்று கூட்டிமுடிக்க.

அடங்கும் முல்லை - அடங்குதற்கிடமாகிய முல்லைநிலம்.

பூம்பந்தர் - அயலில் பரந்து குடைபோல விரிந்த குருந்த மரத்தின் மேற்படர்ந்து நிறையப் பூத்தலின் முல்லைக் கொடியானது பூம்பந்தர் போன்றதென்பதாம். லதா மண்டபம் என்பர் வடவர். (லதை - கொடி.)

மெல்இணர்க் குருந்து - மென்பூம்பந்தர் - மென்முல்லை - மென் புதல் - மென் முயல் - என இவை யாவையும் மென்மையோடு பொருந்த உரைத்தது காண்க. "குருந்த மேறிக் கொடிவிடு மாதவி" (கௌசிகம் - திருவாரூர் - 5), "கொல்லை முல்லை மெல்லரும், பீனும் குற்றாலம்" (குறிஞ்சி - 3) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரங்கள் காண்க.

பெருமபுனல் - காணியாறு - இடையிடை பரந்து - முயலுகைத்து - அடங்கும் என்றது காட்டாறுகள் வெள்ளத்தாற் பெருகுங்காலத்தில் முல்லைநிலக்காடுகளில் பல பக்கமும் பரந்து செல்வதனால் நீரின் வேகம் குறைந்து நிரந்து செல்லும்; அந்நீர் மெல்லிய முல்லைப்புதல்களினூட் பரந்து செல்லும்போது அங்குப் பதுங்கியிருக்கும் மென்மைத் தன்மையுடைய முயல்கள் அந்நீரினால் தூரத்தப்பட்டு அங்கு நின்றும் ஓடும்; இவ்வாறு புதல்கள் முதலிய பல இடங்களிலும் பரந்து சென்றபின் காணியாற்றின் பெருநீத்தம் அடங்கும் (வேகம் குறையும்) என்றதாம்.

இவ்வாறு தொடர்ந்து கூறியவாற்றால் முல்லைக்குரிய கருப்பொருள்களுள் **காணியாறு** என்ற நீர்நிலையும், **குருந்தம்** முல்லை என்ற மரமும் பூவும், முயல் என்ற மாவும், உணர்த்தப்பட்டமை காண்க. காணியாற்றின் இயல்பும் தன்மையணியிற் சுவைபெற உரைத்ததுவும் கண்டுகொள்க. மலையின்வீழருவிகள் " பள்ளத்தா ழுறு புனலிற் கீழ்மே லாக" (திருவாசகம்) என்றபடி அதிகவேகமாய் வருதலும், யானை தேக்கு சந்தனம் முதலியவற்றை வாரி உருட்டிக்கொண்டு வருதலும்போ லல்லாது, காணியாறுகள், பெருநீரினைக் கொண்டிருந்தும் முல்லையின் பரந்த காடுகளினிடையே பரந்து செல்லுதலால் மென்புதல்களையும் அலைக்கமாட்டாது அங்குத் தங்கும் மென் முயல்களைமட்டும் ஓடத் தூரத்தி அம்மட்டில் அடங்குவன என்று தற்குறிப்பேற்றச் சுவை விரவக் கூறிய நயமும் காண்க.

**நீண் முல்லை** - முல்லைநிலக் காடுகளின் பரப்புக் குறித்தது. 16

1094. பிள்வு கொண்டதண் மதிநுதற் பேதைய ரெயிற்றைக்
களவு கொண்டது தளவெனக் களவலர் தூற்றும்;
அளவு கண்டவர் குழனிறங் கனியுமக் களவைத்
தளவு கண்டெதிர் சிரிப்பன தமக்குமுண் டென்று. கஎ

(இ - ள்) பிளவு...தூற்றும் - பிளவுபட்ட குளிர்ச்சி பொருந்திய மதியை ஒத்த நெற்றியினையுடைய இடைச்சியர்களது பற்களினழகை முல்லை யரும்புகள் களவு கொண்டன என்று களாச்செடிகள் அலர்தூற்றுவன; அளவு கண்டு...என்று - (அதனை) அளவையினால் முல்லை அறிந்து, அவ்விடைச்சியரது கூந்தலின் நிறம்போலக் கனிந்த அந்தக்களவினைத் " தமக்கும் அதுவுண்டு " என்று சிரிப்பன.

(வி - ரை) இப்பாட்டுத் தன்மையணியும், உயர்வுநவிற்சியும், தற்குறிப்பேற்றமும் சிலேடையும் விரவிய கலவையணி நயம்படக் கூறப்பட்டதாம்.

**பிளவுகொண்ட மதி** - இருபிளவாகப் பிளந்தது போன்ற வடிவுடைய மூன்றாம் பிறை. **மதிநுதல்** - மதிபோன்ற நெற்றி. மெய்ப்பற்றிவந்த உவமம்.

**பேதையர்** - இடநோக்கி இடைச்சியரைக் குறித்தது.

**எயிற்றைத் தளவு களவுகொண்டது** என்க. **எயிறு** - எயிற்றின் வடிவம் நிறம் முதலியன; ஆகுபெயர்.

**எயிற்றைக் களவு கொள்ளுதல்** என்றது அதன் அழகைக் கவர்ந்துகொண்டு அதுபோல விளங்குதல். இடைச்சியர்களின் பற்கள் முல்லை யரும்புகள்போல வுள்ளன என்பது கருத்து.

**களவு அலர் தூற்றும்** - அலர் தூற்றுதல் - பழித்தலுக்கும் மலர்கள் சிந்துதலுக்கும் சிலேடைபடக் கூறினர். **களவு** - களாச்செடி. (களாமரம் எனினுமாம்).

**அளவு கண்டு** - அளவையினால் அறிந்து. அலர்தூற்றுதலினால் அதன் உள்ளுறையைக் கருதலளவையினால் கண்டு என்பது குறிப்பு. **தூற்றும்** - தூற்றுகின்ற எனப்

பெயரெச்சமாகக் கொண்டும், அளவு - தன்மை என்று கொண்டு, தூற்றும் தன்மை என்றுரைப்பினு மமையும். அலர்தூற்றல் - பலரறியப் பழி சொல்லுதல்.

அவர் குழல் நிறம்கனியும் - அவர் - அவ்விடைச்சியர்; குழல்நிறம் - குழலின் நிறம்போன்ற கருமை நிறம். கனியும் - குழனிற முடையனவாகப் பழுக்கும். களாப் பழம் கருமையுடையது. "களங்கனியைக் காரெனச் செய்தாருமில்" - நாலடி. "காக்கையிற் கரிது களம்பழம்" என்று உதாரணமாக எடுத்துக் கூறுவதும் காண்க. கருமை நிறமே உருவமாகப் பழுத்தது போலும் என்பதாம். களா - கள - களவு. "குறியதன் கீழாக் குறுகலு மதனே டுகர மேற்றலும்" என்ற விதிப்படி களா என்பது களவு என்று வந்தது. நிலா - நிலவு என்பதுபோல "வண்ண நீடிய மைக்குழம் பாமென" (455), "இழுது மையிருட் கிருளென" (திருஞான - புரா - 678) முதலியவை காண்க.

அக்களவை - அலர்தூற்றும் என்று களவுக் குறைத்ததுபோல, இங்கும் அந்தக் களாமரத்தினை என்றும், அந்தக் களவினை - திருட்டுத்தனத்தை - என்றும் இருபொருள் படக்கூறின சுவை காண்க. அ - அவ்வாறு அலர்தூற்றிய - என முன்னறிசுட்டு.

எதிர் சிரிப்பன - எதிர் - அந்த அலர் தூற்றுதலுக்கு எதிராக; சிரிப்பன - மலர்கின்றன. முல்லை மலர்தல் சிரித்தல் போலாகும் என்பது.

"தமக்கும் உண்டு" என்று சிரிப்பன - வெளிய அந்தக் களவுத்தன்மை அலர்தூற்றும் தமக்கும் உண்டு என்ற கருத்துடன் சிரிப்பன.

எயிறு தளவின் தன்மைத்து - குழல் களவின் தன்மைத்து என்பன தன்மை யணிக்குறிப்பு. களவு குழனிறங் கனியும் - என்பது உயர்வுநவிற்சி. அலர் தூற்றல் - சிரித்தல் - இவை களவு கொண்டது தற்குறிப்பேற்றமும் சிலேடையும்.

ஓரிடத்திலே வெவ்வேறு பொருள்களைத் திருடிய இருவர் ஒருவரை யொருவர் அலர்தூற்றிக்கொள்ளும் சுவைபட உரைப்பது இத்திருப்பாட்டு.

முல்லைக் கருப்பொருள்களுள் களா அதற்குரிய மரமும், முல்லை - பூவுமாம்.

தளவு - கொடிக்கும் பூவுக்கும், களவு - மரத்துக்கும் (செடிக்கும்) பழத்துக்கும் முதலினை யொற்றுமை பற்றிக் கூறினர். களவு அலர் தூற்றும்போது அரும்பா யிருந்த முல்லை, அது கண்டபின் சிரிப்பதுபோல அலர்ந்தது என்று முன்பின் கால ஒழுங்கு காணும்படி, பின் வைத்த வைப்புமுறையும் காண்க. 17

1095. மங்கை யர்க்குவாள் விழியினை தோற்றமான் குலங்கள்
கிரு எங்கு; மற்றவ ரிடைக்கிடை மலர்க்கொடி யெங்கும்;
முல்லை அங்கண் "முல்லையின் றெய்வ"மென் றருந்தமி ழுரைக்குஞ்
வாயில் செங்கண் மாலுறைஞ் சிவன்மகிழ் திருமுல்லை வாயில். கஅ

(இ - ள்) அங்கண் - அந்த முல்லை நிலத்தில்; மங்கையர்க்கு...குலங்கள் எங்கும் - இடைச்சியர்களின் வாள் போன்ற விழியினைகளுக்குத் தோல்வியடைந்த மான் கூட்டங்கள் எங்கும் உள்ளன; மற்றவர்...கொடி எங்கும் - மற்று அவ்விடைச் சியரின் இடைகளுக்குத் தோற்ற (முல்லை) பூங்கொடிகள் எங்குமுள்ளன; முல்லையின் ...திருமுல்லைவாயில்-முல்லை நிலத்துக்குரிய தெய்வமென்று அரிய தமிழ்ப்பொருளிலக் கணத்தில் உரைக்கப்படுகின்ற செங்கண்ணுடைய திருமால் பூசித்த சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருமுல்லைவாயில் என்ற தலம் உள்ளது.

(வி - ரை) அங்கண், மான்குலங்கள் எங்கும் உள்ளன; மலர்க்கொடி எங்கும் உள்ளன; திருமுல்லைவாயில் உள்ளது என்று பயனிலைகளை விரித்துரைத்துக் கொள்க.

மங்கையர் வாள் விழியிணைக்கு - என்க. இங்கும் நான்காம் வேற்றுமை உருபு விரித்துக்கொள்க. விழியிணைக்குத் தோற்றலாவது அவ்விழிகள் போன்ற அழகும் மருண்ட பார்வையும் தம் கண்களுக்கில்லாமை.

இடைக்கு இடை கோடி - என்றதும் அவ்வாறே கொள்க. இடைதல் - தோல்வியுற்று உடைதல். இவையிரண்டும் உயர்வு நவிற்சியும் தற்குறிப்பேற்றமுமாம்.

மலர்க்கோடி - இடநோக்கி முல்லைக்கொடியினைக் குறித்தது. முல்லைக்கொடிகளின் அவண்டு வளைந்திருக்கும் தன்மை காண்க.

முல்லையின் தெய்வம் என்று அருந்தமிழ் உரைக்கும் செங்கண்மால் - நானிலத்துக்கும் அவ்வநிலத்துக்குரிய தெய்வம் உண்டு. அதனைப் பொருளிலக்கணம் "மாயோன் மேய காடுறை யுலகமும், சேயோன் மேய மைவரை யுலகமும், வேந்தன் மேய தீம்புன லுலகமும், வருணன் மேய பெருமண லுலகமும், முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச், சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" (தொல் - அகத் - 5) என்று அறிவிக்கின்றது. முல்லைக் கருப்பொருள்களுள், உரிய தெய்வம் திருமால் என்பது அறிவிக்கப்பட்டபடியாம். அருந்தமிழ் - அரியதாகிய தமிழ்ப் பொருளிலக்கணம். அநமையாவது இவ்விலக்கண அமைதி வேறு எந்த மொழிக்கும் இல்லாமை. தமிழ் - தமிழ்ப் பொருளிலக்கணத்துக்கு வந்தது. ஆகுபெயர்.

மால்தோழம் சிவன் - மால்தான் தெய்வமாக ஆட்சிபுரியும் உரிமை கொண்ட முல்லைநிலத்தில் தனக்குப் பெருமானைச் சிவனே வழிபடுகின்றார் என்ற சிறப்புப்படக் கூறினர். முல்லையின் தெய்வமென்று உரைக்கும் - என்ற இலேசினாலும் குறிப்பினாலும் முல்லை முதலாகிய அவ்வநிலத்துக்குரிய தெய்வமிதுவிது என்றுரைப்பது உபசாரமே என்பதும், அத்தெய்வங்களே அங்கங்கும் நிறுவி அத்தெய்வங்கட்குத் தெய்வமாய் ஆட்சிபுரிபவர் சிவபெருமானே என்பதும் அவரே முழுமுதல்வர் என்பதும் கருதலளவையாற் பெறவைத்தார். முல்லையின் தெய்வமென்றுரைக்கும் மால்தோழம் என்ற கருத்துமிது.

சிவன் என்றதனால் முழுமுதற் கடவுள் என்பது பெறவைத்தார். "சிவனெனு நாமந் தனக்கே யுடைய செம்மேனி யெம்மான்", "பரமுதலாயதேவர் சிவனை மூர்த்தி" என்ற அப்பர் திருவாக்குக்கள் காண்க.

சிவன் மகிழ் திருமுல்லைவாயில் - சிவன் எங்கும் நிறைந்துள்ளவராயினும் திருமுல்லைவாயிலில் சிறந்த விளக்கத்தோடு வீற்றிருப்பார் என்பார் மகிழ் என்றார். சிவபெருமான் முல்லைக்கொடியின்கீழ் எழுந்தருளியிருத்தலால் முல்லைவாயில் எனப் பெயர் பெற்றது. சோழநாட்டில் சீகாழிக்கருகில் உள்ள இப்பெயர்பெற்ற தலத்தினின்றும் பிரித்துணரத், தொண்டை நாட்டிலுள்ள இது, வடதிருமுல்லைவாயில் என்று வழங்கப் பெறும். "சொல்லரும் புகழான் றொண்டைமான் களிற்றைச் சூழ்கொடி முல்லையாற் கட்டிட், டெல்லையி லின்ப மவன்பெற வெளிப்பட் டருளிய விறைவனே யென்று, நல்லவர் பரவுந் திருமுல்லை வாயி னுதனே!" (தக்கேசி - 10) என்ற ஆளுடைய நம்பிகள் தேவாரம் இத்தச் சரிதத்தினையும் பெயர்க்காரணத்தையும் விளக்குதல் காண்க. இத்தலத்தில் ஒருகாலம் தொண்டைமான் யானையேறிச் செல்லும்போது அவனது யானையின் காலில் முல்லைக்கொடிகள் சுற்றி அதனை மேற்செல்லவொட்டாது தடுத்துவிட்டன; அவன் முல்லைக்கொடிகளை வாளினால் வெட்ட, அது அந்த முல்லை வனத்தில் மறைந்திருந்த நாயகரின் திருமேனியில் பட்டு இறைவர் வெளிப்பட்டனர். அந்தச் சுவடு இன்றும் காணத்தக்கது.

இத்தலம் அம்பத்தூர் என்ற (M. S. M. Ry.) இருப்புப்பாதை நிலயத்தினின்றும் வடமேற்கே மட்சாலையில் 3 நாழிகை யளவில் அடையத்தக்கது.

குறிப்பு :—இப்பாட்டிற்கு மேலே குறித்தபடியன்றித், திருமுல்லைவாயிலில் எங்கும் மான் கூட்டங்களும் கொடிகளும் உள்ளன என்று கூட்டி வினைமுடிபு கொண்டு உரைத்தனர் முன் உரைகாரர்கள். இராமநாதச் செட்டியார் உரைக் குறிப்பினைப் பின்பற்றி இங்கு மேற்கண்டவாறு கூட்டி உரைக்கப்பட்டது. 18

1096. நீறு சேர்திரு மேனியர் நிலாத்திகழ் முடிமேன்
மாறில் கங்கைதா னவர்க்குமஞ் சனந்தர வணைந்தே
யூறு நீர்தரு மொளிமலர்க் கலிகைமா நகரை
வேறு தன்பெரு வைப்பென விளங்குமா முல்லை. கசூ

திரு ஊறல்

இ - ள்) வெளிப்படை. திருநீறு சேர்ந்து விளங்குகின்ற திருமேனியினையுடைய சிவபெருமானது பிறை விளங்கும் திருமுடிமேல் உள்ள ஒப்பற்ற கங்கையானது அவர்க்குத் திருமஞ்சனநீரைத் தரும்பொருட்டு இவ்வுலகத்தில் வந்து அணைந்து ஊறுகின்ற நீரைத்தரும் ஒளிபொருந்திய மலர்களையுடைய கலிகைமாநகர் என்ற திருவூறல் என்னும் தலத்தை வேறாகத் தனது பெரிய சேமவைப்பு என்று சொல்லும் படி பெரிய முல்லை நிலமானது விளங்கும்.

(வி - ரை) நீறு சேர்திருமேனியர் - நீறுசேர் - உலகங்கள் தீயூழியிற் சாம்பராயினபோது அச்சாம்பர் அக்காலத்து அழியாதிருக்கும் சிவன்திருமேனியில் சேர்ந்து கிடப்பதாம் என்ற குறிப்புப்பட நின்றது. "வெந்த சாம்பல் விரையெனப் பூசியே" (கௌசிகம் - திருப்பாசுரம் - 3) என்ற ஆளுடைய பிள்ளையாரது தேவாரத்துக்கு, ஆசிரியர் சேக்கிழார் நாயனார் அருளிய "வெந்த சாம்பல் விரையென் பதுதம, தந்த மில்லொளி யல்லா வொளியெல்லாம், வந்து வெந்தற மற்றப் பொடியணி, சந்தமாக் கொண்ட வண்ணம்" என்ற பேருரையும் இங்கு நினைவு கூர்க. "நீறு சேர்திரு மேனியர்" (மேகராகக் குறிஞ்சி - பராய்த்துறை - 1) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவார ஆட்சி போற்றப்பட்டது காண்க. மேனியரது என ஆறனுருபு விரிக்க.

நிலாத்திகழ்முடி - திகழ்ச்சி குன்றிய நிலா மீளவும் திகழும் பேறுபெற்ற திருமுடி என்பதாம்.

மாறில் கங்கை - மாறுஇல் - ஏழு பெருந் தீர்த்தங்களுள் ஒன்றாதலானும், அவற்றுள் இறைவன் றிருமுடியில் இருக்கும் பேறுபெற்றதாகலானும் மாறு இல்லாததாயிற்று. மாறுஇல் - குற்றமற்ற என்றலுமாம். கங்கைதான் - அணைந்தே - நீர்தரும் என்று கூட்டுக. மஞ்சனம் - திருமஞ்சனம் செய்தற்குரிய நீர். தான் - தானாகவே. கங்கையே என்ற தேற்றப் பொருள்படக் கூறுதலுமாம்.

முடிமேல் - கங்கை - மஞ்சனந்தர - அணைந்தே என்றதனால் முடிமேல் தங்கிக் கிடத்தலினும், இந்நிலவுலகத்தில் இங்கு ஊறுநீராய் வரின் அவரது திருமேனி முழுதும் தீண்டும் திருமஞ்சனநீராகப் பயன்பெறலாமென்று எண்ணி அணைந்து என்ற குறிப்பும் (அணைந்த என்ற சொல்லாற்றலாற்) பெறுதல் காண்க. அணைதல் - வானிடத்தினின்றும் கயிலையினின்றும் போந்து இங்குச் சேர்தல்.

ஊறு நீர் தரும் - ஓடுகின்ற பேரியாறானது சிறிய அளவாய் உருவெடுத்து ஊறுகின்ற நீரினைத்தரும் என்க. இக்காரணத்தால் திரு ஊறல் என்று இத்தலத்துக்குப் பெயர் வழங்குவதும் காண்க. சுவாமி பெயர் சலநாதேசுவரர் எனவும், கங்காதரேசுவரர் எனவும் வழங்கப்படுதலும் காண்க.

வேறு தன்பெருவைப்பு - வேறு - வேறாகிய - தனியாகிய. பெருவைப்பு - பெரிய சேமநிதி.

கலிகைமாநகர் - இது தக்கோலம் எனவும், திருவூறல் எனவும் வழங்கப்படும். தொண்டைநாட்டில் 12-வது தலம். ஆளுடையபிள்ளையாரால் பாடப்பெற்றது.

சுரர்குருவுக்கு இளைய முனியாகிய சம்வர்த்தன முனிவர் பூசித்த தலம் என்று ஆசிரிய ரால் பாராட்டப்படும் பெருமையுடையது.' (திருஞான - புரா - 1007). இது தக்கோலம் என்ற இருப்புப்பாதை நிலையத்திலிருந்து கிழக்கே ஒரு நாழிகையளவில் உள்ளது. 19

**மருதம்**

1097. வாச மென்மலர் மல்கிய முல்லைசூழ் மருதம்
வீசு தெண்டிரை நதிபல மிக்குயர்ந் தோடிப்
பாச டைத்தடங் தாமரைப் பழனங்கண் மருங்கும்
பூசல் வன்கரைக் குளங்களு மேரியும் புகுவ. உ0

(இ - ள்) வெளிப்படை. வாசனையுடைய மெல்லிய மலர்கள் நிறைந்த முல்லைக் கொடிகளையுடைய முல்லை நிலத்தினை அடுத்த மருத நிலத்தில், வீசுகின்ற தெள்ளிய அலைகளையுடைய பல நதிகள் மிக்கு உயர்ந்து ஓடிப், பசிய இலைகளையுடைய பெரிய தாமரைகள் பூத்தற்கிடமாகிய வயல்களின் பக்கங்களிலும், பறவைகளின் ஒலி மிகுதி யுடைய வலிய கரைகள் பொருந்திய குளங்களிலும் ஏரியிலும் புகுவன என்க.

(வி - ரை) **வாசமென்மலர்** - இடநோக்கி முல்லை மலர்களைக் குறித்தது. **முல்லை சூழ் மருதம்** - முல்லையை அடுத்த மருதநிலம். " எல்லையின் புறத்தன - முல்லை " (1093) என்றது காண்க.

**வீசுதெண்திரை நதிபல** - பாலி - கூவம் - குசஸ்தல ஆறு-கம்பை - அடையாறு - வேகவதி - செய்யாறு - முதலியன. தெள்திரை - வெள்ளம் வரும் சில நாட்களி லன்றி எனைக்காலமெல்லாம் தெளிந்த தண்ணீரே வருதல் குறிப்பு.

நதிபல - ஓடி - பழனங்கள் மருங்கும் - குளங்களும் - ஏரியும் புகுவ என்க.

**மிக்கு உயர்ந்து ஓடி** - மிகுதல் - நீர்பெருகுதல் ; உயர்தல் - கரையினுள் அடங் காமல் மேற்கிளம்புதல் ; ஓடுதல் - வேகங் குறித்தது.

**பூசல் வன் கரை** - பூசல் - குளக்கரையில் உள்ள மரங்களில் அளவில்லாத பறவைகள் கூடிச் செய்யும் பற்பல விதமான ஒலி. பூசல் என்றதற்கு இவ்வாறன்றி அலைகள் மோதுகின்ற என்றுரைத்தனர் முன்னுரைகாரர்கள்.

**குளம் - ஏரி** - நாற்புறமும் வலிய கரைகள் இடப்பட்டனவாய்த், தாமரை முதலி யவை பூத்தற்கிடனும், ஊரினுள் இருக்கும் சிறிய நீர் நிலைகளாகிய வாவிகள் குளம் எனவும், அவ்வாறல்லாது அளவாற் பெரியனவாய் ஊரின் புறத்து இருப்பனவாய்ப் பெரும் கரைகளால் தண்ணீர் தேக்கப்பட்டுப் பயிருக்கும் உதவும் பெரு நீர்நிலைகள் ஏரி எனவும் படும். ஏரிகள் நீர் நிறைந்தபோது எண்ணிறைந்த பறவைகள், நீர்வாழுயிர் கள், எனையுயிர்கள் இவைகளுக்கும், தாவரவுயிர்களுக்கும் வரைவின்றி உதவுவன என் பதனை " ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய் " (திருத்தாண்டகம் - திருமறைக் காடு-5) என்று உவமை முகத்தால் அருளினர் அப்பர் சுவாமிகள். தனக்குவமையில்லா தானது கருணைக்கு உவமையாகக் காட்டத்தக்க பெருமை யுடையது ஏரி என்பதாம்.

**புகுவ** - அணை முதலிய செயற்கை முயற்சிகளாற் றேக்கிப் புகுத்தலன்றி, இயல்பாய்த், தாமாகவே, புகுவன என்பது குறிப்பு.

**உயர்ந்தோங்கி**—என்பதும் பாடம். 20

1098. துங்க மாதவன் சுரபியின் திருமுலை சோரிபால்
பொங்கு தீர்த்தமாய் நந்திமால் வரைமிசைப் போந்தே
பாலி அங்க ணித்திலஞ் சந்தன மகிலொடு மணிகள்
பங்க யத்தட நிறைப்பவந் திழிவது பாலி. உக

(இ - ள்) வெளிப்படை. உயர்ந்த தவத்தையுடைய வசிட்ட முனிவனிட மிருக்கும் காமதேனுவினுடைய திருமுலை சொரிந்த பாலானது, பெருகுகின்ற தீர்த்தமாக உருப்பட்டு நந்திமலையினின்றும் போந்தே, அவ்விடத்துள்ள முத்துக் களையும், சந்தனம் அகில் முதலியவற்றையும், மணிகளையும் கொண்டுவந்து தாமரைத் தடாகங்களில் நிறைக்கும்படி கீழ் இறங்கி ஓடிவருகின்றது **பாலியாறு** எனப்படும்.

(வி - ரை) **பாலி** - மேற் கூறிய பல நதிகளுள் ஒன்று பாலாறு. அது சிறப் புடையதாதலின் அதனை இப்பாட்டாலும் வரும்பாட்டாலும் கூறுகின்றார். இப்பாட்டி னுள் **பாலி** (ஆறு) என்ற பெயரின் காரணத்தையும் அதன் வரலாற்றுச் சிறப்பினையும் கூறுகின்றார். நாட்டுச் சிறப்பிலும் நகரச்சிறப்பிலும் இவ்வாறே முதலிற் பழஞ்சரிதத் தொடர்பு காட்டிச் சிறப்பித்து, அதன் பின் இந்நாட் சிறப்புக் கூறியது காண்க.

**துங்கமாதவன்** - வசிட்ட முனிவன். **துங்கம்** - பெருமை. **துங்கம் - மா** - ஒருபொருட்பன்மொழி மிகுதி குறித்தது.

**பாலி** - பால், பொங்கு தீர்த்தமாய்ப் பெருகிப், போந்தே, இழிவதனால் இப்பெயர் பெற்றதென்று பெயர்க் காரணங் கூறியவாறு. இப்பெயர்க்கேற்ற சிறப்பு விளங்கும் தன்மையினையே மேல்வரும்பாட்டினுந் தொடர்ந்து கூறுதல் காண்க.

நீத்திலம்...**பாலி** - "சந்தன வேருங் காரகிற் குறடுஞ் தண்மயிற் பீலியும்... சுமந்து கொண்டுந்தி, வந்திழிபாலி" (வடதிருமுல்லையில் - தக்கேசி - 5) என்ற ஆளுடைய நம்பிகள் தேவாரம் இங்கு நினைவு கூர்தற்பாலது.

சுரபியின் திருமுலைசோர்பால் நந்திவரை மிசைப்போந்த வரலாறு:—ஒருகாலத் தில் நந்திமலையின் மேல் வசிட்டர் தவஞ்செய்திருந்தனர். அவரது ஆச்சிரமத்தில் ஏவல் செய்துகொண்டிருக்கும் காமதேனு சிவபெருமானது இடபதேவரைக் கண்டுவிருப்பங் கொண்டது. அதனை முனிவர் அறிந்து ஒரு தருப்பையினை எடுத்துஎறிய அத்தருப்பை ஓர் இளங்கன்றாகியது. அதனைக் கண்டு மனத்துள் அன்புபெருக உருகிக் காமதேனு பாலினை மலைமீது பொழியவே, அதுவே தீர்த்தமாய்ப் போந்து **பாலா**றெனப் பெரு கிற்று என்பதாம். "சுழிந்த பற்றுடை வசிட்டன திருக்கையாக் கவிஞர், மொழிந்த நந்தியம் பெருவரை" (9) என்றும், "வாலிதாகிய குணத்தினன் வசிட்டனென் றுரைக்குஞ், சீல மாமுனி படைத்ததோர் தேனுவின் றீம்பால், சால நீடியே தொல்லை நாட் படர்ந்திடு தன்மை" (11) என்றும் வரும் கந்தபுராணம் ஆற்றுப்படலங் காண்க.

பொங்கு நீத்தமாய்—என்பதும் பாடம். 21

1099. பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போன்
மள்ளர் வேனிலின் மணற்றிடர் பிசைந்துகை வருட
வெள்ள நீரிரு மருங்குகால் வழிமிதந் தேறிப்
பள்ள நீள்வயற் பருமடை யுடைப்பது பாலி. உஉ

(இ - ள்) **பாலி** - பாலாறு ; பிள்ளை.....தாய் போல் - மகவு தன் கையினைற்ற டவிடப் பெருகும் பால் சொரிகின்ற தனங்களையுடைய தாயினைப் போல ; மள்ளர்... கைவருட-உழவர்கள் வேனிற் காலத்தில் மணல் மேட்டினைப் பிசைந்து காலுண்டாக்கி ஒழுங்குசெய்ய ; வெள்ளநீர்...ஏறி - ஊறிப் பெருகுகின்ற நீர் இருபக்கங்களிலும் கால்வாய்களின் வழியே மிதந்து மேலேறிப்போய் ; பள்ளநீள்...உடைப்பது - பள்ள நிலத்திலுள்ள நீண்ட வயல்களின் பரிய மடைகளை உடைப்பது.

(வி - ரை) பிள்ளை தடவப் பால்சொரியும் முலையினையுடைய தாயின் செய்தியை, மணற்றிடர் பிசைந்து கை வருட நீர் சுரக்கும் பாலியின் செய்திக்கு உவமித்தார்.

பாலி - பாலாறு என்ற பெயருக்கேற்பக் கூறிய பால் சொரியும் உவமை நயத்தை நோக்குக.

பிள்ளை...போல் - குழவி கை வருடி வாய்வைத்தபோது பால் சுரந்தும், அல்லாத காலங்களிற் பால்கரந்தும் இருப்பது தாய் முலையின் இயல்பு. அவ்வாறே, தம்மை ஊட்டும் தாய்போற் கண்டு மள்ளர் வேண்டி மணற்றிடர் பிசைந்து கைவருட நீர் சுரந்தும், அல்லாதபோது நீர் உட்கரந்தும் உள்ளது பாலாறு என்பதாயிற்று. வேண்டுங் காலமறியாது வேண்டாதபோதும் எஞ்ஞான்றும் நீர் பெருக ஓடிக்கொண்டிருக்கும் ஏனைப் பேரியாறுகள் எப்போதும் பாலொழுகும் நோய்த் தன்மைகொண்ட முலைத் தாயைப்போல (அந்நோய் நீக்கம்பெறும் அவசியம்) உள்ளவை என்றது குறிப்பாம். இதனால் எப்போதும் நீர் பெருக்கும்பெருநதிகளும் மேல் நீரின்றி மணற் பரப்பாய்க் கண்டு உள் நீர் ஊறும் பாலாற்றுக்கிணையில்லன என்று தன்மையணியில் வைத்து உயர்வு நவிற்சிபெறக் காட்டியது ஆசிரியரது உண்மை பிறழாத் தெய்வக் கவிமாண் பாகும்.*

வெள்ளநீர்...பருமடை உடைப்பது - மணற்றிடர் பிசைந்து இவ்வாறு தோண்டு காலில் வரும் ஊற்று நீரேயாயினும் அது பெருகிச் சென்று பள்ளத்தில் உள்ள வயற் பகுதிகளிற் சேரும்போது செழித்துப் பெருக்கெடுத்துப் பாய்ந்து பரிய மடையையும் உடைக்கவல்லதாகும் என்பது. வெள்ளநீர் - என்றதனால் கீழ்ப் போகப் போக நீர்ப்பெருக்குளதாகும் இயல்பும், இருமருங்கு என்றதனால் பாலாறு இருகரையும் செழிக்கப்பாயும் இயல்பும், மிதந்து ஏறி என்றதனால் மெல்ல ஓடிச்சேர்ந்து உயரத்தில் ஏறிப்பாயும் இயல்பும், பள்ளநீர்வயல் - என்றதனால் இத்தன்மையும் பயனும் ஆற்றின் பகுதிக்குப் பள்ளத்தில் உள்ள வயல்களுக்கே உளதாகும் இயல்பும், வயல்கள் நீண்டு பெரியனவாயிருக்குமியல்பும், பருமடை என்றதனால் அந்நீரின் பெருக்கினைத் தடுத்து வழிப்படுத்தப் பரியமடைகள் வேண்டப்படும் இயல்பும் தன்மையணியில் வைத்துக் கூறிய கவிநயம் காண்க. "பள்ள மடையாய்" (சிறுத் - புரா - 4) என்றது காண்க. இக்காட்சிகள் இன்றும் உள்ளனவாய்ப் பாலாற்றின் பல பகுதிகளிலும் காணத்தக்கன. வேனிலில் - கை வருட என்றதனால் ஏனைக்காலங்களில் இயல்பாகவே சென்று பாயும் என்பது குறிப்பு. 22

1100. அனைய வாகிய நதிபரந் தகன்பணை மருங்கின்
கனைகு டும்புன னிறைந்துதிண் கரைப்பெருங் குளங்கள்
புனையி ருங்கடி மதகுவாய் திறந்திடப் புறம்போய்
வினைஞ ரார்ப்பொலி யெடுப்பநீர் வழங்குவ வியன்கால். உங

(இ - ள்) வெளிப்படை. அத்தன்மையான நதிகள் பரத்தலால் வயல்களின் பக்கங்களில் ஒலிசெய்கின்ற நீண்டபுனல் நிறைந்து, திண்ணிய கரையையுடைய பெருங் குளங்களுட் சேர்ந்து, அவற்றிற் கட்டப்பட்ட பெருங்காவலுடைய மதகு வாய்கள் திறந்துவிட அவ்வாய்களின் மூலம் வெளியேபோய், மள்ளர்கள் நீர்வரவு கண்டு ஆரவாரம் செய்யும் ஒலிகேட்கும்படி இடமகன்ற கால்வாய்களின் வழியே நீரினை வழங்குவன.

(வி - ரை) அனையவாகிய நதி - 1099-ல் கூறிய பல நதிகளுள்ளே சிறந்த பாலாற்றின் பெருமை மேலிரண்டு பாட்டுக்களாற் கூறிய ஆசிரியர், அதுபோன்ற ஏனை நதி

* இதுபற்றி எனது சேக்கிழார் 136, 137 பக்கங்களில் உரைத்தவை பார்க்க.

களின் சிறப்பினை இப்பாட்டாற் கூறுகின்றார். ஆற்றின் நீர் நேரே வயல்களிற் பாய்வ தும், குளங்களுட் புகுந்து தேக்கப்பட்டு மதகுகளின் வழிக் கால்வாய்களால் வயல்களிற் பாய்வதும் ஆக நீர்ப்பாசன வசதி யிருவகைப்படும். அவற்றுள் ஏனை நதிகள் பாலாறுபோல நேரே வயல்களுட் சென்று பாயாமல், குளங்களை நிரப்பி அங்கு நின் றும் மதகு - கால்வாய் - இவற்றின்மூலம் வயல்களில் சென்று பாய்வன என்பதாம்.

நேரே தான் கொடுத்துவக்கும் வள்ளல்போலப் பாலாறும், தன்பொருளைப் பிறர்பாற் கொடுத்துச் சேமஞ்செய்து அவர்கள் விரும்பியபடி அவர்கள்மூலம் கொடுக் கும் கொடையாளிகள்போல ஏனை நதிகளும் உள்ளன என்ற இந்தக் குறிப்பினால் பாலாற்றின் சிறப்புக் கூறியதுமாயிற்று.

**புனை இருங் கடி மதகு வாய்திறந்திட**-வெள்ளநீரைத் தேக்கிவைத்து வேண்டிய போது வேண்டிய அளவு வேண்டிய நிலங்களுக்குள் புக விடுவதற்கு ஏரிக்கரைகளில் திண்ணிய பெரிய காவல்பெற்ற மதகுகள் வேண்டப்படுவன. பெருநீர்த் தேக்கத்தி னால் கூடும் கனத்தைத் தாங்குவதற்குத் தக்க வலிமையும் காவலும் வேண்டப்படுவத னால் இருங் கடிமதகு என்றார். இது மனிதர் நினைந்து பெருமுயற்சியால் மேற்கொண்ட வகுக்கப்படுதலின் **புனை** என்றார். திறக்கவும் அடைக்கவும் ஏற்றபடி அமைக்கப்படுவ தென்ற குறிப்புப்பட **வாய்திறந்திட** என்றார்.

நதிகள் பரந்து - புனல்நிறைந்து - குளங்கள் புகுந்து - மதகுவாய் திறந்திடப் - புறம்போய் - ஒலிஎடுப்பக் - கால் (வழி) - நீர் வழங்குவ எனக் கூட்டிமுடிக்க.

**கனைநெடும்புனல்** - பெருநீர்ப்பெருக்கு இரைச்சலுடன் வருதல் குறித்தது.

**திண்கரைப் பெருங்குளங்கள்** - (சிறையிட்ட) தேக்கப்பட்ட நீர் உடைத்துக் கொண்டு போகாதபடி இடப்பட்டவையாதலின் திண்ணிய கரை என்றார். **பெருங் குளங்கள்** - பாசன ஏரிகள்.

**மதகுவாய் திறந்திடப் புறம்போய்** - குளத்தில் சிறைப்பட்ட நீர் மதகுவாய் திறக்க வெளியிற் போய். "மாமத கூடுபோய், மண்டுநீர் வயலுட்புக" (60) என் றது காண்க. இதற்கு இவ்வாறன்றி, மதகுகளும் கரைகளும் உடைத்துக்கொள்ளும் படி என்று முன் உரைகாரர்கள் உரைத்தவை பொருந்தாமை யறிக.

**வினைஞர்** - இடநோக்கி உழவரைக் குறித்தது. **ஆர்ப்பொலி எடுப்ப**-"மள்ளர் குரைத்த கையோ சைபோய், அண்டர் வானத்தி னப்புறஞ் சாருமால்" (60) என்று இதன் சிறப்புக் கூறியது காண்க.

**வழங்குவ** - வேண்டிய அளவு வயல்களுக்குக் கொடுப்பன. **வியன்கால்** - இடம் அகன்ற கால்களின் வழி. வழி என்றது தொக்கது.

இப் பாட்டிற்கு இவ்வாறன்றி, நதி - பாலாறு என்று கொண்டு, பாலாற்றின் மிக்க நீர் நிறைந்து குளங்களும் மதகுகளும் உடைத்துக்கொள்ளும்படி சென்று கால்வாய்கள் நீரைக் கொடுக்கின்றன என்றுரைத்தனர் முன் உரைகாரர்கள்.

குளங்கள் என்றதை எழுவாயாக்கிப், பாலாறு பாய்தலால் புனல் நிறையக் குளங்கள் நீர் வழங்குவ என்று கூட்டி முடித்து உரை கூறுவர் இராமநாதச்செட்டியார்.

**கரைப்பொரும்**—என்பதும் பாடம். 23

1101. மாறில் வண்பகட் டேர்பல நெருங்கிட வயல்கள்
சேறு செய்பவர், செங்நெலின் வெண்மூளை சிதறி
நாறு வார்ப்பவர், பறிப்பவர், நடுபவ, ரான
வேறு பல்வினை யுடைப்பெருங் கம்பலை மிகுமால், உச

(இ - ள்) வெளிப்படை. ஒப்பற்ற வளத்தைக் கொடுக்கும் எருமைக் கடாக்களைப் பூட்டிய பல ஏர்கள் நெருங்கிட வயல்களைச் சேறு செய்பவர்களும், செங்நெல்லினது வெள்ளிய முளைகளைச் சிதறிவிதைத்து நாற்று விடுகின்றவர்களும், நாறு பறிக்கின்றவர்களும், (நாறு) நடுகின்றவர்களுமாகிய வெவ்வேறு பல உழவின் பகுதிகளாகிய தொழில்களைச் செய்பவர்களுடைய பெரிய ஆரவாரம் மிகும்.

(வி - ரை) **மாறிலீ வண்மை என்றது** - ஏரினுல் வரும் ஒப்பற்ற வளம்குறித்தது. "ஏரின் மல்கு வளத்தி னுல்வரு மெல்லி யில்லதோர் செல்வம்" (441) என்றதுகாண்க.

**பகட்டு ஏர்பல** - பகடு எருமைக்கடா. இவற்றையே ஏரிற்பூட்டுவதும் இவற்றுற் பிற உழவுப் பகுதிகளைச் செய்வித்தலும் பற்றி முன் உரைத்தவை பார்க்க. (74 முதலியன).

**ஏர்பல** - உழவு காலத்தில் பல ஏர்களை ஒரு சேரக்கொண்டு தொழில் செய்யும் தன்மை குறித்தது.

**சேறுசெய்தல் - நாறுவார்த்தல்** - (நாறு) பறித்தல் - **நாறுநடுதல்** - இவை உழவின் வெவ்வேறு பகுதிகள். இவை பலவும் பற்பல இடங்களில் ஒரு காலத்தே காண நிகழ்வனவாதலின் **பல்வினையுடைப் பெருங்கம்பலை மிகும்** என்றார். இவ்வாறு ஒருகாலத்தில் சேறுசெய்தல் முதல் நெல் அறுத்தல், தூற்றல், குவித்தல் வரை உழவு வினைப் பகுதிகள் பலவும் பல வயல்களிலும் காண நிற்பதும், குறித்த பருவம் என்பதின்றி எல்லாக் காலத்தும் உழவு வினைகள் செய்ய நிற்பதும் தொண்டை நன்னாட்டின் நீர்வள நிலவளங்களின் சிறப்பியல்பாம்.

**வெண்முளை சிதறி நாறு வார்ப்பவர்** - **நாறு வார்த்தல்** - நாற்று விடுதலுக்காக விதை நெல்லைத் தூவுதல். **வார்த்தல்** - தூவுதல். விதை நெல்லை முன்னர் நீரில் ஊறவைத்து முளை கிளம்பின பின்னரே நாற்று விடுதற்காக அதனைத் தெளித்து விடுவது நன்மை தரும் உழவு வழக்கு என்பதனைக் குறித்தார். **சிதறுதல்** - நாறு விடுதற்குச் சேறுசெய்து அமைத்த நிலத்தில் தூவுதல். **வெண்முளை** - ஊறவைத்த நெல்லின் முளை கிளம்பும் பருவம் குறித்தது; முளை கிளம்பும்போது வெள்ளிதாய் இருக்கும். 24

1102. வரும்பு னற்பெருங் கால்களை மறித்திட வாளை
பெருங்கு லைப்பட விலங்குவ பிறங்குநீர்ப் பழனம்;
நெருங்கு சேற்குல முயர்த்துவ நீள்கரைப் ; படுத்துச்
சுருங்கை நீர்வழக் கறுப்பன பருவராற் றொகுதி. உரி

(இ - ள்) வெளிப்படை. நீர் வருகின்ற பெரிய கால்களை வாளைமீன்கள் குறுக்கிட்டுத் தடுக்க, அதனுல் அந்த நீர் தேக்கம் பெற்றுப் பெரிய கரைகள் உடைபட்டுப் போம்படி நீர்க்கால்கள் விலங்கிப் போகின்றன; விளங்குகின்ற நீரையுடைய வயல்களில் நெருங்கியுள்ள சேல் (கெண்டை) மீன்களின் கூட்டம் பள்ளமானவயலை நீண்ட கரையாகச் செய்து உயர்த்தி விடுகின்றன; மதகுகளுட் புகுந்து நீர்வரும் வழியைப் பரிய வரால் மீன்கள் அடைத்துவிடுகின்றன.

(வி - ரை) இதனுல் வாளை, சேல், (கெண்டை), வரால் என்ற மூன்று வகை மீன்கள் இவ்வுழவின் பகுதிகளில் செய்யும் செயல்களை இடையூறு செய்வனபோலக் கூறினர். **வாளை** மீன்கள் குறுக்கிட்டுக் கால்களில் நீர்வருதலைத்தடுக்கும்; **சேல்கள்** பல கூடியதனுல் பள்ளவயல் கரைபோல மேடிட்டுப்போம்; **வரால்கள்** மதகினுட் புகுந்து நீர்வரும் வழியினை அடைக்கும் என்க.

மறித்திட - விலங்குவ - உயர்த்துவ - அறுப்பன - நாறுநட்டுக் கூைகட்டபின் வினைவுமுற்றி அறுக்கும் வரை நீர்பாய்ச்சுதல் தவிர வேறு உழவுவினைகள் இல்லை. அக்காலத்து நீர்பாய்வதனை இடையூறின்றி நிகழச் செய்தலே உழவர் உழத்தியர் தொழிலாம். இங்கு மீன்களால் நீர்ச்செலவின் நிகழும் இடையூறுகளைக் கூறியவதனால் அவற்றை விலக்கி நீர்பாயும்படிச் செய்வதும் குறிப்பாற் கூறப்பட்டமை காண்க. இடையூற்றை நீக்கும்வகையால் உழவுக்குத் துணை செய்வதோடு தமது மீன் உணவுக்கும் துணை செய்துகொள்வர் என்ற குறிப்புமாம். நீர் வளத்தால் மிக்குப் பெருகிய மீன்களின் செழிப்பும், அவற்றின் செயலால் நெல் வினைவுவரை உள்ள காலப்பகுதியின் செலவும் உணர்த்தியதிறம் காண்க. இவ்வாறே முன்னர்த் திருநாட்டுச் சிறப்பில் நாறு நட்டுக் கூைகட்டபின் கடைசியர்களின் வினையாட்டும், வயன் மாதர் சிறுமகளிர் வினையாட்டுமாகக் காலங் கழித்துப், பயிர் வளர்ந்து முற்றும்வரை காலம்செல்லுதலைக் காட்டிய திறமும், அவ்விடத்துரைத்தவையும் இங்குணினைவுகூர்க. (63—66).

கரைப்படுத்துச் சேற்குலம் பழனம் உயர்த்துவ - என்றது சேல்கள் மிகுதியாய் நெருங்கிச் செறிந்து தங்கும் தன்மையினை உணர்த்திற்று. நெநுங்குசேல் என்ற குறிப்புமிது. சேல் - கெண்டைமீன். இதற்கு இவ்வாறன்றி சேல்கள் ஒன்றன்மேலொன்று படுத்துக் கரைகளை உயர்த்துவ என்றுரைத்தனர் முன்னுரைகாரர்கள்.

வரால் - வேகமான நீரோட்டத்தினும் எதிர்த்துச் செல்லும் இயல்பு குறித்து அவை மதகுவாயில் வரும் வேகமான நீர் வழியிற் புகுந்து நீர்வழக்கு அறுப்பன என்றார். சுநுங்கை - நீர்வருதற்கமைத்த சிறுவழி; மதகுவாய். வழக்கு - வழங்குதல் - வருதல். முன்னரும் வழங்குவ (1102) என்றது காண்க.

வாளைகள் காலைகளை மறித்திட - அளவாற் பெரியனவாய் வேகமாய் இயங்குதலன்றி அங்கங்கும் கிட்கும் இயல்பினை உடையன என்பது குறிப்பு. வரால்கள் தொகுதியாயும், சேல்கள் நெருங்கியும் இயங்குமியல்பினை முறையே தொகுதி என்றும், நெநுங்கு என்றும் குறித்த ஆசிரியர் அவ்வாறின்றித் தனித்தனி யியங்கும் வாளையை அடைமொழியின்றித் தனிக் கூறிய நயமும் காண்க. 25

1103. தூளைத்த டம்பணை யெழுந்தசெந் தாமரைத் தவிசின்
இளைத்த சூல்வளை கண்படுப் பனவிடை யெங்கும்;
விளைத்த பாசொளி விளங்குநீள் விசும்பிடை யூர்கோள்
வளைத்த மாமதி போன்றுள மருதநீர் வைப்பு. உசு

(இ - ள்) வெளிப்படை. நீர்வளம் மிக்க மருதநிலப்பகுதியில் வரம்புகளையுடைய பெரிய வயல்களில் மூளைத்தெழுந்த செந்தாமரைப் பூவாகிய இருக்கையில் சூல்கொண்டு இளைத்த தூங்குவனவாகிய சங்குகள், அந்த இடமெங்கும் மூற்றிய பச்சைநிற ஒளி பெற்று விளங்குவதாகிய ஆகாயத்தினிடையே பரி வேடத்தால் வளைக்கப்பட்ட முழுமதி போன்றுள்ளன.

(வி - ரை) தடம்பணை - எங்கும் - சூல்வளை கண்படுப்பன எனக்கூட்டுக. வயல்களிற் செந்தாமரை மூளைத்தெழுந்து பூத்தன; தாமரை மலரில் ஏறிச் சூல்கொண்டிளைத்த சங்குகள் துயின்றன; சுற்றிலும் எங்கும் நெற்பயிர் பச்சை நிறத்துடன் விளங்கியது; அந்தச் சங்குகளின் தோற்றம், பசியவானத்தினிடையில் பரிவேடத்தால் வளைக்கப்பட்ட முழுமதியின் தோற்றம்போன்றிருந்தது என்பதாம்.

பசிய பயிர் - வானம்; செந்தாமரை - மதியைச் சுற்றிய செந்நிறமுடையு பரிவேடம்; அதனிடையில் சங்கு - முழுமதி; போன்றன என்க.

**தூளை** - வரம்பு. நீரினையும் எரு முதலிய உரங்களையும் வயலினின்றும் வெளிப் போகாமல் தடுத்து நிறுத்துதலால் வரம்புகள் தூளை எனப்பட்டன. "சிறைவான் புனல்" (திருக்கோவை) என்பதுங் காண்க.

**பணை எழுந்த செந்தாமரை** - இதுபற்றி முன் உரைத்தவை பார்க்க. **எழுந்த** - தாமரைக்கொடி மூலைத்தெழுந்ததனையும், அதன் பூக்களின் தண்டு உயர எழுந்து நிற்பதனையும் குறித்தது.

**தாமரைத் தவிசு** - தவிசு - இருக்கை; படுக்கையிடம்; சேக்கை. "செறியிதழ்த் தாமரைத் தவிசிற் றிகழ்ந்தோங்கு மிலக்குடைக்கீழ்" (மேகரா - குறி - வீழி - 2) என்றும், "சேற்றெழுந்த மலர்க்கமலச் செஞ்சாலி கதிர்வீச, வீற்றிருந்த" (பழந்தக்க - தோணிபுரம் - 6) என்றும் வரும் ஆளுடையபிள்ளையார் தேவாரங்களும் காண்க.

**சூல் இளைத்தவளை என்க.** சூல்கொண்டதனால் அயர்வடைந்த சங்கு. கண்படு தற்குக் காரணங் கூறியவாறு.

**விளைத்த பாகொளி** - பயிர் விளைந்து முற்றியதனால் விளங்கும் பசியநிறம். இதனால் நட்ட நெற்பயிர் இடைக்காலத்துள் முதிர்ந்து பச்சையாய் விளங்கிய நிலையும் குறிக்கப்பட்டது காண்க.

**ஊர்கோள்** - பரிவேடம். **ஊர்கோள் வளைத்த** - ஊர்கோளினால் வளைக்கப்பட்ட. தச்சனாற் கட்டப்பட்ட என்புழிப்போல, வினைமுதற்பொருளில் வந்த மூன்றனுருபும், படுவிகுதியும் தொக்குநின்றன. இங்கு ஊர்கோள் என்றது ஓரோர்காலம் முழு மதியைச் சூழ்ந்துகாணும் சிவந்த கதிர்ப்படலத் தொகுதியை.

**மாமதி** - முழுமதி. நீர்மருதவைப்பினிடத்துக் கண்படுவனவாகிய சூல் **வளைகள்** - போன்றுள என்க. **வளை** - சாதியொருமையாதலின் பன்மைவினை கொண்டது.

**நீர் வைப்பு**—என்பதும் பாடம். 26

1104. ஓங்கு செந்நெலின் புடையன வுயர்கழைக் கரும்பு;
பூங்க ரும்பயன் மிடைவன பூக;மப் பூகப்
பாங்கு நீள்குலைத் தெங்குபைங் கதலிவண் பலவு
தூங்கு தீங்கனிச் சூதநீள் வேலிய சோலை. உசு

(இ - ள்) வெளிப்படை. ஓங்கி வளரும் செந்நெற் பயிரின் பக்கத்தில் உயர்ந்த கழைக்கரும்பு உள்ளன; அந்த அழகிய கரும்புகளின் அயலில் நெருக்கமாகிய கமுகுகள் உள்ளன; அந்தக் கமுகுகளின் பக்கத்தில் நீண்ட குலைகளையுடைய தென்னைகளும், பசிய காய்களையுடைய வாழைகளும், வளப்பம் பொருந்திய பலாமரங்களும், தொங்குகின்ற இனிய பழங்களையுடைய மாமரங்களுமாய்ப் பொருந்திய நீண்ட வேலியை யுடையன சோலைகள்.

(வி - ரை) **ஓங்கு செந்நெல்** - ஓங்கு - சின்னாளில் மேலுயர்ந்து வளரும் நெற்பயிரின் வளர்ச்சியையும், செழிப்புடைய நெல் உயர்ந்தும் புடைபரந்தும் வளரும் வளர்ச்சியையும் குறித்தது. செந்நெல்லின் சிறப்புப்பற்றி முன் உரைத்தவை பார்க்க. நெல் - இங்குச் செந்நெற்பயிர் குறித்து நின்றது.

**உயர் கழைக்கரும்பு** - இது கரும்பின் ஒருவகை குறித்தது. "கழைக்கரும்பு" (67) என்றவிடத்துரைத்தவை பார்க்க. **உயர்** - என்றதனால் கணுக்களினிடை உள்ள பகுதி நீண்டிருத்தலும், கரும்பு நீண்டு வளர்ந்திருத்தலும் குறிக்கப்பட்டது. **கழைக் கரும்பு** - ஒரு பொருட் பன்மொழி என்றனர் முன்னுரைகாரிர்கள்.

**மிடைவன பூகம்** - கமுகமரங்களை நெருங்கப் பயிரிடும்தன்மை குறிக்கப்பட்டது.

நீள் தூலத்தேங்கு - தென்னையின் குலை நீண்டிருத்தலால் காய்களின் செறிவும் செழிப்பு மிகுதியும் குறிக்கப்பட்டன. நீண்டதென்னை என்றலுமாம்.

வண் பலவு - பலாவின் வண்மையாவது பெரும் பழங்களையுடைமை, ஒரு பழத்தில் பல சுளைகளையுடைமையால் பலருக்கும் ஒரே காலத்தில் உணவாகும் தன்மை, வேரினுள்ளும் மரம் முழுமையும் காய்த்துப் பலன் உதவுதல், காயும் பழமும் உணவாகுதல், பழம் வெடித்துச் சாறுபாய்தல் முதலியன. "வண்பலவின்" (1044) என்ற விடத்துரைத்தவையும் பார்க்க.

தூங்கு தீங்கனிச் சூதம் - மாங்கனிகள் நீண்ட காம்புகளுடன் மரக்கிளைகளில் தொங்கு மியல்புடையன. தீங்கனி என்றதனால் கனி இனிய சுவையுடைத்தாதலும், காய் அவ்வாறின்றிப் புளிப்புடைத்தாதலும் குறிப்பாம். திரோதான சத்திக்கும் அருட் சக்திக்கும் முறையே மாங்காயினையும் மாங்கனியினையும் உவமித்துக் கூறுவன ஞான சாத்திரங்கள். இங்ஙனம் தன்மை யணிச்சுவைபடக் கூறியது காண்க.

கதலி - பலவு - சூதம் - இவை முக்கனிகளாதலும் அறிக. "முக்கனியின் சாறெழுகிச் சேறுலரா நீள்வயல்சூழ் முதுகுன்றமே" என்பது ஆளுடைய பிள்ளையார் திருவாக்கு.

சோலை வேலிய - சோலைகள் - தென்னை, கதலி, பலா, மா என்ற இவற்றை வேலியாக உடையன. வேலி என்பது இம்மரங்கள் நெல் வயலினையும் கரும்புப் பயிர்களையும் சுற்றி வெளிப்புறத்தில் வேலிபோல அமைந்துள்ளன என்பதாம். இவ்வாறன்றி இம்மரங்கள் நிலத்தின் இடைநடுவில் இருப்பின் இவற்றின் நிழலகப்பட்டு ஏனைப்பயிர்கள் பயன்தரா வென்க.

நெல் - கரும்பு - பூகம் - தெங்கு - கதலி - பலா - மா இவை மருதநிலக் கருப்பொருள்களுள் உணவுக்குரியனவாதல் காண்க. 27

1105. நீடு தண்பணை யுடுத்தநீண் மருங்கின ; நெல்லின்
கூடு துன்றிய விருக்கைய ; விருந்தெதிர் கொள்ளும்
பீடு தங்கிய பெருங்குடி மனையறம் பிறங்கு
மாட மோங்கிய மறுகன ; மல்லன்மூ தூர்கள். உஅ

(இ - ள்) வெளிப்படை. வளப்பமுடைய பழைய ஊர்கள், குளிர்ச்சியையுடைய பெரிய வயல்களாற் சூழப்பட்ட நீண்ட பக்கங்களையுடையன ; நெற்கூடுகள் நெருங்கிய வீடுகளையுடையன ; விருந்தினர்களை எதிர்கொண்டு உபசரிக்கும் பெருமையில் நிலைத்த பெருங்குடிகள் இல்லறத்தில் விளங்குதற்கிடமாகிய மாடங்கள் ஓங்கிய வீதிகளையுடையன.

(வி - ரை) மூதூர்கள், மருங்கின ; இருக்கைய ; மறுகன என்க.

பணை உடுத்த - பணைகளாற் சூழப்பட்ட. பணை - பண்ணை. உடுத்தல் - சூழ்தல் என்ற பொருளில் வழங்குவது.

நெல்லின் கூடு - நெல்லைச் சேமித்து வைக்குமிடம். வைக்கோற் புரியினுலமைத்த குரம்பை. நெல் - மருதக் கருப்பொருள். மருத நிலமக்களுக்கு இது முதன்மை பெற்ற உணவுப் பண்டமாதலின் ஊர்களில் நெற்கூடு துன்றிய இருக்கை என்றார். இருக்கை - வீடு ; வயலிடங்களில் நெற்கூடுகள் அமைத்தலுமுண்டு. நெல்லின் கூடு நிறைந்தமையே விருந்து எதிர்கொள்ளுதற்கு வேண்டும் பெருஞ் சாதனமாதலின் இதனை முன்வைத்து, அதனை அடுத்து வைத்து ஓதினர். "நெற்கூடு" கோட்புலி நாயனார் புராணம் பார்க்க. துன்றுதல் - மிகுதியாக நெருங்கியிருத்தல். நெல்லினைக் கூடுகட்டி வீடுகளிற் சேமித்தல் மரபு.

மனையறம் பிறங்கும் மாடம் ஓங்குதல் வீதிகளுக்குச் சிறப்பு என்று முடித்தது காண்க. பணையில் நெல் விளைவும், நெற்கூடுகளின் உதவியால் விருந்தெதிர் கொள்ளுதலும் உளவாக, இவையெல்லாம் இல்லற ஒழுக்கத்தால் நிலைபெறுவன என்பதாம்.

மல்லல் - நெல்லே யன்றி அதன் வழித்தாய் உளவாகும் பிற எல்லா வளங்களும் கொள்க. மல்லல் ழுதூர் - சிலநாள் செழித்துப் பின் மறையும் ஊர்கள் போலன்றி பழைமையாகவரும் செழிப்புடையன என்பது.

ஊர் - மருதநிலப் பதிகள் ஊர் எனப்படும். 28

1106. தொல்லை நான்மறை முதற்பெருங் கலியொலி துவன்றி
யில்ல றம்புரிந் தாகுதி வேள்வியி லெழுந்த
மல்கு திண்புகை மழைதரு முகிற்குலம் பரப்புஞ்
செல்வ மோங்கிய திருமறை யவர்செழும் பதிகள். உக

(இ - ள்) வெளிப்படை. திருமறையோர்களது செழும் ஊர்கள், பழைமையாகிய நான்கு வேதங்கள் முதலிய பெருமையுடைய கலைகளே ஓதுகின்ற ஒலி மிகுந்து இல்லறத்திற் புரிந்த ஆகுதிகளுடன் கூடிய வேள்விகளில் எழுந்த திண்மையுடைய புகையானது மழையினைத்தரும் முகிற் கூட்டங்களைப் பரப்புகின்ற செல்வத்தால் மிகுந்தன.

(வி - ரை) உழவினைவரும் வளங்களையும், அவ்வளங்களாலுயர்ந்து மனையறம் பிறங்கும் பெருங்குடிகளையும், முன்னர்க் கூறிய ஆசிரியர், அவ்வாறு உள்ள ஊர்களுட் சிறந்து விளங்குவனவும் மறையவர்களுக்குச் சிறப்பாயுரியனவுமாகிய ஊர்களே விதந்து வேறு எடுத்துக் கூறுகின்றார்; அந்த மறையவர் செழும்பதிகளுட் சிறந்த திருவல்லத் தினை மேல்வரும் பாட்டிற் றொடர்ந்து கூறும் முறையும் காண்க.

இவற்றை வேறுபிரித்து விதந்து கூறுதற்குக் காரணம் முன்கூறிய உழவு வளங்களுக்கும் இல்லறத்துக்கும் இன்றியமையாத துணையாய் நிற்கின்றமையால் முதன்மை பெற்ற மழைக்குக் காரணமாகிய வேள்விகளை அவர்கள் செய்பவர் என்பதாம்; அதனை வேள்விப்புகை மழைதரும் முகிற்குலம் என்றதனைத் குறிப்பித்தார்.

தொல்லை - பழைமை. மறைகளின் தொன்மையாவது உலகங்களைப் படைத்த போதே உலகத்துயிர்கள் உய்யும் வழியினையும் உடனே வகுத்து மறைகளை இறைவன் அருளினர் என்றதனாலாம். "அசரசர பேதமான யாவையும் வகுத்து - மறையாதி நூலையும் வகுத்து" என்று இதனை விளக்கினர் தாயுமானார். முதற்றோன்றிய நாத தத்துவத்திற்றோன்றியதாதலின் தொல்லை நான்மறை என்றார் என்பதும் பொருந்தும்.

மறைமுதற் பெருங்கலை - முதன்மை பெற்ற வேதங்களும் அவை முதலாகக் கணிக்கப்படும் ஆறங்கம் முதலிய பெருங்கலைகளும். ஒலி - இவற்றைப் பயிலும் ஒலி.

வேள்வியில் எழுந்த - புகை - மழைதரும் முகிற்குலம் பரப்பும் என்றது வேள்விகள் மழைக்குக் காரணமாவன என்றதாம். "வானளிப்பன வேள்வியின் வளர்தி" (1032) என்றதும் அங்குரைத்தவையும் பார்க்க. "வேள்வி நற்பயன் வீழ்புன லாவது" (திருஞான - புரா - 822) என்றது காண்க. 81ல் உரைத்தவை பார்க்க.

இல்லறம் புரிந்த ஆகுதி வேள்வியில் - இல்லறத்திற் புரிந்த வேள்வி என்க. புரிந்த - என்ற பெயரெச்சத்தி னீற்றகரம் கெட்டுப், புரிந்தாகுதி என நின்றது. துவன்றி - மிகாநிற்ப : மிகப்பெற்று.

புரிந்து (அதிற் செய்யப்படும்) ஆகுதி என்று விரித்தலும் ஒன்று.

முகில் பரப்பும் செல்வம் - உலகத்துக்கு உயிராகிய எல்லா வளங்கட்கும் காரணமாகிய மழையினைச் செய்யும் செல்வமே சிறந்தது என எடுத்துக் காட்டியபடி.

**திருமறையவர்** - இங்குத் திரு என்பதனை "முகிற்குலம்பரப்பும் செல்வம்" என விளக்கியவாறும் காண்க.

**செழும்பதிகள்** - செழுமை - உலகம் செழிக்கும் மழைதருதலாலும், அதற்குச் சாதனமாகிய வேள்விகளுக் கிருப்பிட மாதலாலும், அதற்குச் சாதனமாகிய இல்லறச் சிறப்பாலும் உளதாம்.

**பதிகள் ஓங்கிய** என்க. **ஓங்கிய** - அன் பெறுத அகரவீற்று வினைமுற்று. இவ் வாறன்றி இதனைப் பெயரெச்சமாகக் கொண்டு, ஓங்கிய பதிகள் உள்ளன என்றுரைப் பர் முன்னுரைகாரர்கள். **பதிகளுள்** என்று உருபு தொக்கதாகக் கொண்டு தொடர்பு படுத்தி, மேல்வரும் பாட்டுடன் கூட்டிப் - பதிகளுள் - மறையவர் வல்லம் - விளங் கும் - என்று முடிப்பர் இராமநாதச் செட்டியார்.

**தண்புகை**—என்பதும் பாடம். 29

1107. தீது நீங்கிடத் தீக்காலி யாமவு ணற்கு
நாதர் தாமருள் புரிந்தது; நல்வினைப் பயன்செய்
மாதர் தோன்றிய மரபுடை மறையவர் வல்லம்
பூதி சாதனம் போற்றிய பொற்பினுல் விளங்கும். ஈ0

திரு வல்லம்

(இ - ள்) வெளிப்படை. தீமை நீங்கும்படி தீக்காலி என்கிற அவுணனுக்கு இறையவர் அருள்புரிந்ததாகிய, நல்வினையின் பயனைச் செய்கின்ற மாதர்கள் உதித்த மரபினையுடைய வேதியர்களது பதியாகிய, திருவல்லம் என்ற தலமானது திருநீற் றினையும், அதனுடன் சேர்ந்த சிவசாதனமாகிய உருத்திராக்கத்தையும் பேணிய அழகி னுடன் விளங்குவதாம்.

(வி - ரை) **தீதுநீங்கிட...அருள் புரிந்தது** - மகாவிட்டுணுவின் சக்கரத்தால் தான் இறக்க நேரிடும் தீங்கு நீங்கும்படி தீக்காலி என்ற அவுணன் வரங்கிடக்க, அவனுக்கு அத்தீமை அணுகாது காத்து அருளினர் என்பது தல வரலாறு. தீக்காலி பூசித்துப் பேறு பெற்றதனால் இத்தலம் தீக்காலிவல்லம் என்றும் வழங்கும்.

**அருள் புரித்தது** - அருள்புரிதற்கு இடமாகிய. **அருள்புரிந்த** - வல்லம் என்று கூட்டுக.

**நல்வினைப் பயன்செய் மாதர் தோன்றிய மரபு** - இவ்வரலாறுவது :—தனக்குப் புத்திரிகளேயன்றிப் புத்திரன் இல்லை என்றறிந்த ஒரு மறையவன் புத்திரப்பேறு வேண்டிச் சிவபெருமானை நோக்கித் தவங் கிடந்தான்; அவர் வெளிப்பட்டு "உனக் குப் புத்திரியே யன்றிப் புத்திரப்பேறு கிடைக்குமாறில்லை" என்று அருளிச்செய்ய, அவன் அவரை நோக்கி, "ஆயின் அப்புத்திரிகள் தேவரீருக்குத் திருத்தொண்டு செய் வோராகப் பிறக்க அருள் செய்யவேண்டு" மென்று வேண்டி அவ்வாறே பெற்று மேன்மை யடைந்தனன் என்பதாம். இதற்கு இவ்வாறன்றி, **மாதர்** - அழகு என்று கொண்டு, நல்வினைப்பயனுகிய சிவபுண்ணியத்தையே செய்யும் பொற்புத் தோன்றிய மரபு என்று பொருள் கொள்வாருமுண்டு.

**மரபுடை மறையவர் வல்லம்** - அந்த மரபினில் வந்த மறையோர் விளங்கும் திருவல்லம். பழஞ்சரிதத் தொடர்புபற்றிய சிறப்புக்களே முன்னர்க்கூறிப், பின் பிற வளங்களைக் கூறுவது ஆசிரியரது மரபு.

**மறையவர் வல்லம்** - "விரித்தவன் வேதங்கள் வேறுவேறு" (1), "அருமறை யாறங்கமாஞன்" (9), "கற்றவர் திருவல்லம்" (11) (வியாழக்குறிஞ்சி) என்ற ஆளுடையபிள்ளையாரது இத்தலத் தேவாரங்கள் காண்க.

திருவல்லம் - இது தொண்டைநாட்டின் 10-வது திருத்தலம். பாலாற்றின் கரையிலுள்ளது. திருவல்லம் என்ற (M. S. M.) இருப்புப்பாதை நிலயத்தினின்றும் வடகிழக்கில் கற்சாலையில் ½ நாழிகையளவில் அடையத்தக்கது.

பூதிசாதனர்—என்பதும் பாடம். 30

1108. அருவி தந்தசெம் மணிகளும் புறவிலாய் மலரும்
பருவி யோடைக ணிறைந்திழி பாலியின் கரையின்
மருவு கங்கைவாழ் சடையவர் மகிழ்ந்தமாற் பேறும்
பொருவில் கோயிலுஞ் சூழ்ந்ததப் புறம்பணை மருதம். நக

திரு மாற் பேறு

(இ - ள்) வெளிப்படை. அந்தப் புறம்பணை மருதநிலமானது குறிஞ்சி நிலத்தின் மலைச்சாரலிலிருந்து வருகின்ற அருவிகள் கொழித்து வருகின்ற சிவந்த இரத்தினங்களும், குறிஞ்சியை அடுத்த முல்லை நிலத்தினின்றும் வாரிக்கொண்டு வரப்பட்ட மலர்களும் கலந்து ஓடைகளில் நிறைந்து கீழே இழிந்து வருகின்ற பாலாற்றின் கரையில், பொருந்திய கங்கை வாழ்கின்ற சடையினையுடைய சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருமாற்பேறு என்னும் ஒப்பற்ற திருக்கோயிலினையும் சூழப்பெற்றது.

(வி - ரை) அருவி - குறிஞ்சியின் மலைகளிலிருந்து வருகின்ற என்பது இசையெச்சம். அருவியும் செம்மணிகளும் குறிஞ்சிக் கருப்பொருள்கள். மணிகளையும் மலர்களையும் கொண்டு, தலவழிபாடு செய்யப் பாலாறு இத்தலத்தின்வழிச் செல்கின்றது என்ற குறிப்பும் காண்க. "வம்பு லாமலர் நீரால் வழிபட்டு" (57) என்றது முதலியவை காண்க.

புறவு - முல்லைப்புறவு. மலர் - முல்லைக்கருப்பொருள். பருவி - கலந்து.

ஓடைகள் - நீர் ஓடுதல் அருதவை. ஓடைகளின்கண்; எழனுருபு தொக்கது. கோயிலும் - இரண்டனுருபு தொக்கது.

புறம்பணை மருதம் - கோயிலும் - சூழ்ந்தது என முடிக்க. கோயிலையும் என இரண்டனுருபு விரிக்க.

மாற்பேறு - திருமால் பூசித்துச் சக்கரப்பேறு பெற்ற காரணத்தால் இப்பெயர் பெற்றது. திருமால் இங்குச் சுவாமியின் திருமுன்னர் நின்று தரிசித்துக்கொண்டிருக்கும் கோலத்துடன் இருப்பதும் காண்க. "மன்னிய மாலொடு சோமன் பணி செய" (11) (ஆளுடைய பிள்ளையார்), "பொருமாற் றிண்படை வேண்டிநற் பூம் புனல், வருமாற் றின்மலர் கொண்டு வழிபடும்" (திருக்குறுந்தொகை) என்ற இத்தலத் தேவாரங்கள் காண்க.

இது தொண்டை நாட்டின் 11-வது தலம். பனூர் என்ற நிலயத்திலிருந்து தென் மேற்கே மட்சாலையில் 2 நாழிகையளவில் அடையத்தக்கது.

பூம்பணை மருதம்—என்பதும் பாடம். 31

1109. விரும்பு மேன்மையென் பகர்வது? விரிதிரை நதிகள்
அருங்க ரைப்பயில் சிவாலய மனேகமு மணைந்து
பருங்கை யானையை யுரித்தவ ரிருந்தவப் பாசூர்
மருங்கு சூழ்தவம் புரிந்ததன் மே?மற்ற மருதம். நஉ

திருப் பாசூர்

(இ - ள்) வெளிப்படை. விரியும் அலைகளையுடைய நதிகளின் அரிய கரைகளில் பயிலுதலையுடைய அநேகம் சிவாலயங்களையும் அணையப்பெற்று, பெரிய கையினையுடைய யானையை உரித்த சிவபெருமான் விரும்பி வீற்றிருந்த திருப்பாசூரினையும்

பக்கத்திற் சூழும் தவத்தினைச் செய்ததன்றே அந்த மருத நிலம்? ஆதலின் (எல்லாராலும்) விரும்பப்படுகின்ற அதனது மேன்மையைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டியது வேறென்னவுள்ளது? (ஒன்றுமில்லை).

(வி - ரை) மற்ற மருதம் - சிவாலயம் அநேகமும் அணைந்து - திருப்பாசூர் - மருங்கு சூழ் தவம் புரிந்ததன்றே? மேன்மை (வேறு) என் பகர்வது? என்று கூட்டிப் பொருள் கொள்க.

நதிகள் அருங்கரைப் பயில் சிவாலயம் அனேகம் - பாலாற்றினைப் போன்ற பல ஆறுகள் அந்நாட்டில் உள்ளன; அவற்றின் கரைகளில் அநேகம் சிவாலயங்களும் உண்டு என்க. அருங்கரை - அருமையாவது அங்குப் பல சிவாலயங்களும் இருத்தல்.

பயில் - மக்கள் தேற்றம்பெற உணர்ந்து (வழிபட) உள்ள.

தவம் புரிந்தது - சிவாலயம் அநேகம் அணைவதற்கும், பாசூர் மருங்கு சூழ்வதற்கும் நிலம் முன்னை நாளில் தவம் செய்திருக்க வேண்டும் என்பதாம்.

விரும்பும் மேன்மை என் பகர்வது? - மக்கள் விரும்பத்தக்க மேன்மைகளுள் இதுவே மிகச் சிறந்த மேன்மை என்பது குறிப்பு. திருப்பாசூரின் பெருஞ் சிறப்பினையும் அறிவித்தபடி.

பாசூர் - தொண்டை நாட்டின் 16-வது தலம். சுவாமி மூங்கிலினடியில் மூலத் தெழுந்தமையால் இப்பெயர் எய்தியது. சந்திரன் பூசித்து அருள்பெற்ற தலமென்பது "அந்திக் கோன்றனக் கேயருள் செய்திடும்" என்ற திருக்குறுந்தொகையாலும், காரிகால் வளவன்மீது சமணர் ஏவிய பாம்பைச் சுவாமி தடுத்துப் பிடித்து ஆட்டியருளினர் என்ற தலவரலாறு "பாம்பு மாட்டுவர் பாசூர டிகளே" என்ற திருக்குறுந்தொகையாலும் அறிவிக்கப்பட்டன. இத்தலம் திருவள்ளூர் நிலயத்திலிருந்து வடக்கே கற்சாலையில் 2½ நாழிகையளவில் உள்ள திருவள்ளூரை அடைந்து, அங்கு நின்றும் மேற்கே கற்சாலையில் 2 நாழிகை யளவில் அடையத்தக்கது. 32

## நெய்தல்

1110. பூம ரும்புனல் வயற்களம் பாடிய பொருநர்
தாம ரும்கிளை யுடன்றட மென்மலர் மிலைந்து
மாம ருங்குதண் ணீழலின் மருதயாழ் முரலுங்
காமர் தண்பணைப் புறத்தது கருங்கழி நெய்தல். கூங

(இ - ள்) வெளிப்படை. பூக்கள் பொருந்தும் நீர் நிறைந்த வயற்களத்தைக் குறித்து மருதப் பண்ணைப் பாடுகின்ற பொருநர்கள் தங்களுடைய அருமையாகிய சுற்றத்தார்களுடன் கூடித் தடங்களிற் பூத்த மெல்லிய மலர்களைச் சூடிக்கொண்டு மாமரங்களினருகில் குளிர்ந்த நீழலிலிருந்து மருத யாழினை முரல்கின்ற அழகிய குளிர்ந்த வயல் நிலத்தின் புறத்திலே கரியகழிகளையுடைய நெய்தனிலம் உள்ளது.

(வி - ரை) பூமருநம்புனல் வயற்களம்-வயல்களிலும் நீர்வளமிகுதியால் தாமரை முதலியன பூக்கும். மருநம் - மருவும். செய்யும் என்றும் பெயரெச்சத்தில் உயிர் மெய் நீங்கியது.

களம்பாடுதல் என்பது பொருநர்கள் நெற்களத்தின் சிறப்பினை எடுத்துச் சிறப்பித்துப் பாடுதல். களம் உழவின் சிறந்த பகுதிகள் நிகழுமிடம். நெற்போர்க்களம். பொருநர் - புகழ்ந்து பாடுவோர். அவர் போர்க்களம் பாடுவோர் - ஏர்க்களம் பாடுவோர் - பரணிபாடுவோர் எனப் பலதிறப்படுவர். இங்குக் கூறிய பொருநர் - வயற்களம் பாடுவோர். வயற்களம் பாடிய - பிறிதினியைபு நீக்கிய விசேடணம்.

களம் பாடிய போருநர் - மலர்மீலைந்து - நீழலில் - யாழ்முரலும் - பணை என்க. பண்களைமிடற்றுப் பாடலாகப் பாடிய பின்னர் அதற்குத் தக்கபடி யாழினையும் மிழற்றுவர். இங்கு மாமரத்தின்கீழ் மருதப்பண் பாடிய பொருநர் மருதயாழினையும் உடன்மிழற்றினர். யாழ்முரலுதல் என்பது மரபு வழக்கு. மருதயாழ் - மருதநிலத்து யாழ். மா - மருதத்தின்மரம். இவை மருதக்கருப்பொருள்.

பணைப் புறத்தது - வயல்களின் புறத்தே உள்ளது. நெய்தல் பணையின்புறத்தே உள்ளது என்க. பணை - பண்ணை. நெய்தல் கூறத் தோற்றுவாய் செய்தவாறு. 33

1111. தூய வெண்டுறைப் பரதவர் தொடுப்பன வலைகள்;
சேய நீள்விழிப் பரத்தியர் தொடுப்பன செருந்தி;
ஆய பேரளத் தளவர்க ளளப்பன வுப்பு;
சாயன் மென்னடை யளத்திய ரளப்பன தரளம். ஙச

(இ - ள்) வெளிப்படை. தூய்மையாகிய வெள்ளிய மணற்றுறையினையுடைய கடற்கரையில் வாழ்கின்ற பரதவர்களால் (மீன்) வலைகள் தொடுக்கப்படுகின்றன; சிவந்த நீண்ட கண்களையுடைய பரத்தியர்களாற் செருந்திமலர் மாலைகள் தொடுக்கப் படுகின்றன; அவ்விடத்தில் பெரிய அளங்களில் அளவர்களால் உப்பு அளக்கப்படு கின்றன; (மயில்போன்ற) சாயலையும், (அன்னம் போன்ற) நடையையும் உடைய அளத்தியர்களால் முத்துக்கள் அளக்கப்படுகின்றன.

(வி - ரை) வெண்துறை - வெண்மணலை உடைய கடற்றுறை என்று இட நோக்கிப் பொருள் கொள்க. மேல்வரும் பாட்டிற் "படுமணற்கரை" என்பது காண்க. கருமணலும் சிறுபான்மையுளதாயினும் பெரும்பான்மைபற்றி வெண் மணலைக் கூறினர். அன்றியும் தொண்டைநாட்டுக் கடற்கரை வெண்மணல் கொண் டது. தூய - கரைக்குத் தூய்மை மணலினாலாகியது. மணல் தூய்மையுடையதென் பது வேள்விகளில் வேதிகைகளில் வெண்மணல் பரப்பி அதன்மேல் எரிவளர்த்தல் வேண்டுமெனச் சிவாகமங்களில் விதித்தவாற்றானறியப்படும். "புரிதூ லவர்வேள்விக் களத்திற் புனைந்த வேதிகைமேன், மணல்வெண் பரப்பி னிடையிடையே வளர்த்த செந்தீ மானுமால்" (நமிநந்தி - புரா - 3) என்றது காண்க. சாந்தி முதலியவற்றின் பொருட்டு நிறுவிப் பூசிக்கப்படும் நிறைகுடங்களின் நீரில் இடப்படும் ஐவகைமண் (பஞ்சமிருத்திகை)களில் கடல்மணலும் ஒன்றென்பர். இனி, வெண்துறை - வெண்மை யாகிய நிறத்தினையுடைய அலைகள் பொருந்திய கடற்றுறை என்றலுமாம். "வெண் டலைப்புணரிக் குடகடல்" (புறநா) என்றதும் காண்க.

தொடுப்பன வலைகள் - வலைகள் - மீன் பிடிக்கும் வலைகள். தொடுத்தல் - புதிய வலைகளைப் பின்னுதலும், பழையவற்றைப் பழுது பார்த்தலுமாம். கடலிற் பெருமீன்கள் படுதலின் வலைகள் அவ்வப்போது சிதைவுறுவன. ஆதலின் அவை ஒவ் வொரு நாளும் பழுது பார்க்கப்படவேண்டுதல் அத்தொழிற்குரிய செயல். தொடுப் பன - தொடுக்கப்படுவன. படுவிகுதி தொக்குவந்த செயப்பாட்டு வினைமுற்று. அளப்பன என்றதனையும், மேல்வரும் பாட்டில் கொடுப்பன - குளிப்பன - என்ப வற்றையும் இவ்வாறே கொள்க.

தொடுப்பன செருந்தி - பரத்தியர் அணிந்துகொள்வதற்காகச் செருந்தியைத் தொடுப்பர். மீன்விலைப்பரத்தியராயினும் தம்மை அணிசெய்துகொள்ளும் பழக்க முடையவர்கள் என்பதும், அவ்வாறு அணிவதில் அந்நிலத்தும் பூவினையே பயன்படுத் திக்கொள்ளு மியல்புடையவர் என்பதும் குறிப்பு.

**ஆய** - அங்கிலத்தின் ஆகிய. **அளம்** - உப்பளம். உப்புவிளைத்துச் சேர்க்குமிடம் அளம் எனப்படும். அளத்தில் வாழுமக்களுள் ஆண்மக்கள் அளவர் - அளத்தவர் - எனவும், பெண்மக்கள் அளத்தியர் எனவும் பெயர் பெறுவர்.

**சாயல் மென்நடை** - சாயலுக்கு மயிலையும், நடைக்கு அன்னத்தையும் உவமித்தல் மரபு. இதனால் அவர்களது இயற்கையழகினையும், **தொடுப்பன செநந்தி** என்றதனால் செயற்கையழகினையும் கூறியவாறு. மேல்வரும்பாட்டில் "வடிவகிர்க்கண் மங்கையர்" என்றதும், 1115-ல் "விழிக்கயல்" என்றதும் காண்க. பரதவ சாதியினர் மீனுட்சியம்மையாரைத் தங்கள் மகளாராய்ப் பெற்று வளர்த்த சரிதத்தை உட்கொண்டு ஆசிரியர் இவ்வாறு சிறப்பித்தனர் போலும்.

**அளப்பன தூளம்** - தூளம் - நன்முத்துக்கள். இவை கடல்படுபொருள்கள். அளப்பன என்ற ஆற்றலான் அவை மிகுதியும் பெறப்படும் தன்மை குறிக்கப்பட்டது.

**தொடுப்பனவலைகள்** - **அளப்பன உப்பு** என, வன்மையான தொழில்களை ஆண்பாலரிடத்தும், **தொடுப்பன செநந்தி** - **அளப்பன தூளம்** என மென்மையும் மேன்மையும் பட்ட தொழில்களைப் பெண்களிடத்தும் சார்த்திக் கூறிய உண்மை உய்த்துணர்க. இவ்வாறே மேல்வரும் பாட்டில் கொழுமீன் கொடுத்தல் - சங்கு குளித்தல் என்னும் வலிய தொழில்களை நுளையரும், பவளம் விற்றல், மணற்கேணி குளித்தல் என்பவை நுளைச்சியரும் செய்தலைக் கூறுதலும் கருதுக. இதனால் ஆண்பாலரும் பெண்களும் தத்தம் உடல் இயல்புக்கும் மன இயல்புக்கும் ஏற்ற தொழில்களைச் செய்தலே முறையாமென்பதனையும் குறித்தவாறு கண்டுகொள்க. 653-ல் உரைத்தவையும் பார்க்க.

**செநந்தி** - நெய்தனிலப் பூ; **தூளம்** - கடலிற் படுபொருளும், **உப்பு** - நெய்தலின் விளைபொருளும் ஆம். **மீன் படுத்தல்** - நெய்தனிலச் செய்தொழில். இவை நெய்தற் கருப்பொருள்கள்.

**சேய நீள் விழி** - நெடுந்தூரத்தே நின்ற பொருள்களையும் கண்டு அளக்கும் தன்மைவாய்ந்த என்ற குறிப்பும் காண்க. "வியலகத்தின் விடுந்திமில் வாழ்நர்கள் கொணர்ந்த, கயலளப்பன பரத்தியர் வரிநெடுங் கண்கள்" (அதிபத்தர் - புரா - 6) என்றது காண்க. **மேன்னடையின் சிறப்புப்பற்றி** "ஓதிமம் அசைநடைக் கழிந்து - மருங்கு நின்றிழி யலமருளும்" (அதிபத்தர் - புரா - 7) என்று கூறுவதும் இங்கு நினைவு கூர்தற்பாலது.

மெல்லிடை—என்பதும் பாடம். 34

1112. கொடுவி னைத்தொழி னுளையர்கள் கொடுப்பன கொழுமீன்;
படும ணற்கரை நுளைச்சியர் கொடுப்பன பவளம்;
தொடுக டற்சங்கு துறையவர் குளிப்பன; வவர்தம்
வடுவ கிர்க்கண்மங் கையர்குளிப் பனமணற் கேணி. ஙூ

(இ - ள்) வெளிப்படை. நுளையர்களால், கொடியவினையாகிய கொலைத்தொழிலினைச் செய்து கொணரப்பட்டுக் கொழுமீன்கள் கொடுக்கப்படுவன; நுளைச்சியர்களால் மணற்கரையிற் படுகின்ற பவளங்கள் விற்கப்படுகின்றன; (சகரர்களால்) தோண்டப்பட்டதென்னும் கடலில் துறையவர்களால் சங்குகள் குளித்தெடுக்கப்படுகின்றன; அவர்களுடைய மாவடுவின் பிளப்பினைப் போன்ற வடிவுடைய கண்களையுடைய பெண்களால் மணற்கேணி குளிக்கப்படுவன.

(வி - ரை) நுளையர்கள் கொடுவினைத் தொழிலாற் கொடுப்பன என்க. கொடு வினை - கொலை. நீரினுள்ளே கொழுத்துச் செழித்து வாழும் மீன்களைப் படுத்துக் கொல்லுதல்பற்றிக் கொடுவினை என்றார்.

கொடுவினைத் தொழில் - மீன் பிடிக்கும் தொழிலை எண்ணும்போது கருணை உருவாகிய ஆசிரியரது திருவுள்ளம் பதைக்கின்றது. "பரிவுறத் தடிந்த பன்மீன்" (73) என்று முன்னர்க் கூறியதும் காண்க. புலால் உண்பவரில் ஒரு சாரார், மக்கள் கையாற் கொலை செய்யப் பெறுதலின் ஆடு கோழி முதலியவற் றின் இறைச்சியே புலால் எனப்படும் என்றும், அவ்வாறு கொலை செய்யப்படாமல் மீன்கள் தாமாக இறந்துபடப் பெறப்படுதலின் மீன் உணவு புலாலுண்பதாகாதென் றும் கூறித், தாம் செய்யும் தகாத செயலுக்கும் உட்கொள்ளும் தகாத உணவுக்கும் ஒரு நியாயம் கற்பிக்க முயல்வர். "ஊனுண் துறமின்! உயிர்க்கொலை நீங்குமின்!" என்றுபதேசித்த புத்தர் வழியினரென்று சொல்லும் பௌத்தரும், வடநாட்டிலும் மேற்குநாட்டிலும் மறையவரும் இக்கருத்துக்கொண்டு மீனுணவு கொண்டமைவா ராயினர். "கழிக் கரைப்படு மீன்கவர் வாரமண் அழிப்பர்", "கழிக்கரை மீன் கவர் வார்" என்று இக்கருத்துப்பற்றியே, கருணைப்போர்வை மேற்கொண்ட பௌத்தரது கருணையின்மையினை எடுத்துரைத்தருளினர் ஆளுடையபிள்ளையார். நீரினுள் வாழும் மீன் முதலிய பிராணிகளை அவற்றின் உயிர் வாழ்வுக்கு இன்றியமையாத பூதமாகிய நீரினின்றும் பிரித்து எடுத்தலாகிய செயலே அவற்றைக் கொலை செய்தலாகும். நிலத் தில் வாழும் நம்போன்ற உயிர்களுக்குக் காற்று இன்றியமையாதிருத்தல்போல மீன் முதலாக நீர் வாழ்வனவாகிய பிராணிகள் உயிருடன் வாழ்வதற்கு நீர் இன்றியமை யாததாகும். Element என்பர் நவீனர். மனிதனைக் காற்றில்லாமற் செய்து இறக் கும்படி செய்துவிட்டால் அது கொலையாகா தென்பாரு முண்டோ? இது பற்றிக் கொலை மறுத்தலில் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் உரைத்தவைகளையும் பார்க்க.

தொழில் - சீவனத்துக்குரிய மரபுத்தொழில் என்ற பொருளில் வந்தது. கொடு வினைத்தொழில் என்று இங்கு இதனை எடுத்துக் காட்டியது பரதவர் கையிற்பட்டு இறந்தும், அதனை உண்ணும் மாக்களின் வாய்ப்பட்டு ஒழிந்தும் கழியும் பிராணிக ளிடத்தும், இக்கொடுமை செய்து இம்மையிலும் கேடடைந்து மறுமையிலும் நரகம் புகும் மக்களிடத்தும் ஆசிரியர் கொண்ட கருணையைக் காட்டுகின்றது.

கொடுப்பன - கொணர்ந்து கொடுக்கப்படுவன. தேடிக் கொடுப்பன என்க. கடலினுட்சென்று மீன்வலைப் படுத்துக் கொணர்தல் நுளையர் தொழிலும், அவற்றை விலைப்படுத்துதல் நுளைச்சியர் தொழிலுமாம். "கழிக்கயல் விலைசெய்" (1115) என்று கூறுதல் காண்க. இது இயல்பும் வழக்குமாம். "திமில் வாழ்நர்கள் கொணர்ந்த, கயல ளப்பன பரத்தியர் வரிநெடுங் கண்கள்" (அதிபத்தர் - புராண - 6) என்பதும், அதுபற்றி எனது சேக்கிழார் 131–135 பக்கங்களில் உரைத்தவையும் பார்க்க. இவ்வாறன்றிக் கொடுப்பன என்பதற்கு விற்கப்படுவன என்றுரைத்தனர் முன்னுரைகாரர்கள். கொழுமீன் - ஓர் சாதி மீன். (திருக்கோவை 188 உரை).

மணற் கரைப்படும் - பவளம் - நுளைச்சியர் கொடுப்பன - என்க. கடலகத் துக் குளித்தெடுக்கப்படும் முத்துக்கள் போலன்றிப், பவளக் கொடிகள் கரையில் படர்ந்தும் ஒதுக்கப்பட்டும் கிடைப்பனவற்றை நுளைச்சியர் தேடிக் கொணர்ந்து பண் படுத்தி விற்பர் என்பது. "துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித் தொன்மயிலை" என்ற திருத்தொண்டத் தொகையும் காண்க.

துறையவர் கடற் சங்கு குளிப்பன என்க. சங்கு குளித்தல் என்பது கடலினுள் மூழ்கி அதனடியிலிருக்கும் சங்குகளை வாரியெடுத்துக் கொணரும் தொழிலுக்கு மரபுப்

பெயராய் வழங்குவது. குளிப்பன - குளித்தெடுக்கப்படுவன. முத்துக் குளித்தல் என்பதும் காண்க.

குளிப்பன மணற்கேணி - பரத்தியர் மணற்கேணியிற் குளிப்பர் என்பதாம். மணற்கேணி - நெய்தனிலத்தின் நீர்நிலை. பரத்தியரது உடல் அழகும் அணிநலனும் முன்னர்க் கூறப்பட்டன. குளிப்பன என்ற இதனால் நுளைச்சியர் உடலைத் தூய்தாக வைத்துக்கொள்ளு மியல்புடையார் என்பதும் குறிக்கப்பட்டது.

வடுவகிர்க்கண் மங்கையர் - கண்களின் இயற்கை யழகினைக் கூறுவதுடன் அவர்கள் பவளம், மணி, மீன் முதலியனவாய்த் தாம் விற்கும் கடல்படு பொருள்களாகிய பண்டங்களின் விலையினை நிச்சயிக்கும் கூரிய கண்ணுடையர் என்பதும் குறிக்கப்பட்டது. "கயலளப்பன" (அதி - புரா - 6) என்றது காண்க.

துறையர் - நுளையர் - நெய்தனில மக்களுள் ஆண்பாலார். நுளைச்சியர் - அந்நிலப் பெண்கள். மீன் - பவளம் - அந்நிலக் கருப்பொருள்கள். சங்கு குளித்தல் - அந்நிலச் செய்தி. 35

1113. சுழிப்பு னற்கட லோதமுன் சூழ்ந்துகொண் டணிய
வழிக்க ரைப்பொதிப் பொன்னவிழ்ப் பனமலர்ப் புன்னை ;
விழிக்கு நெய்தலின் விரைமலர்க் கட்சுரும் புண்ணக்
கழிக்க ரைப்பொதி சோறவிழ்ப் பனமடற் கைதை. நகூ

(இ - ள்) வெளிப்படை. சுழிகளுடன் கூடிய நீரையுடைய கடல் நீரினுற் சூழ்ந்து கொள்ளப்பட்ட பக்கத்தில் உள்ள வழிக்கரையில் பொதிந்த பொன்னினைப் புன்னை மலர்கள் பொதியவிழ்த்துக் கொடுப்பன ; அலர்கின்ற நெய்தல் மலர்களில் தங்கிய வண்டுகள் உண்ணும்படி கழிக்கரையில் நீண்டமடல்களையுடைய தாழை பொதிசோற்றை அவிழ்த்துக் கொடுப்பன.

(வி - ரை) சுழிப்புனல் - சுழித்துவரும் அலைகளையுடைய நீர். சுழித்தல் - சுருண்டு வருதல் குறித்தது. சுழி - நீர்ச்சுழிகள் - கடற்கரையில் இருத்தல் அரிது.

கொண்ட் அணிய என்பது கொண்டணிய என நின்றது.

ஓதம் முன் சூழ்ந்துகொண்ட அணிய வழிக்கரை என்றது அலைகள் முன்பக்கம் வந்து பரவத்தக்கதாகிய கடல் விளிம்பில் உள்ள வழிக்கரையில் என்பதாம்.

புன்னை - கடல் வழிக்கரையில் செல்வார்க்கு நிழல் தரும்படி அமைவன.

புன்னை பொதி பொன் அவிழ்ப்பன என்க. பொதிப் பொன் அவிழ்த்தலாவது புன்னை முகைகள் விரிந்து உள்ளே பொதிந்து மூடியதுபோல் வைத்திருந்த மஞ்சணிறமுள்ள தாதுக்களை உதிர்ப்பன என்பதாம். "கரும்புனைவெண் முத்தரும்பிப் பொன்மலர்ந்து பவளக் கவின்காட்டுங் கடிபொழில்சூழ் கலயநல்லூர் காணே" (ஆளுடைய நம்பிகள்), "புன்னை வெண்கிழி யிற்பவ ளம்புரை பூந்தராய்" (ஆளுடைய பிள்ளையார்) என்ற தேவாரங்களும், பிறவும் காண்க.

விழிக்கும் - மலரும். நெய்தல் - கருங்குவளை ; இந்தப்பூ மலர்தல் கண் விழிப்பது போன்றிருப்பதென்பது கருத்து.

மலர்க்கட் சுரும்பு - மலரில் வாழும் வண்டுகள். கண் - ஏழனுருபு. கண்போன்ற கரிய சுரும்பு என்றலுமாம். கள்ளை உண்ண என்று உரை கூறுதல் பொருந்தாதென்க.

பொதி சோறு அவிழ்ப்பன மடல் கைதை - மடற்கைதை - நீண்ட மடல்களாகிய (இலைகளை) இதழ்களை உடைய தாழை. பொதி சோறு அவிழ்ப்பன - தாழை மலர்களில் உள்ளிருக்கும் சோறு என்ற பகுதிகள் வெளியில் தெரியும்படி மடல்

விரிந்து அலர்வன என்பதாம். சுரும்பு உண்ணச் சோறு அவிழ்ப்பன - வண்டுகள் வந்து படிந்து தேனுண்டு மகரந்தங்களைக் கொள்ள மலர்வன. "வண்டலர் கைதை, துன்று நீறுபுனை மேனிய வாகித் தூய நீறுபுனை தொண்டர்க ளென்னச், சென்று சென்றுமுரல் கின்றன" (242) எனத் தாழைப்பூவில் வண்டுகள் படிவதனை முன்னர் உரைத்தது காண்க.

வழிக்கரையிற் செல்வார்க்கு உதவியாகப் புன்னை பொன் கொடுக்க, அதனைக் கண்டு தாழை, (பொன் தந்தால் அது பசிமாற்றுது-ஆதலின் நாம் கழிக்கரையில் வாழ் வார்க்கு உடனே பசியாற உண்ணும் சோறு கொடுப்போம் என்று) தம்மிடமுள்ள பொதி சோற்றை அவிழ்ப்பன என்று ஈரிடத்தும் சுவைமிக்க தற்குறிப்பேற்ற அணி நலம்படக் கூறிய கவிநயம் காண்க.

பொதி சோறு - கட்டுச்சோறு; பொதிப் பொன் - பொன் முடிப்பு. இங்குப் பொதி என்ற சொற்சிலேடைப் பொருளும், வழிக்கரை - கழிக்கரை என்ற சொல் லாற்றற் குறிப்பும் காண்க.

புன்னை - நெய்தனிலக் கருப்பொருளாகிய மரம். "மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலே" (ஆளுடைய பிள்ளையார் தேவாரம்). நெய்தலும் கைதையும் நெய்தனிலத் துக் கருப்பொருள்களாகிய பூ.

கழிக்கடைப்பொதி—என்பதும் பாடம். 36

1114. காயல் வண்கரைப் புரைநெறி யடைப்பன கனிமுட்
சேய தண்ணறுஞ் செழுமுகை செறியுமுண் டகங்கள்;
ஆய நுண்மணல் வெண்மையை மறைப்பன வன்னங்
தாய முன்றுறைச் சூழல்சூழ் ஞாழலின் ரூது. கூஎ

(இ - ள்) வெளிப்படை. கழிக்கானல்களின் வளப்பமிக்க கரைகளிற் குற்ற மூடைய சிறு வழிகளை, முதிர்ந்த முட்களையுடைய சிவந்த குளிர்ந்த மணம் பொருந்திய செழித்த அரும்புகள் நிறைந்த முள்ளிச்செடிகள் அடைப்பன; அவ்விடத்தில் உள்ள நுண்மணலின் வெண்மையை அன்னங்கள் தாவி விளையாடும் முன்கரையின் சூழ லினைச் சூழ்ந்து மூடித்துள்ள ஞாழல் மலர்களின் பூந்தாதுக்கள் மறைப்பன.

(வி - ரை) காயல் - உப்பளம் என்றலுமாம். வண்கரை - வண்மையாவது கடல் படு வளங்கள் யாவும் பிறநாட்டு வளங்களும் வந்து கூடிக் கிடைத்தற் கிடமாதல்.

கரைப் புரை நெறி - கரையில் உடைப்பும் துவாரங்களும் உள்ள சிறு வழிகள். கரையில் அலைகளால் அரித்து அழிக்கப்பட்ட பிளவுகளையும் துவாரங்களையும் நீர் முள்ளிச் செடிகள் மறைத்து நிற்றல் இயற்கை. முண்டகம் - தாழையென்றும், கனிமுள் - மெல்லிய முள் என்றும், அடைப்பன - மூடுவதற்குப் பயன்படுவன-மூடு வன - என்றும் கொண்டு உரைப்பாருமுண்டு. "கண்டகங்காள் முண்டகங்காள் கைதைகாள்" என்ற தேவாரத்தால் முண்டகம் வேறென்பதறியப்படும்.

சேய முண்டகம் - தூரத்திலிருந்து வந்த தாமரை என்றுரைப்பாரு முண்டு. அவர்கள் நெய்தனிலம் மருத நிலத்தை அடுத்திருப்பதனால் ஆறுகளும் ஓடைகளும் தாமரைகளை வாரி வருதலும் கூடும் என்றும் - "கமல வண்டலர் கைதை" (242) என முன்னுரைத்தவை காண்க என்றும் கூறுவர்.

ஆய - அக்கடற்கரையில் உள்ள. நுண்மணல் வெண்மையினை ஞாழலின் தாது மறைப்பன என்பது வெண்பரப்பு முழுமையும் மறையும்படி ஞாழலின் பூந்தாதுக்கள் நிறைந்தன என்பதாம். அவ்விடத்து ஞாழல்களின் மிகுதி குறித்தது.

**ஞாழல்** - கடல்சார்ந்த இடங்களில் மிகுதியும் உளதாகும் ஒருவகைச் செடி. நெய்தற் கருப்பொருள்களுள் ஒன்று ; புலிநகக் கொன்றை என்பாருமுண்டு.

**அன்னம்** - சிறுபான்மை நெய்தனிலத்திற் பயிலும் பறவைகளுள் ஒன்று. **முன்றுறை** - துறையின் முன் பக்கம். இல்முன் என்பது முன்றில் என வருவது போலக் கொள்க. **சூழல்** - சூழ்ந்துள்ள இடம்.

**கயல்முள்**—என்பதும் பாடம். 37

1115. வாம்பெ ருந்திரை வளாகமுன் குடிபயில் வரைப்பிற்
ரும்ப ரப்பிய கயல்களின் விழிக்கய றவிரக்
காம்பி னேர்வருந் தோளியர் கழிக்கயல் விலைசெய்
தேம்பொ திந்தசின் மழலைமென் மொழியசெவ் வழியாழ். நஅ

(இ - ள்) வெளிப்படை. வாவுகின்ற பெரிய அலைகள் சூழ்ந்த வளாகத்தின் முன்னே குடிகளின் இருப்பிடங்களில் மூங்கிலை ஒத்த தோள்களையுடைய பரத்தியர்கள் தாம் பரப்பிய கயல் மீன்களுள், கண்களாகிய கயல்மீன்கள் நீங்கலாக, அக் கழிக் கயல் மீன்களை விலைப்படுத்துகின்ற இனிமை மிகுந்த சிறிய மழலையாகிய மென் மொழி களின் இனிய தன்மையை, அந்நிலத்துக்குரிய செவ்வழியாழ் பெற்றிருக்கின்றது.

(வி - ரை) **வாம்** - வாவும். குதித்து மேற் கிளம்பும். **திரைவளாகம் முன்** - அலை களால் வளைக்கப்பட்ட இடத்தின் முன்னே. **வளாகம்** - வளைக்கப்பட்ட இடம். **குடி பயில் வரைப்பு** - பரதவர் குடியிருக்கும் இடம்.

**தாம்பரப்பிய கயல்களின் விழிக்கயல் தவிரக் கழிக்கயல்விலை செய்** - என்றது பரத்தியர் இருவகைக் கயல்களைப் பரப்புவர் ; ஒன்று கழிக்கயல் ; மற்றது விழிக்கயல். இவ்விரண்டனுள் விழிக்கயல் நீங்கக் கழிக்கயல் மட்டும் விலைப்படுவன என்றதாம்.

**விழிக்கயல் பரப்புதலாவது** விழியின் பரந்த செயல்கொண்டு கயல்களை அளந்து நிச்சயித்தற்கும், விலைக்குக்கொள்வோரைத் தெரிந்துகோடற்கும் பார்வைசெலுத்தல்.

**கழிக்கயல் பரப்புதலாவது** கழியிற் படுத்த மீன்களை விலைப் பொருட்டு இனம் பிரித்தும் வேறுவகையானும் பரப்பிக் காட்டுதல். உலரவைத்தற்காகப் பரப்பிய என்பாருமுண்டு.

**விழிக்கயல் தவிர** என்றதனால் விழிக்கயல் விலைப்பண்டமாக்கப்படுதல் இல்லை என்பது. இவர்களது பார்வை காமப்பொருட்டு அயலவரிடத்துச் செல்லாது என்ற இதனாற் பரத்தியரது கற்பின்றிறமும் குறித்தவாறு. "காச லம்பு முலையவர் கண் ணெனும், பூச லம்பு நெறியின் புறஞ்செலா" என்ற கம்பர் பாட்டும் கருதுக.

**காம்பின் நேர்வரும் தோளியர்**-இதனாற் பரத்தியரது உடலியலின் அழகு குறிக் கப்பட்டது. நீள்விழி - சாயன்மென்னடை (1111) என்பவையும் இக்கருத்துப் பற்றியன.

**விலைசெய் தேம் பொதிந்த சின்மழலை மென்மொழி** - மீன் விலைசெய்தல் இழி தொழிலேயாயினும் அதனை மெல்லியமொழி கொண்டு இயற்றி நலம்பெறும் பரத்திய ரது மெல்லிய நல்லியல்பும் உடன் குறிக்கப்பட்டது காண்க.

**மழலை மென்மொழிய செவ்வழி யாழ்** - மழலைமொழி செவ்வழியாழ் போன்றது என்பதனை மாற்றி யாழ் மழலைமொழி போன்றன என்று ஒதினார் பரத்தியரின் மொழிச் சிறப்பும் உடன் கூறுதற்கு. தேம்பொதிந்த சின் மழலை என்ற கருத்துமிது. மொழிய - மொழிகளின் தன்மையை - இனிமையை - உடையன. மொழி - சாதி யொருமை. மொழிபோல இசைத்தல் யாழின் சிறப்பியல்புமாம்.

செவ்வழி யாழ் - நெய்தனிலத்துக்குரிய யாழ். கயல்விலைப்படுத்துதல் - நெய்தனிலச் செய்தி. நெய்தற் கருப்பொருள்களுள் இரண்டு கூறியவாறு. 38

1116. மருட்கொ டுந்தொழில் மன்னவ னிறக்கிய வரியை
நெருக்கி முன்"திரு வொற்றியூர் நீங்க"வென் றெழுதும்
ஒருத்தர் தம்பெருங் கோயிலி னொருபுறஞ் சூழ்ந்த
திருப்ப ரப்பையு முடையதத் திரைக்கடல் வரைப்பு. ௩௯

திரு வொற்றி யூர்

(இ - ள்) வெளிப்படை. மயக்கத்தினாற் கொடுந்தொழில் செய்யும் (மாந்தாதா என்னும்) மன்னவன் குறைத்தெழுதிய திட்டம் வரைந்த எழுத்து வரியை நெருக்கி வரிப்பிளந்து, - அதன் முதலில் "திருவொற்றியூர் நீங்கலாக" என்று எழுதவல்ல ஒருத்தராகிய சிவபெருமானது பெரியகோயிலின் ஒருபுறத்தில் சூழ்ந்த திருப்பரப்பிடத்தையும் உடையது அந்த நெய்தனிலத்தின் வரைப்பாகும்.

(வி - ரை) மருட்கொடுந்தொழில்...ஒருத்தர் - இங்குக் குறித்த வரலாறாவது - அயோத்தியில் அரசுபுரிந்திருந்த மாந்தாதா என்ற ஒரு அரசன் நீண்டவயதாய் உடல் தளர்ந்து நடுக்கமும் பிணி முதலியனவும் மேலிட்டு வருத்தமுற்றனன். அதுபோழ்து சிலரை நோக்கி "மிகுந்த மூப்பு நலிவதனால் வருந்தாது விரைவில் இறக்கும்வகையாது?" என்று வினாவினான். அவர்கள் மருளுடைமையால் "முன்செய்துவந்த சிவபுண்ணியங்களுக்குக் குறைவுசெய்தால் விரைவில் இறந்துபோகலாம்" என்றனர். அரசனும் அவ்வாறே துணிந்து கணக்கனைக் கூவித் தான் முன்பு விதித்து நடத்திவந்த சிவன் கோயிற் படித்தரத் திட்டங்களை எல்லாம் அரை வரிசையாகக் குறைத்துக் கணக்கு எழுதிவரும்படி உத்தரவிட்டு அவ்வாறே எழுதிவந்த கணக்கிற் கையெழுத்தும் இட்டு வைத்தனன். மறுநாட் பார்க்கும்போது அதில் அந்த வரியை நெருக்கி வரிப்பிளந்து "திருவொற்றியூர் நீங்கலாக" என்று எழுதியிருந்தது கண்டு, அரசன், இது திருவொற்றியூர் நகராளும் இறைவன் றிருவருளேயாகும் என்று தெரிந்து, அங்குப் பெருஞ் சிறப்புக்கள் செய்து, முதுமையினது வருத்தங்கள் நீங்கிப், பின்னரும் நெடுநாள் வாழ்ந்து, உய்தியு மடைந்தனன் என்பதாம்.

மருட்கொடுந் தொழில் - மயக்கத்தினாற் செய்த கொடிய தொழிலாவது முன் கூறிய வரலாற்றின்படி, உண்மை ஞானமில்லாத துற்சனவர் சொல்லே கேட்டுச் சிவாலயப் படித்தரத்தைக் குறைத்தலாம்.

இறக்கிய வரியை முன் நெருக்கி எழுதும் என்க. "எல்லாச் சிவாலயங்களிலும் குறைக்க" என்று தொடங்கிய ஏட்டுவரியின் முதலில் வரிப்பிளந்து, "திருவொற்றி நகர் நீங்கலாக - எல்லாச் சிவாலயங்களிலும்" என்று நெருக்கித் திருத்தி எழுதிய என்பதாம். இறக்கிய - குறைத்தெழுதிய. வரி - ஏட்டுவரி. இறக்குதல் - குறைத்தல். இறக்கிய - சுமத்திய என்றும், வரி - இறைப்பொருள் என்று முரைகூறுவாருமுளர். அது தவறென்க. ஒருத்தர் - ஒற்றிநகர்ப் படம்பக்கநாதர். ஒருவரே பதி என்று வேதாகமங்களுள் எடுத்துச் சொல்லப்பட்ட முழுமுதற் கடவுள். "ஒன்றென்ற தொன்றே காண் ஒன்றேபதி" என்பது ஞானசாத்திரம். ஒருத்தர் - தனக்குவமையில்லாதவர் - ஒப்பற்றவர் என்றலுமாம்.

முன் கூறிய இவ்வரலாற்றை "ஏட்டு வரியில் ஒற்றிநகர் நீங்க லென்னு மெழுத்தறியு, நாட்ட மலருந் திருநுதலார்" (ஏயர்கோன் - புரா - 204) என்று பின்னரும் விதந்து பாராட்டியும், இதுபற்றியே திருவொற்றிநகர் நாதருக்கு எழுத்தறியும் பெருமான் எனப் போந்த திருப்பெயரினை, "எழுதாத மறையளித்த எழுத்தறியும் பெரு

மானே" (திருஞா - புரா - 335) என்று போற்றியும் ஆசிரியர் காட்டியருளிய திறமும் காண்க.

**கடல்வரைப்பு கோயிலின்** ஒருபுறம் சூழ்ந்த திருப்பரப்பை உடையது என்றது அத்திருக்கோயிலின் ஒருபுறமாகக் கிழக்கே முன்பக்கத்திற் சூழ்ந்த பரந்த இடம் கடற்கரையாகும் என்றதாம். வரைப்பு - இடம்.

ஒற்றியூர் - உபமன்னியு மாமுனிவரிடம் சிவதீக்கை பெற்றுப் பூசித்த வாசுகியைத் தமது திருவுருவிற் சேர்த்தி அமர்த்திக்கொண்டு அந்த அடையாளங்களுடன் இன்றும் விளங்க வீற்றிருப்பதனால் சுவாமிக்குப் படம்பக்கநாதர் என்று பெயர் வழங்கும்.

திருவருளால் **ஆளுடையநம்பிகள்** சங்கிலியம்மையாரை மணந்துகொண்டருளிய தலம். சைவசமய பரமாசாரியர்களாகிய பெருமக்கள் **ழவர்** முதலிகளுடைய தேவாரமும் பெற்ற சிறப்புடையது. திருவாரூரும் - காஞ்சிபுரமும்போலவே இத் திருவொற்றியூரும் சிவனருள் சிறந்த பெருந்தலமாமென்பது ஆளுடையநம்பிகளது சரிதத்தால் விளக்கப்படும் பெருமையுடையது. "புவியுட் சிவலோ கம்போலத் திங்கண் முடியா ளளித்ததிரு வொற்றியூர்" என்று போற்றப்படும் சிறப்புடையது. அறுபான்மும்மை அடியார் திருக்கூட்டத்தினுள் கலியநாயனார் அவதரித்துத் திருவிளக்குப் பணிசெய்து அருள் பெற்றதலம்.

**பட்டினத்தடிகள்** இங்குப் பலநாள் தங்கிப் பேறுபெற்றுக் கடற்கரையில் திருக்கோயிலுக்கு வடகீழ்ப்பக்கத்தில் சிவயோகத்தமர்ந்து சிவலிங்க உருவமாய் இன்றும் விளங்க வீற்றிருந்தருளும் பெருஞ்சிறப்புடையது. பதினொராந் திருமுறையில் தொகுக்கப்பட்ட "திருவொற்றியூர் ஒருபா வொருபஃது" என்ற நூலினும் பட்டினத் தடிகள் அருளிச்செய்தருளிய தலம்.

திருவொற்றியூர் நிலயத்திலிருந்து கிழக்கே கற்சாலை வழியில் $\frac{1}{8}$ நாழிகையளவில் உள்ளது. சென்னையிலிருந்து வடக்கே கற்சாலை வழி 5 நாழிகையளவில் உள்ளது.

கடல்வைப்பு—என்பதும் பாடம். 39

1117. மெய்த நும்புகழ்த் திருமயி லாபுரி விரைசூழ்
திருமயிலை - மொய்த யங்குதண் பொழிற்றிரு வான்மியூர் முதலாப்
திருவான்மி பைத ரும்பணி யணிந்தவர் பதியெனைப் பலவால்;
யூர் நெய்த லேய்தமுன் செய்தவந் நிறைதவஞ் சிறிதோ? சஂ

(இ - ள்) வெளிப்படை. உண்மையை நிலைநாட்டித்தரும் புகழினையுடைய திருமயிலாபுரியும், மணம் சூழ்கின்ற மலர்கள் நெருங்கிய குளிர்ந்த சோலைகள் குழ்ந்த திருவான்மியூரும், முதலாகப், பைபொருந்திய பாம்பினை அணியாக அணிந்த சிவபெருமான் வீற்றிருக்கும் திருத்தலங்கள் இன்னும் பல அங்குள்ளன; இவற்றையெல்லாம் தன்னிடத்திற் பொருந்தப் பெறுதற்கு அந்நெய்தனிலமானது செய்த அந்த நிறை தவம் சிறிதாமோ? (ஆகாது).

(வி - ரை) மெய்தநும்புகழ் - மெய் - உண்மை. "மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்" ஆவன, அரன் வழிபாடும் அடியார் பூசையுமேயாம் என்ற உண்மை. தருதல் - இவையே உண்மை என்றதனை நிலைநாட்டிக் காட்டித்தருதல். "உண்மையாமெனில் உலகர் முன்வருக" என நிலையிட்டு உரைத்ததற்கேற்ப எலும்பே பெண்ணாக வந்த சரிதம் இத்தலத்தின் பெருமை குறிப்பதாம் என்பது கருத்து. மெய் - உடம்பு என்று கொண்டு, எலும்பினையே உடம்பாகக் கண்டு ஆக்கி உயிரையும் உட்புகப் பொருத்திக் கொடுத்த புகழ் என்று விசேடமுரைப்பாருமுண்டு.

மோய் - அலரும் பருவத்து அரும்புகள். தயங்குதல் - மிகுந்து விளங்குதல்.

பை தரும் பணி - பணி - பாம்பு. பாம்பு நச்சுப்பையினையுடைய தென்றதாம். "பையஞ் சுடர்விடு நாகம்" (ஆரூர்) என்றது அப்பர்சுவாமிகளது திருவாக்கும். பணி - பணத்தையுடையது; பணம் - படம்.

எனைப்பல - இன்னும் பல. பல - பலவுள்ளன. உள்ளன என்ற பயனிலை வருவிக்க. எய்த - அத்தலங்கள் தன்னகத்தே பொருந்தியிருக்க.

அந்நிறைதவம் - அ - சிறந்த தலங்களைத் தன்னிடம் பொருந்தப் பெற்ற அளவுக்கு அந்த எனப் பண்டறிசுட்டு.

நிறைதவம் - கருதியபேறு தவத்தால் நிறைவாக்கப் பெறுதலின் நிறை என்றார். நிறை - நிறைவு செய்யும்.

சிறிதோ? - ஓகார வினு எதிர்மறை குறித்தது. சிறிதன்று என்க.

மயிலாபுரி - இத்தொண்டை நாட்டு 24-வது தலம். இது மயிலாப்பு - எனவும் மயிலை எனவும் வழங்கும். "மயிலாப்பிலுள்ளார்", "புன்னையங் கானன் மடமயிலை" என்ற தேவார ஆட்சிகள் காண்க. அம்மையார் மயிலுருவாகிப் புன்னையின்கீழ் இறைவனைப் பூசித்த காரணம்பற்றி இப்பெயர் பெற்றது. புன்னை மரமும் அதன்கீழ் அம்மையார் மயிலுருவுடன் பூசித்த திருவுருவமும் இன்றும் காணப்பெறுவன. இராமர் பூசித்துப் பேறுபெற்று ஐப்பசி ஓணத்தில் திருவிழாக் கொண்டாடினர் என்றது தலபுராணம். "ஐப்பசி ஓண விழாவும்" (2) என்ற ஆளுடைய பிள்ளையாரது இத்தலத் தேவாரங் காண்க. ஆளுடையபிள்ளையார் (பூம்பாவையாரது) எலும்பைப் பெண்ணுக்கித் தந்த சிறப்புடையது. அவர்தம் புராணம் 1034 முதல் 1120 வரை திருப்பாட்டுக்கள் பார்க்க. இவ்விழா பிரமோற்சவத்தில் 8-ம் திருநாளில் இன்றும் கொண்டாடப் பெறுகின்றது. இத்திருவுருவங்கள் கோயிலினுள் மேலைக் கோபுரவாயிலுக்கு வடபுறம் உள்ளன. அறுபான்மும்மை நாயன்மார்களுள் வாயிலார்நாயனார் அருள் பெற்றதலம். இவர் கோயில் அம்மையாரின் கோயிலுக்கு எதிரில் தென்புறம் திருமதிலை யடுத்து உள்ளது. திருக்குறள் பாடியருளிய திருவள்ளுவர் அவதரித்துப் பேறுபெற்ற தலம். மேற்குமுகமான சந்நிதி. சுவாமிபெயர் கபாலீசர் என்பது திருப்பதிகத்துக் காண்க. சென்னைக்குத் தெற்கே கற்சாலை வழி 4 நாழிகையளவில் அடையத்தக்கது.

திருவான்மியூர் - தொண்டை நாட்டின் 25-வது தலம். இதுவும் மேற்குமுகமான சந்நிதி. வான்மீக மகாமுனிவருக்கு அருளிய காரணத்தால் இப்பெயர் பெற்றது. தேவர்கள் கடல் கடைந்து பெற்ற அமுதத்தாற் சிவலிங்கத்தாபித்துப் பூசித்ததனால் சுவாமி மருந்தீசர் என வழங்கப்பெறுவர். "சென்றூர் தம்மிடர்தீர் திருவான்மியூர்" (ஆளுடைய பிள்ளையார் - கௌசிகம் 11), "வாதை தீர்த்திடும் வான்மியூ ரீசனே" (8) "வாட்டந் தீர்த்திடும்" (9) (அப்பர் சுவாமிகள் குறுந்தொகை) என்ற தேவாரங்களும், "திருவான்மியூர் மருந்தைச் சேர்ந்து" (திருநா - புரா - 331), "பிறவி மருந்தான பெருந்தகை" (திருஞான - புரா - 1124) என்ற மாபுராணத் திருவாக்குக்களும் காண்க. அப்பர் சுவாமிகள் திருக்கழுக்குன்றத்தினின்றும் போந்து இங்கு வந்து தரிசித்துத் திருமயிலாபுரி திருவொற்றியூர் சென்றருளினர். ஆளுடைய பிள்ளையார் திருவொற்றியூரினின்றும் இங்குப் போந்தருளினர். சுவாமியின் மூலலிங்கத் திருவுருவம் பால் வெண்ணீற்றின் வரிகளையுடைய சுயம்பு. சுவாமிபெயர் பால்வண்ணநாதர்.

இது திருமயிலாபுரியினின்றும் தென்கிழக்கில் கற்சாலையில் 4 நாழிகையளவில் அடையத்தக்கது. போக்கு வரவு வசதிகளும் மோட்டார் பஸ் முதலியனவும் உண்டு. 40

**திணை மயக்கம் :**

**(1) நெய்தலும் குறிஞ்சியும் (மயங்கியது).**

1118. கோடு கொண்டெழுந் திரைக்கடற் பவளமென் கொழுந்து
மாடு மொய்வரைச் சந்தனச் சினைமிசை வளரும்
நீடு நெய்தலுங் குறிஞ்சியும் புணர்நிலம் பலவால்
ஆடு நீள்கொடி மாடமா மல்லையே யனைய. சக

(இ - ள்) கோடு...நிலம் - சங்குகளைத் தம்மிடத்துக்கொண்டு மேற் கிளம்புகின்ற அலைகளையுடைய கடலிற் படர்கின்ற பவளக்கொடியின் மெல்லிய கொழுந்துகள் பக்கத்தில் நெருங்கிய சந்தன மரங்களின் கிளைகளில் வளர்தற் கிடமாகிய நீடிய நெய்தலும் குறிஞ்சியும் கூடிய திணைமயங்கும் புணர்நிலங்களும்; ஆடும் நீள்கொடி... அனைய - ஆடுகின்ற நீண்ட கொடிகளையுடைய மாடங்கள் விளங்கும் மாமல்லை நகரம் போன்றவை; பல - பலவாம். (ஆல் - அசை).

(வி - ரை) குறிஞ்சி - பாலை - முல்லை - மருதம் - நெய்தல் என்ற ஐந்திணைகளையும் அவ்வவற்றுக்குரிய முதற்பொருள் கருப்பொருள்களுடன் முறையே அவ்வவற்றில் விளங்கும் சிவ தலங்களின் சிறப்புடன் சார்த்திக் கூறிவந்த ஆசிரியர், இனி அம் முறையே அவை ஒன்றோடொன்று கூடிய புணர்நிலங்களை வகுத்து நாட்டுவளம் கூறத் தொடங்குகின்றார். திணைகள் கூடிய நிலங்களின் ஒழுக்கத்தைத் திணைமயக்கம் என்பது மரபு. மயங்குதல் - கூடுதல் - கலத்தல் - என்ற பொருளில்வந்தது. இவ்வாறு புணர்நிலங்கள், குறிஞ்சியினுடன் நெய்தல் - மருதம் - முல்லை என்பன முறையே தனித்தனி கூடுவதனால் மூன்றும், அவற்றை அடுத்து முல்லையினுடன் நெய்தலும் - மருதமும் அவ்வாறே கூடுவதனால் இரண்டும், மருதத்துடன் நெய்தல் கூடுவதனால் ஒன்றும் ஆக ஆறு வகைப்படும்.*

அவற்றுள் முதற்கண், நெய்தலுங் குறிஞ்சியுங் கூடிய திணைமயக்கத்தினை இப்பாட்டாற் கூறுகின்றார். இவ்வாறே ஏனைய புணர்நிலம் ஐந்தினையும் அம்முறையே மேல்வரும் ஐந்து பாட்டுக்களாற் கூறும் அமைதி கண்டுகொள்க.

**கோடுகொண்டு எழும்திரை-கோடு** - சங்கு. "கோடுவாய் வைத்து" (திருமுருகு). அலைகள் சுருண்டு மேற்கிளம்பும்போது, நீரின் கீழிருந்த சங்குகளை வாரிக்கொண்டு உயர்கின்றன என்க.

**கடற்பவள மென்கொழுந்து** - கடலில் விளையும் பவளக்கொடியின் கொழுந்து. பவளங்கள் கொடிபோலப் படர்வன. இவை, கொடி படர்வனபோலப் பவளப்பூச்சி என்னும் ஒருவகைப் பூச்சிகளால் தொடர்ந்து கட்டப்படுவதனைக் கொடிபோல்வன.

**பவளக்கொழுந்து சந்தனச் சினைமிசை வளரும்** என்றது சந்தன மரக்கிளைகளைப் பற்றுக்கோடாக வைத்துக் கொடிபோலப் பவளப்பூச்சிகள் பவளக் கூடுகட்டிச் செல்லும் இயல்பு குறித்தது.

**வரைச் சந்தனச்சினை** - சந்தனம் குறிஞ்சி நிலத்தின் கருப்பொருளாகிய மரம். "சந்தமா ரகிலொடு" என்ற திருக்காளத்தித் தேவாரமும் காண்க.

**நெய்தலும் குறிஞ்சியும் புணர் நிலம்** - நெய்தற் கருப்பொருளாகிய பவளம் குறிஞ்சிப் பொருளாகிய சந்தனத்தின்மேல் வளர்வதனால் அம்முறையிற் கூறினர்.

---

* கால வேறுபாட்டால் முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்த பாலை எனப்பட்டது வேறு. (1092 பார்க்க.)

(மலை)மேலதாகிய குறிஞ்சியினின்றும் போந்து (கடல்)கீழதாகிய நெய்தல்வரை அம்முறை கீழிறங்கி நிலவளம் வகுத்துவந்த ஆசிரியர், இனிப் புணர்நிலங்களே வகுக்கும்போது கீழிருந்து மேலே செல்லும் முறைபற்றி நெய்தலும் குறிஞ்சியும் என அம்முறையிற் றொடங்கிக் கூறுகின்றார். பிறவும் இவ்வாறே கண்டுகொள்க.

புணர் நிலம் - இரண்டுநிலப் பொருளும் கூடி மயங்கிய நிலப்பகுதி. இப் பாட்டிற் குறிக்கப்பட்டன கடற்கரையைச் சார்ந்திருக்கும் மலைப்பகுதிகள். இவ்வாறு மயங்கிவருவதனை "எங்கில மருங்கிற் பூவும் புள்ளும், அங்கிலம் பொழுதொடு வாரா வாயினும், வந்த நிலத்தின் பயத்த வாகும்" (அகத் - 19) என்று விதி கூறி அமைவு படுத்தினர் தொல்காப்பியர்.

மாமல்லையே அனைய - புணர்நிலம் - பல என்று கூட்டுக. இது "கடன்மல்ல புரம்" எனவும், மாமல்லபுரம் எனவும் வழங்கும். மாமல்லபுரம் என்பது மாவலிபுரம் என்றும், மல்லை என்றும் மருவியதுபோலும். மாவலிபால் மண்ணிரந்து அவனைச் சங்கரித்த திருமாலிருந்த தலமாதலின் வைணவர்களும் இதனைத் தங்களுடைய பெருந் தலங்களுள் ஒன்றாகக் கொண்டாடுகின்றனர். "பிணங்க ளிடுகாட்டிற் பிஞ்ஞகனெடு...கடன்மல்லை" என்பது திருவாய்மொழி. இங்குள்ள திருமால் மாவலி மீண்டன் என்று வழங்கப்படுவர். இது வாமனனவதார நிகழ்ச்சியின்பின் திருமால் சிவபூசை செய்த தலம் என்பர். இங்குச் சந்தனமரத்தினாற் சமைக்கப்பட்ட கருப்பக்கிருக மண்டபத்தில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளமை "சந்தனச் சினைமிசைப் பவளமென் கொழுந்து வளரும்" என்றதன் உண்மையை விளக்கி நிற்றல் குறிக்கத் தக்கது.

இங்குள்ள கோயில்களும், சிவாலயத்திற்குரிய ஐந்து தேர்களும் (இவற்றைப் பஞ்சபாண்டவர் தேர் என்பது சாமானிய வழக்கு) மலைப்பக்கமுள்ள ஒவ்வோர் கற்களில் குடைந்து எடுக்கப்பட்டன. சென்னைப் பிரதேசத்தில் ஆலயத் திருப்பணிகளுக்கு வரும் கற்கள் இங்கிருந்தே எடுக்கப்படுவன. இது கடற்கரையில் உள்ள மலையாதலின் நெய்தலும் குறிஞ்சியும் புணர்நிலம் என்றார். பல என்றதனால் இத்தகைய புணர்நிலங்கள் தொண்டைநாட்டுக் கடற்கரையில் பலவாம் என்பதும் குறிக்கப்பட்டது.

மல்லை - இத்தலம் திருக்கழுக்குன்றத்திலிருந்து கிழக்கே கற்சாலைவழி 9 நாழிகையளவில் உள்ளது. திருக்கழுக்குன்றத்திற்கு வழி 1091-ன் கீழ்ப் பார்க்க. 41

## (2) மருதமும் குறிஞ்சியும்.

1119. மலைவி ழிப்பன வெனவயற் சேல்வரைப் பாறைத்
தலையு கைப்பவுந், தளைச்செறு விடைநெடுங் கருமான்
கலைகு திப்பன கரும்பகட் டோங்கிகர்ப் பவுமாய்
அலைபு னற்பணை குறிஞ்சியோ டணைவன வனேகம். சஉ

(இ - ள்) வெளிப்படை. மலைகள் கண்ணைத் திறந்துபார்க்கின்றன என்று சொல்லத்தக்கதாய், வயல்களினுள்ள சேல்மீன்கள் மலைகளின் பாறைகளிடத்துப் பாய்ந்து புரள்வனவும், வரம்புகளையுடைய வயல்களினிடையே, எரிற்பூட்டிய கரிய எருமைகள் போகின்றன என்று சொல்லும்படி கருமான் கலைகள் குதித்துப் போவனவும் ஆகி, அலைகள் பொருந்திய நீரினையுடைய வயல்கள், குறிஞ்சி நிலப்பகுதியுடன் கூடிய இடங்கள் அனேகம் உள்ளன.

(வி - ரை) மலைவிழிப்பன என - மலைப்பாறைகளில் அடித்துள்ள வயலிலிருந்த சேல் மீன்கள் பாய்ந்து புரளுதல் அந்த மலைகள் கண்ணைத் திறந்து பார்ப்பனபோல இருந்தன என்பது. சேல் - மருதநிலக்கருப்பொருள். வரைப்பாறை - குறிஞ்சி. பாறைகளில் சேல்கள் பாய்ந்து புரளத்தக்கதாய் வயல்களும் மலைப்பாறைகளும் அடித்தடித்துக் கூடிய நிலமாதலின் பணை குறிஞ்சியோடு அணைவன என்றார்.

தளை - வரம்பு. செறு - வயல். இவைமருத நிலப்பகுதி. செறு - என்பது அறுவா நாட்டு வழக்கு. "செறுவி னிற்செழுங் கமல மோங்கு" (நம்பிகள் - திருப்புகலூர் - 11), "செறுவிற் பூத்த சேயிதழ்த் தாமரை" (புறநா - 397). நெடும் கருமான்கலை - கருமான் - குறிஞ்சிக்கருப்பொருள். மான் - முல்லைக் கருப்பொருளாயினும், கருமான் குறிஞ்சிக் கருப்பொருளாம் என்பது இராமநாதச் செட்டியார் குறிப்புரை.

பகட்டு ஏர் நிகர்ப்ப - பருமையாலும், கரியநிறத்தினாலும், தடித்து மீண்ட கொம்பினாலும் கருமான்கலை எருமையை நிகர்த்தது என்க. மெய்யும் உருவும்பற்றி வந்த உவமம். சேல்மீன் விழிபோன்றது என்றது மெய்பற்றி வந்த உவமம். பகடு - மருதக் கருப்பொருள். பகட்டோர் செலுத்திச் செறுவினிற் றொழில்செய்தல் மருதநிலச் செய்தி. "பெரும்பகட்டோர் இனப்பண்ணை யுழும்பண்ணை" (திருநா - புரா - 3).

தளைச் செறுவிடை ஏர்க் கரும்பகடு எனக் - கருமான் கலை குதிப்பனவுமாய் - என்று கூட்டிப் பொருள் கொள்க.

அனேகம் - தொண்டை நாட்டில் மலையும் வயலுமாக அடித்திருக்கக் காணும் இடங்கள் எண்ணிறந்தன என்பது.

இதனால் மருதம் குறிஞ்சியுடனும், குறிஞ்சி மருதத்துடனும் புணர்ந்த புணர் நிலன் கூறப்பட்டது. 42

## (3) முல்லையும் குறிஞ்சியும்.

1120. புணர்ந்த வானிரைப் புறவிடைக் குறுமுயல், பொருப்பின்
அணைந்த வான்மதி முயலினை யினமென வணைந்து
மணங்கொள் கொல்லையின் வரகுபோர் மஞ்சன வரைக்கார்
இணைந்து முல்லையுங் குறிஞ்சியுங் கலப்பன வெங்கும். சஙக

(இ - ள்) வெளிப்படை. பசுக்கூட்டங்களையுடைய முல்லைப் புறவிலிருந்த குறுமுயல் மலையுச்சியிற் சேர்ந்த முழுமதியினிடத்திருந்த முயற்கறையை நோக்கி அது தனது இனமாகிய முயல் என்று கருதி அங்கு அணைவதனாலும், மணம் பொருந்திய முல்லை நிலத்திலிருக்கும் வரகுபோர்களை, மலைகளை மஞ்சனஞ்செய்யும் நீரையுடைய மேகங்கள் சேர்வதனாலும், முல்லையும் குறிஞ்சியும் கலப்பனவாகிய புணர் நிலங்கள் எங்கும் உள்ளன.

(வி - ரை) ஆனிரை - குறுமுயல் - முல்லைநிலக் கருப்பொருள்கள்.

குறுமுயல் பொருப்பின் அணைந்தும் என்க. முல்லையினின்றும் முயல் மலை மேல் ஏறியபடியால் முல்லையும் குறிஞ்சியும் கலந்தது என்பதாம்.

மதி முயலினை இனம் என அணைந்து என்பது தற்குறிப்பேற்றம்.

கொல்லை - முல்லை நிலம். மணங்கொள் என்றது முல்லை நிலத்தின் நிறைந்த முல்லை முதலிய பூக்களிற்கூடிய மணங்குறித்தது. வரகு - முல்லைக் கருப்பொருள்; முல்லைக் காடுகளில் விளைபொருள். வரகு போர் - கார் இணைந்தும் என்றது வரகு போர்களை மிக உயரமாகக் குவித்தலும் அடுக்குதலும் குறித்தது. வரகுபோர் - "ஒற்றிடை யினமிகா மொழியுமா ருளவே, அத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே" (தொல் - எழுத் - குற் - 7) என்றபடி வல்லொற்றுமிகாது வந்தது.

வரை மஞ்சனக்காரி என்க. மலையை மஞ்சனம் செய்யும் நீரையுடைய மேகம். மேகம் குறிஞ்சிக்குரியது. மலைகளை மஞ்சனம் செய்யும் கார் என்ற பொருட் பொருத்தமும் காண்க. "பூட்டு கார்முகந் தன்னெடுந் தோன்றிய புயல்வா, பூட்டு தண் புன னன்றியங் கிரிமிசை யுருத்தல், வேட்டு வக்குலத் திண்ணனூர் மஞ்சனம் விமலற், காட்டு கின்றதோர் தனிச்செயல் போன்றுள தன்றே" (ஆற்றுப்படலம் - 6) என்ற கந்தபுராணமும், "அடித்தருண கிரியானே யுனக்குவிண்ணீ ரலதுபுன லாட்டு வாரார்" (திருமலைச்சருக்கம் - 83) என்ற அருணசல புராணமும் இக்கருத்தைத் தழுவியன வாதல் காண்க.

மலையில் தவழும் மேகம், மலையை அடித்து வரரு போரும் மலைபோன்றுயர்ந் திருத்தலின் அதனில் இணைந்தது என்றதனால் குறிஞ்சியும் முல்லையும் கலந்துகாண்க. "ஈடு பெருக்கிய போர்களின் மேக மிளைத்தேற" (926) என்றதும் நினைவுகூர்க.

அணைந்தும் - இணைந்தும் - கலப்ப - என்க.

மஞ்சென—என்பதும் பாடம். 43

## (4) நெய்தலும் முல்லையும்.

1121. கவரு மீன்குவை கழியவர் கானவர்க் களித்துச்
சிவலுஞ் சேவலும் மாறியுஞ், சிறுகழிச் சியர்க
ளவரை யேனலுக் கெயிற்றியர் பவளமுத் தளந்து
மூவரி நெய்தலுங் கானமுங் கலந்துள வொழுக்கம். சச

(இ - ள்) வெளிப்படை. பரதவர்கள், தாங்கள் கவரும் மீன் குவியல்களை இடையர்களுக்குக் கொடுத்துப் பண்டமாற்று வகையால் அவர்களிடமிருந்து கவுதாரியையும் சேவலையும் கொள்வதாலும், நெய்தனிலச் சிறுமியர்கள் தாம் இடைச்சியர்பாற் கொள்ளும் அவரைக்கும் தினைக்கும் ஈடாகப் பவளத்தையும் முத்துக்களையும் அளந்து கொடுத்தலினாலும். கடலைச்சார்ந்த நெய்தனிலமும் முல்லை நிலமும் என்ற இரண்டும் ஒழுக்கத்தாற் கலந்துள்ளன.

(வி - ரை) மீன்குவை - நெய்தற்பொருள். கழியவர் - கழியருகிலும் கடலருகிலும் வாழ்பவர் - பரதவர். கானவர் - இடனோக்கிக் காடுறைபவர்களாகிய இடையர்களைக் குறித்தது. கழிச்சியர் - நெய்தனிலப் பெண்கள். சிவல் - கவுதாரி. சிவல் - சேவல் - இவை முல்லைநிலக் கருப்பொருள். சேவல் - கானங்கோழி.

எயிற்றியரின் அவரை ஏனலுக்கு என்க. அவரையும் ஏனல்லும் முல்லைப்பொருள்களும், பவளமும் முத்தும் நெய்தனிலப் பொருள்களுமாம். முத்துக்கள் ஏனைக் குறிஞ்சியிலும் மருதத்தினும் சிறுபான்மை படுமாயினும் பெரும்பான்மைபற்றி நெய்தலுக்கே உரியன.

உவரி - கடல். உவர்ப்புள்ள நீர் கொண்டதனால் இப்பெயர் கொண்டது. கானம் - காடு ; முல்லைப்பகுதி. இப்பாட்டால் முல்லை குறிஞ்சிகளின் செய்திபற்றிய கலப்புக்கூறுதலின் கலந்துள ஒழுக்கம் என்றார் என்பாருமுண்டு.

முன்பாட்டில் முல்லையும் குறிஞ்சியும் புணர்நிலத்தினை அங்கிலப் பொருள்கள் இயற்கையிற்கூடும் சேர்க்கைபற்றிக் கூறினர். இப்பாட்டில் நெய்தலும் கானலும் சேர்வதனை வாணிகமுறைப் பண்டமாற்றுவகையால் அங்கிலப்பொருள்கள் கலக்கும் சேர்க்கைபற்றிக் கூறினர்.

மீன் கொடுத்துச் சிவலும் சேவலும் கொள்ளுதல் இருதிறத்தும் ஆண்பாலார் தொழிலும், பவளமும்முத்தும் கொடுத்து அவரையும் ஏனலும் கொள்ளுதல் பெண்

பாலார் (சிறுமியர்) தொழிலும் ஆவன எனக் காட்டிய நயமும் கண்டுகொள்க. 1113, 1114ல் உரைத்தவையும் பார்க்க. 44

## (5) மருதமும் முல்லையும்

1122. அயன றும்புற வினிலிடைச் சியரணி நடையும்
வியனெ டும்பணை யுழத்தியர் சாயலும் விரும்பி
யியலு மன்னமுங் தோகையு மெதிரெதிர் பயில
வயலு முல்லையு மியைவன பலவுள மருங்கு. சரு

(இ - ள்) வெளிப்படை. ஒன்றனையொன்று அடுத்துள்ள, மணங்கமழும் முல்லைப் புறவில் வாழும் இடைச்சியர்களது அழகிய நடையினையும், அகன்ற நெடிய வயல் களையுடைய மருதநிலத்தில் வாழும் உழத்தியர்களது சாயலையும் விரும்பி இயங்கு கின்ற அன்னமும் (மருதம்), மயிலும் (முல்லை) எதிர் எதிர் பயில்வதனால் மருதமும் முல்லையும் கூடுவனவாகிய பல நிலங்கள் அந்தப்பக்கங்களில் உள்ளன.

(வி - ரை) அயல் - அடுத்துள்ள. நறும்புறவு - நறுமை மணம். இதுபற்றி முன் உரைத்தவை பார்க்க. புறவு - இடங்கோக்கி முல்லைப்புறவினைக் குறித்தது.

இடைச்சியர் - முல்லை நிலமகளிர். உழத்தியர் - மருதநிலமகளிர். அன்னம் - மருதத்துக்குரியது. தோகை குறிஞ்சிப் பொருளாயினும் சிறுபான்மை முல்லைக்கும் வரும். "முல்லைக் குரியபுள் கானங் கோழியும் மயிலும் சிவலும்" (இறைய - 1 - உரை). அன்னம் சிறுபான்மை நெய்தலுக்கும் உரியது. "அன்னந் தாய முன்றுறைச் சூழல்" (1114) என்றது காண்க.

அன்னமும் தோகையும் எதிர் எதிர் பயிலுதலாவது - இடைச்சியரது நடையை விரும்பி அன்னமும், உழத்தியரது சாயலை விரும்பி மயிலும் முறையே மருதநிலத்தி லிருந்து முல்லைநிலத்துக்கும் முல்லைநிலத்திலிருந்து மருதத்துக்கும் பயிலுதலின், ஒன்றனையொன்று எதிர் எதிர் சந்திப்பன என்பது கருத்து. பயிலுதல் - அவர்களுக் கெதிரில் நடந்து பழகுதல் என்று கொள்ளலுமாம்.

வயல் - மருதம். விரும்பி எதிரெதிர் பயில - தற்குறிப்பேற்றம். 45

## (6) நெய்தலும் மருதமும்.

1123. மீளு மோதமுன் கொழித்தவெண் டரளமுங் கழுகின்
பாளை யுக்கவும் விரவலிற் பரத்தியர் பணைமென்
றோளு ழத்தியர் மகளிர்மா முடிமுன் றொருக்கு
நீளு நெய்தலு மருதமுங் கலந்துள நிலங்கள். சசு

(இ - ள்) வெளிப்படை. (அலைகள் முன்புரண்டுவந்து பின்) மீளும் கடலினால் முன்னே கொழிக்கப்பட்ட வெள்ளிய முத்துக்களும் கழுகினது உதிர்ந்த பாளையினின் றும் உதிர்ந்த பூக்களும் கலந்து சேர்வதனால், பரத்தியர்களும், பணைத்தெழுந்த மூங்கில்போன்றுயர்ந்த மெல்லிய தோள்களையுடைய உழத்தியர்களும், மாறுபட்டு அவற்றை முன்வாரிச் சேர்க்கின்ற நீண்ட நெய்தலும் மருதமுமாகிய நிலங்கள் கலந் துள்ளன.

(வி - ரை) மீளும் ஓதம் - கடலின் அலைகள் புரண்டு அலைத்து முன்கரையில் வந்து பரவிப் பின் மீளும் இயல்பு குறித்தது. முன்வரும்போது முத்துக்களை வாரி

வந்த அலைகள் அவற்றைக் கரையில் இட்டு மீண்டன. முத்துக்கள் கனமுடையமையால் பின் செல்லும் அலைநீருடன் மீளாது நிலத்தில் உதிர்க்கப்பட்டுத் தங்கின என்பதனைக் கொழித்த வெண்டாளம் என்றார்.

கழகின் பாளை உக்கவும் - நெய்தனிலத்தின் அருகே உள்ள மருதநிலத்திற் கமுகுகள் இருந்தனவாக அவற்றின் பாளைகளினின்றும் உதிர்ந்த பூக்கள் கீழே சிந்தியிருந்தனவும்.

தாளமும் - பாளை உக்கவும் - மாறடி முன் தொகுக்கும் - முத்துக்களும் கமுகம் பாளையின் உதிர்ந்த பூக்களும் ஒன்றுபோல விளங்குதலின் முறையே இவற்றைப் பிரித்தறிந்து தொகுக்க இயலாது, நெய்தல் மகளிரும் பண்ணை மகளிரும் அவற்றை எமது எமது என்று மாறுபட்டுத் தொழில் செய்தனர் என்று குறிக்க மாறடி என்றார். கமுகு பூக்கும்போது முத்துப்போல் விளங்குமென்பதுபற்றி, "எண்ணூர் முத்த மீன்று மரகதம் போற்காய்த்துக், கண்ணூர் கமுகு பவளம் பழுக்குங் கலிக்காழி" (குறிஞ்சி - 4) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரமும் காண்க. மாறடி - "மயிற்குலமு முகிற் குலமு மாருட மருங்காடும்" (திருநா - புரா 10) என்றது காண்க.

தாளம் - நெய்தலுக்கும், கழகு - மருதத்துக்கும் உரிய கருப்பொருள்கள். பரத்தியர் - உழத்தியர் - என்பன முறையே நெய்தனிலத்தும், மருதநிலத்தும் உள்ள மகளிர் பெயர்.

ஓதமங் கொழித்த—என்பதும் பாடம். 46

1124. ஆய நானிலத் தமைதியிற் றத்தமக் கடுத்த
மேய செய்தொழில் வேறுபல் குலங்களின் விளங்கித்,
தீய வென்பன கனவிலு நினைவிலாச் சிந்தைத்
தூய மாந்தர்வாழ் தொண்டைநாட் டியல்புசொல் வரைத்தோ ? சை

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறுகிய குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்ற நான்குவகைப்பட்ட நிலங்களிலும் அமைதிகளிலும், தங்கள் தங்களுக்குப் பொருந்திய செய்தொழிலாற் பலவாகிய வேறு குலங்களினுல் விளங்கித், தீயவை எனப்படுகின்ற வற்றைக் கனவிலும் நினையாத மனத்தையுடைய தூய மக்கள் வாழ்கின்ற தொண்டை நாட்டின தியல்பு (எமது) சொல்லினளவில் அடங்குவதாகுமோ ? (அடங்காது).

(வி - ரை) ஆய - மேலே சொல்லப்பட்டனவாகிய. நன்மையாகிய என்ற குறிப்புமாம். நானிலத்தில் - அமைதியில் என்று கூட்டுக. மேற்காட்டியபடி நிலம் நான்குவகையும் புணர்நிலம் ஆறுவகையும் ஆகப் பத்துவகைகளிலும் என்க.

தத்தமக்கு...விளங்கி - அடுத்த மேய செய்தொழில் - நூல்களானும் ஆன்றோராசாரத்தானும் அவ்வவர்க்கும் அடுத்ததென்று விதிக்கப்பட்டுப் பொருந்திய செய்தொழில்கள். இவை சிவாகம முதலியவற்றாலும் தமிழிலக்கணத்தானும் அறியப்படும் செய்தொழிலைச் செய்தி என்ற பெயராற் றொல்காப்பியம் கூறும்.

வேறுபல் - வெவ்வேறுகிய பல. குலங்கள் - தொன்றுதொட்டுவரும் மரபுகள் - குடிகள்.

செய்தொழில் - செய்தற்குரிய தொழில் - குலங்கள் என்றது ஈண்டுச்சாதியை. மேய - பொருந்திய. குலங்களுக்குத் தொழிற் பொருத்தம் கூறப்பட்டுள்ளது. மேவாதனவாகிய தொழில்களைச் செய்தல் குலநலமன்று என்பது முன்னோர் துணிபு. "குலவித்தை கல்லாமற் பாகம்படும்", "அரிசி விற்றிடு மந்தணர்க் கோர்மழை... வருட மூன்று மழை" என்பனவாதி வாக்குக்கள் இக்கருத்தைப்பற்றி எழுந்தன.

மாந்தர் - அமைதியில் - குலங்களின் விளங்கி - வாழ் - நாட்டின் - இயல்பு என்று கூட்டுக.

வேறுபல் குலங்களில் விளங்கி - நானிலமும் அறுவகைப் புணர்நிலமும்போலக் குலங்களும் பெருங்குலங்கள் நான்காகவும் கலப்புக் குலங்கள் ஆறுகவும் விதிக்கப் படுவன.* நிலத்தியல்போல, அவ்வவற்றில் வாழும் மக்களும் தத்தமக்கடுத்த இயல் பின் வந்த உரிய செய்தியோடு விளங்குதல் முறை என்பதாம்.

தீய என்பன...வரைத்தோ ? - தீய என்பன - தீயவை என்று நூல்களானும் ஆன்றோராசாரத்தானும் விலக்கப்படுவன. என்பன - எனப்படுவன. படு - விகுதி தொக்குவந்த செயப்பாட்டுவினையாலணையும் பெயர்.

கனவிலும் நினைவு இலாச் சிந்தை - தீமைகள் - மனம், வாக்குக், காயம் என்ற மூன்று கரணங்களாலும் இயற்றப்படுவன. கொலை செய்தலும், கொல் என்று வாயினாற் கூறுதலும், கொல்ல நினைத்தலும் என்ற இவைபோல்வன. "நல்ல நினைப் பொழிய நாள்களி லாருயிரைக், கொல்ல நினைப்பதுவும் குற்றமு மற்றொழிய" (திருவாரூர் - புறநீர்மை - 4) என்ற நம்பிகள் திருவாக்கும், பிறவும் காண்க. இம் மூன்றனுள் மனத்தானும் தீமை நினையாமையே அடிப்படையாம். என்னை ? மனம் தூயதாகவே, வாக்குத் தீமையின்றி விளங்கும் ; அதனால் செயலிலும் தீமை நிகழாது. ஆதலின் சிந்தைத் தூய்மை சொல்லவே, ஏனைய இரண்டும் உடன்வரும் என்க. கனவு - உயிர்நிற்கு நிலைகளின் ஒன்று ; இதனைச் சொப்பனாவத்தை என்பர் வடவர். இவ்வவத்தை, உயிர், கண்டத்தானத்தில் (கழுத்து - little brain) தங்கும்நிலை என்ப. இறைவனருளால் கனாக்கள், வருங்கால நிகழ்ச்சிகளை அறிவிக்க நிகழ்வனவும் உண்டு ; நோய்களாலும் கனாநிகழ்தல் உண்டு ; தூய்மையில்லாத தீச்செயல்களாலும் தீய வாசனையாலும் கெட்ட கனாக்கள் உளவாம். அவ்வாறு நிகழாதபடி தம் செயல் களையும் உட்கரணங்களையும் தூயநல்லொழுக்கத்தில் வைத்து நடப்பர் பெரியோர். இம்மாந்தர்கள் இவ்வாறு நல்லொழுக்கத்து நின்றமையால் கனவிலும் தீயநினைவுகள் இல்லையாயின என்பதாம்.

தூய மாந்தர் - மாந்தர் தூயராவதற்குக் காரணம் கனவிலும் தீய நினைவில்லாமை யாம் என்பதுணர்த்த உடம்பொடு புணர்த்தி ஓதினர்.

தூய மாந்தர் வாழ் தொண்டை நாடு - "தொண்டை நன்னாடு" (1078)ல் உரைத்தவை பார்க்க. "எவ்வழி நல்லவ ராடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்ற புறப்பாட்டும் நினைவு கூர்க. "பெருந்தொண்டை நன்னாடெய்தி" (திருநா - புரா - 315), "தொண்டைத் திருநாட்டில்" (திருஞான - புரா - 974), "பேருலகி லோங்குபுகழ்ப் பெருந்தொண்டை நன்னாட்டு" (கலியர் - புரா - 1), "சொல் விளங்கு சீர்த் தொண்டை நன்னாட்டிடை" (வாயிலார் புரா - 1), "செம்மைநெறி வழுவாத பதி" (திருஞான - புரா - 1009) என்று பலவிடத்தும் இக்கருத்தையே வற்புறுத்தி ஆசிரியர் விதந்தோதுதல் காண்க. "மங்கலத் தமிழ்ப் புவிக்கு வாண்முக மெனத்தகுந், தங்க மிக்க சீர்த்தி பெற்ற தொண்டை நாடு" (தழுவக் குழைந்த படலம் - 129) என்ற காஞ்சிப் புராணமும் இக்கருத்தையே தழுவிய தென்க.

இயல்பு - இந்த மேன்மைகள் இத்திருநாட்டுக்குச் செயற்கையாலன்றி இயற் கையானமைந்தன என்பது குறிப்பு.

---

*கலப்புக் குலங்கள், மேற்குல ஆடவரும் கீழ்க்குலப் பெண்டிரும் கலந்ததன் பயனாக வரும் வகை மூன்றும், கீழ்க்குல ஆடவர் மேற்குலப் பெண்டிருடன் கலந்த தன் பயனாக வரும் மூன்றும் கூடி ஆறு என்ப.

மேலே 1083 முதல் 1124 வரை உள்ள திருப்பாட்டுக்களால் தொண்டை நாட்டின் நானிலத் தைந்திணைச் சிறப்பினைத் தமிழ்இலக்கண வரம்பு காட்டிச்,செம்மை நெறியுடன் கூட்டி விரித்துரைத்த ஆசிரியரது தெய்வக் கவிநலத்தைத், தெய்வக் கவிப்பண்புடைய எமது மாதவச் சிவஞான யோகிகள் " திருத்தொண்டை நன்னாட்டு நானிலத்தைந் திணைவளமுந் தெரித்துக் காட்ட, மருத்தொண்டை வாய்ச்சியர்சூழ் தூன்றைநகர்க்கு குலக்கவிபே வல்ல னல்லாற், கருத்தொண்ட ரெம்போல்வா ரெவ்வாறு தெரிந்துரைப்பார் ? கலந்தார்க் கின்ப, மருத்தொண்ட ரணியிலவை யொன்மூடொன் றியைந்தனவு மாங்காங் குண்டால் " (திருநாட்டுப் படலம் - 128) என்று தமது காஞ்சிப்புராணத்தினுள் எடுத்து வியந்து பாராட்டிப் போற்றினர்.

சொல்வரைத்தோ ? - வரை - அளவு. ஓகாரம் எதிர்மறை குறித்தது. 47

## காஞ்சிமா நகரச் சிறப்பு

1125. இவ்வ ளந்தரு பெருந்திரு நாட்டிடை யேன்றும்
மெய்வ ளந்தரு சிறப்பினு லுலகெலாம் வியப்ப
" வேவ்வு கங்களு முள்ள "தென் றியாவரு மேத்துங்
கைவி ளங்கிய நிலையது காஞ்சிமா நகரம். சஅ

(இ - ள்) வெளிப்படை. இந்த வளங்களைத்தரும் பெருமையுடைய திருநாட்டில் பெருமையுடைய காஞ்சிபுரத் திருநகரமானது, உண்மையாகிய வளங்களைத் தரும் சிறப்பினாலே உலகங்களெல்லாம் வியக்கும்படி எல்லா வுகங்களினும் அழியாமல் நிலைத் துள்ளதென்று எல்லாரும் துதிக்கின்ற ஒழுக்கத்தினால் விளங்கிய நிலைமையினை யுடையது.

(வி - ரை) பெரும் திரு நாடு - பெருமை என்றது மேற்கூறிய நானிலத்தைந்திணை யின் முதற்பொருள் கருப் பொருள்களின் வளங்களாகிய உலகநிலைப் பெருமை. திரு என்றது அவ்வளங்களோடு கூடிய சிவச்சார்பினாலாகிய செம்மை.

மெய் வளம் - என்றும் அழிவில்லாத சத்து எனப்படும் செம்மையாகிய முத்தி வளம். காசி முதலாக எண்ணப்படும் முத்தித்தலங்கள் ஏழனுள் காஞ்சிபுரமும் ஒன் றுதலின் என்றும் மெய் வளந்தரு சிறப்பினுள் என்றார். " நகரேஷு காஞ்சி " என்பதும் காண்க.

யாவரும் ஏத்தும் - எல்லாச் சமயத்தாரும் என்பாரும் உண்டு. இத்தலத்தில் 20 சிவதலங்களும், 8 வைணவ தலங்களும் உண்டு. சைவர்களேயன்றி வைணவர்களும் பௌத்தர் முதலாயினோரும் போற்றினர் என்பர். மணிமேகலை கச்சிமாநகரம் புக்க காதை, தவத்திறமுரைத்த காதை முதலாயினவும் காண்க.

எவ்வுகங்களும் உள்ளது - உகாந்த காலத்தில் ஏனைய உலகங்களெல்லாம் அழி யினும் இஃது அழியாமல் நிலைபெற்றுள்ளது என்ற காரணத்தால் இதற்குப் பிரளய சித்து என்ற பெயரும் வழங்கும். கைவிளங்கிய - கை - ஒழுக்கம். " கையொன் றறி கல்லாய் " (கலித் - 95).

மெய்வளந்தரு சிறப்பினுள் எவ்வுகங்களும் உள்ளது - என்றும் அழிவில்லாத முத்தியைத் தருதலால் என்றும் அழியாதது என்பதாம். காரணகாரிய முறை பெறக் கூறினர்.

இந்நகரச் சிறப்பினைக் " கச்சிமா நகரோர் தட்டுங் கடவுள ருலகோர் தட்டும், வைச்சுமுன் னயனூர் தூக்க மற்றது மீது செல்ல, நிச்சய முறுகித் தாழ்ந்து நிலமிசை

விழுமிவ் வூரை, யிச்சகத் தூர்க ளோடு மெண்ணுதன் மடமைப் பாற்றே" (திருநகரப் பட - 1) என்று காஞ்சிப்புராணமுடையார் பாராட்டிய திறமும் காண்க. 48

1126. ஆன தொன்னக ரம்பிகை தம்பெரு மானை
மான வர்ச்சனை யாலொரு காலத்து வழிபட்
டூன மில்லற மனேகமு முலகுய்ய வைத்த
மேன்மை பூண்டவப் பெருமையை யறிந்தவா விளம்பில், சசூ

1127. வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்
துள்ளு வார்புனல் வேணியா ரருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையி னுகமத் திறனெலாந் தெரிய
வுள்ள வாறுகேட் டருளினு லுலகையா ளுடையாள். நிo

1126. (இ - ள்) வெளிப்படை. இவ்வண்ணம் ஆயின தொன்மையுடைய காஞ்சிமாநகரம், உமையம்மையார் தமது நாயகராகிய சிவபெருமானைப் பெருமை யுடைய பூசனையினுல் ஒரு காலத்தில் வழிபாடு செய்து உலகம் உய்யும்படி குற்ற மில்லாத அனேக அறங்களையும் நிலைபெற வைத்த மேன்மை பூண்டதாகிய அத்தப் பெருமையை அறிந்தபடி சொல்லப் புகுந்தால், சசூ

1127. (இ - ள்) வெளிப்படை. வெள்ளிமால் வரையில் திருக்கயிலாயத்தில் எழுந்தருளியிருந்து, சூதிகொள்ளும் பெருநீராகிய கங்கையைச் சூடிய சடையினை யுடைய சிவபெருமான் அருளிச்செய்ய, உலகையாளுடைய உமையம்மையார் வணங் கித், தெளிந்த உண்மையைக் கூறும் ஆகமங்களின் திறங்களையெல்லாம் தெரியும்படி உள்ளவாறு கேட்டு அறிந்து கொண்டருளினர். நிo

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

1126. (வி - ரை) ஆன - முன்னே உரைத்த சிறப்புடையவாயின.

தொன்னகர் - "எவ்வுகங்களு முள்ளது" என முன் பாட்டிற் கூறினமையின் தொன்மை புலப்படுமாறறிக.

மான அருச்சனை - பெருமையுடைய பூசை. சிவாகமங்களுள் விதித்த முறைகள் எல்லாம் ஒன்றுங் குறையாமல் இயற்றும் பூசையாதலின் இவ்வாறு கூறினர். மானம் - பெருமை. அர்ச்சனை - பூசை; வழிபாடு. "நீமொழிந்த ஆகமத்தின் இயல்பி னலுனை யருச்சனை புரிய" (1131), "எய்த ஆகம விதியெலாஞ் செய்தாள்" (1139) என்பன காண்க.

ஒருகாலத்து - முன்பு இராதாதேவியாராலும், பின்பு பார்வதியாராலும் அருச் சனை செய்யப்பட்டமையால் இவ்வாறு கூறினர் என இங்கு விசேடவுரை காண்பர் ஆலாலசுந்தரம் பிள்ளை; "முதிர மங்கை தவஞ்செய்த காலமே முன்பு மங்கை தவஞ் செய்த காலமே" (திருவியமகம் - கச்சிஏகம்பம்) என்ற ஆளுடையபிள்ளையார் திரு வாக்கையும் ஆதரவு காட்டுவர்.

ஊனமில் அறம் அனேகமும் - "எல்லா அறமும்" (1146), "முப்பதோ டிரண்டறம் புரக்கும்" (1148) என்றபடி எல்லா அறங்களையும் எப்போதும் அம்மை யார் உயிர்களின் துன்ப நீங்கும்படி செய்தருள்கின்றார் என்பது.

உலகு உய்ய வைத்த - அறஞ்செய்வார் அச்செயற்குரிய பயன்களை எய்துவர். இங்கு அம்மையார் அருட்கருவிருத்தி உலக முய்யும்பொருட்டே அறங்களையும் சிவ பூசையினையும் வைத்தனர் என்பதாம். வைத்த - என்றும் நிலவும்படி அமைத்த.

விளம்பில் - சொல்வோமாகில் என்று தொடங்கிக்கொண்டு அச்சரிதத்தை 1131 முதல் 1151வரை 20 திருப்பாட்டுக்களால் கூறுகின்றார். விளம்பில் - சொல்வோமாகில் என்ற வினையெச்சம், விளம்பிய அச்சரித முடிபாகிய "அறம்புரக்கும்" (1151) என்றதனோடு முடிகின்றது. 49

1127. (வி - ரை) வெள்ளிமால்வரைக் கயிலை - உலகில் உள்ள மலைகளுள்ளே பெரியதாகிய வெள்ளிமலையின் உயர்ந்த கொடுமுடிகளுட் சிறந்து விளங்குவதாம் கயிலை என்பது. இதற்கு நொடித்தான்மலை என்று பெயர் வழங்குவர். நொடித்தல் - அழித்தல்; நொடித்தான் - அழித்தலைச் செய்தவன். "ஊழிதோ றூழி முற்றும் முயர் பொன்னெடித் தான்மலை" என்ற ஆளுடையநம்பிகள் தேவாரமும் காண்க. "பனி மால்வரை" (11) என்றவிடத் துரைத்தனவும், திருமலைச் சிறப்பில் உரைத்தனவும் பார்க்க. [illegible]

வீற்றிருந் தருளுதலாவது - ஆகமங்களை உபதேசம் செய்யும் முறையில் ஆசாரிய ராகச் சுகாசனத்தில் நேரே எழுந்தருளியிருத்தல்.

அருள்செய - உபதேசிக்க. "நீமொழிந்த ஆகமம்" (1131) என்றது காண்க.

தெள்ளு வாய்மை - இதுவே பொருள் என்று கண்டு தெளிந்த உண்மை.

தெள்ளு வாய்மையின் ஆகமத்திறன் எலாம் - "ஈசானஸ் ஸர்வ வித்யானும்" (வேதம்) என்றபடி எல்லாக் கலைகளுக்கும் ஈசானனே முதல்வராவார். அவ்விறைவர் உயிர்களின் பக்குவபேதத்துக்கேற்ப அனந்த பேதமான சாத்திரங்களையும் சொல்லியருளினர். அவற்றுள்ளே "வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்", "வேதமோ டாகமம் மெய்யா மிறைவனூல்" என்று முடித்தனர் அறிந்தோர். அவ்விரண்டனுள்ளும் வேதம் பொதுநூல். அது, அன்னம் பிரமம் - விஷ்ணுபிரமம் - என்பன முதலாக உயிர்களின் திறத்துக்கேற்றவாறு பலபடியும் கூறிச் செல்லும் நூலாகும். ஆகமம், அவ்வாறன்றி முடிந்த நிலையாகச் சத்திநிபாதமுடையவர்களுக்குச் "சிவனே முழுமுதற் கடவுள்" என்று தெளிந்த உண்மையினை எடுத்துக் கூறும். "சத்தி யப்பொருட் டெளிவெலாஞ் சத்திநி பாதர்க், குய்த்துணர்த்திய தாகம மென்பர்நூ லுணர்ந்தோர்" என்ற திருவிளையாடற் புராணங் காண்க. "வேத மென்னும் பாதவம் வளர்த்தனை - அதனிற் படுபயன் பலவே...ஒரும் வேதாந்த மென் றுச்சியிற் பழுத்த, ஆரா வின்ப வருங்கனி பிழிந்து, சாரங் கொண்ட சைவசித் தாந்தத் தேனமுது" என்று சுவைபடப் பாராட்டினர் குமரகுருபர சுவாமிகள்.

இவ்வாகமங்கள் 28 என்ப. அவற்றுள் (மகாசதாசிவமூர்த்தியின் ஈசானமுகத்தின் உள்ள) ஈசான முகத்தில் எட்டும், வேனத் தற்புருட முதலிய நான்கு முகங்களினும் ஐயைந்தாக இருபதும் ஆக 28 ஆகமங்களும் வெளிப்பட்டன என்ப. இவற்றுள்ளே சிவபேதம் பத்தும், உருத்திரபேதம் பதினெட்டு மாம். சிவபேதம் பத்தையும் ஒருவரிடத்தொருவராக மும்மூன்று பேராய் அணுசதாசிவருட்டலைவராகிய பிரணவர் முதல் முப்பதின்மரும், உருத்திரபேதம் பதினெட்டையும் ஒருவரிடத்தொருவராக ஒவ்வோராகமத்துக் கிவ்விரண்டு பேராக அனாதி ருத்திரர் முதல் முப்பத்தறுவரும் இவ்வாறு அறுபத்தறுவர் இவ்வாகமங்களைக் கேட்டனர் என்பர். "அஞ்சன மேனி யரிவையோர் பாகத்தன், அஞ்சோ டிருபத்து மூன்றுள வாகமம், அஞ்சலி கூப்பி யறுபத் தறுவரும், அஞ்சு முகத்தி லரும்பொருள் கேட்டதே" (பாயிரம் - 57) என்ற திருமூலர் திருமந்திரமும் காண்க. "அறுபத் தறுவர் பிரணவ நாதி, அறிவுறக்கேட்டாரா கமம்" (சைவசமய நெறி 337).

திறன்எலாம் - ஆகமங்கள், உபாகமங்கள் ஆகிய எல்லாமும். முற்றும்மை தொக்கது. [illegible]

உள்ளவாறு - ஐயந்திரிபறக் கேட்டனள் என்பதாம்.

உலகை ஆளுடையாள் கேட்டருளினுள் - என்றதனால் தம் பொருட்டன்றி உலகத்துயிர்களின் நன்மையின் பொருட்டுக் கேட்டனர் என்பது குறிப்பு. கேட்டு அருளினுள் என்ற குறிப்பும் அது. இக்கருத்துப்பற்றியே உலகையாளுடையாளாதலின் கேட்டனள் என்று உடம்பொடு புணர்த்தி ஓதியதும் என்க.

வெள்ளிமால்வரைக் கயிலை - இமயமலை ஒரு காலத்துக் கடலினுள்ளே இருந்தது என்றும், நில அண்டத்தினகத்துள்ள மிக்க வெப்பத்தின் செயல்களால் உளதாகும் நிலப்புரட்சியில் மேற்கிளம்பியதென்றும், அது கடலகத்துள் இருந்ததற்குரிய அடையாளங்கள் அதிற் காணப்படுகின்றன என்றும், மேற்குத் தொடர்ச்சிமலை என்கிற (Western Ghats) மலைகள் இதனினும் மிகப் பழைமையுடையன என்றும் நில நூலோர் கொள்கின்றனர். மேற்குத் தொடர்மலையின் ஒரு பகுதி கோயமுத்தூர்ச் சில்லாவின் மேலைச்சிதம்பரம் என்னும் திருப்பேரூரின் (தேவார வைப்புத்தலம்) மேற்கே வெள்ளிமலை என்ற பெயரால் இன்றும் வழங்கும் ஒரு உயர்ந்த மலை உண்டு. அது கயிலாயமேயாம் என்று பேரூர்ப்புராணம் எடுத்துரைக்கும்.

திறனேலாம் தெளிய—என்பதும் பாடம். 50

1128. எண்ணி லாகம மியம்பிய விறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை யெனவுரைத் தருள
அண்ண லார்தமை யருச்சனை புரியவா தரித்தாள்
பெண்ணி னல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து. நிக

(இ - ள்) வெளிப்படை. எண்ணில் ஆகமங்களே யெல்லாம் சொல்லி யருளிய சிவபெருமான் தாம் விரும்புகின்ற உண்மையாவது பூசனையேயாகும் என்று சொல்லியருள, (அதனைத் திருவுள்ளங் கொண்டவராய்ப்) பெண்ணுகியவர்களுள் எல்லாம் நல்லவராய்ப் பெருந்தவக் கொழுந்து போல்வராகிய உமையம்மையார் அண்ணலாரைப் பூசை செய்வதற்கு விருப்பங் கொண்டனர்.

(வி - ரை) எண் நில் ஆகமம் - அளவுபடுத்தி நிறுத்தப்பட்ட ஆகமங்கள்; மூலாகமங்கள் 28-ம், உபாகமங்கள் 207-ம் ஆகிய இவை. மூலாகமங்கள் ஒவ்வொன்றும் அனேக கோடி கிரந்தங்களையுடையன. "எண்ணி லிருபத் தெண்கோடி நூறுயிரம்" (பாயிரம் - 58), "எண்ணி லெழுபது கோடி நூறுயிரம்" (மந்திர - 60) என்ற திருமூலர் திருமந்திரங்களில் எண்ணில் - எண்ணிக்கையில் என்ற பொருளில் வந்தபடி இங்கும் அப்பொருள் கொண்டுரைக்கப்பட்டது.

எண் நில் - எண்ணத்தினுள் - கருத்தினுள்ளே - நிற்கத் தக்க என்றுரைப்பினுமமையும். அனேக கோடி கிரந்தங்களை உடைமையால் எண்ணில் எண்ணில்லாத என்ற பொருள்பட உரைத்தனர் என்பாருமுண்டு.

ஆகமம் - ஆ - க - ம - என்றவை முறையே சத்தும், சதசத்தும், அசத்துமாகிய பதி பசு பாசம் என்ற மூப்பொருள்களையும் தெரிவிப்பன; எனவே மூப்பொருள்களை நிச்சயஞ் செய்து காட்டி உயிர்களை உய்விப்பன ஆகமம் என்பதாம்.

ஆதரித்தல் - விரும்புதல். பெண்ணின் நல்லவள் - தமது நாயகன் விரும்பியதனையே தாமும் விரும்பிச் செய்தல் பெண்மை நலமுடையார்க்கு இலக்கணமாதலின், இறைவர், பூசனையே தாம் விரும்புவது என்றுரைத்தருளத், தாமும் அவ்வாறு பூசித்தலையே விரும்பினர் என்பதாயிற்று. இதுபற்றி இங்கு இத்தன்மையாற் கூறினர்.

ஆதரித்தல பிபடப்பெற்ற (உ) என்ற கூபிகள்ளே வரைந்து

பெருந்தவக் கொழுந்து - பெரிய தவத்தின் கொழுந்து போல்வார் என்றது, தவத்தினின் விளைந்து இனியும் தவஞ்செய்து முற்றும் நிலையும், மேலும் தவத்தை உலகத்தில் விளைவித்துத்தரும் நிலையும் குறித்தது.

கேட்டருளினுள் - என்றதனால் கற்றனர் என்பதும், உள்ளவாறு என்றதனால் கசடற என்பதும், ஆகமத்திறனெலாம் என்றதனால் கற்பவை என்பதும், அருச்சனை புரிய ஆதரித்தாள் என்பதனால் அதற்குத்தகநிற்றல் என்பதும் குறிப்பாற் பெறப்பட்டமையும், "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ, னற்றா டாழாஅ ரெனின்' என்றதும் காண்க.

"ஐம்பத்தோரக்கரி" என்றபடி ஐம்பத்தோரெழுத் திருவமுடையவராய் விளங்கும் அம்மையார் விரும்பியவதனைச் சொல்லும் இத்திருப்பாட்டு 51-வது பாட்டாக அமைந்த தெய்விக அமைப்பும் காண்க. ஒலிக் கூட்டத்தினிலையினுள் (நாதத்தினுள்) விளங்குபவர் சிவபெருமான் என்ற உண்மையும், எழுத்தறியும் பயன் சிவபூசையே யென்ற உண்மையும் குறிப்பிற் பெறப்பட்டமையும் காண்க. 661 உரை பார்க்க.

ஆகமம் அருளிய—என்பதும் பாடம். 51

வேறு

1129. நங்கை யுண்ணிறை காதலி னோக்கி
நாய கன்றிரு வுள்ளத்து மகிழ்ந்தே
யங்க ணெய்திய மூறுவலுந் தோன்ற,
"வடுத்த தென்கொனின் பா"லென வினவ,
"விங்கு நாத !நீ மொழிந்தவா கமத்தி
னியல்பி னுலுனை யருச்சனை புரியப்
பொங்கு கின்றதென் னுளை"யென் றிறைஞ்சிப்
போக மார்த்தபூண் முலையினுள் போற்ற, ருஉ

1130. தேவ தேவனு மதுதிரு வுள்ளஞ்
செய்து "தென்றிசை மிக்கசெய் தவத்தால்,
யாவ ருந்தனை யடைவது, மண்மே
லென்று முள்ளது காஞ்சி ;மற் றதனுள்
மாவ மர்ந்தநம் மிருக்கையி லணைந்து
மன்னு பூசனை மகிழ்ந்துசெய் வா"யென்
றேவ, வெம்பெரு மாட்டியும் பிரியா
விசைவு கொண்டெழுந் தருளுதற் கிசைந்தாள். ருங

1129. (இ - ள்) வெளிப்படை. நங்கையாருடைய உள்ளத்தில் நிறைந்த வீருப்பத்தினை நோக்கி, நாயகனார் தமது திருவுள்ளத்தில் மகிழ்ச்சி கொண்டே, அங்கண் பொருந்திய புன்முறுவலும் தோன்ற "உன்னுடைய உள்ளத்தினுள் பொருந்தியது என்ன?" என்று கேட்க, "நாதரே! தேவீர் இங்கு மொழிந்தருளிய ஆகமத்தின் முறைமைப்படியே உம்மைப் பூசிக்க எனது ஆசை பொங்குகின்றது" என்று சொல்லிப், போகமார்த்த பூண்முலையார்களிய அம்மையார் வணங்கித் துதிக்க,

1130. (இ - ள்) வெளிப்படை. தேவ தேவரான சிவபெருமானும் அதனைத் திருவுள்ளத்திற் கொண்டு, "தெற்குத் திசையானது செய்த மிக்க தவப்பயனால், யாவ

ரும் தன்னிடம் வந்து அடையத்தக்கதும், நிலவுலகத்தில் என்றும் அழியாது நிலைபெற்றிருப்பதும் காஞ்சிமா நகரமாகும்; அதனுள், மாமரத்தினடியில் நாம் விரும்பி எழுந்தருளியிருக்கும் இருக்கையில் சென்று அணைந்து நிலைபெற்ற பூசையினை மகிழ்ந்து செய்வாயாக!" என்று ஆணையிட்டருள, எம்பெருமாட்டியும் நாயகரை விட்டுப்பிரியக் கூடாத நிலைமையில் விடை கொண்டு அங்கு நின்றும் எழுந்தருளுதற்கு உடன்பட்டனர். ருங

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1129. (வி - ரை) நங்கை - பெண்ணினல்லாருக்கு வழங்கும் சிறப்புப்பெயர். நாயகன் - தலைவன் என்றும், நங்கைக்கு நாயகன் - கணவன் - என்றும் இருபொருளும் பட நின்றது.

அங்கண் எய்திய முறுவல் - அங்கண்மையினால் - அருளினால் - பொருந்திய புன்சிரிப்பு. அங்கண் - அவ்விடத்து - அப்பொழுது என்றுரைத்தலுமாம்.

நீ மொழிந்த ஆகமத்தின் இயல்பு - "ஆகமத் திறனெலாம்" (1127) என்றது காண்க. இயல்பு - விதித்த முறைமை. இயல்பு - சிவபூசை செய்தலே உயிர்களுக்கு அடுத்த இயற்கை - தன்மை; பிற எல்லாம் மாறுபட்ட தன்மை என்பது குறிப்பு. வாயின் தன்மை வாய்மை என்றதுபோல.

என் ஆசை பொங்குகின்றது - பொங்குதல் - உள் அடங்காது மேற்கிளம்புதல். மேன்மேலும் அதிகரித்தல்.

போகமார்த்த பூண்முலையினாள் - "போகமார்த்த பூண்முலையாள்" (திருநள்ளாறு - 1) என்ற ஆளுடையபிள்ளையாரது தேவார ஆட்சி போற்றப்பட்டது காண்க. (1) சைவத்தின் முடிந்த உண்மையாவது சிவபூசை என்று காட்டும் இந்த இடத்தில் சைவத்தாபனத்துக்கு உதவிபுரிந்து உலகத்துக்கு எடுத்துக் காட்டிய இத்திருப்பதிகத்தினை நினைவுகூர்தற்பொருட்டு இதனை எடுத்தாண்டனர்; (2) அம்மையாரின் அருட்டிருமேனியாகிய பெண்மையுருவக் குறிப்புப்பெறக் கூறியதும் கருத்து; (3) பரம் அபரம் என்னும் இரண்டு ஞானநிலயங்களே அம்மையாரது இரண்டு தனங்களாக உரைக்கப்படும். இந்த இருவகை ஞானங்களே சிவபோக விளைவுதருவன என்பது குறிக்கவும் இங்கு இத்தன்மையாற் கூறினார்.

முறுவல் - தமது உபதேசப்பயனை உலகத்துயிர்கள் பெறப்போகும் நிலையினுக்கு மகிழ்ந்தனர் என்ற குறிப்பும் காண்க. என்றிறைஞ்சி — என்பதும் பாடம்.

அருச்சனை புரிதல் - பூசித்தலுக்கு விதித்த எல்லா அங்கமும் செய்தல். 52

1130. (வி - ரை) தேவதேவன் - தேவர்களுக்கெல்லாம் தலைவராகிய பெருந்தேவர் - சிவபெருமான். தேவர்கள் இறந்து பிறக்கின்றவர்கள். தேவதேவராகிய இவர் இறவாதவர்; பிறவாதவர்.

தென்திசை செய் மிக்க புண்ணியம் என்க. "மாதவஞ் செய்த தென்றிசை" (35) என்றவிடத் துரைத்தவை பார்க்க. தென்றிசை தவஞ்செய்தமையால் அம்பிகை தன்னிடத்தமர்ந்து காஞ்சியிற் றவஞ் செய்தருளப்பெற்றது.

காஞ்சி - (1) க + அஞ்சி = க - பிரமம்; அஞ்சுதல் - விரும்புதல்; (2) க - பிரமன்; பிரமதேவனால் விரும்பப்பட்டது. "எம்மான் அயன்றனைப் படைத்து வேத, மோதுவித் தருளி னோக்கி யுலகெலாம் படையென் றேவும், போதிது பார்த்திவ் வாறு படையெனப் புகன்று வைத்தான், ஈதென லாகுங் காஞ்சி" என்ற காஞ்சிப்புராணங் காண்க. (3) க - தலை. தலைமை பெற்றது. (4) க - அஞ்சி - பேரின்பந் தருவது; (5) நிலமகட்குக் காஞ்சி என்னும் உந்தித்தானத்தை ஒத்தது - என்றிவ்வாறு காரணப்பொருள்கள்

பலவும் பொருந்தப் பெயர் வழங்கப்படுவது. காஞ்சிப்புராணம் - திருவேகம்பப்படலம் 34-35-36 பாட்டுக்கள் பார்க்க.

**மா அமர்ந்த நம் இநக்கை** - மா - மாமரம். அமர்தல் - விரும்புதல். "ஆயின வற் றுயர்காசி காஞ்சியெனு மிரண்டதிக மறிவான் மிக்கோ, ராயினவை யிரண்டுள் ளுஞ் சாலநமக் கினியநக ரணிநீர்க் காஞ்சி" (காஞ்சிப்புரா - தழுவக் - 48) என்றது காண்க. இநக்கை - எழுந்தருளியிருக்குமிடம். "மாவின் மூலத்தில் வந்து தோன்றி னூர்" (1134), "மாவடி வைகுஞ் செவ்வேள்" (கந்தபுராணம்).

இந்த மாமரம் நான்கு மறைகளின் உருவமுடையது. நால்வகையான கனிகளைத் தருவது. இம்மரம் இன்றும் நாம் கண்டு வணங்கத்தக்கதாய்த் தழைத்து ஓங்கி விளங்குதல் நமது பேறேயாகும். வேதங்களே இந்த மாவாய் ஓங்கியன என்பது "தாவ ரும்பழ மாமறை தம்பிரா னருளால், மேவ ருந்தனிச் சூதமாய்...ஓங்கிய தன்றே" (திருவேகம்பப்படலம் - 4) என்ற காஞ்சிப்புராணத்தால் அறியப்படும்.

**மன்னுபூசனை** - "நின் பூசனை யென்றும் முடிவ திலநம் பால்" (1145) என்ற படி என்றைக்கும் முடிதலில்லாது நித்தியமாய் நிகழும் பூசை.

**மன்னுதல்** - நிலைபெறுதல். பூசிக்கும் உயிர்களும், பூசிக்கப்படும் இறைவனும் நித்தியர்கள். "என்றுநீ அன்றுநான்; பின்னடிமை யல்லவோ?" (தாயுமானார்) என்ற படி மூத்திநிலையிலும் உயிர்கள் சிவனுக்கு அடிமை செய்வன. அவ்வாறு உயிர்கள் நித்தியமாய் இறைவனைப் பூசித்து உய்யும்பொருட்டு இறைவியார் தாம் நிலைத்த பூசையினைச் செய்கின்றார் என்பதும் குறிப்பு. இப்பொருளில் **மன்னு** என்பதற்கு **மன்னுயிர்க்கும்** - உயிர்களை நிலைபேறு பெறுவிக்கும் என்றுரைத்துக்கொள்க.

**பிரியா இசைவு கொண்டு** - பிரியமாட்டாதவராயும், இறைவரது ஏவுதலின்படி கயிலையினின்றும் பிரிந்து காஞ்சி செல்வதற்கு உடன்பட்டு. "தாழ்ந்துதாழ்ந் தெழுந்து நின்று, கொம்பரி னெல்கிப் பல்காற் புறவிடை கொண்டு" என்ற காஞ்சிப்புராணமும் காண்க.

**எழுந்தருளுதற்கு**—கயிலையினின்றும் செல்வதற்கு. 53

1131. ஏத மில்பல யோனியெண் பத்து
நான்கு நூறுயி ரந்தனுள் வைத்த
பேத மும்புரந் தருளுமக் கருணைப்
பிரான்மொ ழிந்தவா கமவழி பேணிப்
போது நீர்மையிற் றொழுதனள் போதப்,
பொருப்பில் வேந்தனும் விருப்பில்வந் தெய்தி
மாத வம்புரிந் தருளுதற் கமைந்த
வளத்தொ டும்பரி சனங்களை விடுத்தான். நிச

(இ - ள்) வெளிப்படை. மலம் நீங்கும் பலவகைப்பட்ட யோனிபேதமாகிய எண்பத்துநான்கு நூறுயிரம் வீகைகளினுள்ளும் வைக்கப்பட்ட உயிர்களை எல்லாம் காப்பாற்றி அருளும் கருணையினையுடைய சிவபெருமான், உபதேசித்த அந்த ஆகமங் களிற் கூறப்படும் நெறியே பூசை செய்தலை விரும்பிச் செல்கின்ற தன்மையினாலே, தொழுதுகொண்டு உமையம்மையார் செல்ல, மலையரசனும் விருப்பத்தோடும் வந்து அடைந்து அம்மையார் மாதவத்தைச் செய்தருளுவதற்கேற்ற வளங்களுடன் பரிசனங் களை விடுத்தனன்.

(வி - ரை) ஏதம் இல் - ஏதம் - குற்றம்; அநாதியே உயிர்களைப் பற்றித்த ஆணவ மலக் கட்டு. இல் - இல்லையாகப் பெறும். உயிர்கள் அவ்வவற்றின் கன்மத்துக் கேற்ற படி பலவகைப்பட்ட யோனிகளில் தோன்றுமாறு வைக்கப்படுதலால் குற்றம் நீங்கப் பெறுகின்றன என்பதாம். கசஞதடு பமக்கம் நிலத்தி நிம்பசாச்ச.

எண்பத்து...கருணைப்பிரான் - "உரைச்சேரு மெண்பத்து நான்குநூ றுயிரமாம் யோனி பேத, நிரைச்சேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா யங்கங்கே நின்றுண்" (மேகரா - வீழி - 4) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரம் காண்க. ஊர்வன 11, மானுடம் 9, நீர்வாழ்வன 10, பறப்பன 10, நடப்பன 10, தேவர் 14, தாவரம் 20, ஆக 84 வகை. இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோரிலக்கமாக எண்பத்து நான்கு இலக்கமாயிற்று என்ப. இவை யோனிபேதமாகிய வகை. இவற்றுள் ஒவ்வொன்றி லும் வரும் உயிர்களின் தொகை எண்ணிறந்தன.

வைத்த - என்றதனால் தோற்றமும், புரந்து - என்றதனால் நிலைபேறும், அருளும் - என்றதனால் இறுதியும் குறிக்கப்பட்டன. வைத்த என்ற சொல்லாற்றலால் "தோற் றிய திதியே" (சிவஞானபோதம்) என்ற விதியிற் கண்டவாறு உலகமும், முதற் பொருளும், வைத்தற் காரணமான உயிர்களின் மலமும் பெறப்பட்டது காண்க. ஏதமில் - என்ற கருத்துமிது. கசஞதடு பமக்கம் நிலத்தி நிம்பசாச்ச

கருணைப்பிரான் - அம்மூன்று தொழில்களையும் செய்தல் உயிர்களின் மேல் வைத்த கருணையே காரணமாம் என்பது.

மொழிந்த - மொழிதல் - உபதேசித்தல்.

தொழுதனள் போத - தொழுது செல்ல - தொழுதனளாகி. முற்றெச்சம்.

அவ்வாறு சென்ற அம்மையார் மலையரசன் முன்பு தடாகத்தில் ஒரு தாமரை யிடத்துக் குழவியாய் இருந்தனராக, அவரைக் கண்டு மலையரசன் எடுத்து வளர்த்து, அவர் விரும்பியபடி தவஞ்செய்தற்கேற்ற சாதனம் பலவும் அமைத்தனன் என்பது கந்தபுராணம். "அத்தட மலருமோ ரரவிற் தத்தின்மேற், பைத்ததோர் குழவியின் படி வத் துற்றனள்" (பார்ப்பதிப்படலம் 21) என்றது காண்க. கசஞதடு பமக்கம்நிலத்தி

தவம் புரிந்தருளுதற்கு...பரிசனங்கள் - இவை 1136-1137-ல் விரிக்கப்பட்டன. வளம் - பூசைச் சாதனங்களாகிய திரவியங்கள்; பரிசனம் - ஏவல் மகளிர்.

நூறுயிரமதில்—என்பதும் பாடம். 54

1132. துன்னு பல்லுயிர் வானவர் முதலாச்
சூழ்ந்து டன்செலக் காஞ்சியி லணையத்
தன்னே ரேர்வரும் பதுமமா நாகந்
தம்பி ராட்டிதா டலைமிசை வைத்தே
"யன்னை யாயுல கினைத்தையு மீன்ரு !
யடிய னேனுறை பிலமத னிடையே
மன்னு கோயில்கொண் டருளுவா" யென்ன,
மலைம டந்தைமற் றதற்கருள் புரிந்து, திருு

1133. அங்கு மண்ணுல கத்துயிர் தழைப்ப
வளவி லின்பத்தி னருட்கரு விருத்தித்
திங்க டங்கிய புரிசடை யார்க்குத்
திருந்து பூசனை விரும்பினள் செய்ய,

வெங்கு நாடவுங், திருவினை யாட்டா
லேக மாமுத லெதிர்ப்படா தோழியப்
பொங்கு மாதவஞ் செய்துகாண் பதற்கே
புரிவு செய்தனள் பொன்மலை வல்லி. ஙுசு

1132. (இ - ள்) வெளிப்படை. நெருங்கிய பலவுயிர்களும் தேவர்களும் முதலாகத் தம்மைச் சூழ்ந்துடன் செல்ல, அம்மையார் காஞ்சியில் அணைய, ஒப்பற்ற பதுமன் என்னும் மாநாகமானது தம்பெருமாட்டியின் திருவடிகளைத் தலையின்மேற் சூடிக் கொண்டு, "உலகங்களை யெல்லாம் தாயேயாகி ஈன்றருளிய அம்மையே! அடியேன் உறைகின்ற பிலத்தினிடை நிலைபெற்ற திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்க வேண்டும்" என்று வேண்ட, அதற்கு அருள்புரிந்து இசைந்து, ஙுஙு

1133. (இ - ள்) வெளிப்படை. அவ்விடத்தில், இந்த மண்ணுலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் தழைக்கும் பொருட்டு, அளவில்லாத இன்பத்தினையுடைய அருளையே திருவுள்ளத்திற் கொண்டு, சந்திரன் தங்கிய புரிந்த சடையினராகிய சிவபெருமானுக்குத் திருந்து பூசனைகளைச் செய்ய விரும்பினராகி, (அவரது இருக்கையை) எவ்விடத்தும் தேடவும் ஒப்பற்ற பெருமுதல்வராகிய சிவபெருமான், திருவினையாட்டால், எதிர்ப்படாது மறைந்திருக்கவே, பொங்கும் மாதவத்தினைச் செய்து அவரைக் காண்பதற்கே, பொன்மலை வல்லியாராகிய உமையம்மையார் விருப்பம் கொண்டனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1132. (வி - ரை) துன்னுபல் உயிர்...உடன் சேல-அவரது பூசையினும் பயன் பெறும் உயிர்களின்மேல் வைத்த கருணையினைத் திருவுள்ளத்துக் கொண்டே அம்மையார் போதருகின்றாராதலின் அப்பயனைப் பெறும் பல உயிர்களும் உடன் போந்தன என்க.

இதனைக் காஞ்சிப்புராணம் - தழுவக்குழைந்த படலம் - 112-121 பாட்டுக்களிற் சிறப்பித்துக் கூறுதல் காண்க.

பதும மாநாகம் - திசைக்கொன்றுக எட்டுத் திக்குக்களினும் அமையும் பெரிய எட்டு நாகங்களுள் ஒன்று. அவை, வாசுகி - அனந்தன் - தக்கன் - சங்கபாலன் - குளிகன் - பதுமன் - மகாபதுமன் - கார்க்கோடகன் என்பன. அவற்றுள் பதுமன் என்ற மாநாகம் காஞ்சியில் பிலத்தில் குடிகொண்டிருந்தது எனவும், அந்தப் பிலத்தில் எழுந்தருளியிருக்கும்படி அது அம்மையாரை வேண்டிற்று எனவும் கொள்க. இந்தப் பிலம் திருக்காமக் கோட்டத்தில் உள்ளது.

மலைமடந்தை - கயிலையினின்றும் போந்த அம்மையார் மலையரசனுக்கு மகளாராகி அவனுக்கு அருள்புரிந்து இங்கு அணைகின்றார் என்ற குறிப்புப்பட இங்கு இப் பெயராற் கூறினர். பொன்மலைவல்லி என மேல்வரும்பாட்டிற் கூறிய கருத்துமிது.

அன்னையாய் உலகனைத்தையும் ஈன்றாய்! என்றது அவ்வுயிர்களின்மீது கொண்ட கருணையினால் அங்கு வந்தனர் என்றும், அதனால் அவை தம்மைச் சூழவந்தன என்றும் குறிப்புப்பட உரைத்ததாம். உலகை ஈனுதலாவது கருவறையிலகப்பட்ட கண்ணில்லாக் குழவிபோல ஆணவத்தால் அறிவிழந்து கேவலத்திற் கிடந்தவுயிர்களுக்குக் கலை முதலிய மாயாகாரியங்களால் அறிவைத் தோற்றுவித்தல். "அம்மையோ டப்பனுகி" (சித்தி - பாயி) உரை பார்க்க. மன்னுயிர் தழைப்ப - (1133) என்ற கருத்துமது. உயிர்தழைத்தல் - உயிர்கள் மலக்கட்டு நீங்கி அறிவு விரியப்பெறுதல்.

அருள் புரிந்து - இசைந்து அந்தப் பிலத்திற்றங்கி என்க. அருள்புரிந்து - கருதிருத்தி - விரும்பினள் - புரிவுசெய்தனள் என வரும் பாட்டுடன் கூட்டி முடித்துக் கொள்க.

1133. (வி - ரை) அங்கு - அத்தப்பிலத்தில்.

மன்னுலகத்து உயிர்தழைப்ப - தது - கரண - புவன - போகங்களே உயிர்கள் பெறக் கொடுத்தலால் அவை கன்மம் புசித்துச் சிவனைப் பூசித்துப் பந்தரீங்கி இன்ப மடைய.

அளவுஇல் இன்பத்தின் அருள்கரு இருத்தி - அளவுஇல் இன்பம் - எல்லையில் லாத இன்பம். இன்பத்தின் அருள் - இன்பந்தருதற் கமைந்த அருள். அருட்கரு - செயல்களெல்லாம் உயிர்கள் மேல்வைத்த அருள்காரணமாக நிகழ்தலின் அது கரு எனப்பட்டது. கரு - கருத்து என்ற பொருளில் வந்தது.

செய்ய விரும்பினள் எங்கும் நாடவும் - என்க. விரும்பினள் - விரும்பின ளாகி - முற்றெச்சம். பூசித்தற் பொருட்டு இறைவனது திருவுருவத்தை நாடவும் எனச் செயப்படுபொருள் வருவிக்க. "மாவமர்ந்த நம் மிருக்கையில் மகிழ்ந்து - பூசனை செய்வாய்" (1130) என்று இறைவர் அருளிஞராதலின் பூசைசெய்ய அவரது திரு வுருவத்தை நாடினுர் என்க. இவ்வாறன்றி அருட்கரு என்றது அருளைத் தன்னிடத்தே கொண்ட சிவலிங்கமாகிய குறியென்று உரைகொண்டு அருட்கரு விருத்தி அதனிற் பூசனைசெய்ய என்று கூட்டி யுரைப்பாரு முண்டு.

திருவிளையாட்டால் ஏகமாமுதல் எதிர்ப்படாது ஒழிய - எதிர்ப்படா தொழிதல் - மறைந்திருத்தல் ; எதிர்ப்படுதல் என்பது விளங்குதல் என்ற பொருளில் வந்தது ஏகமாமுதல் - தனிப்பெரு முதல்வர் ; தனித்தலைவர். மா - மாமரம் என்று கொண்டு, ஏகம் - மா - முதல் - ஏகாம்பரநாதர் என்றலுமாம். திருவிளையாட்டு - தோன்றலும் மறைதலும் இறைவனது திருவிளையாட்டுக்களேயாம் என்பது.

போங்குமாதவம் செய்து காண்பதற்கு - இறைவன் தவத்திற்கே யிரங்கி வெளிப்படுவர் என்று நூல்கள் கூறும் உண்மை கருதியது. ஏகாரம் தேற்றம்.

புரிவு செய்தல் - புரிதல் - விரும்புதல். இறைவனோடு பிரிக்கப்படாத ஒன்றுகிய அருட்சத்தியாகிய அம்மையார் வேறுகிப் பூசை செய்பவரும், அவர் பூசை ஏற்பவரும் ஆக இரண்டாகி வெளிப்பட்டும், பின்னர் அம்மையார் தழுவ வொன்றுகியும் காணு மாறு ஒருபொருளே ஒன்றுகவும் இரண்டாகவும் காண்பது இத்தலத்து விஞ்சைகளுள் ஒன்றும் என்று காஞ்சிப்புராணம் சிறப்பித்துக் கூறும்.

அனைத்துயிர் தழைப்ப—என்பதும் பாடம்.

1134. நெஞ்ச மீசனைக் காண்பதே விரும்பி
நிரந்த ரந்திரு வாக்கினி னிகழ்வ
தஞ்சே ழுத்துமே யாகவா ளுடைய
வம்மை செம்மலர்க் கைகுவித் திறைஞ்சித்
தஞ்ச மாகிய வருந்தவம் புரியத்
தரிப்ப ரேயவ டனிப்பெருங் கணவர்
வஞ்ச நீக்கிய மாவின் மூலத்தின்
வந்து தோன்றினுர் மலைமகள் காண. நிஎ

(இ - ள்) வெளிப்படை. ஆளுடைய அம்மையார் தமது நெஞ்சம் இறைவனைக் காண்பதனையே விரும்பத், திருவாக்கினில் எப்பொழுதும் நிகழ்வது திருவைந் தெழுத் துக்களேயாகச், செந்தாமரைபோலும் கைகளைக் குவித்து வணங்கி, ஆதரவாகிய அரிய தவத்தினைச் செய்ய, அவரது தனிப்பெருங் கணவர் தரிப்பரோ? தரியாதவராகிக் குற்றம் நீக்கிய மாமரத்தினடியில் மலைமகளார் காணும்படி வந்து சிவலிங்கத் திரு மேனி தாங்கி வெளிப்பட்டனர்.

(வி - ரை) நெஞ்சம் - என்றதனால் மனமும், திருவாக்கு என்றதனால் வாக்கும், கைதுவித்து என்றதனால் மெய்யும் ஆக முக்கரணங்களின் ஒழுக்கமும் ஒன்றித்து நிகழும் தவம் கூறப்பட்டது. வஞ்சம் - தோன்றுது மறைந்த வஞ்சம் என்றலுமாம். வஞ்சம் நீக்கிய மாவின் மூலம் - மா - மாமரம். வேத உருவாகிய மாமரமாதலின் ஆன்மாக்களின் குற்றம் போக்கியது என்பார் வஞ்சம் நீக்கிய என்றார். வேதம் பொதுவகையால் எல்லாத் தெய்வங்களையும் கூறினும் சிறப்புவகையால் சிவபெருமானைத் திருவருத்திரத்தின் மூலம் தனது இருதயமாகிய மூலத்தை மறைத்து வைத்திருக்கின்றது என்பர். மாவின்மூலம் - மாமரத்தின் வேர் வேத இருதயம் என்றதும் குறிப்பு. 1034, 1037-ல் உரைத்தவை பார்க்க. ஆதலின் அவ்வாறு வேத மூலத்தில் மறைந்து திருவிளையாட்டால் எதிர்ப்படாதொழிந்த இறைவர் தவத்தின் மூலம் வந்து தோன்றினர் என்ற குறிப்பும் காண்க. விநம்பி - செயவெனெச்சத்திரிபு.

கை குவித்தருளி—என்பதும் பாடம். 57

1135. கண்ட போதிலப் பெருந்தவப் பயனுங்
கம்ப மேவிய தம்பெரு மானை
வண்டு லாங்குழற் கற்றைமுன் முழ
வணங்கி வந்தெழு மாசைமுன் பொங்கக்
கொண்ட காதலின் விருப்பள வின்றிக்
குறித்த பூசனைக் கொள்கைமேற் கொண்டு
தொண்டை யங்கனி வாயுமை நங்கை
தூய வர்ச்சனை தொடங்குதல் புரிவாள், நிஅ

1136. உம்பர் நாயகர் பூசனைக் கவர்தா
முரைத்த வாகமத் துண்மையே தலைநின்
றெம்பி ராட்டியர்ச் சனைபுரி வதனுக்
கியல்பில் வாழ்திருச் சேடிய ரான
கொம்ப னார்கள்பூம் பிடகைகொண் டணையக்
குலவு மென்றளி ரடியிணை யொதுங்கி
அம்பி காவன மாந்திரு வனத்தி
லான தூநறும் புதுமலர் கொய்தாள். நிகூ

1135. (இ - ள்) வெளிப்படை. அவ்வாறு தோன்றிடக் கண்டபோது கோவைப் பழம் போன்ற அழகிய வாயினையுடைய அம்மையார் தாம் செய்த பெருந்தவத்தின் பயனுகிய ஏகம்பத்தில் பொருந்திய தமது பெருமானை, வண்டுகள் மொய்த்த வார்ந்து கட்டிய கூந்தல் முன்னே தாழும்படி வணங்கி உள்ளே வந்தெழுகின்ற ஆசையானது மேன்மேல் பொங்க, மேற்கொண்ட பெருங்காதலினால் உளதாகும் விருப்பம் அளவில் லாததாகத், தாம் குறித்த பூசனையின் கொள்கையினை மேற்கொண்டு, அந்தத் தூய அர்ச்சனையைத் தொடங்குவாராகி, நிஅ

1136. (இ - ள்) வெளிப்படை. தேவதேவராகிய சிவபெருமானது பூசைக்கு, அவர் தாமே உபதேசித்த ஆகமங்களின் உண்மையினையே தலைநின்று, எமது பெருமாட்டியார் அர்ச்சிப்பதற்காக, இயல்பில் வாழும் திருத்தோழியர்களாகிய கொம்பு போன்ற பெண்கள் திருப்பூங் கூடைகொண்டு அணையக் குலவுகின்ற மெல்லிய தளிர் போன்ற அடியிணைகளால் மெல்ல நடந்து அம்பிகாவன மென்னும் திருநந்தன வனத்தில் சிவபெருமானுக்கு ஏற்ற தூயவாசனையுடைய புதிய மலர்களைக் கொய்தனர். நிகூ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1135. (வி - ரை) கண்டபோதில் - தோன்றிடக்கண்ட அப்பொழுதில்.

பெருந்தவப்பயனும் - "மறைய நின்றுளன் மாமணிச் சோதியான், உறவு கோனட் டுணர்வு கயிற்றினன், முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே" (பொதுக் குறுந்தொகை) என்ற அப்பர்சுவாமிகள் திருவாக்கின்படி பெருந்தவத்தின் பயனாக வெளிப்பட்டருளினர் இறைவர் என்பது.

கம்பம் - திருவகம்பம். இறைவனது மாவடி இருக்கை.

வண்டுலாங்குழற் கற்றை முன் தாழ வணங்கி - பெண்களுக்குரிய விதிப்படி ஐந்தங்கங்களும் நிலந்தோய (பஞ்சாங்க நமஸ்காரம்) வணங்கும்போது குழற்கற்றை முன்னே தாழ்ந்தது என்க.

ஆசை - காதல் - விநப்பம் என்பவை ஒன்றினொன்று மேன்மேல் அதிகரிக்கு நிலைபற்றி 751-லும், பிறண்டும் முன்னுரைத்தவை பார்க்க.

பூசனை கொள்கை - பூசை செய்யும் முயற்சியினை. கொள்கை - கொள்ளுதல். கொள்கையினை. இரண்டனுருபு தொக்கது.

புரிவாள் - கொம்பனார்கள் - அணைய - அடியிணை ஒதுங்கி - மலர் கொய்தாள் - என மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க. 58

1136. (வி - ரை) ஆகமத்துண்மையே தலைநின்று - ஆகமநெறியிலே உறைத்து நின்று.

அர்ச்சனை புரிவதற்கு - அர்ச்சித்தலுக்காக. புரிவதற்குப் - பூக்கொய்யப் - பூம் பிடகை கொண்டணைய என்க. அருச்சனை புரிவதற்கு ஆன மலர் என்று கூட்டியுரைப் பதுமாம். அருச்சனை - பூசை.

இயல்பிலவாழ் திருச்சேடியர் - அம்மையாருடன் வந்ததனால் தம்மியல்பாலே வாழ்வடைந்து நின்ற சேடியர். சேடியர் - தோழியர். இவர்கள் அநிந்திதை - கமலினி என்ற இருவர்களும், இலக்குமி, சரசுவதி, இந்திராணி முதலியோரும் ஆவர்.

பூம்பிடகை - திருப்பூங்கூடை. (மூன்று கூடைகளில் நிரப்பிவைத்த காரணத் தால் புத்தனது நூல்களுக்குத் திரிபிடகம் என்ற பெயர் வழங்குவது காண்க.)

அடியிணை ஒதுங்கி - தளிரடிகளானதால் மெல்ல நடந்து என்க. சிறு கற்களுக்கு ஒதுங்கி என்பாருமுண்டு.

அம்பிகா வனம் - அம்மையார் தாமே உளதாக்கிய நந்தனவனம் ஆதலின் இப் பெயர் பெற்றது. சிவபூசைக்குத் தாமே நந்தனவனமமைத்தும், அதில் தாமே ஏற்ற பூக்களைக் கொய்தும் பூசித்தல் வேண்டும் என்பது சிறந்த விதி. அம்பிகை பூக்கொய் யப் பேறுபெற்றதனால் இப்பெயர் பெற்றதென்றலுமாம்.

ஆன - உண்டாயின என்க. ஆன - சிவபூசைக்கான - ஏற்ற - விதித்த - என்றலு மாம்.

ஆன - தூ - நறும் - புது - மலர் என்ற நான்கு அடைமொழிகளாலும் பூசைக்கு அம்மையார் எடுத்த மலர்களின் சிறப்பைக் கூறினர். மலர்கள் நான்கு வகைப்படுத லும் குறிப்பு. இவைபற்றி முருக நாயனார் புராணத்திலுரைத்தவை நினைவுகூர்க. 59

1137. கொய்த பன்மலர் கம்பைமா நதியிற்
குலவு மஞ்சன நிலவுமெய்ப் பூச்சு.
செய்த ருங்கொழுந் தூபதீ பங்கள்
நிறைந்த சிந்தையி னீடிய வன்பின்

மெய்த ரும்படி வேண்டின வெல்லாம்
வேண்டும் போதினி லுதவமெய்ப் பூசை
யெய்த வாகம விதியெலாஞ் செய்தா
ளுயிர்க ளியாவையு மீன்றவேம் பிராட்டி. கூo

(இ - ள்) வெளிப்படை. கொய்த பல மலர்களும், கம்பைமா நதியினது நீரிலுல் குலவும் திருமஞ்சன நீரும், நிலவும் மெய்ப்பூச்சும், நெய்யினையுடைய செழிய தூபதீபங்களும், முதலாக ஆசை நிறைவாகிய சிந்தையில் நீடிப் பெருகும் அன்புடன் உண்மையான பூசைப் படித்தரங்களுக்கு வேண்டிய சாதனங்களை யெல்லாம் அம்மை யார் வேண்டியபோது சேடியர்கள் எடுத்து ஏந்த, மெய்ம்மையான பூசையினைப் பொருந்த ஆகமங்களில் விதித்த எல்லாவற்றையும், உலகங்களை யெல்லாம் பெற் றெடுத்த எம்பிராட்டியார் வழுவாமற் செய்தனர்.

(வி - ரை) கொய்த - முன்பாட்டிற் கூறியபடி கொய்த. விதிப்படி கொய்த என்பது குறிப்பு.

மலர் - மஞ்சனம் - மெய்ப்பூச்சு - தூப - தீபங்கள் - என்ற இவை ஐந்தும் சிவ பூசைக்கு இன்றியமையாத சாதனங்கள் என்பது குறிக்க இவற்றை எடுத்து விதந் தோதினர். இவற்றுள் மூன்றை விடுத்து இரண்டு கூட்டிப் "பத்திரம் புஷ்பம் பலம் தோயம்" என்பர் வடவர். "புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" என்று இதனை இன்னுஞ் சுருக்கியமைத்துக் காட்டினர் திருமூலதேவ நாயனார்.

கம்பைமா நதியிற் குலவு மஞ்சனம் - கம்பையாறு - காஞ்சிபுரத்தின் ஆறு. இப் போது அது நிலத்தின்கீழ் ஓடுவதென்பர். ஆற்றுநீர் திருமஞ்சனத்திற்குச் சிறந்தது; ஆதலின் நதியிற் குலவு என்றார். மஞ்சனம் - திருமேனியாட்டுதற்குரிய நீர்.

நிலவு மெய்ப்பூச்சு - மெய்ப்பூச்சு - சந்தனம்; மரபு வழக்கு. நிலவு - என்றது திருமேனியிற் பொருந்தி நிறைதல் குறித்தது.

நெய்தநம் கொழும் தூப தீபங்கள் - நெய்தரும் தூபம் - நெய்தரும் தீபம் என்று தனித்தனி இயைக்க. நெய்தநம் தூபமாவது குங்கிலியம் முதலியவற்றோடு நெய் யினையும் கூட்டியமைக்கும் தூபப் புகைப்பண்டம். கொழும் தீபம் - செழிப்பான ஒளி விடும் தீபம். நெய்விளக்குக்குச் சிறப்பாயுரிய ஒளி குறித்தது. "விளக்கினுற் பெற்ற வின்ப மெழுக்கினுற் பதிற்றி யாகுந், துளக்கினன் மலர்தொ டுத்தாற் றூயவிண் ணேற லாகும், விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாதும், அளப் பில தீதஞ் சொன்னர்க் கடிகடா மருளு மாறே" (தனித்திரு நேரிசை) என்று அப்பர் சுவாமிகள் இவற்றின் பயனை நன்கெடுத் தருளியிருத்தல் காண்க.

நிறைந்த சிந்தையில் நீடிய அன்பு - சிந்தையின் நிறைவும் அன்பின் பெருக்கும் சிவபூசைக்கு மூலாதாரமாய் அடிப்படையாகியவை. மெய்தநம் படி - படி - பூசைப் படித்தரம். வேண்டும் போதினில் உதவ - பூசைச் சாதனங்களை உரிய காலத்தில் உரியவகையில் எடுத்தேந்த. உதவுதல் - எடுத்து ஏந்துதல். உதவ என்பதற்குச் சேடியர் என்ற எழுவாய் வருவிக்க.

ஆகமவிதி யெலாம் எய்தச் செய்தாள். மெய்தநம் - ஆகமங்களில் விதித்த என்றலுமாம். 60

*1138. கரந்த ரும்பய னிதுவென வுணர்ந்து
கம்ப மேவிய வும்பர்நா யகர்பா
னிரந்த காதல்சே யுள்ளத்த ளாகி
நீடு நன்மைக ளியாவையும் பெருக

வரந்த ரும்பொரு ளாமலை வல்லி
மாறி லாவகை மலர்ந்தபே ரன்பாற்
சிரம்ப ணிந்தெழு பூசைநா டோறுந்
திருவு ளங்கொளப் பெருகிய தன்றே. சுக

(இ - ள்) வெளிப்படை. உயிர்களுக்கு வரம் கொடுக்கும் பொருளாகிய மலை வல்லியார், கைகளைப் பெற்றதனாலுண்டாகிய பயன் சிவபூசை செய்தலேயாகும் என்று உணர்ந்து, திருவேகாம்பரத்தில் எழுந்தருளிய தேவதேவரிடத்துப் பரந்த விருப்பத்தைச் செய்கின்ற திருவுள்ளத்தினை உடையவராகி, நீடும் நன்மைகள் எல்லாம் பெருகத், தலையினால் வணங்கி எழுந்து செய்கின்ற பூசை நாள்தோறும் சிவபெருமானது திருவுள்ளத்துக்கு ஏற்கும்படி அன்றே பெருகியது.

(வி - ரை) கரம் தரும் பயன் இது - உயிர்களுக்கு இறைவன் கைகளைத் தந்தது சிவபூசை செய்து தம்மை அடையும் பொருட்டேயாம் என்பது துணிபு. "வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன்", "வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்த வைத்து", "கண்ணுரக் கண்டுமென் கையாரக் கூப்பியும்", "கடி மாமலர் தூவிநின்று...கைகாள் கூப்பித் தொழீர்" முதலிய திருவாக்குக்கள் காண்க. "தேடித் தொழாதகை மண்திணிந்த, கல்லாம்" (பொன் - அந்- 42) என்று இதனை எதிர்மறை முகத்தால் வற்புறுத்தி யருளினார் எங்கள் கழறிற்றறிவார் நாயனார்.

இது - சிவபூசை செய்தல். உணர்ந்து - தெளிந்த உணர்ச்சியிற் கொண்டு.

நிரந்த காதல் உள்ளத்தளாகி - படிமுறையால் மேல் மேல் வளர்ந்த அன்பு.

நீடு நன்மைகள் யாவையும் பெருகச் - சிரம்பணிந்தெழு பூசை என்று கூட்டுக. அம்மையார் செய்த பூசையின் குறிக்கோளாவது உயிர்கள் எவைக்கும் நீடு நன்மைகள் எல்லாம் பெருகுவதேயாகும் என்பதாம். "உலகை யாளுடையாள்" (1129), "பெண்ணினல்லவள்" (1130), "போகமார்த்த பூண்முலையினாள்" (1131), "உலகனைத்தையு மீன்றாள்" (1134), "மன்னுலகத்துயிர் தழைப்ப" (1135), "உயிர்கள் யாவையும் ஈன்ற எம்பிராட்டி" (1139), என்று முன் கூறியவை எல்லாம் இக்கருத்தை வற்புறுத்துவன என்க.

நீடு நன்மைகள் - சிவனையடையும் தன்மை செய்வன - தருவன. பெருக உயிர்களுக்கு வரம் தரும் எனக் கூட்டியுரைப்பாரும் உண்டு.

வரந்தரும் பொருளாம் மலைவல்லி - உயிர்களுக்கு என்பது வருவித்துரைக்க. வரமாவது - உயிர்கள் சிவபெருமானை அடைந்து இன்பமுறச் செய்தல். அம்மையார் மாயாசத்தியை யுடையராதலின் அது கொண்டு உயிர்களுக்கு ஏற்ற உடம்பும் கரணங்களும் தந்து, அவை இறைவனை அறிந்து பூசித்து, அவைகளும் அவரை அனுபவித்து இன்பமடையும்படி செய்கின்றார். அம்மையாரும் உயிர்களும் இறைவனை அனுபவிக்கும் நாயகிகளாவர். இறைவன் ஆன்ம நாயகன். உயிர்கள் நாயகிகளாக இன்பமனுபவிக்கச் செய்விப்பவர் அம்மையாரே யாவர் என்பது கருத்து.

மாறிலாவகை மலர்ந்த பேரன்பு - மாறு - ஒப்பு. "மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்" (252) என்றது காண்க. அன்பு மலர்ந்தபின் மாறுதலின்றி அதிகமணம் செய்யும் என்ற குறிப்பும் காண்க. கரம் தரும் பயன் இது என உணர்தலும், யாவரும் நன்மையடையும்படி எண்ணுதலும், ஒப்பற்று மேன்மேல் வளரும் அன்

புடைமையும் பூசைக்கு இன்றியமையாதன. அன்பு மலர்தலாவது விரிந்து மேன் மேற் பெருகுதல். 61

1139. நாத ரும்பெரு விருப்பொடு நயந்து
நங்கை யர்ச்சனை செய்யுமப் பொழுதின்
காதல் மிக்கதோர் திருவிளை யாட்டிற்
கனங்கு ழைக்கருள் புரிந்திட வேண்டி
யோத மார்கட லேழுமொன் றுகி
யோங்கி வானமு முட்படப் பரந்து
மீது செல்வது போல்வரக் கம்பை
வெள்ள மாந்திரு வுள்ளமுஞ் செய்தார். சுஉ

(இ - ள்) வெளிப்படை. பெரிய விருப்பத்தோடு மகிழ்ந்து நங்கையார் தம்மைப் பூசை செய்யும் அப்பொழுது, ஏகம்பநாதரும் அவரிடத்துக் காதல் உடையதொரு திருவிளையாட்டின் மூலம் கனத்த குழைகளை அணிந்த அவர்க்கு அருள் செய்யும் பொருட்டு, ஓதப்பெருக்குடைய ஏழுகடல்களும் ஒன்றுகப் பொங்கி வானமும் உள்ளடங்குமாறு மேலே உயர்ந்து செல்வது போலக் கம்பையாற்றில் வெள்ளம் பெருகி வருமாறு திருவுள்ளஞ் செய்தருளினார்.

(வி - ரை) பெருவியப்போடு நயந்து - என மீண்டு முரைத்தது உள்ளன்பின் இன்றியமையாத சிறப்பினை வற்புறுத்தும் பொருட்டு.

நங்கை - நாதர் - நங்கை - நாயகன் (1129) என்றவிடத் துரைத்தவை பார்க்க.

திருவிளையாட்டில் அருள்புரிந்திட வேண்டி - என்று கூட்டுக. இல் - ஆல் என்ற மூன்றனுருபுப் பொருளில் வந்த உருபு மயக்கம். விளையாட்டின் மூலம் என்க. "ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதிமாண்பும், கேட்பான்புகில் அளவில்லை கிளக்க வேண்டா" (திருப்பாசுரம் 4) என்று ஆளுடைய பிள்ளையார் ஆணையிட்டருளியபடி இறைவன் அருள்புரியும் வகை இன்னதென்பது எவர்க்கும் தெரிய வராது. இங்கு அம்மையாருக்கு ஒரு திருவிளையாட்டின் மூலம் அருள்புரியத் திருவுள்ளங் கொண்டனர் என்க.

திருவுள்ளமும் செய்தார் - திருவிளையாட்டில் அருள்புரிய வுள்ளஞ் செய்ததனால் வெள்ளமாம் திருவுள்ளமும் என உம்மை சிறப்பும்மை.

காதன்மிக்க ஓர் திருவிளையாட்டில் - என்றது அவ்விளையாட்டு அம்மையாருக்கு அருள்புரிவதாகவும், அவர்பால் தாம் கொண்டுள்ள காதலின் மிகுந்ததாகவும் உள்ளதென்பது. ஆறுபெருக அம்மையார் தம்மைத் தழுவிக்கொள்ளுமாறு செய்வதனைக் காதன்மிக்க என்றார். ஓர் - ஒப்பற்ற - தனித்த என்க. "விழைந்த கொள்கையினர்" (1141), "வளைத்த மும்புடன் முலைச்சுவ டணிந்தார்" (1143) என்று பின்னர்க் கூறுவனவும் காண்க.

ஆனால் இதனைப் பசுக்களாகிய தேவர் முதலியோர் கொள்ளும் பாசத்தொடர் பாகிய காதலோடொக்க எண்ணி இடர்ப்படுதல் சிவாபராதமாம். என்னை? இக்காதல் உயிர்களை ஈடேற்றும் பொருட்டே சத்தியுடன்கூடி நிற்கும் தத்துவ நிலையினையே குறிப்பதாம். இதன் விளைவினை "உம்ப ரேமுதல் யோனிக ளெல்லாம் உயிரும் யாக்கையும் உருகியொன் றுகி" (1142) எனப் பின்னர் ஆசிரியர் எடுத்துக் காட்டுவதும் காண்க. "உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்தும், கலிநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ", "பெண்பா

லுகத்திலனேற் பேதா யிருநிலத்தோர், விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ" என்று மணிவாசகப் பெருமானர் அறிவுறுத்தியருளியவையுங் காண்க. உயிர்கள் காதல் கொள்வது தாந்தாம் உய்வதன் பொருட்டும், இறைவன் காதல்மிக்க வோர் திருவிளையாட்டினை மேற்கொள்வது உயிர்களின் பொருட்டும் என அறிக.

ஓதமாகடல்—என்பதும் பாடம். 62

1140. அண்ண லாரருள் வெள்ளத்தை நோக்கி
யங்க யற்கண்ணி தம்பெரு மான்மேல்,
விண்ணை லாங்கொள வரும்பெரு வெள்ள
மீது வந்துறு மெனவெருக் கொண்டே
உண்ணி லாவிய பதைப்புறு காத
லுடன்றிருக் கையாற் றடுத்துநில் லாமை
தண்ணி லாமலர் வேணியி னுரைத்
தழுவிக் கொண்டன டன்னையே யோப்பாள். சுங

(இ - ள்) வெளிப்படை. பெருமையுடைய பெருமானர் அருளிய வெள்ளத்தை அழகிய கயல்போலும் கண்களையுடைய அம்மையார் நோக்கி, வானமும் உட்பட மேல் வளர்ந்துவரும் பெருவெள்ளமானது மேல்வந்து அடரும் எனப் பயந்தே, தமது திரு வுள்ளத்திற் பொருந்திய பதைப்புடன் கூடிய காதலோடு, திருக்கையினால் அதனை மேல்வராதபடி தடுக்கவும் அது நில்லாதபடியால், தமக்குத்தாமே ஒப்பாராயின அம்மை யார் குளிர்ந்த சந்திரன் மலர்தற்கிடமாகிய சடையுடைய இறைவரைத் தழுவிக் கொண்டனர்.

(வி - ரை) அருள் வெள்ளம் - அருளிய வெள்ளம் எனவும், அருளாகிய வெள்ளம் எனவும் பொருள்பட நின்றது.

அங்கயற்கண்ணி நோக்கி என்க. நோக்குதல் - ஊன்றிப் பார்த்தல். இது கண்ணின் செயலாதலின் அங்கயற்கண்ணி என்ற சிறப்பாற் கூறினர். இதனால் அவர் நோக்கியது, மீன் தன் சினைகளின்மேற் கருணை நோக்கம் வைத்து அவற்றை முட்டையாகிய சிறைகளினின்றும் விடுவிப்பது போல, இங்கு உயிர்களை வீடு செய்த லினை உட்கொண்டதாம் என்பதும் குறித்தபடியாயிற்று.

மீதுறும் என்ன - தாம் பூசிக்கும் இறைவரது திருமேனியின்மீது பொருந்தி அடர்த்துச் செல்லும் என்று எண்ணி.

வெருக்கொள்ளுதல் - பயமுடையராதல். இவ்வாறு அம்மையாரை வெருட்டு தற்காகவே இறைவனர் திருவிளையாடல் செய்தனர் என்பதனை, "வெள்ளங் காட்டி வெருட்டிட வஞ்சி வெருவி யோடித் தழுவ வெளிப்பட்ட, கள்ளக் கம்பனை" (தக்கேசி-10) என்று ஆளுடையநம்பிகள் இத்தலத்தேவாரத்தில் அறிவுறுத்தியது காண்க.

உள் நிலாவிய பதைப்புறு காதலுடன் - பூசையின் வைத்த காதல் முன் கூறப் பட்டது. அக்காதலே இப்போது பதைப்புற்றதற்கும், தழுவிக் கொண்டதற்கும் காரணமாயிற்றென்பது.

தன்னையே ஒப்பாள் - "பெண்ணினல்லவள்" (1128); மேலும் இறைவர் தனக் குவமை யில்லாத தலைவராதலால் அவரது தேவியாரும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவியாவார் என்பதாம். தன்னையே ஒப்பாள் என்பது சுட்டுப்பெயர்.

தடுத்தும் நில்லாமை - வெள்ளத்தைக் கையினால் தடுத்த செயல் தாம் உலக காரணமாகிய சத்தியுடையராதலால் தாமே அதனைத் தடுத்து நிறுத்தும் ஆற்ற லுடையார் என்ற கருத்து பற்றியது. ஆனால் அது அதனால் தடைபட்டு நில்லாமை இறைவரது அருளினாலாயது என்பார் அண்ணலார் அருள் வெள்ளம் என்று முதலிற் கூறியது காண்க.

தடுக்க நில்லாமை—என்பதும் பாடம். 63

1141. மலைக்கு லக்கொடி பரிவுறு பயத்தால்
மாவின் மேவிய தேவர்நா யகரை
முலைக்கு வட்டொடு வளைக்கையால் னெருக்கி
முறுகு காதலா லிறுகிடத் தழுவச்
சிலைத்த னித்திரு நுதற்றிரு முலைக்குஞ்
செந்த ளிர்க்கரங் களுக்குமெத் தெனவே
கோலைக்க ளிற்றுரி புனைந்ததம் மேனி
குழைந்து காட்டினர் விழைந்தகோள் கையினர். கூச

(இ - ள்) வெளிப்படை. மலையரசன் மகளாராகிய அம்மையார் அன்பின் மிகுதி யினால் கொண்ட பயத்தினால், மாமரத்தின் மூலத்தில் மூளைத்த தேவர் நாயகரை முலையாகிய மலையினோடு வளையணிந்த கைகளினால் நெருக்கி முதிரும் ஆசையினால் இறுகத் தழுவத், திருவிளையாட்டை விரும்பிய கொள்கையினையுடைய சிவபெருமான், வில்போன்ற ஒப்பற்ற நுதலினையுடைய அவரது திருத் தனங்களுக்கும், சிவந்த தளிர்போன்ற திருக்கரங்களுக்கும் மெத்தென்றிருக்கும்படி, கொலைபுரியும் கொடிய யானையின் தோலைப்போர்த்த தமது வலிய மேனியினைக் குழைந்து காட்டினர்.

(வி - ரை) மலைக்குலக்கொடி - குலக் கொடி - குலம் - நன்மையும் சிறப்பும் குறித்து நின்றது ; சிறந்தகொடி. "குலமகள்" முதலிய ஆட்சிகள் காண்க. கொடி - கொடி போன்றவர்.

பரிவுறு பயத்தால் - பயத்திற்குக் காரணம் கூறியவாறு. மேலும் "முறுகு காதலால்" என்பது காண்க. முன்பாட்டில் "பதைப்புறு காதல்" (1140) என்றதும் கருதுக. இச்செயல்களின் உண்டாகிய அன்பினை வற்புறுத்தும் பொருட்டு மீண்டுங் கூறியபடியாம்.

முலைக்குவடு - முலையாகிய மலை ; உருவகம். குவடு - குவடுபோன்ற முலை என உவமத் தொகையாக உரைப்பினுமாம்.

சிலைத்தனித் திருநுதல் - சிலைநுதல். சிலைபோன்ற நுதலினையுடையார். அன் மொழித் தொகை. சிலைநுதலுடைமை பெண்களின் பொது வியல்பாயினும் பெண்ணி னல்லவளாகிய அம்மையாரின் நுதல் ஒப்பிலாத தனிச்சிறப்புடையதென்பதாம். சிவனது அருட்செல்வத்தை அளிப்பதென்பதும் குறிக்கத் தனி - திரு - என்ற அடை மொழிகளை ஏற்குமாறு இடைப்பிறவரலாய் வைத்தோதினர்.

தளிர்க்கரங்கள் - பூசித்தற் பொருட்டுத் தளிர்களை ஏந்தியபடியே நின்ற கரங் கள் என்ற குறிப்பும் காண்க. செழுந்தளிர் என்பது பாடமாயின் செழித்த என்க.

மெத்தெனவே குழைந்து காட்டினர் என்று கூட்டுக. மெத்தெனல் - கடினத் தன்மையின்றி மெதுவாயிருத்தல். ஏகாரம் தேற்றம். அதன் பொருட்டே என்க.

கோலைக் களிற்று உரி புனைந்த தம்மேனி-என்பதனால், யானையுரி வன்மையுடையது ; அதனைப் போர்த்தலால் அவர் மேனி அதனினும் வன்மையாயது ; ஆயினும் அது வலிமை நீங்கி மென்மையுடையதாக என்பதாம்.

மேனியும் - என்று சிறப்பும்மை தொக்கதென்று கொள்ளுதலுமாம்.

விழைந்த கோள்கையினூர் - மேனி குழைந்து காட்டியதற்குக் காரணம் கூறியபடி. 64

*1142. கம்பர் காதலி தழுவமெய் குழையக்
கண்டு நிற்பவுஞ் சரிப்பவு மான
உம்ப ரேமுத லியோனிக ளெல்லா
மூயிரும் யாக்கையு முருகியோன் முகி
"எம்பி ராட்டிக்கு மெல்லிய ரானு
ரென்று மேகம்ப" ரென்றெடுத் தேத்த
வம்பு லாமலர் நிறையவிண் பொழியக்
கம்பை யாறுமுன் வணங்கிய தன்றே. சுரு

(இ - ள்) வெளிப்படை. தமது காதலியாராகிய அம்மையார் தழுவ ஏகம்பவாணர் மெய்குழைந்ததனைக் கண்டு, நிற்பனவும் அசைவனவுமாகிய தேவர் முதல் எழுவகைப்பட்ட உயிர்வருக்கங்கள் எல்லாம் உயிரும் உடம்பும் உருகி ஒன்றுகி, "என்றும் ஏகம்பர் எமது பிராட்டிக்குத் தழுவக் குழைந்த திருமேனியுடையாராயினர்" என்று புகழ்ந்து துதிக்க, மணம் வீசும் கற்பகப் புதுப்பூக்களை வானவர் நிறையப்பொழிய, அப்பொழுதே கம்பையாறு வணங்கித் தன் வெள்ளம் தணிந்தது.

(வி - ரை) காதலி தழுவக் கம்பர் மெய்குழைய - என்க. கண்டு - உணர்ந்து. உயிர்கள்தோறும் உயிர்க்குயிராய் ஒளித்து நின்ற கள்வர் இறைவராதலின் அவர் தழுவக் குழந்தையை எல்லாவுயிர்களும் உணர்ச்சியிற் கண்டன என்பதாம்.

நிற்பவும்.....ஒன்றுகி - நிற்பவும் சரிப்பவும் ஆன அசர சர பேதமான உயிர். இயங்கியல் நிலையியற் பொருள்கள். தாவர - சங்கமங்கள் என்பர். ஆன - யோனிகள் என்க. நிற்பன சரிப்பன என்றது நின்றலில் - நிற்றலும் புடைபெயர்தலும் - என ஒரு காரணம் பற்றிய உயிர்களின் பாகுபாடு.

தேவரே முதல் - என்றது தேவர் மனிதர் முதலிய பிறப்புப் பற்றி எழுவகையாகப் பகுக்கப்படும் பாகுபாடு.

உயிரும் யாக்கையும் உருகி ஒன்றுகி என்றது - ஊனும் உருகிற்று ; அதனுள் நின்ற உயிரும் உருகிற்று என்றதாம்.

ஒன்றுகி - உருகுதலாகிய ஒரே உணர்ச்சியின் வயப்பட்டவையாகி. "அவையே தானே யாயிரு வினையிற், போக்கு வரவு புரிய வாணையின், நீக்க மின்றி நிற்கு மன்றே" (சிவஞானபோதம் 2 - சூத்) என்ற ஞான நூலின்படி எல்லாவுயிருள்ளும் அவையே யாகிக் கலந்து இறைவர் நிற்பவராதலின் அவை யாவும் அக்குழைதலை யடைந்து உருகி ஒன்றுயின என்க. வைகையாற்றின் கரையில் பாண்டியனது கைப் பிரம்பினாலும், கயிலைமலைச் சாரலில் அருச்சுனனது வில்லாலும் இறைவனூர் அடியுண்டபோது, அவ்வடி எல்லா உயிர்கள் மேலும் பட்டன என்ற சரிதங்களின் வரலாறும், இறைவன் நாயகியாரைப் பிரிந்து யோகத்திலிருந்த காலத்து "வில்லாடன் மார னிருப்பவும் யோகம் விளைத்தவங்காட்டி புல்லா திருந்தன வெல்லா வுயிருந்தம் போகத்தையே" என்ற வரலாறும் இங்கு நினைவு கூர்க.

மோனிகள் எடுத்தேத்த - என்றது உயிர்கள் போற்றிய செய்தி. விண் பொழிய- என்றது தேவர்கள் போற்றி மலர்மாரி பொழிந்த செய்தி. விண் - விண்ணுலகத்தவர். ஆகுபெயர்.

கம்பையாறு முன் வணங்கியது - வெள்ளம் தணிந்தது. பிழை பொறுக்கும்படி அம்மையாரை அடி வணங்கிற்று என்பாருமுண்டு. 65

1143. பூதி யாகிய புனிதநீ றுடிப்
பொங்கு கங்கைதோய் முடிச்சடை புனைந்து
காதில் வெண்குழை கண்டிகை தாழக்
கலந்த யோகத்தின் மருவிய கருத்தால்
ஆதி தேவனு ராயுமா தவஞ்சே
யவ்வரங் கொலோ வகிலமீன் றளித்த
மாது மெய்ப்பயன் கோடுப்பவே கொண்டு
வனைத்த மும்புடன் முலைச்சுவ டணிந்தார். சுசு

(இ - ள்) வெளிப்படை. சிறந்த செல்வமாகிய தூய திருநீற்றினைத் திருமேனி நிறைய அணிந்து, பொங்கிவரும் கங்கைநதி தோய்ந்த சடையினை முடியாகக் கட்டிக் கொண்டு, காதில் வெள்ளிய சங்கக் குழையும் உருத்திராக்கக் கண்டிகையும் தாழ அணிந்து, கூடிய யோகத்திற் (கூட்டத்திற்) கருத்து வைத்ததனால் ஆதிதேவராகிய சிவபெருமான், அறிவோர்களால் ஆராயத்தக்க மாதவம் செய்யும் அந்த மேன்மை தானே? எல்லாவுலகங்களையும் பெற்றெடுத்த அம்மையார் மெய்ப்பயன் கொடுப்பவே அதனைக் கொண்டு அவரது திருமேனியின் அடையாளங்களாகிய வளைத்தழும்புடன் முலைச்சுவடும் அணிந்து கொண்டனர்.

(வி - ரை) பூதி - விபூதி சிறந்த செல்வம். திருநீறே எல்லாவற்றினும் சிறந்த செல்வமாகும். "பூதி : பூதிரசுவரியம்" என்பது வேதம். இறைவர் நீறணிந்ததனைப் "புஸ்மோத்தூளித சர்வாங்கம்" என்று வேதம் துதிக்கும்.

சடைமுடி புனைந்து - என்க. சடையினை முடியாக மேல் முடித்துக்கட்டி.

குழையும் கண்டிகையும் தாழ - என்க. எண்ணும்மைகள் தொக்கன. காதிலும் உருத்திராக்கம் அணிவது உண்டு. தாழ அணிந்து என்னும் பொருளைத் தருதலால் தாழ என்பது உபசார வழக்கு.

வெண்குழை - சங்கக்குழை. தூய்மை குறித்தது. கண்டிகை - கண்டத்தில் தரிப்பது.

கலந்த யோகத்தின் மருவிய கருத்தால் மாதவம் செய் அவ்வரம் - கலந்த யோகம் - அம்மையாருடன் கூடியநிலை. "இளங்கொம் பனாளோ டிணைந்தும் பிணைந்தும்" (ஆளுடையபிள்ளையார் தேவாரம்) என்றபடி பிரிந்திருந்த தாம், முன்னர்க்கூடியிருந்த அக்கூட்டத்தினில் பொருந்திய கருத்தினால் தவஞ்செய் என்க. தவஞ் செய்வதுபோலிருந்தமைக்குக் காரணங் கற்பித்தவாறு.

ஆயுமாதவம்-அறிஞர் இத்தவக் கோலத்தின் காரணத்தை ஆராயநின்றது என்க.

நீறுபூசுதல் - சடைமுடி புனைதல் - குழையும் கண்டிகையும் தாழ அணிதல் - தனியிருத்தல் முதலிய இவை தவக்கோலங்கள். அம்மையார் தவஞ்செய்து அதன்பயனாக இறைவனைப் பெற்றுத் தழுவிக்கொண்டனராக, அவ்வாறு தழுவப் பெறுவதற்கு அப்பனாரும் தவம்செய்து அந்தப்பயன் பெற்றனரோ என்று சொல்லும்படி.

அவ்வரங்கொலோ - ஓகாரம் ஐயப்பொருள் தந்து நின்றது. வரம் - மேன்மை குறித்தது. "நங்கையென் றேற்றாள் கொல்லோ நம்பியைத் தினைத்தற் கென்பார்,

மங்கையை மணப்பா னென்னே வள்ளலு நோற்ற னென்பார்" (திருமண - 120) என்ற திருவிளையாடற் புராணமும், இவ்வாறு வருவன பிறவும் காண்க.

மெய்ப்பயன் - மெய் - திருமேனி; திருமேனி தீண்டித் தழுவும் பயன். மெய்-உண்மை; மாதவத்துக்குரிய உண்மையான பயன் என்ற பொருள் குறிப்பதும் காண்க. உண்மைப் பயனுவது - இருவரும்கூடி உயிர்களுக்குச் செய்யும் திருவருள்.

அணிந்தார் - அணியாக என்றைக்கும் மேற் கொண்டனர். "துடிகொணே ரிடையாள் சுரிகுழன் மடந்தை துணைமுலைக் கண்கடோய் சுவடு, பொடிகொள் வான் றழலிற் புள்ளிபோ லிரண்டு பொங்கொளி தங்குமார் பினனே" (அருட்பத்து-5) என்ற திருவாசகமும், "கொழும்பவளச் செங்கனிவாய்க் காமக் கோட்டி கொங்கை யிணை யமர்பொருது கோலங் கொண்ட தழும்புளவே" (அதிகை - அடையாளத் திருத்தாண்டகம் - 10) என்ற தேவாரமும் காண்க.

"காமனை முனிந்து நெடுஞ்சடை தரித்துக் கவின்றகல் லாடைமேற் புனைந்து, யாமெலாம் வழுத்துந் துறவியென் றிருந்து மொருத்திதன் னிளமுலைச் சுவடு, தோமுறக் கொண்டா ரெனச்சிறை யிடல்போற் சுடர்மனக் குகையுளே கம்பத், தோமெனும் பொருளை யடக்கி யாநந்த முறுகர்வா ழிடம்பல வுளவால்" என்று காஞ்சிப் புராணத்தே எமது மாதவச் சிவஞான யோகிகள் இக்கருத்தையே அழகுற விரித்துப் புனைந்தமை இங்கு நினைவு கூர்க. 66

1144. கோதி லாவமு தனையவண் மூலைக்குக்
குழைந்த தம்மண வாளநற் கோலம்
மாது வாழவே காட்டிமு னின்று
"வரங்கள் வேண்டுவ கொள்க"வென் றருள
வேத காரண ராயவே கம்பர்
விரைம லர்ச்செய்ய தாமரைக் கழற்கீ
ழேத நீங்கிய பூசனை முடிந்த
தின்மை தானறி விப்பதற் கிறைஞ்சி, கூஎ

1145. அண்டர் நாயக ரெதிர்நின்று கூற
மளவிலு லஞ்சி, யஞ்சலி கூப்பிக்,
"கொண்ட விற்றையென் பூசனை யின்னுங்
குறைநி ரம்பிடக் கொள்க"வென் றருள,
வண்டு வார்குழன் மலைமகள் கமல
வதன நோக்கி, யம் மலர்க்கணைற் றியின்மேல்
மூண்ட நீற்றர்"நின் பூசனை யென்று
முடிவ தில்லைநம் பா"லென மொழிய, கூஅ

1146. "மாறி லாத விப்பூசனை யென்று
மன்ன வெம்பிரான் மகிழ்ந்து கொண்டருளி,
யீறி லாதவிப் பதியினு ளெல்லா
வறமும் யான்செய வருள்செய வேண்டும்;
வேறு செய்வினை திருவடிப் பிழைத்த
லொழிய விங்குளார் வேண்டின செயினும்
பேறு மாதவப் பயன்கொடுத் தருளப்
பெறவும் வேண்டு"மென் றனள்பிறப் பொழிப்பாள். கூக

1144. (இ - ள்) கெளிப்படை. குற்றத்தை நீக்கும் அமுதம்போன்ற அம்மையாரது திருமுலைக்குக் குழைந்த தமது நல்ல மணவாளத் திருக்கோலத்தை அம்மையார்

வாழவே காட்டி, முன்னே நின்று, இறைவனுர் "வேண்டுவனவாகிய வரங்களைக் கொள்க" என்றருளிச்செய்யக், குற்றம் நீங்கிய பூசனை இன்னமும் முடிந்திலாமையை அறிவிப்பதற்காக வேதகாரணராகிய திருவேகம்பருடைய வாசனையுடைய செந்தா மரை போன்ற திருவடிகளின்கீழ் வணங்கி, சுஎ

1145. (இ - ள்) வெளிப்படை. தேவதேவருடைய எதிரேநின்று சொல்கின்ற அளவினுல், அஞ்சிக், கைகளைக் கூப்பிக்கொண்டு, "தேவரீர் ஏற்றுக்கொண்ட, எனது இன்றையநாளின் பூசனையில் இன்னும் எஞ்சிநின்ற பகுதியினையும் நிரம்பச் செய்வ தனை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்" என்று விண்ணப்பித்தருளி, வண்டுகள் மொய்த்த வார்குழலையுடைய மலைமகளின் தாமரைபோன்ற திருமுகத்தைப் பார்த்து, அந்த மலர்போன்ற கண்ணினையுடைய திருநெற்றியின்மேல் திரிபுண்டரமாகத் தரித்த திருநீற்றினையுடைய பெருமானுர் "நம்மிடத்து உனது பூசனை என்றைக்கும் முடிவ தில்லை" என்று மொழிய, சுஅ

1146. (இ - ள்) வெளிப்படை. "எம்பிரானே! முடிவில்லாத இந்தப் பூசனை என்றைக்கும் நிலையாக நிகழத் தேவரீர் மகிழ்ந்து ஏற்றுக்கொண்டருளி, இறுதியில் லாத இந்தத் தலத்தினுள் எல்லா அறங்களையும் நான் செய்யும்படி அருள்புரிய வேண்டும்; இங்குள்ளவர்கள் திருவடிப் பிழைத்தலாகிய சிவாபராதமொன்றொழியச் செய்யும் வேறுகிய எந்தச் செயல்களையும் தாம் வேண்டுவனவற்றை வேண்டியவாறே செய்தாலும் அவற்றுக்குப் பேறு மாதவப் பயனுக அருளிச்செய்வதனை நான் பெறவும் வேண்டும்" என்று உயிர்களின் பிறப்பொழிப்பதனையே கருத்துட்கொண்ட அம்மை யார் வரங் கேட்டருளினர். சுக

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

1144. (வி - ரை) **கோது இலா அழது அனையவள்** - அழது - ஒருவாறு சாதலை நீக்குவது. **கோது** - இங்கு இறத்தல் பிறத்தல்களுக்குக் காரணமாகிய மூலமலம் குறித்து நின்றது. அழது என வாளா கூறின் அது உவமையாகாதென்பார் கோதிலா அழது என்றார். இலா - இல்லையாகச் செய்கின்ற. "பிறப்பொழிப்பாள்" என இக் கருத்தையே 1146-ல் விரித்துக்கூறுதல் காண்க.

**மணவாள நல் கோலம்** - கணவராகிய நல்ல கோலம். நல் என்ற அடை மொழி இக்கோலங் கொண்டதனுல் உயிர்கள் யாவையும் நன்மைபெற்று உய்யச் செய்வது குறித்தது.

**மாது வாழவே** - மாது வாழ்தல் என்றது அவர் பெற்றெடுத்து வளர்க்கும் உயிர்கள் யாவையும் வாழும்பொருட்டு என்ற கருத்தினை உள்அடக்கி நின்றது. "ஆகம விதியெலாஞ் செய்தா, ஞயிர்கள் யாவையு மீன்றவெம் பிராட்டி" (1137) என்ற கருத்தும் காண்க.

**காட்டி முன்நின்று** - சிவலிங்கத் திருமேனியினுள் மறைந்துநின்ற நிலையினின்றும் வெளிப்பட்டுக் கயிலையில் வீற்றிருந்த திருக்கோலத்தைக்காட்டி என்க. முன்னர் "வந்து தோன்றினுர்" (1134) என்றது சிவலிங்கத் திருமேனியைத் தோற்றுவித்தல் குறித்தது.

**ஏதம்நீங்கிய பூசனை** - மந்திரம், சாதனம் முதலிய எவ்வாற்றினும் குறைவின்றி நிகழும் பூசை.

**பூசனை முடிந்த தின்மைதான் அறிவிப்பதற்கு** - நாதனுர் அருளியபடி வரங் கேட்பதற்குரிய காலம், பூசை முடிந்த நிலையாமாதலின் அம்முடிபு இன்னும் நிகழ வில்லை என்று அறிவிப்பதற்காக. வரங் கேட்கவேண்டில் பூசைமுடிபிற் கேட்டல் வேண்டுமென்ற மரபினை உட்கொண்டு அதனை அறிவிக்க என்பதாம். பூசையினிடை

யில் கம்பையாறு பெருகவும், தாம் இறைவரைத் தழுவவும், அவர் அதற்குக் குழைந்து வளைச்சுவடும் முலைச்சுவடும் அணிந்த கோலங் கொண்டு தோன்றவும் கூடியதனால் பூசனை முடியாது நின்றதென்பது.

இறைஞ்சி - "வரங் கொள்க" என்றருளிய இறைவர்பால், வரங்கொள்ளாது மற்றும் இதனை அறிவிக்கப்புகுதலாலும், அவரறியாததொன்றைத் தாம் அறிவிக்கப் புகுதல்போல இது நிற்குமாதலாலும், இறைவரிடத்தும் பெரியோரிடத்தும் எதனையும் விண்ணப்பம் செய்யவேண்டில் வணங்கிப் பின் கூறுதல் மரபாதலாலும் இறைஞ்சினார் என்க. பின்னரும் "அஞ்சி அஞ்சலிகூப்பி" (1145) என்பது காண்க. 67

1145. (வி - ரை) எதிர்நின்று கூறும் அளவினில் அஞ்சி - அவர் எதிரேநின்று வேறு மறுமொழி சொல்லப் புகுவதனால் அஞ்சி.

கொண்ட - ஏற்றுக்கொண்ட. இதுவரை செய்த பூசையின் பகுதியை ஏற்றுக் கொண்டமை, அவர் கோலங்காட்டி வெளிப்பட்டருளியதனாலும், வரங்கொள்க என்றருளியதனாலும் அறியவந்தமையால் கொண்ட என்றார். இவ்வாறன்றி கொண்ட - நான் மேற்கொண்ட என்றுரைப்பினு மமையும்.

இன்னும் குறைநிரம்பிடக் கொள்க - வரங் கேட்டுப் பெறுதலினும், பூசை முட்டில்லாது நிறைவேறுவதனையே பெரிதும் விரும்புவர் பெரியோர் என்ற குறிப்பும் காண்க.

நீன் பூசனை என்றும் முடிவது இல்லை நம்பால் - நீயும் நானும் நித்தியர்கள்; நீ பெற்றெடுத்த உயிர்களின் வாழ்வு கருதிப்பூசை செய்கின்றாய்; அந்த உயிர்களும் நித்தியர்கள்; அவர்களின் பொருட்டு இப்பூசையின் பயனும் நாமிருவரும் செய்யும் திருவருளும் நித்தியமாய் நிகழ்வது; ஆதலின் உன் பூசையும் முடிவில்லாது என்றைக்கும் நிகழத்தக்கது என்றபடி. இக்கருத்துப்பற்றியே மேல்வரும் பாட்டில் இத்திருவருளினை ஏற்று, "மாறி லாதவிப் பூசனை என்றும் மன்ன எம்பிரான் மகிழ்ந்து கொண் டருளி" என்று அம்மையார் கேட்கும் வரங்களுள் முதலாவதாக இதனைக் கேட்டருளியதும் காண்க.

குறை நிரம்பிடக் கொள்ளுதலாவது பூசையின் எஞ்சிய குறைப்பகுதி நிரம்பு மாறு செய்து முடிக்க அதனை ஏற்றுக்கொள்ளுதல். குறையாயிருத்தல் முற்றுப்பெற.

அம்மலர்க்கண் நெற்றி - அந்தக் கமலம் போன்ற கண்ணினையுடைய நெற்றி. நெற்றிக்கண் நெருப்பாதலாற் முமரை போன்ற சிவப்பு நிறமும், மேலேழுக்கி குவிந்திருத்தலால் தாமரை போன்ற வடிவும் உடைமையால் அம்மலர்க்கண் என்றார். மெய்யும் உருவும்பற்றி வந்த உவமம். "எரியாய தாமரைமே லியங்கி னரும்" (தாண்டகம் - இடைமருது - 7) என்றது காண்க. அந்தக்கமலம் என்று அகரம் முன்னறிசுட்டு. நோக்கிய என்று பெயரெச்சமாகக் கொண்டுரைப்பாருமுண்டு.

முண்டம் - திரிபுண்டரமாகிய. "திருநீற்று முண்டத்தொளித் தழைப்பு" (508) "முண்டவேதியர்" (547) "திருமுண்டம் தீண்டமாட்டாது அஞ்சுவார்" (திருவாசகம் - அச்சப்பத்து - 9) முதலியவை காண்க.

அன்பினலஞ்சி—என்பதும் பாடம். 68

1146. (வி - ரை) மாறு - கெடுதல்-முடிதல். மாறு - மாறுபாடு என்று கொண்டு மனம் - மொழி - மெய் என்ற மூன்றின் தொழிலும் பிறழாத என்றும், மாறு - கைமாறு என்று கொண்டு கைம்மாறு கருதாத - கைம்மாறு செய்ய இயலாத - என்றும், உரைப்பினுமமையும். மாறு இலா - ஒப்பற்ற என்று கொண்டு எல்லாவற்றிலும் சிறந்த சிவபூசை என்றுரைப்பாருமுண்டு.

என்றும் மன்ன - "என்றும் முடிவதில்லை" (1145) என முன்னர் அருளினாதலின் அவ்வாறு முடிவில்லாத இப்பூசனை நிலைத்திருக்கும்படி என்க.

எம்பிரான் - எம்பிரானே !; அண்மை விளி. எம்பிரானே ! - தேவரீர்-கொண்டு அருளி - அருள் செயவேண்டும் என்று கூட்டிமுடிக்க.

ஈறு இலாத இப்பதி - "ஈறுசேர் பொழுதினு மிறுதி யின்றியே, மாறிலா திருந் திடும் வளங்கொள் காஞ்சி" என்று கந்தபுராணமுடையார் இச்சொல்லையும் பொருளையும் விரித்தமைத்த ஆட்சியினையும் காண்க.

இப்பதியினுள் எல்லா அறமும் யான் செயவேண்டும் - உலக நாயகராகிய சிவபெருமானுடன் கூடித் தாம் நடத்தும் இல்லறத்தினுல் எல்லா உயிர்களையும் காத்தல் கடனுதலானும், உலகத்தில் இல்லற வாழ்வுடைய தம் மக்களுக்கு வழிகாட்டுதல் தமது கடனுதலானும் இவ்வாறு வரங்கேட்டனர் என்ற குறிப்பும் பெறப்படும். "மனையறம் பெருக்குங் கருணையினுல்" (1148) என்றது காண்க. "இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு, நல்லாற்றி னின்ற துணை", "துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு, மில்வாழ்வா னென்பான் றுணை", "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க ருனென்றுங், கைம்புலத்தா றோம்ப றலை" (திருக்குறள்) என்று வரும் அறநூல் விதிகள் காண்க. இப்பதியினுள் - முத்தித்தலங்களாகிய ஏழனுள்ளே சிறந்ததாகிய இந்தப் பதியினுள் என்பது குறிப்பு.

செய் வேறு வினை - என்க. வேறு - நூல்களானும் ஆன்ருேராசாரத்தானும் விதித்தவற்றுக்கு வேருக - மாருக.

திருவடிப் பிழைத்தல் - சிவநிந்தை, அடியார் நிந்தை, வேதசிவாகமநிந்தை முதலாயின. இவை சிவாபராதங்கள் எனப்படும் தீர்வில்லாத குற்றங்களாகி, இவற்றைச் செய்தோரைத் தக்கன் போலத் தலையிழத்தல் முதலிய கொடுந்தண்டனைகளுக்கும், கொடு நரகவேதனைக்கும் உள்ளாக்கும் என்பது உண்மை நூற்றுணிபு. இவை உய்தியில் குற்றமெனப்படும். ஆதலின் திருவடிப் பிழைத்தலோழிய என்று இவற்றை விலக்கி, ஏனைய வாகிய வேறு செய்வினை என்ருர். ஒழிய-நீங்கலாக. "பிழைப்ப ஞகிலுந் திருவடிப் பிழையேன்" என்று ஆளுடைய நம்பிகள் காட்டியருளியதும் காண்க.

வேறுவினை வேண்டின செயினும் - என்று கூட்டுக. வேண்டிய - விதிவிலக்குகளை எண்ணுது தம் கருத்துக்கிசைந்தவற்றையே செய்தாலும்.

மாதவப்பயன் கொடுத்தருளப் பெறவும். "செய்வோர் செய்திப் பயன் வினைக்கும்செய்" என்றபடி செய்வினைக்குத் தக்கபயன் தருதல் என்பது வினைப்பகுதியின் பொது நியதியேயாயினும், இப்பதியில் தேவரீரது அருள் விசேடத்தால் செய்வினைகள் எத்தன்மையனவே யாயினும் எல்லா வினைகளுக்கும் மாதவப் பயனையே கொடுத்தருள வேண்டுமென்றதாம்.

பிறப்பு ஒழிப்பாள் - உயிர்களின் பிறப்பினை ஒழிப்பவராகியவர். யாவர்க்கும் தாயாதலின் தமது பிள்ளைகளின் பொருட்டு இவ்வாறு வரங் கேட்டருளினர் என்று குறிக்க இத்தன்மையாற் கூறினர்.

இங்ஙனம் அம்மையார் இறைவனிடத்து உயிர்களின் பொருட்டுக் கேட்ட வரங்கள் மூன்ருகும்: அவை (1) தமது சிவபூசனை என்றும் மன்ன, அதனை இறைவன் ஏற்றுக்கொண்டருளுதலும்; (2) காஞ்சிப்பதியில் தாம் எல்லா அறங்களையும் செய்ய அருளுதலும்; (3) காஞ்சியில் வாழ்வோர், சிவாபராதம் நீங்கலாக, வேறு எவ்வினை செய்யினும் மாதவப்பயன் கொடுத்தருளுதலும் என்பனவாம். 69

1147. விடையின் மேலவர் மலைமகள் வேண்ட,
விரும்பு பூசனை மேவிவீற் றிருந்தே,
யிடைய ருவறம் வளர்க்கும்வித் தாக
விகப ரத்திரு நாழிநெல் லளித்துக்,

கடைய ராகியு முயர்ந்தவ ராயுங்
காஞ்சி வாழ்பவர் தாஞ்செய்தீ வினையுந்
தடைப டாதுமெய்ந் நெறியடை வதற்காந்
தவங்க ளாகவு முவந்தருள் செய்தார். ஏ0

(இ - ள்) வெளிப்படை. மலைமகள் இவ்வாறு வேண்ட, விடையினை ஊர்ந்து வருபவராகிய சிவபெருமான் அவர் விரும்பிய பூசனையின் கண்ணே பொருந்தி வீற்றிருந்து, அறங்களையெல்லாம் எக்காலத்தும், இடையறாது வளர்க்கும் வித்தாக இக பரங்களுக்குரித்தான இருநாழி நெல்லை அளித்துக், கடையவர்களாகியும் உயர்ந்தவராகியும் காஞ்சிமா நகரத்தில் வாழ்கின்றவர்கள் செய்கின்ற தீவினைகளும் தடையின்றி மெய்ந்நெறியினை அடைவதற்குத் துணைசெய்யும் மாதவங்களாகப் பலிக்கவும் மகிழ்ந்து வரங்கொடுத்தருளினார்.

(வி - ரை) விரும்பு பூசனை மேவி வீற்றிருந்தே - அம்மையார் விரும்பிச் செய்த பூசனையினுள் அமர்ந்து இருந்தே. "முதிர்ந்த பற்று முற்றச்சும், கோள மதனினுண்ணிறைந்து குறித்த பூசை கொள்கின்றார்" (சண்டீசர் - புரா - 36) என்றது காண்க. இது அம்மையார் வேண்டிய முதலாவது வரத்தினை அளித்தவகை.

இடையற...அளித்து - இது அம்மையார் வேண்டிய இரண்டாவது வரத்தினை அளித்தவகை. எல்லா அறங்களையும்.நான் இப்பதியில் செய்தல் வேண்டும் எனச் கேட்டருளினாதலின், எல்லா அறங்களையும் வளர்த்தற்கு வித்தாக - மூலமாக - இருநாழி நெல்லை அளித்தனர் என்க. இக பரத்து இருநாழி - இகத்தைப் பற்றிய அறங்களுக்கு ஒரு நாழியும், பரத்தைப்பற்றிய வறங்களுக்கு ஒருநாழியும் ஆக இருநாழிநெல் அளித்தனர் என்பது. பரத்துக்குப் படைப்பும், இகத்துக்கு உணவும் நெல்லினைக் கொண்டே அமைதலால் எல்லா அறங்களையும் செய்தல் வேண்டிய அம்மையார்க்கு அறவனார் நெல் அளித்தனர். வித்தினுல் விளைவு பெருகி யுணவாகி உலகங்காக்குமதினை உணவின் வித்து என்னுது அறம் வளர்க்கும் வித்து என்ற கருத்துமிது. உயிர்கள் உணவுண்டு வாழ்வதெல்லாம் அறத்தின் பொருட்டே என்பதும் குறிப்பு. "உனக் காண்டு தோறும், நல்வாய்மை யறம்வளர்க்கும் வித்தாநெல் லிருநாழி தருகே மந்த, நெல்லாலே யிகபரத்து முயிர்ப்பைங்கூழ் தழைகவென நிறுவல் செய்தார்" (தழுவக்குழைந்த படலம் - 426) என்று காஞ்சிப்புராணம் இதனை விரித்துரைத்தது.

கடையராகியும்...தவங்களாகவும் - இது அம்மையார் வேண்டிய மூன்றாவது வரத்தினை அப்பனார் அளித்தவகை. கடையராகியும் உயர்ந்தவராகியும் - கடைமையும் உயர்வும் குலம், கல்வி, ஒழுக்கம், அறிவு முதலிய எல்லாவகையானும் கொள்க. "நலமில ராக நலமதுண் டாக நாடவர் நாடறி கின்ற, குலமில ராகக் குலமதுண் டாகத் தவம்புரி குலச்சிறை" (புறநீர்மை - திருவாலவாய் - 6) என்ற ஆலுடையபிள்ளையார் திருவாக்குக் காண்க. தாம்செய் தீவினையும் - உம்மை, காஞ்சி வாழ்வோர் தீவினை செய்யார்; தவறி ஒருவேளை செய்யநேரினும் என்பது குறித்தது. என்னை? "தீயவென்பன கனவினு நினைவிலாச் சிந்தைத், தூய மாந்தர்வாழ் தொண்டைநாட் டியல்பு" (1124) என நாடு முழுமைக்கும் கூறிய பொதுவுரை, சிறப்பாகக் காஞ்சித்திருநகரகத்தும் உரியதாகும். ஆயின் காஞ்சிவாழ்பவர் தீவினை செய்யுமா றென்னையோ? எனின், மெய்ம்மறந்து செய்தல், பிறர்சார்புபற்றிச் செய்தல், தம் வசமிழந்து செய்தல், சிவச் சார்பில்லாப் புறச்சமயத்தோர் - புறநாட்டினர் இங்குவந்து செய்தல் முதலாயின நிகழ்தற் கிடமுண்டாமாதலின், அவர்கள்மேல் வைத்த கருணையினுல் அத்தீவினையும் மாதவப்பயன் றரவேண்டினார் என்க. "நன்றியில் சமயத்தி லுள்ளோர்" (திருஞான.

புரா - 1085), "தேற்ற மில்சமண் சாக்கியத் திண்ணரிச் செய்கை, யேற்ற தன்றென வெடுத்துரைப்பார்" (திரு 1091) என்றவை முதலியன இங்கு நினைவு கூர்தற்பாலன. "அருளப் பெறவும்" (1146) என்ற உம்மையின் குறிப்பும் இது.

**தீவினையும் - மெய்ந்நெறி யடைவதற்கு ஆம் தவங்களாகவும்** - தீவினை நல்வினை யாகாது என்ற நியதி பிழையாமல் மெய்ந்நெறி யடைவதற்காக முயலும் சாதன மாகிய தவங்களாயின என்க.

**விடையின் மேலவர்** - "விடையின்மேல் வருவானை" (சீகாமரம் - வன்பார்த் தான் பனங்காட்டூர் - 1) என்ற ஆளுடைய நம்பிகள் தேவாரம் இங்கு நினைவுகூர்தற் பாலது. வரந்தர வருவார் இறைவர் விடையினை ஊர்ந்துவந்தனர் என்ற குறிப்புமாம். அறந்தர வருவார் அறவுருவாகிய விடையின்மேல் வந்தார் என்ற குறிப்புமாம்.

முன் பாட்டிற் கேட்ட மூன்று வரங்களையும் ஒருங்கே கொடுத்ததனை இப்பாட் டில் அடுத்துக் கூறியது இறைவனது அருட்பெருக்கின் விரைவு குறித்தது. "நாவாய் அழைத்த ஒலி ஒலி மாறிய தில்லையப்பாற், றீயா யெரிந்து பொடியாய்க் கழிந்த திரி புரமே" (திருவிருத்தம் - பொது) என்ற அப்பர் சுவாமிகள் தேவாரம் காண்க.

**யார்க்கும் வித்தாக—ஆக்கும் வித்தாக—என்பனவும் பாடங்கள்.** 70

*1148. எண்ண ரும்பெரு வரங்கண்முன் பேற்,றங்
கெம்பி ராட்டிதம் பிரான்மகிழ்ந் தருள
மண்ணின் மேல்வழி பாடுசெய் தருளி,
மனைய றம்பெருக் குங்கரு ணையினு
னண்ணு மன்னுயிர் யாவையும் பல்க
நாடு காதலி னீடிய வாழ்க்கைப்
புண்ணி யத்திருக் காமக்கோட் டத்துப்
போலிய முப்பதோ டிரண்டறம் புரக்கும். எக

(இ - ள்) வெளிப்படை. இவ்வாறு எண்ணுதற்கும் அரியவாயின பெரிய வரங் களைப் பெற்றனராகி, அங்கு எமது பெருமாட்டியார், தமது பெருமான் மகிழ்ந்தருளும் படி இவ்வுலகத்திற் பூசை செய்து அப்பயனை உயிர்களுக்கு அருளியதோடு, இல்லற ஒழுக்கத்தை உலகிற் பெருகச் செய்யும் கருணையினால், நிலைபெற்ற உயிர்கள் எல்லாம் பெருகுமாறு விரும்பிய காதலினால், நீடிய வாழ்க்கைக் குரியதாகிய புண்ணியத் திருக் காமக்கோட்டத்தில் எழுந்தருளியிருந்து, முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்கின்றார்.

(வி - ரை) **எண்ணரும் பெருவரங்கள்** - வேறு எவராலும் நினைத்தற்கும் அரி யனவாகிய மேலே சொல்லிய மூன்று பெரிய வரங்கள். எண் - எண்ணத்தகும் என்று கொண்டு மூன்று வரங்களுக்கும் மூன்று அடைமொழிகளாகத் தந்தனர் என்றலுமாம்.

**மண்ணின்மேல் வழிபாடு செய்து அருளி** - தாம் கேட்ட முதலாவது வரத்தினை ஏற்றுக்கொண்டு செலுத்தியநிலை கூறப்பட்டது. காமாட்சி அம்மையார் காஞ்சிபுரம் திருக்காமக்கோட்டத்தில் எழுந்தருளியிருந்து சிவபூசையினை நித்தியமாகச் செய்து கொண்டிருக்கின்றார் என்பது. **அருளி** - அப்பூசையின் பயனை உயிர்களுக்கு அருளி.

**மனையறம்...புரக்கும்** - இதனால் அம்மையார் தாம் வேண்டிப் பெற்ற இரண் டாவது வரத்தினைக் கொண்டுசெலுத்திய நிலை கூறப்பட்டது.

**நண்ணும் மன்உயிர்** - நண்ணும் - வினைக்கீடாய்ப் பிறவியில் வருகின்ற. **மன் உயிர்** - நிலைபெற்ற - அழிவில்லாத-உயிர். உயிர்க்கு அழிவில்லை என்பது சாத்திர முடிபு.

**நீடியவாழ்க்கைப் புண்ணியம்** - நிலைத்த இருப்பிடமாகக் கொண்ட புண்ணியம் பெற்ற. **புண்ணியம்** - புண்ணியத்தைத் தருகின்ற - புண்ணிய உருவாகிய - காமக் கோட்டம் என்றலுமாம்.

திருக்காமக்கோட்டம் - காமாட்சியம்மையார் எழுந்தருளியிருக்கும் பிலத்துவார மாகிய திருக்கோயில். காமக்கோட்டம் என்ற பெயர் போந்த காரணம் பல்வகை களாலும் காஞ்சிப்புராணத்தினுள் எடுத்துரைக்கப்பட்டது. அதனை

" ஒருமுறை யங்கட் காமமாந் தரும முஞற்றுநர் தமக்குமத் தருமந்
தருபயன் கோடி யாதலிற் கரடத் தடத்திழி கடாம்படு கலுழிப்
பெருவரை வதனப் பிள்ளையைக் குகனைப் பெற்றவ ளமர்பில மதுதான்
கருதரு காமக் கோடியென் றுலகிற் காரணப் பெயரினால் வயங்கும் " (33)

" அன்றியுங் காமக் கிறையவர் தனத ரனையவர்க் கோடியர் தரலா
லென்றுமோ ரியல்பி னெங்கணும் விரவி யெவற்றினுங் கடந்தபே ரொளியைக்
குன்றுறழ் கொம்மைக் குவிமுலைத் தடத்தாற் குழைத்தருள் கருணையெம் பிராட்டி
நன்றுவீற் றிருக்கும் பேரொளிப் பிலத்திற் கப்பெயர் நாட்டலு மாமால் " (34)

" இன்னுமிப் புவனப் பரப்பினிற் காம மென்பன மனைவியர் மக்கள்
பொன்னணி யிருக்கை பூண்முதற் பலவாம் பூந்தளி ரணிநலங் கவற்றுந்
தன்னடி வணங்கி யிரந்தவர் தமக்குத் தடங்கிரி பயந்தபே ராட்டி
யன்னவை கோடி யளித்திட லானு மப்பெய ரெய்துமங் கதுவே " (35)

" அல்லதூஉங் கவைத்தாட் கரும்பகட் டூர்தி யடுதொழிற் கூற்றினைக் குமைத்த
கொல்லையேற் றண்ண னுதல்விழிச் செந்தீக் கோட்படு மொருதனிக் கருப்பு
வில்லியை விளையாட் டியற்கையிற் கோடி காமரா விழித்துணைக் கடையா
லல்லியங் கோதை யாங்களித் திடலா லப்பெயர் பூண்டது மாமால். (36)

" மற்றுமா ருயிர்சேர் நாற்பொருட் பயனில் வகுத்தமூன் றாவது காமம் ;
பற்றுகா மத்திற் கோடியா முடிவிற் பயில்வது வீடுபே றாகுங் ;
உற்றவர் தமக்கு வீடுபே றளிக்கு முண்மையி னாலுமப் பெயராற்
சொற்றிடப் படுமா லுலகெலா மீன்றா ளமர்ந்தருள் சுடரொளி விமானம் " (37)

" பின்னரு மொன்று ககரமே யகர மகரமாய்ப் பிரிதரு மூன்று
மன்னவே றுகைக்கு மயனரி யீச னாயமுத் தேவரைப் பகரும் ;
இன்னவர் தம்மை யுகந்தொறுங் கோடி முறையெழில் விழிகளிற் படைத்தாண்
மின்னிடைப் பிராட்டி யென்பதனாலு மப்பெயர் விளங்குமென் பதுவே " (38)

" வேறுமொன் றாங்கட் காவெனப் படுவாள் வெண்மல ராட்டிமா வென்பா
ளூறுதேங் கமலப் பொகுட்டணை யணங்கா மூங்குவ ரிருவரு முகிலை
மாறுகொ ளைம்பா லுமைவிழிக் கோடி தன்னிடை வருமுறை யானு
மேலுமத் திருப்பே ரெம்பெரு மாட்டிக் கென்றெடுத் தியம்புவ ருணர்ந்தோர் " (39)

" விந்துவின் வயங்கி யம்மைவீற் றிருக்கும் வியன்றிருச் சக்கர வடிவா
மந்தவான் பிலந்தா னியம்பிய காம மனைத்திற்கு மாதர மாகிப்
பந்தமில் காமக் கோட்டமென் றெருபேர் பரித்திடு ; மற்றெவற் றினுக்கு
முந்திய பீட மாதலி னாதி பீடமு மொழிந்திடப் படுமால் " (40)

என்ற வீராட்டகாசப் படலப் பாட்டுக்களாற் காண்க.

இக்கோயில் காஞ்சிபுரத்தினடுவில் விளங்கும் தனியாலயம். சிவபெருமான் றிருக் கோயில்களிற் சென்று வழிபடுதலன்றி வேறெந்தக் கோயிலினும் சென்று வழிபடுத லில்லாத மரபுடைய எந்தம் பெருமக்களாகிய சைவ சமய பரமாசாரியர் மூவரும் முறையே சென்று வணங்கி வழிபட்ட பெருமையுடையது. " தைய லாளுல குய்ய வைத்த, காரி ரும்பொழிற் கச்சி மூதூர்க் காமக் கோட்டமுண் டாக நீர்போய், ஊரிடும்

பிச்சை கொள்வ தென்னே யோண காந்தன் றளியுளீரே'' (இந்தளம் - 6) என்ற நம்பி கள் தேவாரமும், பிறவும் காண்க. இது காமகோடி பீடமென்றும், ஆதிபீடம் என்றும் பெயர் வழங்கப் பெறுவது. இக்கோயில் ஒன்றொழியக் காஞ்சிபுரத்தினெல்லையில் திருவகம்ப முதலாக உள்ள எந்தச் சிவாலயத்தினும் அம்மையாரது சன்னதி அமைக் கப்பெறுத பெருமை ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

புரக்கும் - நித்தியமாக இன்றைக்கும் அறங்களை வளர்த்துக் கொண்டிருக்கின்றார் என்பது. போலிய என்றது, என்றும் எங்கும் அறம் புரப்பவர் அம்மையாரே யாயி னும் திருக்காமக்கோட்டத்திற் சிறக்க விளங்கும்படி புரக்கின்றனர் என்பதாம். 71

## நீலமலர் மூன்றுடனென்று

1149. அலகி னீடவத் தறப்பெருஞ் செல்வி
யண்ட மாந்திரு மனைக்கிடுந் தீப
முலகில் வந்துறு பயனறி விக்க
வோங்கு நாண்மலர் மூன்றுட னென்று
நிலவ வாண்டினுக் கொருமுறை செய்பு
நீடு தொன்மையா னிறைந்தபே ருலக
மலர்பெ ருந்திருக் காமக்கோட் டத்து
வைத்த நல்லற மன்னவே மன்னும். எஉ

(இ - ள்) வெளிப்படை. அளவில்லாத நீண்ட தவத்தினைச் செய்யும் அறப் பெருஞ்செல்வியாராகிய அம்மையார், பிரமாண்டமாகிய தமது திருமனைக்கு இடும்பெரு விளக்குக்களாகிய முச்சுடர்களுமே, அவ்வம்மையார் உலகில் வந்ததனாலுறும் பயனை அறிவிக்கும்படி வந்தாற்போல, ஓங்குகின்ற புதிய நீலமலர்கள் மூன்றுடன் கூடிய தாகிய ஒரு பூ நிலவும்படியாக ஒரு ஆண்டுக்கு ஒருமுறை மலர்கின்ற நீடிய பழைமையி னால், நிறைந்த உலகத்தில் விளங்கும் பெரிய திருக்காமக்கோட்டத்தில் வைத்த நல் லறங்கள் நிலைபெறும்படியாக வீற்றிருந்தருளுவர்.

(வி - ரை) தீபம் - அறிவிக்க - மலர் மூன்றுடன் ஒன்று - ஆண்டினுக் கொரு முறை - நிலவச்செய்யும் - தொன்மையால், உலகம் - மலர் - காமக்கோட்டத்து வைத்த அறம் மன்னச் - செல்வி - மன்னும் என்று கூட்டி உரைத்துக் கொள்க.

அநம்பேருஞ் செல்வி - காஞ்சியில் அறப்பெருஞ் செல்வித்தெரு என்றொரு வீதியுண்டு. அஃது இப்போது அரப்பணஞ் சேரித்தெரு என்று மருவிவழங்குகின் றது. "தருமத்தின் செல்வி" என்பது தேவியின் திருநாமங்களுள் ஒன்றாக நிகண்டு களில் பேசப்படும்.

அண்டமாம் திருமனைக்கு இடும் தீபம் - அண்டத் தொகுதிகளெல்லாம் கூடிய கூட்டம் பிரமாண்டம் எனப்படும். தீபம் - சூரியன் - சந்திரன் - அக்கினி என்ற முச் சுடர்களும் அண்டங்களுக்கு ஒளிசெய்யும் பேரொளிப் பொருள்களாதலின் தீபங்க ளெனப்பட்டன. தீபம்போல்வதனைத் தீபம் என்று கூறினர்.

ஆண்டினுக்கு ஒருமுறை நாண்மலர் மூன்றுடன் ஒன்று நிலவச் செய்யும் நீடு தொன்மை - என்க. ஓர் ஆண்டினுக்கு ஒருமுறை ஒரு தாளில் மூன்று நீலமலர்களை யுடையதொரு பூவை மலரச்செய்யும் என்பதாம். இது, முச்சுடர்களும்வந்து இங்குப் பிராட்டியார் உலக நலம்பற்றிப் போந்து தவஞ்செய்து கொண்டிருக்கின்றதன் பயனை உலகத்தார்க்கு அறிவிப்பது போன்றிருந்தது என்க. மலர் - நீலமலர். "தோன்று மலர்த் தீபச் சுடர்" என்று இரட்டையர் உலாவில் இதனைப் பாராட்டினர். இதன் விரிவு காஞ்சிப் புராணத்தினுட் காண்க. 72

கரிகால்வளவன்

—பாட்டு - 1162 - பக்கம் - கசஅக



திருவேகம்பம் கோபுரமும் கம்பா நதியும்

—பாட்டு - 1137 - பக்கம் - கசடுக



உலகாணித் தீர்த்தமும் திருக்காமக்கோட்டம் கோயிலும் (உட்பார்வை)

—பாட்டு - 1150 - பக்கம் - கசஎடு

குறிப்பு :—காமக்கோட்டத்தின் பக்கத்தில் காளி கோயில் என வழங்கும் ஒரு ஆலயம் உளது. இறைவனது திருக்கண்ணைப் புதைத்தமையாற் காளிம உருவம் பெற்று அம்மையார் தவஞ் செய்திருந்த இடம். இக் கோயிலினுள் " கண்படாத காயாப்புளி " உளது. " காளமேக மொப் பாள் உறை வரைப்பு " (1156) என்றது பார்க்க. இக்காளிம உருவம் நீங்கியபின் அம்மையார் அமர்ந்தது திருக்காமக்கோட்டம் என்ப.

## உலகாணித் தீர்த்தம்

1150. தீங்கு தீர்க்குநற் றீர்த்தங்கள் போற்றுஞ்
சிறப்பி னுற்றிருக் காமக்கோட் டத்தின்
பாங்கு மூன்றுல கத்தினுள் ளோரும்
பரவு தீர்த்தமாம் பைம்புனற் கேணி,
வாங்கு தெண்டிரை வேலைமே கலைசூழ்
வைய கந்தனக் கெய்திய படியா
யோங்கு தன்வடி வாய்நிகழ்ந் தென்று
மூள்ள தொன்றுல காணியென் றுளதால். எஉ

(இ - ள்) திருக்காமக் கோட்டத்தின் பாங்கு...கேணி - திருக்காமக் கோட்டத்தின் பக்கத்தில் மேல் நடு கீழ் என்னும் மூன்றுலகத்திலுள்ளவர்களும் துதிக்கும் தீர்த்தமாகிய குளிர்ந்த நீரையுடைய ஒரு தடாகம்; வாங்கு தெண்திரை...படியாய் - வளைந்த தெள்ளிய அலை வீசுகின்ற கடலாகிய மேகலையாற் சூழப்பட்ட நிலவுலகத்தார்க்கு வீட்டுநிலை யடைவதற்கு ஏற்ற படிகளையுடைய ஏணிபோன்று; ஓங்கு தன் வடிவாய்... உள்ளது - உயர்ந்த நீர் வடிவாகவே நிறைவுற்று எக்காலத்தும் உள்ளதாய்; தீங்கு தீர்க்கும்...சிறப்பினால் - தம்முள் மூழ்குகின்றவர்களின் பாவங்களையெல்லாம் போக்கும் நல்ல தீர்த்தங்கள் எல்லாம் போற்றுகின்ற சிறப்பினாலே; உலகாணி என்று ஒன்று உளது - உலகாணி என்று பெயர்பெற்ற தீர்த்தம் ஒன்று உள்ளது. ஆல் - அசை.

(வி - ரை) இப்பாட்டால் உலகாணித் தீர்த்தச் சிறப்புக் கூறப்பட்டது.

உலகாணித் தீர்த்தம் என்று ஒன்று உள்ளது; அது மற்ற எல்லாத் தீர்த்தங்களும் போற்றும் சிறப்புடையது; மூவுலகத்தவர்களும் பரவும் பெருமையுடையது; நிலவுலகத்துள்ளோர் முத்திநெறி யடைவதற்கு ஏணி போன்றது; நீரின் வடிவாய் நிகழ்வது என்க.

தீங்கு தீர்க்கும் நல் தீர்த்தங்கள் போற்றும் சிறப்பாவது - தம்முள் மூழ்கினோர்தம் பாவங்களைப்போக்கி அவற்றைத் தாம் ஏற்றுக்கொள்ளும் தீர்த்தங்கள் அவ்வாறு ஏற்றுக்கொண்ட தமது பாவங்களைப் போக்கிக்கொள்ள இதனுள் வந்து மூழ்கி வந்திக்கும் சிறப்பாகும். திருக்குடமூக்கில் மகாமகத் தீர்த்தத்தின் வரலாற்றைத் "தாவி முதற் காவிரிநல் யமுனை கங்கை சரசுவதிபொற் முமரைபுட் கரணி தெண்ணீர்க், கோவியொடு குமரிவர தீர்த்தஞ் சூழ்ந்த குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னூரே" (திருத்தாண்டகம் - 10) என்றும், "பூமருவு கங்கைமுதற் புனிதமாம் பெருந்தீர்த்த, மாமகந்தா னுதற்கு வந்துவழி படுங்கோயில்" "(திருஞான - புரா - 409) என்றும் விரித்துரைத்த திருவாக்குக்களை இங்கு நினைவு கூர்க.

தீர்த்தம் - தூய்மை - பரிசுத்தம். தூய்மை செய்வதனால் நீருக்குத் தீர்த்தம் என்று பெயர் வழங்குவதாயிற்று. அக்காரணம் பற்றியே சிவபெருமானுக்குத் தீர்த்தன் என்று பெயர் வழங்கும். "ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந், தீர்த்தன்" (திருவெம்-12 திருவாசகம்); "தீர்த்தனைச்சிவனை" (தோயில்) குறுந்தொகை; காண்க.

தெண்திரைவேலை மேகலை சூழ் வையம் - அலைகளையுடைய கடலானது நிலமகளுக்கு மேகலை போல விளங்குவது. வேலை மேகலை - உருவகம். "எழுகோவை மேகலை; எண் கோவை காஞ்சி."

எய்திய படியாய் - படி - ஏணி. படிகளையுடையது. படி - ஆகுபெயர். ஆய் - உவமருபு; "ஆள்வா ரிலிமா டாவேனே?" (திருவாசகம்) என்றாற்போல.

படியாய் ஓங்கு தன் வடிவாய் - என்றது மேலேற்றும் சாதனமாகிய ஏணியின் தன்மை பெற்று உள்ளதாயினும் வடிவத்தால் கீழ் நோக்கிய கேணியின் உருவமாகவே உள்ளது என்றதாம். படியாயும் - சிறப்பும்மை தொக்கது. "மேலுலகுக்கிய மரமும் கீழ் நோக்கிய கிணறும்" என்ற பழங் கல்வெட்டுக்களின் வாசகம் நினைவுகூரத் தக்கது. தன் வடிவு - நீராகிய - கேணியில் அமைந்த தீர்த்தமாகிய - தனது வடிவம். இதற்கு இவ்வாறன்றி அம்மையாரின் வடிவு என்றுரைப்பாருமுண்டு. இப்பொருட்கு ஐம்பூதங்களும் சிவனது அட்டமூர்த்தங்களுள் அடங்கி, அம்மையின் வடிவமாவன என்ற உண்மை ஆளுடைய பிள்ளையார் திருவாலவாயில் அருளிய கனல்வாதத் திருப்பதிகங்களுட் குறிக்கப்பட்டது நினைவு கூரத்தக்கது.

ஒன்று - ஒப்பற்ற தனிச் சிறப்புடையது என்ற குறிப்புமாம்.

உலகாணி - தீர்த்தத்தின் பெயர். அம்மையார் இதன் கரையின் பாங்கர் அறச் சாலையாக்கித் தவம் புரிந்தனர் என்பது காஞ்சிப் புராணத்தாலறியப்படும். இதனையே காமகீ கோட்டத்தின் பாங்கு என்றார். "மூவருந் தம்முட் கூடன் முதலிய வேறு பாட்டான், மேவருங் கரணம் யாக்கை விடயமா தார மெல்லாம், ஆவகை வரங்கள் பெற்ற வத்திறத் துலக முற்றும், பாவுதன் வடிவா யோங்கு முலகாணிக் கரையின் பாங்கர்" (தழுவக் குழைந்த படலம் - 136) என்பது காஞ்சிப் புராணம். உலகம் தன் வடிவாய் விளங்கப்பெற்றது உலகாணி என்பர். சக்கரதீர்த்தம் - நேமித்தடம் - என்றும் வழங்குவர். (கந்தபுரா)

சிறப்பினுள்—பாங்கின்—வடிவாய் நிறைந்து—என்பனவும் பாடங்கள். 73

## திசை மயக்கம்

1151. அந்த மின்றிநல் லறம்புரிந் தளிக்கு
மம்மை தன்றிருக் காமக்கோட் டத்தில்
வந்து சந்திர சூரியர் மீது
வழிக்கொ ளாததன் மருங்குபோ தலிறை
சந்த மாதிர மயங்கியேம் மருங்குஞ்
சாயை மாறிய தன்றிசை மயக்க
மிந்த மாநிலத் தவரெலாங் காண
வென்று மூள்ளதொன் றின்றுமங் குளதால். எச

(இ - ள்) வெளிப்படை. நல்ல அறங்களையெல்லாம் எல்லையின்றிச் செய்து உயிர்களைக் காப்பாற்றும் அம்மையாருடைய திருக்காமக்கோட்டத்தில் சந்திர சூரியர்கள் வந்து அதன் மேலால் வான வழியில் நேர் செல்லாது பக்கத்தில் ஒதுங்கிப் போகின்ற படியால், நேர் திக்குக்கள் மாறுபட்டு, அதனால் எவ்விடத்தும் நிழல்கள் மாறியிருக்கின்றதனாலாகிய திசைமயக்கம், இந்தப் பெரிய நிலவுலகத்தார்களெல்லாரும் காணும் படி எந்நாளும் உள்ளது; அது இக்காலத்தும் உள்ளது.

(வி - ரை) அறம் அந்தமின்றிப் புரிந்து என்று கூட்டுக. "எல்லா அறமும் யான் செயவேண்டும்" (1146) எனவும், "இடையறு அறம்" (1147) எனவும், "அறம் புரக்கும்" (1148) எனவும், "நல்லறமன்னவே மன்னும்" (1149) எனவும் முன் உரைத்தவாற்றால் என்றும் முடிவில்லாதபடி அறஞ் செய்கின்றார் என்பதாம்.

அறம் புரிந்து அந்தம் இன்றி அளிக்கும் - என்று கூட்டி, அறங்களைச் செய்து அதனால் உயிர்களை அழிவில்லாமற் காக்கின்ற என்றுரைப்பாருமுண்டு.

சந்திர சூரியர் வந்து அதன்மீது வழிக் கொளாது மருங்கு போதலினால் என்க. வந்து - தத்தம் வான வீதியில் வந்து. மீது - மேர் மேலே. வழிக் கொள்ளுதல் - தத்தமக்குரிய வானவீதி வழியிற் போதல். மருங்கு - சுற்றுப் பக்கம். மருங்கு போதல் - வலம்வருதல் போலச் சுற்றிப் போதல் என்ற குறிப்பும் காண்க.

சந்த மாதிரம் - வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு என்ற மேர் திக்குக்கள். சந்தம் - அழகிய - நல்ல - என்றுரைப்பாருமுண்டு.

மாதிரம் மயங்கிச் - சாயை மாறியதன் - காரணமாய் உளதாகும் திசை மயக்கம் என்க. திசை மயக்கம் - திசை தெரியாது மக்கள் மயங்கும் மயக்கத்தினைத் திசையின் மேலேற்றிக் கூறப்பட்டது.

இன்றும் உளது - இன்றைக்கும் யாவரும் நேரில் அனுபவிக்கும்படி உள்ளது. இன்றும் அங்குச் சென்று கூர்ந்துணர்வோர் இதனைக் கண்கூடாகக் காணலாம்.

அளிக்கும் அன்னை—என்பதும் பாடம். 74

## காஞ்சித் தானம்

1152. கன்னி நன்னெடுங் காப்புடை வரைப்பிற்
காஞ்சி யாந்திரு நதிக்கரை மருங்கு
சென்னி யிற்பிறை யணிந்தவர் விரும்பு
திருப்பெ ரும்பெயரி ருக்கையிற் றிகழ்ந்து
மன்னு வெங்கதிர் மீதெழும் போது
மறித்து மேல்கடற் றலைவிழும் போதுந்
தன்னி ழற்பிரி யாதவண் காஞ்சித்
தான மேவிய தன்மையு முடைத்தால். எரு

(இ - ள்) வெளிப்படை. காளி தேவியினுடைய நன்மையான பெரிய காவல் பொருந்திய அந்தக் காஞ்சிநகர எல்லைக்குள், காஞ்சி என்ற பெயருடைய ஆற்றினது கரையின் பக்கத்தில் சென்னியிற் பிறைச்சந்திரனை அணிந்த சிவபெருமான் விரும்பி எழுந்தருளியிருக்கும் திருப்பெரும்பெய ரிருக்கை என்னும் பெயருடைய கோயிலில், விளங்கி நிலைபெற்ற வெப்பமாகிய கதிர்களைப் பரப்பும் சூரியன் மேற்கிளம்பும்போதும் மீண்டும் மேல்கடலில் விழும்போதும் தனது நிழல் தன்னிடத்தினின்றும் பிரியாத வளமுடைய காஞ்சித்தானம் பொருந்திய மேன்மையினையும் அங்நகரம் உடையதாகும்.

(வி - ரை) கன்னி காப்பு - கன்னி - காளி ; கன்னி காப்பு என்பது காஞ்சிபுரத்தின் பன்னிரு பெயர்களுள் ஒன்று. ஒரு காலத்தில் உமையம்மையாரைச் சிவபெருமான் காளி என்றழைக்க, அதனைப் பொருது, அம்மையார் அவ்விறைவரைப் பூசித்துக் காளிம வடிவத்தின் நீங்கினர். அவ்வாறு நீக்கிய வடிவத்தினின்றும் கண்டாரை அச்சுறுத்தும் உருவத்தோடு ஒரு பெண் தோன்றி அம்மையாரை வணங்கிப் பணி கேட்டு நிற்க, அதனை நோக்கி அம்மையார், " சும்பன், நிசும்பன் என்ற அவுணரைச் சங்கரித்துக் கவுசிகி என்னும் பெயர் பூண்டு, காஞ்சியில் நிலைபெற்றிருந்து நகர் காவல் செய்து வருவாய் " என்று கட்டளை யிட்டருளினர் ; அவ்வாறே அந்தக் காளி, கச்சி நகரைக் காவல் புரிகின்றாள் : என்பது வரலாறு. " கன்னி காத்திடலாற் கன்னி காப்பென்னும் கவின்பெய ருடையது கச்சி " என்பது கந்தபுராணம். காஞ்சிமரத்தையுடைமையால் காஞ்சி நகரம் என்ற பெயர் பெற்றது. கன்னி - உமையம்மையார் என்றுரைப்பாருமுண்டு.

திருப் பெரும்பெய ரிருக்கை - கோயிலின் பெயர். பெரும் பெயர் - மகாவாக்கியம். பெரும் பெயரால் - மகாவாக்கியத்தினுற் - பேசப்பட்ட் கடவுளாகிய சிவபெருமான் எழுந்தருளிய இடம் என்க. "பெரும்பெயர்க் கடவுளிற் கண்டு" (சிவஞான போதம் - பாயிரம்). "பெரும்பெய ரியவுள்" (திருமுருகு).

காஞ்சித்தானம் - காஞ்சிமரமுள்ள இடம். தன் நிழல் பிரியாத காஞ்சி - சூரியன் உதயமாகும்போதும் மேல் கடல் விழும்போதும் இந்த மரத்தின் நிழல் அதனைப் பிரியாது அதனடியிலே அடங்கி விடுவதாகும் என்பது.

உடைத்து - அங்ஙகரம் என்ற எழுவாய் வருவிக்க. 75

## பல பதிகள்

1153. மறைக ளாற்றுதித், தருந்தவம் புரிந்து,
மாறி லாஇய மந்தலை நின்று,
முறைமை யால்வரும் பூசனை செய்ய,
முனிவர் வானவர் முதலுயி ரெல்லா
நிறையு மன்பினு ளருச்சனை செய்ய
நீடு காமங்க ளவரவர்க் கருளி
யிறைவர் தாமகிழ்ந் தருளிய பதிக
ளெண்ணி றந்தவத் திருநக ரெல்லை. எசு

(இ - ள்) வெளிப்படை. வேதமந்திரங்களினுற் றுதிசெய்து, அரிய தவத்தைச் செய்து, மாறுபாடில்லாத நியமத்தினிற் சிறந்து, முனிவர்கள் முறைமையால் வருகின்ற பூசனை செய்யவும், தேவர்கள் முதலிய எல்லாவுயிர்களும் உள்ளத்து நிறைந்த அன்பினுல் அருச்சனை செய்யவும், அவரவர் விரும்பிய நீடிய விருப்பங்களை அவ்வவர்க்குக் கொடுத்தருளிச் சிவபெருமான் மகிழ்ந்து எழுந்தருளிய தலங்கள் அத்திருநகரத்தின் எல்லையினுள் எண்ணிறந்தன உள்ளன.

(வி - ரை) முனிவர் பூசனை செய்ய, வானவர் முதல் உயிரெல்லாம் அருச்சனை செய்ய அருளி, இறைவர் மகிழ்ந்து அருளிய பதிகள் என்க. திருநகர் எல்லையுள் - பதிகள் - உள்ளன என்பதாம்.

மறைகளால்...பூசனை - சிவபூசை செய்தற்கின்றியமையாத ஒழுக்கமும் நியதியும் கூறப்பட்டன. முறைமை - ஆகமவிதி. கண்ணப்பர் புராணத்தினுள் சிவகோசரியாரது பூசையின் வரலாறு காண்க.

காமங்கள் - விரும்பிய வரங்கள். பதிகள் - தலங்கள்.

ஓணகாந்தன்றளி - (ஓணன் - காந்தன் என்ற அசுரர் பூசித்தது), கச்சிமேற்றளி (விட்டுணு பூசித்தது), தக்கேசம் (தக்கன் தாபித்துச் சமக மந்திரங்களாற் றுதித்தது) முதலியவை காண்க. கண்ணீசம், சலந்தரீசம், சித்தீசம், அபிராமீசம், ஆதிபதீசம், இரணீசம், இரேணுகீச்சரம், கச்சபேசம், சுரகரீசம், நவக்கிரகீசம், நாரசிங்கீசம், பரசுராமீசம், பராசரேசம், பலபத்திரராமீசம், பாண்டவீசம், மக்கீசம், மணிகண்டீச்சரம், முத்தீசம், வயிரவீசம், வாணீசம், விடுவச்சேனீசம், வீரராகவீசம், பணதரீச்சரம் முதலிய பெயர்கள் அவற்றைத் தாபித்துப் பூசித்துப் பேறுபெற்ற முனிவர் தேவர் முதலியோரை விளக்கி நிற்றல் காண்க. விரிவு காஞ்சிப்புராணத்தினுட் கண்டு கொள்க.

திருநகர் எல்லை - பதிகள் எண்ணிறந்த - தன் எல்லையுள் எண்ணிறந்த சிவாலயங்கள் உள்ள தலம் காஞ்சிபுரத் திருநகரமேயாம் என்பது தேற்றம். 76

## இடங்கள்

1154. மன்னு கின்றவத் திருநகர் வரைப்பின்
மண்ணின் மிக்கதோர் நன்மையி னுலே,
துன்னும் யானையைத் தூற்றில்வாழ் முயன்முன்
றுரக்க வெய்திய தொலைவிலூக் கத்தாற்
றன்னி லத்துநின் றகற்றுதல் செய்யுந்
தான, மன்றியுந் தங்வேழுந் தரணி,
யெங்கி லத்தினுங் காண்பரு மிறவாத்
தான மென்றிவை யியல்பினி னுடைத்தால். எஎ

(இ - ள்) வெளிப்படை. நிலேபெற்ற அந்தக் காஞ்சிபுரத் திருநகரத்தின் எல்லே யுள், இங்கிலவுலகத்தில் மிகுந்ததோர் நன்மையினுல், அணுக நெருங்கிய ஒரு யானை யைத் தூற்றில் வாழ்கின்ற ஒரு முயலானது ஓடும்படி கெடாத ஊக்கத்தினுல் தன் னிடத்தினின்றும் அகலச் செய்யும் இட்டழம், அதுவன்றியும் உயிர்நீங்கிய உடம்புகள் மீளவும் உயிர்பெற்றெழுகின்ற இடழம், எங்கிலத்திலும் காண்பதற்கரிதாகிய இறவாத் தானம் என்ற இடமும், ஆகிய இவைகளே அந்நகரம் இயல்பாக உடையது.

(வி - ரை) இப்பாட்டால், முயல்கரி தொடர்பொது, தநுவெழுந்தரணி, இறவாத் தானம் என்ற மூன்றிடங்களேயும்பற்றி நகர்வளம் பேசப்பட்டது.

யானையை முயல் துரக்க - என்றது அந்த இடத்தின் பலத்தினுலே, அங்கு இருந்த குறுமுயல் அங்கு வந்த யானையைத் தன்னிடத்தினின்று அகற்றவல்லது என்பதாம். "குறுமுயல்போய்க் கரிதொடர் பொது" (கந்தபுராணம்), "மதகரியை முயலூக்கித் துரக்கு மொன்றில்" (காஞ்சிப்புராணம்) என்பவை காண்க. இவ்வாறே ஒரு கோழி யானையைத் துரத்திய பூசாரமுள்ள உறையூரின் வரலாறும் அதுபற்றி வந்த கோழியூர் என்றும் பெயர்க்காரணமும் காண்க.

தநு எழும் தரணி - உயிர்நீங்கிய உடலே இட்டால் உயிர்பெற்றெழும் இடம்.

இறவாத்தானம் - காஞ்சிப்புராணத்துள் இறவாத்தானப் படலம், பிறவாத்தானப் படலம் என்றவை பார்க்க.

தொலைவில் ஊக்கம் - அழிக்கலாகாத ஊக்கம். இதனே "ஊக்கித் துரக்கும்" என்றனர் காஞ்சிப்புராணமுடையார்.

இயல்பினின் உடைத்து - (இவற்றைச்) செயற்கையானன்றி அங்கர் தன் னியற்கையாலுடையது. 77

## தீர்த்தங்கள்

1155. ஈண்டு தீவினை யாவையு நீக்கி
யின்ப மேதரும் புண்ணிய தீர்த்தம்
வேண்டி னுர்தமக் கிட்டசித் தியதாய்
விளங்கு தீர்த்த,நன் மங்கல தீர்த்த,
நீண்ட காப்புடைத் தீர்த்த,மூன் றுலகி
னிகழ்ந்த சாருவ தீர்த்தமே முதலா
வாண்டு நீடிய தீர்த்தமெண் ணிலவு
மமர நாட்டவ ராடுத லொழியார். எஅ

(இ - ள்) வெளிப்படை. (மலைபோலக்) குவிந்த பாவங்களை யெல்லாம் நீக்கி இன்பத்தையே தருகின்ற புண்ணிய தீர்த்தமும், வேண்டுவார்க்கு வேண்டுவனவற்றையே கொடுப்பதாய் விளங்கும் இட்டசித்தி என்னும் தீர்த்தமும், நன்மையைத் தரும் மங்கல தீர்த்தமும், தேவர்களது பெருங்காவலையுடைய தீர்த்தமும், மூன்றுலகங்களிலும் உள்ள தீர்த்தங்களெல்லாம் ஒருங்குகூடிய சநுவ தீர்த்தமும் என்ற இவை முதலாக அந்நகரத்தில் உள்ள எண்ணில்லாத தீர்த்தங்களிலும் தேவர்கள் வந்து ஆடுதலை ஒழியார்கள்.

(வி - ரை) இப்பாட்டின் அங்குள்ள தீர்த்தங்களின் சிறப்பினால் நகரச் சிறப்புக் கூறினார்.

ஈண்டுதல் - குவிதல். ஈண்டு தீவினை யாவையும் - ஈட்டப்பட்டதனால் வந்து குவிந்த தீவினைகளெவற்றையும். "பண்ணிய வுலகினிற் பயின்ற பாவம்" (அப்பர்). பிராரத்தம் ஆகாமியம் சஞ்சிதம் என்ற மூவகைக் கருமங்களையும் நீக்கி என்றபடி. ஈண்டு - இவ்வுலகத்தில் என்றும், காஞ்சிபுரத்தில் என்றுஞ் கூறுவாருமுளர்.

தீவினை நீக்கி இன்பமே தரும் புண்ணிய தீர்த்தம் - இது அரிதரசா தீர்த்தம் என்று பெயர்பெறும். அரிதம் - பாவம்.

இட்ட சித்தியதாய் விளங்கும் தீர்த்தம் - இட்டசித்தித் தீர்த்தம். தீர்த்தத்தின் பெயரையும், அது வினைக்கும் பயனையும் உடன் கூறியவாறு காண்க. இது கச்ச பாலயத்தில் உள்ளது. ஞாயிற்றுக்கிழமையில் இதனுள் மூழ்குதல் சிறப்புத் தருவதென்பர். இதன் பெயர் சிலப்பதிகாரத்திலும் வழங்கப்பட்டுள்ளது.

நன் மங்கல தீர்த்தம் - அமங்கலமானவற்றை மங்கலமென்றும், சிறந்த மங்கலந்தராததனை மங்கலமென்றும் உபசரித்துக் கூறும் இலக்கண வழக்குண்டாயினும் அவ்வாறன்றி, இது, சிறந்த நன்மைகளைத் தருவதால் மங்கல தீர்த்தம் என்று பெயர் பெற்றதென்று பெயர் போந்த காரணத்தையும் பயனையும் காட்டுதற்கு நல் என்ற அடைமொழி பெய்து ஓதினார். இதனுள் செவ்வாய்க்கிழமையில் மூழ்குதல் சிறப்புத் தருவதாம் என்பர்.

காப்புடைத்தீர்த்தம் - இது சுரரட்சிதம் எனப் பெயர் பெறும். காப்பு என்றதனால் தேவர்களின் காவல் குறிக்கப்பட்டது, உலககாவலர் (திசை காவலர்) தேவர்களேயாகலான்.

சநுவதீர்த்தம் - இதனுட் சனிக்கிழமைகளில் மூழ்குதல் சிறப்புடையதென்பர். சநுவ - என்றதனால் மூவுலகங்களிலும் உள்ள எல்லாத் தீர்த்தங்களும் பொருந்துவது என்னும் காரணத்தாற் போந்த பெயர் என்று குறிப்பதற்கு மூன்றுலகினிகழ்ந்த என்றார். இது திருவேகம்பம் தேரடியில் உள்ளது. (சநுவ என்றதனைக் கோணல் வழியிற் பொருளாக்கிக் கொண்டு, புண்ணிய தீர்த்தத்தினுட் செய்யத்தகாத செயல்களையும் மாக்கள் செய்யக் காண்பது இந்நாட் கொடுமைகளுள் ஒன்று).

அமரநாட்டவர் ஆடுதல் ஒழியார் - தேவர்கள் எப்போதும் ஒழியாமல் இவற்றுள் மூழ்கிச் செல்வர்.

(குறிப்பு:—தேவர்கள் மூழ்குதல் ஒழியார் என்ற இலேசினால் மனிதர் மூழ்குதல் ஒழிந்தாலும் என்ற குறிப்புப் பெறப்படுகின்றதற்கேற்ப, இத்தீர்த்தங்கள் பலவும் மனிதர் மூழ்கத்தகாத நிலையில் இந்நாளில் ஆக்கிவைக்கப்பட்டுள்ளமை வருந்தத்தக்கது. அன்பர்கள் இத்தூய தீர்த்தங்களைத் தூய்மையான நிலையில் வைத்துக் கொண்டாடுதல் தகுதியும் சிவபுண்ணியமுமாகும். இது திருக்கோயிலதிகாரிகளும், கும்பிடச்செல்லும் ஆண் பெண் மக்களும் ஒருங்கே கவனிக்கற்பாலதாகிய சிறந்த செய்தி.)

**விம்மிதங்கள்**

1156. தாள தொன்றினின் மூன்றுபூ மலருந்
தமனி யச்செழுந் தாமரைத் தடமும்,
நீள வார்புனல் குடதிசை யோடி
நீர்க ரக்குமா நதியுட,னீடு
நாள லர்ந்தசெங் குவளைபைங் கமல
நண்ப கற்றரும் பாடல மன்றிக்
காள மேகமொப் பாளுறை வரைப்பிற்
கண்ப டாதகா யாப்புளி யுளதால். எக

(இ - ள்) வெளிப்படை. ஒரு தாளில் மூன்று மலர்கள் பூக்கும் பொற்றமரை யினையுடைய தடமும், மிகப் பெருகிவரும் நீரானது மேற்குமுகமாக ஓடிப் பின் மறைந்துபோகும் ஆறும், அதனுடனே, நீண்ட பகற்காலத்தில் மலர்ந்த செங்குவளை யும், (இரவில் மலரும்) பசிய தாமரை மலரும், நடுப்பகலில் மலரும் பாதிரியும், அன்றிக், கரிய மேகம்போன்ற நிறங்கொண்ட திருமேனியையுடைய அம்மையார் எழுந் தருளியிருக்கும் அந்த எல்லையில் (இரவில்) உறங்காத காயாத புளிய மரமும் உண்டு.

(வி - ரை) நீள வார் புனல்...நதி - கம்பையாறு. கம்பை வெள்ளம் (1139), பெருவெள்ளம் (1140), கம்பையாறு (1142) என்றவை காண்க. மேற்கே ஓடுகின்ற ஆறு சிறப்புடையதென்பர். நீர் கரக்கும் - நிலத்தில் மேற்பரப்பில் ஓடுதல் மறைந்து, நிலத்தின்கீழ் ஓடுகின்ற என்க. இப்பொழுதும் கிணறுகளில் அடியில் நீர் ஓடுதல் குறிப்பிற் காணவுள்ளது.

நாள் அலர்ந்த - நாள் பகல். குவளை இரவில் மலர்வது; அது பகலில் மலர்தல் விம்மிதம்.

பைங்கமலம் - குவளை நாள் அலர்ந்து என்றமையால் கமலம் இரவில் மலர்தல் இங்குக் குறித்த விம்மிதம் என்பது பெறப்பட்டது. கமலம் - பகலில் மலர்வது.

நண்பகல் தரு பாடலம் - அவ்விதமே மாலையில் மலரும் பாடலம் நண்பகலில் அலர்வது விம்மிதமாம்.

காளமேகம் ஒப்பாள் - கருக்கொண்டமையால் கருமைமிக்க மேகம். நிறத்தால் மட்டுமன்றிக் கைம்மாறு கருதாது பொழியும் பயனாலும் மேகம் அம்மையாருக்கு ஒப்பாயிற்று. மெய்யும் பயனும் பற்றிவந்த உவமம்.

கண்படாத காயாப்புளி - கண்படுதல் - உறங்குதல். கண்படாத புளி என்றது இம்மரத்தின் இலைகள் இரவிற் குவிகின்றதில்லை என்றதாம். இதற்கு மனிதர் கண் ணுக்குத் தோன்றுத என ஒருவர் உரை கூறினர். காயாப் புளி - காய்த்தலில்லையா கவே கனிதலும், வித்து உண்டாகி மீளவும் முளைத்தலும், இல்லையாயின. கோவைச் சில்லா திருப்பேரூரில், அத்தலத்தைச் சார்ந்தார்க்கு மீளப் பிறத்தல் இல்லை என்பதற் குச் சான்றாகப் பிறவாப்புளி என்றதொருமரம் உள்ளது. அதன் விதைகள் நிலத்தில் இட்டால் முளைப்பதில்லை. இது பேரூர்ப் புராணத்துக் கண்டது. 79

**கிணறுகளும் பிலங்களும்**

1157. சாயை முன்பிணிக் குங்கிண றொன்று,
தஞ்ச முண்ணினஞ் சாந்தட மொன்று,
மாயை பின்றிவந் துள்ளடைக் தார்கள்
வான ரத்துரு வாம்பில மொன்று,

மேய வவ்வுரு நீங்கிடக் குளிக்கும்
விளங்கு போய்கையு மொன்று,விண் ணவரோ
டாய மின்பமுய்க் கும்பில மொன்றே,
டனைய வாகிய வதிசயம் பலவால். அ0

(இ - ள்) வெளிப்படை. தன்னுட் படிந்தோர்களது சாயையைப் புலப்படாத படி தன்னுள்ளே அடக்கிக்கொள்ளும் கிணறு ஒன்றும், சிறிதுண்டாலும் நஞ்சாகிக் கொல்லும் நீருடைய தடம் ஒன்றும், ஒரு வஞ்சமுமின்றி வந்து உள்ளே புகுந்தவர்கள் குரங்கினுருவத்தை யடையும் ஒரு பிலமும், பொருந்திய அந்தக் குரங்குருவம் நீங்கும் படி குளிக்கத்தக்க பொய்கை ஒன்றும், தேவர்களோடு கலத்தலால் உளதாகும் இன் பத்தைக் கொடுக்கும் பிலம் ஒன்றும், ஆக அத்தன்மையனவாகிய அதிசயம் அந்நகரத் தில் பலவாகும்.

(வி - ரை) சாயை - தண்ணீரிற் காணும் நிழல். பிரதிபிம்பம் என்பர். பிணித் தல் - வெளித் தோற்றுமல் தனக்குள் அடக்கிக் கொள்ளுதல்.

தஞ்சம்-சிறிதளவு. நஞ்சாம் தடம் - நஞ்சுத் தன்மை செய்யும் நீருடைய தடாகம். மாயை - வஞ்சனை. மாயையின்றி - மனிதவுரு நீங்கிக் குரங்குருவம் அடைதற் குரிய தீவினை ஒன்றுமின்றி என்க. இவ்வாறன்றி இதனைப் பிலத்துக்கேற்றி, வான ரத்துருவ் மாக்குதல் அதன் வஞ்சனைத் திறத்தாலன்று ; விம்மிதத் திறத்தாலாவதாம் என்றுரைப்பினும் பொருந்தும். பிலம் - ஆழத்தில் உள்ள நீர்நிலை என்ற பொருளில் வந்தது.

வீண்ணவரோடு ஆய இன்பம் உய்க்கும் - தேவர்களோடு கூடச்செய்து அக் கூட்டத்தினுல் உளதாகிய இன்பத்தைத்தரும். உய்த்தல் - செலுத்துதல் - அந்த இன் பத்திற் சேர்த்தல்.

இந்த இரண்டு பாட்டுக்களானும் அதிசயங்களால் நகரச் சிறப்புக் கூறினர். 80

## விநாயகர் - வைரவர் - முருகர் காவல்

1158. அஞ்சு வான்கரத் தாறிழி மதத்தோ
ராணை நிற்கவு, மரையிருட் டிரியு
மஞ்சு நீள்வது போலுமா மேனி
மலர்ப்ப தங்களில் வண்சிலம் பொலிப்ப
நஞ்சு பில்கெயிற் றரவவெற் றரையி
னும மூன்றிலைப் படையுடைப் பிள்ளை
யெஞ்ச லின்றிமுன் நிரியவுங், குன்ற
மெறிந்த வேலவன் காக்கவு மிசையும். அக

(இ - ள்) அஞ்சு...நிற்கவும் - ஐந்து பெரிய கைகளையும் ஆறுபோலப் பாயும் மதத்தையும் உடைய ஒப்பற்ற யானை முகமுடைய விநாயகக் கடவுள் நின்று காக்க வும் ; மலர்ப்பதங்களில் வண் சிலம்பு ஒலிப்ப - மலர்போன்ற பாதங்களில் வண்மை யுடைய சிலம்புகள் சத்திக்க, அரை இருள்...மேனி - பாதியிரவிலே திரிகின்ற மேகம் நீள்வது போன்ற கரிய (கஞ்சுகம் போர்த்த) திருமேனியினையும் ; நஞ்சு... வெற்றிரையின் - நஞ்சினை ஒழுக்குகின்ற பற்களையுடைய பாம்பைக் கச்சாக அணிந்த வெற்றரையினையும் உடைய ; நாமம்...நிரியவும் - அச்சத்தைத் தருகின்ற மூன்றிலை வடிவுடைய சூலப்படையை ஏந்திய பிள்ளையாகிய வைரவக் கடவுள் இடைவிடாது



திருவேகம்ப விகடசக்கர விநாயகர் கோயில்

—பாட்டு - 1158 - பக்கம் - கசஅஉ



1



2

1. திருவேகம்பம் - திருவேகம்ப மேல் விமானங்கள்

2. திருவேகம்ப மாமரம்

"மாவமர்ந்த நம்மிருக்கை" (1130) "மாவின் மூலம்" (1134)

—பாட்டு - 1138 - பக்கம் - கசசூ0

முன்னே திரிந்து காக்கவும்; குன்றம்...காக்கவும் - கிரவுஞ்சமலையை இருபிளவாகப் பிளந்த வேற்படையினையுடைய முருகக் கடவுள் காக்கவும்; இசையும் - (அங்ஙகரம்) பொருந்தும்.

(வி - ரை) அஞ்சுவான் கரம். "ஐந்து கரத்தனை யானை முகத்தனை" என்று திருமந்திரம் காப்புச் செய்யுள் இதனையே போற்றிற்று. ஐந்து என்பது அஞ்சு என மருவி வந்தது. வான் என்றதனால் வானவர்க்காக என்பதும், அஞ்சு என்றதனால் அவ்வானவர்க்குப் பகையாயிருந்த கயமுகாசுரன் முதலிய கொடியோர் அஞ்சுகின்ற என்பதும் குறிப்பாம். கரத்தைக்கண்டு அஞ்சுதலாவது அதனில் ஏந்திய ஒரு கோடாகிய படையினால் அக்கொடிய கயமுகனைச் சங்கரித்தமையால் அதனைக் கண்டஞ்சுதல் என்ற குறிப்புத் தருவது. இக்கருத்துப் பற்றியே "ஒருகோட்டன்" என்று தொடங்கித் தமது ஞான நூலுக்குக் காப்புக் கூறினர் அருணந்திசிவாசாரிய சுவாமிகள்.

பாசம், அங்குசம், அரதனகலசம், கொம்பு, மோதகம் என்ற இவைகளை முறையே இந்த ஐந்து கைகளும் ஏந்தி நிற்கின்றன. இதனைப் "பண்ணிய மேந்துங் கரந்தனைக் காக்கிப் - பானிலா மநுப்பமர் தடக்கை, விண்ணவர்க் காக்கி - யரதனக் கலச வியன் கரந் தந்தைதாய்க் காக்கிக், கண்ணி லாணவவெங் கரிபிணித் தடக்கிக் கரிசினேற் கிருகையு மாக்கு, மண்ணலைத் தணிகை வரைவள ராபச் சகாயனை யகந்தழீஇக் களிப்பாம்" என்று தணிகைப்புராணத்தினுள் (கடவுள் வாழ்த்து) கச்சியப்ப முனிவர் அழகாக எடுத்தோதியது காண்க. வன்கரம் என்பது பாடமாயின் இப்பெருஞ் செயல்கள் செய்யும் வலிமையுடைய கைகள் என்றுரைத்துக் கொள்க.

ஆறு இழி மதம் - ஆறுபோல வழிகின்ற கன்னமதம், கபோலமதம் என்ற இரண்டு மதங்கள். முகம்மட்டும் யானை உருவுடையதாதலால் இவ்விரண்டுமே அவர்க்கு இயல்பிற் கூறப்படுவது. மும்மதத்தன் என்பது உபசாரம். முருகப் பெருமான்பொருட்டு யானையாகவே வந்தது ஓர் அவசரம் பற்றியது.

ஆனை - யானை முகமுடைய விநாயகக் கடவுள். ஆகுபெயர். இங்குக் குறிக்கப் பட்ட மூர்த்தி திருவேகாம்பரத்தில் தெற்கு வாயிலில் ஆயிரக்கான் மண்டபத்தில் எழுந்தருளியுள்ள விகட்சக்கர விநாயகமூர்த்தி. தக்க யாகத்தில் விட்டுணுவினிடமிருந்த சக்கரம் விநாயகக் கடவுளின் திருக்கையிற் போந்ததாக, அதனை மீளப்பெறும் பொருட்டு, விட்டுணுவின் சேனைத் தலைவனாகிய விடுவசேனன், விநாயகக் கடவுளின் மூன்புநின்று விகடக்கூத்தாடி அதனைப் பெற்றனன் என்பது சரிதம். இக்காரணத்தால் இவருக்கு இப்பெயர் வழங்குவதாயிற்றென்பர். "விழிமலர்ப்பூ சனையியற்றித் திருநெடுமால் பெறுமாழி மீள வாங்கி, வழியொழுகாச் சலந்தரன்மெய்க் குருதிபடி முடைநாற்ற மாறு மாற்றுற், பொழிமதநீர் விரையேற்றி விகடநடப் பூசைகொண்டு புதிதா நல்கிப், பழிதபுதன் முதையினும் புகழ்படைத்த மதமாவைப் பணித்தல் செய்வாம்" (கடவுள் வாழ்த்து) என்ற காஞ்சிப்புராணம் விகடசக்கர விநாயகக் கடவுள் அதி இவ்வரலாற்றைத் தமிழ் மணம்படக் கூறுதல் காண்க.

ஆனை நிற்கவும் - நிற்க - நின்று காக்க. காஞ்சிமாநகரத்தை விநாயகக் கடவுள் - வைரவமூர்த்தி - முருகப்பெருமான் என்ற மூன்று சிவகுமாரர்களும் காவல் புரிகின்றனர் என்பது வரலாறுதலின் அந்த மூவர் காவலும், இவ்வொரு பாட்டாற் கூறப்பட்டது. விகடசக்கர விநாயகர் தலவிநாயகராதலின் கந்த புராணத்தில் கடவுள் வாழ்த்தில் "கச்சியின் விகட சக்ர கணபதிக் கன்பு செய்வாம்" என்று அதி கூறினர். காஞ்சிப் புராணமுடையாரும் மேற்கூறியபடி இவருக்கு வாழ்த்துக் கூறியதும் இது பற்றியேயாம்.

அரை இருள் திரியும் மஞ்சு நீள்வது போலும் மா மேனி என்றது வைரவ மூர்த்தியின் திருமேனியிலணிந்த கஞ்சுகத்தின் மிக்க கருமைநிறங் குறித்தது. மா - கருமை நிறமுடைய. இக்கறுப்பு அவர் பூண்டுள்ள கஞ்சுகத்தினது நிறம். வைரவர் மகா விட்டுணுவின் கரிய தோலினைச் சட்டையாகப் போர்த்துள்ளவர் என்றும், அதனால் அவருக்குச் சட்டைநாதர் என்று பெயர் வழங்குவதென்றும் கூறுப. வைரவக் கடவுளது திருமேனி சிவந்த நிறமுடையதென்பர். "கோடி சூரியப் பிரதீகாசம்" என்பது வடமொழித் தியானசுலோகம். "வெஞ்சினப் பரியழன்மீது போர்த்திடு, மஞ்சனப் புகையென வால மாமெனச், செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக், கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம்" என்ற கந்தபுராணமுங் காண்க. இவ்வாறன்றி பாதியிரவில் திரியும் மேகம்போன்ற திருமேனி என்றுரைத்து, நிறப் பண்பிலுலன்றி இரவித்திரியும் தொழிற் பண்புபற்றிப் போந்த உவமையாகக் கூறுவாருமுண்டு. எவ்வகையினும் மேகம், உபகாரத்திலுகிய பயன்பற்றி வந்த உவமம் என்பது கொள்ளத்தக்கது. சிவபெருமானைப்போலவே குமாரர்கள் மூவரும் சிவந்த நிறமுடையவர் என்ப.

இருள் திரியும் - திரியும் என்பதனைப் பிறவினையாக்கி இருளைத் திரிக்கும் கருமை என்றுரைப்பாருமுண்டு. அரையிருள் திரியும் என்றதனால் வைரவக் கடவுளின் காவல் இரவில் சிறப்பாயுரிமையாவது குறிப்பு.

மஞ்சு நீள்வது போலும் - வைரவர் காவற்செலவின் வேகத்தால் அவர் மேற் போர்த்த கஞ்சுகம் நீண்டு அசைவது கரிய மேகம் நீண்டு செல்வது போல்வது என்க. நீள்வதாகிய மஞ்சு - காளமேகம் என்று கொள்வதுமொன்று.

மா மேனி - கஞ்சுகத்தாற் கரிய திருமேனி - கஞ்சுகம் போர்த்த என வருவித்துரைக்கப்பட்டது.

வண் சிலம்பு - எண்ணும் அடியார்களுக்குத் திருவடிகள் இருக்கும் இடத்தை அறிவுறுத்திக் காட்டுவதனால் சிலம்பு வண்மையுடையது என்பதாம். "திருச்சிலம் போசை யொலிவழி யேசென்று, நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற" (திருவுந்தியார்) என்ற ஞான சாத்திரமும், "மலர்த்தாள் பூண்டு வந்திறைஞ்சுங், கால மிதுவென் றங் கவரை யழைத்தா லென்னைக் கடல்விளித்த, வால மிருண்ட கண்டத்தா னடித்தா மரை மேற் சிலம்பொலிப்ப" (ஏயர்கோன் - புரா - 334) என்ற திருவாக்கும், பிறவும் காண்க.

மஞ்சு நீள்வதுபோலும் மா மேனி - என்றதற்கு மேற்கூறியபடி யன்றி மேகம் போன்ற நிறமுடைய திருமேனி என்று உரை கூறுவாருமுண்டு. வைரவக் கடவுளுக்கு நிறம் அஞ்சனம் என்னும் கறுப்பு என்று சில ஆகமங்களிற் கூறப்படுவதென்பர். மிக்க சிவப்பு கருநிறங் காட்டுமென்பதும் இயல்பு.

வேற்றரை - உடை அணியாத இடை. ழன்றிலேப் படை. - திரிசூலம்; சிவபெருமானைப்போலவே வயிரவக் கடவுளும் திரிசூலம் ஏந்துபவர். சிறுத்தொண்ட நாயனார் பொருட்டு வயிரவக்கோலம் பூண்டுவந்த இறைவர் திரிசூலம் ஏந்தி வந்த சரிதமும் உன்னுக. "அயன்கபா லந்தரித்த இடத்திருக்கை யாலணைத்த, வயங்கொளிமூ விலைச்சூலம்" (சிறீத்தொண்டர் புரா - 34) என்றது காண்க. நாமம் - அச்சம்.

பிள்ளை - வயிரவக்கடவுளைச் சிவகுமாரர்களில் ஒருவராகக் கூறும் புராணமரபு குறித்தது. வைரவக் கடவுளின் கோலத்தையும் அவரது திருவருட் பெருமையினையும் வரலாற்றினையும், கச்சிநகர்க் காவலினையும் பற்றி "எளியரை வலியர் வாட்டின் வலியரை யிருநீர் வைப்பி, னளியறத் தெய்வம் வாட்டு மெனுமுரைக் கமைய வன்றே, தெளியுமா வலியைச் செற்றேற் செருத்துரிக் கவயம் போர்த்த, வளியுயர் கச்சி காவல்

வயிரவர்க் கன்பு செய்வாம்" என்று (கடவுள் வாழ்த்து) காஞ்சிப்புராணத்துள் எடுத்துக் கூறுதலும், கந்தபுராணத்துள்ளும் மேற்காட்டியபடி துதி கூறுதலும் காண்க.

"நிறைவாந் தன்மை, வாமனனார் மாகாயத் துதிரங் கொண்டார்" (தனித் திருத்தாண்டகம்), "விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமரு கங்கை,தரித்ததோர் கோல கால பைரவ ராகி" (திருநேரிசை - திருச்சேறை - 6) என்ற தேவாரங்கள் முதலியவை இவர் சிவபிரானின் வேறல்லாத தன்மையினையுடையவர் என எடுத்துக் கூறுவனவும் காண்க. கணபதி, முருகப்பெருமான் வரலாறுகளின் உள்ளுறையும் இதுவேயாதலும் அவரவர் புராணங்களுட் கண்டுகொள்க.

**குன்றமெறிந்த வேலவன் காக்கவும்** - குன்றம் - கிரவுஞ்சமலை. இம்மலை சூரபதுமன் முதலிய மூவருள் மாயாமல நிலையினருக்குக் கூறப்படும் தாரகாசுரன் இருந்த வஞ்ச மலையாகும். மாயையினுட்பட்ட உயிர்கள் அதினின்றும் மீளும் வகையறியாது அதனுள்ளே உழன்று அலைதல்போல, இம்மலையினுட்பட்டோரைத் தாரகன் தனது மாயத்தால் அதனுள்ளே உழலவைத்து மாய்த்தனன். இம்மலையை முருகப்பெருமான் தமது வேலாயுதத்தால் இருபிளவாக்கித் தாரகனையும் சங்கரித்தனர் என்ற வரலாறு (கந்தபுராணம் - தாரகன் வதைப்படலம்) காண்க. "முன்னுள் வரைகிழிய, எந்து மயில்வே னிலைகாட்டி யிமையோ ரிகல்வெம் பகைகடக்கும், சேந்தன்" (சண்டீ - புரா - 1) என்று பின்னரும் இதனை ஆசிரியர் எடுத்தோதுதல் காண்க. மாயாமலம் சிதைவு பட்டால் உயிர்கள் விரைவில் ஈடேறுவர் என்ற குறிப்புப்பெற முருகப் பெருமானது பெருமைகளில் இதனைத் தேற்றம்பெற இங்கு எடுத்துக் காட்டியருளினர் ஆசிரியர். 661ல் உரைத்தவையும் பார்க்க.

**இசையும்** - இடையூறின்றி யிருக்கும் என்க. "கன்னி நன்னெடுங்காப்பு" (1152) என்றதனால் இந்நகரத்தினைக் காளி காவல் செய்தல் கூறினர். சாத்தனார் முதலிஞரும் காவல் புரியும் வரலாறுகள் கந்தபுராண காஞ்சிப்புராணங்களுட் காண்க.

"கணிமுகில் செக்கர் போர்த்தெனுங் கரிய கஞ்சுகச் செங்நிறக் கடவுள்
மணிசுடர் வயிரக் கிம்புரி மருப்பு மால்கரி முகத்தவன் வருசூர்
அணிபட வெறிந்த வேலவ னயன்போற் றேன்றிய சாத்தன்மால் விசையை
யிணையில்சீர்க் காளி முதலிஞே ரென்று மினிதுகாத் திடுவதந் நகரம்"

(திருநகரப்படலம் - 82) என்பது கந்தபுராணம். சிறப்புப்பற்றிக் கணபதி, வயிரவர், முருகர் என்ற மூவர் காவலையும் இங்கு ஒருங்குவைத்து எடுத்துக் கூறினர். [illegible] ஐயனாரது காவல் அடுத்தபாட்டிற் கூறுதல் காண்க. 81

## காரி சேண்டணைவேளி

1159. சத்தி தற்பர சித்தயோ கிகளுஞ்
சாத கத்தனித் தலைவரு முதலா
நித்த மெய்திய வாயுண்மெய்த் தவர்க
ணீடு வாழ்திருப் பாடியு மனேகஞ்,
சித்தர் விஞ்சைய ரியக்கர்கந் தருவர்
திகழ்ந்து மன்னுவார் சேண்டுகை யேந்தி,
வித்த கக்கரி மேற்கொளுங் காரி
மேவு சேண்டணை வெளியுமொன் றுளதால். அஉ

(இ - ள்) வெளிப்படை. சிவசத்தியை உபாசித்துச் சித்தியடைந்த சத்தியோகிகளும், சிவயோக சாதகமுடைய தனித்தலைவர்களாகிய சிவயோகிகளும், முதலா

அழிவில்லாமையுடைய ஆயுளைக் கொண்ட மெய்த்தவர்கள் நிலைத்து வாழ்கின்ற பாடிகளும் அநேகம் அங்கு உள்ளன; சித்தர்கள், விஞ்சையர்கள், இயக்கர் கந்தருவர்கள் என்ற இவர்கள் விளக்கம் பெற்றுப் பொருந்துகின்ற, நீண்ட செண்டினைக் கையில் ஏந்திச் சிறந்த யானையின்மேல் ஏறிச் செல்கின்ற ஜயனார் உலாவருகின்ற செண்டாணை வெளியும் ஒன்று அங்கு உண்டு.

(வி - ரை) தற்பர சத்தி சித்த யோகிகள் என்க. (தற்பர சத்தி - உயிர்களுக்குத் தலைவியாகிய சத்தி என்பது.) யோகிகளுள் ஒரு வகையினர்; சத்தியை உபாசிப்பவர். இவர்கள் சுத்த சாத்த மதத்தினர் எனப்படுவர். இவர்களுக்கு நூல் சத்தி தத்துவத்தில் வசிக்கும் ஓர் ஆன்மாவால் செய்யப்பட்ட சாத்த நூலாகும். சட சித்துக்கள் (உலகம்) எல்லாம் சத்தியின் பரிணமமேயாம் என்பது இவர்களது முடிபு. சிவசத்தியையே பரம்பொருள் எனக் கொண்ட சித்தர்களாகிய யோகியர்களாதலின் சத்திசித்த யோகியர் என்றார். இவ்வாறன்றிச், சித்த யோகியர் - சித்த - கைவந்த - (சித்தித்த), - முற்றுப்பெற்ற - யோகத்தை யுடையவர் என்றலுமாம்.

சாதகத் தனித் தலைவர் - சிவயோகியர். நித்தம் எய்திய ஆயுள் மெய்த்தவர்கள் - மருந்து - மந்திரம் - யோகம் முதலியவற்றுல் காயகற்ப முறைகளை யனுசரித்து உடம்பைத் தபித்து வலிதாக்கி நீண்ட ஆயுள் பெற்றவர்.

நித்தம் என்றது உபசாரம். ஏனையோரினும் பன்மடங்கு நீடித்த அளவு குறித்து நின்றது என்பார் நீடுவாழ் என்று கூறினர். " அச்சுத னயனமர ராகியபெய ரவர்க்கு... நிச்சயப் படுமுகமனே யானபோல்" (சூரனமைச் - 140) என்ற கந்தபுராணம் காண்க.

பாடி - இடம். சிற்றூர் என்பாருமுண்டு.

சித்தர் - விஞ்சையர் - இயக்கர் - கந்தருவர் - இவர்கள் தெய்வச் சாதியர். சித்தர் - சித்துக்களைச் செய்யும் வன்மையுடையவர். இவர்களைப் பதினெண் சித்தர்களெனவும் அவர்களது மரபில் வந்தோர் என்றும் கூறுவர். இவர்களது வலிமையினைச் " சித்தர் கணம்" என்ற பகுதியில் "வித்தகச் சித்தர் கணமே" என்று பாராட்டினார் தாயுமானார். மன்னும் - மன்னுகின்ற. மன்னும் - வெளி என்று கூட்டுக. இவ்வாறன்றி மன்னுவார் - வசிப்பார்கள் என்று உரைப்பாருமுண்டு. முன்னர் வாழ்பாடி என்றும், பின்னர் மேவு - வெளி என்றும் கூறுவதுலுல் இப்பொருள் பொருந்துமோ என்பது ஐயம்.

வார்செண்டு - தலையில் இரு பிளவாகப் பிளந்து நீண்டு வளைந்த பிரம்பு. சவுக்கு என்பர். வார் - நீண்ட. வார் - பொருந்திய என்பாருமுண்டு.

வித்தகக்கரி - வித்தகம் - சிறப்பு. கரி - ஐயனாருக்கு யானை ஊர்தியாகும். காரி - ஐயனார். அரிகரபுத்திரர் என்ப. செண்டாணைவெளி - யானை குதிரைகளை நடத்தும் வையாளி வீதி. வெளி - வீதி. இதனை வெளிவீதி என்று மதுரையில் வழங்கும் வழக்கும் காண்க. இமயமலையிற் புலிக்கொடி பொறித்து, அதன் எல்லைவரைத் தனது வலிமையை நாட்டச்செல்லும் கரிகாற்சோழர் இந்தக் காரிக்கடவுளை வழிபட்டு, அவரிடத்துச் செண்டுபெற்றுச் சென்று அங்ஙனமே வெற்றிபெற்று வந்தனர் என்பது சரிதம். " தனது ஆணை சேறற்கும், சாத்தன் அருளால் தான் பெற்ற செண்டினாலே அதனை (இமயத்தை) அடித்துத் திரித்துப் பொறித்து மறித்து நிறுத்தான் என உணர்க, என்னை ?

" செண்டு கொண்டுகரி கால னொருகாலி லிமயச் சிமய மால்வரை திரித்தருளி மீளவதனைப், பண்டு நின்றபடி நிற்க விதுவென்று முதுகிற் பாய்பு லிப்பொறி குறித்தது மறித்தபொழுதே" (கலிங்கத்துப்பரணி - இராச - 1) எனவும், "கச்சி வளைக்கைச்சி காமக் கோட் டங்காவன், மெச்சி யினிதிருக்கும் மெய்ச்சாத்தன் - கைச்செண்டு கும்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான், செம்பொற் திரிதிரித்த செண்டு " எனவும்

கூறினாதலின்'" என்று அடியார்க்கு நல்லார் உரையினுட் கூறுதல் இங்கு நினைவு கூர்தற்பாலன.* (சிலப் - இந் - காதை - 95 - 98 - உரை). 82

## யோகபீடம் - போகபீடம்

1160. வந்த டைந்தவர் தம்முரு மாய
மற்று ளாரைத்தாங் காண்பிட முளது ;
சிந்தை யோகத்து முனிவர்யோ கினிகள்
சேரும் யோகபீ டமுமுள ; தென்று
மந்த மில்லறம் புரப்பவள் கோயி
லான போகபீ டமுமுள தாகு ;
மெந்தை யார்மகிழ் காஞ்சிநீ டெல்லை
யெல்லை யில்லன வுள்ளவா ரறிவார் ?. அக

(இ - ள்) வெளிப்படை. அந்நகரத்தில், தன்னிடத்து வந்து அடைந்தவர்கள் தனதுருவம் மற்றவர்க்குத் தோற்றாது மறையத், தாம் அவர்களைக் காணும்படியான தொரு இடமுளது ; சிந்தை யோகத்து முனிவர்கள், யோகினிகள் சேர்ந்துள்ள யோகபீடமும் ஒன்றுள்ளது ; அழிவில்லாத அறங்களை என்றும் புரக்கின்ற காமாட்சி அம்மையார் விரும்பி எழுந்தருளியிருக்கும் கோயிலாகிய போகபீடமும் உளதாகும் ; எமது பெருமானாராகிய ஏகாம்பர நாதர் மகிழ்ந்து வீற்றிருக்கும் காஞ்சிபுரத்தில் இவ் வாறு கீண்ட அளவற்ற அதிசயங்கள் உள்ளன ; அவற்றை யாவர் அறிவார்கள் ? (ஒருவருமிலர்.)

(வி - ரை) காண்பிடம் - காணுமிடம். தம்மைப் பிறர்காணுது தாம் பிறரைக் காண்பது சித்திகளுள் ஒன்று. 'வேறொருவர் காணும லுலகத் துலாவலாம்' என்றார் தாயுமானார். இவ்வாறு சித்திகள் செய்வார் சித்தர்கள் எனப்படுவர். இவர்களை முன் பாட்டிற் கூறினார். இது தவமுயற்சிகளால் அவ்வவர்க்கு மட்டும் உண்டாவது ; இங்குக் கூறியது வேறு ; இது இந்த இடத்தின் தன்மையாம் ; இந்த இடத்தில் வந்து அடைந்தவர் எல்லாநம் பெறக்கூடியது. மற்றுள்ளாரை - அங்கு வராதவரை என் றுரைப்பாருமுண்டு.

யோகத்து முனிவர் - யோகம் - கூடுதல். சிந்தையை இறைவன்பாற் கூட்டிய வர் யோகர் எனப்படுவர். யோகினி - பெண்பால்.

அறம் புரப்பவள் - காமாட்சியம்மையார். "அறம்புரந் தளிக்கும் அன்னை" (1153) என்றது காண்க.

போகபீடம் - திருக்காமக்கோட்டம்.

எல்லையில்லன உள்ள - இன்னும் அநேகம் விம்மிதங்கள் உள்ளன. இவற்றைக் காஞ்சிப் புராணம் விம்மிதப்படலத்தும், கந்தபுராணம் திருநகரப்படலத்தும் விரி வாய்க் கண்டு கொள்க.

ஆர் அறிவார் ? வினு, முற்றும் அறிபவர் ஒருவருமிலர் என்று எதிர்மறை உணர்த்திற்று. இவை இக்கலியுகத்திற் சிறப்புடைய சிலர்க்கு மட்டுமன்றி யாவர்க்கும் தெரியாவென்பர். இதற்கு "இன்னவா மதிசயங்கள் மற்று முள்ள எல்லையில ; யவைமுற்று மறிவார் யாரே ?, முன்னுகத்தி னெல்லார்க்குங் காட்சி யெய்து ; மூண்டகொடுங் கலியுகத்திற் படிமை வாழ்க்கை, மன்னினோர் சிலர்க்கன்றித்

* இது பற்றி எனது சேக்கிழார் - 107-111 பக்கங்கள் பார்க்க.

தோன்ரு" (விம்மிதப்படலம் - 21) என்று காஞ்சிப்புராணமுடையார் விரிவுரை கூறுதல் காண்க. 83

## உருத்திர சோலை - பரிசவேதி

1161. தூண்டு சோதியொன் றெழுந்திரு டுரக்குஞ்
சுரர்கள் வந்துசூ ழுருத்திர சோலை,
வேண்டி னுர்கடம் பிறப்பினை யொழிக்கு
மெய்ந்நெ றிக்கணின் முர்கடாம் விரும்பித்
தீண்டில் யாவையுஞ் செம்பொனாக் குவதோர்
சிலையு முண்டுரை செய்வதற் கரிதா
லாண்ட நாயகி சமயங்க ளாறு
மகில யோனியு மளிக்குமந் நகரம். அச

(இ - ள்) வெளிப்படை. விளங்கி எழுகின்ற ஓர் ஒளிப்பிழம்பானது இரவில் தோன்றி இருளை நீக்குதற்கிடமாகியும், தேவர்கள் வந்து சூழ்வதற்கிடமாயுமுள்ள உருத்திரசோலை யென்னும் பூங்காவனமும், விரும்பி வேண்டியவர்களுக்கு அவர்களுடைய பிறவியை யொழிக்கின்ற மெய்ஞ்ஞான நெறியில் நின்றவர்கள் (பொன்னுக்க) விரும்பித் தீண்டும்படி செய்தால், ஓடு முதலிய எவ்வகைப் பொருள்களையும் பொன்னுகச் செய்கின்ற ஒரு கல்லும் உண்டு ; எம்மை ஆட்கொள்ளும் காமாட்சியம்மையார் தாம் ஆறு சமயங்களையும் எல்லாவுயிர்களையும் காப்பாற்றும் அத்தத் திருநகரத்தில் உள்ள இத் தன்மையான பெருமைகளைச் சொல்வதற்கு அரிதாகும்.

(வி - ரை) தூண்டு சோதி-வேறெவராலும் தூண்டப்படாமல் இறைவனது சத்தி யாலே தூண்டப்படுவது என்ற பொருளில் வந்தது. படுவிருதி தொக்குவந்த செயப் பாட்டுவினைப் பெயரெச்சம். சுரர்களைத் தூண்டும் என்று பெயரெச்சமாக கொண்டு உரைத்தலுமாம். " தூண்டு சுடரனைய சோதி கண்டாய் " (திருமறைக்காடு) என்ற திருத்தாண்டகம் காண்க. இறைவன், தூண்டப்படாது இயல்பாய ஒளியுடையவன் என்பது " தூண்டாமைச் சுடர்விடு நற்சோதியானை " (ஆவடுதுறை - 9) என்ற திருத் தாண்டகத்தாலறியப்படும்.

வேண்டினுர்கள் தம் பிறப்பினை ஒழிக்கும் சிலையும் - பொன்னுக்குவதோர் சிலையும் என்று பிரித்துத் தனித்தனி கூட்டி உரைப்பாருமுண்டு.

பிறப்பினை ஒழிக்கும் மெய்ந்நெறி என்று கூட்டுக.

தீண்டில் யாவையும் செம்பொனாக்குவது - பரிசவேதி என்பது. தீண்டில் - தீண்டும்படி செய்தால். பொன்னுசை கொண்டு தீண்டில் இது பலிக்காது என்பதும், ஆசையற்று வீடுபேற்றின் முயல்வோர் விரும்பித் தீண்டும்படி செய்தால் மட்டும் யாவையும் பொன்னுக்குவிக்கும் என்பதும் பெறப்பட்டன. " ஓட்டினை யெடுத்தா யிரத்தெட்டு மாற்முக வொளிவிடும் பொன்னுக்கு"ம் சித்தர்கள் என முன் சொல்லப் பட்ட தன்மை வேறு. இங்குக் கூறப்படும் பிறப்பறுக்கும் மெய்ந்நெறிக்க ணின்முர்கள் விரும்பித் தீண்டுஞ் செய்கை வேறு. இரசவாதத்திலும் இவ்விதமாகியதொரு நியதி யுண்டு. " [illegible] "

சமயங்களாறும் அளிக்கும் - " ஆறுசமயத் தவரவரைத், தேற்றுந் தகையன " (இன்னம்பர் - திருநேரிசை) என்ற அப்பர் சுவாமிகள் தேவாரமும், " அறிவினுல் மிக்க வறுவகைச் சமயம் அவ்வவர்க் கங்கே ஆரருள் புரிந்து " (தக்கேசி - புன்கூர் - 9) என்ற சுந்தரர் திருவாக்கும், "அறுசமயத்தலைவர்" (சாக்கியர் புரா, 1) என்ற மாபுராண

மும், பிறவும் கூறுகின்றபடி அவ்வவர் பக்குவத்திற் கேற்றபடி உதவ ஆறுவகைச் சமயங்களையும் இறைவன் வகுத்தருளினர். இறைவியார் ஆன்மாக்களை அவ்வவற்றில் நிறுத்துவித்து மேல்வரச் செய்வர் என்பதாம். இவை உட்சமயங்கள்.

அகில யோனியும் அளிக்கும் - உயிர்களுக்காக இறைவன் செய்யும் தொழில்க ளெல்லாம் சத்தியினுற் செய்தலின் இவ்வாறு கூறினர். ஐந்தொழில்களுள் படைத் தல் காத்தல் அழித்தல் என்ற மூன்றும் உயிர்கள்பெறும் உடம்பினைப் பற்றிச் செய் யப்படுவன. உடம்பு மாயையினின்றும் வரும். மாயை இறைவனுக்குச் சத்தியாம். 84

## கரிகாற் சோழர்

1162. என்று முள்ளவிந் நகர்கலி யுகத்தி
லிலங்கு வேற்கரி காற்பெரு வளத்தோன்
வன்றி றற்புலி யிமயமால் வரைமேல்
வைக்க வேகுவோன் றனக்கிதன் வளமை
சென்று வேடன்முன் கண்டுரை செய்யத்
திருந்து காதநான் குட்பட வகுத்துக்
குன்று போலுமா மதில்புடை போக்கிக்
குடியி ருத்தின கொள்கையின் விளங்கும். அரு

(இ - ள்) வெளிப்படை. என்றும் அழியாது நிலைத்துள்ள இக்காஞ்சிபுரத் திரு நகரமானது, வலிய திறலுடைய புலிக்கொடியினைப் பெரிய இமயவரையின் மேல் நாட்டும்படிச் செல்வோராகிய, கலியுகத்திலே விளங்குகின்ற கரிகாற்பெருவளத்தான் என்னும் சோழ அரசர்க்கு, முன்னே இதனைக் கண்டு (சிந்து மேதன் என்னும்) ஒரு வேடன் சென்று இதன்சிறப்பைச் சொல்லத், திருத்தம் செய்யப்பெற்ற நான்கு காத தூரம் சுற்றெல்லையுடைய ஒரு நகரமாக அமைத்துக்கொண்டு, மலையைப்போலும் பெரு மதிலை நான்கு பக்கத்திலும் சூழச்செய்து, அவர், அனேகம் குடிகளை அவ்விடத்தில் குடியிருக்கும்படி செய்த பெருமையுடன் விளங்கும்.

(வி - ரை) என்றும் உள்ள - பிரளயத்திலும் அழியாத. பிரளயசித் என்று பேர் பெற்ற.

கலியுகத்தில் - இந்நகர் என்றும் நிலைத்திருப்பதனால் இங்குச் சொல்லப்படுவது கலியுகத்தில் அதனுடைய தோற்றம் நிலை என்ற வரலாறுகளாம் என்பதாம்.

கரிகால் பெருவளத்தோன் - தீயினுற் காய்ந்த காலையுடைமையாற் கரிகாற் சோழர் என்ற காரணப் பெயர்பெற்ற அரசர். இவரே இக்கலியுகத்தில் இந்நகரத்தை அமைத்தவர். இவரது திருவுருவம் ஏகாம்பரநாதர் கோயில் உள் வாய்தலின் முன்பு வைத்து வணங்கப்படுகிறது காண்க. படம் பார்க்க. அரசர் பெருந்திருவெல்லா முடையாரான வளம்பற்றி இவரைப் பெருவளத்தோன் என்று பழைய நூல்கள் எல்லாம் கூறும்.

புலி இமயமால் வரையில் வைக்க ஏகுவோன் தனக்கு-கரிகாற் சோழர் இமய மலைவரை நாடுகொண்டு அடிப்படுத்தி இமயத்தில் தமது புலிக்குறியைப் பொறித்து வெற்றிகொண்டனர் என்பது வரலாறு. இதனை, "அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப், பகைவிலக் கியநிப் பயங்கெழு மலையென, விமையவ ருறையுஞ் சிமயப் பிடர்த்தலைக், கொடுவரி யேற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு" என்ற சிலப்பதி காரத்தாலும், (இந்திரவிழா - காதை - 95-98), அதற்கு அடியார் நல்லார் எழுதிய உரையாலுமறிக. அவ்வாறு இமயம் நோக்கிப் புறப்படும்போது வேடன் காஞ்சியின்

பெருமைகண்டு வந்து சொன்னலுகக், கரிகாற்சோழர் அங்குச்சென்று, காடெறிந்து நாடுகண்டு, நான்கு காதம் எல்லை வகுத்து நகராக்கி மதில்போக்கிக் குடியிருத்தினர்; காரிக்கடவுளை வழிபட்டு அவர்பாற் செண்டுபெற்று ஏகி, அச்செண்டினைக் கொண்டு இமயத்தலையில் எறிந்து வெற்றிபெற்றனர் என்பது இப்பாட்டிற் குறித்த சரித வரலாறுகும். சோழர் இமயத்தில் புலி பொறித்த வரலாறுபற்றி 552 - 608-ல் உரைத்தவையும் பார்க்க.

**வன் திறல்** - ஒரு பொருட் பலசொல்; மிகுதி குறித்தது; மிக்க வலிமையுடைய.

**புலி** - புலி முத்திரை. இது சோழர் மரபுக்குரியது. " புண்டரிகம் (புலி) பொன் வரைமே லேற்றி " (608) என்றதும், பிறவும் காண்க. சோழர் குலத்தின் முதற்குரவ ரான வியாக்ரபாதரின் இலச்சினைபோலும். **இமயமால் வரைமேல் புலி வைக்க ஏகு வோன்** என்க. இமயமலையில் புலிக்குறி பொறிக்கச் செல்வோன்.

**இமயமலையை** வடபெருங்கல் என்பது மதுரைக்காஞ்சி (70). **வேட்டன் கண்டு** உரைசெய்த வரலாற்றின் விரிவு காஞ்சிப்புராணத்துட் காண்க. இவ்வாறே மதுரைச் சிறப்பை ஒருவணிகன் கண்டு குலசேகர பாண்டியனுக்குச் சொல்ல அவன் சென்று கண்டு காடெறிந்து திருமாளிகையும் நகரமும் ஆக்கிய செய்தி திருவிளையாடற் புராணத்திலு லறியப்படுவதாகும். இவ்வாறே தில்லையின் வரலாறும் காண்க.

*கரிகாற் பெருவளத்தோன் - ஏகுவோன்றனக்கு - வேடன் - கண்டு உரைசெய்ய - வகுத்து - மதில்போக்கிக் - குடியிருத்தின - கொள்கையின் - நகர் - கலியுகத்தில் - விளங்கும் என்று கூட்டி முடித்துக்கொள்க. உலகத் தோற்றம், ஒடுக்கம், முனிவர் மரபு, அரசர் மரபு, சரிதம் என்ற ஐந்தும் கூறுதல் புராணத்துக்குரிய உறுப்புக்களாத லின் இவ்வாறு அவையெல்லாம் அமைய இங்கு எடுத்துக் கூறினர் என்க. புராணம் பாடுவித்த அநபாயரது மரபின் தொடர்புபற்றிய சிறப்பும் உடன்கண்டவாருயிற்று.* 85

## மதில் சூழ்ந்த அகழி

வேறு

1163. தண்காஞ்சி மென்சினைப்பூங் கொம்ப ராடல்
சார்ந்தசைய வதன்மருங்கு சுரும்பு தாழ்ந்து
பண்காஞ்சி யிசைபாடும் பழன வேலிப்
பணைமருதம் புடையுடைத்தாய்ப் பாரி னீடுந்
திண்காஞ்சி நகர்கொச்சி யிஞ்சி சூழ்ந்த
செழுங்கிடங்கு திருமறைக ளொலிக்குந் தெய்வ
வண்காஞ்சி யல்குன்மலி வல்லி காக்க
வளர்கருணைக் கடலுலகஞ் சூழ்ந்தான் மானும். அசு

(இ - ள்) வெளிப்படை. குளிர்ச்சியையுடைய காஞ்சிமரத்தின் மெல்லிய கிளைக ளாகிய பூங்கொத்துக்களையுடைய கொம்புகள் (காற்றினால்) ஆடலைப் பொருந்தி யசைய, அதன் பக்கத்தில் வண்டுகள் விரும்பிவந்து காஞ்சிப்பண் ணிசையைப் பாடுதற் கிடமாகிய காஞ்சோலையைத் தனக்கு வேலியாகவுடைய வயல்களோடு கூடிய மருத நிலத்தை அருகில் உடையதாய், உலகத்தில் நீடுகின்ற வலிய காஞ்சி நகரத்தின் வலிய கொச்சியாகிய மதிலைச் சூழ்ந்த செழித்த அகழியானது, சிறந்த வேதங்கள் சத்திக் கின்ற தெய்வத் தன்மையுடைய வண்மையுடைய காஞ்சி என்கின்ற அணியை அணிந்த இடையினையுடைய மலைவல்லியார், காக்கின்றதனால், வளர்கின்ற கருணைக்கடலானது இவ்வுலகத்தைச் சூழ்ந்திருந்தால் எவ்வாறிருக்குமோ அதனை ஒக்கும்.

(வி - ரை) காஞ்சி (மென்சினை) = மாமரம். காஞ்சிப்பண் இசை என்க. காஞ்சி- மருதப்பண்களுள் ஒன்று. திண்காஞ்சி நகர் - காஞ்சி நகரத்தின் பெயர். வண்காஞ்சி- பெண்கள் அணியும் மேகலை என்னும் அணி. இவ்வாறு ஒருசொல் பலமுறையும் வருவது சொற்பின் வருநிலை என்ற அணி.

ஆடல் சார்ந்து அசைய - சுரும்புதாழ்ந்து வண்காஞ்சி இசைபாடும் என்றதனால் மாவின் பூங்கொம்பர் ஆடற் பெண்கள்போல ஆடலினைப் பொருந்தியசைய வண்டுகள் அவ்வாடற் பெண்களின் பக்கம் தாழ்ந்து வணக்கத்துடன் அவ்வாடலுக் கேற்றபடி பாடல் பாடுகின்றன என்றதோர் நயமும் கண்டுகொள்க.

பூங்கொம்பர் - பூங்கொம்பு போன்றார் என்ற தொனிப்பொருட்சுவையுங் காணத்தக்கது.

தாழ்ந்து - தாழ்தல் - விரும்புதல். பழனம் - இங்கு மாமரச்சோலை குறித்து நின்றது ; ஆகுபெயர். வேலிமருதம் - மருதவயலின் கரைப்பக்கம் மாஞ்சோலையிருத்தலால் பழனவேலி என்றார்.

நொச்சி இஞ்சி - நொச்சியாகிய மதில் - காவலினை வேண்டாத அரண் என்றபடியாம்.

இஞ்சி சூழ்ந்த கிடங்கு - கருணைக்கடல் - உலகத்தைச் சூழ்ந்தால் - ஒக்கும் என்று கூட்டுக. "ஆழ்கிடங்கு (சூழ்வயலு மதிலும்" — நம்பி-கச்சிநெறி-8.

திருமறைகள் ஒலிக்கும் தெய்வ வண்காஞ்சி என்றது மேகலையின் ஆர்ப்பரவம் வேத வொலியினைப்போன்று உளதென்றதாம். மறைகள் சத்தித்துத், தொண்டு பூண்டார்க்கு இறைவி இருக்கும் இடம் அறிவிப்பதால் வள்ளன்மையுடைய காஞ்சியாம் என்பது குறிப்பு. அம்மையார்க்கு வேதமே காஞ்சி என்ற அணியாம் ; ஆதலின் வேதமாகிய காஞ்சி (அணிகலன்) என்றலுமாம். வண்சிலம்பு அரற்ற-(1160) என்றது காண்க.

காக்கக் கருணைக்கடல் உலகத்தைச் சூழ்ந்தால் மானும் என்றது கருணை வடிவாகிய அம்மையார் நாற்புறமும் காவல் புரிதலின் கருணைக்கடல் சூழ்ந்தாற் போலும் என்றார் ; உலகம் என்றது காஞ்சியை யுணர்த்திச் சுட்டுப் பெயராய் நின்றது என்றலும் பொருந்தும். 86

## மதிலும் அகழியும்

1164. கொந்தலர்பூங் குழலிமையக் கொம்பு கம்பர்
கொள்ளும்பூ சனைகுறித்த தானங் காக்க
மந்திரமா மதிலகழி, யவர்தாந் தந்த
வாய்மையா கமவிதியின் வகுப்புப் போலு ;
மந்தமில்சீர்க் காஞ்சியைவந் தடைந்தார்க் கன்றி
யடைகளங்க மறுப்பரிதென் றறிந்து சூழ
வந்தணைந்து தன்கறுப்பு முவர்ப்பு நீக்கு
மாகடலும் போலுமலர்க் கிடங்கு மாதோ. அஎ

(இ - ள்) மலர்க்கிடங்கு - நீர்ப்பூக்கள் நிறையப் பூத்தற் கிடமாகிய அகழியானது ; கொந்தலர்...காக்க - கொத்துக்களாக அலர்ந்த பூக்களைச் சூடிய கூந்தலினையுடைய பார்வதிதேவியார், திருவேகாம்பர நாதர் விரும்பி ஏற்றுக் கொள்ளும் பூசைத்தானத்தைக் காப்பதற்காக ; அவர்தாம்.....வகுப்பு - அவ்விறைவரால் அருளிச் செய்யப்பட்ட உண்மை யாகமங்களின் விதிப்படி வகுக்கப்பட்டவையாகிய ; மந்திரமா மதில் அகழி - மந்திரத்தால் அமைத்த மதில்களுடன் கூடிய அகழிகளை ;

போலும் - ஒத்திருக்கும்; (அன்றியும் அந்த அகழியானது) அந்தமில்.....மாகடலும் போலும் - கெடுதலில்லாத சிறப்பினையுடைய காஞ்சி நகரைவந்து அடைந்தவர்களுக் கல்லாது தம்மைப்பற்றிய குற்றங்களை நீக்கிக்கொள்ளுதல் அருமையாமென்று அறிந்து அக்காஞ்சியைச் சூழவந்து தனது கறுப்பையும் உவர்ப்பையும் நீக்கிக்கொள்ளும் பெரிய கடலினையும் ஒத்திருக்கும்.

(வி - ரை) மலர்க்கிடங்கு, இமயக் கொம்பு - தானங்காக்க - ஆகமவிதியின் - மந்திரமாமதில் அகழி - வகுப்புப்போலும்; - மாகடலும்போலும் என்று கூட்டி முடித்துக் கொள்க.

**பூசனை குறித்த...வகுப்பு** - பூசைக்குரிய ஐவகைச் சுத்திகளுள் இது தானசுத்தி எனப்படும். "....ஐவகைச் சுத்திசெய் தாசனம் மூர்த்தி மூர்த்திமானும் சோதியையும் பாவித்து ஆவாகித்து....." (சித்தி - 8 - 20) முதலியவை பார்க்க. ஐந்து சுத்தியாவன ஆன்மசுத்தி - தானசுத்தி - திரவியசுத்தி - மந்திரசுத்தி - இலிங்கசுத்தி - என்பனவாம். இவற்றைச் செய்யும்முறை ஆகமங்களில் விதிக்கப்பட்டுள்ளன. இது உரிய மந்திரம் பாவனை கிரியைகளால் பூசைத்தானத்துக்குவரும் இடையூறுகளைப் போக்கி நான்கு மூலிகளினும் தீயின் ஒளியுடன் சொலிக்கின்ற மூன்று மதிலும், அவற்றைச் சுற்றி மூன்று அகழியும், உண்டாக்கியும், அவ்வாறே சத்தியாகின்ற காவலை மேலும் கீழும் உளதாக்கியும், எல்லாவகைக் காவலும் பொருந்தச் செய்து கொள்ளுதலாம் என்பர். ஞான பூசையிலும் ஐவகைச் சுத்தியுண்டு. "மண்முதற் கரணமெல்லாம்" (97) என்ற சிவப்பிரகாசத் திருவாக்குக் காண்க. இவையெல்லாம் ஆகமநூல் வல்லார்வாய் முறைப்படி கேட்டுணரத் தக்கன.

**மந்திரமாம் மதில் அகழி** - உரிய மந்திரங்களாலும் பாவனை கிரியை என்பவற்றாலும் செய்து அமைக்கப்பட்ட மதில்களுடன்கூடிய அகழிகள். **ஆம்** - என்றதனால் மந்திரத்தின் முன்வரும் பாவனையும் பின்வரும் கிரியையும் கொள்ளப்படும். **மந்திரம்** - நினைப்போனைக் காப்பது.

**வாய்மை ஆகமம்** - உண்மைப் பொருளை உணர்த்தும் ஆகமம். ஆகமங்களின் உண்மைப்பொருள்களாகிய முப்பொருள்களை வடித்தெடுத்து உணர்த்தும் சித்தாந்த ஞானசாத்திரங்கள் மெய்கண்ட சாத்திரங்கள் என்னப்படுதலும் காண்க.

**அந்தமில்சீர்** - "என்றுமுள்ள இங்கர்" (1164) என்றது காண்க.

**அடைந்தார்க்கன்றி** - அரிது - எதிர்மறை உறுதி குறித்தது. **அடைகளங்கம்** - அநாதியே உயிருடன் வரும் மூலமலம்.

**அறிந்து - சூழவந்து - அணையும் - மாகடல்** - தற்குறிப்பேற்றம்; அறிதலும், அறிந்தபடி செய்தலும் என்ற உணர்ச்சியுடையதாய்க் கூறுவதால். தனக்குக் கறுப்பும் உவர்ப்பும் உள்ளதென்றுணர்தலும் நீக்கும் வழியறிதலும் ஆம். கிடங்கு கடலும் போலும் என்பது அகழியின் அகலமும் ஆழமுமான நீர்ப்பரப்புக் குறித்தது. மெய்யும் உருவும் பற்றி எழுந்த உவமையை உள்ளுறுத்தது.

**ஆகமவிதியின் வகுப்புப் போலும்** - என்றது வினையும் பயனும் பற்றி எழுந்த உவமை. இவ்வுவமைகளினால் ஆகமவிதிப்படி பூசை செய்யும் சிவசாதனமும், அதனைச் சாதித்தரிர்க்குக் களங்கமும் அறுதலாகிய பயனும் உள்ளுறையாகக் காட்டிய தெய்வக் கவிநலமும் காண்க.

**உயிர்களுக்கு ஆணவமும்**, அதனைக் கட்டுப்பட்டமையாகிய பசுத்துவமும் சகசமாகிய களங்கமாதல் போலக், கடலுக்குக் கறுப்பும் உவர்ப்பும் சகசமாயுடனேதோன்றிய களங்கமென்பதும் காண்க. இவ்விரண்டுமில்லாத தன்மையால் காஞ்சியை அடைந்ததனால் கடல் இவை நீங்கப் பெற்றது என்பது உவமத்தின் உள்ளுறை. **நீக்கும்** -

என்றதும் காண்க. இவ்வாறே உயிர்களும் தமது சிவமுயற்சிகளால் களங்கம் நீக்கிக் கொள்ளலாம் என்பதும் குறிப்பு. பூசையும் பூசைக்குரிய அவசியமும் கூறிய பொருத்தமும் காண்க. 87

## மதில்வாயில்

1165. ஆங்குவள ரேயிலினுடன் விளங்கும் வாயி
லப்பதியில் வாழ்பெரியோ ருள்ளம் போல
வோங்குநிலைத் தன்மையவா யகில முய்ய
வுமைபாக ரருள்செய்த வொழுக்க மல்லாற்
றீங்குநெறி யடையாத தடையு மாகிச்
செங்நெறிக்க ணிகழ்வாய்மை திருந்து மார்க்கந்
தாங்குலவ நிலவிவள ரொளியா லென்றுந்
தடநெடுவா னளப்பனவாந் தகைய வாகும். அஅ

(இ - ள்) வெளிப்படை. அவ்விடத்தில் மதிலினுடன் விளங்குகின்ற வாயில்கள் அந்த நகரத்தில் வாழும் பெரியோர்களுடைய உள்ளம்போல ஓங்குதலும் நிலைத்தலுமாகிய தன்மையுடையனவாகி, உலகத்தார் உய்யும்பொருட்டு உமைபாகராகிய சிவபெருமான் அருளிச்செய்த நல்லொழுக்கமல்லாது தீங்கு நெறிகள் அடையாத தடைகளுமாகிச், செம்மை நெறியின்கண் நிகழும் வாய்மையுடன் விளங்கும் ஆகமவிதிகள் தாம் பொருந்த நிலவி வளர்கின்ற ஒளியினால் என்றும் பெரிய நீண்ட ஆகாயத்தை அளப்பனபோன்ற தன்மையுடையனவாகும்.

(வி - ரை) வாயில் - இது நகரத்தைச் சுற்றியுள்ள மதிலின் வாயில்களைக் குறித்தது. இவை வேறு; ஆலயக் கோபுரவாயில் வேறு. இவற்றையே கோயில் வாயில் என்றுரைப்பாரும் உண்டு.

ஆங்கு - மதில் அகழியின் பக்கம். வாயில் - உள்ளம்போல் - தன்மையவாய் - தடையுமாகி - அளப்பனவாம் தகைய ஆகும் என்று முடிக்க.

வாயில் பெரியோர் உள்ளம்போல் ஓங்கி நிலைத்த தன்மைய் என்றதாம். ஓங்குதல் - நிலைத்தல் - பெரியோர் உள்ளத்தின் தன்மைகள்; ஓங்குதல் - உயர்வையே நினைத்தலும், நிலைத்தல் - நடுநிலை பிறழாமையும் அசைவின்மையுமாம்.

வாயில் ஓங்குதல் - உயர்ந்திருத்தல். வாயிலின் நிலைத்தன்மை - நடுநிலையின் அமைந்திருத்தல். மனையின் முன் பாகத்தை நவக்கிரகங்களுக்கும் பங்கிட நடுவில்நின்ற புதனின் பங்கில் வாயில் அமைத்தால் அது என்றும் ஓங்கும் என்பது நம் நாட்டு மரபு. வாயில் நிலை - என்ற பெயர் வழக்கும் காண்க. தன்னிடம் வந்தடையத் தக்க எல்லா உயிர்களையும் ஒப்ப உள்ளே விடுதலானும் நடுநிலையில் நிற்பது திருவாயில் என்க. வாயில் - வாயில்கள். சாதி யொருமை; ஆதலின் தன்மையவாய், தடையுமாகி, அளப்பன ஆம் தகைய எனப் பன்மை வினைகள் கொண்டது.

உமைபாகர் அருள்செய்த ஒழுக்கம் - ஆகமவிதிகளில் விதித்த சிவநெறி யொழுக்கம். ஏனையவெல்லாம் தீங்குநெறி எனப்படும் என்க. "திருவீழி மிழலை யானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே", "திருநாகேச் சரத்துளானைச் சேராதார் நன்னெறிக்கட் சேரா தாரே" என்பனவாதி திருத்தாண்டகங்கள் காண்க. தீங்குநெறி - ஆகம முதலிய நூல்களால் விலக்கப்பட்டவை; வாயிலைக் குறிக்கும்போது பகைவரால் இடையூறு வரும் வழிகள்.

பெரியோர் உள்ளம் - சிவவொழுக்கமல்லாது தீயொழுக்கம் உட்புகவிடாது. அதுபோல வாயிலும் நல்லொழுக்கம் உட்புகவிட்டும், அல்லொழுக்கம் உட்புகவிடாமலும் உள்ளது.

செந்நெறி - செம்மைநெறி. சிவநெறி. திருந்து மார்க்கம் - சன்மார்க்கம்.

வளர் ஒளியால் - பெருவாயிலிற் நிகழ்கின்ற ஒளிகளால் வானமும் விளங்குவதாகும். பெரியோர் உள்ளம் தன்னுள் வளரும் வாய்மை ஞான ஒளியால் ஞாலு காயம் - சிதாகாசம் என்னும் இறைவனுலகை அளக்கும் தன்மையுடையதாகும். "சுடர்மனக் குகை" என்ற காஞ்சிப்புராணம் காண்க. 88

1166. மாறுபெற லருங்கனக மாட நீடு
மணிமறுகு நெடுந்தெருவும் வளத்தில் வந்த
வாறுபயி லாவணவீ திகளு மற்று
மமைந்தநக ரணிவரைக ணடுவு போக்கிக்
கூறுபடு நவகண்ட மன்றி மல்கக்
கொண்டவநே கங்கண்ட மாகி யன்ன
வேறெருமண் ணுலகுதனி லுளதா மென்ன
விளங்கியமா லோகநிலை மேவிற் றன்றே. அசு

(இ - ள்) வெளிப்படை. ஈடில்லாத அரிய பொன்மயமாகிய மாளிகைகள் மிகவு மூள்ள அழகிய வீதிகளும், நீண்ட தெருக்களும், பற்பலவாற்றலும் வந்த வளங்களும் பொருந்தி விற்கப்படும் அங்காடி வீதிகளும், மற்றுள்ளவைகளும், அமைந்த அந்த நகரமானது, அழகிய வரைகளை நடுவில் அமைத்து வெவ்வேறுகப் பிரித்திருக்கும் நவ கண்டங்களேயன்றி நெருக்கங்கொண்ட அநேகங்கண்டங்களையுடைய வேறெரு பூமண்டலத்தைத் தன்னிடத்திற் கொண்டுள்ளதாம் என்று சொல்லும்படி விளங்கு கின்ற மாலோகத்தின் தன்மையைப் பொருந்தியது.

(வி - ரை) மணிமறுகு - நெடுந்தெரு - ஆவணவீதி - மற்றும் என்பன பலவகைப் பட்ட வீதிகளைக் குறித்தன. மறுகு - தெரு - வீதி என்பன ஒரு பொருள் குறித்த பல சொல்லாயினும் இங்குப் பலவகை வீதிகளைக் குறிக்க இவ்வாறு பல சொற்களால் கூறினர். 1177-ம், முன் இதுபோல் வந்த பிற இடங்களும் காண்க.

மாட நீடு மறுகு - என்றதனால், நெடுந்தெரு என்பது பெருமாளிகைகளில்லாத சாதாரண வாழ்க்கையுடைய வீடுகள் கொண்டதென்பதாம்.

ஆறு வந்த வளத்திற் பயில் என்க. ஆறு - வழி. மலைபடுபண்டம் முதலியன வாகப் பல நிலங்களினின்றும் வரும் வகை.

அணிவரைகள் - அழகிய வீதிகள் இரேகைகள் போன்று நகரத்தைப் பல பிரிவு களாகப் பிரிப்பதனால் இவற்றை வரைகள் என்றார். வீதிகள் அழகு பொருந்த நீண்டு ஒழுங்குபட அமைந்திருத்தல் நகர அமைப்பின் சிறப்பாகும்.

வரைகள் நடுவு போக்கித் கூறுபடு நவகண்டமன்றி - வரைகள் - மலைகள்; பெருமலைகளே நிலவுலகத்தைக் கண்டங்களாகப் பிரிப்பன; அதுபோல் வீதிகள் நகரத்தைப் பல கண்டங்களாகப் பிரித்தன என்றும், இங்கு வரைகள் என்பது மலை களைப்போன்ற மாடங்களை யுணர்த்தின என்றும் கூறுவார்முமுண்டு. கண்டங்களை வகுக்கும் பெருமலைகள் ஏழு என்ப. அவை - இமயம், ஏமம், நிடதம், நீலம், சுவேதம், சிருங்கம், கந்தமாதனம் என்பன.

நவகண்டமன்றி - அநேகம் கண்டமாகி - ஒன்பது கண்டங்களேயல்லாமல் அநேகங் கண்டங்களாகப் பிரித்து காணப்படுவதால் என்க. நவகண்டங்களாவன - பரதகண்டம், கிம்புருடகண்டம், அரிவருடகண்டம், இளாவிரதகண்டம், இரமிய கண்டம், இரணியகண்டம், குருகண்டம், கேதுமாலகண்டம், பத்திராசுவகண்டம் என்பன.

மகாலோகம் - மேலேழுலகங்களுள் ஒன்று. அனேகம் உலகங்களைக் கொண்டது. மெய்பற்றி எழுந்த உவமம். பூமியில் பரதகண்டம் முதலிய ஒன்பது கண்டங்கள் உள்ளதேபோல், நகரங்களில் ஒன்பது கோள்களில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கண்டம் பொருந்துமாறு ஒன்பது கண்டமாக அமைக்கப்படுவதும் ஒரு மரபு.

அன்றே - ஏ - அசை. 89

1167. பாகமருங் கிருபுடையு முயர்ந்து நீண்ட
படரொளிமா ளிகைநிரைகள் பயின்மென் கூந்தற்
றோகையர்தங் குழாமலையத் தூக்கு முத்தின்
சுடர்க்கோவைக் குளிர்நீர்மை துதைந்த வீதி
மாகமிடை யொளிதழைப்ப மன்னி நீடு
மருங்குதா ரகையலைய வரம்பில் வண்ண
மேகமிடை கிழித்தொழுகுந் தெய்வக் கங்கை
மேனதிகள் பலமண்மேல் விளங்கி யோக்கும். கூ0

(இ - ள்) வெளிப்படை. பருக்கப்பட்ட இருபக்கங்களிலும் உயர்ந்து நீண்ட பரந்த ஒளியை வீசுகின்ற மாளிகைகளின் வரிசைகளில் பயிலும் மெல்லிய கூந்தலினையுடைய பெண்களின் கூட்டங்கள் அலங்காரத்தின் பொருட்டு அசையும்படி தொங்கவிட்ட குளிர்ந்த தன்மையுடைய முத்துமாலைகளின் ஒளிப்பிழம்பு மிக்கு வீசும் வீதியானது, ஆகாயத்தில் நெருங்கிய ஒளிதழைக்கும்படி நிலைத்து விளங்கும் பக்கத்தில் எல்லையில்லாத நிறங்களையுடைய நட்சத்திரங்கள் அலையும்படி மேகங்களை இடையிற் கிழித்து ஒழுகி வருகின்ற தெய்வக்கங்கை முதலிய மேல் நதிகள் பலவும் இந்நிலவுலகத்தில் விளங்குவதனை ஒத்திருக்கும்.

(வி - ரை) (1) படரொளி மாளிகை - விண்ணொளி தழைப்பன; (2) தோகையர் தம் கூந்தல் அலைதல் - வரம்பில் வண்ணம் மேகம் காட்டின; (3) அலையத்தூக்கு முத்தின் சுடர்க்கோவை - தாரகை அலைதல் போன்றன; (4) குளிர்நீர்மை துதைந்த வீதி - மேகங் கிழித்தொழுகும் தெய்வக் கங்கை மேல் நதிகள்பல மண்மேல் விளங்கியன போன்றன - என்றிவ்வாறு இத்த உவமையின் பகுதிகளைத் தனித்தனி வைத்துப் பிரித்துக் கண்டுகொள்க.

தூக்கு குளிர்நீர்மை முத்தின் கோவைச் சுடர் என்க. முத்து மாலைகளைத் தூக்குதல் அணிசெய்தற் பொருட்டு. நீர்மை - மணிகளின் இயற்கை ஒளிப்பிழம்பு. முத்துக்கள் குளிர்ந்த நீர்மையுடைய ஒளியையுடையன. நீரோட்டம் என்பர். முத்தின் சுடர் - குளிர்ச்சியுடையது என்பார் குளிர்நீர்மை என்றார். 492 - பார்க்க.

தெய்வக் கங்கை - தேவதேவனது திருமுடியினின்றும் போதருதல் குறித்தது. தன்னுட் படிந்தோர் மலநீங்கி முத்திபெறச் செய்தலால் தெய்வத்தன்மையுடைய என்று கூறினும் அமையும். மேல்நதிகள் - கங்கையிலிருந்து பிரிந்த பல ஆறுகள். இவைபல வீதிகளுக்கு உவமிக்கப்பட்டன.

1167-ல் வாயில் வானளப்பன என்றார்; 1168-ல், அவ்வாறு வாயில் வானளப் பன ஆயின் வானம் முதலிய பல உலகுகளும் இங்குப் பொருந்துவனவோ? எனின், ஆம்; இங்ஙகர் அனேகம் கண்டமாகி மாலோக நிலமேலிற்று என்றார். 1169-ல், அவ்வாறு பல உலகங்களும் கூடும் மாலோகநிலை மேவுமாயின், அந்த மேலுலகத்தி லுள்ள ஆறுகள் இங்குக் காணப்படுவனவாமோ? எனின், ஆம்; தெய்வக்கங்கை மேனதிகள்பல மண்மேல் விளங்கியொக்கும் என்றார் என இம்மூன்றுபாட்டுக்களும் தொடர்பாகி வரும் தெய்வக்கவி நலமும் காணத்தக்கது.

விளங்கிஞல் ஒக்கும் என்பது விளங்கி யொக்கும் எனத் திரிந்து நின்றது:

விளங்கி ஒங்கும்—என்பதும் பாடம். 90

1168. கிளரொளிச்செங் கனகமயந் தானுய் மாடு,
கீழ்நிலையோர் நீலச்சோ பானம் பூணக்
கொளவமைத்து மீதொருபாற் கன்ன சாலை
குலவயிரத்தா லமைத்த கொள்கை யாலே,
யளவில்சுடர்ப் பிழம்பானர் நம்மைத் தேடி
யகழ்ந்தேன மானனு, மன்ன மாகி
வளர்விசும்பி, லெழுந்தானும் போல நீடு
மாளிகையு முளமற்று மறுகு தோறும். கூக

(இ - ள்) வெளிப்படை. வேறு அந்த வீதிகள்தோறும் சில மாடங்கள் ஒளி கிள ரும் செம்பொன்னின் மயமாய்ச் செய்யப்பட்டுப் பக்கத்தில் கீழ்நிலையில் நீலமணிக ளழுத்திய படிகளையுடையனவாய், மேல் நிலையில் ஓர் பக்கத்தில் சிறந்த வயிரமணி வகையால் அமைத்த சாளரத்தைக் கொண்டிருக்கின்றமையாலே, அளவில்லாத ஒளிப் பிழம்பாகி நின்ற சிவபெருமானுடைய அடியினையும் முடியினையும் தேடிக் காணும் பொருட்டு வராக வடிவங்கொண்டு நிலந்தோண்டிச் சென்ற விட்டுணுவும், அன்னவருக் கொண்டு பறந்து சென்ற பிரமனும்போல நீடியுள்ளன.

(வி - ரை) (முன்பாட்டிற் கூறியபடி) கங்கையின் கிளைநதிகள் போன்று விளங் கிய பல வீதிகளில் பல மாளிகைகள் விளங்கின; அவை தூய செம்பொன் மயமான ஒளி வீசும்படி அமைந்திருந்தன; அவற்றின் கீழ்நிலையில் ஓர் பக்கம் நீலநிறமமைந்த படிகளும், மேல்நிலையில் வயிர ஒளி வீசும்படி அமைந்த சாளரமும் விளங்கின; கீழே யுள்ள நீலப் படிகள் கரிய திருமாலைப்போலவும், மேல்விளங்கிய வயிரவொளிச் சாளரம் வெள்ளையன்னமாகிய பிரமதேவனைப்போலவும் தோன்றின; இத் தோற்றம் ஆயிரத்தெட்டு மாற்றுகி ஒளிவிடும் செம்பொன்போல விளங்கிய சிவபெருமானை மாலும் பிரமனும் முறையே கீழும் மேலும் தேடிச்செல்வதுபோல விளங்கிற்று என்பதாம்.

ஒளிச் செங்கனக மயம் - செம்மேனியம்மானுடைய ஒளி. "ஆயிரத் தெட்டு மாற்றுக ஒளிவிடும் பொன்" என்பர் தாயுமானர். தூய பசும்பொன் செம்மைநிறம் மிக்கிருக்குமென்ப.

சோபானம் - படிகள். கன்னசாலை - உயர்நிலையில் அமைக்கும் சாளர வாயில். மேன்மாடத்தில் முன்புறம் காதுபோல நீண்டிருக்கும் பரண்கூடு. கன்னம் - காது. இது மேனிலையிலும், சோபானம் கீழ்நிலையிலும் அமைக்கப்படுவன.

கொள்கை - கொண்டிருத்தல். கை - தொழிற்பெயர் விகுதி.

ஏனம் ஆனனும் - அன்னமாகி எழுந்தானும் போல, நீலச் சோபானமும் வயிரக் கன்ன சாலையும் தோன்றின என்று முறையே நிரனிறையாக உவமைகளைக் கூட்டுக.

நீலச் சோபானமும் வயிரக் கன்னசாலையும் மாலுமயனும்போல்வன என்ற ஆற்றலினால் ஒளிச்செங்கனக மயமாடங்கள் பொன்னொளிப் பிழம்பாகிய சிவபெருமானை நினைபூட்டின என்பது கருதப்படும். முன்னவற்றை வெளிப்பட உவமை முகத்தாற் கூறிய ஆசிரியர், பின்னதனைக் கருதலளவையாற் பெறவைத்தது அவரது தெய்வக் கவிநல மாண்பாகும். என்னை? இறைவன் "தனக்குவமை யில்லாதான்" ஆதலின் உவமை கூறுதல் அமையாது என்பதும், இறைவருண்மை (இருப்பு) காட்சியளவையாலன்றிக் கருதல் - உரை என்கின்ற அளவைகளாலே பெறப்படும் என்பதும் ஞானசாத்திர முடிபாதலானும், மாலும் அயனும் தேடியபோது இறைவர் வெளிப்பட்டும் அறியவாராது மறைந்து நின்றாராதலானும் இவ்வாறு உவமையால் உய்த்துணரவைத்துக் கூறினரென்க. காவிரியைப் பிரமனுக்கும் அடியவர்க்கும் உவமித்த ஆசிரியர் அதனை இறைவரது முடியினின்று வரும் கங்கைக்கும் அம்மையாரது கருணையினெழுக்கத்துக்கும் உவமித்ததன் உள்ளுறையினையும் இங்கு நினைவு கூர்க. 54 - 57 பாட்டுக்கள் பார்க்க. அவ்வாறே இங்குக் கங்கையும் பிரமனும் மாலும் (வரும் பாட்டில்) அடியவருமே உவமிக்கப்பட்ட தெய்வக்கவி மாண்பும், வேறு பதார்த்தங்கள் பாராது பரமே பார்த்திருக்கும் ஆசிரியரது திருவுள்ளத்தின் மாண்பும் குறிக்கொள்க.

கனகமயம் - நீலம் - வயிரம் - செம்பொன் ஒளி வீசுமாறு மாடங்களைச் சுதை போக்கி அமைப்பதும், நீலம் கருமை நிறம் வீசப் படிகளமைப்பதும், சாளரம் வெண்ணிற ஒளி பொருந்த அமைப்பதும் இந்நாளிலும் இயல்பிற்காணும் காட்சியாகும்.

முன்பாட்டிற் கங்கையினை உவமித்தாராதலின், அக்கங்கை சூடிய பெருமானது தோற்றமும் இங்குக் காணப்படுமோ? எனின் ஆம் என்று கூறுவார் போன்று, அது அவரைத் தேடிய அயன் மால் என்ற இவர்களின் தோற்றத்தால் அறியக்கிடக்குமென இப்பாட்டினுற் கூறினர். அவ்வாறு பெருமானது தோற்றம் காணப்பெறுமாயின் அதனைக்கண்டு போற்றி நிற்கும் அடியார்களது காட்சிகளும் உளவாமோ? எனின், அவையும் உள என்ற கருத்து மேல்வரும் (1169) பாட்டால் கூறிய உவமத்தொடர் கருத்தும் காணத்தக்கது.

மாளிகைகள் உள மற்ற—என்பதும் பாடம். 91

1169. மின்பொலிபன் மணிமிடைந்த தவள மாட
மிசைப்பயில்சந் திரகாந்தம் விசும்பின் மீது
பொன்புரையுஞ் செக்கர்நிறப் பொழுது தோன்றும்
புனிற்றுமதி கண்டுருகிப் பொழிந்த நீரால்
வன்புலியி னுரியாடைத் திருவே கம்பர்
வளர்சடையு மிளம்பிறையுங் கண்டு கும்பிட்
டன்புருகி மெய்பொழியக் கண்ணீர் வாரு
மடியவரு மனையவுள வலகி லாத. கூஉ

(இ - ள்) வெளிப்படை. ஒளி வீசுகின்ற பல மணிகள் நெருங்கிய வெள்ளிய மாடங்களின்மீது மேற்பதித்த சந்திரகாந்தக் கற்கள் ஆகாயத்தில் பொன்னைப் போன்ற செக்கர் நிறமுடைய அந்திமாலையில் தோன்றும் பிள்ளை மதியாகிய மூன்றாம் பிறைச்சந்திரனைக் கண்டு உருகிச்சொரிந்த நீரினால், வலிய புலித்தோலாடையினை

உடுத்த திருவேகம்பருடைய வளர்ந்து நீண்ட சடையினையும் அவர் அச்சடைமேற் சூடிய இளம்பிறையினையும் கண்டு கும்பிட்டு அன்பினால் உருகி உடம்பெல்லாம் கண்ணீர் வழியநிற்கும் அடியவர்களையும் ஒத்திருக்கும் மாடங்கள் அளவில்லாதன உள்ளன.

(வி - ரை) தவளமாடம் - நீறுபூசிய அடியாரையும், மிசைப்பயில் சந்திரகாந்தம் - செக்கரையும் பிறையையும் காணும் கண்களையும், (சந்திர காந்தம்) - மதிகண்டு நீர் பொழிதல் - சிவன்றிருக் கோலங்கண்டு அவ்வடியார் உருகிக் கண்ணீர் பொழிதலையும், செக்கரும் பிறையும் சிவபெருமானுடைய செஞ்சடையையும் அதன்மேற் சூடும் பிறையையும் போல்வன என்று உவமை கண்டு கொள்க.

**தவள மாடம்** - இவை வேறு; முன்பாட்டிற் கூறிய செங்கனகமய மாடங்கள் வேறு.

**சந்திரகாந்தம்** - சந்திரனது கதிர்கள் மேற் ருக்கும்போது நீர்கசியும் இயல்புடைய ஓர் வகைக் கல்.

செக்கர்நிறப் பொழுதுதோன்றும் புனிற்றுமதி - புனிறு - ஈன்றணிமையானது. மறை மதிக்கு மூன்றும்நாள் மேற்றிசையில் தோன்றத் தொடங்கும் மதிக் கீறு குறித்தது. செக்கர்நிறப்பொழுது - செந்நிறமுள்ள அந்திமாலைப் பொழுது. "குடதிசை மதியது சூடு சென்னி" (வியாழக்குறி - கடைமுடி - 6) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரங் காண்க.

செக்கர்மாலையிற் பிறையினைக்கண்டு நீர் கசியப்பெறும் சந்திரகாந்தத்தினை மேற் பதித்த மாடங்கள், செக்கர்போன்ற சடையினையும் அதிற்சூடும் பிறையினையும் கண்டு அவற்றுல் இறைவருடைய கோலத்தினை உள்ளே கண்டுகொண்டு கண்ணீர் பொழியும் அடியார் போல உள்ளன என்க.

செக்கர் - சிவபெருமானது சடைக்கற்றை போன்றது என்பது "மாலையின், முங்குருவே போலும் சடைக்கற்றை" என்ற (அற்புதத் திருவந்தாதி) அம்மையார் திருவாக்காலு முணர்க.

**மாடங்கள் அடியவரும் போல்வன** - என்றது மெய்யும் வினையும்பற்றி வந்த உவமம். அடியவரும் - உம்மை உயர்வு சிறப்பு. முன்பாட்டிற்கூறிய தன்மையல்லாமல் இன்னும் என இறந்தது தழுவிய எச்சவும்மை என்றலும் பொருந்தும். 92

1170. முகிலுரிஞ்சுங் கொடிதொடுத்த முடிய வாகு
முழுப்பளிங்கின் மாளிகைகண் முற்றுஞ் சுற்று
நிகரில்சரா சரங்களெல்லா நிழலி னுலே
நிறைதலினு னிறைதவஞ்செ யிமயப் பாவை
நகிலுழுத சுவடும்வளைத் தழும்பும் பூண்ட
நாயகனுர் நான்முகற்குப் படைக்க நல்கு
மகிலயோ னிகளெல்லா மமைத்து வைத்த
வரும்பெரும்பண் டாரநிலை யனைய வாகும். கூஉ

(இ - ள்) வெளிப்படை. மேகங்கள் உராய்கின்ற கொடிகள் கட்டிய சிகரங்களையுடைய முழுதும் பளிங்குக் கற்களாலமைந்த மாளிகைகளைச் (வெளிப்பக்கம்) சுற்றுகின்ற சரங்களும் அசரங்களும் ஆகிய எல்லாம், நிழல்படுதலினுல் உண்டாகிய பிரதிபிம்பங்கள் மூலமாக நிறைதலினுல், நிறைதவத்தைச் செய்யும் பார்வதியம்மையாரது முலைச்சுவடும் வளைத்தழும்பும் அணிந்துகொண்ட திருவேகாம்பரநாதர், பிரமதேவனுக்குப் படைப்புத் தொழிலுக்காகக் கொடுக்கும்படியான எல்லாச் சிவராசிகளையும்

ஒருங்கே சேர்த்துவைத்த அரிய பெரிய கருவூலத்தின் நிலைகொண்டன போன்றன வாகும்.

(வி - ரை) நாயகனார் நான்முகற்குப் படைக்க நல்கும் - சிவபெருமான் பிரம தேவனுக்கு வேதமோதுவித்து இக்காஞ்சியைப் பார்த்துப் படைப்புத்தொழில் செய்வா யென்று காட்டினர் என்ற இத்தல வரலாற்றினை இங்கு நினைவு கூர்க.

இவ்வரலாறுபற்றி முன் உரைத்தவை பார்க்க. படைப்புத் தொழிலினுள்ளே படும் சீவராசிகளையெல்லாம் பிரமதேவனிடம் நல்குதற்கு இங்கு அமைத்துவைத்தது போலும் என்பதாம்.

1167-ல் முத்துமாலைகள் தூக்கிய மாடங்களும், 1168-ல் செம்பொன் ஒளிவீசும் மாடங்களும், 1169-ல் தவள மாளிகைகளும், கூறி, இப்பாட்டில் முழுப்பளிங்கின் கூடர் மாளிகைகளைக் கூறும் பொருத்தமும் கண்டுகொள்க.

மாளிகைகள் முற்றும் சுற்றும் - பளிங்கு மாளிகைகளின் புறத்திற் சுற்றும் சராசர அண்டங்களின் நிழல் பிரதிவிம்பமாகக் காணப்பட்டன; ஆதலின் அவை (மாளிகைகள்) யோனிகள் எல்லாம் பொருந்தும் கருவூலம்போல விளங்கின; அக் காட்சி பிரமதேவனுக்குப் படைக்க நல்கும் பண்டாரம்போன்றது என்றதாம். மாடங் கள் பண்டாரநிலை மேவின என்பது மெய்ப்பற்றிவந்த உவமம்.

சுற்றும் சராசரங்கள் - உலகமும் அண்டங்களும் சுற்றிச் சுழன்று சூழ்வருவன என்னும் வானசாத்திர உண்மையினை நினைவுகூர்க.

நிழல் - பிரதிவிம்பம். நகில் - முலை. பண்டாரம் - கருவூலம்.

நிறைதவம் செய் - அம்மையாரது செய்தவமே நிறைவுடையது; என்றைக்கும் நித்தியமாகிய சிவபூசையைச் செய்துகொண்டே யிருக்கும் பயன்றருதலால் என்க.

நகிலுழுத சுவடும் வளைத்தழும்பும் பூண்ட நாயகனார் - 1143–1145 பார்க்க. 93

1171. பொற்களப மாளிகைமேன் முன்றி னின்று
பூங்கழலங்கு மணிப்பந்தும் போற்றி யாடும்
விற்புருவக் கொடிமடவார் கலன்கள் சிந்தி
விழுவனவுங், கெழுவுதுணை மேவு மாதர்
அற்புமுதிர் கலவியினிற் பரிந்து சிந்து
மணிமணிச்சே டியர்தொகுக்கு மவையு, மாகி
நற்கனக மழையன்றிக் காஞ்சி யெல்லை
நவமணிமா ரியும்பொழியு நாளு நாளும். கூசி

(இ - ள்) வெளிப்படை. பொன்மயமாகிய களபச்சாந்துடைய மாளிகைகளின் மேல் முன்றிலில் நின்று மெல்லிய கழங்குகளையும், அழகிய பந்துகளையும் இறைவரது புகழ்களைப் போற்றிக்கொண்டு ஆடுகின்ற விற்போன்ற புருவமுடைய கொடிபோன்ற மடவார்களுடைய அணிகலன்களிற் சிதறி விழுகின்ற பொற்பணிகளும், தழுவும் நாய கர்களுடன் கூடிய பெண்கள் அன்பு முதிரும் கலவியில் அன்பு மிகுதியாகிய செயல் களினூற் சிந்தும் அணிகளினின்றும் வீழ்ந்து சேடிமார்களாற் கூட்டிச் சேர்த்த மணி களும் ஆகி இவ்வகையில் நல்ல பொன்மழையேயல்லாமல் நவமணிமாரியும் பலநாளும் பொழியும் (அந்நகரில்).

(வி - ரை) பொற்களபம் - மாளிகைகளுக்குப் பூசும் பொற்களபச் சாந்து. போன் - பொற்றூளும் நிறமும் குறித்தது.

பூங்கழலங்கும் மணிப்பந்தும் போற்றி ஆடும் விற்புருவக் கொடி மடவார் - போற்றி - இறைவர் தன்மையை என்று செயப்படுபொருள் வருவிக்க. "கொழு

பைந்து புடைத்தொல்கு நூபுரஞ்சேர் மெல்லடியார், அம்பந்தும் வரிக்கழலும் அரவஞ் செய் பூங்காழி" (சீகாமரம் - சாய்க்காடு - 11) என்றும், "இறைவனது தன்மை பாடிக், கருந்தடங்கண் ணுர்கழல்பந் தம்மானைப் பாட்டயருங் கழுமலமே" (மேகரா - 2) என்றும் வரும் ஆளுடைய பிள்ளையார் தேவாரங்கள் காண்க. மனை முன்றில்களில் வியர்வை எழப் பந்தாடுதல் முன்னுளில் மகளிர்கள் தமது உடல் நலத் திற்கும் உடல் மென்மைக்கும் ஏற்ப விளையாடும் விளையாட்டுக்களுள் ஒன்றுயிருந் தது. கழல் ஆடுதலும் இந்நாளில் வழக்கொழிந்து வருகின்றது. கழல் - கழற்சிக்காய். விற்புருவம் - வில்போன்ற புருவம் மெய்பற்றி எழுந்த உவமம். போற்றி - விளையாட் டுக்களைப் பாராட்டி என்பாருமுண்டு.

கோடி மடவார் - கொடிபோன்ற இடையையுடைய மடவார் என்றலுமாம். கொடி, மடவார்க்கும் இடைக்கும் மெய்பற்றி உவமிக்கப்படும்.

கேழவுதுணை.....கலவி - தமது துணைவர்களுடன் - கணவர்களுடன் - அன்பு மிகுதியினும் கூடிய கலவித்துறைகளில் ஊடலும் - பின்னர்க் கூடலும் - என்ற இவை முதலியவற்றுல் மகளிர்களின் அணிகளினின்று மணிகள் சிந்துவன என்க. அன்பு முதிர்ந்த காமவிகாரத்துட்பட்ட செயல்களானமையின் அன்பு எனப் பாலது அற்பு என்று வலித்தல் விகாரமாயிற்று.

நற்கனக மழையன்றி - காஞ்சியில் முன்னெரு காலத்தில் முகில்கள் பொன்மாரி பெய்தன என்றதொரு வரலாறுமுண்டு. அத்தப் பொன்மழையே யன்றி என்ற குறிப்புமாம். அன்றியும் மேகங்கள் நீர் - பொன் - மணி - முத்து - நீ - மண் முதலிய வற்றைப் பெய்யுமென்பதும் நூல்களால் அறியப்படும்.

நாளும் நாளும் - மேல் இருவகைகளைப் பகுத்தாராதலின் நாளுளும் என்னது நாளு நாளும் என்று பிரித்துக் கூறினர். அந்நகரில் பொழியும் என வருவித்துக் கொள்க.

சிந்தி விழுவனவும் - தொகுக்கும் அவையும் ஆகிக் கனகமழையன்றி - நவமணி மாரியும் பொழியும் (அந்நகரில்) என்க. 94

1172. பூமகளுக் குறையுளெனுந் தகைய வான
பொன்மாடத் தரமியங்கள் பொலிய நின்று
மாமகரக் குழைமகளிர் மைந்த ரங்கண்
வந்தேறு முன்னருநீர் வண்ட லாடத்
தூமணிப்பொன் புனைநாளத் துருத்தி வீசுஞ்
சுடர்விடுசெங் குங்குமநீர்த் துவலை தோய்ந்த
காமர்மணி நாசிகையின் மருங்கு தங்குங்
கருமுகில்கள் செம்முகில்க ளாகிக் காட்டும். கூரு

(இ - ள்) வெளிப்படை. திருமகளுக்கு இருப்பிடமாகும் என்று சொல்லப்படும் தகுதியினையுடைய பொன் மாடங்களின் மேல் நிலா முற்றங்கள் அழகு பொருந்தி விளங்க நின்று பெரிய மகரகுண்டலங்களை அணிந்த பெண்கள், தங்களுடைய நாயகர் கள் அங்கு வந்து ஏறு முன்னர் நறியவாசனையுடைய நீரினுல் வண்டலாட்டயர்ந்து விளையாடுதற்காகத், தூயமணிகளிழைத்த அழகாகச் செய்யப்பட்ட உள்ளுளைகளை யுடைய நீர்துவும் துருத்தியினின்றும் வீசும், ஒளி விடுகின்ற செங்குங்குமப்பூக் கலந்த பனிநீர்த் துளிகள் தோய்ந்துள்ள, அழகிய மணிகள் கட்டிய கோபுர நாசிகையின் பக் கத்தில் தங்கும் கருமுகில்கள் செந்நிற மேகங்களாகித் தோன்றுவன.

(வி - ரை) பூமகள் - செந்தாமரைப் பூவில் இருக்கும் திருமகள். இலக்குமி. "பூவி னுளென வருதலிற் பூம்பாவை யென்றே, மேவு நாமம்" (திருஞான புராண - 1045) என்றது காண்க.

பூமகளுக்கு உறையுள் என - இலக்குமியின் இருப்பிடம் இது என்றது மிக்க செல்வத்தின் நிறைவு குறித்தது. பின் சொல்லும் உவமப் பொருள்களின் தகுதி காட்டுதற்கு இவ்வாறு கூறினார். உறையுள் - தங்கும் இடம்.

அரமியம் - நிலாமணி முற்றம். "மாளிகையின் மேலால், ஏறி...மணி நிலா முன்றின் மருங்கு" (316) என்றது பார்க்க.

மைந்தர் வந்தேறுமுன் துருத்தி வீசும் குங்குமநீர்த் துவலை தோய்ந்த நாசிகை - என்றது மாதர்கள், மாடங்களின் மேனிலையில் நிலாமணி முற்றத்தில் எங்கும், துளை யுடைய பொன்துருத்திகளாற் செங்குங்கும நீர்த்துவலைகள் வீசி வைத்தனர்; அதனை அவர்கள் தமது நாயகர் அங்கு ஏறி வருமுன்னர்ச் செய்தனர்; அவ்வாறு முன்னர்ச் செய்தது அவர் வரும்போது வண்டல் ஆடுதற்கு ஆயத்தமாயிருக்கும் பொருட்டாம்; அப்படி வீசப்பட்டு மாடத்தின் நாசிகையில் தோய்ந்திருந்த செங்குங்கும நீர்த்துளிகளை அங்குத் தங்கிய கருமுகில்கள் தோய்ந்ததனால் செங்கிற முகில்களாகிக் காட்டின என்பதாம்.

பொன்புனை நாளத்துருத்தி - நாளம் - நீண்ட தண்டு. பொன் - செல்வநிறைவு குறித்தது. பொன்னுற் செய்யப்பட்ட உள் துளைகளையுடைய நீர்வீசும் அருத்தி. water spray-sprout என்பர் நவீனர். நீரை அதிகமாகக் வீழ்த்தாமல் மூக்கின் சிறு துளைகளால் நீர்தெளிக்கும் ஒருவகை அமைப்புடைய கருவி. துருத்தி - காற்றின் உதவியால் வீசுவது.

நாசிகை - மாளிகையின் சிகரத்துக்குக் கீழே, நாசி (மூக்கு) போல நீண்டிருக்கும் பகுதி. மாடங்களை ஒரு மனித உடலாகக் கொண்டால் அதன் நாசிபோல்வதனால் நாசிகை எனப்படும். மூக்குப்போலக் காற்று உள் வீசுதற்கும் இவை பயன்படும்.

நாசிகையின் மருங்கு தங்கும் கரு முகில்கள் - மாடங்களின் உயர்ச்சி குறித்தது. "செல்வ நெடுமாடஞ் சென்று சேணுங்கிச், செல்வ மதிதோய" (கோயில் - குறிஞ்சி) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரம் காண்க. இதனால் மாடங்களின் செல்வ நிலையும், மகளிர் விளையாட்டும், வாழ்க்கை நலனும் கூறிய வகையால் நகரச்சிறப்பும், குடிச்சிறப்பும் உடன் கூறப்பட்டன காண்க. 95

1173. இமமலிய வெடுத்தகெடு வரைகள் போல
விலங்குசுதைத் தவளமா ளிகைநீள் கோட்டுச்
சிமையடையுஞ் சோபான நிரையும் விண்ணுந்
தெரிவரிய தூய்மையினு, லவற்றுட் சேர்ந்து
தமர்களுட னிழிந்தேறு மைந்தர் மாதர்
தங்களையும், விசும்பிடைநின் றிழியா நிற்கு
மமரரையு மரமகளிர் தமையும், வெவ்வே
றறிவரிதாந் தகைமையன வனேக மங்கண். கூஉ

(இ-ள்) வெளிப்பட்ட. பனிமூடுமாறு உயர்ந்த நீண்ட மலைகளைப்போல விளங்கு கின்ற சுண்ணச்சாந்து பூசிய வெள்ளிய மாளிகைகளுடைய நீண்ட சிகரங்களின் உச் சியைச் சேர்வதற்காக அமைக்கப்பட்ட படிகளின் வரிசையையும், மேலேயுள்ள வானுலகத்தினையும் பிரித்து அறியக்கூடாதபடி உள்ள தூய்மையினாலே, அந்தப் படி வரிசைகளுட் சேர்ந்து தமர்களுடன் இறங்கியும் ஏறியும் வரும் மைந்தர்களும் பெண்

களும் என்னுமிவர்களையும், விண்ணுலகத்தினின்றும் இறங்கிவரும் தேவர்களும் அரமகளிர் என்ற இவர்களையும் வெவ்வேறாகப் பிரித்து அறிவதற்கு அரிதாகிய தன்மையுடையனவாகிய மாளிகைகள் அனேகம் அங்கு உள்ளன.

(வி - ரை) இமம் - பனி. பனி மூடியிருத்தலால் இமயமலை என்றும், பனிமலை என்றும் பெயர் வழங்குதல் காண்க.

கோட்டுச்சிமை - சிகரத்தின் உச்சி. சிமை - சிகரம். உயர்ந்த நிலையின் உயர்ந்த இடம். மாடங்களிற் கோபுரங்கள் போலவும் சிகரம் போலவும் உயர்ச்சிபெற அமைக்கும் அமைப்புக்கள் காண்க. high towers-minarets என்பர் நவீனர்.

சோபான நிரையும் விண்ணும் அறிவரிது என்றது படிவரிசை எங்கு முடிகின்றது, அதற்குமேல் விண் எங்குத்தொடங்குகின்றது, எனப் பிரித்துக் காணமுடியாதவாறு படிவரிசைகள், கீழிருந்து காண்பவர்க்கு விண்ணிற்போய் மறைந்துபடுவனவாகக் காணப்படுதல்.

மைந்தர் மாதர் தங்களையும் - அமரரையும் அரமகளிர் தமையும் - வெவ்வேறு அறிவரிதாம் தகைமை - மிக உயர்ந்த படிவரிசைகளில் ஏறியும் இறங்கியும் செல்வோராதலின் அவர்கள் மனிதரோ அன்றித் தேவர்கள்தாமோ என்று துணிந்து சொல்ல முடியாதபடி உயர்ச்சி யுள்ளது என்க. அந்நாட்டு மைந்தர் மாதர்கள் தேவர்களைப் போன்ற ஒளியும் அழகும் உடையவர்கள் என்ற குறிப்பும்பட நிற்பது காண்க. தேவர்கள் பூவுலகத்திற்கணித்தாக வரும்போது கால்நிலந் தோய்வதுபோல வருவர் என்ற கொள்கையும் கருதுக. சோபானமும் விண்ணும் பிரித்துக் காணவரிதாதல் போல அவற்றுட் சேர்வோரும் பிரித்துக் காணவரியர் என்றதாம்.

அமரர் அரமகளிர் விண்ணிடை நின்றிழிதல் - இங்குக் காஞ்சியை அடைந்து ஏகாம்பரநாதரை வணங்கி உய்யும்பொருட்டு என்பது குறிப்பு. தேவர் - தேவமாதர் பலரும் இங்கு வழிபட்ட வரலாறுகள் காஞ்சிப்புராணத்தினுட் காண்க.* 1155-ல் உரைத்தவை பார்க்க. அரமகளிர் - ஒருவகைத் தேவசாதிப் பெண்கள்.

வரையே—இசைந்தந்தத்தவள—நீர்மையினாலவற்றுள்—என்பனவும் பாடங்கள்.

1174. அரவநெடுந் தேர்வீதி யருகு மாடத்
தணிமணிக்கோ புரத்தயலே வியல்வாய் நீண்ட
விரவுமர கதச்சோதி வேதித் திண்ணை
விளிம்பினொளி துளும்பமுறைப் படிமீ தேறுங்
குரவமருங் குழன்மடவா ரடியி லூட்டுங்
குழம்படுத்த செம்பஞ்சின் சுவட்டுக் கோலம்
பரவைநெடுந் தரங்கமிசை விளங்கித் தோன்றும்
பவளநறுந் தளிரனைய பலவும் பாங்கர். கூ௭

(இ - ள்) வெளிப்படை. ஒலியையுடைய நீண்ட தேர்வீதியின் அருகில் உள்ள மாடத்தின் அழகிய மணிகள் பதித்த கோபுரத்தின் பக்கத்தில் உள்ள விசாலமாய் நீண்ட மரகத மணிகளின் ஒளிபொருந்திய திண்ணைகளின் விளிம்பின் ஒளி ததும்பும்படி முறைமையின் அந்தப் படிகளின்மேல் ஏறுகின்ற, குராமலர்களைச் சூடிய கூந்தலையுடைய பெண்களின் பாதங்களில் ஊட்டிய செம்பஞ்சுக் குழம்பின் சுவடுகள் பதிந்த கோலமானது, கருங்கடலின் நீண்ட அலைகளின்மேல் விளங்கித் தோன்றும்பவளத்தின் நறிய தளிர்களைப் போன்று விளங்குதற் கிடமாகிய பல மாளிகைகளும் உள்ளன.

* சுவாமிகூம் பக்கம் திருத்தமும் பார்க்க.

(வி - ரை) வியல் - அகன்ற. மரகதச் சோதி விரவு - என்க. மரகதச் சோதி என்றது மரகதமணியின் ஒளி வீசும்படி செய்கின்ற என்றதாம்.

வேதித்திண்ணை விளம்பின்...கோலம் - திண்ணையின் விளிம்பானது மரகத ஒளி வீச, அதன் ஓரத்தில் உள்ளபடிகளில் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டிய பாதமுடைய பெண்கள் ஏறிச் செல்ல, அவர்களது செம்பஞ்சூட்டிய பாதச் சுவடுகள் அந்தப் படிகளிற் பதிகின்றன; அத்தோற்றம் மரகதம்போன்ற கருநிறக் கடலின் அலைவிளிம்பில் காணும் பவளக்கொடியின் தளிர்போன்றது என்பதாம். "துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித் தொன்மயிலை" (திருத்தொண்டத்தொகை - 8) என்று இத் தொண்டைநன்னாட்டுக் கடற்கரையினைக் கூறிய திருவாக்கு இங்கு நினைவுகூர் தற்பாலது.

ஒளி துளும்பு முறை என்றதனால் அவ்வொளி வீச அதனால், மைந்தர் மாதர்களும் ஒளி பெற்று, இயல்பின் ஒளியுள்ள தேவர்போல விளங்கினர் என்பதாம். இந்நாட்டுப் பெண்களின் அடிகள் பவளம்போல் விளங்கிற்று என்ற குறிப்புமாம். மேற்பாட்டிற் கூறிய சோபான நிரைகளின் சிறப்பைத் தொடர்ந்து கூறியபடியும் காண்க.

இயல்பாய் நீண்ட—என்பதும் பாடம். 97

1175. வெம்புசினக் களிற்றதிர்வு மாவி னார்ப்பும்
வியனெடுந்தேர்க் காலிசைப்பும் விழவ றாத
வம்பொன்மணி வீதிகளி லரங்கி லாடு
மரிவையர்நா புரவொலியோ டமையு மிம்ப;
ரும்பரினிந் திரன்களிற்றின் முழக்குந் தெய்வ
வுயரிரவி மாக்கலிப்பு மயனூர் தித்தேர்
பம்பிசையும் விமானத்து ளாடுந் தெய்வப்
பாவையர்நா புரவரவத் துடனே பல்கும். கூஅ

(இ - ள்) வெளிப்படை. மிகுந்த கோபத்தையுடைய யானைகளின் அதிர்வும், குதிரைகளின் ஆர்ப்பும், அகலமாகிய நீண்ட தேர்களின் சக்கரங்கள் செல்கின்ற இசைப்பும், (விழவறாத காரணத்தால்) அழகிய பொன்னணிந்த வீதிகளில் உள்ள ஆடரங்குகளில் ஆடுகின்ற ஆடற்பெண்களின் காற்சிலம்புகளின் ஒலியோடு (அந்நகரம்) இங்கே அமையும்; தேவேந்திரனது ஐராவதமென்னும் யானையின் முழக்கமும், தெய்வத் தன்மையுடைய சூரியனுடைய தேரிற்பூட்டிய குதிரையின் கலிப்பும் பிரமதேவனுடைய ஊர்தியாகிய தேரினது பரவிய முழக்கமும், தேவ விமானங்களினிடத்து ஆடும் தெய்வப் பெண்களின் காற்சிலம்புகளின் அரவத்துடனே (அந்நகரின்) உம்பர் நிறைவு பெற்றிருக்கும்.

(வி - ரை) அந்நகரம் என வருவித்துக்கொள்க. அந்நகரத்தின், இம்பர், அதிர்வும், ஆர்ப்பும், இசைப்பும், ஒலியோடு அமையும்; உம்பர், முழக்கும் - கலிப்பும் - இசையும் - அரவத்துடனே பல்கும் என்று முடிக்க.

1173-ல் கூறிய கருத்தினைத் தொடர்ந்து மைந்தர் மாதர்களும், அமரர் அரமகளிரும் இந்நகரில் நிறையும் சிறப்பினை இப்பாட்டினாற் கூறினார்.

இம்பரில் மக்கள், யானை, குதிரை, தேர், காலாள், (பெண்கள்) என்ற நால்வகையாலும் நால்வகை ஓசைகளைச் செய்ய, உம்பரில் தேவர்களும், அவ்வாறே, யானை - குதிரை - தேர் - காலாள் (பெண்கள்) என்ற நால்வகையாலும் நால்வகை ஓசைகளைச் செய்கின்றனர் என்பதாம்.

இம்பர் - உம்பர் - என்ற சொல்லாற்றலால் இவ்வுலகமும் மேலுலகமும் வெவ் வேறுகப் பிரிந்த நிலையும், இரண்டு சொற்களும் அடுத்து வைக்கப்பட்டதனால் இவ் விரண்டுலகமும் ஒன்று கூடிய நிலையும் காட்டிய கவிநயமும் காண்க. இரண்டுலகமும் வேறு பிரிந்தனவாயினும் ஒன்றுகூடி விரவியும் நின்றன என்பது.

இங்குக்கூறிய ஓசைகள் பலவும் வெவ்வேறு திறத்தன என்று காட்டத் தனித் தனி ஓசை என்ற ஒருபொருள் குறித்த பல சொற்களால் கூறிய திறமும் காண்க. தேவர் செய்யும் ஓசைகள் மண்ணுலக ஓசைகளினும் சிறந்தன என்பதனை அவ்வச் சொற்களாலும், அவற்றை மேல் வைத்த முறையானும், அமையும் இம்பர் - உடனே பல்கும் என்ற வினைமுடிபுகளின் ஆற்றலானும் உணர்த்தினர்.

இங்குக்கூறிய இம்பர் யானை, குதிரை, தேர் என்பன இந்நகர மைந்தர் மாதர்க ளுடையன போலும். அரசர்களுடைய போர்க்கருவிகளல்ல என்றமைத்துக் கொள்ளு தல்வேண்டும் ; அவற்றை 1177-ல் வேறு கூறுதலுடன் பொருத்த வேண்டில்.

விழவறாத அம்பொன் மணிவீதி - காஞ்சி நகரத்தில், ஆண்டின் ஒவ்வோர் மாத மும் பல விழாக்கள் நிகழ்வது இன்றும் காணப்படும் சிறப்பாகும். "கொடிகொள் செல்வ விழாக்குண லையுரு, கடிகொள் பூம்பொழிற் கச்சி" (குறுந்தொகை) என் பது தேவாரம். "வீதிகளும் ஒழியா விழாவணி" (1181), "விழவுமலி திருக்காஞ்சி வரைப்பு" (1179) என்று பின்னரும் இதனை வற்புறுத்துதல் காண்க. விழாக்கள் வீதிக்கும் சிறப்புத் தருவன. "விழவுருதன விளங்கொளி மணிநெடு வீதி" (ஏயர் கோன் புரா - 3), "விழவுகின்ற வியன்மறுகு" (மதுரைக்காஞ்சி - 328).

அரங்கு - ஆடரங்குகள். இவைகள் பெருநகரங்களில் அமைவன. "வீதித் தேரோடு மரங்கேறிச் சேயிழையார் நடம்பயிலுந் திருவையாறே" முதலியவை காண்க.

தெய்வ உயர் இரவி மா - சூரியனது குதிரை - ஏழு நிறமுடையதென்றும் அதனால் சப்தாசுவம் என்று பெயர் பெறுவதென்றும் கூறுதல் மரபு.

விமானத்துள் ஆடுந் தெய்வப் பாவையர் - தேவ விமானங்களில் விண்ணினின் றும் இறங்கும்போது தேவ அரம்பையர் ஆடல் செய்துகொண்டு வருகின்றனர். மண்ணோர் அரங்கிலும், அரம்பையர் விமானங்களிலும் ஆடுகின்றனர் என்பதாம்.

அலையுமிம்பர் - அணையும் இம்பர்—என்பதும், அவனூர்தித் தேர்—என்பதும் பாடங்கள். 98

## மறை அந்தணர் வீதி

1176. அருமறையந் தணர்மன்னு மிருக்கை யான
வாகுதியின் புகையடுத்த வம்பொன் மாடப்
பெருமறுகு தொறும்வேள்விச் சாலை யெங்கும்
பெறுமவிப்பா கங்கொடுக்கும் பெற்றி மேலோர்
வருமுறைமை யழைக்கவிடு மந்திரமெம் மருங்கும்
வானவர்நா யகர்திருவே கம்பர் முன்றிற்
றிருமலிபொற் கோபுரத்து நெருங்கு மெல்லாத்
தேவரையு மணித்தாகக் கொண்டு செல்லும். கூகூ

(இ - ள்) வெளிப்படை. அருமறைவல்ல அந்தணர்கள் வாழும் இருக்கைக ளாகியும், ஆகுதிப்புகை நிரம்பிய அழகிய பொன்மயமான மாளிகைகள் நிறைந்த பெரிய வீதிகள்தோறும் ஆகுதியின் புகை அடுத்த வேள்விசெய்யுமிடங்களில் எங்கும்,

அவ்வத் தேவர்கள் பெறுகின்ற அவிப்பாகங்களைக் கொடுக்கும் தன்மையுடைய மேலோர்கள் கூறும், அத்தேவர்களை வரும்முறையில் அழைப்பதற்கு உரிய மந்திரங்கள், தேவர்களின் நாயகராகிய திருவேகம்பர் திருமுன்றிலில் திருமலிதற்கிடமாகிய பொற்கோபுர வாயிலில் நெருங்கியிருக்கும் எல்லாத் தேவர்களையும் தம்பக்கத்தில் (வேள்விச்சாலைகளுக்கு) அழைத்துக்கொண்டு போகும்.

(வி - ரை) இதுவரை வீதிகளின் சிறப்புக்களைப் பொதுவகையாற் கூறினர். இனி, நாற்குலத்தாரும், குலபேதத்தாரும் முறையே வாழும் வீதிகளைத் தனித்தனி கூறுகின்றார்.

அருமறை அந்தணர் - வேதவேதியர். சிவவேதியர்களாகிய அந்தணர்களினின்றும் வேறு பிரித்துணர்த்துதற்கு மறை அந்தணர் என்றார்.

மறுகுதொறும் வேள்விச்சாலை - அந்தணர் தினமும் வேள்வி வளர்க்கும் இடங்கள். 1063–1064ல் உரைத்தவை பார்க்க.

அவிப்பாகம் - வேள்விகளில் தீக்கடவுளின் வாயிலாகத் தேவர்களுக்கு இடும் உணவு அவி எனப்படும். பாகம் - "எண்ணிறந்த கடவுளருக் கிடுமுணவு கொண்டீட்டும், வண்ணவெரி வாயின்கண் வைத்ததென" (796) என்றது காண்க. பாகம் - பகுதி - அவியின் பகுதி. அவியானது பற்பல தேவர்க்கும் தனித்தனி பிரித்துக் கொடுக்கப்படுமானதால் அவிப்பாகம் எனப்படும்.

அழைக்கவிடும் மந்திரங்கள் - அழைத்தற்காகச் சொல்லப்படும் மந்திரங்கள்.

மந்திரங்கள் - தேவரை - அணித்தாகக் - கொண்டு செல்லும் என்று கூட்டுக. எல்லாத் தேவர்களும் திருவேகம்பரது திருவாயிலில் முன்னரே வந்துகூடி நெருங்கியுள்ளார்கள் என்பதும், வேள்விச்சாலையில் அவ்வவர்களுக்குரிய அவிப்பாகம் கொடுத்தற்காக அவர்களைக் கூப்பிடும் மந்திரங்கள், கோயில் வாயிலினின்றும் அவர்களை வேள்விச்சாலைக் கணிமையில் கொண்டு செலுத்தும் என்பதும் கருத்து.

பெற்றி மேலோர் - பெற்றி - தன்மை. பெற்றியை உடைய பெரியோர்கள்.

அழைக்கவிடும் மந்திரங்கள் - அழைத்தற்காக உச்சரிக்கப்படும் உரிய மந்திரங்கள். விடும் - பிரயோகிக்கப்படும் - சொல்லப்படும் - என்ற பொருளில் வந்தது. அழைக்கத் தூதுவிடுதல்போல இந்த மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டபோது அவை தூது சென்று உரியதேவரை அழைத்துக் கொணர்ந்து விடுத்தலினால் அழைக்க விடும் என்றார். விடும் என்பதனைப் பகுதிப் பொருள் விகுதியாகக் கொண்டு அழைக்கும் எனப் பொருள் கொள்வதும் பொருந்தும். அழைந்துவிடும் என்பது பாடமாயின் அழைத்தற்கும், பின்னர் முடிவில் போக விடுத்தற்கும், உரிய மந்திரங்கள் என்க.

வானவர் நாயகர்...எல்லாத் தேவரையும் - வானவர் நாயகராதலின் அவரது திருவாயிலில் தங்கள் தங்கள் குறைதீரும்படி வரம்பெறுதற்கும், பணி யறிந்து புரிவதற்குமாகத் திருமுன்பு காத்துகொண்டிருக்கின்றனர் எல்லாத் தேவர்களும் என்பார் வானவர் நாயகர் என உடம்பொடு புணர்த்தி ஓதினர். "வாய்தல்பற்றித் துன்றி நின்றார் தொல்லை வானவ ரீட்டம் பணியறிவான், வந்துநின் றாய னுந்திரு மாலும் மதிட்கச்சியாய்" (கச்சி - திருவிருத்தம்) என்ற அப்பர்சுவாமிகள் தேவாரமும், "வாழ்ந்திமையோர் குழாநெருங்கு மணிநீள் வாயில்" (திருஞான - புரா - 1021), "மால யன்சத மகன்பெருந் தேவர் மற்று முள்ளவர்கள் முற்று நெருங்கிச்,சில மாமுனிவர் சென்றுமுன் றுன்னி...நிற்ப...திருவாயில்" (249). என்ற திருவாக்குக்களும் காண்க. எல்லாத் தேவரையும் - உம்மை முற்றும்மை. அங்கு வந்து நெருங்கிக்காத்து வாழ்வடைகின்றார்கள் தேவர்கள் கூட்டம் முழுவதும் என்பது குறிப்பு. நெருங்கும் -

காலம் பெற்றுத் திருவாயிலினுள்ளே புகுதற்கு முந்திக்கொள்வதற்காகப் புடைபட்டு முந்தி நெருங்குகின்றனர். "கருமால் பிரமன் தடைபட் டின்னுஞ் சார மாட்டாத் தன்னைத் தந்த வென்னா ரமுதைப், புடைபட் டிருப்ப தென்று கொல்லோ" (புணர்ச்சிப் பத்து - 1) திருவாசகம்.* 99

## அரசர் வீதி

1177. அரசர்குலப் பெருந்தெருவுந் தெற்றி முற்றத்
தாயுதங்கள் பயிலும்விய லிடமு மங்கட்
புரசைமதக் கரிகளொடு புரவி யேறும்
பொற்புடைய வீதிகளும் பொலிய வெங்கும்
விரைசெய்நறுந் தொடையலங்கற் குமரர் செய்யும்
வியப்புறுசெய் தொழில்கண்டு விஞ்சை விண்ணோர்
நிரைசெறியும் விமானவூர் திகளின் மேலு
நிலமிசையும் பலமுறையு நிரந்து நீங்கார். ௧௦௦

(இ - ள்) வெளிப்படை. அரசமரபினர் வாழும் பெரிய வீதிகளிலும், தெற்றியினை யுடைய முற்றங்களில் ஆயுதங்களைப்பயிலும் அகலமான இடங்களிலும், அவ்விடத்துக் கயிற்றையுடைய யானைகளையும் குதிரைகளையும் ஏறிநடத்தும் அழகிய வீதிகளிலும், எவ்விடத்தும், பொலிவடையும்படி, வாசனை வீசுகின்ற நல்ல மலர்களையும் மணிமாலை களையும் அணிந்த அரசகுமாரர்கள் செய்யும் அதிசயிக்கத்தகுந்த வில் - வாள் - முதலிய வித்தைகளைக் கண்டு, வித்தியாதரர்களாகிய தேவகூட்டத்தார் வரிசையான நெருங்கிய தேவவிமானங்களின் மேலும் நிலத்தின் மேலும் பலமுறையும் கூடி நீங்காதிருப்பர்.

(வி - ரை) தெருவும் - இடமும் - வீதிகளும் - எங்கும் பொலிய - கண்டு - விஞ்சை விண்ணோர் - நிரந்து நீங்கார் என்க.

குலப்பெருந்தெரு - குலம் - கூட்டமும் தன்மையும் குறித்த தெனினுமாம்.

தெற்றி - சித்திர கூடங்கள். வியல் இடம் - வில் - வேல் - வாள் முதலிய ஆயுதங்களை அரசிளங்குமரர் பயிலும் இடமாதலின் அகலமான முற்றங்களை உடையன என்பது.

அங்கண் - அதற்குப் பக்கமான இடங்களில். யானை - குதிரை ஏற்றம் பயிலும் இடங்கள் ஆயுதம் பயில் இடங்களுக்கு அணிமையில் அமைதல் மரபும் இயல்புமாம்.

தொடை - பூமாலை. தொடுக்கப்படுவதால் தொடை எனப்படும். அலங்கல் - மணிமாலை.

தொடை அலங்கற் குமரர் - தத்தமக்குரிய அடையாள மாலைகளையும், (அவை பெரும்பாலும் மணமும் அழகும் பெறாவாகலான்) அழகும் மணமுடைய வேறு மலர் மாலைகளையும் அணிந்த அரசகுமாரர்கள் என்றலுமாம்.

புரசை - யானைக்கழுத்துக்கயிறு. புரோசை என்ப. செய்தொழில் கண்டு வியப் புறு விஞ்சை விண்ணோர் - என்று கூட்டி உரைத்தலுமாம். செய்தொழில் - வில் - வாள் முதலிய வித்தைகளின் தொழில். வித்தை வல்லவர்களாதலின் இத்தேவர்கள் விஞ்சையர்கள் எனப்படுவர். விஞ்சை - வித்தை என்பதன் மரூஉ.

---

*இது முதல் 3 பாட்டுக்களும் சிறிது ஐயப்பாடுடையன என்பது பற்றி எனது "சேக்கிழார்" 215-217 பக்கங்கள் பார்க்க.

விமான வூர்திகளின் மேலும் நிலமிசையும் என்றது மேலிருந்து கண்டு வியப்பதும், கீழ் நிலமிசை வந்து உடனிருந்து பழகிக் கொள்வதும் செய்வர் என்ற குறிப்புப் படக் கூறியதாம்.

விருப்புறுசேய்—என்பதும் பாடம். 100

## வணிகர் வீதி

1178. வெயிலுமிழும் பன்மணிப்பூண் வணிக மாக்கள்
விரவுநிதி வளம்பெருக்கும் வெறுக்கை மிக்க
வயினிலவு மணிக்கடைமா நகர்க ளெல்லாம்
வனப்புடைய பொருட்குலங்கண் மலித லாலே
கயிலைமலை யார்க்சி யால யங்கள்
கம்பமுமே வியதன்மை கண்டு போற்றப்
பயிலுமுருப் பலகொண்டு நிதிக்கோன் றங்கப்
பயிலளகா புரிவகுத்த பரிசு காட்டும். கஅக

(இ - ள்) வெளிப்படை. ஒளி வீசும் பல மணிகளையுடைய அணிகலன்களை அணிந்த வணிகர்கள் பொருந்திய நிதிகளின் வளங்களைப் பெருகச் செய்யும் செல்வங்கள் மிகுந்த இடத்தால் மிக்க, மணிகள் அழுத்திய முதல் வாயிலையுடைய பெரிய மாளிகைகள் எல்லாம், அழகுடைய பொன்னும் நவமணிகளும் முதலிய செல்வக் கூட்டங்கள் நிறைதலால் கயிலாயபதியாகிய சிவபெருமான் கச்சியிலிருக்கும் பலதளிகளிலும் திருஏகாம்பரத்திலும் எழுந்தருளியிருக்கும் சிறப்பை யறிந்து குபேரன் வந்து, தரிசித்துத் தங்குவதற்காக அளகாபுரியைப் பயில்கின்ற பல உருவங்களுடன் வகுத்த தன்மையினைக் காட்டுவன.

(வி - ரை) வெறுக்கை - செல்வம். வளம் பெருக்கும் வெறுக்கை என்றது பல வகை வளங்களையும் பெருக்குகின்ற நிலை குறித்தது.

பொருட்குலங்கள் - பொருள்களின் பலவகைத் தொகுதிகள். ஆலயங்கள் கம்பமும் - ஆலயங்களிடத்தும் ஏகம்பத்தின் கண்ணும். ஆலயங்கள் என்றவிடத்து உம்மை தொக்கது. ஈரிடத்தும் ஏழனுருபுகள் தொக்கன. 1153 பார்க்க.

நிதிக்கோன் - குபேரன். பயில் அளகாபுரி - குபேரன் வசிக்கும் அளகை. அளகாபுரியைப் பல உருக்கொண்டு வகுத்த பரிசு என்க.

மாநகர்கள் என்றது இங்கு மாளிகைகளையும் மாளிகைகளின் தொகுதிகளையும் குறித்தது. மாநகர்கள் - மலிதலாலே பரிசு காட்டும் என்க. நகர் - மாடங்கள் எனப் பொருள் கொள்வர் நச்சினார்க்கினியர் (சிந்தா - நாம - 297).

மாநகர்கள் - வணிகர் தெருக்கள் தனித்துப் பல செல்வ மாளிகைகளுடன் விளங்குவதால் அவையே தனி நகரங்கள் போன்றன என்பது கருத்து. இவ்வாறுள்ள இடங்கள் தனிநகரங்களாகப் பெயர் வழங்குதலும் காண்க.

பயிலும்உரு - அளகாபுரியைப் பழகியவர்கள் இதுவே அது என்று காணத்தக்க உருவம். பயில் அளகாபுரி - குபேரன் வாழும் அளகை. 101

## வேளாளர் வீதி

1179. விழுமமலி திருக்காஞ்சி வரைப்பின் வேளாண்
விழுக்குடிமைப் பெருஞ்செல்வர் விளங்கும் வேணி
மழவிளவெண் டிங்கள்புனை கம்பர் செம்பொன்
மலைவல்லிக் களித்தவரு ளுணவின் மூலந்

தொழுவுலகு பெறுமவடா னருளப் பெற்றுத்
தொன்னிலத்து மன்னுபயிர் வேத வாய்மை
யுழவுதொழி லாற்பெருக்கி யுயிர்க ளெல்லா
மோங்கவருந் தருமவினைக் குளரா லென்றும். கஉஉ

(இ - ள்) வெளிப்படை. விழாக்கள் மிகுகின்ற திருக்காஞ்சியின் எல்லையில் வேளாளராகிய தூயகுடியில் வந்த பெருஞ் செல்வர்கள், ஒளி விளங்குகின்ற சடையில் மிக இளைய வெள்ளிய பிறையினைச் சூடிய திருவேகம்பர், செம்பொன்மலைவல்லியாகிய காமாட்சியம்மையாருக்குக் கொடுத்த அருளுருப்பெற்ற உணவின்மூலம் என்னும் இருநாழி நெல்லையும், தம்மைத் தொழுதமையால், உலகங்களையெல்லாம் பெற்ற தாயாராகிய அவ்வம்மையார் கொடுத்தருள, அதனைப் பெற்றுப், பழமையாகிய இவ்வுலகத்தில் நிலைத்த பயிர்களை வேத வாய்மையிற் பேசப்படும் உழவு தொழிலாற் பெருகச்செய்து, எல்லா உயிர்களும் தழைக்கும்படி வருகின்ற தருமச் செய்கைகளுக்கு உரியவர்களாய் எந்நாளும் தழைத்துள்ளார்கள்.

(வி - ரை) விழக்குடி - விழுப்பம் - உயர்வு - மேன்மைதங்கிய குடிப்பிறப்பு.

பெருஞ்செல்வம் - "மேழிச் செல்வங் கோழை படாது", "பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்" என்பன்வாதி முதுமொழிகள் வேளாளருடைய செல்வத்தின் பெருமையை விளக்குவன. முன் பாட்டில் "விரவுநிதி வளம்பெருக்கும் வெறுக்கை", "மணிக்கடை", "வனப்புடைய பொருட்குலங்கள்", "பயில் அளகாபுரி" என்று பலவாறும் வணிகரது பொருட்சிறப்பினைப் பேசிய ஆசிரியர், இங்கு, வேளாளரை (அதனினும்) பெரும் செல்வர் என்ற குறிப்பும், உணவின் மூலம் - உயிர்களெலாம் ஓங்கவரும் தருமவினை என்ற குறிப்புக்களும் காண்க.

மழ - இள - ஒருபொருட் பன்மொழி - மிக்க இளமை குறித்தது.

அருள் உணவின் மூலம் - அருள் - அருளுருவாகிய. உயிர்கள் ஓங்க அறங்கள் எல்லாமும் செய்தற்பொருட்டுத் தரப்படுதலின் அருளுருவாயிற்று. உணவின் மூலம் - நெல். பெருகி உணவுக்கு உதவுதலால் மூலம் என்றார். வளர் உணவின் மூலம் என்பது பாடமாயின், மேன்மேல் ஒன்று ஆயிரமாக இலக்கமாகப் பெருகுந்தன்மையுடைய விதைமுதல் என்க. விதை முன்னதோ மரம் முன்னதோ என்னும் பீசாங்குர நியாயம் என்றதொரு முறைக்கு விடையிறுப்பார் போன்று விதை தான் முதலாகிய மூலமாகும் - அது இறைவன் இறைவிக்களித்தது என்று கூறும் குறிப்பும் காண்க.

உலகுதொழப் பெறும் அவள் - உலகத்துயிர்கள் எல்லாம் தொழுதேத்தி உய்யுமாறு உணவின் மூலத்தைப் பெறுகின்ற அம்மையார் என்றலுமாம்.

வேத வாய்மை உழவு தொழில் - வேதங்களுன்னே விதிக்கப்பட்ட தருமங்களுட் சிறந்த உழவுதொழில் என்றலுமாம். வாய்மை ஒழுக்கத்தினின்று பெருக்கி என்று கூட்டியுரைத்தலுமொன்று. உயிர்களெல்லாம் ஓங்கவரும் தொழிலாதலின் தருமவினை என்றும் உடன் கூறினர்.

தருமவினை - வேளாண்மை. வினைய தொழில்கள்போ லன்றி இத்தொழிலின்கண், சிவகாருண்யமாகிய அறம் நிகழ்ந்து வருதற்கேதுவாதல் குறிக்கப்பட்டது. தருமவினைக்கு என்றும் உளரால் என்க. தருமஞ் செய்வதற்கென்றே அமைந்து என்றும் வாழ்பவர் வேளாளர்கள் என்பது. ஆல் - அசை.

ஓங்கவரும்—என்பதும் பாடம்.

## குல பேதம்

*1180. ஓங்கியநாற் குலத்தோவ்வாப் புணர்விற் றம்மி
லுயர்ந்தனவு மிழிந்தனவு மான சாதி
தாங்குழுமிப் பிறந்தகுல பேத மெல்லாந்
தந்தகைமைக் கேற்றதனி யிடங்கண் மேவி
யாங்குநிறை கிளைபயின்று மரபி னாற்ற
வடுத்தவினைத் தொழின்முறைமை வழாமை நீடு
பாங்குவள ரிருக்கைநிலை பலவு மெல்லாம்
பண்புநீ டியவுரிமைப் பால வன்றே. கரு௩

(இ - ள்) உயர்வுடைய நாற்குலங்களிலும் ஒவ்வாப்புணர்ச்சியினால், அவற்றுள் உயர்ந்தனவும் இழிந்தனவும் ஆன சாதிகள் தம்முட்கூடுதலாற் பிறந்த குலபேதங்கள் எல்லாம் தங்கள் தங்களுடைய தகுதிக்கேற்றவாறு அமைந்த தனியிடங்களிற் பொருந்தி, அங்கு, நிறைந்த தம் கிளைஞர்களுடன் கலந்து தங்கள் தங்கள் மரபினுக்கு ஏற்ற தொழில் முறைமையில் தவறாமல் நீடும்படியான குணத்துடன் பெருக வாழ்ந்திருக்கும் பலவாகிய இருக்கை நிலைகள் எல்லாம் நற்பண்புநீடிய உரிமையுடையனவாயுள்ளன.

(வி - ரை) ஓங்கிய நாற்குலம் - அந்தணர் - அரசர் - வணிகர் - வேளாளர் என்பன. இவை தொல்காப்பிய முதலிய பழந்தமிழ் நூல்களுட் கூறப்பட்டுள்ளன. "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும், ஐவகை மரபி னரசர் பக்கமும், இருமூன்று மரபினேனோர் பக்கமும்" (தொல் - புறத்திணை - 20) என்ற இடத்து வேளாளர்க்கும் அறுதொழில் கூறினர் தொல்காப்பியனார்.*

ஒவ்வாப்புணர்வில் - அவ்வக்குலத்தோர் அவ்வக்குலத்தில் மணஞ்செய்து கொள்ளுதல் நூல்களானும் ஆன்றோராசாரத்தானும் ஒப்பப்படுவதென்பதும், அவ்வாறன்றிக், குலம் பிறழ்ந்து புணர்ந்து கொள்ளுதல் ஒவ்வாதென்பதும், ஆம். ஆனால், பல்லாற்றானும் விதிபிறழ்ந்து ஒழுகும் மக்கட்பண்பில், இவையும் உலக வழக்கினுள் வருவனவாதலின், நகர அமைப்பினுள் இவர்களும் இடம்பெற் றமைவாராயினர். மேற்காட்டிய தொல்காப்பியச் சூத்திரத்தினுள் பக்கமும் என்றதற்கு "அவ்வருணத்தார் ஏனைய வருணத்தார்கட்கொண்ட பெண்பாற்கட்டோன்றிய வருணப் பகுதியோரும்" என்று நச்சினார்க்கினியர் உரைத்துப் போந்தனர்.

தம்மில்...பேதமெல்லாம் - நாற்குலத்தினுள், உயர்சாதி ஆணும், தாழ்ந்தசாதிப் பெண்ணும் கூடிப் பிறந்த மூவகையான அநுலோமரும், அதுபோலத் தாழ்ந்த சாதி ஆண் உயர்சாதிப் பெண்ணுடன் சேர்ந்து பிறந்த அறுவகையான பிரதிலோமரும், இவ்விருவகையினர் தம்முட்கலப்பால் பிறந்த சங்கரரும் என இவை குலபேதமாகும் என்று மனு முதலிய தருமநூல்கள் வகுக்கும். அநுலோமர் மூவர் பிரதிலோமர் மூவர் ஆக அறுவர் என்பதும், இவ்வறுவரும் ஔத்திரிதீக்கைக்குரியர் என்பதும் சிவாகமங்

*இந்த அறுதொழிலாவன எவை என்பதுபற்றி உரையாசிரியர்கள் வெவ்வேறு திறம்பட உரைத்தனர். அவை எவ்வாறாயினும், அறுதொழிலுரிமையுடைய தமிழருள் வேளாளர் என்பார் வேறு, நால்வகைச் சாதியுள் ஏவல் மாக்களாகிய சூத்திரர் என்பார் வேறு, என்பதறிவோர் துணிபு. குலங்களின் நலங்களையும் உயர்வு தாழ்வுகளையும் பற்றிப் பூசலிடுவோர் இத்திருப்பாட்டிலும் தொல்காப்பிய முதலிய பழந்தமிழ் நூல்களினும் கூறிய வகைகளைச் சிந்தித்து அமைந்து ஒழுகுதல் நலம்தரும்.

களின் கொள்கையுமாம். விரிவுகள் ஆண்டுக் கண்டுகொள்க. இவை விரிந்து பரத்தலின் பேதமெல்லாம் என்றார். 1124-ல் உரைத்தவையும் பார்க்க.

தம் தகைமைக்கேற்ற தனி இடங்கள் மேவி - எனவும், மரபின் ஆற்ற அடுத்த வினைத் தொழின் முறைமை வழாமை எனவும், கூறியவாற்றால் நகர அமைப்பிலும், மக்கட் கூட்ட ஒழுங்கு அமைப்பிலும் இக்குலத்தவர் யாவரும் அவ்வவர்க்குக் குறித்த ஒவ்வோர் தனியிடத்தின் குடிவாழ்க்கைக்கும், அவ்வவர் மரபுக்கேற்ற தனித்தொழில் வாழ்க்கைக்கும் உரியவர் என்பது பெறப்படும்.

உரிமைப்பால - என்பதும் கருதுக. இதனால் அவ்வவர் சமூக உரிமைகளும் கடமைகளும், நூல்களாலும் ஆன்றோர் ஆசார வழக்காலும் வரையறுக்கப்பட்டுள்ளன என்பது விளங்கும். இதுபற்றி முன் உரைத்தவையும் நினைவு கூர்க. எவரும் ஒன்று போலவே எத்தொழிலும் செய்வதற்கும் எங்கும் உறைவதற்கும் உரியவர் என்னும் புதுக்கொள்கை முந்து நூல்களாலும் ஆன்றோராலும் ஆதரவு பெறுதென்பதுவும் இதனால் விளங்குவதாம். 103

வேறு

1181. ஆதி மூதெயி லங்நகர் மன்னிய
சோதி நீண்மணித் தூபமுந் தீபமுங்
கோதில் பல்லிய முங்கொடி யும்பயில்
வீதி நாளு மொழியா விழாவணி. கoச

(இ - ள்) வெளிப்படை. ஆதிதேவரது பழைமையாகிய மதில் சூழ்ந்த அந்தக் காஞ்சி மாநகரத்தில் உள்ள வீதிகள், நீளும் சோதியுடைய மணிகளிழைத்த தூப தீபங்களையும், குற்றம்போக்கும் பல இயங்களையும், கொடிகளையும் உடையனவாகிய விழாக்களின் சிறப்புக்களை, என்றும் நீங்காதிருக்கின்றன.

(வி - ரை) ஆதி - முதல்வர். ஆதியின் - நகர் என்று கூட்டுக. ஆதிநகர் - முதன்மையான நகர் என்றுரைப்பினும் அமையும்.

கோதி நீள் மணி - தூபகலசங்களுக்கும் தீபகலசங்களுக்கும் மணிகளிழைத்துள்ளன என்பதாம்.

கோதில் இயமம் - கோதில் கொடியும் - என்று தனித்தனி கூட்டுக. சிவபெருமான்திருவிழாக்களில் முழக்கப்படும் பேரி முதலிய பலவகை இயங்களும், பூத பைசாச முதலியவற்றால் வரும் குற்றங்கள் சாராமல் மக்களைக்காக்கும் தன்மையுடையன என்பதும், அவ்வாறே சிவனது இடபக் கொடியும் உயிர்களின் பாசமாகிய நீமை போக்கும் தன்மையுடையது என்பதும் சிவாகமங்களின் துணிபு. "கோதிலா வேறுங் கொடி" என்ற திருவாசகமும் காண்க. கோது இல் - கோதினை இல்லையாகச் செய்யும் என்க. கோதில் பல் இயம் - குற்றமில்லாத பல இயங்கள் என்றும், கொடி விழாக்களின் சிறப்புக்களுள் ஒன்றாகிய கொடியாடைகள் என்றும் உரைப்பாரும் உண்டு. வீதி - சாதியொருமையாதலின் ஒழியா என்ற பன்மைவினை கொண்டது.

ஆதிநகர் - மன்னியவீதி - தூபமும் - தீபமும் - கொடியும் - பயில் - விழாவணி - நாளும் - ஒழியா என்று கூட்டி முடிக்க.

விழா அணிகளை வரும்பாட்டில் விரித்துக்கூறுகின்றார். 104

1182. வாயி லெங்கணுந் தோரண, மாமதில்
ஞாயி லெங்கணுஞ் சூழ்முகி, ணண்மதி

தோயி லெங்கணு மங்கலங், தோண்டர்சூழ்
கோயி லெங்கணு மும்பர் குலக்குழாம். கஎரு

(இ - ள்) வெளிப்படை. (விழா அணி ஆவன) அங்கரின் மாளிகை வாயில்கள் தோறும் தோரணங்கள் உள்ளன; பெரிய மதிலின் உறுப்புக்களின் மேல் எல்லாம் மேகங்கள் சூழ்கின்றன; ஒளிவிளங்கும் சந்திரன் தோயும்படி உயர்ந்த வீடுகளில் எங்கும் மங்கலங்கள் நிகழ்கின்றன. தொண்டர்கள் சூழ்ந்து வலம் வரும் கோயில்களிலெல்லாம் தேவர்களின் மிகுந்த கூட்டங்கள் உள்ளன.

(வி - ரை) வாயில் - தோரணம் - அங்கர மாந்தர் தங்கள்தங்களுடைய மாளிகை வாயில்களில் எங்கும் தோரண முதலியவற்றால் அலங்கரித்தல் சிவபெருமானது திருவிழாக்களின் சிறப்பினை நோக்கி என்க.

மதிதோய் இல் எங்கணும் மங்கலம் என்றதும் அக்கருத்துப்பற்றியேயாம். மங்கலம் - திருவிழாவின் பொருட்டு நகரமாந்தர் தங்கள் மனைகளில் இயங்கள் முழக்குதல், ஆடல் பாடல் இயற்றுதல், முதலாயின நிகழ்ச்சிகள் செய்வித்தல் இன்றும் திருத்தில்லை - திருவாலவாய் முதலாயின பெருந்தலங்களிற் காணத்தக்கன.

ஞாயில் - மதிலுறுப்புக்கள். ஞாயிலில் முகில் சூழ்தல் என்றது திருவிழாவின் வேள்விகளின் பயனாய் முகில்கள் உண்டாகிச் சூழ்தல் குறித்தது.

தோண்டர்சூழ் - சூழ்தல் - வலம் வருதல் - நிறைதல் என்றலுமாம். உம்பர்குலக் குழாம் - தொண்டர்கள் சென்று சூழ்வந்து செல்லத், தேவர்கள் காலமும் இடமும் பெறுது காத்திருக்கின்றனர் என்பது குறிப்பு. 1176-ல் உரைத்தவையும், 17-18-ம் இவ்வாறு முன் வந்தவையும் பார்க்க.

குலக்குழாம் - குலம். இங்குப் பலவகைத் தேவகணங்களைக் குறித்தது. 105

1183. வேத வேதியர் வேள்வியே தீயன;
மாத ரோதி மலரே பிணியன;
காதல் வீதி விலக்கே கவலைய;
சூத மாதவி யேபுறஞ் சூழ்வன. கஎசு

(இ - ள்) வெளிப்படை. வேத வேதியர்கள் இயற்றும் வேள்விகளே தீயினைக் கொண்டன; பெண்களின் கூந்தல்களில் உள்ள மலர்களே பிணிப்புடையன; விருப்பந்தரும் வீதிகளில் விலக்குக்களாகிய வழிகளே கவலையுடையன; மாமரங்களும் குருக்கத்தி மரங்களுமே புறஞ்சூழ்வன.

(வி - ரை) காஞ்சி நகரத்தில் அரன்றிருவிழாவும் அடிமைத் திறமும் செவ்வனே நிகழ்வனவாதலானும், மாந்தர் கனவிலும் தீமைநினையாத தூய சிந்தையராயுள்ளமையானும், பிற ஊர்களினும் நாடுகளினும் அண்டங்களினும் காணப்படும் பிணி, கவலை, புறஞ்சூழ்தல் முதலிய குற்றங்களை இங்குக் காணமுடியாது. கோதுகளை அரன் திருவிழாக்கள் போக்குவன என்பது முன்பாட்டில் உரைக்கப்பட்டது. இவற்றைக் காண வேண்டுமானால் சொற்சிலேடை நயம்பற்றியும், சொல்லாற்றலானும், கூறலாமேயன்றி உண்மையிற் காணமுடியாது என்பது இப்பாட்டின் கருத்து. இவ்வாறே மேல் வரும் இரண்டு பாட்டுக்களினும் கொள்க.

வேள்வியே தீயன - தீயன - என்பது தீயை உடையன - தீமையுடையன - என இருபொருளும்பட வழங்கும். தீயையுடைமையால் தீயன என்னலாமன்றித் தீமையுடைமையால் அவ்வாறு சொல்லத்தக்க பொருள் வேறொன்றுமில்லை என்பார் வேள்

வியே என்று பிரிநிலையேகாரந் தந்து கூறினர். மலரே - விலக்கே - மாதவியே என்ற இடங்களினும் இவ்வாறே கொள்க.

மலரே பிணியன - பிணியன - பிணிக்கப்படுவன - பிணியுடையன என்பது சிலேடை. ஓதி - கூந்தல்.

வீதி விலக்கே கவலைய - விலக்கு - பெருவீதிகளினின்றும் விலகிச் செல்லும் சிறு வீதிகள். கவலை - சந்து முடுக்கு. கவலைய - சந்து முடுக்குக்களை உடையன - கவலையினையுடையன என்பது சிலேடை.

தூத மாதவியே புறஞ்சூழ்வன - புறஞ்சூழ்தல் - புறத்திற் சூழ்தல் - புறங்கூறிக் கேடுநினைத்தல் (கோட்சொல்லுதல்) என்பது சிலேடை.

"துன்பே கவலை பிணியென் றிவற்றை நணுகாமற் றுரந்து கரந்து மிடீர்" (அதிகை-கொல்லி) என்ற அப்பர் சுவாமிகள் தேவாரமும் இங்கு நினைவு கூரத்தக்கது.

இத்திருப்பாட்டும் மேல்வரும் இரண்டு பாட்டுக்களும் ஒழித்துக் காட்டணி என்னும் அணியின் பாற்படும். 106

1184. சாய லார்க ணுசுப்பே தளர்வன ;
வாய மாடக் கொடியே யசைவன ;
சேய வோடைக் களிறே திகைப்பன ;
பாய சோலைத் தருவே பயத்தன. கஎ

(இ - ள்) வெளிப்படை. மயில்போலுஞ் சாயலையுடைய பெண்களின் இடைகளே தளர்வன ; அப்பெண்களின் கூட்டங்களையுடைய மாடங்களின்மேல் உள்ள கொடிகளே அசைவன ; சிவந்த பொன்னிறமான நெற்றிப்பட்டங்கள் பூண்ட யானைகளே திகைப்பன ; பரவிய சோலைகளிலுள்ள மரங்களே பயத்தையுடையன.

(வி - ரை) தளர்ச்சியையுடையன நுசுப்பே ; அசைவையுடையன கொடியே ; திகைப்பையுடையன களிறே ; பயத்தையுடையன தருவே ; இவையன்றித் தளர்வு முதலியனவற்றை உடையபொருள் வேறில்லை என்பது கருத்து.

நுசுப்பே தளர்வன - தளர்தல் - துவளுதல் - இளைத்தல் - என்பது சிலேடை.

ஆயம் - (பெண்களின்) கூட்டம்.

கொடியே அசைவன - அசைதல் - காற்றினால் ஆடி அசைதல் - ஓர் நிலையில் லாது பெயர்தல் என்பது சிலேடை.

களிறே - திகைப்பன - திகைப்பன - திகை - திசை - திக்குக்களில் உள்ளன. திகைத்தல் - மயங்குதல் - மயக்கத்தை உடையன என்பது சிலேடை. திக்குக்களில் உள்ளன என்றபொருட்குச் சேய களிறு என்று கூட்டி நெடுந்தூரத்தில் உள்ள என்று பொருள் கொள்க.

பாய - பரவிய. தருவே பயத்தன - பயத்தன - பயனை உடையன - (பயம் - பயன் - பழம்.) - பயத்தை (அச்சத்தை) உடையன என்பது சிலேடை. இவ்வுலக நிலையில் உயிர்களுக்கு வரும் ஐந்து பயங்களையும் அரசன் நீதிமுறை யாட்சியுற் போக்குதலினாலும், அவ்வுலகநிலையில் வரும்பயம் வாராமல் தெய்வம் காத்தலினாலும் அங்கு நில் சிலேடைவகையால் தருக்களினது பயம் தவிர வேறு பயமில்லை என்பதாம்.

இவ்வாறு தளர்ச்சி முதலியன வேறில்லையாதலுக்குக் காரணம் தெய்வங்களும் ஒழுக்கங்களுமாம் என்பது குறிப்பு. 107

1185. அண்ண லாரன்ப ரன்பேமு னர்த்தன ;
தண்ண றுஞ்செழுந் தாதே துகளன ;

வண்ண நீண்மணி மாலையே தாழ்வன ;
எண்ணில் குங்குமச் சேறே யிழுக்கின. கஅ

(இ - ள்) வெளிப்படை. சிவபெருமானன்பர்களின் அன்பே முன் ஆர்த்தன ; குளிர்ந்த வாசனையுடைய மலர்களின் பூந்தாதுக்களே துகளுடையன; அழகிய நீண்ட மணி மாலைகளே தாழ்வுள்ளன ; அளவில்லாத குங்குமக் குழம்புச்சேறே இழுக்கையுடையன.

(வி - ரை) அன்பினுலாகிய ஆர்ப்பும், தாதின் துகளும், மணிமாலைகளின் தாழ்வும், சேற்றின் இழுக்குமேயன்றி வேறு ஆர்ப்பு, துகள், தாழ்வு, இழுக்கு என்பன இல்லை என்றதாம்.

அன்பே முன் ஆர்த்தன - ஆர்த்தல் - ஆரவாரித்தல். " ஆர்ப்பரவஞ்செய்ய " (திருவெம்பாவை - 11). அன்பு மிகுதியினுல் " ஆடுதலும் பாடுதலுமாய் நிகழ் "தல். " சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் றிருவார்த்தை விரிப்பார் " (திருவாசகம்), " தம்முட் பித்த ரைப்போலப் பிதற்றுவார் " (திருவாரூர் - குறிஞ்சி - அப்பர் தேவாரம்) முதலிய திருவாக்குக்கள் இங்கிலையை விளக்குவன. ஆர்த்தல் - கட்டுவித்தல். (ஆர்த்தபிறவி - திருவாசகம்) என்றும், நிறைவித்தல் - நுகர்வித்தல் என்றும், கொண்டு, அப்பொருள்கட்கு ஏற்ப உரைப்பாருமுண்டு.

தாதே துகளன - துகள் - பொடி. புழுதி (குற்றமுடையன) - என்பது நிலைடை. பூந்தாதுக்களே யன்றித் துகள் வேறில்லை என்பதாம். " தொன்மைமுறை வருமண் ணின் றுகளன்றித் துகளில்லா, நன்மைநிலை ஒழுக்கம் " (திருநா - புரா - 2) என்றது காண்க.

மாலையே தாழ்வன - தாழ்தல் - தொங்குதல் - கீழ்நிலையிற் றழ்வுறுதல் - என்பது நிலைடை. மணிமாலைகள் தாழ்தலன்றித் தாழ்வுடையன வேறில்லை என்க.

சேறே இழுக்கின - இழுக்கு - வழுக்குதல் - இழுக்குடையவை (குற்றமுடையவை) வேறில்லை என்க.

ஆர்த்தல் - அன்பர் செயல். தாது - சிவபெருமானை அருச்சிக்கும் மலர்களின் தாதுக்கள் ; மணிமாலை - இறைவரை அலங்கரிக்கச் சூட்டுவன ; சேறு - திருவிழாவில் திருவீதி குளிரத் தெளிப்பன என்றிவ்வாறு தொடர்புபடுத்திக் கண்டுகொள்க. " எவ ருந் தொழுதெழு மடியார் திருவல கிடுவார் குளிர்புனல் விடுவார்கள் " (திருநா - புரா - 163) முதலியவை பார்க்க.

அண்ணலார் அன்பே என்றும், அன்பர் அன்பே என்றும் தனித்தனி கூட்டி உரைத்துக்கொள்வது மொன்று.

துகள்வன—என்பதும் பாடம். 108

1186. வென்றி வானவர் தாம்விளை யாடலு
மென்று முள்ளவர் வாழு மியற்கையு
நன்று முள்ளத்து ணண்ணினர் வேட்கைக
ளொன்று மங்கொழி யாவகை யுய்ப்பது. கஅக

(இ - ள்) வெளிப்படை. வெற்றியையுடைய தேவர்களைப்போல விளையாட்டையாலையும், காயசித்திபெற்று ஏனையோர்போல உடல் அழியாமற் செய்து நீடித்து இருக்கின்ற சித்தர்கள்போல் எந்நாளும் வாழ்ந்திருக்கின்ற இயல்பினையும், மற்ற எல்லா நன்மைகளையும் பெறக் கருதித் தங்கள் உள்ளத்தில் விருப்பங்கொண்டு சேர்ந்தவர்கள் அவாவிய பொருள்களுள் ஒன்றும் ஒழியாதபடி செலுத்துவது அந்தத் திருநகரம்.

(விரை) தேவர்கள்போல விளையாடுதலும், சித்தர்போல என்றுமிருப்பதும், மற்றும், நன்மைகளும் வேண்டி அங்குறைவோர்க்கு அந்நகரம் அவ்விருப்பங்களுள் ஒன்றும் விடாமல் எல்லாம் நிறையக் கொடுக்கும் என்றபடி.

இனி, இவ்வாறன்றித், தமது பகைவரை வெற்றிகொண்டு விளையாடுதலையும், அவ்வாறு வெற்றிகொண்டு, பின்னர் நீண்ட ஆயுளுடன் வாழ்தலையும், பிற நன்மைகள் பெறுதலையும் விரும்பி வானவர் நண்ணினர்; அவர் வேட்கையுள் ஒன்று மொழியாவகை உய்ப்பது என்று கூட்டி உரைப்பாருமுண்டு.

முன் மூன்று பாட்டுகளானும் பொதுவாக மக்களது வாழ்க்கைநிலைச் சிறப்பும் அன்பர் செயற் சிறப்பும் கூறியவகையால் நகரச் சிறப்புரைத்தார். இப்பாட்டால் தேவர் சித்தர்களுடைய இயல்பிலுள் நகரச் சிறப்புக் கூறுகின்றார்.

**என்றும் உள்ளவர்** என்றது உபசாரம். சித்தர்கள் காயகற்ப முறைகளைச் சாதித்ததன் பலனுப்பிறரினும் நீண்ட ஆயுள் படைத்தவர்கள் என்பதாம். "நெடுநாளிருந்தபேரு நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி" என்றனர் தாயுமானார். சரீர சித்தி யுபாயம்பற்றித் திருமூலர் திருமந்திரத்துட் கூறுவன காண்க. என்றும் அழியாமல் இருப்பவர் சிவபெருமான் ஒருவரேயாம். தேவர் முதலிய யாவரும் ஓரோர் காலத்தில் அழிந்து சிவனுள் ஒடுங்கவுள்ளவரே யாவர். ஆன்மாக்களெல்லாம் நித்தியர்கள் எனப்பட்டாலும் மலத்தினும் பிறவியினும் கட்டுப்பட்டவர்கள் என்க.

உய்த்தல் - செலுத்துதல் - கொண்டு கொடுத்தல்.

வேட்கையுள்—என்பதும் பாடம். 109

*1187. புரங்க டந்தவர் காஞ்சி புரம்புகழ்
பரம்பு நீள்புவ னம்பதி ஞன்கினும்
வரம்பில் போக வனப்பின் வளமெலா
நிரம்பு கோள்கல மென்ன நிறைந்ததால். ககo

(இ - ள்) வெளிப்படை. திரிபுரங்களை எரித்தவராகிய சிவபெருமான் எழுந்தருளிய காஞ்சிபுரமானது தனது புகழ் பரவிய நீண்ட பதினான்கு புவனங்களிலும் உள்ள எல்லையில்லாத எல்லாப் போகங்களின் சிறப்புக்கேதுவான வளங்களெல்லாம் நிரம்பியுள்ளதொரு கொள்கலம்போல நிறைந்துள்ளது.

(விரை) புரங்கடந்தவர் - திரிபுரத்தை எரித்தவர் - சிவபெருமான். கடத்தல் மேல் செல்லுதல் - அழித்தல் என்ற பொருளில் வந்தது.

புவனம் பதினான்கு - மேல் ஏழ் உலகமும், கீழ் ஏழ் உலகமும். வரம்பில் போக வனப்பின்வளம் - போகங்கள் எல்லையற்றன; அவற்றுக்காதாரமாக வுள்ளன வளங்களாம்; அவ்வளங்களுட் சிறந்தவையெல்லாம்.

கோள்கலம் - அந்த வளங்க ளெல்லாவற்றையும் தன்னகத்துக் கொண்ட பாண்டம்.

இப்பாட்டினுள் எல்லா அண்டங்களிலும் உள்ள எல்லாவளங்களும் காஞ்சியில் உள்ளன என்றபடியாம். எவ்வுலகத்தவர்களும் இங்குவந்து இறைஞ்சுதலினுல் அவ்வளங்கள் யாவும் உள்ளனவாயின என்க. 1166 - 1170 பாட்டுக்களும் பார்க்க. 110

## நாயனார் சரிதம்

வேறு

1188. அவ்வகைப் திருநகர மதன்கணேரு மருங்துறைவா;
ரிவ்வுலகிற் பிறப்பினு லேகாலிக் குலத்துள்ளார்;

செவ்வியவன் புடைமனத்தார் ; சீலத்தி னெறிநின்றார் ;
மைவிரவு கண்டரடி வழித்தொண்ட ருளரானார். ககக

(இ - ள்) வெளிப்படை. அத்தன்மைத்தாகிய காஞ்சித்திருநகரத்தில் ஒரு பக்கத்தில் வாழ்வார் ; இந்த உலகத்திற் குடிப்பிறப்பினால் ஏகாலியர் குலத்தில் உள்ளவர் ; செம்மையுடைய அன்பு நிரம்பிய மனத்தினை உடையவர் ; சைவசீலமாகிய தவவொழுக்கத்தின் நெறியில் நின்றவர் ; விடம்பொருந்திய கண்டராகிய சிவபெருமானது திருவடிகளில் வழிவழியாகத் தொண்டுபுரிபவர் ஒருவர் உள்ளவராயினார்.

(வி - ரை) அவ்வகைய - 1125 முதல் 1189 வரை உள்ள திருப்பாட்டுக்களில் விரித்த அந்த எல்லா வகைகளையுமுடைய என்ற தொடர்பினை அறிவிப்பார் அ என்ற சேய்மைச் சுட்டினாற் கூறினாற்.

ஒரு மருங்கு - தமது மரபினுக்கு விதித்த ஓரிடத்தில். " தந்தகைமைக் கேற்றதனியிடங்கள் மேவி " (1180) என்றதுகாண்க. ஒரு மருங்கு - என்ற இலேசினால், இறைவர் அறிவித்தாலன்றி உலகம் இவரது பெருமையை அறியமுடியாதபடி ஒதுங்கிய ஓரிடத்தில் என்ற குறிப்பும் காண்க.

இவ்வுலகிற் பிறப்பினால் ஏகாலிக் குலத்து உள்ளார் - இவ்வுலக நிலைப்பிறப்புக் காரணமாக - உடல்பற்றிய தொடர்பாகிய பிறப்பின் அளவிலே - ஏகாலியர் குலத்தவர் - வண்ணார் - என்பதாம். உயிர்பற்றிய நிலைவேறு, உடல் பற்றிய நிலைவேறு, என்றும், இவ்விரண்டினையும் பிரித்துணர்தல் வேண்டும் என்றும் அறிவிக்கப், பிறப்பினால் என்றார். " வேட்கோவர் குலத்து வந்தார் " (360) " குலமுதல் வணிகர் " (405), " வணிகர்தங் குலத்தினில் வந்தார் " (503), " அந்தணர் கலய ரென்பார் " (835), " கடைஞர் இருப்பினில் வாழ்வார் " (1051) முதலியவை காண்க.

ஏகாலிக் குலம் - வண்ணார் மரபு - " ஊரொலிக்கும் பெருவண்ணார் " (1190) என்றது காண்க. இவர் சிவபெருமானுக்குத் தும்பைமலர் எடுத்துக் கொடுத்து வந்தமையால் " தும்பையான் " என்ற மரபுப் பெயர் உலக வழக்கில் வழங்குவதாயிற்று என அம்மரபில் வந்த அன்பர் திரு. முத்து (தஞ்சை) என்பவர் அறிவித்தனர்.

செவ்விய அன்பு - சிவபிரானிடத்து இடைவிடாது செய்கின்ற அன்பு. செவ்விய செம்மையாகிய - முத்திக்குக் காரணமாகிய. சீலம் - அந்த அன்பின் வழியதாகிய சைவவொழுக்கம். " சீலத்தார் கொள்கை " (கோயில் - குறிஞ்சி) என்றது ஆளுடையபிள்ளையார் தேவாரம்.

அடி வழித்தொண்டர் - திருவடியில் வழிவழியாளாய்த் தொண்டு புரிபவர். அவரது மரபின் முன்னோர்களும் சிவத்தொண்டு செய்துவந்தனர் என்பது. " வழிவழியாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த பழவடியார் " (திருப்பல்லாண்டு.)

உளரானார் - 1051 ல் " உளரானார் " என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

இதுமுதல் 18 திருப்பாட்டுக்களால் நாயனாரது சரிதங் கூறுகின்றார். " சூதன் ஒலிமாலை " (திருப்பாசுரம்) என்று ஆளுடைய பிள்ளையாரால் விதந்து கூறப்படும் பதினெண்புராணங்கள் எனப்படும் மாபுராணங்களின் சாரமாகிய சிவபுண்ணியத்தின் விளக்கமாக இப்புராணம் அமைந்தது என்பது பதினெட்டு என்ற தொகைக் குறிப்பினால் போதரும் என்க. இம்மாபுராணத்துள் பாடற் றொகைக்குறிப்புக்களாற் போந்த பொருள்களைப்பற்றி 661 - ல் உரைத்தவை பார்க்க.



1189. மண்ணின்மிசை வந்ததற்பின் மனமுதலா யினமூன்று
மண்ணலார் சேவடியின் சார்வாக வணைவிப்பார்

புண்ணியமெய்த் தொண்டர்திருக் குறிப்பறிந்து போற்றுநிலைத்
திண்மையினுற் "றிருக்குறிப்புத் தொண்ட" ரேனுஞ் சிறப்பினர்.ககஉ

(இ - ள்) வெளிப்படை. இவ்வுலகில் வந்தவதரித்தபின், மனம் முதலிய மூன்று கரணங்களையும் சிவபெருமானது திருவடிகளின் சார்பாகவே அணைவிப்பாராகி, (அவர்), சிவபுண்ணியமுடைய மெய்த்தொண்டர்களுடைய உள்ளத்தின் திருக்குறிப்பினை அறிந்து அவர்களுக்குத் தொண்டுசெய்யும் தன்மையில் நிலைத்த உறைப்பினுலே திருக்குறிப்புத் தொண்டர் என்று சொல்லப்படும் சிறப்புப் பெயரை உடையவராயினர்.

(வி - ரை) மண்ணின்மிசை வந்ததன் பின் - பிறந்தருளிய பின்னர். "பிறந் தணர்வு தெடங்கியபின்" (1052) என்றதும் ஆண்டுரைத்தனவும் பார்க்க.

மனம் முதலாயின மூன்று - மனம், வாக்கு, காயம் என்பன. இவை மூன்று கரணங்கள் எனப்படும். இவற்றுள் உண்ணின்று தூண்டும் கருவி மனமேயாதலின் அது முதன்மையுடைய தென்பார் மனமுதலாயின என்றார். மூன்றும் அண்ணலார் சேவடியின் சார்வாக அணைவித்தலாவது "வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவன்" (அப்பர் சுவாமிகள்) என்றபடி இதுவே பிறந்த பயன் என்றறிந்து, மனம் - சிவனையும் அவனடியாரையும் நினைக்கவும், வாய் - அவன் திருநாமமாகிய திருவைந்தெழுத்தை ஓதவும் அவனடியாரைப் போற்றவும், மெய் - சிவனுக்கும் அடியாருக்கும் தொண்டு செய்யவும் என்ற இந்தச்சார்பில் நிறுத்துதல். "சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன் கண்ணினைநின் றிருப்பாதப் போதுக் காக்கி, வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன் மணிவார்த்தைக் காக்கி" என்ற திருவாசகமும், அதனை உள் வைத்து "ஆங்கவர் மனத்தின் செய்கை யரனடிப் போதுக் காக்கி, யோங்கிய வாக்கின் செய்கை யுயர்ந்தவஞ் செழுத்துக் காக்கித், தாங்குகைத் தொழிலின் செய்கை தம்பிரா னடியார்க் காக" (நேசநாயனார் புரா - 3) என்ற மாபுராணமும் இங்குக் கருதத்தக்கன. இவ்விரண்டனுள்ளும் மனத்தை முதலில் வைத்தோதியதும் காண்க. பிறந்தது முதல் இவ்வாறு நிகழப்பெறுதல் முன்னைத் தவத்தால் ஆகியது. 1051 பார்க்க. அணைவிப்பார் - எதிர்கால வினையாலணையும் பெயர். அணைவிப் பார் - அறிந்து போற்றும்நிலை - என்று கூட்டி உரைத்துக்கொள்க.

சேவடியின் சார்வாக அணைவிப்பார் - மெய்த் தொண்டர் திருக்குறிப்பு அறிந்து போற்றுநிலை என்றது மெய்த்தொண்டரது திருக்குறிப்பினை அறிந்து போற்றினுல் அதுவே அண்ணலார் சேவடியின் சார்பு ஆகும் என்ற கருத்துடையது. இதுபற்றியே இந்நாயனார் அடியார்களுடைய துணிகளை மாசுகழுவித் தொண்டு செய்துவந்தனர் என்பதனை மேல்வரும் இரண்டு பாட்டுக்களாலும் அறிவித்தல் காண்க.

புண்ணிய மெய்த்தொண்டர் - சிவபுண்ணியத்திற் சிறந்த மெய்யடியார்கள். திருக்குறிப்பு அறிந்து - திருவுள்ளக் கருத்தினை அவர்கள் சொல்லாமலே குறிப்பினலறிந்து. இந்நாயனார் அவ்வாறு செய்த வரலாற்றினை 1197-ல் காண்க. "யானேமுன் செய்குற் றேவ, லொன்றிது தன்னை யென்னை யுடையவ ரருளிச் செய்ய, நின்றது பிழையாம்" (414) என்றவிடத்து இவ்வுண்மை யடிமைத்திறம் விளக்கப்பட்டது பார்க்க.

போற்றுதல் - அதித்தலும், ஏவின செய்தலும், ஏவாமலே குறிப்பறிந்து செய்தலும் முதலாயின எல்லாம் இயற்றுதல் இங்குப் போற்றுதல் எனப்பட்டது. போற்றுதல் - கொண்டு நெறிகாத்தல். போற்றுநிலைத் திண்மை - திருத்தொண்டின் நெறியினைச் சோர்வுபடாது காத்தளிக்கும் வலிமை. "திருத்தொண்டி னுறைப்பாலே

வென்றவர்" (அப்பூதி - 13), "ஆளுடையா ரடியவர்தங் திண்மை யொழுக்க நடை" (469) முதலியவை பார்க்க.

திண்மையினுல் "திருக்குறிப்புத் தொண்டர்" எனும் சிறப்பு - சிறப்புப் பெயர் போந்த காரணம் உரைக்கப்பட்டது. இவரது இயற்பெயர் விளங்கவில்லை. சிறுத் தொண்ட நாயனருக்கு அச்சிறப்புப் பெயர் போந்த காரணம் (சிறுத் - புரா - 15) அறிவிக்கப்பட்டதும், அஃதேபோல்வன பிறவும் இங்கு நினைவு கூர்க.

எனும் - திருத்தொண்டத் தொகையில் தமது இயற்பெயராலின்றி இப்பெயரால் இவர் துதிக்கப்பட்டதனுல் என்னும் என்று கூறிப், பெயர்க்காரணமும் கூறினர். 112

1190. தேரொலிக்க மாவொலிக்கத் திசையொலிக்கும் புகழ்க்காஞ்சி
"யூரொலிக்கும் பெருவண்ணு" ரெனவொண்ணு வண்மையினர்;
நீரொலிக்க வராவிரைக்க நிலாமுகிழ்க்குந் திருமுடியார்
பேரொலிக்க வருகுமவர்க் கொலிப்பர்பெரு விருப்பினெடும். ககஉ

(இ - ள்) வெளிப்படை. தேர்கள் ஒலி செய்யவும், குதிரைகள் ஒலி செய்யவும், எல்லாத் திசைகளிலும் சென்று பரவுகின்ற புகழினையுடைய காஞ்சிமாநகரத்தில் ஊரில் உள்ளார்க்குத் துணி ஒலிக்கும் பெரிய வண்ணர் தாமே இவர் என்று சொல்ல முடியாத பெரிய கிலையினை உடையராகிய இவர், கங்கை நீர் ஒலிக்கவும், அரவுகள் இரைக்கவும், சந்திரன் முகிழ்க்கின்ற திருமுடியினையுடைய சிவபெருமானது பெயர் களை ஒலிக்கும் போதே மனமுருகுகின்ற அடியார்களுக்குப் பெரிய மகிழ்ச்சியோடும் துணிகளை ஒலித்துக் கொடுப்பர்.

(வி - ரை) தேர் ஒலிக்க - மா ஒலிக்க - மா - குதிரை. மா - யானை என்றலு மாம். மா விலங்குப் பொதுப்பெயர் என்று கொண்டு, யானை குதிரையிரண்டனையும் கொள்வதுமாம். இவை காஞ்சிமாநகரத்தில் மக்களும், அரசரும், தேவர்களும் ஊர்ந்து வருவன. 1175–1177-ல் இவைபற்றிக் கூறியவை பார்க்க. மாவின் ஒலி உயிருள்ள பொருளின் ஒலியாதலின் உயிரில்லாத பொருளாகிய தேர் ஒலியினின்றும் வேறு பிரித்துக் கூறினர். இவ்வொலிகள் காஞ்சியின் புகழ் திசைகளில் சென்று பரவுதற் கும் அறிவித்தற்கும் காரணமாயிருத்தல்பற்றி ஓசை யென்றெழியாது பொருட்பொலி வள்ள சத்தம்போல ஒலி என்று கூறினர். திசை யொலிக்கும் என்ற கருத்துமிது.

தேர் ஒலிக்க - தேர் ஒலிக்கும்படி என்று கொண்டு, தேர்கள்சத்திக்கும்படி அவற் றிற் பூட்டிய மாக்கள் ஒலிக்க என்று கூட்டி உரைத்தலுமாம்.

திசை ஒலிக்கும் புகழ் - எல்லாத் திசைகளினின்றும், முத்தி பெறும்பொருட்டு மக்களும், வரம்பெறும்பொருட்டுத் திக்குப்பாலகர் முதலிய தேவரும் வருகின்றனர் என்பதும் குறிப்பு.

இனித், தேரும் மாவும் காஞ்சி நகரத்துள்ளார் இரவலர்க்குக் கொடுக்கும் ஈகைப் பண்டங்களாம் என்றும், அக்கொடையின்புகழ் எல்லாத் திசைகளிலும் பரவுமென் றும் கூறும் குறிப்பில் வைத்ததுமாம் காண்க. "தேரொடு மாசிதறி" என்ற மதுரைக் காஞ்சி (224)ம், மூல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளல் கதையும் நினைவு கூர்க.

ஊர் ஒலிக்கும் பெருவண்ணர் என ஒண்ணு உண்மையினர் - ஊராருக்கெல்லாம் துணிகள் ஒலிக்கும் பொது வண்ணராவர் இவர் என்று சொல்லக் கூடாத தன்மை. இவரது உண்மை யடிஞமத் திறத்தை அறிந்தார் இவரை ஊர்ப்பொது வண்ணர் என்று சொல்லத் துணியார் என்பது.

நீர் ஒலிக்க அரா இரைக்க நிலா முகிழ்க்கும் திருமுடியார் - அராவும் நிலவும் ஒருங்கு வாழும் சடை என்பதாம், "சந்திரனே மாகங்கை திரையான் மோதச் சடா மகுடத் திருத்தமே" (அதிகை - தாண்டகம்), "பாம்போடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்" (புகலூர் - தாண்ட) முதலியவை நினைவு கூர்க. பகையாகிய அரா நச்சுக் காற்று இரைப்பினும், நீர் ஒலித்தலினால் நிலா முகிழ்க்கும் என்றதொரு குறிப்பும் காண்க. முகிழ்த்தல் - மூளுத்தல். மீளத் தோன்றுதல்.

பேரொலிக்க உருகுமவர் - சிவபெருமானது பெயரைக் கேட்டவுடன் உருகுகின்ற மனமுடையவர்கள் சிவனடியார்கள். "வெள்ளந்தாழ் விரிசடையாய்! விடையாய்! விண்ணோர் பெருமானே! எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப், பள்ளந்தா ழுறு புனலிற் கீழ்மே லாகப் பதைத்துருகு மவர்" (திருச்சதகம்) என்ற திருவாசகமும், "முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்" என்ற திருத்தாண்டகமும், "பிறையாளன் திருநாம மெனக்கொருகாற் பேசாயே" (திருத்தோணிபுரம்) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரமும் முதலியவை காண்க.

உருகுமவர்க்குப் பெருவிருப்பினெடும் ஒலிப்பர் என்க. ஒலித்தல் - அணி தோய்த்து அழுக்குப் போக்குதல். தோய்க்கும்போது கல்லுடன் துணி மோதும் ஒலி உண்டாதலினாற் போந்த ஒலிக்குறிப்பினால் வந்த பெயர் போலும்.

இப்பாட்டில் ஒலிக்க என்ற பலவும் சொற்பின் வருநிலை. ஊர் ஒலிக்கும் - ஒலிப்பர் என்றவை சொற்பொருட் பின்வருநிலை.

உருகுமவர்க்கு ஒலிப்பர் - சிவபெருமானது பெயரைக் கேட்டமாத்திரையின் உருகுகின்ற அடியார்களை, அவர்களது மனமுருகுதலால் வரும் மெய்ப்பாடுகளாலும், திருவேடத்தாலும், வாக்காலும் காயத்தாலும் செய்யும் திருத்தொண்டினாலும் அறிந்து அத்தன்மையர்களுக்கு விருப்பத்தினெடும் ஒலிப்பர் என்பதாம்.

விருப்பினெடும் - தமது குலத்தொழிலாகிய தூசு ஒலித்தலை அவ்வூராருள் ஏனையோர்பாற் செய்ய நேர்ந்தபோது அதன் வருவாயைத் தமது அமுதுக்காகக் கொள்பவர் என்பதும், அடியார்க்கு ஒலிக்க நேர்வதனை விரும்பிச் செய்தனர் என்பதும் ஆம். திருநீலகண்ட நாயனார் சரிதம் (362) காண்க. 113

1191. தேசுடைய மலர்க்கமலச் சேவடியா ரடியார்தந்
தூசுடைய துகண்மாசு கழிப்பார்போற் றொல்லிவினை
யாசுடைய மலமூன்று மினையவரும் பெரும்பிறவி
மாசுதனை விடக்கழித்து வருநாளி லங்கொருநாள், ககச

1192. பொன்னிமயப் பொருப்பரையன் பயந்தருளும் பூங்கோடி தன்னினிலைமை யன்றளக்க வேழுந்தருளு நம்பெருமான்
றன்னுடைய வடியவர்தந் தனித்தொண்டர் தம்முடைய
வன்னிலைமை கண்டன்பர்க் கருள்புரிவான் வந்தணைவார், ககரு

1193. சீதமலி காலத்துத் திருக்குறிப்புத் தொண்டர்பா
லாதலாய் மெலிந்துமிக வழுக்கடைந்த கந்தையுடன்
மாதவவே டந்தாங்கி மாலறியா மலரடிகள்
கோதடையா மனத்தவர்முன் குறுகுடைகள் கொளக்குறுகி, ககசு

1194. திருமேனி வெண்ணீறு திகழ்ந்தொளிருங் கோலத்துக்
கருமேக மெனவழுக்குக் கந்தையுட னேழுந்தருளி

வருமேனி யருந்தவரைக் கண்டுமன மகிழ்ந்தெதிர்கொண்
டுருமேவு மயிர்ப்புளக முளவாகப் பணிந்தெழுந்தார். ககள

1191. (இ - ள்) வெளிப்படை. ஒளியுடைய தாமரை மலர்போன்ற திருவடியினையுடைய சிவபெருமானடியார்களது துணிகளில் துகளாலாகிய அழுக்கினைப் போக்குபவர்போலத் தமது பழவினைபற்றி வரும் குற்றங்களாகிய மும்மலங்களும் அணைதலினால் வருகின்ற பெரும்பிறவி யென்னும் அழுக்கினை விடுமாறு போக்கி வருகின்ற நாள்களில் அங்கு ஒரு நாளின்கண், ககச

1192. (இ - ள்) வெளிப்படை. பொன்மயமுடைய இமயமலையின் அரசன் பெற்றருளிய மகளாராகிய பூங்கொடிபோன்ற பார்வதியம்மையாரது தவநிலையினை உலகறிய அளக்கும் பொருட்டு முன்னாளில் எழுந்தருளிய நம்பெருமான், தமது அடியவர்களுடைய ஒப்பற்ற தொண்டரது அந்த நிலைமையினைக் கண்டு அன்பர்க்கு அருள் புரியும் பொருட்டு வந்து அணைவாராகி, ககடு

1193. (இ - ள்) வெளிப்படை. குளிர் மிகுந்த காலத்தில் திருக்குறிப்புத் தொண்டரிடத்தில் ஏழையாய் மெலிவுற்று மிக அழுக்கடைந்த கந்தையுடனே மாதவ வேடமாகிய சிவவேடந்தாங்கிக் கொண்டு, திருமாலும் அறியாத மலர் போன்ற பாதங்கள், குற்றமடையாத மனத்தினையுடைய அன்பர் முன்னே, குறுநடை கொள்ளும்படி வந்து சேர்ந்து, ககசு

1194. (இ - ள்) வெளிப்படை. வெண்ணீறு மிக விளங்கும் கோலத்தையுடைய திருமேனிமேல் கருமேகம் போர்த்ததுபோல அழுக்குடைய கந்தையோடு வருகின்ற மேனிப்பொலிவுடைய அருந்தவரைத் திருக்குறிப்புத்தொண்டர் கண்டு, மன மகிழ்ந்து, எதிர்கொண்டு, தமது உடல் மயிர்ப்புளகம் உண்டாக, அவரைப் பணிந்து எழுந்தனர். ககள

இங்ஙான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1191. (வி - ரை) தேசுடைய - சேவடி தம்மையடைந்த அன்பர்களுடைய ஆணவவிருளாகிய அகவிருளைப் போக்குகின்றதென்பது குறிப்பு. தேசு - ஒளி.

அடியார்தம் தூசு உடைய துகள் மாசு - தூசு - துணி - உடை. தேசுடைய சேவடியா ரடியார்களாதலின் அவர்களது உடை எஞ்ஞான்றும் மாசுடையன ஆகா; ஆனால் அவற்றிற் றுகள் படிந்த மாசு மட்டில் கூறப்படும் என்பார் தூசுடைய மாசு என்னாது, தூசுடைய துகள் மாசு என்றார். "பங்கமென் னப்படா பழிகளென் னப்படா, புங்கமென் னப்படாப் புகழ்களென்னப்படும்...அடிகள் வேடங்களே" (கொல்லி-திருந்துதேவன்குடி - 6) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரங் காண்க.

கழிப்பார் போல் என்றதில் போல் என்ற கருத்தும் இது. உண்மையில் அது மாசு எனப்படமாட்டாது என்றது குறிப்பு. போல் என்றதனால் அவர் கழித்து வந்தது தூசுடைய துகண்மாசு அன்று; அது தமது பெரும் பிறவியாகிய மாசு தனை விடக்கழித்ததுவேயாகி முடிந்தது என்றபடி. போல் என்ற சொல் இவ்வாறு வழங்கப் படுதல்பற்றி 460-752-772 பாட்டுக்களில் உரைத்தவை இங்கு நினைவு கூர்தற்பாலன.

தொல்லைவினை ஆசுடைய மலம் மூன்று - பிறவிக்கேதுவாகிய ஆணவம் கன்மம் மாயை எனப்படும் மூன்று மலங்கள். தொல்லைவினை என்றது அநாதியே தொடர்ந்து வருகின்ற கான்மியமாகிய மூலகன்மத்தை; அது மும்மலங் காரணமாகத் தோன்றுவது. மும்மலங்களுள் எண்ணப்படுவது மூல கன்மம்.

மலமூன்றும் அணையவரும் பெரும் பிறவி மாசு-மும்மலகாரியமாய் வருவது இப் பிறவி. இதுவே உயிருக்கு அழுக்காய் அதனைப் படிவித்து மறைப்பது ஆதலின் மாசு என்றார்.

மாசுதனை விடக் கழித்தலாவது - அரன்பணி - அடியார் பணி என்னும் சிவபுண்ணியமாகிய சாதனையினால் பிறவியாகிய அழுக்கினைப் போக்கிக்கொள்ளுதல். இது பற்றி 803-ல் சாருமல மூன்றுமற என்றவிடத் துரைத்தவை காண்க.

வருநாளில் - "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்றபடி நாள்தோறும் படியும் பிறவி மாசினை விடக்கழிக்கின்ற வகையால் அடியார்தந் துணி தோய்த்துத் துகள் மாசு கழித்து வந்தனர் என்பதாம். 114

1192. (வி - ரை) பூங்கொடிதன் நன்னிலைமை யன்றளக்க எழுந்தருளும் நம் பெருமான்-அம்மையாரின் நற்பூசையின் நிலைமையை அளப்பவர்போல உலகிற்காட்ட எழுந்தருளிய பெருமான். 1134–1144 பார்க்க. கந்தபுராணத்துத் தவங்காண் படலத்து வரலாறு குறித்ததெனினும் ஒக்கும். "குரும்பைமுலை மலர்க்குழலி கொண்ட தவங் கண்டு, குறிப்பினொடுஞ் சென்றவடன் குணத்தினைநன் கறிந்து, விரும்பு வரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த விண்ணவர்கோன்" (கலயநல்லூர் - தக்க - 1) என்ற நம்பிகள் தேவாரங் காண்க.

அடியவர்தம் தனித்தொண்டர் - திருக்குறிப்புத்தொண்ட நாயனார். இவ்வாறு அடியார்களது குறிப்பறிந்து ஏவல்செய்வ தரிது என்பார் தனி என்றார்.

அந்நிலைமை - அடியார்களுக்குச் செய்யும் திருத்தொண்டின் தன்மை.

கண்டு - திருவுள்ளத்திற் கொண்டு என்க. காணுதல் உலகர்க்குக் காட்டும் பொருட்டு. 1204 பார்க்க. அன்பர் - அவர். அன்பர் என்றது சுட்டுப்பெயராய் நின்றது.

அருள்புரிவான் வந்து அணைவார் - புரிவான் - புரிவதற்கு - புரியும்பொருட்டு அணைபவர் என்க. வானீற்று வினையெச்சம்.

நம்பெருமான் - அருள்புரிவான் - அணைவார் (1192) - தாங்கி - குறுகி (1193) - எழுந்தருளிவரும் (119) என முடிக்க. தாங்கி - குறுகி என்ற வினையெச்சங்கள் வரும் என்ற பெயரெச்சத்தின் வினையுடன் முடிந்தன.

வந்தணைந்தார்—வந்தணைவார்—என்பனவும் பாடங்கள். 115

1193. (வி - ரை) சீதமலிகாலம் - மிக்க குளிர்பொருந்திய காலம். அக்காலம் மழை மிகுதியாய்ப் பெய்த நாள்கள் போலும். சித்திரையிலும் பெருமழை பெய்து குளிர்மிகுதலும் உண்டுபோலும். "மேல் கடற்பால் அக்குன்றம் வெங்கதிரோன் அணை வதன் முன்" (1196) "இன்று அந்திபடு வதன்முன்னம் தருகின்றேன்" (1197) "முன் பொலித்துமனைக் காற்றேற்க வறிந்திலேன்" (1201) என்று பின்வருவனவற்றால் அக்காலம் வெயில் உடையநாள் என்றும் தெரிகின்றது. இந்நாயனார் திருவடிப்பே றடைந்த திருநாள் சித்திரைச் சுவாதியாம் என்பர். அதற்குப் பொருந்தப் பொருள் கொள்க.

ஆதுலர் - ஏழை. இது அழுக்கடைந்த கந்தை ஒன்றினையே தாங்கிவருதலால் விளக்கப்பட்டது. ஆதுலர் - விரத்தர் என்றுரைப்பாருமுண்டு.

கந்தை - பொந்தை - கந்தை. 504 பார்க்க.

மாதவ வேடம் - சிவனடியார் திருவேடம். திருநீறு - உருத்திராக்கம் - வேணி என்ற இவை தாங்கிவரும் திருக்கோலம். இதுவே சிறந்த தவவேடமாம்.

கோதடையா மனத்தவர் - அண்ணலார் சேவடியின் சார்வாக மனம் முதலிய மூன்றையும் மண்ணின்மிசை வந்தநாள்முதல் அணைவித்தாராதலின் (1189) கோது எவையும் அவர் மனத்தினுள் அடையாவாயின.

அடிகள் குறுநடைகள் கொள - ஆதுலராய் மிக மெலிந்து ஒரு அழுக்குக் கந்தை யுடன் கொண்ட வேடத்திற்கேற்பக் கால்கள் தள்ளாடிய நடையுடன் விளங்கின என்பது. குறுநடை - தளர்ச்சியால்வரும் சிறுநடை. 116

1194. (வி - ரை) திருமேனி...கோலத்து - இதனையே முன் மாதவ வேடம் என்றார். கோலத்து - கோலத்திலே. கோலத்து மேனி கந்தையுடன் என்க. வெண் ணீற்றுக்கோலம் கந்தையுடன் கூடி விளங்கிற்று.

கருமேகம் என அழுக்குக் கந்தை - அழுக்குக் கந்தையைக் கருமேகத்திற்கு உவ மித்தார். கருமேகம் - சூல்கொண்டு விரைவில் மழை பெய்யவுள்ள மேகம். இங்கு அன்பர்க்குப் பெரும்புனன் மழையும், பேரருள் மழையும் பெய்யக் காரணமாயிருத் தல்பற்றி அழுக்குக் கந்தையைக் கருமேகம் என்றார்போலும். இந்த அழுக்குக் கந்தை இச்சரிதநிகழ்ச்சிக்குக் காரணமாதலும் காண்க. மெய்யும் பயனும் பற்றிவந்த வுவமம்.

உருமேவு மயிர்ப்புளகம் உளவாகப் பணிந்தெழுந்தார் - பெரியார்களையும் கடவுளரையும் காணும்போதும் பேசும்போதும் எண்ணும்போதும் மயிர்க்கூர்ச்செறி தல் அன்பின் சிறந்த இலக்கணமாம். "ஈசருக்கே யன்பாளர் யாவரையுந் தாங்கண் டாற்,கூசிமிகக் குதுகுதத்துக் கொண்டாடி மனமகிழ்வுற், றூசையினு லாவின்பின் கன் றணைந்தாற் போலணைந்து, பேசுவன பணிந்தமொழி யினியனவே பேசுவார்" என்று வரும் பத்தராய்ப்பணிவார் புராணம் பார்க்க. இவை சிவனடியாரைக் கண்டவுடன் செய்யத்தகுவன. 117

1195. எய்துமவர் குறிப்பறிந்தே யினியமொழி பலமொழிந்து
"செய்தவத்தீர் திருமேனி யிளைத்திருந்த தென்?"னென்று,
கைதொழுது "கந்தையினைத் தந்தருளுங் கழுவ"வென,
மைதிகழ்கண் டங்கரந்த மாதவத்தோ ரருள்செய்வார். ககஅ

1196. 'இக்கந்தை யழுக்கேறி யெடுக்கவொணு தெனினும்யான்
மெய்க்கொண்ட குளிர்க்குடைந்து விடமாட்டேன்; மேல்கடற்பால்
அக்குன்றம் வேங்கதிரோ னணைவதன்முன் றருவீரேல்
கைக்கொண்டு போயொளித்துக் கொடுவாருங் கடிதென்றார். ககக

1195. (இ - ள்) வெளிப்படை. வந்த அவரது திருவுள்ளக் குறிப்பினை அறிந்தே "செய்தவத்தீர்! தேவரீரது திருமேனி இளைத்திருந்த காரணம் என்ன?" என்று, இனிய மொழிகள் பலவும் சொல்லிக் கைதொழுது "கந்தையினைத் தோய்த்து ஒலித் தற் பொருட்டுத் தந்தருளும்" என்று சொல்லத் திருநீலகண்டத்தை மறைத்து வந்தவராகிய மாதவத்தோர் சொல்வாராய், ககஅ

1196. (இ - ள்) வெளிப்படை. இக்கந்தையானது அழுக்கு மிகுதியினால் எடுக்க வொண்ணாததாயிருப்பினும், நான், என் மேனியிற்கொண்ட குளிரினுக்குப் பயந்து அதனை விடமாட்டேன்; மேற்குக் கடலிடத்து அத்தகிரியாகிய அந்த மலையைக் சூரி யன் சேர்வதற்கு முன் தருவீராகில் எற்றுக் கொண்டுபோய் ஒலித்துக்கொண்டு விரை வில் வாரும்" என்று சொன்னார். ககக

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1195. (வி - ரை) எய்தும் அவர் குறிப்பு அறிந்தே - தம்முன் திருஅடிகள் குறு நடைகொண்டு வந்தாராதலின் (1193) அவ்வாறு தம்மிடம் வந்த அவரது குறிப்பைத் தெரிந்து. "தொண்டர் திருக்குறிப்பறிந்து போற்றுநிலைத் திண்மையினு"ராதலின் (1189) உள்ளக்குறிப்பினை உடல்நிலையாலும் அவர் வந்த செயலாலும் அறிந்தனர் என்க. தொண்டர்க்கு விருப்புடன் பணிசெய்யும் ஏகாலியராகிய தம்பால் அழுக்குக் கந்தையுடன் ஆலரராய் வருதலின் தொண்டர் திருவுள்ளக்குறிப் பிதுவேயாம் என் றறிந்தனர் என்பது.

என்? என்று இனியமொழி பல மொழிந்து என்க. இவை அடியவரைக் கண்டவுடன் சொல்லவேண்டிய குளிர்ந்தமொழிகள். மேல் வருவன தொண்டுசெய்வதற்குரிய தொழில் மொழிகள். "சிவநேசர் பாதம் வணங்கிச் சிறக்க, அவரேவல் செய்க வறிந்து", "ஆசையொடு மரனடியா ரடியாரை யடைந்திட் டவர்கரும மூன் கரும மாகச் செய்தே, கூசிமொழிந் தருண்ஞானக் குறியி னின்று கும்பிட்டுத் தட்ட மிட்டுக் கூத்தாடித் திரியே" - சிவஞானசித்தி 12 (2).

திருமேனி பிளேத்திருந்தது - "ஆதலராய் மெலிந்து" - (1193) பார்க்க. இளைத்த திருமேனி காட்டி வந்ததின் கருத்து "இந்தவுடம் கிடர்செய்தீர்" (1197), என்று தாம் சுட்டிக் கூறியபடியே கொண்டு, "மெய்குளிரும் விழுத்தவர்பால்" (1200), "திருமேனி குளிர்காணும் தீங்கு" (1201) என்று நாயனார் வருந்தித் தலையைக் கல்லிற் புடைக்கும் சரித நிகழ்ச்சியினை விளைத்தற் பொருட்டாமென்க.

கைதொழுது - முன்னர்ப் "பணிந்தெழுந்து" (1194) என்றது பொது வணக்கம். இப்போது தொழுதது, அடியார்க்குப் பணிசெய்யும் பேறு தமக்குக் கிடைக்க வேண்டிச் செய்த சிறப்பு வணக்கம். வணங்கி விண்ணப்பத்தினைச் செய்யும் மரபும் குறித்தது. கழுவ - தோய்த்து அழுக்குப்போக்கி வெளுக்க. கழுவ - நீரினும் சுத்தி செய்து வெள்ளையாக்க. "தூசுடைய தகளைக் கழுவும்" என்ற குறிப்பும் காண்க.

மைதிகழ் கண்டம் கரந்த மாதவத்தோர் - நிகம்பரமாகிய அழுக்கேறுத் தமது ஆடையை அழுக்கேறியபடி காட்டியும், உண்மையில் விடமாகிய மாசுடைய கண்டத்தினை மறைத்தும் வந்தனர் என்பது குறிப்பு. இவ்வாறு வந்தது கந்தைகழுவும் தொழிலின் மூலம் அவரைப் பிறவி கழுவச் செய்தலாம். கறைக்கண்டத்தினைக் காட்டி வந்திருப்பரேல் நாயனார் தமது பிறவிமாசினைக் கழுவ இவரை வேண்டியிருப்பார் என்க.

அருள்செய்வார் - என்முர் - என வரும்பாட்டுடன் முடிக்க.

இன்மொழிகள்—என்பதும் பாடம். 118

1196. (வி - ரை) எடுக்க ஒண்ணாது - தாங்க முடியாது. தரிக்கமுடியாது. எடுத்தல் - சுமத்தல். மேற்கொள்ளுதல் என்ற பொருளில் வந்தது. அழுக்கு மிகுதியினால் தரிக்க ஒண்ணாதாயினும் குளிர்க்குடைந்தமையால் விடமாட்டேன் என்பதாம்.

உடைதல் - துன்பமுறுதல். குளிர்க்கு உடைந்து - குளிரின் வருத்தத்தாற் துன்புற்று. நான்கனுருபு ஏதுப்பொருளில் வரும் ஐந்தனுருபின் பொருளில் வந்தது. உருபு மயக்கம். விடமாட்டேன் - கைவிடமாட்டேன்.

மேல் கடற்பால் அக்குன்றம் - அத்தமனகிரி. அக்குன்றம் - உலகறிசுட்டு. வெங்கதிரோன் அணைவதன்முன் - ஞாயிறு மேல்கடல் வீழுமுன். இது நாயனருக்குத், தூசு எற்றி வெளுத்து உலர வைத்தற்குப் போதிய காலவெல்லை தந்ததுமன்றித் தமது மேனி குளிர்தாங்கி நிற்பதற்குரிய கால அளவு குறித்ததும் ஆயிற்று. ஞாயிறு எறிக்கும் வேளையிற் குளிர் வருத்தாமற் முங்கலாகுமென்றும், ஞாயிறு வீழ்ந்தபின் குளிர் தாங்கலாற்றாது வருத்துமென்றும் குறித்தபடியுமாம்.

தருவீரேல் - தருதற்கு நீர் உடன்படுவீராகில். உடன்பாடு மேல்வரும் பாட்டிற் காண்க.

கடிது கொடு வாரும் என்க. கடிதென்பதனைப் பின்வைத்தது அதிவிரைவுபற்றி வந்த எச்சரிக்கைக் குறிப்பு. 119

1197. "தந்தருளு மிக்கந்தை தாழாதே யொலித்துமக்கின்
றந்திபடு வதன்முன்னந் தருகின்றே" னெனவவருங்

"கந்தையிது வொலித்துணக்கிக் கடிதின்றே தாரீரே
லிந்தவுடற் கிடர்செய்தீர்" ரென்றுகொடுத் தேகினார். கூ0

(இ - ள்) வெளிப்படை. அடியவரை நோக்கித் தொழும்பனார் " தந்தருள்வீராக; இக்கந்தையினைச் சிறிதும் தாழாது இன்று அந்திபடுவதன் முன்னரே ஒலித்துத் தருகின்றேன் " என்றுகூற, அவரும், " இந்தக் கந்தையினை விரைவாக ஒலித்து உலரவைத்து இன்றைக்கே தாரீராகில் இந்த உடலுக்குத் துன்பஞ் செய்தீராவீர் " என்று சொல்லிக், கொடுத்துப், போயினர்.

(வி - ரை) தந்தருளும் - தாருங்கள் - தருவீராக. இவ்வாறன்றிப் பெயரெச்சமாகக் கொண்டு தந்தருள்கின்ற இக்கந்தை என்று கூட்டி உரைத்தலுமாம்.

அந்திபடுவதன் முன்னம் தருகின்றேன் - " தருவீரேல் " என்று அடியவர் விஞவினாதலின் அப்படியே தருவதாகத் தம் இசைவினைக் கூறியபடியாம்.

கந்தை.....இடர் செய்தீர் - இது கந்தையைத் தொண்டனாரிடம் கொடுக்கும் போது அடியவர் சொல்லிய ஆணைமொழி.

இந்தவுடல் - உயிருக்கு உடலின் மூலமாகவே துன்பம் வருகின்றதாதலின் வரும் இடர் நான் தாங்கி வந்த இந்த உடலைப் பற்றியதாகுமேயன்றி உள்ளிருக்கும் இறைவனாகிய என்னைத் தாக்காது என்றபடி. இனி இவ்வுலகத்து உயிர்கள் எல்லாம் என் உடல்; அவற்றினுள் தட்டுப்படாது அவற்றை என் உடலாகக் கொண்டு உயிர்க்குள் உயிராய் நான் நிற்கின்றேன் ; உயிர்களாகிய என் உடலுக்கு வரும் இடர்கள் என்னைத் தாக்கா ; என்பதும் குறிப்பு. இஃதன்றியும் அடியவர் தங்கள் உடலே வேறுகப் பிரித்து இன்பத் துன்பங்களை அதனிடம் சார்த்தித் தாம் அவற்றுட்படாது எண்ணுவதும் பேசுவதும் இயல்பு. கன்மானுபவங்களுக்குத் தாம் உடன்பட்டுழலாது அவ்வனுபவங்களை உடனாழாய்க் கழிப்பது பெரியோர் இயல்பு. அது பற்றியும் இந்த உடலுக்கு என்றார் என்றலுமாம்.

இடர்செய்தீர் - இறந்த காலத்திற் கூறினார் ; நீர் சொல்லியபடி தருதல் கூடுவதில்லையாதலின் இடர் செய்தவராகவே உமதெண்ணத்தில் பலிக்க, அதற்குத் தக்கபரிகாரம் தேடுவது இச்சரித உள்ளுறையாகலான் தணிவு பற்றிச் செய்தீர் என்றார். 120

1198. குறித்தபொழு தேயொலித்துக் கொடுப்பதற்குக் கொடுபோந்து
வெறித்தடநீர்த் துறையின்கண் மாசேறிந்து மிகப்புழுக்கிப்
பிறித்தொலிக்கப் புகுமளவிற் பெரும்பகல்போய்ப் பின்பகலாய்
மறிக்கரத்தார் திருவருளால் மழையெழுந்து பொழிந்திடுமால். கூக

(இ - ள்) வெளிப்படை. மாதவர் குறித்த காலத்திற்குள்ளே ஒலித்துக் கொடுத்தற்காகத் தொண்டனார் கந்தையினைக் கொண்டுபோந்து, வாசனையுடைய மலர்கள் நிறைந்த நீர்த்தடத்தின் துறையில் அதனை அழுக்குப் போகத் தோய்த்துப், பின்னர் மிகவும் புழுங்க வைத்துப், பின்னர் வேறுகத் தோய்க்கப்புகும்பொழுது பெரும்பகல் எல்லைகழிந்து, பின் பகலாகி, மானேந்து கையினராகிய சிவபெருமான் திருவருளால் மழை எழுந்து பொழிந்திடுவதாயிற்று.

(வி - ரை) குறித்தபொழுதே - " கதிரோன் மேல்கடற்பால் அக்குன்றம் அணைவதன்முன் தருவீர் " (1196) என்று மாதவரும், " அந்திபடுவதன் முன்னந் தருகின்றேன் " (1197) என்று தாமும் குறித்ததாகிய பொழுது - காலம் ; சூரியன் படுமுன்.

பொழுதே - பொழுதினுள் - கால எல்லைக்குள். வெறித்தடநீர் - வெறி - நீரினுட் பூக்கும் மலர்களின் வாசனை. நீர்ப்பூக் கொடிகள் நிறைதலின் அந்நீர் தூய்மையும் அணிதோய்த்து வெண்மையாக்குதற்குத் தகுதியும் உடையதென்பதும் பெறப்பட்டது.

துறையின்கண் - நீர்த்தடத்தில் உள்ள பல துறைகளில் வண்ணர் அணி தோய்த் தற்கென்று ஒதுக்கப்பட்ட துறையில். இத்துறை அங்குத் தோய்க்கும் அணிகளின் அழுக்குப்படியும் தன்மையால் குளித்தல் - குடித்தல் - முதலியவற்றினுக்குத் தகுதி யற்றது. அவ்வாறே குளித்தல் - குடித்தலுக்குரிய துறைகளில் அணி தோய்க்க லாகாதென்பதுமாம். ஆறுகளிலும் குளங்களிலும் வண்ணர் துறை என்று தனியாக அமைந்துள்ளதனை இந்நாளிலும் பல இடங்களில் காணலாம். ஆனால் இத்தகைய நல் வழக்கம் சீர்திருத்தம் என்ற பேரால் இந்நாளில் புறக்கணிக்கப்பட்டு நீர்நிலைகளை மக்கள் எவ்வித நியதியுமின்றி எல்லாவகையாலும் அசுத்தம் செய்து உலகை அலைத்து வருதல் வருந்தத்தக்கது.

மாசெறிந்து-மிகப்புழுக்கி - பிறித்தோலிக்க - இவை மூன்றும் அணிகளை அழுக் குப் போக்கி வெளுத்தலில் அமைந்த அங்கங்களாகிய தனிச் செயல்கள். மாசெறி தல் - முதலில் அழுக்குப் போகத்தோய்த்தல் ; புழுக்குதல்-உவர்மண் ஏற்றித் துணியை ஆவியில் புழுக்குதல். பிறித்தோலித்தல் - அவ்வாறு புழுக்கியபின் அத்துணியழுக்கும் உவரின் கறையும் நீங்குமாறு மேலும் நன்றாய்த் தோய்த்தல்.

பெரும்பகல் - உச்சிவேளை - நண்பகல் ; பின்பகல் - மாலை.

பொழிந்திடும் - பொழிந்து இடும் என்க. இடும் - பொழிந்து அதன் பயனை நாயனாரை இவ்வுல உலகத்தினின்றும் ஞானவுலகமாகிய சிவபெருமானது நித்திய உலகத்திலே கொண்டு சேர்த்து வைக்கும் என்ற குறிப்பும் காண்க. " நீயுமினி நீடிய நம், மன்னுலகு பிரியாது வைகுவாய் " (1204) என்பது காண்க.

திருவருளால் - அக்காலத்தில் மழையை எதிர்பார்க்க முடியாதிருந்தும் மழை பெய்து அப்போது திருத்தொண்டினுக்கு இடையூறுபோலக் காணப்படினும் உண்மை யில் இந்நாயனாரைத் திருவடியிற் சேர்ப்பிக்க வந்ததாதலின் திருவருளால் மழை பொழிந்திடும் என்றார். எழுந்து - என்றதனால் முன்னர்க்காண இயலாத நிலையிலிருந் தது என்பதாம். 121

1199. திசைமயங்க வெளியடைத்த செறிமுகிலின் குழாமிடைந்து,
மிசைசொரியும் புனற்சாரை விழிநுழையா வகைமிடைய,
வசைவுடைய மனத்தன்ப ரறிவுமறந், தருந்தவர்பா
லிசைவுநினைந், தழிந்," தினியா னென்செய்கே " னெனநின்றார். கஉஉ

(இ - ள்) வெளிப்படை. திசைஎலாம் ஒளிபெறுது மயங்கும்படி வெளியெங்கும் அடைத்த திரண்ட முகிலின் கூட்டங்கள் நெருங்கி மேலே நின்று பெய்யும் மழையின் தாரையானது, கண்பார்வை செல்லக்கூடாதபடி நெருங்கத், தன்பமுற்ற மனத்தினையுடைய அன்பர் தம் அறிவு அயர்ந்து அரிய மாதவரிடத்துத் தாம் கொடுத்த வாக்குறுதியை நினைந்து மனம் உடைந்தவராய் " இனி நான் என்ன செய் வேன் " என்று நின்றனர்.

(வி - ரை) திசைமயங்க - திசை தெரியமாட்டாது மக்கள் மயங்க. மக்களின் மயக்கம் திசைகளின்மேல் ஏற்றப்பெற்றது. திசைமயக்கம் - 1151 பார்க்க.

வெளியடைத்த - ஆகாய வீதியை மறைத்த. செறி என்பது முகிலின் நீர்ச்செறி வினையும், குழாம் முகிற்கூட்டங்களையும் உணர்த்தின. மிடைதல் - அவ்வாறுள்ள பல கூட்டங்கள் நெருங்குதல்.

தாரை விழிநுழையா வகைமிடைதல் - மழைத்துளிகளின் நெருக்கம் கண் பார்வை இடையிற் செல்லாதபடி நெருங்கிச் செறிந்து இருத்தல். விழி நுழைதல் என்

பதும் வெளியடைத்த என்பதும் இம்மேகங்கள் எங்கேனும் இடைவிடுமோ என்று பார்க்கும் ஆவல் மிக்க அன்பர் அவ்வாறு பார்க்கவும் இயலாதபடி என்றவாறு.

அசைவுடைய - அறிவு மறந்து-நினைந்து-அழிந்து-நின்றார்-இவை அன்பரின் துன்பமும் கவலையு முறுகி மேன்மேல் வளரும் நிலை குறித்தன. அசைவு - முதலில் நிகழ்வதாய மனத்திண்மையினைப் பெயர்த்திடும் நிலை. அறிவு மறத்தல் - மனத்திண்மை பெயர்ந்து அசையின் அறிவு தொழிற்படாதொழிதல். அழிதல் - இசைவுபட்ட பொருள் இயற்றமுடியாத நிலை நேர்ந்துபட்டமைபற்றி மனம் அழுங்குதல். நிற்றல் - வேறு மனச் செயலும் புறச்செயலும் இன்றி அசைவற்று நிற்றல். அசைவுடைய மனம் - இதனால் அசைவு பெற்றதன்றி வேறுவகையால் என்றும் அசைவுபடாதது என்க. "ஆயமாடக் கொடியே அசைவன" (1184) என்றதன் குறிப்புக் காண்க. "வானந்துளங்கிலென்" (திருவிருத்தம்), "பூத மைந்து நிலையிற் கலங்கினும்" (142) என்றவற்றாலறிகின்றபடி என்றும் அசைவிலாது உறைப்புடைய அன்பர் மனம் இங்கு அசைவுபெற்றதற்குக் காரணம் திருத்தொண்டு செய்வதற்கு நேர்ந்த இடையூறே என்பார் இசைவு நினைந்து என மேல் விரித்தார். "குற்றேவ லழிந்தவா" என மேல்வரும் பாட்டிற் கூறுவதும் காண்க. 122

1200. ஓவாதே பொழியுமழை யொருகால்விட் டொழியுமெனக்,
காவாலி திருத்தொண்டர் தனிநின்றார்; விடக்காணார்;
மேவார்போற் கங்குல்வர, "மெய்குளிரும் விழுத்தவர்பா
லாவாவென் குற்றேவ லழிந்தவா!" வெனவிழுந்தார். கஉங

(இ - ள்) வெளிப்படை. நீங்காமல் பொழியும் மழை ஒருவேளை பொழியாது விட்டொழியும் என்று, காபாலியாகிய சிவபெருமானது திருத்தொண்டர் தனி நின்றார்; ஆனால் மழைவிடும் நிலைகாணவில்லை; பகைவரைப்போல இரவு வரவே, "குளிரால் உடல் வருந்தும் தூய தவசியாரிடத்தில் ஆ! ஆ! எனது குற்றேவல் தவறிவிட்டதே" எனக் கீழே விழுந்தனர்.

(வி - ரை) ஓவுதல் - நீங்குதல்.

ஒருகால் விட்டொழியும் - இது நாயனார் மனத்துட் கருதிய நம்பிக்கை. நின்றார் என நிற்றலுக்குக் காரணங் கூறியபடி.

மேவார் - பகைவர். கங்குலைப் பகைவரென்றது தனது இசைவு நிறைவேறுதபடி செய்துவிட்ட செயலினால். வினைபற்றி எழுந்த உவமம். இரவைக் கண்டு வருந்தும் அகப்பொருள்களும் இக்கருத்துப் பற்றியன. "பகலோன் கரந்தனன் காப்பவர் சேயர்" (188), "திருநுத லாட்கென்ன தாங்கொலென் போதரவே" (318), "திரிந்திளைத்து வாழியன்றே வருக்கன்பெருந் தேர்வந்து வைகுவதே" (339) என்ற திருக்கோவைத் திருவாக்குக்களும், "பையுண் மாலை தயியோர் பனிப்புற" (304) என்றதும், பிறவும் காண்க.

மெய்குளிரும் - குளிரும் என்றது குளிரினால் வருந்தும் என்ற பொருளில் வந்தது உபசாரம். "மெய்க்கொண்ட குளிர்க்குமைந்து விடமாட்டேன்" (1196) என அருந்தவர் கூறியதனை நினைந்து கொண்டபடி.

ஆ! ஆ! அருந்தவரின் மெய்குளிரும் என்ற நினைவு வந்தவுடனே அதற்குத் தாம் காரணமாய்விட்ட நிலை நினைவுக்குவர நாயனார் மனம் நடுங்கிற்று.

ஆ! ஆ! - இரக்கம் குறித்த இடைச்சொற்கள். அடுக்கு மிகுதிகுறித்தது. மெய்குளிரும் விழுத்தவர்பால்.....எவல் அழிந்தவா என்று வாக்கியம் தொடர்ந்து

முடிபு பெறுமுன் இடையில் இந்த அவலச்சொற்கள் வந்தது அவரது மனத்தெழுந்த துயரமிகுதி குறித்தன ; அருந்தவரின் மெய்வருத்தத்தினைச் சிறிதளவும் பொறுத மன நிலையின் வெளிப்பாடென்க.

குற்றேவல் - குறுகிய ஏவல் ; சிறிய ஏவல். நான்செய்வது சிறிய ஏவற்பணியே யாம் என்ற பணிவு நிலை. இதனைத் " தாழ்வெனும் தன்மை " என்பது ஞானசாத்திரம். குற்றேவலும் என இழிவு சிறப்பும்மை தொக்கது.

அழிந்தவா - அழிந்தவாறு. அழிந்தநிலை. ஆ - ஆறு. கடைக்குறை.

விழுந்தார் - அடியார்பாற் செய்யும் ஏவல் அழிந்த படியை எண்ணவே மனம் அழிந்தது ; மனமழிந்தமையால் நிற்கும் வலிகுறைய அதனால் நிற்கலாற்றுதவராய் விழுந்தனர் என்க. 123

1201. " விழுந்தமழை யொழியாது, மெய்த்தவர்சொல் லியவெல்லை
கழிந்தது;முன் போலித்துமனைக் காற்றேற்க வறிந்திலேன்
செழுந்தவர்தக் திருமேனி குளிர்காணுந் தீங்கிழைத்த
தொழும்பனேற் கினியிதுவே செய"லென்று துணிந்தெழுவார்;கஉச

1202. " கந்தைபுடைத் திடவெற்றுங் கற்பாறை மிசைத்தலையைச்
சிந்தவெடுத் தேற்றுவ "னென் றணைந்துசெழும் பாறைமிசைத்
தந்தலையைப் புடைத்தெற்ற, வப்பாறை தன்மருங்கு
வந்தெழுந்து பிடித்ததணி வனைத்தழும்பர் மலர்ச்சேங்கை. கஉடு

1201. (இ - ள்) வெளிப்படை. பெய்தமழை ஒழியாமையின், " உண்மைத் தவசியார் சொல்லிய கால அளவு கடந்துவிட்டது ; இதன் முன்னமே ஒலித்து மனையி னுள் காற்று ஏற்கச்செய்து உலர்த்தும் உபாயம் அறியாமற்போய்விட்டேன் ; செழிப் புடைய தவசியாரின் திருமேனியானது குளிரால் வருந்தும் தீமையினைச் செய்த கடையாய தொண்டனுக்கு இனிச் செய்யத்தகும் செயல் இதுவே யா "மென்று துணிந்து எழுவாராய், கஉச

1202 (இ - ள்) வெளிப்படை. " கந்தையினைத் தோய்ப்பதற்கு எற்றுகின்ற பாறையின்மேல் எனது தலையை அது சிதைந்துபடுமாறு எற்றுவன் " என்று துணிந்து, அணைந்து, செழிப்புடைய பாறையின்மேல் தமது தலையைமுட்டி மோதிய அளவில் அந்தப் பாறையின் பக்கத்திலிருந்து அழகிய வனைத்தழும்பு பூண்டவராகிய ஏகாம்பர நாதரது மலர்போன்ற செம்மையுடைய கையானது வந்து, எழுந்து, அத்தலையைப் பிடித்துக்கொண்டது. கஉடு

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

1201. (வி - ரை) விழுந்த மழை - மழை வீழ்தல் என்பது மரபு. " வீழ்க தண் புனல் " (திருப்பாசுரம்) "விசும்பிற்றுளி வீழினல்லால் " (குறள்) முதலியவை காண்க. பெய்த மழை என்னாது விழுந்த மழை என்று இங்குக் கூறியது உலகத்தவர் யாவரும் பெய்க என வேண்டிநிற்கும் மழை, இங்கு நாயனார் தம் விழுத்தொண்டினுக்கு இடை. யூறாய் வீழ்ந்தது என்ற மனத் துன்பத்தால் இழுக்கிய பொருள்படக் கூறிய குறிப்புமாம். விழுந்த - மழை பெய்துகொண்டே யிருக்கவும் இறந்தகாலத்தாற் கூறியது, அது வீழ்ந்து நின்றது என இறந்தகாலத்தாற் கூறலாம்படி அது நின்றுபடுமோ என எதிர் பார்த்து நின்ற வண்ணமாயிருந்த அவரது மனநிலை குறித்தது. " ஓவாதே பொழியு மழை ஒருகால் விட்டொழியுமென...நின்றூர் " (1200) என முன்பாட்டிற் கூறியது காண்க.



1



2

1. குமரகோட்டம் —பாட்டு-1158 - பக். கசஅஉ

2. சர்வ தீர்த்தம் —பாட்டு-1155 - பக். கசஎக



1



2

1. கைலாசநாதர் கோயில் - " கச்சிக் கற்றளி "
(பூசலார் புராணம் - 9)

2. திருக்குறிப்புத்தொண்டர் ஆலயம்
—பாட்டு - 1202 - பக்கம் - கருஉசு

இவ்வாறு வீழ்ந்த என இறந்த காலத்தாற் கூறினாரேனும் வீழ்கின்ற என நிகழ் காலப் பொருள்கொள நிற்பது காலவழுவமைதி.

மெய்த்தவர் சொல்லிய எல்லை - "மேல்கடற்பால் அக்குன்றம் வெங்கதிரோன் அணைவதன்முன்" (1196) என்று தவசியார் குறித்த கால எல்லை. எல்லை - கால அளவு. "கங்குல்வர" (1200) என்றது காண்க.

முன்பு ஒலித்து மனைக்காற்று ஏற்க - முன்பு - பின்பகலாக முற்றி மழை பொழிவதற்கு முன்பு. மனைக்காற்று ஏற்றல் - நீர்த்துறையினின்று தமது மனைக்குச் சென்று மழையால் நனையாமல் மனைக்குள் காற்று ஏற்கும்படி வைப்பதனால் உரைச் செய்தல். அறிந்திலேன் - அங்ஙனவு வரப்பெற்றேனில்லை.

செழுந்தவர் - தவத்தின் மிகுதியாலாகிய செழுமையுடையவர். "மெலிந்து திருமேனி யினைத்திருந்த தென்" (1195) என முன்னர்க் கூறியவதனால் இங்குக் குறித்தது அவரது திருமேனிச் செழுமையன்று. இப்பாட்டில் முன்னர் "மெய்த்தவர்" என்றும், "அருந்தவர்" (1199), "விழுத்தவர்" (1200), என்றும் கூறியவை காண்க. தவத்தின் செழுமை "மாதவவேடந் தாங்கி" (1193), "வெண்ணீறு திகழ்ந்தொளிருங் கோலம்" (1194) என்றதனால் அறியப்பட்டது என்க.

திருமேனி - செழுந்தவருடைய தூய உடலாதலின் இவ்வாறு கூறினர். இவற் றால் நீறு நிறைந்த தவக்கோலத்தில் நாயனார் ஈடுபட்டு உருகியதிறம் அறிய நின்றது. தவராகிய திருமேனிகொண்டெழுந்தருளியவர் என்பதும் குறிப்பிற் பெறப்படுதல் காண்க.

குளிர்காணும் தீங்கு - குளிரை யடைந்து வருந்தும் தீமை. "மெய்க்கொண்ட குளிர்க்குடைந்து" (1196) என்று அவர் கூறியதனை நாயனார் நினைவு கூர்ந்து வருந் திய நிலை. அவரது திருமேனிமட்டில் குளிர்காண்பதாகும்; அவர்காண நில்லார் என்ற குறிப்பும் காண்க.

தீங்கு இழைத்த தொழும்பனேன் - நலம் செய்ய நினைத்தாரேயன்றித் தீங்கு இழைத்தாரிலர்; இழைக்க எண்ணினருமிலர்; ஆனால் கந்தையினை உரிய கால எல்லைக் குட் கொடாத செயலினால் அத்தீங்கு வருதற்குத் தாம் காரணராயினர் எனத் துணிந்த னர் என்க. இதனை offence by omission, என்பர் நவினர். தொழும்பனேன் - தொண்டிற் கடையாயினேன் என்பதும் குறிப்பு.

இனி இதுவே செயல் - முன் எண்ணிய தொண்டின் செயல் கந்தையினைக் கழு வித் தருதல். அஃதியலாது மாறுரு முடிந்தபோது இனிச்செய்யும் செயல் இதுவே. இதுவே என்பது மேல்வரும் பாட்டிற்கூறப்படுவது.

துணிந்து - முடித்து; எழுவார் - மேற்கொள்வாராகி - எழுவாராகி. முற்றெச் சம். எழுவார் - எற்ற (1202) என்று கூட்டுக. 124

1202. (வி - ரை) கற்பாறை மிசைத்தலையைச் சிந்த எற்றுவன் - முன்னர்க் கற்பாறையும், தலைதாங்கிய உடலும், சிவனடியார் பணிக்கு உபகாரப் பொருள்களாய் நின்றன. இப்போது தாம் துணிந்தபடி தமது உடல் அடியார் திருமேனிக்குத் தீங்கு இழைக்கும் பொருளாயினமையின் அதனை அக்கற்பாறையில் தலையைமோதிச் சிதைப் பன் என்பது நாயனார் கொண்ட துணிபு. அடியார் பணிக்கு உதவியாயின பாறையே அதற்குத் தீங்கு வந்தபோது தீர்வுதருதற்கும் உதவுதல் தகுதி என்று துணிந்தனர் என்பதாம். இக்குறிப்புப்பெறக் "கந்தை புடைத்திட எற்றுங் கற்பாறை மிசை" என்றார்.

**எடுத்து** - தூக்கி - ஓங்கி. **எடுத்து எற்றுவன்** என்றது தலை சிதறுண்ணும் பொருட்டு.

**செழும்பாறை** - பாறையின் செழுமையாவது - முன்பு, சிவனடியார்க்குக் கந்தை புடைத்திட உதவிவந்தமையும், இப்போது, நாயனார் தலையை மோதிப்புடைக்க நின்றமையும், பின்பு, அத்தலையைப் பிடிக்க ஏகம்பவாணருடைய திருக்கை அதன் மருங்கு எழுந்துவர நின்றமையுமாம். துணிந்து எழுவார் (1201) - "**எற்றுவன்**" என்று அணைந்து - **எற்றச்** - செங்கை - வந்து - எழுந்து - பிடித்தது என்று கூட்டி முடித்துக் கொள்க.

மனத்தில் இதுவே செயல் என்று துணிந்ததற்கும், அத்துணிபின்படி அச்செயலை நிறைவேற்றுதற்கும் இடையில் எவ்வகையாலும் கால நீட்டிப்பு (தாமதம்) இல்லை என்று குறிக்கத் **துணிந்து - அணைந்து - எற்ற** - என்று தொடர்ந்து செல்லும் வினையெச்சங்களாற் கூறினர்.

**எற்ற** - எற்றுதலாகிய வினை (செயல்) முற்றுப்பெறுது இடையே தலையைச் செங்கை பிடித்ததனால், அவ்வினை, எச்சமாகவே (எஞ்சியே) நின்றது குறிக்க வினை முற்றுக்கூறுது **எற்ற** என வினை எச்சத்தாற் கூறிய நயமும் காண்க. எற்றும் செயல் முயற்சி யளவில் நின்றதேயன்றி முடிவு பெறவில்லை என்றதும் காட்டினர்.

**தலையை எற்றச் செங்கை பிடித்தது - எற்ற** என்ற வினைக்கும், **பிடித்தது** என்ற வினைக்கும் **தலை** என்ற ஒன்றே செயப்படுபொருளாய் வைத்த நயமும் காண்க. "வேண்டும் பரிசொன் றுண்டென்னி லதுவு முன்றன் விருப்பன்றே" (குழைத்த பத்து-6) என்ற திருவாசகத்தின் குறிப்புப்படி, அன்பர் செயலும் ஆண்டான் செயலும் ஒன்றுபட நிகழ்தலும் குறிப்பித்தவாறு காண்க. "தன்னுடைய வடியவர்தந் தனித் தொண்டர் தம்முடைய அங்கிலமை கண்டன்பர்க் கருள்புரிவ" (1192) தானையே இறைவர் விருப்பங்கொண்டனர் என்பதும் கருதுக.

**எற்றப் பிடித்தது** - எற்ற அடியவரது செயல்குறித்த செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம் பிடித்தது என்ற ஆண்டவரது செயல் குறித்த பிறவினை முதல் வினை கொண்டது. அடியார்செயல் ஆண்டவர் செயலுடன் முடிவுபெறுதல் குறிப்பாகும்.

**அப்பாறை** - எற்றிய அந்த என முன்னறி சுட்டு.

**வந்து எழுந்து பிடித்தது - வந்து** - நின்ற திருத்தாண்டக முதலியவற்றாலும் வேத முதலிய இறைவரது மொழிகளாலும் அறியப்படுகின்றபடி இறைவருடைய கை எங்கும் நிறைந்து நிற்பது; ஆனால் அன்பு செய்யுமிடத்துக் கூர்ந்து மேல்வருவது அதன் தன்மை; ஆதலின் **வந்து** என்றார். **எழுந்து** என்ற கருத்துமது. நாயனார் தலையைப் பாறையில் மோதிப்புடைக்காதபடி தலைக்கும் பாறைக்கும் இடையே செங்கை எழுந்தது என்றபடியாம். **பிடித்தது** - எழுந்ததோ டமையாது அத்தலையைப் பிடித்துக்கொண்டது என்க. இவ்வாறே "ஊறுகண் டஞ்சித் தங்க ணிடந் தப்ப வுதவுங் கையை, யேறுயர்த் தவர்தங் கையாற் பிடித்துக் கொண்டு" (829) என்ற கண்ணப்பநாயனார் புராண வரலாறுங் காண்க.

**அணி வளைத்தழும்பர் மலர்ச்செங்கை** - பாறையில் மோத எற்றும்போது தாங்கு தற்கு மெத்தென விருக்கும் கை என்பது குறிப்பு. **வளைத்தழும்பர்** - "கொலைக்க ளிற்றுரி புனைந்ததம் மேனி குழைந்து காட்டினர்" (1141) என்றபடி தழுவக் குழைந்த திருமேனியுடையார் என்பது.

**மலர்க்கை** என்றும், **செங்கை** என்றும் கூறியது மென்மையும் செம்மையும் பெற்றதென்று குறிப்பதற்கு.

பிடித்தது - செங்கை எனப் பயனிலையை முன்வைத்தது அருட்செயலின் விரைவு குறித்தது. 125

1203. வானிறைந்த புனன்மழைபோய் மலர்மழையா யிடமருங்கு
தேனிறைந்த மலரிதழித் திருமுடியார் பொருவிடையின்
மேனிறைந்த துணைவியொடும் வெளிநின்றார்; மெய்த்தொண்டர்
தாநிறைந்த வன்புருகக் கைதொழுது தனிநின்றார். கஉசு

(இ - ள்) வெளிப்படை. ஆகாயத்தில் நிறைந்து பெய்த புனல் மழை போய்ப் பூமழையாயிடப், பக்கத்தில், தேன்நிறைந்த கொன்றை மலர்மாலை சூடிய திருமுடியினையுடைய சிவபெருமான் பொருகின்ற விடையின் மேலே தம்முடன் நிறைந்த துணைவியாராகிய உமையம்மையாரோடு ஆகாயத்தில் வெளிப்பட்டு நின்றனர்; மெய்த்தொண்டர் நிறைந்த அன்பினால் உள்ளுருகக் கைகூப்பித் தொழுதுகொண்டு தனியே நின்றார்.

(வி - ரை) வான் நிறைந்த புனன் மழை - வானஞ் செறிந்து மழை பெய்த நிலை 1199-ல் உரைக்கப்பட்டது.

புனன் மழை போய் மலர் மழையாயிட - புனல் மழையே பூமழையாயிற்று என்னும்படி. தொண்டருடைய அந்நிலைகண் டருள்புரிவதற்காக அருளால் வந்த புனல் மழையாதலின் விளக்கம் கண்டவுடன் போயிற்று என்பது போய் என்றதன் குறிப்பு. மலர்மழை - திருவருளின் வெளிப்பாடு கண்டு தேவர்கள் பொழியும் கற்பகப்பூமழை: "புனன்மழையோ மதுமழையோ பொழிவொழியா பூஞ்சோலை" (1043), "மண்ணவர் கண்மழை பொழிந்தார்; வானவர் பூமழை பொழிந்தார்" (130), "பொழியுந் தெய்வப் பூவின்மா மழையின் மீள மூழ்குவார் போன்று தோன்ற" (398) முதலியவை காண்க.

நிறைந்த துணைவி - அருளுருவமாகித் தம்முடனே எங்கும் நிறைந்து விளங்கும் அம்மையார்.

வெளி நின்றார் - அன்பர் காணும்படி வெளிப்பட்டு நின்றனர். செங்கை எழுந்து தோன்றுவதன்முன் மறைந்தருளி நின்றனர்; பின்னர்ச் செங்கை மட்டில் எழுந்து பிடித்த அளவில் வெளிப்பட்டு நின்றனர்; இப்போது அன்பர் முழுவதும் நேரே காண வெளிப்பட்டு நின்றனர் என்க. வெளி நின்றார் - ஞான ஆகாய வெளியில் நின்றனர் என்றலுமாம்.

நிறைந்த அன்பு உருக-உள்ளத்தில் நிறைந்து பெருகிய அன்பினால் கருவி கரணங்கள் எல்லாம் உருக என்க.

தனிநின்றார் - தனியாக என்றும், ஒப்புயர்வற்றவராய் என்றும் உரைக்கநின்றது. ஆண்டவர் வெளிநின்றார் - நாயனார் தனிநின்றார் என்ற சுவையும் காண்க. முன்னரும் "தனிநின்றார்" (1200) என்றார். அது வேறு. அது திரோதசத்தி உருவமாகிய அருண் மழையுள் நின்றநிலை. இது வெளிப்பட்ட திருஅருட் பூமழையினுள் நின்றநிலை. 126

1204. முன்னவரை நேர்நோக்கி முக்கண்ணர் "மூவுலகு
நின்னிலைமை யறிவித்தோம்; நீயுமினி நீடியகம்
மன்னுலகு பிரியாது வைகுவா" யெனவருளி
யந்நிலையே யெழுந்தருளி யணியேகாம் பரமணைந்தார். கஉச

(இ - ள்) வெளிப்படை. முன்னின்ற அவரை இறைவனார் நேர்நோக்கி முக்கண்ணராகிய ஏகாம்பரநாதனார் "உனது அன்பின் நிலைமையை மூவுலகங்களும் அறியும்

படி செய்தோம்; நீயும், இனி நீடிய நமது நிலைபெற்ற உலகிலே பிரியாமல் இருப்பாயாக" என்று அருளிச்செய்து, அந்நிலையினின்றும் எழுந்தருளி அழகிய திருவாரூர் பரத்தில் அணைந்தனர்.

(வி - ரை) முன்னவரை-தமது முன்நின்ற அத்திருத்தொண்டரை. "தொழுது முன் நின்றவிப் பத்தரைக் கோதில்சென்றேன், தெளித்துச் சுவையமு தூட்டி யமரர் கள் சூழிருப்ப, அளித்துப் பெருஞ்செல்வ மாக்கும்" (ஐயாறு 7) என்ற திருவிருத்தச் சொல்லும் பொருளும் இங்கு நினைவு கூர்தற்பாலன. முன்னவர் - முதன்மை பெற்றவர் என்றலுமாம்.

முக்கண்ணர் நேர் நோக்கி-நோக்குதற்குக் கண் கருவியாதலின் இங்கு முக்கண்ணர் என்ற பெயராற் கூறினர். செய்தற்கரிய பெருஞ்செயல் செய்த தொண்டனரைத் தம்கியல்பாக உரிய மூன்று கண்களாலும் முழுஅருளிலேக்கமும் செய்தனர் என்பது குறிப்பு. நேர் நோக்கி - என்ற குறிப்புமது. மூன்றுவதுகண் நெருப்புக்கண் எனவும் மன்மதனை எரித்த பார்வையுடையதெனவும். படுமாதலின், அவ்வாறன்றி, அருளின் நேர்பட நோக்கினர் என்பது. "செற்றங் கருங்கனைத் தீவிழித் தான்றில்லை யம்பலவ, னெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே" (கோயில் - திருவிருத்தம் - 8) என்ற அப்பர் சுவாமிகள் தேவாரமும் இக்கருத்தைப் புலப்படுத்தி நிற்பது காண்க.

முழுலகும் நின் நிலைமை அறிவித்தோம் - அறிவித்தற்காகவே இவ்வருட் செயல் செய்தோம் என்பது. "அந்நிலைமை கண்டன்பர்க் கருள்புரிவான்" (1192) என்ற விடத்துரைத்தவை பார்க்க.

நீயும் வைகுவாய் - நீயும் - நாமும் அறிவித்தோம் நீயும் வைகுவாய் என எண்ணும்மை. அசை என்றலுமாம்.

நீடிய நம் மன் உலகு - சிவனுலகம். நீடிய உலகு - மன் உலகு என்க.

நீடுதல் - எங்கும் பரவியிருத்தல்; மன்னுதல் என்றும் அழியாதிருத்தல். மன்னி நீடிய என்று ஒருபொருளாகக் கொண்டுரைத்தலுமாம். நீடிய - என்றதனைச் செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகக் கொண்டு, நீடிய வைகுவாய் என்று கூட்டி, நிலைபெற்றிருக்கும் பொருட்டு நம்முலகில் இருப்பாய் என்றுரைப்பினுமமையும். மன்-அரசு என்று கொண்டு எல்லாவற்றுக்கும் மேலாய் அரசாங்கத்தமர்ந்த உலகம் என்றலும் பொருந்தும். "நிலமிசை நீடு வாழ்வார்" என்ற திருக்குறட் கருத்தும் காண்க.

அந்நிலையே - வெளிநின்ற அந்நிலையினின்றே.

எழுந்தருளி ஏகாம்பரம் அணைதல் - வெளிப்படத் தோன்றிய நிலையினின்றும் எங்கும் நிறைந்த (வியாபக) நிலையினுள் மறைதல். "பொற்றொடியாள் பாகனார் பொன்னம்பல மேவினார்" (648) முதலியவை பார்க்க. "வளைத்தழும்பர் மலர்ச் செங்கை" (1202) என்றதும் காண்க. "அணி ஏகாம்பரம்" என்னூர் காஞ்சிபுரமாதலின். எழுந்தருளி - மறைந்து. சைவமரபு வழக்கு. 127

1205. சீர்நிலவு திருக்குறிப்புத் தொண்டர்திருத் தொழில்போற்றிப்
பார்குலவத் தந்தைதா ளறவெழிந்தார் பரிசுரைக்கேன்;
பேரருளின் மெய்த்தொண்டர் "பித்த"னெனப் பிதற்றுதலா
லாருலகி லிதனுண்மை யழிந்துரைக்க விசைந்தெழுவார்? கஉஅ

(இ - ள்) வெளிப்படை. சிறப்பு நிலவப்பெற்ற திருக்குறிப்புத்தொண்ட நாயனுடைய திருத்தொழிலைத் துதித்து, உலகம் விளங்கும்படி தந்தையின் தாள்கள் அறும்

படி வெட்டிய சண்டீச நாயனாரது தன்மையினைச் சொல்லத் தொடங்குகின்றேன்; பேரருளுடைய மெய்த்தொண்டர் இறைவரைப் "பித்தன்" என்று பிதற்றுதலாலே, இதன் உண்மைத் தன்மையினை முற்றும் அறிந்துசொல்ல இசைந்து எழுவார் யாவர்? (ஒருவருமிலர்).

(வி - ரை) சீர்நிலவு - திருத்தொண்டத்தொகையினாற் போற்றப்பட்டபடி, திருக்குறிப்புத்தொண்டர் என்ற சிறப்பு நிலவப் பெற்ற, அப்பெயரினையே இங்கு எடுத்தாண்டமை காண்க. அப்பெயரினைக் கூறியதனாலே சரிதச் சுருக்கமும் உரைத்து முடித்துக்காட்டிய பண்பும் கருதுக. 1189-ல் "திருக்குறிப்புத் தொண்டரெனுஞ் சிறப்பினர்" என்றதும் இங்கு நினைவுகூர்க.

திருத் தொழில் - 1191லும், 1199 முதல் 1202 வரை திருப்பாட்டுக்களிலும் உரைக்கப்பட்டவை.

சீர் நிலவு...தொழில் போற்றி - ஆசிரியர் தமது மரபின்படி இதுவரை கூறிவந்த சரிதத்தை முடித்துக்காட்டியதாம்.

பார்குலவ...உரைக்கேன் - இது மேல்வருஞ் சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்ததாம்.

பார்குலவத் தந்தை தாள் அற எறிந்தார் - பார்குல்வ - உலகம் விளங்க - அறிந்து அநித்துப் பயன்பெற. சிவபூசை செய்தபின் சண்டேசுவரபூசை செய்து அதனாற் சிவபூசைப் பயனை உலகத்தார் பெறுதலின் குலவ என்றார். "தாதைதாள் மழுவினால் எறிந்த" என்பது முதனூல்.

குலவுதல் - விளங்குதல். "குலவு கோலத்த கொடிநெடு மாடங்கள்" (தேவாரம்). "திசைவிளங்க." (திருஞான - புரா - 22) என்று ஆளுடைய பிள்ளையார் திருவவதாரப் பயன் கூறியது காண்க. இதனால் மேல்வருஞ் சரித சாரத்தைத் தோற்றுவாய் முகத்தால் அறிவித்த நயமும் காண்க.

அற எறிந்த - தாள்களைத் தந்தையினது குற்றம் அறும்படி - அறும்பொருட்டு - எறிந்த என்றலுமாம். "மழுவா லேறுண்டு குற்றநீங்கி" (1263)

பேரருளின் மெய்த்தொண்டர்-ஆளுடைய நம்பிகள். அருளினாலே திருக்கயிலையினின்றும் இவ்வுலகில் அவதரித்து, அருளினால் தடுத்தாட் கொள்ளப்பட்டு, அருளினால் திருத்தொண்டத்தொகை அருளி, அருளினால் மீளத் திருக்கயிலையினை அடைந்த பெருமானதலின் இவ்வாறு கூறினர். "வந்து வானவரீச ரருளென" (34) "அருள் செய்தபின்" (39), "அருள்செய்த சாலுமொழியால் (174), "அருளின் நோக்கி" (219) என்றிவ்வாறு வருமவை யெல்லாம் காண்க. இக்கருத்தைப் "பெருமணச் சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த பேரருளின் பெருமாள்" (கடவுள் வாழ்த்து - 12) என்று காஞ்சிப்புராணமுடையார் விரித்தனர். மெய்த்தொண்டர் - "உம்பர் நாயகர் தங்கழ லல்லது நம்பு மாறறி யாத" (299) திருத்தொண்டின் உண்மைநிலையுடையார்.

"பித்தனே" எனப் பிதற்றுதல் - தம்மை ஆட்கொள்ளவந்த முதல்வனை அறியாது "பித்தன்" என இகழ்தல். 186 பார்க்க.

பின்னர்ப் "பித்தா" என்று பாடியதன் பொருள் வேறு; அது இறைவராணையின் படி பாடியது. முன்னர்ப் "பித்தன்" என்று ஏசியதும், பின்னரும் அவ்வாறே "பித்தன்" என்று பாடியதும் வெவ்வேறு பொருளன; ஆதலின் பிதற்றுதலால் என்றார். பிதற்றல் - பொருள் மயங்க மொழிவழங்குதல். பலபடியும் பல முறையும் சொல்லுதல். "வன்றொண்டன் சொல் பெருங்குலத் தவரொடு பித்தற்றுதல் பெருமையே" (நம்பி - காந்தா - வலம்புரம் - 10) "பிணங்கித் தம்மூட் பித்தரைப் போலப் பிதற்று

வார்" (குறிஞ்சி - திருவாரூர் 4 அப்பர்) என்ற தேவாரங்கள் காண்க. பித்தனேன - என - போல என்று உவம உருபாகக் கொண்டு பித்தனைப்போல மெய்த்தொண்டர் பிதற்றுதலால் என்றுரைத்தலுமாம். இப்பொருளில் மெய்த்தொண்டர் பித்தன்போலப் பிதற்றுவாராயின் யாவர் உண்மை யறிந்து உரைக்கவல்லார் என்று கொள்க. "பித்த ரெனப் பானடித் தொண்டரு ரூரன் பிதற்றிவை" (கொல்லிக் கௌவாணம் - முதுகுன்றம் - 11) என்ற நம்பிகள் தேவாரம் காண்க.

பித்தனேனப் பிதற்றுதலால் இதன் உண்மை அறிந்து உரைக்க இசைந்து உலகில் யாவர் எழுவார் ? என்றது ஆட்கொண்டு இன்பந்தர வந்த தம்மைப் "பித்தன்" என்றிகழ்ந்ததனையும் புகழ்ந்ததுவாகக் கொண்டதுமன்றி, அவ்வண்ணமே பாடுக என்று மகிழ்ந்தும் கொண்டதுபோலத், தந்தையைத் தாள்அற எறிந்த பாதகத்தையே புண்ணியமாகக் கொண்டு பரிசும் கொடுத்தனர்; ஆதலின் இதன் உள்ளுறையை எவரும் அறிந்து சொல்ல வல்லவரல்லர் என்றதாம். யாவர் என்ற வினா ஒருவரும் இலர் என்று இன்மை குறித்தது.

யாவர் அறிந்து இசைக்க - மாபாதகம் தீர்த்த திருவிளையாடலின் வரலாறும், "பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்" என்ற திருவாசகமும், "பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே" என்ற திருப்பல்லாண்டும் இங்குக் கருதத் தக்கன. பரிசு உரைக்கேன் - என்ற குறிப்பும் அது.

உண்மை - உள்ளது - உள்ளுறை. அறிந்து - உரைக்க - இசைந்து - எழுவார் - அறிதலும், அறிந்தாலும் அதனை உரைத்தலும், உரைப்பேன் என்று இசைந்து எழுதலும் ஒன்றன்மே லொன்றுக அரிய செயல்களாமென்பது குறிப்பு.

இவ்வாறு சொல்ல அரிய செயலினுள் புகுகின்றேன் என்ற அச்சத்தினையும் பணிவினையும் புலப்படுத்தியபடி. தாதை தாள் எறிந்த கதை என்றிகழ்ச்சியாய் எண்ணிக் கழியாமல், அதனை இறைவர் ஏற்றுப் பரிசுவைத்த அறியலாகாப் பெருமையினையே எண்ணிப் பத்திசெய்து கேட்குமாறு எச்சரித்தபடியுமாம். "பித்த"னென் றிகழ்ந்தது நன்றி கொன்ற சிவநிந்தையாகிய பெரும்பாதகமாயினும், அங்ஙனமாகாது சிவனைப் போற்றிய பெரும் புண்ணியமேயாயினமையும் கருதுக என்று வற்புறுத்திய படியுமாம். 128

---

## சரிதச் சுருக்கம்

நாடு

தொண்டை நன்னாடு பெருமையும் மேன்மையும் தொன்மையும் உடையது; தன்னிடத்து உமையம்மையார் தவஞ்செய்து தலைவரைத் தழுவத் தவஞ்செய்து பெற்றது; நடுநிலை பொருந்திய நல்லொழுக்கந் தலைநிறந்த பெருங்குடிகள் தழைத்து வாழ்தற்கிடமாவது; பழையனூர் வேளாளர்கள் எழுபதின்மர் ஒரு வணிகனுக்குத் தாம் கூறிய சொல்லைத் தம் உயிரினும் சிறந்ததாகக் காத்துத் தீப்புகுந்த மேன்மை யுடையது; சேரநாட்டு வீரர்கள் மைத்துன முறை கொண்டாடி நட்புக் கொள்ளும் பழஞ்சரிதத் தொடர்புடையது.

நானிலம் - ஐந்திணை வளம்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நானிலப் பகுதியும், அவற்றோடு பாலையும் விரவிய ஐந்திணை நெறியும் தத்தம் இயல்பிற் செழித்துச் சிவத்தன்மை வெளிப்படக் காணுமாறு ஓங்கி உலகுக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் தன்மை யுடையது இந்நாடு.

குறிஞ்சி

அவற்றுள்ளே, மலைச்சாரல்களில் அருவிகள் பாய, இறவுளர் தினை விளைக்கும் புனங்களும் சீறூர்களும் உடையதாய் விளங்கும் இங்காட்டுக் குறிஞ்சியானது, மால்விடை யெந்தையார் திருக்காளத்தியையும், அண்ணலார் திருவிடைச்சுரத்தினையும், உம்பர் நாயகர் திருக்கழுக்குன்றத்தினையும் தன்னகத்துக் கொண்டு விளங்கத் தவஞ்செய்து பெற்றது.

பாலை

முல்லையையுங் குறிஞ்சியையும் அடுத்த சில்லிடங்களில் வேனிலும் கடும்பகற்பொழுதும்பற்றி, நீலிகோட்டங்களும் நிரந்து, பாலையென்றும் சொல்லலாகும் பரன்முரம்புகளும் உள்ளன.

அந்த எல்லையின் புறத்தே கானியாறுகள் இடையிடை பரந்துவரக், குருந்த மரங்களின் மேற்படர்ந்த முல்லைப் புதர்களையுடைத்தாய் இடையர் சேரிகளில் ஆனும் மானும் திரியும் முல்லை, நிலப்பரப்பு மிக உள்ளது. முல்லையின் தெய்வமென்று தமிழின் பொருளிலக்கணம் பேசுகின்ற திருமால் வழிபட்ட திருமுல்லைவாயிலும், கங்கைநீர் எப்போதும் ஊறிவரும் திருவூறலும் இம் முல்லை நிலத்தில் விளங்குவன.

மருதம்

முல்லையைச் சூழ்ந்த மருதநிலத்திற் பல நதிகளும் ஓடிக், குளமும், ஏரியும் புருந்து, வயல்களைச் செழிக்கச் செய்வன. காமதேனுவின் பால் ஆருகப் பெருகி நந்திமலையினின்றும் ஓடிவரும் பாலாறு, பிள்ளைகள் தமது சிறு கைகளாற் தடவப் பால்பெருகும் முலையுடைய தாயினைப்போல, மள்ளர்கள் வேனிலில் மணற்றிடர்களைப் பிசைந்து கையினல் தொழில்செய்யக் கீழே சுரந்து ஓடிவர, அந்த நீர் வெள்ளம் கால்களின்வழி மிதந்து ஏறிப் பள்ளவயல்களின் பெருமடைகளையும் உடைத்துப் பாயும் செழிப்புடையது. இவ்வாறு நீர்வளமும் நிலவளமும் சேர்தலாற் செந்நெல்லும், வாழையும், உயர்கழைக்கரும்பும், கமுகும், தென்னையும், பலாவும், மாவும் சோலைகளாகச் செழித்துப் பயன் தருவன.

விருந்தெதிர் கொள்ளும் மேன்மையுடைய பெருங்குடிகளும், இல்லறம் புரிந்து வேள்விசெய்து மழைக்குக்காரணமாய் விளங்கும் செல்வமறையோர்களும் நிறைந்த செழும் பதிகள் பல அங்கு உள்ளன.

மறையவர் திருவல்லமும், கங்கைவாழ் சடையார் திருமாற்பேறும், யானையுரித்தவர் இருந்த திருப்பாசூரும் தன்னகத்துத் திகழ்ந்திருக்கத் தவம் புரிந்தது இந்த மருதமாகும்.

நெய்தல்

இதன் புறத்ததாய்க், கொழுமீன் கவர்ந்தும், பவளம் முத்து முதலிய மணிகள் படுத்தும், பரதவர் வாழும் கடற்கரை சூழ்ந்த விடங்களில் கைதையும் புன்னையும் பூக்கும் சூழல்களுடையதாய் உள்ளது நெய்தல் நிலம். இறைவரது திருவோற்றியூர், திருமயிலாப்பூர், திருவான்மியூர் முதலாகிய பெருந் தலங்களைத் தன்னகத்துக்கொண்டு விளங்க இந்நெய்தல் செய்தவம் நிறைதவம் சிறிதாமோ ?

புணர்நிலங்கள் - தீணை மயக்கம்

(1) நெய்தலுங் குறிஞ்சியும் புணர்ப்பாகிய நிலங்கள் மாட மாமல்லை முதலியவை போன்ற பலஇடங்கள் உண்டு. இவைபோலவே (2) மருதமும்குறிஞ்சியும், (3) முல்லையுங் குறிஞ்சியும் கூடிய புணர்ப்பு நிலங்கள் பலவுள்ளன. இவ்வாறே (4) நெய்தலும் முல்லையும், (5) மருதமும் முல்லையும் இயைவனவாகிய நிலங்களும் உண்டு. மேலும் (6) நெய்தலும் மருதமும் மயங்கிய நிலங்களும் காணவுள்ளனவாம்.

இவ்வாறு நானிலத்தமைதியிலும் தத்தமக்கடுத்த செய்தொழிலில் வேறு பல குலங்களில் விளங்கித் தீமையென்பன கனவிலு நினைவிலாச் சிந்தைத் தூய மாந்தர் வாழும் சிறப்புடையது தொண்டைநன் னாடு.

நகரம்

இப்பெருந் திருநாட்டின் தலைநகரமாய் உலகெலாம் வியப்ப என்றுமுள்ளதாகிய நகரம் காஞ்சிபுரமாகும். அது உமையம்மையார் தன்னிடத்தே எழுந்தருளித் தவஞ் செய்து ஏகம்பநாதரைத் தழுவப்பெற்ற சரிதப் பெருமையுடையது.

அம்மையார் தவமும், பூசையும்

திருக்கைலாயத்தில் ஆகமங்களையெல்லாம் இறைவர் அருளிச்செய்ய அம்மையார் கேட்டருளினர். எண்ணில் ஆகமங்கள் அருளிய இறைவர் தாம் விரும்பும் உண்மையாவது பூசனையேயாகும் என்றருளிச் செய்ய, அவ்வாறே தாம் பூசைசெய்ய அம்மையார் மனங்கொண்டனர். அதற்கேற்ற இடம் காஞ்சிபுரத்தின் மாவடியேயாகும் என்று இறைவர்பால் அறிந்த இறைவியார் அங்குநின்றும் போந்து, மலையரசன் வந்து விடுத்த பரிசனங்களுடன் சென்று காஞ்சியில் பதும மா நாகம் வேண்டியபடி அதன் பிலத் துவாரத்தில் எழுந்தருளியிருந்து, கம்பையாற்றின் கரையில் மாவின் மூலத்தில், தவஞ் செய்து, சிவனுரு வெளிப்படக் கண்டு, பூசிக்கத் தொடங்கி மெய்ப்பூசை யெய்த ஆகம விதியேலாஞ் செய்தருளினர். அப்போது இறைவனுர் ஒரு திருவிளையாட்டினுல் அம்மையாருக்கு அருள்செய்யத் திருவுள்ளங்கொண்டு கம்பையாற்றிற் பெருவெள்ளம் வர அருளினர். ஆறு பெருக்கெடுத்து மேலெழுந்துவரக் கண்டு தம் திருக்கையாற் றடுத்து நில்லாமையால் அம்மையார் வெருக்கொண்டு காதலால் முலைக்குவட்டொடு வளைக்கையால் நெருக்கி இறுகச் சிவபெருமானைத் தழுவிக்கொண்டனர். இறைவர் அதனை விரும்பியவராய் யானையை உரித்துப் போர்த்த தமது திருமேனி குழைந்து காட்டி முலைச்சுவடும் வளைத்தழும்பும் அணிந்துகொண்டு அத்திருமேனி காட்டி வெளிப்பட்டருளினர். உம்பரே முதல் யோனிகள் எல்லாம் உயிரும் உடம்பும் உருகி ஒன்றுகி இறைவரருளை எத்தின. கம்பையாறு முன் வெள்ளந் தவிர்ந்து வணங்கிற்று. மணவாள நற்கோலங் காட்டி நின்ற இறைவனுர், அம்மையாரை நோக்கி "வேண்டும் வரங் கொள்க" என்றருள, அம்மையார், இறைஞ்சிநின்று, "இற்றை என்பூசை இன்னும் முடிந்ததில்லையாதலின் அதனைக் குறை நிரம்பிடக் கொண்டருளல் வேண்டு" மென்று விண்ணப்பிக்க, அதற்கு இறைவனுர் "நம்பால் நின்பூசனை என்றும் முடிவதில்லை" என்றருளவே, அம்மையார் இறைவர்பால் வரங்கேட்கலாயினர். அவையாவன:— "இந்தப் பூசை என்றும் மாறுது நிலைத்திருக்கும்படி தேவரீர் மகிழ்ந்துகொண்டருளுதல்வேண்டும்; இந்தப் பதியில் எல்லா அறங்களும் யான் செய்யும்படி அருளுதல் வேண்டும்; திருவடிப் பிழைத்தல் ஒன்றெழிய இங்குள்ளவர் வேறு செய்வினை எதுவேயாயினும் மாதவப்பயன் கொடுத்தருளப் பெறவும் வேண்டும்" என்ற மூன்றுமேயாம். எல்லா வுயிர்களின் பிறப்பையும் ஒழிக்கும் பேரருட் செல்வியாகிய அம்மையார் கேட்டருள, அவ்வாறே இறைவனுர் அந்தப் பூசனையை விரும்பி வீற்றிருந்தும், இடையறுத அறங்களை யெல்லாம் வளர்க்கும் வித்தாக இகபரத்து இருநாழி நெல்லை அளித்தும், காஞ்சி வாழ்பவர் செய்தீவினையும் தடையின்றி மெய்ந்நெறியடையச் செய்யும் தவங்களாகவும் வரங்களை மகிழ்ந்து தந்தருளினர்.

திருக்காமக் கோட்டம்

விம்மிதங்கள்

அவ்வாறே அம்மையார் நித்தமாகிய பூசனை செய்து கொண்டு உயிர்களிடத்து இல்லறம் பெருக்கும் கருணையினுல் புண்ணியத் திருக்காமக் கோட்டத்தில் எழுந்தருளியிருந்து மூப்பத்திரண்டறங்களையும் அளித்தருள்கின்றனர்.

திருக்காமக் கோட்டத்தில் ஆண்டினுக்கொருமுறை ஒரு தாளில் முச்சுடர் போல மூன்று பூக்கள் மலரும் அற்புதம் உள்ளது. உலகாணி முதலிய விம்மித தீர்த்

தங்கள் உண்டு. அதன் மேல் சந்திர சூரியர் தத்தம் நெறியிற் செல்லாது பக்கம் சுற்றிப் போதலினுல் உளதாகிய திசைமயக்கம் உலகெலாங்காண இன்றும் அங்குள்ளது. காஞ்சி நதிக்கரையில் தன்னிழற் பிரியாத காஞ்சித்தானம் உண்டு. முனிவர் வானவர் முதலினோர் பலரும் தாபித்து அருச்சித்து இட்டசித்திகளே அடைந்த தளிகள் எண்ணிறந்தன அத்திருநகரின் எல்லையில் உள்ளன. யானையை முயல் தன்னிடத்தினின்று துரத்தும் தானமும், இறந்தோர் உடல் மீள உயிர்பெற்றெழும் இடமும், இறவாத்தானமும் உள்ளன. இட்டசித்தித் தீர்த்தம், சாருவதீர்த்தம் முதலியனவாய்த் தேவர்களும் வந்து படியும் பல புண்ணிய தீர்த்தங்களும் அங்கு உண்டு. ஒரு தாளில் மூன்று பூ மலரும் பொற்முமரைத் தடமும், மேற்கில் ஓடி நீர் கரக்கும் நதியும்,பகலில் அலரும் குவளையும், இரவில் மலரும் தாமரையும், நண்பகலில் பூக்கும் பாடலமும், கண்படாத காயாப் புளியும் திருக்காமக்கோட்டத்தின் எல்லையினுள் உளவாகும். சிறிது உண்டாலும் நஞ்சாகும் நீருடையதொரு தடமும், தன்னுட் குடைந்தவர்கள் வானரவுருவம் பெறும் ஒரு பிலமும், அவ்வுரு நீங்கக் குளிக்கும் ஒரு பொய்கையும், தேவர்களோடு இன்பம் துய்க்கும் ஒரு பிலமும் முதலாகிய அதிசயங்கள் பல உண்டு.

யானைமுகமுடைய விநாயகக்கடவுளும், வைரவக்கடவுளும், அறுமுகக்கட்வுளும் காவல் புரியப்பெற்றது அத்திருநகரம். சத்திதற்பர யோகிகளும் அழியா உடற்சித்தி பெற்ற சித்தர்களும் வாழ்கின்ற பாடிகளும் அனேகம் உண்டு. சித்தர் இயக்கர்கள் கந்தருவர் என்ற தேவசாதியார்களும் விளங்கி, கையிற்செண்டு ஏந்தி யானைமீது வீற்றிருக்கும் ஐயனுர் கோட்டத்தையுடைய சேண்டிணை வெளியும் அங்குள்ளதாம். யோகபீடமும் போகபீடமும் ஒருங்கே இருக்கப்பெற்றது இத்திருநகரம். இன்னும் இவ்வாறுள்ள விம்மிதங்கள் பல. அவை இந்தப் பொய்யாகிய கலியுகத்தில் நல்லோர் சிலர்க்கன்றிப் பலர்க்கும் விளங்கித் தோன்றுது மறைந்து நிற்கும்.

## பழமன்னர் சரிதம் - நகர்வளம்

எக்காலத்தும் அழியாதிருக்கும் இத்திருநகரத்தின் வளமையைக் கலியுகத்தில் ஒரு வேடன் கண்டு அறிந்துவந்து சொல்லக், கரிகாற் பெருவளத்தோனுகிய சோழர் வடநாட்டை வென்று அடிப்படுத்தி இமயத்தில் புலிக்கொடி பொறிக்கப் போகும் காலையில் கேட்டு, இங்குவந்து, காடெறிந்து, நான்கு காதம் எல்லை வகுத்துக், குன்று போல மதிலும் கடல்போல அகழியும் போக்கிக், குடியேற்றி நகரங்கண்டனர். மதில் வாயில்கள் அங்கு வாழும் பெரியோர்களது உள்ளம்போல ஓங்கி நிலைத்து நல் லொழுக்கமல்லாமல் தீங்கு தெரியடையாத தடைகளாய் விளங்குவன. மண்ணிலும் விண்ணிலும் உள்ள எல்லா வளங்களும் அங்கு நிறைவன. ஆவணவீதி முதலிய பல மறுகுகளும் சிறப்பன. அறங்களெல்லாம் பெருக அம்மையார் காவல்புரியும் தன்மையாற் செல்வமும் இன்பமும் சிறந்து விளங்குவது இத்திருநகரமாம். மறையவரது இருக்கைகளும், அரசர் மாளிகைகள் நிறைந்த தெருக்களும், வணிகர் வீதிகளும், வேளாளர் முன்றில்களும் சிறக்க விளங்குவன. நாற்குலத்தோரும், உயர்ந்தனவு மிழிந்தனவுமான சாதிகளில் தம்மில் ஒவ்வாப் புணர்ப்பில்வந்த சாதி பேதத்தினரும் தத்தம் தகைமைக்கேற்ற தனியிடங்களிற் பொருந்திவாழ்ந்து, தத்தமக்கேற்ற தொழில் செய்து, மனையறம்புரிந்து, வாழும் தன்மை நீடிய இருக்கைகளும் உரிமைப்பான்மையால் அங்கு உள்ளனவாகும்.

இத்திருநகர வீதிகளில் திருவிழாச் சிறப்புக்கள் எந்நாளும் ஒழியாது பயில்வன. தொண்டர்களும் வானவர்களும் சூழ்ந்திருப்பர். தீமை, பிணி, கவலை, புறஞ்சூழ்தல், தளர்ச்சி, அசைவு, திகைப்பு, பயம், ஆர்ப்பு, துகள், தாழ்ச்சி, இழுக்கு என்னும் குற்றங்

கள் இந்நகரத்திற் செய்யுளணி வகையான சொல்லளவினுலன்றிப் பொருள்வகையாற் காணக்கிடையா. தன்னே வந்தடைந்த தேவர் மக்கள் நரகர் முதலிய யாவர்களும் அவ் வவர் கருதிய வேட்கைகள் ஒன்றும் ஒழியாமல் பெறும்படி உதவுவது இந்நகரம்.

நாயனுர் சரிதம்

இத்திருநகரத்திலே, ஒரு மருங்கிலே, ஏகாலியர் குலத்தில் அவதரித்த ஒருவர் அன் புடைய திருமனமும், ஒழுக்கநெறிச் சீலமும், சிவனடிமைத் திறத்தில் வழிவழித் தொண்டும் உடையாராய் விளங்கினுர். அவர், பிறந்த நாள்முதல், மனம் மொழி மெய் என்ற மூன்றினையும் சிவன்சேவடிச் சார்வாக அணைவிப்பார்; சிவனடியார்களுடைய திருவுள்ளக் குறிப்பினை அறிந்து போற்றும் திண்மையினுல் அவர் தமக்குத் திருக் குறிப்புத்தொண்டர் என்ற பெயர் வழங்கும் சிறப்புடையவராயினுர். அவர் காஞ்சி நகரில் ஊராருக்கு ஒலிக்கும் பெருவண்ணுர் எனச் சொல்லலாகாத உண்மையிற் சிறந்தவர்; சிவபெருமானது பெயரைச் சொன்ன மாத்திரத்தில் உருகும் மனத் தினையுடைய அடியார்க்குப் பெருவிருப்பத்தோடும் ஒலித்துக் கொடுப்பர். சிவனடியா ரது துணிகளின் துகள் மாசினைக் கழிப்பார்போலத் தம்முடைய மும்மலப் பிறவி யாகிய மாசினை விடும்படி கழித்து வருவாராயினுர்.

ஒருநாள் சிவபெருமான் அவரது உண்மைத் தொண்டி னிலைகண்டு அருள்புரியும் பொருட்டுச் சீதம் மலியும் காலத்தில் ஏழையாய் மிக அழுக்குடைய ஒரு கந்தையைத் தாங்கிக்கொண்டு அன்பர் முன்பு வந்தருளினர். தொண்டனுர் அவரைக் கண்டு மகிழ்ந்து எதிர்கொண்டு பணிந்து, அவர் குறிப்பு அறிந்து, "ஐயனே! உமது திரு மேனி இனைத்திருந்ததென்? நீர் தாங்கும் இக்கந்தையைக் கழுவத் தந்தருள்வீராக!" என்று வணங்கிக் கேட்டனர். அதற்கு அவர் இக்கந்தை அழுக்கேறி, இனி, மேலே தாங்க ஒண்ணுதிருப்பினும் குளிரினுல் வருத்தம் பொறுக்க முடியாது இதனை விட மாட்டேன். மாலைக்குள் ஒலித்து உலர்த்திக் கொடுப்பீராகில் கொண்டுபோய் விரை வில் ஒலித்துக்கொண்டு வாரும்" என்றனர். தொண்டனுர் "அவ்விதமே அந்திபடு வதன்முன் தருகின்றேன்" என்று கூறத், தவசியார், விரைவில் கொண்டுபோய்த் தோய்த்துலர்த்தி மாலைப்பொழுதுக்குள் கொடாவிட்டால் இந்த உடலுக்கு இடர் செய்தவராவீர்" என்று சொல்லிக் கந்தையினைக் கொடுத்துப் போயினர்.

தொண்டனுரும், குறித்த நேரத்திற் கொடுப்பதற்காக, அதனைக் கொண்டு சென்று நீர்த்தடத்தில் உரியபடி தோய்த்துப், புழுக்கிப், பிறித்தொலிக்கப் புகும்போது திருவருளினுல் மழை எழுந்து செறிந்து பொழிந்தது. தவசியாரிடத்துத் தமது இசை வினை நினைந்து, தொண்டனுர் "யான் என் செய்கேன்!" என்று நின்றுர். ஓயாது பொழியும் மழை ஒருகால் விட்டு ஒழியுமோ? என்று சிறிதுபோது நின்றனர். மழை விடக் காணுர். "அடியாரிடத்து எனது குற்றேவல் அழிந்ததே! மழை ஒழியாது குறித்த கால எல்லை கழிந்தது. முன்னரே ஒலித்து, மனையில் காற்றேற்க உலரவைக்க அறியாது போயினேன். செழுந்தவருடைய திருமேனி குளிர்காணும் தீங்கினை இழைத்த தீமையுடையேனுக்கு, இனி, இதுவே செயல்! கந்தை புடைக்கும் கற்பாறை யில் எனது தலையைச் சிந்த மோதுவன்" என்று துணிந்து, எற்ற, அந்தக் கற்பாறை மிசை அணிவீழ்ந் தழும்பேற்ற ஏகம்பநாயகரது மலர்ச்செங்கை வந்து எழுந்து அவ ரது தலையைப் பிடித்துக் கொண்டது.

புனல் மழை போய்ப் புதுமலர் மழையாய்ப் பொழிந்தது. ஏகாம்பரநாதர் தமது துணைவியாராகிய காமாட்சியம்மையாருடன் இடபவாகனத்தில் எழுந்தருளிக் காட்சி தந்தருளினர். தொண்டனுர் கைகூப்பித் தொழுது நின்றனர். அவரை நேர்நோக்கி

இறைவர், "உனது அன்பு நிலையினை மூவுலகும் அறிவித்தோம். நீயும், இனி, நம் முடைய நிலைத்த சிவலோகத்திற் பிரியாது வாழ்வாய்!" என்று அருள்புரிந்து திரு ஏகாம்பரத்தில் எழுந்தருளினர்.

---

தலவிசேடம்:—இது உலகத்திற்கெல்லாம் தாயாகிய அம்மையார் இறைவரிடத் துக் கேட்டருளிய ஆகமவழி உலகமுய்ய இறைவரைப் பூசிக்கும் பொருட்டுக் கயிலையினின்றும் இங்குப் போந்தருளிக் கம்பையாற்றின் கரையில் மாவடியில் திருவருளால் மூளைத்தெழுந்த சிவலிங்கக்குறி கண்டு பூசித்துத் திருக் காமக்கோட் டத்தில் எழுந்தருளியிருந்து அறம் வளர்த்து உலகுயிர்களைக் காத்துவரும் பெருமை யுடைய தலம். தாம் பூசை செய்யும்போது கம்பையாறு பெருகிவர, அம்மையார் நடுங்கி இறைவரைத் தழுவிக்கொண்ட காரணத்தால் கோயில் ஏகம்பம் எனப் பெயர் பெற்றது. (கம்பம் - நடுக்கம்). அம்மை வளைக்கையால் நெருக்கி இறுகிடத் தழுவ இறைவனார் தமது திருமேனி குழைந்து காட்டி வளைத்தழும்பும் மூலைச் சுவடும் அணிந்து கோலங்காட்டி யருளித் தழுவக்குழைந்த நாதராயினர். ஏகாம்பரம் என்ற பெயரும் இத்திருக்கோயிலுக்கு வழங்கும். அது வேறு பொருள் கொண் டது. (ஏகாம்பரம் - ஏகம் - ஒன்று; ஆம்பரம் - மாமரம் - ஒற்றை மாமரமுடை யது. அம்பரம் - ஆம்பரம் எனத் தற்பவமாயிற்று). மாவடியில் இறைவனார் அமர்ந்து இருக்கை கொண்டதனால் இப்பெயர் வழங்குவதாகும். முத்தித்தலங்க ளேழனுள் முதன்மை பெற்றது. ஐம்பூதப் பெருந்தலங்களுள் முதலாவது; பிருதுவித்தலம் என்பர். இதன் எல்லையுள் திருக்காமக் கோட்டம், திருக்குமர கோட்டம், கச்சபேசம் முதலிய விளக்கமான எண்ணிறந்த தளிகள் உள்ளன. திருவேகம்பத்தில் தெற்குத் திருவாயிலில் ஆயிரக்கான் மண்டபத்தின் முன்புறம் விகட்சக்கர விநாயகர் விளக்கமாக எழுந்தருளியுள்ளார். முதலை வாயினின்றும் காப்பற்றப்பட்டு மீட்கப்பட்ட யானை அத்திகிரி என்னும் மலையாக அமைய, அதன்மீது திருமால் வரதராஜர் என்ற பெயருடன் கோயில் கொண்டுள்ளார். திருவொற்றியூரில் சபதம் பிழைத்த காரண மாக இரண்டு திருக்கண்களும் மறையப்பெற்ற ஆளுடைய நம்பிகளுக்கு இடதுகண் கொடுத்தருளிய தலம். இப்புராண சரிதமுடையாராகிய திருக்குறிப்புத் தொண்ட நாயனார் தொண்டுசெய்து திருவடியடைந்த வரலாறு இப்புராணத்துட் கூறப்பட்டது. அன்றியும் சாக்கியநாயனாரும், ஐயடிகள் காடவர்கோன் நாயனாரும் அருள்பெற்ற தலமுமிதுவாகும். முறையே பிரமா, விட்டுணு, உருத்திரர் பூசித்த வெள்ளைக்கம்பம், கள்ளக்கம்பம், நல்லகம்பம் என்ற இலிங்கமூர்த்திகள் ஏகாம்பரத்தில் தெரிசிக்க உள் ளன. ஊழியில் தேவர்களைச் சமிதையாகக் கொண்டு சிவனார் வேள்விசெய்த திருக் கச்சிமயானம் என்ற தலம் (தேவார வைப்புத் தலம்) திருவேகம்பத்தினுள் கொடி மரத்தின் முன் உள்ளது. இதுவன்றிச் சிவசாரூப மெய்தத் தவஞ் செய்திருந்த விட்டுணு, ஆளுடைய பிள்ளையார் திருப்பதிகத்தைக்கேட்டு உருகிச் சிவலிங்க உருவ மாய் அமைந்த திருக்கச்சி மேற்றளி என்பதும், ஓணன் காந்தன் என்ற அசுரர்கள் பூசித்த திருவோணகாந்தன்றளி என்பதும், விநாயகர் குபேரன் முதலியோர் பூசித்த திருக்கச்சியனேகதங்காவதம் என்பதும் இந்திரன் புதன் முதலியோர் பூசித்த திருக்கச்சி நெறிக் காரைக்காடு (காரை வனத்தில் உள்ளது) என்பதும் இத்திருநகர எல்லைக்குள் உள்ள தேவாரப் பாடல்பெற்ற நான்கு தலங்களாம். தொண்டைநாட்டுப் பாடல் பெற்ற தலங்கள் முப்பத்திரண்டனுள் ஐந்து தலங்கள் இந்நகர எல்லையுள் தரிசிக்க உள்ளன. இந்நாயனார் அருள்பெற்ற தலம் முத்தீசர் கோயில் எனப்பெறும்.

இறைவர் - திருவேகம்பர். அம்மை - காமாட்சியம்மையார் - ஏலவார்குழலி. விநாயகர் - விகடசக்கர விநாயகர். முருகர் - மாவடிக் குமரநாயகர். மரம் - மா. தீர்த்தம் - சிவகங்கை - கம்பை முதலியன. பதிகம் 12.

இது காஞ்சிபுரம் நிலயத்திலிருந்து மேற்கே கற்சாலே வழி 1 நாழிகையளவில் அடையத்தக்கது.

---

கற்பனை :—1. உலகத்தாயாகிய உமையம்மையார் உலகம் வாழத் தன்னிடம் இருந்து தவஞ்செய்தருளப் பெறுவதும், நடுநிலை நல்லொழுக்கமுடைய தலைமை சால் பழங்குடிகள் தழைப்ப உள்ளதும், வாய்மையைத் தம் உயிரினும் சிறந்த பொருளாகக் கொண்டு காத்த முன்னோர்களைக் கொண்டிருப்பதும், ஆகிய பெருமைகள் ஒரு நாட்டுக்கு அமைவது அரிய பெருஞ்சிறப்பாகும். அத்தகைய தனிச்சிறப்புடையது தொண்டை நன்னாடு. (1078, 1079—1080)

2. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நானிலப்பகுதிகளும் ஐந்திணை யொழுக்கமும் தன்னகத்தித் தத்தம் இயல்பின் விளங்கக் கொண்டுள்ளமை ஒரு நாட்டிற்கு நிறைவுடைய பெருஞ் சிறப்புத் தருவதாகும். அத்தகைய சிறப்புத் தொண்டை நாட்டுக்குரியது. (1083—1086)

3. மலையே, காடே, வயலே, கடலே என்ற முற்கூறிய நானிலப் பகுதிகள் ஒவ்வொன்றும் சிவதலங்களைப் பெற்றுச், சிவநெறியில் மக்களை ஒழுகத் துணைசெய்து, சிவவழிபாட்டிற் செலுத்தி வாழ்விக்கும் இயல்பில் விளங்குவது தொண்டைத் திரு நாட்டின் பெருஞ் சிறப்பாகும். (1087—1124)

4. சிவ வழிபாட்டுக்குரிய சாதனமாக உதவாதபோது வெறும், நீர்வளம் நில வளம் முதலியவை பயனிலவாம்.

5. தண்ணீர் வேண்டும்போது மள்ளர்கள் மணற்றிடர்களைப்பிசைந்து கைவருட, நீர் சுரந்து வேண்டுமளவும் ஓடி, வயல்மடை உடையப்பாய்ந்து விளைவதரும் பாலாறு, பால் வேண்டும் பிள்ளை தடவி வாய்வைத்தபோது சுரந்து ஊட்டும் தாய்முலை போன்றது. இப்பெருமை எப்போதும் பெருக்கெடுத்து ஓடும் பெருநதிகளுக்கும் கிடையாத தொன்றாகும். (1099)

6. விருந்து எதிர்கொள்ளும் சிறப்புடன் இல்லறம் புரக்கும் பெருங்குடிகள் வாழும் மாடங்கள் நெருங்குவது நகரத்துக்குச் சிறப்பாகும். (1105)

7. புத்திரப்பேறு வேண்டினோர்க்கு அது கிடையாமற் புத்திரிப்பேறு வாய்க்கு மாயின், அதுவே புத்திரப்பேறுபோல நல்வினைப் பயன் தருவதாக என்று வேண்டிப் பெறும் பெரியோரும் உண்டு. (1107)

8. உணவும், வாழ்க்கையின் நலன்களும் அவ்வகிலத்து வாழ்வோர் அவ்வகிலத்துப் பொருள்களினின்றே ஆக்கிக்கொள்ளுதல் இயற்கை வாழ்க்கையாகும். (1086)

9. பெருநிலப் பகுதிகளாகிய குறிஞ்சியாதி நான்குமேயன்றி அவற்றின் புணர்ப்பு நிலம் ஆறும், தன்னகத்துப் பொருந்தப் பெற்றுள்ளது பெருநாட்டினியல்பு. (1118—1123)

10. இவ்வாறுகிய வெவ்வேறு வகை நிலங்களினும் வாழும் வெவ்வேறு பல் குடிகளும் தத்தமக்கடுத்த மேய செய்தொழில் செய்து வாழ்வது தொண்டைநாட்டின் பெருஞ் சிறப்புக்களுள் ஒன்றாகும். (1124)

11. தீயவை என்பன கனவிலும் நினைவிலாத மனத்தையுடைய தூயமாந்தர்கள் வாழ்வது தொண்டை நன்னாட்டிற்குரிய பெரிய சிறப்பாகும். (1124)

12. மகவின் நோய் தீர்தற் பொருட்டுத் தாய் மருந்துண்ணுதல்போல உலகுயிர்கள் யாவையும் சிவனே அறிந்து பூசித்து உய்யும் பொருட்டு உலகத்தாயாகிய உமையம்மையார் ஆகமங்களே எல்லாம் இறைவரிடத்துக் கேட்டருளி, அவற்றில் விதித்தபடி தவம் செய்து, சிவலிங்கத் திருமேனி கண்டு, ஆகமவிதி வழியே சிவபூசையும் செய்தருளினர். உலகுயிர்களின் பொருட்டே இறைவரிடத்து மூன்று பெருவரங்கள் கேட்டுப் பெற்று அறங்களே வளர்த்து வருவாராயினர். இவை அம்மையாரின் பெருங் கருணை யியல்பாம். (1126—1147)

13. சிவபூசையானது எல்லா மக்களும், என்றும் முடிவில்லாது, அறிவும் ஆற்றலும் ஆயுளும் உள்ள அளவும் நித்தியமாய்ச் செய்துவரக் கடவதொன்று. இவ்வாறு தவறுது பூசை கொண்டருளும்படி இறைவரிடம் வரம் வேண்டிப் பெறுவது அறிவுடையோர் செயல். (1145—1146)

14. காமாட்சியம்மையார் தழுவக், கம்பர் குழைந்தமையால் உலகில் உள்ள எல்லா உயிர்களும் உயிரும் உடலும் உருகி ஒன்றுகி, அன்பு நெறிப்பட்டு வாழ்கின்றன. இது எங்கும் நிறைந்த முழுமுதற் கடவுள் சிவபெருமானே என்பதனை விளக்கும் உண்மையாகும். (1142)

15. திருவடிப் பிழைத்தல், கழுவாயில்லாத பெரும்பாவம். அதனைச் செய்ய மனத்தால் நினைத்தலும் பாதகமாம். (1146)

16. கம்பர் காமாட்சியம்மையாருக்கு அளித்த உணவின் மூலமாகிய இருநாழி நெல், உலகுயிர்க்கெல்லாம் அறம் வளர்க்கும் வித்தாக ஓங்கி உலகங் காத்து இகபர சாதனங்களே அளித்து வருகின்றது. (1147)

17. புண்ணியத் திருக்காமக் கோட்டத்தி னெல்லையுள் இன்றும் காண நிற்கும் திசைமயக்கம் முதலிய பல அற்புதங்களையும், விம்மிதமாகிய மரங்கள் தீர்த்தங்கள் முதலியவற்றையும் கண்டு நல்வழிப்பட்டுப் பேறுபெற முயலுதல் அறிவுடை மக்களின் கடமை. (1158—1159)

18. தெய்வங்களாற் காவல் செய்யப்படும் சிறப்பு ஒரு நகரின் பெருமைக்கு ஏதுவாகும். (1158—1159)

19. உயிர்களின் பொருட்டு உலகத்தாயாகிய் காமாட்சியம்மையார் அறம் வளர்த்தும், தவமும் பூசையும் புரிந்தும் திருக்காமக் கோட்டத்தில் காமபீடத்தில் நித்தியமாக எழுந்தருளியிருக்கும் கருணைத்திறத்தினைக் கண்டு வழிபட்டு உய்வது அறிவுடைய மாந்தர் கடன். (1148)

20. பழஞ்சரிதப் பெருமையும், மன்னவர்வழிப் பெருமையும் பெற்றுடையது பெருநகரச் சிறப்புக்களுள் ஒன்றாகும். (1162)

21. பெரியோர் உள்ளங்கள் ஒங்கு நிலைத்தன்மை பெற்றுச் சிவனருளிய நல்லொழுக்கமல்லாது தீங்கு நெறியடையாத தடையுமாகி விளங்குவன. மக்களின் மனைவாயில்களும் நகரமதில் வாயில்களும் அவ்வாறே நிற்றல் அமைவுடைத்து. (1165)

22. அந்திச் செக்கர்வானத்தையும் பிறைமதியினையும் கண்டபோது சிவபெருமான் திருச்சடையையும் அதில் வாழ்ந்தோங்கும் வளரிளம் பிறையையும் மனத்துக் கண்டு உருகிக் கும்பிட்டு அன்புருகிக் கண்ணீர் வாராகிற்பது அன்புடையோர் தன்மை. இவ்வாறே சராசரங்களையும் காலந் திக்கு முதலியவற்றையும் சிவனுருவமாகவே காண்பது உண்மையன்பின் தன்மை. "காலையே போன்றிலங்கு மேனி" என்ற அற்புதத் திருவந்தாதியில் காரைக்காலம்மையார் விளக்கியருளிய இவ் வுண்மைநெறியினில் மனத்தினைப் பண்படுத்துவது அறிவுடையோர் கடன். (1169)

23. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நாற்குலத்தோரும், இவர்களுள் ஒவ்வாப்புணர்ப்பில் வந்த குலபேதத்தோரும் எல்லாம் அவ்வவர் தந்தகைமைக்கேற்ற தனி யிடங்கள் மேவித் தத்தந் தொழின்முறைமை வழாது பயின்று வளமுற வாழ்ந்திருத்தல் சிறந்த நகர அமைப்பின் இயல்பாகும். இச்சிறப்புக் காஞ்சிமாநகரத்திற்குள்ளது. (1180)

24. வீதிகளில் என்றும் விழாக்களின் அணி மலிந்து விளங்குவது பெருநகரின் சிறப்பு. (1181)

25. தீமை, பிணி, கவலை, புறஞ்சூழ்தல், தளர்ச்சி, அசைவு, திகைப்பு, ஆர்ப்பு, தாழ்ச்சி, இழுக்கு முதலிய குற்றங்கள் காணக் கிடையாதிருத்தல் சிறந்த பெருநகரங்களின் தன்மை. (1183–1186)

26. அறிவு தொடங்கிய நாள் முதலாக மனம் மொழி மெய் என்ற மூன்றும் சிவனடிச்சார்பில் செலுத்தும் பெருமை முன்னைத் தவத்தால் வருவது. (1189) அவ்வாறு சிவச்சார்பில் முக்கரணங்களாலும் எஞ்ஞான்றும் ஒழுக முயலுதல் அறிவு பெற்றோர் கடமை.

27. சிவனடியார்களுக்கு அவர் குறிப்பறிந்து பணி செய்தல் சிறப்புடைய திருத்தொண்டாகும்.

28. சிவனடியார்களது உடைகளின் துகள் மாசு போக்கி ஒலித்துக் கொடுத்தல் அந்தத் தொண்டு புரிவோர்க்குத் தமது பிறவிமாசு போக்குதற்கேதுவாகும். (1191)

29. சிவனடியவர்க்குப் பணி செய்ய இசைவோர் இசைந்தபடியே இயற்றிடுதல் வேண்டும். அது செய்யத் தவறினால் அடியார்பால் அபசாரம் செய்தோராவர். சிவாபராதம் செய்த பலனும் நேரும். (1199)

30. சிவனடியாரிடத்து இசைந்தபடி ஒழுகாது அபசாரப்பட்டு வாழ்தலினும் உயிர் துறத்தலே சிறந்ததென் றெண்ணுவர் பெரியோர். (1200—1202)

31. தனதடியவர்பாற் றொண்டு செய்தலில் உறைத்து நிற்குந் தொண்டர்களைத் தமக்குத் தொண்டு செய்வோரினும் மேலாகக் கொண்டு காத்தருளுவர் சிவபெருமான். இக்கருத்துப்பற்றியே "அடியார்க்கு மடியேன்" என்று பல முறையும் திருத்தொண்டத்தொகையாகிய தமிழ் வேதம் கூறிற்று.

32. சிவனுக்கும் அடியார்க்கும் பணி செய்ய நின்ற சாதனமாகிய பொருள்களையே, அத்திருப்பணிக்கு முட்டுநேர்ந்தபோது, தமது உயிரைப்போக்கி அவ்வகையாற் றிருத்தொண்டினுக்கு வந்த இடையூற்றை விலக்கும் சாதனங்களாகப் பயன்படுத்தி விடுவது அன்புடைமைக்கு அடையாளம். அவ்வாறு செய்யும் அன்புடைச் செயலினுள்ளே தோன்றி முளைத்தெழுந்து காத்தல் சிவபெருமானது பேரருளினியல்பாகும்.

திருக்குறிப்புத்தொண்டநாயனார்புராண முற்றிற்று

திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணத்தைப் பற்றிய

# சில குறிப்புக்கள்

(இவற்றை உரிய இடங்களில் சேர்த்துக் கொள்க)

1078 - கசoo - பக். 26-வது வரி-" விழுக்குடிமைச் செம்மையினார் " என்றதன் பின் (திருநா - புரா - 341) என்று சேர்த்துக் கொள்க.

1092 - கசகடு - பக். 5-வது வரியினிறுதியில் - நீலநீலி - " அடியளந் தான் றுஅயது " (குறள்) என்றது போல் நீலி என்றது வாளா பெயராய் நின்றது. நீல வாள் - நஞ்சு பூசித் தோய்த்த வாள். நீலம் பண்பாகு பெயராய் நஞ்சைக் குறித் தது. " நீலமார் கண்டனே " (தேவா), " நச்சழற் பகழி " (656) என்பவை காண்க - என்று சேர்க்க.

1127 - கசடுo - பக். 11-வது வரியினிறுதியில் வெள்ளிமலையாகிய கயிலை என் பாருமுண்டு - எனவும், ஷி பக்கத்திறுதியில் திறன் - நெறி - வழி எனவும் சேர்க்க.

1128 - கசடுக - பக். இறுதியில் - " ஆதரித்து வழிபடப் பெற்ற " (கச்சி - தக் கேசி - 2) என்ற நம்பிகள் தேவாரமும் காண்க - என்று சேர்க்க.

1129 - கசடுஉ - பக். 30-வது வரியின்கீழ் - என்றிறைஞ்சி—என்பதும் பாடம்- என்று சேர்க்க.

1131 - கசடுடு - பக். 4-வது வரியினிறுதியில் " மூக்கு வாய்செவி கண்ணுட லாகிவந், தாக்கு மைவர்த மாப்பை யவிழ்த்தரு, ணேக்கு வானமை நோய்வினை வாராமே, காக்கு நாயகன் கச்சியே கம்பனே " (குறுந்தொகை - கச்சி - 7), "இரக்கண் வாய் மூக்குயர் காய மாகித் தீவினை தீர்த்தவெம் மானே" (தக்கேசி, நம்பிகள், கோலக்கா) என்று வருவன காண்க. எனவும்,

ஷி 16-ம் வரியினிறுதியில், பேதம் - வகை - வினைக்கேற்பவரும் உடலின் வகை. வழி - திறன். " ஆகமத்திற னெலாம் " (1127) எனவும்,

ஷி 25-ம் வரியினிறுதியில் பொருப்பில் - பொருப்பினை இல்லாகவுடைய என் றலுமாம் - எனவும் சேர்க்க.

1133 - கசடுஎ - பக். 20-வது வரியினிறுதியில் அன்பரிடத்துச் சிவத்தை வினைவிக்கச் (கூர்விக்க) செய்வது திரு - வினை - யாட்டு எனவும், 27-வது வரியினிறுதி யில் " சுத்தியு ளாதியோர் தையல் பங்கன் " (இராமனதீச்சரம் - 4 - வியாழக்குறி) என்ற ஆளுடையபிள்ளையார் திருவாக்கும் காண்க எனவும் சேர்க்க.

1134 - கசடுஅ - பக். 3-வது வரியினிறுதியில் வஞ்சம் - பொய் - பொய் நீக்கிய உண்மை வடிவான என்றலுமாம் - என்று சேர்க்க.

1137 - கசசo - பக். 16-வது வரி - தோதிஞர் என்றதன்பின், " நறை மலிதரு மளறெடுமுகை நகுமலர்புகை மிகுவளரொளி, நிறைபுனல்கொடு தினைனினைவொடு நியத மும்வழி படுமடியவர் " (நட்டபாடை - சிவபுரம் - 4) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரம் காண்க எனவும், 21-வது வரியினிறுதியில் " கம்பைக் கரையே கம்பம் " (இந்தளம் - கச்சி - 5) என்றது ஆளுடையபிள்ளையார் தேவாரம் - எனவும் சேர்க்க.

1138 - கசசுக - பக். 9-வது வரி - " பெருகத் தலையினுல் " - என்பதனைப் பெருக, ஒப்பற்றவகை விரிந்தெழுந்த பேரன்பினுலே, தலையினுல் - என்று திருத்திக்கொள்க.

1148 - கசஎஉ - பக். 36 வரி இறுதியில் " என்று மேத்தி வழிபடப்பெற்ற " (தக்கேசி - கச்சி) என்ற நம்பிகள் தேவாரமும், " பூசனை என்றும் முடிவதில்லை நம்பால் " (1145) என்றதும் காண்க - என்று சேர்க்க.

1153 - கசஎஅ - பக். இறுதியில் தளிகள் எண்ணிறந்த - என்பதும் பாடம். "கச்சிப் பலதளியு மேகம் பத்துங் கயிலாய நாதனையே காண லாமே" (கூேத் - கோ - 4) என்ற திருத்தாண்டகமும் காண்க. கச்சிக் கயிலாய நாதர் கோயில் கயிலை யின் காட்சிபோலக் கட்டப்பட்டதென்றும், "காடவர் கோமான் கச்சிக் கற்றளி யெடுத்து" (பூசலார் - புரா - 9) என்ற கோயில் இதுவாம் என்றும், இதனை எடுப்பித்த வர் இராசசிம்மர் என்ற காடவ அரசர் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர் - என்று சேர்க்க.

1158 - கசஅடு - பக். 30-வது வரியினிறுதியில் "அணியம ரர்க்கிறை காப்ப தாய கடிபொழி லேகம்பம்" (கச்சி - குறுந்தொகை - 7) என்றதுங் கருதுக - என்று சேர்க்க.

1161 - கசஅஅ - பக். 28-வது வரியினிறுதியில் "தண்ட முடைத்தரு மன்றம ரென்றம ரைச்செயும் வன்றுயர் தீர்க்குமிடம், பிண்ட முடைப்பிற வித்தலை நின்று நினைப்பவ ராக்கையை நீக்குமிடம்" (கச்சியனே - இந்தளம் - 6) என்ற நம்பிகள் தேவாரமும் காண்க - எனவும்,

டி கசஅசு - பக். வரியினிறுதியில் "சமயமவை யாறினுக்குந் தலைவன்றன் காண்" (கச்சி - தாண்டகம் - 7) என்ற திருவாக்கும் காண்க - எனவும் சேர்க்க.

1163 - கசகூக - பக். 17-வது வரியினிறுதியில் - இஞ்சி சூழ்ந்த செழுங்கிடங்கு "ஆழ்கிடங்குஞ் சூழ்வயலு மதில்புல்கி யழகமரு, மீண்மறுகிற் கலிக்கச்சி நெறிக் காரைக் காட்டாரே" (8) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரங் காண்க - என்று சேர்க்க.

1173 - கடுoஉ - பக். 23-வது வரி "காண்க" என்றதன்பின், "விண்ணிடை விண்ணவர்கள் விரும்பிவந் திறைஞ்சியேத்த" (கச்சி மேற்றளி - நேரிசை3) என்ற திருவாக்குக் கருதுக - என்று சேர்க்க.

1190 - கடுகஅ - பக். 6-வது வரி "கங்கை யிரைப்ப வராவிரைக்குங் கற்றைச் சடைமுடியான்" (திருப்பொற் - 14) என்ற திருவாசகமும் காண்க.

1205 - கடுஙஉ - பக். 13-வது வரியினிறுதியில் "ஒத்தொவ்வாதன செய்துழல் வாரொரு, பித்தர் காணும் பெருமானடிகளே" (கடலூர் மயானம் - 5) என்ற குறுந் தொகையிற் பித்தரியல்பு வருத்தமை காண்க.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# 20. சண்டேசுர நாயனார்புராணம்

## தோகை

"மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க,
வெகுண்டெழுந்த தாதைதாண் மழுவினு லேறிந்த
வம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்"

—திருத்தொண்டத் தோகை

## வகை

"குலமே நியசேய்ஞ லூரிற் குரிசில் குரைகடல்சூழ்
தலமே நியவிறற் றண்டிகண் டீர்ந்தை தாளிரண்டும்
வலமே நியமழ வாலெறிந் தீசன் மணிமுடிமே
னலமே நியபால் சோரிந்தலர் சூட்டிய நன்னிதியே"

—திருத்தொண்டர் திருவந்தாதி - 22

## விரி

1206. பூந்தண் பொன்னி யெங்காளும் பொய்யா தளிக்கும் புனலூட்டு
வாய்ந்த மண்ணித் தென்கரையின் மன்ன, முங்காள், வரைகிழிய
ஏந்து மயில்வே னிலைகாட்டி, யிமையோ ரிகல்வெம் பகைகடக்குஞ்,
சேந்த னளித்த திருமறையோர் மூதூர் செல்வச் சேய்ஞலூர். க

புராணம் :—சண்டேசர் என்னும் பெயருடைய நாயனாரது சரிதவரலாறும் பண்பும் கூறும் பகுதி. இனி நிறுத்த முறையானே மும்மையாலுலகாண்ட சருக்கத்து ஆறுவது சண்டேசுர நாயனார் புராணங் கூறத்தொடங்குகின்றார்.

தோகை:—மெய்ம்மைபுள் நின்று மணலாலாகிய சிவலிங்கத் திருமேனியின்கண் சிவனைவழிபட்டுநிற்கவும், அதுகண்டு வெகுண்டு எழுந்த தாதையின் தாள்களை மழுவினால் எறிந்த அம்மைபோன்ற திருவடிப்பற்று மிகுந்த கண்டேசநாக்கும் நான்அடியேனுவேன்.

திருமேனியில் மெய்ம்மையே வழிபட்டாநிற்க என்க. திருமேனி - மணலாலாக்கிய சிவலிங்கத்திருமேனி யினிடத்து ; சிவனைக்கண்டு வழிபடத்தக்க குரு, லிங்க, சங்கமம் என்ற மூன்று திருமேனிகளில் இலிங்கமாகிய திருமேனியில் என்க. திருமேனியின் கண் வழிபட என்பதாம். ஏழனுருபு தொக்கது. வழிபடாநிற்க - அவன் (தந்தை) பார்த்துக்கொண்டிருப்பவும், புடைத்துக் கொடிதா மொழி கூறவும், தாம் பணியிற் சலியாது முயன்றுகொண்டிருக்க என்ற சரிதக்குறிப்பு. வழிபடாநிற்கவும், என்று சிறப்புமை தொக்கது. அவர் வழிபட்ட நிலை பிறராறியவாராது நின்றதாதலின் உம்மையும் தொக்கு நின்றது. இங்ஙாயனர் அந்த வுடம்பு தன்னுடனே அரனர் மகனாராகிச் சண்டேச பதத்தில் அமர்ந்து இன்றும் சிவயோகத்தில் எழுந்தருளி வழிபட்டு நிற்கின்றாராதலின், வழிபடாநிற்க என்று நிகழ்காலத்தாற் கூறிய உண்மையும் காண்க.

தீநுமேனி - நாயனாரது திருமேனி குறித்ததாகக்கொண்டு அதற்குத்தக வுரைப்பாரு முண்டு.

வேதண்டு எழுந்த தாதை-இது 1252-1254-1255ல் விரிநூலுள் விரிக்கப்பட்டது. தாதை - "தந்தையென வேயறிந்து" (1256) பார்க்க. மழுவினுல் எறிந்த - தாள்களே எறிய எண்ணி "மருங்கு கிடந்தகோல் எடுத்தார்க்கு அதுவே முறைமையினுல் வந்து மழுவாயிட" (1256) பார்க்க. இதனை "வலமேறிய மழுவாலெறிந்து" என்று வகைநூல் வகுத்துக் காட்டிற்று. "எறிந்தார்" (1256) "எறிந்த அதுவே" (1257).

அம்மையான் - அன்னை போன்றவர். பெண்பாற் பெயர் ஆண்பால் விகுதி பெற்று வந்தது. அடிச்சண்டிப்பெருமான் - திருவடிப்பற்று விடாத தொண்டராகிய சண்டேசர்.இறைவரது நின்மாலியத் தீர்த்தத் தொட்டிக்கும் சண்டேசர் கோயிலுக்கும் குறுக்கே போகலாகாது என்ற விதியும் இடையறுத இத்தொடர்பு குறித்தது. அம்மை - அமைதி - மாண்பு என்று கொண்டுரைத்தலுமொன்று. (சிந்தா - நச் - உரை - 3131) [illegible]

இறைவனாரது மகனாராகப் பெற்ற பெருமை குறிக்க இந்நாயனாரது அடிமைத் திறத்தை முதனூல் ஒன்றரை அடிகளாற் புகழ்ந்து போற்றிற்று. இதுபோலவே ஆனுடைய பிள்ளையாராகிய மகனரின் அடிமைத்திறத்தினையும் முதனூல் போற்றிய அளவும் காண்க.

வகை :—நன்மை மிகுந்த திருச்சேய்ஞலூரில் அவதரித்த பெருமையால் மிக்கவராகிய, ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த உலகத்தில் வலிமைமிக்க சண்டேசர், தமது தந்தையின் தாள்களிரண்டினையும் வெற்றி பொருந்திய மழுவினுல் எறிந்து, ஈசனது அழகிய திருமுடியின்மேல் நன்மைமிகுந்த பாலினைச் சொரிந்து, பூக்களைச் சூட்டி, அருச்சித்த நல்ல நிதிபோன்றவர் என்று அறிந்துகொள்ளுங்கள்.

குலம் - நன்மை என்ற பொருளில் வந்தது. "குலப்பதி" முதலியவை காண்க. குலம் ஏறிய-உயர்குலம் என்று கொண்டு, மறையவர் வாழ்கின்ற என்றலுமாம். "திரு மறையோர் மூதூர்" (1206), "மறையோர் விளங்குபதி" (1207) என்பது விரிநூல்.

தரீசில் - பெருமையிற் சிறந்தோன்.

தலம் ஏறிய விறல் தண்டி - இவரது விறல் எல்லா வுலகமும் நிறைந்து எல்லாராலும் போற்றப்படுவது என்க. இதனை "எல்லா வுலகு மார்ப்பெடுப்ப" (1262) என்று விரித்தது விரிநூல். விறலாவது "நடமே புரியும் சேவடியின் வழியன்பின் கடனே யியல்பாய் முயற்றிவரும் காதல் மேன்மேல் எழுங்கருத்தின் திடமும்" (1221), ஆனினங்கள் தம்மை யீன்ற கறவாமே பால் பொழிந்தபோது, அது திருமஞ்சனமாங் குறிப்புணர்ந்து பூசனை விரும்பும் வேட்கை விரைந்தெழப்பெற்ற பண்பும் (1236), ஒருமை நினைவால் (1242) ஒன்றுமுள்ளத் துண்மையினுல் (1252) பூசனை புரிந்த திண்மையும், தந்தை தமது முதுகிற் புடைத்துக் கொடிதா மொழி கூறவும், மண்டு காதலருச்சனையின் வைத்தாராய் அவை ஒன்றுமறிந்திலராகி நின்ற உறைப்பும் (1254), அவன் திருமஞ்சனப் பாற்குடத்தைக் காலாற் சிதறக் கண்டவுடன் பதைத்து அவனைத்தந்தை எனவே யறிந்து, மழுவினுல் அவனுடைய தாள்களிரண்டினையுஞ்சேதித்து, அவனுக்குக் கழுவாய் விதித்தலும், அருச்சனையில் வந்த இடையூற்றினை அகற்றி முன்போல அருச்சிக்கப்புக்க திறலும் (1256) என்ற இவை முதலாயினவை. தண்டி - சண்டேசர் என்ற பதம். குரிசில் - தண்டி - எறிந்து - பால்சொரிந்து - சூட்டிய - நன்னிதியே - கண்டீர் என்று முடிக்க. பால் சொரிந்து அலர் சூட்டி - எறிந்த என்று மாற்றிக்கொள்க. நலமேறிய மழு - மருங்கு கிடந்த கோல் எடுத்தார்க்குத் திருவருளால் அதுவே மழுவாயிட்டமையால் நன்மைமிக்க என்றார். கழுவாயில்லாத

சிவாபராதத்தினுக்கும் திருவருளால் குற்றத்தீர்வு தருதலால் அந்த மழு நலம் ஏறிய தாயிற்று. தந்தையை எறிந்த பாதகமே முத்திக்குக் காரணமாயின நன்மையும் குறிப்பு. தாளிரண்டும் - "இருதாளும் துணித்த" (1257) என்றதனு விரிதூல். ஒரு தாளே குடத்தைச் சிந்தவும், இரு தாள்களையும் துணித்த தருதிபற்றிப் பின் 1257-ல் உரைப்பவை பார்க்க. நன்னிதி - சிவபூசைப் பயனுகிய கிடையாச் செல்வம் கிடைப் பிக்கும் தன்மைபற்றி இவ்வாறு சிறப்பித்தார்.

சரித வரலாறும் பெயரும் தொகைதூல் தொகுத்துக் கூறிற்று. ஊரும் பேரும் சரித வரலாறும் பண்பும் வகைதூல் வகுத்துக் காட்டிற்று. இவை விரிந்தபடி விரி தூலுட் காண்க.

1206. (இ - ள்) வெளிப்படை. அழகிய குளிர்ச்சியுடைய காவிரி, எந்நாளினும் பொய்க்காமல் நீர்தரும், நீர்நாடாகிய சோழவளநாட்டில், வாய்ப்புடைய மண்ணி யாற்றின் தென்கரையில், நிலைபெறும்படி, முன்னுளில் கிரவுஞ்சமலை பிளக்குமாறு ஏந்திய கூரிய வேலினது நிலைபெற்ற தன்மையைக் காட்டிப், பின்பு, தேவர்களது கொடிய பகையாகிய சூரர்களைச் செயிக்க நின்ற, முருகனுணையினுல், அளிக்கப்பட்ட திருமறையோர்கள் நெருங்கிய பழைய ஊர் செல்வ நிறைந்த சேய்ஞலூர் என்பதாகும்.

1206. (வி - ரை) பூந் தண் பொன்னி-பூ - அழகு. அழகு காவிரியின் இயல்பு; கரடுமுரடாயும், மலையின்வீழருவிகள்போலக் கடிதாயும் ஓடாது மெல்லிதாய்ப் பரந்து செல்லுதலும் செல்லுமிடமெல்லாம் அழகு செய்தலுமாம்.

எந்நாளும் பொய்யாது அளிக்கும் - எந்நாளும் - மழையில்லாத காலத்தும் முது வேனிற்காலத்தும். உம்மை உயர்வு சிறப்பு. பொய்யா தளித்தலாவது சுருங்கி வறண்டுபோகாது நீர் தருதலும் பருவந் தவிராது நீர் தருதலுமாம். "வான் பொய்யி னுந் தான்பொய்யா" (பட்டினப்பாலை - 5). "தவாநீர்க் காவிரிப்பாவை" (மணிமே).

வாய்ந்த மண்ணி - மண்ணி - கொள்ளிடத்திலிருந்து பிரிந்துவரும் கிளை யாறு. இது பல காலங்களில் பல வழிகளால் ஓடிச் சென்றது. பழ மண்ணிப்படிக்கரை முதலியவற்றின் வரலாறுகள் காண்க. இவ்வாறே காவிரியும் மாறிச்செல்லும் வழிக ளுடையதென்பதுபற்றிப் பழங் காவிரி முதலிய வரலாறுகளும் கருதுக. வாய்ந்த - காவிரி பாயும் நாட்டில் வடிகாலாருகிய கொள்ளிடத்தினின்றும் பிரிந்துவந்து கூடிய. வாய்த்தல் - ஏற்றவாறு பொருந்துதல்.

மன்ன - அன்றுமுத லின்றுவரையும் இனிமேலும் நிலைபெறும்படியாக.

முன்னுள்...காட்டி - முருகப்பெருமான் சூரசங்காரத்தின் பொருட்டுத் தேவர் சேனைகளுடன் கயிலையினின்றும் தென்றிசையில் வருங்காலத்து இடையில் சூறுக் கிட்டு எதிர்த்த மாயமலையாகிய கிரவுஞ்சமலையை வேலாயுதத்தினுற் பிளந்து தாரகா சுரனையும் வதைத்தருளினர் என்ற சரிதம் கந்தபுராணத்துள் விரிவாய்க் காணத் தக்கது. முன்னுள்-தென்றிசையிற் போந்து சேய்ஞலூரை யுளதாக்குதலுக்கு முன்னு ளிலே. வரை - கிரவுஞ்சம் என்னும் மாயமலை. "சூன்ற மெறிந்த வேலவன்" (1158), "வரையுரங் கிழித்த திண்மை அயில்" (661) என்ற விடங்களிலுரைத்தவையும் பார்க்க. வரைகீழிய என்றதனுல் அதனை இருப்பிடமாக்கொண்டு அதனுள் இருந்து மாயஞ் செய்த தாரகாசுரனைக் கொன்றதும் உடன்கொள்க.

ஏந்தும் அயில் வேல் நிலைகாட்டி - வேற்படை வெல்லும் என்ற நிலையினை விளக் கிக்காட்டி. ஞான வேற்படையின் சத்தியினை நாட்டிக் காட்டுதலே பொருளன்றித் தாரகனை வதைத்தல் ஒரு பொருளன்று என்ற குறிப்புப்பட, வேலால் வரை கிழித்த சேந்தன் என்னுது, வரை கீழிய ஏந்தும் வேல் நிலைகாட்டி - என்ற நயமும் காண்க,

காட்டி - கடக்கும் - சூரனுதியோர் மூவருள், வேற்படையிஞற் சங்கரிக்கப்பட்ட இருவருள், ஒருவனை தாரகனைக் காட்டி என்ற இதனாலும், மற்றவனை சூரபதுமனை இகல் வெம்பகை கடக்கும் என்றதனாலும் உணர்த்தினர். பகை என்றதனால் குலிசாயுதத்தால் வதைக்கப்படும் சிங்கமுகனையும் கொள்ளவைத்தார்.

இகல் வெம்பகை-போரிற் கொடிய பகைவன்; சூரபதுமன். கடக்கும் - சேய்ஞலூர்த் தாபனத்தின்பின் இனி நிகழ உள்ளது என்பார் எதிர்காலப் பெயரெச்சத்தாற் கூறினர். சேந்தன் - முருகப்பெருமான்.

அளித்த ழதூர் - அளித்தது அதனைப் புதிதாய் உளதாக்கி விருப்பிய என்றதாம். "செல்லு மாமுகில் செறிந்திடு காப்பின், மல்லன் மாநகர் வளந்தனை நோக்கி, யெல்லை யில்லறிவன் யாமுறை தற்கோர், நல்ல மாநகரி தென்று நவின்முன்", "வீரவேளிது விளம்புத லோடு, மாரும் வானவர்க ளம்மொழி கேளா, வேரெ லாமுடைய விங்நகர் சேய்ஞ, லூரதென்று பெய ரோதின ரன்றே" என்னும் கந்தபுராணம் குமாரபுரிப் படலம் (14 - 15) பார்க்க. சேய்ஞலூர் என்பது வடமொழியில் குமாரபுரி என வழங்கப்பட்டது.

காட்டிக் - கடக்கும் - சேந்தன் அளித்த - கிரவுஞ்சத்தையும் தாரகனையும் சங்கரித்த பின்னரும், சூரனை வதைக்கும் முன்னரும் ஆக இடைவழியில் முருகர், சேய்ஞலூரை உளதாக்கி அங்குச் சிவபெருமானைப் பூசித்தனர் என்ற சரித நிகழ்ச்சியைச் சுருக்கி விளக்கிய திறம் காண்க. "சேயடைந்த சேய்ஞலூர்" என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரம் காண்க. சேய் (முருகன்) நல் ஊர் - சேயினால் அமரப்பட்ட நல்ல ஊர் என்க. சேய் நல்லூர் என்பது சேய்ஞலூர் என வழங்குவதாயிற்று. நகரத்துக்கு ஞகரம் போலி.

திருமறையோர் ழதூர் - திரு - முத்திக்குச் சாதனமாவது. செல்வம் - அருட் செல்வம் குறித்தது.

மறையோர் ழதூர் - "வேதியர் வாழும் சேய்ஞல்" (ஆப்பாடி - 2) என்பது திருநேரிசை. இது மறையோர் மிகுதியும் வாழும் நகரமாகும். சரிதமுடைய நாயனார் மறையவராதலும் குறித்தவாறு. ழதூர் - சேய்ஞலூர் என்று முடிக்க. பெயர்ப் பயனிலை.*

இப்பாட்டினால் நாயனாரது திருநாடு, ஆறு, திருநகர் முதலிய வளங்களையும், பழஞ்சரிதத் தொடர்பும், குடிவளமும் ஒருங்கே கூறிய நயம் காண்க. இவ்வாறே "விரைசெய் நறும்பூந் தொடையிதழி" (491) என்றதும், பிறவும் காண்க. 1

1207. சேம்மை வெண்ணீற் றருமையினு; ரிரண்டு பிறப்பின் சிறப்பினர்;
மும்மைத் தழலோம் பியநெறியார்; நான்கு வேத முறைபயின்றார்

---

*முருகப் பெருமான் உளதாக்கி யமர்ந்து சிவபூசை செய்த சிறப்புடைய பெருந்தலமா மிதன் ஆலயம் பழுதுபட்டுப் போய் 50 ஆண்டுகளின் முன் சுவாமி, அம்பிகை முதலிய மூர்த்திகள் எல்லாரையும் இளங்கோயிலினுள் அன்பர்கள் எழுந்தருளுவித்துள்ளார். இதன் கோயில் முழுதும் இடிக்கப்பட்டு அரை குறை வேலையாய் நின்றுபட்டிருப்பதைச் சைவ உலகம் இன்னும் பார்த்துக் கொண்டுதான் வாளா நிற்கின்றது. "மண்ணின் பயனு மப்பதி" (1210) என்று ஆசிரியர் விதந்து போற்றிப் பாராட்டும் பெருமையுடையதாய்ச் சிவபூசைப் பயனை உலகுக்குக் கொடுப்பதாயுள்ள இப்பெரும் தலத்தின் நிலை இதுவாயின் சைவர்கள் சிவபூசையின் பயன் பெற்றுய்வ தெங்கே? இதனைத் திருப்பணி செய்து முற்றுவித்து முன்போலத் தாபித்தல் சிவபெருமான் திருவருளும், முருகப் பெருமான் திருவருளும், சண்டீசர் திருவருளும் ஒருங்கே பெறுவிக்க வல்லதாகிய தலைசிறந்த சிவத்திருப்பணியாகும்.

தம்மை யைந்து புலனும்பின் செல்லுந் தகையா ; ரறுதொழிலின்
மெய்ம்மை யொழுக்க மேழுலகும் போற்று மறையோர் விளங்குவது.

(இ - ள்) வெளிப்படை. சிவநெறிச்சாதனமாகிய திருவெண்ணீற்றில் ஒன்று பட்ட ஒழுக்கமுடையவராய், இரண்டு பிறப்பின் சிறப்புடையராய், மூத்தியினையும் என்றும் வளர்க்கும் நெறியில் நிற்பவராய், நான்கு வேதங்களையும் முறையிற் பயின்ற வராய், ஐந்து புலன்களும் தங்களைப் பின்செல்லும் தன்மையுடையராய்த், தாம் செய்யும் அறுதொழிலின் மெய்யொழுக்கத்தினை ஏழுலகங்களும் போற்றத்தக்கவராய் உள்ள மறையவர்கள் விளங்குவது அவ்வூர்.

(வி - ரை) செம்மை - சிவம் - மூத்தி. செம்மை வெண்ணீறு - செம்மையைத் தருவதாகிய - சிவசாதனமாகிய திருவெண்ணீறு என்க. திருநீறு சிவனைப்போலவே அழியாத தன்மையுடையது ; வேதங்களாற் றுதிக்கப்படுவது. "முத்தி தருவது நீறு", "பத்தி தருவது நீறு", "பாவ மறுப்பது நீறு" முதலிய வேத வாக்குக்கள் காண்க. செம்மை - "செம்மையே" (தொகை - பக் - கருநிச - உரை பார்க்க).

நீற்று ஒருமையினார் - திருநீற்று நெறியிற் பிறழாது ஒன்றுபட்ட உறுதியுடைய வர்கள். "உறுவது நீற்றின் செல்வ மெனக்கொளு மூள மிக்கார்" (355), "விதியி னூலே பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீர்" (488), "தொன்மைத் திருநீற்றுத் தொண்டின் வழிபாட்டி, னன்மைக்க ணின்ற நலம்" (610) முதலியவை காண்க. ஒருமை - ஒன்றுபட்ட உறுதி. "ஒன்றி யிருந்து நினைமின்கள்" என்ற திருவிருத்தம் சிந்திக்கத்தக்கது.

இரண்டு பிறப்பின் சிறப்பாவது ஒரு பிறவியிலே இரண்டு பிறப்பின் சீர்பெறு கின்ற மேம்பாடு. துவிசர் (இருபிறப்பாளர்) என்பர் வடவர். உபநயனம் என்ற சடங் கின் முன்னர் ஒரு பிறப்பும், அதன்பின் பிரம நோக்கம் கொண்டதொரு பிறப்பும் என்பன இருபிறப்பு எனப்படும். உபநயனம் என்பது பற்றி "முந்நூல் சாத்தி" (152) என்ற விடத்துரைத்தவும், பிறவும் பார்க்க. சிறப்பு - உயர்வு. விசேட தீக்கையாற்றுன் இருபிறப்பின்றன்மை வருமென்பது சித்தாந்த சாராவலி.

மும்மைத்தழல் ஓம்பிய நெறி - மூத்தீ என்பன ஆகவனீயம் முதலாக் எண்ணப் பட்ட மூன்று. இவை மறையோர் மனையில் நித்தியமாக வளர்க்கப்படத்தக்கன. "எரி மூன்று" (354), "ஆகுதிகள்" (1064) என்ற இடங்களிலும் பிரமண்டு முரைத் தவை பார்க்க. தழல் - தீக்கடவுள். இரண்டு முகங்களையும், ஏழுகைகளையும், மூன்று கால்களையுமுடையவர் என்று சொல்லப்படுபவர். அவ்விய கவ்வியமாகிய இரண்டுக் கும் இரண்டு முகங்கள் ஆவன ; அவ்வியம் தேவர்க்கும் - கவ்வியம் பிதிரர்க்கும் கொடுக்கப்படுவன ; ஏழு கோடி மகா மந்திரங்கள் தேவர் முதலிய ஏழுவகையினர்க்கும் கொண்டு கொடுக்கும் கைகளெனப்படுவன ; (ஏழுகோடி - மந்திரங்களில் சுவாகா முத லாக உள்ள ஏழு முடிபுகள்); மூவுலகங்களும் செல்வன மூன்று கழல்கள். "எண் ணிறந்த கடவுளருக் கிடுமுணவு கொண்டேட்டும், வண்ணவெரி வாயின்கண் வைத்த தென" (796) என்ற விடத் துரைத்தவையும் பார்க்க. "இருமுகங் கழன்மூன் றேழுகைத்தலம்" என்ற (சாட்டியக்குடி - 5) திருவிசைப்பாவும் கருதுக.

நான்கு வேதம் - இருக்கு முதலாக வியாசர் வகுத்த நான்கு வேதங்கள். வியாசர் இவ்வாறு வகுக்குமுன் இவை தைத்திரீய முதலாக நான்காகச் சொல்லப்பட்டன என்ப. முன்னர் மூன்றுகவும் சொல்வர்.

முறை பயிலுதலாவது - பதம், சடை, கிரமம், கனம் ஆகிய முறைமையிற் பயிலு தலும், காலந்தெரிந்து பயிலுதலுமாம். "இருபிறப்பாளர் பொழுதறிந்து நவல" (திருமுருகு) என்றதும் காண்க.

ஐந்து புலனும் தம்மைப் பின்செல்லும் தகையார் என்க. புலன் வழியே தாம் செல்லாமல் தம் வழி அவற்றை நிறுத்தினர். "உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்" (குறள்), "மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத்து", "ஆட்டுத் தேவர்தம் வழியொழித்து" (திருவாசகம்), "தருமந்தன் வழிச்செல்கை" (29) முதலியவை காண்க.

அறுதொழிலின் மெய்ம்மை ஒழுக்கம் - அறுதொழிலாவன : ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பர். மெய்ம்மை ஒழுக்கம் என்றது இந்த அறுதொழிலிலும் உண்மை நிலையில் ஒழுகுதல் ; அஃதாவது உண்டிப் பொருட்டானும் அது போன்ற வேறு காரணங்களானுமன்றி இறைவன் சாட்சியாய் அவ்வொழுக்கத் தைப் பாதுகாத்தற் பொருட்டாகவே அத்தொழிலின் ஒழுகுதல்.

மறையோர் விளங்குவது - மறையோர்கள் நிறைந்து விளங்கும் ஊர். "தந்தகை மைக் கேற்றதனி யிடங்கண் மேவி" (1180) என்றபடி பற்பல குலபேதத்தரும் தனித்தனி அங்கங்கு இடம் பெற்று வாழும் நகரங்களும், அவ்வாறன்றிச் சீரூர்களாய் ஒரே குலத்தவர் தனியாக வாழ அமைக்கப்பட்ட நகரங்களும் என்று ஊர்கள் இருவகைப்படும். இவ்வாறு தனி மரபினர்க்கென்று ஊர்கள் அமைப்பது முன்னுளி லும் இக்காலிலும் வழக்காகும். சேய்ஞலூர் - மறையோர் தனித்துக் குடியிருக்கை கொண்டவூர். அக்கிரகாரம் என்பர் ; இது அகரம் என்று மருவி வழங்கும். மறைய வர்க்குத் தனியிருக்கைகளுடைய ஊர்கள் அமைப்பதும் முன்னுள் அரசர் முதலியோர் செய்துவந்த தருமங்களுள் ஒன்றாகும். அது சதுர்வேதி மங்கலம் என்ற பெயராற் பழங் கல்வெட்டுக்களில் அறியப்படுகின்றது. இச்சரிதமுடைய நாயனார் மறைச்சிறுவ ராதலும் உன்னுக. மறையோர் சிறப்புப்பற்றியே 1 முதல் 6 வரை பாட்டுக்களால் நகரச் சிறப்புக் கூறிய தகுதியும் கண்டுகொள்க. இவ்வாறே ஆளுடையபிள்ளையார் புராணத்துக் கூறப்பட்ட நகரவளங்களும் பிறவும் இங்கு நினைவுகூர்க.

இப்பாட்டு ஒன்றுமுதல் ஏழுவரை முறையாக அடுக்கிவரும் எண்ணலங்காரம் என்ற அணிபெற அமைக்கப்பட்டதாம். "ஆழியொன்று" (339) என்ற திருக்கோவை யாரும் எதிர்முறையாக வரும் "மணங்கமழ்" (புறநீர்மை - ஓமாம் புலியூர் - 6) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரமும் காண்க.

விளங்குவது அவ்வூர் - என்று வருவித்து முடிக்க.

விளங்குபதி—என்பதும் பாடம். 2

1208. கோதின் மான்மறைப் புரிமுந்நூல் குலவு மார்பிற் குழைக்குடுமி
யோது கிடைசூழ் சிறுவர்களு முதவும் பெருமை யாசானும்
போதின் விளங்குந் தாரகையு மதியும் போலப் புணர்மடங்கண்
மீது முழங்கு முகிலோதுங்க வேத வொலிகண் முழங்குவன. ங

(இ - ள்) வெளிப்படை. குற்றமற்ற மான்தோலுடைய மூப்புரி நூலணிந்த மார் பினையும், குழைக்குடுமியினையும் உடைய வேதம் ஓதுகின்ற கூட்டமாய் நிறைந்த சிறுமாணவர்களும், அவர்களுக்கு வேதத்தை உதவும் பெருமையுடைய ஆசிரியனும், இராப்பொழுதில் விளங்கும் தாரகைகளும் சந்திரனும் போலப் பொருந்துகின்ற மடங்களில், அவற்றின்மேல் உற்றிக்கின்ற முகில்கள் ஒதுங்கும்படி வேத ஒலிகள் முழங்குவனவாகும்.

(வி - ரை) மீது...முழங்குவன - வேதமோதும் மடங்கள் மேகந் தவழும்படி உயர்ந்துள்ளன ; அங்கு ஓதுங்கும் மேகங்களினுடைய ஒலிகளின் மேல் ஓங்கி அந்த மடங்களினின்று பெருகும் வேத ஒலிகள் மிகுந்துள்ளன ; வேதங்கள், யானைப்பிளிறல்

போன்றது எனப்படும் நிஷாதம் என்ற உயர்ந்த சுரங் கலந்து மாணவர் பலர் கூடி ஓதும் போது மேக ஒலிக்கும் மேற்பட ஓங்கி முழங்குவன என்பதாம். ஓதுங்க - மேற் செல்லமாட்டாது ஒருபுறம் தங்க என்க. சுர ஒலிக்குத் தம் ஒலி தாழ்ந்தமையால் வெள்கி ஒருபுறம் ஒதுங்க என்று தற்குறிப்பேற்ற வணி பெற நின்ற குறிப்பும் காண்க. 81, 834 பார்க்க.

சிறுவர்களும்...புணர்மடங்கள்-சிறுர் பலரும் ஆசான் ஒருவருமாதலின் தாரகை யும் மதியும்போல என்றார். சூழ் - சந்திரனைத் தாரகைகள் சூழ்ந்திருப்பதுபோல ஆசானை மாணவர் சூழ்ந்திருப்பர் என்பது.

போதின் விளங்கு தாரகையும் மதியும்போல - போதின் - இராப்பொழுதில். பொழுது என்பது போது என நின்றது. தாரகையும் மதியும் பகற்போதில் ஒளி செய்யமாட்டா. ஆசான் - மாணவ ரிடைப் பொருத்தம் தண்ணளியும் ஒண்மையும் நிலவப் பெறுதலால் வெய்யவன் நிலவும் பகற்போதில் உவமை கூடாதாயிற்று. அன்றியும், சிற்றொளிப் பொருள்கள் பலவும் பேரொளிப் பொருள் ஒன்றும் ஒளி விளங்க வேண்டப்படுதலால், பிற ஒளிகளெல்லாவற்றையும் தன்னுள் அடக்கி ஒளி தராமற் செய்து ஞாயிறு தானே தனியரசு செலுத்தும் பகற்பொழுது இங்கு உவமைக் குப் பொருந்தாததாயிற்று. இவை குறிக்க (இராப்)போதின் விளங்கு என்றார்.

அளவாற் சிறியவையாய்க் காணப்படினும் தாரகைகளும் மதியினைப் போன்ற தனி ஒளிப்பொருள்களாதலின் ஆசானைப் போலவே தனித்தனி அறிவொளியுடைய உயிர்ப் பொருள்களாகிய சிறுவர்க்கு ஏற்ற உவமையாயின. ஒளி யளவின் பெருமை சிறுமைகளும் உவமைக்கேற்ற தன்மை தந்தன. மதி ஒளிவிடும் காலத்தில் தாரகை கள் விளக்க முறுதலால் ஆசானுல் சிறுவர் விளக்கம் பெறுதலும் பெறப்படும்.

அன்றியும் மதி, கோள்களுள் ஒன்றுதலின், போதின் இடையீடின்றி ஒளி நில வும் பொருளாமென்பதும், தாரகைகள் அவ்வாறன்றி விட்டுவிட்டு ஒளியிமைப்பன என்பதும் இங்கு இவ்வுவமைக்குச் சுவை தந்தன. "சேண்விளங் கியற்கை வாண் மதி கவைஇ, யகலா மீனி னவிர்வன விமைப்ப" (முருகு - 87-87) என்றதும், அவ் விடத்து நச்சினர்க்கினியர், மீன் - உரோகிணி முதலியன. வியாழமும் வெள்ளியு மாம் என்றதும் காண்க. சிறுவர் - முன் பாட்டிற் கூறிய மறையவர் மக்கள்.

புணர்தல் - இங்கு உணர்வொளியால் கலத்தல் குறித்தது. தாரகை மதிஒளி வீசும்போது விளங்கினும் தாந்தாமே தனித்தனி ஒளிப்பொருள்களாதலும் குறிக் கத்தக்கது.

சிறுவர்களும் - ஆசானும், தாரகையும் மதியும்போலப் புணர் என்றது வினை யும் மெய்யும்பற்றி எழுந்த உவமங்கள். சிறுவர் தாரகைபோல, ஆசான் மதிபோல என்று நிரனிரையாகக் கூட்டிக்கொள்க.

ஓதுகிடை - வேதம் பயிலும் சிறுவர் கூட்டம். "மல்கு பெருங்கிடை" (1063), "வேதமுங் கிடையும்" (81) என்றவை பார்க்க.

உதவும் பெருமை - சிறுவர்க்கு வேதத்தை உதவும் பெருமை. வேதம் வரச் செய்யும் தன்மை.

மான்தோல் - முந்நூல் - குடுமி - இவை மறைத் சிறுவர்களாகிய பிரமசாரிகள் என்பார்க் குரிய அடையாளங்கள். முந்நூன் மார்பும் குடுமியும் உடைய சிறுவர் என்க.

கோதில் மான்தோல் - கோதில் - என்றது பிரமசரிய நிலைக்கு உதவும் பண்பி னலும் சிறப்பினலும் இறந்த பிராணியின் தசை சம்பந்தப்பட்ட தோல் என்ற குற்ற மில்லாத என்க. மான்தோல் தூய்மையுடையதென்பதும் மரபு.

தழைக்குடுமி - மெல்லிய புன்மயிர் கொண்ட குடுமி. குறுகிய நீளமுடையதாய் அசையும் குடுமி என்றலுமாம்.

சிறுவர்களும் என்றது இப்புராணமுடைய நாயனார் இச்சிறார் கூட்டத்தினுள் ஒருவராய்ப் பயின்ற பண்பு குறிக்கச் சிறப்பித்தபடியாம்.

மடங்கள் - வேதம் பயில் இடங்களைப்பற்றி 1063-ல் உரைத்தவை பார்க்க.

புடைசூழ்—என்பதும் பாடம். 3

1209. யாக நிலவுஞ் சாலைதொறு மறையோ ரீந்த வவியுணவின்
பாகதுகர வருமாலு மயனு மூரும் படர்சிறைப்புண்
மாக மிகந்து வந்திருக்குஞ் சேக்கை யெனவும், வானவர்கோ
ஞாக மணையுங் கந்தெனவு நாட்டும் யூப வீட்டமுள. சு

(இ - ள்) வெளிப்படை. யாகங்கள் செய்யப்படுகின்ற சாலைகள் தோறும் மறையவர் கொடுத்த அவிப்பாகத்தை உண்ணுதற்கு வருகின்ற மாலும் பிரமனும் ஏறி வருகின்ற படரும் சிறகுகளையுடைய (கருடனும் அன்னமும் ஆகிய) பறவைகள் ஆகாயத்திலிருந்துவந்து தங்குதற்குரிய இருப்பிடம்போலவும், (அவ்வாறே வரும்) தேவேந்திரனுடைய (ஊர்தியாகிய ஐராவதம் என்னும்) யானையைக் கட்டுந் தறிபோலவும், நாட்டப்படும் யூபத்தம்பங்களின் கூட்டம் உள்ளன.

(வி - ரை) யாக நிலவும் சாலை - வேள்விச் சாலைகள். யூபம் - வேள்விப் பசுவைக் கட்டும் தம்பம். ஓமத்தறி. சேக்கை - கூடு - இருப்பிடம் - பறவைகள் தங்குமிடம். "பைம்பொழிற் சேக்கைக ணேக்கினவாற், பகலோங் கிருங்கழி வாய்க்கொழு மீனுண்ட வன்னங்களே" (188) என்ற திருக்கோவையாரும், "புள்ளினம் வைகு சேக்கைகள் மேற்செல" (304) என்றதும் காண்க. கந்து - யானையைக் கட்டும் தறி. "யூப வேள்விப் பெரும்பெயர்ச்சாலை" (77) என்றதும் காண்க.

யூப ஈட்டம் சேக்கை எனவும் கந்து எனவும் உள - என்க. வேள்விகளில் பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களுக்கு அவிப்பாகம் தரப்படும்; அதற்காக அவர்கள் வரும்போது தங்கள் தங்கள் ஊர்திகளில் ஏறி வருவார்கள்; அவை வேள்விச் சாலைகளின் பக்கத்திற் தங்கவேண்டுமாதலின் யூபத்தம்பங்கள் தங்குதற்கு உதவுவன போன்றிருந்தன என்பது கருத்து. யூபத்தம்பங்களின் உயர்ந்த அகன்ற உச்சியிடங்கள் மேலிருந்து வரும் பறவைகளாகிய கருடன் அன்னம் என்ற ஊர்திகள் தங்குமிடம் போலவும், அடியகன்ற யூபம் கீழ் ஊர்ந்து வரும் யானை கட்டும் தறிபோலவும் உள்ளது என்க. உம்மைகள் எண்ணும்மைகள்.

ஒரு பொருளையே இரண்டு பொருளுக்கு உவமை ஆக்கினர். மெய்பற்றி வந்த உவமைகள். இப்பாட்டு மறையவர் வேள்வி குறித்தது.

படர் சிறைப்புள் - புட்கள் கருடனும் அன்னமும். புள் - பன்மை குறித்த ஒருமை. நாகம் - யானை - ஐராவதம்.

ஈந்த அவி உணவின் பாகம் - இங்குச் சிவபெருமானைக் குறித்துச் சொல்லாத காரணமாவது, சிவனே வேள்விகட்கெல்லாம் முதல்வராகலானும், சிவனையன்றிச் செய்யும் வேள்விகள் தக்கன் வேள்விபோல முற்றுப்பெறாது சிதைவுபட்டொழியுமாகலானும், சிவபெருமானுக்கு முதற்கண் அவிகொடுத்து எழுந்தருளுவித்த பின்னரே ஏனைத் தேவருக்கு அவியுணவு தருதல் மரபாதலானும், விட்டுணு பிரமன் இந்திரன் முதலினோர் சிவனுக்குரிய வேள்விகளைக் காத்தற்பொருட்டே அமைவார்களாதலானும் சிவனுக்கு அவிகொடுத்தல் கூற வேண்டாதாயிற்று. ஈந்த - எனவும், அவி உணவின் பாகம் எனவும் கூறிய குறிப்பும் சிவனுக்கு அளித்து எஞ்சியதே இவர்களுக்கு

அளிக்கப்பெறுகின்றது என்றதாம். இவ்வாறு வேள்வியினிறுதியில் இவர்களுக்கு அவி தரப்படுதலின் அதுவரை இவர்கள் காத்திருக்க வேண்டியவர்களாதலால் இவர்களது ஊர்திகளுக்கும் அதுவரை தங்குமிடம் வேண்டுவதற்கும் என்பதும் இப்பாட்டின் குறிப்பாதலும் கண்டுகொள்க. 4

1210. தீம்பா லொழுகப் பொழுதுதொறு மோம தேனுச் செல்வனவுங்,
தாம்பா டியசா மங்கணிப்போர் சமிதை யிடக்கொண் டணைவனவும்,
பூம்பா சடைநீர்த் தடமூழ்கி மறையோர் மகளிர் புகுவனவு
மாம்பான் மையினில் விளங்குவன வணிநீண் மறுகு பலவுமுள. 5

(இ - ள்) வெளிப்படை. ஓமங்களுக்குப் பஞ்சகவ்வியத்தின் பொருட்டு வளர்க்கப்படும் பசுக்கள் இனிய பால் ஒழுகும்படி பொழுதுதோறும் செல்வனவும், தாங்கள் பயின்ற வேத சாகைகளைக் கணித்துக் கொள்வோராய் மாணவகர்கள் ஓமத்துக்குரிய சமிதைகளைக் கொண்டு அணைவனவும், பூக்கள் நிரம்பிய தடங்களில் நீர்மூழ்கி மறையவர் மகளிர்கள் புகுவனவும் ஆம் பான்மையினில் விளங்குவனவாகிய நீண்ட தெருக்கள் பலவும் அங்ஙகரில் உள்ளன.

(வி - ரை) செல்வனவும், அணைவனவும், புகுவனவும் ஆம் பான்மையினில் விளங்கும் மறுகுபலவும் உள்ளன என்றபடியாம். செல்வன, அணைவன, புகுவன - செல்வதற்கும் அணைவதற்கும் புகுவதற்கும் இடமாவன என்க.

பொழுது தோறும் தீம்பால் ஒழுகச் செல்வன - என்க. மடியின் மிக நிறைதலால் கறவாமே பால் ஒழுகச் செல்வது பசுக்கள் செழித்து வளர்தற் கறிகுறியாம். அத்தகைய பசுக்கள் கன்றை நினைந்து செல்வதனலும் பால்கறவாமே ஒழுகுவதா மென்ப. இவ்வாறு பால் ஒழுகச் செல்லும் பசுக்களை இன்றும் கோயமுத்தூர்ச் சில்லா அரசாங்கத்தாரது விவசாயப் பண்ணையிலும் அவ்வாறுள்ள பிற சில இடங்களிலும் காணலாம். கறவாமே பசுக்கள் பால் பொழிதலின் வினைவாகும் இச்சரிதக் குறிப்பும் காண்க. 1235 பார்க்க.

ஓமதேனு - ஆகுதிகளுக்குப் பால் தரும் பசுக்கள். 1247 பார்க்க. தேனு - சாதி யொருமை.

தாம் பாடிய சாமம் கணிப்போர் - பாடிய - இங்குக் கற்ற என்னும் பொருளிலும், சாமம் - பொதுவாய் வேதம் என்ற பொருளிலும் வந்தன. கணிப்போர் - தாம் கற்ற வேதப் பகுதிகளை மீள மீளச் சொல்லிப் பயின்று கணக்கிடும் சிறுவர். சுரங்களினளவும் - பதம் - சடை - கிரமம் என்ற முறைகளினளவும், காலத்தினளவும் கணக்கிட்டுப் பயில்வதால் கணிப்போர் என்றார்.

கணிப்போர் சமிதை இடக்கொண்டு அணைவனவும் - நித்தியாக்கினிக்கு வேண்டும் சமிதைகளைக் கொண்டுவருதல் மறையயிலும் சிறுவர்களின் கடமைகளுள் ஒன்றாக வைப்பது முன்னுளில் மறையவர் வழக்குக்களுள் காணப்படும். ஊர் வெளியில் உள்ள வேதம் பயில் மடங்களிற் சென்று மறை பயின்ற பின்வேளையில் அச் சிறுவர் அங்குச் சமிதை சேகரித்து மனைக்குத் திரும்பும்போது, காலத்தை வீணுக்காமல் தாம் கற்ற மறைப்பகுதிகளைக் கணித்துக்கொண்டே செல்வர் என்பது. வீண் பேச்சுப் பேசி வீதி செல்லும் இந்நாள் மாணவகர் இதைக் கணிப்பார்களாக.

பூம்பாசடை...புகுவன - மறையோர் மகளிர் நகர்ப்புறத்தில் உள்ள பூம் பொய்கைகளில் சென்று குளித்து நீர்கொண்டு மனைக்கு வருதலும் முன்னுள் மறையவர் வழக்குக்களுள் ஒன்றாகும். மேற்சொல்லிய இவ்வழக்குக்கள் இந்நாளில் அருகி வருதல் வருந்தத்தக்கது.

மறையவர் பதியாதலின் முன்பாட்டில் வேள்விச் சாலைகளைப்பற்றிக் கூறிய கருத்தைத் தொடர்ந்தே, இங்குக் கூறிய மூன்றும் மறையவர் மனையில் வளர்க்கும் மூத்தீ வேள்விக்கான பகுதிகளாமென்பதும் கண்டுகொள்க.

ஆம் பான்மை - செல்வனவும் அணைவனவும் புகுவனவும் ஆகும் பான்மை பெற்ற மறுகுகள் என்க. பான்மை - நற்பண்பு - நல்ல தன்மை.

அணி நீள் மறுகு - மறுகுகளுக்கு அணியாவது இடமகன்றனவாய், இருபுறமும் குளிர்ந்த நன்னிழலுடையனவாய், செல்வ மனைக ளிரண்டு புறமும் நிறைந்தனவாய், மேடு பள்ளங்களும் கோணை வளைவு முடுக்குக்களும் இன்றிச் செல்வதற்கு வசதியாய் இருத்தல். நீண்மறுகு - பிரிவும் வளைவுமின்றி நெடுந்தூரம் செல்லுதல். இத்தன்மைகள் இங்ஙனும் நல்ல நகர அமைப்பில் தெருக்கள் வகுப்பதில் கருதவுள்ள தகுதிகளாகும்.

1211. வாழ்பொற் பதிமற் றதன்மருங்குமண்ணித் திரைகள்வயல்வரம்பின்
ழுழ்விற் றரளஞ் சொரிகுலைப்பாற் சமைத்த யாகத் தடஞ்சாலை
சூழ்வைப் பிடங்க ணெருங்கியுள தொடங்கு சடங்கு முடித்தேதறும்
வேள்வித் தலைவர் பெருந்தேர்கள் விண்ணே றேறும் விமானங்கள்.

(இ - ள்) வெளிப்படை. வாழ்வுடைய அந்த அழகிய பதியின் பக்கத்தில் மண்ணியாற்றின் அலைகள் வரம்புகளினடியில் முத்துக்களைச் சொரியும் கரையின் மருங்கு அமைக்கப்பட்ட இடமகன்ற வேள்விச்சாலைகளைச் சூழ்ந்த வெளியிடங்களில், அங்குத் தொடங்கிய யாகச் சடங்குகளை முடித்துச்செல்லும் வேள்வித் தலைவர்களின் பெருந்தேர்களும் அச்சடங்குகளில் வந்து அவிப்பாகமுண்டு செல்லும் தேவர்கள் ஏறிச் செல்லும் விமானங்களும் நெருங்கி உள்ளன.

(வி - ரை) முன்னிரண்டு பாட்டுக்களின் கருத்தினைத் தொடர்ந்து யாகசாலைகளின் இருக்கையும் சிறப்பும் வேள்வியின் முடிபும் கூறுகின்றார்.

பதியின் மருங்கு மண்ணியாறு ஓடுகின்றது ; அதன் அலைகள் புரண்டு பரவும்படி இரு கரையிலும் அடுத்து வயல்கள் இருக்கின்றன ; வயல் வரம்புகளை யடுத்து இடப் பரப்புடைய கரைகள் உண்டு ; நகர்ப்புறத்தே உள்ள அந்தப் பரந்த கரைகளில் வேள்விச்சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன ; அவற்றினைச் சூழ வைப்பிடங்களாகிய வெளியிடங்கள் உள்ளன ; அந்த இடங்களில் சடங்குமுடித்து வெளியேறும் வேள்வித் தலைவர்களின் தேர்களும், வேள்விக்கு வந்த விண்ணோர்களின் விமானங்களும் இடம் பெற்றிருந்தன என்பதாம்.

வேள்விச்சாலைகள் அமைக்கத்தக்க இடங்கள், நகர்ப்புறத்தில் அதன்பக்கத்தில் ஆறு, வயல், குளம் இவைகளை அடுத்த பரந்த கரைகளாம் என்பதும், யாகசாலைகளைச் சூழத் தேர்கள் நிற்கவேண்டிய அகன்ற வெளியிடங்கள் வேண்டப்படுவன என்பதும், தேர் ஏறிச்செல்லும் பெருந்திருவுடையோரும் தலைவர்களாய் வேள்விகளை இயற்றுவிப்பர் என்பதும் பெறப்பட்டன. தேர்கள் - தரையிற் செல்வனவும், விமானங்கள் - ஆகாயத்திற் செல்வனவும் ஆம். தேர்கள் - விமானங்கள் - வைப்பிடங்களில் - நெருங்கியுள - என்று முடிக்க. எண்ணும்மைகள் தொக்கன. குலை - கரை. வைப்பிடம் - தங்கவைக்குமிடம். Place to park cars & carriages என்பர் நவீனர். 6

1212. மடையிற் கழுநீர் செழுநீர்சூழ் வயலிற் சாலிக் கதிர்க்கற்றை
புடையிற் சுரும்பு மிடைகமுகு புனலிற் பரம்பு பூம்பாளை
யடையிற் பரிலுங் தாமரைநீ லலரிற் றுயிலுங் கயல்கள்வழி
நடையிற் படர்மென் கொடிமௌவ னனையிற் றிகழுஞ் சினைக்காஞ்சி,

(இ - ள்) வெளிப்படை. மடையில் செங்குவளைகளும், செழிப்புடைய நீர் சூழ்ந்த வயலின் செங்நெற் கதிர்க்கற்றைகளும் பக்கத்தில் வண்டுகள் மொய்க்கும் கழுகிற் பூத்த நீர்ச்செழிப்பினால் மிகுந்த கழுகம் பூம்பாளைகளும், இலைகள் மிகுந்த தாமரைகளின் நீண்ட பூக்களில் துயிலும் கயல் மீன்களும், நடக்கும் வழியில் (மேற் பந்தர் போலப்) படர்ந்த மெல்லிய முல்லைக்கொடிகளும், அரும்புகளால் விளங்கும் கிளைகளையுடைய காஞ்சி மரங்களும் (உள்ளன).

(வி - ரை) அங்கங்கும் உள்ளன என்ற பயனிலை வருவிக்க.

மடையில் கழுநீரும் - வயலில் சாலியும் - புடையில் கழுகுப் பூம்பாளையும் - அல்லில் கயல்களும் - நடையில் கொடிமௌவலும் கிளைக்காஞ்சியும், உள்ளன என்று கூட்டி உரைத்துக்கொள்க.

செழுநீர் - செங்குவளை என்பாருமுண்டு. கழுநீர் - செங்குவளை

செழுநீர்சூழ் என்றதனால் நீரின் செழிப்பினால் சாலிக்கதிர்கள் கற்றையாக வளர்தற்குக் காரணங்காட்டியபடி. கதிர்க்கற்றை - நெற்கதிரின் நீளமும் நெல்மணிகளின் செறிவும் குறித்ததுடன் அவ்வகையான கதிர்கள் ஒரு தூற்றில் காண உள்ளதும் குறித்தது.

புடையில் - கழுது - பூம்பாளை - என்க. நெல்வயலின் ஓரங்களிற் கழுகுப் பயிர் உள்ளது பற்றி முன்னுரைத்தவை பார்க்க. சுரும்புமிடை பூம்பாளை எனவும், கழுதுப் பூம்பாளை எனவும் கூட்டுக. கழுகம்பாளையிற் சுரும்பு மொய்த்தல் அதில் உள்ள மலர்களின் மணமுடைய தேனை நுகர்தற்பொருட்டாம்.

அடையிற் பயிலும் தாமரை நீள் அலர் - தாமரைக் கொடிகள் இலைப்பரப்பு மிகுதியும் உடையன; நீரினுட் கொடிகள் நெருங்கிச் சுற்றியதனால் இலைகளும் நெருங்கியுள்ளன. அவற்றின் பூக்கள் ஏனை யிலைக்கூட்டத்தின் மேல் உயரக்கிளம்பிய ஒவ்வோர் நீண்ட தண்டில் அலர்வன என்றதன்மைகள் குறிக்கப்பட்டன காண்க.

தாமரை அலரில் துயிலும் கயல்கள் - கயல் மீன்களின் ஊற்றுச்சுவை நுகர்ச்சியின்ப உணர்வுடைமை கூறியபடியாம். 926-ல் உரைத்தவை இங்குக் கருதத்தக்கன.

வழி நடையில் படர்கொடி மௌவல் - சினைக்காஞ்சி - இவை நடை வழியில் நிழல் செய்யும் பொருட்டு வளர்க்கப்படுவன. மௌவல் கொடி படர்ந்துள்ள இலைச் செறிவினால் வழி நடப்போர்க்கு இளைப்பில்லாமற் செய்ய நிழலும், பூக்களால் வழி நடப்போர்க்குக் களைப்பு நீக்க நன்மணமும் தருவன. அவ்வாறே நீண்ட கிளைகளையுடைய காஞ்சி மரமும் இலைகளால் நிழலும் சினைகளால் மணமும் தருவன என்பது குறிப்பு. 1212-ல் "அணிநீண் மறுகு" என்றவிடத் துரைத்தவை பார்க்க. காஞ்சி - நீர்வளமுள்ள இடங்களிற் செழித்து வளரும் ஓர் வகை மரம். காஞ்சியைச் சாலை மரங்களாக வைத்து வளர்த்தனர் என்பதாம்.

7

1213. சென்னி, யபயன், குலோத்துங்கச் சோழன், றில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக் கியவளவர் போரே, றென்றும் புவிகாக்கு
மன்னர் பெருமா, னநபாயன் வருந்தொன் மரபின் முடிசூட்டுந்
தன்மை நிலவு பதினைந்தி னொன்றாய் விளங்குந் தகைத்தவ்வூர். அ

(இ - ள்) வெளிப்படை. அவ்வூரானது, சோழர் மரபில் அபயன் என்றும், குலோத்துங்கச் சோழர் என்றும், பெயருடையவராய்த் தில்லைத் திருவெல்லையினைப் பொன்மயமாக வேய்ந்த சோழர் போரேறும் நிகழ்ந்த அநபாயச் சோழர் அவதரித்த பழைமையாகிய மரபில் முடிசூட்டிக்கொள்ளும் தன்மையில் நீடிவருகின்ற ஐந்து பதிகளில் ஒன்றாகி விளங்கும் பண்பினையுடையது.

(வி - ரை) இப்புராணம் பாடுவித்த நன்றியின்பொருட்டு அநபாயரது அன்பின் நிறத்தை ஆசிரியர் இப்புராணத்தினுள் வைத்துப் பாராட்டிய பதினெரு இடங் களுள் இது சிறந்த இடமாகும்.

அபயன் - குலோத்துங்கன் என்ற இரண்டு பெயர்களும் அநபாயருக்கு வழங்கப் பட்டனவென்ற செய்தியும், அவர் தில்லைத் திருவெல்லியினைப் பொன்மயமாக்கினர் என்ற செய்தியும் அவரது சரித ஆராய்ச்சிக்கும், குலோத்துங்கன் என்று வழங் கப்படும் பலருள்ளும் அவர் இன்னர் என்று குறிப்பிடுதற்கும் பெருந்துணை செய் வன. "சேய வன்றிருப் பேரம் பலஞ்செய்ய, தூய பொன்னணி சோழன்", (8) என்றதும் காண்க. அநபாயரின் பெருமைகள் பலவற்றுள்ளும் அவரது திருநீற்று அன்பின் திறமும், தில்லை எல்லை பொன்மயமாக்கிய தொண்டின்திறமுமே ஆசிரியரது திருவுள்ளத்தைக் கவர்ந்தன ; ஆதலின் அவர் அவற்றைப் பல இடத்தும் பாராட்டுவா ராயினர். அன்பின்றிறம்பற்றி அநபாயருக்குத் திருநீற்றுச்சோழர் எனப்பெயர் வழங்கலாயிற் றென்பதும் அறியப்படுகின்றது. "பொருவருபே ரம்பலமும் கோபுர மும் ஆலயமும் பொன்வேய்ந் தணிமைச், சுருதியுடன் சைவநெறி தழைத்தோங்கத் திருநீற்றுச் சோழ னென்று, குருமணிமா முடிபுனைந்த குலோத்துங்க வளவன்" என்று சிதம்பர புராணமும் ; "துன்றுபுகழ்த் திருநீற்றுச் சோழனென முடிசூடி, மன்னினடந் தொழுதெல்லை வளர்கனக மயமாக்கி வென்றிபுனை யநபாயன்" என்று கோயிற் புராணமும் போற்றியன. அபயன் என்பது பல சோழரும் பூண்ட பெயர்.

குலோத்துங்கசோழன் என்பதும் பல சோழர்கள் பூண்ட பெயராகும். ஆனால் அநபாயர் என்பதே இவ்வரசர் சிறப்பாய்ப் பூண்டுகொண்ட பெயராதலின் அதனை இறுதியில் வைத்துக் காட்டினதுடன் வேறு பல இடத்திலும் அப்பெயராலேயே தம் அரசரைக் குறிப்பாராயினர் ஆசிரியர். இவர் குலோத்துங்கர் இரண்டாவதவர் என்பது இந்நாள் பல ஆராய்ச்சியாளர் கண்ட முடிவாகும். சில காலத்துக்கு முன் முதலாம் குலோத்துங்கரே இவர் என்ற கொள்கை நிலவி வந்தது. இவ்விரண்டு கொள்கையுமன்றிக் கங்கைகொண்ட சோழரே இவர் என்றதொரு புதிய கொள்கையு முண்டு. இவைபற்றி எனது "சேக்கிழார்" 12 முதல் 23 வரை பக்கங்களில் விரி வாகக் கூறியுள்ளவை காண்க. இவ்வாறன்றி இப்பாட்டில் அபயன் (1), அபயகுல சோழர் குலோத்துங்கர் (2), அநபாயர் (3) என மூன்று சோழர்களைக் குறித்ததாக உரைத்தனர் முன் உரைகாரர்கள்.

எல்லை பொன்னின் மயமாக்கிய என்றதனால் தில்லையின் எல்லைக்குள் பல இடங் கள் இவர் பொன்மயமாக்கினர் என்பது பெறப்படும். (8) பார்க்க.

என்றும் புவிகாக்கும் என்றது பேரன்பராகிய தமது அரசர் பெருமானது ஆட்சி நீடுவாழ்வதாக என்று ஆசிபுரிந்தபடியாம். இன்றும் உலகம் சைவத்திறத்தின் வாழ்ந்து நிற்பதாமென்னில் அது அநபாயரது ஆட்சியின் வலிமையா லாவதாம் என்பது மிகையாகாது. ஆதலின் என்றும் புவிகாக்கும் என்றது என்றும் திரியாத உண்மைத் திருவாக்காகும் என்க.

அநபாயன் வரும் தொன்மரபு - சோழ அரசர் மரபு. தொன்மை - வழிவழி வரும் பழமை. அநபாயர் வரும் மரபு என்றது அநபாயரது மரபின் முன்தையோரை.

முடிதுண்டும் தன்மை நிலவுபதி ஐந்து - சோழ அரசர் தமது நாட்டில் ஐந்து பகுதிகளில் முடிசூட்டிக் கொள்வது வழக்கு. அவை காவிரிப்பூம்பட்டினம், திருவாரூர், உறையூர், சேய்ஞலூர், கருவூர் என்பன.

இப்பாட்டினால் அரசர் மரபு வழக்குப்பற்றி நகரச்சிறப்புக் கூறினர்.

நீடும் தகைத்து—என்பதும் பாடம்.

*1214. பண்ணின் பயனு நல்லிசையும் பாலின் பயனு மின்சுவையுங்
கண்ணின் பயனும் பெருகொளியுங் கருத்தின் பயனு மெழுத்தஞ்சும்
விண்ணின்பயனும் பொழிமழையும் வேதப்பயனுஞ்சைவமும்போன்
மண்ணின் பயனு மப்பதியின் வளத்தின்பெருமைவரம்புடைத்தோ.

(இ - ள்) வெளிப்படை. பண்ணிற்கு பயனுகும் நல்ல இசையினையும், பாலுக்குப் பயனுகும் இனிய சுவையினையும், கண் பெற்றதற்குப் பயனுகும் பெருகும் ஒளியினையும், கருத்திற்கு உரிய பயனுகும் திரு அஞ்செழுத்தினையும், விண்ணினுக்குப் பயனுகும் பொழியும் மழையினையும், வேதத்திற்குப் பயனுகும் சைவத்தினையும் போல மண்ணிற்குப் பயனுகும் அத்தப் பதியினது வளத்தினது பெருமை அளவுடைய தாகுமோ? (ஆகாது).

(வி - ரை) உவமை முகத்தால் பல பெரிய உண்மைகளை இத்திருப்பாட்டினுல் ஆசிரியர், உலகம் பயன்பெறப் போதித்துப் புகட்டுதல் காணத்தக்கது.

பண்ணின் பயன் ஆம் நல்இசை - பண் - பாலைப்பண் முதலாயின. இது தமிழுக்கே சிறப்பாக உரிய இசையமைதி. "பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்" (குருகாவூர்-6) என்ற ஆளுடைய நம்பிகளது தேவார முதலியவை காண்க. பண்ணின் பயனும் நல்இசை என்றது இசை கூடினுலன்றி வெறும் பண் பயன்தராதென்பதாம். இசை என்பது இறைவனது புகழ்களை இசைக்கும் பொருள்கூடிய தொடர்பு. திருஇசைப்பா என்றது காண்க. இசை அல்லது இறைவன் புகழ்ப்பொரு ளுடன் கூடாதவழிப் பண் பாடுதல் வெறும் செவிக்கு ஓசை இன்பமாயொழியும் என்பதும், அது மனத்தினுட் சென்று மனத்தையும் உயிரையும் உருக்கி இறைவன் திருவடிச் சார்பு பெறுவிக்காதென்பதும் குறிப்பித்தவாறு. "பண்ணென்ற இசைபாடு மடியார்கள் குடியாக, மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன்" (சோமாரம் - புள்ளிருக்கு வேளூர் 8.) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரமும், "பண்பொருந்த இசைபாடும்" (பழந்தக்கபழனம் 5.) என்ற அப்பர் சுவாமிகள் தேவாரமும் காண்க. இச்சிறப்பினையே "பண்ணினேர்மொழி யாளுமை பங்கரோ" (திருமறைக்காடு - குறுந்தொகை) என்ற தேவாரமும், "பண்ணினேர்மொழி யாளென் றெடுத்துப் பாடப் பயன்றுய்ப்பான்" என்ற மாபுராணமும் விரித்துக் கூறுவனவாம். இறைவன் புகழோடு கூடாத வெறும் சங்கீதங்களில் ஈடுபட்டுப் பணமும் தந்து போதும் போக்கும் மாக்கள் இதனை உய்த்து உணர்ந் துய்வார்களாக.

பாலின் பயனும் இன்சுவை - "அன்னமூலத் தீம்பாலி னரியசுவைத் திஃது" (மண்சும-பட-23) என்ற திருவிளையாடற்புராணங் காண்க. பாலினை ஆட்டி அதன் பயனுகப்பெற்ற இனிய சுவையாகிய இச்சரித விளைவினைக் குறிப்பாலுணர்த்துவதும் காண்க.

கண்ணின் பயனும் பெருத ஒளியும் - ஈண்டுக் கண் என்றது கண்ணுறுப்பினை. காட்டும் ஒளியாகிய ஞாயிறு முதலிய பேரொளிப் பொருள்களும் கண்ணுக்குப் பயனுகா; காணுமொளியாகிய கண்ணொளியே கண்ணுக்குப் பயனும். "ஒளியு மிருளு மூலகு மலர்கட், டெளிவி லெனிலென் செய" என்ற திருவருட்பயனும் ஈண்டுக் கருதத்தக்கது. பெருகொளி என்றதனையே "அலர்கட் டெளிவு" என்று இத் திருவருட்பயன் குறள் வெண்பாவிற் கூறப்பட்டது. பெருத ஒளி என்றது கண்ணுக்குச் சிறப்பாகிய, சேய்மையிலும் சென்று அறியும் தன்மையினைக் குறிப்பதுமாம்.

கருத்தின் பயனும் எழுத்து அஞ்சும் - திருவைந்தெழுத்தினைக் கருதுவதற்கே கருத்து மக்களுக்குத் தரப்பட்டிருக்கின்றது என்பது உண்மைநூற் றுணிபு. "நினைக்க மடநெஞ்சம்" (தேவாரம்), "சிந்தனை செய்ய மனமமைத்தேன்" (11-ம் திருமுறை -

பொன்வண் - 92) என்பனவாதி திருவாக்குக்களால், சிவனே நினைத்தலே மனம் பெற்ற தன் பயனும் ; அல்லாதவழி கருத்துப் பெற்ற பயன் இல்லையாகும் என்பது. ஐந்தெழுத்து - சிவன்றிருநாமம். "ஆலப் படுகரும்பின் சாறு போல அண்ணிக்கு மைந்தெழுத்தி னுமத் தான்காண்" (திருத்தாண்டகம் - வீழி - 2) முதலியவை காண்க. ஐந்தெழுத்தைக் கருதுவதாவது : அவற்றின் உள்ளீடாய் அறிவிக்கப்படும், சிவன் உயிர்களுக்குச் செய்யும் பெருங்கருணையை எண்ணி உருகுதல். "விதி எண்ணு மஞ் செழுத்தே" என்பது ஞானசாத்திரம்.

**விண்ணின் பயனும் பொழி மழையும்** - ஆகாயம் ஏனை எல்லாவற்றுக்கும் இடம் கொடுக்கும் என்ப. அவ்வாறு விண் தனது தொழிலைச் செய்வதனில் மழைக்கு இடங் கொடுத்த அளவானே அது பயனுடைத்தாகும் என்பது. இக்கருத்துப் பற்றியே "வானின் றுலகம் வழங்கி வருதலால்", "விசும்பிற் றுளிவீழி னல்லால்" என்ற திருக்குறள்களும் போந்தன. "வான் சிறப்பு" என்ற கருத்துமிது.

**வேதப்பயனும் சைவம்** - வேதத்தின் முடிந்த பொருள் சைவம்.சைவம் சிவாகமப் பொருளே குறித்தது. "இனி அதர்வசிகை முதலிய உபநிடதங்களிற் கூறும் பொருளுஞ் சிவாகமப் பொருளே நோக்கும் வழிச், சூத்திரமும் பாடியமும்போலத் தூலாருந்தி முறைமையாமாகலின், வேதம் பொது நூலெனவும், ஆகமஞ் சிறப்புநூலெனவுங் கூறப்பட்டன. "வேதாந்தத் தெளிவாஞ் சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்றும்" (சிவப் - பாயி - 7) என்றதனாலும் இம்முறைமை தெரிந்து கோடற்கென்க. **வேதப் பயனுஞ் சைவமும்போல்** என்பதும் அது" என்று எமது மாதவச் சிவஞான யோகிகள் சிவஞானமாபாடியச் சிறப்புப் பாயிரத்தினுள் இதனை விளக்கியருளியது காண்க. 1033 - 1037-ல் உரைத்தவையும் பார்க்க.

**மண்ணின் பயனும் அப்பதி** - **மண்** - இந்நிலவுலகம் ; மண்ணுலாகிய உலகம். பிருதுவியண்டம் என்பர் வடவர். இந்தப் பதியில்லையாயின் மண்ணுலகம் வேறெல்லாமிருந்தும் பயனற்றதாகும் ; இப்பதியே மண்ணுலகத்துக்குப் பயன் தருவது என்பதாம். போக நிலங்களாகிய ஏனை மேல் கீழ் உலகங்கள் போலல்லாது, இந்நிலவுலகமாகிய புவனியானது உயிர்கள் இங்குவந்து பிறந்து சிவனைப் பூசித்து முத்தியடைதற்கேதுவாகிய வுலகமாம். "இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற வாறு" (திருப்பள்ளியெழுச்சி - 10) என்ற திருவாசக முதலியவை காண்க. அவ்வாறு வந்து பிறந்து சிவபூசை செய்யும் உயிர்க்கு அந்தப் பூசையின் பயனை உதவும் சண்டீச நாயனாரைப் பெறும் பேறுடையது இப்பதி ; ஆதலின் இதனை **மண்ணின் பயனும் பதி** என்றார்.

உலகத்துயிர்க்கெல்லா மிதுவேபொருள் என்று சிவபூசை செய்து வழிகாட்டி முருக்கக்கடவுள் இப்பதியை நிறுவினர் என்பதனைச் "சேந்தனளித்த" (1206) என்று முதலிற் கூறிச், அச்சிவபூசைப் பயனை அளிக்கும் தன்மையை இங்குக் கூறி, நகரச் சிறப்பினை வளத்தின் பெருமை வரம்புடைத்தோ ? என முடிக்கு மியைபு காண்க.

பண்ணினுக்குப் பயன் என்பனவாதியாக எல்லா இடத்தும் நான்கனுருபுகள் விரித்துக்கொள்க.

**போல்** - நல் இசை - இன்சுவை - பெருகொளி - அஞ்செழுத்து - பொழிமழை - சைவம் என்ற ஆறனையும்போல அப்பதி உற்றது என்பதாம். **பயனுதல்** உவமத்துக்குப் பொதுத்தன்மை. பயன்பற்றி வந்த உவமம். அப்பதியாகிய ஒரு உவமேயப் பொருளுக்கு ஆறு உவமானப் பொருள்கள் தந்தது அப்பொருளின் சிறப்புக் குறித்தற்கு. இது பல பொருளுவமை என்னும் அணியின் பாற்படும். அன்றியும் பண்ணின் பயன் இசை-கருத்தின் பயன் அஞ்செழுத்து-வேதப்பயன் சைவம் என்ற உண்மைகளை வற்புறுத்திப் புகட்டுதலும் ஆசிரியர் கருத்தென்க. இப்புராண முழுமையும் அறுசீர்க்கழிநெடில் விருத்தமாக யாத்து உரைத்ததும் ஒரு சிறப்புப் பற்றியதென்க.

இனிப், பண்பொருந்த இசை பாடியும், இறைவரைப் பாலின் திருமஞ்சனமாட்டியும், கண்ணுரைக் கண்டும், அவனது திருவைந்தெழுத்தை எண்ணுர எண்ணியும், விண்ணின் வீழும் மழையானிறைந்த குளிர்புனல்கொண்டு அருச்சித்தும், வேதாகம நூல் வழிச் சிவபூசை செய்தால் அதன் பயனை நிலவுலகத்தாருக்கு அந்தத் தலம் தருகின்ற பெருமையுடையதாம் என்ற தொடர்பாகிய உள்ளுறைப் பொருளும் படுவது காண்க.

வரம்புடைத்தோ ? ஓகாரம் எதிர்மறை. 9

1215. பெருமை பிறங்கு மப்பதியின் மறையோர் தம்மூட் பெருமனைவாழ்
தரும நிலவு காசிபகோத் திரத்துத் தலைமை சான்மரபி
லருமை மணியு மளித்ததுவே நஞ்சு மளிக்கு மரவுபோ
லிருமை வினைக்கு மொருவடிவா மெச்ச தத்த னுளனுனன். கo

(இ - ள்) வெளிப்படை. பெருமையால் விளங்கும் அந்தப் பதியில் மறையவர்களுள்ளே சிறந்த இல்வாழ்க்கைக்குரிய அறங்களில் நிலைத்த காசிப கோத்திரத்தில், தலைமையாகிய குடியில், அருமையாகிய மணியையும் கொடுத்து அதுவே நஞ்சினையும் கொடுக்கும் பாம்பினைப்போல, நல்வினை தீவினை என்ற இருவினைகளையும் செய்தற்கு ஒரு வடிவாய் வந்தவனுகிய எச்சதத்தன் என்பவன் ஒருவன் உள்ளவனுனன்.

(வி - ரை) மறையோர் - வேதியர் என்ற பெரும்பிரிவு.

காசிப கோத்திரம் - மறையோர்களுள் நிலவும் கோத்திரங்கள் என்று சொல்லும் பல உட்பிரிவுகளுள் ஒன்று. இது காசிபர் என்ற இருடியிடத்திலிருந்து தொடர்புகொண்டு வருவதுபோலும். கோத்திரத்துத் தலைமைசால் மரபு - கோத்திரம் என்ற உட்பிரிவினுள் வரும் சிறு பிரிவு. பிரவரம் என்று வழங்குவர்.

அருமை...அரவுபோல் - அரவு மணியினையும் நஞ்சினையும் தருவது. எச்சதத்தன் விசாரசருமர் என்னும் நற்புதல்வரைப் பெறுதலாகிய நல்வினையும் பெற்றுன் ; அவர் செய்த சிவபூசைக்கு இடையூறு செய்தலாகிய சிவாபராதஞ் செய்யும் தீவினையினையும் பெற்றுன் ; ஆதலால் இருமைவினைக்கு மொருவடிவாம் என்றார். பயன்பற்றி வந்த உவமம். நன்மை தீமை என்ற மாறுபட்ட செயல்களிரண்டும் ஒரு சேர ஒரு பொருளிடத்தே காண உள்ளதொரு உவமப்பொருள் இந்த இடத்துக் கேற்பக் கொண்டு உரைத்தது ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகளது தெய்வக்கவி மாண்புகளுள் ஒன்று.

எச்சதத்தன் - எச்சம் - யக்ஞம் என்ற வடமொழி தமிழில் எச்சம் என வந்தது. "தக்கனை யுமெச்சனையும் தலையறுத்து" (சாழல் - 5) என்ற திருவாசகமும், "தக்கனது பெருவேள்விச் சந்திரனிந் திரனேச்ச னருக்க னங்கி, மிக்கவிதா தாவிஞ்ஞூம் விதிவழியே தண்டித்த விமலர்" (மேகரா - முதுகுன்றம் - 3) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரமும் பிறவும் காண்க. வேள்வி செய்யும் மரபில் வந்தானுதலால் இப்பெயரால் வழங்கப்பட்டனன். தத்தன் - முன்னுளில் மறையோர் பூண்ட சிறப்புப் பெயர்களுள் ஒன்று.

பெருமனைவாழ் தருமம் நிலவு - சிறந்த இல்லறத்தில் நிலவுகின்ற. இல்லறத்தின் பெருமையாவது "இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றி னின்ற துணை" யாவதும், "துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கும்" துணையாவதும், "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க ருனென்றாங், கைம்புலத்தா ரோம்" புதலும் ஆம். தம் பொருட்டன்றிப் பிறர்க்குதவி செய்தற்காகவே மனையறமாகிய இல்வாழ்க்கை உளதாகுமென்று வகுத்தனர் பெரியோர்.

1216. மற்றை மறையோன் றிருமனைவி வாய்ந்த மரபின் வந்துதித்தாள் ;
சுற்றம் விரும்பு மில்வாழ்க்கைத் தொழிலா ளுலகிற் றுணைப்புதல்வற்
பெற்று விளங்குந் தவஞ்செய்தாள் ; பெறும்பே றெல்லாப் பயன்பெறு
பற்றை யெறியும் பற்றுவரச் சார்பா யுள்ள பவித்திரையாம். [வாள் ;

(இ - ள்) வெளிப்படை. அந்த மறையவனுடைய திருமனைவியார், அவன் மணஞ்செய்தற் கியைந்த மரபில் வந்து பிறந்தவர் ; சுற்றந்தழுவுதலே விரும்புகின்ற தன்மையில் இல்வாழ்க்கை நடத்தும் தொழிலுடையவர் ; உலகில் துணையாக உள்ள புதல்வர்ப் பேற்றைப் பெற்று அதனால் விளங்கும் தவத்தை முன் செய்தவர் ; யாவரும் புதல்வரால் பெறுகின்ற பேறுகளுக்கெல்லாம் எல்லையாயுள்ள பயனைப் பெறுபவர் ; உலகப்பற்றுக்களை யெல்லாம் அறுத்தற்குக் கருவியாகிய சிவநேயம் (சிவன்பாற் பற்று) வருதற்குச் சார்பான குணத்தினையுடைய பவித்திரை என்பவர்.

(வி - ரை) மற்றை - முன் சொன்ன என்ற சுட்டுப் பொருளில் வந்தது. அம் மறையவன் இருமை வினைக்கும் ஒரு வடிவாயினமை போலன்றி மனைவியார் ஒரு நிலை நின்று சிவனடிப்பற்று வருதற்குச் சார்பாகவே உள்ளவர் என்ற பொருள்தந்து வினைமாற்றுப் பொருட்குறிப்பும்பட நின்றது. திருமனைவி என்ற குறிப்பும் அது.

வாய்த்தல் - வாய்ப்பு - "இருவர் சுட்டிய பல்வேறு தொல்குடி" (திருமுருகு) என்றபடி குடி மரபு முதலிய பிறப்பு வகையாலும், குணம் முதலிய சிறப்பு வகையாலும் ஆவது. இது பெண்ணுக்குப், பிறந்த இடத்துச் சிறப்பு.

சுற்றம் விரும்பும் இல்வாழ்க்கைத் தொழிலாள் - இல்வாழ்க்கையிற் சுற்றம் விரும்பிப் பேணுதல் மனையாளது பெருங்கடமையும் தொழிலுமாமாதலின் அதனை எடுத்துக் கூறினர். இது பெண்ணுக்குப், புகுந்த இடத்தின் சிறப்பு.

துணைப்புதல்வற் பெற்று விளங்கும் தவம் உடையாள் - நல்ல புதல்வரைப் பெறுதல் இல்லறத்தில் வாழும் மனைவியரின் தவப்பயன். "மங்கல மென்ப மனைமாட்சி மற்றத, னன்கல நன்மக்கட் பேறு" என்பது திருக்குறள். நன்மக்கட் பேறில்லா தாளை மலடி என்றும் இல்வாழ்க்கையின் பயனை யடையாதவள் என்றும் கூறுவர். துணைப்புதல்வன் - நல்ல புதல்வன். தன் பெற்றோர்க்கு இம்மையில் நலம்பெறத் துணை செய்தலோடு தனது நன்மையால் மறுமையில் அவர்கள் நரகம் புகாமலும் துணைசெய்வான். ஆனால் இங்கு இந்நாயனாராகிய புதல்வனார் தமது பெற்றோர்க்கு இம்மை மறுமைகளின் நன்மைகளுடன் மேலாகிய வீட்டுலகமும் பெறத் துணை செய்தாராதலின் துணைப்புதல்வன் என்றும், பெற்று விளங்கும் தவம் என்றும் கூறினர்.

பெறும் பேறு எல்லாப் பயன் - உலகில் புதல்வரைப் பெற்றோர் யாவராலும் அடையப்பெறும் எல்லாப் பேறுகளிலும் சிறந்த பயனுக முடிவில் நிற்கும் பயன்.

தவஞ் செய்தாள் என்றது இவரைப் புதல்வராகப் பெறுதற்குச் செய்த முன்னைத்தவம் குறித்தது. பயன் பெறுவாள் - அவரைப் பெற்றதனால் இனி அடைய நிற்கும் சிறந்த பயன். ஆதலின் முன்னதனை இறந்தகால வினைமுற்றாலும், பின்னதனை எதிர்கால வினைமுற்றாலும் கூறினர்.

பற்றை எறியும் பற்று - "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு" என்ற திருக்குறள் இங்கு நினைவுகூர்தற்பாலது. பற்றை என்றதிற் கூறிய பற்று என்றது ஆணவமலத்தை. இது உயிரை அநாதியே பற்றி நின்று மீட்சியின்றித் துன்புறுத்தலால் இப்பெயர்பெற்றது. எறிதல் என்றது அதனை வலியிலதாகச் செய்தல். பின்னர்ப் பற்று என்றது இறைவன்பாற் பற்று ; சிவனிடத்து வைத்த அன்பு.

**பற்றுவரச் சார்பாயுள்ள** *என்றது சிவன்பாலன்பு வருதற்குத் துணையாயுள்ள என்றதாம். தக்கபடி இல்லறம் நடத்தியதனால்* " **அணைப்புதல்வற் பெற்று** "த் தனது கணவனுக்கு உறுதிபயக்கும்வகை சார்பாய் நின்றுள் ; தனக்கும் அவ்வகைப் பற்று வருதற்குச் சார்பாகிய ஒழுக்கத்தில் நின்றுள் ; இனித், தான்பெற்ற புதல்வர்ப் பேற்றினால் பிற உயிர்களுக்கும் பற்றை எறியும் பற்றுவரச் சார்பாயினுள் என்ற பல குறிப்புக்களும் கண்டுகொள்க. **உள்ள** - சிவனது சார்பினால் வரும் பயன் என்றும் நிலைத்துள்ளது. முன்னர்ச் செய்தாள் என்றும், பின்னர்ப் பெறுவாள் என்றும் இறந்தகால எதிர்காலங்களாற் கூறிய ஆசிரியர் இங்கு **உள்ள** என்று முக்காலத்துக்குமுரிய குறிப்புவினைப் பெயரெச்சத்தாற் கூறியதும் குறிக்கொள்க. இவள் சார்பினால் உயிர்கள் எஞ்ஞான்றும் பற்றை எறியும் பற்று வரப்பெறுதல் நிலைத்துள்ளதென்பதாம். **சார்பாயுள்ள பவித்திரை** என்ற குறிப்புமது.

**பவித்திரை** - தூய்மையுடையவள். **பவித்திரம்** - தூய்மை. " பழுதுபுகுந் ததுதீரப் பவித்திரமாஞ் செயல் " (788) என்றது காண்க. பெயர்ப்பொருள் கூறுபவராகி உயிர்களைத் தூயனவாக்கும் தன்மையுடன் நிகழ்பவள் என்ற குறிப்புப்படக் கூறுதல் காண்க.

**பவித்திரையாள்**—என்பதும் பாடம். 11

1217. நன்றி புரியு மவர்தம்பா, னன்மை மறையின் றுறைவிளங்க,
என்று மறையோர் குலம்பெருக, வேழு புவனங் களுமுய்ய,
மன்றி னடஞ்செய் பவர்சைவ வாய்மை வளர, மாதவத்தோர்
வென்றி விளங்க, வந்துதயஞ் செய்தார் விசார சருமனார். கஉ

(இ - ள்) வெளிப்படை. நன்மை செய்யும் அவர்களிடமாக, நன்மை தரும் மறைகளின் துறைகள் விளங்கவும், என்றும் மறையோர்களின் குலம் பெருகவும், ஏழுலகங்களும் உய்யவும், திருவம்பலத்தில் திருக்கூத்தியற்றும் பெருமானுடைய சைவ உண்மைத்திறம் வளரவும், மாதவத்தோர்களின் வெற்றி விளங்கவும், விசார சருமனார் வந்து திருஅவதாரஞ் செய்தருளினார்.

(வி - ரை) **நன்றி** - இங்கே நன்மையாவது இல்லற நல்லொழுக்கம்.

**நன்மை மறை** - இந்நன்மையாவது வேதங்களிற் கூறப்பட்ட விதி விலக்குகளால் உலகம் நன்னெறியில் நிறுத்தப்படுதல்.

**மறையின் துறை விளங்க** என்றது விசாரசருமனாரின் சரிதத்தால் வேத நீதிகள் விளக்கமுறுதல். அவையாவன - பிரமசரிய நிலை, உபநயனம், வேதம்பயிலுதல், சமிதையும் எரியும்கொண்டு சாமம் கணித்தல், பசுக்காத்தல் முதலியவையாம்.

**என்றும் மறையோர் குலம்பெருக** என்றது மறையோர் குலத்திலே விசாரசருமனார் திருவவதாரம் செய்து பசுக்காத்துச் சிவபூசை செய்து சிவன் மகனாராகப் பெற்ற சரித நிகழ்ச்சியினை அறிந்து, அதனைப் பின்பற்றிச், சிவனை வழிபட்டு, அந்தக் குலத்தாராகிய மறையோர் வளர்ந்து வருதல் குறித்தது. " கானவர் குலம் விளங்க " (662) என்று கண்ணப்ப நாயனார் திருவவதாரத்திலும், " அந்தண ராகுதி பெருக " (திருஞான - புரா. 23) என்று ஆளுடைய பிள்ளையார் திருவவதாரத்திலும் கூறியனவும், இவ்வாறு வருவன பிறவும் காண்க.

**ஏழுபுவனங்களும் உய்ய** - சிவபூசைசெய்து அதன் பயனாலன்றி உயிர்களுக்கு உய்தி கிடையாது என்பது ஞானநூன் முடிபு. " சைவத் திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர் " என்பது (8. 11) சிவஞானசித்தியார். இந்நாயனாரது திருவவதாரத்தால் **புவனம் உய்தலாவது** இவர்

காட்டிய வழியாற் சிவபூசை செய்து அதன் பயனை இவர்பாற் பெற்று உய்தல். இவ் வாறே "எழுலகுங் குளிர்தூங்க" (திருஞான - புரா. 23) என்று கூறுவதும் காண்க.

சைவ வாய்மை வளர்தலாவது சைவத்திற் சொல்லப்பட்ட சிவபூசையே மக்களுக்கு உறுதி தருவதாம் என்ற முடிந்த உண்மை நிலைபெற்றுப் பரவுதல்.

மாதவத்தோர் வென்றி விளங்க என்றது சிவபூசை செய்வோரின் வெற்றி விளக்க முறுதல். மாதவம் - சிவபூசை, தவங்களுள் எல்லாம் தலைசிறந்தது அதுவே யாகலின். "மாதவத்தோர் செயல்வாய்ப்ப" (திருஞான - புரா. 23) என்றதும் காண்க. இவ் வெற்றியாவது பூசையில் வரும் இடையூறுகள் எவையேயாயினும் அவை முன்னிற்காதொழிதல். "வானந் தளங்கிலென்...ஒருவனுக் காட்பட்ட வுத்த மர்க்கே", "அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை" என்றற்றொடக் கத்துத் திருவாக்குக்களும் சரிதங்களும் நினைவு கூர்க. இந்நாயனார் சரிதத்தினுள், உலகர் செய்யிற் பெரும்பாதகமாகும் செயலாகிய, மறையவனும் - தந்தையும் - ஆகிய வனைக்கொன்ற செயலும், நன்மையாகி முடிந்து முத்திக்கேதுவாகிய வெற்றி காண்க.

உதயம் செய்தார் - அவதரித்தார். ஞாயிறு - மதி - முதலிய ஒளிப்பொருள்கள் உதயமாயின் உலகத்துப் புற இருள் நீங்குதல் பயனாவதுபோல, இந்நாயனார் உதயமா யினமையால் ஆணவ இருள் நீங்கி உயிர்கள் உய்தி பெறுதலாகிய பெரும்பயனாகுவது என்பது குறிப்பு.

விசார சருமனார் - இஃது இவரது பிள்ளைத் திருநாமம். சருமர்-மறையவர்களுக் குரிய மரபுப்பெயர். விசாரம் - ஆத்துமஞான விசாரணை. முன்னைநிலையிலே, ஆன்ம விசாரணை முற்றிய உணர்ச்சியுடன் வந்து அவதரித்த சாமுசித்தராவர் என்பது சரிதத்தாலறியப்படும். "கொளுத்து வதன்முன் கொண்டமைந்து...அலகில் கலையின் பொருட்கெல்லை யாடுங் கழலே யெனத்தெளிந்த, செலவு மிகுந்த சிந்தை" (1222) என்பதும், மேல்வரும் பாட்டிற் கூறும் பொருளும் காண்க. பிரளயாகலர் விஞ்ஞான கலர்களுக்குப்போல அருள்புரியத் தக்கவர் சாமுசித்தர். "பண்டைநற் றவத்தாற் றேன்றிப் பரமனைப் பத்திப்பண்ணும், தொண்டர்" என்ற சித்தியாரும் உரையும் பார்க்க. விசாரணையாவது - உயிர்களின் இருப்பையும், அவற்றைக்கட்டிய பாசத்தின் இயல்பையும், அந்த மலக்கட்டினை நீக்கி இன்பந்தரும் இறைவனையும் விசாரித்து அறிந்து, பாச நீக்கத்தின் பொருட்டுச் சைவ சாதனங்களின் வழி நிற்றல். 12

1218. ஐந்து வருட மவர்க்கணைய வங்க மாறு மூடனிறைந்த
சந்த மறைக ளுட்படமூன் றலைவர் மொழிந்த வாகமங்கண்
முந்தை யறிவின் றேடர்ச்சியினன் முகைத்த மலரின் வாசம்போற்
சிந்தை மலர வுடன்மலருஞ் செவ்வி யுணர்வு சிறந்ததால். கந

(இ - ள்) வெளிப்படை. அவருக்கு ஐந்து ஆண்டுகள் நிரம்ப, ஆறங்கங்களுடன் கூடியனவாகிச் சந்தசுகளுடைய மறைகளுட்பட்டத் தலைவராகிய சிவபெருமான் முன்னே மொழிந்தருளிய சிவாகமங்களிலே முன்னைய அறிவினதுதொடர்ச்சியினாலே, அரும்பாகி முதிரும் பூவில் வெளித்தோன்றும் மணம்போலச், சிந்தை மலர அதன் உடனே மலர்கின்றதாகிய பக்குவமுள்ளவுணர்ச்சி சிறக்க உளதாயிற்று.

(வி - ரை) ஐந்து வருடம் - ஐந்தாவது ஆண்டின் நிறைவு. அங்கம்...மறைகள் - அங்கம் ஆறு - சிக்கை முதலியன. 354 பார்க்க. இவை வேதம் ஓதுங்கால் ஒருதலையாகப் பயிலப்பட வேண்டுபவையாதலின் உடன் நிறைந்த என்றார். சந்தம் - வேதங்களுக் குரிய சுரங்கள்; புகழுடைய என்பாருமுண்டு.

மறைகள் உட்பட முன் தலைவர் மொழிந்த ஆகமங்கள் - உட்பட் என்றதனால் ஆகமங்கள் சிறப்பு நூலாகவும், வேதம் பொது நூலாகவும் உள்ளன என்பதும், வேதங்கள் உலகர்க்கும் ஆகமங்கள் சத்திநிபாதர்க்கும் உரைக்கப்பட்டன என்பதும் தெரிக்கப்பட்டன; ஆகமங்கள் பயில்வோர் வேதங்களையும் அவற்றின் அங்கங்களையும் முன்னர்ப் பயில வேண்டுமென்பதும் குறிப்பால் உணர்த்தப்பட்டது. மறைகள் ஆகமங்களினுட்பட்டன என்பதும், மறைப்பொருளை உள்ளடக்கி அதன்மேல் உள்ள முடிந்த பொருள்களை ஆகமங்கள் வெளிப்படுப்பன என்ற குறிப்பும் உட்பட் என்றதனாற் பெறவைத்தனர். "வேதமோ டாகம மெய்யா மிறைவனால், ஓதும் பொதுவுஞ் சிறப்பு மென் றுன்னுக" என்பது திருமந்திரம். தலைவர் மொழிந்த என்றதனை இடைநிலைத் தீபகமாகக்கொண்டு மறைகளுக்கும் ஆகமங்களுக்கும் கூட்டுக.

முந்தை அறிவின் தொடர்ச்சியினால் - முன்பிறப்பின் அறிவு இப்பிறப்பில் ஆன்மாவினுடன் தொடர்ந்து வருகின்ற முறைமையினால். "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற், கெழுமையு மேமாப் புடைத்து" (குறள்). உடல் அழிந்தபோதிலும் அறிவுப் பொருளாகிய உயிர்க்கு அழிவில்லை; உயிருடன் அறிவு பல பிறவிகளிலும் தொடர்ந்தே வரும் என்பது உண்மை. அதுவே மக்களுள் அறிவின் ஏற்றத் தாழ்வுகளுக்குக் காரணமாகும். ஆகமங்கள் முந்தையறிவின் தொடர்ச்சியினால் மலர்தல் என்றது முன் வாசனையினால் ஆகம அறிவு வளர்ந்து வெளிப்பட்டு விளங்குதல் குறித்தது. "வாதனையால் முப்பொழுதும் பூநீர் கொண்டு வைகல் மறவாது வாழ்த்தியேத்திக், காதன்மையாற் றொழுமடியார்" (கன்றாப்பூர் - 1) என்ற திருத்தாண்டகமும் காண்க.

முகைத்த மலரின் வாசம்போல் - மலரில் வரும் மணம் முன்பு தோன்றுவிடினும் அரும்பினுள்ளே சூக்குமமாயுள்ளதென்க. அரும்பில் வெளித் தோன்றுத மணம் மலரிலே தோன்றுதற்கு, முன் அங்கு அது இருந்ததுவே காரணமாகும். "இல்லது வாராது" என்பது உண்மையன்றே? அரும்பினில் மறைந்து நின்ற மணமும் நிறமும் மென்மையும், அரும்பு முற்றி மலர மலர நிறைவுற்று வெளிப்படத் தொடங்குவது போல அறிவின் முன்னைத் தொடர்ச்சியும் வந்தது என்றபடி.

சிந்தைமலர உடன்மலரும் செவ்வி உணர்வு - சிந்தை - உட்கரண நான்கனுள் ஒன்று. சிந்தைமலர உடன்மலர்தல் - சிந்தை விரிய அதனைச் சார்ந்துநின்ற அறிவும் நுண்ணிதாய் ஒடுங்கியிருந்த முன்னை நிலையினின்றும் விரிவடைதல். "சிந்தைமலர்ந் தெழுமுணர்வாற் செழுங்கலையின் நிறங்களெல்லா, முந்தைமுறை மையிற்பயின்று" (திருஞா - புரா - 21) என்றதும் காண்க. செவ்வி - பக்குவம் - ஏற்ற காலம். மலரும் செவ்வி" - (முருகர் புரா - 7). பக்குவமாவது "கொளுத்துவதன் முன் கொண்டமைந்து, அலகிலையின் பொருட்கெல்லை யாடுங் கழலே எனத் தெளி"யும் தகுதியுடைமை. இவ்வுணர்வு சிவஞானம் என்ப. மறைகள் உட்பட ஆகமங்களின் உணர்வுநிறைந்த அறிவு மலர்தலால் சிவத்துவ விளக்கத்துக்குச் சாதனமாகிய சிவஞானம் வெளிப்படலாயிற்று என்பது கருத்து. "பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற், சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது" என்ற திருமந்திரக் கருத்து இப் பாட்டில் விளக்க முறுதல் காண்க. சிறந்தது - வெளிப்பட்டு விளங்கிற்று. ஆல்-அசை.

13

முகைத்த மலரின்—என்பதும் பாடம்.

1219. நிகழு முறைமை யாண்டேழு நிரம்பும் பருவம் வந்தெய்தப்
புகழும் பெருமை யுபநயனப் பொருவில் சடங்கு முடித்தறிவி
னிகழு நெறிய வல்லாத வெல்லா மியைந்த வெனினுந்தந்
திகழு மரபி னீதுவிக்குஞ் செய்கை பயந்தார் செய்வித்தார். கச

(இ - ள்) வெளிப்படை. வயது நிகழ்ந்துவரும் முறைமையில் ஏழு ஆண்டுகளும் நிரம்பும் பருவம் வந்து பொருந்தப், புகழும் பெருமையையுடைய உபநயனம் என்கின்ற ஒப்பற்ற சடங்கினை முடித்ததற்பின், இகழப்படும் நெறியையுடையனவல்லாத எல்லாமும் அவரறிவினிடத்தே பொருந்தியிருந்தன எனினும், அவரைப் பெற்றவர்கள், தமது விளக்கமுடைய மரபின் வழக்கின்படி வேதமோதுவிக்கும் செயலைச் செய்வித்தனர்.

(வி - ரை) நிகழும் முறைமை - நாளும் மாதமுமாக ஆண்டுகள் ஏறிச் செல்லும் முறையிலே. முன்பாட்டில் அவர்க்கு ஐந்தாண்டுகளின் பருவ நிகழ்ச்சியும், இப்பாட்டால் ஏழு ஆண்டுகளின் பருவ நிகழ்ச்சியும் கூறப்பட்டன. ஐந்து ஆண்டுகளின் பருவம் ஒருவனுக்கு உணர்வு தொடங்கி வெளிப்படும் பருவம் என்ப. "பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம்" என்ற அற்புதத்திருவந்தாதிக்குப் "பிறந்துணர்வு தொடங்கியபின்" (காரைக் - புரா - 3) என்று ஆசிரியர் உரை செய்தது காண்க. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்ற முதுமொழிக் கருத்தும் காண்க.

உபநயனப் போருவில் சடங்கு - உபநயனம் - அந்தணர் முதலாகிய முதல் மூன்று வருணத்தார்க்கும் சிறப்பாயுரியதாய் ஏழு வயதளவில் நடைபெறவேண்டுவதோர் சடங்கு. பிள்ளைக்குப் பஞ்சசிகை வைத்தும், மான்மறுவுடன் முந்நூலணிவித்தும், பிரமமந்திரோபதேசம் செய்தும் பிரமசரியமாகிய முதல் நிலையில் நிறுத்துதல். போருவில் சடங்கு என்றது இதனால் அப்பிள்ளை இரு பிறப்பாளனாகிய நிலையைப் பெறும் அருமைப்பாடு குறித்தது. "உபநயன முறைமை யாகும் இருபிறப்பி னிலைமையினைச் சடங்கு காட்டி" (திருஞான - புரா - 264) என்றது பார்க்க. உபநயனம் - சேர்ந்தாகிய மற்றொரு கண் என்பது பதப்பொருள். (உப - அணுக; நயனம் - நடத்துதல்; இறைவனை அணுக அடையச் செய்தல் என்றலுமாம். நீ - நய் - நட - என்பது பகுதி.) மந்திரோபதேசத்தால் ஞானக்கண் திறக்கப்படுதல் என்பதாம். சிவத்துவ விளக்கத்துக் கேதுவாகிய ஞானம் மூன்றுவது கண் என்ப. மான்மறுவும், முஞ்சி யரைஞாணும், பஞ்ச சிகையும் முதலிய பிரமசரிய அடையாளங்களும் இக்கருத்தே பற்றியன. சிவனே பிரமம்; சிவனை அறிகின்றவன் அவருடைய அடையாளங்களைத் தாங்கிச் சரித்தல்வேண்டும். ஐந்து முகங்களுடைமையால் பஞ்சசிகை சிவனதடையாளம்; மூன்றுவது கண் சிவனுக்குரியது. 507, 508, 509 பாட்டுக்களில் உரைத்தவையும் பார்க்க. "முந்நூலணியும் கலியாணம்" (வெள் - சரு - 6) என்பதும் காண்க. எனவே, சைவ மரபில் நிற்பவர்க்கன்றி ஏனைப் பாஞ்சராத்திரிகள், வைதமார்க்கத்தவர், ஏகான்மவாதிகள் முதலியோரிடத்து உபநயனம் என்பது உரிய பொருளின்றிப் போதலும், சைவமே எல்லாவற்றையும் உள்ளடக்கியதென்பதும் அதனாற் போதருதலும் உய்த்துணர்ந்துகொள்க.

இகழும் நெறிய அல்லாத எல்லாம் - அறிவோரால் இகழ்ந்து விலக்கப்படாத எல்லா நூலறிவும்.

இயைந்த எனினும் - ஓதுவிக்கும் செய்கை - செய்வித்தார் - அறிவின்கட் சிறப்பு முன்னரே பொருந்தியிருப்பினும், உபநயனச் சடங்கு முடித்ததுபோலவே, வேதமோதும் பயிற்சியையும் சடங்காகவே செய்வித்தனர் என்க. ஓதுவிக்கும் செய்கை - வேதம் பயில்வித்தல் - கனம் சடை முதலாக வேதம்பயிலும் செயல். "தாம்பாடிய சாமங் கணிப்போர்" (1210), "ஓது கிடையி னுடன்போவார்" (1222), "சமிதையுடன்மேல் எரிகொண்டு" (1232) என்றவை வேதம் பயிலுதல் குறித்தன. மறையவர்க்குரிய அறுதொழில்களுள் "ஓதல்", "ஓதுவித்தல்" என்பன வேதம் ஓதுவதனையே குறிப்பன. இதனை வேத அத்தியயனம் என்பது வழக்கு.

**பயந்தார்** - இவரது அறிவு விளக்க நிலைக்கு ஏற்ற வேதப்பயிற்சி எவ்வாறு செய்யத்தகுவது எனவும், எவ்வாறாயினும் மரபுநிலை வழுவாது செய்வித்தல் வேண்டும் எனவும் எழுந்த அச்சத்துடன் செய்வித்தார் என்ற குறிப்பும் காண்க. "உலகிறந்த சிவஞான முணரப்பெற்றார், தொல்லைமுறை விதிச்சடங்கு மறையோர் செய்ய" (263) என்றும், "ஒருபிறப்பு மெய்தாமை யுடையார் தம்மை யுலகியல்பி லுபநயந முறைமை யாகும், இருபிறப்பி னிலைமையினைச் சடங்கு காட்டி யெய்துவிக்கு மறை முனிவர்" (264) என்றும் வரும் ஆளுடையபிள்ளையார் புராணங் காண்க.

**சடங்கு முடித்து - ஓதுவிக்கும் செய்கை - செய்வித்தார்** - பயந்தார், சடங்கு தாமே முடித்தும், ஓதுவித்தல் பிறராற் செய்வித்தும் இயற்றினர் என்பது குறிப்பு. தந்தையே குருவாயிருந்து பிரமோபதேசம் செய்யும் வழக்கும் காண்க. 14

1220. குலவு மறையும் பலகலையுங் கொளுத்து வதன்முன் கொண்டமைந்து
நிலவு முணர்வின் றிறங்கண்டு நிறுவு மறையோ ரதிசயத்தார் ;
"அலகில் கலையின் பொருட்கெல்லை யாடுங் கழலே" யெனக்கொண்ட
செலவு மிகுந்த சிந்தையினிற் றெளிந்தார் சிறிய பெருந்தகையார். கரு

(இ - ள்) வெளிப்படை. அறிவு விளங்குதற்கு ஏதுவாகிய மறைகளையும் அவைகளை உள்ளிட்ட பல கலைகளையும் ஆசிரியர்கள் கொளுத்துவதன் முன்னே தமது உள்ளத்திற் கொண்டு அமைந்து நிலவுகின்ற அறிவின் திறத்தினைக்கண்டு, போதிக்கின்ற ஆசிரியர்கள் அதிசயித்தனர். அளவில்லாத கலைகளினாற் குறிக்கப்படும் பொருளுக்கெல்லாம் எல்லையாயுள்ள பொருள் அருட்பெருங் கூத்தியற்றும் திருவடியேயாம் என்று கொண்ட உறுதிமிக்க தமது சிந்தையினால் அந்தச் சிறிய பெருந்தகையாளர் தெளிந்து கொண்டனர்.

(வி - ரை) **குலவும்** என்ற பெயரெச்சம் மறை என்னும் ஏதுப்பெயர் கொண்டது. அறிவு எனக் குலவுதற்கு வினைமுதல் வருவித்துரைக்க. "குலாத்தில்லை யாண்டான்" (திருவாசகம்), "கூனுங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் குலவு மலர்ப்பாதம்" (கூற்றுவர் - புராணம் - 9), "குலாவு பாதம் விளக்கியே" (443) முதலியவை பார்க்க.

**கொளுத்துதல்** - கொள்ளச் செய்தல். சொல்லுதல் என்ப. தீக்கொளுத்து என்ற பொருளில் பெரும்பாலும் வழங்கும் இச்சொல் தீயைக் கொள்ளச் செய்தல் என்ற பொருளில் வருவதாம். இங்கும் அறிவாகிய தீயைக்கொளுவி அறியாமையைப் போக்குதல் என்ற குறிப்பும் காணப்படும்.

**கொண்டு அமைந்து அறிவின் நிலவும் திறம்** - "முந்தை யறிவின் தொடர்ச்சியினான் முகைத்த மலரின் வாசம்போல்" (1218) என்ற தன்மை.

**முன்** - முன்னரே. ஏகாரம் தொக்கது. இவ்வாறு முற்பிறப்பிற் கற்ற கல்வியறிவு, இப்பிறவியில் கலைபயில்வதன் முன்பே சில மக்களிடை விளங்குதல் இந்நாளிலும் அரிதின் காணப்படுவதறிக.

**நிறுவும் மறையோர்** - ஓதுவிக்கும் ஆசிரியராகிய பிராமணர்கள். **நிறுவுதல்** - கலைப்பயிற்சியை உணர்வினுள் நிற்கச்செய்தல்.

**அதிசயித்தார்** - அதிசயமாவது காரணம் இன்னதென்றறியுமாறு கண்கூடாகக் கண்ட பெருமித உணர்ச்சி, "அதிசயம் கண்டாமே" (திருவாசகம்). இது போதித்த ஆசிரியர்களது மனநிலை.

**தெளிந்தார்** - இது போதிக்கப்பெற்ற மாணவராகிய விசாரசருமரின் மனநிலை. "ஓது கிடைசூழ் சிறுவர்களும் உதவும் பெருமை யாசானும்" (1207) என்றபடி ஆசா

னும் மானவரும் ஒரு சேரக் காண நிற்பவர்களாதலின் இருவரது மனநிலைகளும் ஒரு பாட்டில் ஒரு சேரக் கூறிய இயைபு காண்க.

அலகில் கலையின் போநட்கு எல்லை ஆடும் கழலே என - இது எல்லாக் கலைகளாலும் முடிவாகக் கொண்ட துணிபு. எவ்வகைக்கலையும் ஓரோர் பொருளை நிச்சயிப்பன; ஆதலின் எல்லாக்கலைகளாலும் நிச்சயிக்கப்படும் எல்லாப் பொருள்களும் முடிந்த இடம் திருவடி என்க. முடிந்த இடமாவது அவை யாவும் போய்ச் சேர்ந்து அதற்குமேல் இன்னதென்றறிய முடியாது ஓய்ந்து நிற்கும் இடம் என்பதாம். "உலகுய்ய நடமாடு, மெல்லியினைத் தலைப்பட்டார் யாவர்களுங் கண்டிலரால்" (1075) என்றது காண்க. "பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர், போதார் புனைமுடியு மெல்லாப் பொருண் முடிபே" (திருவெம்பாவை - 10) என்ற திருவாசகங்களும் இக் கருத்துப் பற்றியன. கற்றதனலாய பயன் நற்றாள் தொழுதல் என்பது திருக்குறட் கருத்துமாம்.

எனச் சிந்தையினில் - தெளிந்தார் - என்று கூட்டுக. கொண்ட செலவு மிகுந்த சிந்தை - முன்னரே உட்கொண்ட உணர்ச்சி போந்திருந்த சிந்தை. செலவு - செல்லுதல். செலவு மிகுதலாவது "அறிவின், எல்லாமியைந்த" (1219) என்ற கருத்து; அதாவது உறைப்பு முற்றியிருத்தல்.

தெளிந்தார் - ஐயமின்றித் துணிந்தார். "உள்ளத்தின் ஒருமை நினைவால்" (1242), "கருத்தின் றிடனேர் நிற்கும்" (1221), "ஒன்று மூள்ளத் துண்மையினுல்" (1252), "மண்டு காத லருச்சனையில் வைத்தார் மற்றென் றறிந்திலரால்" (1255) எனப் பின்வருவன காண்க.

சிறிய பெருந்தகையார் - முரண்தொடை. சிறுமை பருவத்தாலும் உருவத்தாலும், பெருந்தகைமை - உள்ளத்தின் உயர்வாலும் ஆகும். "அச்சிறிய பெருந்தகையார்" (திருஞான - புரா - 73) என்று இவ்வாறே ஆளுடைய பிள்ளையாரைக் கூறுதலும் காண்க. 15

1221. "நடமே புரியுஞ் சேவடியார் நம்மை யுடையா" ரெனுமெய்ம்மை
யுடனே தோன்று முணர்வின்க ணுழையா தூறும் வழியன்பின்
கடனே யியல்பாய் முயற்றிவருங் காதன் மேன்மே லெழுங்கருத்தின்
றிடனேர் நிற்குஞ் செம்மலார் திகழுங்காளி லாங்கொருநாள், ககூ

1222. ஓது கிடையி னுடன்போவா, ரூரா னிரையி னுடன்புக்க
போது, மற்றங் கொருபுனிற்றூ போற்று மவன்மேன் மருப்போச்ச,
யாது மொன்றுங் கூசாதே யெடுத்த கோல்கொண் டவன்புடைப்ப,
மீது சென்று மிகும்பரிவால் வெகுண்டு, விலக்கி, மெய்யுணர்ந்து, கச

1223. பாவுங் கலைக ளாகமநூற் பரப்பின் றெருகுதிப் பான்மையினுன்
மேவும் பெருமை யருமறைகண் மூலமாக விளங்குலகில்
யாவுந் தெளிந்த பொருணிலையே யெய்த வுணர்ந்த வுள்ளத்தா
லாவின் பெருமை புள்ளபடி யறிந்தா ராயற் கருள்செய்வார், கஅ

1224. "தங்கு மகில யோனிகட்கு மேலாம் பெருமைத் தகைமையன;
பொங்கு புனித தீர்த்தங்க ளெல்லா மென்றும் பொருந்துவன;
துங்க வமரர் திருமூனிவர் கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்க மனேத்துந் தாமுடைய வல்ல வோநல் லானினங்கள்?; கஉ

1225. "ஆய சிறப்பி னுற்பெற்ற வன்றே மன்று ணடம்புரியு
நாய னுர்க்கு வளர்மதியு நதியு நகுவெண் டலைத்தொடையு
மேய வேணித் திருமுடிமேல் விரும்பி யாடி யருளுதற்குத்
தூய திருமஞ் சனமைந்து மளிக்கு முரிமைச் சுரபிகடாம்; உ0

1226. "சீல முடைய கோக்குலங்கள் சிறக்குக் தகைமைத் தேவருடன்
கால முழுது முலகினைத்துங் காக்கு முதற்கா ரணராகு
நீல கண்டர் செய்யசடை நிருத்தர் சாத்து நீறுதரு
மூல மவதா ரஞ்செய்யு மூர்த்த மென்னு முடிவென்னே?; உக

1227. "உள்ளுங் தகைமை யினிப்பிறவே துளவே! யுழைமான் மறிக்கன்று
துள்ளுங் கரத்தா ரணிபணியின் சுடர்சூழ் மணிகள் சுரநதிநீர்
தெள்ளுஞ் சடையார் தேவர்கடம் பிராட்டி யுடனே சேரமிசைக்
கொள்ளுஞ் சினமால் விடைத்தேவர் குலமன் றேவிச் சுரபிகுலம்?"

1228. என்றின் னனவே பலவுநினைக், "திதத்தின் வழியே மேய்த்திந்தக்
கன்று பயிலா னிரைகாக்கு மிதன்மே லில்லை கட; னிதுவே
மன்று ளாடுஞ் சேவடிகள் வழுத்து நெறியா வது" மென்று
நின்ற வாயன் றனைநோக்கி "நிரைமேய்ப் பொழிக நீ" யென்பார்,

1229. "யானே யினியிந் நிரைமேய்ப்ப" னென்று; ரஞ்சி யிடைமகனுந்
தானே நிறைஞ்சி விட்டகன்றன்; முழு மறையோ ரிசைவிஞ
லானே நெருங்கும் பேராய மளிப்பா ராகிப், பைங்கூழ்க்கு
வானே யென்ன நிரைகாக்க வந்தார் தெய்வ மறைச்சிறுவர். உச

1221. (இ - ள்) வெளிப்படை. "அருட்கூத்தையே இயற்றும் திருவடியினை யுடையவர் நம்மை உடைய தலைவராவர்" என்னும் உண்மை எண்ணுந்தோறும் உடனே தோன்றும் உணர்வினுள் ஒழியாமல் ஊறுவதாகிய அன்பின் வழியே கடமை யாக இயல்பாய் முயற்சி செய்யும்படி வருகின்ற காதலானது மேன்மேல் எழுகின்ற கருத்தின் உறுதி பிறழாமல் நேர்நிற்கும் செம்மலார் இவ்வாறு விளங்குகின்ற நாட் களில் ஆங்கு ஒரு நாளில், கசு

1222. (இ - ள்) வெளிப்படை. வேதமோதும் மாணவர் கூட்டத்தினுடன் போகின்றவர், ஊரவருடைய ஆனிரையினுடன் போயினபோது, அவற்றுள் ஈன் றணியதொரு பசுத் தன்னை மேய்ப்பவன்மேல் கொம்பினால் முட்டச்செல்ல,ஒரு சிறிதும் கூசாமல் எடுத்த கோலினால் அவன் அதனைப் புடைக்க, அதுகண்டு, மேற்சென்று, மிகும் அன்பினாலே சினந்து, அவன் செயலிலக்கி, உண்மையினை உணர்ந்தாராய், கள

1223. (இ - ள்) வெளிப்படை. பரந்த கலைகளும், ஆகம நூல்களின் பரந்த தொகுதியும், உண்மைப்பகுதியினும் பெருமை பொருந்திய அரிய வேதங்களும், ஆகிய இவைகளின் மூலமாக, விளங்கும் உலகத்தில், எல்லாம் தெளிந்துணர்ந்து பொரு ணிலை தெளிய உணர்ந்த உள்ளத்தினால், பசுக்களின் பெருமையினை உள்ளபடியே அறிந்தாராகி, விசாரசருமனார், ஆயனுக்கு அருள்புரிவாராய், கஅ

1224. (இ - ள்) வெளிப்படை. "(உயிர்கள் தங்கும்) எல்லா யோனிகளுக்கும் மேலாகிய பெருமைத்தன்மையுடையன; பொங்குகின்ற தீய தீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்தப்பெற்றன; பெருமையுடைய தேவர்களும் முனிவர் கூட்டங்

களும் சூழ்ந்து இருக்கை கொண்டு பிரியாத அங்கங்களையும் உடையன ஆனினங்கள் அல்லவோ ?; ககூ

1225. (இ - ள்) வெளிப்படை. "ஆய சிறப்பினுலே ஈன்ற அன்றைக்கே, திரு வம்பலத்தில் நடம்புரிகின்ற நாயனருக்கு, வளர் பிறையும், கங்கையும், வெள்ளிய நகு தலை மாலையும் பொருந்திய சடையுடைய திருமுடியின் மேல், அவர் விரும்பி ஆடி யருளுதற்குத் தூய திருமஞ்சனமாகிய ஆனைந்தினையும் அந்த உரிமையுடைய பசுக்கள் கொடுப்பனவாகும்; உ0

1226. (இ - ள்) வெளிப்படை. "சிறப்பாந் தன்மையுடைய தேவரோடு கால முழுதும் எல்லா உலகங்களையும் காக்கின்ற முதற் காரணராகும் திருநீலக்கண்டராகிய சிவந்த சடையினையுடைய திருக்கூத்துடைய பெருமான் சாத்தும் திருநீற்றைத் தரு கின்ற கோமயம் என்னப்படும் மூலத்தினைத் தருகின்ற மூர்த்தங்கள் சிலமுடைய இந்தப் பசுக்களேயாகும் என்றல் முடிவு வேறு என்ன உள்ளது ? உக

1227. (இ - ள்) வெளிப்படை. "நினைக்கத்தக்க தன்மை இனிப் பிற வேறும் உளவாமோ ? உழைமான் மறிக்கன்று துள்ளியாடுதற் கிடமாகிய திருக்கரத்தினை யுடையவரும், அணியும் பாம்புகளின் ஒளிசூழ் மணிகளைக் கங்கை நீரானது தெள்ளு கின்ற சடையினையுடையவரும் ஆகிய சிவபெருமான் தேவர்கள்தம் பெருமாட்டி யுடனே சேரமிசைக் கொள்ளும்படியான சினமால் விடைத் தேவரின் குலமல்லவா இந்தப் பசுக்குலம் ?", உஉ

1228. (இ - ள்) வெளிப்படை. என்று இவ்வகையாகிய பல எண்ணங்களையும் எண்ணிக், "கன்றுகளுடன் கூடிய ஆனிரைகளை இன்பந்தரும் வழியே மேய்த்துக் காக் கின்ற இதனின் மேல் செய்யத்தக்க கடமை வேறில்லை; இதுவே அம்பலக் கூத்தரது திருவடிகளைப் போற்றும் நெறியுமாம்" என்று கொண்டு, எதிர் நின்ற ஆயனை நோக்கி, "நீ இந் நிரைமேய்க்கும் தொழிலை ஒழிக" என்று சொல்லி, உஙூ

1229. (இ - ள்) வெளிப்படை. "இனி இந்நிரையினை யானே மேய்ப்பேன்" என்றார்; இடைமகனும் பயந்து அவர் முன் வணங்கி, மேய்த்தற் றொழிலை விட்டு நீங் கினன்; தாமும் மறையோர் இசைவு பெற்று ஆக்களே நெருங்கும் பேராயத்தினைக் காப்பாராகிப், பசிய பயிர்களுக்கு மழையே போலப், பசுக் கூட்டங்களைக் கரக்கத் தெய்வ மறைச்சிறுவர் முற்பட்டுவந்தனர். உச

இந்த ஒன்பது பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1221. (வி - ரை) நடமே - ஆனந்தக் கூத்தினையே. நடமே புரியும் சேவடி - தூக்கிய திருவடி; இடது திருவடி. முத்தி கொடுப்பது அத்திருவடியே யாதலின் அதனை உடையார் நம்மை உடையார் என்றார்.

மெய்ம்மை - உண்மை உணர்த்தும் நூல்களாகிய வேத சிவாகமங்களின் துணிபு.

நம்மை உடையார் - உடையவர் - (பதி), அவரது உடைமைப் பொருள்கள் (உயிர்கள் - பசுக்கள்), அவை உடையானை யறிந்து அடைந்து இன்புற வொட்டாது அவற்றைக் கட்டிய பாசம், அப்பா சத்தின் வலிபோக்கி இன்பமளிக்க அவர் செய்யும் அருள், என்ற இவ்வளவும் இதனுற் பெறப்படுமென்க.

உடனே தோன்றும் உணர்வினின்கண் - மேற்கூறிய மெய்ப்பொருணிச்சயமாகிய துணிபுகள் எல்லாம் ஒருங்கே, நடமேபுரியும் சேவடியார் என்று உணர்ந்த அப் பொழுதே, ஒருங்கே, உணர்விற்றோன்றுவனவாகும் என்பது.

உணர்வின் ஒழியாது ஊறும் வழி அன்பு - அன்பு இடையறாது ஊற்றெடுத்து வழிவழி வருதற்குக் காரணம் உணர்வில் மேற்கூறிய துணிபுகள் எல்லாம் உடன்

தோன்றுவதேயாகும் என்பார் அதனை உணர்வு என்பதனோடு உடம்பொடு புணர்த்தி ஓதினார். வழி அன்பு - முன்னைப் பிறவியிலிருந்து தொடர்ந்து பரம்பரையில் இடையறாது வரும் அன்பு. "முந்தை யறிவின் முடர்ச்சியினால்.....சிந்தை மலர உடன் மலரும் செவ்வி யுணர்வு" (1218) என்றது காண்க. ஒழியாது - இடையறாது.

அன்பின் கடனே இயல்பாய் முயற்றிவரும் காதல் - அன்பினாற் கடமையாகச் செய்யும் செயலினால், செயற்கையானன்றி இயல்பினாலே எழும் முயற்சியாக வினவிக் கப்படும் காதல். முயற்றுதல் - ஊக்கப்படுத்துதல்.

கருத்தின் திடம் நேர்நிற்கும் - காதல் கருத்தில் மேன்மேல் எழப், பின்னர் மாறாது அதனில் ஒன்றித்து உறைத்துநிற்கும். நேர் நிற்கும் செம்மலார் - கருத்தின் திடத்திலே உறைப்புடன் நிற்கும் பெரியார் - மனம் இறைவனிடமாகப் பதிந்து கொண்டவர். "மண்டுகாத லருச்சனையின் வைத்தார் மற்றொன் றறிந்திலரால்" (1254), "வேறுணரார்" (1255) என்று பின்வருவன இந்த மன நிலையினை வெளிப் படுத்துதல் காண்க. செம்மல் - பெருமையுடையார். "பெருந்தோன்றலார்", "மேலாம் பெரியோர்" என்பன இக்கருத்தையே தொடர்ந்து புலப்படுத்துவன.

தீகழுநாளில் - இவ்வாறு கருத்தின் திடம் நேர்நின்று விளங்கும் நாள்களில்.

ஆங்கு ஒருநாள் - ஆங்கு என்ற முதனீண்ட சுட்டும், ஒரு என்ற அடையும் அந் நாளினது சிறப்பை யுணர்த்துவன. அந்நாளின் நிகழ்ச்சிகள் மேல் 1229-ம் பாட்டில் உரைக்கப்படுவன. அவற்றின் பயனுக விசாரசருமனார் ஆனிரை மேய்த்து, மணலால் இலிங்கந் தாபித்துப், பாலால் திருமஞ்சனமாட்டி, அதனைச் சிவனது திருமகனாராகி, உயிர்களுக்குச் சிவபூசைப் பயனை கொடுத்தருளியிருக்கப் பெற்றனராதலின் இவ் வாறு சிறப்பித்தனர் என்பதாம். ஒருநாள் என்ற தொடக்கம் நிரைகாக்க வந்தார் (1229) என்றதனுடன் முடிவுபெறுகின்றது.

செம்மலார் - ஒருநாள் (1221) - நிரையிடன் புக்கபோது - ஆ - ஓச்ச, - அவன் புடைப்ப, - வெகுண்டு - விலக்கி - உணர்ந்து (1222) - அறிந்தா(ராய்) - அருள்செய் வார் (1223) - "ஆனினங்கள் - தகைமையன ; - பொருந்துவன - உடைய அல்லவோ? (1224); - ஐந்தும் அளிக்கும் (1225); மூர்த்தம் (1226) ; விடைத்தேவர் குலமன்றே? (1227) ;" என்று - பலவும் கினைந்து, - "இதன்மேலில்லை கடன் ; - இதுவே வழுத்து நெறியாவதும்" என்று, - ஆயன்றனை நோக்கி - "நிரைமேய்ப்பு ஒழிக நீ" என்பார் (1228) - "இனியானே மேய்ப்பன்" என்றார் ; இடைமகனும் அகன்றான் ; இசை வினால் - நிரை காக்க - மறைச்சிறுவர் - வந்தார் (1229) என்று மேல்வரும் பாட்டுக்க ளுடன் கூட்டி இந்த ஒன்பது பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க. 16

1222. (வி - ரை) ஓதுகிடை - வேதமோதும் மாணவர் கூட்டம். 1208 பார்க்க.

ஊர் ஆன் நிரையின் - உடன்புக்க போது-வேதம்பயிலும் மடங்களும் வேள்விச் சாலைகளும் ஊர்ப் புறத்தே உள்ளனவாதலின் ஊரினின்றும் வேதம் பயில்வதற்காக உரியநேரத்திற் புறப்பட்டுத் தெருவழியே வேத மாணவர் கூட்டம் செல்வதாம். அந்நேரத்தில் ஊர் ஆனிரையும் காலையில், மனைகளில், பால் தந்தபின் மேய்வதற்கு மண்ணியாற்றின் கரைப்புறவுக்குச் செல்வன ஆதலின் உடன்புக்கபோது என்றார்.

புனிற்று ஆ - ஈன்றணிய பசுவாதலின் கன்றைப்பிரிய மனமின்றி மேய்க்கக் கொண்டுபோகும் இடையன்மேல் மருப்பு ஓச்சிற்றுப் போலும். போற்றும் அவன் - மேய்க்கும் இடைமகன். மருப்பு ஓச்சுதல் - கொம்பினை அசைத்து முட்டச் செல்லு தல். மருப்பு ஓச்ச என்றதற்கு கொப்பினால் முட்ட என்றுரைத்தனர் முன் உரை காரர். "கடிதோச்சி மெல்ல எறிக", "கைச்சிறிய தொருமாறு கொண்டோச்ச"

(திருஞான - புரா - 73) என்ற இடங்களிற் போல ஈண்டும், ஒச்ச - முட்டுதற்குச் செல் என்றல் பொருந்தும். கொம்பினை அசைத்து முயன்றதேயன்றி முட்டிப் பிழை செய்யாதிருக்க இடைமகன் புடைத்தான் என்க.

யாதும் ஒன்றும் கூசாதே 1224—1227 பாட்டுக்களிற் கூறியபடிக்குள்ள பெருமைகளில் எதையும் ஒரு சிறிதும் உணராமலும், பசுவைக் கருணையின்றிக் கோல் கொண்டு புடைத்தலைப்பற்றி ஒரு சிறிதும் அஞ்சாமலும். கூசுதல் - தகாத செயல் செய்ய அஞ்சுதல்.

மெய்யுணர்ந்து - உள்ளத்தினுள் எழுகின்ற வுணர்ச்சியினால் உண்மையை அறிந்து. மேல்வரும் பாட்டில் எய்த உணர்ந்த உள்ளத்தால் என்றது வேத ஆகமநூல் உணர்ச்சி குறித்தது. மெய்யுணர்ந்து, (அதன் மேல்) மறைகள் மூலமாக உணர்ந்த உள்ளத்தால் என்று கூட்டிக் கொள்க. 17

1223. (வி - ரை) பாவும் கலைகள் - மிகப்பரந்துகிடக்கும் எல்லாக் கலைகளும். அளவிடமுடியாத கலைஞானங்களைக் குறித்தது.

ஆகமநூற் பரப்பின் தொகுதி - மூலாகமங்கள் உபாகமங்கள் என்ற இவை பல வற்றின் தொகுதி. தொகுதி - என்றதனால் ஆகமங்கள் பலவாகிப் பரந்திருப்பினும் அவை கூறும் முடிந்த பொருள்களில் ஒற்றுமையுடையன என்பதும், ஆவின் பெருமை யினை ஒன்று போலவே எல்லா ஆகமங்களும் கூறுவன என்பதும் ஆம்.

அருமறைகள் - ஆகமங்களேயன்றி வேதங்களும் ஆவின் பெருமை கூறுவன.

ஓலமாக - ஏதுவாகக் கொண்டு. கலைகளும் ஆகமங்களும் மறைகளும் என்னு மிவற்றை ஏதுவாகக் கொண்டு யாவுந் தெளிந்த என்க. எண்ணும்மைகள் தொக்கன. இது நூல்வழியால் தெளிந்த உணர்வு.

யாவும் தெளிந்த...உள்ளம் - பதிமுது நிலை - உயிரவை நிலை - இருண்மலநிலை - அருளது நிலை என்ற பொருணிலை யெல்லாம் தெளிய உணர்ந்து கொண்டமைந்த உணர்ச்சியினையுடைய உள்ளம். "நடமே புரியும் சேவடியார் நம்மை உடையார் எனும் மெய்ம்மை" (1221) என்றதும் ஆண்டுரைத்தவையும் பாரக்க.

பெருமை உள்ளபடி அறிந்தார் - உள்ளபடியினை - வகையினை - அறிந்தாராதலின். படி - படியை - வகையை. இரண்டனுருபு தொக்கது. உள்ளவாறு - உண்மையாக என்றுரைப்பினுமாம்.

அருள் செய்வார் - செய்வாராகி. செய்வார் - "நிரைமேய்ப்பொழிக நீ (1228) - யானே - மேய்ப்பேன்" என்றார் (1229) என்று மேல்வரும் பாட்டுக்களுடன் முடிக்க.

மேலே 1224 - 1227-ல் வருவனவும், "இன்ன பலவும்" (1228) விசாரசருமனார் தம் மனத்துள்ளே நினைந்து துணிந்து கொண்ட முடிபுகள்.

பொருளினிலை யெய்த—என்பதும் பாடம். 18

1224. (வி - ரை) தங்கும் அகில யோனிகட்கும் மேலாம் பெருமை - தங்கும் - உயிர்கள் இவ்வுலகிற் பிறவி எடுத்து வரும்போது தங்கும் என்க. அகில யோனிகட்கும் - எல்லாவிதமான யோனி பேதங்களுள்ளும். மேலாம் பெருமை - உயர்வுடையதாகிய பெருமை. யோனி பேதம் என்பது உடல் எடுக்கும் பிறவி வகை. அவை எண்பத்து நான்கு இலக்கம் என்ப. "உரைசேரு மெண்பத்து நான்கு நூ றுயிரமாம் யோனி பேதம்" (திருவீழிமிழலை - மேகராக - 4) என்றது ஆளுடையபிள்ளையார் தேவாரம். இவை எல்லாவற்றுள்ளும் மேன்மையுடையன ஆவின் பிறவியே என்பது.

புனித தீர்த்தங்கள் - புனிதம் - தூய்மை. தூய்மை செய்யும் தீர்த்தங்கள், 1155-ல் உரைத்தவை பார்க்க.

எல்லாம் - கங்கை, யமுனை முதலிய ஏழு பெருந்தீர்த்தங்களும், அவற்றையும் புனிதமாக்கும் மாமக தீர்த்தமும், இன்னும் இவை போல்வனவும் ஆகிய எல்லாமும். முற்றும்மை தொக்கது.

என்றும் - எல்லாக் காலங்களிலும்.

துங்க அமரர் - பிரமன் - விட்டுணு - வருணன் - அக்கினி முதலிய பெருந் தேவர்கள். கணங்கள் - சிவகணங்கள்.

சூழ்ந்து பிரியாத அங்கம் அனைத்தும் - அமரர் முதலினோர் ஆனினங்களின் ஒவ் வோர் அங்கத்தினும் பொருந்தி அங்கு நின்றும் அகலாது வாழ்ந்துள்ளார்கள் என்பது.

நல் - உயிர்களுக்கு நன்மை செய்கின்ற. அதற்காகவே பிறந்தவை ஆனினங் கள் என்பதாகும்.

பசுக்களின் உறுப்புக்களில் தேவர்களும் முனிவர்களும் தீர்த்தங்களும் இருத்த லாவது: பிரமனும் விட்டுணுவும், பசுவின் கொம்பினடியிலும், கோதாவிரி முதலிய தீர்த் தங்களும் சராசரமும் கொம்பினுனியிலும் இருப்பர். சிவபெருமான் சிரசிலும் உமா தேவியார் நடு நெற்றியிலும் முருகக்கடவுள் நாசி நுனியிலும் வீற்றிருப்பர். உண் ணுசியில் திக்குப் பாலகர்கள் - செவிகளில் அசுவினி தேவர்கள் - கண்களில் சந்திர சூரியர்கள் - தந்தத்தில் வாயு - நாவில் வருணன் - இருதயத்தில் சரசுவதி - கபோ லத்தில் இயமனும் இயக்கர்களும் - உதட்டில் காலை நண்பகல் மாலை என்னும் மூன்று காலத்துக்குமுரிய அதிதெய்வங்கள் - கழுத்தில் இந்திரன் - முசிப்பில் (இடை) அருக்கதேவர் - மார்பில் சாத்தியர் - நான்கு கால்களில் அகிலவாயு - முழங்காலில் மருத்துக்கள் - குளம்பினுனியில் நாகலோகத்தார் - குளம்பினடுவில் கந்தருவர் - மேற் குளம்பில் தேவமாதர்கள் - முதுகில் உருத்திரர் - சந்துகளில் எண் வசுக்கள் - அரைப் பரப்பில் பிதிர் தேவர்கள் - பகத்தில் எழுகன்னியர் - குதத்தில் திருமகள் - அடி வாலில் தேவர்கள் - வால் மயிரில் சூரியனெளி என்றிவ்வாறு தேவர் முனிவர் அந் தந்த அங்கங்களிற் சூழ்ந்து பிரியாதிருப்பர். கோசலத்தில் ஆகாய கங்கையும், கோமயத்தில் யமுனையும் இருப்பர். பூமிதேவி வயிற்றினும், பெருங்கடல்கள் மூலி யினும், காருகபத்தியம் ஆகவனீயம் தக்கிணுக்கினி என்னும் முத்தீயும் வயிறு - இத யம் - முகம் என்னும் மூவிடங்களினும், யாகத்தொழில் முழுவதும் எலும்பிலும் சுக் கிலத்திலும் இருக்கும். கற்புடையமாதர்கள் எல்லா அவயவங்களிலும் வசிப்பார் : என் றிவ்வாறு கண்டுகொள்க. இவை சிவதருமோத்திரத்தினுள் "வேதாவும் கரியவனு மாவினது கோட்டடியின் வீளங்கி வாழ்வர்" என்பது முதலாக ஆறு பாட்டுக்களால் விரித்துக் கூறப்பட்டுள்ளன.

இப்பாட்டினுல் தூயவுடம்புடைமைபற்றி ஆனினங்களின் சிறப்புக்கூறப்பட்டது.

1225. (வி - ரை) ஆய சிறப்பு - இவ்வாருகிய சிறப்பு. தூயவுடம்புடைமை யாலுகிய சிறப்பு.

பெற்ற அன்றே - கன்றினைப்பெற்ற - ஈன்ற - பொழுதே. ஈன்ற அன்றே அளிப் பினும் திருமஞ்சனமைந்தும் ஆகமங்களில் விதித்த கால எல்லையிற் கொள்ளத்தக்கன என்ப. அன்றே - படைப்புக் காலத்திலே, பெற்ற - பெற்றன என்று கொண்டுரைத் தலுமாம்.

நாயனூர் - தலைவர் - சிவபெருமான் "மன்றி னடமாடு, நாயனு ரென்றுரைப்போம் நாம்" (கோயிலன்மணிமாலை - 13), "அழகிது நாயனீரே" (774) முதலியவை பார்க்க. இப்பொருள் பற்றியே, நமது தலைவர்களாந் தன்மை கொண்டு நம்மை ஆட் கொண்டருளும் அடியார்பெருமக்களை "நாயனூர்" என்ற வழக்கும் போந்தது.

நதி - கங்கை. நதுவெண் தலைத் தொகை - சிரமாலை என்பர். இவை ஊழிகளில் வீந்த பிரமவிட்டுணுக்களின் தலைகளைக் கோவைபோல அணிந்த மாலை. "தலைமாலை தலைக்கணிந்து (திருஅங்கமாலை), "மூரல்வெண் சிரமாலை யுலாவித் தோன்றும்" (தாண்டகம் - பூவணம்) என்ற தேவாரங்களும் பிறவும் காண்க.

ஆடி அருளுதல் - திருமஞ்சனமாடுதல். திருமஞ்சனம் ஐந்து - பசுவின் நெய் - பால் - தயிர் - கோமயம் - கோசலம் என்பன. (916) பார்க்க. இவை ஆனைந்து எனப்படும்.

உரிமைச் சுரபிகள் - அந்த உரிமையுடைய ஆனினம். இவ்வுரிமை ஆனினங்களுக்கே இறைவனுற்றரப்பட்டுள்ளது என்பது குறிப்பு.

உரிமை சுரபிகள் என்று பாடங்கொண்டும், ஆயசிறப்பினுல் சுரபிகள் உரிமை பெற்ற அன்றே என்று கூட்டி அந்தச் சிறப்பினுல் சுரபிகள் உரிமை பெற்றன வன்றே? என்று பொருள் கொள்வாருமுண்டு. இப்பொருளில் ஏகாரம் வினுப் பொருளில் வந்ததென்ப.

இப்பாட்டினுல் ஆனைந்தின் சிறப்பும் தூய உடம்புடைமையும் பற்றிப் பசுவின் சிறப்புக் கூறப்பட்டது. 20

1226. (வி - ரை) சீலம் - இங்குத் தூய்மை குறித்தது.

சிறக்கும் தகைமைத் தேவருடன் - சிறப்பாகிய படைப்பு முதலிய தொழில்களைச் செய்யும் பெருந்தேவர்களோடு.

தேவருடன்...உலகனைத்தும் காக்கும் என்று கூட்டுக. தேவர்களையும் மற்றும் எல்லா உயிர்களையும் காக்கின்ற.

காலம் அனைத்தும் என்பது இடையில் நின்று தேவருடன் உலகனைத்துங் கால முழுதும் என்று கொண்டு கூட்டி யுரைக்கின்றது. எல்லாக் காலங்களிலும் எல்லா உயிர்களையும் உலகங்களையும் காக்கின்ற என்க.

முதற்காரணர் என்பது தமக்கொரு முதல்வரில்லாத முழுமுதற் காரணர் என்ற பொருளில் வந்தது. காக்கின்ற கடவுளரை யெல்லாம் தோற்றுவித்துக் காத்து இறுதியில் தன்னகத் தொடுக்கும் தன்மை பற்றிக் காக்கும் முதற்காரணர் என்றார் என்றலு மொன்று. "படைப்போற் படைக்கும் பழையோன், காப்போற் காக்குங் கடவுள்" என்ற திருவாசகம் காண்க.

சாத்தும் - அணியும். நீறு அணிந்து நிற்பது சிவபெருமானது சிறப்புத் தன்மை. நீறு - இறுதிக் காலத்திலும் அழியாமலிருப்பது இறைவன் திருமேனியில் தங்கும் திரு நீருகும். இங்குக் குறித்த நீறு இறைவர் திருமேனியில் அணிவதற்கு அடியார் பயன் படுத்துவது. "வள்ளல் சாத்து மதுமலர் மாலையும் அள்ளு நீறும்" (31) என்றது காண்க.

நீறுதரும் மூலம் - திருநீறு பெறுதற்கு ஆதாரமாயுள்ளது. கோமயம் என்பர். பசுவின் சாணம்.

மூலம் அவதாரம் செய்யும் பூர்த்தம் - கோமயம் உண்டாகும் இடம். அவதாரம் - பூர்த்தம் என்ற சொற்கள் அப்பொருள்களின் உயர்வைக் குறித்துநின்றன. பூர்த்தம் - வடிவம்; இங்கு ஆனினத்தைக் குறித்தது.

என்றுல் முடிவு என்னே? என்று காண்போமாலுல் இதன் ஏற்றத்துக்கு அளவும் உண்டோ? என்பதாம்.

சைவத்தின் சிறந்த சாதனமாகிய திருநீற்றினுக்கு ஆதாரமாயுள்ளது பசுக்களது பெருஞ் சிறப்பாம் என்பது. என்னே? என்ற வினு வேறின்மை குறித்தது.

இதனுல் திருநீற்றின் சிறப்புப்பற்றிப் பசுக்களது சிறப்புக் கூறப்பட்டது. 21

1227. (வி - ரை) உள்ளும்...உளவே? - மேலும் இனி நினைக்கத்தக்க வேறு தன்மைகளும் உளவோ? இல்லை; என்று இப்பாட்டிற் கூறும் பொருளே முடிந்த முடிபாகக் கூறுகின்றுராதலின் இவ்வாறு தொடங்குகின்றுர்.

**உழைமான் மறிக்கன்று துள்ளும் கரத்தார்** - இருடிகள் செய்த ஆபிசார யாகத்தினின்றும் போந்து உலகத்தை அழிக்கவந்த மான்கன்று சிவபெருமானது இடதுகரத்தின் இருவிரனுனியில் ஆடி நிற்பதாகும் என்பது வரலாறு. விரிவு கந்த புராண முதலியவற்றுட் காண்க. உழை - மான் - மறி - ஒருபொருட் பன்மொழி; பல தன்மைகளை வற்புறுத்தி ஒரு பொருளின்மேனின்றன. அந்த மானினது தோற்றம், நிலை, ஒடுக்கம் என்ற மூன்று வெவ்வேறு நிலைகளைக் குறிக்க மூன்று சொற்களாற் கூறினுர். **உழைமான்** - ஒருவகை மான் என்பாரும், **மறிக்கன்று** - மறியாகிய கன்று என்பாரும் உண்டு. "புள்ளி உழைமானின் தோலான்" என்ற மேற்கோள் முதலியனவும் காட்டுவர். உழைமான் - புள்ளிமான் என வழங்குவர். மறி - மான் முதலிய சில மிருகங்களின் கன்றுகளுக்குப் பெயராயும் வழங்கும்.

**கன்று துள்ளும் கரத்தார்** - சிவபெருமானது திருக்கரத்தில் விரல்களின் நுனியில் இரண்டு கால்களை நிறுத்தித் துள்ளுவது இந்த மான்கன்று என்பது அவரது அளவில்லாத சத்தியைக் காட்டுவதாம் என்பர்.

**மணிகளை - நீர் - தெள்ளும்** என்றும், **சடையார் - பிராட்டியுடனே - மிசைக் கொள்ளும்** என்றும் கூட்டுக. சுடர் சூழ்ந்த மணிகளையுடைய பணியணியினையும் தெளிந்த நீரையுடைய சுரநதியினையும் அணிந்த சடை என்றுரைத்தலுமாம்.

**அணிபணியின்** - கரத்தார் அணியும் பாம்பினது. **பணி** - பாம்பு. கரத்தாரது அணியாகிய பாம்பின் என்றலுமாம்.

**சுடர்சூழ்மணி** - பாம்பின் தலையில் உள்ளதாகச் சொல்லப்படும் அரதனம். "முழையர வுமிழ்ந்த செய்ய மணிவெயில்" (778) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. "நஞ்சுகால், வாய நாக மணிப்ப ணங்கொள் விளக்கெ டுத்தன" (திருநா - புரா - 355) என்றதும் பிறவும் காண்க.

**சுரநதி** - கங்கை. **தெள்ளும்** - தெளிவுகாட்டும்; விளங்கும்.

**தேவர்கள் தம்பிராட்டி** - தேவர்களுக்கெல்லாம் பெருமாட்டியார் - தலைவியார். உமையம்மையார். தம்பிரான் என்ற சொற்குப் பெண்பாலாகத் தம்பிராட்டி என்னும் வழக்கு இந்நாளிலும் மலையாள நாட்டில் வழங்குவதாம். இது பழந்தமிழர் வழக்கு.

**மிசைக் கொள்ளுதல்** - மேல் கொண்டு எழுந்தருளுதல்.

**சினமால் விடைத்தேவர்** - சினம் - பொருளுக்கு இயற்கையடைமொழி. அடைந்தோரைக் காக்கும் பொருட்டுப் பகைவரைச் சீறுகின்ற என்றலுமாம். "அண்ண லரண் முரண் ஏறும்" (காந்தா - அதிகை - 1) என்ற அப்பர் சுவாமிகள் தேவாரம் காண்க. **மால்** - பெரிய. **மால்** - விட்டுணு என்று கொண்டு திரிபுரமெரித்த அந்நாளில் இடபமதாய்த் தாங்கிய திருமால் செய்தி குறிப்பதாகக் கூறுதலுமாம்.

**விடைத்தேவர்** - இடப தேவர். இவர் வேறு; திருநந்தி தேவர் வேறு. நந்தி தேவர் சிவகணங்கட்கெல்லாம் நாயகராய்த் திருமலைக்காவல் பூண்டுள்ளவர். (20).

**விடைத்தேவர் குலமன்றே இச்சுரபிதலம்** - விடைத்தேவரைச் சூழ்ந்துள்ள நந்தை - பத்திரை - சுரபி - சுசீலை - சுமனை - என்னும் ஐவகைப்பசுக்களின் மூலம் ஆனினம் உலகிற் பெருகும் என்றும், இவ்வைவகைப் பசுக்களும் திருப்பாற்கடலில் உதித்தன என்றும் கூறுவது வரலாறு.

அடியார்களுக்கு அருள் செய்யும் பொருட்டு வெளிப்படும்போதெல்லாம் அற வுருவுடைய விடையினை ஊர்ந்தே அறவனுர் எழுந்தருள்வாராதலின் இதனினும் வேறு சிறப்பில்லை என்று முடிபாகக் கூறினுர்.

இதனுல் விடைத்தேவர் குலம்பற்றிப் பசுக்களின் சிறப்புக் கூறப்பட்டது. 22

1228. (வி - ரை) என்று இன்னனவே பலவும் நினைந்து - முன் 1224 முதல் 1227 வரை நான்கு திருப்பாட்டுக்களானும் கூறியவற்றையும், அவை போல்வன பல வற்றையும் எண்ணி. இவை விசாரசருமனுர் மனத்தினுள் எண்ணமிட்டுச் சிந்தித்தவை.

'இதத்தின்...நெறியாவது' என்று - இது, பலவும் நினைந்தபின் விசாரசருமனுர் மனத்துள்ளே துணிந்து கொண்ட முடிபு.

இதத்தின் வழியே மேய்த்துக் காத்தல் - 1230 - 1231ல் விரித்து உரைக்கப் படுவது. இதுபற்றி ஆனயர் புராணத்துரைத்தவையும் பார்க்க.

கன்றுபயில் ஆன் நிரை - கன்றுகளுடன் கூடிய கறவைப் பசுக்கள். "பாலும் பயனும் பெருகவரும் பசுக்கள்" (1230) என்றும், "அந்தணுள ராகுதிக்குக் கறக்கும் பசுக்கள்" (1247) என்றும் கூறியவற்றுல் ஓமதேனுக்களாகிய இப்பசுக்கள் முழுமை யும் மறையோர் வேள்விக்குரிய பஞ்சகவ்வியமும் பாலும் (நெய்யும்) தரும் கறவைகள் என்பதறிப்படும்.

இதன்மேல் இல்லை கடன்; இதுவே சேவடிகள் வழுத்து நெறியாவதும் - மக்கள் செய்யவேண்டிய கடமைகள் பலவற்றுள்ளும் இதற்கு மேற்பட்ட கடமை வேறில்லை; கடமையாதலோ டமையாது இது சிவன் சேவடி போற்று நெறியுமாவது. மக்களின் கடமைகள் பலப்பலவாக நூல்களால் வகுக்கப்படினும் அவை பலவும் சிவன் சேவடி வழுத்து நெறியாகாது இவ்வுலக சம்பந்தமாய்ப்போந்து உடல் பற்றிக் கழி வன. இக்கடமை அவ்வாறன்றி, அவற்றுள்ளே தலைமையாய் நிற்பதுடன், சிவன் சேவடி வழுத்து நெறியுமாகும் என்றதாம்.

இது மன்றுளாடும் சேவடிகள் வழுத்து நெறியாதுமாறு யாங்ஙனம்? எனில் சிவனைக் குறித்த வேள்விகளுக்குரிய பொருள்களைத் தருதலால் பசுக்காத்தல், சிவ வேள்விக்குரிய சாதனம் தரும் சிவபுண்ணியம் ஆகும்; சிவன் ஆனைந்தும் திருமுழுக்கு மகிழ்ந்தாடுவனுதலால் இது சிவன் ஆடுதற்குரிய திருமஞ்சனம் தருதற்கும், உயர்வாகிய திருமுழு பெறுதற்கும் துணை செய்த சிவபுண்ணியமுமாகும் ஆதலின்.

பசுக்கூட்டத்தைச் சிவன் விரும்புவார்; ஆதலின் அதனைக் காப்போர்பால் மகிழ் வார்; எனவே சிவனை மகிழ்விக்கு நெறியிதுவே என்னலுமாம். இதுவே - ஆவதும் - இதன்மேற் கடன் வேறில்லை; அன்றியும் இதுவே நெறியாவதும் என்க. வழுத்து நெறி களுள் அருச்சனையும் வேள்வியும் சிறந்தன - ஆதலின் இவற்றுக்குரிய சாதனம் தரும் ஆனிரைகாத்தலே வழுத்து நெறியாவதும் என்றதுமாம்.

நின்ற ஆயன் - விசாரசருமனுர் வெகுண்டு விலக்கியபின் (1222) தம் மனத்துள் எண்ணி, இவ்வாறு உணர்ந்து துணிவு பெறும் வரை அங்கு நின்றுகொண்டிருந்த ஆயன். ஆயன் - ஆயத்தை உடையவன். செலுத்துபவன். ஆயம் - கூட்டம் இங் குப் பசுக்கூட்டம் குறித்தது. "ஆனே நெருங்கும் பேராயம்" (1229)

நீ நிரை மேய்ப்பு ஒழிக என்க. எழுவாயைப் பின்வைத்தது வெகுட்சிக் குறிப்பு. "வெகுண்டு" (1222) என்றதனு காண்க.

என்பார் - என்பார் ஆகி. முற்றெச்சம். என்பார் - என்னுர். (1229) என முடிக்க

நீ நிரை மேய்ப்பு ஒழிக; யானே இனி இந் நிரை மேய்ப்பன் - என்று தொடர்ந்து கூறியது, "நீ ஒழிக" என்றபோது, "இனி யாவர் அதைக் கைக் கொள்வர்?" என்ற வினு எழுவ தியல்பாகையால், அது எழாவகை தாமே கூறி முடித்தவாறு.

1229. (வி - ரை) இடை மகன் - இடையன். ஆனிரை மேய்க்கும் மரபினன்.

இறைஞ்சி விட்டு அகன்றனன் - மறையவர் பதியாதலானும், பதியின் எல்லாரும் தலைவர்களாகலானும், அந்த மறையவர் கூட்டத்தினுள் விசாரசருமனார் ஒருவராக லானும் ஊர் சமூதாயத்தாரின் உத்தரவேயாகும் இது என்று தாங்கி இறைஞ்சி ஏற்றுக் கொண்டனன்.

யானே நிரை மேய்ப்பன் - (இடைமகன் அஞ்சி அகன்றனை) நிரை மேய்த்தல் இடையர் மரபின் றொழிலாகலானும், அந்தணர்க்குரிய தொழில்களுள் ஒன்றாக விதிக்கப்படாமையானும், மரபு பிறழ்ந்து விசாரசருமனார் அதனை மேற்கொள்ளவும் இடைமகன் விடவும் நேர்ந்த இயைபென்னையோ? எனின், இதற்கு விடை முன் பாட்டிற் கூறப்பட்டதென்க. மக்கட் கூட்டத்தின் உயிரினைப் பற்றிய உயர்ந்த கடமைகளுள் ஒன்றாகியும் சிவவழிபாட்டு நெறியாகியும் உள்ள இதன்முன்பு உடலைப் பற்றிய தாழ்ந்த கடமைகளாகிய உலகநிலை மரபுவழக்குக்கள் முனைந்து நில்லாது ஒதுங்கிப்போம் என்பது துணிபு.

மறையோர் இசைவினுல் - மறையோர் ஊர் ஆன் நிரைக்கு உடையோர் ஆத லின் அவர்களுடைய இசைவு வேண்டப்படுவதாயிற்று. அன்றியும் மறையவர்களு டைய ஊராதலானும் மறையவர் மரபிற்குரித்தாகாத தொழில் பற்றியதாதலானும் ஏனை மறையோர்களின் இசைவு வேண்டப்படுவதாம்.

ஆனே நெநங்கும் பேர் ஆயம் - ஆன் - ஆனிரை. பசுக்கள் என்னும் ஆன்மாக் களின் பொதுமையையும் குறிப்பாலுணர்த்தி நின்றது. அளிப்பாராகி என்ற குறிப்பும் அது. விசாரசருமனார் நிரைகாக்க வந்தது, ஆன் கூட்டமாகிய அந்த ஆயம்மட்டில் அன்றி, உண்மையில், ஆன் - ஆன்மாக்கள் - நெருங்கும் பேர் ஆயம் - பெருங்கூட்டம் - அளிப்பதற்காகவே யாகும் என்பது. ஆனே என்ற ஏகாரமும், நெநங்கும் என்றதும், பேர் (பெரிய) என்றதும் அங்கு முன்னே நின்ற ஒரு சிறு கூட்டமாகிய ஆனிரை குறித்ததனோடு நில்லாது ஆன்மாக்களின் தொகுதியாகிய வேறுமொரு பெருங்கூட் டத்தைக் குறிக்க நின்றதும் கருதுக. நிரைகாக்க என்றலே ஆன் ஆயமளித்தலாகு மாதலால் முன்சொன்ன ஆன் நெநங்கும் ஆயம் வேறு என்பதும் குறிப்பாலுணர்த் தப்படும். நிரை காத்தலால் ஆன் நெநங்கும் ஆயம் அளித்தலாவது - பின்னர் நிகழும் சிவபூசையும், அதனால் நாயனார் பெறும் சண்டேச பதமும், அது கண்டு வழிபட்டு உலகமுய்ந்து சிவபூசைப்பயன் பெறும் நன்மையும் காரணகாரிய முறையில் பெறப் படுதல் குறிக்கொள்க.

பைங்கூழ்க்கு வானே என்ன - கூழ் - பயிர். வான் - மழை - "வான்சிறப்பு" என்றது காண்க. மழை பயிர்களைக் காத்து வளர்த்தல்போல் நாயனார் ஆன் நிரையை ஓம்பிக் காத்து வளர்த்தனர் என்பது. வினைபற்றி வந்த உவமம். "விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றுங்கே, பசும்புற் றலைகாண் பரிது" (குறள்) என்றபடி இன்றியமை யாமை குறித்த உவமம்.

நிரைகாக்க வந்தார் - காக்க - காக்கும்பொருட்டு, காத்தற்கு. வந்தார் - காக்குந் தொழிலை மேற்கொண்டு வந்தனர்.

தெய்வ மறைச் சிறுவர் - தெய்வமறை என்றும், தெய்வச் சிறுவர் என்றும் கூட்டி யுரைக்க நின்றது. தெய்வத்தன்மை வாய்ந்த சிறுவர் என்க. "மூன்றையறிவின் றொடர்ச்சி" (1218) பெற்றும், "தெளிந்த சிந்தை" (1220) பெற்றும், "கருத்தின் திடனேர் நிற்கும் செம்ம"னாராய் (1221), "யாவும் தெளிந்த பொருணிலையே யெய்த உணர்ந்த உள்ளமுடை"யாராய் விளங்கியது தெய்வத்தன்மை என்க.

1230. கோலுங் கயிறுங் கொண்டுகுழைக் குடுமி யலையக் குலவுமான்
மேலு நூலுஞ் சிறுமார்பிற் றுவள வரைக்கோ வணஞ்சுடரப்,
பாலும் பயனும் பெருகவரும் பசுக்கள் மேய்க்கும் பான்மையினுஞ்
சாலும் புல்லி னவைவேண்டுந் தினையு மிசையுந் தலைச்சென்று, உடு

1231. பதவு காலங் களின்மேய்த்தும் பறித்து மளித்தும் பரிவகற்றி
யிதமுண் டுறையு ணற்றண்ணீ ரூட்டி யச்ச மெதிர்நீக்கி,
யதர்நல் லனமுன் செலநீழ லமர்வித், தமுத மதுரப்பால்
உதவும் பொழுது பிழையாம லுடையோ ரில்லந் தொறுமுய்த்தார்.

1230. (இ - ள்) வெளிப்படை. பசு மேய்க்கும் கோலினையும் கயிற்றினையும் கொண்டு, சிறுபுன் குடுமி அசைய, விளக்கமுடைய மான்மேலும் அதனுடன் பூணூலும் சிறிய மார்பகத்தில் துவளத், திருவரையில் கோவணம் ஒளிவிளங்கப், பாலும் கன்றுகளும் பெருகும்படி வருகின்ற பசுக்களை மேய்க்குந் தன்மையில், மிகவும் புல்லின் அவை வேண்டுமளவும் விரும்பி உண்ணும்படி மேற்சென்று, உடு

1231. (இ - ள்) வெளிப்படை. புல் மிகவுள்ள காலங்களில் ஆனிரைகளை மேய்த்துப் புல் உண்ணச் செய்தும், கையாற் பறித்துக் கொடுத்துக் காப்பாற்றியும், அவற்றின் துன்பம் போக்கி, இதமாக நீர் உண்ணத்தக்க நீர்த்துறையுள் நல்ல குளிர்ந்த நீரை உண்ணச்செய்து, அச்சங்களை வாராமல் நீக்கி, நல்லனவாகிய வழிகளில் அவை முன்னே செல்லும்படி விட்டு நிழலில் இளைப்பாறச் செய்து, அமுதமாகிய சுவையுள்ள பாலினைத் தரும் நேரத்தில் தவறுமல் அவற்றினை உடையோராகிய மறையவர்களுடைய மனைகள் தோறும் செலுத்தினர். உசு

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1230. (வி - ரை) இப்பாட்டினுல் விசாரசருமனுர் நிரைகாக்க வந்த திருக்கோலத்தை விரித்துக்காட்டுகின்றுர். இதனுலும் மேல்வரும் பாட்டாலும் அவர் பசு மேய்த்த திறத்தினையும் விரித்துக் கூறுகின்றுர்.

**கோலும் கயிறும்** - இவை நிரைமேய்த்தலுக்கு உதவுவன. ஆனிரை காப்போர் இந்த இரண்டும் கொண்டு போதல் காண்க.

**கயிறு** - பசுக்களையும் கன்றுகளையும் வேண்டும்போது பிணித்தற்கும், **கோல்** அவற்றைச் செலுத்தற்கும் உதவுவன. முன்னர் ஆ மேய்த்த ஆயனும் கோல்கொண்டு சென்றான் என்பது "எடுத்த கோல்கொண் டவன்புடைப்ப" (1222) என்றதனுல் அறியப்படும். "ஆயன்கோல் போடிற், பசுக்க டலைவனைப் பற்றி விடாவே" என்ற திருமந்திரமும் கருதுக. விசாரசருமனுர் கொண்ட இந்தக் கோலே பின்னர் மழுவாயிட, அது கொண்டே தாதையினது தாள்களை எறிந்தனர் என்பதும் இங்கு நினைவுகூர்தற் பாலது. "முந்தை மருங்கு கிடந்த கோல்" (1256) என்பது காண்க.

**குழைக்குடுமி - மான்றோல் - நூல் - கோவணம்** - இவை பிரமசரிய நிலையின் விளங்கும் அவர்து மேனியிற் கொண்டவை.

**குழைக்குடுமி** - பிரமசாரிகளுக்கு அடையாளமாகிய சிறுபுன்குடுமி. பஞ்சசிகை என்பர். குழைக்குடுமி அலைய - சிறுபுன்குடுமி கீழ்த்தாழ்ந்து அசைந்தாட. தூல் விதிதவறிக் குடுமியைக் குறுகக் கத்திரித்துப் பிரமசாரிகள் திரியும் கொடுமை இக்காலத்துக் கோர நாகரிக விளைவுகளுள் ஒன்று.

**மான்தோலும் நூலும் சிறுமார்பில் துவள** - மான்றோலினைப் பூணூலில் முடிந்து கொண்டு தாங்குதல் பிரமசரியத்துக்குரிய வழக்கு. பஞ்சசிகை - மான்றோல்

உபநயனம் என்னும் நெற்றிக்கண் முதலிய அடையாளங்கள் பிரமம் என்னும் சிவத்துவ விளக்கங் குறிப்பன என்பதுபற்றி முன்னுரைத்தவை பார்க்க - (1219).

அரைக்கோவணம் சுடர - அரையிற் கோவணம் பூண்பதுவும் பிரமசரிய வழக்கு. அக்கோவணம் தூயதாய் வெள்ளியதாய் விளங்குவதென்பார் சுடர என்றார். நூல் மார்பிற் றுவள என்றதற்கேற்பக் கோவணம் அரையிற் சுடர என்று கூட்டிக் கொள்க. இதுபற்றித் "தஞ்ச மாமறைக் கோவண வாடையின் றசைவும்" (509) என்றதும், பிறவும், பார்க்க.

பாலும் பயனும் பெருகவரும் பசுக்கள் - பயன் - கன்றுகள். பசுக்காத்துப் பெறும் பயனிரண்டு : அவை பாலும் கன்றும் என்பன. அவற்றுட் பால் - அன்றன்று பெற்றுக்கழியும் தற்காலப்பயன் என்றும், பயன் (கன்று) அவ்வாறன்றி நீடிச்செல்லும் பெரும்பயன் என்றும் கொள்ளப்படும். ஆதலின், ஆனேந்திற் சிறந்த பாலினும் கன்றினையே பயன் என்றார். பாலின் பயன் என்பாருமுண்டு.

பாலும் பயனும் பெருக வருதலாவது - இந்த இரண்டும் ஒன்றுனென்று குறையாது சமமாகப் பெருகநிற்றல். இக்காலத்துப் பலர், பால் வேண்டிய பேராசையால் கன்றுக்குப் பால்விடாமற் கறந்துகொண்டு கன்றினம் செழிக்கவிடாது பாழ்படுத்துப் பயனின்றுக்குவர். "தோற்கன்று காட்டிக் கறத்தல்" என்ற கொடுங்காட்சியும் இந்காளிற் காணவுள்ளது !. மற்றும் சிலர் கன்றையே நினேந்து பால் பெருதொழிவர். இந்த இரண்டுமின்றிப் பாலும் பயனும் என்ற இரண்டு பயன்களும் தக்கபடி பெருகுமாறு பசுக் காத்தல்வேண்டும் என்ற குறிக்கோள் நாட்டப்பட்டது காண்க.

மேய்க்கும் பான்மையினுல் - மேய்க்கத்தக்க பரிசினேக் கொண்டமையால். இதனேமேல் விரிக்கின்றார்.

சாலும்...தலேச்சென்று - சாலும் புல் - புல்லின் குணநலமும் அளவின் மிகுதியும் குறித்தது. வேண்டும் தனேயும் - தனே - அளவு. மிசையும் தலேச்சென்று - மிசைதல் - விரும்பி யுண்ணுதல். தலே - இடம். உண்ணும் இடங்களிற் கூடப்போய். சென்று - மேய்த்தும் பறித்தும் - அளித்தும் என்று கூட்டுக. 25

1231. (வி - ரை) தலேச்சென்று - மேய்த்தும் - பறித்தும் - அளித்தும் - பரிவகற்றி - தண்ணீர் ஊட்டி - அச்சம் நீக்கி - என்பன விசாரசருமனார் ஆனிரைமேய்த்தக்காத்த வகையை விரிக்கின்றன.

மேய்த்தும் - பறித்தும் - அளித்தும் - புல் மேய இயலுங்காலத்தில் மேய்த்தும், இயலாதபோது பறித்தும், காத்தும் என்க. மேய இயலாத காரணமாவன மழை பெய்தலாலும் பசுக்கள் உடல் நிலேயாலும் நிலத்தின் மேடு பள்ளம் சேறு முதலாகிய இயல்பாலும் பலபுறமும் சென்று மேயக்கூடாமல் இருத்தலும், பயிரிட்ட நிலத்திற் புல் இருத்தலும் முதலியவை.

பரிவு - பசித்துன்பம். "அழிவாம் பசி" (திருநா - புரா - 304).

இதம் உண்துறையுள் நல் தண்ணீர் ஊட்டி - தண்ணீர் குடிக்கும் துறை சேறுடனிருத்தல், இறங்குமிடத்தில் கரையின்றி ஆழமாயிருத்தல், நாணல் முதலிய புதல் இருத்தல், காராம் முதலிய இருத்தல் என இவை போன்ற இடர்கள் இல்லாத துறை. துறைகளேப்பற்றி முன் உரைத்தவை பார்க்க.

நல் தண்ணீர் - அழுகற் பொருள்கள், வண்டல் முதலியன இல்லாத தூயநீர். உண்ணும் துறையாயினும் நீர் நல்லதாய் இல்லாத காலமுமுளது.

எதிர் அச்சம் நீக்கி - என்க. அச்சம் - புலிமுதலியவற்றால் வருவனவும், பகையரசர் நிரைகவர்தல் முதலியவற்றால் வருவனவும் ஆம்.

அதர் - வழி. நல்லன (ஆகிய) அதர், என்க. வழிகள் நல்லனவாதல் - குழி, மேடு, கல், முள், முதலிய இடர்கள் இல்லாமலும், தீயவிலங்குகள் தங்காமலும், நேராகவும் உள்ளமை.

நீழல் அமர்வித்தல் - இளைப்பாறி உணவு சீரணிக்கச் செய்து கொள்ளும் பொருட்டு மேய்ந்தவுடன் நிழலில் பசுக்களை அமர்வித்தல் முறை.

அமுத மதுரப்பால் - நோய் நீக்கம் செய்தும், உடல் வளர்ச்சிக்கு உதவியும், சுவையுள்ள உணவாகி உதவுவது. மதுரம் - சருக்கரை முதலிய வேருன்றின் சேர்க்கையாலன்றித் தானே சுவையுள்ளது. இவை உலக நிலையின் அளவாற் குறிக்கப்படும் தன்மை. இனி, அமுதம் - மரணத்தை நீக்குவது. சிவவேள்விச்சுரிய பொருளாய் உதவுதலின் சாவா மூவாச் சிவபதப் பயன் தந்து மக்களை நிலைபேறு பெறச் செய்வது என்பது உயர்ந்த உயிரின் நிலையாற் குறிக்கப்படும் பொருள். இச்சரிதத்தில் நாயனுர்க்கு இந்தப் பால்தானே அமுதம் பெறச் செய்வதும் காண்க. "அமுதம் பெறு சண்டி" (தக்கேசி திருநின்றியூர் - 2) என்றது நம்பிகள் தேவாரம்.

உதவும் பொழுது - உதவ வேண்டிய காலத்தில்; அஃதாவது - மாலைநேரம்; மாலை வேள்விக்குரிய காலம்.

உய்த்தல் - உடையவர் இல்லந்தோறும் பசுக்களைக் கொண்டு செலுத்துதல் ஆ மேய்ப்போர் கடமை.

மேய்த்துப் பறித்தும்—இதழண்டுறையு நற்றண்ணீர்—என்பனவும் பாடங்கள்.

1232. மண்ணிக் கரையின் வளர்புறவின் மாடும் படுகர் மருங்கினிலும்,
தண்ணித் திலநீர் மருதத்தண் டலைசூழ் குலையின் சார்பினிலும்,
எண்ணிற் பெருகு நிரைமேய்த்துச் சமிதை யுடன்மே லெரிகொண்டு
நண்ணிக் கங்குன் முன்புகுது நன்னுள் பலவா மந்நாளில். உஎ

1233. ஆய நிரையின் குலமெல்லா மழகின் விளங்கி மிகப்பல்கி
மேய வினிய புல்லுணவும் விரும்பு புனலு மார்தலினுல்
ஏய மனங்கொள் பெருமகிழ்ச்சி யெய்தி யிரவு நண்பகலுங்
தூய தீம்பான் மடிபெருகிச் சொரிய முலைகள் சுரந்தனவால். உஅ

1232. (இ - ள்) வெளிப்படை. மண்ணியாற்றின் கரையில் வளரும் (முல்லைப்) புறவின் பக்கத்திலும், படுகர்களின் பக்கத்தும், குளிர்ந்த முத்துக்களைக் கொழிக்கும் மருதநிலத்துச் சோலைகள் சூழ்ந்த கரைகளின் பக்கத்திலும், மேன்மேல் வளர்ந்து பெருகும் ஆனிரைகளை மேய்த்துச் சமிதையுடன் மேல் எரியினையும் கொண்டு பொருந்தி இரவு வருமுன்பு புகுகின்ற நல்ல நாள்கள் பலவாம்; அந்நாள்களில், உஎ

1233. (இ - ள்) வெளிப்படை. அவ்வாருகிய ஆனிரையின் கூட்டமெல்லாம் அழகுடன் விளங்கி மிகவும் பெருகி, மேவிய இனிய புல்லுணவும் விரும்பும் தண்ணீரும் நிறைய உண்ணப்பெற்ற காரணத்தால், எய்திய மனத்திற்கொண்ட பெருமகிழ்ச்சி பொருந்தி இரவிலும் நண்பகலிலும் தூய இனிய பாலினை மடிகள் பெருகிச் சொரியும் படி முலைகள் சுரந்தன. உஅ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

1232. (வி - ரை) புறவின் மாடும் - படுகர் மருங்கும் - தலையின் சார்பினிலும் - இவை விசாரசருமனுர் ஆனிரைகளை மேய்த்த இடங்களைக் குறித்தன. புறவு - மருதத்தையும் ஆற்றின் கரையினையும் அடுத்த முல்லைப் புறவு. பசுக்கள் முல்லை நிலத்

கருப்பொருள். "முல்லையின் தெய்வமென் றருந்தமி ழுரைக்கும்" (1095) திருமால் கோபாலனுகப் பசுக்காத்த செய்தியும் காண்க. (குறிஞ்சியின் ஆறுகள் மலையின்வீ ழருவிகளாதலானும் குறிஞ்சி நிலம் மேடுபள்ளமிக்குள்ள மலைச்சரிவுகளாதலானும் பசு மேய்தற்குரியனவல்ல).

**படுகர் மருங்கு** - ஆற்றோரத்தில் வண்டற்சேர்க்கையாற் கூடிய பள்ள நிலம் **படுகர்** எனப்படும். இவை நீர்க்கரையில் உள்ளனவாதலாற் புல்லும் செடிகளும் மிக உள்ள இடங்களாம்.

**மருதத் தண்டலை சூழ் குலையின் சார்பு** - மருதநிலத்திற் செழித்த நீர் வளத்தால் சோலைகள்மிகும்; அவற்றின் சார்பாய்க் கரைப்பரப்பாகிய நிலங்கள். இவையும் ஆக்கள் மேய்தற்குரிய பசும்புற் பரப்புடையன. குலை - கரை.

எனவே இம்மூன்று வகையான இடங்களும் ஆனிரை மேய்தற்கென்று வசதிகள் பெற்றவை; நகரின் அணிமையிலும் உள்ளவை.

இவ்வாருகிய மேய்ச்சனிலங்கள் ஒவ்வோர் ஊர்களின் சுற்றும் ஒதுக்கி வைக்கப் பட்டும், அதனுல் ஆனிரைகள் செழித்தும், அதனுல் மக்கள் சுகமுற வாழ்ந்தும் வந்தது முன்னுளில் நம்நாட்டு மக்களின் சமூக வாழ்க்கையில் கண்ட நல்வழக்காகும். இவை இந்நாளின் மக்களின் பேராசையின் பயனுக மாறிப்போய், இதற்குரிய எல்லாப் பொது நிலங்களும் மக்கள் தனிவசப்பட்டுப்போக, ஆனிரைகள் மேய்தற்கு இடமில் லாது நலிவு அடைந்து குறையக் காண்பதும் அதனுல் மக்களின் உடற்சுகமும் உயிர்ச் சுகமும் குறைந்துவரக் காண்பதும் புது நாகரிக விளைவாகிய கேடுகளுட் சிலவாம். இதனை மக்கள் கண்டு கருதித் திருந்த ஒழுகுதல் நலம்தரும்.

**மாடும்** - மருங்கினிலும் - **சார்பினிலும்** என்றவற்றுல் பசுக்கள், புறவு - படுகர் - தண் டலை சூழ்குலை - இவற்றுக்குட்சென்று கேடுபடாமலும் கேடுவினைக்காமலும் பக்கங் களில் மேய்க்கப்பட்டன என்பதாம். இதுவும் சமூக நல் வழக்குக்களுள் ஒன்று என்க.

**எண்ணிற் பெருகு நிரை** - பயன் என்னுங் கன்றுகள் பெருக உளவாதல் கருதி எண்ணிற் பெருகும் என்றார்.

**சமிதையுடன் மேல் எரி கொண்டு** - நிதமும் சமிதையும் எரியும் சேகரித்து மனைக்குக் கொண்டுவருதல் மறைபயிலும் பிரமசாரிகளின் கடமைகளுள் ஒன்று. **சமிதை** - மனையிற் செய்யப்படும் நித்திய வேள்விக்குதவுவன. **எரி** - இங்கு (வேள் விக்காக) எரிகடையும் மரக்கோல் (அரணி) குறித்தது. ஆகுபெயர். "எரிகடையு மரணி" (794) "தீக்கடைகோல்" (793) என்றவை காண்க.

**கங்குல்முன் புகுதும்** - பசுக்களும் மனைக்கு மாலைப்போதில் மாலை வேள்விக் குதவும்பொருட்டு இரவு புகுமுன்பு திரும்பிவிடுதல் முறை என்பதாம்.

**நன்னுள்** - நிரைகாக்கு மிந்நாள்களே மன்றுளாடுஞ் சேவடிகள் வழுத்தும் சிவநெறியிற் செல்வதற்குரியனவாதலின் இவையே நன்னுள்களாயின என்பதாம். "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" முதலிய தமிழ்மறைத் திருவாக்குக்கள் காண்க.

அந்நாளில் - எய்தி - பால் - பெருகி - சுரந்தன என்று வரும்பாட்டுடன் முடிக்க.

1233. **(விரை) ஆய** - மேற்சொல்லியபடி காப்போற்றப்பட்டனவாகிய.

**அழகின் விளங்கி மிகப்பல்கி** - நல்ல புல்லுணவும் நன்னீரும் பெற்று அச்ச மின்றிச் செழித்து மனமகிழ்வுற்றிருந்தனவாதலின் பசுக்கள் உடல் செழித்து அழகாய் விளங்கின என்க. **பல்கி** - மிகுந்து இனம்பெருகி. **மேய** - மேவிய - பொருந்திய, **மேய இனிய** - மேய்வதற்கு இனிமையாகிய என்று கொள்வதுமொன்று.

ஆர்தல் - நிறைய உண்ணுதல். "அமலைக் கொழுஞ்சோ முர்ந்த பாணர்க்கு" (புறநா - 34 - 14).

ஏய - ஏய்தல் - பொருந்துதல். மனங்கொள் ஏய பெருமகிழ்ச்சி என்க.

மனங்கொள் மகிழ்ச்சி எய்தி - பசுக்கள் மேற்கூறியபடி நன்முய் அன்புடன் பாதுகாக்கப்படின் மனமகிழ்ச்சி யடைவன; மகிழ்ச்சி அடையவே பால்நிறையக் கறப்பன என்பது உயிர்வருக்கநூற் றுணிபு. சில பசுக்கள் கீதம் பாடக்கேட்டு மன மகிழ்ந்து மிக்க பால் கறக்குமென்பதும் அந்நூலோர் கண்ட உண்மைகளுள் ஒன்று. பசு மேய்க்கும் இடைமகளுக வந்த கோபாலனைக் குழல் ஊதுபவனுகக் (வேணுகோபாலன்)கூறுவதும் இக்கருத்துப்பற்றியதேயாம். பசு மேய்ப்போர் குழலூதும் வழக்கமும், ஆயர் நாயனுர் சரித வரலாறும் கருதுக. "கனைத்த மேதி காணு தாயன் கைமேற் குழலூத, வனைத்துஞ் சென்று திரளும் சார லண்ணு மலையாரே" (தக்கேசி - 6) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரமும் காண்க. "ஆடிக் கறக்கும் பசுவை ஆடிக்கற; பாடிக் கறக்கிறதைப் பாடிக்கற" என்ற முதுமொழிக்கருத்தும் கருதுக.

மகிழ்ச்சியினுல் மடிபெருகி - முலைசுரந்தன என்று கூட்டுக. மடிபெருகினும் கன்றுகள் வாய்வைத்து உண்ணுதபோது முலைசுரத்தல் பெரும்பான்மையில்லையாம். கன்றின்மேல் பசுக்கள் கொண்ட அன்பாகிய இன்பகிலை காரணமாகவே முலைசுரத்தல் நிகழும். பசுக்கள் கன்றின்மேல் வைக்கும் அன்பாகிய வாத்சல்யம் என்பது இறைவன் உயிர்கள் மேல் வைக்கும் அருளுக்கு உவமிக்கப்படும். அதனுலே இறைவன் பக்த வத்சலன் எனப்படுவார். மேல் விசாரசருமரைக் கண்டு தாய்போன்ற தன்மை கொண்டு கறவாமே பால் பொழியவும், அதனுல் இச்சரித விளைவுக்குக் காரணமுண்டாகியதும் ஆகியவற்றின் உள்ளுறை இங்குத் தொடங்கி விளக்கப்பட்டதும் கருதுக.

இரவும் நண்பகலும் - பால் கறந்துவிட்ட மடி மீளவும் பால்பெருகிச் சுரக்க உள்ள இடைக்காலங்கள்.

முலைகள் தீம்பால் சொரியச் சுரந்தன என்க. தூய்மை உடற்சுகம் தரும் தன்மை. தீம் - இனிமை. "நெருகலும் தீம்பல மொழிந்த" (அகநா - 239). இது சுவையால் இனிதாந் தன்மை.

எய்த இரவும் நன்பகலும்—என்று பாடங் கொள்வாருமுண்டு. 28

1234. பூணுந் தொழில்வேள் விச்சடங்கு புரிய வோம தேனுக்கள்
காணும் பொலிவின் முன்னினியு மநேக மடங்கு கறப்பனவாய்ப்
பேணுந் தகுதி யன்பாலிப் பிரம சாரி மேய்த்ததற்பின்
மாணுந் திறத்த வானவென மறையோ ரேல்லா மனமகிழ்ந்தார். உக

(இ - ள்) வெளிப்படை. மறையவர்கள் எல்லாரும் தாம் மேற்கொள்ளும் தொழிலாகிய வேள்விச்சடங்கு செய்வதற்கு உதவும் ஓமப் பசுக்கள், கண்ணுல் நேரே காணுமாறு மிக அழகுடன் விளங்கி முன்னினியினும் அநேக மடங்கு பால்கறப்பன வாய்ப், பசுக்காக்கும் முறையில் தகுதியுடன் அன்பினுல் இந்தப் பிரமசாரி மேய்த்ததற்பின் மாட்சிகொண்ட தன்மையுடையவாயின என்று மன மகிழ்ந்தார்கள்.

(வி - ரை) பூணும் தொழில் வேள்வி - மறையோர் தமது மரபுரிமையாக மேற்கொள்ளும் தொழிலாகிய வேள்வியில். அறுதொழில்களுள் வேட்டல் ஒன்முகி மறையோரது நியமமாதலிற் பூணும் என்முர்.

ஓமதேனு - 1210 பார்க்க.

காணும் பொலிவின் - வெளிப்படையாகக் கண்ணுற்கண்டு களிக்கும் அழகினுடன்.

முன்னையினும் அநேக மடங்கு கற்ப்பனவாய் - இதற்குக் காரணம் முன்பாட்டில் மடிபெநகி என்றதனால் உரைக்கப்பட்டது.

பேணும் ததுதி இப்பிரமசாரி அன்பால் மேய்த்ததற்பின் - என்க.

பேணும்ததுதி - பசுக்காத்தற்குத்தக்க தன்மை. இதனை முன், "மேய்க்கும் பான்மை" (1230) என்றார். இத்தகுதிக்குரிய செயல்கள் 1230 - 1231-ல் உரைக்கப் பட்டன. அன்பால் - பசுக்கள் செழித்து மனமகிழும்படி மேய்ப்பதற்கு இன்றியமை யாத சாதனம் அவற்றினிடத்து அன்புடைமையேயாம் என்ற அணிபை வற்புறுத்திய வாறு காண்க. இதனை முன்னர் "மிகும்பரிவால்" (1232) என்றதும் காண்க.

இப்பிரமசாரி - விசாரசருமனார் தம்முள் ஒருவராயிருத்தலின் இ என்ற அண் மைச் சுட்டினாற் குறித்தார்கள்.

மாணும் திறத்த ஆன - மாண்பு பொருந்திய தன்மையுடையனவாயின. மாண்பாவது அழகுடைமையும் மனமகிழ்ந்து பால் அதிகம் தரும் தன்மையுமாம். ஆன - ஆயின. ஆயன் மேய்த்தபோதில்லாத மாண்பு இப்போது உளதாயிற்று என் பார் மேய்த்ததற்பின் - ஆயின என்றார்.

மறையோர் - பசுக்களை உடையவர்கள். 1233-ல் பசுக்கள் ஏய மனங்கொள் பெருமகிழ்ச்சி எய்தினதைக் கூறினார்; இங்கு அவற்றின் மகிழ்ச்சிகண்டு அவற்றாற் பெறும் வேள்விச் சிறப்பு நோக்கி மறையோரும் மனமகிழ்ந்தமை கூறினார்.

எல்லாம் - எல்லாரும். முற்றும்மை தொக்கது. கறப்பனவாய் - மாணுந்திறத்த ஆயின என்று கூட்டுக. 29

1235. அனைத்துத் திறத்து மானினங்க ளணைந்த மகிழ்ச்சி யளவின்றி
மனைக்கட் கன்று பிரிந்தாலு மருவுஞ் சிறிய மறைக்கன்று
தனைக்கண் டருகு சார்ந்துருகித் தாயாந் தன்மை நிலையினவாய்க்
கனைத்துச் சுரந்து முலைக்கண்கள் கறவா மேபால் பொழிந்தனவால்.

(இ - ள்) வெளிப்படை. எல்லாவகையாலும் ஆனினங்கள் கொண்ட மன மகிழ்ச்சி அளவில்லாமல் வீட்டில் உள்ள தமது கன்றுகளைப் பிரிந்தாலும், தம்முன் மருவிய சிறிய மறைக்கன்றுகிய விசாரசருமரைக் கண்டு அருகே யடைந்து உருகி, அக்கன்றுக்குத் தாம் தாயாகிய தன்மையுள்ள நிலையினை அடைந்தவைகளாகக் கனைத் துக்கொண்டு மடிசுரந்து முலைக்கண்களினின்றும் கறவாமலே பாலினைப் பொழிந்தன.

(வி - ரை) அனைத்துத்திறம் - முன் 1233-ல் உரைக்கப்பட்டவை.

மகிழ்ச்சி அளவின்றி - கண்டு - சார்ந்து - உருகி - நிலைமையவாய் - கனைத்து - சுரந்து - பால் பொழிந்தன - என்று முடித்துக்கொள்க.

மனைக்கட்கன்று பிரிந்தாலும் - மறைக்கன்று தனைக்கண்டு - பிரியத்தரியாத தமது கன்றுகளை மனைக்கட்பிரிந்து தாம் தனியே மேய்வதற்கு வந்த போதிலும், அதனால் வருந்தாது, விசாரசருமரைத் தம்கன்றுகவேகண்டு. மருவும் - தம்முடன் மருவி யிருக்கும். விசாரசருமனார் பசுக்களின் கூடவேயிருந்து பேணிய தன்மைகுறித்தது. "கன்றகல் புனிற்றுப் போல்வர்" (761) என்றபடி கன்றினைப் பிரிந்த பசுக்கள் இயல்பாய் வருந்தல் வேண்டுமாயினும், இங்கு அதற்குமாறுக வருந்தாதிருந்ததுடன், அன்பு பெருக நின்று மடி சுரந்து பாலும் பொழிந்தன என்னில், இதுவும் இயற்கைக்கு மாறன்று, இங்கும் ஒரு அன்புமிக்க கன்றிருந்ததாகலின் என்றதாம்.

சிறிய மறைக்கன்று - சிறுமை பிராயத்தாலும் உருவத்தாலும் காணப்பட்டது. அச்சிறிய பெருந்தகையார்" (திருஞான - புரா - 73) முதலியவை காண்க. பசுக்கள்

அவரைத் தம்கன்றுக எண்ணியமையால் மறைக்கன்று என்றார். மறையோர்குழவி என்ற பொருளும் தோன்ற நின்றது. கன்றுபோல்வாரைக் கன்றுஎன்றது இலக்கணை.

பிரிந்தாலும் - கண்டு என்க. தமது கன்றுகவே கண்டு.

தாயாம் தன்மைநிலைமையவாய் - அருகு சார்தல் - உருகுதல் - கனைத்தல் - முலை சுரந்து பால் பொழிதல் என்ற இவை தாய்ப்பசுக்களின் தன்மை. நிலைமைய ஆய் - நிலைமையை அடைந்தனவாகி. நிலைமை அவாய் - என்று பிரித்துத், தம்து கன்றினுக்குத் தாயாயிருப்பதனுடன் இந்தக்கன்றினுக்கும் தாயாகியிருக்கும் நிலைமையை விரும்பி - ஆசை கொண்டு - என்றுரைக்கவும் நின்றது. அவாய் - அவாவி - விரும்பி. மனைக்கட் கன்று - தம்மால் ஊட்டி வளர்க்கப்படும் கன்று; மறைக்கன்று - தம்மை அன்புடன் ஊட்டி வளர்க்கும் கன்று என்று கொண்டன என்பதாம். "ஏய மனங்கொள் பெருமகிழ்ச்சி யெய்தி" (1233) என்றது காண்க.

தாயாந்தன்மை நிலைமையில் முலையினின்றும் பால் பொழிதல் உளதாகும் என்பதனை ஆளுடைய பிள்ளையாரது நிலையினைக் கேட்டவுடன் தமது தனபாரங்களிற் பால் சுரந்து நின்ற மங்கையர்க்கரசி யம்மையாரது வரலாறு முதலியவற்றாலுமறிக. "முன்னின் - நிலைவிளம்பக், கொங்கை சுரந்தவருட் கோமகள்" என்றார் சிவப்பிரகாச முனிவர் (நால்வர்நான்மணிமாலை). "பிள்ளையெனச் சொல்லச் - சுரந்த, தன முடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த, மனமுடையா ளன்பிருந்த வாறு" (திருக்களிறு - 54) என்றது ஞானசத்திரம்.

கறவாமே பால் பொழிந்தன - கன்றினை நினைந்தபோதும் கண்டபோதும் கறவாமலே பால் பொழிதல் பக்க அன்பினுக்கும் பாற்செழிப்புக்கும் அடையாளம். இத்தகைய பசுக்களை இக்காலிலும் காணலாகும். கறவாமே பால் பொழிந்த இக் நிகழ்ச்சியே இச்சரித விளைவுக்குத் தொடக்கமாம். இத்திருப்பாட்டு இப்புராணத்தி னுள் சரிபகுதியில் அமைந்த அமைப்பும் காண்க.

பொழிந்தனவால் - ஆல் - அசை - அதிசயக் குறிப்புப்பட நின்றது. முன்னர் 1233ல் முலைகள் சுரந்தனவால் என்றார். அங்குத் தம் கன்றுகள் வாய் வைத்து உண்ணுமாறு சுரந்த மட்டில் நின்றன; இங்குப் பொழிந்தன எனச் சுரந்த மட்டில் அமையாது முலைக்கண்களினின்றும் வெளிப்படப் பால்சொரிந்தன என்று கூறியதும் மனைக்கன்றுக்கும் மறைக்கன்றுக்கும் பசுக்கள் கொண்ட வேறுபாடு குறித்தது. அன்றி யும், முன்னைய நிலை, மனங்கொள் பெருமகிழ்ச்சியால் நிகழ்ந்ததாகப், பின்னையது அந்த மகிழ்ச்சி அளவின்றிப் பெருகியதால் ஆகியது என்பதும் காண்க. பின்னரும் செழும்பால் பொழிந்தன (1239) என்றதும் கருதுக. இவ்விடங்களில் ஆல் என்ற ஒரே அசைமொழி தந்தோதியதும், சுரத்தல் பொழிதல் என்ற இரண்டும் கன்றின் மேற் கொண்ட அன்பு ஒன்றே பற்றியது என்று காட்டுதற்காமென்க. 30

1236. தம்மை யணைந்த வான்முலைப்பால் தாமே பொழியக் கண்டுவந்து
செம்மை நெறியே யுறுமனத்திற் றிருமஞ் சனமாங் குறிப்புணர்ந்தே
எம்மை யுடைய வள்ளலா ரெய்த நினைந்து தேளிந்ததனில்
மெய்ம்மைச் சிவனார் பூசனையை விரும்பும் வேட்கை விளைந்தெழலும்,

1237. அங்கண் முன்னை யர்ச்சனையி னளவின் றோடர்ச்சி விளையாட்டாப்
பொங்கு மன்பான் மண்ணிமணற் புனைசெக் குறையி லாத்தியின்கீழ்ச்
செங்கண் விடையார் திருமேனி மணலா லாக்கிச் சிவாலயமுந்
துங்க நீடு கோபுரமுஞ் சுற்று லயமும் வகுத்தமைத்தார். 32

சேய்ஞலூர் (முழுப்பார்வை)

மண்ணியாற்றின் கரை



1

2

3

4

திருச்சேய்ஞலூர் கோயில்

திருஆப்பாடி கோயில்

—பாட்டு - 1237 - பக்கம் - கடிஅ0

1. திருச்சேய்ஞலூர் கோயிலும் குளமும் (பின்புறம்)
2. திருஆப்பாடி (முன்புறம்) 3. திருஆப்பாடி கோயிலும் திருஆத்தியும்
4. திருஆப்பாடி சண்டீசர் கோயில்

1236. (இ-ள்) வெளிப்படை. தம்மை அணைந்த பசுக்கள் முலைப்பாலினைக் கறவா மல் தாமே பொழியக் கண்டு மகிழ்ந்து, செம்மை நெறியிலே உற்ற தமது திருமனத் தில் அந்தப்பால் சிவபெருமானுக்குத் திருமஞ்சனமாகும் குறிப்பினை உணர்ந்தே, எம்மை ஆளுடைய வள்ளலாராகிய விசாரசருமனார், பொருந்தும்படி நினைந்து, தெளிந்து, அத் தெளிவினுள்ளே சிவனாரது உண்மையாகிய பூசையை விரும்பும் வேட்கை மினைந்து எழுந்ததாகவே, கூக

1237. (இ - ள்) வெளிப்படை. அவ்விடத்து, அர்ச்சனையினது முன்னுளித் செய்த தொடர்ச்சி அளவிற் சிறுவர் விளையாட்டாக உருக்கொண்டு பொங்குகின்ற அன்பினாலே, மண்ணியாற்றின் மணற்றிடரில், ஆத்திமரத்தின் அடியில், செங்கண் விடையினையுடையாரது திருமேனியாகிய சிவலிங்கத்தை மணலினாலே உளதாக்கிச் சிவாலயமும், பெரிய நீண்ட கோபுரமும், சுற்றாலயமும் வகுத்து அமைத்தனர். கூஉ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1236. (வி - ரை) தம்மை அணைந்த - வள்ளலார், தம்மை அணைந்த என்று கூட்டித் தொடங்கிக் கொள்க. அணைந்த - கண்டு அருகு சார்ந்து என்று முன் பாட் டிற் கூறியபடி அணைந்த.

தாமே - பிறர் எவரும் கறவாமல் தாமே. "கறவா மேபால் பொழிந்தனவால்" (1235) என்றது காண்க.

செம்மை நெறி - சிவநெறி - முத்திநெறி. செம்மை நெறியே உறும் மனம் - சிவத்தன்மை பெறுதற்காகிய வழியிலே சென்ற மனம். சிவபூசையே முத்திக்குச் சாதனமாமென்று தெளிந்த மனது. இதுவே செந்நெறி எனவும்படும்.

மனதில் திருமஞ்சனமாம் குறிப்பு உணர்ந்து - செம்மைநெறியே உறும் மனம் ஆதலின் அதனுள் அருளால் முன்சென்ம வாசனைப்படி ஒரு குறிப்பு எழுந்ததாக,அதனை உணர்ந்து. செம்மைநெறி உறுதல் குறிப்பு எழுதற்குக் காரணமாய் நின்றது என்பது குறிக்க அதனை உடம்பொடு புணர்த்தி ஓதினார். ஏனையோர்க்கு அவ்வாறு குறிப்புத் தோன்றாது என்பதாம்.

வள்ளலார் - தம்மை யடைந்தோர் யாவர்க்கும் சிவபூசைப் பயனாகிய, தாம் பெற்ற, பேரின்பத்தை வரையாது கொடுத்தலின் வள்ளலார் என்றார். எம்மை யுடைய என்ற கருத்தும் அது; எம்மைத் தமது அடிமையாகக் கொண்டு ஆள்கின்ற - ஆளாகவுடைய.

எய்த நினைந்து - பொருள்முடிவுபெறப் பொருந்த நினைந்து. நினைதல் - சிந்தித்தல் - ஆராய்தல். தெளிதல் - துணிதல்.

நினைதலாவது - உடையவர்களின் சம்மதமின்றி இது செய்யலாவதோ? என்றும், வேள்விக்காகும் பொருளைப் பிறிதொன்றிற் பயன்படுத்தலாகுமோ? என்றும், இவ்வாறு பலவும் எண்ணுதல். தெளிதலாவது உடையவர் சம்மதமின்றியே பசுக்கள் தாமே பால்பொழிதலானும், இவ்வாறு செய்யாவிடின் அந்தப் பால் வேள்விக்கும் உதவாது வீணே நிலத்திற் கழியுமாகலானும், இறைவனைத் திருமஞ்சனமாட்டுதலும் சிவவேள்வியே யாமாகலானும், பிறவாற்றானும் இதுவே தக்கதென்று துணிதல்.

அதனில் - அக்குறிப்பினைத் தெளிந்த அதனுள்; தெளிவினுள்ளே. அதனில் - எழலும் என்று கூட்டுக. தெளிந்தது என வினையாலணையும் பெயராகக் கொண்டு உரைத்தலுமாம். தெளிந்ததனால் என ஏதுப்பொருள் கொள்வதுமொன்று.

செம்மை நெறியே...குறிப்பு - முன் தொடர்ச்சியினால் செம்மை நெறி உறும் மனம் பெறும் விதியில்லாத ஏனையோர், பாலினைக் கண்டபோது, அது தமக்கும் மகார்க்கும் பிறர்க்கும் நல்ல உணவுப்பண்டமாகும் என்ற குறிப்பினையே உணர்குவர்.

இன்னும், முன் தொடர்ச்சியினுல் தீமைநெறியே உறும் மனங்கொண்ட விதியுடையோர் திருமஞ்சனத்துக்கு அமைத்த பாலினையும் அது மக்கட்குதவாமல் வீணே கழிகின்றது என்று வாதாடிக் கழிந்து நிரயத்துக்காளாகுவர். இவ்வாறுளாரையும் காண்பது இந்நாட் கொடுமைகளுள் ஒன்று. காதற்ற வூசியைப் பட்டிலுற் பொதிந்து பெட்டியில் வைத்திருக்கக் கண்டபோது, பிறரெல்லாம் காதறுந்த ஊசியேயாயினும், வேறு எப்பொருளேயாயினும், இவ்வாறு காப்பாற்றப்படுதல் வேண்டும் என்ற குறிப்புணர்வ்ராக, எமது பெருமகனுராகிய பட்டினத்தடிகள் "காதற்ற வூசியும் வாராது கூடக் கடைவழிக்கே" என்ற உண்மையினை அதனுட்கண்டு ஒன்பது கோடி பொருளையும் ஒரே தொடியில் துறந்து தவராச சிங்கமாயினர் என்ற வரலாறும் இங்கு நினைவுகூர்தற்பாலது.

சிவனுர் மெய்ம்மைப் பூசனையை என்க. மெய்ம்மையாவது எவ்வாற்ருனும் பொக்கம் ஒன்றுமில்லா திருத்தல். "நெக்கு நெக்கு நினைப்பவர்" என்பது முதலிய திருவாக்குக்கள் இங்குக் கருதற்பாலன. சிவனையே குறிக்கோளாகக் கொண்டு குறிவைத்த பூசை. "குறித்த பூசை" (1241), "ஒன்றுமுள்ளத் துண்மையினுல்" (1252) என்பன காண்க.

சிவனுர் - சிவபெருமானே முழுமுதற் கடவுளாவார் என்பது குறிப்பு. பூசனை - திருமஞ்சனமாட்டுதல் முதலிய பூசையின் எல்லா உறுப்புக்களின் தொகுதி குறித்தது.

விரும்பும் வேட்கை விளைந்து எழலும் - மனத்தின்கண் பூசனையையே விரும்புகின்ற ஆசை. முன்னைப்பிறவியின் விளைத்த வாசனையாகிய விதையினின்று முளைத்தெழுந்து மேன்மேல் வளர்ந்து எழுந்ததனுல் விளைந்து எழ என்ருர். "முகைத்த மலரின் வாசம்போல்" (1218), "பண்டைப் பரிவால்" (1240) முதலியவையும், "விளைத்த அன்பு" (772) என்றதும் பார்க்க.

விரும்பும் வேட்கை - விருப்பமானது முற்றிய நிலையில் வேட்கை எனப்படும்.

விரைந்தெழலும்—என்பதும் பாடம். 31

1237. (வி - ரை) அர்ச்சனையின் முன்னைத் தொடர்ச்சி யளவில் அங்கண் விளையாட்டா என்க.

விளையாட்டாப் பொங்கும் அன்பால் - முன்னைப் பிறவி வாசனையாகிய அர்ச்சனையின் தொடர்ச்சி இப்பிறப்பில் சிறுவர் மணற்கூட்டி விளையாடும் விளையாட்டு என்ற உருவத்தில் வந்தது என்பதும், அவ்வாறு வரினும் அது உள்ளே நிறைந்து பொங்கும் அன்பினுல் ஆகியது என்பதும் ஆம்.

மணற் புனைக்குறை - மணற்றிடர் - திட்டை - திடல்.

சேங்கண் விடையார் திருமேனி மணலால் ஆக்கி - "தாபர சங்க மங்க ளென்றிரண் டுருவி னின்று, மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்பன்" (சித்தியார்-228) என்ற இடத்து "சதாசிவ தத்துவத்தின் வைகும் இறைவன், புறத்தே திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனியும் திருவேடமும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக் கொண்டுநின்றும் ஈண்டுள்ளார் செய்யும் பூசை கொண்டருளுவனுகலான், அஃதறிந்தவ்விடங்களின் வழிபடுக" என விதிக்கப்படுதலின் அவ்விரண்டனுள் இங்கு விசாரசருமனுர் திருக்கோயிலுள்ளிருக்குந் திருமேனியாகிய இலிங்கத் திருமேனி கண்டு வழிப்படலாயினர் என்றும், அவ்வாறு சிவலிங்கத் திருமேனி காண்பதில் மண் - உருத்திராக்கமணி - சந்தனம் - முதலிய பலவற்ருலும் சிவலிங்கம் ஆக்கிக்கொண்டு பூசிக்கலாமென்று விதியிருப்பதனுல் அவற்றுள் மணலாலாக்கிக் கண்டனர் என்றும் கொள்க.

திருமேனியாக்கிச் சிவாலயமும் - கோபுரமும் - சுற்றாலயமும் வகுத்தமைப்பார் - சிவலிங்கத்தை முன்னர் அமைத்து வைத்துக்கொண்டு, பின் அதற்கு ஏற்றவாறு சிவா

லயமும் கோபுரமும் சுற்றாலயமும் பிறவும் அமைக்கவேண்டுவது முறை என்றும், இப் படிக்கன்றி முன்னர் ஆலயம் கோபுரம் முதலியவற்றை அமைத்துக் கொண்டு பின் னர் அதற்குச் சிவலிங்கம் அமைத்தல் தகுதியன்றென்றும் கருதவைத்த முறை காண்க.

கோபுரமும் சுற்றாலயமும் வகுத்தமைத்தார் என்றதனால், சிவலிங்கம் தாபித்தபின், அதற்குரிய சிவாலயமும் கோபுரமும் முதற்கண் இன்றியமையாது வேண்டப்படுவன வென்றும், சுற்றாலயம் அவற்றின் பின்னரே அமைக்கத்தக்கது என்றும் குறித்தபடி.

சிவாலயம் - சிவலிங்கப் பெருமானுக்குரிய ஆலயம். சுற்றாலயம் - பரிவார மூர்த்திகளெனப்படும் விநாயகர் முருகர் நந்தி தக்ஷிணமூர்த்தி சண்டேசர் வைரவர் சூரிய சந்திரர் முதலிய மூர்த்திகளுக்குரிய இடம். இவை முதற்சுற்றில் இருக்கத்தக்கன.

இத்தச் சிவலிங்கமூர்த்தியும் சிவாலயமும் இப்போது திருவாப்பாடி ழர்த்தியும், திருக்கோயிலுமாக அமைந்துள்ளன.

துங்கநீடு என்றது பெருமையால் என்றும் நீடியுள்ள என்று குறிப்பதாம்.

ஆத்தியின் கீழ் - இந்த ஆத்திமரம் இப்போது திருவாப்பாடிக் கோயிலினுள் தென் மேல்பாகத்தில் உள்ளது. இது காட்டாத்தி என்ற வகையுட்பட்டது. இது போலவே சிறுத்தொண்ட நாயனருக்கு அருள்புரிய வந்த உத்தராபதியார் திருச் செங்காட்டங்குடி ஆலயத்தில் "வண்ணமல ராத்தியின்கீழ்" எழுந்தருளியிருந்த அந்த மரமும் இப்போது தரிசிக்க உள்ளது. 32

1238. ஆத்தி மலருஞ் செழுந்தளிரு முதலா வருகு வளர்புறவிற்
பூத்த மலர்க டாந்தெரிந்து புனிதர் சடிலத் திருமுடிமேற்
சாத்த லாகுந் திருப்பள்ளித் தாமம் பலவுந் தாங்கொய்து [தார். கூக
கோத்த விலைப்பூங் கூடையினிற் கொணர்ந்து மணந்தங் கிடவைத்

(இ - ள்) வெளிப்படை. ஆத்திமலரும், செழுந்தளிரும் முதலாகப், பக்கத்தில் வளர்கின்ற (முல்லைப்) புறவினிற் பூத்த மலர்களுள்ளே தாமே தெரிந்து புனிதராகிய சிவபெருமானுடைய சடையுடைய திருமுடியின்மேல் சாத்துதற்காகும் திருப்பள்ளித் தாமங்கள் பலவற்றையும் தாம் கொய்து இலைகளாற் கோத்துவைத்த பூங்கூடையினிற் கொண்டுவந்து வாசனை (வெளிப் போகாது) தங்கும்படி வைத்தனர்.

(வி - ரை) சாத்தலாகும் திருப்பள்ளித்தாமம் பலவும் - இங்கு, விசாரசருமனுர், இறைவனுர் பூசைக்கு ஆகம விதிப்படி சாத்தக்கூடியனவாக விதிக்கப்பட்ட மலர், தளிர் முதலியவற்றைத் தெரிந்து எடுத்தனர் என்றும், அவை ஆத்தி முதலிய மலர்க ளென்றும் செழுந்தளிர்களென்றும், அவை அங்கு அருகில் முல்லைப்புறவில் தம்மியல் பால் வளர்ந்து பூத்தன என்றும் கூறப்பட்டது. ஆத்தி - திருவாத்தி என்று கூறுப.

அருகு வளர் புறவு - பக்கத்தில் இயல்பாய் வளர்ந்த முல்லைப்புறவு. "மண்ணிக் கரையின் வளர்புறவின் மாடு" (1232) என்றது பார்க்க. சேய்ஞலூர் உள்ளது மருத நிலமேயாயினும், ஆமேய்க்குமிடங்கள் முல்லைப் பகுதிக்குரியன என்பதும், ஆமேய்த் தல் முல்லைத் திணைக்குரிய பகுதி என்பதும், அமைவன ஆதலின், இங்கு விசாரசரும னுர் மலர்பறித்தது அருகேவளர்ந்ததும் தாம் ஆக்களை மேய்த்த நிலமும் ஆகிய முல்லைப் புறவின் சார்பு என்று கொள்க.

புறவிற் பூத்த மலர்கள் - மனிதரால் வளர்க்கப்பட்ட நந்தனவன முதலியன வற்றிலன்றி இங்கு நாயனர் எடுத்தவை புறவில் இயற்கையில் வளர்ந்த மரம் செடிகளிற் பூத்த மலர்களாம். இது புண்ணிய நிலமாகிய நமது தென்திசைத் தேசத்திற்குரிய பெருமைகளுள் ஒன்று. இதுபற்றியே "புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு

நீருண்டு" என்று திருமூலர் வகுத்தோதியதும், "பூசனைக்குப் பொருந்து மிடம்பல, பேசிலத்திசை யொவ்வா பிறதிசை" (46) என்று முன்னர் வகுத்ததும் கருதுக. நந்தன வனங்களின் அமைவுபற்றி (240) லும், திருப்பள்ளித்தாமங் கொய்து சேர்க்கு முறைபற்றி (559)லும் கூறிய ஆசிரியர் இங்கு அவ்வாறு அமையும் நந்தவனமில்லாத போதும் சிவபூசை செய்யச் சாதனம் தேடும் முறைபற்றி அறிவிக்கும் பண்பு காண்க.

மலர்கள் - மலர்களுள் ஆகும் பள்ளித்தாமம் என்று கூட்டுக. மரஞ் செடி கொடி களில் உள்ளபோது பலவகை மலர்கள் என்ற பெயரால் அறியப்படும் இவை, சிவனுக் காகக் குறித்து எடுக்கப்படும்போது திருப்பள்ளித்தாமம் என்ற யெரால் வழங்கப்படும் முறையினை, மலர்கள் - தெரிந்து, சாத்தலாகும் திருப்பள்ளித்தாமம் - கொய்து என்றறிவித்த பண்பு காண்க.

பூத்த மலர்கள் என்றதனுல் புதிதாக மலர்ந்த - அன்றலர்ந்த - என்றுணர்த்தினர்.

தாந்தெரிந்து - தாங் கொய்து - கோத்த இலைப்பூங்கூடை - தாமே விதி தெரிந்து தாமே கொய்து கூடையிற் கொண்டு சேர்த்தல் நன்மை தருவதென்பது. இதுபற்றி முன் எறிபத்தநாயனர் - முருகநாயனர் புராணங்களிலுரைத்தவை பார்க்க.

புனிதர் - இயல்பாகவே பாசங்களி னீங்கியவர் - தூய்மை யுடையவர் - தூய்மை செய்பவர்.

சாத்தலாகும் - சாத்தற்கு ஆவன என்று விதிக்கப்பட்ட. 1024 பார்க்க.

இலைகோத்த பூங்கூடை என்க. மலர்களைச் சேர்த்து வைத்தற் பொருட்டுத் தாமே இலைகளாற் கோத்துச் செய்த திருப்பூங்கூடை. மலர்களைக் கையிற் கொண்டு சேர்த்த லும் அணி முதலியவற்றில் வைத்துக் கொணர்தலும் ஆகாவென்பர்.

மணந்தங்கிட - மலர்களின் மணம் காற்றினுற் பரவி வெளிச் செல்லாமலும் வெய்யில் முதலியவற்றுல் சிதையாமலும் அவற்றினுள்ளே தங்கியிருக்கும்படி.

சிவபூசைக்காகச் சிவலிங்கமும், சிவாலயமும், கோபுரமும் சுற்றுலயமும் வகுத்தது சிவபூசை வேட்கை எழுந்தபின் விசாரசருமனுர் செய்த முதற்செயல். சிவபூசை செய்தற்குச் சிவலிங்கமும், ஆலயமும், இன்றியமையாது முதலில் வேண்டப்படுத லால் அவ்விரண்டனையும் முதலில் அமைத்துக் கொண்டனர். பின்னர்த் திருமஞ்சன மாங் குறிப்பு உணர்ந்ததும், அது பூசையின் ஒரு அங்கமேயாதலின், அதற்குரிய பூசை புரிய வேண்டியது முதலில் அவசியமாயிற்று. பின்னர்ப் பிற அங்கங்களும் சாதனங் களுமாகிய மலர் முதலியன வேண்டப்படுமாதலின் அவற்றை அடுத்தபடியாகத் தேடிக்கொண்டனர். இனி இவையெல்லாம் குறிப்பினுல் உணர்த்திய பாலாகிய திரு மஞ்சனப் பொருளைத் தேடிக்கொள்ளுதல் (1239) அடுத்த பாட்டிற் கூறுவர். அவ் வாறு தேடி அமைத்தபின் செய்யும் பூசையினையும் அதனை இறைவர் ஏற்றுக் கொண் டதனையும் அடுத்த (1240, 1241) இரண்டு பாட்டுக்களாற் றொடர்ந்துகூறிப், பூசை முடித்து நாயனர் மகிழ்ந்த மனநிலையினை அதற்கடுத்த (1242) பாட்டாற் கூறுவார். பூசை வேட்கை எழுந்ததனையும், பூசைச் சாதனம் தேடியதனையும், பூசையினையும், அதனை இறைவர் ஏற்றுக்கொண்டதனையும், அதனை நிரப்பி விசாரசருமனுர் மகிழ்ந்த தனையும் ஒருசேரத் தொடர்ந்து (1237–1242) இந்த ஆறு திருப்பாட்டுக்களாலும் கூறிய வகையைக் கண்டுகொள்க. 33

1239. நல்ல நவகும் பங்கள்பெற நாடிக் கொண்டு நாணற்பூங்
கொல்லை யிடத்துங் குறைமறைவு மேவுங் கோக்க ளுடன்கூட
வொல்லை யணைந்து பாலாக்க ளொன்றுக் கொருகா லாகவெதிர் [வால்.
செல்ல வவையுங் கனைத்துமுலை தீண்டச் செழும்பால் பொழிந்தன

(இ - ள்) வெளிப்படை. நல்லனவாகிய நவகும்பங்கள் பெறுதற்கு நாடி எடுத்துக்கொண்டு நாணல்கள் நெருங்கிய அழகிய கொல்லையிடத்தும், ஆற்றிடைக் குறை மறைவிலும் மேய்கின்ற பசுக்களுடன்கூட விரைவில் அணைந்து பாற்பசு ஒன்றுக்கு ஒருகாலாக எதிரே போக, அவையும் முலைதீண்டியவுடன் கனைத்துச் செழும்பால் பொழிந்தன.

(வி - ரை) நல்ல நவகும்பங்கள் - நல்லனவாகிய ஒன்பது கும்பங்கள். "ஆன் மார்த்த பூசைக்கும் நவகும்பங்கள் தாபித்து அபிடேகம் செய்யலாமென்று காமி காகமங் கூறுகின்றமையால் அது வருமாறு..." என்பது சைவ பூஷணம்; 71-ம் பக்கம் (104) காண்க. ஒன்பது கும்பங்கள் தாபித்துத் திருமஞ்சன மாட்டுதல் ஆகம விதிகளுள் ஒன்று. நவகும்பம் - (பூசைக்காதலின்) புதிய குடங்கள் என்பாருமுண்டு.

பெற நாடி கொண்டு - பெற - எண்ணி; நாடி - அதற்காக முயன்று; கொண்டு - வந்ததைப் பெற்றுக்கொண்டு. நாணற்கொல்லை - குறைமறைவு - இவை பசுக்கள் மேயும் இடங்கள்.

ஒன்றுக் கொருகாலாக எதிர் செல்ல - முலைதீண்ட என்க. ஒரு பசுவினது மடியில் ஒரு முலைக்காம்பில் பால் பெறும்படி முலையைத் தீண்ட. ஒருகாலாக - என்றது முலைக்காம்பாக என்ற பொருளிலும், எதிர் செல்ல என்றது முறையாகப்போக - நிகழ - என்ற பொருளிலும் வந்தன.

ஒருகாலாக - பால் கறத்தலில் வழங்கும் மரபு வழக்கு. இவ்வாறன்றி ஒருதரம் என்று கூறுவாருமுண்டு. முலைதீண்டச் செழும்பால் பொழிந்தன - விசாரசருமனுரைக் கண்ட மாத்திரத்தில் அருகுசார்ந்து உருகி முலைசுரந்து கறவாமே பால் சொரிந்த பசுக்கள், அவர், தம்மை யணைந்து முலைதீண்டப் பால் பொழிதல் ஒரு வியப்பாமோ?

பொழிந்தனவால் - விசாரசருமனுரைத் தம் கன்றுகப் பசுக்கள் நினைந்த நிலையை முன்னரும் "பொழிந்தனவால்" (1237) என்ற இதே சொல்லினுற் கூறினர். முன்னர்க் கூறியது பசுக்கள் விசாரசருமனுரை அருகுசார்ந்து பால்பொழிந்த நிலை; இங்குக் கூறியது பசுக்களே அவை மேயுமிடத்து விசாரசருமனர் அணைந்து முலைதீண்டியபோது பால் சுரந்து பொழிந்த நிலை.

முலைதீண்ட என்றது அன்பு பெருகப் பால் சுரக்கச் செய்யும் செயல் அளவில் நின்றது. இங்கும் கறவாமே தீண்டிய அளவில் பால் பொழிந்தன என்க.

கனைத்தல் - அன்பின் பெருக்கால் நிகழும் மெய்ப்பாடு. முன்னரும் "கனைத்துச் சுரந்து" (1235) என்றது காண்க. 34

1240. கொண்டு மடித்த குடநிறையக் கொணர்ந்து விரும்புங் கொள்கையி
அண்டர் பெருமான் வெண்மணலா லயத்து ளவைமுன் ருபித்து[னல்
வண்டு மருவுந் திருப்பள்ளித் தாமங் கொண்டு வரன்முறையே
பண்டைப் பரிவா லருச்சித்துப் பாலின் றிருமஞ் சனமாட்டி, ஈடு

1241. மீள மீள விவ்வண்ணம் வெண்பால் சொரிமஞ் சனமாட்ட
ஆள வுடையார் தம்முடைய வன்ப ரன்பின் பாலளதாய்
மூள வமர்ந்த நயப்பாடு முதிர்ந்த பற்பு முற்றச்சூழ்
கோள மதனி லுண்ணிறைந்து குறித்த பூசை கொள்கின்றூர், ஈசு

1242. பெருமை பிறங்குஞ் சேஞலூர்ப் பிள்ளை யார்த முள்ளத்தில்
ஒருமை நினைவா லும்பர்பிரா னுவக்கும் பூசை யுறுப்பான

திருமஞ் சனமே முதலவற்றிற் றேடா தனவன் பினினிரப்பி
வருமந் நெறியே யர்ச்சனைசெய் தருளி வணங்கி மகிழ்கின்றார். கூஎ

1240. (இ - ள்) வெளிப்படை. பொழிந்த அந்தப்பாலினைக் குடங்கள் நிறைய ஏற்றுக்கொண்டு, கொணர்ந்து, விரும்பும் கொள்கையினால் தேவதேவரது வெண் மணலாலாகிய கோயிலினுள்ளே அவற்றை முன் தாபித்து, வண்டுகள் பொருந்த நின்ற திருப்பள்ளித் தாமங்களினால் வரன் முறையாலே முன்னைத் தொடர்ச்சியாகிய அன்பினாலே அருச்சனை புரிந்து, பாலின் திருமஞ்சனத்தை ஆட்டி, கூடு

1241. (இ - ள்) வெளிப்படை. மீண்டும் மீண்டும் இவ்வாறு வெண் பாலினைச் சொரியும் திருமஞ்சனத்தினை ஆட்ட, ஆட்கொண்டருளுதற்கு உடையாராகிய சிவ பெருமான் தம்முடைய அன்பரது அன்பின்பால் உளதாகி மேன்மேல் உண்ணின்று பெருக விரும்பிய நயப்பாடு முதிர்ந்ததாகிய அன்பு முற்றச் சூழும் கோளத்தினிடத்தில் உள்ளே நிறைந்து நின்று அவர் குறிப்பிற் கொண்ட பூசையினை ஏற்றுக் கொள் கின்றாராக, கூசு

1242. (இ - ள்) வெளிப்படை. பெருமை விளங்கும் சேய்ஞலூர்ப் பிள்ளையார் தமது உள்ளத்தில் ஒன்றுபட்ட நினைப்பினாலே தேவர் பெருமான் மகிழும் பூசனையின் உறுப்புக்களாகிய திருமஞ்சனமே முதலாகியவற்றில் தாம் தேடிக்கொள்ளாதவற்றை அன்பினால் நிரப்பிக்கொண்டு வரும் அந்நெறியிலே அருச்சனை செய்தருளி வணங்கி மகிழ்கின்றாராயினர். கூஎ

இம்மூன்று பாட்டுக்களும் ஒரு தொடர்பு கொண்டு பொருள்செய்ய நின்றன.

1240. (வி - ரை) மடுத்த குடம் நிறையக் கொண்டு கொணர்ந்து என்க.

மடுத்த - முலைதீண்டப் பால் பொழிந்தனவாதலின் இவர் செய்ய எஞ்சுகின்ற செயல் அதனைக் குடத்தில் ஏற்றலேயாம்; ஆதலின் மடுத்ததுடம் என்றார். மடுத்தல் - நிறைய ஏற்றல்; நிறைத்தல். கொணர்ந்து - நாணற் கொல்லையிடத்தும் குறைமறை வினும் (1239) பாலினை ஏற்ற இடத்திலிருந்து மணலினிற் புளினக்குறையில் ஆத்தி யின்கீழ்க் (1237) கோயில் ஆக்கிய இடத்துக்குக் கொண்டுவந்து.

ஆலயத்துள் - சிவாலயத்தினுள் (1237).

அவை முன் தாபித்து - குடங்களைத் தாபித்தலாவது ஆசனம் கற்பித்து வைத்தும், திருமஞ்சனமாகக் கற்பித்து அபிமந்திரித்தும் நிறுவுதல். இதன் விரிவு சிவாகமங்களுட் காண்க.

வண்டுமருவும் திருப்பள்ளித்தாமம் கொய்து - இலைப்பூங்கூடையில் மலர்களைக் கொணர்ந்து மணந்தங்கிட வைத்தா (1238) ராதலின் மணத்துக்கும் அதனால் உணர்ந்த தேனுக்குமாக வண்டுகள் மருவி நின்றன என்பது குறிப்பு. "அரும்பற் றப் பட வாய்மலர்...சுரும்பற் றப்படத் தூவித் தொழுமினே" (அப்பர்சுவாமி தேவாரம்). "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி...நறியவு முளவோநீ யறியும் பூவே" என்ற திருப்பாட்டின்படி வண்டுகள் மணத்தினாலே பூக்களைத் தெரிந்து மொய்த்துத் தேனுண்பன என்பதறியப்படும். மருவும் - மருவுகின்ற என்க.

திருப்பள்ளித்தாமம் கொண்டு - பூக்களைக் கொண்டு. 1238ன் உரை பார்க்க.

பண்டைப் பரிவால் வரன்முறையே அர்ச்சித்து - என்க. அர்ச்சித்துத் - திரு மஞ்சனமாட்டி என்றதனால் இது திருமஞ்சனமாட்டுதலின் முன்னர்ச் செய்யும் அருச்சனையாகும். திருமஞ்சனம் முதலிய பூசை உறுப்புக்கள் எல்லாம் முடிந்தபின் செய்யும் அருச்சனை வணக்கம் முதலியவை வேறு; அவற்றை "அருச்சனைசெய் தருளி

வணங்கி" என்று (1242) பின்னர்க் கூறுவது காண்க. இங்குக்கூறிய அர்ச்சித்தலாவது மணலாதரவாக, அதிற் சிவனது வித்தியா தேகத்தை நிறுவி, அதிற் சிவத்தை வெளிப் படச் செய்வதற்கு ஆகமங்களில் விதித்த மந்திரம், பாவனை, செயல் என்றவற்றைச் செய்தலாம். இவை இலிங்கசுத்தி செய்தலும், ஆதாரசத்திமுதல் ஆதிசத்திவரை இலிங்க பீடத்தில் வைத்துச் சிவாசன பூசைகள் செய்தலும், அதன்மேல் இலிங்கத்தில் வித்தியா தேகமாகிய மூர்த்தியை வருவித்து வைத்தலும், அதன்மேல் அத்தேகத்தினுள் சீவனு யுள்ள பரசிவமாகிய மூர்த்திமானைத் துவாத சாந்தத்தின்மேல் தியானித்து வருவித்து வைத்தல் என்னும் சிவ ஆவாகனம் செய்தலும், பின்பு, அவரைப் பூசை முடியும்வரை அந்த இலிங்கத் திருமேனியில் கருணையுடன் விளக்கமாக எழுந்தருளியிருக்க வேண்டு தலும், அதன்பின் உரிய மந்திரங்களால், மலர்களைக் கொண்டு கைகூப்பிச் சார்த்துத லும் அருச்சித்தலும் வணங்குதலும் முதலாயின. "திருப்பள்ளித் தாமஞ் சாத்தி, மஞ் சனமாம்...பாற்குடங்கள் எடுத்து நயப்புற் றூட்டுதலும்" (1254) என்று பின்னரும் இவ்வாறே கூறுதல் காண்க. சுயம்பு - ஆரிடம் - மானிடம் - முதலாக எண்ணப்பட்ட எண்வகைச் சிவலிங்கங்களுள் சுயம்பு - தைவிக இலிங்கங்களுக்கு இந்த நியாச ஆவா கன விதி கிடையாது. ஏனை மானிட முதலாய அறுவகைக்கும் இவை செய்யப்பட வேண்டும் என்று சிவாகமங்கள் விதிக்கின்றபடியால், இங்கு நாயனார் தாபித்ததும், மானிடலிங்கம் என்ற வகையுட்பட்டதும் ஆகிய சிவலிங்கத் திருமேனியில் வரன் முறையே அருச்சித்து அதனிற் சிவபெருமானது விளக்கங்கண்டு, பின்னர்த் திருமஞ்சன மாட்டினர் என்று கூறிய முறை காண்க. திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத் தினுள் அம்மையார் கம்பைமா நதிக்கரையில் மாவினடியிற் பூசித்தது இறைவனார் தமதருளாற் றமேவந்து தோன்றிய (1134) (சுயம்பு) மூர்த்தியாயினமையால் அங்கே இவ்வாறு ஆவாகனவிதி இயற்றப்படாமல் திருமஞ்சனம், மெய்ப்பூச்சு, தூப, தீப முத லிய பூசைகளே தொடங்கி ஆகமவிதிப்படி (1139) செய்யப்பெற்றன என்பதையும் இங்கு உய்த்துணர்ந்து கொள்க. அஃது உலகின் பொருட்டுத் தான்றோன்றிமூர்த்தி யிற் செய்யப்பட்ட பரார்த்த பூசையெனவும், இஃது ஆன்மார்த்த பூசை என்னும் கணிக பூசை எனவும் கூறுவர். (நியாசம் - வைத்தல்).

**வரன் முறையே** என்றது மேலே காட்டியபடி சுத்திகள் - ஆசன்பூசை - நியாசம் - ஆவாகனம் - வேண்டுகை முதலிய விதிமுறைகளே ஆகமங்களில் விதித்த கிரமப்படியே. ஆவாகனம் முதல் புட்பதானம்வரை பத்துச் செய்கையாலும், ஐந்து உபசாரங்களா லும் பூசனை புரியும் முறைபற்றிச் சித்தாந்த சாராவளி கிரியாபாதம் 23-24 பார்க்க.

**பண்டைப் பரிவால்** - முன் பிறவியின் வாசனையால் விளக்கமாகிய அன்பினாலும், அறிவினாலும். "முந்தையறிவின் தொடர்ச்சியினன்" (1218) முதலியவை பார்க்க. ஆகமவிதிகள் யாவும் முன்னைப் பயிற்சி வசத்தால் விசாரசருமனார் மனத்தினுள் அறி யப்பட்டன என்க.

**பாலின் றிருமஞ்சனம்** - பாலாலாகிய திருமஞ்சனம் என்றும், பால்+இன் = பால் என்ற இனிய திருமஞ்சனம் என்றும் உரைக்க நின்றது. இங்குப் பால்தான் இப்பூசை விளைய ஆதரவாயிருந்தமையின், அச்சிறப்புக் காட்டும்படி இவ்வாறு குறித்தார்.

**ஆட்டி** - இவ்வண்ணம் ஆட்ட - நயப்பாடு முதிர்ந்த பற்றுமுற்ற - உடையவர் - கோள்மதனில் நிறைந்து - பூசை கொள்கின்றார்; பிள்ளையார் - தினைவால் - அன்பினில் நிரப்பி - அருச்சனை செய்து வணங்கி - மகிழ்கின்றார் என்று இந்த மூன்று பாட்டுக் களையும் தொடர்ந்து கூட்டிப் பொருள் கொள்க.

**பண்டைப்பயில்வால்**—என்பதும் பாடம்.

1241. (வி - ரை) மீள மீள ஆட்ட - நவகும்பங்களையும் மேன்மேல் ஆட்டிய தனால் மீள மீள என்று அடுக்கிக் கூறினர்.

ஆள உடையார் - ஆள்வதற்கு - அடிமைகொள்வதற்கு - உரிமையுடையவர். ஆள உரியார் என்று பாடங் கொள்வாருமுண்டு.

ஆளஉடையார் - பூசை - கோள்கின்றார் என்க.

அன்பின்பாலுளதாய் மள அமர்ந்த நயப்பாடு முதிர்ந்த பற்று முற்ற - "நயப்புற் றூட்டுதலும்" (1254) என்பதும், "பூசனையை விரும்பும் வேட்கை (1236) என்றதும் காண்க. நயப்பாடு - ஆசை. அமர்ந்த - விரும்பிய. மள - மேன்மேற் பெருக. நயப் பாடு முதிர்ந்தபற்று - ஆசை மிகுந்ததனற் பற்றுகி விளைந்தது.

முற்ற - விளைய. அன்பின்பால் உளதாய் - அன்புகாரணமாக உளதாகிய; அன் பினையே இருக்கையாகக் கொண்டதாகிய. பூசைவேட்கையானது அன்பினல் உள தாகியது; அது முதிர்ந்த பற்றுக விளைந்தது. முற்ற - முற்றியதனல். காரணப்பொருட் டில்வந்த வினையெச்சம். முற்றியபடியால் - கொள்கின்றார் என்றபடியாம். அன்பின் பால் - அன்பின் குறிப்பினல் கொண்ட பசுப்பாலினிடத்து என்றுரைக்கவும் நின்றது.

மள அமர்ந்த நயப்பாடு - "பொங்குமன்பால்" (1237); "மண்டுகாதல்"(1254).

சூழ்கோளம் அதனில் உள் நிறைந்து - கோளம் - இங்கு மணலாலாகிய சிவலிங் கத்தைக் குறித்தது. கோளம் - வட்டவடிவமாகிய பொருளைக்குறிக்கும் பெயர். இங்கு அவ்வாறமைந்த சிவலிங்கம் குறித்து நின்றது. சூழ் கோளம் - சூழ்தல் - கருது தல். விசாரசருமனார் கருதியமைத்துக் குறித்த சிவக்குறி.

உண்ணிறைந்து - மணலிலிங்கத் திருமேனியினுள்ளே நிறைந்து. எங்கும் நிறைந்த இறைவராயினும், இங்குவிளக்கமாக நிறைந்தனர். பசுவினிடத்துப் பால் உடல் முழுதும் நிறைவுடையதாயினும் மடியின் முலைக்காம்பில் விளக்கமாக நிறைவது போல் என்க. அரிவாட்டாயநாயனாருடைய நியதி வழுவாது "படிமிசைக் கமரில் வந்து" பூசைகொண்டதும், அவ்வாறு வருவன பிறவும் நினைவு கூர்க.

குறித்த - இது, சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருமேனியாகும் என்ற குறிப்பினைப் பூசித்த. மணல் என்ற குறிப்பு நீங்கச் சிவமென்ற குறிப்புப்பெற மன நேர்பட்ட என்றபடி. "அண்ணல் பாதங், கொண்டவன் குறிப்பினுலே கூப்பினன் தாப ரத்தை" (ஆப்பாடி - 4) என்ற திருநேரிசையின் கருத்தினை ஓர்க. குறித்த பூசை-சிவத்தினிற் குறிவைத்த பூசை.

கோள்கின்றார் - ஏற்றுக் கொள்வாராகவே ஆள உடையார் கொள்கின்ற ராதலின், அது கண்டு வணங்கி, ஆட் செய்வாராகிய பிள்ளையார் மகிழ்கின்றார் என்று மேல்வரும் பாட்டில் முடிவது காண்க.

கோளநின்றார்—என்பதும் பாடம். 36

1242. (வி - ரை) பெருமை பிறங்கும் சேய்ஞலூர் என்றும், பிறங்கும் பிள்ளை யார் என்றும் கூட்டி உரைக்கநின்றது. பெருமையினற் பிறங்குதல். பெருமையானது இங்குச் சார்ந்ததனற் பிறங்குதற் கிடமாகிய என்றுரைத்தலுமாம். பிறங்குதல்-விளங்கு தல். பிள்ளையார் - "ஆனுடைய பிள்ளையார்" என்பதுபோல உலகத்தந்தையாகிய சிவ பெருமான் "உனக்கு நாம் தாதை" (1259) என்றருளி மகனைக் கொள்ள வருவா ராதலின் இவ்வாறு கூறினர். சேய்ஞலூரில் வந்தவதரித்த பிள்ளையார் என்றலுமாம்.

தம் உள்ளத்தில் ஒருமை நினைவால் - "ஒன்றியிருந்து நினைமின்கள்" என்பது திருவிருத்தம். ஒருமை நினைவாவது பூசிக்கும் தாமும், பூசிகக்ப்படும் சிவபெருமானும் வேருகக் காணமுடியாது நினைவினில் ஒற்றித்து நிகழ்தல். இதனையே இலயம் என் பது வட்வர் வழக்கு. "ஒன்று முள்ளத் தண்மையினல்" (1252) என்பதும், பின்னர் இச்சரித்தத்தில் எச்சதத்தன் தம்மைப் புடைத்துக் கொடிதர் மொழி கூறவும்

வேறுணராது நிற்பதும், "மண்டு காத லர்ச்சனையின் வைத்தார் மற்றென் றறிந் திலரால்" (1254) என்பதும் காண்க.

உம்பர்பிரா னுவக்கும் பூசை - "இறைவர்தாம் விரும்பும் உண்மை யாவது பூசனை யென" (1128) என்றது காண்க. உவத்தலாவது உயிர்கள் தம்மைப் பூசித்து இன்பமடையச் சங்கற்பித்தல்.

பூசை உறுப்பான திருமஞ்சனமே முதலவற்றில் தேடாதன அன்பினில் நிரப்பி - பூசை உறுப்புக்களில் இலை பூ என்றவற்றையும், திருமஞ்சனவகையில் பாலும் தேடி அமைத்துக் கொண்டமை முன்னர்க் கூறப்பட்டது. ஏனையவாகிய திருமஞ்சன நீர் - சந்தனம் - புகை - அமுது - முதலியவைகளில் தாம் தேடி அமைத்துக் கொள்ளாதனவற்றை அன்பினால் நிறைவு ஆக்கிக் கொண்டு என்றபடி.

அன்பினால் நிரப்புதல் - பாவனையால் உளவாகக் கொண்டு பூசித்தல். தேடாதன என்றார் முன் சொன்ன பூ இலை பால் என்றவற்றின் மேலும் திருமஞ்சன நீர் தேடிக்கொள்ளக் கிடைத்தமை குறித்தற்கு. திருமஞ்சனமே முதலவற்றில் - பூசை உறுப்புக்களில் திருமஞ்சன நீர் இன்றியமையாததாய் முதன்மை பெற்றது என்பது குறிப்பு. "பூவுண்டு நீருண்டு" (திருமந்திரம்), "பூவோடு நீர் சுமக்கும் நின்னடியார்" (சம்பந்தர்), "சலம் பூவொடு தூபமறந் தறியேன்" (அப்பர்), "தூயகாவிரியி னன்னீர் கொண்டிருக் கோதி யாட்டி" (ஷை - திருநேரிசை) முதலிய திருவாக்குக்கள் காண்க.

வரும் அந்நெறியே - ஆகமங்களில் விதித்தபடி வருகின்ற அவ்வழியாலே. அகரச் சுட்டு வரன் முறையே - (1240) என முன்னர்க் கூறியதனைச் சுட்டி நின்றது. அந்நெறி யாவன - உரிய, ஆடை - சந்தனம் - பூ - மாலை - அணிகள் முதலியவற்றால் அலங்கரித்தலும், உரிய மந்திரங்களால் அர்ச்சித்தலும், தூப தீபம் அர்க்கியம் கொடுத்தலும், அமுதூட்டலும், ஆவரண பூசை செய்தலும், துதித்தலும், வணங்குதலும், செபித்தலும் முதலாயின. "உயர்ந்த வர்ச்சனைமுறை உய்த்தார்" (9), "மாடு சூழ்புடை வலங் கொண்டு வணங்கிமுன் வழுத்தித், தேடு மாமறைப் பொருளினைத் தெளிவுற நோக்கி, நாடு மஞ்செழுத் துணர்வுற விருந்துமுன் னவின்றார்" (10) என்ற திருநீலநக்கநாயனார் புராணம் முதலியவை காண்க.

மகிழ்கின்றார் - பூசை முடிந்த பின்னும், அதனால் நாயனார் கொண்ட மகிழ்ச்சி குறைவுபடாது நிலவி நின்றது என்பது குறிக்க மகிழ்ந்தார் என்னாது மகிழ்கின்றார் என்று நிகழ்காலத்தாற் கூறினார். "நீடுபூசனை நிரம்பியு மன்பினா னிரம்பார்" (திருநீலநக்கர் புரா - 10) என்றது காண்க. "முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை, யெம்முறைச் சொல்லு நிகழுங் காலத்து, மெய்ந்நிலை பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்" (தொல் - சொல் - 43) என்பதும், "முக்காலத்து மொத்தியல் பொருளைச், செப்புவர் நிகழுங் காலத் தானே" (நன் - பொது - 32) என்பதும், இலக்கணமாதல் காண்க. முன்னர்க், "கொள்கின்றார்" (1241) என்றதும் கருதுக.

தேடாதன அன்பினில் நிரப்பி - பூசை உறுப்புக்களாகிய சாதனங்கள் முற்றும் தேடக்கிடையாத போதும் அதனாற் பூசை முட்டுப்படாது இயற்றுதல் வேண்டும் என்பதனை வற்புறுத்தியதுடன், அவ்வாறு இயற்றும் வழியினையும் வகுத்துக்காட்டிய வாறாயிற்று. இவற்றின் விரிவு ஆகமங்களுட் காண்க. பூசைக்கு இன்றியமையாத பூவும் நீரும் நமது புண்ணிய பூமியில் எங்கும் தேடக்கிடைப்பன என்பதனைத் திருமூல தேவநாயனார், "புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" என்று வழிகாட்டி உபதேசித்தருளினர். இவையும் கிடைக்காதபோதும் பூசை முட்டாமல் மனத்தாற் செய்யத்தக்கது என்பது விதியாம் என்பதனையும், மனத்தன்பால் நிரப்பும் வகையினையும், "போதும் பெறாவிடிற் பச்சிலை யுண்டு புனலுண்டெங்கும்; ஏதும் பெறாவிடி னெஞ்

சுண்டன்றே" (கழுமல மும் - கோவை - 12) என்று பட்டினத்தடிகள் வற்புறுத்தி யருளியது காண்க. 37

1243. இறையோ னடிக்கீழ் மறையவனு ரெடுத்துத் திருமஞ் சனமாட்டு நிறைபூ சனைக்குக் குடங்கள்பால் நிரம்பச் சொரிந்து நிரைக்குலங்கள் குறைபா டின்றி மடிபெருகக் குவிந்த முலைப்பால் குறைவின்றி மறையோர் மனையின் முன்புதரும் வளங்கள் போலிய வைகுமால்.

(இ - ள்) வெளிப்படை. இறைவனுரது திருவடிகளில் மறைச்சிறுவனுர் எடுத் துத் திருமஞ்சனம் ஆட்டுகின்ற நிறைந்த பூசைக்கு, அன்பு நிறைதலினுல் குடங்களில் பால் சொரிந்தும், ஆனிரைகள், குறைவில்லாமல் மடிபெருக அதனுற்குவிந்த முலைப் பாலின் அளவு குறைவின்றி மறையவர்களின் வீடுகளில் முன்பு தருகின்ற வளங்கள் எல்லாம் விளங்கும்படியே பொருந்தியன.

(வி - ரை) இறையோன் - மறையவனுர் - என்ற ஒருமை பன்மை விகுதிகளைக் கருதுக. "ஒருவனுமே பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ" (திருவாசகம்) என்றபடி, ஒன்றும் பலவாகியும் நிற்கும் இறைவனை ஒருமையிலும் கூறுதல் அமையு மாகலான், அவ்வாறே இறையவன் என்று ஒருமையிற் கூறியருளிய ஆசிரியர், யாண் டும் மறந்தும் அரனடியார்களைப் பன்மைச் சொல்லினுலன்றி ஒருமையிற் கூறுத நியதியுடையாராதலின் மறைவனுர் என்றார். "அவர்தம் சென்னிமிசைப் பாத மலர் சூட்டினுன், சிவபெருமான்" (திருநா - புரா - 195) என்றதும், இவ்வாறு வரு வன பிறவும் கண்டு கொள்க.

திருமஞ்சனம் ஆட்டும் நிறை பூசனை - கறவாமே பொழிந்த பாலினைக் கண்டு, அது திருமஞ்சனமாகும் என்ற குறிப்பு உணர்ந்து, அதனையேபற்றிச் செய்த பூசை யாதலின் திருமஞ்சன மாட்டும் பூசனை என்றும், ஆயினும் ஏனைய உறுப்புக்கள் எல் லாம் மேற்காட்டியபடி முற்ற நிகழ்ந்த தென்று குறிக்க நிறை பூசனை என்றும் கூறினுர்.

நிரம்ப குடங்கள் பால் சொரிந்தும் - என்க. முலை தீண்டலும் கறவாமே பால் தாமே பொழிந்தனவாதலின் சொரிந்தன என்றார். சொரிந்தும் - சொரிந்தனவா யினும். சொரிந்தும் குறைவின்றி - முன்பு தரும் வளங்கள் - பொலிய என்க. உம்மை உயர்வு சிறப்பு. அன்பாற் குடங்களிற் பால் சொரிந்ததனுல் முன்பு தரும் பால் அளவு குறைதல் வேண்டுமே என்று நினைக்க வருமாதலின், அவ்வாறன்றி, முன்பு தரும் வளங்கள் குறைவின்றிப் பொலிய என்று எச்சரித்துக் காட்டியபடியாம். "மடி பெரு கிச் சொரிய முலைகள் சுரந்தன" (1235) என்றது காண்க.

இது, பசுக்கள் கொண்ட - அளவின்றி எழுந்த - மகிழ்ச்சியினுலாகிய பெருமை யினையும், நாயனுருக்குத் தாயாந் தன்மைநிலை யன்பின் பெருமையினையும், நாயனுரது அருளின் பெருமையினையும், காட்டுவதாகும்.

குறைபாடின்றி மடிபெருக - முலைப்பால் குறைவின்றி என்றது குறைவில் லாது மடிகள் பெருகின ; அதனுற் குறைவில்லாது பாலும் தந்தன என்றதாம். குறைபா டின்றி என்றதனுல் மடியின் ஊற்றின் பெருக்கமும், முலைப்பால் குறைவின்றி என்றத னுல் பால்சுரந்து தரும் வளத்தின் அளவும் குறிக்கப்பட்டன. மடி பெருகியிருப்பினும் ஒருமுறை பால் தந்த பசுக்கள் மீளவும் தருதல் அமையாமையு முண்டாதலின் மடி பெருகப்பால் குறைவின்றி என்று கூறவேண்டியதாயிற்று.

குறைபாடு என்பது அளவினையும், குறைவின்றி வளங்கள் போலிய என்றது குணத்தன்மையினையும் குறிப்பனவாகக் கூறுவாருமுண்டு.

நிரம்ப - நிரம்பியமையால். தாயாந்தன்மை நிலையாகிய அன்பு நிரம்பியதனால் என்க. காரணப் பொருட்டாய் வந்த வினையெச்சம். குடங்கள் நிரம்ப என்றலுமாம்.

வளங்கள் - பால். பால் என்றது ஒரு வளமேயாயினும் அதனால் தயிரும் நெய்யும் என்ற ஏனைய வளங்களும் விளைவன ஆதலானும் நிரைக்குலங்கள் பலவாதலானும் பன்மையிற் கூறினர். போலிய - சிறக்க - விளங்க.

குடங்கொள்பால்—என்பதும் பாடம். 38

1244. செயலிப் படியே பலநாளுஞ் சிறந்த பூசை செய்வதற்கு
முயல்வுற் றதுவே திருவிளையாட் டாக முந்நூ லணிமார்பர்
இயல்பிற் புரிய மற்றிதனைக் கண்டித் திறத்தை யறியாத
அயன்மற் றொருவ னப்பதியி லந்த ணாளர்க் கறிவித்தான். கூ

(இ - ள்) வெளிப்படை. இப்படியாகிய செய்கையாலே பின்னரும் பல நாள்களும் சிறப்பாகிய பூசனை செய்வதற்கு முயல்வுற்று, அதுவே திருவிளையாட்டாக நிகழ, மூப்புரிநூலணிந்த மார்பினையுடைய விசாரசருமனார் இயல்பினைப் புரியும் மற்ற இதனைக் கண்டு இதன் திறத்தினை அறியாத அயலானாகிய மற்றை யொருவன் அந்த ஊரில் அந்த ணாளர்களுக்கு இதனை அறிவித்தான்.

(வி - ரை) சிறந்த...திருவிளையாட்டாக - சிறந்த பூசை - முத்தி நெறிகளாகிய சைவசாதனங்கள் நான்கனுள் கிரியை என்னும் சிறப்புடைய இரண்டாவது சாதனமாம் என்றபடி. இது புத்திரமார்க்கம் எனவும் படும். "புத்திரமார்க் கம்புகலிற் புதிய விரைப் போது புகையொளிமஞ் சனமமுது முதல்கொண் டைந்து, சுத்திசெய்தா சன மூர்த்தி மூர்த்தி மானஞ் சோதியையும் பாவித்தா வாஹித்துச் சுத்த, பத்தியினு லருச் சித்துப் பரவிப் போற்றிப் பரிவினொடு மெரியில்வரு காரியமும் பண்ணி, நித்தலுமிக் கிரியையினை யியற்று வோர்க ணின்மலன்ற னருகிருப்பர் நினையுங் காலே" (சித்தி - 8 - 20) என்ற திருவாக்கும், "கிரியையோ கங்கள் கிளர்ஞான பூசை, யரிய சிவனுரு வமரு மரூபந், தெரியும் பருவத்துத் தேர்ந்திடும் பூசை, யுரியன நேயத் துயர்பூசை யாமே" (5 - 30) என்ற திருமூலர் திருமந்திரமும் இங்குக் கருதத்தக்கன.

முயல்வுற்று - முயற்சியாவது ஒருகுறிக்கோளை அடைவதற்குச் செய்யும் செயல். சாதனம் என்ப.

அதுவே திருவிளையாட்டாக இயல்பிற் புரியும் - சிறந்த பூசை செய்யும் முயற்சி பெருமுயற்சியாலும் பலநாள் முயன்று கைவரும் சிறந்த சாதனையாலும் ஏனைப் பெரியோர்கள்பால் அரிதில் வருவதாகவும், இவரிடத்துச் சிறுவர் இயல்பிற் செய்யும் விளையாட்டுருவமாக நிகழ்ந்தது என்றபடியாம். இவர்பால் பூசைவிளையாட்டாகவும் விளையாட்டே பூசையாகவும் விளைந்தது என்க.

இது முன்னைத் தொடர்பால் ஆகியது. "நின்ற விதியின் விளையாட்டா நிறைந்த வரும்பூசை" (1254) என்று பின்னர்க் கூறுவதும் காண்க. ஏனையோர் செய்வன கருவிளையாட்டுக்களாய்க் கழிந்தொழிய, இவர் செய்தது திருவாகிய சிவத்தைப் பெறுவித்தலால் திருவிளையாட்டு எனப்பட்டது.

இயல்பிற் புரியும் - செயற்கையானன்றித் தம் இயல்பினாற் செய்தனர். மனிதர்க் கியல்பாக அமையவேண்டுவது சிவவழிபாடு, தலையும் வாயும் கையும் முதலிய கருவி கரணங்கள் எல்லாம் அதற்காகவே தரப்படுதலான்; அல்லாதவை எல்லாம் இயல் பிற்கு மாறுபட்டவை என்பது குறிப்பாகும். "ஒழியா தூறும் வழியன்பின் கடனே யியல்பாய் முயற்றிவரும் காதல்" (1321) என்று முன்னர்க் குறித்ததும் இங்கு நினைவு கூர்க.

மற்றிதனை - மற்று என்பது ஏனைச் சிறூர் வினையாட்டுப் போலாது சிறந்த பூசை முயல்வுற்ற செயலாகும் என்ற குறிப்பில் நின்றது.

இத்திறம் - சிறந்த பூசையாகும் தன்மை. கண்டு - நேரிற் கண்டு. கண்டும் என உம்மை தொக்கது என்றுரைத்தலுமாம்.

அறியாத அயல் மற்று ஒருவன் - விசாரசருமனூர் செய்த சிறந்த பூசையினை நேரே காணும் பேறுபெற்றும் உண்மைத்திறத்தை அறியும் விதியின்றி அறியாமையினால் மீதூரப்பட்டு வினை வினைத்தானுதலால், இவ்வாறு அயல் - மற்று - ஒருவன் என்று மும்முறையும் வேறுபடுத்திக் கூறினர்.

மற்று - பெரியதனிற் பெரியதனைக் கண்டும் சிறியதனிற் சிறிய அறிவு படைத்தவன் என்றது குறிப்பு. முன்னர் மற்றிதனை என்றதில் மற்று என்றது சிறூர் வினையாட்டுக்களின் தோற்றமுடையதனை அத்தொகுதியினின்றும் பிரித்து உயர்வின்கட் செலுத்தியது; மற்றொருவன் என்றதில் மற்று என்றது விதியும் அறிவும் உடைய மக்களின் தோற்றமுடைய அவனை அத்தொகுதியினின்றும் பிரித்து இழிபின்கட் செலுத்தியது. மற்று - இரண்டும் அசை என்பாருமுண்டு. 39

1245. அச்சொற் கேட்ட வருமறையோ "ராய னறியா னென்றவற்றின்
இச்சை வழியே யான்மேய்ப்பே னென்றெம் பசுக்க டமைக்கறந்து
பொச்ச மொழுகு மாணவகன் பொல்லாங் குரைக்க வவன்றுறை
யெச்ச தத்தன் றனையழைமி" னென்று ரவையி லிருந்தார்கள். சo

(இ - ள்) வெளிப்படை. அச்சொற்களைக் கேட்ட, அவையிலிருந்தவர்களாகிய மறையவர்கள் "ஆயன் பசுக்களை மேய்க்க அறியாததனின் அவற்றின் இச்சையறிந்து அவ்வழியே யான் மேய்ப்பேன் என்று சொல்லிக், கொண்டுபோய் எமது பசுக்களைக் கறந்து வஞ்சனையாக ஒழுகுகின்ற மாணவகனது பொல்லாங்கினைச் சொல்வதற்காக, அவனுடைய தந்தையாகிய எச்சதத்தனை அழையுங்கள்" என்று சொன்னார்கள்.

(வி - ரை) அச்சொல் - அயல் மற்றொருவன் அறிவித்த அந்தச்சொல்.

"ஆயன் அறியான்...அழைமின்" - என்றது அவையிலிருந்த மறையவர் கூற்று. "ஆயன் அறியான் என்று...யான் மேய்ப்பேன்" என்றது விசாரசருமனூர் தம்மிடம் ஆமேய்க்க இசைவு பெற்றபோது கூறிய சொற்களை மறையோர் தினைவு கூர்ந்து சொல்லியது. "மறையோர் இசைவினால்" (1229) என்றது காண்க.

போச்சம் - வஞ்சனை. போச்ச மொழுகுதல் என்றது, இதத்தின் வழியே மேய்ப்பேன் என்று கொண்டு போய், அதற்கு மாறுகப் பாலைக்கறந்து வீணுக்கி வினையாடுதலை.

பொல்லாங்கு - தீச்செயல். பொல்லாங்கினை உரைக்க என்று இரண்டனுருபு விரிக்க.

அவன் தாதை எச்சதத்தன் தனை அழைமின் - சிறுவர் செய்யும் குற்றங்களுக்குப் பெற்றோரே பொறுப்பாளிகளாவர் என்றும், சிறுரைத் திருத்துதல் பெற்றோர் கடமையாம் என்றும் உள்ள உலக நியாயம் பற்றித் தாதையை அழைமின் என்றார்கள். இந்நாள் அரசாங்க நீதிமுறைகளிலும் இவ்வாறுகிய விதிகள் விதிக்கப்பட்டிருத்தல் காண்க. சிறுவர்களை அவர்கள் செய்த குற்றத்திற்குத் தண்டிக்காத நீதிமுறையும் காண்க. விசாரசருமனூர் அதுபோழ்து ஏழு ஆண்டு நிரம்பும் பருவச் சிறுவராயினர் (1219) என்பதனையும் உன்னுக. 40

1246. ஆங்கு மருங்கு நின்றார்க ளவ்வந் தணன்றன் றிருமனையின்
பாங்கு சென்று மற்றவனை யழைத்துக் கொண்டு வரப்,பரந்த
ஓங்கு சபையோ ரவனைப்பார்த் "தூரா னிரைமேய்த் துன்மகன்செய்
தீங்கு தன்னைக் கே "ளென்று புகுந்த பரிசு செப்புவார், சக

1247. "அந்த ணுளை ராகுதிக்குக் கறக்கும் பசுக்க ளானவெலாஞ்
சிந்தை மகிழ்ந்து பரிவினுற் றிரளக் கொடுபோய் மேய்ப்பான்போற்
கந்த மலிபூம் புனன்மண்ணி மணலிற் கறந்து பாலுகுத்து
வந்த பரிசே செய்கின்ரு னென்ரு " னென்று வாய்மொழிந்தார். சஉ

1246. (இ - ள்) *வெளிப்படை.* அங்குப் பக்கத்தில் நின்றவர்கள் அவ்வந்தண னுடைய திருமனையினிடத்துப் போய், மற்றவனை அழைத்துக் கொண்டு வரவே, பரந்த ஓங்கிய அந்தச் சபையோர்கள் அவனைப்பார்த்து "உன் மகன் ஊரவருடைய ஆனிரையை மேய்த்துச் செய்யும் தீங்கினை நீ கேட்பாயாக!" என்று தொடங்கி, நிகழ்ந்த செய்தியைச் சொல்வார்களாகி, சக

1247. (இ - ள்) *வெளிப்படை.* அந்தணாளர்கள் வேள்விக்குப் பால் கறக்கும் பசுக்களை யெல்லாம் மனமகிழ்ந்து அன்பினுலே திரட்டிக் கொண்டுபோய் மேய்ப் பவன் போல, மணங்கமழும் பூக்கள் பொருந்திய நீர் நிறைந்த மண்ணியாற்றின் மணலிற் கறந்து பாலினைக் கீழே ஊற்றி (மனதுக்கு) வந்த தன்மையாகவே செய் கின்றான் என்று சொன்னான்" என்று சொன்னார்கள். சஉ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1246. (வி - ரை) ஆங்கு மருங்கு நின்றார்கள் - சபையில் "அழைமின்" என்று சொன்னவர்களின் அருகில் நின்றுகொண்டிருந்தவர்கள்; இவர்கள் சபையினரிடம் தம் காரியத்தின் பொருட்டு நின்றவர்கள். மருங்கு எனவும், நின்றார்கள் எனவும் கூறிய குறிப்பினுல் சபையோரிடம் வந்து பக்கத்தில் நின்றவர்கள் என்பது பெறப்படும். சபை யோர் குறிப்பிட்டு எவரையும் தனிநோக்காது "அழைமின்" என்று பொதுமொழியா லுரைத்தாலும், அதுகொண்டு அங்கு மருங்கு நின்றவர்கள் சென்று அந்தப்பணி செய் தல் வழக்கு. அந்தணர்களின் ஊர்ச்சபையாதலின் வேறு எவரும் அதில் உட்காந்திருக்க இடம் பெறுது நின்றிருத்தலும் வழக்காகும். தில்லைமறையோர் சபைமுன் திருநீல கண்டநாயனர் நின்றதும், திருவெண்ணெய் நல்லூர் அந்தணர் சபையின்முன் நம்பியா ரூரரும் சுற்றத்தார்களும் நின்றதும் ஆகிய சரிதங்களையும் உன்னுக.

திருமனை - விசாரசருமனுர் அவதரித்தருளிய இடமாகவும் அவர் இருக்குமிடமாக வும் உள்ளதாதலின் இவ்வாறு போற்றினர். இத்திருமனையின் அடையாளங்களேனும் அது இருந்த இடமேனும் குறித்துக் காப்பாற்றப் பெற்றிருப்பின் அது சைவ உலகத் துக்குப் பெருஞ்சிறப்புத் தருவதாயிருந்திருக்கும்.

மற்றவன் - "அறியாத அயன்மற் ரெருவன்" (1244) என்றவன்போல அவனும் அயலவனுக நிற்பவன் என்பது குறிப்பு. மற்று-அவனை என்று பிரித்து உரைத்தலுமாம்.

புகுந்த பரிசு - நிகழ்ந்த தன்மை. புகுதல் - நிகழ்தல் - போதல்.

செப்புவார் - செப்புவாராகி. முற்றெச்சம். செப்புவார் - என்று - வாய்மொழிந் தார் என்று கூட்டி முடிக்க.

தீங்கு - மேற்பாட்டில் விரிக்கப்பட்டது. "செயல் தன்னைக்கேள்" என்னுது செய்த தீங்கு என்று செயலைச் சொல்லுதற்கு முன்பே முடித்து ஓதியது, அது தீங்கு என்பதனைச் செய்தி கேட்குமுன்பே அவன் மனதில் ஊன்றுவித்தற் பொருட்டு.

வரப்பகர்ந்த—என்பதும் பாடம்.

1247. (வி - ரை) அந்தணாளர் ஆகுதிக்கு - ஆறனுருபு விரிக்க. ஆகுதிக்குக் கறக்கும் - ஆகுதிக்காக வேண்டும் வளங்களைத் தருவதற்குப்பால் கறக்கும் என்க. நான்கனுருபு கொடைப் பொருளில் வந்தது. முன்னர் "ஓமதேனுக்கள்" (1210 - 1234) என்றது காண்க. ஆகுதி - சிவவேள்வி. "பசுக்கள் பால்குன்றியவழி அவியின்மையானும், அது கொடுத்தற்குரியார் மந்திரங் கற்பமென்பன ஓதாமையானும் வேள்வி நடவாதாம்" என்று "ஆபயன் குன்றும்" என்ற குறளின்கீழ்ப் பரிமேலழகர் உரைத்தனர்.

சிந்தை.....போல் - முன் "ஆயன்.....ஒழுகும்" (1245) என்று தாம்கொண்டகருத்தினை எச்சதத்தனிடம் அந்தணர் அறிவிக்கும் மொழிகள். மேய்ப்பான் போல் - என்றதனால் மேய்ப்பதாகச் சொல்லியது வஞ்சமொழி என்றும், அவ்வாறு செய்யமுற்பட்டது போலியே என்றும் குறித்தபடியாம்.

சிந்தை மகிழ்ந்து - ஆ மேய்ப்பதில் கொண்ட உள்ள நிறைந்த மகிழ்ச்சியே காரணம் என்று காட்டியபடி.

பரிவினுல் - பசுக்களின்மேல் வைத்த அன்பினால். பரிவினுல் - சிவன்பால் வைத்த அன்பினால் என்ற உண்மைக் குறிப்பும் காண்க.

வந்த பரிசே - சிறுராகிய தமது மனதுக்கு வந்தபடியே. "மனம்போன போக்கெல்லாம்" என்றதுபோல. தாம் இவ்வுலகில் முன்னைத் தொடர்ச்சியுடன் வந்த அத்தன்மைக் கேற்றபடியே என்றதோர் உண்மைக்குறிப்பும் காண்க.

செய்கின்றனீ - என்றனீ - அச்செய்தியைத் தாம் அறிந்த வகையினைக் கூறியபடி. அது தாம் நேரிற் கண்டறிந்ததன்று; மற்றவன்பாற் கேட்டறிந்ததொன்று என உணர்த்தியபடியாம். அவையோர் முறை செய்கின்றபோது ஒருவன் தம்முன் வந்து சொன்ன செய்தியும், அதற்குப் பிறர் கூறும் பக்கமும் கேட்டு ஒழுங்கு செய்தல் போல, என்றனதலின் அதற்கு உனது விடை யாது? என்ற குறிப்புப்பட நின்றது.

என்றனீ - அயன் மற்றொருவனென்ற எழுவாய் தொக்கது. மற்றவனைக் குறித்த பெயரும் மறைந்து நின்றது.

வாய்மொழிதல் - சொல்லுதல். நீதிமன்றத்தில் வழங்கும் மரபு மொழி. வாய் என்றது வாளா பெயராய் நின்றதெனினுமாம்.

அந்தண் மறையோர்—என்று மறையோர் வாய்மொழிந்தார்—என்பனவும் பாடங்கள். 42

1248. மறையோர் மொழியக் கேட்டஞ்சிச் "சிறுமா ணவகன் செய்தவீ
தறையு நான்முன் பறிந்திலே; னிதற்கு முன்பு புகுந்ததனை
நிறையும் பெருமை யந்தணர்காள்! பொறுக்க வேண்டு நீங்க"ளெனக்
குறைகொண் டிறைஞ்சி, "யினிப்புகுதிற் குற்ற மெனதே யா" மென்றான்.

(இ - ள்) வெளிப்படை. மறையவர்கள் இவ்வாறு சொல்லக்கேட்டுப் பயந்து; "சிறுமாணவகன் செய்த இதனைச் சிறிதேனும் நான் முன்பு அறியேன்; இதற்கு முன்பு நிகழ்ந்த தீமையினை, நிறையும் பெருமையுடைய அந்தணர்களே! நீங்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று குறைகொண்டு வணங்கிக் கேட்டுக்கொண்டு "இனி, இச்செயல் நிகழ்ந்தால் குற்றம் என்னுடையதேயாகும்" என்று எச்சதத்தன் சொன்னான்.

(வி - ரை) சிறுமாணவகன் செய்த ஈது - செய்த - செய்ததாகச் சொன்ன. தான் கண்டிலனாயினும், சபையோர் கேட்டுச் சொல்லத், தான் கேட்டறிந்ததனை உள்ளதெனவே கொண்டு, பிழையுடன்பட்டவனைச், "செய்ததாகச் சொன்ன" என்னாது செய்த என்றே கூறினான். "இதற்கு முன்பு புகுந்ததனைப் பொறுக்க வேண்டும்"

என்று குறைகொண்டிறைஞ்சுதலும், "இனிப் புகுதில்" என்றதும் இக்கருத்துப் பற்றியே எழுந்தன.

இறையும் - ஒரு சிறிதும். முன்பு - நீங்கள் சொல்வதற்கு முன்பு.

நிறையும் பெருமை அந்தணர்காள்! பொறுக்க வேண்டும் - பொறுத்தற்குக் காரணங் கூறியவாறு. நிறையும் பெருமையுடையோராதலின் என்க. இது நீதிச் சபையோரைச் சுட்டிக்கூறும் மரபு வழக்குமாம். "அனேத்துநூ லுணர்ந்தீர்" (200) முதலியவையும், ஆண்டுரைத்தவையும் பார்க்க.

குறை கொள்ளுதல் - தன்குறையைச் சொல்லி வேண்டிக்கொள்ளுதல்- பிழை யுடன்படுதல்.

இனிப்புகுதில் குற்றம் எனதே ஆம் - என்ற அவன் வாய்மொழிகள், பிற்றை நாள் விசாரசருமனுர் செய்யப்புகும் செயலினை நேரே கண்டும், அத்திறத்தை அறிந்து கொள்ளாத குற்றமும், சினந்து அவரைப் புடைத்துக் கொடிதா மொழி கூறியும் பாற்குடத்தைக் காலாற் சிதறியும் செய்யும் சிவாபராதமாகிய பெருங்குற்றமும் என் மேலதாகவே இருக்குமன்றி அவர்மேற் குற்றமொன்று மிராது என்றதோ ருண்மைக் குறிப்புப் பெற நிற்பனவாதலும் காண்க. 43

1249. அந்த ணுளர் தமைவிடைகொண் டந்தி தொழுது மனைபுகுந்து
"வந்த பழியொன்" றெனநினைந்தே மகனுர் தமக்கு வாய்நேரான்
"இந்த நிலைமை யறிவே"னென் றிரவு கழிந்து நிரைமேய்க்க
மைந்த னுர்தாம் போயினபின் மறைந்து சென்றுன் மறைமுதியோன்.

(இ - ள்) வெளிப்படை. அந்தணர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, மாலைச் சந்திக்கடன் முடித்து, வீட்டினுட் புகுந்து இந்த மகனால் தனக்குவந்த பழி இது ஒன்றுகும் என்று நினைந்து கொண்டு, மகனரிடம் இதனைச் சொல்லாதவனுய், "இந்த நிலைமையினை யானே நானே நேரிற் கண்டறிவேன்" என்று எண்ணி, அன் றிரவு கழிந்தபின், மைந்தனுர் தாம் ஆனிரைகளை மேய்க்கப்போன பின்பு, மறை முதியோனுகிய எச்சதத்தன் மறைந்து சென்றனன்.

(வி - ரை) விடைகொண்டு - பிழை யுடன்பட்டு மன்னிப்புக்கேட்டும், இனி வரில் என்குற்றமே என்று ஒப்பியும், அவையோரிடம் விடைபெற்றுக்கொண்டு. அவை யோர் அவனது வேண்டுகோளுக்கு இணங்கி விடை தந்தனர் என்பது.

அந்தி தொழுது - மறையோர் அந்தியிற் செய்யவேண்டிய சந்தியா தியானம் என்னும் கடமையைச் செலுத்தி. அந்தி என்பது ஆகு பெயராய் அந்நேரத்தில் வழி படற்குரிய தேவிக்காயிற்று.

வந்த பழி ஒன்று - ஒன்று - பெயர்ப்பயனிலை. மகனுர் - மைந்தனுர் - என விசார சருமரைப் பன்மையிற்கூறிய ஆசிரியர் தந்தையை ஒருமையாற்கூறிய தன்மை காண்க. இவ்வாறே மேல்வரும் பாட்டுக்களில் வருவனவும் கண்டு அவ்வவற்றின் அமைதியை யுங் கண்டுகொள்க.

வாய் நேர்தல் - சொல்லுதல். மகனரிடம் சொல்லாதிருந்ததற்குக் காரணமாவது பழி ஒன்று வந்ததென்று கவலை கொண்டதும், தானே நேரில் அறிவேன் என்று துணிந் ததும் ஆம் என்பது குறிக்க, வாய் நேரான் என்பதனை அந்த இரண்டற்குமிடையில் வைத்தோதினுர்.

இரவு கழிந்து - கழிய என்பது கழிந்து என வந்தது. வினையெச்சத்திரிபு. எச்ச தத்தன் கவலையினால் தூக்கமும் பிடியாமல் இரவுக் காலம் கழித்தான் என்று குறிப்பினு

லுணர்த்தினர். மறையோர் ஆகுதிக்குக் கறக்கும் பால் வீணுப்ப் போயினதெனக் கேட்டதும் அவன் கொண்ட அச்சமும், அந்திதோழது என்றதனுல் அவனது ஒழுக்க மும் புலப்பட்டமை காண்க. "இருமை வினைக்கும் ஒருருவாம்" (1215) என்றபடி அவன் நல்வினைக்கும் காரணனுதலின் பழியஞ்சிக் கவன்றுன் என்பதாம்.

மறைந்து சென்றுன் மறை முதியோன் - பின் சென்றதனுல் எழுவாயும் பின்வந் தது. மறை - வேதம் என்றும், மறைதல் என்றும் இருபொருளும் படநின்றது.பின்னரும் மறைந்து - குரவின்மிசை யேறி ஒளித் திருந்தான் (1250) என்பது காண்க. விசார சருமரின் ஒளியின் முன்அவன் மறைய வேண்டிய நிலையிலுள்ளவனே யாவன் என்க. "நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்" என்பது நீதிநூல். மகனுரிடத்தில் நேரில் கேட்டும் அல்லது கூடவே சென்றும் அறிந்து கொள்ளும் நிலையினையுடைய தந்தை இவ்வாறு மறைந்து நிற்கவேண்டும் அவசியமில்லையாதலின் அதுபற்றி முன்னர் "அதுவே நஞ்சு மளிக்கு மாவுபோல்" (1215) என்று உவமித்ததன் பொருத்தமும் கண்டுகொள்க. மேலும் இக்குறிப்பினுல் அவனை "மறையோன்" (1250), "முதுமறை யோன்" (1253), "மாலாமறையோன்" (1255), "மறையோன்" (1256), "முதுமறை யோன்", (1263) என்றே கூறுவதும் உய்த்துணர்ந்து கொள்க. அவன் காசிப கோத்திரத்தில் உதித்து மறைபயின்று ஒழுகிய அளவில் மறையோனுய் முதியோனுய்க் நின்றெழிந்தனனன்றி மறையின் உட்பொருளாகிய சிவஞானத்தினை உணராது மடவோனுய் நின்றுன் என்பது குறிப்பு. பின் - காலமு மிடமும் குறித்தது. 44

1250. சென்ற மறையோன் றிருமகனுர் சிறந்த வூரா னிரைகொடுபோய்
மன்றன் மருவும் புறவின்கண் மேய்ப்பார் மண்ணி மணற்குறையி
லன்று திரளக் கொடுசென்ற வதனை யறிந்து மறைந்தப்பா
னின்ற குரவின் மிசையேறி நிகழ்வ தறிய வொளித்திருந்தான். சரு

(இ - ள்) வெளிப்படை. அவ்வாறு சென்ற மறையோனுகிய எச்சதத்தன் தனது திருமகனுராகிய விசாரசருமனுர் சிறந்த ஊர் ஆனிரைகளைக் கொண்டுபோய் மணங் கமழும் புறவினிடத்து மேய்ப்பாராகி மண்ணியாற்றின் மணற்குறையில் அன்று திரட்டிக்கொண்டு சென்ற அச்செயலை அறிந்து, மறைந்து அப்பால் நின்றதொரு குராமரத்தின்மேல் ஏறி இனி நிகழ்வதனை அறிவதற்காக ஒளித்திருந்தான்.

(வி - ரை) திருமகனுர் - மேய்ப்பார் - கொடுசென்ற அதனை - மறையோன் - அறிந்து - மறைந்து - ஏறி - அறிய - ஒளித்திருந்தான் என்று கூட்டியுரைத்துக்கொள்க.

சிறந்த ஊர் என்றும், சிறந்த ஆனிரையென்றும் கூட்டி உரைக்க நின்றது. இரு வழியும் சிறப்பு விசாரசருமனுரது தொடர்பினுல் உளதாகிய தென்க.

மன்றல் மருவும் புறவு - மன்றல் - மணம். இது புறவினிற் பூக்கும் பலவகை மரங்களின் மலர்கள் - இலை - தளிர் என்றிவற்றுலாவது. "மணந் தங்கிட" (1238); "வண்டுமருவும்திருப்பள்ளித்தாமம்" (1240.) "கந்தமலர்" (1247) என்பன காண்க.

அன்று - விசாரசருமனுர் திருவருள் பெறவும், எச்சதத்தன் கழுவாயில்லாத சிவாபராதமும் நீங்கப்பெற்றுக் கதிபெறவும், இச்சரித நிகழ்ச்சியினுல் உலகம் சிவ பூசைப் பயன் பெற்றுய்யவும் என்ற ஒப்பற்ற திருநாளாதலின் அதனை அன்று என உயர்வு தோன்றச் சுட்டிக் கூறினர். அன்று - அன்றும். உயர்வு சிறப்புத் தந்து நின்ற இறந்தமுவிய எச்சவும்மை தொக்கது.

அறிந்து - அறிய - திரளக் கொடுசென்ற அதுவரைக்கும் அறிந்தனன்; இனி மேல் நிகழ்வதனை அறியநின்றுன் என்க.

அப்பால் . சிறிது தூரத்திற் கப்பால். அகரம் சேய்மைச் சுட்டு. மகனார் செய்வ தனைத் தான் நன்கு காணவும் தன்னை அவர் காணுமலும் இருக்கும் இடம் தேடினானதி லின் தூரத்திலிருந்த மரத்தை நாடியதுடன் அதன் மேல் ஏறி ஒளித்தும் இருந்தான்.

தூவு - தூரா என்பது ஒருவகை மரம். இதன் மலரைச் சிவபெருமான் உகந்தணி வர்."தூராமலரோ டூரா மதியஞ் சடைமேற் கொண்டார்" என்ற திருத்தாண்டகமும், "திருவிடைக் கழியில் திருக்தூரா நீழற்கீழ் நின்ற" என்ற திருவிசைப்பாவும் காண்க. இதனை நந்தனவனங்களின் வைத்துப் போற்ற வேண்டிய மரங்களினுள் வகைப்படுத்தி 240-ல் ஆசிரியர் கூறியதும் ஆண்டு உரைத்தவையும் பார்க்க. 45

1251. அன்பு புரியும் பிரமசா ரிகளு மூழ்கி யரனார்க்கு
முன்பு போல மணற்கோயி லாக்கி மூகைமென் மலர்கோய்து
பின்பு வருமான் மூலைபோழிபால் பெருகுங் குடங்கள் பேணுமிடங்
தன்பாற் கொணர்ந்து தாபித்துப் பிறவும் வேண்டு வனசமைத்தார்,

1252. நின்ற விதியின் விளையாட்டா னிறைந்த வரும்பூ சனைதொடங்கி
யொன்று முள்ளத் துண்மையினு லுடைய நாதன் றிருமுடிமேன்
மன்றல் விரவுந் திருப்பள்ளித் தாமஞ் சாத்தி மஞ்சனமா
நன்று நிறைதீம் பாற்குடங்க ளெடுத்து நயப்புற் றூட்டுதலும், சஎ

1253. பரவ மேன்மே லெழும்பரிவும் பழைய பான்மை மிகும்பண்பும்
விரவ மேதக் கவர்தம்பான் மேவும் பெருமை வெளிப்படுப்பா
னரவ மேவுஞ் சடைமுடியா ரருளா மென்ன வறிவழிந்து
குரவ மேவு முதுமறையோன் கோப மேவும் படிகண்டான். சஅ

1251. (இ - ள்) வெளிப்படை. அன்பு புரிகின்ற பிரமசாரிகளாகிய விசாரசரு மனரும், நீரில் மூழ்கிப், பின், சிவபெருமானுக்கு முன்னே நாட்களிற் போல மணலாற் சிவாலயமும் சுற்றாலயமும் ஆக்கி, அன்றுமலரும் அரும்புகளையும் மெல்லிய மலர்களை யும் கொய்து, பின்புவரும் பசுவின் மூலைபொழிபால் பெருகும் குடங்களைப் பேணும் இடத்திற் கொண்டு வந்து தாபித்துப் பிறவும் வேண்டுவனவற்றை அமைத்துக் கொண்டாராகி, சசு

1252. (இ - ள்) வெளிப்படை. நின்ற விதியின் விளையாட்டாலே நிறைந்த அரிய பூசனையைத் தொடங்கி ஒன்றிய உள்ளத்தின் உண்மையினாலே ஆளுடைய நாதரது திருமுடிமேல் வாசனை பொருந்திய திருப்பள்ளித் தாமத்தைச் சாத்தி அருச் சித்து நன்றாக நிறைந்த இனிய பாற்குடங்களை எடுத்து ஆசையுடன் திருமஞ்சனமாக ஆட்டுதலும், சஎ

1253. (இ - ள்) வெளிப்படை. பரவ மேன்மேல் எழுகின்ற அன்பும், முன் பிறவி வாசனை மீக்கூரும் பண்பும் பொருந்த, மேன்மையுடைய அவரிடம் உள்ள பெருமையை வெளிப்படுத்துவதற்குப், பாம்பினை யணிந்த சடைமுடியுடைய சிவ பெருமானது அருளேயாமிது என்று சொல்லும்படி அறிவழிந்து, குராமரத்தின் மேவி இருந்த முதுமறையோனுகிய எச்சதத்தன், கோபமூளும்படி அதனைக் கண்டனன். சஅ

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1251. (வி - ரை) அன்பு புரிதல் - அன்பினால் தூண்டப்பட்ட செயல் செய்தல். அன்பு - அதனால் விளையும் செயலுக்காயிற்று. அன்புகொண்ட என்றலுமாம்.

பிரமசாரிகள் - பன்மை விகுதி பெருமைகாட்டி நின்றது. உம்மை சிறப்புணர்த் திற்று.

முழ்கி - இதனை நித்த நியமமாய்ச் செய்து பூசனை செய்தனர். இங்நாட் பூசை யுடன் இனி மூழ்கும்செயல் வேண்டப்படாமல் " அந்த உடம்பு தன்னுடனே அரனூர் மகனு "ராய் (1264) விளங்கும் பெருமை குறித்து இங்குச் சொல்ல வேண்டியிருத் தலின், முன்னர், முதலிற் பூசைசெய்யத் தொடங்கின செயல் கூறும்போது (1237-ல்) இதனைச் சொல்லாதுவிட்டதிறம் காண்க.

முன்புபோல மணற்கோயி லாக்கி - முன்பு ஆக்கியதிறம் 1237-ல் விளக்கப் பட்டது. (முன்புபோல) முகைமென் மலர் கொய்து என்க. இதனை 1238-ல் காண்க.

பின்பு வரும் ஆன்முலை பொழிபால் - பின்பு வரும் - மலர் கொய்அவைத்த பின்பு செய்ய வருவதாகிய இச்செயலை விரிவாய் 1239—1240-ல் உரைத்தபடி இங் கும் கொள்க. பால் கறந்து வெகுநேரம் தங்கினால் அதன் தன்மை மாறுமாகையால், எனைப்பொருள்களை அமைத்தபின் அதனைத்தேடிக்கொள்வது அமைவுடைத்தாம்என்பது குறிக்க அம்முறைபற்றியே இறுதியிற் கூறியதுடன் பின்பு வரும் என்றும் குறித்தார். இனி, அன்று கொண்டபால் முன்னை நாட்களிற்கொண்ட பால்போலன்றிப் பின்னை வரும் சரித விளைவுக்குக் காரணமாய் வருதல் குறிப்பிற் கூறியபடியுமாம். " வெவ்வே றியல்பினில் " (811) என்றதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

ஆன்முலை பொழிபால் - கறவாமல் ஆன் தாமே பொழிந்தன என்ற பொருள் தோன்றப் பொழிபால் என்றார். " முலைதீண்டச் செழும்பால் பொழிந்தனவால் " (1239) என்றது காண்க.

பெருதுங் குடங்கள் பேணுமிடந் தன்பாற் கொணர்ந்து தாபித்து - 1240 பார்க்க. பெருதுங்குடங்கள் என்றது பால் நிறையப் பொங்கப்பெற்ற என்ற பொருளில் வந்தது. பேணும் இடம் - ஆலயத்தினுள் திருமஞ்சனக் குடங்கள் வைக்கவேண்டிய முறை யின் அமைத்த இடம்.

பிறவும் வேண்டுவன - திருமஞ்சன நீர் - தருப்பை முதலாயின. இதற்குச் சிவ லிங்கம் முதலாயின என்பர் ஆறுமுகத்தம்பிரானார். " அரனூர்க்கு முன்புபோல மணற் கோயிலாக்கி " என்றதனால் சிவலிங்கம் முன்னரே பெறப்பட்டமை கண்டுகொள்க.

வேண்டுவன பிறவும் என்க. பூசைக்குரிய சாதனங்களையும் வேண்டுவனவாகிய பிறவற்றையும். இரண்டனுருபு தொக்கது.

சமைத்தல் - தேடிக் கொள்ளுதலும், தேடியபின் அவற்றைப் பூசைக் குரியபடி மாலைமுதலியன போல அமைத்துக் கொள்ளுதலுமாம். 46

1252. (வி - ரை) நின்ற விதியின் விளையாட்டால் - சைவாகமங்களின் நிலைத்த விதிகளின்படியே விளையாட்டாகவும். நின்ற விதியின் - விதியின் நின்ற என்றுகூட்டி முன்னைப் பிறவி வாசனையினால் அவரது மனத்தினுள்ளே தோன்றி நின்ற என்றுரைத் தலுமாம். " முந்தை யறிவின் முடர்ச்சியினால் " (1218), " செம்மை நெறியே உறு மனத்தில் " (1236), " முன்னை யர்ச்சனையின் அளவின் முடர்ச்சி விளையாட்டா ' (1237) என்று முன்னர்க் கூறியவை காண்க.

நிறைந்த அரும் பூசனை - முன்னர், " குறித்தபூசை " (1241), " நிறை பூசனை " (1243) என்ற ஆசிரியர் இங்கு இனி நிறைவாக வள்ளதனை இவ்வாறு இறந்த காலக் குறிப்பொடு கிளந்ததது அன்றைய நாட்பூசை விரைவில் நிறைவு பெறும் அரிய பூசையாய் விளங்குவ தொன்றாகும் என்ற குறிப்புப் பெறக் கூறியபடியாம். " தேடா தன வன்பினி னிரப்பி " (1242) என்றபடி பூசையின் எல்லாவுறுப்புக்களும் நிறைந்த

என்றலுமாம். பிறர் எல்லாரும் செய்யும் பூசைகட் கெல்லாம் குறிக்கொள்ளத் தக்க இலக்கியமாயும் பயன் தருவதாயும் நிகழ்வதொன்றுகலின் அநும் பூசனை என்றார்.

ஒன்றும் உள்ளத் துண்மை - ஒருப்பட்ட உள்ளத்தின் மெய்ம்மைநிலை. "ஒருமை நினைவால்" (1242) என்றது காண்க. மனம் ஒருப்படாதபோது பூசனையாற் பயனில்லை என்பது அணிபு. "பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு, நக்கு நிற்ப னவர்தமை நாணியே" என்ற திருக்குறுந்தொகையும் பிறவும் காண்க.

உண்மை - உள்ளத்தின் தன்மையாகிய ஒருமைப்பாடு. இவ்வுள்ள நிகழ்ச்சி பின்னர் 1254—1257 பாட்டுக்களில் விரித்துக் கூறிய புறநிகழ்ச்சிகளால் அறியப்படும்.

உடைய நாதன் - ஆளுடைய இறைவன். "உடைய நாதனே போற்றி" என்பது திருவாசகம். "ஆளவுடையார்" (1241) என்றது காண்க. சிவபூசைக்கு "உடையவர்" பூசை என வழங்கும் சைவமரபும் கருதுக. உயிர்கள் யாவும் இறைவனது அடிமைகளாம் என்பது உண்மைநூற் றுணிபு. அதனை எஞ்ஞான்றும் மனத்தினுள் ஊன்றவைத் தொழுகுதல் வேண்டும் என்பது உயர்ந்தோர் ஒழுக்கமாம். கல்வெட்டுச் சாசனங்களில் உடையார் எனவரும் வழக்கும் காண்க.

திருப்பள்ளித்தாமஞ் சாத்தி...ஆட்டுதலும் - முன்னரும் "அருச்சித்துப் பாலின் திருமஞ்சன மாட்டி" (1240) என்றது காண்க. அபிடேகத்தின் பொருட்டு அட்ட புட்பஞ் சாத்தி என்பாருமுண்டு.

நன்று நிறை தீம் பாற் குடங்கள் - "பெருகுங் குடங்கள்" என முன் பாட்டிற் கூறியது காண்க. நன்று நிறை என்பது குடங்களுள் நிறைந்தது பால் அளவில் அமையாது நன்றென்பன எல்லாம் நிறைந்தன என்ற குறிப்புப்பட நின்றது. நன்று ஆட்டுதலும் எனக்கூட்டி யுரைத்தலுமாம். 47

விளையாட்டா நிறைந்த—என்பதும் பாடம்.

1253. (வி - ரை) பரிவும் - பண்பும் - விரவ என்க. பரவ எழும் பரிவு - பரவ எழுகின்ற ஆசை.

பரவுதல் - இங்குப் பூசிக்கும் எல்லா உறுப்புக்களையும் உள்ளிட்டு நின்றது. பூசை செய்யச் செய்ய அதில் அன்புமிகுதல் உயர்ந்தோரிலக்கணம்.

பரவ எழும் பரிவு என்றது இப்பிறவியின் முயற்சியும், பழைய பான்மை மிகும் பண்பு என்றது அதற்கு ஆதரவாய் முன்னைப் பிறவியிற்கொண்ட சைவ ஒழுக்க முயற்சியும் குறித்தன. பான்மை - பழைய வாசனை. முன்பாட்டில் நின்றவிதி என்றதும், "அன்பர் அன்பின் பால் உளதாய்" (1241) என்றதும் காண்க.

பரிவும் - பண்பும் - விரவ - இவ்வாறுகப் பொருந்தி நிற்க இந்த நிலையினை(க் கண்டான்) என்க.

மேதக்கவர் - மேன்மையுடையவர். மேதகைமை - மேன்மை.

பெருமை வெளிப்படுப்பான் - மேன்மையினை உலகர்க்குப் புலப்படும்படி வெளிப்படுத்திக் காட்டும் பொருட்டு. வெளிப்படுத்திக் காட்டாவிடில் அறிவார் ஒருவருமிலர் என்பதாம். பானீற்று வினையெச்சம். வெளிப்படுப்பான் - சடைமுடியார் - அநளாம் என்ன அறிவழிந்து - வெளிப்படுத்துவதற்காகச் சடையார் மேற்கொண்ட அருள் என்னும்படி மறையோன் அறிவழிந்தனன். அவன் அறிவழியாது, கோபம் மேவாது நேர்கண்டிருப்பானையின் தான் அன்றுசெய்தது போலச் செய்திருக்கமாட்டான்; அப்படிச் செய்திராளையின் விசாரசருமரது பெருமை இவ்வுலகில் வெளிப்பட்டிராது; ஆதலின் அருளே அவனை அறிவழியச் செய்தது என்ன. என்றார். அருள் அறிவுருவாதலின் அறிவழியச்செய்யுமோ என்றையுறுவார்க்குப் பெருமை வெளிவருவதற்

காகத் திருவருளாயிற்று இது என்னும்படி என்றார். "உள்ளங் கவர்ந் தெழுந் தோங்குசினங் காத்துக், கொள்ளுங் குணம்" என்றபடி அறிவழிந்தவரே கோபங் கொள்வர் என்ற குறிப்பும் காண்க.

முன்னர் 1240 - 1241 - 1242 மூன்று பாட்டுக்களிற் கூறியது போல் ஈண்டும் இந்த மூன்று பாட்டுக்களால் விசாரசருமனுரது பூசையினைக் கூறும் பண்பும் காண்க. முன்னர்க், "குறித்த பூசை கொள்கின்றார்" (1241) என்று பூசையினை ஏற்று அருள் வைத்ததனைக் கூறியபடியே, ஈண்டும், "சடைமுடியார் அருளாம் என்ன" என்று உவமை முகத்தாற் குறிப்பார் போன்று அருளினைக் கூறிமுடித்த பெற்றியும் சிந்தித் துக் களிக்கவுள்ளது.

பிரமசாரிகளும் - ஆக்கி - கொய்து - தாபித்து - சமைத்தா (ராய்த்) (1251) - தொடங்கி - சாத்தி - எடுத்து - ஆட்டுதலும் (1252) - விரவ - முதுமறையோன் அறிவழிந்து - கோப மேவும்படி கண்டான் (1253) என்று இந்த மூன்று பாட்டுக் களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க.

விரவு மேதகக்கவர்—என்பதும் பாடம். 48

1254. கண்ட போதே விரைந்திழிந்து கடிது சென்று கைத்தண்டு
கொண்டு மகளுர் திருமுதுகிற் புடைத்துக் கொடிதா மொழிகூறத்
தொண்டு புரியுஞ் சிறியபெருந் தோன்ற லார்தம் பெருமான்மேன்
மண்டு காத லர்ச்சனையின் வைத்தார் மற்றுன் றறிந்திலரால். சகூ

(இ - ள்) வெளிப்படை. கண்டபோதே விரைவில் இறங்கி வேகமாகச் சென்று கைத்தண்டினுல் மகளுரது திருமுதுகில் புடைத்துக் கொடிதாகிய மொழிகளைக் கூறவும், திருத்தொண்டு புரியும் சிறிய பெரிய தோன்றலார், தமது பெருமான்மேல் அருச்சனையில் முறுகிய காதலினை ஊன்றி வைத்திருந்தாராதலின் வேருென்றும் அறிந் தாரல்லர்.

(வி - ரை) கைத்தண்டு கொண்டு தீநமுதுகிற் புடைத்து - முதுமறையோனுதலின் கையிற்றண்டு வைத்திருந்தான்; அல்லது ஒருதண்டு அன்று எடுத்திருக்கலாம்.

முதுகிற் புடைத்து - விசாரசருமனுர் தன்னை அறியாமல் மறைந்து ஒளித்திருந்த வன் பின்புறமிருந்து சென்றுனுதலின் முதுகிற் புடைத்தான் போலும்.

தோண்டு புரிதல் - பூசை புரிதல். இங்குத் திருமஞ்சன மாட்டும் திருப்பணி குறித்தது.

சிறிய பெருந் தோன்றலார் - பருவத்தாலும் உருவத்தாலும் சிறியரேனும் பண் பினுற் பெரியவர் என்க. முரண் தொடை. தோன்றல் - பெருந்தகை. பெருமையிற் சிறந்தோர். "சிறிய பெருந்தகையார்" (1220) பார்க்க.

தம்பெருமான் மேல் அர்ச்சனையின் மண்டுகாதல் வைத்தார் என்க. "ஒன்றும் உள்ளம்" (1252), "ஒருமை நினைவு" (1242) என்று உரைத்தனிலை. இங்கிலையை "நெறிவழியே சென்று நேர்மையு ளொன்றித், தறியிருந் தாற்போலத் தம்மை நிறுத் திச், சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராகி, குறியறி வாளர்க்குக் கூடலு மாமே" (தந். 5, யோகம் 1.) என்று திருமந்திரம் உணர்த்திற்று.

மற்றுன்றை - எச்சதத்தன் செய்த அடாத செயலை அவன் பக்கத்தில் அவனைச் சார்த்திக் கூறிய ஆசிரியர், அச்செயலின் நிலை விசாரசருமனுர் பக்கம் சாரா வகை அதனை மீண்டும் சொல்லாராகி, மற்றுன்றை என்று விலக்கிக் கூறிய பண்பு காண்க. மேல்வரும் பாட்டிலும் "வெகுண்டோ னடிக்க, வேறுணரார்" என்றது

காண்க. "முன்னினைந்த வப்பரிசே" (481), "தன்கருத்தே" (647) என்றவை காண்க. மற்றென்றும் - உம்மை தொக்கது. 49

1255. மேலாம் பெரியோர் பலகாலும் வெகுண்டோ னடிக்க வேறுணரார்
பாலார் திருமஞ் சனமாட்டும் பணியிற் சலியா ததுகண்டு
மாலா மறையோன் மிகச்செயிர்த்து வைத்த திருமஞ் சனக்குடப்பால்
காலா லிடறிச் சிந்தினைன் கையாற் கடைமைத் தலைநின்றான். நிo

(இ - ள்) வெளிப்படை. வெகுண்டோனெகிய எச்சதத்தன் பலகாலும் அடிக்க மேலோராய பெரியோர் வேறு அதனை உணராதவராகிப் பாலினால் நிறைந்த திருமஞ் சன மாட்டும் திருப்பணியிற் சலியாததனைக்கண்டு, அறிவழிந்து மயக்கமெய்தி மிகவும் கோபித்து, முன்னர்ச் செயலினாற் கடைத்தொழிலிற் றலைநின்றானெகிய அம்மறையவன், வைத்திருந்த திருமஞ்சனக் குடப்பாலினைக் காலினால் இடறிச் சிந்தினான்.

(வி - ரை) மேலாம் பெரியோர் - மிகப் பெரியோர். பெரியோராயுள்ள யாவர்க்கும் மேலாகும் நிலையினுள்ளவர்; தொண்டர்கள் பெரியோர்; இவர் "தொண்டர்தமக் கதிபராக" உள்ளாராதலின் மேலாம் (மேல் - ஆகும்) என்ற குறிப்புமாம்.

பலகாலும் வெகுண்டோன் அடிக்க - வெகுண்டோனாதலின் பலகாலும் அடிக்க என்று பலகாலும் செய்ததற்குக் காரணங் கூறியவாறு. கோபத்தால் அறிவிழந்திராவிடில் ஒருமுறையோடு நின்றிருப்பான் என்றதும் குறிப்பு.

சலியாதது - ஒரு சிறிதும் பிறழாது செய்தலை. இரண்டனுருபு விரிக்க. "சலியாது முயன்ற தவப்பெருந் தொண்டர்".

மாலா மறையோன்-பலகாற்செய்தும் பயனின்றுதலை உணர்ந்தும் அறிவு பெற்று உண்மையறிய மாட்டாதவனாய் கையாற்செய்த தீமைபோல் காலாலும் செய்ததற்கு அவனது அறிவழிந்த மயக்க மிகுதியே காரணம் என்றபடி. மால் ஆம் - மாலினால் மயக்கத்தினால் - மீதூரப்பட்டு மாலின்படிவமேயாகும் என்றது குறிப்பு.

மிகச் செயிர்த்து - முன்னர் அறிவழிந்து கோப மேலிடினும்; இப்போது அறிவு முற்றுமழிந்ததுடன் மயக்கமே உருவாகி மேலும் கோபம் கொண்டு என்க.

வைத்த திருமஞ்சனக் குடப்பால் - தாபித்து வைத்தவற்றுள் (1251) எடுத்து ஆட்டியவைபோக எஞ்சி இனி ஆட்டுதற்கென்று தாபித்து வைக்கப்பட்டிருந்தொரு குடம் என்பது குறிப்பு. திருமஞ்சனப் பாற்குடம் என்க.

காலால்...தலைநின்றான் - கை - செயல் - ஒழுக்கம். கை - சிறுமையும்மாம். கடைத்தொழிலில் தலைநின்றவன். கையினால் இனிமேலும் செய்யும் கடைத்தொழிலின்மையின் காலினாலும் அவ்வாறே செய்தான் என்பதுமாம். கடைமை - தலை - முரண் அணி. கை - கால் - சொல்லணி. தலைநின்றான் - வினையாலணையும் பெயர். சிந்தினான் - அதனால் தலைநின்றான் என வினைமுற்றாகக் கொண்டுரைத்தலுமாம்.

இவ்வொரு பாட்டில் வெகுண்டோன் - மாலா மறையோன் - கையாற் கடைமைத் தலைநின்றோன் என்று மும்முறை எச்சதத்தனைக் குறித்து முடித்தது அவன் செய்த சிவாபராதத்தினை மும்முறையாலுங் கடிந்து மொழிந்து காட்டியதுடன், அதனைச் சொல்லுமுன், தன்னை அது தாக்காதபடி கழுவாய் செய்துகொள்ளவே முதலில் மேலாம் பெரியோர் என விசாரசருமரைத் துதித்துக் கொண்டார் என்க.

கடைமைத்தலை நின்றான் என்று முன்பு செய்த அபராதத்தினைக் கடைத்தொழிலிற் றலைமை காட்டிய ஆசிரியர், பின்னர்ச் செய்ததனை, இடறிச் சிந்தினான் என்ற மட்டில் அமைந்ததனால் முன் செய்கை அடியார்பாற் செய்த அபசாரமாய்ப் பின்னதனினும் கொடிய மிக்க பெரும்பாதகமாம் என்பது குறிப்பாம். "முன்னத்தி னுணருங்

*கிளவியு முளவே, யின்ன வென்னுஞ் சொன்முறை யான"* (தொல்-சொல்-எச்ச - 63) *என்றபடி இவ்வாறு மும்முறைகூறி அவனது மிகக் கடையனுந் தன்மை குறித்தனர். "தனியுமொரோவழி" என்றதனால், மறையோன் செயிர்த்துக், கடைமைத் தலைமின் முன் சிந்தினன் என்று, ஒருபொருள்மேல்வந்த பலபெயர்க்கும் தனி வினைகள் தந்து முடித்தார்.*

**கலியாரது கண்டு**—*என்பதும் பாடம்.* 50

1256. சிந்தும் பொழுதி லதுநோக்குஞ் சிறுவ ரிறையிற் றீயோனைத்
தந்தை யெனவே யறிந்தவன்றன் றாள்கள் சிந்துந் ததுதியினுன்
முந்தை மருங்கு கிடந்தகோ லெடுத்தார்க் கதுவே முறைமையினுல்
வந்து மழுவா யிடவெறிந்தார்; மண்மேல் வீழ்ந்தான் மறையோனும்.

(இ - ள்) வெளிப்படை. சிந்தும் பொழுதிலே அதனை நோக்கும் சிறுவர், சிறிதளவில், அந்தத் தீயவனைத் தந்தையெனவே அறிந்து, அவனது தாள்கள் சிவபெருமானுக் குரிய பாலினைச் சிந்திய தருதியினுல் (அப்பாதகத்தைத் தண்டிக்க எண்ணி) முன்பு பக்கத்திற் கிடந்த கோலினை எடுக்க அவர்க்கு முறைமையினுல் அதுவேவந்து மழுவாயிட, அதுகொண்டு அவனது தாள்களை எறிந்தார்; மறையோனும் மண்ணின் மேல் வீழ்ந்தான்.

(வி - ரை) சிந்தும் பொழுதில் அதுநோக்கும் - *'மற்றென்றறிந்திலரால்'*(1254), *"வேறுணரார்"* (1255) *என்றிருந்தவர், அது நோக்கிய தென்னையோ? வெனின்,முன் குறித்த செயல்களெல்லாம் மற்றவையாயும் வேறுயும் இருந்தன; அதுவோ அவரின் வேறல்லாது அவரது உள்ளம் ஒன்றியதாயிருந்தது; ஆதலின் அவர் அதனை நோக்கினர் என்க. நோக்குதல் - ஊன்றிப்பார்த்தல். அவரது நிறைந்த காதல் முழுதும் அருச்சனையில் வைத்தாராதலின் அதுபற்றிய பொருளாகிய பாற்குடம் சிதறுண்டபோது அவர் நோக்கம் பட்டது என்க. அவரது புறக்கருவி அகக்கருவிகள் யாவும் வெளியிற் செல்லாது திருப்பணி யொன்றிலே ஒன்றியிருந்தன வாதலின் திருப்பணிக்கு நேர்ந்த இடையூறு அவரது ஒன்றியிருந்த தன்மையை மாற்றி நோக்குவித்தது என்க.*

**தீயோனை இறையில் அறிந்து, என்க** - *சிந்திய செயலை நோக்கினர்; அந்நோக்கம் அதனைச் செய்தவன்பாற் சென்று அவனை யாவன் என்று ஆராயச் செய்தது; அதனால் அவன் தமது தந்தையெனவே விரைவில் அறிந்தனர்; தீயோனை - தந்தையென்ற நினைவு மட்டும் வந்ததேதவிர அவனது தீமையின் நினைவு மாறவில்லை என்பார் தீயோனை அறிந்து என்றார்.*

**தாள்கள் சிந்தும் ததுதியினுல் - ததுதியாவது**-*சிந்திய செயல் தாள்கள் செய்தன ஆதலின் தண்டனை பெறுதற்குத் தகுதியுடைமை.*

**முந்தை மருங்கு கிடந்தகோல் - கோல் - ஆனிரை மேய்த்தகோல். அது அவர் பக்கத்துக் கிடந்தது என்பதாம்.**

**அதுவே முறைமையினுல் வந்து மழுவாயிட** - *குற்ற நீங்கும்படி தாள்களை ஒறுத்தற்காகக் கோல் எடுக்க அது உரிய தண்டனை தரத்தக்க கருவியாக மாறுதல் முறைமையாதலின் அம்முறையினுல் அதுவே மழுவாயிட என்க. முறைமை - இறைவரது ஆணைமுறை.* **வந்து** - *அவரது கையினில் வந்து. தமது கரணங்கள் எல்லாம் சிவகரணங்களே ஆகப்பெற்ற மேலாம் பெரியோராதலின் தண்டிக்க எடுத்த சிறுகோலே சிவனாணையால் அவரது கையில் மழுவாயிற்று. முறைமை - மகனுகும் முறை என்ற குறிப்பும் காண்க. தந்தையார் கொண்ட மழு மகனாராகிய இவர்க்கு முரியதாகும் முறைமை. எறியவேண்டுமென்ற எண்ணத்துடன் எடுத்த முறைமையினுல் என்றலு மாம்.*

எறிந்தார் - தாள்களை என்ற செயப்படுபொருள் வருவிக்க.

வீழ்ந்தான் மறையோனும் - எறிந்த செயலோடு இடையீடின்றி வீழ்ந்த செயலும் நிகழ்ந்ததாகலின் எறிந்தார் - வீழ்ந்தான் என்று பயனிலையை முன்வைத்தும், அடுத்துவைத்தும் ஓதினார் ; வீழ்ந்ததன் விரைவு குறித்தது. மறையோனும் - உம்மை இழிவு சிறப்பு. 51

1257. எறிந்த வதுவே யர்ச்சனையி லிடையூ றகற்றும் படையாக
மறிந்த தாதை யிருதாளுந் துணித்த மைந்தர் பூசனையில்
அறிந்த விடையூ றகற்றினராய் முன்போ லர்ச்சித் திடப்புகலுஞ்
செறிந்த சடைநீண் முடியாருந் தேவி யோடும் விடையேறி, ௫௨

1258. பூத கணங்கள் புடைசூழப் புராண முனிவர் புத்தேளிர்
வேத மொழிக ளெடுத்தேத்த விமல மூர்த்தி திருவுள்ளங்
காதல் கூர வெளிப்படலுங் கண்டு தொழுது மனங்களித்துப்
பாத மலர்கண் மேல்விழுந்தார் பத்தி முதிர்ந்த பாலகனார். ௫௩

1257. (இ - ள்) வெளிப்படை. எறிந்த அதுவே அருச்சனையில் நேர்ந்த இடையூற்றினைப் போக்கும் படையாக உதவப், பூசையினைத் தடுத்த தந்தையின் இரண்டு தாள்களையும் துணித்து வீழ்த்திய மகனார், தமது பூசனையில் அறிந்த இடையூற்றினைப் போக்கினராய், முன்போல அருச்சிக்கத் தொடங்கலும், நெருங்கிய நீண்ட சடையினையுடைய சிவபெருமானும் உமாதேவியாருடன் விடையின்மேல் ஏறி, ௫௨

1258. (இ - ள்) வெளிப்படை. பூதகணங்கள் புடைசூழ்ந்து வரவும் பழைய முனிவர்களும் தேவர்களும் வேதமொழிகளால் தோத்திரித்து வரவும் விமலமூர்த்தியாகிய சிவபெருமான் தமது திருவுள்ளக் கருணைமிக்கு வெளிப்பட்டருளலும், பத்தி முதிர்ந்த பாலகனாராகிய விசாரசருமனார், கண்டு தொழுது மனமிகக் களிப்படைந்து அவரது பாத தாமரைகளின்மேல் வீழ்ந்தனர். ௫௩

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1257. (வி - ரை) எறிந்த அதுவே...படையாக - சிவபூசையில் இடையூறகற்றும்படை பாசுபதாத்திரமாம். ஆகமங்களில் விதித்த பூசை உறுப்புக்களுள், 'இடையூற்றை விலக்குதல்' (விக்கினோச்சாடனம்) என்பதொன்று. அது, உரிய மந்திரம் பாவனை செயல்களால் மேல் - நடு - கீழ் என்ற மூன்றுலகங்களாலும் நேரும் இடையூறுகளைப் போக்கிப், பின் பூசையிற் புகுதலாகும் என்ப. அவ்விடையூறுகளாவன் இன்னவென்றறியாது வருபவை. இங்கு நேர்ந்தது இவற்றின் வேறாய்ப், புதிதாய், இன்னதென் றறியவந்ததொன்று. ஆதலின் அர்ச்சனையில் அறிந்த இடையூறு என்றார்.

மறிந்த - மறித்தல் - தடுத்தல். மறித்த என்பது எதுகை நோக்கி மறிந்த என மெலித்தல் விகாரமாயிற்று. குறித்த செயல் விகாரமாதலின், சொல்லும் விகாரமாயிற்று. அவ்விடையூறு மெலிந்தொழியும் என்பதும் குறிப்பு.

இருதாளும் துணித்த - ஒருதாளே பாற்குடத்தை இடறவும் இருதாளும் சிதைத்ததென்னை? எனின், ஊன்றி நின்ற தாளினது துணைகொண்டே மற்ற ஒரு தாளைத் தூக்கி இடறினானாதலின் குற்றஞ்செய்த தாளினுக்குத் துணைசெய்த குற்றத்தினுட்பட்டது ஊன்றி நின்ற காலுமாம். எனவே நீதிநூல் விதிப்படி குற்றஞ்செய்தானும் அதற்குத் துணைசெய்தானும் ஒருங்கே தண்டிக்கப்படுதல் முறையாமென்க.

முன்போல் அருச்சித்திட - இடையூறகற்றிய வகையால், தாதை வீழ்ந்த செயல் முதலிய புற நிகழ்ச்சிகள் ஒருசிறிதும் உள்ளத்திற்றாக்காது இறைவன் பாலதாகவே கொண்ட ஒருமை நினைவால் அருச்சித்திட என்பது.

அர்ச்சித்திடப் புகலும் - சடைமுடியார்நம் - வெளிப்படலும் - உலகப் பற்றறுத்த போதே இறைவன் வெளிப்படுவன் என்பதுண்மை. "யானெனதென் றற்ற விடமே திருவடியா" (கந்தர் கலிவெண்பா) என்றது காண்க.

முடியாநம் - உம்மை சிறப்பும்மை. முன் உள்ளே நிறைந்து பூசைகொண்ட அவரும் என இறந்தது தழுவிய எச்சவும்மை என்றலுமாம்.

வெளிப்படலும் - முன்னர்க் "கோளமதனில் உள் நிறைந்து பூசைகொ"ண்ட அவர், இப்போது காதல்கூர வெளிப்பட்டனர் என்க. "மறைய நின்றுளன்... முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே" (அப்பர் - திருக்குறுந்தொகை - பொது.) என்றபடி அன்பு முறுகி விளைந்த இடத்தேதான் இறைவரது வெளிப்பாடு நிகழுமென்க. நாயன்மார் சரிதங்கள் பலவுங்காண்க.

தேவியோடும் விடையேறி - அடியார்க் கருள்தந்து தம்முலகம் தர வரும்போதெல்லாம் இவ்வாறு வருவர் சிவபெருமான். 52

1258. (வி - ரை) புராண முனிவர் - பழைய முனிவரர். புத்தேளிர் - தேவர்கள்.

விமலமூர்த்தி - சிவபெருமான். விமலமூர்த்தி என்னும் அன்மொழித் தொகைத் தொடர் மொழி மலங்கட்குப் பகையான திருமேனியையுடையவர் எனப் பொருள் தரும். "மூலமாகிய மும்மல மறுக்குந், தூயமேனி" (திருவாசகம்) என்பது காண்க.

காதல்கூர - தம்மை அவர்க்குத் தாதை எனக் கொள்கின்றாராதலின் காதல் என்ற சொல்லாற் கூறினர்.

பத்தி முதிர்ந்த - முறுகி வளர்ந்த அன்பினையுடைய. "முறுக வாங்கிக்கடைய" என்ற கருத்துமிது. (கடைதல்-தியானித்தல்; "தியான நிர்மதனுத்" என்பது சுருதி.)

பாலகனூர் - விமலனூர் தம்மைத் தாதை எனக்கொள்வார் காதல்கூர வெளிப்பட்டபடியால் அதற்கேற்ப நாயனாரையும் பாலகனூர் என்ற சொல்லாற் கூறினர்.

பாதமலர்கள்மேல் விழுதல் - பாதத்தின்கீழ் மரம்போல வீழ்ந்து அவசமாய்க் கிடத்தல். இக் கருத்துப்பற்றியே மேல்வரும் பாட்டில் "கீழ்விழுந்தவரை எடுத்து" என்றது காண்க. மேல் - ஏழனுருபு. வரும் பாட்டில் கீழ் என்பதுமது. 53

1259. தொடுத்த விதழி சூழ்சடையார் துணைத்தா ணிழற்கீழ் விழுந்தவரை
எடுத்து நோக்கி "நம்போருட்டா லீன்ற தாதை விழவேறிந்தாய்;
அடுத்த தாதை யினியுனக்கு நா"மென் றருள்செய் தணைத்தருளி
மடுத்த கருணை யாற்றடவி யுச்சி மோந்து மகிழ்ந்தருள, நிச

1260. செங்கண் விடையார் திருமலர்க்கை தீண்டப் பெற்ற சிறுவனு
ரங்கண் மாயை யாக்கையின்மே லளவின் றுயர்ந்த சிவமயமாய்ப்
பொங்கி யெழுந்த திருவருளின் மூழ்கிப் பூமே லயன்முதலாந்
துங்க வமரர் துதிசெய்யச் சூழ்ந்த வோளியிற் றோன்றினார். நிநி

1259. (இ - ள்) வெளிப்படை. தொடையாகிய கொன்றை மாலை சூழ்ந்த சடையினையுடைய சிவபெருமானார், தமது திண்ணத்தாள்களினீழலின் கீழே விழுந்தவரை எடுத்து நோக்கி, "நம்பொருட்டாக உன்னைப் பெற்ற தந்தை வீழும்படி நீ எறிந்தாய்; இனி, உனக்கு நாமே அடுத்த தந்தையாயினேம்" என்று அருளிச்செய்து, அவரை அணைத்தருளி, நிறைந்தகருணையினால் தடவி, உச்சிமோந்து மகிழ்ந்தருள, நிச

1260. (இ - ள்) வெளிப்படை. செங்கண் விடையினையுடைய சிவபெருமானது மலர் போன்ற திருக்கையினாலே தீண்டப்பெற்ற விசாரசருமராகிய சிறுவனார், அவ்விடத்தே தமது மாயை உடம்பின்மேல் அளவில்லாமல் உயர்ந்த சிவமயமாய்ப்

பொங்கி எழுந்ததாகிய திருவருளிலே மூழ்கித், தாமரைப் பூவில் வீற்றிருக்கும் பிரம தேவர் முதலாகிய பெருந் தேவர்களும் துதி செய்யத் தம்மைச் சூழ்ந்து விளங்கிய சிவ வொளியினுள்ளே தோன்றினார். ௫௫

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1259. (வி - ரை) சடையார் - விழுந்த அவரை, எடுத்து - நோக்கி - என்றருள் செய்தருளி - அணைத்தருளி - தடவி - உச்சிமோந்து - மகிழ்ந்தருள - (அவ்வாறு) தீண்டப்பெற்ற சிறுவனார் - மாயையாக்கையின் மேல் - சிவமயமாய்த் - திருவருளின் மூழ்கி - ஒளியில் - தோன்றினார் என்று இந்த இரண்டு பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க.

தொடுத்தஇதழி சூழ்சடையார் - இதழி - கொன்றை - இதழியும் சடையும் சிவபெருமானுக்குச் சிறப்பாயுரியவை. முன்னர்ச் " சடைநீள் முடியாரும் " (1257) என்றும், பின்னரும் " துண்டமதிசேர் சடைக்கொன்றைமாலை " (1261) என்றும் இவற்றையே எடுத்துக்கூறுதல் காண்க. தொடுத்த இதழி - மாலையாகத் தொடுத்ததுபோன்ற சரக்கொன்றை. தொடுக்கப்பட்ட கொன்றைமாலை என்று உரைத்தலுமாம். விசாரசருமனார் தொடுத்துச் சூட்டிய இதழிமாலை என்ற குறிப்புப் பட உரைக்கவும் நின்றது. ஆத்தியின்கீழ் மணலாற் சிவலிங்கந் தாபித்துக் கோயி லாக்கினாராதலின் அந்தத் தொடர்புபற்றி " ஆத்திமலரும் செழுந்தளிரும் முதலா " (1238) என்று ஆத்தியை முன்வைத்துக் கூறினாரேனும், முல்லைப்புறவுக்குரியதும் சிவபிரானுக்குச் சிறப்பாயுரியதுமாகிய கொன்றையும் உடன்கொள்ளப்படுமென்ப தாம். " பூமலி கொன்றை சூட்ட " (சாய்க்காடு - 6) என்ற திருநேரிசையும் காண்க. விசாரசருமனார் சிவமூர்த்தியாகிய குறிப்புடன் திருப்பள்ளித்தாமஞ்சாத்திக் காதல் கூர அருச்சித்தாராதலின் அவர் நினைத்துக் குறித்து அலங்கரித்த அந்தக் கோலத் துடன் வெளிப்பட்டு நிற்றலும் இறைவனருளின் இயல்பாமென்க. " ஆரொருவ ருள் குவா ருள்ளத் துள்ளே யவ்வுருவாய் நிற்கின்ற வருளுந் தோன்றும்" (பூவணம் - 10) என்ற திருத்தாண்டகமுங் காண்க.

துணைத்தாள் நிழற்கீழ் - துணைத்தாள் - இரண்டு பாதங்கள். அடைந்தவர்க்குத் துணை - பற்றுக்கோடு - ஆகிய திருவடி என்றலுமாம். " கழற்சேவடி யடைந்தார் களைகணெட்டும்" (தாண்டகம்). தாள் - திருவருள் நிறைவு. நிழல் - என்றது அவ்வரு ளின் நிறைவின் ஒருவர் பொருட்டு வெளிப்படும் நிலை. அருள் வெளிப்பட்ட பின்னரே அதன் அனுபவம் நிகழக் கூடியதாதலின் தாளின் கீழ் என்னாது தாள் நிழற்கீழ் என் றார். தாட்கீழ் எனவரும் இடங்களிலும் இவ்வாறே வருவித்துரைத்துக் கொள்ளத் தக்கது.

விழுந்தவரை எடுத்து - கீழ் வீழ்ந்தாராதலின் எடுக்க வேண்டியதாயிற்று. வீழ்ந்தாலன்றி எடுத்தல் நிகழக் கூடாதாதலின்,பெரியோர்கள்பாலும் இறைவர்பாலும் அருள்பெற வேண்டுவோர் அவர் காலின்கீழ் வீழ்தல் வேண்டும் என்பது இக்கருத்துப் பற்றியதாம். கீழ் வீழ்ந்த நிலையிலிருந்த பாண்டியநாட்டை மேலெழுவிக்க விரும்பிய குலச்சிறை நாயனார், ஆளுடையபிள்ளையார் வரும் வழியில் வீழ்ந்துகிடந்து அவரே வந்து தமது திருக்கைகளாற் றூக்கி எடுக்கும் வரையில் எழாமல் வீழ்ந்தபடியே கிடந்த வரலாறு இங்கு நினைவு கூர்தற்பாலது. (திருஞான - புரா - 656 - 657).

நோக்கி - அருட்பார்வை யளித்து.

" நம்...நாம் " என்று அருள்செய்து - இவை இறைவனார், விசாரசருமனாருக்கு உரைத்த உபதேசமாகிய உறுதிமொழிகள்.

எடுத்து - அணைத்தருளி - தடவி - என்றவை சிவபெருமான் கையினாற் றீண்டிச் செய்த செயல்கள். எடுத்தல் பாசநீக்கம் செய்தலும், அணைத்தல் - தடவுதல் சிவப் பேறு பெறுவித்தலும் குறித்தன. "அன்று நின்னுரு வாகத் தடவியே யால வாயர னாகத் தடவியே" (திருவியமகம் - 5) என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரம் காண்க. "சித்தமல மறுவித்துச் சிவமாக்கி" (அச்சோ 1) என்ற திருவாசகக் கருத்தும் நினைவு கூர்க. அணைத்தலால் சிவமாக்கப் பெறுதலும், தடவுதலால் அதனுள் மூழ்கிச் சிவவொளியிற் றோன்றுதலுமாம். இக்கருத்து மேல்வரும் திருப்பாட்டில் "தீண்டப் பெற்ற" என்றதனால் விளக்கப்படுதல் காண்க. சிவஞானமாபாடியம் 11 சூத்திர வுரையைத் தழுவி அணைத்தல் - அருள் விளக்கமும், தடவுதல் - ஆனந்த விளக்கமு மாம் என்று கொள்ளலாமென்பர் வித்வான் திரு. சா. பெரியசாமிப் பிள்ளை. "தீவகமா மென வுருவாய் வந்து நாதன் றிருநோக்காற் பரிசத்தாற் றிகழும் வாக்காற், பாவனை யால்" (சிவப்பிரகாசம் - 8) என்றபடி இங்கு நோக்கி - அருள் செய்து - தடவி என்ற வற்றால் முறையே நோக்கால் - வாக்கால் - பரிசத்தால் நிகழும் தீக்கைகளும், இனம் பற்றி ஏனைய தீக்கைகளும் நிகழ்ந்தன எனக் கொள்ளலாமென்பர் ஸ்ரீ ந. சிவப்பிர காசதேசிகர்.

எடுத்து - "என்னையிப் பவத்திற் சேரா வகையெடுத்து" என்ற சிவஞான சித்தி யார் பார்க்க.

ஈன்றதாதை - பெற்றெடுத்து வளர்த்துப் பிரமோபதேசமும் செய்த தந்தையை யும். சிறப்பும்மை தொக்கது.

நம்பொருட்டால் - நமக்குச் செய்யும் திருப்பணிவிடை முட்டின்றி நிறைவேறும் பொருட்டு. "அர்ச்சனையில் இடையூறகற்றும் படையாக", "அறிந்த இடையூ றகற் றினராய்" (1257) என்றது காண்க.

இனி உனக்கு நாம் அடுத்த தாதை என்க. அடுத்த - பின்முறையால் என்று கொண்டு ஈன்றதாதை எறிந்து பட்டொழிந்தமையால் அடுத்ததாதை - அடுத்தபடியில் - என்க. அடுத்த - தகுதியான என்று கொண்டு அவன் உனக்கு அடாத தாதை, நாமே அடுத்ததாதை என்ற குறிப்பும் காண்க. இனி அடுத்த - வழிபட்ட - தாதை என்றலு மாம். இனி உனக்கு அடுத்த தாதை என்றது இதன் முன்னர் எல்லா உயிர்களுக்கும் போல உனக்கும் பொதுவகையால் இறைவராயும் தாதையாயு மிருந்தோம்; இனி அவ்வாறன்றிச் சிறப்பு வகையால் தாதை முறைமையால் அடுத்து மிகநெருங்கி விளங் குவோம் என்றதும் ஆம்.

அணைத்தருளி - தடவி - உச்சிமோந்து - மகிழ்ந்தருள - இவை தாதையர் தம் சிறுவரிடத்து அன்பினாற் செய்யும் செயல்கள். தாதை என்ற முறைமை அருளி னாராதலின் தாதைபோல இவை செய்தருளினர். இதன்மேல் மகன்மையாகிய உரிமை தந்த விவரம் 1261-ல் உரைப்பார். 54

1260. (வி - ரை) திருமலர்க்கை தீண்டப்பெற்ற - தீண்டப் பெற்ற - தீண்டப் பெற்றதனால் என்க. காரணப் பொருட்டாய் வந்த பெயரெச்சம். பெற்றதனால் திருவருளின் மூழ்கி ஒளியில் தோன்றினார் என்றதாம்.

அங்கண்மாயை யாக்கை - அங்குத் தீண்டப்பெற்ற யாக்கை - மாயையால் ஆகிய உடம்பு. உயிர்களுக்கு உடம்பு மாயையினின்றும் தரப்படுகின்ற தென்பது சாத்திரம். தநு என்கின்ற உடம்பும், கரணம், புவனம், போகம் என்ற இவையும் எல்லாம் மாயையினின்றும் வருவனவாம்.

அளவின்று உயர்ந்த சிவமயமாய் என்றது மாயாவுடம்பும் கரணங்களும் சிவ வுடம்பும் சிவகரணங்களும் ஆகி. பசு கரணங்கள் எல்லாம் பதி கரணங்களாக மாறி

என்க. "மற்றவர்க்கு நந்தம் காரணம்போ லல்லாமை காண்" என்ற திருக்களிற்றுப் படியாரும், "ஊனுயிர் வேறு செய்தா னெடித்தான்மலி யுத்தமனே" என்ற நம்பிகள் தேவாரமும் "மாயை மாமாயை மாயா வருமிரு வினையின் வாய்மை, ஆயவா ருயிரின் மேவும் அருளெனி லொளியாய் நிற்கும்" (சிவப்பிரகாசம் - 70) என்ற ஞானசாத் திரமும் பிறவும் காண்க. கைதீண்டினதால் மாயை யாக்கையே அதற்கு மேற் பட்ட அளவில்லா உயர்வுடைய சிவமயமான யாக்கையாக மாற்றப்பெற்றது; பரிசவேதியானது தான் தீண்டிய பொருளைப் பொன்னுக்குதல்போல என்க. சிவ மயம் - சிவசொரூபம். திருவருளில் ழுழ்கி - அருட்பெருக்கினுள் அமுந்தித் தன்வச மிழந்து. அருள் நிறைவுபெற்று.

பூமேல் அயன் முதலாந் துங்க அமரர் துதிசெய்ய - பூ மேல் அயன் - பூ - தாமரை; தாமரையில் இருக்கும் பிரமன். துங்கம் - பெருமை. சிவத்துவ விளக்கமாகிய திருவருள் வெளிப்பாடு கண்டு அமரர் துதித்தனர் என்க. "வானவர்பூ மழைபொழிந் தார்" (130) என்பது முதலிய இடங்கள் காண்க.

பூ - பூமி என்று கொண்டு, அயன் முதலாம் பெருந் தேவரும் தமது தேவருலகம் விட்டுப், பூ மேல் - பூமியில் வந்து துதிக்க என்றுரைத்தலு மொன்று. "இத்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற வாறு என்று" விரும்பிப் பிரமன் முதலியோர் பூவுலகில் வந்து சிவபூசை செய்கின்றார்கள்; அவர்கள் எல்லாம் சிவபூசையின் பயன்பெறச் சண்டேச ரைத் துதிக்கின்றார்களாதலின் இவ்வாறுகூறினர் என்றலுமாம் என்க.

சூழ்ந்த ஒளியில் தோன்றினர் - தம்மை உள்ளடக்கி மேற் சூழ்ந்து எழுந்த சிவ வொளியில் விளங்கினர். சிவப்பிரகாசம் என்பது வடமொழி. இவ்வொளி ஞானக் கண்ணுற் காணப்படுவதாகும்.

சிவபெருமான் வெளிப்பட்டுக் கைதீண்டியதனால் மாயையுடம்பு சிவவுடம்பாய் விளங்கினமை இப்பாட்டிற் கூறப்பட்டது. இதனை "அந்த உடம்பு தன்னுடனே அரனார் மகனு ராயினர்" (1264) என்பது காண்க.

சூழ்ந்த ஒளி என்பது சிவத்துவ விளக்கமாகிய பேரொளி. இத்தகைய ஒளி பெரி யோர்களுடலைச் சூழ்ந்து விளங்கு மென்பது. "அங்க ணேரொளி யாயிர ஞாயிறு பொங்கு பேரொளி போன்று" (26) என்றதனாலும் காண்க. 55

1261. அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப னுக்கி யனைத்துலகம்
உண்ட கலமு முடுப்பனவுஞ் சூடு வனவு முனக்காகச்
சண்டி சனுமாம் பதந்தந்தோ" மென்றங் கவர்பெற் றடமுடிக்குஞ்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார். ருசு

(இ - ள்). வெளிப்படை. தேவர்களது பெருமானாகிய சிவபிரானும் விசாரசரு மனாரைத் தொண்டர்களுக்கெல்லாம் அதிபராக ஆக்கி, "நாம் உண்டபரிகலமும், உடுக்கும் உடைகளும், சூடும் மாலை அணிகலன் முதலியனவும் ஆகிய அனைத்தும் உனக்கே உரிமையாகும்படி சண்டேசன் ஆகும் பதவியையும் தந்தோம்" என்று சொல்லி அவருடைய அழகிய பெரிய திருமுடிக்குத் தமது பிறைச்சந்திரன் இருக்கும் சடையிற்சூடிய கொன்றைமலர் மாலையை எடுத்துச் சூட்டியருளினர்.

(வி - ரை) அதிபன் ஆக்கி - சூழ்ந்தவொளியிற் றோன்றிய அவரை எனச் செயப்படு பொருள் முன்பாட்டிலிருந்து வருவிக்க.

தொண்டர்தமக்கு அதிபன் ஆக்கி - தொண்டர்களுக்கெல்லாம் நாயகராக - முதல்வராகச் - செய்து. "சோதி மணிமுடித் தாமமு நாமமும் தொண்டர்க்கு நாயகமும்" (திருப்பல்லாண்டு) என்றது காண்க.

உண்ட கலமும், உடுப்பனவும், சூடுவனவுமாகிய அனைத்தும் என்க. அனைத்தும் என்ற முற்றும்மையால் "பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயில்" முதலியன வாய் இங்குக்கூறுதலையும் கொள்க.

உனக்காகச் சண்டீசனுமாம் பதம் - உனக்கே உரிமையாகுமாறு சண்டீசன் என்கிறபதவியை.

சண்டீசர் என்பது ஒரு பதவி; அல்லது தானம். சிவபெருமான், அம்பிகை, விநாயகர், முருகக்கடவுள் சூரியன் இவர்களுக்கெல்லாம் அவ்வம் மூர்த்திகளை நெருங்கி அந்தந்த நிலையில் சண்டீசபதம் உண்டு. அவ்வவற்றில் வாழ்பவர்கள் அவ்வம் மூர்த்திகளை வழிபடுவோர்க்கு அவ்வவழிபாடுகளின் பயனை அளிப்பர். சிவபெருமானுடைய சண்டீச பதத்தில் இந்தக்கற்பத்தில் வாழ்பவர் இச்சரிதத்தில் கண்ட விசாரசருமனாராவர். இவர் இப்பதவியின் பெயரால் அழைக்கப்படுகின்றார். சூரியமூர்த்தியிடம் உள்ள சண்டி தேசச்சண்டர் எனப்படுவர். அவ்வாறே அம்பிகை விநாயகர் முருகக்கடவுள் இவர்களது சண்டபதத்து வாழ்வோர் முறையே நீலிச் சண்டன், ஆம்போச்சண்டன், மாத்ருச்சண்டன் என்று பெயர்பெறுவர். சிவபெருமானது சண்டபதத்தில் வாழ்வோர் தொனிச்சண்டர் எனப்படுவர். இவ்வரலாறு களையெல்லாம் ஆகமங்களுள் விரிவாய்க் கண்டுகொள்க.

சண்டீசனுமாம் பதம் - தொண்டர்தமக் கதிபனுக ஆக்கியதுடன் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

உனக்காக - சிவநின்மாலியங்களாகிய அமுது, பரிவட்டம், மாலை முதலியவைகள் சண்டீசருக்கு உரியன. இவர்க்குக் கோயில் சிவாலயத்தில் அபிடேகத்தீர்த்தத் தொட்டிக்கு அடுத்து அமைக்கப்படும். சிவபெருமானுடன் இடையறுத தியானத் தொடர்புடையாராதலின் இவரது கோயிலுக்கும் சிவதீர்த்தத் தொட்டிக்கும் இடையே குறுக்கிட்டுப்போகலாகாது என்பது சிவாலய தரிசன விதிகளுள் ஒன்று. சிவதரிசனம் சண்டீச தரிசனப் பிரார்த்தனையுடன் நிறைவேறுகிறது. சண்டீசர் கோயிலையடைந்து வணங்கிக் கைகளைத்தட்டித் தாம்பெற்ற சிவ நின்மாலியப் பிரசாதங்களை அவரிடம் சேர்த்துச் சிவதரிசன பலனைத்தர வேண்டுமென்று பிரார்த்தித்து அவர் பாற்பெற்ற விபூதியை அணிந்துகொள்ள வேண்டுமென்பது விதி. சிவ நின்மாலியங்களைச் சிவதீக்கையில்லாதவர்கள் புசிக்கலாகாது; சண்டீச நின்மாலியத்தை எவரும் புசிக்கலாகாது; என்றிவ்வாறு பலவும் சிவாகமங்களுள் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றை நல்லாசிரியர்பாற்கேட்டு ஒழுகுவது சைவ நன்மக்களின் கடமை.*

உண்டகலம் - நிவேதனமாயின உணவாகிய பரிகலம். பரிகலசேடம் என்பர் வடவர். உண்டு மிகுந்த உணவு. பரிகலம் - கலம் என வந்தது.

உண்டகலம் - உடுப்பன - சூடுவன - அனைத்தும் உனக்காக என்றதனால் சிவனுக்கு நிவேதித்த திருஅமுதை சண்டீசருக்கு ஊட்டத்தக்கது; அவருக்கு உடுத்த ஆடையே உடுக்கவும், சூட்டியமாலை - அணிகள் என்பவையே சூட்டி அலங்கரிக்கவும் தக்கன என்பதாம்.

துண்டமதி - பிறைச்சந்திரன். வாங்கி - எடுத்து. கொன்றைமாலை - சிவனுக்குரிய திருவடையாளமாலை.

*முக்கிய குறிப்பு:—வழிபடுவோர் சண்டீசமூர்த்தியின் பேரில் தமது ஆடைகளின் நூலிழைகளை எடுத்துப்போடும் கெட்ட வழக்கம் பல கோயில்களிற் காணப்படுகிறது. இது பெருஞ் சிவாபராதமாம். சிவனுக்குச் சாத்திய நின்மாலியமான ஆடையே சண்டீசருக்குச் சாத்தப்படுவதாகும். மக்கள் தாங்களணிந்து அசுத்தமான ஆடைகளின் இழைகளைப் போடுதல் மிகவும் அநுசிதமும் பாவமுமாகும்.

உனக்காக - தந்தையின் உரிமை மகனாருக் காகும் என்றபடி. "அடுத்த தாதை இனி உனக்கு நாம்" (1259) என்று கொண்டாராதலின் தமது உரிமைகளையெல்லாம் தந்து மகனாராக்கிக் கொண்டருளினர் என்க. சூட்டுதல் - மகுடம் சூட்டுதலைக் குறிப்பா லுணர்த்தி நிற்றலும்காண்க. மதிசேர்சடைக் கொன்றைமாலை என்ற குறிப்புமது. 56

1262. எல்லா வுலகு மார்ப்பெடுப்ப வெங்குமலர்மா ரிகள்பொழியப்
பல்லா யிரவர் கணநாதர் பாடி யாடிக் களிபயிலச்
சொல்லார் மறைக டுதிசெய்யச் சூழ்பல் லியங்க ளெழச்சைவ
நல்லா றோங்க நாயகமா நங்கள் பெருமான் றொழுதணைந்தார். ௫௭

(இ - ள்) வெளிப்படை. எல்லா உலகங்களில் உள்ளோரும் மகிழ்ச்சியினால் அரகரவென்று ஆரவாரிக்கவும், எவ்விடத்தும் பூமழை பொழியவும், பற்பல ஆயிரம் சிவகணநாதர்கள் பாடியும் ஆடியும் களிப்படையவும், வேதங்கள் மொழிகளால் நிறைந்த துதிகளைச்செய்யவும், நாற்புறமும்சூழ்ந்த பலவகைவாத்தியங்கள் முழங்கவும், சைவ நன்னெறியானது ஓங்கி வளரும்படியாக, நமது பெருமானாகிய நாயனார் சிவ பிரானைத் தொழுது, தலைவராகத் தமது சண்டீசபதவியில் அணைந்தனர்.

(வி - ரை) ஆர்ப்பெடுப்ப - பொழியக் - களிபயிலத் - துதிசெய்ய - எழ - என்றவை முன் ஐந்து பாட்டுக்களிற் போந்த திருவருள் வெளிப்பாடுபற்றி நிகழ்ந்தவை.

சைவ நல்லாறு ஓங்க என்பது ஓங்கும்பொருட்டு என நாயனார் நாயகம்பெற்று அணைந்ததன் பயன் குறித்தது. சிவபூசையின் பெருமையை உலகம் அறிந்து பயன் பெறுதல் குறிப்பு. "சைவ வாய்மை வளர" 1217 என்றதை இங்கு நினைவு கூர்க.

நாயகமா - தலைவராக. முன்பாட்டிற் கூறியபடி "தொண்டர்தமக் கதிப னாக்கி"னாராதலின் அவ்வாறே நாயகமாக அணைந்தனர். ஆக - என்பது ஆ - என ஈறுகுறைந்து வந்தது.

நங்கள் பெருமான் - தொண்டர்தமக் கதிபராக ஆயினமையின் நமக்கெல்லாம் தலைவர் - பெருமானாவர் என்பது குறித்து நின்றது.

தொழுது - தமக்கு மாலைசூட்டிப் பதமளித்த சிவபெருமானைக் கும்பிட்டு.

அணைந்தார் - தமக்குத் தந்த சண்டீசராகிய பதத்தில் சேர்ந்தனர் என்க.

கணநாதர் பாடி ஆடிக் களிபயில - இவை இவரைத் தலைவராகக் கிடைக்கப் பெற்ற மகிழ்ச்சியின் விளைவு.

மறைகள் சொல்லார் துதிசெய்ய என்க. மறைகள் தாமே துதி முழக்கின என்பதாம். இயங்கள் எழ - இவை தேவதுந்துபி முழக்குக்கள். மலர்மாரி - தேவர்கள் பொழியும் கற்பகப்பூமழை. 57

1263. ஞால மறியப் பிழைபுரிந்து நம்ப ரருளா னான்மறையின்
சீலந் திகழுஞ் சேய்ஞலூர்ப் பிள்ளை யார்தந் திருக்கையிற்
கோல மழுவா லேறுண்டு குற்ற நீங்கிச் சுற்றமுடன்
மூல முதல்வர் சிவலோக மெய்தப் பெற்றான் முதுமறையோன். ௫௮

(இ - ள்) வெளிப்படை. வயதான் முதிர்ந்த மறையோனாகிய எச்சதத்தன் உலக மறியும்படி சிவாபராதஞ் செய்தும், சிவபெருமானது திருவருளினால், நான்மறையின் நல்ல ஒழுக்கம் விளங்கும் சேய்ஞலூர்ப் பிள்ளையாருடைய திருக்கையில் ஏந்திய அழகிய மழுவினாலே எறியப்பட்டதனால், அந்தப் பிழையினின்றும் நீங்கினவனாய்த், தன் சுற்றத்தாருடனே மூலமுதல்வருடைய சிவலோகத்தில் சேரும் பேற்றினைப்பெற்றான்,

(வி - ரை) ஞாலமறிய - உலகத்தாரெல்லாருங்காண. வெளிப்படையாக.

பிழை புரிந்தும் - பிழை - சிவாபராதம் - சிவனடியாரிடத்திலும் சிவனிடத்திலும் குற்றம் செய்தமை. உம்மை இழிவு சிறப்பு. பிழைபுரிந்தும் குற்றம் நீங்கிச் சிவலோக மெய்தப்பெற்றான் என்க. பிழை இங்குக் கழுவாயில்லாத சிவாபராதம் குறித்தது. அந்தப் பெரும் பிழையின் குற்றமும் நீங்கப்பெற்ற காரணம் கூறுவாராய், அது, நம்பரநளால் பிள்ளையார் தம் திருக்கையிற் கோலமழுவால் ஏறுண்டமையாம் என்று மேலே தொடர்ந்து கூறுவது காண்க.

நம்பரநளால்-இவ்வாறு இக்குற்றத் தீர்வு நம்பரருளாதலுக்குக் காரணம் இரண்டு வகையாலறிவித்தார். அவை : "மேதக்கவர் தம்பால் மேவும் பெருமை வெளிப்படுப் பான், அரவ மேவுஞ் சடைமுடையா ரருளா மென்ன" (1253) என்றதனால் எச்ச தத்தனுக்கு வந்த கோபம், விசாரசருமனுரது பெருமையினை உலகுக்கு வெளிப்படுத்து வதற்குத் திருவருளால் வந்தது என்பதொன்று ; "கோல் எடுத்தார்க்கு அதுவே முறை மையினால் வந்து மழுவாயிட" (1256) என்றதனால் அச்சிவாபராதத்தினைப் போக்க அருளினால் கோலே மழுவாயிற்று என்பதொன்று என்க.

நான்மறையின் சீலம் திகழும் சேய்ஞலூர் எனவும், சீலம் திகழும் பிள்ளையார் எனவும் உரைக்க நின்றது. திகழும் - ஊர் என்ற பொருள், மறையவர்பதி யாதலின் திகழ்தற் கிடமாகிய ஊர் என்றதாம்.

சேய்ஞலூர்ப் பிள்ளையார் - சேய்ஞலூரில் அவதரித்த சிவகுமாரர் என்க. மூத்த பிள்ளையார் என்று விநாயகப் பெருமானையும், இளைய பிள்ளையார் என்று முருகப் பெரு மானையும், ஆளுடைய பிள்ளையார் என்று திருஞானசம்பந்தப் பெருமானையும் சிவபெரு மானது பிள்ளைகளாகும் காரணத்தால் வழங்குதல் காண்க. "யாவர்க்குந் தந்தைதா யெனுமவரிப் படியளித்தா, ராவதனு லாளுடைய பிள்ளையா ராய்" (திருஞான - புரா - 69) என்று இச் சொற்பொருளை விரித்தமை காண்க. ஆர் - விகுதி சிறப் புணர்த்திற்று.

பிள்ளையார் என்றும், திருக்கை என்றும், கோலமழ என்றும் சிறப்பித்தது தீர்த் தற்கரிய சிவாபராதத்தையும் தீர்க்கத்தக்க திருவருட்குக் காரணமாய்நின்ற சிறப்பு உணர்த்தற்கு என்க.

ஏறுண்ணுதல் - எறியப்படுதல். ஏறுண்டு - ஏறுண்டதினால். ஏறுண்டு - நீங்கி என்க. உண்டு - பெற்று. ஏறு - எறிகை.

நீங்கி - எய்தப்பேற்றன் - நீங்கியதனால் - சேரும் பேறுபெற்றனன். ஏறுண்டதி னால் நீங்கினன் ; நீங்கியதனால் எய்தினன் என்று ஒன்றற்கொன்று காரணமாயிற்று. "தந்தைதா ளொடும் பிறவித்தா ளெறிந்து" (திருவிளை - புரா) என்றதும் காண்க.

சிவலோகம் எய்தப்பேற்றன் - தனது குற்றத்தினால் நரகலோகத்தில் நெடுங் காலம் கிடக்கவேண்டியவன் அதற்கு மாறாகச் சிவலோகத்தை யடையப்பெற்றனன் என்பது குறிப்பு. இவன் சிவனடியாரைப் பகைத்துச் சிவலோகமடைந்தவர்களுள் ஒருவன். திருத்தொண்டர்புராண வரலாறு (48) பார்க்க.

முதுமறையோன் - முதுமை வயதளவின்நின்றது. "மறைமுதியோன்" (1249) என்றவிடத்துரைத்தவை பார்க்க.

சுற்றழிடன் - இவர்கள் விசாரசருமனரின் தொடர்புகொண்ட புண்ணிய வீசே டத்தினால் சிவனுலகடைந்தவர்கள். "மூவேழ் சுற்ற முரணுறு நரகிடை, யாழாமே யரு ளாசே போற்றி" என்ற திருவாசகம் காண்க. "கோத்திரத்தி லிருபத்தோர் தலை முறைக்கு முத்திவரங் கொடுப்போ மென்னூர்" என்ற அருணைசலபுராணமும் பார்க்க.

பிள்ளை யார்தந் திருக்கையின் கோல மழுவா லேறுண்டு குற்ற நீங்கினானாயினும், மூலமுதல்வர் சிவலோக மெய்தப்பெற்றுச் சிவபெருமானது அங்கீகாரமும் பெற்றானாயினும், எங்கள் ஆசிரியர் பெருமானது திருவாக்கானது அடியார்க்குச் சொல்லும் சிறப்பினை வேறெவருக்கும் சொல்ல இடந்தராதென்பதனை அவன் சிவலோகமடைந்த இந்த இடத்தினும் "பெற்றான் முதுமறையோன்" என்று அவனை முன்போலவே ஒருமையிலும், நாயனாரைப் "பிள்ளையார் தம்திருக்கை" என்று சிறப்புப்பன்மையிலும் கூறியதனாலறிக. இதுபற்றி முன்னர் உரைத்தவையும் நினைவுகூர்க. 58

1264. வந்து மிகைசெய் தாதைதாண் மழுவாற் றுணித்த மறைச்சிறுவர்
அந்த வுடம்பு தன்னுடனே யரனார் மகனா ராயினார்;
இந்த நிலைமை யறிந்தாரார்? ஈறி லாதார் தமக்கன்பு
தந்த வடியார் செய்தனவே தவமா மன்றோ சாற்றுங்கால்? ௫௯

(இ - ள்) வெளிப்படை. வந்து தகாதகாரியம் செய்த தந்தையுடைய கால்களை மழுவினால் வெட்டி வீழ்த்திய மறைச்சிறுவர் அந்த உடம்புடனே சிவபெருமானாரது திருமகனாராக ஆயினார். யாவரே இந்த நிலைமையினை அறிந்தவர்கள்? சொல்லப்புகுவோமாகில் எஞ்ஞான்றும் ஈறில்லாதவராகிய சிவபெருமானுக்கு அன்பு தந்த அடியார்கள் செய்தவை எவையோ அவையே தவமாகுமன்றோ?

(வி - ரை) வந்து - "மைந்தனார் தாம் போயினபின் மறைந்து சென்று" (1249) எனவும், குராமரத்தின் மேலிருந்து கோபத்துடன் வந்து, எனவும் உரைக்க. வந்து - வந்தும் - நல்ல குலத்தில், நல்ல கோத்திரத்தில், நல்ல மரபில் வந்தும் என்று, உயர்வு சிறப்பும்மை தொக்கதாகக் கொண்டு, உரைப்பினும் பொருந்தும்.

மிகை - செய்யத்தகாத செயல். வரம்புகடந்த செய்கை.

அந்த உடம்பு - அந்த - இப்பூவுலகில் ஒரு பெயரும் உருவும் தாங்கி எச்சதத்தனுக்கு மகனாராகப் பிறந்து வளர்ந்து இதுகாறும் செயல்செய்த அந்த என முன்னறி சுட்டு. உடம்பு - "அங்கண் மாயை யாக்கை" (1260) என்றபடி மாயாஉடம்பு.

அந்த உடம்பு தன்னுடனே அரனார் மகனா ராயினார் என்றது மாயை உடம்பு அதன் தன்மை திரிந்து சிவமயமாய்ப் பொங்கி எழுந்து திருவருளின் மூழ்கிச் சிவவொளியில் தோன்றியதாதலின் அவ்வுடம்புடனே சிவனார் மகனாராவதற்கு ஏதுவாயிற்று. "ஊனுயிர் வேறுசெய்தான்", "யானையின்மேல் என்னுடல் காட்டுவித்தான்", "மானவ யாக்கையொடு" என்பன இத்தன்மையை விளக்குவனவாம்.

அறிந்தார்ஆர்? வினா ஒருவரும் அறியும் வலியிலர் என்பது குறித்தது. எவரும் பசுஞான பாசஞானங்களால் அறிய வலியிலர்.

அன்புதந்த - தம்மையும் தம்முடையவாகக் கொண்ட உயிர்ப்பொருள் உயிரில் பொருள் எல்லாவற்றையும் இறைவருக்குத் தந்த; அவருக்கு உடைமையாக ஒப்புக் கொடுத்த.

அடியார் - அடிமை செய்வோர். தம்மையே தந்து விட்டமையால் அடிமைகளாய்த் தம்வசமின்றி அவர் வசமேயாயினவர் என்று குறிக்க இங்கு அடியார் என்ற சொல்லாற் கூறினார்.

செய்தனவே தவமாம் அன்றோ? ஏகாரம், தவமென்று உலகில் விதிக்கப்படாதனவும் விதிக்கு மாறாயினவும் என்பதனைக் குறிப்பாலுணர்த்தி நின்றது. "செய்தனவே தவமாக்கும் அத்தன்" என்ற திருவாசகச் சொல்லும் பொருளும் ஆகிய ஆட்சி போற்றப்பட்டது காண்க. (திருத்தோணோக்கம் - 6.)

சாற்றுங்கால் தவமா மன்றே? என்க. சொல்லப்புகின் அடியார் செய்தனவே தவம்; தவம் என்பது வேறில்லை; தவமென்று நூல்களால் விதிக்கப்படாதனவும் அடிமைத்திற முணர்ப்பில் உறைத்து நின்று அடியார் செய்தனராகில் அவையே தவமாம் என்பது. "ஆருலகி லிதனுண்மை யறிந்துரைக்க விசைந்தெழுவார்" (1205) என்று தொடங்கிக் காட்டிய கருத்தையே இங்கு அனுபவத்தின் முடித்துக் காட்டிய திறமும் பண்பும் காண்க.

இவ்வுண்மையை "அரனடிக் கன்பர் செய்யும் பாவமு மறம தாகும், பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும், வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி, நரரினிற் பாலன் செய்த பாதக நன்மை யாய்த்தே" (2 - 29) என்றும், "அவனிவனுய் நின்றமுறை யேக ளுகி யரன்பணியி னின்றிடவு மகலுங் குற்றஞ்..... பரிவாற் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே" (10 - 1) என்றும் வரும் சிவஞானசித்தியார் திருவாக்குக்கள் விளக்குவனவாம். 59

குறிப்பு:—பாராயணஞ் செய்வோர் 1217 - 1221 - 1234 - 1243 - 1250 பாட்டுக்களில் நிறுத்தி வாசிக்கலாம்.

---

சரிதச் சுருக்கம்:—பொன்னியாறு எந்நாளும் பொய்யாது பாய்ந்து செழிப்புத் தரும் சோழநாட்டில், மண்ணியாற்றின் தென்கரையில், முன்னுள் கிரவுஞ்ச மலையையும் தாரகாசுரனையும் சங்கரித்துத் தாம் ஏந்திய வேலாயுதத்தின் தன்மையை வெளிப்படக் காட்டிப், பின்னுள் சூரபதுமனுதியோரைச் செயிக்க நின்றவராகிய முருகப் பெருமானரால், நிலைபெறும்படி உளதாக்கப்பட்ட காரணத்தால் சேய்ஞலூர் என்ற பேர்பெற்ற ஊர் மறையவர் விளங்கி வாழும் பதியாகும். அதில்வாழும் மறையவர்கள் வேதவாய்மை ஒழுக்கத்திற் சிறந்தவர்கள். மாணவர்களும் ஆசானும் கூடிய வேதம் பயிலிடங்கள் அங்கு விளங்குவன. வேள்விச் சாலைகளும் பல உள்ளன. அந்நகரத்தின் தெருவுகள் பொழுதுதொறும் பால் மடிசுரந்து செல்லும் பசுக்கூட்டங்களாலும், தாம் கற்ற வேதப்பகுதிகளைக் கணித்துக்கொண்டும் சமிதை கொண்டும் கூட்டமாகச் செல்லும் வேதம் பயில் மாணவர் கூட்டங்களாலும், அழகிய நீர்த்தடங்களில் மூழ்கிச் செல்லும் மறையவர்மகளிர்களாலும் பொலிவுற்றுவிளங்குவன. அந்நகரைச் சுற்றிலும் நெல் கழுகு முதலிய பயிர்கள் செழித்துள்ளன. தாமரைத் தடங்களும் அங்கு நிறைந்து காண உள்ளன. வழிக்கரைகளைக் காஞ்சிமரங்கள் நிழல் செய்வன.

நில்லையெல்லை யெல்லாம் பொன்மயமாக்கித் திருப்பணிசெய்த அபய குலோத்துங்க அநபாயச் சோழ அரசரின் முந்தையோர்களாகிய சோழ அரசமரபினர் முடிசூட்டிக் கொள்ளும் ஐந்து நகரங்களில் ஒன்றுகியது அவ்வூர். பண்ணுக்கு இசையும், பாலுக்குச் சுவையும், கண்ணுக்குப் பெருகு ஒளியும், கருத்துக்குத் திருவைத்தெழுத்தும், விண்ணுக்கு மழையும், வேதத்துக்குச் சைவமும் பயனுவனபோல, மண்ணுலகத்துக்குப் பயனுக விளங்கும் அந்தப் பதியின் பெருமை அளவுபடாததாகும்.

பெருமையுடைய அந்தப் பதியிலே மறையவர் மரபிலே இல்வாழ்க்கையிற் சிறந்த காசிபகோத்திரத்திலே தலைமைபெற்ற குடியிலே, அரதனமும் நஞ்சும் ஒருங்கே அளிக்கும் அரவுபோல, நல்வினை தீவினையிரண்டற்கும் ஒருருவாகிய எச்சதத்தன் என்ற மறையவன் ஒருவன் உளனுனன். அவனுடைய திருமனைவி ஏற்ற நற்குடியிற் பிறந்தவள்; சுற்றந்தழுவும் சிறப்புடைய இல்வாழ்க்கைத் தொழிலுடையவள்; தூணைப் புதல்வற் பெற்று விளங்கும் தவமுடையவள்; உலகப்பற்றை யெறியும் இறைவன் பற்று வருதற்குச் சார்பாயுள்ளவள்; அவள் பெயர் பவித்திரை என்பதாம். நன்மை

செய்யும் இவர்கள்பால், வேதநெறி விளங்கவும் வேதியர்குலம் பெருகவும், ஏழுலகங்களும் உய்யவும், சிவபெருமானது சைவ உண்மை வளரவும், மாதவர்களுடைய வெற்றி உலகில் விளக்கமுறவும் விசாரசருமனார் என்ற பெயரால் விளங்குமவர் வந்து உதயமாயினர்.

அவருக்கு ஐந்து வயது அணைந்தபோது, முன்னைப் பிறப்பின் அறிவு தொடர்ந்து வருதலாலே, முகையாய் விரியும் மலரில் மணம் வருவதுபோல், ஆறங்கமுடனே நிறைந்த வேதங்களுட்பட முன்னே சிவபிரான் மொழிந்தருளிய ஆகமங்களின் அறிவு அவரது மனத்தினுட் சிறந்து விளங்கிற்று. அவர்க்கு ஏழுவயதாகிய அளவிலே அவருடைய பெற்றோர்கள் தமது மரபின் வழக்கின்படியே உபநயனம் என்ற சடங்கினையும் செய்வித்துக் கலைபயிலும் செய்கையினையும் செய்வித்தனர். ஆசிரியர் சொல்வதன் முன்னே வேதாகமங்களையும் பல கலைகளையும் தம்மனத்துக் கொண்ட அவரது அறிவின் திறத்தினைக் கண்டு, கற்பிக்கும் மறையோர்கள் அதிசயித்தார்கள். அளவில்லாத கலைகளின் பொருள்களுக்கெல்லாம் எல்லையாய் உள்ளது தில்லைத் திருவம்பலத்தில் அருட்கூத்தியற்றும் திருவடியேயாகும் என்று அந்தச் சிறிய பெருந்தகையார் தெளிந்தனர்; தெளியவே, அதனால் அருட்கூத்தரே நம்மை ஆளுடைய தலைவராவார் என்ற உண்மை எப்பொழுதும் அவரது சிந்தையில் ஊற்றெடுத்து வருவதாயிற்று; வரவே, அன்பினால் உளதாகும் திருத்தொண்டின் கடமையே இயல்பாய் எழுகின்ற முயற்சியாய் அவரது கருத்தினுள் அம்முயற்சியிற் காதல் மேன்மேல் எழுந்தது; அவ்வுறுதிப்பாட்டில் நேர் நின்று உறைத்து அவர் விளங்கிவருவாராயினர்.

அந்நாள்களில் ஒருநாள் வேதம் பயிலும் மாணவர் கூட்டத்துடன் விசாரசருமனார் ஊர் ஆனிரையினுடன் போகும்போது ஈன்றணியதொரு பசு தன்னை மேய்க்கும் ஆயனைக் கொம்பினால் முட்டப்போயிற்று. அவன் ஒருசிறிதும் கூசாமல் தன்கையிற் கொண்ட கோலினால் அப்பசுவினைப் புடைக்கப், பசுவின்மேல்வைத்த மிக்க அன்பினால் அவனைக் கோபித்து மேற்சென்று, விசாரசருமனார் விலக்கினார். எல்லாக் கலைகளும் வேதங்களும் ஆகமநூல்களும் கூடிய தொகுதியினால் பொருளின்நிலை நிச்சயித்து உண்மை உணர்ந்துகொண்ட தமது திருவுள்ளத்தாலே பசுக்களின் பெருமையினை அறிந்துகொண்டவராய், அவர் ஆயனை நோக்கி அருள் செய்வாராகி, "ஆனினங்கள் எல்லாயோனிபேதங்களிலும் சிறந்தன; தூயதீர்த்தங்கள் எல்லாம் என்றும் பொருந்தப்பெற்றன; தேவர் முனிவர் கடவுளர் கூட்டங்கள் சூழ்ந்து பிரியாத அங்கமுடையன; அச்சிறப்பினாலே ஈன்றவன்றே சிவபெருமான் விரும்பியாடுதற்குப் பஞ்சகவ்வியம் தரும் உரிமையுடையன; மேலும் சிவன் சாத்தும் திருநீற்றினைத்தரும் மூலமாகிய கோமயம் அவதாரம்செய்யும் இடமாவன; அன்றியும் இவை சிவபிரானும் உமையம்மையாரும் சேர எழுந்தருளும் விடைத்தேவரின் குலத்தைச் சேர்ந்தன" என்று இன்னபலவும் நினைந்தனர்; "இத்தகைய பசுக்களைக் காத்தலே சிறந்தகடன்; இதுவே சிவன் சேவடிகளை வழிபடும் நெறியுமாகும்" என்று துணிந்தனர்; ஆயனை நோக்கி "நீ ஆன்நிரை மேய்க்குந்தொழிலை ஒழிக; நானே இனி மேய்ப்பேன்" என்றார். அவனும் அஞ்சி, வணங்கிப் போய்விட்டான்.

மறையோர்களின் இசைவும் பெற்றவராய்ப் பசும்பயிருக்கு மழைவருதல்போல் விசாரசருமனார் ஆனிரை மேய்க்க வந்தனர். கோலும் கயிறும்கொண்டு, பிரமசரிய வேடங்களுடன் வரும் அவர், பாலும் பயனும் பெருகவருகின்ற பசுக்களை மேய்க்கின்ற பண்பினாலே மிகவும் புல்உள்ள இடங்களில் அவை வேண்டுமளவும் உண்ணும்படி உடன்சென்று, புல்மிகும் காலங்களில் மேய்த்தும் கையாற் பறித்துக் கொடுத்தும் அவற்றின் பசியைப்போக்கி, இதமாகிய நீர்உண்ணும் துறையில் நல்லதண்ணீரை

ஊட்டி, அவற்றுக்கு நேரும் பயங்கள் வாராமற்காத்து, நல்ல வழிகளிற்செலுத்தி, நிழலில் அமர்வித்துப் பால்தரும் வேளையில் தவறாது உடையவர் மனைகள் தோறும் கொண்டு செலுத்தி வந்தனர். மண்ணியாற்றின் கரையில் வளர்கின்ற முல்லைப் புறவின் பக்கத்திலும், படுகரின் பக்கத்திலும், சோலைகளைச்சார்ந்த கரைகளின் பக்கத்திலும் ஆனிரைகளை இவ்வாறு மேய்த்துச், சமிதையும் அரணியும்கொண்டு, இரவுபடுமுன் விசாரசருமனார் ஊரிற்சேர்ந்த நன்னுள்கள் பலவாகும். இப்படிக் காப்பாற்றப்பட்ட அதனுல் ஆனிரைகளெல்லாம் அழகுடன் விளங்கிப் பெருகித், தமது மனங்கொண்ட பெருமகிழ்ச்சியினுல் இருபோதும் தூய இனிய பால் மடிபெருகிச் சொரிய முலைகள் சுரந்தன. ஆனிரைகள் முன்னையினும் அனேகமடங்கு கறப்பனவாயின. அதுகண்டு " இப் பிரமசாரி மேய்த்ததற்பின் ஒமதேனுக்கள் மாண்புடையனவாயின " என்று மறையோர்கள் எல்லாரும் மனமகிழ்ந்தனர். பசுக்கள் எல்லாவகையாலும் கொண்ட மகிழ்ச்சி அளவின்றிப் பெருகியதனுல் மனையில் உள்ள தமது கன்றுகளைப் பிரிந்தபோதிலும் தம்முடன் வரும் சிறிய மறைக்கன்றுகிய விசாரசருமரைக்கண்டு அவர் பக்கத்திற் சென்று உருகித், தாய்போலக் கனைத்து மடிசுரந்து கறவாமே முலைகளின்றும் பால் பொழிந்தன. அதனைக்கண்ட விசாரசருமனாரது செம்மை நெறியே செல்லும் மனமானது அந்தப்பால் சிவபிரானுக்குத் திருமஞ்சனமாகும் குறிப்பினை உணர்ந்தது; உணரவே, அவர் அதனை மேலும் நினைந்து தெளிந்து, சிவனுர் பூசைசெய்யும் ஆசை மிகப் பெற்றனர்; பெறவே, முன் பிறப்பிற் செய்த அர்ச்சனையின் தொடர்ச்சியே விளையாட்டாக நிகழ்ந்து அன்பு பொங்கியது; பொங்கவே, அவர் மண்ணியாற்றின் மணற்றிடரில் ஆத்திமரத்தினடியில் சிவபெருமானது திருமேனியாகிய இலிங்கக்குறியினை மணலாற் செய்து சிவாலயமும் கோபுரமும் சுற்றாலயமும் வகுத்தனர். ஆத்திமலரும் செழுந்தளிரும் முதலாக அருகில் முல்லைப்புறவில் தேடிச் சிவனுக்குச் சாத்தலாகும் திருப்பள்ளித்தாமம் கொய்து இலைகோத்த பூங்கூடையிற் கொணர்ந்து மணந்தங்கிட வைத்தனர். நல்ல நவகும்பங்களைக்கொண்டு பசுக்கள் மேயும் இடங்களிற் சென்று பாற் பசுக்கள் ஒன்றுக் கொருகாலாக முலைதீண்டவே அவை கனைத்துப் பால் பொழிந்தன. அந்தப் பாற்குடங்களைக் கொணர்ந்து வெண்மணலாலயத்தில் தாபித்தனர். முன்னை வழியின்வரும் அன்பின் நெடுர்பாலே அருச்சித்துப் பாலின்றிருமஞ்சனமாட்டினர். அவரது அன்பினுள்ளே நிறைந்து அவர் குறித்த பூசையினை ஆருடையாரும் அமர்ந்து கொள்கின்றாராயினர். இவ்வாறு செய்யும் ஒருமை நினைவுகொண்ட பூசையில் பூசைக்குரிய உறுப்புக்களான திருவமுது புகை சாந்தம் விளக்கு முதலானவற்றில் தாம் தேடிக்கொள்ளாதனவற்றை அன்பினுலே நிறைவு செய்துகொண்டு முறையால் வரும் அந்நெறியிலே அருச்சித்து வணங்கி விசாரசருமனார் மகிழ்கின்றாராயினர். இவ்வாறு அவரது பூசனைக்குக் குடங்கள் நிறையப் பால்சொரிந்தும், ஆனினங்கள் பால் குறைவில்லாமல் மறையோர் மனைகளிலும் முன்பு தரும் வளங்கள் சிறக்க நிகழ்ந்தன.

இவ்வாறே பல நாளும் பூசையே திருவினையாட்டாக இயல்பில் விசாரசருமனார் செய்யும் இதனைக் கண்டும், இதன் திறத்தினை அறியாத அயல் மற்றொருவன் இதனை அவ்வூர் மறையவர்களுக்கு அறிவித்தான். அது கேட்ட சபையிலிருந்த மறையோர் " எம்பசுக்களை இச்சையறிந்து மேய்ப்பேன் என்று கொண்டு சென்று வஞ்சனையாய் ஒழுகும் மாணவகனின் பொல்லாங்கினைச் சொல்வதற்கு அவனுடைய தந்தையை அழைமின் " என்றார்கள். அவ்வாறே அழைக்கப்பட்டு எச்சதத்தனும் வந்தனன். அவனிடம் மறையோர் தாம்கேட்ட செய்தியைக் கூறினர். அவன் பயந்து " சிறு மாணவகன் செய்த இதனைச் சிறிதும் நான் முன்பு அறிந்திலேன்; இதன்முன் நிகழ்ந்த

தனை நீங்கள் பொறுத்தல் வேண்டும். இனிப் புகுதிற் குற்றம் எனதேயாம்" என்று குறையிரந்து விடைப்பெற்றுச் சென்று, பழியொன்று வந்ததே எனக் கவன்று, அதனை மகனாரிடம் சொல்லாதவனாய், "இந்த நிலைமையினை நானே நேரில் அறிவேன்" என்றுட்கொண்டு, அவ்விரவு கழிந்த பிற்றைநாள் விசாரசருமனார் ஆனிரை மேய்க்கப் போயினபின் அவர் பின்பு மறைந்து சென்றனன். மகனார் ஆனிரைகளை மண்ணி மணற்குறையில் மேய்ப்பதற்குச் சேர்த்துக் கொண்டு போனதை அறிந்து அருகே நின்றதொரு குராமரத்தின்மேல் ஏறி நிகழ்வதனை அறிவதற்காக அவன் ஒளித்திருந்தான். அன்பு புரிகின்ற பிரமசாரிகளும் நீரின் முழுகிச், சிவனாருக்கு முன்போல மணற்கோயில் செய்து, திருப்பள்ளித்தாமங் கொய்து, ஆன் முலைப்பாற் குடங்களையும் உரிய இடத்திற் கொண்டுவந்து தாபித்து, வேண்டுவனவாகிய பிறவற்றையும் அமைத்துக்கொண்டனர். விதியின் நின்ற விளையாட்டினால் தமது அரிய பூசனையைத் தொடங்கி ஒன்றுபட்ட மனத்தோடு ஆளுடைய நாதனார் திருமுடியின்மேல் மலர்சாத்திப் பாற்குடங்களையும் எடுத்து அன்புடன் திருமஞ்சனம் ஆட்டினார். அதனைக் கண்டவுடன் மேன்மையுடைய விசாரசருமனாரது பெருமையை வெளிப்படுத்துவதற்குச் சிவபெருமான் மேற்கொண்ட திருவருளே என்று சொல்லும்படி குராமரத்தின்மேலிருந்த மறையோன் கோபம் மிகுந்தனன். உடனே இறங்கிவந்து விரைந்துசென்று கையிலிருந்த கோலினால் மகனாரது திருமுதுகிற் புடைத்துக் கொடியமொழிகளையும் சொன்னான். தொண்டுபுரிகின்ற அத்தோன்றலார் செறிந்த ஆசையினைப் பூசையில் வைத்தாராதலின் வேறொன்றனையும் அறிந்திலர். அவன் பலகாலுமடிக்கவும் அவர் வேறொன்றினையும் அறியாராகிப் பாலினாற் றிருமஞ்சனம் ஆட்டுகின்ற திருப்பணியினிற் சலியாதவராய் நிற்கவே, கையாற் கடைமைத் தலைநின்ற அவன் திருமஞ்சனப் பாற்குடத்தைக் காலினால் இடறிச் சிந்தினான். சிந்தினஉடனே ஓரிறையில் அத்தீயோனைத் தந்தையெனவே அறிந்து, அவனது கால்கள் திருமஞ்சனப் பாற்குடத்தைச் சிந்தும் தகுதியினால் அவற்றைத் தண்டிப்பதற்காக அவர் முன்னேகிடந்த கோலை எடுத்தனர். அதுவே முறைமையினால் அவர் கையில்வந்ததும் மழுவாக மாறிற்று. சிவபூசையில் நேர்ந்த இடையூற்றினைப் போக்கும் சிவன்படைக்கலமாக அதனையேகொண்டு தாதையின் இரண்டு தாள்களையும் அவர் துணித்தனர். மறையோனும் மண்மேல் விழுந்தனன். இவ்வாறு பூசையில் வந்த இடையூற்றினைப் போக்கி முன்போல் அருச்சித்திடப் புகுந்தனர்.

சிவபெருமான் உமாதேவியாருடன் விடையின்மேல்ஏறிப், பூதகணங்களும் தேவர்களும் முனிவர்களும் புடைசூழ, எழுந்தருளி முன்னேவந்து காட்சி கொடுத்தனர். அவரது பாதங்களில் பத்திமுதிர்ந்த பாலகனார் விழுந்தனர். அவரை எடுத்து, நோக்கி, "உன்னை ஈன்ற தாதையை எம்பொருட்டாக வெட்டினை! இனி நாமே உனக்கு அடுத்த தாதை" என்று அருளி, அணைத்து, உச்சிமோந்து, மகிழ்ந்துகொண்டருளினர். சிவபெருமானது திருமலர்க்கையினால் தீண்டப்பெற்ற சிறுவனார் அங்கண் மாயையாக் கையின்மேல் சிவமயமாகப் பொங்கிய திருவருளின் மூழ்கிச் சிவவொளியிலே விளங்கித் தோன்றினார். அவரை இறைவனார் தமது தொண்டர்க்கெல்லாம் தலைவவராக ஆக்கி, "நாம் உண்ட பரிகலமும் உடுப்பவையும் சூடுபவையும் உனக்கே உரிமையாகும்படி சண்டீசன் என்னும் பதவியைத் தந்தோம்" என்று அருளிச் செய்து, அதற்கடையாளமாக அவருடைய திருமுடிக்குத் தமது சடைமுடியிற் சூடிய கொன்றை மாலையை எடுத்துச் சூட்டியருளினர். அவரும் தேவர்கள் மலர்மாரி பொழிய, வேதங்கள் துதிசெய்ய, உலகமெல்லாம் ஆரவாரிக்கக், கணநாதர்கள் களிப்படைந்து பாடியாட, தேவதுந்துபிகள் முழங்கச், சைவநன்னெறி ஓங்கச், சிவபெருமானைக் கும்பிட்டுக்கொண்டு, தமது பதவியில் அணைந்தனர்.

அவரது தந்தையாகிய எச்சதத்தன் உலகமறியப் பிழைபுரிந்தும், இறைவருடைய திருவருளினாலே சேய்ஞலூர்ப்பிள்ளையாருடைய திருக்கையில்வந்த அழகிய மழுவினாற் றண்டிக்கப்பட்டமையால் குற்றம் நீங்கினவனாகிச் சுற்றத்தாருடன் முதல்வனருடைய சிவலோகத்தையடைந்தனன். மறைச் சிறுவனார் அந்த உடம்புடனே சிவனார் திரு மகனாராக ஆயினர். இந்த நிலைமையினை அறிந்தவர் யாவர்? சிவனருக்கு அன்பு செய்து தம்மை ஆளாக ஒப்புவித்த அடியார்கள் செய்தன எவையோ அவையே தவமாகுமன்றே?

---

தலவிசேடம் :—1. சேய்ஞலூர் - சூரசங்காரத்தின் பொருட்டுக் கயிலைத்திருமலையினின்றும் தேவசேனைகளுடன் எழுந்தருளிவரும் முருகப்பெருமான், வழியில், தாரகாசுரனைச் சங்கரித்துக் கிரவுஞ்சமலையையும் பிளந்து போந்து, மண்ணியாற்றின் தென் கரையில் ஊர் உளதாக்கிச் சிவபூசை செய்துகாட்டியருளிய தலம். இது புராண முதற் பாட்டில் உரைக்கப்பட்டது. இங்குச் சண்டீசநாயனார் திருவருள்பெற்ற வரலாறு புராணத்தினுட் காண்க. இவ்வரலாறுகள் இரண்டினையும் ஆளுடையபிள்ளையார் இத் தலத்தேவாரப் பதிகத்தினுள் "சேயடைந்த சேய்ஞலூர்" (11) - "பீரடைந்த பாலதாட்ட"(7) என்ற திருப்பாசுரங்களில் வைத்துப் பாடியருளினர். ஆளுடையபிள்ளையார் இத்தலத்தை அடைந்தருளியபோது சண்டேசநாயனார் அவதரித்த திருத்தலமாதலின் முத்துச்சிவிகையினின்றும் இறங்கி நடந்துபோய் வழிபட்டருளினர். சுவாமி - சத்திகிரீசுவரர். அம்மையார் - சகிதேவியார். தீர்த்தம் - மண்ணியாறு. பதிகம் 1. திருஆப்பாடிக்குத் தெற்கே ½ நாழியளவில் அடையத்தக்கது.

2. திருஆப்பாடி - இத்தலம் சண்டீசநாயனார் ஆனிரைகளை மேய்த்து மண்ணியாற்றின் கரையில் மணற்றிடரில் ஆத்தியின்கீழ் மணலாற் சிவலிங்கமாக்கித் தாபித்து மணற்கோயிலமைத்துப் பசுவின் பாலினாற் றிருமஞ்சனமாட்டிச் சிவபூசை செய்து பதம்பெற்ற இடம்.

சுவாமி - பாலுகந்தநாதர். அம்மையார் - பெரிய நாயகி. தீர்த்தம்-மண்ணியாறு. மரம் - ஆத்தி. பதிகம் 1.

ஆடுதுறை (S. I. R.) நிலையத்திலிருந்து வடக்கே கற்சாலை வழி, ஏழு நாழிகையளவில் உள்ள திருப்பனந்தாளை அடைந்து, அங்கு நின்றும் மேற்கே மட்சாலைவழி 1½ நாழிகை அளவில் அடையத்தக்கது.

---

கற்பனை :—1. தெய்வங்களால் உளதாக்கப்பட்டு நிகழ்தல் ஒரு நகரத்துக்குச் சிறப்புத் தருவதாம். முருகப்பெருமானால் உளதாக்கப்பட்டது சேய்ஞலூரின் பெருஞ் சிறப்பினைக் காட்டுவதாம்.

2. நல்லொழுக்கமிக்க மறையவர்கள்குடி நிரம்பி நிகழ்வது ஒரு பதியின் சிறப்பினைக் காட்டுவது.

3. மறையவர் பதிகளின் புறத்தே மறைச்சிறுவர் வேதம் பயிலும் மடங்களும் வேள்விச் சாலைகளும் அமைக்கப்பட்டு விளங்குவது நல்ல நகர அமைப்பின் இயல்பு.

4. பசுக்களும் நல்ல மாணவர்களும் நன்மகளிர்களும் பயிலும் பான்மையுடைமையினால் தெருக்கள் விளக்கம் பெறுவன.

5. தொன்மை அரசமரபினர் பழங்கால முதல் முடிசூட்டிக் கொள்ளும் இடமாக இருத்தல் ஒருபதியின் சிறப்பினைக் காட்டுவதாம்.

6. பண்ணுக்குப் பயன் நல்ல இசை; பாலுக்குப்பயன் இனிய சுவை; கண்ணுக்குப் பயன் பெருகு ஒளி; கருத்துப் பெற்ற பயன் தீநுவைந்தெழுத்தை கணித்

தல்; விண்ணுக்குப்பயன் மழைபொழிதல்; வேதப்பயன் சைவம்; இவ்வாறு மண்ணுலகு பெற்ற பயனாய் விளங்கும் ஒரு பதிஉளதாயின் அது திருச்சேய்ஞலூராகும்.

7. விசாரசருமனாரைப் பெற்ற நல்வினையும், அவர் செய்த மன ஒருமையானிகழ்ந்த சிவபூசையைச் சிதறிய சிவாபராதமும், என்ற இரண்டற்கும் ஒருங்கே இடமாய் நின்ற எச்சதத்தினைப்போல நல்வினை தீவினைகளாகிய இருமை வினைக்கும் ஒருருவாகும் மக்களும் உளர்.

8. இல்வாழ்க்கையில் மனைவியாரது பெருங்கடமை சுற்றந் தழுவுவதாகும். தினைப் புதல்வரைப்பெற்று விளங்குதல் மனையின் மாட்சி என்ப. இல்வாழ்வினின்றே உலகப் பற்றை எறியும் இறைவன்பற்று வரச் சார்பாய் உள்ளது மனைத்தக்காளது மாண்பாகும்.

9. ஐந்துவயதளவில் ஒருவற்கு உணர்வு தொடங்கும்; அவ்வாறு தொடங்கும் உணர்வானது முன்சென்ம வாசனையோடு முகைத்தமலரின் மணம் வெளிப்படுவது போல வெளிப்பட்டுச் சிந்தைமலர உடன்மலர்ந்துகொண்டேவரும். முன்னைப்பிறவியிற் பெற்று முதிர்ந்த நல்லுணர்வு இப்பிறவியிற் றொடர்ந்துவரும். அவ்வாறே முன்பிறவியிற் சேர்த்த தீயுணர்வும் இங்குவந்து முற்றுவதும் விதியாம்.

10. ஏழுவயதளவில் உபநயனம் செய்வித்தலும் வேதமுதலாகிய கலைகள் பயில்வித்தலும் மறையவர் சிறுவர்க்குச் செய்யத்தக்க சடங்குகள்.

11. ஆசிரியர்கள் சொல்லுவதற்குமுன் சிலமாணவர்கள் கலைஞானங்களை அறிந்துணர்ந்து கொள்வது முன்பிறப்பின் முதிர்ந்த வாசனையுணர்வினாலாகும்.

12. இவ்வாறு முன்பிறப்பின் வாசனையறிவுடன் வந்த பெரியோர் எல்லாக் கலைகளுக்கும் எல்லையாயுள்ளது கூத்தப்பெருமானது திருவடியேயாம் என்று விரைவிற் றெளிந்து அவ்வழித்தாய்வரும் அன்பின் பெருக்கினால் சிவபூசைசெய்யும் கடமையே தமது இயல்பாக அதில் ஆசை மிகப்பெற்று அந்நெறியில் ஒழுகுவர்.

13. பசுக்களைப்புடைத்தல், அச்சுறுத்துதல், முதலியவை செய்வது பெரும் பாவங்களாம். இவ்வாறு யாரேனும் செய்யக்கண்டால் இரங்கி வெகுண்டு மேற்சென்று விலக்கி அவர்களுக்கு நல்லறிவு கொளுத்துதல் வேண்டும்.

14. பசுக்களின் பெருமைகளை வேதங்களும் ஆகமங்களும் முதலிய எல்லாம் ஒன்றுபோலவே எடுத்துக்கூறுவன.

15. உலகப்படைப்பில் காணும் எல்லா யோனிபேதங்களுள்ளும் பசுக்கள் சிறந்தன; புனிததீர்த்தங்கள் எல்லாம் என்றும் அவற்றினிடத்திற் பொருந்துவன; தேவர்கள் முனிவர்கள் முதலியோர் அவற்றின் அங்கங்களிற்சூழ்ந்து பிரியாது இருப்பர்; சிவன் விரும்பியாடும் திருமஞ்சனமாகிய ஆனந்தினையும் அளிக்கும் உரிமையுடையன இப்பசுக் கூட்டங்கள்; சிவபெருமான் அணியும் திருநீற்றைத்தரும் மூலமாகிய கோமயம் இப்பசுக்களிடமிருந்து வருகின்றது; மேலும் இவை இறைவனார் உமையம்மையாருடன் ஒருசேர மேல்கொண்டு எழுந்தருளி வரும் ஊர்தியாகிய விடைத்தேவர் குலத்தைச் சேர்ந்தவை - இவை முதலிய காரணங்களால் பசுக்கள் மிகவும் பெருமையும் தூய்மையும் உடையன.

16. பசுக்கூட்டங்களை இதமாக மேய்த்துக் காத்தல் கடமையாகும். அதுவே சிவனேவழிபடும் நெறியுமாகும்.

17. பசுக்களை அன்போடு கொண்டு சென்று மிகவும் புல்உள்ள இடங்களில் மேய்த்தல்வேண்டும். நல்லபுல்லை வயிறு நிறைய மேயச்செய்தலும், மேய்க்கமுடியாத போது கையாற்பறித்து அளித்தலும், நல்ல தூயதண்ணீர் இருக்கும் துறைகளில்

அவற்றை நீரூட்டலும் வேண்டும். ஆற்றின் கரைப்பக்கமும், படுகரின் பக்கங்களும், சோலைகளை அடுத்த கரைகளைச்சார்ந்த இடங்களும் பசுக்களை மேய்ப்பதற்கு உரிய இடங்களாம். பயிரிட்ட நிலங்களிலும் தூய்மையில்லாத இடங்களிலும் இடர்கள் உள்ள இடங்களிலும் பசுக்களை மேய்த்தலாகாது.

18. நல்ல புல்லும் நீரும் வயிறுநிறைய உண்ணுமாறு கிடைக்கச்செய்து அன் போடு காக்கப்பட்டால் ஆனிரைகள் மனமகிழ்ச்சி யடைந்து முன்னையினும் அனேக மடங்கு பால் சுரப்பனவாகும்.

19. கன்றினிடத்து அன்புமிகும்போது பசுக்கள் கறவாமலே மடிபெருகிப் பால் சொரிவன. அதுவேயுமன்றித் தம்மிடம் மிக்க அன்புகொண்டு காக்கும் அவரைக் கண்டபோதும் அவை தாயாம் தன்மைகொண்டு உருகிக் கனைத்து முலைசுரந்து கறவாமே பால் சொரிதலுமுண்டு. இதனால் அவை வழக்கமாய்த்தரும் பாலின் அளவு குறைவுபடாது நிகழும்.

20. பசு பாலினைச் சொரியக்கண்டால் பலருக்கும் பலவாறு தோன்ற, அது இறைவனுரது திருமஞ்சனமாதற்குரியது என்ற குறிப்பு மனத்துள் தோன்றிப் பூசை செய்யும் விருப்பு எழப்பெறுவது ஒருவற்கு முன்னைப்பிறவியின் வாசனையால் உண் டாவதாம்.

21. முன்னைத் தவத்தின் தொடர்ச்சி யுணர்வுடையார்க்கு ஆற்றின் கரையில் மரத்தினடியில் மணலாற் சிவலிங்கமும் சிவாலயமும் வகுத்து ஒருமையான் மெய்யன் போடு இறைவனுர் உவந்துகொள்ளும்படி பூசை செய்தலும் ஆகும்; புறவில் தாமரைப் பூத்த ஆத்தி முதலாகிய மலர் இலை முதலியவைகளையும், அங்குத் தேடிக் கொள்வனவாகிய பிற சாதனங்களையுமே அவர் தமது அரிய பூசைக்குப் பயன்படுத்திக் கொள்வதும், தேடாதனவற்றை அன்பினுல் நிரப்பிக்கொள்வதும் இயல்பு.

22. இவ்வாறு ஒருமை நினைவால் குறித்துச் செய்யும் பூசையினுள்ளே நிறைந்து இறைவனுர் மகிழ்ச்சி கொள்வார்; பூசிக்கும் அவர்களும் அந்நெறியில் பூசித்து வணங்கி மகிழ்வர்.

23. சிறுவர் செய்யும் பிழைகளுக்குப் பெற்றோரைப் பொறுப்பாகக் கொள்வது உலகநிலை யியல்பு.

24. உலக நிலையில் தகாதெனப்படும் ஒரு நிகழ்ச்சியைக் கண்டவுடனே அதன் உண்மையை ஆராய்ந்தறியும் விதியின்றிச் சினம் மூளுதல் சிற்றுணர்வுடையோர் செயல். அறிவழியப் பெற்றோர்களே கோபத்தால் மீதூரப்படுவோர்.

25. சிவபூசையில் ஒருமை மனம் வைத்து நிகழ்வோர் தம்மை வேறொருவன் புடைத்தாலும் கொடுமொழி கூறினுலும் அறியமாட்டார்கள். அவர்களுடைய ஐம் பொறிகளும் தாம் மனம் வைத்த பூசையிலே செல்வன அன்றிப் புறவிடயங்களை அறியமாட்டா. இதற்குக் காரணம் அவர்களது மனம் அவற்றினுட் கலந்து புற விடயங்களை நுகரவாராமையேயாகும். ஆனுல் அவர்கள் மனம் வைத்த பூசைக்கு இடையூறு வந்த போது மனம் அந்தப் பொறிகளின் வழியே சென்று அந்த இடை யூற்றை அறிந்து விலக்கி முன்போலப் பூசை செய்ய வல்லராதலும் அவரியல்பு.

26. தந்தை தாய் தாரம் மகவு என்ற உலகப்பற்றுக்களை அறவே துணித்து இறைவர்பால் ஒன்றித்த மனம் வைத்தபோது இறைவனுர் வெளிப்பட்டு அருளுவர்.

27. அடியார்கள் கையால் திருவருளின்வழியே தண்டிக்கப்பட்டபோது சிவா புராதமும் நீங்கப்பெற்றுச் சிவலோகமும் கிடைப்பது இயல்பாகும்.

28. இறைவனாரிடத்து அன்புவைத்துத் தம்மையே ஒப்புவித்த அடியார் செய்தவனே தவமாவன.

29. சிவபெருமான் வெளிப்பட்டருளப்பெற்றுத் திருக்கரத்தினாற் றீண்டப் பெறும் பேறுடையார்களது மாயை யாக்கையே சிவமயமான யாக்கையாக மாறிச் சிவ வொளியில் விளங்கும்.

30. ஒரு சிவனடியார் ஒரு குலத்தில் விளங்குவாராகில், அவரால் அக்குலத் தவரும் திருந்தப்பெற்றுச் சிவனருள் பெறுவர்.

31. மனிதப்பிறவி உயிர்களுக்குத் தரப்படுவது சிவனை விதிப்படிபூசித்து முத்தி பெறுதற்கேயாம். மனிதப்பிறவி கிடைத்தற்கரியது. இம்மனித உடல் உள்ள பொழுதே சிவனை வழிபட்டுப் பூசித்து வீடு பெற முயலுதல் எல்லாருக்கும் கடமை யாகும். அறிவுடையோர் இவ்வாறு முயல்வர். இதனை அறியாமல் வீணே காலம் கழித்தலின் மிக்க அறியாமையில்லை. "ஊனெடுத் துழலு மூம ரொன்றையு முணரா ரந்தோ!", "இறப்பொடு பிறப்பி னுக்கே யினியராய்", "பெயர்த்தும் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே", "அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா ஊரு மவையெல்லா மூரல்ல வடவி காடே" என்பனவாதி திருவாக்குக்கள் அவர்களை நோக்கி எழுந்தன.

32. சிவபெருமானே நம்மை ஆளுடைய முழுமுதற்கடவுள் என்று உணர்ந்து அவர்பால் அன்பு கரைகடந்து பெருக, அந்த அன்பினாலே இன்பம் பெருக, யாதொரு பயனுங் கருதாது தம்மை மறந்த நிலையில் நின்று, சிவாகமங்களில் விதித்த படி சிவபூசை செய்தல் முறை. சிவபூசையின் முடிவில் விதிப்படி சண்டே சுர பூசையும் செய்யப்படுதல் வேண்டும். சிவபெருமான் உண்ட அமுதும் மாலை ஆடை முதலியனவும் சண்டீசுரர் ஏற்றுச் சிவபூசையின் பயனை அளிப்பர். சண்டீசு வரபூசை செய்யப்படாவிடிற் சிவபூசைப் பயனை மக்கள் அடையார் என்பது துணிபு.

33. லிங்க என்பது சித்திரித்தல் எனப் பொருள்படும். படைத்தல் முதலிய தொழில்களால் உலகத்தைச் சித்திரிப்பதனால் சிவனது அந்தப் பெருமையே சிவலிங் கம் எனப்படும். கல், மண், படிகம், உலோகம் முதலியவற்றால் ஆக்கப்பட்டுச் சிவனது அந்தப் பெருமை வெளிப்படுதற்கு ஆதாரமாயுள்ள சிவக்குறிகளும் உபசாரத்தால் சிவலிங்கம் என வழங்கப்படும். படைத்தல் முதலிய ஐம்பெருந் தொழில்களை அதிட் டித்து நிற்கும் சத்தியே சிவனுக்கு வித்தியாதேகம் எனப்படும். மூலமலம் இல்லாமை யால் சிவனுக்கு வைந்தவ முதலிய உடம்பு இல்லை; சத்தியே சரீரமாகும். ஐந்தொழிலுக் கும் உரிய ஈசானம் முதலிய ஐந்து மந்திரங்களாலே தலைமுதலியனவாக அந்தத் திரு வுடம்பு கற்பிக்கப்படும். "ஒருநாம மோருருவ மொன்று மில்லா" தவராகிய சிவன், உயிர் கள் தம்மை கண்டு வழிபட் டுய்யவேண்டுமென்ற கருணைப் பெருக்கினாலே சத்தி காரியமாகக் கற்பிக்கப்பட்ட அந்தத் திருவுடம்பினுள் விளங்கி வீற்றிருப்பர். அவரது அந்தப் பெருங்கருணையை அறிந்து வழிபட்டுய்வது அறிவுடைய மக்களின் கடமை யாகும்.

சண்டேசுரநாயனார் புராணம் முற்றும்

சேர்க்கை I

# பசுக் காக்கும் முறை

பசுக்களைச் செலுத்தும்போது அவைகளுக்குச் சிறிதும் துன்பம் செய்யாமலும் அச்சம் வராமலும் இரக்கத்தோடு பலாசங்கோலினுலே மெல்ல ஓச்சிப் போ போ என்று செலுத்தல்வேண்டும். இரக்கமில்லாமற் கோபித்தும், அதட்டியும், அடித்தும் தீங்கு செய்பவர் நரகத்துக்காளாவர். பசுக்களின் பெருமையை உணர்ந்து அவற்றை வணங்கிப் பூசித்துப் புல் கொடுத்தவர்கள் சிவலோகத்தை அடைவர். இதனை எல்லாரும் செய்தல்வேண்டு மென்பதனை "யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை" என்று திருமூலதேவர் திருமந்திரம் அருளினர். பசுக்களின் வருத்தம் தணிப்பதற்கென்றே திருமூலராகும் சிவயோகியார் தமது உடலை விடுத்து அவற்றை மேய்த்த இடையன் உடம்பிற் பரகாயப்பிரவேசம் என்ற யோக நெறியினுலே புகுந்து எழுந்து அவற்றை மகிழ்வித்தனர்.

பசுக்களைத் தீண்டினும் தீவினைகள் நீங்கும்; நல்வினைகள் பெருகும். பசுக்கள் மக்களுக்கு இம்மை மறுமை என்ற இரண்டு பயனும் தருவன. சிவவழிபாட்டுக்குரிய சாதனம் தருதலால் சிவனடி சேர்தற்கும் துணைசெய்வன.

பசுக்கள் தங்குதற்குரிய சாலையை விதிப்படி அமைத்து அதனுள் ஆற்றுமண், புற்றுமண், ஓடைமண், அரசமரத்தடிமண், வில்வத்தடிமண் முதலிய தூயமண்ணினுல் நிலம் செய்தல்வேண்டும்.

இளங்கன்று, முதிர்கன்று, நோய்க்கன்று என்பவற்றுக்கு வெவ்வேறுக இடங்கள் அமைக்கவேண்டும். (இதுபற்றி ஆனயநாயனர் புராணத்தில் உரைத்தவை பார்க்க.)

காடோறும் அவ்வப்போது கோசல கோமயங்களை அப்புறப்படுத்திச் சுத்தி செய்து, மசகம் வராமல் தூபமிட்டுத் தீபமேற்றிச் சாலையைப் பூ முதலியவற்றுல் அலங்கரித்து, அதனுள் சுவத்தி என்னும் சொல்லைச் சொல்லிப் பசுக்களை மெல்லப் புகுவித்து அன்போடும் புல்லைக் கொடுக்கவேண்டும். நோயுற்ற பசுக்களுக்கு வேறிடம் செய்து மருந்து கொடுத்துக் காத்தல்வேண்டும். இளைத்த பசுக்களைக் கண்டு இரங்கித் தாம் வாங்கி வளர்த்தல் பெரும் புண்ணியமாம்.

அட்டமிநாள் தோறும் பசுக்களை நீராட்டிப் பூச்சூட்டிச் சோறும் நீரும் தந்து புகையும் விளக்கும் காட்டிப் பூசித்து வணங்குதல்வேண்டும்.

வேனிற்காலத்திற் சோலைகளிலும் மழைக்காலத்தில் மலைச்சாரல் வனங்களிலும் பனிக்காலத்தில் வெயில் மிகுந்த வெளிகளிலும் துன்பம் வாராதபடி பசுக்களை நல்ல புல்லுள்ள நிலத்தில் மேய்த்துத் தூய நல்ல நீர்த்துறைகளில் நீருட்டுவித்தல் வேண்டும்.

பசுக்களின் துன்பம்போகக் காக்காதவர்களும், பூசைசெய்யாதவர்களும், காக்காத பாவிகளைத் தண்டிக்காத அரசனும் நரகில் வீழ்வார்கள்.

ஆவுரிஞ்சுதற்குக் கல் - தறி முதலியவற்றை நடுதலும், சிவனுக்கும் ஆசாரியனுக்கும் பசுவைத் தானம் செய்தலும், நல்ல இலக்கணங்களையுடைய எருதைச் சிவசந்நிதானத்துக்குத் தானமாக விடுதலும், சிவபெருமானது திருப்பணிவிடைக்காக எருதுகள் கொடுத்தலும் பெரும் சிவபுண்ணியங்களாம்.

மலட்டுப் பசுக்களின் மேலேனும், இடபத்தின் மேலேனும் பாரம் ஏற்றினவர்களும், இடபத்தில் ஏறினவர்களும் நரகில் வீழ்ந்து வருந்துவர். இடபங்களை உழவுக்காகவேனும் பயன்படுத்தலாகாது என்ற மரபினைச் சேக்கிழார் நாயனர் பலஇடத்தும் உணர்த்தியருளினர். பசுக்களின் மேற்பார மேற்றலாகாது என்பது சொல்லாமலே யமையும்.

பசுக்கள் தரும் திருமஞ்சனம் ஐந்தினையும் சிவனுக்கு ஆட்டுவித்தல் மேலான சிவபுண்ணியமாகும். ஈன்று இரண்டுமாதம் வரை கன்று உண்ணும்படி பாலை விட்டுப் பின் கறந்து சிவபெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டுதல் வேண்டும்.

கன்று பால் உண்டு முலையை விடுத்தபோது, நீரிலுல் முலையைக் கழுவிக் கறத்தல் வேண்டும். பேராசையினுற் கன்றுக்குப் பால்விடாமற் கறப்பவர்கள் நரகத்தில் வீழ்ந்து நெடுங்காலம் வருந்திப் பின்பு பூமியிற் பிறந்து கடும்பசியினுலே வருந்தி வீடுகள்தோறும் பிச்சையேற்பர் ; பிச்சை ஏற்பினும் கிடையாமல் வருந்துவர்.

கபிலையின் பாலைச் சிவபெருமானுக்கே கொடுத்தல் வேண்டும்; அவ்வாறு செய்யாது பருகினுேர் நரகில் விழுவர்.

புலையர்கள் பசுச்சாலையில் புகுதலாகாது. புகுந்தால் எண்ணிறந்த காலம் எரிவாய் நரகில் வீழ்ந்து மீட்சியின்றி வருந்துவர்.

பசுக்களைப் பகைவர் கவர்ந்தால் எதிர்த்துக் காத்தல்வேண்டும். காக்க இயலாதபோது அதன் பொருட்டுத் தம் உயிர் விட்டவர்கள் சிவபதமடைவார்கள்.

பசுக்காத்தலின் முறையும் பெருமையும் ஆனாய நாயனுர், சண்டேசுவர நாயனுர், திருமூலதேவ நாயனுர் என்ற மூன்று நாயன்மார்களின் சரிதங்களாலும் அறிவுறுத்தப்பட்டன. அதுவே அவற்றின் சிறப்பினைக் காட்டுவதாம். வேதங்களும் ஆகமங்களும் இச்சிறப்பினைப் பேசும். சிவதருமோத்திரத்தினுள் இவை விரிவாகப் பேசப்பட்டுள்ளன. நித்திய கன்மவிதிப்பத்ததிகளில் பசுவின்பூசையும் விதிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீமத் ஆறுமுகநாவலர் அவர்கள் இப்புராண சூசனத்தில் எழுதியுள்ளவற்றைத் தழுவி இஃது எழுதப்பட்டது.

குறிப்பு :—பசுக்காத்தலின் பெருமையையும், காவாதொழிதலின் தீமையினையும் பற்றி வேதாகமங்களும் மற்றும் நூல்களும் ஒன்று போலவே தோத்திரிப்பன. அவற்றைப் பின்பற்றி ஒழுகி நிகழ்ந்துவந்தது நமது புண்ணிய பூமியாகிய பரதகண்டமேயாம். ஆனுல் இக்காலத்து அவ்வொழுக்கம் மாறிவிட்டது. பசுக்களைக் காப்பதும் காவாதொழிவதும் நிற்க, அவற்றை உண்டிப் பொருட்டாக வதைசெய்யா திருந்தாலே போதும் - அதுவே பெரும்புண்ணியமாகும் என்று சொல்லும் காலமாக உள்ளது இக்காலக் கொடுமை ! அந்தோ ! பசுவின் குருதி ஒருதுளி நிலத்தில் வீழ்வதாயின் அதினின்றும் பலகோடி அசுரர்கள் வந்து உதித்து உலகை நாசம் செய்வர் என்றும் நூல்கள் கூறுகின்றன. நாடோறும் மிருக மனித வயிற்றை நிரப்பும் பொருட்டு வதைக்கப்படும் பசுக்களின் இரத்தம் ஆருகப் பெருகுமாயின் இந்நாடு என்ன அலங்கோலம்தான் படாது ? இக்கொடிய பாவம் நமது புண்ணிய நாட்டில் வரத் தலைப்பட்ட நாளே நமது நாட்டுக்கு அளவற்ற கேடுகள்வரத் தொடங்கிவிட்டன என்பது அறிவோர் துணிபாகும். பசுக்களிடம் கருணையில்லாதவர்களும் பசுக் கொலைபுரிவோரும் பசுவிறைச்சி யுண்போரும் ஆகிய புறமதத்தினர், கொலைஞர், புலையர் முதலியோரிடம் பசுக்களையேனும் கன்றுகளையேனும் விற்பது பெரும்பாதகமாகும். விலைக்குப் பெற்றவன் செய்யும் பாதகத்துக்கு விற்றவனும் பொறுப்பாளியாவன் என்பது நூற்றுணிபும் உண்மையுமாம். நோய்ப்பசு, மூப்புடையபசு, இளைத்தபசு முதலியவற்றை விற்பதும், அதனுல் வரும் சிறு ஊதியத்தைப் பொருளாக எண்ணுவதும் பாவமாகும் ; அவற்றையும், பால்வற்றிய பசுக்களையும் உடையவர்கள் தாமே வைத்துக் காப்பாற்றுதல் கடமையாம். தம்மால் இயலாதபோது காக்கக்கூடியவர்களிடம் ஒப்புவித்தலே முறைமையாகும். தனித்தனிப் பசுக்காக்க இல்லாதவர்கள் பலர் ஒன்றுகூடிப் பசுக்காக்கும் சாலை நியமித்து அதன் மூலம் அவற்றைக் காக்க முயல்வது பெருங்கடமையும் சிவபுண்ணியமுமாகும். ஊர்ப்புறங்களில் பசுக்கள் மேயப் புல்உள்ள நிலம் உண்டாக்கி வைத்தல் புண்ணியமும், அவ்வாறுள்ள நிலங்களை அபகரித்தல், பெரும்பாவமும் ஆம். மக்கள் இவற்றை அறிந்து திருந்த முயல்வார்களானுல் நாட்டுக்கு நலமும் தமக்கு நன்மையையும் தேடிக்கொண்டவராவர்.

## சேர்க்கை II

சண்டேசுர நாயனாரைப்பற்றிய

# சைவத் தெய்வத் திருமுறைத் திரட்டு

## ஆளுடைய பிள்ளையார்

முதல் திருமுறை — திருச்சேய்ஞலூர் — பண் - பழந்தக்கராகம்.

பீரடைந்த பால தாட்டப் பேணு தவன்முதை
வேரடைந்து பாய்ந்த தாளே வேர்தடிந் தான்றனக்குத்
தாரடைந்த மாலை சூட்டித் தலைமை வகுத்ததென்னே ?
சீரடைந்த கோயின் மல்கு சேய்ஞலூர் மேயவனே. (7)

திருக்கோளிலி — பண் - பழந்தக்கராகம்

வந்தமண லாலிலிங்க மண்ணியின்கட் பாலாட்டுஞ்
சிந்தைசெய்வோன் றன்கருமந் தேர்ந்துசிதைப் பான்வருமத்
தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றருளிக்
கொந்தணவு மலர்கொடுத்தான் கோளிலியெம் பெருமானே. (4)

திருவூறல் — பண் - வியாழக்குறிஞ்சி

எண்டிசை யோர்மகிழ வெழின் மாலையும் போனகமும் பண்டு
சண்டி தொழவளித்தா னவன் றழமிடம் வினவிற்
கொண்டல்கள் தங்குபொழிற் குளிர் பொய்கைகள் சூழ்ந்துநஞ்சை
யுண்டபி ரானமருந் திரு வூறலை யுள்குதுமே. (5)

இரண்டாந் திருமுறை — திருப்புள்ளிருக்குவேளூர் — பண் - சீகாமரம்

கீதத்தை மிகப்பாடு மடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழுகின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
*வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. (5)

மூன்றாந் திருமுறை — திருப்பாசுரம் — பண் - கௌசிகம்

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலை யறவெட்டிட் முக்கண் மூர்த்தி
யடிசேர்ந்த வண்ண மறிவார்சொலக் கேட்டு மன்றே. (7)

திருவேட்டக்குடி — பண் - பஞ்சமம்

தோத்திரமா மணலிலிங்கந் தோடங்கியவா னிரையின்பால்
பாத்திரமா வாட்டுதலும் பரஞ்சோதி பரிந்தருளி
ஆத்தமென மறைநான்கவர்க் கறம்புரிநூ லன்றுரைத்த
தீர்த்தமல்கு சடையாருந் திருவேட்டக் குடியாரே. (3)

*இங்கு இது இத்தல சம்பந்தமான வேறுமொரு சரிதங் குறித்ததென்றும் கொள்வர்.

திருவாலவாய் - திருவியமகம் பண் - பழம்பஞ்சுரம்

சென்று தாதை யுகுத்தனன் பாலியே சீறி யன்பு செகுத்தனன் பாலியே
வென்றி சேர்மழக் கோண்டுமுன் காலியே வீட் வெட்டிடக் கண்டுமுன் காலியே
நின்ற மாணியை யோடின கங்கையா னிலவ மல்கி யுதித்தன கங்கையால்
அன்று நின்னுரு வாகத் தடவியே யால வாயர னுகத் தடவியே. (5)

---

## ஆளுடைய அரசுகள்

நான்காந்திருமுறை திருவாப்பாடி பண் - திருநேரிசைக்கொல்லி

அண்டமா ரமரர் கோமா னுதியெம் மண்ணல் பாதங்
கொண்டவன் குறிப்பி னுலே கூப்பினன் தாப ரத்தைக்
கண்டவன் றுதை பாய்வான் காலற வெறியக் கண்டு
சண்டியார்க் கருள்கள் செய்த தலைவராப் பாடி யாரே. (4)

திருக்குறுக்கைவீரட்டம் பண் - திருநேரிசைக்கொல்லி

தழைத்ததோ ராத்தி யின்கீழ்த் தாபர மணலார்ற் கூப்பி
யழைத்தங்கே யாவின் பாலைக் கறந்துகோண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் றுதை தாளைப் பெருங்கோடு மழுவால் வீசக்
குழைத்ததோ ரழுத மீந்தார் குறுக்கைவீ ரட்ட னுரே. (3)

திருச்சாய்க்காடு பண் - திருநேரிசைக்கொல்லி

ஆமலி பாலு நெய்யு மாட்டியர்ச் சனைகள் செய்து
பூமலி கொன்றை சூட்டப் பொறுததன் றுதை தாளைக்
கூர்மழ வொன்று லோச்சக் குளிர்சடைக் கொன்றை மாலைத்
தாமநற் சண்டிக் கீந்தார் சாய்க்காடு மேவி னுரே. (6)

திருச்சேறை பண் - திருநேரிசைக்கொல்லி

நிறைந்தமா மணலைக் கூப்பி நேசமோ டாவின் பாலைக்
கறந்துகோண் டாட்டக் கண்டு கறுத்ததன் றுதை தாளை
யெறிந்தமா ணிக்கப் போதே யெழில்கொள்சண் டீச னென்னச்
சிறந்தபே ரளித்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னுரே. (5)

ஐந்தாந்திருமுறை கோயில் திருக்குறுந்தொகை

மாணி பால்கறந் தாட்டி வழிபட
நீணு லகெலா மாளக் கொடுத்தவன்
ஆணி யைச்செம்பொ னம்பலத் தண்ணின்ற
தாணு வைத்தமி யேன்மறந் தய்வனே.

திருக்கொண்டீச்சரம் திருக்குறுந்தொகை

கண்ட பேச்சினிற் காளையர் தங்கள்பான்
மண்டி யேச்சுணு மாதரைச் சேராதே
சண்டி யீச்சுர வர்க்கருள் செய்தவக்
கொண்டி யீச்சுர வன்கழல் கூறுமே.

திருமங்கலக்குடி

வண்டு சேர்பொழில் சூழ்மங் கலக்குடி
விண்ட தாதையைத் தாளற வீசிய
சண்ட நாயக னுக்கருள் செய்தவன்
திண்ட மாமதி சூடிய சோதியே.

ஆரூர்த் திருமுறை திருப்பூவணம் திருத்தாண்டகம்

ஆங்கணேந்த சண்டிக்கு மருளி யன்று
தன்முடிமே லலர்மாலை யளித்த றேன்றும்
பாங்கணேந்து பணிசெய்வார்க் கருளி யன்று
பலபிறவி யறுத்தருளும் பரிசுந் தோன்றும்
கோங்கணேந்த கூவிளமு மதமத் தம்மூங்
குழற்கணிந்த கொள்கையொடு கோலந் தோன்றும்
பூங்கணேவே ளுருவழித்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னுர்க்கே. (10)

---

## ஆளுடைய நம்பிகள்

ஏழாந் திருமுறை திருக்கலயநல்லூர் பண் - தக்கராகம்

இண்டைமலர் கொண்டுமண லிலிங்கம தியற்றி
யினத்தர்வின் பாலாட்ட விடறியதா தையைத்தாள்
துண்டமிடு சண்டியடி யண்டர்தொழ தேத்தத்
தொடர்ந்தவனைப் பணிகொண்ட விடங்கனதூர் வினவின்
மண்டபமுங் கோபுரமு மாளிகைசூ ளிகையு
மறையொலியும் விழவொலியு மறுகுநிறை வெய்திக்
கண்டவர்கண் மனங்கவரும் புண்டரிகப் பொய்கைக்
காரிகையார் குடைந்தாடுங் கலயநல்லூர் காணே. (3)

திருப்புன்கூர் பண் - தக்கேசி

ஏத நன்னில மீரறு வேலி யேயர் கோனுற்ற விரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக் கோல வெண்மணற் சிவன்றன்மேற் சென்ற
தாதை தாளற வெறிந்தசண் டிக்குன் சடைமி சைமல ரருள்செயக் கண்டு
பூத வாளிகின் பொன்னடி யடைந்தேன் பூம்பொ ழிற்றிருப் புன்கூரு ளானே. (3)

திருவீழிமிழலை பண் - சீகாமரம்

எறிந்த சண்டி யிடந்த கண்ணப்ப னேத்து பத்தர்கட் கேற்ற நல்கினீர்
செறிந்த பூம்பொழிற்றேன் முளரிசூழ் திருமிழலை
நிறைந்த வந்தணர் நித்த நாடொறு நேசத் தாலுமைப் பூசிக் குமிடம்
அறிந்து வீழிகொண்டீ ரடியேற்கு மருளுதிரே. (6)

---

## ஆளுடைய அடிகள்

எட்டாந். திருமுறை திருவாசகம் திருத்தோணேக்கம்

தீதில்லை மாணி சிவகநமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் றுதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப வீசன் றிருவருளாற் றேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணேக்கம். (7)

---

## சேந்தனூர்

ஒன்பதாந் திருமுறை பண் - பஞ்சமம்

திருவிசைப்பா - திருப்பல்லாண்டு - கோயில்

தாதையைத் தாளறு வீசிய சண்டிக்கு மண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமு மருளிச்
சோதி மணிமுடித் தாமழ நாமழந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (கo)

---

## திருழலதேவ நாயனூர்

பத்தாந் திருமுறை திருமந்திரம் (2-ம் தந்திரம்)

உறுவ தறிதண்டி யொண்மணற் கூட்டி
யறுவகை யானேந்து மாட்டத்தன் றுதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழ வால்வெட்டி மாலேபெற் றனே. (15)

---

## நக்கீரர்

பதினேராந் திருமுறை கைலேபாதிகாளத்திபாதி யந்தாதி

வந்தமர ரேத்து மடைகூழும் வார்சடைமேற்
கொந்தவிழ மாலே கொடுத்தார்கோல்—வந்தித்து
வாலுகுத்த வண்கயிலைக் கோனூர்தம் மாழடிமேற்
பாலுகுத்த மாணிக்குப் பண்டு.

கோபப்பிரசாதம்

.....மானுடனுகிய சண்டியை, வானவ னுக்கியும்..... (10 - 11)

போற்றித் திருக்கலிவெண்பா

.....மட்டித்து,
வாலுகத்தா னல்லிலிங்க மாவகுத்து மற்றதன்மேற்
பாலுதப்பக் கண்டு பதைத்தோடி—மேலுகைத்தங்
கோட்டியவன் றுதை யிநதா ளேறிந்துயிரை
வீட்டிய சண்டிக்கு வேருக—நாட்டின்கட்
பொற்கோயி லுள்ளிருத்திப் பூமாலே போனகமு
நற்கோல மீந்த நலம்போற்றி—.....

---

## பட்டினத்துப்பிள்ளையார்

### திருவேகம்பமுடையார் திருவந்தாதி

இனியவ ரின்ஞ ரவரையொப் பார்பிற ரென்னவொண்ணைத்
தனியவர் தைய லுடஞ மவர்தரு மம்பணித்த
முனியவ ரேது முகந்தமுக் கண்ணவர் சண்டியன்புக்
கினியவர் காய்மழு வாட்படை யார்கச்சி யேகம்பரே. (48)

---

## நம்பியாண்டார்நம்பிகள்

### திருத்தொண்டர் திருவந்தாதி

குலமே றியசேய்ஞ லூரிற் குரிசில் குரைகடல்சூழ்
தலமே றியவிறற் றண்டிகண் டீர்தந்தை தாளிரண்டும்
வலமே றியமழ வர்லெறிந் தீசன் மணிமுடிமே
னலமே றியபால் சொரிந்தலர் சூட்டிய நன்னிதியே. (22)

---

## சேக்கிழார் நாயனார்

பன்னிரண்டாம் திருமுறை — சண்டீசநாயனார் புராணம்

1219. நன்றி புரியு மவர்தம்பா னன்மை மறையின் றுறைவிளங்க
என்று மறையோர் குலம்பெருக வேழு புவனங் களுமுய்ய
மன்றி னடஞ்செய் பவர்சைவ வாய்மை வளர மாதவத்தோர்
வென்றி விளங்க வந்துதயஞ் செய்தார் விசார சருமனூர். (12)

1242. பெருமை பிறங்குஞ் சேய்ஞலூர்ப் பிள்ளை யார்த முள்ளத்தில்
ஒருமை நினைவா லும்பர்பிரா னுவக்கும் பூசை யுறுப்பான
திருமஞ் சனமே முதலவற்றிற் றேடா தனவன் பினினிரப்பி
வருமந் நெறியே யர்ச்சனைசெய் தருளி வணங்கி மகிழ்கின்றூர். (37)

1261. அண்டர் பிரானுந் தொண்டர்தமக் கதிப ஞக்கி யனைத்துநாம்
உண்ட கலமு முடுப்பனவுஞ் சூடு வனவு மூனக்காகச்
சண்டி சனுமாம் பதந்தந்தோ மென்றங் கவர்பொற் றடமுடிக்குத்
தண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினூர். (56)

1262. எல்லா வுலகு மார்ப்பெடுப்ப வெங்கு மலர்மா ரிகள்பொழியப்
பல்லா யிரவர் கணநாதர் பாடி யாடிக் களிபயிலச்
சொல்லார் மறைக டுதிசெய்யச் சூழ்பல் லியங்க ளெழச்சைவ
நல்லா றேங்க நாயகமா ஙங்கள் பெருமான் றெழுதணைந்தார். (57)

1264. வந்து மிகைசெய் தாதைதாண் மழுவாற் றுணித்த மறைச்சிறுவர்
அந்த வீடம்பு தன்னுடனே யாஞூர் மகனு ராயினூர்;
இந்த நிலைமை யறிந்தாரா? ரீறி லாதார் தமக்கன்பு
தந்த வடியார் செய்தனவே தவமா மன்றே சாற்றுங்கால்! (59)

---

திருஞானசம்பந்தநாயனார் புராணம்

ஞானசம் பந்தரு நாய னார்சடைத்
தூநறுந் தொடையன்முன் சூட்டும் பிள்ளையார்
பான்மையில் வரும்பதி யென்று நித்தில
யானமுன் னிழிந்தெதி ரிறைஞ்சி யெய்தினர். (244)

வேதியர் சேய்ஞலூர் விமலர் தங்கழல்
காதலிற் பணிந்தவர் கருணை போற்றுவார்
தாதைதா டடிந்தசண் டீசப் பிள்ளையார்
பர்தகப் பயன்பெறும் பரிசு பாடினர். (248)

சைவத் தெய்வத்திருமுறைத்திரட்டு முற்றும்

---

## சேதுபுராணம்

கடவுள் வாழ்த்து

மனுதிகளுக் கெட்டாத பரமா னந்த
வாழ்வினையங் கோரிலிங்க மணலாற் கூப்பித்
தனுதிதயந் தனினின்றுந் தாபித் தான்பா
றழைத்தவன்பா லாட்டவந்து தடுக்கத் தாதை
யெனுதவன்ற னிருபதமு மழுவாற் றுண்டித்
திகழ்ந்தவனைப் பரபதத்து ளிருத்தித் தானும்
பிஞகியரு ளடைந்தவிறற் சண்டே சன்ரூள்
பிரசமல ரிறைத்திறைஞ்சிப் பரசு வாமே. (12)

—நிரம்பவழகியதேசிகர்.

---

உ

சிவமயம்

# சுந்தரமூர்த்திநாயனார் துதி

## தோகை

"ஆரூ ரூரு நிலம்மானுக் காளே"—திருத்தொண்டத்தொகை

## வகை

"நிதியார் திருத்திதென் வேள்விக் குடியாய் நினைமறந்த
மதியேற் கறிகுறி வைத்த புகர்பின்னை மாற்றி"டென்று
துதியா வருள்சொன்ன வாறறி வாரிடைப் பெற்றவன்கா
ணதியார் புனல்வய னுவலூர் கோனென்னு நற்றவனே"

—திருத்தொண்டர் திருவந்தாதி - (23)

## விரி

1265. நேச நிறைந்த வுள்ளத்தா னீலநிறைந்த மணிகண்டத்
தீச னடியார் பெருமையினை யெல்லா வுயிருந் தொழுவெடுத்துத்
தேச முய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம். சுo

துதி :—இனி, நிறுத்த முறையானே, "மும்மையா லுலகாண்ட" என்று தொடங்கும் திருத்தொண்டத்தொகை மூன்றுவது பாசுரத்தினுள், "அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்" என்ற சரிதத்துக்கடுத்து, "ஆரூர ரூரரி லம்மானுக் காளே' என்றதனுட் போந்தபடி ஆரூர்ப் பெருமானுக்கு ஆளுடையநம்பிகள் ஆளாயின சரிதப் பகுதியைக் கூறத்,தொடங்கிய ஆசிரியர், நம்பிகளது சரிதத்தின் மற்றொரு பகுதியினை உள்ளமைத்து, ஆளாந்தன்மையைக் காட்டும் முகத்தால் நம்பிகளின் துதியாகக் கூறுகின்றார்.

தோகை :—(தொகைநூலுள் "மும்மையா லுலகாண்ட" என்று தொடங்கும் இப்பாசுரத்திற் குறிக்கப்பட்ட ஆறு அடியார்களுக்குத் தனித்தனி அடியேனுகிய) ஆரூரன், திருவாரூர் அம்மானுக்கும் ஆள் என்று முடிக்க. முன்னிரண்டு சருக்கங்களின் இறுதியில் (550 - 967) உரைத்தவை பார்க்க. ஆரூரில் அம்மானுக் காளேயாகிய ஆரூரன் முன் சொன்ன ஆறு அடியவர்களுக்கும் தனித்தனி அடியேனுவேன் என்று கூட்டி முடித்தலுமாம்.

வகை :—செல்வம் பொருந்திய திருத்தியும் தென் வேள்விக்குடியும் என்ற தலத்தில் எழுந்தருளி இனிது வாழும் முதல்வரே! உம்மைமறந்த நினைவுடைய எனக்கு அம்மறதியைமாற்றி நினைப்பூட்டும் வகையால் என் உடம்பினில்வைத்த அடையாளங்களாகிய பிணியின் தன்மைகளைப், பின்னை மாற்றியருள்வீராக!" என்று துதித்துச், சொன்னவாறறிவார் என்ற திருநாமமுடைய அம்முதல்வரிடம் அவ்வாறே அருளைப்பெற்றவர், ஆற்றின் நிறைந்த நீர்பாயும் வயல்சூழ்ந்த திருநாவலூரர் என்னும் நல்ல தவத்தினையுடையவரேயாவர்.

நிதியார் துருத்தி தென்வேள்விக் குடியாய் - திருத்துருத்தியும் திருவேள்விக் குடியும் சேர்ந்து ஒரே தலமாகக் கணிக்கப்பெறுவதும் மரபு. சொன்னவாறறிவார் என்பது இத்தலத்தின் இறைவரது பெயர். "சொன்ன வாறறிவார் துருத்தியார் வேள்விக் குடியுளார்" என்று இதனை, நம்பிகள் "மின்னுமா மேகங்கள்" என்னும் இத்தலத் தேவாரத்தில் முதற் பாசுரத்திற் போற்றியருளினர். ஆளுடைய பிள்ளையாரும்

ஆளுடையநம்பிகளும் இந்த இரண்டு தலங்களையும் ஒன்றுசேர்த்துத் "திருத்தியும் வேள்விக்குடியும்" என்று திருப்பதிகங்கள் அருளியிருக்கின்றமை காண்க. ஆயினும் இவை காவிரிக்கு வடகரையிலும் தென்கரையிலும் உள்ள தனியாலயங்களாகக் காணப்படுவதனாலும், அவற்றுக்குத் தனித்தனி திருப்பதிகங்களுமுள்ளதனாலும் வேள்விக்குடியைக் காவிரிக்கு வடகரை 23-வது தலமாகவும், திருத்தியைத் தென்கரை 37-வது தலமாகவும் தல வரிசையில் கணித்திருக்கின்றனர். இறைவனார் பகலில் பிரமசரிய வேடத்துடன் திருத்தியில் தங்கி, இரவில் வேள்விக்குடியில் திருமணம் புரிந்து கொண்டனர் என்பது வரலாறு. "பகலிடம் புகலிடம் பைம்பொழில்சூழ், வீங்குநீர்த் திருத்தியா ரிரவிடத் துறைவர் வேள்விக் குடியே" என்ற ஆளுடையபிள்ளையார் தேவாரம் காண்க.

"நினைமறந்த...மாற்றிடு" இது நம்பிகள் திருத்துருத்தியில் இறைவரை வேண்டிக் கொண்டது. புராணத்துட் காண்க. "அடியேன்மே லுற்றபிணி, வருத்தமெனை யொழித்தருள வேண்டுமென வணங்குவார்" (எயர்கோன் - புரா - 297) பார்க்க. **துதியா** - அவ்வாறு துதித்து.

சொன்னவாறறிவாரிடை அருள் பெற்றவன் என்க. அருள் - வேண்டிக் கொண்டவாறே பிணி நீங்கப்பெற்ற திருவருள். வேண்டிக்கொண்ட அந்த அருள் எனச் சுட்டு வருவிக்க. "என்னுடம் படும்பிணி யிடர்கெடுத் தானே", "பழவினை யுள்ளன பற்றறுத் தானே", "உற்றநோ யிற்றையே யுறவொழித் தானே" "அம்மைநோ யிம்மையே யாசறுத் தானே", "மேலைநோ யிம்மையே வீடுவித் தானே" என்பனவாதி ஆளுடையநம்பிகள் தேவாரங்களால் அவ்வாறருள்பெற்றமை விளங்கும். **துதியா - அருள்பெற்றவன்** - துதித்து அத்தப்படியே அருள் கிடைக்கப்பெற்றவர். "புதியபிணி யதுநீங்கி அக்கணமே மணியொளிசேர் திருமேனி யாயினார்" (எயர்கோ - புரா - 299) என்றது காண்க.

நினைமறந்த மதியேற்கு அறிதுறிவைத்த புகர்-என்றது மறந்ததனால் அடையாள மாகத் திருமேனியிற் காணவைத்த நோய். **புகர்** - பிணியால் மேனியிற் காணும் புற அடையாளம். திருத்துருத்தியில் வரும்போது நம்பிகளது திருமேனியில் புதியதாகிய ஒரு பிணியின் அறிகுறி தங்கியதென்பதும், வலது கண் மறைந்ததாகிய ஒரு கண் பார்வையுடனிருந்தனர் என்பதும் சரிதத்தா லறியப்படும். இது திருவொற்றியூரில் இறைவர்முன் செய்த சபதத்தை மறந்த அபசாரத்தால் நேர்ந்ததென்று நம்பிகள் கருதியருளினர் என்பது கருத்து. இது "என்னை நான்மறக்குமா றெம்பெரு மானை யென்னுடம் படும்பிணி யிடர்கெடுத் தானே" என்ற அவர் திருவாக்காலும் கருதி அறிய வுள்ளது. **பின்னைமாற்றிடு** - மறவியை மாற்றியதனால் என்றும் நினைந்துள்ளே னுதலின் பின்னை அதனை மாற்றுக என்பது கருத்து.

**நிதியார் துருத்தி** - செல்வநிறைவு காவிரியின் செழிப்பினால் ஆகியது. "வரைத் தலைப் பசும்பொனே டருங்கலன்க ளுந்திவந், திரைத்தலைச் சுமந்துகொண் டெறிந் திலங்கு காவிரிக், கரைத்தலைத் திருத்திபுக்கு" (திருவிராகம் - 1) என்ற ஆளுடைய பிள்ளையார் தேவாரமும், "பொன்மணி வரன்றியும்" (காந்தாரம் - 6) என்ற ஆளுடையநம்பிகள் தேவாரமும் காண்க. **துருத்தி** - ஆற்றிடைக்குறை. ஆற்றின் வண்டல் சேர்ந்த தரையாதலின் அதனாலும் செழிப்பும் செல்வமுமுளதாம். "பொன்னியி னடுவு தன்னுட் பூம்புனல் பொலிந்து தோன்றும், தன்னிய திருத்தியானை" (திருநேரிசை - 3) என்ற ஆளுடைய அரசுகள் திருவாக்கும் காண்க.

**நற்றவனே - பெற்றவன்** காண் என்க. நற்றவனாதலின் பெற்றனன்; ஏனையோர்க்கு அவ்வாறு துதித்த அக்கணமே துதித்தவாறே பெறுதல் அரிது என்பதாம். ஏகாரம் தேற்றம். பிரிநிலை எனினுமாம். **காண்** - காண்க - கண்டுகொள்க.

**வைத்துப் புகர்பின்னை** - என்பதும் பாடம்.

1265. (இ - ள்) வெளிப்படை. விடம்பொருந்திய அழகிய கண்டத்தையுடைய இறைவனாரது அடியார்களது பெருமையினை, அன்புநிறைந்த வுள்ளத்தினாலே, எல்லா வுயிர்களும் அறிந்து தொழுதேத்தத் தேசமெல்லாம் உய்யும்படி திருத்தொண்டத் தொகையினால் முன் அருளிச்செய்த திருவாளராகிய ஆளுடையநம்பிகளது வாசம் பொருந்திய மலர்போன்ற மெல்லிய பாதங்களை வணங்குதற்குப் பேறு கிடைக்கப் பெற்ற இந்தப் பிறவியினை வணங்குவோம்.

(வி - ரை) நேச நிறைந்த உள்ளம் - "இவர்க்குயா னடியே னாகப், பண்ணுநா ளெந்நா ளென்று பரமர்தாள் பரவிச் சென்றார்" (335), "அடியவர்க் கடிய னாவே னென்னுமா தரவு கூர" (336), "அவர்தாம் வேண்டு மதனையே" (341) என்றவை காண்க.

நீலம் - நீலநிறமுடைய விடத்துக்காயிற்று. பண்பாகுபெயர். "நீலவாள்" என்றது (1092 - சில குறிப்புக்கள்; பக்கம் - கருசக) பார்க்க.

ஈசன் அடியார் பெருமையினை - ஈசன் பெருமையினையும் அடியார் பெருமையினையும் என்றுரைக்கவும் நின்றது. "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்" என்ற தொகுதியினுள் இறைவரும் ஒருவராதலும் காண்க. 350—351 பார்க்க. அடியார் பெருமைகூறவே அதனுடன் அவர்களை ஆண்ட இறைவர் பெருமையும் உடன்கூற வருதலும் கருதத்தக்கது.

எல்லாவுயிரும் தொழ என்பது நம்பிகள் பணித்துச்செய்த பேரருளின் பொருட்டு அவரை உயிர்கள் தொழஎனவும், தேசமுய்ய என்பது, நம்பிகள் திருவுள்ளத்தில் உலக முய்யும்படி கருதியருளிப் பணித்தது எனவும் கொள்க. நேச நிறைந்த என்றதனால் உலகுயிர்களின்மேல் வைத்த கருணையும் குறிப்பால் உணர்த்தப் படுதல் காண்க. "மாத வஞ்செய்த தென்றிசை வாழ்ந்திடத், தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப், போதுவார்" (35) என்றபடி அடியார் பெருமையினை அறிந்து வழி பட்டு உலகமுய்யும் பொருட்டுத் திருத்தொண்டத் தொகையினை அருள்வதற்காகவே நம்பிகள் அவதரிக்கத் திருவருள் கூடிற்று என்பதறியப்படுதலும் இங்குக் கருதுக.

முன் பணித்த - முன் - உலகுயிர்கள் அறியும்படி தேற்றமாக என்க. முன்னாளில் என்றலுமாம்.

பணித்தல் - கட்டளையிட்டு - ஆணையிட்டு - அருளுதல். வழிகாட்டுதல் என்ற பொருளில் வந்தது. "ஆரூரன் அடிமைகேட் டுவப்பார் ஆரூரி லம்மானுக் கன்பரா வாரே" என்றதன் கருத்தும் காண்க.

திருவாளன் - சிவசம்பந்தமாகிய திருவை ஆள்பவர் - உடையவர். "உயிரளித்த திருவாளன்" (வெள். சருக் - 12) என்பதும் கருதுக. அடியார் பெருமையினை உலகுக்கு அறிவித்து வழிப்படுத்தும் தமது திரு - (முத்தித்திரு) என்ற செயலை இவர்பால தாகப் பணித்து இறைவர் அருள்செய்தாராதலின் இப்பெயராற் கூறினார்.

கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம் - பிறவி தீது என்பர் பிறர்எல்லாம்; ஆயின் நம்பிகளது கழல்களை வணங்கும் பேறு கிடைப்பதாயின் அப்பிறவி பிணங்கத் தக்க தீதல்லாது வணங்கத்தக்க பொருளுமாகும் என்பது கருத்து. "மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே" என்ற திருவாக்கின் கருத்தினையும் இங்கு வைத்துக் காண்க.

## மும்மையாலுலகாண்ட சருக்கம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

# பாட்டு முதற்குறிப்பகராதி

## இரண்டாம் பகுதி

(இலைமலிந்த - மும்மையாலுலகாண்ட - சருக்கங்கள்)


| பாட்டு | பாட்டு வரிசை எண் | பக்க எண் |
|---|---|---|
| **அ** | | |
| அகல்பா | 1016 | கஙஂசு |
| அக்குலப் | 906 | ககசுஎ |
| அங்கணம | 1029 | கஙஙக |
| அங்கணர | 592 | எசசு |
| அங்கண்ம | 693 | அஅஙு |
| அங்கண்மா | 1033 | கஙசஂ |
| அங்கண்மு | 1237 | கருஅஂ |
| அங்கண்வா | 1089 | கசகக |
| அங்கப்பொ | 712 | கூஂஂ |
| அங்கிவன் | 765 | கூசுச |
| அங்குமண் | 1133 | கசருரு |
| அச்சொற் | 1245 | கருகூஉ |
| அஞ்சுவான் | 1158 | கசஅஉ |
| அடல்விடை | 644 | அகச |
| அடன்முனை | 630 | எகூஅ |
| அடியனேன | 922 | ககஅச |
| அடைமே | 1022 | கஙஉஙு |
| அண்டர்நா | 1145 | கசசுஎ |
| அண்டர்பி | 1261 | கசுஂஎ |
| அண்ண | 1185 | கருகஉ |
| அண்ணலா | 1140 | கசசுஙு |
| அண்ணலார் | 813 | கஂஉச |
| அண்ணலார்நி | 558 | எகஂ |
| அண்ணலைக் | 666 | அருக |
| அத்தருவள | 740 | கூஙக |
| அந்தணர்க | 1076 | கஙகூஉ |
| அந்தணாளர் | 1249 | கருகூரு |
| அந்தணாள | 1247 | கருகூஙு |
| அந்தமின்றி | 1151 | கசஎசு |
| அந்தம்மில | 983 | கஉசுகூ |
| அந்திப்பி | 977 | கஉசுச |
| அந்நாளிர | 991 | கஉஎகூ |
| அந்நிலையி | 804 | கஂகரு |
| அந்நிலையெ | 603 | எசுஂ |
| அந்நின்ற | 647 | அகஅ |
| அப்பதியிற் | 872 | ககஉசு |
| அப்பெற்றி | 716 | கூஂஅ |
| அப்பொழுத | 565 | எஉக |
| அப்பொழுதத | 840 | கஂஎஅ |
| அப்பொற் | 975 | கஉசுக |
| அம்பொன் | 1091 | கசகஙு |
| அயல்வரை | 685 | அஎஙு |
| அயனறும் | 1122 | கசசரு |
| அயில்கொ | 1040 | கஙருக |
| அரசர்குல | 1177 | கருஂசு |
| அரசனாங் | 586 | எசக |
| அரவநெடு | 1174 | கருஂஉ |
| அரவமணி | 1030 | கஙஙஉ |
| அருமறைப் | 1037 | கஙசஎ |
| அருமறைய | 1176 | கருஂச |
| அரும்பெற | 658 | அஙஅ |
| அருவரைக் | 664 | அருஂ |
| அருவிதந்த | 1108 | கசஙஂ |
| அருள்செய் | 895 | ககருஂ |
| அரையிற் | 710 | கூஂஂ |
| அலகினீட | 1149 | கசஎச |
| அலர்பகல் | 676 | அசுஙு |
| அல்லனல்கு | 911 | ககஎக |
| அல்லிமலர் | 930 | கககூஎ |
| அவனுடைய | 806 | கஂகரு |
| அவ்வகைய | 1188 | கருகச |
| அவ்வழியந் | 776 | கூஎஎ |
| அவ்வாறு | 1007 | கஉகூரு |
| அவ்வென் | 888 | ககசக |
| அவ்வேலையி | 994 | கஉஅஙு |
| அளிமிடைக | 749 | சுசக |
| அனைத்துத் | 1235 | கருஎக |
| அனையவா | 1100 | கசஉஉ |
| அனையன | 674 | அருஅ |
| அன்பரங்கி | 844 | கஂஅக |
| அன்பின்று | 989 | கஉஎசு |
| அன்புபுரியு | 1251 | கருகூஎ |
| அன்பூறி | 947 | கஉகரு |
| அன்றிரவு | 1061 | கஙஎஎ |
| அன்றிரவுகன | 805 | கஂகரு |
| அன்னவடி | 1028 | கஙஙஂ |
| அன்னவிம் | 775 | கூஎசு |
| **ஆ** | | |
| ஆங்கதன் | 748 | கூசஂ |
| ஆங்கப்பணி | 1026 | கஙஉச |
| ஆங்குமரு | 1246 | கருகூஙு |
| ஆங்குவள | 1165 | கசகூஙு |
| ஆடுமயிலி | 956 | கஉஉச |
| ஆட்கொளு | 919 | ககஎஅ |
| ஆணையா | 1081 | கசஂஙு |
| ஆண்டெதி | 669 | அருரு |
| ஆதிமூதெ | 1181 | கருகஂ |
| ஆத்திமல | 1238 | கருஅஙு |
| ஆயசிறப்பி | 1225 | கருசுரு |
| ஆலநானில | 1124 | கசசசு |
| ஆயநிரையி | 1233 | கருஎசு |
| ஆயர்குலத் | 934 | கஉஂஉ |
| ஆயவந்த | 1034 | கஙசஉ |
| ஆயவிசை | 951 | கஉகசு |
| ஆர்கொல் | 618 | எஅக |
| ஆர்தமரா | 762 | கூருஅ |
| ஆவதென் | 746 | கூஙஅ |
| ஆவினிரை | 937 | கஉஂசு |
| ஆளுடைத் | 606 | எசுச |
| ஆறலைத்து | 655 | அஙச |
| ஆறுசெஞ் | 841 | கஂஎஅ |
| ஆறும்மதியு | 567 | எஉக |
| ஆனசீர்த் | 602 | எருகூ |
| ஆனதொன் | 1126 | கசசகூ |
| ஆனபெரு | 1021 | கஙஉக |
| ஆனாயர்கு | 963 | கஉஙச |

| பாட்டு | பாட்டு வரிசை எண் | பக்க எண் |
|---|---|---|
| ஆனிரைக | 955 | கஉஉ௩ |
| ஆனிரைகூ | 935 | கஉ௦௩ |
| **இ** | | |
| இக்கந்தை | 1196 | கரு௨க |
| இங்கிதுபி | 572 | எஉஅ |
| இதற்கினி | 822 | க௦ச௦ |
| இத்தனைகா | 695 | அஅச |
| இத்தனைபொ | 812 | க௦உச |
| இத்தன்மை | 1060 | க௩எஎ |
| இத்திருநா | 651 | அஉ௯ |
| இந்தநன்னி | 909 | ககஎ௦ |
| இந்தனத் | 794 | க௦௦க |
| இந்நிலைய | 635 | அ௦ரு |
| இந்நெறி | 838 | க௦எரு |
| இப்படித்தா | 1051 | க௩சூஅ |
| இப்பரிசாயி | 1065 | க௩அக |
| இப்பரிசு | 800 | க௦௦அ |
| இப்பிறவி | 1068 | க௩அ௩ |
| இமமலிய | 1173 | கரு௦க |
| இம்முனைய | 632 | அ௦க |
| இருவருமெ | 600 | எரு௭ |
| இல்லத்திற் | 849 | க௦அசூ |
| இவர்தமை | 760 | கூரு௮ |
| இவ்வகைப | 997 | கஉஅரு |
| இவ்வகையா | 1055 | க௩எஉ |
| இவ்வகைவ | 736 | கூஉஎ |
| இவ்வண்ண | 990 | கஉஎசூ |
| இவ்வண்ணந் | 692 | அஅக |
| இவ்வண்ணமி | 1066 | க௩அஉ |
| இவ்வண்ணம் | 790 | கூகூஎ |
| இவ்வளந்த | 1125 | கசசஅ |
| இவ்வாறுகே | 639 | அ௦கூ |
| இவ்வாறுநி | 961 | கஉ௩க |
| இவ்வாறுல | 992 | கஉஅக |
| இளைத்தனர் | 772 | கூஎஉ |
| இறையோ | 1243 | கரு௩௦ |
| இன்னறரு | 1067 | க௩அஉ |
| **ஈ** | | |
| ஈண்டுதீவி | 1155 | கசஎசூ |
| ஈரவேபூட்- | 599 | எரு௩ |
| **உ** | | |
| உண்ணிறை | 759 | கூரு௮ |
| உம்பர்நாய | 1136 | கசரு௮ |
| உள்ளுந்த | 1227 | கரு௩ரு |
| உறுகவின் | 880 | கக௩ரு |
| உனக்கவன் | 807 | க௦கரு |
| **ஊ** | | |
| ஊரில்விடு | 1053 | க௩எ௦ |
| ஊர்தொறு | 852 | க௦கூ௦ |
| ஊனமுதுக | 799 | க௦௦சூ |
| **எ** | | |
| எடுத்தகுழ | 939 | கஉ௦சூ |
| எண்ணரும் | 1148 | கசஎஉ |
| எண்ணியநூ | 953 | கஉகசூ |
| எண்ணிலாக | 1128 | கசரு௩ |
| எண்ணிறந் | 796 | க௦௦க |
| எம்மருங் | 945 | கஉக௩ |
| எய்தியசீ | 784 | கூஅஅ |
| எய்துமவர் | 1195 | கரு௨க |
| எல்லாவுல | 1262 | கசூ௦கூ |
| எழுவிரலி | 948 | கஉகரு |
| எள்ளுஞ்செ | 984 | கஉஎஉ |
| எறிந்தவது | 1257 | கசூ௦௩ |
| என்செய்தா | 766 | கூசூசூ |
| என்செய்தாற் | 819 | க௦௩ச |
| என்றவர்கூ | 743 | கூ௩ச |
| என்றவர்போ | 923 | ககஅச |
| என்றவரு | 570 | எஉஉ |
| என்றிவ்வு | 1009 | கஉகூஅ |
| என்றின்ன | 1228 | கரு௩ரு |
| என்றுபகை | 621 | எஅரு |
| என்றுமுள் | 1162 | கசஅகூ |
| என்றுமெய் | 861 | க௦கூஎ |
| **ஏ** | | |
| ஏதமில்பல | 1131 | கசரு௩ச |
| ஏயுமாறு | 1078 | க௩கூஅ |
| ஏலங்கம | 1014 | க௩௦௩ |
| ஏறுகாற்பன் | 782 | கூஅரு |
| ஏனமோடு | 727 | கூகஎ |
| **ஐ** | | |
| ஐந்துவரு | 1218 | கரு௩௦ |
| ஐயரேய | 1070 | கசஅ௩ |
| ஐவனவடி | 683 | அஎ௦ |
| **ஒ** | | |
| ஒடியெறிந் | 724 | கூகச |
| ஒப்பில்பெ | 933 | கஉ௦க |
| ஒருமகள் | 902 | ககரு௮ |
| ஒருமுன்கை | 889 | ககசக |
| **ஓ** | | |
| ஓங்கியநாற் | 1180 | கரு௦சூ |
| ஓங்குசெந் | 1104 | கசஉசூ |
| ஓதுகிடை | 1222 | கரு௩ச |
| ஓவாதே | 1200 | கரு௨ரு |
| **க** | | |
| கங்கைநீர் | 837 | க௦எச |
| கஞ்சாறர் | 885 | ககசக |
| கடகரிது | 554 | எ௦ச |
| கடல்விரிபு | 733 | கூஉ௩ |
| கடுமுயற் | 675 | அரு௯ |
| கடுவிசை | 584 | எ௩கூ |
| கண்கட்டி | 999 | கஉஅஅ |
| கண்டத்தி | 708 | கூ௦௦ |
| கண்டபின் | 825 | க௦சஉ |
| கண்டபொ | 645 | அகரு |
| கண்டபோதி | 1135 | கசரு௮ |
| கண்டபோ | 1254 | கசூ௦௦ |
| கண்டவரி | 573 | எஉகூ |
| கண்ணீலக் | 867 | கககஅ |
| கண்ணுதல் | 826 | க௦சஉ |
| கண்மலர் | 931 | கககூஅ |
| கதிரவனு | 750 | கூசஉ |
| கதிரோனெ | 615 | எஎகூ |
| கந்தைபுடை | 1202 | கரு௨சூ |
| கம்பர்காத | 1142 | கசசூரு |
| கரந்தரும் | 1138 | கசசூ௦ |
| கரிப்பரும | 663 | அ௩கூ |
| கருங்கதிர் | 665 | அரு௯ |
| கருப்புவில் | 864 | கக௦ச |
| கருமுகிலெ | 810 | க௦உ௩ |
| கருவரை | 731 | கூஉ௦ |
| கரையில்க | 1035 | க௩சச |
| கலயனாரத | 848 | க௦அரு |
| கல்லின்புற | 988 | கஉஎசூ |
| கவருமீன் | 1121 | கசசச |
| கழைசொரி | 778 | கூஅ௦ |
| களியானை | 566 | எஉக |
| கறைவிளங் | 1082 | கச௦ரு |
| கனவுநிலை | 808 | க௦உக |
| கன்றொடு | 936 | கஉ௦ச |
| கன்னிநன் | 1152 | கசஎஎ |

| பாட்டு | பாட்டு வரிசை எண் | பக்க எண் |
|---|---|---|
| | கா | |
| காடனுமெ | 764 | கூசுசா |
| காதலன் | 1038 | கஙசாக |
| காதலால | 856 | கஎகடு |
| காப்பணி | 878 | ககஙங |
| காயல்வன் | 1114 | கசாஙசு |
| காய்வுற்ற | 986 | கஉஎங |
| காலனேக்கா | 847 | கஎஅச |
| கால்கழல் | 623 | எஅக |
| கானக்கடி | 978 | கஉசுசா |
| கானவர்கு | 662 | அஙக |
| கானவர்பெ | 828 | கஎசள |
| கானவர்போ | 770 | கூளஎ |
| கானில்வரி | 697 | அஅஅ |
| | கி | |
| கிளரொளி | 1168 | கசாகசு |
| | கு | |
| குடங்கையி | 833 | கஎசுஅ |
| குருதியினதி | 626 | எகூசா |
| குலவுந்து | 1012 | கஙஎஎ |
| குலவுமறை | 1220 | கடுசுங |
| குழல்செய் | 1087 | கசாஎக |
| குழைக்கலை | 876 | ககஙக |
| குழையணி | 587 | எசாஉ |
| குறவர்பன் | 1084 | கசாஎள |
| குறித்தபொ | 1198 | கடுஉங |
| குன்றவர | 652 | அஙஎ |
| குன்றவர் | 688 | அளசு |
| குன்றியை | 739 | கூஙஎ |
| | கூ | |
| கூருகிர்மெ | 1047 | கஙசுங |
| கூர்முனைய | 628 | எகூசு |
| | கை | |
| கைச்சிலைவி | 757 | கூடுடு |
| கைதொழு | 1072 | கஙஅள |
| கையினைத் | 575 | எஙக |
| கைவாளுட | 646 | அகடு |
| | கொ | |
| கொடுவினை | 1112 | கசாஙங |
| கொண்டல் | 1085 | கசாஎள |
| கொண்டும | 1240 | கடுஅடு |
| கொண்டுவ | 1025 | கஙஉங |
| கொந்தலர் | 1164 | கசாகக |
| கொம்பளை | 846 | கஎஅங |
| கொய்தபன் | 1137 | கசாடுக |
| கொழுவிய | 774 | கூளசா |
| | கோ | |
| கோடுகொ | 1118 | கசாசக |
| கோடுமுன் | 721 | ககஉ |
| கோட்டமி | 699 | அகஎ |
| கோட்டுமல | 1024 | கஙஉங |
| கோதிலாவ | 1144 | கசாசள |
| கோதின்மா | 1208 | கடுசாஅ |
| கோலப்பூ | 560 | எகஎ |
| கோலமுல் | 1092 | கசாகசா |
| கோலினிற் | 767 | கூசுசு |
| கோலுங்க | 1230 | கடுளசா |
| | ச | |
| சங்கங்கண் | 1003 | கஉகக |
| சங்கொடு | 581 | எஙங |
| சத்திதற்ப | 1159 | கசாஅடு |
| | சா | |
| சாயலார்க | 1184 | கடுகஉ |
| சாயுந்தளி | 969 | கஉடுங |
| சாயைமுன் | 1157 | கசாஅக |
| சார்வருந் | 777 | கூளஅ |
| சாலிநேடி | 912 | ககளக |
| சால்பாய | 972 | கஉடுள |
| | சி | |
| சிந்தும் | 1256 | கசுஎஉ |
| சிலபகல்க | 862 | கஎகள |
| சிலைமற | 696 | அஅசு |
| சிலையினைக் | 682 | அசுக |
| சிவலோக | 1058 | கஙளடு |
| | சீ | |
| சீதமலிகா | 1193 | கடுகஅ |
| சீரேறுமி | 1057 | கஙளசா |
| சீர்நிலவு | 1205 | கடுங்எ |
| சீர்மன்னு | 968 | கஉடுக |
| சீலமுடை | 1226 | கடுசுடு |
| | சு | |
| சுரமகளிர் | 958 | கஉஉஅ |
| சுழிப்புன | 1113 | கசாஙடு |
| சுற்றத்தார் | 640 | அஎக |
| | சூ | |
| சூழும்மிதழ் | 971 | கஉடுசு |
| | சே | |
| செக்கர்ச் | 982 | கஉசுக |
| செங்கண்வ | 705 | அகஅ |
| செங்கண்வி | 1260 | கசுஎசா |
| செங்கண்வெ | 827 | கஎசஉ |
| செங்கண்வெ | 853 | கஎகக |
| செந்தழ | 780 | கூஅங |
| செந்தினை | 684 | அளக |
| செந்தீமே | 1073 | கஙஅக |
| செந்நெலா | 904 | ககசுடு |
| செம்மாண் | 998 | கஉஅடு |
| செம்மை | 1207 | கடுசசு |
| செயலிப்ப | 1244 | கடுகக |
| செல்கின்ற | 1063 | கஙளள |
| செறிந்தவர் | 589 | எசாச |
| செறிவலித் | 1049 | கஙசுசு |
| சென்றணை | 946 | கஉகசா |
| சென்றம | 1250 | கடுசுசு |
| சென்றவரு | 883 | ககஙக |
| சென்னிய | 1213 | கடுடுங |
| | சே | |
| சேட்டாரு | 638 | அஎள |
| சேவடியி | 943 | கஉஎள |
| சேறணிதண் | 869 | ககஉஉ |
| சேனையுமா | 857 | கஎகடு |
| | சொ | |
| சொல்லு | 1093 | கசாகடு |
| சொன்னவு | 994 | அஅசா |
| | ஞா | |
| ஞாலமறிய | 1263 | கசுஎக |
| ஞானச்செய் | 893 | ககசஅ |
| | த | |
| தங்குமகில | 1224 | கடுசுசா |
| தஞ்சரணத் | 894 | ககசக |
| தஞ்சேசர | 568 | எஉக |
| தண்காஞ்சி | 1163 | கசாகஎ |
| தண்மலர | 671 | அடுசு |
| தந்தருளுமி | 1197 | கடுஉஉ |
| தந்திரத்த | 579 | எஙங |
| தந்தைநிலை | 703 | அகடு |
| தந்தையுமை | 677 | அசுசா |
| தம்பிரா | 604 | எகக |
| தம்பெருமா | 649 | அஉக |
| தம்பெருமா | 1069 | கஙஅடு |

| பாட்டு | பாட்டு வரிசை எண் | பக்க எண் |
|---|---|---|
| தம்மையணை | 1236 | கருஅ௦ |
| தலைப்பட்டா | 634 | அ௦ங |
| தலைமிசைச் | 773 | கூஎச |
| தளைத்தடம் | 1103 | கசஉரு |
| தள்ளுமு | 1027 | கஙஉகூ |
| தனுவொரு | 771 | கூஎ௦ |
| **தா** | | |
| தாதுசூழுங் | 1017 | கஙகச |
| தாயனாரெ | 907 | ககசுஅ |
| தாவில்செ | 1083 | கச௦ரு |
| தாழுஞ்சம | 981 | கஉசுகூ |
| தாழுஞ்செய | 995 | கஉஅங |
| தாளதொ | 1156 | கசஅக |
| தாளறுவன | 728 | கூகஅ |
| தாளில்வாழ் | 717 | கூ௦கூ |
| தானாள்விரு | 614 | எஎஅ |
| **தி** | | |
| திங்கள்சேர் | 753 | கூசச |
| திசைமயங் | 1199 | கருஉச |
| திசைமுழு | 964 | கஉஙரு |
| திண்படைவ | 631 | அ௦௦ |
| திருக்கைசெ | 921 | ககஅச |
| திருப்புன் | 1056 | கஙஎஉ |
| திருமகட்கு | 881 | ககஙரு |
| திருமலையின் | 791 | கூகூஅ |
| திருமேனி | 1194 | கருகஅ |
| திருவுடை | 1074 | கஙகூ௦ |
| தில்லைவாழ | 1075 | கஙகூ௦ |
| **தீ** | | |
| தீங்குகுறித் | 641 | அகக |
| தீங்குதீர்க் | 1150 | கசஎரு |
| தீதுகொள் | 967 | கஉசஉ |
| தீதுநீங்கிட | 1107 | கசஉகூ |
| தீம்பாலொ | 1210 | கருருக |
| **து** | | |
| துங்கநீண் | 834 | க௦சுகூ |
| துங்கமாத | 1098 | கசஉ௦ |
| துடிக்குற | 673 | அருஅ |
| துடியடிய | 735 | கூஉரு |
| துன்னுபல | 1132 | கசருரு |
| **தூ** | | |
| தூண்டுசோ | 1161 | கசஅஅ |
| தூயவெண் | 1111 | கசஙஉ |
| தூரியத்து | 582 | எஙங |
| **தெ** | | |
| தெய்வநிகழ் | 701 | அகூங |
| தெள்ளுத | 1036 | கஙசச |
| தென்றிசை | 723 | கூகச |
| **தே** | | |
| தேசுடைய | 1191 | கருகஅ |
| தேரொலிக் | 1190 | கருகஎ |
| தேவதேவ | 1130 | கசருஉ |
| தேவுமால் | 769 | கூசுஅ |
| தேனக்க | 865 | கக௦ரு |
| தேனாருந் | 607 | எசுரு |
| தேனிறைந் | 1086 | கச௦அ |
| **தொ** | | |
| தொடுத்த | 1259 | கசு௦ச |
| தொண்டக | 687 | அஎரு |
| தொண்டனா | 899 | ககருச |
| தொல்லைநா | 1106 | கசஉஅ |
| தொழுந்த | 598 | எருங |
| தொன்மைத் | 610 | எஎரு |
| **தோ** | | |
| தோள்கொ | 616 | எஅ௦ |
| **ந** | | |
| நங்கையுண் | 1129 | கசருஉ |
| நடமேபுரி | 1221 | கருசுச |
| நட்டம்புரி | 987 | கஉஎரு |
| நண்ணிமா | 720 | கூகஉ |
| நண்ணியவ | 913 | ககஎக |
| நண்ணியவொ | 858 | க௦சுசு |
| நண்ணுமி | 1019 | கஙகஅ |
| நம்முடைய | 704 | அகூசு |
| நலிவாருமெ | 959 | கஉஉகூ |
| நல்லசெங் | 918 | ககஎஅ |
| நல்லநவ | 1239 | கருஅச |
| நல்லபதமு | 797 | க௦௦ரு |
| நள்ளார்க | 612 | எஎஎ |
| நற்றவரா | 392 | ககசஎ |
| நற்றிறம்புரி | 1080 | கச௦உ |
| நனைமருவு | 1043 | கஉருஅ |
| நன்மைநீடி | 1079 | கச௦க |
| நன்றிபுரியு | 1217 | கருருசு |
| **நா** | | |
| நாடியகழ | 738 | கூஉஅ |
| நாணனுமன் | 752 | கூசச |
| நாணனே | 745 | கூஙசு |
| நாணனொடு | 802 | க௦க௦ |
| நாதரும்பெ | 1139 | கசசுஉ |
| நாமமூதூர் | 1018 | கஙகஎ |
| நாளும்பெ | 976 | கஉசுக |
| நாளைப்போ | 1062 | கஙஎஎ |
| **நி** | | |
| நிகழுமுறை | 1219 | கருசுக |
| நிலத்தினோ | 1031 | கஙஙசு |
| நிறைந்தநீ | 942 | கஉ௦எ |
| நினைத்தனர் | 820 | க௦ஙஎ |
| நின்றசெங் | 823 | க௦ச௦ |
| நின்றமுதுகு | 698 | அஅகூ |
| நின்றவரங் | 1064 | கஙஅ௦ |
| நின்றவிதி | 1252 | கருசுஎ |
| நின்றெங்கு | 715 | கூ௦அ |
| **நீ** | | |
| நீங்கும்மிர | 1000 | கஉஅகூ |
| நீடுதண்ப | 1105 | கசஉஎ |
| நீடுமன்பி | 1039 | கஙரு௦ |
| நீலமாமஞ் | 944 | கஉகக |
| நீவிநிதம்ப | 927 | கககூச |
| நீளிடைமுடு | 627 | எகூரு |
| நீளிடைவி | 732 | கூஉக |
| நீறுசேர்தி | 1096 | கசககூ |
| நீற்றலர்பே | 1042 | கஙருஎ |
| **நு** | | |
| நுதலின்க | 1013 | கங௦௦ |
| **நெ** | | |
| நெஞ்சமீச | 1134 | கசருஎ |
| நெடிதுபோ | 755 | கூருஉ |
| நெடியோன | 569 | எஉஉ |
| நெருங்குபை | 722 | கூகஙு |
| நெறிகொண் | 706 | கூ௦௦ |
| **நே** | | |
| நேசநிறைந் | 1265 | கசுஉஅ |
| **ப** | | |
| பகர்ந்துலகு | 1041 | கஙருச |
| பட்டவன | 793 | க௦௦௦ |
| பணிந்தெழுந் | 789 | கூகூசு |
| பணிபுவனங் | 957 | கஉஉஎ |
| பணிவுடைய | 873 | ககஉஎ |

| பாட்டு | பாட்டு வரிசை எண் | பக்க எண் |
|---|---|---|
| பண்ணின்ப | 1214 | கடுடுடு |
| பண்ணுறு | 583 | எஙஅ |
| பதவுகாலங் | 1231 | கடுஎச |
| பதுமநற்றி | 851 | க০அக |
| பயில்வடுப் | 661 | அஙக |
| பயில்வினி | 792 | ககஅ |
| பரவமேன் | 1253 | கடுகள |
| பரிவுறுசிந் | 924 | ககஅள |
| பலதுறைக | 734 | கஉங |
| பல்வேறுவா | 713 | க০சு |
| பழுதுபுகுந் | 788 | ககச |
| பன்முறையு | 996 | கஉஅடு |
| **பா** | | |
| பாகமருங் | 1167 | கசசுடு |
| பாங்கின்ம | 870 | ககஉங |
| பாசிலைப்ப | 686 | அளங |
| பாசொளி | 670 | அடுடு |
| பாதம்பர | 1015 | கங০ங |
| பாய்தலுமி | 574 | எங০ |
| பார்மிசை | 859 | க০கள |
| பாலனுமறை | 836 | க০எஉ |
| பாவியேன் | 818 | க০ஙங |
| பாவுங்கலி | 1223 | கடுசச |
| பாஜவிரி | 1044 | கஙடுக |
| பான்மையி | 681 | அசுஅ |
| **பி** | | |
| பிளவுகொ | 1094 | கசகசு |
| பிள்ளாதை | 1099 | கசஉக |
| பிறந்தபெரு | 877 | ககஙங |
| பிறந்துணர் | 1052 | கஙசுக |
| பின்மறவர் | 729 | கூகக |
| **பு** | | |
| புணர்ந்தவ | 1120 | கசசஙு |
| புண்டரிகம் | 608 | எளக |
| புயல்காட்டு | 868 | ககஉக |
| புரங்கடந் | 1187 | கடுகச |
| புரிந்தவர் | 596 | எடுக |
| புலரும்பொ | 1023 | கஙஉங |
| புள்ளுந்த | 1050 | கஙசுள |
| புறப்பட்ட | 619 | எஅங |
| பூனைமலர்மெ | 879 | ககங்ச |
| புன்மைச்செ | 985 | கஉள்ங |
| **பூ** | | |
| பூணுந்தொ | 1234 | கடுள்அ |
| பூதகணங்க | 1258 | கசி০ஙு |

| பாட்டு | பாட்டு வரிசை எண் | பக்க எண் |
|---|---|---|
| பூதியாகியபு | 1143 | கசசுசு |
| பூந்தண்பொ | 1206 | கடுசஙு |
| பூமகளுக்கு | 1172 | கடு০০ |
| பூமரும்புன | 1110 | கசஙக |
| **பெ** | | |
| பெருமைபி | 1242 | கடுஅடு |
| பெருமைபி | 1215 | கடுடுள |
| பெற்றியாற் | 657 | அஙசு |
| **பே** | | |
| பேறினியித | 829 | க০சஅ |
| பேறுவேறு | 1090 | கசகஉ |
| **பொ** | | |
| பொங்கரில் | 932 | கஉ০০ |
| பொங்கிய | 744 | கூஙடு |
| பொங்கியமா | 929 | ககஙசு |
| பொடிமூடு | 890 | ககசக |
| பொருட்டிரு | 556 | எ০எ |
| பொருபுலிப் | 672 | அடுஅ |
| பொருப்பி | 787 | கூகஙு |
| பொருவருஞ் | 659 | அஙக |
| பொற்களப | 1171 | கசகக |
| பொற்சிலை | 629 | எகஅ |
| பொற்றடவ | 690 | அளஅ |
| பொன்மலைப் | 552 | எ০க |
| பொன்றரத் | 842 | க০எஅ |
| பொன்றவழ | 585 | எச০ |
| பொன்னி | 1192 | கடுகஅ |
| **போ** | | |
| போதராநி | 917 | ககளஅ |
| போதுவர் | 761 | கூடுஅ |
| போமதித | 737 | கூஉஅ |
| போர்வலைச் | 719 | கூகக |
| போர்வைத் | 1054 | கஙஎ০ |
| மங்கலவிழவு | 562 | எகசு |
| போனவதிரு | 637 | அ০எ |
| **ம** | | |
| மங்கலமாஞ் | 884 | ககச০ |
| மங்கலவிழவு | 562 | எகக |
| மங்குல்வாழ் | 830 | க০சக |
| மங்கையர்க் | 1095 | கசகள |
| மடையிற்க | 1212 | கடுடுஉ |
| மட்டவிழ | 601 | எடுஅ |
| மண்ணிக்க | 1232 | கடுள்சு |
| மண்ணின்மி | 1189 | கடுகடு |

| பாட்டு | பாட்டு வரிசை எண் | பக்க எண் |
|---|---|---|
| மந்தரத்தும் | 952 | கஉகசு |
| மந்தாநிலம் | 973 | கஉடுஅ |
| மருங்குனின் | 768 | கூசுஅ |
| மருங்குபெரு | 898 | ககடுஙு |
| மருட்கொடு | 1116 | கசஙஅ |
| மருவியகால் | 960 | கஉங০ |
| மருவியதிரு | 835 | க০எக |
| மலைக்குலக் | 1141 | கசசுச |
| மலைபடுமணி | 679 | அசுடு |
| மலைவிழிப்ப | 1119 | கசசஉ |
| மல்கியவள | 680 | அசுள |
| மல்குமப் | 1088 | கசக০ |
| மல்லனீர்ஞா | 551 | சுகூக |
| மழுவுடைச் | 855 | க০கூச |
| மழைவளரு | 557 | எ০அ |
| மறைகளா | 1153 | கசஎஅ |
| மறையவர் | 1071 | கங்அள |
| மறையோர் | 1248 | கடுசுச |
| மற்றவரணை | 561 | எகசு |
| மற்றவரினை | 605 | எசுஙு |
| மற்றவர்தஞ் | 636 | அ০சு |
| மற்றவர்நி | 742 | கூஙங |
| மற்றவர்பிழி | 821 | க০ஙஅ |
| மற்றவர்ம | 845 | க০அஉ |
| மற்றவர்மொ | 577 | எஙஉ |
| மற்றவனுங் | 613 | எளஅ |
| மற்றவன்ற | 700 | அகஉ |
| மற்றவ்வூர் | 1046 | கங்சுஉ |
| மற்றினிநா | 648 | அகக |
| மற்றைம | 1216 | கடுடுஅ |
| மனந்தளரு | 901 | ககடுடு |
| மனைசாலு | 871 | ககஉச |
| மனைமருங்க | 915 | ககளச |
| மன்னவன்வ | 854 | க০கக |
| மன்னவன்ற | 590 | எசசு |
| மன்னியசிற | 555 | எ০டு |
| மன்னுகின் | 1154 | கசளசு |
| மன்னுந்தி | 1005 | கஉசுங |
| **மா** | | |
| மாகமார்தி | 754 | கூடுக |
| மாசறுசிந் | 920 | ககஅஉ |
| மாசுடம்பு | 1077 | கங்கங |
| மாடுவிரைப் | 926 | கககஉ |
| மாடொங்கு | 1010 | கஉகக |
| மாதங்கந் | 591 | எசக |
| மாதங்கமெ | 1002 | கஉசுச |

| பாட்டு | பாட்டு வரிசை எண் | பக்க எண் |
|---|---|---|
| மாமதின்ம | 553 | எ0ங |
| மாமுனிவர் | 801 | க00க |
| மார்பிற்சிறு | 709 | சு00 |
| மாறிலாத | 1146 | கசசுஎ |
| மாறிலாமகி | 863 | க0சுஎ |
| மாறிலூனமு | 811 | க0உங |
| மாறில்பெரு | 874 | ககஉஅ |
| மாறில்வன் | 1101 | கசஉங |
| மாறுபெற | 1166 | கசகஉச |
| மாறுமுதற் | 950 | கஉகசு |
| மானச்சிலை | 714 | கூ0எ |
| **மீ** | | |
| மின்பொலி | 1169 | கசகூஎ |
| மின்னிடை | 850 | க0அஎ |
| மின்னுசெஞ் | 908 | ககசுக |
| மின்னும்ம | 1011 | கஉகூசு |
| **மீ** | | |
| மீளமீளவி | 1241 | கஞஅடு |
| மீளுமோத | 1123 | கசசடு |
| **மு** | | |
| முகிலுரிஞ் | 1170 | கசசுஅ |
| முண்டங்கிறை | 887 | ககசக |
| மூத்திரையே | 949 | கஉகசு |
| மூந்தைமறை | 938 | கஉ0சு |
| மும்மைப்பு | 974 | கஙடுசு |
| முழுதும்பழு | 993 | கஉஅஉ |
| முன்புசெய் | 751 | கூசச |
| முன்புதிருக் | 803 | க0கக |
| முன்புநின்ற | 763 | கூசுங |
| முன்புபோன் | 916 | ககஎசு |
| முன்னவரை | 1204 | கடுஉசு |
| முன்னிருந் | 702 | அகூச |
| முன்னிலகம | 925 | ககஅஅ |
| முன்னின்ற | 965 | கஉங்சு |
| முன்னெற்றி | 707 | கூ00 |
| முன்னோளள் | 809 | க0உக |
| **மெ** | | |
| மெய்தரும் | 1117 | கசசுக |
| மெய்யன்பர் | 962 | கஉஙஉ |
| **மே** | | |
| மேகவொழு | 622 | எஅஅ |
| மேலாம்பெ | 1255 | கசு0க |
| மேலாறுசெ | 866 | கககச |
| மேல்கொண் | 564 | எகக |
| மேவநேர் | 786 | கூகூ |
| மேவலர்பு | 650 | அஉஎ |
| மேவுசெல் | 910 | கக்எக |
| **மை** | | |
| மைச்செறிந் | 656 | அஙடு |
| மைத்தடங்கு | 588 | எசச |
| **மொ** | | |
| மொய்காட்டு | 783 | கூஅஅ |
| மொய்வைத் | 970 | கஉடுச |
| **யா** | | |
| யாகநிலவு | 1209 | கடுடு0 |
| யாதொன்று | 839 | க0எஎ |
| யானேயினி | 1229 | கடுசுடு |
| **வ** | | |
| வடங்கொ | 1059 | கஙஎசு |
| வண்டுபாட | 1020 | கஙஉ0 |
| வண்ணவெ | 691 | அஅ0 |
| வந்தடைந்த | 1160 | கசஅஎ |
| வந்தணைந்த | 891 | ககசஎ |
| வந்தணைந்தவே | 900 | ககடுடு |
| வந்தழுதறி | 882 | ககஙஅ |
| வந்தவரழை | 571 | எஉஎ |
| வந்தவர்குரு | 814 | க0உக |
| வந்தழைத்த | 620 | எஅச |
| வந்துதிருக் | 798 | க00சு |
| வந்துதிரும | 785 | கூகூ |
| வந்துமிகை | 1264 | கசுக |
| வந்துற்றபெ | 979 | கஉசுசு |
| வந்துற்றை | 1006 | கஉகச |
| வயலெலா | 832 | க0சுஎ |
| வயல்வள | 1045 | கஙசுக |
| வருங்கறை | 781 | கூஅடு |
| வருமுறைப் | 668 | அடுங |
| வரும்புனற் | 1102 | கசஉச |
| வரும்புனற்பொ | 903 | கககுங |
| வரையுறை | 667 | அடுங |
| வலத்திருக்க | 824 | க0சஉ |
| வல்லாண் | 980 | கஉசுஎ |
| வளத்தினீடு | 905 | கககுசு |
| வளவனுர் | 597 | எடுங |
| வளவனுங் | 578 | எஙங |
| வள்ளலார்ம | 886 | கசசக |
| வள்ளலார்வா | 954 | கஉஉங |
| வன்சிறு | 1048 | கஙசுடு |
| வன்புலிக்கு | 653 | அஙஉ |
| வன்பெருங் | 595 | எடுக |
| வன்றிறலுந் | 758 | கடுடு |
| வன்றொடர்ப் | 718 | கூக0 |
| வன்னிலைம | 928 | கககடு |
| **வா** | | |
| வாங்கியதொ | 594 | எடுக |
| வாங்குவார் | 896 | ககடு0 |
| வாசமலர்ப் | 940 | கஉ0எ |
| வாசமென் | 1097 | கசஉ0 |
| வாம்பெரு | 1115 | கசஙஎ |
| வாயம்பால் | 795 | க00க |
| வாயிலெங்க | 1182 | கடுக0 |
| வாய்ந்தசீர் | 831 | க0சுடு |
| வாரணச்சே | 660 | அஙக |
| வாழ்பொற் | 1211 | கடுடுஉ |
| வாளியுந்தெ | 816 | க0ஙக |
| வாளின்ப | 611 | எஎசு |
| வாளொடுமீ | 625 | எகக |
| வானளிப்ப | 1032 | கஙஙஅ |
| வானிறைந் | 1203 | கடுஉசு |
| **வி** | | |
| விடையவர் | 843 | க0அக |
| விடையின் | 1147 | கசஎ0 |
| விண்ணவர் | 966 | கஉஙஎ |
| விண்பயில்பு | 860 | க0கஎ |
| விரவுபன்ம | 779 | கூஅக |
| விரிகடல்சூ | 875 | ககஉக |
| விரும்புமே | 1109 | கசஙஉ0 |
| வில்லொடு | 580 | எஙங |
| விழவுமலி | 1179 | கடு0எ |
| விழுந்தமழை | 1201 | கடுஉசு |
| விழுந்தவரெ | 815 | க0ஙக |
| விழுந்தெழுந் | 897 | ககடுஉ |
| **வீ** | | |
| வீரக்கழல் | 711 | கூ00 |
| **வெ** | | |
| வெங்கட்க | 1004 | கஉகூங |
| வெங்கட்புலி | 617 | எஅக |

| பாட்டு | பாட்டு வரிசை எண் | பக்க எண் | பாட்டு | பாட்டு வரிசை எண் | பக்க எண் | பாட்டு | பாட்டு வரிசை எண் | பக்க எண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வெங்கணைப | 729 | கூகசூ | வெம்மறக் | 756 | கூ௫உ | வேடர்தங்க | 741 | கூ௩உ |
| வெங்கண்வி | 624 | எகூ௦ | வெயிலுமி | 1178 | க௫௦எ | வேடர்தங்கோ | 678 | அசூ௫ |
| வெங்கதிர்வி | 689 | அஎசூ | வெய்யமா | 726 | கூகசூ | வேதவேதி | 1183 | க௫கக |
| வெஞ்சிலைக் | 725 | கூகசூ | வெல்படை | 654 | அ௩௩ | வேழக்கரு | 609 | எஎ௩ |
| வெஞ்சினவா | 633 | அ௦உ | வெள்ளிமா | 1127 | கசசகூ | வேழத்தரச | 1001 | கஉஅகூ |
| வெட்டுண்டு | 576 | எ௩க | வென்றிமட | 643 | அகஙு | | | |
| வெண்கோ | 941 | கஉ௦எ | வென்றிமால் | 563 | எகஅ | வை | | |
| வெண்ணீறு | 642 | அகக | வென்றிவா | 1186 | க௫கஙு | வைகலுமு | 914 | ககஎச |
| வெந்தழற் | 593 | எசகூ | வே | | | வைகறையு | 559 | எக௦ |
| வெம்புசின | 1175 | க௫௦௩ | வேடரைக்கா | 817 | க௦௩௩ | வையம்மு | 1008 | கஉகூசூ |


## முதற்பகுதியின் திருத்தங்களுடன் சேர்க்க

பக்கம் உ௫எ - பாட்டு - 224 - வரி 16 - திருப்பதிகம் பாடினார் - என்றதன் பின் (கோவலனான்முகன்) என்ற என்பது முதல் உ௫அ - பக்கம் 11-வது வரி சான்றுகளாம் என்பது வரைஉள்ள பகுதி முற்றிலும் நீக்குக. அதற்குப் பதிலாகத் - திருப்பதிகம் பாடினார் - அப்பதிகம் இப்போது அகப்படவில்லை. அது மறைந்ததுபோலும். "கோவலனான்முகன்" என்று தொடங்கும் இத்தலப்பதிகம் இப்போது பாடியருளியதாகக் குறித்துள்ளது தவறு. அது பின் ஒருமுறை நம்பிகள் திருநாவலூர்சென்று தரிசித்தபோது பாடியதாகும். ஏயர்கோனார் புராணம் 170 பாட்டுப் பார்க்க. இப்பதிகத்தினையும் குறிப்புக்களையும் ஆண்டு வைத்துக் கண்டு கொள்க. பலகாலம் பிரிந்து, பின் வந்து தரிசித்தபோது முன்னைச் சரித நிகழ்ச்சியின் நினைப்புக்கள் தமது திருவுள்ளத்தில் வரவே அக்குறிப்புக்களுடன் அப்பதிகம் அருளினர் என்று கொள்ளக் கிடக்கின்றது - என்று சேர்த்துக்கொள்க.

# இரண்டாம் பகுதியின் திருத்தங்கள்

| பக்கம் | பாட்டு | வரி | | |
|---|---|---|---|---|
| எ0o | 551 | 3 | வேற்றுமைத்தொகை | வேற்றுமை உருபு தொக்கது. |
| ,, | ,, | 12 | | மலர் - மலர்க்கூடை ; இலக்கணை. |
| ,, | ,, | 30 | ஒல்லையில் | ஒல்லை |
| எ0க | 551 | 25 | சோழர்வரைச் | சோழர்வரை |
| | | | | "பொன்னிமயக் கோட்டுப் புலி பொறித்து மண்ணுண்டான், மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்" (சிலப் - கள - ஆய்ச் - உள்வரி - 2) என்றது காண்க. (சேர்க்க) |
| ,, | ,, | 37 | அநபாயர்வரைச் | அநபாயர்வரை |
| எ0உ | ,, | 3 | | ஏனைய விற் கயல்களே வென்று ஓங்க என்பாருமுண்டு. |
| ,, | ,, | 22 | அரசாங்கத்தார் தமது | அரசாங்கத்தாரது |
| எ0ரு | 554 | 37 | | துறைகளாடும்—என்பதும்பாடம். |
| ,, | | 42 | அன்பிணன்றக்க | அன்பிணன்மிக்க |
| எ0சு | | 34 | | "அவ்வண்ணமாகிய வீசன்" (பொன் அந்தாதி) (நீக்குக) |
| எ0எ | 555 | ,, | வாழ்வதாகிய | வாழ்வதாகிய என்றலுமாம். |
| ,, | ,, | 4 | | தன்னில் மல்கும்—அன்புமிக்க—என்பனவும் பாடங்கள். |
| எ0அ | 556 | 15 | | இறைவருக் குரிமை—என்பதும் பாடம். |
| எக0 | | 40 | அடிகனோ— | அடிகளே |
| எகரு | 559 | 4 | | மொய்யலர் ; கமழ்முகம்—என்பனவும் பாடங்கள். |
| ,, | ,, | ,, | பூக்கூடை | பூங்கூடை |
| ,, | ,, | 19 | | தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும் பார்மலர் - இண்டைகட்டி வழிபாடு செய்யுமிடம் - (செவ்வழி - திருஞா - தேவா - கேதாரம் - 1 - (சேர்க்க) |
| எகசு | 560 | 7 | | பூக்கூடை—தண்டுங்கொண்டே—என்பனவும் பாடங்கள். |
| எகள | 561 | 34 | நவமி நன்னுள் | நவமி நன்னுள்—நவமி நாளின்—என்பனவும் பாடங்கள். |
| எகஅ | 562 | 22 | மெற்பாகரை | மெற்பரிசரை |

| பக்கம் | பாட்டு | வரி | | |
|---|---|---|---|---|
| எஉ0 | 563 | 14 | பிடித்துடன்— | பிடித்துடன்—வன்றிறல்—என் பனவும் பாடங்கள். |
| ,, | | 24 | என்றுவமித்ததுக் | என்றுவமித்துக் |
| எஉக | 564 | 24 | | களிறுபூண்ட—என்பதும் பாடம். |
| எஉங | | 17 | அவதா—அவிதா | அவிதா—அவிதா |
| எஉச | 566 | 3 | | நீடுரியாய்—என்பதும் பாடம். |
| எஉசு | 569 | 31 | மொழியா— | மொழியா, முதல்வா—என்பன வும் பாடங்கள். |
| எஉஎ | 570 | 10 | | அடியார்க்குக் களிறு வழிப்பகை யாதல் கோச்செங்கட் சோழ நாயனுர் சரிதத்தும் காண்க. "மலையே வந்து விழினும் மனிதர்காள்!, நிலையினின்று கலங்கப்பேறுதிரேல், தலைவ னுகிய வீசன் றமர்களைக், கொலைகை யானைதான் கொன் றிட கிற்குமே" என்ற தனிக்குறுந்தொகையும் கருதுக. இனி, இங்குக் களிறு - ஐம்புலக்களிறு எனவும், இப்பொருள் "தொண்டரஞ்சு களிறும் மடக்கி" என்னும் தேவாரத்தாற் பெறப்படும் எனவும், ஐம்புலனை வழிப்பகை என்பது "இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும் ஏழையேற் கென்னுடன் பிறந்த, ஐவரும் பகையே" என்ற திருவிசைப் பாவினுல் விளக்க முறு கின்றது எனவும் கூறுவர் திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A., அவர்கள். ஐம்புலன் யாவர்க்கும் பகைமையாயினும் அடியார் அவற்றைப் பகையென் றுணர்ந் தொழுகுவர் என்க. (சேர்க்க) |
| எஉஎ. | 570 | 16 | | கொன்றதை—என்பதும் பாடம். |
| ,, | ,, | 32 | சார்ந்தார்க் | சேர்ந்தார்க் |
| எஙஉ | 576 | 28 | வீழும்படிச் சிலர் | வீழும்படி சிலர் |
| எஙடு | 579 | 37 | பதாகை போர்ப்ப— | பதாகை போர்ப்ப—வெந்திறற் நேரும்—என்பனவும் பாடங்கள். |
| எசஉ | ,, | 12 | மலையோய் | மாலையோய் |
| எசஅ | | 6 | எறித்ததே | எறிந்ததே |
| ,, | | 35 | தங்கள் தம்மிடத்து | (நீக்குக) |
| எடு0 | | 40 | வாய்கி | வாங்கி |
| எடுச | | 14 | என்று காண்க | என்றது காண்க |
| எடுஅ | | 17 | இங்குதிரு | இங்குத்திரு |
| எடுக | | 9 | என்ரூர். | என்ரூர்; |
| ,, | | 26 | வெளிப்பட்ட | வெளிப்பாடாகியீ |
| எசூஉ | | 43 | நிறைந்தார் என | நிறைந்தாரின் ஏன |
| எசூசு | | 2 | பூப்பரித் | பூப்பறித் |
| ,, | | 18 | பெற்ற | பெற்று |

| பக்கம் | பாட்டு | வரி | | |
|---|---|---|---|---|
| ,, | | 8 | இதுகண்டு | அதுகண்டு |
| எஎக | | 13 | வாழ்வு பெறும் | வாழ்வு பெறும்படி |
| எஎடி | | 15 | பாவங்களே | பாசங்களே |
| எஎக | | 17 | ஏகாரம் தேற்றம் | ஏகாரம் பிரிநிலை |
| எஅக | | 5 | கோபத்தையுடையனும் | கோபத்தினால் |
| ,, | | 37 | வழைத்தானென் | வழைத்தாரென் |
| எஅசு | | 36 | அதனதற்கேற்ற | அவ்வவற்றிற்கேற்ற |
| எஅஎ | | 34 | உறைத்தனர் | உரைத்தனர் |
| எஅசு | | 34 | கழல்காலிற்கட்டிய எனமாற்றுக. | (நீக்குக) |
| எகo | | 24 | இயல்புமுடையன | இயல்புமுடையனவாதல் |
| எகஉ | | 15 | பிறரருடன் | பிறருடன் |
| எகஎ | | 2 | போன்றனர் | போன்றவராகிய வீரர் |
| ,, | | ,, | இவ்வாறுள்ள வீரர் எண்ணிறந்தோர். | எண்ணிறந்தோர் |
| ,, | | 9 | நேர் உருவ | நேர் உரம் உருவ |
| அoஅ | | 20 | அலமர | அலமா |
| ,, | | 23 | வஞ்சனையான் | வஞ்சனையால் |
| அகஅ | | 11 | பழிதொழில் | பழித்தொழில் |
| அகசு | | 9 | அவ்வுள்ளத்தினுள்ளத்தில் | அவ்வுள்ளத்தில் |
| அஉக | | 3 | பொருந்திரைப்பாரும் | பொருத்தி யுரைப்பாரும் |
| அஉஉ | | 2 | வாயினினின்று | வாயிலினின்று |
| அஉச | | 22 | கவலாது | கவராது |
| அஉங | 649 | 18 | | நாயனார் சரித முழுவதும் சித்திரமாகக் கோயிற் சுவரில் எழுதப்பட்டுள்ளது (சேர்க்க) |
| | 676 - 691 - 702 - 744 - 753 - 773 | | | இப்பாட்டுகளுக்கு * நட்சத்திரக் குறியிட்டுக் கொள்ளலாம். |
| கஎஎ | 776 | 17 | நாட்போதில் | நாட்போதின் |
| கஎஅ | ,, | 12 | செய்தாரிலர் | செய்திலர் |
| கஎக | 777 | 34 | உண்ணவந்தான் | உய்ய வந்தான். |
| கஅக | 778 | 21 | எழுவாய் தொக்கிநின்றது | எழுவாய் வருவித்துரைக்க. |
| கஅஉ | 779 | 15 | சூரியனுற் றுரத்தப்பட்ட இருளும், | சூரியனுற் றுரத்தப்பட்ட பகல் இருளும் |
| ,, | ,, | 16 | சந்திரனுற் றுரத்தப்பட்ட இரவும் | சந்திரனுற் றுரத்தப்பட்ட இரவு இருளும் |
| ,, | ,, | 34 | இல்லே யென்றுராயிற்று | இல்லேயென்பதாயிற்று. |
| கஅச | 780 | 18 | பிறவிப்பயனில்லையாய்ஒழியும் | அவ்வுயிர்க்குப் பிறவிப் பயனில்லையாய் ஒழியும். |
| கஅடி | ,, | 6 | ஒரு பொருளில்லே | ஒருகாலமில்லே. |
| கஙக | 784 | 19 | மருந்தென்றூர் | மருந்தென்றூர்; உருவகவணி. |

| பக்கம் | பாட்டு | வரி | | |
|---|---|---|---|---|
| ககூக | ,, | 36 | சத்தாயுள்ள சிவமாதலின் .....நிற்பவர் | சத்தாயுள்ள சிவமாதலின் அறிவுச் கறிவாகிய அந்தச் சிவத்தை அச் சிவனருளே கண்ணுகக் கண்டு நிற்பது இவர் தன்மையாம். |
| ககூஉ | 786 | 7 | தேவதேவீசனே | தேவதேவேசனே |
| ,, | ,, | 22 | தேவர்க்கெல்லாந்தலைவர் | தேவரை நடத்துபவர் |
| ,, | ,, | 24-26 | பண்புத் தற்கிழமை | செயப்படுபொருளில் வந்தது. இத னைக் கர்மணிசட்டி என்பது வட வர் வழக்கு. "சிந்தையை யடக்கியே சும்மா விருக் கின்ற" (தாயுமானர்) என்பதுகாண்க. சிந்தையினடக்க மாவது புறப்பொருள்களைப்பற்றிய சங்கற்ப விகற்பஞ் செய்யும் சிந்தையைச் சிவன்பால் வைத்தல். "சிந்தனை நின் றனக்காக்கி" என்ற திருவாசகம் காண்க. "சிவாநு பவஞ் சுவாநுபூதிகமாம்" என்ற சித்தியார் உரை பார்க்க. |
| ,, | ,, | 37 | மிகுதி உணர்த்திற்று | மிகுதியை உணர்த்திற்று. |
| ககூஉ | 786 | 15 | இதற்கு மேலும் தூணை | இதற்குத் தூணை |
| ,, | ,, | 24 | பிரித்துரைத்தலுமாம் | பிரித்துரைத்தலுமாம். பவுட்க ராகமத்தில் "பகவன் தேவதே வேச ப்ரஹ்ம விஷ்ணவிந்த்ர நாயக" என முதலில் வரும் சுலோகத்துக்கு, "தேவதேவா" என்பதனை உம்மைத் தொகையாகக் கொண்டு, முதல் தேவபதம் பிறப்பால் தேவரையும், இரண்டாவது தேவபதம் கர்ம தேவரையும் உணர்த்துமெனவும், ஈச என்பது அவ்விரு வகைத் தேவரையும் நடத்துவோனே எனவும் பொருள் கூறியும்; பின்னர், முதல் தேவபதத்தைத் தனிச் சொல் லாகக்கொண்டு, (தீவ்ய இதி தேவ:—விளங்குகின்றவன் தேவன்) ஸ்வாநந்தய பரிபூர்ண :—நித்திருப்தன் என்று பொருள் கூறியும்; தேவேச ப்ரஹ்ம விஷ்ணவிந்த்ர நாயக என்பதற்கு தேவ தேவர்களாகிய வாசவனுதி யர்க்கு, ஈச - அதிபதிகளாகிய, பிரம்ஹ விஷ்ணவிந்த்ர நாயக - அயன், மால் முதலியோரை நடத்துபவனே என்று உரைகூறியும் விரித்துரைத்தனர் உமாபதி சிவாசாரியார். இக்குறிப்பு ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் எழுதியது. |
| ககூடு | 788 | 4 | வழக்கப்படிச் செய்யும் | வழக்கப்படி செய்யும் |
| ககூஅ | 791 | 28 | ஒளித்து நின்று | ஒளியின்கண் நின்று |
| ககூக | ,, | 4 | இருமலைகளிடையே | இருமலைகளினிடையே |
| ,, | ,, | 20 | | ஒளி - மறைவிடம் (சேர்க்க) |
| கஂஂஉ | 796 | 13-14 | கொண்டு சென்று..... .....வைத்ததுபோல | எண்ணிறந்த தேவர்களுக்கு இடு கின்ற உணவைக் கொண்டு |

| பக்கம் | பாட்டு | வரி | | |
|---|---|---|---|---|
| | | | | சென்று ஊட்டுகின்ற சிவந்த எரிக் கடவுளது வாயிலேவைத் ததுபோல. |
| ,, | 794 | 25 | என வந்தது | என நின்றது. |
| கஂஂஙூ | 795 | 34 | சரிதச் சுருக்கமும் | சரித சுருக்கம். |
| கஂஂச | 796 | 3-4 | உணவை ஊட்டும் | உணவைக் கொண்டு ஊட்டும். |
| ,, | ,, | 8 | தேவன் | தேவர் |
| ,, | ,, | 25 | மெய்யும் | உருவு |
| ,, | ,, | 32 | அதற்குச் | அதனை |
| கஂஂஙி | 797 | 21 | (திண்ணனார்) | திண்ணனார் |
| கஂஂஎ | 799 | 38 | கூறுவராய் | கூறுவாராய் |
| கஂஂஅ | 800 | 38 | அடுத்து வருதல் | அடுத்துவருவது |
| கஂசகூ | 829 | 20 | | இது பெண்ணெருபாகனது வளையலணிந்த இடக்கை என்று காளத்தியில் உள்ள வடமொழிக் கல்வெட்டுக் கூறுகிறது. (சேர்க்க) |
| கஂசுடி | 831 | 28 | காதலிக்கப்பட்டவர் | காதலிக்கப்பட்டவள். |
| ,, | ,, | 35 | கடவூர் - கடக்கும் ஊர் | கடவூர் - அமிர்த கடத்தில் இறைவர் எழுந்தருளியுள்ளவூர். |
| கஂசுகூ | 830 | 4-5 | பிறவினைப்பொருள் கொள்க | பிறவினைவிகுதி தொக்கது. |
| கஂசுகூ | 833 | 23 | இடமுடைய - | படுதல் - அகலமாதல். இடமுடைய - இடமகன்ற என்றலுமாம். "இடம்பட வீடெடேல்" என்றது காண்க. |
| ,, | ,, | 32 | அவர்களது நிலங்களே அவராணையின் ஒழுகி | அவராணையின் ஒழுகி அவர்களது நிலங்களே |
| கஂஎக | 835 | 15 | நல்லொழுக்க | சைவவொழுக்க |
| ,, | ,, | 40 | குடம் | கடம் |
| கஂஎஉ | ,, | 16 | சிந்தையார் - ஆரும் | சிந்தையார் - என்றதை ஆரும் |
| கஂஎஙூ | 836 | 7 | ஆணவம் உள்ளவழி | ஆணவ மறைப்பு உள்ளவழி |
| ,, | ,, | 8 | ஆணவம் கெட்டுத் | ஆணவம் நீங்கித் |
| ,, | ,, | 21 | என்று பாராட்டினர் | என்றும் பாராட்டினர். |
| கஂஎச | ,, | 9 | பகுதிகள் | பொருள்கள் |
| ,, | ,, | 10 | இறைவன் | இறைவர் |
| கஂஎடி | 837 | 9 | இது உண்மைநிலை யறியாதார் கூற்றேயாமென்க | இஃது உண்மைநிலை யறியாதார் விஞ்ஞேயாமென்க. |
| ,, | ,, | 14 | இன்பதன்பங் | இன்பத்தன்பங் |
| ,, | ,, | 20 | குறைவில்லாதபடி | குறைவில்லாத தன்மை |
| ,, | 838 | 33 | பாடு - தொழிற்பெயர்விகுதி- | (நீக்குக) |
| ,, | ,, | 45 | முற்றும்மை..... .....குறித்தது | முற்றும்மை நல்ல நிலங்களினும் ஒன்றும் எஞ்சாமை குறித்தது. |

| பக்கம் | பாட்டு | வரி | | |
|---|---|---|---|---|
| கoஎசு | ,, | 38 | அடிமைகளைப் பின்னர்க் | அடிமைகளைக் |
| கoஎள | 839 | 37 | சுமங்கிலி | சுமங்கலி |
| கoஎள | 839 | 42 | சுமங்கிலி | சுமங்கலி |
| ,, | ,, | 43 | என்றதனலும் அறிக | என்றதனலும், "சசிதேவி மங் கல்ய தந்து ரட்சாபரண க்ருபா கர" என்ற கந்தரலங்காரத்தா லும் அறிக. |
| கoஎஅ | 841 | 22 | வைத்திருந்தும் | வைத்தும். |
| கoஎக | 840 | 5 | கூறுகின்றபடி | கூறுகின்றதனே |
| ,, | ,, | 18 | புறம்பாயின | புறம்பானவை |
| ,, | ,, | 28 | உறுதிபற்றி | தெளிவு பற்றி |
| ,, | ,, | 30 | எதிர்மறை குறித்தது | எதிர்மறை |
| ,, | ,, | 32 | எல்லாராலும் | எவராலும் |
| கoஅo | 842 | 5 | | காரணமாகிய மெய்ப்பொருளைக் காண்பார்க்குக் காரியமாகிய வேற்றுவிகாரங் காட்சிப்படா தாகலின் தாலி பொன் எனப் பட்டது. (சேர்க்க) |
| கoஅக | 843 | 17 | எல்லா முன் உடைமையே | "எல்லாமுன்னுடைமையே |
| ,, | ,, | 33 | | ஆர்த்தல் - கட்டுதல். அஃதாவது ஏனையவற்றைப் பந் தித்துத் தான் மேம்படுதல். |
| ககடுச | 898 | 10 | திழுவெழு | திருவெழு |
| ககசo | 925 | 38 | | தண்டலை நீணெறிக் கோயிலில் நாயனார் திருவுருவம் பத்தினியா ருடன் வைத்து வழிபடப்பெறு கின்றது. (சேர்க்க) |
| கஙஙo | 1027 | 12 | அப்புராணங்களுள் | அவ்வப் புராணங்களுள் |
| ,, | 1028 | 19 | இருவரும் அறியமாட்டாதே | இருவராலும் அறியப்படாது |
| ,, | ,, | 30-31 | அவர்கள் அறியவொண் ணுமை | அவர்களால் அறியப்படாது |
| கஙஙஉ | 1029 | 19 | மீளாநிலை | மீளாநிலை. பேரரவியற்கை என்ற தும் இது. |
| கஙஙக | 1030 | 4 | அதிக்கும் | அதித்த |
| ,, | ,, | 23 | இனிவரும் | இனி அடுத்துவரும் |
| கஙஙச | ,, | 9 | விதிவிலக்குகளை | விதிவிலக்குக்களை |
| கஙஙடு | ,, | 23 | மேலுயிர்த்திப் | மேலுயர்த்திப் |
| கஙஙஅ | 1032 | 40 | | "வேள்வி நற்பயன் வீழ்புன லாவது" (சேர்க்க) |
| கஙசடு | 1035 | 43 | | "மீத்துடை நெடுங்கயம், தீப்பட மலர்ந்த, காந்த ளொண்பூ வடர் |

| பக்கம் | பாட்டு | வரி | |
|---|---|---|---|
| | | | தலோம்பி" பெரும்பாண் 289 - 290 (சேர்க்க) ✓ |
| கஉடுக | 1040 | 38 | சூலப் படையினராகிய சிவபெரு மானைக் குறித்துத் தை அமா வாசையில் ஒருபோதுண்டு காக்கும் விரதம் சூல விரதம் என்பது ஆகமம். இது சிவ விரதமெட்டனுள் ஒன்று. "கொல்லுறு சூலவிடை விரதமெனு மெட்டுஞ் சிவவிர தங் குணிக்குங் காலே" என்பது பிரமாணம். (சேர்க்க) ✓ |
| கஉடுஎ | 1042 | 24 | "மலையா ரருவித் திரண்மா மணி யுந்திக், குலையாரக் கொணர்ந் தெற்றி" - (துறையூர் - நம்பி கள்.) (சேர்க்க) ✓ |
| கஉடுஅ | 1042 | 11 | ஆசிரியரது மரபுங் ஆசிரியரது கவிமரபுங் ✓ |
| கஉஎசு | 1059 | 31 | இவ்வாறே தில்லையில் தசதீர்த்தங் களுள் ஒன்றுகிய (3-வது) சூல தீர்த்தம் தூர்ந்து மறைந்துபோயினதை வியாக்கிரபாதர் உளக்கண்ணுற்கண்டு புதுப்பித்ததும் அதனுல் அது புலிமடு என வழங்கப்படுவதுமாகிய வரலாறும் காண்க. (சேர்க்க) |
| கசடுo | 1127 | 12 | வெள்ளிமலையாகிய கயிலே ✓ என் பாருமுண்டு. (சேர்க்க) ✓ |
| " | " | 44 | திறன் - நெறி - வழி ✓ (சேர்க்க) |
| கசடுக | 1128 | 41 | ஆதரித்து வழிபடப்பெற்ற (2) என்ற நம்பிகள்தேவாரங்காண்க. ✓ (சேர்க்க) |
| கசடுஙூ | 1130 | 31 | என்றிறைஞ்சி—என்பதும்பாடம். ✓ (சேர்க்க). ✓ |
| கசடுடு | 1131 | 5 | "சிரக்கண் வாய் செவி மூக்குயர் காய மாகித் தீவினே தீர்த்தவெம் மானே" (தக்கேசி - கோலக்கா - 9 - நம்பிகள்) "மூக்கு வாய்செவி கண்ணுட லாகிவந், தாக்கு மைவர்த மாப்பை யவிழ்த்தரு, ணேக்கு வானமை நோய்வினே வாராமே, காக்கு நாயகன் கச்சி யேகம்பனே" ✓ (குறுந் - 7) என்ற தேவாரங்கள் காண்க. (சேர்க்க) ✓ |
| " | " | 17 | வழி - திறன் - "ஆகமத் திறன் எலாம்" 1127. பேதம் - வகை; வினைக்கேற்ப வரும் உடலின் வகை. (சேர்க்க) ✓ |
| " | " | 26 | பொருப்பில் - பொருப்பினே இல் லாகவுடைய என்ற லுமாம். (சேர்க்க) ✓ |

| பக்கம் | பாட்டு | வரி | | |
|---|---|---|---|---|
| கசடுஎ | 1133 | 21 | | அன்பரிடத்துச் சிவத்தை விளங்க விளைவிக்கச் செய்வது (விளை ஆட்டு) (சேர்க்க) |
| ,, | ,, | 28 | | "சத்தியு ளாதியோர் தையல்பங் கன்" (ஆளுடையபிள்ளையார் - இராமனதீச்சரம்) (சேர்க்க) |
| கசடுஅ | 1334 | 4 | | வஞ்சம் - பொய். பொய் நீக்கிய உண்மை வடிவான என்றலும் பொருந்தும். (சேர்க்க) |
| கசசுo | 1138 | 17 | விதந்தோதினர் | விதந்தோதினர். "நறைமலிதரு மலரெடுமுகை நகுமலர்புகை மிகுவளரொளி, நிறைபுனல் கொடு தினைநினைவொடுநியதமும் வழி படுமடியவர்" (நட்டபாடை சிவபுரம்-4-சம்பந்தர்). (சேர்க்க) |
| ,, | ,, | 22 | | "கம்பைக் கரையே கம்பம்" இந் தளம் - 5 - சம்பந்தர். (சேர்க்க) |
| கசசுக | 1138 | 10 | பெருகத், தலையினுல் | பெருக, ஒப்பற்றவகை விரிந் தெழுந்த பேரன்பினுல், தலையி னுல் |
| கசசுஉ | 1139 | 5 | பொழுதின் | பொழுதிற் |
| கசசுசு | 1143 | 37 | ஆராயின்றது என்க. | ஆராய நின்றது என்க. இறைவ னுர் அளக்கவந்த மாதவம் என்று கூட்டி யுரைத்தலுமாம். (எனச் சேர்க்க) |
| கசசுகூ | 1141 | 36 | தீண்ட | தீட்ட |
| கசஎஅ | 1153 | 42 | என்பது தேற்றம். | என்பது தேற்றம். தளிகளெண் ணிறந்தன—என்பதும் பாடம். "கச்சிப் பலதளியும் கயிலாய நாதனையே காணலாமே" (திருத்தாண்டகம்.) கச்சிக் கயிலாயநாதர் கோயில் கயிலையின் காட்சிபோலக் கட்டப்பட்டதென்றும், "காடவர் கோமான் கச்சிக் கற்றளி யெடுத்து" (பூசலார் புரா - 9) என்ற கோயில் இதுவே என்றும், இவர் இராச சிம்மனென்னும் காடவ அரசர் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுப. (எனச் சேர்க்க). |
| கசஅடு | 1159 | 31 | கூறுதல் காண்க. | கூறுதல் காண்க. "அணிய மரர்க் கிறை காப்பதாய கடிபொழி லே கம்பம்" (குறுந் - 7). (சேர்க்க). |
| கசஅஅ | 1161 | 38 | யுண்டு. | யுண்டு. "சமயமவை யாறினுக் குந் தலைவன் முன்காண்" (7) கச்சி- தான் - (சேர்க்க). |

| பக்கம் | பாட்டு | வரி | | |
|---|---|---|---|---|
| கசகக | 1163 | 18 | கூட்டுக. | கூட்டுக. "ஆழ்கிடங்கும் சூழ் வயலு மதிலும்" (நம்பி - கச்சி-நெறிக் - 8.) (சேர்க்க). |
| கடிoஉ | 1173 | 24 | காண்க. | காண்க. "விண்ணிடை விண்ண வர்கள் விரும்பிவந் திறைஞ்சி யேத்த" (மேற்றளி - நேரிசை சேர்க்க). |
| கடிசச | (தொகை) | 14 | | அம்மையான் - மோக்கத்தைத் தருவோனுகிய இறைவனது; அடிச்சண்டிப் பெருமானுக்கு - திருவடி யடைந்த சண் டேசுர நாயனுர்க்கும் எனவும், அம்மையான் - சேய் மைத்தாய மோட்சத்தைத் தருவோன் - பெருமான் - தலைவர் எனவும் கூறுவர் க. சதாசிவம் செட்டியார். (சேர்க்க) |

## செய்யுளணிக் குறிப்புக்கள்

| பக்கம் | வரி | | |
|---|---|---|---|
| xxiv | 9 | அறியா - 875 | நீக்குக. |
| | ,, | 1180 | 1190 |
| | 18 | கின் | கு |
| | 21 | 803; | நீக்குக |
| | 23 | (ஆ) | நீக்குக |
| | 27 | சிவத்தைச்சார அணைபவர் போல - 732; | நீக்குக |
| | 30 | 796; | 796; வேதகத் திரும்பு பொன்னுற்போல் - 803; |
| | 32 | கோதிலாவமுதனையவள் - 1194 | நீக்குக |
| | 40 | ஆர்கலி ஏழுமொன்றுய் மன்னிய ஒலியின் - 603; | நீக்குக |

உ

சிவமயம்

# அருஞ்சொற்றொடரகராதி

[எண்கள் - பாட்டு வரிசை எண்]


அ

அகலமிதித் தோடி 785
அகல்பாறை 1016
அகழி 1164
அகன்குடிச் சீறூர் 664
அகன்பணைநீர் 1041
அகன்புறவு 935
அகிலமீன் றளித்த 1027
அகிலயோனி 1161; 1224
அகில் 1098
அக்கொடுபன் மணி 708
அங்கணரடியார் 592
அங்கணர் 560
அங்கமாறு 1218
அங்கயற் கண்ணி 1140
அங்குக்கேட்ட தொன்று 589
அங்குலி 938
அசைவிடாது 954
அசைவுடைய 1199
அச்சந் தாய் தலையன்பின் 574
அச்சமு மருளும் 656
அச்ச மெதிர் நீக்கி 1231
அச்சேரி 741, 755
அஞ்சலி 894; 921
அஞ்சு வண் கரம் 1158
அஞ்செழுத்து 1134
அடகு 915
அடல்விடை யேறு 644
அடற்சிலை யாண்மை 690
அடாதன வடுத்தபோது 557
அடிச்சிறுதளிர் 673
அடிச்சுவட் டின் 723
அடித்தளர்வு 669; 735
அடித்தலம் 894
அடித்தொண் டர் 611
அடித்தொண் டின்நெறி 1052
அடிநீழல் 1029
அடிபிரியா 737
அடிமைத்திறம் 980; 1033
அடியவர்தந் தனித் 1192
அடியார் 874
அடியாரை யலைத்த 992
அடியார்களில் 569
அடியார் செய் தன 1264
அடியார் பெருமை 1265
அடியொற்றி 792
அடுத்ததாதை 1259
அடுத்ததென் கொல் 1129
அடுத்தவினைத் 1180
அடை 1212
அடைமே லலவன் 1022
அணங்கயர் வன 1084
அணங்காடல் 660
அணங்கு 894
அணங்குறை வாளை 802
அணங்குடை யாட்டி 716
அணிநடை 1122
அணிமிடை கரை 749
அணியேகாம் பரம் 1204
அணைதொறு மென்மேல் 746
அணைத்தருளி 1259
அணையவொட் டாது 565
அணைவிப்பார் 1189
அணைவுறுபிணை 735
அண்டமாந் திரு 1149
அண்டர்பிரான் 645; 1261
அண்டர்பெரு மான் 1020; 1240
அண்ணலம் புரவி 583
அண்ணலார் 1128
அண்ணலார்க் கரம் 796
அண்ணலைப் பிரிய 759
அண்ணல் 666
அதரம்வைத் தூத 948
அதர்நல்லன 1231
அதற்படுகாதல் 659
அதிசயம் 1157
அதிர்வு 1175
அதுக்கி 774
அதுநோக்கும் 1256
அத்தனுக்கென் 812
அநபாயன் 1213
அந்தணனார் பூசை 798
அந்தமில்புக ழான் 593
அந்தரதுந்துபி 1073
அந்தரத்தகல மெல்லாம் 579
அந்தரத்து 952
அந்தவுடம்பு தன்னுடனே 1264
அந்தி தொழுது 1249
அந்திபடுவது 1197
அந்திப்பிறை 977
அந்திமாலை யணை 776
அந்தமிலா வானந்த 1076
அந்தமிலுண வின் 684
அந்நிலையே 1204
அந்நின்ற தொண்டர் 647
அபயன் 1213
அபராதம் 592
அபிடேகம் 1008
அமண்செய லான 1012
அமண்புகல் 991
அமரநாட்ட வர் 1155

அமர்துஞ்சுபி 663
அமரோசை 949
அமர்ந்தருள் செயல் 1038
அமர்மேற் சென்று 615
அமர்வினைத்தாற்620
அமுதவாக்கு 827
அமுது செய்வித்த 775
அமைச்சர் 994
அம்பல நிறைந்தார் 604
அம்பலவர் திருவாயில் 1068
அம்பல வாணரன்பர் 588
அம்பிகாவனம்1136
அம்பிகை 1126
அயலிடைவேறடி 1045
அயல்மற்றொருவன் 1244
அயல் வரைப்புலம் 685
அயல்வழியடைத்த 552
அயற் புலங்கவர்ந்து 655
அயனூர்தி 1175
அயன்போய் 1006
அயிலுடைத்தடக்கை 661
அயில் 1165
அயில் கொள்முக்குடுமி 1040
அரசமாவீதி 583
அரசாளுரிமை1009
அரணியினில் 794
அரமியங்கள் 1172
அரம்பையர் 1089, 1090
அரவம் 1175
அரவமேவும் 1253
அரவுமிழ்ந்த 778
அரனுர்க்கு 1251
அரனுர்மகனுர்1264
அராவிரைக்க 1190
அரிக்குறுந்துடி 663
அரிதாரம் 697
அரிதினீங்கி 763
அரிப்பிணவு 658
அரிமெல்லணை 1011
அரியறியா 875
அரியாசனம் 1004
அரியேற்றில் 618
அரிவாள் 918
அருகந்தர்திறம் 980
அருகுசார்ந்தருகி 1235
அருங்கலம் 932
அருங்குடியிருப்பு 685
அருச்சனைபுரிய 1128
அருச்சித்திடப்புக 1257
அருட்கரு 1133
அருட்கருணை 963
அருட்பெருங்கருணை 921
அருட்பேரரசு 1015
அருத்தியினுல்1056
அருந்தமிழ் (பொருளிலக்கணம்) 1095
அருந்தவப் பெருமை 1038
அருந்தவம் புரிய 1078
அருமறைகள் 1223
அருமறைசூழ் 1074
அருமறைப்பயனுகிய 1037
அருமறைப் பொருளா 600
அருமறையுருத்திரம் 1034
அருமறை வாய்மை 1033
அருமையில் 668
அரும்பெறலிறைச்சி 768
அரும்பெறற் றம்பிரானுர் 781
அரும்பெறன் மறவர்தாயம் 658
அருவரைக் குறவர் 664
அருவரையனைய தோளார் 575
அருளா மென்ன 1253
அருளின் பொருள் 1029
அருள்செயும் 589
அருள்செய்த வாக்கு 988
அருள்வழியே 695
அரைக் கோவணம் 1230
அரைஞாண் 670
அரைமணிக் கவடி 667
அரையிருள் 1158
அர்ச்சனைகள் 1026
அர்ச்சனை செய்து 801
அலகில் கலியின் 1220
அலங்கல் 558;1177
அலமந்தார் 786
அலமருவான் 637
அலர்பகல் கழிந்து 676
அலர்புகழரசு 862
அலர்முகம் 630
அலவன் கொழு 1042
அலைப்பட்ட 634
அலைப்புனற் பனை 1119
அல்குந் தங்குலம் 1063
அல்லின்கண் 988
அல்லிமலர்ப் பழனம் 930
அல்லுறங்கார் 800
அவரை (தானியம்) 1121
அவரையேனலுக்களந்தும் 1121
அவர்கருத்தினளவினரோ 803
அவலோடு மடுத்தது 1058
அவிப்பாகம் 1176
அவியுணவின் 1209
அவையினிருந்தார்கள் 1245
அழகார்புகலி 1029
அழகிது 639
அழகிதுவமுது 774
அழல்புக்கார் 1072
அழன்று பொங்கி 570
அழிந்து 1199
அழுக்கடைந்த கந்தை 1193
அழுக்கேறி 1196
அழைத்தபணி 698
அழைத்த பேரோசை 678
அள்காபுரி 1178
அளகின்குறும் பார்ப்புக்குழு1047
அளத்தியர் 1111
அளப்பரும் பெருமை 665
அளப்பன 1111
அளம் 1111
அளவிலாதரவு நீட 759
அளவிலாப் பரிவில் 597
அளவிலா வார்வம் 751
அளவில் சீற்றத்தினுலே 578
அளவில் செய்தவத்தினுலே 662
அளவின்றுயர்ந்த சிவமயம் 1260
அளவுபெற 952
அளியா ரடியார் 566
அறநெறித் தக்க 906
அறப்பெருஞ் செல்வி 1149

அறம்புரந் தளிக்கும் 1151
அறம்புரப்ப வள் 1160
அறம்புரிசால்பு 933
அறிந்தவா விளம்பில் 1126
அறிந்தவிடை யூறு 1257
அறியாமை யறியாதார் 875
அறிவழிந்து 1253
அறிவாரிரு வர் 1028
அறிவினிகழ் நெறி 1219
அறிவுமறந்து 1199
அறுதொழி லின் 1207
அற்புழுதிற் கலவி 1177
அற்றை நாடொடங்கி 690
அனலும் வெங்காலும் 572
அனேத்துத் திறத்தும் 1235
அனேக மடங்கு 1234
அன்பரன்பின் 1241
அன்பராங் குணம் 587
அன்பர்க்கருள் புரிவான் 1192
அன்பனுரறிந்த 804
அன்பால் மேய்த்த 1234
அன்பின் துணிவு 989
அன்பிலுருறு பாசம் 858
அன்பு கொண்டு 763
அன்புடை மனம் 1188
அன்பு பிழம்பாய்த் திரிவார் 803
அன்பு புரியும் 1251
அன்புபோல் தூயசெங்கெல் 916
அன்புமுன்பு 752
அன்புருக 1203
அன்புருவம் 753
அன்பெனும் மூர்த்தி 976
அன்றுநீவைத்த படி 698
அன்னமுன் தோகையும் 1122
அன்னம் 1144

ஆ

ஆ 1200
ஆகமத்திறன் 1127
ஆகமத்தினியம் பிய பூசனே 748
ஆகமத்தியல்பி னுல் 1129
ஆகமத் துண்மை 1136
ஆகமநூற்பரப் பின்றெருகுதி 1223
ஆகமம் 1128
ஆகமவழி 1131
ஆகமவிதியின் வகுப்பு 1164
ஆகமவிதியெ லாம் 1137
ஆகுதிக்குக் கறக்கும் 1247
ஆகுதிவேள்வி 1106
ஆகுநீள்கொடி 1118
ஆகுளி 654
ஆசான் 1208
ஆசிரியத் தன்மை 614
ஆசிரியனேந் தும் 686
ஆசில்மறை முனி 1077
ஆசுடையமல மூன்று 1191
ஆடவன்கொன் றுருன் 741
ஆடியருளு தற்கு 1225
ஆடியிற்றுடியும் 678
ஆட்டம் 935
ஆணைசெலுத்து மாற்றல் 979
ஆணையாஞ் சிவம் 752
ஆணையாமென றீறு 1081
ஆண்டாயகி 1161
ஆண்டினுக் கொருமுறை 1149
ஆண்டெதி ரேனந்து 669
ஆண்டேழு நிரம்பும் 1219
ஆண்மை 606
ஆண்மையிலிரு வரும் 628
ஆதரித்தாள் 1128
ஆதிதேவனூர் 1143
ஆதிலர் 1193
ஆத்திமலர் 1238
ஆம்பான்மை 1210
ஆயம் 664, 1229
ஆயர்குலத் தவர் 933
ஆயர்குலம் 937
ஆய்வுற்றகொட் பில் 986
ஆராதபெருங் காதல் 1065
ஆராவன் பினில் 777
ஆருயிர்கழிய வும் 628
ஆரோசை 749
ஆர்கலியேழு 603
ஆர்கலிமுழக் கம் 750
ஆர்தல் 1233
ஆர்ப்பு 582
ஆர்வமுன் பெருக 777
ஆவணவீதி 1166
ஆவ்தென் 746
ஆவினினிய 818
ஆவின்பெரு மை 1223
ஆளவுடை யார் 1241
ஆளாகும்பதம் 873
ஆளியேறு போல 717
ஆளுடைத் தொண்டர் 606
ஆளுடைய வம்மை 1134
ஆளுடையள் 1127
ஆள்வினைவாள் 622
ஆறங்கம் 870
ஆறலைத்துண் ணும் 655
ஆறுநற்சுவை 863
ஆற்றின்றெளி புனல் 749
ஆனவுறுப் பிறைச்சி 799
ஆனளிப்புன வஞ்சு 1032
ஆனுதகாத லன்பர் 607
ஆனிரை 655
ஆனிரைப் புறவு 1120
ஆனிலை 555
ஆனெருங் கும் 1229
ஆன்பெற்ற வஞ்சு 916
ஆன்முலைபொழி பால் 1257
ஆன்முலைப் பால் 1236
ஆன்றதொல் குடி 658

இ

இகபரத்திரு நாழிநெல் 1147
இகல்வெம் பகை 1206
இகழ்ந்தன செய்ய 982
இகன்முனையில் 633
இங்கதுபிழைப் பது எங்கே 572

இசைதேர்மது கரம் 1019
இசைப்பு (ஒலி) 582
இசைமயமாய் 965
இசையமுது 939
இசைவு 1229
இசைவு நினைந்து 1199
இச்சை வழியே 1245
இஞ்சி 1163
இடரான கடிந்து 1014
இடிக்குர லெழிலி 655
இடுந்தானம் 950
இடைச்சியர் 1122
இடைதுணி வன 728
இடைதுளும்பா960
இடைமகன் 1229
இடையரு வறம் 1147
இடையீடு 938
இடைவண் ணம் 953
இணைக்கும்வாச மாலை 1025
இண்டை 899
இண்டைச் சுருக்கு 1025
இதத்தின்வழி 1228
இதமுண்டுறை1231
இதுகடைப் பிடித்து 759
இத்தனை பொழுது 812
இத்தனைமுனிய 588
இந்தவனுசிதம் 785
இந்தவுடற் கிடர் 1197
இந்திரன் களிறு 1175
இங்கின்ற தன்மை 647
இங்கின்ற நிலையே 965
இமயக் கொம்பு 1164
இமயப்பாவை 1170
இமமலிய வெடுத்த 1173
இமய மால் வரை 1162
இம்மலிதனியே756
இம்மலிப் பெருந்தேன் 750
இம்மாயப் பொய் தகையுமுரு 1072
இம்மூனைய வெம்போர் 632
இயக்கர் 1159
இயல் 953
இயல்பில் வாழ் 1136
இயல்பிற்புரி யும் 1244
இயல்பினின் ருன் 704
இயைவன பலவுள 1122
இரண்டுதிறத் தார் 883
இரண்டு பிறப்பு 1207
இரவுசேரும் வெவ்விலங்கு 776
இரவொன் றில்லை 780
இரியல்போக 562
இருகைகளின் 622
இருக்குமொழி 966
இருக்கை 1176
இருக்கைய 1105
இருக்கையி னிற் 701
இருகடர் 779
இருசுடர்க் குறுகண் 672
இருட்கடி 556
இருதுணியாய் வீழ்ந்த 741
இருப்பர் கும் பிடலாம் 745
இருப்புமணி 1047
இருமடங்கு 688
இருமைவினைக்கு மோருருவாம்1215
இரும்பின்சரி 1047
இரும்புசெய் வினைஞர் 630
இருள் ஒதுங்கி னலே 779
இருள்கால்சீப்ப967
இருள்செய்த 895
இருள் துரக் கும் 1161
இலேப்புதல் 969
இலேப்பூங் கூடை 1238
இவர்தமைக்கண் டேனுக்கு 760
இவர்தமைப்பிரிய வொண்ணுது 760
இவுளிமேல் கொண்டு 602
இவ்வண்ணம் புகுத 786
இழிச்சி 1004
இழிந்தனன் 587
இழிந்தேறு மைத்தர் 1173
இழுக்கின 1185
இளவரியேறு 578
இளைத்த சூல் வளை 1103
இளைத்தனர் நாயனூர் 772
இற (மீன்) 1084
இறக்கியவரி 1116
இறப்ப 992
இறவாத் தானம் 1154
இறவுளர் 1088
இறவுளரளவே 665
இறுகால்(ஊழி) 583
இறைநீள் செஞ்சேவடி 568
இறையில் 1256
இறையும் 1248
இற்றை 1145
இற்றையி னிலேமை 821
இனத்திடைப் பிரிந்த 820
இனமென வேனைந்து 1120
இனம்பெருக 901
இனிதுண்டு தீங்கின்றி 695
இனியநல்லூரன் 775
இனிய வெம்பிரானூர் 771
இன்றுமவன் 758
இன்னமுது 863
இன்னல் 909
இன்னல் புகுந்தன 989
இன்னறரு மிழிபிறவி 1067
இன்னுயிரின்றி வாழும் யாக்கை 996

ஈ

ஈசர்மகிழ்பதி 1060
ஈடுபெருக்கிய போர் 926
ஈண்டினர் 680
ஈமவருங்கடன் 994
ஈயலுண்டி 684
ஈரவே பூட்டும் வாள் 599
ஈழக்குலச் சான்றூர் 609
ஈறிலாவன்பின் 863
ஈறிலாத விப்பதி 1146
ஈறிலாதார் 1264
ஈனமிகு 637
ஈன்றதாதை 1259

உ

உகைப்ப 1119
உச்சி மோந்து 1259
உடன்பிரியா வன்பு 648
உடன்மலரும் 1218
உடுப்பனவும் 1261
உடை தோல் 702, 710

உடைந்துபுற
கிட்டான் 636
உடைய
நாதன் 1252
உடையார் 946
உடையோரில்
லன்தோறும் 1231
உடைவாள் 592
உட்கொண்டு 587
உட்டருகளிப்பு 601
உட்பட 993
உணக்கி 1197
உணக்குவ 1083
உணர்வின்
றிறம் 1220
உணர்வு
தொடங்கிய 1052
உணர்வொன்
றுய் 959
உணவின்
மூலம் 1179
உணவுரிமை 1053
உண்டகலம் 1261
உண்ணிறை
விருப்பு 826
உண்ணிறைந்
தெழு 759
உண்ணிறை
காதல் 1129
உண்ணீர்மைப்
புணர்ச்சி 867
உண்ணெஞ்சில்642
உண்மையினர்1190
உதயஞ்செய்
தார் 1217
உதவியவினை 742
உபயனப் பொரு
வில் சடங்கு 1219
உமைபாகர் 1165
உம்பர்குலக்
குழாம் 1182
உம்பர் பிரான் 649
உம்முடன்
றுணை 756
உயிரும்யாக்
கையும் 1142
உயிருள
வென்று 630
உயிரையும் - மெய்
மையும்தூக்கி1080
உயிர்களெல்
லாம் 996
உயிர்செகுத்து 595
உயிர்த்து
நின்று 755
உய்த்தார் 1231
உய்ப்பது 1186
உரிமைச்சுரபி 1225
உரிமைச்
செயல் 1004
உரிமை
பூண்டார் 556
உரிமைப்பால 1180
உருகும்
மனத்தார் 1021
உருத்திர
சோலை 1161
உருத்திரம் 1030,
1037
உருமிகத் தெரியாப்
போது 782
உருமேறு 622
உருவியதட்டு
டன் 628
உலகமன்னன் 587
உலகமெல்லாம் 665
உலகினேத்துங்
காக்கும் 1226
உலகினேத்தை
யுமீன்றுய் 1132
உலகுசீர்
போற்றும் 1041
உலகுய்ய நட
மாடுமெல்லை1075
உலகெங்கு நிரம்பிய
சைவம் 1012
உலகெலாந்
தலைசிறப்ப 901
உலகெலாம்
வியப்ப 1125
உலந்தபோது 993
உலை 630
உவரிகெய்தல்1121
உவர்ப்பு 1164
உழத்தியர்
868, 927
உழத்தியர்
சாயல் 1122
உழத்தியர்
மகளிர் 1123
உழலைவேலி 674
உழவுதொழில்1179
உழை 728, 950
உழைமான்
மறிக்கன்று 1227
உள்ளத்தள் 1138
உள்ளநிலைப்
பொருள் 886
உள்ளபடி
யறிந்தார் 1223
உள்ளவாறு 1127
உள்ளுந்
தகைமை 1227
உறங்கிமீ
தெழுவ 601
உறுகடன்
வெறியாட்டு 662
உறுகொலை 735
உறுபிறப்பரி
வார் 919
உறுப்பிறைச்சி 795
உறைத்து 867
உறையுள் 1172
உற்றநோய்
தீர்ப்பது 821
உற்றன வுதவிய
பண்பினர் 629
உற்றிடத்து 605
உன்மத்தர்
போல 823

ஊ

ஊட்டி 676, 758,
918, 919
ஊணுமுறக்க
மும் 802
ஊரானிரை
1222 ; 1240
ஊரொலிக்கும்1190
ஊர்கோள்வளைத்த
மாமதி 1103
ஊர் (மருதம்) 1086
ஊழிக்காலம் 1014
ஊறுசெய்
காலம் 782
ஊறுநீர்தரும் 1096
ஊனமில்பலி 662
ஊனமில்லறம் 1126
ஊனமு
தமைத்து 770
ஊனமுதவந்த 828
ஊனின்புழுக்
கல் 656
ஊனின்றிரு
வமுது 773
ஊனுக்கூன் 821
ஊனுணவுநல்கி 676
ஊன்றிருவமுது796

எ

எங்கள்முன்
பெருமுதலி 766
எடுக்கவொண்
ணாது 1196
எண்டிசையு
மேறியசீர் 608
எண்ணிரண்
டாண்டின் 691
எண்ணிலாக
மம் 1128
எண்ணிறந்த
கடவுளர் 796
எண்பத்துநான்கு
நூறுயிரம் 1131
எதிரெதிர்
பயில 1122
எதிர்சிரிப்பன 1094
எதிர்ப்படா
தொழிய 1133
எந்தம்பெருமக்
கள் 983
எந்திரத்தேர் 579
எந்தையார்
மைந்தர் 661
எப்பற்றினையும்
மறுத்து 975
எம்மை
யுடைய 1236
எயிலினுடன்
விளங்கும்
வாயில் 1165
எயிலுடைப்
புரங்கள் 661
எயில் 870

எயிறு 1094
எயிற்றியர் 685
எயிற்றிருவாயில் 1064
எயிற்றுத்தாலி 669
எயிற்றியர்மகளிர் 653
எயினப்பிள்ளை 673
எயினர் 685
எயின்மூதூர் 608
எய்தரிய பெருமை 1064
எய்தாமை வேண்டும் 646
எரிகடையு மரணி 794
எரிசூழவலம் 1071
எரியமைக்க 1068
எரியிற்புகை 624
எரியினில் வதக்கி 766
எருத்தினில் 1002
எருவைநெருங்கின 626
எல்லீருங்கைக் கொண்மின் 694
எல்லை 1220
எல்லையொழிந்தது 1201
எல்லையில் கல்வி 1009
எல்லையில் தீமையேன் 918
எவ்வுகங்களுமுள்ளது 1125
எழு (படை) 580
எழுதரிய திருவடி 889
எழுதுங்கொடி போல்பவர் 993
எழுத்தஞ்சு 939, 1214
எளியார் வலியாம் 566
எள்ளாத செய்கை 612
எள்ளுஞ் செயல் 984
எற்புமணி 887
எற்றுங் கற்பாறை 1202
எற்றுவன 1202
எனைப்பல 1117
என்புதிறந்து 988
என்புநெக்குருகி 751
என்பூடு கரைந்து 947
என்றுமுடிவதில்லை 1145
என்றுமுள்ளது 1130
என்றுமுள்ளவர் 1186
என்றுமுள்ள 1162
என்றும் முட்டா 977

ஏ

ஏகநாயகர் 754
ஏகமாமுதல் 1133
ஏகம்பர் 1142, 1144
ஏகாலிக்குலம் 1189
ஏசறவு 1066
ஏதமில் பலயோனி 1131
ஏதம் நீங்கிய பூசனை 1144
ஏதம்பிணியாவகை 1015
ஏந்தலையேந்து 998
ஏலங் கமழ் கோதை 1014
ஏலாவிகல் 614
ஏவல்செயுந் தொழில் 873
ஏழாநாள் 688
ஏழிசையமுதம் 958
ஏழிசையின் சுருதி 939
ஏழு புவனம் 1217
ஏழுவிரலிடை 948
ஏறுகாற்பன்றி 782
ஏறுண்டு 1263
ஏற்குமாற்றால் 863
ஏற்றழிந்தமானம் 635
ஏனம் (பன்றி) 1010, 1168
ஏனல் 1121

ஐ

ஐந்தின்மேலான வாண்டு 674
ஐந்துபுலனும் 1207
ஐந்துமாறடக்கியுள்ளார் 780
ஐந்துவருடம் 1218
ஐயரே 1070
ஐயர் 719, 752
இறைவர் 776
ஐயவிப்புகை 676
ஐயனடையாளம் 1008
ஐவனமுணங்கும் 652
ஐவனவடிசில் 683

ஒ

ஒடியெறிந்து 723
ஒத்தநிலை 949
ஒப்பரியபூசனை 800
ஒருகால்விட்டொழியும் 1200
ஒருங்கிய நெஞ்சு 898
ஒருதெருவில் முட்டி 563
ஒருப்பட்டு 1056
ஒருப்பாடு 858
ஒருமருங்கு 1188
ஒருமைநினைவு 1242
ஒருமையுய்த்திட 1037
ஒருவழிச்சென்றேறுதுறை 791
ஒலிச்சின்னம் 581
ஒலித்துக்கொடுவாரும் 1196
ஒலிப்பர் 1190
ஒல்லை 918
ஒல்லைபோயுட்புக்கார் 1075
ஒல்லைவந்துற்ற செய்கை 551
ஒவ்வாப் புணர்வு 1180
ஒழிவின்றி யாராவன்பு 759
ஒழுக்கம் 1165
,, (திணை) 1121
ஒளித்திருந்தால் 807
ஒளித்திருந்தான் 1250
ஒளிநின்று 791
ஒளிவட்டம் 623
ஒள்ளிழை 886
ஒற்றைத்திங்கட்குடை 1004
ஒன்றியசிந்தை 946
ஒன்றியணைதருதன்மை 1061
ஒன்றியபணிகள் 861
ஒன்றியவிலைப் பூச்சூட்டி 758
ஒன்றுக்கொருகாலாக 1239
ஒன்றுமுதல் 949
ஒன்றுமுள்ளத்துண்மை 1252
ஒன்றொடொன்று 718

ஓ

ஓங்குநிலைத் தன்மை 1165
ஓசையைந்து 750
ஓதங்கிளர் சோலை 1002
ஓதிமலர் 1182
ஓதுகிடை 1208, 1222
ஓதுவிக்குஞ் செய்கை 1219
ஓமதேனு 1210
ஓரிரவுஞ் சிந்தித்து 637
ஓவாதேபொழியுமழை 1200
ஓவாமை 933

க

கங்கணம் 709
கங்குல்புலர 676
கங்குல்வர 1200
கச்சிற்செறிந்த 618

கடப்பாடு 611
கடமா 728
கடமை (காட்டுப்பசு) 643
கடலும்படும் 969
கடலெனைக் கதறி 575
கடலேழு 1139
கடவுட்பொறை யாட்டி 714
கடவுள்மால் வரை 750
கடனேயியல் பாய் 1221
கடிது 1196
கடுபகற்பொழு தினைப்பற்றி 1092
கடுவிசைமுடுகி 584
கடைஞ ரிருப்பு 1051
கடைஞர் வினை 1049
கடைநாள் 582
கடைமைத்தலை நின்றுரன் 1255
கணங்கள் 1224
கணகாதர் 897
கணப்பொழுது 781
கண்கட்டிவிடு 997; 998; 999
கண்கோட னிறைந்து 941
கண்டகர் 629
கண்டகன் 986
கண்டல் 1085
கண்டிகை 1013, 1143
கண்டுயிலாத வீரர் 781
கண்ணப்பு நம்பெருமான் 649
கண்ணி 1025
கண்ணினீடு பார்வை 720
கண்ணினுக் கணியாய் 666
கண்ணின்பய னும் 1214
கண்ணீரரும் புவன 1020
கண்ணீர் வாரும் 1169
கண் துயிற்றி 676
கண்படாத 1156
கண்படா வில்லியார் 810
கண்படான் 637
கண்படுப்பன 1103
கதம்பம்நாற்றி 670
கதிரவனுச்சி 689; 750
கதிரோன் 615
கதிர்காட்டி 783
கதிர்சொரி தரளம் 778
கதிருச்சிநீங்க 685
கதிர்க்கற்றை 1212
கதிர்ச்சாலி 609
கதிர்நிலவு 967
கதிர்மீதெழும் போது 1152
கதிர்விசும்பின் 689
கந்தமலியும் புனல் 1247
கந்தருவர் 1159
கந்தை 1193
கந்தைபுடைத் திட 1202
கமர் 902, 917, 918
கமுகின்பாளை யுக்க 1123
கம்பம் 1135, 1176, (ஏகம்பம்) 1138
கம்பர் 1242, 1179
கம்பர்கொள் ளும்பூசனை 1164
கம்பலை 1035, 1101
கம்பைமாநதி 1137
கம்பையாறு 1142
கம்பைவெள் ளம் 1139
கயல்களலமிற் றுயிலும் 1212
கயமுனி 735
கயவாய் 729
கயிலை 1127
கரந்தரும் பயன் 1138
கரவிலவர் 1030
காரிகாற்பெரு வளத்தோன் 1162
கரிக்கன்று 653
கரிசொரிவன 1085
கருங்கடல் 781
கருங்கதிர்விரிக் குமேனி 665
கருங்கழிநெய் தல் 1110
கருங்கொடி 630
கருஞ்சிறார் 1047
கருணைகூர்ந்த 753
கருணைக்கடல் 1163
கருணைத்தாய ளுள் 1078
கருணைப் பிரான் 1131
கருத்தின்பய னும் 1214
கருத்தின் றிடம் 1221
கருந்தரங்கம் 722
கருந்திரை 783
கருப்பநீட 662
கருப்பருமருப்பு 663
கருப்பாலை 928
கருப்புவில் லோன் 864
கருமா 729
கருமிடறு 881
கருமுகி லென்ன 810
கருமுகில்கள் 1172
கருமேகமென 1194
கரும்பகட் டேர் 1119
கருவரால் 1035
கருவரை 733
கருவரைகாளமேக மேந்தியது 664
கருவிப்படை வீரர் 978
கருவுயிர்க்கமுரு குயிர்க்கும் 1042
கரைவளர் கழை 746
கலகஞ்செய் 1012
கலந்தவுண் 683
கலந்துள வொழுக்கம் 1121
கலித்த 582
கலித்தோடா 960
கலிப்பு 1175
கலியுகம் 1162
கலுகுதிப்பன 1119
கலுமருப்பின் 697
கலுமான் 728
கலுவளர் திங் கள் 691
கவடிமெய்க் கலன் 686
கவரும்மீன் குவை 1121
கவலியில்லான் 699
கழங்கு 1171
கழல் (கழற்சிக் காய்) 897
கழல்சார்ந்த ணிவு 873
கழல்வணங்க வந்தபிறப்பு 1265
கழிக்கயல் 1115
கழிக்கரை 1113
கழியவர் 1121
கழுக்கடை 580
கழுநீர் 867
கழைக்கரும்பு 1104
கழைவிளைசெழு நீர்முத்து 663
களங்கமின்றி 1018
களங்கம் 1164
களமணி களத்து 597
களவு(களா) 1094
களவுகொண் டதுதளவு 1094
களிந்தி 722
களிபயில் 1262
களிறுண் விளங்கனி 910
களிற்றின் கோடு 651; 679

கள்ளுண்டுகளி தூங்க 1050
கறங்குபறை 1050
கறவாமேபால் 1235
கறவை யானிரை 1084
கறுப்பு 1164
கறைவிளங் கிய 1082
கற்றவர்கடன் 613
கற்றை 1135
கற்றைச்சடை 1022
கனகமழை 1171
கனகவரை 1024
கனங்குழை 1139
கனவிலுங்கூட விலா 1124
கனவுங்கூட 808
கனிமுள் 1114
கனிய 1086
கனிவாயும் 952
கனைகுரலு புரம் 879
கனைபுரவித் தனித்தேர் 808
கன்றகல் புனிற்று 761
கன்றுபயிலா னிரை 1228
கன்னசாலை 1168
கன்னலடும் புகை 928
கன்னிநன்னெடுங் காப்பு 1152
கன்னி வேட்டை 696

கா

காகமிடைந்த களம் 622
காசுடைவடத் தோள் 686
காசொடு தொடுத்த 670
காசிபகோத் திரம் 1215
காஞ்சி (அளி) 1168
காஞ்சியாந் திருநதி 1152
காஞ்சியிசை 1163
காஞ்சித் தானம் 1152
காஞ்சிவாழ் பவர் 1147
காடுகாவல் 724
காடுபலியூட்டு 696, 699
காட்டிலுறை தெய்வம் 699
காணுநேர்பாடு 826
காணும்பொலி வின் 1234
காதங்கள்பல 741
காதம் 1162
காதலி 1142
காதல்செய் முறைமை 1082
காப்பணியும் 878
காப்புநன்னுள் 682
காமங்கள் 1153
காமருகுழலி 665
காம்பினேர் வரும் 1115
காயல்வண் கரை 1114
காயாப்புளி 1156
காயாவின் 931
காய்தழலுமிழ் கண்வேழம் 574
காய்வுற்ற செற்றம் 986
காரகிற்குறடு 746
காரி 1159
காருடன் கடைநாள் 582
காரெனும் பருவ நல்லாள் 944
காரேறு மெயில் 1057
கார்கொள 1087
கார்பெறு கானம் 859
கார்மன்னு சென்னி 968
கார்மூல்லை 931
கார்மேதி 927
கார்வரை யடவி 777
கார்வலைப் படுத்தகுன்று 719
காலமுழுதும் 1226
காலவேனில் 1092
காலில்வளைத்த 772
காலைமதி 615
காலைமுற்றி 994
கால் (வாய்க் கால்) 1099, 1100, 1102
கால்கழல் கட் டிய 623
கால்சாயும் 615
கால்வழி மிதற் றேறி 1099
கால்விசைத் தசையா 960
காவதமரையில் 744
காவல் கைக் கொள் 997
காவாலி 1200
காவிகள் 931
காழித்தலைவர் 862
காளத்தியுத்த மர் 649
காளமேகம் 1156
காளம் 581
கானக்கடி 978
கானங்கடத்து 692
கானத்தின் 937
கானம்-முல்லை 1121
கானவர் 1121
கானவர்குலம் 662
கானவர்க்கரிய 690
கானவர் பெரு மானூர் 828
கானவூனமுத மாக்கும் 681
கானவேனத் தின்குட்டி 675
காஞ்திகாரணர் 963
கான்மரை 777
கான்யாறு 960, 1093
கான்வேட்டை 790

கி

கிடை 1063
கிழமைகொள் 950
கிளைபயின்று 1180
கின்னரர் 959

கு

குங்குமச் சேறு 1185
குங்குமநீர்த் திவலை 1172
குங்கிலியம் 865
குஞ்சிமேற் றுதைய 770
குடருடல் பம்பின 626
குடிசெய்தவம் 975
குடிச்சிறு குரம்பை 673
குடிபயில் வரைப்பு 1115
குடிநெருங்கி 1045
குடியிருத்தின கொள்கை 1162
குடை (அர சாணை) 996
குடைநீழல் 1011
குட்டமிட்டுக் கொழுப் பரிந்து 794
குண்டலம் 887
குரவமேவும் 1253
குரவலருங் குழல் 1194
குரவின்மிசை யேறி 1250
குரவை தூங்க 660
குருதியினதி 626
குருந்து 1093
குரைகழல் 577
குலக் கொழுந்து 880
குலத்தலைமை 699, 703
குலத்தாயம் 614
குலபேதமெல் லாம் 1180
குலப்பதி 872, 906
குலமறவர்க டலைவர் 740
குலமுதற் றலைவன் 693
குலமுது குறத்தி 676

குலமைந்தர் 994
குலவயிரம் 1168
குலவரைச் சாரல் 749
குலையின் சார்பு 1232
குலைவயல் 1042
குலோத்துங்கச் சோழன் 1213
குவலயம் 1039
குவிந்தமுலை 1243
குழம்படுத்த செம்பஞ்சி 1174
குழல்செய் வண்டினம் 1087
குழல்நாதம் 964
குழல்வாசனை 937
குழற்கதிர் நெல் 1050
குழற்கருவி 939
குழற்கருவி யிசைத்து 966
குழனிறங் கனியும் 1094
குழுசிப் புதை நீழல் 1048
குழுமி 1031
குழுமிய வோசை 654
குழைக்கலையும் 876
குழைக்குடுமி 1208, 1230
குழையணி காதினான் 587
குழையுடை நீலங்கள் 905
குளந்தொட் டார் 1058
குளிப்பன 1112
குளிர்ந்த பொன்முகலி 743
குளிர்காணும் 1201
குளிர்க் குடைந்து 1196
குளிர்நீர்மை 1167
குறவர் 1084
குறிகள் மிக நல்ல 700
குறிச்சியை வலம் 687
குறிச்சிவாழ்க்கை மனைவி 657
குறிஞ்சி 1118
குறிஞ்சி யாழ் 1087
குறிஞ்சியோ டணைவன 1119
குறித்தபூசை 1241
குறித்த பொழுது 1198
குறிப்பறிந்து 874, 1189
குறிப்பறிந்தே 1195
குறிப்படி 764
குறிப்பின் வைக 1012
குறிப்பொடு பயின்றார் 1036
குறுங்கண் ணாகுளி 721
குறுநடைகள் 1193
குறுநடைக் குறும்பு 673
குறுந்தளிர் 878
குறுமுயல் 1120
குறை கொண்டு 1248
குறைநிரம் பிட 1145
குறைபா டின்றி 1243
குறைபாடு 703
குறைமறைவு 1239
குறைவிலா நிறைகுடி 1031
குறைவினை 956
குறையுட லொழுகி 626
குற்றநீங்கி 1263
குற்றமே குணமா 657
குற்றேவல் 1200
குன்றமெறிந்து 1158
குன்றவரதனில் 652
குன்றவர் 688
குன்றனைய மாளிகை 1064
குன்றுபோலு மாமதில் 1162

கூ

கூடிக்கிடைத் தனர் 572
கூடை 916
கூரிலையமுக் குடுமிப்படை 1053
கூருகிர் 1047
கூர்முனையயில் 628
கூலிக்குநெல் 911
கூலியெல்லாந் திருவமுது 912
கூழுங்குடியும் 995
கூற்று (இய மன்) 864

கெ

கெட்டேன் 756

கே

கேசவடப் பூணூல் 888
கேடில்பதங்கள் 976
கேளுந்துணை யும் 976

கை

கைகாட்டுவான் 783
கைக்கொண் டார் 997
கைச்செறி கட்டி 709
கைதை 1113
கைத்தண்டு 1254
கைப்பற்றிய 716
கைப்பிடிக்க 899
கையடகு 914
கையாற்கடைமைத் தலை 1255
கையாற்றரை யடித்து 565
கையிலேந்தற் கருமை 666
கையினிற் றெரிந்து 559
கைவகுத்து 620, 621
கைவண்ணச் சிலை 692
கைவண்ண நிரம்பின 990
கைவருட 1099
கைவரைகளும் 736
கைவாளமர் 639
கைவிளங்கிய நிலை 1125
கைவிளிச்சிறந்த வோசை 721
கைவினையெயி னர் 683
கைவேறு கொள் 994

கொ

கொடிச்சியர் 688, 1089, 1091
கொடிச்சுரை 1046
கொடிதா மொழிகள் 1254
கொடிப்பாலை 950
கொடிமறுங் குல் 880
கொடிமௌ வல் 1212
கொடியின் தோட்டுமலர் 1024
கொடுங்கோன் மை 984
கொடுஞ்செவிச் சாபம் 675
கொடுஞ்செவி ஞமலி 652
கொடுமையே தலைநின்று 657
கொடுவினைத் தொழில் 1112
கொட்புற் றெழுந்தனர் 580
கொண்டல் 1085
கொம்பு(இயம்) 654
கொலைஞமலி கள் 738
கொலைபட்டார் 634
கொலைபயில் பொழுது 731
கொலைமழு 570
கொலைமறவினை 736
கொலைவிரவார் 735
கொல்களத்தை விட்டு 634
கொல்கை 592
கொல்லுமிடை 644

கொல்லெறி குத்தென்று 654
கொல்லோமான் 1075
கொல்லோமெல் லிணர் 1093
கொழுந்தசை பதம் 767
கொழித்த வெண் டரளம் 1123
கொழுமீன் 1112
கொழுவிய தசைகள் 774
கொளுத்து வதன்முன் 1220
கொள்கலம் 1187
கொள்கைக் குறிவழி 645
கொள்கைத்து 995
கொள்கையி னும்பர் 824
கொற்றவர் 605
கொற்றவன தெய்வங்கள் 700
கொற்றவன் 577
கொன்முனை யடுசரம் 730
கொன்றது வீழ்ப்பன் 570

கோ

கோக்கும் கோவை 1025
கோடுகொண் டெழுந் திரைக்கடல் 1118
கோடுடை யேனம் 764
கோடுமுன் பொலிக்க 721
கோட்டமில் 699
கோட்டம் 1092
கோட்டுச் சிமை 1173
கோட்டுமலர் 1024
கோணமில் குடுமித்தேர் 745
கோதடையா 1193
கோதிலா வுழுது 1144
கோதையர்தந் திறம் 1014
கோபமேவும் படி 1253
கோப்பமை கிண்கிணி 878
கோபுரம் 1176, 1237
கோரோசனை 1054
கோலமழு 1263
கோலமுன்கை 682
கோலினிற் கோத்து 767
கோலினிற் றெரிந்து 774
கோலுங் கயிறும் 1230
கோவலர் 937
கோவலனூர் 943
கோவா 889
கோவி (கோதாவரி) 889
கோளம் 1241
கோளொடு பயில்பணி 732
கோள் கொண்ட 616
கோற்றேன் 793

சி

சகுனம் 812
சங்கங்கள் 1003
சங்கரன்சார்பி லோர் 991
சங்கம் 974
சங்குதுறையவர் குளிப்பன 1112
சங்குவிளங்கு வெண்டோடு 707
சடங்கு 1211
சடிலத்திரு முடி 1238
சடைமௌலி 1010
சடையவன் 644
சடையார் போனின்ற 946
சண்டக்கால் 564
சண்டீசனுமாம் பூதம் 1261
சதமகன்நகரம் 553
சத்திதற்பர 1159
சந்தப்பொதியில் 979
சந்தனக் காப்பு 977, 984
சந்தனச்சினை 1118
சந்தார்முலை 973
சந்திரகாந்தம் 1169
சந்திரசூரியர் 1151
சந்து (சந்தன மரம்) 746
சபையோர் 1246
சமங்கொண்டும் 952
சமண்பேரெக்கர் 982
சமயங்களாறும் 1161
சமிதை 1210
சமிதையுடன்மேல் எரிகொண்டு 1232
சரணத்துரியாடை 710
சராசரங்கள் 939, 1170
சரிப்பன 961
சருகிலையணைத்த கல்லில 767
சருப்பொரி 714
சற்றுநீயருந்தி 742
சன்னவீரம் 708

சா

சாதகத்தனித் தலைவர் 1159
சாமங்கணிப் போர் 1210
சாமரைக்காமர் பூங்கான் 1011
சாயாதார் 620
சாயுந்தளிர் வல்லி 969
சாயைமாறி 1151
சாயைமுன் பிணிக்கும் 1157
சாரணர் 959
சாரல் 1083
சாரிகை முறைமை 627
சாரிகையின் 1019
சார்வருந் தவங்கள் 777
சார்வலித் தொடக்கு 719
சாலி 911
சால்பாயமும்மைத் தமிழ் 972
சால்புநிறை 885
சால்வழி 1042

சி

சிகழிகை 940
சிகை 887
சித்தர் 1159
சிந்தைக் கினிதாய 977
சிந்தை சாய்வுற்றிட 986
சிந்தை - சிவமே 1006
சிந்தைதாழ்ந்தான் 980
சிந்தை தெளிவுறும் 749
சிந்தை நியமத்தோடு 785
சிந்தை நினைவரிய 900
சிந்தை பரங்கொள 703
சிந்தைமலர 1218
சிந்தையோகத்து 1160
சிலமுறையாண்டு 676
சிலைக்கீழ்த்தங்கி 694
சிலைக்குலம் 623
சிலைத்தனித் திருநுதல் 1141
சிலைத்தெழ 726
சிலைத்தொழில் 677
சிலையில் பருவம் 676
சிலைமலையர் குலம் 702
சிலைமறவர் 696

சிலைமிசைப் பொலிந்த 773
சிலையினைக் காப்பு 681
சில்லரித்துடி 654
சிவகோசரி யார் 784
சிவதா 565–568
சிவபதநிழல் 864
சிவலும் சேவலும் 1121
சிவலோகம் 1263
சிவாலயம் 1109, 1237
சிறிய பெருந் தகையார் 1220
சிறிய பெருந் தோன்றலார் 1254
சிறியமறைக் கன்று 1235
சிறுகழிச்சியர் 1121
சிறுத்தொண் டர் 1080
சிறுநாணெறிந் தார் 712
சிறுபுன்குஞ்சி 669
சிறுமணிமேகலை 878
சிறுவனார் 1260
சிறைத் தோகை 1088
சிற்றாடை 878
சினைகொள் ளும் 951
சினையான் 936
சின்மழலை 1115

சீ

சீரேறுமிசை பாடி 1057
சீலமுடைய கோ 1226
சீலம் 1014
சீறு (ஒலி) 582
சீறும்சிலை 567
சீறூர் 664, 680, 1086

சு

சுடர்ப்பிழம்பு 1168
சுதைத்தவள மாளிகை 1173
சுந்தரத் தாமரை 1076
சுரநதி 1227
சுரபி 1098
சுரமகளிர் 958
சுரிகுழற் றோகை 1088
சுரிகை 629, 895
சுருங்கை 1102
சுருட்குழல் 878
சுருதி மலருந் திருவாய் 1024
சுவரோடு வாரலைய 1058
சுவைகாண லுறுகின்றார் 795
சுழிப்புனற் கடல் 1113
சுறவமுள் மருப்பு 1084
சுற்றம்விரும் பிய 1046
சுற்றம்விரும்பு மில்வாழ் க்கை 1216
சுற்றாலயம் 1237

சூ

சூடுபரப்பிய பண்ணை 926
சூதமாதவி 1183
சூத்திரம் 889
சூரரமகளிர் 688
சூரரிப்பிணவு 658
சூழல் 1058
சூழல்செய்த கான் 725
சூழ்சிலம் போசை 781
சூழ்ந்துசெய் வார் 1004

செ

செக்கர்ச்சடை யார் 982
செக்கர்நிறப் பொழுது 1169
செங்கண்வயக் கோளரியேறு 705
செங்கண்விழிக் கனல்சீறு பொறி 624
செங்கதிர்மீது போத 993
செங்கமலமென் பொய்கை 1035
செங்கீரை 908
செங்குடுமிவார ணம் 1049
செங்கைத்தலம் 712
செஞ்சடைவேதி யர் 908
செஞ்சாலி 913
செடிதலைச்சிலைக் கைவேடர் 724
செண்டணை வெளி 1151
செண்டு 1159
செந்தினையிடி 1086
செந்தினையிடியுந் தேனும் 684
செந்தீமேலெழும் பொழுது 1073
செந்நாய் 675
செந்நிலை 860
செந்நின்றமனம் 965
செந்நெலின் வெண்முளை 1101
செந்நெல் 908
செந்நெறி 1165
செப்பரும் 945
செப்பற்கரிதாய 716
செப்பியவாகம விதி 801
செம்பியன் 604
செம்பொன்மலை வல்லி 1179
செம்பொன் மேரு 681
செம்பொன்வள் ளம் 1027
செம்மணி 1083
செம்மணியின் றீபம் 881
செம்மலர்மேல் வந்தெழுந்த வந்தணன் 1073
செம்மலார் 1221
செம்மாண் வினை 998
செம்முகில்கள் 1172
செம்மைநெறி யே 1236
செம்மைபுரி சிந்தை 1052
செம்மைப் பொருள் 974
செம்மை வெண்ணீறு 1207
செயலின் நிலை நின்று 977
செயிர்த்தெழுந் தார் 632
செய்கடன் 914
செய்தவத்தின் 705
செய்தவம் 1130
செய்தவிரைத் தாமம் 946
செய்தொழில் 614
செய்யநாவின் 718
செய்யுள் மிக் கேறு சங்கம் 972
செய்வகை யிதுவே 997
செய்வண்ணத் திறம் 790
செய்வண்ண மொழிந்திட 990
செய்வதறிந்தி லர் 815
செய்வரை யுயர்ப்ப 683
செய்வேறு வினைத்திறம் 994
செருக்களம் 621
செருக்கினார்ப்பு 582
செருந்தி 1111
செருப்படியும் 787
செல்வக்குடி 968
செவ்வரை போற் 701
செவ்வழி யாழ் 1115
செவ்வி 691
செவ்விமணம் 970
செவ்வி யுணர்வு 1218

செவ்வேல் 659
செறற்கரும் போர்வீரர் 619
செறிகுடிக் குறிச்சி 674
செறிதுறுகற் பெருமலை 791
செறிந்தவர் 900
சென்னி 590
(சோழர்) 603, 1213
சென்னியேறு நாண்மலர் 811
சென்னியிற் கொண்டு சென்னி 603

சே

சேக்கை 1049, 1209
சேடரின் மிக்க செய்கை 678
சேடியர் 1171
சேடை 697
சேடைசாத்தி 715
சேட்டாருங் கங்குல் 638
சேணுயர் திருக் காளத்தி 745
சேணுலாவு சீர் 1081
சேந்தன் 1206
சேய்ஞலூர்ப்பிள்ளை யார் 1242, 1263
சேல்பாய்தடம் 972
சேவல் 1121
சேஞ்திபதியாங் குடி 872
சேனைக்கடல் 972

சை

சைவவாய்மை 1217

சொ

சொல்லிச் செல விட்டான் 638
சொல்லிவிட் டான் 677
சொல்லியே காக்க 1080
சொல் வரைத்தோ 1124
சொல்வேறு வாழ்த்து 713

சோ

சோணாடு 608
சோபான நிரை 1173
சோரி 988
சோர்தரு கண்ணீர் 762

ஞா

ஞாங்கர் 870
ஞாட்பின்கண் 633
ஞாயில் 1182
ஞாலநீடரங்கு 944
ஞாலமதியப் பிழை 1263
ஞாலம் 996, 1014
ஞாழல் 1114
ஞானச்செய் தவர் 893
ஞானமாமுனி வர் 828
ஞானம்(முலைப் பால்) 1028
ஞானவரம்பின் றலை நின்றார் 1021

த

தகட்டுவரால் 1042
தங்கண்முதற் சரம் 822
தங்கள்குறிவா ராமை 802
தங்கிய பவத் தின் 753
தஞ்சமாகிய 1134
தஞ்சமுண் ணின் 1157
தஞ்சேசரணம் 568
தடங்கிடங்கு 1044
தடங்கொண்ட குளத்தளவு 1059
தடமருப்பீர் 955
தடித்ததோள் 677
தட்டி (இயம்) 581
தணித்த மனத் திருமுனிவர் 789
தணிவில்பெரும் பேறு 873
தண்டலை 869
தண்டில்கட்டுங் கண்ணி 1025
தண்டிற்றூங் கும் மலர் 563
தண்டு 560
தண்டை 581, 670
தண்ணிலாமலர் வேணி 1140
தண்பணை 1110
தண்பொருந்தம் 969
தத்தமக்கடுத்த 1124
தத்துவங்க ளென்னும் 752
தத்தையென் பாள் 657
தந்தகைமைக் கேற்ற 1180
தந்திரி 1054
தந்திரிகள் 952
தந்திரித்தலைவர் 579
தந்தைதந்தைக் கும் 715
தபோவனம் 789
தமக்குமுண்டு 1094
தமனியச்செழுந் தாமரை 1156
தமிழ்நாடு 979
தமிழ்நூலின் 974
தம்பணிவிட்டு 1058
தம்பரிவுபெருக 1069
தம்பிராட்டி 1132, 1227
தம்பிரான் 921
தம்பிரான் கோயில் 986
தம்பெருமான் 1135, 1254
தரங்கம் 1174
தரளம் 679
தரளம்சொரி குலை 1211
தரித்திலர்தேவ தேவர் 826
தருங்குறிபல வும் 565
தருமமும்நீதி யும் 1032
தருமவினை 1179
தருவளர் சூழ லிடை 740
தருவினேதென் 954
தருவின்குலம் 1043
தரைப்படத் துணித்து 590
தலைதுமிவன 728
தலைநின்றார் 1053
தலைநின்று 1136
தலைப்பட்டா ரெல்லாரும் 634
தலைமரபின்வழி 696
தலைமிசைச் சுமந்த 773
தலைமைசால் பெருங்குடி 1079
தலையுவா 778
தலைவணங்கும் 867
தவமுன் செய் தான் 657
தவவல்லி 963
தவவேந்தர் 1009
தவளமாடம் 1169
தழுவினர் 754
தழைப்பீலி 697
தளவு 1094
தளைச்செறு 1119
தள்ளாததங்கள் 612
தள்ளாத்தாள் 1050
தள்ளுஞ்செயல் 984
தள்ளும் முறைமை 1027
தள்ளுவெண் திரை 1036
தனம் பொழிந்து 901
தனிதொடர் வழி 737
தனிநின்றார் 640
தனிநேமி நடாத்தி 1014
தனிப்பெருங் கணவர் 1134
தனிப்பெரு வேட்டை 810
தனிமுதலாம் பரன் 789

தனியாயின தலேவர் 1078
தனியிடத்தி லிருந்து 1025
தனிவீரர்க் கெதிரே 643
தனிவேட்டை வினே 792
தனுவெழுந் தரணி 1154
தன்கருத்தேமுற் றுவித்தான் 647
தன்னிழற் பிரி யாத 1152
தன்னேத்தான் 593
தன்னேயேசால 613
தன்னேயே யொப்பான் 1140

தா

தாண்டகச் சதுரர் 862
தாதியர் 879
தாபித்து 1240, 1251
தாமரைத் தவிசு 1103
தாயங்கொள் ளுங்கால் 620
தாயாந் தன்மை 1235
தாரகை 1208
தாரகையலேய 1167
தாரகையு மதி யும் 1208
தாரம் (இசை) 950
தாரை 581
தாரைகள் 1003
தாலிமாறி 865
தாவில்செய்கை 910
தாழுஞ்சமண் கையர் 981
தாழுஞ்செயல் 995
தாழ்வடம் 888
தாளம் 1111
தாளறுவன 778
தாளில்வாழ் செருப்பர் 717
தாளுந்தடமுடி யும் 611
தாளரியு 869
தாளுள்விருத்தி 614

தி

திகழ்ந்தபுனல் 1041
திங்கட்கொழுந் தணி 598
திங்கண்முறை வேட்டை 693
திங்கள்செல்ல 662
திசைகளெங் கும் 815
திசைமயக்கம் 1151
திசைமயங்க 1199
திசைதொறு 679
திசையொலிக் கும் புகழ் 1190
திண்சிலேயின் வளம் 704
திண்ணஞர் பரிவு 813
திண்ணன் 666
திண்பலகை யான் 643
திமிலே 581
திருக்கண்ணில் வர்தஞறு 829
திருக்காஞ்சி வரைப்பு 1139
திருக்காமக் கோட்டம் 1148, 1149, 1150, 1151
திருக்குழல் வாசனே 961, 965
திருச்சேடியர் 1136
திருத்தாள்மடித் தேற்றி 711
திருநீறு 1013
திருநீறுதாங் கிய 641
திருநீற்றி லெளளி 941
திருநீற்றின் றிருந்தொளி 1018
திருநீற்றுச்சார் புடைய 649
திருநீற்று நெறித்துறை 1012
திருநீற்றுயர் நன்னெறி 985
திருநெடுந்தாலி 865
திருப்பணி 604, 977
திருப்பரப்பு 1116
திருப்பள்ளித் தாமம் 1022, 1238, 1240
திருப்பூங் கூடை 1023
திருப்பெரும்பெய ரிருக்கை 1152
திருமகள் 881
திருமஞ்சனமாங் குறிப்பு 1236
திருமஞ்சனமே முதலாக 788
திருமஞ்சன மைந்து 1225
திருமலர்க்கை 1260
திருமலர்ப்பொகுட் டிருந்தவன் 1037
திருமலிதழனி 668
திருமலேச்சாரற் சோலே 744
திருமலேயின் புறம் 791
திருமன்று 1060
திருமுகலி 746
திருமூலே 1141
திருமுன்பு 785
திருமுன்பே 786
திருவடிப் பிழைத்தல் 1146
திருவாயி லமைத்தார் 796
திருவாயில்நேரே கும்பிட 1057
திருவாயிற்புற நின்று 1055
திருவாய்நீர் 671
திருவாளன் 1265
திருவிளையாட்டு 1133, 1139
திருவுடைய தில்லே 1074
திருவுளங் கொள 1138
திருவுள்ளஞ் செய்து 1130
திருவுள்ள மாவதே 786
திருவுள்ளம் காதல்கூர 1258
திருவுள்ளம் 1139
திருவெல்லே 1065, 1213
திருவொற்றியூர் நீங்க 1116
திரைக்கடற் பரப்பு 722
திரைக்கரத் தால் 1041
தினகரமண்ட லம் 1043

தீ

தீக்கடைகோல் 793
தீக்கடைந்து 764
தீங்கிழையார் 641
தீங்குகுறித் தழைத்த 640
தீங்குசெய்தார் 586
தீங்குநெறி யடை யாத தடை 1165
தீதிலாநீலச் சிவபுரி 1038
தீதுகொள் வினே 967
தீபங்கள் 1137
தீபமாமரங்கள் 780
தீயபுட்கள் 812
தீயமைத்தபடி 1070
தீயவென்பன 1124
தீயன 1183
தீயின் மஞ்ச னம் 1077
தீர்த்தங்கள் 1150
தீர்வுநேர்வார் 592
தீவினையின் றிறம் 790

து

துகள்மாசு 1191
துகள்வன 1185
துகிற்கொடி 870
துகிற்பதாகை 579
துங்கப்பெருமா மழை 712
துங்கவேதியர் குலம் 1033
துங்கவேழம் 590
துடிக்குலங்கள் 726
துடிக்குற டுருட்டி 673
துடியிடை 922
துடவை யிடை 1045
துணங்கை யாட 688
துணிந்த மறை மொழி 789
துணைத்தாள் 1259
துணைப் புதல் வர் 1216
துணையடிகள் 1076
துணைவி 1203
துண்டப்பிறை 708
துண்ணென வணைந்து 562
துண்ணென்று 712
துதைந்தநூல் சூழ் 1005
துயிலிடையிற் கிடை 792
துவர்வார்விசி 710
துவைப்பு 582
துளித்த கண் ணீர் 1020
துளும்பும் 1174
துளைகொள் வேய் (இயம்) 687
துள்ளுபறழ் 1047
துறைக்கண்ணி 686
துறைநீதி யமைச்சர் 1012

தூ

தூக்கு 953
தூங்குதீங்கனி 1104
தூசு 1191
தூண்டுசோதி 1161
தூதுகொள் பவர் 967
தூநறுமென்புல் 935
தூநறும்பள்ளித் தாமம் 770
தூபம் 1137
தூயதிருவமு தமைக்க 795
தூயநாமம் 924
தூயபெருந் தனித்துளை 948
தூயமாதவம் 1078
தூயமாந்தர் 1124
தூயவெண்டுறைப் பரதவர் 1111
தூரியத் துவைப்பு 582
தூற்றில் வாழ் முயல் 1154

தெ

தெங்கின் தாளதிர 1044
தெம்முனையி லயற்புலம் 704
தெய்வக் கங்கை 1167
தெய்வத்தமிழ் 970
தெய்வநாயகர் 559
தெய்வநிகழ்குற முதியாள் 701
தெய்வப்பாவை யர் 1175
தெய்வப் பெருமை 668
தெய்வ மறை முனிவர்கள் 1070
தெய்வமறைச் சிறுவர் 1229
தெவ்வென்று 1014
தெவ்வர் கண நிரை 692
தெளிந்த செலவு 1220
தெள்ளுதிரை 886
தெள்ளும்மறை கள் 1027
தெள்ளு வாய்மை 1127
தெற்றி 1177
தென்றிசை 1130

தே

தேக்கிலையால் 793
தேக்க 954
தேசுடைய கழல் 1037
தேடாதன வன்பினில் 1242
தேடிக்கொள் ளுந்துறை 984
தேமலரளகம் 553
தேமாவின்கா 927
தேம்பொதிந்த 1115
தேய்க்குங்கை 987
தேரொலிக்க 1190
தேவதேவன் 1130
தேவதேவே சனே 786
தேவராட்டி 696, 769
தேவர்தின்ன விறைச்சி 765
தேவர்பிரான் 877
தேவு மால் கொண்டான் 769
தேறுவார்க் கமுதமான 811
தேனக்க கோதை 865
தேனலர் கொன்றை 681
தேனிற் றோய்த்து 684
தேனுமுடன் கலந்தது 799
தேன்பிழிந்து கலந்தது 797
தேன்பொழிவ 1019

தொ

தொடக்குநாய்ப் பாசம் 673
தொடர்பினி லிடையறாச் சுருதி 1034
தொடர்வுறும் விசை 737
தொடுதோல் 943
தொடுப்பன வலைகள் 1111
தொடையல் 1025
தொண்டக முரசு 687
தொண்டர்தமக் கதிபன் 1261
தொண்டின் திறம் 1030
தொண்டையங் கனிவாய் 1135
தொல்லைவினை 1191
தொழில் தலை நின்றார் 1034
தொழும்பர் 896
தொழும்ப னேன் 1201
தொன்மரபில் 689
தொன்மரபு 1213
தொன் முறைமை 667
தொன்மைக் குடி 975
தொன்மைப் புகழ் 968
தொன்மை மேன்மை 1079
தொன்னகர் 1126

தோ

தோகை 1122
தோட்டார்பூந் தாரார் 638
தோரண மணிகள் 660
தோரைமலி சேடை 697
தோலொடு தோல் 625
தோழங்கள் 936
தோளியர் 1115
தோள்கொண்ட வல்லாண்மை 616
தோள்வலயம் 709
தோன்றாவகை கலந்து 636
தோன்றித்தண் கோலமலர் 941

ந

நகிலுழுத சுவடு 1170
நகிற்கொடி 870
நகுவெண்டலைத் தொகை 1225
நகைக்கும் பதம் 1023
நங்குலத் தலைமை 765
நங்கை 914, 1139
நச்சழற்பகழி 656
நஞ்சுபில்கெயிற் றரவம் 1158
நடமாடுங் கழல் 1072
நடமேபுரியும் 1221
நடுநிலையொழுக் கம் 1079
நந்தமிழ் முத்தம் 904
நம்பர்தாமளக்கி லன்றி 606
நம்பெருமான் 1192
நம்மையுடை யார் 1221
நயப்பாடு 1241
நயப்புற்று 1252
நரம்பு 987
நரம்புறுதானம் 938
நரைமூதாட்டி 696
நலப்பட்டான் தேவர்க்கு 765
நலமிகுகயிலை வெற்பு 605
நலமென்றுங் குன்றுதார் 610
நலமேசெய்து 704
நலிவார் 959
நல்லகாட்சியே 745
நல்லபதமுற 797
நல்லமஞ்சனப் புனல் 811
நல்லறம் 1149
நல்லோர் மனம் 1018
நல்வினைப்பயன் செய்மாதர் 1106
நவகண்டம் 1166
நவகும்பங்கள் 1239
நவமணிமாரி 1171
நவைவந்துற்ற போது 1080
களிர்வரை 752
நல்லார்களும் போற்றும் 612
நறுநீர்வண் டல் 1172
நறுந்துகில் 998
நறும்புறவு 1122
நறுவிலி 940
நற்றவக் கொள்கை 605
நற்றிறம்புரி 1080
நற்றுறைமாந் தர் 968
நனைமருவும் சினை 1043
நன்றவன்றன் 805
நன்றிபுரியும் 1217
நன்றுநான்செய்த இந்தமதி 823
நன்றுநிறைதீம் பால் 1252
நன்னர் மகிழ்ச்சி 1028
நன்னிலை 909
நன்னிலைமையன் றளக்க 1192
நன்னுதல் 923

நா

நாகக்குலம் 682
நாகமணையுங் கந்து 1209
நாகம் 1209
நாகிள ஆன் 930
நாசிகை 1172
நாடுவளம் படுத்து 980
நாட்குறித்த தெல்லாம் 677
நாட்டாரைக் கொல்லாதே 638
நாணற்பூங் கொல்லை 1239
நாதனுக 694
நாநிமிர்கின்றன 623
நாந்தெரிந்த வாறு 649
நாயகமா நங்கள் பெருமான் 1262
நாயகன் 1129
நாயனூர் 1225
நாயனூர்க்கினிய செய்கை 759
நாய்களட்டமாக விட்டு 725
நால்வேதம் 1207
நாவலர்புகழ்ந்து போற்றும் 650
நாவிற்பழகிய வினைமை 774
நாளத்துருத்தி 1172
நாளலர்ந்த செங்குவளை 1156
நாளும் மூடிந் தது 991
நாளொடுசீறி மலைப்பவர் 625
நானிலத் தமைதி 1124
நான்மறையின் சீலம் 1263

நி

நிதம்பம் 927
நிதிக்கோன் 1178
நித்திலம் 1098
நித்திலம்சேர்ந்த கோவை 973
நித்திலவருவிச் சாரல் 651
நிரந்த காதல் செய் 1138
நிரந்தரம் 1134
நிரப்புநீங்கி 698
நிராயுதரைக் கொன்றுரெனும் தீமை 646
நிருபர்கோன் 599
நிரைக்குலங் கள் 1243
நிரைக்கொடி புறவம் பாட 944
நிரைமேய்ப்பு 1228
நிரையின் குல மெல்லாம் 1233
நிலத்தினின்றேறப் பாய்ந்தார் 823
நிலமலர் 1024
நிலவிய விரு வினை வலி 734
நிலாத்திகழ் முடி 1096
நிலாமுகிழ்க்கும் திருமுடி 1190
நிலைசுழல்பவர் 734
நிலைப்பட்ட மெய்யுணர்வு 634
நில்லாநிலை யொன்றிய 980
நிவந்தெழும் பெரும்புனல் 1031
நிழலினுலே நிறைதல் 1170
நிறுவு மறை யோர் 1220
நிறைதவம் 1117, 1170
நிறைந்தவரும் பூசனை 1252
நிறைபுரிந்திட 1082
நிறைமலர்ப் பாதம் 817
நிறையும் பெருமை 1248
நிற்பவும் சரிப் பவும் 1142
நின்றசெங் குருதி 823
நின்றவிதியின் வினையாட் டால் 1252
நின்றுரெங்கணு மிரியல்போக 562
நின்னளவிலன்றி மேம்படுகின் றுன் 700

நீ

நீங்குமிரவு 1000
நீடுநீர்தாழ்த் ததி 764
நீடியசரி 738
நீடியசோகம் 817
நீடுசெருப்பு 711

நீடுநன்மைகள் 1138
நீணிலமலை 752
நீரிடைநெருப் பெழுந்தனைய 1035
நீரொலிக்க 1190
நீர்பசித் திருக்க 762
நீர்மலர் 1024
நீர்மைபணிந்த முத்தம் 969
நீர்வழக்கறுப் பன 1102
நீர்வழங்குவ வியன்கால் 1100
நீலகண்டர் 1226
நீலச்சோபா னம் 1168
நீலநிறைந்த 1265
நீலநெல்லரி கூலி 913
நீலமணிகளு மிமைக்குஞ் சோதி 779
நீலமலை 701
நீலவாட் படைநீலி 1092
நீலி 927
நீலிகோட்டம் 1092
நீளிருங் குன்றச் சாரல் 816
நீளிருணீங்க 777
நீளுநெய்தல் 1123
நீள்குலைத் தெங்கு 1104
நீறுதரும் மூலம் 1226
நீறேசெய்யு மபிடேகம் 1008
நீற்றலர் பேரொளி 1042
நீற்றின் சார்பு 980
நீறுவிரும்பு தொழும்புள் ளார் 934

நு

நுசுப்பு 1184
நுசுப்பைமுலை வருத்த 880
நுண்மணல் வெண்மை 1114
நுதலின்கண் விழித்தவர் 1013
நுஷச்சியர் 1112
நுஷையர்கள் 1112

நூ

நூபுர வரவம் 1175
நூலாறு நன் குணர்வார் 866
நூல்கொண்ட மார்பர் 564
நூல்பாயிடம் 972
நூன்மார்பர் 1025
நூன்முறை 998

நெ

நெஞ்சுவேரேர் விருப்புற 746
நெஞ்சேய் துயரம் 568
நெய்க்குழல் 927
நெய்தருங்கொழுந் தூபம் 1137
நெய்தல் 1083, 1110, 1117, 1118
நெய்வாள் 646
நெருங்குசேற் குலம் 1102
நெருப்பமைத்த குழி 1071
நெருப்புக்காண் பாய் 748
நெருப்புயிர்த்து 570
நெல்லின்கூடு 1105
நெறிகளிற் சரித்து 996
நெறிகுழல் 1049
நெறிகொண்ட குஞ்சி 706
நெறிசூழல் 739
நெறிசேர்புலன் 734
நெற்குறு பாட்டு 1049
நெற்றிசென்று 643

நே

நேசநிறைந்த வுள்ளம் 1265
நேமி 580
நேரடர்ந்தான் 635
நேரியர் பெருமான் 599
நேரிருவர் 627
நேரிழை 1082
நேர்காண வல்லார் 860
நேர்நிற்கும் 1221
நேர்நோக்கி 946, 1204
நேர்படச் செல் லும் 752
நேர்படாமல் 718
நேர்பெற நோக்கி 777
நேர்வார்போல் 646

நை

நைகரமில்லா 914
நையுமனம் 1070

நொ

நொச்சி 1163

நோ

நோன்மை 866
நோன்றலை மேதி 972

ப

பகட்டேர் 1042, 1101
பகலவன் 775
பகலெல்லை யடங்க 986
பகழிப்புண்க ளார்க்கும் 819
பகைத்தோன் 621
பகைப்புலத்த வர் 584
பங்கயமாகிதி 904
பச்சிலையோடு பூவும் 757
பஞ்சமுத்திரை 889
பஞ்சவடி 894
படர் 1001
படர்சிறைப் புள் 1209
படிமத்தாள் 698
படுகர்மருங்கு 1232
படுகளம் 584
படைக்கலம் (வில்) 681
படைஞர் 580
படை பிழைத்து 636
படையறுதுணி 626
பட்டடைக் குரல் 950
பட்டவர்த்தனம் 561, 576, 601
பட்டிகை 888
பணி (பாம்பு) 873
பணிபுவனங் கள் 957
பணியிற்சலியா தது 1255
பணியின்சுடர் 1227
பணிவீரர்கள் 623
பணிவுடைய வடிவு 873
பணைமருதம் 1163
பண்டாரநிலை 1170
பண்டைப்பரி வால் 1240
பண்ணின்பயனு நல்லிசை 1214
பண்ணுறு முறுப்பு 583
பண்படுமின் சொல் 969
பண்புடையடி யார் 860
பதவுகாலம் 1231
பதிகச்செழுந் தேன் 1019
பதிகப்பற்றுன 1026
பதைப்புறு காதல் 1140
பத்திமுதிர்ந்த பாலகனர் 1258
பத்தாடியமங்கை யர் 973
பம்பை 726
பயந்தார் (பெற் றோர்) 886, 1219

பயில்விளி 792
பயோதரம் 944
பரசு 557
பரதவர் 1111
பரத்தியர் 1111, 1123
பரப்பிய கயல்கள் 1115
பரமன்னவர் 1015
பரம்புநீள் புவனம் 1187
பரம்பொருள் 924
பரவமேன் மேல் 1253
பரவை 1174
பராய்க்கடன் நெறி 659
பராய்க்கடன் நேர்ந்து 680
பரன்முரம்பு 1092
பரிக்காரர் 562, 591
பரிக்காரரோட 562
பரிசனங்கள் 1131
பரிசு 1205
பரிதியோடுஞ் சந்திரன் 778
பரிவகற்றி 1231
பரிவுதானோர் படிவம் 755
பரிவுறுபயம் 1141
பருங்கை யானையை 1109
பருவரால் தொகுதி 1102
பருவரைத்தடந் தோள் 591
பருவியோடைகள் 1108
பலகலையும் 1220
பலகை 618
பலகைக்குலம் 622
பலகைபுறம் போக்க 644
பலதுறைகளில் 734
பலிநேர்(தல்) 714
பல்கும் 1175
பல்நறவுமாந்தி 685
பல்லாயிரவர் கணநாதர் 1262
பல்லியங்களெழ 1262
பல்லியம் 1003
பவலோகங் கடப்பவர் 1058
பவளச் செவ்வாய் 671
பவள நறுந்தளிர் 1174
பவளமென் கொழுந்து 1118
பவித்திரமாஞ் செயல் 788
பவித்திரை 1216
பழங்கூரை 1046
பழனம் 1084
பழைய பான்மை 1253
பழைய மழவிடை 896
பள்ளநீள் வயல் 1099
பள்ளித்தாமம் 590
பள்ளித்தாமம் நிறைந்திட 600
பறந்தலை 626
பறவை 1084
பறித்து மளித்தும் 1231
பறைத் துடவை 1053
பற்றல ரிலாதாய் 577
பற்றலர் முனைகள் 561
பற்றலன் 640
பற்றுவன 951
பற்றையெரியும் 1216
பனிமலர்மாரி 599
பனையுடுத்த 1105
பன்னகநாண் 1024
பன்னகாபரணர் 590
பன்னெடுங் கரங்கள் 775

பா

பாகரும் பட்டார் 576
பாங்கர் 1003
பாசடை 929
பாசிலைப்படலை 686
பாசிலை மென்கொடி 940
பாசொளிமணி 670
பாடலம் 1156
பாடி 1159
பாடுபெற்றசீர் 1039
பாணி 953
பாதலம் 623
பார்குலவ 1205
பார்ப்பான் 758
பார்வை 720
பாலாக்கள் 1239
பாலாந் திருமஞ்சனம் 1255
பாலின் திருமஞ்சனம் 1240
பாலின் பயனாமின்சுவை 1214
பாலுகுத்து 1247
பாலும் பயனும் பெருக 1230
பால்பாய்முலை 972
பால்மறைநாகு 936
பாவுங்கலைகள் 1223
பாளை 929
பாளைவிரி மணம் 1044
பாறை 987
பாறை தன் மருங்கு 1202
பாறைமுன்றில் 652
பானற்கந்தரம் 893
பானற்குலமா மலர் 713
பானுரைவாய் 955
பான்மதி 662
பான்மதியுவரி 662

பி

பிஞ்ஞகர் 1071
பிஞ்ஞகன் 809
பிடர் 729
பிணம்படு செங்களம் 631
பிணியன 1183
பிணையல் 1025
பிண்டிபாலம் 580
பித்தனெனப் பிதற்றுதல் 1205
பிரசமென் சுரும்பு 1035
பிரமசாரி 1234
பிரமசாரிகள் 1251
பிரியாவிசைவு 1130
பிரியாதுவைகுவாய் 1204
பிலம் 1132, 1157
பிழைக்குநெறி 876
பிழை தீர்க்க வேண்டி 594
பிழைத்த துண்டு 587
பிழைபடினன்றி 587
பிள்ளைதைவர 1099
பிள்ளைப்பேறு 875
பிறப்பினால் 1188
பிறப்பொழிப்பாள் 1146
பிறவிமாசு 1191
பிறப்பின்சார்பு 657
பிறித்தொலிக்கப் புகும் 1198
பிறை 1152
பிறைக்கண்ணிப் பெருந்தகை 1052
பிறையுரிஞ்சு 1071
பின்பகல் 1198
பின்றை 688

பீ

பீடு 1105
பீலி 658
பீலியின்குவை 679

பு

புகழ்புரிகுரவை 660
புகனான்கு 951
புகுந்தபரிசு 1246
புடைத் தெங்கு 1048
புடைத்தெற்ற 1202
புடைபெயர்ந்த 644
புடைபெயர்வு 960
புணர்நிலம் 1118
புண்டரிகம் 608

புண்ணியக் கங்கை 671
புண்ணிய தீர்த்தம் 1155
புண்ணியத் திருக்காமக் கோட்டம் 1148
புண்ணியப் பொருளாய் 666
புண்ணியப் போர்வீரர் 642
புண்ணியமா முனிவடிவு 1072
புண்ணியமெய்த் தொண்டர் 1189
புண்ணியம் 913
புண்ணீர் 822
புண்ணீர்குறை படாதிழிய 821
புண்ணூறு 990
புண்படுவழி 631
புதல்வர்ப்பெற்று விளங்குந் தவம் 1216
புதல்வர்ப்பேறு 659
புதல்வனை யெடுத்து 664
புதுநறவு 1083
புதுமலர்க்கா 763
புதுமலையிடித்து 552
புந்தி 900
புயல்காட்டுங் கூந்தல் 868
புரங்கடந்தவர் 1187
புராணமுனி வர் 1258
புரிசடைப் புராண 922
புரிசை 555
புரிந்தவர் கொடுத்த வாள் 596
புரிமுந்நூல் 1208
புரிவு செய்தனள் 1133
புரிவுறுகடன் 690
புரைநெறி 1114
புலப்படுத்தார் 1057
புலரும்பொழுது முன் 1203
புலர்வளவும் 808
புலர்வுற்றது 993
புலவி 967
புலன்கரணமேவிய வொன்று 961
புலன்வென்று நீக்கி 1014
புலி (கொடி) 1162
புலிகிடந்தவெம் முழை 617
புலிக்குருளை 653
புலித்தோ லிருக்கை 701
புலிநரம்பிற் செய்தகாப்பு 682
புலிப்பறழ் 665
புலிப்போர்வை 672
புலியினுரி யாடை 1169
புலியுகிர்ச்சுட்டி 669
புலியெயிற்றுத் தாலி 658
புலைப்பாடி 1046
புலைமகளிர் 1049
புல்வாய் 959
புவனம்பதி னான்கு 1187
புவிகொண்டா டும் 554
புவியளிக்கும் 608
புழுக்கி 1198
புளினக்குறை 1237
புளினம் 746
புள்ளொலிகறங் கிட 1035
புறச்சிறுகான் 674
புறஞ்சூழ்ந்து 617
புறத்தது 1110
புறத்திருத் தொண்டர் 1040
புறந்தருவார் 877
புறந்தோல் 987
புறம்பணை 1046
புறவம் 1083
புறவிலாய் மல ரும் 1107
புறவிற்பூத்த 1238
புறவின்மாடும் 1232
புற்பதத்தன 1086
புற்பாற் சொன்றி 683
புற்றர வனைய சரம் 629
புனல் கழுத்தள வாயிட 1036
புனல்சோர 960
புனற்றாரை 1199
புனனாட்டு 1206
புனன்மழை 1203
புனிததீர்த்தங் கள் 1224
புனிதர் 1238
புனிதர்பொற் றாள் 603
புனிற்று 936, 1222
புனிற்றுமதி 1169
புனைதவத்து மாமுனிவர் 808
புனைதொழிற் கைவினைஞர் 705
புனையலாகும் மலர் 1024
புனையிருங்கடி மதகு 1100
புன்றலைச்சிறு மகார் 653
புன்றலைநாய் 1048

பூ

பூகம் 1104
பூங்கணைவீதி 870
பூங்கூடை 560,563
பூங்கொடி 1192
பூசல் வன் கரை 1097
பூசனைகுறித்த தானம் 1164
பூசனையின் செயல் 798
பூசையுறுப்பு 1242
பூதகணங்கள் புடைசூழ 1258
பூதிசாதனம் 1107
பூதியாகிய புனிதநீறு 1143
பூந்தண் பொன்னி 1206
பூமகளுக்குறை யுள் 1172
பூமரும்புனல் 1110
பூம்பந்தர் 1093
பூம்பாசடை நீர்த்தடம் 1210
பூம்பாளை 1212
பூம்பிடகை 1136
பூரணகும்பம் 870
பூரித்ததூநீர் 1005
பூளைப்பூவாம் பிறவி 1062

பெ

பெண்ணமுதம் 879
பெண்ணினல்ல வள் 1128
பெய்கருமுகி லிடியொடு 736
பெய்கலம் 914
பெரியதேக்கு 743
பெரியோருள் ளம் 1165
பெரியோர் செய்கை 596
பெருகுசோபா னம் 752
பெருங்கலை யொலி 1106
பெருங்களி 664
பெருங்குடி 1105
பெருங்குலை 1046
பெருங்குறிச்சிக் கிறைவன் 692
பெருந்தவக் கொழுந்து 1128
பெருந்தவப் பயன் 1135
பெருந்தேர் 1211
பெருந்தடந் தோள் 596
பெருமனைவாழ் தருமம் 1215
பெருமிதம் 613
பெருமுதி யோர் 881
பெருமைக் களவாகிய 983
பெரும்பகல் 1037, 1198
பெரும்புற மலைய 658
பெருவண்ணம் 953

பெருவதுவை 901
பெருவரங்கள் 1148
பெருவிருப்பு 1190
பெருவிழா 660
பெருவிழா வெடுத்து 664
பெருவைப்பு 1096
பெறும்பே றெல்லை 1216
பெறுவன கொண்டு 788
பெற்ற வன்றே 1225
பெற்றிமை 613

பே

பேணுந்தகுதி 1234
பேணுமிடம் 1251
பேதித்துக் காணுநெறி 802
பேதையரிழைத்த வண்டல் 673
பேதையர் 1094
பேரணங் காடல் 660
பேரரணம் 651
பேரிசை 1053
பேருலகு 989
பேருவகை யன்பின் 754
பேரொலிக்க 1190

பை

பைங்கட் குறுநரி 617
பைங்கமுகு 869
பைங்கழல் வரிந்த 580
பைங்கூழ்க்கு 1229
பைதரும்பணி 1117
பைந்துணர் மாவடு 908

போ

பொக்கணம் 888
பொங்கர் 931
பொங்கியவொளி யினீழல் 753
பொங்குதீர்த் தம் 1098
பொச்சமொழு கும் 1245
பொச்சையி னறவு 656
பொடி(நீறு) 922
பொடிமூடு தழல் 890
பொதிசோறு அவிழ்ப்பன 1113
பொதிபொ னவிழ்ப்பன 1113
பொதுவர் 945
பொய்கை 1157
பொய்யன்பு 962
பொய்யாதளிக் கும் 1206
பொருகரி தொடர்ந்து 572
பொருசிலம்பிடிப் பித்தார்கள் 689
பொருப்பி லெழுஞ்சுடர் 787
பொருப்பில் வேந்தன் 1131
பொருப்பு 1120
பொருப்புரிமை 699
பொருவிடை 1203
பொருள்செய் தாம் 895
பொலங்குழை 878
பொல்லாங்கு 1245
பொழிமதஞ் சொரிய 562
பொற்களப மாளிகை 1171
பொற்பட்ட மால்யானை 577
பொற்பொது 962
பொற்றொடி யார் 648
பொன்செய் தாழ்வரை 879
பொன்மலைப் புலி 552
பொன்மலை வல்லி 1033
பொன்றவழரு விக் குன்றம் 585
பொன்னம்பலம் 648
பொன்னிநாடு 903
பொன்னிமயப் பொருப்பு 1192
பொன்னின்மய மாக்கிய 1213
பொன்னெடும் பொது 603

போ

போகத்தின்மரு வியகருத்து 1143
போகமார்த்த பூண்முலை யாள் 1129
போகவனப் பின் வளம் 1187
போதின்விளங்கு தாரகை 1208
போதுநீர்மை 1131
போதுபோக் கும் 984
போரணிநெடு வேலோற்கு 660
போரிலவர்க் கழித்த 637
போரேற்றை விலங்க 1057
போர் (நெற் போர்) 926
போர்செய் களம் 625
போர்மள்ளர் 616
போர்வைத் தோல் 1054
போற்றுமவன் 1222

பௌ

பௌவத்திரை யிற்படு 710

ம

மகட் கொடுப்பக் 885
மகட்பயந்த 884
மகட்பேச 881
மகப்பயந்த போது 662
மகரக்குழை 1171
மகவுறக்கு நிழல் 1048
மகனுர் 1249
மகனுர்திரு முதுகு 1254
மங்கலதீர்த் தம் 1155
மங்கலநீர்ச் சுனை 705
மங்கலபூசை 1010
மங்கலமுழு 592
மங்கலமாந்தர் 1006
மங்கலமாம் செயல் 884
மங்கலமானது 932
மங்கலமிங்கொழு குவது 892
மங்கலவா குதி 1005
மங்கல வாழ்த்து 689
மங்கலவிழவு 562
மங்குல்வான் கிளர்ச்சி 581
மஞ்சனமாட்ட 770
மஞ்சனம் 1137
மஞ்சுதழைத்த 894
மஞ்சுநீள்வது 1158
மஞ்சேயென 568
மஞ்சை 944
மடற்கைதை 1113
மடிசெவியன 735
மடிபெருகி 1233
மடுத்தகருணை 1259
மடுத்தகுடம் 1240
மடைதிறந்தார் 946
மட்கலம் 917
மணக்கோலம் 893, 899
மணத்திறம் 882
மணநேர்ந்து 882
மணந்தங்கிட 1238
மணப்பருவம் 880
மணம் 886
மணமிசைந்த படி 883
மணம் புணர்ந்து 901
மணவாளநற் கோலம் 1144
மணற்குறை 1250

மணற் கோயில் 1251
மணற்சிற்றில் 879
மணிகள் கான்ற விரிகதிர்ப் படலை 779
மணிக்கடைகாப் போர் 577
மணிக்குதம்பை 670
மணிச்சதங்கை 670
மணிமறுகு 1166
மணிநீலமலை 701
மணிமெளலி 1017
மணியிசைப்பு 582
மணியுமளித்த அவே நஞ்சு மளிக்குமரவு 1215
மண் (பூமி) 989
மண்கிளைத் தறியாத 907
மண்டுகாதல் 1254
மண்ணின் பயன் 1214
மண்ணின் மிக்க தோர் 1154
மண்ணீர்மை நலம் 867
மண்ணுலகத் தயிர் 1133
மண்ணுலகை விளக்கிய 875
மண்ணெலா மகிழ்ந்து 603
மண்பகிர்ந்த வன் 860
மண்படுவான் 637
மதகுவாய் கிறந்திட 1100
மதக்களிறு 588
மதக்கைமா 655
மதர்த்தெழு முள்ளம் 822
மதித்தோற்கு முகம் 868
மதிநாறுஞ் சடை 963
மதிநூல் வல்லவர் (சோதிடர்) 883
மதிநூல் வளர் வாய்மை 1009
மதிமுயல் 1120
மதில்புடை போக்கி 1162
மதுகரம் 1019
மந்தர நிலம் 973
மந்தாரத்தின் பனிமலர் 1073
மந்திரமா மதிலகழி 1164
மந்திகள் முழையில் வைத்த மணி விளக்கு 780
மந்திரம் 952, 1176
மந்திரயோகர் 1005
மந்திரயோகு 1005
மயலுறுகளிப்பு 685
மயன்மிக முதிர்ந்தான் 768
மயிர்க் கயிறு 707
மயிர்க்கா றேறும் 755
மயிர் நுழுதி 940
மயிர்ப் புளகம் 1194
மயிர்முகிழ்த்து 955
மயிற்கழுத்து 697
மயிலுடைக் கொற்ற வூர்தி 661
மரகதச்சோதி 1174
மரகதம் 779
மரக்கடை தீக்கோல் பண்ணி 748
மரக்கோவை 928
மரத்திரள் 675
மரபினுக்குத் தரும் பரிசு 882
மரவுரி 697, 942
மருங்கு நின்றகலா 776
மருங்கு புடைபட 793
மருங்கு போதல் 1151
மருட்டுறை மாற்று 556
மருட்கொடுந் தொழில் 1115
மருதத்தண் டலை 1232
மருதநீர் வைப்பு 1103
மருதம் 1083
மருதயாழ் 1110
மருந்துகள் பிழிந்து 820
மருந்துகைகண் டேன் 825
மருப்பு 1222
மருப்போச்ச 1222
மருள்செய்த பிறப்பு 895
மரை (மான் வகை) 643
மரைமா 728
மலமூன்று 803
மலமூன்று மீனைய. 1191
மலயம் 970
மலரக்கற்று 691
மலர்க்கண்ணீ ரருவி 755
மலர்க்கண் ணெற்றி 1145
மலர்க்கிடங்கு 1164
மலர்த்துணர் தூக்கி 946
மலர்ப்புன்னை 1113
மலர்மழையா யிட 1203
மலர்வாய 1019
மலைகாவலர் 738
மலைக்குலக் கொடி 1141
மலைபடுமணி 679
மலைமடந்தை 1132
மலைமருந்து 784
மலையிற்முழ்ந் தான் 775
மலையுறை மாக்கள் 682
மலையெழு கொழுந்து 754
மலைவல்லி 896, 1163
மலைவாய் 959
மலைவிழிப்பன 1119
மழலைத் தீஞ் சொல் 671
மழவிள வெண் டிங்கள் 1179
மழைப் பொரு ளாம் 896
மழைவளருலகு 557
மள்ளர் 616
மறக்குடி மரபு 667
மறக்குலத் தலைவர் 678
மறச்சிறு மைந்தர் 674
மறந்து மயல் நினைவின்றி 1052
மறப்படைவாட் சுற்றத்தார் 619
மறம் பூண் டான் 643
மறவர் 630
மறவர்களரி யேறும் 737
மறுமை கொண்டு 703
மறித்துநாம் போகைக்கு 764
மறித்ததாதை 1257
மறுகன 1105
மறுகு (வீதி) 870, 1010
மறைகளுட் பட 1218
மறைக்குலங் கள் 720
மறைச் சிறு வர் 1264
மறைமுதி யோன் 1264
மறை யந்த ணர் 1176
மறையின் முறை 1217
மறையோ ரிசைவு 1229
மறையோர் குலம் 1217
மறையோர் மகளிர் 1210
மனக்கவலை ஒழிகென்று 807

மனங்கொண்ட குறிப்பு 703
மனச்செவ் வன்பர் 888
மனத்தினுங் கடிது 820
மனமுதலாயின மூன்று 1189
மனமுறுமற் புதமாகி 808
மனவு 658
மனைக்காற் றேற்க 1201
மனைப் படப்பை 914
மனையறம் பெருக்கும் 1148
மன்றவரடி யார் 570
மன்றன் மருவும் 1217
மன்றினடைஞ் 1217
மன்றுளாடுஞ் சேவடி 1228
மன்னிய வாகமப்படி 804
மன்னுந்திசை வேதி 1005
மன்னுலகு 1204

மா

மா(குதிரை) 1175
மாகமருங்கி னும் 622
மாகம் 1209
மாசறுகோலம் 670
மாசுடம்புவிட 1077
மாசெறிந்த 1198
மாடவைப்பு 968
மானவகன் 1248
மாதங்கம் 591, 1001
மாதவத்தோர் வென்றி 1217
மாதவப்பயன் 1146
மாதவம் செய் வ்வரம் 1143
மாதவ வேடம் 1193
மாதிரம் மயங்கு 1151
மாதூரிய நாதம் 953
மாநவமி 561
மாமதி 707
மாமுனிவர் 801
மாயனூர் 907
மாயை யாக்கை 1269
மார்க்கம் 1165
மாலறியா மலரடிகள் 1193
மாலா மறையோன் 1255
மாலோக மில 1166
மால் கொண்ட களிறு 564
மாவடு 902, 916
மாவமர்த்தநம் மிருக்கை 1130
மாவீளக்க 783
மாவிரத முனிவர் 891
மாவின்மூலம் 1134
மாவெழுப்பி 726
மா வேட்டை யாடி 758
மா வொலிக்க 1190
மாளிகை நிரைகள் 1166
மாறடு சில 782
மாறுடி முன் தொகுக்கும் 1123
மாறிலாதவிப் பூசனை 1146
மாறிலா மகிழ்ச்சி 863
மாறிலாவகை 1138
மாறிலானமுது 811
மாறின்றிமண் காக்கின்ற 578
மாறுகொள் முழக்கம் 655
மானப்படை 978
மானம் 635, 637
மானவர்ச் சேனை 1126
மானவெங் களிறு 602
மானின் பார்வை 652
மானின்வயிற் றரிதாரத்தில தம் 697
மானும் 1163
மான்குலம் 1095
மான்பிணைகள் 653
மான்மேலு நூலும் 1230
மான்மேல் 1208

மி

மிகுமொழி 1082
மிகைசெய் தாதை 1264
மிக்கபெருந் திருவின் 1045
மிக்கெழுந்த 1060
மிசைக்கொள்ளு தல் 575, 1227
மிருகங்கள் 643
மிருகங்கள் கொந்தி 794
மின்னுமென நீடிய 991
மின்னிரை 622
மின்னின்ற செஞ் சடையார் 647

மீ

மீதங்குக்கடாவு வார் 591
மீதுவழிக் கொளாது 1151
மீதூர்காலை 643
மீளிவேடர் 717
மீனிறைத்த பேருணவின் 1086

மு

முகக்கருவி 1053
முகங்காட்டுந் தேரிரவி 783
முகத்தை நோக்கார் 766
முகிண்முத்த நகை 880
முகிலின் குலம் 1199
முகிலுரிஞ்சுங் கொடி 1170
முகிலொ துங்க 1208
முகில்செய்வ 928
முகைத்தமல ரின்வாசம் 1218
முகைமென் மலர் 1251
முக்கண்ணர் 1204
முச்சி 658, 887
முடி(கிரீடம்) 1008
முடிசூடுசாலை 1004
முடிசூட்டுந் தன்மை 1213
முடிந்த திண்மை 1144
முடிய முடியை யுடைய 1170
முடிவிலாவின்ப மான 751
முடுகிய விசை யிற் பற்றி 675
முட்ட நீர் கடிது 576
முட்டலர் செய்து 983
முட்டினர் 628
முட்டுஞ் சுடர்ப் படை 582
முட்டும்பரிசு 987
முண்டகங்கள் 1114
முண்டநீற்றர் 1145
முண்டம் (கிரீ புண்டரம்) 887
முண்டித்த திரு முடி 887
முதல்வன் (அரசன்) 576
முதல்வனுரு ணேக்கால் 803
முதற்கதி 953
முதற் காரணர் 1226
முதற் சுரிகை 703
முதற் சைவம் 1006
முதற் பருவம் 879
முதியர் 677
முதுமறையோன் 1253, 1263
முத்திரை 949

முத்தின் சுடர்க் கோவை 1167
முந்தைமுறை 798
முந்தை முறைமை 882
முந்தையதுறை 677
முந்தையறிவின் மூடர்ச்சிசி 1218
முப்போதோடி ரண்டறம் 1148
முப்புரிநூல் மார்பர் 1068
மும்மைத் தழல் 1207
மும்மைப்புவ னம் 974
மும்மையினுலுல காண்டார் 1013
முயல்காட்டு மதி 868
முயல்வுற் றதுவே 1244
முயற்பறழ் 675
முருகவேள் 659
முருகவேள் முன்றில் 659
முருகுயிர்க்க 1023
முருந்திடை வைத்த 707
மூலைகள்சுரந் தன 1133
மூலைக்கண்கள்1235
மூலைக்குவடு 1141, 1143
மூலைநீண்ட 1239
மூலைனைமுகம் 879
மூலைப்பால் 1027
மூல்லைப்பண் 950
மூல்லைமென் புதல் 1093
மூல்லையின்நெய் வம் (மால்) 1095
முழக்கம் 582
முழவங்கனை சாறு 871
முழவு 1087
முழுதும் பழுதேபுரி 993
முழுப்பளிங்கின் மாளிகை 1170
முழுப்பை யுகைப்பன 930
முழை 672, 1048
முழையரி 557
முளவு முள்ளரிந்து 669
முறிகொண்ட கண்ணி 706
முறுவல் நிலவரை 1024
முறுவல் புறமகலாத 880
முறை செய் குவன் 1008
முறைத்தானம் சோதித்த 949
முறைமை தந்த 703
முறைமைப் பணி 983
முறைமை யாம் 1082
முறைமை யினுல் 1256
முற்படு கொடை நிலை 629
முற்றக் கற்றனன் 690
முற்றம் 1177
முனைவனுர் 915
முன் கடை 616
முன் செய்த பூசை 1029
முன் துறை 1085
முன் பறைந்து 758
முன்புசெய்தவத்தி னீட்டம் 751
முன்பு தரும் வளங்கள் 1243
முன் பொலிந்து 1201
முன்றுறைச் சூழல் 1114
முன்னிலை 925
முன்னின்ரு பாதகன் 647
முன்னெற்றி 707
முன்னைச்சூழும் வினை 981
முன்னைப்பிறதுறை வேட்கை 763
முன்னையர்ச் சனையின் 1237

ழ

மூங்கில்வன் பதங்கள் 683
மூதறியோர் 882
மூதெயில் 1181
மூப்பின் தொடர்வு 694
மூலமுதல்வர் சிவலோகம் 1263
மூலமவதாரஞ் செய்யும்மூர்த் தம் 1266
மூளவமர்ந்த நயப்பாடு 1241
மூளைபுல்லும் படி 988
மூள்கின்ற செற்றம் 616
மூன்றிலைப் படை 1158

மெ

மெத்தெனவே1141
மெய்காட்டும் 783
மெய்குளிரும் 1200
மெய்குழை 1142
மெய்க்கொண்ட குளிர் 1196
மெய்தரும்படி1137
மெய்தரும் புகழ் 1117
மெய்திகழ் வெண்ணூல் 1072
மெய்த்திருத் தொண்டு 1060
மெய்த்தவர் 588, 1159, 1201
மெய்த்தொண் டர் 565, 1205
மெய்ந்நெறிக்க ணின்ரூர்கள் 1161
மெய்நெறியடை வதற்காம் 1147
மெய்ப்பயன் 1143
மெய்ப்பரிவு 1051
மெய்ப்பற்று 975
மெய்ப்பூசை 1137
மெய்ப்பூச்சு 1137
மெய்ப்பொரு ளாஞர் 1067
மெய்ப்பொருள்872
மெய்ம்மறந்த மெய்யன்பு 877
மெய்ம்மைச்சிவ ஞர்பூசனை 1236
மெய்ம்மைத் தவம் 1022
மெய்ம்மைப் பொருள் 974
மெய்ம்மையின் வேறு 776
மெய்ம்மை யுடனே தோன்று முணர்வு 1221
மெய் யுணர்ந்து 1222
மெய்யுணர்வு 634
மெய்வண்ணந் தளர்மூப்பு 692
மெய்வாழுல கம் 992
மெய்விரவு பேரன்பு 1055
மெய்வைத்த கால் 970
மெலிவனுனன் 692
மெலிவித்தும் 952
மென்கரும்பு 609
மென்குரைப்பு1047
மென்பொழிய1115

மே

மேகமிடைக் கிழித்து 1167
மேகவொழுங்கு கள் 622
மேதக்கவர் 1253
மேம்படலால் 614
மேய்க்கும் பான்மை 1230
மேலாம் பெரி யோர் 1255
மேல்கொண்ட பாகர் 563, 564

மேவலர் புரங்கள் 650
மேவார்போல்1200
மேவினர் பிரியமாட்டா விமலனர் 818
மேற்கடல் 1152
மேற் கண்டேன் 645
மேற்கதுவ 574
மேற்கொள்வார் 639

மை

மைக்கற்புரைநெஞ்சு 982
மைச்சூழல் 927
மைச்செறிந்தனைய 656
மைதழையுங் கண்டம் 784
மைதிகழ் கண்டம் 1195
மைத்தடங் குன்று 588
மைத்துனக் கேண்மை 1081
மைந்தர் (முருகர்) 661
மைந்தனர் 1249
மைவரை யனைய 575
மைவரை யென்ன 776
மைவண்ணக் கருங் குஞ்சி 790
மைவிரவு கண்டர் 1188

மொ

மொய் காட்டு மிருள் 783
மொய்த்த பல்சுணம் 812
மொய்வண்ண விளங்கொளி 990
மொய்வைத்த வண்டு 970

மோ

மோகமா யோடி754

யா

யாகத்தடஞ் சாலை 1211
யாகநிலவுஞ் சாலை 1209
யாக்கைதன் பரிசும் 803
யாமஞ்சென்று 781
யாமவிருளும் வெளியாக்கு மிரவு 1018
யாரளக்கவல்லார் 607
யாவுந் தெளிந்த 1223
யாழ் 1054

யூ

யூபவீட்டம் 1209

யோ

யோகபீடம் 1160
யோகினிகள் 1160

வ

வக்கானை 949
வக்குவன வக்குவித்து 794
வங்கியம் 948
வங்கினைப்பற்றிப் போதாவல்லு டும்பு 765
வஞ்சம் 1134
வடங்கொண்ட பொன்னிதழி 1059
வடகெடுவான் மீன் 915
வடுப்பொலிந்த யாக்கை 661
வட்டணை 636
வட்டந்திகழ் பாறை 987
வட்டமுறு பெருங் கல்லை 793
வடிவாளொளி 636
வடுக்கக்கருநாடர் 978
வடுவகிர்க் கண் 1112
வணிகமாக்கள் 1178
வணிகர்குலம் 975
வண்சிலம்பு 1158
வண்டமிழ்நாடு 980
வண்டல் 633
வண்டானம் 931
வண்டுவார் குழல் 1145
வண்ண வெஞ் சிலை 691
வண்ணவெஞ் சிலையார் 813
வண்பலவு 1104
வதனபங்கயம் 1020
வதுவை 892
வதுவைநாள் 902
வதுவைமுகங் கோடித்தல் 884
வந்தபரிசே 1247
வந்தபழி யொன்று 1247
வம்புலா மலர்ச்சுனை 1091
வயப்புலிப் போத்தனூர் 620
வயல்(மருதம்) 1122
வயல்வளம் 1045
வயவர் 631
வயற்களம்பாடிய பெருநர் 1110
வயிரம் 1168
வரகுபோர் 1120
வரந்தரும் பொருள் 1138
வரம் புடைத்தோ 1214
வரன் முறையே 1240
வரிகொண்டாட 688
வரிக்குருளை 675
வரிசிலைவிழவு 685
வரித்தளிர் அதைத்த 697
வரிமயிற்குலங்கள் 660
வரியுளத்துமைம் பால் 905
வரிவண்டுதாது பிடிப்பன 948
வரிவிற்சாலை 705
வரியின்தோல் 679
வருதுளிமுத்தம் 672
வருத்தமிகுங் காதல் 1056
வருமந் தெறியே 1242
வருமிரவொடு பகல் 731
வருமுறைப் பருவம் 668
வருமுறையாரு நாளில் 810
வரும்பிறப்பின் வழிவந்த 1052
வரைகிழியவேந்து மயில்வேல் 1206
வரைக்காரி னேந்து 1120
வரைச்சூராட்டி 700
வரைதருமணி 746
வரைத்தினை மென் சோறு 683
வரைபுணர் குறிஞ்சி 1088
வரைப்பால் 1085
வரைப்பு 1156
வரையடியிடம் 733
வரையாட்சியருள் 695
வரையுரை கடவுட் காப்பு 667
வரைவாழ்ரமகளிர் 957
வரையுரங் கிழித்த திண்மை 661
வர்த்தமானீச்சரம் 1128
வலிதெருமா 738
வலித்து நிலங்கொள் 978
வலைச்சிலைத் தொழில் 719
வல் (படைக்கலம்) 580

வல்லாண்மையின் 980
வல்லி 1037
வல்லிடும்பை 571
வல்லேறு போல்வார் 713
வளத்தின் வந்த வாறு 1166
வளந்தரு பெருந்திரு நாடு 1125
வளமை 1162
வளர்பலவின் நீளமுதிர் கனி 1044
வளவர் 561, 578, 591, 608
வளவர் போரேறு 1213
வளவனார் பெருமை 606
வளைக்கை 1141
வளைத்தழும்பர் 1202
வளைத்தழும்பு 1143, 1170
வள்ளுகிர்நாய்த் துள்ளுபறழ் 1041
வழிக்கரை 1113
வழித்தொண்டர் 1188
வழிநடை 1212
வழிபடுந்தொழிலர் 556
வழிபாடு 1148
வழிபாடுசெய்து வருந்தவம் 784
வழிபாட்டினன் மைக்கணின்ற நலம் 610
வழியன்பு 1221
வழிவந்தாற்ற 742
வனசரர்கள் 798
வனமேதி 733
வனவேந்தர் 801
வன்கணார் 717
வன்கண் 580
வன்புன்கண் 989
வன்பெருந்தொண்டு 605
வன்மைசெய்வான் 981
வன்றிறலுந்தை 158
வன்றொடர்ப் பிணித்தபாசம் 718
வன்றொழில்மறவர் 656
வன்னிவளர்த்து 1005

வா

வாசமலர்மென் கழல் 1265
வாட்டாயங் கொள்போர் 638
வாட்படைத் தொழில் 613
வாட்படைபயிற்றும் 610
வாம்பொருந்திரை 1115
வாயம்பு 795
வாயில் 1165
வாயிற்காவலர் 576
வாயினன்னீர் சிந்திட 814
வாயினிலதுக்கி 767
வாயின்மஞ்சன நீர் 772
வாயுங்கட்டி 659
வாயுமுதல் வழங்குதுளை 938
வாய்நேரான் 1249
வாய்ந்தமரபு 1216
வாய்முத்தம் கொள்ள 672
வாய்மை திருந்து 1165
வாய்மை துணங்க நூல் 1013
வாய்மொழிந்தார் 1247
வாரணச் சேக்கை 1049
வாரணச் சேவல் 660
வாரொழுக்கி 723
வார்பயில்முன்றில் 1047
வார்வலைத் திறம் 719
வார்வலை மருங்கு 652
வாலியசுவை 767
வாலியநேசம் 560
வாழுமியற்கை 1186
வாழ்த்தெடுத்து 682
வாழ்பதி 903
வாரிபுதை பார்த்து 713
வாளியோடு சாபமேவு 717
வாளின்படை பயிற்றி 611
வாளைப் போத்து 1062
வாள்கொண்ட தாயம் 616
வாள் வீரர் 632
வானந்தன் மயமாக்கி 962
வானமுமுட்பட 1139
வானவர் கோன் 1209
வானவர் நாயகர் 1176
வானளிப்பன 1032
வானாளுந் தேவர் 607
வானிலெழிந்த போரொலி 600
வானீராறு 1023

வி

விசிப்பறை 1048
விசிவார் 1054
விசும்பு 1169
விஞ்சைத்தனு 689
விஞ்சையர் 1159
விஞ்சையர்கள் 959
விஞ்சை விண்ணோர் 1177
விடக்குவர 643
விடலைகளிருவர் 737
விடேலென்னோசை 902
விடைகொண்டு 789, 1059, 1249
விடைக்குலம் 936
விடைத்தேவர் குலம் 1227
விடையவர் 650
விடையுகைத்து 963
விண்ணின்பயனும் 1214
விண்படர்கொடி விடு 631
விண்பிற்பட வோங்கிய 999
விதிமுறை வணங்கி 690
விமலமூர்த்தி 1258
விமானங்கள் 1211
விமானவூர்திகள் 1177
வியப்புறு செய்தொழில் 1177
வியலிடம் 1045
வியல்வாய் நீண்ட 1174
வியன்துடி 581
விருந்தெதிர் கொள்ளும் 1105
விரும்பு முண்மை 1128
விரைப்பொலி சோலை 926
விலங்கின்சாதி 816
வில்லியார் 741
வில்லுழவின் பெருமுயற்சி 692
வில்விரைந்தெழ 579
வில்விழவு 688
வில்விழா வெடுக்க 680
விழவுபொங்க 687
விழிக்கயல் 1115
விழிக்குநெய்தல் 1113
விழிநுழையா 1199
விழுக்குடிமை 1179
விழுத்தவர் 1200


...லையடிகள் நூல்...

மழை 1201
த்த
ர்கை 1141
ன்கோடு 652
கம் 1115
ம்பு
சர்த்தி 710
ளத்தவண்பு 772
ளத்த வுணர்
வாடு 1051
ளையாடல் 1186
ளையாட்டா 1237
ற்களிற்
றதிரே 586
ற்பெருஞ்
ர் 619
ற்பிடிக்
ன்றான் 678
ற்புருவம் 1171
ற்றொழில்
விறல் 657
ற்றொழிற்
ாம் 690
சாலும் 871
னைஞரார்ப்
பொலி 1100
னைஞர் 681
னைப்பாச
ற 1077
னமா
றுத்து 1076
னையிரண்டு 803
னையென்
சூழ்ந்த 876

வீ

ணை 1054
ரக்கழல் 711
ரக் கழல்
கலிப்ப 633

வே

வங்கட்
னிறு 1004
வங்கட்புலி 617
வங்கதி
ரான் 1196
ங்குரற்
ம்பை 581

வெஞ்சின மடங்
கல் 657
வெஞ்சினவாட்
டியுமிழ 633
வெடிபட
முழங்கும் 585
வெடிபட விரி
சிறு குருஞ் 735
வெட்சிமுன்ஞ 686
வெண்கவடி
(பலகறை) 708
வெண்கவிகை 861
வெண்குழை 1143
வெண்கோட
லிலைச்சுருள் 941
வெண்கோல் 943
வெண்டிருநீற்
றின் பொலிவு 645
வெண்ணீறு
642, 1194
வெண்ணீற்
றுருமை 1207
வெண்பால்சொரி
மஞ்சனம் 1241
வெண்மணலால
யம் 1240
வெண்முளை
சிதறி 1101
வெண்முளைப்
பெய்து 884
வெந்த
விறைச்சி 785
வெம்புலியேறு 635
வெம்மறக்
குலம் 756
வெயில்படுவெங்
கதிர் 792
வெய்யகோற்
பாகர் 575
வெருக்கொடு 921
வெருக்கொண் 820
வெருக்கொண்
டே 1140
வெவ்வாய்
நரகம் 992
வெவ்வாளரா
வோன் 639
வெவ்வேறறி
வரிதாம் 1173

வெவ்வேறியல்
பினில் 812
வெளி 620
வெளிகின்றூர்
647, 1203
வெளிமேற்கை
வருத்து 620
வெள்ளம் 1140
வெள்ளலகு 710
வெள்ளிக்குன்ற
வர் 585
வெள்ளிமால்
வரை 1127
வெறித்தடநீர்த்
துறை 1198
வெறியாட்டு 662
வெறுக்கை 1178
வெற்பராயம் 726
வெற்பர் 719
வெற்பில்
விளைவளன் 698
வெற்பின்முளைத்
தெழு முதல் 772
வெற்றரை 1158
வெற்றிகொள்
சுரிகை 629
வெற்றிகொள்
வேட்டைக்
காடு 742
வென்றி
மங்கை 718
வென்றிமடங்
கல் 742
வென்றிமால்
யானை 563
வென்றி யண்ண
லார் 661
வென்றிவேள் 678

வே

வேங்கை
வன்மேல் 708
வேடன் 1162
வேடுகை
வளைத்து 721
வேடுவனென்று 805
வேட்கைகள் 1186
வேட்கைவிளைத்
தெழல் 1236
வேட்டுவச்சாதி 756

வேட்டைக்
கோலங்
கொள்ள 705
வேட்டைவினைத்
தொழில் 782
வேணி 863, 1013
வேணிமுடி 1072
வேண்டுந்தனை
யும் 1230
வேண்டும்போதி
னில் 1137
வேண்டுவன
சமைத்தார் 1251
வேதகத்திரும்பு
பொன் 803
வேதகாரணர் 1144
வேதப்பயனும்
சைவம் 1214
வேதமந்திர
நியதி 1038
வேதவாய்மைக்
காவலர் 650
வேதவொலி
கள் 1208
வேதி 1005
வேதத்
திண்ணை 1174
வேம்பிழைத்
திடையே 767
வேயும்படுதோளி
யர் 969
வேய் 938
வேய்ங்குழல் 943
வேரி 1003
வேரித்தொங்
கல் 1004
வேரிவிளங்கணிக்
கவளம் 684
வேலவன் 1158
வேலுழவர் 633
வேலைவப்பிடங்
கள் 1086
வேழக்கரும்பு 609
வேழத்தரவு 1001
வேழம்(மானை) 574
வேளாண்
குடிமை 872
வேளாண்முழுக்
குடிமை 1179

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வேள்விச் சடங்கு | 1234 | வேறிருதடக் கைத்தாயவடு களிறு | 584 | வேறுள்ளார் | 576 | வைகிருளின் புலர்சாலை | |
| வேள்விச் சாலை | 1176 | வேறினியென் | 645 | வேறொருமண் ணுலகு | 1166 | வைதிகத்தேர் | |
| வேள்வித் தலைவர் | 1211 | வேறுணரார் | 1255 | வேறொன்றுபுகு தர | 588 | வைப்பு (சே நிதி) | |
| வேள்வியின் புகை | 1106 | வேறுண்ணினை வார் | 567 | வேற்றொலிகள் | 964 | வையகம் | |
| வேறிடத்தினின் றார் | 619 | வேறுபுலங்கள் வென்றி | 699 | வை | | வையந்தன்னை | |
| | | வேறுமிழா நின்றான் | 768 | வைகறை | 559 | வையந்தாங்கி | |
| | | | | வைகறை யாமாக்குறி | 1049 | வையந் தாங் குஞ் செயல் | |


## சில குறிப்புக்கள்

கண்ணப் நாயனார் புராணம் (657) உடுப்பூர் - இதற்கு 2 நாழிகை உள்ள குன்றின்மேல் தண்டாயுதபாணி கோயில் உளது. இன்றும் பலர் வழிபட்டு வருகின்றார்கள். கார்த்திகை நாட்களில் கோழிகள் கொணர்ந்து வழக்கமுமுள்ளது. (784) சிவகோசரியார் - பாரத்துவாச ஆச்சிரமம் என்று மிடம் இவர் தங்கித் தவஞ்செய்திருந்த இடமென்று கருதப்படுகின்றது. குளமும் ஒன்றுள்ளது. பாரத்துவாச கோத்திரம் சிவமறையோர் கோத்திர ஒன்று. இன்றைக்கும் சிவமறையோர் பல கோத்திரத்தார்கள் இங்கு பூ இருப்பினும் அவர்களுள் பாரத்துவாச கோத்திரத்தார் மட்டும் காளத்தி ந தீண்டித் திருமஞ்சன முதலியன செய்தற் குரிமையுடையவர்கள்.

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் (1162) கரிகாற் பெரு வள சோழர். இவர் கலி 425ல் வாழ்ந்தார் என்று கருதப்படுகிறது. காஞ்சிபுரம் பிரகாச தேசிகராதீனத்துச் செப்புப் பட்டயத்தினால் இஃது கருதப்படுகி ஷை மடம் இதுவரை 250 பட்டங்கள் ஆயிருக்கின்றன என்பர். பட்டம் ஒ 20 ஆண்டுகளாகக் கணக்கிட்டால் 5000 ஆண்டுகள் ஆகின்றன.